# நினைவுகூருதலின் தியானங்கள்

சார்லஸ் டேஸ் ரசல்

# நினைவுகூருதலின் தியானங்கள்

[தமிழாக்கம்]

பாஸ்டர் சார்லஸ் டேஸ் ரசல் அவர்களினால்,
நமது ஆண்டவருடைய மரணத்திற்கான நினைவுகூருதல்
பற்றி எழுதப்பட்ட பாடங்கள் அடங்கின தொகுதி.

# முகவுரை

இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் குறித்த இந்த ஆய்வைத் தவிர, வேறு எந்த ஆய்வும் உண்மையான கிறிஸ்தவனுடைய இருதயத்தைத் தொடுகிறதாய் இராது. இயேசுவின் தலை மற்றும் பாதங்களை மரியாள் அபிஷேகிப்பது துவங்கி, கல்லறையிலிருந்துள்ள நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதல் வரையிலான சம்பவங்களை உள்ளடக்கினதான, வசந்த காலத்தின் அந்த வாரத்தை – நினைவுகூருதல் காலப்பகுதியைப்பார்க்கிலும், வேறு எந்தக் காலப்பகுதியும் அதிகமான பயபக்தியுடன் கைக்கொள்ளப்படுவதில்லை.

பழைய ஏற்பாட்டின் சரித்திரத்தில் இடம்பெறும் பஸ்கா காரியத்தினை, தேவனுடைய குமாரனால் ஈடுபலி கொடுக்கப்பட்டதிலுள்ள அதன் நிறைவேறுதலுடன் இணைத்து, இந்த ஆய்வானது ஈடுபலியினுடைய புனித "சிவப்பு நூலையும்" மற்றும் "மனித சரித்திரம் அனைத்தின் திருப்புமுனையாகிய" – கல்வாரியில் நிகழ்ந்த பலியையும் கையாளுகின்றதாய்க் காணப்படுகின்றது. இப்புத்தகமானது பெரிதும் துதி சாற்றுவதற்கு ஏதுவானதாக இருப்பினும், இப்புத்தகத்தினுடைய பாடங்களானது ஈடுபலி மற்றும் பாவநிவாரணபலி தொடர்புடையதான ஆய்வுக்கட்டுரைகளையும்கூட உள்ளடக்கப்பெற்றுள்ளது.

அப்பம் மற்றும் திராட்சப்பழரசம் எனும் அடையாளங்களில் பங்கெடுப்பதன் மூலம் மாத்திரமல்லாமல், சரித்திரத்தின் அந்த உச்சக்கட்ட சம்பவங்கள் அடங்கின வாரத்தையும், அவ்வாரம் மாபெரும் பலியுடன் நிறைவுப்பெற்றதையும், பயபக்தியுடன் கருத்தூன்றிப் பார்ப்பதற்கென்று இந்த ஆசரிப்பிற்கு முந்தின பல வாரங்களைச் செலவழிப்பதன் மூலமும், அநேக வேதத்தின் மாணாக்கர்கள் இந்நிகழ்வை நினைவுகூர்ந்து ஆசரிக்கின்றனர்.

பாஸ்டர் சார்லஸ் டேஸ் ரசல் அவர்களின் சுமார் 40-ஆண்டுகள் காலமான ஊழியத்தில், வருஷத்தினுடைய இந்த ஒரு காலக்கட்டத்தில் தனது வாசகர்களுக்கு அவர்களது ஆவிக்குரிய ஆயத்தமாகுதலின் விஷயத்தில் உதவத்தக்கதாக, பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அந்தக் கட்டுரைகளை ஒன்றுசேரத் தொகுத்து வழங்குவதே, 'நினைவுகூருதலின் தியானங்கள்' எனும் இப்புத்தகத்தினுடைய நோக்கமாக இருக்கின்றது.

இந்த ஒரு தொகுதியின் கட்டுரைகளானது, இத்தலைப்புக் குறித்து பாஸ்டர் ரசல் அவர்களால் எழுதப்பட்டுள்ளதான பெரும்பாலான வார்த்தைகளை உள்ளடக்கியுள்ளது. இப்புத்தகமானது தலைப்புகளாக – பஸ்கா தொடர்புடையதான கட்டுரைகள் பிரதானமாய்த் தனிப்பிரிவுகளிலும், வெற்றி பிரவேசம் தொடர்புடைய கட்டுரைகள் முக்கியமாக இன்னொரு பிரிவின் கீழும், இப்படியாக பல பிரிவுகளின் கீழும் பிரித்து வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுப்பொருளானது வருடந்தோறுமென்ற அடிப்படையில் கையாளப்படுவதினால், ஒரே மாதிரியான தலைப்பையுடைய அநேக ஆய்வுக்கட்டுரைகளானது தேவைக்கும் அதிகமாகவே வழங்கப்பட்டிருக்கும். அநேகமாக இந்தத் தொகுதியினைப் பயன்படுத்துவதிலுள்ள மிகுந்த நன்மை என்னவெனில், ஒவ்வொரு உட்ப்பிரிவிலிருந்தும் கட்டுரையைத் தெரிந்தெடுப்பதாகும் மற்றும் இப்படியாக மாபெரும் உச்சகட்டமாகிய இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் வரையிலான சம்பவங்களை, அது நிறைவேறின துல்லியமான காலத்தோடு குறிப்பிடும் விதத்தில் அமைந்திருக்கும்.

இங்குச் செய்யப்பட்டுள்ளதான ஒரே திருத்தம், அந்தந்தக் குறிப்பிட்ட வருடத்திற்கான கட்டுரையில் நினைவுகூருதலின் தியதி குறித்த வரலாற்றுப் பதிவுகள், உள்ளூர் ஆசரிப்புகள் குறித்த விவரங்கள், பல்வேறு பட்டணங்களில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கைப் பற்றின அறிக்கைகள்/தகவல்கள் நீக்கப்பட்டுள்ளதாகும்.

இந்தத் தொகுதியினுடைய பின்பாகத்தில் வாசகனுக்கு, இப்புத்தகத்திலுள்ள கட்டுரைகளின் காலவரிசைப்படியான பட்டியலும் கூடக் கொடுக்கப்பட்டுள்ளது.

மிகவும் நன்மை பயக்கின்ற, ஆவிக்குரிய நினைவுகூருதல் காலப்பகுதிக்காக ஆயத்தமாகும் விஷயத்தில், கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்களுக்கு உதவியாக இருக்கும் என்ற உண்மையான நம்பிக்கையில், இப்புத்தகமானது வெளியிடப்படுகின்றது.

- வெளியீட்டாளர்கள்.

# பொருளடக்கம்

**முழுமையான உள்ளடக்கம்**


பஸ்கா | R465 / ஏப்ரல் 1883 . . . . . 3
கர்த்தருடைய இராப்போஜனம் | R839 / மார்ச் 1886 . . . . . 14
என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் | R1013 / மார்ச் 1888 . . . . . 26
நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டு நிறைவு நாள் | R1100 / மார்ச் 1889 . . 44
கர்த்தருடைய இராப்போஜனம் | R2771 / பிப்ரவரி 1901 . . . . . 53
கடைசி இராப்போஜனம் | R3363 / மே 1904 . . . . . 68
நம்முடைய "பஸ்காவின்" நினைவுகூருதல் | R3525 / மார்ச் 1905 . . . . . 79
பஸ்காவைப் பலியிட வேண்டிய | R3749 / ஏப்ரல் 1906 . . . . . 87
என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் | R3879 / அக்டோபர் 1906 . . . . . 100
நினைவுகூருதலான பஸ்கா இராப்போஜனம் | R4590 / ஏப்ரல் 1910 . . . . . 111
வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | R5191 / மார்ச் 1913 . . . . . 123
பஸ்காவின் இரண்டு நினைவுகூருதல் சின்னங்கள் | R5541 / செப்டம்பர் 1914 . . . . . 149
பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம் | R5640 / மார்ச் 1915 . . . . . 158
நினைவுகூருதல் காலப்பகுதிக்கான சிந்தனைகள் | R5869 / மார்ச் 1916 . . . . . 175


**நிழலான பஸ்கா**


நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து | R94 / ஏப்ரல் 1880 . . . . . 195
கர்த்தருடைய இராப்போஜனம் | R208 / ஏப்ரல் 1881 . . . . . 197
நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து | R721 / பிப்ரவரி 1885 . . . . . 202
பஸ்கா ஏற்படுத்தப்பட்டது | R1657 / ஜூன் 1894 . . . . . 207
செங்கடலின் பாதை | R1657 / ஜூன் 1894 . . . . . 209
கர்த்தருடைய இராப்போஜனம் | R1800 / ஏப்ரல் 1895 . . . . . 211
எசேக்கியாவின் மாபெரும் பஸ்கா | R2379 / நவம்பர் 1898 . . . . . 214
நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து...பலியிடப்பட்டார் | R2917 / டிசம்பர் 1901 . . . . . 224
நினைவுகூருதல் ஆசரிப்பு | R3548 / மே 1905 . . . . . 231
பஸ்கா மற்றும் பாவநிவாரணநாளின் பலிகள் | R4384 / மே 1909 . . . . . 235
என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் | R4703 / அக்டோபர் 1910 . . . . . 239
இஸ்ரயேல் தப்புவிக்கப்பட்டது (அ) கடந்துபோகப்பட்டது | R5272 / ஜூலை 1913 . . . . 245
முதற்பேறானவர்களின் கடந்துபோகுதல் | Over Land Monthly / page 93 . . . . . 251
பஸ்கா ஏற்படுத்தப்பட்டது | The Photo-Drama Of Creation / page 33 . . . . . 265
பஸ்கா — எத்தனைதரம் திரும்பச் செய்யப்படுகின்றது? | What Pastor Russell Said / page 524 . . . . . 266
பஸ்கா — முதற்பேறானவர்கள் யாரை அடையாளப்படுத்துகின்றனர்? | What Pastor Russell Said / page 524 . . . . . 266
பஸ்கா — பஸ்காவுக்கும், பாவநிவாரணநாளுக்கும் தொடர்பு | What Pastor Russell Said / page 524 . . . . . 266
நிழலிலும், நிஜத்திலும் பஸ்கா | Pastor Russell's Sermons / page 557 . . . . . 267


**நினைவுகூருதல்**


நம்முடைய பஸ்கா | R225 / மே 1881 . . . . . 281
பஸ்கா | R325 / மார்ச் 1882 . . . . . 284

அவர் வருமளவும் | R1021 / ஏப்ரல் 1888 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 287
நினைவுகூருதல் இராப்போஜனம் | R1382 / மார்ச் 1892 . . . . . . . . . . . . . . . . . . . . . 289
வருடாந்திர நினைவுகூருதல் இராப்போஜனம் | R1625 / மார்ச் 1894 . . . . . . . . . . . . 293
நினைவுகூருதல் இராப்போஜனம் | R1786 / மார்ச் 1895 . . . . . . . . . . . . . . . . . . . . . 300
நினைவுகூருதல் அடையாளங்களின் ஆராதனை ஒழுங்கு | R1793 / ஏப்ரல் 1895 . . . . 304
நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதல் | R1942 / மார்ச் 1896 . . . . . . . . 307
நினைவுகூருதல் இராப்போஜனம் | R2115 / மார்ச் 1897 . . . . . . . . . . . . . . . . . . . . . 313
நினைவுகூருதலின் ஆசரிப்பு | R2291 / ஏப்ரல் 1898 . . . . . . . . . . . . . . . . . . . . . . 319
நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கான தியதி | R2429 / பிப்ரவரி 1899 . . . . . . . . . 329
நினைவுகூருதல் இராப்போஜனம் | R2592 / மார்ச் 1900 . . . . . . . . . . . . . . . . . . . . . 332
நினைவுகூருதல் இராப்போஜனம் | R2622 / மே 1900 . . . . . . . . . . . . . . . . . . . . . . . 336
யார் நினைவுகூருவது ஏற்றது? | R3635 / செப்டம்பர் 1905 . . . . . . . . . . . . . . . . . . 339
பஸ்கா நினைவுகூருதல், ஏப்ரல் 8, 1906 | R3706 / ஜனவரி 1906 . . . . . . . . . . . . . . 342
முதலாம் மாதத்தில் பஸ்கா | R4127 / பிப்ரவரி 1908 . . . . . . . . . . . . . . . . . . . . . . . 344
நினைவுகூருதல் ஆசரிப்பு | R4375 / ஏப்ரல் 1909 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 355
1911 — நினைவுகூருதல் இராப்போஜனம் — 1911 | R4756 / பிப்ரவரி 1911 . . . . . . . . . . . 359
நினைவுகூருதல் இராப்போஜனம், ஏப்ரல் 10-ஆம் தேதி | R5420 / மார்ச் 1914 . . . . . 364
நினைவுகூருதல் இராப்போஜனம் | The Photo-Drama Of Creation / page 67 . . . . . . . 371
நினைவுகூருதல் இராப்போஜனம் — ஏன் நாம் பங்கெடுக்கின்றோம்.
| What Pastor Russell Said / page 486 . . . . . . . . . . 372
நினைவுகூருதல் இராப்போஜனம் — புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தைப் பயன்படுத்துதல்
| What Pastor Russell Said / page 486 . . . . . . . . . 372
பஸ்கா மற்றும் பாவநிவாரணநாள் — எப்போது மற்றும் ஏன் ஆசரிக்கப்படுகின்றது.
| What Pastor Russell Said / page 525 . . . . . . . . . . 373

**அடையாளங்களின் அர்த்தம்**

அப்பம் மற்றும் திராட்சரசம் | R509 / ஜூலை 1883 . . . . . . . . . . . . . . . . . . . . . . 379
பஸ்கா இராப்போஜனம் | R740 / ஏப்ரல் 1885 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 384
கர்த்தருடைய இராப்போஜனம் | R899 / பிப்ரவரி 1887 . . . . . . . . . . . . . . . . . . . . . 390
நம்முடைய வருடாந்தர இராப்போஜனம் | R936 / மே 1887 . . . . . . . . . . . . . . . . . . . 394
அடையாளங்களினுடைய முக்கியத்துவம் | R1636 / ஏப்ரல் 1894 . . . . . . . . . . . . . . . 399
கர்த்தருடைய பாத்திரம் மற்றும் கர்த்தருடைய போஜனபந்தி | R1898 / டிசம்பர் 1895 . . 404
நினைவுகூருதல் இராப்போஜனம் | R2282 / ஏப்ரல் 1898 . . . . . . . . . . . . . . . . . . . . 415
ஜீவ அப்பம் நானே | R4146 / மார்ச் 1908 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 418
நினைவுகூருதல், ஏப்ரல் 14 | R4153 / மார்ச் 1908 . . . . . . . . . . . . . . . . . . . . . . 431
புளித்தமா பற்றின உவமை | R5050 / ஜூன் 1912 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 435
நமது "ஆசீர்வாதத்தின் பாத்திரம்" | R5341 / நவம்பர் 1913 . . . . . . . . . . . . . . . . . 437
நமது கர்த்தருடைய மாம்சத்தைப் புசித்தலுக்கும் மற்றும் அவரது இரத்தத்தைப்
பானம்பண்ணுதலுக்குமான அர்த்தம் | R5342 / நவம்பர் 1913 . . . . . . . 444
உங்களால் கூடுமா? | R5421 / மார்ச் 1914 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 449
இரட்சிப்பின் பாத்திரத்தினுடைய ஆசீர்வாதம் | R5538 / செப்டம்பர் 1914 . . . . . . . . . . 456

**மீட்கும்பொருள்**

கிறிஸ்துவின் இரத்தம் | R13 / ஜூலை 1879 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 471

பதிலாள் தொடர்புடைய கேள்விகள் | R485 / மே 1883 . . . . . . . . . . . . . . . . . . . . . 475
இரத்தத்தினைச் சாதாரணமானதாய் எண்ணுதல் | R4605 / மே 1910 . . . . . . . . . . . . . 479

**நினைவுகூருதலை எதிர்நோக்குதல்**

நினைவுகூருதல் இராப்போஜனம் | R1504 / மார்ச் 1893 மற்றும் R2436 / பிப்ரவரி 1899 . 489
பஸ்கா காலத்தின்போதான விசேஷித்தச் சோதனைகள் | R2793 / ஏப்ரல் 1901 . . . . . . . 493
நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு... | R3178 / ஏப்ரல் 1903 . . . . . . . . . . . . . . . . . . . 495
ஜெபத்திற்கு விடையாக விடுதலை | R4346 / மார்ச் 1909 . . . . . . . . . . . . . . . . . . . . 499

**பெத்தானியாவில் நடந்த இராவிருந்து**

விலையேறப்பெற்ற நளததைலமுள்ள வெள்ளைக்கல் பரணி | R2447 / ஏப்ரல் 1899 . . . . 503
நறுமணம் வீசிய தைலம் | R2743 / டிசம்பர் 1900 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 510
மிகவும் விலையேறப்பெற்ற தைலம் | R3534 / ஏப்ரல் 1905 . . . . . . . . . . . . . . . . . . 521
அவளால் இயன்றதை அவள் செய்தாள் | R3877 / அக்டோபர் 1906 . . . . . . . . . . . . . 538

**வெற்றி பிரவேசம்**

நமது கர்த்தருடைய நிழலான வெற்றி | R1794 / ஏப்ரல் 1895 . . . . . . . . . . . . . . . . . 551
ஓசன்னா! வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் | R2745 / டிசம்பர் 1900 . . . . . . . . . . 555
உன்னதத்திலே ஓசன்னா | R3537 / ஏப்ரல் 1905 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 563
கர்த்தருடைய நாமத்தில் வருகின்றவர் | R3850 / செப்டம்பர் 1906 . . . . . . . . . . . . . . 577

**சீஷர்களின் பாதங்களைக் கழுவுதல்**

பாதம் கழுவுதல் | R843 / ஏப்ரல் 1886 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 593
பாதம் கழுவுதல் | R2278 / மார்ச் 1898 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 597
நான் உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன் | R2449 / ஏப்ரல் 1889 . . . . . . . . . . . . 602
ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் | R3542 / ஏப்ரல் 1905 . . . . . . . . . 610

**யோவான் 14-17 வரையிலான அதிகாரங்களின் வார்த்தைகள்**

நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் | R2453 / ஏப்ரல் 1899 . . . . . . . . . . 625
வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் | R2455 / ஏப்ரல் 1899 . 633
நான் திராட்சச்செடி — நீங்கள் கொடிகள் | R2464 / மே 1899 . . . . . . . . . . . . . . . . 639
மெய்யான திராட்சச்செடி மற்றும் அதன் கனி | R3544 / ஏப்ரல் 1905 . . . . . . . . . . . . . 651
வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவி | R4164 / மே 1908 . . . . . . . . . . . . . . . . . . . . . . 668
நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் | R3551 / மே 1905 . . . . . . . . . . . . 682
உனக்காக வேண்டிக்கொண்டேன் | R3759 / ஏப்ரல் 1906 . . . . . . . . . . . . . . . . . . . . 698

**கெத்செமனே**

கெத்செமனேயில் வியாகுலம் | R1801 / ஏப்ரல் 1895 . . . . . . . . . . . . . . . . . . . . . . 711
உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துதல் | R1806 / மே 1895 . . . . . . . . . . . . . . . . 717
கெத்செமனே — விழிப்பும், ஜெபமும் | R2773 / பிப்ரவரி 1901 . . . . . . . . . . . . . . . . 729
பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் | R3885 / நவம்பர் 1906 . . . . . . . . . . . . . . . . 740
இருளான கெத்செமனே வேளை | R4707 / நவம்பர் 1910 . . . . . . . . . . . . . . . . . . . . 755
ஏன் கெத்செமனேயில் வியாகுலம்? | R5550 / அக்டோபர் 1914 . . . . . . . . . . . . . . . 761

**யூதாசினால் காட்டிக்கொடுக்கப்படுதல்**

கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் | R2467 / மே 1899 . . . . . . . . . . . . . . . . . . . . 771
இயேசு காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் கைவிடப்பட்டார் | R2778 / மார்ச் 1901 . . . . 783

இப்பொழுதே முடிவு செய்யுங்கள் | R3366 / மே 1904 . . . . . . . . . . . . . . . . . . . . . . . 792
நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் மறுதலிக்கப்பட்டார் | R4167 / மே 1908 810
உண்மையற்ற ஒரு பொருளாளரின் வீழ்ச்சி | R5552 / அக்டோபர் 1914 . . . . . . . . . . . 823

**பேதுருவின் மறுதலிப்பு**

சுய/தன்நம்பிக்கை ஒரு பெலவீனமாகும் | R4711 / நவம்பர் 1910 . . . . . . . . . . . . . . . . 833
தேவசமாதானம் | R5284 / ஆகஸ்ட் 1913 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 839
பரிசுத்த பேதுரு கோதுமையைப்போல் புடைக்கப்பட்டார் | R5563 / அக்டோபர் 1914 . . . 855

**ஆலோசனை சங்கத்தாருக்கு முன்பாக நடந்திட்ட விசாரணை**

பிரதான ஆசாரியனுடைய முன்னிலையில் இயேசு | R1809 / மே 1895 . . . . . . . . . . . 863
மாபெரும் பிரதான ஆசாரியன் குற்றம் சாட்டப்பட்டார் | R2469 / மே 1899 . . . . . . . . . 866
நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துள்ளீர்கள் | R2780 / மார்ச் 1901 . . . 874
அசட்டைப்பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும் | R3887 / நவம்பர் 1906 . . . . . . . . 882
தேவனைத் தூஷிக்கிறவராகக் குற்றஞ்சாட்டப்பட்டார் | R4710 / நவம்பர் 1910 . . . . . . 892
இயேசுவைக் கேலிக்குள்ளாக்கும் விசாரணைகள் | R5560 / அக்டோபர் 1914 . . . . . . . 899

**பிலாத்துவுக்கு முன்பாக நடந்திட்ட விசாரணை**

பிலாத்துவுக்கு முன்பாக இயேசு | R1809 / மே 1895 . . . . . . . . . . . . . . . . . . . . . . 913
பிலாத்துவின் முன்னிலையில் இயேசு | R2312 / மே 1898 . . . . . . . . . . . . . . . . . . . . 916
பிலாத்துவின் முன் நல்ல அறிக்கை | R2470 / மே 1899 . . . . . . . . . . . . . . . . . . . . . 922
இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை | R2785 / மார்ச் 1901 . 931
எத்தரென்னப்பட்டாலும், நிஜஸ்தர் | R3553 / மே 1905 . . . . . . . . . . . . . . . . . . . . 940
எத்தரென்னப்பட்டாலும், நிஜஸ்தர் | R3895 / நவம்பர் 1906 . . . . . . . . . . . . . . . . . . 952
இயேசு, பிலாத்துவினால் விசாரணைப்பண்ணப்பட்டார் | R5570 / நவம்பர் 1914 . . . . . 965

**சிலுவை மரணம்**


கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார் | R1815 / மே 1895 . . . . . . . . . . . . . . . . 981
கிறிஸ்து இயேசு சிலுவையில் அறையப்பட்டார் | R1988 / ஜூன் 1896 . . . . . . . . . . . . . 985
சிலுவையில் அறையப்பட்டவர் மீது ஒரு பார்வை | R2315 / ஜூன் 1898 . . . . . . . . . . . . 988
அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார் | R2473 / மே 1899 . . . . . . . . . . 997
பாவநிவாரணபலி நிறைவேற்றப்பட்டது | R2787 / மார்ச் 1901 . . . . . . . . . . . . . . . . . 1009
கிறிஸ்து எப்படி மற்றும் ஏன் சிலுவையில் அறையப்பட்டார் | R3369 / மே 1904 . . . . . . 1022
சரித்திரத்தில் நிகழ்ந்த மாபெரும் நிகழ்வு | R3560 / மே 1905 . . . . . . . . . . . . . . . . . 1038
கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுவேன் | R3900 / டிசம்பர் 1906 . . 1051
ஏன் நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார் | R4171 / மே 1908 . . . . . . . . . . . . 1069
ஜீவாதிபதி சிலுவையில் அறையப்பட்டார் | R4712 / நவம்பர் 1910 . . . . . . . . . . . . . . 1087
தேவனால் வாதிக்கப்பட்டவர், சிறுமைப்பட்டவர் | R5577 / நவம்பர் 1914 . . . . . . . . . . . 1093

**புதுச் சிருஷ்டியின் பஸ்கா**

புதுச் சிருஷ்டியின் பஸ்கா | தொகுதி 6 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 1107

**அட்டவணை**

ரீபிரிண்ட்ஸ் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகளுக்கான அட்டவணை . . . . . . . . . . 1139



## நினைவுகூருதலின் தியானங்கள்

# முழுமையான உள்ளடக்கம்



# பஸ்கா

இது இஸ்ரயேலர்களுடைய மிக முக்கியமான பயபக்திக்குரிய அனுசரிப்புகளில் ஒன்றாக இருந்தது மற்றும் இன்னமும் இருந்து வருகின்றது. இது நிழலான ஜனங்களென அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட "நியாயப்பிரமாணத்தினுடைய" முதலாம் அம்சமாகக் காணப்பட்டது.

இவ்வனுசரிப்பு நிறுவப்பட்ட விவரங்கள் யாத்திராகமம் 12-ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. பழுதற்ற ஓர் ஆட்டுக்குட்டி அடிக்கப்பட வேண்டும்; அதன் இரத்தமானது, வீட்டு வாசலினுடைய நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் தெளிக்கப்படுகின்றது மற்றும் இப்படியாக தெளிக்கப்பட்டுள்ள வீடுகளுக்குள், குடும்பத்தினர்கள் அந்த ஆட்டுக்குட்டியினுடைய மாம்சத்தை, புளிப்பில்லாத அப்பத்துடனும், கசப்பான கீரையுடனும் புசித்தார்கள். (யூதர்களுடைய முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியின்) அந்த இரவில், தெளிக்கப்பட்ட இரத்தத்தின் காரணமாகவும், ஆட்டுக்குட்டி புசிக்கப்பட்டதின் காரணமாகவும், இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் கடந்துபோகப்பட்டார்கள் அல்லது எகிப்தியர்களின் முதற்பேறானவர்கள் சந்தித்திட்ட மரணத்தின் வாதையினின்று தப்புவிக்கப்பட்டார்கள். இச்சம்பவத்தின் காரணமாகவும் மற்றும் அடுத்த நாளில் இஸ்ரயேலர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று, சுதந்திரமடைந்து வெளியேறினதின் காரணமாகவும், தேவனுடைய கட்டளையின் பேரில், இஸ்ரயேலர்கள் ஒவ்வொரு வருடமும், அதன் ஆண்டுநிறைவு நாளில் அதை நினைவுகூர்ந்து ஆசரித்தார்கள். (யாத்திராகமம் 12:14)

இஸ்ரயேலர்கள் இந்த அனுசரிப்பினுடைய எழுத்துக்களை மாத்திரமே பார்த்தார்களே ஒழிய, நிழலாகிய அதன் அர்த்தத்தைப் பார்க்கவில்லை. அப்போஸ்தலனை 1 கொரிந்தியர் 5:7-ஆம் வசனத்தினுடைய வார்த்தைகளை எழுதும்படிக்கு ஏவி, அவ்வனுசரிப்பிற்குரிய அர்த்தத்திற்கான திறவுகோலை ஒருவேளை தேவனுடைய பரிசுத்த ஆவியானது, நமக்குக் கொடுக்கவில்லையெனில், நாமும் இஸ்ரயேலர்களைப் போலவே இருளில் காணப்பட்டிருப்போம். "ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." (1 கொரிந்தியர் 5:7)

இப்படியாக இக்காரியத்தின் மீது, பரிசுத்த ஆவியானது நமது கவனத்தைக் கொண்டுவந்த பிற்பாடு, மேலும் தேவனுடைய ஆட்டுக்குட்டியாகிய இயேசுதான், பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய நிஜம் என்பதையும், இஸ்ரயேலின் முதற்பேறானவர்களுக்கு, நிழலான ஆட்டுக்குட்டியினுடைய மரணம் அவசியமாய் இருந்ததுபோன்று, இயேசுவினுடைய மரணமானது, முதற்பேறானவர்களாகிய சபை மரணத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்கு அவசியமாய் இருக்கின்றது என்பதையும் தெளிவாய்க் காண்பிக்கக்கூடிய மற்ற வேதவாக்கியங்களையும் நாம் கண்டுபிடித்தோம். இப்படியாக பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு, நாம் இப்பொழுது தம்முடைய சீஷர்களுடன், கடைசி பஸ்காவைப் புசித்திட்ட இயேசுவின் வார்த்தைகளினிடத்திற்கும், செயல்பாடுகளினிடத்திற்கும் கடந்துவருகின்றோம்.

தேவன் மிகவும் சரியாய்ச் செயல்படுபவர் ஆவார்; நிழலான ஆட்டுக்குட்டியானது, முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியில் அடிக்கப்பட்டக்

காரியமானது, தேவனுடைய திட்டத்தில், இயேசு அதே கால வேளையில் மரிப்பார் என்ற உண்மைக்கான நிழலாக (அ) முன்னடையாளமாக இருந்தது. இயேசு தம்முடைய சீஷர்களுடன் பஸ்காவை அனுசரிக்கவும் மற்றும் அதே நாளில் உண்மையான "ஆட்டுக்குட்டியென" அடிக்கப்படவும்தக்கதாக தேவன் யூதர்கள் மத்தியில் காலக் கணக்கிடுதலை ஒழுங்குப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. (நாளினுடைய கணக்கிடுதல் விஷயத்தில், ஒரு நடுராத்திரியிலிருந்து, மறு நடுராத்திரி வரை என்று இப்பொழுது காணப்படும் வழக்கத்தின்படி யூதருடைய நாள் கணக்கீடு காணப்படாமல், மாறாக மாலை ஆறு மணிக்கு ஆரம்பித்து, அடுத்துவரும் மாலை 6 மணிக்கு நிறைவடைவதாய் இருக்கின்றது). ஆகவே இயேசுவும், சீஷர்களும் பஸ்காவை சுமார் 8 மணியளவு புசித்தார்கள் மற்றும் அதே இரவில் அவர் காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் அதே நாளில்தானே மரித்தார்; இப்படியாகவே அனைத்து எழுத்துக்களும், எழுத்தின் உறுப்புகளும் நிறைவேற வேண்டியிருந்தது மற்றும் நிறைவேறவும் செய்தது.

"இதோ உன் இராஜா வருகிறார்" எனும் தீர்க்கத்தரிசனத்தை நிறைவேற்றும் வண்ணமாகவும் மற்றும் அதே வேளையில் பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப் படுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக அது வீட்டிற்குள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற பஸ்கா நிழலிலுள்ள அம்சத்தினை நிறைவேற்றும் வண்ணமாகவும், இயேசு தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக, கழுதையின்மேல் ஏறி, பட்டணத்திற்கு வந்தபோது, தாம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக அல்லது நிராகரிக்கப்படத்தக்கதாக தம்மை ஜனங்களுக்கு முன்வைத்தார். (மத்தேயு 21:4; யாத்திராகமம் 12:3) "பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார் . . . மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு, குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டு போகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரயேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்" என்று நாம் வாசிக்கிற பிரகாரமாக, பஸ்காவிற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக, இயேசு தம்மை இறுதியாக இஸ்ரயேல் ஜாதியாருக்கு (அ) வீட்டாருக்கு முன்வைத்தார் (யோவான் 12:1, 12, 13). அவர்களது இராஜா கழுதைக்குட்டியின் மீது ஏறி, அவர்களிடத்தில் வந்தார். அவரோ அவர்களுக்காகக் கண்ணீர்விட்டு, "இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள்" என்று கூறினார். (மத்தேயு 23:38, 39)

இயேசு பஸ்காவினுடைய உட்கருத்தை அறிந்திருந்தார், ஆனால் சீஷர்களோ அறிந்திருக்கவில்லை. இயேசு தனிமையில் காணப்பட்டார்; எவராலும் அவரைப் புரிந்துகொள்ள முடியாது; எவராலும் அவரை உற்சாகமூட்ட முடியாது. அவர் காரியங்களைச் சீஷர்களுக்கு விவரித்திருந்தாலுங்கூட, அவர்களால் அவரது விளக்கத்தைப் புரிந்து கொள்ளவோ (அ) உணர்ந்துகொள்ளவோ முடியாது, காரணம் அவர்கள் இன்னமும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. அவர்கள் ஆதாமின்

பாவத்திலிருந்து, நீதிக்கு ஏதுவாய்த் தீர்க்கப்படாதது வரையிலும், ஜெநிப்பிக்கப்படவும் முடியாது - அதாவது அவர்களை மரணத்தின் வல்லமையினின்று மீட்டுக்கொள்ளும் இரத்தத்தைச் சிந்தின அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய புண்ணியத்தினால் பாவத்திலிருந்து கடந்துபோகப்படுவது அல்லது விடுவிக்கப்பட்டதாகக் கருதப்படும் நிலைவரும் வரையிலும் அவர்கள் ஜெநிப்பிக்கப்பட முடியாது.

முன்பு ஒருவரும் கடந்து செல்லாத இடுக்கமான வழியில், இயேசு இவ்வாறு தனிமையாகக் கடந்து செல்லுகையில் - நமக்கான முன்னோடியாகவும், தலைவராகவும் அவர் இவ்வழியில் தனிமையாகக் கடந்து செல்லுகையில், அவரது இருதயமானது, சில சமயங்களில், மரணத்திற்கு ஏதுவாக மிகவும் துக்கமடைந்ததில் ஆச்சரியமடைவதற்கு ஒன்றுமில்லை. "வேளை வந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொன்னார்." (லூக்கா 22:14-16) உண்மையான ஆட்டுக்குட்டி அன்றைய தினமே இன்னும் கொஞ்சம் நேரம் கழித்து அடிக்கப்படுவதன் மூலமாக எப்படிப் பஸ்காவின் காரியம் நிறைவேற ஆரம்பிக்கும் என்பதைச் சீஷர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென இயேசு ஆசையாயிருந்தார்.

சீஷர்களால் கிரகித்துக்கொள்ள முடிகிற மட்டும் கிரகித்துக் கொள்ளத்தக்கதாக, இயேசு பஸ்காவின் அர்த்தம் பற்றின சத்தியத்தை வெளிப்படுத்துவதே, அவர் சீஷர்களுடன் இந்தப் பஸ்காவைப் புசிப்பதற்கு விசேஷமாக ஆசைப்பட்ட தற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம். "அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி: நீங்கள் இதை வாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்;" "பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்." (மாற்கு 14:22; லூக்கா 22:17-20)

நிழலான ஆட்டுக்குட்டியிலிருந்து, நிஜமாகிய தம்மிடத்திற்குச் சீஷர்களுடைய மனங்களைத் திருப்பிடுவதும், தாம் நிறைவேற்றவிருக்கும் நியாயப்பிரமாணத்தினுடைய பஸ்காவெனும் அம்சத்தை அனுசரிப்பது இனிச் சரியாய் இருக்காது என்பதைக் காண்பிப்பதும்தான் ஆண்டவருடைய நோக்கமாய் இருந்தது என்பதில் நமக்கு ஐயமில்லை. (பஸ்காவினுடைய) ஆட்டுக்குட்டியினுடைய இடத்தில் வரும்

அவரைப்பற்றின நினைவுகூருதலின் அம்சங்களாக சீஷர்களுக்கு இனி அப்பம் மற்றும் இரசம் இடம்பெறப்போகின்றது. இப்படியாகப் பார்க்கப்படும்போது, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்ற இயேசுவின் வார்த்தைகள் ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகின்றது; அதாவது நிழலான விடுதலையை நினைவுகூரும் வண்ணமாக, இனிமேல் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியைக் கொல்ல வேண்டாம், மாறாக உண்மையான விடுதலைக்கு, உண்மையான கடந்துபோகுதலுக்கு ஆதாரமாய்க் காணப்படும் என்னுடைய மாம்சத்திற்கும், ஜீவனுக்கும் அடையாளமாய்க் காணப்படும் அப்பத்தையும், இரசத்தையும் பயன்படுத்துங்கள். ஆகவே என்னையும், என்னுடைய வார்த்தைகளையும் ஏற்றுக்கொள்ளுகிற யாவரும், இதுமுதற்கொண்டு, என்னை நினைவுகூரும்படிக்கு இப்படியாகச் செய்யுங்கள்" என்ற விதத்தில் இயேசுவின் வார்த்தைகள் காணப்பட்டது.

இப்படியாக இராப்போஜனத்தை, தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலாகவும், யூதர்களால் அனுசரிக்கப்பட்டு வந்த பஸ்காவிற்கு மாற்றாகவும் நமது கர்த்தர் நிறுவினார். ஏன் முதலில் இயேசு நிழலான ஆட்டுக்குட்டியைப் புசித்தார்? என்று கேட்கப்படலாம். அவர் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவராக பிறந்தார் என்றும், அதன் சகல அம்சங்களையும் அவர் அனுசரிக்க வேண்டியவராக இருந்தார் என்றும் நாம் பதிலளிக்கின்றோம். அவர் தம்முடைய சிலுவையில் நியாயப்பிரமாணத்தை அறைந்துபோட்டு, நியாயப்பிரமாணத்தை முடிவிற்குக் கொண்டுவந்துவிட்டதால், பஸ்கா அல்லது இதற்கு மாற்றாக இடம்பெறும் கர்த்தருடைய இராப்போஜனம் தொடர்புடையதான பிரமாணத்திலிருந்து நாம் விடுதலையுடையவர்களாகக் காணப்படுகின்றோம் - ஆனால் ஒவ்வொரு வருடமும் நமது கர்த்தருடைய மரணத்தின் நினைவு நாளை அனுசரிப்பதை சிலாக்கியம் எனக் கருதுபவர்களில் நாம் அடங்கினவர்களாய் இருக்கின்றோம்; "பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே, ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்."(1 கொரிந்தியர் 5:7-8)

நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்குரிய, மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் இந்தத் தருணமானது எப்போது (அ) ஏன் புறக்கணிக்கப்பட்டுப்போனது என்பதைக் கணிப்பது கடினமான காரியமாகும், ஆனால் சூழ்நிலைகளுக்கு ஏற்பவே புறக்கணிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. மாபெரும் போதகர் (இயேசு) நினைவுகூருதலின் விஷயத்தில் ஏதோ தவறு செய்துவிட்டார் என்றும், வருடத்திற்கு ஒருமுறை நினைவுகூருதலை அனுசரிப்பதைக் காட்டிலும், அடிக்கடி அனுசரிப்பது அனுகூலமாய் இருக்கும் என்றும் பக்திவைராக்கியமுள்ள சில போதகர்கள் எண்ணியிருப்பார்கள் என்பதிலும், இவர்கள் "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்ற வார்த்தைகள் மூலம், பவுல் நினைவுகூருதலை அடிக்கடி அனுசரித்தாலும் ஒன்றுமில்லை என்று போதித்துள்ளதாகப் புரிந்துகொண்டுள்ளனர் என்பதிலும் ஐயமில்லை (1 கொரிந்தியர் 11:26). ஆனால் நினைவுகூருதல் குறித்துப் பவுல் பேசியுள்ளவைகள் அனைத்தையும்

ஜாக்கிரதையாய் ஆராய்ந்துப் பார்க்கும்போது, காரியங்களை இவர்கள் புரிந்துகொண்டுள்ளது போன்று அவர் சொல்லவில்லை என்பது உறுதியாகும். "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து" (1 கொரிந்தியர் 11:23). இங்கு இயேசுவினால் தெரிந்துகொள்ளப்பட்டதான நேரம், மிகவும் சரியான நேரமாக மாத்திரமாய் இராமல், நினைவுகூருதலானது அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவிலே நிறுவப்பட்டதை விசேஷித்த வெளிப்படுத்தல் மூலம் கர்த்தரிடத்திலிருந்து, பவுல் பெற்றுக்கொள்ளுமளவுக்கு, அந்த நேரம் மிகவும் சரியான நேரமாகக் காணப்பட்டது என்பதையும் கவனிக்கவும்.

கர்த்தருடைய மரணத்திற்குரிய சரியான நினைவுகூருதலை அனுசரிக்கத்தக்கதாக, சபையானது எத்தனை தரம் அந்த அப்பத்தைப் பிட்டு, அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணிட வேண்டும்? ஆண்டுதோறும் அவரது மரணத்தினுடைய நினைவு நாளில் மாத்திரமே செய்ய வேண்டும். எப்படி அமெரிக்காவிற்கான சுதந்திரமானது, வருடந்தோறும் அது சுதந்திரமடைந்த நாளாகிய ஜூலை 4-ஆம் தேதியில் கொண்டாடப்படுகின்றதோ, இப்படியான விதத்திலேயே கர்த்தருடைய நினைவுகூருதலும் அனுசரிக்கப்பட வேண்டும். (அமெரிக்காவின் சுதந்திரத்தை) ஜூலை 4-ஆம் தேதியில் கொண்டாடாமல், பொருத்தமற்ற பல்வேறு தினங்களில் சிலர் கொண்டாடிட முற்பட்டால், அது விநோதமாகவே பார்க்கப்படும். மேலும் ஜூலை 4-ஆம் தேதியைக்குறித்து "இதை நீங்கள் கொண்டாடும் போதெல்லாம், நீங்கள் தேசத்தினுடைய பிறப்பை அறிவிக்கிறவர்களாய் இருப்பீர்கள்" என்று சொல்லப்பட்டால், ஒரு வருடத்தில் அநேகம் தருணங்களில் கொண்டாடப்படுவதைக் குறித்துப் பேசப்பட்டுள்ளதாக யாரேனும் புரிந்துகொள்வார்களா? இப்படியே கர்த்தருடைய இராப்போஜனமும், அதன் ஆண்டுநிறைவு நாளில் மாத்திரமே அனுசரிக்கப்பட வேண்டும்.

ஆதித் திருச்சபையினர் கர்த்தருடைய இராப்போஜனத்தை வாரத்தினுடைய முதல் நாள்தோறும் புசித்து வந்ததைச் சுட்டிக்காட்டும் பதிவுகள், வேதவாக்கியங்களில் காணப்படுவதைத் தாங்கள் காண்பதாக சிலர் எண்ணுகின்றனர். இது ஒருவேளை உண்மையானால், இக்காரியத்தில் இதற்குமேலாக கூறிடுவதற்கு எங்களுக்கு எதுவுமில்லை என்பதே நமது பதிலாக இருந்திருக்கும்; ஆனால் இப்படியான பதிவுகள் எங்கிருக்கின்றது? இவர்கள் நமக்கு "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" என்ற அப்போஸ்தலர் 20:7-ஆம் வசனத்தைக் காட்டுகின்றனர். ஆனால் இங்குக் கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலாகத்தான் அப்பம் பிட்கப்பட்டுள்ளது என்பதற்கான ஏதேனும் சாட்சியம் உள்ளதா? ஏன் இங்கு நடைபெற்ற காரியம் கர்த்தருடைய இராப்போஜனம் என்று குறிப்பிடப்படவில்லை மற்றும் திராட்சரசம் ஏன் தவிர்க்கப்பட்டுள்ளது? அப்பமாகிய அடையாளத்தைப்போன்று பாத்திரம் எனும் அடையாளமும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லையா? எம்மாவு என்னும் கிராமத்தில்

"அவர் அப்பத்தைப் பிட்டப்போது" இரண்டு சீஷர்கள் இயேசுவை அடையாளம் கண்டுகொண்டார்கள் என்பதாக எழுதப்பட்டுள்ளபடியால், அங்குப் பிட்கப்பட்டது சாதாரணமான போஜனத்திலும் மேலானது என்று யாரேனும் சொல்லக்கூடுமோ? அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தைப் புசித்தார்கள் என்று யாரேனும் சொல்லக்கூடுமோ? யாரும் இப்படியாகச் சொல்லமாட்டார்கள்.

வாரத்தின் முதல் நாளானது (அ) கர்த்தருடைய நாளானது, நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்குரிய சரியான நாளாய் இருப்பதற்குப் பதிலாக மிகவும் பொருத்தமற்றதாக இருக்கின்றது. இயேசுவின் மரணத்தையும், கர்த்தருடைய இராப்போஜனம், கெத்செமனே மற்றும் கல்வாரியின் துயரமான காட்சிகளையும் நினைவுகூருவதற்குரிய ஒரு நாளாக, வாரத்தின் முதல் நாளானது ஆதிச் சபையினரால் நியமிக்கப்படுவதற்கு (அ) பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக, வாரத்தின் முதல்நாளானது, அவர்களுக்கு மகிழ்ச்சியின் நாளாகவும், களிகூருதலின் நாளாகவும் மற்றும் "கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்துள்ளார்" என்று கூறி, ஓசன்னா சாற்றுவதற்குரிய நாளாகவும் காணப்பட்டது. இதனாலேயே இந்நாளின் பெயர் இப்படியாகக் காணப்படுகின்றது மற்றும் இதனாலேயே சபையால் இந்நாளானது தொழுதுகொள்வதற்கும், துதிப்பதற்குமுரிய நாளாக பொதுவாய் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

வாரத்தினுடைய முதல்நாளாகிய, கர்த்தருடைய நாள்தோறும், அப்பம் பிட்கும் வழக்கமானது, அநேகமாக சீஷர்கள் சொற்பமானவர்களாய்க் காணப்பட்டப்படியால், கர்த்தருடைய நாளில் ஒன்றுகூடுவதற்கெனச் சில சமயங்களில் நீண்ட தூரம் பிரயாணப்பட்டு வருகையில், ஒன்றுசேர்ந்து போஜனம் பண்ணுவதிலிருந்து ஆரம்பித்தக் காரியமாக இருக்க வேண்டும். இன்னும் அநேகமாக முதல் நாளில் அப்பம் பிட்கப்படும்போது, இயேசு உயிர்த்தெழுந்த பிற்பாடு, எப்படி அடிக்கடி முதல் நாளன்று தங்களுக்குத் தோன்றி காட்சி அளித்தார் என்பதையும், எப்படித் தாங்கள் புசித்துக்கொண்டிருக்கும்போது, இயேசு இப்படியாகத் தோன்றினார் என்பதையும் அவர்கள் நினைவுகூர்ந்தபோது, எண்ணங்களிலும், சிரத்தையிலும் ஏற்பட்ட ஆசீர்வாதமான ஓர் இணைதலின் காரணமாகவுங்கூட இந்த வழக்கம் ஆரம்பித்திருக்க வேண்டும். (லூக்கா 24:35)

சபையில் கர்த்தருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் கொண்டாடத் தக்கதாக, ஒரு காலத்தில் நிறுவப்பட்டிருந்த இந்த வழக்கத்தினுடைய மங்கின சுவடுகளானது, உரோமன் திருச்சபை மற்றும் ஆயர் திருச்சபைகளால் "புனித வெள்ளி" என்ற நவீன தோற்றத்தில் இன்னமும் அனுசரிக்கப்பட்டு வந்தாலும், மற்றக் கிறிஸ்தவ பிரிவுகளால் கிட்டத்தட்டக் கவனிக்கத் தவறப்பட்டுள்ளது.

காவல் கோபுரத்தின் வாசகர்களில் அநேகர், நமது கர்த்தருடைய மரணத்தின் நினைவுகூருதலை, அதன் ஆண்டு நிறைவுநாளில் அனுசரிப்பதை வழக்கமாய்க் கொண்டிருக்கின்றனர். கர்த்தருடைய மரணமானது, நிழலாகிய பஸ்காவின் இடத்தை எடுத்துக் கொள்கின்றது என்று நம்புகின்ற நாம், அந்த நாளை யூதர்களின் (அ) சந்திரன் நாள்காட்டியின்படி கணக்கிடுகின்றோம்; ஆகவே இந்நாளானது பெரும்பாலும், சூரிய

நாள்காட்டியின்படி கணக்கிடப்படும் "புனித வெள்ளியின்" தியதியிலிருந்து முற்றிலும் வேறு தியதியாகவே காணப்படுகின்றது. (1883-ஆம் வருடத்தில்) இந்த வருடத்தில் பஸ்காவானது, வாரத்தின் முதல் நாளில், ஏப்ரல் 22-ஆம் தியதியன்று, மாலை 6 மணிக்கு வருகின்றதாய் இருக்கின்றது; ஆகவே ஏப்ரல் 22-ஆம் தியதியன்று மாலை 3 மணிக்குக் கர்த்தருடைய மரணம் சம்பவித்ததாய் இருக்கும்; மேலும் கர்த்தருடைய இராப்போஜனமானது ஏப்ரல் 21-ஆம் தியதி, சனிக்கிழமை மாலையன்று, 7 முதல் 8 மணிக்குள் புசிக்கப்பட வேண்டும். பஸ்கா பண்டிகை ஆரம்பிப்பதற்கு முந்தின நாளின்போது, ஆட்டுக்குட்டியானது அடிக்கப்படுவதை நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும். எப்போதுமுள்ள வழக்கத்தின்படியே அது அனுசரிக்கப்படும். புளிப்பில்லாத அப்பம்* மற்றும் ரசத்தினுடைய அர்த்தத்தையும், முக்கியத்துவத்தையும் நாம் பேசுகின்ற அதே வேளையில், இவை இரண்டையும் பயன்படுத்திச் செய்யப்பட்ட முதல் நினைவுகூருதலின் ஒழுங்கின் மாதிரியைப் பின்பற்றிடவும் நாம் நாடிட வேண்டும். [* புளிப்பில்லாத அப்பமானது எந்த ஒரு எபிரெய குடும்பத்திடமிருந்தும் வாங்கப்படலாம்]

## அடையாளங்களினுடைய அர்த்தம்

பிட்கப்பட்ட அப்பம் மற்றும் பாத்திரத்தின் அர்த்தத்தை இங்கு நாம் சுட்டிக்காண்பிப்பது, சிலருக்குப் பயனுள்ளதாய் இருக்கும்.

அப்பத்தைக்குறித்து நமது கர்த்தர் கூறினதாவது: "இது என் மாம்சம்" ஆகும்; அதாவது புளிப்பில்லாத அப்பமானது, நமக்காகப் பிட்கப்பட்ட அல்லது பலிச் செலுத்தப்பட்ட அவரது மாம்சத்தை, அவரது மனுஷீகத்தை அடையாளப் படுத்துகின்றதாய் இருக்கின்றது. அவர் தம்மையே நமக்காகப் பலிச்செலுத்தாதது வரையிலும் நம்மால் நித்தியமான ஜீவனை ஒருபோதும் பெற்றுக் கொள்ளமுடியாது; அவர் சொன்னதுபோல: "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை." (யோவான் 6:53)

இயேசுவின் சரீரம் பிட்கப்பட்டதான காரியமானது, மனிதன் புசித்தால், ஒருபோதும் மரியாமல் இருக்கப்பண்ணுகின்றதான, ஜீவ அப்பத்தை அளிக்கிறதாக மாத்திரம் காணப்படாமல், இன்னுமாக அது ஜீவனுக்கு நேரான "இடுக்கமான வழியையும்" திறந்தது மற்றும் ஜீவனுக்கு நேராய் வழிநடத்துகின்றதான இடுக்கமான வழியில் நடப்பதற்கு உதவியான, ஆவிக்குரிய உணவாகிய சத்தியத்தை நாம் அடையத்தக்கதாக, முத்திரையை உடைத்தது. இப்படியாகப் பிட்கப்பட்ட அப்பமானது, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று தம்மைக்குறித்துக் கூறினவரின் பிட்கப்படுதலை அடையாளப்படுத்துவது பொருத்தமானதே என்று நாம் காண்கின்றோம். (யோவான் 14:6)

ஆகையால் பிட்கப்பட்ட அப்பத்தை நாம் புசிக்கையில் - அவர் மரித்திருக்கவில்லையெனில், அவர் நமக்காகப் பிட்கப்பட்டிருக்கவில்லையெனில், நாம்

ஒருபோதும் பிதாவினிடத்திற்கு வந்திருக்க முடியாது என்றும், நாம் என்றென்றும் ஆதாமினுடைய பாவத்தினுடைய சாபத்தின் கீழிலும், மரணத்தினுடைய நுகத்தின் கீழிலும் காணப்பட்டிருந்திருப்போம் என்றும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மற்றுமொரு கருத்து: பயன்படுத்தப்பட்ட அப்பமானது, புளிப்பற்றதாகும். புளிப்பு என்பது கெடுக்கிற ஒன்றாக, சீரழிக்கும் ஒன்றாக இருப்பதினால், பாவத்திற்கான அடையாளமாய் இருக்கின்றது மற்றும் பாவம் மனுக்குலத்தில் கொண்டுவந்ததான சீரழிவையும், மரணத்தையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இந்த அடையாளமானது, நமது கர்த்தர் இயேசு பாவம் இல்லாதவராக இருந்தார் என்பதை, கறைதிறையற்ற ஆட்டுக்குட்டி என்பதை, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாய்" இருந்தார் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் ஆதாமின் சந்ததியில் வந்தவராய் இருந்திருப்பாரானால், வழக்கம்போல் ஏதோ ஒரு பூமிக்குரிய தந்தை வாயிலாக தமது ஜீவனைப் பெற்றவராக இருந்திருப்பாரானால், அவரும்கூட மற்ற மனிதர்களைப்போலவே ஆதாமின் பாவத்தினால், புளிப்பானவராய் இருந்திருப்பார்; ஆனால் அவருடைய ஜீவனானது கறைதிறை இல்லாமல், உயர்ந்த பரலோக நிலையிலிருந்து, பூமிக்குரிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலைமையில் வந்ததாய் இருந்தது; ஆகவே அவர் "வானத்திலிருந்து வந்த அப்பம்" என்று அழைக்கப்பட்டார் (யோவான் 6:41). ஆகவே தேவன் அருளியுள்ளதான தூய்மையான, புளிப்பற்ற, மாசற்ற அப்பத்தினைக்குறித்து உணர்ந்துகொள்வோமாக மற்றும் அவரைப் புசிப்போமாக; அதாவது சத்தியத்தைப் புசித்து, ஜீரணிப்பதன் வாயிலாக அவரை நாம் புசிப்போமாக; அதிலும் விசேஷமாக - விசுவாசத்தின் வாயிலாக அவரது நீதியை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுதல் எனும் சத்தியத்தைப் புசிப்போமாக; மேலும் அவரை வழியாகவும், ஜீவனாகவும் அடையாளங்கண்டுகொள்வோமாக.

இந்த நினைவுகூருதல் அடையாளங்கள் தொடர்புடையதான இன்னும் ஆழமான ஓர் அர்த்தத்தை, அப்போஸ்தலன் தெய்வீக வெளிப்படுத்துதலின் வாயிலாக தெரிவித்துள்ளார். அப்பமானது நமது கர்த்தர் இயேசுவை மாத்திரம் அடையாளப் படுத்துகின்றதாயிராமல், நாம் அவரைப் புசித்தப் பிற்பாடு (அவரது நீதியை நமக்குரியதாக்கிக்கொள்வதன் வாயிலாக நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு) நாம் அர்ப்பணத்தின் வாயிலாக, உலகத்திற்கான உணவாகிய அந்தப் பிட்கப்பட்ட ஒரே அப்பத்தின் பாகமாக, நாம் அவரோடு இணைந்தவர்களானோம் என்றும் அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். (1 கொரிந்தியர் 10:16) இது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளாகிய நாம், எதிர்க்கால மகிமைகளில் அவரோடுகூட உடன் சுதந்தரர்களாகுவதற்கும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதும், பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஜீவன் வழங்குவதுமான மாபெரும் வேலையில் பங்காளிகளாகுவதற்குமுரிய நிபந்தனையாய்க் காணப்படுகின்ற கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும் இப்பொழுது பங்கடைவதற்கான சிலாக்கியத்தினை உடையவர்களாய் இருக்கின்றோம் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

இதே கருத்தானது, அப்போஸ்தலனால் மீண்டும் மீண்டுமாகவும், பல்வேறு அடையாளங்களினாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அவை அனைத்தைக்

காட்டிலும், இவ்வடையாளமே ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகின்றது; அதாவது தங்கள் தலையோடுகூட (கிறிஸ்துவின் சரீரமாகிய - கொலோசியர் 1:24 பார்க்கவும்) சபையே இப்பொழுது பிட்கப்படுகின்றதான "ஒரே அப்பமாக" இருக்கின்றனர். இது நமது தலையானவருடனான நமது ஐக்கியத்திற்கும், உறவிற்கும் குறிப்பிடத்தக்கதான விவரிப்பாய்க் காணப்படுகின்றது.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்;" "அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 – KJV; திருவிவிலியம்)

'திராட்சரசமானது' நமது கர்த்தரினால் பலிச்செலுத்தப்பட்ட ஜீவனை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மரணத்தில் கையளிக்கப்பட்ட ஜீவனுக்கான அடையாளம்)" (மத்தேயு 26:27, 28).

பாவத்தின் காரணமாக ஆதாமின் சந்ததி இழந்துபோனதான் ஜீவனுக்கான மீட்கும்பொருளாகக் கர்த்தர் தமது ஜீவனைக் கொடுப்பதன் மூலமே, புதிய உடன்படிக்கையின் கீழ் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் வாயிலாக மனிதர்களுக்கு ஜீவனுக்கான உரிமை கடந்துவர முடியும். (உரோமர் 5:18, 19). சிந்தப்பட்ட இரத்தமானது, "அனைவருக்குமான மீட்கும் பொருளாக" (விலையாகக்) காணப்பட்டது; இது அனைவருக்காகவும், நமது மீட்பரினாலே கொடுக்கப்பட்டதாய் இருந்தது; ஆனால் அவர் பாத்திரத்தைச் சீஷர்களிடத்தில் கொடுத்து, அதைப் பருகும்படிக்கு அவர்களிடம் கூறினதாவது, தம்முடைய பாடுகளில் அவர்கள் பங்காளிகளாகுவதற்கான அல்லது பவுல் குறிப்பிட்டுள்ளதுபோன்று "கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதற்கான" அழைப்பாய்க் காணப்பட்டது (கொலோசெயர் 1:24). விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு, நாமாய் முன்வந்து கிறிஸ்துவின் காரணங்களை/நோக்கங்களை ஆதரிப்பதின் வாயிலாக, அவரது பாடுகளில் பங்குகொள்வோமானால், நாம் தேவனால் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகவும் மற்றும் இயேசுவின் பாடுகளில் பங்கடைபவர்களாகவும் கருதப்படுவோம் என்பதே நம்முன் வைக்கப்பட்ட காரியமாகும். "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் (சிந்தப்பட்ட இரத்தம் - மரணம்) பங்குகொள்ளுதல் அல்லவா?" (1 கொரிந்தியர் 10:16 திருவிவிலியம்). "பாத்திரத்தினுடைய" மதிப்பினை நாம் அனைவரும் உணர்ந்தவர்களாக, கிறிஸ்துவோடுகூட, அவரது பாடுகள் மற்றும் அவமானத்தின் "பாத்திரத்தில்" பங்குகொள்வதற்கான வாய்ப்பிற்காக, தேவனை ஸ்தோத்திரிப் போமாக; இப்படியானவர்கள் அனைவரும், அவரோடுகூட மகிமைப்படுத்தப்படுவர்

என்ற நிச்சயமும் கொண்டிருக்கலாம். (உரோமர் 8:17)

பாத்திரமானது அவரது அவமானத்தில் நமது பங்குகொள்ளுதலையும், அவரது பலியில் நமது பங்குகொள்ளுதலையும், அதாவது நமது மனுஷீகத்தின் மரணத்தையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில், நமது கர்த்தரும், பாத்திரத்திற்கு இந்த அர்த்தத்தைச் சாற்றினவராய் இருந்தார். உதாரணத்திற்கு அவரது சிங்காசனத்திலுள்ள எதிர்க்கால மகிமைக் குறித்த வாக்குறுதியை அவரது சீஷர்களில் இருவர், அவரிடத்தில் கேட்டபோது, அவரோ: "நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கக்கூடுமோ?" என்றார். அவர்களது இருதயப்பூர்வமான உறுதிமொழியின் நிமித்தமாக, "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்" என்றார். திராட்சப்பழரசமானது, இரத்தம்/இரசம் வெளியே வருமளவுக்குத் திராட்சையைப் பிழிவதை மாத்திரம் குறிக்காமல், பிற்பாடு கடந்துவரும் புத்துணர்வையும்கூடக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; ஆகையால் "கிறிஸ்துவின் பாடுகளில்" இப்பொழுது பங்குகொள்ளும் நாம், அவரது மகிமைகளிலும், கனங்களிலும் மற்றும் அழியாமையிலும் சீக்கிரத்தில் பங்குகொள்வோம் - அதாவது இராஜ்யத்தில் அவரோடுகூடப் புதிய திராட்சரசத்தைப் பருகும்போது ஆகும்.

ஆகையால் மிகவும் அன்புக்குரியவர்களே, நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்குக் கூடுகையில் நாம் செய்கிற காரியத்தினுடைய அர்த்தத்தினை மனதிற்குக் கொண்டுவருவோமாக; அவருடைய ஜீவனால் ஊக்குவிக்கப்பட்டு, ஜீவ அப்பத்தினால் பலப்படுத்தப்பட்டுள்ள நாம், அவருடைய மரணத்திற்குள்ளாக அவரோடுகூடப் பானம்பண்ணுவோமாக மற்றும் மற்றவர்களைப் போஷிக்கத்தக்கதாக அவரோடுகூட நாம் பிட்கப்பட வேண்டும் என்று முன்பில்லாத அளவுக்கு மிகவும் உறுதியுடன் முன்னேறுவோமாக. "நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" (2 தீமோத்தேயு 2:11, 12).

## யார் பங்குகொள்ளலாம்?

கிறிஸ்துவின் அங்கங்கள் அனைவரும், ஒருவேளை ஒருவர் தனியாக இருப்பின், அவருங்கூட ஆண்டவரோடு நினைவுகூருதலை அனுசரிக்கலாம்; ஆனால் கூடுமான மட்டும் அந்த ஒரே அப்பத்தின் அங்கங்கள் அனைவரும் ஒன்றுகூடிட வேண்டும். அனுசரிப்பில் சம்பிரதாயங்கள் எதுவும் வேண்டாம் என்றாலும், "சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்பட" வேண்டும்.

மற்றுமொரு கருத்து: இப்படியாக "நம்முடைய பஸ்காவை" (அ) அதன் ஆண்டு நிறைவு நாளில் அதை நினைவுகூருவது ஏற்றக் காரியமாக இருப்பினும், இன்னொரு கோணத்தில் நாம் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும், அவரைப் புசித்துப் பானம்பண்ணுகிறவர்களாக இருந்து, நமது கர்த்தருடன் இந்தப் பரிசுத்தமான ஐக்கியம் கொண்டவர்களாய் இருக்கின்றோம் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. இஸ்ரயேலர்கள் தங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியினை, "கசப்பான கீரைகளுடன்" புசித்த இரவானது, முழுச் சுவிசேஷ யுகத்திற்கும் நிழலாய் இருக்கின்றது; மேலும் அவர்கள்

எகிப்திலிருந்து, அடுத்து வந்த காலை வேளையில் விடுதலையானார்கள். இப்படியாகவே நம்முடைய விஷயத்திலுங்கூடக் காணப்படுகின்றது, அதாவது நாம் நம்முடைய ஆட்டுக்குட்டியை, கசப்பான சோதனைகளுடனும், பொல்லாங்கனுடைய உபத்திரவங்களுடனும் தற்கால யுகத்தில் புசிக்கின்றோம், ஆனால் காலையிலோ களிப்பும் மற்றும் பூமியிலிருந்தும், தீமையின் ஆளுகையிலிருந்தும், கொடுமைகளிலிருந்தும் நமக்கான விடுதலையும் கடந்துவருகின்றது. காலை ஏற்கெனவே விடிந்துகொண்டிருக்கின்றது, ஆகவே "கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றிடுவதற்கு" அதிகம் துரிதப்படுவோமாக. (கொலோசெயர் 1:24)

(கர்த்தருடைய) இந்தக் கட்டளையின் அர்த்தம் தொடர்பாக, நாம் மேலே முன்வைத்திட்ட கருத்துக்களை, அப்போஸ்தலனாகிய பவுல் வலியுறுத்துபவராக இருந்து, அதன் அர்த்தம் பற்றின சரியான புரிந்துகொள்ளுதலுக்கான அவசியத்தைச் சுட்டிக்காட்டுகின்றார். அவர் பின்வருமாறு எச்சரிக்கின்றார்: "இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, (அதன் அர்த்தம் குறித்த புரிந்துகொள்ளுதலுடனும் மற்றும் உணர்ந்துகொள்ளுதலுடனும்) இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் (அதன் உண்மையான அர்த்தத்தினை - கிறிஸ்துவின் பாடுகளிலும் மற்றும் மரணத்திலும் உள்ள நம்முடைய பங்கெடுத்தலை சரியாய்ப் புரிந்துகொள்ளாத காரணத்தினால்) இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதி உள்ளவர்களுமாயிருக்கிறார்கள் அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்." (1 கொரிந்தியர் 11:27-30)

பவுலினுடைய கருத்துக்களிலுள்ள உண்மைக்கு நாம் ஒவ்வொருவரும் சாட்சிப் பகர முடியும். சபையில், அதாவது பெயர்ச் சபையில் மாத்திரமல்லாமல், உண்மையான சபையின் அங்கத்தினர்களிலும் அநேகர், "பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டுள்ளவர்களில்" அநேகர், பலவீனமடைந்து, வியாதிப்பட்டுள்ளனர் மற்றும் அநேகர் முற்றிலும் நித்திரைக்குள் போய்விட்டனர், அதாவது ஆவிக்குரிய காரியங்களுக்கு மரித்துப் போய்விட்டனர் மற்றும் மரித்துப்போன கிளைகளென, திராட்சச்செடியிலிருந்தும், ஜெயங்கொள்ளும் சபையிலிருந்து வெட்டப்பட்டுப் போய்விட்டனர். (யோவான் 15:2)

ஆகவே நாம் வருடந்தோறும் நம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளும்போது, நாம் பலவான்களாகவும், ஆவிக்குரிய உற்சாகத்தினால் நிரப்பப்பட்டவர்களாகவும் காணப்பட வேண்டுமெனில், "மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காதவர்களாகக்" காணப்பட வேண்டுமெனில், நாம் நம்மைச் சோதித்து அறிந்துகொள்வோமாக மற்றும் நாம் ஏற்றக் காலத்தில் அவருடைய மகிமையில் பங்கடையத்தக்கதாக இப்படியாகப் பாடுகளிலும், அந்தச் சின்னங்களிலும் பங்குகொள்வோமாக!

# கர்த்தருடைய இராப்போஜனம்

***"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." 1 கொரிந்தியர் 5:7, 8***

ஒவ்வொரு வருடமும் நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டுநிறைவு நாள் வருகையில், புதிய வாசகர்களுக்காகவும், இந்த விலையேறப்பெற்ற சத்தியங்களைக் கவனத்திற்குக் கொண்டுவருவதன் மூலம் நம் அனைவருடைய ஞாபகங்களைப் புத்துணர்வுபண்ணத்தக்கதாகவும், அவரது மரணத்தை நினைவுகூர்ந்து ஆசரிப்பதினுடைய ஏற்புடைமையை மீண்டும் குறிப்பிடுவது அவசியமெனத் தோன்றுகின்றது.

பஸ்கா இஸ்ரயேலர்களுடைய மிக முக்கியமான பயபக்திக்குரிய அனுசரிப்புகளில் ஒன்றாக இருந்தது மற்றும் இன்னமும் இருந்து வருகின்றது. இது நிழலான ஜனங்களென அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட "நியாயப்பிரமாணத்தினுடைய" முதலாம் அம்சமாகக் காணப்பட்டது.

இவ்வனுசரிப்பு நிறுவப்பட்ட விவரங்கள் யாத்திராகமம் 12-ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. பழுதற்ற ஓர் ஆட்டுக்குட்டி அடிக்கப்பட வேண்டும்; அதன் இரத்தமானது, வீட்டு வாசலினுடைய நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் தெளிக்கப்படுகின்றது மற்றும் இப்படியாக தெளிக்கப்பட்டுள்ள வீடுகளுக்குள், குடும்பத்தினர்கள் அந்த ஆட்டுக்குட்டியினுடைய மாம்சத்தை, புளிப்பில்லாத அப்பத்துடனும், கசப்பான கீரையுடனும் புசித்தார்கள். (யூதர்களுடைய முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியின்) அந்த இரவில், தெளிக்கப்பட்ட இரத்தத்தின் காரணமாகவும், ஆட்டுக்குட்டி புசிக்கப்பட்டதின் காரணமாகவும், இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் கடந்துபோகப்பட்டார்கள் அல்லது எகிப்தியர்களின் முதற்பேறானவர்கள் சந்தித்திட்ட மரணத்தின் வாதையினின்று தப்புவிக்கப்பட்டார்கள். இச்சம்பவத்தின் காரணமாகவும் மற்றும் அடுத்த நாளில் இஸ்ரயேலர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று, சுதந்திரமடைந்து வெளியேறினதின் காரணமாகவும், தேவனுடைய கட்டளையின் பேரில், இஸ்ரயேலர்கள் ஒவ்வொரு வருடமும், அதன் ஆண்டு நிறைவு நாளில் அதை நினைவுகூர்ந்து ஆசரித்தார்கள். (யாத்திராகமம் 12:14)

இஸ்ரயேலர்கள் இந்த அனுசரிப்பினுடைய எழுத்துக்களை மாத்திரமே பார்த்தார்களே ஒழிய, நிழலாகிய அதன் அர்த்தத்தைப் பார்க்கவில்லை. அப்போஸ்தலனை 1 கொரிந்தியர் 5:7-ஆம் வசனத்தினுடைய வார்த்தைகளை எழுதும்படிக்கு ஏவி, அவ்வனுசரிப்பிற்குரிய அர்த்தத்திற்கான திறவுகோலை ஒருவேளை தேவனுடைய பரிசுத்த ஆவியானது, நமக்குக் கொடுக்கவில்லையெனில், நாமும் இஸ்ரயேலர்களைப்போலவே இருளில் காணப்பட்டிருப்போம். "ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." (1 கொரிந்தியர் 5:7)

இப்படியாக இக்காரியத்தின் மீது, பரிசுத்த ஆவியானது நமது கவனத்தைக் கொண்டுவந்த பிற்பாடு, மேலும் தேவனுடைய ஆட்டுக்குட்டியாகிய இயேசுதான், பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய நிஜம் என்பதையும், இஸ்ரயேலின் முதற்பேறானவர்களுக்கு,

நிழலான ஆட்டுக்குட்டியினுடைய மரணம் அவசியமாய் இருந்ததுபோன்று, இயேசுவினுடைய மரணமானது, முதற்பேறானவர்களாகிய சபை மரணத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்கு அவசியமாய் இருக்கின்றது என்பதையும் தெளிவாய்க் காண்பிக்கக்கூடிய மற்ற வேதவாக்கியங்களையும் நாம் கண்டுபிடித்தோம். இப்படியாகப் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு, நாம் இப்பொழுது தம்முடைய சீஷர்களுடன், கடைசி பஸ்காவைப் புசித்திட்ட இயேசுவின் வார்த்தைகளினிடத்திற்கும், செயல் பாடுகளினிடத்திற்கும் கடந்துவருகின்றோம்.

தேவன் மிகவும் சரியாய்ச் செயல்படுபவர் ஆவார்; நிழலான ஆட்டுக் குட்டியானது, முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியில் அடிக்கப்பட்டக் காரியமானது, தேவனுடைய திட்டத்தில், இயேசு அதே கால வேளையில் மரிப்பார் என்ற உண்மைக்கான நிழலாக (அ) முன்னடையாளமாக இருந்தது. இயேசு தம்முடைய சீஷர்களுடன் பஸ்காவை அனுசரிக்கவும் மற்றும் அதே நாளில் உண்மையான "ஆட்டுக்குட்டியென" அடிக்கப்படவும்தக்கதாக தேவன் யூதர்கள் மத்தியில் காலக் கணக்கிடுதலை ஒழுங்குப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. (நாளினுடைய கணக்கிடுதல் விஷயத்தில், ஒரு நடுராத்திரியிலிருந்து, மறு நடுராத்திரி வரை என்று இப்பொழுது காணப்படும் வழக்கத்தின்படி யூதருடைய நாள் கணக்கீடு காணப்படாமல், மாறாக மாலை ஆறு மணிக்கு ஆரம்பித்து, அடுத்துவரும் மாலை 6 மணிக்கு நிறைவடைவதாய் இருக்கின்றது). ஆகவே இயேசுவும், சீஷர்களும் பஸ்காவை சுமார் 8 மணியளவு புசித்தார்கள் மற்றும் அதே இரவில் அவர் காட்டிக்கொடுக்கப் பட்டார் மற்றும் அதே நாளில்தானே மரித்தார்; இப்படியாகவே அனைத்து எழுத்துக்களும், எழுத்தின் உறுப்புகளும் நிறைவேற வேண்டியிருந்தது மற்றும் நிறைவேறவும் செய்தது.

"இதோ உன் இராஜா வருகிறார்" எனும் தீர்க்கத்தரிசனத்தை நிறைவேற்றும் வண்ணமாகவும் மற்றும் அதே வேளையில் பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்படுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக அது வீட்டிற்குள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற பஸ்கா நிழலிலுள்ள அம்சத்தினை நிறைவேற்றும் வண்ணமாகவும், இயேசு தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக, கழுதையின்மேல் ஏறி, பட்டணத்திற்கு வந்தபோது, தாம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக அல்லது நிராகரிக்கப்படத்தக்கதாக தம்மை ஜனங்களுக்கு முன்வைத்தார். (மத்தேயு 21:4; யாத்திராகமம் 12:3) "பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார் . . . . . . மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு, குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்" என்று நாம் வாசிக்கிற பிரகாரமாக, பஸ்காவிற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக, இயேசு தம்மை இறுதியாக இஸ்ரயேல் ஜாதியாருக்கு (அ) வீட்டாருக்கு முன்வைத்தார் (யோவான் 12:1, 12, 13). அவர்களது இராஜா

கழுதைக்குட்டியின் மீது ஏறி, அவர்களிடத்தில் வந்தார். அவரோ அவர்களுக்காகக் கண்ணீர்விட்டு, "இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள்" என்று கூறினார். (மத்தேயு 23:38, 39)

இயேசு பஸ்காவினுடைய உட்கருத்தை அறிந்திருந்தார், ஆனால் சீஷர்களோ அறிந்திருக்கவில்லை. இயேசு தனிமையில் காணப்பட்டார்; எவராலும் அவரைப் புரிந்துகொள்ள முடியாது; எவராலும் அவரை உற்சாக மூட்ட முடியாது. அவர் காரியங்களை சீஷர்களுக்கு விவரித்திருந்தாலுங்கூட, அவர்களால் அவரது விளக்கத்தைப் புரிந்துகொள்ளவோ (அ) உணர்ந்துகொள்ளவோ முடியாது, காரணம் அவர்கள் இன்னமும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. அவர்கள் ஆதாமின் பாவத்திலிருந்து, நீதிக்கு ஏதுவாய்த் தீர்க்கப்படாதது வரையிலும், ஜெநிப்பிக்கப்படவும் முடியாது - அதாவது அவர்களை மரணத்தின் வல்லமையினின்று மீட்டுக்கொள்ளும் இரத்தத்தைச் சிந்தின அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய புண்ணியத்தினால் பாவத்திலிருந்து கடந்துபோகப்படுவது அல்லது விடுவிக்கப்பட்டதாகக் கருதப்படும் நிலைவரும் வரையிலும் அவர்கள் ஜெநிப்பிக்கப்பட முடியாது.

முன்பு ஒருவரும் கடந்து செல்லாத இடுக்கமான வழியில், இயேசு இவ்வாறு தனிமையாகக் கடந்து செல்லுகையில் - நமக்கான முன்னோடியாகவும், தலைவராகவும் அவர் இவ்வழியில் தனிமையாகக் கடந்து செல்லுகையில், அவரது இருதயமானது, சில சமயங்களில், மரணத்திற்கு ஏதுவாக மிகவும் துக்கமடைந்ததில் ஆச்சரியமடைவதற்கு ஒன்றுமில்லை. "வேளை வந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொன்னார்." (லூக்கா 22:14-16) உண்மையான ஆட்டுக்குட்டி அன்றைய தினமே இன்னும் கொஞ்சம் நேரம் கழித்து அடிக்கப்படுவதன் மூலமாக எப்படிப் பஸ்காவின் காரியம் நிறைவேற ஆரம்பிக்கும் என்பதைச் சீஷர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென இயேசு ஆசையாயிருந்தார்.

சீஷர்களால் கிரகித்துக்கொள்ள முடிகிற மட்டும் கிரகித்துக் கொள்ளத்தக் கதாக, இயேசு பஸ்காவின் அர்த்தம் பற்றின சத்தியத்தை வெளிப்படுத்துவதே, அவர் சீஷர்களுடன் இந்தப் பஸ்காவைப் புசிப்பதற்கு விசேஷமாக ஆசைப்பட்டதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம். "அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி: நீங்கள் இதைவாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்;" "பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து:

இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்.” (மாற்கு 14:22; லூக்கா 22:17-20)

நிழலான ஆட்டுக்குட்டியிலிருந்து, நிஜமாகிய தம்மிடத்திற்கு சீஷர்களுடைய மனங்களைத் திருப்பிடுவதும், தாம் நிறைவேற்றவிருக்கும் நியாயப்பிரமாணத்தினுடைய பஸ்காவெனும் அம்சத்தை அனுசரிப்பது இனிச் சரியாய் இருக்காது என்பதைக் காண்பிப்பதும்தான் ஆண்டவருடைய நோக்கமாய் இருந்தது என்பதில் நமக்கு ஐயமில்லை. (பஸ்காவினுடைய) ஆட்டுக்குட்டியினுடைய இடத்தில் வரும் அவரைப்பற்றின நினைவுகூருதலின் அம்சங்களாக சீஷர்களுக்கு இனி அப்பம் மற்றும் இரசம் இடம்பெறப்போகின்றது. இப்படியாகப் பார்க்கப்படும்போது, “என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்” என்ற இயேசுவின் வார்த்தைகள் ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகின்றது; அதாவது நிழலான விடுதலையை நினைவுகூரும் வண்ணமாக, இனிமேல் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியைக் கொல்ல வேண்டாம், மாறாக உண்மையான விடுதலைக்கு, உண்மையான கடந்துபோகுதலுக்கு ஆதாரமாய்க் காணப்படும் என்னுடைய மாம்சத்திற்கும், ஜீவனுக்கும் அடையாளமாய்க் காணப்படும் அப்பத்தையும், இரசத்தையும் பயன்படுத்துங்கள். ஆகவே என்னையும், என்னுடைய வார்த்தைகளையும் ஏற்றுக்கொள்ளுகிற யாவரும், இதுமுதற்கொண்டு, என்னை நினைவுகூரும்படிக்கு இப்படியாகச் செய்யுங்கள்” என்ற விதத்தில் இயேசுவின் வார்த்தைகள் காணப்பட்டது.

இப்படியாக இராப்போஜனத்தை, தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலாகவும், யூதர்களால் அனுசரிக்கப்பட்டு வந்த பஸ்காவிற்கு மாற்றாகவும் நமது கர்த்தர் நிறுவினார். ஏன் முதலில் இயேசு நிழலான ஆட்டுக்குட்டியைப் புசித்தார்? என்று கேட்கப்படலாம். அவர் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவராக பிறந்தார் என்றும், அதன் சகல அம்சங்களையும் அவர் அனுசரிக்க வேண்டியவராக இருந்தார் என்றும் நாம் பதிலளிக்கின்றோம். அவர் தம்முடைய சிலுவையில் நியாயப்பிரமாணத்தை அறைந்துபோட்டு, நியாயப்பிரமாணத்தை முடிவிற்குக் கொண்டுவந்துவிட்டதால், பஸ்கா அல்லது இதற்கு மாற்றாக இடம்பெறும் கர்த்தருடைய இராப்போஜனம் தொடர்புடையதான பிரமாணத்திலிருந்து நாம் விடுதலையுடையவர்களாகக் காணப்படுகின்றோம் -ஆனால் ஒவ்வொரு வருடமும் நமது கர்த்தருடைய மரணத்தின் நினைவு நாளை அனுசரிப்பதை சிலாக்கியம் எனக் கருதுபவர்களில் நாம் அடங்கினவர்களாய் இருக்கின்றோம்; “பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடபபட்டிருக்கிறாரே, ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.” (1 கொரிந்தியர் 5:7-8)

நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்குரிய, மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் இந்தத் தருணமானது எப்போது (அ) ஏன் புறக்கணிக்கப்பட்டுப்போனது என்பதைக் கணிப்பது கடினமான காரியமாகும், ஆனால் சூழ்நிலைகளுக்கு ஏற்பவே

புறக்கணிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. மாபெரும் போதகர் (இயேசு) நினைவுகூருதலின் விஷயத்தில் ஏதோ தவறு செய்துவிட்டார் என்றும், வருடத்திற்கு ஒருமுறை நினைவுகூருதலை அனுசரிப்பதைக் காட்டிலும், அடிக்கடி அனுசரிப்பது அனுகூலமாய் இருக்கும் என்றும் பக்திவைராக்கியமுள்ள சில போதகர்கள் எண்ணியிருப்பார்கள் என்பதிலும், இவர்கள் "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்ற வார்த்தைகள் மூலம், பவுல் நினைவுகூருதலை அடிக்கடி அனுசரித்தாலும் ஒன்றுமில்லை என்று போதித்துள்ள தாகப் புரிந்துகொண்டுள்ளனர் என்பதிலும் ஐயமில்லை (1 கொரிந்தியர் 11:26). ஆனால் நினைவுகூருதல் குறித்துப் பவுல் பேசியுள்ளவைகள் அனைத்தையும் ஜாக்கிரதையாய் ஆராய்ந்துப் பார்க்கும்போது, காரியங்களை இவர்கள் புரிந்துகொண்டுள்ளதுபோன்று அவர் சொல்லவில்லை என்பது உறுதியாகும். "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து" (1 கொரிந்தியர் 11:23). இங்கு இயேசுவினால் தெரிந்துகொள்ளப்பட்டதான நேரம், மிகவும் சரியான நேரமாக மாத்திரமாய் இராமல், நினைவுகூருதலானது அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவிலே நிறுவப்பட்டதை விசேஷித்த வெளிப்படுத்தல் மூலம் கர்த்தரிடத்திலிருந்து, பவுல் பெற்றுக்கொள்ளுமளவுக்கு, அந்த நேரம் மிகவும் சரியான நேரமாகக் காணப்பட்டது என்பதையும் கவனிக்கவும்.

கர்த்தருடைய மரணத்திற்குரிய சரியான நினைவுகூருதலை அனுசரிக்கத் தக்கதாக, சபையானது எத்தனை தரம் அந்த அப்பத்தைப் பிட்டு, அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணிட வேண்டும்? ஆண்டுதோறும் அவரது மரணத்தினுடைய நினைவு நாளில் மாத்திரமே செய்ய வேண்டும். எப்படி அமெரிக்காவிற்கான சுதந்திரமானது, வருடந்தோறும் அது சுதந்திரமடைந்த நாளாகிய ஜூலை 4-ஆம் தேதியில் கொண்டாடப்படுகின்றதோ, இப்படியான விதத்திலேயே கர்த்தருடைய நினைவுகூருதலும் அனுசரிக்கப்பட வேண்டும். (அமெரிக்காவின் சுதந்திரத்தை) ஜூலை 4-ஆம் தேதியில் கொண்டாடாமல், பொருத்தமற்ற பல்வேறு தினங்களில் சிலர் கொண்டாடிட முற்பட்டால், அது விநோதமாகவே பார்க்கப்படும். மேலும் ஜூலை 4-ஆம் தேதியைக்குறித்து "இதை நீங்கள் கொண்டாடும் போதெல்லாம், நீங்கள் தேசத்தினுடைய பிறப்பை அறிவிக்கிறவர்களாய் இருப்பீர்கள்" என்று சொல்லப்பட்டால், ஒரு வருடத்தில் அநேகம் தருணங்களில் கொண்டாடப்படுவதைக்குறித்துப் பேசப்பட்டுள்ளதாக யாரேனும் புரிந்துகொள்வார்களா? இப்படியே கர்த்தருடைய இராப்போஜனமும், அதன் ஆண்டுநிறைவு நாளில் மாத்திரமே அனுசரிக்கப்பட வேண்டும்.

ஆதித் திருச்சபையினர் கர்த்தருடைய இராப்போஜனத்தை வாரத்தினுடைய முதல்நாள்தோறும் புசித்து வந்ததைச் சுட்டிக்காட்டும் பதிவுகள், வேதவாக்கியங்களில் காணப்படுவதைத் தாங்கள் காண்பதாக சிலர் எண்ணுகின்றனர். இது ஒருவேளை உண்மையானால், இக்காரியத்தில் இதற்குமேலாக கூறிடுவதற்கு எங்களுக்கு

எதுவுமில்லை என்பதே நமது பதிலாக இருந்திருக்கும்; ஆனால் இப்படியான பதிவுகள் எங்கிருக்கின்றது? இவர்கள் நமக்கு "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்" என்ற அப்போஸ்தலர் 20:7-ஆம் வசனத்தைக் காட்டுகின்றனர். ஆனால் இங்குக் கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலாகத்தான் அப்பம் பிட்கப்பட்டுள்ளது என்பதற்கான ஏதேனும் சாட்சியம் உள்ளதா? ஏன் இங்கு நடைபெற்ற காரியம் கர்த்தருடைய இராப்போஜனம் என்று குறிப்பிடப்படவில்லை மற்றும் திராட்சரசம் ஏன் தவிர்க்கப்பட்டுள்ளது? அப்பமாகிய அடையாளத்தைப்போன்று பாத்திரம் எனும் அடையாளமும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லையா? எம்மாவு என்னும் கிராமத்தில் "அவர் அப்பத்தைப் பிட்டப்போது" இரண்டு சீஷர்கள் இயேசுவை அடையாளம் கண்டுகொண்டார்கள் என்பதாக எழுதப்பட்டுள்ளப்படியால், அங்குப் பிட்கப்பட்டது சாதாரணமான போஜனத்திலும் மேலானது என்று யாரேனும் சொல்லக்கூடுமோ? அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தைப் புசித்தார்கள் என்று யாரேனும் சொல்லக்கூடுமோ? யாரும் இப்படியாகச் சொல்லமாட்டார்கள்.

வாரத்தின் முதல் நாளானது (அ) கர்த்தருடைய நாளானது, நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்குரிய சரியான நாளாய் இருப்பதற்குப்பதிலாக மிகவும் பொருத்தமற்றதாக இருக்கின்றது. இயேசுவின் மரணத்தையும், கர்த்தருடைய இராப்போஜனம், கெத்செமனே மற்றும் கல்வாரியின் துயரமான காட்சிகளையும் நினைவுகூருவதற்குரிய ஒரு நாளாக, வாரத்தின் முதல் நாளானது ஆதிச் சபையினரால் நியமிக்கப்படுவதற்கு (அ) பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக, வாரத்தின் முதல்நாளானது, அவர்களுக்கு மகிழ்ச்சியின் நாளாகவும், களிகூருதலின் நாளாகவும் மற்றும் "கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்துள்ளார்" என்று கூறி, ஓசன்னா சாற்றுவதற்குரிய நாளாகவும் காணப்பட்டது. இதனாலேயே இந்நாளின் பெயர் இப்படியாகக் காணப்படுகின்றது மற்றும் இதனாலேயே சபையால் இந்நாளானது தொழுதுக்கொள்வதற்கும், துதிப்பதற்குமுரிய நாளாக பொதுவாய் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

வாரத்தினுடைய முதல்நாளாகிய, கர்த்தருடைய நாள்தோறும், அப்பம் பிட்கும் வழக்கமானது, அநேகமாக சீஷர்கள் சொற்பமானவர்களாய்க் காணப்பட்டப்படியால், கர்த்தருடைய நாளில் ஒன்றுகூடுவதற்கெனச் சில சமயங்களில் நீண்ட தூரம் பிரயாணப்பட்டு வருகையில், ஒன்றுசேர்ந்து போஜனம் பண்ணுவதிலிருந்து ஆரம்பித்தக் காரியமாக இருக்க வேண்டும். இன்னும் அநேகமாக முதல் நாளில் அப்பம் பிட்கப்படும்போது, இயேசு உயிர்த்தெழுந்தப் பிற்பாடு, எப்படி அடிக்கடி முதல் நாளன்று தங்களுக்குத் தோன்றி காட்சி அளித்தார் என்பதையும், எப்படித் தாங்கள் புசித்துக்கொண்டிருக்கும்போது, இயேசு இப்படியாக தோன்றினார் என்பதையும் அவர்கள் நினைவுகூர்ந்தபோது, எண்ணங்களிலும், சிரத்தையிலும் ஏற்பட்ட ஆசீர்வாதமான ஓர் இணைதலின் காரணமாகவுங்கூட இந்த வழக்கம் ஆரம்பித்திருக்க வேண்டும். (லூக்கா 24:35)

சபையில் கர்த்தருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் கொண்டாடத் தக்கதாக, ஒரு காலத்தில் நிறுவப்பட்டிருந்த இந்த வழக்கத்தினுடைய மங்கின சுவடுகளானது, உரோமன் திருச்சபை மற்றும் ஆயர் திருச்சபைகளால் "புனித வெள்ளி" என்ற நவீன தோற்றத்தில் இன்னமும் அனுசரிக்கப்பட்டு வந்தாலும், மற்றக் கிறிஸ்தவ பிரிவுகளால் கிட்டத்தட்டக் கவனிக்கத் தவறப்பட்டுள்ளது.

காவல் கோபுரத்தின் வாசகர்களில் அநேகர், நமது கர்த்தருடைய மரணத்தின் நினைவுகூருதலை, அதன் ஆண்டு நிறைவுநாளில் அனுசரிப்பதை வழக்கமாய்க் கொண்டிருக்கின்றனர். கர்த்தருடைய மரணமானது, நிழலாகிய பஸ்காவின் இடத்தை எடுத்துக்கொள்கின்றது என்று நம்புகின்ற நாம், அந்த நாளை யூதர்களின் (அ) சந்திரன் நாள்காட்டியின்படி கணக்கிடுகின்றோம்; ஆகவே இந்நாளானது பெரும்பாலும், சூரிய நாள்காட்டியின்படி கணக்கிடப்படும் "புனித வெள்ளியின்" தியதியிலிருந்து முற்றிலும் வேறு தியதியாகவே காணப்படுகின்றது. இது ஒரே கணக்கிடுதலின்படி இருந்தாலும், துல்லியமாய் அல்ல மற்றும் உண்மையான சந்திர தேதிக்கு அருகாமையிலுள்ள வெள்ளி மற்றும் ஞாயிறு நாளினுடைய ஆசரிப்பாயிருக்கின்றது. (1886-ஆம் வருடத்தில்) இந்த வருடத்தில் கர்த்தருடைய இராப்போஜனத்தின் ஆண்டுநிறைவு நாளின் ஆசரிப்பானது, ஏப்ரல் 18-ஆம் தியதியன்று, ஞாயிறு, மாலை 8 மணிக்கு இடம்பெறும்; ஆகவே திங்கள் பிற்பகல் 3 மணியானது சிலுவை மரணத்திற்கான ஆண்டுநிறைவு நாளாய் இருக்கும்; எபிரெயர்களால் ஆசரிக்கப்படுகின்றதான பஸ்கா பண்டிகை வாரமானது அந்த நாளின் மாலை 6 மணியுடன் துவங்குகின்றது.

1 கொரிந்தியர் 11:26-ஆம் வசனத்தில் இடம்பெறும் பவுலினுடைய போதனையானது, நமது பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய மரணத்திற்கு நினைவுகூருதலாகவும் மற்றும் அவருடைய மரணத்திலுள்ள நம்முடைய பங்கடைதலுக்கு அடையாளமாகவும் காணப்படுகின்ற இந்த எளிமையான மற்றும் தாக்கத்தினை ஏற்படுத்தும் ஆசரிப்பை, நாம் கர்த்தருடைய மகிமையான வந்திருத்தலை அறிந்துகொண்ட மாத்திரத்தில், நிறுத்திவிட வேண்டும் என்பதாக காணப்படுகிறதில்லை. இவ்வாசரிப்பானது இந்த உண்மைகளை நமக்கு நினைப்பூட்டுகிறதாகவும், வருடாந்திர நினைப்பூட்டுதலாகவும், அவருடன் பலியினாலான நம்முடைய உடன்படிக்கையின் புதுப்பித்தலாகவும் காணப்படுகின்றபடியால், அவருடைய இந்தப் பிரசன்ன காலத்தில், நாம் அவருக்கு ஒப்பான மகிமையான சாயலுக்கு மறுரூபமடைவது வரையிலும் - இராஜ்யத்தில் அவரோடுகூட நவமான சந்தோஷத்தின் திராட்சரசத்தை நாம் பானம்பண்ணுவது வரையிலும் - இது ஆசரிக்கப்படுவது ஏற்றதேயாகும்.

## அடையாளங்களினுடைய அர்த்தம்

பிட்கப்பட்ட அப்பம் மற்றும் பாத்திரத்தின் அர்த்தத்தை இங்கு நாம் சுட்டிக்காண்பிப்பது, சிலருக்குப் பயனுள்ளதாய் இருக்கும்.

அப்பத்தைக்குறித்து நமது கர்த்தர் கூறினதாவது: "இது என் மாம்சம்" ஆகும்; அதாவது புளிப்பில்லாத அப்பமானது, நமக்காகப் பிட்கப்பட்ட அல்லது பலிச்

செலுத்தப்பட்ட அவரது மாம்சத்தை, அவரது மனுஷீகத்தை அடையாளப்படுத்துகிறதாய் இருக்கின்றது. அவர் தம்மையே நமக்காகப் பலிச்செலுத்தாதது வரையிலும் நம்மால் நித்தியமான ஜீவனை ஒருபோதும் பெற்றுக்கொள்ளமுடியாது; அவர் சொன்னதுபோல: "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை" (யோவான் 6:53).

இயேசுவின் சரீரம் பிட்கப்பட்டதான காரியமானது, மனிதன் புசித்தால், ஒருபோதும் மரியாமல் இருக்கப்பண்ணுகின்றதான, ஜீவ அப்பத்தை அளிக்கிறதாக மாத்திரம் காணப்படாமல், இன்னுமாக அது ஜீவனுக்கு நேரான "இடுக்கமான வழியையும்" திறந்தது மற்றும் ஜீவனுக்கு நேராய் வழிநடத்துகின்றதான இடுக்கமான வழியில் நடப்பதற்கு உதவியான, ஆவிக்குரிய உணவாகிய சத்தியத்தை நாம் அடையத்தக்கதாக, முத்திரையை உடைத்தது. இப்படியாகப் பிட்கப்பட்ட அப்பமானது, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று தம்மைக்குறித்துக் கூறினவரின் பிட்கப்படுதலை அடையாளப்படுத்துவது பொருத்தமானதே என்று நாம் காண்கின்றோம் (யோவான் 14:6).

ஆகையால் பிட்கப்பட்ட அப்பத்தை நாம் புசிக்கையில் - அவர் மரித்திருக்க வில்லையெனில், அவர் நமக்காகப் பிட்கப்பட்டிருக்கவில்லையெனில், நாம் ஒருபோதும் பிதாவினிடத்திற்கு வந்திருக்க முடியாது என்றும், நாம் என்றென்றும் ஆதாமினுடைய பாவத்தினுடைய சாபத்தின் கீழிலும், மரணத்தினுடைய நுகத்தின் கீழிலும் காணப்பட்டிருந்திருப்போம் என்றும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மற்றுமொரு கருத்து: பயன்படுத்தப்பட்ட அப்பமானது, புளிப்பற்றதாகும். புளிப்பு என்பது கெடுக்கிற ஒன்றாக, சீரழிக்கும் ஒன்றாக இருப்பதினால், பாவத்திற்கான அடையாளமாய் இருக்கின்றது மற்றும் பாவம் மனுக்குலத்தில் கொண்டுவந்ததான சீரழிவையும், மரணத்தையும் அடையாளப்படுத்து கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இந்த அடையாளமானது, நமது கர்த்தர் இயேசு பாவம் இல்லாதவராக இருந்தார் என்பதை, கறைதிறையற்ற ஆட்டுக்குட்டி என்பதை, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாய்" இருந்தார் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் ஆதாமின் சந்ததியில் வந்தவராய் இருந்திருப்பாரானால், வழக்கம்போல் ஏதோ ஒரு பூமிக்குரிய தந்தை வாயிலாக தமது ஜீவனைப் பெற்றவராக இருந்திருப்பாரானால், அவரும்கூட மற்ற மனிதர்களைப்போலவே ஆதாமின் பாவத்தினால், புளிப்பானவராய் இருந்திருப்பார்; ஆனால் அவருடைய ஜீவனானது கறைதிறை இல்லாமல், உயர்ந்த பரலோக நிலையிலிருந்து, பூமிக்குரிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலைமையில் வந்ததாய் இருந்தது; ஆகவே அவர் "வானத்திலிருந்து வந்த அப்பம்" என்று அழைக்கப்பட்டார் (யோவான் 6:41). ஆகவே தேவன் அருளியுள்ளதான தூய்மையான, புளிப்பற்ற, மாசற்ற அப்பத்தினைக்குறித்து உணர்ந்துகொள்வோமாக மற்றும் அவரைப் புசிப்போமாக; அதாவது சத்தியத்தைப் புசித்து, ஜீரணிப்பதன் வாயிலாக அவரை நாம் புசிப்போமாக; அதிலும் விசேஷமாக - விசுவாசத்தின் வாயிலாக அவரது நீதியை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுதல் எனும் சத்தியத்தைப் புசிப்போமாக; மேலும் அவரை வழியாகவும், ஜீவனாகவும் அடையாளங்கண்டுகொள்வோமாக.

இந்த நினைவுகூருதல் அடையாளங்கள் தொடர்புடையதான இன்னும் ஆழமான ஓர் அர்த்தத்தை, அப்போஸ்தலன் தெய்வீக வெளிப்படுத்துதலின் வாயிலாக தெரிவித்துள்ளார். அப்பமானது நமது கர்த்தர் இயேசுவை மாத்திரம் அடையாளப்படுத்துகின்றதாயிராமல், நாம் அவரைப் புசித்தப் பிற்பாடு (அவரது நீதியை நமக்குரியதாக்கிக்கொள்வதன் வாயிலாக நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு) நாம் அர்ப்பணத்தின் வாயிலாக, உலகத்திற்கான உணவாகிய அந்தப் பிட்கப்பட்ட ஒரே அப்பத்தின் பாகமாக, நாம் அவரோடு இணைந்தவர்களானோம் என்றும் அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். (1 கொரிந்தியர் 10:16) இது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளாகிய நாம், எதிர்க்கால மகிமைகளில் அவரோடுகூட உடன் சுதந்தரர்களாகுவதற்கும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதும், பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஜீவன் வழங்குவதுமான மாபெரும் வேலையில் பங்காளிகளாகுவதற்குமுரிய நிபந்தனையாய்க் காணப்படுகின்ற கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும் இப்பொழுது பங்கடைவதற்கான சிலாக்கியத்தினை உடையவர்களாய் இருக்கின்றோம் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

இதே கருத்தானது, அப்போஸ்தலனால் மீண்டும் மீண்டுமாகவும், பல்வேறு அடையாளங்களினாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அவை அனைத்தைக்காட்டிலும், இவ்வடையாளமே ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகின்றது; அதாவது தங்கள் தலையோடுகூட (கிறிஸ்துவின் சரீரமாகிய - கொலோசியர் 1:24 பார்க்கவும்) சபையே இப்பொழுது பிட்கப்படுகின்றதான "ஒரே அப்பமாக" இருக்கின்றனர். இது நமது தலையானவருடனான நமது ஐக்கியத்திற்கும், உறவிற்கும் குறிப்பிடத்தக்கதான விவரிப்பாய்க் காணப்படுகின்றது.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்;" "அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 - KJV ; திருவிவிலியம்)

'திராட்சரசமானது' நமது கர்த்தரினால் பலிச்செலுத்தப்பட்ட ஜீவனை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மரணத்தில் கையளிக்கப்பட்ட ஜீவனுக்கான அடையாளம்)" (மத்தேயு 26:27, 28).

பாவத்தின் காரணமாக ஆதாமின் சந்ததி இழந்துபோனதான ஜீவனுக்கான மீட்கும்பொருளாகக் கர்த்தர் தமது ஜீவனைக் கொடுப்பதன் மூலமே, புதிய உடன்படிக்கையின் கீழ் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் வாயிலாக மனிதர்களுக்கு

ஜீவனுக்கான உரிமை கடந்துவர முடியும். (உரோமர் 5:18, 19). சிந்தப்பட்ட இரத்தமானது, "அனைவருக்குமான மீட்கும் பொருளாக" (விலையாகக்) காணப்பட்டது; இது அனைவருக்காகவும், நமது மீட்பரினாலே கொடுக்கப்பட்டதாய் இருந்தது; ஆனால் அவர் பாத்திரத்தைச் சீஷர்களிடத்தில் கொடுத்து, அதைப் பருகும்படிக்கு அவர்களிடம் கூறினதாவது, தம்முடைய பாடுகளில் அவர்கள் பங்காளிகளாகுவதற்கான அல்லது பவுல் குறிப்பிட்டுள்ளதுபோன்று "கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதற்கான" அழைப்பாய்க் காணப்பட்டது (கொலோசெயர் 1:24). விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு, நாமாய் முன்வந்து கிறிஸ்துவின் காரணங்களை/நோக்கங்களை ஆதரிப்பதின் வாயிலாக, அவரது பாடுகளில் பங்குகொள்வோமானால், நாம் தேவனால் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகவும் மற்றும் இயேசுவின் பாடுகளில் பங்கடைபவர்களாகவும் கருதப்படுவோம் என்பதே நம்முன் வைக்கப்பட்ட காரியமாகும். "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் (சிந்தப்பட்ட இரத்தம் - மரணம்) பங்குகொள்ளுதல் அல்லவா?" (1 கொரிந்தியர் 10:16 திருவிவிலியம்). "பாத்திரத்தினுடைய" மதிப்பினை நாம் அனைவரும் உணர்ந்தவர்களாக, கிறிஸ்துவோடுகூட, அவரது பாடுகள் மற்றும் அவமானத்தின் "பாத்திரத்தில்" பங்குகொள்வதற்கான வாய்ப்பிற்காக, தேவனை ஸ்தோத்திரிப்போமாக; இப்படியானவர்கள் அனைவரும், அவரோடுகூட மகிமைப்படுத்தப்படுவர் என்ற நிச்சயமும் கொண்டிருக்கலாம். (உரோமர் 8:17)

பாத்திரமானது அவரது அவமானத்தில் நமது பங்குகொள்ளுதலையும், அவரது பலியில் நமது பங்குகொள்ளுதலையும், அதாவது நமது மனுஷீகத்தின் மரணத்தையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில், நமது கர்த்தரும், பாத்திரத்திற்கு இந்த அர்த்தத்தைச் சாற்றினவராய் இருந்தார். உதாரணத்திற்கு அவரது சிங்காசனத்திலுள்ள எதிர்க்கால மகிமைக்குறித்த வாக்குறுதியை அவரது சீஷர்களில் இருவர், அவரிடத்தில் கேட்டபோது, அவரோ: "நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கக்கூடுமோ? என்றார். அவர்களது இருதயப்பூர்வமான உறுதிமொழியின் நிமித்தமாக, "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்" என்றார். திராட்சப்பழரசமானது, இரத்தம்/இரசம் வெளியே வருமளவுக்குத் திராட்சையைப் பிழிவதை மாத்திரம் குறிக்காமல், பிற்பாடு கடந்துவரும் புத்துணர்வையும்கூடக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; ஆகையால் "கிறிஸ்துவின் பாடுகளில்" இப்பொழுது பங்குகொள்ளும் நாம், அவரது மகிமைகளிலும், கனங்களிலும் மற்றும் அழியாமையிலும் சீக்கிரத்தில் பங்குகொள்வோம் - அதாவது இராஜ்யத்தில் அவரோடுகூடப் புதிய திராட்சரசத்தைப் பருகும்போது ஆகும்.

ஆகையால் மிகவும் அன்புக்குரியவர்களே, நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்குக் கூடுகையில் நாம் செய்கிற காரியத்தினுடைய அர்த்தத்தினை மனதிற்குக் கொண்டுவருவோமாக; அவருடைய ஜீவனால் ஊக்குவிக்கப்பட்டு, ஜீவ அப்பத்தினால் பலப்படுத்தப்பட்டுள்ள நாம், அவருடைய மரணத்திற்குள்ளாக

அவரோடுகூடப் பானம் பண்ணுவோமாக மற்றும் மற்றவர்களைப் போஷிக்கத்தக்கதாக அவரோடுகூட நாம் பிட்கப்பட வேண்டும் என்று முன்பில்லாத அளவுக்கு மிகவும் உறுதியுடன் முன்னேறுவோமாக. "நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடே கூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" (2 தீமோத்தேயு 2:11, 12).

## யார் பங்குகொள்ளலாம்

இந்த அப்பத்திலும், இந்தப் பாத்திரத்திலும் பங்குகொள்வதற்குத் தனக்கு உரிமை இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானித்துக்கொள்ளும் காரியமானது, அவனவனிடத்தில் விடப்பட்டுள்ளது. ஒருவன் பாவங்களுக்கான மன்னிப்பிற்காக, புதிய உடன்படிக்கையின் இரத்தத்தை விசுவாசித்து, தன்னை சீஷன் என்று அறிக்கைப் பண்ணிக்கொண்டு, கர்த்தருடைய ஊழியத்திற்கென அர்ப்பணம் பண்ணினவனாகக் காணப்படுவானானால், அவனது சக சீஷர்கள் அவனது இருதயத்தை நியாயந்தீர்க்காதிருப்பார்களாக. தேவனால் மாத்திரமே இருதயத்தினைத் தெளிவாய் அறிந்துகொள்ள முடியும்.

இந்த அடையாள சின்னங்களானது, கிறிஸ்துவினுடைய மரணத்தை அடையாளப்படுத்துகின்றபடியால், இந்த அடையாளங்களில் அறியாமையிலும், அபாத்திரமான நிலைமையிலும், சரியற்ற விதத்திலும், அதாவது இந்த அடையாளங்களில் "கர்த்தருடைய சரீரம்" நமக்கான மீட்கும் பொருளாக இருப்பதை அடையாளம் கண்டுகொள்ளாத நிலையிலும் பங்குகொள்ளுதல் குறித்து நாம் அனைவரும் ஜாக்கிரதையாய் இருப்போமாக; ஏனெனில் இப்படியான நிலையில் பங்குகொள்பவன், கர்த்தரைக் கொன்றுபோட்டவர்களில் ஒருவனாக இருப்பான் மற்றும் அடையாளத்தில் அவன் "கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாய் இருப்பான்" (1 கொரிந்தியர் 11:27).

"எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிவானாக;" எந்த மனுஷனும் இந்த அடையாளங்களைப் புசிக்கையில், இவைகள் தனது ஜீவன் மற்றும் சிலாக்கியங்களுக்கான மீட்கும் பொருளென உணர்ந்துகொள்வானாக மற்றும் அதைப் புசிக்கையில் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுப்பதற்கும், மற்றவர்களுக்காகப் பிட்கப்படுவதற்குமெனத் தன்னை அளிக்கப் பெறுகிறவனாகுகின்றான் என்பதையும் உணர்ந்துகொள்வானாக; இல்லையேல் அவன் இப்படிப் போஜனம்பண்ணுவது என்பது அவனது மனசாட்சிக்கு முன்னிலையில், அவனது அன்றாட ஜீவியத்திற்கு - "அவனுக்கு ஆக்கினைத்தீர்ப்பு" வரும்படிக்கு ஏதுவாய் இருக்கும். (1 கொரிந்தியர் 11:28, 29)

நமது நீதிமானாக்கப்படுதலை மாத்திரமல்லாமல், கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும் பங்குகொள்வதற்கான நமது அர்ப்பணித்தலையும் அடையாளப்படுத்து கின்றதான இந்த நினைவுகூருதலுக்குரிய அடையாள சின்னங்களைச் சரியாய் உணர்ந்துகொள்ளாததின் காரணமாக, "அநேகர் பலவீனரும், வியாதியுள்ளவர்களு மாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்" என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். (1 கொரிந்தியர் 11:30) இது உண்மை என்பது உறுதியே

ஆகும்; இந்த இராப்போஜனத்தில் அடையாளப்படுத்தப்படும் உண்மைகளை உணர்ந்துகொள்ளாததும், கவனிக்கத் தவறினதுமே, பெயரளவிலான திருச்சபையானது பெலவீனமாயும், வியாதிப்பட்டும், நித்திரை நிலைமையிலும் இருப்பதற்குமான காரணமாய்க் காணப்படுகின்றது. மீட்கும் பொருள் பலிக்குறித்தும், தங்கள் கர்த்தருடன் உலகத்திற்கான பலியிலும், அவருடைய பாடுகளிலும் தங்களுக்கான பங்கைக் குறித்ததுமான தெளிவான உணர்ந்துகொள்ளுதலே பரிசுத்தவான்களை முழுமையாய் விழிப்படையப் பண்ணுகிறதாகவும், பலப்படுத்துகிறதாகவும் இருக்கின்றதே ஒழிய வேறு எதுவுமில்லை. "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்." (1 கொரிந்தியர் 11:28)

## உபத்திரவங்களினாலே பூரணப்படுதல்

பரிசுத்தரும், குற்றமற்றவரும், பாவமற்றவருமான - அவரே
உபத்திரவங்களினாலே பூரணப்படுத்தப்பட்டாரெனில்,
நீயோ - பரலோகை அடையவும், பிதாவின் அங்கீகரிப்பைப் பெற்றிடவும்,
கடினமற்ற பாதையில் நடக்க நாடிடுவாயோ?
ஆ, இல்லை! எந்தன் ஆத்துமாவே வேதனையும், துக்கமும் - உன்
அலங்கத்திற்குள் வருகையில், அவற்றை வரவேற்க விரைந்திடு;
மெல்லிய குரல்தனிலே இருதயத்தின் ஆழத்தில் சொல்லிடு - நீ
"என் இராஜாவை நான் எவ்வளவாய் நேசிக்கின்றேன்;
அவருக்காக நான் எதையும் செய்வேன்" என்று
காண்பிக்க மற்றொரு வாய்ப்பு என்றே.
துன்பத்தின் நாட்களில் நீ காணப்படுகையிலே - உந்தனை
இவ்விதமாய்க் காயப்படுத்தின அவர் கரங்களைப் பற்றிக்கொள்.
தம் குமாரனை நேசித்ததுபோல உனை நேசிக்கிறவரின் மார்புதனில் சாய்ந்திடு.
வேண்டிடு - "கர்த்தாவே துன்பங்கள் தராமல் இருந்திடாதேயும்
மாசனைத்தையும் சுட்டெரித்திடும" என்றே.
பற்றியெரிகின்ற சோதனையில் நான் நின்றிட எனக்கு உதவியருளுமே.
விலையுயர்ந்த கற்களைத் தீட்டுபவரே திவ்விய - அன்பின்
மகிமையின் ஒளிதனைப் பூரணமாய்ப் பிரதிபலித்திட எனைத் தீட்டிடுமே.
ஓ! உம் இராஜ மகுடத்தில் நான் பிரகாசிக்கும்படி
ஏற்ற இடத்தில் எனைக்கொண்டு பொருத்துமே.

- Poems of the Way, p. 137

# என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்

"பஸ்காவைப் பலியிடவேண்டிய புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாள் வந்தது. அப்பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவரைக் கொலைசெய்யும்படி யோசித்து . . . எவ்விதமாய் அப்படிச்செய்யலாமென்று வகைதேடினார்கள். அப்பொழுது அவர் பேதுருவையும் யோவானையும் அழைத்து: நாம் பஸ்காவைப் புசிக்கும்படிக்கு நீங்கள் போய், அதை நமக்கு ஆயத்தம்பண்ணுங்கள் என்றார் . . . வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி: நீங்கள் இதை வாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப் பழரசத்தைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்" (லூக்கா 22:7, 2, 8-20).

இதுவே கர்த்தருடைய இராப்போஜனமானது நிறுவப்பட்டது குறித்து லூக்கா அவர்களால் பதிவு செய்யப்பட்டதான எளிமையான பதிவாகக் காணப்படுகின்றது; மீண்டுமாக நியமிக்கப்பட்ட வேளை சமீபிக்கையில், "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்ற வார்த்தைகளை நாம் நினைவிற்குக்கொண்டு வருகின்றோம். இந்த வேண்டுகோளுக்கு இணங்கி, நாம் நமது கர்த்தரினால் நிறுவப்பட்டதான எளிமையான ஆசரிப்பைத் திரும்பத்திரும்ப ஆசரிப்பதன் மூலம், நமது பஸ்காவினை மீண்டுமாக நினைவுகூர்ந்து ஆசரிக்கின்றோம்.

வருடம் 1888-இல், மார்ச் மாதம், 26-ஆம் தேதி திங்கள் பிற்பகல், கல்வாரியில் நிகழ்ந்த நமது கர்த்தருடைய மரணத்தின் ஆண்டுநிறைவு நாளாக இருக்கின்றது - யூதரின் முதலாம் மாதத்தில் 14-ஆம் தேதியாய் இருக்கின்றது; யூதர்களுக்கு ஒரு நாள் மாலை, சூரிய அஸ்தமனத்துடன் ஆரம்பமாகுகின்றது. ஆகையால் மார்ச் 25-ஆம் தேதியாகிய, ஞாயிறு மாலையானது, "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியாக," நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியெனத் தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலாக, கர்த்தரால் நிறுவப்பட்டதான நமது கர்த்தருடைய இராப்போஜனத்தின் ஆண்டுநிறைவு நாளாய்க் காணப்படுகின்றது.

அந்த ஒரு தருணத்திற்காக, இங்குள்ள சபையார், வழக்கமாய் நாம் கூடுகிற அலிகெனியின் (Allegheny), பெடெரல் தெருவிலுள்ள (Federal Street) மேல்வீட்டறையில், மாலை 7:30 மணிக்குக் கூடிடுவார்கள்; மற்றும் நமது மீட்பரை அன்புகூருகிறவர்களும், நாம் கூடி ஆசரிக்கின்றதான ஈடுபலியினை

மதிக்கிறவர்களுமானவர்கள் அனைவரும், நம்மோடுகூடக் கூடிடுவதற்கு நாம் மிகுந்த அன்போடுகூட அழைக்கின்றோம். தொலை தூரத்திலிருந்து வருபவர்களை வரவேற்று உபசரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். எங்களோடுகூட எத்தனை பேர்களால் வந்து கூடமுடியுமோ, வந்து கூடுங்கள். இதனை தொடர்ந்து பல நாட்களுக்கு, அநேகம் கூடுகைகள் ஏற்பாடு பண்ணப்படும்; இதில் யுகங்களுக்கடுத்த திட்டம் தொடர்புடையதான கேள்விகள் கேட்கப்படுவதற்கான நல்வாய்ப்புகள் கிடைக்கப்பெறும். அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அனைவரும் சத்தியத்திற்கு ஊழியக்காரர்களாய் இருக்கின்றபடியால், தங்களைப் பயனுள்ளவர்களாக்கிக் கொள்வதற்குத் தங்களை ஆயத்தம் பண்ணிக்கொள்ளும்படிக்கு, இம்மாதிரியான கூடுகைகள் அருளும் வாய்ப்புகளைப் பயன்படுத்த முடிகிறவர்கள் யாவரும் பயன்படுத்திக்கொள்ளுவது இன்றியமையாததாகும்.

ஆனால் சொற்பமானவர்கள் மாத்திரமே இங்கு வந்துகூடிட முடியும் என்பதை நாம் அறிவோம்; அனைத்து இடங்களிலும் காணப்படுகின்ற கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உண்மையுள்ளவர்கள் அனைவரும், தம்மையே பலிச்செலுத்தினதன் வாயிலாக நம்மை மீட்டுக்கொண்டவராகிய தேவ ஆட்டுக்குட்டியானவரை "நினைவுகூரும்படி இதைச் செய்வார்களாக." அனைத்து இடங்களிலும் காணப்படுகின்றதான இப்படிப்பட்டவர்கள், விலையேறப்பெற்ற விசுவாசத்தில் ஒத்த நிலையில் இரண்டு (அ) மூன்று பேர் காணப்பட்டாலும்கூட, ஒன்றுகூடிட வேண்டும். தனிமையில் காணப்படுபவர்கள்கூடக் கர்த்தரோடும், மாம்சத்தில் ஆங்காங்கே காணப் படுகின்றதான ஒரே சரீரத்தின் உடன் அங்கத்தினர்களோடும், இருதயத்தினுடைய ஐக்கியத்தில், அப்பத்தைப் பிட்டு, திராட்சரசத்தில் பங்கெடுக்கலாம்.

மற்றக் காரியங்களில் காணப்படுவதுபோலவே, இந்தக் காரியத்திலும் கிறிஸ்தவர்கள் வேதவசனங்களினுடைய உபதேசங்களை விட்டுவிட்டவர்களாகவும், ஆதித் திருச்சபையினுடைய மாதிரியை விட்டுவிட்டவர்களாகவும், இது ஆசரிப்பதற்கான காலம் தொடர்புடைய விஷயத்தில் பல்வேறு வழக்கங்களைப் பின்பற்றுகிறவர்களாகவும் காணப்படுகின்றனர். வெகு சிலரே, அதை "இராப்போஜனமாக" ஆசரிக்கின்றனர்; புராட்டஸ்டண்டினர்கள் பொதுவாய் மாலைக்குப்பதிலாக, வசதிக்காக மதிய வேளையைத் தெரிவு செய்துள்ளனர். சிலர் கர்த்தருடைய மரணத்தை ஞாயிறுதோறும் நினைவுகூர்ந்து ஆசரிக்கின்றனர்; சிலர் மாதத்திற்கு ஒருமுறை என்றும், சிலர் மூன்று மாதத்திற்கு ஒருமுறை என்றும் ஆசரிக்கின்றனர். இவர்கள் நேரத்தின் விஷயத்திலும், அடிக்கடி ஆசரிக்கும் விஷயத்திலும் அக்கறையற்றவர்களாகக் காணப்படுகின்றனர்; இவர்கள் எண்ணுவது என்னவெனில்: "இதை ஆசரிப்பது நல்லது எனில், ஏன் இதை அடிக்கடி, ஆம் தினந்தோறும் ஆசரிக்கக்கூடாது!" என்பதேயாகும். இதற்கு வேறு சிலர் பதிலளிப்பது என்னவெனில்: இப்படிச் செய்வதினால், அவ்வாசரிப்பானது அதற்குரிய பயபக்தியையும், ஆற்றலையும் இழந்துவிடுமே! என்பதேயாகும். இப்படியாகவே, இப்பொழுது இவர்கள் ஆசரிக்கையில் காணப்படுகின்றது. ஞாயிறுதோறும் ஆசரிப்பவர்கள் அப்போஸ்தலர் 2:42, 46 மற்றும் 20:7, 11-ஆகிய வசன பகுதிகளைத்

தவறாய்ப் புரிந்துகொண்டவர்களாய்க் காணப்படுகின்றனர். இவைகளெல்லாம் கர்த்தருடைய இராப்போஜனம் ஆசரிக்கப்பட்ட தருணங்கள் என்று இவர்கள் அனுமானித்துத் தவறு செய்துவிட்டனர். இவ்வசனப்பகுதிகளானது, தொலை தூரங்களிலிருந்து ஆதித் திருச்சபையினர் வாரத்தின் முதல்நாள் தோறும் ஒன்றுகூடுகையில், அவர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து எளிமையான உணவை உட்கொண்ட வழக்கத்தையே குறிப்பிடுகின்றதாய் இருக்கின்றது; அதாவது இப்பொழுதும் நாட்டுப்புறங்களில் "அன்பின் விருந்து" என்ற பெயரில் ஒன்றாய்ச் சேர்ந்து புசிக்கும் வழக்கம்போன்ற ஆதித் திருச்சபையினரின் வழக்கமே இவ்வசனப்பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த "அன்பின் விருந்துகளானது" யூதாவினால் (12-ஆம் வசனத்தில்) குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் இதில் பங்கெடுக்கும் அனைவரும் உண்மையுள்ள சகோதர சகோதரிகள் அல்ல என்றும் நமக்குச் சுட்டிக்காண்பிக்கின்றார். இந்த அன்பின் விருந்துகளானது நமது கர்த்தருடைய (அ) அப்போஸ்தலர்களுடைய எந்தக் கட்டளையின் பேரிலும் ஏற்படுத்தப்படவில்லை; மாறாக வாரத்தின் முதல்நாள் கொண்டாடுவதுபோன்று, இதுவும் நன்றியுள்ள இருதயங்களால் தானாய்ச் செய்யப்பட்ட செயலாகும். இப்படியாக ஆதித் திருச்சபையினர் வாரந்தோறும் நமது கர்த்தருடைய (மரணத்தையல்ல, மாறாக) உயிர்த்தெழுதலைக் கொண்டாடினார்கள் மற்றும் அவர்களது அன்பின் விருந்துகளில் அப்பம் பிட்கப்பட்டதானது, கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பாக, எம்மாவு எனும் கிராமத்திலும், மற்றத் தருணங்களிலும், அவர்களது சாதாரணமான மதிய உணவின்போது, கர்த்தர் அப்பம்பிட்டுத் தம்மைச் சீஷர்களுக்கு வெளிப்படுத்தின காரியத்தின் இனிமையான ஞாபகப்படுத்துதலாய் இருந்தது (லூக்கா 24:29, 30, 42; யோவான் 21:12, 13). இப்படியாக அவர்கள் அவரது உயிர்த்தெழுதலையும், அவரை அறிந்துகொள்ளத்தக்கதாக தங்களது கண்கள் திறக்கப்பட்டதையும் குறித்துக் கொண்டாடினார்கள். (கர்த்தருடைய இராப்போஜனத்தில் அப்பத்தைப்போன்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டதான) திராட்சரசத்தை அவர்கள் (இந்த அன்பின் விருந்துகளில்) பயன்படுத்தவுமில்லை; இந்த விருந்துகளைக் கர்த்தருடைய இராப்போஜனம் என்றும் அவர்கள் அழைக்கவுமில்லை; கர்த்தருடைய இராப்போஜனத்திற்கே உரிய விசேஷித்த பயபக்தியுடன் இந்த விருந்துகளை அனுசரியாமல், மாறாக நன்றியுடனும், சந்தோஷத்துடனும் அவர்கள் அனுசரித்து வந்துள்ளனர். "அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணினார்கள்" (அப்போஸ்தலர் 2:46).

மாதத்திற்கு ஒருமுறை அல்லது காலாண்டிற்கு ஒருமுறை, ஞாயிற்றுக்கிழமை மதிய வேளையில் "இராப்போஜனத்தை" ஆசரிப்பவர்கள், "நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம்" என்ற பரிசுத்த பவுல் அவர்களின் வார்த்தைகளையே, தங்கள் இந்த வழக்கத்திற்குக் கூறுகின்றவர்களாய் இருக்கின்றனர் (1 கொரிந்தியர் 11:23, 25); இவ்வசன வார்த்தைகளானது, அதைத் தாங்கள் விரும்பும்போதெல்லாம் ஆசரிப்பதற்கான சுதந்தரத்தை அளிப்பதாக இவர்கள் எண்ணிக்கொள்கின்றனர்.

ஆனால் அப்போஸ்தலனோ "போதெல்லாம்" எனும் வார்த்தையை 'எப்போதெல்லாம்' எனும் அர்த்தத்தில் பயன்படுத்துகின்றார். "எப்போதெல்லாம் இதைச் செய்கின்றீர்களோ" என்பதானது, எதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதின் மீது கவனத்தைத் திருப்புகின்றதாய் இருக்கின்றது. இவ்விடத்தில் பவுல், "(நமது கர்த்தர்) தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே" என்று குறிப்பிடுகின்றார் மற்றும் அப்போது, அங்கு நமது கர்த்தரினால் தமக்கான நினைவுகூருதல்களாகவும், யூதர்களால் புசிக்கப்பட்டதான நிழலான பஸ்காவின் இடத்தில் இடம்பெறுகின்ற தாகவும் அப்பத்தையும், திராட்சரசத்தையும் நிறுவினார் என்றும் குறிப்பிடுகின்றார். யூத வழக்கத்தையும் மற்றும் அது மீண்டும் மீண்டுமாக எப்போது ஆசரிக்கப்பட்டது என்பதையும் அறிந்தவர்களுக்கே பவுல் இதை எழுதினார்; ஆகையால் "பானம் பண்ணும்போதெல்லாம்" (அ) எப்போதெல்லாம் என்ற வார்த்தையானது இவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டுநிறைவு நாளைச் சுட்டிக்காட்டுவதாக இருந்தது.

நிழலான ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தின் வாயிலாக, இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் அடைந்த நிழலான கடந்துபோகுதலுக்கான வருடாந்தர நினைவுகூருதலை அகற்றுவதற்காகவே கர்த்தருடைய இராப்போஜனமானது திட்டமிடப்பட்டது. இப்படியான ஒரு நிகழ்வானது, நமது கர்த்தரினாலும், அவரது அப்போஸ்தலர்களினாலும், யூதர்கள் அனைவராலும் ஆசரிக்கப்பட்டபடியே, அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிக்கப்படுவதே ஏற்றதாய் இருக்கும். அவர்கள் வேறு ஏதாகிலும் காலப்பகுதியில் ஆசரிப்பதற்கு எண்ணவே இல்லை; அமெரிக்கர்களும் தங்கள் விடுதலைக்கான அறிக்கையானது கையெழுத்திடப்பட்ட நிகழ்வை, ஜூலை 4-ஆம் தேதியன்று கொண்டாடுவதற்குப்பதிலாக வேறு தேதிகளில் கொண்டாடுவதற்கு எண்ணுவதில்லை.

கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளதுபோலவே இராப்போஜனத்தை நம்மைப்போன்று யூதருடைய முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியன்று ஆசரிக்கும் வழக்கத்தினை ஆதித்திருச்சபையினர் பெற்றிருந்தனர். ஆதியிலிருந்த தூய்மையான விசுவாசத்தின் விஷயத்தில் மாபெரும் விசுவாச துரோகமானது அப்போஸ்தலர்களின் நாட்களிலேயே ஆரம்பித்தப்போதிலும், மேற்கூறப்பட்டதான இந்த வழக்கமானது, நான்காம் நூற்றாண்டில், நைஸ் குழுவினால் அதிகாரப்பூர்வமாக அழிக்கப்படுவதற்கு முன்புவரை சில கிறிஸ்தவர்களால் தொடர்ந்து கைக்கொள்ளப்பட்டு வந்தது; அதாவது அப்போஸ்தலர்களால் நிகழுமென முன்னறிவிக்கப்பட்டதான மாபெரும் விசுவாச துரோகமானது, பிற்பாடு போப்மார்க்கம் என்று அழைக்கப்பட்டதான மாபெரும் தப்பறையான அமைப்பாகப் பகுதியளவு வளர்ந்து காணப்பட்ட நான்காம் நூற்றாண்டுவரை, இந்த வழக்கமானது சில கிறிஸ்தவர்களால் தொடர்ந்து கைக்கொள்ளப்பட்டு வந்தது.

இந்த ஒரு காரியம் குறித்து, மோஷியம் அவர்கள் எழுதின சபை சரித்திரம் (Mosheim's Church History) எனும் புத்தகத்தின் 523-ஆம் பக்கத்திலிருந்து சிலவற்றை நாம் மேற்கோளிடுகின்றோம்; அவர் கூறுவதாவது: "இந்த (இரண்டாம்) நூற்றாண்டினுடைய முடிவு காலங்களில் ஆசியா மைனரிலுள்ள கிறிஸ்தவர்களுக்கும்,

மற்றப் பாகங்களிலுள்ள, அதிலும் குறிப்பாய் உரோம சபையிலுள்ள கிறிஸ்தவர்களுக்கும் இடையில் கடுமையான வாதம் உண்டானது . . . ஆசியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் நிறுவப்பட்டதான கர்த்தருடைய இராப்போஜனத்தையும், அடுத்து சம்பவித்த மீட்பருடைய மரணத்தையும் முதல் யூத மாதத்தினுடைய 14-ஆம் தேதியில் நினைவுகூர்ந்து ஆசரிக்கும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர் . . . இந்த ஒரு வழக்கத்தினை அவர்கள் அப்போஸ்தலர்களாகிய பிலிப்பு மற்றும் யோவான் வழியாய்த் தாங்கள் பெற்றுக்கொண்டதாகக் குறிப்பிட்டனர்.”

ஆனால் அதற்கென்று மீட்பருடைய மரணத்தைப் பொருத்தமற்ற காலங்களில் நினைவுகூர்ந்தவர்கள், இதினிமித்தம் நமது கர்த்தரினால் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவார்கள் என்று நாம் போதிப்பதாக எவரும் தவறாய்ப் புரிந்துகொள்ள வேண்டாம். இல்லவே இல்லை, தேவனுக்கு நன்றி, சுவிசேஷசபையானது, எல்லா விஷயங்களிலும் நியாயப்பிரமாணத்தின் கீழ் வைக்கப்படாமல், கிருபையின் கீழ் வைக்கப்பட்டிருக்கின்றது. (பொருத்தமற்ற காலங்களில்) இவ்விதமாய், ஆனால் நமது கர்த்தருடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்குமான அடையாளங்களில் உண்மையான இருதயத்தில் பங்கெடுத்தவர்கள் சிலவிதங்களில் இழப்பினை அடைபவர்களாக இருப்பினும், அதாவது இவ்வாசரிப்பானது இருதயத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தின் ஆற்றலானது, அடிக்கடி ஆசரிக்கப்படுவதன் காரணமாகக் குறைந்துபோகின்ற விதத்தில் இழப்பினை அடைபவர்களாக இருப்பினும், அவரே பாவங்களுக்கான பலியாவார் என்று இப்படியாய் அறிக்கைப்பண்ணின இவர்களை அவர் புறக்கணிப்பதில்லை. ஆனால் நமது கர்த்தருடைய வார்த்தைகளின் நோக்கமானது கிரகிக்கப்படும்போது, முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் அனைவரும், அவரது ஏற்பாடுகளானது சிறந்தது மற்றும் மிகவும் ஏற்றது என்றும், யாருக்கு நினைவுகூருதலாய் இருக்கின்றதோ, அவரால் மிகவும் அங்கீகரிக்கப்படும் நிலையில் இருக்கின்றது என்றுமுள்ள உறுதியில் மகிழ்ச்சியுடன் அவரது ஏற்பாடுகளுக்கு இணங்குவார்கள்.

## அடையாளங்களானது கருத்தில் எடுக்கப்பட வேண்டும்

ஏற்றவேளை குறித்தக் காரியம் மாத்திரம் கவனிக்க தவறப்படாமல், அடையாளங்களாகிய திராட்சரசம் மற்றும் புளிப்பற்ற அப்பத்தினுடைய உண்மையான அர்த்தம்கூட “இருண்ட யுகங்களினுடைய” ஆவிக்குரிய இருளின் நிமித்தமாகத் தெளிவற்றதாய்க் காணப்பட்டது. மூன்றாம் நூற்றாண்டில், புறமதத்தினுடைய தத்துவ ஞானங்களிலிருந்து, கிறிஸ்தவத்திற்குள்ளாகக் கொண்டுவரப்பட்டதான திரித்துவ உபதேசத்தை உடையவர்களின் தப்பறைகளானது, தேவனுடைய பிள்ளைகளுடைய மனங்களைத் திரித்துப்போட்டு, மூடிப்போட்டு, நமது மீட்பர் நமக்கான ஈடுபலி விலைக்கிரயமெனக் கொடுத்திட்டதான பலி குறித்தத் தெளிவான கண்ணோட்டங் களைக் காண தடைப்பண்ணினதாய் இருந்தது.

கிறிஸ்துவையும், வரவிருக்கின்ற விடுதலையையும் முன்னடையாளப்படுத்தின

இஸ்ரயேல் ஜனங்களின் நிழலான ஆட்டுக்குட்டியானது, (பாதுகாப்பிற்காக வீட்டின்மீது தெளிக்கப்பட்டதான இரத்தத்தைத் தவிர்த்து) அனைவராலும் புசிக்கப்பட்டது. இப்படியாகவே உண்மையான ஆட்டுக்குட்டிக்கான நினைவுகூருதல் சின்னங்களினுடைய விஷயத்திலுமாகும். அப்பமானது அனைவராலும் புசிக்கப்படும்; திராட்சரசமோ சொற்பமானவர்களால் மாத்திரமே பங்கெடுக்கப்படும். அப்பமும், திராட்சரசமும், நமது கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்து கின்றதாய் இருக்கின்றது. நமது கர்த்தர், ஒரு மனிதனாக, உலகத்திற்கு ஜீவன் கொடுக்கத்தக்கதாக, பரலோகத்திலிருந்து இறங்கிவந்த ஜீவனுள்ள அப்பமாவார் (சொல்லர்த்தமாக ஜீவ அப்பமாவார்). அடையாள விளக்கமானது அருமையாய் உள்ளது: மனுக்குலமானது - ஜீவன் இல்லாமையினால் மரித்துக்கொண்டிருக்கின்றது மற்றும் மரணத்தை நிறுத்துவதற்கும், நல்நிலை ஆக்கிடுவதற்கும், ஆதாமில் இழந்துபோனதான ஆதிப் பரிபூரணத்திற்குச் சீர்ப்பொருந்த பண்ணுகிறதற்கும் ஏதுவாக ஜீவன் உண்டாக்கும் தன்மைகளை முழுக்கப்பெற்றுள்ளதான உணவிற்கான தேவையில் காணப்படுகின்றது. மனிதர்கள் சைவ உணவிலும், அசைவ உணவிலும், தாது பொருள்களிலும், வேதியியலிலும், அனைத்துப் பகுதிகளிலும் சஞ்சீவிகளை/அனைத்து நோய்களுக்கான மருந்துகளை, வாழ்நாளை நீட்டிப்பதற்கான மருந்துகளை, ஜீவனைத் திருப்பிக்கொடுக்கிற மருந்துகளைத் தேடிக்கொண்டிருக் கின்றனர்; ஆனால் அனைத்துமே விருதாவாக உள்ளது; இப்படியான எந்த "ஜீவ அப்பமும்" இதுவரையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் மனிதர்கள் இப்படியாக விருதாவாய் நான்காயிரம் வருடங்களாகத் தேடிக்கொண்டிருக்கையில், பரலோகத்திலிருந்து மெய்யான ஜீவ அப்பமானது இறங்கிவந்தது; இதை ஒருவன் புசித்தானானால் (அதைத் தனக்கெனப் பயன்படுத்துவது அவனுக்கான சிலாக்கியமாக இருக்க, அதைத் தனக்கெனச் சொந்தமாக்கிக்கொள்வானானால் அல்லது பங்கெடுப்பானானால்) அவன் என்றென்றும் ஜீவிப்பான். அதாவது அவனது மீட்பிற்காக தேவன் அருளியுள்ள வழிவகை மீதான விசுவாசத்தினால், ஜீவனுக்கான தயவை அவன் ஏற்றுக்கொள்கையில், அதற்கான நிபந்தனையின் அடிப்படையில், ஆம் அவைகளின் அடிப்படையில் மாத்திரம், ஜீவனைப் பெற்றுக்கொள்ளலாம். இதையே நமது கர்த்தர் அடையாள வார்த்தையில் தமது மாம்சத்தைப் புசித்தல் என்று குறிப்பிட்டார்.

அடையாள விளக்கமானது எவ்வளவு முழுமையாய், அருமையாய் உள்ளது என்பதைக் கவனியுங்கள். தேவனுடைய குமாரன், அவர் முதலில் பரலோக (அ) ஆவிக்குரிய ஜீவியாகக் காணப்பட்டபோது, அவர் மனிதனுக்கான அப்பமாகக் காணப்படவில்லை மற்றும் அவர் தம்முடைய ஆவிக்குரிய சரீரத்தை அப்பமாகக் கொடுத்திருந்தாரானால், வேறுபட்ட சுபாவமுடையவர்களாகிய (மனித சுபாவமுடையவர்களாகிய) நம்மால் அதை நம்முடையதாக்கிக்கொள்ள முடியாது; அதாவது ஒரு மரத்தினைப் போஷிப்பதும், முழுமைப்படுத்துவதுமான விஷயங்களானது (காற்று, ஈரப்பதம், பூமி/நிலம்), வித்தியாசமான சுபாவத்தின் காரணமாக மனிதனை முழுமைப்படுத்த முடியாததுபோலாகும். மனுஷன் மனுஷீக அல்லது மாம்சீக சுபாவம்

உடையவனாவான். ஆகையால் தேவனுடைய ஆவிக்குரிய குமாரன், மரித்துக்கொண்டிருக்கும் மனிதர்களுக்கு ஜீவ அப்பத்தைக் கொடுக்கவேண்டு மானால், அந்த அப்பம் ஜீவனளிக்கும் சத்து நிரம்பப் பெற்றுள்ளதான மாம்சமாகக் காணப்பட வேண்டும்.

இதற்கான ஆயத்தத்திற்காகவே தேவனுடைய குமாரன், ஆவியிலிருந்து, மாம்சத்திற்கு மாற்றப்பட்டார். "அவர் மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினபோது" அவர் இவ்வளவாய்த் தம்மைத் தாழ்த்தினவரானார் (யோவான் 1:14). மாம்சமே ஜீவன் கொடுக்கும் அப்பமாகப்போகின்றது; பரலோக அல்லது ஆவிக்குரிய நிலைமையில் காணப்பட்ட அவர் பூமிக்குரியவர் (அ) மனுஷனானதால், மாம்சமானதால், இந்த அப்பமானது பரலோகத்திலிருந்து இறங்கிவந்த அப்பம் என்று, அதாவது ஆவிக்குரிய (அ) பரலோக நிலையிலிருந்து பூமிக்குரிய (அ) மனித சுபாவத்திற்கு இறங்கி வந்த அப்பம் என்று கூறப்படுவது உண்மையே. இதுவே மனுஷன் புசித்தால், மரியாமல் இருக்கப்பண்ணுகிறதான ஜீவ அப்பமாகும் (யோவான் 6:50).

இப்பொழுது நாம் ஜீவ அப்பத்தைக் கண்டுபிடித்துவிட்டோம், ஆனால் அவரை நாம் எவ்வாறு புசிப்பது? ஜீவனுள்ள எதையும் நாம் புசிக்கமுடியாது; நோயின் காரணமாக மரிக்கும் எதுவும்கூட உணவிற்கு ஏற்றதாய் இருக்காது. ஆகையால் ஒருவேளை நமது கர்த்தர் இயற்கையான மரணம்* என்று அழைக்கப்படுகின்றதான மரணத்தை அடைந்தாரானால், இது அவரும், மற்ற மனிதர்களைப்போன்று பாவி என்பதை நிரூபிப்பதாய் இருந்திருக்கும்; ஏனெனில் மரணம் என்பது, பாவத்திற்கான தண்டனையாக இருக்கின்றது; மற்றும் இப்படியாக மரிக்கும் அவரில் பங்கெடுப்பது/ அவரைப் புசிப்பது என்பது, புதிய ஜீவன் எதையும் கொடுக்கிறதாய் இராது. [*உண்மையில் இயல்பான மரணம் என்ற ஒன்று கிடையாது. தேவனுடைய ஏற்பாட்டில் ஜீவன் என்பதுதான் இயல்பான நிலையாகும் மற்றும் இயல்பான ஜீவனுக்கு எதிரான மீறுதல்களின்போதே மரணம் வருகின்றது – மரணம் என்பது கீழ்ப்படியாமைக்கான, பாவத்திற்கான பின்விளைவு (அ) தண்டனையாகும். எனினும் இயல்பான மரணம் எனும் வார்த்தையானது, விழுந்துபோன, ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டுள்ளதான சந்ததி தொடர்பாகப் பயன்படுத்தலாம்; ஏனெனில் இயல்பான மரணம் என்பது பாவத்திற்கான இயல்பான விளைவாகவும், அனைத்து மனித பாவிகளுக்கும் பொதுவானதாகும். ஆகையால் நமது கர்த்தர் பாவம் செய்யாததினால் அவரால் வியாதி முதலானவைகளால் மரிக்க முடியாது; ஒருவேளை அவர் பாவம் செய்வாரானால், அவரது மாம்சமானது ஜீவன் அளிக்கிறதாய் இருக்க முடியாது. அவரது மாம்சமானது நமக்கு ஜீவன் அளிக்கத்தக்கதாக அவர் தமது ஜீவனை நமக்கான மீட்கும்பொருள் விலைக்கிரயமாகக் கொடுக்க விரும்பினாலேயே தவிர, மற்றபடி அவருடைய ஜீவன் எடுக்கப்பட முடியாது.] ஆகையால் மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் பலியின் மூலமாகவே அல்லாமல், நமக்கு இந்த ஜீவனுக்கான உணவை (அ) ஜீவ அப்பத்தை அளிக்கிறதற்கு வேறெந்த வழியும் இல்லை என்று நாம் காண்கின்றோம்; நம்முடைய ஜீவனானது பறிமுதல் பண்ணப்பட்டதுபோல, அவரது ஜீவனும் பறிமுதல் பண்ணப்பட்டதினால், அவர் மரிக்கவில்லை; மாறாக ஆதாமுக்கும், இவர் வாயிலாக

ஜீவனை இழந்து போனவர்களாகிய நம் அனைவருக்கும் என்று அவர் தம்மை ஈடுபலியாக, சரிநிகர்சமான விலையாக, மீட்கும்பொருளாக ஒப்புக்கொடுத்தவரானார். மாம்சத்தில் அவரது ஜீவியமானது, அவரது மாதிரியானது, ஆலோசனையானது, போதனைகளானது, எப்படி இசையினால் (பாட்டினால்) பட்டினிக்கிடந்து இறக்கும் மனிதனை ஜீவனோடு வைக்க முடியாததுபோலவே, ஜீவன் கொடுக்கமுடியாது. நாம் அவரது பரிபூரணமான மாதிரியைக் குறித்து ஆராயலாம் மற்றும் பின்பற்றுவதற்கு முயற்சிக்கலாம், ஆனால் அதனை நம்மால் பூரணமாய்ச் செய்ய முடியாது, ஏனெனில் நாமே மரித்துக்கொண்டிருக்கின்றோம் மற்றும் பலத்தில் குறைவுப்பட்டிருக்கின்றோம். நமக்கு ஜீவன், ஜீவனளிக்கும் உணவு தேவை மற்றும் வேறெந்த விதத்திலும் நாம் பெற்றுக்கொள்ள முடியாத இந்த ஜீவனை நமக்கு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காகவே, அவர் மாம்சமானார்.

ஆகையால் இக்காரியம்குறித்து அவர் தம் சீஷர்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கையில், "மனுஷகுமாரன் பாடுகள் பட்டு" என்று கூறினதின் மூலம், அவர்கள் தம்மைப் புசிக்க வேண்டுமானால் ஆட்டுக்குட்டியானது அடிக்கப்படுவது அவசியம் என்று அவர்களுக்குக் கூறினார். அவர் மாம்சத்திலேயே, அவர்களது போதகராகவே தொடர்ந்து காணப்பட்டிருந்திருப்பாரானால், அவர்கள் நிச்சயமாய் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள், ஆனால் ஒருபோதும் ஜீவன் பெற்றிருந்திருக்கமாட்டார்கள். ஆகவேதான் "மனுஷகுமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்" என்றும், "நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாய் இருக்கும்; நான் போகாதிருந்தால் (நான் மாம்சத்திலேயே இருந்துவிட்டால், நான் என்னைப் பலியாக ஒப்புக்கொடுத்து, இவ்விதமாய் உங்கள் மீட்பிற்கான பிதாவின் திட்டத்தினை நடந்தேற்றவில்லை என்றால்) தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்" என்றும் கூறினார். தேவனால் புத்திரர்கள் என்று அடையாளம் கண்டுகொள்ளப்படத்தக்கதாகவும், அப்படியானவர்களுக்கு ஜீவன் அருளப்படத்தக்கதாகவும், நீங்கள் ஆக்கினையிலிருந்து தப்பித்து, தேவனால் அங்கீகரிக்கப்படத்தக்கதான மற்றும் தேவனுக்கு இசைவான நிலைக்கு வருவதற்கு என்னுடைய பலியின் மூலமாகவும், என்னில் பங்கெடுப்பதன் மூலமாகவுமே ஒழிய, உங்களுக்கு வேறு வழியில்லை, என்ற விதத்தில் கூறினார்.

ஆகையால் சத்தியத்தை ஜீவ அப்பம் என்று எண்ணிக்கொள்வதும், சத்தியத்தைப் புசிப்பது என்பது நம்மை நீதிமானாக்கும் என்றோ, ஜீவிப்பதற்கான உரிமையைக் கொடுக்கும் என்றோ எண்ணிக்கொள்வதும் தவறாகும். மலைப் பிரசங்கத்தையும், கர்த்தருடைய மற்றச் சொற்பொழிவுகளையும் விசுவாசிப்பது என்பது ஜீவனைக் கொடுக்கும் என்று எண்ணிக்கொள்வதும் தவறாகும். இவைகளெல்லாம் சத்தியங்கள்தான் மற்றும் இவைகள் ஆட்டுக்குட்டியோடு புசிப்பதற்கும், ஆட்டுக்குட்டியினைப் புசித்தப் பிற்பாடும், புசிப்பதற்கு ஏற்றதாய்க் காணப்படும் நல் உணவுகளாகும்; ஆனால் இவை ஆட்டுக்குட்டி இல்லாமல் ஜீரணமாகாது. இதே சத்தியங்களானது அநேகருக்கு ஜீரணமாகாமல் இருந்துள்ளது மற்றும் ஊட்டச்சத்து உணவாய் இருப்பதற்குப்பதிலாக, வாந்தி உண்டாக்குகிறவைகளாகச்

செயல்படுகின்றன மற்றும் "அநேகர் கர்த்தருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்." ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்டு, அப்போஸ்தலர்கள் விசுவாசத்தின் வாயிலாக ஜீவனளிக்கும் அந்த உணவில் புசிப்பதற்கு முன்புவரையிலும், பன்னிரண்டு பேரும்கூட, நமது கர்த்தருடைய போதனைகளிலிருந்து குறைவான போஷாக்கையே பெற்றவர்களாய் இருந்தார்கள். பிற்பாடு ஜீவனுடைய பலத்தினாலும், சக்தியினாலும்தான், அவர்களிடத்தில் போதகர் பேசியிருந்ததான அனைத்துக் காரியங்களிலிருந்தும் இனிமையையும், பலத்தையும் அடையமுடிகின்றவர்களாய் இருந்தார்கள். ஆட்டுக்குட்டியைப் புசித்தலானது, அது கொண்டுவந்ததான புதிய ஜீவனானது, அவர்களை மீண்டுமாகத் தேவனுடனான ஐக்கியத்தில் சீர்ப்பொருத்தியது மற்றும் புத்திர சுவிகாரத்தின் ஆவியை அவர்கள் பெற்றுக்கொண்டபோது, சத்தியங்களை, ஏற்றக்கால உணவுகளென அவர்களால் உணர்ந்துகொள்ள முடிந்தது மற்றும் பலமடையத்தக்கதாகப் பயன்படுத்த முடிந்தது.

நமது ஆட்டுக்குட்டியானவர் நமக்காக, நம் சார்பிலாக அடிக்கப்பட்டார்; ஏனெனில் அவர், ஜீவன் பெறும்படிக்கு அனைவராலும் புசிக்கப்பட வேண்டிய அப்பமாகக் காணப்படுகின்றார் மற்றும் அவர் தம்மை ஒப்புக்கொடுக்காதது வரையிலும் நம்மால் அவரைப் புசிக்க முடியாது. இப்பொழுது அவர் என்ன கொடுத்தார்? மற்றும் நாம் என்ன புசிக்கின்றோம்? என்பதைப் பார்க்கலாம். அவரது மாம்சமே என்பது நம்முடைய பதிலாகும். ஆனால் அவரது மாம்சம் என்கிறபோது, அதன் அர்த்தமென்ன? "அவர் மாம்சமாக்கப்பட்டார்," அதாவது மனுஷனானார் என்று மேலே நாம் காண்பித்தோம் (யோவான் 1:14). ஆகையால் அவரது மாம்சத்தைக் கொடுப்பது என்பது, மனிதனாக அப்போது காணப்பட்ட அவரையே கொடுப்பதாகும்.

தேவனுடைய பிரமாணத்தின் கீழ் அவர் பெற்றிருந்ததான மனித உரிமைகள் மற்றும் சிலாக்கியங்களை, நம்முடைய நன்மைக்காக துறந்திட்டார்; அதாவது பிரதிநிதியாகிய ஆதாமுக்குள் உரிமைகளையும், சிலாக்கியங்களையும் இழந்துபோனதின் காரணமாக, உரிமைகளோ (அ) சிலாக்கியங்களோ இல்லாமல் காணப்படும் மனித குடும்பமானது, இந்த உரிமைகள், சிலாக்கியங்கள் மற்றும் சுயாதீனங்களையும் திரும்பப்பெற்றுக்கொள்ளத்தக்கதாக அவர் துறந்திட்டார். ஆதாம் பாவம் செய்து, குமாரத்துவத்திற்குரிய உரிமை மற்றும் சிலாக்கியம் அனைத்தையும் இழந்தபோது, அவரது சந்ததி அனைத்தும் அவருக்குள் காணப்பட்டது; ஆகையால் நாம் அனைவரும் அந்த ஓர் இழப்பில், பங்காளிகளாகக் காணப்படுகின்றோம். ஆகையால் இப்பொழுது முழுமையான மற்றும் போதுமான உரிமைகளானது, புதிய மனிதனாகிய "மனிதனாகிய கிறிஸ்து இயேசுவுக்கு" உரியதாக இருக்கின்றது; பரிபூரணரும், ஆக்கினைக்குட்படாதவருமான இவர், ஆதாம் இழந்துபோனதான மனிதனுக்குரிய கீழ் நிலை உரிமைகளுக்காக, தம்முடைய உயர்நிலை உரிமைகளை மாற்றிக்கொண்டவரா னார். இவர் தம்மையே கொடுத்துவிட்டு மற்றும் தாம் பெற்றிருந்ததான அனைத்தையும், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டிருந்ததான சந்ததிக்கான நன்மைக்காகவும், பயன்பாட்டிற்காகவும் ஒப்படைக்கையில், உலகத்தின் ஜீவனுக்காக இவரது மாம்சம் கொடுக்கப்படுகிற காரியமானது, இறந்து கொண்டிருக்கும் மனுஷனிடத்தில்

இழந்துபோன சிலாக்கியங்களையும், சுயாதீனங்களையும், ஜீவனையும் திரும்பக்கொடுப்பதைக் குறிக்கின்றதாய் இருக்குமென நாம் காண்கின்றோம் (மத்தேயு 13:44; யோவான் 6:51). ஆகையால் இவரது மாம்சத்தைப் புசிப்பது என்பது, புசிப்பவன் பூரணரும், பாவமில்லாதவருமான "மனிதனாகிய கிறிஸ்து இயேசு" பெற்றிருந்ததான உரிமைகள், சுயாதீனங்கள் மற்றும் ஜீவனைத் தன்னுடைய பயன்பாட்டிற்கெனத் தன்னுடையதாக்கிக்கொள்வதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

அவர் மரித்தபோது, கொடுத்ததானவைகளானது, நம்முடையதாகவும், ஆதாமின் அனைத்துப் பிள்ளைகளும் இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறதாகவும் காணப்படுகின்றது. ஆனால் அது அதைப் புசிப்பவர்களுக்கு மாத்திரமே, அதாவது கிறிஸ்து இயேசுவுக்குள்ளான மீட்பின் வாயிலாக தேவனால் நமக்கு இலவசமாய் அருளப்பட்டதான அந்த உரிமைகளையும், சிலாக்கியங்களையும் விசுவாசத்தினால் தங்களுடையதாக்கிக்கொள்பவர்களுக்கு மாத்திரமே ஜீவன் முதலானவைகளைக் கொடுக்கின்றதாய் இருக்கும்.

ஒரு மனிதன் குஷ்டரோகியானால், அவன் மாத்திரமல்லாமல், அவனுக்குள் இருக்கும் அனைவரும், அதாவது அவனுக்கு இன்னும் பிறக்காத சந்ததி அனைவரும் அதினால் பாதிக்கப்பட்டிருப்பார்கள். இப்படியாகவே ஆதாம் மற்றும் அவரது பிள்ளைகளின் விஷயத்திலும் காணப்படுகின்றது; நாம் "பாவத்தில் பிறந்தவர்களாய்" இருக்கின்றோம் மற்றும் அதன் தண்டனையாகிய மரணத்தின் கீழ், அதாவது நமக்கான இயல்பான பிரமாணமென மரணத்தின் கீழ்க் காணப்படுகின்றோம். குஷ்டரோகத்தினை நிச்சயமாய்க் குணப்படுத்தும் மருந்து (அ) ஜீவ அப்பம் ஒன்று, நன்மை உண்டாகத்தக்கதாக அளிக்கப்படுகின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள், அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, புசிக்கப்பட/சொந்தமாக்கிக்கொள்ளப்பட வேண்டும்; இல்லையேல் குணமடையாது. இப்படியாக கிறிஸ்துவின் விஷயத்திலும், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டு, மரித்துக்கொண்டிருக்கும் பாவியின் விஷயத்திலும்கூடக் காணப்படுகின்றது. அவனுக்கு அவசியமான தன்மைகளை அப்பமானது பெற்றிருப்பது மாத்திரமல்லாமல், அவன் அதை அடையத்தக்கதாகக் காணப்படுவது மாத்திரமல்லாமல், அவன் பாவம் எனும் நோயிலிருந்தும், மரணத்திற்குள்ளாக தீர்க்கும் அதன் சாபத்திலிருந்தும் விடுதலையடைய வேண்டுமெனில், அவன் அதைப் புசிக்க வேண்டும் (அ) விசுவாசத்தினால் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும். குஷ்டரோகியாகப் பிறந்த ஒவ்வொரு பிள்ளையும், தனக்கெனப் புசிப்பது அவசியமாக இருப்பதுபோலவும், குடும்பத்தில் ஒருவர் மருந்தை (அ) ஜீவன் தரும் உணவை உட்கொள்வதன் மூலம், குடும்பத்திலுள்ள அனைவரும் குணமடைவதில்லை என்பதுபோலவும், பாவிகளின் விஷயத்திலும் காணப்படுகின்றது; பாவிகளில் ஒவ்வொருவரும், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதான தேவ ஆட்டுக்குட்டியினுடைய, ஜீவன் அளிக்கும் மாம்சத்தினைத் தனக்காகப் புசித்துக்கொள்ள வேண்டும். அது அனைத்து மனிதர்களுக்கானதாகும்; ஆகையால் ஒவ்வொரு பாவியும், அதைப் புசித்து, ஜீவிப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றிட வேண்டும்

மற்றும் ஜீவனுக்கான இந்த அப்பத்தினைப் புசியாமல், எவரும் குணமடைந்து, ஜீவனுக்குள் (பூரணத்திற்குள்) கொண்டுவரப்பட முடியாது. (அநேகர் இதன் அடையாள சின்னத்தை அறியாமையில் புசித்தாலும்) எவரும் இதை அறியாமையில் புசிக்க முடியாது; புறமதத்தினர் எவரும் இதைப் புசித்து, ஜீவிப்பதற்கான வாய்ப்பினை இதுவரையிலும் பெற்றுக்கொள்ளவுமில்லை மற்றும் இந்த ஒரு சத்தியத்தினைப் பற்றின அறிவிற்குள்ளாக அனைவரும் வரவேண்டும் என்பதினால், இதுவே மாபெரும் ஆயிரவருட நாளில் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பிற்கான (பரீட்சைக்கான) நிரூபணமாய் இருக்கும்; ஏனெனில் அனைவரும் விரும்பினால், புசித்து என்றென்றும் ஜீவிக்கத்தக்கதாக "இதற்குரிய சாட்சி ஏற்றக்காலங்களில் அனைவருக்கும்" கொடுக்கப்பட வேண்டும் (1 தீமோத்தேயு 2:4-6). இந்த யுகத்தில் சொற்பமானவர்கள் மாத்திரமே சத்தியம் குறித்த குறைவான அறிவிற்குள் வந்திருக்கின்றபடியால், இந்த மாபெரும் விருந்தை உலகத்திற்கு முன்பு வைப்பதற்கான தேவனுடைய "ஏற்றக்காலங்களானது" காலையிலாகும், திரும்பக்கொடுத்தலின் காலங்களிலாகும், கர்த்தரைப்பற்றின அறிவானது பூமியை நிரப்பிக் காணப்படுகின்றதான ஆயிரவருட நாளிலாகும் என்பது உறுதியே (ஆபகூக் 2:14; ஏசாயா 25:6).

ஆயிரவருட யுகத்தின்போதே, மனிதர்கள் கிறிஸ்துவைத் தேவனுடைய ஆட்டுக்குட்டி என்றும், தங்களுக்கான ஈடுபலி விலைக்கிரயம் என்றும் ஏற்றுக்கொள்கையில், சரீர ரீதியிலும், மன ரீதியிலும், ஒழுக்க ரீதியிலுமான அவரது பரிபூரணங்களில் பங்கெடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்; மற்றும் இப்படியாக அவர்கள் செய்து, அவரது போதனைகளுக்கு இணங்கும்போது, அவர்கள் படிப்படியாகப் பரிபூரணத்திற்கு, ஆதாமுக்குள் இழந்த அனைத்திற்கும் திரும்பி, அந்த யுகத்தினுடைய முடிவில் முழுமையான பூரணத்தை அடைவார்கள் (அ) அடையவில்லையெனில் துணிகரமான கீழ்ப்படியாமையின் நிமித்தமாக, எந்தக் குணமாகுதலோ, எந்த ஜீவ அப்பமோ, எந்த மருந்தோ பெற்றிராத இரண்டாம் மரணத்திற்குள் முற்றும், முழுமையாக ஜீவனிலிருந்து அறுப்புண்டு போவார்கள்.

இப்பொழுது இந்த ஜீவ அப்பத்தைப் பெற்றுக்கொண்டு, அதைப் புசிப்பவர்களாகிய (அ) தங்களுடையதாக்கிக்கொள்பவர்களாகிய, சபையாகிய நாம் பரிபூரணத்திற்கு நேராக நமது மனித ஆற்றல்கள் படிப்படியாகச் சீர்ப்பொருந்தப் படுவதையோ, மனித உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் முதலானவைகளுக்கு நாம் சீர்ப்பொருந்தப்படுவதையோ அனுபவிப்பதில்லை. நம்முடைய நிலையானது, எண்ணப்பட்ட நிலையே ஒழிய, உண்மையான நிலையல்ல. விசுவாசத்தினால் மாத்திரமே நமது மீட்பருடைய மாம்சத்தை நம்மால் புசிக்க முடியும் மற்றும் புசிக்கின்றோம்; (தரிசித்து இல்லாமல்) விசுவாசத்தினாலேயே நமது கர்த்தரினால் ஏறெடுக்கப்பட்ட பலியின் மூலமான மனித உரிமைகளையும், சுயாதீனங்களையும், ஜீவனையும் ஏற்றுக்கொள்கின்றோம். அடுத்த யுகத்தில் ஜீவிக்கும் மனுக்குலமானது, தங்கள் விசுவாசத்திற்கு உதவியாகத் தரிசித்தலைப் பெற்றிருப்பார்கள்; ஏனெனில் அவர்கள் விசுவாசத்தின் மற்றும் கீழ்ப்படிதலின் படிகளை எடுத்து வைக்கையில், படிப்படியாக தங்கள் சரீரத்தில் சீர்த்திருந்துதலை உணர்ந்துகொள்வார்கள். ஆனால்

இப்பொழுது எவரும் தரிசித்து நடக்க முடியாது; ஆகையால்தான் வரவிருக்கும் யுகத்தில் இராஜரிகத்திலும், ஆசாரியத்துவத்திலும் கிறிஸ்துவோடுகூட மணவாட்டியாகவும் உடன்சுதந்தரர்களாகவும் காணப்படத்தக்கதாக இப்பொழுது உலகத்திலிருந்து தெரிந்தெடுக்கப்படுகின்றதான "சிறுமந்தையினர்," சொற்பமானவர்களாகவும், மிகவும் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆட்டுக்குட்டியினைப் புசிப்பதற்கு, அவரது தூய்மையையும், அவரது பரிபூரணத்தையும், அவரது கறையற்ற தன்மையையும், மனிதனுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டதான தேவதயவுகள் அனைத்திற்குமான அவரது உரிமையையும்குறித்து நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இன்னுமாக மனித உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் எனும் ஆசீர்வாதங்களானது - விழுந்துபோன மற்றும் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டுள்ளதான சந்ததிக்குத் திரும்பக்கொடுக்கப்படத்தக்கதாகவும், இப்படியாக ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட சிருஷ்டிகளுக்குத் தேவன் அருளாத நிலைகளுக்கு, அதாவது தேவனுடன் ஐக்கியம் கொள்ளும் நிலைக்கு, தேவனால் அங்கீகரிக்கப்படும் நிலைக்கு அனைவரும் வந்திடுவதற்கு அனுமதிக்கப்படத்தக்கதாகவும், அவர் இந்த மனித உரிமைகளையும், சிலாக்கியங்களையும் பலிச்செலுத்தியுள்ளார், ஒப்புக்கொடுத்துள்ளார் என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

அனைவருக்கும் பொதுவாய் விருந்தானது பரிமாறப்படப் போகின்றதான பொதுவான காலத்திற்கு முன்னதாக, ஏன் இப்படியாகச் சிலர் அவரது மாம்சத்தைப் (அவரது மனித பரிபூரணங்கள், உரிமைகள், முதலானவைகளை) புசிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்? ஆ! இங்கு ஒரு மிகவும் விலையேறப்பெற்றதான சத்தியம் காணப்படுகின்றது; இங்குக் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக நமக்குப் பாராட்டப்பட்டுள்ளதான "அவருடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியமானது" உலகத்தின் பார்வைக்கு மறைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. அதை இப்பொழுது பார்க்கலாம்.

திராட்சரசத்தினால் அடையாளப்படுத்தப்பட்டதான இரத்தமானது, மரணத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; "இரத்தம் ஏதோ ஒன்றின் - உயிர்" ஆகும்; ஆகையால் இரத்தம் சிந்தப்படுவது என்பது அல்லது சிருஷ்டியினின்று எடுக்கப்படுவது என்பது சிருஷ்டியினுடைய மரணத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் கிறிஸ்துவினுடைய சிந்தப்பட்ட இரத்தமானது, கிறிஸ்துவினுடைய மரணத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது உலகத்தின் பாவங்களுக்கு ஜீவன் கொடுக்கப்பட்டதாய் இருக்கின்றது. நிழலான பஸ்காவில் ஆட்டுக்குட்டியானது புசிக்கப்பட்டது, ஆனால் இரத்தம் புசிக்கப்படவில்லை. இரத்தத்தைப் புசிப்பதற்கு எந்த இஸ்ரயேலனும் அனுமதிக்கப்படவில்லை. இக்காரியமானது எப்படி அனைவரும் மனுஷக்குமாரனுடைய மாம்சத்தைப் புசிப்பார்கள், ஆனாலும், அனைவருமே அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ண (அ) அவரது மரணத்தில் பங்கெடுக்கக்கூடாது என்பதற்கு அடையாளமாய் இருக்கின்றது. நமது கர்த்தர் தமது இரத்தத்திற்கு அடையாளமான திராட்சரசத்தை யாருக்குக் கொடுத்தாரோ, அவர்களே அவரது மரணத்தில் பங்கெடுப்பதற்கும், பங்கடைவதற்கும் அழைக்கப்பட்டனர் மற்றும்

இது ஏற்றதுமாகும்; ஏனெனில் அவர்கள் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாக இருக்கப்போகின்றனர் மற்றும் ஒவ்வொரு மனுஷனுக்காகவும் தலை மரணத்தை ருசிப்பார்க்க வேண்டியது மாத்திரமல்லாமல், அவரது சரீரமாகிய நாமும்கூட "அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி," "அவருடனேகூட மரிக்க" வேண்டும் (பிலிப்பியர் 3:10; உரோமர் 6:8). ஆகவே "பாத்திரம்" என்பது மரணத்திற்கான அடையாளமாய் இருக்கின்றது; இதை நாம் அறிந்த நிலையில், இதில் நாம் பங்கெடுக்கையில், நாம் நமது கர்த்தரும், மீட்பருமானவருக்கான ஊழியத்தில் நமது ஜீவியங்களை மரணம் வரையிலுமாக ஒப்புக்கொடுப்பவர்களாய் இருப்போம். திரும்பக்கொடுத்தலுக்கும், நித்தியமான ஜீவனுக்கும் நாம் பாத்திரவான்களா (அ) இல்லையா என்பது, அவரது மாம்சத்தை நாம் புசிக்கும் (ஏற்றுக்கொள்ளும் மற்றும் சொந்தமாக்கிக்கொள்ளும்) விஷயத்தைச் சார்ந்திருக்கின்றது; ஆனால் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாக, அவரது மணவாட்டியாக, உடன்சுதந்தரர்களாக நாம் அங்கீகரிக்கப்படுவோமா (அ) இல்லையா என்பது, தற்கால யுகத்தில், விசுவாசத்தினால் அவரது மாம்சத்தை நாம் புசித்தப் பிற்பாடு, நாம் அவரது "பாத்திரத்தில்" பானம்பண்ணி, மரணம்வரையிலுமாக, அவரது சேவைக்கென்று நம்மையே முற்றிலும் அர்ப்பணிக்கும் விஷயத்தைச் சார்ந்திருக்கின்றது.

இது உண்மையானால், அப்பம் புசித்தப்பிற்பாடு, திராட்சரசம் கொடுக்கப்படும் காரியமும், அப்பத்தைப் புசித்தவர்களுக்கு மாத்திரமே இரசம் கொடுக்கப்படும் காரியமும் எவ்வளவு பொருத்தமானதாய் இருக்கின்றது. இக்காரியமானது அனைத்து வேதவாக்கியங்களுக்கு இசைவாகப் போதிப்பது என்னவெனில்: (மற்றவர்கள் அல்ல, மாறாக) தேவ ஆட்டுக்குட்டியானவருடைய பலியிலும், புண்ணியத்திலுமுள்ள விசுவாசத்தினால், பாவங்கள் அனைத்திலிருந்தும் நீதிமானாக்கப்பட்டவர்கள் மாத்திரமே, தங்கள் (நீதிமானாக்கப்பட்ட) மனுஷீகத்தைச் சிலுவையில் அறைந்திடுவதற்கும், இந்த யுகத்தில் கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் பங்கடைவதற்கும், பின்தொடரும் ஆயிரவருட யுகத்திலும், நித்திய காலமும் அவரது மகிமையில் பங்கடைவதற்கும் அழைக்கப்படுகின்றனர் என்பதாகும்.

அவரது மாம்சத்தைப் புசிக்கிறவர்கள் (அவரது புண்ணியங்களைத் தங்களுடையதாக்கிக்கொள்பவர்கள் - நீதிமானாக்கப்பட்டவர்கள்) மற்றும் அவரது இரத்தத்தைப் பானம்பண்ணுபவர்கள் (தங்கள் நீதிமானாக்கப்பட்ட மனுஷீகத்தை அவரது சேவையில் பலியாகக் கொடுப்பதன் வாயிலாக, அவரது பலியில் அவரோடுகூடப் பங்கெடுப்பவர்கள்) மாத்திரமே "கிறிஸ்துவினுடைய ஒரே சரீரத்தின்" அங்கத்தினர்களென, "மெய்யான திராட்சச்செடியின்" அங்கத்தினர்களென, அவரில் நிலைத்திருப்பார்கள் (யோவான் 6:56). இப்படியானவர்கள் மாத்திரமே (வசனம் - 53) தன்னில்தானே ஜீவனுடையவர்களாய் ஆகமுடியும்; அதாவது எதையும் சார்ந்திராத ஜீவனை, அழியாமையைப் பெற்றுக்கொள்ள முடியும் (மிலேனியல் டாண், தொகுதி - I, அத்தியாயம் - 10 பார்க்கவும்).

மீதமான மனுக்குலத்தார் "மனிதனாகிய கிறிஸ்து இயேசுவினால்" பலிச் செலுத்தப்பட்ட உரிமைகளைப் புசிப்பதன் மூலம் (சொந்தமாக்கிக்கொள்வதன் மூலம்)

சார்ந்திருக்கும் ஜீவனை அடைவார்கள்; இது விருப்பமுள்ளவர்களுக்கும், கீழ்ப்படிதலுள்ளவர்களுக்கும் நித்திய காலமும் அருளப்படும்.

இவர்கள் அனைவரும் முதலாவதாகக் கர்த்தரைப்பற்றியும், அவர் செலுத்தின பலிபற்றியும், அது அளித்ததான நீதிமானாக்கப்படுதலையும், திரும்பக்கொடுத்தலையும் பற்றியுமான அறிவிற்குள்ளாகக் கொண்டுவரப்பட வேண்டும் மற்றும் பின்னர் அதில் இலவசமாய்ப் பங்கெடுத்து, ஜீவிக்கலாம். இப்படியானவர்களைக்குறித்து ("பாத்திரத்தில்" பங்கெடுக்காமல்) "இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான்" என்றும், "என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்," அதாவது ஜீவன் அளிப்பவராகிய கிறிஸ்துவைச் சார்ந்துள்ளவர்கள் அனைவருக்கும் - சார்ந்திருக்கும் ஜீவன் அருளப்படும் என்றும் எழுதப்பட்டுள்ளது. வித்தியாசம் என்னவெனில் இப்பொழுது தெரிந்தெடுக்கப்படுகின்றதான சுவிசேஷசபையானது, கிறிஸ்துவின் சரீரமானது, தலையானவரோடுகூட அழியாமையை உடையவர்களாய் இருப்பார்கள்; தன்னில்தானே ஜீவனுடையவர்களாய் இருப்பார்கள் மற்றும் உலகத்திற்கு ஜீவன் கொடுக்கிற ஆதாரமாய் இருப்பார்கள்; உலகமானது இந்த ஊற்றண்டைக்கு ஜீவனுக்காக வந்து, இதனால் ஜீவிப்பவர்களாய் இருப்பார்கள்.

"இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும்குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்" என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகளையும் நாம் கவனிக்கின்றோம் (1 கொரிந்தியர் 11:27, 29). இதன் அர்த்தம் என்னவெனில், கிறிஸ்துவின் பலியானது தங்களுடைய பாவங்களுக்கானது என்று அடையாளங்கண்டுகொள்ள தவறும் அனைவரும், இந்த அடையாளங்களைப் புசிப்பது என்பது, "இவரது இரத்தப்பழியானது எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று யூதர்கள் சத்தமிட்டப்போது, பழிக்கு ஆளானதுபோல, இவர்களும் அவரைக் கொன்றவர்கள் என்ற பழிக்கு ஆளானவர்களாய் இருப்பார்கள். யூதர்கள் தங்களைக் குற்றமில்லாத இரத்த (மரணத்திற்கான) பழிக்குள்ளாக்கினதுபோன்று, இப்பொழுது கர்த்தருடைய சரீரமும், இரத்தமும் தங்களுக்கான ஈடுபலியென்று நிதானித்தறியாமல், அடையாளங்களைப் புசிப்பவர்களும், அவரது இரத்தம் எங்கள்மேல் இருப்பதாக என்றும் சொல்லுகிறவர்களாய் இருப்பார்கள். கர்த்தருடைய சரீரமும், இரத்தமும் தங்களுக்கான ஈடுபலி என்று அடையாளம் கண்டுகொள்ளாதவர்கள் அனைவருக்கும், இதில் பங்கெடுப்பது என்பது, அவரது சரீரத்தைப் பிட்டதிலும், அவரது இரத்தத்தைச்

சிந்தினதிலுமான குற்றத்தில் பங்குள்ளவர்களாக தீர்க்கப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும்; இது இவர்களுக்கு மன்னிப்பை - பாவங்களுக்கான மன்னிப்பையும் பேசாது.

பொதுவான (ஆங்கில) மொழியாக்கமானது *condemnation* என்று மொழிப்பெயர்ப்பதற்குப் பதிலாக, *damnation* என்று சரியற்ற மொழிப்பெயர்ப்பைக் கொடுத்துள்ளது. இதை அபாத்திரமாய், அறியாமையில் செய்யும் திரளான ஜனங்களுக்கு, அதாவது அடையாளங்களினுடைய அர்த்தத்தினைச் சரியாய் அடையாளம் கண்டுகொள்ளாமலும், அவ்வடையாளங்களானது குறிக்கின்றதான கர்த்தருடைய மரணத்தின் முக்கியத்துவத்தைச் சரியாய் அடையாளங்கண்டு கொள்ளாமலும், இதை அபாத்திரமாய் அறியாமையில் செய்யும் ஜனங்களுக்கு உண்மையான எந்த இரத்தப்பழியும் இல்லை, மாறாக அடையாள பழியே உள்ளது. அடையாளமாக இவர்கள் கர்த்தருடைய சரீரத்தைப்பிட்டு, அவரது இரத்தத்தினைத் தங்கள்மேல் எடுத்துக்கொள்கின்றார்கள். அடையாளமானது சரியாய்ப் புரிந்துகொள்ளப்படுகையில், அது சமாதானத்தையும், பாவங்களுக்கான மன்னிப்பையும், ஆட்டுக்குட்டியுடன் ஐக்கியத்தையும் பேசுகின்றாய் இருக்கும்; ஆனால் புரிந்துகொள்ளப்படவில்லையெனில் அது நியாயப்பிரமாணத்தின் கீழ், கொலைக்கான அடையாளமான ஒப்புக்கொள்ளுதலாக அர்த்தமாகிவிடும். ஆனால் இவை அனைத்தும் அடையாளமாய் இருப்பதினால், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவதும், அடையாளமான ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுதலாகவே இருக்கும். உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதான தேவனுடைய ஆட்டுக்குட்டியினால் கொடுக்கப்பட்டதான ஈடுபலி குறித்த அறிவிற்குள் முதலாவது வருபவர்கள் மாத்திரமே, இந்த அடையாளத்தை அபாத்திரமாய்ப் பயன்படுத்துகிறவர்களுக்கு வருகிறதான உண்மையான ஆக்கினைக்குள்ளான தீர்க்கப்படுதலுக்குள் உண்மையாய் வரமுடியும்.

அவர் நிமித்தமாக, பாடுகள் மற்றும் மரணம் எனும் பாத்திரத்தில் பானம் பண்ணுதலானது, பலிச் செலுத்துதலானது, அனைத்துமே தற்கால யுகத்திலேயே செய்து முடிக்கப்பட வேண்டும். மகிமையின் யுகமானது ஆரம்பமாகும்போது, கிறிஸ்துவின் பாடுகள் அனைத்தும், அதாவது தலை மற்றும் அவரது சரீரத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினருடைய பாடுகள் அனைத்தும் முடிந்துபோனதாய்க் காணப்படும். தீர்க்கதரிசிகள் கிறிஸ்துவின் பாடுகள்குறித்தும், பின்வரும் மகிமைகுறித்தும் பேசியுள்ளபோது, அவர்கள் சிறிய மற்றும் கடைநிலை அங்கத்தினன் அனைவரையும் உள்ளடக்கின முழுக் கிறிஸ்துவைக்குறித்தே பேசியுள்ளனர் (1 பேதுரு 1:11). மகிமை வரும்போது, இரத்தத்தைப் பானம்பண்ணுதலும், கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்களென அந்தப் "பரம அழைப்பில்" பங்கடைவதற்கான வாய்ப்பு அனைத்தும் முடிவடைந்துவிடும். அப்போது முழுக் கிறிஸ்துவுக்குத் தலையான நமது கர்த்தரும்,

அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் பிட்கப்பட்டு, பலிச்செலுத்தப்பட்டவர்களாய்க் காணப்படுவார்கள் மற்றும் உலகத்தின் ஜனங்களைப் போஷித்தலானது உண்மையில் ஆரம்பமாகும். திரும்பக்கொடுத்தலானது, அப்போது மனுக்குலத்தினால் உணர்ந்துகொள்ள ஆரம்பிக்கப்படும். இதை நாம் இப்பொழுது விசுவாசத்தினால் தரிப்பிக்கப் பெற்றிருக்கின்றோம், அதாவது பலிச்செலுத்தக்கூடிய இந்த ஒரு காலப்பகுதியில் நாம் பலிச்செலுத்தத்தக்கதாகத் தரிப்பிக்கப்பெற்றிருக்கின்றோம்; ஏனெனில் ஒப்புக்கொடுப்பதற்கு ஜீவனே இல்லாதபோது, ஜீவனுக்கான உரிமை இல்லாதபோது, எவராலும் கிறிஸ்துவுடனே தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்திட முடியாது. ஆகையால் சரீரம் நிறைவடைந்து பலிச்செலுத்துதல் முடிவடைகையில் வெளிப்படும் மகிமையில் நாமும் உடன் சுதந்தரர்களாகக் காணப்படத்தக்கதாக, கிறிஸ்துவுடன் உடன் பலிச் செலுத்துபவர்களாகுவதற்கும், அவரது பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்குமான அழைப்பாகிய "பரம அழைப்பை" நாம் பெற்றுக் கொள்ளத்தக்கதாக, முதலாவது விசுவாசத்தினால் கிறிஸ்துவின் புண்ணியங்களில் பங்கெடுப்பதற்கும், விசுவாசத்தின் மூலம் பிதாவை அணுகுவதற்கும், பிரியமானவருக்குள் அங்கீகரிக்கப்படுவதற்கும் நமக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஆகையால் அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு அடையாளங்களானது (அப்பம் மற்றும் திராட்சரசமானது) கர்த்தருடைய பலிக்கான நினைவுகூருதல்களாக மாத்திரம் காணப்படாமல், அவருடன் பலிச் செலுத்துவதற்கான தங்களது உடன்படிக்கைக்கும் மற்றும் தாங்கள் நிபந்தனைகளை நிறைவேற்றி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகுவதற்கும், நமது கர்த்தரும், மீட்பரானவருடன் உடன் சுதந்தரர்களாகக் காணப்படுவதற்கும், ஜனங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பதில் அவருடன் உடன் வேலையாட்களாகக் காணப்படுவதற்கும் பாத்திரவான்களாகுவதற்கான காரியங்களுக்கும்கூட நினைவுகூருதல்களாகக் காணப்படுகின்றது.

நினைவுகூருதலின் இந்த அம்சத்தைப் பின்வரும் வார்த்தைகளைக்கூறி பவுல் நம் கவனத்திற்குக் கொண்டுவருகிறார்: "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய (அபிஷேகிக்கப்பட்ட வகுப்பார் அனைவருடைய) இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் (நமது கர்த்தரைத் தலையாகப் பெற்றிருக்கும் "சிறுமந்தையாகிய," சபையின்) ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான (அங்கத்தினர்களான) நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (1 கொரிந்தியர் 10:16, 17).

இந்த யுகத்தில் விசுவாசத்தின் மூலமாக (அ) அடுத்த யுகத்தில் நிஜமாகவே அனைவரும் நமது கர்த்தர் இயேசுவின் மாம்சத்தைப் புசிக்க வேண்டும்; அதாவது அவரது பலியினால் அனைவருக்கும் பெற்றுத்தரப்பட்டதான அந்த மனுஷீக உரிமைகள்

மற்றும் சிலாக்கியங்களில் பங்கெடுக்க வேண்டும்; இல்லையேல் ஒன்றில் இப்பொழுது பலிச்செலுத்துவதற்கு (அ) ஒன்றில் (பலிச்செலுத்தும் சிலாக்கியம் இல்லாமல் அடுத்த யுகத்தில்) அதை அனுபவிப்பதற்கு என்று ஜீவிப்பதற்கான உரிமைகள் ஏதும் இருக்காது. ஆகையால் "இதைச் செய்வதற்கும்," நிதானித்து, அறிந்து செய்வதற்கும் என்று நாம் விசுவாசிகள் அனைவரையும் வலியுறுத்துகின்றோம். அடையாளத்தைப் பயன்படுத்துகையில், அனைத்துப் பாவங்களிலிருந்துமான நீதிமானாக்கப்படுதலையும், வேறு எந்த நாமத்தின் மூலமாகவோ, வழியின் மூலமாகவோ இல்லாமல், தேவனுடைய ஆட்டுக்குட்டியின் வாயிலாக தேவன் நீட்டுகின்றதான ஜீவிப்பதற்குரிய உரிமையையும் முழுமையாய் ஏற்றுக்கொள்ளுங்கள், சொந்தமாக்கிக்கொள்ளுங்கள், பயன்படுத்திக்கொள்ளுங்கள். விசேஷமாக கிறிஸ்துவோடுகூட அவரது மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்களும் மற்றும் இப்படியாய் அவரது "சரீரத்தின்" அங்கத்தினர்களுக்குள், வந்தவர்களுமாகிய விசுவாசிகள் அனைவரும், அவரது இரத்தத்தின் மூலமான நீதிமானாக்கப்படுதலை நினைவுகூர்ந்து, அவரோடுகூட மரிப்பதற்கான தங்களது உடன்படிக்கையினைப் புதிய, திவ்விய சுபாவத்தின் பங்காளிகளெனப் புதுப்பித்துக்கொண்டு, "இதை ஆசரிப்பார்களாக" (உரோமர் 6:3, 4).

ஒரே சரீரத்தின் உடன் அங்கத்தினர்கள் என்று உங்களால் அடையாளங் கண்டுகொள்ள முடிகிறவர்களுடன் கூடிக்கொள்ளுங்கள்; ஈடுபலியில் விசுவாச மற்றவரைத் தவிர்த்துவிடுங்கள். முன்கூட்டியே கூட்டத்திற்கான ஆயத்தங்களைச் செய்துகொள்ளுங்கள். உங்களில் யார் அடையாளச் சின்னங்களைப் பரிமாறுகின்றார்கள் என்பது முக்கியமல்ல; முதலாம் ஆசரிப்பில் யூதாஸ்கூட உதவியிருந்திருக்கலாம். "நீங்கள் எல்லாரும் சகோதரராய் இருக்கிறீர்கள்" என்பதையும், உங்களது வாய்ப்பிற்கேற்ப, திறமைக்கேற்ப, எந்தக் காரியத்திலும் ஒருவருக்கொருவர் பணிவிடை புரிந்திடுவதற்கான சிலாக்கியம் உடையவர்களாய் இருக்கின்றீர்கள் என்பதையும் நினைவில்கொள்ளுங்கள். கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்; ஆனால் போலியான தன்னடக்கத்தைப்பார்த்து, உங்கள் மத்தியிலான கோதுமையைக்காட்டிலும் களையைத் கனத்திற்குரியவர்களாக எண்ணாதிருங்கள்.

நமது கர்த்தர் இயேசுவினுடைய கிருபையானது, உங்கள் அனைவரோடும் இருப்பதாக. அந்தத் தருணமானது மிகுந்த ஆசீர்வாதங்களில் ஒன்றாகவும், மிகுந்த நன்மை பயப்பவைகளில் ஒன்றாக இருப்பதாக.

# கெத்செமனே

முன்னிரவு இருட்டினிலே, நான் பயணிக்கும்போதினிலே,
கண்ணில் படுவதெல்லாம் கருப்பாயும் இருட்டாயும் தோன்றியதே,
இரட்சகர் ஏன் என்னருகினில் இல்லை, என்றே நோக்கி நின்றேன்,
பாதை மிகவும் செங்குத்தானதாய், கரடுமுரடாய், ஏற்ற இறக்கமாய்,
முள்ளும் கல்லும் நிறைந்திருந்ததுவே.

சுமக்கவியலா பாரத்தின் கீழே, செவிடாகிக் குருடாகித் தடுமாறி நின்றேன்,
துன்பம் மிகுந்த கண்ணீர் ததும்பி, பார்வையை மறைத்து நின்றதுவே,
அந்த மங்கலான மறைப்பினூடே பார்க்கையிலே - என்
கர்த்தரின் முகத்தினைப் பார்க்கவியலாமலே தவறவிட்டேனே.
கடைசியில் பார்வையைப் பரலோகத்தின் அன்பின் மீதே நிலைநிறுத்தினேனே,
அவர் கூறும் ஆலோசனைகளோ, பரத்திலிருந்துவரும் வெளிச்சத்திலே
எப்போதும் பளிச்சிடுமே, இதைப் பார்த்துக்கொண்டு நடக்கையிலே,
நான் ஆர்வமுடன் முன்னோக்கிக் கடந்துவந்தேன்.
முட்களும், கற்களும் குத்தி பாதம் கிழிந்து களைப்படைந்ததுவே,
நான் பூமியின்மீதே விழுந்துவிட்டேனே.
காலத்தாலும், புயலாலும் கிழிக்கப்பட்ட ஒரு சலவைக்கல் சிலுவைதனை,
கண்டேன் என் சிரசை அதன்மீதே சாற்றினேனே,
என் துன்பங்கள் கலந்த மகிழ்ச்சியையும் நான் கொடுத்துவிட்டேன்,
திடீரென சக்கரத்துக்குள் சக்கரம் சுழலும் ஒலி, காற்றில் வந்ததே,
ஆ, என்னருகினில் மண்டியிட்ட பரலோக தூதரை நான் கண்டேன்,
நடு இரவில், அந்தத் தோட்டத்திலே பகலைப்போன்றே வெளிச்ச மிகுந்ததே,
அந்த நிழல்களினூடே பார்த்தபோதில் கிறிஸ்து அங்கே
நின்றிருந்தாரே என்னுடைய கெத்செமனேயின் அனுபவங்களிலே.

- Birla I. Morris (R5214)

# நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டு நிறைவு நாள்

புதிய வாசகர்களுடைய நலன்கருதி, நமது கர்த்தருடைய மரணத்தை வருடத்திற்கு ஒருமுறை, அதன் ஆண்டுநிறைவு நாளில் நினைவுகூர்ந்து ஆசரிப்பது நம்முடைய வழக்கமாய் இருக்கின்றது என்று நாம் குறிப்பிடுகின்றோம்.

"பாவத்தின் சம்பளம் மரணம்" என்றும், நமது அருமை மீட்பரினால் அனைவருக்குமாகக் கொடுக்கப்பட்டதான ஈடுபலியானது, அவரது ஜீவனாய் இருக்கின்றது என்றும், உண்மையாய் உணர்ந்துகொள்பவர்கள் அனைவருக்கும் - அவரது மரணம், அவரது சிலுவையானது, எப்போதும் அவர்களது கவனத்தினுடைய மையமாகக் காணப்பட வேண்டும்; மற்றும் இதிலிருந்தே எதிர்க்கால ஜீவன் மற்றும் ஆசீர்வாதங்களுக்கான நமது நம்பிக்கைகள் அனைத்தும் உண்டாகுகின்றதாய் இருக்கின்றது. இப்படியானவர்கள் அனைவரும் கல்வாரியில் வெளிப்பட்டதான நமக்காக மரித்திட்ட அன்பை, மீட்பரின் அன்பை, அனைத்தையும் சகித்த அன்பை, வல்லமையுள்ள அன்பைக்குறித்து நினைவுகூர்ந்து ஆசரிப்பதைச் சிலாக்கியமாகக் கருதிடுவார்கள். "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை." (யோவான் 15:13) ஆனாலும் தேவனுடைய அன்பானது, விசேஷமானதாகவும், மற்ற அனைத்து அன்பிற்கும் மேலானதாகவும் காணப்படுகின்றது; ஏனெனில் நாம் பாவிகளாகவும், சத்துருக்களாகவும் இருந்தபோதே, நம்மைத் தேவனிடத்தில் கொண்டுசேர்க்கத்தக்கதாகவும், ஆதாமினுடைய மீறுதல் காரணமாக இழந்துபோகப்பட்டதான பரிபூரண நிலைமைக்கும், தேவனுடன் இசைவாய் உள்ள நிலைமைக்கும், மனிதனைச் சீர்ப் பொருந்தப்பண்ணுவதற்கான உரிமையும், வாய்ப்பும் தமக்குக் கிடைக்கத்தக்கதாகவும் கிறிஸ்து அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக நீதியுள்ளவராய் மரித்தார்.

தம்முடைய உண்மையுள்ள பின்னடியார்களிடத்திலான இந்த விருப்பத்தினை முன்னறிந்தவராகவும், இந்த விருப்பத்திற்கான தமது அங்கீகரிப்பையும், அந்த விருப்பம் ஏற்றது என்பதையும் சுட்டிக்காட்டும் வண்ணமாகவும், நமது கர்த்தர் அந்த எளிமையான, அதே சமயம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும் "கடைசி இராப்போஜனம்" என்று அழைக்கப்படும் நினைவுகூருதலை நிறுவினார். இது அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில் மற்றும் அவர் சிலுவையில் அறையப்பட்டதான அதே நாளிலும் - நீசான் மாதத்தினுடைய 14-ஆம் தேதியன்று - பஸ்கா பண்டிகை ஆரம்பிப்பதற்கு முந்தின நாளில் நிறுவப்பட்டது.

நாம் நாளைக் கணக்கிடும் முறையிலிருந்து, எபிரெயர்களுடைய நாள் கணக்கிடும் முறைமையானது வித்தியாசமானதாகும். அவர்களுக்கு ஒரு நாளானது சூரிய அஸ்தமனத்துடன் (அ) மாலை 6 மணியுடன் துவங்குகின்றதாய் இருக்கின்றது. இதனால்தான் நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும் கடைசி இராப்போஜனத்தைச் சுமார் 8 மணிக்குப் புசித்துவிட்டு, பின்னர் கெத்செமனே தோட்டத்திற்கும், பிலாத்துவினிடத்திற்கும், ஏரோதினிடத்திற்கும் சென்று, பின்னர் அதே நாளின் மதிய வேளையில் அவர் சிலுவையில் அறையப்பட முடிந்தது. அநேகமாக நமது கர்த்தருடைய

மரணத்திற்கான நினைவுகூருதலான அடையாளமான இராப்போஜனமும், அவரது மரணமும் அதே/ஒரே நாளில் இடம்பெறத்தக்கதாகவே, எபிரெயர்கள் 24 மணி நேரங்கள் கொண்ட ஒரு நாளினை, இரவுடன் துவங்கும் வழக்கத்தினைக் கொண்டிருக்கத்தக்கதாக ஏற்பாடு பண்ணப்பட்டது. மீண்டுமாக இரவு என்பது பாவம் எனும் இருளான வேளையையும், மரணத்தில் நித்திரைப்பண்ணுகிற வேளையையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; மற்றும் இதனை தொடர்ந்து உயிர்த்தெழுதலின், பரலோக வெளிச்சத்தின், ஆசீர்வாதத்தின் மகிமையான மற்றும் நித்திய காலமான காலை வருகின்றது; இந்தக் காலையானது ஆயிரவருட யுகத்தில், நீதியின் சூரியன் தனது செட்டைகளில் ஆரோக்கியத்துடன் உதிக்கையில் துவங்குகின்றதாய் இருக்கின்றது.

சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியினுடைய பஸ்கா இராப்போஜனத்தின் இடத்தில், கர்த்தரால் நிறுவப்பட்டதான அப்பமும், திராட்சரசமுமுள்ள அவரது நினைவுகூருதல் இராப்போஜனமானது இடம்பெறுகின்றது என்ற உண்மையும், பஸ்கா ஆட்டுக்குட்டியும், அது புசிக்கப்பட்டதைத் தொடர்ந்து உண்டான எகிப்திலிருந்துள்ள விடுதலையும், தேவ ஆட்டுக்குட்டிக்கும், அவரது புண்ணியங்களில் பங்கெடுப்பவர்கள் அனைவருடைய விடுதலைக்கும் நிழலாய்க் காணப்படுகின்றது என்ற உண்மையும், ஆட்டுக்குட்டியின் நிஜமாகிய "உலகின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்ற தேவாட்டுக்குட்டியினுடைய" மரணத்தை, அதன் ஆண்டுநிறைவு நாளில் நினைவுகூர்ந்து ஆசரிப்பதே, இதற்கான ஒரே சரியான மற்றும் ஏற்ற மற்றும் சிறந்த நேரமாக இருக்கும் என்பதின் ஏற்புடைமையை நாம் அடையாளம் கண்டுக்கொள்ளத்தக்கதாக நம்மை வழிநடத்தும். இப்படியாகவே நாம், "நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்ற அவரது வார்த்தைகளைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நமது கர்த்தர் நோக்கம் கொண்டிருந்தார் என்று நாமும் நம்புகின்றோம்; அதாவது, "நீங்கள் இந்தப் பஸ்கா இராப்போஜனத்தை ஆசரிக்கும்போதெல்லாம், நீங்கள் நிழலான ஆட்டுக்குட்டியையும், எகிப்திலிருந்துள்ள நிழலான விடுதலையையும் நினைவுகூரும்படி இதைச் செய்யாமல், மாறாக என்னை நிஜமான தேவாட்டுக்குட்டி என்று விசுவாசிக்கின்ற நீங்கள், என்னையும், உயிர்த்தெழுதலின்போதுள்ள உண்மையான கடந்துபோகுதலையும் எண்ணிட வேண்டும்" எனும் விதத்தில் கூறினார்.

ஒவ்வொரு யுகத்திலும் காணப்பட்டக் கிறிஸ்தவர்களானவர்கள் கல்வாரியில் நடந்த இம்மாபெரும் நிகழ்வையும், அங்கு உலகத்தின் ஜீவனானது விலைக்கொடுத்து வாங்கப்பட்டதான காரியத்தையும் ஆசரிக்க வேண்டும் என்பது ஏற்புடையது என்பதை ஏதோ விதத்தில் அடையாளங்கண்டுகொண்டுள்ளனர் மற்றும் சிலுவையில் அறையப்பட்ட நிகழ்வுக்கும், உயிர்த்தெழுதலுக்கும் நினைவுகூருதலாக அநேகர் "புனித வெள்ளியையும்," "ஈஸ்டர் ஞாயிறையும்" ஆசரிக்கின்றனர். ஆனால் கர்த்தருடைய மரணத்தை, இராப்போஜனத்தில், அவரால் அங்கீகரிக்கப்படுகின்றதான, அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிக்கும் காரியமானது, கிட்டத்தட்ட 16 நூற்றாண்டு களுக்கும்மேலாக கவனிக்கத்தவறப்பட்டுள்ளது. இது இரண்டு காரணங்களுக்காக

தவிர்க்கப்பட்டது. முதலாவது காரணம், கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்ளுகிறவர்களுக்கும், யூதர்களுக்கும் இடையில் பகைமை உண்டானதேயாகும்; அதாவது தங்கள் மீது யூதர்களுடைய மற்ற வழக்கங்கள் மற்றும் ஆசரிப்புகளினுடைய செல்வாக்கினைக் குறித்த கிறிஸ்தவர்களின் அச்சத்தினால், புதிய மதத்தை, பழைய மதத்துடன் இணைக்கின்றதான இணைப்புகளைத் துண்டித்துப்போடுவதற்காகும்; மற்றும் இரண்டாவது காரணம் போப்மார்க்கம் கட்டுப்பாட்டினைப் பெற்றிருந்தபோது, உலகத்தின் பாவத்தை எடுத்துப்போடுவதற்கு எப்போதும் போதுமானதாய்க் காணப்பட்ட ஒரே மற்றும் ஓர் உண்மையான மரணத்திற்குப்பதிலாக, "பூசைபலியானது" கொண்டுவரப்பட்டதாகும். (இந்தப் பூசைபலியானது, கிறிஸ்துவை மீண்டும் மீண்டுமாகப் பலியிடுவதைத் தெரிவிக்கின்றதாய் இருந்தது).

போப்மார்க்கத்தினுடைய இருளினின்று வெளியே வந்திட்டவர்களான புராட்டஸ்டண்டினர்கள், பூசை பலியை - அருவருப்பை - நிராகரிக்குமளவுக்கும் மற்றும் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆதியில் காணப்பட்டதான, அதற்கே உரிய எளிமையில் ஆசரிக்குமளவுக்கும், போதுமானவைகளை அடையாளம் கண்டுகொண்டனர். எனினும் அதை எத்தனைதரம் ஆசரிப்பது ஏற்றதாய் இருக்கும் என்பது தொடர்புடைய விஷயத்தில் சந்தேகத்திலேயே காணப்பட்டனர்; சிலர் ஞாயிறுதோறும் என்றும், சிலர் மாதந்தோறும் என்றும், சிலர் காலாண்டுதோறும் என்றும், சிலர் இன்னும் சில விதத்திலும் ஆசரித்துவருகின்றனர்.

இவ்விஷயம் தொடர்புடையதான வேதவாக்கியங்களினுடைய ஆதாரமானது, அனைத்துச் சந்தேகங்களையும், அனுமானங்களையும் தெளிவுபடுத்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் அதன் ஆதி எளிமையிலும், முழுக்க அர்த்தம் நிரம்பின நிலையிலும் நினைவுகூருதல் குறித்த கட்டளையை முன்வைக்கின்றதாய் இருக்கின்றது. இவ்விஷயம் குறித்து R1013-இல் நாம் விளக்கியிருப்பினும், புதிய வாசகர்களுக்கு அதே ரீபிரிண்ட்ஸ் எண்ணின் கீழான புதிய தலைப்பாகிய, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" எனும் பாடத்தினைப் பரிந்துரைக்கின்றோம். நம்மிடத்தில் அதனுடைய சில பிரதிகள் காணப்படுகின்றது மற்றும் இக்கண்ணோட்டத்திலிருந்து இப்பாடத்தினைப் படிக்க விரும்புகிறவர்களுக்கு, நாம் அந்தப் பிரதிகளை இலவசமாகக் கொடுக்க விரும்புகின்றோம்.

யூதர்களால் கைக்கொள்ளப்படும் விதம்போலவே அப்போஸ்தலர்களால் கைக்கொள்ளப்பட்டதுபோன்றும், ஆதித் திருச்சபையினரால் கைக்கொள்ளப்பட்டது போன்றும், இந்த ஒரு நிகழ்வை, அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிக்கும் பழக்கத்தினை நாமும் கொண்டிருக்கின்றோம் - அதாவது சூரியக்காலக் கணக்கிடுதலின்படியாக அல்லாமல் சந்திரக்காலக் கணக்கிடுதலின்படியாகும். ஆதித் திருச்சபையினர் சந்திரக்காலத்தைப் பின்பற்றினதுபோல, நாமும் பின்பற்றுகையில், அந்த நாளானது, வாரத்தினுடைய ஏதோ ஒரு நாளாய் இடம் பெறுகின்றது*. [*புனித வெள்ளியையும், ஈஸ்டர் ஞாயிறு முதலானவைகளை ஆசரிப்பவர்கள், சந்திர காலக்கணக்கிடுதலையே பயன்படுத்துகின்றனர்; எனினும் துல்லியமாய் அல்ல;

ஏனெனில் துல்லியமான சந்திர காலக்கணக்கிடுதலின்படியான தேதிக்குப்பதிலாக, அதற்கு அருகாமையில் காணப்படுகின்றதான வெள்ளிக்கிழமையையும், ஞாயிற்றுக்கிழமையையும், ஆண்டுநிறைவு நாட்களுக்காகத் தெரிவு செய்து கொள்கின்றனர்.] இந்த வருடம் அது ஏப்ரல் 14-ஆம் தேதி ஞாயிறு மாலையாக (6 மணிக்குமேல்) இருக்கின்றது. அந்தநாள் மாலையில் 6 மணிக்கு, எபிரெய மாதமாகிய நீசான் மாதத்தின் 14-ஆம் தேதி துவங்குகின்றதாய் இருந்து, திங்கட்கிழமை மாலை 6 மணிவரை நீடிக்கின்றதாய் இருக்கின்றது; இந்தத் திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு பஸ்கா பண்டிகை என்று அழைக்கப்படும் யூதர்களுடைய ஏழுநாள் பண்டிகையினுடைய முதல்நாளாகிய நீசான் 15-ஆம் நாள் துவங்குகின்றதாய் இருக்கின்றது. நாம் அவர்களது பண்டிகையையும் ஆசரிப்பதில்லை மற்றும் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியையும் பயன்படுத்துகிறதில்லை. நம்முடைய ஆசரிப்பானது நிஜமான, உண்மையான தேவாட்டுக்குட்டியாய்க் காணப்படுகின்றவர்பற்றியாகும் மற்றும் இவருக்கே அப்பமும், திராட்சரசமும் அடையாளங்களாய்க் காணப்படுகின்றது. எதிர்க் காலத்தில் நாம் யூதர்களுடைய சந்தோஷத்தின் ஏழு நாட்கள் பண்டிகையினுடைய நிஜத்தை - தேவனுடைய ஜனங்கள் அனைவரும் (இஸ்ரயேலர் களால் அடையாளப்படுத்தப்படுபவர்கள் - அவரோடு இசைவிற்குள்ளாக வந்துவிட்டவர்களும், அவரோடு இசைவிற்குள்ளாக வரும் அனைவரும்) - பாவம் மற்றும் அதன் பின்விளைவாகிய மரணத்தைக் கடந்துவந்து, அக்கறையில் வந்து நிற்கும்போதும் மற்றும் இப்பொழுது முதற்பேறான சபையையும், இவர்களைப் பின்தொடர்ந்து வரவும், கர்த்தரைச் சேவிக்கவும் விரும்புகின்றவர்களையும் அடிமைப்படுத்திடுவதற்கு நாடிக்கொண்டிருக்கின்றதான சாத்தானும், ஈட்டிகளும், கவண்களும், பொல்லாப்பான தந்திரமுள்ள இரதங்களும் உள்ள அவனது மனமார்ந்த பின்னடியார்களும் இறுதியில் முற்றிலுமாக ஜெயங்கொள்ளப்படும்போதும், இரண்டாம் அல்லது நித்தியமான மரணத்திற்குள் தள்ளப்படும்போதும் - நாம் கொண்டாடுவோம். இவர்களது இந்த இறுதி அழிவானது, பார்வோனும், அவனது குதிரை வீரர்களும் செங்கடலில் மூழ்கடிக்கப்படுவதில் அடையாளப்படுத்தப்படுகின்றது. இந்த அழிவிலிருந்து ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தின் கீழ்க் காணப்பட்டதான அனைவரும் காப்பாற்றப்பட்டனர் - (தற்காலமாகிய சுவிசேஷயுகமாகிய அந்த இரவில்) முதற்பேறானவர்கள் மாத்திரம் காப்பாற்றப்படாமல் (தப்புவிக்கப்படாமல்), இவர்களால் அடுத்தநாள் காலையில் (ஆயிரவருட யுகத்தில்) வழிநடத்தி வரப்பட்டதான கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும்கூடக் காப்பாற்றப்பட்டனர்.

நமது ஆட்டுக்குட்டியானவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் பலன்பெற்றவர்களாகிய விசுவாசிகளில் இரண்டு (அ) மூன்று பேர் எங்கெல்லாம்கூடி இதை அநுசரிக்க வாய்ப்புள்ளதோ, அவர்கள் ஒன்றுகூடிட மறவாமல், ஒன்றுகூடி நமக்கு மிகவும் விலையேறப்பெற்றவைகளைச் செய்து தந்துள்ளவரான அவரின் நினைவாக "இதைச் செய்வோமாக." முடிந்தமட்டும் கர்த்தருடைய சரீரத்தின் அநேக அங்கத்தினர்கள் இவ்வாறாக ஒன்றுகூடிட விரும்பினாலும், யாரையும் வற்புறுத்தாதீர்கள்; எண்ணிக்கை அவசியம் என்று எண்ணாதீர்கள்; உங்கள்

ஐக்கியத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட நபர் உங்களோடுகூடக் கண்டிப்பாய்க் கலந்து கொள்வது அவசியம் என்று எண்ணாதீர்கள்; உங்களோடுகூடச் சேர்ந்து இந்தச் சிலாக்கியத்தினை அனுபவிப்பதற்கு உங்கள் சுற்றுப்புற வட்டாரத்தில் எவருமில்லையெனில், கர்த்தரோடு தனிமையில்கூடி, அவரது இந்த மாபெரும் பலியினை ஆசரியுங்கள்.

இந்த எளிமையான ஏற்பாட்டின் விஷயத்தில் அதை ஆசரிக்கும் காரியமும், அடையாளங்களைக் கையாளும் காரியமும், சிலர் போதிப்பதும் மற்றும் விசுவாசிப்பதும் போன்று, ஒரு விசேஷித்த வகுப்பாருக்கு, அதாவது "குருமார் வகுப்பாருக்கு" உரியது என்று எண்ணிட வேண்டாம். தம் உண்மையான பின்னடியார்கள் மத்தியில் கர்த்தர் இம்மாதிரியான பாகுபாடுகளைப்பார்ப்பதில்லை; மாறாக, "நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார்" என்றே கூறியுள்ளார். நீங்கள் எல்லாரும் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாய் (வேலைக்காரர்களாய்) இருக்கின்றீர்கள்; நீங்கள் அனைவரும் நற்செய்தியைப் பிரசங்கிக்கிறவர்களாய் (அறிவிக்கிறவர்களாய்) இருக்கின்றீர்கள்; அந்த நற்செய்தியை உங்கள் மகிழ்ச்சிகரமான வார்த்தைகள் மற்றும் பார்வைகள் மற்றும் கிரியைகள் மூலம் வெளிப்படுத்துகிறவர்களாகவும், உங்கள் நாவுகள், பேனாக்கள் மற்றும் அச்சடிக்கப்பட்ட காகிதங்கள்/பக்கங்கள் மூலம் தெரிவிக்கின்றவர்களாகவும் இருக்கின்றீர்கள்; மனிதனால் ஏற்படுத்தப்படாமல், மாறாக "மெல்கிசெதேக்கின் முறைமையின்படியான" "இராஜரிக ஆசாரியக்கூட்டத்தில்" - நம்முடைய மாபெரும் பிரதான ஆசாரியனுடைய சரீரத்தில் அங்கத்தினர்களாக திவ்விய ஏற்படுத்துதலினால் உண்டான ஆசாரியர்களாய் நீங்கள் இருக்கின்றீர்கள். (மத்தேயு 23:8; வெளிப்படுத்தல் 1:6; எபிரெயர் 3:1; 4:14; 7:21)

மற்றவர்களை இல்லாமல் அர்ப்பணிக்கப்பட்டவர்களின் கூட்டத்தையே நாடுகிறவர்களாக இருப்பினும், உடன்படிக்கைப்பண்ணாத வேறு எவருமே கலந்துகொள்ளக்கூடாது என்று சொல்லுகிறவர்களாக இருக்க வேண்டாம்; கர்த்தருடைய பந்தியிலுள்ள மற்றவர்களுடைய உரிமைகளைக்குறித்துத் தீர்மானம் பண்ணிடுவதற்கும் முயற்சிக்காதீர்கள். உங்களால் நிராகரிக்கப்படும் எவரேனும் கூடிடுவதற்கும், அநுசரிப்பதற்கும் விரும்புவார்களானால், கர்த்தரோடுகூட அன்று வஞ்சகன் பந்தியில் காணப்பட்டான் என்றும், அந்த இரவில் அவன் பணத்திற்காக அவரைக் காட்டிக்கொடுத்தான் என்றும் நினைவில்கொள்ளுங்கள். பிசாசுக்கு ஊழியம் புரிந்திட்ட யூதாசை, பிசாசு வெளியே புறப்பட்டுப்போக வைப்பதுவரையிலும், கர்த்தர் யூதாசை சகித்துக்கொண்டிருந்தாரானால், இப்பொழுதுள்ள அந்த வகுப்பார் சார்பிலான பிரிந்துசெல்லுதலும் அவர்களாலேயே நடைப்பெறத்தக்கதாக நீங்களும் காத்திருக்கலாம்.

அலிகெனியிலுள்ள (Allegheny) சபையாராகிய எங்களோடுகூட இங்குவந்து கூடிடுவதற்கும், ஆசரிப்பதற்கும் வாய்ப்புகள் உள்ள அனைவருக்கும் அழைப்பு விடுப்பதும், தொலைவிலிருந்து வருகின்றவர்கள் அனைவரையும் எங்களால்

முடிந்தமட்டும் உபசரிப்பதும் எங்களுடைய வழக்கமாய் இருந்துவருகின்றது; மேலும் நாங்கள் மீண்டுமாக, இந்த வருடத்தில் அன்போடுகூட இந்த அழைப்பை விடுக்கின்றோம். நாம் நம்முடைய மீட்பரின் பலியை நினைவுகூர்ந்து ஆசரிப்பதற்கும், பின்தொடரும் மூன்று தினங்களிலும் அதன் ஐசுவரியத்தையும், பலன்களையும் - இப்பொழுது அர்ப்பணிக்கப்பட்டச் சபைக்கும், எதிர்க்காலத்தில் "பூமியின் குடிகள் அனைத்திற்குமான" பலன்களையும் குறித்துச் சிந்தனைச் செய்வதற்கும், வரமுடிந்தவர்கள் அனைவரும் வாருங்கள். இனியும் அழைப்பு விடுக்கப்படும் என்றோ, தனிப்பட்ட அழைப்பு விடுக்கப்படும் என்றோ காத்திருக்காதீர்கள். வருகின்றவர்கள் அனைவரும் வரவேற்கப்படுகின்றனர் மற்றும் இது உங்களுக்கான விசேஷித்த அழைப்பாகும். ஆனால் எவரும் கசப்பான இருதயத்தோடு (அ) பெருமையோடு (அ) வீணான மேட்டிமையோடு வராமல், மாறாக மீட்பருக்கான அன்பில் நிரம்பிவழியும் இருதயத்தோடும் மற்றும் அவரைக்குறித்தும், அவரது சித்தம்குறித்தும், திட்டம் குறித்தும், நமக்கான சிலாக்கியம்குறித்தும் நன்கு அறிந்துகொள்ள வேண்டுமென்ற வாஞ்சையில் நிரம்பின இருதயத்தோடும் வாருங்கள்; நாம் அனைவரும் ஒன்று கூடிடலாம்.

உங்களால் வரமுடியுமா என்பது குறித்து முடிந்தமட்டும் சீக்கிரமாய் முடிவு செய்யுங்கள். உங்களால் வரமுடியும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களானால், இது குறித்து மாத்திரம் எங்களுக்குக் கடிதமோ (அ) அஞ்சல் அட்டையோ அனுப்பி வையுங்கள். உங்கள் முகவரியைத் தெளிவாய்க் குறிப்பிடுங்கள் மற்றும் உங்களோடுகூட வேறு யாராவது வருகின்றார்கள் என்றால், அவர்களைக்குறித்தும், நீங்கள் எந்த இரயில் பாதை வழியாக வருவீர்கள் என்பதுகுறித்தும், எந்நேரத்தில் வந்துசேருவீர்கள் என்று எதிர்ப்பார்க்கப்படலாம் என்பதுகுறித்தும் தெளிவாய்க் குறிப்பிடுங்கள்.

(கிறிஸ்துவுக்குள்ளாக - அவரது மரணத்திற்குள்ளாக மூழ்குதலை (அ) உண்மையான ஞானஸ்நானத்தை அடையாளப்படுத்துகின்றதான) தண்ணீர் ஞானஸ்நானத்திற்கான வாய்ப்பு அக்கூடுகையின்போது காணப்படுமா என்று கேட்கப்பட்ட அநேக கேள்விகளுக்குப் பதில் - ஆம்! அதற்கான நல்ல வாய்ப்புள்ளதென நாம் கூறுகின்றோம். கிறிஸ்துவுக்குள் தாங்கள் ஏற்கெனவே ஸ்நானம் கொண்டுள்ளதை உணர்ந்தவர்களாக கர்த்தரையும், அப்போஸ்தலர்களையும் தண்ணீர் ஞானஸ்நானத்தில் பின்பற்றிடுவதற்கு விரும்புகின்றவர்கள், ஏப்ரல் 14-ஆம் தேதி ஞாயிறன்று மதியவேளையில், இதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வார்கள். இப்படியாக ஞானஸ்நானம் எடுப்பவர்கள் அனைவரும் இது விஷயம்குறித்துத் தங்கள் வேதாகமத்துடனும், கன்கார்டன்ஸ்சுடனும் (Concordance) ரீபிரிண்ட்ஸ் 1539-ஆம் பக்கத்தையும் கவனமாய்ப் படிப்பதற்குக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடந்த பஸ்கா இராப்போஜனத்தின்போது 23 பேர் இத்தகையதொரு சிலாக்கியத்தினைச்

சந்தோஷத்துடன் பயன்படுத்திக்கொண்டனர். ஆனால் எவரையும், இப்படியாகத் தங்கள் அர்ப்பணிப்பை வெளியரங்கமாய் அறிக்கைப்பண்ணிடுவதற்கு நாம் வற்புறுத்துவதில்லை. இன்னுமாக தண்ணீர் ஞானஸ்நானத்தை ஐக்கியத்திற்கான பரீட்சையாகவும் நாம் வைக்கிறதில்லை; எனினும் முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ள ஒருவர் தண்ணீர் ஞானஸ்நானத்தினுடைய அருமையையும், ஏற்புடைமையையும் பார்ப்பதற்குச் சீக்கிரமாகவோ (அ) கொஞ்சம் காலம் கழிந்தோ வழிநடத்தப்படுவார் என்றும், அவர் எப்போது பார்க்கின்றாரோ, அதுமுதல் அது அர்ப்பணத்திற்கான ஆழத்திற்கும் மற்றும் உலகத்திற்கும் அதன் கருத்துக்களுக்கும் கிறிஸ்துவோடுகூட மரித்துவிடுவதற்கான உண்மைக்குமான பரீட்சையாக மாறிவிடுகின்றது என்றும் நாம் நம்புகின்றோம்.

கர்த்தரினால் பயன்படுத்தப்பட்ட அப்பமானது, புளிப்பில்லாத அப்பமாகும்; புளிப்பினால் உப்பப்படாமல் உண்டாக்கப்பட்ட அப்பமாகும்; இது கிட்டத்தட்ட மாவு மற்றும் தண்ணீரினால் செய்யப்பட்ட சாதாரணமான ரொட்டி (water crackers) போன்று காணப்படும், ஆனால் பெரிதாகவும், மெல்லியதாகவும் காணப்படும். எபிரெய குடும்பத்தினரிடமிருந்து இத்தகைய அப்பத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்ததானால், பெற்றுக்கொள்ளுங்கள்; இல்லையேல் மாவு மற்றும் தண்ணீரினால் செய்யப்பட்ட சாதாரணமான ரொட்டி பெற்றுக்கொள்வது வசதியாய் இருந்தால், அதையே பயன்படுத்துங்கள். நாம் "நியாயப்பிரமாணத்தின் கீழ்க் காணப்படாததினால்" புளிப்புச் சேர்க்கப்படாத அப்பமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பது அவசியமில்லை என்றாலும், இராப்போஜனம் அநுசரிக்கப்படும் வேளையின் விஷயம்போன்று, இதிலும் நாம் அன்பினாலும், சிலாக்கியத்தினாலும் இயக்கப்படுகின்றவர்களாய்க் காணப்படுகின்றோம். சரியான வேளையில் அநுசரிப்பதிலுள்ள விசேஷித்த ஏற்புடைமையைக் காண்பதினால், இராப்போஜனத்தைச் சரியானவேளையில் ஆசரித்திட நாம் விரும்புவதுபோலவே, அப்பத்தின் விஷயமும் காணப்படுகின்றது; அப்பமானது நமது கர்த்தருடைய சரீரத்திற்கான அடையாளமாய் இருக்கின்றது என்று நாம் காண்கையிலும் மற்றும் புளிப்பு என்பது வேதவாக்கியங்களில் சீர்க்கேட்டிற்கும், பாவத்திற்கும் அடையாளமாய்ப் பயன்படுத்தப்பட்டுள்ளதை நாம் காண்கையிலும், நாம் இயல்பாகவே பரிசுத்தமானவரை, மாசில்லாதவரை, குற்றமற்றவரை, பாவிகளுக்கு விலகினவரை - தூய்மையானவரை அடையாளப்படுத்திடுவதற்கு, எளிமையாகப் பெற்றுக்கொள்ள முடிகின்றதான தூய்மையான (புளிப்பில்லாத) அப்பத்தை அடையாளமாகப் பயன்படுத்திடுவதற்கு விருப்பம்கொள்ள வழிநடத்தப்படுவோம்.

தம்முடைய சிந்தப்பட்ட இரத்தத்தை அடையாளப்படுத்திடுவதற்கு நமது கர்த்தரினால் பயன்படுத்தப்பட்ட திராட்சரசமானது/wine (இன்றும் பாரம்பரியமான யூதர்கள் பஸ்காவுக்கான தங்கள் திராட்சரசத்தைத் தயாரிப்பதுபோன்று) திராட்சப்பழச்சாற்றைத் (grape juice) துரிதமாய்ப் புளிப்பேற்றுவதற்கெனப் புளிப்புச்

சேர்க்கப்படாமல் ஆயத்தம் பண்ணப்பட்டதாய் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. எனினும் அது புளிப்பான திராட்சரசமேயாகும் (wine); திராட்சப்பழச்சாற்றிலுள்ள (grape juice) புளிக்க வைக்கும் தன்மங்களானது, இரசத்தை மெதுவாய்ப் புளிப்பாக்குகின்றது மற்றும் அசுத்தங்களை நீக்குகின்றது மற்றும் இப்படியாக திராட்சரசமாக (wine) மாறுகின்றது. இராப்போஜனத்தின்போது நமது கர்த்தரினால் பயன்படுத்தப்பட்ட திராட்சரசமானது (wine) சுத்தமான திராட்சரசம் (pure wine) (வெறும் திராட்சப்பழச் சாறாக/grape juice இருக்க முடியாது, காரணம் திராட்சப்பழச்சாறானது இலையுதிர் காலம் துவங்கி வசந்த/இளவேனிற் காலம்வரையிலும் புளிக்காமல் காணப்பட முடியாது) என்பதுகுறித்து நமக்குத் தெளிவாய் இருப்பினும், மற்றும் இதுபோன்றதான இரசமானது அதிகளவில் பானம்பண்ணுதல் என்பது வேதவாக்கியங்களில் போதைக்கொண்டு வெறிக்கப்பண்ணும் என்பதாகக் குறிப்பிட்டிருப்பினும், கலப்படமான wine/ஒயின்கள் மற்றும் வர்த்தக மதுபானங்கள் உண்டுபண்ணுகிற நாசத்தையும், ஆரோக்கியம் மற்றும் குடும்பத்திற்குச் சீரழிவையும் உண்டுபண்ணியுள்ளதையும், உண்டு பண்ணிக்கொண்டிருக்கிறதையும் நாம் நன்கு உணர்ந்திருப்பதினால், நமது கர்த்தர் விலையேறப்பெற்ற ஜீவன் கொடுக்கின்ற தமது இரத்தத்தை அடையாளப்படுத்துவதற்கென்று, இந்தக் கலப்படமான மற்றும் பாதகமான ஒயின்களையோ/திராட்சரசங்களையோ அல்லது வேறு ஏதாகிலும் வகை திராட்சரசங்களையோ அடையாளமாக தெரிந்தெடுக்கமாட்டார் என்பதில் எங்களுக்கு உறுதியே; சுத்தமான திராட்சரசம்கூட (pure wine) மதுபானம் பருகுவதற்கான ஆசையை விழிக்கப்பண்ணிடுவதாக (அ) ஆசையைப் புத்துயிரடையப் பண்ணுவதாய் இருக்கும் என்று கருதப்படுகின்றது. இது விஷயத்தில் நம்முடைய மரித்துக்கொண்டிருக்கும் சந்ததியில் அதிகரித்து வருகிறதான இப்பெலவீனத்தைக் கர்த்தர் கருத்தில்கொண்டிருப்பார் என்று நாம் நம்புகின்றோம். இது விஷயம் குறித்ததான நமது கர்த்தருடைய எண்ணங்களை நாம் இப்படியாக இருக்குமென நிதானிப்பதினாலும், அடையாளங்களைப் பயன்படுத்தி அவரது மரணத்தை நினைவுகூர்ந்து ஆசரிப்பது என்பது கட்டளையின் பேரில் செய்யப்படாமல், மாறாக ஆசரிப்பது என்பது சிலாக்கியமாக இருக்கின்றபடியாலும், புளிப்பில்லாத அப்பங்களை நாம் பயன்படுத்துவது தவறாய் இருக்காது என்று நாம் காண்கின்றோம் மற்றும் ஒருவரையும் தூண்டிவிடாதபடிக்கு, wine/திராட்சரசத்திற்குப் பதிலாக வேறொன்றைப் பயன்படுத்துவது என்பது தவறாகவோ அல்லது கட்டளையை அலட்சியப்படுத்து வதாகவோ இருக்காது என்று நாம் காண்கின்றோம்; விசேஷமாக இதே ஒரு கொள்கையானது, அப்போஸ்தலனாலும்கூடப் பலமாய் முன்வைக்கப்படுகின்றது; அவர் சொல்லியுள்ளதாவது: "மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது பலகீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில்

ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்." "ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன்." (உரோமர் 14:21; 1 கொரிந்தியர் 8:13)

அப்படியானால் wine/திராட்சரசத்துக்குப் பதிலாக என்ன பயன்படுத்தப்படலாம்? நியாயப்பிரமாணத்தின்படி புளிப்பான அனைத்தும் தவிர்க்கப்பட வேண்டியதான பஸ்கா வாரத்தின்போது எபிரெயர்கள் என்ன செய்வார்களோ, அதையே நாமும் செய்யலாம். ஒருவேளை அவர்களுக்குத் திராட்சரசம் (wine) தீர்ந்துபோய்விட்டதென்றால், துரிதமாய்ப் புளிக்கவைக்கப்படுவதற்கெனப் புளிப்புச் சேர்க்கப்பட்ட இரசத்தைத் தவிர்த்து, உலர்ந்த திராட்சைகளினால் உண்டாக்கப்பட்டதும் மற்றும் "திராட்சப்பழ ரசத்திற்கு" (fruit of the vine) சமமானதுமானதை, wine/திராட்சரசத்திற்குப் பதிலாகப் பயன்படுத்துவார்கள். நம்மாலும் அதைச் சுலபமாய்ச் செய்ய முடியும். இனிப்புத் தன்மை அதிகமாய்க் காணப்படுகின்றதான சாதாரணமான உலர் திராட்சைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்; அவைகளைக் கொஞ்சம் நீருடன் வேகவைத்தப் பிற்பாடு, வடிக்கட்டி, ரசத்தை மாத்திரம் எடுத்துக்கொள்ளுங்கள். இது உண்மையான "திராட்சரசமாய்" (wine) இருப்பதுபோல, உண்மையில் "திராட்சப்பழரசமாகவும்" (fruit of the vine) காணப்படுகின்றதல்லவா? நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும் உலர் திராட்சரசமோ (அ) திராட்சப்பழச்சாற்றையோதான் பயன்படுத்தினார்கள் என்று நாம் வலியுறுத்தாமல், மாறாக உண்மையான திராட்சரசத்தைத்தான் (wine) பயன்படுத்தினார்கள் என்று கூறுகிறவர்களாக இருப்பினும், நம்முடைய சீதோஷண நிலைக் காரணமாகவும், நம்முடைய நாட்களிலுள்ள விரைவான வாழ்க்கை நடைமுறை அழுத்தங்கள் காரணமாகவும், ஆண்கள் மத்தியில் சுயகட்டுப்பாட்டின் விஷயத்திலான பெலவீனம் காரணமாகவும், மாறுபட்ட சூழ்நிலைகள் காரணமாகவும் உண்மையான (wine) திராட்சரசத்திற்குப்பதிலாக உலர் திராட்சரசத்தை, திராட்சப்பழரசமாக (fruit of the vine) நாம் பயன்படுத்துவதைக் கர்த்தர் அங்கீகரிப்பார் என்று நாம் நம்புகின்றோம்.

# கர்த்தருடைய இராப்போஜனம்

## மத்தேயு 26:17-30

### "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்." லூக்கா 22:19

கர்த்தருடைய இராப்போஜனத்தினுடைய அர்த்தம் மற்றும் அது ஆசரிக்கப்படுவதற்கான சரியான வேளை தொடர்புடைய விஷயத்தில் கிறிஸ்தவ மண்டலம் எங்கும் பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. இது யூதருடைய பஸ்காவுக்கான நிஜமாக நிறுவப்பட்டது என்ற உண்மையினைப் பெரும்பாலான கிறிஸ்தவ மாணாக்கர்கள் அடையாளம் கண்டுகொண்டுள்ளனர். பழமை மிக்க சபைகளாகிய உரோமன் மற்றும் கிரேக்க கத்தோலிக்கச் சபைகள், எபிஸ்கோப்பல் சபைகள் முதலான சபைகளில், நமது கர்த்தருடைய மரணத்தை, அதன் ஆண்டு நிறைவு நாளில், ஆண்டுதோறும், நினைவுகூருதலாக ஆசரிப்பதற்கான பிரயாசம் எடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் இவ்வாசரிப்பானது, யூதருடைய கணக்கிடுதலின்படி, யூதருடைய முதல் மாதமாகிய நீசான் மாதத்தில், அதாவது யூதர்கள் நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்த நாளாகிய 14-ஆம் தேதியன்று ஆசரிக்கப்பட்டு வந்தது. பின்னரோ நமது கர்த்தருடைய மரணத்தைக் குறிப்பிட்டக்காலப்பகுதியில் வரும் வெள்ளி அன்றும், அவரது உயிர்த்தெழுதலை ஞாயிறு அன்றும், அதாவது புனித வெள்ளி என்றும், ஈஸ்டர் ஞாயிறு என்றும் ஆசரிப்பதற்கு வசதியாகக் கணக்கிடும் முறைமையில் மாற்றங்கள் செய்யப்பட்டன. கிறிஸ்வ மண்டலத்தில் பின்வந்த பிரிவினர்கள் மத்தியில், இவ்வழக்கமானது நடைமுறையில் இல்லாமல்போயிற்று மற்றும் அநேகமாக இதற்குக் காரணம், முடிந்தமட்டும் புராட்டஸ்டண்ட் வழக்கங்களுக்கும், ஆசரிப்புக்களுக்கும், கத்தோலிக்க வழக்கங்களுக்கும், ஆசரிப்புக்களுக்கும் இடையே அதிகமான வேறுபாட்டினைக் காண்பிப்பதற்கேயாகும். இதன்விளைவாகப் பெரும்பான்மையான புராட்டஸ்டண்டினர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை, யூதருடைய பஸ்காவுடன் தொடர்புப்படுத்திப்பார்க்கவும், வருடந்தோறும் நீசான் மாதம் 14-ஆம் தேதியில் ஆசரிக்கப்படுகின்றதான யூதருடைய ஆட்டுக்குட்டியின் மரணமானது, இந்நிழலுக்கு நிஜமாகவும், இந்நிழலினுடைய நிறைவேறுதலாகவும் காணப்படுகின்றதான நமது கர்த்தர் இயேசுவினுடைய மரணத்திற்கு நிழலாகக் காணப்படுகின்றது என்ற உண்மையினை உணர்ந்துகொள்வதற்கும் தவறிப்போகின்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

இப்படியாய்க் கவனிக்கத் தவறிப்போன விஷயத்தில் இவர்கள் முற்றிலும் பொறுப்பிலிருந்து விலகமுடியாது; ஏனெனில் பழமைமிக்க சபைகளானது நமது கர்த்தருடைய மரணத்தை, அதன் ஆண்டுநிறைவு நாளில் கொண்டாடினபோதிலும், இவர்கள் நினைவுகூருதலுக்கு ஒத்திருக்கின்ற, ஆனால் வேதவாக்கியங்களினால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நிழலுக்குப் பொருந்தாததுமான மற்றச் சடங்குகளை அறிமுகப்படுத்தினார்கள் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, சாதாரணமான கத்தோலிக்கன் ஒருவனுடைய மற்றும் புராட்டஸ்டண்டினன் ஒருவனுடைய மனதிற்கு, கத்தோலிக்க பூசைபலியானது, நமது

கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலாக மாத்திரமே தோன்றுகின்றது; ஆனால் இது, அதனுடைய உண்மையான அர்த்தம் இல்லை. திருப்பலியானது, இறையியல் கண்ணோட்டத்தின்படி சரியாய்ப் புரிந்துகொள்ளப்பட்டால் அது ஒரு புதிய பலியே ஒழிய, கல்வாரியில் இடம் பெற்றதான ஒரே பலியினுடைய நினைவுகூருதலல்ல. இதைக் கர்த்தருடைய இராப்போஜனத்தின் அடிக்கடியான ஆசரிப்பு என்று தவறாய்ப் புரிந்துகொண்ட புராட்டஸ்டண்டினர்கள், ஆரம்பக்காலங்களிலிருந்தே, நினைவுகூருதல் இராப்போஜனமானது, வசதிக்கேற்ற காலங்களிலெல்லாம் ஆசரிக்கப்பட்டு வருகின்றதென நம்புகிறவர்களாகிவிட்டனர். எனினும் இக்காரியம் தொடர்புடைய விஷயத்தில் புராட்டஸ்டண்டினர்கள் மத்தியில் பல்வேறு வகையான கருத்துக்கள் நிலவுகின்றதை நாம் காண்கின்றோம்; ஒவ்வொருவரும் தாங்கள் விரும்புவதற்கேற்ப, நலமானது என்று எண்ணுகிறதற்கேற்ப, சிலர் வாரந்தோறுமாகவும், சிலர் மாதந்தோறுமாகவும், சிலர் காலாண்டுதோறுமாகவும் ஆசரித்து வருகின்றனர்.

இம்மாதிரியான ஒழுங்கீனங்களானது, கர்த்தரினாலோ (அ) அப்போஸ்தலர் களினாலோ ஏற்படுத்தப்படவில்லை என்றும், நமது கர்த்தர் இதை இதற்கே உரிய ஒரு குறிப்பிட்ட நேரத்தில், வருடத்தின் ஒரு குறிப்பிட்ட நாளில் நிறுவினார் என்றும், "இதை . . . . . போதெல்லாம்" என்ற வார்த்தைகளானது அப்பத்தையும், பாத்திரத்தையும் மாத்திரம் சுட்டிக்காட்டாமல், இந்நிகழ்வு ஆசரிக்கப்படுகின்றதான வேளையையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது என்றும் நாம் நம்புகின்றோம். திருப்பலிப்பற்றின உரோமன் கத்தோலிக்க உபதேசத்தைக்குறித்து விவரமாய் விளக்குவதற்கு நாம் இங்கு முற்படப்போவதில்லை, மாறாக திருப்பலியானது எந்த விதத்திலும், கிறிஸ்துவினுடைய உண்மையான பலிக்கான நினைவுகூருதல் ஆசரிப்பு இல்லையென்று நாம் உரோமன் (அ) கிரேக்க கத்தோலிக்கர்களுக்கு மிலேனியல் டாண் தொகுதி-III-இல், 98-104 வரையிலான பக்கங்களில் குறிப்பிட்டதை மாத்திரமே நம்முடைய வாசகர்களுக்கு இங்கு மேற்கோளிடுகின்றோம். கடந்தக் காலப் பாவங்களுக்குக் கிறிஸ்துவினுடைய முதல்பலியானது போதுமானதாய் இருக்கின்றதேயொழிய, அதற்குப் பின்னுள்ள பாவங்களுக்குப் போதுமானதல்ல என்றும், ஒவ்வொரு தருணங்களிலும் கிறிஸ்துவைப் புதிதாய் உண்டாக்குவதற்கும், ஏதேனும் குறிப்பிட்ட பாவத்திற்கென (அ) பாவங்களுக்கெனக் கிறிஸ்துவைப் புதிதாய்ப் பலிச்செலுத்திடுவதற்கும், முறையாய் ஏற்படுத்தப்பட்டதான கண்காணிகளுக்கும், குருக்களுக்கும் தேவன் அதிகாரம் கொடுத்திருக்கின்றார் என்றும் இவ்வுபதேசத்தினால் வலியுறுத்தப்படுகின்றது; High Mass/பாடல் பூசை என்பது ஒரு நபருடைய குறிப்பிட்ட பாவங்களுக்கானது; Low Mass/சாதாரணமான பூசை என்பது சபையாருடைய பொதுவான பாவங்களுக்கானது ஆகும்.

குருவினுடைய ஆசீர்வாதமானது சாதாரணமான மெல்லிய அப்பத்தையும், திராட்சரசத்தையும், கிறிஸ்துவினுடைய நிஜமான சரீரமாகவும், இரத்தமாகவும் மாற்றிவிடுகின்றது என்றும், இப்படியாகக் கிறிஸ்து பல்லாயிரமான குருமார்களால், ஒவ்வொரு வருடமும் பல்லாயிரம் முறை மீண்டும் மீண்டுமாக உண்டாக்கப்பட்டு, பல்லாயிரம் பாவங்களுக்காக மீண்டும் மீண்டுமாகப் பலிச்செலுத்தப்படுகின்றார் என்றும், கத்தோலிக்க மார்க்கமானது வலியுறுத்திக் கூறுகின்றதாய் இருக்கின்றது.

இவைகளனைத்துமே முற்றிலுமாகக் கிறிஸ்தவத்திற்கு எதிரானது என்று நாம் மறுப்புத் தெரிவிக்கின்றோம் மற்றும் பெரும்பான்மையான பாரம்பரியமான புராட்டஸ்டண்டினர்கள் (Orthodox Protestants) தங்கள் மனப்பூர்வமான ஒப்புதலை, நம்முடைய இந்த மறுப்பிற்குக் கொடுப்பார்கள். எனினும் புதிய புராட்டஸ்டண்ட் பிரிவினர்களை உருவாக்கினவர்கள் இக்காரியத்தைக் கவனிக்க தவறிவிட்டனர் என்பது, அவர்கள் பழமையான சபைகளில் திருப்பலி அடிக்கடி ஏறெடுக்கப்படும் காரியத்தை, தாங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை அடிக்கடி, நினைவுகூரும்படியாக ஆசரிப்பதற்குக் காரணமாகப் பயன்படுத்துகையில் தெளிவாகுகின்றது. எனினும் (திருப்பலியில் இடம்பெறுவது போன்று) மிகவும் அடிக்கடி ஆசரிக்கும் காரியமானது ஞானமற்றதாகவும், நன்மைப் பயக்காததாகவும் இருக்குமெனப் பெரும்பான்மையான புராட்டஸ்டண்டினர் அறிந்தவர்களாகக் காணப்படுகின்றனர்; ஆகையால் பெரும்பான்மையானவர்கள் வருடத்திற்கு மூன்று (அ) நான்குமுறை மாத்திரம் அதுவும் இப்படியாகச் செய்வதன் மூலம் அவ்வாசரிப்பில் பங்கெடுக்கும் அனைவருக்கும், அது மிகுந்த தாக்கத்திற்குரியதாகவும், பயபக்திக்குரியதாகவும் காணப்படும் என்ற நம்பிக்கையில் ஆசரிக்கப்படுகின்றது. ஆனால் நம்முடைய கர்த்தருடைய மரணத்தை, அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிப்பதாகிய ஆதிமுறைமையே இன்னும் அதிக பயபக்திக்குரியதாக இருக்குமென நாம் எண்ணுகின்றோம்; இது தவிர ஆதிமுறைமைக்கே, வேறெந்த முறைமைகளுக்கும் இல்லாத வேதவாக்கியங்களின் ஒப்புதல் காணப்படுகின்றது என்றும் நாம் வலியுறுத்துகின்றோம்.

## வேதவாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு சொல்லப்படும் வேறு சில தவறான கருத்துக்கள்

நமது கர்த்தருடைய மரணத்தை, ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் - ஒவ்வொரு வாரத்தின் முதல்நாளிலும் ஆசரிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டவர்களாகிய நமது "பிளைமவுத் சகோதரரும்" (Plymouth Brethren), "டிசைப்பில்" (Disciple) நண்பர்களும், பெரிய தவறுக்குள் விழுந்துள்ளதாக நமக்குத் தோன்றுகின்றது. இப்படியாக ஆசரிப்பதிலுள்ள பொருத்தமின்மையானது பல்வேறு வழிகளில் வெளிப்படுகின்றதாயிருக்கின்றது; முதலாவதாக இவர்கள் முற்றிலும் வேறுபட்டதும், சந்தோஷத்திற்குரிய ஈஸ்டர் தருணமுமாகிய நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலை நினைவுகூரும் நாளாகிய ஞாயிற்றுக் கிழமையன்று கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருகின்றனர். நாளினுடைய முக்கியத்துவத்தினைப் பார்க்கத் தவறிப்போன இவர்கள், நாளினுடைய வேளை/நேரம் தொடர்புடைய விஷயத்தைப் பார்க்கத் தவறுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆதியில் நிறுவப்பட்டதான நினைவுகூருதலானது இரவில் பங்கெடுக்கப்பட்டது, ஆனால் காலையிலோ (அ) பிற்பகலிலோ அதை நினைவுகூரும் வழக்கம் இப்பொழுது இவர்களிடத்தில் நிலவுகின்றது.

இந்தக் கிறிஸ்தவ நண்பர்கள், வாரந்தோறும் ஆசரிக்கும் இந்தத் தங்கள்

வழக்கத்தினை, காரணம் ஏதுமின்றி ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று நாம் எண்ணிவிடக்கூடாது; ஆனால் இவர்கள் முன்வைக்கும் காரணங்களை நாம் பார்க்கையில், அவைகள் போதுமானவைகளாக இல்லையென்று காண்கின்றோம். இவர்கள் வலியுறுத்துவது என்னவெனில்: சீஷர்கள் வாரத்தினுடைய முதல்நாளில் அப்பம் பிட்பதற்கெனக் கூடுவதாக இடம்பெறும் வசனப்பகுதிகள் - உதாரணத்திற்கு அப்போஸ்தலர் 2:42,46; 20:7 என்பவைகள் நினைவுகூருதலின் இராப்போஜனத்தைப் பற்றியே குறிப்பிடுகின்றன என்பதாகும். ஆனால் இதற்குமாறாக வாரத்தினுடைய இந்த முதல்நாள் கூடுகைகளானது, அன்பின் விருந்துகள் என்றும், இது எந்த விதத்திலும் நமது கர்த்தருடைய நினைவுகூருதலின் இராப்போஜனத்தைக் குறிப்பதாகவோ (அ) இதன் இடத்தை எடுத்துக்கொள்வதாகவோ இருப்பதில்லையென்றும் நாம் எண்ணுகின்றோம். இந்தப் பல்வேறு பதிவுகளில், நமது கர்த்தருடைய இரத்தத்தை அடையாளப்படுத்துகின்றதும், அவரது சரீரத்தை அடையாளப்படுத்துகின்றதான புளிப்பில்லாத அப்பம்போன்று முக்கியத்துவம்வாய்ந்த அடையாளச் சின்னமாகக் காணப்படுகின்றதுமான "பாத்திரத்தைக்" குறித்து எதுவும் சொல்லப்படவில்லை என்பதும் கவனிக்கப்படலாம். சபைக்கு - தனது கர்த்தருடைய உயிர்த்தெழுதலினால் உண்டான அவளது சந்தோஷத்திற்குரிய நாளில், அன்பின் விருந்துகள் நிகழ்வது ஏற்புடையதாகும் மற்றும் இப்படிச் செய்வதற்கு முதல் ஞாயிறன்று நிகழ்ந்தவைகளே அவளை ஏவிற்று என்பதில் ஐயமில்லை; முதல் ஞாயிறன்று, நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் நாளில், அவரை எம்மாவு எனும் கிராமத்தில், அப்பம்பிட்குதல் மூலமாக அவ்விரண்டு சீஷர்களும் அடையாளம் கண்டுகொண்டார்கள்; அன்று சாயங்காலத்தில் பதினொரு பேரும் பந்தியிருக்க உட்காருகையில், அவர் "உங்களுக்குச் சமாதானம்" என்று கூறினார் மற்றும் அவர்களுடைய இருதயங்களானது அவர்களுக்குள் கொழுந்துவிட்டு எரியச்செய்தார் (லூக்கா 24:30, 31; யோவான் 20:19). நமது கர்த்தருடைய இராப்போஜனமோ, அவரது மரணத்திற்கும், அவருடைய பாடுகளில் நாம் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென ஐக்கியம் கொள்வதற்கான நம்முடைய உடன்படிக்கைக்கும் நினைப்பூட்டுதலாக இருக்கத்தக்கதாக நிறுவப்பட்டது.

## கர்த்தருடைய இராப்போஜனத்தின் முதலாம் ஆசரிப்பு

நம்முடைய இந்தப் பாடமானது, முதலாம் நிறுவுதலை நமக்குச் சுட்டிக்காண்பித்து, அது பஸ்கா ஆரம்பிப்பதற்கு முந்தினநாளில், அதாவது நீசான் மாதம் 14-ஆம் தேதியில் ஆசரிக்கப்பட்டது என்று சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. பஸ்கா தொடர்புடையதான நியாயப்பிரமாணமானது, மிகவும் துல்லியமான விவரங்களைக் கொடுத்ததாய் இருந்தது. ஆட்டுக்குட்டியானது நீசான் மாதம் 10-ஆம் தேதி வீட்டிற்குள்ளாகக் கொண்டுபோகப்பட வேண்டும் மற்றும் 14-ஆம் தேதி அடிக்கப்பட்டு, 15-ஆம் தேதியினுடைய விடியலுக்கு முன்னதான, இரவிலே புசிக்கப்பட வேண்டும். நிஜத்தில் இயேசு தம்மை 10-ஆம் தேதியன்று அந்த

ஜாதியினிடத்திற்கு முன்வைத்தார். ஆனால் அவரது உண்மையுள்ளவர்களாகிய சிலரைத் தவிர, மற்றப்படி அவர்கள் அவரை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்தார்கள் மற்றும் 14-ஆம் தேதியன்று அவர் சிலுவையில் அறையப்பட்டார். அவர் சிலுவையில் அறையப்பட்டதான அதே யூத நாளில்தான், நம்முடைய இந்தப் பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான பஸ்காவை அவர் புசித்தார் மற்றும் பிற்பாடு அவர் காட்டிக்கொடுக்கப்பட்டார். (யூதர்களுடைய நாளானது சூரிய அஸ்தமனத்துடன் ஆரம்பித்து, அடுத்த சாயங்காலம்வரை நீடிக்கின்றது). பதிவுகளை வைத்துப்பார்க்கும் போது நமது கர்த்தரும், அவரது சீஷர்களும், யூதர்கள் பொதுவாய்ப் புசித்ததான நாளுக்கு முந்தினநாளில் பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்தார்கள் என்பதில் சந்தேகமில்லை; ஏனெனில் யோவானுடைய சுவிசேஷத்தில், நமது கர்த்தர் பஸ்காவைப் புசித்த பிற்பாடு பிலாத்துவிற்கு முன்னிலையில், அவரது அரண்மனையில் காணப்படுகையில், அவரைக் குற்றப்படுத்தினவர்களாகிய பரிசேயர்கள் பஸ்காவை இன்னும் புசிக்கவில்லை என்றும், அவர் சிலுவையில் அறையப்பட்டப் பின்னர் சாயங்காலம் வரையிலும் அவர்கள் புசிப்பதில்லையென்றும் நாம் வாசிக்கின்றோம் (யோவான் 18:28; 19:14).

நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களிடத்தில், "நான் பாடுபடுவதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" என்று கூறினதாக ஒரு சுவிசேஷகர் பதிவு செய்கின்றார். இது அவர் ஒரு யூதனாக முழுமையாகவும், நியாயப்பிரமாணத்தின்படியாகவும் அனுசரிப்பதற்குக் கடமைப் பட்டிருந்த, யூத சடங்கினுடைய அவரது கடைசியான ஆசரிப்பாய்க் காணப்பட்டது. நமது கர்த்தரும், சீஷர்களும் 14-ஆம் தேதியினுடைய எந்தக் குறிப்பிட்ட மணிவேளையில் பஸ்காவில் பங்கெடுத்தார்கள் என்பதை நாம் திட்டவட்டமாய் அறிய முடியாது; எனினும் பஸ்காவைப் புசித்தப்பிற்பாடு, அநேகமாக நடுஇரவுக்குச் சமீபமாக, நமது கர்த்தர் தம்முடைய சொந்த மரணத்திற்கான புதிய நினைவுகூருதலை, கர்த்தருடைய இராப்போஜனத்தை நிறுவியிருக்க வேண்டும்; நியாயப்பிரமாணத்தினுடைய பஸ்கா இராப்போஜனத்திற்குப்பதிலாக இதை நிறுவினார் மற்றும் இதைக்குறித்துத் தம்முடைய பின்வரும் வார்த்தைகளில் குறிப்பிட்டார்: "ஆகையால் நீங்கள் இதைச் செய்யும்போதெல்லாம், என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்." "இதை" என்பது நிஜமான ஆட்டுக்குட்டியை, "உலகத்தின் பாவத்தைச் சுமந்துத் தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை" அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; மற்றும் "இதைச் செய்வது" என்பது - அப்பத்தைப் பிட்பதும், திராட்சப்பழ ரசத்தைப் பானம்பண்ணுதலும் - நமது கர்த்தருடைய மரணத்தைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது; இது நிழலில் இடம்பெற்ற மரணத்தைத் தெரிவிப்பதில்லை, ஏனெனில் நிஜமானது இப்பொழுது வந்துவிட்டது மற்றும் இதே நாளில், இன்னும் சில மணி நேரங்களுக்குப் பிற்பாடு, அவர் கொல்லப்படப் போகின்றார், சிலுவையில் அறையப்படப் போகின்றார். இப்படியாக நமது கர்த்தர் புதிய நிறுவுதலுக்காக, தம்முடைய சபைக்காக ஆழமான மற்றும் விரிவான அஸ்திபாரமிட்டார் மற்றும் இதை யூத நிழலிலிருந்து பிரித்துக் காண்பிக்கும் வண்ணமாக, விசுவாசிகளுக்குத் தம்மை நிஜம் எனவும், இதில் அடங்கும் மேலான

அர்த்தத்தையும் சுட்டிக்காண்பித்தார்; உண்மையான இஸ்ரயேலர்கள் அனைவரும், பார்வோனிடமிருந்தில்லாமல், பார்வோனின் நிஜமாகிய சாத்தானிடமிருந்து விடுதலையடைவதே, தேவனுடைய ஜனங்களில் முதற்பேறானவர்கள் அனைவரும் மரணத்தினின்று, திரளான ஜீவனுக்கு, அதாவது நித்தியமான ஜீவனுக்குள் விடுவிக்கப்படுவதே - மேலான அர்த்தமாய்க் காணப்படுகின்றது.

நிழலைத் தெளிவாய்ப் பார்க்கின்றவர்களால், நிஜம் கடந்து வருவதுவரையிலும், நிழலினால் கடந்து போகமுடியாது என்றும், பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலுக்கான நிஜமானது, அதன் ஆண்டுநிறைவு நாளில், அதாவது நீசான் மாதம் 14-ஆம் தேதியில் நிகழவேண்டும் என்றும் உணர்ந்துகொள்ள முடியும். ஆகையால்தான் "அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை" என்பதாக வேதவாக்கியங்களில் இடம்பெறுகின்றது (யோவான் 7:30; 8:20). தேவன் இக்காரியங்களை எல்லாம் முன்கூட்டியே அறிந்திருந்தார் மற்றும் இது சம்பந்தமான அனைத்தையும் அவர் முன்னேற்பாடு பண்ணியிருந்தார் மற்றும் நிழலானது இவைகளை மிகத் தெளிவாய்க் குறிப்பிடுகின்றது. நாம் இனி நிழலை ஆசரிப்பதில்லை; நிழலினுடைய இடத்தில், தேவ ஆட்டுக்குட்டியினுடைய நிஜமான பலி இடம்பெற்றது என்று நம்பி, கிறிஸ்தவர்களென நாம், நிஜத்தினுடைய நினைவுகூருதலாக "இதைச்" செய்கின்றோம்; ஏனெனில் அப்போஸ்தலன் கூறுவதுபோன்று, "நம்முடைய பஸ்காவாகிய (ஆட்டுக்குட்டியாகிய) கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" (1 கொரிந்தியர் 5:7, 8).

நிழலான சுடப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய பஸ்கா இராப்போஜனத்தைக் கர்த்தரும், அப்போஸ்தலர்களும் புசித்துக்கொண்டிருக்கையில், நமது கர்த்தர் அவர்களை நோக்கி, "உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்றார். இதை நமது கர்த்தர் கூறினபோது அவர் "ஆவியில் கலங்கினதாக," உணர்வினை வெளிப்படுத்தினதாக யோவான் நமக்குத் தெரிவிக்கின்றார். தம்முடைய மரணம் தொடர்புடையதான உண்மைகளையும், விவரங்களையும் அவர் முன்னமே அறிந்திருந்தபடியால் அவர் காட்டிக்கொடுக்கப்படுகிற காரியமானது, அவரது இந்த மன உணர்விற்குக் காரணமாய் இருந்திருக்காது என்பதில் நமக்கு நிச்சயமே. அவரது துக்கத்திற்கானக் காரணமானது, தம்மால் மிகவும் பரிவோடு காக்கப்பட்டவர்களிலும், பராமரிக்கப்பட்டவர்களிலும் ஒருவன் இப்பொழுது நன்றியற்றவனாகவும், பரிசுத்தமற்றவனாகவும் போவதுகுறித்த சிந்தனையேயாகும் என நாம் நியாயமாய் அனுமானிக்கின்றோம்; அவரது துக்கம் யூதாசுக்காகவே என்பது உறுதியே. அவர் இப்படிக் கூறினதினிமித்தமாக, சீஷர்கள் "ஆண்டவரே, நானோ?" என்ற கேள்விகளைக் கேட்டனர்; கிரேக்க வார்த்தையினுடைய அர்த்தத்தின்படி பார்க்கையில், கேள்வியின் அர்த்தம் என்னவெனில், "ஆண்டவரே, நீர் என்னையா குற்றஞ்சாட்டுகின்றீர்? இது நான் இல்லை, அல்லவா?" என்பதாகும். சீஷர்கள் அனைவரும்கூடத் துக்கமடைந்தார்கள். அநேகமாக இந்த வேளையிலுள்ள இந்த

அனுபவத்திலும்கூட அவர்கள் கடந்துபோக வேண்டியிருந்தது; ஏனெனில் இவைகளெல்லாம் அவர்களுக்கு முன்பாகக் காணப்படுகின்ற சோதனையான காலங்களுக்கென அவர்களை ஆயத்தப்படுத்தத்தக்கதாக, அவர்களுக்கு அவசியமாய்க் காணப்பட்டது என்பது நிச்சயமே.

மற்றவர்களோடுகூட இதே கேள்வியை யூதாசும் கேட்டார்; ஏனெனில் இப்படியாகக் கேட்கவில்லையெனில், அது தனது குற்றத்தைத் தானே ஒப்புக்கொள்வதைக் குறிப்பதாகிவிடும். தாம் துணிக்கையைத் தோய்த்து யாருக்குக் கொடுப்பாரோ, அவனே என்பது நமது கர்த்தருடைய பதிலாகக் காணப்பட்டது மற்றும் அவர் துணிக்கையைத் தோய்த்து, யூதாசுக்குக் கொடுத்தார் மற்றும் யூதாசும் வாங்கின பின் வெளியே போனார் (யோவான் 13:25-30). இந்த நிகழ்வுகள் அனைத்தும், யூதாசினுடைய இருதயத்தைக் கரையப்பண்ணி, எல்லாம் முடிந்துபோவதற்கு முன்னதாக, அவர் தனது போக்கை மாற்றிக்கொள்ள வழிநடத்தப்படுவதற்குப்பதிலாக - வாதைகளை நிறுத்துவதன் மூலம் பார்வோனுக்குப் பாராட்டப்பட்டதான தெய்வீக இரக்கமானது, பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினதுபோல - யூதாசுக்குள்ளும் வெறுப்பின்/தீய நினைவின் ஆவி உண்டானது. எதிராளியானவனுடைய யோசனைகளை எதிர்ப்பதற்குப்பதிலாக, அவன் முழுமையாய்ச் சாத்தானின் ஆவியினால் நிரம்பி, "சாத்தான் அவனுக்குள் முற்றும், முழுமையாய்ப் புகுந்து" தீமைச் செய்வதற்கான கருவியாகச் சாத்தான் அவனது இருதயத்தை ஆட்கொள்ளும்வரை, அதிகமதிகமாய் அவ்வாலோசனைகளை அசைப்போட்டுக் கொண்டிருந்தான்; மற்றும் கர்த்தர் மற்றும் சீஷர்கள் மத்தியில் தன்னைப் பொருந்தாதவனாக யூதாஸ் உணர்ந்தபடியால், அவன் வெளியே போனான் என்பதில் ஐயமில்லை.

ஆகையால் அநேகமாக நமது கர்த்தர் சீஷர்களின் பாதங்களைக் கழுவினபோதும் மற்றும் பின்னர் அப்பம் மற்றும் திராட்சப்பழரசத்தை, தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலாக நிறுவினபோதும், யூதாஸ் சீஷர்களோடு காணப்படாதது தெரிகின்றது. அவன் இல்லாமல் இருந்தது நல்லதே; இதுபோலவே கிறிஸ்துவினுடைய உண்மையான, நேர்மையான, அர்ப்பணிப்புமிக்க சீஷர்கள் மாத்திரமே, அவரது மரணத்தை, அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிப்பதற்குக் கூடிடுவது கூடுமட்டும் பெரிதும் விரும்பப்படுவதாக. எனினும் நாம் இருதயத்தைக் கணிப்பதற்கு இயலாதவர்களாய் இருக்கின்றோம் என்பதை நினைவில்கொண்டு, நினைவுகூருதலின் பந்திக்கு வருகிறதற்கு, மீட்படைவதற்கென்று கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினை விசுவாசிப்பவர்களும், கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணிப்பைப் பண்ணியுள்ளதாக அறிக்கைப்பண்ணுகிறவர்களுமான அனைவரும் வரவேற்கப்பட வேண்டும். உடன் சீஷர்களெனத் தங்களைக்குறித்து அறிக்கைப் பண்ணிக்கொள்பவர்களை ஆராயும் விஷயத்தினைத் தேவனிடத்திலேயே விட்டுவிடுவோமாக.

## அப்பம் மற்றும் பாத்திரத்தினுடைய அடிப்படையான அர்த்தம்

நினைவுகூருதலாகப் புளிப்பில்லாத அப்பத்தினை சீஷர்களுக்கு முன்வைக்கையில் இயேசு, "நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்றார். அவரது வார்த்தைகளினுடைய அர்த்தமாவது, "இது என் சரீரத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது" என்பதாகும். அப்பமானது உண்மையில் அவரது சரீரமாக இருக்கவில்லை; ஏனெனில் அவரது சரீரம் எந்த விதத்திலும், இதுவரையிலும் பிட்கப்படவில்லை. பலி இன்னமும் நிறைவேறி முடியாததினால், அவர்களாலும், எந்த விதத்திலும், அவரில் நிஜத்தில் (அ) உண்மையில் பங்கெடுக்க முடியாது. எனினும் புளிப்பில்லாத அப்பமானது, நமது கர்த்தருடைய பாவமற்ற மாம்சத்தைக் குறிக்கின்றதென நாம் அடையாளம் கண்டுகொள்ளும் போதும் அடையாளம் முழுமையாய் உள்ளது; புளிப்பானது, நியாயப்பிரமாணத்தின்கீழ் பாவத்திற்கான அடையாளமாகவும், பஸ்கா காலங்களில் புறம்பாக்கிப்போடுவதற்கு விசேஷமாய்க் கட்டளையிடப்பட்டுள்ளதாயும் காணப்படுகின்றது. வேறொரு தருணத்தின்போது, இயேசு கொடுத்திட்ட பாடமானது, இந்த அடையாள சின்னத்தினை நமக்கு விளக்குகின்றதாய் இருக்கின்றது. அவர் "வானத்திலிருந் திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம்; ஜீவ அப்பம் நானே என்றார்." (யோவான் 6:33, 35)

இந்த ஜீவ அப்பத்தை நாம் எவ்வாறு புசிக்க வேண்டும் (அ) சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வதற்கு, அப்பம் எதைக் குறிக்கின்றது என்பதைப் புரிந்துகொள்வது நமக்கு அவசியமாய் இருக்கின்றது. இக்காரியம் தொடர்பான நமது கர்த்தருடைய விளக்கத்தின்படி, அது அவர் நமக்காகப் பலிச்செலுத்தின அவரது மாம்சத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் நமது மனித சுபாவத்தில் வரத்தக்கதாக, தாம் மனிதனாகுவதற்கு முன்னதாகக் காணப்பட்ட ஆவிக்குரிய ஜீவியின் நிலையினையும், அதன் மகிமையினையும் துறந்து வந்திருந்தாலும், அவர் மனிதனாகுவதற்கு முன்பாகக் காணப்பட்ட ஆவிக்குரிய ஜீவி நிலையானது பலிச்செலுத்தப்படவில்லை. நமது கர்த்தராகிய இயேசு பரிசுத்தராகவும், மாசில்லாதவராகவும், குற்றமற்றவராகவும், பாவிகளுக்கு விலகினவராகவும், அதாவது தகப்பனாகிய ஆதாமினால் கறைப்படுத்தப்படாதவராகவும், மற்றும் இதனால் பாவமற்றவராகவும் காணப்பட்டக் காரியமே, அவரை ஆதாம் மற்றும் இவர் சந்ததிக்கான மீட்பராக்கிற்று மற்றும் "ஏற்றக்காலங்களில் விளங்கிவந்ததான, அனைவருக்குமான மீட்கும் பொருளாக" அவர் தம்முடைய ஜீவனைக் கொடுப்பதற்கும் அனுமதித்தது.

பாவிகளுக்காக நமது கர்த்தராகிய இயேசுவின் தூய, கறையற்ற மனுஷீகச் சுபாவமே கொடுக்கப்பட்டது என்று நாம் காண்கையில், நாம் எதைச்

சொந்தமாக்கிடுவதற்கான சிலாக்கியம் பெற்றிருக்கின்றோம் என்று நாம் காண்கின்றோம். அவர் எதை நமக்காக ஒப்புக்கொடுத்தாரோ, அதையே நாம் "புசிக்க" வேண்டும், சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும்; அவரது பரிபூரண மனுஷீக சுபாவமானது, மனுக்குலம் முழுவதையும் மரணத்தண்டனையிலிருந்து மீட்பதற்காகவும், அவர்கள் இணங்குகையில் அவர்களை மனித பூரணத்திற்கும், நித்திய ஜீவனிடத்திற்கும் திருப்புவதற்காகவும் கொடுக்கப்பட்டது. நம்முடைய கடந்தகால பாவங்கள் யாவற்றையும் இரத்துச் செய்ததாக ஒருவேளை தேவன் கருதினாலும், மனித பூரணத்தினை அடைந்திடுவதற்கான உரிமையை நாம் உடையவர்களாக இருக்கின்றோமெனத் தேவன் ஒருவேளை கண்டுகொண்டாலும், இது நம்மைப் பூரணமும் படுத்தாது, நித்திய ஜீவனுக்கான உரிமையையும் தராது என்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

ஆதாமின் சந்ததியிலுள்ள எவரேனும் இயேசுவின் பலியில் நன்மையடைய வேண்டுமானால், அவர் இரண்டாம் வருகை வந்து, முழு உலகத்திற்கான மத்தியஸ்தராக, தீர்க்கத்தரிசியாக, ஆசாரியராக, இராஜாவாக இருந்து, அக்காலத்தில் அருளப்படுகின்றதான அருமையான சிலாக்கியங்களைப் பயன்படுத்துகின்றதான அனைவரையும் பரிபூரணத்திற்கும், தேவனுடன் இசைவான நிலைக்கும் திருப்புவதற்கு உதவுவது அவசியமாய் இருக்கின்றது.

இதே ஆசீர்வாதத்தை இந்த யுகத்தின் சுவிசேஷசபையானது, தங்கள் மீட்பரிலான விசுவாசத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்கின்றனர்; அதாவது விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலைப் பெற்றுக்கொள்கின்றனர்; நாம் ஒருபோதும் பெற்றிராததும், ஒருபோதும் இழந்துபோகாததும், கிறிஸ்து மீட்டுக்கொள்ளாததுமான, ஆவிக்குரிய சுபாவத்திற்கு நீதிமானாக்கப்படவில்லை; மாறாக தந்தையாகிய ஆதாம் பெற்றிருந்ததும், அவரால் இழந்துபோகப்பட்டதும், கிறிஸ்து தம்முடைய பாவமற்ற சொந்த மாம்சத்தை, நமக்கான மீட்கும்பொருள் பலியாகக் கொடுத்து, அவர் மீட்டுக்கொண்டதுமான மனுஷீக சுபாவத்திற்கு நீதிமானாக்கப்பட்டுள்ளோம். அப்பத்தில் பங்கெடுத்தல் என்பது கர்த்தர் மனுஷீக உரிமைகளையும் சிலாக்கியங்களையும் பலிசெலுத்தினதன் காரணமாக அடையப்பெற்றதான, மனுஷீக உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் அனைத்திற்குமான - நீதிமானாக்கப்படுதலை விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளுதலை, நமதாக்கிக்கொள்ளுதலை நமக்கு முதலாவது குறிக்கின்றதாய் இருக்கின்றது.

இதுபோலவே திராட்சப்பழ ரசமானது நமக்காகக் கொடுக்கப்பட்டதான நமது கர்த்தரின் ஜீவன் - அவரது மனுஷீக ஜீவன், அவரது ஆத்துமா நம் பொருட்டாக மரணத்திற்குள் ஊற்றப்பட்டதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; மேலும் இதை நாம் நமதாக்கிக்கொள்ளுதல் என்பதும், நமது கர்த்தருடைய பலியானது பெற்றுத்தந்ததான திரும்பக்கொடுத்தலுக்கான உரிமைகளையும், சிலாக்கியங்களையும் நாம்

ஏற்றுக்கொள்வதை முதன்மையாகக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

## அப்பம் மற்றும் பாத்திரத்தினுடைய இரண்டாவது மற்றும் ஆழமான அர்த்தம்

நாம் ஏற்கெனவே பார்த்துள்ளபடி ஆயிரவருட யுகத்தின்போது உலகமானது கிரியையினாலும், கீழ்ப்படிதலினாலும் நீதிமானாக்கப்படுவதற்கு முன்னதாக, இந்தச் சுவிசேஷயுகத்தின்போது சபையை விசுவாசத்தினால் நீதிமான்களாக்குவதிலுள்ள தேவனுடைய நோக்கமானது, இப்பொழுது காண்கிறவர்களும், கேட்கிறவர்களும், மனிதனுக்காக அன்பானது ஏறெடுத்துள்ளதான மாபெரும் பலியை இப்பொழுது உணர்ந்துகொள்பவர்களுமான இந்த வகுப்பார், தங்கள் சரீரங்களை ஜீவப் பலியாக ஒப்புக்கொடுப்பதற்கும், மற்றும் இவ்விதமாய்க் கர்த்தர் இயேசுவோடுகூட, அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென அவரது பலியில் பங்கடைவதற்கும் அனுமதிக்கப் படுவதற்கேயாகும். நினைவுகூருதலுக்கான இந்த ஆழமான மற்றும் கூடுதலான அர்த்தத்தினை அவர் வெளிப்படையாய்க் குறிப்பிடவில்லை. இது "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக் கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" என்று அவர் குறிப்பிட்டவைகளில் ஒன்றாயிருக்கும் என்பதில் ஐயமில்லை (யோவான் 16:12, 13).

சத்தியத்தின் ஆவியானது அப்போஸ்தலனாகிய பவுல் வாயிலாகப் பேசி, நினைவுகூருதலின் இந்த இரண்டாம் மற்றும் மிக உயர்வான அர்த்தத்தினைத் தெளிவாய் விவரிக்கின்றது; ஏனெனில் அர்ப்பணித்துள்ள சபைக்கு அவர் எழுதுகையில் அவர், "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா!" (1 கொரிந்தியர் 10:16 திருவிவிலியம்); அதாவது கிறிஸ்து தம்முடைய உண்மைக்கான பலனாகப் பெற்றுக்கொண்டதான மகிமையில், நாமும் அவரோடுகூடப் பங்காளிகளாகக் கருதப்படத்தக்கதாக, உடன் பலிச்செலுத்துபவர்களெனக் கிறிஸ்துவோடுகூட உள்ள மரணம் வரையிலுமான நம்முடைய பங்குகொள்ளுதலாய் இருக்கிறதல்லவா? - "ஏனெனில் அநேகரான நாம் ஒரே அப்பமும், ஒரே சரீரமுமாய் இருக்கிறோம்" என்று கூறுகின்றார் (1 கொரிந்தியர் 10:16, 17).

இந்த அடையாளமான கட்டளையினுடைய இரண்டு கண்ணோட்டங்களும் மிகவும் முக்கியமானவைகளாகும். நமது கர்த்தருடைய பலியின் மூலமான நமது நீதிமானாக்கப்படுதலை, நாம் முதலாவதாகப் பார்ப்பது அவசியமாயிருக்கின்றது. முழுக்கிறிஸ்து, தெய்வீக கண்ணோட்டத்தின்படி இயேசுவைத் தலையாகப் பெற்றுள்ளதான, அநேக அங்கத்தினர்களையுடைய ஒரு சரீரமாக இருக்கின்றது

என்றும், இந்தச் சபை முழுவதும் பிட்கப்பட வேண்டுமென்றும், அதன் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் கர்த்தர் இயேசுவின் சாயலாக வேண்டும் மற்றும் அவரது பலியின் அடிச்சுவடுகளில் நடக்க வேண்டுமென்றும் நாம் உணர்ந்துகொள்வதும் ஏற்றக் காரியமாயிருக்கின்றது (1 கொரிந்தியர் 12:12-14). இதை நாம் நம்முடைய ஜீவியங்களைச் சகோதர சகோதரிகளுக்கு ஒப்புக்கொடுப்பதன் மூலம் செய்கின்றோம்; அதாவது கிறிஸ்து தம்முடைய ஜீவியத்தை அனைவருக்காகவும் ஒப்புக்கொடுத்தது போல், நாமும் செய்வதின் மூலம் செய்கின்றோம்.

நமது கர்த்தர் தம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஒப்புக்கொடுக்காதது போன்று, நாமும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஒப்புக்கொடுப்பதில்லை. அவர் தம்முடைய உண்மையான பூரண மாம்சத்தைப் பலிச்செலுத்தினதுபோன்று, நாமும் உண்மையாய்ப் பூரணமாய் இராததும், ஆனால் பூரணமானதாகக் கருதப்படுகிறதுமான நீதிமானாக்கப்பட்ட நம்மைப் பலிச்செலுத்திட வேண்டும். இதுபோலவே பாத்திரமும் பாடுகளை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அநேகம் திராட்சப் பழங்களின் சாறாக இருப்பினும் அது ஒரு பாத்திரமாக இருப்பதுபோலவே, அநேகம் மணிகளினின்று உண்டானதாயினும் அது ஒரு அப்பமேயாகும். கோதுமை மணிகளானது மனிதனுக்கான அப்பமாக வேண்டுமானால், அவைகளால் அதன் ஜீவனையோ, மணியாக அதன் தனித்தன்மையையோ தக்கவைத்துக்கொள்ள முடியாது. திராட்சப்பழங்களானது, உலகத்திற்கு ஜீவனளிக்கும் ஆவியாக வேண்டுமானால், அது திராட்சப்பழங்கள் எனும் அதன் அடையாளத்தைத் தக்கவைத்துக்கொள்ள முடியாது. இப்படியாகக் கர்த்தருடைய ஜனங்கள் ஒரே அப்பத்திலும், ஒரே பாத்திரத்திலும் பங்கெடுப்பவர்களாய் இருக்கின்றார்கள் என்ற பரிசுத்த பவுல் அவர்களுடைய வார்த்தையினுடைய அருமையை நாம் பார்க்கின்றோம்.

பாத்திரமானது, fruit of the vine/ திராட்சப்பழரசமானது (திராட்சரசமாக/wine ஒருவேளை இருந்திருந்தாலும்கூட எங்குமே பாத்திரமானது wine/திராட்சரசம் என்று குறிப்பிடப்படவில்லை), இரத்தத்தை அதாவது ஜீவனைக் குறிப்பதாக நமது கர்த்தர் குறிப்பாய்த் தெரிவித்துள்ளார்; அது தக்கவைக்கப்பட்ட ஜீவனை அல்ல, மாறாக சிந்தப்பட்ட, விட்டுக்கொடுக்கப்பட்ட, ஒப்புக்கொடுக்கப்பட்ட, பலியாக்கப்பட்ட ஜீவனைக் குறிக்கின்றது என்று தெரிவித்துள்ளார். இந்த ஜீவனானது, பாவ மன்னிப்புண்டாகும்படிக்கு என்றும், அவருடையவர்கள் அனைவரும் அதைப் பருக வேண்டும் மற்றும் அவரது பலியினை ஏற்றுக்கொண்டு, விசுவாசத்தினால் தங்களுடையதாக்கிக்கொள்ள வேண்டுமென்றும் அவர் நம்மிடம் கூறுகின்றார். விசுவாசத்தின் மூலமாக நீதிமானாக்கப்பட்டுள்ள அனைவரும், ஜீவனை இந்த ஆதாரத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவிற்குப் புறம்பே அழியாமையைப் பெற முடியுமென யார் ஒருவராலும் கூறப்படுவது ஏற்றதாயிருக்காது. நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதன் விளைவாக ஜீவன் கிடைக்குமெனக் கூறுவதும் ஏற்றதாயிருக்காது. ஏதோ ஒரு மாபெரும் போதகர் மீதான விசுவாசமும், அவருடைய போதனைகளுக்குக் கீழ்ப்படிவதும் நித்திய ஜீவனைக் கொண்டுவருமென்று கூறுவதும் ஏற்றதாயிருக்காது. முழு உலகத்திற்கான

மீட்கும்பொருளாக ஒருமுறை சிந்தப்பட்டதான இரத்தத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமே அல்லாமல், மற்றப்படி வேறெந்த வழியிலும் நித்திய ஜீவனை அடைய முடியாது. "நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை." இதுபோல அவரது பாத்திரத்தில் பானம் பண்ணிடுவதற்கும், ஒரே அப்பத்தின் அங்கத்தினர்களென அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கும், அவரது மரணத்திற்குள்ளான ஸ்தானத்தில் அவரோடுகூட அடக்கம் பண்ணப்படுவதற்கும் மற்றும் இப்படியாக மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் நேரான அவரது உயிர்த்தெழுதலில் அவரோடுகூடக் காணப்படுவதற்குமான கர்த்தருடைய அழைப்பினை ஏற்றுக்கொள்வதின் மூலமாக மாத்திரமே ஒழிய மற்றப்படி புதிய சுபாவத்தினை அடைவதற்கு வேறு வழியில்லை (உரோமர் 6:3-5; 8:17).

## இராஜ்யத்தில் கொண்டாடுதல்

(நினைவுகூருதலுக்கான இராப்போஜனம் நிறுவப்பட்ட தருணத்தின்போது) நமது அருமை கர்த்தர் எப்போதும்போல், அவரது போதனைகள் அனைத்தினுடைய முக்கிய அம்சமாகிய இராஜ்யம்குறித்துச் சிலவற்றைப் பேசவேண்டும் என்றிருந்தார். உண்மையுள்ளவர்களாகக் காணப்படும் பட்சத்தில், இராஜ்யத்தில் ஒரு பங்கினை அடைவார்களென அவர் வாக்களித்தவர்களிடம், தாம் ஓர் இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்வதற்கெனப் புறப்பட்டுப்போக வேண்டும் என்றும், தாம் திரும்பிவந்து, அந்த இராஜ்யத்தில் அவர்கள் பங்கடையத்தக்கதாக, தம்மோடுகூட அவர்களை ஏற்றுக்கொள்வார் என்றுமாக தாம் கூறியிருந்தவைகளை, அவர்களுக்கு நினைப்பூட்டினார். இன்னுமாக தம்மால் நிறுவப்படுகின்றதான இந்த நினைவு கூருதலானது, இராஜ்யத்தில் அதன் நிறைவேறுதலைக் காணும் என்று இப்பொழுது கூறுகின்றார்.

என்ன அர்த்தத்தில் இவ்வாக்கியத்தினைக் கர்த்தர் கூறினார் என்பதைத் துல்லியமாய்த் தீர்மானிப்பது சிரமமானக் காரியமாக இருப்பினும், அவரது பாத்திரம் அடையாளப்படுத்துகின்றதான பாடுகள் மற்றும் சோதனைகளின் விளைவாக, இராஜ்யத்தில் பெருமகிழ்ச்சிக் காணப்படும் என்று அர்த்தப்படும் வகையில் அவர் பேசியுள்ளார் என்று புரிந்துகொள்வது முரண்பாடாய்க் காணப்படாது. "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்." பிதாவினுடைய சித்தத்திற்கான உண்மையானக் கீழ்ப்படிதலின் காரணமாகச் சகிக்கப்பட்ட சோதனைகளையும், கஷ்டங்களையும் அவர் திரும்பி நோக்கிப்பார்த்து, இவைகளின் பிரமாண்டமான பலனை, அதாவது மனுக்குலம் அனைத்தின்மீது கடந்துவரும் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அவர் காண்கையில், இவைகளில் களிகூருவார். முதலாவது நீதிமானாக்கப்பட்டதிலும், பின்னர் அர்ப்பணிப்பிலும், அவரோடுகூடப் பாடுபடுவதிலும் இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணினவர்களாகிய அவரது சீஷர்கள் அனைவரும் இந்தப் பெருமகிழ்ச்சியில் பங்கடைவார்கள். இவர்கள், அவரோடுகூட ஆளுகைச் செய்வதற்கான, அவரது வாக்குத்தத்தத்தினைப் பெற்றிருக்கின்றனர்,

மற்றும் ஆளுகை ஆரம்பித்து, இராஜ்யத்தின் வேலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கையில், இவர்களும், கர்த்தரும் தங்கள் பூமிக்குரிய ஓட்டம் நிறைவடைவது வரையிலும் நாளுக்குநாள் தேவன் தங்களை வழிநடத்தின வழியினை, அது "இடுக்கமான வழியாக," சுயத்தைப் பலிச் செலுத்தும் வழியாக, சுயத்தை வெறுக்கும் வழியாக இருப்பினும், அவ்வழியினைத் திரும்பி நோக்கிப்பார்த்து, துதிப்பார்கள்.

தாம் கைது செய்யப்படுவதற்கும், மரிப்பதற்குமான வேளை அருகாமையில் இருப்பதை அறிந்திருந்த நமது அருமை ஆண்டவரின் விசுவாசமானது, அந்தத் துயரமான வேளைகளினுடைய பரீட்சைகளில் நிலைநின்றது. அப்பத்திற்கும், பாத்திரத்திற்கும் அவர் பிதாவுக்கு ஸ்தோத்திரம் ஏறெடுத்ததானக் காரியமானது, அப்பம் பிட்கப்படுதலும், திராட்சப்பழம் நசுக்கப்படுதலும் குறிக்கின்றதான பாடுகள் யாவற்றிலும், சந்தோஷத்தோடே உடன்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஏற்கெனவே அவர் பிதாவின் ஏற்பாட்டில் திருப்தியடைந்தவராய் இருந்தார். இந்த ஒரு மனநிலைக்கு இசைவாகவே, அவர்கள் புறப்படுகையில், பாட்டுப்பாடினார்கள் - சந்தேகத்திற்கிடமின்றி பூமியில் அவரது ஓட்டம் கிட்டத்தட்ட முடிவடைந்ததற்காகவும், இதுவரையிலும் தமக்குத் தேவையான கிருபை போதுமானதாய் இருந்ததற்காகவும் துதி மற்றும் ஸ்தோத்திரப்பாட்டு ஏறெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

## இந்த வருஷத்து நினைவுகூருதலின் இராப்போஜனம்

நமது கர்த்தருடைய மரணத்தின் ஆண்டுநிறைவு நாளானது, யூத கணக்கீட்டின்படி, ஏப்ரல் 3-ஆம் தேதி, புதன்கிழமை வருகின்றதாய் இருக்கின்றது. அவரது நினைவுகூருதலை ஆசரிப்பதற்கான ஏற்றநேரம், "அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே", அதாவது ஏப்ரல் 2-ஆம் தேதி, செவ்வாய்க்கிழமையன்று இரவாய் இருக்கும்; அதுவும் சரியாய் 6 மணிக்கு அல்லாமல், கொஞ்சம் நேரம் தேவையான ஆயத்தங்களைச் செய்வதற்காகவும், அடையாளத்தினுடைய அர்த்தத்தினைக் கொஞ்சம் ஆராய்வதற்கும், முழுக்காரியத்தையும் மறுபடியும் எண்ணிப்பார்ப்பதற்குமெனச் செலவிட்டப் பின்னர், ஆசரிக்கப்பட வேண்டும்.

வழக்கத்தின்படியே அலிகெனியிலுள்ள (Allegheny) சபையார், நாம் ஆக்கினைத் தீர்ப்பினின்று மீட்கப்படுவதற்கு ஏதுவாய்க் காணப்பட்டதான மாபெரும் நிகழ்வினை ஆசரிப்பதற்கென்றும், நாம் மகிமைக்கும் கனத்திற்கும், அழியாமைக்கும் நேரான அவரது உயிர்த்தெழுதலில், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைய வேண்டுமெனில், அவரோடுகூட மரிப்பதற்கான நம்முடைய அர்ப்பணிப்பை ஆசரிப்பதற்கு என்றும், இந்த ஆண்டுநிறைவு நாளில் ஒன்றுகூடிடுவார்கள்.

உலகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்றதான அருமையான

நண்பர்கள் (இதைப் புரிந்துகொண்டுள்ளவர்களுக்கு மிகுந்த அர்த்தமுள்ளதாய்க் காணப்படுகின்றதான) இந்தப் பாக்கியமான நினைவுகூருதலை அலட்சியப்படுத்திட வேண்டாம் என்று நாம் பரிந்துரைக்கின்றோம். சிறு கூட்டத்தாராய் இருப்பவர்கள், பெரிய கூட்டத்தாருடன் இணைந்து ஆசரிக்கத்தக்கதாகச் செல்லுங்கள் என்று நாம் அறிவுரைக் கூறுவதில்லை, மாறாக ஒவ்வொரு சிறு கூட்டத்தாரும் தங்கள் வழக்கத்தின்படி ஒன்றுகூடிட அறிவுறுத்துகின்றோம்; ஏனெனில் இப்படியாகச் செய்வதே ஆதித் திருச்சபையின் வழிமுறையாக இருந்தது. சந்தோஷமான இருதயத்தோடு, நாம் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்; அதுவும் நமக்கான நமது கர்த்தருடைய பலித் தொடர்புடையது மாத்திரமல்லாமல், அவரோடுகூட மரிப்பதற்கான நமது உடன்படிக்கைத் தொடர்புடையதுமான அதற்கே உரிய பயபக்தியுடன் ஆசரிக்கக்கடவோம். ஒவ்வொரு சபை கூட்டத்தாரிலுமுள்ள வழிநடத்துபவர்கள் (முடிந்தால் சில எபிரேய குடும்பத்திடமிருந்து) புளிப்பில்லாத அப்பத்தையும், ஒன்றில் புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாற்றை (unfermented grape juice) அல்லது உலர்ந்த திராட்சரசத்தை (raisin juice) அல்லது திராட்சப்பழரசத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தங்கள் பண்ணிடவேண்டும். (wine) புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தைப் பயன்படுத்துவதற்கு எதிராகவே நம்முடைய பரிந்துரை காணப்படுகின்றது; ஏனெனில் இது மாம்சத்தில் பெலவீனமாய்க் காணப்படும் சிலருக்குச் சோதனையாக அமையலாம்; எனினும் திராட்சரசமே (wine) பயன்படுத்தப்படும்படி குறிப்பிடப்பட்டுள்ளது என்று யார் மனசாட்சியில் நம்புகின்றார்களோ, அவர்களுக்கு ஏற்பாடுகள் பண்ணப்படலாம். சிலருடைய மனசாட்சியைத் திருப்திப்படுத்துவதற்கெனச் சிறிதளவு புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தை (fermented wine), புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாற்றுடன் (unfermented grape juice) அல்லது உலர்ந்த திராட்சரசத்துடன் (raisin juice) சேர்ப்பது தவறாகாது.

இந்தச் சிறு கூடுகைகளானது ஆரவாரமில்லாமல் காணப்படுவதற்குப் பரிந்துரைக்கின்றோம். ஒழுக்கமாயும், கிரமமாயும், அமைதியாயும், நாம் ஆசரிக்கப் போகின்றதான மாபெரும் செய்கை தொடர்புடையதான விலையேறப்பெற்ற நினைவுகளினால் நிரம்பினவர்களாக, ஒன்றுகூடுவோமாக. ஆசரிப்புகளிலும், சடங்குகளிலும், நம்முடைய கவனம் அதிகமாய்க் காணப்படாதிருப்பதாக. மற்ற விஷயங்களில் செய்வதுபோல, இதிலும் நமது கர்த்தரைப் பிரியப்படுத்துபவைகளைச் செய்திடுவதற்கு நாடுவோமாக; மற்றும் இப்படியாகச் செய்யப்படும் பட்சத்தில் பங்கெடுக்கும் யாவருக்கும், இவ்வனுசரிப்பு நன்மை பயக்கின்றதாயிருக்கும் என்பதில் நமக்கு நிச்சயமே.

விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தை அறிக்கைப் பண்ணுகிறவர்களும், நமது இரட்சகரின் ஊழியத்திற்கான அர்ப்பணிப்பும் பண்ணியுள்ளவர்களுமான எவருமே இந்த அடையாளங்களில் பங்கெடுப்பதற்குத்

தடைப்பண்ணப்படக்கூடாது என்று இதற்கு முன்பும் நாம் கருத்துத் தெரிவித்திருக்கின்றோம். உண்மையான இருதயமற்றோர், இந்த ஐக்கியத்தின் சிலாக்கியத்தினை ஏற்றுக்கொள்வதில்லை. எனினும் "கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்" என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைக்குறித்து சிலர் கொண்டிருக்கும் தவறான கண்ணோட்டங்களின் காரணமாகப் பயப்படுபவதினால், அப்படியானவர்களுக்கு விளக்கம்கொடுத்து தெளிவுப்படுத்த வேண்டியுமுள்ளது (1 கொரிந்தியர் 11:29). இந்த மாபெரும் செய்கையை, நினைவுகூருதலை ஆசரிப்பதான சிலாக்கியத்தினை கைவிடமாட்டார்கள் என்று நாம் நம்புகின்றதான இந்தப் பயப்படுகிறவர்களுக்காக, அப்போஸ்தலனால் இங்குக் குறிப்பிடப்படும் வகுப்பாரைக்குறித்து நாம் இங்கு விவரிக்கின்றோம்; பலியினுடைய உண்மையான முக்கியத்துவத்தினை உணர்ந்து கொள்ள தவறுகின்றவர்களும், இந்த ஆசரிப்பை வெறுமனே சடங்காச்சாரமாகக் கண்டுகொள்பவர்களும்தான் அப்போஸ்தலனால் அவ்வசனத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் வகுப்பாரில் இடம்பெறுவார்கள் என்பது நம்முடைய புரிந்துகொள்ளுதலாய் இருக்கின்றது. இவர்கள் ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகின்றார்கள்; ஏனெனில் இவர்கள் காரியத்தை ஆராய்ந்துப்பார்த்தார்களானால், இவர்கள் இந்தச் சுவிசேஷயுகத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்றதான "சிறுமந்தையினரை" கர்த்தர் எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்கின்றார் என்பதைத் தெளிவாகப் பார்க்கமுடியும். இதைச் செய்ய இவர்கள் தவறுவது என்பது ஆக்கினைத்தீர்ப்பையும், கண்டனத்தையும் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது; இவர்கள் கர்த்தரையும், அவரது பலி முதலானவைகள் எதையும் அறிந்திராத உலகத்திலுள்ள மற்றவர்களைக்காட்டிலும் அதிகப் பொறுப்புடையவர்களாய் இருக்கின்றனர்.

இந்த மகத்துவமிக்க நினைவுகூருதலை நாம் ஆசரிக்கையில், நம்முடைய நீதிமானாக்கப்படுதலுக்காகவும், நமது மீட்பரோடுகூட உடன் பலிச் செலுத்துபவர்களென நாம் அனுபவிக்கும் மகத்துவமான சிலாக்கியங்களுக்காகவும், கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதற்கான சிலாக்கியத்திற்காகவும் நன்றியினைக் காணிக்கையாக்கிடுவதற்கு நாம் மறவாதிருப்போமாக. இந்த ஒரு தருணத்தில் துக்கித்தல்களும், ஆழ்ந்த சிந்தித்தல்களும், தியானித்தல்களும், இருதயத்தை முழுக்க ஆராய்வதும் காணப்பட்டாலும், கர்த்தர்போலவே நாமும் விசுவாசத்தினால் ஜெயங்கொண்டு, இருளிலிருந்து நம்மை தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்குக் கொண்டுவந்தவரும், இப்பொழுது நடைப்பெற்றுக்கொண்டிருக்கின்றதான மாபெரும் நிகழ்வில் பங்குபெற நமக்குச் சிலாக்கியம் அருளினவருமானவரின் புண்ணியங்களை அறிவித்து முன்னேறுவோமாக.

# கடைசி இராப்போஜனம்

## மத்தேயு 26:17-30

பரிசுத்த நகரத்தில் பஸ்கா போஜனத்தை இயேசுவும் மற்றும் அப்போஸ்தலர்களும் புசிக்கத்தக்கதாகவும், இயேசு தம்முடைய சீஷர்களுக்கு முன்னறிவித்தப் பிரகாரமாய்த் தம்முடைய சத்துருக்களின் கரங்களில் பாடுபடத்தக்கதாகவும், ஜனங்களுடைய பாவத்திற்கான பாவநிவாரணபலியைத் தாம் நிறைவேற்றத் தக்கதாகவும், எருசலேமுக்கு அருகாமையிலுள்ள பெத்தானியாவுக்கு இயேசுவும், அப்போஸ்தலர்களும் வந்தார்கள். தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே அவர் பெத்தானியாவிற்கு வந்தார். அடுத்தநாளின் இராப்போஜனத்தின் வேளையில் மரியாள் அவரை (தைலத்தினால்) அபிஷேகித்தாள். இதற்கு அடுத்த நாளில் அவர் எருசலேமுக்குக் கழுதையின்மீது ஏறிவந்தார். அவர் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர் பட்டணத்திற்காகக் கண்ணீர்விட்டழுது, "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" என்று கூறினார். இதற்கு அடுத்தநாளில் அவர் ஆலயத்திற்குவந்து, கயிற்றினாலான சவுக்கைக்கொண்டு காசுக்காரர்களைத் துரத்தினார். இதற்கு அடுத்தநாளில் அவர் தம்மை உலகத்திற்கான ஒளியென அறிவித்து, தம்முடைய பொதுவிடத்திலான கடைசிப் போதனையை ஆலயத்தில் பண்ணினார். ஒவ்வொருநாள் இரவும் லாசரு, மார்த்தாள் மற்றும் மரியாளின் வீட்டிற்கு அவர் திரும்பினதாகத் தெரிகின்றது. இவ்விடத்திற்கு அருகாமையிலுள்ள இடங்களில் எப்போதெல்லாம் இயேசுவும், அப்போஸ்தலர்களும் காணப்படுகின்றார்களோ, அப்போதெல்லாம் லாசரு மற்றும் மார்த்தாள் மற்றும் மரியாளின் வீடே, அவர்களுக்கான வீடாக இருந்தது. இதற்கு அடுத்தநாளாகிய புதன்கிழமையன்று கர்த்தர் பெத்தானியாவிலேயே ஓய்ந்திருந்தார்; மற்றும் வியாழக்கிழமையன்று, "அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அதே இரவில்" அவரும், அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் புசிக்கத்தக்கதாக, பஸ்காவை ஆயத்தம் பண்ணும்படிக்கு, தம்முடைய சீஷர்களில் இரண்டுபேரை அனுப்பிவைத்தார்.

பஸ்கா பண்டிகையானது ஒரு வாரமளவுக்கு நீடிக்கக்கூடியது; மற்றும் அது யூதர்களுடைய ஒழுங்கின்படி கைக்கொள்ளப்படும் மிக முக்கியமான பண்டிகைகளில் ஒன்றாகும். அந்த வாரத்தில் கர்த்தருடைய ஜனங்களுடைய புளிப்பற்ற தன்மை, பரிசுத்தம் மற்றும் தூய்மையைக் குறிப்பாய்த் தெரிவிக்கத்தக்கதாக, பாவத்திற்கு நிழலாயிருந்த புளிப்பானது அனைத்து உணவுகளிலும் ஜாக்கிரதையாகத் தவிர்க்கப்பட்டு, ஒவ்வொரு வீடுகளிலும் அழிக்கப்படுகின்றது. மாம்சீக இஸ்ரயேலர்கள் நிழலில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு அடையாளமாக இருக்கின்றனர். முழு வாரமும் சந்தோஷத்தின் பண்டிகையாக இருந்தது. காரணம், தேவன் இஸ்ரயேலை, எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுவித்தார். பண்டிகை வாரமானது, யூதர்களுடைய முதலாம் மாதத்தின், 15-ஆம் தேதியன்று ஆரம்பிக்கின்றது. ஆனால், அதற்கு முந்தின நாளாகிய 14-ஆம் தேதி அன்று ஆட்டுக்குட்டிக் கொல்லப்பட்டு, அதன் இரத்தம் வீட்டின் நிலைக்கால்களின் மீது தெளிக்கப்படுகின்றது. இது

இரத்தத்தின் கீழ்க்காணப்பட்டு இஸ்ரயேலர்களின் முதற்பேறானவர்களைக் கர்த்தர் தப்புவித்து, எகிப்தியரின் முதற்பேறானவர்களைச் சங்கரித்துப்போட்டு, இவ்விதமாக எகிப்தியர்கள் கர்த்தருடைய ஜனங்களைப் போக சம்மதித்ததாகிய, எகிப்தில் இரவுவேளையில் நடந்திட்ட விஷயங்களை நினைவுகூருவதாகச் செய்யப்பட்டது. பஸ்கா பண்டிகை வாரம் ஆரம்பிப்பதற்குரிய முந்தினநாள் இரவில், இந்த நினைவுகூருதலின் ஆட்டுக்குட்டியைப் புசிப்பதற்கான, ஆயத்தங்களைச் செய்யும்படிக்கு, தம்முடைய சீஷர்களைக் கர்த்தர் அனுப்பிவைத்தார்.

ஆயத்தம்பண்ணும் வேலைக்கு எனப் பேதுருவும், யோவானும் அனுப்பி வைக்கப்பட்டார்களென லூக்கா அவர்கள் நமக்குத் தெரிவித்துள்ளார். மேலும், தண்ணீர் குடத்தை யார் கொண்டுசெல்கின்றாரோ, அவருடைய வீட்டில்தான் விருந்து ஏற்பாடு பண்ண வேண்டுமென்று அவர்கள் அறிந்துகொள்ளலாம் என்று, கர்த்தர் தெரிவித்ததாக மாற்கு அவர்கள் நமக்குத் தெரிவித்துள்ளார். மாற்குவினுடைய தாயாராகிய மரியாளுக்குச் சொந்தமானதுதான் அந்த வீடு என்றும், அப்பொழுது பயன்படுத்தப்பட்ட மேல்வீட்டறைதான் பிற்பாடு அப்போஸ்தலர்கள் ஒன்று கூடின இடம் என்றும், அவர்கள் மீது பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதம் பொழிந்த இடம் என்றும், சிலரால் அனுமானிக்கப்படுகின்றது. பேதுரு சிறையிலிருந்து விடுவிக்கப்படும்படிக்கு ஜெபம் பண்ணுவதற்கென, அநேகர் ஒன்றுகூடியதும் இந்த மரியாளின் வீட்டில்தானா என்பது நமக்குத் தெரியவில்லை. அது பெரிய மேல்வீட்டறையாகும் மற்றும் அது ஏற்கெனவே உணவு உட்கொள்வதற்குரிய மஞ்சத்தினால் ஏற்பாடு பண்ணப் பட்டிருந்தது. கர்த்தரைக் கைது செய்யும்படிக்கு நாடுகின்றவர்கள் சார்பில், எவ்விதத்திலும் பஸ்கா அனுசரிப்பும், யோவான் 14:17-ஆம் வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நமது கர்த்தர் பிற்பாடு கொடுத்ததான சொற்பொழிவும் குறுக்கிடப்படாதப்படிக்கு, இயேசுவும், சீஷர்கள் அனைவரும் ஒன்றுகூடுவது வரையிலும், பஸ்கா அநுசரிக்கப்படுகின்ற இடம்பற்றின தகவல் யூதாசுக்குத் தெரியாத வண்ணம், இயேசு இப்படியாக மறைமுகமாக மேல்வீட்டறையைக்குறித்துக் கூறினார் என்று அனுமானிக்கப்படுகின்றது. ஆட்டுக்குட்டியை ஏற்பாடுபண்ணுதல், புளிப்பில்லா அப்பங்கள், கசப்பான கீரைகள், திராட்சரசம் ஆகியவற்றிற்கு ஏற்பாடுபண்ணுதல் எனும், விதத்தில்தான் பேதுருவும், யேவானும் பஸ்காவிற்காக ஆயத்தம்பண்ணினார்கள். சாயங்காலத்தில், ஏற்றவேளையில் அநுசரிப்பிற்காக அனைவரும் ஒன்று கூடினார்கள்.

## தாழ்மைக்கான ஒரு பாடம்

இவ்வேளையில் அப்போஸ்தலர்கள் மத்தியில் வாக்குவாதம் எழும்பினதாக லூக்காவும், யோவானும் பதிவு செய்துள்ளனர் (லூக்கா 22:24-30; யோவான் 13). அப்போஸ்தலர்கள் முற்றும் முழுமையாகச் சுயநலத்தினாலும், பேராசையினாலும் தூண்டப்பட்டிருந்தார்கள் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. கர்த்தராகிய ஆண்டவர் மீதான அவர்களுடைய அன்பினிமித்தமே, அவருக்கு அருகாமையில் இருக்கும் ஸ்தானத்தையடைய வேண்டுமென்று, அவர்களுக்குள் வாக்குவாதம் காணப்பட்டது

என்று, நாம் எடுத்துக்கொள்ளலாம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்களுடைய ஜீவியம் முழுவதுமாக, நினைவில் காணப்படக்கூடிய மிகுந்த அருமையான செய்தியைக்கொடுக்க கர்த்தர் முற்பட்டார். அவர்கள் புழுதி நிறைந்த சாலையில் பிரயாணம்பண்ணி நண்பகல் வேளையில் வந்தடைந்தார்கள்; மற்றும் அவர்கள் செல்வந்தர்களாய் இராதபடியினால், அவர்களை வரவேற்பதற்கும், அவர்களது பாதங்களைக் கழுவுவதற்கும் வேலைக்காரர்கள் அவர்களுக்கு இல்லை. மேலும் அவர்களுடைய பரஸ்பரமான சௌகரியத்திற்கென, ஒருவருக்கொருவர் இதைச் (பாதங்கழுவுதலை) செய்வதை விட்டுவிட்டு, பந்தியில் சிறப்பிற்குரிய ஸ்தானம் அடைவதற்கென ஒருவரோடொருவர் போராடிக்கொண்டிருந்தனர். யோவான் ஆண்டவருக்கு அருகாமையில் உட்காரும் மிகவும் விரும்பப்படும் ஸ்தானத்தை அடைந்திருந்தார் . . . இதற்குக் காரணம் யோவான் அவருக்கு உறவினனாகவும், இயேசு விசேஷித்த விதத்தில் அன்புகூர்ந்தவர்களில் ஒருவராகவும் இருந்ததினால் மாத்திரமல்லாமல், அப்போஸ்தலர்கள் மத்தியில் இவர் வயதில் சிறியவராகவும் இருந்ததினாலாகும்.

முற்காலங்களின் பழக்கவழக்கமானது, அநேக விதங்களில் இன்றைய பழக்கவழக்கத்திலிருந்து வித்தியாசப்படுகின்றது. அவர்கள் உணவு உண்கையில் பந்தியைச்சுற்றி வளைந்துள்ள மஞ்சத்தில், ஒரு பக்கமாய்ச்சாய்ந்து கிடப்பது வழக்கமாகும். அவர்கள் தங்களது இடது முழங்கையில் (elbow) சாய்ந்து காணப்பட்டு, வலது கையைக்கொண்டு உணவை வாய்க்கு எடுத்துச் செல்வர். ஆகவே, அவர்களது தலைகள் ஒருவரோடொருவர் நெருங்கிக் காணப்படுகின்றது. ஆனால், அவர்களுடைய பாதங்களோ பின்னால் வெளியே நீட்டப்பட்ட நிலையில் காணப்படும். வாக்குவாதமானது அதன் போக்கிலேயே தொடரும்படி விடப்பட்டது. இராப்போஜனம் ஆரம்பித்தது. இயேசு எழுந்துநின்று அவர்கள் ஒவ்வொருவரின் பாதங்களை, ஒன்றன்பின் ஒன்றாகக் கழுவ ஆரம்பித்தார். அவருடைய பாதங்களைக் கழுவ வேண்டுமென்றும் ஒவ்வொருவருடைய பாதங்களைக் கழுவ வேண்டுமென்றும், தங்களுக்குள் அவர்கள் எண்ணி, கழுவியிருக்க வேண்டும். ஆனால் அதற்குப்பதிலாக ஒவ்வொருவரும், தான் மற்றவரைக்காட்டிலும் தாழ்ந்தவனல்ல எனும் கருத்தை ஏற்படுத்துவதற்குரிய நோக்கத்தைக்கொண்டிருந்தனர். இப்படியாக, ஆண்டவரால் அவர்களுக்குச் செய்யப்பட்ட ஊழியமானது, கடுமையான கடிந்துகொள்ளுதலாய் இருந்தது. கொஞ்சம் முன்பு கொடுக்கப்பட்டதான பாடத்தை அதாவது, "அவர்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" என்ற பாடத்தை அவர்கள் அவ்வளவு சீக்கிரமாய் மறந்துவிட்டனர். இக்காரியத்தை விவரிப்பதற்குரிய வாய்ப்பு இங்கு நமது கர்த்தருக்குக் கிடைத்தது. அவர்களனைவருக்கும் அவர் ஊழியம் புரிந்திட விரும்பினார்; மற்றும் ஆவிக்குரிய காரியங்கள் அனைத்திலும் அவர் அவர்களுக்கு ஊழியம் தொடர்ந்து புரிந்துக்கொண்டிருக்கின்றார். ஆகவேதான் அவரை அவர்கள் தங்களுடைய ஆண்டவரென உண்மையில் கருதினார்கள். இப்பொழுதோ மிகவும் மதிப்புக்குறைந்த ஊழியமும் அவர்களுக்குப் புரிந்திட, தாம் விரும்புமளவுக்குத் தம்முடைய தாழ்மையை

அவர்களுக்குக் காட்டினார். எத்துணை விலைமதிப்புள்ள பாடம்! இதன் முக்கியத்துவம் கர்த்தருடைய உண்மையான பின்னடியார்கள் மத்தியில் இழந்துப்போகாமல் இருப்பதாக! ஆனால், இதுவும் கர்த்தருடைய இராப்போஜனம் மற்றும் ஞானஸ்நானம் போன்று, செய்யத்தக்க முறைமையென (அ) கட்டளையென இருக்கின்றது எனச் சிலர் அனுமானிப்பதின் மூலமாக, தவறிழைத்துள்ளனர். நம்முடைய புரிந்துக் கொள்ளுதலின்படி இந்த அடையாளத்தின் மூலமான பாடமும், அப்பாடமானது எந்த நேரத்திலும், எவ்விடத்திலும் நம் ஒவ்வொருவருக்கும் பொருந்தும் என்ற காரியமும் தெரிவிப்பது என்னவெனில்... எவ்வளவுதான் மதிப்புக்குறைவான ஊழியமாக இருப்பினும், அதைப் பொருட்படுத்தாமல், அந்தப் பயனுள்ள ஊழியத்தைச் சகோதரர்களுக்குச் செய்ய நாம் நாடுகின்றவர்களாய் இருக்க வேண்டும்; மற்றும் இப்படியாகச் செய்யப்படும்போது, அதைக் கர்த்தர் தமக்கே செய்ததாகக் கருதுகின்றார் என்பதுமாகும்.

## அந்த மனுஷன் பிறவாதிருப்பானானால் அவனுக்கு நலமாயிருக்கும்

அவர்கள் இராப்போஜனத்தின்போது காணப்படுகையில், மிகவும் துக்கங்கொண்டவராக இயேசு, தம்மால் தெரிந்துக்கொள்ளப்பட்ட 12 பேரில் ஒருவன்தான் தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்றும், இப்படியாக தம்முடைய மரணத்திற்குத் துணை கருவியாக ஆகப்போகிறான் என்றும் விவரித்தார். அதாவது இதே இராப்போஜனத்தில், இதே அப்பத்தில், இதே சுடப்பட்ட ஆட்டுக்குட்டியின் மாம்சத்தில் தம்முடன் கூடப் புசிக்கிறவனும், தம்முடன் கூடத் தாலத்தில் கையிடுகிறவனே தம்மைக்காட்டிக்கொடுத்து, தம்முடைய மரணத்திற்குத் துணையாகப் போகிறான் என்று விவரித்தார். இவைகள் அனைத்தும் எழுதப்பட்டிருந்தாலும், தெய்வீகத் திட்டம் தொடர்பான எந்தக் காரியங்களிலும், எவ்விதமான மாற்றமில்லாமல் இருந்தாலும், இப்படியாகத் தம்மைக் காட்டிக்கொடுத்து, தம்முடைய மரணத்திற்குத் துணையாகிறது என்பது, தோழமையில் மிகவும் பயங்கரமான பிளவை ஏற்படுத்துகின்றதாய் இருக்கும், அதாவது எண்ணுவதற்கே வேதனையானதாக இருக்குமென்று சுட்டிக்காட்டினார். காட்டிக்கொடுக்கப்படாமலேயே அவர் அதிகாரிகளால் கைதுச் செய்யப்படுவதாய் இருந்தாலும் அல்லது முன் பின் தெரியாத நபர் மூலமாகவோ அல்லது ஒரு சீஷன் வாயிலாகவோ அவர் காட்டிக்கொடுக்கப்பட்டு அதிகாரிகளால் கைதுச் செய்யப்படுவதாய் இருந்தாலும், இது கர்த்தருடைய நோக்கம் மற்றும் அர்ப்பணிப்பைப் பொறுத்தமட்டில் அவருக்கு ஒன்றும் வித்தியாசமாகக் காணப்படப்போவதில்லை; அதாவது இது தெய்வீக ஏற்பாட்டில் எவ்விதமான மாற்றத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை. எனினும் அவரைக் காட்டிக்கொடுப்பவர் அவருடைய உயிர் நண்பனாகவும், சீஷனாகவும் இருப்பதுதான் மிகுந்த துக்கத்திற்கான காரணமாகும்.

"அம்மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்" என்ற வார்த்தைகள் நமக்குத் தெரிவிப்பது என்னவெனில், கர்த்தருடைய கண்ணோட்டத்

தின்படி, யூதாஸ் அதிகளவிலான அறிவையும், மேலான காரியங்களுக்கான வாய்ப்புகளையும் ஏற்கெனவே அனுபவித்துள்ள காரணத்தினால், அவருடைய கிரியைக்கு அவரே பொறுப்பு வகிக்கின்றார், மற்றும் அவருக்கு எதிர்க்காலத்தில் எந்தவொரு நம்பிக்கையும் இல்லை என்பதாகும். ஒருவேளை யூதாஸ் அவருடைய குணலட்சணத்தைச் சரி செய்வதற்கென, இன்னும் ஒரு வாய்ப்பை அருளுவதற்குரிய ஏதேனும் காரணத்தைக் கர்த்தர் காண்பாரானால், அதற்கு நாம் நிச்சயமாய் மறுப்புத் தெரிவிப்பதில்லை. ஆனால், அப்படியாக இன்னுமொரு வாய்ப்பு யூதாசுக்கு அருளப்படும் என்று எண்ணுவதற்கு, நம்மால் எந்த வேதவாக்கியங்களின் அடிப்படையிலான காரணத்தையும் பார்க்கமுடியவில்லை. நம்முடைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், கர்த்தருடன் தொடர்புவைத்தவரும், பரிசுத்த ஆவியினுடைய வல்லமையின் கீழ்க்காணப்பட்டவரும், கர்த்தருடைய நாமத்தினால் பிசாசுகளைத் துரத்துவதற்கும் மற்றும் வியாதிகளைச் சொஸ்தப்படுத்துவதற்கும் அனுப்பப்பட்டவர்களில் ஒருவராகவும், அவருடைய பிரதிநிதியாகவும், அவருடைய வல்லமையைப் பயன்படுத்துபவராகவும் இருந்த யூதாஸ் மாபெரும் வெளிச்சத்திற்கும், அனுபவத்திற்கும் மற்றும் அறிவிற்கும் எதிராகப் பாவம் செய்தவராகக் காணப்படுகின்றார். யூதாசினுடைய முடிவு சோகமானதே. தற்கொலை பண்ணுகின்ற ஒவ்வொருவனும், தான் பிறவாமல் இருந்தால் நலமாயிருக்கும் என்பதை, தற்கொலை பண்ணுவதன் மூலம் ஒப்புக்கொள்பவனாக இருக்கின்றான்.

## கர்த்தாவே, நானோ?

மற்றொரு பதிவானது, சீஷர்கள் ஒவ்வொருவரும் கர்த்தரை நோக்கி நானோ? என்று கேட்டதாகவும், இறுதியில் யூதாசும் கேட்டார் என்றும் நமக்குத் தெரிவிக்கின்றது. சீஷர்கள் தங்களுக்கு இதில் எந்தச் சம்மந்தமும் இல்லை என்பதில் நிச்சயமாய் இருந்தார்கள்; மற்றும் தங்களுடைய குற்றமில்லா நிலைமையைக் கர்த்தர் உறுதிப்படுத்திக்கொள்ள விரும்பினார்கள். பதினொரு பேரும் இப்படியாகக் கர்த்தரிடத்தில் கேட்க, அவர்களுடைய குற்றத்தைச் சுட்டிக்காட்டும் விதத்தில் கர்த்தர், விடை எதுவும் கொடுக்காமல் இருந்தது, யூதாஸ்தான் அந்நபர் என்பதைத் தெரிவிப்பதாக இருந்தது. ஆண்டவரே நானோ? என்று யூதாசும் கேட்டதில், அவருடைய தைரியம் தெரிகின்றது. இதற்கு, "நீ சொன்னபடிதான்" அல்லது "நீ தான்" என்று இயேசு யூதாசுக்கு விடையளித்தார். கர்த்தருடைய குற்றம் சாட்டுதல்/கடிந்துரை எத்துணை பெருந்தன்மையுடன் காணப்படுகின்றது. கர்த்தருடைய வார்த்தைகள் பயமுறுத்துகின்றதாகவும், பழித்துரைப்பதாகவும், கசப்பின் வெளிப்படுத்தலாகவும் இராமல், மாறாக கவலை மற்றும் அனுதாபத்தின் வெளிப்படுத்தலாக மாத்திரமே இருந்தது என்பது எத்துணை பாடமாய் நமக்கு உள்ளது! நம்முடைய சத்துருக்கள்மீது நாம் அனுதாபம்கொள்ள வேண்டுமே ஒழிய பகைக்கக்கூடாது. சபிக்காமல் நம்மால் முடிந்தமட்டும், நம்முடைய சத்துருக்களை ஆசீர்வதிக்க வேண்டும். பணத்திற்காகவோ அல்லது வேறு சுயநலமான காரியங்களுக்கெனக் கர்த்தரையோ (அ) அவரது

சத்தியத்தையோ (அ) அவரது சகோதரர்களை விற்றுப்போடும் யூதாசுக்கு ஒத்த மனப்பான்மைக்கு எதிராக, இயேசுவினுடைய சீஷர்கள் அனைவரும் விழித்திருந்து, ஜெபம்பண்ணுவது நல்லது. யூதாஸ் வகுப்பார் உண்டு என்பதை நாம் அறிந்து வைத்தவர்களாக, நமது இருதயங்களை நாம் காத்து, "ஆண்டவரே நானோ?" என்று கேட்போமாக.

யூதர்களுடைய நியாயப்பிரமாணத்தின்படியாக பஸ்கா இராப்போஜனத்தை அவர்கள் புசித்துக்கொண்டிருக்கையில் அல்லது இராப்போஜனம் புசித்து முடித்து அவர்கள் பந்தியில் இன்னமும் காணப்படுகையில், மீதமிருந்த அப்பத்தில் சிலவற்றை இயேசு எடுத்து, அதை ஆசீர்வதித்து, அதைப்பிட்டுத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்து, "நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கின்றது" என்று கூறினார். "உங்களுக்காகப் பிட்கப்படுகிற" எனும் வார்த்தைகளை வேறொரு சுவிசேஷகர் பதிவு செய்துள்ளார். "என்னுடைய சரீரமாயிருக்கின்றது" மற்றும் "என்னுடைய இரத்தமாயிருக்கின்றது" என்ற வார்த்தைகளின் காரணமாக, எப்போதெல்லாம் நினைவுகூருதலின் அப்பமும், இரசமும் படைக்கப்படுகின்றதோ, அப்போதெல்லாம் அப்பமும், இரசமும், கிறிஸ்துவின் நிஜமான சரீரமாகவும், அவருடைய நிஜமான இரத்தமாகவும் மாறும் என்று நாம் புரிந்துக்கொள்ள வேண்டும் எனக் கத்தோலிக்கர்களும், சில புரொட்டஸ்டண்டினரும் கூறுகின்றனர். இது காரணகாரியத்திற்கு உட்பட்டதல்ல என்றும், மிகவும் உண்மையற்றது என்றும் நாம் கருத்துத் தெரிவிக்கின்றோம். அப்பமும், இரசமும், நமது கர்த்தருடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்கும் அடையாளமாக மாத்திரமே இருக்கின்றது. இது அடையாள வார்த்தைகள் என்பதற்கான நிரூபணமானது, இவ்வார்த்தைகளை நமது கர்த்தர் பேசின/பயன்படுத்தினபோது, அவருடைய சரீரம் இன்னமும் பிட்கப்படவும் இல்லை, அவருடைய இரத்தம் இன்னமும் சிந்தப்படவும் இல்லை என்பதேயாகும். ஆகவே அப்பமும், இரசமும், அவருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப் படுத்துவதற்கெனப் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் என்ற அர்த்தத்தில் அல்லாமல், வேறு ஏதாகிலும் விதத்தில் எடுத்துக்கொள்ளப்படுமாயின், அப்பொழுது உண்மை திரித்துக்கூறப்பட்டதாக, பொய்யுரைத்ததாக ஆகிவிடும். மேலும், கர்த்தராலோ, அவருடைய பின்னடியார்களாலோ பொய்யுரைக்கப்பட்டதாக நம்மால் ஏற்றுக் கொள்ளவே முடியாது.

நமது கர்த்தரினால் விவரிக்கப்பட்டுள்ள அப்பமானது, வானத்திலிருந்து வந்த அப்பத்தை அதாவது, உலகத்தின் பாவத்திற்காக அவரால் பலிச்செலுத்தப்பட்ட அவருடைய மாம்சத்தை அடையாளப்படுத்துகின்றது. இதைப் புசிக்கும்படிக்குத் தம்முடைய பின்னடியார்கள் அனைவரையும் அழைக்கின்றார். மேலும் அவருடைய சரீரம் பிட்கப்படுவதன் மூலமாக, கிடைக்கப்பெற்ற ஆசீர்வாதங்களையும், இரக்கத்தையும், கிருபையையும் நாம் நமக்கெனச் சொந்தமாக்கிக்கொள்ளும்போது, அவருடைய மாம்சத்தைப் புசிக்கின்றவர்களாய் இருப்போம். இப்படியாகப் பாவங்களுக்கான மன்னிப்பையும், பிதாவுடன் ஒப்புரவாகுதலையும் பெற்றுத்தந்த பலியினுடைய நன்மைகளை நாம் நமக்கெனச் சொந்தமாக்கிக்கொள்கின்றோம்.

# புது உடன்படிக்கையின் இரத்தம்

"இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" (மத்தேயு 26:28). "இது (பாத்திரம்) என்னுடைய இரத்தத்தை அடையாளப்படுத்துகின்றது. இது எப்பொழுதும் உங்களுக்கும், என்னுடைய அன்பார்ந்த பின்னடியார்கள் அனைவருக்கும் என்னுடைய இரத்தத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கும். மேலும், இது இப்படியான தருணங்களிலெல்லாம் என்னுடைய மரணத்தையும், தேவனுக்கும் மற்றும் மனுஷனுக்கும் இடையிலான மாபெரும் மத்தியஸ்தராகிய என்னாலேயே தேவனுக்கும், பாவிகளுக்கும் இடையிலே முத்திரிக்கப்பட்ட உடன்படிக்கையையும் உங்களுக்கு நினைப்பூட்டுவதாக இருக்கும்" என்ற விதத்தில் இயேசு கூறினார்.

கிறிஸ்துவின் இரத்தத்தினால் முத்திரையிடப்பட்டுள்ள புது உடன் படிக்கையானது, பழைய ஏற்பாட்டில் எங்கும் மற்றும் எபிரெயர்களுக்கு அப்போஸ்தலர் எழுதியுள்ள நிரூபத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது (எபிரெயர் 8:6-13; 10:29; 12:20). இந்தப் புது உடன்படிக்கையானது, நியாயப்பிரமாண உடன்படிக்கையைத் தள்ளிவைத்துவிட்டது. மோசேயை மத்தியஸ்தராகக் கொண்டிருந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, யாரெல்லாம் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளையெல்லாம் கைக்கொள்வார்களோ, அவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்களெனத் தெரிவித்தது. ஆனால், புது உடன்படிக்கையானது, இரக்கத்தைக் காட்டுகின்றது; மற்றும் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர், ஜனங்களின் சார்பிலான தம்முடைய மரணத்தின் மூலமாக, மனுக்குலத்தையும் படிப்படியாகச் சீரழிந்த நிலையிலிருந்து, உண்மையான மற்றும் நேர்மையான இருதயத்தின் நல்ல வாஞ்சைகள் அனைத்தையும், அவர்கள் பூரணமாய்ச் செய்யத்தக்கதான நிலைக்கு உயர்த்திவிடுவார்.

இந்த அப்பம் மற்றும் பாத்திரத்திற்கு இன்னும் ஆழமான அர்த்தம் இருப்பதை அப்போஸ்தலர் பவுல் நமக்குக் காட்டுகின்றார். "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" என்பதைப்பற்றின தெளிவான புரிந்துக்கொள்ளுதலைப் பெற்றிருந்தவர் அப்போஸ்தலர் பவுலேயாவார். அதாவது நாம் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கமாய் இருக்கின்றோம் என்றும், இப்பொழுது அவருடைய பாடுகளில் பங்காளிகளாக இருக்கின்றோம் என்றும், ஒருவேளை உண்மையுள்ளவர்களாய் இருப்போமானால், அவருடைய மகிமையின் சரீரத்தினுடைய அங்கங்களாகவும், அவருடைய மகிமையில் பங்கடைகின்றவர் களாகவும் இருப்போம் என்றுமுள்ள இரகசியத்தைக்குறித்த தெளிவான புரிந்துகொள்ளுதலை அப்போஸ்தலர் பவுலே பெற்றிருந்தார். இக்கண்ணோட்டத்தின் படி பார்க்கையில், அப்போஸ்தலர் விவரித்துள்ள பிரகாரமாக, பிட்கப்பட்ட அப்பம் என்பது கர்த்தர் இயேசு தனிப்பட்ட விதத்தில் பிட்கப்படுவதை மாத்திரம் குறிக்காமல்,

இந்தச் சுவிசேஷயுகம் முழுவதுமுள்ள அவருடைய மறைப்பொருளாயிருக்கும் அங்கங்கள் பிட்கப்படுவதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது; மற்றும் பாத்திரத்தில் பானம்பண்ணுவது என்பது, அவர் மனுக்குலத்தின் சார்பாக புது உடன்படிக்கையை முத்திரைப்பண்ணத்தக்கதாக, அவர் மரணத்தில் பங்கடைவதை மாத்திரம் உள்ளடக்கவில்லை, இன்னுமாக பாத்திரத்தில் அவரோடுகூட நாம் பங்கடையத்தக்கதாக, "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்ற அவரது அழைப்பானது, தற்காலத்தில் அவரோடுகூட உபத்திரவப்படுவதிலும், மரிப்பதிலும் நாம் பங்கடையலாம் என்பதையும், ஆயிரவருட யுகத்தின்போது, புது உடன்படிக்கைக்கான சூழ்நிலைகளை ஆரம்பித்துவைப்பதிலும் நாம் பங்கடையலாம் என்பதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இக்கருத்து எத்துணை பிரம்மாண்டமாகவும், எத்துணை ஆழமாகவும், எத்துணை பரந்தமனப்பான்மையுடனும் காணப்படுகின்றது! கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றுவதற்கு நாம் அனுமதிக்கப்படுவதும், எதிர்க்காலத்தில் அவருடைய மகிமையில் பங்கடைவதற்கு எதிர்நோக்குவதும், எத்துணை அருமையான சிலாக்கியமாகும். இக்கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா? "என்ற சீஷர்களுக்கான அவருடைய வார்த்தையிலுள்ள முக்கியத்துவத்தை நம்மால் காண முடிகின்றது (மத்தேயு 20:22). இப்படிப் பங்குகொள்வதற்கென அழைக்கப்படுவதற்கு அனைவரும் பாத்திரமாய் இராததுபோல, அழைக்கப்பட்டவர்களில் அனைவரும்கூட இப்படிப் பங்குகொள் வதற்குரிய சிலாக்கியத்தை மகிழ்ச்சியுடனும், நன்றியுடனும் உணர்ந்துகொள்ள மாட்டார்கள். நம்மில் ஒவ்வொருவரும் உறுதியுடன் யாக்கோபையும், யோவானையும் போன்று, கர்த்தரிடம், "கர்த்தாவே கூடும்," நாங்கள் விருப்பத்துடன் இருக்கின்றோம் என்றும், உம்முடைய உதவியினால் நாங்கள் ஜெயங்கொண்டவர்களாகவும், முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும் வருவோம் என்றும், சொல்வோமாக.

## புதிய திராட்சரசம் - இராஜ்யத்தின் சந்தோஷங்கள்

நமது கர்த்தர் இராஜ்யத்தில் நவமானதாய்ப் பானம் பண்ணுவதுவரையிலும், தாம் திராட்சரசம் பருகுவதில்லை என்று கூறினார். இதன் அர்த்தம் கர்த்தர் அவர்களுடன் இராஜ்யத்தில் புதிய அல்லது புளிக்காத இரசத்தைப் பானம்பண்ணுவார் என்பதாக இராமல், மாறாக இராஜ்யம் வருவதுவரையிலும் திராட்சரசம் அடையாளப்படுத்தும் நவமான (அ) நிஜமான காரியங்கள் நிறைவடைவதில்லை என்பதேயாகும். இராஜ்யம் வரும்போது, தற்காலத்தின் அனைத்து உபத்திரவங்களும், சோதனைகளும் கடந்துபோய்விடும்; மற்றும் திராட்ச ஆலையின் மிதிக்கப்படுதலும், இரசம் உருவாக்குதலும் அனைத்தும் முடிந்துவிடும்; மற்றும் திராட்சரசம்

சந்தோஷத்திற்குரியதாகவும், மகிழ்ச்சிக்குரியதாகவும் காணப்பட்டு, கற்பனைசெய்து பார்ப்பதற்கு அப்பாற்பட்ட சந்தோஷங்கள் மற்றும் ஆசீர்வாதங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கும்; மற்றும் இச்சந்தோஷமானது, தற்காலத்தில் நம்முடைய மீட்பருடன் அவருடைய பாடுகளிலும், பின்வரும் மகிமைகளிலும் உண்மையாய் ஐக்கியம் கொண்டிருந்தவர்கள் அனைவரின் பங்காக இருக்கும். இராஜ்யத்தின் காலம் இப்பொழுது சமீபித்துள்ளது. அதாவது, கர்த்தர் இவ்வார்த்தைகளைப் பேசின காலங்களைக்காட்டிலும், 1800 வருடங்கள் கடந்துள்ள இப்பொழுது, மிகவும் சமீபித்துள்ளது; மற்றும் இதன் ஆரம்பத்திற்கான ஆதாரங்கள் அனைத்துத் திசைகளிலும் பெருகிக்கொண்டு வருகின்றது. அதை எதிர்ப்பார்த்த வண்ணமாக நம்முடைய இருதயங்கள் களிகூர்ந்திருக்க வேண்டும்; மற்றும் தற்காலத்தில் துக்கத்தின், அவமானத்தின், பாடுகளின், பாத்திரத்தில் பானம் பண்ணுவதில் நாம் உண்மையாயிருந்து, இவ்விதமாக நம்முடைய அன்பையும், நம்முடைய நேர்மையையும் வெளிப்படுத்துவோமாக.

இதற்குப் பின்வரும் சம்பாஷணையாக, யோவானால் (15, 16, 17-ஆம் அதிகாரங்களில்) பதிவு செய்யப்பட்டுள்ள காரியங்கள், கர்த்தருடைய ஜனங்கள் அநேகருக்கு பல நூற்றாண்டுகளாக ஆசீர்வாதமாய் இருந்துவருகின்றது. பின்னர், அவர்கள் ஸ்தோத்திர பாட்டைப்பாடி, ஒலிவ மலைக்கு, கெத்செமனே தோட்டத்திற்குப் போனார்கள். சீஷர்கள் அனைவரின் மீதும் சோதனைகள் கடந்துவந்தது. ஒவ்வொரு நினைவுகூருதலின் காலங்களிலும், கர்த்தருக்கான நம்முடைய வாக்குறுதியை அடையாளமாய்த் தெரிவிக்கும் ஒவ்வொரு முறையும், கர்த்தருடைய ஜனங்களுக்குப் புதிய சோதனைகள், புதிய பரீட்சைகள், புதிய சலித்தெடுத்தல்கள் வருகின்றது. யாரால் நிலைநிற்க முடியும்? நம்முடைய இரட்சகராகிய நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியைப் பற்றிக்கொண்டிருப்போமாக! மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டிருப்போமாக! உண்மையுள்ள வார்த்தைகளைப் பற்றிக்கொண்டிருப் போமாக! நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாக!

## இயேசு கூறுவதை நான் கேட்டேன் [விடியல் துதிப்பாடல்கள், # 108]

இந்த அருமையானப் பாடலானது முன்வைக்கும் – தனிமையின் உணர்வுகள், வெறுமையின் உணர்வுகள், நிலைவரமான நண்பனின் அவசியம் என்ற உணர்வுகள் – குறித்த அனுபவங்களானது கிட்டத்தட்ட ஒவ்வொரு மனித இருதயத்திலும் ஏதோ ஒரு தருணத்தில் கடந்துவருகிறதாகவே இருக்கும். (இவ்வனுபவங்கள் காணப்படுகையில்) ஒருவேளை ஒருவன் இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டிருந்திருப்பானானால் – அவன் மனமானது இயல்பாகவே இயேசுவினிடத்திற்குத் திரும்பிடும். ஆனால் அந்தோ பரிதாபம்! இயேசுவிடம் வருவதோ அல்லது அவரது சீஷர்கள் ஆகுவதோ என்னவென்று அறியாதவர்களாக அநேகர் காணப்படுகின்றனர். பெரும்பாலும் உச்சக்கட்டம் அடைவதற்கு முன்னதாகவும், மாபெரும் நிகழ்வுகள் நிறைவடைவதற்கு முன்னதாகவும், மன அழுத்தம் கடந்துபோய்விடுகின்றது மற்றும் அந்நபர் மீண்டுமாக தனது பழைய சிந்திக்கும் முறைமைக்கும், செய்கைக்கும் திரும்பிவிடுகின்றான்.

இயேசுவிடம் வருதல் என்பது, நம்மை நமது விழுந்துபோன, பாவமான, மரிக்கும் நிலையினின்று மீட்கத்தக்கதாக, பரம பிதாவின் பிரதிநிதியென, பரம பிதாவினால் நியமிக்கப்பட்டு, அனுப்பிவைக்கப்பட்டதான மாபெரும் மற்றும் வல்லமையுள்ள இரட்சகர் என்று ஏற்றுக்கொள்வதைக் குறிக்கின்றதாய் இருக்கும். இயேசுவிடம் வருகையில் நாம் முதலாவதாக எந்த நிபந்தனைகளின் கீழ், அவர் நம்மை ஏற்றுக்கொள்வார், நமக்குப் பரிந்துபேசுபவர் ஆவார் மற்றும் பரம பிதாவின் குடும்பத்திற்குள் கொண்டுவருவார் என்பதுபற்றி உறுதிப்படுத்திக் கொள்கின்றோம். "ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்றுள்ள வார்த்தைகளை நாம் கேட்கின்றோம். (1 யோவான் 2:1; மத்தேயு 16:24)

சுயத்தை வெறுத்தல் எனும் முதலாம் படியானது, தெய்வீகச் சித்தத்திற்கு முரணான நமது மனுஷீக சித்தத்தைக் கைவிட்டுவிடுவதைக் குறிக்கின்றாய் இருக்கும். கர்த்தருக்கே ஒழிய, மற்றபடி வேறு எவருக்கும் என்று நமது சித்தங்களைக் கையளிப்பதற்கு நாம் துணிந்திடக்கூடாது. சித்தம் என்பது, நாம் பெற்றிருக்கின்ற மிகவும் விலையேறப்பெற்ற ஒன்றாகும். நமது சித்தத்தை, நமது பூமிக்குரிய சிறந்த நண்பன் வசத்திலோ, பெற்றோர்கள் வசத்திலோ, கணவன் வசத்திலோ, மனைவி வசத்திலோ கையளிப்பது என்பது பாதுகாப்பானதல்ல. ஆனால் நம்முடைய சித்தங்களை நாம் துணிந்து தேவனிடத்தில் கையளித்துவிடலாம்; ஏனெனில் அவருக்குத் தங்களை ஒப்புக் கொடுத்துள்ளவர்கள் அனைவருக்குமான ஆசீர்வாதத்தின் விஷயத்திலுள்ள

அவரது தெய்வீக ஏற்பாட்டினையும், அவரது மகா அன்பையும், இரக்கத்தையும் மற்றும் ஞானத்தையும் அறிந்திருக்கின்றோம்.

ஆனால் நம்முடைய சித்தத்தைக் கையளிப்பது/ஒப்புக்கொடுப்பது என்பது, முதலாம்படி மாத்திரமேயாகும். அடுத்து வருவது – தினந்தோறும் சிலுவையை எடுத்துக்கொண்டு நம்முடைய சொந்த சித்தத்தையும், நம்முடைய நண்பர்களுடைய சித்தத்தையும் மற்றும் பல்வேறு எதிர்க்கும் செல்வாக்கையும் எதிர்த்து, கர்த்தருடைய சித்தத்தின்படி செய்வதாகும். கிறிஸ்தவனாய் இருப்பது என்பது, ஆட்டுக்குட்டியானவரின் பின்னடியாராக இருப்பதாகும். இயேசு பிதாவின் சித்தத்தைச் செய்யத்தக்கதாக, தம்முடைய சித்தத்தை ஒப்புக்கொடுத்து விட்டதுபோலவே, அவரது பின்னடியார்கள் அனைவரும் கூடக் காணப்பட வேண்டும். (யோவான் 6:38)

இப்படியாக இயேசுவினிடத்தில் வந்து, அவரது சித்தத்தையும், பிதாவின் சித்தத்தையும் ஏற்றுக்கொள்ளும்போது, நாம் பரிசுத்த ஆவியினுடைய ஜெநிப்பித்தலை அடைகின்றோம் மற்றும் அதுமுதல் தேவனுடைய பிள்ளைகளாக, தேவனுடைய சுதந்தரவாளிகளாக, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு உடன்சுதந்தரர்களாகக் காணப்படுவோம்; நாம் அவரோடுகூடப் பாடுபடுவோமானால், அவரோடுகூட மகிமையும் படுத்தப்படுவோம். (உரோமர் 8:17)

அதுமுதற்கொண்டு வேதாகமத்தின் மூலமாகக் கர்த்தருடைய குரலானது நம்மிடம் பேசிக்கொண்டிருப்பதை நாம் கேட்க ஆரம்பிப்போம் மற்றும் மாபெரும் வெளிச்சமானது நம்முடைய ஜீவியங்களுக்குள் கடந்துவருகின்றதாய் இருக்கும். நம்முடைய புதிய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, அனைத்துமே வித்தியாசமாய்த் தோன்ற ஆரம்பிக்கும். பரம ஆசீர்வாதங்கள், பரம நம்பிக்கைகள், பரம விருப்பங்களோடு ஒப்பிடுகையில், பூமிக்குரிய வெற்றிகள், பூமிக்குரிய சோதனைகள், பூமிக்குரிய சந்தோஷங்கள் மற்றும் பூமிக்குரிய துக்கங்கள் ஒரு பொருட்டானவைகளல்ல. "நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே." (எபிரெயர் 10:32)

- Angelophone Hymn Book.

# நம்முடைய "பஸ்காவின்" நினைவுகூருதல்

ஒவ்வொரு வருடமும், நம்முடைய மீட்பரின் மரணம் குறித்ததான இந்த ஆசரிப்பானது, மிகவும் அர்த்தம் நிறைந்ததாகவும், மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் காணப்படுகின்றது. தியதியினுடைய மாற்றங்களும், தியதியானது யூதருடைய கணக்கிடுதல் முறைமையின்படியாகக் கணக்கிடப்பட வேண்டும் என்பதுமான உண்மைகளானது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்ற தாகவும், பஸ்கா நிழலின் பல்வேறு அம்சங்களையும், தேவனுடைய ஆட்டுக்குட்டியின் மரணத்தில் அவைகளின் நிறைவேறுதலையும் — "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கின்றாரே" என்பதையும் நம்முடைய மனங்களுக்கு நினைப்பூட்டுகின்றதாகவும் காணப்படுகின்றது. (1 கொரிந்தியர் 5:7)

எகிப்தினுடைய தேவன் (அ) அதிபதியான பார்வோனின் கீழ்க்காணப்பட்டதான இஸ்ரயேலின் கடுமையான அடிமைத்தனமானது, பாவம் மற்றும் மரணத்தினுடைய ஆளுகையின் பாரத்தின்கீழ், சர்வ சிருஷ்டியும் தவித்துக்கொண்டிருக்கும் சீர்க்கேட்டின் அடிமைத்தனத்தை நம்முடைய மனங்களுக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது; மற்றும் பார்வோன், "இவ்வுலகத்தின் தேவனான" சாத்தானுக்குப் பொருத்தமான அடையாளமாய்க் காணப்படுகின்றார். மோசேயின் தலைமையின் கீழான இஸ்ரயேல் அனைத்தினுடைய விடுதலையில், மோசேயிலும் பெரியவரான தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்துவின் தலைமையின்கீழ், ஆயிரவருட யுகத்தின்போது, தேவனுக்கும், அவரது பிரமாணத்திற்கும் பயபக்திகொள்ளும் அனைவருடைய விடுதலையை, நம்மால் பார்க்க முடிகின்றது. பார்வோனும், அவனுடைய சேனைகளும் வீழ்த்தப்படுதலில், சாத்தானும், அவனது நடக்கையைப் பின்பற்றினவர்களும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவதற்கான நிழலைப் பார்க்கின்றோம். இந்த நிஜமான ஆசீர்வாதங்கள் அனைத்தும், கிறிஸ்துவை மையமாகக் கொண்டுள்ள நிஜமான கடந்துபோகுதலின் பலன்களாக இருக்கின்றது.

## அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி

உலகத்தோற்றத்திற்கு முன்பாக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக நமது கர்த்தரைக் குறிப்பிடும் வேதவாக்கியமானது, இந்தப் பஸ்காவின் அம்சங்கள் அனைத்தும், ஆதாம் மரணத் தண்டனைத் தீர்ப்பிற்குள்ளாக விழுந்தபோது மாத்திரமல்லாமல், ஆதாம் சிருஷ்டிக்கப்படுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னதாகவே தேவனுடைய மனதிலும், திட்டத்திலும் தெளிவாய்க் காணப்பட்டுள்ளது என்பதை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இப்படியாகப் பார்க்கும்போது தேவனுடைய நீதியானது பல நூற்றாண்டு காலமாக வெளிப்பட்டிருப்பினும், திவ்விய அன்பானது இயேசுவின் முதலாம் வருகைவரையிலும் "வெளிப்படுத்தப்படவில்லை" என்றாலும், ஆதிமுதற்கொண்டே தேவனுடைய இருதயத்தில் தமது சிருஷ்டிகளிடத்திலான அன்பு காணப்பட்டுள்ளது என்பது நமக்கு உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

பஸ்கா விடுதலையானது ஆயிரவருட ஆசீர்வாதங்களை அடையாளப்

படுத்துகின்றதுபோல, பஸ்கா இரவானது, இந்தச் சுவிசேஷ யுகத்தை அடையாளப் படுத்துகின்றதாய் இருக்கின்றது; இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது - தேவனில் விசுவாசம் கொண்டிருக்கும் அனைவரும் அவர் அளிக்கும் இரட்சிப்பிற்காகக் காத்திருக்கின்றனர். "விசுவாச வீட்டார்" அனைவரும் சோதனைகள் மற்றும் பரீட்சைகள் எனும் கசப்பான கீரைகளுடன், சத்தியம் எனும் புளிப்பில்லாத அப்பத்தைப் புசிக்கின்றவர்களாக, விடியலுக்காய்க் காத்திருக்கின்றனர் - "முதற்பேறானவர்களின்" சபையானது, "ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தின்" பாதுகாப்பின் கீழ் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்ட நிலையினின்று நீதிமானாக்கப்பட்ட நிலைக்குள், மரணத்தினின்று ஜீவனுக்குள் கடந்துபோகப்படுகின்றனர். ஆ! இதற்காகவே! இதன் காரணமாகவே நாம் கர்த்தரில் தொடர்ந்து களிகூர்ந்து, நம்முடைய ஆட்டுக்குட்டியுடன், புளிப்பில்லாத அப்பத்தையும், கசப்பான கீரைகளையும் தொடர்ந்து புசிக்கின்றவர்களாய் இருக்கின்றோம்; இதன் காரணமாகவே இவையனைத்திற்குமான வருடாந்தர நினைவுகூருதலை ஆசரிக்கின்றோம்; "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." (1 கொரிந்தியர் 5:7, 8)

இதையே நமது எஜமான் தம்முடைய சீஷர்கள் அனைவருக்கும் பின்வருமாறு கூறிக் கட்டளையிட்டார்: ". . . புசித்து, பானம்பண்ணும்போதெல்லாம் (என்னுடைய இரண்டாம் வருகைக்கு முன்புவரை, வருடாவருடம் நீங்கள் இதைச் செய்யும்போதெல்லாம்) என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் - நிழலான ஆட்டுக்குட்டி மற்றும் நிழலான இஸ்ரயேலினுடைய நிழலான முதற்பேறானவர்களுக்குச் சம்பவித்த நிழலான கடந்துபோகுதலுக்கான நினைவாக அல்ல."

பல நூற்றாண்டுகள் காலமாக, ஆதிக்கால திருச்சபையினுடைய இந்த எளிமையான வழக்கத்திற்கு எதிராளியானவன், கர்த்தருடைய ஜனங்களைக் குருடாக்கி உள்ளான்; முதலாவதாக உரோம திருப்பலியும்/பூசைபலியும், நினைவுகூருதலும் ஒன்றுதான் என்று கர்த்தருடைய ஜனங்களை நம்ப வைத்துள்ளான் மற்றும் பின்னர் காலாண்டுதோறும், மாதந்தோறும், வாரந்தோறும் என்ற புராட்டஸ்டண்டினர்களின் ஆசரிப்பு விதத்தைக் கொண்டுவந்தான். இப்பொழுது நாம் கிருபையால் "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கின்றாரே" என்ற சத்தியத்தை அறிய வந்தபோதே எவ்வளவு நாம் இழப்பிற்குள்ளாகக் காணப்பட்டோம் என்பதை அறிந்தவர்களானோம்; அவராலேயே "முதற்பேறானவர் களாகிய" நாம் நினைவுகூருதலை ஆசரிக்கின்றோம்.

நமக்காக நமது ஆண்டவரினால் திட்டமிடப்பட்டுள்ளதான ஆசீர்வாதங்கள் விஷயத்தில் இனிமேலும் நாம் ஏமாறப்போவதில்லை. நாம் "பண்டிகையை ஆசரிப்போம்." இந்த யுகத்தினுடைய அர்ப்பணிக்கப்பட்டுள்ள விசுவாசிகள், "முதற்பேறானவர்களாகிய சபையாக" இருப்பதுபோல, நிழலில் காணப்பட்டுள்ளபடி வீட்டாரிலுள்ள யாவருக்கும் முதற்பேறானவர்களின் (கிறிஸ்துவின்) தலைமையின் கீழ் விடுதலைக் காணப்படும். மோசேயினால் விடுவிக்கப்படுகின்றதான பிற்பிறப்புகளில், அப்போஸ்தலன் தெளிவாய்ச் சுட்டிக்காண்பிப்பதுபோன்று, இறுதியில் கீழ்ப்படிதலுள்ளவர்கள் மாத்திரமே அடங்குவார்கள். (அப்போஸ்தலர் 3:23)

# அன்று இராத்திரியில்

ஒரு முக்கியமானக் காரியத்தை, அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிப்பது என்பதும், கல்வாரியில் 18 நூற்றாண்டுகளுக்கு முன்னதாக நடைப்பெற்றதான (நாடகங்கள் அனைத்திலும்) மகா நாடகத்தில் இடம்பெறும் பிரதான பாத்திரங்களுடன்கூட நாம் காணப்பட்டு, அங்குக் காணப்பட்டதான செய்கைகளையும், பேசப்பட்ட வார்த்தைகளையும், பார்க்கப்பட்ட பார்வைகளையும் நாம் நினைவுக்குக் கொண்டுவருவது என்பதும் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதாகவும், உற்சாகமூட்டுகின்றதாகவும் இருக்கின்றது. முன்பெல்லாம் அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க யூதர்கள் நாடினபோதிலும், "அவரது வேளை இன்னும் வராததினால்," அவர்மேல் கைப்போட அவர்களால் கூடாமற்போயிற்று என்று காணப்பட்டப்போதிலும், இந்த ஒரு சோக நிகழ்வுக்காக அந்த ஒரு வருடத்தை, அந்த ஒருநாளை, அந்த ஒரு மணிவேளையை, தேவன் முன்கூட்டியே தீர்மானித்துள்ளார் என்பதிலுள்ள தெய்வச் செயலை நாம் கவனிக்கையில், அது நம்முடைய பொதுவான விசுவாசத்தையும் பெலப்படுத்துகின்றதாக இருக்கின்றது. இந்த ஒரு மாபெரும் நிகழ்விற்கான துல்லியமான வேளை எந்த நாளில் நிகழ வேண்டும் என்று கவனமாய் நிழலில் பல நூற்றாண்டுகள் காலம் கொடுக்கப்பட்டது மாத்திரமல்லாமல், நமது கர்த்தரும்கூடத் துல்லியமாகவே "என்னுடைய வேளை வந்துள்ளது" என்று குறிப்பிடுகின்றார் மற்றும் நிஜமான ஆட்டுக்குட்டியெனத் தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலை அப்பம் மற்றும் திராட்சரசம் கொண்டு நிறுவும் தருணத்திற்கு அவர் காத்திருந்து, "வேளை வந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" என்றார். (லூக்கா 22:14, 15)

# பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்

நமது கர்த்தரும், அவரது அப்போஸ்தலர்களும் எப்படிக் கவனமாய் இருந்தார்களோ, அப்படியாகவே நாமும் அவரது மரணத்திற்கான நினைவுகூருதலை, பண்டிகையைச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் ஆசரிப்போமாக - ஏதோ ஒருவேளையில், காலையில், மதியத்தில் (அ) இரவில் இல்லாமல், மாறாக இராப்போஜனமாக - ஏதோ ஒருநாளில் இல்லாமல், மாறாக அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிப்போமாக; வேறு எதையோ ஒன்றை, வேறெதோ நாளில் ஆசரிப்பதற்குப் பதிலாக, 'இதை' அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிப்போமாக.

காலை 9 மணிமுதல் கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டு அவர் "முடிந்தது" என்று சத்தமிட்டு மரித்த பிற்பகல் 3 மணிவரையிலான நாளுக்கு, இணையான இவ்வருடத்திற்குரிய நாள் ஏப்ரல் 17-ஆம் தேதி, திங்கட்கிழமையாகக் காணப்படுகின்றது. அவர் மாலை 6 மணிக்கு முன்னதாக யோசேப்பின் புதிய கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார் மற்றும் (அந்நேரமுதல் ஆரம்பித்த) அடுத்த

நாளானது யூதர்களால் கொண்டாடப்படும் பஸ்கா பண்டிகை வாரத்தினுடைய, முதல் நாளாகக் காணப்பட்டது மற்றும் இது இவ்வருடத்தில் ஏப்ரல் 18-ஆம் தேதி, செவ்வாய்க் கிழமையாகக் காணப்படுகின்றது. நாம் நமது எபிரெய நண்பர்களுடன் பொதுவாய் எதையும் ஆசரிப்பதில்லை, மாறாக எந்த நாளில் நமது கர்த்தருடைய மரணம் சம்பவித்தது என்று அடையாளங்கண்டுகொள்வதன் மூலம் அதற்கு முந்தின மாலையானது, அதன் நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கான தருணம் என்பதை தெளிவுப்படுத்திடவே, நாம் அவர்களுடைய தியதிகளைக் குறிப்பிடுகின்றோம்.

நமது கர்த்தர் நினைவுகூருதல் இராப்போஜனத்தை நிறுவினவராக, தாம் சிலுவையில் அறையப்படுவதற்கான முந்தின மாலையில், "தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அதே இரவில்," மாலை 6 மணிக்குமேல் அதை ஆசரித்திடும்படிக்கு, தம்முடைய பின்னடியார்களிடத்தில் கேட்டுக்கொண்டார். இது நாம் ஏற்கெனவே காண்பித்துள்ளதுபோல நீசான் 14-ஆம் தேதியாக இருக்கின்றது – அவர் மரித்த அதே நாளாக இருக்கின்றது; ஒரு சூரிய அஸ்தமனத்திலிருந்து மறு சூரிய அஸ்தமனம்வரை, மாலை 6 மணியிலிருந்து மறுநாள் மாலை 6 மணி வரைக்குமாக, தங்கள் நாட்களைக் கணக்கிடும் வழக்கத்தினை தேவன் யூதர்களுக்குக் கொடுத்துள்ளார்.

## ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவுதல்

இயேசுவும், அவரது சீஷர்களும் யூதர்களாய் இருந்தபடியால், அவர்கள் யூதருடைய பஸ்கா இராப்போஜனத்தை ஆசரிக்கும் கடமையில் காணப்பட்டனர் மற்றும் அவர்கள் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியை, கீரைகளுடனும், புளிப்பில்லாத அப்பங்களுடனும் மற்றும் திராட்சரசத்துடனும் ஒன்றுகூடிச் சேர்ந்துப் புசித்தனர். கிறிஸ்துவில் நிறைவேறியுள்ளதான அந்த நிழலான அம்சங்கள் மீது நமக்கு இனிக் கவனம் இருப்பதில்லை. யூதருடைய பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்தப்பிற்பாடு, நமது கர்த்தர் முதற்பேறானவர்களுக்கான தம்முடைய பலியின் நினைவாகவும் மற்றும் அவரோடுகூட உள்ள அவர்களது உடன்பலிக்கான நினைவாகவும் காணப்படும் புதிய நினைவுகூருதல் இராப்போஜனத்தை நிறுவினார்.

நமது கர்த்தர், தம்முடைய சீஷர்களுடைய பாதங்களைக் கழுவினதானது, பஸ்கா இராப்போஜனத்திற்குப் பின்பும், நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கு முன்னதாகவும் இடம்பெற்றதா அல்லது நினைவுகூருதல் இராப்போஜனத்திற்குப் பின்பாக இடம்பெற்றதா என்பதில் நமக்கு நன்கு தெளிவில்லை என்றாலும், அநேகமாக இரண்டாம் யூகத்தின்படியாகவே காணப்பட வேண்டும் (மத்தேயு 26:26) மற்றும் அது முதன்மை நிலைக்கான போட்டிமனப்பான்மையின் ஆவி அப்போஸ்தலர்களிடம் இன்னமும் காணப்பட்டதின் காரணமாக படிப்பினையாகவும், தாழ்மைக்கான மாதிரியாகவும் விளங்கும்படியாகவும் கொடுக்கப்பட்டது. எப்படியாக இருப்பினும் பாதம் கழுவுதலானது நினைவுகூருதலின் ஒரு பாகமல்ல மற்றும் இது கர்த்தருடைய சீஷர்கள் மத்தியில் வழக்கமாகக் காணப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டதாக நாம் புரிந்துகொள்வதுமில்லை; இப்படியாகச் சிந்திக்காமல், வேறுபட்டுச் சிந்திக்கிறவர் களிடத்திலும், சொல்லர்த்தமாகவே ஒருவருக்கொருவர் பாதங்களைக்

கழுவிக்கொள்ளும் முறைமையைக் கைக்கொள்ளுகிறவர்களிடத்திலும் நாம் சண்டைப்பண்ணுகிறதில்லை. ஒருவருக்கொருவர் உதவியோ அல்லது ஆறுதலோ அளிக்கும் விஷயத்தில் அது எவ்வளவு கனம் குறைந்த பணிவிடையால் ஏற்படுவதாக இருப்பினும், அதைச் செய்வதிலிருந்து நமது கர்த்தருடைய பின்னடியார்கள் தவிர்த்துக்கொள்ளக்கூடாது என்பதே அதன் படிப்பினையாகக் காணப்படுகின்றது என்பது நமது புரிந்துகொள்ளுதலாய் இருக்கின்றது. இப்படியாகச் சொல்லர்த்தமாகவே பாதங்களை இப்பொழுது கழுவுவது என்பது, சௌகரியத்திற்குத் தொலைதூரமான தாகவும், ஆறுதலளிக்கும் மற்றப் பணிவிடைகளை எப்போதும் புறக்கணித்து விடுவதாகவும் காணப்படும்.

## இது என்னுடைய சரீரமாயிருக்கிறது

வழக்கமான யூதருடைய பஸ்கா இராப்போஜனம் முடிவடைந்த பிற்பாடே, மீதியிருந்த புளிப்பில்லாத அப்பத்தில் சிலவற்றை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு, தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்துக் கூறினதாவது: "வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்." (மத்தேயு 26:26; மாற்கு 14:22; லூக்கா 22:19)

"இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்ற இந்த வார்த்தைகளானது, பல நூற்றாண்டுகள் காலமாய்க் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் விடைக்கிடைக்காத விவாதத்திற்குள்ளாய் உள்ளது; இந்த விவாதத்திற்கான அடிப்படை, பூசைபலி குறித்ததான உரோமன் கத்தோலிக்க உபதேசமாகும்; இந்தப் பூசைபலியினுடைய உபதேசமானது, பாதிரியாரின் ஆசீர்வாதத்தினால், அப்பம் இயேசுவின் உண்மையான மாம்சமாகிவிடுகின்றது என்றும், அதற்குப் பாதிரியார் போற்றினவராக, யாருக்காக பூசைபலியானது ஏறெடுக்கப்படுகின்றதோ, அவருடைய பாவங்களுக்காக அதை (புதிதான பலியென) பிட்கின்றார் என்றும் கூறுகின்றது. இந்தப் பூசைபலியினுடைய முறைமையானது, நமது கர்த்தருடைய நினைவுகூருதலை ஒத்திருக்கத்தக்கதாக, "இது என்னுடைய சரீரமாயிருக்கின்றது" என்ற வார்த்தைகளுக்கு மிகுந்த அழுத்தம் கொடுக்கப்படுகின்றது மற்றும் இப்படியாக அப்பம்தான் சரீரம் என்பதும், அதைப் பலிச் செலுத்துவதற்கு வாய்ப்புள்ளது என்பதும் நிரூபிக்கப்படுகின்றது. ஆனால் இந்த வார்த்தைகளைக் கர்த்தர் கூறினபோது, அவர் இன்னமும் மரிக்கவில்லை என்பது நினைவில் கொள்ளப்படும்போது, அனைத்துப் பிரச்சனையும் தீர்ந்துவிடும். ஆகையால் அவர் "இந்த அப்பம் என்னுடைய சரீரத்தை அடையாளப்படுத்துகின்றது" என்ற அர்த்தத்தில்தான் சொல்லியிருக்க வேண்டும்; ஏனெனில் வேறு ஏதேனும் அர்த்தத்தில் சொல்லியிருந்திருப்பாரானால் அது உண்மையாக இருக்க முடியாது - காரணம் அவர் அப்போது அதைச் சொல்லும்போது மாம்சத்தில்தான் காணப்பட்டார் மற்றும் அவருக்கு அதுவரையிலும் எந்த விதத்திலும் மறுரூபம் ஏற்படவில்லை.

நமது கர்த்தருடைய வார்த்தைகளை அதற்கே உரிய எளிமையிலும், தெளிவிலும் பார்க்கும்போது, அதன் பாடங்கள் எத்துணை அருமையாயிருக்கின்றது.

புளிப்பில்லாத (தூய) அப்பமானது, இந்த நினைவுகூருதலின்போது - நாம் புசித்து, நித்தியமான ஜீவனை அடைவதற்கு ஏதுவாக, பரலோகத்திலிருந்து இறங்கி வந்ததான அப்பத்தை, நமது கர்த்தரை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அடுத்த கருத்தென்னவெனில், பரலோகத்திலிருந்து அருளப்பட்டதான இந்த "அப்பமானது," நம்முடையதாக்கிக்கொள்ளப்படுவதற்கெனப் "பிட்கப்பட" வேண்டும். ஆகையால் நமது கர்த்தர் பரலோகத்திலிருந்து "அப்பமாக" இறங்கிவருவது மாத்திரமல்லாமல், அவர் மரணத்தில் பிட்கப்பட வேண்டியதும் - நம்முடைய பாவங்களுக்காகப் பலிச் செலுத்தப்படுவதும் அவசியமாய் உள்ளது என்று நாம் பார்க்கின்றோம் - அவர் பிட்கப்பட்டால்தான், நாம் அவரது புண்ணியத்தினை நம்முடையதாக்கிக் கொண்டு, நித்தியமான ஜீவனை அனுபவிக்கமுடியும்.

## புது உடன்படிக்கைக்குரிய இரத்தம்

நமது கர்த்தருடைய அன்பான பலிக்கான இந்த நினைவுகூருதலின் ஒரு பாகமாக, "திராட்சப்பழரசம்" (fruit of the vine) அடுத்து அறிமுகப்படுத்தப்படுகின்றது. இது தம்முடைய இரத்தத்தை - "பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தத்தை" அடையாளப்படுத்துகின்றது என்று விவரித்தார். (மத்தேயு 26:28) இது அவசியமான ஈடுபலி விலைக்கிரயத்திற்கும், உலகத்தின் பாவங்களுக்காகக் கொடுக்கப்பட்டதான ஈடுபலி விலைக்கிரயத்திற்கும் எத்தகையதொரு நினைவுகூருதலாய் உள்ளது. பிட்கப்பட்ட அப்பமானது ஒருபகுதி பாடத்தினைக் கற்று தந்தது; "பாத்திரமானது" மீதியான பாடத்தினைக் கற்றுத்தந்தது. தேவனிடத்திற்கும், அவருடைய தயவினிடத்திற்கும் திரும்பிடுவதற்கு நமக்குப் போஷாக்கும், பலமும், உதவியும் மாத்திரம் அவசியமாயிராமல், நமக்கு விலையேறப்பெற்ற இரத்தமும் அவசியமாயுள்ளது - நீதியினுடைய ஆக்கினைத் தீர்ப்பினின்று நம்மை விடுவிக்கத்தக்கதாக நமக்கான மீட்பின் கிரயமாக நமது கர்த்தருடைய ஜீவன் அவசியமாயுள்ளது.

கர்த்தருடைய சீஷர்கள் விசுவாசத்தினால் "அப்பத்திலும்," "பாத்திரத்திலும்" பங்குகொள்ள வேண்டும் (தங்களுடையதாக்கிக்கொள்ள வேண்டும்) இல்லையேல் அவர்களால் அவரோடுகூட ஒன்றாய்க் காணப்படமுடியாது. இதற்கும்மேலாக, இந்த நினைவுகூருதலுக்கு இன்னும் ஒரு கண்ணோட்டம் காணப்படுகின்றது என்று அப்போஸ்தலன் காண்பிக்கின்றார். இப்படியாகப் புசித்து, பானம்பண்ணும் நாம் - இப்படியாக நமது இரட்சகருடைய புண்ணியங்களில் பங்கெடுக்கும் நாம் - அவரோடுகூட அவரது "அங்கத்தினர்களென," அவரது "சரீரமெனப்" பிட்கப்படுபவர்களாகக் கருதப்படுகின்றோம் மற்றும் அவருடைய வழிகாட்டுதலின் பேரில், அவரது ஊழியத்தில் பலியாக்கப்படும் நம்முடைய ஜீவியங்களானது, அவரது பலியின் பாகமாகக் கருதப்படுகின்றது. அப்போஸ்தலனின் வார்த்தைகளானது பின்வருமாறு: "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம்

பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் (கிறிஸ்துவில்) பங்குகொள்கிறோம்.” (1 கொரிந்தியர் 10:16, 17 திருவிவிலியம்)

ஆ, ஆம்! கர்த்தருடைய பாடங்கள் எத்துணை ஆழமாய் உள்ளது மற்றும் அவைகளை நாம் ஆழமாய்ப்பார்க்கையில், அதிகமான அழகை நாம் காண்கின்றோம் மற்றும் அவைகளை நாம் உணர்ந்து, மனப்பூர்வமாய்க் கீழ்ப்படியும்போது நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் அதிகமதிகமாய்த் திறக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இரண்டு விதத்தில் “நாம் பண்டிகையை ஆசரிக்கக்கடவோமாக”: (1) நமது மீட்பரினால் நமக்காகச் செய்யப்பட்டதான மாபெரும் வேலையையும், அவர் வாயிலாக நமக்கு அருளப்பட்டதான கிருபையின் ஐசுவரியங்களையும் உணர்ந்துகொண்டு ஆசரிப்போமாக; மற்றும் (2) நமது மீட்பரோடுகூட உடன்பலிச் செலுத்துவதற்கான - அவரது ஊழியங்களில் நம்முடைய ஜீவனைச் சகோதரருக்காக ஒப்புக்கொடுப்பதற்கும் மற்றும் இப்படியாக “கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றிடுவதற்கும்” உரிய நமக்கான சிலாக்கியத்தினை உணர்ந்து ஆசரிப்போமாக. (கொலோசெயர் 1:24)

“கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை” என்று சொல்லும்போது, அது அனைவருக்கும் போதுமானதாய் நமது கர்த்தரினால் பாடுபட முடியவில்லை என்பதையோ, அவர் பட்டப்பாடுகள் அனைவருக்கும் போதுமானதாய் இல்லை என்பதையோ குறிக்காமல், மாறாக நாம் அவரது சுபாவத்திலும், அவரது மகிமையிலும் பங்கடைய வேண்டும் என்று அவர் விருப்பம் கொண்டுள்ளதையே குறிக்கின்றதாய் இருக்கின்றது; அவரோடுகூடப் பாடுபடுவதின் மூலம் மாத்திரமே, அவரது அங்கத்தினர்களென நாம் அவரது மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் பங்கடைவதற்கு அனுமதிக்கப்பட முடியும்.

## கர்த்தருடைய மரணத்தை அறிவிக்கிறீர்கள்

அனைத்து இடங்களிலுமுள்ள கர்த்தருடைய சகோதர சகோதரிகள் அனைவரும், எங்களோடுகூடக் கர்த்தரின் நினைவுகூருதலை அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிக்கும் விஷயத்தில் இணைந்துகொள்ளும்படிக்குப் புத்திமதிக் கூறுகின்றோம். விசுவாசத்தையும், அர்ப்பணிப்பையும் அறிக்கைப்பண்ணுகிறவர்கள் கூடிக்கொள்ளுங்கள்; இப்படியில்லாத மற்றவர்களை வற்புறுத்தாதீர்கள். வாய்ப்பிற்கேற்ப நாம் இரண்டுபேராக மற்றும் மூன்று பேராக மற்றும் திரளான கூட்டங்களாகக் கூடிக்கொள்வோமாக. உங்கள் அருகாமையிலுள்ள சகோதரர்களுடன் கூடிக்கொள்ளத்தக்கதாக, தேவைப்படும் பட்சத்தில் ஒன்று (அ) இரண்டு தினங்கள் விடுமுறை எடுத்துக்கொள்ளுங்கள். பணத்தின் மீதான கவனங்களானது, அனைத்தையும் தீர்மானம் செய்வதற்கு அனுமதித்துவிடாதீர்கள். கர்த்தரோடும், நேர்மையாய் அவரது நினைவுகூருதலை ஆசரிப்பவர்களோடும் காணப்படுகின்ற அந்த ஒருநாள் விருந்தானது, சாதாரணமான பல உணவுகளைக்காட்டிலும் நமக்கு விலையேறப் பெற்றதாகும். மனுஷன் பூமிக்குரிய அப்பத்தினால் மாத்திரமல்லாமல் விசேஷமாகப் பரலோகத்திலிருந்து இறங்கி வந்ததான அப்பத்தினால் பிழைக்கின்றவனாய் இருப்பான்.

ஒருவர்கூடத் துணைக்கு இல்லாமல் தனிமையாய்க் காணப்படுகிறவர்களும் கூட இந்த நினைவுகூருதலை ஆசரிப்பார்களாக. சோடா ரொட்டிகளானது/பிஸ்கோத்துகளானது, புளிப்பில்லாத அப்பங்களாகத்தான் காணப்படுகின்றது மற்றும் இதையே பயன்படுத்திக்கொள்ளலாம்; ஒருவேளை நீங்கள் ஏதேனும் எபிரெய குடும்பத்தினருக்கு அருகாமையில் வாழ்கின்றீர்களானால், அவர்களிடமிருந்து புளிப்பில்லாத அப்பத்தை (ரொட்டியை) ஒன்று (அ) இரண்டு, சென்று கொடுத்து, வாங்கிக்கொள்ளப்படலாம். “திராட்சப்பழரசத்தை” (fruit of the vine) பொறுத்தமட்டில், நீங்கள் ஒரு குப்பி திராட்சப் பழச்சாறை ஒவ்வொரு கோடைக்காலத்தின்போதும் சேமித்து வைத்திருக்கலாம்; ஒருவேளை இப்படியாக நீங்கள் வைத்துக்கொள்ளவில்லையெனில், நீங்கள் உலர் திராட்சைகளை வேகவைத்து, அந்த இரசத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்; அது திராட்சப்பழரசமாகக் (fruit of the vine) காணப்படும்.

நினைவுகூருதலுக்கான இந்த ஆயத்தங்கள் அடையாளச் சின்னங்களினுடைய உண்மையான அர்த்தம் மறந்துபோகுமளவுக்கு, நம்முடைய நினைவுகளை ஆக்கிரமித்துக்கொள்ளத்தக்கதாய் நாம் அனுமதிக்காமல் இருப்போமாக. நினைவுகூருதலுக்கு முந்தின நாட்களிலும், அடுத்துவரும் நாட்களிலும், முடிந்தமட்டும் ஜெபம் செய்வதற்கும், நினைவுகூர வேண்டிய அந்த மாபெரும் நிகழ்வுகளைத் தியானிப்பதற்கும் மற்றும் நன்றியுடன்கூடிய சந்தோஷத்துடன் நம்முடைய இருதயங்களில் ஜீவ அப்பத்தினைப் புசிப்பதற்கும் இடம் கொடுப்போமாக.

நினைவுகூருதலுக்குப் பின்னர் - அடையாளமான பாத்திரம் மற்றும் அப்பத்தில் பங்கெடுத்தப் பின்னர், நமது கர்த்தர் செய்த மாதிரியின்படியே, நாமும் கூட்டத்தை நிறைவுசெய்வதற்கு மீண்டுமாக பரிந்துரைக்கின்றோம். “அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு புறப்பட்டுப்போனார்கள்.” (மத்தேயு 26:30) நாமும் இப்படியே செய்வோமாக. பொதுவாக நாம் சொல்லும் வாழ்த்துதல்களைத் தவிர்த்திடலாம்; கர்த்தர் கெத்செமனேக்குச் சென்றதும் - பிரதான ஆசாரியனின் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதும் — பிலாத்துவின் முன்னிலையிலும், ஏரோதின் முன்னிலையிலும், மீண்டுமாகப் பிலாத்துவின் முன்னிலையிலும் அழைத்துச் செல்லப்பட்டதும் — அவர் அடிக்கப்பட்டதும் — ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதும் — தம்முடைய சிலுவையைச் சுமந்து சென்றதும் — நம்முடைய பாவங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டதுமான நிகழ்வுகளின்மீது நம்முடைய நினைவுகள் கடந்துபோவதாக. இந்த நினைவுகளானது நம்மை அதிகமதிகமாய்க் கர்த்தரை மதிக்கச் செய்திடும் மற்றும் அதிகமதிகமாய்ப் பாவத்தை நாம் வெறுத்திடச் செய்திடும் மற்றும் இப்படியாக நாம் “எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்” என்று நம்மை நன்கு உணர்ந்துகொள்ளச் செய்திடும்.

# பஸ்காவைப் பலியிட வேண்டிய

## லூக்கா 22:7

பஸ்கா என்ற வார்த்தையானது, யூதர்கள் மத்தியில் பண்டிகை வாரத்திற்கென்று, அதாவது நீசான் மாதம் பதினைந்தாம் தேதி துவங்கும் பஸ்கா பண்டிகைக்கென்று வழக்கமாகப் பயன்படுத்தப்படும் பெயராய்க் காணப்படுகின்றது. ஆனால் இதையும் மற்றும் பண்டிகை என்ற வார்த்தை இடம்பெறாத நிலையில் அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியானது, பஸ்கா என்று பொதுவாய்க் குறிப்பிடப்பட்டிருக் கின்றதுமான வேதவாக்கியங்களில் இடம்பெறும் பஸ்கா என்ற வார்த்தையையும் நாம் குழப்பிக்கொள்ளக்கூடாது. அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியானது பஸ்கா என்று குறிப்பிடப்பட்டிருப்பதற்கு உதாரணமாக, "பஸ்காவைப் பலியிடவேண்டிய புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாள் வந்தது" என்று நாம் வாசிக்கின்றோம். இன்னுமாக நண்பர் ஒருவரிடத்தில் கேட்கும்படிக்காக நமது கர்த்தர் சீஷர்களை அனுப்பினபோது, "அந்த வீட்டெஜமானை நோக்கி: நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே என்று போதகர் உம்மிடத்தில் கேட்கச் சொன்னார் என்று சொல்லுங்கள்" என்பதாக நாம் வாசிக்கின்றோம். மீண்டுமாக "பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்" என்று வாசிக்கின்றோம். ஆட்டுக்குட்டியைப் புசிப்பதற்கென நமது கர்த்தர் சீஷர்களோடு அமர்ந்தபோது, "நான் பாடுபடுவதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய இராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இதைப் புசிப்பதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (லூக்கா 22:7, 11, 13, 15, 16).

பஸ்கா ஆட்டுக்குட்டியைப்பார்க்கிலும், யூதர்களானவர்கள் இன்னமும் பஸ்கா வாரத்தைக்குறித்தே அதிகம் கவனிக்கிறவர்களாக இருப்பினும், நாமோ நமது கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய மாதிரிக்கு இசைவாக, "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டிக்கு" நிழலான மற்றும் உலகத்திற்கு முன்னதாகவே கடந்துபோகப்படுகின்றவர்களாகிய (அ) தப்புவிக்கப்படுபவர்களாகிய "முதற்பேறான வர்களின் சபையாகிய," இப்பொழுது விசுவாசிக்கின்ற நாம், யாருடைய தெளிக்கப்பட்ட இரத்தத்தின் கீழ்க் காணப்படுகின்றோமோ, அவருக்கு நிழலான ஆட்டுக்குட்டியின் மீதே விசேஷித்தக் கவனத்தைக் கொண்டிருக்கின்றோம்.

யூதர்களுக்கான தேவனுடைய ஏற்பாடுகளானது நிழலானவைகளாகவும், நிஜமான அல்லது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நமக்கு விலையேறப்பெற்ற பாடங்கள் நிரம்பினவைகளாகவும் காணப்படுகின்றன. நிழலில் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மத்தியில் இரண்டு மாபெரும் மதம் சார்ந்த நிகழ்வுகளை அருளியிருந்தார்; ஒன்று மதச் சார்பற்ற ஆண்டினுடைய துவக்கத்திலும், மற்றொன்று மதச் சார்புடைய ஆண்டினுடைய துவக்கத்திலும் கொடுத்திருந்தார். மதச் சார்புடைய ஆண்டானது வசந்த/இளவேனிற் காலத்தில், இளவேனிற் சம இரவு பகல் நாளை (vernal equinox) தொடர்ந்துவரும் முதல் அமாவாசையிலிருந்து எண்ணப்படுகின்றது; கிட்டத்தட்ட ஏப்ரல்

1-ஆம் தேதியாகும்; ஆனால் சூரிய மற்றும் சந்திரக்காலத்தின் அடிப்படையில் வேறுபடுகின்றதாய் இருக்கும். இது தொடர்புடையதாகவே, அதாவது அவர்களது மதச் சார்புடைய ஆண்டினுடைய துவக்கக்காலத்தில், கர்த்தர் பஸ்காவை நியமித்தார்; அதாவது பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்படுதலும், புசிக்கப்படுதலும் பதினான்காம் தேதியில் இடம்பெற வேண்டும் என்றும், இதைப் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையினுடைய பஸ்கா வாரமானது தொடர வேண்டும் என்றும் நியமித்தார். யூதர்களுக்கான மதச் சார்பற்ற ஆண்டானது ஆறு மாதங்களுக்குப் பிற்பாடு, ஏழாம் மாதத்தில், கிட்டத்தட்ட அக்டோபர் 1-ஆம் தேதியில் துவங்குகின்றது; இந்த மதச்சார்பற்ற ஆண்டு தொடர்புடையதாகவே கூடாரப் பண்டிகைத் தொடர்பாகப் பாவநிவாரண பலிகள் நியமிக்கப்பட்டன; இத்தருணத்தின்போது, இஸ்ரயேலர்கள் எகிப்தைவிட்டு, கானானுக்குப் போகும் வழியிலான தங்களது வனாந்தரப் பிரயாணத்தை நினைவுகூர்ந்தார்கள்.

இந்த இரண்டு மாபெரும் மதம் சார்ந்த ஆசரிப்புகளும் ஒரே பாடத்தினை வெவ்வேறு கோணங்களில் அடையாளப்படுத்துகின்றன; முதலாவது ஆசரிப்பானது மிகவும் குறிப்பாக முதற்பேறானவர்களின் கடந்துபோகுதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றதாய் இருக்கின்றது; இந்த முதற்பேறானவர்கள், பின்னர் ஆசாரியத்துவப் பொறுப்பினைப் பெற்றுக்கொண்டதான லேவி கோத்திரத்தினால் அடையாளப்படுத்தப் படுகின்றனர். இந்நிழலானது மோசேயை உள்ளடக்கினதான இந்த ஆசாரிய கோத்திரத்தின் வாயிலான இஸ்ரயேல் அனைத்திற்குமான விடுதலையையும்கூட அடையாளப்படுத்துகின்றது என்றாலும், இந்நிழலானது விசேஷமாக, குறிப்பாக, முழுமையாக முதற்பேறானவர்களாகிய, ஆசாரிய கோத்திரத்தினுடைய விடுதலையை, ஆசீர்வாதத்தை மாத்திரமே கையாளுகின்றதாய் இருக்கின்றது. ஏழாம் மாதத்தின் நிழலானது, மிகக் குறிப்பாக முழு உலகத்தினுடைய பாவங்களுக்கான நிவாரணத்தை, மன்னிப்பை மற்றும் தேவனுடன் ஒப்புரவாக விரும்பும் மனுக்குலம் யாவருடைய ஒப்புரவாகுதலைத் தெரிவிக்கின்றதாய் இருப்பினும், இந்தப் பாவநிவாரண நாளினுடைய பலியில், சபையினுடைய பாவங்களுக்கான பாவநிவர்த்தியானது, பாவநிவாரண நாளினுடைய முதலாம் பலியினால் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதாலும், பொதுவான உலகத்தினுடைய பாவங்களுக்கான பலியானது, இரண்டாம் பலியினால் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதாலும், உலகத்தின் மீது ஆசீர்வாதம் கடந்துவருவதற்கு முன்னதாக, சபையினிடத்தில் தேவனுடைய விசேஷித்த தேவதயவானது கடந்துவருவது தெரிவிக்கப்படுகின்றது.

## நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து

"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே" என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளில் பொதுவாய் உணர்ந்துகொள்ளப்படாத ஆற்றலும், அர்த்தமும் காணப்படுகின்றது (1 கொரிந்தியர் 5:7). நம்முடைய கர்த்தர்

உலகத்தினுடைய பஸ்காவாயிராமல், சபையினுடைய பஸ்காவாகக் காணப்படுகின்றார். இஸ்ரயேல் அனைத்தும் மனுக்குலத்தின் உலகத்திற்கு அடையாளமாய்க் காணப்படுகின்றனர் மற்றும் ஜனங்கள் அனைவருடைய அடிமைத்தனமானது, மனுக்குலம் முழுவதும் பாவம், மரணம் மற்றும் நிழலில் பார்வோன் எனும் - நிஜத்தில் சாத்தான் எனும் மாபெரும் விசாரணைக்காரன் கீழ் அடிமைப்பட்டிருப்பதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அனைவருமே விடுவிக்கப்பட வேண்டுமென்பதே விருப்பமாகக் காணப்பட்டது மற்றும் கர்த்தருடைய ஏற்பாடானது, அனைவரையும் இறுதியில் விடுவிக்கப்போகின்றது. இதையே அப்போஸ்தலன் பின்வருமாறு எழுதுகையில் விவரிக்கின்றார்: "சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும்."

ஆனால் அப்போஸ்தலன் தவிப்பவர்களை இரண்டு வகுப்பார்களாக பிரிக்கும் வண்ணமாக, "தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குக் காத்துக்கொண்டிருந்து . . . . இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது" (உரோமர் 8:19, 20, 22) என்று கூறுகின்றார். இங்கு அவர் சாத்தானுடைய அடிமைத்தனம், பாவத்தின் வல்லமை மற்றும் மரணத்தின் வல்லமையினின்று மனுக்குலத்தின் உலகத்தினுடைய விடுதலையானது, உலகத்தினை ஆளுகைச் செய்யும் தேவனுடைய இராஜ்யம் என மகிமையிலும், வல்லமையிலும் கிறிஸ்து, மகிமையடைந்த சபையினுடைய வெளிப்படுதல் மூலமாக மாத்திரமே வருமென்று குறிப்பிடுகின்றார். முதற்பேறான சபையானவளின் தற்காலத்தினுடைய நிலையினைக்குறித்தும் அப்போஸ்தலன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்" (உரோமர் 8:23). இரண்டு வகுப்பாருக்கும் தவிக்கும் அனுபவம் காணப்படுகின்றது மற்றும் இரண்டு வகுப்பாருக்கும், காத்திருக்கும் அனுபவங்களும் காணப்படுகின்றன; ஆனால் அவர்கள் வெவ்வேறு காரியங்களுக்காகவும் காத்திருக்கின்றனர். முதற்பேறான சபையானவள், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கெடுப்பதின் வாயிலாக, கிறிஸ்துவின் சரீரமென, அவளது விடுதலைக்காகக் காத்திருக்கின்றாள். பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாகவும், தெய்வீக நிபந்தனைகளின்படி தெய்வீகத் தயவை விரும்பும் யாவரையும் தூக்கிவிடத்தக்கதாகவும், சபை வகுப்பார் பூரணமடைந்து, மகிமையடைந்து, அதிகாரம் பெற்றுக்கொண்டு, தங்கள் பிதாவினுடைய இராஜ்யத்தில் சூரியனைப்போல் பிரகாசிப்பதற்காக, தெய்வீக வாக்குத்தத்தத்தின்படி உலகமோ காத்துக்கொண்டிருக்கிறது.

இப்பொழுது நிழலைப்பார்க்கலாம்; இஸ்ரயேலர் அனைவரும் சங்காரத் தூதனால் ஆபத்தில் காணப்படாமல், மாறாக முதற்பேறானவர்கள் மாத்திரமே காணப் பட்டார்கள் என்பதைக் கவனியுங்கள். எகிப்தியர்களின் முதற்பேறானவர்கள் மாத்திரமே சங்காரம் பண்ணப்பட்டனர். ஆகையால் இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் மாத்திரமே தப்புவிக்கப்பட்டனர் (அ) கடந்துபோகப்பட்டனர். ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்

தினால் பாதுகாக்கப்பட்டவர்களாகிய இந்த முதற்பேறானவர்களைக் கர்த்தர் விசேஷமாக தம்முடையவர்கள் என்று குறிப்பிடுகின்றார்; மற்றும் இவர்களைப் பிரித்து விசேஷித்த, சொந்த ஜனங்களென வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் அனைத்துக் கோத்திரங்களிலுமுள்ள முதற்பேறானவர்களுக்குப் பதிலாக லேவிக் கோத்திரமானது கர்த்தரினால் எடுத்துக்கொள்ளப்பட்டது; இந்தக் கோத்திரத்தினை விசேஷமாய்த் தம்முடையவர்களென அவர் ஏற்றுக்கொண்டார் மற்றும் இவர்கள் நிழலில் விசுவாச வீட்டாரை அடையாளப்படுத்துகின்றவர்களாய்க் காணப்பட்டனர். இந்த விசுவாச வீட்டாரிலிருந்து, அடுத்ததாக நமது பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்துவுக்கும், அவரது சரீரமாகிய சபை எனும் உடன் ஆசாரியர்களாகிய ஆசாரியக் கூட்டத்தாருக்கும் நிழலாய்க் காணப்படும் ஓர் ஆசாரியக் குடும்பத்தினர் தெரிந்தெடுக்கப்பட்டனர். ஆகையால் இப்படியாய்க் காரியங்களைத் தெளிவாய்ப்பார்க்க முடிகின்றவர்களால், பஸ்காவானது விசுவாச வீட்டாருடன் மாத்திரமே தொடர்புடையதெனக் கண்டுகொள்வார்கள். இதற்கு இசைவாகப் பார்க்கையில் ஆட்டுக்குட்டியினைப் புசிக்கும் காரியத்திற்கு நிஜமான கர்த்தருடைய இராப்போஜனமானது, உலகத்திற்காக ஏற்படுத்தப்படாமல், விசுவாச வீட்டாருக்கென்று முழுமையாகவும், தனிப்பட்ட விதத்திலும் நிறுவப்பட்ட ஒன்றாய்க் காணப்படுகின்றது.

## பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்

நிழலில் ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதையும், அதன் இரத்தமானது வீட்டினுடைய நிலைக்கால்களிலும், மேற்சட்டங்களிலும் தெளிக்கப்படுவதையும், அதன் மாம்சமானது, கசப்பான கீரைகளுடன் புசிக்கப்படுவதையும் காண்கையில், இவைகளின் நிஜத்தைப் பார்க்கையில், கிறிஸ்துவே நிஜமான ஆட்டுக்குட்டி என்றும், அவரது இரத்தம் நம்முடைய இருதயங்களில் தெளிக்கப்படும்போது, நம்மைத் துர்மனசாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாக்கி, நாம் கடந்துபோகப் பட்டோமென, நாம் தப்புவிக்கப்பட்டோம் என, அவரது இரத்தத்தின் வாயிலாக நமக்கு ஜீவன் அருளப்பட்டதென நமக்கு உறுதியளிக்கிறது என்றும் நாம் காண்கின்றோம். இந்தத் தெளிக்கப்படுதலானது, விசுவாசத்தின் மூலமான நம்முடைய நீதிமானாக்கப் படுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் ஆட்டுக்குட்டியினைக் கசப்பான கீரைகளுடன் புசித்தல் என்பது நிஜத்தில் நம்முடைய அர்ப்பணித்தலையும், கிறிஸ்துவில் நம்முடைய பங்கெடுத்தலையும், அவரது பாடுகளில் நமது பங்கெடுத்தலையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது; கசப்பான கீரைகள் குறிக்கின்றதான சுயத்தை வெறுத்தல்களானது, பசியைத் தூண்டிவிடுகிறதாய் இருந்து, அதிகமதிகமாய் ஆட்டுக்குட்டியில் பங்கெடுப்பதற்கு நம்மை ஊக்குவிக்கின்றதாய் இருக்கின்றது. சாட்சியினை நம்புபவர்கள் அனைவரும், விலையேறப்பெற்ற இரத்தத்தினை விசுவாசிக்கின்ற அனைவரும் கடந்துபோகப்பட்டவர்களாய் இருக்கின்றனர் மற்றும் இவர்கள் இன்னுமாகத் தேவனைப் பணிந்துகொள்வதற்கும், அவருக்கு ஊழியம் செய்திடுவதற்கும் விரும்புகின்றவர்களும், தேவனை அன்புகூருபவர்களுக்குமான

ஜனங்கள் அனைவருடைய பொதுவான விடுதலைக்காகக் காத்திருக்கவும் செய்கின்றனர். இப்படியாக விசுவாசிக்கின்றவர்கள் தங்களைத் தற்காலத்தில் அந்நியர்களாகவும், பரதேசிகளாகவும் கருதி, மேன்மையான பரம தேசமாகிய, பரம கானானை எதிர்நோக்கினவர்களாகக் காணப்பட்டனர். இக்காரியங்கள் அனைத்தும் நிழலான இஸ்ரயேலில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது; ஏனெனில் அந்தப் பஸ்கா இரவில் ஆட்டுக்குட்டியைப் புசிக்கையில், அவர்கள் கையில் தடிப் பிடித்துக் கொண்டவர்களாகவும், பிரயாணத்திற்கென அரைக் கட்டிக்கொண்டவர்களாகவும் காணப்பட்டனர். இதுபோலவே இன்றுள்ள கர்த்தருடைய உண்மையுள்ள ஜனங்களானவர்கள் தங்களை அந்நியர்களாகவும், பரதேசிகளாகவும், நிரந்தரமான இடமற்றவர்களாகவும் உணர்ந்து மேலானவைகளை நாடுபவர்களாகக் காணப்பட வேண்டும்.

## கர்த்தருடைய இராப்போஜனம்

நாம் மேலே குறிப்பிட்டிருப்பவைகளே, கர்த்தருடைய இராப்போஜனம் என்றும், இயேசுவின் இறுதிவிருந்து சடங்கு (Communion, Eucharist) என்றும் பொதுவாய் அழைக்கப்படுகின்றதும், காவல் கோபுரத்தின் (Watch Tower) வாசகர்களால் நினைவுகூருதல் (Memorial) என்று அறியப்பட்டிருக்கின்றதுமான நமது கர்த்தருடைய மரணத்தினை நினைவுகூரும் ஆசரிப்பிற்கான அடிப்படையாக இருக்கின்றதெனக் கிறிஸ்தவ ஜனங்கள் அனைவரும் ஓரளவிற்கு அடையாளம் கண்டுகொண்டவர் களாய்க் காணப்படுகின்றனர். பெரும்பான்மையான கிறிஸ்தவ ஜனங்களுடைய பிரச்சனை என்னவெனில், அவர்களுடைய வேத ஆராய்ச்சியில் போதுமானளவுக்கு ஆராய்ச்சியும், விடாமுயற்சியும் இல்லாமையே ஆகும்; மற்றும் இதன் காரணமாக இவ்விஷயத்திலும், மதம் சார்ந்த அனைத்துக் காரியங்களிலும் தங்களது விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் ஏறக்குறைய குழப்பமுடையவர்களாகவும், தெளிவற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் கர்த்தருடைய வார்த்தையைப் போதியாமல், பெரும்பாலும் மனிதர்களுடைய பாரம்பரியங்களையே போதிப்பதினாலும்; உலகத்திற்கே பிரதானமாய்ப் பிரசங்கம் பண்ணுகிறவர்களாய் இருந்து, கடந்துபோகப் பட்டவர்களாகிய, அதாவது மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கடந்துபோனவர்களாகிய, அதாவது தேவனுடைய குடும்பத்திற்குள்ளாகப் புத்திரர்களென ஏற்றுக்கொள்ளப் பட்டவர்களாகிய - முதற்பேறானவர்களின் சபைக்குப் பிரசங்கம் பண்ணாதவர்களாக இருந்ததினாலேயே, இவர்களது ஊழியமானது, குற்றஞ்சாட்டப்படுவதற்கு ஏதுவானதாக நமக்குத் தோன்றுகின்றது.

நமது கர்த்தருடைய பலியை, நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலாகப்பார்ப்பது தொடர்புடைய விஷயத்தினாலான தெளிவற்ற கண்ணோட்டமானது நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்குரிய ஆசரிப்பிற்கான ஏற்றக்காலம் தொடர்புடைய விஷயத்திலுள்ள குழப்பத்தில் நன்கு வெளிப்படுகின்றது. கிறிஸ்தவ மண்டலத்தை நாம் பார்க்கையில், புராட்டஸ்டண்டினர்

இந்த ஆசரிப்பை, நினைவுகூருதலை, பரவலாய் ஆசரிக்கின்றனர். ஆனால் அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிக்காமல், மற்றும் ஆண்டுநிறைவு நாளினைப் பொருட்படுத்தாமல் ஏதோ நிழலான பஸ்காவிற்கும், நாம் ஆசரிக்கும்படிக்கு நமது கர்த்தரினால் கட்டளையிடப்பட்டதான நிஜத்திற்கும் தொடர்பு இருப்பதை அறியாதவர்கள்போல, ஆசரித்து வருவதை நாம் காண்கின்றோம். ஆகையால் சிலர் இராப்போஜனத்தை நான்கு மாதத்திற்கு ஒருமுறை என்றும், சிலர் மூன்று மாதத்திற்கு ஒருமுறை என்றும், சிலர் மாதத்திற்கு ஒருமுறை என்றும், சிலர் வாரந்தோறும் என்றும் ஆசரிக்கின்றனர்; கடைசியில் குறிப்பிடப்பட்டவர்கள் தவிர மீதமானவர்கள் அனைவரும் இவ்வாசரிப்பின் காரியத்தினை விருப்பத்திற்கு ஏற்ப, வசதிக்கேற்ப செய்கிற காரியமாய்க் கருதி, இந்த விசேஷித்த மற்றும் சரியான வருடந்தோறுமான ஆசரிப்பை, ஆசரிக்காமல் காணப்படுகின்றனர். சீஷர்கள் (Disciples) என்ற கிறிஸ்தவ பிரிவிலுள்ள நமது சகோதரர்கள் வாரந்தோறும் ஆசரிக்க வேண்டுமென விடாப்பிடியாய்க் காணப்படுகின்றனர்; இதற்குக் காரணம் என்னவெனில் இவர்கள் அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில், கர்த்தருடைய ஜனங்கள் கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கு ஞாபகார்த்தமாய்க் கூடினதான வாரக்கூடுகைகளில், அவர்கள் "அப்பம் பிட்டதாக" வாசிக்கின்றனர். கொள்கைகள் எதையும் நிதானித்துப்பார்க்காமல் இராப்போஜனத்தின் ஆசரிப்பானது, கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் அப்பம் பிட்கப்படுதலை மாத்திரமே குறிக்குமென இவர்கள் முடிவிற்கு வந்துவிட்டனர்.

ஆனால் நமது கர்த்தர் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு அப்பம் பிட்கும் நிகழ்வினால் தம்மை பல்வேறு தருணங்களில் - எம்மாவு என்னும் கிராமத்திலும், மீண்டுமாக மேல்வீட்டறையிலும் - வெளிப்படுத்தினதை ஆதித் திருச்சபையினர் நினைவுகூர்ந்ததினால், அவர்களுக்கும், நம் அனைவருக்கும் எல்லாமுமாகக் காணப்பட்ட அந்த உயிர்த்தெழுதலினாலான சந்தோஷங்கள் மீண்டும் மீண்டுமாக நினைப்பூட்டப்படுவதற்கென வாரத்தினுடைய முதல்நாளில் ஒன்றுகூடுவதில் மகிழ்வுற்றனர் என்று நாம் காண்கின்றோம். பொது மாநாடுகள் நிறைவடைகையில் நாம் கொண்டிருப்பதான அன்பின் விருந்துகள் (அ) சாதாரணமான உணவைப்பார்க்கிலும் மேலான ஒன்றை அவர்கள் உண்டதாக எந்தக் கருத்துக்களும் தெரிவிக்கப்படவில்லை. இப்படியாக ஆதித் திருச்சபையினர் செய்ததினால், நமது பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கின்றார் என்பதினால் மற்றும் தேவனுடைய இரக்கத்தினால் தெளிக்கப்பட்ட அவரது இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் வாயிலாக நாம் கடந்துபோகப்பட்டுள்ளோம் என்பதினால் ஆதித் திருச்சபையினர் வாரத்தின் முதல் நாளில் பஸ்காவை ஆசரித்ததாகவும் எந்தக் குறிப்பும் தெரிவிக்கப்படவில்லை. இப்படியாக அப்பம் பிட்குதலை அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனமாகக் கருதினதாகவும் குறிப்பிடப்படவுமில்லை; கர்த்தருடைய நினைவுகூருதலின் இராப்போஜனத்தில் அப்பத்துடன்கூட முக்கியமான அம்சமாகத் திகழும் பாத்திரம் குறித்தும் குறிப்பிடப்படவுமில்லை.

## ஒரு தப்பறை மற்றொன்றிற்கு வழிநடத்துகின்றது

நமது கர்த்தருடைய நினைவுகூருதலுக்கான வருடந்தோறுமான ஆசரிப்புத் தொடர்புடைய விஷயத்தில் இந்த அஜாக்கிரதையின் ஆரம்பமானது எளிமையாக அடையாளம் கண்டுகொள்ளப்படலாம். ஆதித் திருச்சபையானது இதை வருடந்தோறும் ஆசரித்தது மற்றும் வருடந்தோறுமான இந்த ஆசரிப்பானது பழமைமிக்க கிறிஸ்தவ சபைகளால், உரோமன் கத்தோலிக்கர்கள், கிரேக்க கத்தோலிக்கர்கள், எபிஸ்கோப்பிலர்கள் முதலானவர்களால் இன்னமும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது; இவர்கள் அனைவரும் புனித வெள்ளியை, கிறிஸ்துவாகிய நம்முடைய பஸ்காவின் இந்த அடிக்கப்படுதலின் நினைவுகூருதலாகக் கொண்டாடுகின்றனர். ஆனால் இவர்கள் இக்காரியங்கள் அனைத்தினுடைய முக்கியத்துவம் வாய்ந்த முக்கியத்துவங்களைப் பெரிதும் பார்க்கத் தவறிப்போனவர்களானார்கள். மூன்றாம் நூற்றாண்டினுடைய காலப்பகுதியில் உள்ளே நுழைந்த மிகவும் கடுமையான தப்பறையாகிய பூசைப் பலியானது, வருடந்தோறும் ஆசரிக்கப்பட வேண்டிய நினைவுகூருதலிலும், இதில் நினைவுகூரப்படுகின்றதான மாபெரும் பலியிலும் மையம் கொள்ளவேண்டிய விசேஷித்த கவனத்தை அதன்பால் ஈர்த்துவிட்டதாய்க் காணப்படுகின்றது. பூசை பலியில், அதை ஏறெடுக்கும் குருவானவர் மூன்று புனிதமான இலத்தீன் வார்த்தைகளை உச்சரித்து அப்பம் மற்றும் திராட்சரசம் மீது அற்புதம் புரிவதால், அவைகள் மாறி, இயேசுவின் மாம்சமாகவும், இரத்தமாகவும் உண்மையில் ஆகிவிடுகிறதாம். இப்படியாகப் பூசை பலியை ஏறெடுக்கும் குருவானவர் புதிதாய்க் கிறிஸ்துவைப் பலிச்செலுத்துவதாகவும், பாவிகளுக்காக ஏறெடுக்கப்படும் பூசையில், தனிப்பட்ட பாவங்களுக்கெனக் குருவானவர் புதிய பாவநிவாரண பலியைச்செலுத்துவதாகவும் கூறப்படுகின்றது. இப்படியாக மனுக்குலத்தினுடைய இருதயங்களானது, பாவங்களுக்கான ஒரே பாவநிவாரண பலியினின்று, அதாவது ஒரே தரம் மற்றும் என்றென்றுமாக விசுவாசிகள் அனைவரையும் கடந்துபோகப் பண்ணினதுமான ஒரே பாவநிவாரண பலியினின்று திசைத் திருப்பப்பட்டு, தங்கள் பார்வைகளைக் குருமார்கள், பூசை மற்றும் ஆசீர்வாதங்கள் மற்றும் தீர்த்தம் முதலானவைகள் மீது ஈர்க்கப்பெற்றவர்களாய்க் காணப்படுகின்றனர். இதைக் கர்த்தர் தம்முடைய வார்த்தைகளில், தம்முடைய சபையில், தம்முடைய ஆலயத்தில் "பாழாக்கும் அருவருப்பு" ஸ்தாபிக்கப்படும் என்று கூறி குறிப்பிடுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை (தானியேல் 11:31). மில்லேனியல் டாண் (Millennial Dawn), தொகுதி-III, அத்தியாயம்-III, IV.

உரோமன் கத்தோலிக்கர்களிடமிருந்து வந்ததான புராட்டஸ்டண்டினர்கள், மதம் சார்ந்த தங்கள் ஆதிக் கருத்துக்களை உரோமன் கத்தோலிக்க மார்க்கத்திடமிருந்து பெற்றிருக்கின்றபடியால், உரோமன் கத்தோலிக்க அமைப்பினுடைய தப்பறைகளில் பல இவர்களிடத்திலும் ஒட்டிக்கொண்டிருப்பதிலும், தேவனுடைய வார்த்தைகளினுடைய அநேக ஆவிக்குரிய போதனைகளினுடைய ஆழமான முக்கியத்துவம் தொடர்புடைய விஷயங்களில் தங்கள் புரிந்துகொள்ளுதலின்

கண்களைக் குருடான நிலையில் இவர்கள் பெற்றிருப்பதிலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இது இப்பாடத்தில் நாம் பார்த்துக்கொண்டிருக்கும் போதனையின் விஷயத்திலும்கூட உண்மையாய் இருக்கின்றது. நமது கர்த்தருடைய, அப்போஸ்தலர்களுடைய, மோசேயினுடைய, தீர்க்கத்தரிசிகளினுடைய, சபைக்கான பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட போதகர்களுடைய போதனைகளை நாம் தெளிவாய்ப்பார்க்கத்தக்கதாக, "இருண்ட யுகங்களுடைய" தப்பறைகளினின்று நமது மனங்கள் விடுவிக்கப்பட வேண்டுமென்பதே நாம் அனைவரும் வாஞ்சிக்க வேண்டிய காரியமாய் இருக்கின்றது.

## வேளை வந்தபோது

பஸ்கா தொடர்புடையதான வேதவாக்கியங்களின் பதிவும், இதற்குப்பதிலாக நிறுவப்பட்டதும், இதற்கான நிஜமாக அவரது சீஷர்கள் அவரை நினைவுகூருவதுமான கர்த்தருடைய இராப்போஜனம் தொடர்புடையதுமான வேதவாக்கியங்களின் பதிவு அனைத்தும் வேளைப்பற்றின நுணுக்கமான விவரத்தைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; அதாவது பல்வேறு கிறிஸ்தவ பிரிவினர்களின் பொதுவான வழக்கத்தின்படி காலையிலோ, மதியத்திலோ, பிற்பகலிலோ ஆசரிக்கப்படாமல், சாயங்காலத்தில் அது ஆசரிக்கப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. நமது கர்த்தரும், அவரது அப்போஸ்தலர்களும் நீசான் மாதம் 14-ம் நாள் ஆரம்பமாகுவது வரையிலும் பஸ்காவிற்கென உட்காரவில்லை. இதுபோலவே தங்களை விசுவாச வீட்டாரின் அங்கத்தினர்களென, முதற்பேறானவர்களுடைய சபையின் அங்கத்தினர்களென அடையாளங்கண்டுகொள்பவர்கள் அனைவரும் இந்த விஷயத்திலும், மற்ற விஷயங்களிலும் ஆண்டவருடைய வழிக்காட்டுதலைப் பின்பற்றிடுவதற்கு ஜாக்கிரதையாய் இருந்திட வேண்டும். இதில் ஆசீர்வாதமும், அர்த்தமும் காணப்படுகின்றன. அவர் ஆசரித்ததான அதே இரவில், அவர் காட்டிக்கொடுக்கப்பட்டதான அதே இரவில், அவர் அப்பத்தை எடுத்து, அதைப்பிட்டு, தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார். நாம் இன்னமும் அதே இரவில் காணப்படுகின்றோம் மற்றும் அந்த அப்பத்தைப் புசித்தலும், அந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணுதலும், கர்த்தருடைய சீஷர்கள் மத்தியில் இன்னும் நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

நீசான் மாதம் 14-ம் தேதியே இவ்வாசரிப்பிற்கான சரியானவேளை என்ற விஷயத்திலும், இஸ்ரயேலர்கள் அனைவரும் இதே நாளில்தான் சரியாய் ஆசரிக்க வேண்டுமென்ற விஷயத்திலும் நமது கர்த்தர் தெளிவாய் இருந்தார். மேலும் சரியாய் மாதத்தினுடைய ஆரம்பத்தைக் கணிப்பதில் அவ்வளவுக்கு நுணுக்கம் இருப்பதில்லை. (சந்திரனுடைய படிப்படியான நிலையின்) சந்திர கலையின்/ moon phase அடிப்படையில் யூதருடைய காலக்கணக்கீட்டின் முறைமை காணப்படுவதினால், அக்கணக்கீடு, நம்முடையதிலிருந்து வேறுபட்டதாகவே இருக்கும் மற்றும் இதனால் அவர்களது மாதத்தினுடைய துல்லியமான ஆரம்பத்தைக் கண்டுபிடிப்பதில் மிகவும் சிரமம் காணப்படுகின்றது. விசேஷமாக இளவேனிற் சம இரவு பகல் நாள் தொடர்புடைய

தாகவும், யூதர்களின் விஷயத்தில் இன்னொரு நிழலானது, பஸ்கா அறுவடையின் காலத்தில் வரவேண்டுமெனக் குறிப்பிடுவது தொடர்புடையதாகவும், இக்கணக்கீடு கணக்கிடப்படுவதால் மிகுந்த சிரமம் காணப்படுகின்றது. இவ்விஷயங்களையெல்லாம் அறிந்திருப்பவர்கள் அனைவரும், வாக்குவாதமும், கருத்துவேறுபாடும் இல்லாமல், சந்திர காலக்கணக்கீட்டின்படி, அறுவடைக் காலத்திற்கு இணக்கமாக யூதர்களுடைய வருடத்தின் ஆரம்பத்திற்கான தேதியினை முடிவு செய்வது என்பது நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்று என்று ஒத்துக்கொள்வார்கள். ஒரு தேதியை புதிய வருடத்தின் ஆரம்பத்திற்கான தேதி எனவும், ஒரு தேதியை அவ்வருடத்தினுடைய 14-ஆம் தேதி எனவும் நிர்ணயிக்கும் வேலையினை உடைய வேதப்பாரகர்களால் ஜனங்களுக்காகத் திர்மானிக்கப்படும் தேதியானது கர்த்தருடைய கண்ணோட்டத்தின்படி, நினைவுகூருதலுக்காய் நிறுவப்பட்ட தேதியாகுகின்றது. வேறு வார்த்தையில் சொல்ல வேண்டுமெனில், வேதபாரகர்கள் ஒருநாள் முந்தியோ (அ) பிந்தியோ ஒரு தேதியை நிர்ணயித்தார்களா என்பது ஒரு காரியமல்ல; ஒன்றுபோல்/வேறுபாடற்ற தேதி காணப்பட வேண்டும் மற்றும் முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியானது மாறுபாடற்று அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதே நோக்கமாகும்.

இன்றும் காரியங்கள் இப்படியாகவே காணப்படுகின்றது. யூத காலத்தின்படி முதல் மாதத்தின், முதலாம் தேதியினுடைய கணக்கிடுதலை உறுதிப்படுத்தும் விஷயத்தில் எவ்விதமான பதட்டமடைதலோ அல்லது சிறியதைப் பெரிதாக்கி பார்த்தலோ அவசியமில்லை; மாறாக ஒரே நாளில் சூரியன் அஸ்தமனத்திற்குப் பின்னர் அனைவரும் நினைவுகூருதலை ஆசரிப்பதிலும் மற்றும் எந்தநாள் நீசான் மாதத்தின் 14-ஆம் தேதியாக ஆசரிக்கப்பட வேண்டும் என்பதிலும் சரியாய் இருப்பதே அவசியமானதாகவும், ஏற்றதாகவும் உள்ளது. ஜனவரி மாதம் 15-ஆம் தேதியினுடைய நம்முடைய வெளியீட்டில் நீசான் மாதத்தினுடைய முதலாம் தேதியை, இளவேனிற் சம இரவு பகல் நாளுக்குப் பின்வரும் அமாவாசை நாளைத் திட்டவட்டமாய் நிர்ணயிக்கும் விஷயத்தில் சிரமமுள்ள வருடங்களில் இவ்வருடமும் ஒன்றென நாம் சுட்டிக்காண்பித்திருந்தோம். இதற்கு நாம் முக்கியத்துவம் செலுத்துவதில்லை; நினைவுகூருதலை ஏப்ரல் 8-ஆம், ஞாயிறு இரவில் ஆசரிப்பதற்கு நாம் பரிந்துரைக்கின்றோம். இது யூதருடைய கடைப்பிடிப்பிற்கு இசைவானதாகவும், நீசான் 15-ஆம் தேதியாகிய ஏப்ரல் 9-ஆம் தேதியன்று பௌர்ணமி வருகின்றது என்ற உண்மைக்குப் பொருந்துகின்றதாகவும் காணப்படுகின்றது. நினைவில் கொள்ளப்பட வேண்டிய முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு: (1) அது வருஷத்தினுடைய இளவேனிற் காலத்தில், கிட்டத்தட்ட பஸ்கா காலத்தில் இருக்க வேண்டும்; (2) தேதியானது வேறுபாடற்று ஒன்றுபோல் கடைப்பிடிக்கப்பட வேண்டும்; (3) ஆதியில் எகிப்தில் நிறுவப்பட்டதற்கு இசைவாகவும், பின்னர் நமது கர்த்தரால் நிறுவப்பட்டதான நினைவுகூருதலுக்கு இசைவாகவும் சாயங்காலத்தில் ஆசரிக்கப்பட வேண்டும்.

மேற்கூறினவைகளுக்கு இசைவாக, கடைசி பக்கத்தில் குறிப்பிட்டிருக்கின்றதான நேரத்தில், அலிகெனியிலுள்ள (Allegheny) சபையார், நமக்காக

அடிக்கப்பட்டதான நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்துவின் மரணத்தினை நினைவுகூரும்படிக்கு ஒன்றுகூட வேண்டுமென்றிருக்கின்றனர். அதே காலப்பகுதியில் உலகமெங்கும் காணப்படும் அங்கங்களுடைய சிறுசிறு கூட்டத்தினர் ஆசரித்ததாகச் செய்திகளைப் பின்னர்த் தெரிந்துகொள்வோம் என்றும் நாம் நம்புகின்றோம். பார்வோன் மற்றும் எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்ததான விடுதலையை, நினைவு கூர்ந்திடுவதற்கென நாம் யூதர்களைப்போன்று ஒன்று கூடிடவில்லை, மாறாக நிஜமான இஸ்ரயேலர்களெனச் சாத்தானுடைய வல்லமையினின்றும், பாவத்தினுடைய ஆளுகையினின்றும் தப்பிடுவதற்கு நாடுகின்றோம். சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியையும், கசப்பான கீரைகளையும் புசிப்பதற்காகவும், எகிப்தில் நடந்த கடந்துபோகுதலை நினைவுகூருவதற்காகவும் நாம் ஒன்றுக்கூடாமல், மாறாக தேவ ஆட்டுக்குட்டியானவரின் மரணத்தினை நமது பஸ்கா என்று அடையாளம் கண்டுகொள்வதற்கும், நினைவுகூருவதற்கும், அவரையும், அவர் கொடுத்த சத்தியங்களைப் புசிப்பதற்கும், நமக்காக அவர் கையளித்ததான ஜீவிக்கும் உரிமைகளை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்வதற்கும் ஆவிக்குரிய இஸ்ரயேலர் களென நாம் ஒன்று கூடுகின்றோம்.

இன்னுமாக, நமது கர்த்தரினால் விவரிக்கப்பட்டுள்ளதுபோன்று, புளிப்பில்லாத அப்பத்தினை, நமக்காகப் பிட்கப்பட்டதான அவரது மாம்சத்தினுடைய தூய்மையை அடையாளப்படுத்துகிறதற்காகவும், திராட்சப்பழரசத்தை நமக்காகச் சிந்தப்பட்ட அவரது இரத்தத்தை அடையாளப்படுத்துகிறதற்காகவும் மாத்திரமாக நாம் பயன்படுத்தாமலும், அப்போஸ்தலனுடைய விளக்கத்தின் வெளிச்சத்தில், அந்தப் பெரிய அப்பத்தின் ஒரு பாகமெனக் கிறிஸ்துவோடுகூடப் பிட்கப்படுவதும், அந்தப் பெரிய பாத்திரத்தின் ஒரு பாகமென அவரது பாடு மற்றும் மரணம் எனும் பாத்திரத்தில் ஐக்கியம்கொள்வதும் நம்முடைய சிலாக்கியத்தின் பாகமாக இருக்கின்றது என்று புரிந்துகொள்கின்றோம். இந்த இரண்டு கண்ணோட்டத்திலிருந்து, முதலாவதாக கடந்துபோகப்பட்டவர்கள் என்ற நிலையிலும், இரண்டாவதாக இனிவரும் காலத்தில் தெய்வீகத் தயவையும், தேவனுடைய புத்திரர்களுக்குரிய சுயாதீனத்தையும் ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரையும் பாவம் மற்றும் சாத்தானுடைய அடிமைத்தனத்திலிருந்து வெளியே வழிநடத்தும் மாபெரும் வேலையில் அவரோடுகூட நாம் பங்கடையத்தக்கதாக, பலியில் அவரோடுகூட இணைந்துகொண்டவர்கள் என்ற நிலையிலும், கர்த்தருடனான நம்முடைய உறவைப் பார்க்கின்றோம். நமக்கு அருளப்பட்டதான சிலாக்கியமானது, எத்துணை பிரமாண்டமாய் உள்ளது! அப்போஸ்தலன் பின்வருமாறு சொல்லியதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை . . .

## ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்

வானத்திலிருந்து இறங்கிவந்ததும், நமக்காகப் பிட்கப்பட்டதுமான இந்த அப்பத்தைப் புசித்தல் என்பது நாம் வருடந்தோறும் ஒன்றுகூடுகிறதான விசேஷ

தருணத்திற்குரியது மாத்திரமல்ல. நமது கர்த்தருடைய கட்டளையின் பேரில் வருடந்தோறுமான ஒன்றுகூடுதலானது, அவர் இல்லாத இரவு முழுவதுமான, அவர் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதான காலை வரையிலுமான நமது அனுபவங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. பண்டிகையை இப்படியான விசேஷித்த விதத்தில் மற்றும் நினைவுகூரும் விதத்தில் வருஷத்திற்கு ஒருமுறை மாத்திரம் நாம் ஆசரிக்காமல், நாளுக்குநாள், ஒவ்வொரு மணி நேரமும் தேவ ஆட்டுக்குட்டியைப் புசிக்க வேண்டும்; விசுவாசத்தினால் அவரது தகுதிகளை, புண்ணியங்களை உணர்ந்து, நமதாக்கிக்கொள்ள வேண்டும்; கிருபையிலும், அறிவிலும், அன்பிலும், ஆவியின் கனிகள் மற்றும் கிருபைகள் அனைத்திலும் வளர்ந்திட வேண்டும். "நீங்கள் இதைச் செய்யும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்பதான ஆண்டவருடைய வார்த்தைகளானது, கட்டளையான விதத்தில் காணப்பட்டது என்பதை நாம் நினைவுகூருகின்றோம். நம்முடைய கர்த்தருடைய மரணத்தை நினைவுகூரும் இந்த வருடாந்தர ஆசரிப்பில், நாம் என்ன செய்கின்றோம் என்பது குறித்து, இனிமேல் நம்முடைய மனங்களில் எவ்வித சந்தேகங்களும் காணப்படாது; கிறிஸ்து நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியென அடிக்கப்பட்டார் என்பதை நாம் உணர்ந்துகொண்டபடியால், நாம் பண்டிகையை ஆசரிக்கின்றோம். ஆண்டுநிறைவு நாளைப்போல், வேறெந்த ஒரு வேளையும் மிகவும் ஏற்றதாய்க் காணப்படாது. அது சூரியக்காலத்தின்படியோ (அ) சந்திரக்காலத்தின்படியோ கணக்கிடப்பட்டாலும் சரி, வாரத்தினுடைய நாட்களுக்கு ஏற்பவோ (அ) மாதத்தினுடைய நாட்களுக்கு ஏற்பவோ கணக்கிடப்பட்டாலும், அது சந்தேகத்திற்கிடமின்றி வருடாந்தரமான ஆசரிப்பேயாகும்; நாம் அதைச் செய்யும் போதெல்லாம், ஒவ்வொரு வருடமும் அதைச் செய்யும்போதெல்லாம், வருடந்தோறும் அதன் ஆண்டுநிறைவு நாளில் அதைச் செய்யும்போதெல்லாம் நாம் நிழலை நினைவுகூர்ந்து ஆசரிக்காமல், மாபெரும் நிஜமாகிய இயேசு எனும் நமது மீட்பரை நினைவுகூர்ந்தே ஆசரிக்கின்றவர்களாய் இருக்கின்றோம்.

வரவிருக்கும் நினைவுகூருதலின் ஆசரிப்பானது அனைவருக்கும் மிகவும் நன்மை மற்றும் நலம் பயக்கின்ற ஒன்றாய்க் காணப்படும் என்று நாம் நம்புகின்றோம். எவரும் இச்சிலாக்கியத்தினைக் கவனிக்கத்தவறாமல் இருப்பதற்கு நாம் வலியுறுத்துகின்றோம் மற்றும் கர்த்தரையும், அவரது பலியினுடைய சுத்திகரிக்கும் வல்லமையையும், நாம் அவரிடத்தில் பண்ணியுள்ளதான அர்ப்பணிப்பையும் குறித்து உணர்ந்த நிலையில் உத்தம இருதய நோக்கத்துடன் பங்கெடுக்கும் அனைவருக்கும், இந்தப் பண்டிகையை ஆசரித்ததின் விளைவாகவும், இந்த யுகத்திற்கும், அடுத்துவரும் யுகத்திற்குமான திட்டம் அனைத்தும் மையம் கொண்டுள்ளதான மாபெரும் மைய உண்மையினை நினைவுகூர்ந்ததின் விளைவாகவும், விசேஷமான ஆசீர்வாதம் கடந்துவரும் என்றும் நாம் உறுதியளிக்கின்றோம்.

இந்த நினைவுகூருதலுக்காக மாநாடுகளில் பல்வேறு கூட்டமான கர்த்தருடைய ஜனங்கள் கூடிடுவதுபோன்று கூடாமல், சிறுசிறு கூட்டத்தினராகக்கூடி ஆசரிப்பது சிறந்தது என்பதை அருமையான நண்பர்கள் நினைவில்கொள்ளும்படி நாம் வலியுறுத்துகின்றோம். கர்த்தரும், அவரது பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் தனியாகக் கூடினார்கள் மற்றும் இதை ஒவ்வொரு குடும்பமும் தனியாய்க் கூடிக்கொள்ளும் யூதருடைய வழக்கத்தின்படியே செய்தார்கள். ஆகையால் கர்த்தருடைய ஜனங்களுடைய ஒவ்வொரு சிறு கூட்டமும் ஒரு குடும்பமாக, சகோதரக்கூட்டத்தாராகக் காணப்படுகின்றனர். புளிப்பில்லாத அப்பத்தினைப் பெற்றுக் கொள்ள முடியவில்லையெனில், சோடா ரொட்டிகளை/பிஸ்கோத்துகளை (Soda Biscuits) எளிதில் பெற்றுக்கொள்ளலாம்; இது புளிப்பற்ற சிறு அப்பமாகும், அதாவது காடிச்சத்து (yeast)/புளிப்புச் சேர்க்காமல் உண்டுப்பண்ணப்பட்ட அப்பமாகும். திராட்சப்பழச்சாறு (grape juice) கிடைக்கவில்லையெனில், உலர்ந்த திராட்சைகளானது, நீருடன் வேகவைக்கப்பட்டு இப்படியாக திராட்சப்பழரசம் (fruit of the vine) தயாரிக்கப்படலாம் அல்லது எவரேனும் விரும்பினால் புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தை (wine) பயன்படுத்திக் கொள்ளலாம். நமது கர்த்தர் எதைப் பயன்படுத்தினார் என்பதை நாம் உறுதிச்செய்வது என்பது கூடாத காரியமாகும். (fermented liquor) புளிப்பேற்றப்பட்டதான பானமானது, மதுபானத்தின் (strong drink) விஷயத்தில் அடங்கி கிடக்கும் ஆசைகளைத் தூண்டிவிட்டு, இப்படியாக இதைப் பானம்பண்ணுகிறவர்களுக்கு இது கண்ணியாக இருந்துவிடக்கூடாது என்பதற்காக, நாம் புளிப்பேற்றப்படாத திராட்சப்பழ ரசத்தையே (unfermented fruit of the vine) நம் சார்பில் பறிந்துரைக்கின்றோம். ஒவ்வொரு சிறுகூட்டத்தாரும் கூடுகையில், எங்குமுள்ள கர்த்தருடைய அருமையான ஜனங்களிலுள்ள மற்றவர்கள் அனைவரையும் ஜெபத்தில் நினைவுகூர்ந்து, மிகவும் ஏற்கத்தக்க விதத்திலும், மிக முழுமையான விதத்திலும் பாடுகள், பலி, மரணம் எனும் அவருடைய பாத்திரத்தில் பங்கெடுப்பதற்கும், அவருடைய சரீரமாகிய ஒரே சபையின், ஒரே ஜீவனின் அங்கத்தினர்களென அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கும் நமக்கு உதவுகின்றதான கர்த்தருடைய ஆவியானது, அதிகமதிகமாக நம் அனைவருடைய இருதயங்களில் அருளப் பெறுவதற்கு அவரிடம் வேண்டிக்கொள்வார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

தங்களுடைய அர்ப்பணிப்பை ஞானஸ்நானத்தின் வாயிலாக அடையாளப் படுத்த விரும்புகிறவர்களின் சௌகரியத்திற்காக, அலிகெனியிலுள்ள (Allegheny) பைபிள் ஹவுஸ் சேப்பலில் (Bible House Chapel) வைத்து, ஏப்ரல் 8-ஆம் தேதி ஞாயிறன்று, காலை 10 மணிக்கு ஞானஸ்நான ஆராதனை நடைப்பெறும். எல்லாவிடங்களிலுமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய (ஒவ்வொரு) சிறுசபைக்கூட்டத்தாரும், ஞானஸ்நானத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திடுவார்கள்

என்பதில் ஐயமில்லை மற்றும் மாலையில் நடைப்பெறவிருக்கின்றதான நினைவுகூருதலில் கலந்துகொள்வதற்கு முன்னதாக, ஞானஸ்நான ஆராதனைக்கான ஏற்பாட்டினை விரும்புகின்றவர்கள், கூடுமானவரை முன்கூட்டியே இங்குத் தங்களது விருப்பங்களைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

## சிலுவையின் அருகில்

இயேசுவே, சிலுவையின் அருகே என்னை வைத்தருளும்;
அங்கே ஒரு விலையுயர்ந்த நீரூற்று உள்ளதுவே,
குணமாக்கும் ஓடை அனைவருக்கும் இலவசமாகவே
கல்வாரி மலையிலிருந்து பாய்கின்றதே.

சிலுவையினருகே நடுங்கிய ஆத்துமாவை
அன்பும், இரக்கமும் கண்டதுவே. அங்குப்
பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரம் என்னைச்
சுற்றி அதன் ஒளியை சிதறவிட்டதே.

நதிக்கு அப்பால் இருக்கும் பொன்னான கரையை
நான் நெருங்கும்வரை, சிலுவையினருகே
விழித்திருந்து காத்திருப்பேனே! ஆம், எப்போதும்
நம்பிக்கையுடனும் எதிர்ப்பார்ப்புடனுமே.

சிலுவையை, ஆம் சிலுவையைக் குறித்தே
எப்போதும் மேன்மைப் பாராட்டிடுவேனே.
நதிக்கு அப்பால் இளைப்பாறுதலை அடையும்வரை
எந்தன் ஆன்மா காத்திருக்குமே.

- விடியல் துதிப்பாடல்கள், #135

# என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்

## மத்தேயு 26:17-30

நமது கர்த்தர் தமது கடைசி பஸ்காவை அனுசரித்த வியாழன் அன்று இரவில், நினைவுகூருதலுக்கான இராப்போஜனத்தை நிறுவினார் என்றும், அடுத்த நாளாகிய வெள்ளிக்கிழமையன்று அவர் சிலுவையில் அறையப்பட்டார் என்றுமுள்ள கருத்தை, பெரும்பான்மையானவர்கள்போல் நாமும் கொண்டிருந்தாலும், இந்த நிகழ்வானது வாரத்தினுடைய மற்ற நாட்களில் சம்பவித்தன என்று எண்ணுபவர்களுடன் நாம் வாதாடுவதில்லை. அங்கு நிறைவேறின காரியங்கள்மீதும் மற்றும் மோசேயினால் நிறுவப்பட்டதான பஸ்காவினுடைய நிஜம் என்ற விதத்திலும் மற்றும் பாவங்களுக்கான, அதாவது முழு உலகத்தினுடைய பாவங்களுக்கான நமது கர்த்தருடைய மாபெரும் பலியின் நிறைவேறுதல் என்ற விதத்திலுமுள்ள அதன் முக்கியத்துவத்தின் மீதும்தான் நாம் மிகுந்த முக்கியத்துவம் செலுத்துகின்றோம். இந்த முக்கியத்துவம் வாய்ந்த கொள்கைகளுக்காகவே நாம் உண்மையாய்ப் போராட/வாதாட விரும்புகின்றோம்; ஏனெனில் இவைகள் "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தினுடைய" ஒரு பாகமாய் இருக்கின்றது; ஆனால் வாரத்தினுடைய எந்தக் குறிப்பிட்ட நாட்களில் இந்நிகழ்வுகள் சம்பவித்தன என்பது தொடர்புடைய விஷயத்தைக் குறித்து நாம் போராடுவதில்லை/வாதாடுவதில்லை; ஏனெனில் எங்களைப் பொறுத்தமட்டில் அவை முக்கியத்துவம் அற்றவைகளாகவும், அற்ப விஷயமாகவும், பின்விளைவுகள் உண்டுபண்ணாத விஷயமாகவும் காணப்படுகின்றன என்பதினால் அவை எந்த விதத்திலும் கர்த்தருடைய ஜனங்களின் மனம் (அ) இருதய ஐக்கியத்தினைக் குலைத்திடக்கூடாது.

நம்முடைய இந்தப் பாடமானது, சீஷர்களுக்கான நமது கர்த்தருடைய கட்டளையுடன் ஆரம்பமாகுகின்றது; கர்த்தராகிய இயேசுவைத் தேவ ஆட்டுக்குட்டியெனச் சுட்டிக்காட்டின பஸ்காவை, ஒரு விசேஷித்த மற்றும் சிறந்த யூத குடும்பமாகக் காணப்பட்ட இயேசுவும், சீஷர்களும், அந்நிழல் குறித்து நியாயப்பிரமாணம் கூறுவதுபோன்று ஆசரிப்பதற்கென ஓர் இடத்தை ஆயத்தம் பண்ணுவதற்கு நமது கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். இந்த ஓர் இராவிருந்தைக் குறித்துதான் நமது கர்த்தர்: "நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" என்று கூறினார். அவர் நீசான் மாதம் பதினைந்தாம் தேதி துவங்கி, ஒரு வாரக்காலம் நீடிக்கின்றதான பிரதானப் பண்டிகையைக்குறித்துக் குறிப்பிடவில்லை. பொதுவானப் பண்டிகைக்கு முன்னதாக இடம்பெறுகிறதும், எகிப்திலிருந்துள்ள தங்களது விடுதலையை ஜனங்களுக்கு நினைப்பூட்டுகிறதும், விடுதலையாக்கப்பட்ட ஜனங்களென அவர்களது சந்தோஷத்திற்கு அடிப்படையாய்க் காணப்பட்டதுமான கசப்பான கீரைகளுடனான, சுடப்பட்ட ஆட்டுக்குட்டியுடைய இராப்போஜனத்தையே அவர் குறிப்பிட்டார். மேல்வீட்டறையானது, இந்த இராப் போஜனத்திற்காக ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது. அனைத்தும் ஆயத்தம் பண்ணப்பட்டிருந்தது மற்றும் சாயங்காலத்தில், சூரியன்

மறைந்து, ஆறு மணிக்குப் பிற்பாடு நமது கர்த்தரும், பன்னிரண்டு பேரும் கூடினார்கள். இராப்போஜனத்தின்போது மிகுந்த கனமிக்க ஸ்தானங்கள் குறித்துச் சீஷர்கள் மத்தியில் வாக்குவாதம் உண்டாயிற்று என்றும், அவர்களது பாதங்களை இயேசு கழுவினதின் மூலமாக, இந்தப் பேராசையினுடைய ஆவியை இயேசு கடிந்துகொண்டு, இப்படியாகத் தம்முடைய தாழ்மையான இருதயத்தையும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் மற்றும் அனைவருக்கும் பணிவிடைப் புரிவதற்கான தம்முடைய ஆயத்தத்தையும் விளக்கினார் என்றும் பதிவுகளில் ஒன்று நமக்குத் தெரிவிக்கின்றது. இப்படியாக அவர்கள் மத்தியில் பெரியவராய் மதிக்கப்படுகின்றதான தாம், எவருக்கும் மற்றும் அனைவருக்கும் பணிவிடைப் புரிந்திடுவதற்கு விருப்பமுடையவராகவும், ஆயத்தத்துடன் காணப்படுபவராகவும் இருக்கும் அவர்களுக்கான பிரதானப் பணிவிடைக்காரராய் இருக்கின்றார் என்ற மாதிரியை அவர்களுக்கு முன்வைத்தார்.

## உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்

அவர்கள் புசித்துக்கொண்டிருக்கையில், அவர்களில் ஒருவன் தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்று இயேசு குறிப்பிட்டார் மற்றும் உடனடியாக அங்கிருந்தவர்கள் மத்தியில் துக்கம் பரவ, இப்படியான ஒரு குற்றச்சாட்டினின்று தன்னைக் குற்றமற்றவன் என்று நிரூபிப்பதற்குக் கடமைப்பட்டுள்ளதை ஒவ்வொருவரும் உணர்ந்து, ஆண்டவரே, நானோ, நானோ? என்று கேட்டார்கள். மற்றவர்களோடுகூட யூதாசும் இக்கேள்வியைக் கேட்டான்; ஒருவேளை தானும் இப்படியாகக் கேட்கவில்லையெனில், தான்தான் அந்நபர் என்று தான் ஒப்புக்கொள்வதாகிவிடும் என்று உணர்ந்தவராக யூதாஸ் இக்கேள்வியைக் கேட்க, இவரது கேள்விக்கு இயேசு: "நீ சொன்னபடிதான்," அதாவது "ஆம், உன்னைத்தான் நான் குறிப்பிட்டேன்" என்ற விதத்தில் பதிலளித்தார். இயேசுவிடம் கேட்கப்பட்டபோது, தாம் யாருக்குத் துணிக்கையைத் தோய்த்துக் கொடுக்கின்றாரோ, அவன்தான் காட்டிக்கொடுப்பவன் என்று கூறி, (ஒரு துண்டு ஆட்டுக்குட்டியின் மாம்சமும், ஒரு துண்டு புளிப்பில்லாத அப்பமுமாகிய) துணிக்கையைத் தோய்த்து, இயேசு யூதாசுக்குக் கொடுத்து, இப்படியாக நேரடியாய் அவரது பெயரைக் குறிப்பிடாமல், அவரைச் சுட்டிக்காட்டினார் என்று வேறொரு பதிவு நமக்குத் தெரிவிக்கின்றது. இதுவரையிலும் மற்றச் சீஷர்கள் யூதாசை அறிந்துகொள்ளவில்லை என்றும், பிற்பாடே யூதாஸ் திருடன் என்று கண்டுபிடிக்கின்றனர் என்றும் தோன்றுகின்றது.

யூதர்கள் மற்றும் அரேபியர்கள் மத்தியில் ஏமாற்றுதலும், காட்டிக்கொடுத்தலும் பரிட்சயமற்ற ஒன்றல்ல, ஆனாலும் அவர்களால் அங்கீகரிக்கப்படுகின்றதான கண்ணியத்திற்கான/நேர்மைக்கான சட்டத்தொகுதியின்படி ஒருவன் இன்னொரு நபருக்கு எவ்விதத்திலாகிலும் தீங்கிழைக்கப்போகின்றவனாய் இருந்தால் அவன் அந்த நபருடைய உணவைப் புசிப்பதில்லை. உணவானது உப்பிடப்பட்டிருக்கின்றபடியால், இந்த வழக்கமே அநேகமாக மாறாத/முறிவுறாத உடன்படிக்கை என்று

அழைக்கப்பட்டிருக்க வேண்டும். சத்துருவானவனை உங்கள் போஜனப்பந்தியிலிருந்து புசிக்கச் செய்வது அல்லது உப்பிடப்பட்ட உங்கள் உணவை எடுத்துப் புசிக்கச் செய்வது என்பது, அக்காலக்கட்டத்தின் போதான ஜனங்களின் மத்தியில், சத்துருவானவனின் நட்பு நீடிக்கும் என்பதற்கான, அதாவது அவன் இனி ஒருபோதும் உங்களுக்குத் தீங்கு செய்வதில்லை என்பதற்கான உறுதிமொழிக்குச் சமமாய் இருப்பதாகக் கருதப்பட்டது. அக்காலக்கட்டத்தில் காணப்பட்டதான இந்த வழக்கத்திற்கு யூதாஸ் கீழ்ப்படியாமலும், ஒப்புக்கொள்ளாமலும் காணப்படுமளவுக்கு, அதாவது தான் யாருடைய அப்பத்தைப் புசித்தானோ, தான் யாருடைய உப்பில் பங்கெடுத்தானோ, அவருக்கு உண்மையாயும், நேர்மையாயும் இருப்பதை எதிர்ப்பார்க்கும் இந்த வழக்கத்திற்குக் கீழ்ப்படியாமலும், ஒப்புக்கொள்ளாமலும் காணப்படுமளவுக்கு, யூதாஸ் சரியான சிந்தையில்/ஆவியில் மிகவும் குறைவுப்பட்டவனாயிருந்தான். ஆகையால்தான் நமது கர்த்தர், "என்னோடேகூடத் தாலத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று கூறினார்.

எனினும் தம்முடைய மரணம் என்பது, தம்முடைய சத்துருக்கள் மற்றும் தம்மைக் காட்டிக் கொடுத்தவன் சார்பிலுமான வெற்றியைக் குறிக்கின்றதாயிராமல், மாறாக தம்மைக்குறித்துத் தீர்க்கத்தரிசிகளினால் எழுதப்பட்டவைகளுக்கு இசைவாக நடந்த ஒன்றாகும் என்றும் இயேசு விளக்கினார். இன்னுமாக இந்த விஷயததில் யூதாஸ் தன்னுடைய பொறுப்பிற்கோ, இக்காரியத்தில் தன்னுடைய துணிகரத்திற்கோ பொறுப்பு வகிக்காதவராய் மற்றும் தீர்க்கத்தரிசனத்தை மாத்திரமே நிறைவேற்றினவராய்க் காணப்பட்டார் என்றும் நாம் எண்ணிவிடக்கூடாது; இம்மாதிரியான (அவன் பொறுப்பு வகிக்கவில்லை என்ற) சிந்தையானது, "எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாய் இருக்கும்" என்ற இயேசுவின் வார்த்தைகளினால் மறுக்கப்படுகின்றது. (இயேசுவின்) இவ்வார்த்தைகளானது, சத்தியத்தினைப்பற்றின தெளிவான அறிவிற்குள் வருவதற்கான வாய்ப்புகள் மூலம் யூதாஸ் ஏற்கெனவே மாபெரும் ஒப்புரவாகும் வேலையிலும் மற்றும் இதன் காரணமான பொறுப்புகளிலும் தனக்கான பங்கினை அனுபவித்துள்ளார் என்று நாம் எண்ணுவதற்கு ஏதுவாயிருக்கிறது. யூதாசினுடைய பாவம், மரணத்திற்கு அதாவது இரண்டாம் மரணத்திற்கு ஏதுவான பாவமாய்க் காணப்படுகின்றது என்பது உறுதியே. ஆகையால் அவரது தற்கால ஜீவியத்தைப்பார்க்கும்போது, அவரது வாழ்க்கைப் பயனற்ற, வீணடிக்கப்பட்ட ஒன்றாக இருந்தது என்றும், அவர் வாழ்க்கையின் துக்கங்கள், கடுந்துயரங்கள் மற்றும் பின்னர் வந்ததான நம்பிக்கையின்மை மற்றும் தற்கொலை ஆகியவற்றைவிட, அதன் சந்தோஷங்களானது மிகுதியாய்க் காணப்படவில்லை என்றும் நாம் கருத வேண்டியுள்ளது.

# நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது

பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்தப்பிற்பாடு, அதாவது கசப்பான கீரைகள் மற்றும் புளிப்பில்லாத அப்பம் முதலானவைகளுடன் ஆட்டுக்குட்டியைப் புசித்தப்பிற்பாடு, இயேசுவினால் நிறுவப்பட்டதான நினைவுகூருதலின் இராப் போஜனமானது, அவரது கட்டளையின் பேரில், அவரது பின்னடியார்கள் அனைவருக்கும், யூதர்களுக்கான பஸ்கா இராப்போஜனத்தினுடைய இடத்தை எடுக்கின்றதாய் இருக்கின்றது. இது ஒரு புதிய காரியமாகும் மற்றும் அவர் புளிப்பில்லாத அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரித்து, பின்னர் அதைப்பிட்டு, துண்டுகளை தம்முடைய சீஷர்கள் ஒவ்வொருவரிடத்திலும் கொடுத்து, "நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்று கூறினபோது, அப்போஸ்தலர்கள் அவரது வார்த்தைகளைக் கவனமாகக் கேட்டார்கள். அவர் என்ன அர்த்தத்தில் கூறினார்? அவரோடுகூட அவர்கள் செலவழித்ததான மூன்று வருடக்காலப்பகுதிகளில், அவர் உவமைகளாகவும், மறைப்பொருளாகவும்தான் பேசுவார் என்று அவர்கள் தெரிந்துகொண்டார்கள். வேறொரு தருணத்தின்போது அவர்களும் காணப்படுகையில் தம்மை வானத்திலிருந்து இறங்கின அப்பம் என்றும், இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றும் பிழைப்பான் என்றும் அவர் கூறியிருந்தார். இப்பொழுதோ அவர் புளிப்பில்லா அப்பம் சிலவற்றை அவர்களிடத்தில் கொடுத்து, அது தம்முடைய சரீரம் என்று கூறுகின்றார். இந்த அப்பமானது, அவருடைய சரீரத்திற்கு அடையாளமாய் இருக்கின்றதென அவர் குறிப்பிடுகின்றார் என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள்; ஏனெனில் இந்த ஒரு தருணத்தின்போது, அவர்கள் இதுமுதல் அவரை நினைவுகூரும்படிக்கு இதைச் செய்ய வேண்டும், அதாவது அவரை அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியென அவர்கள் இதுமுதல் நினைவுகூர்ந்து, அவரது மாம்சத்தை அடையாளப்படுத்துவதற்குப் புளிப்பில்லா அப்பத்தைப் பயன்படுத்தி, முன்பு அவர்கள் புசித்தச் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டிக்குப்பதிலாக, இந்தப் புளிப்பில்லாத அப்பத்தில் பங்கெடுக்க வேண்டுமென்று அவர்களிடத்தில் கூறினார்.

உரோமன் கத்தோலிக்கன்மார்களும், சில புராட்டஸ்டண்டினர்களும் நம்புவது போன்று, அவர் ஸ்தோத்திரித்ததின் காரணமாக, அப்பமானது, அவரது நிஜமான மாம்சமாக மாறியது என்ற அர்த்தத்தில் அவர் கூறவில்லை; ஏனெனில் அவர் அவ்வேளையில் இன்னமும் தமது மாம்சத்தைப் பெற்றவராய் இருந்தார்; சுமார் பதினைந்து மணி நேரங்களாக அவர் கொல்லப்படவில்லை. ஆகையால் இப்படியான வாதங்கள் அனைத்தும் சொற்புரட்டும், அறிவீனமுமாகும். அவர், "இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்று அவர் சொன்னபோது, அவர் பிற்பாடு "நானே திராட்சச்செடி" என்றும், "நானே வாசல்" என்றும், "நானே நல்ல மேய்ப்பன்" என்றும், "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" என்றும் அவர் கூறினபோது எப்படி அடையாளமான விதத்தில் பேசினாரோ, அப்படியாகவே பேசினார். ஆண்டவருடைய வார்த்தைகளின் சரியான, தெளிந்த கண்ணோட்டமானது வெளிப்படையாய்த்

தெரிகின்றது; அவர் இப்படியாய்ப் பல்வேறு விதங்களில் அடையாளப்படுத்தப் பட்டுள்ளார். நாம் பார்த்துக்கொண்டிருக்கிற வசனத்தில், சுவிசேஷயுகம் முழுவதிலுமுள்ள அவரது பின்னடியார்கள் அனைவருக்கும் மற்றும் அப்போஸ்தலர் களுக்கும் அப்பமானது - அவரை, அவரது மாம்சத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கும்.

அப்பமானது, உணவு அனைத்திற்குமான அடையாளமாய் இருப்பதுபோல (ஆம் கோதுமையில் அனைத்து விதமான ஊட்டச் சத்துக்களும் சரியான விதத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது உண்மையே), இந்த அடையாளம் போதிப்பது என்னவெனில், கிறிஸ்து கொடுக்கப்போகின்றதான ஜீவனை ஒருவன் பெறவேண்டுமெனில், அது அவரது பலியின் விளைவானதென அவன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதேயாகும். நாம் ஜீவிக்கத்தக்கதாக அவர் மரித்தார். அவர் மனமுவந்து, விரும்பி கையளித்ததான உரிமைகளும், சிலாக்கியங்களும், அவரில் விசுவாசம் வைத்து மற்றும் அவரையும், அவரது போதனைகளையும் ஏற்றுக்கொள்பவர்கள் அனைவராலும் புசிக்கப்பட வேண்டும், பயன்படுத்தப்பட வேண்டும், சொந்தமாக்கிக்கொள்ளப்பட வேண்டும்; இப்படியானவர்கள் ஆதாமினால் இழந்துபோகப்பட்டதும், கிறிஸ்துவினால் மீட்கப்பட்டதுமான உரிமைகளுடனும், சிலாக்கியங்களுடனுமுள்ள பரிபூரண மனுஷீகச் சுபாவத்தினால் தரிப்பிக்கப்பட்டவர் களாகக் கருதப்படுகின்றனர். வானத்திலிருந்திறங்கின இந்த அப்பத்தைப் புசித்தால் மாத்திரமேயொழிய மற்றபடி, எவரும் நித்திய ஜீவன் பெறமுடியாது. இது தற்காலத்தினுடைய விசுவாசிகளுக்கு மாத்திரமல்லாமல், இனிவரும் யுகத்திலுள்ளவர்களுக்கும்கூடப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. அவர்களுக்கான ஜீவிக்கும் உரிமைகளும், சிலாக்கியங்களும், அவரது பலியின் மூலமாக வந்ததென அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், நமது கர்த்தருடைய சரீரத்தை அடையாளப்படுத்து கின்றதான அப்பமானது, அவரது பலியை ஏற்றுக்கொள்வதன் மூலமான நம்முடைய நீதிமானாக்கப்படுதலை விளக்குகின்றதாய் இருக்கின்றது.

## நீங்களெல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்

அடுத்து திராட்சப்பழரசமுள்ள பாத்திரத்தைக் கர்த்தர் எடுத்தார். அது புளிப்பேற்றப்பட்ட திராட்சரசம் (wine) என்பதாக நமக்குக் குறிப்பிடப்படவில்லை; ஆகவே அது புளிப்பேற்றப்பட்ட ஒன்றா (அ) புளிப்பேற்றப்படாத ஒன்றா என்பது கருத்து வேற்றுமைகள்கொண்ட காரியமாகும்; மற்றும் நம்முடைய காலக்கட்டத்தினுடைய சூழ்நிலைகள் மற்றும் கர்த்தருடைய வார்த்தைகளானது கட்டளையிடுபவைகள் யாவற்றையும் பார்க்கும்போது, புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாறு (அ) உலர்ந்த திராட்சரசமானது, அவரது கட்டளைகளின் காரியங்களை நிறைவேற்றுகின்றதாய் இருக்குமென நாம் நம்புகின்றோம். அது ஒருபோதும் புளிப்பேற்றப்பட்ட திராட்சரசமென (wine) குறிப்பிடப்படாமல், (fruit of the vine) திராட்சப்பழரசமுள்ள பாத்திரம் என்று

மாத்திரம் குறிப்பிடப்படுகின்றபடியால், கர்த்தருடைய பின்னடியார்கள் மத்தியில் வாக்குவாதத்திற்கு இடமில்லை. எவ்வகையான திராட்சப்பழரசத்தைப் பயன்படுத்துவது தொடர்புடைய விஷயத்தில் ஒவ்வொருவனும் தன் மனசாட்சியின்படி நடந்து கொள்வதற்குச் சுதந்திரம் உடையவனாய் இருக்கின்றான்; ஆனால் புளிப்பற்ற இரசமே, கர்த்தருடைய பின்னடியார்களிடத்தில், குடிப்பழக்கம் தொடர்புடைய விஷயத்தில் அடங்கியிருக்கின்றதான விருப்பங்களைத் தட்டியெழுப்பும் அபாயமற்ற ஒன்று என்று நாம் விரும்பித் தேர்ந்தெடுக்கின்றோம்.

பாத்திரம் தொடர்புடைய விஷயத்தில், "இது பாவமன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயி ருக்கிறது" என்று கர்த்தர் கூறினார். (பழமைமிக்க கிரேக்க மூலப் பிரதிகளாகிய Sinaitic மற்றும் Vatican மூலப்பிரதிகளில் "புதிய" எனும் வார்த்தையானது தவிர்க்கப்பட்டுள்ளது) உண்மைதான் புதிய உடன்படிக்கையானது, செயலாக்கத்தில் வருவதற்கு முன்னதாக, கிறிஸ்துவினுடைய இரத்தத்தினால் முத்திரையிடப்பட வேண்டும் மற்றும் ஆயிரவருட யுகம் ஆரம்பிப்பது வரையிலும் அது செயலாக்கத்திலும் வரமுடியாது. ஆனால் நமது கர்த்தருடைய மரணத்தினால் முத்திரையிடப்பட்ட இன்னொரு உடன்படிக்கையும் இருக்கின்றது; அது உடன்படிக்கைகள் அனைத்திற்கும் அஸ்திபார உடன்படிக்கை யான பழைய உடன்படிக்கையாகிய, ஆபிரகாமின் உடன்படிக்கையாகும். இப்படியாக இது முத்திரிக்கப்படும் என்பது ஆபிரகாமினுடைய கரங்களினாலான ஈசாக்கின் உருவகமான மரணத்திலும், மரணத்திலிருந்துள்ள ஈசாக்கின் உருவகமான உயிர்த்தெழுதலிலும், நிழலான விதத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஈசாக்கு நமது கர்த்தராகிய இயேசுவை அடையாளப்படுத்துகின்றார் என்று அப்போஸ்தலன் நமக்கு உறுதிப்படுத்தி, "சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்து - வாக்குத்தத்த உடன்படிக்கையின் - பிள்ளைகளாய் இருக்கிறோம்" என்றும் கூறுகின்றார் (கலாத்தியர் 4:28).

இப்படியாக நமது கர்த்தருடைய வார்த்தைகளை, அவர் முத்திரிக்கின்றதான (அ) உறுதிப்படுத்துகின்றதான ஆபிரகாமின் உடன்படிக்கைக்குப் பொருத்திப் பார்க்கும்போது, அவரது மரணத்தின் மூலமாகவே அவர் அந்த உடன்படிக்கைக்கு, மற்றும் பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதற்கான அதன் மகிமையான ஏற்பாடுகள் அனைத்திற்கும் சுதந்திரவாளியானார் என்று நாம் காண்கின்றோம். இந்தக் கோணத்தில் பார்க்கும்போது, தம்முடைய பின்னடியார்களிடத்தில், "இது என்னுடைய பாத்திரமாயிருக்கிறது; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்று இயேசு கூறிய வார்த்தைகளுக்கு விசேஷித்த அர்த்தமும், அழுத்தமும் இருப்பதை நாம் காண்கின்றோம். இப்படியாகக் கர்த்தருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கான அழைப்பு என்பது, இந்தச் சுவிசேஷயுகத்தின் தெரிந்துகொள்ளப்பட்டதான சபையானது, பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படுதல் என்பதான ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தினுடைய நிறைவேறுதலுக்குரிய தெய்வீக வழிவகையாகிய இராஜ்யத்தின் வரவிருக்கும் மகிமைகளில் அவரோடுகூடப் பங்கடையத்தக்கதாக, அவரோடுகூட அவரது பாடு மற்றும் மரணம் எனும் பாத்திரத்தில்

பங்கெடுப்பதற்கு, அவரோடுகூடத் தங்கள் ஜீவனை ஒப்புக்கொடுப்பதற்கு அவர்களுக்கான அழைப்பைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

அப்பம் புசித்தலும், மற்றும் நமது கர்த்தருடைய மரணத்தின் மூலமாகவும், அதை ஏற்றுக்கொள்வதின் மூலமாகவுமுள்ள நீதிமானாக்கப்படுதலில் பங்கெடுத்தலும், முழு உலகத்திற்கும் அவசியமாகக் காணப்பட்டாலும், அதாவது நமது கர்த்தருடைய பலியினால் வாங்கப்பட்டதான திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களை முழு உலகமும் பெற்றுக்கொள்வதற்கு அவசியமானதாகக் காணப்பட்டாலும், பாத்திரமானது உலகத்திற்கானதாயிராமல், மாறாக சபைக்கு மாத்திரமானதாக, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமானதாய் இருக்கின்றது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" - நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள் என்பது மாத்திரமல்லாமல், நீங்களெல்லாரும், முழுவதையும் பானம் பண்ணுங்கள் - மீதி வைக்க வேண்டாம். இனிவரும் யுகத்திற்கென்று கிறிஸ்துவின் பாடுகளில் எதுவும் மீதி வைத்து வைக்கப்பட்டிருப்பதில்லை; நீதியினிமித்தமாகப் பாடுபடுதல்கள் எதுவும் அக்காலத்தில் உலகம் அனுபவிப்பதில்லை; அக்காலத்தில் பொல்லாப்புச் செய்கைக்காரர்கள் மாத்திரமே பாடுபடுவார்கள். இக்காலத்திலேயே தேவபக்தியாய் நடப்பவர்கள் யாவரும் துன்புறுத்தப்படுவார்கள்; மற்றும் இக்காலத்திலேயே கர்த்தருக்கு உண்மையாய் இருப்பவர்களும், அவருடைய இராஜ்யத்தின் மகிமைகளில் பங்கடைவதற்குப் பாத்திரவான்களாகக் கருதப்படுபவர்களுமாகிய அவரது பின்னடியார்கள், அவரது பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். ஆகையால்தான் இவ்விரு சிந்தனைகளையும் சேர்த்து, "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை" என்று கர்த்தர் கூறினார். கர்த்தருடைய சீஷர்களெனவும், அவரது அடிச்சுவடுகளில் நடப்பதற்கெனவும் தற்காலத்தில் அர்ப்பணம் பண்ணுபவர்கள், விசுவாசத்தின் மூலமான நீதிமானாக்கப்படுதலில் மாத்திரமாகப் பங்கெடுக்காமல், அவரது சீஷர்களாயிருப்பதற்கென அனைத்தையும் விட்டுவிடுபவர்களாகிய தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ளதான நித்திய ஜீவனை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், பலியின் மூலமாகப் பாத்திரத்திலும் பங்கெடுக்க வேண்டும்.

## இராஜ்யத்தில் நவமானதாய்ப் பானம்பண்ணுதல்

"இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் இராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லை" என்பதினால் நமது கர்த்தர் வேறான சூழ்நிலைகளின் கீழ், நீண்டதொரு காலத்திற்குப் பின்னர் உள்ள ஒரு புதிய திராட்ச ரசத்தைக் குறிப்பிடுகின்றவராய் இருக்கின்றார். இப்படியாக அவர் முன்பு சில வாரங்களாக அவர்களுக்குப் போதித்து வந்தவைகளை, அவர்களது மனங்களில் நிலைநாட்டினார்;

அதாவது அவர் தற்போது தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கமாட்டார் என்றும், மாறாக தாம் பாடுபடுவார், சிலுவையில் அறையப்படுவார் என்றும், அவர்களும் தம்மோடு பாடுபடுவார்கள் என்றும், பிற்பாடு இராஜ்யமானது ஸ்தாபிக்கப்பட்டு, தாம் மகிமையில் காணப்படுகையில், தம்முடைய சீஷர்களும், தம்மோடுகூடத் தமது சிங்காசனத்தில் காணப்படுவார்கள் என்றும் தாம் போதித்து வந்தவைகளை, அவர்களது மனங்களில் உறுதிப்படுத்தினார். அத்தருணத்தின்போது கொடுக்கப்பட்டதானப் பாடங்கள் மூலமாக, இப்புதிய சிந்தனைகளானது அவர்களது மனங்களில் நன்கு பதியவைக்கப்பட்டது.

தற்காலத்தில் பாத்திரமானது, அவர்களுக்குத் திராட்சப்பழங்களின் நசுக்கப்படுதலை, திராட்சப்பழங்களின் இரசத்தினை, அவர்களது ஆண்டவரின் இரத்தத்தினை, ஜீவன் பலியாக்கப்படுவதை, ஊற்றப்படுவதையும், அவருக்கான ஊழியங்களிலும், அவரது காரணங்களிலும் அவரோடுகூடத் தங்கள் ஜீவியங்களும் பலியாக்கப்படுவதையும்குறித்துப் பேசுகின்றதாய் இருக்கும். ஆனால் பாடுகள், அவமானம் மற்றும் மரணம் எனும் தற்காலத்தினுடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகின்றவர்கள் அனைவரும், இராஜ்யத்தில் கனம், மகிமை, ஆசீர்வாதம் மற்றும் சந்தோஷம் எனும் அவரது பாத்திரத்திலும் பானம்பண்ணுவார்கள் என்ற கருத்தின் மூலமாக இந்தத் தற்காலத்தின் பாடுகளானது, பின்வரும் மகிமையுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. இதே சிந்தனையானது, நம்முடைய மனங்களுக்கு முன்பாகவும் காணப்பட வேண்டும் மற்றும் முற்காலத்திலுள்ள அப்போஸ்தலர்களுக்கு இருந்ததுபோலவே, இந்தச் சிந்தனையானது, இராஜ்யத்தைக் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தமான பாடுகளானது நிறைவு பெறுவதற்கான ஒரு காலப்பகுதியாகவும், மகிமைகள் வருவதற்கும், பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படுவதற்குமான காலப்பகுதியாகவும் அதிகமதிகமாய் நோக்கிடுவதற்கு நமக்கு உதவுகின்றதாய் இருக்கின்றது. இங்கு நமது கர்த்தர் தம்முடைய இராஜ்யத்தை, தம்முடைய இரண்டாம் வருகையுடன் தொடர்புபடுத்துகின்றார் மற்றும் இந்த நவமான திராட்சரசத்தைச் சீஷர்கள் பெந்தெகொஸ்தே நாளிலோ, எருசலேமினுடைய அழிவின் காலத்திலோ, பானம்பண்ணுவார்கள் என்று அவர் எந்தவிதத்திலும் குறிப்பிடவில்லை; "உம்முடைய இராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று அவர்களுக்குக் கற்றுக்கொடுத்த ஜெபத்தில், குறிப்பிட்டிருப்பதான காலத்திலேயல்லாமல், வேறெந்த காலத்திலும் பானம் பண்ணுவார்கள் என்று அவர் எவ்விதத்திலும் குறிப்பிடவில்லை.

இந்த ஒரு சிந்தையே நம்முடைய மனங்களுக்கு முன்பாகவும் காணப்பட வேண்டும்; இராஜ்யத்திற்காகக் காத்திருக்கையில், நாம் நமது கர்த்தருடைய இரண்டாம் வருகைக்காகவும், அவர் வந்து இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காகவும், அதாவது அவரோடுகூடக் காணப்பட்டு, அவரது மகிமையில் பங்கடைய வேண்டியவர்களாகிய

அவரது உண்மையுள்ளவர்களினுடைய உயிர்த்தெழுதலின் மாற்றமடைதலுக்காகவும், மகிமையடைதலுக்காகவும் காத்திருக்கின்றவர்களாய் இருப்போம். "அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்" (1 யோவான் 3:3) என்று அப்போஸ்தலர் கூறியுள்ளதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. இராஜ்யத்தில் நவமானதாய்ப் பானம்பண்ணுதல்குறித்த இந்த நம்பிக்கையை உடையவன், அதாவது மனுக்குலத்தின் உலகத்தைத் தூக்கிவிடுவதற்கான அந்தப் பாக்கியமான வாய்ப்புகளிலும், கனங்களிலும், மகிமைகளிலும் தன் ஆண்டவருடன் பங்கெடுத்தல்குறித்த இந்த நம்பிக்கையை உடையவன், இந்தத் தற்காலத்தினுடைய பலிகளை/தியாகங்களை, சோதனைகளை, பாடுகளை இலேசானதாக, ஆம் சந்தோஷமாய் எடுத்துக்கொள்வான்; ஆம், தான் ஆண்டவரோடுகூட மகிமையடையத்தக்கதாக, ஆண்டவரோடுகூடப் பாடுபடுவதற்கு மகிழ்ச்சியுடன் காணப்படுவான்.

## பாவமன்னிப்புண்டாகும்படி

தேவன் யாருக்குமே தண்டனை வழங்காமல், பாவங்களை மன்னிப்பார் என்று மனிதர்கள் போதிப்பது என்பது எங்களைப் பொறுத்தமட்டில் வீணானதேயாகும். கிறிஸ்து பாவிகளுக்கான மீட்கும்பொருள் இல்லையென்றும், தேவன் நீதியுள்ளவராகவும், பாவிகளை நீதிமானாக்குகிறவருமாகவும் இருக்கும்படிக்கும், நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படிக்கும் அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக நீதியுள்ளவராய்க் கிறிஸ்து மரிப்பதற்கு அவசியமில்லை என்றும் மனிதர்கள் வலியுறுத்திக் கூறுவதும் வீணானதேயாகும். உலகத்தை இரட்சிப்பதற்கான வார்த்தைகளை உடையவரான இயேசு, ஒரு மாபெரும் போதகராக இருப்பது போதுமானது என்று மனிதர்கள் வலியுறுத்திக் கூறுவதும் வீணானதேயாகும். இவ்விடத்திலும், மற்ற இடங்களிலும் இடம் பெறுகின்றதான ஆண்டவருடைய வார்த்தைகளுக்கும், அப்போஸ்தலர்கள் அனைவரின் சாட்சியங்களுக்கும் இசைவான நம்முடைய பதில் என்னவெனில்: கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரிப்பது என்பது அவசியமாகும் மற்றும் தெய்வீக ஏற்பாட்டின் மூலமாக அவர் நம்முடைய தண்டனையை ஏற்றுக்கொண்டதன் வாயிலாகவே அல்லாமல், மற்றபடி தெய்வீக நீதியினால் நம்முடைய பாவங்களானது ஒருபோதும் மன்னிக்கப்பட்டிருந்திருக்காது. ஆகையால் அநேகருக்குப் பாவமன்னிப்பு உண்டாகும்படிக்கு நமது கர்த்தருடைய இரத்தம் சிந்தப்பட்டது என்பது நமக்கு மிகவும் விலையேறப்பெற்றக் கருத்தாய் இருக்கிறது. இன்னுமாக அவரோடுகூட அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்களென அவரோடு மிகவும் நெருங்கிக் காணப்படுவதற்கான சிலாக்கியம் நம்முடையதாய்

இருக்கின்றது என்பதும், அவரது புண்ணியத்தினால் மூடப்படுகின்றதான நம்முடைய சிறு பலிகளானது, தேவனுடைய பார்வையில், உலகத்திற்குரியதான மாபெரும் பாவத்திற்கான பலியின் பாகமாகக் கருதப்படுகின்றது என்பதும், கிறிஸ்துவோடுகூடப் பாடுபடுபவர்களென, நாம் அவரது பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கும், மரணத்திற்குள்ளான அவரது ஞானஸ்நானத்தில் மூழ்குவதற்கும் அனுமதிக்கப்பட் டிருக்கின்றோம் என்பதும் நமக்கு விலையேறப்பெற்ற சிந்தனைகளாக இருக்கின்றன.

மனிதன் தேவனுடைய சாயலிலிருந்து, பாவம் மற்றும் மரணத்திற்குள்ளாக விழுந்துவிட்டான் என்று சொல்வதற்குப்பதிலாக, அவன் மிருக நிலையிலிருந்து, இப்போது அவன் காணப்படுகின்றதான நிலைமைக்குப் படிப்படியாய்ப் பரிணாம வளர்ச்சியடைந்துக்கொண்டிருக்கின்றான் என்று நம்மிடம் பரிணாமக் கொள்கைக் காரர்களும், விமர்சகர்களும் கூறுவதும் வீணானதே. இவர்களை நாம் நம்புவதில்லை. விழுகை சம்பவித்தது என்பதும், இதன் காரணமாக மீட்பின் வேலை அவசியமானது என்பதும், முழு உலகத்திற்கான பாவங்களுக்கான நிவாரணமாகுவதற் குரிய சிலாக்கியம் பெற்றவரும், அதிகாரம் கொடுக்கப்பட்டவருமான தேவனுடைய கனம்பொருந்திய ஊழியக்காரன் கிறிஸ்து ஆவார் என்பதும், தம்மைப் பலிச்செலுத்தினதில் அவர் இந்தப் பாவநிவாரண வேலையை ஆரம்பித்தார் என்பதும், அவரது சரீரத்தினுடைய அங்கத்தினர்களுடைய பலிச்செலுத்துதலின் மூலமாக இந்தச் சுவிசேஷயுகத்தில் அவ்வேலையை அவர் நடத்தி வருகின்றார் என்பதும், அவர் சீக்கிரமாய் அந்த வேலையை முடித்துவிட்டு, அவரது மகிமைப்படுத்தப்பட்ட அங்கத்தினர்கள் அனைவருடன் ஆயிரவருட யுகத்தின்போது, அந்த மீட்பின் வேலையினுடைய ஆசீர்வாதங்களை உலகத்திற்குப் பகிர்ந்துகொடுத்து, அனைவரும் சத்தியம் மற்றும் தேவனுடைய அன்புகுறித்த அறிவிற்குள் கொண்டுவரப்படுவார்கள் என்பதும், நம்மை அன்புகூர்ந்து, நம்மைத் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கினதின் மூலம் நிறைவேற்றப்படுபவைகளின் உயரமும், ஆழமும், நீளமும், அகலமும் அளவிடமுடியாதவைகளாய் இருக்கும் என்பதுமான தெய்வீக ஏவுதலினால் உண்டான சாட்சிகளையே நாம் பற்றிக்கொண்டவர்களாய் இருக்கின்றோம்.

## என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்

இந்த நினைவுகூருதலின் இராப்போஜனத்தை அப்போஸ்தலர் குறிப்பிடுகை யில், அவர் ஆண்டவருடைய வார்த்தைகளாகிய, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்பதைக் குறிப்பிட்டு, பின்னர் "நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம், கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்றும் குறிப்பிடுகின்றார் (1 கொரிந்தியர் 11:24-26). நம்மை அன்புகூர்ந்து, நம்மை வாங்கினவரோடுகூட நாம் பங்கடையப் போகின்றதான கனங்கள், மகிமை மற்றும் சந்தோஷம் எனும் நவமான திராட்சரசத்துடன் நாம் கொண்டாடப்போகின்றதான இராஜ்யத்தின் காலம் வருவதுவரையிலும் இந்த மாபெரும்

செய்கையை நாம் நினைவுகூர வேண்டும் என்பதே இவ்வசனத்தில் இடம்பெறும் கருத்தாகும். அப்போஸ்தலன் (parousia) பரோஷியாவரை, அதாவது தம்முடைய ஊழியக்காரர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும், அவர்களுக்குப் பலனளிக்கிறதற்கு மெனக் கர்த்தர் பிரசன்னமாகும் காலம்வரை என்ற அர்த்தத்தில் குறிப்பிடாமல், மாறாக அனைவரும் சேர்க்கப்பட்டு, இப்படியாக இராஜ்ய வகுப்பார் அனைவரும் நிறுவப்பட்டு, மகிமைப்படுத்தப்படுவதுவரை என்ற அர்த்தத்திலேயே குறிப்பிட்டுள்ளார்.

அதே அப்போஸ்தலன், அதே நிருபத்தில், சபை ஒருவரோடொருவரும், கர்த்தரோடும் கொண்டிருக்கும் ஐக்கியம், ஒருமைக்குறித்த கருத்தினை வலியுறுத்துகின்றார். அவர் கூறியுள்ளதாவது: " நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்;" "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம். உடல் ஒன்றே; உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கிறார்" (1 கொரிந்தியர் 10:16, 17; 12:12; KJV & திருவிவிலியம்). தேவனுடைய கண்ணோட்டத்தில், தெரிந்துகொள்ளப்பட்ட தலை மற்றும் அவரது சரீரத்தின் தெரிந்துகொள்ளப்பட்ட அங்கத்தினர்களை உள்ளடக்கின ஒரு மாபெரும் மேசியா காணப்படுகின்றார் என்பதே கருத்தாய் இருக்கின்றது. இவர்கள் அனைவரும் ஒரே அப்பமென, தேவனுடைய கண்ணோட்டத்தில் உலகம் நித்திய ஜீவன் பெறுவதற்கான அப்பமாய்க் காணப்படுகின்றனர் மற்றும் இந்த அடையாளம் நிறைவேற வேண்டுமெனில் அவரது மகிமைக்குள் பிரவேசிப்பதற்கு முன்னதாக ஒவ்வொருவரும் மற்றும் அனைவரும் பிட்கப்பட வேண்டும் மற்றும் ஒவ்வொருவரும், அனைவரும் கிறிஸ்துவின் பாடு மற்றும் மரணம் எனும் அவரது பாத்திரத்தில் பங்கெடுக்க வேண்டும். இந்தப் பாடுகள் அனைத்தும் நிறைவேறின பிற்பாடே உலகத்தின் விஷயத்திலுள்ள புதிய யுகத்திற்கான, புதிய நாளுக்கான, சபிக்கப்படுதலுக்குப் பதிலான ஆசீர்வாதத்தின் நாளுக்கான, மரிப்பதற்குப்பதிலான திரும்பக்கொடுத்தலின் நாளுக்கான, விழுகைக்குப் பதிலான தூக்கிவிடுதலின் நாளுக்கான, காலம்/வேளை வருகின்றதாய் இருக்கும்.

# நினைவுகூருதலான பஸ்கா இராப்போஜனம்

யூதர்களுடைய காலக்கணக்கீட்டின்படி நினைவுகூருதல் இராப்போஜனத்தின் ஆண்டுநிறைவு நாளானது, இந்த வருடம் ஏப்ரல் 22-ஆம் தேதி, வெள்ளி மாலை 6 மணிக்குமேல் இடம்பெறுகின்றதாய் இருக்கின்றது. நாம் யூதர்களின் காலக்கணக் கீட்டின்படி கைக்கொள்வதுபோன்றே, ஆதியில் கிறிஸ்தவ சபையும் இந்த நினைவுகூருதலின் இராப்போஜனத்தைக் கைக்கொண்டுவந்தார்கள்; ஆனால் இதற்கான தேதிகளை மிகவும் சீராக பெற்றுக்கொள்ளத்தக்கதாகவும் மற்றும் யூதருடைய மாதிரியின்படி பின்பற்றும் எண்ணத்திலிருந்து கிறிஸ்தவர்களுடைய மனங்களைத் திசைத்திருப்பத்தக்கதாகவும் தேதியினை கணக்கடும் முறைமை கொஞ்சம் மாற்றப்பட்டது. யூதருடைய காலக்கணக்கீட்டுமுறைமை பஸ்காவானது, வாரத்தினுடைய எந்தக் கிழமையிலும் வருவதற்கு அனுமதித்ததாய் இருந்தது. ஆனால் காலக்கணக்கீட்டுமுறைமையின் மாற்றமானது - நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டுநிறைவு நாளானது எப்போதும் வெள்ளிக்கிழமைகளில் வரப் பண்ணிற்று; இது "புனித வெள்ளி" என்று அழைக்கப்பட்டது மற்றும் அவருடைய உயிர்த்தெழுதலுக்கான ஆண்டுநிறைவு நாளானது எப்போதும் "மூன்று நாளைக்குப்" பிற்பாடு, ஞாயிற்றுக்கிழமைகளில் வரப்பண்ணிற்று; இது பிற்பாடு ஈஸ்டர் ஞாயிறு என்று அழைக்கப்பட்டது. யூதர்களுடைய காலக்கணக்கீடுமுறைமையானது, சந்திரன் மற்றும் சூரியன் அடிப்படையிலாகும். ஆகவே அவர்களுடைய பெரும்பான்மையான வருடங்கள் பன்னிரண்டு மாதங்களை உடையதாக இருந்தது மற்றும் அவ்வப்போது சில வருடங்கள் பதிமூன்று மாதங்களை உடையதாக இருந்தது. யூதர்களுடைய காலக்கணக்கீடு முறைமையின்படி, வசந்த காலத்தின்/இளவேனிற் சம இரவு பகல் நாளைத் தொடர்ந்துவரும் முதல் அமாவாசையிலிருந்து 14 நாட்களுக்குப் பின்வரும் பௌர்ணமி இடம்பெறும் நாளானது, பஸ்கா தேதியாகக் காணப்படுகின்றது. பிற்பாடு - இளவேனிற் சம இரவு பகல் நாளைக்கு முன்னதாகவே சந்திரனானது அமாவாசை நிலையில் காணப்படுகின்றபோதிலும், சம இரவு பகல் நாளைத் தொடரும் முதல் பௌர்ணமிக்குச் சமீபமான வெள்ளிக்கிழமையினைக் கிறிஸ்தவ சபைகள் தெரிந்துகொண்டனர் - இதுவே இவ்வருடம் கத்தோலிக்கரின் கணக்குப்படி புனித வெள்ளியானது மார்ச் 25-ஆம் தேதியிலும், யூத கணக்கிடுதலின்படி, சரியான தேதி ஏப்ரல் 23-ஆம் தேதியாக இடம்பெறுவதற்கும் இடையிலான வித்தியாசத்திற்கான காரணமாகும். நாம் நினைவுகூருதலை முந்தின மாலையில் ஆசரிக்கின்றோம். நமது கர்த்தருடைய மரணத்திற்கான நாளோ (அ) வேளையோ அல்ல, அவரது மரணமே பிரதானமாய் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இந்த வருடம் இத்தகையதொரு நினைவுகூருதலானது ஏப்ரல் 22-ஆம் தேதி, வெள்ளி மாலை, 6 மணிக்குமேல் (நீசான் 14-ஆம் தேதியில்) ஆசரிக்கப்படும். அடுத்த நாள், ஏப்ரல் 23-ஆம் தேதி, சனி, பிற்பகல் 3 மணியானது, நமது கர்த்தருடைய மரணத்திற்கு இணையான வேளையாகும்; யூதருடைய பஸ்கா பண்டிகையானது மூன்று மணி நேரத்திற்குப் பின்னர் துவங்குகின்றதாய் இருக்கின்றது. அனைவருடைய மனங்களைத் திருப்திப் படுத்திடவே, இவ்வளவு விளக்கம் கொடுக்கப்படுகின்றது.

# நாம் எதை நினைவுகூருகின்றோம்?

நாம், நான்கு மாபெரும் காரியங்களை நினைவுகூருகின்றோம். அவை பின்வருமாறு:

(1) பஸ்கா ஆட்டுக்குட்டியாக நமது கர்த்தர் மரித்த விஷயம்.

(2)அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற பின்னடியார்களும், அவருடைய பாத்திரத்தில் பங்காளிகளுமானவர்களுமாகிய நமக்குக் கிறிஸ்துவின் மரணத்திலும், கிறிஸ்துவின் பாடுகளிலும் அவரோடுகூட உள்ள நமக்கான உறவு அல்லது பங்கு பற்றின விஷயம்.

(3)தற்கால இரவில் நிகழும் இந்தக் கடந்துபோகுதலுக்குப்பின் விரைவாக வரப்போகின்ற மாபெரும் விடுதலையை எதிர்பார்த்தவர்களாக இப்பஸ்காவை நாம் அநுசரிக்கின்றோம். விடுதலையானது முதலாவதாகக் கடந்துபோகப்பட்டவர்களாகிய சபைக்கும் - "சிறு மந்தைக்கும்" மற்றும் திரள்கூட்டத்தினருக்கும், அதாவது நிஜமான இராஜரிக ஆசாரியக் கூட்டத்தாருக்கும் மற்றும் லேவி கோத்திரத்தாருக்கும் கடந்துவரும். இவர்களின் விடுதலையானது, காலையில், அதாவது, உயிர்த்தெழுதலின் காலையில், அதாவது ஆயிரவருடத்தின் காலைவேளையில் சம்பவிக்கும்.

(4)சபையைக் கடந்துபோகுதலுக்குப்பிற்பாடு தொடரும், "கொழுத்த பதார்த்தங்களின் மாபெரும் விருந்தையும்" நாம் நினைவுகூர்ந்து எதிர்பார்க்கின்றோம். அதாவது, கடந்துபோகப்பட்டவர்கள் தங்கள் கர்த்தரோடு சேர்ந்து அவருடைய பரலோக இராஜ்யத்தில் மாபெரும் நிஜமான தீர்க்கதரிசியாகவும், பூமி முழுவதற்கும் ஆசாரியராகவும், நீதிபதியாகவும், மத்தியஸ்தராகவும், இராஜாவாகவும் இருந்து, தற்காலத்தில் தாங்கள் பங்கடைவதற்கென அவர் அனுமதித்ததும் மற்றும் தங்களைப் பாத்திரவான்களாக்குவதற்கெனத் தங்களுக்குத் தரிப்பிக்கப்பட்டதுமான அவருடைய அதே இரத்தத்தின் புண்ணியத்தின் (தகுதியின்) மூலம் இவர்கள் மனுக்குலத்தைச் சீர்தூக்கி ஆசீர்வதிக்கப்போகும் காரியங்களையும் நாம் நினைவுகூர்ந்து எதிர்பார்க்கின்றோம்.

இந்த நினைவுகூருதலிலிருந்து நாம் மாபெரும் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், மேற்பார்த்த அவ்விஷயங்களைத் தனித்தனியேயும், தெளிவாயும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

"தேவனுடைய ஆட்டுக்குட்டியென" இயேசுவை நாம் பார்க்கும்போது, அவர் கறைதிறையற்றவர் - "பரிசுத்தர், குற்றமற்றவர், மாசில்லாதவர், பாவிகளுக்கு விலகினவர், என்று அறிந்துகொள்கின்றோம். (எபிரெயர் 7:26) அவர் எப்படி, "ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்" என்றும், எப்படி "மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்" என்றும், நாம் அறிந்துகொள்கின்றோம் (அப்போஸ்தலர் 8:32). தம்மை அழிக்க நோக்கம் கொண்டிருப்பவர்களை இயேசு தமது பேச்சினாலேயே எதிர்த்திருக்க முடியும். எந்த மனுஷனும் அவரிடத்திலிருந்து

அவருடைய ஜீவனை வலுக்கட்டாயமாக எடுத்துக்கொள்ளவில்லை என்றும், அவர்தாமே விரும்பி முன்வந்து தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார் என்றும் உள்ள காரியங்களை நமக்கு உறுதிபடுத்திக் காட்டியுள்ளார். இயேசு, பிதாவின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதற்கெனத் தமது ஜீவனை ஒப்புக்கொடுக்கவில்லை. ஏனெனில் நீதியானது, பலிச்செலுத்த வேண்டுமென்று கேட்கவில்லை. மாறாக இயேசு, பிதாவின் சித்தத்திற்கு இசைவாக, "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச்செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" என்று கூறி தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தவராகக் காணப்பட்டார் (சங்கீதம் 40:8). இந்த ஒரு கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, தமது பலியின் புண்ணியம் முதலாவது, தமது பின்னடியார்களுக்கான நன்மைக்காகவும், பின்னர் சகல ஜனங்களையும் ஆசீர்வதிப்பதற்காகவும் உதவும் என்பது தெய்வீகத் திட்டமாக இருப்பதை முன்னறிந்திருந்த நிலையில், நமது மீட்பர் தம்மை தப்புவித்துக் கொள்ளாமல், தம்மை மனபூர்வமாய் ஒப்புக்கொடுத்ததினிமித்தம் கிறிஸ்தவ விசுவாசி அதிகமாய்க் களிகூரக்கடவன். ஆகவே, பிட்கப்பட்ட புளிப்பில்லாத அப்பத்தில் நாம் பங்குகொள்ளும்போது, தேவனுடைய ஏற்றவேளையில் மனுக்குலம் முழுவதற்குமான ஈடுபலியாக தம்மையே ஒப்புக்கொடுத்தவரின் தூய்மையையும், பாவமற்ற தன்மையையும் நாம் நினைவுகூருகின்றோம். இந்தக் கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்க்கையில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டுக் காணப்படும் நமது இனத்தை, தெய்வீகப் பிரமாணத்தை மீறாமல் ஜீவனுக்குள் சீர்ப்பொருந்துவதற்கு இயேசுவின் மரணம் அவசியமாய் இருப்பதை அவருடைய சிந்தப்பட்ட இரத்தம் சுட்டிக்காட்டுகின்றது என்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது. இங்குச் சற்று நேரம் - கர்த்தராகிய இயேசு கிறஸ்துவின் அன்பை மாத்திரமல்லாமல், இத்திட்டத்தைத் திட்டமிட்ட பிதாவின் அன்பையும் மற்றும் இப்படியாக மாதிரியாக்கப்பட்ட அவருடைய நீதியையும் மற்றும் இப்படியான ஏற்பாடு செய்வதிலுள்ள அவருடைய ஞானத்தையும் நம்முடைய இருதயங்களில் நாம் நிதானித்து உணர முற்படுகின்றோம்; இன்னுமாக, இந்த ஏற்பாடுகளின் சகல மகிமையான அம்சங்களும் மற்றும் நாம் நினைவுகூரும் அனைத்து வாக்குத்தத்தங்களும் முழுமையாய் நிறைவேறும்போது விளங்கப்போகும் தேவனுடைய வல்லமையையும் நமது விசுவாசமானது கிரகித்துக்கொள்ள வேண்டும்.

முதலாம் கருத்துபோன்று, இரண்டாம் கருத்தும் நமக்கு முக்கியமானதாய் உள்ளது. மீட்பருடைய பலி மூலம் கடந்துவரும் முதல் ஆசீர்வாதமானது, இந்தச் சுவிசேஷ யுகத்தில் கேட்கின்ற செவிகளையுடையவர்களுக்கும், ஏற்றுக் கொள்ளத்தக்கதான இருதயமுடையவர்களுக்கும் அருளப்பட்டுள்ளது. இந்த ஆசீர்வாதமானது, மிகவும் பிரமிக்கத்தக்கதாகும். மேலும் இந்த ஆசீர்வாதமானது, பாவத்திலிருந்து திரும்பி விசுவாசம் மூலம் கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொண்டு, முழு அர்ப்பணிப்புடன் தங்களுடைய சரீரங்களை

ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோம் என்று வாக்களிக்கும் மனுக்குலத்தின் மத்தியிலுள்ள சிலருக்கு இன்னும் அதிகமான ஆசீர்வாதத்திற்குள் வழி நடத்துகின்றது. இவர்கள் அனைவருக்கும் - இந்தச் சுவிசேஷயுகத்தில் தெரிந்துகொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை நிறைவடைவது வரையிலும் - இவர்கள் மாம்சத்தில் அவரோடுகூடப்பாடுபட்டு, இப்பொழுது அவரோடுகூட ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதலிலும், பின்னர் உயிர்த்தெழுதலின் மூலம் ஆவிக்குரிய தளத்தில் ஏற்படும் பிறப்பிலும் பங்கடையத்தக்கதாக, இவர்களுடைய பலிகள் தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்படத்தக்கதாக மீட்பர் தம்முடைய பலியின் புண்ணியத்தை இவர்கள்மேல் தரித்திடுவார். இவ்விதமாக தேவனுக்கும், மனுஷருக்கும் இடையே மத்தியஸ்தராக அவர் தம் ஆயிரவருட இராஜ்யத்தில் காணப்படுகையில், இவர்கள் அவருடைய மகிமையடைந்த "அங்கங்களாக" அவரோடுகூடக் காணப்படுவார்கள். இங்கு மனுஷர் என்று குறிப்பிடப்படும் வார்த்தையானது, ஆவிக்குரிய தளத்தில் பரிசுத்த ஆவியினால், புதிய சிருஷ்டிகளாக ஜெநிப்பிக்கப்படாத அனைவரையும் உள்ளடக்குகின்றது.

நாம் அப்பத்தில் பங்கெடுக்கும் காரியமானது, மனுஷனாகிய இயேசுவின் மாம்சீக பூரணத்திலுள்ள நம்முடைய பங்கெடுத்தலை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. விசுவாசத்தின் வாயிலாகவே நாம் அவருடைய பூரணத்தில் பங்கடைகிறோமே ஒழிய நிஜமாய் அல்ல. அவர் நமக்கு மனித பூரணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை; மாறாக நாம் ஜீவபலியாக ஒப்புக்கொடுப்போம் என்று தேவனுக்கு உடன்படிக்கைப் பண்ணியுள்ள நம்முடைய மாம்சீக சரீரங்களின் பூரணமற்றத் தன்மைகளும், குறைகளும் தெய்வீகப் பார்வைக்கு முன் மூடப்பட்டுக் காணப்படத்தக்கதாக இயேசுவின் நீதியும், அவருடைய பூரணமும் நமக்குத் தரிக்கப்பட்டதாக மாத்திரமே உள்ளது.

மாபெரும் பரிந்து பேசுபவராக, நமக்குக் காணப்படும் நம் மீட்பரானவர், நம்முடைய பலியின் மீது, தமது பலியினுடைய புண்ணியத்தை (தகுதியை) தரிப்பிக்கும்போது, பிதாவானவர் அதை ஏற்றுக்கொண்டு, பலிச்செலுத்தும் அந்த நபரைக் கிறிஸ்துவின் சரீர அங்கத்திற்குரிய புதிய சுபாவத்திற்குள் ஜெநிப்பிக்கின்றார். நாம் உடனடியாக புதிய சுபாவத்தில் பூரணமடையாததாலும், அழியக்கூடிய மாம்சத்திலேயே இன்னமும் காணப்படுவதினாலும், பிதாவானவர் நம்மை தத்தெடுத்ததாக - நீதிமானாக்கப்பட்ட நம்முடைய மாம்ச நிலையை, அதன் சகல அம்சங்களுடனும் தத்தெடுத்ததாக ஒரு கோணத்தில் சொல்லலாம்.

யார் இப்படியாக கிறிஸ்துவின் புண்ணித்தில் பங்கெடுத்துள்ளார்களோ மற்றும் யாருடைய பலி தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோ, அப்படியானவர்கள் மாத்திரமே, அவர்கள் பண்ணியுள்ள பலியின் உடன்படிக்கைக்குப் பொருத்தமாக அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணவும், தினந்தோறும் அவருடைய மரணத்திற்குள்ளாக மூழ்கவும் வேண்டுமெனக் கட்டளைப் பெற்றுள்ளனர்.

## புதிய உடன்படிக்கைக்கான என்னுடைய பாத்திரம்

பாத்திரம் நம்முடையதாயிராமல், கர்த்தருடையதாய் இருக்கின்றது. இரத்தத்தினால் அடையாளப்படுத்தப்படும் பலி அல்லது ஜீவன் நம்முடையதாயிராமல், மீட்பருடையதாயிருக்கின்றது. அதைப் பருகுவதும், அதில் பங்கெடுப்பதற்கும் மாத்திரமே நமக்கான சிலாக்கியமாய் இருக்கின்றது. தேவனுக்கும், இஸ்ரயேலுக்கும் இடையிலான மற்றும் இஸ்ரயேலர்கள் வழியாக சகல மனுக்குலத்திற்மான புதிய உடன்படிக்கையானது, நமக்கு வாய்ப்பு அளிக்கப்படாமலேயே, இயேசுவின் இரத்தத்தினால் முத்திரையிடப்பட்டிருக்க முடியும். கிறிஸ்துவின் பாடுகளும், மரணமுமாகிய பாத்திரத்தில் பங்குகொள்வதற்கென நமக்கருளப்பட்டுள்ள சிலாக்கியமானது, கிறிஸ்துவின் மரணமும், பாடுகளும் போதுமானதாய் இல்லையென்றோ அல்லது நம்மால் எதையாகிலும் கூட்டிச்சேர்க்கக்கூடும் என்றோ சுட்டிக்காட்டுவதில்லை. மாறாக அது தேவனுடைய தயவை விவரிக்கின்றது. அதாவது, ஒருவேளை நமக்கும் அவருடைய ஆவி காணப்படுமாயின் நம்மையும் ஏற்றுக்கொண்டு, நமது கர்த்தரும், இரட்சகருமானவருடன் நம்மை உடன்சுதந்தரர்களாக ஆக்க தேவன் சித்தமுள்ளவராக இருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. கிறிஸ்துவைப் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு - சிறிய அம்சங்களைக்கூட விட்டுவிடாமல் நிறைவேற்றுவதற்கு மற்றும் மரணம்வரையிலும் நிறைவேற்றுவதற்கு அவரை இயக்கின வண்ணமாக அவருக்குள் காணப்பட்ட ஆவி, பயபக்தியின் ஆவியாகும். இதே ஆவிதான், இன்று கிறிஸ்துவின் மணவாட்டியினுடைய அங்கங்களாக, அவருடைய சரீரமாக, பரலோக மகிமைக்குரிய அவருடைய சபையாக பிதா ஏற்றுக்கொள்ளும் அனைவரிடமும் காணப்பட வேண்டும். ஆகவேதான் மீட்பர் தம்மோடுகூட, தம்முடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கும் அனைவரும் சுயத்தை வெறுத்தல் மற்றும் சுயத்தைப் பலிச்செலுத்துதல் என்னும் தம்முடைய பாத்திரத்தில் பானம்பண்ண வேண்டும் என்றும், தம்முடைய மரணத்திற்குள்ளான ஸ்நானம் பண்ணவேண்டும் என்றும் இவ்விஷயங்களைக்குறித்து திட்டவட்டமாய்த் தெரிவித்துள்ளார்.

இக்காரியங்களைக்குறித்துதான் பரிசுத்தவானாகிய பவுலும் சுட்டிக் காட்டுகின்றார். அதாவது, நமது கர்த்தர்தான் வானத்திலிருந்திறங்கி வந்த மெய்யான அப்பமாக இருக்கின்றார் என்றும், இந்த ஒரே அப்பத்தில் நாம் பாகங்களாக இருப்பதற்கே நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்றும், இந்த ஒரே அப்பம்தான் இறுதியில் ஆயிரவருட யுகத்தின்போது, உலகத்திற்கான ஜீவ அப்பமாகக் காணப்படும் என்றும் சுட்டிக்காட்டுகின்றார். நாம் கிறிஸ்துவில் பங்கெடுப்பது மாத்திரமல்லாமல், பிதாவின் திட்டத்தின்படி அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நாம், பெரிய அப்பத்தில், அதாவது திரளான கிறிஸ்துக்களில் நமது கர்த்தரோடுகூட அங்கங்களாகவும் ஆகின்றோம். ஆகவேதான் நாம் ஒன்றுக்கூடி நினைவுகூருதலை அநுசரிக்கும் வண்ணமாக இந்த அப்பத்தைப் பிட்டுக்கொள்வதின் மூலம், நாம் நம்முடைய கர்த்தருடைய பிட்கப்பட்ட சரீரத்தை மாத்திரம் அடையாளம் காட்டாமல், சபையின் பிட்கப்படுதலையும் மற்றும் அந்தச் சபையின் அங்கத்தினர்களென நம்முடைய சொந்த

பிட்கப்படுதலையும் அல்லது மரித்துக்கொண்டே இருப்பதையும்கூட அடையாளம் காட்டுகின்றோம். "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (1 கொரிந்தியர் 10:16-17).

திராட்சப்பழரசமுடைய பாத்திரமானது, நமது கர்த்தருடைய பலியாக்கப்பட்ட ஜீவனைக் குறிக்கின்றதாயிருக்கின்றது. பாத்திரம் இந்த அர்த்தத்தை மாத்திரம் உடையதாய் இராமல், நாம் அவருடைய சீஷர்களானபோது, அவருடைய பாத்திரத்தில் பங்கடைவதற்கான அவருடைய அழைப்பை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம் என்பதையும் நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது. நமக்குப் பாத்திரம் என்பது, நாம் கர்த்தருடைய பிரதிநிதிகளாக மரணம்வரையிலும் சுயத்தைப் பலிச் செலுத்தும் விஷயத்தில் உண்மையாய் இருப்போமென்பதைக் குறிக்கின்றதாயிருக் கின்றது. "(நமக்கு அருளப்பட்டதான கற்பனைப்பண்ணிப் பார்க்கமுடியாத மாதயவுக்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்லி) கடவுளைப்போற்றி திருவிருந்து கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலின் பங்குகொள்ளுதல் அல்லவா!" (1 கொரிந்தியர் 10:16 திருவிவிலியம்). பாத்திரம் நமது கர்த்தருடைய பலியையும், உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே இயேசுவோடு நம்மையும் முன்னறிந்திருந்த பிதாவினால், ஏற்பாடு பண்ணிவைக்கப் பட்டிருந்த திட்டத்திற்கு இசைவாகவும், மற்றும் கர்த்தருடைய அழைப்பினிமித்த மாகவும், அவருடைய பலியில் அவரோடுகூட நமக்கு இருக்கும் பங்கையும் அடையாளப்படுத்துகின்றது அல்லவா?

ஓ! இக்கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்பொழுது, இராப்போஜனத்தின் பாத்திரம் எத்துணை ஆழமான அர்த்தமுடையதாயிருக்கின்றது! ஓ! இப்பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் எவ்வளவாய் இருதயம் ஆராயப்பட வேண்டும்! இந்த இராப்போஜனப் பாத்திரம் பாவத்திலிருந்து திரும்புவதை மாத்திரம் அடையாளப் படுத்தாமல், இயேசுவின்மேல் நம்பிக்கை வைப்பதை மாத்திரம் அடையாளப் படுத்தாமல், தப்பான காரியங்களுக்குப்பதிலாக சரியான காரியங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதை மாத்திரம் அடையாளப்படுத்தாமல், பிரதானமாக விசுவாசிகளின் சரீரங்கள் தேவனுக்கு ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கப்படுவதையே குறிக்கின்றதாய் இருக்கின்றது; இந்தப் பலிகள் இயேசுவினுடைய புண்ணியம் தரிபிக்கப்படுவதினால், பரிசுத்தமுள்ளவைகள் என்று கருதப்படுகின்றன; மேலும் தேவன் இவ்விதமாய் பலிச்செலுத்துபவர்களைப் புதிய சிருஷ்டிகளாக, புதிய சுபாவத்திற்குள் ஜெநிப்பித்து, இவர்களுடைய இந்தப் பலிகளை ஏற்றுக்கொள்கின்றார்! (ரோமர் 12:1)

யாரொருவர் இவைகளின் அர்த்தம் அனைத்தையும் அறிந்திருந்தபோதிலும், பயபக்தி இல்லாமலும், சர்வ சாதாரணமாகவும், இந்த அடையாளமான மாம்சத்திலும்,

அடையாளமான இரத்தத்திலும் பங்குகொள்கின்றாரோ அவர் தன் மீதே ஆக்கினையை வருவித்துக்கொள்கின்றார் என்று அப்போஸ்தலர் சுட்டிக்காட்டியிருக்கும் விஷயத்தில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்த இரத்தம் பார்க்கப்படும் கண்ணோட்டம் குறித்துதான் அப்போஸ்தலர், எபிரெயர் 10:29-ஆம் வசனத்தில் பேசியுள்ளார். தங்களைப் பரிசுத்தம்பண்ணின இரத்தத்தை சாதாரணமாய் எண்ணும் சிலரைக்குறித்து - இந்தச் சுவிசேஷ யுகத்தில் நமக்கு இந்தப் பரம அழைப்பைக் கொடுத்திட்டதான கிருபையின் ஆவியை அசட்டைப்பண்ணும் சிலரைக்குறித்து அப்போஸ்தலன் பேசுகின்றார். இப்படிப்பட்டவர்களுக்குத் தேவன் இரண்டாம் மரணத்தை ஏற்பாடு பண்ணியுள்ளார் என்று அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார். தேவனிடம் உண்மையான அர்ப்பணிப்புப் பண்ணாமலும், தங்களுக்கு அருளப்பட்டுள்ள உண்மையான தேவனுடைய கிருபையையும், உண்மையான சிலாக்கியத்தையும், ஒருபோதும் புரிந்துகொள்ளாமலும், சபையில் அங்கங்களாகக் காணப்படுபவர்கள், இரண்டாம் மரணத்திற்குப் பாத்திரமாயிருப் பார்கள் என அப்போஸ்தலர் இவ்வசனத்தில் குறிப்பிடுவதாக நாம் எண்ணிவிடக் கூடாது. மாறாக, இவ்வசனத்தில் அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுபவர்கள், ஒருகாலத்தில் இயேசுவின் மாம்சம் மற்றும் இரத்தம்குறித்த விஷயங்களைத் தெளிவாகப் புரிந்துகொண்டவர்களாக இருந்தார்கள்; இவர்கள் ஒருமுறை பிரகாசிக்கப்பட்டவர்கள்; இவர்கள் தேவனிடத்திற்குக் கிட்டிச்சேருவதற்கென்று விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசம் காரணமாக நீதிமான்களாக்கப் பட்டதோடல்லாமல், இந்த விசுவாசம் மூலமான நீதிமானாக்கப்படுதலின் காரணமாக இவர்கள் பரிசுத்தமுமாக்கப்படுதல் நிலைக்குக் கடந்துபோய், தங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தவர்களுமாய் இருந்தார்கள். தங்களை அர்ப்பணம் பண்ணுகையில், "கிறிஸ்துவின் பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கு" ஒப்புக்கொண்டபோது, தங்களைப் பரிசுத்த ஆவியின் மூலம் ஜெநிப்பித்து, தங்களைப் பரிசுத்தம்பண்ணின (நாம் நினைவுகூரும் பாத்திரத்தை) உடன்படிக்கையின் இரத்தத்தைப் பிற்காலங்களில் சாதாரணமாய் எண்ணினவர்களைக் குறித்தே இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே...

சுவிசேஷத்தின் தற்கால அழைப்பினுடைய நோக்கத்திற்கு இசைவாகவும், தேவனுடைய சித்தமாகவும், விருப்பமாகவும் காணப்படும் நம்முடைய பரிசுத்தமாக்கப்படும் காரியமானது, நாம் அழைக்கப்பட்டபோது, நடைப்பெறுவதில்லை. நாம் பாவத்திலிருந்து திரும்பும்போதும், நடைபெறுவதில்லை. தேவனுடைய சத்தத்திற்கு நாம் செவிசாய்க்க ஆரம்பிக்கும்போதும், நடைபெறுவதில்லை. மாறாக, இவ்விதமான ஆசீர்வாதங்கள் மற்றும் தேவனுடைய இரக்கத்தின், தாக்கத்தின் காரணமாக நாம் முழுமையான அர்ப்பணிப்பின் நிலைக்கு வரும்பொழுது, அதாவது முழுமையான சீஷத்துவத்தின் நிலைக்கும், முழுமையான சரணடையும் நிலைக்கும் வரும்போதும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள், தெய்வீகச் சுபாவம் மற்றும் நம்முடைய கர்த்தரோடுகூட அவருடைய இராஜ்யத்தில் உடன்சுதந்தரர்கள் நிலையை அடைவதற்குமென

நம்முடைய சகல பூமிக்குரிய உரிமைகள் மற்றும் சிலாக்கியங்களை முழுமையாய் பலிச்செலுத்தும் நிலைக்கும் வரும்போதே நடைபெறுகின்றது. "இப்படிப்பட்டதான கிருபைகளை யாராவது அசட்டைப்பண்ணுவார்களா? என்று கேள்விகள் எழலாம். கர்த்தரோடுகூட உடன் பலி செலுத்துபவர்களாகிய சிலாக்கியத்தை யாராவது உதறித்தள்ளுவார்களோ? என்று கேள்விகள் கேட்கப்படலாம். பாத்திரம் மற்றும் மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம் தொடர்பான விஷயத்தில், இதனால் உண்டாகும் பலனில் பங்கடைவதற்கான சிலாக்கியத்தை அறிந்தும், யாராவது, "பாத்திரத்தையும்" "மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தைப்" புறக்கணிப்பார்களா? என்றும் கேள்விகள் கேட்கப்படலாம். ஜெநிப்பிக்கப்பட்ட ஆவியை இன்னமும் தக்கவைத்துக் கொள்கிறவர்களும், மகிமை, கனம் மற்றும் அழியாமையாகிய பார்க்க முடியாதவைகளை இன்னும் விசுவாசத்தினால் உணர்ந்துகொண்டிருப்பவர்களுமாய்க் காணப்படும் எவரும் புறக்கணிக்கவோ, சாதாரணமாக எண்ணவோ, ஏற்க மறுக்கவோ மாட்டார்கள் என்பதே நம்முடைய பதிலாகும். ஒருவேளை ஒருவர் பரம ஈவை ருசிப்பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும் மற்றும் வரவிருக்கிற யுகத்திற்குரிய சிலாக்கியங்களிலும், வல்லமைகளிலும் பங்கடைந்தும் மறுதலித்து பின்வாங்கி போவாரானால், அப்படிப்பட்டவர்களை மீண்டும் புதுப்பிப்பது கூடாத காரியமாகும்.

நம்மால் இருதயங்களை வாசிக்கமுடியாது. யாரெல்லாம் முதலாம் திரைக்கு அப்பால் பார்த்துள்ளார்கள் மற்றும் யாரெல்லாம் பார்க்கவில்லை என்பது திட்டவட்டமாய் நமக்குத் தெரியாது. யாரெல்லாம், "மரணத்துக்கு ஏதுவான பாவம்" செய்துள்ளார்கள் மற்றும் யாரெல்லாம் செய்யவில்லை என்பது நமக்குத் திட்டவட்டமாய் தெரியாது. நாம் ஒருவரையொருவர் நியாயந்தீர்க்கக்கூடாது. ஒருவருக்கொருவர் ஜீவியத்தின் போக்கில் வெளிப்படுத்துபவைகளை நாம் ஏற்றுக்கொண்டிட வேண்டும். ஒருவேளை, ஒருவர் தன்னைப் பரிசுத்தம் பண்ணின உடன்படிக்கையின் இரத்தத்தை மறுப்பாரானால், ஒருவேளை இந்த நினைவுகூருதலின் பாத்திரத்தில் கிறிஸ்துவோடு பங்குகொள்ளும் காரியத்தை ஒருவர், தான் அவருடைய மாபெரும் பலியில் பங்குகொள்வதாக எண்ணாமல், ஏதோ சாதாரணமாய்க் காணப்படும் ஒன்றில்தான் பங்குகொண்டதாக எண்ணுவாரானால், அந்நபர் கிறிஸ்துவின் பாத்திரத்தில் பங்காளியாக இருப்பதின் மதிப்பைப் புரிந்துகொள்ளும் அவரது ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதலையும், அவரது ஆவிக்குரிய பார்வையையும் இழந்துபோய்விட்டார் என்று வெளியாகுகின்றது. புதிய உடன்படிக்கையானது, இன்னும் கொஞ்சம் காலத்தில் இஸ்ரயேலர்களுக்காகவும், இஸ்ரயேலர்கள் வாயிலாக தெய்வீக நிபந்தனைகளுக்கு இசைவாய் வரவிருக்கும் பூமியின் சகல குடிகளுக்கும் முத்திரையிடப்படும்.

தங்களால் ஆவிக்குரிய காரியங்களைப் பார்க்கமுடிகின்றது என்று அறிக்கைப்பண்ணுகிற சிலர், மரணம்வரையிலான முழுமையான அர்ப்பணிப்புப் பண்ணியுள்ளோம் என்று அறிக்கைப்பண்ணுகிற சிலர், ஒரே அப்பத்தில் பிட்டுப் பங்குகொள்வதிலும், கிறிஸ்துவுக்குள்ளான மரணத்தில் ஐக்கியமாகிய ஒரே பாத்திரத்தில் பானம்பண்ணுவதிலும் உள்ள அர்த்தத்தை தங்களால் புரிந்துகொள்ள முடிகின்றது என்று அறிக்கைப்பண்ணுகிற சிலர், இவைகள் அனைத்தையும்

ஒருபோதும் உண்மையாய்ப் புரிந்துகொள்ளாமல் இருப்பதற்கும் வாய்ப்புகள் உண்டு. இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய வாக்குறுதிகளினால் நம்மை வஞ்சித்ததோடல் லாமல், தங்களையும் வஞ்சித்துப் போட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

"அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" (மத்தேயு 7:16); "அவர்களின் செயல்களைக்கொண்டே அவர்கள் யார் என்று அறிந்துகொள்வீர்கள்" (திருவிவிலியம்) என்ற கர்த்தரின் வார்த்தைகளை நாம் நினைவில்கொள்ள வேண்டும். தங்களைப் பரிசுத்தம்பண்ணப்பட்டவர்கள் என்றும், பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்றும், கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கத்தினர்களாகிய அர்ப்பணம்பண்ணப்பட்ட பலிச் செலுத்துபவர்கள் என்றும் கூறி, பாடுகள் மற்றும் சுயத்தை வெறுத்தல் எனும் அவருடைய பாத்திரத்தில் பங்கெடுத்துக்கொண்டு, பரிசுத்தத்தின் ஆவியை/ சிந்தையை வெளிப்படுத்தி, ஆவியின் கனிகள் மற்றும் வரங்களின் வளர்ச்சிக்கான அறிகுறிகளைக் கொண்டிருப்பவர்கள், ஆவியில் ஜெநிப்பிக்கப் பட்டவர்கள் என்று நாம் அறிந்துகொள்ளலாம். ஆனால், ஒருவேளை இவர்கள் பிற்பாடு உடன்படிக்கையின் இரத்தத்தை மறுப்பவர்களாகவும், கிறிஸ்துவின் பாத்திரத்தில் பங்குகொள்ளும் சிலாக்கியத்தை ஏதோ சாதாரணமான ஒரு காரியம் என்றும், இச்சிலாக்கியம் கிறிஸ்துவின் அங்கங்களுக்கு மாத்திரமே உரியதல்ல என்றும் எண்ணுபவர்களாகவும், ஆவியின் கனிகளைப் பின்னர் வெளிப்படுத்தாதவர்களாகவும், எதிராளியானவனுடைய ஆவியின் கனிகளை வெளிப்படுத்துகிறவர்களாகவும் இருப்பார்களேயானால், இவர்கள் வெளிச்சத்தையும், ஆவியையும் இழந்துவிட்டார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். இப்படிப்பட்டவர்கள் வெளியரங்கமாக வன்முறை, களவு, கொலை முதலியவைகளைச் செய்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. இவர்களிடம் கோபம், பகைமை, துர்க்குணம், பொறாமை, சண்டைச் சச்சரவின் ஆவி வெளிப்பட்டால், இதுவே இவர்கள் கிறிஸ்துவின் ஆவியை இழந்துவிட்டார்கள் என்பதற்கான சான்றுகள் ஆகும். கோபம், பகைமை, துர்க்குணம், பொறாமை, சண்டைச் சச்சரவின் ஆவி ஆகியவைகளைப் பரிசுத்த.பவுல் அடிகளார் மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள் என்று குறிப்பிடுகின்றார்.

கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள பரிசுத்தமாக்கப்பட்ட அங்கமாகிய ஒருவர், சில சந்தர்ப்பங்களில் பெலவீனத்தால் மேற்கொள்ளப்பட்டு, கோபமடைவது உண்மைதான். ஆனால், அவர் அதற்கென்று துர்க்குணமும், பகைமையையும் தனக்குள் வைத்திருக்கவே மாட்டார். இன்னுமாக, ஒருவேளை அவர் பெலவீனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் உடனடியாக தனது பெலவீனத்தை உணர்ந்து, மன்னிப்பிற்காக பரலோக கிருபையின் சிங்காசனத்திற்குப் போவதோடல்லாமல், தன்னுடைய செயல்பாடுகளினால் பாதிக்கப்பட்ட, காயப்பட்ட நபரிடத்திலும் சென்று குற்றத்தை மனவருத்தத்தோடு ஒப்புக்கொண்டு, மன்னிப்புக் கேட்கவும் செய்வார். ஆனால், தன்னுடைய ஆவியானது துர்க்குணத்தின் ஆவியாக மாற பெற்றிருப்பவன், தான் தேவனுடைய ஆவியை ஏற்கெனவே இழந்துவிட்டான் என்றும், தான் இரண்டுதரம் மரித்துவிட்டான் என்றும், வேரோடே பிடுங்கப்பட்டு விட்டான் என்றும் காட்டுகின்றான். இப்படிப்பட்டவர்கள் திராட்சச்செடியின்

குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிராமல், முள்களின் குடும்பத்தையே சேர்ந்தவர்களாக இருக்கின்றார்கள்.

## நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரம்

நாம் நினைவுகூருதலை அநுசரிக்கும்போது, நம்முடைய இருதயங்கள் இயேசுவினுடைய பாடுகளை மாத்திரம் தியானித்தால் போதாது, இன்னுமாக, பலியின் மரணத்திற்கு நேராக அவருடைய அடிச்சுவடுகளில் நடக்கும் அவருடைய சரீரத்தின் அங்கங்களுடைய பாடுகளை மாத்திரம் தியானித்தாலும் போதாது. மாறாக, இந்தப் பாத்திரத்தில் நாம் பங்குகொள்வதின் மூலம், நாம் சரியான மகிழ்ச்சியின் ஆவியையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இயேசு, ஆவியில் களிகூர்ந்தார் என்று நாம் வாசிக்கின்றோம். இன்னுமாக, பாத்திரத்தில் பானம்பண்ணும் நம் அனைவரையும், அப்போஸ்தலர், "கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்; மீண்டும் சொல்லுகின்றேன், சந்தோஷமாயிருங்கள்" என்று வலியுறுத்துகின்றார். கிறிஸ்தவனுடைய ஜீவியம் என்பது, துக்கமானதுமல்ல, மகிழ்ச்சியற்றதுமல்ல, மாறாக மிகுந்த சந்தோஷகரமானதாகும். "உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும, உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து" - "அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" என்று அறிந்து - கிறிஸ்தவனால், உபத்திரவங்களிலும் சந்தோஷமாயிருக்க முடியும். (ரோமர் 5:3-4; 2 கொரிந்தியர் 4:17) இப்படியாக, நாம் பாடுகள் மற்றும் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாகிய (மீட்படைந்து உரிமைப்பேறு பெறுவதற்கான அடையாளமாகிய) பாடுகள் மற்றும் மகிழ்ச்சியின் பாத்திரத்தில் நாம் பானம் பண்ணுகின்றோம்; இந்தச் சந்தோஷத்தை நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையின்பொழுது, அவருடைய அங்கங்களாக அவருடைய மணவாட்டி வகுப்பாராக நாம் அவரிடத்தில் கூட்டிச் சேர்க்கப்படும்பொழுது பெற்றுக்கொள்வோம். கர்த்தருக்கு ஊழியஞ்செய்யும் விஷயத்தில் நாம் வைராக்கியத்துடனும், தைரியத்துடனும் இருப்பதற்கு ஆவியில் இந்த மகிழ்ச்சி என்பது அவசியமாய் உள்ளது. பரிசுத்தவானாகிய பேதுரு, சீலாவுடன்கூடச் சிறைச்சாலையில் கால்கள் தொழுமரத்தில் கட்டப்பட்ட நிலையிலும், முதுகுக் காயங்களினால் காணப்பட்ட நிலையிலும், இந்த மகிழ்ச்சியின் ஆவி அவர்களுக்குள் கிரியைசெய்து, அவர்களைத் தேவனைத் துதித்துப்பாடச் செய்ததைக் கவனியுங்கள். இது இடுக்கமான வழியில் பிரயாணம்பண்ணும் கிறிஸ்துவின் உண்மையான அனைத்துப் பின்னடியார்களுக்கும் பொருந்தக்கூடியதாய் உள்ளது. ஒவ்வொரு முள்ளினாலும் உண்டாகும் காயங்கள் மத்தியிலும், கிறிஸ்துவினிமித்தம் கொடிதான வார்த்தைகளெனும் கூர்மையான ஒவ்வொரு அம்புகள் நம்மைத் தாக்கி உண்டுபண்ணும் வலியின் மத்தியிலும், சொல்லிமுடியாத சந்தோஷம் நமக்குக் காணப்படும்.

# புதிய உடன்படிக்கையின் சந்தோஷம்

நாம் பங்கடைவதற்கென நமது கர்த்தர் வாய்ப்பு அருளின புதிய உடன்படிக்கைக்கான இரத்தத்தினுடைய அர்த்தத்தை, முக்கியத்துவத்தை நாம் படிப்படியாக, அதிகமதிகமாக, முழுமையாகப் புரிந்துகொள்ள ஆரம்பிக்கையில், இன்னும் அதிகமான சந்தோஷம் நமக்குரியதாய் இருக்கின்றது. அவர் தமது புண்ணியத்தை நமக்குத் தரிப்பித்து, நம்மையும் அவரோடுகூட மரிக்கும்படிக்குச் செய்கின்றார். இவ்விதமாக, புதிய உடன்படிக்கைக்கான இரத்தத்தை அவருடைய அங்கங்களாகிய நம் மூலமாக சென்றடையச் செய்கின்றார். ஆனால், இது கிறிஸ்துவுடன் தங்களை மரிக்க ஒப்புக்கொடுக்கின்றோம் என்று வாக்களிக்கிறவர்களுக்கு மாத்திரமே அருளப்படுகின்றது; என்றாலும்கூட, அது நமக்கு (உரியதாய்) அளிக்கப்படவில்லை, மாறாக நம்முடைய பலிகளை நமக்குப் பரிந்துபேசுபவராகக் காணப்படும் நம்முடைய மாபெரும் பிரதான ஆசாரியன், பிதாவின் நாமத்தினால் ஏற்றுக்கொண்டு, பிதாவின் நாமத்திற்கு ஒப்புக்கொடுத்து, புத்திரசுவிகாரத்தின் ஆவியை நமக்கு அருளத்தக்கதாக, நம்முடைய பலிகளைப் பாத்திரமானவைகள் ஆக்கத்தக்கதாக அவருடைய புண்ணியம் நமக்குத் தரிப்பிக்க மாத்திரமே பட்டுள்ளது அல்லது கடனாய் மாத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது.

நமது கர்த்தர் இயேசுவுக்கு மாத்திரமே உரியதான இந்தப் பூமிக்குரிய உரிமைகள், அவருடைய விருப்பத்தின்படியே, புதிய உடன்படிக்கையின் வாயிலாக, மாம்சீக இஸ்ரயேலர்களிடம் சென்றுசேரும். (எரேமியா 31:31). "அவர்களும் இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்தும், பின்பு உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள்" (ரோமர் 11:31). மாம்சீக இஸ்ரயேலர்கள்மீது வரப்போகும் ஆசீர்வாதத்தினிமித்தமும் மற்றும் அந்த ஆசீர்வாதங்களில் முழு மனுக்குலமும் கூடப் பங்கடைவதற்கான வாய்ப்பினை அடையப்போவதினிமித்தமும் நாம் மகிழ்ச்சிக் கொள்கின்றோம். சுவிசேஷ யுகத்தினுடைய ஆரம்பத்தில் மாம்சீக இஸ்ரயேலர்களுடைய தள்ளிவிடுதல், நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான ஆயத்தமாய் இருக்குமானால், நாம் ஏற்றுக்கொள்ளப்படும் காரியமானது, அவர்களுக்கு நித்திய இழப்பாய் இராமல், அவர்கள் - புதிய உடன்படிக்கைக்கு முழுமையாய்த் தகுதியாக்கப்பட்ட ஊழியர்களின் மற்றும் மாபெரும் மத்தியஸ்தரின் மற்றும் மாபெரும் பிரதான ஆசாரியரின் அங்கங்களாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் ஆசீர்வாதத்தின் வாயிலாக, நன்மை பெற்றுக்கொள்வார்கள் என்பதில் நாம் எத்துணை மகிழ்ச்சியடைகின்றோம் (2 கொரிந்தியர் 3:6). இவ்விதமாக, மாம்சீக இஸ்ரயேலர்களுக்கே எனத் தேவனால் வைக்கப்பட்டிருந்த பூமிக்குரிய ஆசீர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் இறுதியில் மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு அளிக்கப்படும். இவைகள் அனைத்தும் நியாயப்பிரமாண உடன்படிக்கையினாலும், அதன் நிழலான மத்தியஸ்தராகிய மோசேயினாலும் நிழலாய்க் காட்டப்பட்டது. இந்த மோசே தேவனுடைய கிறிஸ்துவுக்கும், மாபெரும் மத்தியஸ்தருக்கும் நிழலாய் இருக்கின்றார். இந்த மாபெரும் மத்தியஸ்தரின் தலையாக இயேசுவும், அங்கங்களாக அவருடைய உண்மையுள்ள பின்னடியார்களாகிய ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களும் இருக்கின்றார்கள்.

ஆகவே, வருடங்கள் செல்ல செல்ல, மனித புத்திக்கு எட்டாத அளவுக்கு நீளமும், ஆழமும், அகலமும், உயரமும் கொண்டுள்ள எல்லா அன்புக்கும்மேலான

தெய்வீக அன்பில் வெளிப்படும் இந்த மகிமையான நினைவுகூருதலை உணர்ந்துகொள்வோமாக.

## பண்டிகையை ஆசரிப்போமாக

இவ்விஷயங்களையெல்லாம் உணர்ந்துகொண்டிருக்கும் கர்த்தருடைய ஜனங்கள், "யூதர்களைப்போன்று நிழலை நினைவுகூராமல், பரிசுத்த.பவுல் 'நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்' என்று கூறியுள்ளதைப் போன்று, "என்னை நினைவுகூரும்படிக்கு இதைச் செய்யுங்கள்" என்ற போதகரின் அழைப்புக்குச் செவிசாய்த்து, அவருடைய நாமத்தில், அவருடைய அங்கங்களாக ஒன்றுகூடிடுவதற்கு நாம் வலியுறுத்துகின்றோம். இதுவரையிலும் மகிமையில்லாததாய்க் காணப்படும் தமது சரீரத்தைக் கர்த்தர் தமது வருகையின்போது, தமது மகிமையான சரீரமாய் உண்மையில் மாற்றும்வரையிலும் இதை அநுசரிக்க வேண்டும்.

அருமையான சகோதர சகோதரிகள் சிறு கூட்டங்களாகக் கூடமுடியும் பட்சத்தில் கூடவேண்டும் என்றும், இப்படிக் கூடுவதற்கு வாய்ப்பில்லை என்னும் பட்சத்தில் கர்த்தரோடுகூட தனிமையில் இதை அநுசரிக்க வேண்டும் என்றும் நாம் ஆலோசனை வழங்குகின்றோம். இப்படியாக, அநுசரிக்கும்போது, பெருந்திரளாய்க் கூடி அநுசரிப்பதற்கு நாம் பரிந்துரைக்காமல், ஒவ்வொரு சிறுசிறு கூட்டத்தாரும் கிறிஸ்துவின் சரீரமெனத் தனி கூடுகையாகக்கூடி அநுசரிக்க நாம் பரிந்துரைக்கின்றோம். "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" (மத்தேயு 18:20).

புரூக்கிலின் டேபர்நாக்கிளினுடைய (Brooklyn Tabernacle) சபையார் புரூக்கிளினுள்ள பின்வரும் முகவரியில் கூடிக்கொள்வார்கள்: எண்: 13-17, Hicks Street, Brooklyn. இதற்கு முந்தின ஞாயிற்றுக்கிழமையன்று ஞானஸ்நான ஆராதனை நடைப்பெறும். இதில் பங்கெடுக்க விரும்புகின்றவர்கள் அனைவரும், கூடுமானமட்டும் முன்கூட்டியே தகவல் தெரிவிக்கவும். இந்த ஞானஸ்நான ஆராதனையில், அருகாமையிலுள்ள நண்பர்கள் (சகோதர சகோதரிகள்) கலந்துகொள்ளலாம். ஆனால் நினைவுகூருதல் ஆராதனையில் பங்குகொள்வதற்கான அழைப்பு எதுவும் தொலைவில் இருக்கும் நண்பர்களுக்குக் (சகோதர சகோதரிகளுக்குக்) கொடுக்கப்படுவதில்லை. ஆனால் தங்கள் குடும்பங்களில் சாதகமான வாய்ப்புகளைப் பெற்றிராத தனி நபர்கள்/சகோதர சகோதரிகள், எவ்விடத்திலுமுள்ள சபையாராலும் வரவேற்கப் படுகின்றனர்.

# வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம்

**"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்." 1 கொரிந்தியர் 11:24,25**

நம்முடைய பாவங்களுக்கான, அதாவது நம்முடையதற்காக மாத்திரமல்லாமல் சர்வலோகத்தினுடைய பாவங்களுக்கான நமது கர்த்தருடைய மாபெரும் பலிக்கான நினைவுகூருதலாக, அவரால் நிறுவப்பட்டதான இராப்போஜனமானது, அதன் எளிமையிலும், அதன் சிறப்பிலும் கவனத்தை ஈர்க்கின்ற ஒன்றாய்க் காணப்படுகின்றது. உலகத்தின் மாமனிதர்கள் தங்களைப்பற்றின நினைவுகளை நீடித்திருக்கப் பண்ணுவதற்கென மிக வித்தியாசமான வழிவகைகளை எப்போதும் நாடினதுண்டு. இவர்கள் தங்கள் மகத்துவங்களையும், தங்கள் சிறப்புகளையும், தங்கள் பின்னடியார்களுக்கு நினைப்பூட்ட முயன்றிட்டாலும், நிச்சயமாய் தங்கள் மரணத்திற்கான - அதிலும் விசேஷமாக நமது கர்த்தருடைய விஷயத்தில் காணப்படுகின்றதுபோல, அவமானமான, நிந்தனையுள்ள, குற்றவாளியாக மரிக்கும் மரணத்தைப்போன்றதொரு மரணத்திற்கான நினைவுகூருதலையும், ஞாபகார்த்தத் தையும் ஏற்படுத்திடவேமாட்டார்கள். இயேசுவின் இடத்தில் இன்னொருவன் காணப்பட்டால், அநேகமாக தனது பராக்கிரமிக்கச் செயல்களுக்கான ஞாபகார்த்தமாகப் பதக்கங்களை ஏற்படுத்திடுவதற்கே அறிவுரை வழங்கியிருப்பான்; உதாரணத்திற்கு லாசருவை உயிர்த்தெழப்பண்ணினதற்கு (அ) சீறும் கடலை அமைதிப்படுத்தினதற்கு (அ) ஜனங்கள் குருத்தோலைகளுடன், இராஜாவுக்கு ஓசன்னா என்று சத்தமிட, எருசலேமுக்கு அவர் மேற்கொண்ட வெற்றி பிரவேசத்திற்கு ஞாபகார்த்தமான பதக்கங்களை ஏற்படுத்திடுவதற்கே அறிவுரை வழங்கியிருப்பான்.

ஆனால் நமது கர்த்தரோ, அவருடைய கணிப்பிலும், தேவனுடைய கணிப்பிலும், அவரது மகத்துவமான வேலையாகக் காணப்பட்ட காரியத்தையே, அதாவது நம் சார்பிலான அவரது பாவநிவாரண பலியையே, தமது பணியிலுள்ள மற்ற அனைத்து அம்சங்களைக் காட்டிலும் அதிகமாய், அவரது உண்மையான பின்னடியார்களால் மற்றும் அவர்களால் மாத்திரமே உணர்ந்துகொள்ளப்படப்போகின்ற காரியத்தையே, தமக்கு நினைவுகூருதலாகத் தெரிந்துகொண்டார். அவரது பின்னடியார்கள் அவரது ஆச்சரியமான வார்த்தைகள் அல்லது கிரியைகளுக்கு ஏதோ ஒன்றினை நினைவுகூருதலாக மதித்திருக்க முடியும் என்பது உண்மைதான்; ஆனால் உலகத்தாரால்கூட இவைகளை உணர்ந்துகொள்ளவும் முடியும். ஆனால் நம்முடைய ஒப்புரவாகுதலுக்கும், பாவநிவிர்த்திக்கும் அடிப்படையாகக் காணப்படும் நமக்கான ஈடுபலியென, அவரது மரணத்திற்கு இருக்கும் மதிப்பின் விஷயம் அப்படியல்ல. இது அர்ப்பணம் பண்ணினவர்களாகிய சிறுமந்தையினரை - தெரிந்துகொள்ளப் பட்டவர்களைத் தவிர, வேறு எவராலும் இதுவரையிலும் முழுமையாய்ப் புரிந்துகொள்ளப்படவில்லை. மேலும் இவர்களுக்காகவே நினைவுகூரும் சின்னங்களானது ஏற்பாடுபண்ணப்பட்டு, நிறுவப்பட்டது. யூதாஸ் அங்குக் காணப்பட்டாலும், அவனுக்குத் துணிக்கையானது கொடுக்கப்பட்டது மற்றும் போஜனம்

நிறைவுபெறுவதற்கு முன்னதாக, அவன் மற்றவர்களை விட்டுவிட்டு வெளியேறினான்; இது இந்த யுகத்தின் முடிவில் சிறுமந்தையினர் தங்கள் கர்த்தரோடுகூட, அவரது பாடுகளில் பங்கெடுப்பதற்கான தங்களது பங்கினை நிறைவேற்றிடுவதற்கு முன்னதாக, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியினால் நிறைவேற்றப்பட்டதான ஈடுபலியினைச் சரியாய் மதிப்பிடாதவர்களும், உணர்ந்துகொள்ளாதவர்களுமாகிய அனைவரும், உண்மையுள்ளவர்களின் கூட்டத்திலிருந்தும், ஐக்கியத்திலிருந்தும் வெளியேற்றப்படுமளவுக்குச் சத்தியம் எனும் துணிக்கையானது மிகவும் பலமிக்கதாகியிருக்கும் என்பதைக் குறிக்கின்றது என்பதில் ஐயமில்லை (1 யோவான் 2:19).

## பஸ்கா இராப்போஜனத்தின் தியதி

எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்ததான தங்களது விடுதலையையும், அக்காலத்தில் தங்களது முதற்பேறானவர்கள் தப்புவிக்கப்பட்டதையும், நினைவுகூரும் வண்ணமாக யூதர்கள் ஆட்டுக்குட்டியைப் புசிக்கின்றதான பஸ்கா இராப்போஜனத்தினுடைய தியதியானது, யூதர்களுடைய காலக்கணக்கீட்டு முறைமையின்படியே, அதாவது சந்திர காலக்கணக்கீட்டு முறைமையின்படியே கணக்கிடப்படுகின்றது (யாத்திரயாகமம் 12:2-14). நாம் மாதங்களைப் பிரிப்பதுபோல் பிரிப்பதற்குப்பதிலாக, அவர்கள் அமாவாசையை, புதிய மாதத்திற்கான ஆரம்பத்தினைக் குறிப்பதற்கு அனுமதித்தனர்; சூரிய காலத்திற்கும், சந்திர காலத்திற்கும் இடையிலான வித்தியாசமானது, எப்போதும் வசந்த கால/இளவேனிற் சம இரவு பகல் நாளைத் தொடரும் அமாவாசையுடன் புதிய வருடத்தை ஆரம்பிப்பதன் மூலம் சரிப்பண்ணப்படுகின்றது. தங்கள் மதம் சார்ந்த விழாக்களை ஆசரிக்கும் விஷயத்தில், யூதர்கள் இன்னமும் இந்தக் கணக்கீட்டு முறைமையையே கைக்கொள்ளுகின்றனர். மேலும் நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும் ஆதித் திருச்சபையினரும் இதே ஒரு விதியை, நமது கர்த்தருடைய இறுதி இராப்போஜனத்திற்குரிய வருடாந்தர ஆசரிப்பிற்கான தியதியினை நிர்ணயிக்கும் விஷயத்திற்கும் பயன்படுத்தினதால், நாமும் அதையே பின்பற்றுகின்றோம்.

வசந்த கால/இளவேனிற் சம இரவு பகல் நாளைத் தொடரும் முதல் அமாவாசையானது, இந்த வருடத்தில் (1913), ஏப்ரல் 8-ஆம் தேதியில் நிகழ்வதாக எபிரெய ஆண்டு குறிப்பேட்டில் (almanacs/calendar) கணக்கிடப்பட்டுள்ளது . . . அநேகமாக இது எருசலேமின் ஆய்வு கருத்து அறிவிப்பாகும். மாலை 6 மணிக்கு, யூதருடைய புனிதமான வருடத்தினுடைய முதலாம் மாதமாகிய, நீசான் மாதத்தின் முதல் நாள் ஆரம்பமாகுகின்றது. நீசான் முதலாந்தேதி துவங்கி 10-ஆம் தேதியில் பஸ்கா ஆட்டுக்குட்டியானது, மந்தையிலிருந்து தெரிந்தெடுக்கப்படுகின்றது. 14-ஆம் நாளில் (பௌர்ணமி அன்று*) "சாயங்காலங்களுக்கு நடுவில்" (நீசான் 13-ஆம் தேதி மாலை 6 மணி முதல், நீசான் 14-ஆம் தேதி மாலை 6 மணிக்குள் ஏதேனும் ஒரு நேரத்தில்) ஆட்டுக்குட்டியானது அடித்து, புசிக்கப்பட வேண்டும். பதினைந்தாம் தேதி அவர்களது பஸ்கா பண்டிகையானது ஆரம்பித்து, ஏழு நாட்கள் நீடிக்கின்றது; இதன் முதலாம் மற்றும்

ஏழாம் நாட்களானது விசேஷித்த விதமாய்ப் பரிசுத்தமானவைகளாக, ஓய்வுநாட்களாக (அ) "பிரதான" நாட்களாக ஆசரிக்கப்படுகின்றன (யாத்திராகமம் 12:16). பதினாறாம் தேதியில் வாற்கோதுமை அறுவடையின் முதற்பலன்கள், ஓமர் அளவு கர்த்தருக்குச் செலுத்தப்பட்டன மற்றும் 50 நாட்கள் கழிந்து (பெந்தெகொஸ்தே நாளில்) அவர்கள் கர்த்தருக்கு இரண்டு அப்பங்களை அசைவாட்டும் காணிக்கைகளாக்கினார்கள் (லேவியராகமம் 23:17). [* சூரியன் கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கான அடையாளமாய்க் காணப்படுவதினால், சந்திரனும் இஸ்ரயேல் ஜாதிக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றது. (வெளிப்படுத்தல் 12:1) பன்னிரண்டு மற்றும் சிலசமயம் இடம்பெறும் பதிமூன்று சந்திர மாதங்களானது, அந்த ஜாதியின் கோத்திரங்களை அடையாளப்படுத்துகின்றது. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது, சந்திரனானது பௌர்ணமி நிலையில் காணப்பட்டது. பின்னர் உடனடியாக தேய்வுற ஆரம்பித்தது மற்றும் பௌர்ணமிக்கு முன்பு சந்திரன் வளர்வதற்குரிய காலத்தைப்போலவே தேய்வதற்கும் காலம் எடுத்துக்கொண்டது. ஆகையால் கிறிஸ்துவின் மரணமானது இஸ்ரயேல் சரித்திரத்தினுடைய இரண்டு சரிசமமான பாகங்களுக்கிடையிலான திருப்புமுனையாகக் காணப்பட்டது. தொகுதி-2, ஆங்கிலத்தில் பக்கம் - 218, தமிழில் பக்கம் - 235 பார்க்கவும்.

அசுசியடைந்த யூதர்கள், இதன் காரணமாக பஸ்காவினை அதற்குரிய காலத்தில் கைக்கொள்ள முடியாமல் போவதால், அப்படியானவர்கள் இரண்டாம் மாதத்தின் 14-ஆம் தேதியில் (அடுத்த பௌர்ணமியில் - எண்ணாகமம் 9:8-13) அதைக் கைக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்; இதன் படிப்பினை என்னவெனில் - (அறியாமையின் காரணமாக) மேசியா தங்களுக்கு முன்வைக்கபட்டபோது, அவரைத் தங்கள் மீட்பர் என்று ஏற்றுக்கொள்வதற்குத் தடைப்பண்ணப்பட்டவர்கள், அனைத்தும் திரும்பிக்கொடுக்கப்படும் காலங்களில், தங்கள் ஜாதியானது (சந்திரன்) மீண்டும் முழுமையான ஆசீர்வாத நிலையில், பின் அறுவடையில் வரும்போது, மேசியாவை ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்புப் பெற்றுக் கொள்பவர்களாய் இருப்பார்கள் என்பதேயாகும்.]

யூதர்களால் ஒவ்வொரு வருடமும் செய்யப்பட்டுவந்ததான இவைகள், நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறபடி, மாபெரும் மற்றும் பிரம்மாண்டமான நிகழ்வுகளுக்கு நிழலாய் இருக்கின்றன. பத்தாம் தேதியில் ஆட்டுக்குட்டியானது தெரிந்து கொள்ளப்படுவது என்பது, இஸ்ரயேலானது நிஜமான கடந்துபோகுதலிலுள்ள முதற்பேறானவர்களுடைய சபையென ஆசீர்வதிக்கப்படவும், அங்கீகரிக்கப்படவும் வேண்டுமெனில், அவர்கள் எவ்வாறு பஸ்கா பண்டிகைக்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக, இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னதாக இயேசுவை ஏற்றிருக்க வேண்டும் என்பதை அடையாளப்படுத்திக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. அந்த நாளில்தான் கர்த்தர் அவர்களது இராஜாவென, கழுதையின்மேல் ஏறி, பட்டணத்திற்குள் வந்தபோது, இறுதியாக அந்த ஜாதியாருக்கு தம்மை முன்வைத்தார் (யோவான் 12:12-16 ஒப்பிட்டுப்பார்க்கவும்). ஆனால் தேவ ஆட்டுக்குட்டியை ஏற்றுக்கொள்வதை அலட்சியப்படுத்தினவர்கள், உடனடியாக மறுக்கப்பட்டனர் மற்றும் அவர்கள் நிழலான முதற்பிறப்புகளாக இருப்பதிலிருந்து ஓயப்பண்ணப்பட்டார்கள்.

(இந்த வருடத்தில் [1913] ஏப்ரல் 20-ஆம் தேதி ஞாயிறு அன்று மாலை ஆறு

மணிக்கு ஆரம்பித்து, 21-ஆம் தேதி, மாலை ஆறு மணிவரை நீடிக்கின்றதான) 14-ஆம் தேதியில்தான் பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட வேண்டும் மற்றும் புசிக்கப்பட வேண்டும். (அநேகமாக இந்த ஒரு நோக்கத்திற்கான தெய்வீக ஏற்பாட்டின் காரணமாகவே) எபிரெய காலக்கணக்கிடுதலானது, "கடைசி இராப்போஜனத்தினுடைய" புசித்தலானது, கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டதான அதே நாளில் நிகழ்வதற்கு அனுமதித்ததாய் இருக்கின்றது. (சிலுவையில் அறையப்படுவது வரையிலும் முடிவடையாத, நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றும் விதமாக ஆசரிக்கப்பட்டதான) ஆட்டுக்குட்டியும், கசப்பான கீரைகளும், புளிப்பில்லாத அப்பமும் உள்ள பஸ்கா இராப்போஜனமானது, மாலை ஆறு மணிக்குமேல் புசிக்கப்பட்டது. பின்னர்த் தொடர்ந்து நிஜமான ஆட்டுக்குட்டியினுடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப் படுத்துகின்றதான அப்பமும், திராட்சரசமும் உள்ள நினைவுகூருதலின் இராப்போஜனத் தினுடைய நிறுவுதல் நடந்தது. ஆகையால் இதுவே வருடந்தோறும், அந்தத் தருணம் வருகையில், அவரது பின்னடியார்களால், சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியினைப் புசிப்பதற்குப்பதிலாக, நிஜமான ஆட்டுக்குட்டிக்கும், நிஜமான முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலுக்கும் - அவரது இரத்தத்தின் பயனான மாபெரும் கடந்துபோகு தலுக்கும் நினைவுகூருதலாக ஆசரிக்கப்பட வேண்டும்.

(ஓய்வு நாளுக்கு மறுநாளாகிய அல்லது 15-ஆம் தேதியின் பஸ்கா பண்டிகைக்கு மறுநாளாகிய) நீசான் 16-ஆம் தேதியில் முதல் பலன்களாகிய வாற்கோதுமையினுடைய கதிர்கட்டை அசைவாட்டுதலானது, "நித்திரையடைந் தவர்களில் முதற்பலனாக" நமது கர்த்தராகிய கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது (லேவியராகமம் 23: 5, 6, 11, 15-17; 1 கொரிந்தியர் 15:20).

ஐம்பதாம் நாளாகிய பெந்தெகொஸ்தே நாளில் இரண்டு அப்பங்கள் அசைவாட்டுக் காணிக்கையாக்கப்படுவது என்பது, சபையைத் தேவனுக்கு முன்னாக நிறுத்துவதையும், சபை மாபெரும் பிரதான ஆசாரியனுடைய புண்ணியத்தின் வாயிலாக ஏற்றுக்கொள்ளப்படுவதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இந்த ஏற்றுக்கொள்ளுதலானது பெந்தெகொஸ்தே நாளில் நிகழ்ந்த பரிசுத்த ஆவியினாலான அபிஷேகிக்கப்படுதலால் சுட்டிக்காட்டப்படுகின்றது. சபை உண்மையில் "ஒரே அப்பமாகக்" காணப்படுகின்றனர் (1 கொரிந்தியர் 10:17); இரண்டு அப்பங்களானது, பாவநிவாரண நாளில் இடம்பெறும் இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களினால் அடையாளப்படுத்தப்படுகின்ற அதே காரியங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இது முன்னிறுத்தப்படும் அனைவரும், கிறிஸ்து இயேசுவின் மூலமாகத் தேவனுக்குள் ஏற்றுக்கொள்ளப்படுபவர்களாய் இருந்தாலும், முன்னிறுத்தப்படும் அனைவரும் முடிவுவரையிலும் உண்மையாய்க் காணப்படும் நிலைக்கு வரமாட்டார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இரண்டு அப்பங்களானது, அர்ப்பணிக்கப்பட்டவர்களிலுள்ள இரண்டு வகுப்பாரை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; அதாவது ஜெயங்கொள்ளுகிற சிறுமந்தையையும் மற்றும் உலகத்தை ஜெயங்கொள்வதின் மூலம்,

"பரம அழைப்பினை" உறுதிப்படுத்திக்கொள்ளாதவர்களாகிய திரள் கூட்டத்தினர் எனும் அர்ப்பணிக்கப்பட்ட தேவனுடைய பணிவிடைக்காரர்களையும் அடையாளப் படுத்துகின்றதாய் இருக்கின்றது.

புனித வெள்ளிக்கும், ஈஸ்டர் ஞாயிறுக்குமான தேதிகளைக் கணக்கிடுவதற் கென எபிஸ்கோப்பலியன்ஸ் (Episcopalians) மற்றும் உரோமன் கத்தோலிக்கர்கள் மத்தியில் நடைமுறையில் காணப்படுகின்ற கணக்கிடும் முறைமையானது, முன்பிருந்த முறைமையிலிருந்து வேறுபடுகின்றது. இளவேனிற் சம இரவு பகல் நாளுக்குப் பின்வரும் முதல் பௌர்ணமியைத் தொடர்ந்துவரும் முதல் ஞாயிறை, இவர்கள் ஈஸ்டர் ஞாயிறு என்றும், இதற்கு முன்வரும் வெள்ளியை, புனித வெள்ளி என்றும் கொண்டா டுகின்றனர். இப்படியான கணக்கீட்டுமுறைமையானது, நாம் அங்கீகரிக்கின்றதான யூத முறைமைக்குப்பதிலாக கி. பி. 325-இல், நைஸ் ஆலோசனைக்குழுவினால் நிறுவப்பட்டது. ஆனால் "பஸ்கா" என்ற பெயரானது (ஈஸ்டர்* ஞாயிறு என்றில்லாமல்) நீண்ட காலம் பயன்படுத்தப்பட்டு வந்தது; போப்மார்க்கமானது அரசியல் செல்வாக்கில் உறுதியடைந்தப்பிற்பாடு, அறியாமையிலுள்ள புறமதத்தார், அரசினுடைய சலுகையினை அனுபவித்துக் கொண்டிருந்ததான இந்த அமைப்பிற்குள் குவிய ஆரம்பித்தப்பிற்பாடே "பஸ்கா" என்ற பெயருக்குப்பதிலாக, "ஈஸ்டர்" என்ற பெயர் நிறுவப்பட்டது; ஏனெனில் பஸ்கா ஆசரிக்கப்படுகின்றதான அதே காலப்பகுதியில், புறமதத்தினரும், இளவேனிற் தேவதையாகிய ஈஸ்டெரா (Estera), ஜெர்மனியில் ஒய்ஸ்ட்ரா (Ostara) என்று அழைக்கப்படும், அதாவது தங்கள் ஈஸ்டர் தேவதைக்குப் பண்டிகை கொண்டாடும் வழக்கத்தில் காணப்பட்டனர். இதுவும் அதிக எண்ணிக்கையிலான ஜனங்களைக் கூட்டுவதற்கும், செல்வாக்கினை அதிகரிப் பதற்கும் என்று, பேராசை மிக்க "குருமார் வகுப்பினர்" (clergy) கையாண்ட அநேக முறைமைகளில் ஒன்றாகும். [* அப்போஸ்தலர் 12:4-ஆம் வசனத்தில் இடம்பெறும் ஈஸ்டர் எனும் வார்த்தையானது, தவறான மொழிப்பெயர்ப்பாகும்; அது பஸ்கா என்றே மொழிப்பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். (Revised) ரிவைஸ்ட் மொழியாக்கம் பார்க்கவும்.]

சிலசமயம் யூத கணக்கிடுதல் முறைமையும், உரோம கணக்கிடுதல் முறைமையும், ஒரே நாட்களைச் சுட்டிக்காட்டுகின்றது; ஆனால் எப்போதும் இப்படியாகக் காணப்படுவதில்லை; சிலசமயங்களில் இவைகளின் கணக்கிடுதலானது கிட்டத்தட்ட ஒரு சந்திர (அ) மாத அளவு வித்தியாசப்படுகின்றது.

யூதர்கள் பஸ்கா வாரத்தினை, நீசான் 15-ஆம் தேதியாகிய ஏப்ரல் 22-ஆம் தேதியில் (அதாவது ஏப்ரல் 21-ஆம் தேதி மாலை ஆறு மணிக்கு) ஆரம்பமாகும் "பண்டிகையாக" கொண்டாடுகின்றனர். நினைவுகூருதலினுடைய இராப்போஜனத்தில் நாம் பண்டிகை வாரத்தினை ஆசரியாமல், மாறாக பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்டதற்கும், புசிக்கப்பட்டதற்குமான நாளுக்கான ஆண்டுநிறைவு நாளாகிய, அதாவது முதற்பேறானவர்களின் சபையானது மரணத்திலிருந்து முதலாம் உயிர்த்தெழுதலில் முழுமைப்பெறுகின்றதான ஜீவனுக்குள்ளாகக் கடந்துபோவதற்குக் காரணமாய் இருந்த பலியை ஏறெடுத்த தேவனுடைய உண்மையான ஆட்டுக்குட்டியாகிய,

நமது கர்த்தர் இயேசுவினுடைய மரணத்தின் ஆண்டுநிறைவு நாளும், நீசான் 15-ஆம் தேதிக்கு முந்தின நாளும், 1913-ஆம் வருஷத்தில் ஏப்ரல் 20-ஆம் தேதி மாலை ஆரம்பமாகும் நீசான் 14-ஆம் நாளையே நாம் ஆசரிக்கின்றோம். பஸ்கா பண்டிகை வாரத்தினுடைய நிஜமானது, உண்மையான இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் அனைவருடைய இருதயத்தின் சந்தோஷத்தில் காணப்படுகின்றது; ஏழு நாட்கள் என்பது சந்தோஷம் மற்றும் இரட்சிப்பினுடைய பூரணத்தை (அ) முழுமையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

கணக்கிடுதல் தொடர்புடையதான அநேகம் கேள்விகளுக்கு நாம் பொதுவான பதிலாக, விவரங்களைக் கொடுத்துவிட்டோம்; இதற்குக் காரணம் இதற்கு ஏதேனும் மிகுந்த முக்கியத்துவம் இருப்பதினாலோ அல்லது துல்லியமான ஆண்டுநிறைவு நாள் ஆசரிப்பில் காணப்படும் அடிமைப்படுத்துதலோ அல்ல. கிறிஸ்துவினால் விடுதலைப் பண்ணப்பட்டவர்கள்மீது இப்படியாக எந்த ஓர் அடிமைத்தனமும் இல்லையென்று நாம் அடையாளம் கண்டுள்ளோம். "என்னை நினைவுகூரும்படி இதைச் (இந்த வருடாந்தர நினைவுகூருதலை நீங்கள் ஆசரிக்கும் ஒவ்வொரு முறையும்) செய்யுங்கள்" என்று நமது கர்த்தர் கூறுகையில், அவர் நோக்கம் கொண்டுள்ளதுபோன்று, நினைவுகூருதலின் இராப்போஜனத்தை அதன் சரியான ஆண்டுநிறைவு நாளில் ஆசரிப்பதற்கு விருப்பங்கொண்டவர்களாக நாம் இருப்பினும், இதை நாங்கள் கடமையாகப் பார்ப்பதைவிட சிலாக்கியமாகவே பார்க்கின்றோம்; ஒருவேளை அறியாமை (அ) தவறானப் புரிந்துகொள்ளுதலின் காரணமாக நாளைத் தெரிந்துகொள்ளும் விஷயத்தில் நாம் தவறு இழைத்தாலும், கர்த்தர் நம் நல் நோக்கங்களை ஏற்றுக்கொள்வார் என்றும், தவறை மன்னிப்பார் என்றும், தமது ஆசீர்வாதத்தை அருளுவார் என்றும் நாம் நம்புகின்றோம். தவறானப் போதனைகள் மற்றும் மனித பாரம்பரியங்களின் காரணமாக, அவரது மரணத்திற்கான இந்த நினைவுகூருதலை ஆசரிப்பதற்கென, அவர் நியமித்துள்ளதான அதன் ஆண்டுநிறைவு நாளை தெரிவு செய்வதற்குப்பதிலாக வேறு காலங்களையும், நேரங்களையும் தெரிவுசெய்யும் அவரது பிள்ளைகளாகிய அநேகருடைய நல் நோக்கங்களைக் கர்த்தர் ஏற்றுக்கொள்கின்றார் என்றும் நாம் நம்புகின்றோம். இதுபோலவே ஐக்கிய நாடுகள் சுதந்திரமடைந்தத் தேதியை மறந்தவராக (அ) ஜூலை 4-ஆம் தேதியே இந்நிகழ்வினுடைய ஆண்டுநிறைவு நாள் என்றும், இந்தத் தியதியே, இதைக் கொண்டாடுவதற்கென நியமிக்கப்பட்டுள்ளதான பொருத்தமான தேதி என்றுமுள்ள உண்மைகளை அறியாதவராக வருடத்திற்கு மூன்று, நான்கு (அ) ஐம்பது முறைகள் சுதந்திரத்தைக் கொண்டாடிடும் ஒரு மனிதனுடைய தேசப்பற்று நோக்கங்களை நாம் ஒத்துக்கொள்கின்றோம்.

மற்றச் சத்தியங்களைப்போலவே, இருண்ட யுகங்களையுடைய குப்பைகளின் கீழ் நீண்டகாலமாய்ப் புதைக்கப்பட்டுக் கிடந்த இதையும் இப்பொழுது தேவன் தம்முடைய ஜனங்களுக்குத் தெளிவுப்படுத்துகின்றார். அவரது ஜனங்களாக உண்மையில் காணப்படுபவர்கள் அனைவரும் சத்தியத்திற்காக ஆவலாய்க்

காணப்படுகின்றனர் மற்றும் மற்றப் பாடங்களைப்போலவே இப்பாடத்திலுமுள்ள சத்தியங்களானது, தேவவார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்

"நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:23-26).

கர்த்தருடைய மரணம் என்ற வார்த்தை எதைக்குறிக்கின்றது மற்றும் எதைக் குறிக்கவில்லை என்பதை நேர்மையான மனமுடையவர்களிடத்தில் விவாதித்திடு வதற்கு எந்த அவசியமும் இருப்பதில்லை. ஈடுபலிபற்றின உபதேசத்தினின்று அல்லது ஈடுபலி உபதேசத்துடன் சம்பந்தப்பட்டதான நியாயமான ஊகங்களின்று தங்களை விலக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆவலில் சிலர் வேதவாக்கியங்களுக்கு முரணாக, நமது கர்த்தருக்கு இரண்டு மரணங்கள் சம்பவித்தன என்றும், ஒன்று அவர் உலகத்திற்கு வந்தபோது நிகழ்ந்தது என்றும், மற்றொன்று கல்வாரியில் நிகழ்ந்தது என்றும், முதல் மரணத்திற்கு முன்னதாக, கல்வாரியில் "எல்லோரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவி னுடைய" மரணமானது அவ்வளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்றும் வலியுறுத்திக் கூறுகின்றனர். இவர்கள் "அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்" என்று வேதவாக்கியம் தெரிவிக்கும் உண்மையினையும், நமது கர்த்தரினாலோ (அ) அவரது அப்போஸ்தலர்களாலோ குறிப்பிடப்பட்டுள்ளதான ஒரே மரணம், கல்வாரியில் நிகழ்ந்த மரணமே ஆகும் என்ற உண்மையினையும் வேண்டுமென்றே அறியாதவர்களாய்க் காணப்படுகின்றனர்.

எருசலேமில் தாம் அடையப்போகின்றதான மரணத்தைக்குறித்து அவர் பேசினதாக அப்போஸ்தலர்கள் தெரிவிக்கின்றனர். நம்முடைய மீட்பருடைய இந்த ஒரே ஒரு மரணம் மாத்திரமே, இந்த நினைவுகூரும் அடையாளங்களினால் அடையாளப்படுத்தப்படுகின்றது; அவரது சரீரம், அவரது மாம்சம் நமக்காகப் பிட்கப்பட்டுள்ளது மற்றும் நித்திய ஜீவன் அடைய வேண்டுமெனில் இதன் புண்ணியத்திலும், ஜீவனிலும் அனைவரும் பங்கெடுக்க வேண்டும். இந்த முக்கியமான கேள்வி தொடர்புடைய விஷயத்தில், நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்.

எப்படித் தண்ணீர் ஞானஸ்நானமானது, முக்கியமான ஞானஸ்நானமாகக்

காணப்படாமல், உண்மையான ஞானஸ்நானத்தை அடையாளப்படுத்தும் அடையாளமாக மாத்திரம் காணப்படுகின்றதோ, அதுபோலவே அடையாளங்களாகிய அப்பத்திலும், திராட்சரசத்திலும் பங்கெடுத்தல் என்பது மிக முக்கியமான விருந்திற்கு/காரியத்திற்கு அடையாளமாக மாத்திரமே காணப்படுகின்றது; அதாவது அவரது பிட்கப்பட்ட சரீரத்தின் மற்றும் சிந்தப்பட்ட இரத்தத்தின் வாயிலாக நமக்கு நித்திய ஜீவனை உறுதிப்படுத்துகின்றதான கிறிஸ்துவினுடைய புண்ணியத்தை நம்முடையதாக்கிக்கொள்ளும் காரியத்திற்கு அடையாளமாக மாத்திரமே காணப்படுகின்றது. அவரால் நிறைவேற்றப்பட்டதான பலியை விசுவாசத்தினால் ஏற்றுக்கொண்டு, அதே விசுவாசத்தினால், அவரால் போதிக்கப்பட்டுள்ளபடி மனிதனாகிய கிறிஸ்து இயேசு பெற்றிருந்ததும், நமக்காக மரணத்தில் கையளிக்கப்பட்டதுமான புண்ணியங்கள், பரிபூரணங்கள் மற்றும் உரிமைகள் அனைத்தையும் நமதாக்கிக்கொள்வதன் மூலமாக நமது இருதயங்களானது உண்மையில் நித்திய ஜீவனுக்கான அப்பத்தை, பரலோகத்திலிருந்து தேவன் நமக்கு அனுப்பிவைத்ததான அப்பத்தைப் புசிக்கின்றதாய் இருக்கின்றது. இதுதான் உண்மையான அப்பம் மற்றும் இதைப் புசிப்பது என்பது நித்தியமான ஜீவனைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இதுவே சொல்லர்த்தமான அப்பமானது அடையாளப்படுத்துகின்றதான அடிப்படையான அர்த்தமாய் இருக்கின்றது மற்றும் இப்படியான அர்த்தத்திலேயே அதில் சரியாயும், புரிந்த நிலையிலும் பங்கெடுக்கும் அனைவருக்கும் காணப்படுகின்றது. அது பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து ஆதாமையும், அவரது குடும்பத்தையும் மீட்ட ஈடுபலிக்கான நினைவுகூருதலாகும்.

## அப்பம் மற்றும் பாத்திரம்

மற்றுமொரு கருத்து: பயன்படுத்தப்பட்ட அப்பமானது, புளிப்பற்றதாகும். புளிப்பு என்பது கெடுக்கிற ஒன்றாக, சீரழிக்கும் ஒன்றாக இருப்பதினால், பாவத்திற்கான அடையாளமாய் இருக்கின்றது மற்றும் பாவம் மனுக்குலத்தில் கொண்டுவந்ததான சீரழிவையும், மரணத்தையும் அடையாளப்படுத்து கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இந்த அடையாளமானது, நமது கர்த்தர் இயேசு பாவம் இல்லாதவராக இருந்தார் என்பதை, கறைதிறையற்ற ஆட்டுக்குட்டி என்பதை, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாய்" இருந்தார் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் ஆதாமின் சந்ததியில் வந்தவராய் இருந்திருப்பாரானால், வழக்கம்போல் ஏதோ ஒரு பூமிக்குரிய தந்தை வாயிலாக தமது ஜீவனைப் பெற்றவராக இருந்திருப்பாரானால், அவரும்கூட மற்ற மனிதர்களைப்போலவே ஆதாமின் பாவத்தினால், புளிப்பானவராய் இருந்திருப்பார்; ஆனால் அவருடைய ஜீவனானது கறைதிறை இல்லாமல், உயர்ந்த பரலோக நிலையிலிருந்து, பூமிக்குரிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலைமையில் வந்ததாய் இருந்தது; ஆகவே அவர் "வானத்திலிருந்து வந்த அப்பம்" என்று அழைக்கப்பட்டார் (யோவான் 6:41). ஆகவே தேவன் அருளியுள்ளதான தூய்மையான, புளிப்பற்ற, மாசற்ற அப்பத்தினைக்குறித்து உணர்ந்துகொள்வோமாக மற்றும் அவரைப்

புசிப்போமாக; அதாவது சத்தியத்தைப் புசித்து, ஜீரணிப்பதன் வாயிலாக அவரை நாம் புசிப்போமாக; அதிலும் விசேஷமாக . . . விசுவாசத்தின் வாயிலாக அவரது நீதியை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுதல் எனும் சத்தியத்தைப் புசிப்போமாக; மேலும் அவரை வழியாகவும், ஜீவனாகவும் அடையாளம் கண்டுகொள்வோமாக.

இந்த நினைவுகூருதல் அடையாளங்கள் தொடர்புடையதான இன்னும் ஆழமான ஓர் அர்த்தத்தை, அப்போஸ்தலன் தெய்வீக வெளிப்படுத்துதலின் வாயிலாக தெரிவித்துள்ளார். அப்பமானது நமது கர்த்தர் இயேசுவை மாத்திரம் அடையாளப்படுத்துகின்றதாயிராமல், நாம் அவரைப் புசித்தப்பிற்பாடு (அவரது நீதியை நமக்குரியதாக்கிக்கொள்வதன் வாயிலாக நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு) நாம் அர்ப்பணத்தின் வாயிலாக, உலகத்திற்கான உணவாகிய அந்தப் பிட்கப்பட்ட ஒரே அப்பத்தின் பாகமாக, நாம் அவரோடு இணைந்தவர்களானோம் என்றும் அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். (1 கொரிந்தியர் 10:16). இது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளாகிய நாம், எதிர்க்கால மகிமைகளில் அவரோடுகூட உடன் சுதந்தரர்களாகுவதற்கும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதும், பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஜீவன் வழங்குவதுமான மாபெரும் வேலையில் பங்காளிகளாகுவதற்குமுரிய நிபந்தனையாய்க் காணப்படுகின்ற கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும் இப்பொழுது பங்கடைவதற்கான சிலாக்கியத்தினை உடையவர்களாய் இருக்கின்றோம் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

இதே கருத்தானது, அப்போஸ்தலனால் மீண்டும் மீண்டுமாகவும், பல்வேறு அடையாளங்களினாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அவை அனைத்தைக்காட்டிலும், இவ்வடையாளமே ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகின்றது; அதாவது தங்கள் தலையோடுகூட (கிறிஸ்துவின் சரீரமாகிய - கொலோசெயர் 1:24 பார்க்கவும்) சபையே இப்பொழுது பிட்கப்படுகின்றதான "ஒரே அப்பமாக" இருக்கின்றனர். இது நமது தலையானவருடனான நமது ஐக்கியத்திற்கும், உறவிற்கும் குறிப்பிடத்தக்கதான விவரிப்பாய்க் காணப்படுகின்றது.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்;" "அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 - KJV ; திருவிவிலியம்)

"'திராட்சப்பழரசமானது' (fruit of the vine) நமது கர்த்தரினால் பலிச்செலுத்தப்பட்ட ஜீவனை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மரணத்தில் கையளிக்கப்பட்ட ஜீவனுக்கான அடையாளம்)" (மத்தேயு 26:27, 28).

பாவத்தின் காரணமாக ஆதாமின் சந்ததி இழந்துபோனதான ஜீவனுக்கான மீட்கும் பொருளாகக் கர்த்தர் தமது ஜீவனைக் கொடுப்பதன் மூலமே, புதிய உடன்படிக்கையின் கீழ் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் வாயிலாக மனிதர்களுக்கு ஜீவனுக்கான உரிமை கடந்துவர முடியும். (உரோமர் 5:18, 19). சிந்தப்பட்ட இரத்தமானது, "அனைவருக்குமான மீட்கும் பொருளாக" (விலையாகக்) காணப்பட்டது; இது அனைவருக்காகவும், நமது மீட்பரினாலே கொடுக்கப்பட்டதாய் இருந்தது; ஆனால் அவர் பாத்திரத்தைச் சீஷர்களிடத்தில் கொடுத்து, அதைப் பருகும்படிக்கு அவர்களிடம் கூறினதாவது, தம்முடைய பாடுகளில் அவர்கள் பங்காளிகளாகுவதற்கான அல்லது பவுல் குறிப்பிட்டுள்ளதுபோன்று "கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதற்கான" அழைப்பாய்க் காணப்பட்டது (கொலோசெயர் 1:24). விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு, நாமாய் முன்வந்து கிறிஸ்துவின் காரணங்களை/நோக்கங்களை ஆதரிப்பதின் வாயிலாக, அவரது பாடுகளில் பங்குகொள்வோமானால், நாம் தேவனால் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகவும் மற்றும் இயேசுவின் பாடுகளில் பங்கடைபவர்களாகவும் கருதப்படுவோம் என்பதே நம்முன் வைக்கப்பட்ட காரியமாகும். "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் (சிந்தப்பட்ட இரத்தம் - மரணம்) பங்குகொள்ளுதல் அல்லவா?" (1 கொரிந்தியர் 10:16 திருவிவிலியம்) "பாத்திரத்தினுடைய" மதிப்பினை நாம் அனைவரும் உணர்ந்தவர்களாக, கிறிஸ்துவோடுகூட, அவரது பாடுகள் மற்றும் அவமானத்தின் "பாத்திரத்தில்" பங்குகொள்வதற்கான வாய்ப்பிற்காக, தேவனை ஸ்தோத்திரிப் போமாக; இப்படியானவர்கள் அனைவரும், அவரோடுகூட மகிமைப்படுத்தப்படுவர் என்ற நிச்சயமும் கொண்டிருக்கலாம். (உரோமர் 8:17)

பாத்திரமானது அவரது அவமானத்தில் நமது பங்குகொள்ளுதலையும், அவரது பலியில் நமது பங்குகொள்ளுதலையும், அதாவது நமது மனுஷீகத்தின் மரணத்தையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில், நமது கர்த்தரும், பாத்திரத்திற்கு இந்த அர்த்தத்தைச் சாற்றினவராய் இருந்தார். உதாரணத்திற்கு அவரது சிங்காசனத்திலுள்ள எதிர்கால மகிமைக்குறித்த வாக்குறுதியை அவரது சீஷர்களில் இருவர், அவரிடத்தில் கேட்டபோது, அவரோ: "நீங்கள் கேட்டுக்கொள்ளு கிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கக்கூடுமோ? என்றார். அவர்களது இருதயப்பூர்வமான உறுதிமொழியின் நிமித்தமாக, "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்" என்றார். திராட்சப்பழரசமானது, இரத்தம்/ரசம் வெளியே வருமளவுக்குத் திராட்சையைப் பிழிவதுமாத்திரம் குறிக்காமல், பிற்பாடு கடந்துவரும் புத்துணர்வையும் கூடக்குறிக்கின்றதாய் இருக்கின்றது; ஆகையால் "கிறிஸ்துவின் பாடுகளில்" இப்பொழுது பங்குகொள்ளும் நாம், அவரது மகிமைகளிலும், கனங்களிலும் மற்றும் அழியாமையிலும் சீக்கிரத்தில் பங்குகொள்வோம் - அதாவது இராஜ்யத்தில் அவரோடுகூடப் புதிய திராட்சரசத்தைப் பருகும்போது ஆகும்.

# கர்த்தர் வருமளவும்

இவ்வார்த்தைகளினுடைய முழுமையான அர்த்தம் என்ன?

நினைவுகூருதலுக்கான இராப்போஜனத்தை நிறுவின நமது கர்த்தர், அதன் ஆசரிப்பு விஷயத்தில் எவ்விதமான எல்லைகளை வைக்காததினால், நமக்கான ஈடுபலியாக நமது கர்த்தர் இயேசுவினுடைய மரணத்திற்கும், அவரோடுகூடப் பலிச்செலுத்திடுவதற்கான நமது அர்ப்பணிப்பிற்குமான நினைவுகூருதலை - ஒரு குறிப்பிட்டக் காலளவில் ஆசரிப்பது ஏற்றதாய் இருக்கும் என்று அப்போஸ்தலன் கால அளவை எல்லைக்குட்படுத்துவதாக நாம் புரிந்துகொள்ளக் கூடாது. மாறாக அது கால வரம்பிற்குட்பட்ட, அதாவது கொஞ்சம் வருடங்களுக்குரிய ஏற்பாடு என்று கருதப்படாமல், கர்த்தருடைய இரண்டாம் வருகை வரையிலும் தொடர்ந்து ஆசரிக்கப்பட வேண்டும் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையைக்குறித்துப் பேசுகையில், உலகத்தை ஆளுகைச்செய்து, ஆசீர்வதிக்கப்போகின்றதான கிறிஸ்துவின் இராஜ்யம் (அ) சபையினுடைய கூட்டிச் சேர்க்குதலையும், உயர்த்தப்படுதலையும் உள்ளடக்கின விதத்திலேயே, அப்போஸ்தலனுடைய வார்த்தைகள் காணப்படுகின்றன. ஒன்றோடொன்று தொடர்புடைய விஷயங்களை, ஒன்றுக்கொன்று ஒத்திருக்கும் விஷயங்களை இப்படியாய்ப் பேசுவது இன்றும் பொதுவான மற்றும் பொருத்தமான வழக்கமாய் இருக்கின்றது. கிறிஸ்துவாகிய தலையும், சரீரமும் வல்லமையிலும், மகா மகிமையிலும் உலகத்தை ஆளுவதற்கு வந்துகொண்டிருக்கின்றனர். கர்த்தர் (அ) தலையினுடைய பிரசன்னம் முதலாவது அவசியமாகும்; அடுத்து அவரது சரீரத்திலுள்ள நித்திரையடைந்த அங்கத்தினர்களின் மறுரூபமடைதலும், உயிரோடிருக்கும் அங்கத்தினர்களின் சலித்தெடுத்தலும், அவர்கள் படிப்படியாக அவரோடு கூட்டிச்சேர்க்கப்படுதலும் சம்பவிக்கும்.

இராஜா தம்முடைய மாபெரும் வல்லமையை 1878-ஆம் வருடத்தில் செயல்படுத்தத் துவங்கின காலத்திலிருந்து இராஜ்யம் ஆரம்பித்துவிட்டது என்று கருதப்படுகின்றதாய் இருப்பினும் (வெளிப்படுத்தல் 11:17), இராஜ்யத்தினுடைய கடைசி அங்கத்தினன் மறுரூபமடைவது (அ) மகிமைப்படுத்தப்படுவது வரையில், அப்பமாகிய கிறிஸ்து எனும் தலை மற்றும் சரீரத்தினுடைய பிட்கப்படுதல் நிறைவடைவது வரையில், அது முழுமையாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்காது. ஓர் அங்கம் பாடுபடுகையில், சரீரம் பாடுபடுகின்றது; ஓர் அங்கத்தினன் மகிமையடையாமல் இருக்கையில், இராஜ்யமானது வல்லமையிலும், ஆளுகையிலும் முழுமையாய் வரவில்லை என்பதாகும்.

"ஆகையால் நீங்கள் இந்த (பஸ்காவில்) அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும், அவருடைய மரணத்தைத் (உங்கள் நம்பிக்கை மற்றும் உறுதி என்று) தெரிவிக்கின்றீர்கள்" என்று அப்போஸ்தலன் கூறுகையில், கிறிஸ்துவினுடைய சபை (அ) இராஜ்யத்தினுடைய முழுமையான உயர்த்தப்படுதலை உள்ளடக்கின கிறிஸ்துவின் வருகையையே

குறிப்பிட்டார் என்பதில் உறுதியே. இராஜ்யத்தின் மகிமையே, அடையாளத்தினுடைய முடிவு என்ற இதே கருத்தானது, நினைவுகூருதலை நிறுவினப்போதான நமது கர்த்தருடைய பின்வரும் வார்த்தைகளிலிருந்தும் எடுத்துக்கொள்ளப்படலாம்: "இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் இராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 26:29).

நமது கர்த்தருடைய மரணமானது ஈடுபலி விலைக்கிரயமாக இருந்தது என்று நம்புகிறவர்கள் அதை அறிக்கைப்பண்ணுவது, அதைத் தங்கள் நம்பிக்கைகள் அனைத்திற்குமான அடிப்படை என்று தெரியப்படுத்துவது ஏற்றக்காரியமாகவும், நலமளிக்கிற காரியமாகவும் இருக்கும். இதற்கான ஏற்றக்காலமானது, இக்காலத்திலேயே, அதாவது தேவ வார்த்தையினுடைய இந்த அடிப்படையான உபதேசமானது, திரித்துக் கூறப்படுவதும், தவறாய் விவரமளிக்கப்படுகிறதுமான இக்காலத்திலேயே ஆகும்.

## சிலாக்கியத்தினை உணர்ந்துகொள்ளுதல்

எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும், எவரும் இந்த வருடாந்திர சிலாக்கியத்தினைப் புறக்கணித்திட வேண்டாமென்று நாம் வலியுறுத்துகிறோம். இதை ஆசரிக்கும் விஷயத்தில் விசேஷித்த ஆசீர்வாதம் உள்ளது. நீங்கள் சோர்வடைந்திருக் கிறீர்களானால், போய்ப் பிட்கப்பட்ட அப்பத்தில் பங்கெடுத்து, உங்கள் நீதிமானாக்கப் படுதலைக்குறித்தப் புதிதான உணர்ந்துகொள்ளுதலையும், ஒரே அப்பத்தின் - அவரது சபையின், அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென அவரோடுகூடப் பிட்கப்படுவதற் கான (பலிச்செலுத்தப்படுவதற்கான) உங்களது அர்ப்பணிப்பைக்குறித்த புதிதான உணர்ந்துகொள்ளுதலையும் கர்த்தரிடத்தில் கேளுங்கள்.

இப்படியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, உணர்ந்துகொள்ளப்பட வில்லையெனில், நினைவுகூருதலானது அர்த்தமற்றதாக (அ) பாதகமானதாகக் காணப்படும் என்பதை நாம் மறக்காமல் இருப்போமாக. ஆனால் பாவங்களோ, அனலற்றத் தன்மைகளோ, அபாத்திரன் என்ற உணர்வுகளோ, நம்மைத் தடைச் செய்யாதிருப்பதாக. கர்த்தரிடத்தில்போய் உங்கள் குறைவுகள் அனைத்தையும் மறைக்காமல் கூறிவிடுங்கள். உங்கள் சகோதர சகோதரிகளிடத்தில் (அ) நீங்கள் யாருக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தீர்களோ, அவர்களிடத்தில்போய், அவர்கள் உங்களிடத்தில் தவறுகளை ஒப்புக்கொள்கிறார்களோ, இல்லையோ, நீங்கள் முழுமையாய் ஒப்புக்கொண்டுவிடுங்கள். உங்கள் கர்த்தருடன் ஒப்புரவாகிக்கொள்ளுங்கள் மற்றும் கூடுமானமட்டும் அனைத்து மனிதர்களுடனும் ஒப்புரவாகிக்கொண்டு வந்து புசியுங்கள் - ஆம் இப்பொழுது (அ) பின்னர் "ஏற்றக்காலத்தில்" ஏற்றுக்கொள்பவர் அனைவருக்குமான கர்த்தருடைய ஐசவரியமான ஏற்பாட்டில் பங்கெடுங்கள்.

இப்படியானதொரு இருதய ஆராய்தலும், சுத்திகரித்தலும், யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டதான பஸ்கா நிழலில் காண்பிக்கப்பட்டுள்ளதை நாம் நினைவுகூருகிறோம். தங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியினைப் புசிப்பதற்கெனக்

கூடிடுவதற்கு முன்னதாக, புளிப்பான அல்லது அழுகிப்போனதான ஏதாகிலும் பொருட்கள், எலும்புகள், ரொட்டித் துண்டுகள் காணப்படுகின்றதா என்று தங்களது குடியிருப்புகளில் எல்லாம் அவர்கள் தேடினார்கள். இவைகளெல்லாம் எரிக்கப்பட்டன - அழிக்கப்பட்டன. ஆகையால் நாமும் நிஜத்தை நிறைவேற்றி, கோபம், பகைமை, சண்டை, துர்க்குணம் எனும் "பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போட" வேண்டும் (1 கொரிந்தியர் 5:7, 8).

இவ்வகை பாவம் எனும் புளிப்பானது, எரிக்கப்படாமல், முற்றிலுமாகப் புறம்பே கழித்துப்போடப்பட முடியாது என்பதையும், அன்பு - பரம அன்பு, தேவ அன்பு மாத்திரமே இதை எரித்துப்போட முடியும் என்பதையும் நினைவில் கொண்டிருக்க வேண்டும். இந்த அன்பானது, நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருந்தால், இது எதிர்ப் பண்புடைய அனைத்தையும், அதாவது பொறாமை, பகைமை, புறங்கூறுதல் முதலானவைகள் அனைத்தையும் பட்சித்துப் போட்டுவிடும். இவைகளையெல்லாம் புறம்பே கழித்துப் போட்டு, கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு, அவரது ஆவியில் நிரம்பிடுவதற்கு அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். மனம் தளர்ந்துபோக வேண்டாம். பாடத்தைக் கற்றுக்கொண்டு, புதிய தீர்மானங்களுடனும், ஆண்டவருடைய உதவியில்லாமல், நீங்கள் நீங்களாகவே பரிசை ஒருபோதும் அடையமுடியாது என்ற உண்மையினைப்பற்றின அதிகமானப் புரிந்துகொள்ளுதலுடனும், மீண்டுமாகத் தொடருங்கள். மேற்கூறிய உண்மையினை நம்மைவிட அவர் நன்றாய் அறிவார் மற்றும் "என்னையல்லாமல் உங்களால் ஒன்றுஞ்செய்யக் கூடாது" என்று கூறுகின்றார். நமக்கான தேவையின் காரணமாகவே, பிதா நமக்கு இப்படியாக ஏற்பாடு பண்ணியுள்ளார். "தைரியங்கொண்டிருங்கள்!" என்பதே "ஜெயங்கொள்ளுகிற" வகுப்பாரில் அடங்குவதற்கு நாடுகிற மற்றும் ஏங்குகிற அனைவருக்குமான ஆண்டவருடைய வார்த்தைகளாக இருக்கின்றது.

## உங்கள் எதிராளியான பிசாசு

வருஷத்தினுடைய இந்த ஒரு காலப்பகுதியில் சோதனைகளானது, விசேஷமாய் அனுமதிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது. எப்போதும் "கசப்பான வேர்களானது முளைத்தெழும்பி," வளர்வது வழக்கமாகும்; ஆனால் இந்த ஒரு காலப்பகுதியிலோ பத்து மடங்கு வலிமையோடு வளர்கின்றது. நம்முடைய சீஷத்துவத்திற்கான இறுதிப் பரீட்சையானது, அறிவின் விஷயத்தில் இல்லாமல் அன்பின் விஷயத்தில்தான் என்பதை நாம் நினைவில்கொள்வோமாக. "நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாய் இருங்கள் என்கிற புதிதானக் கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்." அப்போஸ்தலர்கள் ஒருவரிலொருவர் போதுமானளவுக்கு அன்புக்கொண்டிராததாலேயே, இராஜ்யத்தில் யார் பெரியவராய் இருப்பார் என்று வாக்குவாதம் பண்ணினவர்களாகக் காணப்பட்டனர் மற்றும் அன்புக்கொண்டிராததாலேயே ஒருவருக்கொருவர் தாழ்த்திக்கொள்ள மாட்டோம் என்று மிகவும் தீர்மானமாய்க் காணப்பட்டு, இதனால் ஆண்டவருடைய பாதங்களையும் கழுவும் காரியத்தினைப் புறக்கணித்தவர்களாக, கனம் குறைந்த

வேலையிலும், அவரே அனைவருக்கும் பணிவிடைக்காரராக இருக்கத்தக்கதாக, அவருக்கு வாய்ப்பளித்தவர்களாகக் காணப்பட்டனர். இந்தத் தவறான சிந்தையே, அதாவது கர்த்தருடைய சிந்தை இல்லாமையே, அவர்கள் எதிராளியானவனுடைய வல்லமையினால் தாக்கப்படுவதற்கு ஏதுவாயிற்று மற்றும் யூதாசைக் காட்டிக்கொடுப்பதற்கு ஏதுவாய் வழிநடத்திற்று மற்றும் பேதுரு தனது அபிஷேகிக்கப்பட்ட கர்த்தரை மறுதலிப்பதற்கு ஏதுவாயிற்று.

ஆகையால் நாம் சோதனைக்குள் விழுந்துவிடாதபடிக்கு நம்மைக்குறித்து நாம் எச்சரிக்கையாயிருப்போமாக; விழித்திருந்து ஜெபம்பண்ணுவோமாக; மிகுந்த தாழ்மையுடனும், மிகுந்த அன்புடனும் காணப்படுவோமாக. இயேசுவினுடைய பின்னடியார்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதற்கும் (அ) அவர்களைச் சிக்கவைப்பதற்கும் (அ) அவர்களை இடறப்பண்ணுவதற்கும் நமது மாபெரும் எதிராளியானவன் அன்றுமுதல் இன்றுவரையிலும் அதிக உற்சாகத்துடன் காணப்படுகின்றான்.

நம்முடைய பாவங்களை நிவிர்த்திச் (திருப்தி) செய்கிற கிருபாதார பலியாய், அதாவது நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாய், அவரது விலையேறப்பெற்ற இரத்தம் காணப்படுகின்றது என்ற விசுவாசத்தின் நம்பிக்கையை உடையவர்கள் அனைவரும், இந்த உண்மையை அறிக்கைச் செய்வதில் முன்பில்லாதளவுக்கு அதிக வைராக்கியத்துடனும், ஊக்கத்துடனும் காணப்படுவார்களாக; "ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய (பலியாகிய) கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." பெயரளவிலான எந்த முதற்பிறப்புகளும் கடந்து போகப்படுவதுமில்லை, மகிமையிலுள்ள முதற்பேறானவர்களின் சபையினுடைய அங்கத்தினர்களும் ஆகுவதில்லை; அந்த இரவில், நிழலில் நடந்ததுபோலவே இரத்தத்தின் கீழ்க் காணப்படாதவர்களும், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியினுடைய புண்ணியங்களில் பங்கெடுக்காதவர்களுமானவர்கள் எவரும் முதற்பேறானவர்களின் சபையினுடைய அங்கத்தினர்கள் ஆகுவதில்லை.

## யார் பங்குகொள்ளலாம்

கர்த்தருடைய இராப்போஜனம் என்பது, உலகத்துக்குரியதாயும், பெயரளவிலான விசுவாசிகளுக்குரியதாயும் இராமல், (1) கிறிஸ்துவை தங்களுடைய மீட்பராகவும், தங்களுடைய பாவத்தைச் சுமந்தவராகவும், ஏற்றுக்கொண்டவர்களும் மற்றும் (2) அவருக்கும், அவருடைய ஊழியத்திற்கும் எனத் தங்களை அர்ப்பணம் பண்ணினவர்களுமாய் இருப்பவர்களுக்கு மாத்திரம் உரியதாகும். ஆனால், இதில் யார் பங்குகொள்ளலாம் அல்லது பங்குகொள்ளக்கூடாது என்று தீர்மானம் பண்ணுவது நமக்குரிய அல்லது எந்த மனுஷனுக்குரிய அல்லது ஒரு கூட்டத்தாருக்குரிய வேலையல்ல. "அப்பத்திலும்," "பாத்திரத்திலும்" பங்குகொள்வதற்கான சரியான தகுதிகள் என்ன என்பதை கர்த்தருடைய வார்த்தையிலிருந்து சுட்டிக்காண்பிப்பதும்,

"எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்" என்று அப்போஸ்தலன்போன்று கூறுவதும் நமக்குரிய கடமையாகும் (1 கொரிந்தியர் 11:28).

இப்பொழுது தேவனுடைய ஜனங்கள் இருண்ட யுகங்களினுடைய தவறான உபதேசங்களிலிருந்து வெளிவந்துகொண்டிருப்பதினாலும், இப்பொழுது இந்த நினைவுகூருதலின் விஷயங்கள் இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ளப் படுவதினாலும், ஒருவர் தன்னைச் சுய பரிசோதனைப் பண்ணிக்கொள்ளும் அல்லது நிதானித்துக்கொள்ளும் காரியம்கூட முன்பைக்காட்டிலும் இப்பொழுது மிக முழுமையாகக் காணப்படுகின்றது. ஒவ்வொருவரும் பின் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களைத் தன்னிடத்திலேயே கேட்டுக்கொள்ளவார்களாக :

(1) மனித குடும்பத்தில் நான் ஓர் அங்கமாக இருக்கின்றபடியால், ஆதிப்பாவத்தின் காரணமாக எல்லார்மேலும் கடந்துவந்த மரணத்திற்கு ஏதுவான அந்த ஆக்கினைத் தீர்ப்பின் கீழ், நானும் காணப்பட்டேன் என்று வேதவாக்கியங்கள் போதிக்கும் காரியங்களை நான் நம்புகின்றேனா?

(2) இந்தப் பாவம் மற்றும் மரணத் தண்டனையினின்று நான் தப்பித்துக்கொள்வதற்கு எனக்கு இருக்கும் ஒரேவழி, என்னுடைய கர்த்தராகிய மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவினால் கொடுக்கப்பட்ட ஈடுபலியின் வழியாகவே உள்ளது என்று நான் நம்புகின்றேனா?

(3) அவர் நம் பொருட்டு தம்மையே அதாவது, அவருடைய மாம்சத்தையும், இரத்தத்தையும், மனுஷீகத்தையும் ஈடுபலிக்கான கிரயமாகக் கொடுத்தார் என்றும், அவர் தமது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி, தம்முடைய ஆத்துமாவை பாவத்திற்கான பலியாகக் கொடுத்தார் என்றும் நான் நம்புகின்றேனா? (ஏசாயா 53:10-12)

(4) அவர் யோர்தானில் ஞானஸ்நானம் எடுத்தப்போது ஆரம்பமான, மரணம் வரையிலான அவருடைய அர்ப்பணமானது, மனுக்குலத்திற்காக அவர் தம்மையே பலிசெலுத்தினது மூலம், சிலுவையில் அவர் மரித்தபோது, நிறைவேறி முடிந்தது என்று நான் நம்புகின்றேனா?

(5) நியாயப்பிரமாணத்திற்கு அவர் கீழ்ப்படிந்ததின் காரணமாக அவர் சுதந்தரித்துக்கொண்ட (நித்தியஜீவன் மற்றும் உலகத்தின்மீது ஆளுகை எனும்) உரிமைகளை அவர் இப்படியாக, பலியானதின் மூலம் - இறுதியில் புதிய உடன்படிக்கையின் கீழ் ஆசீர்வாதங்களை ஏற்றுக்கொள்ளுகின்ற அனைவருக்கும் - விழுந்துபோன மற்றும் மரித்துக்கொண்டிருக்கும் மனுக்குலத்திற்கு - கொடுத்துவிட்டார் என்பதை நான் புரிந்துள்ளேனா?

(6) இவ்விதமாக பலிச் செலுத்தப்பட்ட அவருடைய மாம்சமும், இரத்தமும் இவைகள் விலைக்கிரயமாகக் கொடுக்கப்பட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட அந்த ஆசீர்வாதங்களுக்கும், கிருபைகளுக்கும் அடையாளமாக இருக்கின்றது என்பதை நான் புரிந்துள்ளேனா?

(7) அவருடைய மாம்சத்திற்கும், அவருடைய இரத்தத்திற்கும் அடையாளச்

சின்னங்களாக இருக்கும் அப்பம் மற்றும் திராட்சரசத்தில் பங்குகொள்ளும் காரியமானது, என்னுடைய கர்த்தரின் மாம்சம் மற்றும் இரத்தம் எனக்காகவும், அனைவருக்காகவும் பெற்றுத்தந்த அந்த ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும் நான் ஏற்றுக்கொள்வதைச் சுட்டிக்காட்டுகின்றது என்பதை நான் புரிந்துள்ளேனா?

(8) ஒருவேளை இவ்விதமாய் நினைவுகூரப்பட்டதான ஈடுபலியை நான் இருதயப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு இருப்பேனாகில், இந்த ஈடுபலியின் மீதான விசுவாசத்தின் காரணமாக நீதிமானாக்கப்பட்ட என்னை - என்னுடைய மாம்சத்தையும், இரத்தத்தையும் கர்த்தரோடுகூடப் பிட்கப்படும்படிக்கும், அவரோடுகூடப் பாடுபடும்படிக்கும், அவரோடுகூட மரிப்பதற்கும் கர்த்தருக்கென்று முழுமையாய் நான் அர்ப்பணம் பண்ணியுள்ளேனா?

ஒருவேளை இக்கேள்விகளுக்கு நம்மால் தீர்க்கமான பதில் கொடுக்க முடியுமெனில், நாம் கர்த்தருடைய சரீரத்தைக்குறித்து முழுத் தெளிவுடனும், மற்றும் அவருடைய பலிக்கு மரியாதைக் கொடுக்கிறவர்களாகவும் காணப்படுகின்றோம். மேலும், நாம் அதைப் புசிக்கலாம் - கண்டிப்பாய்ப் புசிக்க வேண்டும் - "நீங்கள் எல்லாரும் இதிலே புசியுங்கள்."

பாவத்திற்கும், பாவிகளுக்கும் ஓர் ஈடுபலி அவசியம் எனும் காரியத்தை மறுப்பவர்களும், கிறிஸ்துவின் புண்ணியத்தில் பங்கடைவது தங்களுக்குத் தேவையில்லை என்றும் எண்ணுபவர்களும், ஒருவருடைய புண்ணியம், மற்றவருக்குத் தரிப்பிக்க முடியும் எனும் காரியத்தை மறுப்பவர்களும், கிறிஸ்துவின் நீதியினால் கிடைத்திட்ட கலியாண வஸ்திரத்தைக் களைந்து போட்டவர்களும், தங்களுடைய சொந்த நீதியாகிய அழுக்கான கந்தைகளை அணிவதில் "சந்தோஷத்துடனும்," "சுதந்திர உணர்வுடனும்" காணப்படுபவர்களும், தங்களைப் பரிசுத்தம்பண்ணின விலையேறப்பெற்ற இரத்தத்தை இப்பொழுது பரிசுத்தமற்றது அல்லது சாதாரணமான ஒன்றாக எண்ணுபவர்களும் - தாங்கள் விசுவாசிக்க இனி மறுப்புத் தெரிவிக்கின்ற இந்த நினைவுகூரும் காரியத்திலிருந்து விலகிக்கொள்ளும்படிக்கு நாம் அறிவுரை கூறுகின்றோம். ஏனெனில், ஒருவேளை அவர்கள் பங்குகொள்வது அவர்களது, விசுவாசமற்ற நிலையில் இன்னும் மாய்மாலத்தைக்கூட்டி வழங்கிவிடுவதாகிவிடும். இப்படிப்பட்டவர்கள் பங்குகொள்வது என்பது, தங்கள்மீதும், ஈடுபலி இல்லை என்ற தங்களுடைய கோட்பாடுகளின்மீதும் கண்டனம் சுமத்திக்கொள்வதற்கு ஏதுவாகிவிடும்.

## தேவனுடைய வார்த்தையாகிய சத்தியம்

மாபெரும் எதிராளியானவனுடைய பல்வேறு வழிகள் மூலம் பிரகடனப்படுத்தப் பட்ட தவறான வாதங்கள் மூலமாக, இந்தத் தப்பறைகளுக்குள் சிக்கினவர்களாக மாத்திரம் காணப்படும் அனைவருக்கும் நாம் அறிவுரை கூறுவது என்னவெனில்: வீணான அனைத்து மனித தத்துவ ஞானங்களை/கோட்பாடுகளை உதறித்தள்ளி,

மீண்டுமாக எளிமையான தேவ வார்த்தைகளையும், அதினால் முன்வைக்கப்படும் சத்தியங்களையும் ஏற்றுக்கொள்வதுமாகும்; தேவ வார்த்தைகளினால் முன்வைக்கப்படும் சத்தியங்கள் என்னவெனில்: அனைவரும் விழுந்துள்ளனர் என்பதும், தெய்வீகப் பிரமாணத்திற்கும், தீர்ப்பிற்கும் இசைவாக நம்முடைய ஒப்புரவாகுதலுக்கும், சீர்த்துாக்கப்படுதலுக்குமான ஒரே வழி நம்முடைய பாவங்களுக்கான ஈடுபலியை (அ) முழுமையான மற்றும் துல்லியமான சரிநிகர்சமான விலையைக் கொடுப்பதேயாகும் என்பதும், இதுதவிர வேறெந்த வழியிலும் அவரால் நீதியுள்ளவராகவும், பாவிகளை நீதிமானாக்குகிறவருமாயும் காணப்பட முடியாது என்பதும் ஆகும். மேற்கூறப்பட்டவர்கள் நமது கர்த்தர் இயேசு தேவ ஆட்டுக்குட்டியென, நம்முடைய பாவங்களுக்கான முழுத் தண்டனையை அவர் மரத்தில், தம்முடைய சரீரத்தில் சுமந்தார் என்றும், அனைவருக்குமான முழுமையான ஈடுபலியை அவர் கொடுத்தார் என்றுமுள்ள உண்மைகளை அடையாளம் கண்டுகொள்வார்களாக.

கொள்கை மிகவும் எளிமையானதாகும்; ஆனால் ஒருவேளை அதைச் சிலரால் கிரகித்துக்கொள்ள முடியவில்லையெனில், இப்படியானவர்கள் தேவன் இப்படியாய்த் தெரிவித்துள்ளார் என்ற உண்மையையாகிலும் கிரகித்துக்கொள்வார்களாக மற்றும் கர்த்தரிடத்தில் திரும்புவார்களாக மற்றும் அவரும் திரளாய் மன்னிப்பார். இப்படியானவர்கள் கிறிஸ்துவுக்குள்ளான நமது தேவனுடைய கிருபை அனைத்திற்குமான இந்த அஸ்திபாரத்தை இன்னதென்று சகல பரிசுத்தவான்களோடுங்கூட உணர்ந்துகொள்ளத்தக்கதாகப் பரிசுத்த ஆவியினுடைய வழிகாட்டுதலையும், கண்களின் அபிஷேகிக்கப்படுதலையும் கேட்பார்களாக. இப்படியாகப் பிட்கப்பட்ட அப்பத்தையும், சிந்தப்பட்ட இரத்தத்தையும் உண்மையாய் ஏற்றுக்கொண்டு, அதாவது தங்கள் பாவங்களுக்காகவே பலிச்செலுத்தப்பட்டுள்ளது என்றும், சிந்தப்பட்ட இரத்தமானது (கொடுக்கப்பட்ட ஜீவனானது) அனைவருக்குமான மன்னிப்பை உறுதிப்படுத்துகின்றது என்றும் உணர்ந்து, இப்படிப்பட்டவர்கள் சரித்திரத்தின் மாபெரும் நிகழ்வை, அதாவது நம்முடைய பாவங்களுக்காக தேவனுடைய நேசக்குமாரனின் விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தப்பட்டதையும், அவரது விலையேறப்பெற்ற ஜீவன் பலிச்செலுத்தப்பட்டதையும் நினைவுகூர்ந்து ஆசரிப்பார்களாக. "தெளிக்கப்பட்ட இரத்தத்தின்" கீழிலிருந்து அறிந்தும், மனப்பூர்வமாகவும் வெளியேறுகிறவர்களை, இந்த வார்த்தைகளும் சரி (அ) வேறெந்த வார்த்தைகளும் சரி - வழியினிடத்திற்கும்/சத்தியத்தினிடத்திற்கும், ஜீவனிடத்திற்கும் திருப்புவது என்பது கூடாதகாரியம் என்று தேவனுடைய வார்த்தைகளிலிருந்து நாம் அறிகின்றோம். அப்படியானவர்களுக்கு எந்தக் கடந்துபோகுதலும் கிடையாது. "மனந்திரும்புவதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்" (எபிரெயர் 6:4-10; 10:26-30). நம்மிடமிருந்து வரும் இந்த அன்புடன்கூடிய புத்திமதியும், வேதவாக்கியங்களை உண்மையாய்ச் சுட்டிக்காட்டுதலுங்கூடக் கர்த்தருக்கும் மற்றும் சத்தியத்திற்கும் மற்றும் பகுத்தறிவில்லாமல் இடறுகிற சகோதரர்கள் (அ) சகோதரிகளுக்கும் ஊழியம் புரிந்திடுவதற்கான வாஞ்சை எனும் உண்மையான நம்முடைய நோக்கத்தின் காரணமாய்க் கொடுக்கப்படுகிறது என்று

பார்க்கப்படுவதற்குப் பதிலாக, (நம்முடைய) பகைமை, துர்க்குணம், பொறாமை மற்றும் அனைத்து விதமான பொல்லாப்புகளினால் உண்டானது என்று கருதப்படும் என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

ஈடுபலியினுடைய கொள்கையினை முழுமையாய் உணர்ந்துகொள்ளாத நிலையில், ஆனால் நமது மீட்பருடைய மரணமானது, நம்மை நம்முடைய குற்றங்களிலிருந்து நிவிர்த்திபண்ணி, குற்றத்திற்கான தண்டனையினின்று நம்மை விடுவித்தது என்ற உண்மைக்குறித்த பயபக்தியுடன்கூடிய உணர்ந்துகொள்ளுதலுடன் கடந்தகாலங்களில் அநேகர் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்தும் அடையாளங்களில் பங்கெடுத்துள்ளனர். இப்படியானவர்கள் நினைவுகூருதலின் உண்மையான அர்த்தத்தினை உய்த்துணர்ந்துள்ளனர்; எனினும் சத்தியத்துடன்கூடக் காணப்படும் மிகுதியான தப்பறைகளின் காரணமாக, இவர்களால், நாம் இப்பொழுது உணர்ந்துள்ளதான அதன் எளிமையான கொள்கையினை உணர்ந்துகொள்ள முடியவில்லை.

## ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டவர்கள் மாத்திரம்

சில பேப்டிஸ்ட் (Baptist) சகோதரர் பின்வருமாறு குறிப்பிடலாம்: நினைவுகூருதல் இராப்போஜனத்தில் பங்கெடுப்பதற்கு, ஞானஸ்நானம் அவசியமான தகுதியாய் இருக்கின்றது என்பதைக் குறிப்பிடுவதற்கு நீங்கள் மறந்துவிட்டீர்கள்.

இல்லை, நாங்கள் ஞானஸ்நானத்தை மறந்துபோகவில்லை. ஞானஸ்நானம் என்பது அவசியம் என்றும், நினைவுகூருதல் இராப்போஜனமானது சபைக்கு மாத்திரமே உரியது என்றும், சபையாகுவதற்கு முன்னதாகவே, ஒருவருக்கு ஞானஸ்நானம் அவசியம் என்றும், நாங்கள் உங்களோடுகூட ஒத்துக்கொள்கின்றோம். ஆனால் சபை என்றால் என்ன என்பது தொடர்புடைய விஷயத்தில், நாங்கள் உங்களிடமிருந்து வேறுபடுகின்றோம். பேப்டிஸ்ட் சபையானது (Baptist Church) சபையல்ல என்று நாங்கள் எண்ணுகின்றோம். மற்றெல்லா சபைகளானது விழுந்துபோன மனிதர்களினால் ஏற்படுத்தப்பட்டு, நடத்தப்படுவதுபோலவே, பேப்டிஸ்ட் சபையும் "கோதுமைகளையும்", "களைகளையும்" கொண்டிருக்கின்றது; ஆனால் சபையானது, கோதுமையை மாத்திரமே பெற்றிருக்கும். கிறிஸ்தவ மண்டலத்தினுடைய எந்த ஒரு பிரிவும், அதினிடத்தில் எந்தக் "களைகளும்" இல்லாமல், அனைத்துமே "கோதுமைகளாக" இருக்கின்றது என்று கூறமுடியாது. பரலோகத்தில் பெயர்கள் எழுதப்பட்டுள்ளதான சபையானது "கோதுமைகள்" அனைத்தையும் கொண்டிருக்கின்றது மற்றும் "களைகளை" அதன் பட்டியலில் பெற்றிருப்பதில்லை. இந்த ஒரு சபையையே, நமது கர்த்தர் ஸ்தாபித்தார் மற்றும் இதில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அனைவரும் - கடந்துபோகப்பட்டவர்களாகிய சபை - "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபையே" - அங்கத்தினர்களாய் இருப்பார்கள் (எபிரெயர் 12:23).

இதுபோலவே ஞானஸ்நானத்தைக்குறித்த உங்களது வலியுறுத்தலும் எங்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. வேதவாக்கியங்களுடைய கண்ணோட்ட

மானது, உங்களுடையதைக்காட்டிலும் மிகவும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. "முதற்பேறானவர்களின் சபையினுடைய" அங்கத்தினர்கள் என்று ஏற்றுக்கொள்ள முடியாதவர்களை எல்லாம், உங்கள் பேப்டிஸ்ட் சபையில் நீங்கள் அங்கத்தினர்களாகப் பெற்றிருக்கின்றீர்கள். அப்படியானவர்கள் தண்ணீர் ஞானஸ்நானம் என்ற உங்களது பரீட்சையினைக் கடந்துவிட்டனர்; ஆனால் அவர்கள் பரலோகத்தில் தங்கள் பெயர்களை எழுதப்பெற்றவர்களாகிய சபையினுடைய அங்கத்தினர்கள் அனைவருக்கும் அவசியமான மாபெரும் ஞானஸ்நானம் எனும் பரீட்சையினைக் கடக்காதவர்களாகக் காணப்படுகின்றனர். உண்மையான ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளான முழுகுதலின் மூலமும், அவரது சாயலிலான உயிர்த்தெழுதலின் மூலமும் கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக, சபைக்குள்ளான ஞானஸ்நானமாகும். தண்ணீர் ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளான மனித சித்தத்தினுடைய உண்மையான முழுகுதலுக்கு அருமையான அடையாளமாய் இருக்கின்றது மற்றும் மரணம்வரையிலுமான பலிச்செலுத்துதலுக்கு அருமையான விளக்கமாகவும் காணப்படுகின்றது; எனினும் எப்படி இராப்போஜனத்தில் நாம் புசிக்கின்றதான அப்பமும், திராட்சரசமும், நமது கர்த்தருடைய பலியின் உண்மையான ஜீவன் கொடுக்கும் அம்சங்களாக இல்லாமல், மாறாக அவைகளின் அடையாளங்களாக மாத்திரம் காணப்படுவதுபோன்று, தண்ணீர் ஞானஸ்நானமும் வெறும் அடையாளமேயாகும்.

ஆகையால் சபையாகிய, முழுகப்பட்டவர்கள் மாத்திரமே இராப்போஜனத்தில் பங்கெடுக்க வேண்டும் என்பதை நாம் ஒத்துக்கொள்கின்றோம்; இன்னுமாக உண்மையில் முழுகினவர்கள் என்பவர்கள் தங்கள் சித்தங்களை மரிக்கப் பண்ணினவர்களாகவும், கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளாக அடக்கம் பண்ணினவர்களாகவும், அவருக்குள் புதிய சிருஷ்டிகளெனப் புதிதான ஜீவன் உள்ளவர்களாய் நடந்துக்கொள்ளும்படிக்கு எழுந்தவர்களாகவும், தங்களது ஓட்டமானது சொல்லர்த்தமான மரணத்தில் நிறைவுபெறுவதற்கும், முதலாம் உயிர்த்தெழுதலில் உண்மையான புதிய ஜீவன்களாக விழித்தெழுவதற்கும் காத்திருப்பவர்களாகவும் இருப்பவர்கள் என்று நாம் அடையாளம் கண்டுகொள்கின்றோம். இப்படியானவர்கள் அனைவரும் யாராக இருந்தாலும் சரி, எங்குக் காணப்பட்டாலும் சரி, இவர்கள் ஞானஸ்நான அடையாளத்தைப் பண்ணியிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இவர்களே கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையின் உண்மையான அங்கத்தினர்கள் ஆவர். ஆம் இப்படியான அர்ப்பணிக்கப்பட்டவர்கள், தங்கள் சொந்த சித்தத்திற்கு மரித்து, கிறிஸ்துவின் சித்தத்திற்கு மாத்திரமாக ஜீவனுடையவர்களாய் இருப்பவர்கள், நமது கர்த்தருடைய அறிவுரையானது தண்ணீர் ஞானஸ்நானத்தையும் (அ) அடக்கம்பண்ணுதலையும், மற்றும் தங்கள் சித்தங்களை அடக்கம் பண்ணுவதையும் உள்ளடக்குவதைக் காண்கையில், தங்கள் தலையும், கர்த்தருமானவரை அனைத்து விஷயங்களிலும் பின்பற்றிடுவதற்கும், அவருக்குக் கீழ்ப்படிந்திடுவதற்கும் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள்; அதிலும் விசேஷமாகத் தாங்கள் குழந்தைகளாக இருந்தபோது,

தாங்கள் "விசுவாசிகளாய்" இருக்கவில்லை" என்பதையும், தண்ணீர் துளிகள் தெளிக்கப்படுவது என்பது எந்த விதத்திலும் அடக்கத்தையும், உயிர்த்தெழுதலையும் அடையாளப்படுத்தாது என்பதையும் இப்பொழுது இவர்கள் உணர்ந்திருக்கையில் கர்த்தரை அனைத்து விஷயங்களிலும் பின்பற்றிடுவதற்கும், அவருக்குக் கீழ்ப்படிந்திடுவதற்கும் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். இவர்கள் நினைவு கூருதலின் இராப்போஜனத்தில் பங்கெடுப்பதற்கு முன்னதாக (நமது கர்த்தரினாலும், அப்போஸ்தலர்களினாலும் நமக்குச் சுட்டிக்காட்டப்பட்டதுபோல) கூடுமானால் தண்ணீரிலும் அடக்கம் பண்ணப்பட வேண்டுமென்று தேவனுடைய வார்த்தைகளில் இடம் பெறுகின்றதான இந்தக் கட்டளையின் மதிப்பையும், அருமையையும் கண்டுகொள்வார்கள். வேதாகமப் பாடங்களினுடைய ஆராய்ச்சியின் தொகுதி-VI-இல் (Volume-6), அத்தியாயம் 10-இல், இடம்பெறும் "புதுச் சிருஷ்டியினுடைய ஞானஸ்நானம்" எனும் பாடத்தைப்பார்க்கவும்.

உண்மையான "கோதுமை" மாத்திரமே கர்த்தருடைய பந்தியில் காணப்படுவார்கள் என்று நாம் எதிர்ப்பார்த்திட முடியாது; எப்படி யூதாஸ் முதல் கூடுகையில் கலந்துகொண்டானோ அப்படியே சில "களைகள்" கூட வருவார்கள் என்றே நாம் எதிர்ப்பார்க்கலாம். ஆனால் நம்மால் இருதயத்தைக் கணிக்கமுடியாது என்பதினாலும், "களைகளினின்று," "கோதுமையை" நம்மால் பிரிக்க முடியாது என்பதினாலும், இந்தப் பாடம் தொடர்புடையதாகத் தேவனுடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டதான "தேவனுடைய ஆலோசனைகள் அனைத்தையும் அறிவிப்பதன்" மூலமாக எங்கள் கடமைகள் அனைத்தையும் முடித்துவிட்டு, ஒப்புரவாகுதலின் இரத்தத்தின் மீதான தனது விசுவாசத்தைக்குறித்தும், மீட்பரிடத்திலான தனது அர்ப்பணிப்புக்குறித்தும் அறிக்கைப் பண்ணிக்கொள்கின்றதான ஒவ்வொருவனும் தான் பங்கெடுக்கலாமா அல்லது வேண்டாமா என்கிறதை முடிவுபண்ணும் விஷயத்தினை அவனவனிடத்திலேயே விட்டுவிடுகின்றோம்.

## எப்படிப் பங்கெடுப்பது?

உங்களைத்தவிர, உங்கள் அயலகத்தார் மத்தியில் தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் எவரேனும் இருப்பார்களானால், அதை நீங்கள் அறிவீர்கள். அவர்களுக்காகவும், சத்தியத்திற்காகவுமான உங்களது உண்மையான அன்பானது, நீங்கள் சத்தியத்தைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, அவர்களைச் சத்தியத்தினால் ஆசீர்வதிக்கத்தக்கதாக நீங்கள் நாடிடுவதற்கு உங்களை வழிநடத்தியிருந்திருக்கும். நீங்கள் ஐக்கியமும், உறவும் கொண்டிருக்கும் அப்படியானவர்கள், உங்களோடுகூட நினைவுகூருதலில் கலந்துகொள்வதற்கு நீங்கள் அழைத்திடலாம்; ஆனால் அவர்கள் ஈடுபலியை மறுக்கிறவர்கள் என்று நீங்கள் அறிவீர்களானால், அத்தகையவர்கள்மீது கூடுதல் ஆக்கினைத் தீர்ப்பு வருவதற்கு நீங்கள் உதவுகிறவர்களாக இராதபடிக்கு, அவர்களை அழைக்க வேண்டாம்.

சூழ்நிலைகளுக்கேற்ப கொஞ்சமானவர்களோடு அல்லது அநேகருடன் கூடிக்கொள்ளுங்கள்; ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான உறவின் மற்றும் ஐக்கியத்தின்

ஆவி இல்லாத கும்பலோடு கூடிக்கொள்வதற்குப்பதிலாக, உங்களோடுகூட நினைவுகூருதலின் சிந்தையில் காணப்படுபவர்களாகிய கொஞ்சம் பேருடன் கூடிக்கொள்வது சாலச்சிறந்தது.

இந்த ஒரு தருணத்திற்குக் கர்த்தர் பயன்படுத்தினது போன்றதும், இப்பொழுது எபிரெயர்களால் பயன்படுத்தப்படுகின்றதுமான புளிப்பில்லாத அப்பத்தை (ரொட்டி-crackers) ஏற்பாடு பண்ணிக்கொள்ளலாம்; ஏனெனில் தூய்மையான/இனிப்பான, புளிப்பற்ற அப்பமானது (புளிப்பு அடையாளப்படுத்தும்) பாவம் அறியாதவரும், பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமான, தேவ ஆட்டுக்குட்டியினுடைய பாவமற்ற மாம்சத்தினை நன்கு அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளதுபோன்று "திராட்சப்பழரச" பானத்தை ஏற்பாடு பண்ணிக்கொள்ளுங்கள். சந்தேகத்திற்கிடமின்றி கர்த்தரும், சீஷரும் லைட் ஒயினை (Light Wines: 12.5%-க்கு குறைவான மதுசாரம் கொண்ட திராட்சரசம்) பயன்படுத்தினார்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி திராட்சரசமானது (wine) மிகப் பொருத்தமான அடையாளம் என்று கருதுகின்றோம். ஆனால் நமது கர்த்தர் திராட்சரசத்தை (wine) நிபந்தனை விதியாமல் திராட்சப்பழரசம் (fruit of the vine) என்று குறிப்பிடுவதால், திராட்சப்பழங்களை உலர வைப்பதன்மூலம் கிடைக்கும் உலர் திராட்சைகளைக் கொதிக்க வைத்து, வடிக்கட்டி எடுக்கும் இரசத்தினைப் பயன்படுத்துவதற்கு, மறுப்புத் தெரிவிப்பதற்கு நம்மிடத்தில் ஒன்றுமில்லை. நிச்சயமாய் இதுவும் (புளிப்பேற்றப்பட்ட) திராட்சரசம் (wine) போன்று, திராட்சப்பழரசமே (fruit of the vine) ஆகும்.

(புளிப்பேற்றப்பட்ட) திராட்சரசத்தை (wine) பயன்படுத்திடுவதனைக் கடமை உணர்வின் காரணமாக விரும்புகிறவர்களிடத்தில், இந்த உலர் திராட்சப்பானத்தை (Raisin-liquor) நாம் வற்புறுத்துவதில்லை; ஆதித் திருச்சபையினரிடமிருந்து நம்முடைய சூழ்நிலைகள், பழக்கங்கள், தட்பவெட்ப நிலைகள் முதலானவைகள் மிகவும் வேறுபடுகின்றது என்பதை அனைவருக்கும் நாம் நினைப்பூட்டுவதற்கு மாத்திரம் விரும்புகின்றோம்; மற்றும் பரிசுத்தவான்களில் சிலர் மாம்சத்தின் சுதந்தரிக்கப்பட்ட பெலவீனங்களை உடையவர்களாய் இருக்கின்றனர் என்றும், ஒருமுறை சுவைத்தல் என்பது மாபெரும் சோதனைக்கு ஏதுவாய் மீண்டும் தூண்டிவிடுகிறதாய் அமையும் என்றும் விசேஷமாய் அறிந்த நிலையில், நம்முடைய நாட்களிலுள்ள அநேக வெறியூட்டும் திராட்சரசங்களைக் (wines) கர்த்தருடைய இரத்தத்திற்கு அடையாளமாய் நாம் பயன்படுத்திடுவதற்கு அவர் சித்தமாய் இருப்பாரோ என்று நாம் ஐயப்படலாமோ. "ஒவ்வொருவரும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலை போடலாகாது என்று தீர்மானித்துக்கொள்ளுங்கள்" (உரோமர் 14:13). ஒருவேளை (புளிப்பேற்றப்பட்ட) திராட்சரசமானது மனமாற விரும்பப்படுகிறதெனில், லைட் ஒயினை தெரிவு செய்யுங்கள் அல்லது உலர் திராட்சரசத்துடன் சிறிதளவு திராட்ச ரசத்தை (wine) கலந்து கொள்ளுங்கள்.

நினைவுகூருதலின் ஆராதனையானது, மிகவும் எளிமையாய்க் காணப்பட வேண்டும்; அது பிரதானமாய் ஐக்கியத்திற்கான காலப்பகுதியாகும். அப்பம் மற்றும்

திராட்சரசத்திற்கென்று சபையார் நடுவில் ஒரு மேஜையை ஏற்பாடு பண்ணிடுங்கள். ஒரு துதிப்பாடலைப் பாடின பிற்பாடு, சகோதரரில் ஒருவர் ஆராதனையின் நோக்கத்தினை, குறிப்பிட்ட சில வார்த்தைகளில் கூறிவிட்டு, இக்காரியம் தொடர்புடையதாக வேதவாக்கியங்களிலிருந்து சில வசனங்களை வாசித்திட வேண்டும். இன்னொருவர் நமது கர்த்தருடைய பிட்கப்பட்ட சரீரமாகிய ஜீவ அப்பத்திற்காக ஸ்தோத்திரித்திட வேண்டும்; இதன் பின்னர்ப் புளிப்பில்லாத அப்பமானது (அல்லது வசதியாக இருக்குமானால் சோடா ரொட்டியானது - soda biscuits) கலந்துகொள்ள வந்திருக்கும் அனைவரிடத்திலும் கொடுக்கப்படுவதாக. ஜீவ அப்பத்தைக்குறித்துக் கருத்துக்கள் குறிப்பிடுவதற்கு (அ) வேதாகம பாடங்களின் ஆராய்ச்சியில், தொகுதி-VI-இல் (Volume-VI), XI-ஆம் அத்தியாயத்தின் சாராம்சம் சொல்லப்படுவதற்கான வாய்ப்பு இப்பொழுது வழங்கப்படலாம். அடுத்ததாக "பாத்திரத்திற்காகவும்," அது அடையாளப்படுத்தும் விலையேறப்பெற்றதான இரத்தத்திற்காகவும் ஸ்தோத்திரத்துடன்கூடிய ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும். "திராட்சப்பழரசமுள்ள" பாத்திரமானது பரிமாறப்படுவதாக. இப்பொழுது விலையேறப்பெற்ற இரத்தம்பற்றின கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்படலாம். ஆனால் இந்தக் கூடுகையில், கலந்தாய்வுகளானது தவிர்க்கப்படுவதாக. விசுவாசத்திற்காக உண்மையாய்ப் போராடுவது மற்றத் தருணங்களிலெல்லாம் எவ்வளவுதான் ஏற்றதாய்க் காணப்பட்டாலும், இது அப்படியான ஒரு தருணமல்ல. இது கர்த்தரும், நம்முடைய மீட்பரும், வந்திருக்கும் இராஜாவுமானவரிடத்தில் ஐக்கியம் மற்றும் உறவுக்/அந்நியோனியம் கொள்வதற்கானத் தருணமாகும். எவனாகிலும் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால், அவன் பேசட்டும்; மற்றவர்களோ நம்முடைய ஆசீர்வாதத்திற்கென ஆண்டவர் நியமித்த அவருடனான விசேஷித்த ஐக்கியத்திற்கான பரிசுத்தமான தருணங்களானது கெடாதபடிக்கு விவாதத்திலிருந்து விலகிக்கொள்வார்களாக.

நினைவுகூருதலை உண்மையான, வஞ்சகமற்ற இருதயங்களுடன் ஆசரிப்பவர்கள், மாபெரும் மற்றும் புத்துயிர் அளிக்கின்றதான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் இதற்காகவே ஆராதனையின் நடுவில், யாருமே சத்தமாய்ப் பேசாதபோது, அமைதியான தருணங்களைப் பெற்றிருப்பது நலமாயிருக்கும்; அதாவது ஐக்கியத்தினாலும் கடந்தகாலங்களிலும், தற்போதுமுள்ள அவரது அன்பினை உணர்ந்துகொள்ளுதலினாலும், மரணம்வரையிலுமாக அவரது உண்மையான பின்னடியார்களாக இருப்பதற்கெனப் பண்ணப்பட்டதான வாக்குறுதியினைப் புதுப்பித்துக்கொள்ளுதலினாலும், கடந்த வருடத்தில் எவ்வாறு அந்த வாக்குறுதியானது காப்பாற்றப்பட்டது (அ) மீறப்பட்டது என்று சிந்திப்பதினாலும், நமது கர்த்தரோடுகூட உடன்சுதந்திரர்களெனப் பரிசினைப் பெற்றுக்கொள்வதற்கென நாம் அழைக்கப்பட்டதான ஓட்டத்தில் பொறுமையோடுகூட ஓடிடுவதற்கு மீண்டும் தீர்மானிப்பதினாலும், அனைவருடைய இருதயங்களானது ஆண்டவருடன் மிகவும் நெருங்கிவர முடிகிற அமைதியான தருணங்களைப் பெற்றிருப்பது நலமாயிருக்கும்.

நம்முடைய பாடல் புஸ்தகத்திலுள்ள, 276-ஆம் துதிப்பாடலானது,

நினைவுகூருதலை நிறைவு செய்வதற்கு அருமையாய்ப் பொருந்துகின்ற துதிப்பாடலாய்க் காணப்படுகின்றது. நமக்கொத்த விசுவாசத்தில் உலகமெங்கும் காணப்படும் சிலர் இதே மாபெரும் பலியை நினைவுகூர்ந்து ஆசரிக்கின்றனர் என்றும், அதே கிருபையான கர்த்தரை நினைவுகூருகின்றனர் என்றும், அதே மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களினால் தேற்றப்படுகின்றனர், ஊக்குவிக்கப்படுகின்றனர் என்றும், அதே கிருபையான இராஜாவினுடைய கிருபையினால், மாபெரும் பணிவிடைகள் புரிந்திடுவதற்கும், அவரது ஊழியத்திலும், அவரது ஜனங்களுக்கான ஊழியத்திலும் மாபெரும் பலிகளை ஏறெடுத்திடுவதற்கும் தீர்மானம் எடுக்கின்றனர் என்றும், அதே துதி, ஆராதனை பாடலினால் நிறைவு செய்கின்றனர் என்றும் நாம் உணர்கையிலும், நமது சந்தோஷம் பெருகுகின்றது.

"சிலுவை முன்தனிலே நாம் செலவழித்த
ஆசீர்வாதம் நிறைந்த தருணங்கள் இனிமையானதே;
பாவிகளுக்காக உயிர்த்தெழுந்த நண்பனிடமிருந்தே
ஜீவனையும், ஆரோக்கியத்தினையும், சமாதானத்தையும் பெற்றிருக்கின்றோமே."

"அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, புறப்பட்டுப்போனார்கள்" என்று முதலாம் இராப்போஜனம் குறித்து எழுதப்பட்டுள்ளது. நாமும் அவ்வாறே செய்வோமாக. ஒவ்வொருவனும் நிறைவான இருதயத்துடன் தனது வீடு திரும்புவானாக. பொதுவாய், வழக்கமாய்க் கூடுகைகளுக்குப்பின் சொல்லப்படும், அதாவது சொல்வது ஏற்றதாய்க் காணப்படுகின்றதான வாழ்த்துதல்களையும், வழக்கமாய் இடம்பெறும் அனைத்து விதமான கருத்துத் தெரிவித்தல்களையும், அபிப்பிராயம் தெரிவித்தல்களையும் இந்தத் தருணங்கள்போது தவிர்த்து விடுங்கள் என்று நாம் யோசனைக் கூறுகின்றோம். இப்படியாக ஆண்டவருடனான நமது ஐக்கியத்தினையும், அந்நியோன்யத்தையும்/ உறவையும் நீட்டித்துக்கொள்ளலாம். அடுத்தநாள் முழுவதும் அவரைப் பின்தொடர்ந்துப் பார்த்துக்கொண்டிருங்கள். வஞ்சனையற்றவருக்கு எதிராக ஜனங்களுடைய கூச்சலைக் கவனியுங்கள். ஜனங்கள் எருசலேமின் குருமார் வகுப்பினரால் தூண்டப்படுவதைக் கவனியுங்கள். ஏரோதுக்கு முன்னிலையிலும், அவனது போர்ச்சேவகர்களின் முன்னிலையிலும் அவர் நிற்பதைப் பாருங்கள். அவர் கேலியாய் இராஜ வஸ்திரம் தரிப்பிக்கப்படுவதையும், முள்ளினாலான கிரீடம் தரிப்பிக்கப்படுவதையும், குட்டப்படுவதையும், உமிழப்படுவதையும் பாருங்கள்.

அவர் குற்றவாளியெனச் சிலுவையில் அறையப்படுவதையும், அவர் செய்திட்டதான மிகவும் கிருபையான கிரியைகளினாலேயே, அவர் பழித்துரைக்கப்படுவதையும், அதாவது "மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை" என்று கூறிப் பழித்துரைக்கப்படுவதையும் பாருங்கள். அவரால் தம்மை இரட்சித்துக்கொண்டிருக்க முடியும் என்றும், அவர் வேண்டிக்கொண்டிருந்திருப்பாரானால், தம்மை விடுவிப்பதற்கும், தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கும், "பன்னிரண்டு லேகியோனுக்கும் அதிகமான தூதரை"

பெற்றுக்கொண்டிருக்க முடியும் என்றும், தம்முடைய சத்துருக்களுக்காக, தம்மை பழித் தூற்றுபவர்களாகக் காணப்படுபவர்களுக்காக மரிப்பதற்குப்பதிலாக, அவர்களை அவரால் அழித்துப்போட்டிருக்க முடியும் என்றும், நமக்கான ஈடுபலி கிரயமென அவர் தம்மை மனமுவந்து கொடுத்தக் காரியத்திலேயே உயிர்த்தெழுதல் மற்றும் நித்திய ஜீவனுக்கான நமது நம்பிக்கை சார்ந்துள்ளது என்றும் நினைவுகூருவோமாக. நமக்காகவும், அனைவருக்காகவுமான அவரது அன்பை எண்ணிப்பார்க்கையில், அது சிலுவையின் நல்ல போர்ச் சேவகர்களென அதிகமதிகமாய்ச் சகித்துக்கொள்வதற்கு, அவரது பின்னடியார்களாகிய நம்மை நிச்சயமாய்ப் பலப்படுத்துகின்றதாய் இருக்கும். உண்மையாய்ச் சகிக்கப்படும் பட்சத்தில், மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகின்றதும், நமக்கான சோதனையாக மற்றும் சிட்சையாகக் காணப்படுவதற்கு இப்பொழுது அனுமதிக்கப்பட்டிருக்கின்றதுமான இலேசான உபத்திரவங்களின் கீழ், நாம் இளைப்புள்ளவர்களாய் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே, எப்பொழுதும் நினைத்துகொள்வோமாக.

## புரூக்லினில் நினைவுகூருதல் ஆசரிப்பு

வழக்கம்போல புரூக்லினிலுள்ள சபையார், "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே" என்கிறதை ஆசரிப்பார்கள். எப்படி ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் சரி, எந்தச் சபைப் பிரிவில் அவர்கள் காணப்பட்டாலும் சரி அல்லது அனைத்திலிருந்து சுதந்திரமாய்க் காணப்பட்டாலும் சரி, இயேசுவின் மாபெரும் - பாவநிவாரண பலியில் விசுவாசமுள்ள பக்தியுள்ள விசுவாசிகள் அனைவரும் நம்மோடுகூடக் கூடிடுவதற்கும், இந்த நினைவுகூருதலில் பங்கெடுப்பதற்கும் அன்போடு அழைக்கப்படுகின்றனர். கர்த்தருடைய பந்தியானது, அவருடையவர்களாய்க் காணப்படும் அனைவருக்குமானதாகும்.

வியாதிப்பட்டிருக்கின்ற அல்லது முடமான நிலையிலுள்ள சகோதர, சகோதரிகள் புரூக்லின் டேபர்நேக்கலுக்கு (Brooklyn Tabernacle) அஞ்சல் அட்டை மூலம் விண்ணப்பத்தைத் தெரிவித்துக்கொண்டு, அடையாளச் சின்னங்களை அவர்களது வீடுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

## என்னிடத்தில் வா

ஆ! என் இருதயம் மிகுந்த பாரம் கொண்டுள்ளதுவே
சோர்ந்து, நொறுங்கி போயுள்ளதே . . .
என்னிடத்தில் வா என்றழைத்தவர் ஒருவர்,
வந்து இளைப்பாறு என்றாரே.

அவர் எனது வழிகாட்டியாகிடுவதற்கு - நான்
அவரிடத்தில் போக - அவர் அடையாளக் குறிகள்
ஏதேனும் வைத்திருக்கின்றாரா? ஆம்! அவர் கைகளிலும்,
பாதங்களிலும், விலாவிலும் காயங்கள் உள்ளதுவே.

இராஜாவைப்போல் அவர் சிரசிசை
அலங்கரிக்க மகுடம் இருக்கிறதா?
ஆம்! அங்கே மகுடம் உள்ளது,
ஆனால் அது முள்ளினாலான மகுடமே!

நான் அவரைக் கண்டறிந்து, பின்தொடர்ந்தேனாகில்
இங்கே எனது பங்கு என்னவோ?
ஆ! அதிக வருத்தமும், போராட்டங்களும்,
அதிக கண்ணீருமே - ஆம் இவைகளே.

நான் அவரை உறுதியாய்ப் பற்றிக்கொள்வேனாகில்
இறுதியில் நான் எதை அடைவேன்?
ஆ! துக்கம் மறைந்திருக்கும், போராட்டம் முடிந்திருக்கும்,
யோர்தானும் கடந்திருப்போமே!

என்னை ஏற்றருளுமே என நான் வேண்டினால்,
என்னை அவர் மறுப்பாரோ?
பூமியும், வானமும் ஒழிவது
வரையிலும் இல்லையே.

- விடியல் துதிப்பாடல்கள், #3

# அவர் வருமளவும்

"அன்புக்குரிய சகோ. ரசல் அவர்களே . . . கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறித்து அப்போஸ்தலன் எழுதுகையில் "கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று கூறுகின்றார். (1 கொரிந்தியர் 11:26) மேலும் கர்த்தர்: "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று கூறுகையில், நான் இல்லாதிருக்கிற காலங்களில் என்னை நினைவுகூருங்கள் என்ற அர்த்தத்திலேயே நிச்சயமாய்க் கூறியிருந்திருக்க வேண்டும். நினைவுகூருதல் ஆசரிப்பானது என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி இப்பொழுது நிறுத்தப்பட வேண்டும், ஏனெனில் கர்த்தர் இப்பொழுது பிரசன்னமாயிருக்கின்றார். இதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?"

பதில். மேலே மேற்கோளிடப்பட்டிருக்கின்றதான பவுலினுடைய வார்த்தைகளானது, கவனமாய் வாசித்துப்பார்க்கப்படும்போது, அது கர்த்தர் வந்து, பிரசன்னமான பிற்பாடு அவ்வாசரிப்பைத் தடைப்பண்ணிடும் எதையும் நமக்குச் சுட்டிக்காண்பிக்கிறதில்லை. மாறாக அங்கு அப்போஸ்தலனின் கருத்தென்னவெனில்...நாம் அப்பத்தைப் பிட்கும்போது, கிறிஸ்துவோடு மரணத்தில், ஒரே அப்பத்தின், ஒரே சரீரத்தின் அங்கத்தினர்களெனக் காணப்படும் நம்முடைய பங்கெடுத்தலை நாம் வெளிப்படுத்துகின்றோம் என்பதாகும். ஆகையால் நாம் மாம்சத்தில் காணப்படும் நாட்கள்வரையிலும், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் பாடுகள் நிறைவடைவதுவரையிலும், அவருடைய பாடுகளில் குறைவானது நிறைவேற்றப்படுவது நிறைவடைவதுவரையிலும், நாம் அவைகளை நிறைவேற்றுவதும், பாத்திரத்தில் பங்குகொள்வதும், அதை அடையாளப்படுத்திக் காண்பிப்பதும் ஏற்றக்காரியமாகவே இருக்கும்.

"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளின் விஷயத்தில், "தாம் இல்லாதிருக்கும்போது தம்மை நினைவுகூருங்கள்" என்ற அர்த்தத்தில் அவர் குறிப்பிட்டார் என்று நாம் எண்ணுகிறதில்லை. அவர் முதலாம் இராப்போஜனத்தின்போது காணப்பட்டார் மற்றும் அவர் இல்லாமல் இருக்கும்போதுதான் அவரது மரணத்தை நினைவுகூருவது சரி என்றால், அவர் இல்லாமல் காணப்படுவதற்கு முன்னதாகவே நினைவுகூருவதும்கூடப் பொருத்தமற்றதாகவே காணப்படும்.

இயேசு என்ன அர்த்தத்தில் கூறினார் என்று நாம் பின்வருமாறு எண்ணுகின்றோம்; "பஸ்கா ஒரு நிழலாகவும், நிச்சயமாய் நிறைவேற வேண்டிய நியாயப்பிரமாணத்தின் ஒரு பாகமாகவும் காணப்படுகின்றது. இதன் நிறைவேறுதலானது இப்பொழுது சமீபித்துக்கொண்டிருக்கின்றது. அடிக்கப்பட்டு, புசிக்கப்பட்டதான ஆட்டுக்குட்டியினுடைய நிஜமாக நான் இருக்கின்றேன்; மற்ற அனைத்து அம்சங்களும்கூட நிறைவேறும் – தேவ இராஜ்யமானது முழுமையாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்போது, என்னைப் பின்பற்றுபவர்களாகிய, என் சீஷர்கள் அனைவருமாகிய நீங்கள், முதற்பேறானவர்களெனக் கடந்து போகப்பட்டிருக்கும்போது, மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலில் விடுவிக்கப் பட்டிருக்கும்போது, முழு நிழலும் நிறைவேற்றப்படும். ஆகையால் நீங்கள் இதைப் புசிக்கும்போதெல்லாம் – பஸ்காவை நினைவுகூர்ந்து ஆசரிக்கும் போதெல்லாம் – நிழலுக்கு அப்பால்பார்த்து, என்னில் ஆட்டுக்குட்டியினுடைய நிஜத்தை அடையாளம் கண்டுகொள்ளுங்கள். இதை நிழலான ஆட்டுக்குட்டியின் நினைவாக இல்லாமல், மாறாக என்னை நினைவுகூரும்படி செய்யுங்கள்."

- ரீபிரிண்ட்ஸ், பக்கம் 619.

# பஸ்காவின் இரண்டு நினைவுகூருதல் சின்னங்கள்

## மாற்கு 14:12-25

**"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்." 1 கொரிந்தியர் 11:26**

இந்த ஒரு பாடத்தினுடைய விஷயமானது, இயேசுவினுடைய பூமிக்குரிய ஊழியத்தின் மிகச் சுவாரசியமான அம்சங்களில் ஒன்றாகும். அப்போஸ்தலர் களுடனான தம்முடைய கடைசி இராப்போஜனமாக இது இருக்கப்போகின்றது என்பதை அப்போஸ்தலர்கள் அறியாதிருந்தார்கள் என்று அவர் அறிந்திருந்தார். அவர் தம்முடைய மரணம் சமீபித்திருக்கின்றது என்று குறிப்பிட்டிருந்தபோதிலும், அவர் குறிப்பிட்டிருந்தது போன்றதொரு விபரீதமானது மிகவும் சமீபமாய் இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்வதற்கு முடியாதவர்களாய் அவரது சீஷர்கள் காணப்பட்டனர். ஆனால் இயேசுவோ தாம் குறிப்பிட்டவைகளின் அர்த்தத்தினை முழுமையாய் உணர்ந்தவராய், தம்முடைய வேலையின் நிறைவிற்காய் ஆவலுள்ளவராய் இருந்தார். அந்த நாளினுடைய முடிவின்போது, அவரும், அவரது சீஷர்களும் பஸ்காவைப் புசிக்க சென்றபோது இயேசு: "நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்" என்றார்; அது அடுத்தநாள் நிறைவேறின மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானமாகும்.

பஸ்காவை ஆயத்தம்பண்ணும்படிக்குப் பேதுருவும், யோவானும் அனுப்பிவைக்கப்பட்டிருந்த இரண்டு சீஷர்களாகக் காணப்பட்டனர். இப்படி இயேசுகூறி அனுப்பினபோது, அவர் பெத்தானியாவில், லாசருவின் வீட்டில் காணப்பட்டார் என்பது நிச்சயமே. இயேசுவும், அவரது சீஷர்களும் பஸ்காவைப் புசித்ததான அதே பெரிய மேல்வீட்டறையில்தான், அப்போஸ்தலர்களும், மற்றவர்களும் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்திற்குக் காத்திருக்கத்தக்கதாகக் கூடியிருந்தார்களென அனுமானிக்கப் படுகின்றது. இந்த ஓர் அறையானது இன்னமும் பாரம்பரியத்தினால் அடையாளம் காண்பிக்கப்படுகின்றது, எனினும் கிறிஸ்தவர்கள்மேல் விசேஷித்தப் பொறாமை கொண்டவர்களான முகமதியர்களின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றது.

அதே நாளினுடைய மாலையில் இயேசு பன்னிரண்டு பேரோடுகூட இவ்வறையில் கூடினார்; அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. அவர்கள் யூதருடைய பஸ்காவினை, அதற்குக் குறிக்கப்பட்ட வேளையில் ஆசரிப்பதற்கெனக் கூடினார்கள். ஆட்டுக்குட்டியானது சுடப்பட்டிருந்தது மற்றும் புளிப்பில்லாத அப்பம் ஆயத்தம் பண்ணப்பட்டிருந்தது மற்றும் கசப்பான கீரைகளும் இருந்தன. அனைத்துமே ஆதிக் கட்டளைக்கு அப்படியே ஒத்திருந்திருக்க வேண்டும் என்பதில் நமக்கு நிச்சயமே; ஏனெனில் புதிய யுகம் இன்னும் வராததினால் இயேசுவும், அவரது அப்போஸ்தலர்களும் மற்ற யூதர்களைப்போன்று யூத பிரமாணத்தினுடைய ஒவ்வொரு அம்சத்திற்கும் கட்டுப்பட்டவர்களாய் இருந்தனர். இயேசுவின் பலிக்கான தெய்வீக அங்கீகரித்தலையும், முழுமையான அர்ப்பணித்தலின் வாயிலாக அவருடைய

சீஷர்களாகி உள்ளவர்கள் அனைவருக்குமான தெய்வீக ஏற்றுக்கொள்ளுதலையும் குறிக்கின்றதான பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்திற்கான வேளை வருவதுவரையிலும், நியாயப்பிரமாணத்தினுடைய ஒவ்வொரு அம்சமும் கட்டுப்படுத்தும் ஒப்பந்தமாகவே காணப்பட்டது.

## இராஜ்யத்தின் கனங்கள் விரும்பப்பட்டன

தாங்கள் மாபெரும் துன்பம் நிகழப்போவதற்கு முந்தைய நாளில் காணப்படுகின்றார்கள் என்பதை உணர்ந்துகொள்வதற்குப்பதிலாக, இயேசு சீக்கிரமாய் இராஜாவாகச் சிங்காசனத்தில் அமருவார் என்று அப்போஸ்தலர்கள் நம்பினவர்களாய் இருந்தனர். அவரது சிங்காசனத்தில், அவரோடுகூடத் தாங்கள் உட்காருவதற்கான அவருடைய வாக்குத்தத்தத்தை நினைவுகூர்ந்தார்கள். இந்த வாக்குத்தத்தத்தை அடைவது மிகவும் அருகாமையில் காணப்படுவதுபோன்று அவர்களுக்குத் தோன்றினபடியால், தாங்கள் இராஜ்யத்தில் பெறப்போகின்றதான கனத்தின் நிலைகள் குறித்த சிந்தனைகளே அவர்களுக்குக் காணப்பட்டது. இதற்காகப் பிடிவாதமாய்ப் போராடவில்லையெனில், மிகுந்த கனமிக்க ஸ்தானங்கள் தங்களுக்குக் கிடைக்காது என்பதாக அவர்கள் எண்ணினார்கள். அவர்களுடைய மனநிலையை உணர்ந்தவராக இயேசு, "புறஜாதியாரின் இராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள்; உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப்பேலாவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கக்கடவன்" என்றார்.

இவைகள் அவர்களுக்குப் புரிந்துகொள்வதற்குக் கடினமாய்க் காணப்பட்டதான புதிய கொள்கையாய் இருந்தன; மற்றும் இன்றுவரை இது இயேசுவின் பின்னடியார்கள் முழுமையாய்ப் புரிந்துகொள்வதற்குச் சிரமமாகவே உள்ளது. மாம்சத்தில் பிரதான பணிவிடைக்காரனாய்க் காணப்படுபவனே, இராஜ்யத்தில் பிரதானமானவனாய்க் காணப்படுபவான். பணிவிடைக்காரர்களிலேயே பெரிய பணிவிடைக்காரர் கர்த்தராகிய இயேசுவே ஆவார். இதே கொள்கையானது அவரது பின்னடியார்கள் அனைவரின் விஷயத்திலும்கூட உண்மையாயிருக்கின்றது. இவர்களில் யார் மிகுந்த உண்மையுடனும், மிகுந்த நேர்மையுடனும், மிகுந்த வைராக்கியத்துடனும் சகோதர சகோதரிகளுக்குப் பணிவிடைச் செய்கின்றானோ, அப்படிப்பட்டவனே தேவனிடத்திலான தனது தயவைப் பெருகப் பெற்றவனாகவும், மேசியாவின் இராஜ்யத்தில் மிகவும் பெரிதான ஒரு ஸ்தானத்திற்கெனத் தன்னை ஆயத்தம் பண்ணுகிறவனாகவும் இருப்பான்.

ஏதாகிலும் கனமற்ற பணிவிடையைச் செய்வது என்பது, உயர் ஸ்தானத்திற்கான தங்களது அபாத்திர தன்மையை ஒப்புக்கொள்ளுகிறதாய் இருக்குமென்ற எண்ணத்தினாலும், எவரும் பணிவிடைக்காரனுடைய பணியை எடுப்பதற்கு விரும்பாததினாலும், பாதங்கள் கழுவுவதற்கான எந்த ஏற்பாடுகளையும் சீஷர்கள் பண்ணவில்லை. மணற்பாங்கான தேசத்தில், பாதரட்சைகளானது பயன்படுத்துகையில், பாதம் கழுவுதலானது மிகவும் இன்றியமையாததாய்க் காணப்படுகின்றது. கடிந்துகொள்ளும் வகையில் இயேசு பந்தியிலிருந்து எழும்பி,

தம்முடைய சீஷர்களுக்காக இந்தக் கனமற்றப் பணிவிடையைப் புரிந்து, தாழ்மைக்குறித்த பாடத்தினுடைய முக்கியத்துவத்தைக்கூறி, அவர்கள் ஒருவருக்கொருவர் செய்ய வாய்ப்புப் பெற்றுள்ளதான பணிவிடையானது எவ்வளவு தாழ்வானதாக இருப்பினும், அதைப் புரிந்திடுவதற்கு அவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட வேண்டுமென்பதைச் சுட்டிக் காண்பித்தார்.

இப்படிப்பினையானது, அனுசரிக்கப்பட வேண்டிய ஒரு சடங்காச்சாரமாய் இராமல், மாறாக ஒரு கொள்கைக்கான விளக்கப்பாடமாக இன்னமும் நம் மத்தியில் காணப்படுகின்றது. கர்த்தருடைய சகோதரருள் ஒருவருக்குச் செய்யப்படுகின்றதான எந்த ஓர் எளிமையான/தாழ்வான பணிவிடையும், பாதம் கழுவப்படுவதற்கு ஒத்திருக்கின்றது.

## யூதாசினுடைய வாழ்க்கையில் கவலைக்கிடமான வேளை

பஸ்கா போஜனம், அதாவது ஆட்டுக்குட்டி, கசப்பான கீரைகள் மற்றும் புளிப்பில்லாத அப்பம் புசிக்கப்பட்டுக்கொண்டிருந்தது; புளிப்பில்லாத அப்பங்களானது தடிமனான ரொட்டிபோன்றிருக்கும் மற்றும் சிலசமயம் மாம்ச சாற்றை எடுப்பதற்குக் கரண்டிக்குப் பதிலாகவும் பயன்படுத்தப்படுகின்றது. சுவிசேஷங்களில் ஒன்றானது, இயேசு இருதயத்தில் வியாகுலமடையத் தொடங்கி, "என்னோடுகூட என் விருந்தினர்களாக, என் குடும்பத்தின் அங்கத்தினர்களாக உணவருந்திக் கொண்டிருக்கும் பன்னிரண்டு பேராகிய உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பதற்குத் திட்டம் பண்ணிக்கொண்டிருக்கின்றான்" என்று கூறினதாகத் தெரிவிக்கின்றது.

இப்படியாகக் கூறுவதில் இரண்டு நோக்கம் இருந்திருக்க வேண்டும். முதலாவதாக இவ்வார்த்தைகளானது, ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருப்பதான காட்டிக்கொடுத்தல் குறித்து இயேசு நன்கு தெரிந்திருந்தார் என்பதைச் சீஷர்களுக்குக் காண்பிப்பதற்காகும். இதனால் இயேசுவுக்கு ஏதோ எதிர்ப்பார்க்காத விதத்தில் நடந்துவிட்டதென அல்லது தெய்வீகத் திட்டத்திற்குப் புறம்பாக ஏதோ நடந்துவிட்டதென அவர்கள் எண்ணமாட்டார்கள். இரண்டாவதாக யூதாசை திகைக்கப்பண்ணத் தக்கதாக, அவரைச் சிந்தித்துப்பார்க்க வைக்கத்தக்கதாக, அவருக்குக் கடைசி கண்டனமாகக் காணப்படுவதற்கென இயேசு இவ்வார்த்தைகளைக் கூறினார். துரோகியினுடைய நடக்கையானது, நமது அறிவுக்கு எட்டியவரை வெட்கக்கேடான ஒன்றுதான்; ஆனால் துரோகியானவன் யாருக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டுகின்றானோ, அந்நபரிடமிருந்து விருந்தோம்பலைப் பெற்றுக்கொண்டு, அந்நபரினுடைய அப்பத்தைப் புசிக்கையில், அவனது நடக்கையானது இரட்டிப்பான விதத்தில் வெட்கக் கேடானதாகக் காணப்படும்.

சீஷர்கள் மத்தியில் அச்சம் பரவினது; ஒருவர்பின் ஒருவராக, "நானோ?" என்று கேட்டார்கள். "என்னை நீர் குறிப்பிடவில்லை அல்லவா!" என்பதே இக்கேள்வியினுடைய உட்கருத்தாகும். "நானோ?" என்று பொதுவாய்க் கேட்கப்பட்ட கேள்வியை யூதாசும் கேட்டுக்கொண்டார். அப்போஸ்தலனாகிய யோவான், இயேசுவிற்கு அடுத்து

உட்கார்ந்திருந்தார் மற்றும் ஆண்டவர் யாரைக் குறிப்பிடுகின்றார் என்று ஆண்டவரிடம் கேட்கத்தக்கதாகப் பரிசுத்த பேதுரு, யோவானுக்குச் சைகைக்காட்டினார். அது அநேகமாக இயேசுவுக்கு மாத்திரமே கேட்க, மிகுந்த மெல்லியக் குரலில் கேட்கப்பட்டக் கேள்வியாய் இருந்தது. "நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான்" என்பதாக மெல்லிய குரலில் நமது கர்த்தருடைய பதில் காணப்பட்டது. விசேஷித்த அக்கறையைச் சுட்டிக்காட்டும் வண்ணமான ஒரு விசேஷித்த துணிக்கையை (தோய்த்து) ஆயத்தம்பண்ணி, அதை யூதாசிடம் கொடுத்தார். இப்படியாகவே பரிசுத்த யோவானும், பரிசுத்த பேதுருவும் காரியத்தினை அறிந்துகொண்டார்கள்.

இது நடந்த கொஞ்ச நேரத்திற்குப் பிற்பாடு, யூதாஸ் புறப்பட்டுப்போனார்; "சாத்தான் அவனுக்குள் புகுந்தான்" என்பதாகப் பதிவுபண்ணப்பட்டுள்ளது. தனது சிறந்த நண்பனை முப்பது வெள்ளிக்காசுகளுக்கு விற்கும் காரியத்தினை யூதாஸ் ஆலோசித்து, தீர்மானித்து, ஆதாயத்தினைக் கணக்குப்பார்த்தபோது, பொல்லாங்கனின் ஆவியானது அவனிடத்தில் முற்றிலுமாய் ஆதிக்கம்கொண்டது. கொஞ்சம் நேரத்திற்குப் பிற்பாடு இயேசு நிறுவினதும், இன்று கிறிஸ்தவர்களினால் ஆசரிக்கப்படுகிறதுமான நினைவுகூருதலின் இராப்போஜனத்தின்போது, யூதாஸ் அநேகமாக இருந்திருக்கமாட்டார்.

## நினைவுகூருதலின் அர்த்தம்

இயேசுவினால் நிறுவப்பட்டதான நினைவுக்கூருதலின் இராப்போஜனமானது, பஸ்கா இராப்போஜனத்திடத்திலிருந்து முற்றிலுமாய் வேறுப்பட்டதாகவும், வேறானதாகவும் இருக்கின்றது; எனினும் இவைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாகும்; ஏனெனில் ஒன்று நிழலாகவும், மற்றொன்று அதற்கான முழுமையான உதாரணமாய் (அ) இன்னும் மேலான அர்த்தமுள்ள உயர்தரமான நிழலாய்/மாதிரியாய்க் காணப்படுகின்றது. ஒன்றில் தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவை அடையாளப்படுத்துவதற்கு, சொல்லர்த்தமான ஓர் ஆட்டுக்குட்டி பயன்படுத்தப்படுகின்றது; மற்றதில், அதாவது முழுமையான உதாரணத்தில் அப்பம் பிட்கப்படுதலானது, இயேசுவின் மரணத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

யூதர்கள் தங்கள் ஜாதியினுடைய பிறப்பையும், எகிப்திய அடிமைத்தனத்திலிருந் ததான தங்கள் ஜாதியாரின் விடுதலையையும் கொண்டாடுகின்றனர். இதன் ஆரம்பமானது, எகிப்தியர்கள்மீது பத்தாம் வாதை கடந்துவந்தபோது, தங்கள் முதற்பேறானவர்களை வாதையானது கடந்துபோனதில் ஆகும். அந்தப் பஸ்கா இரவின்போது தப்புவிக்கப்பட்டவர்களாகிய இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள், மேசியாவின் இராஜ்யமாகிய காலை வருவதற்கு முன்னதாக பாவம் எனும் இரவு நிலவும் தற்காலத்தில் கடந்துபோகப்படுகிறவர்களாகிய (அ) தப்புவிக்கப்படுபவர்களாகிய முதற்பேறானவர்களின் சபைக்கு நிழலாய் இருக்கின்றனர் என்று பரிசுத்த பவுல் நமக்குக் காண்பிக்கின்றார்.

கிறிஸ்துவினுடைய மரணத்திற்கான நினைவுகூருதலானது மாதந்தோறும் (அ) காலாண்டுதோறும் (அ) வாரந்தோறும் ஆசரிக்கப்படக்கூடாது என்றும், இது யூதருடைய பஸ்காவிற்கான முழுமையான உதாரணமாய்க் கருதப்பட்டு, யூதருடைய பஸ்கா ஆசரிக்கப்படுகின்றதான அதே காலத்தில், வருஷந்தோறும் ஆசரிக்கப்பட வேண்டும் என்றுமுள்ள முடிவிற்கு வேதத்தின் மாணாக்கர்கள் அதிகமதிகமாய் வந்துகொண்டே இருக்கின்றனர்.

தாம் நிறுவினதான இராப்போஜனத்தினுடைய அர்த்தத்தை அப்போஸ்தலர்களுக்கு விளக்கினபோது, அவர்கள் அவரது வார்த்தைகளினுடைய அர்த்தத்தினைப் புரிந்துகொண்டார்களென நாம் புரிந்திட வேண்டாம். மாறாக அவர் ஏற்கெனவே முன்னறிவித்திருந்ததுபோல, அவர்கள் பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதங்களையும், வெளிச்சமூட்டுதலையும் பெற்றுக்கொண்ட பிற்பாடு, பரிசுத்த ஆவியானது இக்காரியங்களை அவர்களது கவனத்திற்குக் கொண்டுவந்து, அவைகளின் அர்த்தத்தினை அவர்கள் புரிந்துகொள்வதற்கு உதவினது. "இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்ற இயேசுவினுடைய வார்த்தைகளின் உட்கருத்தினை இப்பொழுது நாம் பார்க்கலாம். சிலர் எண்ணிக்கொள்வதுபோன்று, அப்பமானது அவரது உண்மையான சரீரமாகவும், திராட்சரசமானது அவரது உண்மையான இரத்தமாகவும் மாறினது என்ற அர்த்தத்தில் அவர் கூறியிருந்திருக்கமாட்டார் என்று நாம் உணர்ந்துகொள்கின்றோம். அவர் அத்தருணத்தில் இன்னமும் தம்முடைய உண்மையான சரீரத்தையும் மற்றும் தம்முடைய உண்மையான இரத்தத்தையும் பெற்றிருந்தார். "இந்த அப்பமானது, உங்களுக்காகப் பிட்கப்படப்போகின்றதான என் சரீரத்திற்கு அடையாளமாய் இருக்கின்றது; மற்றும் நாளை உங்களுக்காக சிந்தப்படப்போகிறதான என் இரத்தத்திற்கு - என் ஜீவன் கொடுக்கப்பட்டதற்கு - இந்தத் திராட்சரசம் அடையாளமாய் இருக்கின்றது" என்ற அர்த்தத்திலேயே அவர் கூறினார்.

அந்த அப்பத்தைப் புசிப்பதினாலும், அந்தச் சொல்லர்த்தமான பாத்திரத்தில் பானம்பண்ணுவதினாலும், சீஷர்களுக்கு விசேஷமான புண்ணியம் உண்டாகும் என்ற அர்த்தத்தில் இயேசு கூறினதாகவும் நாம் எண்ணிவிடக்கூடாது. இவைகளுக்கு அப்பால் நாம் நோக்கிப்பார்ப்பவர்களாக இருந்து, அவர் பின்வரும் அர்த்தத்திலேயே குறிப்பிட்டார் என்று பார்க்க வேண்டும்; அதென்னவெனில், "என்னுடைய மரணமானது பெற்றுத் தந்ததான புண்ணியங்களில் நீங்கள் விசுவாசத்தினால் பங்கெடுக்கும்போது மாத்திரமே, என் சீஷர்களாக உங்களுக்கு அளிக்கப்பட்டதான மாபெரும் ஆசீர்வாதங்களை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்" என்பதேயாகும். இயேசுவின் மரணமானது, தங்களுடைய பாவங்களுக்கேயாகும் என்றும், அதுவே தங்களைப் பரம பிதா ஏற்றுக்கொள்வதற்கான அடிப்படையாயிற்று என்றும் அப்போஸ்தலர்கள் நம்பினார்கள். கிறிஸ்துவினுடைய ஜீவனை அவர்கள் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டால் மாத்திரமே, தாங்கள் இந்த அனைத்து ஆசீர்வாதங்களையும் உண்மையில் பெற்றுக்கொள்பவர்களாக முடியும் என்று உணர்ந்துகொண்டார்கள்.

இந்த அப்பம் மற்றும் பாத்திரத்தினுடைய மற்றுமொரு முக்கியமான அர்த்தத்தினைப் பரிசுத்த பவுல் அடிகளார் நமக்காகச் சுட்டிக்காண்பிக்கின்றார். அவர் கிறிஸ்து மற்றும் அவரது சபையின் ஒருமைப்பாட்டினைக்குறித்துத் தெரிவிக்கின்றார். மேலும் ஒரே அப்பமும், ஒரே பாத்திரமும் காணப்படுவதை நமக்குத் தெரிவிக்கின்றார். முதலாவதாக இந்த அப்பமானது கிறிஸ்து இயேசுவை அடையாளப்படுத்துகின்றது; மேலும் இரண்டாவதான பார்வையில் பார்க்கையில் கிறிஸ்துவினுடைய பலியின் மூலமாக நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு, அவரது பின்னடியார்கள் அனைவரும் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகும் மற்றும் பிட்கப்பட்டு வரும் ஒரே அப்பத்தின் பாகங்களாகும் சிலாக்கியத்தினை உடையவர்களாய் இருக்கின்றனர். இதுபோலவே கிறிஸ்துவினுடைய இரத்தத்தின், அவரது பலியின் புண்ணியத்தில் பங்கெடுத்தப் பிற்பாடு, அவரது உண்மையான பின்னடியார்கள் அனைவரும், அவரோடு அங்கத்தினர்களாகவும், அந்த ஒரே பாத்திரத்தில் பங்கெடுப்பவர்களாகவும் கருதப்படுகின்றனர்.

அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைக் கேளுங்கள்:

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (KJV); "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்" (1 கொரிந்தியர் 10:16, 17; திருவிவிலியம்).

## புதிய உடன்படிக்கை முத்திரையிடப்படுதல்

இயேசு பாத்திரமானது, திராட்சப்பழரசமானது புதிய உடன்படிக்கைக்குரிய இரத்தத்தினை அடையாளப்படுத்துவதாகக் குறிப்பிட்டார். நியாயப்பிரமாண உடன்படிக்கை என்பது பழைய உடன்படிக்கையாக இருக்கின்றது; இது யூதர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவர முடியவில்லை, காரணம் இதை அவர்களால் கைக்கொள்ள முடியவில்லை. மேலும் இதனால் அவர்கள் பூமியின் மற்ற ஜாதிகளை ஆசீர்வதிக்கவும் தகுதியற்றவர்களானார்கள். ஆனால் மோசேயைக்காட்டிலும் மேன்மையான (அ) சிறந்த (அ) உயர்ந்த ஒரு புதிய மத்தியஸ்தரினால், மேம்பட்ட ஒரு புதிய உடன்படிக்கையானது அறிமுகப்படுத்தப்படும் என்று தேவன் வாக்களித்தார்.

பழைய நியாயப்பிரமாணமானது நிறைவேற்ற முடியாமல் போனவைகளை, புதிய உடன்படிக்கையானது நிறைவேற்றுமெனத் தேவன் தெரிவித்துள்ளார்; ஏனெனில் புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, அதன் மத்தியஸ்தராகிய மேசியாவினால், அவரது இரண்டாம் வருகையில் தொடங்கி வைக்கப்படும். வல்லமையிலும், மகா மகிமையிலும் ஸ்தாபிக்கப்படும் அவரது இராஜ்யமானது, மனுக்குலத்தை ஆண்டு, ஆசீர்வதித்து, கற்பித்து, இந்தப் பாக்கியமான வாய்ப்புகளுக்கு இணங்குகிற யாவருக்கும், "கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை" அருளும்.

இயேசுவின் மரணமாகிய இரத்தமானது, அந்தப் புதிய உடன்படிக்கையை முத்திரையிடுகின்றது (அ) நடைமுறைக்குக் கொண்டுவருகின்றது. ஆனால் கவனியுங்கள்; இயேசுவின் இரண்டாம் வருகையின்போது அவரது இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில் தொடங்கி வைக்கப்படுகின்றதான ஆயிரவருட யுகத்தினுடைய புதிய உடன்படிக்கையின் கீழ்ச் சபையானது, ஆசீர்வதிக்கப்படுவதில்லை. அந்தப் புதிய உடன்படிக்கைக்கு முன்னதாகவே சபை ஆசீர்வதிக்கப்படும். ஆம், கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதான அவர்களது அர்ப்பணிக்கப்பட்ட ஜீவியங்களானது (இரத்தமானது) புதிய உடன்படிக்கையினை முத்திரையிடுகின்றதான அவரது சொந்த பலியில் ஒரு பாகமாகக் கருதப்படுகின்றது. ஆகையால் கிறிஸ்துவின் முழுச் சரீரமாகிய சபையானது, அவரது பாத்திரத்தில் அவரோடுகூடப் பானம்பண்ணுதலில் - பூமிக்குரிய உரிமைகள், சிலாக்கியங்கள், ஜீவனையே பலிச்செலுத்துவதில் பங்கடைந்து முடிவது வரையிலும், புதிய உடன்படிக்கையானது, முழுமையாய் முத்திரையிடப்பட முடியாது.

## பலியினாலான உடன்படிக்கை

இதற்கிடையில் இயேசுவும், சபையும் தங்கள் பலனை நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ் அல்லது புதிய உடன்படிக்கையின்கீழ்ப் பெற்றுக்கொள்ளாமல், மாறாகப் பலியினாலான உடன்படிக்கை என்று அழைக்கப்படும் ஒரு விசேஷித்த உடன்படிக்கையின்கீழ்ப் பெற்றுக்கொள்கின்றனர். கிறிஸ்து மற்றும் சபையினுடைய இந்த உடன்படிக்கைக்குறித்துச் சங்கீதங்களில் கர்த்தர், "பலியினாலே என்னோடே உடன்படிக்கைபண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்" (சங்கீதம் 50:5) என்று கூறுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விசேஷித்த பலியினாலான உடன்படிக்கைக்குள் பிரவேசிப்பவர்கள், கர்த்தரோடுகூடக் கூட்டிச்

சேர்க்கப்படுதலானது, 1800 வருடங்களுக்கும் மேலாக, இதுவரையிலும் நடைப்பெற்று வருகின்றது. பலியானது கிட்டத்தட்ட நிறைவேறியுள்ளது என்றும், சீக்கிரத்தில் பலிச்செலுத்தியவர்களாகிய, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் மகிமையடைந்து, முதலாம் உயிர்த்தெழுதலினுடைய வல்லமையினால் மாற்றமடைந்து, "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" என்ற அவரது வாக்குத்தத்தத்திற்கு ஏற்ப, அவர்களது கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பார்கள் என்றும் நம்புவதற்கு நமக்கு அநேக காரணங்கள் உள்ளது.

இனிப் பாத்திரத்தில் பானம்பண்ணுவதில்லை என்று நமது கர்த்தர் குறிப்பிட்டார்; அவர் பானம்பண்ணவுமில்லை. அவரது வேலை - பாத்திரத்தில் அவர் பானம் பண்ணுதலானது, அடுத்த நாளில், கல்வாரியில் நிறைவேறினது. அங்கு அவர் பிதா தமக்கென ஊற்றின பாத்திரத்தில் பானம்பண்ணுதலை நிறைவேற்றி முடித்தார். அதே பாத்திரத்தினைப் பிதா, இயேசுவின் பின்னடியார்கள் அனைவருக்குமாக ஊற்றிக்கொடுத்துள்ளார்; மற்றும் சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படப்போகின்றதான இராஜ்யத்தில் அவரது உடன்சுதந்திரர்களாகக் காணப்படவேண்டுமானால், அவர்களும் அவரது பாத்திரத்தில் பானம்பண்ணிட வேண்டும் மற்றும் அவரது பிட்கப்பட்ட சரீரத்தினுடைய புண்ணியங்களில் பங்கெடுக்க வேண்டும்.

இதுவே இராஜ்யத்தில் விசேஷித்த ஸ்தானங்களைக் கேட்டுக்கொண்டதான தமது சீஷர்களாகிய பரிசுத்த யோவானுக்கும், பரிசுத்த யாக்கோபுக்கும் கொடுக்கப்பட்ட நமது கர்த்தருடைய பதிலின் உட்கருத்தாகும். இயேசுவோ: "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா (உங்களுக்கு விருப்பமா)?" என்று கேட்டார். அவர்களும் தங்களது விருப்பத்தினை மனப்பூர்வமாய்த் தெரிவித்தனர். அவர்கள் வேண்டுதலை, அவர்கள் பெற்றுக்கொள்வார்கள் என்றும், அவர்கள் விருப்பத்துடன் காணப்பட்டால், அவர்கள் தமது பாத்திரத்தில் பானம்பண்ணத்தக்கதாக அவர் பார்த்துக்கொள்வார் என்றும் இயேசு அவர்களுக்கு உறுதியளித்தார். இப்படியாகவே அவரது பின்னடியார்கள் அனைவரின் விஷயத்திலும் காணப்படும். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (உரோமர் 8:28) என்று வேதவாக்கியங்களானது, அவரது பின்னடியார்களுக்கு உறுதியளிக்கின்றது.

## *சிலுவையில்லாமல் கிரீடமில்லை*

"இனிமைமிகு சிவப்பான திராட்சரசம் செய்யவே,
கருஞ்சிவப்பு திராட்சை நசுக்கப்பட வேண்டுமே.
அழுக்குப்படிந்த பொன்தனை புடமிடவே,
உலையில் கடுமையான தீப்பிழம்பு எரிந்திட வேண்டுமே.
சக்கரம் கடுமையாய்ச் சுழலாவிடில்,
ஆபரணங்களுக்கு ஒளி எங்கே?
எ`கு தன்னை மெருகேற்ற கீழ்ப்படுத்தாவிடில்,
கூர்வாளாக எப்படி ஒளிர முடியும்?

ஆசீர்வதிப்பதற்காய்க் காயப்படுத்தும் கரத்தின் கீழ்தனிலே
உந்தனை நீ அன்போடே கீழ்ப்படுத்தாவிடில்,
எந்தன் ஆத்துமாவே நீ எப்படி
ஆவியின் கனிகள்தனைப் பெற்றிடுவாய்?
ஆ! அனைத்துப் பூமிக்குரிய அசுசிதனை
நெருப்புப் பட்சிக்கும் என்று பொறுமையாயிரு -
நீ சிலுவையை மறுத்தாயானால்,
கிரீடம் உனக்கில்லையே.

- ரீபிரிண்ட்ஸ், பக்கம் 5532

# பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம்

**"அந்த இரத்தத்தைக் காணும்போது, கர்த்தர் சங்காரக்காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம் பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகிக் கடந்துபோவார்." யாத்திராகமம் 12:23**

யூதர்கள் ஆசரிக்கும் பஸ்கா பண்டிகைக் காலம் நெருங்குகிறது. அது இந்த வருடம் (1915) மார்ச் 30-ஆம் தேதி வருகிறது (நீசான் மாதம் 15-ஆம் தேதியானது, மார்ச் 29-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கிறது). இந்தப் பஸ்கா பண்டிகைக்கு முன்னால் வருகிற ஆட்டுக்குட்டி அடிக்கப்படுதலில் கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த கவனம் இருக்கிறது. நீசான் மாதம் 14-ஆம் தேதி பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது. அது இந்த வருடம் மார்ச் 28-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கிறது. நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய நமது ஆண்டவராகிய இயேசுவின் மரணத்தை நினைவுகூருதல் அதே நாளில் ஆசரிக்கப்பட வேண்டும். ஆகையால் நாம் அதை மார்ச் 28-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலையில் ஆசரிக்க வேண்டும். ஆயிரக்கணக்கான யூதர்களும், கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்கின்றவர்களும் இந்த ஒரு காலக்கட்டத்தில், இந்த மிகவும் முக்கியமான நிகழ்வைக் கடமையான விதத்திலும், சடங்காச்சாரமான சம்பிரதாயங்கள் சிலவற்றினாலும் ஆசரித்தாலும், இவ்விரண்டு மதத்தாரிலும், எவருமே இவ்வாசரிப்பினுடைய உண்மையான அர்த்தத்தினை உணராதவர்களாகவே இருக்கின்றனர் என்பதின் நிமித்தம் நாம் மிகுந்த மனவருத்தம் அடைகின்றோம்.

## பஸ்கா ஏற்படுத்தப்பட்டது

இவர்களுடைய மனங்களானது, அதன் உண்மையான அர்த்தத்தின் விஷயத்தில் விழித்துக்கொள்ளுமானால், உலகம் அறிந்திராத அளவுக்கான ஒரு மத மறுமலர்ச்சி ஏற்படக்கூடும். ஆனால் பரிசுத்த பவுல் குறிப்பிடுவதுபோல, "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அநேகருடைய மனதைக் குருடாக்கினான்" மற்றும் பகுதி திறக்கப்பட்ட புரிந்துகொள்ளுதலின் கண்களையுடைய சிலரும் குருடர்களாகவும், தொலைவில் பார்க்கமுடியாதவர்களாகவும் இருக்கின்றனர் என்று பரிசுத்த பேதுரு விவரிக்கின்றார். இவர்கள் 3500-வருடங்களுக்கும் மேலாக, ஆசரிக்கப்பட்டதான இந்த அனுசரிப்புச் சார்ந்த தேவ ஆழங்களைப் பார்க்கமுடியாதவர்களாய் இருக்கின்றனர். குறைகூறி விமர்சிப்பவர்களாலும்கூட, ஒரு சடங்காச்சாரம் மிக நீண்டகாலமாக ஆசரிக்கப்பட்டு வருகிறது என்றால், உண்மையிலேயே அதற்கு ஓர் அடிப்படை இருக்க வேண்டுமென்று ஒத்துக்கொள்ளப்படுகின்றது. எகிப்தில் அப்படிப்பட்ட நிகழ்வு நடந்திருக்க வேண்டும்; பத்தாவது வாதையில் எகிப்தின் முதற்பேறானவர்கள் எல்லாம் அழிந்திருக்க வேண்டும்; இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் எல்லாம் காக்கப்பட்டிருக்க வேண்டும் (அதாவது

இரத்தத்திற்குக்கீழாக இருக்க வேண்டுமென்ற கட்டளையை ஆசரித்தவர்கள் அனைவரும் காக்கப்பட்டிருக்க வேண்டும்) - இல்லையென்றால் விஸ்தாரமாகப் பரவியுள்ள இந்தச் சடங்காச்சாரம் ஒரு மாயமானதாக இருந்திருக்கும்.

இதன் நிறுவுதல் தொடர்புடைய விஷயத்தில் அனைத்துக் காரியங்களையும் நாம் சொல்லாமல், பின்வருபவைகளை மாத்திரமே சொல்வது போதுமானதாகும்: இஸ்ரயேலர்கள் எகிப்தியர்களால் அடிமைப்படுத்தப்பட்டு இருந்தனர்; அவர்கள் அடிமைத்தனத்தினின்று விடுதலையாகும்படியான தேவனுடைய ஏற்பாட்டின்படி வேளை வந்தபோது, அவர்களது எகிப்திய எஜமான்கள் அவர்களை அடிமைகளாகவே வைத்திட சுயநலமாய் நாடி, அவர்கள் கானான் தேசத்திற்குச் செல்வதற்கு அனுமதிக்க மறுத்தனர். அந்த வருடத்தில் தேவன் ஒன்றன்பின் ஒன்றாக ஒன்பது வாதைகளை எகிப்தியர்கள்மேல் அனுப்பினார் மற்றும் எகிப்திய இராஜா, இஸ்ரயேலர்களை விடுவிப்பேன் என்று வாக்குக்கொடுத்து, வாதைகளை நீக்க தேவனிடம் கேட்டபோது, அவரும் அதை நீக்கினார். ஆனால் எகிப்திய இராஜா அந்த வாக்கைக் காப்பாற்றவில்லை. இறுதியில் தேவனுடைய ஊழியக்காரன் மோசே உச்சக்கட்டமாக ஒரு பெரிய அழிவைத் தெரிவித்தார் – அதாவது ஒரே இரவிலே எகிப்தியரின் ஒவ்வொரு குடும்பத்திலும் தலைச்சன் பிள்ளைகள் இறந்துவிடும் என்றும், அதினிமித்தம் எகிப்து முழுவதும், இராஜாவின் வீட்டிலும், ஏழையின் வீட்டிலும் மாபெரிய துக்கம் ஏற்படும் என்றும், இதன் பலனாக இஸ்ரயேலரைப் போக அனுமதிப்பதில் பிரியமாய் இருப்பார்கள் என்றும், ஆம் அவர்கள் போவதற்கும், அவர்களைச் சீக்கிரம் போகும்படிக்கும் துரிதப்படுத்துவார்கள் என்றும், தங்கள் இராஜா இன்னும் தனது இருதயத்தைக் கடினப்படுத்தித் தேவனுடைய கட்டளையைத் தொடர்ந்து எதிர்த்தால், இது எகிப்தின் முழு ஜனங்களுக்கும் மரணத்தைக்கொண்டுவருமென ஜனங்கள் பயப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

முதல் மூன்று வாதைகள் எகிப்தியருக்கும், இஸ்ரயேலர் வாழும் பகுதிகளிலும் பொதுவாக வந்தது. அடுத்த ஆறு வாதைகள் எகிப்தியர் வாழும் பகுதிகளை மட்டும் வாதித்தன. கடைசி பத்தாவது வாதையானது எகிப்தின் முழுமைக்கும் பொதுவாக இருந்தது மற்றும் இஸ்ரயேலர்களுக்கான இடங்களையும்கூட உள்ளடக்கினது; ஆனால் இஸ்ரயேலர்கள் தங்கள் விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் காண்பிக்கும்பொருட்டு ஒரு வயதுக்குரிய ஆட்டுக்குட்டியை அடித்து, அதன் இரத்தத்தை வீட்டுவாசல் நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் தெளித்து, அந்த இரவிலே அதன் மாம்சத்தை, கசப்பானக் கீரையோடும், புளிப்பில்லா அப்பத்தோடும், கையிலே தடிபிடித்துக் கொண்டும், அரையிலே கச்சைக் கட்டிக்கொண்டும் பிரயாணத்திற்குத் தயாராக இருந்து புசிக்க வேண்டும். இன்னும் அந்த இரவிலே எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகளின் மரணத்தையும் முழுமையாக எதிர்ப்பார்த்திருக்க வேண்டும். யார் வீட்டுவாசல் நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் இரத்தம் தெளிக்கப்படவில்லையோ அவர்கள் வீட்டிலும், இந்தச் சங்காரம் எதிர்ப்பார்க்கப்பட வேண்டும்.

# நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டி

இஸ்ரயேலர்கள் பஸ்காவை நியாயப்பிரமாணத்தினுடைய முதலாவது அம்சமாகவும், தங்கள் ஜாதிக்கான மாபெரும் நினைவுகூருதல்களில் ஒன்றாகவும் ஆசரிப்பதற்குக் கட்டளையிடப்பட்டிருந்தனர். ஆகையால் உலகமெங்குமுள்ள யூதர்களாலும் மற்றும் கடவுளைக் கண்டறிவது அசாத்தியம் எனும் கொள்கை உடையவர்களாலும் (agnostics) கூடப் பஸ்காவானது ஓரளவுக்கு ஆசரிக்கப்படுகின்றது என்று நாம் பார்க்கின்றோம். இவர்கள் இன்னமும் பஸ்காவை, முற்காலத்து வழக்கமெனக் கொஞ்சம் மதிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். ஆனால் அறிவுகூர்மையுள்ள மனங்களை உடையவர்களான நமது யூத நண்பர்கள், இந்த அனுசரிப்பினுடைய அர்த்தமென்ன என்று ஒருபோதும் விசாரியாதது விநோதமாய்க் காணப்படுகின்றதல்லவா? பஸ்கா ஆட்டுக்குட்டியானது ஏன் அடிக்கப்பட்டு, புசிக்கப்படுகின்றது? ஏன் இரத்தமானது வீட்டுவாசலினுடைய நிலைக்கால்களிலும், மேற்சட்டங்களிலும் தெளிக்கப்படுகின்றது? இப்படிச் செய்வதற்குத் தேவன் கட்டளையிட்டுள்ளார் என்பது உண்மைதான்; ஆனாலும் தெய்வீகக் கட்டளைக்குப் பின்னாக உள்ள காரணம், நோக்கம் என்ன? என்ன பாடம், என்ன அர்த்தம் உள்ளது? விவேகமுள்ள தேவன், விவேகமான கட்டளைகளைத்தான் கொடுப்பார் என்பது உண்மையே; ஏற்றக்காலத்தில் யேகோவா தேவன் தம்முடைய உண்மையுள்ள ஜனங்கள் அனைத்துக் காரியங்களினுடைய அர்த்தங்களைப் புரிந்துகொள்ளச் செய்வார். ஏன் இந்தக் காரியத்தில் எபிரெயர்கள் சிரத்தை இல்லாமல் இருக்கிறார்கள்? ஏன் தவறான எண்ணம் அவர்களை ஆட்கொண்டிருக்கிறது?

கிறிஸ்தவ மதத்தில் அந்தக் கேள்விக்கான பதில் இருந்தால்கூட, சிரத்தையின்மையால் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இதைக்குறித்த சரியானக் காரணத்தையும், தாற்பரியத்தையும் சொல்லமுடியாதவர்களாய் இருக்கின்றனர். யூதனால் தனக்கான ஓய்வுநாள் என்பது இளைப்பாறுதலுக்கான, ஆசீர்வாதத்திற்கான, மற்றும் வேலைகளிலிருந்து, கவலைகளிலிருந்து, மரணத்திலிருந்து விடுதலைக்கான வரவிருக்கிற காலப்பகுதிக்கு நிழலாய் இருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ள முடியுமானால், இதுபோலவே மோசேயின் வாயிலாகக் கொடுக்கப்பட்ட அம்சங்கள் அனைத்தும், "ஏற்றக்காலத்தில்" அருளப்படப்போகின்றதான பல்வேறு ஆசீர்வாதங்களுக்கு நிழலாய்க் காணப்படத்தக்கதாகக் கர்த்தரினால் வடிவமைக்கப்பட்டுள்ளது என அவனால் ஏன் காண முடியவில்லை? பஸ்கா ஆட்டுக்குட்டி, தேவ ஆட்டுக்குட்டியை அடையாளப்படுத்துகிறது என்பதையும், அதன் மரணம் மேசியாவாகிய இயேசுவின் மரணத்தை அடையாளப்படுத்துகிறது என்பதையும் ஏன் எல்லாராலும் பகுத்துணர முடியவில்லை? மேலும் இரத்தம் தெளிக்கப்படுதல் இயேசுவின் மரணத்தின் புண்ணியத்தை விசுவாச வீட்டாருக்குத் தரிப்பித்தலை அடையாளப்படுத்துகிறது என்பதையும் ஏன் பகுத்துணர முடியவில்லை?

இயேசுவே "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக" இருக்கின்றார் என்றும், மனுக்குலத்தார் யாவருடைய பாவங்களுக்காக ஏற்றவேளையில்

இயேசுவினுடைய பலியின் புண்ணியம் செயல்படுத்தப்படுவதின் வாயிலாக, மனிதனுக்கான தண்டனை சந்திக்கப்படுதலின் மூலம் உலகத்தின் பாவம் தள்ளுபடியாவது சாத்தியமாகும் என்றும் காண்கிற கண்களை உடையவர்கள் பாக்கியவான்களாவர். இதுவரையிலும் சபை மாத்திரமே இயேசுவினுடைய மரணத்தினாலான புண்ணியத்தினைப் பெற்றிருக்கின்றனர். முழு உலகமும் தெய்வீகத் தயவை இழந்து, துன்பம், வலி ஆகியவற்றுடனுள்ள மரணம் எனும் தெய்வீகத் தீர்ப்பின் கீழ் வந்துள்ளபடியால், இந்தத் தண்டனைத் தீர்ப்பானது (அ) சாபமானது மாற்றிப்போடப்படுவதற்கு முன்னதாக, நீதியானது திருப்திப்படுத்தப்படுவது அவசியம் என்றும், அப்போஸ்தலர் குறிப்பிடுவதுபோன்று "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங் களின்படி நமது பாவங்களுக்காக" - நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி, "அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக நீதியுள்ளவராய் மரித்தார்" என்றும் காண முடிந்தவர்கள் மிகுந்த தயவு பெற்றவர்களாய் இருக்கின்றனர். இப்படியாக அவர் ஒரு புதிய வழியை, நித்திய ஜீவனுக்கான ஒரு வழியைத் திறந்து வைத்தார்.

## முதற்பலன்கள்

வேதவாக்கியங்களானது கிறிஸ்துவின் சபையை, "முதற்பேறானவர்களின் சபை" என்றும், "தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்கள்" என்றும், தேவனுக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலன்கள்" என்றும் அழைக்கின்றது (எபிரெயர் 12:23; யாக்கோபு 1:18; வெளிப்படுத்தல் 14:4). இவ்வார்த்தைகளானது இறுதியில் தேவனுடைய குடும்பத்தில் பிற்பிறப்புகள் என்ற மற்றவர்கள் இருப்பார்கள் என்று, சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; பிற்பலன்கள் இருப்பார்கள் என்று சுட்டிக்காட்டுகின்றது. பொதுவாய்க் கிறிஸ்தவ ஜனங்கள் இந்த வேதவாக்கியங்களைக் கவனிக்கத் தவறிப்போனவர்களாக, அதுவும் இவைகளுக்கு அர்த்தம் பொருத்தும் விஷயத்தில் தவறிப்போனவர்களாக இருந்து, வேதாகமத்தில் முதற்பலன்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பவர்கள் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்கள் என்றும், பிற்பலன்கள் இல்லை என்றும் நம்புகிறவர்களானார்கள். ஆனால் பஸ்கா நிழலானது, இஸ்ரயேலர்கள் அனைவரையும் இரட்சிப்பதே தேவ நோக்கமாக இருக்கின்றது என்று சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக இஸ்ரயேல் ஜாதியானது, தேவனுடன் இசைவிற்குள் வந்து, வாக்களிக்கப்பட்ட தேசத்தில் நித்திய ஜீவனை அருளப்பெறுகின்றவர்களாகிய மனுக்குலம் யாவருக்கும் அடையாளமாய் இருக்கின்றார்கள் என்று சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

இரண்டு கடந்துபோகுதல்கள் இருப்பதை நாம் கவனிப்போமாக - முதற்பேறானவர்களை மாத்திரமே கடந்துபோகுதல் என்பது முதலாவதாகும்; தெய்வீக வல்லமையின் மூலமாக ஒட்டுமொத்த இஸ்ரயேல் ஜாதியும் அற்புதகரமாக விடுவிக்கப்பட்டு, செங்கடலின் வழியே நடத்திச்செல்லப்பட்டபோது, மற்றொன்று நிகழ்ந்தது; செங்கடலில் வழியானது காற்று மற்றும் அலைகளின் அழுத்தம் காரணமாக அவர்களுக்கென்று விசேஷமாக ஆயத்தப்படுத்தப்பட்டது. அவர்கள் வெட்டாந்தரையில்

நடந்து, கடந்துசென்றனர் மற்றும் இரட்சிக்கப்பட்டனர்; ஆனால் இரண்டாம் மரணத்திற்குள் இறுதியில் போகப்போகிறவர்களுக்கு அடையாளமாக பார்வோனின் சேனைகள் கடலில் மூழ்கடிக்கப்பட்டனர். செங்கடலில் நடந்த கடந்துபோகுதலானது, கர்த்தருடன் இசைவிற்குள் வருவதற்கும், அவரைத் தொழுதுகொள்வதற்கும் விரும்புகிற ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொரு சிருஷ்டியும், அதாவது இஸ்ரயேலின் பாகமாகும் அனைவரும், பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையினின்று இறுதியில் விடுவிக்கப்படுவதைச் சித்தரிக்கின்றதாயிருக்கின்றது; ஏனெனில் இஸ்ரயேலரில் ஒருவர்கூட, எகிப்திய அடிமைத்தனத்தில் விட்டுவரப்படவில்லை.

செங்கடலில் நடந்த அந்தக் கடந்துபோகுதலை நாம் இங்கு ஆராயவுமில்லை; இதன் நிஜத்தையும் நாம் இப்பொழுது ஆசரிக்க இருக்கவுமில்லை. இல்லை; முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலுக்கான (அ) தப்புவிக்கப்படுதலுக்கான நிஜத்தையே நாம் ஆசரிக்கிறோம். எல்லாருடைய விடுதலையும், இந்த முதற்பேறானவர்களின் இரட்சிப்பைச் சார்ந்திருந்தாலும், முதற்பேறானவர்கள் மட்டுமே ஆபத்தில் இருந்தார்கள். இதற்கு இசைவாய் இருக்கிற அனைத்து வேதவாக்கியங்களோடு இதைப் பொருத்திப்பார்க்கும்போது, தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்களாகிய, முதற்பேறானவர்களின் சபை மாத்திரமே தற்காலத்தில் காக்கப்படுகின்றனர் - இரத்தத்தின் கீழிருக்கும் இவர்கள் கடந்துபோகப்படுகின்றனர். பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று உண்மையான மகாபெரிய மோசே விடுவிக்கும்போது, அவரைப்பின்பற்ற விரும்புகிறவர்களாகிய மீதமுள்ள மனுக்குலத்தார், இப்போது ஆபத்தில் இல்லை; பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருக்கிற முதற்பேறானவர்கள் மாத்திரமே இப்போது ஆபத்தில் இருக்கிறார்கள்.

## முதற்பேறானவர்களின் சபை

மனுக்குலத்திலிருந்த முதற்பேறானவர்களாகிய சபை, சந்ததியிலுள்ள மீதமானவர்களுக்கு முன்னதாகவே தங்கள் அடிமை நிலைமைக்குறித்தும், விடுதலைக்கான தங்களுக்குள்ள அவசியத்தைக்குறித்தும், தேவன் தமது நல்வாக்குத்தத்தங்கள் யாவற்றையும் தங்களுக்கு நிறைவேற்ற விருப்பமுள்ளவராய் இருக்கின்றார் என்பது குறித்துமான உணர்ந்துகொள்ளுதலின் விஷயங்களில், தங்களது புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பெற்றவர்களாய் இருக்கின்றனர். இன்னுமாக இவர்கள் தேவ கிருபைக்கு இணங்கி, அவருக்கும், அவரது ஊழியத்திற்குமெனத் தங்களையே முழுமையாய் அர்ப்பணம்பண்ணி, இதன் பலனாகப் பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்படுகின்றார்கள். இவர்கள் விஷயத்தில் ஜீவனா (அ) மரணமா அல்லது விசுவாச வீட்டிற்குள்ளாக, அதாவது தெளிக்கப்பட்ட இரத்தத்திற்குப் பின்பாக இருப்பதா (அ) இல்லையா என்பதுதான் காரியமாய் உள்ளது. இந்த வகுப்பார் இரத்தத்தின் கீழிருந்து வெளியேறுவது என்பது, தெய்வீக இரக்கத்தினை

அவமதிப்பதைக் குறிக்கின்றதாயிருக்கும். அது இவர்கள் தெய்வீகக் காருண்யத்தினை வெறுப்பதை/இகழ்வதைக் குறிக்கின்றதாயிருக்கும்; இன்னுமாக ஆட்டுக்குட்டியினுடைய இரத்தம் அடையாளப்படுத்துகின்றதான தேவனுடைய இரக்கத்தில் தங்கள் பங்கினை அனுபவித்தப்பிறபாடு, அதை இவர்கள் மதிக்காததையும் குறிக்கின்றதாயிருக்கும். இப்படியாய்ச் செய்கிறவர்களைக்குறித்து வேதவாக்கியங்களானது, "பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்" என்றும், "கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று" என்றும் குறிப்பிடுகின்றது (உரோமர் 6:9; எபிரெயர் 10:26). இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய எதிராளிகளாகக் கருதப்படுவர் மற்றும் இவர்களது அழிவுக்கு, எகிப்தினுடைய முதற்பேறானவர்களின் அழிவானது அடையாளமாய்க் காணப்படுகின்றது.

அந்த இரவில் மரித்த எகிப்தியரின் தலைச்சன்களும், கட்டளைக்கு விரோதமாக வீட்டைவிட்டு வெளியே சென்றதினால் மரித்த இஸ்ரயேலர்களும் இரண்டாம் மரணத்திற்குச் சென்றுவிட்டார்கள் என்று நாங்கள் சொல்வதாக அர்த்தப்படுத்திக்கொள்ள வேண்டாம். அதற்கு முற்றிலும் மாறாக, இந்தக் காரியங்கள் எல்லாம், சுவிசேஷ யுகத்தில் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து இருக்கிற கிறிஸ்துவின் சபையின் நிஜங்களுக்கும், உயர்தளத்திலுள்ள காரியங்களுக்கும் முன்னடையாளங்களாகவும், உருவகங்களாகவும், நிழல்களாகவும், விளக்கங்களாகவும் இருக்கின்றன என்று நாங்கள் புரிந்துகொள்கிறோம். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பும், தேவனுடைய நல்வார்த்தையை ருசிப்பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், இப்படியாக முதற்பேறானவர்களின் சபையின் அங்கத்தினரான பிறகும் மனப்பூர்வமாய்ப் பாவம்செய்தால், மறுதலித்துப்போனால் மனந்திரும்புகிறதற்கேதுவாக நம்மை மறுபடியும் புதுப்பிப்பது கூடாதகாரியமாகும். இதற்குமேலும் தேவன் நமக்காக எதையும் வைத்திருக்கவில்லை. நாம் அவரது இரக்கத்தை அசட்டை செய்தால், நாம் இரண்டாம் மரணத்தில் மரிப்போம். (2 பேதுரு 2:12; யூதா 12)

முதற்பேறானவர்களாகிய சபையானது, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதினாலும், எல்லா விதத்திலும் அதிகமான அறிவையும், சிலாக்கியங்களையும் அனுபவிப்பதாலும் இவர்கள் உலகத்தைக்காட்டிலும் மிகவும் பொறுப்புடையவர்களாய் இருக்கின்றனர்; ஏனெனில் இவர்கள் மாத்திரமே இப்பொழுது இரண்டாம் மரணத்திற்கான அபாயத்தில் காணப்படுகின்றனர். இதுவே பஸ்கா நிழலினுடைய படிப்பினையாக இருக்கின்றது மற்றும் இது உண்மை கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமே பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

பாவம் மற்றும் மரணத்தின் இரவு கடந்துபோய், விடுதலைக்கான மகிமையான காலை வருகையில், கிறிஸ்துவாகிய நிஜமான மோசே, தேவனுடைய ஜனங்கள் அனைவரையும், அதாவது தேவசித்தத்தை அறியவரும்போது, அதற்குக் கீழ்ப்படிய,

அதைக் கனப்படுத்த, அதை மதித்திட மகிழ்கிற யாவரையும் வழிநடத்திடுவார், இரட்சித்திடுவார். அந்த விடுதலையின் நாளானது, முழு ஆயிரவருட யுகமாகக் காணப்படும் மற்றும் ஆயிரவருட யுகத்தின் முடிவில் எகிப்தின் சேனைகளினால் அடையாளப்படுத்தப்படுகின்றதான பொல்லாத செய்கைக்காரர்கள் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அழிவிற்குள்ளாக அறுப்புண்டுப் போவார்கள்.

## இதை நீங்கள் செய்யும் போதெல்லாம்

அப்போஸ்தலனாகிய பவுல், "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" என்று கூறி, நமது கர்த்தர் இயேசுதான் பஸ்கா ஆட்டுக்குட்டி என்று தெளிவாயும், உறுதியாயும் அடையாளம் கண்டுகொண்டார். நமது வீடுகளின் மீதல்ல, மாறாக நமது இருதயங்கள் மீது இரத்தம் தெளிக்கப்படுவது நம் அனைவருக்கும் அவசியமென அப்போஸ்தலன் நமக்குத் தெரிவிக்கின்றார். நாம் ஆட்டுக்குட்டியில் பங்குகொள்ள வேண்டும்; கிறிஸ்துவினுடைய புண்ணியத்தினை, அவரது பலியின் புண்ணியத்தினை நாம் நமதாக்கிக்கொள்ள வேண்டும்; புதிய யுகமாகிய காலையின்போதான விடுதலைக்கு நாம் பலத்துடனும், ஆயத்தத்துடனும் காணப்பட வேண்டுமானால், நாம் புளிப்பில்லாத அப்பமாகிய சத்தியத்தைப் புசிக்க வேண்டும். இப்படியாக நாம் கிறிஸ்துவை விசுவாசத்தினால் மாத்திரம் தரித்துக்கொள்ளாமல் மாறாக நாம் அதிகமதிகமாக அவரது குணலட்சணத்தைத் தரித்து, நமது இருதயங்களிலும், ஜீவியங்களிலும் அவரது மகிமையான சாயலுக்கு மறுரூபமடைகின்றோம்.

யூதர்கள் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியினைப் புசித்ததுபோன்று, நாம் கிறிஸ்துவைப் புசிக்க வேண்டும். யூதர்களுடைய பசியினைத் தூண்டினதும், பசிக்கு உதவினதுமான கசப்பான கீரைகளுக்குப்பதிலாக, நமக்குக் கர்த்தர் ஆயத்தம் பண்ணினதும், பூமிக்குரியவைகள் மீதான நமது விருப்பங்களை மறந்துபோவதற்கு உதவுவதும், ஆட்டுக்குட்டி மற்றும் புளிப்பில்லாத அப்பமாகிய சத்தியத்தைப் புசிப்பதற்கான தீவிரப் பசியை நமக்குக் கொடுக்கிறதுமான கசப்பான அனுபவங்களையும், சோதனைகளையும் நாம் பெற்றிருக்கின்றோம். நமக்கு எந்த நிரந்தரமான தேசமும் இல்லை என்று நாமும் நினைவில்கொள்ள வேண்டும்; பரதேசிகள் போலவும், யாத்திரிகர்கள்போலவும், கையில் தடி பிடித்துக்கொண்டவர்களாகவும், பரம கானானுக்கும், நமது மீட்பரோடுகூட, தேவனுக்கான இராஜாக்களாக, ஆசாரியர்களாக, இருக்கப்போகிற முதற்பேறானவர்களாகிய சபைக்குத் தேவன் வைத்து வைத்துள்ளதான மகிமையானவைகள் அனைத்தினிடத்திற்குமான நமது பிரயாணத்திற்காக, நாம் அரைக்கட்டிக்கொண்டவர்களாகவும் காணப்பட வேண்டும்.

நமது கர்த்தராகிய இயேசுவும் தாம்தான் பஸ்கா ஆட்டுக்குட்டி என்று அடையாளம் கண்டுகொண்டார். அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில், சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதாக, அவர் தம்முடைய சீஷர்களுடன் மேல்வீட்டறையில்

கூடி, "நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" என்றார். யூதர்களாக அவர்கள் காணப்பட்டப்படியால், அந்த இரவில் அவர்கள் பஸ்கா இராப்போஜனத்தைப் புசிப்பது அவசியமாயிருந்தது; அதாவது எகிப்தில் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதற்கும், நிழலான பார்வோனிடமிருந்து (இவ்வுலகத்தின் அதிபதியிடமிருந்து) நிழலான முதற்பேறானவர்கள் காப்பாற்றப்பட்டதற்குமான ஆண்டுநிறைவு நாளினுடைய இரவில் மற்றும் உண்மையான பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்படப்போகிறதுமான அதே நாளில் அவர்கள் பஸ்கா இராப்போஜனத்தைப் புசிப்பது அவசியமாயிருந்தது. மேலும் நிழலின் விஷயங்கள் நிறைவடைந்தவுடன், நமது கர்த்தர் இயேசு, பழையவைகளின்மீதே புதிய நினைவுகூருதலை ஏற்படுத்தி, "என்னை நினைவுகூரும்படி (பஸ்கா காலத்திற்கான நினைவுகூருதலை வருடந்தோறும்) இதைச் செய்யுங்கள்" என்றார். (1 கொரிந்தியர் 11:24-25) அதாவது அறிவுக் கண்கள் திறக்கப்படாத உங்கள் அயலாரான யூதர்கள் இதனை நிஜத்தின் கோணத்தில் புரிந்துகொள்ளமாட்டார்கள். ஆனால் என்னை தேவனுடைய திட்டத்தில் உலகத்தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியாகவும், உலகின் இரட்சிப்பின் விலைக்கிரயமாக நான் எனது ஜீவனைக் கொடுக்கப்போவதையும் அறிந்த நீங்கள், மற்றவர்களால் உணரப்படாத விதத்தில், இந்தப் பஸ்கா காலத்தைச் சிறப்பானதாக, புனிதமானதாகக் கருதுவீர்கள். இதுமுதல் நீங்கள் இந்த நிழலை ஆசரிக்க மாட்டீர்கள - ஆனால் நிஜத்தை நினைவுகூருவீர்கள்; ஏனெனில் நான் தேவ ஆட்டுக்குட்டியாக மரிக்க இருக்கிறேன் மற்றும் இப்படியாக, தெளிக்கப்படும் இரத்தத்தை முதற்பேறான சபைக்கும் மற்றும் மாம்சத்தை முழு விசுவாச வீட்டாருக்கும் கொடுக்கப்போகிறேன் என்ற விதத்தில் கூறினார்.

## இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது

எகிப்திலிருந்து விடுதலையானதை நினைவுகூரும்பொருட்டு, பஸ்கா ஆட்டுக்குட்டியை யூதர்கள் புசித்து வந்ததைப்போல, ஆண்டவரின் பின்னடியார்கள் இனிச் செய்யக்கூடாது என்பதை நமது ஆண்டவர் தம்மை ஆட்டுக்குட்டியாகக் குறிப்பிடுவற்குரிய புதிய அடையாளங்களாகிய புளிப்பில்லாத அப்பத்தையும், திராட்சப்பழரசத்தையும் தேர்ந்தெடுப்பதன் மூலம் காண்பித்தார். அதுமுதல் அவரது பின்னடியார்கள் அவர் கட்டளையிட்டபடி, தங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய அவரது மரணத்தினை அப்போஸ்தலரின் மரணம்வரை ஆசரித்துவந்தனர். அதன்பிறகு ஒரு விசுவாச வீழ்ச்சியின் மூலம் பெயர்க் கிறிஸ்தவ மண்டலத்தில் குழப்பங்கள் ஏற்பட்டு, இருண்ட யுகம் என்று சொல்லக்கூடிய காலம் வந்தது. இயேசுவால் ஏற்படுத்தப்பட்ட பஸ்கா இராப்போஜனத்தில் அவரது மரணத்தை ஆசரிப்பது உபயோகத்தில் இல்லாமல் போனபோதிலும், இந்த இருண்ட யுகத்திலும்கூட, இயேசுதான் நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டி என்ற போதனை காணவேபட்டது. ஆனால் இதுவும் உரோமன்

கத்தோலிக்க சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட பூசை பலி (Mass) என்னும் பயங்கரமான தேவதூஷணத்தினால் புதைக்கப்பட்டுப்போனது மற்றும் இலட்சக்கணக்கான பெயர்க் கிறிஸ்தவர்களை வஞ்சித்துக் குழப்பியது. இந்தப் பூசைபலியைத்தான் "பாழாக்கும் அருவருப்பு" என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன, காரணம் கர்த்தரின் பிள்ளைகளுடைய விசுவாசம் மற்றும் பழக்கம் மீதான இதன் நாசகரமான செல்வாக்கே யாகும். பூசைபலியானது புராட்டஸ்டண்ட் சபையாரால் கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களுடைய போதகங்களுக்கு எதிரானது என்று பொதுவாக புறக்கணிக்கப்பட்டப்போதிலும், இதினின்று பகுதியளவே தப்பித்துள்ளவர்களான இந்தப் புராட்டஸ்டண்ட் சபையார் இந்தப் பயங்கரமான தப்பறையின் செல்வாக்கினைப் பெரிதும் தங்கள்மீது பெற்றவர்களாகவே இருக்கிறார்கள்.

## பூசைபலி என்பது இறுதிவிருந்து அல்ல

அநேக புராட்டஸ்டண்ட் சபையார், பூசைபலி என்பது இறுதிவிருந்து என்ற வேறொரு பெயரில் காணப்படும் கர்த்தரின் இராப்போஜனம்தானே என்று கபடமின்றி கேட்கிறார்கள். ஓ! இல்லை, இது முற்றிலும் மாறானது என்று பதில் கூறுகிறோம். கர்த்தரின் இராப்போஜனம் என்பது கல்வாரியில் நிறைவேறிய கர்த்தரின் மரணத்தை ஆசரிப்பதாகும். பூசைபலி செய்யப்படும் ஒவ்வொரு தடவையும், அது பாவத்திற்கான ஒரு புது பலியைக்குறிக்கிறது. குருவானவர் அப்பத்தை ஆசீர்வதிக்கும்போது, அது கிறிஸ்துவைப் புதிதாகப் பலியிடத்தக்கதாக அவருடைய உண்மையான சரீரமாக மாறுகிறது என்று உரோம சபை நண்பர்கள் நம்புகிறார்கள். பாடல் பூசை என்பது ஒரு குறிப்பிட்ட நபரின் ஒரு குறிப்பிட்ட பாவத்திற்காகக் கிறிஸ்துவின் ஒரு குறிப்பிட்ட பலியாக இருக்கிறது. சாதாரண பூசை என்பது ஒரு சபையாரின் பொதுவான பாவங்களுக்காக ஏறெடுக்கப்படும் கிறிஸ்துவின் பலியாக இருக்கிறது. கிறிஸ்து கல்வாரியில் செலுத்திய பலி, ஆதி மற்றும் கடந்தகால பொதுவான பாவங்களுக்கான பலியென உரோம சபையார் நம்புகின்றனர்; ஆனால் ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் அனுதினமும் செய்கிற பாவங்கள், தவறுகள், களங்கங்கள் ஆகியவைகளைப் போக்குவதற்குக் கிறிஸ்துவின் புதிய பலி அவ்வப்போது தேவைப்படுகின்றது என்று அவர்கள் கூறுகின்றனர். இப்படியாக அவர்களுடைய இந்தக் கருத்தின்படி, பூசைபலி குறிக்கிறபடி, உரோமன் கத்தோலிக்கர், கிரேக்க கத்தோலிக்கர் மற்றும் குருமாரைச் சேர்ந்தவர்களும் அனுசரிக்கிறபடி, உலகெங்கிலும் கிறிஸ்து புதியதாக ஒவ்வொரு நாளும் பலியிடப்பட்டுக்கொண்டிருக்கிறார். தேவனுடைய பார்வையில் இதுதான் "அருவருப்பு" என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றது. ஏனெனில் கிறிஸ்து இனி மரிப்பதில்லை என்றும், "கிறிஸ்து தம் மூலமாக பிதாவினிடத்திற்கு வருகிறவர்களை ஒரே பலியினாலே என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" என்றும் கூறுகிற வேதவாக்கியங்களைப் பூசைபலி அவமதிக்கின்றது. (உரோமர் 6:9; எபிரெயர் 10:14)

நினைவுகூருதல் இராப்போஜனம் மற்றும் பஸ்காவில் குறிப்பிட்டுக் காட்டப்பட்ட கல்வாரியின் மகாபெரிய பலியின் மதிப்பை, பூசைபலியில் அடிக்கடி செலுத்தப்படுகிற

பலிகள் குறைக்கின்றன அல்லது செல்லாததாக்குகின்றன என்பதை உடனடியாகக் காணமுடிகின்றது. தங்களுடைய பாவங்களை நீக்குவதற்காகப் பூசைபலியைக் காண வந்திருந்தவர்களை, மெய்யான பஸ்காவின் ஆழ்ந்த கருத்துக்களைக் கவனிக்கும்படி நாம் எப்படி எதிர்ப்பார்க்க முடியும்? புனித வெள்ளி ஆசரிக்கப்படுதல் அறிமுகமாகவே, அதற்கு முன் ஆசரிக்கப்பட்டுவந்த நினைவுகூருதல் இராப்போஜன காரியங்கள் வெகு காலத்திற்கு முன்பே ஓய்ந்துபோனது.

புராட்டஸ்டண்ட் சபையாரைப் பொறுத்தவரை, பூசைபலியை வேதத்திற்கு விரோதமானது என்று ஒதுக்கியபடியால், கர்த்தரின் இராப்போஜனத்தை ஆசரிக்கும்படி திரும்பினார்கள். எனினும் பூசைபலியை அடிக்கடி செய்து பழகி இருந்தபடியால், கர்த்தரின் இராப்போஜனத்தை அடிக்கடி ஆசரிக்கப்படும்போது நன்மை பயக்கும் என்று எண்ணினவர்களானார்கள். ஆகையால் சிலர் நான்கு மாதத்திற்கு ஒருமுறையும், சிலர் மூன்று மாதத்திற்கு ஒருமுறையும், சிலர் மாதம் ஒருமுறையும், சிலர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் ஆசரிக்கிறார்கள். இதை எத்தனை தடவை ஆசரிக்க வேண்டும் என்பதில் ஒத்தக் கருத்து வராததற்கான இரண்டு காரணங்கள்: (1) நமது கர்த்தரின் மரணம் நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியின் மரணம் என்பதையும், அதன் ஆசரிப்பு நிஜமான பஸ்கா இராப்போஜனம் என்பதையும் கிறிஸ்தவர்கள் பொதுவாகக் கவனிக்கத் தவறுகிறார்கள். (2) "நீங்கள் இதைச் செய்யும்போதெல்லாம்" என்று நமது கர்த்தர் சொன்ன வார்த்தைகளை உங்கள் விருப்பத்தின்படி அடிக்கடி செய்யுங்கள் என்று அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கின்றனர். ஆனால் அவரோ, "(யூதர்களாகவும், பஸ்காவை ஆசரிக்கும் பழக்கமுடையவர்களாகவும் காணப்படும்) எனது சீஷர்களாகிய நீங்கள் இத்தருணத்தை ஆசரிக்கும்போதெல்லாம் என்னை - சொல்லர்த்தமான பஸ்கா ஆட்டுக்குட்டியையும், நிழலான முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலின் மூலம் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்துள்ள நிழலான விடுதலையையும் நினைவுகூரும்படி இல்லை - மாறாக என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்ற விதத்திலேயே கூறினார்.

வாரம் ஒருமுறை கர்த்தரின் இராப்போஜனத்தை ஆசரிப்பவர்கள் வேதவசனத்தை மேற்கோள் காட்டுகிறார்கள். ஏனெனில் ஆதிக்கால சபையில் வாரத்தின் முதலாம்நாள் கூடி அப்பம் பிட்டார்கள் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். நினைவுகூருதலான இராப்போஜனத்தை அப்பம் பிட்குதலோடு குழப்பிக்கொள்வது ஒரு பெரிய தவறாக இருக்கிறது; ஏனெனில் அப்பம் பிட்குதல் என்பது சாதாரண உணவு சாப்பிடுதலைக் குறிக்கிறது. அது இராப்போஜனம் என்பதாக, குறிப்பிடுவதாக வேதத்தில் எந்தப் பதிவும் இல்லை. திராட்சரசம் எதுவும் இதனுடன் குறிப்பிடப்படவில்லை. அப்பமானது, நமது கர்த்தரின் பிட்கப்பட்ட சரீரத்தைக் குறிப்பிடுவதாகச் சொல்லப்படவில்லை. ஆதிக்கால சபையில் வாரத்தின் முதலாம்நாள்கூடி நமது ஆண்டவரின் உயிர்த்தெழுதலைக் கொண்டாடுவது ஓர் உற்சாகமுள்ள சமூக வழக்கமாக இருந்தது. இந்தப் பொதுவான சமூக வழக்கம் சகோதரர்களை இணைக்கவும், சகோதர ஐக்கியத்திலும், அந்நியோனியத்திலும் வளர்க்கவும் உதவியாக இருந்தது. அநேக இடங்களில் கர்த்தரின் ஜனங்கள் இந்த

வழக்கத்தை இன்னமும் கடைப்பிடித்து வருகிறார்கள். ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் பிற்பகல் மற்றும் மாலை ஆராதனைகளுக்கிடையே அப்பம் பிட்குதலைப் புரூக்லின் கூடாரத்தின் சபையார் செய்துவருகிறார்கள்; இது தூரத்தில் வசிக்கிற சகோதரர்கள் கர்த்தரின் ஜனங்களோடு ஐக்கியம் வைத்துக்கொள்வதற்கு வாய்ப்பு அருளத்தக்கதாகவும் மற்றும் அவர்களின் சௌகரியத்திற்காகவும் செய்யப்படுகின்றது.

## நினைவுகூருதல் இராப்போஜனத்தின் தேதி

நாம் எல்லோரும் அறிந்திருக்கிறபடி யூதர்கள் சந்திர காலக்கணக்கைப் பயன்படுத்தி வந்தார்கள். ஒவ்வொரு அமாவாசையும் அவர்களுக்கு ஒரு புது மாதப்பிறப்பாக இருந்தது. இளவேனிற் சம இரவு பகல் நாளுக்கு அருகாமையிலான அமாவாசைதான் நீசான் அல்லது ஆபீப் மாதம் முதல் தேதியாகும். அந்த மாதம் 15-ஆம் தேதிதான் பஸ்காவின் புளிப்பில்லா அப்பப் பண்டிகை ஆரம்பித்து, ஒரு வாரம் கடைபிடிக்கப்படுகிறது. அந்த ஏழுநாள் பண்டிகையானது, இஸ்ரயேலரின் முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதல் காரணமாக அவர்களுக்கு ஏற்பட்ட சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் அடையாளப்படுத்தினதாய் இருக்கின்றது மற்றும் ஒவ்வொரு உண்மை கிறிஸ்தவர்களும், கிறிஸ்துவின் மீட்பின் பலியின் புண்ணியத்தினால் தங்களது பாவங்கள் கடந்துபோகப்படுகிறதை உணருகிறதினால் ஏற்படக்கூடிய முழுமையான சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் அடையாளப்படுத்தினதாய் இருக்கின்றது. ஆகையால் உண்மையான எல்லாக் கிறிஸ்தவர்களும் தங்கள் இருதயங்களில் இந்தப் பஸ்கா பண்டிகையின் தொடர்ச்சியான சந்தோஷத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஏழுநாள் என்பது பூரணத்தை, முழுமையைக்குறிக்கிறது. இந்தக் காரியத்தை இதே கருத்தில் கவனிக்காமல் யூதர்கள், தொடர்ந்து வருகிற வாரத்தின் செய்கைகளைக்காட்டிலும், பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதற்கும், அதன் மாம்சம் புசிக்கப்படுவதற்கும் குறைவாகவே கவனம் செலுத்தினார்கள். ஆனால் நமது ஆண்டவர் தம்மை பஸ்கா ஆட்டுக்குட்டியின் நிஜம் என்று அறிவித்தபோதும் மற்றும் அவரது இரண்டாம் வருகைவரை அவரது மரணத்தை அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிக்கும்படி நம்மை அழைத்தபோதும், அவர் பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக்கூறினார். நாம் அவரது இராஜ்யத்தில் நுழையும்போது, அது நமது ஆசீர்வாதம் முழுமையாய் நிறைவேறுவதைக் குறிக்கிறதாயிருக்கும்.

கிறிஸ்துவின் மரணத்தின் வருடாந்தர ஆசரிப்பை, மற்றப் பலவித காலங்களிலும், வேளைகளிலும், ஒழுங்கற்றும், எந்தவித முக்கியக் கருத்து இல்லாமலும் ஆசரிப்பதற்குப்பதிலாக, அநேகக் கிறிஸ்தவர்கள் இந்தப் பாடத்தை சத்திய வெளிச்சத்தில் பார்ப்பார்களேயானால், மேலும் கிறிஸ்துவின் மரணத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதை இருதயப்பூர்வமாக ஆசரிப்பார்களேயானால், அது அவர்களுக்கு சந்தேகத்திற்கிடமின்றி ஒரு பெரிய ஆசீர்வாதமாக இருக்கும்.

வருடத்திற்கொருமுறை, இதை நீங்கள் செய்யும்போதெல்லாம், என்னை நினைவுகூரும்படி செய்யுங்கள் என்று நமது கர்த்தர் கட்டளையிட்டபடி, இந்தக் காரியத்தில் அதிகக் கவனம் செலுத்தி ஆண்டவரின் மரணத்தை ஆசரிப்பதில் சந்தோஷப்படுகிற கர்த்தரின் ஜனங்களில் சிறிய வகுப்பார் உலகெங்கிலும் எழும்பியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஓர் ஆசரிப்பு மனதிற்கும், இருதயத்திற்கும் விசேஷித்த ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் என்று நாங்கள் நம்புகிறோம். தெய்வீக நிபந்தனைகளுக்கு எவ்வளவு அருகே வருகிறோமோ, அந்த அளவிற்கு நமது ஆசீர்வாதம் அதிகமாக இருக்கும் மற்றும் நமது ஆண்டவரும், தலையுமானவரிடத்திலும், அவரது சரீரத்தின் மற்ற அங்கத்தினர்களிடத்திலும் நாம் நெருங்கி வருவோம்.

இந்த ஆசரிப்பின்நாள் இந்த வருடம் (1915) மார்ச் 28-ஆம் தேதி, 6 மணிக்குமேல் வருகிறது; ஏனெனில் யூதக் கணக்கீட்டின்படி நீசான் மாதம் 14-ஆம் தேதி அப்பொழுதுதான் ஆரம்பிக்கிறது. ஆண்டவரின் மகா பெரிய பலியை நினைவுகூரும்படி ஆங்காங்கே இருக்கிற கர்த்தருடைய ஜனங்கள் சிறுகூட்டமாக, குடும்பமாகக் கூடும்படி வலியுறுத்துகிறோம். அது அவருடைய மரணத்தின் வருடாந்தர ஆசரிப்பாக இருக்கின்றது என்ற காரியமே அக்காரியத்தினை, தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒன்றாக்குகின்றது.

## ஆண்டவரே, நானோ?

முதலாம் நினைவுகூருதலின் சந்தர்ப்பங்களை நாம் மீண்டும் நினைவுகூருகின்றோம் . . . அப்பம் மற்றும் திராட்சரசமுள்ள பாத்திரம் ஸ்தோத்திரிக்கப்பட்டது; இவைகள் அவரது பிட்கப்படுகிற சரீரத்தையும், சிந்தப்படுகிற இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றது என்றும், அவரது பின்னடியார்கள் அனைவரும் அவரைப் புசிப்பதன் மூலம் மாத்திரமல்ல, அவரோடுகூடப் பிட்கப்படுவதன் மூலம் பங்குகொள்ள வேண்டுமென்றும், அவரது இரத்தத்தின், பலியின் புண்ணியத்தில் பங்கெடுப்பது மாத்திரமல்லாமல், தாங்கள் பிற்பாடு இராஜ்யத்தில் அவரது கனத்திலும், மகிமையிலும் பங்கடையத்தக்கதாகத் தங்களது ஜீவியங்களை அவரது ஊழியத்திலும், எல்லா விதத்திலும் அவரோடு ஒத்துழைப்பதிலும் ஒப்புக்கொடுப்பதன் மூலம் பங்குகொள்ள வேண்டுமென்றும் நமது கர்த்தர் கூறினார். இந்தக் கருத்துக்களானது, நமது கர்த்தருடன் ஒத்து இசைந்திருப்பவர்களுக்கு எத்துணை விலையேறப் பெற்றதாய்க் காணப்படும்!

இந்தச் சிந்தனைகளைச் சிந்தித்தவர்களாக, அவர்கள் யூதாசின் செயல்களை நினைத்துப்பார்க்கலாம். யூதாஸ் அதிகமாய்த் தயவு பாராட்டப்பட்டும், இழிவான ஆதாயத்திற்காக தனது ஆண்டவரை விற்கத்துணிந்தான். மேலும் ஆண்டவருக்குத் துரோகம் இழைக்க தைரியங்கொண்டு, "ரபீ நானோ" என்றும் கேட்டார். ஆண்டவரோடுகூட இருந்தவன் அவரை மறுதலித்து எதிரிகளிடம் காட்டிக்கொடுக்கக் கூடிய இப்படிப்பட்ட செயல், அருவருக்கத்தக்கதாகவும், எச்சரிக்கையுடன் நமது

இருதயத்தை நிரப்பக்கூடியதாகவும் இருக்க வேண்டும் மற்றும் கனத்திற்காகவோ, செல்வத்திற்காகவோ, வேறு எதற்காகவோ, சத்தியத்தையோ அல்லது கிறிஸ்துவின் சரீர அங்கமாகிய எந்த ஊழியக்காரரையோ விற்க நாம் துணிந்திடக்கூடாது.

நினைவுகூருதலின் இராப்போஜனத்தைப் பின்தொடர்ந்ததான துக்கம் நிறைந்த வேளையுள்ள சம்பவங்களைக் கவனிக்கத்தக்கதாக, நாம் மீட்பரைக் கெத்செமனேவுக்குப் பின்தொடர்ந்துபோய், "அவர் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லவரை நோக்கி பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணுவதை" பார்க்கின்றோம். பிதாவின் திட்டத்தினை நிறைவேற்றுவதில், ஏதாகிலும் விஷயத்தில் தவறிப்போய் மற்றும் அதன் நிமித்தமாக உயிர்த்தெழுப்பப்படுவதற்குப் பாத்திரமற்றவராகக் கருதப்பட்டு விடுவாரோ என்று நமது ஆண்டவர் மரணப் பயத்தை வெளிப்படுத்துவதைப்பார்க்கின்றோம். நமது கர்த்தர் தமது அர்ப்பணிப்பின் உடன்படிக்கையை உண்மையாய்க் காத்துக்கொண்டுள்ளார் என்றும், வாக்களிக்கப் பட்டுள்ளதுபோல உயிர்த்தெழுதலை அடைவார் என்றுமுள்ள வாக்குறுதியினால் அவர் ஏதோ ஒரு விதத்தில் ஆறுதல்படுத்தப்பட்டதாக நாம் கவனிக்கின்றோம்.

இதற்குப்பிற்பாடு அவர் பிரதான ஆசாரியன் மற்றும் பிலாத்து மற்றும் ஏரோது மற்றும் மீண்டுமாகப் பிலாத்துவின் முன்னிலையில் எவ்வளவு அமைதியுடன் காணப்பட்டார் என்று நாம் கவனிக்கின்றோம். "தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்திமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும் அவர் தற்காத்துக் கொள்வதற்கெனத் - தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்." அவர் முடிவுபரியந்தம் உண்மையாயும், தைரியமாகவும் இருந்ததாகப் பார்க்கின்றோம்; தம்முடைய பாதுகாப்பிற்கெனத் தம்மால் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமானத் தூதரைப் பிதாவிடம் கேட்டிருக்கவும், பெற்றிருக்கவும் முடியும் என்றுமுள்ள அவரது நம்பிக்கையையும் நாம் பார்க்கின்றோம். ஆனால் தம்முடைய பலியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு உதவி வேண்டி விண்ணப்பிப்பதற்குப்பதிலாக, அவர் அவைகளை உண்மையாய்ச் சகிப்பதற்கு வேண்டிய உதவியையே விண்ணப்பித்தார். இங்கு அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றும் பின்னடியார்களுக்கு எத்தகையதொரு படிப்பினைக் காணப்படுகின்றது!

## சுயபரிசோதனைக்கு ஒரு சந்தர்ப்பம்

இன்னொரு பக்கத்தில், அவரது உண்மையுள்ள சீஷர்கள் மத்தியில், மிகுந்த தைரியமானவர்கள்கூட, ஆண்டவரைவிட்டு, ஓடிப்போனார்கள் என்றும், அவர்களில் ஒருவர் தனது துணிவின்மையினால், தனது கர்த்தரையே மறுதலித்தார்! என்றும் நினைவுகூருகின்றோம். நம்மை மீட்டுக்கொண்டவருடன் பாடுபடுவதற்கான நமது விருப்பத்தின், நமது தைரியத்தின், நமது விசுவாசத்தின் அளவுத் தொடர்புடைய விஷயத்தில், நம்முடைய இருதயங்களை ஆராய்ந்துபார்ப்பதற்கான எத்தகையதொரு

தருணமாய் இது காணப்படுகிறது! எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் (அ) சூழ்நிலையிலும் நமது ஆண்டவரை மறுதலிக்கமாட்டோம் என்றும், நம்முடைய உதடுகளினால் மாத்திரமல்லாமல், நம்முடைய நடத்தையினாலும் அவரை அறிக்கைப்பண்ணுவோம் என்றுமுள்ளதான தீர்மானங்களினால் மனதைத் தாங்கி ஆதரிப்பதற்கு எத்தகையதொரு சிலாக்கியம் இப்படியாக நமக்கு வழங்கப்பட்டுள்ளது.

யேகோவா தேவனுடைய ஜனங்களெனத் தங்களைக்குறித்து அறிக்கைப் பண்ணினவர்களே ஜீவாதிபதியைச் சிலுவையில் அறைந்துப்போட்டார்கள் என்ற எண்ணத்தினால் நாம் அதிர்ச்சியடைகின்றோம்! இது மாத்திரமல்லாமல் இவர்களது மதத் தலைவர்கள், இவர்களது பிரதான ஆசாரியர்கள், வேதபாரகர்கள், பரிசேயர்கள் மற்றும் நியாயசாஸ்திரிகளே இந்தப் பயங்கரமான செய்கைக்குப் பொறுப்பாளிகளாய் இருக்கின்றனர். "உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்பட வேண்டாம்; அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்" என்ற ஆண்டவருடைய வார்த்தைகளை நினைவுகூருகின்றோம்.

## அதே பாத்திரத்தில் பானம்பண்ணுங்கள்

சத்தியத்திற்கான எதிர்ப்பும், ஒளியைச் சுமப்பவர்களுக்கான துன்புறுத்தலும் இன்று கிறிஸ்தவம் என்று அழைக்கப்படும் உலகத்தின் மிக முக்கியமான பிரதிநிதிகளிடமிருந்து வருவதைக் காண்கையில், நாம் ஆச்சரியமுற வேண்டாம். இந்த உண்மையானது நம்மை எதிர்ப்பவர்களையோ (அ) நமது கர்த்தரை மரணத்திற்கு ஏதுவாய்த் துன்புறுத்தினவர்களையோ பகைப்பதற்கு நம்மை வழிநடத்திடக்கூடாது. இக்காரியம் தொடர்புடையதான அப்போஸ்தலனாகிய பேதுருவின் வார்த்தைகளாகிய "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்" (அப்போஸ்தலர் 3:17) என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஆ, ஆம்! (மத உலகத்தாரின்) இருதயம் மற்றும் மனதின் குருட்டுத்தன்மையும், அறியாமையுந்தான் தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்துவினுடைய பாடுகள் அனைத்திற்குமான அடிப்படையாகக் காணப்படுகின்றது. இவைகள் தங்களினுடைய தலையானவருடைய உபத்திரவங்களில் குறைவானதை, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் நிறைவேற்றுவதுவரையிலும், இப்பொழுது காணப்படுவதற்குப் பிதா அனுமதித்துள்ளார் (கொலோசெயர் 1:24). சீக்கிரமாகவே நமது அருமை கர்த்தர் கூறியுள்ள பிரகாரமாகவே, இப்பொழுது அவரது பிட்கப்பட்ட சரீரத்தில் பங்கெடுத்து, அவரோடுகூடச் சத்தியத்தின் ஊழியத்தில் பிட்கப்படுகிறவர்களும், இப்பொழுது பாடுகள் மற்றும் சுயத்தை வெறுத்தல் எனும் அவரது பாத்திரத்தில் பங்கெடுப்பவர்களும், திரைக்கு அப்பால், இராஜ்யத்தில் அவரோடுகூடச் சந்தோஷத்தின் புதிய திராட்சரசத்தைப் பருகுவார்கள். (மத்தேயு 26:29)

## பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்

அந்த மகிமையான காலையில், உலகைப் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கும் மாபெரும் வேலை ஆரம்பமாகும்; சீர்த்தூக்குதலின் மாபெரும் வேலை, "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கத்தரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீரும் திரும்பக்கொடுத்தலின் காலங்கள்" ஆரம்பமாகும் (அப்போஸ்தலர் 3:21). நினைவுகூருதலின் அனுசரிப்பில் பங்கெடுப்பவர்கள் ஒவ்வொருவரின் மனதிற்கு முன்பாகக் காணப்பட வேண்டிய சிந்தையானது, பரிசுத்த பவுல் அடிகளாரின் பின்வரும் வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது; அதாவது, "அவரோடுகூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்;" "நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்;" "ஏனெனில் அவை அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவமாய் இருக்கின்றது;" "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" (உரோமர் 8:1-8) என்பதேயாகும்.

விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய புண்ணியத்தினால் முதற்பேறானவர்களான நம்முடைய பாவங்களைக் கடந்துபோகுதல் குறித்தும், நமது பாக்கியமான கர்த்தருடன், அவரது பாடுகளின், மகிமையின் அனுபவங்களில் நாம் பங்கடைவது குறித்துமான இந்தச் சிந்தனைகளுடன், சோதனைகளும், கஷ்டங்களும் இருந்தாலுங்கூடச் சந்தோஷத்தோடே பஸ்கா பண்டிகையை ஆசரிப்போம். இப்படியாக அவரது பின்னடியார்களென உண்மையாய்த் தொடர்ந்து செய்துவருவோமானால், வெகு சீக்கிரத்தில் கர்த்தரால் ஆதரிக்கப்படுபவர்களை, அதாவது இறுதியில் மகா இராஜாவுக்குச் செவிக்கொடுத்து, அவரை அறிந்துகொண்டு, அவருக்குக் கீழ்ப்படியும் யாவரையும், பாவம் மற்றும் மரணத்தினுடைய ஆளுகையிலிருந்து, எகிப்திலிருந்து, கானானுக்கு நேராய் வழிநடத்திடும் மாபெரும் சிலாக்கியத்தினை நாம் பெற்றுக்கொள்வோம். ஆம், சகோதரர்களே, அப்போஸ்தலரின் வசனத்தின்படி, "நமது பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் . . . பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்."

## இராஜ்யத்தில் சந்தோஷத்தின் பாத்திரம்

தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலை நிறுவின தருணத்தின்போது, ஆண்டவர் அப்போஸ்தலர்களுடனான தம்முடைய சம்பாஷணையில் கூறினதாவது: "இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் இராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 26:29). இங்கு நமது கர்த்தர் இரண்டு மகா நாட்களை - பாடுபடுகிற நாளையும் மற்றும் மகிமையின் நாளையும் வித்தியாசப்படுத்துகின்றார். இந்தச் சுவிசேஷயுகமானது பாடுபடுகிற நாளாய்க் காணப்படுகின்றது. ஆயிரவருட நாளானது, மகிமையின் நாளாகக் காணப்படும் மற்றும் இது விசேஷமாக "கிறிஸ்துவினுடைய நாள்" என்று பேசப்படுகின்றது.

திராட்சப்பழரசமானது, சொல்லர்த்தமான பாத்திரமானது, இரண்டு கருத்துக்களைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. திராட்சரச பாத்திரமானது, திராட்சப்பழமானது அதன் ஜீவனை இழந்துபோவதன் காரணமாக உண்டாகுகின்றது. திராட்சப்பழமானது, அதன் தனித்துவத்தை இழந்துபோகின்றதாய் இருக்கின்றது. சாறுபிழிந்தெடுக்கப்படுகின்றது மற்றும் இப்படியாகத் திராட்சப்பழரசமானது பயன்பாட்டிற்கென ஆயத்தம் பண்ணப்படுகின்றது. திராட்சரச பாத்திரமானது . . . திராட்சச்சாறானது திராட்சப்பழம் பிழியப்படுவதை மாத்திரமல்லாமல், இரசத்தின் காரணமாக உண்டாகும் மகிழ்ச்சியையும்கூட அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இப்படியாகவே அடையாளமான பாத்திரத்தில், நாம் பானம்பண்ணும் விஷயத்திலும் காணப்படும். நமக்கு அது நமது இரட்சகருடைய பாடுகளையும், மரணத்தையும் மற்றும் இந்தப் பாடுகளில் அவரோடுகூட நாம் பங்கடைவதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆனால் திராட்சரசமானது, சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையுங்கூட அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் இப்படியான அர்த்தத்தில் வேதவாக்கியங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால் முந்தின பத்தியில் கர்த்தரால் பயன்படுத்தப்பட்டதான வார்த்தைகளாகிய திராட்சப்பழரசத்தின் விஷயத்தில், பாத்திரமானது இராஜ்யத்தின் சந்தோஷங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

நமது கர்த்தர் இயேசுவுக்கான பூமிக்குரிய அனுபவங்களினுடைய விஷயத்தில், பிதா அவருக்கு ஒரு குறிப்பிட்ட பாதையை அமைத்து வைத்திருந்தார். இந்தப் பாதையானது, பாடுகள் மற்றும் மரணம் எனும் அவருடைய பாத்திரமாகக் காணப்பட்டது. ஆனால் அவர் இந்தப் பாத்திரத்தில் உண்மையாய்ப் பானம்பண்ணிட்ட பிற்பாடு, அவருக்கு வித்தியாசமான/வேறே பாத்திரம், வேறே அனுபவம், அதாவது கனம், மகிமை மற்றும் அழியாமை கொடுக்கப்படும் என்று பிதா அவருக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். மேலும் அவருடைய பின்னடியாளர்களாகுவதற்கு விரும்புகிறவர் களுக்கும் இதே செய்தியை, அதாவது அவரோடுகூடப் பாடுபட்டார்களானால், அவரோடுகூட மரணம் எனும் அவரது பாத்திரத்தில் பானம் பண்ணினார்களானால், அப்போது அவர்கள் சந்தோஷமாகிய அவரது வருங்கால பாத்திரத்திலும் பங்கடைவார்கள் என்று இரட்சகர் முன்வைக்கத்தக்கதாக, பிதா அவருக்கு அதிகாரம் அளித்தவரானார்.

## சிலுவையின் பாதையில்

"தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன், அதை இழந்துபோவான்." திராட்சரச ஆலைகளினால் அடையாளப்படுத்தப்படுகின்றதான சோதனையான அனுபவங்கள் வாயிலாக நாம் அனைவரும் கடந்துபோக வேண்டும். தெய்வீக ஊழியத்தில், நாம் நமது ஜீவியங்களை ஒப்புக்கொடுத்திட வேண்டும். மனிதன் எனும் விதத்தில் நாம் தடையம் இல்லாமல் போவதற்கும் மற்றும் புதிய சிருஷ்டிகளாகுவதற்கும் வேண்டி, நாம் நம்மை நொறுக்கும் அனுபவங்களுக்குள் ஒப்புக்கொடுத்திட வேண்டும். "அவரோடேகூட பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோமே" ஒழிய, மற்றப்படியல்ல. ஆகையால் அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கான அழைப்பை நாம் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டுள்ளோம். பாத்திரமானது அதன் கடைசிவரை குடித்து முடிக்கப்படாததுவரையிலும், நாம் அடுத்தப் பாத்திரத்தை, அதாவது இராஜ்யத்தினுடைய சந்தோஷங்களாகிய பாத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. நமது கர்த்தர் பிதாவுக்குக் கீழ்ப்படிந்திருந்தபோது, அது அவருக்கு மிகுந்த

ஆசீர்வாதத்தைக் கொணர்ந்ததாய் இருப்பினும், அது அவருக்கு இறுதி தருணம் வரையிலும், அதாவது "முடிந்தது" என்று சத்தமிட்டது வரையிலும், சோதனையான/ துயரம் நிறைந்தவேளை போன்றதாகவே இருந்தது. இப்படியாகச் சபையின் விஷயத்திலும் காணப்படும். நாம் பாத்திரத்திலுள்ள அனைத்தையும் பானம் பண்ணிட வேண்டும்; பாத்திரத்திலுள்ள எதுவும் மீதியாய் வைக்கப்படக்கூடாது.

கிறிஸ்துவினுடைய சரீரமானது, அவர்களுடைய ஓட்டத்தை நிறைவுபண்ணும் போது, கிறிஸ்துவினுடைய பாடுகள் அனைத்துமே நிறைவடைந்துவிடும். நமது கர்த்தர் மகிமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, அவருக்குச் சந்தோஷத்தினுடைய புதிய பாத்திரமானது கொடுக்கப்பட்டது. அப்போது தேவனுடைய தூதர்கள் அனைவரும் அவரைத் தொழுதுகொண்டார்கள். சீக்கிரத்தில் நமக்கான சந்தோஷத்தின் பாத்திரமானது, நமக்குக் கொடுக்கப்படும். நித்திரையிலிருந்த பரிசுத்தவான்கள் விழித்தெழுந்து, தங்களுடைய பலனுக்குள் பிரவேசித்து, ஆசீர்வாதத்தின் பாத்திரத்தைப் பெற்றுக்கொண்டபோது, அது மகிமையானதொரு வேளையாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை (வேதாகம பாடங்கள், தொகுதி 3, பக்கங்கள் 290-301; தொகுதி 4, பக்கங்கள் 865-866 பார்க்கவும்). மேலும், ஆண்டவருடைய வருகையின்போது, உயிரோடிருப்பவர்களாய்க் காணப்பட்டவர்கள் ஒவ்வொருவராய், வீட்டிற்குள் சேர்க்கப்படுகின்றார்கள். நாமும் உண்மையுள்ளவர்களாய்க் காணப்பட்டால், சீக்கிரத்தில் அவர்களோடுகூட இந்தச் சந்தோஷத்தின் பாத்திரத்தில் பங்குபெறுகின்றவர்களாய் இருப்போம் என்பதில் ஐயமில்லை. கிறிஸ்துவினுடைய அங்கத்தினர்கள் அனைவரும் திரைக்குப் பின்னாக வருவதுவரையிலும், பூரண ஆனந்தம் அடையப்படாது என்று நாம் நம்புகின்றோம். அப்போது அவரது சிங்காசனத்தில் நாம் பங்கடைந்து, அவரது மகிமையிலும் பங்குபெறுவோம். அப்போது நமது அருமை கர்த்தருடன் இராஜ்யத்தில், புதிய இரசத்தை நாம் பானம்பண்ணுவோம்; ஏனெனில் இதுவே அவரது உண்மையுள்ள பரிசுத்தவான்கள் அனைவருக்குமான வாக்குத்தத்தமாக இருக்கின்றது.

"யூத பலிபீடத்தில் கொல்லப்பட்ட
எல்லா மிருகங்களின் இரத்தமும்
குற்ற மனசாட்சியைத் தணித்திடாது
அல்லது கறைகளை முற்றும் கழுவாது.

"ஆனால் பரம ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து
நமது பாவங்கள் அனைத்தையும் நீக்குகிறார்;
உயர்ந்த நாமமுடையவரின் ஒரு பலி
அவைகளைக் காட்டிலும் விலையேறப்பெற்ற இரத்தம்.

"எனது ஆத்துமா திரும்பிப்பார்க்கிறது
அவர் சுமந்த சுமையை,
அவரது ஜீவனை எனக்காக ஊற்றும்பொழுது
அங்கே பார்க்கிறது அதன் மீட்கும்பொருளை."

# நினைவுகூருதல் காலப்பகுதிக்கான சிந்தனைகள்

***"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்." 1 கொரிந்தியர் 11:26***

யூதர்களால் ஆசரிக்கப்படுகின்றதான பஸ்கா காலமானது சமீபித்திருக் கின்றது; இந்த வருடத்தினுடைய ஏப்ரல் மாதம் 17-ஆம் தேதி துவங்குகின்றது. ஆனால் இந்த ஒரு காலப்பகுதிகளில் கிறிஸ்தவர்களுடைய கவனமானது, பஸ்கா பண்டிகைக்கு முன்பு இடம்பெறுகின்றதும், தேவ ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து இயேசுவை அடையாளப்படுத்துகின்றதுமாகிய, ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதல் மீதே விசேஷமாய் மையம் கொண்டுள்ளது. ஆகையால் நாம் ஆசரிக்கின்றதான இந்தப் பஸ்கா காலமானது, மாபெரும் நிஜம் தொடர்புடையதாகும். இந்த ஒரு காலப்பகுதியில், கிறிஸ்தவர்களாகிய நாம் சரித்திரம் அனைத்திலும் பெரியதொரு நிகழ்வாகிய, உலகத்தினுடைய இரட்சகரின் தியாக மரணத்தை நினைவுகூர்ந்து ஆசரிக்கின்றோம்.

ஆயிரக்கணக்கான யூதர்களும், கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்கின்றவர்களும் இந்த ஒரு காலக்கட்டத்தில், இந்த மிகவும் முக்கியமான நிகழ்வைக் கடமையான விதத்திலும், சடங்காச்சாரமான சம்பிரதாயங்கள் சிலவற்றினாலும் ஆசரித்தாலும், இவ்விரண்டு மதத்தாரிலும், எவருமே இவ்வாசரிப்பினுடைய உண்மையான அர்த்தத்தினை உணராதவர்களாகவே இருக்கின்றனர் என்பதின் நிமித்தம் நாம் மிகுந்த மனவருத்தம் அடைகின்றோம். இவர்களுடைய மனங்களானது, அதன் உண்மையான அர்த்தத்தின் விஷயத்தில் விழித்துக்கொள்ளுமானால், உலகம் அறிந்திராத அளவுக்கான ஒரு மத மறுமலர்ச்சி ஏற்படக்கூடும். ஆனால் பரிசுத்த பவுல் குறிப்பிடுவதுபோல, "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அநேகருடைய மனதைக் குருடாக்கினான்" மற்றும் பகுதி திறக்கப்பட்ட புரிந்துகொள்ளுதலின் கண்களை உடைய சிலரும் குருடர்களாகவும், தொலைவில் பார்க்கமுடியாதவர்களாகவும் இருக்கின்றனர் என்று பரிசுத்த பேதுரு விவரிக்கின்றார். இவர்கள் 3000 வருடங்களுக்கும்மேலாக, நிழலிலும், நிஜத்திலும் ஆசரிக்கப்பட்டதான இந்த அனுசரிப்புச் சார்ந்த தேவ ஆழங்களைப் பார்க்கமுடியாதவர்களாய் இருக்கின்றனர்.

இஸ்ரயேலர்கள் பஸ்காவை நியாயப்பிரமாணத்தினுடைய முதலாவது அம்சமாகவும், தங்கள் ஜாதிக்கான மாபெரும் நினைவுகூருதல்களில் ஒன்றாகவும் ஆசரிப்பதற்குக் கட்டளையிடப்பட்டிருந்தனர். ஆகையால் உலகமெங்குமுள்ள யூதர்களாலும் மற்றும் கடவுளைக் கண்டறிவது அசாத்தியம் எனும் கொள்கை உடையவர்களாலும் (agnostics) கூடப் பஸ்காவானது ஓரளவுக்கு ஆசரிக்கப்படுகின்றது என்று நாம் பார்க்கின்றோம். இவர்கள் இன்னமும் பஸ்காவை, முற்காலத்து வழக்கமெனக் கொஞ்சம் மதிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். ஆனால் அறிவுகூர்மையுள்ள மனங்களை உடையவர்களான நமது யூத நண்பர்கள், இந்த அனுசரிப்பினுடைய அர்த்தமென்ன என்று ஒருபோதும் விசாரியாதது விநோதமாய்க் காணப்படுகின்றதல்லவா?

பஸ்கா ஆட்டுக்குட்டியானது ஏன் அடிக்கப்பட்டு, புசிக்கப்படுகின்றது? ஏன் இரத்தமானது வீட்டுவாசலினுடைய நிலைக்கால்களிலும், மேற்சட்டங்களிலும் தெளிக்கப்படுகின்றது? இப்படிச் செய்வதற்குத் தேவன் கட்டளையிட்டுள்ளார் என்பது உண்மைதான்; ஆனாலும் தெய்வீகக் கட்டளைக்குப் பின்னாக உள்ள காரணம், நோக்கம் என்ன? என்ன பாடம், என்ன அர்த்தம் உள்ளது? விவேகமுள்ள தேவன், விவேகமான கட்டளைகளைத்தான் கொடுப்பார் என்பது உண்மையே; ஏற்றக்காலத்தில் யேகோவா தேவன் தம்முடைய உண்மையுள்ள ஜனங்கள் அனைத்துக் காரியங்களினுடைய அர்த்தங்களைப் புரிந்துகொள்ளச் செய்வார். யூதனால் தனக்கான ஓய்வுநாள் என்பது இளைப்பாறுதலுக்கான, ஆசீர்வாதத்திற்கான, மற்றும் வேலைகளிலிருந்து, கவலைகளிலிருந்து, மரணத்திலிருந்து விடுதலைக்கான வரவிருக்கிற காலப்பகுதிக்கு நிழலாய் இருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ள முடியுமானால், இதுபோலவே மோசேயின் வாயிலாகக் கொடுக்கப்பட்ட அம்சங்கள் அனைத்தும், "ஏற்றக்காலத்தில்" அருளப்படப்போகின்றதான பல்வேறு ஆசீர்வாதங்களுக்கு நிழலாய்க் காணப்படத்தக்கதாகக் கர்த்தரினால் வடிவமைக்கப்பட்டுள்ளது என அவனால் ஏன் காண முடியவில்லை?

## முதற்பலன்கள் மற்றும் பிற்பலன்கள்

இயேசுவே "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக" இருக்கின்றார் என்றும், மனுக்குலத்தார் யாவருடைய பாவங்களுக்காக ஏற்றவேளையில் இயேசுவினுடைய பலியின் புண்ணியம் செயல்படுத்தப்படுவதின் வாயிலாக, மனிதனுக்கான தண்டனை சந்திக்கப்படுதலின் மூலம் உலகத்தின் பாவம் தள்ளுபடியாவது சாத்தியமாகும் என்றும் காண்கிற கண்களை உடையவர்கள் பாக்கியவான்களாவர். இதுவரையிலும் சபை மாத்திரமே இயேசுவினுடைய மரணத்தினாலான புண்ணியத்தினைப் பெற்றிருக்கின்றனர். முழு உலகமும் தெய்வீகத் தயவை இழந்து, துன்பம், வலி ஆகியவற்றுடனுள்ள மரணம் எனும் தெய்வீகத் தீர்ப்பின் கீழ் வந்துள்ளபடியால், இந்தத் தண்டனைத் தீர்ப்பானது (அ) சாபமானது மாற்றிப்போடப்படுவதற்கு முன்னதாக, நீதியானது திருப்திப்படுத்தப்படுவது அவசியம் என்றும், அப்போஸ்தலர் குறிப்பிடுவதுபோன்று "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக" - நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி, "அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் மரித்தார்" என்றும் காண முடிந்தவர்கள் மிகுந்த தயவு பெற்றவர்களாய் இருக்கின்றனர். இப்படியாக அவர் ஒரு புதிய வழியை, நித்திய ஜீவனுக்கான ஒரு வழியைத் திறந்து வைத்தார்.

வேதவாக்கியங்களானது கிறிஸ்துவின் சபையை, "முதற்பேறானவர்களின் சபை" என்றும், "தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்கள்" என்றும், தேவனுக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலன்கள்" என்றும் அழைக்கின்றது (எபிரெயர் 12:23; யாக்கோபு 1:18; வெளிப்படுத்தல் 14:4). இவ்வார்த்தைகளானது இறுதியில் தேவனுடைய குடும்பத்தில் பிற்பிறப்புகள் என்ற மற்றவர்கள் இருப்பார்கள் என்று,

சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; பிற்பலன்கள் இருப்பார்கள் என்று சுட்டிக்காட்டுகின்றது. பொதுவாய்க் கிறிஸ்தவ ஜனங்கள் இந்த வேதவாக்கியங்களைக் கவனிக்கத் தவறிப்போனவர்களாக, அதுவும் இவைகளுக்கு அர்த்தம் பொருத்தும் விஷயத்தில் தவறிப்போனவர்களாக இருந்து, வேதாகமத்தில் முதற்பலன்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பவர்கள் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்கள் என்றும், பிற்பலன்கள் இல்லை என்றும் நம்புகிறவர்களானார்கள்.

ஆனால் பஸ்கா நிழலானது, இஸ்ரயேலர்கள் அனைவரையும் இரட்சிப்பதே தேவ நோக்கமாக இருக்கின்றது என்று சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக இஸ்ரயேல் ஜாதியானது, தேவனுடன் இசைவிற்குள் வந்து, வாக்களிக்கப்பட்ட தேசத்தில் நித்திய ஜீவனை அருளப்பெறுகின்றவர்களாகிய மனுக்குலம் யாவருக்கும் அடையாளமாய் இருக்கின்றார்கள் என்று சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இரண்டு கடந்துபோகுதல்கள் இருப்பதை நாம் கவனிப்போமாக - முதற்பேறானவர்களை மாத்திரமே கடந்துபோகுதல் என்பது முதலாவதாகும்; தெய்வீக வல்லமையின் மூலமாக ஒட்டுமொத்த இஸ்ரயேல் ஜாதியும் அற்புதகரமாக விடுவிக்கப்பட்டு, செங்கடலின் வழியே நடத்திச்செல்லப்பட்டபோது, மற்றொன்று நிகழ்ந்தது; செங்கடலில் வழியானது காற்று மற்றும் அலைகளின் அழுத்தம் காரணமாக அவர்களுக்கென்று விசேஷமாக ஆயத்தப்படுத்தப்பட்டது. அவர்கள் வெட்டாந்தரையில் நடந்து, கடந்துசென்றனர் மற்றும் இரட்சிக்கப்பட்டனர்; ஆனால் இரண்டாம் மரணத்திற்குள் இறுதியில் போகப்போகிறவர்களுக்கு அடையாளமாக பார்வோனின் சேனைகள் கடலில் மூழ்கடிக்கப்பட்டனர். செங்கடலில் நடந்த கடந்துபோகுதலானது, கர்த்தருடன் இசைவிற்குள் வருவதற்கும், அவரைத் தொழுதுகொள்வதற்கும் விரும்புகிற ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொரு சிருஷ்டியும், அதாவது இஸ்ரயேலின் பாகமாகும் அனைவரும், பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையினின்று இறுதியில் விடுவிக்கப்படுவதைச் சித்தரிக்கின்றதாயிருக்கின்றது; ஏனெனில் இஸ்ரயேலரில் ஒருவர்கூட, எகிப்திய அடிமைத்தனத்தில் விட்டுவரப்படவில்லை.

## முதற்பேறானவர்களின் பொறுப்பு

இந்த (இரண்டாவது) கடந்துபோகுதலை நாம் ஆசரிக்கப்போவதில்லை. எகிப்து தேசத்தில் இஸ்ரயேலின் முதற்பேறானவர்களை தூதன் கடந்துபோனதின் நிஜத்தையே நாம் ஆசரிக்கின்றோம். முழு [இஸ்ரயேல்] ஜாதியின் விடுதலையானது இந்த முதற்பேறானவர்களின் கடந்துபோகுதலை, இரட்சிப்பைச் சார்ந்திருந்தாலும், எகிப்தில் அந்த இரவின்போது இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் மாத்திரமே அபாயத்தில் காணப்பட்டனர். ஆகையால் சுவிசேஷயுகமாகிய இந்த இரவில், மனித தளத்திலுள்ள தேவ புத்திரர்களிலுள்ள முதற்பேறானவர்கள் மாத்திரமே இப்பொழுது கடந்து போகப்படுகிறவர்களாக இருக்கின்றனர்; இவர்கள் மாத்திரமே சங்காரத் தூதனால் அழிக்கப்படுவதற்கான அபாயத்தில் காணப்படுகின்றனர். இவர்கள் அனைவரும்

தெளிக்கப்பட்ட இரத்தத்தின் கீழ்க் காணப்படுகின்றனர்.

வேதவாக்கியங்கள் அனைத்தும் சொல்லுகிறபடி "சிறு மந்தையினர்," "தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்கள்," "முதற்பேறானவர்களாகிய சபை" மாத்திரமே தற்கால யுகத்தில் தப்புவிக்கப்படுகின்றனர், கடந்து போகப்படுகின்றனர் என்று நாம் பார்க்கின்றோம். இந்த யுகத்தைத் தொடர்ந்துவரும் யுகத்தில், மீதமான மனுக்குலமானது, மாபெரும் நிஜமான மோசேயைப் பின்தொடர விரும்புகையில், அவர் ஜனங்களைப் பாவம் மற்றும் மரணம் எனும் அடிமைத்தனத்திலிருந்து வெளியே நடத்திடுவார்; ஆனால் அவர்கள் இப்பொழுது நித்தியமான அழிவுக்கான அபாயத்தில் இல்லை; முதற்பேறானவர்கள் மாத்திரமே அபாயத்தில் இப்பொழுது காணப் படுகின்றனர்.

மனுக்குலத்திலிருந்த முதற்பேறானவர்களாகிய சபை, சந்ததியிலுள்ள மீதமானவர்களுக்கு முன்னதாகவே தங்கள் அடிமை நிலைமைக்குறித்தும், விடுதலைக்கான தங்களுக்குள்ள அவசியத்தைக்குறித்தும், தேவன் தமது நல்வாக்குத்தத்தங்கள் யாவற்றையும் தங்களுக்கு நிறைவேற்ற விருப்பமுள்ளவராய் இருக்கின்றார் என்பது குறித்துமான உணர்ந்துகொள்ளுதலின் விஷயங்களில், தங்களது புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப் பெற்றவர்களாய் இருக்கின்றனர். இன்னுமாக இவர்கள் தேவ கிருபைக்கு இணங்கி, அவருக்கும், அவரது ஊழியத்திற்குமெனத் தங்களையே முழுமையாய் அர்ப்பணம் பண்ணி, இதன் பலனாகப் பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்படுகின்றார்கள். இவர்கள் விஷயத்தில் ஜீவனா (அ) மரணமா அல்லது விசுவாச வீட்டிற்குள்ளாக, அதாவது தெளிக்கப்பட்ட இரத்தத்திற்குப் பின்னபாக இருப்பதா (அ) இல்லையா என்பதுதான் காரியமாய் உள்ளது.

இந்த வகுப்பார் இரத்தத்தின் கீழிருந்து வெளியேறுவது என்பது, தெய்வீக இரக்கத்தினை அவமதிப்பதைக் குறிக்கின்றதாயிருக்கும். அது இவர்கள் தெய்வீகக் காருண்யத்தினை வெறுப்பதை/இகழ்வதைக் குறிக்கின்றதாயிருக்கும்; இன்னுமாக ஆட்டுக்குட்டியினுடைய இரத்தம் அடையாளப்படுத்துகின்றதான தேவனுடைய இரக்கத்தில் தங்கள் பங்கினை அனுபவித்தப்பிற்பாடு, அதை இவர்கள் மதிக்காததையும் குறிக்கின்றதாயிருக்கும். இப்படியாய்ச் செய்கிறவர்களைக்குறித்து வேதவாக்கியங்களானது, "பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்" என்றும், "கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று" என்றும் குறிப்பிடுகின்றது (உரோமர் 6:9; எபிரெயர் 10:26). இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய எதிராளிகளாகக் கருதப்படுவர் மற்றும் இவர்களது அழிவுக்கு, எகிப்தினுடைய முதற்பேறானவர்களின் அழிவானது அடையாளமாய்க் காணப்படுகின்றது. முதற்பேறானவர்களாகிய சபையானது, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப் படுவதினாலும், எல்லா விதத்திலும் அதிகமான அறிவையும், சிலாக்கியங்களையும் அனுபவிப்பதாலும் இவர்கள் உலகத்தைக் காட்டிலும் மிகவும் பொறுப்புடையவர்களாய் இருக்கின்றனர்; ஏனெனில் இவர்கள் மாத்திரமே இப்பொழுது இரண்டாம் மரணத்திற்கான அபாயத்தில் காணப்படுகின்றனர். இதுவே பஸ்கா நிழலினுடைய படிப்பினையாக இருக்கின்றது மற்றும் இது உண்மை கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமே

பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

பாவம் மற்றும் மரணத்தின் இரவு கடந்துபோய், விடுதலைக்கான மகிமையான காலை வருகையில், கிறிஸ்துவாகிய நிஜமான மோசே, தேவனுடைய ஜனங்கள் அனைவரையும், அதாவது தேவசித்தத்தை அறியவரும்போது, அதற்குக் கீழ்ப்படிய, அதைக் கனப்படுத்த, அதை மதித்திட மகிழ்கிற யாவரையும் வழிநடத்திடுவார், இரட்சித்திடுவார். அந்த விடுதலையின் நாளானது, முழு ஆயிரவருட யுகமாகக் காணப்படும் மற்றும் ஆயிரவருட யுகத்தின் முடிவில் எகிப்தின் சேனைகளினால் அடையாளப்படுத்தப்படுகின்றதான பொல்லாத செய்கைக்காரர்கள் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அழிவிற்குள்ளாக அறுப்புண்டுப் போவார்கள்.

## நமது பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசு

அப்போஸ்தலனாகிய பவுல், "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" என்று கூறி, நமது கர்த்தர் இயேசுதான் பஸ்கா ஆட்டுக்குட்டி என்று தெளிவாயும், உறுதியாயும் அடையாளம் கண்டுகொண்டார். நமது வீடுகளின்மீதல்ல, மாறாக நமது இருதயங்கள் மீது இரத்தம் தெளிக்கப்படுவது நம் அனைவருக்கும் அவசியமென அப்போஸ்தலன் நமக்குத் தெரிவிக்கின்றார். நாம் ஆட்டுக்குட்டியில் பங்குகொள்ள வேண்டும்; கிறிஸ்துவினுடைய புண்ணியத்தினை, அவரது பலியின் புண்ணியத்தினை நாம் நமதாக்கிக்கொள்ள வேண்டும்; புதிய யுகமாகிய காலையின் போதான விடுதலைக்கு நாம் பலத்துடனும், ஆயத்தத்துடனும் காணப்பட வேண்டுமானால், நாம் புளிப்பில்லாத அப்பமாகிய சத்தியத்தைப் புசிக்க வேண்டும். இப்படியாக நாம் கிறிஸ்துவை விசுவாசத்தினால் மாத்திரம் தரித்துக்கொள்ளாமல் மாறாக நாம் அதிகமதிகமாக அவரது குணலட்சணத்தைத் தரித்து, நமது இருதயங்களிலும், ஜீவியங்களிலும் அவரது மகிமையான சாயலுக்கு மறுரூபமடைகின்றோம்.

யூதர்கள் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியினைப் புசித்ததுபோன்று, நாம் கிறிஸ்துவைப் புசிக்க வேண்டும். யூதர்களுடைய பசியினைத் தூண்டினதும், பசிக்கு உதவினதுமான கசப்பான கீரைகளுக்குப்பதிலாக, நமக்குக் கர்த்தர் ஆயத்தம் பண்ணினதும், பூமிக்குரியவைகள் மீதான நமது விருப்பங்களை மறந்துபோவதற்கு உதவுவதும், ஆட்டுக்குட்டி மற்றும் புளிப்பில்லாத அப்பமாகிய சத்தியத்தைப் புசிப்பதற்கான தீவிரப் பசியை நமக்குக் கொடுக்கிறதுமான கசப்பான அனுபவங்களையும், சோதனைகளையும் நாம் பெற்றிருக்கின்றோம். நமக்கு எந்த நிரந்தரமான தேசமும் இல்லை என்று நாமும் நினைவில்கொள்ள வேண்டும்; பரதேசிகள் போலவும், யாத்திரிகர்கள்போலவும், கையில் தடி பிடித்துக்கொண்டவர் களாகவும், பரம கானானுக்கும், நமது மீட்பரோடுகூட, தேவனுக்கான இராஜாக்களாக, ஆசாரியர்களாக, இருக்கப்போகிற முதற்பேறானவர்களாகிய சபைக்குத் தேவன் வைத்து வைத்துள்ளதான மகிமையானவைகள் அனைத்தினிடத்திற்குமான நமது பிரயாணத்திற்காக, நாம் அரைக்கட்டிக்கொண்டவர்களாகவும் காணப்பட வேண்டும்.

நமது கர்த்தராகிய இயேசுவும் தாம்தான் பஸ்கா ஆட்டுக்குட்டி என்று

அடையாளம் கண்டுகொண்டார். அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில், சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதாக, அவர் தம்முடைய சீஷர்களுடன் மேல்வீட்டறையில் கூடி, "நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" என்றார். யூதர்களாக அவர்கள் காணப்பட்டப்படியால், அந்த இரவில் அவர்கள் பஸ்கா இராப்போஜனத்தைப் புசிப்பது அவசியமாயிருந்தது; அதாவது எகிப்தில் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதற்கும், நிழலான பார்வோனிடமிருந்து (இவ்வுலகத்தின் அதிபதியிடமிருந்து) நிழலான முதற்பேறான வர்கள் காப்பாற்றப்பட்டதற்குமான ஆண்டுநிறைவு நாளினுடைய இரவில் மற்றும் உண்மையான பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்படப்போகிறதுமான அதே நாளில் அவர்கள் பஸ்கா இராப்போஜனத்தைப் புசிப்பது அவசியமாயிருந்தது. மேலும் நிழலின் விஷயங்கள் நிறைவடைந்தவுடன், நமது கர்த்தர் இயேசு, பழையவைகளின்மீதே புதிய நினைவுகூருதலை ஏற்படுத்தி, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றார்.

## அப்பம் மற்றும் பாத்திரத்திற்கான அடிப்டையான அர்த்தம்

முதலாம் நினைவுகூருதலின் சந்தர்ப்பங்களை நாம் மீண்டும் நினைவுகூருகின்றோம் . . . அப்பம் மற்றும் திராட்சரசமுள்ள பாத்திரம் ஸ்தோத்திரிக்கப்பட்டது; இவைகள் அவரது பிட்கப்படுகிற சரீரத்தையும், சிந்தப்படுகிற இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றது என்றும், அவரது பின்னடியார்கள் அனைவரும் அவரைப் புசிப்பதன் மூலம் மாத்திரமல்ல, அவரோடுகூடப் பிட்கப்படுவதன் மூலம் பங்குகொள்ள வேண்டும் என்றும், அவரது இரத்தத்தின், பலியின் புண்ணியத்தில் பங்கெடுப்பது மாத்திரமல்லாமல், தாங்கள் பிற்பாடு இராஜ்யத்தில் அவரது கனத்திலும், மகிமையிலும் பங்கடையத்தக்கதாகத் தங்களது ஜீவியங்களை அவரது ஊழியத்திலும், எல்லா விதத்திலும் அவரோடு ஒத்துழைப்பதிலும் ஒப்புக்கொடுப்பதன் மூலம் பங்குகொள்ள வேண்டும் என்றும் நமது கர்த்தர் கூறினார். இந்தக் கருத்துக்களானது, நமது கர்த்தருடன் ஒத்து இசைந்திருப்பவர்களுக்கு எத்துணை விலையேறப் பெற்றதாய்க் காணப்படும்!

நினைவுகூருதலாகப் புளிப்பில்லாத அப்பத்தினை சீஷர்களுக்கு முன்வைக்கையில் இயேசு, "நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்றார். அவரது வார்த்தைகளினுடைய அர்த்தமாவது, "இது என் சரீரத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது" என்பதாகும். அப்பமானது உண்மையில் அவரது சரீரமாக இருக்கவில்லை; ஏனெனில் அவரது சரீரம் எந்த விதத்திலும், அதுவரையிலும் பிட்கப்படவில்லை. பலி இன்னமும் நிறைவேறி முடியாததினால், அவர்களாலும், எந்த விதத்திலும், அவரில் நிஜத்தில் (அ) உண்மையில் பங்கெடுக்க முடியாது. எனினும் (தூய்மையான, புளிப்பற்ற) புளிப்பில்லாத அப்பமானது, நமது கர்த்தருடைய பாவமற்ற மாம்சத்தைக் குறிக்கின்றதென நாம் அடையாளம் கண்டுகொள்ளும்போதும் அடையாளம் முழுமையாய் உள்ளது; புளிப்பானது, நியாயப்பிரமாணத்தின் கீழ்ப் பாவத்திற்கான அடையாளமாகவும், பஸ்கா காலங்களில்

புறம்பாக்கிப்போடுவதற்கு விசேஷமாய்க் கட்டளையிடப்பட்டுள்ளதாயும் காணப்படுகின்றது. வேறொரு தருணத்தின்போது, இயேசு கொடுத்திட்ட பாடமானது, இந்த அடையாள சின்னத்தினை நமக்கு விளக்குகின்றதாய் இருக்கின்றது. அவர் "வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார்;" "ஜீவ அப்பம் நானே;" "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்." (யோவான் 6:33, 35, 51)

இந்த ஜீவ அப்பத்தை நாம் எவ்வாறு புசிக்க வேண்டும் (அ) சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வதற்கு, அப்பம் எதைக் குறிக்கின்றது என்பதைப் புரிந்துகொள்வது நமக்கு அவசியமாய் இருக்கின்றது. இக்காரியம் தொடர்பான நமது கர்த்தருடைய விளக்கத்தின்படி, அது அவர் நமக்காகப் பலிச்செலுத்தின அவரது மாம்சத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் நமது மனித சுபாவத்தில் வரத்தக்கதாக, தாம் மனிதனாகுவதற்கு முன்னதாகக் காணப்பட்ட ஆவிக்குரிய ஜீவியின் நிலையினையும், அதன் மகிமையினையும் துறந்து வந்திருந்தாலும், அவர் மனிதனாகுவதற்கு முன்பாகக் காணப்பட்ட ஆவிக்குரிய ஜீவி நிலையானது, பலிச் செலுத்தப்படவில்லை. நமது கர்த்தராகிய இயேசு பரிசுத்தராகவும், மாசில்லாதவராகவும், குற்றமற்றவராகவும், பாவிகளுக்கு விலகினவராகவும், அதாவது தகப்பனாகிய ஆதாமினால் கறைப்படுத்தப்படாதவராகவும், மற்றும் இதனால் பாவமற்றவராகவும் காணப்பட்டக் காரியமே, அவரை ஆதாம் மற்றும் இவர் சந்ததிக்கான மீட்பராக்கிற்று மற்றும் "ஏற்றக்காலங்களில் விளங்கிவந்ததான, அனைவருக்குமான மீட்கும் பொருளாக" அவர் தம்முடைய ஜீவனைக் கொடுப்பதற்கும் அனுமதித்தது (1 தீமோத்தேயு 2:3-6).

பாவிகளுக்காக நமது கர்த்தராகிய இயேசுவின் தூய, கறையற்ற சுபாவமே கொடுக்கப்பட்டது என்று நாம் காண்கையில், நாம் எதைச் சொந்தமாக்கிடுவதற்கான சிலாக்கியம் பெற்றிருக்கின்றோம் என்று நாம் காண்கின்றோம். அவர் எதை நமக்காக ஒப்புக்கொடுத்தாரோ, அதையே நாம் "புசிக்க" வேண்டும், சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும்; அவரது பரிபூரண மனுஷீக ஜீவனானது, மனுக்குலம் முழுவதையும் மரணத் தண்டனையிலிருந்து மீட்பதற்காகவும், அவர்கள் இணங்குகையில் அவர்களை மனித பூரணத்திற்கும், நித்திய ஜீவனிடத்திற்கும் திருப்புவதற்காகவும் கொடுக்கப்பட்டது; நாம் இதை உணர்ந்துகொண்டு, மரணத்திலிருந்து நம்மை இரட்சிப்பவராக, அவரை ஏற்றுக்கொண்டிட வேண்டும். நம்முடைய கடந்தக்கால பாவங்கள் யாவற்றையும் இரத்துச் செய்ததாக ஒருவேளை தேவன் கருதினாலும், மனித பூரணத்தினை அடைந்திடுவதற்கான உரிமையை நாம் உடையவர்களாக இருக்கின்றோமெனத் தேவன் ஒருவேளை கண்டுகொண்டாலும், இது நம்மைப் பூரணமும் படுத்தாது, நித்திய ஜீவனுக்கான உரிமையையும் தராது என்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

ஆதாமின் சந்ததியிலுள்ள எவரேனும் இயேசுவின் பலியில் நன்மையடைய

வேண்டுமானால், அவர் பிதாவின் சந்நிதியில் பிரவேசித்து, நீதியின் கரத்தில் தம்முடைய மரணத்தினால் உண்டான தியாகப் புண்ணியத்தினை வைத்து, பிதாவிடமிருந்து, "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரத்தினைப்" பெற்றுக்கொள்ளத்தக்கதாக, கல்லறையினின்று, ஜீவனுக்கான திவ்விய தளத்திற்கு எழும்புவது அவசியமாகும். உலகம் தொடர்புடைய விஷயத்தில், பிதாவின் ஏற்றக்காலங்களில் முழு உலகத்திற்கான மத்தியஸ்தராக, தீர்க்கத்தரிசியாக, ஆசாரியனாக, இராஜாவாக கர்த்தர் இயேசு இருந்து, அக்காலத்தில் அருளப்படுகின்றதான அருமையான சிலாக்கியங்களைப் பயன்படுத்துகின்றதான அனைவரையும் பரிபூரணத்திற்கும், தேவனுடன் இசைவான நிலைக்கும் திருப்புவதற்கு உதவத்தக்கதாக - ஏற்றக்காலங்களில் கர்த்தர் இயேசு மகிமைப்பொருந்தின திவ்விய ஜீவியாக மீண்டும் திரும்புவதும் அவசியமாய் இருக்கின்றது.

இதே ஆசீர்வாதத்தை இந்த யுகத்தின் சுவிசேஷசபையானது, தங்கள் மீட்பரிலான விசுவாசத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்கின்றனர்; அதாவது விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலைப் பெற்றுக்கொள்கின்றனர்; நாம் ஒருபோதும் பெற்றிராததும், ஒருபோதும் இழந்துபோகாததும், கிறிஸ்து மீட்டுக்கொள்ளாததுமான, ஆவிக்குரிய சுபாவத்திற்கு நீதிமானாக்கப்படவில்லை; மாறாக தந்தையாகிய ஆதாம் பெற்றிருந்ததும், அவரால் இழந்துபோகப்பட்டதும், கிறிஸ்து தம்முடைய பாவமற்ற சொந்த மாம்சத்தை, தமது பரிபூரண மனுஷீக ஜீவனை நமக்கான மீட்கும் பொருள் பலியாகக் கொடுத்து, அவர் மீட்டுக்கொண்டதுமான மனுஷீக சுபாவத்திற்கு நீதிமானாக்கப்பட்டுள்ளோம். ஆகையால் நினைவுகூருதலின்போது புளிப்பில்லாத அப்பத்தில் பங்கெடுத்தல் என்பது விசுவாசத்தினால் மாம்சத்தின் ஜீவிக்கும் உரிமைக்கான - மனுஷன் ஜீவிக்கும் உரிமையும் மற்றும் கர்த்தர் தம்மைக் கொடுத்துப் பெற்றுத் தந்ததான, அதனோடுகூட உள்ள சிலாக்கியங்கள் அனைத்திற்குமான - நீதிமானாக்கப்படுதலை நமதாக்கிக்கொள்ளுதலை நமக்கு முதலாவது குறிக்கின்றதாய் இருக்கின்றது. இதுபோலவே திராட்சப்பழரசமானது நமக்காகக் கொடுக்கப்பட்டதான நமது இரட்சகரின் ஜீவன் - அவரது மனுஷீக ஜீவன், அவரது ஆத்துமா நம் பொருட்டாக மரணத்திற்குள் ஊற்றப்பட்டதை முதன்மையாகக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; மேலும் இதை நாம் நமதாக்கிக் கொள்ளுதல் என்பதும், நமது கர்த்தருடைய பலியானது பெற்றுத் தந்ததான திரும்பக்கொடுத்தலுக்கான உரிமைகளையும், சிலாக்கியங்களையும் நாம் ஏற்றுக்கொள்வதை முதன்மையாகக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

## அப்பம் மற்றும் பாத்திரத்திற்கான ஆழமான அர்த்தம்

ஆயிரவருட யுகத்தின்போது உலகமானது கிரியையினாலும், கீழ்ப்படிதலினாலும் நீதிமானாக்கப்படுவதற்கு முன்னதாக, இந்தச் சுவிசேஷயுகத்தின்போது சபையை விசுவாசத்தினால் நீதிமான்களாக்குவதிலுள்ள தேவனுடைய நோக்கமானது - இப்பொழுது காண்கிறவர்களும், கேட்கிறவர்களும், மனிதனுக்காக அன்பானது ஏறெடுத்துள்ளதான மாபெரும் பலியை இப்பொழுது உணர்ந்துகொள்பவர்களுமான

இந்த வகுப்பார், தங்கள் சரீரங்களை ஜீவப் பலியாக ஒப்புக்கொடுப்பதற்கும், மற்றும் இவ்விதமாய்க் கர்த்தர் இயேசுவோடுகூட, அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென அவரது பலியில் பங்கடைவதற்கும் அனுமதிக்கப்படுவதற்கேயாகும் என்பதை இப்பொழுது நாம் கவனிப்போமாக. நினைவுகூருதலுக்கான இந்த ஆழமான அர்த்தத்தினை அவர் வெளிப்படையாய்க் குறிப்பிடவில்லை. இது "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" என்று அவர் குறிப்பிட்டவைகளில் ஒன்றாயிருக்கும் என்பதில் ஐயமில்லை. (யோவான் 16:12, 13) கிறிஸ்து வாயிலாக அருளப்பட்டதான பிதாவின் இந்த வல்லமையானது, செல்வாக்கானது, சத்தியத்தின் ஆவியானது அப்போஸ்தலனாகிய பவுல் வாயிலாகப் பேசி, நினைவுகூருதலின் மிக உயர்வான அர்த்தத்தினைத் தெளிவாய் விவரிக்கின்றது; ஏனெனில் அர்ப்பணித்துள்ள சபைக்கு அவர் எழுதுகையில் அவர், "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா!"; அதாவது கிறிஸ்து தம்முடைய உண்மைக்கான பலனாகப் பெற்றுக்கொண்டதான மகிமையில், நாமும் அவரோடுகூடப் பங்காளிகளாகக் கருதப்படத்தக்கதாக, உடன் பலிச் செலுத்துபவர்களெனக் கிறிஸ்துவோடுகூட உள்ள மரணம்வரையிலுமான நம்முடைய பங்குகொள்ளுதலாய் இருக்கிறதல்லவா? - "ஏனெனில் அநேகரான நாம் ஒரே அப்பமும், ஒரே சரீரமுமாய் இருக்கிறோம்" என்று கூறுகின்றார் (1 கொரிந்தியர் 10:16, 17).

இந்த அடையாளமான கட்டளையினுடைய இரண்டு கண்ணோட்டங்களும் மிகவும் முக்கியமானவைகளாகும். நமது கர்த்தருடைய பலியின் மூலமான நமது நீதிமானாக்கப்படுதலை, நாம் முதலாவதாகப்பார்ப்பது அவசியமாயிருக்கின்றது. முழுக்கிறிஸ்து, அபிஷேகம் பண்ணப்பட்ட முழுக்கூட்டத்தாரும் தெய்வீக கண்ணோட்டத்தின்படி இயேசுவைத் தலையாகப் பெற்றுள்ளதான, அநேக அங்கத்தினர்களை உடைய ஒரு சரீரமாக இருக்கின்றது என்றும், இந்தச் சபை, இந்தச் சரீரம் முழுவதும் பிட்கப்பட வேண்டுமென்றும், அதன் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் கர்த்தர் இயேசுவின் சாயலாக வேண்டும் மற்றும் அவரது பலியின் அடிச்சுவடுகளில் நடக்க வேண்டுமென்றும் நாம் உணர்ந்துகொள்வதும் ஏற்றக் காரியமாயிருக்கின்றது (1 கொரிந்தியர் 12:12-14). இதை நாம் நம்முடைய ஜீவியங்களைச் சகோதர சகோதரிகளுக்கு ஒப்புக்கொடுப்பதன் மூலம் செய்கின்றோம்; அதாவது இயேசு தம்முடைய ஜீவியத்தை நேரடியாய்த் தமது யூத சகோதரர்களுக்காய், ஆனால் உண்மையில் பிதாவின் நோக்கத்தின்படி முழு உலகத்திற்காய் ஒப்புக்கொடுத்ததுபோல், நாமும் செய்வதின் மூலம் செய்கின்றோம்.

இயேசு தம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஒப்புக்கொடுக்காததுபோன்று,

நாமும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஒப்புக்கொடுப்பதில்லை. அவர் தம்முடைய உண்மையான பூரண மாம்சத்தை, தம்முடைய மனுஷீகத்தைப் பலிச் செலுத்தினதுபோன்று, நாமும் உண்மையாய்ப் பூரணமாய் இராததும், ஆனால் இயேசுவினுடைய புண்ணியத்தினால், பூரணமானதாகக் கருதப்படுகிறதுமான நீதிமானாக்கப்பட்ட நம்மைப் பலிச்செலுத்திட வேண்டும். இதுபோலவே அப்பமும், பாத்திரமும் பாடுகளை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. கோதுமை மணிகளானது, மனிதனுக்கான அப்பமாகுவதற்கு முன்னதாக நொறுக்கப்பட்டு, மாவாக்கப்பட வேண்டும்; அவைகளால் அதன் ஜீவனையோ, மணியாக அதன் தனித்தன்மையையோ தக்கவைத்துக்கொள்ளமுடியாது. திராட்சப்பழங்களானது, உலகத்திற்கு ஜீவனளிக்கும் மருந்தாக வேண்டுமானால் அதன் சாறு அனைத்தையும் பிழிந்தெடுக்கப்படுகிறதான அழுத்தத்திற்கு அது அதனை கீழ்ப்படுத்தி, ஒப்புக்கொடுத்திட வேண்டும் மற்றும் திராட்சப்பழங்கள் எனும் அதன் அடையாளத்தை இழந்துபோய்விட வேண்டும். இப்படியாகவே கிறிஸ்துவாகிய தலை மற்றும் சரீரம் எனும் கூட்டத்தாரின் விஷயத்திலும் ஆகும். இப்படியாகக் கர்த்தருடைய ஜனங்கள் ஒரே அப்பத்திலும், ஒரே பாத்திரத்திலும் பங்கெடுப்பவர்களாய் இருக்கின்றார்கள் என்ற பரிசுத்த பவுல் அவர்களுடைய வார்த்தையினுடைய அருமையையும், அழுத்தத்தையும் நாம் பார்க்கின்றோம். அவரது இரத்தமே, அவரது பலியினுடைய புண்ணியமே முக்கியமானதாகும்; அவரது புண்ணியமானது நமக்குச் சாற்றப்படுவதினாலும் மாத்திரமே, நாம் அவரது சரீரத்தின் அங்கங்களாகக் காணப்படுவதினால் மாத்திரமே, நமது இரத்தத்திற்குத் தகுதி உள்ளது.

பாத்திரமானது, திராட்சப்பழரசமானது, இரத்தத்தை அதாவது ஜீவனைக் குறிப்பதாக நமது கர்த்தர் குறிப்பாய்த் தெரிவித்துள்ளார்; அது தக்கவைக்கப்பட்ட ஜீவனை அல்ல, மாறாக சிந்தப்பட்ட, விட்டுக்கொடுக்கப்பட்ட, ஒப்புக்கொடுக்கப்பட்ட, பலியாக்கப்பட்ட ஜீவனைக் குறிக்கின்றது என்று தெரிவித்துள்ளார். ஊற்றப்பட்டதான இந்த ஜீவனானது, பாவ மன்னிப்புண்டாகும்படிக்கு என்றும், அவருடையவர்கள் அனைவரும் அதைப் பருக வேண்டும் மற்றும் அவரது பலியினை ஏற்றுக்கொண்டு, விசுவாசத்தினால் தங்களுடையதாக்கிக்கொள்ள வேண்டுமென்றும் அவர் நம்மிடம் கூறுகின்றார். அவர்கள் ஜீவனை இந்த ஆதாரத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவிற்குப் புறம்பே அழியாமையைப் பெறமுடியுமென யார் ஒருவராலும் கூறப்படுவது ஏற்றதாயிருக்காது. நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதன் விளைவாக ஜீவன் கிடைக்குமெனக் கூறுவதும் ஏற்றதாயிருக்காது. ஏதோ ஒரு மாபெரும் போதகர் மீதான விசுவாசமும், அவருடைய போதனைகளுக்குக் கீழ்ப்படிவதும் நித்திய ஜீவனைக் கொண்டுவருமென்று கூறுவதும் ஏற்றதாயிருக்காது. முழு உலகத்திற்கான மீட்கும்பொருளாக ஒருமுறை சிந்தப்பட்டதான இரத்தத்தின் மூலமே அல்லாமல், மற்றப்படி வேறெந்த வழியிலும் நித்திய ஜீவனை அடையமுடியாது. "நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்போஸ்தலர்

4:12). இதுபோல அவரது பாத்திரத்தில் பானம்பண்ணிடுவதற்கும், ஒரே அப்பத்தின் அங்கத்தினர்களென அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கும், அவரது மரணத்திற்குள்ளான ஸ்தானத்தில் அவரோடுகூட அடக்கம் பண்ணப்படுவதற்கும் மற்றும் இப்படியாக மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் நேரான அவரது உயிர்த்தெழுதலில் அவரோடுகூடக் காணப்படுவதற்குமான கர்த்தருடைய அழைப்பினை ஏற்றுக்கொள்வதின் மூலமாக மாத்திரமே ஒழிய மற்றப்படி புதிய சுபாவத்தினை அடைவதற்கு வேறு வழியில்லை (உரோமர் 6:3-5; 8:17).

## இராஜ்யத்தில் கொண்டாடுதல்

நினைவுகூருதலுக்கான இராப்போஜனம் நிறுவப்பட்ட தருணத்தின்போது, நமது அருமை கர்த்தர் எப்போதும்போல், அவரது போதனைகள் அனைத்தினுடைய முக்கிய அம்சமாகிய இராஜ்யம்குறித்துச் சிலவற்றைப் பேசவேண்டும் என்றிருந்தார். உண்மையுள்ளவர்களாகக் காணப்படும் பட்சத்தில், இராஜ்யத்தில் ஒரு பங்கினை அடைவார்களென அவர் வாக்களித்தவர்களிடம், தாம் ஓர் இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்வதற்கெனப் புறப்பட்டுப்போக வேண்டும் என்றும், தாம் திரும்பிவந்து, அந்த இராஜ்யத்தில் அவர்கள் பங்கடையத்தக்கதாக, தம்மோடுகூட அவர்களை ஏற்றுக்கொள்ளவார் என்றுமாக தாம் கூறியிருந்தவைகளை, அவர்களுக்கு நினைப்பூட்டினார். இன்னுமாக தம்மால் நிறுவப்படுகின்றதான இந்த நினைவுகூருதலானது, இராஜ்யத்தில் அதன் நிறைவேறுதலைக் காணும் என்றும், அவர்களோடுகூடப் பிதாவின் இராஜ்யத்தில் திராட்சப்பழரசத்தை நவமானதாய்ப் பானம் பண்ணும் நாள்வரைக்கும், அதைத் தாம் பானம்பண்ணுவதில்லை என்றும் இப்பொழுது கூறுகின்றார்.

என்ன அர்த்தத்தில் இவ்வாக்கியத்தினைக் கர்த்தர் கூறினார் என்பதைத் துல்லியமாய்த் தீர்மானிப்பது சிரமமானக் காரியமாக இருப்பினும், அவரது பாத்திரம் அடையாளப்படுத்துகின்றதான பாடுகள் மற்றும் சோதனைகளின் விளைவாக, இராஜ்யத்தில் பெருமகிழ்ச்சிக் காணப்படும் என்று அர்த்தப்படும் வகையில் அவர் பேசியுள்ளார் என்று புரிந்து கொள்வது முரண்பாடாய்க் காணப்படாது. "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்." பிதாவினுடைய சித்தத்திற்கான உண்மையானக் கீழ்ப்படிதலின் காரணமாகச் சகிக்கப்பட்ட சோதனைகளையும், கஷ்டங்களையும் அவர் திரும்பி நோக்கிப்பார்த்து, இவைகளின் பிரம்மாண்டமான பலனை, அதாவது மனுக்குலம் அனைத்தின்மீது கடந்துவரும் ஆசீர்வாதங்களை அவர் காண்கையில், இவைகளில் களிகூருவார். முதலாவது நீதிமானாக்கப்பட்டதிலும், பின்னர் அர்ப்பணிப்பிலும், அவரோடுகூடப் பலியிலும் இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணினவர்களாகிய அவரது சீஷர்கள் அனைவரும் இந்தப் பெரு மகிழ்ச்சியில் பங்கடைவார்கள். இவர்கள், அவரோடுகூட ஆளுகைச் செய்வதற்கான, அவரது வாக்குத்தத்தத்தினைப் பெற்றிருக்கின்றனர், மற்றும் ஆளுகை ஆரம்பித்து, இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கையில், இவர்கள் தங்கள் பூமிக்குரிய ஓட்டம்

நிறைவடைவதுவரையிலும் நாளுக்குநாள் தேவன் தங்களை வழிநடத்தின வழியினை, அது "இடுக்கமான வழியாக," சுயத்தைப் பலிச்செலுத்தும் வழியாக, சுயத்தை வெறுக்கும் வழியாக இருப்பினும், அவ்வழியினைத் திரும்பி நோக்கிப்பார்த்து, துதிப்பார்கள்.

தாம் கைது செய்யப்படுவதற்கும், மரிப்பதற்குமான வேளை அருகாமையில் இருப்பதை அறிந்திருந்த நமது அருமை ஆண்டவரின் விசுவாசமானது, அந்தத் துயரமான வேளைகளினுடைய பரீட்சைகளில் நிலைநின்றது. அப்பத்திற்கும், பாத்திரத்திற்கும் அவர் பிதாவுக்கு ஸ்தோத்திரம் ஏறெடுத்ததானக் காரியமானது, அப்பம் பிட்கப்படுதலும், திராட்சப்பழம் நசுக்கப்படுதலும் குறிக்கின்றதான பாடுகள் யாவற்றிலும், சந்தோஷத்தோடே உடன்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஏற்கெனவே அவர் பிதாவின் ஏற்பாட்டில் திருப்தியடைந்தவராய் இருந்தார். இந்த ஒரு மனநிலைக்கு இசைவாகவே, அவர்கள் புறப்படுகையில், பாட்டுப்பாடினார்கள் . . . சந்தேகத்திற்கிடமின்றி பூமியில் அவரது ஓட்டம் கிட்டத்தட்ட முடிவடைந்ததற்காகவும், இதுவரையிலும் தமக்குத் தேவையான கிருபை போதுமானதாய் இருந்ததற்காகவும் துதி மற்றும் ஸ்தோத்திரப்பாட்டு ஏறெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

நினைவுகூருதலின் இராப்போஜனத்தைப் பின்தொடர்ந்ததான துக்கம் நிறைந்த வேளையுள்ள சம்பவங்களைக் கவனிக்கத்தக்கதாக, நாம் மீட்பரைக் கெத்செமனேவுக்குப் பின்தொடர்ந்துபோய், "அவர் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லவரை நோக்கி பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணுவதை" பார்க்கின்றோம். பிதாவின் திட்டத்தினை நிறைவேற்றுவதில், ஏதாகிலும் விஷயத்தில் தவறிப்போய் மற்றும் அதன் நிமித்தமாக உயிர்த்தெழுப்பப்படுவதற்குப் பாத்திரமற்றவராகக் கருதப்பட்டு விடுவாரோ என்று நமது ஆண்டவர் மரணப் பயத்தை வெளிப்படுத்துவதைப்பார்க்கின்றோம். நமது கர்த்தர் தமது அர்ப்பணிப்பின் உடன்படிக்கையை உண்மையாய்க் காத்துக்கொண்டுள்ளார் என்றும், வாக்களிக்கப்பட்டுள்ளதுபோல உயிர்த்தெழுதலை அடைவார் என்றுமுள்ள வாக்குறுதியினால் அவர் ஏதோ ஒரு விதத்தில் ஆறுதல்படுத்தப்பட்டதாக நாம் கவனிக்கின்றோம்.

இதற்குப் பிற்பாடு அவர் பிரதான ஆசாரியன் மற்றும் பிலாத்து மற்றும் ஏரோது மற்றும் மீண்டுமாகப் பிலாத்துவின் முன்னிலையில் எவ்வளவு அமைதியுடன் காணப்பட்டார் என்று நாம் கவனிக்கின்றோம். "தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்திமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும் அவர் தற்காத்துக்கொள்வதற்கெனத் - தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்." அவர் முடிவுபரியந்தம் உண்மையாயும், தைரியமாகவும் இருந்ததாகப் பார்க்கின்றோம்; தம்முடைய பாதுகாப்பிற்கெனத் தம்மால் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமானத் தூதரைப் பிதாவிடம் கேட்டிருக்கவும், பெற்றிருக்கவும் முடியும் என்றுமுள்ள அவரது நம்பிக்கையையும் நாம் பார்க்கின்றோம். ஆனால் தம்முடைய பலியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு உதவி வேண்டி விண்ணப்பிப்பதற்குப்பதிலாக, அவர் அவைகளை உண்மையாய்ச் சகிப்பதற்கு

வேண்டிய உதவியையே விண்ணப்பித்தார். இங்கு அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றும் பின்னடியார்களுக்கு எத்தகையதொரு படிப்பினைக் காணப்படுகின்றது!

இன்னொரு பக்கத்தில், அவரது உண்மையுள்ள சீஷர்கள் மத்தியில், மிகுந்த தைரியமானவர்கள்கூட, ஆண்டவரைவிட்டு, ஓடிப்போனார்கள் என்றும், அவர்களில் ஒருவர் தனது துணிவின்மையினால், தனது கர்த்தரையே மறுதலித்தார்! என்றும் நினைவுகூருகின்றோம். நம்மை மீட்டுக்கொண்டவருடன் பாடுபடுவதற்கான நமது விருப்பத்தின், நமது தைரியத்தின், நமது விசுவாசத்தின் அளவுத் தொடர்புடைய விஷயத்தில், நம்முடைய இருதயங்களை ஆராய்ந்துப்பார்ப்பதற்கான எத்தகையதொரு தருணமாய் இது காணப்படுகிறது! எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் (அ) சூழ்நிலையிலும் நமது ஆண்டவரை மறுதலிக்கமாட்டோம் என்றும், நம்முடைய உதடுகளினால் மாத்திரமல்லாமல், நம்முடைய நடத்தையினாலும் அவரை அறிக்கைப்பண்ணுவோம் என்றுமுள்ளதான தீர்மானங்களினால் மனதைத் தாங்கி ஆதரிப்பதற்கு எத்தகையதொரு சிலாக்கியம் இப்படியாக நமக்கு வழங்கப்பட்டுள்ளது.

## நமக்கு எதிர்ப்பு மத உலகத்திலிருந்தே வரும்

யேகோவா தேவனுடைய ஜனங்களெனத் தங்களைக்குறித்து அறிக்கைப் பண்ணினவர்களே ஜீவாதிபதியைச் சிலுவையில் அறைந்துப்போட்டார்கள் என்ற எண்ணத்தினால் நாம் அதிர்ச்சியடைகின்றோம்! இது மாத்திரமல்லாமல் இவர்களது மதத் தலைவர்கள், இவர்களது பிரதான ஆசாரியர்கள், வேதபாரகர்கள், பரிசேயர்கள் மற்றும் நியாயசாஸ்திரிகளே இந்தப் பயங்கரமான செய்கைக்குப் பொறுப்பாளிகளாய் இருக்கின்றனர். "உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்பட வேண்டாம்; அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்" என்ற ஆண்டவருடைய வார்த்தைகளை நினைவுகூருகின்றோம். அவர் மத உலகத்தைக் குறிப்பிட்டார் என்று பார்க்கின்றோம் மற்றும் இதை உணர்ந்துகொள்ளுகையில், மத உலகமே, அவரது பின்னடியார்களாகிய நம்மையும் பகைக்கும் என்று அறிந்துகொள்கின்றோம். சத்தியத்திற்கான எதிர்ப்பும், ஒளியைச் சுமப்பவர்களுக்கான துன்புறுத்தலும் இன்று கிறிஸ்தவம் என்று அழைக்கப்படும் உலகத்தின் மிக முக்கியமான பிரதிநிதிகளிடமிருந்து வருவதைக் காண்கையில், நாம் ஆச்சரியமுற வேண்டாம். இந்த உண்மையானது நம்மை எதிர்ப்பவர்களையோ (அ) நமது கர்த்தரை மரணத்திற்கு ஏதுவாய்த் துன்புறுத்தினவர்களையோ பகைப்பதற்கு நம்மை வழிநடத்திடக்கூடாது. இக்காரியம் தொடர்புடையதான அப்போஸ்தலனாகிய பேதுருவின் வார்த்தைகளாகிய "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்" (அப்போஸ்தலர் 3:17) என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

ஆ, ஆம்! (மத உலகத்தாரின்) இருதயம் மற்றும் மனதின் குருட்டுத்தன்மையும், அறியாமையுந்தான் தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்துவினுடைய பாடுகள் அனைத்திற்குமான அடிப்படையாகக் காணப்படுகின்றது. இவைகள் தங்களினுடைய

தலையானவருடைய உபத்திரவங்களில் குறைவானதை, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் நிறைவேற்றுவதுவரையிலும், இப்பொழுது காணப்படுவதற்குப் பிதா அனுமதித்துள்ளார் (கொலோசெயர் 1:24). சீக்கிரமாகவே நமது அருமை கர்த்தர் கூறியுள்ள பிரகாரமாகவே, இப்பொழுது அவரது பிட்கப்பட்ட சரீரத்தில் பங்கெடுத்து, அவரோடுகூடச் சத்தியத்தின் ஊழியத்தில் பிட்கப்படுகிறவர்களும், இப்பொழுது பாடுகள் மற்றும் சுயத்தை வெறுத்தல் எனும் அவரது பாத்திரத்தில் பங்கெடுப்பவர்களும், திரைக்கு அப்பால், இராஜ்யத்தில் அவரோடுகூடச் சந்தோஷத்தின் புதிய திராட்சரசத்தைப் பருகுவார்கள். அந்த மகிமையான காலையில், உலகைப் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கும் மாபெரும் வேலை ஆரம்பமாகும்; சீர்த்தூக்குதலின் மாபெரும் வேலை, "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கத்தரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீரும் திரும்பக்கொடுத்தலின் காலங்கள்" ஆரம்பமாகும் (அப்போஸ்தலர் 3:21).

நினைவுகூருதலின் அனுசரிப்பில் பங்கெடுப்பவர்கள் ஒவ்வொருவரின் மனதிற்கு முன்பாகக் காணப்பட வேண்டிய சிந்தையானது, பரிசுத்த பவுல் அடிகளாரின் பின்வரும் வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது; அதாவது, "அவரோடுகூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்;" "நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்;" "ஏனெனில் அவை அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவமாய் இருக்கின்றது;" "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" (உரோமர் 8:1-8) என்பதேயாகும். விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய புண்ணியத்தினால் முதற்பேறானவர்களான நம்முடைய பாவங்களைக் கடந்துபோகுதல் குறித்தும், நமது பாக்கியமான கர்த்தருடன், அவரது பாடுகளின், மகிமையின் அனுபவங்களில் நாம் பங்கடைவது குறித்துமான இந்தச் சிந்தனைகளுடன், சோதனைகளும், கஷ்டங்களும் இருந்தாலுங்கூடச் சந்தோஷத்தோடே பஸ்கா பண்டிகையை ஆசரிப்போம். இப்படியாக அவரது பின்னடியார்களென உண்மையாய்த் தொடர்ந்து செய்துவருவோமானால், வெகு சீக்கிரத்தில் கர்த்தரால் ஆதரிக்கப்படுபவர்களை, அதாவது இறுதியில் மகா இராஜாவுக்குச் செவிக்கொடுத்து, அவரை அறிந்துகொண்டு, அவருக்குக் கீழ்ப்படியும் யாவரையும், பாவம் மற்றும் மரணத்தினுடைய ஆளுகையிலிருந்து, எகிப்திலிருந்து, கானானுக்கு நேராய் வழிநடத்திடும் மாபெரும் சிலாக்கியத்தினை நாம் பெற்றுக்கொள்வோம்.

## வரவிருக்கிற நினைவுகூருதலின் நாள்

வழக்கத்தின்படியே நியூயார்க் (New York) மற்றும் புரூக்கிலின் (Brooklyn) சபையார் இந்த வருஷமும், தற்காலச் சத்தியத்தினை உணர்ந்துள்ள பரிசுத்தவான்கள் அனைவருக்கும் விலையேறப்பெற்ற அர்த்தங்கள் நிரம்பப்பெற்றுள்ளதான இந்த மகா

பெரும் நிகழ்வை ஆசரிப்பதற்கு ஒன்றுகூடுவார்கள். உலகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்றதான அருமையான நண்பர்கள் இந்தப் பாக்கியமான நினைவுகூருதலை அலட்சியப்படுத்திட வேண்டாம் என்று நாம் பரிந்துரைக்கின்றோம். சிறு கூட்டத்தாராய் இருப்பவர்கள், பெரிய கூட்டத்தாருடன் இணைந்து ஆசரிக்கத்தக்கதாகச் செல்லுங்கள் என்று நாம் அறிவுரைக் கூறுவதில்லை, மாறாக ஒவ்வொரு சிறு கூட்டத்தாரும் தங்கள் வழக்கத்தின்படி ஒன்றுகூடிட அறிவுறுத்துகின்றோம்; ஏனெனில் இப்படியாகச் செய்வதே ஆதித் திருச்சபையின் வழிமுறையாக இருந்தது. சந்தோஷமான இருதயத்தோடு, நாம் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்; அதுவும் நமக்கான நமது கர்த்தருடைய பலித் தொடர்புடையது மாத்திரமல்லாமல், அவரோடுகூட மரிப்பதற்கான நமது உடன்படிக்கைத் தொடர்புடையதுமான அதற்கே உரிய பயபக்தியுடன் ஆசரிக்கக்கடவோம். ஒவ்வொரு சபை கூட்டத்தாரிலுமுள்ள வழிநடத்துபவர்கள் புளிப்பில்லாத அப்பத்தையும், ஒன்றில் புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாற்றை/grape juice (அ) உலர்ந்த திராட்ச ரசத்தை/raisin juice (அ) திராட்சப்பழரசத்தைப்/fruit of the vine பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தங்கள் பண்ணிடவேண்டும். (wine) புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தைப் பயன்படுத்துவதற்கு எதிராகவே நம்முடைய பரிந்துரை காணப்படுகின்றது; ஏனெனில் இது மாம்சத்தில் பெலவீனமாய்க் காணப்படும் சிலருக்குச் சோதனையாக அமையலாம்; எனினும் புளிப்பேற்றப்பட்ட திராட்சரசமே (wine) பயன்படுத்தப்படும்படி குறிப்பிடப்பட்டுள்ளது என்று யார் மனசாட்சியில் நம்புகின்றார்களோ, அவர்களுக்கு ஏற்பாடுகள் பண்ணப்படலாம்.

இந்தச் சிறு கூடுகைகளானது ஆரவாரமில்லாமல் காணப்படுவதற்குப் பரிந்துரைக்கின்றோம். ஒழுக்கமாயும், கிரமமாயும், அமைதியாயும், நாம் ஆசரிக்கப்போகின்றதான மாபெரும் செய்கை தொடர்புடையதான விலையேறப்பெற்ற நினைவுகளினால் நிரம்பினவர்களாக, ஒன்றுகூடுவோமாக. ஆசரிப்புகளிலும், சடங்குகளிலும், நம்முடைய கவனம் அதிகமாய்க் காணப்படாதிருப்பதாக. மற்ற விஷயங்களில் செய்வதுபோல, இதிலும் நமது கர்த்தரைப் பிரியப்படுத்துபவைகளைச் செய்திடுவதற்கு நாடுவோமாக; மற்றும் இப்படியாகச் செய்யப்படும் பட்சத்தில் பங்கெடுக்கும் யாவருக்கும், இவ்வனுசரிப்பு நன்மை பயக்கின்றதாயிருக்கும் என்பதில் நமக்கு நிச்சயமே.

விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தை அறிக்கைப் பண்ணுகிறவர்களும், கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணிப்பும் பண்ணியுள்ளவர் களுமான எவருமே இந்த அடையாளங்களில் பங்கெடுப்பதற்குத் தடைப்பண்ணப்

படக்கூடாது என்று இதற்கு முன்பும் நாம் கருத்துத் தெரிவித்திருக்கின்றோம். உண்மையான இருதயமற்றோர், இந்த ஐக்கியத்தின் சிலாக்கியத்தினை ஏற்றுக்கொள்வதில்லை. எனினும் "கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்" என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைக்குறித்தத் தவறான கண்ணோட்டங் களின் காரணமாக, சிலர் உற்சாகப்படுத்தப்பட வேண்டியுமுள்ளது (1 கொரிந்தியர் 11:29). இந்த மாபெரும் செய்கையை, நினைவுகூருதலை ஆசரிப்பதான சிலாக்கியத்தினை கைவிடமாட்டார்கள் என்று நாம் நம்புகின்றதான இந்தப் பயப்படுகிறவர்களுக்காக, அப்போஸ்தலனால் இங்குக் குறிப்பிடப்படும் வகுப்பாரைக்குறித்து நாம் இங்கு விவரிக்கின்றோம்; பலியினுடைய உண்மையான முக்கியத்துவத்தினை உணர்ந்துகொள்ள தவறுகின்றவர்களும், இந்த ஆசரிப்பை வெறுமனே சடங்காச்சாரமாகக் கண்டுகொள்பவர்களும்தான் அப்போஸ்தலனால் அவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வகுப்பாரில் இடம்பெறுவார்கள் என்பது நம்முடைய புரிந்துகொள்ளுதலாய் இருக்கின்றது. இவ்வாசரிப்பானது குறிப்பிடுபவைகளை ஆராய்வதற்கும், தெரிந்துகொள்வதற்கும் தவறுவது என்பது ஆக்கினைத்தீர்ப்பை, கண்டனத்தைக் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது.


இவ்வருஷத்தில் இந்நிகழ்வானது, பரிசுத்தவான்கள் அனைவருக்கும் மிகவும் விலையேறப்பெற்றதாகவும், நன்மை பயக்கின்றதாகவும் இருக்குமென நாம் நம்புகின்றோம். நம்முடைய ஓட்டத்தின் முடிவை நாம் நெருங்குகையில், நம்முடைய அழைப்பு, அதன் பொறுப்புகள் மற்றும் சிலாக்கியங்களின் மகா முக்கியத்துவமானது, நம்முடைய இருதயங்களிலும், மனங்களிலும் அதிகமதிகமாகப் பதிய பெற்றிருக்க வேண்டும். நாம் அருமையான காலப்பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு நாளும் என்னென்ன வரப்போகின்றது என்பதை நாம் அறியோம். ஆகையால் மிகுந்த ஜாக்கிரதையுடனும், மிகுந்த தெளிந்த நிலையிலும், அதேவேளையில் நம்முடைய இரட்சிப்புச் சமீபமாயிற்று என்றும், நாம் உண்மையுள்ளவர்களாய் இருப்போமானால், சீக்கிரத்தில் நம்முடைய நேச மணவாளனுடன், அவரது இராஜ்யத்தினுடைய சந்தோஷதிராட்சரசத்தில் பங்கெடுத்து, என்றென்றும் அவரோடு காணப்படுவோம் என்றும் அறிந்து சந்தோஷத்தோடே, களிகூருதலோடே நடப்போமாக.

## இரத்தம் உங்களுக்கு அடையாளம்

எகிப்தில் அந்த இருளான இரவில், தேவன் இஸ்ரயேல் புத்திரர்களிடத்தில், இரத்தம் அவர்களுக்கு அடையாளமாய்க் காணப்படும் என்றும், தாம் இரத்தத்தைப் பார்க்கையில், அவர்களைக் கடந்துபோவார் என்றும் கூறினார்.

எகிப்திலுள்ள வீடுகள் அனைத்திலும் முதற்பேறானவர்கள் கொல்லப்படப்போகின்றார்கள், ஆனால் இரத்தத்தை நிலைக்கால்களிலும், மேற்சட்டங்களிலும் பெற்றிருக்கின்றதான ஒவ்வொரு வீடுகளைத் தேவன் கடந்துபோகப் போகின்றார் என்று நீங்கள் நினைவுகூருவீர்கள். எந்த இரத்தம்? அது ஆட்டுக்குட்டியின் இரத்தமாகும். இரத்தம் காணப் படுமானால், அவர்கள் நன்கு பாதுகாப்புடன் காணப்படுவார்கள், காரணம் தேவன் இப்படியாகக் கூறியிருக்கின்றார். (யாத்திராகமம் 12-ஆம் அதிகாரத்தில் இடம்பெறும் பதிவைக் கவனமாய் வாசியுங்கள்). ஆட்டுக்குட்டியின் இரத்தமானது, பல வருடங்களுக்குப் பின்னர் சிந்தப்படப் போகின்றதான இயேசுவின் இரத்தத்தினைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது மற்றும் அந்த இருளான இரவில் ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தின் கீழ் எப்படி இஸ்ரயேலின் பிள்ளைகளானவர்கள் நன்கு பாதுகாப்பாய்க் காணப்பட்டார்களோ, அதுபோலவே தேவனுடைய ஆட்டுக்குட்டியாகிய இயேசுவினுடைய இரத்தத்தின் கீழ்க்காணப்படு கின்றதான அனைவரும், தேவனுடைய பிரசன்னத்திற்குள் காணப்படுவது போன்று நன்கு பாதுகாப்பாய்க் காணப்படுகின்றனர். அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை (இயேசுவை) ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.

– Selected (R572)



## நினைவுகூருதலின் தியானங்கள்

# நிழலான பஸ்கா



# நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து

**"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே, ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." 1 கொரிந்தியர் 5:7, 8**

பஸ்கா என்பது இஸ்ரயேல் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட மிக முக்கியமான நிழல்களில் ஒன்றாக இருந்தது மற்றும் அவர்களது மிகப் பரிசுத்தமான பண்டிகைகளில் ஒன்றாகவும் அவர்களால் எப்போதும் அனுசரிக்கப்பட்டும் வந்தது. எகிப்தின் முதற்பேறானவர்கள்மீது பத்தாவது வாதை கடந்து வந்தபோது, தங்களின் முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலை நினைவுகூரும் வண்ணமாக அவர்கள் பஸ்காவை ஆசரித்து வந்தார்கள். ஒவ்வொரு வருடமும் அந்நிகழ்வினுடைய ஆண்டு நிறைவு நாளின்போது, முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியன்று, ஓர் ஆட்டுக்குட்டியை அடித்து அதை நினைவுகூர்ந்தார்கள். அவர்கள் நிழலை மாத்திரமே கண்ணோக்கினார்கள்; அப்போஸ்தலர்கள் வாயிலாக பரிசுத்த ஆவியினால் போதிக்கப்பட்டிருக்கும் நாமோ இதற்கான நிஜம், "தேவனுடைய ஆட்டுக்குட்டியென" - "நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து நமக்காக அடிக்கப்பட்டிருக்கின்றார்" என்பதை அடையாளம் கண்டுகொள்ள முடிகின்றது. நமது ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம் நம்மீது தெளிக்கப்படவில்லையெனில், மரணம் நம்மீது கடந்துவருகின்றதாய் இருக்கும், ஆனால் அவருக்குள் நமக்கு ஜீவன் இருக்கின்றது.

நிழலான ஆட்டுக்குட்டியானது, முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியன்று மரணத்திற்குள்ளாக்கப்பட்டதுபோன்று, நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியானவரும் அதே நாளில் மரணத்திற்குள்ளாக்கப்பட்டார். வேறொரு நாளில் சம்பவிப்பது என்பது நிழலின் நிறைவேறுதலாக இராது; ஆனபடியாலே லூக்கா 22:7-ஆம் வசனத்தில் நாம் வாசிக்கிறபடி சம்பவித்தது. அவர்கள் நிழலான ஆட்டுக்குட்டியைப் புசித்ததுபோல, நாமும் நம்முடைய ஆட்டுக்குட்டியைப் புசிக்கின்றோம். அதேநாளில்தானே, இயேசு அப்போஸ்தலர்களுக்கு, தம்முடைய பிட்கப்படுகிற சரீரத்திற்கும் மற்றும் சிந்தப்படுகிற இரத்தத்திற்குமான அடையாளச் சின்னங்களைக்கொடுத்து, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றார், அதாவது இனிமேல் என்னை உங்களது ஆட்டுக்குட்டியாக எண்ணி, இந்தப் பண்டிகையை ஆசரியுங்கள் என்றார்.

இதைச் செய்துவருவது, அதாவது பஸ்காவை நினைவுகூருவதும், நமது கர்த்தருடைய சரீரம் மற்றும் இரத்தத்திற்கான அடையாளங்களைப் புசிப்பதும் பிட்ஸ்பர்காகிய (Pittsburgh) இங்குள்ள நம்மில் அநேகருடைய வழக்கமாக, பல வருடங்கள் காணப்பட்டு வருகின்றது மற்றும் இது பரிசுத்தமான இன்பத்திற்கும், ஐக்கியத்திற்குமுரிய தருணமாகவே எப்போதும் இருந்துள்ளது மற்றும் குறிப்பாக அவ்வாறாகவே இவ்வருடமும் இருந்தது. நாங்கள் மார்ச் 24-ஆம் தேதியன்று இரவில் (தாராளமான இடவசதியின் காரணமாக) எப்போதும்போல் சகோதரர் கான்லீ மற்றும் அவரது துணைவியின் வீட்டில் கூடினோம்; மற்றும் புளிப்பில்லாத அப்பத்தைச் சேர்ந்து புசித்தோம் - அது அடையாளப்படுத்தும் சத்தியத்தையும் புசித்தோம்; அதாவது இயேசு புளிப்பற்றவர் (பாவமில்லாதவர்), பரிசுத்தமானவர், குற்றமற்றவர், மாசில்லாதவர் ஆவார்

மற்றும் அப்பமாகிய அவரை ஒரு மனுஷன் புசித்தானானால், என்றென்றைக்கும் மரியாமல் இருப்பான் எனும் சத்தியத்தையும் புசித்தோம். பவுலோடுகூட நாங்களும், "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே, ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" என்று கூறினோம். கிறிஸ்துவை எங்களுக்குள் நாங்கள் பெற்றிருந்தபடியால், "ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்" என்று எழுதப்பட்டிருக்கிறபடியே, முதற்பேறானவர்களின் சபை முழுவதும் (சீக்கிரத்தில்) கடாட்சிக்கப்படுவார்கள் மற்றும் கடந்துபோகப்படுவார்கள் என்பதை நாங்கள் தெளிவாகப்பார்த்தோம் மற்றும் "இனி உலகத்திற்குச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு விழித்திருங்கள்" என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டோம்.

நாம் கிறிஸ்துவினுடையவர்களானால், அவர் பிட்கப்பட்டதுபோல பிட்கப்படவும், அவர் மாம்சத்தை மரிக்கப்பண்ணினதுபோன்று, மாம்சத்தைச் சிலுவையில் அறைந்திட்டதுபோன்று மரிக்கவுந்தக்கதாக நாமும் எவ்வாறு அதே அப்பத்தின் பாகமாகக் காணப்படுகின்றோம் என்பதையும் நாம் வாசிக்கின்றோம். "நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17) இன்னுமாக அந்த அப்பத்தின் பாகமாக நாம் நம்மைக் கருதவும், நாம் பிட்கப்படவும் வேண்டுமானால், முதலாவதாகப் பாவமறியாத நம்முடைய ஆண்டவர்போன்று நாம் காணப்படத்தக்கதாக, பாவமென்னும் "பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போட வேண்டும்," என்பதையும் நாங்கள் கண்டோம்.

போஜனம் புசித்தப் பிற்பாடு, நாங்கள் பாத்திரத்தை - திராட்சரசத்தை எடுத்தோம். அதை நாங்கள் பருகினபோது, அது பஸ்கா இராப்போஜன நிழலில் அடையாளப்படுத்தப்படவில்லை என்பதையும், மாறாக அது சந்தோஷம் மற்றும் ஜீவனுக்கான அடையாளமாக இருந்தது என்பதையும் நினைவுகூர்ந்தோம். போஜனத்திற்கு பின்பு, அவர் பாத்திரத்தை எடுத்து, "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்று கூறினார்; மேலும் கசப்பான கீரைகளுடன் (உபத்திரவங்களுடன்) ஆட்டுக்குட்டியைப் புசிக்கும் தற்கால இரவுவேளை கடந்துபோன பிற்பாடு, நமது கர்த்தர் "உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று கூறி புதிய ஜீவனையும், புதிய சந்தோஷங்களையும் கொடுப்பார் என்று நாங்கள் உணர்ந்துகொண்டோம். இப்பொழுதும் மற்றும் இங்கும்கூட, பரதீசின் அந்தச் சந்தோஷங்களுடைய ஒரு முன்னனுபவம் உள்ளதை நாங்கள் உணர்ந்துகொண்டோம். இவ்வாறாக நமது பண்டிகையின் திராட்சரசமானது, இராஜ்யத்தின் சந்தோஷங்களுக்கு நிழலாக இருக்கின்றது; அப்போது - "இராப்போஜனத்திற்குப் பின்பு," நாம் நம்முடைய பிதாவின் இராஜ்யத்தில் கர்த்தரோடுகூட நவமானதாய்ப் பானம்பண்ணுவோம்.

# கர்த்தருடைய இராப்போஜனம்

*"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே, ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்."* **1 கொரிந்தியர் 5:7, 8**

எகிப்தின் மீதான 10-வது வாதையின்போது, தங்கள் முதற்பேறானவர்கள் மரணத்திலிருந்து வியக்கத்தக்க விதத்தில் கடந்துபோகப்பட்டதை அல்லது கடாட்சிக்கப்பட்டதை நினைவுகூரத்தக்கதாக வருடந்தோறும் (மற்றும் இன்னமும்) ஆசரிக்கப்பட்டுவரும் யூதருடைய பண்டிகையாகப் பஸ்கா இருந்தது.

யாத்திராகமம் 12-ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள காரியங்களாகிய - ஆட்டுக்குட்டி அடிக்கப்படுதலும், அதன் மாம்சம் நெருப்பில் சுடப்பட்டதும், அந்த மாம்சம் கசப்பான கீரைகளுடனும், புளிப்பில்லாத அப்பங்களுடனும் புசிக்கப்பட்டதும், அதைப் புசிக்கின்றவர்கள் நின்ற வண்ணமாகவும், இடைக்கட்டிக்கொண்டவர் களாகவும், பாதரட்சையைத் தொடுத்தவர்களாகவும், தடி பிடித்தவர்களாகவும், வாக்களிக்கப்பட்டுள்ள கானான் தேசத்திற்கு நேராக, எகிப்திலிருந்து வெளியேறி, புறப்படுவதற்கு ஆயத்தமாக இருந்ததும் - சந்தேகத்திற்கிடமின்றி நம் வாசகர்கள் அநேகருக்கு தெரிந்த விஷயங்களேயாகும். இன்னுமாக இவைகளின் அர்த்தங்கள் நிழல்களாக இருக்கின்றன என்பது தெரிந்த விஷயங்களேயாகும்: அதாவது எப்படி "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாகிய" இயேசு வந்தார் என்பதும், "பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கின்றார் என்பதும், எப்படி விசுவாச வீட்டாரின் நிலைக்கால்களும், மேற்சட்டங்களும், மேன்மையான வைகளைப் பேசுகிறதும், வீட்டிலிருப்பவர்களுக்கு மேலான விதத்தில் இரட்சிப்பைக் கொண்டுவருகிறதுமான ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் (அடையாளமாய்) தெளிக்கப்படுகின்றது என்பதும், எப்படி நாம் அந்நியர்களுமாய், பரதேசிகளுமாய் இருந்து, எகிப்தை (உலகத்தை) நமது வீடாகக் கொண்டிராமல் அல்லது அங்குத் தரித்திராமல், மாறாக கையில் தடி பிடித்திருக்க வேண்டும் என்பதும், இந்த ஜீவியத்தின் சோதனைகளையும், கசப்பான அனுபவங்களையும் அடையாளப்படுத்தும் "கசப்பான கீரைகள்" எப்படி நமக்கு அவசியமாய் இருக்கின்றது என்பதும், அது எப்படி (புளிப்பு அசுத்தத்திற்கு அல்லது தப்பறைக்கு நிழலாய் இருக்கின்றபடியால், தூய்மையான சத்தியத்தை அடையாளப்படுத்தும்) புளிப்பில்லாத அப்பத்திற்கான நமது பசியை/விருப்பத்தை அதிகப்படுத்துகின்றது மற்றும் "என்னுடைய மாம்சத்தைப் புசியாமல் இருந்தால், உங்களுக்குள்ளே ஜீவனில்லை" என்று கூறின நமது ஆட்டுக்குட்டியானவரைப் புசிப்பதற்கான நமது விருப்பத்தையும் அதிகப்படுத்துகின்றது என்பதும், தெரிந்த விஷயங்களேயாகும். இவ்வாறாக நாம் நம்முடைய ஆட்டுக்குட்டியைப் புசித்து, மகிமையின் நம்பிக்கையாகிய கிறிஸ்துவானவரை நமக்குள் உருவாக்கப்பெற்றிருக்கிறோம். 1800-வருடங்களுக்கும் மேலான காலப்பகுதியை உடைய இந்த இரவு வேளையின்போது, நமது ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது முதல், உண்மையான அந்த ஒரே விசுவாச வீட்டாரே புசித்துக்கொண்டு வருகின்றனர் - விடுதலையின் காலைக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றனர் - இந்தக் காலையின்

விடியலானது ஏற்கெனவே வந்துவிட்டதென நாம் நம்புகின்றோம்.

இயேசு, அதாவது ஆட்டுக்குட்டியானவர் அதே நாளிலும் மற்றும் நிழலின் அந்த அம்சத்தினுடைய நிறைவேறுதலாகவும் மரித்திருப்பதினால், கிறிஸ்தவர்கள் அனைவரும் நமது ஆட்டுக்குட்டியானவர் மரித்தநாளை, நினைவுகூரும்படிக்கு அனுசரிப்பது எவ்வளவு பொருத்தமானதாய்த் தோன்றுகின்றது. நிழலை மாத்திரமே அங்கீகரிக்கின்ற "மாம்சீக இஸ்ரயேலர்களை" காட்டிலும், அந்நாளின்மீது நமக்கு நிச்சயமாய் அதிக கவனமுள்ளது. தினந்தோறும் பண்டிகையை நாம் ஆசரிக்கையில், அதாவது தினந்தோறும் கிறிஸ்துவிலும், அவருடைய சத்திய வார்த்தைகளிலும் நாம் பங்குபெறுகையில், நமது கர்த்தருடைய மரணத்தை, அதன் ஆண்டு நிறைவு நாளில் நினைவுகூரும்படிக்கு அனுசரிப்பது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், அருமையானக் காரியமாகவும் இருக்குமல்லவா?

அந்த நாளானது, தம்மை நினைவுகூரும்படிக்கு வருடந்தோறும் அனுசரிக்கப்பட வேண்டும் என்பது நமது கர்த்தருடைய விருப்பமாக இருந்தது என்றும், நிழலான யூதர்களுடைய அனுசரிப்பிற்குப்பதிலாக, அவருடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்குமான அடையாளச் சின்னங்களாகிய அப்பம் மற்றும் திராட்சரசம் அடங்கிய கர்த்தருடைய இராப்போஜனத்தை, அதாவது நம்முடைய பஸ்கா இராப்போஜனத்தை நிறுவினார் என்றும் நாம் புரிந்துகொள்கின்றோம்.

இதனோடு தொடர்புடைய அனைத்தும், இதுவே அவரது நோக்கம் என்பதைக் காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் ஒவ்வொரு வருடமும் பஸ்காவை முறையாக ஆசரித்துவந்தார் மற்றும் அவரது கடைசி பஸ்காவின்போது, அவர் காட்டிக்கொடுக்கப் பட்ட அன்று இரவில், லூக்கா 22:15-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக் கூறினார். இயேசு ஆசரித்தது, பஸ்கா (ஆட்டுக்குட்டியின்) அடிக்கப்படுதலேயொழிய, பஸ்காவைப் பின்தொடரும் ஏழு நாட்களுக்குரிய பஸ்கா பண்டிகையல்ல. அக்காலங்களில் யூதர்கள் இரண்டையும் ஆசரித்தனர், அதிலும் குறிப்பாக பஸ்கா பண்டிகையையே ஆசரித்தனர். பஸ்கா ஆட்டுக்குட்டியின் அடிக்கப்படுதலுக்கான நினைவுகூரும் ஆசரிப்பை இப்பொழுது அவர்கள் ஆசரிப்பதுமில்லை மற்றும் நீண்டகாலமாய் ஆசரிக்கவுமில்லை. மாறாக பண்டிகையை மாத்திரமே ஆசரித்திருக்கின்றனர்.

(கடைசி வேளையில்) இயேசு அடிக்கப்படுதலுக்கான நினைவுகூருதலை மாத்திரம் ஆசரித்து, பின்னர் தம்மை உண்மையான பலியாக ஒப்புக்கொடுத்தார். பழைய நிழலுக்குப் (ஆட்டுக்குட்டிக்கு) பதிலாக, (அப்பம் மற்றும் திராட்சரசம் எனும்) நினைவுகூருதலின் சின்னங்களை - புதிய இராப்போஜனத்தை இயேசு நிறுவி, தம்முடைய அப்போஸ்தலர்களுக்குக்கொடுத்து, "என்னை நினைவுகூரும்படிக்கு இதைச் செய்யுங்கள்" என்றார். (இனிமேல் நிழலை ஆசரிக்க வேண்டாம், மாறாக என்னை - நிஜத்தை நினைவுகூர்ந்து ஆசரிக்கத்தக்கதாக, இந்தப் புதிய அடையாளச் சின்னங்களைப் பயன்படுத்துங்கள்). "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் மற்றும் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுமளவும்" மற்றும் "ஜெயங்கொண்டவர்களாகிய முதற்பேறான வர்களைக் கடந்துபோகுதல் (அ) கடாட்சிப்பதன் மூலமாக நிழல் நிறைவடையுமளவும்

மற்றும் முழு விசுவாச வீட்டாரின் இறுதி விடுதலை சம்பவிக்குமளவும்" - (நிழலான ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தையல்ல, மாறாக) அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.

பஸ்காவின் அடிக்கப்படுதல் - கிறிஸ்துவின் மரணமானது, முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியாகிய அதன் ஆண்டு நிறைவு நாளில் வருடந்தோறும் நினைவுகூரப்படுவதே சரியாக இருக்குமேயொழிய மற்றபடியல்ல. இந்த ஆண்டு நிறைவு நாளானது 1881-ஆம் வருடமாகிய இவ்வருடத்தில் ஏப்ரல் 14-ஆம் தேதியன்று (மாலை 6 மணிக்குத் தொடங்கும் நிலையில்) வருகின்றது. பின்வரும் ஏழு நாட்களுக்குரிய புளிப்பில்லாத அப்பம் புசித்தலின் பண்டிகையானது, நமது மீட்கும்பொருளின் காரணமாக, நாம் பிற்பாடு அனுபவிக்கும் தொடர்ச்சியான, பூரணமான மற்றும் நித்தியமான பண்டிகையை அடையாளப்படுத்துகின்றது; (ஏழு என்ற எண்ணானது, பூரணத்திற்கான அடையாளமாக இருக்கின்றது).

சில கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமைதோறும், கர்த்தருடைய இராப் போஜனத்தை அனுசரிப்பதையும், மற்றும் தங்களுடைய இந்த வழக்கமானது, அப்போஸ்தலர் நடபடிகைகள் புஸ்தகத்தில், "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருந்தார்கள்" என்று மீண்டும் மீண்டுமாகக் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களின் அடிப்படையில் காணப்படுவதாகக் கூறிக்கொள் வதையும் நாம் அறிந்திருக்கின்றோம். (அப்போஸ்தலர் 20:7) அப்பம் பிட்குதல் அடிக்கடிக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இப்படியாக (அப்பம் பிட்குதல்) குறிப்பிடப்பட்டிருக்கும் எந்த ஓர் இடத்திலும், அப்பத்தைப்போன்று அக்கட்டளையில் முக்கியமான அம்சமாக இடம்பெறும் திராட்சரசம் குறிப்பிடப்படவில்லை என்பதையோ, இதுவுமல்லாமல் வாரத்தின் முதல்நாளில்கூடின இந்தக் கூடுகைகள் எங்குமே "கர்த்தருடைய இராப்போஜனம்" என்றோ அல்லது நாம் அது இராப்போஜனம் என்று முடிவுசெய்யத்தக்கதாக வேறு ஏதாகிலும் பெயரிலோ அழைக்கப்படவில்லை என்பதையோ மேற்கூறப்பட்டுள்ள கிறிஸ்தவர்கள் பார்க்கத் தவறியுள்ளனர் என்பது உறுதியே.

"கர்த்தருடைய நாளானது (வாரத்தின் முதல் நாளானது) கர்த்தருடைய மரணத்தின் நினைவுகூருதலை ஆசரிப்பதற்கு ஏற்ற நாளாகவே இருக்க முடியாது என்பதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன; அவைகளில் முக்கியமான காரணம், "முதல்நாள்" (அ) "கர்த்தருடைய நாளானது" முற்றிலும் வேறுபட்ட ஒரு சம்பவத்தின் நினைவுகூருவதற்குரிய நாளாக நிறுவப்பட்டது மற்றும் கைக்கொள்ளப்பட்டது, அதாவது நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்குரிய நினைவுகூருதலின் நாளாகவே நிறுவப்பட்டது என்பதேயாகும். ஒன்று "இரவில்" ஆசரிக்கப்பட்டு, இராப்போஜனம் என்று அழைக்கப்பட்டது, மற்றொன்றோ பகற்பொழுதில் ஆசரிக்கப்பட்டது. ஒன்று அழுகையின் மற்றும் துயரத்தின் இரவாய் இருந்தது, மற்றொன்றோ "கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார்" என்றுகூறி மகிழ்ச்சியும், களிகூருதலும்கொள்ளும் காலை வேளையாக இருந்தது. ஒன்று சுவிசேஷயுகமாகிய, பாடுகளுள்ள தற்காலத்து இரவு வேளைக்கு நிழலாய் இருந்தது, மற்றொன்றோ "அதிகாலையில்" சரீரத்தினுடைய

உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு, பிரகாசமான ஆயிரவருட இராஜ்யத்தின் பகலில் இடம்பெறும் நம்முடைய ஒன்றுசேர்க்கப்படுதல் மற்றும் ஐக்கியத்திற்கான நிழலாக இருக்கின்றது.

இயேசு மரணத்திலிருந்து எழுந்த பிற்பாடு, அவர் அடிக்கடி, வாரத்தினுடைய முதல்நாளில் சீஷர்களுக்குத் தோன்றிக் காட்சியளித்தார் மற்றும் பல்வேறு தருணங்களில் அவர்கள் சாதாரணமாக உணவு உட்கொள்ளும்போது அப்பம் பிட்கையில் தம்மை அவர்களுக்கு அவர் வெளிப்படுத்தினவராகக் காணப்பட்டார். சபை இந்த வாரத்தின் முதல்நாளை விசேஷமாக ஒருவரோடொருவரும், கர்த்தரோடும் சந்திப்பதற்கான நாளாக ஒதுக்கி வைத்தார்கள் என்றும், அவர்கள் நீண்ட தொலைவிலிருந்து வருவதினாலும், மற்றுமாகக் கர்த்தர் தம்மை இப்படியாக (அப்பம் பிட்குதல் மூலம்) வெளிப்படுத்தினதாலும், அந்தநாளில் அவர்கள் தங்கள் போஜனத்தைப் பொதுவாய் உட்கொள்வதற்கென ஒழுங்குப்படுத்தியிருந்திருப்பார்கள் என்றும் எண்ணுவதைக்காட்டிலும் வேறு ஏதேனும் நியாயமான அனுமானங்கள் இருக்கக்கூடுமோ? இந்த நாளானது, எப்போதும் சந்தோஷத்தின் ஒரு நாளாகக் காணப்பட்டது, மற்றநாளோ அனுதாபத்துடன்கூடிய துயரம் நிறைந்த இரவாக இருந்தது.

ஞானஸ்நானத்தைப்போன்று, இந்தக் கட்டளையின் சரியான அனுசரிப்பும்கூட, போப்மார்க்கத்தினுடைய ஆளுகையின்போது மறைந்துபோய்விட்டது; இது முற்றிலும் அகற்றப்பட்டு, இதனிடத்தில் மரிக்கும் நபர் உத்தரிக்கும் ஸ்தலம் முதலானவைகளிலிருந்து காக்கப்படத்தக்கதாக, மரணபடுக்கையின்போது கொடுக்கப்படும் நற்கருணை விருந்து (sacrament) அனுமதிக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. புராட்டஸ்டண்டினரோ (Protestants) இவ்விஷயத்திற்குப் பொதுவாய் அதிகம் கவனம் காட்டாதவர்களாய் இருந்து, "பானம்பண்ணும்போதெல்லாம்" எனும் வார்த்தைகளை, சௌகரியமான வேளைகளிலெல்லாம் செய்வதற்கான அதிகாரமாக எடுத்துக்கொள்கின்றனர் மற்றும் இவ்வசனத்தின் வார்த்தைகளில் இடம்பெறும் "இந்த" எனும் வார்த்தையானது பஸ்காவைக்குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதையும், இந்தச் சம்பவத்திற்கான நினைவுகூருதலை ஆசரிக்கும்போதெல்லாம், நிழலை இல்லாமல், நிஜமாகிய என்னை நினைவுகூரும்படி - இதைச் செய்யுங்கள் என்று அவர் கூறியுள்ளார் என்பதையும் காணத்தவறிவிடுகின்றனர்.

காலந்தவறி ஆசரிப்பதினால் பாவம் செய்யப்படுகின்றது என்றோ, ஆசரியாமல் இருப்பது பாவம் என்றோ நாம் சொல்லுகிறதில்லை; மாறாக அது நிறுவப்பட்டது போலவே ஆசரிப்பது என்பது வேறுவிதமாய் ஆசரித்தலைக்காட்டிலும் மிகவும் ஏற்றதாகவும், நல்யோசனையாகவும், நினைவுகூருதலாகவும் காணப்படும் என்றே நாம் சொல்லுகின்றோம்.

## நன்றியுடன்கூடிய அர்ப்பணிப்பு

ஸ்தோத்திரத்திற்குரிய என் இரட்சகர் மரித்த
அவ்வியத்தகு சிலுவையினை - நான்
ஆராய்ந்துபார்க்கையிலே . . . எனக்குப் பூமியில்
இலாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளை
நஷ்டமென்று எண்ணினேன். அவைகளின்
பகட்டும், பெருமிதமும் எத்தனை வெறுமையானது!

எனக்கு ஜீவனையும், சமாதானத்தையும் வாங்க
உம்மையே நீர் பலியாக ஈந்திருக்க - இதை
நான் மறந்து, உம்மைவிட்டு விலகி
இவ்வுலக இன்பத்திலே நான்
இளைப்பாறுதலை நாடிடமாட்டேனே.

நான் எனக்குச் சொந்தமல்ல ஆண்டவரே,
எனது எல்லா பெலனும், உரிமையும்
உமக்கே உரியதாகுமே . . .
தேவனுக்குத் துதிச் சாற்றிட ஊழியம் செய்வது,
இந்த அடிமைக்குக் கிடைத்த சிலாக்கியமே.

அற்பமான எனதனைத்தையும் உமது பலியினருகே
வைத்திடுகின்றேனே. அது நலிந்ததுதான் என
நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆயினும்
அது மிகச் சிறியதல்லவே.

என்னுடைய நன்றியுடன்கூடிய காணிக்கையை
நீர் அங்கீகரிப்பீரென நான் அறிவேனே. அன்பே என்
இக்காணிக்கைக்குக் காரணமென நீர் அறிவீர் ஆண்டவரே.
ஆ! அன்பு உமக்கு சுகந்த வாசனையல்லவோ.

- விடியல் துதிப்பாடல்கள், #325

# நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து

**"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே, ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." 1 கொரிந்தியர் 5:7, 8**

யூதர்களுடைய ஏழு நாட்களுள்ள பஸ்கா பண்டிகையானது இந்த வருடத்தில் (1885-இல்) மார்ச் 31-ஆம் தேதி துவங்கி, ஏப்ரல் 7-ஆம் தேதி முடிவடைகின்றது மற்றும் இது அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியைப் புசிக்கின்றவர்களுக்கு வரும் பூரணமும், நித்தியமுமான தூய்மைக்கும், சந்தோஷத்திற்குமான நிழலாய் இருக்கின்றது. நமது பஸ்கா (ஆட்டுக்குட்டியாகிய) கிறிஸ்து அடிக்கப்பட்டுள்ளபடியினால், நாம் அனைவரும் அவரால் உண்டான புண்ணியத்தில் விசுவாசத்தினால் பங்கெடுத்துள்ளபடியால், நாம் தேவனுக்கு முன்பு தொடர்ந்து களிகூரவும், சத்தியத்தைப் புசிக்கவும், சகல பாவமாகிய புளிப்பை, அதாவது துர்க்குணம், மாய்மாலம் முதலியவைகளை முற்றிலுமாகக் களைந்துபோடத்தக்கதாக பவுல் போதிக்கின்றார்.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் மரணமும் மற்றும் அதைப் புசித்தலும்தான், இஸ்ரயேலர்களுக்கு ஒருவாரமளவும் நீடிக்கக்கூடிய "பஸ்கா பண்டிகைக்கான" காரணமாக அல்லது அடிப்படையாகக் காணப்பட்டது. பண்டிகை வாரத்திற்குரிய முந்தின நாளில், ஆட்டுக்குட்டியானது அடிக்கப்படுகின்றது மற்றும் இது இயேசுவினுடைய மரணத்திற்கு நிழலாய் இருக்கின்றது. ஆகையால் சிலுவை மரணநாளுக்கான ஆண்டு நிறைவு நாளானது இந்த வருடத்தில், மார்ச் மாதம் 30-ஆம் தேதியன்று (யூத நேரத்தின்படி) மதியம் முதல் பிற்பகல் 3 மணிக்குள்ளாக வருகின்றதாக இருக்கின்றது மற்றும் இதற்கு முந்தின சாயங்காலம் (இதுவும் யூத நேரத்தின்படி அதே நாளாக இருக்கின்றது; ஏனெனில் அவர்களுக்கு நாளானது சாயங்காலம் 6 மணிக்குத் துவங்குகின்றதாய் இருக்கின்றது) அதாவது மார்ச் 29-ஆம் தேதியாகிய ஞாயிற்றுக்கிழமையன்று சாயங்காலத்தில், 6 மணிமுதல் 10 மணிவரை ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதற்கும், பஸ்கா போஜனத்தை ஆயத்தம் பண்ணுவதற்கும் மற்றும் புசிப்பதற்கும் செலவிடப்படுகின்றது மற்றும் இதற்குப் பின்னர், நமக்காகப் பிட்கப்பட்டு, சிந்தப்படப்போகின்ற நமது கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்தும் அப்பம் மற்றும் திராட்சரசம் அடங்கின இராப்போஜனமானது, சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியின் இடத்தில் இனிமேல் இடம்பெறப்போவதாக அவரால் தம்முடைய சீஷர்களுக்கு அறிமுகம்பண்ணப்பட்டது; இந்தச் சின்னங்கள் (அப்பம், இரசம்) "நிஜமாகிய அவரை - உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை" அடையாளப்படுத்துகின்றதாய் இருந்தது.

தம்முடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்குமான அடையாளச் சின்னங்களாகிய

அப்பத்தையும், திராட்சரசத்தையும் சீஷர்களுக்குக்கொடுத்து, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று கூறி, அதைப் புசிக்கும்படிக்குக் கர்த்தர் கூறினபோது, அதுமுதல் பஸ்காவின் ஆண்டு நிறைவு நாளானது, நிழலான ஆட்டுக்குட்டியைப் புசிப்பதன் வாயிலாக நினைவுகூரப்படாமல், மாறாக நிஜமான ஆட்டுக்குட்டியின் இந்தச் சின்னங்களைப் புசிப்பதன் மூலம் நினைவுகூரப்பட வேண்டுமென்று கர்த்தர் போதித்ததாக நாம் புரிந்துகொள்கின்றோம். (லூக்கா 22:19) எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்டதை நினைவுகூருவதற்காக இல்லாமல், மாறாக பாவம் மற்றும் மரணத்திலிருந்ததான நம்முடைய விடுதலைப்பற்றி நினைவுகூருவதற்காகவே ஆகும். நிஜமானது ஆரம்பித்துவிட்டதென எல்லாவிதத்தி லும் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும்.

அப்போஸ்தலன், "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப்புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:26) என்று கூறும்போது, இந்த ஆண்டு நிறைவு நாளானது (ஆண்டுதோறும் அந்நாளில்) ஆசரிக்கப்படும் போதெல்லாம், நாம் கர்த்தருடைய மரணமே நம்முடைய சந்தோஷம், பரிசுத்தம் மற்றும் நம்பிக்கை அனைத்திற்குமான அடிப்படையாக இருக்கின்றது என்பதைத் தெரிவிக்கின்றவர்களாய் இருப்போம் என்று அப்போஸ்தலன் போதிப்பதாகவே நாம் புரிந்துகொள்கின்றோம். "கர்த்தர் வருமளவும்" எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை, நம்மை வரையறுக்கும் விதத்திலும் மற்றும் நம்முடைய தற்போதைய ஆசரிப்பு சரியற்றது எனும் விதத்திலும் நாம் புரிந்துகொள்வதில்லை; ஏனெனில் அவ்வார்த்தைகளுக்கான திட்டவட்டமான அர்த்தமானது - கர்த்தருடைய இராஜ்யம் வந்திருந்து, அந்த இராஜ்யத்தில் அவர் தம்மோடுகூட நீங்கள் (திவ்விய சுபாவத்தின் உரிமைகள், சிலாக்கியங்கள் மற்றும் சந்தோஷங்கள் எனும்) நவமான இரசத்தைப் பருகும்படிக்கு அழைப்பதுவரையாகும். மாற்கு 14:25; லூக்கா 22:16-ஆம் வசனங்களைப்பார்க்கவும்.

நம்முடைய புதிய வாசகர்கள் அநேகரின் நலன் கருதி, நாம் குறிப்பிடுவது என்னவெனில், சில வருடங்களாக "இதை," ஆண்டுதோறும் அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிப்பது நம்முடைய வழக்கமாக இருந்துவருகின்றது; அதுவும் கூடுமானவரை, நமது கர்த்தரால் இது நிறுவப்பட்ட முதற்தருணத்தின்போதும் மற்றும் ஆதித் திருச்சபையாரிடத்திலும் விளங்கின எளிமையானது பேணப்பட்டும் வருகின்றது. இந்நகரத்தில் இருக்கும் சபையார் வழக்கம்போல், அலிகெனி நகரத்திலுள்ள, பிரடரல் தெருவில், எண்: 101-இல் உள்ள "மேற்வீட்டறையில்" கூடிக்கொள்வார்கள்.

கர்த்தருடைய சீஷர்களாய் இருப்பவர்கள் அனைவரையும் - பிட்கப்பட்டச் சரீரத்தையும், சிந்தப்பட்ட இரத்தத்தையும் மதிக்கும் அனைவரையும், நமக்கான மீட்கும்பொருளை ஒன்றாய்ச்சேர்ந்து நினைவுகூரும்படி எங்களோடு கூடும்படிக்கு வரவேற்கின்றோம்.

நம் அனைவராலும் இங்குக் கூடிடமுடியாது, ஆனால் நம் அனைவராலும் நமது கர்த்தருடன் கூடிடமுடியும் மற்றும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்று உணர்ந்துகொள்கையில் நமது தலையானவருடனும், நமது பிதாவுடனும், ஒருவரோடொருவரும், இருதயத்தினுடைய ஐக்கியத்தில், ஐக்கியம்கொள்கின்றோம். எங்கே இயேசுவின் நாமத்தில் இரண்டு அல்லது மூன்றுபேர் கூடிக்கொள்கின்றார்களோ, அங்குத் தலையானவர் காணப்படுவார் மற்றும் அதன் காரணமாக ஆசீர்வாதமும் கடந்துவரும்.

நமது கர்த்தருடைய சரீரத்தை அடையாளப்படுத்தும் அப்பத்தைப் பிட்கையில், அவருடைய நியமித்தலினாலேயே நாம் இப்பொழுது அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகக் காணப்படுகின்றோம் மற்றும் அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்களெனப் பிட்கப்படவும் போகின்றோமென்பதை நாம் மறந்துவிட வேண்டாம். நாம் நீதிமானாக்கப்படுவதற்குக் காரணமான அவரது பலியாக்கப்பட்ட ஜீவனுக்கான சின்னத்தை நாம் பருகுகையில், நாமும் அவருடைய பாத்திரத்தில் பங்கடைவதற்கும் மற்றும் இப்படியாக அவரது மரணத்தின் அடையாளத்தில் பங்குகொள்வதற்கும் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம். அவருடைய கிருபையினால், நாம் அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணி, பின்னர் அவரது மகிமையில் பங்குகொள்வோம். (மத்தேயு 20:22, 23)

இதையே அப்போஸ்தலர் 1 கொரிந்தியர் 10:16-18 வரையிலான வசனங்களில் குறிப்பிடுகின்றார். பலிகளைப் புசித்த அந்த ஆசாரியர்கள், அந்தப் பலிகளைச் செலுத்தினவர்களாகவும், அந்தப் பலியினால் அடையாளப்படுத்தப்படுகின்றவர் களாகவும் காணப்பட்டனர். "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 திருவிவிலியம்) கவனமற்ற விதத்தில் எவரும் இந்த அடையாளங்களில் பங்குகொள்ளாமல், மாறாக ஜாக்கிரதையுள்ள மற்றும் உண்மையுள்ள இருதயங்களுடனும் ஒவ்வொருவனும் இயேசுவினுடைய பலியின் விளைவாகவரும் பலன்களிலுள்ள தனக்கான பங்கினை மாத்திரமல்லாமல், இயேசுவினுடைய பலியின் விளைவாக பின்பு தனக்கு இயேசுவோடு பலியிலிருக்கும் பங்கினையும் உணர்ந்துகொள்வதற்கு முயற்சிப்பானாக.

## இனிமையான தருணங்கள்

சிலுவை முன்தனிலே நாம் செலவழித்த
ஆசீர்வாதம் நிறைந்த தருணங்கள் இனிமையானதே;
பாவிகளுக்காக மரித்த நண்பனிடமிருந்தே ஜீவன்,
ஆரோக்கியம், சமாதானம் பெற்றிருக்கின்றோமே.

தெய்வீக இரக்கம் அவரது கருணையுள்ள கண்களில்
பிரகாசிப்பதைக் காணும்போது, ஓ!
சிலுவையின் அடிவாரத்திலிருந்து பார்க்கும் காட்சி
உண்மையாய் ஆசீர்வாதமாய் உள்ளதுவே.

சிலுவையை ஏறெடுத்துப் பார்க்கையிலே
அங்கேதான் எந்தன் பரலோகத்தைக் காண்கின்றேனே.
அதிகம் அன்புகூருகையில் அதிகம் மன்னிக்கப்பட்டேனே,
கிருபையின் அற்புதத்தைப் போலானேன்.

அன்பும், வருத்தமும் என் இதயத்தைப் பிளக்கவே,
என் கண்ணீரால் அவரது பாதங்களை நனைத்தேன்.
விசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திருந்தால்,
அவரது மரணத்தால் ஜீவனைப் பெறலாமே.

உருக்கமான மனதுடனும், நன்றியுடன்கூடிய வருத்தத்துடனும்
என் இரட்சகரோடு இங்கே தங்கித் தரித்திருப்பேனே.
இங்கேதான் புது நம்பிக்கையையும், பெலனையும்
பெறுகையில் - இருள் பகலாக மாறுகிறதே.

- விடியல் துதிப்பாடல்கள், # 276

# எங்கள் அனுசரிப்பு

யூதர்களால் கைக்கொள்ளப்பட்டப் பண்டிகைக்கு முன்பு நிகழ்ந்த பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலை நாங்கள் ஆசரித்தோம். நீசான் மாதம் 14-ஆம் தேதியின் மதிய வேளையில், இயேசு மரித்தார் (இவ்வருடத்தில் அந்நாளானது ஏப்ரல் 19-ஆம் தேதி, திங்கட்கிழமையன்று, மதிய வேளையாக இருந்தது). பிரமாணத்தின்படி பஸ்கா ஆட்டுக்குட்டியானது, நீசான் மாதம் 14-ஆம் தேதியன்று அடிக்கப்பட வேண்டும்; இவ்வருடத்திலோ இக்காரியமானது ஏப்ரல் 18-ஆம் தேதியாகிய கர்த்தருடைய நாளன்று (ஞாயிற்றுக்கிழமையன்று) மாலை 6 மணிமுதல், ஏப்ரல் 19-ஆம் தேதியாகிய திங்கட்கிழமையன்று மாலை 6 மணிக்குள் ஏதாகிலும் ஒரு நேரத்தில் இடம்பெறுகின்ற காரியமாக இருக்கின்றது.

கடைசியாக கர்த்தரும் மற்றும் அப்போஸ்தலர்களும் பஸ்கா இராப்போஜனத்தை ஆசரித்தப்போது, இதை அவர்கள் "அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே," அதாவது 14-ஆம் தேதியன்று நேரமே புசித்தார்கள். நிழலான போஜனத்தைப் புசித்தப் பிற்பாடு, நினைவு அடையாளங்கள் (அ) கர்த்தருடைய இராப்போஜனமானது நிறுவப்பட்டது மற்றும் பின்னர் அவர்கள் வெளியேறி, கெத்செமனேக்கும், காய்பாவினிடத்திற்கும், ஏரோதினிடத்திற்கும் மற்றும் பிலாத்துவினிடத்திற்கும் மற்றும் கல்வாரியினிடத்திற்கும் போனார்கள்; இந்தக் கல்வாரியில் இயேசு அதே நாளின் பிற்பகலில், சிலுவையில் அறையப்பட்டு மரித்தார் மற்றும் அதே பிற்பகலிலேயே அடக்கமும் பண்ணப்பட்டார், ஏனெனில் இயேசு மரித்த அந்த நாளின், மாலை 6 மணிமுதற்கொண்டு ஆரம்பமாகும் அடுத்தநாளில், மாபெரும் பஸ்கா பண்டிகையானது துவங்கினது. (யோவான் 19:32, 33)

பஸ்கா பண்டிகையை அல்லாமல், பஸ்கா போஜனத்தையே இயேசு ஆசரித்தார் மற்றும் இதற்குப் பிற்பாடு, இந்தப் போஜனத்திற்குப்பதிலாக, அப்பத்தினாலும், திராட்சரசத்தினாலும், தம்முடைய மரணத்திற்குரிய ஒரு நினைவுகூருதலை ஏற்படுத்தி, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்."

ஆகையால் நினைவுகூருவதற்குரிய நம்முடைய அனுசரிப்பானது, இந்த வருடத்தில், ஏப்ரல் 18-ஆம் தேதியாகிய கர்த்தருடைய நாளன்று (ஞாயிற்றுக் கிழமையன்று) மாலை 8 மணியளவில் நடைபெறும். இந்தத் தருணத்தில் இங்கோ (அ) வேறு ஏதாகிலும் இடத்திலோ, கூடுமான பேர்கள் ஒன்று கூடிடுவோமாக மற்றும் தனிமையில் காணப்படுபவர்களும், "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று மீட்பரினால் இறுதி நேரங்களில் கூறப்பட்டுள்ள வார்த்தைகளுக்கு இணங்கிடுவதற்குத் தவறிட வேண்டாம் மற்றும் இதனை கட்டாயமான கடமையாக எண்ணாமல், மாறாக அன்பின் சிலாக்கியமாகக் கருதி இணங்கிடுவார்களாக.

யூதர்களால் ஆசரிக்கப்பட்ட பஸ்காபண்டிகை வாரமானது, நமக்கு உயர்வான விதத்தில் நிறைவேறுகின்றதாய் இருக்கின்றது; அது எகிப்தின் நிஜமாகிய உலகத்திலிருந்து கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமையிலும், சமாதானத்திலும் மற்றும் சந்தோஷத்திலும் நிறைவேறுகின்றதாய் இருக்கின்றது. அடிமைத்தனத் திலிருந்துள்ள நம்முடைய விடுதலையானது முற்றிலும் முழுமை அடையும்போது, நாம் இன்னும் பிரம்மாண்டமான சுயாதீன நிலைமையையும் மற்றும் சந்தோஷத்தையும் உணர்ந்துகொள்கின்றவர்களாய் இருப்போம்.

- ரீபிரிண்ட்ஸ், பக்கம் 833

# பஸ்கா ஏற்படுத்தப்பட்டது

## யாத்திராகமம் 12:1-14

*"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே."*
**1 கொரிந்தியர் 5:7**

பஸ்கா என்ற வார்த்தையானது, கடந்துபோகப்படுதலை அல்லது உபத்திரவத்திலிருந்து கடாட்சிக்கப்படுதலைக்குறிக்கின்றதாய் இருக்கின்றது. கடைசி வாதை எகிப்தின்மீது கடந்துவந்தபோது, சங்காரத்தூதன் எகிப்தின் முதற்பேறானவர்களோடுகூட, இஸ்ரயேலின் முதற்பேறானவர்களும் சேர்ந்து சங்காரம் பண்ணப்படாதபடிக்கு, இஸ்ரயேலர்களின் வீடுகள் அனைத்தும் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் அடையாளம் போடப்பட்டிருந்தது. இந்த முதற்பேறானவர்கள் பிற்பாடு, மோசேயினுடைய லேவியெனும் ஆசாரிய கோத்திரத்தினால் அடையாளப்படுத்தப்பட்டனர் மற்றும் இந்த ஆசாரியத்துவத்தின் மூலமாகவே இஸ்ரயேல் முழுவதும், தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள் கொண்டுவரப்பட்டார்கள். (யாத்திராகமம் 13:2; எண்ணாகமம் 3:11-13) சுவிசேஷயுக சபையானது, இதற்கான நிஜமாகக் காணப்படுகின்றது. இவர்கள் மாத்திரமே ஜனங்கள் அனைவரிலும், இப்பொழுது நித்தியமான மரணத்திற்குரிய - இரண்டாம் மரணத்திற் குரிய அபாயத்தில் காணப்படுகின்றனர்; ஏனெனில் இவர்களே போதுமானஅளவுக்கு அறிவைப் பெற்றவர்களாய் இருக்கின்றனர்; அதாவது இவ்வறிவை இவர்கள் ஒருவேளை புறக்கணித்தாலோ (அ) தவறாய்ப் பயன்படுத்தினாலோ, இரண்டாம் மரணத்திற்குள்ளாகத் தீர்க்கப்படுமளவுக்குப்போதுமான அறிவைப் பெற்றவர்களாய் இருக்கின்றனர்.

இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள், இப்பொழுது விசுவாசத்தினால் கிறிஸ்துவில், "தெளிக்கப்பட்ட இரத்தத்தின்" கீழ் - நமக்காக அடிக்கப்பட்ட நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவினுடைய இரத்தத்தின்கீழ் நிலைத்திருப்பவர்களை அடையாளப்படுத்துகின்றனர். இவர்கள் கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய புண்ணியத்தினால், ஜீவனுக்குப் பாத்திரமானவர்களாகக் கருதப்படுவதினால், இவர்கள் விடுவிக்கப்படுவார்கள், கடாட்சிக்கப்படுவார்கள், கடந்துபோகப்படுவார்கள். ஆனால் எவரேனும் ஒருவேளை இந்த மறைவிடத்தின் கீழ் நிலைத்திராவிட்டால், நிழலான ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினுடைய பாதுகாப்பை விட்டு, இஸ்ரயேலின் முதற்பேறானவர்களில் யாரேனும் ஒருவர் துணிந்து வெளியேறும் பட்சத்தில் மரித்துப்போவதுபோலவே, நிச்சயமாய் மரிக்க வேண்டியிருக்கும். நிழலானது நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் முக்கியத்துவத்தை இப்படியாக எத்துணை அழுத்தத்துடன் தெளிவாய்க் காட்டுகின்றது!

நிழலான பஸ்காவை நினைவுகூர்ந்து ஆசரிப்பதற்குரிய நிழலான ஆசரிப்பானது, இதன்பின் தொடர்ந்து இஸ்ரயேலால் ஆசரிக்கப்பட்டது. இதை நமது கர்த்தரும், அவருடைய சீஷர்களும், அனைத்து யூதர்களும் செய்ய வேண்டியது

போன்று, நீசான் மாதம், 14-ஆம் தேதியில் ஆசரித்தார்கள். இந்தப் பஸ்கா போஜனத்திற்குப் பிற்பாடு, இதனிடத்தில் கர்த்தருடைய இராப்போஜனமானது ஏற்படுத்தப்பட்டது; அதுவும், நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஜீவியத்தின் கடைசி இரவன்று - அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அதே இரவன்று - அவர் சிலுவையில் அறையப்பட்ட அதே நாளன்று ஏற்படுத்தப்பட்டது; யூதர்களுடைய நாளானது, சூரியன் மறைவிற்குப் பின்னான மாலைவேளையில் துவங்குகின்றதாய் இருக்கின்றது. பஸ்காவானது யூதர்களுக்கு எப்படியாகக் காணப்பட்டதோ, அப்படியே இந்த வருடாந்தர நினைவுகூருதலும்கூட கிறிஸ்துவின் பின்னடியார்களுக்குக் காணப்பட வேண்டும். இவர்கள் கிறிஸ்து இயேசுவை, தங்களது ஆட்டுக்குட்டியெனப் பார்க்கவேண்டும் மற்றும் அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமான தங்களது நீதிமானாக்கப்படுதலில் களிகூர வேண்டும். இஸ்ரயேலர்கள் செய்ததுபோன்று - இவர்களும் அதை வருடந்தோறும் ஆசரித்திட வேண்டும், ஆனாலும் நிழலின் காரியமாக இராமல், மாறாக நிஜத்தினுடைய நினைவுகூருதலாக இப்பொழுது இவர்கள் ஆசரித்திட வேண்டும். அவருக்கு ஒப்பான சாயலில், மரணத்திலிருந்து முழுமையாக விடுவிக்கப்படுவது வரையிலும், பஸ்கா காலங்கள் வரும்போதெல்லாம் "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கின்றபடியால் - பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்."

## உனக்கு முன்பாக

உனக்கு முன்பாக அவமானத்தின் பாதையில் தனித்துப் பயணித்தாரே,
அடிகள்தனை தலைப்பணிந்தே ஏற்றுக்கொண்டாரே,
ஆழ்ந்த துக்கம், வலி, வேதனை, எப்படியிருக்கும் என்பதையும் அறிவாரே,
முடிவில்லா உபத்திரவங்களை நீடிய பொறுமையுடன் சகிப்பதை அவர் அறிவாரே,
மரணத்தின் ஆழமான பாத்திரத்திலுள்ள கசப்பனைத்தையும் பருகிற்றாரே,
அவருக்கென்று ஒரு துளி இரத்தத்தையும் வைத்துக்கொள்ளவில்லையே,
எல்லா இரத்தத்தையும் நமை மீட்டெடுக்கவே சிந்திவிட்டாரே,
ஒளியின் இராஜ்யத்தில் உன்னை மகிமைக்குக் கொண்டுவரவே,
உனக்காகவே, உனக்கு முன்பே, அவர் போரிலே வெற்றிச் சிறந்தாரே.

– Songs of the Nightingale, p. 127

# செங்கடலின் பாதை

## யாத்திராகமம் 14:19-29

*“விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்துபோனார்கள்.”*
**எபிரெயர் 11:29**

தேவனுடைய முற்காலத்து ஜனங்களுடைய சரித்திரத்தின், இவ்வதிகாரமானது தேவனுடைய வல்லமை மற்றும் ஞானம் மற்றும் அன்பிற்கான உதாரணமாக விளங்குகின்றது. இதன்பால் கவனம் காட்டுகின்ற அனைவருக்கும் இது, சர்வ வல்லமையுள்ளவருடன் எதிர்த்துப்போராடுவதற்கான பிரயாசம் எடுத்தலைக் குறித்து ஜாக்கிரதையாய் இருக்கத்தக்கதாக எச்சரிப்பாய்க் காணப்படுகின்றது. அவருடைய பராமரிப்பின்கீழ்க் காணப்படுபவர்கள் எவ்வளவு வலுவற்றவர்களாகவும் (அ) முக்கியத்துவமற்றவர்களாகவும் (அ) ஏழைகளாகவும் (அ) மனுஷருக்குள்ளே அசட்டைப்பண்ணப்பட்டவர்களாகவும் காணப்பட்டாலுங்கூட அவர்களுக்கு எதிராய் ஓங்கியெழும்பும் கரமானது, தேவனுடைய வல்லமைக்கு எதிராக எதிர்த்து நிற்கிறதாய் இருந்து மற்றும் நிச்சயம் கெடுதலுக்கு ஆளாகுகின்றதாய்க் காணப்படும்.

எகிப்திலிருந்து நிழலான இஸ்ரயேலின் இந்த விடுதலையானது, தேவனுடைய ஊழியக்காரர்களாய் இருப்பதற்கும் மற்றும் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் வாஞ்சிப்பவர்கள் அனைவரும் பாவத்திலிருந்தும், அதன் அடிமைத்தனத்திலிருந்தும் விடுவிக்கப்படுவதைச் சித்தரிக்கின்றதாய் இருக்கின்றது; இந்த வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களானது, வாதைகளுக்குப் பிற்பாடு, மனிதனுடைய முன்னேற்றத்திற்கும், தேவனிடத்தில் நெருங்குவதற்கும் தடையாய் இருக்கின்ற பாவம் மற்றும் சுயநலத்தினால் உண்டான அமைப்புகள் அனைத்தும் முற்றிலுமாய் அழிகையில் நிறைவேறும். (வெளிப்படுத்தல் 16) பார்வோனின் சேனையானது, கடலினால் கவிழ்க்கப்பட்டக் காரியமானது, அண்மையில் சம்பவிக்க இருக்கிற மகா “உபத்திரவ காலத்தில்,” அடிமைப்படுத்தி வைத்திருக்கும் தற்காலத்து அமைப்புகளில் அநேகமானவைகள் ஒழுங்கின்மையினால் கவிழ்க்கப்படும் எனும் உண்மைக்கு ஒத்ததாக இருக்கின்றது. பொல்லாதவர்கள் அனைவரையும் இறுதியில் கவிழ்த்துப்போடுகின்றதான புயலானது ஏற்கெனவே கிட்ட நெருங்கி வந்துகொண்டிருக்கின்றது; ஆனால் தேவனை நாடுகின்றவர்களும், அவரில் தங்களது விசுவாசத்தைவைத்து, அவரது ஞானமானது சுட்டிக்காட்டும் பாதையில் தொடருகின்றவர்களுமானவர்கள் அனைவருக்கும் தப்பித்துக்கொள்வதற்குமான போக்கு அருளப்பட்டிருக்கும்.

யாத்திராகமம் 11:2; 12:35, 36-ஆம் வசனங்களில் ஆங்கிலத்தில் இடம்பெறும் “borrowed” மற்றும் “lent” என்பதான வார்த்தைகளானது, *shaal* என்ற எபிரெய வார்த்தையினுடைய சரியற்ற மற்றும் தவறாய்ப் பொருள் கொடுக்கும் மொழிபெயர்ப்புகளாகக் காணப்படுகின்றது என்பதையும், தேவன் சார்பிலான ஒரு நேர்மையற்றக் கட்டளையாகவும், இஸ்ரயேலர்கள் சார்பிலான ஒரு நேர்மையற்ற நடக்கையாகவும் தோன்றும் அர்த்தத்தைக் கொடுக்கின்றது என்பதையும் இங்குக்

குறிப்பிட வேண்டியது முக்கியமானதாய்க் காணப்படுகின்றது (தமிழ் மொழியாக்கம் சரியாக உள்ளது). இஸ்ரயேலர்கள் கடனாய் வாங்கவில்லை, மாறாக வெள்ளியுடைமை களையும், பொன்னுடமைகளையும், வஸ்திரங்களையும் கேட்டுக்கொண்டார்கள். எகிப்தியர்களும் கடனாகக் கொடுக்கவில்லை, மாறாக இஸ்ரயேலர்கள் கேட்டுக்கொண்டதை, அவர்களுக்குக் கொடுத்தார்கள். இப்படியாக இஸ்ரயேலர்கள் தங்களது நீண்டகாலப் பணிகளுக்காக சில வெகுமானங்களைப் பெற்றுக் கொண்டார்கள்; அதுவும் இவைகளை அவர்களின் வேண்டுகோளை மறுப்பதற்குரிய பயத்தினால் மாத்திரமே அவர்களை ஒடுக்குபவர்கள் கொடுத்தார்கள்.

நமக்கான
தேவனுடைய
தேர்வுகளானது,
எத்தனைதரம்
அகோரமான
சிலுவையாகவே
தோற்றமளிக்கின்
றது; ஆனால்
நாம் நெருங்கிப்பார்க்கையில், அந்தச் சிலுவையில்
பரத்திலுள்ள நம்முடைய பிதாவினிடத்திலிருந்துள்ள
அன்புக்குரியதும், உற்சாகமளிக்கிறதுமான ஒரு
செய்தியை நாம் காணமுடிகின்றது. தெய்வீகச்
சித்தத்திற்கு ஒருவேளை நாம் கீழ்ப்படிந்து ஒப்புக்-
கொடுக்கவில்லையெனில், நாம் அந்தச் சிலுவையினின்று
பொறுமையற்ற-
வர்களாக விலகிப்
போய், அது
கொண்டுவந்த
பாக்கியமான
செய்தியை
ஒருபோதும்
வாசித்திருந்திருக்
கமாட்டோம். அது
சிலுவைதான்,
எனினும் அது
இப்பொழுது ஒரு
பொக்கிஷமாகும்.

நன்னெறி: ஒவ்வொரு சிலுவையையும் அதற்குரிய படிப்பினைக்காக ஆராய்ந்து பாருங்கள்.

அனைவருக்கும் அதிகப்படியான கிறிஸ்தவ அன்புடன், B.H.Barton, Minot, N. D. - Jan. 27, 1916.

- Pilgrim Echoes, p. 511

# கர்த்தருடைய இராப்போஜனம்

## மாற்கு 14:12-26; மத்தேயு 26:17-30; லூக்கா 22:7-30; 1 கொரிந்தியர் 11:23-25.

## "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்"

வசனங்கள் 12-16; பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்ட, புளிப்பில்லாத அப்பத்தினுடைய முதலாம்நாள், நீசான் 14-ஆம் தேதியாகும் (R1786 -பார்க்கவும்). பஸ்கா பண்டிகையானது 15-ஆம் தேதி துவங்கி, 7 நாட்கள் நீடித்ததாய் இருந்தது; ஒரு நாளானது முந்தினநாளின் சூரிய அஸ்தமனத்தோடு - மாலை 6 மணியோடு துவங்குகின்றது. (யாத்திராகமம் 12:18-20) இந்த ஒரு தருணத்தின்போது புளிப்புப் பயன்படுத்துவதற்குத் தடைப்பண்ணப்பட்டிருந்தது, காரணம் நினைப்பூட்டுதலாய் இருந்திடுவதற்கேயாகும்; அதாவது (1) அப்பம் புளிப்பதற்குக் காத்திருக்க முடியாத அளவுக்கு அவர்கள் எகிப்தினின்று அவசரமாய்ப் புறப்பட்டதற்கு நினைப்பூட்டுதலாகும் (யாத்திராகமம் 12:34, 39) மற்றும் (2) எகிப்தில் அவர்கள் அடைந்த பாடுகளுக்கு நினைப்பூட்டுதலாகும்; இந்த அவர்களின் பாடுகளினிமித்தம் அது சிறுமையின் அப்பம் என்று அழைக்கப்பட்டது. (உபாகமம் 16:3); ஆனால் (3) அதன் பிரதான அர்த்தமாவது, பாவத்தைக் களைந்துபோடுவதாகும்; ஏனெனில் புளிப்பு என்பது கெட்டுப்போகச் செய்கின்றபடியால், அது தூய்மையின்மைக்கு அடையாளமாய் இருக்கின்றது. (1 கொரிந்தியர் 5:6-8; மத்தேயு 16:6) இஸ்ரயேலும் மற்றும் அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று அடைந்த விடுதலையும், பாவம் மற்றும் மரணம் எனும் அடிமைத்தனத்தினின்றுள்ள உலகத்தினுடைய விடுதலைக்கு நிழலாய் இருக்கின்றது என்று பார்க்கும்போது, இந்தப் பண்டிகையானது, ஆயிரவருட யுகத்தின்போதான உலகத்தினுடைய சரியான நிலைமைக்கு நிழலாய் இருக்கின்றது. கிறிஸ்து மூலமாய்ப் பாவம் மற்றும் மரணத்திலிருந்துள்ள மாபெரும் விடுதலையையும், மற்றும் மகா உபத்திரவக் காலத்தையும் அனுபவித்திருக்கும் உலகமானது, அவர்கள் தங்களிடமிருந்து பாவம் எனும் புளிப்பைக் களைந்துபோடுவதற்கு எதிர்ப்பார்க்கப்படுவார்கள் மற்றும் தங்கள் விடுதலையைக் குறித்த நன்றியுடன்கூடிய நினைவுகூருதலில், சுயநலம் எனும் புளிப்போடும் இல்லாமல், துர்க்குணம், பொல்லாப்பு எனும் புளிப்போடும் இல்லாமல், மாறாக துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே (தேவனுடைய நன்மைகளில் களிகூருகின்றவர்களாகவும், பங்கெடுக்கின்றவர்களாகவும் இருந்து) பண்டிகையை ஆசரிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுவார்கள்.

கிறிஸ்துவினுடைய பலிக்கு முன்னடையாளமான பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலானது எப்போதும் நீசான் 14-ஆம் தேதியன்று செய்யப்படுகின்றது (யாத்திராகமம் 12:6); ஆகையால் கிறிஸ்துவினுடைய பலியும், அதே நாளில் நடைபெற்று, இவ்விதமாய் நிழல் முன்னுரைத்திருந்தபடி நிறைவேறினது. ஆட்டுக்குட்டியினுடைய பலியானது, "முதற்பேறான சபையினுடைய" இரட்சிப்பிற்கென்றும், இஸ்ரயேல் ஜாதி நிழலாய்க் காணப்படுகின்றதான சர்வ சிருஷ்டிக்குமான அடுத்து சம்பவிக்கயிருக்கும் விடுதலைக்குமான கிறிஸ்துவினுடைய பலிக்கு நிழலாய்க் காணப்பட்டது.

பஸ்கா வாரத்தின்போது, விருந்தோம்பலானது எருசலேமில் கடமையாகக்

கருதப்படுகின்றது; ஆகையால்தான் கர்த்தர் மேல்வீட்டறையைக் கேட்டுக்கொண்ட போது, அவ்வறையை அவருக்குக் கொடுத்திடுவதற்கு உரிமையாளர் ஆயத்தத்துடன் காணப்பட்டார். அநேகமாக 14-ஆம் வசனம் தெரிவிப்பது போல அம்மனுஷன் விசுவாசியாக இருந்திருக்க வேண்டும் அல்லது 15-ஆம் வசனம் காண்பிகின்றது போன்று, முன்கூட்டியேகூட ஏதேனும் ஏற்பாடுகள் பண்ணப்பட்டிருக்கலாம்.

வசனங்கள் 17-21; யார் பெரியவராய் இருக்க வேண்டும் என்பதற்கான வாக்குவாதம்பற்றி லூக்கா அவர்களால் மாத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ள (லூக்கா 22:24) காரியமானது அநேகமாக அவர்கள் பந்தி அமர்ந்தபோது துவங்கியிருந்திருக்க வேண்டும்; ஒவ்வொருவரும் கர்த்தருக்கு அருகாமையில் காணப்பட வேண்டும் என்று விரும்பினவர்களாகக் காணப்பட்டனர் மற்றும் இப்படியாகக் கொஞ்சம் சுயநலத்திற்கு ஒத்த ஆவியை வெளிப்படுத்துகின்றவர்களாய் இருந்தனர். இந்த ஒரு தருணத்தின்போதுதான் கர்த்தர் மிகவும் நெஞ்சைத்தொடும் வண்ணமாக தாழ்மைக்கான விளக்கம் கொடுத்தார் மற்றும் இந்த மிக அவசியமான பண்பு இல்லையெனில், அவர்களால் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசித்திட முடியாது எனும் உண்மையானது சீஷர்களுடைய மனங்களில் வலியுறுத்தி, பதியவைக்கப்பட்டது. (யோவான் 13:5)

சீஷர்களில் ஒருவன் தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்று கர்த்தர் அறிவித்ததின் நிமித்தமாக சீஷர்களுடைய மனோநிலையானது, உடனடியாக தாழ்மை பற்றிக் கொடுக்கப்பட்ட பாடத்தினுடைய பலனை வெளிப்படுத்தினதாய் இருந்தது. அவர்கள் அதிக தன்நம்பிக்கை உடையவர்களாய் இருக்கவில்லை, மாறாக ஒவ்வொருவரும் தங்கள் உறுதியைக் குறித்துப் பயமடைந்தவர்களாக, ஆண்டவரே அவரா? (அ) இவரா? என்று கேட்காமல், மாறாக ஆண்டவரே நானோ? என்று விசாரித்தார்கள். அவர்கள் சுயப்பரிசோதனை செய்யும் ஆவியை உடையவர்களாய் இருந்தனர்.

ஆண்டவருடைய எச்சரிப்பை யூதாஸ் ஆர்வமற்றுக் கேட்டுக்கொண்டிருந்த காரியம் மற்றும் நிதானமாய்த் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தது மற்றும் தீமையில் பொல்லாப்பான பிடிவாதம் ஆகியவை, வெளிப்படுத்தின அவரது இருதயத்தின் கடினமும், மாய்மாலத்தினுடைய ஆழமும், பதினொரு பேரிடம் காணப்பட்ட தாழ்மை மற்றும் அன்பின் ஆவிக்கு எதிரிடையாய்க் காணப்பட்டது. இது சாத்தானின் வல்லமைக்கு மனமுவந்து ஒப்புக்கொடுக்கும்/அடிப்பணியும் ஆத்துமாவிற்கான நம்பிக்கை ஏதேனும் இல்லாத நிலைக்கு உதாரணமாய்க் காணப்படுகின்றது. வசனம் 21, யூதாஸ் சீர்ப்பொருந்திடுவதற்கான எந்த நம்பிக்கையின் வெளிச்சத்தையும் வீசிடவில்லை. யோவான் 17:12-ஆம் வசனத்தையும் பார்க்கவும். தேவனுடைய காருண்யமானது, யூதாசினுடைய இருதயத்தைக் கடினப்படுத்த மாத்திரமே செய்தது; ஆகையால் அவரைக் குணப்படுத்த எதுவும் இல்லை.

வசனங்கள் 22-24; அப்பம் மற்றும் திராட்சரசமாகிய அடையாளங்களினுடைய வெளிப்படையான அர்த்தத்தினைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. பிட்கப்பட்ட அப்பமானது, நம்முடைய மீட்பிற்கென்று கிறிஸ்துவினுடைய மனுஷீகம் பலிச் செலுத்தப்பட்டதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இந்தப் பலியினுடைய பயன்களானது விசுவாசத்தின் மூலமாக தனித்தனியே சொந்தமாக்கிக்கொள்ளப்பட வேண்டும்; இப்படிச் சொந்தமாக்கிக்கொள்ளும் காரியமானது, அதைப் புசிக்கும்

காரியத்தினால் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. பாவமன்னிப்புண்டாகும் படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய, அவரது சிந்தப்பட்ட இரத்தத்திற்கு அடையாளமான திராட்சரச பாத்திரமானது, பிட்கப்பட்ட அப்பத்திற்குரிய அதே அர்த்தத்தினை உடையதாய் இருக்கின்றது; இதில் நாம் பங்கெடுத்தல் என்பதும்கூட, அவரது பலியினுடைய பயன்களை நம்முடையதாக்கிக் கொள்வதையும், இப்படியாய் நீதிமானாக்கப்படுவதையும் குறிக்கின்றதாக இருக்கின்றது. ஆகையால்தான் கர்த்தர், "நீங்கள் (விசுவாசத்தினால்) மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். (யோவான் 6:53) இந்த அர்த்தத்தோடுகூட அப்போஸ்தலனாகிய பவுல், இன்னொரு அர்த்தத்தையும் காண்பிக்கின்றார் (1 கொரிந்தியர் 10:16, 17); அதாவது அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென அவரது பலியில், அவரோடுகூட நம்முடைய பங்கெடுத்தலைக் காண்பிக்கின்றார் — "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 திருவிவிலியம்)

இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, யோவானால் பதிவுசெய்யப்பட்டுள்ள அந்த அனைத்து அறிவுரைகளின், தேற்றுதல்களின், ஆறுதலின், நம்பிக்கையின் வார்த்தைகள் கொடுக்கப்பட்டன மற்றும் மனதைத்தொடும் அந்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. (யோவான் 13:33-38; 14-17 வரையிலான அதிகாரங்கள்) இந்தக் காலப்பகுதியானது சீஷர்களால் ஒருபோதும் மறக்கப்படவில்லை மற்றும் இதன் தாக்கமானது, அவர்களது பிந்தைய நடத்தைகளில் மிகவும் வெளிப்பட்டதாய் இருந்தது.

வசனம் 25; தற்காலத்தினுடைய பாடுகள் அனைத்தும் முடிவடைகையில் கிறிஸ்து மற்றும் சபையினுடைய இறுதி ஜெயத்தை முன்னறிவிக்கின்றதாய் இருக்கின்றது. அப்பொழுது அவர்கள் ஒன்றாய்க் கூடிக்கொண்டாடிடும் விருந்திற்கு, புதிய மற்றும் பாக்கியமான அர்த்தமிருக்கும்; அது அவர்களது விசுவாசத்தினுடைய வீரத்திற்கும், மிகுந்த கடுமையான பரீட்சைகளின்கீழ்த் தெய்வீக நோக்கத்திற்கான அவர்களது உண்மைக்குமான ஞாபகார்த்தமான கொண்டாட்டமாயும் மற்றும் அந்த விசுவாசம் மற்றும் உண்மையினுடைய வெற்றியில், ஒன்றாய்ச் சேர்ந்து களிகூருவதாயும் இருக்கும்.

வசனம் 26; "அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்." (மாற்கு 14:26) அவர்கள் கலைந்துபோவதற்குப்பதிலாக, சேர்ந்துபோனார்கள். யூதாஸ் தனது மிகக் கொடூரமானத் திட்டத்தை நிறைவேற்றிட போனபோது, கர்த்தருடைய துக்கத்தையும், எச்சரிப்புகளையும் கவனித்தவர்களாகப் பதினொருபேரும் தங்கள் அன்பினாலும், அனுதாபத்தினாலும் அவரைத் தேற்றிடு வதற்கும், அவருக்கு உதவிபுரிந்திடுவதற்கும் நாடினார்கள்.

# எசேக்கியாவின் மாபெரும் பஸ்கா

## 2 நாளாகமம் 30:1-13

### "நீங்கள் கர்த்தருக்கு உடன்பட்டு, அவருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு வாருங்கள்." (வசனம் 8)

ஏசாயாவின் தரிசனமும், இஸ்ரயேலின் வீழ்ச்சியைக் குறித்து அறிவிப்பதற்கான அவரது பணியும், "இராஜாவாகிய உசியா" மரணமடைந்த வருஷத்திலாகும் (ஏசாயா 6:1). உசியா இராஜாவிற்குப் பின்பு துன்மார்க்கமான இராஜாவாகிய ஆகாஸ் யூதாவின் அரியணையில் வந்து, 16-வருடங்களாகத் தேவனையும், அவரது பிரமாணங்களையும் புறக்கணித்தவனாய்த் துன்மார்க்கமாய் ஆளுகைச் செய்துவந்தான். ஆனால் இவருக்கு ஒரு சிறந்த மனைவி காணப்பட்டாள் மற்றும் அபியாளாகிய இவளது கவனமுள்ள பராமரிப்பின்கீழ், இவர்களது குமாரனாகிய எசேக்கியா இராஜ்யபராத்திற்கென ஆயத்தப்படுத்தப்பட்டு வந்தார் மற்றும் எசேக்கியா அநேக விதத்தில் முன்மாதிரியான ஓர் இராஜாவாகவும், தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரனுமானார். இராஜ குடும்பத்துடன் ஏசாயா தீர்க்கத்தரிசி தொடர்புகொண்டவராய்க் காணப்பட்டப்படியால், இவர் எசேக்கியாவிற்கு ஆசிரியராக இருந்திருப்பார் என்றும், சரியாய்ச் சிந்திப்பதற்கும், செய்வதற்கும் எசேக்கியாவை வழிநடத்துவதற்கு உதவியிருந்திருப்பார் என்றும் அனுமானங்கள் காணப்படுகின்றன. இத்தனைப் பொல்லாத ஒரு தகப்பனிடத்திலிருந்து, இப்படி ஒரு நல்ல குமாரன் வந்துள்ளதான உண்மையானது, தெய்வீக ஏற்பாட்டின்கீழ், நாம் நமது மூதாதையர்களின் பொல்லாப்பான தன்மைகள் அனைத்தையும் சுதந்தரித்துக்கொள்வோம் என்பதாய் இருப்பதில்லை என்பதற்கு நமக்குச் சான்று பகர்கின்றது. இவைகளை நாம் முழுமையாய் ஜெயங்கொள்ள முடியாதென்றாலும், தனிப்பட்ட பிரயாசங்கள் மற்றும் பயிற்றுவிக்கப்படுதல்களின் விளைவாக ஆதாமின் சந்ததியிலுள்ள எவரேனும் பூரணத்தைத் திரும்ப அடையப்பெறுவதற்கு எதிர்ப்பார்க்க முடியாது என்றாலும், சாதகமானச் சூழ்நிலைமைகள், மத ரீதியான பேணிவளர்த்தல் முதலானவைகள், இவைகளினால் சரியாய் இயக்கப்படுபவர்களைப் பெரியளவிலான சீர்த்திருந்துதலுக்கு நேராக வழிநடத்துகின்றது என்று நாம் காண்கின்றோம்.

இங்கு ஆயிரவருட காலத்தின்போது உலகம் - ஆசீர்வதிக்கப் படுவதற்கும், தூக்கிவிடப்படுவதற்கும் கர்த்தரால் பயன்படுத்தப்படும் வழிமுறைகள் குறித்த குறிப்பை நாம் பெற்றுக்கொள்கின்றோம். மனித குடும்பமானது, அது காணப்படுகின்றதான சீரழிந்த நிலைமையினின்று அதனையே தூக்கியெடுப்பதற்குக் கூடாததாய் உள்ளது; ஏனெனில் குறுகிய ஜீவியக்காலமும், தீமை மிகுதியாய்ப் பரவியுள்ளதாய்க் காணப்படுவதுமாகும்; ஆகையால் மனுக்குலத்தைத் தூக்கிவிடுகின்றதான வல்லமையானது, விழுகையினால் அசுசிப்படாததும், வெளியிலிருந்து வருகிறதுமான வல்லமையாகக் காணப்பட வேண்டும். இன்னுமாக மனிதன் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்தும், பெலவீனத்திலிருந்தும் முழுமையாய் விடுவிக்கப்படுவதற்கு முன்னதாக, தெய்வீகத் தீர்ப்பினுடைய நிபந்தனைகளின்கீழ், மனிதனுடைய

பாவத்திற்கான தண்டனை ரத்துச் செய்யப்பட வேண்டும்; அவனது தண்டனையானது, அவனுக்காகச் சந்திக்கப்பட வேண்டும். இந்த மீட்பானது (அ) விலைக்கொடுத்து வாங்குதலானது, மனுக்குலத்திற்காக ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ளது; பாவத்திலிருந்தும், மனதிலும், ஒழுக்கத்திலும், சரீரத்திலுமான சீரழிவுகளாகிய அதன் பின்விளைவுகளிலிருந்தும் மனுக்குலமானது விடுவிக்கப்படுவது என்பது, எதிர்க்கால வேலையாகும் மற்றும் இது கிறிஸ்துவின் மாபெரும் பலியினால் சாத்தியமாக்கப்படும். மனுக்குலத்தை மீட்டுக்கொண்டவரும் மற்றும் வல்லமைக்கும், மகா மகிமைக்கும் உயர்வாய் உயர்த்தப்பட்டவரும், மனுக்குலத்தின் குடும்பத்தில், தமது கிருபையை ஏற்றுக்கொள்பவர்கள் எவரையும் நீதியினிடத்திற்கும், பரிபூரணத்தினிடத்திற்கும் தூக்கிவிடுவதற்கென்று சீக்கிரத்தில் தமது இந்த வல்லமையை மனிதன் சார்பில் பயன்படுத்தப்போகின்றார் என்ற கருத்து கிருபை நிறைந்ததாயுள்ளது. தூக்கிவிடும் பணியானது, போதித்தல், சிட்சித்தல், நீதியில் சரிப்படுத்துதலின் அடிப்படையில் காணப்படும் மற்றும் இவைகள் விஷயத்தில் ஒவ்வொருவனும் "உலகத்தோற்றமுதல் பரிசுத்தத் தீர்க்கதரிசிகளெல் லாருடைய வாக்கினாலும் தேவன் உரைத்திட்டதான அனைத்திலும் சீர்ப்பொருந்தப்படுதலை" அடையத்தக்கதாக, ஒத்துழைப்புக் கொடுப்பதற்குக் கடமைப்பட்டிருப்பான் (அப்போஸ்தலர் 3:19-21).

எசேக்கியா ஏற்கெனவே நன்கு போதிக்கப்பட்டிருந்தார் என்பதும், அவரது தகப்பனாருடைய மரணத்தின்போதும் மற்றும் அவர் இராஜ பதவியில் பிரவேசிக்கும் போதும் கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணினவராய் இருந்தார் என்பதும் அவர் தனது ஆளுகையை ஆரம்பித்தவுடனே - தனது இராஜ்யபாரத்தினுடைய முதலாம் மாதத்தில், இப்பாடத்தில் நாம் பார்க்கிற சீர்த்திருத்தங்களை, அதாவது தெய்வீக நியமித்தலின்படியே யேகோவா தேவனுக்கான தொழுதுகொள்ளுதலை மீண்டும் கொண்டுவந்தார் என்பதில் உறுதியாகுகின்றது. ஒருவேளை அவர் கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணாதவராய்க் காணப்படுவாரானால் மற்றும் சரியான இருதய நிலைமையில் காணப்படாமல் இருந்திருப்பாரானால், அவர் அதிகாரத்திற்கு உயர்ந்த காரியமானது, நேர் எதிர்மாறானவைகளைச் செய்திடுவதற்கு அவரை இயக்கியிருந் திருக்கும் மற்றும் சுயத்தைத் திருப்திப்படுத்துவதற்கும், இறுமாப்புக் கொள்வதற்கும் அவரை வழிநடத்தியிருந்திருக்கும்.

வருஷக் கணக்காகத் திறக்கப்படாமலும், செப்பனிடப்படாமலும், அதிக அளவிலான குப்பைகள் குவியுமளவுக்கு விடப்பட்டிருந்த நிலையிலுமான ஆலயத் தினைத் திறப்பதும், ஆயத்தப்படுத்துவதும் அவரது முதலாம் வெளியரங்கமானப் பணியாய் இருந்தது. இராஜா இந்த வேலையில் தனக்கு உதவிச் செய்திடுவதற்குரிய சரியான உதவியாளர்களை, அதாவது தேவனால் நியமிக்கப்பட்டிருந்ததான லேவிக் கோத்திரத்தாரை அழைத்தார். ஆலயத்தின் சுத்திகரிப்பானது, மோசேயினுடைய பிரமாணத்திற்கு ஏற்ப நடைப்பெற்றது மற்றும் நிறைவேறி முடிந்தபோதோ, முதலாவதாகச் செய்ய வேண்டியிருந்தது மகா பெரும் பாவநிவாரண பலிச்செலுத்துதலாகும். இராஜாவாகிய எசேக்கியா பரந்த மனப்பான்மையுடையவராக இருந்து, பலியானது யூதேயாவின் ஜனங்களாகிய இரண்டு கோத்திரத்தாரின் சார்பாக மாத்திரமல்லாமல், தங்களைவிட்டுப் பிரிந்துபோனதான சகோதரராகிய

"இஸ்ரயேலர்கள் அனைவரின்" சார்பாகவும் செலுத்தப்படுவதற்கு விசேஷித்தக் கட்டளைகளிட்டார்.

சில விதங்களில், அதாவது தெய்வீக வாக்குத்தத்தங்களானது ஆபிரகாமின் சந்ததியார் அனைவருக்குமாகப் பண்ணப்பட்டுள்ளது எனும் விதத்தில் [10 இஸ்ரயேலரும், 2 யூத கோத்திரத்தாரும்] இஸ்ரயேல் ஜாதியார் ஒன்றாகத்தான் உள்ளதாக, எசேக்கியா சரியாய் அடையாளம் கண்டுகொண்டிருந்தார்; ஆகையால் கர்த்தராகிய ஆண்டவரை தேவன் என்று அங்கீகரித்தும், அவரது முகத்தினை நாடும் நிலையிலுமான (12) அனைத்துக் கோத்ததிரத்திலுமுள்ள எவரும் சக இஸ்ரயேல் சகோதரனாகக் கருதப்பட வேண்டும்.

எகிப்திலிருந்துள்ள இஸ்ரயேலுக்கான கர்த்தருடைய விடுதலையின் நினைவுகூருதலுக்குரிய பஸ்கா பண்டிகையின் காலமாய் அப்போதிருந்தது; பஸ்கா பண்டிகையானது, பாவம் மற்றும் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து ஆவிக்குரிய இஸ்ரயேலனுக்கான விடுதலைக்கு நிழலாய்க் காணப்படுகின்றது; இன்னுமாக நீதியை விரும்பி, கர்த்தருக்கு ஊழியம்புரிய விரும்புகிறவர்கள், ஆயிரவருடக் காலத்தின்போது, சாத்தானுடைய முழுமையான கவிழ்க்கப்படுதலின் வாயிலாக, அவனது அடிமைத்தனத்திலிருந்து இறுதியில் விடுவிக்கப்படுகிறதற்கும்கூட நிழலாய்க் காணப்படுகின்றது. இந்தப் பஸ்கா பண்டிகையானது, அந்த வருஷத்தில் முறையாய் ஆசரிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது; ஏனெனில் பதிவை வைத்துப்பார்க்கும்போது, பஸ்கா பண்டிகையானது சில இஸ்ரயேலர்களால் கைக்கொள்ளப்பட்டு வரப்பட்டிருந்தப்போதிலும், மத சம்பந்தமான விஷயத்தில் பரவலாய் ஒழுங்கீனம் நிலவியிருந்தபடியால், பஸ்காவானது அந்த ஜனங்களினால் கைக்கொள்ளவும் படவில்லை மற்றும் கைக்கொள்ளப்பட்டவர்களால் அதில் நியமித்து வழங்கப்பட்டதான அம்சங்கள் அனைத்துடன் கைக்கொள்ளவும் படவில்லை. இம்முறை அதன் முறையான ஆசரிப்பு மீண்டுமாகத் தொடங்கப்பட வேண்டும் என்றும், ஆசரிப்பதற்கு முன்னதாக ஜனங்களுடைய சுத்தீகரிப்புத் தொடர்பாகவும், ஜனங்கள் தங்கள் வீடுகளிலிருந்து பாவத்திற்கு அடையாளமான புளிப்பைப் புறம்பாக்கிப்போடுவது தொடர்பாகவுமுள்ள நியாயப்பிரமாணத்தின் காரியங்கள் அனைத்தையும் முறைப்படிச் செய்ய வேண்டும் என்றும் இராஜா தீர்மானம்பண்ணினார் (யாத்திராகமம் 12:15-20); இப்படியாக அடையாள விதத்திலாகிலும், ஜனங்கள் பண்டிகையை ஆசரிக்கத்தக்கதாகப் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாய்க் காணப்படுவார்கள். ஆனால் இவைகள் அனைத்திற்கும் காலம் தேவைப்பட்டது; அதாவது கட்டளைகள் பிறப்பிக்கப்படுவதற்கும், ஜனங்களுடைய பக்திவைராக்கியம் தூண்டிவிடப்படுவதற்கும் மற்றும் பாவத்திலிருந்து விலகுதல், கர்த்தருக்குப் பரிசுத்தமாய் இருத்தல் என்பவைகளை அடையாளப்படுத்துகின்றதான இவ்வேலைகளை ஜனங்கள் செய்திடுவதற்குத் தூண்டிடப்படுவதற்கும் காலம் தேவைப்பட்டது. ஜனங்கள் அவ்வளவுக்கு அசுசியுடன் இருந்தபடியாலும், முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியாகிய நியமிக்கப்பட்ட நாளில்தானே பஸ்காவை ஆசரிக்கத்தக்கதாக ஆயத்தமாகுவதற்குக் காலம் மிகவும் குறைவாய் இருந்தபடியாலும், கர்த்தருடைய அனுமதியின்பேரில் பஸ்காவானது இரண்டாம்

மாதத்தினுடைய 14-ஆம் தேதியன்று ஆசரிக்கப்பட்டது (எண்ணாகமம் 9:10, 11).

அனைத்து இஸ்ரயேலர்களின் சார்பாகப் பாவநிவாரண பலிச்செலுத்தப்பட வேண்டுமென்று எசேக்கியாவின் அறிவுறுத்தலில் வெளிப்பட்டதான அதே மனம் மற்றும் இருதய நிலைமையானது, இன்னும் அவரை இயக்கினதாய்க் காணப்பட்டு, "யூதேயாவில்" மாத்திரம் சீர்த்திருந்துதலை விரும்பாமல், தங்களிடமிருந்து பிரிந்து காணப்படுகின்ற சகோதரராகிய "இஸ்ரயேலிலும்" சீர்த்திருந்துதலை விரும்பிடுவதற்கு அவரை வழிநடத்தினதாய் இருந்தது. இதனால் விசேஷமான தூதுவர்கள், ஒவ்வொரு கோத்திரத்திலுள்ள அனைத்து இஸ்ரயேலர்களையும் யேகோவா தேவனைத் தொழுதுகொள்வதற்குத் திரும்பிடுவதற்கும் மற்றும் இந்தப் பண்டிகைக்கு விசேஷமாய் வந்திடுவதற்கும் உரிய அழைப்பினை விடுப்பதற்கு இஸ்ரயேல் தேசத்தினுடைய தெற்கு ஓரத்தில் இருக்கும் பட்டணமாகிய பெயெர்செபாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டனர். இன்றைய நாட்களிலுள்ள அஞ்சல் (post) முறைமையானது அப்போது நடைமுறையில் இல்லை; ஆகையால் இந்தக் கடிதங்களை எடுத்துச்செல்வதற்கு அப்போது விசேஷமான அஞ்சல் ஏற்பாடு பண்ணப்பட்டது.

இத்தகைய ஓர் அழைப்பு விடுக்கப்பட்டதான காலம் மிகவும் ஏற்றக்காலமாகும், ஏனெனில் இஸ்ரயேல் சிறையிருப்பிற்குள் கொண்டுபோகப்படுதல் குறித்ததான ஏசாயாவின் தீர்க்கத்தரிசனமானது ஏற்கெனவே நடைபெற்றுக்கொண்டிருந்தது; இக்காலக்கட்டத்தில் பத்துக் கோத்திரங்களும் அசீரியாவிற்குக் கப்பம் கட்டிக்கொண்டிருந்தனர் மற்றும் அநேக ஜனங்கள் (சிறைப்பிடித்து) கொண்டுபோகப்படுதலானது, உண்மையில் ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டது. ஆகையால் "உத்தம இஸ்ரயேலர்களாய்க்" காணப்படும் எல்லோருக்கும், அவர்கள் சிறைப்பட்டுப் போவதானது, அவர்கள் கர்த்தரைப் புறக்கணித்ததற்கான தண்டனை என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவருகின்றதாகவும், கொஞ்சமேனும் விசுவாசமும், பக்திவைராக்கியமும் கொண்டிருப்பவர்களை, கர்த்தரைத் தொழுதுகொள்வதற்கெனத் திரும்பிடுவதற்குத் தூண்டிவிடுகின்றதாகவும் கர்த்தருடைய இந்த (எசேக்கியாவின் கடிதம் மூலமான) ஏற்பாடு காணப்பட்டது. இராஜாவாகிய எசேக்கியாவின் கடிதமானது, கழிந்ததை நினைவுகூருவதற்கும், யேகோவா தேவனிடத்திற்குத் திரும்பிடுவதற்கு மான சுருக்கமான புத்திமதியாகவே காணப்பட்டது. "தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்குத் துரோகம்பண்ணின உங்கள் பிதாக்களைப்போலவும் உங்கள் சகோதரரைப்போலவும் இராதேயுங்கள்; அதற்காக, நீங்கள் காண்கிறபடியே, அவர்கள் பாழாய்ப்போகிறதற்கு ஒப்புக்கொடுத்தாரே;" "நீங்கள் கர்த்தருக்கு உடன்பட்டு, அவர் சதாகாலத்துக்கும் பரிசுத்தம்பண்ணின அவருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு வந்து . . . அப்பொழுது அவருடைய உக்கிரமான கோபம் உங்களைவிட்டுத் திரும்பும்" (2 நாளாகமம் 30:7, 8).

இந்தப் புத்திமதியானது, தற்போதைய விடுதலையை மாத்திரம் குறிப்பிடாமல், ஏற்கெனவே நாடு கடத்தப்பட்டுள்ள அவர்களது சகோதரருடைய திரும்பிவருதலையுங் கூடக் குறிப்பிட்டதாய் இருந்தது. ஆனால் இந்தச் செய்தியைச் சுமந்துவந்ததான தூதர்கள் வடக்குப்புறமான இராஜ்யத்தில் பரியாசம் பண்ணப்பட்டார்கள். எந்தளவுக்கு

ஜனங்கள் கர்த்தரிடமிருந்து விலகி இருந்தார்களோ, அந்தளவுக்கு அவர்கள் பெருமையும், இறுமாப்பும் உடையவர்களாய் இருந்தனர் மற்றும் இப்படியாகவே எப்போதும் இருந்துவந்துள்ளது; மற்றும் இவர்களது அதிகளவிலான பெருமையே, இவர்கள் ஒரு தேசமாக அழிவிற்குள் செல்வதற்கு வழிநடத்தினதாய் இருந்தது. கர்த்தரோடு இசைவிற்குள் காணப்படுகின்றதான அனைவரும் தாழ்மையான மனமுடையவர்களாய் இருப்பார்கள் மற்றும் இப்படிப்பட்டவர்கள் மாத்திரமே மதிப்புடன் (அ) அன்புடன் கர்த்தருடைய கிருபை நிறைந்த செய்தியினை ஏற்றுக்கொள்வார்கள் மற்றும் செய்திகளைச் சுமந்துவந்த ஊழியக்காரர்களையும் நன்றாய் நடத்துவார்கள். (இஸ்ரயேலில்) இம்மாதிரியான சூழ்நிலைகளின் மத்தியில் கீழ்ப்படிபவர்கள் அதிகளவிலான விசுவாசமும், யேகோவா தேவனுக்கு அன்பும் கொண்டிருந்திருக்க வேண்டும்; ஏனெனில் இவர்களுங்கூட, இவர்களை அழைத்ததான தூதுவர்களுடனே, விசுவாசமற்ற ஜனங்களுடைய கேலிக்கும், ஏளனத்திற்கும் ஆளாகியிருந்திருப்பார்கள். அநேகர் இல்லையென்றாலும், கொஞ்சம்பேர் தங்களைத் தாழ்த்திக்கொண்டார்கள் என்றும், இவர்கள் ஆசேர், மனாசே மற்றும் செபுலோன் கோத்திரங்களிலிருந்து வந்தார்கள் என்றும் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது; இவர்களும் தங்களைத் தாழ்த்துகிறவர்களுக்கும், கீழ்ப்படிகிறவர்களுக்கும் தேவன் எப்போதும் அருளுகின்றதான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்கள். வசனம் 11-இல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளோடுகூட, 18-ஆம் வசனத்தில் எப்பிராயீம், மனாசே, இசக்கார், செபுலோன் கோத்திரங்களிலிருந்து "ஏராளமான அநேகம்" ஜனங்கள் வந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் பார்க்கின்றோம். இப்படியாக பத்துக் கோத்திரத்திரங்களில், ஐந்து கோத்திரங்களிலிருந்து ஏறக்குறைய கொஞ்சம் ஜனங்கள் வந்தார்கள் மற்றும் ரூபன், காத் எனும் இரண்டு கோத்திரங்கள் ஏற்கெனவே சிறைப்பட்டுப் போயிருந்தனர். இஸ்ரயேலாகிய தங்கள் சொந்த தேசத்தில் பரவிக்கிடந்த விக்கிரக ஆராதனையின் காரணமாகவும், யூதேயாவில் பக்தியான ஜீவியத்திற்கான சிறந்த வாய்ப்புகள் காணப்பட்டதன் காரணமாகவும், பத்துக் கோத்திரங்களிலுள்ள சில மனுஷர்கள் ஏற்கெனவே தங்களை யூதேயாவின் இராஜ்யத்துடன் இணைத்துக் கொண்டார்கள் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும் (2 நாளாகமம் 15:9).

யூதேயா முழுவதும், பஸ்கா பண்டிகைக்குக் கலந்துகொள்வதற்கான அழைப்பானது, மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது; "யூதேயாவிலும் கர்த்தருடைய வார்த்தையின்படியே, இராஜாவும், பிரபுக்களும் கட்டளையிட்டபிரகாரம் செய்கிறதற்கு, தேவனுடைய கரம் அவர்களை ஒருமனப்படுத்திற்று." (2 நாளாகமம் 30:12) இதன் விளைவாக, அந்த வருஷத்தில், எருசலேமில் வழக்கத்திற்கு மாறாக திரளான அளவில் ஜனங்கள் கூடிவந்திருந்தார்கள். சாலொமோனின் நாட்கள் முதற்கொண்டு, அதாவது 250 வருடங்களாக இப்படியானதொரு பஸ்கா ஆசரிக்கப்பட்டதில்லை என்பதாக பதிவுகள் காணப்படுகின்றன. பண்டிகையானது, மகா சந்தோஷத்துடனும், ஆனந்தத்துடனும், கர்த்தரை துதித்தும், பாடியும் ஆசரிக்கப்பட்டது; பக்தி பரவசத்தினால் ஜனங்கள் மிகவும் ஆட்கொள்ளப்பட்டுக் காணப்பட்டபடியால், அவர்களது யோசனையின் பேரிலேயே துதித்தலுக்கும், பரிசுத்தமானவைகளிடத்தில்

பரிசுத்தமான உணர்வுகளைக் கொண்டிருத்தலுக்குமான பஸ்கா வாரத்தினை, இன்னும் ஒரு வாரம் நீட்டி ஆசரித்தார்கள் (வசனம் 21-26).

உண்மையான கபடற்ற இஸ்ரயேலர்கள், பத்துக் கோத்திரங்களினுடைய இராஜ்யத்தினின்று, அந்தநாளில் இரண்டு கோத்திரங்களினுடைய இராஜ்யத்தினிடத்திற்குச் சேர்க்கப்பட்டனர் என்ற உண்மையை இங்கு நாம் சற்று நிறுத்தி, கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம். யூதாவின் பிந்தைய சிறைப்பிடிப்பிற்குப் பிற்பாடு, இஸ்ரயேலில் இருந்த பிரிவுகளானது, அடையாளம் தெரியாமலாகிவிட்டது. சிறையிருப்பிலிருந்து திரும்பிடுவதற்கான அனுமதியின் கோரேசினுடைய கட்டளையானது, எந்தக் கோத்திர பிரிவினருக்கென்று குறிப்பிடாமல், இஸ்ரயேல் அனைவருக்கும் என்று பிறப்பிக்கப்பட்டது; மற்றும் திரும்பி வந்தவர்களான அனைத்துக் கோத்திரங்களிலுமுள்ள உண்மையுள்ளவர்கள் ஒன்று சேர இஸ்ரயேல் என்று அடையாளம் கண்டுகொள்ளப்பட்டனர் மற்றும் பிற்பாடு இப்படியாகவே வேதத்தில் குறிப்பிடவும்பட்டுள்ளனர். [concordence] கன்கார்டன்ஸ் புஸ்தகத்தைப் பயன்படுத்தி, புதிய ஏற்பாட்டில் 'இஸ்ரயேல்' என்று குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்களைக் கவனியுங்கள். யூதர்கள் மாத்திரம் என்றில்லாமல் இஸ்ரயேலில் மீதியானவர்களும்தான் சுவிசேஷயுகத்தில் கூட்டிச் சேர்க்கப்பட்டனர் மற்றும் மீதியானவர்களோ, சுவிசேஷயுகத்தில், "தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய," ஆவிக்குரிய இஸ்ரயேல் தெரிந்தெடுக்கப்படுவது வரையிலும், "கடினப்பட்டிருப் பார்கள்," உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களிலிருந்து முறித்துப்போடப்பட்டவர்களாக இருப்பார்கள். (உரோமர் 11:7, 25-32 பார்க்கவும்)

எசேக்கியாவினால் கொண்டுவரப்பட்டதான உண்மையான பக்தியின் விஷயத்திலான மறுமலர்ச்சியானது, அந்தப் பஸ்காவோடு முடிவடைந்து போகவில்லை. இது கர்த்தரை உண்மையாய்த் தொழுதுகொள்வதற்கும், ஆசாரியர்கள் மற்றும் லேவியர்களைத் தாங்கிடவும், பலிக்கடுத்தவைகளைப் பராமரிக்கவும் வேண்டி தாராளமாய்க் கொடுப்பதற்குமான பக்திவைராக்கியத்தினால் ஜனங்களை நிரப்பினதோடுகூட, யூதேயா தேசம் முழுவதிலும், இன்னுமாக பத்துக் கோத்திரங்களுடைய தேசத்திலும், அனைத்து விதமான விக்கிரக ஆராதனைக்கு எதிராக மிகுந்த கிளர்ச்சி உருவாகுவதற்கு நேராக வழிநடத்தினதாய் இருந்தது; இதன் காரணமாக தேசத்தில் விக்கிரகங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன, பாகாலுக்கான கட்டுப்பாடற்ற வழிபாட்டிற்கெனப் பயன்பட்டுவந்ததான அருவருப்பான மேடைகள் அழிக்கப்பட்டன. இப்படி ஜனங்கள் கர்த்தருக்கு நேராய்த் திரும்பினதன் காரணமாக, அந்த ஜாதியாருடன் பண்ணப்பட்டிருந்ததான தேவனுடைய உடன்படிக்கைக்கு இசைவாக அவர்கள்மீதும், அவர்களுடைய இராஜாவின்மீதும் மாபெரும் பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் கடந்துவந்தன. இராஜா மிகவும் ஐசுவரியவானானார் மற்றும் ஜனங்களும் இப்படியானதால், கர்த்தருக்கான அவர்களது காணிக்கைகளும், தசமபாகங்களும், லேவியர்களுக்கும், ஆசாரியர்களுக்கும் கொடுப்பதற்குப் போதுமானதாய் மாத்திரம் காணப்படாமல், மிகவும் திரளாய்க் காணப்பட்டதினால், அவைகளை வைப்பதற்குப் பண்டகசாலைகள் கட்டப்பட்டன.

இவைகளில் ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கான ஒப்புமைகளுக்காக நோக்குகையில்,

அநேகவற்றை நாம் காண்கின்றோம்: (1) உண்மையான தேவபக்தி அனைத்துமே ஒழுங்கு மற்றும் (சுத்திகரித்தலுடன்) துப்புரவுடன் முழுவதும் ஒத்துவருகின்றதாய் இருக்கின்றது; அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவதுபோன்று, ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார் மற்றும் யாரொருவன் தேவனுடைய ஆலயத்தைச் சுத்திகரிப்பதற்கும், தெய்வீக ஒழுங்கு முறைக்கு இசைவாய்க் கொண்டுவருவதற்கும் முயல்வானோ அவன் - எசேக்கியாவும், அவரது இராஜ்யமும் ஆசீர்வதிக்கப்பட்டதுபோலவே, இப்பொழுது ஆசீர்வதிக்கப் படுவான் என்று சொல்லலாம்; ஆனாலும் ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள பலன்களானது, பூமிக்குரிய ஆசீர்வாதங்களாயிராமல், ஆவிக்குரியவைகளாக இருக்கின்றன என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். (இன்னமும் நிறைவடையாத) ஜெயங்கொள்ளும் சபையே உண்மையான ஆலயமாகக் காணப்பட்டாலும், இப்பாடத்தில் இதுவரையிலும் பார்த்து வந்துள்ளவைகளில் தற்காலத்திலுள்ள கர்த்தருடைய சபையாரே, அவரது ஆலயமாகப் பெயரளவில் கருதப்படலாம். எனினும் இந்தப் படிப்பினையை நாம் நமது சொந்த இருதயங்களுக்குக்கூடப் பொருத்திப்பார்த்திடலாம்; ஏனெனில் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றதுபோல, ஒவ்வொரு கிறிஸ்தவனும் பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாக இருக்கின்றான் மற்றும் சபையுங்கூட மொத்தத்தில், அதன் தற்போதைய அபரிபூரணமான நிலைமையிலுங்கூட கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட, சமர்ப்பிக்கப்பட்ட, பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாகக் கருதப்படலாம். ஆகையால் நமது பிரதான ஆசாரியனுடைய மாபெரும் பாவநிவாரணத்தின் காரணமாக நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஆவிக்குரியவைகளில் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், அவன் சகல உலகப்பிரகாரமான அசுசியிலிருந்து தன்னையும் (தன்னால் முடிந்த மட்டும், தன்னோடுகூட உள்ளவர்களும், இதே சிந்தையுள்ளவர் களுமாகிய மற்றவர்களையும்) நீங்கப்பெற்ற நிலையில் காத்துக்கொள்வதற்கு நாடிட வேண்டும். கடந்த காலங்களிலுள்ளவைகள் மாத்திரமல்லாமல், உலகத்தில் எப்போதும் காணப்படும் உலகப்பிரகாரமான அசுசிகளிலிருந்தும் சுத்திகரிக்கப்படுவதற்கான அவசியத்தினைக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் நினைவில்கொள்ள வேண்டும். "பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக் கடவோம்" (2 கொரிந்தியர் 7:1) என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை நாம் நினைவுகூருகின்றோம்.

வெறுமனே சுத்திகரிப்புச் செய்யப்படக்கூடாது, மாறாக தெய்வீக ஒழுங்குமுறைக்கு இசைவாய்ச் செய்யப்பட வேண்டும். எசேக்கியாவும், ஆசாரியர்களும், லேவியர்களும், இஸ்ரயேலினுடைய உடன்படிக்கைக்கான மத்தியஸ்தராகிய "மோசேயினுடைய நியாயப்பிரமாணத்திற்கு" ஏற்ப சுத்திகரித்து, பரிசுத்தம் பண்ணினதுபோல், புத்திரர்கள் வீட்டாராகிய நாமும் "புதிய உடன்படிக்கையின்" மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு ஏற்ப, அதாவது

"பிரியமானவருக்குள்" நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டதான பிரமாணத்திற்கு ஏற்ப சுத்திகரிக்கப்படுவதற்கும், பரிசுத்தம் பண்ணப்படுவதற்கும் நாட வேண்டும். நியாயப்பிரமாணத்தின் கீழ் ஒரு விதமான விதிமுறைகளின்படி சடங்குகள் ஆசரிக்கப்பட வேண்டியிருந்ததுபோன்று, சுவிசேஷத்தின் கீழிலும் ஒருவிதமான விசுவாசமும், ஒரு விதமான நல் வார்த்தைகளும், ஒரு விதமான கீழ்ப்படிதலும் கடைப்பிடிக்கப்பட வேண்டியிருந்தது. நமது சுத்திகரித்தலானது, காளை மற்றும் ஆட்டினுடைய இரத்தத்தினால் உண்டாகாமல், மாறாக கிறிஸ்துவினுடைய மிகுந்த விலையேறப்பெற்றதான இரத்தத்தின் புண்ணியத்தினாலேயே உண்டாகின்றது; கிறிஸ்துவினுடைய இரத்தமானது, அவரது மரணத்தின் காரணமாக நம்மிடத்தில் பழிவாங்குதலைப் பேசாமல், பிதாவினிடத்தில் அவர் மூலமாய்க் கடந்துவருபவர்கள் அனைவருக்கும் இரக்கத்தையும், மன்னிப்பையும், கிருபையையும் பேசுகின்றதாய் இருக்கின்றது.

(2) கர்த்தரைத் தொழுதுகொள்ளும் விஷயத்தில் இணைந்துகொள்வதற்கு விரும்புகின்ற இஸ்ரயேலர்கள் அனைவரையும், சகோதரர்களெனக் கருதுவதும், தொழுதுகொள்ளுவதற்கென அவர்களை வரவேற்பதுமாகிய எசேக்கியாவின் பரந்த மனப்பான்மையுடனான கருத்திலுங்கூட நமக்கு ஒரு படிப்பினை உள்ளது. இது தொடர்புடைய விஷயத்தில் அவர் பரந்து, விரிந்த, வேதவாக்கியங்களின் அடிப்படையிலான கருத்தைக்கொண்டிருந்தது மாத்திரம் போதாது; கர்த்தருடைய ஜனங்கள் நடுவில் எவ்விதமான பிரிவினையின் வேலிகள் இல்லாமல் பார்த்துக் கொள்வதும், கர்த்தருடைய வீடாகிய ஆலயத்தில், கர்த்தரைத் தொழுதுகொள்வதற்கு ஏற்பாடுபண்ணுவதும் அவரது கடமையாகவும், சிலாக்கியமாகவும் இருந்தது. இப்படியாகவே ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் மத்தியிலும், "உத்தம இஸ்ரயேலர்கள்" அனைவரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கின்றார் கள் என்ற உணர்ந்து கொள்ளுதல் காணப்பட வேண்டும் மற்றும் அனைவரையும் கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினை மாபெரும் பாவநிவாரணம் என்று நம்புகின்ற உத்தம இஸ்ரயேலர்களாகவும், கர்த்தருடைய ஊழியத்திற்கென அர்ப்பணித்துள்ள உத்தம இஸ்ரயேலர்களாகவும் எண்ணி, நடத்திட வேண்டும். இப்படியாய் அடையாளம் கண்டு கொள்கின்றதான கிறிஸ்தவ பண்பானது, கடந்த நூற்றாண்டினுடைய பாதி முதற்கொண்டு அதிகளவில் பெருகிவருகின்றது என்று நம்புவதில் நாம் மகிழ்ச்சிக்கொள்கின்றோம்; இன்னும் செய்யப்பட வேண்டியவைகள் அநேகம் உள்ளன: கிறிஸ்தவ பிரிவுகள் எனும் வேலிகள் அனைத்தும் தகர்க்கப்பட வேண்டும் மற்றும் பிரிவுகளின் பெயர்களும், விசுவாசப் பிரமாணங்களும் ஒழித்துக் கட்டப்பட வேண்டும்; இன்னுமாக (விலையேறப்பெற்ற இரத்தத்தில் விசுவாசித்து, கர்த்தருக்கும் மற்றும் தங்களால் புரிந்துகொள்ள முடிகிற அளவுக்கு அவரது வார்த்தைகளிலுள்ள அறிவுரைகளுக்குக் கீழ்ப்படிவதற்கும் முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ள அனைவராகிய) உண்மை கிறிஸ்தவர்கள் ஒருங்கிணைந்துக் காணப்பட வேண்டும்

மற்றும் சிலர் மற்றவர்களைக்காட்டிலும் அதிகப்படியான அறிவையும், பரிசுத்தமாக்குதலையும் அடைந்திருக்கலாமே ஒழிய, மற்றப்படி எந்த வேறுபாடுகள் இன்றி, ஒரே ஜனங்களாகக் காணப்பட்டு, "கிறிஸ்து இயேசுவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகுவதற்கு" நாட வேண்டும்.

(3) உண்மையான இஸ்ரயேலிடத்திலும், அனைவருக்குமான தேவ வாக்குத்தத்தத்திலும் உண்மையான ஐக்கியங்கொள்வதற்கும், அதுவும் அனைத்து விசுவாசப் பிரமாணங்களையும், பிரிவுகளையும் உதறி உண்மையான ஐக்கியம் கொள்வதற்குமுரிய செய்திக்கு/தூதிற்கு, அன்றும் அநேகர் ஆதரவு வழங்காதது போன்று இன்றும், ஆதரவு வழங்கப்படுவதில்லை. அன்றுபோல் இன்றும் பெரும்பாலானவர்கள் நகைப்பதற்கும் மற்றும் வேதவாக்கியங்களில் கற்பிக்கப்பட்டிருக்கின்றதும், ஆதி திருச்சபையில் கடைபிடிக்கப்பட்டதுமான கிறிஸ்து இயேசுவிலான எளிமையினை ஆதரிப்பவர்களைக் கற்பனையுலகில் சஞ்சரிப்பவர்களாக முத்திரை குறிப்பதற்கும் வழிநடத்தப்படுகின்றனர். எனினும் அன்றுபோல் இன்றும், சிலர் தங்களால் சரியான தூதென/செய்தியென அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றதான சத்தியத்தினால் ஈர்க்கப்படுகின்றனர். இஸ்ரயேலில் காணப்பட்டதுபோலவே இன்றும் கேட்ட செய்திக்கேற்ப செயல்படுவதற்குப்போதுமான தைரியம் இல்லாத நிலையில், செய்தியினைக் கேட்ட அநேகர் காணப்படுகின்றனர். அனைத்துக் கிறிஸ்தவ பிரிவுகளிலிருந்தும், வெவ்வேறான விசுவாச பிரமாணங்களைக் கொண்டிருப்பவர்கள் மத்தியிலிருந்தும் வெகு சொற்பமானவர்களே ஈர்க்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர்; இப்படிப்பட்டவர்கள் சாந்தமானவர்களாகவும், தங்களைத் தாழ்த்திடுவதற்கு ஆயத்தத்துடனும், விருப்பத்துடனும் காணப்படுபவர்களாகவும் இருப்பவர்கள் ஆவர். பெருமையுள்ளவர்களோ சபை பிரிவுணர்ச்சிக்காகவும், கனங்களுக்காகவும், மதிப்பிற்கும் போராடுகிறவர்களாய்க் காணப்பட்டு, தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தவறிவிடுவார்கள்; "சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்."

(4) தேவன் விஷயத்திலும் மற்றும் பரிசுத்த அலங்காரத்துடனும், அவரது வார்த்தை கூறுபவைகளுக்கு இசைவுடனும் தொழுதுகொள்ளும் விஷயத்திலும், பயபக்தியின் உணர்வுகளில் உண்மையான எழுப்புதல் என்பது எசேக்கியாவின் நாட்களிலும், இன்றும் மொத்தத்தில் விக்கிரகங்களை உடைப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும். ஓ! வைராக்கியத்துடன் கவிழ்த்துப்போடுவதற்குக் கர்த்தருடைய ஜனங்களுக்கு எத்தனை விக்கிரகங்கள் காணப்படுகின்றன. அவைகள் அநேகமான தோற்றங்களிலும், வடிவங்களிலும் காணப்படுகின்றன, எனினும் அவற்றின் பொதுவான தன்மை ஒன்றே. இந்த விக்கிரகங்களில் ஒன்றும், ஆயிரமாயிரம் பேர்கள் புழுதிமட்டும் விழுந்து வணங்குகின்றதுமான ஒரு விக்கிரகம் சபை பிரிவுணர்ச்சியாகும்; இன்னொரு விக்கிரகம் பணமாகும்; இன்னொன்று இச்சை; இன்னொன்று சுயநலமான

குறிக்கோள்; இன்னொன்று பெருமை; இன்னொன்று சுகபோகம் ஆகும்; இவையனைத்தும் சுயநலம் எனும் ஒரே குடும்பப் பெயருடைய லேகியோன் ஆகும். கிறிஸ்து இயேசுவுக்குள்ளான மீட்பின் வாயிலாக, கர்த்தருக்கான முழுமையான அர்ப்பணித்தலுக்குள் கடந்துவந்துள்ளவன், மற்றும் கர்த்தரைப் பரிசுத்த அலங்காரத்துடன் தொழுதுகொள்ளும் நிலைக்குள் கடந்துவந்துள்ளவன் எவனும், பாவத்தின் வாயிலாக மாபெரும் எதிராளியானவன் தன்னைத் தூண்டி, தன்னை வணங்கச் செய்ததும், தொழுதுகொள்ளச் செய்ததுமான இந்த விக்கிரகங்களிலுள்ள அருவருப்பான தன்மையை உடனடியாக உணர்ந்துகொள்வான். எந்தளவுக்கு கர்த்தருக்கான நமது பக்திவைராக்கியம் காணப்படுகின்றதோ மற்றும் எந்தளவுக்கு அவரது ஆவி நம்முடைய இருதயங்களில் காணப்படுகின்றதோ, அந்தளவுக்கு நாம் இந்த விக்கிரகங்களைத் தகர்ப்பதற்கும் மற்றும் நம்முடைய வாயின் வார்த்தைகளையும், ஜீவியத்தின் கிரியைகளையும் மாத்திரமல்லாமல், நமது எண்ணங்கள் அனைத்தையும் கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்துவதற்கும் வைராக்கியம் உடையவர்களாக இருப்போம் (2 கொரிந்தியர் 10:5).

## பெலன் தாரும் இயேசுவே

ஆசீர்வதிக்கப்பட்ட என் இயேசுவே, அனுதின சிலுவைதனை
மகிழ்வுடன் சுமக்க வேண்டிய பெலன் தாரும்.
என் அனுதின சிலுவை, எத்தன்மையதாய் இருப்பினும்,
உந்தன் நாமத்தினாலே மகிழ்ச்சியுடன் சுமந்திடவே பெலன் தாருமே.
என் அன்றாட கடமைகளைச் செய்திடும்போதினிலே
உம்மைப் பின்சென்றிட வேண்டுமே,
தினம்தினம் யான் பணிவுடனே கேட்டுப்பெற்றிட வேண்டுமே,
நீர் அருமையாய்ச் சுமந்திட்ட சிலுவைதனின் நினைவுகளுடனே
அன்றாடம் நாங்கள் செய்யும் வேலைகளைப் புனிதமாக்க வேண்டுமே,
பூமியிலே நாங்கள் இழக்கும் ஒவ்வொரு இழப்புகளையும்
ஆசீர்வாதமாகவே, இலாபமாகத் திரும்பப்பெற வேண்டுமே.
உம் பாதம் வந்துசேர்ந்து நான் சுமந்திட்ட சிலுவைதனை
உம் கால்களுக்கடியிலே சாற்றிடும் வரைதனிலே,
என் அன்றாட சிலுவைதனைச் சுமக்க உதவி தாரும் ஐயா,
உம் இரத்தத்தின் மூலமே என் பாவத்திலிருந்து மன்னிப்படைய வேண்டுமே,
சிலுவை மூலமே என் கிரீடந்தனை வென்றெடுக்க வேண்டுமே.

- விடியல் துதிப்பாடல்கள், #65A

# நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டார்

## யாத்திராகமம் 12:1-17

வாதைகள் ஒவ்வொன்றும் மோசேயின் மூலமான பார்வோனின் வேண்டுதல்களுக்கு இணங்க தெய்வீக இரக்கங்களினால் ஓய்ந்துபோனாலும், பார்வோனின் இருதயமோ கடினப்பட்டு கொண்டிருந்தது. தேவன் முன்னதாகவே அறிந்து அறிவித்திருந்த வண்ணமாக தேவனுடைய தயவு பார்வோனை மனந்திரும்புதலுக்கு ஏதுவாக நடத்தாமல் அவனை இன்னும் கடினப்படுத்தவே செய்தது. கடைசி பத்தாவது வாதை இந்தக் கடினமான மனிதனை (பார்வோன்) உருக்குலைய வைத்து, இஸ்ரயேலை விடுவிக்கும் கட்டாயத்திற்குள் அவனை நடத்தும் என்று தேவன் மோசேயினிடத்தில் கூறியிருந்தார். இந்த (கடைசி) வாதை வருவதற்கு முன்பு பார்வோன் இஸ்ரயேலர்களை விடுவிப்பதற்கு விரும்புகின்றானோ? என்று மோசே அவனிடம் கேட்டார். மேலும் எதிர்மறையான பதில் வந்தபோது இதன் விளைவாக அச்சம் மிகு ஆபத்து எகிப்தியர்கள்மீது வருமென்று பார்வோனை எச்சரிக்கவும் செய்தார். பின்னர் உடனடியாக மோசே கோசேன் நகரத்தைவிட்டுத் திரும்பி ஜனங்களை யாத்திரைக்கு ஆயத்தம் பண்ணும்படி புறப்பட்டார். இஸ்ரயேலர்கள் போகவேண்டும் என்றதாலும், தங்களின் ஆட்சியாளர்கள் பிடிவாதத்தில் இருப்பதின் நிமித்தம் வருத்தம் கொண்டதாலும், இஸ்ரயேலர்களுக்குத் தாராளமாக பொன், வெள்ளி ஆபரணங்களையும், விலையுயர்ந்த பொருட்கள் பலவற்றையும் எகிப்தியர்கள் கொடுத்தார்கள். தேவன் இஸ்ரயேலர்களோடு இருக்கிறார் என்றும், எகிப்தியர்களுக்கு எதிராக இருக்கின்றார் என்றும் பார்வோனால் உணரமுடியாமல் இருந்தபோதிலும், எகிப்திய ஜனங்கள் இதை ஏதோ விதத்தில் உணர்ந்திருந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பயணத்திற்கான ஆயத்தத்திற்கு எத்தனை நாட்கள் எடுத்தது என்று நமக்குத் தெரியவில்லை, ஆனால் அந்த நாட்களானது பார்வோனுக்கும் மற்றும் மோசேயினாலும், ஆரோனாலும் முன்வைக்கப்பட்டதான கடைசி அச்சுறுத்தல் குறித்து அறிந்திருந்திருந்த அனைவருக்கும் எதிர்ப்பார்ப்பின் காலமாகவே இருந்திருக்குமென்று நாம் எண்ணுகின்றோம். ஆனால் பயணத்திற்கு ஆயத்தம்பண்ணுவதற்கு அநேக நாட்கள் தேவைப்பட்டிருந்திருக்கும் என்பதில் நமக்கு உறுதியே; ஏனெனில் ஜனங்களில் ஒவ்வொரு குடும்பத்தினரும் பழுதற்ற ஒரு வயது ஆண் ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுக்க வேண்டும் என்ற அறிவிப்புகளிலிருந்து மேற்கூறிய உறுதி நமக்குக் கிடைக்கின்றது; இந்த ஆட்டுக்குட்டியானது பஸ்கா என்று அழைக்கப்படுகின்றதான மத ஆசரிப்பிற்கு அடிப்படையாகப்போகின்றது மற்றும் பஸ்காவானது அதுமுதல் அந்த ஜாதியாரால் ஆசரிக்கப்பட்டு வருகின்றது. ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுத்து, அதை மற்றவைகளிடமிருந்து பிரித்து, ஆபிப் (பின்னர் நீசான் என்று அழைக்கப்பட்ட) மாதம் 10-ஆம் தேதிவரை பாதுகாத்து, அந்த மாதத்தின் 14-ஆம் தேதியிலே சாயங்காலங்களுக்கு நடுவில் (ஒரு நாளினுடைய மாலை 6 மணியிலிருந்து, அடுத்தநாள் மாலை 6 மணிவரை - வழக்கமான யூத நாள்) அடிக்கப்பட வேண்டும். அந்த ஆட்டுக்குட்டியின் மாம்சம் அன்றைய நாளின் மாலையில்

புசிப்பதற்காக சுடப்பட வேண்டும். அதன் இரத்தம் வீட்டுவாசலின் நிலைக்கால்களிலும் மற்றும் மேற்சட்டங்களிலும் தெளிக்கப்படுவதற்கென எடுத்து வைக்கப்பட வேண்டும். அந்த நாளின் இரவில் குடும்பம் குடும்பமாக ஒன்றுக்கூடி கசப்பான கீரைகளோடு, சுடப்பட்ட மாமிசமானது, பிரயாணத்திற்கான எதிர்ப்பார்ப்புடன், எகிப்தை விட்டு 15-ஆம் தேதி காலையில் நேரமே புறப்படுவதற்கெனப் பாதரட்சைகளையும், கைகளில் தடிகள் முதலியவற்றையும் எடுத்துக் கொண்டு புசிக்கப்பட்டது.

யாத்திராகமம் புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்ட இச்சம்பவம் எபிரெயர்களுக்கு மிகவும் சுவாரசியமானதாகும், விலையேறப்பெற்ற ஒன்றாகவும் காணப்பட்டது மற்றும் அது தொடர்பான பிரமாணமானது அந்த ஜாதியாரின் வரலாற்றில் மிக முக்கியமான சம்பவமாகக் காணப்படுகின்றது. ஆனால் கிறிஸ்தவர்களுக்கோ இது அதிலும் மேன்மையான முக்கியத்துவம் கொண்டுள்ளதாகும். நிஜமான இஸ்ரயேலனான கிறிஸ்தவனைப் பொறுத்தவரையில் இந்த முழுச் சம்பவமும் - நிஜமான இரவின் முடிவிலும் மற்றும் நிஜமான பஸ்கா நாளின் துவக்கத்திலும், நிஜமான மோசேயின் கரங்களின்மூலம், நிஜமான இஸ்ரயேலர்களுக்குக் கிடைக்கப்பெறும், நிஜமான விடுதலையைக்குறிக்கின்றது. "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டார்" என்ற நம்முடைய ஆதார வசனமானது, கர்த்தராகிய இயேசுவே நிஜமான ஆட்டுக்குட்டி என்று அடையாளப்படுத்துகின்றது மற்றும் அவர் செலுத்திட்ட பலியை நாம் இப்பொழுது எதிர்ப்பார்த்திருக்கின்றதும் மற்றும் சமீபித்திருக்கின்றதுமான விடுதலையுடன் தொடர்புபடுத்துகின்றது (1 கொரிந்தியர் 5:7). இந்தக் கருத்துக்கள் அனைத்துப் பிரிவுகளிலுமுள்ள கிறிஸ்தவர்களால் உணரப்பட்டுள்ளது. மேலும் நம்முடைய கர்த்தரின் இராப்போஜனமானது, பஸ்கா இராப்போஜனத்தின் நிஜத்திற்கான நினைவுகூருதல் என்று விசேஷமாக கத்தோலிக்க திருச்சபைகளாலும், புராட்டஸ்டண்டின் பழைய பிரிவுகளில் உள்ளவர்களாலும் உணரப்பட்டுள்ளது. எபிரெயர்கள் பஸ்காவை வருடந்தோறும் அனுசரிப்பதுபோன்று, இந்தச் சபைகளும் வருடந்தோறும் "புனித வெள்ளி" என்ற பெயரிலும், கர்த்தரின் இராப்போஜனம் என்ற பெயரில் அடையாளமான இராப்போஜனத்தையும், "தேவனுடைய ஆட்டுக்குட்டியின்" மரணத்திற்கும் மற்றும் "முதற்பேறானவர்களின் சபைக்குக்" பாராட்டப்பட்ட தெய்வீக இரக்கத்திற்குமான நினைவுகூருதலாக அனுசரிக்கின்றனர்.

நாம் சற்று நேரம், பஸ்காவின் அம்சம் சிலவற்றையும் மற்றும் நிஜமான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நமக்கான, அவைகளின் அர்த்தங்களையும் பார்க்கலாம். ஆட்டுக்குட்டியை அந்த மாதத்தின் 10-ஆம் தேதியில் எடுத்துக்கொண்ட விஷயம், நமது கர்த்தராகிய இயேசு, தமது முதலாம் வருகையின்போது, தமது ஊழியத்தின் முடிவில் இஸ்ரயேலர்களுக்கு அதே நீசான் மாதம் 10-ஆம் தேதியில் கழுதைக்குட்டியின்மீது ஏறிச்சென்று, தம்மை இராஜாவாக முன்வைத்ததைக் குறிக்கின்றது. இச்சமயத்தில்தான் இஸ்ரயேல் ஜாதியார் அவரை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்; ஆனால் அவர்களோ, "அவரைவிட்டு தங்களுடைய முகங்களை மறைத்துக் கொண்டார்கள்." அவர்கள் ஓர் ஜாதியாரென விரும்பின ரூபத்தை அவர்களால் அவரிடத்தில் பார்க்கமுடியவில்லை. நீசான் மாதம் 14-ஆம் தேதியன்று மாலையில் நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களோடு பஸ்காவைப் புசித்தார். அன்றைய இரவிலேயே அவர் காட்டிக்கொடுக்கப்பட்டார். நீசான் மாதத்தின் 14-ஆம் நாளின் காலையில் அவர்

குற்றவாளியாக தீர்க்கப்பட்டுச் சிலுவையில் அறையப்பட்டார். பின்னர் அதே நாளில் அடக்கம்பண்ணப்பட்டார். இவைகள் அனைத்தும் நீசான் மாதம் 14-ஆம் தேதியில் சாயங்காலங்களுக்கு நடுவில் நடந்தது; அதாவது நாளின் ஆரம்பமாகிய மாலை 6 மணி முதல், நாளானது முடிவுறும் அடுத்த மாலை 6 மணிவரையிலான காலப்பகுதிகளுக்குள் நடந்தது. அடுத்த நாளில், 15-ஆம் தேதியில், மாலையில் யூதர்களின் பஸ்கா பண்டிகை அனுசரிக்கப்பட்டது. நம்மிடத்திலான தேவனுடைய கிருபையில் சந்தோஷம் கொள்வதன் மூலமும், தொடர்ந்து புசிப்பதின் மூலமும், நாம் அந்தப் பண்டிகையை நிஜமாக அனுசரிக்கிறோம். ஆனால் கர்த்தருடைய இராப்போஜனமானது, நீசான் மாதம் 14-ஆம் தேதிக்கு உரியதாகவும், தேவனுடைய ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதின் நினைவுகூருதலாயும் உள்ளது. பஸ்கா புசிக்கப்பட்ட இரவானது, இந்தச் சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்துகின்றது; அதாவது பாவமும், தீமையும் மேலோங்கி காணப்படுகின்றதும் மற்றும் "தங்களுக்காக பலியிடப்பட்ட பஸ்காவாகிய கிறிஸ்துவின்" புண்ணியங்களைப் புசித்தும், அவருடைய மாம்சமே மெய்யான அப்பம் என்று உணர்ந்தும் கர்த்தருடைய ஜனங்கள் காணப்படுகின்றதான இருளான நேரமாகிய இந்தச் சுவிசேஷயுகத்தை அடையாளப்படுத்துகின்றது.

ஆட்டுக்குட்டியின் மாம்சத்தோடு யூதர்கள் - பாவத்திலிருந்து விலகியிருக்கும் நிலையை அடையாளப்படுத்துகின்றதான - புளிப்பில்லாத, தூய்மையான, கலப்படமில்லாத அப்பத்தையும் புசித்தார்கள். இது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மூலம் பரம பிதாவினிடத்திலிருந்து நமக்குவரும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை அடையாளப்படுத்துகின்றது. "இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே." (யோவான் 6:50) எபிரெயர்கள் தங்களுக்குரிய அப்பத்தையும், ஆட்டுக்குட்டியையும் புசித்ததுபோல, நிஜமான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் கிறிஸ்துவின் கிருபைகளிலும், புண்ணியங்களிலும் இலவசமாய்ப் பங்கெடுப்பதோடல்லாமல், கசப்பான கஷ்டங்கள், சோதனைகள், தவறாக கருதப்படுதல் மற்றும் பாடுகளை அடையாளப்படுத்தும் "கசப்பான கீரைகளையும்" கூடப் பெற்றுக்கொள்கின்றனர். எபிரெயர்கள் காலையிலுள்ள தங்களுடைய பிரயாணத்திற்கு ஆயத்தமாய் இருந்த நிலையில் புசித்ததுப்போல, உண்மையான இஸ்ரயேலர்கள் இந்தச் சுவிசேஷயுகத்தில் இந்த ஆவிக்குரிய கிருபைகளில் பங்குகொண்டு, தற்போது எகிப்தில் இருப்பதைப்போல் தோன்றினாலும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கே ஏங்கியவர்களாய் இருக்கின்றனர். மேலும் இவர்களின் வாழ்க்கைமுறை இவர்கள் இந்தத் தேசத்தில், உலகில், பரம தேசத்தையே நாடித் தேடும் பரதேசிகளும், அந்நியர்களுமாய் இருக்கின்றனர் என்று சுட்டிக் காட்டுகின்றது. ஆனால் பஸ்கா புசிக்கப்பட்ட அன்றைய இரவில் விடுதலை வராமல், இரவைத் தொடர்ந்த காலையிலே வந்தது. இதுபோலவே, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் விடுதலையும், இவ்வுலகத்தின் அதிபதியின் ஆளுகையில் பாவம் மற்றும் உபத்திரவத்தின் இரவில் வருவதில்லை. "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று நாம் ஜெபிக்கும், எதிர்பார்க்கும், காத்திருக்கும் ஆயிரவருட அரசாட்சியின் காலையிலேயே விடுதலை வருகின்றது. "தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்." (சங்கீதம் 46:5)

பஸ்கா என்பது இஸ்ரயேல் ஜனங்கள் காலையில் செங்கடலைக் கடந்து செல்வதை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ குறிக்கும் என்று சிலர் எண்ணுவது தவறாகும். இப்படியாக எதுவுமில்லை. பஸ்கா ஆட்டுக்குட்டி புசிக்கப்பட்ட மற்றும் அதன் இரத்தம் நிலைக்கால்களில் பூசப்பட்ட இரவில் இஸ்ரயேலரின் முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதல் காரணமாக அல்லது தப்புவிக்கப்பட்டதினிமித்தமாக, கடந்துபோகுதல்/பஸ்கா என்ற பெயர்ச் சூட்டப்பட்டது. சங்காரத்தூதன் எகிப்து முழுவதும் சென்று, எகிப்தின் அனைத்து முதற்பேறானவர்களையும் சங்கரித்தார். மேலும் இரத்தம் மேற்சட்டங்களில் மற்றும் நிலைக்கால்களில் பூசப்பட்ட நிபந்தனையின் பேரில் இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். இந்தத் தெய்வீகக் கட்டளையை மதியாமல் கர்த்தர் மோசே மூலமாய் அறிவித்தப் பிரகாரமாய் இஸ்ரயேலர்களில் யாராகிலும் தங்களின் வீட்டு நிலைக்கால்களிலும், கதவுகளிலும் இரத்தம் பூசாமல் இருந்தால், எகிப்தியர்களுக்கு சம்பவிக்கிறவண்ணமாகவே இவர்களுக்கும் சம்பவிக்கும். யார் கர்த்தருடைய ஜனங்கள் என்றும், யார் அவருடையவர்கள் இல்லை என்றும் இரத்தம் வேறுபடுத்திக் காட்டியது.

ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு இது எதைக்குறிக்கும்? நம்முடைய பஸ்கா ஆட்டுகுட்டியென நமது கர்த்தர் இயேசுவின் பலியினுடைய மீட்பின் புண்ணியத்தின் மீதுள்ள விசுவாசத்தை அறிக்கையிடுவதே, இரத்தம் தெளிக்கப்படுவதின் அர்த்தம் என்று நாம் பதில் கூறுகின்றோம். இந்த விஷயங்களைக் குறித்ததான கர்த்தருடைய வார்த்தைகளைக் காணும் யாவரும் இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு இல்லை என்று உணர முடியும். மேலும் இப்படியாக நம்முடைய இரட்சகரின் மரணத்தினுடைய முக்கியத்துவத்தை உணரும் ஒருவர், அதை அறிக்கையிடுவார் என்று எதிர்ப்பார்க்கப்படலாம், அதாவது நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்கப்படுவது அடையாளப்படுத்துகின்ற அறிக்கையிடுதலானது எதிர்ப்பார்க்கப்படலாம். கதவுகளில் இரத்தம் காணப்படுவது என்பது, கதவுக்குள் இருக்கும் அனைவரும் இரத்தம்மீது நம்பிக்கைக் கொண்டிருப்பதால், அதன் புண்ணியத்தின்கீழ் இருப்பதைக்குறிக்கின்றது. கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாகும் மீட்பைப்பற்றின உபதேசமானது, நூற்றாண்டுகள் காலமாக அரைகுறையான தெளிவோடு காணப்பட்டிருந்தபோதிலும், இந்த யுகத்தின் முடிவில் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டவர்களுக்கும், போதகர்கள் என்று தங்களையே அழைத்துக்கொண்டிருப்பவர்களுக்கும், விமர்சகர்களுக்கும் இது கேள்விக்குறியாக இருப்பது ஆச்சரியமே/குறிப்பிடத்தக்கது. இத்தகையவர்கள் கர்த்தருடைய பார்வையில் இஸ்ரயேலர்களாய் இராமல் எகிப்தியர்களாகவே இருக்கின்றனர். இஸ்ரயேலர்கள் என்றும், தம்முடைய ஜனங்கள் என்றும் அவர் அடையாளம் காணும் யாவரும், அவரையும், அவருடைய வார்த்தைகளையும் மற்றும் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து இயேசு விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தினதுமூலம், அவர் நமக்கு நிறைவேற்றின வேலையையும் அடையாளம் கண்டுகொள்வார்கள்.

பதிலாள் உபதேசமானது இந்த நிழலில் மிகுந்த அழுத்தத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரத்தமானது இரத்தநாளங்களில் இருக்கும்போது ஜீவனைக் குறிக்கின்றது. ஆகவே அது சிந்தப்படுவது மரணத்தைக்குறிக்கும். மரணத்தீர்ப்பானது நம்முடைய மனுஷசந்ததிக்கு எதிராக இருந்தபடியால் கிறிஸ்து நம்முடைய

பாவங்களுக்காக மரிக்கவேண்டியது அவசியமாய் இருந்தது. ஆகவே இந்த யுகத்தில் அவர் அங்கீகரிக்கும் ஒவ்வொருவரும் பாவ நிவாரணபலியின்மீது விசுவாசமும், அதை அறிக்கை செய்கிறவர்களாயும் இருக்க வேண்டும் என்று கர்த்தர் கடமைபடுத்தி யுள்ளார். இரத்தம் தெளிக்கப்பட்ட வீட்டில் உள்ளவர்களின் விசுவாசத்திற்கான ஓர் ஆதாரமாய், ஓர் அடையாளமாய், ஒரு சாட்சியாய், ஒரு சான்றாக இரத்தம் உள்ளது. இது தேவனுக்கான அடையாளமாக இராமல், மனிதனுக்கானதாய் உள்ளது. தேவன் தப்புவிக்கச் செய்வார், ஆனால் தப்புவிக்கப்பட வேண்டிய ஒவ்வொரு இஸ்ரயேலனும் தன்னுடைய பங்கைச் செய்துள்ளானோ என்று பார்த்துக்கொள்வது அவனுடைய காரியமாய் இருக்கின்றது.

அனைத்து இஸ்ரயேலர்களுக்கும் மரண ஆபத்து உள்ளது என்று தவறாய்க் கருதப்படக்கூடாது. முதற்பேறானவர்களுக்கே ஆபத்து இருந்தது. இதுவே நிழலின் மிக முக்கியமான அம்சமாகும். கர்த்தரையும், நீதியையும் நேசிக்கும் அனைவருக்கும், அதாவது முதற்பேறானவர்களுக்கும், மற்ற அனைவருக்கும் காலையில் விடுதலை வருகின்றதாய் இருந்தாலும், ஆயிரவருட அரசாட்சியின் காலைக்கு முன்பான இரவில் விசேஷமான சோதனை வரும்; இந்த விசேஷமான சோதனை முதற்பேறானவர்களை மாத்திரம் பாதிக்கும். யார் இந்த முதற்பேறானவர்கள்? பரலோகத்தில் பெயர் எழுதப்பட்ட "முதற்பேறானவர்களின் சபையே," "சிறுமந்தையே," புதிய சுபாவத்திற்குள்ளும் மற்றும் நமது கர்த்தரோடுக்கூட வரவிருக்கின்ற இராஜ்யத்தில் உடன் சுதந்திரத்திற்குள்ளும் ஜெநிபிக்கப்பட்டவர்களே - இந்த முதற்பேறானவர்கள். பார்வோன் மற்றும் அவனுடைய வல்லமை மற்றும் அடிமைத்தனத்திலிருந்தும் இஸ்ரயேலர்களாகிய மற்ற அனைவரும் விடுவிக்கப்படுவது, மற்ற அனைவரும் சாத்தானின் வல்லமையிலிருந்தும், பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் விடுவிக்கப்படுவதை அடையாளப்படுத்துகின்றது. ஆனால் இந்த இரவில் ஆபத்தில் இருப்பவர்களும், சுவிசேஷ யுகத்தில் தப்புவிக்கப் படுகிறவர்களும் அல்லது கடந்துபோகப்படுகின்றவர்களும் சிறுமந்தையாகிய முதற்பேறானவர்களின் சபையே ஆகும். இதுவே நிழல் தெளிவாய் முன்வைக்கும் காரியமாகும். பஸ்காவிற்குப்பின்/கடந்துபோகுதலுக்குப் பின்னரே புதிய ஒழுங்குகளின் கீழ் இந்தப் பஸ்காவில் தப்புவிக்கப்பட்டவர்கள், லேவியர்களாக தலைமை வகிக்கிறவர்கள் ஆனார்கள் என்பது நினைவில்கொள்ளப்படலாம். மேலும் இவர்களிடத்திலிருந்தே ஆசாரியர்களான சிறுமந்தை வந்தனர். ஆகையால்தான் முதற்பேறான சபையை, "நீங்களே இராஜரிக ஆசாரிய கூட்டத்தார்" என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். (1 பேதுரு 2:5, 9)

இந்தப் பஸ்கா ஆட்டுக்குட்டியின் நிஜம், நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டார் என்று அறிந்து கொண்டோம். மாம்சீக இஸ்ரயேலர்களால் அநுசரிக்கப்பட்ட நிழலின் இடத்தில் வேறொரு நினைவுகூருதலை ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நமக்கு, நம்முடைய கர்த்தர் நிறுவியுள்ளார். அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவில், அவர் ஒரு யூதனாக பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்த அதே இரவில், பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்தப் பின்னர், அதை நிறுவினார். உலகத்தின் பாவத்தைப் போக்குகிற நிஜமான தேவனுடைய ஆட்டுக்குட்டியாக அவர் தம்மையே அடையாளப்படுத்தும் அப்பத்தையும், திராட்சரசத்தையும் எடுத்துக்கொண்டு

தம்முடைய உண்மையான சீஷர்கள் அனைவரும் யூதர்கள்போன்று நிழலான பஸ்காவை ஆசரியாமல், இதுமுதல் நிஜமான பஸ்காவை அனுசரிக்கும்படியாகக் கட்டளையிட்டார். "இதைப் பானம்பண்ணும் (பஸ்கா அனுசரிக்கும்போது) போதெல்லாம், (நிழலாய் நடந்த விடுதலையை இனிமேல் நினைவுகூராமல்) என்னுடைய நினைவாகச் செய்யுங்கள் என்றார்." இது வருடாவருடமும் மற்றும் இன்னமும் நினைவுகூரப்படுகின்றது.

இப்பாடம் குறித்த விஷயத்தில் சில தேவனுடைய ஜனங்கள் குழப்பமடைந்துள்ள தாலும், நினைவுகூருதல் இராப்போஜனமானது, யூதருடைய பஸ்காவிற்கான நிஜத்தின் நினைவுகூருதல் என்ற உண்மையினைக் கவனிக்கத்தவறினதாலும், கர்த்தருடைய உத்தரவு இல்லாமலேயே, தாங்களாகவே இராப்போஜனத்தின் ஆசரிப்பிற்கான வேளைகளையும், காலங்களையும் நிர்ணயிப்பதற்குத் தங்களுக்குச் சுயாதீனம் இருப்பதாக எண்ணிக்கொள்கின்றனர். இவர்கள் இப்படியாகச் செய்திடும் விஷயத்தில், பழியிலிருந்து விலகுவதற்குக் காரணங்கள் இருக்கின்றது; ஏனெனில் மாபெரும் எதிராளியானவனால் அமைப்பு நிறுவப்பட்டது முதற்கொண்டு, 18 நூற்றாண்டுகளாக, அநேகம் உபதேசங்களும், தவறான ஆசரிப்புகளும் இயேசுவின் பின்னடியார்கள் மத்தியில் அறிமுகம் செய்யப்பட்டது; இப்படியாக அறிமுகப்படுத்தப்பட்ட உபதேசங்களில் ஒன்று பூசைபலி உபதேசமாகும்; இது கிறிஸ்துவின் பலியைத் திரும்பத்திரும்ப ஏறெடுப்பதற்கான நோக்கம் உடையதாகும் மற்றும் பாதிரியார் கிறிஸ்துவின் மாம்சத்தை உருவாக்கி, யாருக்காகப் பூசைபலி ஏறெடுக்கபடுகின்றதோ, அவரின் பாவங்களுக்காகக் கிறிஸ்துவைப் பூசைபலியில் மீண்டுமாகப் பலிசெலுத்துகின்றார் என்பதாகக் கூறப்படுகின்றது. போப்மார்க்கத்தினின்று வெளியே வந்தவர்களாகிய புராட்டஸ்டண்டினர்கள், பூசைபலியைப் புறக்கணித்தனர் என்றபோதிலும், பூசைபலியானது அடிக்கடிப் பண்ணப்பட்டதினால், கர்த்தருடைய இராப்போஜனமும் காலம் மற்றும் வேளைத் தொடர்புடைய விஷயத்தில் எவ்வித வரையறை இல்லாமல் ஆசரிக்கப்பட வேண்டுமென்று கற்பனைபண்ணி, ஆசரித்துவருகின்றனர். கடைசி இராப்போஜனத்திற்கென்று இன்னும் பஸ்காவின் தேதியினைக் கடைப்பிடிப்பவர் களாகிய பழமைமிக்க சபைகளுங்கூட, யூதர்களுடைய வழக்கத்திற்கு மாறான புதிய வழக்கத்தினைத் தேர்ந்தெடுத்துக்கொண்டனர் - அதாவது இவர்களது புதிய வழக்கத்தின்படி நினைவுகூருதலுக்கான நாளானது எப்போதும் உண்மையான/சரியான தேதிக்கு அருகாமையிலுள்ள வெள்ளிக்கிழமையன்று காணப்படுகின்றது மற்றும் இதனால் பின்வரும் ஞாயிறானது ஈஸ்டராகக் காணப்படும்; இது வாரத்தினுடைய முதல் நாளில் இடம்பெற்ற நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான நினைவுகூரும் நாளாய்க் காணப்படுகின்றது.

நமது கர்த்தரினாலும், அப்போஸ்தலர்களினாலும் பயன்படுத்தப்பட்டதும், அன்றும், இன்றும் கர்த்தருடைய ஜனங்கள் சிலரால் பயன்படுத்தப்பட்டதுமான யூத காலக்கணக்கீட்டு முறைமையின்படி, பஸ்காவின் வருடாந்தர ஆசரிப்பிற்கான அடுத்த வருஷத்தின் ஆண்டு நிறைவு நாளின் தேதி 1902-இல், ஏப்ரல் 20-ஆம் தேதி, சூரிய அஸ்தமனத்திற்குப் பிற்பாடு காணப்படும்.

## கிறிஸ்துவோடு

வாழ்வின் ஆனந்தங்கள், அச்சுறுத்தல்களினின்று சற்றே விலகி கிறிஸ்துவோடு
அவர் முகத்தைப்பார்த்திட இன்று நீயும் நானும் அமைதி காத்து நிற்கின்றோமா?
ஒரு கணமேனும் அவர் முகத்தின் கிருபைதனை பார்த்திட வேண்டியும்
மிக உண்மையான அந்தச் சொற்ப நேர தோழமையினால் வளர்ந்திட வேண்டியும்
எல்லாம் இழந்து அவர் சித்தம் செய்திட வலிமையும் துணிவும் வேண்டியும்
கிறிஸ்துவோடு அவர் முகத்தைப்பார்த்திட இன்று
நீயும் நானும் அமைதி காத்து நிற்கின்றோமா?

நம் கரம்தனை அவர் கரத்தில் வைத்திடுவதற்கும்
அவர் சித்தத்தை நம் சித்தத்துடன் ஒப்பிட்டுப்பார்ப்பதற்கும்
அவர் விருப்பத்தையே நாமும் தரித்திடுவதற்கும்
இன்று நமக்கு நேரம் கிடைத்ததா சிந்தித்திடுவதற்கு?
அவருடனான அத்தகைய தொடர்பு நாள்முழுவதும்
நம்மைத் தாங்கி பாதுகாத்திடும் என்று,
புயல்கள் மற்றும் வெள்ளத்தின் மத்தியில்
நேராய் நடப்பதற்கு நமக்கு உதவும் என்று,
தெரிந்துகொள் - நன்றாய்த் தெரிந்துகொள்.
அந்தரங்க ஜீவிதத்தின் பாவங்களைக் கண்டுபிடித்து
அதன் கறைகளைக் கழுவிடும் என்று,
அவருக்கான நமது அன்பின் எண்ணங்களை
மீண்டும் புதுப்பித்திடும் என்று,
தள்ளாடுகின்ற நடைகளை உறுதிப்படுத்திடும் என்று,
எனக்கும், உனக்குமான அவரது அடிச்சுவட்டை
நாம் காண உதவிடும் என்று,
தெரிந்துகொள் - நன்றாய்த் தெரிந்துகொள்.

- Poems of the Way, p. 95

# நினைவுகூருதல் ஆசரிப்பு

நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆசரிப்பானது, அடிக்கடி ஆசரிக்கப் படுவதைக்காட்டிலும், வருடாந்தர ஆசரிப்பாய்க் காணப்படுவதே ஏற்றது என்று கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொரு வருடமும் அறிந்துகொண்டு வருகின்றனர். அலிகெனியில் (Allegheny) இவ்வருடம் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை, முன்பிருந்த எண்ணிக்கையைக்காட்டிலும் மிக அதிகமாக இருந்தது. அதிக எண்ணிக்கைக் காணப்படும் என்று எதிர்ப்பார்த்த வண்ணமாகத்தான், ஞானஸ்நானத்திற்குத் தூது மதியவேளையின்போது கொடுப்பதற்கும், ஏப்ரல் 16-ஆம் தேதி, மாலையன்று நினைவுகூருதல் ஆராதனைக்கென்றும், கார்நீஜீ அரங்கை ஏற்பாடு பண்ணியிருந்தோம். பத்துச் சகோதரர்களும், 31 சகோதரிகளும், கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற பலியினால் சாத்தியமான மீட்பின் மீதான விசுவாசத்தையும், தாங்கள் பாவத்தைத் துறந்ததையும், மரணம் வரையிலுமாக சுயத்தைப் பலிச்செலுத்தி இயேசுவின் அடிச்சுவடுகளில் நடந்திடுவதற்காக தங்களுடைய முழுமையான அர்ப்பணிப்பையும் வெளிப்படையாய் அறிக்கைப்பண்ணின பிற்பாடு, பைபிள் ஹவுஸ் பேப்பிஸ்டிரியில் (Bible House Baptistry) வைத்து, மரண – ஞானஸ்நானத்தைத் தண்ணீரில் அடையாளப்படுத்தினார்கள்.

## அந்நிகழ்வும், அந்நாளும்

நினைவுகூருதல் ஆராதனையின்போது, சரித்திரத்தினுடைய இந்த மாபெரும் நிகழ்வானது ஏன் வாரந்தோறும், மாதந்தோறும், காலாண்டுதோறும் என்றில்லாமல் வருடந்தோறும் ஆசரிக்கப்படுகின்றது என்பதற்கு விளக்கம் கொடுக்கப்பட்டது. அந்த ஒருநாளோ (அ) மணி நேரமோ (அ) வேளையோ விசேஷித்த முக்கியத்துவம் வாய்ந்ததல்ல, மாறாக அது வருடாந்தர ஆசரிப்பாகவே கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் இப்படியாக ஆசரிக்கப்படும்போதே, அது உரிய தாக்கத்தினை மனதில் பதியப்பெற்றிருக்கும். உண்மையைச் சொல்லவேண்டுமெனில், நாம் அனைவரும் அறிந்திருக்கிறபடி, அது உலகமெங்கும் அதேவேளையில் (அ) மணி நேரத்தில் அல்லது அதேநாளில்கூட ஆசரிக்கப்பட முடிகிறதில்லை; நேரத்தின் வித்தியாசம், அவ்வளவுக்குக் காணப்படுகின்றது. உதாரணத்திற்கு நாம் அலிகெனியில் (Allegheny) ஆசரிக்கும்போது - லண்டனிலுள்ள சகோதரர்கள் ஆசரித்து முடிந்து, நடுராத்திரி தாண்டி, அவர்கள் தூங்கிக்கொண்டிருப்பார்கள். மேலும் நாம் அவர்களோடுகூட ஒரேவேளையில் இங்கு ஆசரிப்பது என்பது, மிகவும் நேரமே ஆசரிப்பதாகக் காணப்படும். இதேமாதிரியான பிரச்சனை, பஸ்காவை ஆசரிக்கும் விஷயத்தில் யூதர்களுக்கும் இருந்துள்ளது. வரலாறானது ஆதித் திருச்சபையாரும் இதே பிரச்சனையைச் சந்தித்தார்கள் என்றும், இதைச் சரிப்படுத்துவதற்காக நமது கர்த்தருடைய மரணத்தைப் பஸ்கா நாளுக்கு அருகாமையிலுள்ள வாரத்தினுடைய ஒரு நாளில் – புனித வெள்ளியன்று ஆசரிப்பதாக முடிவு செய்யப்பட்டது என்றும் நமக்குத்

தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இந்த ஏற்பாட்டின் நிமித்தம் மூன்று நன்மைகள் உள்ளது; அவை:

(1) இது அந்தச் சிறப்புமிக்க வாரத்தினுடைய நிகழ்வுகள் அனைத்தையும் மனதிற்கு முன்பாக ஒன்று சேர்க்கின்றது; அந்நிகழ்வுகள் பின்வருமாறு: குருத்தோலை ஞாயிறன்று, யூதர்களின் இராஜாவென நமது கர்த்தர் கழுதையின்மீது ஏறிவந்தார்; திங்கள், செவ்வாய் மற்றும் புதன்கிழமை ஆலயத்தில் போதித்தல்; வியாழனன்று பஸ்காவிற்கு ஆயத்தம்பண்ணப்படுதல்; இரவன்று பஸ்கா இராப்போஜனம் புசிக்கப்படுதல், பின்னர் நமது நினைவுகூருதல் இராப்போஜனமானது ஏற்படுத்தப் படுதல், பின்னர் யோவான் 14 - 17 வரையிலான அதிகாரங்களில் இடம்பெறும் படிப்பினைகள் கொடுக்கப்படுதல் மற்றும் ஜெபம் ஏறெடுக்கப்படுதல், பின்னர் கெத்செமனே அனுபவங்கள், காய்பாவின் அரண்மனையில் அனுபவங்கள் மற்றும் வெள்ளிக்கிழமை காலையில் ஆலோசனை சங்கத்தினர் முன்பாக மற்றும் பிலாத்துவின் அரண்மனையிலும் மற்றும் ஏரோதின் அரண்மனையிலும் ஏற்பட்ட அனுபவங்கள், பின்னர் கல்வாரியின் காட்சிகள் மற்றும் யோசேப்பின் புதிய கல்லறைக் காட்சி; சனிக்கிழமையன்று நமது கர்த்தர், நம்பிக்கை அவருக்குள் புதைக்கப்பட்ட நிலையில், அவர் மரித்துக் காணப்பட்டார். ஞாயிறு புதிய நம்பிக்கைகளுள்ள உயிர்த்தெழுதலின் நாளாய்க் காணப்பட்டது; அது புதிய நம்பிக்கைகளும், உணர்வுகளுமுள்ள ஈஸ்டர் நாளாகும்.

(2) இது புனித வெள்ளியையும், ஈஸ்டர் ஞாயிறையும் ஆசரிப்பவர்களுடன் நம்மை நெருக்கமான உறவிற்கும், இணக்கத்திற்கும் கொண்டுவருகின்றது; மற்றும் நினைவுகூருதலை வியாழன் மாலையன்று நாம் ஆசரிப்பதானது, அவர்களுக்கு அந்தத் தேதியினுடைய சரியான தன்மையைக் குறித்து யோசனையை/கருத்தினை எழுப்புகின்றதாகவும் மற்றும் அடிக்கடி ஆசரிக்கப்படுவதற்கான அதிகாரம் மற்றும் ஞானம் குறித்து அவர்கள் கேள்வி எழுப்பிடவும் செய்கின்றது.

(3) நாகரிகமடைந்துள்ள தேசங்களில், புனித வெள்ளி என்பது பொதுவாய்ச் சட்டப்பூர்வமான விடுமுறையாய்க் காணப்படுகின்றது மற்றும் நமது கர்த்தருடைய மரணநாள் தொடர்புடையதான விலையேறப்பெற்ற ஞாபகார்த்தங்கள் மற்றும் சம்பவங்கள் அனைத்தின்மீதும் நம் மனங்களைப் பிரயோகித்திட நல்ல வாய்ப்புக் கிடைக்கின்றது.

அனைவராலும் அதே இரவிலும், வேளையிலும் ஆசரிக்கமுடியாது என்பதினால், சபையார் ஈஸ்டர் ஞாயிறுக்கு முன்புவரும் வியாழன் இரவில் இனிமேல் ஆசரிப்பைக் கொண்டிருப்பதற்கு மேற்கூறிய வாதங்களைக் கருத்தில்கொள்ளும் படிக்குக் கேட்டுக்கொள்ளப்பட்டனர். இப்பொழுது அதே கருத்துதான் எங்கும் சிதறிக் காணப்படும் அருமை நண்பர்கள் அனைவருக்கும் முன்வைக்கப்படுகின்றது.

## இதை என்னை நினைவுகூரும்படிச் செய்யுங்கள்

அத்தருணமானது வழக்கம்போலவே, நமது கர்த்தர் "வானத்திலிருந்து இறங்கிவந்த அப்பம்" நமக்காகப் பிட்கப்பட்டது என்று உணர்ந்து பங்கெடுக்கப்பட்ட போது பயபக்திக்குரியதாகவே காணப்பட்டது. அது "அன்பனைத்திலும் உயர்ந்ததான

தெய்வீக அன்பினுடைய" சான்றாய் இருக்கின்றது என்று நாங்கள் அடையாளங்கண்ட போது, நாங்கள் களிகூர்ந்தோம். நாம் பாவிகளாகவே காணப்பட்டபோதே, தேவன் இவ்வளவாய் நம்மை அன்புகூர்ந்துள்ளார் என்றால், நாம் "மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிறதை" - இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பதற்கு நாம் தினந்தோறும் நாடிடுவதை அவர் காண்கையில், அவர் இப்பொழுது எவ்வளவாய் நம்மை அன்புகூர்ந்திடுவார் என்று எங்கள் இருதயங்களில் உறுதியடைந்தபோது, நாங்கள் மீண்டுமாய்க் களிகூர்ந்திட்டோம்.

அப்பமானது, நமக்காக இயேசுவினால் பலிச்செலுத்தப்பட்டுள்ளதான மனித உரிமைகளை நமக்குக் குறிப்பிடுகின்றதாய் இருந்தது; இதை விசுவாசிக்கிறவர் களாகிய நாம் புசித்து – விசுவாசத்தின் மூலமாய் நம்முடையதாக்கிக்கொள்கின்றோம் மற்றும் ஆதாமினால் ஆதியில் பெற்றிருக்கப்பட்டதான உரிமைகள் அனைத்திற்கும் நீதிமானாக்கப்பட்டவர்களாய்க் கருதப்படுகின்றோம். பின்னர் அப்போஸ்தலனின் வார்த்தைகளிலிருந்தும், இன்னும் படிப்பினையைப் பெற்றுக்கொண்டோம் - "நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாய் இருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17)

"பாத்திரமானது" நமது கர்த்தருடைய இரத்தத்திற்கு - அவரது மூன்றரை வருடக்கால ஊழியத்தின்போது ஊற்றப்பட்டதும், கல்வாரியில் எஞ்சியதும் ஊற்றப்பட்டதுமான அவரது ஜீவனிற்கு அடையாளமாய் இருக்கின்றதென நாங்கள் அடையாளம் கண்டுகொண்டோம். அது நமக்காகச் சிந்தப்பட்டது; ஆம் "பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்பட்டது." அது நமது மீட்பருடைய விலாவில் சேவகனால் ஈட்டியினால் குத்தப்பட்டபோது, வழிந்திட்டதான இரத்தமல்ல. இல்லை, இதற்கு முன்பே, அவர் ஏற்கெனவே மரித்துவிட்டார். இரத்தம் என்பது ஜீவனை அடையாளப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாகும் மற்றும் ஈட்டி குத்தப்படுவதற்கு முன்னதாகவே நமது கர்த்தருடைய ஜீவனானது (அ) ஆன்மாவானது மரணத்திற்குள் ஊற்றப்பட்டுவிட்டது. இதற்கான அவசியத்தினை நாம் தேவனுடைய பிரமாணத்தின்கீழ்ப் பார்த்திட்டோம்; அதாவது, "இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது" என்பதில் பார்த்திட்டோம். நாங்கள் துக்கமடைந்திட்டாலும், மீண்டும் களிகூர்ந்து, கர்த்தருக்கு எங்களுடைய இருதயங்களில்:

"அவரது இரத்தம் அழுக்குகளைச் சுத்திகரிக்குமே.
அவரது இரத்தம் எந்தனுக்குப் பயன்படுத்தப்பட்டதே" என்று பாடினோம்.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?" எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளின் மூலமான பரிசுத்த ஆவியினுடைய போதித்தலின் வாயிலாக, "பாத்திரத்திற்கு" இன்னும் ஆழமான அர்த்தத்தினைப் பெற்றுக்கொண்டோம்; (1 கொரிந்தியர் 10:16) இப்படியாகப் பார்க்கும்போது, "நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்" எனும் நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு ஆழமான அர்த்தமிருக்கும் என்று உணர்ந்தோம்; "என்னுடைய அவமானத்திலும், மரணத்திலும் பங்கெடுங்கள்; என்னுடைய அடிச்சுவடுகளில் நடவுங்கள்; இப்படிச் செய்வீர்களானால் நீங்கள் மெய்யாகவே என் சீஷர்களாய் இருப்பீர்கள் மற்றும் நான் இருக்கும் இடத்தில், என் சீஷனும் இருப்பான்" எனும் அர்த்தத்தில் நமது கர்த்தருடைய வார்த்தைகள் காணப்படுகின்றது என்று உணர்ந்தோம்.

மாபெரும் அப்பத்தின் ஒரு பாகமாக, அவரோடுகூடப் பிட்கப்படுவதற்குமான சிலாக்கியத்திற்காகவும் மற்றும் அவரது பாத்திரத்தில் பானம்பண்ணி, கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றிடுவதற்குமான சிலாக்கியத்திற்காகவும் மற்றும் "அவரோடுகூடப் பாடுகள் பட்டோமானால், அவரோடுகூட ஆளுகையும் செய்வோம்" என்ற வாக்குறுதியுடன்கூட உள்ள இச்சிலாக்கியங்களுக்காகவும் நாம் தேவனுக்கு நன்றி செலுத்தினோம்.

சுமார் 550 பேர் அங்குக் காணப்பட்டார்கள் மற்றும் இதில் அநேகமாக 525 பேர் பிட்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்குமான அடையாளங்களில் பங்கெடுத்தார்கள். பின்னர் துதிப்பாடல் ஒன்றைப் பாடிவிட்டு, அன்று இரவில் காட்டிக்கொடுக்கப்படுதலின், அடுத்த நாளில் பின்தொடர்ந்திட்ட பாடுகளின் காட்சிகளை நினைவுகூர்ந்திட வெளியேறினோம்/கலைந்துசென்றோம்.

# பஸ்கா மற்றும் பாவநிவாரணநாளின் பலிகள்

சமீபத்தில் நாம் பஸ்காவை ஆசரித்ததான காரியமானது, முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியன்றுள்ள பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய பலியானது, ஏழாம் மாதத்தினுடைய 10-ஆம் தேதியன்றுள்ள பாவநிவாரண நாளின் பலியினுடைய அதே கருத்தைத்தான் அடையாளப்படுத்துகின்றதா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

இல்லை என்றே நாம் பதிலளிக்கின்றோம். இந்த இரண்டு நிழல்களும் வருஷத்தினுடைய எதிர்முனைகளில் காணப்படுகின்றது; ஒன்று மதச்சார்புடைய ஆண்டின் துவக்கத்திலும், மற்றொன்று மதச்சார்பற்ற ஆண்டின் துவக்கத்திலும் இடம்பெறுகின்றதாய் இருக்கின்றது. மதச்சார்ப்பற்ற ஆண்டானது இலையுதிர் காலத்திலும், மதச்சார்புடைய ஆண்டானது இளவேனிற் காலத்திலும் துவங்குகின்ற தாய்க் காணப்படுகின்றது. மதச்சார்புடைய ஆண்டின் துவக்கத்தின்போதான பஸ்கா பலியானது, சபை சார்பிலான நமது கர்த்தருடைய பலியை மாத்திரம் குறிப்பாய் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் மதச்சார்ப்பற்ற ஆண்டின் துவக்கத்தின்போதான பாவநிவாரண நாளினுடைய பலியானது, கிறிஸ்துவினுடைய பலியையும், "இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாராகிய" சபையின் பலியையும் மற்றும் "ஜனங்கள் அனைவருக்காகவும்" நிறைவேற்றப்பட்டதான பரந்த விரிந்த வேலையையும் சித்தரித்துக் காட்டுகின்றதாய் இருக்கின்றது.

பஸ்கா ஆட்டுக்குட்டியானது, தலையாகிய இயேசுவையும், அவரது சரீரமாகிய சபையையும் அடையாளப்படுத்துகிறதில்லை. அது குறிப்பாக "தேவ ஆட்டுக் குட்டியாகிய," நமது கர்த்தர் இயேசுவை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்று நமது கர்த்தரைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தது. பஸ்கா ஆட்டுக்குட்டியின் விஷயத்திலும், இப்படியாகவே கட்டளையிடப்பட்டிருந்தது. அது முழுமையாகச் சுடப்பட வேண்டும் மற்றும் புசிக்கையில், அதன் எலும்புகள் முறிக்கப்படக்கூடாது. இன்னுமாக பஸ்கா ஆட்டுக்குட்டியும், அதன் இரத்தமும், முதற்பேறானவர்களாகிய சபைக்கு மாத்திரம் அடையாளமாய்க் காணப்படுகின்ற முதற்பேறானவர்களுக்கு மாத்திரம் "கடந்துபோகுதலை," காப்பாற்றப்படுதலைச் சாத்தியமாக்கிற்று. மற்றவர்களுடைய விடுதலை, பஸ்காவினுடைய நிழலில் இடம்பெறுவதில்லை.

பாவநிவாரண நாள் பலியில், தெளிவான வித்தியாசம் உள்ளது. இரண்டு பலிகள் ஏறெடுக்கப்படுகின்றது — ஒன்று பிரதான ஆசாரியனுடைய சரீரத்திற்காகவும், மற்றும் அவரது குடும்பத்தாருக்காகவும் ஏறெடுக்கப்படுகின்றது, மற்றுமொரு பலியானது "ஜனங்கள் அனைவருக்காகவும் ஏறெடுக்கப்படுகின்றது. முதலாவது பலியானது (29 வருடங்களுக்கு முன்னதாக வெளியிடப்பட்டதான ஆசரிப்புக்கூடார நிழல்களில்) நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிற வண்ணம் சபைக்காகவும், "முழு விசுவாச வீட்டாருக்காகவுமான" நமது கர்த்தருடைய மரணத்தை அடையாளப்படுத்து கின்றதாய் இருக்கின்றது. பாவநிவாரண நாளின் இரண்டாவது பலியானது, "ஜனங்கள் அனைவருடைய பாவங்களுக்காக," கர்த்தருடைய ஆட்டினுடைய நிஜமாகிய

சபையினுடைய மரணத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இரண்டையும் ஒரே பிரதான ஆசாரியன்தான் ஏறெடுத்தார் மற்றும் இவர் நமது கர்த்தர் இயேசுவுக்கும், இயேசு தம்மையே முதலாவது பலிச்செலுத்திடும் காரியத்திற்கும், பின்னர் அவரது அங்கத்தினர்கள் என்று ஏற்றுக்கொண்டிடும் நம்மை இரண்டாவதாகப் பலிச் செலுத்துகின்ற காரியத்திற்கும் நிழலாய்க் காணப்படுகின்றார்.

ஆசாரியர்களுக்கான பிரதிஷ்டையில், காளை மாத்திரமே பாவநிவாரணமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது (ஆடு இடம்பெறுவதில்லை, ஏனெனில் இது "ஜனங்களுக்காக" இல்லை). பின்னர் சர்வாங்க தகனபலி காண்பிக்கப்பட்டது மற்றும் இது கர்த்தரையும், சபையையும் அவர்களது ஒன்றுபட்ட மற்றும் அதேசமயம் பிரிக்கப்பட்ட நிலையையும், உறவையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆட்டுக்கடா ஒன்று அடிக்கப்பட்டு, சந்துகளாக துண்டாக்கப்பட்டு, கழுவப்படுகின்றது; பின்னர் அதன் துண்டுகளானது, கர்த்தருடைய பலிபீடத்தில் தலையுடன் தொடர்புடையதாக, வரிசையாக வைக்கப்படுகின்றது; மற்றும் இது முழுவதும் தகனபலியாகச் செலுத்தப்படுகின்றது. இது சபையாகிய சரீரத்தினுடைய அங்கத்தினர்களுக்கு, சரீரத்தின் தலையாகிய கர்த்தரோடுள்ள உறவை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. (யாத்திராகமம் 29:10-18)

## பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரித்தல்

பாவநிவாரண நாள் பலியினுடைய, பாவநிவாரணபலியின் விஷயத்தில் இன்னொரு விஷயமும் கவனிக்கப்பட வேண்டும்; இதுவும் பஸ்காவிலிருந்து முற்றிலும் வேறுபட்ட காரியமாகும்; அதாவது பாளயத்திற்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும் காரியமாகும். காளை முதலாவதாகச் சுட்டெரிக்கப்படுகின்றது, மற்றும் இரண்டாவதாக வெள்ளாட்டுக்கடா சுட்டெரிக்கப்படுகின்றது. (லேவியராகமம் 16:27; யாத்திராகமம் 29:14) சுட்டெரித்தலானது, படிப்படியான மாம்சத்தினுடைய அழிவை அடையாளப் படுத்துகின்றதாய் இருந்தது. பாளயத்திற்குப் புறம்பே என்பது மனிதனால் புறக்கணிக்கப்படுவதை, அவமதிப்பை, விலக்கிவைத்தலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நமது கர்த்தர் இப்படியாகவே பாளயத்துக்குப் புறம்பே பாடுபட்டார் என்றும், நாமும் அவரோடுகூட, அவரது சரீரத்தின் அங்கத்தினர்களெனப் பாடுபட வேண்டுமென்ற முழு நோக்கத்துடன், அதே மனப்பான்மையுடன் காணப்படுவோமாக என்றும் அப்போஸ்தலன் கூறுகின்றார். இவ்வுண்மையைப் பரிசுத்த பவுல் வலியுறுத்தும் வண்ணமாக, "எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாகப் (பலிக்காக) பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டுவரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும். அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச்

சுமந்து, (கர்த்தருடைய ஆடுகளெனப்) பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம்" என்று கூறுகின்றார். (எபிரெயர் 13:11-13)

பாருங்கள் இங்கு அப்போஸ்தலன் நிழலான பலிகளைச் சுட்டிக்காட்டி, அவைகளைக் கிறிஸ்து மற்றும் சபையினுடைய விசேஷித்த பலிகளுடன் ஒப்பிடுகின்றார்; மற்றும் கிறிஸ்துவின் பலியில் பங்கெடுக்கவும் — நமது கர்த்தரினால் அனுபவிக்கப்பட்டது போன்று பாளயத்துக்குப் புறம்பான அனுபவங்கள் வாயிலாகக் கடந்துசெல்லும் கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடா வகுப்பாரில், நம்மை அங்கத்தினர்களாக்கிக் கொள்ளவும் அப்போஸ்தலன் நமக்குப் புத்திமதி கூறுகின்றார்; காளை கர்த்தருக்கும், வெள்ளாட்டுக்கடா நமக்கும் நிழலாய்க் காணப்படுகின்றது.

ஒருகாலத்தில் நம்மோடுகூடக் காணப்பட்டு, ஆனால் இப்பொழுது நம்மைவிட்டுப் பிரிந்துபோனவர்களில் சிலர், தங்கள் ஆதிக்கத்தினை எவர்கள்மேல் செலுத்த முடிகின்றதோ, அவர்களுடைய விசுவாசத்தை அசைத்துப்போடுவதற்குத் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்கின்றனர். இவர்கள் வருடக்கணக்காக எங்களோடு காணப்பட்டு, (இந்த நிழலினுடைய நிறைவேறுதல் மற்றும், சபை அவளுடைய ஆண்டவரோடுகூடத் தற்காலத்தில், இந்தப் பாடுகளில் ஐக்கியம் கொண்டிருத்தல் தொடர்புடைய விஷயத்தில்) ஒருமித்தக் கருத்துக்கொண்டிருப்பதாகக் கூறினபோதிலும், இப்பொழுது இவர்கள் இவ்விஷயங்களில் எல்லாம் குருடாகிப் போனவர்களாகவும், முடிந்தமட்டும் அதிகமான நபர்களைக் குருடாக்கிப் போடுவதற்கும், குழப்பிடுவதற்கும் ஆவலாய்க் காணப்படுபவர்களாகவும் இருக்கின்றனர். நாம் இங்கு மேலே முன்வைத்துள்ளவைகளை, நம்மால் முடிந்தமட்டும் கடந்த 29 வருடங்களாக முன்வைத்து வருகின்றோம் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட சபையானது, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களெனப் பாடுபடுவதற்குச் சிலாக்கியம் அடைந்துள்ளது என்றும், எதிர்க்காலத்தில் அவர் தலையாகக் காணப்படும் ஒரே சரீரத்தின் அங்கத்தினர்களென, அவரோடுகூட மகிமையடையவும் சிலாக்கியமடைந்துள்ளது என்றுமுள்ள இந்தச் சுவிசேஷயுகத்தினுடைய இரகசியத்தை வெளிப்படுத்தி வருகிறோம்.

இந்த விஷயம் தொடர்பாகவும், மற்ற எந்த விஷயம் தொடர்பாகவும் நாம் எழுதியுள்ளவைகளானது, நமது கர்த்தர் இயேசு நமக்கான பலியாக, தம்முடைய சொந்த இரத்தத்தைக் கொடுத்துள்ளார் என்றும், நமக்கான பலியை, அவர் கல்வாரியில், சிலுவையின் மீதினில், தம்முடைய சொந்த சரீரத்தில் நிறைவேற்றினார் என்றுமுள்ள கருத்துக்களை மறுக்கிறதாய்க் காணப்படுவதில்லை. அப்போஸ்தலனுடைய வார்த்தையின்படி, அவர் ஆவிக்குரிய சரீரத்திற்கு, ஆவிக்குரிய தலையென உயர்த்தப்படுவதற்கான வேளைவந்தது. அவர் மாம்சத்திலிருந்தபோது, அந்த ஆவிக்குரிய தலையாகக் காணப்படவில்லை. அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்னரே,

அவர் சபையாகிய தம்முடைய சரீரத்திற்குத் தலையானார். சபையானது, தங்கள் அழிவுக்குரிய சரீரங்களைப் பலியில் அர்ப்பணித்து, அது ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, அவர்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட புதுச் சிருஷ்டிகளாக மாத்திரமே, அவரது அங்கத்தினர்களானார்கள். நம்மைப் புதுச் சிருஷ்டிகளென ஏற்றுக்கொள்கையில், பிரதான ஆசாரியன் நமது அர்ப்பணிக்கப்பட்ட சித்தங்களை ஏற்றுக்கொள்கின்றார் மற்றும் இதை நாம் நிறைவேற்றிடுவது தொடர்புடையதாக நம்மைப் பரீட்சிக்கின்றார் மற்றும் நம்முடைய பலியின் இரத்தத்தினை அவருடையதெனக் கருதுகின்றார், ஏனெனில் அவருடைய இரத்தமே நம்முடையதை நீதிமானாக்கி, பலிச்செய்திடுவதற்கு ஏதுவாக்கிற்று.

தங்களைப் போஷிக்கத்தக்கதாக, தேவன் கொடுத்துள்ளதான இந்தச் சத்தியங்களை ஆராய்வதில் தங்கள் நேரத்தை ஞானமாய்ப் பயன்படுத்திக் கொள்பவர்களுக்கான அநுகூலத்தினை நாம் உணர்ந்துகொள்கின்றோம். வேத ஆராய்ச்சியில் உண்மையாய்க் காணப்பட்டு, மற்றும் அதற்கேற்ப ஜீவிப்பவர்கள், இப்பொழுது பலவான்களாய்க் காணப்படுகின்றனர். மற்றவர்களோ இப்பொழுது பெலவீனர்களாகிப்போய், ஒவ்வொரு உபதேசக் காற்றினால் இழுத்துச் செல்லப்படு வதற்கு ஏதுவாய்க் காணப்படுகின்றனர். கூடுகைகள் மூலமாகவும், குறிப்பாக வாசிப்பதன் மூலமாகவும் அடையப்பெறும் ஆவிக்குரிய போஷாக்கின் அவசியத்தினை நாம் வலியுறுத்துகின்றோம். எவ்வளவுதான் கேட்டாலும், அது வாசிக்கிறதற்கு ஈடாகாது. இன்னுமாக ஆறு தொகுதிகளை/volumes வாசிப்பதற்கு நாம் அறிவுரைக் கூறுகின்றோம். கொஞ்சம் காலத்திற்கு முன்னதாக, ஒரு தாயாரும், அவரது மகளும், தாங்கள் ஒரு நாளுக்குப் பன்னிரண்டு பக்கங்கள் வைத்துப்படித்தால், ஆறு தொகுதிகளையுமே ஒரு வருடத்தில் வாசித்துவிடலாம் என்று கண்டுபிடித்ததாக வாட்ச் டவருக்குக் கடிதம் எழுதினதின் மூலமான யோசனையை இன்று அநேகர் பின்பற்றி வருகின்றார்கள் என்று நாங்கள் மீண்டுமாக நினைப்பூட்டுகின்றோம். இந்தத் தாயாரும், மகளும் இம்முறையை ஒரு வருடம் பின்பற்றி, அடுத்தும் இதையே பின்பற்றி இருந்திருக்கின்றனர். இந்த யோசனையானது, அநேகரால் கைக்கொள்ளப்பட்டு, நல்ல பலன்கள் கிடைத்துள்ளது மற்றும் அதையே நாமும் அனைவருக்கும் பரிந்துரைக்கின்றோம். நம்முடைய மனங்களானது ஓட்டையான பாத்திரங்களாகக் காணப்படுகின்றது மற்றும் பலமுறைகள் தொகுதிகளை வாசித்தவர்கள், தாங்கள் முன்பு வாசித்தப்போது வெளிப்படாதவைகள், பின்பு வாசிக்கையில் வெளிப்படுவ தாகவும் கண்டிருக்கின்றனர்.

# என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்

## மத்தேயு 26:17-30

இந்தப் பாடங்கள் அனைத்துமே நமக்காக முன்கூட்டியே தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. இல்லையேல் நமது கர்த்தருடைய இறுதி பூமிக்குரிய நாட்களில், வருஷத்தினுடைய வசந்த காலத்தின்போது சம்பவித்த நிகழ்வுகளைக் குறித்து, அவைகள் நிகழ்ந்த காலப்பகுதியில்தான் தியானிப்பவர்களாய் இருந்திருப்போம். சத்தியம் எப்போதுமே நமக்கு விலையேறப்பெற்றதாய் இருந்துள்ளது மற்றும் எப்போதும் நன்மைக்கேதுவான படிப்பினைகளைக் கொண்டுள்ளது.

இயேசு ஒரு யூதனாவார்; ஆகையால் மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் அனைத்து அம்சங்களுக்கும் கீழ்ப்பட்டவராய் இருந்தார். அவர் நியாயப்பிரமாணத்தை அழிக்க வரவில்லை, மாறாக அதை நிறைவேற்றவே வந்தார். இன்றைய பாடமானது, நியாயப்பிரமாணத்தினுடைய ஓர் அம்சமாகிய பஸ்கா பிரமாணத்தினுடைய நிறைவேறுதலைச் சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது; இது ஏற்கெனவே முழுமையாய் நிறைவேறிவிட்டது என்றில்லாமல், 18 நூற்றாண்டுகளுக்கு மேலாக நிழலானது நிறைவேறிக்கொண்டு வருகின்றது என்றும், சீக்கிரத்தில் முழுமையாய் நிறைவேறிவிடும் என்றும் சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. இந்தப் பாடத்தினைப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், நாம் நிழலைத் தெளிவாய் மனதில் நினைவு பெற்றிருக்க வேண்டும்:

சுமார் 3,500 - வருடங்களுக்கு முன்னதாக, தேவன் இஸ்ரயேல் ஜனங்களை, எகிப்தின் இராஜாவாகிய பார்வோனின் சர்வாதிகார/கொடுங்கோலாட்சியின் கீழிருந்து விடுவித்தார். ஜனங்களை அடிமைகளாக, சொத்துக்களாக வைத்துக்கொள்ள விரும்பி, அவர்களை அனுப்புவதற்குப் பார்வோன் திரும்பத்திரும்ப மறுத்து வந்தான். சிட்சைகளாக தேவன் எகிப்தின்மீது வாதைகளைத் திரும்பத்திரும்ப அனுப்பினார். ஒவ்வொரு வாதையினுடைய தாக்கத்தினாலும், பார்வோன் மனந்திரும்பினான் மற்றும் தன்மீது இரக்கம் காண்பிக்கப்படுவதற்கும், ஜனங்கள் வாதையினின்று விடுவிக்கப்படுவதற்கும், மோசே வாயிலாக தேவனிடத்தில் மன்றாடினான். எனினும் தெய்வீக இரக்கத்தினுடைய ஒவ்வொரு வெளிப்பாடும், அனைத்து வாதையிலுமே கடினமானதான பத்தாவது வாதை இறுதியில் வருவதை அவசியமாக்குமளவுக்குப் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்த மாத்திரமே செய்தது. அந்தப் பத்தாம் வாதையானது, எகிப்தினுடைய முதற்பேறானவைகள் அனைத்திற்கும் எதிரான மரணத் தீர்ப்பின் நிறைவேற்றுதலாய்க் காணப்பட்டது. ஆனால் எகிப்திலுள்ள இஸ்ரயேலர்கள், குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் எகிப்திற்கான இந்த ஏற்பாடுகளிலிருந்து விலக்கப்பட்டவர்களாய் இருந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்களுக்கென்று ஓர் ஆட்டுக்குட்டியினைப் பெற்றிருக்க வேண்டும்; அதன் எலும்புகள் எதுவும் முறிக்கப்படக்கூடாது. அதன் இரத்தமானது, வீட்டுவாசல் நிலைக்கால்களில் தெளிக்கப்பட வேண்டும் மற்றும் வீட்டிற்குள் கூடியிருக்கும் குடும்பமானது, அதன் மாம்சத்தைப் புளிப்பில்லாத அப்பங்களுடனும், கசப்பான கீரைகளுடனும் புசிக்க

வேண்டும்; அதுவும் பிரயாணிப்பவர் போன்று கையில் தடி பிடித்துக்கொண்டு, காலையில் எகிப்திலிருந்து வெளியேறுவதற்கு ஆயத்தமான நிலையில் புசிக்க வேண்டும்.

## இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் கடந்துபோகப்பட்டார்கள்

தெய்வீகத் தீர்ப்பானது எகிப்தியர்களின் முதற்பேறானவர்களைக் கொன்றுபோட்டதான அந்த இரவில், இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் கடந்துபோகப்பட்டார்கள் அல்லது தப்புவிக்கப்பட்டனர்; ஆகையால்தான் பஸ்கா - கடந்துபோதல் எனும் பெயர் வந்தது. மேலும் இஸ்ரயேலின்மீதான கர்த்தருடைய மிகப்பெரிய ஆசீர்வாதத்திற்கான ஞாபகமான இந்த ஆசரிப்பானது, தேவனுடைய தயவிற்கான நினைவுகூருதலாக வருடந்தோறும் ஆசரிக்கப்படும் படிக்கு கட்டளையிடப்பட்டது; ஏனெனில் இது கடந்துவரவிருக்கின்றதான இன்னும் மேலான இரக்கம் மற்றும் ஆசீர்வாதத்திற்கான நிழலாய்க் காணப்படுகின்றது. கொஞ்சம் காலத்திற்குப்பிறகு, தப்புவிக்கப்பட்டதான முதற்பேறானவர்களுக்குப்பதிலாக கோத்திரங்களில் ஒன்றாகிய, லேவி கோத்திரம் எடுக்கப்பட்டது. இதற்குப் பிற்பாடு லேவியர்களே, கடந்துபோகப்பட்ட முதற்பேறானவர்களாகக் காணப்பட்டனர் மற்றும் தேவனுக்கும் அவருடைய ஊழியத்திற்கென்றும் விசேஷமாய் அர்ப்பணிக்கப்பட்டவர்கள் ஆனார்கள்.

## நிஜத்தில் நிறைவேறுதல்

இஸ்ரயேலர்கள் மற்றும் அவர்களது முதற்பேறானவர்களின் இந்த அனுபவங்களானது மிகவும் உண்மையானவைகளாகவும், கவனத்தை மிகவும் ஈர்க்கின்றவைகளாகவும் அவர்களுக்குக் காணப்பட்டன; ஆனால் இவைகள் இப்பொழுது கடந்துபோகப்படுகின்றவர்களும், அந்நிழலுக்கு நிஜமானவர்களுமாய்க் காணப்படுகின்றவர்களுமான கிறிஸ்தவர்களுக்கு இன்னும் அதிகமாய்க் கவனத்தை ஈர்க்கின்றதாயுள்ளது. கிறிஸ்தவர்கள் என்று குறிப்பிடுகையில், கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கைப்பண்ணியுள்ளவர்கள் அனைவரையும் அல்லது சபைக் கூடுகைகளில் தினந்தோறும் பங்கெடுப்பவர்கள் அனைவரையும் நாம் குறிப்பிடவில்லை. இப்பொழுது அழைக்கப்பட்டு, கர்த்தருக்கான தங்களது உண்மையில் பரீட்சிக்கப்பட்டு, விசுவாசத்தின் வாயிலாக மரணத்தைவிட்டு, ஜீவனுக்குட்பட்டிருப்பவர்களாகிய, பரிசுத்தவான்களாகிய சிலரையே நாம் குறிப்பிடுகின்றோம். இவர்கள் வேதவாக்கியங்களில், “பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை” என்று குறிப்பிடப்பட்டுள்ளனர் (எபிரெயர் 12:23). முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலுக்கு அல்லது முதற்பேறானவர்களின் தப்புவிக்கப்படுதலுக்குப் பிற்பாடே எகிப்திலிருந்து இஸ்ரயேல் தேசத்தாரின் விடுதலை சம்பவித்ததுபோலவே, “முதற்பேறானவர்களுடைய சபை” நிறைவேறுதலுக்குப் பிற்பாடே, முதலாம் உயிர்த்தெழுதலுடைய வல்லமையினால் இவர்கள்

மரணத்திலிருந்து, ஜீவனுக்குள் கடந்து சென்றபிற்பாடே, தெய்வீக ஆசீர்வாதமானது மனுக்குலத்தினுடைய உலகத்தின்மீது நேரடியாய்க் கடந்துவரும். முதற்பேறானவர் களின் வகுப்பார் இருப்பது என்பது, பிற்பிறப்புகள் வகுப்பார் இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இப்படியாக தற்காலத்தின் சபைக்கான அழைப்பும், பரீட்சைகளும், சோதித்தல்களும், நிரூபித்தல்களும் மற்றும் இறுதியில் பலன் அளித்தல்களும், மனுக்குலத்திற்கான தெய்வீக இரக்கம் பாராட்டுதலின் முடிவாக இல்லையென்றும், இது இரக்கம் பாராட்டுதலுக்கான ஆரம்பம் மாத்திரமே என்றும், வேதவாக்கியங்கள் எங்கும் தெளிவாய்ப் போதிக்கின்றன; ஏனெனில் பரிசுத்தவான்கள் "முதற்பேறானவர்களின் சபை" என்று அல்லது அப்போஸ்தலர் குறிப்பிடுவதுபோன்று "தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்கள்" என்று குறிப்பிடப்படுவதால், பிற்பலன்கள் என்பதும் தெய்வீகத் திட்டத்தினுடைய பாகமாய் இருக்கின்றது என்பதில் நமக்கு உறுதியே.

லேவியர்கள் மத்தியில் காணப்பட்ட பல்வேறு பிரிவுகள், கிறிஸ்துவினுடைய சபையின் பல்வேறு படிநிலைகள் மற்றும் நிலைகளை அடையாளப்படுத்துகின்றது. ஆனால் லேவியர்கள் மத்தியிலான முதன்மையான பிரிவினர், ஆரோனின் ஆசாரிய குடும்பத்தினராய் இருந்தனர்; இதுபோலவே நிஜமான லேவியர்கள் மத்தியிலும் ஒரு விசேஷித்த வகுப்பார், அதாவது உண்மையுள்ளவர்களாகிய சிலர் காணப்பட்டனர் மற்றும் இவர்கள் வேதவாக்கியங்களில் இராஜரிக ஆசாரிய கூட்டத்தினர் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## நிஜமான ஆட்டுக்குட்டியானவரும், அவருடைய இரத்தமும்

இயேசுவின் நாட்களில் பஸ்காவினுடைய நிஜம் நிறைவேறுவதற்கான வேளை வந்தது. இயேசுதாமே பஸ்கா ஆட்டுக்குட்டியாகப் போகின்றார். விசுவாசத்தினால் அவரது பலியின், அவரது இரத்தத்தின் புண்ணியமானது, அவரது ஜனங்களுடைய இருதயங்களின் நிலைக்கால்களில் தெளிக்கப்படப்போகின்றது மற்றும் அவரது மாம்சமானது, அவரது பூமிக்குரிய பூரணத்தின் புண்ணியமானது அவர்களது மனங்களில் புசிக்கப்படப்போகின்றது அல்லது சொந்தமாக்கப்படப்போகின்றது. இதனோடுகூட அவருடைய ஜனங்கள் தெய்வீக வாக்குத்தத்தங்களாகிய புளிப்பில்லாத அப்பங்களையும் மற்றும் சோதனைகள், துன்பங்கள் எனும் கசப்பான கீரைகளையும் புசிக்கப்போகின்றார்கள் மற்றும் இன்னுமாக ஆட்டுக்குட்டியானவரோடுகூட, அவரது அவமானங்களிலும், பாடுகளிலும் அவர்கள் பங்கெடுப்பதை அடையாளப்படுத்து கின்றதான திராட்சப்பழரசத்தையும் அவர்கள் பானம்பண்ணப் போகின்றார்கள்.

தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு என்ற நிஜமான பஸ்கா ஆட்டுக் குட்டியானவர், நிழலான ஆட்டுக்குட்டிகளானது அடிக்கப்பட்டதற்கான நாளுக்குரிய ஆண்டு நிறைவு நாளில்தானே, சுமார் 19 நூற்றாண்டுகளுக்கு முன்னதாக அடிக்கப்பட்டார். இயேசுவின் பலியானது, மீண்டும் மீண்டுமாகத் திரும்பிச்செய்யப்பட வேண்டியதில்லை, ஏனெனில் விசுவாசத்தின் மூலமாக நாம் அனைவரும் அதே இரத்தத்தை இன்று தெளிக்கின்றோம் மற்றும் நம்முடைய இருதயத்தில் அதே

பூமிக்குரிய பலியினுடைய புண்ணியத்தினைப் புசிக்கின்றோம் மற்றும் துன்பங்கள் எனும் அநேகக் கசப்பான கீரைகளைப் பெற்றிருக்கின்றோம் மற்றும் இரத்தத்தைப் பானம் பண்ணுகின்றோம் - அதாவது ஆண்டவருடைய சிந்தனையிலும், நீதியினிமித்தமான பாடுகளுக்கான பலனிலும் பங்கடைகின்றோம்.

"சிறு மந்தையினரைத்" தவிர மற்றபடி இந்த 19 நூற்றாண்டுகள் காலமாக, அநேகர் இந்தச் சிலாக்கியங்களை உணர்ந்துகொண்டதில்லை. சிறுமந்தையின ருக்கான தற்போதுள்ள அனுபவங்களினிமித்தம், அவர்கள்மீது பொறாமைகொள் வதற்கும் எவருமில்லை; இனிவரவிருக்கும் ஜீவியத்தில் அவர்களுக்கான பலன் மற்றும் ஆசீர்வாதங்கள் எவ்வளவு மிகுதியாயிருக்கும் என்பது குறித்தும் எவரும் உணர்ந்துகொள்ளவுமில்லை. அக்காலத்தில் கிறிஸ்துவோடுகூடப் பாடுபடுவதற்குப் பதிலாக, இவர்கள் மகிமையோடும், கனத்தோடும், அழியாமையோடும் அவரோடுகூட ஆளுகைச்செய்வார்கள்.

## என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்

("நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே" - 1 கொரிந்தியர் 5:7) நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியென மரிப்பதன் வாயிலாக இந்த நிழலை நிறைவேற்றிட ஆரம்பித்த இயேசு, தம்முடைய பின்னடியார்களுக்கு வருடந்தோறும் நினைவூட்டும் சின்னங்களை நிறுவினார்; இது அவர்களுடைய மனதில் நிழலுக்குப் பதிலாக இடம் பெற்று, மாபெரும் நிஜத்தைத் தொடர்ந்து அவர்களுக்கு நினைப்பூட்டுவதாகக் காணப்படும். சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியினுடைய மாம்சத்திற்குப்பதிலாக, ஆண்டவர் அப்பத்தினைப் பயன்படுத்தினார் மற்றும் இரத்தத்திற்குப்பதிலாக திராட்சப்பழரசத்தைப் பயன்படுத்தினார் மற்றும் தொடர்ந்து நிழலானது ஆசரித்து நினைவுகூரப்படுவதற்குப்பதிலாக, இவைகள் [புதிய சின்னங்கள்] நிஜத்திற்கான, நினைவுகூருதலாக ஆசரிக்கப்படுவதற்குக் கட்டளையிட்டார்; அதாவது "உலகத்தின் பாவத்தை எடுத்துப்போடுகிறதான தேவ ஆட்டுக்குட்டிக்கும்" மற்றும் இஸ்ரயேலும், பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படுவதற்கு முன்னதாக முதற்பேறானவர்களின் சபைக்கு நிகழவிருக்கின்றதான கடந்துப்போகுதலுக்குமான - நினைவுகூருதலாக ஆசரிக்கப்படுவதற்குக் கட்டளையிட்டார்.

நமது கர்த்தர் யூதனாயிருந்தபடியால், சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டி, முதலானவைகளைப் புசிப்பதற்கு, அதாவது நிழலான பஸ்காவைக் கைக்கொள்வதற்கு முதலாவது கடமைப்பட்டிருந்தார்; ஆனால் அந்தப் பஸ்கா இராப்போஜனத்திற்குப் பிற்பாடு தமக்கான நினைவுகூருதலுக்கு மாற்றுப்பொருளான அப்பத்தையும், திராட்சப்பழரசத்தையும் பின்வருமாறு கூறி நிறுவினார் . . . "நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களெல் லாரும் அதிலே பானம்பண்ணினார்கள்" (வசனம் 23). அவரது தெரிந்துகொள்ளப்பட்ட

மணவாட்டியும், அவரது இராஜ்யத்தில் உடன்சுதந்தரர் களுமான சபையைச் சேர்த்துக்கொள்வதற்கென்றும், இஸ்ரயேல்மீதும் மற்றுமாக இஸ்ரயேல் வாயிலாக ஒட்டுமொத்த மனுக்குலத்தின்மீதும் சம்பூரணமான ஆசீர்வாதங்ளைப் பொழிந்திடுவதற்கென்றும் அவர் வல்லமையிலும், மகா மகிமையிலுமான தமது இரண்டாம் வருகையில் வரும்வரையிலும்... "நான் தேவனுடைய இராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம்பண்ணும் நாள்வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனி நான் பானம்பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்கச் சொல்லுகிறேன் என்றார்" (மாற்கு 14:22-25).

## சுயநலமாய்க் காட்டிக்கொடுத்த யூதாஸ்

காட்டிக்கொடுப்பதற்கான வேளை சமீபமாயிற்று. நாம் அறிந்திராத ஏதோ ஒரு வல்லமையினால், யார் தம்மைக் காட்டிக்கொடுப்பார் மற்றும் இன்னும் பல விஷயங்களை ஆண்டவர் அறிந்திருந்தார். அக்காரியத்தைப் பன்னிருவரிடத்தில் வெளிப்படுத்தும் வண்ணமாக அவர் "உங்களிலொருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்றார். ஒவ்வொருவரும், "ஆண்டவரே, நானோ, நானோ?" என்றும் கேட்டார்கள். தன்னுடைய வஞ்சகமான நடவடிக்கைப்பற்றி ஆண்டவர் அறிந்திருக்கிறார் என்பதை அறிந்தும், யூதாஸ் வெட்கம் இல்லாமலேயே "நானோ?" என்று கேட்டான். "நீ சொன்னபடிதான்" ...நீ தான் காட்டிக்கொடுப்பவன் என்பதாகப் பதில் கடந்துவந்தது. தெய்வீகத் திட்டமானது துரோகியினால் நடந்தேற்றப்பட்டது மற்றும் அவர் முப்பது வெள்ளிக்காசுகளுக்கு விற்கப்பட வேண்டும் என்பதான வேதவாக்கியங்கள் நிறைவேறின; ஆனால் இது தொடர்பாக தேவன் முன்னறிவு கொண்டிருப்பதினால், தேவன் எவ்விதத்திலாகிலும் துரோகமானச் செயல் புரிவதற்குப் பின்னிருந்து தூண்டிவிட்டார் என்பதாகாது; ஆகையால்தான் "எந்த மனுஷனால் மனுஷக்குமாரன் காட்டிக் கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ" என்பதாக வேதவாக்கியம் இடம் பெறுகின்றது. இந்தக் கண்ணோட்டத்தின்படி, யூதாசுக்கு எதிர்க்கால வாழ்க்கைக்கான எந்த நம்பிக்கையும் இல்லையென்று நாம் புரிந்துகொள்ள வேண்டும். யூதாஸ் தனது மரணத்திற்கு முன்பாக அடைந்த துக்கமும், வேதனையும், முந்திய நாட்களில் அவன் அடைந்திருந்த எந்தச் சந்தோஷங்களினாலும் சரிபடுத்தப்பட முடியவில்லை.

## என் பிதாவின் இராஜ்யத்தில்

தமது மாம்சத்தை அடையாளப்படுத்துகின்றதான அப்பத்தையும், தமது இரத்தத்தை அடையாளப்படுத்துகின்றதான பாத்திரத்தையும் ஆண்டவர் சீஷர்களிடத்தில் கொடுத்தபோது, அவர் அவர்களுக்கு நீதிமானாக்கப்படுதலையும், பரிசுத்தமாக்கப்படுதலையும் அடையாளமான விதத்தில் கொடுத்தவராய் இருந்தார் மற்றும் பரிசுத்தவானாகிய பவுல் விவரித்ததுபோன்று, இதைக் காட்டிலும் அதிகமாய்ச் செய்தார்; அதாவது தற்காலத்தின் பாடுகளிலும், எதிர்க்கால மகிமைகளிலும்

அவரோடுகூடப் பங்கெடுப்பதற்கு வாய்ப்பளித்தார் (1 கொரிந்தியர் 10:16, 17; மத்தேயு 26:29). பாத்திரத்தினுடைய நிஜமானது, அதன் உயர்வான கோணத்தில் பார்க்கையில், அது மகிமையின் மகா இராஜாவாகிய கிறிஸ்து, தமது மகா வல்லமையையும், ஆளுகையையும் எடுத்துக்கொள்ளும்போது, அவரோடுகூட, அவருக்குள் உண்மையுள்ளவர்கள் அனைவரும், பங்கடைகின்றதான புதிய சந்தோஷங்களைக் குறிக்கின்றதாய் இருக்கும்.

### *கிறிஸ்து நமது பஸ்கா*

நம் இரட்சகர் அன்பின் நினைவலைகளினாலே,
நாம் இந்த எளிய விருந்தை அனுஷ்டிக்கின்றோமே,
ஒவ்வொரு முழுத்தத்தம் செய்திட்ட பரிசுத்தவான்களையும்
இந்த விருந்து சாலைக்குள்ளே வரவேற்கின்றோமே.

விசுவாசத்தினாலே ஜீவ அப்பத்தை எடுத்துக்கொள்வோமே,
அதையே இது அடையாளம் காட்டுமே,
இந்தப் பாத்திரம் அவர் இரத்தத்திற்கான அடையாளமே,
நமக்கான விலையேறப்பெற்ற தியாக பலி இதுவே.

இப்பாத்திரம் மீண்டும் மீண்டுமாய் நினைப்பூட்டுதே
நீர் எங்களை விடுவித்த அந்நேரத்தையே.
விரைவிலே இராஜ்யத்தின் அதிகாரத்துடனே புது மகிழ்ச்சியில்
அதை உம்முடனே பானம்பண்ணுவோமே ஆண்டவரே.

எவ்வளவு களிப்பு எமக்குக் கிட்டும் ஆண்டவரே,
உம்முடனே என்றென்றைக்கும் வாழும் பாக்கியம் கிடைக்குமே,
உயிர்த்தெழுந்த ஆற்றல்களை ஆடையாக அணிந்த நாமே,
உம்முடைய முடிவில்லாத புகழினைப் பாடிடுவோமே.

- விடியல் துதிப்பாடல்கள், #122

# இஸ்ரயேல் தப்புவிக்கப்பட்டது (அ) கடந்துபோகப்பட்டது

## யாத்திராகமம் 12:21-31

***"அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." மத்தேயு 20:28***

யூதருடைய பஸ்கா என்பது ஓர் ஏற்பாடு என்றும், அது கடந்த காலங்களிலுள்ள ஒரு நினைவுகூருதல் என்றும், அதில் தங்களுக்கு எவ்விதமான விசேஷித்த கவனமும் இல்லை என்றும் கிறிஸ்தவ ஜனங்கள் கூறுவதுண்டு. பஸ்காவின் அர்த்தம் பொதுவாய்ப் புரிந்துகொள்ளப்படாததே, இப்படிப் பார்க்கப்படுவதற்கான காரணமாய் இருக்கின்றது. யூதனைக் காட்டிலும் உண்மையில் கிறிஸ்தவனே பஸ்காவின்மீது மிகுந்த ஆழமான கவனம் கொண்டவனாய் இருக்கின்றான். ஆனால் ஒருவிதத்தில் முழு உலகமே, அதன்மீது கவனம் கொண்டிருக்கின்றது மற்றும் அதை நாம் நம்முடைய இந்தப் பாடத்தில் பார்ப்போம்.

எபிரெயர்களுக்குப் பண்ணப்பட்டதான விடாப்பிடியான துன்புறுத்தல்களின் நிமித்தமாக எகிப்தியர்கள் மீது தண்டனையாக வந்த பத்தாவது வாதையானது, அவர்களது முதற்பேறானவர்களுடைய மரணத்தைக்கொண்டுவந்ததாய் இருந்தது. எகிப்தினுடைய ஒவ்வொரு வீட்டிலும் மரணம் வந்தது; அவர்களது குடும்பங்களினுடைய மலராகிய முதற்பேறான புத்திரன் (அ) புத்திரி மீது மரணம் வந்ததாய் இருந்தது. அந்த இரவினுடைய பீதி குறித்து விளக்குவதைக்காட்டிலும், நன்கு கற்பனை செய்து பார்க்கப்படலாம்.

மரணமானது எப்போதும் வேதவாக்கியங்களில் மனிதனுடைய சத்துரு என்றும், பாவத்திற்கான தண்டனை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாவத்தின் காரணமாக மரணத்தீர்ப்பானது நம்முடைய முதலாம் பெற்றோர்கள்மீது கடந்துவந்ததாய் இருந்தது மற்றும் அவர்கள் மூலம், முன்னோர் வழிவரும் பிரமாணங்கள் வாயிலாக, அது அவர்களது பிள்ளைகள் அனைவரின்மீது, மனுக்குலம்மீது கடந்துவந்ததாய் இருந்தது. நாம் அனைவரும் மரித்துக்கொண்டிருக்கின்றோம் மற்றும் மரணத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்கான ஒரே நம்பிக்கையானது, தேவன் நாம் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றார் என்றும், "அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்" உள்ள இயேசுவினுடைய மரணத்தின் மூலமாக, அவர் தம் நீதி திருப்திப்படுத்தப்படுவதற்கு ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றுமுள்ள உண்மைகளில் அடங்கியுள்ளது என்று வேதாகமம் தெரிவிக்கின்றது. பாவம் மற்றும் மரணத்திற்கான மாபெரும் தீர்வானது சீக்கிரத்தில் மனுக்குலத்திற்காகச் செயல்படுத்தப்படும் என்றும் வேதாகமம் கூறுகின்றதாய் இருக்கின்றது. மேசியாவினுடைய ஆளுகையின்போது, மரணத்தண்டனையானது இரத்துச் செய்யப்படும்; சாபமானது மாற்றிப்போடப்படும் மற்றும் அழுகையோ (அ) சஞ்சலமோ (அ) மரித்தலோ இருக்காது.

சாபம், மரணம் மாற்றிப்போடப்படுவது என்பது மகிமையடைந்த மீட்பர் வாயிலாக ஜீவனுடைய ஆசீர்வாதம் கடந்துவருவதைக் குறிக்கின்றதாய் இருக்கும். அப்போது

முழுமையாய் வெளிச்சமூட்டப்பட்டு, அவரது கரங்களினின்று தெய்வீகத் தயவினை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவருக்கும் அவர் ஜீவன் அளிப்பவராக இருப்பார். மனுக்குலத்தில் விருப்பமும், கீழ்ப்படிதலுமுள்ளவர்கள் அனைவரும் தகப்பனாகிய ஆதாமினுடைய மகிமையான பூரணத்திடத்திற்கும், நித்திய ஜீவனுக்கான சிலாக்கியத்திடத்திற்கும், முழுமையாய்ச் சீர்ப்பொருந்துவதற்கான உயிர்த்தெழுதலின் பணி ஆரம்பமாகும்.

எகிப்தியர்கள்மீது தேவன் அந்த இரவில் வர அனுமதித்ததானது, ஆறாயிரம் வருடங்களாக மனுக்குலம் அனைத்திற்கும் எதிராக காணப்பட்டு வருகின்றதான அதே தண்டனை மாத்திரமேயாகும். தண்டனை மரணமாக மாத்திரமாய்க் காணப்படாமல், சடுதியான மரணமாய்க் காணப்பட்டது. நல் ஆரோக்கியமான நிலையிலிருந்த முதற்பேறானவர்கள் ஓய்வு எடுக்கப்போனபோது, காலைக்கு முன்னதாக அவர்கள் பிணங்களானார்கள்; அவர்கள் சாதாரணமாய் மரிப்பதுபோல் இல்லாமல், மரணத்தண்டனையானது அவர்கள்மீது சடுதியாய் வந்தது. அவர்கள் நித்திரையடைந் தனர்.

இந்த வாதையானது இஸ்ரயேலின் வீடுகளைத் தீண்டவில்லை. இவர்களது முதற்பேறானவர்கள் சர்வ வல்லமையுள்ளவரால் தப்புவிக்கப்பட்டனர், கடந்து போகப்பட்டனர், பாதுகாக்கப்பட்டனர்; ஆகையால்தான் பஸ்கா/கடந்துபோகுதல் என்ற இந்தப் பெயர் வழங்கப்பட்டது. தெய்வீகக் கட்டளையின் பேரில் இஸ்ரயேலர்கள் இந்தச் சரித்திர நிகழ்வினுடைய ஆண்டு நிறைவு நாளினைத் தொடர்ந்து ஆசரித்தனர். ஒவ்வொரு இஸ்ரயேலனும் பஸ்காவினை ஆசரிக்கும்போது, தனது முற்பிதாக்களினுடைய இந்தத் தெய்வீக விடுதலைப்பற்றின இந்தப் பதிவின் மீதான தனது நம்பிக்கையையும், தேவனிடத்திலான விசுவாசத்தையும் வெளிப்படுத்துகின்றவனாய் இருக்கின்றான் — இப்படியில்லையெனில் அவன் வஞ்சகம் பண்ணுகிறவனாய் இருப்பான்; ஏனெனில் இதற்கு வேறெந்த அர்த்தமும் இல்லை.

## பஸ்காவினுடைய உண்மையான அர்த்தம்

இஸ்ரயேல் கடந்துபோகப்பட்டதான அனுபவமானது ஓர் உருவகமாகும். நிழலில் இவைகள் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடைய — ஆவிக்குரிய இஸ்ரயேலுடைய அனுபவங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அனைத்து ஜாதிகளிலிருந்தும், பிரிவுகளிலிருந்தும் — யூதர்கள், உரோமர்கள், பிரஞ்சு மக்கள், பிரிட்டிஷ் மக்கள் முதலானவர்களிடமிருந்தும் — சகல ஜாதிகளிலிருந்தும், கோத்திரத்தாரிடமிருந்தும், பாஷைக்காரரிடமிருந்தும் கூட்டிச்சேர்க்கப்படுகின்ற பரிசுத்தவான்களாகிய தேவ ஜனங்கள் அடங்கிய கூட்டத்தாரே இந்த ஆவிக்குரிய இஸ்ரயேலர் என்பது கவனிக்கப்பட வேண்டும். ஆவிக்குரிய இஸ்ரயேலின் பிரதான அங்கத்தினர்கள் மாம்சீக இஸ்ரயேலர்களிடமிருந்து வந்தனர். எனினும் எந்த ஜாதியாரும் தள்ளிவைக்கப்படுவதில்லை. இது ஒரு தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் வகுப்பாராகும்; இவர்கள் ஜாதியின் அடிப்படையிலோ அல்லது குணலட்சணத்தைத் தவிர மற்றபடி வேறெந்த முன்னுரிமைகளின் அடிப்படையிலோ தெரிந்தெடுக்கப் படுவதில்லை.

ஆவிக்குரிய இஸ்ரயேலின் இந்த வகுப்பார், அந்த இரவில் கடந்துபோகப்பட்டவர்களாகிய இஸ்ரயேலின், அதாவது மாம்சீக இஸ்ரயேலரின் முதற்பேறானவர்களால் அடையாளப்படுத்தப்படுகின்றனர். அடுத்தநாள் காலையில் இஸ்ரயேல் அனைத்தும் முதற்பேறானவர்களுடைய தலைமையின்கீழ் வெளியேறினார்கள்; இந்த முதற்பேறானவர்கள் பிற்பாடு ஆசாரியக்கோத்திரத்தில் அடையாளப்படுத்தப்பட்டனர்; இந்த ஆசாரியக்கோத்திரத்தார் மகிமையடைந்த மேசியாவை, இராஜரிக பிரதான ஆசாரியனாகப் பெற்றிருக்கும் இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாரை அடையாளப்படுத்துபவர்களானார்கள். அவரும், அவரது "முதற்பேறானவர்களின் சபையும்," அவரது உயிர்த்தெழுதலில், அதாவது முதலாவது (அ) பிரதான உயிர்த்தெழுதலில் பங்கடைவதன் மூலமாக சீக்கிரத்தில் மகிமையடைந்து, தேவனுடன் இசைவிற்குள் திரும்ப விரும்புகின்ற அனைவரையும் ஆசீர்வதிக்கின்றதான மேசியாவின் இராஜ்யத்தில், வல்லமையிலும், மகிமையிலும் நிறுத்தப்படுவார்கள். (எபிரெயர் 12:23)

கடந்த காலங்களில், வேதத்தின் மாணவர்கள் தேவனுடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்வதில் குறைவான வேகத்திலேயே காணப்பட்டனர். படிப்படியாக, தற்போதுள்ள சிலாக்கியங்களினுடைய வெளிச்சத்தில், தெய்வீக அன்பினுடைய, ஞானத்தினுடைய, வல்லமையினுடைய நீளங்களையும், அகலங்களையும், உயரங்களையும், அவர்கள் கற்பனைக்கூடப்பண்ணிப்பார்க்காத அளவுக்குத் தேவனுடைய வார்த்தைகளானது முன்வைக்கின்றது என்ற உண்மையினை அவர்கள் உணர்ந்துகொள்ளும் நிலைக்கு வருகின்றனர். தேவன் முதற்பேறானவர்களின் சபை என்று பேசும்போது, அவர் மற்றக் குமாரர்களையும் கொண்டிருக்க நோக்கம் கொண்டுள்ளார் என்றும், இவர்கள் முதலாவது குமாரர்கள் மாத்திரமே என்றும் அவர் சுட்டிக்காட்டுவதாக இப்பொழுது வேதத்தின் மாணவர்கள் பார்த்து வருகின்றனர். கடந்துபோகப்பட்டவர்களாகிய இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் மாத்திரம் எகிப்தினுடைய அடிமைத்தனத்தினின்று தப்புவிக்கப்படாததுபோன்று, எகிப்தின் அடிமைத்தனமானது அடையாளப்படுத்துகின்றதான பாவம் மற்றும் மரணம் எனும் அடிமைத்தனத்திலிருந்து முதற்பேறானவர்களின் சபை மாத்திரமே காப்பாற்றப்படுவதில்லை. முதற்பேறானவர்கள் காப்பாற்றப்படுவது என்பது, மீதியானவர்களுடைய விடுதலையையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

இரவு மற்றும் காலைக்கும்கூட நிஜங்கள் காணப்படுகின்றன. தேவனுக்குள் இசைவிற்கு வரவிரும்பின அநேகரைப் பாவம் மற்றும் மரணம் அடிமைப்படுத்தி, கட்டுப்படுத்திக்கொண்டிருந்ததான ஆறாயிரம் ஆண்டுகள் காலத்தை, இரவுவேளை என்று வேதாகமம் குறிப்பிடுகின்றது. இந்த இரவுவேளையில், தேவனுடைய ஜனங்கள் அதிகமதிகமாய்ப் பார்வோன் மற்றும் எகிப்தியர்கள் அடையாளப்படுத்துகின்ற சாத்தான் மற்றும் அவனது ஊழியர்களினால் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். இது ஆறாயிரம் வருடங்களுள்ள நீண்ட இரவுவேளையாகும் மற்றும் இது குறித்துத் தீர்க்கத்தரிசி, "சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்" என்று குறிப்பிடுகின்றார். (சங்கீதம் 30:5)

காலை என்பது மாபெரும் நிஜமான ஓய்வுநாளாகிய, ஏழாம் ஆயிரவருட

நாளினுடைய விடியலை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அப்போது தெய்வீக வல்லமையினால் மரணத்திலிருந்து, ஜீவனுக்குக் கடந்துபோகப்பட்டவர்களாகிய முதற்பேறானவர்களின் சபையும், மேசியாவும் இராஜ்யத்தின் மகிமையில் நிறுத்தப்படுவார்கள் மற்றும் தேவனுடன் இசைவிற்குள் வரவிரும்புகின்றவர்கள் அனைவரையும் ஆசீர்வதிக்கும் மாபெரும் பணி ஆரம்பமாகும்.

தற்போதுள்ள யுகத்திலிருந்து, புதிய யுகமானது முற்றிலும் வேறுபட்டதாய்க் காணப்படும் என்பதினால், அடையாளத்தில் புதிய யுகமானது, இரவு என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளதான தற்கால யுகத்தினுடைய இருளுக்கு எதிர்மாறான, காலை வேளையினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மேசியாவின் இராஜ்யமாகிய காலையில், அவரே மாபெரும் இராஜாவாக ஒளியின் அதிபதியாகக் காணப்படுவார். அப்போது இருளின் அதிபதி கட்டப்பட்டிருப்பான். ஆயிரவருட காலங்களைக் கொண்டதான அந்த மகிமையான யுகத்தின்போது, தேவனுடன் இசைவிற்குள் வரவிரும்புகிறவர்கள் அனைவரும், இஸ்ரயேலர்கள் ஆகுவார்கள் மற்றும் படிப்படியாக மோசேக்கு நிஜமானவரால் சீர்ப்பொருந்தப்பட்டதான பரதீசின் பூரணத்திற்கு நேராக வழிநடத்தப்படுவார்கள். ஏதேனில் ஆதாமினால் கீழ்ப்படியாமையின் காரணமாக இழந்துபோகப்பட்டதும், கல்வாரியில் இயேசுவின் மரணத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்டதுமான அனைத்தையும் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் விருப்பமற்றவர்களும், கீழ்ப்படியாதவர்களுந்தான் தவறிப்போவார்கள்.

## என் முதற்பிறப்பாகிய இஸ்ரயேல்

எந்த ஓர் ஆசீர்வாதமும், பாவம் மற்றும் மரணத்திலிருந்ததான எந்த ஒரு விடுதலையும் தேவனுடைய கிருபையினால் உண்டானதாக இருக்கின்றதாலும், நீதியினுடைய கட்டாயத்தின் பேரில் உண்டானதாக இராததினாலும், தாம் நோக்கம் கொண்டுள்ளதான ஆசீர்வாதங்களானது, ஆபிரகாமின் சந்ததி (அ) பிள்ளைகள் வாயிலாக மனுக்குலத்தை அடைய வேண்டுமென்று நீண்ட காலத்திற்கு முன்னதாகவே தேவன் தீர்மானித்திடுவதற்கு முழு உரிமையையும் கொண்டவராய் இருந்தார். இதைக் குறித்து அவர் தெளிவாய், ஆனால் மறைமுகமான விதத்தில் தெரிவித்துள்ளார். ஆபிரகாமுக்கு இரண்டு வெவ்வேறு சந்ததியினர் காணப்பட்டார்கள் என்றும், ஒன்று பரலோக சந்ததியினர், மற்றொன்று பூமிக்குரிய சந்ததியினர் என்றும் கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளார்; ஆனால் யூதர்கள் இதைக் கவனிக்கவில்லை. அவர் "உன் சந்ததி (1) வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும், (2) கடற்கரை மணலைப்போலவும்" காணப்படும் என்றும் கூறினார்.

தேவன் இப்படியாக ஆபிரகாமிடம் விவரித்துக்கூறவில்லை, ஆனால் வாக்குத்தத்தத்தினுடைய இவ்வம்சத்தினை நாம் இப்பொழுது பார்க்கின்றோம். நட்சத்திரங்களானது ஆபிரகாமினுடைய ஆவிக்குரிய சந்ததியாரை – மேசியா மற்றும்

அவரது மணவாட்டி என்று அடையாளமாய் அழைக்கப்படுகின்றதான சபையை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. எண்ணமுடியாத — கடற்கரை மணலானது, இறுதியில் பாவம் மற்றும் மரணத்திலிருந்து இரட்சிக்கப்படுபவர்களும், "முதற்பேறானவர்களின் சபையை" ஆவிக்குரிய சந்ததியாகப் பெற்றிருக்கின்றதான மேசியாவின் இராஜ்யத்தில் தெய்வீகத் தயவினிடத்திற்கும், நித்திய ஜீவனிடத்திற்கும் சீர்ப்பொருந்தப்படுபவர்களுமான ஜனங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆவிக்குரிய சந்ததியாரைத் தெரிந்தெடுக்கும் விஷயத்தில், தேவன் ஆபிரகாமினுடைய மாம்சீக சந்ததியினரை மறந்துபோகவுமில்லை, தம்முடைய தயவை விலக்கிக்கொள்ளவுமில்லை; ஏனெனில் அவர்களுக்கே முதலாம் சிலாக்கியம் அல்லது வாய்ப்புக் கிடைத்ததாய் இருந்தது மற்றும் இவர்களிடமிருந்தே இந்த ஆவிக்குரிய இஸ்ரயேலரின் — ஆபிரகாமினுடைய ஆவிக்குரிய சந்ததியின் முதலாம் அங்கத்தினர்கள் கூட்டிச்சேர்க்கப்பட்டனர். இவர்களைக் குறித்துப் பரிசுத்த பவுல், "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" என்றார். (கலாத்தியர் 3:29) அதாவது ஆபிரகாமின் இந்த ஆவிக்குரிய சந்ததியார் வாயிலாக மனுக்குலம் அனைத்தும் தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் — பாவம் மற்றும் மரணத்தினுடைய சாபம் நீக்கப்படும் என்று ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்டதான "வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" என்றார். (வெளிப்படுத்தல் 21:4, 5; 22:3)

இன்னுமாக ஆவிக்குரிய இஸ்ரயேலர் பூமிக்குரிய சுபாவத்தினின்று, பரலோக சுபாவத்திற்கு மறுரூபமடைந்து, நிறைவடையும்போது, தேவனுடைய ஆசீர்வாதங்களானது, மீண்டுமாக ஆபிரகாமுடைய மாம்சீக சந்ததியினிடத்திற்குக் கடந்துவர ஆரம்பிக்கும் என்றும் வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இப்படியாக ஆவிக்குரிய சிலாக்கியங்கள் தொடர்புடைய விஷயத்தில், தேவனுடைய ஏற்பாடுகள் யூதர்களுக்கென்று முதலாவதாகக் காணப்பட்டது மற்றும் பூமிக்குரிய சிலாக்கியங்கள் தொடர்புடைய விஷயத்திலும், அதாவது மனிதப் பூரணத்திற்குச் சீர்ப்பொருந்தும் விஷயத்திலும் யூதர்களுக்கே தேவனுடைய ஏற்பாடுகளானது முதலாவதாகக் காணப்படும். (உரோமர் 11:25-33; அப்போஸ்தலர் 3:19-21)

## முதற்பேறானவர்கள் இரத்தத்தினால் பாதுகாக்கப்பட்டனர்

இஸ்ரயேலின் முதற்பேறானவர்களிடத்தில் பாராட்டப்பட்டத் தெய்வீகக் கிருபையானது, இரத்தத்தினாலேயே ஆயிற்று என்பதைக் கவனிக்க நாம் தவறிட

வேண்டாம். ஆம் பரிசுத்த பவுல் சுட்டிக்காட்டுவதுபோன்று, பழைய ஏற்பாட்டினுடைய வேதவாக்கியங்களுடைய முழுப் பாடமுமே, "இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" என்பதேயாகும். தெய்வீகக் கட்டளையின் பேரில் இஸ்ரயேலர்கள் ஒரு வயதுள்ள பழுதற்ற ஆட்டுக்குட்டியினைத் தெரிந்துகொண்டு, அதை அடித்து, அதன் இரத்தத்தினைத் தங்கள் வீட்டுவாசலின் நிலைக்கால்களிலும், மேற்சட்டங்களிலும், தெளித்து, உள்ளிருந்து அதன் மாம்சத்தைப் புசிப்பதன்வாயிலாக, கர்த்தரிடத்தில் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்துகின்றவர்களாய்க் காணப்பட்டனர்.

பஸ்கா எப்படி நிழலாகக் காணப்படுகின்றதோ, அப்படியே ஆட்டுக்குட்டியும், இரத்தம் தெளிக்கப்படுதலும்கூட நிழலாய்க் காணப்படுகின்றது. ஆட்டுக்குட்டியானது, தேவ ஆட்டுக்குட்டியான இயேசுவை — கறைதிறையற்றவரும், மாசில்லாதவரும், பரிசுத்தரும், குற்றமற்றவருமான இயேசுவை அடையாளப்படுத்துகின்றது. அவரது மரணம் என்பது அவருடைய சொந்த பாவங்களுக்கென்று இல்லாமல், மாறாக மனுக்குலத்தினுடைய பாவத்திற்காகவேயாகும். இன்னுமாகக் கிறிஸ்து சபைக்காக மாத்திரம் மரியாமல், வேதவாக்கியங்கள் தெரிவிப்பதுபோன்று முழு உலகத்தினுடைய பாவத்திற்காகவும் மரித்தார் என்பதையும் கவனிப்பது அவசியமாயுள்ளது. சபை என்பவர்கள், உலகத்தில் ஒரு சிறு எண்ணிக்கையினரே; அதாவது முதற்பேறானவர் களின் எண்ணிக்கையினரேயாகும். பரிசுத்த யாக்கோபு சொல்வதுபோன்று நாம், தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்களாய் இருக்கின்றோம். (யாக்கோபு 1:18) சபையோ இரவில் கடந்துபோகப்படுகின்றனர் மற்றும் மற்றவர்களுக்கெல்லாம் முன்னதாக விசேஷமாய் இரட்சிக்கப்படுகின்றனர்; ஆனால் இரத்தத்தினுடைய புண்ணியத்தின் மூலமே தப்பித்துக்கொள்கிறார்களே ஒழிய மற்றப்படியல்ல. முதற்பேறானவர்களை மாத்திரம் இரத்தம் மூடுகிறதில்லை எனும் காரியமானது நிழலில் இரத்தமானது முதற்பேறானவர்களுக்கென்று மாத்திரம் தெளிக்கப்படாமல், விசுவாச வீட்டாரைக் குறிக்கின்றதான வீட்டின்மீதும் தெளிக்கப்படும் காரியத்தின்மூலம் அடையாளப்படுத்தப்படுகின்றது.

# முதற்பேறானவர்களின் கடந்துபோகுதல்

இஸ்ரயேலர்களால் ஆசரிக்கப்பட்டதான முதன்மையான நினைவுகூருதல் என்பது பஸ்கா ஆகும். பஸ்கா என்பது இஸ்ரயேலர்களினுடைய சரித்திரத்தின் மிகச் சிறப்பு வாய்ந்த நிகழ்வுகளில் ஒன்றிற்கான ஆசரிப்பாகும். பாவநிவாரண நாளானது அவர்களது சிவில்/மதச்சார்பற்ற ஆண்டினுடைய துவக்கத்தில் இடம் பெறுவது போன்று, இந்தப் பஸ்காவானது அவர்களது மதச்சார்புடைய ஆண்டின் துவக்கத்தில் இடம்பெறுகின்றதாய் இருக்கின்றது. இந்தப் பஸ்கா என்பது, அவர்களது தேசத்தினுடைய பிறப்புத் தொடர்புடையதாய் இருக்கின்றது. அந்தக் குறிப்பிட்டக் காலப்பகுதியில் தேவன், எகிப்தின் அரியணையில் அடிப்பணியாத மனமுடைய பார்வோனைக் கொண்டுவந்தார் என்பதாக வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. அரியணையை அடைவதற்கு மற்ற நபர்கள் வரிசையில் காணப்பட்டிருந்தாலுங்கூட இந்த மனிதன் அரியணையை அடையத்தக்கதாக, தேவன் விசேஷமாய் உதவினார் என்று - இம்மனுஷனுடைய இயல்பான வணங்கா கழுத்துத் தன்மையின் மூலமாகவும், வீண் பிடிவாதத்தின் மூலமாகவும், இவரது நடத்தையானது அவசியமாக்கிவிடும் மற்றும் ஏற்றதாக்கிடும் வாதைகள் ஒவ்வொன்றிலும் தெய்வீக வல்லமையானது வெளிப்படத்தக்கதாக, இம்மனுஷன் அரியணையை அடைவதற்கு, தேவன் இவருக்கு விசேஷமாய் உதவினார் என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. "என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என் நாமம் பூமியிலெங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் உன்னை நிலைநிறுத்தினேன்" (யாத்திராகமம் 9:16) என்று நாம் வாசிக்கின்றோம். எகிப்தியர்கள்மீது அனுப்பப்பட்டதான பத்து வாதைகளானது, இவர்கள் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களை அநியாயமாய் நடத்தினதற்கு எதிரான தெய்வீக நீதியினுடைய வெளிப்படுத்துதல்களாயிருந்தன. பத்து வாதைகளில், இறுதியான வாதையானது, பஸ்கா/கடந்துபோகுதல் எனும் நமது பாடத்தோடு தொடர்புடையதாய் இருக்கின்றது. எகிப்தியர்களின் முதற்பேறானவர்கள் அனைவரும் மரிக்க வேண்டும் என்பதாகவும், இஸ்ரயேலர்களின் முதற்பேறானவர்கள் மரிக்கக்கூடாது என்பதாகவும் ஆணை அனுப்பிவைக்கப்பட்டது. எகிப்தில் தங்கியிருக்கின்றதான தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களோ, தங்களை எகிப்தியர்களிடமிருந்து வேறுபடுத்தி, வித்தியாசப்படுத்திக் காண்பிக்கத்தக்கதாக விசேஷமான ஏற்பாடுகளைச் செய்திடுவதற்குக் கட்டளையிடப்பட்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கென்று பழுதற்ற ஓர் ஆட்டுக்குட்டியினைத் தெரிந்துகொண்டு, அதை முதலாம் மாதத்தினுடைய பத்தாம் தேதியன்று வீட்டிற்குள் கொண்டுவர வேண்டும். அதை அவர்கள் பதினான்காம் தேதிவரை பேணி, பராமரித்து, பின்னர் அதை அடிக்க வேண்டும். அதன் இரத்தமானது வெளி வீட்டுவாசலினுடைய நிலைக்கால்களிலும், மேற்சட்டங்களிலும் தெளிக்கப்பட வேண்டும் மற்றும் அதன் எலும்புகள் எதுவும் முறிக்கப்படாத நிலையில், அதன் மாம்சமானது நெருப்பில் சுடப்பட வேண்டும். அது பதினான்காம் தேதி இரவிலேயே கசப்பான கீரைகளுடனும், புளிப்பில்லாத அப்பங்களுடனும் புசிக்கப்பட வேண்டும். அடுத்தநாள் காலையில் இந்த உணவினுடைய பலத்தினால், அவர்கள் எகிப்திலிருந்து, ஆபிரகாமோடு

பண்ணப்பட்டதான உடன்படிக்கையின்கீழ்ச் சுதந்தரித்துக்கொள்ளத்தக்கதாக வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குப்புறப்பட வேண்டும்.

## சங்காரத் தூதன் கடந்துபோனார்

மோசேயின் வாயிலாக கர்த்தர் முன்னுரைத்திருந்தவைகள் போலவே விளைவுகள் நிகழ்ந்தது. எதிப்தியர்களின் முதற்பேறானவர்கள் அந்த இரவில் மரித்தார்கள் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்களின் முதற்பேறானவர்களோ கடந்துபோகப்பட்டார்கள் (அ) தப்புவிக்கப்பட்டனர். குறிப்பிடத்தக்கதான இந்த அற்புதமானது, தெய்வீகக் கட்டளையின் பேரில் நினைவுகூரப்பட்டது மற்றும் ஒவ்வொரு வருடமும், இதற்கான காலப்பகுதியில், ஒரு குடும்பத்திற்கு (அ) கூட்டத்தாருக்கு ஓர் ஆட்டுக்குட்டியென, இஸ்ரயேலர்களின் ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் பத்தாம் தேதி அன்று ஓர் ஆட்டுக்குட்டி கொண்டுவரப்படுகின்றது. அவர்கள் குடியிருக்கும் இடங்களிலிருந்து புளிப்புகள் அனைத்தும் அப்புறப்படுத்தப்படுகின்றன. சீர்க்கேட்டினை அடையாளப்படுத்துகின்றதான அனைத்தும் சுட்டெரித்துப்போடப்பட்டது மற்றும் புளிப்பில்லாத அப்பம் மாத்திரமே, ஆட்டுக்குட்டியின் மாம்சத்தோடு புசிக்கப்பட்டது. வருடந்தோறும் பஸ்காவானது, எட்டு நாட்கள் கொண்டாடப்படுகின்றது மற்றும் முதலாம் நாளும், எட்டாம் நாளும் பிரதான நாட்களாக இருக்கின்றன (அ) விசேஷமாய் ஆசரிக்கப்பட வேண்டிய நாட்களாய் இருக்கின்றன. சமீபத்தில் நாங்கள் எருசலேமுக்குச் சென்றபோது, பஸ்காவானது பழமையான யூத முறைமையாக மாத்திரம் காணப்படாமல், அந்தத் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்களுடைய மிகுந்த சந்தோஷகரமான பண்டிகையாகவும் காணப்படுகின்றது என்பதை நாங்கள் அறிந்திருந்தபடியால், எருசலேமில் பஸ்கா காலத்தின்போது காணப்படத்தக்கதாக காலத்தினைத் திட்டமிட்டுச் செயல்பட்டோம். இஸ்ரயேலானது அவர்களுக்கு ஆதிக்காலங்களில் பாராட்டப்பட்டதான தெய்வீகத் தயவுகளில் ஒன்றினைக் கொண்டாடுகின்றது மற்றும் இவ்வாசரிப்பானது, வேதவாக்கியங்களில் எழுதப்பட்டிருக் கிறபடி இன்னும் எதிர்க்காலத்தில் தேவன் இன்னும் குறிப்பிடத்தக்க விதத்தில் தம்மை வெளிப்படுத்துவது குறித்த தீர்க்கத்தரிசனங்களை அவர்களுக்கு நினைப்பூட்டு கின்றது; "ஆதலால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரயேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு இனிமேல் சத்தியம்பண்ணாமல், இஸ்ரயேல் புத்திரரை வடதேசத்திலும், தாம் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா தேசங்களிலுமிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம்பண்ணுவார்கள்; நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்பி வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 16:14, 15). மீண்டுமாக "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கைபண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின

உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 31:31, 32) என்பவைகளை நினைப்பூட்டுகின்றது. இங்கு, பஸ்கா காலத்தின்போது எகிப்திலிருந்துள்ள இந்த விடுதலையானது, அதாவது தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுடைய கடந்தகால சரித்திரத்தின் மிகவும் சிறப்புமிக்க இந்நிகழ்வானது, இஸ்ரயேலுடன் புதிய உடன்படிக்கையானது ஏற்படுத்தப்படுவதற்கு ஏற்றக்காலம் வருகையில் முழுமையாய்த் திரைக்குள் மறைந்துபோய்விடும் என்பதாக மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது; புதிய உடன்படிக்கையானது பிரமாணம் மற்றும் திவ்விய கோரிக்கைகள் தொடர்புடைய விஷயத்தில் பழையது, ஆனாலும் மேன்மையான பலிகளின் காரணமாகவும், மேலான மத்தியஸ்தரின் காரணமாகவும் புதியதாயுள்ளது; சீனாயின் உடன்படிக்கையினுடைய மத்தியஸ்தராகிய மோசே, ஜனங்களுக்கு அவர்களுடைய மத்தியஸ்தராகப் பணிபுரிந்திடுவதற்கான தனது பிரயாசங்கள் அனைத்திலும் உண்மையாயிருந்து செய்தவைகளைக்காட்டிலும், இந்த மேலான மத்தியஸ்தர் இஸ்ரயேலுக்கு மேன்மையானவைகளைச் செய்வார். இந்த மேலான மத்தியஸ்தர் மற்றும் இவராலான மேன்மையான உடன்படிக்கைக்குறித்தே மோசே, "உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல (ஆனால் பெரியவர் . . . என்னுடைய நிஜமானவர்) ஒரு தீர்க்கத்தரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிக்கொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கத்தரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்" என்று கூறினார் (உபாகமம் 18:15; அப்போஸ்தலர் 3:22, 23).

## எருசலேமில் நிகழ்ந்த பஸ்கா

பஸ்கா அன்று மாலையில், ஒவ்வொரு யூத குடும்பமும், அதற்கு ஆயத்தமான நிலைமையில் காணப்பட்டனர். யூத ஆண்டு குறிப்பேட்டின்படியான (calendar) முதலாம் மாதத்தினுடைய பத்தாம் தேதியைத் தாண்டி நாங்கள் எருசலேமுக்கு வந்தபடியால், குடும்பங்கள் ஆட்டுக்குட்டிகளைத் தெரிந்தெடுப்பதை எங்களால் பார்க்க முடியவில்லை. ஆட்டுக்குட்டிகள் ஏற்கெனவே வீடுகளுக்குக் கொண்டுச் செல்லப்பட்டன. ஆசரிப்பிற்கான பல்வேறு ஆயத்தங்கள் பண்ணப்பட்டதான காலப்பகுதியில் நாங்கள் அங்குக் காணப்பட்டதால், அவைகளை நாங்கள் பார்த்தோம். ஒவ்வொரு வீட்டாரும் அவ்வாசிரிப்பிற்காக வீட்டைச் சுத்தம் செய்தனர் மற்றும் பழைய எலும்புகளும் (அ) அழுகினதும், துர்நாற்றம் வீசுகிறதுமான எந்த ஒரு பொருளும் மற்றும் அழுகின நிலையிலுள்ள எந்த ஓர் உணவும் காணப்படுகின்றதாவென மூலை முடுக்கெல்லாம் தேடப்பட்டது மற்றும் கழிவுப்பொருட்கள் அனைத்தும் சுட்டெரிக்கப்பட்டன. இவைகள் மாத்திரமல்ல, இப்படிச் சுத்தம்பண்ணின பிற்பாடு, ஓர் ஆச்சாரமான முறைமையும் செய்யப்படுகின்றது. வீட்டின் தலைவர், எரியும் மெழுகுவர்த்தியுடன், வீட்டார் பின்தொடர்ந்துவர, முழு வீட்டையும் சோதனையிடு

கின்றார். ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதும், சுடப்படுவதும் ஒருவிதமான முறையில் செய்யப்படுகின்றது. ஆட்டுக்குட்டியினுடைய சரீரத்திற்குள் நீளவாக்கில் ஒரு கம்பு விடப்படுகின்றது மற்றும் சிலரால் குறுக்காகவும் ஒரு கம்பு விடப்படுகின்றது மற்றும் இப்படியாக திட்டமிடாமலேயே சிலுவையின் கருத்தானது கொடுக்கப்படுகின்றது; தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களின் மனங்களிலும், தங்களது ஆட்டுக்குட்டியானது சிலுவையில் அறையப்பட்டதான இயேசுவையே குறிக்கின்றதாகவே இருக்கின்றது.

குடும்ப அங்கத்தினர்கள் உணவைச்சுற்றிக் கூடிக்கொள்கின்றனர் மற்றும் அநேகர் இன்று கத்திகளையும், முள் கரண்டிகளையும் (forks), கரண்டிகளையும் (spoons) பயன்படுத்தினாலும், ஜனங்களில் சிலர் ஆதிக்காலங்களினுடைய வழக்கங்களைப் பின்பற்றுகிறவர்களாக இருந்து, தங்கள் விரல்களையே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். சிலர் நவீன கால மெல்லிய, முறுகலான புளிப்பில்லாத அப்பங்களைப் (matzo) பயன்படுத்துகின்றனர்; ஆனால் அநேகர் தடிமனான அப்பம் போன்றதான பழைய வழக்கத்தின்படியான புளிப்பில்லாத அப்பத்தையே பயன்படுத்தினார்கள். இந்த அப்பங்களானது கடினமானவைகளாகவும், எளிதில் மடக்கத்தக்கவைகளாகவும் இருந்தன. அப்பங்களில் ஒன்றினை மடக்கும்போது, அது கரண்டிபோல் பயன்படுத்தப்பட்டு, உண்ணப்படுகின்றது மற்றும் சிலசமயங்களில் விசேஷித்த சுவைக்காக அவைகள் இரசங்களில் தோய்த்து உட்கொள்ளப்படுகின்றன. முதல் பஸ்கா நிகழ்வின்போது, இஸ்ரயேலர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தரித்தவர்களாகவும், வாக்களிக்கப்பட்டத் தேசத்திற்கு உடனடியாகப் புறப்படும் வண்ணம் ஆயத்தத்துடன் காணப்பட்டவர்களாகவும் இருந்ததுபோல, இதை நினைப்பூட்டும் வண்ணமாகவே புசித்தல் விஷயங்கள் அனுசரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும், மோசேயால் கட்டளையிட்டதுபோல குடும்பத் தலைவர் குடும்பத்தாருக்கு இவ்வாசரிப்பிற்கான அர்த்தத்தினையும், யூத ஜாதியினுடைய ஆரம்பம் தொடர்புடையதான அதன் துவக்கத்தையும் விவரிக்கின்றார். இந்த ஆட்டுக்குட்டியினைப் புசித்தலானது, பிரமாணத்தின்படி, முதலாம் மாதத்தினுடைய பதினான்காம் தேதிக்குரியதாகும். பின்வரும் பதினைந்தாம் தேதி அன்று, பார்வோன் மற்றும் செங்கடலின் வல்லமையிலிருந்ததான மாபெரும் விடுதலையின் நிமித்தமான சந்தோஷத்தின் பண்டிகை ஆரம்பமாகுகின்றது. அந்த எட்டு நாட்கள் அளவும் எருசலேமில் தங்கும் சிலாக்கியம் எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் பண்டிகையினுடைய முதலாம் மகா நாளில் பரிசுத்த நகரமானது, அதன் உச்சப்பட்சமான மகிழ்ச்சியினால் நிறைந்திருந்தது.

அங்குக் காணப்பட்டதான ஜனத்தொகையில் பெரும்பான்மையானவர்களாய்க் காணப்பட்ட யூதர்களுக்கு மாத்திரமாக இந்தக் காலப்பகுதி விசேஷமானதாய்க் காணப்படாமல், ஜனத்தொகையில் அதிகளவு வகிப்பவர்களான கிரேக்க மற்றும் அர்மேனியன் கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் அக்காலமானது ஜெபிப்பதற்கான தருணமாகவும், விடுமுறைக்காலமாகவும் காணப்படுகின்றது. பழமை வாய்ந்த கிறிஸ்தவ சமுதாயத்தினர்கள் இன்னும் யூத காலக்கணக்கீட்டின்படியான, ஆதித் திருச்சபையின் பாணியிலேயே நமது கர்த்தருடைய மரணம் மற்றும்

உயிர்த்தெழுதலின் தேதிகளை ஆசரிக்கின்றனர்; யூதக் காலக்கணக்கீட்டின்படியான ஆதித் திருச்சபையின் பாணியிலிருந்து, பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாவே உரோம கத்தோலிக்கச் சபையும், அதன் மகள்கள் அமைப்பும் கொஞ்சம் வேறுபட்டு போய்விட்டது. இதனால்தான் இந்த வருடம் (இப்பாடம் எழுதப்பட்ட வருடம்) உரோம கத்தோலிக்கன், எபிஸ்கோப்பலியன், லூதரன் சபைகள் புனித வெள்ளியையும், ஈஸ்டர் ஞாயிறையும் மார்ச் 25 மற்றும் 27-ஆம் தேதிகளில் கொண்டாடினார்கள்; ஆனால் நாங்கள் எருசலேமில் பார்த்ததான ஆசரிப்பானது ஒரு மாதம் தாண்டி, அதாவது ஏப்ரல் 22 - 24- ஆம் தேதிகளில் ஆசரிக்கப்பட்டன. ஆகையால் கிரேக்க மற்றும் அர்மேனியன் கிறிஸ்தவர்கள் புனித வெள்ளியையும், ஈஸ்டர் ஞாயிறையும் கொண்டாடினதையும் நாங்கள் காண முடிந்தது.

## அர்த்தம் மற்றும் விளக்கம்

முப்பத்தைந்து நூற்றாண்டுகள் காலமாக, தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள், தெய்வீகக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களாக "பஸ்கா" நினைவுகூருதலை, அதன் வெளித்தோற்றமான முக்கியத்துவத்தை மாத்திரம் நோக்கினவர்களாகவும், ஆனால் ஒரு கணம்கூடத் தாங்கள் ஆசரிக்கின்றதான காரியத்தினுடைய உண்மையான அர்த்தத்தைச் சிந்தித்துப்பார்க்காதவர்களாக, அதாவது தங்களுக்கும், மனுக்குலம் யாவற்றிற்கும் மிகவும் முக்கியமானதாகக் காணப்படும் தெய்வீகத் திட்டத்தினுடைய ஒரு பிரம்மாண்டமான அம்சத்திற்குப் பஸ்கா நிழலாய்க் காணப்படுகின்றது என்பதைச் சிந்தித்துப்பார்க்காதவர்களாக ஆசரித்து வந்தார்கள். அவர்கள் அடித்த ஆட்டுக்குட்டியானது, இயேசுவாகிய "தேவ ஆட்டுக்குட்டிக்கு" நிழலாய் இருக்கின்றது; இயேசுவின் மரணமனாது, முழு உலகத்தினுடைய பாவங்களுக்கான மீட்கும்பொருள் விலைக்கிரயமாகக் காணப்படுகின்றது. ஆபிரகாமுக்கும் மற்றும் இவர் மூலமாகத் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்குமான வாக்குத்தத்தமானது, நிறைவேறுவதற்கு முன்னதாக, இயேசுவின் மரணம் சம்பவிப்பது அவசியமாய் இருந்தது. பாவத்திலிருந்ததான ஒரு மீட்பானது, நித்தியமான பயனை உடையதாகக் காணப்படுவதற்கு, வருடந்தோறும் பலிச்செலுத்தப்பட்டுவரும் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியினுடைய பலியைப் பார்க்கிலும் மேன்மையான பலி அவசியமாயுள்ளது. (ஆதாம் மற்றும் அவரது சந்ததியாகிய) மனுக்குலத்திற்கான பலியாக, தமது ஜீவனை அளிக்கத்தக்கதாக இயேசு மனிதனாகுவது மாத்திரம் அவசியமாயிராமல், இன்னுமாக பலியின் வேலையை முடித்தப் பிற்பாடு அவர் யேகோவா தேவனின் வலது பாரிசத்தில் ஆவிக்குரிய மேசியாவாகக் காணப்படத்தக்கதாகப் பரத்திற்கு ஏறவும் வேண்டியிருந்தது; தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் நம்புகிறதும் மற்றும் தாங்கள் மேசியாவின் ஆசீர்வாதங்களைச் சகல ஜாதிகளுக்கும், ஜனங்களுக்கும் பாஷைக்காரர்களுக்கும் வழங்குவதற்கெனப் பயன்படுத்தப்படுவார்கள் என்பதாகவுமுள்ள ஆபிரகாமுடனான உடன்படிக்கையில் தங்களுக்குப் பண்ணப்பட்டதான கிருபையான வாக்குத்தத்தங்கள்

அனைத்தையும் இவர்களுக்காக இந்த ஆவிக்குரிய மேசியா ஏற்றக்காலத்தில் நிறைவேற்றிடுவார். பாவத்தின் நிமித்தமான ஓர் ஆக்கினைத் தீர்ப்பு உலகத்தின்மீது காணப்பட்டது; "பாவத்தின் சம்பளம் மரணம்." இந்த மரணத் தண்டனைத் தீர்ப்பானது முழுமையாகவும், என்றென்றுமாகவும் புறம்பாக்கிப்போடப்படுவதற்கு முன்னதாக, மனிதன் முற்றிலுமாகவும், என்றென்றுமாகவும் மரண நிலைமைகளிலிருந்து நித்திய ஜீவனுக்கும், அவனது சிருஷ்டிகருக்கு இசைவான நிலைக்கும் உயர்த்தப்படுவதற்கு முன்னதாக, மனிதனுக்கான தண்டனை சந்திக்கப்பட வேண்டும். தெய்வீக ஏற்பாட்டிற்கு இசைவாக இயேசு முதலாவதாக தம்மை இஸ்ரயேலுக்கு, அவர்களது இராஜாவென முன்வைத்தார். ஆனால் அவரிடம் ஐசுவரியமோ, படைகளோ, செல்வாக்குமிக்க நண்பர்களோ இல்லாததினால், அவர்களால் அவரைத் தங்களது மேசியாவெனப் பார்க்கமுடியவில்லை; அவரை வஞ்சகன் என்று அலட்சியப்படுத்தினார்கள். அவர் தம்மைத் தேவகுமாரன் என்றும், அவர்களது இரட்சகர் என்றும் கூறினபோது, அவரைப் போலியானவர் என்றும், தேவனைத் தூஷிக்கிறவர் என்றும், மரணத்திற்குப் பாத்திரமானவர் என்றும் எண்ணினார்கள். அவருக்குத் தங்களது ஆலோசனை சங்கத்திற்கு முன்னதாகத் தீர்ப்பளித்தப் பிற்பாடு, அவருக்கு மரணத்தீர்ப்பை நிறைவேற்றிடுவதற்கு அவர்கள் அதிகாரம் பெற்றிராததால், உரோம தேசாதிபதியினால் செவிக்கொடுக்கப்படுகின்றதான ஒரே குற்றச்சாட்டினை, அதாவது உரோம சக்கிரவர்த்திக்கு எதிரான துரோகம் எனும் குற்றச்சாட்டினை, அவர்மேல் சுமத்தினார்கள். இராஜ துரோக விஷயத்தில் இயேசுவோடுகூடப் பிலாத்துவையும் சம்மந்தப்படுத்திவிடுவார்கள் என்று பிலாத்துவை அச்சுறுத்தி, நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியினை இறுதியில் சிலுவையில் அறைந்துபோட்டார்கள். அவர்கள் தங்களது பஸ்கா ஆட்டுக்குட்டியினைச் சுடுவதற்கெனக் குத்திக்கொல்வதுபோன்ற விதத்தில், அவர் சிலுவையின்மீது அகல கிடத்தப்பட்டார்.

## முதலாம் மாதம், பத்தாம் தேதி அன்று

முதலாம் மாதத்தின் பத்தாம் தேதியாகிய ஏற்றவேளையில் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் பஸ்காவிற்கான தங்களது ஆட்டுக்குட்டியினை எடுத்துக்கொள்வது போன்று, இயேசு தம்மைத் தேவ ஆட்டுக்குட்டியாக முன்வைத்தார் மற்றும் அவர் ஏற்றுக்கொள்ளப்படாமல் மறுக்கப்பட்டார் என்பதையும் நாம் கவனிப்போமாக. அவர் தம்மை முன்வைத்ததானது, துல்லியமாக அதே நாளிலும் மற்றும் சகரியா தீர்க்கத்தரிசியினால் குறிப்பிடப்பட்டுள்ள அதே விதத்திலும் துல்லியமாகக் காணப்பட்டது; "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார். அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார்; அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந் தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கிப் பூமியின் எல்லைகள் பரியந்தமும் செல்லும்" (சகரியா 9:9, 10). நாம்

ஏற்கெனவே பார்த்துள்ளப்படி இந்தத் தீர்க்கத்தரிசனமானது அப்படியே நிறைவேறினது. தீர்க்கத்தரிசி முன்னுரைத்ததுபோலவே இஸ்ரயேலுக்கான "இரட்டிப்பான" அனுபவங்களானது ஆரம்பித்த அதே நாளில்தானே நிறைவேறினது. சுயதிருப்தியின் காரணமாகத் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் குருடாக்கப்பட்டனர் மற்றும் தாழ்மையாய் வந்த இராஜாவினை ஏற்க மறுத்துவிட்டனர் மற்றும் அவரைத் தங்களது பஸ்கா ஆட்டுக்குட்டியாக ஏற்றுக்கொள்வதற்கும் மற்றும் அவரைத் தங்களது இருதயங்களுக்குள்ளும், இல்லங்களுக்குள்ளும் ஏற்றுக்கொள்வதற்கும் மறுத்துவிட்டனர். எனினும் அவர் இந்த அருமையான நிழலினை நிறைவேற்றிடுவதற்குத் தொடர்ந்தார். நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியென அவர் நிழலுக்கு இசைவாக, பதினான்காம் தேதி அன்று மரித்தார்.

தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களில் சிலர், அவர் வாயிலாக ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொண்டனர்; அதாவது தாழ்மையான, கீழ்ப்படிதலான, உண்மையான இருதய நிலையினைப் பெற்றிருந்தவர்களான இயேசுவின் அப்போஸ்தலர்களும், ஜனங்களில் சிலரும் மாபெரும் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக் கொண்டனர். இவர்கள் இயேசுவின் மூலமான தேவனுடைய கிருபையாகிய ஆட்டுக்குட்டியையும், புளிப்பில்லாத அப்பத்தையும் புசித்தார்கள். இவர்கள் இயேசுவினுடைய இரத்தம், "விசுவாச வீட்டாருடைய" இருதயங்களின் நிலைக்கால்களிலும், மேற்சட்டங்களிலும் தெளிக்கப்படுவதை அடையாளம் கண்டுகொண்டனர். பிற்பாடு இவர்கள் தேவ ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தினை, தங்களது நம்பிக்கைகள், சந்தோஷங்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் அனைத்திற்குமான அஸ்திபாரமென ஆசரிப்பதற்கு முடிகின்றவர்களானார்கள் மற்றும் இன்னும் ஆசரித்தும் வருகின்றனர். இவர்கள் தரித்திரராகவோ, ஐசுவரியவான்களாகவோ காணப்பட்டாலும் சரி, பூமிக்குரிய விஷயங்கள் சார்ந்த இவர்களது கனங்கள் அதிகமாகவோ (அ) கொஞ்சமாகவோ காணப்பட்டாலும் சரி, இவர்கள் ஆண்டவருடைய தயவில் தொடர்ந்து வலிமையூட்டுதலை அடைந்தவர்களாக இருந்தனர். உயிர்த்தெழுதலின் மூலமாக இயேசு முதற்பலன் கதிர்க்கட்டான பிற்பாடு, பெந்தெகொஸ்தே நாளின்போது, ஐம்பதாம் நாளின்போது இவர்கள் பிதாவினால் அங்கீகரிக்கப்பட்டார்கள். பிதா இவர்களை உயர்த்தளத்தில் ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பித்து மற்றும் இவர்கள் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதில் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டால், இவர்கள் தேவ ஆட்டுக்குட்டியானவரின் மாபெரும் வெற்றியிலும், பூமிக்குரிய ஆசீர்வாதங்களானது தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாகிய இஸ்ரயேலுக்கு சீக்கிரத்தில் வரவிருக்கின்றதான ஆவிக்குரிய இராஜ்யத்திலும் பங்காளிகளாகக் காணப்படலாம் என்று இவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகின்றார். மேசியா யூதர்களின் இராஜாவாக மாத்திரம் காணப்படாமல், சகரியா தீர்க்கத்தரிசனம் குறிப்பிடுவது போன்று, "அவருடைய இராஜ்யம் ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம் வரைக்கும் (உலகளாவ) செல்லும்," ஜாதிகள் அனைத்தும் அவரது வல்லமையையும், மகிமையையும் அடையாளங்கண்டுகொள்ளும் மற்றும் அவருக்கு முன் முழங்கால் யாவும் முழங்கிடும்

மற்றும் யேகோவா தேவனுக்கு மகிமையாய் அனைத்து நாவும் அறிக்கையிடும். இந்த யுகத்தின் முடிவில் மேசியா வல்லமையிலும், மகா மகிமையிலும் வெளிப்படும்போது, இஸ்ரயேல் தங்களுக்கு வாக்களிக்கப்பட்டவரான மகிமையான மேசியாவை ஏற்றுக்கொள்வார்கள். இதற்கிடையில் (ஏசாயா 10:21-23-இல் இடம்பெறும் மீதமானவர்களைத் தவிர மற்றபடியுள்ள) இஸ்ரயேல், அவரது ஆவிக்குரிய மணவாட்டியாகுவதற்குத் தங்களுக்கு முதலாவது அளிக்கப்பட்டதான வாய்ப்பினை தவறவிட்டவர்களாய் இருப்பார்கள் (சங்கீதம் 45:9-14). தேவன் இதை முன்னறிந்தவராக, தீர்க்கத்தரிசிகள்மூலம் முன்னுரைத்தும் உள்ளார் (ஏசாயா 10:22; ஏசாயா 1:9). யேகோவா தேவன் மேசியாவின் இராஜ்யமானது, ஆவிக்குரிய ஒன்றாக இருக்கும் என்ற உண்மையினை மறைத்து வைத்தவராய்க் காணப்பட்டார். நியாயப்பிரமாணத்திலோ, தீர்க்கத்தரிசிகள் வாயிலாகவோ ஆவிக்குரிய மேசியா குறித்த எந்த ஒரு வாக்குத்தத்தமும் கொடுக்கப்படவில்லை. ஆதியாகமம் துவங்கி மல்கியா வரையிலுமான வாக்குத்தத்தம் அனைத்தும் பூமிக்குரியவையாகும். ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்டதான வாக்குத்தத்தம்கூட "நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன்" (ஆதியாகமம் 13:15) என்பதாக நாம் வாசிக்கின்றோம். இஸ்ரயேல் இந்த வாக்குத்தத்தத்தினை இழந்துபோகவில்லை. ஆபிரகாமினுடைய ஆவிக்குரிய சந்ததியில் மாத்திரம் மிகவும் முதன்மையான நிலையில் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் குறிப்பிடப்படாமல், விரைவில் ஆபிரகாமும், அவர்களது உண்மையுள்ள தீர்க்கத்தரிசிகள் அனைவரும் "பூமியெங்கும் பிரபுக்களாக (ஆளுபவர்களாக) வைக்கப்படுவார்கள்" (சங்கீதம் 45:16); அப்போது ஆபிரகாமின் சந்ததி மேன்மைப்படுத்தப்பட்டு, சகல ஜனங்களுக்குமான திவ்விய ஆசீர்வாதங்களின் கால்வாயாகக் காணப்படுவார்கள். "தேவன் தாம் முன்னறிந்துகொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை." அவர் தமது புதிய உடன்படிக்கையின்கீழ் மற்றும் மெல்கிசெதேக் என்பதினால் அடையாளப்படுத்தப்படும் அதன் மாபெரும் மத்தியஸ்தர் மற்றும் பிரம்மாண்டமான நிஜமான ஆசாரியக்கூட்டத்தின்கீழ் நல்வாக்குத்தத்தங்கள் யாவற்றையும் நிறைவேற்றிடப்போகின்றார் மற்றும் மல்கியா 3:1-3-ஆம் வசனங்களில் முன்னுரைக்கப்பட்டதுபோலவும் செய்யவும் போகின்றார்.

## மோசேயைப் போன்றவர், ஆனால் இவரிலும் பெரியவர்

யேகோவா தேவனுடைய திட்டத்தின்படி மேசியாவாகிய இராஜா, தேவனுக்கும், இஸ்ரயேலுக்கும் நடுவில் மத்தியஸ்தராக - மோசேயின் நிஜமானவராக, நீண்டகாலமாய் வாக்களிக்கப்பட்டிருந்த நிஜமான ஆசாரியனாக, இராஜாவாக, மேசியாவாக நிற்பார். அவர் மாம்சத்தில் காணப்படாமல், ஆவிக்குரிய மேசியாவாகக் காணப்படுவார் என்ற உண்மையானது அவரது மகிமையையும், வல்லமையையும் குறைத்துப்போடுவதற்குப் பதிலாக, அதிகமாக்கவே செய்யும். பூமிக்குரிய மகிமையை இஸ்ரயேலர்கள் பெற்றுக்கொள்வார்கள்; அவர்கள் கற்பனைக்கூடப் பண்ணிப்பார்க்கமுடியாத பூமிக்குரிய ஆசீர்வாதங்களை, யேகோவா தேவனால் "இஸ்ரயேலின் இராஜாவாகிய,

தாவீதின் குமாரனாக" மிகவும் உயர்த்தப்பட்டவரின் கரங்களினின்று பெற்றுக் கொள்வார்கள். இப்படியாக இஸ்ரயேலிடமிருந்து, புதிய உடன்படிக்கையின்கீழ், இஸ்ரயேலின் மத்தியஸ்தர் வாயிலாக, தேவனை அணுகுவதற்கான ஒரு வழி புறஜாதியார்கள் அனைவருக்கும் திறக்கப்படும். ஆகையால்தான் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது: "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து; நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் (இராஜ்யத்துக்கும்) யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் "சீயோனிலிருந்து (ஆவிக்குரிய இராஜ்யத்திலிருந்து) வேதமும், எருசலேமிலிருந்து (சீர்ப்பொருந்தப்பட்ட இஸ்ரயேலின் பூமிக்குரிய இராஜ்யத்திலிருந்து) கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" (ஏசாயா 2:3). அக்காலத்தில் எருசலேமில் தேவனுடைய இராஜ்யபாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதென அடையாளம் கண்டுகொள்ளாத ஜாதிகளுக்கு (விசேஷித்த ஆசீர்வாதம்) மழை இருப்பதில்லை.

புறஜாதிகளை ஆசீர்வதித்தல் தொடர்புடையதாக சகரியா தீர்க்கத்தரிசி குறிப்பிட்டிருப்பதைக் கவனியுங்கள். "அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார்" (KJV); "வேற்றினத்தாருக்கு அமைதியை அறிவிப்பார்" (திருவிவிலியம் சகரியா 9:10) என்று வாசிக்கின்றோம். ஆனால் சமாதானத்தின் இந்த ஆசீர்வாதமானது, முதலாவதாக தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்குக் கடந்துவந்து மற்றும் இவர்கள் வாயிலாகப் புறஜாதிகளுக்குக் கடந்துசெல்லும். இது மாத்திரமல்லாமல், இதே விஷயங்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் தெரிந்து கொள்ளுதலிலும் பொருந்துகின்றதாய் இருக்கும். தீர்க்கத்தரிசி குறிப்பிட்டிருப்பது போல தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் "மீதியானவர்கள்" மேசியாவிற்காக ஆயத்தமாய் இருந்தார்கள் என்றும், இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள் என்றும், பெந்தெகொஸ்தே ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்கள் என்றும் நாம் ஏற்கெனவே பார்த்திருக்கின்றோம்.

இவர்களே நாம் பார்த்திருக்கிறபடி கிறிஸ்தவ சபையின் அப்போஸ்தலர் களாகவும், கிறிஸ்தவ சபையின் ஆதி பிரதிநிதிகளாகவும் காணப்பட்டனர்; ஆனால் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கான முதல் வாய்ப்பினைத் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்குக் கொடுத்தப் பிற்பாடு, ஆபிரகாமினுடைய ஆவிக்குரிய சந்ததி தொடர்புடைய விஷயத்தில், மேசியா புறஜாதியார்களுக்குத் தயவு பாராட்டினார் மற்றும் சமாதானம் கூறினார். ஆகையால் கிருபையின் சுவிசேஷமானது, அதாவது ஆவிக்குரிய தளத்தில் மேசியாவுடன் பங்காளிகள் (அ) அங்கத்தினர்கள் ஆகுவதற்கான அழைப்பானது, தேவனுடைய வழிநடத்துதலின்படி புறஜாதிகளுக்கு இந்தச் சுவிசேஷயுகம் முழுவதும் கடந்துச் சென்றது - கேட்கும் செவிகளை உடையவர்களுக்கும், புரிந்துகொண்டு, கீழ்ப்படியும் இருதயம் உடையவர்களுக்கும் கடந்துசென்றது. இப்படியாக யூதர்கள் மற்றும் புறஜாதிகளிலிருந்து, யேகோவா தேவன், தமது குமாரனாகிய மீட்பருடன் பங்காளிகளாய் இருப்பதற்குப் பாத்திரவான்களாய் இருப்பவர்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டு வருகின்றார். இவர்களே பல்லாயிரமான

பெயர்க்கிறிஸ்தவர்கள் மத்தியில் "சிறு மந்தையினராகக்" காணப்படுகின்றனர். இந்தச் சிறு மந்தையினரிடமே மீட்பர், "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு இராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" (லூக்கா 12:32) என்று கூறினார்; அது இஸ்ரயேலை ஆசீர்வதிக்கப்போகின்றதும், இஸ்ரயேல் வாயிலாகச் சகல புறஜாதியாருக்கும், ஆதாமினுடைய இனத்தின் ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் சமாதானம் பேசுகின்றதும், பாவம் மற்றும் மரணத்தின் நிலைமைகளிலிருந்து தேவனுடன் இசைவான நிலைமைக்கும், நித்திய ஜீவனுக்கும் திரும்பிடுவதற்கான முழு வாய்ப்பினை அருளுகின்றதுமான இராஜ்யமாகும்.

ஆ! ஆம், பஸ்காவின் நிழலிலும், நிஜத்திலும் தேவனுடைய தெரிந்துகொள்ளப் பட்ட ஜனங்களுக்கு, தேவனுடைய ஏற்றவேளை வரும்போது விலையேறப்பெற்ற படிப்பினைகளும், ஆசீர்வாதங்களும் காணப்படுகின்றது. தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் மத்தியில் 18 நூற்றாண்டுகளுக்கு மேலாக நிலவும் குருடான நிலைமையும், தயவினின்று தள்ளப்பட்ட நிலைமையும் என்றென்றுமாகக் காணப்படாமல், முதலாவதாக இஸ்ரயேலிருந்தும், பின்னர் புறஜாதிகளிலிருந்தும், ஆவிக்குரிய தளத்தில், அவரது "தெரிந்துகொள்ளப்பட்ட" பங்காளிகளாக இருக்கப் போகிறவர்களைக் கூட்டிச்சேர்ப்பதுவரை மாத்திரமே நிலவுகின்றதாய் இருக்கும். பின்னர் இஸ்ரயேல், அதன் குருட்டுத் தன்மையினின்று விடுதலையடையும் மற்றும் அவர்கள்மீது ஆசீர்வாதங்கள் திரளாய்க் கடந்துவரும். அவர்கள் ஒரு ஜாதியாக குருடாக்கப்பட்டதும், புறம்பாக்கப்பட்டதுமானவைகள், அவர்கள் ஜாதிக்கே ஆசீர்வாதத்தை உண்டுபண்ணுவதற்குத் தேவனால் நோக்கம் கொண்டிருக்கப்பட்டது. அவர்கள் ஒட்டுமொத்தமாக இரக்கம் பெற்றுக்கொள்ளத்தக்கதாகக் கஷ்டமான நிலைமைகளின்கீழ் அவர்கள் ஒட்டுமொத்தமாகத் தண்டிக்கப்பட்ட ஜனங்களென ஒன்று சேர வைக்கப்பட்டிருந்தனர் (உரோமர் 25:30-32).

## முதற்பேறானவர்களின் சபை

பஸ்கா ஆட்டுக்குட்டியானது புசிக்கப்பட்ட அந்த இரவில் இஸ்ரயேலர்கள் அனைவரும் அபாயத்தில் காணப்படாமல், தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களில் முதற்பேறானவர்கள் மாத்திரமே கடந்துபோகப்பட்டார்கள் என்பது நினைவில் வைக்கப்பட வேண்டும். கொஞ்சம் காலத்திற்குப் பின்னர், அனைத்துக் குடும்பங்களிலுமுள்ள முதற்பேறானவர்களுக்குப்பதிலாக ஒரு கோத்திரத்தை முழுமையாக, அதாவது லேவி கோத்திரத்தைத் தேவன் எடுத்துக்கொண்டார். அப்போதிலிருந்து சங்காரத் தூதனினால் கடந்து போகப்பட்டதன் மூலம் காப்பாற்றப்பட்டவர்களும், ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தினாலும், அதன் மாம்சத்தைக் கசப்பான கீரைகளுடனும், புளிப்பில்லா அப்பத்துடனும் புசித்ததினாலும் காப்பாற்றப்பட்டவர்களுமானவர்கள் இந்த ஒரு கோத்திரத்தினால் அடையாளப் படுத்தப்பட்டனர்.

இரண்டு நிழல்கள் இதில் கலந்து காணப்படுகின்றன; அவை:

(1) நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் பற்றியதாக

முதல் நிழல் உள்ளது; இவர்களில் மகிமையடைந்த மேசியா, பலிச்செலுத்தின ஆரோனுக்கும் மற்றும் ஆசாரியனாக தனது சிங்காசனத்தில் உட்கார்ந்திருந்த மெல்கிசெதேக்குக்கும் நிஜமான மாபெரும் பிரதான ஆசாரியனாய் இருப்பார். ஆரோனின் குமாரர்கள் நற்கீர்த்தியின் மத்தியிலும், துர்க்கீர்த்தியின் மத்தியிலும் தங்கள் ஆண்டவரை மரணம் வரையிலும் பலியில் உண்மையாய்ப் பின்தொடர்ந்த சொற்பமான பரிசுத்தமானவர்களுக்கு அடையாளமாய் இருக்கின்றனர். நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறபடி இவர்கள் விஷயத்தில் முதலாவதாக தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களே அழைக்கப்பட்டனர். தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களிலிருந்து போதுமான எண்ணிக்கையானவர்கள் ஆயத்தமாகாதபோது, மீதமானவர்கள் புறஜாதிகளிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டனர், ஏனெனில் இவர்கள் ஆபிரகாமினுடைய விசுவாசத்தினாலும், கீழ்ப்படிதலினாலும் இயக்கப்பட்டவர்களாய்க் காணப்பட்டனர்.

(2) இன்னுமாக உண்மையுள்ள, ஆனால் குறைவான வைராக்கியம் கொண்டிருக்கும் இயேசுவினுடைய பின்னடியார்களாகிய ஒரு வகுப்பார் இருக்கின்றனர்; இவர்கள் நற்கிரியைகள் செய்திருக்கின்றனர், ஆனால் நேர்த்தியாய்ப் பலிச்செலுத்தும் ஆவியில் கொஞ்சம் குறைவுபட்டுப் போனவர்களாகக் காணப்படுகின்றனர். லேவியர்களுக்கு ஒத்திருக்கும் இவர்களும், யூதர்கள் மற்றும் புறஜாதியார்களிடமிருந்து அழைக்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர்.

ஆசாரியர்கள் மற்றும் லேவியர்களால் அடையாளப்படுத்தப்படுகின்றதான இந்த இரண்டு வகுப்பினரும் ஒன்றாக, "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையில்" அடங்குகின்றனர். இவர்கள் "தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்களாக" இருக்கின்றனர். (யாக்கோபு 1:18) முதலாவது தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களிலிருந்தும், இரண்டாவது புறஜாதிகளிலிருந்தும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய இந்த இரண்டு வகுப்பாரும், எகிப்தின் முதற்பிறப்புகள் சங்கரிக்கப்பட்ட இரவின்போது, கடந்து போகப்பட்டவர் களாகிய இஸ்ரயேலின் முதற்பிறப்புகளினால் அடையாளப்படுத்தப்படுகின்றனர். ஆகையால் இயேசுவின் முதலாம் வருகை முதற்கொண்டு, மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதுவரையிலுமான காலப்பகுதியாகிய இந்தச் சுவிசேஷயுகமானது, இருள் (நாகரிகமடைந்த பூமியை) பூமியையும், காரிருள் புறஜாதியரையும் மூடியிருக்கும் இரவுவேளையாய் இருக்கின்றது என்று நாம் பார்க்கின்றோம். பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய (1 கொரிந்தியர் 5:7) இயேசுவின் இரத்தமானது, விசுவாச வீட்டாரினால் வீட்டுவாசலின் நிலைக்கால்களில் தெளிக்கப்படுகின்றது மற்றும் அதன் பாதுகாப்பின்கீழ் அவர்கள் காணப்படுகின்றனர் மற்றும் சத்தியமாகிய புளிப்பில்லாத அப்பத்திலும், விசுவாசியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், தன்னை இணைத்துக் கொண்டதுமான பலியினாலான பலத்திலும், இலவசமான ஆசீர்வாதத்திலும் பங்குகொள்ளலாம்.

# பிற்பிறப்புகள் மற்றும் முதற்பிறப்புகள்

இந்தச் சுவிசேஷயுகமாகிய இரவில் தெய்வாதீனமாக மரணத்திலிருந்து, ஜீவனுக்குள் வந்ததான, அதாவது கடந்துபோகப்பட்டவர்களாகிய முதற்பிறப்புகள் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்களென எண்ணினதில், நம்மில் அநேகர் பெரிய தவறிழைத்துள்ளோம். தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களின் மூலம், அவர்களது பஸ்காவில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளதான நிழலை (அ) காட்சியைப் பார்க்கும்போது, வேறு கருத்து வெளிப்படுகின்றது. இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் மாத்திரமே இரட்சிக்கப்பட்டார்கள் என்பதற்குப்பதிலாக, சம்பவப்பதிவானது அந்த இருளான இரவைத் தொடர்ந்து, முதற்பேறானவர்களுக்கு மாத்திரமல்லாமல், இஸ்ரயேலர்கள் அனைவருக்கும் அடிமைத்தனத்தினின்று வெளியேறுவதற்கும், சந்தோஷத்திற்கும், ஆசீர்வாதத்திற்குமுரிய காலை வந்தது. நிழலில் முதற்பேறான வர்கள், இருளிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும், வெளிச்சத்திற்கும் மற்றும் விடுதலைக்கும் ஜனங்களை வழிநடத்தும் மதத் தலைவர்களாகிய ஆசாரியர்களாகவும், லேவியர்களாகவுமானதுபோல, யூதர்கள் மற்றும் புறஜாதிகளிலிருந்து இந்தச் சுவிசேஷ யுகத்தில் தெரிந்தெடுக்கப்பட்டதான மேசியாவின் சபையும் இஸ்ரயேலை, அதாவது தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களின் கோத்திரங்கள் அனைத்தையும், பாவம் மற்றும் மரணத்தினுடைய வல்லமையிலிருந்து, ஏற்றக்காலத்தில், அதாவது மேசியாவின் இராஜ்யமாகிய, புதிய யுகத்தினுடைய காலையில் வெளியே கொண்டு வருவார்கள். நிழலில் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களை வெளியே வழிநடத்தின மோசே, ஆவிக்குரிய தளத்திலுள்ள இந்த மாபெரும் மேசியாவிற்கு நிழலாய்க் காணப்படுகின்றார்; இந்த மாபெரும் மேசியா சீக்கிரத்தில் தம்முடைய ஜனங்களாகிய இஸ்ரயேலை வெளியே கொண்டுவந்து, நாம் இதுவரையிலும் உணர்ந்திருக்கின்றதான ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தில் அடங்கும் ஆசீர்வாதங்கள், சிலாக்கியங்கள் மற்றும் தயவுகள் அனைத்தையும் அவர்களுக்கு அருளுவார்.

தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் மாத்திரமே எகிப்திய அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்டார்கள் என்பதும், இவர்கள் மாத்திரமே செங்கடலின் வெட்டாந்தரையில் கடந்துசென்றார்கள் என்பதும், மற்றும் இவர்களுக்கு மாத்திரமே வனாந்தரத்தில் விசேஷமான தெய்வீக ஏற்பாடுகள் காணப்பட்டன என்பதுமான உண்மைகளின் நிமித்தமாக, மேசியா ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாரை மாத்திரமே ஆசீர்வதிப்பார் என்று புரிந்துகொள்ளப்படக்கூடாது. பிதாக்களின் நிமித்தமாக இன்னமும் பிரியமானவர்களாகக் காணப்படுகின்றவர்களும், தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள் கொண்டுவரப்பட்டவர்களுமான தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்கே முதலாவதாக ஆசீர்வாதம் கடந்துவரும். மற்ற ஜாதிகள் நிழலில் குறிப்பிடப்படவில்லை, காரணம் மாபெரும் மத்தியஸ்தராகிய மேசியாவின் வாயிலாக, தேவனுடன் உறவிற்குள், ஐக்கியத்திற்குள் அவர்கள் வர

வேண்டுமெனில், அவர்கள் சீயோனின் குடிமக்களாகி, அதாவது தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களில் அங்கத்தினர்களாகிட வேண்டும்.

இது சில நல்ல கிறிஸ்தவ ஜனங்களுக்கும், நல்திறமிக்க வேதத்தின் மாணாக்கர்களுக்கும் ஆச்சரியமாய் இருக்கும்; ஏனெனில் இவர்களில் அநேகர் புதிய உடன்படிக்கைத் தொடர்புடையதான தெய்வீக வாக்குத்தத்தங்களினுடைய குறிப்பிட்ட சில அம்சங்களைக் கவனிக்கத் தவறிவிட்டனர். இந்த உடன்படிக்கையானது, தேவனுக்கும், அவரது தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்கும் இடையில் பண்ணப்படுமே ஒழிய, வேறெந்த ஜாதியாரோடும் பண்ணப்படுவதில்லை என்று நமக்குத் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளது. ஆகவே ஆபிரகாமுக்கான தேவனுடைய உடன்படிக்கை மற்றும் வாக்குத்தத்தத்திற்கு ஏற்ப இஸ்ரயேல் வாயிலாக, "பூமியிலுள்ள வசம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்." இஸ்ரயேலுடன் புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கைப் பண்ணப்படுதலானது, மற்ற ஜாதியார்களை ஆசீர்வதித்திடும்; காரணம் மோசேயிலும் பெரியவரால் மத்தியஸ்தம் பண்ணப்படுகின்றதான புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளின்கீழ் வருவதற்கான வாய்ப்பானது, சகல ஜனங்களுக்கும், ஜாதிகளுக்கும் அருளப்பட்டிருக்கும். அந்த உடன்படிக்கையின்கீழ் வருவதுஎன்பது, மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றதும், அதனிலும் மேலான விளக்கம் கொண்டுள்ளதும், நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலுமான அன்பு எனும் தெய்வீகப் பிரமாணத்திற்கு முழுமையாய்க் கீழ்ப்பட்டிருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும். தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களை இப்படி முதலாவது ஆசீர்வதிக்கும் மாபெரும் மேசியா, தம்முடைய தயவுகளை ஏற்றுக்கொள்வதற்கும், திவ்வியப் பிரமாணங்களுக்கு இணங்கிடுவதற்கும் விரும்புகின்ற ஜாதிகள் மற்றும் ஜனங்கள் அனைவருக்கும் ஊழியம் புரிந்திட சித்தமாயிருப்பார். இப்படியாகச் சகல ஜாதிகளும் மேசியாவினுடைய ஆளுகையின்போது, படிப்படியாக ஆபிரகாமின் சந்ததியாராகுவார்கள். மேசியாவினுடைய ஆளுகையின் முடிவில் இப்படியாக ஆபிரகாமுக்கான தேவனுடைய வாக்குத்தத்தமானது, நிறைவேறும். "உன் சந்ததி வானத்து நட்சத்திரங்கள்போலவும். கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகுவார்கள்." இங்கு இரண்டு சந்ததிகளும் தெளிவாய்க் குறிப்பிடப்பட்டுள்ளனர்; அவை: (1) ஆவிக்குரிய தளத்திலுள்ள ஆவிக்குரிய (அ) மேசியா சந்ததி, அதாவது நிஜமான ஆசாரியர்கள் மற்றும் லேவியர்கள் நட்சத்திரத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். (2) புதிய உடன்படிக்கையினுடைய மேசியாவின் மத்தியஸ்தம் மூலமாக, பூமியின் சகல ஜாதிகளினுடைய கீழ்ப்படிதலைத் தனக்குள் எடுத்துக்கொள்ளும் இஸ்ரயேலின் நிமித்தமாக, ஆபிரகாமினுடைய சந்ததி பெருகிவரும் மற்றும் மேசியாவினுடைய இராஜ்யத்தின் முடிவில் மனுக்குலம் முழுவதும், தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்குள்ளும், தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாகவும் காணப்படுவார்கள்; ஏனெனில் மோசேயைக்காட்டிலும் பெரிய இராஜாவுக்கும், ஆசாரியனுக்கும், தீர்க்கத்தரிசிக்கும் செவிக்கொடுக்கவும், கீழ்ப்படியவும் மறுப்பவர்கள், ஜீவனிலிருந்து இரண்டாம் மரணத்திற்குள் - நித்தியமான அழிவிற்குள் அறுப்புண்டுபோவார்கள்.

## சபை மற்றும் பஸ்கா

சபையானது, "பஸ்கா பலியில்" ஒரு பங்கு கொண்டுள்ளதாக நாம் வலியுறுத்துகின்றோம் என்று எண்ணிக்கொண்டதில் விமர்சகர் தவறிழைத்துள்ளார். பஸ்கா ஆட்டுக்குட்டிக்கான நிஜம் நமது கர்த்தர் மாத்திரமே ஆவார் என்றே நாம் வலியுறுத்துகின்றோம். இது "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" என்ற வார்த்தைகளுக்கு இசைவாய்க் காணப்படுகின்றது. (1 கொரிந்தியர் 5:7, 8) பஸ்கா ஆட்டுக்குட்டியானது, எலும்புகள் எதுவும் முறிக்கப்படாத நிலையில் சுடப்பட்டு, ஆயத்தம்பண்ணப்பட வேண்டும். இது இப்படியாக நமது கர்த்தரை மாத்திரமே அடையாளப்படுத்துகின்றதே ஒழிய, அவரது "அங்கத்தினர்களை," சபையை அடையாளப்படுத்துகிறதில்லை. ஆனால் பாவநிவாரண பலிகளில் ஒன்றில், தகனப்பலிக்கான ஆட்டுக்கடாவானது சந்துசந்தாக துண்டிக்கப்பட்டது மற்றும் துண்டுகள் கழுவப்பட்டு, தலையோடுகூடப் பலிபீடத்தில் வைக்கப்பட்டது; தனித்தனியாக, ஆனால் ஒன்றாய்த் தேவனுக்குச் செலுத்தப்படுகின்ற கிறிஸ்துவையும், அவரது அங்கத்தினர்களையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது – அங்கத்தினர்கள் தலையினுடைய புண்ணியத்தின்கீழ்க் காணப்படுகின்றனர்.

பஸ்காவானது அனைத்து ஜனங்களுக்கானதல்ல, மாறாக முதற்பேறானவர்களுக்கு மாத்திரமானதேயாகும். இது இந்தச் சுவிசேஷயுகத்தின் சபைக்கான, அதாவது "முதற்பேறானவர்களின் சபை" என்று அழைக்கப்படுகின்றவர்களுக்கான கிறிஸ்துவினுடைய வேலையை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. சபை தனது சொந்த விடுதலையை அவளாகவே கொண்டுவந்துவிடவில்லை; அது கிருபையினாலும், தெய்வீக அன்பினாலும் உண்டானதாகும். இஸ்ரயேலின் முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதல் என்பது, சீனாய் மலையில் இஸ்ரயேலோடு, நியாயப்பிரமாண உடன்படிக்கையானது பண்ணப்படுவதற்கு வழிநடத்தினதுபோல, இந்தச் சுவிசேஷ யுகத்தில் முதற்பேறானவர்களின் சபை கடந்துபோகுதல் என்பது, மாம்சீக இஸ்ரயேலர்களையும், உலகத்தையும் ஆசீர்வதிப்பதற்கான புதிய உடன்படிக்கையின் நிறுவுதலுக்கு வழிநடத்துகின்றதாய் இருக்கின்றது; தலையும், (இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது, மனுக்குலத்தின் மத்தியிலிருந்து தேவனால் தெரிந்துகொள்ளப்படுகின்றதான) சரீரமுமாகிய கிறிஸ்துவுக்கு அடையாளமான மோசே நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு மத்தியஸ்தரானார். காளை மற்றும் ஆட்டினுடைய இரத்தத்தை மோசே எடுத்து தேவன் (அ) தெய்வீக நீதியை அடையாளப்படுத்துகின்றதான நியாயப்பிரமாண புத்தகத்தின்மீது தெளித்தார் மற்றும் அடுத்து ஜனங்கள்மீது தெளித்து, இப்படியாக அந்த உடன்படிக்கையின் மூலமாக தேவனையும், ஜனங்களையும் ஒப்புரவாக்கினார். நிஜமான காளையின் (இயேசுவின்) மற்றும் நிஜமான வெள்ளாடாகிய சபையின் இரத்தமானது புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கையினைச் சேர்த்து முத்திரையிடும். நிஜம் சீக்கிரத்தில் நிகழும். நிஜமான மோசேயின், நிஜமான மத்தியஸ்தரின் உருவாக்குதலானது சீக்கிரத்தில் நிறைவேறித் தீரும்.

- ரீபிரிண்ட்ஸ், பக்கம், 4335.

# பஸ்கா ஏற்படுத்தப்பட்டது

மீண்டும் மீண்டுமாக மோசேயும், ஆரோனும் பார்வோனிடத்தில், "என் ஜனங்களைப் போகவிடவேண்டும்" எனும் தேவ செய்தியுடன் சென்றார்கள். மீண்டும் மீண்டுமாக வாதைகளும், ஜனங்களைப் போகவிடுவதற்கு மறுத்ததற்குமான தண்டனையாகக் கொடுக்கப்பட்டது. மீண்டும் மீண்டுமாக பார்வோன், வாதைகள் நிறுத்தப்பட்டால், தான் ஜனங்களைப் போகவிடுவதாக அறிவித்தான் மற்றும் மீண்டும் மீண்டுமாக பார்வோனும் தனது வார்த்தையின்படி நடந்துகொள்ளவில்லை. "மேலும் என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என்னுடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும், உன்னை நிலைநிறுத்தினேன் என்று பார்வோனுடனே சொன்னதாக வேதத்தில் சொல்லியிருக்கிறது" (உரோமர் 9:17). இதன் அர்த்தமாவது, தேவனால் எகிப்தின் சிங்காசனத்தில் வேறொரு பிரபுவைக் கொண்டுவந்திருக்க முடியும்; அவர் இந்தக் குறிப்பிட்ட பார்வோனுக்குத் தயைப் பாராட்டினதற்குக் காரணம், அவனுடைய பொல்லாத சுயசித்தமும், பிடிவாதமும் மற்றும் சுயநலமுமாகும்.

கர்த்தர் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினதாக வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. இதன் விளக்கம் என்னவெனில், தேவனுடைய தயவே/காருணியமே பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினது. பார்வோன் தான் சரியாய் நடந்துகொள்வான் என்று வாக்குறுதி கொடுத்தபோதெல்லாம், உடனடியாகப் பல்வேறு வாதைகளை அப்புறப்படுத்தும் விஷயத்தில் தெய்வீகத் தயவும், பெருந்தன்மையும் வெளிப்பட்டது. இது அவனைக் கீழ்ப்படிவதற்கும், அன்புகூருவதற்கும் தூண்டிடுவதற்குப்பதிலாக, அவனை அதிகமாய்ப் பிடிவாதம் கொள்ளச் செய்தது. அவன் ஒவ்வொரு வாதைகளுக்குள்ளாக ஒன்றன்பின் ஒன்றாகக் கடந்துபோகுகையில், பின்வரும் வாதைகள் அதிகம் பாதகமானதாய் இருக்காது என்று உறுதிக்கொண்டவனாய்க் காணப்பட்டான். அவன் எதிர்த்து நின்றதற்குத்தக்கதாக துன்பத்தை அனுபவித்தான்/தண்டிக்கப்பெற்றான். (யாத்திராகமம் 4:21; 7:3; 14:4)

பத்தாவது வாதை கவலைக்கிடமானதாய்க் காணப்பட்டது. எகிப்தின் முதற் பேறானவர்கள் அனைவரும் மரித்தார்கள், ஆனால் தெளிக்கப்பட்ட இரத்தத்தின் கீழ்க் காணப்பட்ட இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் பாதுகாப்பாய் இருந்தார்கள். இப்படியாய்த் தேவன் உலகத்திலிருந்து இப்பொழுது அழைக்கப்படுகின்றதான "முதற்பேறானவர்களாகிய சபையினை" அடையாளப்படுத்திக் காண்பித்துள்ளார். முதலாம் உயிர்த்தெழுதலின் வாயிலாக இவர்கள் மகிமையடைந்த பிற்பாடு, இவர்கள் இஸ்ரயேல் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்கும் மற்றும் இஸ்ரயேல் வாயிலாக, பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதற்குமான "இராஜரிக ஆசாரிய கூட்டத்தினராக," ஆவிக்குரிய லேவியர்களாக இருப்பார்கள்.

ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், முதற்பேறானவர்களின் சபை கடந்துபோகப்பட்டு அல்லது விசேஷமாய் இரட்சிக்கப்பட்டு, திவ்விய சுபாவத்தில் பங்காளிகளாகவும், மேசியாவின் ஆளுகையின்போது பிற்பிறப்புகளை ஆசீர்வதிப்பதற்கென மேசியாவின் இராஜ்யத்தில் பங்காளிகளாகவுமாக்கப்படுகின்ற காலமாகிய, 19 நூற்றாண்டுகள் காலமான இந்தச் சுவிசேஷயுகத்திற்கு, பஸ்கா இரவானது நிழலாய் இருக்கின்றது என்று வேதத்தின் மாணவர்கள் எண்ணுகின்றனர். வீட்டுவாசல் நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்கப்படுவதானது, கிறிஸ்துவின் இரத்தத்தின்மீதான விசுவாசத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

## பஸ்கா — எத்தனைதரம் திரும்பச் செய்யப்படுகின்றது?

**கேள்வி.** (1911)—2—பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய இரத்தமானது வருடந்தோறும் தொடர்ந்து தெளிக்கப்படுகின்றதா (அ) எகிப்தில் மாத்திரம் ஒரேதரம் தெளிக்கப்பட்டதா?

**பதில்.** எனக்குத் தெரியாது; அது ஓர் அடையாளமாகும். ஆரம்பத்தில் அப்படியாகத்தான் கட்டளையிடப்பட்டது மற்றும் அப்படியாகவே கைக்கொள்ளவும் பட்டது. யூதன் யாராகிலும் இங்குக் காணப்பட்டால், அவர் வீட்டுவாசலின் நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்கும் வழக்கத்தினை யூதர்கள் இப்பொழுதும் கொண்டிருக்கின்றார்களா என்பதை நமக்குச் சொல்வார். அவர்கள் அப்படியாய்ச் செய்வதில்லை என்று நான் எண்ணுகின்றேன். என்னால் நிச்சயமாய்க் கூற இயலாது.

## பஸ்கா — முதற்பேறானவர்கள் யாரை அடையாளப்படுத்துகின்றனர்?

**கேள்வி.** (1912)—3—ஆட்டுக்குட்டியினுடைய சிந்தப்பட்ட இரத்தத்தின் நிமித்தமாக கடந்துபோகப்பட்டவர்களாகிய முதற்பேறானவர்கள் தலையையும், சரீரமாகிய சபையையுமா (அ) சபையை மாத்திரம் அடையாளப்படுத்துகின்றனரா?

**பதில்.** ஏன்! சபை மாத்திரமே; நமது கர்த்தர் இயேசுவையல்ல. அவர் எதினாலும் கடந்துபோகப்படவில்லை. அவர் மரித்தார். அவரே ஆட்டுக்குட்டியாவார். அவரது இரத்தமே, நம்மை "முதற்பேறானவர்களின் சபையாக்கிற்று." அவரை நீதிமானாக்குகிற ஆட்டுக்குட்டி யாது? அவருக்கு ஆட்டுக்குட்டி தேவையில்லை. அவர் தம்மாலேயே கடந்துபோனார். மரணம்வரையிலுமான தம்முடைய கீழ்ப்படிதலினாலே அவர் கடந்துபோனார். இது நமக்காகக் கொடுக்கப்பட்டதான அவரது இரத்தத்தின் மூலமாக முதற்பேறானவர்களான சபையென நம்மைக் கடந்துபோகச் செய்ய அவருக்கு ஏதுவாக்கிற்று.

## பஸ்கா —பஸ்காவுக்கும், பாவநிவாரண நாளுக்கும் தொடர்பு

**கேள்வி.** (1913) —4—பஸ்கா நிழலுக்கும், வருடாந்தர பாவநிவாரண நாளுக்கும் இடையிலான தொடர்பு என்ன? பஸ்காவானது கொடுக்கப்பட்ட மீட்கும்பொருளையும், பாவநிவாரண நாளானது, மீட்கும்பொருள் பணியின் விளைவான ஜனங்களுடைய சுத்திகரிக்கப்படுதலையும் அடையாளப்படுத்துகின்றதா?

**பதில்.** இந்த இரண்டுமே தொடர்பற்றவை என்றே நான் சொல்லுவேன். தேவன் இவை இரண்டையும் வருஷத்தினுடைய எதிர்முனைகளில், ஒன்றிலிருந்து, இன்னொன்று தொலைவில் இடம்பெறப் பண்ணியுள்ளார். ஒன்று ஒரு காரியத்தினுடைய நிழலாகவும், மற்றொன்று மற்றொரு காரியத்தினுடைய நிழலாகவும் காணப்படுகின்றது.

"மீட்கும்பொருள்" எனும் வார்த்தையானது இரண்டிலும் காண்பிக்கப்படவில்லை. மீட்கும்பொருளுக்கான நிழல் இரண்டிலும் காணப்படுவதில்லை. "மீட்கும்பொருள்" எனும் வார்த்தை (அ) கருத்தானது வேறு இடங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

# நிழலிலும், நிஜத்திலும் பஸ்கா

**"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்."**
**1 கொரிந்தியர் 5:7, 8**

இஸ்ரயேல் தேசத்தின்மீதான தெய்வீகத் தயவிற்கான முதல் நிறுவுதலாய் விளங்கின பஸ்கா அனுசரிப்புகளானது, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் இறுதி விருந்தில் அல்லது திருவிருந்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டதான தெய்வீகத் தயவிற்கான முதல் நிறுவுதலுக்கு நிழலாய்க் காணப்படுகின்றது. நம்முடைய ஆதார வசனத்தில் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டியுள்ளதுபோலவே, யூதர்களுடைய பஸ்காவானது, கிறிஸ்தவர்களாகிய நாம் ஆசரிக்கின்றதான உண்மை பஸ்காவாகிய மேலானவைகளுக்கு நிழலாக இருக்கின்றது. நமக்கான தகவல்களுக்கென்று நாம் யூதருடைய நிழலை முழுமையாய்ச் சார்ந்திருப்பதில்லை; ஏனெனில் கிறிஸ்துவுக்கும், அவரது சபைக்கும் இடையிலான உறவு தொடர்பாகவும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கான விசேஷித்த இரட்சிப்புத் தொடர்பாகவும் நமது கர்த்தர் மற்றும் அவரது அப்போஸ்தலர்களுடைய தெளிவான, திவ்விய வார்த்தைகளை நாம் பெற்றிருக்கின்றோம். எனினும் நிஜத்தைப்பற்றின புரிந்துகொள்ளுதலில் நமக்குப் பெரிதும் உதவக்கூடிய அநேக விவரங்களை நாம் நிழலான பஸ்காவில் பெற்றிருக்கின்றோம்.

பஸ்காவானது மறைமுகமாக மீதமான இஸ்ரயேலர் அனைவருடன் சம்பந்தமுடையது என்றாலும், பஸ்காவானது இஸ்ரயேலர்களின் முதற்பேறானவர்களுடனே நேரடியாய்ச் சம்பந்தம் கொண்டிருந்தது என்பதை நாம் முதலாவதாகக் கவனிக்க வேண்டும். எகிப்தின்மீதான கடைசி வாதையானது, அவர்களது முதற்பிறப்புகள் அனைவரின் மரணமாக இருந்தது மற்றும் பஸ்கா என்பது அந்த இரவின்போது கடந்துவந்ததான சங்காரத் தூதன், இஸ்ரயேலின் முதற்பிறப்புகளைக் கடந்துசென்றார் என்ற உண்மையைச் சுமக்கின்ற வார்த்தையாய் இருக்கின்றது. எகிப்தியர்களுடைய இளைய பிள்ளைகள் அபாயத்திற்குள் காணப்படாததுபோன்று, இஸ்ரயேலர்களின் இளையப் பிள்ளைகளும் அபாயத்திற்குள் காணப்படவில்லை; ஆகையால் இவர்கள் கடந்துபோகப்படவில்லை. எனினும் இவர்கள் - முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலில் அக்கறையுடன் இருந்தார்கள் என்பதில் உறுதியே; இதற்குக் காரணம் உறவுமுறைகள் என்பது மாத்திரமல்லாமல், கர்த்தருடைய ஏற்பாடுகளின்படி அந்த முதற்பேறானவர்களே அடுத்த நாளில், இவர்கள் எகிப்திலிருந்து வெளியேறுகையில், ஜனங்களை வழிநடத்துபவர்களாகவும், விடுவிக்கிறவர்களாகவும் காணப்பட்டார்கள் (எண்ணாகமம் 8:17, 18) என்பதினாலும் ஆகும்.

இன்னுமாக தெய்வீகக் கட்டளையின்பேரில் இஸ்ரயேல் புத்திரரிலுள்ள முதற்பேறானவர்களுக்குப் பதிலாக, முழு லேவிக் கோத்திரமும் எடுத்துக்கொள்ளப்பட்ட

படியால், லேவிக் கோத்திரம் அவர்களுக்கு அடையாளமானார்கள் மற்றும் பலிச்செலுத்தும் ஆசாரியர்களும், போதிக்கும் லேவியர்களும் அந்தத் தேசத்திற்கான நியாயப்பிரமாண உடன்படிக்கையின் ஊழியக்காரரானார்கள். இதன் நிஜமானது, அப்போஸ்தலனாகிய பவுலினால் தெளிவாய்ச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது; அதாவது இந்தச் சுவிசேஷயுகத்தினுடைய தெரிந்துகொள்ளப்பட்ட சபையே, "பரலோகத்தில் பேர் எழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபையாய்" இருக்கின்றது எனச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. இவர்களே "புது உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாய்" இருக்கப்போகின்றார்கள் (எபிரெயர் 12:23; 2 கொரிந்தியர் 3:6).

இந்த முதற்பேறானவர்கள் மாத்திரமே இந்தச் சுவிசேஷயுகத்தில் அல்லது "இரவில்" கையாளப்படுகின்றனர். இவர்கள் மாத்திரமே மரணத்தண்டனைக்கான அபாயத்தில் காணப்படுகின்றனர். அப்போஸ்தலன் சொல்லுகின்றதுபோல், "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" (எபிரெயர் 10:26, 27). மனுக்குலத்தின் முழு உலகமும்கூட - முதற்பேறானவர்களாகிய இந்தச் சபையினிடத்திலும், இவர்களை வெற்றிகரமாய்க் கடந்துபோகுதலிலும், இவர்கள் நித்தியமான ஜீவனை அடைவதிலும் அக்கறைக்கொண்டிருப்பதில் உறுதியே; ஏனெனில் இவர்கள் சீக்கிரத்தில் முத்திரை இடப்படப்போகிறதும், நிபந்தனைகளுடன் பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கப்போகிறதுமான புதிய உடன்படிக்கையின் ஆசாரியக்கூட்டத்தாராகவும், ஆசிரியர்களாகவும் காணப்படுகின்றனர். மனுக்குலம் முழுவதும் சத்திய அறிவின் மூலமாகவும், புதிய உடன்படிக்கையின்கீழ் ஆயிரவருட இராஜ்யத்தினுடைய ஆசீர்வாதங்கள் மூலமாகவும், தேவனுடன் ஒப்புரவாகுதலின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள் (எரேமியா 31:31-34).

## பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசு

முதற்பேறானவர்களின் வகுப்பாரைக் குறித்து நாம் பார்த்துள்ளதினால், நாம் பஸ்கா ஆட்டுக்குட்டியையும் குறித்துத் தெளிவாய் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்; ஏனெனில் இதன் இரத்தத்தின் காரணமாகவே முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதல் சாத்தியமானது. ஆட்டுக்குட்டி என்பது விசேஷமாகக் கபடற்ற விலங்காகவும், தற்காத்துக்கொள்வதற்கோ அல்லது எதிர்ப்பதற்கோ முற்றிலும் தயாரற்ற விலங்காகவும் காணப்படுகின்றது மற்றும் இதன் காரணமாக நமது கர்த்தருக்குப் பொருத்தமான நிழலாகக் காணப்படுகின்றது; அதாவது எதிர்க்காதவராகவும், நம் சார்பாக - முதற்பேறானவர்களின் சார்பாக தம்முடைய பூமிக்குரிய நலன்களையும், தம்முடைய உரிமைகளையும் முழுமையாகவும்,

மனப்பூர்வமாகவும் ஒப்படைத்தவராகவும் காணப்பட்ட நமது கர்த்தருக்குப் பொருத்தமான நிழலாகக் காணப்படுகின்றது. முதற்பேறானவர்கள் அல்லாதவர்களும் இறுதியில் அவரது பலியினால் நலம்பெறுவார்கள் என்பது உண்மையே; எனினும் முதற்பேறானவர்களுக்கு இப்படி விசேஷமாயும், குறிப்பாயும் உள்ளது. இந்தச் சுவிசேஷயுகத்தில், இதுவரையிலும் தேவனுடைய நடவடிக்கைகளானது இந்த வகுப்பார் மட்டிலே இருந்துள்ளது. இவர்கள் மாத்திரமே, பிதாவினிடத்தில், நீதிபரராகிய இயேசு கிறிஸ்துவைப் பரிந்துபேசுகிறவராகப் பெற்றிருக்கின்றனர் (1 யோவான் 2:1, 2). இதுவரையிலும் இவர்கள் மாத்திரமே தேவனிடம் ஒப்புரவாகியுள்ளனர்.

அவிசுவாசிகளுக்கு, தேவனுடைய ஆசீர்வாதங்கள் அனைத்துமே எதிர்க்காலத்தில், புதிய உடன்படிக்கையின்கீழ்க் கடந்துவரும்; ஏனெனில் விசுவாசிகள் மாத்திரமே விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, விசுவாச உடன்படிக்கையாகிய, ஆபிரகாமின் உடன்படிக்கையினுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானது", முதலாவது முதற்பேறானவர்களாகிய சபையை இரட்சிக்கின்றது மற்றும் பின்னர் ஆயிரவருடக் காலத்தின்போது, ஆபிரகாமின் சந்ததியாகப் போகிற அனைவரையும் ஆசீர்வதிக்கும்.

சபையானவள், கர்த்தரோடுகூட அவரது பலியில் பங்கெடுப்பதை அடையாளப்படுத்தும் விதத்தில் நிழல்கள் காணப்படுகின்றன; ஆனால் இந்தப் பஸ்கா நிழலானது, இப்படியானதொன்றல்ல. பஸ்கா ஆட்டுக்குட்டியானது, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக" இருப்பதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கிறது (யோவான் 1:29). ஆனால் உலகத்தின் பாவமானது இன்னமும் போக்கப்படவில்லை. நமது கர்த்தர் தம்முடைய புண்ணியத்தினை இன்னமும் உலகத்திற்கெனச் செயலாக்கத்தில் கொண்டு வரவில்லை, மாறாக விசுவாச வீட்டாருக்காக மாத்திரமாகவும், குறிப்பாகவும் செயலாக்கத்தில் கொண்டுவந்துள்ளார். நமது கர்த்தரும், சபையும் சேர்ந்து, தலையும், சரீரமாக பலிச் செலுத்துவதை அடையாளப்படுத்துகின்றதான வேறொரு பலியில், விலங்கின் சரீரமானது, பல்வேறு துண்டுகளாக வெட்டப்பட்டு, தலையோடுகூட, பலிப்பீடத்தில் வைக்கப்படும் காரியமானது, கிறிஸ்து இயேசுவைத் தலையாகவும், சபையை, அவருடைய அங்கத்தினர்களாகவும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது (யாத்திராகமம் 29:15-18). ஆனால் பஸ்காவின் பலியானது, துண்டங்களாக துண்டிக்கப்படக் கூடாது என்பதாக கட்டளையிடப்பட்டிருக்கிறது. அது முழுவதுமாகப் புசிக்கப்பட வேண்டும் - அதன் ஓர் எலும்புகூட முறிக்கப்படக்கூடாது. அது கிறிஸ்துவையும், சபையையும் குறிக்காமல், மாறாகக் கிறிஸ்துவின் பலியில், அவரை மாத்திரமாகவே அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. (யாத்திராகமம் 12:46; யோவான் 19:36)

# அந்த இரவில்

கடந்து போகுதலானது, காலை வேளையில் நடைபெறாமல், இரவிலே நடைப்பெற்றது என்பது நினைவில்கொள்ளப்பட வேண்டும். காலை வந்தபோது, இஸ்ரயேலர்கள் எகிப்து தேசத்திலிருந்து சுதந்திரமடைந்தார்கள்; அடிமைத்தனத்திலிருந்து, சுதந்திரத்திற்குள் கடந்துபோனார்கள். இரவில் அவர்கள் அடிமைத்தனத்திலேயே காணப்பட்டார்கள் மற்றும் முதற்பேறானவர்கள் கடந்து போகப்பட்ட பிற்பாடு மாத்திரமே வரக்கூடிய விடுதலைக்காகக் காத்திருந்தார்கள். நிழலில் இடம்பெறும் அந்த இரவானது, இந்தச் சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இதே கருத்தானது, நமது கர்த்தர் பின்வருமாறு பேசுகையில் வெளிப்பட்டதாய் இருக்கின்றது: "உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது;" மீண்டுமாக, "விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத்தண்டின் மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்" (மத்தேயு 5:16, 15). இதே கருத்தையே அப்போஸ்தலனாகிய பேதுருவும் பின்வருமாறு கூறுகையில் வெளிப்படுத்துகின்றார்: "அதிக உறுதியான தீர்க்கத்தரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" (2 பேதுரு 1:19). மீண்டுமாகச் சபையைக் குறித்துத் தீர்க்கத்தரிசி பேசுகையில், "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" (சங்கீதம் 119:105) என்றார்.

இன்னும் அநேகம் வேதவாக்கியங்களானது, புதிய ஆயிரவருட யுகத்தினை பகல் என்று குறிப்பிடுகின்றது; அப்போது நீதியின் சூரியனானது, உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும் மற்றும் அதனால் மூடநம்பிக்கை எனும் நிழல்களும், அந்தகாரக் கிரியைகளும் துரத்தப்படும். இந்த அடையாளத்தின் பொருத்தமானது, சிந்திக்கிற மனதிற்குத் தெளிவாய்த் தெரிகின்றதாய் இருக்கும். தேவ ஜனங்களினுடைய நம்பிக்கைகளும், உணர்வுகளும் பாவத்தினுடைய இருளுக்குரியதாய் இராததினாலும், இரவுக்குரியதாய் இராததினாலும், பகலுக்குரியதாகவும், "உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவதுபோல, பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்று அவர்கள் ஜெபித்துக் கொண்டிருக்கின்றதான, நீதியின் ஆளுகைக்குரியதாகவும் காணப்படுவதினால், அவர்கள் பகலின் பிள்ளைகளாகக் காணப்படுகின்றனர்.

பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாக, நமது கர்த்தர், தாம் உலகத்திற்கு ஒளியாக வந்ததாகவும், மனிதர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்பினார்கள் என்பதாகவும் கூறியுள்ளார் (யோவான் 8:12; 3:19-21). இதுவரையிலும் சொற்பமானவர்கள் மாத்திரமே, அவரை "மெய்யான ஒளி" என்று அடையாளம் கண்டுகொண்டுள்ளனர். ஆனால் இறுதியில் அவர் "உலகத்திலே வந்த எந்த

மனுஷனையும் பிரகாசிப்பிக்கிறவராய்" இருப்பார் (யோவான் 1:9). அவரோடுகூட ஒளியைச் சுமப்பவர்களாகக் காணப்படுவதற்கென, அவரது சபையும் அழைக்கப்பட்டிருக்கின்றனர்; மேலும் இப்பொழுது தங்களது ஒளியைப் பிரகாசிக்கும் அனுபவத்தில் இவர்கள் உண்மையுள்ளவர்களாகக் காணப்படுவார்களானால், தமது செட்டைகளினால் உலகத்தைச் சுகப்படுத்துகின்றதான அந்த மாபெரும் நீதியின் சூரியனின் பாகங்களாக அக்காலத்தில் காணப்படுவார்கள். இதை நமது கர்த்தர் கோதுமை மற்றும் களைகள் உவமையில் சுட்டிக்காண்பித்துள்ளார். இந்த யுகத்தினுடைய முடிவில் அவர் கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்த்துக்கொள்வார் என்றும், "அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்" என்றும் கூறியுள்ளார் (மத்தேயு 13:43). அந்தோ பரிதாபம், வெகு சொற்பமானவர்களே, "கேட்கிறதற்குக் காதுள்ளவர்களாகவும்" மற்றும் தெய்வீகத் திட்டத்தினுடைய அருமையான போதனைகளை ஏற்றுக்கொள்பவர் களாகவும் காணப்படுகின்றனர்!

## இரவு முழுவதும் வீட்டுவாசல் நிலைக்கால்களில் இரத்தம்

அந்த இரவில் ஆட்டுக்குட்டியின் இரத்தமானது தங்களுடைய வீட்டுவாசல் நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் தெளிக்கப்பட வேண்டுமென்று இஸ்ரயேலர்கள் கற்பிக்கப்பட்டிருந்தனர். இது விசுவாச வீட்டாரில் அடங்கும் யாவரும் கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தில் விசுவாசிக்க வேண்டும் என்பதையும் மற்றும் இப்படியாகச் சபைப் பாகுபாடின்றி "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதையும்" சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இப்படியாக விசுவாசிப்பது என்பது, நம்மை விசுவாச வீட்டாரில் அங்கத்தினர்களாக்குகின்றது; எனினும் இது நாம் முதற்பேறானவர்களாய்க் காணப்படுவோமா (அ) இல்லையா என்பதை நிர்ணயிக்காது. உண்மையுள்ளவர்கள், பரிசுத்தவான்கள், இராஜரிக ஆசாரியக்கூட்டத்தார் விசுவாச வீட்டாரில் மூத்த ஸ்தானத்தில் காணப்படுகின்றனர்; இந்த ஸ்தானமானது, வருஷதொகையின் காரணமாக இராமல், மாறாக ஆவிக்குரிய வளர்ச்சியின் காரணமாகவேயாகும். இவர்களது விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் சுட்டிக்காட்டுகின்றதான, மீட்பருக்கொத்த குணலட்சணத்தினுடைய வளர்ச்சியின் விஷயத்திலான இவர்களது முதன்மை நிலையின் அடிப்படையில், இவர்கள் ஆசாரியர்களாக, மூப்பர்களாகக் காணப்படுகின்றனர்.

இதுவே வேதவாக்கியங்களின் அடிப்படையிலான போதனையாய் இருக்கின்றது. இயேசு ஜீவித்தார் மற்றும் இயேசு மரித்தார் என்று மாத்திரம் நாம் விசுவாசிக்கிறவர்களாக இருக்கக்கூடாது. அவர் "அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்" பலியின் மரணம் மரித்தார் என்பதை நாம் விசேஷமாய் விசுவாசிக்க வேண்டும் மற்றும் அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தின் வாயிலாக அவர் பெற்றுத் தந்ததான மீட்பில் நமது பங்கினை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நிழலில் வீட்டுவாசல் நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்கப்பட்ட காரியமானது, தேவ ஆட்டுக்குட்டியின் மரணத்திலும், நமக்கான அதன் பயனிலும், அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தை

வெளிப்படையாய் அறிக்கைப்பண்ணுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

இஸ்ரயேலர்கள் இரவில் வீடுகளிலிருந்து வெளியேறக்கூடாது என்று கட்டளை இடப்பட்டிருந்தனர் என்பதை நினைவில்கொள்கின்றோம்; ஏனெனில் எகிப்தியர்களைச் சங்கரிக்கத்தக்கதாகக் கர்த்தர் கடந்துசெல்லுகையில், அவர் மேற்சட்டங்களிலும், வீட்டுவாசலினுடைய நிலைக்கால்களிலும் இரத்தத்தைக் காண்கையில், அவர் அந்த வீடுகளைச் சங்காரத்தூதன் அணுகவிடவில்லை (யாத்திராகமம் 12:1-13). இரத்தம் தெளிக்கப்பட்டுள்ள வீடுகளில் காணப்படுபவர்கள் இரவில், வீட்டிலிருந்து வெளியேறக்கூடாது என்ற கட்டளையானது, முதற்பேறானவர்களுக்கு விசேஷமாயும், அழுத்தத்துடனும் பொருந்துகின்றதாய் இருந்தது. நிஜத்தில் இதன் அர்த்தமாவது, முதற்பேறானவர்களாய்க் காணப்படும் நம்மில் எவரேனும் இரத்தத்தின் கீழிருந்து வெளியேறுவார்களானால், அதாவது இயேசுவினுடைய இரத்தத்தின் பயனை, புண்ணியத்தை மறுதலிப்பார்களானால், இத்தகைய செயல்பாட்டிற்கான தண்டனை மரணமாகும் - இரண்டாம் மரணமாகும் - நம்பிக்கையற்ற மரணமாகும். (எபிரெயர் 6:4-6; 10:26-31)

## ஆட்டுக்குட்டியைப் புசித்தல்

ஆட்டுக்குட்டியின் இரத்தமானது விசுவாச வீட்டாரிலுள்ள முதற்பேறான வர்களை மாத்திரமாக இல்லாமல், விசுவாச வீட்டாரை அடையாளமிட்டது போலவே, ஆட்டுக்குட்டியைப் புசிப்பது என்பதும் முதற்பேறானவர்களுக்கு மாத்திரமானதாய் இராமல், வீட்டார் அனைவருக்கும் உரியதாய் இருக்கின்றது. ஆகையால்தான் நமது கர்த்தர் கூறினதாவது: "என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது;" மீண்டுமாக "வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான்" (யோவான் 6:55, 58). வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், இயேசு சிறந்த விதத்திலான பலியின் மரணம் மரிப்பது மாத்திரம் போதாது; இன்னுமாக அவரது பலியின் வாயிலாகப் பயனடைய வேண்டியவர்கள் அனைவரும், அவரைப் புசிக்க வேண்டும் - அவரது பலியினுடைய புண்ணியத்தினைத் தங்களதாக்கிக்கொள்வதும் அவசியமாகும்.

ஆட்டுக்குட்டியைப் புசிப்பது என்பது, ஆதாமின் கீழ்ப்படியாமையின் காரணமாக இழந்துபோனதும், இயேசுவின் மரணத்தினால் மீட்கப்பட்டதுமான அந்தப் பூமிக்குரிய நலன்களையும், உரிமைகளையும் விசுவாச வீட்டார் தங்களதாக்கிக் கொள்வதற்கு நிழலாய் இருக்கின்றது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், இது பாவத்திலிருந்து, நாம் நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நாம் விசுவாசத்தினால் புசிக்கின்றோம் மற்றும் இதன் காரணமாக, "விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுகின்றோம்" என்று கூறப்பட்டுள்ளது. ஆதாமினுடைய பாவத்தினாலான அபாத்திரத்தின் காரணமாக தெய்வீகத் தயவினின்று நாம் தள்ளிவிடப்பட்டது போலவே, விசுவாசத்தின் மூலமாக நாம் கிறிஸ்துவின் பலியினுடைய புண்ணியத்தின் காரணமாக தேவத் தயவிற்குள் மீண்டும் முழுமையாய்க் கொண்டுவரப் பட்டவர்களாய் நம்மைக் குறித்து எண்ணிக்கொள்வதற்கு நாம் அனுமதிக்கப்

பட்டிருக்கின்றோம். ஆட்டுக்குட்டியைப் புசிப்பது என்பது இக்காரியங்களை உணர்ந்துகொள்வதையும் மற்றும் இவைகளை நமதாக்கிக்கொள்வதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நாம் எந்தளவுக்கு அதிகமாய்ப் புசிக்கின்றோமோ, அந்தளவுக்குக் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்துள்ள நம்முடைய விடுதலைத் தொடர்புடைய விஷயத்திலும், நமது பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய புண்ணியத்தின் வாயிலாக தெய்வீகத் தயவிற்குள் நாம் மீண்டுமாகக் கொண்டுவரப்பட்டுள்ளது தொடர்புடைய விஷயத்திலும், நாம் அதிகமாய்த் திருப்திக்கொள்கின்றோம்.

## புதிய உடன்படிக்கையின் இரத்தம்

பதினாறு நூற்றாண்டுகளுக்கும் மேலாக யூதர்கள் தெய்வீகக் கட்டளையின் பேரில் பஸ்காவை ஆசரித்து வந்துள்ளனர்; ஆட்டுக்குட்டியைப் பலிச்செலுத்தி, இரத்தத்தை நிலைக்கால்களில் தெளித்த பிற்பாடு, அந்த இரவில்தானே அதைப் புசிப்பதை மாத்திரம் ஆசரிக்காமல், இன்னுமாக பின்வந்த ஏழு நாளளவும் பண்டிகையையும் ஆசரித்தார்கள். இந்தப் பஸ்கா பண்டிகையானது, பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய பலி மற்றும் அதைப் புசித்தலினாலான புண்ணியத்தின் அடிப்படையில் உண்டான சந்தோஷங்களையும், களிகூருதல்களையும், தேவனுடனான உறவின் காரணமான ஆசீர்வாதங்களையும், தயவுகளையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. எனினும் யூதர்கள் தாங்கள் செய்து வந்தவைகளின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாதவர்களாய் இருந்தார்கள். அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்ற அவசியமும் இருக்கவில்லை. தேவனுடைய ஏற்றக்காலங்கள் வருகையில், விளக்கம் அருளப்படும்.

அந்த ஏற்றக்காலமானது, நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில் வந்தது - நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்டதான இரவில் - முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியின் இரவில் வந்தது. ஆண்டவர் தம்முடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களோடு கூடினார். அவர்கள் தங்கள் வழக்கமான பஸ்கா இராப்போஜனமாகிய, சுடப்பட்ட ஆட்டுக்குட்டியைப் புசித்தார்கள் மற்றும் இவைகளுக்குப் பிற்பாடு நமது கர்த்தர் நாம் பிரபல்யமாய் அறிந்திருக்கின்றதான "கர்த்தருடைய இராப்போஜனத்தை," அதாவது நிஜமான பஸ்காவிற்கான புதிய அடையாளங்களை அறிமுகப்படுத்தினார்.

நமது கர்த்தர் அறிமுகப்படுத்தின காரியங்களானது, தம்முடைய பின்னடியார்கள் மத்தியில் யூதர்களுடைய அனுசரிப்பிற்குப்பதிலாக இடம் பெறப்போகின்றது மற்றும் இதுவும் அதே கருத்தை, ஆனால் உயர்வான தளத்தில், காரியத்தினைப்பற்றின தெளிவான, சிறந்த புரிந்துகொள்ளுதலாய்க் காணப்படப் போகின்றது. ஆட்டுக்குட்டிக்குப் பதிலாக, நமது கர்த்தருடைய மாம்சத்தினை

அடையாளப்படுத்தும் புளிப்பில்லாத அப்பம் இடம் பெற்றது. இதை அவர் தம்முடைய அப்போஸ்தலர்களிடத்தில் கொடுத்து, "இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று கூறினார் (லூக்கா 22:19). புளிப்பில்லாத அப்பத்தைப் புசிப்பது என்பது, கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியத்தினை தங்களதாக்கிக் கொள்வதை - விசுவாசத்தினாலான நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

நமது கர்த்தர் இன்னொரு அடையாளத்தை - "பாத்திரத்தைக்" கூடச் சேர்த்தார். விசுவாசிகள் அனைவரும் அப்பத்தைப் புசித்தாலும், அவரது பலியினாலான புண்ணியத்தின் வாயிலாக நீதிமானாக்கப்படுதலை உணர்ந்துகொண்டாலும், விசுவாசிகளில் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் மாத்திரமே, இரத்தத்தில் பங்கெடுப்பதற்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர். பாத்திரம் மரணத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. பொதுவாக யூதருக்கான பிரமாணத்தின்கீழ் இரத்தத்தைப் பானம் பண்ணுதல் என்பது இரத்தத்தில் - குற்றமுள்ளவராய் இருப்பதை (அ) மரணத்திற்குக் காரணராய் இருப்பதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது (லேவியராகமம் 17:10-14). ஆனால் நமது கர்த்தர் தம்முடைய இரத்தத்திற்கு அடையாளமாக திராட்சப்பழரசத்தைத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார்; அதை அவர்கள் தங்களதாக்கிக்கொள்வதற்கு வலியுறுத்தும் வண்ணமாக, "இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது;" "அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது;" "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்றார் (லூக்கா 22:20; மத்தேயு 26:27, 28).

அவரது இரத்தத்தில் பங்கெடுப்பதற்கான இந்த அழைப்பானது, கிறிஸ்துவுடன் அவரது அங்கத்தினர்களென, பூமிக்குரிய ஜீவனை, பூமிக்குரிய நலன்களை, நம்பிக்கைகளை, இலட்சியங்களை, ஆசைகள் அனைத்தையுமே பலிச் செலுத்துவதில் பங்கெடுப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. அவரது இரத்தத்தைப் பானம் பண்ணுவதற்கான இந்த அழைப்பினை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும், அவர் தம்முடைய ஜீவனை எந்த வேலைக்கென்று ஒப்புக்கொடுத்தாரோ, அதே வேலைக்கெனத் தங்களது ஜீவியங்களைக் கையளிக்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர். இது யூதருக்கான பஸ்கா நிழலில் இடம் பெறாத காரியமாகும். வீட்டாரில் எவரேனும் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைப் பானம்பண்ண வேண்டுமென எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனினும் அவரது இரத்தத்தைப் பானம் பண்ணுவதற்கும், சத்தியத்திற்காக நம்முடைய ஜீவியங்களை அவரோடுகூட ஒப்புக் கொடுப்பதற்குமான நமது கர்த்தருடைய அழைப்பினை இப்பொழுது

ஏற்றுக்கொள்பவர்களாகிய நாம், இவைகளின் காரணமாக விசுவாச வீட்டாரில் மூத்த சகோதரர்களாக, நமது கர்த்தருடன், நமது மீட்பருடன், முதற்பேறானவர்களின் அங்கத்தினர்களாக, வருங்கால இராஜரிக ஆசாரிய கூட்டத்தினராகக் காணப்படுகின்றோம்.

## நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே

நாம் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளவைகளையே அப்போஸ்தலன் பவுல் சுட்டிக்காட்டுகின்றார். கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்களானவர்கள், இயேசுவைத் தலையாகப் பெற்றுள்ளதான, சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்தினர்களாகக் கருதப்படுகின்றனர் என்று குறிப்பிடுகின்றார். நமக்காகப் பிட்கப்பட்டுள்ள நமது கர்த்தர் இயேசுவையே, பிட்கப்பட்ட அப்பமானது முதலாவதாகக் குறிக்கின்றது என்றும், இரண்டாவதாக அது கர்த்தருடைய காரணங்களுக்காக தங்களை மனப்பூர்வமாயும், சந்தோஷமாயும் ஒப்புக்கொடுக்கின்றவர்களாகிய கிறிஸ்துவின் சபையைக் குறிக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். நாம் பங்கெடுக்கும்படிக்கு அழைக்கப்பட்டதான கிறிஸ்துவினுடைய இரத்தமாகிய பாத்திரமானது, கிறிஸ்துவின் பாடுகளிலும், உபத்திரவங்களிலும் நம்முடைய பங்குகொள்ளுதலைக் குறிக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். (St. Paul Enterprise, ஏப்ரல் 18, 1916 மற்றும் Harvest Gleanings 3, பக்கம் 814-ஆகிய வெளியீடுகளைப் பார்க்கவும்).

ஆகையால் யார் ஒருவன் அறிந்து நினைவுகூருதலின் இராப்போஜனத்தில் பங்கு கொள்கின்றானோ, அவன் பின்வரும் இரண்டு காரியங்களைச் சுட்டிக் காண்பிக்கின்றவனாய் இருக்கின்றான்: (1) இயேசுவே பஸ்கா ஆட்டுக்குட்டியாக இருக்கின்றார் என்ற அவனது விசுவாசத்தையும்; இயேசுவின் புண்ணியத்தில் அவனது பங்கெடுத்தலையும், உணர்ந்து கொள்ளுதலையும் - விசுவாசத்தினாலான அவனது நீதிமானாக்கப்படுதலையும் சுட்டிக்காட்டுகின்றது; மற்றும் (2) கிறிஸ்துவின் சரீரத்தில் அவனது அங்கத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றது; அந்தச் சரீரத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் பிட்கப்படும்படிக்கு இணங்கி இருக்கின்றனர்; ஆண்டவரோடு ஆளுகை செய்யத்தக்கதாக, அவரோடுகூடப் பாடுபடுவதின் மூலம், அவரோடுகூட அவரது பலியில் பங்கெடுப்பதின்மூலம், ஆண்டவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுவதன் மூலம் தங்கள் உண்மையை வெளிப்படுத்துகின்றதான அந்தச் "சிறு மந்தையில்" அவனது அங்கத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. (1 கொரிந்தியர் 10:16, 17; 2 தீமோத்தேயு 2:11, 12).

# யாரைச் சேவிப்பீர்கள்?

"இவனை விடுதலை பண்ணினால் நீர் இராயனுக்குச்
சிநேகிதனல்ல; தன்னை இராஜாவென்கிறவனெவனோ அவன்
இராயனுக்கு விரோதி என்றே சத்தமிட்டார்கள்.
பிலாத்து இவ்வார்த்தையைக் கேட்டபொழுது,
இயேசுவை வெளியே அழைத்துவந்து" - யோவான் 19:12, 13.

"நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள்
செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" - யோவான் 15:14.

இராயனுக்கு சிநேகிதர்களா? அல்லது இயேசுவுக்கு சிநேகிதர்களா?
இதுவே இன்றைக்குரிய கேள்வியாகும்.
இராயனுடைய சிநேகிதர்களே! இயேசுவினுடைய சிநேகிதர்களே!
தாமதமின்றி உங்கள் முடிவுகளை எடுங்கள்.
நீங்கள் மனுஷருடைய கட்டளைகளுக்குக் காத்திருப்பீர்களேயாகில்,
இராயனின் நட்பைப் பெறுவீர்கள்.
பிதாவின் கட்டளைகளைக் கைகொள்வீர்களேயாகில்
ஏளனத்தையும், நிந்தனையையும் அடைவீர்கள்.
இராயனுடைய சிநேகிதர்களே! இயேசுவினுடைய சிநேகிதர்களே!
நின்று காண்பியுங்கள் உங்கள் தெரிவு எப்பக்கமென்று
யார் இரண்டு எஜமானர்களுக்கு உண்மையாய் ஊழியம் செய்ய முடியும்?
யாரால் இரண்டு எதிரெதிரான கொடிகள்தனை பிடித்திருக்கமுடியும்?
இயேசுவின் நண்பர்கள் அவரை விலைமதிப்பில்லாதவராக எண்ணியே
மற்ற எல்லா இலாபங்களையும் அவருக்காக இழக்கின்றனர்;
உலக மனிதர்களின் புகழை விடவும்,
இயேசுவின் புன்னகையே இனிமையானது என எண்ணுகின்றனர்.
இராயனிடமிருந்து விடுதலையாகி, இயேசுவின் சிநேகிதரானவர்களே!
போர் வீரர்களாய் நில்லுங்கள், பயப்படாதேயுங்கள்.
கடுமையாய் அன்பு பரீட்சைக்குள்ளாகுகின்றது
திடன்கொள்ளுங்கள் சமீபமாயிருக்கிறார் கர்த்தர்.
தொடர்ந்து அவர் நாமத்தை அறிக்கைபண்ணுங்கள்
அவர் தலைக்கு அலங்காரமான கிரீட முடிதனை பின்னிடுங்கள்.
ஆசீர்வாதம் நிறைந்த அவரது கரங்கள் உயர்த்தப்பட்டுள்ளது
உன்னுடைய ஒத்தாசைக்காய் இப்பொழுது.
இராயனின் சிநேகிதர்களாய் இருந்த நம்மை இன்று
அவரது சிநேகிதர்களாய் வென்றுவிட்டார்.
மணவாளன் தொலைவில் இருக்கும்போது
அவருக்குப் போட்டியாக வேறெந்த நட்பு நம்மைப் பிரியப்படுத்தக்கூடும்?
இல்லை! கிருபையின் மூலம் நாம் இராயனுடையதை இராயனிடத்திற்கும்
தேவனுடையதை தேவனிடத்திற்கும் ஒப்படைத்துவிடுகின்றோம்.
துதிகளையும், ஜெபங்களையும், மரியாதையையும்
நாம் தேவனுக்கு ஏறெடுக்கின்றோம்.

– Selected (R1013)

## பெத்தானியாவின் மரியாள்

மத்தேயு 26:6-13; யோவான் 12:1-8; மாற்கு 14:3-9

ஆகமங்கள் கூறியவாறே இயேசு தமது நேரம் நெருங்கிவிட்டதை அறிந்தே,
எப்படிச் சிலுவைதனில் விரைவில் மரிக்க வேண்டும் என்றே,
விழுந்துபோன மனுக்குலத்திற்கு ஈட்டுக்கிரயம் கொடுத்து வாங்க
எருசலேம் வழிமீதினில் தம் முகத்தைத் திருப்பியே பயணித்தாரே,
குறிக்கப்பட்ட அவரது நேரத்திற்கு முன்பே,
ஒருநாளின் குறுகிய முடிவிற்கு முன்பே,
லாசரு, மரியாள், மார்த்தாள் வீட்டிற்கே வந்தாரே - அவர்களும்
பரிசுத்த சிந்தனைகள் மனதினில் தேக்கிவைத்தே,
இதற்கு முன்பைவிடவும் அதிகமாகவே வரவேற்றனரே
அங்குதானே கல்லறைதனிலே அவர்களது சோதரன் லாசரு மரித்திருந்தாரே,
கிறிஸ்துவின் சிநேகிதன் மரணத்தின் கரத்தினால் அடிக்கப்பட்டிருந்தாரே
ஆனால் இயேசு அவரை மீண்டும் எழுப்பினாரே
தேவவல்லமை பயன்படுத்தப்பட்டதே, மகிமைப்படுத்தப்பட்டதே.


அவருக்கென்றே இப்பொழுது விருந்தொன்றை ஆயத்தம் செய்தனரே,
லாசரு அவரோடு அங்கே அமர்ந்து விருந்துண்டாரே,
மரியாளோ அவர் பாதம் அமர்ந்தே பாடம் கற்றுக்கொண்டிருந்தாளே,
மார்த்தாளின் சேவையும் குறைவுபட்டதல்லவே,
மரியாளின் கண்களோ அமைதியான ஜெபவீடாகுமே,
அவள் மனதுக்குள்ளே வேறெந்த எண்ணத்திற்கும் அனுமதியில்லை,
அவனோ இறந்தானே, ஆனால் திரும்ப வந்தானே,
அவனைத் திரும்பக்கொண்டுவந்தவரும் அங்கே வந்துள்ளாரே,
ஆழமான அன்போ, மற்றெல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளிவிட்டதுவே,
அவளது ஆர்வமிக்கப் பார்வையோ - இப்போது
வாழ்ந்துக்கொண்டுள்ள அவள் சோதரன் முகம் மீதே பதிந்ததுவே,
அவன் வாழ்க்கையில் மீதே வந்து நிலைநின்றதுவே.

ஒடுங்க வேண்டிய நினைவுகளோ, நுண்ணிய பயங்களோ,
முழுமையான மகிழ்ச்சியிலே மிதந்துகொண்டிருந்ததுவே,
அவளோ குனிந்தே, இரட்சகர் பாதந்தனைக் கண்ணீரில் குளிக்க வைத்தாளே,

விலைமதிப்பில்லா நளதம் என்னும் தைலத்தினால் குளிக்க வைத்தே
தன் தலைக்கூந்தலால் துவட்டி விட்டாளே - ஆனால்
அங்கே ஒருவன் கடுமையாகவே இச்செயலினை எதிர்த்தானே,
அவன் மனம் அன்பிற்குக் குருடாக்கிவிட்டதே,
இத்தனை விலையேறப்பெற்ற தைலத்தை வீணாய் உடைத்ததும் ஏனோ?
முற்றிலும் விற்றே முழுவதும் ஏழைக்குக் கொடுத்திடலாமே,
மனதிற்குள்ளே வேறொன்றை எண்ணியபடியே,
இப்படியாகவே யூதாஸ் சொன்னதால் கூச்சலும் குழப்பமும் நிலவியதே
தன்னலம் மிகுந்தே, பிறர் நலன் நோக்குவதாய்ப் பொய்ச் சொன்னானே,
பணத்தை மிக மிகக் அதிகமாய் நேசித்த - யூதாசும்
ஏழையை மிக மிகக் குறைவாய் நேசித்தானே,
அவனது கரத்திலே காசுப் பை இருந்ததுவே,
அதனுள்ளே இட்ட பணத்தினையும் களவாடுதல் செய்தானே.
அவன் சுயநல இருதயமோ, பாவத்தைக்கொணர்ந்தே வைத்ததுவே,
அவனது இச்செயலோ அவனைக் கீழே விழத்தள்ளியதே.

இயேசுவோ மறுமொழியாகவே, அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்,
அவளைத் தனியே விட்டுவிடு, என் அடக்கத்திற்கான அபிஷேகம் செய்தாள்,
நீங்களெல்லோரும் சுவிசேஷம் அறிவித்திடும்போதினிலே,
இவளினது இச்செயலும்கூட நினைவுகூரலாகுமே - அதிகமாகவே
செய்திட்ட இச்செயலே, அன்பிலே உயர்ந்ததாய் ஆண்டவர் கற்பித்தாரே,
செயல்தான் பேசப்பட்டதே, அன்பு அதனை பேசவைத்ததே,
அவளது அன்பே, இன்றும் பேச வைத்த செயலாய் மாறியதே,
இனிமையான நறுமணத் தைலத்தின் மூடியைத் திறந்த மரியாள்,
அதை இயேசுவின் பாதத்தில் ஊற்றிய போதே,
ஆ! மரியாளே, உன்னிடமிருந்தே நாங்கள் கற்றுக்கொண்டோமே,
நமது கர்த்தருக்கு முன்பாக எல்லாவற்றையும் கையளிக்கின்றோமே - அவருக்கு
மட்டுமே ஊழியஞ்செய்யவே, நாங்கள் மற்றெல்லாவற்றையும் பொருட்படுத்தாமலே.

- Poems of the Way, p. 98



## நினைவுகூருதலின் தியானங்கள்

# நினைவுகூருதல்



# நம்முடைய பஸ்கா

நம்முடைய கடந்த வெளியீட்டில் நாம் குறிப்பிட்டிருந்ததான "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்துவின் மரணத்தை" அதன் ஆண்டு நிறைவு நாளில் ஏப்ரல் 14-ஆம் தேதியில் நாங்கள் ஆசரித்ததானது எப்போதும் காணப்படுகிறதுபோலவே, "ஆசீர்வாதமான காலப்பகுதியாகவே இருந்தது; அது நம் பாவங்களுக்கான நமது கர்த்தருடைய வியாகுலத்தையும், "அவரது இரத்தத்தினாலான மீட்பையும்" நினைவுகூருவதற்கான காலப்பகுதியாகும். நமக்கான ஈடுபலி ஏற்றுக்கொள்ளப் பட்டதை நாம் பார்க்கையில், நமக்கான மன்னிப்பினுடைய முழுமையினை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகையில், நாமும் பவுலோடுகூடப் பின்வருமாறு கூறுகின்றோம்: "தேவன் நம் பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதியாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். (தேவன் தம்முடைய ஏற்பாட்டினால், நம்மைப் பாவங்களறச் சுத்திகரித்துள்ளார் – இது முழுமையாயும், சரியாயும் செய்யப்படவில்லை என்று யாரால் சொல்லிட முடியும்?); ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர் (நாங்கள் இன்னும் பாவிகள் என்று சொல்லுகிறவன் யார்? அப்படியானவன், யார் எங்களுக்காகக் கடனை அடைத்தார் என்பதை நினைவில்கொள்வானாக – கிறிஸ்துவே எங்கள் கடனை அடைத்தார் மற்றும் நிச்சயமாய் அவரது பலியானது, அங்கீகரிக்கப்படத்தக்கதான பலியாகும்)" (உரோமர் 8:31-34).

நம்முடைய நீதிமானாக்கப்படுதலைக் கண்டு, நீதிமானாக்கப்பட்டுள்ள நபர்கள் அனைவருக்கும் பவுல் சொன்னதானவைகளை நாங்கள் ஆழ்ந்து சிந்தித்தோம்; அது என்னவெனில் . . . "சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு (நாள்தோறுமுள்ள அவரது இரக்கங்கள் மற்றும் விசேஷமாக நமக்கான ஈடுபலியாக இயேசுவைக் கொடுத்ததிலும், இப்படியாய் நம்மை நீதிமானாக்கினதிலுமுள்ள அவரது இரக்கங்களை முன்னிட்டு) உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்." இயேசு தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலுக் கென்று கொடுத்திட்டதான அப்பம் மற்றும் திராட்சரசத்தினுடைய அர்த்தத்தினை நோக்கிப்பார்த்து, அவைகளும் - அர்ப்பணிப்பு மற்றும் பலியென்னும் அதே படிப்பினைகளைக் கற்பிக்கின்றது என்று கண்டோம். முதலாவது நம்முடைய பாவங்களுக்காக - நம்மை நீதிமானாக்கத்தக்கதாக சரீரமானது பிட்கப்பட்டது மற்றும் இரத்தமானது சிந்தப்பட்டது; பின்னர் அப்பமானது (சத்தியம் - "நானே சத்தியம்"), நாம் ஏறெடுக்கும்படிக்குக் கூறப்பட்டுள்ளதான பலிக்கு, நம்மைப் பெலப்படுத்தத்தக்கதாக, நமக்குக் கொடுக்கப்பட்டது. தேவன் முதலாவதாக நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடுகூட, "திவ்விய சுபாவத்திலும்," இராஜ்யத்திலும், உடன்சுதந்தரர்களாகு வதற்கான மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களைக் கொடுத்து மற்றும் அடுத்ததாக நாம் எவ்வாறு அந்த வாக்குத்தத்தங்களை உரிமைப்பாராட்டிக் கொள்ளலாம், அடையலாம் என்று நம்மிடம் கூறுகின்றார்; அதாவது "கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட வேண்டும்" என்று கூறுகின்றார் (உரோமர் 8:17). இவைகள் அனைத்தும்தான் இயேசு முதலாவது

கொடுத்ததான "அப்பம் எனும்" மற்றும் பின்னர் கொடுத்ததான "பாத்திரம் எனும்" அடையாளத்திலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த யுகம் முழுவதும் தம்மிடத்தில் சீஷர்களென வருபவர்கள் அனைவருக்கும், அவர் முதலாவதாக சத்தியத்தினுடைய போஷாக்கையும், ஆயத்தப்படுத்துதலையும் கொடுக்கின்றார் மற்றும் அவர்கள் அதைப் புசித்து, தங்களுக்கான பரம அழைப்பினுடைய பரிசினைப் புரிந்து, உணர்ந்துகொண்ட பின்னர், அவர் அவர்களுக்கு மரணத்தின் பாத்திரத்தினை அருளுகின்றார். திராட்ரசமானது இரண்டு விஷயங்களுக்கு அடையாளமாய் இருக்கின்றது; முதலாவதாக அதன் தோற்றத்தில், அது இரத்தத்தைப்போன்று காணப்படுகின்றது மற்றும் "திராட்சப்பழங்களின் இரத்தம்" என்று அழைக்கப்படுகின்றது மற்றும் இதன் காரணமாய், அது மரணத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இரண்டாவதாக அது சந்தோஷப்படுத்துகிற, புத்துணர்வு கொடுக்கின்ற மற்றும் உற்சாகப்படுத்துகின்ற ஆவியையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

நாம் பரலோக உணவினால் வெளிச்ச மூட்டப்பட்டு, பெலப்படுத்தப்பட்ட பிற்பாடு, இயேசு நம் ஒவ்வொருவரிடத்திலும் பாத்திரத்தைக் கொடுத்து கூறுவதாவது: "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்;" "என்னுடைய மரணத்திற்குள்ளாகப் பானம் பண்ணுங்கள் - உங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வாருங்கள் மற்றும் அதே வேளையில் நீங்கள் என்னுடைய ஆவியையும் பானம் பண்ணுகின்றவர்களாய் இருந்து, உலகத்தினால் கொடுக்க முடியாததும், எடுத்துப்போட முடியாததுமான சந்தோஷத்தையும், புத்துணர்வையும் பெற்றுக்கொள்வீர்கள் மற்றும் இறுதியில் என்னோடுகூட அனைத்தையும் சுதந்தரித்துக்கொள்வீர்கள்."

தேவனுடைய வாக்குத்தத்தங்களினால் நாம் இவ்விதமாய்ப் போஷிக்கப்பட்டதையும், பெலப்படுத்தப்பட்டதையும், அவரது பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கும், அவரோடுகூட "நாம் ஆளுகை செய்யத்தக்கதாக" நாம் அவரோடுகூட மரிப்பதற்கும் ஏற்கெனவே உடன்படிக்கைப் பண்ணியிருக்கின்றோம் என்பதையும் நாங்கள் நினைவுகூர்ந்தோம்.

இயேசுவினுடைய சிங்காசனம் தொடர்புடைய விஷயத்தில், தங்களுக்கான ஸ்தானங்கள் குறித்து இயேசுவிடம் இரண்டு சீஷர்கள் வேண்டிக்கொண்டதையும், அவர்களுக்கு அவர் பின்வருமாறு பதிலளித்ததையும் நாங்கள் நினைவுகூர்ந்தோம்; அதென்னவெனில், "நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. ("பிதாவே இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்" என்று வேண்டிக்கொண்டதான - மரணம் என்ற) நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், (தண்ணீரை அடையாளமாய்க் கொண்டுள்ள - நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்)" நான் பெறும் மரண - ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா? என்றார். அதற்கு அவர்கள்: கூடும் என்றார்கள் மற்றும் அவரோ "மெய்யாகவே கூடும்" என்றார். ஆகவே அவருடைய சிங்காசனத்தில் அவரோடுகூட உட்காருவோம் என்ற நம்பிக்கையில் நாம் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கின்றோம் மற்றும் என்னுடைய பாத்திரத்தில் உங்களால் குடிக்கக்கூடுமா? என்ற அவரது வார்த்தைகளானது எவ்வளவாய் நமக்குப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. மகிமையிலும், பாடுகளிலும் நாம் பங்கடைவதற்கு விரும்புகின்றோமா? என்று நாம் நம்மையே கேட்டுக்கொண்டோம். பின்னர் நாம் கூறினதாவது: 'ஆண்டவரே, உம்முடைய வார்த்தைகள் மூலமாக, எங்களுக்கு "ஏற்றசமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபை" கொடுக்கப்படும் என்றும்,

"உம்முடைய கிருபை எங்களுக்குப் போதுமானது" என்றும் நாங்கள் அறிந்திருக்கின்றோம். எங்களுடைய அனைத்தையும் நாங்கள் உம்மிடத்தில் கொடுத்துவிட்டோம் - உம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் எங்களில் உண்டுபண்ணியருளும்." இப்படியாய் எங்களது பலவீனத்திலே உம் பலம் பூரணமாய் விளங்கினபடியால் - எங்களால் கூடும். ஆமென்.'

நாங்கள் பெற்றுக்கொண்டதான அநேக கடிதங்களானது, இந்நிகழ்வு மிகவும் பரவலாய் இவ்வழியில் அங்கும், இங்குமாகக் காணப்படுகின்ற இரண்டு (அ) மூன்று பேர்கள் மத்தியில் ஆசரிக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டுகின்றது. சுமார் இருபது இடங்களில் இது ஆசரிக்கப்பட்டுள்ளதென நாம் எண்ணுகின்றோம். எழுதியுள்ளவர்கள் அனைவருமே, இந்நிகழ்வை, வேறு நாட்களில் கொண்டாடுவதற்குப்பதிலாக, அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிப்பது பொருத்தமானதாகவும், பயப்பக்திக்குரியதாகவும் இருந்ததெனத் தெரிவித்துள்ளனர்.

அறிவிக்கப்பட்டிருந்த தேதியைக் குறித்து ஒன்றிரண்டு சகோதரர்கள் கேள்வி எழுப்பியிருந்தார்கள்; அதாவது ஆண்டுக்குறிப்பேடுபடி (almanac/calendar) அந்நாளானது ஏப்ரல் 14-ஆம் தேதிக்குப்பதிலாக, 12-ஆம் தேதி வருமெனக் கருத்துத் தெரிவித்துள்ளனர். இவர்களுக்கு நாம் பதிலளிப்பது என்னவெனில், பெரும்பான்மையான ஆண்டுக்குறிப்பேடுகளானது (almanac) வானசாஸ்திரக் கணக்கிடுதலின்படி ஆயத்தம் பண்ணப்படுகின்றன மற்றும் இவை கண்களால் பார்த்த சாட்சியின் அடிப்படையிலான யூத முறைமைகளுக்கு அபூர்வமாக இசைந்து வருகின்றது. சில ஆண்டுக்குறிப்பேடுகளானது, யூத ஆண்டுக்குறிப்பேடுகளை வெளியிடுகின்றன மற்றும் இவைகளைப் பயன்படுத்தியே, யூத கணக்கீட்டின்படி முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதி எப்போது வருமென்று உறுதிச் செய்தோம்.

நியாயப்பிரமாணத்தை (அ) யூத ஜாதியை அடையாளப்படுத்துகின்றதான சந்திரனானது, இயேசு உயிரோடு இருக்கையில் அதன் முழுமை நிலையை அடைந்தது, ஆனால் அவர் கையளித்து, மரித்தபோது, அது தேய்வுற ஆரம்பித்தது. ஏப்ரல் 14-ஆம் தேதியில் சந்திரன் பௌர்ணமி நிலவாய் இருந்தது மற்றும் அது தேய்வுற ஆரம்பித்தது; இக்காரியமானது யூத ஆண்டுக்குறிப்பேட்டிற்கு இசைவாகவே காணப்படுகின்றது மற்றும் இதனால் அந்நாளில் ஆசரித்தோம்.

ஒரு சகோதரி தனது மறுப்பைத் தெரிவிக்கும் வண்ணமாக, பஸ்காவைக் கைக்கொள்ளும் விஷயத்திற்கும், அனைத்து விஷயத்திற்கும் ஏன் நியாயப் பிரமாணத்தினையே பார்த்திடலாமே? என்று கேட்டார்கள். நம்முடைய சகோதரி அவசரப்பட்டுவிட்டார்கள்; நாம் நியாயப்பிரமாணத்தினால் நிறுவப்பட்டதான பஸ்காவை ஆசரிப்பதற்குக் கூறவில்லை, மாறாக இதற்குப்பதிலாக நிறுவப்பட்டதான "கர்த்தருடைய இராப்போஜனத்தையே" ஆசரிப்பதற்குக் கூறினோம். "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்" (உரோமர் 10:4) என்று விசுவாசிக்கின்ற நாம், இதை ஒரு நியாயப்பிரமாணம் என்றும் கூறவில்லை (உரோமர் 10:4; 7:6). ஆனால் "இதைப் புசித்து, பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்றிருக்க, யார்தான் நமக்கான ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தினை, அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிக்கமாட்டோம் என்று சொல்லுவார்கள்.

# பஸ்கா

**"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் . . . பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." 1 கொரிந்தியர் 5:7, 8.**

மத்தேயு 26:26, 28 மற்றும் லூக்கா 22:7-20 மற்றும் 1 கொரிந்தியர் 11:23-26 ஆகிய வசனங்களில் இடம்பெறும் கர்த்தருடைய இராப்போஜனம் நிறுவப்பட்டது குறித்த பதிவுகளிலிருந்து, இது நமது கர்த்தருடைய மரணத்தை வருடந்தோறும் நினைவுகூரும் வண்ணமாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், இது இதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிக்கப்படுவது ஏற்றதாயிருக்கும் என்றும் பார்க்கின்றோம். இது "நமது பஸ்காவும்," உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதான தேவ ஆட்டுக்குட்டியுமான கிறிஸ்து இயேசுவினால், யூதருடைய பஸ்காவிற்குப்பதிலாக நிறுவப்பட்டது என்பது தெளிவாய்த் தெரிகின்றது (யோவான் 1:29).

இதன் காரணமாக, இதை நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டு நிறைவு நாளில், (யூதருடைய முதல் மாதத்தின், 14-ஆம் தேதியன்று) ஆசரிப்பதற்கென நாம் ஒவ்வொரு வருடமும் ஒன்றுகூடுகின்றோம்.

அடிக்கடி ஆசரிக்க விரும்புகிறவர்களோடு நாம் சண்டையிடுகிறதில்லை; இன்னுமாக இதைக் கண்டிப்பான (அ) கட்டாயமான ஆசரிப்பு என்றும் நாம் எண்ணுகிறதில்லை. நமக்கான ஈடுபலி விலைக்கிரயத்தை - "நம்முடைய பாவங்களை நிவிர்த்திச் செய்கிற கிருபாதார பலியை; நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திச் செய்கிற கிருபாதார பலியை"- இப்படியாய் நினைவுகூருவதில் நாம் சந்தோஷம் அடைவதாலேயே, நாம் இதை ஆசரிக்கின்றோம்.

இந்த வருஷம் கர்த்தருடைய மரணத்தை நினைவுகூர்ந்து ஆசரிப்பதற்கான வேளையானது, ஏப்ரல் 2-ஆம் தேதி, மாலை 6 மணிக்குப் பிற்பாடாகும்; இதுவே இயேசுவும், அவரது சீஷர்களும் இதைப் புசித்த வேளைக்கொத்த வேளை என்றும், அடுத்தநாள் பிற்பகல் 3 மணியானது, இயேசு மரித்த வேளைக்கு ஒத்தவேளை என்றும் நாம் நம்புகின்றோம் (மத்தேயு 27:46-50).

ஆகையால் கிறிஸ்துவினுடைய பிட்கப்பட்ட சரீரத்தையும், அவரது சிந்தப்பட்ட இரத்தத்தையும் நினைவுகூரத்தக்கதாக அலிகெனி பட்டணத்திலுள்ள (Allegheny City), செடர் அவன்யூ-வின் (Cedar Avenue) எண்: 80-இல் உள்ள J. L. ரஸல் அவர்களின் இல்லத்தில், ஏப்ரல் 2-ஆம் தேதி ஞாயிறு அன்று மாலை 7:45 மணிக்கு ஒரு

கூடுகை நடைபெறும். இப்படியாக இதை (இதன் ஆண்டு நிறைவு நாளில்) பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் - அவரது சரீரத்தின் கடைசி அங்கத்தினன், அவரோடுகூட மரித்து, அவருக்கு ஒப்பாய் மாறி, மகிமையடைந்து, புதிய சிருஷ்டியெனப் பூரணப்படுவது வரையிலும் - அவருடைய மரணத்தைத் தெரிவிக்கின்றவர்களாய் இருப்போம். ஏனெனில், "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய (மரணத்தின்) இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? (நம்முடைய பங்கடைதலாய் இருக்கிறதல்லவா?) நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் (அவருடைய மரணத்தில்) ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிற படியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (1 கொரிந்தியர் 10:16, 17). ஆகையால் நாம் புசித்து, பானம் பண்ணும்போது, அவரது பலியின்மீதான நமது ஈடுபாட்டை மாத்திரம் நாம் தெரிவியாமல், அவரோடுகூட மரிப்பதற்கும், அவரது பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்குமான நம்முடைய உடன்படிக்கையையும்கூடத் தெரிவிக்கின்றவர்களாய் இருப்போம் (மத்தேயு 20:22, 23 பார்க்கவும்).

இது எப்போதும் இங்கு விலையேறப்பெற்ற தருணங்களாய்க் காணப்படு கின்றன மற்றும் கடந்த வருடத்தில் இரண்டு பேர், மூன்றுபேர், இருபதுபேர், ஐம்பதுபேர் கொண்ட பல்வேறு கூட்டத்தினரிடமிருந்து பெற்றுக்கொண்ட கடிதங்களை வைத்துப்பார்க்கையில், அவர்களும் இதே ஆசீர்வாதங்களை அனுபவித்துள்ளதாகத் தெரிகின்றது. "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆகையால் துர்க்குணம், பொறாமை முதலான புளிப்புகளைக் களைந்து, பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்;" கிறிஸ்துவின் சரீரமாக - புளிப்பில்லாத அப்பமாக இருப்போமாக - ஒவ்வொரு அங்கத்தினனும் பெருமிதம்/பெருமைக்கொள்ளாமல், எளிதில் பிட்கப் படத்தக்கவர்களாய் இருப்போமாக.

(எந்த ஓர் எபிரெய குடும்பத்தாரிடமிருந்தும் வாங்கிக்கொள்ள முடிகின்றதான) புளிப்பில்லாத ரொட்டிகளையும் மற்றும் உலர் திராட்சரசத்தையும் நாம் பொதுவாய்ப் பயன்படுத்துவதுண்டு.

## பஸ்காவின் சோதனை

யோவான் 18:11; சங்கீதம் 116:13

என் பிதா ஊற்றின பாத்திரத்தில்
நான் பானம்பண்ணாதிருப்பேனோ?
விலையேறப்பெற்ற பரிசுத்தமான நினைவுகளை
நான் சிந்தியாமலிருப்பேனோ?
அவருடைய அன்பு எனக்குத் துன்பத்தையே அனுப்பி
சந்தோஷத்தை அனுப்பாமல் இருந்தாலும்,
எல்லா நண்பர்களும் எனைக் கைவிட்டாலும்
நான் அவரிடம் முறையிடுவேனோ?
சத்துருக்கள் என்னைத் தவறாய்க் காட்டி
எனக்குத் துன்பம் உண்டாக்கினாலும்
பிதா இவையெல்லாவற்றையும் அறிந்திருப்பதால்
நான் மனநிறைவோடு இருப்பேனோ?

முன்பு எனக்கு நண்பனாய் இருந்தவன்
இப்பொழுது யூதாசாய் மாறியிருப்பினும்;
அவரது அன்பில் இன்னும் எனைச் சேர்த்து
அணைத்திருக்கின்றார் இயேசு.
விசுவாசமற்ற நண்பனின் அன்பையும்
இழப்பையும் அவர் அறிவார்.
இறுதிவரை நான் வைக்கும் ஒவ்வோர்
அடியையும் அவர் அறிவார்.
அவருடைய அன்பு எனை அணைத்திருப்பதினால்
நான் கீழே விழுவதில்லை.
என் பிதா ஊற்றின பாத்திரத்தை
நான் முழுவதுமாகப் பருகுவேன்.

– Hattie O. Henderson. (R5875)

# அவர் வருமளவும்

கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறிப்பிடுகையில் பவுல், நாம் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் "கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கின்றீர்கள்" என்று கூறுவதினால், வரையறை இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். கவனியுங்கள், யூத யுகத்தில் நிழலான ஆட்டுக்குட்டியானது, நிஜமான (அ) உண்மையான ஆட்டுக்குட்டியாகிய நமது கர்த்தர் வரும்வரை ஒவ்வொரு வருடமும் அடித்து, புசிக்கப்பட்டு வந்தது. ஆனால் யோவான் ஸ்நானன் நமது கர்த்தர் வந்திருக்கின்றார் என்று அவரை அறிமுகப்படுத்தி, "இதோ தேவ ஆட்டுக்குட்டி" என்று கூறினபோது, நிழலான ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு, புசிக்கப்படுவதானது உடனடியாக ஓய்ந்துவிடவில்லை; ஏனெனில் நமது கர்த்தர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில் அவரே அதை அனுசரித்தார் என்று நாம் பார்க்கின்றோம். நிஜமான ஆட்டுக்குட்டியானது கல்வாரியில் அடிக்கப்பட்டபோதுதான், நிழலான ஆட்டுக் குட்டியினுடைய ஆசரிப்பானது ஓய்ந்தது.

ஆகையால் இப்பொழுது, தேவனுடைய உண்மையான ஆட்டுக்குட்டியானவர், நமது கர்த்தரானவர் நமக்காகக் கொடுத்திட்டதான, அதாவது நம்முடைய கடந்துபோகுதலுக்காக (அ) நாம் தப்புவிக்கப்படுவதற்காகக் கொடுத்திட்டதான அவரது மாம்சம் மற்றும் இரத்தத்திற்கான அடையாளங்களாக நமக்கு அப்பத்தையும், திராட்சரசத்தையும் கொடுத்திருக்கின்றார். நாம் அவரது மரணத்தை, இந்த அடையாளங்களினால், அவர் வருமளவும் மற்றும் அவரது சரீரத்தின் கடைசி அங்கத்தினன், அவரோடுகூட மற்றும் அவருக்கு ஒத்த நிலையில் முழுமையான இரட்சிப்புக்குள் கடந்துபோகப்படுவதுவரையிலும், நினைவுகூர்ந்து ஆசரிக்க வேண்டும். பின்னர் நாம் கடந்துபோகப்படுவதில், நிஜமானது முழுமையாய் நிறைவேறுகையில், அடையாளம் ஓய்ந்துவிடும். நம்முடைய நம்பிக்கைகள் நிறைவேறுவதுவரையிலும், இந்த நம்பிக்கைகளை நிறைவேற்றுகிறதான அவரது பிட்கப்பட்ட சரீரத்தையும், சிந்தப்பட்ட இரத்தத்தையும் நினைவுகூர்ந்து ஆசரிப்பதன் மூலமாக, இந்த நம்பிக்கைகளைத் தெரிவிப்பது ஏற்றதாய் இருக்கும்.

## நாம் ஆசரிக்க வேண்டுமா?

கடைசி இராப்போஜனத்தினுடைய உண்மையான ஆவிக்குரிய அர்த்தமானது, விசுவாசத்தினால் நமது கர்த்தருடைய பலியின் புண்ணியத்தில் நாம் பங்கெடுப்பதையும், நம்முடைய இருதயங்களில் நாம் அவரை உட்கொள்ளுவதையும் மற்றும் அவருடைய சத்தியத்திற்கான ஊழியத்தில், அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கும், சத்தியத்தினிமித்தமாகச் சுயத்தை வெறுத்தல் மற்றும் அவரோடுகூடப் பாடுகளின் பாத்திரத்தில் பானம்பண்ணிடுவதற்குமான நம்முடைய அர்ப்பணிப்பையும் குறிப்பதாக இருக்கின்றது என்று நாம் அடையாளம் கண்டுகொண்டுள்ளபடியால், மற்றவர்களாகிய சிலர் கடைசி இராப்போஜனத்தை ஆசரிப்பது ஏற்றதல்ல என்று இன்னமும் பிடிவாதமாய்க் காணப்படுகின்றனர். இந்த உண்மைகளைக் கண்ட பிற்பாடும்கூட, "நீங்கள் எல்லாரும் இதிலே புசியுங்கள்"; "நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்" என்று தம்முடைய பின்னடியார்கள் அனைவருக்கும் நமது அருமை மீட்பர் கட்டளையிட்டதும், அப்போஸ்தலர்களால் கைக்கொள்ளப் பட்டதும், ஆதித் திருச்சபையினர் கைக்கொள்ளும்படிக்குப் போதிக்கப்பட்டது போல, நமது அருமை மீட்பருடைய மரணத்தை நினைவுகூர்ந்து ஆசரிப்பதன் மூலமாக, மேற்கூறியவைகளின் அடையாளங்களை நாம் ஆசரிக்கக்கூடாது என்றே மற்றவர்களாகிய சிலர் பிடிவாதமாய்க் காணப்படுகின்றனர். நமக்கு நமது கர்த்தர் விட்டுச்சென்றதான அருமையான மற்றும் எளிமையான அடையாளங்களை இப்படியாய் ஒதுக்கித் தள்ளுவதானது, "தேவனால் போதிக்கப்பட்ட" காரியமல்ல மற்றும் அவரது வார்த்தைகளினால் ஆதரிக்கப்படுவதுமில்லை. கர்த்தருக்குப் பிரியமானதாகவும், "சாந்தமுள்ள வர்கள்" யாவருக்கும் ஏற்புடையதாகவும் காணப்படும் எளிமையினின்றும், கீழ்ப்படிதலினின்றும் நம்மை இப்படியாய் மயக்கி இழுப்பது மாபெரும் எதிராளியானவனேயாகும். "தேவனால் போதிக்கப்பட்டவர்கள்" அனைவரும், வேதவாக்கியங்களில் முன்வைக்கப்பட்டுள்ளதான அவரது போதனைகளுடன் மிகவும் நெருங்கிக் காணப்பட வேண்டும் மற்றும் விக்கிரகாராதனை மற்றும் ஆச்சாரங்களுக்கு நேரான போக்கினையும், தங்கள் சொந்த புரிந்து கொள்ளுதலை மற்றும் ஞானத்தைச் சார்ந்திருக்கக்கூடிய போக்கினையும், கர்த்தரால் கட்டளையிடப்பட்டதான எளிமையான மற்றும் அர்த்தமுள்ள ஆசரிப்புகளைப் புறக்கணிப்பதற்கான போக்கினையும் புறக்கணித்திட வேண்டும். இப்படியாய்ச் செய்வதே பாதுகாப்பானதாய் (அ) நியாயமானதாய்க் காணப்படும்.

- ரீபிரிண்ட்ஸ், பக்கம் 2387.

# நினைவுகூருதல் இராப்போஜனம்

நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலை, ஆசரிப்பதற்கான மிகப் பொருத்தமான தருணம், அதன் ஆண்டு நிறைவு நாளேயாகும் என்றே நாம் விசுவாசிக்கின்றோம் மற்றும் போதிக்கின்றோம். இதுவே ஆதித் திருச்சபையினுடைய வழக்கமாய் இருந்தது மற்றும் இது இன்னமும் புதிய பாணியில் சில சபைப்பிரிவினரால் புனித வெள்ளியன்று ஆசரிக்கப்பட்டு வருகின்றது; எனினும் வாரத்தினுடைய அதே நாளில் ஆசரிப்பைக் கொண்டிருக்கத்தக்கதாக, தேதியினுடைய துல்லியமானது பொருட்படுத்தப்படுவதில்லை. ஆதித் திருச்சபையினரைப்போன்று, நினைவுகூருதலை அதன் ஆண்டு நிறைவு நாளில்தானே, அதாவது ஆதித் திருச்சபையினரும், யூதர்களும், சந்திர காலத்தின்படி கணக்கிட்டதுபோல, யூதருடைய பஸ்கா ஆரம்பிப்பதற்கு முந்தின நாளில், ஆசரித்திடுவதற்கே நாமும் விரும்புகின்றோம்.

இன்னுமாக இந்த நினைவுகூருதலை ஆசரிப்பதற்கான ஒரே ஏற்ற விதம், இதை நமது கர்த்தர் அறிமுகப்படுத்தின விதமும், ஆதித் திருச்சபையினர் ஆசரித்த விதமுமாகும் என்றும், இன்று சிலரால் புனித வெள்ளி என்று ஆசரிக்கும் விதத்திலல்ல என்றும் நாம் விசுவாசிக்கின்றோம் மற்றும் போதிக்கின்றோம்.

அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அதே இரவில் - மாலை 6 மணிக்குப் பிற்பாடு; அதாவது எபிரெய மாதமாகிய நீசானின் 13-ஆம் தேதி என்று நம்மால் அழைக்கப்படுகின்றதும், ஆனால் நீசான் மாதத்தினுடைய 14-ஆம் தேதியின் ஆரம்பம் என்று (யூதர்களின் 24 மணி நேரமானது மாலையில் ஆரம்பிப்பதன் காரணமாக) யூதர்களால் அழைக்கப்பட்ட தேதியில்; மற்றும் யூத காலக்கணக்கிடுதலின்படி அவர் சிலுவையில் அறையப்பட்ட அதே நாளில் (அவர்களது பஸ்கா வாரம் ஆரம்பமாகுவதற்கு முந்தின நாளில்) - நமது கர்த்தர், தம்முடைய சீஷர்களோடு பஸ்கா இராப்போஜனத்தை ஆசரித்தார். (பஸ்கா பண்டிகை வாரத்திற்கு முன்பு எப்போதும் இடம்பெறும் ஆட்டுக்குட்டியுடனான இராப்போஜனமானது, யூதர்களால் பஸ்கா பண்டிகை என்று அழைக்கப்படவுமில்லை மற்றும் இப்பொழுதும் இப்படியாக அழைக்கப்படுகிறதுமில்லை). (நமது கர்த்தர் சிலுவையில் மரிப்பதுவரையிலும் ஒவ்வொரு யூதன்மேலும் ஆதிக்கம் கொண்டிருந்ததான) நியாயப்பிரமாணத்தின்படி ஆசரித்தப் பிற்பாடு, இயேசு தம்முடைய சொந்த மரணத்திற்கான நினைவுகூருதலை நிறுவினார் மற்றும் தம்முடைய மாம்சம் மற்றும் இரத்தத்திற்கு, அப்பத்தையும், "திராட்சபழரசத்தையும்" (fruit of the vine) அடையாளங்களாய்ப் பயன்படுத்தினார்.

தம்முடைய பின்னடியார்கள் பாவங்களுக்கான தம்முடைய பலியினை நினைவுகூருவதற்கு அவர்களுக்குக் கற்பிக்கும் வண்ணமாகக் கூறினதாவது,

# என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்

அப்பம் மற்றும் திராட்சப்பழச்சாறுபோன்று, 'வேளையும்', இந்த நிறுவுதலில் ஒரு பாகமாகக் காணப்படுவதாக எங்களுக்குத் தோன்றுகின்றது. அதேசமயத்தில் இந்த விஷயத்தில் நமது கர்த்தர் நுணுக்கமாய்க் காணப்பட்டார். அவர் "நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" என்று கூறியிருந்தபோதிலும், நியாயப்பிரமாணத்தின்படி இது எகிப்தில் இஸ்ரயேலின் முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதல் காரியத்துக்கு முன்பாக நிகழும் நிழலான ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலுக்குரிய ஆண்டு நிறைவு நாள் வருவதுவரையிலும் புசிக்கப்பட முடியாது; அந்த ஆண்டு நிறைவு நாளே "உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவரும், முதற்பேறானவர்களின் சபையை முதலாவது தப்புவிக்கிறவர் (அ) இரட்சிக்கிறவரான உண்மையான தேவ ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலுக்கான ஆண்டு நிறைவு நாளாய் இருக்கப்போகின்றது. ஆகையால் நமது கர்த்தர் காத்திருந்து, "வேளை வந்தபோது (நியாயப்பிரமாணத்தின்படி முடிந்தமட்டும் நேரமே) அவர் பந்தியிருந்தார்" (லூக்கா 22:14-20).

"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:26) என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளானது, எந்த ஒரு வேளையிலும், எந்த ஒரு நாளிலும், எந்த ஒரு மாதத்திலும் இதை ஆசரிப்பதற்கான அனுமதியைக் கொடுப்பதாக, அநேகரால் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 11:26-குறிப்பாய் ரீபிரிண்ட்ஸ் 1289-இல் விவரிக்கப்பட்டுள்ளது); ஆனால் இவ்வசனத்தை ஆராய்ந்துப் பார்ப்பவர்களினால், இப்படியாகப் புரிந்துகொள்ளப்படாது; ஏனெனில் "இதைப் புசித்து, பானம்பண்ணும்" என்ற வார்த்தைகளுக்கு விசேஷித்த முக்கியத்துவம் உள்ளது. வேறொரு வேளையில் செய்வது என்பது, அது "இதைச்" செய்வதாக இருக்காது; அதாவது ஐக்கிய நாடுகளின் சுதந்திர தினமானது, ஜூலை 4-ஆம் தேதி கொண்டாடப்பட வேண்டும் என்று கட்டளைக் கொடுக்கப்பட்டிருக்க, வேறொரு நாள் கொண்டாடப்படுமாயின், அது இக்கட்டளையை நிறைவேற்றினதாகவோ (அ) சுதந்திரதின நிகழ்வைக் கொண்டாடினதாகவோ இராததுபோலாகும்.

தேவனுடைய ஜனங்கள் இந்த விஷயத்திலோ அல்லது வேறு ஏதாகிலும் விஷயத்திலோ, நியாயப்பிரமாணத்தின்கீழ்க் காணப்படுகின்றார்கள் என்று நாங்கள்

போதிப்பதாக எவரும் எண்ணிக்கொள்ள வேண்டாம். நம்முடைய புதிதான உடன்படிக்கைக்கான ஒரே பிரமாணம், அன்பின் பிரமாணமாகும். நம்முடைய ஆண்டவரை நாம் அன்புகூருகின்றோம் மற்றும் நம்முடைய பாவங்களுக்கான அவரது மாபெரும் பலியினை ஆசரித்திடுவதற்கு நாம் விரும்புகின்றோம் மற்றும் அவர் நமக்குத் தெரிவித்திருக்கிறபடியே, எங்களால் முடிந்தமட்டும் அப்படியே ஆசரித்திடுவதற்கு நாங்கள் விரும்புகின்றோம்.

கர்த்தருடைய ஜனங்களில் சிலர் அவரது மரணத்தை வாரத்தின் முதல் நாள்தோறும் கொண்டாடுகின்றனர்; இப்படியாய்ச் செய்யும் விஷயத்திற்கு அப்போஸ்தலர் 2:46; 20:7-ஆம் வசனங்களில் பதிவுபண்ணப்பட்டுள்ளதான அப்போஸ்தலர்கள் மற்றும் ஆதித் திருச்சபையினருடைய வழக்கமானது ஆதரவளிப்பதாகவும் இவர்கள் எண்ணிக்கொள்கின்றனர். "அப்பம் பிட்குதல்" எனும் வார்த்தைகளை இவர்கள் தவறாய்ப் பொருத்திப்பார்க்கின்றனர் என்றும், அது நினைவுகூருதலின் இராப்போஜனம் அல்ல என்றும், அது இரண்டு காரணங்களுக்காக, ஆதித் திருச்சபையினர் கொண்டிருந்த சாதாரண உணவு வழக்கம்தான் என்றும் நாம் கூறுகின்றோம்; அந்த இரண்டு காரணங்கள் என்னவெனில்: (1) சொற்பமானவர் களாகவும், இங்குமங்குமாகக் காணப்படுபவர்களாகவும் ஆதித் திருச்சபையினர் காணப்பட்டபடியால், அவர்கள் கூடுகைக்காக ஒன்றுகூடுகிற தருணங்களில், மதிய உணவு கொண்டுவந்தவர்களாய் இருந்தனர் மற்றும் (2) இப்படிக் கூடுகைகளுக்காக, அவர்கள் வாரத்தின் முதல்நாளில் கூடினபோது, அவர்கள் ஒன்றுசேர்ந்து உணவு உட்கொண்டனர்; காரணம் வாரத்தின் முதல்நாளில்தான் நமது கர்த்தர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்; காரணம் அதே நாளில்தான், தம்மைப்பற்றின வேதவாக்கியங்கள் நிறைவேறியுள்ளதை அவர்களுக்கு அவர் வெளிப்படுத்தினார் மற்றும் இரவு உணவு உண்கையில், அப்பத்தைப் பிட்பதன் மூலம் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். பிற்பாடு தங்களுக்கு மிக அதிகமான சந்தோஷத்தையும், ஆசீர்வாதத்தையும் கொண்டுவந்ததான நாளையும், உணவையும் கொண்டாடிடுவதற்கு அவர்கள் விரும்பினார்கள் (லூக்கா 24:25-32).

வாரத்தினுடைய முதல்நாளில் உயிர்த்தெழுதலின் கொண்டாடுதலையும், இந்த மதிய உணவுகளையும், நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலோடு குழப்பிக்கொள்பவர்கள் கடுமையான தவறைச் செய்யவில்லை என்றாலும், பெரிதான தவற்றையே செய்துள்ளனர். இந்த உணவுகளின்/அப்பம் பிட்கப்பட்ட நிகழ்வுகளில் திராட்சப்பழரசம் குறிப்பிடப்படவில்லை என்பதையும், அப்பம்போன்ற முக்கியத்துவம் உடையதான திராட்சப்பழரசமானது, நினைவுகூருதல் இராப்போஜனமானது குறிப்பிடப்

பட்டிருக்கும் இடங்களில் ஒருபோதும் குறிப்பிடப்படுவதிலிருந்து தவிர்க்கப்படுவதில்லை என்பதையும் இத்தகையவர்கள் கவனித்திட வேண்டும். ஒரே கிரேக்க வார்த்தையை உடையதான "அப்பம் பிட்குதலானது" அப்போஸ்தலர் 27:35-ஆம் வசனத்திலும் இடம்பெறுகின்றதாய் இருக்கின்றது; இங்கு நினைவுகூருதலுக்காகவோ (அ) அடையாளமாகவோ இல்லாமல், பசிக்கான சாதாரணமான உணவே குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

இந்தப் பாடத்தினைச் சுருக்கமாக இங்குக் கொடுத்திருக்கின்றோம். நினைவுகூருதலை யார் ஆசரிக்க வேண்டும், எப்படி ஆசரிக்க வேண்டும் மற்றும் இன்னும் பல சுவாரசியமான கருத்துகளுக்காக, நமது அன்றாட வாசகர்களுக்கு நாம் ரீபிரிண்ட்ஸ் 1289-யை பரிந்துரைக்கின்றோம்.

தங்களுக்கான ஈடுபலியெனக் கிறிஸ்துவின் மரணத்தினுடைய முக்கியத்துவத்தினை அடையாளம் கண்டுகொண்டுள்ள அனைவரும், கர்த்தரிலுள்ள நம்முடைய தற்போதைய சந்தோஷங்களுக்கு ஆதாரமாகவும், இந்த நினைவுகூருதலின் நிறைவேறுதலில் நாம் பிரவேசிக்க இருக்கின்றவைகளுக்கு ஆதாரமாகவும், அதாவது இராஜ்யத்தில், மகிமையில் நாம் பங்கெடுக்கப்போகும் நம்முடைய கர்த்தருடைய சந்தோஷங்களுக்கு ஆதாரமாகவும் காணப்படுகின்றதான மாபெரும் நிகழ்வினை நினைவுகூரும் வண்ணமாக, போதகர் கட்டளையிட்டதுபோன்று "இதைப் புசித்து, பானம் பண்ணிடுவதற்கு" நாம் வலியுறுத்திக் கூறுகின்றோம். ஆனால் பாவங்களுக்கான இந்தப் பலியிடமிருந்து இல்லாமல், வேறுபக்கத்திலிருந்து மன்னிப்பு வருமென்று நம்புகின்றவர்களும், தங்கள் சொந்தப் பாவங்களைத் தங்களால் சிலுவையில் அறையமுடியும் என்றும், மற்றும் இப்படியாய்த் தங்களைத் தேவனுக்கு ஏற்புடையவர்களாக்க முடியும் என்றும் நம்புகின்றவர்களும், இந்த நினைவுகூருதலை ஆசரிக்க வேண்டாம்; ஏனெனில் இவர்கள் பாவத்தை எடுத்துப்போடுகிறதும், விசுவாசியைத் தேவனுக்கு முன்பாக ஏற்புடையவனாக்குகிறதுமான ஒரே ஒரு பாவநிவாரண பலியென, கர்த்தருடைய பிட்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்கும் இருக்கும் மதிப்பினை உணராதவர்களாய் இருப்பதினால் - இப்படியானவர்கள் போஜனபானம்பண்ணும்போது, தங்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகின்றவர்களாய் இருந்திடுவார்கள்.

# வருடாந்தர நினைவுகூருதல் இராப்போஜனம்

இந்த வருடம், ஏப்ரல் 19-ஆம் தேதி, வியாழக்கிழமை, மாலை 6 மணிக்குப் பின்னர், நமது கர்த்தருடைய "கடைசி இராப்போஜனத்திற்கான" ஆண்டு நிறைவு நாளாய்க் காணப்படுகின்றது; இந்தக் "கடைசி இராப்போஜனத்தை" நமக்கான அவரது மரணத்திற்கான நினைவுகூருதலாக அவர் கொடுத்து, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றார் (லூக்கா 22:19).

இந்தப் பத்திரிக்கையினுடைய கழிந்த வெளியீட்டில், கடைசி இராப்போஜனமானது, யூதருடைய பஸ்கா இராப்போஜனத்திற்குப்பதிலாக இடம்பெறத்தக்கதாகக் கொடுக்கப்பட்டது என்பதற்கும், அது பொருத்தமான வேளையில், வருடந்தோறும் ஆசரிக்கப்பட வேண்டும் என்பதற்குமான ஆதாரங்களைக் கொடுத்திருந்தோம். பஸ்கா ஆட்டுக்குட்டியானது, தேவ ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவுக்கு நிழலாய் இருப்பதுபோன்று, அதன் மரணமும், அவருடைய மரணத்திற்கு நிழலாய் இருக்கின்றது மற்றும் இதனால் அவருடைய மரணமும் அதே நாளில்தான் நிகழ்கின்றது. நமது கர்த்தர் மரித்த அதே நாளிலும், காட்டிக்கொடுக்கப்பட்டதான அதே இரவிலும், அவரால் கடைசி இராப்போஜனமானது நிறுவப்படத்தக்கதாக, நாளினுடைய துவக்கத்தினை மாலை 6 மணியிலிருந்து கணக்கிடும் விதத்தில் யூதருடைய காலக்கணக்கீடு முறைமை ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது என்றும் நாம் காண்பித்திருந்தோம் (1 கொரிந்தியர் 11:23).

புதிய உடன்படிக்கையானது இன்னமும் அகற்றிப்போடாத நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ் யூதனாகக் காணப்பட்டப்படியால், நிழலான ஆட்டுக்குட்டியினை முதலாவது புசிப்பது நமது கர்த்தருடைய கடமையாய் இருந்தது; இந்த இராப்போஜனம் முடிந்த பிற்பாடே அவர் தம்முடைய மாம்சத்திற்கும், இரத்தத்திற்கும் அடையாளங்களாக அப்பத்தையும், திராட்சரசத்தையும் எடுத்துக்கொண்டு, இன்று வரையிலும் நாமும், அவரது ஜனங்கள் அனைவரும் ஆசரிப்பதில் மகிழ்ச்சியடையும் நினைவுகூருதலுக்கான இராப்போஜனத்தை நிறுவினார்.

நிழலான ஆட்டுக்குட்டியினுடைய இடத்தை நமது கர்த்தர் எடுக்கையில், அவரால் நீசான் மாதத்தினுடைய 14-ஆம் தேதியன்று சிலுவையில் அறையப்பட முடியும்; நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய நினைவுகூருதல் மற்றும் அதனால் உண்டான நிழலான கடந்துபோகுதலின் இடத்தில், அவரது மரணத்திற்கான நினைவுகூருதலும், இதனால் உண்டாகும் கடந்துபோகுதலும் இடம்பெறுவதினால், நிழலானது நினைவுகூர்ந்து ஆசரிக்கப்பட்டதுபோலவே, நிஜத்தினுடைய ஆசரிப்பும் வருடாந்தர ஆசரிப்பாகவே இருக்க வேண்டும்.

இது ஆதிக்கால திருச்சபையினருடைய வழக்கமாக இருந்துள்ளது என்று நாம் பார்த்திருக்கின்றோம்; அவர்கள் பல நூற்றாண்டு காலமாக நாம் பின்பற்றுகிற யூத காலக்கணக்கீடு முறைமையையே கைக்கொண்டு வந்தனர்; அதாவது நீசான் மாதம் 13-ஆம் தேதியின் மாலையாகிய 14-ஆம் தேதியின் துவக்கம் எனும் காலக்கணக்கிடுதலாகும். இப்படியான காலக்கணக்கீடு முறைமையானது பிற்பாடு உரோம சபையால் மாற்றப்பட்டது; எனினும் நமது கர்த்தருடைய மரணத்தை வருடந்தோறும் ஆசரிக்கும் கருத்தும், வழக்கமும் இன்னமும் உரோம சபையாலும்,

கிரேக்க சபையாலும், சிரியன் சபையாலும், இங்கிலீஷ் சபையாலும் "புனித வெள்ளியன்று" கைக்கொள்ளப்பட்டு வருகின்றது.

புராட்டஸ்டண்ட் சபைகளானது, (திருப்பலி) பூசை பலியெனும் உரோம சபை உபதேசத்தை, கர்த்தருடைய இராப்போஜனத்துடன் குழப்பிக்கொண்டனர்; ஆனால் இவைகள் இரண்டிற்கு இடையில் எந்தத் தொடர்புமே இல்லை; (மிலேனியல் டாண் புத்தகத்தின் தொகுதி-III, பக்கம்-98 முதல் 101 வரை, பூசைபலிக் குறித்துப் பார்க்கவும்); மேலும் இதன் காரணமாக இவர்கள் எந்த ஒரு குறிப்பிட்ட தேதிக்கும் எந்த ஒரு காரணத்தையும் காணாததினாலும், "இதைப் பானம்பண்ணும்போதெல்லாம்" என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளானது, எப்போது வேண்டுமானாலும் ஆசரிப்பதற்கான முழு அனுமதியைக் கொடுக்கின்றது என்று எண்ணிக்கொண்டதாலும், பல்வேறு காலங்களையும், வேளைகளையும், காலை, மதியம், இரவு மற்றும் மாதந்தோறும், மாதத்திற்கு இருமுறை, காலாண்டுதோறும் என்று தெரிவு செய்துகொண்டனர். ஆனால் அப்போஸ்தலனோ இதைப் பானம்பண்ணும் ஒவ்வொரு முறையும் (வருடந்தோறும்) என்ற அர்த்தத்திலேயே குறிப்பிட்டுள்ளார் என்று நாம் புரிந்துகொள்கின்றோம்.

சில அருமையான கிறிஸ்தவ ஜனங்கள் இந்த இராப்போஜனத்தை வாரத்தின் முதல் நாள்தோறும் நினைவுகூர்ந்து ஆசரிக்கும் தப்பறைக்குள்கூட விழுந்துள்ளனர்; காரணம் இவர்கள் நிஜம் நீக்கிப்போட்டதான நிழல் தொடர்புடைய விஷயத்தில், இராப்போஜனத்தின் அர்த்தம் என்னவென்று கவனிக்கத் தவறியுள்ளனர்; காரணம் இவர்கள் தங்களுடைய இந்த நடவடிக்கைக்கு, புதிய ஏற்பாட்டில் இடம்பெறும், "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில்" என்ற வசனப்பகுதியினை எடுத்துக்காட்டாகத் தவறுதலாய் எண்ணிக்கொள்கின்றனர். இவ்வசனப்பகுதியானது, வாரத்தின் முதல்நாள்தோறும் அப்பம் பிட்குதலானது ஆதிக்கால சீஷர்களின் வழக்கமாய் இருந்தது என்பதை உண்மையில் சுட்டிக்காட்டுகின்றது; ஆனால் இது இங்கு நினைவுகூருதல் இராப்போஜனமே குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்பதை நிரூபிப்பதில்லை. திராட்சப்பழ ரசமானது, நினைவுகூருதலில் அப்பத்தைப்போன்று முக்கியமானதாகும்; ஆனால் இது, அப்பம் பிட்குதலுக்கும், ஜெபித்தலுக்குமெனக் கூடின இந்த வாரந்தோறுமான கூடுகைகளில், ஒருபோதும் குறிப்பிடப்படவில்லை. இவர்கள் நமது கர்த்தருடைய மரணத்தை அல்ல, அவரது உயிர்த்தெழுதலையே கொண்டாடினார்கள். இவர்கள் கடைசி இராப்போஜனத்திற்கான நினைவுகூருதலுக்காக அல்ல, மாறாக நமது கர்த்தர் உயிர்த்தெழுந்த நாளில் அப்பம் பிட்கையில் தங்கள் கண்கள் திறக்கப்பட்டதையும், தாங்கள் அவரை அறிந்துகொண்டதையும், தங்கள் பார்வையினின்று அவர் மறைந்து போனதையும் நினைவுகூரும் வண்ணமாகவே அப்பம் பிட்டுக்கொண்டார்கள்.

இங்கு நினைவுகூருதல் இராப்போஜனம்தான் நடைப்பெற்றதென்றால், அது அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்திருக்கும். நம்மைப்போன்று ஆதிக்கால சீஷர்களும், தினந்தோறும் அப்பம் பிட்டனர் (அ) அப்பம் புசித்தனர்; ஆனால் நமது கர்த்தருடைய மரணத்தை அல்ல, மாறாக அவரது உயிர்த்தெழுதலை நினைவுகூருவதற்காக வாரத்தினுடைய முதல்நாளில் ஒன்றுகூடினார்களே ஒழிய, மற்றபடி அப்பம் பிட்பதற்கு என்று அவர்கள் ஒன்றுகூடி வருவதில்லை.

இந்த வாரக்கூடுகைகளானது, யூதர்கள் அனைவருக்குமான வழக்கம் என்பதை சிறு ஆய்வுகள் பண்ணினாலே புரிந்துவிடும்; வாரத்தினுடைய முதல் நாளுக்குப்பதிலாக, யூதர்கள் வாரத்தின் கடைசி (அ) 7-ஆம் நாளிலும், பண்டிகை நாட்களிலும், (Social Meals) "விருந்து உணவு உண்பதற்கென" ஒன்று கூடுவார்கள். இது குறித்து Mc Clintock மற்றும் Strong's Religious Cyclopedia-வின், தொகுதி 8-இல், பக்கம் 68-இல் இடம்பெறும் வரிகளை, நாம் மேற்கூறிய காரியங்களை உறுதிப்படுத்துவதற்கு என்று மாத்திரம் மேற்கோள் இடுகின்றோம்; அது பின்வருமாறு:

"ஓய்வுநாள் தொடர்பான கடுமையான சட்டங்களின் காரணமாக, எந்த இஸ்ரயேலனும், "ஓய்வு நாள் பிரயாணம்" என்ற ஒரு குறிப்பிட்ட தொலைவுக்குமேல் நடக்கக்கூடாது என்றும், ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கு எதையும் எடுத்துச் செல்லக்கூடாது என்றும் கட்டளையிடப்பட்டிருந்தது. ஓய்வுநாளில் தங்களுடைய விருந்தினைப் பல்வேறு இடங்களில் ஆசரிப்பவர்களாகக் காணப்பட்ட சதுசேயர்கள் (அ) ஆசாரிய குழுவினரால், ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லலாம் மற்றும் தாங்கள் விரும்பும் எதையும் இங்கும், அங்குமாய் எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம்; ஏனெனில் இந்த விருந்துகளை இவர்கள் ஓய்வுநாளின் புனித ஆசரிப்புகளுக்கு உட்படாத தங்களது ஆசாரிய மற்றும் பலியின் வேலைகளின் ஒரு பாகமாகக் கருதினர். ஆனால் ஆசாரிய விருந்துகளைப்போன்று, தங்கள் ஓய்வுநாள் உணவுகளைப் பெற்றிருந்ததான பரிசேயர்களோ, கடுமையான ஓய்வுநாள் சட்டங்களினால் உண்டாகும் சிரமங்களை எதிர்க்கொள்ள வேண்டியவர்களாய் இருந்தனர்."

## ஆசரிப்பு

நம்முடைய ஆராதனை அனைத்திலும், பயபக்தியோடுகூட எளிமையும் கலந்திருக்க வேண்டும்; மற்றும் இந்த நினைவுகூருதலின் விஷயத்திலுள்ள நமது கர்த்தருடைய முன்மாதிரியானது, எளிமை மற்றும் பயபக்தியுடன், பரிசுத்தத்தையும் குறிப்பிடுகின்றாய் இருக்கின்றது.

ஏப்ரல் 19-ஆம் தேதி, வியாழன் மாலை 6 மணிக்குமேல், மீட்பரை அன்புகூருகிறவர்களும், விசுவாசத்திலும், நடக்கையிலும் அவரது பின்னடியார்

களாகக் காணப்படுவதற்கு வாக்குறுதிக் கொடுத்துள்ளவர்களும், "நம்முடைய பாவங்களுக்கான; நம்முடைய பாவங்களுக்கு மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களுக்குமான" அவரது மரணத்தினை ஆசரிப்பார்களாக. உங்கள் வசதிக்கேற்ப விலையேறப்பெற்ற விசுவாசத்தில் ஒத்திருப்பவர்களுடன், ஒன்றுகூடிடுவதற்கும், சரித்திரத்தின் இந்த மாபெரும் நிகழ்வை ஆசரிப்பதற்கும் விரும்புகிறவர்களுடன் கூடிக்கொள்ளுங்கள். மீட்பரில் விசுவாசமுள்ள அர்ப்பணிக்கப்பட்டவர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கைப் பண்ணிக்கொள்பவர்களுடைய கூடுகையாக அது காணப்பட வேண்டும்; ஆனால் இப்படியாக அறிக்கைப் பண்ணிக்கொண்டு மற்றவர்கள் எவரேனும் வருவார்களானால், அவர்களைப் புறக்கணிக்க வேண்டாம்; யூதாஸ் கர்த்தருடனும், மீதி பதினொரு பேருடனும் கூடிக்கொண்டான் என்பதை நினைவில்கொள்ளுங்கள். இன்னுமாக உங்களில் பெரியவனாய் இருக்க விரும்புகிறவன், பாதங்களைக் கழுவுபவனாக இருப்பான்; அதாவது தேவனுடைய ஜனங்களைப் பூமிக்குரிய அசுசிகளிலிருந்து சுத்திகரிக்கும் எளிமையான பணிவிடையைக்கூடச் செய்பவனாவான் என்பதையும் நினைவில்கொள்ளுங்கள்.

நமது கர்த்தரினால் பயன்படுத்தப்பட்ட அடையாளங்கள் புளிப்பில்லாத அப்பம் மற்றும் திராட்சப்பழரசமுமாகும் (fruit of the vine). யூத அயலார்களிடமிருந்து சில பணத்திற்குப் புளிப்பற்ற ரொட்டிகள் பெற்றுக்கொள்ளப்படலாம்; இல்லையேல் இதற்கொத்த மாவு மற்றும் தண்ணீரினால் செய்யப்பட்ட ரொட்டிகளும்/water crackers பயன்படுத்தப்படலாம். நமது கர்த்தர் அநேகமாக "லைட்" ஒயின் (Light Wine) பயன்படுத்தியிருக்க வேண்டும்; ஆனால் அவர் "திராட்சப்பழரசம்" (fruit of the vine) என்று மாத்திரம் குறிப்பிட்டார்; ஆகையால் நாம் புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச் சாற்றை (grape juice) அல்லது உலர்த் திராட்சையைத் தண்ணீருடன் வேகவைத்து, உண்டுபண்ணும் உலர் திராட்சரசத்தை/சாற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எப்படிப் போதையூட்டும் திராட்சரசமானது/wine, திராட்சப்பழரசமாக இருக்குமோ, அதுபோலவே இதுவும் திராட்சப்பழரசமாக இருக்கும். எப்படி அநேகர் இன்று மதுபானத்திற்கு அடிமையாகியுள்ளனர் என்பதினாலும், எப்படி எளிதில் கிடைக்கப்பெறும் திராட்சரசத்தினைச் சுவைத்துப்பார்ப்பது என்பதே தவறாய் வழிநடத்திவிடும் என்பதினாலும் நமது கர்த்தர் நாம் கூறுவதை அங்கீகரிப்பார் என்று நாம் நம்புகின்றோம்.

ஏப்ரல் 1-ஆம் தேதியினுடைய நம்முடைய வெளியீட்டில், இந்த அடையாளங்களுடைய அர்த்தம் தொடர்பாக நாம் சில கருத்துக்களைக் குறிப்பிடுவோம்.

# அலிகெனியில் (Allegheny) நினைவுகூருதல் ஆராதனை

வழக்கம்போல் ஆராதனையானது இங்குப் பைபிள் ஹவுஸ் சேப்பலில் (Bible House Chapel), எண்: 58, ஆர்க் தெருவில், மாலை 7:30 மணிக்கு நடைபெறும். தங்களுக்கான ஈடுபலியென நமது கர்த்தர் இயேசுவினுடைய மரணத்தை விசுவாசிப்பவர்களும், அவருக்கு முழுமையாய் அர்ப்பணித்துள்ளவர்களுமானவர்கள் அனைவரும் வரவேற்கப்படுகின்றனர். ஆனால் இந்த வருடத்தில், தொலைவில் உள்ளவர்கள் எவருக்கும் நாம் விசேஷித்த அழைப்பு விடுப்பதில்லை; மற்றும் வேறு கூடுகைகள் எதற்கும் ஏற்பாடு பண்ணப்படவில்லை. அருகாமையிலுள்ள பட்டணங்களில், யாரேனும் தனியாகக் காணப்படுகின்றார்களானால், அத்தகையவர் கள் எங்களோடுகூடக் கலந்துகொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியாயிருப்போம்; ஆனால் இந்த நினைவுகூருதலுக்கெனக் கூடிடுவதற்கு இரண்டு (அ) மூன்று பேர்கள் காணப்படுவார்களானால், அத்தகையவர்கள் உள்ளூர்களிலேயே ஒன்றுக்கூடிடும் படிக்கு நாம் யோசனைக் கூறுகின்றோம்.

கடந்தமுறை இங்கு மாநாடுகள் நடைப்பெற்றபோது, உள்ளூர்களில் மிகவும் அவசியமாய்க் காணப்படவேண்டியவர்கள், அங்கு இராததினால், உள்ளூர்களிலுள்ள விசுவாசிகளினுடைய பல்வேறு கூடுகைகள் தடைப்பட்டன மற்றும் சிரமத்திற் குள்ளாயின என்பதை நாங்கள் வேதனையுடன் அறிந்துகொண்டோம். இந்த வருஷம் இக்காரியத்தினை மாற்றிடுவதற்கு நாம் விரும்பி, அறிவுறுத்துவது என்னவெனில்: எங்கெல்லாம் இரண்டு (அ) மூன்று பேர்தான் கூடமுடிகின்ற நிலையிருக்கின்றதோ, அவர்கள் அவ்வாறே கூடிடுவார்களாக; பெரியளவிலான விசுவாசிகளின் எண்ணிக்கையையுடைய கூட்டத்தாருக்கும், சிறிய அளவிலான விசுவாசிகளின் எண்ணிக்கையையுடைய கூட்டத்தாருக்கும் அருகாமையிலுள்ள இடங்களில் தனித்திருப்பவர்கள் காணப்படுவார்களானால், இவர்கள் பெரிய கூடுகையில் கலந்துகொள்வதைக்காட்டிலும், சிறிய கூடுகையில் கலந்துகொள்வதற்கு முன்னுரிமைக் கொடுத்து, இப்படியாக இவர்களது வந்திருத்தலின் அவசியத்தை அதிகமாய் நாடுகின்ற சிறிய கூட்டத்தாருக்கு உதவிசெய்து, உற்சாகப்படுத் திடுவார்களாக. மற்றவர்களுக்கு நன்மைசெய்ய நாடுபவர்கள், தாங்களும் அதிகமாய் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

## மோசேயைப்போல ஒரு தீர்க்கதரிசி

"நமது பஸ்காவாகிய" கிறிஸ்துவே, மோசேயைப்போன்ற தீர்க்கத் தரிசியாவார். பஸ்கா நிறுவப்பட்டபோது, "கர்த்தர் எகிப்து தேசத்தில் மோசேயையும், ஆரோனையும் நோக்கி: இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம்; இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாயிருப்பதாக" என்றார் (யாத்திராகமம் 12:1, 2). இதற்குப் போதுமான காரணங்கள் உள்ளன. மனிதன் யாரிடமிருந்து ஜீவனைப் பெற்றுக்கொண்டானோ அந்த முதலாம் ஆதாம் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டார்; மற்றும் தேவன் இந்த ஆக்கினைத் தீர்ப்பின் காரணமாக மனிதனுடன் உடன்படிக்கைக்குள் பிரவேசிக்கவில்லை. பஸ்காவை நிறுவினதிலும், ஆசரித்ததிலும், ஜனங்கள் நிழலான விதத்தில் மரணத்திலிருந்து, ஜீவனுக்குள் கடந்துபோகப்பட்டவர்களாய் இருந்தனர். மற்றவர்கள் சங்காரம் பண்ணப்பட்டபோது, இவர்களது மாம்சீக ஜீவன்களானது பாதுகாக்கப்பட்டது; மேலும் இந்தப் பாதுகாக்கப்படுதலானது, மிகவும் பெரிதான மற்றும் நிரந்தரமான ஒன்றிற்கு நிழலாய் இருக்கின்றது. பஸ்கா ஆட்டுக்குட்டியினைப் பயன்படுத்தும் விஷயத்தில் இரண்டு கருத்துகளானது விசேஷமாய்க் கவனிக்கப்பட வேண்டும். முதலாவது இரத்தம் பற்றியதாகும்: "அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து, நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்; நான் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்" (யாத்திராகமம் 12:1-28). ஆதிக்காலங்களிலேயே இரத்தத்தைப் புசிப்பதானது தடைப்பண்ணப்பட்டிருந்தது: "மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம்" (ஆதியாகமம் 9:4). இந்தத் தடையானது அடிக்கடி கூறப்பட்டது மற்றும் இதற்கு விசேஷமான ஒரு காரணமும் உள்ளது: "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே." (லேவியராகமம் 17:11). பஸ்காவின் இரத்தம் சிந்தப்படுதலும், தெளிக்கப்படுதலும், "ஜீவனுக்கு ஜீவன்" கொடுக்கப்படுகிற, அதாவது ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டவர்கள் நீதிமானாக்கப்படுவதற்கு முன்னதாக, தெய்வீக நீதியானது எதிர்ப்பார்க்கின்ற "ஜீவனுக்கு ஜீவன்" கொடுக்கப்படுகிற காரியத்திற்குச் சிறந்த

"நிழலாய்" இருக்கின்றது. இது "நிழல்" மாத்திரமே; எனினும் நிஜமானது பின்னர் வந்தது: "உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" (1 பேதுரு 1:18, 19). இன்னொன்று மாம்சம் பற்றியதாகும்: "அன்று ராத்திரியிலே அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்கக்கடவர்கள். அதைப் புசிக்கவேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள்; அது கர்த்தருடைய பஸ்கா" (யாத்திராகமம் 12:8, 11). இரத்தம் சிந்துதலினால், இஸ்ரயேலர்களின் ஜீவன் பாதுகாக்கப்பட்டது; ஆனால் அவர்களுக்கு முன்பாக வனாந்தரப் பிரயாணம் காணப்பட்டது மற்றும் அவர்கள் மாம்சத்தையும் புசிக்க வேண்டும். இந்த அம்சமும்கூட, "நமது பஸ்காவாகிய" தேவாட்டுக்குட்டிக்குச் சிறந்த "நிழலாய்க்" காணப்படுகின்றது. அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய சிந்துதலினால், நாம் ஜீவன் பெற்றிருக்கின்றோம். ஆனால் இதுமாத்திரமல்ல ஜீவித பிரயாணம் மேற்கொள்ளப்பட வேண்டும், ஜீவியத்தின் சத்துருக்கள் ஜெயங்கொள்ளப்பட வேண்டும், ஜீவிதத்தின் வேலைகள் செய்து முடிக்கப்பட வேண்டும் மற்றும் ஜீவியத்தின் பயிற்சிகள் முழுமையடைய வேண்டும். இவைகள் அனைத்திலும் சோர்வுகளும், களைப்புகளும் உள்ளன; ஆனால் நம்முடைய பலமானது, பரலோக உணவினால் புதுப்பிக்கப்படுகின்றது: "என் பிதாவோ வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார்;" "என்னிடத்தில் வருகிறவன் ஒருகாலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருகாலும் தாகமடையான்" (யோவான் 6:27-58).

– ரீபிரிண்ட்ஸ், பக்கம் 1321.

# நினைவுகூருதல் இராப்போஜனம்

கிறிஸ்தவர்கள் மத்தியில் புனித வெள்ளியை, நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலாகவும், ஈஸ்டர் ஞாயிறை, அவரது உயிர்த்தெழுதலுக்கான நினைவுகூருதலாகவும் ஆசரிப்பது வழக்கமாய்க் காணப்படுகின்றது. ஆனால் ஆதித் திருச்சபையாரைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு ஞாயிறும் நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான நினைவுகூருதலாக அவர்களுக்குக் காணப்பட்டது; அவர் சிலுவையில் அறையப்பட்ட அதே நாளின் முந்தின மாலையில், கடைசி இராப்போஜனம் புசிக்கப்பட்டதில் அடையாளப்படுத்தபட்டதான அவரது மரணமானது, வருடந்தோறும், யூதருடைய பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்டதற்கான நிஜமாக, எபிரெயர்களினுடைய சந்திர காலக்கணக்கிடுதலின்படியான முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியன்று ஆசரிக்கப்பட்டு வந்தது. "பூர்வப்பாதைகளினிடத்திற்குத்" திரும்பிடுவதற்கான விருப்பத்தில், உலகத்தின் ஒவ்வொரு திசைகளிலும் காணப்படுகின்றதான அநேக வாட்ச் டவர் வாசகர்கள், ஆதித் திருச்சபையினுடைய இந்த வழக்கத்தின்படி கைக்கொள்கின்றனர். இந்த வழக்கத்தின் ஏற்புடைமை குறித்து, இதை மனித கணிப்பின்படி, மனித சபல புத்திபடி (அ) கொள்கையின்படி காலாண்டுதோறும் (அ) மாதந்தோறும் (அ) வாரந்தோறும் (அ) தினந்தோறும் ஆசரிப்பதற்கு நவீன வழக்கங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு ஒன்றிரண்டு காரணங்களை வைத்திருப்பவர்களால்கூடக் கேள்விகேட்க முடியாது.

அந்தக் கொள்கைகளில் இரண்டு மாத்திரமே, வேதவாக்கியங்களின்படியானது என்று வலியுறுத்திக் கூறப்படுகின்றது மற்றும் அவைகளுக்கு மாத்திரமே பதில் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாய் உள்ளது.

(1) கர்த்தருடைய மரணமானது தினந்தோறும் நினைவுகூர்ந்து ஆசரிக்கப்பட வேண்டும் என்கிறவர்கள், "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:26) எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை மாத்திரமே சுட்டிக்காட்டுவார்களே ஒழிய, வேறு எதையும் இல்லை. இவர்கள் "போதெல்லாம்" எனும் இந்த வார்த்தைக்குக் கொடுக்கும் அர்த்தத்திற்கு, ஒருநாளில் மூன்று (அ) நான்குமுறை அல்லது ஒவ்வொரு மணி நேரமும்கூடப் பொருந்தும் என்பதை மறந்துவிடுகின்றனர். "என்னை நினைவுகூரும்படி இதைச் (வருடந்தோறும்) செய்யுங்கள்" என்று நமது கர்த்தர் கூறினபோது, "இதைச் செய்யுங்கள்" என்பதற்கே அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 11:25). கர்த்தருடைய சீஷர்கள் யூதர்களாய் இருந்தபடியால், அவர்கள் வருடந்தோறும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பஸ்கா ஆட்டுக்குட்டியினை அடித்து, புசிக்கும் வழக்கம் கொண்டிருந்தனர் மற்றும் இதுமுதல் தம்மை, ஆட்டுக்குட்டியினுடைய நிஜம் என்றும், தம்முடைய மரணமானது, ஆட்டுக்குட்டியினுடைய மரணத்திற்கான நிஜம் என்றும், முதற்பேறானவர்களின் சபையைக் கடந்துபோகுதல் என்பது (அ) மரணத்தினின்று, ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்க்கப்படுதலானது இஸ்ரயேலுடைய

முதற்பேறானவர்களின் தப்புவிக்கப்படுதலுக்கு நிஜம் என்றும் அவர்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டுமென்று நமது கர்த்தர் விரும்பினார் (எபிரெயர் 12:23).

"இதைச் செய்யுங்கள்;"அதாவது பஸ்காவினை ஆசரியுங்கள் என்பது, யூதர்களுக்கான நியாயப்பிரமாணத்தினுடைய கட்டளையாக இருக்கின்றது; ஆனால் தம்முடைய பின்னடியார்களை நியாயப்பிரமாண உடன்படிக்கையினின்று விடுவித்து, புதியதான உடன்படிக்கையின் கீழ் அவர்களை ஏற்றுக்கொண்டபோது, அவர் "இதைச் செய்யுங்கள்" என்றும், வேறு எதையாகிலும் செய்யுங்கள் என்றும் கட்டளையிடவில்லை, மாறாக அன்பு செய்யவே சொன்னார்; இது புதியதான உடன்படிக்கையினுடைய நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது என்று கர்த்தர் தெரிவித்துள்ளார். ஆனால் அவர் பின்வருமாறு கூறினார்: "நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் (வருடந்தோறுமே ஒழிய, அடிக்கடியல்ல, மற்றும் யூதர்கள் தங்கள் பஸ்காவினை ஆசரிக்கும் எண்ணிக்கைக்குக் குறைவாயுமல்ல, அதிகமாகவுமல்ல) (நிழலான பஸ்காவையும் மற்றும் அடித்து, புசிக்கப்பட்டதான நிழலான ஆட்டுக்குட்டியையும் நினைவுகூரும்படியாய் இல்லாமல், மாறாக) என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்;" அதாவது யாருடைய மரணத்தினாலும், இரத்தத்தினுடைய தெளிக்கப்படுதலினாலும், நீங்கள் மரணத்தினின்று, ஜீவனுக்குள் கடந்து போயுள்ளீர்களோ மற்றும் யாருடைய மாம்சத்தை (அடையாளமான) விதத்தில் புசித்ததன் வாயிலாக, நீங்கள் இருளின், பாவத்தின், ஒடுக்குதலின் இராஜ்யத்தினின்றும், (பார்வோன் நிழலாய்க் காணப்படுகின்றதான) சாத்தானுடைய ஆளகையினின்றும், மோசே மற்றும் யோசுவா அடையாளப்படுத்தும் தேவனுடைய அபிஷேகிக்கப்பட்டவருடைய வழிநடத்துதலின் கீழ் பரமகானானுக்குப் பிரயாணிப்பதற்கான பலத்தைப் பெற்றுக்கொள்கின்றீர்களோ அவரை - " உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதான தேவ ஆட்டுக்குட்டியினை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்."

(2) கர்த்தருடைய மரணத்தை ஞாயிறுதோறும் ஆசரிப்பவர்கள், அந்த நாளானது, முற்றிலும் இன்னொரு காரியத்தினை - மரணத்திலிருந்தான நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலை நினைவுகூரும் நாளாக இருக்கின்றது என்பதை நன்கு அறிவார்கள்; எனினும் இவர்கள் ஆதித் திருச்சபையாரால் வாரத்தின் முதல்நாள்தோறும் செய்யப்பட்டு வந்த "அப்பம் பிட்கும்" காரியத்தினால், தங்களது வழக்கத்தினை (ஞாயிறுதோறும் கர்த்தருடைய மரணத்தை நினைவுகூரும் வழக்கத்தினை) நியாயப்படுத்துகிறவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் அவசரப்பட்டு, தவறுதலாய் அர்த்தம் கொண்டுள்ளனர்; அந்த "அப்பம் பிட்குதலானது" சாதாரணமான உணவுகளாக (அ) அன்பின் விருந்துகளாகக் காணப்பட்டு, இரண்டு காரணங்களுக்காகப் புசிக்கப்பட்டன; பசிக்காகப் புசிக்கப்பட்டது மற்றும் இன்னும் விசேஷமாக அவர்கள் கர்த்தருடைய உயிர்த்தெழுதலை நினைவுகூரும்படிக்கு அந்நாளில் ஒன்றுகூடினபடியாலும் புசித்தார்கள்; ஏனெனில் இரண்டு தருணங்களின் போது, அவரது சம்பாஷணையும், வேதவாக்கியங்களை அவர் விளக்கினதும், அவர்களது பயங்களைப் புறம்பாக்கிப்போட்டு, நம்பிக்கையைத் தூண்டிவிட்டு, வெட்கப்படுத்தாத நம்பிக்கையினால் அவர்களது இருதயங்களை, அவர்களுக்குள்ளே

கொழுந்துவிட்டு எரியப்பண்ணினபோது, அவர் அப்பம் பிட்குதல் மூலம் தம்மை, அந்தக் குறிப்பிட்ட நாளில் (ஞாயிறு) அவர்களுக்கு வெளிப்படுத்தினார் (லூக்கா 24:32; உரோமர் 5:5). கர்த்தர் பரமேறிப்போவதற்கு முன்னதாக, மீண்டுமாக இரண்டு தருணங்களில், சாதாரணமான உணவு உட்கொண்டிருக்கையில், தம்மைச் சீஷர்களுக்கு வெளிப்படுத்தி, அவர்களுக்குப் போதித்து, அவர்களை ஊக்குவித்தார்; மற்றும் அநேகமாக இந்த இரண்டு தருணங்களும், வாரத்தினுடைய முதல்நாளில்தான் நடந்திருக்கும் (யோவான் 20:26; 21:13).

ஆகையால் ஆதித் திருச்சபையினர் கர்த்தரோடுகூட ஆவியில் ஐக்கியம் கொள்ளத்தக்கதாக, வாரத்தின் முதல்நாள்தோறும் ஒன்று கூடிடும் வழக்கத்தினை ஏற்படுத்தினதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை; மற்றும் தங்களுக்குக் கிடைத்த முதலாம் அனுபவத்தையும், இருதயம் கொழுந்துவிட்டெரிந்ததையும் குறித்த நிகழ்வுகளையும், நினைவுகளையும் தங்கள் மனங்களுக்கு முன்பாக உற்சாகமூட்டும் விதத்தில் நிறுத்தி, நினைவூட்டுகிறதான "அப்பம் பிட்குதலையும்" மற்றும் வேறே அம்சங்கள் எதையேனும் அவர்கள் தொடர்ந்து செய்யும் காரியத்திலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் இந்த வழக்கத்திற்கும், "நமது பஸ்காவாகிய கிறிஸ்து" அடிக்கப்பட்டபடியால் ஆதிக் கிறிஸ்தவர்கள் முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கருதின வருடந்தோறுமான பஸ்காவிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை (1 கொரிந்தியர் 5:7, 8). நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து, தம்முடைய பலியை, தம்முடைய மாம்சம் மற்றும் தம்முடைய இரத்தத்திற்கான அடையாளங்களாகிய அப்பம் மற்றும் திராட்சரசத்தினால் அடையாளப்படுத்துகின்றார்; ஆனால் அன்பின் விருந்துகள் (அ) "அப்பம் பிட்கப்படுதல்" குறித்துப் பதிவு செய்யப்பட்டுள்ள பகுதிகளில், திராட்சரசம் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை; இன்னுமாக இந்த அப்பம் பிட்குதல்களானது, தலையாகிய நமது கர்த்தருடைய மற்றும் அவரது சரீரமாகிய சபையினுடைய பாடுகள் மற்றும் மரணத்திற்கான நினைவுகூருதல்களாக ஆசரிக்கப்பட்டன என்று எந்தவொரு குறிப்புக்கூட இடம் பெறுவதுமில்லை.

கிறிஸ்தவர்களாகிய நாம், யூதருடைய பஸ்காவையும், யூதர்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டதையும் ஆசரித்துக்கொண்டாடுவதில்லை; நாம் நிழலான ஆட்டுக்குட்டியை அடித்து, புசிப்பதுமில்லை. யூதர்கள் விஷயத்தில் (நீசான்) மாதத்தின் 10-ஆம் தேதியன்று ஆட்டுக்குட்டி தெரிந்தெடுக்கப்படுவதும், 14-ஆம் தேதியன்று ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதுமானவைகள், 15-ஆம் தேதி துவங்கி, ஒருவாரமளவும் நீடிக்கும் பஸ்கா பண்டிகையினின்று வேறானதாகும். யூதர்கள் விசேஷமாகப் பண்டிகையை ஆசரித்தனர்; நாம் தேவனுடைய மாபெரும் ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தை நினைவுகூருகின்றோம் மற்றும் ஆயிரவருட காலையின் விடுதலைக்காகக் காத்திருப்பவர்களாக, இந்தச் சுவிசேஷ யுக இரவில், நாம் நம்முடைய ஆட்டுக்குட்டியினை, துன்பங்கள் எனும் கசப்பான கீரைகளுடன், தற்போது புசிப்பதன் விளைவாக வரும் முழுமையான மற்றும் நித்தியமான சந்தோஷத்திற்கு நிழலாக மாத்திரமே யூதர்களுடைய ஏழு நாட்கள் கொண்ட பண்டிகைக் காணப்படுகின்றது

என்று நாம் புரிந்திருக்கின்றோம். மாம்சீக இஸ்ரயேலினுடைய குருட்டுத்தன்மையானது விலக ஆரம்பிக்கும்போது, கிறிஸ்துவே பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய நிஜம் என்றும், அவரது மரணத்தின் வாயிலாக கடந்துவருகின்றதான ஆசீர்வாதங்களானது, பஸ்கா ஆசீர்வாதங்களுக்கான நிஜங்கள் என்றும், புரிந்துகொள்வார்கள்.

தேதியைக் கணக்கிடுதலில், யூதருடைய முறைமையையே, அதாவது நமது கர்த்தரும், ஆதிச் சபையும் பின்பற்றினதுமான முறைமையை நாம் பின்பற்றுகின்றோம் மற்றும் அது எளிமையானதும்கூட. யூதருடைய (மதச்சார்புடைய) வருடமானது இளவேனில் - இளவேனிற் சம இரவு பகல் நாளுக்குப் பின்னரான அமாவாசை அன்று துவங்குகின்றது. இதிலிருந்து யூதர்கள் தங்கள் மாதத்தினை எண்ணத் துவங்குவார்கள். இந்த வருடம் இளவேனிற் அமாவாசையானது, மார்ச் 26-ஆம் தேதியில் காணப்படுகின்றது மற்றும் இந்த முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியானது, ஏப்ரல் 8-ஆம் தேதியாகும். ஆனால் எபிரெய கணக்கிடுதலின்படி ஒருநாளானது, முந்தின நாளின் மாலை 6 மணியிலிருந்து துவங்குவதினால், நீசான் மாதம் 14-ஆம் தேதியானது, ஏப்ரல் 7-ஆம் தேதி, ஞாயிறு, மாலை 6 மணிக்குத் துவங்குகின்றதாய் இருக்கிறது. ஆகையால் அந்த நாள் மாலை 8 மணியளவானது கர்த்தருடைய இராப்போஜனத்தினுடைய ஆண்டு நிறைவு நாளாய்க் காணப் படுகின்றது.

அந்த வேளையில், நம்முடைய வழக்கத்தின்படியே அலிகெனியிலுள்ள (Allegheny) சபையானது, சரித்திரத்தின் பக்கங்களில் பதிவுபண்ணப்பட்டுள்ளதான மாபெரும் நிகழ்வின் நினைவுகூருதலை ஆசரிப்பார்கள்; அதாவது மற்றவர்களுக்குப் பெரிதாய்த் தோன்றாததும், ஆனால் அனைவருக்குமாய்க் கொடுக்கப்பட்டதான மீட்கும்பொருளில் விசுவாசம் உள்ளவர்களுக்கு மிகவும் பெரிதாய்த் தோன்றுகிறதுமான மாபெரும் நிகழ்வின் நினைவுகூருதலை ஆசரிப்பார்கள். அந்த வேளையில் மாநாட்டிற்கோ (அ) பொதுவான கூடுகைகளுக்கோ எந்த ஏற்பாடுகளும் நாங்கள் செய்யவில்லை; ஆனால் அலிகெனி (Allegheny) பட்டணத்தைக் கடந்துபோகிறவர்கள் எப்போதும் வரவேற்கப்படுவார்கள். இதேமாதிரி சிதறி பல இடங்களில் காணப்படும் ஒரே மனமுடையவர்கள் செய்திடுவதற்கு நாம் பரிந்துரைக்கின்றோம்; அதாவது தங்கள் அருகே குடிக்கொண்டிருக்கும் சகோதர சகோதரிகளுடன் ஒன்றுகூடிடுவதற்கும், 18 நூற்றாண்டுகளுக்கு முன்னதாக நமது கர்த்தரினால், நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள தான மாதிரியினுடைய எளிமைக்கு முடிந்தமட்டும் ஒப்பாக ஆசரித்திடுவதற்கும் நாம் பரிந்துரைக்கின்றோம்.

அப்பம் மற்றும் திராட்சரசமானது, நம் நிமித்தமான நமது கர்த்தருடைய பலியினை அடையாளப்படுத்துகிறதாக மாத்திரம் இராமல், அவரது சரீரமாகிய (அ) சபையாகிய நாம் ஒரே அப்பத்தின் அங்கத்தினர்களென இப்பொழுது மற்றவர்களுக்காகப் பிட்கப்படுவதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இப்படியாய் நாம் கர்த்தரோடு பலியில் பங்கடைபவர்களாகவும், பின்னர் அவரது மகிமையில் பங்கடைபவர்களாகவும் இருப்போம் - "கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (உரோமர் 8:17).

# நினைவுகூருதல் அடையாளங்களின் ஆராதனை ஒழுங்கு

நினைவுகூருதல் இராப்போஜனம் ஆசரிப்புத் தொடர்புடைய விஷயத்தில் ஆராதனை ஒழுங்குமுறை என்னவென்று சகோதரன் ஒருவர் கேட்டு எழுதியுள்ளார் மற்றும் இது அநேகர் அறியவிரும்பும் காரியமாய் இருப்பதினால், நம்முடைய பதிலின் ஒரு பகுதியை இங்குப் பின்வருமாறு வெளியிட்டுள்ளோம்:

ஆராதனை/கூட்டம் துவங்கின பின்பு, அங்கிருக்கும் தகுதி வாய்ந்த ஒருவர் இக்கட்டளையினுடைய முக்கியத்துவம் குறித்துச் சிறுபிரசங்கம் பண்ணுவாராக; அடுத்து அடையாளங்களினுடைய முக்கியத்துவம் குறித்துப் பிரசங்கம் பண்ணும்விதமாக அப்பத்தைப்பற்றி துவங்கி, அது எதை அடையாளப்படுத்துகின்றது என்று தெரிவித்து, சூழ்நிலைக்கேற்ப விரிவாக அல்லது சுருக்கமாக, அங்குச் செய்யப்படுகிறவைகளின் உண்மையான அர்த்தத்தினை முன் வைத்திடுவதற்கு முயல்வாராக. கர்த்தர் நினைவுகூருதலை நிறுவினபோது, அவர் முதலாவதாக ஸ்தோத்திரித்தார் என்று குறிப்பிடுங்கள்; பின்னர் ஒன்றில் நீங்களே ஸ்தோத்திரம் செலுத்துங்கள் அல்லது அங்கிருக்கும் வேறு யாரையாகிலும் ஸ்தோத்திரம் செலுத்த சொல்லுங்கள்; பின்னர் பின்வரும் வார்த்தைகள் சிலவற்றை சொல்லுங்கள்: பஸ்கா இராப்போஜனத்தை, நிழலான ஆட்டுக்குட்டியினைப் புசித்தப் பிற்பாடு, நமது கர்த்தர் "அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக்கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்றார். வார்த்தைக்குப் பொருத்தமாக, அப்பத்தை [எபிரெயர்களிடமிருந்து வாங்கின புளிப்பற்ற அப்பத்தை (அ) புளிப்பற்றவைகளான சோடா ரொட்டி/பிஸ்கோத்து (Soda Biscuits)] பிட்டுக் கொள்ளுங்கள் மற்றும் கூட்டத்தினுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப அதைப் பரிமாறுகிறவர்களின் கைகளில் கொடுங்கள் (அ) நீங்களே பரிமாறுங்கள்.

தியானத்திற்கென்று கொஞ்சம் நேரம், அமைதியாக விடப்படுவது ஏற்றது என்று நாம் எண்ணுகின்றோம். பின்னர்ப் "பாத்திரமானது" அடையாளப்படுத்துகின்ற காரியத்திற்காக யாரேனும் ஒருவர் ஸ்தோத்திரம் செலுத்துவாராக. அடுத்துச் சொல்ல வேண்டியதாவது, "அவர் அந்தப்படியே, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்

பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள். இது பாவமன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்றார்.” [ஒன்றில் grape juice/திராட்சப்பழச்சாற்றை அல்லது திராட்சப்பழச்சாற்றுடன் மிகக் கொஞ்சமான (wine) திராட்சரசம் மற்றும் சர்க்கரைக் கலவையைப் பயன்படுத்துவது சிறந்தது என்று நாம் அறிவுறுத்துகின்றோம்; திராட்சரசம்/wine சேர்க்கையில், அதன்/alcohol வாசனையோ, சுவையோ கண்டுபிடிக்கமுடியாத அளவுக்கு மிகவும் சிறிய அளவில் பயன்படுத்தப்பட வேண்டும்; இப்படிச் செய்வது என்பது கடந்த காலங்களில் மதுபானங்கள்மீது பிரியம் கொண்டிருந்தவர்களுக்கு பாதுகாப்பாய்க் காணப்படும்]. இந்த அடையாளச் சின்னத்தைப் பரிமாறின பிற்பாடு, மீண்டுமாக அமைதியாய்ச் சிந்தனை செய்யத்தக்கதாகக் கொஞ்சம்நேரம் விடுங்கள் மற்றும் அடுத்து கூறவேண்டியதாவது: “அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பிற்பாடு, புறப்பட்டுப்போனார்கள்” என்று எழுதப்பட்டிருக்கிறது. நாமும் இப்படியாகவே செய்வோமாக. அந்த முக்கியமான இரவில், கர்த்தரை கெத்செமனே தோட்டத்தினிடத்திற்கும், சீஷர்களோடு அவர் ஜெபம் பண்ணினதையும், விழித்திருந்து, ஜெபம்பண்ணும்படிக்கு எச்சரித்ததையும், அவர் காட்டிக்கொடுக்கப்பட்டதையும், கைது செய்யப்பட்டதையும், விசாரிக்கப்பட்டதையும், சிலுவையில் அறையப்பட்டதையும் குறித்துச் சிந்தையில் பின்தொடர்ந்திடுவோமாக.

பிரசங்கம் பண்ணிடுவதற்கு/செய்தி கொடுப்பதற்குப்பதிலாக, ரீபிரிண்ட்ஸ் 1289 மற்றும் 1786-லிருந்து வாசிப்பது சில சமயங்களில் நலம் பயக்கின்றதாய்க் காணப்படும்.

# கிறிஸ்துவின் சமாதானம்

என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக்
கொடுக்கிறேன் - யோவான் 14:27

என்ன ஓர் ஆசீர்வாதமான சிந்தை இது!
இனிய பரிசு கிறிஸ்துவிடமிருந்து!
தேவன் அருளியுள்ள மனசமாதானமே.
எந்தப் பூமிக்குரிய உணர்வுகளும் இவ்வளவு இனிமையாய் இருக்கவில்லையே
எந்தப் பூவுலகின் சந்தோஷங்களும் இவ்வளவு முழுமையாய் இருக்கவில்லையே
அன்பின் பிதா கொடுக்கும் சமாதானம் போலவே - ஆம்
ஆவிக்குரியவர்களாய் வாழுகின்றவர்களுக்கு,
கிறிஸ்துவின் சமாதானத்தை அன்பான பிதா அளித்ததுபோலவே.

வாழ்க்கை எனும் சமுத்திரத்தில் சோர்ந்துபோன சகோதரனே
ஆறுதல்படுத்த கிறிஸ்து அங்கே இல்லாத நிலையில்
பேரலைகள் புரளும்போது நினைத்திடு...
உன் ஆன்மாவின்மீது அலையலையாய் வலி சீறி வீசுகையில் நினைத்திடு...
நமக்கென்று ஒரு துறைமுகம் பாதுகாப்பானதாகவும், உறுதியாகவும் உள்ளதென...
அங்கே உன் இருதயம் இளைப்பாறுதல் - அடையலாமே
கிறிஸ்துவின் சமாதானத்தை அடையலாமே.

அன்பான இருதயம் இன்னும் நடுக்கத்துடனும்,
மறந்துவிடுமோ என்ற பாதி பயத்துடனும்,
வழி மாறிவிடுவோமோ என்ற பயத்துடனும்,
நாளெல்லாம் ஐயமுற்றும், நிலையற்றும் இருக்கும் - நீ
உன் நினைவில் கொள்ள வேண்டும்.
கிறிஸ்துவின் சமாதானமென்னும் பரிசான பரிசு
இலவசமாய் உனக்களிக்கப்பட்டிருக்கிறதென்று...

தேவ அன்பும் அதன் பரிமாணமும்
நம் புரிந்துகொள்ளுதலுக்கும் அப்பாற்பட்டதே.
அவரது பலத்த கரத்தின் கிரியைகளை
நம்மில் யாரால்தான் புரிந்துகொள்ளக் கூடும் - ஆனாலும்
என் ஆத்துமாவே இளைப்பாறு! அமைதலாயிரு!
கிறிஸ்துவின் சமாதானம் உனக்கு அருளுவார் என நீ அறிந்ததினாலே.

ஆகையால் இனி என் ஆன்மாவே
உன் பாரங்களை அவர் மார்பில் ஏற்றி இளைப்பாறு.
துக்கம் உன் இருதயத்தை இறுக்கினாலும் - வலி
உந்தன் வாழ்க்கையையும், பலத்தையும் தொடர்ந்து கசக்கிப்பிழிந்திட்டாலும்
உன்னுடைய வருத்தங்கள் மற்றும் கவலைகள் மீதினிலே - தேவன்
பொழிவாரே சுகமாக்கும் தெய்வீகத் தைலமாகிய - கிறிஸ்துவின் சமாதானத்தை.

– Selected (R1876)

# நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதல்

புறமத மண்டலத்தார் மற்றும் ஆச்சாரமான பெயரளவிலான கிறிஸ்தவ மண்டலத்தாருடையவைகளிடமிருந்து வேறுபடுத்திப்பார்க்கையில், உண்மை சபையினுடைய நினைவுகூருதல்களானது சொற்பமானதாகவும், எளிமையானதாகவும் காணப்படுகின்றன. அநேக உபவாசம் மற்றும் பண்டிகை நாட்களையும், வாரங்களையும் பெற்றிருப்பதற்குப்பதிலாக, நாம் மூன்று நினைவுகூருதல்களை மாத்திரம் பெற்றிருக்கின்றோம்; அவை:

(1) ஞானஸ்நானம்; இது ஏற்கெனவே நீதிமானாக்கப்பட்ட மனுஷீக சித்தத்தை, கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய சித்தத்திற்குள் மரிக்கப்பண்ணுவதற்கும், அடக்கம் பண்ணுவதற்குமான அடையாளமாகும்.

(2) நினைவுகூருதல் இராப்போஜனம்; இது நமது கர்த்தருடைய சரீரமானது சொல்லர்த்தமாகவே பிட்கப்பட்டதையும், அவரது இரத்தம் சிந்தப்பட்டதையும் (கல்வாரியில், "மனிதனாகிய கிறிஸ்து இயேசுவென" அவரது மரணத்தையும்) மற்றும் நாம் அவரோடேகூடப் பிழைத்திருக்கத்தக்கதாக, "அவரோடேகூட மரிக்கத்தக்கதாகவும்", நாம் அவரோடேகூட மகிமையடையத் தக்கதாக, "அவரோடேகூடப் பாடுகளைச் சகிக்கத்தக்கதாகவுமான" நம்முடைய உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்வதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

(3)இன்று ஞாயிறு என்று பொதுவாய் அழைக்கப்படுகின்றதான வாரத்தினுடைய முதல்நாளானது, நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான நினைவுகூருதலாகும்.

நமது கர்த்தர் இந்த மூன்று அருமையான, ஆனால் எளிமையான நினைவுகூருதல்கள் அனைத்தையும் நிறுவினார். அவரது ஞானஸ்நானமானது, யூதர்களுக்கென்று மாத்திரம் பிரசங்கிக்கப்பட்டதான "மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானமாகிய" யோவானின் ஞானஸ்நானத்திலிருந்து வேறுபட்டதாயிருக்கின்றது; ஏனெனில் நமது கர்த்தர் மனந்திரும்புவதற்கு எந்தப் பாவங்களையும் பெற்றிருக்கவில்லை. அவரது ஞானஸ்நானமானது புதிய ஒழுங்கின்படியான முதல் ஞானஸ்நானமாய்க் காணப்படுகின்றது; மற்றும் இது ஏற்கெனவே பிதாவினால் அங்கீகரிக்கப்படும் நிலையாகிய நீதிமானாக்கப்பட்ட மனுஷீகத்தின் சித்தத்தினுடைய மரணத்தையும், தேவனுடைய சித்தத்திற்கு முழுமையான ஒப்புக்கொடுத்தலையும், முழுமையான கீழ்ப்படிதலையும், முழுமையான அர்ப்பணிப்பையும்* அடையாளப் படுத்துகின்றதாய் இருக்கின்றது. [*"ஞானஸ்நானமும், அதன் அர்த்தமும்" எனும் ரீபிரிண்ட்ஸ் 1539 பார்க்கவும்]. இது யோவானுடைய ஞானஸ்நானத்தின் இடத்தை எடுத்துக்கொண்டது (அப்போஸ்தலர் 19:3-5).

நினைவுகூருதல் இராப்போஜனத்தையும், ஞானஸ்நானத்தையும், எந்த விதத்தில் நமது கர்த்தர் நிறுவினாரோ, அதைப்போலவே வாரத்தினுடைய முதல் நாளின் காரியத்தையும் நமது கர்த்தர் நிறுவினார்; அதாவது கட்டளையின் மூலமாய் அல்ல, மாறாக மாதிரியின் மூலம் நிறுவினார். அவர் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்னர், உடனே வாரத்தினுடைய முதல்நாளில் சீஷர்களைச் சந்தித்தார்; கல்லறை அருகே மரியாளையும், சீமோன் பேதுருவையும், எம்மாவூருக்குப்போன இருவரையும்,

மேல்வீட்டறையில் பத்துச் சீஷர்களையும் சந்தித்தார் (யோவான் 20:1, 14, 19; லூக்கா 24:13-31, 34, 36). பின்னர் ஒரு வாரம் காத்திருந்து, மீண்டுமாக எட்டாம்நாளில் அவர்களுக்குத் தோன்றினார்; இந்த எட்டாம்நாள் என்பது அநேகமாக ஏழாம்நாளைப் பின்தொடரும் நாளாகும், அதாவது வாரத்தினுடைய முதல்நாளாகும் (யோவான் 20:26). இப்படியான நிகழ்விற்கான எதிர்ப்பார்ப்புகளைச் சீஷர்கள் கொண்டிருந்திருக்கின்றனர் மற்றும் ஒன்றுகூடி இருக்கின்றனர் மற்றும் அவரை அறிந்துகொள்ளத்தக்கதாகத் தங்களுடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டதையும், அதுவும் "அப்பம் பிட்குதல்" தொடர்புடையதாய் இருந்தது என்பதையும் அவர்கள் நினைவு கூர்ந்தவர்களாக, பின்னர் முதல் நாள்தோறும் அவர்கள் கூடிக்கொண்டது மாத்திரமல்லாமல், "அப்பம் பிட்குதல்" என்று அழைக்கப்படுகின்றதான எளிமையான உணவை ஒன்றுகூடிப் புசிக்கவும் செய்தனர். இந்த "அப்பம் பிட்குதலை" நம்முடைய நாட்களில், சிலர் கடைசி இராப்போஜனத்தினுடைய நினைவுகூருதலின் ஆசரிப்பு என்று தவறாய்ப் புரிந்துகொண்டுள்ளனர். இரண்டுமே முற்றிலும் வேறானவைகளாகும்; ஒன்று மரணத்திற்கான நினைவுகூருதலாகவும், மற்றொன்று சந்தோஷத்தோடு உயிர்த்தெழுதலைக் கொண்டாடுதலுமாகும். வாரத்தினுடைய முதல்நாளானது, நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான மற்றும் வெளிப்படுத்துதலுக்கான, ஐக்கியத்திற்கான நினைவுகூரும்நாளாக மாத்திரம் மதிக்கப்படாமல், மீண்டுமாக பெந்தெகொஸ்தே நாளின் தெய்வீகத் தயவானது அதே நாளில் பாராட்டப்பட்டபடியால், அந்நாள் பரிசுத்த ஆவி பொழியப்பட்டதற்கும் நினைவுகூருதலானது. (அப்போஸ்தலர் 2:1; 20:7; 1 கொரிந்தியர் 16:2)

யூதருடைய பஸ்கா இராப்போஜனத்தின் இடத்தில் இடம்பெறத்தக்கதாக, நமது கர்த்தர் நினைவுகூருதல் இராப்போஜனத்தை நிறுவினார். இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள், எகிப்தின்மீது வந்த கடைசி வாதையினின்று விடுவிக்கப் பட்டதற்கும் மற்றும் பின்னர் முழு இஸ்ரயேல் ஜாதியும் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்டதற்கும் நினைவுகூருதலாக ஒவ்வொரு யூதருடைய வருடந்தோறும், முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியன்று, பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலானது செய்யப்பட வேண்டும். நமது கர்த்தர்தாமே, ஆட்டுக்குட்டியி னுடைய நிஜமாவார். அவரது சபை, தப்புவிக்கப்பட்ட இஸ்ரயேலின் முதற்பேறானவர் களுக்கு நிஜமாவார்கள்; மேலும் தேவனை அன்புகூருகின்றவர்கள் அனைவரும் சாத்தான் கீழுள்ள பாவம் மற்றும் மரணம் எனும் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படப்போகின்றதான, வரவிருக்கும் "திரும்பக்கொடுத்தலானது," இஸ்ரயேல் ஜாதியாருடைய விடுதலைக்கான நிஜமாகும்.

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதும், அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதுமான பலியை செலுத்தின தேவ ஆட்டுக்குட்டியின் மாம்சத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றதான புளிப்பில்லா அப்பம் மற்றும் திராட்சரசமுள்ள நினைவுகூருதல் இராப்போஜனமானது, முதற்பேறான சபையானவளின் நினைவில் அவள் வாங்கப்படுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விலையினை எப்போதும் ஞாபகம் வைப்பதற்கும், கிறிஸ்துவினுடைய பாடுகளில் ஐக்கியம் கொள்வதற்கு தன்னை அவள் ஒப்புக்கொடுப்பதற்கு உறுதியளிப்பதற்கும் நோக்கம் கொண்டுள்ள

தாய்க் காணப்படுகின்றது (1 கொரிந்தியர் 10:16, 17; 11:26). ஆகையால் இது நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்ட அதே இரவில், (எபிரெய நாளானது மாலை 6 மணி முதற்கொண்டு, அடுத்த மாலை 6 மணி என்று கணக்கிடப்படுவதால்) அவர் சிலுவையில் அறையப்பட்டதான அதே நாளில் நிறுவப்பட்டது.

நீசான் 15-ஆம் தேதி துவங்குகின்றதும், ஒரு வாரம் நீடிக்கின்றதுமான பஸ்கா பண்டிகையினைக் கொண்டாடுவது நமது கர்த்தருடைய நோக்கமாயிராமல், மாறாக நீசான் மாதம் 14-ஆம் தேதியன்று தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதல் ஒன்றை நமக்குக் கொடுப்பதே அவரது நோக்கமாய் இருந்தது. (நினைவுகூருதல்) அது ஆதித் திருச்சபையாருக்குக் களிகூருதலுடைய பண்டிகையாக இருப்பதற்குப்பதிலாக, துக்கமும், திகைப்புமுள்ள தருணமாய்க் காணப்பட்டது. இயேசுதாமே "ஆழ் துயரம் கொண்டிருந்தார்" (மத்தேயு 26:38; திருவிவிலியம்)

இந்த நினைவுகூருதலானது, பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதற்கான நிஜத்தினை நினைவுகூரும் ஆசரிப்பு என்று காண்கையில், இது இதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிக்கப்படுவதே ஏற்றதாயிருக்கும் என்று நம்மால் காணமுடிகின்றது; இது மாதந்தோறும், காலாண்டுதோறும், வாரந்தோறும் (அ) நாள்தோறும் ஆசரிக்கப்படாமல், வருடந்தோறும் ஆசரிக்கப்படவேண்டும் என்றும், அதுவும் வருடத்தினுடைய எந்த ஒரு காலப்பகுதியில் நமது கர்த்தர் மரித்தாரோ மற்றும் எப்போது அவர் நினைவுகூருதலை நிறுவினாரோ, அதே காலப்பகுதியில் ஆசரிப்பது ஏற்றது என்றும் நம்மால் காணமுடிகின்றது. இதுவே ஆதித் திருச்சபையாருடைய வழக்கமாய் இருந்தது; இவர்கள் இதற்கான தேதியை, யூத காலக்கணக்கீட்டு முறைமையின்படி கவனித்தவர்களாய் இருந்தார்கள். இதிலிருந்து முதலாவதாக திசைமாறியது, உரோம கண்காணியினுடைய தலைமையின் கீழுள்ள சபைகள் ஆகும்; மற்றும் நீசான் மாதம் 14-ஆம் தேதியானது (வாரத்தின்) ஏதோ ஒருநாளாக இருக்க, இவர்கள் இதற்குப்பதிலாக, அதற்கு அருகாமையிலுள்ள வெள்ளியை, இதற்கு என்று ஏற்படுத்தி, நியமித்து, ஆசரித்தனர். இதுவே "புனித வெள்ளிக்கான" ஆரம்பமாகும் மற்றும் இதனைத் தொடர்ந்துவரும் மூன்றாம் நாளானது பஸ்கா ஞாயிறு என்று அழைக்கப்பட்டது மற்றும் பிற்பாடு இது "ஈஸ்டர் ஞாயிறு" என்று அழைக்கப்பட்டது. பின்னர் (கி.பி. 325-இல்) நைஸ் மாநாட்டின் கட்டளையினாலும் மற்றும் பிற்காலத்தில் போப் கிரிகோரி XIII அவர்களால் ஆண்டுக்குறிப்பேட்டில் (calendar) பண்ணப்பட்ட திருத்தத்தினாலும், கத்தோலிக்க திருச்சபைகள் என்று அழைக்கப்படுகின்றதானது, ஒப்பந்தத்திற்குள் வந்து, "புனித வெள்ளிக்கும்," "ஈஸ்டர் ஞாயிறுக்குமான" தேதிகளை வருடந்தோறும் நிர்ணயிக்கிறவர்களானார்கள்.

"பூர்வப் பாதைகளை" கடந்த 20 வருடங்களாக நாடி தேடிக்கொண்டிருக்கின்ற நாம் நினைவுகூருதல் இராப்போஜனத்தை, நமது கர்த்தரினாலும், அப்போஸ்தலர்களினாலும் அங்கீகரிக்கப்பட்டதான எபிரெய காலக்கணக்கிடுதலின்படி கணக்கிடப்படும், அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரித்து வந்துள்ளோம் (எரேமியா 6:16). எபிரெய காலக்கணக்கிடுதல் முறைமையானது எளிமையான மற்றும் சுலபமான ஒன்றாகும். அவர்கள் தங்கள் வருடத்தினுடைய துவக்கத்தினை (தங்கள் முதலாம் மாதமாகிய நீசான் மாதத்தின் துவக்கத்தினை) இளவேனிற் சம இரவு பகல்

நாளின்/Spring Equinox அமாவாசையன்று பெற்றிருக்கின்றனர் மற்றும் 14-ஆம் தேதி இரவு, 6 மணிக்கு (6 pm) அவர்களது பஸ்கா பண்டிகையினுடைய முதல்நாளாகிய 15-ஆம் தேதியானது துவங்குகின்றது (யாத்திராகமம் 12:2).

இந்த வருடம் சம இரவு பகல் நாளின் அமாவாசையானது (அ) நீசான் மாதமானது மார்ச் 15-ஆம் தேதி ஆரம்பமாகின்றது; ஆகையால் இதன் 15-ஆம் நாள் (அ) எபிரெயர்களுடைய பஸ்கா வாரத்தினுடைய துவக்கமானது 29-ஆம் தேதியாக இருக்கின்றது. பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதும், "தேவ ஆட்டுக்குட்டியாகிய" நமது கர்த்தருடைய மரணத்தின் ஆண்டு நிறைவு நாளுமாகிய நீசான் 14-ஆம் தேதியானது மார்ச் 28-ஆம் தேதியாகக் காணப்பட்டு, எபிரெய கணக்கிடுதலின்படி 27-ஆம் தேதி சூரிய அஸ்தமனத்துடன் ஆரம்பமாகின்றதாய் இருக்கின்றது. நமது கர்த்தர் நினைவுகூருதலை முந்தின மாலையில் நிறுவினதால், நாமும் அவ்வாறே ஆசரிக்கின்றோம்.

இந்த வழக்கத்தின் பிரகாரமாக, அலிகெனியிலுள்ள (Allegheny) சபையார், மார்ச் 27-ஆம் தேதி, மாலை 8 மணிக்கு, மனுக்குலம் அறிந்துள்ள மாபெரும் நிகழ்வினை நினைவுகூர்ந்து ஆசரிப்பதற்கென ஒன்றுகூடிக்கொள்வார்கள். நம்முடைய ஆராதனையைப் பொறுத்தமட்டில் அது மிக எளிமையானதாகக் காணப்படும் மற்றும் அதில் துதி சாற்றுதல், ஜெபம், ஆசரிக்கப்படும் அடையாளங்களின் மற்றும் நிஜங்களின் அர்த்தங்களை மீண்டுமாகச் சிந்தித்துப்பார்த்தல், மற்றும் பஸ்கா - அப்பமும் (புளிப்பில்லாத அப்பம்), திராட்சப்பழரசமுமாகிய (fruit of the vine) அடையாளங்களில் பங்கெடுத்தல் நடைபெறும். [திராட்சப்பழரசத்தின் விஷயத்தில் (fruit of the vine), நாம் wine/திராட்சரசத்திற்குப்பதிலாக புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாற்றை (grape juice) அல்லது உலர் திராட்சரசத்தைத் தேர்ந்தெடுக்கின்றோம்; ஏனெனில் முந்தய காலங்களில் மது பழக்கம் உள்ளவர்களுக்கு, நாம் இது சோதனையாய் அமையாதபடிக்குத் தவிர்த்திட வேண்டும்; (wine) "திராட்சரசம்தான்", திராட்சப்பழரசமாக இருக்குமே ஒழிய (fruit of the vine), வேறு எதுவுமல்ல என்று கருதுகிறவர்களுக்கு ஒரு கரண்டியளவு திராட்சரசம் (wine) சேர்த்துக்கொள்ளலாம். புளிப்பற்ற அப்பமானது எபிரெய குடும்பங்களிடமிருந்து எளிதாய்ப் பெற்றுக் கொள்ளப்படலாம்; இப்படிப் பெற்றுக்கொள்ள முடியவில்லையெனில் புளிப்பற்ற அப்பமாகிய சோடா ரொட்டி (அ) மாவு மற்றும் தண்ணீர்கொண்டு செய்த சாதாரணமான ரொட்டியைப் (soda crackers or water crackers) பயன்படுத்திக்கொள்ளலாம்].

இந்த ஒரு தருணத்தினுடைய விசேஷ அம்சமானது, தேவனுடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதான அடையாளங்களினுடைய அர்த்தத்தினை உணர்ந்து, புரிந்துகொள்ளுதலின் மூலமாகக் கர்த்தரோடுகூட உள்ள இருதய ஐக்கியமாகும். அந்த அடையாளங்களானது நமது மீட்பருடைய பலியை அடையாளப்படுத்துகின்றது என்று மாத்திரமல்லாமல், அவரது சரீரத்தின், சபையின் அங்கத்தினர்களென, நீதியினிமித்தமான பாடுகளில் அவரோடுகூட ஐக்கியம் கொண்டிருப்பதற்கான நம்முடைய சிலாக்கியத்தையும், அதாவது அதிலுள்ள நம்முடைய தனிப்பட்ட பங்கெடுப்பையும் அடையாளப்படுத்துகின்றது என்றும் உணர்ந்து, புரிந்துகொள்ளப்பட வேண்டும். "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின்

பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?" (1 கொரிந்தியர் 10:16, 17). பொருத்தமான ஸ்தோத்திரபாட்டுடன் முடிவுசெய்து, சம்பாஷணைகளைத் தவிர்ப்பதற்கும், இவ்விதமாய் நினைவுகூரப்பட்டதான மாபெரும் நிகழ்வு தொடர்புடைய எண்ணங்களினால், "ஐக்கியத்தினை" தொடர்ந்து நீடிப்பதற்கும், நமது கர்த்தரை கெத்செமனேக்கும், அடுத்தநாளில் கல்வாரிக்கும் சிந்தனையில் தொடர்வதற்கும் நாம் நாடுகின்றோம் மற்றும் இதற்கிடையில் அவருக்கு நம்முடைய அன்பைக் காட்டுவதற்கு எவ்வளவு கொஞ்சமே நம்மால் முடிகின்றது என்று யோசித்துப்பார்த்து, அவரது ஊழியத்தில் ஒவ்வொரு மணி நேரத்தையும் ஒவ்வொரு சிறுசிறு செல்வாக்குகளையும் பயன்படுத்திடும் விஷயத்தில் ஜாக்கிரதையாய் இருப்பதற்கு மிகவும் வைராக்கியமாய்க் காணப்படுவோம் என்று உறுதி எடுக்க நாடுகின்றோம்.

"விலையேறப்பெற்ற இரத்தத்தில்" விசுவாசமுள்ள நண்பர்கள் எவரும், எங்களோடு கூடிடுவதற்கு உள்ளன்போடு வரவேற்கப்படுவார்கள். எனினும் சகோதர சகோதரிகள் அதிக எண்ணிக்கையிலுள்ள கூட்டத்தாருடன் ஒன்றுகூடும் சிலாக்கியங்களை அனுபவிக்கத்தக்கதாக, தங்கள் சொந்த ஊர்களிலுள்ள சிறிய எண்ணிக்கையிலான கூட்டத்தாரை முடிந்தமட்டும் விட்டுச்செல்ல வேண்டாமென்று நாம் அறிவுரைக் கூறுகின்றோம். இரண்டு (அ) மூன்றுபேர் கர்த்தருடைய நாமத்தில் கூடிக்கொள்ளும்போது, அவர் அவர்களை ஆசீர்வதிக்கின்றார். கிறிஸ்துவினுடைய சரீரத்திலுள்ள சகல அங்கத்தினனுடைய நலனுக்காக ஒவ்வொருவனும் தன் சொந்த விருப்பங்களைத் தியாகம் செய்திடுவதற்கு முழுக்க விருப்பமுள்ளவனாக இருப்பானாக. மேலே குறிப்பிட்டுள்ள வசனத்தின்படி மற்றவர்களுக்காகப் பிட்கப்படும்போது, பலன்கள் எப்போதும் ஆசீர்வாதமாய் இருக்கும்.

கர்த்தருடைய அன்புக்குரிய மந்தையிலுள்ள அனைவரும், அலிகெனியிலுள்ள (Allegheny) எங்களையும் மறந்துபோகாமல், உங்கள் ஜெபங்களில் நினைத்துக் கொள்ளுங்கள் மற்றும் நாங்களும் உங்கள் அனைவரையும் நினைத்துக்கொள்வோம்.

நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்.

பிசாசின் தந்திரங்களுக்கு எதிராக ஒவ்வொருவனும் ஜாக்கிரதையாய் இருப்பானாக. நமது கர்த்தருடைய பாடுகளுக்கான ஆண்டு நிறைவு நாளை மாத்திரமல்லாமல், யூதாசினுடைய துரோகத்திற்கும், போலி முத்தத்திற்கும், "நானோ?" என்ற கேள்விக்குமான ஆண்டு நிறைவு நாளினையும் நாம் நெருங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். கர்த்தரோடும், அவருடையவர்களாய் உண்மையில் காணப்படுவோர்களோடும் ஐக்கியம் கொண்டிருக்கத்தக்கதாக, ஒவ்வொருவனும் தனது இருதயமானது, கர்த்தரிடத்திலும் "அவரது சரீரத்தின்" ஒவ்வொரு அங்கத்தினர்களிடத்திலும் அன்பும், ஈடுபாடுமுள்ள மனப்பான்மையில் காணப்படுகின்றதா என்று ஆராய்ந்துப்பார்ப்பானாக. வேறே மனப்பான்மை காணப்படுமாயின், சாத்தான் "உட்புகும்" அபாயம் காணப்படுகின்றது (லூக்கா 22:3). அப்படியான "அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாய் இருக்கும்" (மத்தேயு 12:45; லூக்கா 11:26).

## நசரேயனாகிய இயேசு

அதிகாலை விடிவெள்ளியின் மங்கிய காலைப்பொழுதினில்,
தற்காக்க முயற்சியாமல் கைவிடப்பட்ட கைதி ஒருவர் நின்றார்.
மூர்க்கத்தனமாய் அவருடைய மரணத்திற்காக உரோமானிய
நீதிபதியிடம் கைதியை மூர்க்கத்தனமாய்க் குற்றம்சாட்டிக்
கொண்டிருந்தவர்கள் கோரிக்கை வைத்துக் கூக்குரலிட்டனர்.

அவர் கிறிஸ்து; நிராகரிக்கப்பட்டவரும் குற்றஞ்சாட்டப்பட்டவருமாய் இருந்தார்;
இராஜாதி இராஜாவாகிய அவருடைய சர்வ வல்லமை மறுக்கப்பட்டது;
தேவகுமாரன் புறக்கணிக்கப்பட்டார் மற்றும் காட்டிக்கொடுக்கப்பட்டார்;
அவர் உண்டாக்கின உலகில் ஒதுக்கப்பட்டவரானார்.

அவரது தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களின் கோரிக்கையை
அத்துணிச்சலற்ற நீதிபதி எதிர்த்திடுவதற்கு வல்லமையற்று இருந்தாரே;
ஆதாரமற்ற அவர்களது குற்றச்சாட்டுகளை அவர் ஏற்க
மறுத்தபோதிலும், இறுதியில் சிலுவையில் அறையப்படுவதற்கு
அவர்களது கைதியை அவர்களிடம் ஒப்புக்கொடுத்தார்.

அவரது தெரிந்துகொள்ளப்பட்ட அந்த ஜனங்களே!
அவர் நேசித்து ஆசீர்வதித்த அந்த ஜனங்களே;
மார்போடு அவர் அணைத்திருந்த அவர்களது பிள்ளைகளே;
அவர் அமைதியாய் நிற்கையில் மிகக் கடுமையாகக்
கூச்சலிட்டனரே: "எங்கள் மீதும், எங்கள் பிள்ளைகள் மீதும்
இவரது இரத்தப்பழி இருக்கட்டும்" என்றார்களே.

ஓ, பரிசுத்த இரட்சகரே! உம் கிருபையானது அந்தச் சாபத்தினுடைய,
கொடூரந்தனை மாற்றிப்போடட்டுமே; அவர்களது பிள்ளைகளின்மீது
உம்முடைய பாவநிவாரண பலி மீட்கும்,
அன்பின் மூலமான தெளிக்கப்படும் இரத்தம் ஆகட்டுமே!

– Francis De Haes Fanvier (R843)

# நினைவுகூருதல் இராப்போஜனம்

நமது கர்த்தரினால் நிறுவப்பட்டதும், அப்போஸ்தலர்களாலும், ஆதித் திருச்சபையாராலும் தொடரப்பட்டதுமான நினைவுகூருதல் இராப்போஜனமானது, பஸ்கா இராப்போஜனத்திற்குப்பதிலாக யூதருடைய முதல் மாதமாகிய நீசான் 14-ஆம் தேதியன்று இடம் பெற்றதாய் இருக்கின்றது. ஆதித் திருச்சபையாருடைய இந்த வழக்கமானது இன்றும் ஆங்கில, உரோம, கிரேக்க, அர்மேனிய மற்றும் மற்ற "கத்தோலிக்க" திருச்சபைகளினாலும், லூதரன் திருச்சபைகளாலும் கைக்கொள்ளப் பட்டு வருகின்றது. ஆனால் அப்போஸ்தலர்களுடைய மரணத்திற்குப் பின்னர் உடனடியாகச் சடங்கு, ஆச்சாரங்களானது படிப்படியாக உட்புகுந்து, மிகவும் பெரியளவில் உண்மையான, எளிமையான நினைவுகூருதல் ஆசரிப்பை வேறுமாதிரியாக்கிவிட்டது. பின்னர் பூசைபலி எனும் கருத்துக்கூட மலர்ந்தது; அதாவது குறிப்பிட்ட பாவங்களுக்கான மன்னிப்பிற்காகக் கிறிஸ்துவை மீண்டும், மீண்டுமாகக் பலிச்செலுத்தும் திருப்பலி/பூசைபலி எனும் கருத்துக்கூட மலர்ந்தது. பூசைபலி என்பது கல்வாரியில் நடைப்பெற்றதான மாபெரும் பலியினுடைய நினைவுகூருதல்கள் இல்லை மற்றும் அடையாளமான விதத்திலான பலிகளும் இல்லை, மாறாக அது புதிதாயும் மற்றும் உண்மையாயும் பலி செலுத்துதலைக் குறிக்கின்றதாகும். பூசைபலியானது எந்தக் குறிப்பிட்ட பாவங்களுக்காக ஏறெடுக்கப்படுகின்றதோ, அந்தப் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, கிறிஸ்துவைக் குருவானவர் புதிதாய்ப் பலியிடத்தக்கதாக, சாதாரணமான அப்பத்தையும், திராட்சரசத்தையும் கிறிஸ்துவின் நிஜமான சரீரமாகவும், இரத்தமாகவும் மாற்றிடுவதற்குக் குருவானவர் விசேஷமாய்ப் பணியமர்த்தப்பட்டிருக்கின்றார். இந்தப் பூசைபலியானது - எந்த ஒரு நாளினுடைய (அ) இரவினுடைய எந்த ஒரு வேளையிலும் அனுசரிக்கப்படலாம் என்ற காரியம் தவிர, மற்றப்படி - அநேக விதங்களில் நினைவுகூருதலின் இராப்போஜனத்தை நிறுவினப்போது, கர்த்தர் அப்பத்தையும், திராட்சரசத்தையும் பிட்டு, ஆசீர்வதித்தையே விவரிப்பதுபோன்று தோன்றுகின்றதாய் இருக்கின்றது.

இது தொடர்புடைய விஷயத்தில் சுமார் ஆயிரம் வருடங்களாகக் காணப்பட்டதான தவறானப் போதனைகள் மற்றும் தவறான அனுசரிப்புகளுக்குப் பிற்பாடு புராட்டஸ்டண்டினர்கள் விழித்தெழுந்து, "பூர்வ பாதைகளைக்" கண்டுபிடிப்பதற்கென நாடினபோது, அவர்கள் இந்த விஷயத்திலும், மற்ற விஷயங்களிலும் போப்மார்க்கத்தின் தப்பறைகள் அனைத்தையும் கண்டுபிடிக்கத் தவறினதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இவர்கள் பாவங்களுக்கான கூடுதல் பலிகள் என்ற (பாழாக்கும் அருவருப்பு என்று வேதவாக்கியங்களில் அழைக்கப்படு கின்றதான) போப்மார்க்கத்தின் பூசைபலியினை விலக்கிவிட்டாலும் மற்றும் "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் (கிறிஸ்து) என்றென் றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" என்று நம்பினாலும் மற்றும் கற்பித்தாலும், இவர்கள் திருவிருந்து என்று அழைக்கின்ற ஆசரிப்பின் விஷயத்தில் அடிக்கடி ஆசரிக்கும் காரியமானது, பூசை பலி அடிக்கடி ஆசரிப்பதுபோன்றது என்கிறதும், நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டு நிறைவு நாளே, அதன் நினைவுகூருதலை

ஆசரிப்பதற்கான ஏற்ற ஒரேவேளை மற்றும் நியமிக்கப்பட்ட ஒரேவேளை என்கிறதுமான உண்மைகளைக் காணத்தவறினவர்களாகக் காணப்படுகின்றனர். (எபிரெயர் 10:14)

ஆகையால் சிலர் இதை வருடத்திற்கு மூன்றுமுறை என்றும், சிலர் நான்குமுறை என்றும், சிலர் வாரந்தோறும் என்றும் ஆசரிக்கின்றனர். "அடிக்கடி ஆசரிப்பதே சிறந்தது" என்ற வாதம் சரியானதாய் இருக்குமானால், ஏன் தினந்தோறும் அதை அவர்கள் ஆசரிக்கக்கூடாது? ஏதேனும் வேளையில் அது உண்மையாய்ச் செய்யப்படும்போது, அது பூசைபலிபோன்று பாவமான அருவருப்பு என்று நம்மால் சொல்லமுடியாது என்றாலும், இன்றைய நாட்களின் மனிதர்கள் நமது கர்த்தரையும், சபையின் தேவ ஏவுதலின் பேரிலான போதகர்களாகிய அப்போஸ்தலர்களைக் காட்டிலும் ஞானவான்கள் இல்லை என்பதிலும், ஆதி நிறுவுதலின் காரியங்களிலிருந்து எதிலாகிலும் மாறுவது என்பது பாதகமானதாகவே இருக்கும் என்பதிலும் நமக்கு நிச்சயமே. நினைவுகூரப்படும் காரியத்திற்குச் சம்பந்தமில்லாமல் திரும்பத்திரும்ப ஆசரிக்கப்படுவதின் காரணமாக இந்நிகழ்வானது, அதன் முக்கியத்துவத்தையும், அதன் தாக்கத்தினையும் இழந்துபோகின்றது. தேசம் சார்ந்த நினைவுகூருதல் களானது, வருடத்திற்கு மூன்று முதல் ஐம்பது முறைகள் திரும்பத்திரும்பக் கொண்டாடப்பட்டால், அவைகள் எந்த முக்கியத்துவத்தை மனதில் பதியத்தக்கதாக கொடுக்கப்பட்டதோ, அந்த முக்கியத்துவத்தை எவ்வளவாய் இழந்துபோகின்றதாய் இருக்கும்! உதாரணத்திற்கு ஜூலை 4-ஆம் தேதியானது, ஐக்கிய நாடுகளினுடைய அரசாங்கம் நிறுவப்பட்டதாகிய மாபெரும் நிகழ்வின் தேதியாகும் மற்றும் இது பொதுவாய்க் கொண்டாடப்படுகின்றது. ஒருவேளை இது வாரந்தோறும் (அ) காலாண்டுதோறும் கொண்டாடப்பட்டால், இப்படிச் செய்வதென்பது இதன் முக்கியத்துவத்தையும், தாக்கத்தினையும் இழக்கச்செய்கிறதாய் இருக்குமல்லவா? நிச்சயமாகவே ஆகும்; இப்படியாகவே நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலின் விஷயத்திலாகும்; இதன் ஆண்டு நிறைவு நாளே, இது ஆசரிக்கப்படுவதற்கு ஏற்ற ஒன்றாகவும், நியமிக்கப்பட்ட ஒன்றாகவும் காணப்படுகின்றது. ஆதியில் நிறுவப்பட்ட விதம் கவனிக்கத்தவறப்பட்டபோது, பரவலாய்க் கவனமின்மையும், அலட்சியத்தன்மையும் ஏற்பட்டது; இதனால் இது எப்போதும் வேதவாக்கியங்களில் "இராப்போஜனம்" என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இது இப்பொழுது பொதுவாய் மதியவேளையில் ஆசரிக்கப்படுகின்றது மற்றும் ஒருபோதும் இதன் மாதிரிபடி இராப்போஜனமாக (அ) மாலை உணவாகப் புசிக்கப்படுவதில்லை.

"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:26) என்ற வார்த்தைகளானது, "இதை உங்கள் விருப்பத்திற்கேற்ப அடிக்கடி செய்யுங்கள்" என்ற அர்த்தத்தைக் கொடுப்பதாக அநேகரால் தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுகின்றது. ஆனால் "இதை" என்ற வார்த்தைக்கே கவனம் கொடுக்கப்பட வேண்டும்; நமது கர்த்தரினால் நிறுவப்பட்டதான இந்த வருடாந்தர நினைவுகூருதலை, நீங்கள் ஆசரிக்கும்போதெல்லாம், நீங்கள்

அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் மற்றும் இப்படியாக அவரது இரண்டாம் வருகைவரையிலும், அதாவது நினைவுகூருதலில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதான அனைத்தும் முடிவடைகின்ற (அ) நிறைவேறி தீருகின்றதான காலப்பகுதியாகிய, அவரது இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, நீங்கள் மகிமையடையும் காலம்வரை செய்யவேண்டும்.

தேவனுடைய ஜனங்களானவர்கள் "பூர்வ பாதைகளை" நாடுகின்றபடியால் (எரேமியா 6:16), தற்காலத்தினுடைய சத்தியத்தின் வெளிச்சமானது பரவுகையில், மீட்பின் மைய உண்மையை (மாபெரும் பாவநிவாரண பலியை) அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிப்பவர்களின் எண்ணிக்கையானது அதிகரித்துவருகின்றது; அநேகமாக 5-ஆம் நூற்றாண்டிலிருந்து இதுவரைக்கும் காணப்பட்டதிலும், அதிகமான எண்ணிக்கையில், இந்த வருடம், தேவனுடைய ஜனங்கள் தங்கள் மீட்பரை நினைவுகூரும் வகையில் அவரது மரணத்தினுடைய ஆண்டு நிறைவு நாளில் "இதைச் செய்வார்கள்."

ஆண்டு நிறைவு நாளை கணக்கிடும் முறைமையை "கத்தோலிக்க" திருச்சபைகள் கொஞ்சம் மாற்றிக்கொண்டதால் அவர்கள் எப்போதுமே ஒரு வெள்ளிக்கிழமையை, நம்முடைய கர்த்தருடைய மரணத்திற்கென்றும் (புனித வெள்ளி என்றும்), தொடந்துவரும் ஞாயிற்றுக்கிழமையை, அவரது உயிர்த்தெழுதலுக்கென்றும் (ஈஸ்டர் ஞாயிறு என்றும்) ஆசரிக்கின்றனர். வராத்தினுடைய குறிப்பிட்ட சில நாட்கள் என்று கவனம்கொடுக்காமல், ஆதித்திருச்சபையினர் யூதருடைய கணக்கிடுதல் முறைமையையே பின்பற்றினார்கள் மற்றும் நாமும் அப்படியாகவே செய்கின்றோம். சிலரால் பின்வருமாறு கூறப்படுகின்றது: அதாவது இளவேனிற் சம இரவு பகல் நாளில் (அ) இதற்குப் பின்னர் உள்ள அமாவாசையுடன், ஒவ்வொரு வசந்த/இளவேனிற் காலத்திலும், யூதர்கள் மாதங்களினுடைய ஆரம்பத்தினைச் சடுதியாய்/திடீரென்று பெற்றிருப்பதினால், பொதுவாகவே ஓய்வுநாளாகவும், ஒரு சுற்றினுடைய புதிய ஆரம்பமுமான பஸ்காவின் துவக்கத்துடன், வாரத்திற்கான துவக்கம் திடீரென்று துவங்குகின்றது; எப்படியாக இருப்பினும், அவர்களது பஸ்கா வராமானது எப்போதும் தெய்வீகக் கட்டளையின்பேரில் நீசான் 15-ஆம் தேதியன்றே ஆரம்பமானது (யாத்திராகமம் 12; எண்ணாகமம் 28:16, 17).

கிறிஸ்தவர்களாகிய நாமோ, பஸ்கா வாரத்தினை ஆசரிப்பதில்லை. பஸ்கா வாரத்திற்கான நிஜமானது, இராஜ்யத்தின் மகிமை எதிர்க்காலத்தில் அனுபவிக்கப்படும்போது நிறைவேறுகின்றதாய் இருக்கும். யூதர்கள் அவ்வளவுக்குக் கவனம் செலுத்தாத (அ) கவனமே செலுத்தாத நீசான் 14-ஆம் தேதியையே நாம் ஆசரிக்கின்றோம். நீசான் 14-ஆம் தேதியானது பொதுவாய் ஆசரிக்கப்பட்டு வந்ததாய்த் தோன்றுகின்றது; ஆனால் யூதர்கள் நேரத்தின் விஷயத்தில் அதிருப்திக்கொண்டு, தொழிலில் ஈடுபடுவதற்கு ஒருநாளை கூடப்பெற்றுக் கொள்ளத்தக்கதாக, இராப்போஜனத்தையும் 15-ஆம் தேதியுடன்கூடத் திணித்துக்கொண்டார்கள். 14-ஆம் தேதியில் பஸ்கா ஆட்டுக்குட்டியினை அடிப்பதும், புசிப்பதும் இரண்டும் செய்யப்படுவது சரியே; ஏனெனில் இப்படியே நமது கர்த்தரும்,

பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் செய்தார்கள் மற்றும் அதே நாளில்தானே நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார்; இதனை மாலை 6 மணியோடு ஒவ்வொரு நாளையும் துவக்கும் யூதருடைய கால ஏற்பாடானது சாத்தியமாக்கிற்று (லேவியராகமம் 23:5, 6).

யூதருடைய கணக்கீட்டுமுறைமையின்படி கணக்கிடும்போது, நீசான் 14-ஆம் தேதியானது, இந்த வருடம் ஏப்ரல் 15-ஆம் தேதி, வியாழன் அன்று, மாலை 6 மணிக்குத் துவங்குகின்றது. இரவு 8 மணிக்கு, அலிகெனியிலுள்ள (Allegheny) சிறு கூட்டத்தாரையும் உள்ளடக்கின நிலையில், உலகமெங்கும் காணப்படுகின்றதான உண்மையுள்ள கிறிஸ்தவர்களாகிய கொஞ்சம்பேர், நம்மை அன்புகூர்ந்தவரும், நமக்காகத் தம்மையே கொடுத்தவருமானவரை நன்றியோடு நினைவுகூரும் வகையிலும், இந்தத் தற்காலத்தின் பாடுகளிலும், சோதனைகளிலும், அவரோடும், அவருடையவர்கள் அனைவரோடும்கூட ஐக்கியப்படுவதற்கு உறுதிகொடுக்கும் வகையிலும், எதிர்க்காலத்தில் அவரது மகிமையில் ஐக்கியப்படுவதற்கான நமது நம்பிக்கைகளைத் தெரியப்படுத்தும் வகையிலும் நினைவுகூருதலின் அப்பத்தைப்பிட்டு, நினைவுகூருதலின் திராட்சப்பழ ரசத்தைச் சுவைப்பார்கள். வாசகனே, நீ அந்த வேளையில் எங்களோடு கலந்துகொள்ள மாட்டாயா? தனிமையில் ஆசரித்தாலும் சரி, சிறுசிறு கூட்டத்தினராய் ஆசரித்தாலும் சரி, பல நூறு மைல்கள் தொலைதூரத்தில் ஆசரித்தாலும் சரி, நாம் நிச்சயமாய் விசேஷித்த ஆசீர்வாதத்ததைப் பெற்றுக் கொள்வோம்; மற்றும் இதை நாம் நாடுவோமானால், சந்தேகத்திற்கிடமின்றி நாம் நமது பரலோக மணவாளனுக்கு விசேஷமாய் அருகாமையில் வரவேற்கப்படுவோம் மற்றும் அவரது சிலுவையைச் சுமப்பதற்கும், பிசாசின் தந்திரங்களை எதிர்த்து நிற்பதற்கும் விசேஷமாய்ப் பலப்படுத்தப்படுவோம்.

இரண்டு விசேஷித்த காரணங்களினிமித்தமாக முன் காலத்தில் செய்ததுபோன்று பொதுவான கூடுகை கூடுவதற்கு இத்தருணத்தில் நாம் அழைப்புவிடுப்பதில்லை; அந்தக் காரணங்கள் பின்வருமாறு: (1) முன்புபோல் வருபவர்களை உபசரிக்க முடியாத சூழ்நிலையில் நாங்கள் காணப்படுகின்றோம்; மற்றும் (2) இந்த ஒரு தருணத்தின்போது ஒவ்வொரு சிறுசிறு கூட்டத்தாரும் கூடிக்கொள்வது நன்மை பயக்கின்றதாய் இருக்கின்றது என்று நாங்கள் நம்புகின்றோம். ஒவ்வொரு குடும்பமும் ஒன்றுகூட வேண்டுமென்பதே யூதருக்கான பிரமாணமாய் இருந்தது; மற்றும் இதுவே நமக்கும் ஏற்றதாகவும், நன்மை பயக்கின்றதாகவும் இருக்கும்.

இதற்குமுன் நாம் சுட்டிக்காண்பித்துள்ளதுபோன்று கர்த்தருடைய ஜனங்களில் எவர் வேண்டுமானாலும், கூட்டத்தாரின் விருப்பப்படி, நமது ஆண்டவருடைய பிட்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்குமான அடையாளங்களைப் பரிமாறலாம். "குருமார் வகுப்பார்" மற்றும் "சாதாரண ஜனங்கள் வகுப்பார்" என்ற வித்தியாசங்கள் எல்லாம் தேவனால் உண்டானவையல்ல. மாறாக மனிதனால் தவறாய்

எடுத்துக்கொள்ளப்பட்டவையாகும். அடையாளங்களை எடுப்பதற்கும், புசிப்பதற்கும், பானம்பண்ணுவதற்கும், பரிமாறுவதற்கும், உண்மையான "சீஷர்கள்" அனைவரும் வரவேற்கப்படுகின்றனர். கத்தோலிக்க பாதிரிமார்கள் தாங்கள் செய்வதாகக் கூறிக்கொள்வதுபோன்று, எந்த ஒரு மனிதனுக்கும் அப்பத்திலிருந்தும், திராட்சரசத்திலிருந்தும் தேவனை சிருஷ்டிக்க வேண்டுமானால் அதிக அளவிலான அதிகாரமும், நியமனமும் அவசியமாயிருக்கும்; ஆனால் இந்த அருமையான நினைவுகூருதல் தொடர்புடையதாக நமது கர்த்தர் கொடுத்த கட்டளை எதையும் மற்றும் அனைத்தையும் முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ள, தாழ்மையுள்ள விசுவாசி மாத்திரமே செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றான். ஆகையால் அவருடையவர்களும், அவரது ஏற்பாட்டினுடைய அருமையைக் காண்கின்றவர்களுமாகிய நாம் அனைவரும் கீழ்ப்படிந்து, அவரை நினைவுகூரும்படியாக "இதைச் செய்வோமாக." புளிப்பு அடையாளப்படுத்துகின்றதான பாவத்திலிருந்து கர்த்தர் விலகினவர் என்பதற்கும், அவரது தூய்மைக்கும் அடையாளமாகப் புளிப்பற்ற அப்பத்தைப் பயன்படுத்துவது சிறந்தது. திராட்சப்பழரசம் (fruit of the vine) என்பது திராட்சரசமாகும் (wine) அல்லது (ஏற்றது என்று நாம் எண்ணுவது என்னவெனில்) புளிப்பற்ற திராட்சப்பழச்சாறு (அ) நீருடன் வேகவைக்கப்பட்ட உலர்த்திராட்சச்சாறாகும்; "திராட்சப்பழரசம்" (fruit of the vine) என்பது விரிவான அர்த்தம் கொண்ட வார்த்தையாகும்.

## உரிய ஆயத்தங்களைப் பண்ணுங்கள்

நிழலில் விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்கள் மாத்திரமே பஸ்கா இராப்போஜனத்தைப் புசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். இதன் நிஜம் இருதய விருத்தசேதனம் ஆகும்; அதாவது அப்போஸ்தலன் விவரிப்பது, சுட்டிக்காட்டுவது போன்று கர்த்தருக்கான முழுமையான அர்ப்பணிப்பு மற்றும் பாவத்திலிருந்தும், மாம்சத்திலிருந்தும் விலகியிருத்தலும் ஆகும். அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கும், அவரது பாடுகளின் பாத்திரத்திலும், சுயத்தை வெறுத்தலிலும் பங்கடைவதற்கும் என்று அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் மாத்திரமே உண்மையாய்ச் "சீஷர்களாய்" இருக்கின்றார்கள் என்றும், "இதைச் செய்வதற்கு" அழைக்கப்படுகின்றார்கள் என்றும் நாம் கவனிப்போமாக. மத்தேயு 20:22, 23-ஆம் வசனங்களைப்பார்க்கவும்.

விருத்தசேதனம் பண்ணியுள்ளவர்கள்கூடத் தங்கள் குடியிருப்புகளைச் சுத்திகரிக்க வேண்டும் மற்றும் புளிப்பினால் அடையாளப்படுத்தப்படும் பாவத்தை நீக்கிப்போட வேண்டும் என்பதையும் கவனியுங்கள். இரத்தமானது அவர்களது வீடுகளின் வாசல்களில் தெளிக்கப்படுவதாவது, இரத்தத்தின் மீதான விசுவாசம் வெளியரங்கமாய் அறிக்கைப்பண்ணப்படுவதை அடையாளப்படுத்தப்படுகின்றதாய்

இருக்கின்றது. இவைகள் அனைத்தும் இந்தச் சுவிசேஷயுகத்தினுடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் அடையாளப்படுத்தப்படுகின்றது. புசிக்கிறவர்கள், பரமதேசத்தை நாடுகிற "பரதேசிகளாக" காணப்பட வேண்டும்; நம்முடைய "கசப்பான கீரைகளானது," கர்த்தருக்கான நமது உண்மையினிமித்தமாய் வரும் சோதனைகள், துன்பங்கள் மற்றும் வைதல்கள் மற்றும் ஏமாற்றங்களாக இருக்கின்றது; இவை மாத்திரமே, நமக்காக அடிக்கப்பட்டதான நமது பஸ்காவாகிய கிறிஸ்து எனும் நமது ஆட்டுக்குட்டியின்மீதான நமது பசியினை/ஆவலை அதிகரிக்கப்பண்ணுகின்றதாய் இருக்கின்றது (யாத்திராகமம் 12:8, 11, 12; 1 கொரிந்தியர் 5:7). நியாயப்பிரமாணத்தின்படி, ஆட்டுக் குட்டியினுடைய எந்தப் பாகமும், அடுத்தநாள் புசிக்கத்தக்கதாக மீதிவைக்கப்படக் கூடாது என்கிற காரியமானது, கர்த்தருடைய பலியில் பங்கெடுப்பதற்கான சிலாக்கியத்தை - புசித்தலானது குறிக்கின்றது என்பதையும், பாடுகளில் இந்தப் பங்கெடுத்தல் (அ) ஐக்கியங்கொள்ளுதலானது - இந்தச் சுவிசேஷயுகத்திற்கு மாத்திரமே உரியது என்பதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இது அப்போஸ்தலனாலும்கூடத் தெரிவிக்கப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 10:16, 17).

கர்த்தருடைய ஜனங்கள் யாவரும் தங்களது இருதயங்களானது விருத்தசேதனம் பண்ணப்பட்டுள்ளதா என்றும், மாம்சத்தினுடைய சித்தத்தினின்று விலகி முழுக்க கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளதா என்றும் பார்த்துக்கொள்ளத்தக்கதாகத் தங்களைப் பரிசோதனைப் பண்ணிக்கொள்வார்களாக. நாம் பொல்லாப்பு, துர்க்குணம் மற்றும் விரோதம் எனும் பழைய புளித்த மாவைப் புறம்பே களைந்து போடத்தக்கதாகவும், நம்முடைய இருதயங்களின் எண்ணங்களும், நோக்கங்களும் தூய்மையானதாகவும், பரிசுத்தமானதாகவும், இனிமையானதாகவும் காணப்படத்தக்கதாகவும், தவிர்க்க இயலாத பெலவீனங்களானது, விலையேறப்பெற்ற இரத்தத்தின்கீழ் மூடப்பட்டுக் காணப்படத்தக்கதாகவும் பார்த்துக்கொள்வோமாக. அநேகர் "லெந்து கால வழக்கத்தினை ஆசரிப்பதுபோன்று, 40 நாட்கள் உபவாசம் இருக்க வேண்டுமென்று கர்த்தரினாலும், அப்போஸ்தலர்களாலும் எந்தக் கட்டளையும் கொடுக்கப்படாமல் இருந்தாலும், மனிதனுடைய இத்தகைய ஆச்சாரமான கட்டளைகளை நாம் நிராகரித்தாலும், ஆயத்தமாகும் வண்ணமாக தானாய் விரும்பி, கொஞ்சம் உபவாசத்தையும், ஜெபத்தையும் யார் ஏற்றெடுக்கின்றார்களோ, அவர்கள் அவர்களது விசுவாசம், அன்பு மற்றும் பக்திக்கு ஏற்ப ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

# நினைவுகூருதலின் ஆசரிப்பு

அலிகெனியில் (Allegheny) சமீபத்தில் ஆசரிக்கப்பட்டதான நினைவு கூருதலானது நாங்கள் இதுவரை அனுபவித்திராத அளவுக்கு மிகவும் தாக்கம் நிறைந்ததாகவும், பயபக்தியாயும் காணப்பட்டது. கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகவே காணப்பட்டது; இந்த ஒரு தேதிகளில் 1892-ஆம் வருடம் முதல் பொது மாநாடு நடத்துவதைத் தவிர்த்தது முதற்கொண்டு, இவ்வருஷமே அதிகமான எண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்டனர். சுமார் 200 பேர்கள் கலந்துகொண்டனர்; இந்த ஒரு தருணத்தில் ஈடுபலியில் விசுவாசம்கொண்டிருந்து, கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணிப்பை அறிக்கைப்பண்ணின விசுவாசிகளுக்குத் தவிர வேறு எவருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. அநேக சகோதரர்களால் அதிகப்படியான வேலை நேரத்தின் காரணமாகவும், தங்கள் விடுப்புக் காலத்தின்போது பணியில் யாரையாவது அமர்த்துவதற்கு ஆட்கள் கிடைக்காத காரணமாகவும், அலிகெனியில் வந்து கலந்துகொள்ள முடியாமல்போயிற்று. மாலை 7:30 மணிக்கு நாங்கள் கூடினோம்; எனினும் இந்த நேரத்திற்கு வரமுடியாதவர்களுக்காக 8 மணிவரைக்கும் ஆராதனையை நாங்கள் தாமதித்தோம். இதற்கிடையில் சபையார் அனைவரும் சங்கீதங்களும், ஸ்தோத்திரப் பாடல்களும், ஆவிக்குரிய பாடல்களும் பாடி கர்த்தரைத் தொழுதுகொண்டிருந்தோம் மற்றும் நம்மை அன்புகூர்ந்து, நம்மை தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கினவருக்காக எங்கள் இருதயங்களில் இசை இசைத்துக்கொண்டிருந்தோம்.

நாங்கள் துதிபாடலின், 15-ஆம் பாடலைப் பாடினோம்.

பின்னர் கூடியிருக்கிற எங்களுக்காகவும், இதே நோக்கத்திற்காக எங்கும் கூடியிருக்கும் கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்காகவும் தெய்வீக ஆசீர்வாதங்களுக்கு வேண்டி, நாங்கள் ஜெபம் ஏறெடுத்தோம்; தனிமையில் ஆசரிப்பவர்களையும் நாங்கள் ஜெபத்தில் மறந்துவிடவில்லை; எங்களுக்கு முன்பாகக் காணப்படும் "இராப்போஜனத்தினால்" அடையாளப்படுத்தப்படும் உண்மைகளை உணர்ந்துகொள்ளத்தக்கதாக தெய்வீக ஆசீர்வாதத்திற்காகவும், ஞானத்திற்காகவும், கிருபைக்காகவும் வேண்டிக்கொண்டோம். பின்னர் எங்கள் இருதயங்களும், குரல்களும் ஒன்றுசேர துதிப்பாடலின் 290-ஆம் பாடலைப் பாடினோம்.

இதைத் தொடர்ந்து துதிப்பாடலின், 123-ஆம் பாடலைப் பாடினோம்.

பின்னர் பழைய மற்றும் பரிட்சயமான, பக்திக்குரிய, இருதயத்தை உற்சாகப்படுத்துகிற துதிப்பாடலின், 276-ஆம் பாடலைப் பாடினோம்.

எட்டு மணிக்கு நமது கர்த்தர் தம்மை ஜீவ அப்பமாக விவரிக்கும், அவரது வார்த்தைகளை - யோவான் 6:48-58 வரையிலான வசனங்களை வாசித்தோம்.

"ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். அப்பொழுது

யூதர்கள்: இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணினார்கள். அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் (தொடர்ந்து) புசித்து, என் இரத்தத்தைப் (தொடர்ந்து) பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன். ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினது போலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான். வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் (தொடர்ந்து) புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்." (யோவான் 6:48-58)

இதைக் குறித்து விவரமாய்ப் பார்க்கையில், வனாந்தரத்தின் மன்னாவானது, நித்திய ஜீவனை அடையத்தக்கதாக நாம் புசிக்க வேண்டிய நம்முடைய ஆத்துமாக்களுக்கான உண்மையான மன்னாவாகிய நமது கர்த்தர் இயேசுவைச் சித்தரிப்பதற்கான நிழலாக மாத்திரமே காணப்பட்டது என்பதை நாங்கள் பார்த்தோம். நாம் யூதர்களுக்காக அனுதாபம் கொண்டோம் மற்றும் அவர்களால் அவர்களது மாம்சமான நிலையிலும், அப்போது அருளப்படாத பரிசுத்த ஆவியினுடைய வெளிச்சமூட்டுதலில்லாமலும், நமது எஜமானுடைய வார்த்தைகளில் காணப்பட்டதான தேவனுடைய ஆழமான காரியங்களின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் காணப்பட்டிருப்பார்கள் என்று உணர்ந்துகொள்ள முடிகின்றது. பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள்கூட இன்று அவரது வார்த்தைகளினுடைய அர்த்தத்தை தெளிவற்றே புரிந்துகொண்டிருக்கின்றனர். நமது கர்த்தருடைய மாம்சம் எப்படி, அதைப் புசிக்கின்றவர்களுக்கு ஜீவ அப்பமாக இருக்கின்றது என்று நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். "அப்பமே ஜீவிதத்திற்கான ஆதாரமாக" மனுக்குலம் அனைத்திற்கும் காணப்படுகின்றது மற்றும் இந்தத் தற்கால ஜீவியம், இதன்மேலேயே முக்கியமாய்ச் சார்ந்துள்ளது; ஆகையால் நமது கர்த்தரையும் அவருக்குள்ளான கிருபைகளையும், சத்துவங்களையும் புதிய ஜீவனுக்கான ஆதாரமாய்க் காணப்படும் அப்பத்திற்கு ஒப்பிடும் அடையாளமான வார்த்தைப் பொருத்தமானதாகவே காணப்படுகின்றது என்பதை நாங்கள் பார்த்தோம்.

நமது கர்த்தருடைய மாம்சத்திற்கான முக்கியத்துவத்தையும், அது பாவமில்லாதது என்றும் - அவர் "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமானவர்" என்றும் நாங்கள் கவனித்தோம்.

இது அவசியம் என்றும், காரணம் நமது தகப்பனாகிய ஆதாம் இதேபோன்று பாவமில்லா மாம்ச நிலையில் சிருஷ்டிக்கப்பட்டவராய்க் காணப்பட்டதினாலும்,

தெய்வீகப் பிரமாணத்தை மீறின காரணத்தினால், பாவியானார் மற்றும் அவரது மாம்சம் மரணம் எனும் தெய்வீகத் தீர்ப்பின்கீழ் ஒழுக்க ரீதியிலும், சரீர ரீதியிலும் சீர்க்கெட்டுப்போய்விட்டது என்றும் நாங்கள் பார்த்தோம். மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் அவசியத்தையும் நாங்கள் பார்த்தோம்; இவரது பாவமில்லா மாம்சமே பாவத்தின் காரணமாக அசுசிப்பட்ட ஆதாம் மற்றும் அவரது மாம்சத்திற்குப்பதிலாக சரிநிகர் சமான விலையாக, ஈடுபலி விலைக்கிரயமென ஏற்றுக்கொள்ளப்பட முடியும். இந்த நோக்கத்திற்காகவே நமது கர்த்தர் இயேசு உயர் சுபாவத்தின் மற்றும் நிலையின் கனங்களையும், மகிமைகளையும் துறந்து, "தேவனுடைய கிருபையால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்க்கும்படிக்கு . . . அவர் மாம்சமாக்கப் பட்டார்" என்ற வேதவாக்கியத்தினுடைய விளக்கத்தினை நாங்கள் பார்த்தோம்.

நம்முடைய மீட்பருடைய வார்த்தைகளையே நாங்கள் கவனித்தோம்; அதென்னவெனில்: "நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே." (யோவான் 6:51) தகப்பனாகிய ஆதாமின் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதான மாம்சத்திற்காக, நமது கர்த்தருடைய கறைதிறையற்ற மாம்சம் சரிநிகர்சமான விலையாகக் கொடுக்கப்பட்டதானது, தகப்பனாகிய ஆதாமின் மீட்பிற்காக மாத்திரமல்லாமல், அவருடைய மீறுதலின்போது அவருடைய அரைக்குள்ளாகக் காணப்பட்டதான அவரது சந்ததியார் அனைவரின் மீட்பிற்காகக் கொடுக்கப்பட்ட விலையாகக் காணப்படுகின்றது. நமது மீட்பருடைய கறைதிறையற்ற மாம்சத்திற்காக நாம் தேவனை ஸ்தோத்திரித்தோம் மற்றும் அவரது மாம்சமானது அனைவருக்காகவும் பிட்கப்பட்டுள்ளபோதிலும், அந்தப் பிட்கப்பட்ட சரீரம் மற்றும் சிந்தப்பட்ட இரத்தம் நிறைவேற்றிட்டதான மாபெரும் பாவநிவாரண வேலையில் ஒவ்வொருவனும் தனக்கான பங்கினை தனக்காய் ஏற்றுக்கொள்வது, ஒவ்வொருவனிடமும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது என்ற உண்மையையும் நாங்கள் கவனித்தோம். இந்தப் பிட்கப்பட்ட சரீரத்தில் பங்கெடுக்காமல் எவனும் நித்தியமான ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை நாங்கள் பார்த்தோம். இது பல்வேறு வலியுறுத்தல்களுக்கு முற்றிலும் எதிர்மாறான கருத்தை நமக்குக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது கிறிஸ்துவைப்பற்றியும், பாவங்களுக்கான அவரது பலிப் பற்றியுமான அறிவு, இரட்சிப்பிற்கு அவசியமற்றது என்ற கருத்திற்கு நேர் எதிரான நிலையை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; இது கர்த்தருடைய மாம்சத்தைப் புசிப்பது மற்றும் அவரது இரத்தத்தில் பங்கெடுப்பது மூலம் மாத்திரமே எவர் ஒருவராலும் நித்திய ஜீவனை அடையமுடியும் எனும் கருத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது.

மாம்சத்தைப் புசிப்பது என்பதன் அர்த்தமென்ன என்பதைப்பற்றி நாங்கள் பார்த்தோம்; சொல்லர்த்தமான அப்பத்தைப் புசித்தல் என்பது இரத்தத்தின் மூலம் உறுப்புகளுக்குள் அவை ஒன்றிப்போய் விடுவதையும், எடுத்துக்கொள்ளப்படுவதையும்

குறிப்பதாய் இருப்பதுபோல, நாம் கிறிஸ்துவினுடைய மாம்சத்தைப் புசிப்பது என்பது (1) அவர் பாவமில்லாதவர் மற்றும் நமக்கான பொருத்தமான பலியாக இருக்கின்றார் என்ற உண்மையினைக் குறித்த நம்முடைய உணர்ந்துகொள்ளுதலைக் குறிக்கின்றது; மற்றும் (2) அவர் தம்மையே அனைவருக்குமான ஈடுபலியாக ஒப்புக்கொடுத்தார் என்ற உண்மையின் மீதான நமது விசுவாசத்தைக் குறிக்கின்றது; மற்றும் (3) இந்த அவருடைய பலியானது, பரமபிதா அங்கீகரிக்கத்தக்கதாகக் காணப்பட்டதற்கு ஆதாரம் - மரித்தோரிலிருந்தான நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலிலும், அவர் வாயிலாக விசுவாசிகளைப் பிதா ஏற்றுக்கொள்ளுதலிலும், பெந்தெகொஸ்தே நாள் துவங்கி, இன்றுவரையிலுமாக தொடர்ந்துகொண்டிருக்கும் புத்திர சுவிகாரத்தின் பரிசுத்த ஆவியைப் பிதா அருளினதிலும் விளங்குகின்றது என்ற நம்முடைய நம்பிக்கையையும் குறிக்கின்றது; மற்றும் (4) நித்திய ஜீவனுக்கான நம்முடைய வாஞ்சையையும், கிறிஸ்துவுக்குள்ளாகக் காணப்பட்டதான தூய்மைக்கான நமது வாஞ்சையையும் குறிக்கின்றது; இன்னுமாகப் பாவத்திலிருந்து நம்முடைய விலகுதலையும், முதலாம் ஆதாமுடனான நம்முடைய உறவைத் துறத்தலையும், உலகத்தின் ஜீவனுக்காகக் கொடுக்கப்பட்டதான இரண்டாம் ஆதாமினுடைய மாம்சத்தின் - அவரது பலியின் - அடிப்படையில் இரண்டாம் ஆதாம் மூலமான ஜீவனுக்கான நம்பிக்கையை நாம் ஏற்றுக்கொள்வதையும் குறிக்கின்றது.

அடுத்ததாக நாங்கள் 1 கொரிந்தியர் 11:23-26 வரையிலான வசனங்கள் குறித்துப் பார்த்திட்டோம். மேலும் கர்த்தருடைய நினைவுகூருதல் இராப்போஜன மானது, பஸ்கா இராப்போஜனத்திற்குப் பின் நடந்தது மற்றும் நினைவுகூருதல் இராப்போஜனமானது புதியதும், பஸ்காவின் இடத்தில் இடம்பெறுவதற்கெனத் திட்டமிடப்பட்டதுமானதாய் இருக்கின்றது என்ற உண்மைகளையும் நாங்கள் கவனித்தோம். எகிப்தின் அடிமைத்தனத்தினின்றுள்ள மாம்சீக இஸ்ரயேலர்களின் விடுதலையையும், அவர்கள் எகிப்தை விட்டுப்புறப்படுவதற்கு முந்தின இரவில் சம்பவித்த, அவர்களது முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலையும் நாங்கள் பார்த்து, அவைகளின் நிஜங்களைக் கவனித்தோம்; அதாவது எகிப்து உலகத்திற்கான நிழலாய்க் காணப்படுகின்றது என்றும், அதன் இராஜாவாகிய பார்வோன், இவ்வுலகத்தின் அதிபதிக்கு நிழலாய் இருக்கின்றார் என்றும், எகிப்தின் அடிமைத்தனமானது, பாவத்தினுடைய அடிமைத்தனத்திற்கான நிழலாக இருக்கின்றது என்றும், மோசேயின் தலைமையின் கீழான அனைவருடைய விடுதலையானது, அடுத்த யுகத்தில் தேவனை அன்புகூருகின்ற அனைவருக்கும், அவருக்குப் பலி ஏறெடுக்க விரும்புகின்றவர்களுக்கும், நிஜமான மோசேயின் (கிறிஸ்துவின்) தலைமையின் கீழான இறுதி விடுதலைக்கான நிழலாய் இருக்கின்றது என்றும், சாத்தான் மற்றும் அவனது பின்னடியார்களின் இறுதி வீழ்ச்சிக்கு, பார்வோன் மற்றும் அவனது சேனைகளின்

அழிவானது நிழலாய் இருக்கின்றது என்றும் பார்த்தோம்.

இக்கருத்துக்கள் அனைத்திற்கும் இசைவாகவும் மற்றும் இக்கருத்துக்களின் ஒரு பாகமாகவும் ஜனங்கள் அனைவரும் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்படுவதற்கு முந்தின இரவில் நிகழ்ந்ததான இஸ்ரயேலருடைய முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலானது (அ) விடுதலையானது, (நீதியை அன்புகூர்ந்து, அதை நாடுகின்ற அனைவரின் விடுதலைக்காக ஆயிரவருட யுகம் மற்றும் அவரது இராஜ்யத்தின் முழுமையான அறிமுகத்திற்கு முந்தின "இரவில்") இப்பொழுது தேவன் எப்படி ஒரு குறிப்பிட்ட வகுப்பாரைத் தப்புவிக்கப்பண்ணுகின்றார், கடந்துபோகப்பண்ணுகின்றார், ஜீவன் அளிக்கின்றார் என்பதற்கு நிழலாக இருக்கின்றது என்று நாங்கள் பார்த்தோம். தேவனுடைய ஜனங்கள் இவ்வுலகத்திலும், இவ்வுலகத்தினுடைய அதிபதியின் பொல்லாத செல்வாக்கின்கீழும் இன்னமும் காணப்படுகையில், இந்த இரவில் தப்புவிக்கப்படுகின்ற, விடுவிக்கப்படுகின்ற, கடந்துபோகப்படுகின்றதான வகுப்பார் முதற்பேறானவர்களாக - சபையாக மாத்திரமே காணப்படுகின்றனர்; "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையாக" மாத்திரமே காணப்படுகின்றனர். (எபிரெயர் 12:23)

முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலுக்கான நிழலில், பழுதற்ற ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதும், அதன் இரத்தம் அவர்களுடைய வீட்டின் நிலைக்கால்களில் தெளிக்கப்படுவதும், அதன் மாம்சம், கசப்பான கீரைகளுடன் புசிக்கப்படுவதும் அவசியமாய் இருந்ததை நாங்கள் கவனித்தோம். இந்தப் பஸ்கா ஆட்டுக்குட்டியானது "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டிக்கான" நிழலாய் இருக்கின்றது என்றும், நிழலான இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் நிழலான ஆட்டுக்குட்டியைப் புசித்ததுபோன்று, நிஜமான முதற்பேறானவர்களாகிய தெரிந்தெடுக்கப்பட்ட சபையும் நம்முடைய ஆட்டுக்குட்டியினுடைய மாம்சத்தைப் புசிக்க வேண்டும் என்றும் நாங்கள் பார்த்தோம். நம்முடைய இருதயங்களும் துர்மனசாட்சி அனைத்திடமிருந்தும், பாவத்துடனான தவறான தொடர்பு அனைத்திடமிருந்தும் நீங்க, விலையேறப்பெற்ற இரத்தத்தினால் தெளிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், "கசப்பான கீரைகள்" என்பது உலகத்தின் ஜீவனுக்காகக் கொடுக்கப்பட்டதான நமது கர்த்தருடைய மாம்சத்தை நாம் புசிப்பதற்கு அவசியமான சோதனைகளை, எதிர்ப்புகளை, துன்புறுத்தல்களை, சிரமங்களை, மனித சித்தத்தின் சிலுவைகளைக் குறிக்கின்றதென்றும் நாங்கள் பார்த்தோம்.

தம்முடைய மாம்சத்திற்கும், இரத்தத்திற்கும் அடையாளமாக அப்பத்தையும், திராட்சப்பழரசத்தையும் கொடுத்துள்ள விஷயத்தில், நாம் இரண்டு காரியங்களை அடையாளங்கண்டுகொள்ள நமது கர்த்தர் விரும்பியுள்ளார் என்று நாங்கள் பார்த்தோம்; அவை: (1) தாம்தான் நிஜமான ஆட்டுக்குட்டி மற்றும் சுவிசேஷயுக

சபையைக் கடந்துபோகுதலும் (அ) தப்புவிக்கப்படுதலும் மற்றும் அவள் மரணத்திலிருந்து கிறிஸ்துவுக்குள்ளான புதிய ஜீவனுக்குள் கொண்டுவரப்படுதலும், அவள் அவரோடுகூட முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைதலுமானவைகள் நிஜமான பஸ்காவாய் இருக்கின்றது. (2) புளிப்பில்லாத அப்பமும், திராட்சப்பழரசமும் உண்மையான ஆட்டுக்குட்டியினுடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப் படுத்துகின்றதாகவும், நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய இடத்தை எடுத்துக்கொள்கின்றதாகவும் இருக்கின்றது. அப்பமும், திராட்சப்பழரசமும் ஆட்டுக்குட்டியின் நிஜமாக இராமல், மாறாக நிஜமான ஆட்டுக்குட்டிக்கான அடையாளங்களாகவே காணப்படுகின்றது. ஆகையால் நமது கர்த்தரை விசுவாசத்தினால் நாம் புசிக்கும், நாம் பங்கெடுக்கும் காரியத்தோடும் மற்றும் இதன் அர்த்தத்தோடும், நாம் (சொல்லர்த்தமான) புளிப்பில்லாத அப்பத்திலும், திராட்சப்பழரசத்திலும் பங்கெடுக்கும் காரியத்தினை ஒப்பிடுகையில், அப்பம் மற்றும் திராட்சப்பழ ரசத்தில் பங்கெடுக்கும் காரியமானது குறைவான முக்கியத்துவம் உடைய காரியமாகவே காணப்படுகின்றது என்று நாங்கள் பார்த்தோம்; கர்த்தர் கிருபையுள்ளவர் என்று ருசித்துப்பார்த்திடாத அநேகர், இந்த அடையாளச் சின்னங்களில் பங்கெடுத்துள்ளனர் என்றும், கர்த்தர் கிருபையுள்ளவர் என்றும் ருசிப்பார்த்துள்ள அநேகர், தங்கள் சிலாக்கியத்தினைக் காணாதவர்களாகவும், அவரது பிட்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்கும் அடையாளமான சின்னங்களில் பங்கெடுக்கும் வாய்ப்பினைப் பெற்றிராதவர்களாகவும் காணப்ப டுகின்றனர் என்று நாங்கள் பார்த்தோம். எங்களுடைய இருதயங்களில் உண்மையான விருந்தையும் மற்றும் நாம் பயன்படுத்தும்படிக்குக் கர்த்தர் நமக்குக் கற்பித்ததும், அருளியுள்ளதுமான அடையாளச் சின்னங்களின் விருந்தையும் - இரண்டையும் பெற்றிருப்பதற்கான நம்முடைய சிலாக்கியத்தின் நிமித்தம் நாங்கள் களிகூர்ந்தோம்.

அப்பம் புளிப்பில்லாததாய் இருந்தது என்றும், புளிப்பானது நிழலில் பாவத்தைக் குறிக்கின்றது என்றும் நாங்கள் பார்த்தோம். அப்பமானது நாம் விசுவாசத்தினால் புசிக்கின்றதான நமது கர்த்தருடைய மாம்சத்தை மாத்திரம் அடையாளப்படுத்தாமல், அதை நாம் புசித்தவர்களாக, அவருடைய ஆவியைப் பெற்றவர்களாக, முதற்பேறானவர்களின் அவரது சபையென நாம் புளிப்பில்லாத ஒரே அப்பத்தில் ஒன்றாய் அங்கத்தினர்களெனக் கருதப்படுகின்றோம் என்ற அப்போஸ்தலனுடைய விளக்கத்தையும் நாங்கள் கவனித்தோம். ஆகையால் எப்படி ஒரு சிறு புளிப்பானது, முழு மாவையும் புளிக்க வைத்திடுகின்றதோ, அப்படியே ஒரு சிறு பாவமும்கூட நம் மத்தியில், மாபெரும் புளிப்புகளை உண்டாக்கிவிடும் என்று நாம் நினைவில் கொள்ளும்படிக்கு அப்போஸ்தலன் நமக்குப் புத்திமதி கூறுகின்றார். ஆகையால் “நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு,

பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே (மிக மோசமான துன்மார்க்கத்தோடே) அல்ல, (துன்மார்க்கமாயும், இரகசியமாயும் இருக்கிறதுமான) துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" என்று அப்போஸ்தலன் புத்திமதி கூறுகின்றார். (1 கொரிந்தியர் 5:6-8)

இந்தக் கருத்தைத் தொடர்ந்து, வளர்ச்சியடைந்துள்ள கிறிஸ்தவர்களைப் (தங்கள் இருதயங்களிலிருந்து பாவங்கள் சுத்திகரிக்கப்பட்டு, தங்களை முழுமையாய்க் கர்த்தருக்கு அர்ப்பணித்தவர்களை) புளிப்பில்லாத ஓர் அப்பத்தோடு ஒப்பிட்டவராக, அப்போஸ்தலன், இவர்கள் அனைவரும் (கிறிஸ்துவுடன்) ஓர் அப்பத்தில் அங்கத்தினர்களாக (அ) பாகங்களாக - மற்றவர்களுக்கு ஜீவனளிக்கும் வல்லமையாகவும், ஆற்றலாகவும் தாங்கள் ஆகத்தக்கதாக, பிட்கும்படிக்கு உறுதி பூண்டிருப்பவர்களாக இருக்கின்றனர் என்று தெரிவிக்கின்றார்; "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா (சொல்லர்த்தமான) அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். (1 கொரிந்தியர் 10:16, 17; திருவிவிலியம்) இப்படியாக இரட்டைக் காரியங்களைக் காண்கின்றோம்; அவை: (1) நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கின்றார்; ஆதலால் பாவத்தை விட்டொழிக்க நாடி மற்றும் நமது மீட்பருடைய புண்ணியத்தினைப் புசித்துப் பண்டிகையை ஆசரிக்கின்றோம். (2) அவருடனான நம்முடைய ஐக்கியம் மற்றும் எதிர்க்காலத்தில் வரும் மகிமையில் பங்கடையத்தக்கதாக, இந்தத் தற்காலத்தின் பாடுகளில் பங்கெடுப்பதற்கான அர்ப்பணிப்புமாகும். கிறிஸ்துவினுடைய சரீரத்தில் இந்த ஒரு வளர்ச்சி நிலையை எட்டியுள்ளவர்கள் அனைவரும், மற்றவருடைய நலனுக்காக, அவரோடுகூடத் தாங்கள் பிட்கப்படும்படிக்கு உறுதிபூண்டவர்களாகக் காணப்படுவார்கள் என்று நாம் பார்க்கின்றோம்.

இப்படியானவர்கள் அனைவரும் தங்களுடைய ஆண்டவருடைய ஆவியினால் - பிதாவினிடத்திலும், பிதாவின் சாயலை உடையவர்களிடத்திலும் மற்றும் அனைவரிடத்திலும் அன்பு பாராட்டும் ஆவியினால் இயக்கப்படுபவர்களாய் இருப்பார்கள். இவர்களிடத்திலேயே அப்போஸ்தலன்: "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" என்று கூறுகின்றார். (1 யோவான் 3:16) மற்றவர்களுடைய நலனுக்காகப் பிட்கப்படுவதற்கான

இந்த விருப்பமும், வாஞ்சையும், நமது கர்த்தருடைய பிட்கப்பட்ட சரீரத்தை நாம் முதலாவது புசித்து, அவரது சிந்தையை/ஆவியை, மனதை, பண்பை, அன்பைப் பெற்றுக்கொண்டதன் விளைவாக உண்டானதேயாகும். இப்படிப்பட்டவர்களே, "நாம் அவரோடுகூடப் பாடுபட்டால், அவரோடுகூட ஆளுகையும் செய்வோம்" என்றும், "அவரோடுகூட மரித்தோமானால், அவரோடுகூடப் பிழைத்தும் இருப்போம்" என்றுமுள்ள வாக்குத்தத்தங்களைப் பெற்றிருக்கின்றனர்.

இப்படியாக அப்பத்தினுடைய அர்த்தத்தைப்பார்த்து, அதை எங்கள் இருதயத்தில் புசித்தவர்களாக இருந்து மற்றும் மற்றவர்களைப் போஷிப்பதற்காகவும், ஆசீர்வதிப்பதற்காகவும் கர்த்தரோடுகூடப் பிட்கப்படும்படிக்கு மீண்டுமாக உறுதிபூண்டவர்களாக இருந்து, வேதவாக்கியத்தினுடைய மாதிரியைப் பின்பற்றினவர்களாக, நித்திய ஜீவனளிக்கும் அப்பத்திற்காக தேவனை ஸ்தோத்திரித்தோம். இதைத் தொடர்ந்து கொஞ்சம் நேரம் அமைதி காக்கப்பட்டது; இவ்வேளையில் அப்பமானது பங்கெடுப்பவர்களிடத்தில் எடுத்துச் செல்லப்பட்டது.

அடுத்து நாங்கள் திராட்சப்பழரசத்தைக் குறித்துப் பார்த்தோம் மற்றும் அது மரணத்தை அடையாளப்படுத்துகின்றது என்று பார்த்தோம்; அதில் மரணம் மாத்திரமல்லாமல், பாடுகளும் ஏறக்குறைய சம்பந்தப்பட்டு இருக்கின்றது. திராட்சப்பழங்களானது நசுக்கப்படுகின்றது, மிதிக்கப்படுகின்றது, வெகுவாய்ப் பிழியப்படுகின்றது, இல்லையேல் திராட்சப்பழரசம் கிடைக்காது என்று நாங்கள் பார்த்தோம். திராட்சப்பழச்சாறானது, கிறிஸ்துவினுடைய இரத்தத்திற்கு, அவரது அர்ப்பணிக்கப்பட்ட ஜீவனுக்கு அடையாளமாகவும், அவரோடுகூட உடன் பலிச் செலுத்துபவர்கள் அனைவருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜீவியங்களுக்கான அடையாளமாகவும் காணப்படுவதை நாங்கள் பார்த்தப்போது, அது மிகவும் அருமையான மற்றும் பொருத்தமான அடையாளமாய்க் காணப்படுவதை நாங்கள் கண்டோம். நமது கர்த்தர்தாமே தம்மைத் திராட்சச்செடிக்கும், அவரது பின்னடியார்களைக் கொடிகளுக்கும் ஒப்பிட்டு, நாம் அதிகக் கனிகள் கொணர்வது அவரது விருப்பமாய் இருக்கின்றது என்று தெரிவித்தார்; மேலும் நாம் பயன்படுத்துகின்றதான திராட்சப்பழச்சாறானது, கிறிஸ்துவாகிய திராட்சச்செடியின் கனிகளுக்கும், அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென உண்மையுள்ளவர்களாய்க் காணப்படும் அனைவரின் - தங்களைப் பலியாக்கிடுவதற்கென்றும், தேவனுக்குச் சொந்தமான தங்கள் சரீரங்களிலும், தங்கள் ஆவிகளிலும் தேவனை மகிமைப்படுத்தத் தக்கதாகக் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்தொடர நாடும் அனைவரின் - பாடுகளுக்கும் பொருத்தமான அடையாளமாய்க் காணப்படுகின்றது.

கர்த்தருடைய சிங்காசனத்தில் தாங்களும் உட்காரத்தக்கதாக, அவரிடம் வேண்டிக்கொண்டதான ஆதிக்காலத்து அந்த இரண்டு சீஷர்களுடைய வார்த்தைகளை நாங்கள் நினைவுகூர்ந்தோம் மற்றும் அவர்கள் வேண்டிக் கொண்டதானது, சுயத்தை வெறுத்தலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதை அவர்கள்

முழுமையாய்ப் புரியாதிருந்தார்கள் என்னும் விதமான நமது கர்த்தருடைய பின்வரும் பதிலையும் நாங்கள் நினைவுகூர்ந்தோம்; "நான் குடிக்கும் (அவமானம் மற்றும் பாடுகளின்) பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை (மரணத்தை) நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார்." (மத்தேயு 20:22) அப்போஸ்தலர்களால் இவ்விஷயம் குறித்து முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றாலும், அர்ப்பணம் பண்ணுவதிலும், கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, சிலுவையைச் சகிக்க தாங்கள் விரும்புவதாகக் கூறுவதிலுமுள்ள அவர்களது ஆயத்தத்தில் நமது கர்த்தர் மகிழ்ச்சியடைந்தார் மற்றும் இதுவே அவர்களது இருதயத்தின் வாஞ்சையாக இருக்கின்றபடியால், இப்படியாகவே அவர்கள் செய்வார்கள் - கிறிஸ்துவோடுகூடப் பாடுபடுவதற்கான விருப்பம் அவர்களிடத்தில் காணப்படுகின்றதால் (காணப்படும் வரை), அவர்கள் வாய்ப்பைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும், இந்த வாய்ப்பின் மூலமாகவும், அதற்கான உண்மையின் மூலமாகவும், அவர்கள் அவரது இராஜ்யத்தில் பங்கடைவார்கள் என்றும், அதுவும் அவர்களுள் யார்யாருக்கு எந்த இடம் என்று தம்மால் நிர்ணயிக்க முடியாதபோதிலும், மற்றும் இது பிதாவின் கரங்களில் காணப்படுகின்ற போதிலும், அவர்கள் அவருடைய இராஜ்யத்தில் பங்கடைவார்கள் என்றும் அவர்களுக்கு உறுதியளித்தார். இது நாம் எவ்வளவுதான் பெலவீனர்களாகவும், முக்கியத்துவமற்றவர்களாகவும் காணப்பட்டாலுங்கூட, நம்மை வழிநடத்திடுவதற்குக் கர்த்தர் தம்முடைய கிருபையினால் விருப்பமும், வல்லமையும் கொண்டவராய் இருக்கின்றார் என்றும், நாம் அவருக்கும், பலிச்செலுத்தும் அவரது ஆவிக்கும் உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருந்தால், அவர் நம்மை ஜெயங்கொண்டவர்களாகவும், முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும் வெளிக்கொண்டுவருவார் என்றுமுள்ள உற்சாகமூட்டும் எண்ணங்களை எங்களுக்குக் கொடுத்ததாய் இருந்தது.

பின்னர்ப் பாத்திரத்திற்காக - நம்முடைய மீட்பின் காரணமாக, நம் சார்பிலான கிறிஸ்துவின் பாடுகளுக்காகவும் மற்றும் அவரது பாத்திரத்தில், அவரது பாடுகளில், அவரது அவமானங்களில் - பங்கடைவதற்கான நமக்கான சிலாக்கியத்திற்காகவும் நாங்கள் கர்த்தரை ஸ்தோத்திரித்தோம்; அவரை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகளில் நாம் பங்கடைவோமாக; "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்" என்ற திவ்விய வாக்குத்தத்தம் அனைத்தும் நித்திய கனமகிமையை உண்டுபண்ணும் என்று அறிந்து களிகூருவோமாக. (மத்தேயு 5:11, 12) "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்." என் பாடுகளில் ஐக்கியம் கொள்ளுங்கள் என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகள் நினைவுகூரப்பட்டு, பாத்திரமானது பரிமாறப்பட்டது.

எங்கள் அனைவரின் ஜெபமாகவும், கர்த்தருக்கான எங்களது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதியளிக்கும் விதமாகவும் காணப்படும் வார்த்தைகள் அடங்கிய துதிப்பாடலின் 259-ஆம் பாடலைப் பாடி, ஆராதனையை நிறைவு செய்தோம்.

இருதயத்தை ஆராய்கின்றதான நினைவுகூருதலானது அண்மையில் உள்ளது; வருஷத்தினுடைய துயரமான, ஆனால் மிகவும் மகிமையான அந்தக் காலப்பகுதி அண்மையில் உள்ளது. பாவமற்ற மனிதனை, இந்த அளவுக்குப் பாடுபடுத்தின உலகத்தினை நினைத்துப்பார்ப்பதற்கு மிகவும் வேதனையாய் இருக்கின்றது மற்றும் அவர் பாவமில்லாதவராகவும், அனைவருக்குமான மீட்கும்பொருளானார் என்பதையும் நினைத்துப்பார்க்கையில் களிகூரவே செய்கின்றோம். ஆம் அது துக்கமாயும், அதே நேரம் மகிமையாயும் உள்ளது; ஏனெனில் அவர் அனைத்து மனுஷர்களையும் தம்மிடத்திற்கு இழுத்துக்கொள்வார் மற்றும் அனைவருமே அவரை ஒருகாலத்தில் அறிந்துகொள்வார்கள் மற்றும் நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள்ளான கிருபை அனைத்தையும் குறித்து அனைவரும் ஆச்சரியப்படுவார்கள். இவைகள் அனைத்தையும் சாத்தியமாக்குகிறவரும், தமது குமாரனைப் பெலப்படுத்துவதற்கும், குமாரன் இறுதியில், "முடிந்தது" என்று கூறுவது வரையிலும் அவர் முன்னேறிச் செல்வதற்கு என்று அவருக்கு உதவுவதற்கும் பரலோகத்தி லிருந்து பேசினவருமான ஆச்சரியமான எகோவா தேவனை நானும் எதிர்நோக்கியிருக்கின்றேன். விலைக்கொடுக்கப்பட்டாயிற்று மற்றும் போராட்டத்தில் வெற்றி அடைந்தாயிற்று. பாழும், அவாந்திரமான வனாந்தரத்தில் அவர் கடந்துபோய், தமக்குச் சொந்தமானவர்களைத் திரும்பக்கொண்டு வந்துள்ளார் மற்றும் பரலோகத்தின் வாயில்களில், "களிகூருங்கள், என் ஆடுகளை நான் கண்டுபிடித்துள்ளேன்!" என்ற சத்தம் தொனிக்கின்றது.

அவர் நமக்குச் செய்துள்ளதான மாபெரும் மற்றும் ஆச்சரியமான காரியங்களுக்காக தேவனுக்கு, அவருக்குரிய மகிமையைச் சாற்றிடுவோமாக.

- Songs of the Nightingale, p. 128

# நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கான தியதி

நம்முடைய கடந்த வெளியீட்டில், இந்த வருடத்தின் எபிரெய ஆண்டுக்குறிப்பேடானது (calander) ஆதிக் கணக்கீடுமுறைமைக்கு இசைவாய் இல்லை என்று நாம் குறிப்பிட்டிருந்தோம் (மற்றும் நாங்கள் இதுபோன்ற சிக்கல்களை முன்பும் எதிர்க்கொண்டிருந்திருக்கின்றோம்). ஆகையால் இவ்விஷயம் குறித்து ரபி மேயர் (Rabbi Mayer) அவர்களைச் சந்தித்துப் பேசினோம். அவர் கொடுத்த விளக்கம் என்னவெனில், பஸ்காவிற்கு வேறுபாடற்ற தேதியைப் பெற்றுக்கொள்வதில் யூதர்கள் பெரும் சிரமமடைகின்றனர்; காரணம் ஜாமக்காரர்கள் அமாவாசையைக் கண்ட பிற்பாடு, அக்காரியமானது மலை உச்சியிலிருந்து தீச்சுடர் மூலம் சைகைக்காட்டப்பட வேண்டும் மற்றும் தூதுவர்கள் மூலம் பல்வேறு இஸ்ரயேல் இனத்தார்களிடம் செய்தி அனுப்பி வைக்கப்பட வேண்டும். இதன் காரணமாக 1500 ஆண்டுகளுக்கு முன்னதாக, நான்காம் நூற்றாண்டில் ஹில்லல்ஸ் ஆண்டுக்குறிப்பேடானது (Hillel's Calander) ஏற்றுக்கொள்ளப்பட்டது மற்றும் இதுவே அதுமுதல் பின்பற்றப்பட்டு வருகின்றது.

பஸ்கா தேதி தொடர்புடைய விஷயத்தில் நாம் இரண்டு முக்கியமான காரியங்களை மனதில் கொண்டிருக்க வேண்டும்; அவை (1) "கிறிஸ்து" மரித்தவர்களில் முதற்பலனானார்" எனும் காரியத்திற்கான நிழலாக அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்கட்டுக்கொண்டுவரப்படுகிற காரியமானது, நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் நாளாகிய நீசான் 16-ஆம் தேதியில் நிகழத்தக்கதாக பஸ்காவானது இளவேனிற் சம இரவு பகல் நாளுக்குப் பிற்பாடு (எனினும் மிகவும் பிற்பாடல்ல) காணப்பட வேண்டும். (2) ஆட்டுக்குட்டியானது பௌர்ணமியன்று அடிக்கப்பட வேண்டும்; இந்தக் காரியமானது யூதர்களுக்கு நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழான நிறைவுள்ள தேவ தயவானது அங்கு முடிவுற்றதையும், பின்னர் அந்த ஜாதியார்: "இவர் இரத்தம் எங்கள் மீதும், எங்கள் பிள்ளைகள் மீதும் இருப்பதாக" என்று வேண்டிக்கொண்டதற்கேற்ப, அவர்கள் புறக்கணிக்கப்பட்டதையும் மற்றும் நலிவுற்றதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

எந்த மாதம், முதலாம் மாதம் என்று கணக்கிடும் விஷயத்தில் தீர்மானம் எடுக்கும் காரியமானது, இஸ்ரயேலுடைய மூப்பர்கள் வசத்தில், மேற்கூறப்பட்ட வரையறைகளுக்கு உட்பட்டுவிடப்படுகின்றது; மேலும் இவர்கள் நீசானைக் கணக்கிடுவதற்கென்று இளவேனிற் சம இரவு பகல் நாள் வருவது வரையிலும் மற்றும் அடுத்ததாக அமாவாசை வருவது வரையிலுமாக எப்போதும் காத்திருப்பதில்லை. (இப்படியாக செய்திருப்பார்களானால், இந்த வருடம் நீசான் மாதமானது ஏப்ரல் 11-ஆம் தேதி அன்று மிகவும் தாமதமாகி துவங்கியிருந்திருக்கும்). மாறாக எப்போது சமஇரவு

பகல் நாளை எதிர்ப்பார்த்திடலாம் என்பதை இவர்கள் அறிந்திருந்தபடியால், அறுவடையின்போதும், சம இரவு பகல் நாளுக்குப் பிற்பாடும் தோன்றும் பௌர்ணமிக்கு முந்தின அமாவாசையின் நிகழ்வினை இவர்கள் இந்த முதலாம் மாதத்தினுடைய துவக்கமாகவும், தங்களது வருடத்தினுடைய துவக்கமாகவும் ஏற்றுக்கொள்கின்றனர். நிச்சயமாகவே இதுவே நாமும் பின்பற்ற வேண்டிய கோட்பாடாகும்.

இந்தக் கோட்பாடைப் பின்பற்றுகையில், இந்த வருடம் சம இரவு பகல் நாளைத் தொடரும் பௌர்ணமியானது மார்ச் 27-ஆம் தேதியிலாகும்; மற்றும் இதுவே நீசான் 14-ஆம் தேதியும், நமது கர்த்தருடைய மரணத்தின் ஆண்டு நிறைவு நாளுமாகும்; யூதருடைய கணக்கிடுதலின்படி 14-ஆம் தேதியானது மார்ச் 26-ஆம் தேதி, ஞாயிற்றுக் கிழமையன்று, மாலை 6 மணிக்குத் துவங்குகின்றது; அதாவது கடைசி இராப்போஜனத்தினுடைய ஆண்டு நிறைவு நாளாகும். இதை வைத்துப்பார்க்கையில், நமது கடந்த வெளியீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த தேதியும், யூத தேதியும் தவறாகும் மற்றும் இத்தனை சீக்கிரமாய் இதைத் திருத்தம் செய்வதற்கான வாய்ப்பிற்காக நாங்கள் மகிழ்கின்றோம்.

ஆண்டுக்குறிப்பேடானது (Almanac), அமாவாசைக்கான தேதியினை மார்ச் 11-ஆம் தேதி என்று கொடுத்திருப்பதைச் சிலர் கவனித்திருப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை; ஆனால் இந்தத் தேதியிலிருந்து 14-நாட்கள் எண்ணப்பட்டால், அந்நாளானது பௌர்ணமிக்கான நாளாய் இருப்பதில்லை. ஆகையால் இருண்ட நிலவை (dark moon), அமாவாசை (New Moon) என்று எடுத்துக்கொள்வதற்குப்பதிலாக, யூதர்கள் நிலவு சிறிதளவு கண்களுக்குத் தெரியும்வரை காத்திருந்து, அதிலிருந்து தேதியைக் கணக்கிட்டார்கள் என்று நாம் கருதுகின்றோம். ஆகையால் இப்பொழுது கணக்கிட்டுப் பார்க்கும்போது, அமாவசையானது (New Moon) மார்ச் 13-ஆம் தேதியின் இரவும், மார்ச் 14-ஆம் தேதியின் காலையுமான வேளையில், கண்களுக்குச் சிறிது தெரியும் நிலாவாகக் காணப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படலாம்; அன்றே நீசான் 1 -ஆம் தேதி ஆகும்.

## நானே திராட்சச்செடி, நீங்கள் அதின் கொடிகள்
(யோவான் 15:5)

கனிகள் கொடுக்கும் கொடிகளே
நன்கு வளரவும் முழுமையடையவும் வேண்டி,
வெட்டிவிடப்படுவதற்கெனக் கத்தியின் கூர்மைதனை உணர்கின்றதே.

தேவையற்ற ஒவ்வொரு இளந்தண்டும் வெட்டிவிடப்பட்டாலும்
தேவையற்ற தளிர் இலையும், துளிர் இலையும் தறித்துப்போடப்பட்டாலும்
இலைகள் குறைந்து போயிட்டாலும் - போயிட்டாலும்.

ஓ! உந்தன் வாழ்வினுடைய சந்தோஷத்தின் அழகானது பறிக்கப்பட்டாலும்,
உந்தன் ஆவல்கள் அனைத்தும் மண்ணோடு புதைந்து, புதைத்து
அனைத்தும் கிழித்தெறியப்பட்டாலும் - எறியப்பட்டாலும்.

உந்தன் ஒவ்வொரு விருப்பமும், ஒவ்வொரு கனவும், ஒவ்வொரு நம்பிக்கையும்
தோல்வியுற்று மங்கிப்போனாலும் களிகூர்ந்திடு, மிகக்
களிகூர்ந்திடு இன்னும் - களிகூர்ந்திடு.

திவ்விய அன்பின் கரமே கத்தியைப் பிடித்திருக்கின்றது,
மென்மையாய் வெட்டுகின்றது, முறிக்கின்றது.
உந்தன் ஜீவிதம் கனிகளைக் கொடுத்திட - ஆம்
அதிக கனிகளைக் கொடுத்திடுவதற்கே.

– Poems of the Way, p. 174

# நினைவுகூருதல் இராப்போஜனம்

நமது அருமை மீட்பருடைய மரணத்தினை அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிக்கின்றதான நமது வழக்கத்தின்படி, இவ்வருடமும் முன்பில்லாத அளவுக்கு அதிக எண்ணிக்கையாரால் ஆசரிக்கப்படும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

"பஸ்கா பண்டிகையானது" ஆரம்பிப்பதற்கு முந்தின நாளில் நமது கர்த்தர் பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய நிஜமெனச் சிலுவையில் அறையப்பட்டார் (1 கொரிந்தியர் 5:7); மற்றும் "அவர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே" தம்முடைய மாம்சத்தை அடையாளப்படுத்தும் அப்பத்தையும், தமது இரத்தத்தை அடையாளப்படுத்தும் "திராட்சப்பழரசத்தையும்" (fruit of the vine) எடுத்து, இவைகளைக் கொண்டு ஒரு புதிய நினைவுகூருதலை ஏற்படுத்தினார்; இந்தப் புதிய நினைவுகூருதலை ஆசரிப்பதன் வாயிலாக - ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் விசுவாசத்தினால் "இரத்தம் தெளிக்கப்படுவதன்" வாயிலாகவும், விசுவாசத்தினால் அவரது மாம்சமானது "மெய்யானப் போஜனமென" புசிக்கப்படுவதன் வாயிலாகவும், அவர்களுக்கு உண்டான மாபெரும் நிஜமான கடந்துபோகுதலை ஆசரிக்கின்றவர் களாய் இருப்பார்கள். (யோவான் 6:55)

நம்முடைய ஆசரிப்பிற்கும், யூதர்களுடைய ஆசரிப்பிற்கும் சம்பந்தமில்லை; அவர்கள் "பண்டிகை வாரத்தினையே" ஆசரிக்கின்றனர்; நாமோ அவர்களது பண்டிகைக்கு முந்தின நாளில், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்றதாக தேவ ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தினை நாம் ஆசரிக்கின்றோம். நாம் ஆசரிக்கின்ற தான நாளானது, முழுச் சுவிசேஷயுகத்தையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது; இதில் தலையாகிய கிறிஸ்து இயேசுவின் சரீரமானது - முழுச்சபையானது அவரோடுகூட மனமுவந்து பலிச் செய்கிறவர்களாகப் பாடுபட வேண்டும். பண்டிகை வாரமானது, சீக்கிரத்தில் ஆயிரவருட யுகத்தில் வரவிருக்கின்ற மகிமையையும், சந்தோஷத்தையும் நமக்கு அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இந்த நினைவுகூருதல் குறித்ததான நமது கர்த்தருடைய வார்த்தைகளானது: "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்பதேயாகும். மேலும் அப்போஸ்தலனும்கூட "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று கூறுகின்றார்; (1 கொரிந்தியர் 11:26) அதாவது அவர் தம்முடைய இராஜ்யத்தில் வல்லமையுடன் வந்து, உங்களை தம்மண்டை சேர்த்துக்கொள்ளுவது வரையிலுமாகும். அநேக கிறிஸ்தவர்கள், இந்த நினைவுகூருதலை பல்வேறு வேளைகளில், அதாவது வாரந்தோறுமாக, மாதந்தோறுமாக, காலாண்டுதோறுமாக, இன்னும் பல வேளைகளில் ஆசரிப்பதற்கான சுயாதீனம் காணப்படுவதாக அனுமானித்துள்ளனர்; ஆனால் ஆதித் திருச்சபையினருக்கு இசைவாகப் பார்க்கையில், நாம் மற்ற நிகழ்வுகளையெல்லாம்

ஆசரிப்பதுபோலவே, இதையும், அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிப்பதையே நமது கர்த்தர் தெரிவிக்கின்றார் என்று நாம் புரிந்துகொள்கின்றோம்; அதாவது "நீங்கள் 4-ஆம் ஜூலை அன்று ஆசரிக்கும்போதெல்லாம், இந்தத் தேசத்தினுடைய சுதந்திரத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று நாம் சொல்வதுபோலாகும்.

கடைசி இராப்போஜனத்தில் நமது கர்த்தருடைய மரணத்தினை, ஞாயிறுதோறும் நண்பகலில் ஆசரிப்பவர்கள், வாரந்தோறும் கர்த்தருடைய நாளன்று, ஆதித் திருச்சபையாரால் ஆசரிக்கப்பட்ட "அன்பின் விருந்துகளை" (அ) "அப்பம் பிட்குதலை," நினைவுகூருதல் இராப்போஜனம் என்று தவறாய்ப் புரிந்திருக்கின்றனர்; இந்த "அப்பம் பிட்குதலானது" கர்த்தருடைய நாள்தோறும், நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான நினைவுகூருதலாகவும், அப்பம் பிட்குதல் மூலம் அவர்களது புரிந்துகொள்ளுதலின் கண்களை அவர் திறந்ததற்குமான நினைவுகூருதலாகவும் ஆதித் திருச்சபையாரால் ஆசரிக்கப்பட்டு வந்தது. சரியாய்ப் புரிந்துகொள்ளப்பட்டால் சந்தோஷகரமான வாரந்தோறுமுள்ள இந்த விருந்துகளில் எதுவும், நமது போதகருடைய துயரம் மற்றும் மரணத்திற்குமான வருடாந்தர நினைவுகூருதலுக்கு, ஒத்திருப்பதில்லை மற்றும் இந்த விருந்துகளில் "பாத்திரமும்" குறிப்பிடப்படுவதில்லை.

நமக்கான நமது மீட்பருடைய மரணத்திற்கும், அவரது பலியினுடைய புண்ணியத்தின் வாயிலாக மரணத்திலிருந்து, ஜீவனிடத்திற்கான நமது கடந்துபோகுதலுக்கும், "அவரோடுகூட மரிப்பதற்கும்" - அவரது "பாத்திரத்தில்" பானம் பண்ணுவதற்குமான நமது அர்ப்பணிப்பிற்குமான நினைவுகூருதலான, நினைவு கூருதல் இராப்போஜனத்தினை அலிகெனியிலுள்ள (Allegheny) சபையார், அலிகெனியிலுள்ள (Alegheny, Pa) பைபிள் ஹவுஸ் சேப்பலில் (Bible House Chapel) ஆசரிப்பார்கள். எங்களோடு கூடிடுவதற்குச் சௌகரியமுள்ள, சத்தியத்திலுள்ள நண்பர்களை அன்புடன் வரவேற்கின்றோம்; ஆனாலும் எங்கெல்லாம் உள்ளூர் கூடுகைகள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது எங்கெல்லாம் இப்படிக் கூடிடுவதற்கு வாய்ப்புள்ளதோ, அவைகள் தவிர்க்கப்பட வேண்டாம் என்று நாம் புத்திமதிக் கூறுகின்றோம். இது கர்த்தருடைய ஜனங்களுடைய இருதயங்களானது நெருக்கமாய்க் கூடிடுவதற்கான ஏற்றக்காலப்பகுதியாகக் காணப்படுகின்றது; இன்னுமாக இந்த ஒரு காலங்களானது, கர்த்தருடைய பின்னடியார்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கைப் பண்ணிக்கொள்கின்ற யாவருக்கும் சோதனைக் காலங்களாகக் காணப்படுகின்றது; முற்காலத்து பேதுருவைப் போன்றவர்கள் வருடத்தினுடைய இந்த ஒரு காலப்பகுதியில் விசேஷமாய்ப் புடைத்தெடுக்கப் படுகின்றனர்.

வருடத்தினுடைய இந்த ஒரு காலப்பகுதியில் ஆதி சீஷர்களுக்கு நமது கர்த்தரினால் கொடுக்கப்பட்டதான புத்திமதியானது, இன்னமும் விசேஷித்த விதத்தில் பொருத்தமானதாகவே காணப்படுகின்றது; அது "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு

விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்!" என்பதேயாகும். இதை உணர்ந்தவர்களாகப் பழைய அமைப்புகளாகிய உரோமன் கத்தோலிக்க மற்றும் எப்பிஸ்கோப்பல் சபையார் இன்னமும் நினைவுகூருதலுக்கு முன்பு உபவாச (அ) லெந்து காலங்களைப் பெற்றிருக்கின்றனர்; இப்படியான உபவாசக் காலங்களுக்குள் சம்பிரதாயமாக இல்லாமல், சரியான ஆவியுடன் பிரவேசித்தல் என்பது, சரீர ரீதியிலும், ஆவிக்குரிய ரீதியிலும் அநேகருக்கு மிக உதவிகரமான வழக்கமாய் இருந்துள்ளது என்று நாம் நம்புகின்றோம்.

கர்த்தருடைய ஜனங்களால் ஆரம்பத்தில் ஆசரிக்கப்பட்டு வந்ததான நினைவுகூருதல் இராப்போஜனத்திற்குப்பதிலாக கணக்கீடு முறைமையின் சிறுமாற்றங்கள் காரணமாக "புனித வெள்ளி" என்ற ஒன்று கொண்டுவரப்பட்டது. கர்த்தருடைய இராப்போஜனத்தை மிகவும் அடிக்கடி புராட்டஸ்டண்டினர்கள் ஆசரிப்பதானது, உண்மையிலும், கொள்கையிலும் நமது கர்த்தருக்கு அருவருப்பானதாய்க் காணப்படுகின்றதான, போப்மார்க்கத்தினுடைய "பூசைபலி" எனும் ஆசரிப்பினுடைய அடிப்படையிலேயே ஆகும்; இந்தப் பூசைபலியானது, கல்வாரியில் நடைப்பெற்றதான பலி முழுக்கப் போதுமானதாய் இருக்கின்றது என்பதை மறுக்கின்றதாய் இருக்கின்றது.

எங்குமுள்ள கர்த்தருடைய ஜனங்கள், பாவத்திற்கான மாபெரும் பலியினுடைய நினைவுகூருதலாக இதைச் செய்வார்கள் என்றும், இதை வெளித்தோற்றமான நினைவுகூருதலாக மாத்திரமல்லாமல், அதேவேளையில் விசுவாசத்தினால், தங்கள் இருதயங்களில் கர்த்தரைப் புசிக்கிறவர்களாகவும், "பாத்திரத்தில்" பங்கெடுக்கையில், அவரிடத்தில் மரணம்வரையிலான தங்கள் அர்ப்பணிப்பை மீண்டுமாக உறுதிப்படுத்துபவர்களாகவும் இருப்பார்கள் என்றும் நாம் நம்புகின்றோம். மேலும் விவரங்களுக்கு R5191-ஐ பார்க்கவும்.

இதைச் செய்யும்படிக்கு அவரது அருமையான நாமத்தில் கூடிடுகின்றதான இரண்டு (அ) மூன்று பேர்கள் எங்கெல்லாம் கூடுகின்றார்களோ - இப்படியான ஒவ்வொரு சிறுகூட்டத்தாருடைய நியமிக்கப்பட்ட காரியதரிசியிடமிருந்து உடனடியாக அறிக்கைகளை, அஞ்சல் அட்டைகள் வாயிலாகப் பெற்றுக்கொள்வதில் நாம் மகிழ்ச்சியாயிருப்போம். தொழில் காரியங்களினால் அந்த விலையேறப்பெற்ற தருணத்தினுடைய இருதய "ஐக்கியமானது" குலைக்கப்படாதபடிக்கு, ஒழுங்குகளை முன்கூட்டியே செய்துவிடுங்கள். ஜெபத்திலும், ஐக்கியத்திலும் மாத்திரமாக நாம் அனைவரும் ஒன்றாய்க் காணப்படுவது மாத்திரமல்லாமல், விடியலின் துதி பாடல்களிலுள்ள 1, 23 மற்றும் 122-ஆம் துதிப் பாடல்களையும், முடிந்த அளவுக்குப் பழகிக்கொள்வோமாக.

## கல்வாரி

அழகான பல இயற்கையினூடே
என் யாத்ரிக கோலைக்கொண்டுவந்து
பல பாறைகளின் உயரத்திலிருந்து
பள்ளத்தாக்குகளைக் கூர்ந்துபார்த்தேன்.
ஆனால் இதுவரை நான் பார்த்த எல்லா மலைகளுக்கும் மேலாக,
அமைதி எனக்குத் தரும் குன்றாகிய
கல்வாரி மலைப்போல் பார்த்ததில்லை.

மேகங்களைத் தொடும் பனி கிரீடமுடைய தலைப்பாகம் அம்மலைக் இல்லையே
கதிரவனின் கதிரால் உருகும் ஆல்ப்ஸ் மலையின் பனிப்பாறைகள் இல்லையே
அம்மலையின் தோள்கள் வெளிப்படையானவை
ஆனால் என் எல்லா அலைச்சல்களிலும்
கல்வாரி மலையில் இருப்பதுபோல
பரலோகம் எனக்கு அருகாமையிலும்
பூமி எனக்குத் தொலைவாகவும் இருப்பதுபோல உணர்ந்ததில்லை.

அதன் உச்சியில் கிரீடம் போன்ற காடு அங்கு இல்லை.
மெதுவாய் அசையும் சீமை மரம் அங்கு இல்லை.
விலையுயர்ந்த தேவதாரு மரம் அங்கு இல்லை.
ஆனால் எர்மோன் மலையில் காணப்பட்ட
எல்லா இராஜரிக கேதுருக்களும் உயர்ந்திருந்தாலும்,
கல்வாரி மலையின் முன்பு தாழத் தலைவணங்கி நின்றது.

மண்புழு போன்ற யாத்ரிகனே அங்குப் போய்
இறுதியான உன் இளைப்பாறுதலை நாடு;
பாரமான யாவற்றையும் அங்கு
இயேசுவின் பாதத்தில் வைத்து
பின்பு வந்து மகிழ்ச்சியின் துதியைச் செலுத்து
எவ்வளவாய் உனக்குச் செய்யப்பட்டது என்பதற்காக.
மகிமைக்குரிய பாதையே, கல்வாரியின் பாதை என்று அறிந்துகொள்.

– From the German (R2167)

# நினைவுகூருதல் இராப்போஜனம்

நமது கிறிஸ்தவ நம்பிக்கைகள் அனைத்திற்குமான அஸ்திபாரமாகிய மாபெரும் நிகழ்வினை ஆசரிப்பதில், அதாவது நமது பஸ்காவாகிய கிறிஸ்துவினுடைய மரணத்தினை ஆசரிப்பதில், கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொரு வருடமும் ஆர்வம் காட்டிக்கொண்டுவருவது அதிகரித்து வருகின்றது. ஒவ்வொரு வருடமும் இவ்விஷயமானது அதிக தெளிவுடன் அதிகமானவர்களால் கிரகிக்கப்பட்டு வருகின்றது மற்றும் இதற்கேற்ப அத்தருணத்திற்கு ஏற்புடையதான பயபக்தியும், பரிசுத்தத்துடன்கூடிய சந்தோஷமும் தீவிரமாகுகின்றது மற்றும் பொங்கிவழிகின்றதான ஆசீர்வாதமும்கூடத் தெளிவாய்த் தெரிகின்றதாய் இருக்கின்றது.

எவ்வளவு பேர் கலந்துகொண்டார்கள் மற்றும் கர்த்தருடைய ஆவியும், ஆசீர்வாதமும் எவ்வளவு காணப்பட்டது என்பது பற்றித் தகவல் கொடுக்கும்படிக்கான நம்முடைய வேண்டுகோளுக்கு இணங்கி, ஏப்ரல் 12-ஆம் தேதி மாலையன்று ஆசரித்திட்டதான கர்த்தருடைய ஜனங்களின் சிறு, சிறு கூட்டத்தாரில் அநேகர் தகவல் கொடுத்துள்ளனர். தகவல்களை வைத்துப்பார்க்கையில், இந்த வருடம் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கையானது, கடந்த வருடத்தைக்காட்டிலும் அதிகரித்துள்ளது என்று நாம் எண்ணுகின்றோம். அநேகரிடமிருந்து இன்னும் நமக்குத் தகவல் கிடைக்கவில்லை என்றாலும், எண்ணிக்கை அதிகமாகவே காணப்படுகின்றது. கடிதங்களை வைத்துப்பார்க்கையில், அவ்வாசரிப்பின் காரியமானது ஆழமாய்ப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றது என்றும், அது நமது கர்த்தராகிய இயேசுவினுடைய மாபெரும் பலியை மாத்திரமல்லாமல், அவருடைய பலியில், அவரோடுகூட ஒன்றுப்பட்டிருப்பதற்கான அவருடைய ஜனங்களின் அர்ப்பணிப்பையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்று ஆழமாய்ப் புரிந்துகொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

அலிகெனியிலுள்ள (Allegheny) சபையாருக்கு அது மிகுந்த ஆசீர்வாதமான தருணமாய்க் காணப்பட்டது; சுமார் 290-பேர் கலந்துகொண்டார்கள். நாங்கள் முதலாவதாக யூதர்களுக்கு நிறுவப்பட்டதான பஸ்காவின் பொதுவான அர்த்தத்தையும், நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டிக்கும், நம்முடைய பஸ்காவாகிய தேவாட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவுக்கும் இடையிலுள்ள தொடர்பையும் பார்த்தோம் மற்றும் அந்த இரவில் கடந்துபோகப்பட்டவர்களாகிய இஸ்ரயேலின் முதற்பேறானவர்களிடத்தில், இந்தச் சுவிசேஷ யுகத்தில், தேவனால் கடந்துபோகப்படுபவர்களாகிய முதற்பேறான சபைக்கு நிழலைக் கண்டோம். பின்னர் இந்த முதற்பேறானவர்கள், ஒட்டுமொத்த இஸ்ரயேலர்களுக்குத் தலைவர்களாகவும், அவர்களை எகிப்தின் அடிமைத்தனத் தினின்று விடுவிக்கிறவர்களாகவுமானார்கள் என்பதை நாங்கள் பார்த்தோம்; மேலும் இந்த விடுதலைக்கான நிஜமானது, தேவனை அன்புகூருகிறவர்களுக்கும், உலகம், பாவம் மற்றும் பார்வோன் அடையாளப்படுத்துகின்ற சாத்தானின் அடிமைத்தனத் தினின்று, விடுதலையாகி, தேவனுக்கு ஊழியம்புரிய விரும்புகின்றவர்களுமான அனைவரின் இறுதி விடுதலையாகக் காணப்படுகின்றது என்றும் நாங்கள் பார்த்தோம்; மேலும் இந்த விடுதலையானது, ஆயிரவருட யுகத்தின்போது, முதற்பேறான சபை ஆயிரவருட இராஜ்யத்தில், கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்போது சம்பவிக்கிறதாய் இருக்கும் என்று நாங்கள் பார்த்தோம்.

அடுத்து நிஜத்தினைப்பற்றின அறிந்துகொள்ளுதல் இல்லாமல், எப்படி யூதர்கள் நிழலை 16 நூற்றாண்டுகளுக்கும் மேலாக ஆசரித்துவந்தார்கள் என்றும்; ஏற்றக் காலத்தில் நிஜமான ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து நிழலான ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்ட அந்த ஒரு மாதத்தினுடைய அதே நாளில் அடிக்கப்பட்டார் என்றும், நிழலான ஆட்டுக்குட்டியையும், நிழலான கடந்துபோகுதலையும் ஆசரிக்கத்தக்கதாக யூதர்களைப்போன்று இயேசுவும், அவரது சீஷர்களும் ஒன்றுகூடின அதே நாளில்தானே நமது கர்த்தர், நிழலை அல்ல, மாறாக நிஜமான தம்மைச் சுட்டிக்காட்டுகின்றதான ஒரு புதிய நினைவுகூருதலை ஏற்படுத்தினார் என்றும் நாங்கள் பார்த்தோம். இயேசு தம்முடைய மாம்சத்தையும், தம்முடைய இரத்தத்தையும் அடையாளப்படுத்திடுவதற்கெனத் தெரிந்துகொண்டுள்ள அந்த அடையாளச் சின்னங்களின் பொருத்தத்தையும் நாங்கள் பார்த்தோம்; புளிப்பில்லாத அப்பமானது மிகவும் அருமையாக நமது அருமை மீட்பருடைய தூய்மையையும், பாவமற்ற தன்மையையும் சித்தரிக்கின்றதாய் இருக்கின்றது; மற்றும் திராட்சப்பழரசமுள்ள பாத்திரமானது அவரது பாடுகளைச் சித்தரிக்கின்றதாய் இருக்கின்றது என்று பார்த்தோம்; இந்தப் பாடுகளானது கவலையோடு இல்லாமல், மாறாக நம் நிமித்தமாகச் சந்தோஷமாய், மகிழ்ச்சியாய், மனமுவந்து சகிக்கப்பட்டவையாகும் மற்றும் நாமும் அவைகளில் களிகூர்ந்தோம்.

அப்பத்தை அடையாளமாய்ப் பயன்படுத்துகையில், நம்முடைய இருதயங்களில் எப்படி அவரைப் புசிக்க வேண்டும் என்றும், அவரது பலியின் மூலமாக மாத்திரமே நமக்கு ஜீவன் உண்டு என்பதாகவும், அவர் மரணத்தில் நமக்குப் பதிலாளானதால் மாத்திரமே, நமது தந்தையாகிய ஆதாமினுடைய மீறுதல் காரணமாக, நம்மீது காணப்பட்டதான ஆக்கினைத்தீர்ப்பினின்று, நமது சந்ததி விடுவிக்கப்பட முடியும் என்பதாகவும் உள்ள உண்மைகளை மனதிற்குமுன் கொண்டுவரும் விதத்தில், நம்மால் அவரது மாம்சத்தைப் புசிக்கக்கூடும் என்றும் நாங்கள் பார்த்திட்டோம். புது உடன்படிக்கையினை முத்திரிக்கின்றதான நமது கர்த்தருடைய மரணத்திற்கு அடையாளமான திராட்சப்பழரசத்தை நாங்கள் பார்த்திட்டோம்; இந்த இரத்தத்தின் கீழ்த் தேவன் கிறிஸ்துவின் வாயிலாக நம்முடைய அபூரணங்களிடத்தில் இரக்கமாய்க் காணப்படக்கூடும், மற்றும் சில சமயங்களில் மாம்சத்தின் பெலவீனங்களானது விரும்பிட்ட பலனைக் கொணருவதற்குத் தடையாய்க் காணப்பட்டாலும்கூட, நம்முடைய நோக்கங்களை அவர் ஏற்றுக்கொள்கின்றார்.

பின்னர் வேறே கோணத்திலிருந்து இக்காரியத்தினை நாங்கள் பார்த்திட்டோம், அதாவது 1 கொரிந்தியர் 10:16, 17-ஆம் வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளதான இரண்டாம் கோணத்தை நாங்கள் பார்த்திட்டோம்; இந்த இரண்டாம் கோணத்தின்படி முழுச் சபையும் ஒரே அப்பமாய் இருக்கின்றார்கள் மற்றும் அந்த ஒரே அப்பத்தில், கிறிஸ்துவினுடைய ஒரே சரீரத்தில் அங்கமாகியுள்ளவர்கள் அனைவரும், தலையானவருக்கான ஊழியத்திலும், ஒருவருக்கொருவர் புரிந்திடும் ஊழியத்திலும் பிட்கப்படுவது என்பது, அவர்களுக்கான கடமையாகவும், சிலாக்கியமாகவும் காணப்படுகின்றது; மற்றும் இப்படியாக நாம் கிறிஸ்துவினுடைய பாடுகளில், ஐக்கியத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும் மற்றும் இறுதியில் அவரது மகிமையில் கிறிஸ்துவோடு பங்காளிகளாகவும் முடியும். நாம் கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் (பாடுகளில்) பங்குகொள்ளுதலாய் இருக்கின்றது என்றும், நம்முடைய ஜீவியங்களை,

அவருடையதுடன் ஒருங்கிணைத்துக்கொள்வதாய் இருக்கின்றது என்றும், கிறிஸ்துவினுடைய பாடுகளில் குறைவானதை நிறைவேற்றிடுவதற்காக நம்மை அவருடன் இணைத்துக் கொள்வதாய் இருக்கின்றது என்றும் நாங்கள் பார்த்தோம். அந்த அருமையான அடையாளத்தினுடைய மிக ஆழமான அர்த்தத்திற்குள் பிரவேசித்திட நாங்கள் முயற்சித்தோம் மற்றும் அதை எங்களுடைய இருதயங்களில் தேவனுடைய வல்லமையாகப் பெற்றுக் கொள்ளவும் மற்றும் இதன் மூலம் நமது அருமை இரட்சகர் பற்றின ஆழமான புரிந்துகொள்ளுதலுக்கும், அவரது சீஷர்களென அவரது அடிச்சுவடுகளில் நடக்கத்தக்கதாக ஆழமான பக்தியினைப் பெற்றிருத்தலுக்கும் நேராக வழிநடத்தப்படவும் நாங்கள் நாடினோம்.

வானத்திலிருந்து இறங்கிவந்திட்டதான ஜீவ அப்பத்திற்காக - இயேசுவுக்காக - மனித குடும்பத்தினுடைய ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதான அங்கத்தினனாய் இராமல், அவரது மகா பலியின் மூலமாக நாம் பெற்றிருக்கின்றதான ஆசீர்வாதங்கள் அனைத்திற்கும் நம்முடைய இரட்சகராய் இருப்பதற்கும், நம்முடைய அப்பமாய் இருப்பதற்கும், நமக்கு ஜீவன் அளிப்பவராய் இருப்பதற்கும் பொருத்தமானவராக விசேஷமாய் அருளப்பட்டவருக்காக - தேவனுக்கு ஸ்தோத்திரத்துடன்கூடிய ஜெபத்தினை ஏறெடுத்தப் பிற்பாடு, நாங்கள் அப்பத்தில் பங்கெடுத்தோம். பின்னர் எங்கள் கடந்தகால பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டிருந்தாலும்கூட, எங்களுக் கென்று எங்களிடத்தில் எந்த நீதியும் இல்லை என்றும், கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின்கீழ் இல்லாமல், எங்களுக்குத் தேவன் முன்னிலையில் எந்தத் தகுதியும் இல்லை, அல்லது அவரிடத்தில் எந்தத் தொடர்பும் பெற்றிருக்க முடியாது என்றும் ஒப்புக்கொண்டவர்களாக, பாத்திரத்திற்காக ஸ்தோத்திரித்தோம். தேவனுடைய கிருபையினால் நாம் இயேசுவோடுகூட ஐக்கியங்கொள்ளத்தக்கதாக அழைக்கப்பட்டதற்காகவும் நாங்கள் ஸ்தோத்திரித்தோம் மற்றும் கர்த்தருடைய கிருபையினால், நாங்கள் உண்மையாய் எங்களுடைய ஓட்டத்தில் ஓடிடுவோம் என்றும், இறுதியில் எங்கள் போதகரோடுகூட, அவரது மகிமையில் உடன்சுதந்தரர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவரோடுகூட இராஜ்யத்தின் சந்தோஷங்களில் பங்கெடுப்பவர்களாகுவோம் என்றுமுள்ள எங்களது நம்பிக்கைகளை ஆண்டவரிடத்தில் கூறினோம்.

இப்படியாக அந்த எளிமையான, ஆனால் மனதில் ஆழமாய்த் தாக்கம் ஏற்படுத்துகின்ற நினைவுகூருதலானது நிறைவு பெற்றது; மற்றும் அவ்வேளையினுடைய பயபக்தியானது நம்மில் நிலவத்தக்கதாகவும், நம்முடைய பரஸ்பர ஆறுதலுக்காகவும், சந்தோஷத்திற்காகவும், நம்முடைய மனங்களை நிரப்பிக்கொண்டிருக்கின்றதான அந்த விலையேறப்பெற்றவைகளிலிருந்து, நம்முடைய மனங்களைத் திசைத் திருப்புவதற்கு ஏதுவான எந்தச் சம்பாஷணைகளுக்குள்ளும் கடந்துபோகாமல், மாறாக பின்னர் தொடர்ந்து சீஷர்கள்மீது வந்திட்டதான கடுமையான சோதனைகளையும், அருமை போதகருடைய சோதனைகளையும் நினைவுகூரவும், அவரது உண்மையை அதிகமாய் உணர்ந்துகொள்வதற்கும், வருஷத்தினுடைய அந்தக் காலப்பகுதியில் மிகவும் வீரியத்துடன் காணப்படும் எதிராளியானவனுடைய தந்திரங்களுக்கு எதிராக அதிக ஜாக்கிரதையுடன் காணப்படுவதற்கும் நாடவும் வேண்டி, அந்த மாலையில் நாம் கலைந்து சென்றிடுவதற்கு வேண்டுகோள் வைக்கப்பட்டது. முதலாம் துதிப்பாடலைப் பாடிவிட்டு, நாங்கள் கலைந்துபோனோம்.

# யார் நினைவுகூருவது ஏற்றது?

**கேள்வி.** நினைவுகூருதலானது கிறிஸ்துவினுடைய பலியின்மீதான விசுவாசத்தின் வாயிலாக, அவரது நீதியைச் சொந்தமாக்கிக்கொள்வதை அடையாளப்படுத்துகின்றது என்று கூறுவது சரியா? சரியென்றால் விசுவாசத்தின் வாயிலாக நீதிமானாக்கப்பட்ட, ஆனால் இன்னமும் அர்ப்பணம் பண்ணாத ஒரு நபர், அடையாளச் சின்னங்களில் பங்கெடுப்பதற்கு முழு உரிமையுடையவராய் இருக்கின்றாரா?

**பதில்.** இந்தத் தற்கால யுகத்தில் நீதிமானாக்கப்படுவதற்கான ஒரே நோக்கமானது, நீதிமானாக்கப்பட்டவன் தன்னை அர்ப்பணம்பண்ணுவதற்குத் தகுதியாக்குவதேயாகும் மற்றும் அர்ப்பணம்பண்ணுவதற்கும், புதிய சுபாவத்திற்குள் ஜெநிப்பிக்கப்படுவதற்கும் என்று ஒருவன் தன்னுடைய நீதிமானாக்கப்படுதலைப் பயன்படுத்தவில்லையெனில், அவன் தேவனுடைய கிருபையை விருதாவாகப் பெற்றுக்கொண்டவனாய் இருக்கின்றான் - அதைப் பயன்படுத்துவதற்குத் தவறுகின்றவனாய் இருக்கின்றான். அவன் செய்வது பின்வரும் உதாரணத்திற்கு ஒத்ததாய் இருக்கும்: ஐசுவரியமுள்ள நண்பர் ஒருவர், ஏழை ஒருவன் பொருட்களைத் தன்னுடைய கடையில் வாங்கத்தக்கதாகச் சீட்டுக் கொடுத்துவிட்டு, "1905-ஆம் வருடமாகிய இந்த வருடத்தில், எந்த ஒரு காலபகுதியிலும் ஜான் பிலாங்கோ (அ) மேரி பிலாங்கோ, என்னுடைய கடையில் இந்தச் சீட்டைக் கொண்டுவந்து காண்பிப்பார்களானால், அவர்கள் விரும்புகிற பொருட்களுக்கு விலையில் பத்தில் ஒரு பாகத்தினைச் செலுத்தினால் போதும், அவர்கள் வாங்கின பொருட்கள் அனைத்திற்குமான விலையில் 90 சதவிகிதமான பாகத்தினை நான் செலுத்திடுவேன்" என்று கூறுகின்றார் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒருவேளை ஜான் பிலாங்கோ (அ) மேரி பிலாங்கோ அந்த வருடத்தில் அந்தச் சீட்டினைக் கொண்டுசெல்வதற்கும், அந்தக் குறிப்பிட்டக் காலப்பகுதியில் பொருட்கள் எதையேனும் வாங்குவதற்கும் தவறினால், அந்தச் சீட்டானது உண்மையில் அவர்களுக்குப் பயனற்றதாய் இருக்கும், ஏனெனில் அவர்கள் அதன் நன்மை பயக்கும் நிபந்தனைகளைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இதுபோலவே இப்பொழுது விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டவர்கள், தங்களையே அர்ப்பணம்பண்ணுவதற்கும், பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப் படுவதற்கும், தற்கால சிலாக்கியங்களைப் பலிச்செலுத்துதல் எனும் சிறிய

விலைக்கொடுத்து மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களை அடைவதற்குமான சிலாக்கியத்தினைப் பெற்றுக்கொள்பவர்களாய் இருக்கின்றனர் மற்றும் பரம அழைப்பினைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக இந்த யுகத்தில் தனது நீதிமானாக்கப்படுதலை இப்படியாய்ப் பயன்படுத்தாதவன், அதினால் எந்த நன்மையும் அடையாதவனாய் இருக்கின்றான்; ஏனெனில் அது இந்த ஜீவிதம் முடிவதோடு, செயலற்றுப் போய்விடுகின்றது மற்றும் அடுத்துவரும் ஜீவியத்தில், மீதமான மனுக்குலத்திற்குக் காணப்படுவதுபோலவே அதே நிபந்தனைகளுடன் புதுப்பிக்கப்பட வேண்டும்.

இதை நினைவுகூருதல் இராப்போஜனத்திற்குப் பொருத்திப்பார்த்தல்: நினைவுகூருதல் இராப்போஜனமானது, நம்முடைய நீதிமானாக்கப்படுதலை அடையாளப்படுத்துகின்றதான அப்பத்தைப் புசித்தலை மாத்திரமல்லாமல், கிறிஸ்துவினுடைய பாடுகளில் ஐக்கியங்கொள்ளுதலை, பாத்திரத்தில் பங்கெடுத்தலையும்கூட அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இந்த இரண்டு கருத்துகளுமே அந்த அடையாளத்தில் இணைத்துக் காட்டப்பட்டுள்ளது மற்றும் அதை நாம் பொருத்திப்பார்க்கும் விஷயத்தில், அதைப் பகுதிகளாகப் பிரித்திடக்கூடாது. ஆகையால் கிறிஸ்துவினுடைய நீதியில் பங்கெடுப்பதன் வாயிலாக நீதிமானாக்கப்பட்டவர்கள் மாத்திரமல்லாமல், இன்னுமாக அவரோடுகூடப் பலியிலும், அவரது பாத்திரத்தில் பானம்பண்ணுவதிலும் உடன்சுதந்தரர்களானவர்கள் மாத்திரமே ஒழிய, மற்றவர்கள் நினைவுகூருதல் இராப்போஜனத்தில் பங்கெடுப்பது ஏற்றதாயிராது.

# நாம் அங்கே இருந்திருப்போமாகில்

நாம் இயேசுவின் நாட்களில் ஜீவித்திருப்போமாகில்
எத்தகைய விசுவாசமுள்ளவர்களாய் இருந்திருப்போம்!
நாம் அவருடன் அங்கே இருந்திருந்தால் - நாம்
நித்திரைபண்ணாமல் விழிப்புடன் இருந்திருப்போமே.

நாம் இயேசுவின் நாட்களில் ஜீவித்திருப்போமாகில்
அவரது பாதங்களைக் கழுவியிருந்திருப்போம் - அவர்
பாதம்தனை வேறுயாராகிலும் கழுவட்டும் என்று
நாம் காத்திருந்து இருக்கமாட்டோமே.

அவரது சோதனையின் மற்றும் தேவையின் நேரத்தில்
அவரோடு அவரருகில் இருந்திருப்போம் - அவர்
கைவிடப்பட்டபொழுதில் நாம் அவரோடே இருந்திருப்போமே.

அவரது கல்வாரி பயணத்தின் வழியே
அவரது பாரச்சுமையை மனமுவந்து சென்று - நாம்
சற்றே தாங்கி இருந்திருப்போமே
நாம் அங்கே இருந்திருப்போமேயாகில்.

இப்போது எல்லா வலிகளுக்கும் நீங்கலாகி அவர் தெய்வீக
உன்னதங்களிலே உயர்த்தப்பட்டிருக்கின்றார்.
அவர் மாம்சத்தில் நம்மோடில்லாதபடியால் - நாம்
அவருக்கு நேரடியாக ஊழியஞ்செய்ய இயலாது.

ஆயினும் அவர் மகிமைப்படுத்தப்பட்டிருக்கும் இப்பொழுதிலும்
அவருக்குச் சொந்தமானவர்களுக்குச் செய்யப்படுவது எதுவோ
அது அவருக்கே செய்யப்பட்டதாகும் - எனும்
அவர் வார்த்தைகள் நமக்குத் தெரிவிக்கின்றதே.

இடுக்கமான வழிதனில் இன்னமும் காணப்படுகின்ற
அவருடையவர்களின் தேவைகளுக்கு நாம் இணங்கி
அவருக்கு ஊழியம் செய்திடும் சிலாக்கியம் - மாபெரும்
சிலாக்கியம் இன்னமும் நமக்குள்ளதே.

அவருடைய பாத அங்கத்தினர்கள் இன்னமும் நம்முடன்
இருக்கின்றனரே, களைப்புள்ள பிரயாணிகளாக நடந்து
வருகின்றனரே, ஜீவதண்ணீர் கொண்டு - இவர்களைப்
புத்துணர்வு அடையப்பண்ணிடலாமே.

ஒருவருக்கொருவர் சிலுவை சுமப்பதற்கு உதவி செய்து
நம் அன்பை அவருக்குக் காண்பிப்போமே.
இப்படியாய் அவரோடு அங்கே இருந்திருப்போமானால் - நாம்
என்ன செய்திருந்திருப்போம் என்று அறிந்துகொள்வாரே!

– Poems of the Way, p. 73

# பஸ்கா நினைவுகூருதல், ஏப்ரல் 8, 1906

வெளிநாடுகளிலுள்ள நம்முடைய வாசகர்களின் நன்மைக்காக, நமது பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய மரணத்திற்கான ஆசரிப்பிற்குரிய தியதியை நாம் முன்கூட்டியே அறிவிக்கின்றோம். மீண்டுமாக இரண்டு தியதிகளில், ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் நமக்கு வந்துள்ளது. நம்மால் தேட முடிந்த அனைத்து ஆல்மனாக்குகளிலும் (almanac)/ஆண்டுக்குறிப்பேடுகளிலும் (calendar), இளவேனிற் சம இரவு பகல் நாளுக்குப் பின்னர்வரும் அமாவாசைக்கான தியதி மார்ச் 24-ஆம் தியதியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தியதியிலிருந்து கணக்கிடுகையில் நீசான் 13-ஆம் தேதியினுடைய இரவாகிய நினைவுகூருதலின் நாளின் தியதியானது ஏப்ரல் 6-ஆம் தியதியாகக் காணப்படுகின்றது. ஆனால் அனைத்து almanac/ஆண்டுக்குறிப் பேடுகளும் நாங்கள் அறிந்திருக்கிறவரை, பௌர்ணமியின் தியதியினை ஏப்ரல் 9 என்று கொடுத்துள்ளது. நாம் ஏற்கெனவே சுட்டிக்காண்பித் திருக்கிற பிரகாரம், வேதவாக்கியங்களில் சந்திரனானது, யூத ஜாதிக்கு அடையாளமாய் இருக்கின்றது மற்றும் இதற்கான நோக்கம் இஸ்ரயேலுக்கான வாய்ப்புகளும், பரீட்சைகளும், நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படும் காலப்பகுதியில் முழு அளவில் காணப்பட்டது என்பதற்கும், சிலுவையில் அறையப்பட்ட காலம் முதற்கொண்டு, அந்த ஜாதியாருக்கான ஒளி நலிவுற ஆரம்பித்தது என்பதற்கும் அடையாளமாகக் காணப்படவே ஆகும்.

இம்முரண்பாட்டிற்கு (அ) அமாவாசையிலிருந்து பௌர்ணமி வருவதற்கு எப்படி 16-நாட்கள் தேவைப்படும் என்பதற்குக் காரணம் அறிய முடியாததினால், நாங்கள் அலிகெனியின் வான் ஆய்வு மையத்தினைக் கண்காணிப்பவர்களிடம் (Allegheny Observatory Astronomers) விசாரித்தோம்; அவர்களாலும் காரணம் கூறமுடியவில்லை மற்றும் almanac/ஆண்டுக்குறிப்பேட்டின் விவரங்கள் சரியே என்று உறுதி மாத்திரமே செய்தனர். அவர்கள் எங்களை வாஷிங்டனில் (Washington, D.C.) உள்ள அமெரிக்க கடற்படை ஆய்வு மையத்திடம் விசாரிக்கும்படிக்குப் பரிந்துரைத்தனர்; இவர்களும்கூட நமக்கு almanac/ஆண்டுக்குறிப்பேட்டின் தியதிகளை உறுதிப்படுத்தினார்கள். ஆனாலும் இந்த முரண்பாட்டினுடைய விநோதத்திற்கான காரணத்தை அல்லது சாதாரணமாகவே சந்திரனானது பௌர்ணமி பாகத்தை அடைவதற்கு 14 நாட்கள் போதுமானதாய் இருக்க, ஏன் இத்தருணத்தில் 16 நாட்கள் எடுத்துக்கொள்கின்றது என்பதற்கான காரணத்தைக் கொடுக்க முடியாதவர்களாய் இருந்தார்கள்.

அமெரிக்க கடற்படை ஆய்வு மையம்,
வாஷிங்டன், டி. சி.
திரு. சி. டி. ரசல்,

ஐயா, கடந்த 31-ஆம் தேதியன்று நீங்கள் அனுப்பியுள்ளதான செய்தியினை நான் பெற்றுக்கொண்டேன்; அதில் 1906-ஆம் ஆண்டினுடைய சில ஆல்மனாக்குகளில் அமாவாசையானது மார்ச் 24-ஆம் தேதி, மாலை 6:52-க்கு இடம்பெறுவதாகவும், அதன் பௌர்ணமியானது ஏப்ரல் 9-ஆம் தேதி மதியம் 1:12-க்கு இடம்பெறுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இடைவெளி 15 நாட்களும், 6 மணி நேரங்களுமாகக்

காணப்படுவதினால், இதில் சில முரண்பாடு இருப்பதாக உங்களுக்குத் தோன்றுவதாகவும் குறிப்பிட்டிருந்தீர்கள்.

இதற்குப் பதிலளிக்கும் வண்ணமாக, நான் உங்களுக்குத் தகவல் அளிப்பது என்னவெனில், கூறப்பட்டுள்ள தகவல் சரியாக உள்ளது என்பதும், நேரமானது கிழக்கத்திய நேரப்படி உள்ளது என்பதுமேயாகும். சந்திரனுடைய வட்டத்தின் மா விலகல் (சுற்றுப்பாதையின் வட்ட விலகல்) காரணமாக அமாவாசைக்கும், பௌர்ணமிக்கும் இடையிலான காலப்பகுதியானது, அபூர்வமாக 15 நாட்களைத் தாண்டுகின்றதாய் இருக்கின்றது.

உங்கள் மதிப்பிற்குரிய,
வால்டர். எஸ். ஹார்ஷ்மேன்,
கணித பேராசிரியர்,
யு. எஸ். என். கடலோடிகளின் ஆண்டு குறிப்புநூல் இயக்குநர்.

நினைவுகூருதல் ஆசரிப்பதற்கான சரியான தியதியினைத் துல்லியமாய் உறுதிப்படுத்திடுவதற்கு நாங்கள் இவ்வளவு நுணுக்கமாய் ஆராய்ந்திட்டாலும், துல்லியமான தியதியே முக்கியமானது என்ற எண்ணத்தினைப் பதியவைத்திடுவதற்கு நாம் விரும்பவில்லை. நாம் நியாயப்பிரமாணத்தின்கீழ்க் காணப்படாமல், கிருபையின் கீழ்க் காணப்படுகின்றோம். நினைவுகூருதலை நாம் ஆசரித்தல் என்பது சிலாக்கியமும், வாய்ப்புமே ஒழிய கட்டாயப்படுத்தும் கட்டளையல்ல. அதன் ஆசரிப்பிற்கு நாம் ஒன்றுபோல் ஒரு தியதியினைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் அதை நாம் சரியான மனநிலையில் ஆசரிக்க வேண்டும் என்றும், அதாவது பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய நிழலானது, உலகத்திற்கான மீட்கும்பொருள் விலைக்கிரயமாக, தேவாட்டுக் குட்டியாகிய இயேசுவின் மரணத்தில் நிறைவடைந்ததற்கான நினைவுகூருதல் என்று ஆசரிக்க வேண்டும் என்றுமுள்ளவைகளே முக்கியமானவைகளாகும். நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கின்றாரே, ஆகையால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம். வேறு எதையும் அல்ல, இதையே அவரை நினைவுகூரும் வண்ணமாகவும், அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கும், தற்காலத்தில் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களுக்குத் திறந்துவைக்கப்பட்டுள்ளதான பலியுடன்கூடிய ஊழியங்களில் நம்முடைய ஜீவியங்களை அவரோடுகூட ஒப்புக்கொடுப்பதற்குமான நம்முடைய உடன்படிக்கையினை உறுதிப்படுத்தும் வண்ணமாகவும் நாம் செய்கின்றோம். நினைவுகூருதலை ஆசரிப்பதற்கான மிகுந்த ஏற்றவேளை, ஏப்ரல் 8-ஆம் தேதி, ஞாயிறன்று இரவாகும் என்று நாம் முடிவு செய்கின்றோம். யூதர்களும் இதையே கைக்கொண்டு, ஏப்ரல் 10-ஆம் தேதி, செவ்வாய்க் கிழமையை, பஸ்கா பண்டிகைக்கு (அ) நீசான் 15-ஆம் தேதியின் ஆரம்பம் என ஆசரிக்கின்றனர். இந்தக் கணக்கிடுதலின்படி நீசான் 14-ஆம் தேதி என்பது, ஏப்ரல் 9-ஆம் தேதி திங்கட்கிழமையாய் இருக்கும் மற்றும் யூதருடைய கணக்கிடுதலின்படி, நாளானது முந்தின மாலையோடு, அதாவது ஏப்ரல் 8-ஆம் தேதி, ஞாயிறு மாலையோடு துவங்குகின்றதாய் இருக்கின்றது. அந்தத் தியதியில், நாம் அனைவரும் ஒன்றுபோல் நினைவுகூருதல் இராப்போஜனத்தை ஆசரிப்போமாக.

# முதலாம் மாதத்தில் பஸ்கா

சந்திர காலம் மற்றும் சூரிய காலத்தின் அடிப்படையிலான யூதருடைய ஆண்டுக்குறிப்பேட்டுடன், சூரிய காலத்தின் அடிப்படையிலான நம்முடைய ஆண்டுக்குறிப்பேட்டை இசைவுப்படுத்திடுவதில் அநேகர் அதிகமாகவே சிரமத்திற்குள்ளாகுகின்றனர். இப்படியானவர்களுக்கு ஸ்மித் வேதாகம அகராதியில் இவ்விஷயம் குறித்து இடம்பெறும் பாதகத்தையும் மற்றும் எபிரெய காலகணக்கு நிபுணர் லிண்டோ அவர்கள் இவ்விஷயம் குறித்து எழுதியுள்ள பாதகத்தையும் மேற்கோளிட்டு, அன்பாய் உதவிட விரும்புகின்றோம்.

ஸ்மித் வேதாகம அகராதியானது முன்வைப்பது என்னவெனில்:

"யாத்திராகமம் புத்தகத்தில் நிறுவப்பட்டதான ஆண்டினுடைய அம்சங்களைத் தெளிவாய் அறிந்துகொள்ள முடிந்தாலும், அவைகளை நம்மால் ஒரு குறிப்பிட்ட வருடத்திற்கு அப்படியே பொருத்திட முடியாது. எனினும் அது *tropical* /நிலவுலக வெப்ப மண்டலத்தைச் சார்ந்தது என்பதில் சந்தேகமில்லை*;* ஏனெனில் தேசத்தின் விளைச்சல் சம்பந்தமான சில குறிப்பிட்ட அனுசரிப்புகளானது, குறிப்பிட்ட தியதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இன்னுமாக மாதங்களானது, சந்திர மாதங்கள் என்பதும் தெளிவாய்க் காணப்படுகின்றது*;* ஒவ்வொரு மாதமும் அமாவாசையுடன் துவங்கியது. ஆகையால் சில விதங்களில் சரிப்படுத்திக்கொள்ளும் ஏற்பாடுகள் (*adjustments*) காணப்பட வேண்டும் என்பதுபோல் தோன்றுகின்றது. என்ன ஏற்பாடுகள் பண்ணவேண்டுமென்று தீர்மானிப்பதற்கு முன்னதாக, முதலாவதாக வருஷம் எப்போது துவங்குகின்றது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். ஆபீப் மாதம் *16*-ஆம் தேதியன்று முதிர்ந்த கதிர்களானது, அறுப்பின் முதற்பலன்களாகச் செலுத்தப்பட வேண்டும். (லேவியராகமம் *2:14; 23:10, 11*) வாற்கோதுமையின் அறுப்புடன் அறுப்புத் துவங்குகின்றது (*2* சாமுயேல் *21:9*) மற்றும் பின்னர் கோதுமையின் அறுப்புத் தொடர்கின்றது. (ரூத் *2:23*) ஆகையால் பாலஸ்தீனியாவில் வாற்கோதுமை எப்போது முதிர்கின்றது என்று கண்டுபிடிக்கப்பட வேண்டியுள்ளது அவசியமாயிருக்கின்றது. பிரயாணிகள் தாங்கள் பார்த்ததாகத் தெரிவிக்கும் கருத்துப்படி வாற்கோதுமையானது தேசத்தினுடைய வெப்பமுள்ள பகுதிகளில் ஏப்ரல் மாதத்தின் துவக்க நாட்களில் முதிர்கின்றது. இளவேனிற் சம இரவு பகல் நாளுக்குப் பின்னர், மாதத்தின் பாதியில் வாற்கோதுமையின் அறுப்புத் துவங்குகின்றது*;* ஆகையால் வருஷம் சந்திர மாதங்களாக பிரிக்கப்படாத நிலவுலக வெப்ப மண்டலத்தின் அந்தக் கட்டத்தில், வருஷமானது துவங்குகின்றதாய் இருக்கின்றது. சம இரவு பகல் நாளின் போதான (அ) இதற்குப் பின்வரும் (ஆனால் இதற்கு மிகவும் முன்பல்ல) அமாவாசையானது, வருஷத்தினுடைய துவக்கமாக நிர்ணயிக்கப்படுகின்றது. மிகை மாதம் சேர்க்கும் முறைமையானது சிறைப்பிடிப்பிற்குப் பிற்பாடு வந்த முறைமையாக இருக்க வேண்டும்*;* மிகை மாதத்தைச் சேர்க்கும் முறைமை என்பது சமஇரவு பகல் நாளுக்கு, நெடுநாளுக்கு முன்னதாக பன்னிரண்டாம் மாதமானது நிறைவடையும் பட்சத்தில், பதிமூன்றாம்

மாதத்தைச் சேர்க்கும் முறைமையாகும் – ஏனெனில் அறுப்பின் முதற்பலன்களானது அடுத்துவரும் மாதத்தின் பாதியில் செலுத்தப்பட வேண்டும் மற்றும் இதுபோன்றதான காணிக்கைகளும் நியமிக்கப்பட்ட காலங்களில் செலுத்தப்பட வேண்டும்.”

லிண்டோ அவர்களின் சில பதிவுகள்:

“யூதருடைய வருடமானது சந்திரனுக்கும், சூரியனுக்கும் ஒருங்கே தொடர்பானதாகும் (*luni-solar*). ஏனெனில் மாதங்களானது சந்திர மாதங்களாகக் காணப்பட்டாலுங்கூட, சந்திரனுடைய சுழற்சியின் (*lunar cycle*) அடிப்படையில் எங்களுடைய கணக்கிடுதல் காணப்பட்டாலுங்கூட, ஒவ்வொரு *19*-ஆம் வருடத்திலும், நாமும் சூரிய வருடத்திற்கு ஒத்த தேதிகளுக்கு வருகின்றோம். சந்திர சுழற்சிக்கு (*lunar cycle*) *235* சந்திர மாதங்கள் (*lunations*) காணப்படுகின்றது*;* இதை நாம் வருடத்திற்குப் பன்னிரண்டு மாதங்கள் என்றுள்ள பன்னிரண்டு வருஷங்கள் (சாதாரண வருடங்கள்) என்றும், வருடத்திற்குப் பதிமூன்று மாதங்கள் என்றுள்ள ஏழு வருஷங்கள் என்றும் பிரிக்கின்றோம். வருடத்திற்கு *13* மாதங்கள்கொண்ட வருடமானது எம்போலிஸ்மிக் */Embolismic* வருடம் என்று அழைக்கப்படுகின்றது.

“கி. மு. *432*-ஆம் வருடத்தில், அதாவது சிதேக்கியாவின் ஆளுகையின்போது பெயர்ப்பெற்று காணப்பட்டவரான அத்தேனே பட்டணத்தின் பிரபலமான கணித நூல் வல்லுநராகிய மெடென் (*Meton*) அவர்களும் கூட இதைப்போலவே காலத்தைப் பிரித்துள்ளார், ஆனால் ஒவ்வொரு மூன்றாம் வருடத்தையும் எம்போலிஸ்மிக் (*Embolismic*) வருடமாகப் பிரித்துள்ளார்*;* (சந்திர சூழற்சியின்) *19* வருடங்களில், *18*-ஆம் வருடத்தையும், *19*-ஆம் வருடத்தையும் *13* மாதங்கள் கொண்டவைகளாகப் பிரித்துள்ளார்*;* நம்முடைய ஏற்பாடுகளின்படி, சந்திர வருடங்களும், சூரிய வருடங்களும் சமப்படுத்தப்படுகின்றது.

| | நாட்கள் | மணிநேரங்கள் | நிமிடங்கள் | விநாடி |
|---|---|---|---|---|
| ராப் அடாவின் அடிப்படையிலான *19* வருடங்கள் | *6939* | *16* | *33* | *3 ⅓* |
| *235* சந்திர மாதங்கள் | *6939* | *16* | *33* | *3 ⅓* |

“வருஷமானது மூன்று வகைகளில் காணப்படுகின்றது, அதாவது பூரண வருஷம், சாதாரண வருஷம், அபூரண வருஷம். பூரண வருஷத்திற்கு *355* நாட்கள் காணப்படுகின்றது மற்றும் இது *Hesvan* மாதத்திற்கு *30* நாட்களும், *kislev* மாதத்திற்கு *30* நாட்களும் காணப்படும்போதேயாகும். சாதாரண வருடத்திற்கு *354* நாட்கள் காணப்படுகின்றது மற்றும் இது *Hesvan* மாதத்திற்கு *29*-நாட்களும், *kislev* மாதத்திற்கு *30* நாட்களும் காணப்படும்போதேயாகும். அபூரண வருஷத்திற்கு *353* நாட்கள்

காணப்படுகின்றது மற்றும் இது *Hesvan* மாதத்திற்கு *29* நாட்களும், *kislev* மாதத்திற்கு *29* நாட்களும் காணப்படும்போதேயாகும். *Embolismic* வருடமானது *Adar* மாதத்திற்கு அடுத்ததாக, *Ve-adar* (அ) இரண்டாம் *Adar* மாதம் என்று அழைக்கப்படுகின்றதான ஒரு மாதம் இடையிணைக்கப்படும்போது உண்டாகுகின்றது*;* அப்படியான வருடத்திற்கு *385, 384,* அல்லது *383* நாட்கள் மேற்கூறப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையில் காணப்படுகின்றது. இப்படியாக மாதம் இணைக்கப்படுவதற்கான காரணம் - பஸ்காவை அதற்கேயுரிய ஏற்றக்காலத்தில் கைக்கொள்வதற்கேயாகும்*;* பஸ்காவானது இளவேனிற்/வசந்த காலத்தின் சம இரவு பகல் நாளைத் தொடர்ந்து வரும் பௌர்ணமியின்போது அல்லது (சூரியனானது, மேஷராசி நட்சத்திர கூட்டத்திற்குள் காணப்படும்போது) மேஷத்தில் சூரியன் காணப்படுகையில் கைகொள்ளப்படுகின்றது*;* எத்தருணத்தில் பௌர்ணமி நிகழும் என்பது தெரியாது, ஆனால் சூரியனானது ராசி நட்சத்திர கூட்டத்தில் காணப்படுகையில் அது கைக்கொள்ளப்படவேண்டும். அதன் ஆசரிப்பிற்கான வேளை நிர்ணயிக்கப்பட்டது என்பது எண்ணாகமம் *9:2*-ஆம் வசனத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது*;* "இஸ்ரயேல் மக்கள் குறிக்கப்பட்ட காலத்தில் பஸ்காவைக் கொண்டாடட்டும்." (திருவிவிலியம்)

"நம்முடைய மாதங்களானது எப்போதும் சந்திர மாதங்களாக இருந்துள்ளது என்பது *1* இராஜாக்கள் *6:38*-ஆம் வசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது*;* "பதினோராம் வருஷம் பூல் என்னும் எட்டாம் மாதத்திலே, அந்த ஆலயமுழுவதும் சகல சட்டதிட்டத்தின்படியே ஒருபங்கும் குறையாமல் கட்டித் தீர்ந்தது*;* அவன் அதைக் கட்டிமுடிக்க ஏழு வருஷம் சென்றது." இங்கு மாதம் என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ள இரண்டு எபிரெய வார்த்தைகளும் வெவ்வேறானவைகளாகும்*;* முதலாவது (சந்திரன்) '*Moon*' எனும் வார்த்தையினின்று மொழிப்பெயர்க்கப்பட்டதாகும் மற்றும் இரண்டாவது '*innovation*' (புதிய) எனும் வார்த்தையினின்று மொழிப்பெயர்க்கப்பட்டதாகும். நம்முடைய மாதங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| *Tisri, 30* நாட்கள் | *Nisan* (நீசான்), *30* நாட்கள் |
| *Hesvan, 29* (அ) *30* நாட்கள் | *Yiar, 29* நாட்கள் |
| *Kislev, 29* (அ) *30* நாட்கள் | *Sivan, 30* நாட்கள் |
| *Tebet, 29* நாட்கள் | *Tamuz, 29* நாட்கள் |
| *Sebat, 30* நாட்கள் | *Ab, 30* நாட்கள் |
| *Adar, 29* நாட்கள் | *Elul, 29* நாட்கள் |

"*Embolismic* (*13* - மாதங்கள் உடைய) வருடங்களில் *Adar* மாதத்திற்கு *30* நாட்களும், இடையில் இணைக்கப்பட்டதான மிகை மாதமாகிய *Ve-adar* மாதத்திற்கு *29* நாட்களும் காணப்படுகின்றது.

"இரண்டு அமாவாசைகளுக்கு இடையிலான காலப்பகுதியாகிய *Synodical* மாதம் என்று அழைக்கப்படுகின்றதான சந்திர மாதத்திற்கு *29:12:44:3 1/3*, அதாவது *29 ½* நாட்களும், *¾* மணி நேரமும் கொண்டிருக்கிறபடியால், ஒரு மாதத்திற்கு *29* நாட்கள்

என்றும், அடுத்து வரும் மாதத்திற்கு *30* நாட்கள் என்றும் காணப்படத்தக்கதாக ஏற்பாடு பண்ணப்படுகின்றது. ஒரு மாதத்திற்கு *30* நாட்கள் காணப்படும்போது, பாதி நாளானது விடுமுறையாகக் காணப்படமுடியாது எனும் கோட்பாட்டின் அடிப்படையில், மாதத்தினுடைய கடைசி நாளும், அடுத்த நாளும், அமாவாசை எனக் கடைப்பிடிக்கப்படுகின்றது. முப்பதாம் நாளானது பாதி முந்தின மாதத்தின் நாளாகவும், பாதி அமாவாசையாகவும் காணப்படுவதினால், அந்த முழு நாளும் விடுமுறையாகக் காணப்படுகின்றது மற்றும் அடுத்த நாளும் அமாவாசையினுடைய முதலாம் முழு நாளாக இருக்கின்றபடியால், இதுவும் விடுமுறையாகக் காணப்படுகின்றது. இந்தக் கோட்பாடானது முற்காலங்களிலேயே கைக்கொள்ளப்படுகின்றது என்பது *1* சாமுயேல் *20:5, 27*-ஆம் வசனங்களில் பார்க்கப்படலாம்.

"இந்த ஏற்பாட்டிலும்கூட, இன்னமும் ஒவ்வொரு மாதமும் *44* நிமிடங்களும், *3 1/3* விநாடிகளும் குறைவுபடுகின்றது மற்றும் *12* மாதமுள்ள வருடத்திற்குக் கிட்டத்தட்ட *9* மணி நேரங்கள் காணப்படுகின்றது. இந்தக் குறைவினை நிறைவுபடுத்தும் வண்ணமாக, ஒவ்வொரு இரண்டாம் அல்லது மூன்றாம் வருடத்தில் ***Hesvan*** மாதத்துடன், ஒருநாள் சேர்க்கப்பட்டு அதனால், இந்த மாதத்திற்கு *30* நாட்கள் காணப்படுகின்றது. ***Hesvan*** மாதத்திற்கு *30* நாட்கள் காணப்படும்போது, ***kislev*** மாதத்திற்கு *30* நாட்கள் காணப்படுகின்றது. ***Hesvan*** மாதத்திற்கு *30* நாட்கள் இல்லாமலேயே, ***kislev*** மாதமானது சிலசமயம் *30* நாட்கள் உடையதாக்கப்படுகின்றது; இது பஸ்காவானது திங்கட்கிழமையோ (அ) புதன்கிழமையோ (அ) வெள்ளிக்கிழமையோ இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்காகச் செய்யப்படுகின்றது; ஏனெனில் இந்தப் பண்டிகையானது, மற்ற விடுமுறைகளை ஒழுங்குப்படுத்துவதினால், எந்தப் பண்டிகையும் அவைகள் ஆசரிக்கப்படுவதற்குப் பாத்திரமற்ற நாட்களில் இடம்பெறாதபடிக்கு ஏற்பாடு பண்ணப்படுகின்றது. (அந்தந்த மாதத்தில்) வாரத்தினுடைய அதே நாளில் ...

பஸ்காவின் முதலாம் நாள்போலவே, வாரத்தின் அதே நாளில் ***Tamuz*** மற்றும் ***Ab*** உடைய உபவாசங்களும் இடம்பெறுகின்றது.

பஸ்காவின் இரண்டாம் நாள்போலவே, வாரத்தின் அதே நாளில் ***Sebuot*** மற்றும் ***Hosana Raba***-வின் முதலாம் நாளும் இடம்பெறுகின்றது.

பஸ்காவின் மூன்றாம் நாள்போலவே, வாரத்தின் அதே நாளில் வருடப்பிறப்பின் மற்றும் கூடாரப்பண்டிகையின் முதல் நாளும் இடம்பெறுகின்றது.

பஸ்காவின் நான்காம் நாள்போலவே, வாரத்தின் அதே நாளில் நியாயப்பிரமாணத்தினுடைய களிகூருதலுக்கான நாளும் இடம்பெறுகின்றது.

பஸ்காவின் ஐந்தாம் நாள்போலவே, வாரத்தின் அதே நாளில் ***Kippur,*** பாவநிவாரண நாளும் இடம்பெறுகின்றது.

"ஆகையால் முதலாம் நாளானது திங்கட்கிழமையாக இருக்குமானால், (***Purim***) பூரிம் சனிக்கிழமை வருகிறதாகவும், ***Kippur*** வெள்ளிக்கிழமை வருகிறதாகவும் காணப்படும் மற்றும் இந்த இரண்டு கிழமைகளிலும் இவைகள் கைக்கொள்ளப்பட முடியாது. அந்நாளானது புதன்கிழமையாக இருக்குமானால், ***Kippur*** ஞாயிற்றுக்கிழமை

வருகிறதாகக் காணப்படும்; ஞாயிற்றுக்கிழமையில் இது கைக்கொள்ளப்பட முடியாது; காரணம் ஓய்வுநாளைப்போலவே, *Kippur* கூடக் கண்டிப்பான கட்டளையை உடையவைகளாக இருப்பதினால், இது ஓய்வுநாளுக்கு முந்தியோ, பிந்தியோ கைக்கொள்ளப்பட முடியாது. ஒருவேளை அந்நாளானது, வெள்ளிக்கிழமையாக இருக்குமானால், *Hosana Raba* – சனிக்கிழமை வருகிறதாக இருக்கும்; இந்தச் சனிக்கிழமையில் இந்தப் பண்டிகையின் ஆசரிப்புகள் கைக்கொள்ளப்பட முடியாது. மேற்கூறப்பட்டுள்ள விதிமுறைமையின்படி *Rosh Ashana* (*Tisri*/மதச்சார்ப்பற்ற/*Civil* வருடபிறப்பு) விடுமுறையானது ஞாயிற்றுக்கிழமையிலோ, புதன்கிழமையிலோ (அ) வெள்ளிக்கிழமையிலோ ஒருபோதும் வராதபடிக்குப் பார்த்துக்கொள்ளப்படுகின்றது.

"இந்த விடுமுறையானது அமாவாசையின் நாளன்று பின்வரும் விதிவிலக்குகளுக்கு ஏற்ப கைக்கொள்ளப்படுகின்றது:

*(1)* அமாவாசை ஞாயிற்றுக்கிழமையிலோ, புதன்கிழமையிலோ (அ) வெள்ளிக்கிழமையிலோ நிகழும் பட்சத்தில் விடுமுறையானது *5604*-படி அடுத்தநாளில் கைக்கொள்ளப்பட வேண்டும்.

*(2)* அமாவாசையானது பிற்பகலில் நிகழும்போது, அடுத்த நாளில் கைக்கொள்ளப்பட வேண்டும் மற்றும் அது ஞாயிறு (அ) புதன் (அ) வெள்ளி நிகழும் பட்சத்தில் *5601*-படி அடுத்த நாளில் கைக்கொள்ளப்படுகின்றது.

*(3)* அமாவாசையானது சாதாரண விருஷத்தில் செவ்வாய்க் கிழமையன்று *9* மணி நேரம், *11* நிமிடங்கள், *20* வினாடிகள் காலை வேளையிலோ (அ) இதற்குப் பிற்பாடு நிகழுமானால், அது அந்நாளில் கைக்கொள்ளப்படக்கூடாது மற்றும் அது புதன்கிழமையன்றும் கைக்கொள்ளப்பட முடியாததினால், *5616*-படி வியாழன் அன்று கைக்கொள்ளப்படுகின்றது. இதற்கு புதிய வருஷப்பிறப்பானது அமாவாசையன்றல்லவா கைக்கொள்ளப்பட வேண்டும் என்று மறுப்புத் தெரிவிக்கப்படலாம்; ஆனால் இப்படியாக அமாவாசை அன்று கைக்கொள்ளப்பட வேண்டுமெனில், இதற்கு முந்தின மாதமாகிய *Elul*-க்கு *27* (அ) *28* நாட்கள் மாத்திரமே காணப்பட வேண்டும் மற்றும் ஒரு மாதமானது *29* நாட்களுக்குக் குறைவான நாட்களைப் பெற்றிருக்க முடியாது.

*(4)* அமாவாசையானது திங்கட்கிழமையன்று *3* மணி: *30* நிமிடங்கள்: *52* வினாடிகள் மாலைப் பொழுதோ அல்லது இதற்குப் பின்னரோ *Embolismic* வருடத்திற்கு (இடையிணைக்கப்பட்ட மிகை மாதமுடைய வருடத்திற்கு) பின்வரும் வருடத்தில் நிகழும் பட்சத்தில், விடுமுறையானது *5617*-படி செவ்வாய் அன்று காணப்படுகின்றது. இது அபூர்வமாகவே நிகழ்கின்றது.

"நம்முடைய *Embolismic* வருடங்களானது (மிகை மாதமுடைய வருடங்களானது) ஒவ்வொரு சந்திர சுழற்சியின் போதும் (*19* வருடங்களுள்ள சந்திர சுழற்சியின் போதும்/*lunar cycle*) வருட எண்கள்: *3, 6, 8, 11, 14, 17, 19*-ஆகக் காணப்படுகின்றது.

"மிகுந்த துல்லியத்துடன் கிரகோரியன்/*Gregorian* (ஆண்டுக்குறிப்பேட்டின்) கணக்கிடுதல்கள் காணப்பட்டாலும்கூட, அது இன்னும் குறைப்பாடுகளுடன்தான் காணப்படுகின்றது மற்றும் எதிர்க்காலங்களில் சில திருத்தங்களும் செய்யப்பட

வேண்டியுள்ளது. இதற்கு நிரூபணமாக நைஸ் மாநாட்டில் ஈஸ்டரானது, பஸ்காவின் முதல் நாளன்று - அதே நாளில் கைக்கொள்ளப்படக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது மற்றும் இதன் மூலம் அது யூத மார்க்கம் சம்பந்தப்பட்டதல்ல என்று காண்பிக்கப்பட்டது. ஆகையால் ஈஸ்டரானது பௌர்ணமிக்குப் பின்புள்ள ஞாயிறன்று கைக்கொள்ளும் படிக்குக் கட்டளையிடப்பட்டது*;* பஸ்காவானது எப்போதும் பௌர்ணமியன்றே கைக்கொள்ளப்படுகின்றது*;* எனினும் *1825*-ஆம் வருடத்தில் இரண்டுமே ஒரேநாளில் கைக்கொள்ளப்பட்டது.”

* * *

மேற்கூறப்பட்டவைகளைப் பார்க்கும்போது, பஸ்காவின் விஷயத்தில் யூதர்களுடைய நியாயப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதே தேதியினை அடைந்திடுவதற்கு எடுத்திட்ட ஒவ்வொரு பிரயாசங்களிலும் சிரமங்கள் காணப்பட்டன மற்றும் அடிக்கடி பொருத்தமான இரு நாட்களில் ஒன்றினைத் தெரிவு செய்வதற்கான அவசியம் காணப்பட்டது. எனினும் இந்த விஷயத்தில் அவர்கள் தங்கள் தலைவர்களின் வழிகாட்டுதலைப் பின்பற்றினவர்களாய் இருந்து, ஒவ்வொருவனும் தனிப்பட்ட அறிவிற்கும், சௌகரியத்திற்கும் (அ) விருப்பத்திற்கும் ஏற்ப ஒவ்வொரு தேதியை நிர்ணயித்து, ஆசரிப்பதற்குப்பதிலாக, ஒன்றுபோல் தேதியினைப் பெற்றிருக்கின்றனர். (மத) தலைவர்களுக்கு இப்படியாகக் கீழ்ப்பட்டிருப்பதற்கு நமது கர்த்தரினாலும் கூடச் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது: “வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறயாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்.” (மத்தேயு 23:3) இதே விதமான நடக்கையை அப்போஸ்தலனும் சுவிசேஷயுக சபைக்கு சுட்டிக்காட்டியுள்ளார். (எபிரெயர் 13:17) பஸ்காவின் ஆசரிப்புத் தொடர்புடைய விஷயத்திலுள்ள இரண்டு முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு: (1) ஒன்றுபோல் தேதி மற்றும் (2) முடிந்தமட்டும் துல்லியமாகப் பௌர்ணமியின்போது துவக்கம் கொண்டிருத்தல் – பௌர்ணமியானது இஸ்ரயேலுக்கான தயவின் முழுமையை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

## நினைவுகூருதல் இராப்போஜனம், 1908

ஆதித் திருச்சபையினரின் வழக்கத்தினைப் பின்பற்றினவர்களாக, நாம் “கடைசி இராப்போஜனத்தை” நமது சக கிறிஸ்தவர்களைப்போல வாரந்தோறுமாக (அ) மாதந்தோறுமாக, காலாண்டுதோறுமாக ஆசரியாமல், வருடந்தோறுமாக ஆசரிக்கின்றோம். நாம் அதை முற்பகலில் ஆசரியாமல், இராப்போஜனமென ஆசரிக்கின்றோம். நம்முடைய புரிந்துகொள்ளுதலுக்கு ஏற்ப இப்படியாக “என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்” என்ற நமது ஆண்டவருடைய வேண்டுகோளை எழுத்தின்படியும், ஆவியின்படியும் நாம் கைக்கொள்கின்றோம்.

"புனித வெள்ளி" என்று ஆசரிக்கப்படுகின்றதான நமது கர்த்தருடைய மரணநாளுக்கு, கிறிஸ்தவர்கள் மத்தியில் இன்னமும் ஒரு பரிசுத்தமான மதிப்புப் பொதுவாகக் காணவேபடுகின்றது; ஆனால் இதற்கு முந்தின மாலையில் இடம்பெற்றதான விலையேறப்பெற்ற நினைவுகூருதல் இராப்போஜனத்தைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர். இதற்கான காரணமும் தெளிவாய்த் தெரிகின்றது. உலகளாவ செல்வாக்குடையதாகக் காணப்பட்டதான கத்தோலிக்க மார்க்கமானது நினைவுகூருதல் இராப்போஜனத்திற்குப்பதிலாக "பூசைபலியை/திருப்பலியை" அறிமுகப்படுத்தினது மற்றும் சீர்த்திருத்தவாதிகளானவர்கள் பூசைபலியை, பாவங்களுக்கான பலி இல்லையென்று அதை மறுத்து, "திருவிருந்து" என்று அழைக்கப்படுகின்றதான ஆசரிப்பை எடுத்துக்கொண்டார்கள். எனினும் ஆதியில் நிறுவப்பட்டதான இராப்போஜனமானது, பஸ்கா ஆட்டுக்குட்டியைப் புசித்தலுக்கான, நிஜத்தின் நிறைவேறுதலை ஆசரிப்பதற்காய் நிறுவப்பட்டதாய் இருந்தது மற்றும் இதன் ஆற்றலும், அருமையும், இதை இதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிப்பதற்குப்பதிலாக, அடிக்கடி ஆசரிப்பதன் மூலமாக மங்கியுள்ளது.

இக்கட்டுரையின் ஆசிரியரும், மற்ற அநேகரும் நினைவுகூருதல் இராப்போஜனத்தை வருடந்தோறுமாக, பல காரணங்களினிமித்தம் ஆதி ஆசரிப்பிற்கு மிகவும் ஏற்றாற்போல, வியாழக்கிழமை இரவில் ஆசரித்திடுவதற்கு விரும்பிடுவார்கள்; அந்தக் காரணங்கள் பின்வருமாறு: (1) இப்படி ஆசரிப்பது என்பது இவ்வாசரிப்பை, நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான நினைவுகூருதலான ஞாயிற்றுக்கிழமையுடன் உள்ள அதன் தொடர்புக்குள் கொண்டுவந்துவிடும். (2) அந்த ஒரு காலப்பகுதியில் ஈஸ்டர் ஞாயிறானது நமது கர்த்தருக்கான உயிர்த்தெழுதலுக்கான விசேஷித்த நினைவுகூருதலாகப் பொதுவாய்க் கொண்டாடப்படுகின்றது. (3) இன்று அநேகரால் "புனித வியாழன்/பெரிய வியாழன்" என்று அழைக்கப்படுகின்றதான நாளின் மாலையில், நினைவுகூருதல் இராப்போஜனத்தை ஆசரிப்பது என்பது, நம்மை "விநோதமானவர்கள்" (அ) "யூதருடைய வழக்கத்தினைப் பின்பற்றுகிறவர்கள்" என்று அழைக்கின்ற நம்முடைய அருமை கிறிஸ்தவ நண்பர்கள் அநேகருக்கு ஆற்றல் மிக்க பாடமாகக் காணப்படும்; இவர்கள் ஆராய்ந்து பார்க்காததினால், இவர்களால் நம்முடைய நிலைப்பாட்டினைப் புரிந்துகொள்ள முடியாத காரணத்தினாலேயே, இவர்கள் நம்மை மேற்கூறிய வண்ணம் அழைக்கின்றனர். (4) "பாபிலோன் மயமான" எதையும் பின்பற்றிடுவதற்குப்பதிலாக, பாபிலோனுக்குள் தொலைந்துபோன ஒன்றின்மீது கவனத்தைத் திருப்புகின்றவர்களாய் இருப்போம். இதைத் (இச்சத்தியத்தை) தேடுவது என்பது, மனித பாரம்பரியங்களின் கீழாக தொலைந்துபோன (அ) புதைந்துபோன மற்றச் சத்தியங்களையும் ஆராய்வதற்கும், உணர்ந்துகொள்வதற்கும் ஏதுவாய் இருக்கும்.

ஆனால் இந்த அனுகூலங்களைச் சிலர் உணர்ந்து/புரிந்துகொள்ள மாட்டார்கள் மற்றும் புரிந்துகொள்ள முடியாததினால் பிரிவினை உண்டாகும் என்று அஞ்சினவர்களாக நாம் இந்த அனுகூலங்கள் அனைத்தையும் தவிர்த்து, தள்ளிச் செல்கின்றோம். பிரிவினைகள் காணப்படக்கூடாது என்றும், "சமாதானக்கட்டினால்

ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு” நாம் நாட வேண்டும் என்றுமுள்ள அப்போஸ்தலனின் வார்த்தைகளை நினைவில்கொள்வதற்கே நாம் விரும்புகின்றோம். ஆகையால் வசந்த காலத்தின்/இளவேனிற் சம இரவு பகல் நாளைத் தொடர்ந்த முதல் பௌர்ணமிக்கு அருகாமையிலுள்ள வியாழன் இரவை, நினைவுகூருதலுக்கான தேதி என்று நாங்கள் அறிவிக்கிறதில்லை. ஆகையால் நினைவுகூருதலுக்கான தேதியை – நீசான் 14-ஆம் தேதியின் (முந்தின) மாலை என்று – யூதருடைய பஸ்கா பண்டிகை வாரத்தினுடைய துவக்கத்திற்கு முந்தின நாள் என்று அறிவிக்கின்றோம்; அதாவது 1908 (இப்பாடம் எழுதப்பட்ட) வருடத்தில் ஏப்ரல் 14-ஆம் தேதி, மாலை 6 மணிக்குப் பின்னர் ஆகும். யூதருடைய பஸ்காவானது (பண்டிகையானது) ஏப்ரல் 16-ஆம் தேதி (நீசான் 15-ஆம் தேதி) வியாழன் அன்று துவங்குகின்றது; ஆனால் யூத கணக்கீட்டின் படி ஏப்ரல் 15-ஆம் தேதியின் சூரிய அஸ்தமனத்திற்குப் பின்னர் துவங்குகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் ஏப்ரல் 15-ஆம் தேதியாகிய புதன்கிழமையானது நீசான் 14-ஆம் தேதியாக இருக்கின்றது மற்றும் ஏப்ரல் 14-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை சூரிய அஸ்தமனத்திற்குப் பின்பாகத் துவங்குகின்றதாய் இருக்கின்றது.

## நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்” – 1 கொரிந்தியர் 5:7, 8

இவ்வார்த்தைகளானது நினைவுகூருதல் இராப்போஜனத்தை, யூதருடைய பஸ்காவின் நினைவுகூருதலுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது, எத்துணை அர்த்தங்கள் இவ்வார்த்தைகளில் காணப்படுகின்றதாய் இருக்கும். நிழலினுடைய வெளிச்சமானது, எவ்வளவாய் நிஜத்தைப் பிரகாசிப்பிக்கின்றதாய் இருக்கின்றது. இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் மரணத்தின் அபாயத்திற்குள்ளானதுபோல, “பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபையும்கூட” நித்தியமான மரணம் (அ) ஜீவனுக்கான பரீட்சையில் இப்பொழுது காணப்படுகின்றனர். (எபிரெயர் 12:23) நிழலான முதற்பேறானவர்கள் வீட்டிற்குள்ளாகவே காணப்பட்டு, ஆட்டுக்குட்டியினைப் புசித்து, அதாவது ஆட்டுக்குட்டியினுடைய இரத்தம் தெளிக்கப்பட்டதான நிலைக்கால்களையும், மேற்சட்டங்களையும் உடையதான வீட்டிற்குள் காணப்படுவது வரையிலும் பாதுகாப்பாய் இருப்பதுபோலவே, தெளிக்கப்பட்ட மேலான இரத்தத்தின்கீழாக, விசுவாச வீட்டிற்குள்ளாகவே தரித்திருக்கிறவர்களும், நமது பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசுவைப் புசிக்கிறவர்களும் ஆனவர்களாகிய நாம் மரணத்தினின்று பாதுகாக்கப்பட்டவர்களாக – தேவ ஏற்பாட்டின்கீழ் நித்தியமான ஜீவனுக்கான நிச்சயத்துடன் காணப்படுகின்றோம்.

நாம் நிழலான ஆட்டுக்குட்டியை அல்ல, இதற்குப்பதிலாக இயேசுவையே, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்றதான தேவ ஆட்டுக்குட்டியையே இப்பொழுது அடையாளம் கண்டுகொள்கின்றோம். அவரை நாம் புசிக்கின்றோம்;

அவரது மாம்சத்தைச் சொல்லர்த்தமாய்ப் புசியாமல், விசுவாசத்தினால் அவரது பலியின் புண்ணியத்தில் பங்கெடுத்து, அதை நம்முடையதாக்கிக் கொள்கின்றோம். சுவிசேஷயுகமாகிய இந்த இரவு முழுவதும், நாம் இப்படியாகவே நம்முடைய ஆட்டுக்குட்டியைப் புசிக்கின்றோம் – ஆயிரவருட யுகத்தின் காலைவரை புசிக்கின்றோம் – காலையில் நாம் விடுதலை அடைந்திருப்போம். வருடாந்தர நினைவுகூருதல் இராப்போஜனமானது நம்முடைய பண்டிகையாய் இராமல், மாறாக அதற்கான விளக்கமாக (அ) உயர்தரமான நிழலாக – நினைவூட்டுதலாக – மிகவும் அருமையான, மிகவும் பயபக்திக்குரியதாக, உதவுகிறதாகக் காணப்படுகின்றது. நாம் விசுவாசப் பண்டிகையையும், இன்னுமாக நினைவுகூருதல் இராப்போஜனத்தையும் ஆசரிப்போமாக. "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்." (1 கொரிந்தியர் 11:26)

நம்முடைய வழக்கமான வழக்கத்தின்படியே ஏப்ரல் 14-ஆம் தேதி, செவ்வாய்க் கிழமை, இரவு 7:30 மணிக்கு ஒன்றுகூடி, மாபெரும் மீட்பருடைய மரணத்தையும், மரணத்திற்கு ஏதுவான ஆக்கினைத்தீர்ப்பினின்று நம்முடைய விடுதலையையும் நினைவுகூருவோமாக. இன்னுமாக நாம் புளிப்பில்லாத அப்பத்தைப் பிட்கையில், இயேசுவின் அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்கள் அனைவரும் அவரோடுகூட ஒரே அப்பமாக பிதாவினால் கருதப்படுகின்றார்கள் என்றும், அனைவரும் நமக்கான நமது கர்த்தருடைய பலியில் (அ) பிட்கப்படுதலில் பங்கெடுப்பது மாத்திரமல்லாமல், அவரோடுகூட "அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென," முதற்பேறானவர்களின் சபையெனப் பிட்கப்படுகின்றனர் என்றுமுள்ள அப்போஸ்தலனின் கருத்துக்களையும் நினைவுகூருவோமாக. (1 கொரிந்தியர் 10:17) "திராட்சப்பழரசமுள்ள" "பாத்திரத்தில்" நாம் பங்கெடுக்கையில், அது நமக்காகப் பலிச்செலுத்தப்பட்டதான நமது கர்த்தருடைய இரத்தத்தை, அவரது ஜீவனை அடையாளப்படுத்துகின்றதாய் மாத்திரமல்லாமல், அதை நாமும் பங்கெடுக்கும் பாத்திரமாக - அப்போஸ்தலன் விவரிப்பது போன்று கிறிஸ்துவின் பாடுகளிலுள்ள நம்முடைய ஐக்கியத்தையும் அடையாளப்படுத்துகின்றதாயும் நாம் அதை அடையாளம் கண்டுகொள்வோமாக. (1 கொரிந்தியர் 10:16) இன்னுமாக "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக (ஊழியத்தில்) நிறைவேற்றுகிறேன்" என்றும், இப்படியாக "நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்க – நம்முடைய தருணங்களை, மணி நேரங்களை, தாலந்துகளை, பலத்தை மற்றும் சௌகரியங்களைக் கொடுக்கக் – கடனாளிகளாயிருக்கிறோம்" என்றுமுள்ள அப்போஸ்தலரின் வார்த்தைகளையும் நினைவுகூருவோமாக. (கொலோசெயர் 1:24; 1 யோவான் 3:16)

புளிப்பில்லாத அப்பங்கள் பயன்படுத்தப்படும்படிக்கு நாம் பரிந்துரைக்கின் றோம். யூதருடைய பஸ்கா அப்பமானது (ரொட்டிகளானது) பல்வேறு பட்டணங்களில் வாங்கப்படலாம்; இல்லையேல் "யுநீடா" பிஸ்கோத்து அல்லது சோடா பிஸ்கோத்து/ ரொட்டி (Uneeda Biscuit or Soda Biscuit) பயன்படுத்தப்படலாம். "திராட்சப்பழரசத்தை" (fruit of the vine) பொறுத்த விஷயத்தில் அனைவருக்கும் சம்மதமானால்

திராட்சப்பழச்சாறு (grape juice) அல்லது உலர் திராட்சச்சாறு (Raisin juice) பயன்படுத்திடுவதற்கு நாம் அறிவுரைக் கூறுகின்றோம்; ஆனால் எவரேனும் (wine) திராட்சரசத்தை விரும்பினால், அப்படியானவர்களுக்கு அதை ஏற்பாடு பண்ணிடுவதற்கு அறிவுரைக் கூறுகின்றோம்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஆராதனைக்கென்று கூடிக்கொள்வது போன்றே அந்தந்த சபையார் கூடிக்கொள்ளும்படிக்கு நாம் அறிவுரைக் கூறுகின்றோம்; இந்த ஒரு தருணத்தின்போது, (1) அதிக எண்ணிக்கையிலுள்ள சபையார்களோடு கூடிக்கொள்வதற்கென எவரும் சிறிய எண்ணிக்கையிலான கூடுகைகளை விட்டுச் செல்ல வேண்டாம். "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளை மறந்துவிடாதீர்கள். (மத்தேயு 18:20) ஒருவரோடாகிலும் கூடிக்கொள்ளமுடியாத அளவுக்குச் சகோதரரோ, சகோதரிகளோ வியாதியஸ்தர்களாகவோ (அ) தனிமையிலோ காணப்பட்டால், அவர்கள் கர்த்தருடன் தனிமையில் ஆசரிப்பார்களாக. நினைவுகூருதலுக்கான அடையாளச் சின்னங்களை ஏற்பாடு பண்ணிடுவதற்குப் பணவசதி இல்லாதவர்கள் ஏப்ரல் 1-ஆம் தேதிக்குள்ளாக எங்களுக்குத் தெரிவித்தால், அவைகள் இலவசமாய் வழங்கப்படும்.

சிறந்த முறைமைகள் ஏதும் தெரியாதவர்கள் 6-ஆம் தொகுதியின் குறிப்பிட்டப் பகுதிகளை, ஜெபித்து, ஸ்தோத்திரித்து வாசிப்பதற்கு நாம் அறிவுரைக் கூறுகின்றோம். இத்தருணத்திற்கான ஊழியக்காரர்களின் விஷயத்தைப் பொறுத்தமட்டில், அவர்கள் சபையாரின் வாக்குகளினால், கரங்களை நீட்டுவதன் மூலம் நியமிக்கப்படுகின்ற – மூப்பர்களாய் இருத்தல் வேண்டும். ஒருவேளை சபையின் எண்ணிக்கை குறைவாகவும் மற்றும் மூப்பர் இன்னமும் தேர்ந்தெடுக்கப்படாத பட்சத்தில், அங்குள்ள அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகள் பெரும்பான்மையானவர்களுடைய ஒப்புதலின் பேரில், அத்தருணத்திற்காக ஓர் ஊழியக்காரன் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆசரிப்புப்பற்றியும் மற்றும் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கைப்பற்றியுமான தகவல்களைச் சுருக்கமாக நமக்கு அஞ்சல் அட்டை வாயிலாகத் தெரியப்படுத்தத் தக்கதாக, எவரையாகிலும் நியமித்துக்கொள்வதற்குக் கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள். கர்த்தருக்கும், அவரது சகோதரர்களுக்கும், அவரது நோக் கங்களுக்கான/காரணங்களுக்கான தங்களது உண்மைக்கும், பயபக்திக்குமான வாக்குறுதியை அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அனைவரும் கர்த்தருக்கு முன்பாகப் புதுப்பித்துக்கொள்ளும்படிக்கு நாம் வலியுறுத்துகின்றோம். இப்படிச் செய்வதினால் ஓர் ஆசீர்வாதம் காணப்படுகின்றது மற்றும் இவ்வாசீர்வாதமானது ஒவ்வொருவருக்கும் அவசியமாய் இருக்கின்றது. கர்த்தரும், அப்போஸ்தலரும் சுட்டிக்காட்டுவதுபோல, இப்படியாகப் பங்குகொள்பவர்கள் பலப்படுத்தப்படுவார்கள் மற்றும் ஆசீர்வதிக்கப் படுவார்கள். அனைத்து அஞ்சல் அட்டைகளையும் (வெளிநாடுகளிலிருந்து எழுதப்படும் அஞ்சல் அட்டைகளையும்) Allegheny, Pa., U. S. A.-வில் உள்ள Society என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

## சோதிக்கப்பட்டு மற்றும் பரிட்சிக்கப்படுபவனே

சோதிக்கப்பட்டு மற்றும் பரிட்சிக்கப்படுபவனே, ஓ!
அச்சம் தருகிற கடலலை
சீறுகின்றதாயும், ஆழமாயும் இருப்பினும்,
ஆக்ரோஷமாயும், கட்டுக்கடங்காமலும் இருப்பினும்
அதன் சீற்றம் வீணே - ஆண்டவர்
ஆதரிப்பார், என்றென்றும் யாவே அரசாளுகிறார்.

சோதிக்கப்பட்டு மற்றும் பரிட்சிக்கப்படுபவனே, நீ
சோதிக்கப்பட்டு, பரிட்சிக்கப்பட்டாலும் ஆண்டவர்
உன்னோடு இருந்து வழிநடத்திப் பாதுகாப்பார்.
சோதிக்கப்பட்டு மற்றும் பரிட்சிக்கப்படுவனே
உன்னருகில் ஒருவர் இருக்கின்றாரே.
அவரது பிள்ளைகளின் நம்பிக்கை என்றும் வீண்போகாதே
அவர் பாதுகாத்திடுவார், காத்திடுவார் ஏனெனில்
முடிவுபரியந்தம் அன்பு செய்கின்றாரே - அவர்
போற்றுதலுக்குரிய போதகர், மகிமையான நண்பர்.

சோதிக்கப்பட்டு மற்றும் பரிட்சிக்கப்படுபவனே
அலைகள் எப்படியாய் இருந்தாலும்
அவருடைய மறைவான செட்டைகளுக்குள்ளே
அவரது பிள்ளைகள் காக்கப்படுவர் - அவரை
நம்பும், அவரைத் துதிக்கும் பிள்ளைகள், நித்திய
இராஜாவின் செட்டைகளின் நிழலில் மறைக்கப்படுவர்.

சோதிக்கப்பட்டு மற்றும் பரிட்சிக்கப்படுபவனே
ஆண்டவர் உன்னைத் தாங்குவார்.
அவரே உனக்கு, விசுவாசமுள்ள இரட்சகராய்,
உன்னைப் பாதுகாத்து வழிநடத்துபவராய்,
உன் பட்டயமாய், கேடகமாய் உனக்கு மேன்மையான
ஆசீர்வாதமுமாய் இருப்பார் - வேலைக்காரன்
தன் எஜமானைப்போல இருப்பது போதும்.

சோதிக்கப்பட்டு மற்றும் பரிட்சிக்கப்படுபவனே
மரித்த இரட்சகர் உன்னை அழைத்திருக்கிறார்
அவரோடுகூடப் பாடுபடவும், ஆளுகை செய்யவும்
என்றென்றும் அவரது மகிமைக்கு - பங்காய்
சிலுவை சுமந்தால், கிரீடம் அணியலாம்.

– Selected, (R490)

# நினைவுகூருதல் ஆசரிப்பு

புரூக்லின் கூடாரத்தில் (Brooklyn Tabernacle) கிட்டத்தட்ட 450 பேர் நமது அருமை மீட்பருடைய நினைவுகூருதல் இராப்போஜனத்தை, ஏப்ரல் 4-ஆம் தேதி, ஞாயிறு மாலையன்று ஆசரித்தார்கள். மிகவும் அதிகமானவர்கள் பங்குகொண்டதில் எங்களுக்கு மகிழ்ச்சியே. கலந்துகொண்டவர்கள் அனைவரும் புரூக்லினைச் சேர்ந்தவர்களல்ல. உண்மையைச் சொல்லவேண்டுமெனில் புரூக்கிலினில் வழக்கமாய்க் கலந்துகொள்ளும் சபையாரில் அநேகர் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து வருபவர்களாகவே காணப்படுகின்றனர். அத்தருணமானது மிகவும் பயபக்தியுடனும், தாக்கத்தினை ஏற்படுத்தும் ஒன்றாகவும் காணப்பட்டது. எங்களுக்கு மதிய வேளையில் நிழலான மற்றும் நிஜமான பஸ்கா தொடர்பாகக் கொடுக்கப்பட்ட சத்திய தூதானது, பயபக்திக்குரிய நினைவுகூருதல் குறித்த உணர்ந்துகொள்ளுதலுக்கு நேராக, எங்கள் மனங்களை வழிநடத்தினதாய்க் காணப்பட்டது மற்றும் மாலை நேரத்தின்போதான விளக்கவுரைகளானது, அப்பம் மற்றும் பாத்திரத்தினுடைய அர்த்தம் தொடர்புடைய தாகக் காணப்பட்டது. அப்பத்தைப் புசித்தல் என்பது, நமது கர்த்தருடைய மனுஷீக உரிமைகளைச் சொந்தமாக்கிக் கொள்வதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; இதன் காரணமாக நாம் நீதிமானாக்கப்படுகின்றோம்; இதன் காரணமாக அபூரணங்களை - சுதந்தரித்துக் கொண்டதின் நிமித்தமான, அபூரணங்களை நாம் கொண்டிருந்தாலும் கூட, தேவனுடைய பார்வையில் நீதிக்கேதுவான நம்முடைய நீதிமானாக்கப்படுதலானது தக்கவைக்கப்படுகின்றது என்று நாம் விளக்கினோம். இரத்தம் என்பது நம்முடையதாக்கிக் கொள்ளப்பட்டதும், நம்மை ஜீவனுக்கு ஏதுவாய்த் தீர்த்திட்டதுமான நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமைகளை முதன்மையாய்க் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்று நாம் விளக்கினோம்.

அடுத்ததாக நாங்கள் இரண்டாவதும், பெரியதுமான கண்ணோட்டத்தை எடுத்துக்கொண்டு, அப்போஸ்தலனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில், உண்மையுள்ளவர்கள் அனைவரும், இராஜரிக ஆசாரியக் கூட்டத்தாரிலுள்ள அனைவரும், கிறிஸ்துவினுடைய ஒரே சரீரத்தின் அங்கத்தினர்கள் அனைவரும், ஒரே அப்பமாகத்தக்கதாக தங்கள் ஆண்டவரோடு இணைந்துகொள்கின்றனர் மற்றும் அந்த அப்பம் பிட்கப்படுதலிலும் அவரோடுகூட இணைந்துகொள்கின்றனர் என்றும், இப்படியாக அந்த அப்பம் மனுக்குலத்தின் உலகத்திற்குரிய திரும்பக்கொடுத்தலின் அப்பமாகுகின்றது என்றும் கண்டோம். மேலும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளின் வெளிச்சத்தில், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகுகையில், நாம் நமது கர்த்தரோடுகூட, அவரது பாடுகளின் பாத்திரத்திலும், பூமிக்குரிய ஜீவனை அவர் பலிச் செலுத்துவதிலும் பங்காளிகளாகுகின்றோம் என்றும் கண்டோம். இன்னுமாக எப்படித் தெய்வீக நோக்கங்களின்படி, நாம் என்றென்றுமாய்க் கையளித்துவிடுகின்றதான இந்தப் பூமிக்குரிய ஜீவனானது, புது உடன்படிக்கையின்கீழ் இஸ்ரயேலுக்கு, யூதாவுக்கு

மற்றும் மனுக்குலத்தின் குடும்பங்கள் அனைத்திற்கும் கடந்துபோகும் மற்றும் நமக்கு ஆவிக்குரிய ஜீவனும், உரிமைகளும் அருளப்படும் என்றும் கண்டோம்.

"கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் (அவரது பாடுகளில்) பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 திருவிவிலியம்)

இப்படியாக "தேவனுடைய ஆழங்களை" மீண்டுமாய்க் கணநேரம் கண்ணோக்கினபோது, எங்கள் இருதயங்களானது, உணர்ந்துகொள்ளுதலினால், ஆழமாய்த் தூண்டப்பட்டது. இந்தத் தற்காலத்தில் பாடுகளிலும், பின்வரும் மகிமையிலும் நமது கர்த்தரும், மீட்பருமானவருடன் இத்தனை நெருக்கமாய் இணைந்திடுவதற்கு நாம் அழைக்கப்பட்டிருப்பது, எத்துணை ஆச்சரியமாய்க் காணப்படுகின்றது! இதைக் காட்டிலும் குறைவாய் எதையும் கர்த்தர் நம்மிடம் எதிர்ப்பார்த்திட முடியாது என்றும், இது ஒரு நியாயமான ஊழியம், சிலாக்கியம் மற்றும் கனம் என்றும் உள்ள உண்மைகளை மனதினுடைய கவனத்திற்குள் கொண்டு வந்தோம். நாம் அவரது "அங்கத்தினர்களென" ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, நாம் பண்ணின வாக்குறுதிக்கு உண்மையற்றுப்போவதன் காரணமாக, நமது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் நாம் உறுதிப்படுத்திட தவறுவதினால் உண்டாகும் இழப்பானது, எத்துணை பெரிய இழப்பாய் இருக்கும் என்று மீண்டுமாக நாங்கள் உணர்ந்துகொண்டோம். திரள் கூட்டத்தில் அடங்குபவர்கள்கூட, மகா உபத்திரவத்தில், அந்த நிலைப்பாட்டினை அடைந்தாக வேண்டும் என்றும், இருதயத்தில் சுத்தமுள்ளவர்களும், அவரது ஆவியினால் நிரம்பியிருப்பவர்களுமே தவிர, வேறு எவரும் நித்திய ஜீவன் பெற்றிடுவதற்குக் கர்த்தரினால் பாத்திரமாய்க் கருதப்பட முடியாது என்றும், அப்போஸ்தலன் கூறுகின்றதுபோல நம்முடைய காரியம் ஒன்றில் நித்தியமான ஜீவன் (அ) நித்தியமான மரணமாகக் காணப்படுகின்றது என்றும் நாங்கள் சுட்டிக்காட்டினோம். ஜெயம்கொள்ளத்தக்கதாக - நித்தியமான ஜீவனைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நாங்கள் ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்திலும், அன்பிலும், பக்தியிலும், வைராக்கியத்திலும் கட்டியெழுப்பிடுவதற்கு மீண்டுமாக நாடினோம். லேவியர்களால் அடையாளப்படுத்தப்படும் ஆவிக்குரிய ஜீவிகள் கீழான தளத்தில் ஜீவனைப் பெற்றுக்கொள்வதைக் காட்டிலும், உயர்தளத்தில் நித்தியமான ஜீவனையும், திவ்விய சுபாவத்தையும், இராஜரிக ஆசாரியக்கூட்டத்தில் அங்கத்துவத்தையும் பெற்றுக்கொள்வது என்பது சில விதங்களில் உண்மையில் சுலபமானதாகவே காணப்படும் என்று நாங்கள் புத்திக்கூறினோம்.

அங்குக் கூடியிருந்த அனைவருமே நினைவுகூருதலின் அடையாளச்

சின்னங்களில் பங்கெடுத்தார்கள் மற்றும் நாங்கள் ஆராதனையை ஜெபத்துடன் நிறைவுசெய்தோம், பின்னர் ஸ்தோத்திர பாடல் பாடினோம்; பிற்பாடு வழக்கமாய்ச் சொல்லும் வாழ்த்துதல்கள் எதையும் சொல்லாமல், முடிந்தமட்டும் அத்தருணத்தின் விலையேறப்பெற்ற சிந்தைகளைச் சுமந்துகொண்டிருக்கத்தக்கதாக, அமைதலுடன் வெளியேறினோம்.

இதுவரையிலும் நாங்கள் பெற்றுக்கொண்டதான அறிக்கை தகவல்களை வைத்துப்பார்க்கும்போது, ஆசரிப்பானது பரவலாய் ஆசரிக்கப்பட்டுள்ளதாகவும், பெரும்பான்மையான சபை கூடுகைகளில், கடந்த வருடத்தைக்காட்டிலும், கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தெரிகின்றது. சில இடங்களில் எண்ணிக்கையின் அதிகரிப்புக் கொஞ்சமாகவும் (அ) இல்லாமலும் இருந்திருக்கின்றது; ஏனெனில் முன்பு பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்து ஓர் இடத்தில் ஒன்றுகூடினவர்கள், இப்பொழுது தனியே கூடிடுமளவுக்கு அதிக எண்ணிக்கையில் வளர்ந்துள்ளனர். பிட்ஸ்பர்கிலிருந்து (Pittsburgh) வந்த தகவலானது சிறப்பானதாய்க் காணப்பட்டது - நாங்கள் எதிர்ப்பார்த்ததுபோலவே காணப்பட்டது; பைபிள் ஹவுஸ் சாப்பலானது (Bible House Chapel) நிறைந்துபோனதால், கூடுதலான நாற்காலிகள் அவசியப்பட்டு, கொண்டுவரப்பட்டுள்ளன. எனினும் முன் தருணங்களில் காணப்பட்ட அளவுக்கு அதிகமாய் இருக்கவில்லை; நிழலிலுள்ள அறிவுரைப்படி குடும்பங்கள் கூடிக்கொள்வதுபோன்று, ஒவ்வொரு இடங்களிலுமுள்ள நண்பர்கள் தங்களுக்குள்ளாகக் கூடிக்கொள்வது நலமாய் இருக்கும் என்று நாம் அடிக்கடி நினைப்பூட்டின பிற்பாடும்கூட, முன் தருணங்களில் அருகாமையிலுள்ள இடங்களிலுள்ள நண்பர்களுடைய வருகையின் காரணமாக நினைவுகூருதல் ஆராதனையானது வழக்கமாக கார்நீஜீ அரங்கிலோ (Carnegie Hall) அல்லது வேறு ஏதேனும் பெரிய மண்டபத்திலோ நடைபெற்றுவந்தது.

அறுவடை வேலை மீதான பொதுவான கவனமானது ஆழமாகிக் கொண்டும், விரிவடைந்துக் கொண்டும் வருகின்றது. எவ்வளவுதான் சபை பரீட்சிக்கப்பட வாய்ப்பில்லாததுபோன்று தோன்றினாலும், அறுவடை வேலையினுடைய இறுதிவரையிலும் விசுவாசம் மற்றும் அன்பிற்கான பரீட்சைகள் தொடர்ந்து கொண்டிருப்பதையும், பெருகிக்கொண்டுவருவதையும் நாம் எதிர்ப்பார்த்திடலாம். இவ்வாறே பரிசுத்த பவுல் பிரிவினைகளை உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்கும்படிக்கும் (உரோமர் 16:17), மற்றும் மீண்டுமாக உங்கள் மத்தியில் பிரிவினைகள் இல்லாமல் இருப்பதாக (1 கொரிந்தியர் 1:10) என்று நமக்குப் புத்திமதி கூறுகின்றபோதிலும், அவர் "முதலாவது, நீங்கள் சபையிலே கூடிவந்திருக்கும்போது, உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன்;

அதில் சிலவற்றை நம்புகிறேன். உங்களில் உத்தமர்கள் இன்னார் என்று வெளியாகும்படிக்கு மார்க்கபேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே" என்று கூறுகின்றார். (1 கொரிந்தியர் 11:18, 19) மீண்டுமாகப் பரிசுத்த யோவானும்கூட, "அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துபோனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை; நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே; எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்துபோனார்கள்" என்று கூறுகின்றார். (1 யோவான் 2:19, 20)

இப்போதனையினுடைய பொருள் என்னவெனில்: கிறிஸ்துவின் சரீரமானது ஒன்றாக இருக்கின்றது என்பது உண்மையாக இருப்பினும், சபை அன்பின் கட்டுகளினாலும், சத்தியம் எனும் நரம்புகளினாலும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் கட்டப்பட்டு இருப்பது உண்மையாக இருப்பினும், நம்முடைய அன்பினாலும், சத்தியத்தினாலும், சக அங்கத்தினன் ஒருவனை நம்மால் முடிந்தமட்டும் ஐக்கியத்திற்குள் நிலைக்கப்பண்ணிடுவதற்கு அனைத்தையும் செய்த பிற்பாடும், அவன் விலகிப்போவானானால், கர்த்தர் இருதயத்தை அறிவார் என்றும், நம்மால் செய்ய முடிந்த அனைத்தையும் செய்த பிற்பாடு, மீதியைக் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்றும், அவர் அந்த அங்கத்தினனை ஒழுங்கிப்படுத்தி, தம்முடையவர்களாய்க் காணப்படுபவர்களாகிய சபையினுடைய ஐக்கியத்திற்குள் திரும்பக்கொண்டுவருவார் என்றும் நினைவில் கொண்டவர்களாக, நாம் இக்காரியத்தினை அமைதியுடன் எடுத்துக்கொண்டிட வேண்டும். "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்;" ஆனால் நாம் அறியோம். இதை நன்கு நினைவில்கொண்டவர்களாக, கீழ்ப்படியாத ஒவ்வொரு அங்கத்தினனைக் கையாளும் விஷயத்தில், கர்த்தரிலும், அவருடைய ஞானத்திலும், அன்பிலும், வல்லமையிலும் முழு நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டிருத்தல்/செயல் படுத்திட வேண்டும். நமக்கும், மற்றவர்களுக்கும் "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்" என்றுள்ள கர்த்தருடைய வார்த்தைகளை நினைப்பூட்டிக்கொண்டு, நாம் அனைவரிடத்திலும் இரக்கமாயும், சாந்தமாயும் காணப்படுவதே நம் காரியமாய் உள்ளது.

# 1911 — நினைவுகூருதல் இராப்போஜனம் — 1911

மீண்டுமாக நமது அருமை மீட்பர் சிலுவையில் அறையப்பட்டதற்கான ஆண்டு நிறைவு நாளினை நாம் நெருங்கிக்கொண்டிருக்கின்றோம்; மீண்டுமாகக் கடந்துவந்த வருடங்களானது நமக்குக் கற்பித்துத் தந்துள்ளதான படிப்பினையை நம்முடைய வாசகர்களுக்கு நாம் நினைப்பூட்டுகின்றோம்; அதென்னவெனில் சில விவரிக்கப்படாத காரணங்களின் நிமித்தமாக, இந்த ஒரு குறிப்பிட்டக் காலப்பகுதியில் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் விசேஷித்த சோதனைகளையும், பரீட்சைகளையும் சந்திக்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர் - நமது கர்த்தருடைய துயரமான மற்றும் பாரமான வேளைக்கும், ஆரம்பக்கால சீஷர்கள் மத்தியிலான விசேஷித்த சோதனைகள் காணப்பட்ட வேளைக்கும் ஒத்தவைகளைச் சந்திக்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர். தாம் சிலுவையில் அறையப்படப்போவதை முன்னறிந்தவராக, எருசலேமுக்குப் போவதற்குக் கொஞ்சம் முன்னதாக, அவர் இது குறித்து அப்போஸ்தலர்களுக்கு விளக்கினார். அப்போதுதான் தம்முடைய மாம்சத்தைப் புசித்து, தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவர்கள் மாத்திரமே தங்களுக்குள் ஜீவனைப் பெற்றிருப்பார்கள் என்று அவர் கூறினார். அவருக்கு நெருக்கமான பின்னடியார்களாய்க் காணப்பட்டவர்களில் அநேகர், "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்" என்றும், "அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள்" என்றும் பார்க்கின்றோம். (யோவான் 6:60, 66)

தாம் சீக்கிரத்தில் சிலுவையில் அறையப்படப்போவதைக் குறித்துப் பன்னிரண்டு பேரிடமும் சொன்ன பிற்பாடு, "ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை" என்று பரிசுத்த பேதுரு கூறி, கடிந்துகொள்ளுதலைப் பெற்றுக்கொண்டார். இயேசுவோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து: "எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாய் இருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்" என்றார் (மத்தேயு 16:22, 23). "உன்னுடைய ஆலோசனைகளும், கருத்துக்களும் தெய்வீகத் திட்டத்திற்குப் புறம்பானவைகளாகக் காணப்படுகின்றன; மனுஷகுமாரன் தமது மகிமைக்குள் பிரவேசித்து, சபை மற்றும் உலகத்திற்கு இரட்சகரெனத் தமக்கு நியமிக்கப்பட்டுள்ள வேலையினை நிறைவேற்றத்தக்கதாகப் பலியாகும் விதத்தில் பாடுபட வேண்டியது அவசியமாய் உள்ளது" என்ற விதத்தில் இயேசு கூறினார்.

பின்னர் இறுதிக்கட்டத்தில் யூதாஸ் மீது வந்திட்டதான விசேஷித்த சோதனையையும், பணத்தின் மீதான இவரது மோகமானது, எப்படிப் போதகரின் அடக்கத்திற்கு ஏதுவான அபிஷேகித்தலை எதிர்ப்பதற்கு வழிநடத்தினது என்றும், பின்னர் 30 வெள்ளிக்காசுகளுக்கென்று போதகரை விற்றுப்போடுவதற்கு வழிநடத்தினது என்றும், பின்னர் முத்தத்தினால் அவரைக் காட்டிக்கொடுப்பதற்கு வழிநடத்தினது என்றும், நாம் நினைவுகூருகின்றோம். பின்னர் தங்கள் போதகர் கைதுசெய்யப்பட்டதினாலும், அவர் தாம் கைது செய்யப்படுவதற்கு விரும்பினார் என்பதினாலும் எப்படிச் சீஷர்கள் அனைவரும் குழப்பத்திற்குள்ளானார்கள் என்றும்,

"எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்" என்றும் நாம் நினைவுகூருகின்றோம். (மாற்கு 14:50) பின்னர் எப்படிப் பெருந்தன்மையுள்ள பரிசுத்த பேதுரு கடுமையான தவறினால் மேற்கொள்ளப்பட்டவராகி, தனது ஆண்டவரும் போதகருமானவரைச் சபித்து மறுதலித்தார் என்றும் நாம் நினைவுகூருகின்றோம்.

அநேகமாக இச்சோதனைக்கான இணையானது, கர்த்தருடைய ஜனங்கள்மீது வருஷத்தினுடைய இந்தக் காலப்பகுதியில் வருமென நாம் கொஞ்சம் கற்பனைப்பண்ணுகின்றோம். கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் இந்தக்குறிப்பிட்டக் காலப்பகுதியில் விசுவாசத்திற்கான, கீழ்ப்படிதலுக்கான, நேர்மைக்கான/உண்மைக்கான விசேஷித்த சோதனைகளை, விசேஷித்த பிரச்சனைகளை, பரீட்சைகளைப் பெற்றிருப்பது ஏற்றதாகவும் மற்றும் உண்மையாகவும் காணப்படுகின்றது.

## லெந்து (அ) உபவாச காலங்கள்

மேற்கூறப்பட்டக் கருத்துப்பற்றின எண்ணங்களானது நீண்டகாலத்திற்கு முன்னதாகவே மற்றவர்களுக்குத் தோன்றி, கர்த்தருடைய குடும்பத்திலுள்ள அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மத்தியில் விசேஷித்த உபவாசம் மற்றும் ஜெபத்திற்குமான காலங்களாகிய லெந்து நாட்களை நியமிப்பதற்கு வழிநடத்தியுள்ளது. இந்த உபவாசமானது பல நூற்றாண்டுகள் காலமாய் உரோமன் சபையிலும், ஆங்கில சபையிலும், கிரேக்க சபையிலும் மற்றும் சில சபைகளிலும் ஆசரிக்கப்பட்டு வந்துள்ளது என்பது உறுதியே.

பெரும்பான்மையானவர்களின் விஷயத்தில் உபவாசமானது, வெறும் சம்பிரதாயமாகவும், வெளித்தோற்றமான ஆசரிப்பாகவும், இருதய உணர்வு இல்லாமலும் காணப்படுகின்றது மற்றும் இது கர்த்தருக்குப் பிரியமாயும் காணப்படாது என்றாலும், முற்காலங்களிலும், இப்பொழுதும் சிலர் சிறந்த நோக்கங்களுடனும் உபவாசம் இருந்துள்ளனர் மற்றும் இருக்கின்றனர் என்று நாம் நம்புகின்றோம். எவரையும் நியாயந்தீர்ப்பதோ, தனிப்பட்ட விதத்தில் குற்றப்படுத்துவதோ நமக்கடுத்தக் காரியமல்ல; எனினும் நாம் கூறியிருப்பதை அநேகர் ஒப்புக்கொள்வார்கள் என்பதில் நமக்கு நிச்சயமே. இருதயத்தை ஆளுவதற்கு ஏதுவான எந்தச் சட்டங்களையோ (அ) விதிகளையோ ஏற்படுத்திடுவது கூடாத காரியமாகும் - எந்தச் சட்டத்தினாலும்/விதியினாலும் மாம்சத்தைத் தற்செயலாகக்கூட ஆண்டிட முடியாது.

இம்மாதிரியான விஷயங்களில், இவைகளுக்கு விதிகளையும், சட்டங்களையும் ஏற்படுத்துவதை நாம் அங்கீகரிப்பதில்லை. உணவு தொடர்புடைய விஷயத்தில் மிதமாய் இருக்க வேண்டுமென இருதயப்பூர்வமாய் விரும்புகின்ற அனைவருக்கும், யோசனைகள் கொடுக்கப்படுவது போதுமானதாய் இருக்கும். போதகர் கடந்துபோன பிற்பாடு, தம்முடைய பின்னடியார்கள் உபவாசமிருக்க வேண்டுமென்ற போதகருடைய ஆலோசனையை நாம் பெற்றிருக்கின்றோம். இப்படியான உபவாசமிருக்கப்பட்டதான பல தருணங்களானது வேதவாக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது மற்றும்

இவைகள் கர்த்தருடைய பின்னடியார்களுக்கான சிறந்த/ஏற்ற மாதிரிகளாகக் கருதப்படலாம்; இந்தக் கர்த்தருடைய பின்னடியார்கள் உணவுகள் (அ) பானங்கள் (அ) மற்றப் பூமிக்குரிய சடங்குகள் விஷயத்தில் நியாயப்பிரமாணத்தின் கீழோ, கட்டளையின் கீழோ காணப்படுகிறவர்கள் அல்ல.

உபவாசத்தில் கொஞ்சம் சுயகட்டுப்பாட்டுடன் காணப்படுவது என்பது, நமக்கு சரீர விஷயத்திலும், ஆவிக்குரிய விஷயத்திலும், அதிலும் குறிப்பாக வருஷத்தினுடைய வசந்த/இளவேனிற் காலத்தில் பயன்கொடுக்கின்றதாய் இருக்கும். குளிர்காலத்தினுடைய குளிரான பருவநிலைக்கு அவசியமாய்க் காணப்படும் பலமான ஆகாரங்களானது, கடுமையற்ற பருவநிலையின்போது அவசியமாய் இராது. அதிகப்படியாய் உணவு உட்கொள்ளப்படுவதே, பெரும்பான்மையான இளவேனிற் கால சுகவீனங்களுக்கான காரணமாய் ஐயத்திற்கிடமின்றி காணப்படுகின்றது மற்றும் இந்தச் சுகவீனங்களானது, கொஞ்சம் உபவாசம் இருக்கும்போது - சுவையான மற்றும் பலமான உணவுகளை உட்கொள்ளுதல் கொஞ்சம் கட்டுப்படுத்தப்படும்போது சுகமாகிவிடுகின்றது. அதிகப்படியான போஷாக்கின் நிமித்தமாகச் செரிமானம் தடைப்பண்ணப்படும்போது, மூளையானது மிகவும் மந்தமாகிப்போய், உயர் மனதின் ஆற்றல்களை வலுவிழக்கச்செய்துவிடுகின்றது மற்றும் குறிப்பாக பரம மற்றும் ஆவிக்குரிய காரியங்கள் தொடர்புடையதான உயர் மனதின் ஆற்றல்களை வலுவிழக்கச் செய்துவிடுகின்றது.

இந்த யோசனைகளை, நாம் எவர்மேலும் நுகத்தினை (அ) நியாயப்பிரமாணத்தினைச் சுமத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இல்லாமல், மாறாக ஒவ்வொருவனும் தனது சொந்த மனசாட்சிக்கேற்ப உபவாசம் இருந்து, ஜெபம் பண்ணிடுவதற்கும் மற்றும் இந்த விஷயத்திலும், ஒவ்வொரு விஷயத்திலும் கர்த்தருடனான தனது உறவினுடைய அளவிற்கேற்ப ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்குமான நமது விருப்பத்தில்தான் முன்வைத்திடுகின்றோம்.

## நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கான தியதி

அநேக அருமையான கிறிஸ்தவ ஜனங்கள் நினைவுகூருதல் இராப்போஜனமானது வாரந்தோறும், மாதந்தோறும், மாதத்திற்கு இரண்டுமுறை என்றும், காலாண்டுதோறும் என்றும் ஆசரிக்கப்பட வேண்டும் என்று கற்பனை செய்துகொள்வது போன்று, நமது கர்த்தர் எதுவும் குறிப்பிடவில்லை என்று நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கின்றோம். நினைவுகூருதல் இராப்போஜனமானது, யூத ஏற்பாடு அனைத்தின்படி வருடந்தோறுமான ஆசரிப்பாக - நிழலான பஸ்காவினிடத்தில் இடம்பெறும் ஆசரிப்பாக நிறுவப்பட்டது என்பதில் மிகுந்த நிச்சயமே. நிழலின் விஷயத்தில், தியதியின் காரியத்தில் திட்டவட்டம் காணப்பட்டது மற்றும் இது நிஜத்தினுடைய ஆசரிப்புத் தொடர்புடைய விஷயத்தில் அவசியமாய் இருக்க வேண்டியதில்லை. நிழலானது, நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட வேண்டிய துல்லியமான/திட்டவட்டமான தியதியினை விசேஷமாய்ச் சுட்டிக்காட்டுவதற்குரிய

நோக்கத்தினைப் பெற்றிருந்தது. ஆகையால் யூதர்கள் விஷயத்தில் மிகுந்த நுணுக்கம்/துல்லியம் என்பது ஏற்றதாய் இருந்தது. இப்பொழுதோ இயேசுவின் மரணம் பற்றின உண்மையானது, நடந்து முடிந்த காரியமாய் இருக்கின்றபடியால், தியதி மற்றும் வேளையின் துல்லியம் குறித்த விஷயத்தில் நுணுக்கமாய்க் காணப்படுவது என்பது மிகுந்த அவசியமானதாய்க் காணப்படுகிறதில்லை.

ஆகையால் எப்பிஸ்கோப்பிலியர்களும், கத்தோலிக்கர்களும் மற்றும் லுத்தரன்களும் நமது கர்த்தருடைய மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்குமான ஆண்டு நிறைவு நாளுக்கு அருகாமையிலுள்ள வெள்ளியையும், ஞாயிறையும் புனித வெள்ளி என்றும், ஈஸ்டர் ஞாயிறு என்றும் ஆசரிக்கும் வழக்கத்திற்கு மறுப்புத் தெரிவிப்பதற்கு எதுவுமில்லை. உண்மையில் இவர்களது வழக்கத்திற்கு ஆதரவாக சில விஷயங்கள் சொல்லப்படலாம்; ஏனெனில் இவ்வழக்கமானது ஆண்டு நிறைவு நாளினை, அவ்வாரத்தினுடைய நாட்களுடன் ஒன்றுப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. எனினும் 30-வருடங்களுக்கும் மேலாக, இந்த நினைவுகூருதலை, அதன் துல்லியமான ஆண்டு நிறைவு நாள் என்று நாங்கள் அறிந்திருக்கிற தியதியில் - யூதருடைய காலக்கணக்கீட்டு முறைக்கேற்ப - யூதருடைய நீசான் மாதத்தின் 14-ஆம் தேதியினுடைய முந்தின மாலையில் ஆசரிக்கும் வழக்கத்தினை நாங்கள் பெற்றிருக்கின்றோம். இந்த நீண்ட கால வழக்கத்தின் கண்ணோட்டத்தின்படியும் மற்றும் மாற்றத்தினுடைய அநுகூலத்தைச் சிலர் தெளிவாய்ப் பார்க்க முடியாதவர்களாய் இருப்பார்கள் என்ற உண்மையின் கண்ணோட்டத்தின்படியும், சிலர் குழப்பமடைந்து, தாங்கள் தப்பறையைப் பின்பற்றுவதாக எண்ணுவார்கள் என்றுள்ள உண்மையின் கண்ணோட்டத்தின்படியும், நம்முடைய தெரிந்துகொள்ளுதலானது இப்படியாய்க் காணப்படுகின்றது. ஆகையால் யூதருடைய நாள்காட்டியின்படியான துல்லியமான தியதியே பின்பற்றப்படுவதாக என்று நாம் அறிவுரைக் கூறுகின்றோம்.

இவ்வருஷத்தில் இளவேனிற் சமஇரவுபகல் நாளைத் தொடரும் அமாவாசையானது, மார்ச் 30-ஆம் தேதி நிகழ்கின்றதாய் இருக்கின்றது மற்றும் இதுவே யூதக்காலக்கணக்கீட்டின்படியான முதல் மாதத்தினுடைய முதலாம் நாளாய்க் காணப்படுகின்றது. நமது கர்த்தர் முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியன்று சிலுவையில் அறையப்பட்டிருக்க, இந்த வருஷம் அந்நாளானது, ஏப்ரல் 12-ஆம் தேதியாகக் காணப்படும். ஆனால் அவரது மரணத்திற்கான நினைவுகூருதலான இராப்போஜனமானது, முந்தின நாள் மாலையன்று ஆசரிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது மற்றும் நம்முடைய முந்தைய வழக்கத்தின்படி அனைவரும் ஒரே இருதயத்துடனும், ஒரே மனதுடனும் ஒன்றாய் மாபெரும் மீட்பருடைய மரணத்தினை ஏப்ரல் 11-ஆம் தேதியாகிய, செவ்வாய்க் கிழமையன்று, இரவில் 6-மணிக்குமேல் ஆசரித்திடுவதற்கு நாம் பரிந்துரைக்கின்றோம். இப்படியாக ஆசரித்திட்டாலுங்கூட நம் அனைவராலும் ஒரே மணிநேரத்தில் ஆசரித்திட முடியாது; காரணம் நேரத்திலுள்ள வித்தியாசம் ஆகும்; எனினும் உலகமெங்கும் இவ்வாசரிப்பானது அதேவேளையில்தான் நடைப்பெறும். அனைவரும் இப்படி ஆசரிப்பார்கள் என்ற இந்தப் பொதுவான ஐக்கியமும்கூட, இத்தருணத்திற்கே உரிய சந்தோஷம் மற்றும் பயபக்தியுடன்கூட

அடங்குகின்றது. கர்த்தரை அன்புகூருகின்றவர்களும், மரணம் வரையிலுமாக அவரது சித்தம் செய்வதற்கென முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களுமானவர்கள் அனைவரும், நமக்கு விலையேறப்பெற்றதாய்க் காணப்படுகின்றதான இந்த ஆசரிப்பில் பங்குகொள்ளும்படிக்கு நாம் பரிந்துரைக்கின்றோம்.

இது முதலாவதாக - நம் அருமை மீட்பர் தம் சபை சார்பாகவும், பூமியின் குடிகள் அனைத்தின் சார்பாகவும் உள்ள அவரது பலியினை நமக்கு நினைப்பூட்டு கின்றதாய் இருக்கின்றது. இரண்டாவதாக - அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்கும், அவரோடுகூடப் பாடுபடுவதற்கும், அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கும், மரணத்திற்குள்ளான அவரது ஸ்நானத்திற்குள் ஸ்நானம் பெறுவதற்கும் நாம் கர்த்தரிடத்தில் பண்ணியுள்ளதான வாக்குறுதியை நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது. நினைவுகூரும் வண்ணமாக, அப்பம் பிட்குதலும், பாத்திரத்தில் பானம்பண்ணுதலும் - இவைகள் அடையாளப்படுத்துகின்ற நிஜங்களிலுள்ள நம்முடைய பங்கெடுத்தலைக்காட்டிலும் முக்கியத்துவம் குறைந்ததேயாகும் என்பது உண்மைதான். நம்முடைய மனங்களிலும், இருதயங்களிலும் நாம் இயேசுவினுடைய பிட்கப்பட்ட சரீரத்தைப் புசித்து, அவர் மூலமாய் நம்முடைய மாம்சத்தின் நீதிமானாக்கப்படுதலை தரிப்பிக்கப்பட்ட விதத்தில் நாம் பங்கெடுக்கின்றோம் என்றும், அவர் மூலமாகவே எதிர்க்கால ஜீவியத்திற்கான நம்முடைய நம்பிக்கைகள் அனைத்தும் வருகின்றது என்றும் விசுவாசத்தின் மூலம் உணர்ந்துகொள்ளப்பட வேண்டும்.

இரண்டாவதாக அவரது பாத்திரம் அடையாளப்படுத்துகின்றதுபோல், நாம் அவரது துயரங்களில் பங்கடைய வேண்டும், கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுப்பவர்களாகக் காணப்பட வேண்டும் மற்றும் அவரது அடிச்சுவடுகளில் மரணம் வரையிலுமாக உண்மையாய் நடந்து, கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றிட வேண்டும். பிதா தமக்கு ஊற்றின பாத்திரத்தினை ஆண்டவர் பானம்பண்ணினார். தேவனுடைய கிருபையினால், அவர் பாத்திரத்தில் பங்கடைவதற்கான சிலாக்கியத்தினை நாம் பெற்றிருக்கின்றோம்; ஏனெனில் நாம் அவரோடுகூடப் பாடுபட்டால், அவரோடுகூட ஆளுகை செய்வோம். கிறிஸ்துவின் பாடுகளிலிருந்து நாம் ஓடிவிடுவோமானால், அவரோடுகூட ஜீவப்பலிகளாகுவதற்கு நாம் தவறுவோமானால், நாம் அவரது இராஜ்யத்தினுடைய மகிமையான சிலாக்கியங்களை அடையமுடியாது.

# நினைவுகூருதல் இராப்போஜனம், ஏப்ரல் 10-ஆம் தேதி

நம்முடைய பாவங்களுக்கான மீட்பருடைய மரணத்தையும் - அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவது போன்று - மீட்பரோடுகூட மனுஷீக நிலைகளுக்கு மரித்துப் போவதிலும், அவருடைய பாடுகளிலும், அவரோடுகூட உள்ள நம்முடைய பங்கெடுத்தலையும் - நினைவுகூர்ந்திடுவதற்கான சிலாக்கியத்தினையும் எங்குமுள்ள கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களானவர்கள் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று நாம் நம்புகின்றோம். நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும், தம்முடைய மரணம் நிகழ்வதற்கு முன்னதாகக்கூடி, தம்முடைய மரணத்தை அடையாளப்படுத்தினது போலவே, நாமும் அவரது பலியை நினைவுகூர்ந்து ஆசரிப்பதற்கென ஆண்டு நிறைவு நாளில் கூடுவதும் ஏற்றதாயிருக்கும்.

யூதருடைய பஸ்காவிற்குப்பதிலாகக் கர்த்தர் இந்த நினைவுகூருதலை நிறுவின அவரது நோக்கத்திற்கு இசைவாக, இதை நாம் வருடந்தோறும் ஆசரிப்பது என்பது இத்தருணத்தை, மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒன்றாக்குகின்றது; அதாவது ஆண்டு நிறைவு நாளில், ஆசரிக்கும் அம்சத்தைப் புறக்கணித்து, அவ்வப்போது - மாதந்தோறும், வாரந்தோறும், காலாண்டுதோறும் என ஆசரிக்கப்படும் ஆசரிப்பானது ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தைக்காட்டிலும் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒன்றாக்குகின்றது. வித்தியாசமாய் ஆசரிக்கின்றவர்களிடத்தில் நாம் தவறு கண்டுபிடிக்காமல் இருப்போமாக; மாறாக வாய்ப்புகள் கிடைக்கும்போது, இந்த மாபெரும் நிகழ்வினை, அதன் ஆண்டு நிறைவு நாளில் நாம் ஆசரிப்பதற்கான நம்முடைய காரணங்களை, நாம் அவர்களுக்குத் தெரிவித்திடலாம்.

நாம் இதை (வருடந்தோறும்) புசித்து, பானம்பண்ணும்போதெல்லாம், கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கின்றவர்களாய் இருப்போம். நமது கர்த்தர் பல வருடங்களாகப் பிரசன்னமாகி - அறுவடையின் காலப்பகுதியில் காணப்படுகின்றார் என்று நாம் நம்புகிறவர்களாய் இருப்பினும் - இது அவரது மரணத்திற்கான ஆசீர்வாதமான நினைவுகூருதலை, நாம் தொடர்வதிலிருந்து, நம்மைத் தடைச் செய்திடுவதில்லை. நாம் அவரது மரணத்தை, அவரது இரண்டாம் வருகைவரை, அதாவது இந்த யுகத்தினுடைய முழு அறுவடை வேலையும் முடிவடைந்து, கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபை முழுவதும் மகிமைக்குள் ஏற்றுக்கொள்ளப்படுவது வரை, ஆசரிப்பதைத் தொடர வேண்டுமென்ற அர்த்தத்தில் நமது கர்த்தர் குறிப்பிட்டுள்ளார் என்பது நமது கருத்தாய் இருக்கின்றது. அவர் கூறின பிரகாரம், நாம் அவரோடுகூடப் புதிய பாத்திரத்தில் பானம் பண்ணிடுவோம்.

இப்பொழுது நாம் அவரது அவமானத்தின், நிந்தனையின், பாடுகளின், உலகத்தினுடைய எதிர்ப்பு மற்றும் ஏளனத்தின் பாத்திரத்தில் பானம்பண்ணுபவர்களாய் இருக்க, அவரது புதிய பாத்திரமானது சந்தோஷத்தின், ஆசீர்வாதத்தின், மகிமையின், கனத்தின், அழியாமையின் - திவ்விய சுபாவத்தின் பாத்திரமாய்க் காணப்படும். நமது கர்த்தருக்குப் பாடுகளின் பாத்திரத்தினை ஊற்றின பிதா, ஏற்கெனவே அவருக்கு

ஆசீர்வாதத்தின் மற்றும் மகிமையின் பாத்திரத்தை ஊற்றிவிட்டார். நாம் அவரோடுகூட இந்தப் பாடுகளின் பாத்திரத்தில் பங்கடைவதற்கான சிலாக்கியம் பெற்றிருப்பது போன்று, நாம் உயிர்த்தெழும்போது, மறுரூபமடையும்போது அவரோடுகூட, மகிமையின், ஆசீர்வாதத்தின் பாத்திரத்திலும் பங்கடைவதற்கான சிலாக்கியத்தினை நாம் பெற்றிருப்போம். ஆம், நம்முடைய பாத்திரமானது இப்பொழுது கலந்து காணப்படுகின்றது; கசப்பும் - இனிப்பும் கலந்து காணப்படுகின்றது; ஏனெனில் விசுவாசத்தினால் நாம், தேவனை அன்புகூருகிறவர்களுக்கென்று அவர் வைத்துவைத்துள்ளதானவைகள் அநேகவற்றை ஏற்கெனவே அனுபவித்து வருகின்றோம்.

கர்த்தருடைய ஏற்பாட்டில் சந்திரனானது, யூதருடைய வாய்ப்புகளை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் சூரியனானது சுவிசேஷ யுகத்தினுடைய வாய்ப்புகளை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. நியாயப்பிரமாணத்தின் யுகமானது, வரும் காரியங்களுக்கான நிழலாய் (அ) பிரதிபலிப்பாய்க் காணப்படுகின்றது; அதாவது சந்திரனுடைய ஒளியானது, சூரிய கதிரினுடைய பிரதிபலிப்பாய்க் காணப்படுவதுபோன்று காணப்படுகின்றது. தேவனைப்பற்றின அறிவினால் உலகத்தைப் பிரகாசிப்பிக்கின்ற ஒளியினைத் தன் செட்டைகளின் கீழ்ப் பெற்றிருந்து, நீதியின் சூரியன் உதிக்கின்ற காலப்பகுதிக்கு அருகாமையில் நாம் காணப்படுகின்றோம். இதை நாம் காண்கையில், போதகர் கட்டளையிட்டதற்கேற்ப நாம் நமது தலைகளை உயர்த்தி, களிகூருகின்றோம். (மத்தேயு 13:43) கர்த்தருடைய உவமையின்படி சபையினுடைய ஜெயங்கொள்ளும் அங்கத்தினர்கள் அந்த நீதியின் சூரியனுக்குள் அடங்குவதினால், ஆயிரவருட அரசாட்சியினுடைய மகிமையின் வெளிச்சமானது, உலகத்தார்மீது முழுமையாய்ப் பிரகாசித்திடுவதற்கு முன்னதாக, தெரிந்தெடுக்கப்பட்டதான சபையானது கூட்டிச்சேர்க்கப்பட்டு, அவளது மகிமையடைதல் நிறைவடைந்திட வேண்டும்.

நினைவுகூருதலில் நாம் பங்கெடுக்கையில், முதலாம் நினைவுகூருதல் நிகழ்ந்தபோது காணப்பட்ட சூழ்நிலைகளுக்கு நேர்மாறாக இப்பொழுது நீதியின் சூரியன் உதிப்பதை விசுவாசத்தின் கண்களினால் பார்க்கின்றவர்களாக இருக்கின்றோம். அப்போது சந்திரனானது (நியாயப்பிரமாண உடன்படிக்கையானது) அதன் முழு நிலையில் காணப்பட்டது; இயேசு மறுதலிக்கப்பட்டு, அவர் சிலுவையில் அறையப்பட்டவுடனே, யூதருடைய ஆட்சியானது நலிவுற ஆரம்பித்தது. இயேசு சிலுவையில் மரித்த நாளில் சந்திரன், பௌர்ணமி நிலையில் காணப்பட்டது என்றும், பின்னர் உடனடியாக தேய்வுற ஆரம்பித்தது என்றும் கவனிக்கப்படலாம். இந்த வருடத்தில் ஏப்ரல் 11-ஆம் தேதியில் சந்திரன் பௌர்ணமி நிலையில் காணப்பட்டு, பின்னர் அதன் தேய்வு ஆரம்பமாகும். ஆகையால் 11-ஆம் தேதியானது, நமது கர்த்தர் சிலுவையில் மரித்திட்டதற்கான நாளாகவும், 10-ஆம் தேதி மாலையானது முதலாம் நினைவுகூருதல் இராப்போஜனம் ஆசரிக்கப்பட்ட இரவிற்குரிய நாளாகவும் காணப்படும்.

# பாத்திரமான நிலையில் புசித்து, பானம்பண்ணுதல்

நினைவுகூருதல் இராப்போஜனம் அடையாளப்படுத்தும் காரியங்களை உணர்ந்துகொள்வதினால் மாபெரும் ஆசீர்வாதமும், அதில் பங்கெடுப்பவரின் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்கு ஏற்ப சந்தோஷமும் கடந்துவருவதுபோல, நினைவுகூருதலில் அபாத்திரமான நிலையிலும், சரியற்ற நிலையிலும் பங்கெடுத்தல்கூட ஆக்கினைத் தீர்ப்பைக் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது. கர்த்தருக்கும், அவரது ஊழியத்திற்கென்றும் - தங்களுடைய இருதயங்களை - தங்களுடைய அனைத்தையும் - அர்ப்பணிப்பதன் மூலமாகக் கர்த்தருடன் உறவிற்குள் வந்தவர்களே இதில் பங்கெடுக்க வேண்டுமே ஒழிய, மற்றவர்கள் அல்ல.

யார் தங்களைப் பாவிகள் என்றும், இரட்சகரைப் பாவங்களிலிருந்து தங்களை மீட்பவர் என்றும், இவர் மூலமாய்ப் பிதாவினிடத்திற்கு வருபவர்களுடைய குறைவுகளை ஈடுசெய்திடுவதற்கு இவருடைய புண்ணியங்கள் போதுமானவைகள் என்றும் அடையாளங்கண்டுகொள்கின்றனரோ, இவர்களே இந்த அர்ப்பணிக்கப்பட்ட நிலைமைக்கு வரமுடியுமே ஒழிய, மற்றவர்கள் அல்ல. இப்படியானவர்களே மிகுந்த சந்தோஷத்துடன் இதில் பங்கெடுப்பவர்களாய் இருப்பார்கள். போதகருடைய பாடுகளை இவர்கள் நினைவுகூர்ந்து, அந்தப் பாடுகளிலும் மற்றும் அவை தங்கள் இருதயங்களிலும், ஜீவியங்களிலும் கொண்டு வந்திட்டதான ஆசீர்வாதங்களிலும் களிகூர்ந்திட வேண்டும். கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியங்களைத் தங்களுடையதாக்கிக்கொண்டவர்களும், தங்களுக்கான ஆசீர்வாதங்கள் அனைத்துமே அவர் மூலமாகவே வந்தது என்று முழுமையாய் உணர்ந்து கொண்டுள்ளவாகளுந்தான், அந்த ஒரு தருணத்தில் திராட்சப்பழரசத்தைப்-பானம்பண்ணிட வேண்டுமே ஒழிய, வேறு எவருமல்ல. தங்களுடையதனைத்தையும் கர்த்தருக்குக் கொடுத்துவிட்டவர்களே பாத்திரத்தில் பானம்பண்ணிட வேண்டுமே ஒழிய, வேறு எவருமல்ல; ஏனெனில் இதுவே பாத்திரத்தினுடைய அர்த்தமாய் இருக்கின்றது - அது பாடுகளின் பாத்திரமாகும், மரணத்தின் பாத்திரமாகும் - தேவனுடைய சித்தத்திற்கான முழுமையான ஒப்புக்கொடுத்தலாகும். “என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது” என்பதே போதகருடைய ஜெபமாக இருந்தது மற்றும் இதுவே நினைவுகூருதல் இராப்போஜனத்தில் பங்கெடுப்பவர்களின் மன உணர்வாகவும், வேண்டுகோளாகவும் காணப்பட வேண்டும்.

இப்படிப்பட்டவர்கள் அல்லாதவர்கள் இந்த நினைவுகூருதல் இராப் போஜனத்தில் பங்கெடுத்தல் என்பது, பயனற்றதாக/நாடகமாக இருக்கும்; மற்றும் இது தவறாய் இருக்கும் மற்றும் தேவனிடமிருந்தும், மற்றும் தங்கள் செய்கையினுடைய தவறை உணர்ந்துகொள்வதற்கேற்ப தங்கள் சொந்த மனசாட்சியினிடமிருந்தும் குற்றவாளி என்று தீர்க்கப்படுதலையும், மறுப்பையும் கொண்டுவருதலாய் இருக்கும்.

ஆனால் மாம்சத்தினுடைய அபூரணங்கள் காரணமாக, எவரும் நினைவுகூருதல் ஆசரிப்பிலிருந்து விலகிக்கொள்ள நினைத்திட வேண்டாம். மாம்சத்தின் அபூரணம் என்பது அநேகருக்கு மிகுந்த இடறலின் கல்லாய்க் காணப்படுகின்றது. நாம் மாம்சத்தில் காணப்படுவதுவரையிலும், வார்த்தையிலும், கிரியையிலும், சிந்தையிலும் அபூரணங்கள் காணப்படவே செய்யும் - ஆம் இவை தவிர்க்கப்பட முடியாதவைகள். நாம் விரும்புகிறவைகளைச் செய்யமுடியாது என்று பரிசுத்த பவுல் குறிப்பிடுகின்றார். இதன் காரணமாக நம்முடைய அன்றாட, வேண்டுமென்றில்லாத, மனப்பூர்வமாய்ச் செய்யப்படாத மீறுதல்கள் மன்னிக்கப்படுவதற்கு நமக்குத் தெய்வீகக் கிருபை அவசியமாய் உள்ளது; ஆகையால் பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்களும், கிறிஸ்துவினுடைய ஐக்கியத்திற்குள்ளாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களுமானவர்கள் அனைவரும் ஜெபத்தில், பரலோகக் கிருபையின் சிங்காசனத்தினிடத்திற்கு வருவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர். "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். (எபிரெயர் 4:16) தேவைகளின் காரணமாகவே, தேவன் வழியைத் திறந்து, நமக்காக இந்த ஏற்பாட்டினை ஏற்பாடு பண்ணினார்.

நாம் எதற்காக - பாவங்களுக்காக மனந்திரும்பி, இயேசுவின் நாமத்தினால் மன்னிப்பைக் கேட்டுக்கொண்டோமோ, அந்தப் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான தேவனுடைய ஏற்பாட்டின் மூலமாக, நாம் இனி ஒருபோதும் பாவிகளென ஆக்கினையின் கீழ் இல்லாமல், மாறாக கிறிஸ்துவினுடைய நீதியின் வஸ்திரத்தினால் மூடப்பட்டிருக்கின்றோம் என்று உணர்ந்துகொள்வோமாக. இதுவே, ஒவ்வொரு நாளும் பொருந்தக்கூடிய பரிசுத்த பவுலினுடைய பின்வரும் வார்த்தைகளுக்குப் பின்னாகக் காணப்படுகின்ற கருத்தாகும்; அதாவது "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." (உரோமர் 12:1)

கிறிஸ்தவர்கள் அனைவரும் கர்த்தரிடம் தங்கள் கணக்குகளைத் தீர்த்த நிலையில் வைத்திருக்க வேண்டும். கணக்குளைத் தீர்த்துக்கொள்ளவில்லையெனில், காலம் கடத்தாமல் கணக்குகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். அதாவது இரட்சகருடைய பலியின் புண்ணியத்தின்மூலம் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தரோடு உள்ள இப்படியான கணக்குகள் அவைகள் நிகழ்ந்தபோதே, உடனடியாகச் சரிச்செய்யப்பட வேண்டும் அல்லது அவை நிகழ்ந்த நாளிலேயே சரிச்செய்யப்பட வேண்டும். அவைகள் குவிவதற்கு நாம் அனுமதித்திடக்கூடாது; ஏனெனில் அவை ஆத்துமாவிற்கும், பரம பிதாவிற்கும் இடையில் மதிற்சுவரை

எழுப்பிவிடும். ஆனால் கடந்தகாலங்களில் சூழ்நிலைகள் என்னவாகக் காணப்பட்டாலும்கூட, நினைவுகூருதல் காலங்கள் என்பது, மற்றக் காலங்கள் அனைத்தையும் காட்டிலும், கர்த்தருக்கும் நமக்கும் இடையில் எந்த மேகமும் காணப்படாமலும், நம்மை அவருடைய கண்களிலிருந்து மறைத்துப்போடாமலும் இருக்கத்தக்கதாக, நாம் பார்த்துக்கொள்வதற்குரிய காலமாய் இருக்கின்றது.

இப்படியாக மன்னிக்கப்பட்டு, கிறிஸ்துவினுடைய நீதியாகிய நம்முடைய வஸ்திரத்திலுள்ள அசுசியான கறைகள் சுத்திகரிக்கப்பட்டு, நாம் பண்டிகையை — நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலை ஆசரிப்போமாக. இந்த நினைவு கூருதலில் நாம் அவரது பலி மற்றும் மரணத்தினுடைய புண்ணியத்தின் முக்கியத்துவத்தினை மீண்டுமாக ஒப்புக்கொண்டு, இதை நம் மனங்களில் பதியவைத்திடுவோமாக மற்றும் அவரது பலியும், மரணமும் எப்படி நமக்கான தேவனுடைய கிருபையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்றும், எதிர்க்காலத்தில் ஆயிரவருட இராஜ்யத்தின் மூலமாக முழு உலகத்திற்கும் பாராட்டப்படும், அதே கிருபையாய் இருக்கும் என்றும் ஒப்புக்கொண்டு, நம் மனங்களில் பதியவைத்திடு வோமாக. நம்முடைய அர்ப்பணிப்புக் குறித்தும், நம்முடைய கர்த்தரோடு மரிப்பதற்கும், ஒரே அப்பத்தின் பாகங்களாக, அவரது சரீரத்தின் அங்கத்தினர்களெனப் பிட்கப்படுவதற்கும், அவரது பாடுகள், அவமானம் மற்றும் மரணத்தின் பாத்திரத்தில் பானம்பண்ணுவதில் பங்கெடுப்பதற்குமான நம்முடைய அர்ப்பணிப்புக் குறித்தும் நினைவுகூருவோமாக. "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்." (2 தீமோத்தேயு 2:12)

இந்த வருஷத்தில் நினைவுகூருதல் ஆசரிப்பானது, எங்குமுள்ள அர்ப்பணிக்கப்பட்ட கர்த்தருடைய ஜனங்களுக்கு மிகுந்த ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒன்றாகவும், ஐசுவரியமான ஆசீர்வாதமுள்ள தருணமாகவும் காணப்படும் என்று நாம் விசுவாசிக்கின்றோம். "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கின்றாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." (1 கொரிந்தியர் 5:7, 8)

## சகோ. ரசல் அவர்களது வெளிநாட்டுப் பயணம்

அன்று மாலையில் மழைத்தூறல் காணப்பட்டது; எனினும் 19 நூற்றாண்டுகளுக்கு முன்னதாக நமது போதகரும், அப்போஸ்தலர்களும் அந்த மறக்கமுடியாத இரவின்போது காணப்பட்டதான கெத்செமனே தோட்டத்திற்கு - போதகர் வியாகுலமடைந்த மற்றும் இரத்த வியர்வை சிந்தின தோட்டத்திற்குப் போயாகவேண்டும் என்று நாங்கள் தீர்மானமாய்க் காணப்பட்டோம். ஏகமனதுடன்கூடிய வாக்களிப்புடன், நாங்கள் அந்தப் புனிதமான இடத்தில் நினைவுகூருதலின் அடையாளங்களில் பங்கெடுப்பதற்கு விரும்பிட்டோம்; இவ்விடமானது இதுபோன்றதான நோக்கங்களுக்காக ஒருபோதும் அநேகமாகப் பயன்படுத்தப்படவில்லை. மழைத் தூறலின் மத்தியில் இயேசுவின் பிட்கப்பட்ட சரீரத்தை அடையாளப்படுத்துகின்றதான அப்பத்தினுடைய அர்த்தத்தினையும் மற்றும் இரண்டாவதாக அப்போஸ்தலனாகிய பவுலினால் விவரிக்கப்பட்டதுபோன்று கிறிஸ்துவின் சரீரமாகிய முழுச்சபையும், நாம் பிட்கின்ற அந்த ஒரே அப்பமாய் இருக்கின்றதையும் நாங்கள் பார்த்தோம். நம் சார்பாகவும், உலகத்திற்காகவும் நமது கர்த்தரினால் ஊற்றப்பட்ட ஜீவனை முதலாவது அடையாளப்படுத்துகிறதும் மற்றும் இரண்டாவதாக கிறிஸ்துவின் உபத்திரவங்களில் பங்காளிகள் ஆகுவதன் மூலமாக, அவரது பாத்திரத்தில் பானம்பண்ணுவதன் மூலமாக, கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுப்பதற்குரிய அருமையான சிலாக்கியத்தினை நமக்குக் குறிக்கின்றதுமான பாத்திரத்தைக் குறித்தும் நாங்கள் பார்த்தோம். பிதாவின் இராஜ்யத்தில், அந்த ஆசீர்வாதமான சூழ்நிலைகளின்கீழ், நவமானதாய்ப் பானம்பண்ணுவதில் பின்தொடரும் மகிமையைக் குறித்து நாங்கள் பார்த்தோம். இப்பொழுது பிட்கப்பட்டு வருகின்றதான அப்பமானது, எப்படித் தெய்வீக ஏற்பாட்டின்படி, மனுக்குலத்தின் ஒட்டுமொத்த உலகத்திற்கு அப்பமாகக் காணப்படும் என்றும் நாங்கள் எண்ணிப்பார்த்தோம்.

மழைக் காணப்பட்டப்போதிலும்/அசௌகரியமான வானிலை காணப்பட்டப் போதிலும், எங்கள் இருதயங்களானது மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்பட்டது. அந்த ஆசீர்வாதமான தருணத்திற்காகவும், நினைவுகூரப்பட்டதான ஆசீர்வாதமான காரியங்களுக்காகவும் நாங்கள் ஜெபத்தையும், நன்றியையும் ஏறெடுத்தோம் மற்றும் எங்குமுள்ள கர்த்தருடைய அருமையானவர்களும்கூட இதைப் போன்று நினைவுகூருதலை ஆசரித்துக்கொண்டிருப்பார்கள் (அ) நமக்காக அடிக்கப்பட்டதான நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்துவினுடைய பாடுகளை நினைவுகூர்ந்து ஆசரிப்பார்கள் என்றும் நாங்கள் நினைவுகூர்ந்தோம். அமைதியான தொனியில் கவியொன்றினைப் பாடிவிட்டு, நன்றி உள்ள, சந்தோஷமுள்ள இருதயங்களுடன் கலைந்து சென்றோம். அந்த மாலையின்போதான அனுபவங்களானது, எங்கள் நினைவுகளிலிருந்து ஒருபோதும் மறைந்திடாது; இது உலகத்தின் பாவங்களுக்காக மரித்திட்ட தேவாட்டுக்குட்டியைக் குறித்தும், அவரோடுகூட அவரது பலியில்

பங்கடைவதற்கும் மற்றும் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென, அவரது மரணம் மூலமாக உண்டான மாபெரும் வேலையை நிறைவேற்றத்தக்கதாக, அவரோடுகூட மகிமையடைவதற்குமான சிலாக்கியம் குறித்தும் ஆற்றலுடன் நம்மிடம் எப்போதும் பேசுகின்றதாய் இருக்கின்றது.

எருசலேமில் நமது கடைசிநாள், ஏப்ரல் 24-ஆம் தேதியாகிய ஞாயிற்றுக்கிழமையாய் இருந்தது. இது திரைக்கு இப்பக்கத்திலும் மற்றும் ஐயமின்றி மறுபக்கத்திலும் எப்போதும் நம்முடைய நினைவுகளில் மங்கிப்போகாமலேயே காணப்படும். நாங்கள் ஒலிவமலையைப் போய்ப்பார்த்தோம் மற்றும் அடுத்து இயேசுவும், அவரது அப்போஸ்தலர்களும் அடிக்கடி கடந்து சென்றதான பெத்தானியாவின் சாலைக்குச் சென்றோம். பட்டணத்து வாயிலுக்கு வெளியே உள்ள கெதரோன் ஆற்றைப்பார்த்துவிட்டு, அதைக் கடந்துபோனோம். இயேசு தம்முடைய சீஷர்கள் சூழ்ந்திருக்க, "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று ஜனக்கூட்டத்தார் ஆர்ப்பரிக்க கழுதையின்மீது ஏறிவந்த பெத்தானியா சாலையின் அந்தக் குறிப்பிட்ட பாகம்மீதும், நமது போதகர் பட்டணத்தின் பார்வை தென்பட்டவுடன், ஊர்வலத்தை நிறுத்தி, அங்கு அதற்காகக் கண்ணீர் வடித்து, "இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலேயே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இஸ்ரயேல் வீட்டார் குறித்துக் குறிப்பிட்ட இடத்தின்மீதும் நாங்கள் விசேஷித்த கவனம் கொண்டிருந்தோம். (மத்தேயு 23:28, 29) இந்த இடத்தை நாங்கள் இரண்டுமுறை வந்து பார்த்திட்டோம்; மேலும் இஸ்ரயேல் மற்றும் பூமியின் குடும்பங்கள் அனைவரின் கண்கள் திறக்கப்படுவதற்கான காலம் சமீபமாயுள்ளது என்ற உண்மையின் நிமித்தமாக ஆவியில் களிகூர்ந்தோம். "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்" என்ற வாக்குறுதிக்காய்த் தேவனுக்கு நன்றி! (ஏசாயா 35:5)

-ரீபிரிண்ட்ஸ், பக்கம். 4622
(தெரிந்தெடுக்கப்பட்டப் பத்திகள்)

# நினைவுகூருதல் இராப்போஜனம்

இயேசு கழுதையின்மேல் ஏறிவந்து, தம்மை இஸ்ரயேலின் இராஜாவென முன்வைத்த ஐந்து நாளைக்குப் பின்னர், முதற்பேறானவர்களின் சபையைக் கடந்துபோகுதலுக்கான நிழலான பஸ்கா வந்தது. இயேசுவே உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக இருந்தார். அவர் இதைச் செய்ய வேண்டுமானால், அவர் பஸ்கா ஆட்டுக்குட்டியாக வேண்டும். "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" என்று பரிசுத்த பவுல் அவர்கள் கூறுகின்றார். இயேசு தம்முடைய சீஷர்களோடுகூட நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டியினைப் புசித்தார். பின்னர்த் தம்முடைய சொந்த மாம்சத்திற்கும், தம்முடைய சொந்த இரத்தத்திற்கும் அடையாளமான புளிப்பில்லாத அப்பத்தையும், திராட்சப்பழரசத்தையும் அவர் எடுத்து, நிஜமான பஸ்கா இராப்போஜனத்தை நிறுவினார்.

நிஜமான ஆட்டுக்குட்டியென அவரது மரணத்திற்கான நினைவுகூருதலாக, இயேசுவின் பின்னடியார்கள் இதைச் செய்ய வேண்டும். "இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 6:53). உண்மைதான் இது இருதயத்தினுடைய அனுபவங்களை அடையாளப்படுத்தவில்லையெனில், வெளிப்புறமான அனுசரிப்பில் ஒரு பயனுமில்லை. இயேசுவின் பின்னடியார்கள் தங்கள் இருதயங்களில் அவரது மரணம்தான் முழு உலகத்தினுடைய பாவங்களுக்கான மீட்கும்பொருள் விலைக்கிரயம் என்றும், இது இல்லாமல், நித்திய ஜீவன் ஏதும் இருப்பதில்லை என்றும் உணர்ந்துகொள்ள வேண்டும். இத்தகைய விசுவாசிகளே, உலகத்தாருக்கு முன்னதாகவே, முதலாம் உயிர்த்தெழுதலின் மூலம் ஜீவனுக்குள் கடந்துபோகிறவர்களாகிய முதற்பேறான சபையில் அடங்குபவர்களாய் இருப்பார்கள். (வெளிப்படுத்தல் 20:6)

பரிசுத்த பவுல் அடிகளார் நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கான இன்னும் ஆழமான அர்த்தத்தினை எடுத்துக்காட்டுகின்றார். இயேசுவின் பின்னடியார்கள் அனைவரும், பிட்கப்படுகின்றதான ஒரே அப்பத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்; பாடுகளின், அவமானத்தின், நிந்தனையின் மற்றும் மரணத்தின் ஒரே பாத்திரத்தில் பங்கடைபவர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். (1 கொரிந்தியர் 10:16, 17) இப்படியானவர்கள் மாத்திரமே "மோசே போன்ற உலகத்தின் தீர்க்கத்தரிசியின்," அவரது மகிமையடைந்த "சரீரத்தின்" அங்கத்தினர்களாகவும் காணப்படுவார்கள். (அப்போஸ்தலர் 3:19-23)

சீஷர்கள் ஒருவர் ஒருவருடைய பாதங்களையும், ஆண்டவருடைய பாதங்களையும்கூடக் கழுவிடுவதைப் புறக்கணித்தனர். இயேசு சடங்காக இல்லாமல், தாழ்மைக்கான பாடம் புகட்டும் வண்ணமாக, அப்பணிவிடையைச் செய்தார். அப்பாடத்தினுடைய அர்த்தம் நாம் "கிறிஸ்துவின் அங்கத்தினர்களென" நம்மால் முடிந்த எந்தப் பணிவிடையையும் ஒருவருக்கொருவர் புரிந்திட வேண்டும் என்பதாகும். (அப்போஸ்தலர் 9:5; 1 கொரிந்தியர் 12:27)

இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, இயேசு பதினொரு பேருடன்கூட, யூதாஸ் அவரை முத்தத்தினால் அதிகாரிகளுக்குக் காட்டிக்கொடுத்த இடமாகிய கெத்செமனேக்குப் போனார். பின்னர்த் தொடர்ந்தது - நமது கர்த்தருடைய ஜீவியத்தின், நாம் நினைவில் வைக்கப்படத்தக்கதான இறுதி முடிவு நிகழ்வுகள்.

# நினைவுகூருதல் இராப்போஜனம்—
## ஏன் நாம் பங்கெடுக்கின்றோம்.

கேள்வி. (1911)— 1— ஏன் நீங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கெடுக்கின்றீர்கள்?

பதில். ஏனெனில் அது நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலாய் இருக்கின்றது. மேலும் "புசித்து . . . பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று அப்போஸ்தலன் கூறும்போது, கர்த்தருடைய ஜனங்களானவர்கள், தாங்கள் மறுரூபமடைந்து, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைந்து, திரைக்கு அப்பால் அவரோடுகூட மேலானவைகளில் பங்கெடுப்பதற்கான காலம்வரையிலும், கர்த்தருடைய மரணத்தைத் தங்களுடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் அனைத்திற்குமான அஸ்திபாரம் என்று நினைவுகூருவது சரியானது என்று நாம் புரிந்து இருக்கின்றோம். இதை இன்னொரு நோக்கத்திற்காகவும் நாம் செய்கின்றோம். கர்த்தருடைய இராப்போஜனமானது, நமது அருமை மீட்பருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் மாத்திரம் அடையாளப்படுத்தாமல், நம்முடைய பங்கெடுத்தலையும்கூட அடையாளப்படுத்துகின்றது என்பது நம்முடைய புரிந்துகொள்ளுதலாய் இருக்கின்றது; ஏனெனில் அப்போஸ்தலன் "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா!" என்று கூறுகின்றார். (1 கொரிந்தியர் 10:16; திருவிவிலியம்) வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமெனில் இந்த இராப்போஜனத்தில் பங்கெடுப்பவர்கள், தாங்கள் இயேசுவோடுகூட, அவரது பாடுகளிலும், அவரது மரணத்திலும் பங்காளிகளாக இருப்பதை வெளிப்படுத்துகின்றவர்களாய் இருக்கின்றனர் என்றே அப்போஸ்தலன் கூறுகின்றார். நாம் அதே சரீரத்திலுள்ளவர்களாய் இருக்கின்றோம். ஆகையால் நாம் அவரோடுகூட ஆளுகை செய்யத்தக்கதாக, இப்பொழுது அவரோடுகூடப் பாடுபடுவது என்பது நம்முடைய தற்போதைய கடமையின் பாகமாக இருக்கின்றது.

# நினைவுகூருதல் இராப்போஜனம்—
## (Wine) புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தைப் பயன்படுத்துதல்.

கேள்வி. (1911) —2 —கர்த்தருடைய இராப்போஜனம் தொடர்புடையதாக, புதிய ஏற்பாட்டில் "(புளிப்பேற்றப்பட்ட) திராட்சரசம்" (wine) என்ற வார்த்தையானது எங்கு இடம்பெறுகின்றது?

பதில். (wine) புளிப்பேற்றப்பட்ட திராட்சரசம் என்ற வார்த்தைப்

பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை நான் அறியேன். திராட்சப்பழரசம் (fruit of the vine) என்ற வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது, மற்றும் எவரேனும் திராட்சப்பழரசம் (fruit of the vine) என்பது திராட்சப்பழச்சாறு (grape juice) என்று கருதிடுவதற்கு விரும்புவார்களானால், நான் இதற்கு மறுப்புத் தெரிவிப்பதில்லை; இதுவே நினைவுகூருதலுக்குப் பொருத்தமானது என்றும், (wine) புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தைக் காட்டிலும் சிறந்தது என்றும் நான் எண்ணுகின்றேன்.

## பஸ்கா மற்றும் பாவநிவாரண நாள்— எப்போது மற்றும் ஏன் ஆசரிக்கப்படுகின்றது?

**கேள்வி.** (1916) —1—பஸ்காவானது முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதி மாலையிலும், வருடாந்தர பாவநிவாரண நாளானது ஏழாம் மாதத்தினுடைய 10-ஆம் தேதியிலும் ஏன் ஆசரிக்கப்படுகின்றது?

**பதில்.** ஏனெனில் தேவன் அவைகள் வெவ்வேறானவைகளாக இருப்பதற்கு விரும்பிட்டார். இந்த இரண்டு காரியங்களும் ஒன்றோடொன்று நேரடியான தொடர்பு இல்லாதவையாகும். ஒன்று முதற்பேறானவர்களின் சபையைக் கடந்துபோகுதலுக்கு நிழலாய் இருக்கின்றது; மற்றொன்றோ ஆயிரவருட யுகத்தின்போது பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஆசீர்வாதங்களை வழங்குவதற்கு ஆயத்தமாகவும், அடிப்படையாகவும் காணப்படத்தக்கதாகச் சுவிசேஷயுகத்தில் கிறிஸ்துவும், சபையும் பாடுபடுகிறதற்கு நிழலாய் இருக்கின்றது. பஸ்கா ஆட்டுக்குட்டியானது, இயேசுவினுடைய மரணத்தையும், இந்த யுகத்தில் அவரது ஜனங்களைக் கடந்துபோகுதலையும் மாத்திரமே அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் இதன் காரணமாக இயேசு மற்றும் சபையின் மரணத்தையும், வரவிருக்கும் யுகத்தில் உலகம் ஆசீர்வதிக்கப்படுவதையும் அடையாளப்படுத்தும் இன்னொரு மற்றும் வேறொரு நிழல் கொடுக்கப்பட்டது. இந்த இரண்டும் தனித்தனியாகக் காணப்பட தேவன் விரும்பிட்டார். ஒன்று இயேசுவின் மரணத்தினைக் குறிப்பிட்டது மற்றும் இன்னொன்று, வேறொரு நிழலாய்க் காணப்படத்தக்கதாகக் கொடுக்கப்பட்டது.

# ஆண்டவரே, எனக்கான சிலுவையைத் தெரிந்தெடுத்துத் தாரும்


அது ஒரு துன்பத்தின் காலம், என்னுடைய இருதயமோ
நன்மையான பகுதியை அன்பு செய்தாலும், அதை அறிந்திருந்தாலும்,
வாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்கமுறைகளையும் முரண்பாடுகளையும்
துன்பங்களையும் கண்டு விரக்தியடைந்துள்ளதே,
எனக்குக் கொடுக்கப்பட்ட இவைகளை நான் எண்ணிடும்போதினிலே,
அன்பிற்காக எனக்கு அளிக்கப்பட்ட சோதனைகள், விசுவாசத்தின் பரீட்சைகள்,
நான் எப்போதும், மரணபரியந்தம் நிலைத்து நிற்பேன் என்று எண்ணுதற்கில்லை,
நாம் தரிசித்து நடவாமல், விசுவாசத்தில் நடக்கிறோம் என்று
சொல்லுகிறவருடைய வல்லமையில் ஐயமுற்று,
சந்தேகப்பட்டு முழுமையாகவே விரக்தியடைந்துவிட்டாலும் - என்
சிலுவையை சுமக்கவே முடியவில்லை என்ற எண்ணம் எழுகின்றதே,
ஆ, அதன் சுமையோ நிச்சயமாகவே அதிகமாகவே உள்ளதுவே,
நான் தினம்தினம் சந்திக்கும் மற்றவர்கள் சுமக்கும் சிலுவையை விடவும்
எனக்குக் கொடுக்கப்பட்ட சிலுவையோ அதிக பாரமாகவே உள்ளதுவே,
ஆனாலும் எனக்கென நியமிக்கப்பட்ட ஜீவ கிரீடத்தை இழந்துபோகவும்
கூடாதென்றே எண்ணுகின்றேன் - நானே.

ஓர் ஆழ்ந்த அமைதி சுற்றிலுமாகவே ஆட்சிசெய்யுதே,
இயற்கையின் ஒலி சிறிதளவுகூட ஒலிக்கவில்லையே,
அந்திப்பொழுதின் நிழல்கள் அமைதியை எடுத்துரைப்பதாகக் காணப்படுதே
என்னுடைய களைப்படைந்த ஆவியின் சமாதானமோ விழுந்துவிட்டதே,
ஒரு கணம் தயங்கி, ஒரு பரலோக ஒளி முழுமையாக ஆச்சரியத்தால்
விரிந்த விழிகளால் நான் பார்க்கும்போதில் என் மீது விழுந்ததுவே,
வெள்ளியாலான இறக்கைகளையுடைய தேவ தூதர்கள்
எங்கெங்கும் காணப்பட்டனரே, தேவ தூதர்களின் இசையோ, அந்தக்
குணப்படுத்தத்தக்க நறுமணமுள்ள மணம், காற்றினிலே எங்கும் பரவியதே,
புளங்காங்கிதமடையச் செய்ததுவே, மற்ற யாவரும் முழங்கால்களை மடக்கி
வணங்கிடும் அந்த ஒருவர் என்அருகினில் மென்மையாகவே வந்தாரே,
நானோ நடுக்கத்துடனே விழுந்துகிடந்தேனே,
என்னைப் பின்பற்றிவா, நானே வழி என்று அவர் மொழிந்தாரே,
இவ்வாறாகவே அவர் கூறியப்பின்னே என்னை
அவர் வெகு உயரத்திற்கே அழைத்துச் சென்றாரே,
அங்கே, அன்பினால் வனையப்பெற்ற விதானத்தின் கீழே
என்னுடைய சிலுவையைவிட பெரியதும் சிறியதுமான
சிலுவைகள் பல அங்கே கண்டேனே,

அதில் ஒன்று பற்றிக்கொள்வதற்கு மிகவும் அழகாய்,
மிகச் சிறியதாய், தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டதாய்,
கற்கள் பதிக்கப்பட்டு மிக அழகாகவே காட்சி தந்ததுவே,
ஆஹா, இது எனக்குப் பொருத்தமாக இருக்குமோ?
சுமப்பதற்கும் மிக எளிதாய் இருக்குமோ, என்றெண்ணியே,
அந்தச் சிறு சிலுவைதனை உடனடியாக
ஓடிச்சென்று ஆவலுடன் எடுத்துக்கொண்டேன்,
ஆனாலும் எல்லாமும் ஒரே ஒரு கணம்தான்.
என் அடிப்படையே ஆட்டம் கண்டதுவே,
ஒளிவீசக்கூடிய அந்தக் காண்பதற்கினிய
இலகுவாயிருக்கும் என்றெண்ணிய இரத்தினக்கற்கள்
மிகமிக அதிகமான பாரமாகவே எனக்குக் காணப்பட்டதுவே,
இவ்வாறாக இருக்கக்கூடாதே, நான் கதறினேன், மீண்டும் திரும்பப்பார்த்தேன்,
யாராவது, ஏதாவது இந்தப் பாரத்தை இலகுவாக்க மாட்டார்களா?
என்றே சுற்றும் முற்றும் பார்த்தேன், ஆனால் ஓர் அழகான சிலுவையின் மீதே
நான் கண் பதிக்கும்வரை நான் கடந்து சென்றேன்,
அழகான பூக்கள் செதுக்கப்பட்ட வண்ணம்
அதைச் சுற்றிலும், கோர்த்துப் பின்னிக் காணப்பட்டதுவே,
அதிலே கிருபையும் அழகும் ஒருங்கே அமைந்து காணப்பட்டதுவே,
ஆச்சரியமாகவே நான் அதைப் பார்த்துக்கொண்டிருந்தபோதினிலே,
இன்னமும் ஆச்சரியப்பட்டுப்போனேன் - அதைப் பலர்
கடந்துபோனார்கள் என்றே நான் எண்ணினேன்,
ஆனால் அழகாகக் காணப்பட்ட அந்த அமைப்பின் பின்னே
மறைக்கப்பட்ட துன்பங்கள் எனக்குத் தெரியவரலானதே,
அந்த அழகான வண்ணமிகு பூக்கள் கொண்ட காரியத்தின் அடியினிலே
முட்கள் காணப்பட்டதுவே, இந்தச் சிலுவையை என்னால் சுமக்க முடியாதே,
வருத்தத்துடன் நான் கூறினேன், இப்படியாகவே ஒவ்வொன்றும்,
அங்கே சுற்றியிருந்த எல்லாவற்றிலும், எந்த ஒரு சிலுவையும்
என் தேவையைப் பூர்த்தி செய்வதாய் காணப்படவில்லையே,
அழுதுகொண்டே ஒவ்வொரு பாரமான சுமையையும் கீழே இறக்கி வைத்தேன்,
ஆனால், என் மீது விசுவாசம் கொள், சிலுவையில்லையேல் கிரீடமில்லையே
என்னுடைய பரிபூரணமான அன்பு உன்மீது காட்டப்படுமே என்று கூறும்
என்னுடைய வழிகாட்டியின் குரல் எனக்குக் கேட்டதுவே,
அகன்ற விழிகளுடன், விருப்பத்துடனும் உறுதியான மனதுடனே,
எனது பூமிக்குரிய சிலுவையை நான் சுமந்திட திரும்பினேன்,
நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நன்னடையுமாய்,

வேறெதுவும் மறைவான தீங்குவந்து சேர்ந்திடுமோ என்ற அச்சத்துடனே,
பின்னர், ஏற்கெனவே முன்னேற்பாடாய் நியமிக்கப்பட்ட பாதையிலே,
கேட்பதற்கான செவிகளுடனே, கீழ்ப்படியவும் ஆயத்தமாகவே,
சிலுவை ஒன்று ஆடம்பரமற்ற, தெளிவான, வெளிப்படையான
வடிவத்திலே காணும்படி கிடைத்ததே,
அன்பினால் ஆன வார்த்தைகள் அதிலே வடிக்கப்பட்டிருந்ததே,
நன்றியுடனே அதனை நிலையிலிருந்து தூக்கி நிறுத்தினேன்,
பெருமகிழ்வுடனே, அங்கிருந்த சிலுவைகளிலேயே
இதுதான் சிறந்த சிலுவை என நான் உறுதி செய்தேனே,
இது நான் சுமப்பதற்கு ஏற்றது என்றும் கண்டுகொண்டேனே,
இவ்வாறாக நான் தெரிந்துகொண்ட சிலுவையைக் குறித்து
இரகசியமாக அறிக்கை செய்தபோதினிலே,
ஒரு பரலோகப் பிரகாசம் அதன்மீது வந்து தங்கக்கண்டேனே,
நான் எனது சுமையைத் தாங்குவதற்காக சற்றே குனிந்தபோதினிலே,
எனக்கு மீண்டும் பழைய சிலுவையின் ஞாபகம் வந்ததே,
ஆனால், அது எத்தனை மாறுபாடாய் தோன்றியது?
இப்போதோ அதன் விலையுயர்ந்த மதிப்பை என்னால் உணரமுடிந்ததே - ஆம்,
இப்போது வேறொன்று நன்றாக இருக்கும் என்று இனியும் நான் கூறமாட்டேன்,
ஆஹா, இனி எந்தன் ஒரே விருப்பம் என்னவென்றால்,
என்னைக் குறித்து நன்கு தெரிந்தவர் எனக்குத் தெரிந்தெடுத்துத் தருவார்,
எனவே, என்னதான் அவர் அன்பினால் எனக்கு அனுமதிக்கின்றாரோ,
அதுதான் சிறந்ததென்றே நான் நம்பிடுவேனே,
ஏனென்றால் அவர் மட்டுமே அறிந்திடுவார், முடிவுதனையே.

– Unknown (R3606)



நினைவுகூருதலின் தியானங்கள்

# அடையாளங்களின் அர்த்தம்



# அப்பம் மற்றும் திராட்சரசம்

வாட்ச் டவர் இதழாசிரியர் அவர்களே: "பஸ்கா" சம்பந்தமான ஏப்ரல் மாதத்தினுடைய உங்களுடைய வெளியீட்டினை நான் வாசித்தேன் மற்றும் அதில் நான் நன்கு திருப்தியும் அடைந்தேன். கர்த்தருடைய இராப்போஜனமானது, யூதருடைய பஸ்காவிற்குப்பதிலாக கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்றும், அது வருடந்தோறுமாக ஆசரிக்கப்பட வேண்டும் என்றும் நான் விசுவாசிக்கின்றேன்; ஆனால் நீங்கள் ஒரு காரியத்தைக் குறித்துப் பேசவில்லை. இந்த இராப்போஜனத்திற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய (wine) திராட்சரச வகை குறித்தே நான் குறிப்பிடுகின்றேன். "புளிப்பில்லாத அப்பம்" பயன்படுத்தப்படும்படிக்கு நீங்கள் கருத்துத் தெரிவித்துள்ளீர்கள் மற்றும் இது முற்றிலும் சரியே என்று நான் எண்ணுகின்றேன்; ஆனால் என்ன வகை திராட்சரசம் (wine) பயன்படுத்தப்பட வேண்டும்? என்று நான் கேட்கின்றேன். புளிப்பென்பது பாவத்திற்கு நிழலாய் இருக்கின்றபடியால், இது கிறிஸ்துவினுடைய தூய்மைக்குப் பொருத்தமான நிழலல்ல என்று நீங்கள் சரியாகவே போதிக்கின்றீர்கள் என்று நான் எண்ணுகின்றேன். இப்படியாகவே புளிப்பேற்றப்பட்ட (அ) புளிப்பான திராட்சரசத்தின் (wine) விஷயத்திலும் காணப்படுகின்றது என்று நான் எண்ணுகின்றேன். இது (புளிப்பு) தூய்மையானதல்ல, ஆகையால் கிறிஸ்துவினுடைய இரத்தத்திற்குப் பொருத்தமான அடையாளமாய் இராது! "பாம்பைப்போல் கடிக்கிறதும், விரியனைப்போல் தீண்டுகின்றதுமான" . . . திராட்சரச வகைக்குப்பதிலாக புதிய, சுத்தமான/தூய திராட்சரசத்தை நாம் பயன்படுத்திட வேண்டுமென்று நீங்கள் எங்களுக்குப் போதித்திடவில்லை.

ஒரு பொருளானது புளிக்க வைக்கப்பட்ட பிற்பாடு மற்றும் விஷமானபிற்பாடு, அது கிறிஸ்துவினுடைய தூயதும், விலையேறப்பெற்றதுமான இரத்தத்திற்கு ஏற்ற அடையாளமாய் இருக்க முடியுமோ? கர்த்தருடைய இராப்போஜனத்தைச் சரியாய் ஆசரிக்கும் விஷயத்தில் புளிப்பற்ற அப்பத்தைப்போலவே, நல்ல திராட்சரசமும் பயன்படுத்தப்படுவது முக்கியமானது என்று நான் கூறுகின்றேன். இதை நீங்கள் சிந்தித்து, இதையே கூறுவீர்கள் என்று நம்புகின்றேன்.

உங்கள் உண்மையுள்ள
பி. டி. லேன்.

எங்கள் பதில்

பூரண மதுவிலக்கிற்கான நோக்கத்திற்கு - நாமும் ஒத்திசைந்து காணப்படும் இந்த நோக்கத்திற்குத் தடைப்பண்ணிடுவதற்கு ஏதுவாய், நாம் ஏதும்

செய்துவிடக்கூடாது என்ற வாஞ்சையில், மேலே குறிப்பிட்டுள்ளதான இக்காரியம் குறித்து விசேஷமாய்க் கருத்துத் தெரிவிப்பதை நாங்கள் தவிர்த்திருந்தோம்; ஆனால் சமீபத்தில் எழுந்துள்ளதான அநேகம் கேள்விகளானது இக்காரியத்திற்கு, பதில் அவசியம் என்பதைக் காட்டுகின்றதாய் இருக்கின்றது.

முதலாவதாக நம்முடைய தட்பவெட்பநிலை மற்றும், மனவுளைச்சல் மற்றும் நம்முடைய நாட்களிலுள்ள உணர்ச்சிகளைத் தூண்டும் முறைமைகளானது, போதைத் தரும் மதுபானங்களினுடைய பயன்பாட்டு துவங்கினபோது, மனிதர்களை அதிகமாய் இந்தப் போதையூட்டும் பானங்களைப் பயன்படுத்திடுவதற்குத் தவிர்க்கமுடியாத அளவுக்கு வழிநடத்தினது குறித்து நாம் குறிப்பிட வேண்டும். இதுமாத்திரமல்லாமல், தற்காலத்தில் தயாரிக்கப்படுகின்றதான பெரும்பான்மையான போதையூட்டும் மதுபானங்களானது, இவைகளைப் பயன்படுத்துவதின் காரணமாக உண்டாகும் ஆபத்துகளையும், தீமைகளையும் பெரிதும் அதிகரிக்கும் வகையில் போதையூட்டப் பட்டுள்ளது மற்றும் பொருட்களால் கலப்படம் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காரணங்களினிமித்தமாக மதுபானங்களில் கலப்படம் பண்ணுகிறவர் களுக்கு எதிராக தற்போதைய சட்டங்களை அமுல்படுத்தும் காரியங்களில் அல்லது இதன் உற்பத்தி மற்றும் விற்பனையை முற்றிலும் தடைப்பண்ணிப்போடும் புதிய சட்டங்களைக் கொண்டுவரும் காரியத்தில் (இதைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதில் நமக்கு ஐயமே என்றபோதிலும்) இந்தத் தடையுத்தரவை ஆதரிப்பவர்களுக்கு நாமும் நம்முடைய ஆதரவைத் தெரிவிக்கின்றோம். இப்படி முற்றிலும் தடைப்பண்ணிடுவது என்பது, இந்த உலகத்தின் அதிபதியான சாத்தான் கட்டப்படுவது வரையிலும் நிறைவேறிடாது என்று நாம் எண்ணுகின்றோம்.

நம்முடைய ஆதரவு இருந்தபோதிலும், நம்முடைய பெரும்பான்மையான வாசகர்களின் அனுதாபங்களும், ஆதரவுகளும்கூடப் பூரண மதுவிலக்கின் பக்கமே காணப்படுகின்றது என்ற உண்மையினை நாங்கள் அறிந்திருந்தபோதிலும் - நாங்கள் ஒருவேளை பேசிட்டால் சத்தியம் என்று நாங்கள் கருதுவதையே பேசிடுவோம்; எந்த விக்கிரகம் உடைந்திட்டாலும் சரி, எந்தக் கோட்பாடுகள் கேள்விக்குள்ளானாலும் சரி, சத்தியம் என்று நாங்கள் கருதுவதையே பேசிடுவோம் மற்றும் அவை பின்வருமாறு:

போதையூட்டும் திராட்சரசங்களினுடைய பயன்படுத்துதலைக் குறித்து வேதாகமமானது ஒருபோதும் ஆதரிப்பதில்லை என்று வைராக்கியமிக்க குடியொழிப்பு ஆதரவாளர்கள் திரும்பத்திரும்பக் கூறுவதுண்டு. இயேசு உண்டுபண்ணின மற்றும் பருகின திராட்சரசமானது, திராட்சபழச்சாறு (grape juice) மாத்திரமேயொழிய,

wine/திராட்சரசமல்ல என்றும், இந்தப் பல்வேறு பானங்களைக் குறிப்பிடுகையில் வேறு கிரேக்க வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் இவர்கள் கூறுகின்றனர். இது தவறு என்று நாம் பதிலளிக்கின்றோம். திராட்சப்பழச்சாறு (அ) "புதிய திராட்சரசத்திற்கான" *gleukos* எனும் கிரேக்க வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் ஒருமுறை இடம் பெறுகின்றதாய் இருக்கின்றது (அப்போஸ்தலர் 2:13) மற்றும் இது இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது, ஒருவேளை இது அதிகமாய்ப் பயன்படுத்தப்பட்டால், இது மனதைக் குழப்புகின்றதாய் இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. திராட்சரசம் என்று மொழிப்பெயர்க்கப் பட்டுள்ளதற்கான வார்த்தையானது, அது இடம்பெறும் புதிய ஏற்பாட்டினுடைய மற்ற இடங்களில் எல்லாம் *Oinos* என்பதாகக் காணப்படுகின்றது மற்றும் இது பொதுவான வகை (grape wine) திராட்சரசத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் இது அதிகப்படியாய்ப் பயன்படுத்தும்போது எப்போதும் போதையூட்டுகிறதாகவே இருக்கும் என்பதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

*Oinos* என்பது போதையூட்டுமா என்பதை அறிந்துகொள்வதற்குப் பின்வரும் வசனங்களைப் பார்க்கவும்: "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான (Oinos) வெறிக்கொள்ளாமல்" "And be not drunk with wine, Oinos, wherein is excess." எபேசியர் 5:18; 1 பேதுரு 4:3; லூக்கா 1:15 மற்றும் 7:33, 34-ஆம் வசனங்களையும் பார்க்கவும்.

ஒருவேளை திராட்சரசத்தில் புளிப்பின் தன்மைகள் காணப்பட்டால், அது இயேசுவினால் "இராப்போஜனத்தை நிறுவினப்போது" பயன்படுத்தப்பட்டதாகாது என்று கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இப்படியாக இல்லை. மது ஒழிப்பு பேச்சாளர்கள் இப்படியாகப் பேசிடலாம், ஆனால் பெரும்பாலும் அறியாமையிலேயே இப்படிச் செய்கின்றார்கள் என்பதில் ஐயமில்லை; ஆனால் அறிவியலில் அறிவுள்ள மனிதர்களோ alcoholic or vinous fermentation/ மது நொதித்தல் மற்றும் putrefactive fermentation/ புரதச்சிதைவு நொதித்தல் இடையில் இருக்கும் பெரிதான வித்தியாசத்தினை அடையாளங்கண்டு கொள்வார்கள். முதலாம் முறைமையானது மாசுகளை வெளியேற்றி, திராட்சரசமாகிய இனிப்பான மற்றும் இனிமையான பானத்தை உண்டுபண்ணுகின்றதாய் இருக்கின்றது; மற்ற முறைமையோ புளிப்பினை உண்டுபண்ணி, அழுகிவிடச் செய்கின்றதாய் இருக்கின்றது. இந்த இரண்டாம் முறைமையானது, அப்பத்தைப் புளிக்கப்பண்ணுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது; மற்றும் இது ஏற்படுத்தும் அழுகுதல் (அ) பூஞ்சைகளின் வளர்ச்சியானது,

ஆரம்பக்கட்டத்திலேயே சுடுவதினால் நிறுத்தப்படுகின்றது.

திராட்சரசத்தில் (wine) புளிப்புத்தன்மை காணப்படுகின்றது என்ற காரியமானது யூதருடைய பாரம்பரியத்தைப் பொறுத்தமட்டில் நிரூபிக்கப்படுவதற்குப் பதிலாக மறுக்கவேபடுகின்றது; ஏனெனில் யூதர்கள் பஸ்காவில் திராட்சரசத்தைப் பயன்படுத்துகின்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் பஸ்காவின்போது, அவர்கள் புளிப்பைக் களைந்துபோடுபவர்கள் ஆவர். இவர்கள் உண்மையான திராட்சரசத்தினைப் பயன்படுத்துகின்றார்கள். கர்த்தர் புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாற்றையே (grape juice) பயன்படுத்தினார் என்று வலியுறுத்தப்படுவது என்பது இன்னொரு விதத்திலும் சரியல்ல என்று நம்மால் பார்க்க முடியும். பாலஸ்தீனியாவில் திராட்சப்பழங்களினுடைய அறுவடைக்காலமானது செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆகும் மற்றும் பஸ்காவானது இதற்கு ஆறு மாதங்களுக்குப் பின்னரே வருகின்றது. அக்டோபர் மாதத்தில் தயார் செய்யப்படுகின்றதான திராட்சரசமானது, ஏப்ரலுக்கு முன்னதாகவே நிச்சயமாய்ப் புளிப்பேறியிருக்கும்.

புதிய திராட்சரசத்தைப்பார்க்கிலும், பழைய திராட்சரசம் சிறந்தது என்ற இயேசுவின் சாட்சியும் (லூக்கா 5:39; யோவான் 2:10), அவர்கள் பயன்படுத்தின திராட்சரசமானது புளிப்பேறின ஒன்று என்றுமுள்ள உண்மையும், (alcoholic fermentation/மது நொதித்தல் - இன்னும் நிறைவுபெறாத) புதிய திராட்சரசத்தை - ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டதும், அதன் நீண்டு சுருங்கும் தன்மையானது (elasticity) இழந்துபோயுள்ளதன் காரணமாக, புளிப்பேறுவதினால் உண்டாகும் வாயுக்களினால் ஏற்படும் விரிவினால் வெடித்து, கிழியக்கூடிய வாய்ப்புள்ள பழைய துருத்தியில் (தோல்களில்) வைக்க வேண்டாம் என்பது பற்றின உவமையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஏற்கெனவே குறிப்பிட்டிருப்பதுபோன்று இயேசு மற்றும் அப்போஸ்தலருடைய நாட்களில் இருந்ததைக்காட்டிலும், இங்குள்ள தட்பவெட்ப நிலைகளும், சூழ்நிலைகளும், மதுபானங்களுடைய தூய்மையும் மிகவும் வேறுபட்டதாய் இருக்கின்றது; நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூரும் தருணத்தில் (wine) திராட்சரசத்தைச் சுவைப்பது தனக்கு ஆபத்தானது என்று ஒருவர் எண்ணுவாரானால், அப்படிப்பட்டவர் இதற்குப்பதிலாக உலர் திராட்சரசத்தைப் பயன்படுத்தலாம்; இது திராட்சரசம் (wine) இல்லை என்றாலும், நிச்சயமாய் "திராட்சப்பழரசமேயாகும்" (fruit of the vine). நாங்கள் ஒவ்வொரு வருடமும் உலர் திராட்சரசத்தை ஏற்பாடு பண்ணி வைப்பதுண்டு, ஆனால் கடந்தவருடம் நாங்கள் இராப்போஜனம் ஆசரித்தப்போது ஒருவரால் மாத்திரமே அது பயன்படுத்தப்பட்டது.

# அவர் வருமளவும்!

நாம் கர்த்தருடைய நினைவுகூருதல் இராப்போஜனத்தை ஆசரிக்கையில், கர்த்தர் வருமளவும் – அவர் வந்து, நம்மை மறுரூபமடையப்பண்ணி, மகிமைப்படுத்தி, நம்மை அவரது இராஜ்யமென நிறுவுமளவும் – அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறவர்களாய் இருப்போம். – 1 கொரிந்தியர் 11:26

அவர் வருமளவும், நாம் நம்முடைய தாலந்துகளைப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றோம்.
– லூக்கா 19:13.

அவர் வருமளவும், நாம் விசுவாசத்தின் நல்ல போராட்டம் போராடிக்கொண்டிருக்கின்றோம்.
– 1 தீமோத்தேயு 6:12-14.

அவர் வருமளவும், நாம் உபத்திரவங்களைச் சகித்துக்கொண்டிருக்கின்றோம்.
– 2 தெசலோனிக்கேயர் 1:7

அவர் வருமளவும், நாம் பொறுமையாய் இருக்க வேண்டும்.
– யாக்கோபு 5:8

அவர் வருமளவும், நாம் நீதியின் கிரீடத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கின்றோம்.
– 2 தீமோத்தேயு 4:8

அவர் வருமளவும், நாம் மகிமையின் கிரீடத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கின்றோம்.
– 1 பேதுரு 5:4

அவர் வருமளவும், நாம் கடந்துபோயுள்ள நண்பர்களுடன் மீண்டும் இணைந்திடுவதற்குக் காத்துக்கொண்டிருக்கின்றோம்.
– 1 தெசலோனிக்கேயர் 4:13-18

அவர் வருமளவும், நாம் சாத்தானின் கட்டப்படுதலுக்காய்க் காத்துக்கொண்டிருக்கின்றோம்.
– வெளிப்படுத்தல் 20:3

அவர் வருமளவும் என்று சொல்லும்போது, அது ஒரு விசேஷித்த தருணத்தையோ, மணிநேரத்தையோ (அ) நாளையோ குறிக்காது, மாறாக அவரது பிரசன்னத்தின் காலப்பகுதியைக் (Parousia/பரோஷியா) குறிக்கின்றதாய் இருக்கின்றது; இந்தக் காலப்பகுதியில், அவரது "அறுவடை வேலையானது," அவரது பரிசுத்தவான்களைக் கூட்டிச்சேர்த்து, அவரது பரிசுத்தவான்களை மகிமைப்படுத்தும் மற்றும் வாக்களிக்கப்பட்ட அவரது இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்.

– ரீபிரிண்ட்ஸ், பக்கம் 3652.

# பஸ்கா இராப்போஜனம்

முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டதற்கேற்ப கர்த்தருடைய இராப்போஜனமானது, அதன் ஆண்டு நிறைவு நாளில், மார்ச் 29-ஆம் தேதி மாலையன்று ஆசரிக்கப்பட்டது. இதுவரையிலும் நாங்கள் பெற்றுக்கொண்ட கடிதங்கள் மற்றும் அஞ்சல் அட்டைகள் மூலம், அந்நிகழ்வானது, பரவலாய் ஆழமான ஈடுபாடு கொண்டுள்ள அனைத்துத் திசைகளிலுமுள்ள நம்முடைய வாசகர்களால் ஆசரிக்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி நாங்கள் இதுவரையிலும் தகவல் பெற்றுக்கொள்ளாதவர்கள் அநேகராலும்கூட ஆசரிக்கப்பட்டிருக்கும் என்றும் நிதானிக்கின்றோம். சில இடங்களில் திரளானவர்களும், சில இடங்களில் இரண்டு (அ) மூன்று பேரும், சில இடங்களில் ஒருவர் தனிமையிலும் ஆசரித்திருக்கின்றனர். நாங்கள் அறிந்துகொண்டதுவரையிலும் இவர்கள் அனைவருக்கும், அலிகெனி பட்டணத்திலுள்ள (Allegheny City) எங்களுக்குக் காணப்பட்டதுபோலவே அது மிகவும் விலையேறப்பெற்ற காலப்பகுதியாய் இருந்துள்ளது.

இங்கு வழக்கமான "மேல்வீட்டறையில்" சுமார் நூறு பேர்கூடி, நமக்கான ஈடுபலியினை, நம்முடைய மீட்பருடைய பிட்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்குமான அடையாள சின்னங்களில் பங்கெடுப்பதன் வாயிலாக நினைவுகூர்ந்து, ஆசரித்தோம். நியூயார்க் (New York), மேற்கு வெர்ஜீனியா (West Virginia) மற்றும் பென்சில்வேனியாவின் (Pennsylvania) பல்வேறு பகுதிகளிலிருந்து எட்டுச் சகோதர சகோதரிகள் எங்களோடுகூடக் காணப்பட்டனர் மற்றும் நினைவுகூருதல் ஆசரிப்பதற்கு முன்னதாக நாங்கள் ஒன்றுகூடி ஓர் இனிமையான உரையாடல் கொண்டிருந்தோம்; இதில் எங்களுடைய இருதயங்களானது, நமது பிதாவினுடைய நற்பண்புகள், பராமரிப்பு மற்றும் அன்பு குறித்த நினைவுகூருதல்களால் புத்துணர்வு அடைந்தது. மற்ற விஷயங்களோடுகூட, தேவன் நமக்குத் தம்முடைய திட்டங்களை அதிகமதிகமாய் வெளிப்படுத்திக் கொண்டிருப்பது என்பது தேவனுடனான நம்முடைய உறவிற்கும், நம்முடைய புத்திரத்துவத்திற்குமான சான்றுகளில் ஒன்று என்று (உரையாடலில்) கவனத்தில் கொண்டோம். இது தொடர்பாகவும், இதற்கு ஆதாரமாகவும், "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" என்ற இயேசுவின் வார்த்தைகளானது நினைவுக்கு வந்தது. (யோவான் 15:15)

மணி 8:30 ஆனபோது, அதாவது நமது கர்த்தரினால் பஸ்கா நிறுவப்பட்டதான நேரத்திற்கு மிகவும் ஒத்த நேரம் என்று நாங்கள் கணித்திருந்த நேரம் வந்தபோது, நாங்கள் அடையாளங்களில் பங்குகொண்டோம்; முதலாவதாக அவைகளின் அர்த்தத்தினைச் சுருக்கமாகப் பார்த்தோம். அனைவருடைய நலன் கருதி, நாங்கள் அப்போது பார்த்தவைகளைச் சுருக்கமாய் மறுபடியும் இங்குப் பதிவு செய்கின்றோம்.

அப்பம் தொடர்பான ஆண்டவருடைய வார்த்தைகளை நாங்கள் நினைவுகூர்ந்தோம்; அவை பின்வருமாறு: "இது (அடையாளமாக) உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது." "வானத்திலிருந்திறங்கின அப்பம்

இதுவே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான். நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை.” (யோவான் 6:53) அடையாளமான அப்பத்திலிருந்து, இயேசுவின் சரீரத்தைப்பார்த்தபோது, அதுவே உண்மையில் மெய்யான அப்பம் என்று நாங்கள் உணர்ந்துகொண்டோம். அப்பமானது வானத்திலிருந்திறங்கினது என்று சொல்லப்படுவது என்பது, அவர் பூமியிலிருந்து உண்டானவராய் இராமல், பரலோகத்தில் உண்டானவராய் இருந்தார் என்ற விதத்தி லேயே ஆகும்; அவர் மாம்ச சித்தத்தினால் ஜெநிப்பிக்கப்படாமல், அவர் இடமாற்றப்பட்ட ஜீவியாக இருந்தார் என்ற விதத்திலேயே ஆகும். நம்முடைய சார்பில் மரணத்தை அனுபவிக்க வேண்டுமென்ற விசேஷித்த நோக்கத்திற்காகவும், நாம் அவரது தரித்திரத்தினாலே (அவர் தாம் பெற்றிருந்த அனைத்தையும், ஜீவனையும் கொடுத்துவிட்டார்) ஐசுவரியவான்களாகும்படிக்கும், நம்முடைய பிரதிநிதியாகிய ஆதாம் முன்பு பெற்றிருந்ததும், அவருக்கும் நமக்கும் தொலைந்து போனதுமான அனைத்தும், நம் அனைவருக்கும் திரும்பக்கொடுக்கப்படும்படிக்கும், ஐசவரியவா னாய்க் காணப்பட்ட அவர், தரித்திரரானார், கீழ்ச் சுபாவமாக்கப்பட்டார், மாம்சமாக்கப்பட்டார்.

அவர் பிட்கப்படுவதற்கான, நமக்காக அடிக்கப்படுவதற்கான அவசியமென்ன என்பதை நாங்கள் மீண்டுமாக எண்ணிப்பார்த்திட்டோம். நம்மில் நாம் ஜீவனற்றுக் காணப்பட்டதே காரணம் என்று நாங்கள் கண்டோம். மரணமானது முழுச்சந்ததியையும் விழுங்கிக்கொண்டிருக்கின்றது மற்றும் முழுச் சந்ததியிலும் கிரியைப் பண்ணிக் கொண்டிருக்கின்றது. அனைவருமே இந்த ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட சந்ததியிலிருந்து வந்தவர்களானபடியால், எவனாலும் தன்னுடைய ஜீவனையும் காத்துக்கொள்ளவும் முடியவில்லை, தன்னுடைய சகோதரனையும் மீட்டுக்கொள்ளவும் முடியவில்லை, ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டு, மரிக்கின்ற அனைவருக்கும் மற்றும் தனக்கும் தேவனிடத்தில் மீட்கும்பொருளினையும் கொடுக்க முடியவில்லை. ஆனால் மனிதனுடைய இயலாமை என்பது, தேவனுக்கான வாய்ப்பாய் இருக்கின்றது; ஒரே சுபாவத்தின் காரணமாக, ஈடுபலியைக் (சரிநிகர்சமான விலையை) கொடுக்க முடிகின்றவரும், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட ஆதாமின் சந்ததியிலிருந்து வராததினால் (பரலோகத்திலிருந்து வந்ததினால்), ஏற்றுக்கொள்ளப் படத்தக்கதான மீட்பராகக் காணமுடிபவருமான ஒருவரை தேவன் அருளினார். ஆதாமினுடைய பாவத்தின் காரணமாக, ஏதேனிலுள்ள ஜீவ விருட்சத்தினின்று சந்ததி விலக்கப்பட்டிருக்க மற்றும் இதன் காரணமாக ஜீவிக்க முடியாது என்றிருக்க, அவர்களுக்கு இயேசுவின் வாயிலாக பரலோகத்திலிருந்து ஓர் ஈவாக ஜீவ அப்பமானது இப்பொழுது முன்வைக்கப்பட்டது; இதை ஏற்றுக்கொள்வார்களானால், இது இழந்த ஜீவனையும், ஆசீர்வாதங்களையும் அவர்களுக்குத் திரும்பக்கொடுத்திடும்.

இயேசுவே இந்த ஜீவ அப்பமாகக் காணப்பட்டாலும்கூட ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதான நம்முடைய சந்ததியிலிருந்து எவரேனும், அவரது புண்ணியங்களில் பங்கெடுப்பதற்கு முன்னதாக, அவர் பிட்கப்படுவது, பலியாகுவது அவசியமாயிருந்தது என்று நாங்கள் பார்த்தோம். முதலாம் பிரதிநிதியானவருடைய (ஆதாமினுடைய) பாவத்தின் வாயிலாக அனைவர்மேலும் வந்ததான மரணச் சாபத்தினை இரத்துச்

செய்யத்தக்கதாகப் பரிபூரணமான மனிதனாகக் காணப்பட்ட அவர் தம்மையே சரிநிகர்சமான விலையாகக் கொடுத்திட்டார். இப்பொழுது செய்யப்பட வேண்டிய ஒரே காரியம் என்னவெனில், ஆதாமின் காரணமாக அழிவுக்குள் கடந்து சென்றதான ஒவ்வொருவரும் நம் சார்பிலான இயேசுவினுடைய பலியின் வாயிலாக, அவர் நமக்குப் பெற்றுவைத்திருக்கின்றதான அந்தப் பரிபூரணங்களிலும், உரிமைகளிலும் வந்து, பங்குகொண்டிட (புசித்திட) வேண்டும். விசுவாசத்தின் வாயிலாகக் கிறிஸ்துவினுடைய பரிபூரணங்களை நாம் புசிக்கின்றோம் (அ) நம்முடையதாக்கிக்கொள்கின்றோம்; அதாவது விசுவாசத்தின் வாயிலாக இயேசு நமக்கான மீட்கும்பொருளென்று உணர்ந்துகொள்கின்றோம் மற்றும் விசுவாசத்தின் வாயிலாக, இயேசு பரிபூரணமான மனிதனெனப் பெற்றிருந்ததும், நமக்காக அவர் பிட்ட (அ) பலிச்செலுத்திட்டதுமான அந்தப் புண்ணியங்களை நம்முடையதாக்கிக்கொள்கின்றோம்.

அந்தப் பலியானது அனைவருக்கும் போதுமானதாக இருப்பினும், பலியாக்கப்பட்டவரே ஜீவனளிப்பவர் என்று ஏற்றுக்கொள்வதின் மற்றும் ஒப்புக் கொள்வதின் மூலமே ஒழிய மற்றப்படி எவரும் ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியாது என்ற தேவ ஏற்பாட்டின் அருமையையும் அப்போது நாங்கள் பார்த்தோம். இக்காலத்தில் மாத்திரமல்லாமல், எதிர்க்காலத்திலும்கூட ஈடுபலியை ஒப்புக்கொள்வது என்பது ஜீவன் பெற்றுக்கொள்வதற்கு அவசியமானதாய்க் காணப்படுகின்றது. "மாம்சத்தைப் புசியாமல் இருந்தால், உங்களுக்குள்ளே ஜீவனில்லை" என்பது எப்போதும் உண்மையாய் இருக்கின்றது. கொடுக்கப்பட்டதான ஈடுபலியே, அனைத்து ஆசீர்வாதங்களுக்குமான அஸ்திபாரமாய் இருக்கின்றது என்பது எப்போதும் அடையாளங்கண்டுகொள்ளப்பட வேண்டும். "தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே, பாவங்களை நீக்குகிறவரும்", உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதான தேவ ஆட்டுக்குட்டியினுடைய பிட்கப்பட்ட சரீரத்தின் மூலமாகவும், சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலமாகவுமேயல்லாமல், மற்றபடி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்; ஒருவனும் அவரோடு ஒன்றாய் இருக்கவும் முடியாது.

நம்முடைய (சபையினுடைய) பாவங்கள் மாத்திரமல்லாமல், சர்வலோகத் தினுடைய பாவங்களையும் நிவிர்த்திச் செய்வதற்காகச் சிந்தப்பட்ட இரத்தத்தைக் குறித்தும் நாங்கள் பார்த்தோம்; இதன் அடையாளத்தை நாங்கள் திராட்சரசத்தில் பார்த்திட்டோம்: "இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது." (மத்தேயு 26:28) நாங்கள் மூன்று மாபெரும் உடன்படிக்கைகளைக் கணநேரம் பார்த்திட்டோம்; உண்மையாய் ஆசீர்வாதமாய்க் காணப்படுவதற்கும், மரித்துக்கொண்டிருக்கும் சந்ததிக்கு ஜீவன் அளிப்பதற்கும் எப்படி மோசேயின் கீழான நியாயப்பிரமாண உடன்படிக்கையானது தவறிப்போனது என்றும், ஆனால் ஈடுபலியின் காரணமாக, எப்படிப் புது உடன்படிக்கையானது மேலானதாகக் காணப்பட்டு, பூமியின் குடிகள் அனைத்திற்கு மான ஆசீர்வதிக்கும் (திரும்பக்கொடுத்தல்) பணியினை நிறைவேற்றிடும் என்றும் நாங்கள் பார்த்தோம். இப்படியாக அவரது இரத்தமானது, பலியாக்கப்பட அவருடைய ஜீவனானது, அனைவரையும் மீட்டுக்கொண்ட ஈடுபலியாய் இருக்கின்றது என்றும், அவர்களுக்கான திரும்பக்கொடுத்தலைச் சாத்தியமாக்கிற்று என்றும், இது புது உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துகின்றதான உடன்படிக்கையின் இரத்தமாய், முத்திரித்தலாய், உறுதிச் செய்கிறதாய்க் காணப்படுகின்றது என்றும் நாங்கள்

பார்த்திட்டோம். பிதாவிடத்திற்குக் கிட்டிச்சேர்வதற்கு நமக்கு அனுமதி வழங்கிட்ட இவ்வளவு இலவசமாய்ச் சிந்தப்பட்ட இரத்தத்தில் நாங்கள் களிகூர்ந்தோம்; மற்றும் இரத்தத்தினைக் குறித்துப் பெரிதாய் எண்ணிக்கொள்ளாதவர்களிலும், "உடன்படிக்கை யின் இரத்தத்தினை" சாதாரணமானது என்று எண்ணுகிறவர்களிலும், அந்த விலையேறப்பெற்ற பலியில் வெளிப்படுகின்றதான தேவனுடைய தயவின் ஆவியை இழிவுப்படுத்துபவர்களிலும் ஒருவராய் ஒருபோதும் காணப்பட்டுவிடாதபடிக்கு நாங்கள் தீர்மானித்துக்கொண்டோம். (எபிரெயர் 10:16-21 மற்றும் 26-31 வரையிலான வசனங்களைப் பார்க்கவும்).

இவைகளையெல்லாம் இயேசுவை அடையாளப்படுத்துகின்றதான அப்பத்திலும், திராட்சரசத்திலும் பார்த்தப் பிற்பாடு, அப்போஸ்தலனுடைய வார்த்தைகள் (1 கொரிந்தியர் 10:16, 17) வாயிலாக இந்த ஏற்பாட்டில் காணப்படுகின்றதான இன்னும் மற்றுமொரு அர்த்தத்தினைப்பார்த்தோம். "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா!" (திருவிவிலியம்). அவர் கருத்தென்னவெனில்: கர்த்தர் ஸ்தோத்திரம் செலுத்தி, பிட்டு, அடையாளங்களைப் பரிமாறி இவ்விதமாய்த் தம்முடைய பலியை அடையாளப்படுத்தினபோது, இது கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களென நாம் அர்ப்பணம் பண்ணி, நமது தலையோடுகூடப் பலியில் பிட்கப்படுகின்றோம் என்பதையும் அடையாளப்படுத்துகின்றது என்பது நம்மால் அடையாளங்கண்டுகொள்ள முடிகின்றதா? "அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (திருவிவிலியம்)

இப்படியாக அடையாளங்களைப் புசிப்பது என்பது நம்மை மீட்டுக்கொண்டதான இயேசுவின் பலியையும், அவரோடுகூட உள்ள நம்முடைய பலியையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; அதாவது, இரண்டு அர்த்தங்களை உடையதாய் இருக்கின்றது; புதுஉடன்படிக்கையினை முத்திரித்தலில் இப்பொழுது இயேசுவோடுகூடவே உள்ள நம்முடைய பங்கெடுப்பின் காரணமாக, புது உடன்படிக் கையின் பாக்கியமான ஏற்பாடுகள் யாவற்றையும் "அனைத்தையும் திரும்பக்கொடுக்கும் காலங்களில்," உலகத்திற்குக் கொண்டுவருவதற்கு, நாம் அவரோடுகூட ஏற்றக்காலங்களில் அனுமதிக்கப்படுவோம் என்பதைப் பார்த்திட்டோம். இந்த ஒரு பாடத்தினுடைய காரியங்களினால், நினைவுகளில் உண்டான மறுமலர்ச்சியானது, அவரது மகிமை வெளிப்படுத்தப்படும்போது, நாமும் மகா சந்தோஷத்துடன் மகிழ்ச்சியடையத்தக்கதாக, "கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றுவ தற்கான" தீர்மானத்தினை எங்கள் அனைவருக்குள்ளும் பெலப்படுத்தி னதாய் இருந்தது மற்றும் இயேசுவோடுகூடச் சிங்காசனத்தில் அமருவதற்கான இரண்டு அப்போஸ்தலர்களுடைய வேண்டுகோளை நாங்கள் நினைவுகூர்ந்து, இதற்கான இயேசுவின் பதிலாகிய "பாத்திரத்தில் உங்களால் பானம் பண்ணக்கூடுமா?" என்ற வார்த்தைகளையும் நினைவிற்குக்கொண்டுவந்தோம். நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கின்றதான திராட்சரசம் அடையாளப்படுத்துகின்ற பாடுகள் மற்றும்

மரணத்தின் பாத்திரத்தில் பங்கடைவதிலிருந்து நம்மைப் பின் தள்ளுவதற்கு ஏதுவான மாம்சம், உலகம் மற்றும் பிசாசானவனின் பல்வேறு நெருக்கங்கள் மற்றும் கவர்ச்சிகள் குறித்தும், எங்கள் சொந்த பெலவீனங்கள் குறித்தும் நாங்கள் உணர்ந்துகொண்டோம். எனினும் எங்களுடைய தலையானவரின் பெலத்தினால், எங்களால் அனைத்தையும் செய்ய முடியும் என்று நாங்கள் உணர்ந்தவர்களாக, "ஆம் கர்த்தாவே, நாங்கள் பானம் பண்ணுவோம், உம்முடைய பலத்தினால், எங்களால் கூடும்" என்றோம்; பின்னர் கர்த்தருடைய வார்த்தைகளிலிருந்து, எங்கள் ஒவ்வொருக்குமான அவரது பதிலாகிய, "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்" என்றும், "பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்," "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, அதைச் செய்வேன்" என்றுமுள்ள வார்த்தைகளைக் கேட்டோம்.

அடையாளங்களில் பங்கெடுத்தப் பிற்பாடு, நாங்கள் ஸ்தோத்திரப்பாட்டு ஒன்றைப் பாடிவிட்டு, 1852-வருடங்களுக்கு முன் நடந்திட்டதான காட்சிகளைத் தியானம் செய்தவர்களாக, அவரவர் இல்லங்களுக்குத் திரும்பினோம்; அதாவது தோட்டத்தில் நிகழ்ந்தவைகள், காட்டிக்கொடுக்கப்படுதல், ஏரோதின் சேவகர்கள், முள்ளினாலான கிரீடம், சிவப்பான இராஜ அங்கி, பிரதான ஆசாரியர்கள் மற்றும் அவர் நாட்களின் மாபெரும் மதத் தலைவர்களிடமிருந்து இயேசுவை விடுவிப்பதற்கான பிலாத்துவின் பிரயாசம், அந்த மதத் தலைவர்களுடைய தவறான கோட்பாடுகளையும், மாய்மாலங்களையும் அவர் வெளிப்படுத்தினதற்காகவும் முகாந்தரமின்றி எப்படி அவரை அவர்கள் பகைத்தார்கள் என்பவைகள் குறித்துத் தியானம் செய்தோம்; அவர் சிலுவையில் தொங்குகையில் "முடிந்தது" என்று கூறி, மரித்ததை நாங்கள் கண்டோம் மற்றும் நினைவுகூர்ந்தோம். விசுவாசத்தின் கண்களானது சூழ்நிலைகளைக் கிரகிக்க, நன்றியுடன்கூடிய அன்பினால் எங்கள் இருதயங்களானது நிரம்பி, விசுவாசத்தில் "முடிந்தது" என்றும், நாம் மீட்கப்பட்டுவிட்டோம் என்றும், நமக்கான ஈடுபலி கொடுக்கப்பட்டாயிற்று என்றும் கூறினோம். நாம் ஜீவன் பெற்றிருக்கின்றோம், நாம் அவரைப் புசிக்கின்றோம், நமக்காக அவர் கையளித்ததான ஜீவனையும், உரிமைகளையும் நாம் நம்முடையதாக்கிக்கொள்கின்றோம். "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" என்பதற்காக தேவனுக்கு நன்றி. இறுதியில் நம்முடைய இரட்சகரும், கர்த்தருமானவருக்கு நன்றியோடு, பின்வருமாறு பாடினோம்:

"இயேசுவினுடைய நாமத்திற்கான வல்லமையைக் குறித்து
அனைவரும் வாழ்த்துவார்களாக;
தூதர்கள் பணிந்துகொள்வார்களாக:
இராஜ கிரீடத்தைக்கொண்டு வாருங்கள்,
அனைவருக்கும் ஆண்டவரானவருக்கு முடிச்சூட்டுங்கள்."

## அவர்கள் மட்டும் அறிந்திருந்தால்

எருசலேமே, எருசலேமே நீ உந்தன் சந்திப்பின் நாளை அறிந்திருந்தாயானால்
மேசியாவை உந்தன் நடுவில் அடையாளம் கண்டிருப்பாயானால்
உந்தன் பரிசேயர்களும், ஏளனம் செய்யும் ஆசாரியர்களும், ஜனக்கூட்டத்தினரும்
அவரைப் பணிந்திட வந்திருப்பார்கள் அல்லவா?

போதகருக்கு அயர்வும், கால்களுக்கு சோர்வும் உள்ளதென்றால்
அவரது அழைப்பிற்கு இணங்கி இரவும் பகலும் அவருக்கு பணிபுரிய இரதங்கள்
வந்திருக்கும் அல்லவா என்று நீ எண்ணுகின்றாயோ.

ஆ, அவர்கள் அவரை அறிந்திருந்தார்களானால், சீமோன் வீட்டிலே
அவருக்குக் கொடுக்கப்பட்ட ஒரே ஒரு விருந்திற்கும்,
அதிகமாக எத்தனையோ விருந்துகள் கொடுத்திருப்பார்கள் அல்லவா?

"பறவைகளுக்குக் கூடும், நரிகளுக்குக் குழிகளும் உண்டு,
ஆனால் மனுஷகுமாரனுக்கோ, தலைசாய்க்க இடமில்லை" என்று
அவர் சொல்லக்கூடிய நிலைமை இருந்திருக்காது அல்லவா?

எருசலேமே, உன் அரண்களின் வாசல்கள்
அவருக்காக திறந்திருக்கும் அல்லவா?
அல்பாவும், ஓமெகாவும், தீர்க்கத்தரிசியும்,
ஆசாரியரும், இராஜாவுமான அவருக்கு திறந்திருக்கும் அல்லவா?

ஆ, அவர்கள் அவரை அறிந்திருந்தார்களானால், அன்றுமுதல்
பல நூற்றாண்டுகள் காலமாக அவரது அடிச்சுவடுகளை துணிவுடன்,
பின்தொடர்ந்த தெரிந்துகொள்ளப்பட்ட சிலரை தனிமையிலும், ஏழ்மையிலும்
இந்தப் பூமிக்குரிய மாபெரியவர்கள் விட்டிருந்திருப்பார்களா?
அவர்கள் அசட்டைபண்ணப்பட்டு இருந்திருப்பார்களா?

"அவருடைய பாத அங்கங்கள்" களைப்புடன் புழுதியில் நடக்கையில்
அவர்கள் துரத்தியடிக்கப்பட்டு இருந்திருப்பார்களா?
மரியாளைப்போல் அவரின் தலையில் விலையேறப்பெற்ற தைலத்தினை
ஊற்றிட ஏங்குகின்ற அனைவரும் நினைவுகூரவேண்டிய அவரது
வார்த்தைகள் அன்றுபோல் இன்றும் பொருந்துகின்றதாய் உள்ளதே:
"இந்தச் சிறியரில் ஒருவருக்கு என்ன செய்தீர்களோ,
அதை எனக்கே செய்தீர்கள்" - என்பதேயாகும்.

ஆ, ஆம், ஒரு கலசம் தண்ணீர் கொடுக்கப்பட்டாலும் அதற்குப்
பலனுண்டு, ஏனெனில் அது கர்த்தராகிய கிறிஸ்துவின் நாமத்தில்,
கொடுக்கப்பட்டுள்ளது, ஆகையால் அவரது "சிறியவர்களுக்கு"
ஊழியம் புரிந்திட தாழ்மையுடன் நாடுவோமாக.
ஏனெனில், நாம் செய்வது அவருக்கே செய்வதாகும்.

– Poems of the Way, p. 129

# கர்த்தருடைய இராப்போஜனம்

கர்த்தருடைய இராப்போஜனத்தின் ஆண்டு நிறைவு நாளானது, இந்த வருடத்தில் ஏப்ரல் 7-ஆம் தேதி, வியாழக்கிழமையன்று, மாலையில் வருகின்றதாய் இருக்கின்றது; மேலும் ஆதிக் கிறிஸ்தவர்களுடைய வழக்கத்திற்கு இசைவாக, அவர் நாம் ஆசரிக்கத்தக்கதாகக் கேட்டுக்கொண்ட பிரகாரமும் மற்றும் அவரால் ஆசரிக்கப்பட்ட நேரத்திலும், நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவது என்பது பாக்கியமான சிலாக்கியம் என்று ஆதிக் கிறிஸ்தவர்களைப்போன்றே நாமும் மதிக்கின்றோம். நியாயப்பிரமாணத்தின்கீழ்க் காணப்பட்டவர்களாகிய (இஸ்ரயேலர்கள்) அவருக்குள்ளான விசுவாசிகள் அனைவரையும், அவர் நியாயப்பிரமாணத்தினின்று விடுவித்திட்டாலும், அவர் "நியாயப்பிரமாணத்தின்கீழ்" காணப்பட்டார் மற்றும் அதனால் கட்டுப்படுத்தப்பட்டார். ஆகையால் அவர் யூத மாதமாகிய நீசான் 14-ஆம் தேதியன்றே சிலுவையில் அறையப்பட முடியும் (இந்த வருடம் நீசான் 14-ஆம் தேதியானது ஏப்ரல் 7-ஆம் தேதி, வியாழன் மாலை அன்று துவங்கி, 8-ஆம் தேதி, வெள்ளி மாலை 6-மணியுடன் நிறைவடைகின்றது); ஏனெனில் அவரது மரணமானது, இஸ்ரயேலின் முதற்பேறானவர்களைப் பாதுகாத்திட்ட (அ) மூடிட்ட அவர்களது வீட்டுவாசலின் நிலைக்கால்களில் தெளிக்கப்பட்டதான இரத்தத்தினைக் கொடுத்திட்ட ஆட்டுக்குட்டியினுடைய மரணத்துக்கு நிஜமாய்க் காணப்படுகின்றது. இந்த முதற்பேறானவர்களுக்குப் பதிலாக, லேவி கோத்திரமானது எடுத்துக்கொள்ளப்பட்டது (எண்ணாகமம் 3:12, 13); இவர்களிடத்திலிருந்தே வந்த ஆசாரியர்களின் பலிச் செலுத்தும் பணியினால், ஜனங்கள் அனைவரும் நீதிமானாக்கப்பட்டார்கள்.

ஆட்டுக்குட்டியானது, நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அடையாளப் படுத்துகின்றது; அதன் மரணமானது, அவருடைய மரணத்தினை அடையாளப்படுத்து கின்றதாய் இருக்கின்றது. நிழலுக்கு முற்றுமுடிய இசைவாக, அவரது தியாக மரணமானது, அதே தேதியில் நிகழ வேண்டும் மற்றும் நிகழ்ந்தது. நிழலான ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தினால் காப்பாற்றப்பட்டவர்களாகிய முதற்பேறானவர்கள், "(இயேசு) தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட, முதற்பேறானவர்களின் சபைக்கு" அடையாளமாய்க் காணப்பட்டனர். அந்த முதற்போறான இஸ்ரயேலர்கள், அதாவது பிற்பாடு ஆசாரியர்கள் ஆனவர்கள், பிரதான ஆசாரியனாகக் கர்த்தர் காணப்படுகின்றதான "இராஜரிக ஆசாரியக்கூட்டத்தினை" அடையாளப்படுத்துகின்றனர்; மேலும் இந்த அபிஷேகிக்கப்பட்ட கூட்டத்தார் தேவனோடு இசைவிற்குள் வருகின்றதான ஜனங்கள் அனைவரையும், ஆசீர்வதிப்பதற்கான தேவனுடைய கருவிகளாக இருக்கப்போகின்றனர்; இந்த ஜனங்களுக்கு, இஸ்ரயேலர்கள் அனைவரும் நிழலாய்க் காணப்படுகின்றனர். இப்படியாகப் பார்க்கும்போது, நிழலான ஆட்டுக்குட்டியினுடைய இரத்தமானது, முதலாவதாகவும், நேரடியாகவும் முதற்பேறானவர்களுக்கு மாத்திரம் செயல்படுத்தப்பட்டாலும், அது இஸ்ரயேலர் அனைவரையும் சுத்திகரித்து, பாதுகாத்தது. ஒருவேளை முதற்பேனானவர்கள் காப்பாற்றப்படவில்லையெனில், எந்த ஆசாரியக்கூட்டமும் இருந்திருக்காது; ஒருவேளை ஆசாரியக்கூட்டம் ஏதும் இல்லையெனில், எந்தப் பாவ நிவிர்த்தியும் இருந்திருக்காது. இப்படியாகவே

நிஜத்திலும்கூட உள்ளது; அதாவது உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதான தேவ ஆட்டுக்குட்டியினுடைய புண்ணியமானது, சுவிசேஷ யுக இரவில் முதற்பேறான வர்களுக்கு, சபைக்கு, தெரிந்தெடுக்கப்பட்ட சிறுமந்தையினருக்கு இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாருக்கு மாத்திரமே செயல்படுத்தப்படுகின்றது மற்றும் இவர்கள் பிரதான ஆசாரியனுடைய தலைமையின்கீழ், வரவிருக்கிற யுகத்தில், சீக்கிரத்தில் உத்தம இருதயத்தார் அனைவரையும் (உத்தம இஸ்ரயேலர்கள் அனைவரையும்) தேவனுடன் முழு இசைவிற்குள் கொண்டுவருவார்கள்.

ஆகையால் முதற்பேறான சபையார் அனைவரும், நிழலான ஜனங்கள் போன்று நிழலான ஆட்டுக்குட்டியை நினைவுகூர்ந்து, அதன் மாம்சத்தைப் புசித்தது போலல்லாமல், மாறாக பயபக்தியுடனும், புரிந்துகொள்ளுதலுடனும், தேவ ஆட்டுக்குட்டியாகிய, நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தை நினைவுகூர்ந்து ஆசரிப்பார்களாக. அதன் ஆண்டு நிறைவு நாளானது, ஆண்டுதோறும் வருகையில், அவரை நினைவுகூரும் வண்ணமாய் அதை ஆசரிப்போமாக; ஏனெனில் நமது பஸ்காவாகிய (ஆட்டுக்குட்டியாகிய) கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக் கின்றாரே; ஆகையால் (நாம் அவரது மரணத்தை மாத்திரம் நினைவு கூராமல்) பஸ்கா வார பண்டிகையினுடைய* நிஜத்தையும்கூடச் சந்தோஷமாய் ஆசரிக்கக்கடவோம். [*"பண்டிகை" என்பது, "இராப்போஜனமல்ல," மாறாக பண்டிகையானது, இராப்போஜனத்தைப் பின்தொடர்கின்றது மற்றும் முற்றிலும் வேறுபட்ட அர்த்தம் கொண்டிருக்கின்றது. யூதர்களுக்குப் பண்டிகையானது ஒருவாரமளவும் நீடித்ததாய் இருந்தது மற்றும் ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்டு, புசிக்கப்பட்ட பிற்பாடு துவங்குகின்றதாய் இருக்கின்றது. பண்டிகையின் ஆசரிப்பில், இருதயத்தினுடைய சந்தோஷமும், அனைத்து விதமான சிற்றின்பங்கள் மற்றும் புளிப்பிலிருந்து விலகியிருத்தலும் அடங்குகின்றது. பண்டிகையானது சந்தோஷமுள்ள, தூய்மையுள்ள மற்றும் பாவத்திலிருந்து (புளிப்பிலிருந்து) பிரிந்துள்ள ஜீவியத்தை – ஆட்டுக் குட்டியினுடைய முக்கியத்துவத்தை அடையாளங்கண்டு கொண்டுள்ள அனைவரும் அனுபவிக்கவிருக்கின்ற ஜீவியத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.]

"பண்டிகையானது," "இராப்போஜனமாய்" இராமல், மாறாக அதைப் பின்தொடர்கின்ற ஒன்றாகவும், முற்றிலும் வேறான அர்த்தம் உடையதாகவும் காணப்படுகின்றது. யூதர்களுடைய "பண்டிகையானது" ஒரு வாரக் காலம் நீடித்ததாய் இருந்தது; மற்றும் ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு, புசிக்கப்பட்ட பிற்பாடு துவங்கினதாய் இருந்தது. இதன் ஆசரிப்பில் இருதயத்தின் சந்தோஷமும், அனைத்து வேட்கைகள் மற்றும் புளிப்பிலிருந்து விலகுதலும் அடங்குகின்றது. இது ஆட்டுக்குட்டியினுடைய மதிப்பு முதலானவைகளை அடையாளங்கண்டுகொள்ளும் அனைவரும் அனுபவிக்கப் போகின்றதான சந்தோஷமும், தூய்மையும், பாவத்திலிருந்து (புளிப்பிலிருந்து) விலகியுமுள்ள ஜீவியத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

ஏப்ரல் 7-ஆம் தேதியன்று இரவில், நாம் "பஸ்கா பண்டிகையினை" ஆசரிப்பதில்லை. அது அதன் ஏழு நாட்கள் அடையாளப்படுத்துகின்றதுபோல நம்முடைய ஜீவியம் முழுவதும் ஆசரிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது; ஆனால் நாம் அந்தத் தேதியில் இராப்போஜனத்தை ஆசரிப்போம்; இந்த இராப்போஜனத்தில்

இடம்பெறுகின்றதான அப்பமும், திராட்சரசமும், நமது மீட்பருடைய மாம்சத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

எனினும் அப்பமும், திராட்சரசமும் அடையாளங்கள் மாத்திரமே மற்றும் நாம் செய்கிறவைகள் என்னவென்று உணர்ந்துகொள்வதற்கு, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றுகூறி, நமது கர்த்தர் கட்டளையிட்டவைகளுக்கு ஏற்ப இவைகளை நாம் பயன்படுத்துகையில், இன்னும் ஆழமாய் இவைகளை நாம் பார்க்க வேண்டும். அவரது மாம்சத்திற்கு அடையாளமான அப்பத்தில் பங்கெடுப்பது என்பது, ஆதாம் மூலம் நாமும், அனைவரும் தொலைத்திட்டதும், பூரண மனிதனாக அவருக்குள் இருந்ததுமான அந்தப் பூரணங்களில் பங்கெடுத்தலை நமக்குக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. அவரது இரத்தத்திற்கு, அவரது ஜீவனுக்கு அடையாளமான திராட்சரசத்தில் பங்கெடுப்பது என்பது, ஆதாமில் இழந்துபோனதான, ஜீவிப்பதற்கான உரிமையை, மீண்டுமாய் அவர் மூலமாய், தேவனிடமிருந்து ஏற்றுக்கொள்வதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இப்படியாக அவரது மாம்சத்திற்கும், இரத்தத்திற்கும் அடையாளமான அப்பதையும், திராட்சரசத்தையும் புசிப்பதும், பானம்பண்ணுவதும் என்பது நமது முழுமையான நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நமக்காகக் கொடுக்கப்பட்டதான மீட்பருடைய மனுஷீக பூரணங்களையும், ஜீவனுக்கான அவரது உரிமைகளும், இப்படியாக நம்மால் இந்த அடையாளத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஈடுபலியின் விசுவாசிகள் அனைவரும் இப்படியாய் இதையும், இது கொண்டுவரும் ஆசீர்வாதங்களையும் நினைவுகூர்ந்து ஆசரிப்பதற்கான சிலாக்கியம் பெற்றவர்களாய் இருக்கின்றனர்.

ஆனால் இந்த "விசுவாசிகள்" மத்தியில், "சிறுமந்தையினர்" எனும் வகுப்பார் காணப்படுகின்றனர்; இவர்களுக்கு மேற்கூறியவைகளும், இன்னும் அதிகமாகவும் அர்த்தம் காணப்படுகின்றது. இவர்கள் தங்கள் மாபெரும் பிரதான ஆசாரியன்கீழ் தங்களை உடன் ஆசாரியர்களென அர்ப்பணம் பண்ணினவர்களாய் இருக்கின்றனர். இவர்களுக்கு இந்த அடையாளங்களானது, இவர்களை மனுஷீக ஜீவனுக்கும், அதன் உரிமைகள் அனைத்திற்கும் நீதிமானாக்கிடும் கர்த்தருடைய பலியை மாத்திரம் குறிக்காமல், அவரோடுகூடப் பலிசெலுத்துவதிலும், அவரோடுகூடப்பாடுபடுவதிலும், அவரோடுகூட மரிப்பதிலும், அவரது பலியை ஏற்றுக்கொண்டதன் வாயிலாக தாங்கள் எதற்கு நீதிமானாக்கப்பட்டார்களோ இந்த மனுஷீக உரிமைகள் மற்றும் பூரணங்கள் அனைத்தையும் பலிசெலுத்துவதிலும் தங்களை இணைத்துக்கொண்டதான தங்களது அர்ப்பணிப்பையும்கூடக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

ஆகையால் அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு அடையாளங்களானது (அப்பம் மற்றும் திராட்சரசமானது) கர்த்தருடைய பலிக்கான நினைவுகூருதல்களாக மாத்திரம் காணப்படாமல், அவருடன் பலிசெலுத்துவதற்கான தங்களது உடன்படிக்கைக்கும்; தாங்கள் நிபந்தனைகளை நிறைவேற்றி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகு வதற்கும், நமது கர்த்தரும், மீட்பரானவருடன், உடன் சுதந்தரர்களாகக் காணப்படுவதற்கும், ஜனங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பதில் அவருடன் உடன்

வேலையாட்களாகக் காணப்படுவதற்கும் பாத்திரவான்களாகுவதற்கான காரியங்களுக்கும்கூட நினைவுகூருதல்களாகக் காணப்படுகின்றது.

நினைவுகூருதலின் இந்த அம்சத்தைப் பின்வரும் வார்த்தைகளைக்கூறி பவுல் நம் கவனத்திற்குக் கொண்டுவருகிறார்:"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய (அபிஷேகிக்கப்பட்ட வகுப்பார் அனைவருடைய) இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் (நமது கர்த்தரைத் தலையாகப் பெற்றிருக்கும் "சிறுமந்தையாகிய," சபை) ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான (அங்கத்தினர்களான) நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17)

இந்த யுகத்தில் விசுவாசத்தின் மூலமாக (அ) அடுத்த யுகத்தில் நிஜமாகவே அனைவரும் நமது கர்த்தர் இயேசுவின் மாம்சத்தைப் புசிக்க வேண்டும்; அதாவது அவரது பலியினால் அனைவருக்கும் பெற்றுத் தரப்பட்டதான அந்த மனுஷீக உரிமைகள் மற்றும் சிலாக்கியங்களில் பங்கெடுக்க வேண்டும்; இல்லையேல் ஒன்றில் இப்பொழுது பலிச் செலுத்துவதற்கு (அ) ஒன்றில் (பலிச் செலுத்தும் சிலாக்கியம் இல்லாமல் அப்போது) அதை அனுபவிப்பதற்கு என்று ஜீவிப்பதற்கான உரிமைகள் ஏதும் இருக்காது. ஆகையால் "இதைச் செய்வதற்கும்," நிதானித்து, அறிந்து செய்வதற்கும் என்று நாம் விசுவாசிகள் அனைவரையும் வலியுறுத்துகின்றோம். அடையாளத்தைப் பயன்படுத்துகையில், அனைத்துப் பாவங்களிலிருந்துமான நீதிமானாக்கப்படுதலையும், வேறு எந்த நாமத்தின் மூலமாகவோ, வழியின் மூலமாகவோ இல்லாமல், தேவனுடைய ஆட்டுக்குட்டியின் வாயிலாக தேவன் கொடுக்கின்றதான ஜீவிப்பதற்குரிய உரிமையையும் முழுமையாய் ஏற்றுக்கொள்ளுங்கள், சொந்தமாக்கிக்கொள்ளுங்கள், பயன்படுத்திக்கொள்ளுங்கள். விசேஷமாக கிறிஸ்துவோடுகூட அவரது மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்களும் மற்றும் இப்படியாய் அவரது "சரீரத்தின்" அங்கத்துவத்துக்குள், வந்தவர்களுமாகிய விசுவாசிகள் அனைவரும், அவரது இரத்தத்தின் மூலமான நீதிமானாக்கப்படுதலை நினைவுகூர்ந்து, அவரோடுகூட மரிப்பதற்கான தங்களது உடன்படிக்கையினைப் புதிய, திவ்விய சுபாவத்தின் பங்காளிகளெனப் புதுப்பித்துக்கொண்டு, "இதை ஆசரிப்பார்களாக." (உரோமர் 6:3, 4)

ஒரே சரீரத்தின் உடன் அங்கத்தினர்கள் என்று உங்களால் அடையாளங்கண்டு கொள்ள முடிகிறவர்களுடன் கூடிக்கொள்ளுங்கள்; ஈடுபலியில் விசுவாசமற்றவரைத் தவிர்த்துவிடுங்கள். முன்கூட்டியே கூட்டத்திற்கான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள். உங்களில் யார் அடையாளச் சின்னங்களைக் கொண்டு ஒவ்வொருவரிடம் பரிமாறுகின்றார்கள் என்பது முக்கியமல்ல; முதலாம் ஆசரிப்பில் யூதாஸ்கூட உதவியிருந்திருக்கலாம்.

கலந்துகொள்ள முடிபவர்கள் அனைவரும், பிட்ஸ்பர்கிலுள்ள (Pittsburgh) சபையோடு கலந்துகொண்டு, ஆசரிக்கும்படி அன்போடு வேண்டிக்கொள்கின்றோம். கர்த்தருடைய நாளாகிய, நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான ஆண்டு நிறைவு நாள்வரையிலும் கூடுமானால் தங்கிடத்தக்கதாக, உங்கள் அலுவல்களை ஒழுங்கு செய்திடுங்கள். எல்லாவற்றையும் கொஞ்சம் தள்ளிவைத்துவிட்டு; நமது ஆவிக்குரிய நலன்களுக்கென்று குறிப்பாய்ப் பிரயாசங்கள் எடுக்கத்தக்கதாக நாம் சில நாட்களை ஒதுக்கிச் செலவிடலாம்.

# நம்முடைய வருடாந்தர இராப்போஜனம்

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதான தேவ ஆட்டுக்குட்டியென, நமது கர்த்தருடைய பிட்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்குமான அடையாளங்களாகிய அப்பம் மற்றும் திராட்சரசம் நிறுவப்பட்டதற்கான ஆண்டு நிறைவுநாளை ஏப்ரல் 7-ஆம் தேதி, மாலை அன்று பிட்ஸ்பர்கில் (Pittsburgh) காணப்படும் சபையார் ஆசரித்தார்கள். கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 150 பேர் ஆகும் மற்றும் இதில் அநேகமாக நாற்பது பேர் அருகாமையிலுள்ள பட்டணங்களிலிருந்தும், சிலர் நியூயார்க் (New York), ஒகியோ (Ohio) மற்றும் விஸ்கான்சின் (Wisconsin) போன்ற தொலைத் தூரப்பகுதிகளிலிருந்தும் கலந்துகொண்டனர். அது எப்போதும்போல மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற தருணமாகவே காணப்பட்டது.

நாங்கள் சுருக்கமாக அடையாளங்களாகிய அப்பம் மற்றும் திராட்சரசத்தின் அர்த்தத்தினையும், அது அடையாளப்படுத்துகின்றதான நமது மீட்பருடைய பிட்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்குமான முக்கியத்துவத்தையும், மதிப்பையும் மீண்டுமாகச் சிந்தனை செய்து பார்த்தோம். மாம்சத்தைப் புசிப்பது என்பது, ஆதாமுக்காகவும், அவரது சந்ததி அனைவருக்காகவும் நமது கர்த்தரினால் பலி செலுத்தப்பட்டதான பரிபூரண மனுஷீகத்தையும், அதன் உரிமைகள் அனைத்தையும் நாம் ஏற்றுக்கொள்வதையும், நம்முடையதாக்கிக்கொள்வதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்று நாங்கள் பார்த்தோம். நமது கர்த்தர், "உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே" என்று கூறினபோது, அவர் "என்னுடைய பலியை ஏற்றுக்கொண்டு மனுக்குலத்தின் சார்பில் இலவசமாய்க் கொடுக்கப்பட்டுள்ள என்னுடைய உரிமைகளையும், பரிபூரணங்களையும் (புசிப்பதன் மூலம்) தங்களுடையதாக்கிக்கொள்வது வாயிலாக, உலகமானது (இழந்துபோய்விட்டதான) பரிபூரண மனுஷீக சுபாவத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, நான் என் பரிபூரண (புளிப்பற்ற) மனுஷசுபாவத்தைப் பலிசெலுத்துகின்றேன் (அ) கொடுத்துவிடுகின்றேன்" என்ற அர்த்தத்திலேயே கூறினார் என்று நாங்கள் பார்த்தோம். (யோவான் 6:51)

இப்படியாக அப்பமானது, சீர்ப்பொருந்தப்படுகிற யாவருக்குமானது என்றும், சுவிசேஷயுகத்திலும் சரி, ஆயிரவருட யுகத்திலும் சரி ஒருவன் அப்பத்தினால் நன்மையடைவதற்கும் முன்னதாக அதை ஏற்றுக்கொண்டிட வேண்டும் மற்றும் ஜீரணித்திட வேண்டும் (தன்னுடையதாக்கிட வேண்டும்) என்றும் நாங்கள் பார்த்தோம். இழந்துபோனவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் அனைவரும் ஈடுபலியினை ஏற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் இப்படியாக அதன் பலனாகிய (நிஜமான (அ) கருதப்பட்ட நிலையிலுள்ள) திரும்பக்கொடுக்கப்படுதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆட்டுக்குட்டியினுடைய மாம்சத்தைப் புசிக்கும் அனைவரும், அவரது இரத்தத்தைப் பானம்பண்ணுவதில்லை என்று நாங்கள் பார்த்தோம். பஸ்கா நிழலில் வீட்டினுடைய நிலைக்கால்களும், நிலையின் மேற்சட்டங்களும், ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தினால் தெளிக்கப்பட்டன; இப்படியாகவே மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசிக்கிறவர்கள் அனைவரின் (அவரது புண்ணியங்களில் பங்கெடுத்து,

நீதிமானாக்கப்படுபவர்களின்) விஷயத்திலும் காணப்படுகின்றது; இவர்கள் அனைவரும் இரத்தத்தினை, அதாவது முழு உலகத்திற்கும் பாவமன்னிப்புண்டாகும் படிக்கு, அனைவருக்குமாக சிந்தப்பட்ட விலையேறப்பெற்ற ஜீவனை அடையாளங் கண்டுகொண்டு, சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும்.

ஆனால் "பாத்திரத்தில்" பானம்பண்ணிடுவதற்காக (ஜீவனைப் பலிச்செலுத்திடுவதில் பங்குகொள்வதற்கான) சிலாக்கியமானது சுவிசேஷயுகத்தில் மாத்திரமே அருளப்படுகின்றது. (மாற்கு 10:38) இது "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக" நிறைவேற்றிடுவதற்கும், பின்வரும் அவரது மகிமையில் பங்கடைதலாகிய பலனைப் பெற்றுக்கொள்வதற்குமான இந்த யுகத்திற்குரிய சிலாக்கியமாக (அ) வாய்ப்பாக இருக்கின்றது. ஆகையால் மாம்சத்தை (அப்பத்தை) புசிப்பது என்பது, மனுஷீக உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் அனைத்திற்குமான நீதிமானாக்கப்படுதலைக் குறிப்பதுபோல, இரத்தத்தை (திராட்சரசத்தை) பானம்பண்ணுவது என்பது, நமது கர்த்தரோடுகூட அவரது பலியில் நமது பங்கெடுத்தலையும், அவரோடுகூட மரிப்பதையும், அவரது பாடுகளில் நமது பங்கெடுத்தலையும் - அவரோடுகூடச் சிலுவையில் அறையப்படுதலையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

இது உண்மையானால், அப்பம் புசித்தப் பிற்பாடு, திராட்சரசம் கொடுக்கப்படும் காரியமும், அப்பத்தைப் புசித்தவர்களுக்கு மாத்திரமே இரசம் கொடுக்கப்படும் காரியமும் எவ்வளவு பொருத்தமானதாய் இருக்கின்றது. இக்காரியமானது அனைத்து வேதவாக்கியங்களுக்கு இசைவாகப் போதிப்பது என்னவெனில்: (மற்றவர்கள் அல்ல, மாறாக) தேவ ஆட்டுக்குட்டியானவருடைய பலியிலும், புண்ணியத்திலுமுள்ள விசுவாசத்தினால், பாவங்கள் அனைத்திலிருந்தும் நீதிமானாக்கப்பட்டவர்கள் மாத்திரமே, தங்கள் (நீதிமானாக்கப்பட்ட) மனுஷீகத்தைச் சிலுவையில் அறைந்திடுவதற்கும், இந்த யுகத்தில் கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் பங்கடைவதற்கும், பின்தொடரும் ஆயிரவருட யுகத்திலும், நித்திய காலமும் அவரது மகிமையில் பங்கடைவதற்கும் அழைக்கப்படுகின்றனர் என்பதாகும்.

அவரது மாம்சத்தைப் புசிக்கிறவர்கள் (அவரது புண்ணியங்களைத் தங்களுடையதாக்கிக்கொள்பவர்கள் - நீதிமானாக்கப்பட்டவர்கள்) மற்றும் அவரது இரத்தத்தைப் பானம்பண்ணுபவர்கள் (தங்கள் நீதிமானாக்கப்பட்ட மனுஷீகத்தை அவரது ஊழியத்தில் பலியாகக் கொடுப்பதன் வாயிலாக, அவரது பலியில் அவரோடுகூடப் பங்கெடுப்பவர்கள்) மாத்திரமே "கிறிஸ்துவினுடைய ஒரே சரீரத்தின்" அங்கத்தினர்களென, "மெய்யான திராட்சச்செடியின்" அங்கத்தினர்களென, அவரில் நிலைத்திருப்பார்கள் (யோவான் 6:56). இப்படியானவர்கள் மாத்திரமே (வசனம் - 53) தன்னில்தானே ஜீவனுடையவர்களாய் ஆகமுடியும்; அதாவது எதையும் சார்ந்திராத ஜீவனை, அழியாமையைப் பெற்றுக்கொள்ள முடியும் (மிலேனியல் டாண், தொகுதி - I, அத்தியாயம் - 10 பார்க்கவும்).

மீதமான மனுக்குலத்தார் "மனிதனாகிய கிறிஸ்து இயேசுவினால்" பலி செலுத்தப்பட்ட உரிமைகளைப் புசிப்பதன்மூலம் (சொந்தமாக்கிக்கொள்வதன் மூலம்)

சார்ந்திருக்கும் ஜீவனை அடைவார்கள்; இது விருப்பமுள்ளவர்களுக்கும், கீழ்ப்படிதலுள்ளவர்களுக்கும் நித்திய காலமும் அருளப்படும்.

இவர்கள் அனைவரும் முதலாவதாகக் கர்த்தரைப்பற்றியும், அவர் செலுத்தின பலிபற்றியும், அது அளித்ததான நீதிமானாக்கப்படுதலையும், திரும்பக்கொடுத்தலையும் பற்றியுமான அறிவிற்குள்ளாகக் கொண்டுவரப்பட வேண்டும் மற்றும் பின்னர் அதில் இலவசமாய்ப் பங்கெடுத்து, ஜீவிக்கலாம். இப்படியானவர்களைக் குறித்து ("பாத்திரத்தில்" பங்கெடுக்காமல்) "இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான்" என்றும், "என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்," அதாவது ஜீவன் அளிப்பவராகிய கிறிஸ்துவைச் சார்ந்துள்ளவர்கள் அனைவருக்கும் சார்ந்திருக்கும் ஜீவன் அருளப்படும் என்றும் எழுதப்பட்டுள்ளது. வித்தியாசம் என்னவெனில் இப்பொழுது தெரிந்தெடுக்கப்படுகின்றதான சுவிசேஷசபையானது, கிறிஸ்துவின் சரீரமானது, தலையானவரோடுகூட அழியாமையை உடையவர்களாய் இருப்பார்கள்; தன்னில்தானே ஜீவனுடையவர்களாய் இருப்பார்கள் மற்றும் உலகத்திற்கு ஜீவன் கொடுக்கிற ஆதாரமாய் இருப்பார்கள்; உலகமானது இந்த ஊற்றண்டைக்கு ஜீவனுக்காக வந்து, இதனால் ஜீவிப்பவர்களாய் இருப்பார்கள்.

"இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்" என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகளையும் நாம் கவனிக்கின்றோம் (1 கொரிந்தியர் 11:27, 29). இதன் அர்த்தம் என்னவெனில், கிறிஸ்துவின் பலியானது தங்களுடைய பாவங்களுக்கானது என்று அடையாளங்கண்டுகொள்ள தவறும் அனைவரும், இந்த அடையாளங்களைப் புசிப்பது என்பது, "இவரது இரத்தப்பழியானது எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று யூதர்கள் சத்தமிட்டப்போது, பழிக்கு ஆளானதுபோல, இவர்களும் அவரைக் கொன்றவர்கள் என்ற பழிக்கு ஆளானவர்களாய் இருப்பார்கள். யூதர்கள் தங்களைக் குற்றமில்லாத இரத்த (மரணத்திற்கான) பழிக்குள்ளாக்கினதுபோன்று, இப்பொழுது கர்த்தருடைய சரீரமும், இரத்தமும் தங்களுக்கான ஈடுபலியென்று நிதானித்தறியாமல், அடையாளங்களைப் புசிப்பவர்களும், அவரது இரத்தம் எங்கள்மேல் இருப்பதாக என்றும் சொல்லுகிறவர்களாய் இருப்பார்கள். கர்த்தருடைய சரீரமும், இரத்தமும் தங்களுக்கான ஈடுபலி என்று அடையாளம் கண்டுகொள்ளாதவர்கள் அனைவருக்கும், இதில் பங்கெடுப்பது என்பது, அவரது சரீரத்தைப் பிட்டதிலும், அவரது இரத்தத்தைச் சிந்தினதிலுமான குற்றத்தில் பங்குள்ளவர்களாகத் தீர்க்கப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும்; இது இவர்களுக்கு மன்னிப்பை - பாவங்களுக்கான மன்னிப்பைப் பேசாது.

பின்வந்த அடுத்த நான்கு நாட்களும், முழுக்க கூட்டங்களுக்காகவே செலவிடப்பட்டது; இந்தக் கூட்டங்களில் பல்வேறு சுவாரசியமான தலைப்புகள்

குறித்துக் கலந்துரையாடப்பட்டன; அவைகளையெல்லாம் நம்மால் இங்கு மீண்டுமாகப் பதிவு செய்திட முடியாது. இந்தக் கூட்டங்களானது, தொலைவிலிருந்து வந்தவர்களுக்கு விசேஷித்ததாகவும், மிகவும் சுவாரசியமானதாகவும் காணப்பட்டது மற்றும் இவர்கள் தேவனுடைய வார்த்தையிலுள்ள பலமான ஆகாரத்தினாலும், ஆராயப்பட்டதான மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தத்திலிருந்து வடிக்கட்டி, எடுக்கப்பட்டதான சந்தோஷம் மற்றும் நம்பிக்கை எனும் நவமான திராட்சரசத்தினாலும் பெலப்படுத்தப்பட்டு, புத்துயிர் அடைந்து, தங்கள் தங்கள் பணிக்குத் திரும்பிச் சென்றனர் என்று நாம் விசுவாசிக்கின்றோம்.

இவர்களது இந்த ஒரு வருகையின்போது, கீழே குறிப்பிடப்பட்டிருக்கின்றதான ஒன்பது சகோதர சகோதரிகள், "மரணம் வரையிலுமான" (உரோமர் 6:3, 4) தங்களது அர்ப்பணிப்பை அடையாளப்படுத்திடுவதற்கு, நமது கர்த்தர் கேட்டுக்கொண்டதற்கு ஏற்பவும் (மாற்கு 16:16), அப்போஸ்தலர்கள் கட்டளையிட்டதற்கு ஏற்பவும் (அப்போஸ்தலர் 10:48) மரணத்திற்குள்ளான உண்மையான ஸ்நானத்திற்கு ஒப்பாக, தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதற்கு, வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்களது பெயர்கள் பின்வருமாறு: சகோதரன் மற்றும் சகோதரி ஏ. பௌவென், சகோ. ஜெ. மேசன், சகோ. தோஸ்.ஆர்.ஜாக்சன், சகோதரி ஜெ. விரோ, சகோதரி எம். ஜெ. வேக்நர், சகோதரி எம். தாம்சன் மற்றும் சகோதரி கார்சன் மற்றும் மிட்செல்.

"இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற ஆண்டவருடைய வார்த்தைகளை, அனைத்துத் திசைகளிலுமுள்ள சகோதர சகோதரிகள் நினைவுகூர்ந்துள்ளார்கள் என்பதை நாங்கள் பெற்றுக்கொண்டதான அநேக கடிதங்களானது காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. சில இடங்களில், அதிகமான எண்ணிக்கையில் கூடியிருக்கின்றனர், வேறு சில இடங்களில் ஒன்று (அ) இரண்டுபேர் கூடியிருக்கின்றனர். "இதைச் செய்யுங்கள்" என்று கர்த்தர் சொன்னதைக் கர்த்தருடைய சரியான நோக்கத்திலும், கர்த்தருடைய பலியானது தங்களுடைய பாவங்களுக்கானதாகும் என்று உணர்ந்த நிலையிலும், அவரோடுகூட உள்ள தங்களது அர்ப்பணிப்புக் குறித்து உணர்ந்த நிலையிலும் செய்தவர்கள் அனைவரும் நிச்சயமாய் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை நாங்கள் அறிவோம். இதே சாட்சியினை நாங்கள் பெற்றுக் கொண்டதான, அநேக கடிதங்கள் தெரிவிக்கின்றது. நாங்கள் இங்கே கூடினபோது, உங்களை நினைவுகூர்ந்தோம்; மேலும் உங்கள் கடிதங்களும், நீங்கள் எங்களை மறக்காமல், நினைவுகூர்ந்ததைத் தெரியப்படுத்தினது. "சரீரத்தினுடைய" அங்கத்தினர்கள் அனைவரிடத்திலுமான இந்தப் பரஸ்பர அக்கறையானது சரியானதாகும் மற்றும் இது எப்போதும் நம்முடைய இருதயங்களைச் சந்தோஷப்படுத்துகின்றது.

## கெத்செமனேயும், கல்வாரியும்

பாலஸ்தீனியாவின் அந்த ஓர் இடத்தின் வரலாறு
அப்போதும், எப்போதும் மறக்கப்படுவதில்லையே -
அது கெத்செமனே தோட்டமே!
இயேசுவின் கால்கள் அடிக்கடி பதிந்ததும்,
அவர் கண்ணீர் விட்ட அந்தத் தோட்டம் நினைவில் நமக்குள்ளதே.
பூமியில் அவருடைய பணி முடியவே,
அவர் கடந்துபோகும் காலம் நெருங்கவே,
அன்பற்ற இவ்வுலகையே அவர் பிரிந்திடும் காலம் நெருங்கவே,
தம் இருதயத்திற்குப் பிரியமானவர்களுடனே
தனிமையில் நாடிட்டாரே பரிட்சயமான அவ்விடத்தையே.
அங்கே மிகத் துயரம் அடைந்தே,
கண்ணீர் முகத்தில் வடியவே முகங்குப்புற கிடந்தாரே.
ஆவியில் மகிழ்வுடனே தம் பிதாவின்
நீதியான சித்தத்தை அதுவரை நிறைவேற்றியிருந்தாரே.
ஆனாலும் சோர்வுற்றிருந்த தம் மாம்சம் எதையேனும்
நிறைவேற்றத் தவறி இருக்குமோ?என அஞ்சினாரே.
"ஒரே மனிதனுடைய கீழ்ப்படியாமையினால்
மரணம் எல்லாருக்கும் வந்துள்ளதுவே."
மிருகங்களின் இரத்தம் பாவத்தைச் சுத்திகரிக்காதே.
மோசேயின் பிரமாணத்தின் மூலம் தேவன்
"சரிநிகர் சமான விலை" ஒன்றை முன்வைத்திருந்தாரே.
ஆகவே பலிசெலுத்துபவர் பரிபூரண
பலியைக் கொண்டுவரவேண்டுமே.
நித்திய மரணத்தின் அச்சம் அன்றிரவு அவரைச் சூழ்ந்ததுவே.
ஓ, சிலுவை - பிதாவின் பார்வையிலிருந்து
தம்மை நித்தியமாய் புறம்பாக்குமோ?
தாம் இரட்சிக்க வந்த - இறந்தும் கொண்டிருக்கும் இவ்வுலகை
மரணத்திற்குப் பின் உள்ள வாழ்வுக்கான
நம்பிக்கை ஏதுமின்றி கைவிடும் நிலை ஏற்பட்டு விடுமோ?
இரங்கும் கண்கள் ஒன்றுகூட
இல்லா, அத்தனிமையான இரவுவேளையில் உடைந்த
உள்ளத்திலிருந்தே மும்முறை -
"ஓ, பிதாவே இந்தப் பாத்திரம் என்னை விட்டு
நீங்கக்கூடுமானால், நீங்கும்படிச் செய்யும்.
நான் இதில் பானம் பண்ணினாலொழிய நீங்கக் கூடாதாகில்,
நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" ஆகிலும்
"என் சித்தப்படி அல்ல, உம் சித்தப்படியே ஆகக்கடவது" என்றாரே.
ஓ, சத்தமிடாதிருக்கும் ஆட்டுக்குட்டியாய்
வேதனையில் ஜெபித்துக்கொண்டிருக்கும் தேவகுமாரனை
அங்கே நாம் காண்கையிலே, நம் வாழ்வு
எத்தனை பயனற்றதாய்த் தெரிகிறதே.

-Poems of the way,p.11

# அடையாளங்களினுடைய முக்கியத்துவம்

அப்பத்தைக் குறித்து நமது கர்த்தர் கூறினதாவது: "இது என் மாம்சம்" ஆகும்; அதாவது புளிப்பில்லாத அப்பமானது, நமக்காகப் பிட்கப்பட்ட அல்லது பலி செலுத்தப்பட்ட அவரது மாம்சத்தை, அவரது மனுஷீகத்தை அடையாளப்படுத்துகிறதாய் இருக்கின்றது. அவர் தம்மையே நமக்காகப் பலிசெலுத்தாதது வரையிலும் நம்மால் நித்தியமான ஜீவனை ஒருபோதும் பெற்றுக்கொள்ளமுடியாது; அவர் சொன்னதுபோல: "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை" (யோவான் 6:53).

இயேசுவின் சரீரம் பிட்கப்பட்டதான காரியமானது, மனிதன் புசித்தால், ஒருபோதும் மரியாமல் இருக்கப்பண்ணுகின்றதான, ஜீவ அப்பத்தை அளிக்கிறதாக மாத்திரம் காணப்படாமல், இன்னுமாக அது ஜீவனுக்கு நேரான "இடுக்கமான வழியையும்" திறந்தது மற்றும் ஜீவனுக்கு நேராய் வழிநடத்துகின்றதான இடுக்கமான வழியில் நடப்பதற்கு உதவியான, ஆவிக்குரிய உணவாகிய சத்தியத்தை நாம் அடையத்தக்கதாக, முத்திரையை உடைத்தது. இப்படியாகப் பிட்கப்பட்ட அப்பமானது, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று தம்மைக் குறித்துக் கூறினவரின் பிட்கப்படுதலை அடையாளப்படுத்துவது பொருத்தமானதே என்று நாம் காண்கின்றோம் (யோவான் 14:6).

ஆகையால் பிட்கப்பட்ட அப்பத்தை நாம் புசிக்கையில் - அவர் மரித்திருக்க வில்லையெனில், அவர் நமக்காகப் பிட்கப்பட்டிருக்கவில்லை யெனில், நாம் ஒருபோதும் பிதாவினிடத்திற்கு வந்திருக்க முடியாது என்றும், நாம் என்றென்றும் ஆதாமினுடைய பாவத்தினுடைய சாபத்தின் கீழிலும், மரணத்தினுடைய நுகத்தின் கீழிலும் காணப்பட்டிருந்திருப்போம் என்றும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மற்றுமொரு கருத்து: பயன்படுத்தப்பட்ட அப்பமானது, புளிப்பற்றதாகும். புளிப்பு என்பது கெடுக்கிற ஒன்றாக, சீரழிக்கும் ஒன்றாக இருப்பதினால், பாவத்திற்கான அடையாளமாய் இருக்கின்றது மற்றும் பாவம் மனுக்குலத்தில் கொண்டுவந்ததான சீரழிவையும், மரணத்தையும் அடையாளப்படுத்து கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இந்த அடையாளமானது, நமது கர்த்தர் இயேசு பாவம் இல்லாதவராக இருந்தார் என்பதை, கறைதிறையற்ற ஆட்டுக்குட்டி என்பதை, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாய்" இருந்தார் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் ஆதாமின் சந்ததியில் வந்தவராய் இருந்திருப்பாரானால், வழக்கம்போல் ஏதோ ஒரு பூமிக்குரிய தந்தை வாயிலாக தமது ஜீவனைப் பெற்றவராக இருந்திருப்பாரானால், அவரும்கூட மற்ற மனிதர்களைப்போலவே ஆதாமின் பாவத்தினால், புளிப்பானவராய் இருந்திருப்பார்; ஆனால் அவருடைய ஜீவனானது கறைதிறை இல்லாமல், உயர்ந்த பரலோக நிலையிலிருந்து, பூமிக்குரிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலைமையில் வந்ததாய் இருந்தது; ஆகவே அவர் "வானத்திலிருந்து வந்த அப்பம்" என்று அழைக்கப்பட்டார் (யோவான் 6:41). ஆகவே தேவன் அருளியுள்ளதான தூய்மையான,

புளிப்பற்ற, மாசற்ற அப்பத்தினைக் குறித்து உணர்ந்துகொள்வோமாக மற்றும் அவரைப் புசிப்போமாக; அதாவது சத்தியத்தைப் புசித்து, ஜீரணிப்பதன் வாயிலாக அவரை நாம் புசிப்போமாக; அதிலும் விசேஷமாக - விசுவாசத்தின் வாயிலாக அவரது நீதியை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுதல் எனும் சத்தியத்தைப் புசிப்போமாக; மேலும் அவரை வழியாகவும், ஜீவனாகவும் அடையாளங்கண்டு கொள்வோமாக.

இந்த நினைவுகூருதல் அடையாளங்கள் தொடர்புடையதான இன்னும் ஆழமான ஓர் அர்த்தத்தை, அப்போஸ்தலன் தெய்வீக வெளிப்படுத்துதலின் வாயிலாக தெரிவித்துள்ளார். அப்பமானது நமது கர்த்தர் இயேசுவை மாத்திரம் அடையாளப் படுத்துகின்றதாயிராமல், நாம் அவரைப் புசித்தப் பிற்பாடு (அவரது நீதியை நமக்குரியதாக்கிக் கொள்வதன் வாயிலாக நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு) நாம் அர்ப்பணத்தின் வாயிலாக, உலகத்திற்கான உணவாகிய அந்தப் பிட்கப்பட்ட ஒரே அப்பத்தின் பாகமாக, நாம் அவரோடு இணைந்தவர்களானோம் என்றும் அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். (1 கொரிந்தியர் 10:16). இது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளாகிய நாம், எதிர்க்கால மகிமைகளில் அவரோடுகூட உடன் சுதந்தரர்களாகுவதற்கும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதும், பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஜீவன் வழங்குவதுமான மாபெரும் வேலையில் பங்காளிகளாகுவதற்குமுரிய நிபந்தனையாய்க் காணப்படுகின்ற கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும் இப்பொழுது பங்கடைவதற்கான சிலாக்கியத்தினை உடையவர்களாய் இருக்கின்றோம் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

இதே கருத்தானது, அப்போஸ்தலனால் மீண்டும் மீண்டுமாகவும், பல்வேறு அடையாளங்களினாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அவை அனைத்தைக் காட்டிலும், இவ்வடையாளமே ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகின்றது; அதாவது தங்கள் தலையோடுகூட (கிறிஸ்துவின் சரீரமாகிய - கொலோசியர் 1:24 பார்க்கவும்) சபையே இப்பொழுது பிட்கப்படுகின்றதான "ஒரே அப்பமாக" இருக்கின்றனர். இது நமது தலையானவருடனான நமது ஐக்கியத்திற்கும், உறவிற்கும் குறிப்பிடத்தக்கதான விவரிப்பாய்க் காணப்படுகின்றது.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்;" "அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 – KJV ; திருவிவிலியம்)

'திராட்சப்பழரசமானது' (fruit of the vine) நமது கர்த்தரினால் பலிச்செலுத்தப்

பட்ட ஜீவனை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மரணத்தில் கையளிக்கப்பட்ட ஜீவனுக்கான அடையாளம்)" (மத்தேயு 26:27, 28).

பாவத்தின் காரணமாக ஆதாமின் சந்ததி இழந்துபோனதான ஜீவனுக்கான மீட்கும்பொருளாகக் கர்த்தர் தமது ஜீவனைக் கொடுப்பதன் மூலமே, புதிய உடன்படிக்கையின்கீழ் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் வாயிலாக மனிதர்களுக்கு ஜீவனுக்கான உரிமை கடந்துவர முடியும். (உரோமர் 5:18, 19). சிந்தப்பட்ட இரத்தமானது, "அனைவருக்குமான மீட்கும்பொருளாக" (விலையாகக்) காணப்பட்டது; இது அனைவருக்காகவும், நமது மீட்பரினாலே கொடுக்கப்பட்டதாய் இருந்தது; ஆனால் அவர் பாத்திரத்தைச் சீஷர்களிடத்தில் கொடுத்து, அதைப் பருகும்படிக்கு அவர்களிடம் கூறினதாவது, தம்முடைய பாடுகளில் அவர்கள் பங்காளிகளாகுவதற்கான அல்லது பவுல் குறிப்பிட்டுள்ளதுபோன்று "கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதற்கான" அழைப்பாய்க் காணப்பட்டது (கொலோசெயர் 1:24). விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு, நாமாய் முன்வந்து கிறிஸ்துவின் காரணங்களை/நோக்கங்களை ஆதரிப்பதின் வாயிலாக, அவரது பாடுகளில் பங்குகொள்வோமானால், நாம் தேவனால் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகவும் மற்றும் இயேசுவின் பாடுகளில் பங்கடைபவர்களாகவும் கருதப்படுவோம் என்பதே நம்முன் வைக்கப்பட்ட காரியமாகும். "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் (சிந்தப்பட்ட இரத்தம் - மரணம்) பங்குகொள்ளுதல் அல்லவா?" (1 கொரிந்தியர் 10:16 திருவிவிலியம்). "பாத்திரத்தினுடைய" மதிப்பினை நாம் அனைவரும் உணர்ந்தவர்களாக, கிறிஸ்துவோடுகூட, அவரது பாடுகள் மற்றும் அவமானத்தின் "பாத்திரத்தில்" பங்குகொள்வதற்கான வாய்ப்பிற்காக, தேவனை ஸ்தோத்திரிப்போமாக; இப்படியானவர்கள் அனைவரும், அவரோடுகூட மகிமைப்படுத்தப்படுவர் என்ற நிச்சயமும் கொண்டிருக்கலாம். (உரோமர் 8:17)

பாத்திரமானது அவரது அவமானத்தில் நமது பங்குகொள்ளுதலையும், அவரது பலியில் நமது பங்குகொள்ளுதலையும், அதாவது நமது மனுஷீகத்தின் மரணத்தையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில், நமது கர்த்தரும், பாத்திரத்திற்கு இந்த அர்த்தத்தைச் சாற்றினவராய் இருந்தார். உதாரணத்திற்கு அவரது சிங்காசனத்திலுள்ள எதிர்க்கால மகிமைக் குறித்த வாக்குறுதியை அவரது சீஷர்களில் இருவர், அவரிடத்தில் கேட்டபோது, அவரோ: "நீங்கள் கேட்டுக்கொள்ளு

கிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கக்கூடுமோ? என்றார். அவர்களது இருதயப்பூர்வமான உறுதிமொழியின் நிமித்தமாக, "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்" என்றார். திராட்சப்பழரசமானது, இரத்தம்/இரசம் வெளியே வருமளவுக்குத் திராட்சையைப் பிழிவதை மாத்திரம் குறிக்காமல், பிற்பாடு கடந்துவரும் புத்துணர்வையும்கூடக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; ஆகையால் "கிறிஸ்துவின் பாடுகளில்" இப்பொழுது பங்குகொள்ளும் நாம், அவரது மகிமைகளிலும், கனங்களிலும் மற்றும் அழியாமையிலும் சீக்கிரத்தில் பங்குகொள்வோம் - அதாவது இராஜ்யத்தில் அவரோடுகூடப் புதிய திராட்சரசத்தைப் பருகும்போது ஆகும்.

ஆகையால் மிகவும் அன்புக்குரியவர்களே, 19-ஆம் தேதி அன்று மாலையில், நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருகையில் நாம் செய்கிற காரியத்தினுடைய அர்த்தத்தினை மனதிற்குக் கொண்டுவருவோமாக; அவருடைய ஜீவனால் ஊக்குவிக்கப்பட்டு, ஜீவ அப்பத்தினால் பலப்படுத்தப்பட்டுள்ள நாம், அவருடைய மரணத்திற்குள்ளாக அவரோடுகூடப் பானம்பண்ணுவோமாக மற்றும் மற்றவர்களைப் போஷிக்கத்தக்கதாக அவரோடுகூட நாம் பிட்கப்பட வேண்டும் என்று முன்பில்லாத அளவுக்கு மிகவும் உறுதியுடன் முன்னேறுவோமாக."நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" (2 தீமோத்தேயு 2:11, 12).

## யார் பங்குகொள்ளலாம்

இந்த அப்பத்திலும், இந்தப் பாத்திரத்திலும் பங்குகொள்வதற்குத் தனக்கு உரிமை இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானித்துக்கொள்ளும் காரியமானது, அவனவனிடத்தில் விடப்பட்டுள்ளது. ஒருவன் பாவங்களுக்கான மன்னிப்பிற்காக, புதிய உடன்படிக்கையின் இரத்தத்தை விசுவாசித்து, தன்னை சீஷன் என்று அறிக்கைப் பண்ணிக்கொண்டு, கர்த்தருடைய ஊழியத்திற்கென அர்ப்பணம் பண்ணினவனாகக் காணப்படுவானானால், அவனது சக சீஷர்கள் அவனது இருதயத்தை நியாயந்தீர்க்காதிருப்பார்களாக. தேவனால் மாத்திரமே இருதயத்தினைத் தெளிவாய் அறிந்துகொள்ள முடியும்.

இந்த அடையாள சின்னங்களானது, கிறிஸ்துவினுடைய மரணத்தை அடையாளப்படுத்துகின்றபடியால், இந்த அடையாளங்களில் அறியாமையிலும், அபாத்திரமான நிலைமையிலும், சரியற்ற விதத்திலும், அதாவது இந்த

அடையாளங்களில் "கர்த்தருடைய சரீரம்" நமக்கான மீட்கும்பொருளாக இருப்பதை அடையாளம் கண்டுகொள்ளாத நிலையிலும் பங்குகொள்ளுதல் குறித்து நாம் அனைவரும் ஜாக்கிரதையாய் இருப்போமாக; ஏனெனில் இப்படியான நிலையில் பங்குகொள்பவன், கர்த்தரைக் கொன்றுபோட்டவர்களில் ஒருவனாக இருப்பான் மற்றும் அடையாளத்தில் அவன் "கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாய் இருப்பான்" (1 கொரிந்தியர் 11:27).

"எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிவானாக;" எந்த மனுஷனும் இந்த அடையாளங்களைப் புசிக்கையில், இவைகள் தனது ஜீவன் மற்றும் சிலாக்கியங்களுக்கான மீட்கும்பொருளென உணர்ந்துகொள்வானாக மற்றும் அதைப் புசிக்கையில் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுப்பதற்கும், மற்றவர்களுக்காகப் பிட்கப்படுவதற்குமெனத் தன்னை அளிக்கப்பெறுகிறவனாகுகின்றான் என்பதையும் உணர்ந்துகொள்வானாக; இல்லையேல் அவன் இப்படிப் போஜனம்பண்ணுவது என்பது அவனது மனசாட்சிக்கு முன்னிலையில், அவனது அன்றாட ஜீவியத்திற்கு - "அவனுக்கு ஆக்கினைத்தீர்ப்பு" வரும்படிக்கு ஏதுவாய் இருக்கும். (1 கொரிந்தியர் 11:28, 29).

நமது நீதிமானாக்கப்படுதலை மாத்திரமல்லாமல், கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும் பங்குகொள்வதற்கான நமது அர்ப்பணித்தலையும் அடையாளப்படுத்து கின்றதான இந்த நினைவுகூருதலுக்குரிய அடையாள சின்னங்களைச் சரியாய் உணர்ந்துகொள்ளாததின் காரணமாக, "அநேகர் பலவீனரும், வியாதியுள்ளவர் களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்" என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். (1 கொரிந்தியர் 11:30). இது உண்மை என்பது உறுதியே ஆகும்; இந்த இராப்போஜனத்தில் அடையாளப்படுத்தப்படும் உண்மைகளை உணர்ந்து கொள்ளாததும், கவனிக்கத் தவறினதுமே, பெயரளவிலான திருச்சபையானது பெலவீனமாயும், வியாதிப்பட்டும், நித்திரை நிலைமையிலும் இருப்பதற்குமான காரணமாய்க் காணப்படுகின்றது. மீட்கும்பொருள் பலிக் குறித்தும், தங்கள் கர்த்தருடன் உலகத்திற்கான பலியிலும், அவருடைய பாடுகளிலும் தங்களுக்கான பங்கைக் குறித்ததுமான தெளிவான உணர்ந்துகொள்ளுதலே பரிசுத்தவான்களை முழுமையாய் விழிப்படையப் பண்ணுகிறதாகவும், பலப்படுத்துகிறதாகவும் இருக்கின்றதே ஒழிய வேறு எதுவுமில்லை. "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்" (1 கொரிந்தியர் 11:28).

# கர்த்தருடைய பாத்திரம் மற்றும் கர்த்தருடைய போஜனபந்தி

**"நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே . நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா?" 1 கொரிந்தியர் 10:21, 22**

எச்சரிப்பான இந்த வார்த்தைகளானது, "கொரிந்து பட்டணத்திலுள்ள தேவனுடைய சபைக்கு" மாத்திரமாகப் பேசப்படாமல், "கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும்" என்று பேசப்பட்டுள்ளது. (1 கொரிந்தியர் 1:2) யுகம் முடிவுவரையிலுமான சுவிசேஷ சபையினுடைய, தகுதியாகிக்கொண்டிருக்கிற அங்கத்தினர்கள் அனைவருக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

தேவனுக்கு இருதயத்தில் உண்மையாயும், நேர்மையாயும் காணப்படுகின்றவர்கள், இத்தகையதொரு எச்சரிப்பைக் குறித்து விநோதமாய் எண்ணி, பவுலை நோக்கி: "பவுலே, பவுலே, பேய்களினுடைய உடைமைகளைத் தொடுவதற்கோ (அ) ருசித்துப்பார்ப்பதற்கோ (அ) கையாளுவதற்கோ நாங்கள் எவ்விதமான விருப்பமும் கொண்டிராமலிருக்க, ஏன் இப்படியானதொரு ஆலோசனையை எங்களுக்கு வழங்குகின்றீர்?" என்று கூறியிருக்கலாம். பவுல் கொடுத்துள்ளதான ஆலோசனையானது, கர்த்தருக்கான நமது நேர்மையின் விஷயத்தில் கொஞ்சம் அவருக்கு நம்பிக்கையின்மை ஏற்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆனால் பவுலோ: "தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" என்று பதிலளிக்கின்றார். எச்சரிப்பானது இங்கு நலம் தருகின்ற ஒன்றாய் இருக்கின்றது; அதென்னவெனில்: நமக்கான சோதனைகளும், பரீட்சைகளும் இன்னும் நிறைவடைந்துவிடவில்லை; கர்த்தருடைய பாத்திரமானது நம்முன் வைக்கப்பட்டிருக்கையில், பிசாசு, ஒளியின் தூதனுடைய வேஷத்தில், மிகவும் சூழ்ச்சிகரமாக/தந்திரமாய் தனது பாத்திரத்தையும், நம்முன் வைக்கின்றான்; மேலும் கர்த்தர் தம்முடைய போஜனபந்தியை நம்முன் வைத்திருக்கையில், பிசாசும் தனது போஜனப்பந்தியை நம்முன் வைக்கின்றான்.

கர்த்தருடைய பாத்திரம் எது? அதைக் குறித்துக் கர்த்தர் குறிப்பிட்டுள்ளவைகளை நினைவில் கொண்டுவாருங்கள் - "பிதா எனக்குக்கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ?" மேலும் அதன் கசப்பான அடிமண்டிகள் பானம்பண்ணப்பட வேண்டியிருந்தபோது, அவர் பண்ணின ஜெபத்தைக் கவனியுங்கள் .

. . "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது;" "என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது." அது மரணம்வரையிலான பலியின் பாத்திரமாக இருக்கின்றது. அது ஜீவனை மாத்திரம் பலி செலுத்துதலாகக் காணப்படாமல், நற்கீர்த்தியையும், மனுஷீகத்திற்கு அருமையான அனைத்தையும் பலிசெலுத்துதலாகக் காணப்பட்டது. ஜீவனானது, நிந்தனைகள், உபத்திரவங்கள் மற்றும் விசுவாசம், பொறுமைக்கான உச்சக்கட்டமான பரீட்சைகள் மத்தியில் பலிசெலுத்தப்பட்டது. தம்முடைய சீஷர்களுடனான கடைசிஇராப் போஜனத்தின்போது, இயேசு அடையாளமான பாத்திரத்தை எடுத்து, "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக் காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்றார். (மத்தேயு 26:27, 28) இதே பாத்திரத்தையே அப்போஸ்தலன், "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்." என்று குறிப்பிடும்போது குறிப்பிட்டுள்ளார். (1 கொரிந்தியர் 10:16)

இப்படியாகக் கிறிஸ்துவின் சரீரமானது, தலையானவருடன் அதே பாத்திரத்தில் - பலியின், அவமானத்தின் மற்றும் நிந்தனையின் பாத்திரத்தில் பங்குகொள்வதற்கு அழைக்கப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்." கர்த்தருடைய பாத்திரத்தில் உண்மையாய் இதுவரையிலும் பங்குகொண்டுள்ளவன் பாக்கியவானாய்க் காணப்பட்டு, "உம்மை நிந்திக்கிறவர் களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது" என்று கூறமுடிகிறவனாய் இருப்பான்.

கர்த்தருடைய பாத்திரம் என்பது என்ன என்று நாம் பார்த்துள்ளோம்; இப்பொழுது பேய்களின் பாத்திரம் என்பது என்ன? இதுவும்கூடப் பலியின் பாத்திரமாகவே காணப்படுகின்றது; இதில் பானம்பண்ணுகிறவர்கள் தற்கால ஜீவியத்தினுடைய தங்களது உண்மையான சந்தோஷங்களையும், எதிர்க்கால ஜீவியம் பற்றியதான தங்களது நம்பிக்கைகளையும் பலி செலுத்திவிடுபவர்களாக/தியாகம் பண்ணுபவர்களாகக் காணப்படுவார்கள். எனினும் இவைகள் சாத்தானுடைய பாத்திரத்தின் அடிமண்டிகளாகவே காணப்படுகின்றது; இவைகள் மேற்புறத்தில் காணப்படுவதில்லை. பாத்திரத்தினுடைய பானத்தின் மேற்புறமானது பூமிக்குரிய நற்பேறுகளுக்கான, பெருமைக்கான, சுயமேன்மை அடைதலுக்கான, மற்றவர்கள் மத்தியிலான கனத்திற்கான நம்பிக்கையூட்டுதல்களினால் பளப்பளவென்று காணப்படுகின்றது மற்றும் இந்த நம்பிக்கைகளை அடையப்பெறுவதற்கென நேரம், தாலந்து மற்றும் செல்வாக்குகள் பலியாக்கப்படுகின்றன; இது கசப்பான மற்றும் ஏமாற்றமான முடிவில் முடிவடைகின்றது.

இது உண்மையில் மயக்க வைக்கும் பாத்திரமாக, ஏமாற்றுகிறதும்,

வஞ்சிக்கிறதுமான பாத்திரமாக, இறுதியில் நித்திய மரணத்திற்கு வழிநடத்தும் அளவுக்குப் பயங்கரமான ஆற்றலுடையதான பாத்திரமாகக் காணப்படுகின்றது. "(விசுவாசமற்ற உலகத்தார்) அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்கள் என்று சொல்லுகிறேன்; நீங்கள் (விசுவாசிகள், கிறிஸ்தவர்கள்) பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை . . . நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாய் இருக்கக்கூடாதே" என்று அப்போஸ்தலன் நன்றாய்க் கூறியிருக்கின்றார். (1 கொரிந்தியர் 10:20, 21) வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் நாம் உலகத்தின் ஆவியிலும், சுயநலத்தின், பேராசையின், பெருமையின் ஆவியிலும் பங்குகொண்டு, இந்த இழிவான இலட்சியங்களுக்காக நம்முடைய ஜீவியங்களைப் பலிசெலுத்துபவர்களாகவும், அதேவேளையில் சுயநலமற்றதும், தாழ்மையானதும், சுயத்தை வெறுக்கிறதுமான கிறிஸ்துவின் ஆவியிலும் பங்குகொண்டவர்களாகவும், நம்மை தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே வாங்கினவருக்கு ஊழியம் புரிவதில் பூமிக்குரிய இலட்சியங்களைப் பலியாக்குவதில்/தியாகம் செய்வதில் விருப்பமுள்ளவர்களாகவும் இருத்தல் முடியாது. நாம் இரண்டு ஆவியிலும் பங்குகொண்டவர்களாய் இருத்தல் முடியாது; ஏனெனில் இந்த இரண்டு ஆவியும், ஒன்றுக்கொன்று முரண்பட்டதாய்க் காணப்படுகின்றது. "தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது." "நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்." "இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாய் இருக்கிறான்;" "அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாம் என்று நினையாதிருப்பானாக." (யாக்கோபு 1:8; 1:7)

இந்த எச்சரிப்பானது, உலகத்திற்கு வழங்கப்படாமல், கர்த்தருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுவதாக, ஏற்கெனவே வாக்குறுதி அளித்துள்ளவர்களுக்காக வழங்கப்பட்டுள்ளபடியால், இப்படிப்பட்டவர்கள் இப்பொழுது பேய்களுடைய பாத்திரத்தில் பங்கெடுத்தல் என்பது, இவர்கள் கர்த்தருடைய பாத்திரத்தினின்று விலகிப்போவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். மேலும் கர்த்தருடைய பாத்திரத்திலிருந்து கொஞ்சமும் மற்றும் பேய்களுடைய பாத்திரத்திலிருந்து கொஞ்சமும் என்று, அதாவது இரண்டிலும் கொஞ்சம் பானம்பண்ணலாம் என்று தன் மனதில் முடிவுபண்ணுமளவுக்கு மதியீனமாய் ஒருவன் காணப்படுவானானால் . . . அதாவது கர்த்தருடைய ஆவியிலும், உலகம் மற்றும் பேய்களின் ஆவிகளிலும், இன்னுமாக கர்த்தருடைய உபதேசங்களிலும், பேய்களினுடைய உபதேசங்களிலும் பங்குகொண்டிருப்பதற்கு ஒருவன் மதியீனமாய்த் தன் மனதில் முடிவுபண்ணினவனாய் இருப்பானானால், அவன் தன் உடன்படிக்கையை மனப்பூர்வமாய் அசட்டைப்பண்ணுகிறவனாயும், கிருபையின் ஆவியை அசட்டைப் பண்ணுகிறவனாயும் இருப்பான்.

"கர்த்தருடைய போஜனபந்தி" என்பது என்னவென்று இப்பொழுது நாம் பார்க்கலாம். அது திரளான அளவிலான தெய்வீகச் சத்தியங்கள் திரளாய்ப்

பரப்பப்பட்டுள்ள பந்தியாகும் - ஜீவ அப்பம், ஏற்றக்கால சத்தியங்கள், தேன்கூட்டில் தேன், உச்சிதமான பால் மற்றும் திராட்சரசம் மற்றும் பளிங்கைப்போல் தெளிவான ஜீவத் தண்ணீர் வைக்கப்பட்டுள்ள பந்தியாகும். (யோவான் 6:32-35; மத்தேயு 24:45; சங்கீதம் 19:10; ஏசாயா 55:1; வெளிப்படுத்தல் 21:6; 22:1). நீதியின்மேல் பசிதாகமுள்ள அனைவருக்காகவும் அது பரப்பிவைக்கப்பட்டுள்ளது மற்றும் அதினிடத்திற்கு வருபவர்கள் பாக்கியவான்களாய் இருப்பார்கள்; ஏனெனில் அவர்கள் திருப்தி அடைவார்கள்; அவர்கள் திரளாய்ப் போஷிக்கப்பட்டு, மிகுதியாய்த் திருப்திப்படுத்தப் பட்டிருப்பார்கள் மற்றும் அவர்களது ஆத்துமாக்கள் கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும். (ஏசாயா 55:1, 2; மத்தேயு 5:6; சங்கீதம் 22:26)

கர்த்தருடைய இந்தப் போஜனபந்தியானது, அவரது பரிசுத்தவான்களுக்காக, அவரது சபைக்காக, சுவிசேஷயுகத்தினுடைய ஆரம்பம் முதற்கொண்டு பரப்பிவைக்கப்பட்டுள்ளது; அந்தப் போஜனபந்தியில் எப்போதும், ஏற்றக்கால சத்தியங்கள் காணப்பட்டது; மற்றும் கர்த்தருடைய ஜனங்களில் சிலர், பரிமாறி வழங்குவதற்கென நியமிக்கப்பட்டிருந்தனர். உதாரணத்திற்கு யுகத்தினுடைய ஆரம்பத்தில் அப்போஸ்தலர்கள் பரிமாறி வழங்கினார்கள்; இவர்கள் கர்த்தருடைய ஜனங்களுக்கு முன்பாக ஏற்றக்கால சத்தியங்களை வைத்தது மாத்திரமல்லாமல், எதிர்க்காலத்திற்கெனச் சபைக்கு உணவைச் சேமித்தும் வைத்தார்கள். (2 பேதுரு 1:15, 19) இவர்களது ஊழியமானது முழுச் சபைக்கும், இன்றைய நாள்வரையிலும் விலையேறப்பெற்றதாய் இருந்துள்ளது. மேலும் யுகம் முழுவதிலும் அர்ப்பணிப்புமிக்க தேவமனிதர்கள், கர்த்தருடைய ஜனங்களை, அவரது போஜனபந்திக்கு அழைத்து, அந்தப் பந்தியிலுள்ள திரளானவைகளை அவர்களுக்கு வழங்கினார்கள்; மற்றும் பசியாய் இருந்தவர்கள் போஷிக்கப்பட்டனர் மற்றும் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

ஆனால் இப்பொழுதோ முடிவு, அதாவது யுகத்தினுடைய அறுவடைப் பகுதி வந்துள்ளது; அதாவது வருடத்தினுடைய செழிப்பான காலப்பகுதி வந்துள்ளது; இக்காலத்திலேயே தீர்க்கத்தரிசனம் மற்றும் வாக்குத்தத்தம் எனும் மொக்குகள் வளர்ந்து, தங்கள் பொன்னான கனியைக் கொணர்ந்து கொண்டிருக்கின்றன மற்றும் கர்த்தருடைய போஜனபந்தியானது, அதன் திரளானவைகளால் தத்தளிக்கின்றது. இது மாத்திரமல்லாமல் இப்பொழுது பிரசன்னமாகியுள்ள அறுவடையின் கர்த்தர், தமது வாக்குத்தத்தத்தின்படி வந்து, தம்முடைய ஜனங்களுக்குப் பரிமாறிக்கொண்டிருக் கின்றார். (லூக்கா 12:37) முற்காலங்களில் இல்லாத அளவுக்குத் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மற்றும் நோக்கங்களுடைய ஐசுவரியங்களும், கொழுமையும், முழுமையாய் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முன்பு ஒருபோதும் அறிந்திராத அளவுக்குத் தெய்வ காரியங்கள் முழு நிறைவுடன் சபைக்கு வெளிப்பட்டுள்ளது. இரட்சிப்பின் திட்டமானது, நமது பிரகாசமான நம்பிக்கைகளை/எதிர்ப்பார்ப்புகளை மிஞ்சும் அளவுக்கு, அப்படியானதொரு வசீகரத்திலும், முறைப்படியும் நம்முன் வைக்கப்பட்டுள்ளது; அது எல்லா விதத்திலும் முரண்பாடில்லாமலும், இசைவாயு முள்ளதான ஒரு திட்டமாகும்; அது - திட்டமிடுகின்றவரும், நடந்தேற்றுகின்றவரும், வெளிப்படுத்துகின்றவருமான மாபெரியவரால், மிக மேன்மையான கொள்கைகளின்

அடிப்படையிலும், துல்லியமான கணக்குடனும் மற்றும் ஒழுங்குடனும் யுகங்களினூடே இரகசியமாய்த் தீட்டப்பட்டுள்ளது; அதன் முழுமையிலும், அதன் சீரான அமைப்பிலும், அழகிலும் அது மிகவும் மகிமையானதாய் இருப்பதினால், திருப்தியடைந்த ஆத்துமாவானது, அதனோடு எதையாகிலும் கூடச்சேர்ப்பது என்பது அதன் சிறப்பினைக் கெடுப்பதாகவே இருக்குமென உணர்ந்து, சந்தோஷத்தோடே பின்வருமாறு கூறுவார்கள்: "இது கர்த்தருடைய செய்கையாகும் மற்றும் இதைக் கர்த்தர் வெளிப்படுத்தியுள்ளார் மற்றும் இது நம்முடைய கண்களுக்குப் பிரம்மிப்பாயுள்ளது;" தம்முடைய ஞானத்தையும், அன்பையும், கிருபையையும் குறித்து, "கர்த்தர் கூறியுள்ளவைகளைக்காட்டிலும், இன்னும் அதிகமாய்ச் சொல்லுவதற்குண்டோ?" தேவனுடைய புத்திரர்களும், சுதந்தரர்களுமானவர்களிடத்தில் தம்முடைய கிருபையின் ஐசுவரியங்களையும், தம்முடைய அன்புடன் கூடிய இரக்கத்தின் ஐசுவரியங்களையும் சித்தரிப்பதற்கும் மற்றும் பிரகடனம் பண்ணுவதற்கும் கர்த்தர் மனித பிரதிநிதிகளைப் பயன்படுத்தியிருந்தபோதிலும், இன்னுமாகப் போஜனபந்தியிலுள்ள அனைவரும் அவரோடுகூட, பந்தியிலுள்ளவர்களுக்கு ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வதற்கென உடன்வேலையாட்களாகக் காணப்படுவதற்குக் கர்த்தர் அனுமதித்திருந்தபோதிலும், திட்டத்தின் விஷயத்திலும், அதை நிறைவேற்றும் விஷயத்திலும் தேவனுக்கே அனைத்து மகிமைகளும் சேருகின்றதாய் இருக்கும் மற்றும் திட்டத்தினை வெளிப்படுத்தின விஷயத்திற்காகவும், அதை நமது இருதயங்கள் ஏற்றுக்கொள்வதற்கும், அதை நமது கண்கள் காண்பதற்கும், அதை நமது காதுகள் கேட்பதற்கும் மற்றும் அதை நமது நாவுகள் அறிக்கைப்பண்ணுவதற்குமென அபிஷேகித்த விஷயத்திற்காகவும், நமது கர்த்தரும், தலையுமானவருக்கே ஸ்தோத்திரம் உரித்தாகுகின்றதாயிருக்கும். உன்னதத்திலுள்ள தேவனுக்கும், ஆட்டுக்குட்டியான வருக்கும் என்றென்றும், சதாகாலங்களுக்கும் மகிமை உண்டாவதாக! முழுப்பூமியும் அவரது மகிமையினால் நிரம்பியிருப்பதாக!

தேவனை அறிந்துகொள்வது என்பது ஜீவனும், சமாதானமுமாய்க் காணப்படுவதினால், தேவனை அறிந்துகொள்வதற்கும் மற்றும் நீதியின் மீதும் பசிதாகம் உள்ளவர்கள் அனைவருக்கும் திருப்திகரமான பங்கினால் திரளாய் நிறைந்து பரப்பப்பட்ட நிலையில் கர்த்தருடைய போஜனபந்தி காணப்படுகையில், தேவனுடைய ஜனங்களை வரவேற்கும் வேறு அநேக போஜனபந்திகளும்கூடப் பரப்பப்பட்டுள்ளன. போப்மார்க்கமானது, அதன் போஜனபந்தியைக் கொண்டுள்ளது மற்றும் அதில் கொஞ்சம் அரைகுறை சத்தியங்களும், பூசைபலி, நித்தியமான சித்திரவதை, உத்தரிக்கும் ஸ்தலம் மற்றும் மரியாளின் சிலை வணக்கம், பரிசுத்தவான்களாகப் பாவிக்கப்பட்டுள்ள சிலரின் சிலை வணக்கம், குருமார்களின் காதுகளில் பாவங்களை அறிக்கையிடுதல், குருக்களின் திட்டங்களுக்கு உடனடியாய்க் கீழ்ப்படிதல் முதலான தீட்டான உபதேசங்கள் திரளாயும் காணப்படுகின்றன. புராட்டஸ்டண்டினர்களும் தங்களின் பல்வேறு விதமான போஜனபந்தியைப் பெற்றிருக்கின்றனர்; அதில் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமாக மீட்பு, ஞானஸ்நானம்,

தேவனிடத்திலும், அவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டுள்ள வார்த்தைகளிலும் விசுவாசம் முதலான சில சத்தியங்கள் காணப்படுகின்றன; ஆனால், அந்தோ பரிதாபம்! அவர்கள் பெற்றிருப்பதான அரைகுறையான சத்தியங்கள் அனைத்தும் அசுசிப்பண்ணப்பட்டுள்ளவைகளாக இருக்கின்றன; ஏனெனில் "(அவர்களது) போஜன பீடங்களெல்லாம் வாந்தியினாலும், அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது; சுத்தமான இடமில்லை" என்று தீர்க்கத்தரிசி கூறுகின்றார் (மற்றும் அவரது வார்த்தைகள் உண்மையாகவும் உள்ளது; ஏசாயா 28:8). இந்தப் போஜன பீடங்களானது, புறக்கணிக்கப்பட்டக் காரியங்களினால் - சிந்தித்துப்பார்க்காமலேயே திருப்தியடைந்த நிலையில் முற்காலங்களில் புசித்து விழுங்கப்பட்ட பழைய தப்பறைகளினால் நிரம்பியுள்ளது. ஆனால் இந்த நியாயத்தீர்ப்பின் காலங்களினுடைய (எபிரேயர் 12:26, 27) அசைக்கப்படுதல்களானது, ஜனங்களை நலிவடையச் செய்கின்றது; மற்றும் இதனால் அவர்களால் நித்திய சித்திரவதை மற்றும் மனிதர்கள் பிறப்பதற்கு முன்னதாகவே, மனுக்குலத்தில் பெரும்பாலானவர்கள் நித்தியமான வேதனைக்கே முன்குறிக்கப்பட்டிருக்கின்றனர் போன்றதான பயங்கரமான உபதேசங்களைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எனினும் வெளிப்படையாய் மறுப்புத் தெரிவிப்பதற்கும், புறக்கணிப்பதற்கும் தைரியம் இல்லாமையின் காரணமாக, அவர்களது போஜனபீடங்களானது, புறக்கணிக்கப்பட்ட, நலம்கெடுக்கும் காரியங்களினால் அசுசிப்பண்ணப்பட்டுள்ளது; அவர்களது போஜனபீடங்கள் அனைத்தும் அசுத்தமாயிருக்கிறது.

இந்தத் தற்காலத்தின் "அசைவுகளானது", இந்தப் போஜனபீடங்களை அசுசிப்பண்ணத்தக்கதாக, குமட்டலை/வெறுப்புணர்வை உண்டுப்பண்ணுவதற்கு முன்னதாக, அருமையான கர்த்தருடைய ஜனங்களில் அநேகர், அங்கு உட்காருவதற்கும், நல்ல உணவை அதிலிருந்து தெரிந்தெடுப்பதற்கும், தேவனுடைய வார்த்தையாகிய ஊற்றிலிருந்ததான திரளான ஜீவத்தண்ணீரைக்கொண்டு, தப்பறையான விஷயங்களை முறிப்பதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இப்பொழுது அறுவடைக் காலம் வந்துள்ளப்படியாலும், பிரிக்கும் வேலை நடைப்பெறுகின்றபடியாலும் (மத்தேயு 13:30), தேவனுடைய உண்மையான ஜனங்கள் அனைவரும் இந்தப் போஜனபீடங்களிலிருந்து, கர்த்தர் இப்பொழுது பரிமாறிக் கொண்டிருக்கின்றதான, திரளான அறுவடையுள்ள போஜனபீடத்தினிடத்திற்கு அழைக்கப்படுகின்றனர். கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்ததின் காரணமாகவும், அசுத்தமான போஜனபீடங்களைப் புறக்கணித்ததாலும், அநேக சத்துருக்கள் உருவாகியுள்ளனர்; விசுவாச காதுகளை உடையவர்களும், கர்த்தருடைய போஜனபீடத்திற்கு வரும்படியான அழைப்பிற்குக் கீழ்ப்படிபவர்களும் பாக்கியவான்களாய் இருக்கின்றனர். இதைக் குறித்தே சங்கீதக்காரன் . . . "என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்; என் (ஆசீர்வாதத்தின்) பாத்திரம் நிரம்பி வழிகிறது" என்று

பாடியுள்ளார். (சங்கீதம் 23:5)

பாபிலோனுடைய அசுத்தமான போஜனபீடங்களைத் தவிர, இன்னும் வேறே போஜனபீடங்கள் உள்ளன. அவைகள் பேய்களினுடைய போஜனபீடங்களாக இருக்கின்றன; இந்தப் போஜனபீடங்களில், சகலவிதமான சூழ்ச்சிகரமானதும், வெளிப்படையானதுமான தீமையான உபதேசங்கள் காணப்படுகின்றன; இது தங்களை விலைக்கொடுத்து வாங்கின கர்த்தரையும்கூட மறுதலித்து மற்றும் வேதவாக்கியங் களைப் புரட்டி, வேதவாக்கியங்களுக்குத் தவறாய் அர்த்தம் கொடுத்து, அவைகளின் போதனைகளை நாசப்படுத்தி, மனிதத் தத்துவங்களை உட்புகுத்தும், மதத்திற்கு எதிரான நரகலான கொள்கைவாதிகளை உள்ளே கொண்டுவருகின்றது. "சாத்தானுடைய தலைச்சிறந்த படைப்பாகிய" போப்மார்க்கம்போன்றதான இந்தப் போஜனபீடங்களில் (பிரம்ம ஞானம்) தியோசோபி/theosophy, (ஆவியுலகக் கோட்பாடு) ஸ்பிரிட்டிசம் (spiritism), கிறிஸ்டியன் சைன்ஸ்/Christian science, (பரிணாமக் கொள்கை) எவலூஷன்/Evolution மற்றும் தேவனால் அனுப்பி வைக்கப்பட்டவரின் பலியினாலான மீட்புபற்றின உபதேசத்தை மறுதலிக்கிறதும், வேறு ஏதாகிலும் வழியின்மூலம் எப்படி நித்திய ஜீவனை அடைந்திடலாம் என்று மனிதனுக்குப் போதிக்க முற்படுகின்றதுமான மனித தத்துவத்தின் பல்வேறு பாகங்கள் அனைத்தும் அடங்குகின்றன. இவைகள் அனைத்தும்தான் பேய்களினுடைய போஜனபீடங்களாக இருக்கின்றன மற்றும் இவைகளுக்கு எதிராகவே, "நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும், பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாய் இருக்கக்கூடாதே" என்று கூறி அப்போஸ்தலன் நம்மை எச்சரிக்கின்றார்.

அந்தோ பரிதாபம்! சிலர் கர்த்தருடைய போஜனபந்திக்கான அழைப்பை ஏற்றுக்கொண்டு, அதில் புசித்து, கர்த்தர் நல்லவர் என்று கண்டுகொண்ட பிற்பாடு, கர்த்தருடைய போஜனபந்தியிலிருந்து, பேய்களுடைய போஜனபந்தியினிடத்திற்குத் திரும்புகின்றனர், அதுவும் தாங்கள் இப்படி விரும்பும்போது போனாலும், பின்னர் வந்து, மீண்டுமாக தாங்கள் கர்த்தருடைய போஜனபந்தியினிடத்திற்கு வரவேற்கப்படுவார்கள் என்றும், இப்படியாய்ப் போய்வந்து காணப்பட்டு, இரண்டிலும் பங்குகொண்டிருக்கலாம் என்றுமுள்ள எண்ணங்களில் காணப்படுகின்றனர். இவர்கள் கூறுவது என்னவெனில்... ஓ! ஆம் நாங்கள் குறுகின மனமுடையவர்களும், பலவீனமுடையவர்களுமல்ல; ஒரு பந்தியில் காணப்படுபவைகளைத்தவிர, மற்றவைகள் எதையும் ருசித்துப் பார்க்கமாட்டோம் என்று சொல்லுவதற்கு நாங்கள் பயமுடையவர்கள் அல்ல. கர்த்தருடைய போஜனபந்தி என்பது உண்மையில் மிகவும் நல்லதுதான்; எனினும் மற்றப் போஜனபந்திகளிலும்கூட நல்லவைகள் காணப்படுகின்றன மற்றும் நாங்கள் அனைத்தையும் ருசித்துப்பார்ப்போம்; ஆம், "எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்வோம்;" நலமானவை எந்தப் போஜனபீடத்தில் காணப்பட்டாலும் பரவாயில்லை, அதை நாங்கள் பிடித்துக்கொள்வோம்.

அந்தோ பரிதாபம்! இப்படிப்பட்ட மனப்பான்மையே அநேகரிடம் காணப் படுகின்றது மற்றும் இப்படிப்பட்டவர்கள், "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" என்பதை மறந்துபோனவர்களாகக் காணப்படுகின்றனர்; (நீதிமொழிகள் 16:18) மேலும் இப்படிப்பட்டவர்களின் வழியிலுள்ள தவற்றினை, இவர்களுக்கு உணர்த்துவதற்கென உண்மையுள்ள சகோதரர்கள் ஏறெடுக்கும் பிரயாசங்கள் விருதாவாய்ப்போகையில், இவர்கள் கர்த்தருடைய போஜனபந்தியில் பரிமாறப்பட்டுள்ளதான உணவின்மீதான விருப்பமின்மையை வெளிப்படுத்துகிறதற்கு ஆரம்பிப்பார்கள் மற்றும் கர்த்தருடைய போஜன பந்தியினிடமிருந்து இவர்கள் முழுவதும் சீக்கிரத்தில் விலகிபோய்விடுவார்கள் என்பதும் அதிகமதிகமாய் உறுதியாகிறது. பேய்களுடைய போஜனபந்தியிலுள்ள பாதகமான, விஷத்தன்மையுள்ள பதார்த்தங்களானது, சீக்கரத்தில் சுவையைக் கெடுத்து, ஆவிக்குரிய ஆரோக்கியத்தை வலுவற்றதாக்கி, நலமல்லாதவைகள்மீது விநோதமான விருப்பங்களை உண்டுபண்ணிவிடுகின்றது; மேலும் ஆவிக்குரியதில் நோயுற்ற ஆத்துமாவானது, கர்த்தருடைய போஜனபீடத்தில் புசிப்பதற்கான மனநிலையினைக் கொண்டிருப்பதில்லை. இப்படிப்பட்டவர்கள் புசிக்க வேண்டுமெனக் கர்த்தரும் விரும்புவதில்லை; ஏனெனில் கர்த்தருடைய போஜனபந்தியினிடத்திலிருந்து இப்படிப்பட்டவர்கள் விலகுகையில், இவர்கள் கிருபையின் ஆவியை இகழ்ந்தவர்களாக இருக்கின்றனர் மற்றும் இப்படியான போக்கைக்கொண்டிருக்கையில், இவர்கள் முற்றிலுமாய் விலகிப்போய்விட வேண்டும்; ஏனெனில் "நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும், பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாய் இருக்கக்கூடாதே." "இரண்டு எஜமான்களை உங்களால் திருப்திபண்ணக்கூடாது."

கர்த்தருடைய போஜனபந்தியினிடத்திலிருந்து, பேய்களினுடைய போஜன பந்தியினிடத்திற்குப் போகும் காரியத்தினை வெளிப்படையாய்ச் செய்கிறவன், தெய்வீக ஏற்பாட்டினுடைய தாராளத்தில், தான் திருப்திகொள்ளவில்லை என்றும், தேவனுடைய மாபெரும் எதிராளியாகிய பிசாசின்மேல் தனக்கு இன்னும் கொஞ்சம் மதிப்புக் காணப்படுகின்றது என்றும் சொல்லுகிறவனாய் இருப்பான். இப்படியாக அவன் அநீதியுடன் ஐக்கியம் வைத்திருப்பதன் மூலமாக தேவனுக்கு, தான் உண்மையற்றி ருப்பதை நிரூபிப்பவனாய் இருப்பான். "எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்" எனும் வேதவாக்கியத்தினை மேற்கோளிடுகையில், இதோடுகூடத் தொடர்ந்து இடம்பெறும் வார்த்தை களான, "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலகுங்கள்" என்பதை மறந்துபோய்விடுகிறான். (1 தெசலோனிக்கேயர் 5:19-22) நாம் செய்வதற்கு அநேகம் காரியங்கள் உள்ளன மற்றும் கர்த்தருடைய போஜனபந்தியிலுள்ள உணவினுடைய திரளான பலன்கள் நலமானவை என்று சோதித்து அறிந்துகொள்வதும், அவற்றை நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கும், ஆரோக்கியத்திற்குமெனச் சொந்தமாக்கிக்

கொள்வதும், அவற்றை மற்றவர்களுக்கும் பரிமாறுவதும்தான் நாம் செய்ய வேண்டியவையாகும். கர்த்தர் நல்லவர் என்று நாம் ருசித்துப்பார்க்கின்றோம் மற்றும் அவரது உபதேசங்கள் ஆரோக்கியமானவைகள் என்று சோதித்து அறிந்துகொள்கின்றோம். ஆனால் பேய்களின் உபதேசங்களை விட்டுவிலகுவதைத் தவிர, மற்றப்படி அதை வைத்துக்கொண்டு செய்கிறதற்கு எதுவுமில்லை மற்றும் அந்த உபதேசங்களினால் வசப்படுத்தப்பட்டுக் கெட்டுப்போனவர்களில் உதாரணமாய் விளங்கின அவ்வுபதேசங்களின் மோசமான விளைவுகளைக் குறித்து நாம் மற்றவர்களுக்கு எச்சரிப்பு வழங்கமுடியும்.

எந்தத் தேவனுடைய பிள்ளையும், கர்த்தருடைய போஜனபந்தியில் புசித்தப் பிற்பாடு, பார்வையிலேயே/உடனடியாகக் கர்த்தருடைய பந்தியிலிருந்து வேறுபட்டதான பேய்களினுடைய பந்தியினை அடையாளங்கண்டு கூறமுடிகின்ற வனாகக் காணப்பட வேண்டும். எந்த ஓர் அமைப்பினுடைய அஸ்திபாரமும் எளிதில் அடையாளம் கண்டுகொள்ளப்படலாம் மற்றும் உண்மையான அஸ்திபாரமென ஒன்று மாத்திரமே உள்ளது, அது கிறிஸ்துவாகிய ஈடுபலியாகும். "வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும்கூடாது." (1 கொரிந்தியர் 3:11; 15:3) சத்தியத்தினால் திருப்தியடைந்துள்ளதான எந்த ஓர் ஆன்மாவும், உடனடியாகத் தப்பறையின் அவலட்சணத்தைக் கவனித்துக்கொள்ள வேண்டும். இசை கவிஞனின் செவியானது, இசையின் இனிமையான ஸ்வரங்களுக்குப் பழக்கப்பட்டிருப்பதின் காரணமாக, உடனடியாக முரண்பாடான ஸ்வரங்களை அடையாளம் கண்டுகொள்வதுபோன்று அல்லது கலைஞனின் கண்களானது நுட்பமான வடிவங்களுக்கும், நிறங்களுக்கும், ஒழுங்கிற்கும் பழக்கப்பட்டிருப்பதினால், வேலைப்பாட்டிலுள்ள குறைப்பாட்டினை உடனடியாக அடையாளங்கண்டு கொள்வதுபோன்று, தெய்வீகத் திட்டத்தினுடைய அருமையான இசைவினாலும், பூரணமான மற்றும் நுட்பமான ஒழுங்கினாலும், முறைமையினாலும் பயிற்றுவிக்கப் பட்டதான மனமும், இருதயமும்கூட, உடனடியாகத் தப்பறையினுடைய முரண்பாட்டி னையும் அடையாளங்கண்டுகொள்கின்றது மற்றும் வேறெதிலும் திருப்திகொள் கிறதில்லை மற்றும் வேறெதிலும் மிகுதியாய் மகிழ்வுறுவதுமில்லை; இந்தத் "தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தினை" பெற்றிருக்கின்றதான ஆன்மாவானது, தப்பறையினுடைய தாக்குதல்களையும், வெட்கம்கெட்ட தாக்குதல்களையும் அல்லது சூழ்ச்சிகளையும் சமாளித்து, நிலைநிற்பதற்கென்று, வேறெந்த ஆயத்தங்களையும் செய்ய வேண்டியதில்லை. "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்;" கர்த்தருக்குள் இளைப்பாறி, திருப்தியடையுங்கள்; இந்தப் பொல்லாத நாளினுடைய கொள்ளைநோய்கள் அனைத்திற்கும் எதிரான பாதுகாப்பாய்க் காணப்படும் ஆவிக்குரிய ஆரோக்கியமும், வலிமையும்

வேண்டுமெனில், கர்த்தருடைய போஜனபந்தியில் மாத்திரம் போஷிக்கிறவர்களாய் இருங்கள்.

கர்த்தருடைய போஜனபந்தியிலிருந்து புசித்துப் பிற்பாடும், அதில் திருப்தியடை யாதவர்களுக்குத் தீர்க்கதரிசியின் மூலமான கர்த்தருடைய வார்த்தைகள் பொருந்துகின்றதாய் இருக்கின்றது: "வானங்களே, கேளுங்கள்; பூமியே, செவிகொடு; கர்த்தர் பேசுகிறார்; நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன்; அவர்களோ எனக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினார்கள். மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்; இஸ்ரயேலோ அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது என்கிறார்." (ஏசாயா 1:1-6) மாடும், கழுதையும் எங்குப் போய்ப் போஷிக்கப்பட்டாலும், மீண்டும், மீண்டுமாக தன் எஜமானிடத்திற்கும், முன்னணையினிடத்திற்கும் திரும்புவதற்கு அறிந்திருக்கின்றது. இப்படியாக மாடும், கழுதையும் காணப்படுவதின் வாயிலாக அவைகள், கர்த்தருடைய போஜனபந்தியை விட்டுவிட்டுப் பேய்களுடைய போஜனபந்தியில் வைக்கப்பட்டுள்ளதான உணவுகளைச் சோதித்துப்பார்ப்பதற்கென அல்லது நலமானவைகள் அசுத்தமானவைகளுடன் தொடர்புக்குள் வந்தபடியால், அந்த நலமானவைகள் அசுத்தமானதாகிப்போய், அவைகள் வைக்கப்பட்டிருக்கின்றதான அசுத்தமான போஜனபந்தியினிடத்திற்குத் திரும்புகின்றதான சில கர்த்தருடைய ஜனங்களைக் காட்டிலும் பகுத்தறிவு உடையவைகளாக இருக்கின்றன என்பதை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இப்படிப்பட்டவர்கள் தம்முடைய போஜனபந்தியினிடத்திற்குத் திரும்புவதற்குக் கர்த்தர் அனுமதிப்பதில்லை என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை; "நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும், பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர் களாய் இருக்கக்கூடாதே." ஏன்? ஏனெனில் சம்பூரணமாய்ப் போஷிக்கப் படுகின்றதும், கர்த்தர்தாமே இடைக்கட்டிக்கொண்டு பரிமாறிக் கொண்டிருக்கின்றதான கர்த்தருடைய போஜனபந்தியினிடத்திலிருந்து விலகிப்போவதன்மூலமாக, இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்குத் தாங்கள் உண்மையற்றிருப்பதை வெளிப்படுத்து கின்றவர்களாகவும், அவரது கிருபையின் ஐசுவரியங்களை இழிவாகப் பார்ப்பவர்களாகவும், கிருபையின் ஆவியை நிந்திப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். ஒருமுறை பிரகாசிக்கப்பட்டப் பிற்பாடு, இப்படியாய்த் துணிகரமாய்ச் செய்கின்றவர்கள், கலகக்காரர்களாகிய இஸ்ரயேலரால் அடையாளப்படுத்தப்படுகின்றதான பாவமுள்ள வகுப்பாராய் இருக்கின்றனர். இவர்களைத் தீர்க்கதரிசி குறிப்பாய்ப் பின்வருமாறு விவரிக்கின்றார்: "ஐயோ, பாவமுள்ள ஜாதியும், அக்கிரமத்தால் பாரஞ்சுமந்த ஜனமும், பொல்லாதவர்களின் சந்ததியும், கேடு உண்டாக்குகிற புத்திரருமாயிருக்கிறார்கள்; கர்த்தரைவிட்டு இஸ்ரயேலின் பரிசுத்தருக்குக் கோபமுண்டாக்கி, பின்வாங்கிப் போனார்கள். தலையெல்லாம் வியாதியும், இருதயமெல்லாம் பலட்சயமுமாய் இருக்கிறது. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அதிலே சுகமேயில்லை; அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுமுள்ளது; அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது." (ஏசாயா 1:4, 5, 6)

வீணான தத்துவ ஞானங்கள், மனித பாரம்பரியங்கள் மற்றும் கற்பனைகள் அனைத்தையும் தவிர்த்துவிட்டு, தெய்வீகத் திட்டத்தினை மாத்திரமாக நாம் ஆராய்வது என நமது ஆராய்ச்சியினை எல்லைக்குட்படுத்துவதினால் நாம் குறுகிய மனமுடையவர்களல்ல; ஏனெனில் தெய்வீகத் திட்டத்தினுடைய எல்லையானது மீட்பைப்போன்று பரந்ததாகவும், அதன் ஞானம் மிகவும் துல்லியமானதாகவும், அதன் கோட்பாடு மிகவும் ஆழமானதாகவும் காணப்படுகின்றது. வேதவாக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதான தெய்வீகத் திட்டத்தினை கற்றுக்கொண்டுள்ளபடியால், அதன் ஆவியினால் ஊக்குவிக்கப்படுகிறவர்கள் யாவரும் அதன் காரியங்களை, முழுத்தெய்வீக வெளிப்படுத்தல்களினிடத்துக்குப் பொருத்திப்பார்க்கும் சிலாக்கியமுடையவர்களாய் இருக்கின்றனர் மற்றும் அதன் உதவியினாலும், தேவனிடத்தினாலான ஜெபம் மற்றும் ஐக்கியத்தினுடைய பரிசுத்தமான தாக்கத்தினாலும், ஆவிக்குரிய காரியங்களில் பயிற்றுவிக்கப்படுகின்றனர் மற்றும் இதன் காரணமாக நாம் இசைக்கவிஞனின் செவிகளுடன் பரலோக இசையின், இனிமையான ஸ்வரங்களையும், அதன் துல்லியமான தாளத்தையும் உணர்ந்துகொள்ள முடிகின்றது மற்றும் கலைஞனுக்குரிய கண்களுடன் தெய்வீக ஞானம் மற்றும் கிருபையின் அருமையான மற்றும் நேர்த்தியான வண்ணத்தோற்றத்தினைக் காணமுடிகின்றது.

தேவனால் ஏற்றக்காலங்களில் வெளிப்படுத்தப்பட்டதும், "உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருந்ததும்," பரிசுத்தவான்களுக்கு எப்போதும் பிரியமானவைகளாகக் காணப்படுவதுமான, "தேவனுடைய ஆழங்களுக்கு" நேரான கர்த்தருடைய வழிகாட்டுதலைப் பின்பற்றுவதினால், ஓ! நாம் குறுகின மனமுடையவர்களாகக் காணப்படுவதில்லை, இல்லை! நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? பேய்களும், அவனுடைய போஜனபந்திகள் அனைத்தும் அழிக்கப்படுகையில், பரிசுத்தவான்களும், தேவதூதர்களும் குறுகின மனமுடையவர்களாகக் காணப்படுவார்களா? பொல்லாங்கான அனைத்தையும் நாம் விட்டுவிலகுவோமாக மற்றும் தேவனில் பிரியம்கொள்வோமாக மற்றும் அவரது திரளான கிருபைகளினாலான ஆறுதலில் திருப்திக்கொள்வோமாக. நமது இருதயங்களினுடைய வார்த்தைகளானது எப்போதும் பின்வருமாறு காணப்படுவதாக:

"இளைப்பாறுதலிலிருந்து விலகிப்போய், இனியும் நான் சுற்றித் திரியேன்,
பேரின்பத்திற்காக நான் விருதாவாய்த் தேடித்திரியேன்;
என் ஆத்துமா இல்லத்தில் திருப்திக்கொண்டுள்ளது;
கர்த்தரே என் பங்காய் இருக்கின்றார்."

# நினைவுகூருதல் இராப்போஜனம்

ஜியோர்ஜியாவில் (Georgia) சத்தியத்தில் காணப்படும் நண்பர்கள் சிலர், தாங்கள் பாபிலோனிலிருந்து வெளியே வந்ததுமுதல் நினைவுகூருதலை ஆசரிக்கவில்லை என்றும் எழுதி, இதற்கான தங்கள் காரணத்தையும் பின்வருமாறு கொடுக்கின்றனர்: "எங்கள் மனங்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, ஆனால் எங்களுடைய மாம்சம் இப்படியாக இல்லை மற்றும் சுற்றியிருக்கும் சூழ்நிலைகளின்கீழ் முடியவும் செய்யாது என்று நாங்கள் எண்ணுகின்றோம். நாங்கள் ஏழைகளாக இருக்கின்றோம் மற்றும் எங்களைச் சார்ந்திருக்கும் பெரிய குடும்பங்களையும் பெற்றிருக்கின்றோம் மற்றும் அவர்களை எங்களால் கைவிட்டுவிடவும் முடியாது. ஆகையால் பெரிதும் விரும்பப்படும் இந்த ஆசீர்வாதத்திடமிருந்து நாங்கள் விலகியிருக்கின்றோம்."

சகோதரர்கள் சில தவறான புரிந்துகொள்ளுதலில் காணப்படுகின்றனர் என்று நாம் புரிந்துகொள்கின்றோம். நமது மாம்சம் பூரணப்படுவதுவரைக்கும் ஒருவேளை காத்திருப்போமானால், நம்மில் எவராலும் நினைவுகூருதல் இராப்போஜனத்தில் பங்கெடுக்க முடியாது; ஏனெனில் இந்த யுகத்தில் சபை, மாம்சத்தில் பூரணத்தினை எதிர்ப்பார்த்திடக்கூடாது; நமது பூரணமானது, நாம் உண்மையுள்ளவர்களாய் இருப்போமானால், முதலாம் உயிர்த்தெழுதலில் ஆவிக்குரிய ஜீவிகள் என்றதிலேயே காணப்படும். இப்பொழுது புதிய சுபாவம், புதிய மனம் (அ) சித்தம் எனும் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கின்றோம்; இந்த மண்பாண்டங்களானது ஏறக்குறைய பாவத்தினால் கெடுக்கப்பட்டு, கறைபடுத்தப்பட்டே காணப்படுகின்றது. ஆனால் உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளின்கீழ், (நமது சிறந்த பிரயாசங்களுடன்கூட உள்ள) நமது பூரணமான சித்தங்களை, தேவன் நமது முழுமையான பூரணமென்று ஏற்றுக்கொள்வதற்கு ஒப்புக்கொண்டுள்ளார். இப்படியானவர்கள் அனைவரும் அப்போஸ்தலனோடுகூட "நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறுகின்றது" - நாம் "மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கின்றோம்", முடிந்தமட்டும் நடக்கின்றோம் என்று கூறிடமுடியும்.

அர்ப்பணிப்பு என்பது நமது குடும்பங்களைப் புறக்கணிப்பதையோ, விட்டுவிடுவதையோ குறிப்பதாகாது; தேவனுடைய மற்றும் நம்முடைய எதிராளிகளானவர்கள், நம்மைக் கொல்லுவதற்கோ, சிறைப்பிடித்துச் செல்லுவதற்கோ, சிறையில் அடைப்பதற்கோ, தேவனுடைய வழிநடத்துதலில் அனுமதிக்கப்பட்டு, இப்படியாக வலுக்கட்டாயமாக (குடும்பத்திற்கான) நமது பராமரிப்பினைத் தடுக்கவோ அல்லது நம்மைப் (குடும்பத்திடமிருந்து) பிரிக்கவோ முற்பட்டாலொழிய, மற்றபடி, இதற்கு

வாய்ப்பில்லை; ஆனால் இப்படியாகவே இருண்ட யுகங்களில் காரியங்கள் காணப்பட்டன. மற்றபடி நமது குடும்பங்களுக்கு நியாயமான பராமரிப்பினைக் கொடுப்பதே, தேவனுடைய சித்தம் என்றும், நமக்கான கடமை என்றும் தேவன் நமக்குக் கற்பித்துள்ளார்.

கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணிப்பு என்பது தேவனுடைய சித்தத்திற்குள், நம்முடைய சித்தத்தை முழுமையாய் ஒப்புக்கொடுத்துவிடுவதையும், நம்முடைய சரீரங்களைப் புதிய சித்தத்திற்குள் முழுமையாய் ஒப்புக்கொடுத்துவிடுவதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இது கர்த்தரின் வார்த்தையினுடைய வழிகாட்டுதலின் கீழ் நம்மால் முடிந்தமட்டும், பாவங்களைக் களைந்துபோடுதலையும், தினந்தோறும் மற்றும் மணிநேரந்தோறும் பரிசுத்த ஆவியினை அதன் கனிகள், மலர்களாகிய சாந்தம், நற்குணம், பரிசுத்தம், இரக்கம் - அன்பு ஆகியவற்றுடன் வளர்த்தி, விருத்தியாக்குதலையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

ஆகையால் அருமை சகோதரர்களே விசுவாசத்தில் தேவ ஆட்டுக்குட்டியானது நம்முடைய பாவங்களுக்காக அடிக்கப்பட்டுள்ளது என்பதையும், அவரது பலியினுடைய புண்ணியமானது, தேவனுடைய பார்வையில் நம்மைப் பாவங்களினின்று மூடுகின்றது மற்றும் சுத்திகரிக்கப்பட்டதாகக் கருதப்படச்செய்கின்றது என்பதையும் உணர்ந்துகொள்ளுங்கள்; இப்படியாக விசுவாசித்து, இருதயங்களும், சித்தங்களும் கர்த்தருக்கு முழுமையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நிலையில், அவரது பந்தியினிடத்திற்கு வந்து, சாந்தத்துடனும், திடமனதுடனும் அவரது அடையாளங்களில் பங்கெடுங்கள்.

* * *

நீசான் 14-ஆம் தேதி தொடர்புடையதாக, பல்வேறு கேள்விகள் நம்மிடம் கேட்கப்படுகின்றது; இக்கேள்விகள் அனைத்துமே யூதர்களால் பஸ்கா என்று புரிந்துகொள்ளப்பட்டிருப்பது, பஸ்கா பண்டிகையையே ஒழிய, நாம் ஆசரிக்கின்றதும், 14-ஆம் தேதியில் இடம்பெறுகின்றதுமான ஆட்டுக்குட்டியின் அடிக்கப்படுதல் இல்லை என்பதை அடையாளம் கண்டுகொள்ளுதலில் தவறுவதினாலேயே எழும்புகின்றது. யூதனைப் பொறுத்தவரையில் 14-ஆம் தேதி என்பது, பஸ்காவிற்கான ஆயத்தநாள் மாத்திரமேயாகும் மற்றும் ஆட்டுக்குட்டி புசிக்கப்படுவதும், விசேஷமாக அதன் அடிக்கப்படுதலும், அந்த ஆயத்தத்தின் ஒரு பகுதி மாத்திரமேயாகும். நியாயப்பிரமாணத்தின்படி ஆட்டுக்குட்டியானது நீசான் 14-ஆம் தேதியன்று, மாலையில் - அல்லது சொல்லர்த்தமாகவே சொல்ல வேண்டுமெனில் சாயங்காலங்களுக்கு நடுவில் அடிக்கப்பட வேண்டும். ஆகவே நியாயப்பிரமாணத்தின்படி ஆட்டுக்குட்டியானது 14-ஆம் தேதி, அதாவது 13-ஆம் தேதி மாலை ஆறு மணிக்குமேல் எந்த ஒருவேளையிலாவது அடிக்கப்பட்டு, புசிக்கப்படுகின்றது.

பஸ்காவைப் புசிப்பதற்கு ஆயத்தமாக, பாவமாகிய - புளிப்பு - யாவற்றையும் களைந்துபோடுவதற்கு நம்மில் யாவரும் மறவாமல் இருப்போமாக. "மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசீயும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்." (2 கொரிந்தியர் 7:1; 1 யோவான் 1:7) இப்படியாக மீதி ஜீவிதம் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையாக இருக்கும்.

புளிப்பானது போலியான உபதேசத்தை மாத்திரமே அடையாளப்படுத்துகின்றது என்று மிகவும் தவறாய் எண்ணிவிடாதிருங்கள் (மத்தேயு 16:6-12); புளிப்பானது பொல்லாப்பான தன்மைகளைக்குறிக்கின்றது என்று அப்போஸ்தலன் அர்த்தம் கொடுப்பதை நினைவில்கொள்ளுங்கள். பொல்லாத தன்மைகள் என்பது (மிகவும் கொடிதான பொல்லாப்பாகிய) திருட்டு, பொய் மற்றும் கொலைப்பாதகம் எனும் பொல்லாப்பை மாத்திரமல்லாமல், பேரளவில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக் கின்றதானவர்களைக் கூடத் தாக்குவதற்கு இடம்தருகின்றதான பொல்லாப்புகளாகிய "துர்க்குணம், பகைமை உண்டுபண்ணுதல், பொறாமைகள், வாக்குவாதங்கள், புறங்கூறுதல்கள், தீமை பேசுதல்கள் மற்றும் மாம்சம், பிசாசின் கிரியைகளையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. அன்பின் ஆவியானது நம்முடைய இருதயங்களுக் குள்ளாகக் கடந்துவந்து, துர்க்குணம் எனும் புளித்தமாவைக் களைந்துபோடுவதாக. 1 கொரிந்தியர் 5:6-8; எபேசியர் 4:31; கொலோசெயர் 3:8; தீத்து 3:3 ஆகிய வசனங்களைப்பார்க்கவும்.

"எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்." (1 கொரிந்தியர் 11:28) ஒவ்வொருவனும் தனது சொந்த ஆவிக்குரிய நலனைக் கருதி, இந்தத் தருணத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ள நாடிட வேண்டும். ஒவ்வொருவனும் மீண்டுமாக இரத்தத்தினால் சுத்திகரிப்பைப் பெற்றுக்கொண்டு, மரணம்வரையிலும் ஆண்டவருக்கு உண்மையாய்க் காணப்படுவதற்கான தனது அர்ப்பணிப்பைப் புதுப்பித்துக்கொள்வானாக. "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து, ஜெபம்பண்ணுங்கள்" எனும் ஆண்டவருடைய வார்த்தைகளையும்கூட நினைவில்கொள்வோமாக.

"சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்."(1 தெசலோனிக்கேயர் 5:25)

# ஜீவ அப்பம் நானே

## யோவான் 6:26-37

"இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே என்றார்."

அற்புதக்கரமாக அருளப்பட்டதான போஜனத்தைப் புசித்தப் பிற்பாடு ஜனக் கூட்டத்தார், தங்களுடைய வழக்கத்தின்படியே, தங்களது வெளி வஸ்திரங்களினால் தங்களைப் போர்த்திக்கொண்டு, புல்வெளியில் படுத்துக்கொண்டார்கள். இன்றும்கூடப் பாலஸ்தீனியாவிலுள்ள ஏழை மக்கள் பிரயாணம் பண்ணுகையில் இப்படியாகப் படுத்துக்கொள்வது வழக்கமாய்க் காணப்பட்டு வருகின்றது. காலையில் அவர்கள் தங்கள் உபகாரியைத் தேடினார்கள்; இயேசு அதே பகுதிகளில்தான் காணப்படுவார் என்பதை எதிர்ப்பார்த்தவர்களாகவும், அவர் தங்களுக்கு அற்புதகரமாய்க் காலை உணவையும் கொடுப்பார் என்று சந்தேகத்திற்கிடமின்றி எதிர்ப்பார்த்தவர்களாகவும் அவரைத் தேடினார்கள். ஆனால் அவரையோ (அ) சீஷர்கள் வந்ததான படகையோ காணமுடியாததினால், அவர்கள் எருசலேமை நோக்கி பிரயாணித்தவர்களானார்கள்; ஆனாலும் இன்னும் பிரபலமிக்க மேசியாவைக் கவனமாய்ப் பார்த்துக்கொண்டே பிரயாணித்தவர்களாய்க் காணப்பட்டனர். இறுதியில் கர்த்தரையும், அவரோடுகூட இருந்தவர்களையும் கண்டடைந்தபோது, தாங்கள் அவரைத் தேடினது குறித்துக் கூறினார்கள்; மற்றும் இங்கு நமது கர்த்தர் கொடுத்த பதிலோடுதான் நம்முடைய இன்றைய பாடம் ஆரம்பமாகுகின்றது . . . "நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் இலவசமாய் இரா உணவு புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள்" என்பதாக இயேசுவின் பதில் காணப்பட்டது. இங்குக் காரியங்களை மிகவும் அழுத்தித் தெரிவிக்காததிலுள்ள கர்த்தருடைய ஞானத்தை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது. அவர் அற்புதம் செய்தபோது, எந்தப் பிரசங்கமும் பண்ணவில்லை, மாறாக அற்புதம் அதன் தாக்கத்தினை ஏற்படுத்துவதற்கு அனுமதித்தார்; ஆனால் இப்பொழுதோ மற்றுமொரு அற்புதத்தை நிகழ்த்துவதற்குப் பதிலாக, தமது அற்புதத்தை ஆதாரமாகக்கொண்டு ஒரு பிரசங்கம் பண்ணினார்.

அவரது கண்டனமானது, கடுமையானதாக இல்லை, எனினும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருந்தது; அதாவது "அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல; நித்திய ஜீவன் கொடுக்கும் போஜன வகைக்காகவே நாடுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் ஆசீர்வாதத்திற்கான அவரது நியமிக்கப்பட்ட கருவியாகக் குறித்திருக்கின்றார், சுட்டிக்காட்டியிருக்கின்றார், முத்திரித்திருக்கின்றார்" என்று இயேசு கூறினார். இவ்வார்த்தைகளுக்குள் அடங்கியுள்ளதான படிப்பினையானது தெளிவானதாகவும், அன்றுபோல் இன்றும் பொருந்தக்கூடியதாகவே காணப்படுகின்றது. ஒட்டுமொத்த உலகத்திற்கான பிரச்சனை என்னவெனில், அவர்கள் ஒன்றில் பூமிக்கடுத்த இலட்சியம் உடையவர்களாகவோ (அ) இலட்சியம் ஏதும் இல்லாதவர்களாகவோ காணப்படுகின்றனர் மற்றும் இவை இரண்டிலும், இலட்சியம் ஏதும் இல்லாத நிலைமையே மோசமான நிலைமையாகக் காணப்படுகின்றது. இலட்சியம்

உடையவர்களும், வாழ்க்கைக்கென்று நோக்கம் உடையவர்களுமான ஜனங்கள்தான் எதையாகிலும் தங்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் நிறைவேற்றுகின்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் உலக ஞானிகளாக இருந்து, ஒருகாலத்தில் கொஞ்சம் புல் முளைத்த இடத்தில், அதிகம் புற்கள் முளைக்கப்பண்ணினவர்களாகவும், தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்கூடங்கள் கட்டினவர்களாகவும், பெரிய வியாபார நிறுவனங்களை நடத்தினவர்களாகவும் காணப்படுகின்றனர் மற்றும் சமுதாயப் பண்பாட்டினுடைய உயர்வுக்கு இவர்களுடைய பங்களிப்பு மிகவும் பெரியதாய் இருக்கின்றது. இவர்கள் ஐசுவரியவான்களாக வேண்டும் என்று (அ) ஞானவான்களாக வேண்டும் என்று (அ) புகழ்மிக்கவர்கள்/பிரபலமிக்கவர்களாக வேண்டும் என்று இலட்சியம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர் மற்றும் இந்த இலட்சியங்களானது, இவர்களைக் கிரியைச் செய்திட தூண்டுகின்றது.

ஆனால், அந்தோ பரிதாபம்! பெரும்பான்மையான மனுக்குலமானது, மிகவும் மோசமான நிலைமையில் காணப்படுகின்றனர்; காரணம் இவர்கள் இலட்சியம் ஏதும் அற்றவர்களாக, ஜீவிப்பதற்கெனப் புசிப்பவர்களாகவும், புசிப்பதற்கென ஜீவிப்பவர்களாகவும் மாத்திரம் காணப்படுகின்றனர்; அதாவது உயர் அறிவுள்ள விலங்குகளாக மாத்திரமே ஜீவிக்கின்றனர். அழிந்துபோகின்றதான உணவிற்காக இவர்கள் உழைக்கின்றனர்; இதுவே இவர்களது இலட்சியமாகவும், குறிக்கோளாகவும் காணப்படுகின்றது. மேலும் சிலசமயம் குடிப்பதற்காகவே உழைக்கின்றனர்; இது இவர்களிடமுள்ள அனைத்தையும் திருடிப்போட்டுவிடுகின்றதாய் இருக்கின்றது. இந்த யுகம் முழுவதுமுள்ள தம்முடைய பின்னடியார்களை உள்ளடக்கி, தாம் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள், தமது வாயின் வார்த்தைகளிலுள்ள செய்தியைக் கவனிக்கும்படிக்குக் கர்த்தர் விரும்புகின்றார்; அதென்னவெனில்: தற்காலத்தினுடைய சூழ்நிலைகளின்கீழ், அழிந்துபோகக்கூடிய உணவு என்பது அவசியமாய்க் காணப்பட்டாலுங்கூட, தம்முடைய பின்னடியார்களாகக் காணப்படுகின்றவர்கள், தங்கள் பரம பிதா தங்களது தேவை இன்னது என்று அறிவார் என்பதையும், கவலைக்கிடமான தேவையான நிலைக்குள் அனுமதிக்கமாட்டார் என்பதையும் நினைவுகூருவார்கள். இப்படியாக அழிந்துபோகிற உணவுக்காகக் கவலைக் கொள்ளாததினால், அவர்கள் தங்களது கவனத்தைப் பூமிக்குரியவைகள்மீது இல்லாமல், பரலோக இலட்சியங்களிடத்திற்குத் திருப்பிட முடியும்; இந்தப் பரலோக இலட்சியங்கள் என்பது, அவர்களால் விரும்பப்படுகின்றதான சிறந்தவைகளாகவும், பிரம்மாண்டமானவைகளாகவும் இருக்கின்றன; ஏனெனில் இப்படிப்பட்டதான பாக்கியமான ஜனங்கள், நித்தியமான ஜீவனுக்குரிய தெய்வீக ஆசீர்வாதத்தின் எல்லைக்குள் கடந்துவருகின்றவர்களாக இருக்கின்றனர். எந்த ஆகாரமானது, உணவானது இத்தகையதோர் (பரலோக) இலட்சியங்களை அவர்களிடத்தில் உருவாக்குகின்றதோ, மற்றும் அதன் திருப்திக்கு நேராக வழிநடத்துகின்றதோ, அதுவே உண்மையான ஆகாரமாகவும், அடையத்தக்கதாக அனைத்து முயற்சிகளை எடுப்பதற்குப் பாத்திரமான ஆகாரமாகவும் உள்ளது.

# நாங்கள் என்ன செய்ய வேண்டும்

பிரசங்கமானது அதன் பலனைக்கொணர்ந்தது; தாங்கள் இலட்சியமற்ற வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் (அ) தங்களது இலட்சியங்களானது பூமிக்கடுத்தவைகளாகவும் மற்றும் இதனால் தாங்கள் மரிக்கையில், தங்கள் இலட்சியமும் அழிந்துபோவதாகக் காணப்படுகின்றது என்பதை ஜனங்கள் உணர்ந்தவர்களாக, தெய்வீகத் தயவைக் கொண்டுவருகிறதும், தங்களுக்கு நித்திய ஜீவனை அருளுகின்றதுமான உணவைப் பெற்றுக்கொள்வதற்குத் தாங்கள் எந்தவகை கிரியையை நடப்பிக்கும்படிக்கு அவர் குறிப்பிடுகின்றார் என்று கர்த்தரிடம் கேட்டார்கள். தேவனுக்கேற்ற கிரியை என்று நீர் குறிப்பிடுகிறீரே அதென்ன? என்று அவரிடம் கேட்டார்கள். இக்காரியத்தையே அவர்கள் கேட்க வேண்டுமென்றும், மற்றும் இதற்கே பதிலளிக்க வேண்டுமென்றும் இயேசு விரும்பினார். தாம் தேவனால் அனுப்பப்பட்ட மேசியா என்று தம்மேல் அவர்கள் உடனடியாக விசுவாசம் வைப்பதே அவர்களுக்கான கிரியையாய் இருக்கின்றது என்று அவர் பதிலளித்தார். ஆனால் அவர்களோ: "உம்மை மேசியா என்று நாங்கள் எண்ணுவதற்கு, எங்களுக்கு என்ன ஆதாரம் இருக்கின்றது? நீர் மேசியா என்பதை நிரூபிக்கிறதான தீர்க்கமான அடையாளம் எதையாகிலும் எங்களுக்கு நடப்பியும், அப்போது நாங்கள் விசுவாசிப்போம். நீர் நேற்று சாயங்காலம் ஐந்து அப்பம் மற்றும் இரண்டு சிறு மீன்களைக்கொண்டு ஐயாயிரம் பேராயிருந்த எங்களுக்குப் போஷித்தக் காரியமானது, உம்முடைய மேசியாத்துவத்தை ஒன்றும் நிரூபிப்பதில்லை. மேசியா மோசேபோன்று காணப்படுவார்; மோசேயைப்பார்க்கிலும் பெரியவராய் மாத்திரம் காணப்படுவார் மற்றும் நீர் பண்ணின அற்புதமானது, மோசேயினால் நிறைவேற்றப்பட்டதான சில அற்புதங்களைக்காட்டிலும் பெரியதாய் ஒன்றும் இல்லை. ஐயாயிரம் பேருக்கு ஒருநேர உணவுக் கொடுப்பதற்கு, உம்மிடத்தில் (5) அப்பங்களும், (2) மீன்களும் இருந்தன; ஆனால் மோசேயோ, எந்த உணவையும் கையில் பெற்றிருக்காமலேயே எங்கள் பிதாக்களை வருடக்கணக்காக வனாந்தரத்தில் போஷித்தார். "வானத்திலிருந்து அவர்களுக்கு அப்பத்தைப் புசிக்கக்கொடுத்தார்" என்று எழுதியிருக்கிறபடி மோசே அருளியதான மன்னாவானது, வானத்திலிருந்து வந்ததாய் இருந்தது" என்றார்கள். சில விதங்களில் பார்க்கையில் அவர்கள் நன்கு சிந்தனை செய்கிறவர்களாகத் தெரிகின்றனர்; அவர்கள் மிகவும் எளிதாய் ஒன்றும் மனம் மாற்றப்பட முடியாது; இயேசுதான் மேசியா என்று விசுவாசம் வைப்பதற்கு முன்னதாக, தங்களுக்கு நன்கு நம்பிக்கை உண்டாக வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள்; போலி மேசியாக்களினால் ஏமாற்றப்பட்ட மற்றவர்களைக் குறித்து அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள்; வேதவாக்கிய பதிவுகளை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கவும், மற்றும் தங்கள் மேசியாவென ஏற்றுக்கொள்ளப்படுவர் மோசேயைக்காட்டிலும் பெரியவராக இருந்து, தங்களையும், அனைத்து ஜனங்களையும் போஷிக்க முடிகிறவராகவும், அதுவும் மோசேயினால் வனாந்தரத்தில் கொடுக்கப்பட்டதைக்காட்டிலும் மேன்மையான அப்பத்தினால் போஷிக்க முடிகிறவராகவும்

இருக்கின்றாரா என்று பார்க்கவேண்டுமென மனதில் எண்ணிக்கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

இப்பொழுது தம்முடைய போதனையை விளக்குவதற்கும், தமக்கும், மோசேக்கும் இடையிலான ஒப்புமை என்பது, யார் மிகச் சிறந்த வகையான பூமிக்கடுத்த உணவையும் மற்றும் அதை அதிகமாகவும் கொடுக்கப்போகிறார்கள் என்பதாக இல்லாமல், மாறாக தாம் பரலோக ஜீவனை அவர்களுக்குப் பெற்றுத் தருகின்றதான ஒரு பரலோக உணவை, ஓர் ஆவிக்குரிய உணவை அருளுவார் என்பதைக் காண்பித்துக் கொடுப்பதற்குமான இயேசுவின் வேளைவந்தது. ஆகையால் மன்னாவை மோசே கொடுத்தார் என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருந்ததிலுள்ள தவறினை, முதலாவதாக அவர்களது கவனத்திற்குக் கொண்டுவரும் விதமாக, வானத்திலிருந்து வந்த அப்பத்தை, மோசே கொடுக்கவில்லை, மாறாக என் பிதாவே கொடுத்தார்; தவறுதலாய் இன்னொருவருக்குக் கீர்த்தியைச் சாற்றாதீர்கள். இஸ்ரயேலுக்கு நியாயப்பிரமாணிக்கன் எனும் விதத்தில் மோசே உண்மையில், கர்த்தருடைய கனமிக்க ஊழியக்காரன்தான், ஆனாலும் அவர் மன்னாவை வழங்கவோ (அ) அனுப்பி வைக்கவோ இல்லை. வனாந்தரத்தில் காணப்படுகையில் மன்னாவை அனுப்பி வைத்ததான என் பிதா, இப்பொழுது வேறொரு வகையான அப்பத்தை, வேறொரு வகையான உணவை, வேறொரு வகையான வானத்திலிருந்து வந்த - சொல்லர்த்தமானதாய்க் காணப்படாமல், மாறாக அடையாளமாய்க் காணப் படுகின்றதான - மன்னாவை அனுப்பியுள்ளார். தம்முடைய ஜனங்களுக்குத் தேவன் இப்பொழுது அனுப்பவிருக்கும் மன்னாவும், வானத்திலிருந்து இறங்கி வந்ததாகக் காணப்படுகின்றது மற்றும் அது சில நாட்களுக்கென்று மாத்திரமல்லாமல், சில வருடங்களுக்கென்றில்லாமல், மாறாக நித்திய காலமும், முழு மனுக்குலத்திற்குமான ஜீவ அப்பமாக இருக்கும்படிக்கு நோக்கம் கொண்டிருக்கப் பெற்றுள்ளது என்றார்.

## இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தரவேண்டும்

"இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தர வேண்டும்" என்பதான அவர்களது பதிலை வைத்துப்பார்க்கும்போது, பாடங்கள் அவர்களுடைய இருதயங்களைத் தொட்டுள்ளது என்று நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. அவர்களால் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைக்கும், ஜீவத்தண்ணீர் எனும் அடையாள வார்த்தையினால் ஜீவன் எனும் அன்பளிப்பை/ஈவைக் குறித்துக் கர்த்தர் சமாரியா ஸ்திரீயிடம் சொன்னபோது, அவள்: "அந்தத் தண்ணீரை எனக்குத் தர வேண்டும்" என்று கூறின வார்த்தைகளுக்கும் இடையே ஒற்றுமை இருப்பதை நாம் கவனிக்கின்றோம். இரண்டு தருணங்களின்போதான பதிலானது, அக்காலக் கட்டத்தில் யூதர்களுக்கும் மற்றும் சமாரியர்களுக்கும், தங்களுக்கு இருப்பதைக் காட்டிலும் மேலான ஏதோ ஒன்றிற்கான ஏக்கம் இருந்துள்ளதை நமக்குக் காண்பிக்கின் றதாய் இருக்கின்றது. "மனித மனங்களில் எல்லையில்லாத ஏக்கங்கள் உள்ளன" - நித்தியமான ஜீவனுக்கான ஏக்கங்கள் உள்ளன என்று ஒரு கவிஞன் குறிப்பிட்டிருக்

கின்றார். நெடுங்காலத்திற்கு முன்புள்ள சரித்திரங்களானது, எவ்வாறு அனைத்துத் தேசங்களிலுமுள்ள ஜனங்கள், தற்கால ஜீவியத்தை நீடிக்கத்தக்கதாகவும், கூடுமானால் மரணத்தை முற்றிலுமாக ஒழித்துப்போடத்தக்கதாகவும் ஆரோக்கியம் தரும் உணவுகளையும், ஆரோக்கியம் தரும் ஊற்றுகளையும் நாடினார்கள் என்பதை நமக்குத் தெரிவிக்கின்றது. இது இன்னமும் அடையப்பெறவில்லை என்பதை அனைவருமே உணர்ந்துள்ளனர் மற்றும் இதற்கான போராட்டம் இன்னமும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. ஜீவன் தொடர்ந்து நிலைக்க வேண்டும் என்பதான இத்தகைய ஏக்கங்களினுடைய தாக்கத்தினாலேயே மருந்து மாத்திரைகள் உண்டாக்கப்படுகின்றன. ஜீவனை நீடிக்கப்பண்ணுவதற்கான மனித மனதினுடைய இத்தகைய ஏக்கங்களுக்காக நாம் மனமகிழ்வுறுகிறோம்; இந்த ஏக்கமே இப்பாடத்தில் இடம்பெறும் சம்பவத்திலும், சமாரியா ஸ்திரீயின் சம்பவத்திலும், கர்த்தர் வழங்கும் நித்திய ஜீவன்பற்றி, அதிகமாய் விசாரிப்பதற்கு அடிப்படையாய் அமைகின்றது.

"இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" (யோவான் 6:35) என்றார். மீண்டுமாக நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு, ஜனங்களுடைய புரிந்துகொள்ளுதலின் ஆழத்தைக்காட்டிலும், ஆழம் இருந்தது என்பதில் ஐயமில்லை. ஜனங்களுடைய திகைப்பை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது; அப்போது பெந்தெகொஸ்தே நாள் வராததினாலும், "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" என்பதினாலும், அவர்கள் அப்பொழுது ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை என்பதை நாம் நினைவுகூருகையில், அவர்கள்மேல் நமக்கு அனுதாபம் ஏற்படுகின்றது (யோவான் 7:39). இந்தக் கேள்வியானது, இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்கள் அநேகருக்கு மிகவும் புரியாத ஒன்றாக உள்ளது மற்றும் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களைத் தவிர வேறு எவரும் இதைத் தெளிவாய்ப் புரிந்துகொள்ளுவதில்லை. நம்மால் முடிந்தமட்டும், அவ்வசனப்பகுதியை ஆராய்வதன்மூலமாக, காரியத்தைத் தெளிவுப்படுத்திக் கொள்ளலாம். இங்கு இயேசு தாம் பரலோகத்திலிருந்து இறங்கி வந்திருக்கின்றார், அதாவது மேகத்தி லிருந்து/வானத்திலிருந்து இறங்கி வந்ததான மன்னாவைப்போன்று மாத்திரம் இல்லாமல், மாறாக உலகம் உண்டாவதற்கு முன்னதாக, பிதாவோடு தமக்கு இருந்த மகிமையைத் துறந்த நிலையிலும், தமது முந்தைய ஆவியின் சுபாவத்திலிருந்து, இப்போது மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக, தாம் அவர்களுக்கு முன்பாக நின்று, பேசிக்கொண்டிருக்கின்றதான பூமிக்குரிய சுபாவத்திற்குத் தாழ்த்தப்பட்ட நிலையிலும் பரலோகத்தில் இருந்து இறங்கி வந்திருக்கின்றார் என்று விவரித்தார். ஆனால் தாம் உயிரோடிருக்கையில், அவர்களால் அவரைப் புசிக்க முடியாது; "என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது" என்று அவர் கூறினபோதும், அவர்களால் அவர் என்ன அர்த்தத்தில் கூறினார் என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல், "இந்த மனுஷன் தன்னுடைய மாம்சத்தைப் புசிப்பதற்கு நமக்குக் கொடுப்பாரோ? இப்படியான அர்த்தத்தில்தான் இவர் பேசினாரோ? என்று

யோசித்தவர்களானார்கள். பாடம் அவர்கள் கிரகிக்க முடியாதளவுக்கு மிகவும் ஆழமாய்க் காணப்பட்டது; ஆனால் இது நமக்கு மிகவும் ஆழமாய்க் காணப்படாததற்குத் தேவனுக்கு நன்றி. "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்" என்று கூறிச் சீஷர்களில் சிலர் அவரைவிட்டுப் பிரிந்து, அவருடனேகூட நடவாமல் போய்விட்டது போலவே, இன்றும்கூடக் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் அடிப்படையாக விளங்கும் இவ்வுபதேசத்தை, ஏற்றுக்கொள்ள முடியாமல் சிலர் காணப்படுகின்றனர். இந்த ஒரு பாடத்தினை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள், இதன்மீது கட்டியெழுப்பிக் காணப்படுகின்றதான மற்றப் பாடங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாய்க் காணப்படுவார்கள். "நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே" என்று நமது கர்த்தர் இன்னும் விவரித்துக் கொடுத்தார். அவர் தமது மாம்சத்தைக் கொடுத்துக்கொண்டே இருந்தபோதிலும், அவர்களுக் கென்று ஊழியம் புரிவதில் அந்த மாம்சத்தின் சத்துவத்தை, அதன் பலத்தை எடுத்துப் பயன்படுத்திக் கொண்டிருந்தபோதிலும், அவரது மாம்சத்தை (இச்சம்பவத் தருணத்தின்போது) அவர் இன்னமும் கொடுக்கவில்லை; மரணத்தில், அதாவது சிலுவையின் மரணத்தில், அவர் தம்முடைய யாவையும் ஒப்படைப்பதன் மூலம், தமது பலியின் வேலையை அவர் நிறைவேற்றுவார். இதை அவர் கொஞ்சங்காலம் கழித்துச் செய்து முடித்தார்.

## நாம் அவரது மாம்சத்தைப் புசிக்கின்றோம்

நாம் சொல்லர்த்தமாய், இயேசுவின் மாம்சத்தைப் புசிப்பதில்லை; அதை விசுவாசத்தினாலே புசிக்கின்றோம்; அதாவது நமக்காக மரணத்தில் அவர் ஒப்படைத்ததான, அவரது மாம்சத்தினுடைய புண்ணியத்தினை, பயனை, விசுவாசத்தின் வாயிலாக நாம் நமதாக்கிக்கொள்கின்றோம். ஏன் இப்படியாக? மற்றும் அவர் எதை ஒப்படைத்தார்? மற்றும் அதில் நாம் எவ்வாறு பங்கடைவது? நம்முடைய பதில் என்னவெனில் . . . மனுக்குலத்தின் தலையாகிய ஆதாம், கீழ்ப்படியாமையின் காரணமாக, தனது ஜீவனை இழந்துபோனபடியால், தேவனுடன் இசைவாய்க் காணப்படுகின்றதான ஒரு பரிபூரணமான சந்ததியை இனப்பெருக்கம் பண்ணிடு வதற்கும், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குரிய சிலாக்கியமுடையவராய் அவர் இருப்பதற்கும் பதிலாக, அவரது சந்ததியும் அவரைப் போலவே மரிக்கின்றவர் களாகவும், நித்திய ஜீவனுக்குப் பாத்திரமற்றவர்களாகவும் காணப்பட்டனர். தேவனுடைய ஏற்பாட்டில், மீட்பிற்கான ஒரு பலி அவசியமாயிருந்தது; அதாவது ஆதாமின் ஸ்தானத்தை ஒருவர் எடுத்துக்கொண்டு, ஆதாம் விடுதலையடையத் தக்கதாகவும், ஆதித் தண்டனைத் தீர்ப்பிலிருந்து அவரது சந்ததியை விடுவிக்கத்தக்கதாகவும், அவருக்காக மரிப்பதும் அவசியமாயிருந்தது. பரிபூரணமான நிலையிலும், நீதிக்கு முன்பாக தனது சகோதரனுக்காக ஒரு மீட்கும்பொருளைக்

கொடுக்க முடிந்த நிலையிலும் எந்த ஒரு மனுஷனும் காணப்படவில்லை . . . ஏனெனில் அனைவரும் பாவிகளாகவும், நித்திய ஜீவனுக்கு அவசியமெனத் தேவன் அங்கீகரிக்கின்றதான பரிபூரணத்திற்கும், மகிமைக்கும் குறைவுப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இத்தேவைகளைச் சந்திப்பதற்கெனத் தேவன் தம்முடைய குமாரனை ஏற்பாடு பண்ணினார்; குமாரன் தம் முன் வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தின் பொருட்டு, நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படிக்கு, தாமாய் முன்வந்து, மகிழ்ச்சியுடன், அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக, நீதியுள்ளவராய் மரித்தார் (1 பேதுரு 3:18). ஆகையால் நமது கர்த்தருடைய மாம்சம் (அ) மனித சுபாவமானது, ஆதாமுக்காகவும், அவரது சந்ததிக்காகவும் கொடுக்கப்பட்டது மற்றும் மனுக்குலத்தின் உலகமானது, மரணத்தண்டனைத் தீர்ப்பின் கீழிலிருந்து மீட்கப்படத்தக்கதாக, அவரது மாம்சம், உலகத்தின் ஜீவனுக்காகக் கொடுக்கப்பட்டதாயிருந்தது. இப்படியாக இயேசு, தேவனுடைய கிருபையினால், ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தவராயிருந்தார் மற்றும் நாம் அனைவரும் அழிவுக்குரிய வஸ்துக்களாகிய பொன் மற்றும் வெள்ளியினால் மீட்கப்படாமல், மாறாகக் குற்றமில்லாத, மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே (ஜீவனாலே) மீட்கப்பட்டிருக்கின்றோம் (1 பேதுரு 1:18, 19).

கிறிஸ்து மாம்சமாக்கப்படுவதின் அவசியம் என்ன என்றும், மரணத்திற்குள்ளாகக் கடந்து செல்வதின் மூலமாக, உலகத்தின் ஜீவனுக்காக, கிறிஸ்து தம்முடைய மாம்சத்தைக் கொடுக்க வேண்டியது, அவருக்கு எப்படி அவசியமாயிருந்தது என்றும் நாங்கள் இங்கு அறிந்துகொண்டோம், எனினும் அவரது மாம்சத்தை நாங்கள் எவ்வாறு புசிப்பது? என்று எவரேனும் கேள்வி எழுப்புகின்றீர்களா? ஆ! அடையாளமான வார்த்தைகளில் கொடுக்கப்பட்டதான இக்காரியத்தை, நாம் புரிந்துகொள்ளும்போது, இது அருமையாயும், எளிமையாயும், அர்த்தமுள்ளதாயும் தோன்றும் என்று நாம் பதிலளிக்கின்றோம். கர்த்தருடைய மாம்சத்தைப் புசிக்கும் காரியமானது, அவரது பலியினாலான நன்மையை அடையும் அனைவரின் விஷயத்திலும், தனிப்பட்ட காரியமாய்க் காணப்படுகின்றது. புசித்தல் என்பது, விசுவாசத்தின் மூலம் சொந்தமாக்கிக்கொள்வதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் மீட்பு குறித்த புரிந்துகொள்ளுதலுக்குள் ஒருவன் வந்து, அதை விசுவாசித்த நிலையில், ஜெபத்தில் தேவனிடத்தில் கடந்துபோய், விசுவாசத்தின்மூலமாக தனது பாவங்களுக்கான மன்னிப்பையும், தேவனோடு ஒப்புரவாகுதலையும் ஏற்றுக்கொள்கையில், அவன் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசிக்கின்றவனாகுகின்றான்; அவன் நமது கர்த்தருடைய மாம்சம் (அ) பலியானது பெற்றுத்தந்ததான அந்த நன்மைகளில் (அ) அனுகூலங்களில் பங்கடைபவனாகுகின்றான்.

# நாம் 'புசிப்பதன்' மூலம் நீதிமானாக்கப்படுதல்

இப்படியாக விசுவாசத்தின் வாயிலாகப் புசிப்பதன் விளைவாக, நமது கர்த்தர் பரிபூரண மனிதனாகப் பெற்றிருந்ததான சிலாக்கியங்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் அனைத்தையும் ஒருவன் தனதாக்கிக்கொள்கின்றான்; இது மனித தளத்திலான நம்முடைய நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் நமது பாவங்கள் கிருபையாக மூடப்பட்ட நிலையில், நமக்குத் தேவனுடன் உறவு காணப்படுகின்றது மற்றும் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தினால், நாம் தேவனிடத்தில் சந்தோஷம், சமாதானம் மற்றும் ஐக்கியம் பெற்றுக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றோம். நாம் பலம்மேல் பலமடையத்தக்கதாகவும், நமது கர்த்தருக்குச் சொந்தமானதும், ஆனால் அவர் நமக்காகவும், ஆதாமின் சந்ததியார் அனைவருக்காகவும் ஒப்படைத்துவிட்டதான அருமையான ஆசீர்வாதங்கள், சிலாக்கியங்கள், உறவுகள் மற்றும் தெய்வீகத் தயவுகளை அதிகமதிகமாய் நாம் நமதாக்கிக்கொள்ளத்தக்கதாகவும், நாம் தொடர்ந்து புசிக்க வேண்டும். இன்னுமாகப் புசித்தலினாலான சரியான தாக்கத்திற்குள்ளானவர்கள் . . . கர்த்தருக்கு அருகாமையில் ஈர்க்கப்பட்டு, தங்களுடைய அனைத்தையும் அவருக்கென்று முழுமையாய் அர்ப்பணிக்கத்தக்கதாக வழிநடத்தப்படுபவர்கள், அவரது இரத்தத்தைப் பானம்பண்ணுவதற்கான இந்தச் சுவிசேஷயுகத்தினுடைய விசேஷித்த அழைப்பினைப் பெற்றுக்கொள்கின்றனர். வேதவாக்கிய மொழிநடையில், இரத்தம் என்பது ஜீவனாய் இருக்கின்றது; ஆகையால் யூதர்கள், பொதுவாய் இரத்தத்தைப் பானம் பண்ண தடைப்பண்ணப்பட்டவர்களாய் இருந்தனர்; அப்படிப் பானம்பண்ணுவது என்பது ஒரு நபர் (அ) ஜீவராசியினுடைய மரணத்திற்கு அவர்களைப் பொறுப்பாளி (அ) குற்றவாளியாக்குகின்றது. ஆகையால்தான் யூதர்கள் நமது கர்த்தரைக் குறித்து, "இவருடைய இரத்தப்பழி எங்கள்மேல் இருப்பதாக" . . . "இவரது மரணத்திற்கான பொறுப்பினை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்" என்றார்கள்.

ஆகையால்தான், இராப்போஜனத்தின் பாத்திரத்தில் அடையாளமான விதத்தில் கிறிஸ்துவினுடைய இரத்தத்தில் பங்குகொள்பவர்கள், அதன் உட்பொருளைச் சரியாய்ப் புரிந்து பங்குகொள்ளவில்லையெனில், அவர்கள் தாங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தின் விஷயத்தில் குற்றவாளிகளாக இருக்கின்றார்கள் என்றும், கிறிஸ்துவினுடைய மரணத்தின் விஷயத்தில் குற்றவாளிகளாக இருக்கின்றார்கள் என்றும் அடையாளமாய்த் தெரிவிப்பவர்களாய் இருப்பார்களென அப்போஸ்தலனும் விவரித்துள்ளார். அதன் உட்பொருள் என்ன? நமது பதில் என்னவெனில், இது குறித்து கர்த்தர் கடைசி இராப்போஜனத்தின்போது, தம்முடைய சீஷர்களிடத்தில் பின்வருமாறு கூறியதில் குறிப்பிட்டுள்ளார்: "இந்தப் பாத்திரம் என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" . . . "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்." "இந்தத் திராட்சப்பழரச (fruit of the vine) பாத்திரமானது, என்னுடைய இரத்தத்தை, என்னுடைய மரணத்தைக்குறிக்கின்றதாய் இருக்கின்றது; இதனாலேயே புதிய உடன்படிக்கையானது, இறுதியில் முத்திரிக்கப்படும் மற்றும் என்மேல் விசுவாசமாயிருக்கிற நீங்கள், என்னோடுகூட இதில் பங்குகொள்ளும்படிக்கு,

உங்களை நான் அழைக்கின்றேன்; அதுவும் என்னுடைய மரணத்திற்குக் காரணமாய் இருந்தவர்கள்போல், நீங்கள் இதில் பங்குகொள்ளாமல், மாறாக தங்கள் ஜீவனை தானாய் முன்வந்து ஒப்புக்கொடுத்து, இந்த மரணத்தில், இந்தச் சுயத்தைப் பலிச்செலுத்துதலில் என்னோடுகூட வந்து இணைந்து கொண்டவர்களைப்போன்று பங்குகொள்பவர்களாய் இருங்கள். இந்தப் பாத்திரத்தில் நீங்கள் என்னோடுகூடப் பங்குகொள்ளும் போது - அது நான் என் ஜீவனை ஒப்புக்கொடுத்ததுபோன்று, நீங்களும் உங்கள் ஜீவியங்களை ஒப்புக்கொடுப்பதைக் குறிக்கின்றதாயிருக்கும் மற்றும் பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கப்போகின்றதான புதிய உடன்படிக்கையினை நிறுவுகின்றதும், மாபெரும் பலி, மாபெரும் ஜீவியம் ஒப்புக்கொடுக்கப்படுவதைக் குறிக்கின்றதுமான இந்தப் பாத்திரத்தில் நீங்கள் என்னோடுகூடப் பங்காளிகளாகு வதையும் குறிக்கின்றதாய் இருக்கும்.”

ஆகையால் பரிசுத்த ஆவியினுடைய வழிக்காட்டுதலின் கீழ், அப்போஸ்தல னுடைய வார்த்தைகள்மூலமாக, நமது கர்த்தர் (இப்பாடத்தின் சம்பவத்தில்) அந்த ஜனங்களிடம் பேசின மற்றும் அவர்களால் புரிந்துகொள்ள முடியாத அந்த வார்த்தைகளுக்கான அர்த்தத்தின் ஆழத்தை நம்மால் காண முடிகின்றது. நமது கர்த்தர் இவ்வார்த்தைகளை யூதர்களிடம் பேசியிருந்தபோதிலும், அவர்களிடமிருந்து அவ்வார்த்தைகளானது கடந்துவந்த நமக்கே, மற்றும் அவ்வார்த்தைகளை முழுமையாய்ப் புரிந்துகொள்கின்றதான நமக்கே அவர் குறிப்பாய் அவ்வார்த்தைகளைப் பேசினார் என்று நாம் நம்புகின்றோம். அவரது மாம்சத்தில் பங்கெடுப்பதன் (புசிப்பதன்) வாயிலாக நாம் அடைந்துள்ளதான நீதிமானாக்கப்படுதலில் நாம் களிகூருகின்றோம்; அவரது மனுஷீகம் பலிசெலுத்தப்பட்டதின் வாயிலாக நாம் நீதிமானாக்கப்பட்டதில் நாம் களிகூருகின்றோம்; மனுஷீக நீதிமானாக்கப்படுதலிலுள்ள நமது பங்கை நமதாக்கிக்கொண்டதில் நாம் களிகூருகின்றோம். இறுதியில் முழு உலகமும்கூட, அந்த மாம்சத்தைப் புசிப்பதற்கும், தங்கள் மனுஷீக பாவங்கள் மற்றும் பெலவீனங்கள் இரத்துச் செய்யப்படுவதற்கான தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்வதற்கும், கிறிஸ்து தங்கள் பாவங்களுக்காக மரித்துள்ளதினாலும், அவர் தமது மாம்சத்தைப் புசிக்கக்கொடுத்ததினாலும், ஆயிரவருட அரசாட்சியின் ஆசீர்வாதங்களும், திரும்பக்கொடுத்தல் காலங்களினுடைய ஆசீர்வாதங்களுமாகிய அனைத்தும் தங்களுக்கு வருவதை உணர்ந்துகொள்வதற்குமுரிய சிலாக்கியம் பெறுவார்கள் என்பதில் நாம் களிகூருகின்றோம். முழு உலகமும் அந்த அப்பத்தைப் புசிக்கப்போகின்றார்கள் மற்றும் அப்போஸ்தலர் குறிப்பிட்டிருப்பதுபோல, பிட்கப்படும் அப்பத்தில் கர்த்தரோடு பங்கடைவதற்கும், பிதா அவருக்கு ஊற்றியுள்ளதும், நாமும் அவரோடுகூடப் பங்குகொள்ளத்தக்கதாக பிதா நமக்கு அனுமதித்துள்ளதுமான அவமானம்/நிந்தனை மற்றும் சுயத்தைப் பலிசெலுத்துதல் எனும் பாத்திரத்தில் பங்கடைவதற்கும் சபை இப்பொழுது சிலாக்கியம் பெற்றிருக்கின்றனர்; ஏனெனில் அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்; நாம் அவரது பாத்திரத்தில் பானம் பண்ணுவோமானால், வரவிருக் கின்றதான இராஜ்யத்தில், அவரது சந்தோஷங்களில் நாமும் பங்கடைபவர்களாக இருப்போம் (2 தீமோத்தேயு 2:12).

# பிதாவானவர் கொடுக்கிற யாவரும் வருவார்கள்

முந்தின இரவின்போது அப்பம் புசித்தவர்களும், இப்பொழுதும் நித்திய ஜீவனுக்கு அவசியமான மேலான உணவு குறித்த விளக்கத்தைப் பெற்றுக்கொண்டவர்களுமான ஜனக்கூட்டத்தார், இயேசு மிகவும் அற்புதகரமான மனிதர் என்று அடையாளங்கண்டு கொண்டிருந்தபோதிலும், "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும், ஒருக்காலும் பேசினதில்லை" என்று மற்றவர்கள்போன்று சொல்வதற்கு ஆயத்தமாய் அநேகமாகக் காணப்பட்டிருந்தபோதிலும், அவர்கள் இயேசுவை விசுவாசிக்கவில்லை. வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளிகளாகிய ஆயிரக்கணக்கான இந்த இஸ்ரயேலர்கள் தம்மை ஏற்றுக்கொள்ளாமலும், தம்முடைய செய்திக்குச் செவிசாய்க்காமலும் போனதற்காக நமது கர்த்தர் குழப்பமும், நம்பிக்கை இழந்தும் போனாரா? நிச்சயமாய் இல்லை! இந்த அறுவடையின் காலத்திலுங்கூடத் தெய்வீகச் செய்தியானது, நம்முடைய நாட்களிலுள்ள விசுவாச வீட்டாரிலுள்ள பெரும்பான்மையானவர்களால் புரிந்துகொள்ளப் படாமல் காணப்படுவதைக்கண்டு, அவரது பின்னடியார்களும் ஆச்சரியமடையக்கூடாது. நமது கர்த்தர் ஆவேசம் அடைந்ததாகவும், தம்மை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையெனில், அவர்கள் நித்தியமான சித்திரவதைக்குள் கடந்து போகப்போகிறார்கள் என்று அவர் ஜனங்களுக்குப் போதித்ததாகவும் மற்றும் இப்படியாக பேசி ஜனங்களுடைய மனதை இளகச் செய்ததாகவும் நாம் பதிவுகளில் எதுவும் வாசிக்கவில்லை. ஜனங்கள் மத்தியில் அப்போஸ்தலர்கள் கடந்துசென்றதாகவோ, ஜனங்கள் மனம்வருந்தி, மீண்டும் திரும்பத்தக்கதாக வலியுறுத்தினதாகவோ நாம் பதிவுகளில் எதுவும் வாசிக்கவில்லை. இப்படியாகவெல்லாம் செய்வதற்கு முற்றிலும் நேர்மாறாகவே விஷயங்கள் நடந்தது. வெகு சொற்பமானவர்களே விசுவாசிப்பார்கள் என்று இயேசு நம்பினவராய்க் காணப்பட்டார்; அவர் தம்முடைய சீஷர்களிடத்திலும்கூடத் திரும்பி, "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?" என்றார். அவர்களோ பிரதியுத்தரமாக: "இல்லை; யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. ஆண்டவரே நாங்கள் உம்மோடேக்கூடக் காணப்படுவோம்; இதை அல்லாமல் நாங்கள் வேறு எதுவும் செய்கிறதில்லை; உம்முடைய வாயிலிருந்து நாங்கள் கேட்டதான இந்த மகிமையான செய்தியின் மீதே, எங்களது காரியங்கள்/ஜீவியம் முழுவதும் சார்ந்துள்ளது. உம்மோடுகூட மரிப்பதற்கும், உம்முடைய பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கும் நாங்கள் ஆயத்தமாய் இருக்கின்றோம்" என்றார்கள்.

கவலையை வெளிப்படுத்துவதற்குப்பதிலாக நமது கர்த்தர் ஜனக்கூட்டத்தாரை நோக்கி: "நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள்" என்று உங்களுக்கு நான் முன்னமே சொல்லியிருந்தேன். (நீங்கள் என்னை விசுவாசியாமலிருப்பதற்கான) காரணம் என்ன? காரணம் என்னவெனில், நீங்கள் தற்காலத்தில் நான் வழிநடத்தத்தக்கதாக என் பிதாவினால் எனக்குக் கொடுக்கப்பட்ட தொழுவத்திலுள்ள ஆடுகளல்ல. இந்தத் தொழுவத்திலுள்ளவைகள் அல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; மற்றும் அவைகளையும் நான் அடுத்துவரும் காலப்பகுதியில் பராமரித்துக்கொள்வேன். ஆனால் இப்பொழுதோ, பிதாவானவர்

எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை, அதாவது புறக்கணிப்பதில்லை" என்றார். இது தெரிந்துகொள்ளுதல் இல்லையெனில் வேறு என்ன என்று சொல்வோம்? இது எவ்வளவாய், நமது கர்த்தர் தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தின இரவில் ஏறெடுத்த ஜெபத்தில் "நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் . . . அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் (பிற்பாடு) விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல் அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று குறிப்பிட்டுள்ள வார்த்தைகளுக்கு இசைவாய்க் காணப்படுகின்றது (யோவான் 17:9, 21). தம்மிடத்தில் வருவதற்கும், தாம் அளிக்கவிருக்கிறதான கிருபையான காரியத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், தம் மூலமான தேவனுடைய கிருபையான ஏற்பாட்டினை ஏற்றுக்கொள்வதற்கும் மற்றும் இப்படியாகத் தம்முடைய மாம்சத்தைப் புசிப்பதன்மூலம் நீதிமானாக்கப்படுவதற்கும், நமது கர்த்தர் அனைவரையும் எதிர்ப்பார்க்காததினால், அநேகர் இன்னும் முன்வருவார்கள் என்றோ, இடுக்கமான பாதையில் தம்முடைய அடிச்சுவட்டில் நடப்பதற்கென அர்ப்பணம்பண்ணுவார்கள் என்றோ மற்றும் இப்படியாக தமது பாத்திரத்தில் பங்கடைபவர்களாகவும், வருங்காலத்தில் தம்முடன் உடன்சுதந்திரர்கள் ஆகுவதற்கான வாய்ப்பினை உடையவர்களாகவும் காணப்படுவார்கள் என்றோ அவரால் எதிர்ப்பார்த்திட முடியாது. ஓ! இல்லை. தொடக்கம் முதல் இறுதிவரையிலும் சிறு மந்தையினராகக் காணப்பட்டவர்களும், மற்றும் மிகவும் பாக்கியவான்கள் ஆனவர்களுமாகிய இந்தச் சிறு மந்தையினரிடமே "பிதா இராஜ்யத்தைக் கொடுப்பார்" என்று ஆண்டவர் குறிப்பிட்டார் (லூக்கா 12:32). இவர்கள் மறுரூபமடைந்து, தங்கள் ஆண்டவருக்கு ஒப்பாகக் காணப்பட்டு, இராஜ்யத்தின் வல்லமையையும், மகிமையையும் மற்றும் ஆளுகையையும் பெற்றுக்கொள்ளும்போது, அந்த இராஜ்யத்தின் வாயிலாகவே, இருளின் அதிபதியும், இவ்வுலகத்தின் அதிபதியும் வீழ்த்தப்படுவான்; பாவம் வீழ்த்தப்படும் மற்றும் இப்பொழுது பிதாவினால் அழைக்கப்படாதவர்களும், இழுத்துக்கொள்ளப்படாதவர்களுமாகிய பரிதாபத்திற்குரிய மனுக்குலம் முழுவதையும் ஆசீர்வதித்தல் மற்றும் வெளிச்சமூட்டுதல் மற்றும் சீர்த்தூக்கிவிடுதல் வேலை நடைப்பெறும்!

இது தொடர்புடையதாக, "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால், அவன் என்னிடத்தில் வரமாட்டான்" என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளைக் கவனியுங்கள் (யோவான் 6:44). இதில் ஒரு தடைவிதிப்புத் தெரிகின்றது; அதாவது வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிட்டுள்ளபடி, விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள் வதற்கான காலம் இன்னும் வரவில்லை (வெளிப்படுத்தல் 22:17). அந்த மகிமையான காலமானது, ஆயிரவருட இராஜ்யத்திற்குரியதே ஒழிய, பிதா இப்பொழுது இழுத்துக்கொள்கிறதும், அழைக்கிறதும், முத்திரையிடுகிறதுமான உடன்சுதந்திரர் களாகிய மணவாட்டி வகுப்பாரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளதான

தற்காலத்திற்குரியதல்ல. தற்காலத்தில் பிதாவினால் உண்டாகும் இந்த இழுத்துக்கொள்ளப்படுதலுக்கும் மற்றும் ஆயிரவருட யுகத்தின்போது பிதாவினால் இல்லாமல், மாறாக குமாரனால் உண்டாகும் இழுத்துக்கொள்ளப்படுதலுக்கும், அதுவும் எவரையும் நீக்கிவைக்காமல், அனைவரையும் உள்ளடக்கின நிலையிலுள்ள இழுத்துக்கொள்ளப்படுதலுக்கும் இடையிலான தெளிவான வித்தியாசத்தைக் கவனிக்கவும். இது தொடர்பான நமது ஆண்டவருடைய வார்த்தைகளாகிய, "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" என்பதைக் கவனிக்கவும் (யோவான் 12:32). இன்னமும் அனைத்து மனிதர்களும் கர்த்தரிடத்தில் இழுத்துக்கொள்ளப்படவில்லை. ஏன்? ஏனெனில் உயர்த்தப்படுதல் இன்னமும் நிறைவடையவில்லை. தலையானவர் கல்வாரியில் மாத்திரம் உயர்த்தப்படாமல், இன்னுமாகப் பலனளிக்கப்பட்டவராக உயர்வாகவும் உயர்த்தப்பட்டார் மற்றும் உயர்த்தப்படுதல் காரியம் நிறைவடைவதற்கு முன்னதாக அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றின மணவாட்டி வகுப்பாரின் அங்கத்தினர்கள், அதாவது அவரது சரீரத்தின் அங்கத்தினர்களும் தங்கள் ஓட்டத்தினை முடித்து, அவரது உடன்சுதந்திரர்களென உயர்வாய் உயர்த்தப்பட வேண்டும்.

முதலாம் உயிர்த்தெழுதலுக்குரிய அந்த மகிமையான "மறுரூபமடைதலோடு," ஆயிர வருட இராஜ்யமானது கடந்துவரும் மற்றும் அருமையாய் நீதி ஆளுகைச் செய்யும் அக்காலத்தில், உலகத்தின் ஆசீர்வாதத்திற்கெனச் சூரிய ஒளியும், சத்தியமும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றதான அக்காலத்தில், மனுக்குலம் முழுவதும் பாவம் மற்றும் சுயநலத்தினின்றும், வியாதி, வலி மற்றும் துக்கத்தினின்றும், தீமையான அனைத்தினின்றும், கர்த்தர்பால் இழுக்கப்படுவார்கள், அதாவது அவரது மாம்சத்தை உண்மையில் புசிப்பதற்கென்றும், மாபெரும் மீட்பர் மூலம் தேவன் அருளியுள்ளதான நித்திய ஜீவனையும், அதனோடுகூடத் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்வதற்கென்றும் கர்த்தர்பால் இழுக்கப்படுவார்கள். இப்படியாக நாம் சொல்லுகையில் நாம் (மக்கள் அனைவரும் முடிவில் மீட்கப்படுவார்கள் என்னும் இறைமைக் கோட்பாட்டை) universalism கோட்பாட்டைப் போதிக்கவில்லை; ஏனெனில் இப்பொழுது மணவாட்டி வகுப்பாராகும்படிக்கு அழைக்கப்படுபவர்களிலும், இழுக்கப்படுபவர்களிலும், இந்த இழுத்துக்கொள்ளுதலை எதிர்ப்பவர்களாய் அல்லது அப்போஸ்தலன் கூறுவதுபோன்று, "தேவனுடைய கிருபையை விருதாவாய்ப் பெற்றுக்கொள்கின்றவர்களாய்" இருப்பதற்கும் வாய்ப்புண்டு. இதுபோலவே ஆயிரவருட யுகத்தின்போதான இழுத்துக்கொள்ளுதலையும் எதிர்ப்பதற்கு வாய்ப்புள்ளது; இது குறித்துப்போதுமான அளவுக்கு வேதவாக்கியங்களில், பல்வேறு வார்த்தைகளினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது; "அந்தத் தீர்க்கத்தரிசியின் சொற்கேளாதவனெவனோ (கீழ்ப்படியாதவனெவனோ), அவன் ஜனத்திலிராதபடிக்கு - இரண்டாம் மரணத்தில் - மீட்கப்படுவதற்கான எந்த நம்பிக்கை இல்லாமல் -

நிர்மூலமாக்கப்படுவான்." பிதாவினால் இப்பொழுது இழுக்கப்பட்டவர்களும், இப்பொழுது வந்து நமது கர்த்தருடைய மாம்சத்தைப் புசித்தும், அவரது பாத்திரத்தில், அவரது இரத்தத்தில் பானம் பண்ணியும், அவருடைய பலியில் அவருடன் பங்குகொண்டும் காணப்படுபவர்களுமான இந்தத் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கான கர்த்தருடைய வாக்குத்தத்தத்தைக் கவனிக்கவும். இவர்களுக்கான நம்பிக்கையானது, "நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்" என்பதான வார்த்தைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடைசி நாள், மகா ஏழாம்நாள், ஆயிரவருட நாள். ஆ, ஆம்! மணவாட்டி வகுப்பாராகிய சபையைக் குறித்து, அந்த ஆயிரவருட நாளினுடைய காலையில் - "அதிகாலையிலே தேவன் அவளுக்குச் சகாயம் பண்ணுவார்" (சங்கீதம் 46:5) என்று எழுதப்பட்டுள்ளதை நாம் நினைவுகூருகின்றோம். ஆதாம் முதலான ஆறு நாட்கள் கடந்து போய்விட்டது மற்றும் ஏழாம்நாள் ஏற்கெனவே விடிந்து கொண்டிருக்கின்றது மற்றும் மணவாட்டியானவள் சகல மகிமையோடும் மாபெரும் இராஜாவாகிய பிதா முன்னிலையில், அவரது குமாரனும், மகாராஜனுமான நமது கர்த்தரினால் கொண்டுவரப்படுவதற்கான காலம் அண்மையில் உள்ளது. "அவர்கள் மகிழ்ச்சியோடும் களிப்போடும் வந்து, இராஜ அரண்மனைக்குள் பிரவேசிப்பார்கள்." (சங்கீதம் 45:15).

## நான் புறம்பே தள்ளுவதில்லை

நமது அருமை ஆண்டவர் இவ்வார்த்தைகளையும் கூடக்கூறினதற்காக நாம் எவ்வளவாய் மகிழ்கின்றோம். இவ்வார்த்தை இல்லையெனில், நாம் பெற்றுக் கொண்டதான அழைப்பு மற்றும் இழுத்துக்கொள்ளுதலின் உறுதிபாட்டினைக் குறித்து நாம் சந்தேகிக்கிறவர்களாக இருந்திருப்போம் மற்றும் சிலர் பின்வருமாறு கூடச் சொல்வதற்கு வாய்ப்புண்டு: "ஆம், நான் இழுக்கப்பட்டது உண்மைத்தான், ஆனால் கர்த்தருடைய பின்னடியார்கள் மத்தியில் ஒருவராகுவதற்கு என்னை இயேசு பாத்திரவானாய்க் கருதவில்லை என்பதும் உறுதியே." பிதாவினால் இழுக்கப்பட்டு, தம்முடைய சீஷர்களாகுவதற்கான விருப்பத்தில், தம்மிடம் கடந்து வருபவர்களுக்கு, இங்கு (இவ்வார்த்தைகள் மூலமாக) அவர் தம்முடைய உதவியையும், துன்பமான வேளையின்போதான தம்முடைய உதவியையும், தம்முடைய துணையையும்/ஆதரவையும், தம்முடைய ஏற்றுக்கொள்ளுதலையும் நமக்கு உறுதிப்படுத்துகின்றார். ஆகையால் இப்பொழுது இந்தப் பரமஅழைப்பில், அளிக்கப்பட்டதான தேவ கிருபையை நாம் பயன்படுத்தத் தவறிப்போவோமானால், அது நம்முடைய தவறினாலேயே இருக்கும் என்று நாம் அறிந்துகொள்ளலாம்; ஏனெனில் நாம் மேய்ப்பனுடைய சத்தத்திற்குச் செவிக்கொடுக்கவும், அவரது அடிச்சுவட்டில் நடப்பதற்கும் தவறிவிடுவதே காரணமாகும்.

# நினைவுகூருதல், ஏப்ரல் 14

செவ்வாய்க்கிழமை, மாலை ஆறு மணிக்குமேல், ஏப்ரல் 14-ஆம் தேதியன்று, இந்த வெளியீட்டினுடைய வாசகர்கள், உலகமெங்கும் கிறிஸ்துவினுடைய பிரித்தெடுக்கப்பட்டவர்களென (Ecclesia), அவரது மரணத்தினை, அவரது பிட்கப்பட்ட சரீரம் மற்றும் சிந்தப்பட்ட இரத்தத்திற்கும் அடையாளங்களாகிய "புளிப்பில்லாத அப்பம்" மற்றும் "திராட்சப்பழரசத்துடன்" (fruit of the vine) நினைவுகூர்ந்திடுவதற்கென்று ஒன்று கூடிடுவார்கள். இந்தப் பிரித்தெடுக்கப்பட்டவர்களில் பெரிய எண்ணிக்கையில் இங்குக் காணப்படுகின்றவர்கள், இங்குள்ள அலிகெனி கார்நிஜீ ஹாலில் (Allegheny Carnegie Hall) கூடிக்கொள்வார்கள்; சிறு எண்ணிக்கையிலான பிரித்தெடுக்கப் பட்டவர்கள் (Ecclesias) பலர் காணப்படுவதினால், பெரும் திரளானவர்கள்/எல்லாரும் எங்கோ (ஓர் இடத்தில்) கூடுகின்றார்கள் என்று புரிந்துகொள்ளப்படக்கூடாது; ஏனெனில் ஆண்டவர் கூறியுள்ளதுபோல, "ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்." (மத்தேயு 18:20)

எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும், எவரும் இந்த வருடாந்திர சிலாக்கியத்தினைப் புறக்கணித்திட வேண்டாமென்று நாம் வலியுறுத்துகிறோம். இதை ஆசரிக்கும் விஷயத்தில் விசேஷித்த ஆசீர்வாதம் உள்ளது. நீங்கள் சோர்வடைந்திருக்கிறீர்களானால், போய்ப் பிட்கப்பட்ட அப்பத்தில் பங்கெடுத்து, உங்கள் நீதிமானாக்கப்படுதலைக் குறித்தப் புதிதான உணர்ந்து கொள்ளுதலையும், ஒரே அப்பத்தின் - அவரது சபையின், அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கான (பலிச்செலுத்தப் படுவதற்கான) உங்களது அர்ப்பணிப்பைக் குறித்த புதிதான உணர்ந்துகொள்ளுதலையும் கர்த்தரிடத்தில் கேளுங்கள். அடுத்து "இந்தப் பாத்திரத்தில்" நீங்கள் பானம்பண்ணுகையில், அது நம் சார்பிலான நமது கர்த்தருடைய பாடுகளையும், ஒவ்வொரு மனுஷனுக்காகவும் அவர் மரணத்தை ருசிப்பார்த்ததையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதை நினைவுகூருங்கள். இன்னுமாக அது "நாம் அவரோடுகூட ஆளுகை செய்யத்தக்கதாக, அவரோடுகூடப் பாடுபடுவதற்கான" நமக்கான பெரிதான அழைப்பையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதையும் நினைவுகூருங்கள். இதுவே "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்ற அவரது வார்த்தைகளுக்கான அர்த்தமாய் இருக்கின்றது. மேலும் அப்போஸ்தலன் குறிப்பிடுகிறதுபோல, அது அவருடைய பாடுகளில் பங்கெடுத்தலை/ஐக்கியங் கொள்ளுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. (1 கொரிந்தியர் 10:16)

இப்படியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, உணர்ந்துகொள்ளப்படவில்லையெனில், நினைவுகூருதலானது அர்த்தமற்றதாக (அ) பாதகமானதாகக் காணப்படும் என்பதை நாம் மறக்காமல் இருப்போமாக. ஆனால் பாவங்களோ, அனலற்றத் தன்மைகளோ,

அபாத்திரன் என்ற உணர்வுகளோ, நம்மைத் தடைசெய்யாதிருப்பதாக. கர்த்தரிடத்தில் போய் உங்கள் குறைவுகள் அனைத்தையும் மறைக்காமல் கூறிவிடுங்கள். உங்கள் சகோதர சகோதரிகளிடத்தில் (அ) நீங்கள் யாருக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தீர்களோ, அவர்களிடத்தில்போய், அவர்கள் உங்களிடத்தில் தவறுகளை ஒப்புக்கொள்கிறார்களோ, இல்லையோ, நீங்கள் முழுமையாய் ஒப்புக்கொண்டு விடுங்கள். உங்கள் கர்த்தருடன் ஒப்புரவாகிக்கொள்ளுங்கள் மற்றும் கூடுமானமட்டும் அனைத்து மனிதர்களுடனும் ஒப்புரவாகிக்கொண்டு வந்து புசியுங்கள் - ஆம் இப்பொழுது (அ) பின்னர் "ஏற்றக்காலத்தில்" ஏற்றுக்கொள்பவர்கள் அனைவருக்குமான கர்த்தருடைய ஐசுவரியமான ஏற்பாட்டில் பங்கெடுங்கள்.

இப்படியானதொரு இருதய ஆராய்தலும், சுத்திகரித்தலும், யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டதான பஸ்கா நிழலில் காண்பிக்கப்பட்டுள்ளதை நாம் நினைவு கூருகிறோம். தங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியினைப் புசிப்பதற்கெனக் கூடிடுவதற்கு முன்னதாக, புளிப்பான அல்லது அழுகிப்போனதான ஏதாகிலும் பொருட்கள், எலும்புகள், ரொட்டித் துண்டுகள் காணப்படுகின்றதா என்று தங்களது குடியிருப்புகளில் எல்லாம் அவர்கள் தேடினார்கள். இவைகளெல்லாம் எரிக்கப்பட்டன - அழிக்கப்பட்டன. ஆகையால் நாமும் நிஜத்தை நிறைவேற்றி, கோபம், பகைமை, சண்டை, துர்க்குணம் எனும் "பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போட" வேண்டும். (1 கொரிந்தியர் 5:7, 8)

இவ்வகை பாவம் எனும் புளிப்பானது, எரிக்கப்படாமல், முற்றிலுமாகப் புறம்பே கழித்துப் போடப்பட முடியாது என்பதையும், அன்பு அதாவது பரம அன்பு, தேவ அன்பு மாத்திரமே இதை எரித்துப்போட முடியும் என்பதையும் நினைவில்கொண்டிருக்க வேண்டும். இந்த அன்பானது, நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருந்தால், இது எதிர்ப் பண்புடைய அனைத்தையும், அதாவது பொறாமை, பகைமை, புறங்கூறுதல் முதலானவைகள் அனைத்தையும் பட்சித்துப்போட்டுவிடும். இவைகளையெல்லாம் புறம்பே கழித்துப்போட்டு, கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு, அவரது ஆவியில் நிரம்பிடுவதற்கு அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். மனம் தளர்ந்துபோக வேண்டாம். பாடத்தைக் கற்றுக்கொண்டு, புதிய தீர்மானங்களுடனும், ஆண்டவருடைய உதவியில்லாமல், நீங்கள் நீங்களாகவே பரிசை ஒருபோதும் அடையமுடியாது என்ற உண்மையினைப்பற்றின அதிகமானப் புரிந்துகொள்ளுதலுடனும், மீண்டுமாகத் தொடருங்கள். மேற்கூறிய உண்மையினை நம்மைவிட அவர் நன்றாய் அறிவார் மற்றும் "என்னையல்லாமல் உங்களால் ஒன்றுஞ்செய்யக் கூடாது" என்று கூறுகின்றார். நமக்கான தேவையின் காரணமாகவே, பிதா நமக்கு இப்படியாக ஏற்பாடு பண்ணியுள்ளார். "தைரியங்கொண்டிருங்கள்!" என்பதே "ஜெயங்கொள்ளுகிற" வகுப்பாரில் அடங்குவதற்கு நாடுகிற மற்றும் ஏங்குகிற அனைவருக்குமான ஆண்டவருடைய வார்த்தைகளாக இருக்கின்றது.

## "உங்கள் எதிராளியான பிசாசு"

வருஷத்தினுடைய இந்த ஒரு காலப்பகுதியில் சோதனைகளானது, விசேஷமாய் அனுமதிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது. எப்போதும் "கசப்பான வேர்களானது முளைத்தெழும்பி", வளர்வது வழக்கமாகும்; ஆனால் இந்த ஒரு காலப்பகுதியிலோ பத்து மடங்கு வலிமையோடு வளர்கின்றது. நம்முடைய சீஷத்துவத்திற்கான இறுதிப்பரீட்சையானது, அறிவின் விஷயத்தில் இல்லாமல் அன்பின் விஷயத்தில்தான் என்பதை நாம் நினைவில்கொள்வோமாக. "நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாய் இருங்கள் என்கிற புதிதானக் கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்." அப்போஸ்தலர்கள் ஒருவரிலொருவர் போதுமானளவுக்கு அன்புக்கொண்டிராததாலேயே, இராஜ்யத்தில் யார் பெரியவராய் இருப்பார் என்று வாக்குவாதம் பண்ணினவர்களாகக் காணப்பட்டனர் மற்றும் அன்பு கொண்டிராததாலேயே, ஒருவருக்கொருவர் தாழ்த்திக்கொள்ளமாட்டோம் என்று மிகவும் தீர்மானமாய்க் காணப்பட்டு, இதனால் ஆண்டவருடைய பாதங்களையும் கழுவும் காரியத்தினைப் புறக்கணித்தவர்களாக, கனம் குறைந்த வேலையிலும், அவரே அனைவருக்கும் பணிவிடைக்காரராக இருக்கத்தக்கதாக, அவருக்கு வாய்ப்பளித்தவர்களாகக் காணப்பட்டனர். இந்தத் தவறான சிந்தையே, அதாவது கர்த்தருடைய சிந்தை இல்லாமையே, அவர்கள் எதிராளியானவனுடைய வல்லமையினால் தாக்கப்படுவதற்கு ஏதுவாயிற்று மற்றும் யூதாசைக் காட்டிக்கொடுப்பதற்கு ஏதுவாய் வழிநடத்திற்று மற்றும் பேதுரு தனது அபிஷேகிக்கப்பட்ட கர்த்தரை மறுதலிப்பதற்கு ஏதுவாயிற்று.

ஆகையால் நாம் சோதனைக்குள் விழுந்துவிடாதபடிக்கு நம்மைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருப்போமாக; விழித்திருந்து ஜெபம்பண்ணுவோமாக; மிகுந்த தாழ்மையுடனும், மிகுந்த அன்புடனும் காணப்படுவோமாக. இயேசுவினுடைய பின்னடியார்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதற்கும் (அ) அவர்களைச் சிக்கவைப்பதற்கும் (அ) அவர்களை இடறப்பண்ணுவதற்கும் நமது மாபெரும் எதிராளியானவன் அன்றுமுதல் இன்றுவரையிலும் அதிக உற்சாகத்துடன் காணப்பட்டுவருகின்றான்.

"பூமியின் கடையாந்தரங்களிலுள்ள" வாசகர்களின் நன்மைக்காக, முடிந்தமட்டும் சீக்கரமாகவே நமது பிப்ரவரி மாதம் 1-ஆம் தேதி வெளியீட்டில், இந்த நினைவுகூருதல் பாடம் குறித்தக் கட்டுரையை (R4127), வெளியிட்டோம். மீண்டுமாக நமது மார்ச் 1-ஆம் தேதி வெளியீட்டில் ஜீவ அப்பம் குறித்தும் (R4146) கட்டுரையை வெளியிட்டோம். அந்த வெளியீடுகளையும், நினைவுகூருதல் தொடர்பாக தொகுதி 6-இல், பக்கம்: 607-இல் இடம் பெறுபவைகளையும் நீங்கள் மீண்டுமாக ஆராய்ந்து பார்த்திடுவதற்கு நாம் பரிந்துரைக்கின்றோம்.

## இயேசுவின் சிலுவையின் கீழே

இயேசுவின் சிலுவையின் கீழே நிற்பேனே.
அது களைப்புள்ள தேசத்தில், கன்மலையின் நிழல் போலாகுமே;
அது வனாந்தரத்தில் வீடு போலாகுமே; அது வழியில்
இளைப்பாறும் ஸ்தலம் போலாகுமே; அது சுட்டெரிக்கும் நண்பகல்
வேளையிலிருந்தும், ஒவ்வொரு நாளினுடைய பாரத்திலிருந்தும்
இளைப்பாறும் ஸ்தலம் போலாகுமே.

ஓ! அது பாதுகாப்பும், மகிழ்ச்சியுமுள்ள புகலிடமே;
ஓ! அது நாம் வாஞ்சிக்கும் இனிமையான அடைக்கலமே;
ஓ! அவ்விடத்திலேயே பரலோக அன்பும், நீதியும் சந்திக்குமே;
யாக்கோபிற்கு அருளப்பட்ட அந்த அற்புதமான கனவுபோலவே
என் இரட்சகரின் சிலுவையும் எனக்குப் பரலோகம்
செல்லும் ஏணி போன்றுள்ளதே.

ஓ! சிலுவையே உன் நிழல்தனையே
நான் அடைக்கலமாய்க் கொள்கின்றேனே.
அவர் முகம் பிரகாசம் தவிர வேறு எந்த
ஒளியையும் நான் வேண்டிடுவதில்லையே.
உலகை நான் விட்டுவிடுகின்றேனே, அதன்
இலாபமும் நஷ்டமும் நான் அறிய விரும்பவில்லையே.
என் கடந்தக்கால ஜீவியம் எல்லாம் வெட்கமே,
என் மகிமை அனைத்தும் சிலுவையே.

– வேதமாணவர்களின் துதிப்பாடல்கள், #31

# புளித்தமா பற்றின உவமை

## மத்தேயு 13:33

வேதவாக்கியங்கள் எங்கும் புளிப்பு என்ற வார்த்தையானது, பாவத்திற்கு அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவேதான் தூய்மையுள்ள இயேசு "வானத்திலிருந்து இறங்கின அப்பம்" என்று அடையாளப்படுத்தப்படத்தக்கதாக, யூதர்கள் புளிப்பில்லாத அப்பத்தினைப் பயன்படுத்திடுவதற்குக் கட்டளையிடப்பட்டனர். மீண்டுமாக அவர்களது வருடாந்தர பஸ்கா காலத்தின்போதும், யூதர்கள் தங்கள் வீடுகளிலிருந்து புளிப்பை அப்புறப்படுத்தி, அதைச் சுட்டெரித்து, அழித்துப்போடும் படிக்குக் கட்டளையிடப்பட்டிருந்தனர். இங்கும் மீண்டுமாக புளிப்பு என்பது பாவத்திற்கு, சீர்க்கேட்டிற்கு அடையாளமாய் இருக்கின்றது. இதைக் குறித்துப் பரிசுத்த பவுல் அடிகளார் சபைக்கு எழுதுவதாவது: "எனவே புளிப்புச் சத்துள்ள பழைய மாவைத் (பாவம், பகைமை, விரோதம், துர்க்குணம் முதலானவைகளை) தூக்கி எறிந்துவிடுங்கள். அப்போது நீங்கள் புதிதாய்ப் பிசைந்த மாவாயிருப்பீர்கள்" - அதாவது கிறிஸ்துவோடுகூட ஒரே புளிப்பற்ற அப்பத்திலுள்ளவர்களாய் இருப்பீர்கள் என்பதாகும். இந்த அப்பத்தைக் குறித்தே அவர் "அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" என்று குறிப்பிடுகின்றார். (1 கொரிந்தியர் 5:7 திருவிவிலியம்; 1 கொரிந்தியர் 10:17)

ஒரு குறிப்பிட்ட பலியில் அப்பமானது, புளித்த மாவுள்ளதாகச் சுடப்பட வேண்டும் என்பது உண்மைதான்; எனினும் இது சபையாகிய நம்மையும் மற்றும் நாம் சுபாவத்தின்படி பாவிகளாகவும், மற்றவர்களைப்போலவே கோபாக்கினையின் பிள்ளைகளாகக் காணப்பட்டோம் என்ற உண்மையையும், சுடும்போது, புளிப்பினுடைய கெடுக்கும் தன்மையானது நிறுத்தப்படுகின்றது என்பதையும் அடையாளப்படுத்து வதற்கேயாகும் என்று நாம் நம்புகின்றோம்; இந்தச் சுடுதலானது, நமக்குள் பாவமான மற்றும் சீர்க்கேடான தன்மைகள் முற்றிலுமாய் அழிக்கப்படத்தக்கதாக, சபையானது கடந்துபோக வேண்டிய அனுபவங்களை அடையாளமான விதத்தில் அடையாளப் படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இந்த உவமையில் ஒரு ஸ்திரீ குடும்பத்திற்கான உணவு/மாவில் புளித்த மாவைக் கலப்பதாகவும் மற்றும் இதன் காரணமாக மாவு முழுவதும் புளிப்பேறினதாகவும்

கர்த்தர் குறிப்பிடுகின்றார். இதன் காரணமாகக் குடும்பத்தில் எவரேனும் சுத்த மற்றும் புளிப்பற்ற அப்பத்தை விரும்பினாலும், பெற்றுக்கொள்ள முடியாது; காரணம் புளிப்பு முழுவதும் பரவிவிட்டது. இது எதனை அடையாளப்படுத்துகின்றது? வேதவாக்கிய அடையாளங்களினுடைய விஷயத்தில் ஸ்திரீ மத அமைப்புக்கு அடையாளமாய் இருக்கின்றாள். உவமையில் இடம்பெறும் ஸ்திரீயானவள், ஆரம்பக்காலத்தில் அதிகாரமுடைய மற்றும் சுத்த அப்பத்தை அதாவது கர்த்தரினால் விசுவாச வீட்டாருக்கு அளிக்கப்பட்டதான தூய அப்பத்தைப் பெற்றிருந்த ஓர் அமைப்பை அடையாளப் படுத்துகின்றாள்.

ஸ்திரீ உணவனைத்துடன், புளிப்பை, தப்பறையை, போலி உபதேசத்தினைக் கலந்துவிட்டாள். புளிப்பேற்றப்படாமல் எதுவும் விடப்படவில்லை. விளைவு அஜீரணமாகும். தூய்மையானதான தேவவார்த்தையானது ஏற்றுக்கொள்ளப் படுகிறதில்லை. புளிப்பானது பரவியுள்ளபடியால், இன்றைக்கு இறையியல் உபதேசங்கள் அனைத்தும், அனைத்துச் சபைப் பிரிவுகளிலுமுள்ள கிறிஸ்தவ ஜனங்கள் அனைவருக்கும் வெறுப்பிற்குரியதாகவும், கேடானதாகவும் காணப் படுகின்றது.

நடந்திருப்பவைகளுக்குத் தீர்க்கத்தரிசனமாக இவ்வுவமை காணப்படுகின்றது. உண்மையான கிறிஸ்தவர்கள் அனைவரும் இருண்ட யுகத்தினுடைய விசுவாசப்பிரமாணங்களினின்று, இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கத்தரிசிகளினுடைய வார்த்தைகளுக்குச் செவிக்கொடுக்க திரும்பும் காலம் வந்துள்ளது. வேதாகமத்தின் போதனைகளே, கலப்படமற்ற தேவவார்த்தை என்றும், அதுமாத்திரமே "நம்மை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கும்" என்றும், அதுமாத்திரமே "தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி" செய்யும் என்றும் மீண்டுமாகச் சுட்டிக்காட்டுபவர்களில் முதன்மையானவராக, புனித போப் அவர்கள் இடம் பெறுவதைக் கண்டு நாம் மகிழ்கின்றோம். (2 தீமோத்தேயு 3:15-17)

# நமது "ஆசீர்வாதத்தின் பாத்திரம்"

**"கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 திருவிவிலியம்)**

தேவனைப் போற்றிக்கொண்டு, நாம் பானம்பண்ணுகின்றதான ஆசீர்வாதத்தின் பாத்திரமானது உண்மையில் அநேக விதத்தில் ஆசீர்வாதத்தின் பாத்திரமாகவே இருக்கின்றது. அது கிறிஸ்துவோடு பாடுபடுவதற்கான பாக்கியமான சிலாக்கியத்தையும், அந்தப் பாடுகளுக்கான பலனாகக் கடந்துவரும் ஆசீர்வாதமான காரியங்களையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. வாக்குத்தத்தங்களானது இராஜ்யத்தில், நாம் இராஜ்யத்தின் சந்தோஷங்களில் பங்கடையும்போது நிறைவேறுதலை அடையும் என்று கர்த்தர் தெரிவித்துள்ளார்.

தேவனால் நாட்டப்பட்டதான மாபெரும் திராட்சச்செடியின் பாகமாக சபை அடையாளப்படுத்தப்படுகின்றாள்; இதை இயேசு, "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்" என்று கூறிக் குறிப்பிடுகின்றார் (யோவான் 15:5). இந்தத் திராட்சச் செடியினுடைய அருமையான கனிக் குறித்து நமது கர்த்தர் நம்மிடம் கூறுகின்றார்; மற்றும் கனி வளருதல் என்பது, நமது அனுபவங்களினுடைய துக்கமான பாகத்தைக்குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஒரு விதத்தில் பாத்திரமானது சந்தோஷத்தைக்குறிக்கின்றதாய் இருக்கும்; இதை நாம் இந்தத் தற்காலத்தினுடைய பாடுகளைக்கடந்து, மகிமைக்குள் பிரவேசிக்கும்போது அடைகின்றவர்களாய் இருப்போம் (மத்தேயு 26:29). "தேவனைப் போற்றுதல்/ஸ்தோத்திரித்தல்" [திருவிவிலியம்] (நாம் ஆசீர்வதிக்கிற - KJV மொழிப்பெயர்ப்பில்) என்று ஆதார வசனத்தில் இடம்பெறுகின்றதான வார்த்தைகளானது, கர்த்தருக்கு நன்றி மற்றும் துதி ஏறெடுத்தலைக்குறிக்கின்றதாய் இருக்கும் எனப் புரிந்துகொள்ளப்படலாம். இருதயத்தில் நன்றி இல்லாமலும், மதிப்பினை உணர்ந்துகொள்ளாமலும் பாத்திரத்தைப் பெற்றுக்கொள்பவர்கள், பலனை அடையமாட்டார்கள். ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளதான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், கிறிஸ்துவோடு பாடுபடுவதற்கான இந்த மாபெரும் சிலாக்கியத்திற்காக, நன்றியுணர்வோடு பாத்திரத்தினை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

"கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா (ஐக்கியமாயிருக்கிறதல்லவா?)" எனும் அப்போஸ்தனுடைய இந்தக் கேள்வியைக் கவனிக்கையில், நாம் நம் மனங்களுக்கு முன்பாக இரண்டு கருத்துக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; முதலாவதாக கிறிஸ்துவினுடைய இரத்தத்தை அடையாளப்படுத்துகிறதும், அப்போஸ்தலனால் இங்குக் குறிப்பிடப்படுகிறதுமான சொல்லர்த்தமான பாத்திரத்தை, சொல்லர்த்தமான திராட்சப்பழரசத்தை மனதின் முன்பாகக் கொண்டிருத்தல் வேண்டும்

மற்றும் இரண்டாவதாக அவரது பாத்திரத்தில், பலியின் பாத்திரத்தில் பங்குகொள்வதற்கான சிலாக்கியத்தினை நாம் பெற்றிருக்கின்றோம் என்ற உண்மையை மனதின் முன்பாகக்கொண்டிருத்தல் வேண்டும். அவரது மரணத்தில் பங்குகொள்வதற்கு, அவரது பாடுகளில் பங்குகொள்வதற்கு நாம் சிலாக்கியமடைந் திருக்கின்றோம். இந்த ஒரு கருத்தானது, மற்ற வேதவாக்கியங்கள் மூலமாகவும் முன்வைக்கப்படுகின்றது - இயேசு தமது சரீரமாகிய சபைக்குத் தலையாக இருக்கின்றார் போன்றவைகள் முன்வைக்கப்படுகின்றது. அவர் உலகத்திற்கான மாபெரும் தீர்க்கத்தரிசியாகவும், ஆசாரியனாகவும், இராஜாவாகவும், நியாயாதிபதி யாகவும் மற்றும் ஆசி வழங்குபவராகவும் காணப்படப்போகின்றார்.

வேதவாக்கியங்களின்படி, மாபெரும் தலையானவர், மரணம்வரையிலும் பாடுகள் அனுபவித்திட்டப் பிற்பாடு, உலகத்திற்காக தம்முடைய ஜீவனை கையளித்த பிற்பாடு மகிமைப்படுத்தப்பட்டார். நாம் அவரது அங்கத்தினர்களாக, அதாவது சீக்கிரத்தில் மகிமையில் அவரது அங்கத்தினர்களாகக் காணப்படத்தக்கதாக, மாம்சத்தில் இப்பொழுது அங்கத்தினர்களாக ஏற்றுக்கொண்டுள்ளார். நாம் 'அங்கத்தினர்கள்' எனும் வார்த்தையினை, பாராளுமன்றத்தின் அங்கத்தினர்கள் குறித்துப் பேசும் விதத்திலேயே குறிப்பிடுகின்றோம். பாராளுமன்ற குழுவில் அநேக அங்கத்தினர்கள் காணப்படுவதுபோலவே, கிறிஸ்துவினுடைய சரீரத்தில் அநேக அங்கத்தினர்கள் காணப்படுகின்றனர். கிறிஸ்துவை விசுவாசித்தல் மற்றும் தங்களையே தேவனுக்குக் கொடுத்தல் எனும் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இவர்கள் தங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துகின்றவர் களாய்க் காணப்படுகின்றனர். அப்போது நமது கர்த்தர் இவர்களைத் தம்முடைய அங்கத்தினர்களாக - இப்பொழுது பூமியில் அங்கத்தினர்களாகவும், பிற்பாடு மகிமையில் அவருடைய அங்கத்தினர்களாகவும் ஏற்றுக்கொள்வார்.

## நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்

ஆகையால் இந்தப் பாத்திரத்தில் நாம் உண்மையாய்ப் பானம்பண்ணும்போதே, நாம் நமது “அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திட” முடியும் (மத்தேயு 26:27; 2 பேதுரு 1:10). “நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்” எனும் கட்டளையானது, இரண்டு அர்த்தங்கள் கொண்டவையாக இருக்கின்றது; முதலாவது அர்த்தம், சுவிசேஷ யுகம் முடிவடைவதற்கு முன்னதாக அது முழுவதுமாகப் பானம் பண்ணப்பட வேண்டும் மற்றும் இரண்டாவது அர்த்தம், அவரது சரீரத்தினுடைய அங்கத்தினர்களாகிய அனைவரும் அதில் பானம்பண்ணிட வேண்டும் என்பதாகும். பதினெட்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக இப்பொழுது காணப்பட்டுக்

கொண்டிருக்கின்றதான சரீரம் மற்றும் தலையாகிய கிறிஸ்துவின் பாடுகள் குறித்தும், பின் தொடரும் மகிமை குறித்தும் பரிசுத்தவானாகிய பேதுரு பேசியிருக்கின்றார் (1 பேதுரு 1:8-12; 4:1; 5:1). கடைசி அங்கத்தினன் பரலோக நிலைக்குள் கடந்து போனவுடனே, கிறிஸ்துவின் பாடுகள் அனைத்தும் முடிவடைந்துபோனதாக இருக்கும் மற்றும் அதற்குமேல் எவருக்குமே “கிறிஸ்துவின் பாடுகளில்” பங்கடைவதற்கான சிலாக்கியமும், அவருடைய மகிமையில் பங்கடைவதற்கும், அவரது மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகுவதற்குமான சிலாக்கியமும் கிடைக்காது.

அநேக திராட்சப்பழங்களுடைய இரசத்தை உடையதாக இருப்பினும், அது ஒரே பாத்திரம்தான் மற்றும் அநேக கோதுமை மணிகளினால் உண்டுபண்ணப் பட்டிருந்தாலும், அது ஒரே அப்பம்தான். உலகத்திற்கான அப்பமாக வேண்டுமெனில், மணிகளானது அதன் தனித்துவத்தையும் மற்றும் அதன் ஜீவனையும் தக்கவைத்துக்கொள்ள முடியாது. ஜீவன் வழங்குகிற ஒன்றாகக் காணப்பட வேண்டுமெனில் திராட்சப்பழங்களானது, தங்களைத் திராட்சப்பழங்களாகத் தக்கவைத்திட முடியாது. இப்படியாகக் கர்த்தருடைய ஜனங்கள் ஒரே அப்பத்திலும், ஒரே பாத்திரத்திலும் பங்குகொள்பவர்களாய் இருக்கின்றனர் என்பதான அப்போஸ்தல னுடைய வார்த்தைகளிலுள்ள அழகை நாம் பார்க்கின்றோம். அவரது பாத்திரத்தில் பங்குகொள்வதற்கான கர்த்தருடைய அழைப்பை ஏற்றுக்கொள்வதன் மூலமாகவும், ஒரே அப்பத்தின் அங்கத்தினர்களாக, அவரோடுகூடப் பிட்கப்படுவதன் மூலமாகவும், புதிய சுபாவத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமே ஒழிய மற்றபடியல்ல; அவரது மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தில் அவரோடுகூட அடக்கம் பண்ணப்படுவதின் மூலமாகத்தான் அவரோடுகூட, மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்குமான உயர்த்தெழுதலை - முதலாம் உயிர்த்தெழுதலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## ஒரே அப்பத்தில் சபையின் பங்கு

அப்பமானது முதலாவதாக, நமக்காகவும், பொதுவான உலகத்துக்காகவும் வேண்டி பிட்கப்பட்டதான கர்த்தராகிய இயேசுவினுடைய சரீரத்தை அடையாளப் படுத்துகின்றதாய் இருக்கின்றது. விரிவான கண்ணோட்டத்தில் பார்க்கையில், அது கிறிஸ்துவினுடைய சரீரம் முழுவதையும், அவரது அங்கத்தினர்களாகுபவர்கள் அனைவரையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. இப்படியாக அப்பம் பிட்கப்படுதலானது, சரீரம் பிட்கப்படுதலானது, 18 நூற்றாண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

கர்த்தருடைய இராப்போஜனம் நிறுவப்பட்டபோது, இயேசு அப்பத்தைப் பிட்டார் என்று நாம் வாசிக்கின்றோம். சொல்லப்போனால், அப்போது அவரால் மாத்திரமே அப்பத்தைப் பிட்க முடியும். இயேசு தம்முடைய பலியின் மூலமாகவும், உயர்த்தப்படுதலின் மூலமாகவும் ஒரு குறிப்பிட்ட வகுப்பாருடைய குறைவினை

நிறைவாக்குவதுவரையிலும், மனுக்குலத்தில் மீதியானவர்கள் அனைவருமே, தேவனுடைய பார்வையில், நீதிமான்கள் அல்லாதவர்களாகவே காணப்பட்டனர். ஆகவே இயேசுவே முதலாவதாக அப்பத்தைப் பிட்டார். இன்று புளிப்பில்லாத அப்பமானது, நினைவுகூருதலின் காலக்கட்டத்தில், நம் ஒவ்வொருவரிடத்திலும் கடந்துவரும்போது மற்றும் நாம் ஒவ்வொருவரும் அதில் ஒரு பங்கை/பாகத்தை எடுத்துக்கொள்ளும்போது, அவனவன் தனக்காகவே அதைப் பிட்டுக்கொள்கின்றான்.

நமது கர்த்தர் முதலாவது அப்பத்தைப் பிட்டக் காரியமானது, நமக்குத் தனிப்பட்ட பங்கு இல்லை என்பதைக்குறிப்பதாகாது. நமது கர்த்தருடைய சரீரத்தை (பிட்குதலை) நொறுக்குவதை பரம பிதா செய்ய வேண்டியிருந்தது என்பதை நாம் நினைவுகூருகின்றோம். எழுதப்பட்டிருக்கிறபடியே, "யேகோவாவோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்" (ஏசாயா 53:10). இது நமது கர்த்தருடைய சித்தத்திற்கு எதிராக செய்யப்படவில்லை. குமாரனை நொறுக்கும்/பிட்கும் காரியத்தினை பரம பிதா செய்ய வேண்டியிருந்ததுபோன்று, தெய்வீக ஏற்பாட்டிற்கு இசைவாக, அப்பத்தில் பங்குபெறுகிறவர்களாகிய நம்முடைய நொறுக்குதலையும் பரம பிதா செய்கின்றார்.

அடுத்த அதிகாரத்தில் அப்போஸ்தலனால், "கர்த்தருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று கூறப்பட்டுள்ளதான வார்த்தைகள், இயேசுவினுடைய மரணத்திற்கே குறிப்பாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. வார்த்தைகளினுடைய பின்னணி அமைப்பானது, இங்குக் கர்த்தர் இயேசுவே தனிப்பட்ட விதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:26). "அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்" (சங்கீதம் 45:11). சபை எங்குமே ஆண்டவர் என்று குறிப்பிடப்படவில்லை.

இன்னுமாக "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று இயேசு கூறியுள்ளதையும் நாம் நினைவுகூரவேண்டும் (லூக்கா 22:19). அவர் "உங்களை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றும், பலியிலுள்ள உங்கள் பங்கினை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றும் சொல்லவில்லை. நாம் அவரோடுகூட மரித்தவர்களாய்க் காணப்பட வேண்டும். பின்வரும் மகிமைகளில் பங்கடைய வேண்டுமெனில், இந்தத் தற்காலத்தின் பாடுகளில், நாம் அவரோடுகூடப் பங்குகொள்ள வேண்டும் என்பதை நினைவுகூருகின்றோம். பிதா குமாரனைத் தலையாகத் தந்தருளினார்; "இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" ஆவார் (எபிரெயர் 3:1; உரோமர் 8:17, 18; 9:5).

# இரத்தத்தில் ஜீவன் இருக்கின்றது

இரத்தத்தில் ஜீவன் இருக்கின்றதென வேதவாக்கியங்கள் கூறுகின்றன (லேவியராகமம் 17:11). இதற்கு இசைவாகவே, யூதர்கள் இரத்தத்தைப் புசிப்பதற்கு எப்போதும் தடைப்பண்ணப்பட்டவர்களாய் இருந்தனர். மிருகங்களினுடைய மாம்சம் புசிக்கப்படுவதற்கு முன்னதாக, அவைகளின் இரத்தம் சிந்தப்பண்ணப்பட வேண்டும். யூதர்களின் நடுவே தங்கியிருக்கின்றதான எந்த அந்நியர்களும்கூட, எந்த இரத்தத்தையும் புசிக்க அனுமதிக்கப்படவில்லை (லேவியராகமம் 17:10-14). இப்படியாக ஜீவன் என்பது மிகவும் புனிதமான ஒன்று என்று தேவன் தெரியப்படுத்தினார். மனிதனுக்குத் தேவன் கொடுத்ததான இந்த ஜீவ ஆக்கக்கூறானது, இரத்தத்தில் காணப்படுகின்றதாய் இருக்கின்றது. இரத்த நாளங்களில் இரத்தம் ஓடிக்கொண்டிருப்பது வரையிலும், ஜீவன் காணப்படுகின்றதாயிருக்கும்; ஆனால் இரத்தம் சிந்தும்போது, அந்த ஜீவராசி மரிக்கின்றது.

நமது கர்த்தர் தம்முடைய பூமிக்குரிய ஜீவனை ஒப்புக்கொடுத்தபோது, அந்த ஜீவனைத் தமக்காகப் பயன்படுத்தும் வண்ணமாக, அந்தப் பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமையை அவர் தம் வசமாய் வைத்துக்கொள்ளவில்லை. "விலையுயர்ந்த முத்தை" அடைய விரும்புபவர்கள் அனைவரும், தங்களிடத்திலுள்ள யாவற்றையும் விற்க வேண்டும், அதாவது தாங்கள் அனுபவிக்கின்றதான பூமிக்குரிய ஜீவன் (அ) சிலாக்கியங்கள் அனைத்தையும் ஒப்புக்கொடுத்திட வேண்டும் என்று அவர் நமக்கு உவமை ஒன்றில் கூறியுள்ளார் (மத்தேயு 13:45, 46). நமது கர்த்தர் பரிபூரணமான பூமிக்குரிய ஜீவனை உடையவராய் இருந்தார். அவர் அந்த ஜீவனை ஒப்புக்கொடுத்தார். "அவர் தம்முடைய ஆத்துமாவை (ஜீவனை) மரணத்திலூற்றினார்" (ஏசாயா 53:12). இது எதன் அடிப்படையில் ஆகும்? நமக்கு முன்பாக அவர் முன்வைத்ததான அதே காரியங்களினுடைய அடிப்படையிலேயே ஆகும்; அதாவது "நாம் பிழைத்திருக்க வேண்டும் எனில், நாம் மரித்தாக வேண்டும்; நாம் ஆளுகைசெய்ய வேண்டுமெனில், நாம் பாடுபட வேண்டும்; நாம் அவரோடுகூட மரித்திருக்க வேண்டும்" என்பதாக அவர் நம் முன் வைத்ததான இதே காரியங்களினுடைய அடிப்படையிலேயே ஆகும் (2 தீமோத்தேயு 2:11, 12). ஆகையால் அவரது அடிச்சுவடுகளைப் பின்தொடருகின்றவர்களாகிய நாமும், அவர் செய்த வண்ணமாகவே செய்ய வேண்டும்.

நாம் அவரது சீஷர்களெனச் சகோதர சகோதரிகளுக்கு நம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுப்போமானால், நாம் இயேசு செய்ததையே செய்கிறவர்களாக இருப்போம். இவை அனைத்தும் உலகத்துக்காகச் செயல்படுத்தப்படப்போகின்றது. அந்தப் பூமிக்குரிய ஜீவனை அவர் கையளித்தது என்பது, பாதுகாத்து வைத்துக்கொள்வதற்காக இராமல், மாறாக இறுதியில் அதை மனுக்குலம் அனைத்திற்கும் (கைமாற்றிவிடுவதற்கே) கொடுத்துவிடுவதற்கே ஆகும். மனித ஜீவனுக்கான உரிமை

இன்னும் அவரது கட்டுப்பாட்டின்கீழாக இருக்கின்றது. அவரே மாபெரும் மத்தியஸ்தராக, தம்மால் ஊற்றப்பட்டதான ஜீவனை, மனுக்குலத்தின் உலகத்திற்காகக் கொடுத்தருளுவார்.

சபையாகிய நாம் அவரோடுகூட, அவரது பாடுகளில் பங்கடையத்தக்கதாகவும், ஆவிக்குரிய தளத்தில் அவரது மகிமையான இராஜ்யத்தில் பங்கடையத்தக்கதாகவும், அவர் இப்பொழுது நமக்கு, தம்முடைய புண்ணியத்தை/தகுதியைத் தரிப்பிக்கின்றவராய் இருக்கின்றார். ஆகையால் இந்தப் பாத்திரமானது, பூமிக்குரிய ஜீவனையும், அதனுடன் உள்ள உரிமைகள் அனைத்தையும் முழுமையாய்த் துறந்துவிடுதலைக் குறிக்கின்றதாயிருக்கும். நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஜீவனானது பறிமுதல் செய்யப்படவில்லை, மாறாக ஒப்புக்கொடுக்க மாத்திரந்தான் பட்டது (யோவான் 10:17, 18). அதை ஒப்புக்கொடுத்ததற்கான நோக்கம் என்னவெனில், மனுக்குலம் அதனை பெற்றுக்கொள்ளத்தக்கதாக அதை அவர் தனிப்பட்ட விதத்திலும், என்றென்றுமாகவும் துறந்துவிடுவதாக இருந்தது. அவர்கள்வசம் கைமாற்றும் காரியத்தினை, அவர் இன்னமும் நிறைவேற்றி முடிக்கவில்லை, எனினும் இந்த நோக்கத்திற்காகவே, அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்துவிட்டார்.

## பறிமுதல் செய்யப்படாத, பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமை

உலகத்தை மீட்டுக்கொள்வதற்கான தெய்வீகச் சித்தத்தை நிறைவேற்றும் பணியை நமது கர்த்தர் மேற்கொண்டார் மற்றும் அதை நிறைவேற்றும் காரியத்தினைத் தொடர்ந்தார், எனினும் அவர் நோக்கத்தினை இன்னமும் நிறைவேற்றி முடிக்கவில்லை. அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார், ஆனால் அதன் உரிமையை அவர் இழக்கவில்லை. அவர் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டபோது, அவருக்கு இன்னமும் அந்தப் பூமிக்குரிய ஜீவன்மீது உரிமை இருந்தது மற்றும் அந்த ஜீவனைத் தமக்காக அவர் பயன்படுத்தக்கூடாது என்றும், அதைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்களாகிய உலகம் அனைத்திற்கும், தம்முடைய சபை தம்மோடுகூட ஆளுகை செய்யும் ஆயிர வருடங்களடங்கிய தம்முடைய ஆளுகையின் முடிவில், ஒப்படைக்கப்பட/கொடுக்கப்பட வேண்டும் என்றுமுள்ள புரிந்துகொள்ளுதலை உடையவராய் இருந்தார்.

ஆகையால் அவரது ஜீவன், அவரிடமிருந்து பிடுங்கப்படவில்லை; அவரது கீழ்ப்படியாமையினால் மாத்திரமே அவரிடமிருந்து, அவரது ஜீவன் பிடுங்கப்பட முடியும் (லேவியராகமம் 18:5; எசேக்கியேல் 20:11; லூக்கா 10:28; உரோமர் 10:5). அவர் தாமாய் முன்வந்து, தெய்வீகச் சித்தத்திற்கு இசைவாகத் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார். தம்முடைய ஜீவனானது தெய்வீக நீதியினுடைய கரங்களில் சொத்தாகக் காணப்படத்தக்கதாகவும், இதினிமித்தம் காலங்கள் வரும்போது, அந்தச் சொத்தை தாம் மனுக்குலத்திற்காகப் பயன்படுத்தத்தக்கதாகவும், அவர் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார் (யோவான் 6:51).

நமது கர்த்தருடைய மனுஷீக ஜீவனானது என்றென்றும் ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் என்பதும், அதை அவர் திரும்ப எடுக்கக்கூடாது என்பதும் தெய்வீக நோக்கமாய்க் காணப்பட்டது. அவர் தம்முடைய ஜீவியத்தை யோர்தானில் அர்ப்பணம் பண்ணி, அந்தப் பலியைக் கல்வாரியில் முடித்தார். சுவிசேஷ யுகம் முழுவதிலும், அவர் தம்முடைய மறைபொருளான சபையைப் பலிச்செலுத்திக் கொண்டுவருகின்றார். இந்தச் சரீர அங்கத்தினர்களுடைய பலியினை அவர் நிறைவேற்றின உடனே, மகா பிரதான ஆசாரியனுக்குச் சொந்தமான, அவர்களது ஜீவனுக்கான உரிமைகளானது, புதிய உடன்படிக்கையை முத்திரிப்பதின் மூலமாக உலகத்தை வாங்குவதற்காக, மீட்டுக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும். இதன்பின் உடனடியாக, அவரது இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். அவரது புண்ணியமானது, அவரது ஜீவன - உரிமையானது முழுச் சபையும், திரைக்கு அப்பால் கடந்து போகாததுவரையிலும் அடுத்தக் கட்டமாகச் செயல்படுத்தப்படாது என்பது, கிருபாசனம் ஆட்டினுடைய இரத்தத்தினால் தெளிக்கப்படும் காரியத்தினால் அடையாளப்படுத்தப்படுகின்றது. நமது கர்த்தருடைய இரத்தமும், அவரது சரீரத்தினுடைய இரத்தமும், அனைத்தும் ஒரே இரத்தமாயிருக் கின்றது. அநேக அங்கத்தினர்கள் அடங்கின ஓர் ஆசாரியன் ஆகும். அது அனைவருக்கும், அதாவது சர்வலோகத்தினுடைய பாவங்களுக்குமான ஒரே பாவநிவாரணம் ஆகும் (1 யோவான் 2:2).

இரத்தம், கிறிஸ்துவினுடைய மரணத்தை மாத்திரம் குறிக்காமல், புண்ணியம்/தகுதி தரிப்பிக்கப்பட்டதான அவரது சரீரத்தினுடைய அங்கத்தினர்கள் அனைவருடைய மரணத்தையும்கூடக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இது தொடர்பாகவே அப்போஸ்தலன் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் (ஐக்கியம் (அ) பங்குகொள்ளுதல்) ஐக்கியமாய் இருக்கிறதல்லவா?" நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் (ஐக்கியம் (அ) பங்குகொள்ளுதல்) ஐக்கியமாய் இருக்கிறதல்லவா?" அதாவது பாத்திரத்திலும், அப்பத்திலும் அடையாளப் படுத்தப்பட்டுள்ளதுபோல, அவருடன் ஓர் ஐக்கியம்/பங்கெடுத்தல் ஆகும். காரியம் முழுவதுமே அவரைப்பற்றியதுதான்; ஆனாலும் கிறிஸ்துவின் அங்கத்தினர்களென, மாம்சத்தைப் பலிச்செலுத்துவதில், கிறிஸ்துவினுடைய பாடுகளிலான நமது பங்கெடுப்பில், நமக்கான தனிப்பட்ட பங்கினையும்கூட நாம் நினைவுகூருகின்றோம்.

# நமது கர்த்தருடைய மாம்சத்தைப் புசித்தலுக்கும் மற்றும் அவரது இரத்தத்தைப் பானம் பண்ணுதலுக்குமான அர்த்தம்

*"நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை." யோவான் 6:53*

இந்த அதிகாரத்தில், கர்த்தர் தம்மைப் பரலோகத்திலிருந்து வந்த மெய்யான அப்பம் என்று கூறினதன் நிமித்தமாக, முறுமுறுத்தவர்களாகவும், தம்மை விசுவாசியாதவர்களாகவும் காணப்பட்ட யூதர்களிடம் அவர் பேசியவைகள் இடம்பெறுகின்றது. "மாம்சத்தைப் புசியாமலும், . . . இரத்தத்தைப் பானம்பண்ணாமலும்" எனும் அவரது வார்த்தைகளானது, ஆழமான ஆவிக்குரிய அர்த்தம் உடையவையாகவும், உத்தம இஸ்ரயேலர்களால் மாத்திரம் பெற்றுக்கொள்ள முடிகின்றவையாகவும் காணப்படுகின்றது. மேலும் இது இன்றுங்கூட உண்மையாகவே இருக்கின்றது. உலகமானது அடுத்த யுகத்தில், இயேசுவினால் கையாளப்படும்போது, அவரது மாம்சத்தைப் புசிப்பதற்கு - அவரது பலியினுடைய புண்ணியங்களைத் தங்களுடையதாக்கிக் கொள்வதற்குரிய வாய்ப்பினை நிச்சயமாய்ப் பெற்றுக் கொள்ளும்; எனினும் அவர்கள் அவரது பாத்திரத்தில் பங்குகொள்வதற்கு - அவரது இரத்தத்தைப் பானம்பண்ணுவதற்குரிய எந்த வாய்ப்பினையும் அடையமாட்டார்கள். அடையாளப் பாஷையில் பாத்திரமானது, பலியாக்கப்பட்ட ஜீவனைக்குறிக்கின்றது. பாத்திரத்தினால் அடையாளப்படுத்தப்படும் கிறிஸ்துவினுடைய பாடுகளில், உலகத்திற்கு எந்தப் பங்கெடுப்பும் கிடைக்கப்பெறாது.

நமது கர்த்தருடைய வார்த்தைகளின் அர்த்தம் என்னவெனில் . . . "சுவிசேஷ யுகத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட காரியத்தினை நீ ஏற்றுக்கொள்வாயானால், நீ ஜீவனை அடையலாம் மற்றும் அந்த ஜீவனை மனிதன் இதுவரையிலும் பெற்றிராத (அ) பெறமுடிந்த அளவைக்காட்டிலும் மிக அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். நீ தன்னில்தான் ஜீவனை உடையவனாகலாம் - உனக்குள்ளே ஜீவனை உடையவனாகலாம்."

## இரண்டு இரட்சிப்புகள் சித்தரிக்கப்பட்டுள்ளன

கர்த்தருடைய மாம்சத்தை அடையாளப்படுத்துகின்றதான அப்பத்திற்கும், அவரது இரத்தத்தை அடையாளப்படுத்துகின்றதான திராட்சரசத்திற்கும் இடையில், வேத வாக்கியங்களில் வேறுபாடு நிலைநாட்டப்பட்டுள்ளது என்று நாம் நம்புகின்றோம். சபையானது அவரது மகிமையடைந்த சரீரத்தின் அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு, மேற்கூறப்பட்டுள்ள இரண்டிலும் பங்கெடுப்பதன் வாயிலாக, அவைகளில் பங்கடைபவர்களாக இருக்க வேண்டும். அப்பமானது,

அப்போஸ்தலன் விவரிப்பதுபோன்று, நமக்கு அவசியமான ஜீவ அப்பமென, நமது கர்த்தரை மாத்திரம் நமக்கு அடையாளப்படுத்துகின்றதாய் இராமல், இன்னுமாக நமது கர்த்தர் பிட்கப்பட்டதுபோன்று அவருடைய அங்கத்தினர்களெனப் பிட்கப்படப் போகின்ற நம்மையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; மேலும் திராட்சரசமானது நமது கர்த்தருடைய இரத்தத்தை மாத்திரம் குறிக்காமல், இன்னுமாக சபையினுடைய இரத்தத்தையும் - நாம் அவரது தியாகமான பாடுகளில், அவரோடுகூடப் பங்காளிகளாக இருப்பதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது (1 கொரிந்தியர் 10:16, 17).

நமது கர்த்தருடைய பாத்திரத்தில் பங்குகொள்வதற்கான சிலாக்கியமானது, உலகத்திற்குரியதல்ல. அவர்கள் கிறிஸ்துவினுடைய பாடுகளில் பங்கடைபவர்களாக இருக்கமாட்டார்கள்; ஏனெனில் சபை மகிமையடைவதோடு, அவருடைய பாடுகளிலும், மகிமையிலும் பங்கடைவதற்கான வாய்ப்புகள் அனைத்துமே முடிவடைந்துவிடும். "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" - முழுவதையும் பானம்பண்ணுங்கள் என்று கர்த்தர் கூறினார். உலகம் பானம்பண்ணுவதற்கு எதுவுமிராது. சபை வகுப்பாராகிய நாம், "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுகின்றவர்களாய்" இருப்போம் (கொலோசெயர் 1:24).

"மனுஷகுமாரனுடைய மாம்சமானது," மனித சிலாக்கியங்கள் திரும்பக் கொடுக்கப்படுதலை, அதாவது அதை அடைவதற்கான வழிவகையை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது மற்றும், மனிதன் இழந்துபோனதான ஜீவனை, அதாவது ஆதாமில் இழந்துபோகப்பட்டதான ஜீவனை - மனுஷஜீவனை - பூமிக்குரிய ஜீவனை மனுஷனுக்கு திரும்பக்கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இது கிறிஸ்து மூலமான தேவனுடைய ஈவாகும். ஆனால் இந்த அப்பம் அளிக்கப்படுவது மாத்திரம் போதாது. உலகம் அந்த அப்பத்தைப் புசிப்பதும், கர்த்தருடைய இராஜ்யத்தின் வாயிலாக அவர்களுக்கு அவர் அளிக்கப்போகின்றதான உதவியைப் பெற்றுக் கொள்வதும், அவசியமாகும். "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே" (யோவான் 6:51) என்று இயேசு கூறினார்.

ஒரு கோணத்தில் பார்க்கும்போது, உலகம் மரிக்கவில்லை என்று சொல்லப்படலாம். அவர்கள் ஜீவனுக்கான தங்களது உரிமையை இழந்துள்ளனர்; எனினும் ஜீவன் திரும்பக் கொடுக்கப்படத்தக்கதாக தேவன் இயேசுவின் மூலம் ஏற்பாடுகள் பண்ணியுள்ளார். ஜீவன் ஆதாமில் இழந்துபோகப்பட்டது, எனினும் அது இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் வாயிலாக திரும்பக்கொடுக்கப்படும். இந்த 6000 ஆண்டு காலங்களாக உலகமானது, உணவின்றியும், விழுந்துபோன நிலையிலும் இருந்து வந்துள்ளது. ஆனால் தேவன் இந்த அப்பத்தைத் தயார் பண்ணியுள்ளார் மற்றும் இதை அவர்கள் ஆயிரவருட யுகத்தின்போது பெற்றுக்கொள்பவர்களாய் இருப்பார்கள்.

உலகமானது, இரத்தத்தில் பங்குகொண்டு, கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுக்கும் என்று வேதவாக்கியங்களில் எங்குமே, அடையாளமான விதத்தில்

காண்பிக்கப்படவில்லை. வெகு சொற்பமானவர்களே இரத்தத்தில் பங்கெடுப்பதாக அடையாளப்படுத்திக் காண்பிக்கப்பட்டுள்ளது. இது லேவியராகமம் 16-ஆம் அதிகாரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. இரண்டாம்முறையாகக் கிருபாசனத்தில் தெளிக்கப்படுகின்றதான இரத்தமானது, ஜனங்கள் அனைவருக்காகவுமிருந்து, இப்படியாய் நீதியைத் திருப்திப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இது மனுக்குலம் அனைத்தும் மரணத் தீர்ப்பினின்று விடுதலையாக்கப்பட்டு, அனைவருக்கும் அப்பத்தைப் புசிப்பதற்கும், மரியாமல் இருப்பதற்குமான வாய்ப்புக் கொடுக்கப்படுவதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இன்னொரு காட்சியில் பயன்படுத்தப்பட்ட இரத்தமானது, தெய்வீக ஏற்பாட்டினை மனிதன் ஏற்றுக்கொள்ளும் காரியத்தினை அடையாளப் படுத்துகின்றதாய் இருக்கின்றது. புது உடன்படிக்கைக்கு நிழலான நியாயப்பிரமாண உடன்படிக்கையை முத்திரையிடுகையில், நீதியைத் திருப்திப்படுத்துதலை அடையாளப்படுத்தும் விதத்தில் மோசே முதலாவதாக நியாயப்பிரமாண புத்தகத்தின்மீது இரத்தம் தெளிக்கின்றார். பின்னர் அதே இரத்தத்தினை ஜனங்கள் அனைவரின்மேலும் தெளித்தார் (எபிரெயர் 9:19; யாத்திராகமம் 24:8). நியாயப்பிரமாண புத்தகத்தின்மீது தெளிப்பதற்குச் சில நொடிகளே ஆனது; ஆனால் ஜனங்கள்மீது தெளிப்பதற்கு நெடு நேரம் தேவைப்பட்டது.

ஆயிரவருட யுகத்தினுடைய ஆரம்பத்தில் - சபையானவள் அவளது தலையானவருடன் திரைக்கப்பால் இணைந்த உடனே - உலகத்திற்காக, நீதியினைத் திருப்திப்படுத்துவதற்கென, இரத்தமானது தெளிக்கப்படும். பின்னர் கிறிஸ்து மத்தியஸ்தரென, யாவருக்குமாக ஒரு வேலை செய்யத்தொடருவார். அந்த வேலையானது, ஜனங்கள் இரத்தத்தினால் தெளிக்கப்படும் காரியத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில் மத்தியஸ்தர் ஆயிரவருட ஆளுகையின்போது முன்வைக்கின்றதான நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம், மத்தியஸ்தர் வாயிலாக நம் இனத்தின் ஒவ்வொரு அங்கத்தினனும், தேவனுடன் ஓர் உடன்படிக்கை உறவிற்குள் வருவதற்குரிய சிலாக்கியமடைவான்.

## அறியப்பெற்றதிலேயே மிகவும் விலையேறப்பெற்ற உணவும், பானமும்

அவர்கள் மேசியாவின் ஆளுகையின்போது எதிர்ப்பார்க்கப்படுபவைகளை நிறைவேற்றினார்களானால், அந்த ஆளுகையினுடைய இறுதியில் அவர்கள் பரிபூரணமாவார்கள் மற்றும் அவர்களைக் கிறிஸ்து பிதாவின் முன்னிலையில் ஒப்படைப்பார் மற்றும் அப்போது முன்வைக்கப்படும் பரீட்சையில் உண்மையாய் நிலை

நிற்பவர்கள், பிதாவுடன் முழுமையான உடன்படிக்கை உறவிற்குள் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்.

"என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு" (யோவான் 6:54). நமது கர்த்தருடைய வார்த்தைகளானது, அநேகம் தருணங்களில் சிறு மந்தையினரை மாத்திரமல்லாமல், திரள் கூட்டத்தினரையும் உள்ளடக்கின விதத்தில் மிகவும் பரந்த விதத்தில் இடம்பெற்றுள்ளது மற்றும் இதிலே மாபெரும் ஞானம் விளங்குகின்றதாய் இருக்கின்றது. இவ்வசனத்தில் கர்த்தர் "பானம் பண்ணுகிறவனுக்குள் ஜீவன் உண்டு" என்று சொல்லவில்லை; ஏனெனில் இக்காலத்தில் பலியினாலான உடன்படிக்கையைப் பண்ணி, பாத்திரத்திலும், அப்பத்திலும் பங்காளிகள் ஆகுகிறவர்களில் சிலர் தன்னில்தானே ஜீவனுடைய நிலையை - அழியாமையை அடையமாட்டார்கள்; இவர்கள் மிகுந்த உபத்திரவங்கள் வாயிலாகக் கடந்துவந்து, ஆவிக்குரிய தளத்திலுள்ள கீழ்த்தளத்தில் ஜீவனை அடைகின்றவர்களாய் இருப்பார்கள். இவர்கள் நித்திய ஜீவனை அடைந்தாலும், அது அழியாமை ஜீவனாக/தன்னில்தானே ஜீவனுடைய நிலையாக இருக்காது. அழியாமையை அடைபவர்கள் உயர்த்தளத்தில் நித்திய ஜீவனை உடையவர்களாக இருப்பார்கள். திரள்கூட்டத்தினர் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள், ஆனாலும் அது அழியாமையல்ல - தன்னில்தான் ஜீவனுடைய நிலையல்ல.

நமது கர்த்தர், "என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது" (யோவான் 6:55) என்று கூறினதிலிருந்து, இது அறியப்பெற்றதிலேயே மிகவும் விலையேறப் பெற்ற உணவாகவும், பானமாகவும் உள்ளது என்பதாக அவரால் குறிப்பிடப்பட்டுள்ளது என்று நாம் புரிந்துகொள்கின்றோம். வேறெந்த அப்பத்திற்கும் இத்தனை முக்கியத்துவம் இருந்ததில்லை மற்றும் இதைக்காட்டிலும் மிகவும் விலையேறப் பெற்றதான வேறெந்த பானமும் இல்லை; இதில் பங்கெடுப்பதன் மூலம் மகிமை, கனம் மற்றும் அழியாமை - திவ்வியச் சுபாவம் - தன்னில்தான் ஜீவனுடைய நிலையை அடையப் பெறலாம்.

## நிஜமான மன்னா பொழிதல்

உலகத்தின் ஜீவனுக்காக நமது கர்த்தரால் கொடுக்கப்படவிருந்த அவரது மாம்சமே, பரலோகத்திலிருந்து வந்த அப்பமாய் இருக்கின்றது. மேலும் இதற்குத்தான் வனாந்தரத்தில் பொழிந்த மன்னா நிழலாய்க் காணப்படுகின்றது என்று இயேசு விவரித்தார். "உங்கள் பிதாக்கள் (வனாந்தரத்தில்) மன்னாவை உண்டார்கள் மற்றும்

அவர்கள் மரித்தார்களே. இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான்" என்றார். அவர் பின்வருமாறு கூறினார்: "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்." (யோவான் 12:24). அவர் பூமியில் விழுந்து மரித்தார். மேலும் அவருடைய மரணத்தில், நாம் அவரோடுகூடப் பங்காளிகளானோம். நாம் அவரது பாடுகளிலும், மரணத்திலும் பங்கெடுத்தோம்; இப்படியாக உலகத்தால் ஒருபோதும் பங்கெடுக்க முடியாது. அவர்கள் இவைகளின் பலன்களில் மாத்திரம் பங்கடைபவர்களாக இருப்பார்கள்.

இந்தச் சுவிசேஷயுகத்தினுடைய வேலை அனைத்தும், உலகத்திற்கான ஆகாரத்தையும், அவர்கள்மீது தெளிக்கப்படவிருக்கின்ற இரத்தத்தையும் ஆயத்தப்படுத்தும் வேலையாகக் காணப்படுகின்றது. ஆனால் நம்முடைய ஆதார வசனத்தில் இடம்பெறுகின்றதான நமது கர்த்தருடைய செய்தியானது, உலகத்திற்குரியதல்ல. அவர் நம்மிடம் கூறுவதுபோன்று, "பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி நமக்கே அருளப்பட்டது."

இந்த 19 நூற்றாண்டுகள் காலம் முழுவதிலும், தேவனுடைய இரகசியங்களை, ஒரு விசேஷித்த வகுப்பார் மாத்திரமே அறியமுடிந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இக்காரியங்கள் பொதுவான உலகத்திடமிருந்து மறைத்து வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அக்காரியங்கள் உலகத்திற்கு அருளப்படுவதற்கும், அவர்களுக்காக தேவன் வைத்து வைத்திருக்கின்றதான ஆசீர்வாதங்களை அவர்கள் அறிந்துகொள்வதற்குமான காலம் வந்துள்ளதென நாம் இப்பொழுது நம்புகின்றோம். ஏழாம் எக்காளம் தொனிக்கையில், இரகசியங்கள் வெளிப்படுத்தப்படும் என்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன; அந்த ஏழாம் எக்காளம் இப்பொழுது தொனிக்கின்றது. இந்தச் சத்தியங்களை இப்படி வெளிப்படப்பண்ணுவதே, மன்னா பொழியப் பண்ணுதலாகும்.

# உங்களால் கூடுமா?

**"நான் குடிக்கப்போகும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்க, உங்களால் கூடுமா என்றார்." மத்தேயு 20:22**

நம்முடைய இரட்சகரினால் இவ்வார்த்தைகள் பேசப்பட்ட சந்தர்ப்பத்தை நாம் நினைவுக்குக்கொண்டுவந்து பார்க்கிறோம்; இயேசு தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு சிலநாட்களுக்கு முன்பாக இதைக்கூறினார். இயேசு தம்முடைய இராஜ்யத்தில், தம்முடைய சிங்காசனத்தில் இருக்கும்போது, தம்முடைய சீஷர்களும் தம்முடன்கூட இருப்பார்கள் என வாக்களித்திருந்தார். கர்த்தர் சொன்ன விஷயத்தில் அவர்கள் மிகவும் நம்பிக்கையாக இருந்தபடியினால் அவர்கள் தாங்கள் வகிக்கப்போகும் ஸ்தானத்தைக் குறித்து விவாதம் பண்ணிக்கொண்டிருந்தனர். யாக்கோபு மற்றும் யோவான் எனும் இரண்டு சீஷர்களுடைய தாயானவள் இயேசுவினிடத்தில் வந்து, இராஜ்யத்தில் தன்னுடைய இரண்டு குமாரர்களும் அவருக்கு வலது பக்கமாகவும், இடது பக்கமாகவும் இருப்பதற்கு வேண்டிக்கொண்டாள். இயேசு இரண்டு சீஷர்களிடத்தில் திரும்பி, "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா?" என்று கேட்டார்.

இயேசு தம்முடைய ஊழியத்தின் ஆரம்பத்திலேயே தண்ணீரினால் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டார் என நாம் அறிவோம். தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாக, அவர் மனுஷருக்கான இரட்சகராக மரிக்க வேண்டியிருந்தது. அவர் முப்பது வயதை அடைந்தவுடன் - நியாயப் பிரமாணத்தின்கீழ் முப்பதாவது வயதை அடைந்தவுடன், இந்த மரணத்தை அவர் அடையாளமாய்த் தெரியப்படுத்தினார். அவருடைய ஊழியத்தின் மூன்றரை வருட காலப்பகுதியில், அவர் இந்த ஸ்நானத்தை நிறைவேற்றிக்கொண்டிருந்தார்; அதாவது தம்முடைய ஆத்துமாவை மரணத்திற்குள் ஊற்றிக்கொண்டிருந்தார். இந்த மரணத்தை அவர் கல்வாரியில் முடித்தார். "நான் பெறும் ஸ்நானத்தை" என்று இயேசு கூறியுள்ளார். இதை அவர் தற்காலத்தின் அடிப்படையிலேயே குறிப்பிடுகின்றாரே ஒழிய எதிர்க்காலத்தின் அல்லது கடந்த காலத்தின் அடிப்படையில் குறிப்பிடவில்லை. ஆனால் அவர் பாத்திரத்தைக் குறித்து வித்தியாசமாகப் பேசுகின்றார். "நான் குடிக்கப்போகும் பாத்திரத்தில்" என்று கூறுகின்றார். பாத்திரத்தின் விஷயத்தில் தற்காலத்தின் (அ) கடந்த காலத்தின் அடிப்படையில் பேசாமல் எதிர்கால அடிப்படையில் பேசுகின்றார். தாம் எருசலேமுக்குப் போகப்போவதாகவும், அங்கு அவர் சிலுவையில் அறையப்படுவார் என்றும், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவார் என்றும் அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் கூறியிருந்தார். வேறொரு தருணத்தின்போது, "மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை" என்று கூறியிருந்தார் (யோவான் 6:53). போதகர் தாம் சிலுவையில் அறையப்படுவதுபற்றிக் கூறியிருந்தவைகளைச் சீஷர்கள் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் இயேசு சூழ்நிலையைப் புரிந்தவராக இருந்தார் மற்றும் தமக்காக இப்பாத்திரம்

ஊற்றப்படப்போகின்றது என்பதையும் இயேசு அறிந்திருந்தார். இதைக் குறித்து அவர் மீண்டுமாக, "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப் பேனோ என்றார் (யோவான் 18:11).

## நமது கர்த்தருக்கான விசேஷித்த சோதனை

பாத்திரம் எனும் வார்த்தையானது, ஜீவியத்தின் பல்வேறு அனுபவங்களைக் குறிப்பதாக நாம் எண்ணக்கூடும்; அதாவது அனைவருக்கும் சந்தோஷமும், துக்கமும் கலந்த பாத்திரம் உள்ளது என்று எண்ணக்கூடும். ஆனால் இயேசு இவ்வார்த்தையை வேறே அர்த்தத்தில் பயன்படுத்தினார். அவர் கெத்செமனே தோட்டத்தில் இருந்தபோது, "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபம்பண்ணினார். மீண்டுமாக அதே இரவில், "என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினால் ஒழிய இது என்னை விட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று கூறியும் ஜெபம்பண்ணினார். மரணத்திற்குள்ளான அவருடைய ஸ்நானத்தின் விஷயத்தில், நமது கர்த்தருக்கு எவ்விதமான தயக்கமுமில்லை. ஆரம்பம் துவங்கியே இம்மரணத்திற்குள்ளான ஸ்நானத்தின் விஷயத்தில் அவர் விரும்பி முன்வந்து பங்கெடுத்தார். அவமானமான மரணத்தைத்தான், அவர் நீங்கக்கூடுமானால் நீங்கட்டும் என்று ஜெபம்பண்ணினார். ஆனால் இப்படி அவமானத்துடன் தாம் மரிக்க வேண்டும் என்பதுதான், தமக்கான பிதாவின் சித்தமாக இருக்கின்றது என அறிந்துகொண்ட மாத்திரத்தில், அதை ஏற்றுக்கொள்வதிலும் அவர் விருப்பமாயிருந்தார்.

தெய்வீகப் பிரமாணத்தைத் தூஷித்தவராக நமது கர்த்தர் மரணத் தண்டனைக்குக் கையளிப்பதற்கென நியாயப்பிரமாணத்தில் எதுவும் இல்லை. எனினும் அவருக்கு எதிராக தேவ தூஷணத்தின் குற்றமே தேர்ந்தெடுக்கப்பட்டது. "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்று இயேசு பேசின விஷயத்திலும், அவர் தம்மைத் தேவனுடைய குமாரன் என்று உரிமை கோரின விஷயத்திலும் இயேசு தேவ தூஷணம் செய்ததாக ஆலோசனை சங்கத்தார் முடிவுபண்ணினார்கள். தாம் மிகவும் நேசித்த பிதாவுக்குத் தூஷணம் பேசினதாகக் கருதப்படுதலிலும், ஒரு குற்றவாளி எனச் சிலுவையில் அறையப்படுதலிலும் உள்ள அவமானம் மற்றும் நிந்தையிலிருந்து விடுவிக்கப்படவே இயேசு விரும்பினார். மேலும் இது குறித்த பாரமே அவருடைய மனதை விசேஷமாக அழுத்திக்கொண்டிருந்தது.

இயேசு தாம் மரிப்பதற்காகவே பூமிக்கு வந்திருப்பதையும், தாம் பாடுப்பட வேண்டும் என்பதையும் அறிந்திருந்தார். ஆனால் (அவமானம் அடைதலாகிய) தம்முடைய அனுபவத்தின் இந்த ஒரு பாகத்தை அவர் முழுமையாய்ப் புரிந்துகொள்ள வில்லை. "சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் உயர்த்தப்பட வேண்டும்" என்பதை இயேசு அறிந்திருந்தார்.

இவ்வார்த்தைகள் இயேசு தம்முடைய ஊழியத்தின் ஆரம்பக் காலங்களில் நிக்கொதேமுவிடம் கூறியிருந்தார் (யோவான் 3:14). ஆனால் தாம் இழிவுபடுத்தப்படப் போகின்ற, அவமதிக்கப்படப்போகின்ற நேரத்தை அவர் நெருங்க நெருங்க, அவ்விஷயம் அனைத்தையும் அவர் உணர்ந்தபோது, அவர் மிகவும் கூனிகுறுகி, "இப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் என்னைவிட்டு நீங்கட்டும்" என்று கதறி, தம்முடைய இருதயத்தை ஊற்றினார். ஆனால் தம்முடைய அர்ப்பணிப்பின்போது, "இதோ தேவனே உம் சித்தம் செய்ய வருகின்றேன்" என்றுள்ள தம்முடைய உறுதிமொழியை உண்மை என்று தெரிவிக்கும்வண்ணமாக, உடனடியாக இயேசு, "ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று கூறினார் (மத்தேயு 26:39).

## அவருடைய அவமானத்தில் பங்குகொள்வதற்கு நாம் விரும்புகின்றோமா?

நமது இரட்சகர் தம்முடைய சீஷர்களிடம் பின்வரும் விதத்தில் கேட்டார். அதாவது, உங்களுடைய ஜீவன்களை எடுத்துவிடுவது அநியாயமானதாய் உங்களுக்குத் தோன்றும் நிலையிலும், உங்களுடைய ஜீவியங்களை முற்றிலுமாக ஒப்புக்கொடுக்க உங்களால் கூடுமா? நான் பானம்பண்ணப்போகின்ற இந்தப் பாத்திரத்தில், உங்களால் பானம்பண்ணக்கூடுமா? இது அவமானமும், நிந்தனையும், இழிவும் தொடர்புடையதாய் இருக்கும். என்னோடுகூட இந்தப் பாத்திரத்தில் நீங்கள் பங்குபெற விரும்புகின்றீர்களா?" என்று கேட்டார். "எங்களால் கூடும்" என்று சீஷர்கள் பதிலளித்தார்கள். அவர்கள் விருப்பத்துடன் காணப்பட்டனர்.

இதே பாத்திரம்தான் இராப்போஜனத்தில் இடம்பெறும் பாத்திரத்தில் அடையாளப்படுத்தப்படுகின்றது என்பதைக் காண்கின்றோம். அப்பம் நமது கர்த்தருடைய சரீரத்தையும், திராட்சரசம் அவருடைய இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றது. பாத்திரமானது, அவருடைய மரணம் தொடர்புடைய அவமானத்தையும், நிந்தனையையும் விசேஷமாக அடையாளப்படுத்துகின்றது; அவருடைய பாத்திரத்தில் பங்குகொள்வதற்குத் தாங்கள் விரும்புகின்றதாக இரண்டு சீஷர்களும் கூறினார்கள்; அவர்களுக்கு எந்தத் தயக்கமும் இல்லை. என்ன வந்தாலும், உண்மையாய் இருக்க அவர்கள் ஆயத்தமாயிருந்தனர். அவர் என்ன நிபந்தனைகள் வைத்தாலும், அதற்குச் சம்மதிக்க ஆயத்தமாயிருந்தனர். ஸ்நானம் எனும் வார்த்தையின் அல்லது பாத்திரம் எனும் வார்த்தையின் முழுப்பொருளையும் அவர்கள் இன்னமும் அறிந்துகொள்ளவில்லை. இப்படியாகவே அவருடைய சீஷர்கள் அனைவரும் காணப்பட்டனர். பெந்தெகொஸ்தே நாள் வரும்போதோ, அவர் முன்னுரைத்திருந்ததுபோல, அவர்களிடம் அவர் பேசியிருந்த அனைத்தும் அவர்களுடைய நினைவுக்குவரும் (யோவான் 16:4; 13:19). ஆனால் அவர்கள் விருப்பத்துடனும், வாஞ்சையுடனும் காணப்பட்டனர். இப்படியாகவே நாமும் காணப்பட

வேண்டும். அவர்கள் விரும்புவார்களானால், அவர்கள் இந்த அனுபவங்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும், இங்கு இப்படியாகத் தொடர்ந்து விருப்பம் கொண்டிருந்து, தம்முடன் தொடர்ந்து பாடுபடுவார்களானால், தம்மோடுகூடத் தம்முடைய சிங்காசனத்தில் ஆளுகைசெய்வார்கள் என்றும் இயேசு உறுதியளித்தார். ஆனாலும், சிங்காசனத்தில் ஒவ்வொருவருக்கும் உரிய இடத்தைக் கூறுவது தமக்கான காரியமாய் இராமல், பிதாவுக்கு அடுத்த காரியமாகவே இருக்கின்றது என்று இயேசு தெரிவித்தார்.

இடுக்கமான வழியில் நம்முடைய அருமையான மீட்பர் தைரியத்துடனும், மனோதிடத்துடனும் நடந்துசென்றது நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. அவர் எத்துணை பலமானவராகவும், தைரியமானவராகவும் காணப்பட்டிருக்கின்றார்! அவர் பின்வாங்குவதற்கான சிந்தனையைக் கொண்டிருக்கவேயில்லை; உலகத்தின் நன்மைக்காகத் தம்மைப் பலிசெலுத்த வேண்டும் என்றுள்ள பரலோகத்திலுள்ள பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதே அவருடைய முழு நோக்கமாக இருந்தது. அப்போஸ்தலர்களுக்கு முன்பாக எத்துணை ஓர் உயர்வான மாதிரி முன்வைக்கப்பட்டது - மிகுதியான தாழ்மை மற்றும் சுயத்தை முழுக்கச் சரணடையப்பண்ணுவதன் மூலமாக ஜெயங்கொள்ளுவதற்கான உயர்வான ஒரு மாதிரி முன்வைக்கப்பட்டது!

## சபை கர்த்தருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுதல்

கர்த்தருடைய பாத்திரத்தில் சபை பானம்பண்ணுதல் என்பது, தற்காலத்தில் கிறிஸ்துவின் பாடுகளிலுள்ள நமது பங்கெடுப்பை அடையாளப்படுத்துகின்றது. சரியான நிபந்தனைகளின்கீழ் இப்பொழுது வராத எவரும், புதிய உடன்படிக்கைக்கான மாபெரும் மத்தியஸ்தரினுடைய சரீரத்தில் அங்கம் ஆகிடமுடியாது. ஆகவே, இரத்தத்தைப் பானம் பண்ணுவது என்பது, பாத்திரத்தில் பங்கடைதல் ஆகும். ஒருவேளை நாம் அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணவில்லை என்றால், நாம் அவருடைய மகிமையில் அவருடன் பங்கடையமுடியாது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்று இயேசு கூறினார் (மத்தேயு 26:27). அனைவரும், பானம்பண்ண வேண்டும், மற்றும் முழுப் பாத்திரமும் இந்த யுகத்தில் காலியாக வேண்டும்.

கிறிஸ்துவின் பாடுகளில் பங்கடைவதற்கென நாம் அனுமதிக்கப்பட்டிருப்பது என்பது மிகவும் பெரிதான சிலாக்கியமாகும். "அவரோடேகூட பாடுபட்டால் அவரோடு கூட ஆளுகை செய்வோம்." புதிய யுகத்தை ஆரம்பித்து வைப்பதிலும், அதின் ஆசீர்வாதங்களை விநியோகிப்பதிலும் நாம் பங்கடைவோம். இரத்தத்தைத் தெளிக்கும் நிஜமான மோசே, மகிமையடைந்த தலையும், அவரது சரீரமாகிய சபையுமான கிறிஸ்து ஆவார். "மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக" (அப்போஸ்தலர் 3:22). மோசே சிறிய அளவில் கர்த்தருக்கு நிழலாக

காணப்படுகின்றார். சரீரம் இப்பொழுது உயிர்த்தெழுப்பப்பட்டுக்கொண்டு வருகிறது. இயேசு முதலாவதாக எழுப்பப்பட்டார். பின்னர் அப்போஸ்தலர்கள் அனைவரும், பின்னர் அவருடைய சரீரத்தின் மீதி அங்கத்தினர்கள் அனைவரும் எழுப்பப்படுவார்கள்.

மோசே ஜனங்கள் அனைவர்மீதும் தெளித்ததுபோல இந்த நிஜமான மோசேயும் நிறைவடையும்போது மனுக்குலத்தின் உலகத்தின்மீது "தெளிப்பார்;" மேலும், இது மனுக்குலத்தைத் தெய்வீகப் பிரமாணத்துடனான இசைவிற்குள் கொண்டுவருவதைக் குறிக்கின்றதாய் இருக்கும். மனுக்குலத்தின்மீது தெளிக்கப்படுவதற்கு ஆயிரம் வருடங்கள் தேவைப்படும். ஆகவே பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கும், இரத்தத்தைத் தெளிப்பதற்கும் இடையே பெரிய வித்தியாசம் காணப்படுகின்றது. இரத்தத்தைத் தெளிப்பது என்பது, நீதிமானாக்கப்படுதலைக்குறிக்கின்றது. ஆனால் சபையினால் பாத்திரத்தில் பானம்பண்ணப்படுவது என்பது, நீதிமானாக்கப்படுதலை மாத்திரமல்லாமல், பரிசுத்தமாக்கப்படுதலையும் குறிக்கின்றதாய் இருக்கும்.

## தெய்வீக நோக்கங்களை நமது கர்த்தர் அடையாளம் கண்டுகொள்ளுதல்

"என் பிதா எனக்குக் கொடுத்தப் பாத்திரத்தில் பானம்பண்ணாதிருப்பேனோ?" என்று பரிசுத்தவானாகிய பேதுருவிடம் கூறப்பட்ட நம்முடைய கர்த்தரின் வார்த்தைகளானது, முடிவில் கடுமையானதாய் இருக்கும் அவருடைய மரண அனுபவங்களைப்பற்றியே குறிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் மனுஷரால் அவமதிக்கப்பட்டு, தேவனுடைய சத்துருவாக, அதாவது தேவ தூஷணம் புரிந்தவராகக் கருதப்பட்டார். தம்முடைய சரீரப்பிரகாரமான பாடுகள் கடுமையானதாகக் காணப்படும் என்று அவர் அறிந்திருந்தார்; எனினும் அவருடைய வலியில் இன்னும் கூடுதல் வலியாக, அவருடைய பரிபூரணமான மனதிற்கு, அவமானமும், கெட்டப்பெயரும் காணப்பட்டது. எனினும், இந்தப் பாத்திரத்தையே, பிதா அவருக்குக் கொடுத்திருந்தார். இதுவே இயேசு தொடர்புடைய தெய்வீக நோக்கமாக இருந்தது.

நமது கர்த்தர் தம்முடைய நேர்மையை நிரூபித்துக் காட்டுவதற்கு அவசியமாய் இருந்த அனைத்து அனுபவங்களையும் பெற்றிருந்தார். ஏனெனில், தேவ தூதர்கள் மற்றும் மனுஷர்களாகிய இருவருக்கு முன்பாகவும், அவர் தமது நேர்மையை/ உண்மையை வெளிப்படுத்துவது அவசியமாய் இருந்தது. அனைத்து விஷயங்களும் மனிதனுடைய சிருஷ்டிப்புக்கு முன்னதாகவே தேவனால் ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது. "அவர் உலக தோற்றத்திற்கு முன்னதாக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக இருந்தார்" (வெளிப்படுத்தல் 13:8). அடிக்கப்படும் ஆட்டுக்குட்டி தொடர்புடைய அனைத்தும் பிதாவினால் முன்னமே அறியப்பட்டிருந்தது. இயேசு மனுஷனை மீட்கத்தக்கதாகவும், இப்படியாக உண்மையும் இரக்கமுமுள்ள பிரதான ஆசாரியனாக ஆகத்தக்கதாகவும் இயேசு பாவிகளுக்கு உரியதான பாத்திரத்தைப் பானம்பண்ண வேண்டியிருந்தது. அது பாடுகள் மற்றும் மரணத்தின் பாத்திரமாய் இருந்தது. இயேசு யூதனை மீட்கத்தக்கதாக சிலுவையின் மரணத்தை அடைவது அவசியமாய் இருந்தது.

## கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்ததில் வெளிப்பட்ட அன்பு மற்றும் நேர்மை

அவருடைய பாடுகள் அனைத்தும் வேத வாக்கியங்களில் முன்னறிவிக்கப் பட்டிருந்தது. வனாந்தரத்தில் வெண்கல சர்ப்பம் உயர்த்தப்பட்ட விஷயத்தில் சிலுவையில் அறையப்படுதல் சித்தரிக்கப்பட்டுள்ளது. அவருடைய அனுபவங்கள் அனைத்தும் முன்னமே அறியப்பட்டிருந்தது, முன்னமே ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது மற்றும் அவசியமாய் இருந்தது. பிதாவின் சித்தத்தை நிறைவேற்றத்தக்கதாக, அவர் பூமியில் வந்தபோதோ, வரவிருக்கின்ற அனைத்தையும் அவர் அறியவில்லை. ஆனாலும், "புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ள" பாடுகளை அவர் அனுபவித்ததின்மூலம் அவர் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். பிதாவின் சித்தம் அனைத்திற்கும் அவர் தம்மையே ஒப்புக்கொடுத்தார் மற்றும் இப்படியாகத் தம்முடைய நேர்மையை நிரூபித்தார். "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வந்தேன்." என்று அவரே கூறினார் (யோவான் 6:38). அவருடைய பலி பட்சிக்கப்படுவதற்குரிய வேளை நெருங்கியபோது, கெத்செமனேயின் தனிமையில், "பிதாவே இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்" எனப் போதகர் ஜெபம்பண்ணினார். அவர் மரணத்தின் பாத்திரம் நீங்குவதற்கு ஜெபம் பண்ணினார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக சிலுவையில் அறையப்படுதலில் உள்ள அவமானத்தின் அனுபவங்கள் மாறக்கூடுமோ (அ) இல்லையோ என்றே எண்ணினவராகக் காணப்பட்டார். எனினும், அவர் முறுமுறுக்காமல் (அ) எதிர்க்காமல், "ஆயினும் என்னுடைய சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" என்று கூறினதையே நாம் காண்கின்றோம்!

## நம்முடைய பாத்திரத்திற்கான விசேஷித்த மேற்பார்வை

நமது நேச கர்த்தர் கசப்பான பாத்திரத்தை அடிமண்டிவரை பருகினார் என்றும், அதுவும் மிகவும் நன்றியுடன் பருகினார் என்றும் நாம் காண்கின்றோம். நாம் அனைவரும்கூட அப்பாத்திரத்தில் பானம்பண்ணத்தக்கதாக நமக்கும் அவர் பாத்திரத்தைக் கொடுத்துள்ளதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். அவருக்கு இருந்த அதே அனுபவங்கள் அப்படியே நமக்கு இருப்பதில்லை. எனினும் பிதாவின் சித்தமான வழியில், மரணம் மற்றும் பாடுகளின் பாத்திரத்தில் நாம் அனைவரும் பானம் பண்ண வேண்டும். இயேசு பரிபூரணமானவராக இருந்தபடியால் அவரை மிகக் குறிப்பிடத்தக்க விதத்தில் பிதா கையாண்டார்.

நம்முடைய விஷயத்தில் அனுபவங்கள் வித்தியாசமானதாய்க் காணப்படும்; ஏனெனில் நாம் பூரணமில்லாதவர்களாய்க் காணப்படுவதினால், பூரணமானவரைக் கையாளும் கண்ணோட்டத்தில் இருந்துகொண்டு நாம் கையாளப்பட முடியாது. ஆகவே நமக்கான பாத்திரம் என்பது, போதகருடையதுபோன்று நிர்ணயிக்கப்பட்டதாக, குறிப்பிட்டதாக இருக்குமென்று எண்ணக்கூடாது; மாறாக, பிதா தம்முடைய குமாரனுடன்கூட நாம் மரணத்தின் பாத்திரத்தில் ஒரு பங்கடையும்படிக்கு நம்மை அனுமதித்துள்ளார். பிதாவின் திட்டத்தின்படி, பிதாவினால் நம்முடைய பாத்திரம் ஊற்றப்படுகிறதாயினும், நம்முடைய பாத்திரமானது நம்முடைய இரட்சகரினால்

மேற்பார்வையிடப்படுகின்றது.

போதகருடைய விஷயத்தில், முழு உலகத்தின் பாவத்திற்கெனப் பாத்திரம் அவசியமாய் இருந்தது. நம்முடைய விஷயத்தில் அது அவசியமில்லை; எனினும் நமது கர்த்தருடைய பாடுகளிலும், மகிமையிலும் ஒரு பங்கை நமக்கு அருளுவது பிதாவுக்குப் பிரியமாயிற்று. இயேசு நம்முடைய குறைவுகளை நிறைவாக்கி, நம்முடைய குணநலன்களை வளர்த்தி, நம்மை அவருடைய மகிமையின் சாயலுக்கு வனைகின்றார். நமது பாத்திரத்தின்மீதான நமது கர்த்தருடைய மேற்பார்வை இல்லையெனில் நாம் அநேக விஷயத்தில் குறைவாகவே வளர்ச்சியடைந்திருப்போம்; ஆகவே, நம்முடைய பாத்திரத்திற்கு விசேஷித்த மேற்பார்வை அவசியமாய் உள்ளது. ஆகவேதான், அவசியமான அனுபவங்கள் நமக்கு வரும் அதே வேளையில் அவருடைய கிருபையும் நமக்குப் போதுமானதாக இருக்கும் என்றும், நம்முடைய பெலவீனத்தில் அவருடைய பெலன் பூரணமாய் விளங்கும் என்றும், அனைத்தும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும் என்றும் கர்த்தர் நமக்கு வாக்களித்துள்ளார்.

நாம் அவருடைய பாத்திரத்தில் பங்கெடுக்காதது வரையிலும், நாம் அவருடன் கூட மரணத்திற்குள் மூழ்காததுவரையிலும், நம்மால் அவருடைய மகிமையின் இராஜ்யத்தில் பங்கடையமுடியாது என்பதையும், அவருடைய சிங்காசனத்தில் அவருடன்கூட ஒருபோதும் நம்மால் உட்கார முடியாது என்பதையும், நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. மாபெரும் விலையுடைய இந்த முத்தை அடையத்தக்கதாக, இந்தப் பூமியின் அனைத்தையும், குப்பையும், நஷ்டமும் என்று எண்ணக்கடவோமாக. பாடுகளின் அனுபவங்கள் நமக்கு வரும்போது, நாம் அச்சமடையாமல் இருப்போமாக. இன்னுமாக, "நம்மை சோதிக்கும்படி, நம் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்" காணப்படுவோமாக; ஏனெனில் நம்முடைய அன்புக்குரிய போதகருடன்கூட இப்பொழுது பாடுபடுவதற்கும், பின்னர் நித்தியத்திற்குரிய இராஜ்யத்தில் அவருடன்கூட மகிமைப்படத்தக்கதாக, "நாம் அழைக்கப்பட்டும் இருக்கின்றோம்!"

"உனக்கு பக்கபலமாக நிற்க நண்பனும் இல்லை,
இளைப்பாறுதல் தர எந்தக் கரமும் இல்லை,
குறுகலான வழி, நெருக்கமான பாதையில் நடக்க உன்னால் கூடுமா?
காரிருளில் உன்னால் துணிச்சலாக முன்னேறிச் செல்ல முடியுமா?
அங்குக் கர்த்தர் வெளிச்சத்தை அனுப்பும் வரை
பொறுமையோடு காத்திருக்க உன்னால் முடியுமா?"

"இப்படியாக... அவர் அளிக்கும் பாத்திரத்தில் நீ பானம் பண்ணி
சத்தியக்கொடியை உயர்த்திப் பிடித்திருக்கும்போது
நீ அவருடையவனாய் இருப்பாய்,
அவருடைய கிரீடம் உனக்கு மகுடமாகும்.
அவரது சிங்காசனத்தில் நீ அமர்ந்து,
அவரது மகிமையில் பங்குபெறுவாய்."

# இரட்சிப்பின் பாத்திரத்தினுடைய ஆசீர்வாதம்

**“கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்.” சங்கீதம் 116:12-14**

இந்த வார்த்தைகளானது, தீர்க்கத்தரிசியாகிய தாவீதுக்கு இல்லாதளவுக்கு ஆவிக்குரிய இஸ்ரயேலனுக்கு விசேஷித்த அர்த்தமுடையதாய்க் காணப்படுகின்றது. எனினும் இந்த வார்த்தைகளில் அடங்கும் உணர்வினைக் குறித்த சரியான கருத்தினைத் தீர்க்கத்தரிசி அதிகமாகவே கொண்டிருந்திருப்பார் என்று நாங்கள் எண்ணுகின்றோம். தேவனுடைய காருண்யம் குறித்து இராஜாவாகிய தாவீது உணர்ந்தவராகவே இருந்தார் என்பதில் ஐயமில்லை. கர்த்தரிடமிருந்து தனக்கு வந்திட்டதான ஆசீர்வாதங்களுக்காக, மிகவும் நன்றியுள்ள மற்றும் உணர்வுமிக்க இருதயத்தைத் தாவீது கொண்டிருந்ததை அவரது சங்கீதங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. அவரது இருதயமானது, “நான் கர்த்தருக்காக என்னத்தைச் செலுத்துவேன்? அவரது கிருபைகள் அனைத்திற்குமாக நான் என்னத்தைச் செலுத்துவேன்?” என்று சரியாகத்தான் கூறியுள்ளது.

ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்டதான தேவனுடைய வாக்குத்தத்தத்தைத் தாவீது அறிந்திருந்தார்; ஒரு காலக்கட்டத்தில் தேவன் பூமியின் குடும்பங்கள் அனைத்தையும் ஆசீர்வதிப்பார் என்றும், இந்த ஆசீர்வாதமானது ஆபிரகாமின் சந்ததி வாயிலாகக் கடந்துவரும் என்றும் தாவீது அறிந்திருந்தார். தாங்கள்தான் ஆபிரகாமின் சந்ததி என்பதை இஸ்ரயேல் ஜனங்கள் அறிந்திருந்தார்கள். இவர்களில் ஒருவர் தாவீதுமாவார் மற்றும் ஏதோ ஒருவிதத்தில் தனக்கும் இவ்வாக்குத்தத்தத்தில் பங்குண்டு என்பதாக அவர் உணர்ந்திருந்தார். காரியம் அவருக்குத் தெளிவாய்த் தெரியவில்லை; எனினும் ஆபிரகாமின் சந்ததியே உலகத்தை ஆசீர்வதிக்கும் என்பதை அறிந்திருந்தார்.

“இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு” என்று தெரிவித்ததின் மூலம், தான் அந்த இரட்சிப்பில் பங்கடையத்தக்கதாக, கர்த்தர் தனக்கு அனுமதிக்கும் அனுபவங்கள் எதுவாயினும் அதை, தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சங்கீதக்காரன் மனதில் எண்ணம் கொண்டிருந்தார் என்று நாம் எண்ணுகின்றோம். தானும் அத்தகையதொரு பங்கை அடையத்தக்கதாக, அவர் கர்த்தருடைய நாமத்தைத் தொடர்ந்து தொழுதுகொண்டார்; தான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை “அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும்” செலுத்துபவரானார். அவர் மனப்பூர்வமான பொருத்தனைகளைப் பண்ணியிருந்தார் மற்றும் அதை அவர் நிறைவேற்றப்போகின்றார்; இதை அவர் ஒரு சிலாக்கியமாகக் கருதுபவரானார்; தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் அவர் மகிழ்ச்சிக்கொள்பவராய்க் காணப்படுபவரானார்.

# ஆவிக்குரிய இஸ்ரயேலனுக்கு ஆழமான அர்த்தம் கொண்டுள்ளது

கிறிஸ்தவனுக்கு, இவைகள் அனைத்தும் மிகவும் ஆழமான அர்த்தமுடையவையாகும். நமது கர்த்தர் இயேசு துவங்கி, சபையினுடைய மாபெரும் தலையானவருடன் உடன் சுதந்திரர்களாகுவதற்கு அழைக்கப்பட்டதான தேவனுடைய புத்திரர்கள் ஒவ்வொருவருக்கும் அந்த வார்த்தைகளானது விசேஷித்த அர்த்தமுடையவையாகும். பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு,புத்திரத்துவத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டதான இவர்கள், தேவனுடைய இரக்கங்கள் அனைத்திற்குமாக விசேஷித்த விதத்தில் திரும்பிச் செய்திடுவதற்கு விருப்பம் கொண்டுள்ளனர். இவர்கள் தாவீதைப் போன்றில்லாமல், தங்களுடைய பாவங்களுக்கான நிஜமான மன்னிப்பைப் பெற்றுக்கொண்டவர்களானார்கள். தாவீதினுடைய பாவங்கள் நிழலான விதத்தில் மாத்திரமே மூடப்பட்டன மற்றும் இவரே: "நான் என்னத்தைச் செலுத்துவேன்?" என்று கூறுவாரானால், இதைக் காட்டிலும் மிக அதிகமாகவே நம்மால்: "நான் கர்த்தருக்காக என்னத்தைச் செலுத்துவேன்?"என்று கூறிட முடியும்.

அப்போஸ்தலனாகிய பவுல் பின்வருமாறு நமக்குப் புத்திக்கூறியுள்ளார்: "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (உரோமர் 12:1). இதையே நாம் மகிழ்ச்சியுடன் செலுத்துகின்றோம்; அதாவது நம்முடைய சரீரங்களை ஜீவப்பலிகளாகச் செலுத்துகின்றோம். ஒவ்வொரு உண்மையும், பெருந்தன்மையுமான இருதயத்தில், அன்பிற்கும், இரக்கத்திற்கும் கைமாறாக, நன்றியறிதலே காணப்படும் மற்றும் இவைகளைக் காட்டிலும் இனிமையான பொருத்தம் எதுவுமில்லை மற்றும் இவைகளே உயர்க் குணங்களைப் பெற்றிடுவதற்கும், சிறந்தவைகளைச் செய்திடுவதற்கும் அதிகம் ஏவுகின்றதாய் இருக்கும். தம்முடைய பிள்ளைகள் தங்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் உண்மையான பெருந்தன்மையின் மற்றும் மிகுந்த நன்னெறியின் பண்புகள் அனைத்தையும் வளர்த்தி விருத்திச் செய்திடுவதற்குத் தேவன் விரும்புகின்றவராய்க் காணப்படுகின்றார். ஆகையால் நமக்குப் பாராட்டப்பட்ட அன்பு மற்றும் இரக்கத்தினுடைய ஒவ்வொரு செயல்பாட்டையும் நாம் கவனிப்பதும், அதற்கே உரிய நன்றியையும், (போற்றுதலையும்) உணர்ந்துகொள்ளுதலையும் கைமாறாய்க் காண்பித்திடுவதற்குக் கவனமாய் இருப்பதும் மிகவும் ஏற்றக்காரியமாய் இருக்கின்றது. சுயநலமோ (அ) கவனமற்ற தன்மையோ ஆத்துமாவினுடைய சிறந்த இயல்புகளை நெருக்கிப் போடும்போது, எத்தனைதரம் (நமக்குப் பாராட்டப்பட்ட) அன்பானது, கைம்மாறு பெற்றுக்கொள்ளாமல் கடந்துபோக வேண்டியுள்ளதாய் இருக்கின்றது.

மனிதனுடைய அன்பும், இரக்கத்தின் செயல்பாடுகளுமே, நன்றியறிதல் மற்றும் (பாராட்டுதல்) உணர்ந்துகொள்ளுதல் எனும் பண்புகளை வெளிப்படுத்துவதற்கு நம்மை

அதிகமாய், பெரும்பாலும் தூண்டுகிறதானால், நமது பரம பிதாவினுடைய தொடர்ச்சியான கிருபையும், உருக்கமான இரக்கமும், நம்முடைய ஆத்துமா நன்றியோடு ஒப்புக்கொள்ளுதலையும், துதிச் சாற்றுதலையும் கைம்மாறாக வெளிப்படுத்தத்தக்கதாக (நம் ஆத்துமாவை) தூண்டிவிடுவது பொருத்தமானதாகவே உள்ளது! நாம் பெற்றிருக்கின்றதான ஒவ்வொரு நன்மைக்கும், நாம் அவருக்குக் கடன்பட்டிருக்கின்றோம். இவைகளின் அர்த்தத்தை, அவருடைய அன்பினால், உன்னதமானவரின் மறைவிடத்திற்குக் கொண்டுவரப்பட்டவர்களும், நமது பிதாவினுடைய பொக்கிஷசாலையினுடைய ஐசுவரியங்களையும், "உச்சிதமான கோதுமைகளையும்" அனுபவிக்கிறவர்களுமாய் இருப்பவர்கள் மாத்திரமே அறிந்துகொள்வார்கள். அவரது கிருபைக்குரியவர்களாய் நாம் விசேஷமாய்க் காணப்படுகின்றோம்.

## அவரது கிருபை, ஓ! எவ்வளவு பெரிதாயிருக்கிறது!

நமக்கான விசேஷித்த ஏற்பாடுகள் அடங்கிய நீண்டதொரு பட்டியலை, நம்மில் யாராகிலும் அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போய்விடக்கூடுமோ? நம்முடைய ஜீவியங்களின் கடந்தகால நிகழ்வுகளை நினைவுகூர்ந்து பார்க்கையில், நம்மில் யாரால்தான், கீழே கவிஞன் ஆச்சரியத்துடன் கூறுவது போன்று, கூறாமல் காணப்பட முடியும்:

"நான் திரும்பிப்பார்த்து, நாளுக்குநாள் தேவன்
என்னை வழிநடத்தி வந்த பாதையின் நிமித்தம்
துதி ஏறெடுக்கிறேன்."

கர்த்தர் தம்முடைய ஜனங்களை எத்தனை ஆச்சரியமாய் வழிநடத்தியுள்ளார்! அவரது பிள்ளைகள் என்றென்றும், அவரது தொடர்ச்சியான பராமரிப்பின் கீழ்க் காணப்படுகின்றவர்களாக இருக்கின்றனர். நன்மையான எதையும், அவர்களுக்கு அவர் விலக்கி வைக்கவில்லை மற்றும் அவருக்கு அவர்கள் கீழ்ப்படிதலோடு காணப்படும் பட்சத்தில், அனைத்தும் அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாய் நடைப்பெறுகின்றதாய் இருக்கின்றது. வெயிலிலும், நிழலிலும், மகிழ்ச்சிகளிலும், கண்ணீர்களிலும், அமைதியான சூழ்நிலைகளிலும், புயலும் சீற்றமுமான வேளைகளிலும் பல வருடங்களாகக் கர்த்தரை நம்பி கடந்து வந்தவர்களில் எவர்தான், அவரது விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களுடைய உண்மையையும், அவரது உறுதியான உண்மையையும் கண்டுகொள்ளாமல் இருக்கக்கூடும்! நிச்சயமாய், "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்காகச் சொன்ன நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை!" (யோசுவா 23:14). நம்முடைய வாழ்க்கையின் சிறிய மற்றும் பெரிய காரியங்களில், அவர் எப்போதும் நமக்கான நன்மைக்கடுத்த காரியங்களைக் கவனிக்கிறவராகவே இருந்துள்ளார். துன்பகாலம் ஒவ்வொன்றிலும் நம்பிக்கையூட்டும் ஓர் அம்சம் இருந்துள்ளது!

கர்த்தர் செய்துள்ளதான உபகாரங்கள் அனைத்திற்குமாக, நாம் அவருக்கு

என்னத்தைச் செலுத்துவோம்? அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை என்று சொல்ல முடிகின்ற எதையாகிலும், நாம் பெற்றிருக்கின்றோமா? எதுவுமே இல்லை. பிள்ளைகளுக்குத் தாங்கள் பாராட்டியுள்ள தயவுகளின் மதிப்பைப் பிள்ளைகள் உணர்ந்து ஏற்றுக்கொள்வதைக் காண்பதற்கு அன்புள்ள பெற்றோர்கள் விரும்புவது போன்றே, நமது பரம பிதாவும், அவரிடத்திலான நமது மனப்பான்மையையும், நம்மிடத்திலான அவரது கிருபைகளின் மற்றும் அன்பின் மதிப்பினை நாம் உணர்ந்துள்ளதை, நாம் வெளிப்படுத்துவதையும் - கூர்ந்து கவனிக்கின்றவராய்க் காணப்படுகின்றார். நமக்கு அருளப்பட்டதான அவரது சொல்லிமுடியாத ஈவுகளானது, அவரது இருதயத்தினால் மிகுந்த விலை செலுத்தப்பட்டு அருளப்பட்டவையாகும். ஆகவே நமது மீட்பரிடத்திலான விசுவாசத்தின் மூலமாக, நாம் நன்றியோடு இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருக்கான நமது பொருத்தனை களைச் செலுத்திடுவோமாக. பாடுகள் மற்றும் சந்தோஷத்தின் இந்தப் பாத்திரத்தை, நாம் நமது அருமை ஆண்டவரோடுகூடப் பானம்பண்ணிடுவோமாக. "நாம் பயப்படாமல், நம்பிக்கையாயிருப்போம்" (ஏசாயா 12:2).

தம்மிடத்தில் தங்களை முழுமையாய் ஒப்புக்கொடுத்துள்ளவர்களுக்காக, பிதா ஒரு விசேஷித்த ஏற்பாடு பண்ணியுள்ளார். அவர்களுக்காக அவர் ஏற்படுத்தியுள்ளதான அனுபவங்களானது, "இரட்சிப்பின் பாத்திரமாய்க்" காணப்படுகின்றது. இந்தப் பாத்திரத்தை நாம் கர்த்தரிடமிருந்து ஏற்றுக்கொள்வது என்பது, அவரது ஏற்பாட்டின்படி நமக்குக் கடந்து வருகின்றதான அனுபவங்களானது எப்படிப்பட்டவைகளாக இருப்பினும் - துக்கமாகவோ (அ) சந்தோஷமாகவோ, வலியானதாகவோ (அ) இன்பமானதாகவோ இருப்பினும், அவ்வனுபவங்கள் அனைத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளுவதாகக் காணப்படும். "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" என்று இயேசு தெரிவித்தது போலவே, நம்முடைய இருதயங்களுடைய வார்த்தைகளும் காணப்பட வேண்டும். மோசே வனாந்தரத்தில் சர்ப்பத்தை உயர்த்தினதுபோன்று, கர்த்தர் உயர்த்தப்பட வேண்டுமென்று நிழலில் கர்த்தரைக் குறித்து முன்னுரைக்கப்பட்டுள்ளது. நிஜமான மாபெரும் பாவநிவாரண பலியாக தாம் காணப்படுவார் என்பதையும், விழுந்துபோன மனிதனுக்காக தாம் "பாவமாக்கப்படுவார்" என்பதையும் அவர் அறிந்திருந்தார். தமக்காக பிதா ஊற்றியுள்ளதான பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்குத் தாம் மிகவும் விருப்பத்துடன் காணப்படுவதாகக் கர்த்தர் குறிப்பிட்டார். மேலும் அந்தப் பாத்திரத்தையே, அவர் நமக்குக் கொடுத்துள்ளார்.

இராஜ்யத்தில் தம்மருகில் உட்காருவதற்கு விரும்பிட்டதான தமது சீஷர்களை நோக்கி, நமது இரட்சகர்: "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்க உங்களால் கூடுமா?" என்றார். அவர் கடைசி வரைக்கும் அந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணினார் - அதன் அடிமண்டி வரைக்கும் அவர் பானம் பண்ணினார். இப்படியாகவே அவரது பின்னடியார்களின் விஷயத்திலும் காணப்பட வேண்டும். நாமும் அதே பாத்திரத்தில் பானம் பண்ணிட வேண்டும். அது நமக்கான தனிப்பட்ட பாத்திரந்தான், எனினும் அது அவருடைய பாத்திரமாகும். நாம் உண்மையிலேயே நேர்மையாய்க் காணப்படுவோ

மானால், பாத்திரத்திலுள்ள நமக்கான பங்கை நாம் நன்றியுடனும், மகிழ்ச்சியுடனும் ஏற்றுக்கொள்கின்றவர்களாய் இருப்போம். இன்னுமாக நாம் அதைப் பானம் பண்ணுகையில், அவர் நம்மோடுகூட இருப்பார் என்பதையும், நாம் தனிமையில் காணப்படுவதில்லை என்பதையும் நாம் அறிவோம். அவரது அங்கத்தினர்கள் ஒவ்வொருவரின் அனுபவங்களையும் அவர் மேற்பார்வையிடுகின்றார் மற்றும் ஒவ்வொரு சோதனை மற்றும் பரீட்சையிலும், ஒருவேளை பரீட்சை நமக்கு மிகவும் கடுமையாகிப்போகும் வேளையில், தப்பித்துக்கொள்வதற்கான ஏதோ ஒரு போக்கையும் அவர் அருளுவார்.

## இராஜ்யத்தில் சந்தோஷத்தின் பாத்திரம்

தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலை நிறுவின தருணத்தின்போது, ஆண்டவர் அப்போஸ்தலர்களுடனான தம்முடைய சம்பாஷணையில் கூறினதாவது: "இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 26:29). இங்கு நமது கர்த்தர் இரண்டு மகா நாட்களை - பாடுபடுகிற நாளையும் மற்றும் மகிமையின் நாளையும் வித்தியாசப்படுத்துகின்றார். இந்தச் சுவிசேஷயுகமானது பாடுபடுகிற நாளாய்க் காணப்படுகின்றது. ஆயிர வருட நாளானது, மகிமையின் நாளாகக் காணப்படும் மற்றும் இது விசேஷமாக "கிறிஸ்துவினுடைய நாள்" என்று பேசப்படுகின்றது.

திராட்சப்பழரசமானது, சொல்லர்த்தமான பாத்திரமானது, இரண்டு கருத்துக்களைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. திராட்சரச பாத்திரமானது, திராட்சப்பழமானது அதன் ஜீவனை இழந்துபோவதன் காரணமாக உண்டாகுகின்றது. திராட்சப்பழமானது, அதன் தனித்துவத்தை இழந்துபோகின்றதாய் இருக்கின்றது; சாறுபிழிந்தெடுக்கப்படுகின்றது மற்றும் இப்படியாகத் திராட்சப்பழ ரசமானது பயன்பாட்டிற்கென ஆயத்தம் பண்ணப்படுகின்றது. திராட்சரச பாத்திரமானது . . . திராட்சச்சாறானது திராட்சப்பழம் பிழியப்படுவதை மாத்திரமல்லாமல், ரசத்தின் காரணமாக உண்டாகும் மகிழ்ச்சியையும்கூட அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இப்படியாகவே அடையாளமான பாத்திரத்தில், நாம் பானம் பண்ணும் விஷயத்திலும் காணப்படும். நமக்கு அது நமது இரட்சகருடைய பாடுகளையும், மரணத்தையும் மற்றும் இந்தப் பாடுகளில் அவரோடுகூட நாம் பங்கடைவதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆனால் திராட்சரசமானது, சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையுங்கூட அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் இப்படியான அர்த்தத்தில் வேதவாக்கியங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆகையால் முந்தின பத்தியில் கர்த்தரால் பயன்படுத்தப்பட்டதான வார்த்தைகளாகிய திராட்சப்பழரசத்தின் விஷயத்தில், பாத்திரமானது இராஜ்யத்தின் சந்தோஷங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

நமது கர்த்தர் இயேசுவுக்கான பூமிக்குரிய அனுபவங்களினுடைய விஷயத்தில், பிதா அவருக்கு ஒரு குறிப்பிட்ட பாதையை அமைத்து வைத்திருந்தார். இந்தப் பாதையானது, பாடுகள் மற்றும் மரணம் எனும் அவருடைய பாத்திரமாகக் காணப்பட்டது. ஆனால் அவர் இந்தப் பாத்திரத்தில் உண்மையாய்ப் பானம் பண்ணிட்ட பிற்பாடு, அவருக்கு வித்தியாசமான/வேறே பாத்திரம், வேறே அனுபவம், அதாவது கனம், மகிமை மற்றும் அழியாமை கொடுக்கப்படும் என்று பிதா அவருக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். மேலும் அவருடைய பின்னடியாளர்களாகுவதற்கு விரும்புகிறவர் களுக்கும் இதே செய்தியை, அதாவது அவரோடுகூடப் பாடுபட்டார்களானால், அவரோடுகூட மரணம் எனும் அவரது பாத்திரத்தில் பானம் பண்ணினார்களானால், அப்போது அவர்கள் சந்தோஷமாகிய அவரது வருங்கால பாத்திரத்திலும் பங்கடைவார்கள் என்று இரட்சகர் முன்வைக்கத்தக்கதாக, பிதா அவருக்கு அதிகாரம் அளித்தவரானார்.

## இப்பொழுதுதான் அநுக்கிரகக்காலம்

நம்முடைய பாத்திரமானது, சந்தோஷத்தின் பாத்திரமாகவும், கசப்பின் பாத்திரமாகவும் காணப்படுகின்றது. கசப்பான காடியைக் குடிப்பதற்கென நாம் அழைக்கப்படும்போது, பிதாவின் சித்தத்தைச் செய்வதில் களிகூர்ந்தவராக, இந்தக் கசப்பில் தைரியமாயும், உண்மையாயும் பங்கெடுத்தவரான அவரை நாம் நினைவுகூருவோமாக; மற்றும் நாமும் தைரியங்கொண்டு, நம்முடைய அருமை கர்த்தருடன் இந்தப் பாத்திரத்தில் பங்குபெறுவதற்குப் பாத்திரமாய் நாம் கருதப்பட்டதற்கு நாமும் களிகூருவோமாக. பரிபூரணராய்க் காணப்பட்ட அவருக்கே, பாத்திரத்தில் பானம் பண்ணுதல் தொடர்புடையதான அவரது அனுபவங்கள் பற்றிய விஷயத்தில் தெய்வீகப் பலமும், உதவியும் அவசியமாயிருந்து; தேவையான உதவிக்காக அவர் உண்மையாய் பிதாவை ஜெபத்தில் நாடினது போலவே, நாமும் காணப்பட வேண்டும். நாம் சோதனைக்குள் பிரவேசிக்காதபடிக்கும், நமக்கான உதவி கடந்துவருகிறதான ஒரே ஒருவராகிய அவரிடத்திலிருந்து, நாம் வேறு பக்கமாய்த் திரும்பிவிடாதபடிக்கும், நாம் தொடர்ந்து விழிப்புடன் காணப்பட வேண்டும்.

"இப்பொழுதே உமக்கு என் பொருத்தனைகளை நிறைவேற்றுவேன்" என்று சங்கீதக்காரன் கூறியுள்ளார் (சங்கீதம் 116:14, 18; திருவிவிலியம்). சபைக்கு "இப்பொழுதே அநுக்கிரகக்காலம், இப்பொழுதே இரட்சணிய நாளாய்" இருக்கின்றது.

இப்பொழுதே, பலிகள் ஏறெடுக்கப்படுவதற்குரிய காலமாய் இருக்கின்றதே ஒழிய, எதிர்காலத்தில் அல்ல. நம்மால் மேற்கொள்ளப்பட்டதான இந்தப் பொருத்தனையை, பலியினாலான இந்த உடன்படிக்கையை, நாம் நிறைவேற்றி முடிக்கத்தக்கதாக கர்த்தர் இப்படியாக ஏற்பாடு பண்ணியுள்ளார். நாம் அர்ப்பணித்துள்ளதான மாம்சமானது, பட்சிக்கப்பட வேண்டும். பலிப்பீடத்திலிருந்து ஒருவேளை நாம் பலியை எடுத்துப்போடுவதற்கு நாடுவோமானால், மாம்சத்தை அழித்துப்போடத்தக்கதாக நாம் கையாளப்படுவோம்; இப்படியாக இல்லையேல் நாமே அழிந்துபோக நேரிடும். நமக்காக பிதா ஆயத்தம் பண்ணியுள்ளதான பாத்திரத்தை நாம் உண்மையாய்ப் பானம் பண்ணுவோமானால், இப்படியாக பானம் பண்ணுகிறவர்களுக்கு அவர் வாக்களித்துள்ளதான ஆசீர்வாதங்களை நாம் பிற்பாடு பெற்றுக்கொள்கின்றவர்களாய் இருப்போம். ஆகையால் இப்பொழுது தற்கால ஜீவியத்தில், அவர் நமக்கு அளித்துள்ளதான இந்தப் பாத்திரத்தில் நாம் பானம் பண்ணுகின்றோம்; ஏனெனில் இப்பொழுது இதைச் செய்யவில்லையெனில், வரவிருக்கின்றதான இராஜ்யத்தினுடைய ஆசீர்வாதங்களின் காலப்பகுதியில் நாம் எந்தப் பங்கையும் பெற்றிராதவர்களாகக் காணப்படுவோம்.

நமது கர்த்தருடைய விஷயத்தில், சொல்லர்த்தமாகச் சிலுவையில் அறையப்படுதலானது அவசியமாய் இருந்தது. நியாயப்பிரமாணத்தினுடைய கோரிக்கையை அவர் முழுமையாய்ச் சுமக்க வேண்டியிருந்தது; நியாயப்பிரமாணத்தின் கீழ்ப் பயங்கரமான குற்றவாளியாகக் காணப்படுகிறவரின் விஷயத்தில் காணப்படுவதுபோலவே, நியாயப்பிரமாணத்தினுடைய ஒவ்வொரு மீறுதலுக்கான தண்டனையை அவர் சுமக்க வேண்டியிருந்தது; இல்லையேல் அவரால் அனைத்து/ஒவ்வொரு யூதனையும் மீட்டிருக்க முடியாது. அவர் நியாயப் பிரமாணத்தினுடைய சாபத்தைச் சுமக்க வேண்டியிருந்தது; அவர் மரத்தில் தொங்க வேண்டியிருந்தது. ஆனால் நமது அனுபவங்கள் தொடர்புடைய விஷயத்தில், சிலுவை என்பது, மரத்தினாலான சொல்லர்த்தமான சிலுவையாகக் காணப்படுவதில்லை; ஆணிகள் என்பது சொல்லர்த்தமான ஆணிகளாகக் காணப்படுவதில்லை; கசப்பான வார்த்தைகளும், தூஷணங்களும், திரித்துக்கூறப்படுதல்களும்தான் நமக்கான பங்காய் இருக்கின்றது; இன்னுமாகச் சரீரத்தினுடைய கடைசி அங்கத்தினர்கள் சிலருக்கு, சில விதங்களில் சரீர ரீதியிலான கொடுமைகளும் செய்யப்படலாம்; நாம் அதை அறியோம்.

## சிலுவையின் பாதையில்

"தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன், அதை இழந்துபோவான்." திராட்சரச ஆலைகளினால் அடையாளப்படுத்தப்படுகின்றதான சோதனையான அனுபவங்கள்

வாயிலாக நாம் அனைவரும் கடந்து போக வேண்டும். தெய்வீக ஊழியத்தில், நாம் நமது ஜீவியங்களை ஒப்புக்கொடுத்திட வேண்டும். மனிதன் எனும் விதத்தில் நாம் தடையம் இல்லாமல் போவதற்கும் மற்றும் புதிய சிருஷ்டிகளாகுவதற்கும் வேண்டி, நாம் நம்மை நொறுக்கும் அனுபவங்களுக்குள் ஒப்புக்கொடுத்திட வேண்டும். "அவரோடேகூட பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோமே" ஒழிய, மற்றப்படியல்ல. ஆகையால் அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கான அழைப்பை நாம் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டுள்ளோம். பாத்திரமானது அதன் கடைசிவரை குடித்து முடிக்கப்படாதது வரையிலும், நாம் அடுத்த பாத்திரத்தை, அதாவது இராஜ்யத்தினுடைய சந்தோஷங்களாகிய பாத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. நமது கர்த்தர் பிதாவுக்குக் கீழ்ப்படிந்திருந்தபோது, அது அவருக்கு மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொணர்ந்ததாய் இருப்பினும், அது அவருக்கு இறுதி தருணம் வரையிலும், அதாவது "முடிந்தது" என்று சத்தமிட்டது வரையிலும், சோதனையான/ துயரம் நிறைந்த வேளை போன்றதாகவே இருந்தது. இப்படியாகச் சபையின் விஷயத்திலும் காணப்படும். நாம் பாத்திரத்திலுள்ள அனைத்தையும் பானம் பண்ணிட வேண்டும்; பாத்திரத்திலுள்ள எதுவும் மீதியாய் வைக்கப்படக்கூடாது. நாம் அனைத்து அனுபவங்களையும் சகித்துச் சந்தித்தாக வேண்டும்.

கிறிஸ்துவினுடைய சரீரமானது, அவர்களுடைய ஓட்டத்தை நிறைவுபண்ணும் போது, கிறிஸ்துவினுடைய பாடுகள் அனைத்துமே நிறைவடைந்துவிடும். நமது கர்த்தர் மகிமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, அவருக்குச் சந்தோஷத்தினுடைய புதிய பாத்திரமானது கொடுக்கப்பட்டது. அப்போது தேவனுடைய தூதர்கள் அனைவரும் அவரைத் தொழுது கொண்டார்கள். சீக்கிரத்தில் நமக்கான சந்தோஷத்தின் பாத்திரமானது, நமக்குக் கொடுக்கப்படும். நித்திரையிலிருந்த பரிசுத்தவான்கள் 1878-ஆம் வருடம் வசந்த/இளவேனிற் காலத்தில் விழித்தெழுந்து, தங்களுடைய பலனுக்குள் பிரவேசித்து, ஆசீர்வாதத்தின் பாத்திரத்தைப் பெற்றுக்கொண்டபோது, அது மகிமையானதொரு வேளையாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும், ஆண்டவருடைய வருகையின்போது, உயிரோடிருப்பவர்களாய்க் காணப்பட்டவர்கள் ஒவ்வொருவராய், வீட்டிற்குள் சேர்க்கப்படுகின்றார்கள். நாமும் உண்மையுள்ள வர்களாய்க் காணப்பட்டால், சீக்கிரத்தில் அவர்களோடுகூட இந்தச் சந்தோஷத்தின் பாத்திரத்தில் பங்குபெறுகின்றவர்களாய் இருப்போம் என்பதில் ஐயமில்லை. கிறிஸ்துவினுடைய அங்கத்தினர்கள் அனைவரும் திரைக்குப் பின்னாக வருவது வரையிலும், பூரண ஆனந்தம் அடையப்படாது என்று நாம் நம்புகின்றோம். அப்போது அவரது சிங்காசனத்தில் நாம் பங்கடைந்து, அவரது மகிமையிலும் பங்குபெறுவோம். அப்போது நமது அருமை கர்த்தருடன் இராஜ்யத்தில், புதிய ரசத்தை நாம் பானம்

பண்ணுவோம்; ஏனெனில் இதுவே அவரது உண்மையுள்ள பரிசுத்தவான்கள் அனைவருக்குமான வாக்குத்தத்தமாக இருக்கின்றது.

## நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று யேகோவா சொல்லுகிறார்

நம்முடைய ஆதார வசனத்தினுடைய இறுதியில் சங்கீதக்காரன் தான் செய்த பொருத்தனைகளை, "அவருடைய (தேவனுடைய) ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும்" செலுத்துவேன் என்பதாகக் குறிப்பிட்டுள்ளார். நம்முடைய இருதயங்களில் நாம் உண்மையாய்/நேர்மையாய்க் காணப்படுவது மாத்திரம் போதாது; மனுஷர் முன்னிலையில் ஒரு சாட்சியையும், வெளிப்படையான அறிக்கையையும் கர்த்தர் விரும்புகிறவராய்க் காணப்படுகின்றார். "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்" (உரோமர் 10:10). சத்தியத்தின் சாட்சியாளர்கள் அனைவரும், சத்தியத்திற்கு இரத்த சாட்சிகளாய்க் காணப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், அவர்கள் சத்தியத்திற்காகப் பாடுபடுவதற்கு விருப்பமுள்ளவர்களாய்க் காணப்பட வேண்டும். இப்படியாகவே சத்தியத்தின் கொடிதனை உண்மையாயும், தைரியமாயும் உயர்த்திப் பிடித்திருப்பவர்களுக்கும், அதிகமாய்க் காணப்பட வேண்டும். இவர்களே எதிராளியானவனின் குறி இலக்காகக் காணப்படுவார்கள்.

தம்மை மனுஷர் முன்னிலையில் அறிக்கைப் பண்ணாதவர்களைத் தாமும் பிதாவின் முன்னிலையிலும், பரிசுத்த தேவதூதர்கள் முன்னிலையிலும் அறிக்கைப் பண்ணுவதில்லை என்று நமது ஆண்டவர் கூறியுள்ளார். முற்றும் முழுமையாய் உண்மையுடன் காணப்படுபவர்களே, நமது கர்த்தரைத் தலையாகப் பெற்றுக் கொண்டவர்களும், சீக்கிரத்தில் இப்பொழுது பரலோகக் களஞ்சியத்தில் சேர்க்கப்படு பவர்களுமாகிய இந்த உண்மையுள்ளவர்களின் வகுப்பாரில் அடங்குவார்கள்.

ஆகவே நமது அருமை ஆண்டவருடன், நாம் பருகத்தக்கதாக, நமக்குச் சிலாக்கியமாயுள்ளதான இந்த "ஆசீர்வாதத்தினுடைய பாத்திரத்தின்" மதிப்பை நாம் அதிகமதிகமாய் உணர்ந்துகொள்வோமாக; மற்றும் தேவையான நேரங்களில், உதவிக்கான கிருபையைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, "கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவோமாக." தினந்தோறும், ஒவ்வொரு மணி நேரமும், ஒவ்வொரு கண நேரமும் அவர் நமக்குத் தேவையாய் இருக்கின்றார். நமக்கான மாபெரும் பரிந்துபேசுபவரின் நாமத்தில், நாம் எந்நேரத்திலும் கிருபையின் சிங்காசனத் தினிடத்தில் வரலாம்.

நமது பிதாவின் செவிகளானது, எப்போதும், அவரது பிள்ளைகளுடைய

கூப்பிடுதலுக்குத் திறந்தே உள்ளது. "அவரது கண்ணின் கருமணி போன்ற" அவர்கள் அவருக்குப் பிரியமானவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களை "அவர் தமது உள்ளங் கைகளில் வரைந்திருக்கின்றார்." "ஒருவனை அவன் தாய்த் தேற்றுவதுபோல், நான் உங்களைத் தேற்றுவேன்" என்பது, அவருக்குச் சொந்தமானவர்களுக்கான அவரது வாக்குத்தத்தமாக இருக்கின்றது. நாம் செலுத்தும் அனைத்துமே, அவரது நன்மைகள் அனைத்திற்கும் மற்றும் அவர் நமக்குப் பாராட்டியுள்ளதான ஈடு இணையற்றதான கிருபைகள் அனைத்திற்கும், திரும்பச் செலுத்தப்படும் மிக மிகச் சிறு கைம்மாறாகவே இருக்கின்றது. ஆனால் நம்முடைய சிறிய கைம்மாறுடன்கூடக் காணப்படும் அன்பு மற்றும் வைராக்கியத்தின் அளவானது நமது பரலோக பிதாவிடத்திலும் மற்றும் நமது மாபெரும் மீட்பரிடத்திலுமான நமது நன்றியுணர்வின் அளவினைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

"ஆண்டவரே, நான் உமக்கு என்னத்தைச் செலுத்துவேன்?<br>
என்னால் எண்ணிப்பார்ப்பதற்கு மிஞ்சி காணப்படுதே உம் அன்பு!<br>
எந்தன் பாவப்பட்ட ஜீவனை வாங்கினவருக்கு<br>
எந்தப் புகழுரைதான் பொருத்தமாயிருக்கும்?

தாழ்வில் இருந்த என்னையே<br>
திவ்விய தயவின் உயர் தளத்திற்கு உயர்த்தினீரே!<br>
எந்த வார்த்தைகள்தான் உம்மைத் துதிப்பதற்குப் பொருத்தமாயிருக்கும்?<br>
எந்த வார்த்தைகள்தான் உம் அன்பைபோன்ற<br>
அன்பினை வெளிப்படுத்துவதற்குப் பொருத்தமாயிருக்கும்?

ஆண்டவரே, நான் உமக்கு என்னத்தைச் செலுத்துவேன்?<br>
எந்தன் இருதயத்தை, எந்தன் பலத்தை,<br>
எந்தன் ஜீவனை நான் கொண்டுவருகின்றேனே!<br>
எந்தன் கரங்களை, எந்தன் குரலை, மகிழ்ச்சியாய்<br>
உமக்கு, எந்தன் இரட்சகருக்கு, எந்தன் இராஜாவுக்கு<br>
சேவையில் அர்ப்பணிக்கின்றேனே!"


## மறைக்கப்பட்டச் சிலுவை

ஒலிவ மரத்திலான சிலுவைதனைத் துன்பத்தின் மனிதனவர்
சுமந்ததையே திரள்கூட்டம் பார்த்ததுவே,
அதன் கீழாக எப்படியிருந்ததென யாரும் அறியாரே,
அவர் இருதயத்தினுள்ளே ஒரு மறைக்கப்பட்ட சிலுவைதனைச் சுமந்து வந்தாரே,
இரத்தம் சிந்தும் முழுமனுக்குலத்தின் துன்பமான
கரும் பாவத்தின் சுமையும்கூடச் சுமையாக அழுத்தியதே,
தேவனின் சட்டத்தை உடைத்து மீறியதால்
வந்த பாவமும் சேர்ந்தழுத்தியதே,
முட்களால் முடி பின்னி, ஏளனமாய் வெறுந்தலையில் வைத்தே,
அழுத்தி குரோதமுடன் வெறுத்தே, முகத்தினில்காறி உமிழ்ந்தனரே,
யோர்தான் கரையினில் உலக இரட்சகர் கண்டெடுத்த சிலுவையது,
கல்வாரிக்கு வரும்வரையில் எங்கேனும் சற்றேனும் இறக்கி வைக்கவில்லை.

பல நேரங்களில் அவர் மனித உதவி வேண்டுவதுபோல தோன்றினாலும்,
அக்கொடுமையான சிலுவைதனை
பரிதாபத்தினால் பகிர்ந்துகொள்ள எவருமில்லை,
எருசலேமே, எருசலேமே, அந்தப் பாரமான சிலுவை
அந்த ஏங்குகின்ற இருதயத்துக்கே
எப்போது மிகப் பாரமாகத் தோன்றியதென்பதை நீ அறிவாயோ?
விசுவாசக் குறைவும், கடின இருதயமும் கொண்டு உதவிசெய்யாததால்
இராஜாவோ உன்னைக் கடந்து அவர் வழியில் சென்றிட்டாரே.
அவருடனே எவருமில்லை, இவ்வுலகின் இருளான அவமானமான
பெருந்துன்ப ஆலையை தனித்தே மிதித்தாரே - ஓ,
தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று சீடர்களே, ஒரு மணி நேரம்கூட
உங்களால் எனக்காக விழித்திருக்கக் கூடாதா?
அந்தக் கெத்செமனேயின் காரிருள் வேளையிலே,
நீவீர் அந்தப் பாரமான சிலுவைதனின் பாரம் குறைக்க முயலவில்லையே,
பற்றியெரியும் பெருந்துன்பந்தனைப் பங்குபோட மனமில்லையோ?
ஐயகோ, ஐயகோ, உங்கள் கண் இமைகள் பெருந்தூக்கத்தினாலே
கனத்துவிட்டதே, நீங்கள் எல்லாம் களைப்பினாலே தூங்கிவிட்டீரே,
எனவே, களைப்படைந்த சகோதரரே, இப்போது நிம்மதியாய் உறக்கம் கொள்வீர்,
ஓய்வு கொள்வீர். ஒரு பரலோக தூதனின் இறக்கைகள் தாமே
மறைக்கப்பட்ட சிலுவைதனின் பாரம் குறைக்க உதவியதே,
உங்கள் எஜமான் பலம் பெற்றே - பலம் பெற்றே
வேறோர் சிலுவையைச் சுமக்கவே ஆயத்தம் ஆகிவிட்டாரே.

கல்வாரிக்குக் கொண்டு செல்ல எந்தச் சிலுவை மிகப் பாரமாகும்?
உரோமப் போர்வீரர், ஆசீர்வதிக்கப்பெற்றவர் தோளினில்
சுமத்திய மரச்சிலுவையா? இல்லை, இல்லை. அது பார்க்கவியலா
கண்ணுக்குத் தெரியா மறைக்கப்பட்ட சிலுவைதானே,
அதுவே அவரை பூமியின்மேலே மிகப் பாரமாகவே அழுத்தி நசுக்கியதே,
வெளறிய இதழ்கள் மென்மையாய்த் திறந்தே,
எனது தந்தையே, எனது தந்தையே, என்னை ஏனோ கைவிட்டீரே?
பூமிக்கூடச் சோகமடைந்ததே, அவர் மார்பின் மீதே
அதைச் சுமந்து கொண்டாரே, சூரியன்கூட இருளாய் மாறியதே,
எல்லாம் முடிந்தது, நிறைவேறிற்று, சரிநிகர்சமானவிலை கொடுத்தாயிற்று.
மறைக்கப்பட்ட சிலுவையோ, அன்பால் தளர்ந்த இதயம்தனை
ஊடுருவவே குத்திக் கிழித்ததே,
உன் சிலுவையை எடுத்தே எனைப் பின்பற்றிவா - எஜமான் சொன்னாரே,
ஆம், அவர் உண்மை மணவாட்டியும் ஒரு சிலுவைதனைச் சுமந்தாக வேண்டும்,
மறைக்கப்பட்ட சிலுவை, வாழ்க்கையின் சூழ்நிலை மாற்றங்களாலே உருவானதல்ல,
அதன் நோய்கள், வலிகள், இழப்புகள், ஏழ்மை, பெருங்கூட்டம்
வெளிப்புறப்பார்வைக்காக அடையாளமாகக் கொண்டதுவே, இல்லை, இல்லை,
அவரோடுகூடப் பாளயத்திற்குப் புறம்பே சென்றிடுவோமே
பலியில் நம் ஜீவன்தனை அழித்திடுவோமே, தியாகமாக்கிடுவோமே.
இந்தச் சிலுவையை மார்போடு அணைத்தே
கல்வாரிக்கு நேராய்ச் சென்றிடுவோமே; அங்கே
நம் மணவாளன் காத்திருக்கின்றாரே - வேதனையின்
சிலுவையை எடுத்து, சந்தோஷத்தின் கிரீடம் கொடுத்திடவே.

- Poems of Dawn, p. 215



நினைவுகூருதலின் தியானங்கள்

# மீட்கும்பொருள்



# கிறிஸ்துவின் இரத்தம்

யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டம் குறித்து நாம் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கப்பட்டு வருகையில், இயேசு கிறிஸ்து எனும் ஈவில் வெளிப்படுகின்றதான தேவனுடைய அருமையான அன்பைக் குறித்தும் நாம் அதிகமாய்ப் புரிந்துகொள்வோம். தேவன் எதையும் காரணமில்லாமல் செய்வதில்லை மற்றும் காரணத்தை நாம் புரிந்துகொள்ளும்போதுதான் அவர் செய்கிறவைகளின் மதிப்பினை நம்மால் சரியாய்ப் புரிந்துகொள்ள முடிகின்றது. ஆகையால் கிறிஸ்து ஏன் தமது இரத்தத்தினைச் சிந்தினார் என்பதையும், இதனால் உண்டாகும் விளைவின் தன்மை என்ன என்பதையும் நாம் புரிந்துகொள்ளுகையில், அவரது இரத்தத்தின் உண்மையான மதிப்புக் குறித்த உணர்ந்துகொள்ளுதலுக்கு நெருங்கி வருவோம்.

கீழ்ப்படியாமையின் காரணமாக, மனிதன் பாவியானது மாத்திரமல்லாமல், தனது ஜீவனையும் இழந்துபோனவனானான். "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று." (உரோமர் 5:12) ஒருவேளை மனிதன் இந்நிலையிலேயே இருந்துவிடுவானானால், மனிதன் இறுதியில் தமது சாயலை அடையவேண்டுமென்று மனிதனைச் சிருஷ்டித்ததிலுள்ள தேவனுடைய நோக்கம் தோல்வியில் முடிவதாய் இருந்துவிடும்.

ஜீவனைக்கொடுப்பதற்கு வேறெந்தப் பிரமாணமும் இல்லாததினால், கிறிஸ்துவின் மரணம் மாத்திரமே, மனிதன் மேலான ஜீவனை நாடிடுவதற்குரிய நிலையில் மனிதனைக்கொண்டு நிறுத்திட முடியுமே ஒழிய, வேறு எதினாலும் செய்ய முடியாது.

அவர் தம்மைக் குறித்து, "நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே" என்று கூறியுள்ளார். இயலாமையில் நாம், காணப்பட்டிருக்க, கிறிஸ்து ஏற்றவேளையில் அக்கிரமக்காரர்களுக்காக மரித்தார். இப்பொழுது நீதிமான் ஒருவனுக்காக மரிப்பது அரிது. நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத்துணிவான். ஆனால் நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினால், தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணினார். இப்படி நாம் அவரது இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. (உரோமர் 5:6-9) ஆகவேதான் பவுல் பின்வருமாறு கூறமுடிந்தது: "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்." (அப்போஸ்தலர் 20:28) இவர்கள்

பாவத்திற்குக்கீழ் விற்கப்பட்டிருந்தார்கள், ஆனால் விலைக்கொடுத்து வாங்கப்பட்டுள்ளனர். "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." (1 கொரிந்தியர் 6:19, 20)

கிரயத்துக்குக்கொள்ளப்பட்டீர்கள், மீட்கப்பட்டீர்கள் மற்றும் விடுவிக்கப் பட்டீர்கள் என்ற வார்த்தைகளானது, ஒரே அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது மற்றும் இவ்வார்த்தைகள் பயன்படுத்தப்படும்போது, நாம் நமக்குச் சொந்தமானவர்கள் இல்லை என்றும், நமக்குக் கட்டளையிட உரிமைக்கொண்டிருப்பவர் மற்றும் நம்மிடம் முழுமையான கீழ்ப்படிதலை எதிர்ப்பார்க்கின்றவருமானவருக்கு நாம் சொந்தம் என்பதையும் நமக்கு அடிக்கடி நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது;"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற் றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. அன்றியும், பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள். உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே." (1 பேதுரு 1:15-19)

"ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம்." (வெளிப்படுத்தல் 5:9, 10)

நாம் ஒருவருக்கொருவர் பணிவிடை புரிந்திட கற்பிக்கப்பட்டிருக்கின்றோம். "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்." (மத்தேயு 20:27, 28)

"எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது." (1

தீமோத்தேயு 2:6)

"அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே? மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்." (ஓசியா 13:14)

இவை மாத்திரமல்ல. நாம் இந்த விலையேறப்பெற்ற அழைப்பினைப் பெற்றிருக்கின்றோம்: "வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பர சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்." (ஏசாயா 1:18) "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1 யோவான் 1:9)

"நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களா யிருப்போம். அவர் ஒளியில் இருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொ ருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்." (1 யோவான் 1:6, 7)

வெளிச்சத்தில் சிவப்புநிறக் கண்ணாடி வழியாகப் பார்க்கப்படும் எந்தக் கருஞ்சிவப்பு நிறமுள்ள பொருளும், வெள்ளைநிறப் பொருளாகத் தெரியும் என்பது விந்தையான உண்மையாகும்; இதுபோலவே நம்முடைய பாவங்கள் கருஞ்சிவப்பாய்க் காணப்பட்டாலும், தேவன் அதைக் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் வழியாய்ப் பார்த்திடும் நிலையில் நாம் வருவோமானால், அவை வெண்மையாய்க் கருதப்படும். நமக்கென்று சொந்த நீதி எதுவுமில்லை என்றாலும், நம்முடைய விசுவாசம், நமக்கு நீதியாய் எண்ணப்படுகின்றது. "ஆனபடியினால் முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, மாம்சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்தசேதன முடையவர்களால் விருத்தசேதனமில்லாதவர்களெனப்பட்ட நீங்கள், அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரயேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர் களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லா தவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்." (எபேசியர் 2:11-13)

"கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமுமான கூடாரத்தின் வழியாகவும்,

வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார். அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!" (எபிரெயர் 9:11-14)

"இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. இப்படியிருக்க, நியாயப்பிரமாண மில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக் குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது. அது இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை. எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்; தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக் கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்கு கிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டா கவும், கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார். இப்படியிருக்க, மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப் பிரமாணத்தினாலே? கிரியாப்பிரமாணத்தி னாலேயா? அல்ல; விசுவாசப்பிரமாணத்தினாலேயே." (உரோமர் 3:20-27)

# பதிலாள் தொடர்புடைய கேள்விகள்

**கேள்வி.** மரணத்தில், இயேசு மனிதனுக்கு பதிலாள் ஆவாரானால், நமக்காக அவர் தமது ஜீவனைப் பதிலாளாக இருந்து கொடுத்தது முதற்கொண்டு, இன்னும் மனிதன் ஏன் மரித்துக்கொண்டே இருக்கின்றான்? மனிதர்கள் தொடர்ந்து மரித்துக்கொண்டிருப்பது, அவரது நோக்கத்திற்கு எதிரான காரியமல்லவா? ஏனெனில் தேவன் நீதியுள்ளவர் என்றால், அவரால் ஒரே ஆதாமின் பாவத்திற்காக பாவியையும், அவனுக்கான பதிலாளையும் விடாது வைத்திருக்கக்கூடாதே.

**பதில்.** இயேசு நம்முடைய பிரதிநிதியென அல்லது பதிலாளாக, "நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்" என்று மாத்திரம் வேதவாக்கியம் கூறாமல், "நாம் கிரயத்துக்குக்கொள்ளப்பட்டோம்" என்றும் கூறுகின்றது மற்றும் இக்காரியத்தினை முழுமையாய்ப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், இதற்கே உரிய முக்கியத்தினை இதற்கு நாம் கொடுத்திடவேண்டும்.

மீறப்பட்டதான தேவனுடைய பிரமாணமானது நமக்கு எதிராய்ச் சாற்றியுள்ள தான தண்டனையை, இயேசுதாமே சந்தித்தார் என்ற விதத்தில், இயேசு மனிதனுக்கான பதிலாளானார். இதன்விளைவாக தேவன் இனி ஆக்கினைக்குள்ளாக தீர்ப்பதில்லை; ஏனெனில் கிறிஸ்துவே மரித்திருக்கின்றார். (உரோமர் 8:34-ஆம் வசனத்தைப் பார்க்கவும்) ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படும் காரியமானது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் இப்பொழுது கேள்வி என்னவெனில், நீதி பிரமாணம் திருப்திப்படுத்தப்பட்டாயிற்று என்றால், மரணத்துக்கு அதிகாரியான, மரண தண்டனையை நிறைவேற்றுபவன் (பிசாசானவன் - எபிரெயர் 2:14) உடனடியாக ஏன் தடுத்து நிறுத்தப்படவில்லை? என்பதேயாகும். இந்தக் கேள்விக்கான பதிலைக் கண்டுபிடிக்க, நாம் நினைவுகூர வேண்டியது என்னவெனில்: கிறிஸ்துவினுடைய வேலையும், சித்தமும் பிதாவினுடையதாக இருப்பினும், நாம் பார்த்துக்கொண்டிருக்கும் விஷயத்தினுடைய சட்டரீதியான கோணத்தில் பார்க்கையில், மனிதர்கள் இப்பொழுது பிதாவுக்குக் கட்டுப்பட்டவர்களாய் இல்லாமல், மாறாக அவர்களைக் (கிரயத்துக்குக்) கொண்டவராகிய அவரது குமாரனுக்குக் கட்டுப்பட்டவர்களாய் இருக்கின்றார்கள் என்பதேயாகும். ஆகையால் சத்துருவானவன் இன்னமும் அவனது வேலையில் குறுக்கிடப்படவில்லை என்ற காரியத்தினை எந்தவிதத்திலும் யேகோவா தேவன் அநீதி செய்திட்டார் என்று குற்றமாகச் சாட்டிடமுடியாது மற்றும் (கிரயத்துக்குக்) கொண்டவராகிய இயேசுவுக்கும் எதிராகவும் குற்றமாகச் சாட்டிடமுடியாது; இயேசு தம்முடைய அதிகாரத்தைச் செயல்படுத்துவதற்கும், அனைவரையும் விடுவிப்பதற்குமான தம்முடைய நோக்கத்தினைத் தம்முடைய ஏற்றவேளையில் செய்திடுவார் என்று தெரிவித்துள்ளார்; இன்னுமாக நமக்கு ஜீவிக்கும் உரிமையைப் பெற்றுத்தந்தவர், அதை அவர் உடனடியாக வழங்காததினால், யாராகிலும் அவரைக் குற்றஞ்சாட்டிட கூடுமா? நமக்குக் காரணம் தெரியவில்லை என்றாலும், தாமதத்திற்கு அவர் சில நல் காரணங்களையே கொண்டிருக்க வேண்டும் என்பதில் நமக்கு நிச்சயமே; ஏனெனில் அவர் நம்மேல் அன்புகூர்ந்து, மனதுருகினார் என்பதை நாம் நினைவுகூருகின்றோம்; காரணம், "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை." (யோவான் 15:13)

கடந்த காலங்களிளெல்லாம் ஆயிரமாயிரமான நமது சகோதரர்கள் ஏன், எதற்காக என்று தெரியாமலேயே அவரது ஞானத்தையும், அன்பையும் விசுவாசித்தது போன்று, நாமும் விசுவாசிக்கக்கூடும் என்றாலும், தேவன் அதிகமதிகமாய்த் தம்முடைய திட்டங்களை நமக்கு வெளிப்படுத்துவதற்குச் சித்தமாய் இருக்கிறதும், இயேசு சட்டப்பூர்வமாக மரணத்தை ஜெயங்கொண்டு, மரணத்திற்கும், பாதாளத்திற்குமான திறவுகோல்களைப் (திறப்பதற்கான அதிகாரத்தினை) பெற்றிருந்தப் பிற்பாடும், இன்னமும் மரணம் ஆளுகை செய்ய அனுமதிக்கப்படுவதற்கான காரணத்தை நமக்கு வெளிப்படுத்துவதற்குமான காலப்பகுதியில் நாம் ஜீவிப்பதினால் நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம். (வெளிப்படுத்தல் 1:18)

மரணத்தினாலும், இதற்குக் காரணமுமான பாவத்தினாலும் கெடுக்கப் படுவதற்கு முன்னதாகக் காணப்பட்ட மனிதனுடைய பூரண சுபாவத்தினிடத்திற்கு மனுக்குலத்தைச் சீர்ப்பொருந்தப்பண்ணுவதற்கு மாத்திரம் தேவன் நோக்கம் கொண்டிராமல், இன்னுமாக மனுஷர்கள் மத்தியிலிருந்து "சிறுமந்தையினரை" தெரிந்துகொள்வதற்கும்கூடத் தேவன் நோக்கங்கொண்டிருந்தார்; இந்தச் சிறுமந்தையினர் மனித சுபாவத்திலிருந்து, திவ்விய சுபாவத்திற்கு மறுரூபமடைவது மூலம் "புதுச் சிருஷ்டிகளாகவும்," உயர்த்தப்பட்டுள்ள கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவைப் போன்று காணப்பட்டு, அவரது வேலையிலும், மகிமையிலும், அதிலும் விசேஷமாக மனுக்குலத்தைச் சீர்ப்பொருத்தும் வேலையில் பங்காளிகளாகக் காணப்பட வேண்டும் என்பதும்கூடத் தேவனுடைய நோக்கமாயிருந்தது.

அவரது சிங்காசனத்திலும், வேலையிலும், பங்கடையும் இந்தச் சிறுமந்தையினர், மணவாட்டி, "திரும்பக்கொடுத்தலின் காலங்கள்" ஆரம்பமாகுவதற்கு முன்னதாக, முதலாவது தெரிந்தெடுக்கப்பட வேண்டும், இல்லையேல் அவளால் பங்கடைய முடியாது என்பதை இப்பொழுது அனைவராலும் காணமுடிகின்றது. ஒருவேளை இயேசு மனிதர்களை மீட்டுக்கொண்ட உடனே, அவருக்குச் "சகல அதிகாரமும் கொடுக்கப்பட்ட" (திறவுகோல்கள் கொடுக்கப்பட்ட) உடனே, அவர் மனிதர்களைச் சீர்ப்பொருந்த ஆரம்பித்திருப்பாரானால், இது அவரது மணவாட்டியா கவும், வேலையில் துணைவியாகவும் இருக்கத்தக்கதாக கற்புள்ள கன்னிகையைத் தெரிந்தெடுக்கும் பணியைத் தடைப்பண்ணியிருந்திருக்கும்.

இயேசு தம்முடைய மகா வல்லமையையும், ஆளுகையையும் கையில் எடுக்கையில் தேவகிருபையினால் நாமும் அவரோடுகூட மகிமையடைந்து, வரவிருக்கும் அனைத்திற்குமான திரும்பக்கொடுத்தலுக்கு நிழலாய் மாத்திரம் காணப் பட்டதான தம்முடைய அற்புதங்கள் தொடர்புடையதாய், "இவைகளைப்பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் செய்வான்" என்று வாக்களித்ததற்கு ஏற்ப, அவர் தம்முடைய வல்லமையைச் செயல்படுத்துவதில் நாமும் பங்கடைவோம் என்று இயேசு விசுவாசித்தவராக, இயேசு தமது மகா வல்லமையைப் பயன்படுத்துவதில் தாமதிக்கும் காரியமானது, தேவனுடைய திட்டத்தில் இடம்பெறுவதினால் நாம் மகிழ்ச்சிக் கொள்கின்றோம், மிகுந்த மகிழ்ச்சிக்கொள்கின்றோம்.

மணவாட்டி தெரிந்தெடுக்கப்பட்டு, திரும்பக்கொடுத்தல் வேலைக்கான காலம் வருவதுவரையிலும், ஏன் இயேசு தமது முதலாம் வருகையைத் தாமதிக்கவில்லை? என்று கேள்வி எழும்பலாம். இதுவும், நமது முந்தின கேள்வியும் தொடர்புடையதாகக்

காணப்படுவதினால், நாம் இங்கு அதற்குப் பதிலைப் பதிவு செய்கின்றோம்:

இயேசுவோடுகூடத் திவ்விய சுபாவத்திலும், மகிமையிலும் நாம் பங்கடையத் தக்கதாக, இயேசுவோடுகூட நாம் மனுஷசுபாவத்தைப் பலிசெலுத்துவது மாத்திரம் போதாது, நமது மனுஷசுபாவமானது அபூரணமானதாகவும், ஆதாம் மூலமாக ஏற்கெனவே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதாகவும் காணப்படுவதினால், அது கறைதிறையற்றுப் பலிசெலுத்தப்படுகின்ற யேகோவா தேவனின் பலிபீடத்தில், அங்கீகரிக்கப்படத்தக்கதான பலியாகுவதற்கு முன்னதாக, ஆக்கினைக்குள்ளான நிலையினின்று விலைக்கொடுத்து வாங்கப்படுவது (அ) மீட்கப்படுவது அவசியமாகும். ஆகையால் இயேசுவினுடைய பலியிலும், மகிமையிலும் பங்கடைவதற்கான அழைப்புச் சபைக்கு வருவதற்கு முன்னதாக, நம்முடைய பாவங்களுக்கான மீட்கும் பொருளென, இயேசுவினுடைய பலி அவசியமாய் உள்ளது என்று உடனடியாகப் புரிந்துகொள்ளப் படலாம்.

ஈடுபலிக்கும், திரும்பக்கொடுத்தலுக்கும் இடையில் சிறுமந்தையினர் அவரது பலியில் பங்கடையத்தக்கதாக காலங்கள் பல கடந்துசெல்ல வேண்டியுள்ளது என்பது மாத்திரமல்லாமல், அந்த ஒரு காலப்பகுதியில்தான் தீமையும் ஆளுகைச் செய்ய வேண்டும். ஒரு கணம் யோசித்துப்பாருங்கள், ஒருவேளை நமது அதிபதி இப்பொழுது ஆளுகை செய்கின்றாரானால் மற்றும் நன்மை செய்தலுக்குப் பலனும், தீமை செய்தலுக்குத் தண்டனை முதலானவை வழங்கப்படுகிறது என்றால், சிறுமந்தையினர் தீமையினால் சோதிக்கப்படுவதற்கும், பரீட்சிக்கப்படுவதற்கும் வாய்ப்பிராது மற்றும் நீதிக்காகவும், சத்தியத்திற்காகவும் தங்களையே பலிசெலுத்திடுவதற்கும் வாய்ப்பிராது. இப்படியாகவே இயேசுவினுடைய பலியின் விஷயத்திலும்கூடக் காணப்பட்டிருக்கும்; அப்போது தீமையின் ஆளுகை காணப்படவில்லையெனில், அவர் சத்தியத்திற்குச் சாட்சிபகர்ந்த காரியமானது எந்தப் புறக்கணிப்பையும், நிந்தனைகளையும், முட்களையும் (அ) சிலுவையையும் (அ) மரணத்தையும் கொண்டுவந்திருக்காது.

ஆயிரவருட யுகத்தின்போது, கிறிஸ்துவினுடைய ஆளுகையின்கீழ் "தீமையை நன்மையினாலே வெல்லும்" வாய்ப்பிராது; ஏனெனில் அப்போது தீமையின் ஆளுகையானது முடிவிற்குக்கொண்டுவரப்பட்டு, நீதியின் ஆளுகையானது ஆரம்பிக்கப்பட்டிருக்கும்.

பாவங்களை விட்டுவிடுவதே (அதாவது தீமை செய்வதை, குடிப்பழக்கத்தை, கெட்ட நடத்தை முதலானவற்றைத் தொடராமல் இருப்பதே) பலி என்று கருதுகின்றவர்களால், நம்முடைய நிலைப்பாட்டினைப் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் யார் பலியினை - மனுஷீக உரிமைகள், சிலாக்கியங்கள், சௌகரியங்கள் மற்றும் நலன்கள் ஆகியவற்றை ஒப்புக்கொடுத்தல் மற்றும் தியாகம் செய்தல் என்று காண்கின்றார்களோ அவர்களே, இம்மாதிரியான பலியானது, தீமையான சூழ்நிலைகள் நிலவும்போதே சாத்தியமாகுகின்றது என்பதைப் புரிந்துகொள்வார்கள்.

ஆகையால் சுவிசேஷயுகமானது, "கர்த்தருடைய அநுக்கிரக வருஷமாய்" இருக்கின்றது. இந்தக் காலப்பகுதியிலேயே முறையாய் ஏறெடுக்கப்படுகின்றதான பலிகள் அனைத்தையும் தேவன் ஏற்றுக்கொள்கின்றார். நிழலாகச் செய்வதற்கே ஒழிய, மற்றப்படி இந்த யுகத்திற்கு முன்னதாக இப்படியானதொரு வாய்ப்பு வழங்கப்படவில்லை. ஈடுபலியானது அதுவரையிலும் கொடுக்கப்படாததினாலும், அனைவரும் பாவிகளென மரணம் எனும் ஆக்கினைத்தீர்ப்பிற்குள்ளாகக் காணப்பட்டதினாலும், பலி

செலுத்துவதற்கான வாய்ப்பு இந்த யுகத்திற்கு முன்னதாகக் கூடாததாயிருந்தது உண்மைதான். சிலர் தேவனுடைய கிருபையின் திட்டத்தினை விசுவாசித்தவர்களாக, பாவங்களுக்கான விசேஷித்தப் பலிகளைக் குறித்து உய்த்துணர்ந்தவர்களாக, எதிர்நோக்கினவர்களாகக் காணப்பட்டு, விசுவாசத்தினாலே பலனை ஏற்றுக்கொண்டவர்களானார்கள். இயேசு பாவங்களுக்கான தம்முடைய பலியை நிறைவேற்றி, அதை நம்முடைய பாவங்களுக்கான ஈடுபலி விலைக்கிரயமென முன்வைப்பதற்கு முன்வரையிலும், தேவன் பாவத்தை நிஜமாய் இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதவில்லை என்கிற காரியமானது, பெந்தெகொஸ்தே நாள் வருவதற்கு முன்புவரை, இயேசுவின் சீஷர்களைக்கூட யேகோவா தேவன் பலிகளாக ஏற்றுக்கொள்ளவில்லை என்ற உண்மையிலிருந்து உறுதிப்படுகின்றது.

இயேசு அங்கீகரிக்கப்படத்தக்க பலியாய்க் காணப்பட்டார்; ஏனெனில் அவரில் பாவம் ஏதுமில்லை. இந்த யுகத்தில், அவரது ஈடுபலியினை ஏற்றுக்கொண்டு, அவரது பலியின் பலன்களில் இப்பொழுது பங்கடைபவர்கள், பாவம் மற்றும் அதன் ஆக்கினைத் தீர்ப்பினின்றும் விடுவிக்கப்பட்டவர்களாகக் கருதப்படுகின்றனர். பாவத்தினின்று விடுவிக்கப்பட்டுள்ளவர்களாகிய இவர்களும் அங்கீகரிக்கப்படத்தக்கதான பலிகளாகக் கூடும், அதாவது "கர்த்தருடைய அநுக்கிரக வருஷம்" நீடிப்பதுவரையிலும் பிரியமானவருக்குள் அங்கீகரிக்கப்படுபவர்களாகக் கூடும். சுத்திகரித்தல் மற்றும் பலிச் செலுத்துதல் (அல்லது நீதிமானாக்கப்படுதல் மற்றும் பரிசுத்தமாக்கப்படுதல்) எனும் இந்தப் பிரமாணத்திற்கேற்ப "சிறுமந்தை" - மணவாட்டி - ஆட்டுக்குட்டியானவரின் மனைவி தெரிந்தெடுக்கப்பட்ட பிற்பாடு, பலிசெலுத்துவதன்மூலம் சுபாவ மாற்றம் அடைவதற்கான விசேஷித்த அழைப்பானது, அதாவது பரம அழைப்பானது, பரலோக அழைப்பானது நிறைவுபெறும்.

அடுத்த யுகத்தின்போது காணப்படுகின்றதான பரீட்சையின் நிலைமைகளானது, இப்பொழுது இருப்பதைக்காட்டிலும் மிகவும் சுலபமானதாய் இருக்கும் மற்றும் அவர்களுக்கான கிரீடமானது மகிமையானதாய் இருப்பினும், நாம் எந்தக் கிரீடத்திற்காய் ஓடிக்கொண்டிருக்கின்றோமோ அந்தக் கிரீடத்தைக்காட்டிலும் குறைவான மகிமையுடையதாகவே இருக்கும். அவர்களது நோக்கம், மனித சுபாவத்தில் பூரணமடைதல் ஆகும்; நம்முடையதோ திவ்விய சுபாவத்தில் பூரணமடைதலாகும்; ஒன்று பரலோகச் சாயல், மற்றொன்று மகிமையான, பூமிக்குரிய சாயலாகும். பரலோகத்திற்குரிய மகிமை என்பது ஒரு காரியமாகவும், பூமிக்குரிய மகிமை என்பது இன்னொரு காரியமாகவும் காணப்படுகின்றது. முதல் மனிதனுக்கும் (மற்றும் அவரது மனைவிக்கும்) கொடுக்கப்பட்டிருந்த மகிமையும், ஆளுகையும் திரும்பக் கொடுக்கப்படுகையில், மனிதன் மீண்டுமாக, தேவதூதரிலும் சற்று சிறிய நிலையிலேயே வைக்கப்படுவான் என்ற காரியமானது, நமது கர்த்தராகிய இரண்டாம் ஆதாமுக்கான (மற்றும் அவரது மனைவிக்குமான) உன்னதமான மகிமையையும், அவர் தேவதூதர்களுக்கும் மேலானவராக்கப்பட்டிருப்பதையும், முழங்கால்யாவும் அவருக்கு முடங்கவும், நாவுகள்யாவும் அவரை அறிக்கைப்பண்ணவும் செய்யப்பட்டிருப்பதையும் மங்கலாய் விளக்குகின்றதாய் இருக்கின்றது. (சங்கீதம் 8:5; பிலிப்பியர் 2:9, 10; எபிரெயர் 1:4 மற்றும் 1 கொரிந்தியர் 6:3 ஆகிய வசனங்களை ஒப்பிட்டுப்பார்க்கவும்.)

# இரத்தத்தினைச் சாதாரணமானதாய் எண்ணுதல்

**"தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி (சாதாரணமானதென்று எண்ணி), கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாய் இருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்." எபிரெயர் 10:29**

அப்போஸ்தலன் இங்கு மோசே மற்றும் அவரது பிரமாணத்தை, நிஜமான மோசே மற்றும் மேலான பிரமாணத்தோடு ஒப்பிட்டுக்காட்டுகின்றார். மோசேயின் பிரமாணத்தையும், நிழலான நியாயப்பிரமாண உடன்படிக்கையின் வாயிலாக ஏற்படுத்தப்பட்ட மற்றும் நிறுவப்பட்டதான ஏற்பாடுகளையும் இழிவாகக் கருதுபவன், மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகின்றான்; இந்தத் தீர்ப்பினின்று அவன் கிறிஸ்துவினுடைய புண்ணியத்தின் வாயிலாக விடுவிக்கப்படுவான். இந்த மரண ஆக்கினையானது தற்காலிகமான தன்மையில் காணப்படுவதினால், இது அவனது நித்தியத்திற்கடுத்த நலன்களைப் பாதிப்பதில்லை.

இந்த இரண்டு ஆக்கினைகளுக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது; ஒருவன் நிஜமான மோசேயினால் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவானானால், அவனது தண்டனையானது மிகவும் அதிகக் கடினமானதாய் இருக்கும். இந்தக் கடுமையான (அ) "கொடிதான ஆக்கினை" என்பது "இரண்டாம் மரணம்," அதாவது முற்றிலுமான அழிவைக்குறிக்கின்றதாய் இருக்கின்றது என்று நாம் புரிந்திருக்கின்றோம். ஒருவன் கிறிஸ்து மூலமான மற்றும் புதிய உடன்படிக்கையின் ஏற்பாட்டினுடைய தேவனுடைய பிரமாணங்கள் எதையேனும் அசட்டைப்பண்ணுவானானால், அவன் இரண்டாம் மரணத்திற்குப் பாத்திரமாக இருப்பான். இந்தக் கொள்கையானது, ஆயிரவருட யுகம் முழுவதும்கூடப் பொருந்தும்; அதாவது கிறிஸ்து மூலமாய்த் தேவன் அருளியுள்ளதான கிருபைகள் மற்றும் ஏற்பாடுகள் குறித்த அறிவிற்குள் ஒருவன் வந்த பிற்பாடு, அவன் அவைகளைப் பெரிதாய் எடுத்துக்கொள்ளாமலும், அன்பைப் பரிமாறத் தவறியும், தனக்கு உதவிபுரியும் அந்த ஏற்பாடுகளுக்குக் கீழ்ப்படிய தவறியும் இருப்பானானால், அவன் தொடர்ந்து இனிமேலும் தேவதயவைப் பெற்றுக்கொள்வதற்கு அபாத்திரமானவனாய்க் கருதப்பட்டு, இரண்டாம் மரணத்திற்குள் கடந்துசெல்லுவான். ஆனால் இங்கு அப்போஸ்தலன், ஆயிரவருட யுகத்தின் முடிவில் நடக்கப்போவதைக் குறித்துக் குறிப்பிடவில்லை என்பது நிச்சயமே மற்றும் மோசேக்கும், கிறிஸ்துவுக்கும் இடையிலான அநேகமான ஒப்புமைகளைக் காண்பிப்பதற்கு மாத்திரமே, இவைகளை இங்குக் குறிப்பிட்டோம்.

இந்த ஆதார வசனத்தை அப்போஸ்தலன் உலகத்திற்கும் பொருத்தாமல், மாறாக சபைக்கே பொருத்திக் குறிப்பிடுகின்றார். வசனத்தின் முன் பின் வசனங்களும்கூட, அப்போஸ்தலன் சபைக்கே, அதாவது பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கே, கிறிஸ்துவினுடைய நீதி தரிப்பிக்கப்பட்டதன் வாயிலாக தங்கள் பாவங்களை மூடப்பெற்றவர்களுக்கே, இந்த மூடுதலின் பெலத்தில் நீதிமானாக்கப்பட்டு, தங்கள் சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுத்தவர்களுக்கே பேசிக்கொண்டிருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. நாம்

என்ன நோக்கத்திற்காக இப்படி அர்ப்பணம் பண்ணுகின்றோம்? கர்த்தருடைய பாத்திரத்தில் பானம்பண்ணிடுவதற்கும், அவரது மரணத்திற்குள்ளான ஸ்நானம் கொள்ளுவதற்கும், நாம் அவரோடுகூட ஆளுகை செய்யத்தக்கதாகவும், மகிமையின் தளத்தில் அவரது அங்கத்தினர்களாகக் காணப்படத்தக்கதாகவும், மாம்சீக இஸ்ரயேலை ஆசீர்வதிப்பதும் மற்றும் இவர்கள் வாயிலாக பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதுமான மாபெரும் வேலையைச் செய்யும் ஆபிரகாமின் சந்ததியில், ஆவிக்குரிய இஸ்ரயேலில் அங்கத்தினர்களாகக் காணப்படத்தக்கதாகவும், அவரது சரீரத்தின் அங்கத்தினர்களெனப் பாடுபடுவதற்குமான நமது கர்த்தருடைய அழைப்பின் காரணமாகவே அர்ப்பணம் பண்ணினோம்.

ஆகையால் அப்போஸ்தலன் இக்காரியத்தை நம் கவனத்திற்குக் கொண்டுவருவதன் மூலமாக, நம்மில் எவரேனும், அதாவது பாவத்திலிருந்து திரும்பி, கிறிஸ்துவை நம்முடைய பாவங்களுக்கான மாபெரும் பாவநிவிர்த்தி என்று மாத்திரம் உணர்ந்துள்ளவர்களாகிய எவருக்கேனும் சம்பவிப்பதைப்பற்றிக் குறிப்பிடவில்லை; இல்லை; மாறாக அவரது இரத்தத்தின்மீதான விசுவாசத்தின் வாயிலாக நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகிய நம்மில் எவரேனும், விழுந்துபோவோமானால், சம்பவிப்பவைப் பற்றியே சபையிடம் குறிப்பிடுகின்றார்.

நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில், கடைசி இராப்போஜனத்தை அவர் நிறுவின இரவில், அவர் பாத்திரத்தை எடுத்து, "இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்று கூறினதை நாம் நினைவில்கொள்கின்றோம். (மத்தேயு 26:28) இந்த இரத்தத்தை, புது உடன்படிக்கையை முத்திரிக்கும் இரத்தம் என்று கருதுவதிலுள்ள தேவனுடைய நோக்கம் என்னவெனில், அது ஆதாம் மற்றும் அவரது பிள்ளைகளினுடைய பாவங்கள் அனைத்திற்கும் பாவமன்னிப்பைச் சாத்தியமாக்க வேண்டும் என்பதேயாகும். இந்த ஒரு நோக்கத்திற்காகவே நமது கர்த்தருடைய இரத்தம் சிந்தப்பட்டது. "இது என்னுடைய இரத்தமாயிருக்கிறது" - உங்களுடைய இரத்தமல்ல. நான் ஜெநிப்பிக்கப்பட்டபோது, நான் அர்ப்பணித்ததுமான இரத்தத்தை (அ) ஜீவனை நான் கொடுக்கப்போகின்றேன்; இன்று சிலுவையில் அதை நான் கொடுத்துவிடப் போகின்றேன் (ஏனெனில் அவர் ஒரே நாளினுடைய ஒரு பகுதியில்தான் சிலுவையில் அறையப்பட்டார்). இன்று என்னுடையதாய் இருக்கும் இதில் - தேவனுக்கும், மனுஷனுக்கும் இடையிலான புது உடன்படிக்கையினை முத்திரிக்கின்றதான இரத்தத்தில் - நீங்கள் பங்கெடுக்க நான் உங்களை அழைக்கின்றேன். "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்." நீங்கள் எல்லாரும் இதில் பானம் பண்ணிடுங்கள் மற்றும் அனைத்தையுமே பானம்பண்ணிடுங்கள். மீதி வைக்காதிருங்கள். இந்த இரத்தத்தில், இந்தப் பாத்திரத்தில் பங்கெடுப்பதற்கான அழைப்பானது, வேறெந்த ஜனங்களுக்கோ (அ) வகுப்பாருக்கோ கொடுக்கப்படப் போவதில்லை; உங்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்களே இந்த நோக்கத்திற்காக விசேஷமாய் அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள். நான் பேசிக்கொண்டிருக்கின்றதான அப்போஸ்தலர்களாகிய உங்களுக்கு மாத்திரம் இல்லாமல் உங்கள் வார்த்தைகள் வாயிலாக என்மேல் விசுவாசம் வைத்து, இதுபோன்று அர்ப்பணம்பண்ணி, என்னுடைய மரணத்திற்குள்ளாக ஸ்நானம் எடுப்பவர்களையும், என் பாத்திரத்தில் பானம் பண்ணிடுவதற்கு நான் அழைக்கின்றேன் என்ற விதத்தில்

கர்த்தர் பேசியுள்ளார்.

இராப்போஜனத்தில் நாம் பங்கெடுப்பதான இந்தப் பாத்திரம் தொடர்பாகவே அப்போஸ்தலன், "திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குக்கொள்ளுதல் அல்லவா?" என்று கேட்கின்றார். (1 கொரிந்தியர் 10:16; திருவிவிலியம்) ஆம், என்று நாம் பதிலளிக்கின்றோம். கிறிஸ்துவினுடைய இரத்தமானது, புது உடன்படிக்கையின் இரத்தமாய் இருக்கிறதல்லவா? ஆகையால் புதிய உடன்படிக்கையின் இரத்தத்தில் நாம் பங்குகொள்கின்றோம் அல்லவா? நமது கர்த்தருடைய அழைப்பிற்கேற்ப, நாம் அந்த இரத்தத்தில் பங்குகொள்வதினால், நாம் அவரது "பாத்திரத்திலும்," அது தொடர்புடையதான அனைத்திலும் பங்காளிகளாக இருக்கிறோம் அல்லவா? ஆம். இது எத்தகைய தாக்கத்தினை நம்மிடத்தில் ஏற்படுத்திடக்கூடும்? அதிக அளவிலாகும்; அவரது "பாத்திரத்தில்" பங்கடைவதற்கும், "அவரது மரணத்திற்குள்ளான ஸ்நானம் கொள்வதற்கும்" என்று நமக்கு அருளப்பட்டிருக்கின்றதான மாபெரும் சிலாக்கியத்திற்கென்று நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாய்க் காணப்பட வேண்டும். பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தினுடைய மூன்றாம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல், தான் கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ளவும், அவருடைய பாடுகளில் ஐக்கியம் கொள்ளவும், அவரது மரணத்திற்குள்ளான ஸ்நானம்கொள்ளவும், அவரது பாடுகளின் "பாத்திரத்தில்" பங்கடையவும் வேண்டி, தான் மற்ற அனைத்தையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டதாகக் குறிப்பிடுகின்றார்; நாமும் இப்படியாகவே எண்ணிக்கொள்ள வேண்டும். நமக்கு சுவிசேஷ யுகத்தில் அருளப்பட்டிருக்கின்றதான இந்த மாபெரும் சிலாக்கியத்திற்கு முன்பாக, மற்ற நலன்களும், நோக்கங்களும் ஒரு பொருட்டானவைகள் அல்லவென்று பவுல் அடிகளார் கருதினார்கள்.

இந்த அருமையான சிலாக்கியத்தின் விஷயத்திற்கு ஒருவேளை நாம் எப்போதாகிலும் குருடர்களாய்ப் போவோமானால், நமது கர்த்தருடைய "பாத்திரத்தில்" பங்கடைவதற்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதும், புது உடன்படிக்கையினை முத்திரையிடுகிற (அ) உறுதிச்செய்கிறதுமான இந்த இரத்தத்தில், அதாவது புது உடன்படிக்கைக்கான இரத்தத்தில், அவரோடுகூடப் பங்கெடுப்பதற்கும் அழைக்கப் பட்டிருக்கின்றோம் என்பதுமான உண்மைகளின் மதிப்பினை உணர்ந்துகொள்வதில் குறைவுபடும் நிலைக்குள் ஒருவேளை எப்போதாகிலும் நாம் வருவோமானால், இது நமக்கு விசேஷமாய்க் கொடுக்கப்பட்டதும், உலகத்திலுள்ள வேறெந்த ஜனங்களுக்கு ஒருபோதும் கொடுக்கப்படாததும், மீண்டும் ஒருபோதும் கொடுக்கப்படாததும், தேவதூதர்களுக்கும் ஒருபோதும் கொடுக்கப்படாததும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், இந்த யுகத்தில், அவரது ஆவியை உடையவர்களுக்கும் மாத்திரம் அருளப்பட்டதுமான இந்தச் சிலாக்கியங்கள் மற்றும் தயவுகள் அனைத்தையும் அசட்டைப்பண்ணுகிறதாய் இருக்கும்.

ஒருவேளை "பாத்திரத்தினுடைய" மதிப்புக் குறித்த உணர்ந்துகொள்ளுதலில் நாம் குறைவுபட்டு, பெயரளவிலான கிறிஸ்தவர்கள் அனைவரும் எண்ணியிருக்கின்றது போன்று, அது வெறுமனே சாதாரணமானதுதான் என்று சொல்லுவோமானால்; பாவத்திலிருந்து மாத்திரம் திரும்பி, நேர்த்தியான ஜீவியம் ஜீவிக்க முற்படுவோமானால்; இது விசேஷித்த பலியல்ல, இது கிறிஸ்துவினுடைய இரத்தத்தில் பங்கு

கொள்ளுவதாகவோ, அவரது "பாத்திரத்தில்" பானம்பண்ணுவதாகவோ இராது என்போமானால்; அப்படியானால் நாம் மற்ற ஜனங்கள் அனைவருக்கும் மேலாக, நமக்கு விசேஷமாய் அருளப்பட்டதான சிலாக்கியங்கள் அனைத்தையும் அசட்டைப்பண்ணுகிறவர்களாகவும், புறக்கணிக்கிறவர்களாகவும் இருந்துவிடுவோம். இது முழு ஏற்பாட்டினையும் நாம் அசட்டைப்பண்ணுகிறதைக் குறிக்கின்றதாகவும், நம்முடைய இருதயத்தில் ஏதோ பிரச்சனை இருக்கின்றதைக் குறிக்கின்றதாகவும் இருக்கும்; நாம் இதைப் பலிசெலுத்துவதற்கான சிலாக்கியம் என்று கண்டுகொண்ட பிற்பாடே, "நாம் அவரோடுகூட ஆளுகை செய்யத்தக்கதாக, அவரோடுகூடப் பாடுபடுவதற்கென," கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாக நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளோம் என்பதை நாம் அறிந்துகொண்டபிற்பாடே நாம் மனப்பூர்வமாய், விரும்பி மற்றும் அறிந்து இப்படியாய்ச் செய்திருப்போம்.

இப்படியாய்த் தெளிவான அறிவையும், உணர்ந்து/புரிந்துகொள்ளுதலையும் பெற்றுக்கொண்டு, திரும்பிச் செல்பவர்கள், "உடன்படிக்கையின் இந்த இரத்தத்தினை" உதறித்தள்ளுபவர்களாகவும், அதை அசட்டைப்பண்ணுகிறவர்களாகவும், அருளப்பட்ட சிலாக்கியங்களைப் பயன்படுத்த தவறுபவர்களாகவும் இருப்பார்கள். இந்தச் சிலாக்கியங்களைப் பயன்படுத்துவதற்கு, இவர்கள் முதலாவதாக பூமிக்குரிய சுபாவத்தினை பலிசெலுத்துவது அவசியமாய் இருந்தது. ஆகையால் இப்பொழுது இவர்களிடத்தில் எதுவும் மிஞ்சியிருப்பதில்லை; ஏனெனில் இவர்கள் புதிய சுபாவத்தையும், கிறிஸ்துவின் பலியில் பங்கெடுப்பதன் வாயிலாக மாத்திரம் அடையப்பெறுகின்றதான கர்த்தருடைய ஏற்பாடுகளையும் இகழ்ந்து ஒதுக்கினவர்களானார்கள். சீர்ப்பொருந்துதலுக்கான எந்த வாய்ப்பும் இவர்களுக்கு இருப்பதில்லை. ஆகையால் இவர்களுக்கு - தேவனுடைய ஏற்பாடுகளைக் குறித்து ஒருமுறை புரிந்துகொண்ட பிற்பாடு, அதை அசட்டைப்பண்ணுகிறவர்களுக்கு எது பொருந்துகின்றதோ, அது மாத்திரமே பொருந்துகின்றதாய் இருக்கின்றது; அது இரண்டாம் மரணமாகும்.

அப்போஸ்தலனால் "கொடிதான ஆக்கினை" என்று குறிப்பிடப்படுவது, "மரணத்துக்கு ஏதுவான பாவமாகும்." (எபிரெயர் 10:29) யார் இந்தப் பாவத்தைச் செய்திருக்கின்றனர் என்று சுட்டிக்காண்பிக்க நமக்குத் தகுதியுள்ளதா? இந்த விஷயத்தில் நியாயத்தீர்ப்புச் செய்யாமல் இருப்பதற்கும், இப்படியாக நியாயந்தீர்ப்பது கர்த்தருக்கு உரியது என்று மாத்திரம் கூறிடுவதற்கும் நாம் விரும்புகின்றோம். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை நாம் காண்பது வரையிலும், நாம் எந்தத் தீர்மானமும் எடுப்பதில்லை.

நாம் ஒருவரையொருவர் நியாயந்தீர்க்கக்கூடாது என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். உதாரணத்திற்கு ஒருவேளை நீங்கள் "இயேசு மரித்தார் என்றும், அவர் நம்முடைய மீட்பர் என்றும் நான் நம்புகிறவன்; ஆனால் ஒரு காலத்தில் நான் அவரோடுகூட மரிப்பதற்கும், தற்காலத்தில் அவரோடுகூட அவரது பாடுகளில் பங்கடைவதற்கும், பின்வரும் மகிமையில் பின்னர் பங்கடைவதற்குமாய் அழைக்கப்பட்டேன் என்று அறிந்திருந்த கருத்தை நான் தொலைத்துப் போனவனானேன்" என்று கூறுவதாக வைத்துக்கொள்ளுங்கள். இதற்கு நாங்கள் உங்களிடம்: "ஓ! நீங்கள் மரணத்திற்கேதுவான பாவத்தைச் செய்துள்ளீர்கள்; உங்களைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தினை நீங்கள் அசட்டைப் பண்ணியுள்ளீர்கள்; இதனால் சீர்ப்பொருந்துவதற்கான சிலாக்கியங்கள் உங்களுக்கு

இல்லாததினால், நீங்கள் இரண்டாம் மரண நிலைக்குள்ளாகக் கடந்துபோய் விட்டீர்கள்" என்று நாங்கள் சொல்ல வேண்டுமோ? இல்லை என்று நாம் பதிலளிக்கின்றோம். உங்களை நியாயந்தீர்ப்பதோ (அ) உங்களைக் குறித்துத் தீர்மானிப்பதோ எங்களுக்கடுத்தது என்று நாங்கள் எண்ணுகிறதில்லை, ஏனெனில் உங்களது முந்தின அறிக்கைகளானது எந்தளவுக்கு உண்மையானது என்பதை நாங்கள் அறியோம். நீங்கள் முழு அர்ப்பணம் பண்ணியுள்ளதாக, நீங்கள் எண்ணினபோது, நீங்கள் செய்வது என்ன என்பதை நீங்கள் புரிந்திருந்தீர்களா என்பதை நாங்கள் அறியோம். ஒருவேளை நீங்கள் உங்களையே புரிந்துகொள்ளாமல் இருந்திருக்கலாம். ஆகையால் இந்தக் காரியத்தில் எதுவும் எங்களுக்கு நிச்சயமாய்த் தெரியாததினால், நியாயந்தீர்ப்பது எங்களுக்கடுத்தக் காரியமல்ல என்று சொல்லிடுவதற்கே நாங்கள் விரும்புகின்றோம். இது தொடர்பாக வேதவாக்கியங்களானது, "கர்த்தர் தம்முடைய ஜனத்தின் நியாயத்தை விசாரிப்பார்" என்று கூறுவதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஆகையால் ஒருவேளை உங்களைப் பரிசுத்தஞ்செய்த அல்லது சரீரத்தின் அங்கத்தினன் என்று, பலி என்று உங்களை விசேஷமாய்ப் பிரித்தெடுத்த உடன்படிக்கையின் இரத்தத்தினை நீங்கள் புறக்கணித்துத் தள்ளின பிற்பாடு, தேவனும் உங்களை வெளிப்படையாய்ப் புறம்பே தள்ளி, உங்களிடமிருந்து வெளிச்சம் அனைத்தையும் பின்வாங்கப்பண்ணி, நாங்கள் காணும் அளவுக்கு அவருடைய தயவினின்று உங்களை வெளியேற்றி விடுவதை நாங்கள் காண்போமானால், கர்த்தர் உங்களிடத்தில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றார் என்று மற்றவர்களிடத்தில் குறிப்பிடுகிறோமோ, இல்லையோ, நாங்கள் எங்களுக்குள்ளாகிலும் சொல்லிடுவதில் தவறு இருக்காது.

எந்த ஒரு விதத்திலாகிலும் கர்த்தரைப் புறக்கணிக்கிற எவனும், தொடர்ந்து சத்தியத்தின் வெளிச்சத்தில் காணப்படுவான் என்று எங்களால் கற்பனைப்பண்ணிட முடியாது. ஒருவன் கர்த்தரைப் புறக்கணிப்பானானால், சத்திய வெளிச்சமானது, அவனிடமிருந்து படிப்படியாய் வெளியேறும் என்றும், அவன் அநேகர் காண்பதற்கு மேலாக - சபைக்குச் செல்லுகிற பெயரளவிலான நபர் (அ) எந்த உலகப்பிரகாரமான மனிதன் காண்பதைக்காட்டிலும் மேலாக - காணமாட்டான் என்றும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். இப்படியானவர்கள் புறம்பான இருளுக்குள் கடந்து செல்வது என்பது இவர்கள் கர்த்தருடைய தயவை இழந்துவிட்டார்கள் என்பதற்கான அடையாளமாய் இருக்கின்றது. எந்தளவுக்கு இழந்துள்ளார்கள் என்பதைத் தீர்மானிக்க நாம் விரும்புவதில்லை; ஆனால் ஒருவேளை இந்த அடையாளத்தோடுகூட, எதிராளியானவனின் சுபாவமான, சாத்தானின் ஆவி - கோபம், துர்க்குணம், பகைமை, பொறாமை, விரோதம் போன்றவையும் வெளிப்படுகின்றதானால், கர்த்தருடைய ஆவியானது கடந்துபோய்விட்டது என்றும், இழந்தவர் மரித்துவிட்டார் - "இரண்டுதரஞ் செத்து, வேரற்றுப்போனவர்களாகிவிட்டனர்" என்றுமுள்ள முடிவிற்கு நாம் வரலாம். (யூதா 12)

இப்படியானவருக்கு, நம்மால் முடிந்தது அனைத்தையும் நாம் விசேஷமாய்ச் செய்து முடித்தப் பிற்பாடு, இவர்களுக்கு நாம் தொடர்ந்து ஜெபிப்பதில் பிரயோஜனமில்லை. செய்ய முடிந்த அனைத்தையும் செய்திடுவதற்குத் தேவன் விருப்பமுள்ளவராய் இருக்கின்றார்; ஆனால் அவர் சில மாறாத சட்டங்களையும், கொள்கைகளையும் கொண்டிருக்கின்றார் மற்றும் ஒருவன் இவைகளையெல்லாம் ஒரு காலத்தில் அனுபவித்துவிட்டு, பிற்பாடு இவற்றை அசட்டைப்பண்ணுவானானால், எந்த ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டாலும், அக்கறையுடன் கண்ணீரோடுகூட ஏறெடுக்கப் பட்டாலும், இதற்காகக் கர்த்தர் தம்முடைய கொள்கைகளை மாற்றுவதில்லை.

# பலியின் அப்பம் மற்றும் பாத்திரம்

பிட்கப்பட்ட அப்பமும் - கருஞ்சிவப்பு இரசமுள்ள பாத்திரமும்
வெண்மையான மேஜைதனிலே இருக்குதே.
ஆ! அந்த வியத்தகு பலிக்கு, அவர் கொடுத்திட்ட விலைக்கு
அவைகள் சின்னங்களாகுமே - ஆம்
விலையேறப்பெற்ற அந்தச் சரீரம் எந்தனுக்காய்
ஒருதரம் பிட்கப்பட்டதே; விலையேறப்பெற்ற இரத்தம்
எந்தனுக்காய் ஒருதரம் சிந்தப்பட்டதுவே - ஆ, ஆம்!
நான் மரணத்தினின்றும், குற்றத்தினின்றும்
அவர் வாயிலாய் விடுதலை அடையவே,
ஆம் விடுதலை அடையவே!

அந்தப் பிட்கப்பட்ட அப்பத்திற்கும்,
அந்தச் சிந்தப்பட்ட இரத்தத்திற்கும் - இன்னும்
அர்த்தம் இருக்கின்றதா? - ஆ, ஆம்!
கிருபையினாலே அவரிலும், அவர் பாடுகளிலும்
நான் நிறைவேற்றுவதற்கும் பங்குள்ளதே - என்
ஆண்டவருடனே எந்தன் சரீரமும் பிட்கப்படுமே
அவருடனே எந்தன் இரத்தமும் சிந்துமே,
அவருடன் நான் மரிக்கையில், எந்தன்
மகிமையான தலையாகிய அவருடனே
நித்தியமும் ஜீவிப்பேனே!

ஓ, எத்துணை இரகசியம் இது!
ஓ, மகிமையான கருத்தல்லவா இது!
ஆம், மரணம் வாயிலாக நான் அவருடன்
உயிர்த்து எழும்பிடுவேனே!
ஆம், அவருடன் பாடுபட்டேனானால்
அவருடன் ஆளுகையும் செய்திடுவேனே!
எனினும் இந்த இரவுதனில் - மேஜையில்
அப்பமும், இரசமும் முன்பு இருக்கவே,
"இந்த வாக்குத்தத்தங்கள் என்னுடையதே" - என்று
என் ஆத்துமாவே, என் ஆத்துமாவே - உன்னாலே,
ஆம் உண்மையாய்க் கூற இயலுமோ?

அவர் சித்தம் எதுவாய் இருப்பினும்
உன் சித்தத்தை அவருடன் இணைத்திடுவாயா?
ஜீவியத்தின் திராட்சரசம் வெளிவர வேண்டியே
நசுக்கப்பட நீ விரும்புகின்றாயா?
மற்றவரின் ஜீவியத்தில் மொக்கும், மலரும் - மலரவே
உன்னைக்காட்டிலும் மற்றவரின் ஜீவியம்
ஆசீர்வதிக்கப்பட நீ விரும்புகின்றாயா?
உந்தன் பிட்கப்பட்ட ஜீவியம் பிரதிநிதியாய்
அனுப்பிவைக்கப்பட நீ - மகிழ்வுறுவாயா,
ஆம் நீ நன்றி கூறுவாயா?

கண்கள் குளமாயினும், வலியினால் உதடும்
இதயமும் துடிதுடித்தாலும், அவருடைய - அன்பு
உந்தன் பாவப்பட்ட இருதயம் விரும்பினவைகளை மறுத்திட்டாலும்
நீ புரிந்துகொள்ள முடியாத வேறே அனுபவங்களை - அருளினாலும்
நடக்க கடினமானப் பாதையை அருளினாலும்
நீ அவரின் விலையேறப்பெற்ற சித்தத்திற்கே,
ஆம் என்று பதிலளிப்பாயா?


"போதும் என் குழந்தாய், வா உந்தன் பரம
வீட்டிற்கு" என்று அவர் சொல்லும்வரை
நீ "ஆமென்" என்று சொல்லிடுவாயா?
அமைதியுடன் அவரில் நம்பிக்கைக்கொள்வாயா?
பொறுமையுடன் அன்பாய்க் காத்திருப்பாயா?
அவரின் சத்தியம் பரியாசம்பண்ணப்படுகையில்;
கேலிக்குள்ளாகுகையில்; அவர்போல் - அவரின்
ஊழியனும் உமிழப்படுகையில், முள்முடி - சூட்டப்படுகையில்;
அவரின் சத்தியம் பெற்றதற்கே,
ஆம் நீ களிகூருவாயா?

ஆம், ஆம்! எந்தன் மகிழ்ச்சியான இருதயம்
பதிலளிக்குதே:- "இச்சிலாக்கியத்தில் களிகூருகிறேனே!
எந்தன் கிரீடத்தை முத்தமிடுவேனே! - உம்
அரியணைதனை பங்கிட அருமை ஆண்டவரே
உம் வேளைக்காய் காத்திருப்பேனே! - என்றே

ஓ, எந்தன் ஆத்துமாவே, இந்த அடையாளச்
சின்னங்கள் உனக்கானதே - ஆம் உனக்கானதே,
அந்தப் பிட்கப்பட்ட அப்பமும், இரசமும் உனக்கானதே.
அவரின் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள்
உனக்கானது என்று நீ உரிமைப்பாராட்டலாமே,
ஆம் உண்மையில் உனக்கானதே.

வேளை வரவே, நாம் இங்குக்கூட - அன்பு
சகோதரரே, இந்த விருந்தில் பங்கெடுக்கையில்,
வேளை சமீபித்துள்ளது என்றும் நாம் அறிவோமே.
அவரின் அன்புக்குரியவர்கள் வீடுவந்து - சேரவே
நம் கண்ணீர்கள் யாவும் துடைக்கப்படுமே.
நம்மை ஒடுக்கின யாவும் கடந்துபோய்விடுமே;
பூரணநாளும் வந்திடுமே - ஆம்
ஆகையால் இப்பொழுது சந்தோஷமாய்ப் பங்கெடுப்போமே;
வெளிச்சம் பரம மலைகளில் வீசிடுதே,
ஆம் இராஜா சமீபித்திருக்கின்றாரே!

- Alice G. James (R5195).



நினைவுகூருதலின் தியானங்கள்

# நினைவுகூருதலை எதிர்நோக்குதல்



# நினைவுகூருதல் இராப்போஜனம்

நமது கர்த்தருடைய மரணத்தின் ஆண்டுநிறைவு நாளில் நினைவுகூரப்படும் நினைவுகள் எவ்வளவு புனிதமானதாய்க் காணப்படுகின்றது! அது இரட்சிப்பினுடைய முழுத்திட்டத்திலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதான பிதாவின் அன்பினை மனதிற்குக் கொண்டுவருகின்றது; இந்த இரட்சிப்பின் திட்டத்தினுடைய மையமாக, அவர் தம்முடைய குமாரனை நம்முடைய மீட்பராகக் கொடுத்த காரியம் காணப்படுகின்றது. அது தம்மையே அனைவருக்குமான மீட்கும்பொருளாக (அ) சரிநிகர்சமான பலியாக ஒப்புக்கொடுத்தவரைப்பற்றி விசேஷமாய் நம்முடைய நினைவுகளுக்குக் கொண்டு வருகின்றது. "அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக நீதியுள்ளவராய்ப் பாடுபட்டவருடன்" விசுவாசமானது மிகவும் நெருங்குகின்றது மற்றும் நன்றி நிறைந்த, பொங்குகிற இருதயங்களுடனும், கண்களில் கண்ணீருடனும் நாம், "என் இரட்சகர்! என் மீட்பர்! என் கர்த்தர் மற்றும் ஆண்டவர்! அவர் என்னை அன்புகூர்ந்து, தம்மையே எனக்காகத் தந்தார்" என்று மெல்லிய குரலில் கூறுகின்றவர்களாகுகின்றோம். ஆ! ஆம்!

"சிலுவையின் அடிவாரத்தில் செலவிடும் தருணங்களானது  
இனிமையான தருணங்களாகவும்,  
ஆசீர்வாதத்தில் ஐசுவரியமுள்ளதாகவும் இருக்கின்றன:  
ஜீவனும், சந்தோஷமும், சமாதானமும்  
என் சிறந்த மற்றும் உண்மை நண்பனிடமிருந்து வருகின்றதே."

"தேவதூதர் அனைவரிலும் பெரியவராகவும்," எல்லா நாமத்துக்கும் மேலானவராகவும், பிதாவுக்கு அடுத்திருப்பவராகவும் அவர் இருக்க மற்றும் நாம் அவருடன் நட்புறவுகொண்டிருக்க மிகவும் முக்கியமற்றவர்களாகவும், மிகவும் அபூரணராகவும், மிகவும் அபாத்திரராகவும் இருக்க, நாம் அவரை நினைக்க வேண்டும் என்பதிலும், நாம் அவரை நம்முடையவர் என்று அழைப்பதிலும் அக்கறையுடன் காணப்படுகின்றார் என்ற கருத்தானது எத்துணை பாக்கியமானதாகும். இன்னுமாக "நம்மைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை என்பதையும், நாம் அவரது மரணத்தினை நினைவுகூருவதில் அவர் பிரியப்படுகின்றார் என்பதையும், தம்முடைய பிட்கப்பட்ட மாம்சத்தை அடையாளப்படுத்துவதற்கென்று அப்பத்தையும், தமது சிந்தப்பட்ட இரத்தத்தை அடையாளப்படுத்துவதற்கென்று திராட்சரசத்தையும் கொடுத்துள்ளார் என்பதையும், அதாவது அனைவருக்குமாக விலைக்கொடுத்து வாங்கப்பட்டதும், அனைவராலும் பங்கெடுக்கப்படப்போகின்றதுமான மனித உரிமைகளையும், சிலாக்கியங்களையும் ஒன்று அடையாளப்படுத்தும் வண்ணமாகவும், மற்றொன்று ஏற்றுக்கொள்ளுகின்ற அனைவருக்கும் நித்திய ஜீவனை உறுதிப்படுத்தும் வண்ணமாக அவர் கொடுத்த ஜீவனை அடையாளப்படுத்தும் வண்ணமாகவும் அவர்

கொடுத்துள்ளார் என்பதையும் நினைத்துப்பார்க்கும்போது பாக்கியமானதாய் இருக்கின்றது!

மனமகிழ்ச்சியுடன் அவரும், யூதர்களும் அந்த நாளையும், நாழிகையையும் எண்ணினதுபோன்று நாமும் எண்ணுகின்றோம்; இறுதியில் "வேளை வந்தபோது" நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தைக் கொண்டாடுவதற்கும், எகிப்தின்மீது வந்த மாபெரும் சங்காரத்தினின்று, இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் விடுவிக்கப்பட்டதை நினைத்துப்பார்ப்பதற்கும், பிற்பாடு இந்த முதற்பேறானவர்களின் வாயிலாக உண்டான தேவனுடைய நிழலான இஸ்ரயேல் அனைத்திற்குமான விடுதலையை நினைத்துப்பார்ப்பதற்கும் என்றும் இயேசு, தம்முடைய சீஷர்களோடு பந்தியிருந்தார்.

நிழலினை ஆசரித்து முடித்தப் பிற்பாடு, ஆண்டவர் புதிய அடையாளச் சின்னங்களைக் கையில் எடுத்து, "(இதுமுதல்) என்னை நினைவுகூரும்படி இதைச் (பஸ்காவை ஆசரிப்பதை) செய்யுங்கள்" என்று கூறுவதைக் கேட்பதும் எத்துணை விலையேறப்பெற்றதாய் இருக்கின்றது! ஆ, ஆம்! சிலுவையில் அறையப்பட்டவரில் நம்மால் இப்பொழுது, "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை" காணமுடிகின்றது; "நம்முடைய (ஆட்டுக்குட்டி) பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்;" "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்;" (1 கொரிந்தியர் 11:26) அவரது இராஜ்யம் வரும்போது, நாம் அவரோடுகூட இராஜ்யத்தில் புதிய திராட்சரசத்தை (புதிய ஜீவனையும், சந்தோஷத்தையும்) பானம் பண்ணிடுவதற்கு அனுமதிக்கப்படுவோம். (மத்தேயு 26:29; 1 கொரிந்தியர் 5:7, 8; 11:26)

(விசுவாசத்தின் வாயிலாக மீட்கப்பட்டவர்களெனக் கர்த்தரின் பலியின் புண்ணியத்திலும் மற்றும் இதன் விளைவான நன்மைகளிலும், அதாவது நீதிமானாக்கப்படுதலிலும், திரும்பக்கொடுத்தலின் உரிமைகளிலும், சிலாக்கியங்களிலும் பங்கெடுப்பதன் மூலமாக) நமது கர்த்தருடைய பலியினாலான தயவுகளை அனுபவிப்பதற்குரிய சிலாக்கியம் மாத்திரம் நம்முடையதாய் இராமல், இதனை காட்டிலும் மேலானதாகவே உள்ளது; நாம் நமது ஆண்டவரோடுகூடப் பலியிலும், அதன் மகிமையான பலன்களிலும் பங்கடைவதற்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம். அவர் நம்மிடம் கூறுவதாவது: "எவன் ஒருவன் என்னுடைய வேலையின்மீதும், அதன் விளைவுகள்மீதும் உடன்பாடுள்ளவனாய் இருக்கின்றானோ, எவன் ஒருவன் என்னுடைய இராஜ்யத்தில் பங்கடைந்து, உலகத்தை ஆசீர்வதிக்கும் அதன் வேலையில் இணைந்துகொள்ள விரும்புகின்றானோ, அவனும் என்னோடுகூடப் பிட்கப்படட்டும்

மற்றும் மரணம் வரையிலுமான சுயத்தை வெறுத்தல் எனும் பாத்திரத்தில் என்னோடுகூடப் பானம்பண்ணட்டும்" என்பதாகும். இப்படியானவர்கள் அனைவரிடமும் அவர் கூறுவதாவது: "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்பதாகும். இதே கருத்தை அப்போஸ்தலனும் உறுதிப்படுத்தும் வண்ணமாக, "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகின்றோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் (மரணத்தில்) பங்குகொள்ளுதல் அல்லவா? (ஐக்கியமாயிருக்கிறதல்லவா?) அப்பத்தைப் பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா? (ஐக்கியமாயிருக்கிறதல்லவா?) அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் (கிறிஸ்துவினுடைய சரீரத்தில் அங்கத்தினர்களாயினும்) ஒரே உடலாய் இருக்கின்றோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்" என்று கூறுகின்றார். (1 கொரிந்தியர் 10:16, 17)

அருமை கர்த்தரே எங்களுக்காக, அதாவது நாங்கள் நீதிமானாக்கப் படத்தக்கதாகப் பலிசெலுத்தப்பட்ட உம்முடைய தூய்மையான மனுஷீக சுபாவத்தின் புண்ணியத்தினை, நாங்கள் மகிழ்ச்சியுடன் புசிக்கின்றோம் (எங்களுடைய தேவைக்கென்று சொந்தமாக்கிக்கொள்கின்றோம்). ஏற்றக்காலத்தில் உம்மோடுகூட ஆளுகை செய்யத்தக்கதாக, உம்மோடுகூடப் பாடுபடுவது என்பதும், நித்தியமான எதிர்க்காலத்தில் நாங்கள் உம்மோடுகூட ஜீவிக்கத்தக்கதாகவும், உம்மைப்போன்று காணப்படத்தக்கதாகவும், உமது மணவாட்டியென உமது அன்பிலும், உமது மகிமையிலும் பங்கடையத்தக்கதாகவும், உம்மோடுகூட மரிப்பது என்பதும் பாக்கியமான சிலாக்கியம் என்று நாங்கள் உணர்ந்து, பாடுகளின் பாத்திரத்தில் உம்மோடுகூட நாங்கள் மகிழ்ச்சியுடன் பங்கெடுக்கின்றோம். ஓ! அடையாளத்தை ஆசரிப்பதில் மாத்திரமல்லாமல், உண்மை ஜீவியத்திலும் நாம் உண்மையாய் இருக்க வேண்டும். ஸ்தோத்திரத்திற்குரிய கர்த்தாவே நீர், "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்" என்று கூறும் உம்முடைய வார்த்தைகளை நாங்கள் கேட்கின்றோம். கர்த்தாவே நாங்கள் நாங்களாகவே இப்படிப் பலிசெலுத்திட முடியாது; ஆனால் உம்முடைய கிருபை எங்களுக்குப் போதும்; ஏனெனில் நாங்கள் இப்பொழுதும், எப்பொழுதும் முற்றும் முழுமையாய் உம்முடையவர்களாய் இருக்கின்றோம்.

அவரது பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கும், நமது கர்த்தரோடுகூட, அவரது சரீரமெனப் பிட்கப்படுவதற்குமான தற்கால சிலாக்கியத்தில் நாம் உண்மையுள்ள வர்களாய் இருந்தோமானால், நாம் சீக்கிரத்தில் அவரோடுகூடப் "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையாகுவோம்;" மற்றும் இவர்களே இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாராய் இருந்து, நமது மாபெரும் பிரதான ஆசாரியன் கீழிருந்து, ஓய்வுநாளுக்கு ஆண்டவராய் இருப்பவருடைய செவிகளுக்கு எட்டின ஜெபங்களையும், பெருமூச்சுகளையும் ஏறெடுத்த பாவத்தின் அடிமைகள்

யாவரையும் எகிப்திய சிறைவாசத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் வெளிநடத்துவார்கள்; ஓ! இது எத்துணை அருமையானதொரு சிந்தனையாய் இருக்கின்றது.

இதுபோன்ற சில கருத்துகளே, உலகமெங்கும் காணப்படும் கர்த்தருடைய ஜனங்களை, சிறுசிறு கூட்டத்தாராய் (சிலசமயம் இயேசுவோடு தனிமையிலும்) மார்ச் 26-ஆம் தேதியன்று மாலை, 6 மணிக்குப் பிற்பாடு, தேவனுடைய அண்டசராசரத்தினுடைய வரலாற்றிலேயே மிகக் குறிப்பிடத்தக்க நிகழ்வினை, அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிக்கும் வண்ணமாகக் கூடிடுவதற்கு நெருக்கி ஏவுகின்றது. (இந்த நினைவுகூருதலின் ஆண்டுநிறைவு நாளுக்கான துல்லியமான, சரியான தேதியினை முடிந்தமட்டும் பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் விரும்புகின்றோம்; நாம் துல்லியமான தேதியைப் பெற்றுக்கொள்ளவில்லையெனில், அது கவலைக்கிடமான காரியமாய் இருக்கும் என்பதாக நாம் புரிந்துகொள்ளவில்லை; நாளை ஆசரியாமல், நிகழ்வையே நாம் நினைவுகூர்ந்து ஆசரிக்கின்றோம். எனினும் வேறுபாடற்ற/ஒன்றுபோல் தேதியைப் பெற்றுக்கொள்வதற்கே விரும்புகின்றோம்).

"பிரியமானவர்களே, புசியுங்கள், குடியுங்கள்" என்று மணவாளன், தனது மணவாட்டியினிடத்தில் கூறுகின்றார். (உன்னதப்பாட்டு 5:1) நமது மீட்பருடைய அன்பையும், பலியையும் நாம் ஒவ்வொருவரும் எண்ணி, அவரோடுகூட மரிப்பதற்கென நாம் மீண்டுமாக உறுதியளிக்கையில், நாம் பயபக்தியோடும், பக்தியோடும், கருத்தோடும், ஜெபத்தோடும் புசித்து, பானம்பண்ணுவோமாக. அவரைத் தங்கள் மீட்கும் பொருள் என்று, அடையாளங்கண்டுகொண்டுள்ளவர்களும், அவரை நினைவுகூரும்படியாக 'இதைச்' செய்ய விரும்புகின்றவர்களுமானவர்கள் யாரொருவரோடும் கூடிக்கொள்ளுங்கள் (அ) தனிமையில் இதை ஆசரியுங்கள்.

நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படுவதற்கே தவிர மற்றப்படி ஆச்சாரங்களையும், சம்பிரதாயங்களையும் பொதுவாய் மறந்து, உங்கள் இருதயங்கள் நிஜமான நிலையில் காணப்படுவதாக. முன்கூட்டியே ஏதாகிலும் ஒருவகை திராட்சப்பழ ரசத்தை (fruit of the vine) ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். நாம் வேகவைக்கப்பட்டு எடுக்கப்படும் உலர்த் திராட்சரசத்தை (அ) புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாற்றைப் பரிந்துரைக்கின்றோம்; அப்பத்திற்கு ஒன்றில் யூதருடைய புளிப்பில்லாத அப்பத்தை (அ) water crackers எனும் சாதாரணமான ரொட்டியைப் (இதிலும் மாவு, தண்ணீர் மற்றும் உப்பு எனும் ஒரே கலவை இடம்பெறுகின்றது மற்றும் புளிப்பில்லாததாய் இருக்கின்றது) பரிந்துரைக்கின்றோம். புளிப்பு, பாவத்திற்கு (அ) சீர்க்கேட்டிற்கு அடையாளமாய் இருப்பதினால், புளிப்பு/காடிச்சத்து (yeast) சேர்த்துப்பண்ணும் அப்பமானது, "மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமான" நமது கர்த்தருக்குப் பொருத்தமான அடையாளமாகக் காணப்படுவதில்லை.

# பஸ்கா காலத்தின்போதான விசேஷித்தச் சோதனைகள்

பல வருடங்களுக்கு முன்னதாகவே, பஸ்கா காலம் நமது அருமையான கர்த்தருக்குக் கெத்செமனே மற்றும் கல்வாரியின் வருத்தங்களையும், பரீட்சைகளையும் கொண்டுவந்தது என்பதையும், இதே காலமானது யூதாசுக்கும், பேதுருவுக்கும், கர்த்தருடைய அனைத்துப் பின்னடியார்களுக்கும் பரீட்சைகளின் மற்றும் புடமிடுதலின் காலமாகவும் இருந்தது என்பவைகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தோம். மேலுமாக நமது எதிராளியான சாத்தானானவன் கர்த்தருடைய ஜனங்களைப் பரீட்சித்து, நிரூபிக்கும்படிக்கு விசேஷமான அதிகாரம் கொடுக்கப்பட்ட காலமாகவும் இது விளங்குகின்றது. "சோதனைக் காலமானது" பூமியில் குடியிருக்கும் யாவரையும் சோதிக்கும்படியாக இருக்க, இந்தப் பஸ்கா காலத்தின் பரீட்சைகள் விசேஷமாக அர்ப்பணிக்கப்பட்டுள்ள தேவனுடைய வீட்டார் மீது வரக்கூடியவைகள் என்று நாம் கருதுகின்றோம்.

கடிதங்கள் வாயிலாக அநேகருடைய பாடுகள் மற்றும் கண்ணீர்களை அறிந்துகொண்டோம்; சிலருக்குத் தங்கள் சொந்த பெலவீனங்களினால் பாடுகள் உள்ளன, சிலருக்கு மற்றவருடைய பெலவீனங்களினால் பாடுகள் உள்ளன, இன்னும் சிலருக்கு ஜெயங்கொள்ள முடியாத அல்லது கர்த்தரிடத்தில் முழுவதும் ஒப்புவிக்கப்படாத பூலோக பாரங்களினால் பாடுகள் உள்ளன. இத்தகையவர்கள்மீது அனுதாபங்கொண்டு, எங்களால் முடிந்தமட்டும் ஆலோசனைக் கொடுக்கும் அதேவேளையில், "இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள், இனிக் களிகூருவீர்கள்" என்ற நம்முடைய போதகரின் வார்த்தைகளை நினைவு கூருகின்றோம். மேலும் சோதனையிலிருந்தும், அதை உணரமுடியாத நிலையில் காணப்படுபவர்களுக்கு எங்கள் இருதயங்களில் ஆழமான விசேஷமான கவலைக்கொள்கின்றோம், அதாவது இலட்சியங்கள் அல்லது வியாபாரங்கள் அல்லது இவ்வுலகத்திற்கு அடுத்தக் கவலைகள் மற்றும் ஐசுவரியத்தின் மயக்கத்தினால் ஆவிக்குரிய அல்லது பூமிக்குரிய விஷயங்களில் மூழ்கடிக்கப்பட்டவர்களுக்காக ஆழமான கவலைக்கொள்கின்றோம்; இப்படிப்பட்டவர்களிடம் சத்தியத்தின்மீதான அன்பு ஒவ்வொரு வருடமும் அனலாகுவதற்குப்பதிலாக, குளிராகிவிடுகின்றது; இவர்கள் முன்பு கண்டதுபோல் காண்பதுமில்லை, உணர்ந்துகொள்வதிலும் குறைவு ஏற்படுகின்றது. இவர்கள் அப்போஸ்தலர்கள்போல் - விழித்திருந்து, ஜெபிப்பதற்குப் பதிலாக, தூங்கிக் கொண்டிருந்து, சோதனை வேளைக்குத் தயாரற்று இருக்கின்றனர் என்றும், கெத்செமனேயில் நமது இரட்சகர் அழுது, போராடினதுபோல, சிலர் அழுது, போராடுகின்றனர் மற்றும் அத்தகையவர்கள் அவரைப்போன்று சோதனைக்காலத்தில் பலப்பட்டிருப்பார்கள் என்றும் நாம் நம்மிடமே சொல்கின்றோம்.

இம்மாதிரியான விசுவாசத்தின் பரீட்சைகளையும், பாடுகளையும் அனுமதிக்காதீர் என்று கர்த்தரிடத்தில் நாம் ஜெபம்பண்ணவும்கூடாது; ஏனெனில் "தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள்," பரீட்சிக்கப்பட்ட ஜனங்களாக இருக்க வேண்டும் என்பதை நாம் அறிவோம். இவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டதற்கான முக்கிய காரணம், இவர்கள் நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்டுள்ள இராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் உடன்சுதந்தரர்களாய், ஆயிரவருட அரசாட்சியில் உலகத்தை நியாயந்தீர்த்து, ஆசீர்வதிக்கவேயாகும். "உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற

அக்கினி" என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். தற்கால கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்திலிருந்து, அவருடைய மகிமையான இராஜ்யத்தில் பங்கடைவதற்கு, முன்னேறுவதற்கு - அவர்கள் பரீட்சையில் ஜெயம்பெறுவதற்கு இச்சோதனைகள் அவசியம், கண்டிப்பாக வேண்டும்.

இந்தச் சிந்தனையை நமக்குமுன் தொடர்ச்சியாக, எப்போதும் நாம் கொண்டிருக்க முடிந்தால், கர்த்தருக்குப் பிரியமானவைகளை நாம் விரும்புவதற்கும், அதைச் செய்வதற்கும் எவ்வளவாய் நம்மை ஊக்குவிக்கும், மேலுமாக நம்முடைய நித்திய கனம், மகிமைக்காக இவைகளையெல்லாம் கர்த்தர் நமக்கு அனுமதிக்கின்றார் என்று நாம் உணர்ந்து, நம்முடைய அன்பான போதகர் அனுமதிப்பதற்கு நல்லது என்று கண்டு அனுமதிக்கும் எதையும் உண்மையாகவும், உற்சாகத்துடனும் சகிப்பதற்கு நம்மை ஊக்குவிக்கும். இந்தக் கண்ணோட்டத்தின்படி-

"நம்முடைய சோதனைகள் எத்துணை இலேசானதாய்த் தோன்றுமே!
நம்முடைய பிரயாணத்தின் பாதை எத்துணை சொற்ப தூரமாய்த் தோன்றுமே!
கனவாய் உள்ள பூலோக ஜீவிதமும்,
நாளின் விடியல்தனிலே மறைந்துபோய்விடுமே!

ஆ, சமாதானம்கொள் என் நெஞ்சமே!
அமைதிக்கொள் என் நாவே!
அமைதலாகு கலக்கமுற்ற என் மனமே!
கடந்துபோகும் ஒவ்வொரு மணிநேரமும்,
உன்னை நித்திய இளைப்பாறுதலுக்காய் அதிகமாய் ஆயத்தமாக்குதே."

அன்பான சகோதர சகோதரிகளே நமக்காகவும் மற்றும் ஒருவர்மீது ஒருவர் மிகவும் அக்கறைகொள்வோமாக. மேலும், "அவருடைய இளைப்பாறுதலில், பிரவேசிப்பதற்கு ஏதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" என்று அப்போஸ்தலர் கூறுகிறபடி, சுவிசேஷத்தின் மூலம் நமக்குமுன் வைக்கப்பட்ட, அந்தப் பரிசை, எல்லாவற்றிற்கும் மேலாகக் கருதுவோமாக. எல்லாக் கர்த்தருடைய ஜனங்களை நாம் இப்படியாக அன்புகூர்ந்து, அவர்களுடைய நலனை நம்முடைய பிரதானமான நோக்கமாகக் கருதுவோமாக; இதுவே நமக்கு ஆவிக்குரிய ஆரோக்கியமாக இருக்கும். கர்த்தருடைய மணவாட்டிகள் காரியத்திலுள்ள அவரது நிபந்தனைகள் விஷயம் - புடைத்தெடுத்தல்களானது, நாம் அருமையானதாகக் கருதி நாம் ஐக்கியங்கொண்டுள்ள சிலரை நம்மைவிட்டு எடுத்துப்போடும் விஷயம் - தொடர்புடைய கர்த்தருடைய அன்பு மற்றும் ஞானம் மீதான நமது நம்பிக்கைக்கு - சகோதர சகோதரிகளின்மீதுள்ள நம்முடைய அன்புகூட இடையூறாக இருந்திடுவதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது.

# நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு...

**"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்." மாற்கு 14:38**

மற்றக் காலப்பகுதிகளைக் காட்டிலும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பாவத்திற்குள் விழுவதற்கு அதிகமான வாய்ப்புள்ளது என்பது விநோதமாய்த் தோன்றினாலும், நாம் பல வருடங்களாகக் கவனித்து வந்ததும் மற்றும் மற்றவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்ததும் என்னவெனில் - ஒவ்வொரு வசந்த/இளவேனிற் காலத்தின்போதான பஸ்கா காலங்களில், குறிப்பிடத்தக்கதான வீரியத்துடன் சோதனைகள் கடந்துவருகின்றது என்பதேயாகும். வருடாவருடம் இந்த ஒரு காலப்பகுதியில் அநேகர் அல்லது அனைவருமே இடறிவிழுவதற்கு விசேஷித்த வாய்ப்புள்ளதை நாம் கவனிக்கின்றோம். ஆகையால் நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு உண்மையாய்ச் செவிக்கொடுத்து நமக்காகவும், மற்றவர்களுக்காகவும் உண்மையாய் விழித்திருந்து, ஜெபம்பண்ணிடுவோமாக; மற்றும் ஒவ்வொருவனும் தன் சகோதரனுக்கு முன் இடறலின் கற்களைப் போட்டுவிடாதப்படிக்கும் எச்சரிக்கையாயிருப்பானாக. (உரோமர் 14:13; எபிரெயர் 2:1)

பஸ்கா காலத்தின்போதுதான் நமது கர்த்தர், "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவஅப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்." அப்போது அவரது நண்பர்கள் மற்றும் பின்னடியார்களில் அநேகர், "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள். . . அதுமுதல் . . . அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்." (யோவான் 6:4, 51, 60, 66, 67)

பஸ்கா காலத்தின்போதுதான் யூதாஸ் நமது கர்த்தரைக் காட்டிக்கொடுக்கத்தக்கதாக பேரம் பேசினார் மற்றும் கொஞ்சம் பிற்பாடு, அதைச் செய்தும் முடித்தார்.

பஸ்கா காலத்தின்போதுதான் நமது கர்த்தர், "என் ஆத்துமா மரணத்துக் கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்றார் (மத்தேயு 26:38) மற்றும் "ஆகிலும் நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு அதுமுடியுமளவும் எவ்வளவோ நெருக்கப் படுகிறேன்" என்றார். (லூக்கா 12:50)

பஸ்கா காலத்தின்போதுதான் நமது கர்த்தர் சீஷர்களை அழைத்து, மனுஷகுமாரன் பிரதான ஆசாரியர், வேதபாரகர் கையில் ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் என்றும், தாம் கொல்லப்படுவார் என்றும் விளக்க ஆரம்பித்தார் (மத்தேயு 16:21); அப்போது, தான் ஒரு சீஷன் என்பதை மறந்துபோவதற்கு ஏதுவாய்ப் பேதுரு சோதிக்கப்பட்டு, அவர் கர்த்தரை அழைத்து, "ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை" என்று கூறி அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினார். இவ்விதமாய் இவர் நமது கர்த்தர் தம்மைப் பலி செலுத்திடுவதற்கு மறுத்துவிடுவதற்குக் கர்த்தரையும் சோதிப்பவனானார் மற்றும் "எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாய் இருக்கிறாய் தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்" என்ற

கடிந்து கொள்ளுதலைப் பெற்றுக்கொண்டார். (மத்தேயு 16:22, 23)

பஸ்காவைப் புசிப்பதற்குக் கூடினபோது, தங்களில் யார் இராஜ்யத்தில் பெரியவராய் இருப்பார்கள் என்று பன்னிரண்டு பேருக்குள் வாக்குவாதம் உண்டாயிற்று. இப்படியாய்க் கர்த்தருடைய நீதியான கடிந்துகொள்ளுதலைப் பெற்றுக்கொண்டார்கள் மற்றும் அவர்களது பாதங்களைக் கழுவுவதின் வாயிலாகத் தாழ்மைக்கான உதாரணத்தைக் கர்த்தர் கொடுப்பதற்கு ஏதுவானார்கள்.

ஸ்தோத்திரப் பாட்டுப்பாடிவிட்டு, அவர்கள் பஸ்காவை முடித்துக் கடந்துபோகுகையில்தான், நமது கர்த்தர் இப்பாடத்தினுடைய தலைப்பாகக் காணப்படும், "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்ற வார்த்தைகளை - அவர்தாமே வியாகுலமான போராட்டத்தில் காணப்படும் போதும், இரத்த வியர்வையுடன் தமது சித்தத்தை, தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்போதும், உண்மையாய் ஜெபம்பண்ணி, பெலப்படுத்தப்பட்டபோதும் - அவர்களிடத்தில் கூறினார். (லூக்கா 22:39-46)

கொஞ்சம் நேரத்திற்குப் பிற்பாடு பிரதான ஆசாரியனுடைய சேவகர்கள் அவர்களிடத்தில் வந்தபோது, பதினொரு பேரும், அவரைவிட்டு ஓடிப்போனார்கள் (மாற்கு 14:50); சோதனையை, பயத்தை அவர்களால் எதிர்க்க முடியவில்லை.

கொஞ்சம் நேரத்திற்குப் பிற்பாடு, மற்றவர்களைக்காட்டிலும் தைரியமான பேதுருவும், யோவானும், ஆண்டவருக்கு என்ன சம்பவிக்கப்போகின்றது என்று பார்க்கத்தக்கதாக ஜனக்கூட்டத்தாரோடே போனார்கள்; கிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவராக அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட பேதுரு, சபித்து, கர்த்தரை மறுப்பதற்குச் சோதனைக்குள்ளானார். (மாற்கு 14:68, 70, 71)

அதே வேளையில் நமது கர்த்தரும் பிலாத்துவின் முன்னிலையில் சோதனைக்குள்ளானார், ஆனால் வெற்றிகரமாய் "நல்ல அறிக்கையை" சாட்சியாக விளங்கப்பண்ணினார். (1 தீமோத்தேயு 6:14) நமது கர்த்தருக்கான சோதனைகள் அடுத்தடுத்து பின்தொடர்ந்துவந்தது. அவரது சத்துருக்கள் அவர்மேல் துப்பி, அவருக்கு முட்கிரீடம் சூட்டி, அவரை வைது, "இவன் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவானால், தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளட்டும்" என்று கூறினபோது, அவரால் அவர்களை வியாதியினாலோ (அ) மரணத்தினாலோ அடித்திருக்க முடியும்; ஆனால் அவரோ 'தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போல, அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்; அவர் ஜெயங்கொண்டு, தம்மை இழிவுப்படுத்தினவர்களுக்காக வேண்டிக்கொண்டார்.' (ஏசாயா 53:7; லூக்கா 23:33-37)

இத்தகைய நன்றிக்கெட்ட ஜீவிகளுக்கு மீட்பராக தாம் இருக்கப்போவதில்லை என்றுகூட அவரால் முடிவெடுத்திருக்க முடியும்; ஆனால் தாம் பிதாவை வேண்டிக்கொண்டு, பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை உதவிக்காகப் பெற்றுக்கொண்டு, தம்முடைய சத்துருக்களை ஜெயங்கொண்டிருக்க முடியும் என்பதை அவர் அறிந்திருந்தபோதிலும், அவர் இச்சோதனையை எதிர்த்து, மறுத்தார். ஏற்றக்காலங்களில் சாட்சியாய் விளங்கத்தக்கதாக, அவர் அனைவருக்குமான மீட்கும்பொருளெனத் தம்மைக் கொடுத்தார்.

நமது கர்த்தருடைய மரணமானது, சீஷர்கள் அனைவருக்கும் விசுவாசத்தின்

விஷயத்தில் மாபெரும் சோதனையாய் அமைந்தது; அவர்கள் மீன்பிடிக்கிற தங்களது பழைய தொழிலுக்குத் திரும்பிடுவதற்கும் மற்றும் மனிதரைப்பிடிக்கும் பணியைப் புறக்கணிப்பதற்கும் ஏதுவாய்ச் சோதனைக்குள்ளானார்கள். (யோவான் 21:3-17)

இந்த ஒரு விசேஷித்த காலப்பகுதியில் பவுலும், மற்ற அப்போஸ்தலர்களும்கூட பின்நாட்களில் விசேஷித்த சோதனைகளைப் பெற்றுக்கொண்டவர்களானார்கள். அப்போஸ்தலர் 20:16; 21:10, 11, 27-36-ஆம் வசனங்களைப்பார்க்கவும்.

கடந்த காலங்களில் நிகழ்ந்த இவை அனைத்தையும் வைத்துப்பார்க்கும்போது மற்றும் 1874-ஆம் வருடத்திலிருந்து துவங்கின தற்கால அறுவடை முதல், இன்றுவரையுள்ள நம்முடைய அனுபவங்களை வைத்துப்பார்க்கும்போது, ஒவ்வொரு வசந்த/இளவேனிற் காலப்பகுதியிலும், நாம் கர்த்தருடைய ஆடுகளுக்காக விசேஷமான அக்கறைகொள்கின்றோம்; இந்த இளவேனிற் காலப்பகுதியிலும் அப்படியாகவே அக்கறைகொள்கின்றோம். சோதனைகளினுடைய தன்மை என்னவென்று, அவைகள் நம்மீது வருவதற்கு முன்பு, நம்மால் தெளிவாய் உணர்ந்துகொள்ள முடியாது; ஏனெனில் ஒருவேளை அவைகள்பற்றின அனைத்தையும் நாம் முன்கூட்டியே அறிந்துகொள்வோமானால், அவை இலேசான சோதனைகளாகவே இருக்கும். ஆகையால் விழித்திருங்கள் மற்றும் எப்போதும் ஜெபம்பண்ணுங்கள்; ஏனெனில் ஆயத்தமாய் இருப்பது மாத்திரமே ஒரே பாதுகாப்பான வழியாகும்; காரணம் உங்கள் எதிராளியான பிசாசானவன் எவனை விழுங்கலாம் என்று வகைதேடிக் கொண்டிருக்கின்றான். அவன் உங்கள் பெலவீனங்களை அறிவான் மற்றும் அதைப் பயன்படுத்துவதற்கு ஆயத்தமாய்க் காணப்படுகின்றான். நாம் ஜெயங்கொள்வதற்கு, நம் அனைவருக்கும் நம் இருதயங்களில் ஆவியின் கிருபைகளும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கர்த்தருடைய கிருபையும் அவசியமாய் உள்ளது. "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு, விழித்திருந்து, ஜெபம் பண்ணுங்கள்!"

"என் ஆத்துமாவே, விழித்திரு,
பத்தாயிரம் சத்துருக்கள் எழுந்துள்ளனரே;
பரிசினின்று உன்னை திசைதிருப்ப
பாவத்தின் சேனைகள் பலமாய்ச் சூழ்ந்து நிற்கின்றதே."

***

"அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." (2 தீமோத்தேயு 3:12)

"வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?" (மத்தேயு 10:25)

"இயேசு பிலாத்துவுக்குப் பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது;" இது அவரது

சரீரத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினர்கள் விஷயத்திலும் உண்மையாய் இருக்கின்றது. (யோவான் 19:11)

"ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே." (மத்தேயு 10:36)

"என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்லுவார்கள்;" "சந்தோஷப்பட்டு, களிகூருங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும்." (மத்தேயு 5:11, 12)

"இந்த உலகத்தின் தேவனானவன் . . . கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கின்றான்." . . . "அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே."

## திருவிருந்து

அன்பு பிதாவே, இந்தப் புதிய நாளானது
இராவிருந்தின் அப்பமும், திராட்சரசமும் போல்
எந்தனுக்கு இருக்கட்டுமே; திராட்சரசத்தின்
உள்ளான வெளிச்சம்போல் எந்தனுக்கு இருக்கட்டுமே.
ஆவியின் சுத்திகரிப்பினுடைய இனிமைதனை அறிந்திடவே;
அப்பத்தின் உள்ளான அர்த்தம்போல் இருக்கட்டுமே.
அதினால் அதிகம் சுமை கொண்டவர்களின்
பாரந்தனில் நானும் பங்கடையவே.
உம் திட்டத்திற்கு எந்தன் ஜீவனையும், எந்தன் அனைத்தையும்
என் சக மனுஷனுக்கான ஊழியத்திற்கென்று
மீண்டுமாய் இப்படி அர்ப்பணிக்கின்றேனே.
ஒவ்வொரு மணித்துளிகளும் உந்தன் அன்பின்
நினைவுகூருதல்களால் நிரம்பட்டுமே - அதுவே
எந்தன் ஆத்துமாவைப் பற்றியெரியச்செய்து எந்தன்
கண்களை பரத்தை ஏறெடுத்துப் பார்க்கச்செய்கின்றதே.
பிரச்சனைகள் மற்றும் போராட்டங்கள் மத்தியில்
உந்தன் நித்திய கனவல்லமையை - ஆம்
விசுவாசித்து நம்பிடச் செய்கின்றதே.
உந்தன் வழியின் பிரகாசமான மகிமையை
எந்தனுக்கு காண்பித்தருளுமே - ஓ! ஆண்டவரே
இன்று உம்மோடு திருவிருந்தில் பங்கெடுப்பேனே.

– Elizabeth D. Schumann
(Songs of the Nightingale, p. 125)

# ஜெபத்திற்கு விடையாக விடுதலை

## அப்போஸ்தலர் 12:1-19

*"கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்." சங்கீதம் 34:7*

## பஸ்கா காலப் புடைத்தெடுத்தல்கள்


யூதர்களுடைய அதிலும் விசேஷமாகச் செல்வாக்குமிக்கவர்களுடைய ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான நோக்கத்தில் அகிரிப்பா, அப்போஸ்தலனாகிய யாக்கோபைச் சிரைச்சேதம் பண்ணினார் மற்றும் இது யூதர்களுக்கு மிகவும் பிரியமாய் இருப்பதைக்கண்டு இவர் அப்போஸ்தலனாகிய பேதுருவை கைதுசெய்தார். இங்கு இடம்பெறுகின்றதான கிரேக்க வார்த்தையானது, அவர் தேடப்பட்டு, கைதுசெய்யப் பட்டார் என்பதைக்குறிக்கின்றதாய் இருக்கின்றது. அநேகமாக அப்போஸ்தலர்கள் அனைவரும் அந்த ஒரு காலப்பகுதியில் மறைவில் காணப்பட்டனர்; எனினும் பஸ்கா காலத்தின் நிமித்தமாகப் பரிசுத்த பேதுரு வெளியே வந்தபோது, அவர் கைதுசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்; பஸ்கா வாரத்தினுடைய இறுதியில் இவரை நேரடியாய்க் கொன்றுபோடுவதற்கு அகிரிப்பா திட்டமிட்டிருந்தார். ஆனால் இதற்கிடையில் இந்தப் பாடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதுபோன்று, பரிசுத்த பேதுருவைக் கர்த்தர் விடுவித்தார்.

அந்தப் பஸ்கா காலக்கட்டத்தின் போதான சபையினுடைய துக்கத்தை நம்மால் நன்கு கற்பனை செய்துபார்க்க முடிகின்றது மற்றும் இந்தத் துயரமானது, அவர்களுக்கு நமது கர்த்தருடைய மரணத்தின்போதான வேளையையும், அப்போது அவரது பின்னடியார்கள் மத்தியில் காணப்பட்டதான பீதிகளையும் ஓரளவுக்கு நினைப்பூட்டி யிருக்க வேண்டும். மற்றவர்களுக்கு எப்படியோ, ஆனால் சில வருடங்களாக ஏதோ ஒவ்வொரு பஸ்கா காலமும், ஒவ்வொரு நினைவுகூருதலும், கர்த்தருடைய பின்னடியார்கள் மத்தியிலான விசேஷித்த சோதனை மற்றும் பரீட்சைக்கான காலமாக இருப்பதாக எங்களுக்குத் தோன்றுகின்றது. வருடத்தினுடைய அந்த ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் யூதாசும், பேதுருவும், கர்த்தருடைய சீஷர்கள் அனைவரும் தங்கள் புடைத்தெடுத்தல்களைப் பெற்றுக்கொண்டதுபோன்று, கர்த்தருடைய பின்னடியார் களிலுள்ள மற்றவர்களிடத்தில் சாத்தான் செய்ய விரும்புகின்றதான புடைத்தெடுத் தல்களும், நடுங்கவைத்தல்களும் நினைவுகூருதல் காலத்தில் விசேஷமாய் அனுமதிக்கப்படுகின்றதாக நமக்குத் தோன்றுகின்றது. இந்த அனுமானமானது உண்மையானதாகவோ அல்லது உண்மையானதில்லை என்பதாகவோ இருப்பினும்,

கர்த்தருடைய ஜனங்கள் இந்த ஒரு காலப்பகுதியில் எதிராளியானவனுடைய தந்திரங்களுக்கு எதிராக விசேஷமாய் ஜாக்கிரதையாய் இருப்பது என்பது ஒன்றும் அவர்களுக்கு நிச்சயமாய்ப் பாதகமாய் இருப்பதில்லை; ஏனெனில் சோதனைக்குட் படாதபடிக்கு நாம் விழித்திருந்து ஜெபம்பண்ண வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

வருஷத்தினுடைய இந்த ஒரு காலப்பகுதியில் எதிராளியானவனிடமிருந்து விசேஷமான சோதனைகள், விசேஷமான பரீட்சைகள் வரும் என்ற கருத்தானது, சபை சரித்திரத்தினுடைய பழைய வழிகள் வாயிலாக நம் மத்தியில் கடந்துவந்து காணப்படுகின்றதான விசேஷித்தக் கட்டுப்பாடுகளும், உபவாசங்களும், ஜெபமும் ஏறெடுக்கும் காலம் (அ) லெந்து காலங்கள் என்பதற்கான அடிப்படையாகக் காணப்படுகின்றது என்று தோன்றுகின்றது. இன்று அநேகர் லெந்து காலங்களை வெறுமனே ஆச்சாரமாய்க் கைக்கொள்வதினால், இப்படியாகவே அனைவருக்கும் இருக்க வேண்டுமென்றில்லை மற்றும் ஆரம்பத்திலும் இப்படியாக இருக்கவில்லை. வேதவாக்கியங்களுக்கு இசைவாக, அனைத்துக் காலப்பகுதிகளிலும் ஜெபம் பண்ணுவதற்கும், உபவாசம் இருப்பதற்கும் நாம் தீவிரமாய்ப் பரிந்துரைக்கின்றோம் மற்றும் நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கு முன்னதாக 40 நாட்கள் காலங்களில், அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அனைவரும் கூடுமானமட்டும் விசேஷமாய் விழிப்புடன் காணப்படுவதற்கும் நாம் பரிந்துரைக்கின்றோம்.

நாம் ஏற்கெனவே விவரித்துள்ளதுபோலவே, நமது சுயத்தை வெறுத்தல் களானது, உணவு மற்றும் பானம் விஷயத்தில் மாத்திரமல்லாமல், நம்முடைய விருப்பங்களின் விஷயத்திலும் காணப்பட வேண்டும். எனினும் வருஷத்தினுடைய வசந்த/இளவேனிற் காலப்பகுதியில் மிகவும் எளிமையான மற்றும் மிகவும் வரையறைக்குட்பட்ட அளவிலான உணவை உண்பது என்பது, (ஜெபங்களும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் இல்லாமல் இருந்தாலுங்கூட) சாதாரணமாகவே பெரும்பான்மையான மனுக்குலத்திற்கு நன்மையாகவே இருந்துள்ளது என்பதில் ஐயமில்லை. குளிர்க் காலத்தினுடைய குளிரானது, நன்கு பசியைத் தூண்டி அதிகம் உணவு உட்கொள்ளப்படுவதன் விளைவாக, இளவேனிற் காலம் வரும்போதும் அதே பழக்கம் தொடர்வதினால் அளவு மீறி உண்ணும் தன்மை உண்டாவதினால் அல்லது ஜீரண உறுப்புக்களுக்கு அதிக பளு ஏற்படுவதினால், உணவு கட்டுப்படுத்தப்படுவதன் மூலம் பளு குறைக்கப்படுவது அவசியமாயிருக்கின்றது மற்றும் அளவு மீறி உண்ணும் தன்மையானது ஆவிக்குரியவற்றிற்குச் சாதகமற்று இருப்பதினால், உணவு கட்டுப்படுத்துதல் என்பது ஆவிக்குரியவற்றிற்குச் சாதகமாய்க் காணப்படுகின்றது.



## நினைவுகூருதலின் தியானங்கள்

# பெத்தானியாவில் நடந்த இராவிருந்து



# விலையேறப்பெற்ற நளததைலமுள்ள வெள்ளைக்கல் பரணி

## யோவான் 12:1-11

*"இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்." மாற்கு 14:8*

பூமிக்குரிய ஊழியத்தில் நம்முடைய ஆண்டவரின் கடைசி வாரம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. பஸ்கா பண்டிகை வர ஆறு நாளைக்கு முன்னே, யூதர்களின் ஓய்வுநாளாய் இருந்தது; அந்த ஓய்வுநாள் ஆறு மணியளவில் முடிவடைந்தது; அநேகமாக அப்போதுதான் நம்முடைய ஆண்டவரும் அவருடைய சீஷர்களும், "குஷ்டரோகியான சீமோன் வீட்டில்" மார்த்தாள் மற்றும் மரியாளால் உபசரிக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தச் சீமோன் அவர்களுடைய தந்தையாக இருந்திருக்கக்கூடும். அவர்களின் சகோதரனாகிய லாசருவும் அங்குப் பந்தியிருந்தவர்களில் ஒருவராக இருந்தார்.

தமது மரணம் வெகுவாய்ச் சமீபித்திருப்பதை ஆண்டவர் அறிந்திருந்ததினால், நேசிக்கப்பட்ட தம்முடைய சீஷர்களுக்கு அதைக்குறித்துச் சில தகவல்களைக் கொடுத்தார். பொதுவாக, சீஷர்களின் புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்ட சில அற்புதமான விஷயங்களை எப்பொழுதும் இயேசு பேசுவதினால், அவர்கள் சமீபமாய் இருக்கும் கல்வாரியில் நிகழப்போகிற பயங்கரமான சோக நிகழ்ச்சியைக்குறித்து உணர்ந்துகொள்ள தவறினார்கள். இவைகள் நமக்கு ஆச்சரியமாக இருப்பதற்கு அவசியமில்லை. ஏனெனில், நமது கர்த்தர் உவமைகளாகவே பேசினார் என்று வேதவாக்கியங்கள் காணப்படுகின்றது; "இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார்; உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை." உதாரணமாக: "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்." "நானே வானத்திலிருந் திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான் நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (யோவான் 2:19; 6:51, 53) இப்படியான உவமை பாஷைகளில் கர்த்தர் பேசியிருந்ததை நாம் மனதில்கொண்டு நிதானிக்கும்போது, அவருடைய மரணத்தை முன்னறிவித்த நமது கர்த்தருடைய வார்த்தைகளான, "மனுஷகுமாரன் உயர்த்தப்படுவார்" மற்றும் இதுபோன்ற மற்ற வாக்கியங்களினுடைய சரியான அர்த்தத்தை அப்போஸ்தலர்களால் புரிந்திருந்திருக்க முடியாது என்று நாம் உணர்கின்றோம்.

ஓய்வுநாள் மாலையில் இயேசு அபிஷேகிக்கப்பட்டதைக்குறித்தும், அங்குப் பெத்தானியாவில் நடந்த இராவிருந்தைக்குறித்தும் பார்ப்பதற்கு முன், மரியாள் நளததைலத்தினால் அபிஷேகம் பண்ணின காரியமானது தமது அடக்கத்திற்கு ஏதுவாக பண்ணினாள் என்று நமது கர்த்தர் அறிவித்த காரியங்களை புரிந்துகொள்ளத்

தக்கதாக, அந்நாளுக்குப் பிறகு தொடரும் நாட்களில் நடக்கும் சம்பவங்களை நம் மனதில் கொண்டுவரலாம். மறுநாள் காலையில் (வாரத்தின் முதல் நாள் - பொதுவாக இன்று ஞாயிற்றுக்கிழமை என்று அழைக்கப்படுகிறது). கழுதைக் குட்டியை அழைத்துவரும்படிக்குக் கூறி, பின்னர் அதின்மேல் ஏறி எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணினார். லாசரு உயிர்த்து எழுப்பப்பட்ட அந்த அற்புதத்தை ஜனங்கள் கண்டிருந்ததினால் கும்பல் கும்பலாகக் கூட்டங்கூடி, சகரியாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறும் வண்ணமாக அவரை மேசியா என்றும், தாவீதின் குமாரன் என்றும் வந்தனம் செய்து, வழியில் வஸ்திரங்களையும், மரக்கிளைகளையும் பரப்பினார்கள். (ஆகவே, பொதுவாக இது குருத்தோலை ஞாயிறு என்று அழைக்கப்படுகிறது). இத்தருணத்தில்தான், நம்முடைய ஆண்டவர் எருசலேமை நோக்கி கண்ணீர்விட்டு, "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" (மத்தேயு 23:38) என்று அறிவித்தார்.

இரண்டாவது நாளாகிய திங்கட்கிழமை அன்று, காசுக்காரர்களை ஆலயத்திலிருந்து துரத்தியிருக்க வேண்டுமென்றும், அங்குள்ள ஜனங்களுக்கு அவர் போதித்தார் என்றும், கருதப்படுகிறது. மேலும், அந்த நாளின் பகல் வேளையில் அவர் பிரயாணம் பண்ணிக்கொண்டு இருக்கும்போதுதான் கனியற்ற யூத தேசத்திற்கு அடையாளமாய் இருந்த கனியற்ற அத்திமரத்தைச் சபித்துப் புறக்கணித்தார் என்றும் பதிவுகளிலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம். மூன்றாம் நாளாகிய செவ்வாய்கிழமை அன்று, மீண்டும் ஆலயத்தில் பிரசங்கிப்பதிலும், கேள்விகளுக்குப் பதில் கொடுப்பதிலும் அவர் நேரத்தைச் செலவிட்டார். மேலும், அன்று மாலையில் அவர்கள் பெத்தானியாவுக்குத் திரும்பியபோது, அண்மையில் சம்பவிக்கப்போகும் மாபெரும் சம்பவங்கள் தொடர்பான காரியங்களை அவர் தம் சீஷர்களோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தார். நான்காம் நாளாகிய புதன்கிழமையோ, பெத்தானியாவில் அமைதலாக கழிந்தது. ஐந்தாம் நாளாகிய வியாழன் அன்று, அவருடைய சீஷர்கள் பஸ்கா இராப்போஜனத்தை ஆயத்தம்பண்ண துவங்கினார்கள். மாலை ஆறு மணிக்குமேல் அது புசிக்கப்பட்டது; அந்த மாலை, ஆறாம் நாளாகிய வெள்ளிக்கிழமையின் துவக்கமாய் இருந்தது. யூதர்களின் முறைமையின்படி அது நீசான் 14-ஆம் தேதியாய் இருந்தது. அன்றைய இரவு கெத்செமனே அனுபவங்கள் தொடர்ந்தது. மறுநாள் காலை பிலாத்துவுக்கு முன் விசாரணை செய்யப்பட்டு சிலமணி நேரங்களுக்குப் பிற்பாடு சிலுவையில் அறையப்பட்டு, மரித்துப்போனார்.

நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படுவதற்கு ஆறு நாட்களுக்கு முன், குஷ்டரோகியான சீமோனின் வீட்டில், அதாவது மார்த்தாள், மரியாள், லாசருவின் வீட்டில் அவருக்கு அளிக்கப்பட்ட விருந்தோம்பல் குறித்த சம்பவத்திற்கு இப்பொழுது வரலாம். "இவைகளுக்குப்பின்பு, யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்ய வகைதேடினபடியால், அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயாவிலே சஞ்சரித்துவந்தார்" (யோவான் 7:1); நமது கர்த்தர் இங்கு ஒரு விருந்தாளியைப்போல் மாத்திரம் போய் வந்துக்கொண்டிருந்தார் என்றும், அவருடைய பெரும்பான்மையான நேரத்தைக் கலிலேயாவில்தான் செலவழித்துக்கொண்டிருந்தார் என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். இயேசுவையும், மேசியாவுக்கு உயிருள்ள சாட்சியாக வாழ்ந்துகொண்டிருந்த லாசருவையும் கொலை செய்ய வேண்டும் என்று சில முன்னிலை வகிக்கும் யூதர்கள் வகைதேடி கொண்டிருந்தது அறியப்பட்ட காரியமாய்

இருந்தும், தாம் பலி செலுத்தப்படவேண்டிய நேரம் இப்பொழுது வந்துள்ளபடியினால் கர்த்தர் தம் சத்துருக்கள் மத்தியில் வந்தார்.

இது ஒரு சராசரியான விருந்தாக இருக்கவில்லை, மாறாக, நம்முடைய ஆண்டவரைக் கனப்படுத்தும்படியாக ஒரு விசேஷித்த விருந்தாய் இருந்தது. எனினும், இந்த விருந்தோடு தொடர்புள்ள ஒரு சம்பவம் அவ்விருந்தின் மற்ற அனைத்து அம்சங்களைக் காட்டிலும் பிரமாண்டமாய் இருந்தபடியினால், சுவிசேஷத்தைப் பதிவு செய்தவர் அக்காரியத்தை மாத்திரம், அதாவது விலையேறப்பெற்ற நளததைலத்தினால் நமது கர்த்தர் அபிஷேகம்பண்ணப்படும் காரியத்தை மாத்திரம் குறிப்பிடுகின்றார். "இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மாற்கு 14:9) என்று ஆண்டவர் தாமே கூறினார். ஆகவே, ஆண்டவரால் மிக உயர்வாகக் கருதப்படும் இப்பணிவிடையின் விவரங்களை நாம் மிக ஆழமாக ஆராய்ந்து பார்ப்பது மிகவும் ஏற்றதாயிருக்கின்றது.

பேராசிரியர் ஷாப் அவர்கள்: "இங்குத் தைலம் என்று கூறப்படுவது சாதாரணமான தைலமாக இராமல் நறுமண திரவமாக இருக்கின்றது" என்று கூறுகின்றார். அந்தத் தைலத்தைக்கொண்டிருந்த வெள்ளைக்கல் பரணியானது, குடுவை (அ) ஜாடி (அ) கழுத்துப்பகுதி குறுகலாக உள்ள புட்டியின் வடிவம் கொண்டு காணப்பட்டது. மேலும், பரணி உடைக்கப்பட்ட காரியமானது, நறுமணதைலத்தை மூடியிருந்த ஜாடியின் முத்திரை உடைக்கப்படுகின்றதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. யூதாசின் அதிருப்தியான வார்த்தைகள் அந்தத் தைலத்தின் மதிப்பை வெளிப்படுத்துகிறது. ஏனெனில், "அதை 300 தினாரிக்கு விற்றிருக்கலாமே" என்று கூறினான். தினாரி என்ற வார்த்தை பணம் என்று 5-ஆம் வசனத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் ஒரு பணம் (தினாரி) ஒருநாளின் கூலியாக இருந்தது (மத்தேயு 20:2). இதன் மதிப்பை இக்காலத்துப் பணத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் ஒரு நாளுக்கு 50 செண்ட் (டாலரில் 100-இல் ஒரு பங்கு) கூலி கொடுக்கப்படுகிறது. இப்படியிருக்க 300 தினாரியானது, 150 டாலர் மதிப்புள்ளதாய் இருக்கிறது. ஆகவே, அந்த நளதம் என்னும் தைலம் உண்மையில் மிக விலையுயர்ந்ததாக இருந்தது. அது உரோம பவுண்ட் அளவின்படி 12 அவுன்சுகளாகும். இந்த நளதம் என்னும் தைலம் விலையுயர்ந்தது என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இந்நாளிலுங்கூட கிழக்கத்திய தேசத்தில் மிகச் சிறந்த ரோஜா பூக்களினால் தயாரிக்கப்படுகிற (ரோஜா) தைலமானது மிகவும் விலையுயர்ந்ததாய்க் காணப்படுகின்றது; நாலு இலட்சம் (4,00,000) முழுமையாக வளர்ச்சியடைந்த ரோஜாக்கள், ஓர் அவுன்ஸ் (ரோஜா) தைலத்தைத் தயாரிக்கத் தேவைப்படுகிறது; இதன் தூய்மைக்கு ஏற்றவாறு மதிப்பு உயரக்கூடியதாய் இருக்கிறது; ஓர் அவுன்ஸ் (ரோஜா) தைலம் 100 டாலர் விலை கொண்டிருக்கும்போது, கர்த்தரை அபிஷேகம் பண்ணுவதற்கு மரியாள் பயன்படுத்தின அளவுள்ள (ரோஜா) தைலத்தின் விலையோ 1200 டாலர் விலையுள்ளதாய் இருக்க வேண்டும். நீரோ என்ற சக்கரவர்த்திதான், முதன்முதலில் இப்படிப்பட்ட விலையுயர்ந்த நறுமணம் வீசும் தைலங்களைப் பயன்படுத்தினார் என்று கூறப்படுகிறது. ஆனால், இப்படிப்பட்ட இனிமையான நறுமணதைலம் கொண்டு அபிஷேகம் பண்ணப்படுவதற்கும், பெருமைபடுத்தப்படுவதற்கும் மிகவும் பாத்திரமாய்

இருந்தவர், "பூமியின் இராஜாக்களுக்கெல்லாம் பிரபுவாய் காணப்பட்டவரே" ஆவார்; இவரை அபிஷேகம் பண்ணும் கனம் மரியாளுக்குக் கிடைத்தது.

இது ஒரு வீணான காரியம் என்று யூதாசே முதலில் தடை விதித்தான் - அவனுக்குப் பிரச்சனை என்னவெனில், அவன் கர்த்தரைக் கொஞ்சமாக நேசித்தும் மற்றும் பணத்தை மிக அதிகமாய் நேசித்தும் இருந்ததேயாகும். மற்றவருக்காக நமது அன்பு செலவிட விரும்பும் தொகையின் அளவானது, ஒருவிதத்தில் நம்முடைய அன்பின் அளவையே எடுத்துக்காட்டுகின்றதாய் இருக்கிறது. மற்றச் சீஷர்களும் யூதாசின் வார்த்தைகளைக் கருத்தில்கொண்டு, அச்சம்பவத்தை யூதாஸ் கண்ணோக்கின விதத்தில் கண்ணோக்கி, மரியாளின் கிரியைகளுக்கு மறுப்புத் தெரிவித்தார்கள் என்று வேறொரு சுவிசேஷகர் குறிப்பிடுகின்றார். ஆயினும், யூதாசின் குணலட்சணத்தைச் சற்று வெளிச்சத்திற்குக் கொண்டுவரும்படியாக அப்போஸ்தலனாகிய யோவான் இவ்வாய்ப்பைப் பயன்படுத்தினார்; "அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்" என்று யோவான் கூறுகின்றார் (யோவான் 12:6).

"அவளை விட்டு விடுங்கள்" என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகள், அன்பைக்காட்டிலும் பணத்தை அதிகமாக மதிப்பிட்ட சீஷர்களுக்குக் கடுமையான ஒரு கண்டிப்பாயிருந்தது. ஆம், உண்மையில் தரித்திரர்கள் அநேகர் இருந்தார்கள், இன்னமும் அதிக தரித்திரர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு ஊழியம் செய்வதற்குப் பல வாய்ப்புகள் இருந்தது. ஆயினும், நம்முடைய ஆண்டவரை விசேஷித்தவிதமாய்க் கனப்படுத்துவதற்கும், மரியாளுடைய அன்பையும், பக்தியையும் அருமையாய்ச் சித்தரித்துக்காட்டும் நறுமணதைலங்களை அவர்மேல் ஊற்றுவதற்கும் உரிய வாய்ப்புகள் அதிக நாட்கள் காணப்படுவதில்லை. ஆகவே, இப்படி மிகவும் விலையுள்ள செலவுகளைச் செய்வது நியாயம் என்று நமது கர்த்தர் அங்கு அறிவித்தார். பணத்தோடு அன்பின் உணர்வுகளை சமமாக்கும் கருத்துக்களை தாம் ஆதரிப்பதில்லை என்பதை கர்த்தர் வெளிப்படுத்தினவரானார். ஆயினும், யூதாசைப்போன்று பணமானது தரித்திரருக்குச் செலவழிக்கப்பட வேண்டும் என்று கவலைப்படக்கூடிய நபர்கள், அநேகத் தருணங்களில் தங்களுக்குக் கிடைக்கிற பணத்தில் மிகவும் சிறிய அளவுகளையே தரித்திரர்களுக்குக் கொடுக்கின்றார்கள் என்றே நாம் கருதுகின்றோம்.

மாறாக, மரியாளிடத்தில் காணப்பட்ட ஆழமான, உண்மையான, அன்புள்ள இருதயங்கள் விலையுயர்ந்த பலிகளைச் செலுத்துவதிலே பிரியப்படுகின்றது, அதேசமயம் சரீரப்பிரகாரமாகத் தரித்திரராய் இருப்பவர்களுக்கு உதவியாகவும், ஆழ்ந்த இரக்கத்துடனும் காணப்படுகின்றது. மற்றவர்களுக்கு நாம் ஊழியம் புரியும் விஷயத்தில், அவர்களுக்குப் பணத்தேவை மாத்திரமே இருப்பதில்லை என்பதையும், பணம் தேவைப்படாதவர்களுக்கு அன்பும், அனுதாபமும் தேவைப்படும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. நம்முடைய ஆண்டவர் இப்படிப்பட்டவர்களில் ஒருவராய் இருந்தார்; அவருடைய இருதயம் அன்பினால் முழுமையாக நிரப்பப்பட்டிருப்பினும், அப்போஸ்தலர்களில் அடையாளப்படுத்தப்படும் விழுந்துபோன இனத்திலேயே

உயர்குணமுள்ளவர்களினுடைய ஏறக்குறைய நலிந்துபோன மனங்களில்கூட அவரால் சிறு தோழமையையே அடைய முடிந்தது. மரியாளிடத்திலோ அவருக்குச் சுகந்த வாசனையாக, புத்துணர்வாக, மற்றும் வலுவூட்டுதலாகக் காணப்படும் சத்து மருந்தாகவும், வாசனையாகவும் இருக்கும் ஆழமான அன்பையும், பக்தியையும் காணமுடிந்தது. மற்ற அனைவரைக்காட்டிலும் மரியாள் ஆண்டவரின் குணநலன்களின் ஆழங்களையும், அகலங்களையும், உயரங்களையும், நீளங்களையும் நன்கு அறிந்திருந்தாள். எனவே, அவள் ஆண்டவரின் பாதத்தருகே அமர்ந்து கற்றுக்கொள்வதில் சந்தோஷமடைந்ததும் அல்லாமல், இப்பொழுது தன்னுடைய பக்தி மற்றும் தன்னுடைய அன்பைக்குறித்து அவருக்குக் கொஞ்சம் வெளிப்படுத்தத் தக்கதாக, மிகுந்த விலைக்கொடுத்து செலவழிப்பதிலும் மகிழ்ச்சி அடைந்தாள்.

பொதுவான வழக்கத்தின்படி, மரியாள் முதலில் தைலத்தை ஆண்டவரின் சிரசில் ஊற்றினாள். (மாற்கு 14:3) அதற்குப் பின் மீதியிருக்கும் தைலத்தை அவர் பாதத்தில் ஊற்றினாள். ஆனால், இந்தச் சம்பவத்தைப் பதிவு செய்த அப்போஸ்தலனாகிய யோவான், ஆண்டவரின் தலையில் தைலம் ஊற்றினதை முழுமையாக மறந்துபோய், பாதங்கள் அபிஷேகம் பண்ணப்பட்ட காரியத்திலும், அவள் தனது தலைமயிரினால் அவர் பாதங்களைத் துடைத்த காரியத்திலும், மிகவும் அதிகமாய் வெளிப்பட்ட பக்தியில், மிகவும் ஆழமாக ஆட்கொள்ளப்பட்டுவிட்டார் என்பது தெரிகின்றது. உண்மையில் இது ஓர் அன்பின் வெளிப்பாடு மற்றும் நினைவுகூருவதற்குப் பாத்திரமான ஒரு பக்தியாகும்.

மரியாளைக் குறித்து ஒருவர் அளித்த விமர்சனம்: "அவள், ஸ்திரீகளுக்குரிய பிரதான 'ஆபரணத்தை' எடுத்து அதைப் பிரயாணத்தின் மூலம் தூசிகள் படிந்திருந்த தன்னுடைய போதகரின் பாதங்களைத் துடைப்பதற்கு அர்ப்பணித்தாள். போதகருக்குத் தன்னிடத்திலிருந்த சிறப்பான ஒன்றைக் கனம் குறைந்த பணிவிடைக்குக்கூட அர்ப்பணம் பண்ணினாள். அச்செய்கையானது அவளது பக்தி மற்றும் அன்பின் கூடுமான அளவு உச்சக்கட்ட வெளிப்பாடாய் இருந்தது. அவளது சிறந்த பொக்கிஷத்தை மிக பக்தியான முறையில் அர்ப்பணித்தாள். அவள் இருதயத்தில் பெற்றிருந்த ஆழமான உணர்வுகளை வார்த்தையினால் பேசாமல், இவ்விதமான கிரியைகளினால் வெளிப்படுத்தினாள்."

அந்தத் தைலத்தின் நறுமணம் வீடு முழுவதும் நிரம்பியதைக்குறித்து நாம் ஆச்சரியபட வேண்டியதில்லை. மேலும், சந்தேகத்திற்கிடமின்றி அந்த வாசனை அந்த வீட்டில் நீண்ட நேரம் தங்கியிருந்திருக்க வேண்டும். ஆனால், அதைக்காட்டிலும் விலையேறப் பெற்ற மரியாளின் இருதயத்தில் நிரம்பியிருந்த அன்பு ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது மற்றும் என்றும் மறக்கப்படுவதில்லை. மேலும், அவளுடைய பக்தியின் நறுமணமானது நூற்றாண்டுகள் கடந்து நம்மிடத்தில் வந்து அவளுடைய பணியைக் கனப்படுத்தவும், அவளுடைய நடத்தையைப் பின்பற்றுவதற்கு விருப்பமும் கொண்டுள்ள அனைத்து உண்மையான இருதயங்களுக்கு ஆசீர்வாதத்தையும் கொண்டு வந்துள்ளது.

நம்முடைய அன்பான மீட்பரோடு நாம் தனிப்பட்ட (நேரடியான) விதத்தில் தொடர்புகொள்வதற்கான சிலாக்கியம் (இக்காலத்தில்) நமக்கு இல்லை. ஆயினும், மரியாளின் கிரியைகளுக்கு ஒத்தக் கிரியைகளைச் செய்வதற்கான, அநேக வாய்ப்புகளை (இக்காலத்தில்) நாமும் பெற்றிருக்கிறோம்; அதாவது நம்முடைய கர்த்தரின் "சகோதர சகோதரிகளை" அன்பு, இரக்கம், மகிழ்ச்சி மற்றும் சமாதானமாகிய நறுமண தைலத்தினால் அபிஷேகம் பண்ணுவதற்கான சிலாக்கியம் நமக்குரியதாய் இருக்கின்றது; இவைகள் அதிகமாய்ச் சுயத்தை வெறுத்துச் செய்யப்படும்போது, இவைகள் நமது மூத்தச் சகோதரனுடைய கணிப்பில் மிகுந்த விலையேறப்பெற்றதாகக் காணப்படும்; அதாவது நமது மூத்தச் சகோதரனுடைய (கர்த்தர் இயேசுவினுடைய) சகோதர சகோதரிகளுக்கு எதை நாம் செய்கின்றோமோ அல்லது செய்யாமல் இருக்கின்றோமோ, அவைகளை நாம் அவருக்கே செய்தோம் அல்லது செய்யவில்லை என்பதாகக் கருதப்படும் என்று கூறினவருடைய கணிப்பில் மிகுந்த விலையேறப்பெற்றதாகக் காணப்படும் (மத்தேயு 25:40, 45). இன்னுமாக, "கர்த்தருடைய சரீர அங்கங்கள்" என்று அடையாளப்படுத்தப்படும் இந்தச் "சகோதர சகோதரிகளுக்கும்கூட" கர்த்தர் அடையாளமாகவும் இருக்கின்றார். மேலும், இக்கண்ணோட்டத்தை வைத்து நாம் பார்க்கையில், இப்பொழுது தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும், மற்றும் அருளப்பட்டிருக்கிற சகல நாமங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டு, பிதாவுக்கு அடுத்த நிலையில் காணப்படும் சரீரத்தின் தலையாயிருக்கிறவருடைய சிரசின்மேல் நறுமணதைலம் ஊற்றுவது நமக்கான சிலாக்கியமாய் இராவிட்டாலும், இந்தச் சுவிசேஷ யுகத்தில் அவருடைய சபையாக ஜீவித்துக்கொண்டிருக்கும் கடைசி அங்கங்களாகிய கிறிஸ்துவின் பாதங்கள் மீது நறுமணதைலம் ஊற்றுவதற்கான சிலாக்கியம் நமக்குரியதாய் இருக்கிறது.

இந்தச் சுவிசேஷயுகத்தின் நிறைவு வருடங்கள், நம்முடைய ஆண்டவரின் பூமிக்குரிய நிறைவு நாட்களுக்கு எந்தெந்த விதங்களிளெல்லாம் ஒப்பாகக் காணப்படும் என்பதை நாம் அறியோம். அதுபோல, சரீரத்தினுடைய தலையின் அனுபவங்களுக்கு, கிறிஸ்துவின் சரீரத்தினுடைய பாதங்களின் அனுபவங்கள் எந்தளவுக்கு ஒப்பாகக் காணப்படும் என்பதையும் நாம் அறியோம். எனினும் நாம் ஒருவரையொருவர் ஆறுதல்படுத்துவதும், ஒருவரையொருவர் உற்சாகமூட்டுவதும், சோதனைகளில் ஒருவரையொருவர் நிலைநிற்க உதவுவதும், "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதும்" நமக்கு அளிக்கப்பட்ட ஆசீர்வாதமான சிலாக்கியங்கள் என்பதை நாம் அறிவோம் (கொலோசெயர் 1:24). கிடைக்கக்கூடிய வாய்ப்புகளைப் பயன்படுத்திடுவதற்கு, முதலாவதாக மரியாளைப்போல நாமும் (இவ்வாய்ப்புகளைக்குறித்து) அதைக் குறித்து உணர்ந்துகொள்ள வேண்டும்.

"மாம்சத்தின்படி" நம்முடைய குடும்பத்தின் அங்கங்களை நாம் புறக்கணித்துவிட வேண்டும் என்று எந்த ஆலோசனையும் இங்கு நமக்குக் கொடுக்கப்படவில்லை; இவர்களுக்கென்று கவனம் செலுத்தப்படுவது சரியான விஷயம்தான்; மேலும் இவர்களுக்கடுத்த விஷயங்களில் கவனம் செலுத்தப்பட

வேண்டிய காரியங்களைக்குறித்துக் கர்த்தருடைய ஜனங்கள் அவருடைய அன்பின் ஆவியை, அதாவது இரக்கம், பொறுமை, சாந்தம், நீடிய பொறுமை ஆகியவைகளை முழுமையாகவும், இலவசமாகவும் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ப அதிகமதிகமாய் உணர்ந்துகொள்வார்கள். நம்முடைய விசேஷித்த முயற்சிகளும் பாடுகளும் மாம்ச குடும்பத்தோடு நின்றுவிடாமல், மாறாக விசேஷமாக விசுவாச வீட்டாருக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று வசனங்கள் வலியுறுத்தும் காரியத்தையே நாமும் வலியுறுத்துகிறோம் (கலாத்தியர் 6:10). வருங்காலத்தில் பொதுவான மனுக்குலத்திற்கு நன்மை செய்வதற்கான வாய்ப்புகளும் கிடைக்கும். ஆனால், கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஊழியம் செய்யக்கூடிய வாய்ப்பு இக்காலத்திற்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது.

மற்றவர்களுக்கு நன்மை செய்தல் தொடர்பாகவும் - நம்முடைய குடும்பத்தினரிடத்திலும், கிறிஸ்துவின் அங்கத்தினர்களிடத்திலும் நம்முடைய வார்த்தைகளினாலும், நடத்தையினாலும் அன்பை வெளிப்படுத்துவது தொடர்பாகவும் ஒருவர் குறிப்பிட்டிருக்கும் வார்த்தைகளை மேற்கோளிடுகின்றோம்: "வீட்டிலிருக்கும் அங்கங்கள் ஒருவருக்கொருவர் செய்யும் அன்பின் அடிப்படையிலான கிரியைகளிலிருந்தே சுகந்த வாசனை உண்டாகின்றது. நம்முடைய வீட்டின் இனிமையான நறுமணங்கள் விலைமதிப்புள்ள வீட்டுப்பொருட்களினாலும், தொங்குதிரைகளினாலும், ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்ட சித்திரங்களினாலும், மென்மையான தரை விரிப்புகளினாலும் உண்டாகுவதில்லை. பல வீடுகளில் இவைகள் காணப்பட்டாலும், அந்த வீட்டின் சூழ்நிலை ருசியற்ற, மணமற்ற மெழுகு பூக்கள்போல் இருக்கிறது."

மற்றொருவர் கூறும்போது: "ஒருவேளை என்னுடைய நண்பர்கள் என்னுடைய சரீரத்தின்மேல் ஊற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் அனுதாபமும், பாசமுமாகிய நறுமணதைலங்களினால் நிரப்பப்பட்ட வெள்ளைக்கல் பரணிகளை எங்கோ மூலையில் வைத்திருப்பார்களானால், எனக்கு அவைகள் தேவைப்படும்போது, நான் அவைகளினால் புத்துணர்வும், மகிழ்ச்சியும் அடையத்தக்கதாக அவர்கள் அதை என்னுடைய சோர்ந்துபோன மற்றும் உபத்திரவமான நேரங்களில் என்னிடத்தில் கொண்டுவந்து, அவைகளைத் திறக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். அன்பு மற்றும் அனுதாபத்தின் இனிமைகள் எதுவும் என் மீது யாரும் வீசிடாத ஒரு ஜீவியத்தை ஜீவிப்பதைப் பார்க்கிலும், பூக்குவியல்கள் இல்லாத எளிமையான சவப்பெட்டியைப் பெற்றுக்கொள்வதிலும், புகழுரை இல்லாத அடக்க ஆராதனையைப் பெற்றுக்கொள்வதிலும் நான் திருப்தியாய் இருப்பேன் . . . சவப்பெட்டியின் மீதுள்ள பூக்களினால் என்னுடைய கடந்தகால சோர்வின் மத்தியிலான வாழ்க்கைக்கு நறுமணம் வீச முடியாது."

# நறுமணம் வீசிய தைலம்

## மத்தேயு 26:6-16

*“அவளால் முடிந்ததைச் செய்தாள்.”*

முந்தின பாடங்களானது எருசலேமுக்கு, எரிகோ வழியாக நமது கர்த்தர் பிரயாணம் பண்ணுகையில் நடந்திட்ட நிகழ்வுகளை நமக்குக் காண்பித்ததாய் இருக்கின்றது - அதாவது வழியருகே காணப்பட்ட குருடான மனுஷன் சொஸ்தப்படுத்தப்படுகின்றான்; சகேயுவுடனான உரையாடல் நடைபெறுகின்றது மற்றும் பிரபுவானவன் பற்றின உவமை கொடுக்கப்படுகின்றது; அவர்கள் எருசலேமுக்கு அண்மையில் காணப்பட்டனர் மற்றும் சீஷர்களும், ஜனங்களில் அநேகரும், தேவனுடைய இராஜ்யமானது உடனடியாக வெளிப்படும், அதாவது பூமிக்குரிய பிரமாண்டத்துடன் ஸ்தாபிக்கப்படும் என்று எதிர்பார்த்துக் காணப்பட்டனர். எரிகோவிலிருந்து, எருசலேம் இருபது மைல் தூரமாக இருந்தது. (மரித்தோரிலிருந்து ஆண்டவர் எழுப்பிய) லாசரு மற்றும் அவருடைய இரண்டு சகோதரிகளாகிய மார்த்தாள், மரியாள் வசித்த பெத்தானியா, எருசலேமுக்கு அருகாமையில் இருந்தது. அவர் மாம்சத்தில் தம்முடைய கடைசி ஓய்வுநாளை அவர்களின் வீட்டில் அனுசரிப்பதற்கு முடிவு செய்தார். யூத பிரமாணத்தின்படி ஓய்வுநாளை அவர்கள் அனுசரித்து, அந்த நாள் சந்தோஷத்துடன் முடிவடைந்தது என்று நாம் எண்ணுகின்றோம். ஆயினும், அந்நாளில் நடந்த பல சம்பவங்கள் மீது கவனம் செலுத்தப்படாமல், மாலை நேரத்தில், சூரியன் அஸ்தமித்தப்போது, ஓய்வுநாள் முடிவடையும் நேரத்தில், வாரத்தின் முதலாம் நாள் ஆரம்பிக்கும் வேளையில் அங்கு நடத்தப்பட்ட இராவிருந்தின் மீதே விசேஷித்த கவனம் செலுத்தப்பட்ட விதத்தில் பதிவுகள் காணப்படுகின்றது.

அந்த விருந்து குஷ்டரோகியாகிய சீமோனின் வீட்டில் நடத்தப்பட்டது. ஆயினும் இந்தச் சம்பவத்தில் சீமோனைக்குறித்து எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஒருவேளை அவர் மரித்திருக்கலாம். இந்தச் சீமோன் என்பவர், லாசரு, மார்த்தாள், மரியாளுடைய தந்தையாகவோ அல்லது விதவையான மார்த்தாளின் கணவராகவோ இருந்திருக்கக் கூடும் என்றும், மரியாளும், லாசருவும் மார்த்தாளுக்கு இளையவர்கள் என்றும் கருதப்படுகிறது. ஆயினும் இவைகள் பாரம்பரிய அனுமானமாக இருப்பதினால், வசனங்களில் இதைப்பற்றி ஏதும் சொல்லப்படவில்லை. முன்பு ஒரு தருணத்தில் நம்முடைய ஆண்டவர் அவர்கள் வீட்டிற்கு வந்தபோது, மரியாள் அவர் பாதத்தருகே அமர்ந்து அவருடைய வாயின் வார்த்தைகளைக் கவனித்துக்கொண்டு, வீட்டு வேலைகளைக் கவனியாமல் விட்டதைக்குறித்து, ஆவிக்குரிய விஷயத்தில் கொஞ்சம் குறைவான ஈடுபாட்டையும் மற்றும் நடைமுறை விஷயத்தில் நல்ல காரியசக்தி உள்ளவளாகவும் இருந்த அவளது சகோதரியாகிய மார்த்தாள் குற்றம் சாட்டினபோதே மரியாள், “தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்தெடுத்துக் கொண்டாள்” என்று கூறினார்; அதாவது பணிவிடைகள் அங்கீகரிக்கப்படக்கூடியவைகளாகவும், பாராட்டப்படக்கூடியவைகளாகவும் இருப்பினும், பக்தியும் ஐக்கியமுமே மிகவும் அங்கீகரிக்கப்படக்கூடியவைகள் என்ற விதத்தில் கர்த்தர் கூறினார் என்பதை நாம்

நினைவில்கொள்ளலாம்.

நம்முடைய ஆண்டவருடைய பூமிக்குரிய ஜீவியத்தை நிறைவுசெய்யும் உபத்திரவங்கள் சம்பவிப்பதற்கு முன்பாக, இந்த இரண்டு சகோதரிகளும் எல்லா விதங்களிலும் அவருக்கு இந்த விருந்தில் ஊழியம் செய்வதற்கு நாம் பொறாமைக் கொள்வதற்கு ஏதுவான சிலாக்கியத்தினைப் பெற்றிருந்தார்கள். முன்புபோல் இப்பொழுதும்கூட இந்த இரண்டு சகோதரிகளின் பணிகள், வெவ்வேறாக இருந்தன; எனினும் இம்முறை முன்னேற்பாடுகளுடனும், ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புடனும் இவர்கள் பணிகளைச் செய்திருக்கக்கூடும். பந்தியில் அமர்ந்தவர்களுக்கு, மார்த்தாள் மற்றவர்களோடுகூட உணவுகளைப் பரிமாறியிருக்க வேண்டும். அதேநேரத்தில், மரியாள் குறிப்பான விசேஷித்த வேலைக்காக ஆயத்தமாயிருந்திருக்க வேண்டும். அவள் ஏதோ ஒரு விதத்தில் விலையேறப்பெற்ற நளதம் என்னும் தைலமாகிய வெள்ளைக்கல் பரணியைப் பெற்றிருந்தாள். ஒருவேளை அவள் பரணியை விலைகொடுத்து வாங்கி அதிகநேரம் செலவழித்துத் தைலத்தை உண்டுபண்ணி யிருக்க வேண்டும் அல்லது தைலத்தை வாங்குவதற்கும்கூட அதிகளவு பணம் செலவழித்திருக்க வேண்டும். ஆண்டவரின் வருகையை அவள் முன்னறிந்தவளாக அந்த விருந்தின்போது, உலகத்தின் மிகச்சிறப்பான சக்ரவர்த்திகள், இராஜாக்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் நடத்தபடுவதுபோல, ஆண்டவரையும் அபிஷேகிக்க வேண்டும் என்று முழுமையாக அந்த இராவிருந்தில் ஏற்பாடு பண்ணியிருந்தாள். இராஜாக்கள், சக்ரவர்த்திகள், முதலானவர்களே இவ்விதமாய்த் தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்படுவார்கள்; இத்தகைய விலையுயர்ந்த காரியத்திற்குச் செலவிடுவது, மற்றவர்களுக்கு மிகவும் அரிதாய் இருந்தது. ஏனெனில், நறுமணதைலம் தயாரிப்பதற்கான வசதிகள் நமக்கு இன்று காணப்படுவதுபோல் அக்காலத்தில் இருக்கவில்லை; ஒருவேளை வீட்டிலேயே நறுமணதைலம் தயாரிக்கப்பட்டாலும், அதற்காகச் செலவிடப்பட்ட நேரம் மிகுதியாக இருந்தபடியினால் அதை மிகவும் விலையேறப்பெற்றதாகக் கருதி மிகுந்த ஐசுவரியவான்களுக்கு மாத்திரமே விற்பது வழக்கமாய் இருந்தது.

விருந்து துவங்கியது, இயேசு தம்முடைய சீஷர்களோடும், மற்ற விருந்தினர்களோடுங்கூட மேஜையில் அமர்ந்திருந்தார். கிழக்கத்தியரின் வழக்கத்தின்படி நீண்ட, குறுகின மேஜையைச் சுற்றி விருந்தினர்கள் தங்களுடைய கால்களை நீட்டினபடியே, படுக்கை அல்லது திவான் மேல் சாய்ந்தவண்ணம் அமர்ந்திருப்பார்கள். ஒரு முழங்கையின் மீது சரீரத்தின் மேற்பாதியைச் சாய்த்துக்கொள்வதும், மற்றக் கரத்தைக்கொண்டு உணவை வாய்க்கு எடுத்துச் செல்வதும் வழக்கமாய் இருந்தது. நம்முடைய வழக்கத்தின்படி பயன்படுத்தப்படும் நாற்காலிகளில் உட்காருவது அக்காலத்தில் அவர்களுடைய வழக்கமாய் இருக்கவில்லை.

மார்த்தாளும், அவளுடைய தோழிகளும் உணவு பரிமாறிக் கொண்டிருக்கையில், மரியாள் முன் வந்து, தான் வைத்திருந்த வெள்ளைக்கல் பரணியை உடைத்து, நம்முடைய ஆண்டவரின் தலையில் அந்த விலையேறப்பெற்ற தைலத்தை ஊற்றினாள்.

அதைத் தொடர்ந்து, மீதமுள்ள தைலத்தை அவருடைய பாதங்களில் ஊற்றி, தன்னுடைய தலைமயிரினால் துடைத்தாள் என்று யோவான் பதிவு செய்துள்ளார். நமது கர்த்தருக்கான மரியாளினுடைய அன்பானது மிகவும் ஆழமானதாகவும், மிகவும் பலமானதாகவும் காணப்பட்டப்படியால், ஏதேனும் சாதாரணமான செயல்களைச் செய்வதில் அவ்வன்பிற்குத் திருப்தி இருந்திருக்காது. பூமியின் இராஜாக்கள் இப்படிப்பட்ட தைலத்தினால் அபிஷேகிக்கப்படுகையில், அவளுடைய சிநேகிதரும், அவளுடைய ஆண்டவரும், மேசியாவுமாக இருந்தவரை சிறந்த தைலத்தினால் அபிஷேகிப்பது அவளுக்கு மிகப் பொருத்தமாய்த் தோன்றியது. அவர் மீது அவள் கொண்டிருந்த அன்பு மிகுதியாய் இருந்தபடியினால், அவ்வன்பானது சிக்கனம் என்ற விஷயத்தை அறியாமல் இருந்தது. அதாவது அவளுடைய பிரியமானவருக்கு, தான் அளிக்கும் எக்காரியமும் மிகச் சிறப்பானதாய்க் காணப்படாது என்று எண்ணினாள். தன் இருதயத்தில் அவள் கொண்டிருந்த உச்சிதமான அன்பை, இப்படிப்பட்ட விலையுயர்ந்ததும், மிக நேர்த்தியானதுமான நறுமணதைலத்தைக் கொண்டு அபிஷேகித்து வெளிப்படுத்தினாள். அந்த வீடு முழுவதும் வீசின நறுமணதைக் காட்டிலும், அதிக நறுமணமாய்க் காணப்பட்ட நறுமணத்தை – அதாவது மரியாளை இப்படிச் செய்ய தூண்டின, அவளது இருதயத்தினுடைய அன்பின் நறுமணத்தை – இக்காரியங்களை முழுமையாக நம்முடைய ஆண்டவர் புரிந்துகொண்டார்.

ஆனால் சீஷர்கள் சுயநலமாக இருந்தபடியினாலும், மரியாளுடைய உண்மையான உணர்வைப் புரிந்துக்கொள்ள முடியாமல் இருந்தபடியினாலும் அவளிடத்தில் குற்றம் கண்டுபிடித்தார்கள். இக்குற்றம் கண்டுபிடித்தலுக்கு வழிநடத்தும் தலைவனாகவும், வாயாகவும்/கருவியாகவும், மற்றும் குற்றம் கண்டுபிடித்தலின் ஆவியை மற்றச் சீஷர்களுக்குள் தூண்டிவிட்டவனுமாய் இருந்தவன், சீஷர்களின் கூட்டத்திற்குப் பொருளாளராக இருந்த யூதாஸ் ஆவான் என்று பதிவுகள் தெரிவிக்கின்றன. அந்த விலையேறப்பெற்ற தைலத்தின் விலைக்கிரயம் தன்னுடைய பணப்பையில் வந்து சேரவில்லை என்றும், அப்படி ஒருவேளை வந்தால் அதில் கொஞ்சத்தையாகிலும் எடுத்துத் தன்னுடைய தனிப்பட்ட தேவைகளுக்கென்று செலவு செய்ய முடியாமல் போயிற்றே என்றும் உள்ள விஷயங்களே அவனுக்கு ஏமாற்றமாய் இருந்தது. ஏனெனில், "அவன் திருடனானபடியினால் பணப்பையை சுமந்தவனாக இருந்தான்..." என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. யூதாஸ் எதிர்ப்புத் தெரிவித்த விஷயத்தை வைத்துப் பார்க்கும்போது மரியாள்தான் இத்தைலத்தைத் தயாரித்தாள் என்பது தெரியவருகிறது; ஏனெனில் அதை அதிக பணம் கொடுத்து வாங்கினதற்காக யூதாஸ் குற்றம்சாட்டவில்லை; மாறாக அதை 300 பணத்திற்கு விற்றிருக்கலாம் என்றுதான் குற்றம்சாட்டுகின்றான். இந்தத் தைலம் 300 உரோம தினாரி, அதாவது 48 டாலர்கள் மதிப்பு உள்ளது மற்றும் இன்றைய பண மதிப்பின்படி இதற்கு அதிக தொகைக் காணப்படும். அக்காலத்தில் ஒரு தினாரி ஒரு நாளின் கூலியாக இருந்ததை நாம் அறிந்திருக்கிறோம்; இப்படியாக 300 தினாரி என்பது ஒரு வருடத்தின் வேலைக்கான கூலியாக இருந்திருக்க வேண்டும். ஆகவே, இந்தத் தைலம் கணிசமான தொகை மதிப்புள்ளதாக இருந்திருக்க வேண்டும். இப்படி மரியாள் தைலத்தை

இயேசுவின்மீது ஊற்றினது, வரம்பு மீறின செயல்பாடு என்பது உண்மைதான். ஆனால் இது அவளுடைய வரம்பு மீறின அன்பை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. மேலும் இது தேவனும், தூதர்களும் கனப்படுத்த விரும்பும் கர்த்தருக்காகச் செலவிடப்பட்டது. மேலும் கர்த்தருடைய உண்மையான மதிப்பை அத்தருணத்தில் அவரோடுகூட இருந்த அனைவரைக் காட்டிலும், அதிகமாய் மரியாளே உணர்ந்திருந் தாள்.

அன்பு நிறைந்த மரியாள்! அவள் மற்றவர்களும் புரிந்துகொள்வார்கள் என்ற எதிர்பார்ப்புடன் தனது அன்பின் வெளிப்படுத்தலாகிய இந்த விலையேறப்பெற்ற தைலத்தைத் தயாரித்துக்கொண்டிருக்கும்போது, எத்தகைய உணர்வுகள் அவளுடைய இருதயத்தில் நிரம்பியிருந்திருக்கும் என்பதை நம்மால் ஓரளவுக்குக் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது. ஆனால் இப்பொழுதோ, எல்லாம் எதிர்மாறாகக் காணப்பட்டது; தன்னுடைய நண்பர்களும், விருந்தாளிகளுமாய் இருந்த கர்த்தரின் நெருங்கிய தோழர்களுடைய கோபத்தை அவள் எதிர்கொள்ள வேண்டியதாய் இருந்தது; கர்த்தரும்கூடச் சீஷர்களைப்போன்றே தனது செயல்பாடுகளைக் கருதி அதைப் புறக்கணித்து, தான் அளித்த நறுமணதைலத்தைக் குறித்துக் கண்டனம் தெரிவித்துவிடுவாரோ என்ற அச்சங்கள் அவளுடைய இருதயத்தை மூழ்கடித்தது. நம்முடைய கர்த்தர் அவளுடைய கிரியைகள் நேர்த்தியானது என்று கூறி, அவளுடைய உணர்வுகளுக்குச் சீஷர்களால் இரக்கம் காட்ட முடியவில்லை என்று அவர்களைக் கடிந்துகொண்டு, தம்முடைய சரீரத்தின்மேல் அவள் நறுமணதைலம் ஊற்றின காரியமானது, தம்முடைய அடக்கத்திற்கான ஆயத்தம் என்று அவர்களிடத்தில் கூறுவதை அவள் கேட்டபோது, அவளுடைய இருதயத்திலிருந்து எத்தகைய பெருஞ்சுமைகள் இறக்கிவைக்கப்பட்டிருக்க வேண்டும். இயேசுவுக்கும், அப்போஸ்தலர்களுக்கும் இடையில் நடந்த இந்தச் சம்பாஷணையின்போது, மரியாள் அநேகமாக அந்தத் தைலத்தைத் தலையில் மட்டுமல்ல, அவருடைய பாதத்திலும் ஊற்றி, அவருடைய பாதங்களை தன்னுடைய தலைமயிரினால் துடைத்திருக்க வேண்டும். மேலும், அவள் தனது தலைமயிரை அவருடைய பாதங்களைத் துடைப்பதற்குப் பயன்படுத்தின காரியமானது, தனக்கு அலங்காரமாய் இருப்பவைகளிலேயே மிக விலையேறப்பெற்ற விஷயத்தை கர்த்தருக்கு பணிவிடை செய்ய பயன்படுத்தியதில் அவள் மகிழ்ச்சி கொண்டதற்கான சான்றாக உள்ளது.

மரியாள் ஆண்டவரின் சரீரத்தை அடக்கம் செய்யக்கூடிய சிந்தனையில் அவரை அபிஷேகித்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், அவர் பேசின வார்த்தைகளை மிக ஆச்சரியத்தோடு மரியாளும், மற்றவர்களும் கேட்டுக்கொண்டிருந்திருக்க வேண்டும். பண்டைய காலத்தில் மரித்துப்போன பிரேதத்தை அடக்கம் செய்வதற்கு இப்படிப்பட்ட வாசனை திரவியங்களை ஊற்றி ஆயத்தம் செய்வது வழக்கமாயிருந்தது. இவைகளுக்குத் தாராளமாக பணத்தைச் செலவழிப்பார்கள் - இக்காலத்தில் நாமுங்கூட மிக அழகான சவப்பெட்டிகளையும், விலையுயர்ந்த பூக்களையும், மலர் வளையங்களையும் அன்பின் வெளிப்பாடாக வைப்பதுண்டு. இரட்சகர் உயிரோடு இருக்கும்போதே மரியாள் அவர் மீது விலையேறப்பெற்ற தைலத்தை ஊற்றின

காரியமானது, நாம் அன்புசெய்கிறவர்களிடத்தில் நாம் கையாளவேண்டிய மாதிரியை நமக்குக் காட்டுகின்றது. நம்முடைய நண்பர்கள் மரிக்கும் வரையிலும் நாம் காத்திருந்து அவர்களுடைய உணர்வற்ற மற்றும் எதையும் புரிந்துகொள்ள முடியாத சடலங்களுக்கு நமது கவனத்தைச் செலுத்துவதைக்காட்டிலும், அவர்கள் உயிரோடு இருக்கும்போதே நாம் நம்முடைய தைலமுள்ள பரணியைத் திறந்து, அவர்களுடைய தலையின் மீதும், சோர்ந்துபோன அவர்களுடைய பாதங்கள் மீதும் ஊற்றுவது நலமாய் இருக்கும். நம்முடைய வெள்ளைக்கல் பரணிகள் நம்முடைய இருதயங்களாக இருக்கின்றது. அவைகள் நல் வாழ்த்துதல்கள், இரக்கம், எல்லோரிடத்திலும் அன்பு, அதிலும் விசேஷமாக தலையாகிய கிறிஸ்துவாகிய நமது கர்த்தர் இயேசுவிடத்திலும், அவருடைய சரீரமாகிய சபையின் அங்கங்களிடத்திலும் அன்பு எனும் ஐசுவரியமும், இனிமையும் உள்ள நறுமணதைலங்களினால் நிரம்பியிருக்க வேண்டும்; அதிலும் விசேஷமாக இப்பொழுது நம்மோடுகூட இருக்கும் பாத அங்கங்கள் மீதான அன்பிலும் நிரம்பியிருக்க வேண்டும்; இந்த பாத அங்கங்கள் மீது இனிமையான வாசனையுள்ள அன்பையும், ஈடுபாட்டையும் நாம் அவருடையவர்களாய் இருப்பதினால், கர்த்தருடைய நாமத்தில் காட்டுவதற்கான சிலாக்கியம் இப்பொழுது நமக்குரியதாய் இருக்கிறது.

"எத்தனைதரம், கவனமற்றவராய் இருந்துள்ளோமே, இருந்துள்ளோமே;
காத்திருந்திருக்கிறோமே ஜீவியத்தின் இனிமையான நிகழ்வுகள் ஓய்ந்திடும்வரை!
உடைத்திடுகின்றோமே நம்முடைய தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியை,
மணம் வீச கடைசி தருணத்தின்போதே!

ஓ! ஜீவனோடுள்ள மற்றும் நம்மைப்போன்று பாடுள்ள
நமது நண்பனுக்குச் செலுத்திடுவோமே கவனத்தினை!
அன்பின் பார்வைக்காய், கண்களைப் பார்க்கின்ற நண்பனுக்கு,
பாராட்டின் வார்த்தைக்காய் ஏங்குகின்ற நண்பனுக்குச் செலுத்திடுவோமே
கவனத்தினை!"

தேவனிடத்தில் அர்ப்பணித்த ஒவ்வொரு உண்மையான பிள்ளைகளும் வெள்ளைக்கல் பரணி போன்ற தங்களுடைய இருதயத்தில் பரிசுத்த ஆவி, அன்பின் ஆவி, விசேஷித்த நறுமணம் வீசும் தைலம், கர்த்தருக்கும் மனுஷருக்கும் மிகவும் விலையேறப்பெற்றதுமான நறுமணங்களைப் பெற்றிருக்க வேண்டும். இருதயத்திற்குள் இவ்விஷயங்கள் உடனுக்குடன் சேகரிக்கப்பட முடியாததினால் இவைகள் விலையேறப்பெற்றவைகளாகும். ஆகவே, "தேவனுடைய பரிபூரணத்தினால் முழுமையாக நிரப்பப்படுவதற்கு" நீடியபொறுமை தேவைப்படுகிறது. சொல்லர்த்தமான பரணியின் முத்திரையை உடைப்பதற்கு முன்பல்ல, முத்திரை உடைத்த பின்னர் உள்ளிருந்த தைலம் வெளியே ஊற்றின பிற்பாடே அதற்குரிய நறுமணம் வெளிப்பட்டது. இக்காரியம்போன்றே, நம்முடைய இருதயத்தின் விஷயமும் காணப்படுகின்றது; ஆனால் நம்முடைய இருதயங்களிலிருந்து இத்தைலங்கள் தொடர்ச்சியாகப்

பொழிந்துக்கொண்டிருந்தாலும், இருதயத்திற்குள் அதின் அளவு பெருகிக்கொண்டே இருக்கின்றது என்னும் விஷயத்தில் நம்முடைய இருதயங்கள், மரியாளுடைய சொல்லர்த்தமான பரணியைப் போல் இருப்பதில்லை (சொல்லர்த்தமான பரணிகளின் முத்திரைகள் உடைக்கப்பட்டு, தைலம் வெளியே கொட்டும்போது, பரணிக்குள் இருக்கும் தைலத்தின் அளவு குறைகிறது; ஆனால் நம்முடைய இருதயத்தின் விஷயத்தில் இப்படியாக இருப்பதில்லை).

தைலமானது, கர்த்தர்மேல் அதாவது அவருடைய தலையின்மீதும், பின்னர் அவருடைய சரீரத்தின் தாழ்மையான மற்றும் எளிமையான பாதத்தின்மீதும் மரியாளினால் ஊற்றப்பட்டது போன்றே, நம்முடைய இருதயங்களும் அதற்குள் காணப்படும் பரிசுத்தமான அன்பும் காணப்படவேண்டும். மற்றவர்களால் இக்கிரியைகளைப் புரிந்துகொள்ளாத பட்சத்திலும், நாம் நம்முடைய அன்பையும், ஈடுபாட்டையும் பாவிகள் அல்லது தரித்திரர் நிலையிலுள்ள புறஜாதி உலகத்தார் மீது காட்ட வேண்டும் என்று மற்றவர்கள் எண்ணினாலுங்கூட, நம்முடைய பணி மரியாள் செய்தது போன்றதாகவே காணப்படவேண்டும். ஏனெனில் ஆயிரம் வருஷஆட்சியில் இந்த உலகம் ஆசீர்வதிக்கப்படுவதற்கு அதிகமான வாய்ப்புகள் கொடுக்கப்படும் என்பதை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். அப்பொழுது ஆண்டவரோடுகூட அவருடைய சீஷர்களும் இந்த மனுமக்களை ஆசீர்வதிப்பதற்கு ஒருமித்துச் செயல்படுவார்கள். ஒருவேளை நாம் நம்முடைய இருதயத்தின் பொக்கிஷங்களைக் கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்மேல் ஊற்றுவதற்குச் சிலர் அறியாமையில் தடை செய்தால், அவைகளால் நாம் சோர்ந்து போகாமல், ஆண்டவரின் உற்சாக மூட்டும் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, அவர் நம்மை அங்கீகரித்துக் கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்தவர்களாய், சரீரமாகிய சபை முழுமையாக மரிப்பதற்கு முன்னதாக அவர்களுக்கு அளிக்க வேண்டிய ஆறுதலை அளிக்கக்கடவோம். ஆகவே பரிதாபத்திற்குரிய உலக ஜனங்களைக்காட்டிலும், கிறிஸ்துவுடைய பாடுகளுக்குப் பங்காளிகளாக இந்தப் பூமிக்குரிய ஓட்டத்தைப் பரதேசிகளாய் ஓடி முடிக்கக்கூடிய சபை வகுப்பாருக்கு முதலில் ஆறுதல் அளித்து, புத்துணர்வு ஊட்டுவதே ஏற்றதாயிருக்கிறது. கிறிஸ்துவின் பாடுகள் நிறைவடைந்த பிற்பாடு கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஆறுதல் அளிப்பதற்கும், உற்சாகம் அளிப்பதற்குமான வாய்ப்புகள் இருக்காது. ஆகவே கிறிஸ்துவினுடைய பாடுகள் நிறைவடையும் வரையிலும் இக்காரியங்களை நாம் செய்துக்கொண்டு வரவேண்டும்; இவர்களைக் குறித்துதான் நமது கர்த்தர் இவர்களுக்குச் செய்யப்படுவது எதுவோ அது தமக்கே செய்யப்பட்டதாகக் கருதப்படும் என்று கூறினார். (மத்தேயு 25:40)

ஆகவே, மார்த்தாள் போன்றவர்கள் தங்களுக்குரிய வழியிலும், மரியாள் போன்றவர்கள் தங்களுடைய மிகுந்த விலையேறப்பெற்ற நளததைலங்கள் மூலமும், தங்கள் இருவரின் ஊழியங்களில் ஒன்றும் மறக்கப்படுவதில்லை என்ற நிச்சயத்துடன் ஊழியம் செய்வார்களாக. ஏனெனில், இவர்கள் இருவரையும் பாராட்டும் விதமாகவும், மற்றவர்கள் இவர்களைக்குறித்து, எப்படி எண்ணியிருந்தாலும் சரி, இவர்கள் இருவருடைய அன்பைக் கர்த்தர் உணர்ந்தும், ஏற்றுக்கொண்டும் இருந்தார்

என்பதற்கான சாட்சிகளாகவும், இவர்கள் இருவரை நினைவுகூரும் வண்ணமாகவும் இவர்கள் இருவரும் பேசப்பட்டார்கள், 18 நூற்றாண்டுகளாகப் பேசப்பட்டும் வருகின்றார்கள்.

## சுயநலமான இருதயங்களில் இருந்து வரும் எதிர்ப்புகள்

மரியாளின் பக்திக்குரிய வெளிப்பாட்டை எதிர்த்தும், தரித்திரரின் சார்பாக மிகக் கனிவோடு பேசின அந்த மனுஷன் யார் என்றால், திருடனும், கொலைபாதகனுமாகிய யூதாஸ்காரியோத் ஆவான். இப்படிப்பட்டக் கோட்பாடு, சுவிசேஷ யுகம் முழுவதிலும் நல்ல கோட்பாடு என்று கருதப்பட்டும் வருகிறது. அதாவது, கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அர்ப்பணிக்கப்பட்ட அங்கங்களை அபிஷேகிப்பதிலும், ஆசீர்வதிப்பதிலும் விலையேறப்பெற்ற நேரம் செலவிடப்படுவதைக் குறித்து எதிர்ப்புத் தெரிவித்தும், சமுதாயச் சேவைகளுக்கு சார்பாக மிகுந்த கூக்குரல் எழுப்பிக்கொண்டிருப்பவர்கள், எப்போதும் இருதயத்தில் விசேஷமாக புறஜாதி ஜனங்களுக்குரிய நலனுக்கடுத்த விஷயத்தில் அக்கறைக்கொண்டவர்கள் அல்ல, மாறாக சுயநல நோக்கம் கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். மனசாட்சியுடைய கர்த்தருடைய அருமையான ஜனங்கள் இப்படிப்பட்ட மாய்மாலக்காரர்களால் அடிக்கடி தவறாய் வழிநடத்தப்படுகிறார்கள்; கர்த்தருக்குப் பிரியமான காரியத்தைச் செய்த மரியாளுக்கு எதிராக மற்ற அப்போஸ்தலர்கள் நியாயமான கோபம் கொள்ளத்தக்கதாக யூதாஸ்கூட ஒரு சமயத்தில் அப்போஸ்தலர்களை, தனது போலி பேச்சினால் தவறாய் வழிநடத்திவிட்டான். மேலும் மரியாள் செய்தது கர்த்தருக்குப் பிரியமாக காணப்பட்டதன் காரணமாகவே இந்தச் சுவிசேஷம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுகின்றதோ, அங்கு இவள் செய்ததும் நினைவுகூரப்படும் என்று கர்த்தர் கட்டளையிட்டார்.

இந்நாளிலும் கூட 350-க்கும் மேலான மொழிகளில் இச்சுவிசேஷமானது உலகத்திலுள்ள ஒவ்வொரு முக்கியமான தேசங்களுக்கும் பிரசங்கிக்கப்பட்டுள்ளது. நமது கர்த்தர் மரியாள் நினைவுகூரப்படவேண்டும் என்று மாத்திரம் விருப்பம் கொள்ளாமல், விசேஷமாக அவளுடைய கிரியைகள் நினைவுகூரப்பட வேண்டும் என்றும் விரும்பினார். நற்செய்தியை அறிந்துக்கொள்ளக்கூடிய அனைவரும் இப்படியாக தமக்கும், தம்முடைய சரீரத்திற்கும் காண்பிக்கப்பட்ட இவ்விதமான அன்பை, தாம் அங்கீகரிக்கின்றார் என்றும், நம்முடைய அன்பு எவ்வளவு விலையுயர்ந்ததாய் இருக்கின்றதோ, அவ்வளவாய் அவர் அதை அங்கீகரிக்கவும் செய்கின்றார் என்றும் அறிந்துக்கொள்ள வேண்டுமென விரும்புகின்றார். இக்கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது கர்த்தருடைய பார்வையில் பிரியமாய் இருக்கும் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள மற்ற அங்கங்கள் மீது தன்னுடைய இருதயத்திலிருந்தும், ஜீவியத்திலிருந்தும் நறுமணதைலங்களைப் பொழிவதற்குத் தொடர்ந்து நாட வேண்டும். மேலும், இப்படிச் செய்வதன் மூலம் அவன் கர்த்தருக்குப் பிரியமாய் இருப்பதோடல்லாமல் தனக்கு ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்வான் என்று உணர்ந்துக்கொள்ளக்கடவன். ஏனெனில், எந்த

வெள்ளைக்கல் பரணியும் அதன்மேல் தைலம் படாமல் மற்றவர் மீது தைலத்தை ஊற்ற முடியாது; இப்படியாகவே நம்முடைய இருதய விஷயங்களிலும் காணப்படுகின்றது. அதாவது, நம்முடைய இருதயங்கள் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகிய மற்றவர்கள் மீது கர்த்தருக்காகவும், அவருடைய நோக்கங்களுக்காகவும் கொண்டிருக்கும் அன்பு மற்றும் அர்ப்பணிப்பு எனும் நறுமணதைலங்களை ஊற்றுகையில் இக்காரியமானது தற்காலத்திலேயே கர்த்தருடைய அங்கீகரிப்பையும், ஆசீர்வாதத்தையும் மற்றும் எதிர்காலத்திலும் நமக்கு ஆசீர்வாதங்களை நிச்சயமாய்க் கொண்டுவரும்.

கிறிஸ்துவின் சரீர அங்கங்களை அடக்கம் செய்வதற்காக அவருடைய சத்தியம் மற்றும் கிருபை என்னும் தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்படுவதற்குத் தற்காலத்தில் ஏறெடுக்கப்படும் சில முயற்சிகள் உடன் சீஷர்களால் கண்டிக்கப்படலாம். உதாரணத்திற்கு, உதவி பணிகளுக்கென ஒரு வருடத்திற்குச் செலவிடப்படும் நேரம், ஆற்றல், மற்றும் அதிகப்படியான பணங்கள் கர்த்தருடைய அருமையான பிள்ளைகளில் அநேகரால் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு, யூதாஸ் கூட்டத்தாரால் கசப்பான விதத்தில் கண்டனம் செலுத்தப்படும். ஆயினும், ஆண்டவரின் அங்கீகரிப்பை உணர்ந்துகொண்டு, நம்முடைய பாத்திரம் மகிழ்ச்சியினால் நிரம்பி வழிவதற்கு நாம் அனுமதிக்கின்றோம். (சகோதரர் ரசல் கூறுகின்றார்). நம்முடைய உடன் சீஷர்களோ, நாங்கள் ஏற்றக் கால சத்தியத்தை விசுவாச வீட்டாருக்கு மாத்திரமே கொடுத்துக்கொண்டிருக்காமல், பாவிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று நம்மிடத்தில் கூறுவதுண்டு; தற்கால சத்தியம் என்னும் இனிமையான தைலத்தைக் கொண்டு பரிசுத்தவான்களை அபிஷேகம் பண்ணுவதற்கு நாம் நாடிக்கொண்டிருக்காமல், மாறாக நாம் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள் மத்தியில் செல்லவேண்டும் என்றும், குடிசையில் வாழும் ஜனங்கள் மத்தியில் சேவையில் ஈடுபடவேண்டும் அல்லது வெளிநாடுகளில் சென்று ஊழியம் புரிய வேண்டும் என்றும் நம்மிடம் கூறுவதுண்டு. யூதாஸ் வகுப்பாருக்குரிய உண்மையான பிரச்சனை என்னவெனில், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் சத்தியம் பரிமாறப்படுமாயின், தங்கள் பணப்பெட்டிகளுக்குள்ளே சேர்த்துவைக்கலாம் என்று இவ்வகுப்பார் எண்ணின பணங்கள், சத்தியம் பரிமாறப்படுவதின் வேலைகளில் செலவழிந்துபோய்விடுமே என்ற அச்சமாகவே இருந்தது. இன்னுமாக, கிறிஸ்தவ பிரிவு சபைகளிலுள்ள எண்ணிக்கையும், செல்வாக்கும் குறைந்துவிடும் என்றும் இவர்கள் அஞ்சுகின்றனர். ஆனால், இவர்களுடைய பயங்கள் பெரும்பாலும் கற்பனையாகவே இருந்தது. ஏனெனில், சத்தியம் என்னும் நறுமணதைலமானது, கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் மீது மாத்திரமே ஊற்றப்படக்கூடிய விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்படிப்பட்ட சரீர அங்கங்களிடத்திலேயே சத்தியம் சென்றுசேரத்தக்கதாகவும், மற்றவர்களிடத்தில் இச்சத்தியமானது, எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாத விதத்தில் கர்த்தர் வழிநடத்துவார் என்றே நம்முடைய விசுவாசம் காணப்படுகின்றது. அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்கள் வெகுசிலராக இருப்பதினால், அவர்களுடைய அபிஷேகம் பண்ணப்படுதலும், பாபிலோனிடமிருந்து அவர்களுடைய பிரிக்கப்பட்ட ஜீவியமும், அவர்களுடைய அடக்கமும், அவர்கள் சொற்பமாய் இருக்கும்

காரணத்தினால், கவனிக்கப்படுவதில்லை என்றாலும், இவ்வமைப்புகளிலிருந்து உப்பாகவும், ஒளியாகவும் அவர்கள் எடுக்கப்படும் காரியமானது, இவ்வமைப்புகளுக்கு பயங்கரமான பாதிப்பையும், வரவிருக்கிற மகா உபத்திரவக் காலத்தில் இவ்வமைப்பு வீழ்ச்சியடைந்து போவதற்கு ஏதுவாகவும் இருக்கிறது. (மத்தேயு 5:13, 14)

ஆகவே மரியாள் மற்றும் யூதாசின் எதிரடையான நடத்தையில் மாதிரியாக்கப்படும் அன்பு மற்றும் சுயநலத்திற்கு இடையில் உள்ள மிகப்பெரிய வேறுபாட்டை நாம் தெளிவாக அறிந்துகொள்ள மறக்க வேண்டாம். மரியாள் எரிகிற அன்பினால் நிரப்பப்பட்டிருந்தபடியால், அவளுடைய கர்த்தரைக் கனப்படுத்துவதற்கும், ஆறுதல் படுத்துவதற்கும், பிரியப்படுத்துவதற்கும் அதிக காரியங்களைப் பலி செலுத்துவதற்கு விருப்பம் கொண்டிருந்தாள். மாறாக, யூதாஸ் பலி செலுத்துவதற்கு விருப்பம் கொள்ளாமலும், அடிமைக்குரிய விலையாகிய 30 சேக்கல் வெள்ளிக்காக தனது கர்த்தரை அவருடைய சத்துருக்களிடம் விற்றுப் போடுவதற்கும் விருப்பமுள்ளவனாய் இருந்தான். இதுமாத்திரமல்ல, மரியாளிடம் வெளிப்பட்ட அன்பு சாதகமான தாக்கத்தை யூதாசிடம் ஏற்படுத்தவில்லை. எதிர்மாறான தாக்கத்தையே ஏற்படுத்திற்று. மரியாளுடைய அன்பும், அதை நமது கர்த்தர் அங்கீகரித்த விஷயமும் யூதாசுக்குள் எதிர்ப்பின் ஆவியைத் தூண்டிவிட்டதுபோல் தோன்றுகின்றது. ஏனெனில், நமது கர்த்தரைக் காட்டிக்கொடுக்கும்படிக்குப் பிரதான ஆசாரியனுடன் பேரம் பேசி ஆலோசிப்பதற்குப் புறப்பட்டுச் சென்றான் என்று பார்க்கின்றோம்.

தான் செய்யக்கூடிய வேலைக்கான பணத்தை, யூதாஸ் முன்னதாகவே வாங்கினான் என்று அதன் கிரேக்க வார்த்தையும், Revised Version – என்ற மொழியாக்கமும் தெரிவிக்கின்றது. அவன் அவர்களோடு ஒப்பந்தத்தைப் பண்ணிக்கொண்டான். பொல்லாப்பான வேலைக்காக தன்னை விற்றுப்போட்டான். அதாவது, தனக்கு நன்மை செய்தவராகிய கர்த்தருக்கு எதிராக பொல்லாப்புச் செய்ய தன்னை விற்றுப்போட்டான். கர்த்தருடைய வல்லமை என்ன என்று அவன் முழுமையாக அறிந்திருந்தான். மேலும், அவன் வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதற்கும், பிசாசுகளைத் துரத்துவதற்கும் ஏதுவாக, அவரிடத்திலிருந்து அதிகமான வல்லமையையும் பெற்றுக்கொண்டவனாய் இருந்தான். எவ்வளவு விநோதமான காரியம்! ஆயினும் அவன் செய்த குற்றத்திற்கு ஞானமாக காரணம் சொல்லுவதற்கு வழியைத் திட்டம் பண்ணி வைத்திருந்தான் என்பதிலும் ஐயமில்லை. சந்தேகத்திற்கு இடமின்றி, இந்நாளிலும் நம்முடைய ஆண்டவரை மறைமுகமாக பல பூமிக்குரிய நன்மைகளுக்காகவும், செல்வாக்குகளுக்காகவும் அல்லது பணத்திற்காகவும் விற்க துணிகிறவர்கள் நியாயமான காரணத்தைக் கூறுவதற்கு முயற்சிக்கிறார்கள். ஆனால் மரியாளைப் போல எந்தளவுக்கு நம்முடைய இருதயங்கள் உண்மையையும், அர்ப்பணிப்பையும் கொண்டிருக்குமோ, அவ்வளவாய் யூதாசின் நடத்தையானது நமக்கு வெறுப்பாயும், நம்மால் செய்ய இயலாததாயும் இருக்கும்.ஆயினும் இந்தக் குணலட்சணங்களுடைய உச்சக்கட்டமானது சடுதியாய் நிறைவு அடைந்துவிட வில்லை. துவக்கத்திலிருந்து மரியாளுக்குள் இருந்த அன்பு படிப்படியாக வளர்ச்சியடைந்துக்கொண்டிருந்தது; போதகரின் பாதப்படியிலிருந்து அவர் அளிக்கும்

ஆவிக்குரிய போஷாக்கைப் பெற்றுக்கொள்வதற்கு அவள் கையாண்ட வழக்கத்தின் மூலம் அவளது அன்பு அதிகம் பலம் அடைந்தது; இது தொடர்பாகத்தான் மரியாள் நல்ல பங்கைத் தெரிந்துக்கொண்டாள் என்று கர்த்தர் கூறினார், எனினும் மார்த்தாள் அங்கீகரிக்கப்படாமலும் விடப்படவில்லை. மேலும் ஆண்டவருடைய வல்லமை பல வழிகளில் செயல்படுவதை கண்டபோது, அதிலும் விசேஷமாக அவளது சகோதரன் கல்லறையிலிருந்து உயிரோடு வெளியே கொண்டுவரப்பட்டபோது, மரியாள் விசுவாசத்திலும், அன்பிலும் மேலும் வளர்ச்சியடைந்தாள். அவளுடைய முழு இருதயமும் இந்த அன்பினாலும், மற்றும் கர்த்தரைப்பற்றின புரிந்துகொள்ளுதலினாலும் நிரம்புவது வரையிலும் மற்றும் அதை விலையேறப்பெற்ற விதத்தில் அவருடைய தலையின் மீதும், பாதத்தின் மீதும் வெளிக்காட்டும் அளவுக்கு அவைகள் வளரும்வரையிலும், அவைகளை விருத்திசெய்துக்கொண்டே இருந்தாள். இதற்கு எதிரிடையாக, யூதாஸ் நீண்டகாலமாகச் சுயநலத்தின் ஆவியானது தன் இருதயத்திற்குள் அதிகமதிகமாய் ஊடுருவி வருவதற்கு அனுமதித்துக் கொண்டிருந்தான். மேலும் பணத்தினால் என்ன சாதிக்கலாம் என்ற எண்ணங்களுக்கு இடம் கொடுத்துப் பணத்தைச் சேகரித்து வைப்பதற்கான எண்ணங்களுக்கும் இடம் கொடுத்துவிட்டான். இது அவனது ஆத்துமாவை சங்கிலியிட்டப்படியால், நித்தமும் அவன் காணக்கூடிய ஆண்டவரின் குணநலன்களை உணர்வதைத் தடைசெய்தது; ஆகவே பணத்தைத் தவிர வேறு எதையுமே அவனால் எண்ணமுடியவில்லை. மேலும் படிப்படியாக இந்தச் சுயநலத்தின் கட்டுகள் அவனுடைய இருதயத்தைச் சுற்றிக் கடினமாய் இறுக்கிக் கொண்டிருந்தது. பின்னர் அவனுடைய இருதயத்திற்குள் இருந்த அன்பு, பக்தி, தோழமை தொடர்பான யாவற்றையும் வெளியே கசக்கிப் பிழிந்து வெளியேற்றிவிட்டது. மேலும், இவ்விதமாக அவன் சுயநலத்திற்கும், துரோகத்திற்கும், கீழ்த்தரத்திற்கும், நன்றியற்ற தன்மைக்கும் பிரதிநிதியானான். மேலும், அவனுடைய நாமம் இப்பண்புகளின் அர்த்தத்தைக் கொண்ட நாமமாகவும் விளங்கிவிட்டது. ஆகவே இங்குள்ள நமக்கான பாடம் என்னவெனில்: நீதி, நன்மை, அன்பு, மற்றும் பரிசுத்தம் தொடர்பான யாவற்றையும் பற்றின புரிந்துக்கொள்ளுதலையும், அன்பையும் நாம் விருத்திச்செய்ய வேண்டும்; இன்னுமாக சுயநலம், கீழ்த்தரம், இகழ்ச்சி, கனவீனம் தொடர்புடைய யாவற்றையும் விசேஷமாக நம்முடைய இருதயங்களிலிருந்தும், ஜீவியங்களிலிருந்தும், முடிந்தமட்டும் எதிர்த்துப்போராடி, அழித்துப்போட்டுவிட வேண்டும்.

## நறுமணத்தின் பெருவெள்ளம்

ஓர் உயர்ந்த மகாபெரிய வெள்ளைக்கல் பரணி, நமக்குமேல் விண்ணிலே உள்ளதே - அது படிப்படியாய் மனுக்குலத்தின் மீது ஊற்றப்படுமே! தெய்வீகத் தன்மையின் பொருளான அது, இனிய நறுமணதைலத்தால் நிரம்பப் பெற்றதே. ஒவ்வொரு பள்ளத்தாக்கையும் நிரப்பி உயர்ந்த மலையின்மேல் செல்வதற்கு - அது போதுமான அளவு உள்ளதுவே!

முன்பு மனிதர்களின் வாசஸ்தலத்தை நிரப்பிய பெருமழை வெள்ளம் போலல்லாமல், விரைவில் வேறொரு பெருவெள்ளம் வருமே! கடலிலும், மலைகளிலும், காற்றனைத்தையும் ஊடுருவி, அனைத்து இடத்திலும் வாசனை வீசிடுமே, வரவிருக்கும் அந்த வெள்ளத்தின் அனைத்து இனிமையுமே!

அந்த நறுமண வருடங்களில் மனிதர்களின் மனங்கள், சிந்தைகள் இனிமையாகும் வரை, அந்த இனிமையின் பெருக்கானது மனிதர்களின் கண்கள், காதுகளுக்குள் செல்லுமே!
மரணம், அழுகை, பிரச்சனையோடு முற்றிலும் தீமையான பாவம் நீங்கிய பின்,
வாழ்க்கையில் என்னே! ஒரு மனரம்மியம் இருக்குமே.
வாழ என்னே! ஓர் அருமையான சூழல் அமையுமே!

இந்தப் பேரின்ப பிரவாக மகிமையில், உன்னத உயரத்திலிருந்து கவனிக்கப்பட வேண்டி - நமது தேவன் ஞானமாகக் கட்டளையிட்டுள்ளாரே.
ஆனால் தங்களது தற்போதைய குறைவுற்ற இருப்பிலுள்ள - தைலத்திலிருந்து
பலவீனமான, ஆனால் மனமார்ந்த முயற்சியில் அநுதின ஆசீர்வாதம்
இப்பொழுதும் ஊற்றப்படுகிறதே!

நம்முடைய நளதத்தையும் முற்றிலும் ஊற்றி, ஆறுதல், சமாதானம், மகிழ்ச்சி ஆகியவற்றை நம்மைச் சுற்றியுள்ள தேவபிள்ளைக்கும் கொண்டுவருவோமாக!
அபிஷேகிக்கும் விதமான அந்த வார்த்தைகளும், கிரியைகளும் பாவத்தை
ஒழித்துக்கட்டுவதில், இயேசுவோடு இணைந்திட பாத்திரமான இருதயம்
இருப்பதைக் காட்டுகின்றதே.

ஓ! நான் அதன் மகத்தான தொடர்ச்சியைக் கூற, நீ அதனை கேள்!
அற்புதமான இனிமை அந்நாளில் பூமியின் குடிகளின் மீது பொழியுமே.
எதன் மீது ஊற்றப்பட்டதோ அதிலிருந்து வாசனை மேலெழும்புவதுபோல்
அந்த அனைத்து வாசனையும் எவரிடமிருந்து பூமிக்கு ஊற்றப்பட்டதோ அவருக்கே திரும்புமே!

-Pilgrim Echoes, p.504

# மிகவும் விலையேறப்பெற்ற தைலம்

## யோவான் 12:1-11

"இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்." மாற்கு 14:8

அன்று சனிக்கிழமை இரவாகக் காணப்பட்டிருக்க வேண்டும் என நாம் கருதுகின்றோம்; அதாவது, யூதர்களுடைய ஓய்வுநாள் ஆரம்பமாகும் மாலையில் ஆறு மணிக்குப் பின்னர், இயேசுவும் அவருடைய சீஷர்களும், மரண நித்திரையிலிருந்து எழுப்பப்பட்ட லாசருவும், அக்குடும்பத்தின் மற்றச் சில நண்பர்களோடு விசேஷித்த கனத்தை இயேசுவுக்குக் கொடுக்கும்படியாக அவருடைய நண்பர்களின் வீட்டில் ஆயத்தம் பண்ணப்பட்டிருந்த விருந்தில் அமர்ந்தார்கள். அவ்வீட்டிற்கு அவர் வந்துபோவதை, எப்பொழுதும் அவ்வீட்டார் விரும்பினார்கள். மேலும், பதிவுகள் தெரிவிக்கிற காரியங்களை வைத்துப்பார்க்கையில், அவருடைய ஊழிய நாட்களில், மற்ற வீடுகளுக்கு செல்வதைக்காட்டிலும், இவ்வீட்டிற்கே அவர் வந்துபோய் உள்ளார் என நாம் அறிந்துக்கொள்கின்றோம். இது பெத்தானியாவிலுள்ள லாசரு, மார்த்தாள் மற்றும் மரியாளின் வீடாகும். இது, குஷ்டரோகியாகிய சீமோனின் வீடு என்றும் அழைக்கப்பட்டது. மேலும், இந்தச் சீமோன், இக்குடும்பத்தில் தலைவராகிய தகப்பனாய் இருந்தார் என்று ஒரு அனுமானம் நிலவிக்கொண்டிருக்கிறது; வேறொரு அனுமானமோ, இந்த சீமோன் மார்த்தாளுடைய கணவர் என்றும், இப்பாடத்தின் சம்பவங்கள் நடந்த தருணத்தில் அவள் விதவையாய் இருந்தாள் என்றும் காணப்படுகின்றது.

நமது கர்த்தரும், அவர் சீஷர்களும் எருசலேமுக்குப் போய்க்கொண்டிருந் தார்கள். அவர்கள் போகிற வழியில் புறநகர் பகுதிகளில் பெத்தானியா காணப்பட்டது. அதற்கு முந்தின தினமாகிய வெள்ளிக்கிழமை அல்லது யூதர்களின் வாரத்தின் ஆறாம் நாளன்று, அவர்கள் அநேகமாக அங்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும். அவர்களை எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்த மார்த்தாளும், மரியாளும் அருமையான விருந்தை ஆயத்தம் செய்தார்கள். மேலும், யூதர்களின் முறைமையின்படி ஓய்வுநாளில் வேலை செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்ததினால், இப்படிப்பட்ட தருணங்களில் உணவு பண்டங்கள் முன்கூட்டியே ஆயத்தம் பண்ணப்பட்டிருக்க வேண்டும். பெத்தானியாவில் அவர்கள் கைக்கொண்ட ஓய்வுநாளைக் குறித்து எந்தப் பதிவுகளும் கொடுக்கப்படவில்லை என்றாலும், கர்த்தர் மற்றும் அவருடைய தெரிந்துக் கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்கள் மற்றும் அக்குடும்பத்தின் அருமையான அங்கங்கள் மத்தியில் நடந்த மகிழ்ச்சியான சம்பாஷணைகளை நாம் நன்கு கற்பனை செய்துகொள்ளலாம்.

### சமுதாய வாழ்வில் இயேசு

ஆண்டவருடைய ஞானமுள்ள மற்றும் அன்பான வார்த்தைகள் பதிவு செய்யப்படவில்லையென்றாலும், நல்ல மனுஷனுடைய இருதயத்தில், நன்மையான

பொக்கிஷங்கள் நிரப்பப்பட்டிருக்கும் என்றும், அப்படியாக நன்மையால் நிறைந்த இருதயத்தின் நிறைவால் வாய் பேசும் என்றும் நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே, அன்று விளையாட்டுத்தனமான வார்த்தைகளுக்கோ அல்லது செயல்பாடுகளுக்கோ இடம்கொடுக்கப்படாமல் மாறாக, சரியான இருதய நிலைமையிலுள்ள யாவருக்கும் புத்துணர்வை உண்டுபண்ணும் ஆவிக்குரிய களிகூருதலிலும், இளைப்பாறுதலிலும் அன்றையநாள் செலவழிக்கப்பட்டிருக்க வேண்டும். இதே கோட்பாடுகள், கர்த்தருடைய பின்னடியார்கள் எவ்விடங்களில் காணப்பட்டாலும், அவர்களுடைய சூழ்நிலைகள் என்னவாகக் காணப்பட்டாலும், கூட அவர்களுக்குப் பொருந்தக்கூடியதாய் இருக்கின்றது. இவர்கள் தங்களுடைய இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நன்மையான காரியங்களை மட்டுமே பேச வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள், ஆனால், ஒருவேளை இதற்கு எதிர்மாறாகக் காணப்படுவார்க ளேயானால், அவர்கள் விழிப்படைந்து தங்கள் தலையை (இவ்விஷயம் குறித்ததான அறிவை) மாத்திரம் சரிச்செய்து கொள்வதோடல்லாமல், இருதயத்தின் மாறுபாடுகளையும் சரிச் செய்துகொள்ள வேண்டும்.

லாசருவினாலும், அவருடைய சகோதரிகளினாலும் மிகவும் உயர்வாய்க் கருதிக்கொள்ளப்பட்டவரும், லாசருவை கல்லறையிலிருந்து வெளியே வரும்படி கூறி, தமது மேசியாவுக்குரிய அதிகாரத்தையும், தமக்குள் உயிர்த்தெழுதல் மற்றும் ஜீவனின் வல்லமை இருக்கின்றது என்பதையும் விவரித்துக் காட்டினவருமாகிய இயேசுவினிடத்தில், அவர்கள் கொண்டிருந்த அன்பை நாம் எழுத்துக்களில் காண்பிப்பதைக்காட்டிலும் நன்கு கற்பனை செய்துகொள்ளலாம். ஒருவேளை (லாசருவின் உயிர்த்தெழுதலாகிய), அந்த மாபெரும் சம்பவத்திற்குப்பின், நம்முடைய ஆண்டவர் பெத்தானியாவுக்கு இதுவே முதன்முறையாக சென்றிருக்க வேண்டும்.

நம்முடைய ஆண்டவர் பலதரப்பட்ட மக்களை நண்பர்களாகக் கொண்டிருந்தார். இவர்களில் சிலர் ஐசுவரியவான்களாகவும், சிலர் தரித்திரர்களாகவும், சிலர் நடுத்தரமான சூழ்நிலைகளிலும் இருந்தனர். பெத்தானியாவில் இருந்த இந்தக் குடும்பத்தினர் சௌகரியமான சூழ்நிலையின் கீழ்க் காணப்படும் வகுப்பாராய் இருந்தனர். மேலும், இவர்கள் சௌகரியமான சூழ்நிலைகளில் இருந்த காரியமானது, இவர்களுக்கு சொந்த வீடு இருப்பதின் மூலமும், இவர்களுக்குச் சொந்த கல்லறை இருப்பதின் மூலமும், கர்த்தரை விலையேறப்பெற்ற நளததைலம் கொண்டு அபிஷேகம் பண்ணி கனப்படுத்தும்படிக்கு அதிகம் பணம் செலவு செய்யத்தக்கதாக மரியாள் விருப்பமும், திராணியும் கொண்டிருந்ததின் மூலமும் உறுதிப்படுகின்றது. ஐசுவரியங்கள் அநேகருக்கு மாபெரும் கண்ணியாக இருக்கிறது. இன்னுமாக, ஐசுவரியவான்களில் அநேகர் இராஜ்யத்தில் பிரவேசிப்பது இல்லை என்றும் கர்த்தருடைய வார்த்தை அறிவிக்கின்றது. இவர்களுக்கு தற்கால ஜீவியத்தின் கவர்ச்சிகள் என்பது, மிகவும் சக்திவாய்ந்ததாகவும், தங்களுடைய அர்ப்பணிப்பின் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குத் தடையாகவும் உள்ளது. அதாவது, தங்களுடைய அனைத்தையும் பலிச்செலுத்தவும், தங்களுடைய அனைத்தையும் இயேசுவின் பாதத்தில் ஒப்புவிக்கவும், தங்களுடைய பூமிக்குரிய வாய்ப்புகள் மற்றும்

ஆசீர்வாதங்களைப் பயன்படுத்தும் விஷயத்தில், அவருடைய உக்கிராணக்காரர்களாக மாறுவதற்கும் தடையாக உள்ளது. இன்னுமாக, இவைகளை ஞானமாக அவருடைய ஊழியத்தில் பயன்படுத்துவதற்கும் மற்றும் தாங்கள் கொண்டிருக்கிறோம் என்று அறிக்கைபண்ணின அன்பையும், நேர்மையையும் விவரிக்கும் விதத்தில், அவைகளை அவருடைய ஊழியத்திற்குப் பயன்படுத்துவதற்கும் தடையாக உள்ளது.

பல கோணங்களில் பார்க்கும்பொழுது, மற்றவர்களுக்கு மிகவும் தாராளமாய்ச் செய்வதற்கும், மிகுந்த விருந்தோம்பல் காண்பிப்பதற்கும் என, ஜீவியத்தில் நடுத்தரமான (middle class) வசதி வாய்ப்புகள் காணப்படுவது நலமாய்த் தோன்றலாம். எனினும், நிலைத்து நிற்பதற்கும், அதேசமயம் உண்மையுள்ளவர்களாய் இருப்பதற்கும், பெரும் திரளான வசதியுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் பொழுது, நடுத்தரமான வசதியுங்கூட கொஞ்சம் அதிகமாகவே தோன்றுகின்றது. இதன் காரணமாகவே, இவ்வுலகத்தில் ஏழ்மையானவர்களே பிரதானமாக இராஜ்யத்தின் சுதந்தரவாளிகளாக இருப்பார்கள் என்று நமது கர்த்தர் அறிவித்த காரியங்கள் உண்மை என அறிந்துக்கொள்கின்றோம். அதாவது, பிரதானமாகக் கொஞ்சம் உடையவர்களும், அதிகம் பெற்றுக்கொள்வதற்கு கொஞ்சம் எதிர்ப்பார்ப்பு உடையவர்களும் மற்றும் இப்படிப்பட்ட எதிர்ப்பார்ப்பின் விளைவாக, கர்த்தரை பிரதானமாய் அன்பு கூருகிறவர்களுக்கு அவர் வாக்குத்தத்தம் பண்ணியுள்ள பரம காரியங்களின்மேல் உடனடியாக மனதை திருப்பிக்கொள்ளுகிறவர் களுமே இராஜ்யத்தின் சுதந்திரவாளிகளாய் இருப்பார்கள்.

பெத்தானியாவின் வீட்டாருக்குச் சௌகரியமான சூழ்நிலைகள் இருந்ததுபோன்று நம்மிடத்தில் எந்தளவுக்குக் காணப்படுகின்றதோ, அதாவது தற்கால ஜீவியத்திற்குரிய நற்காரியங்களை எந்தளவுக்குப் பெற்றிருக்கின்றோமோ, அந்தளவுக்கு தக்கதாக இந்த ஜீவியத்திற்குரிய கவலைகளுக்கு எதிராகவும், இவ்வுலகத்தின் ஐசுவரியங்கள், இலட்சியங்கள், எதிர்ப்பார்ப்புகள் மற்றும் குறிக்கோள்களினுடைய வஞ்சனை தன்மைக்கும் எதிராகவும், விசேஷித்த விதமாக நம்மைப் பாதுகாத்துக்கொள்வது அவசியமாய் உள்ளது; இல்லையேல் இவைகள் நம்முடைய இருதயங்கள் கர்த்தரிடத்திலும், அவருடைய நோக்கத்தின் பேரிலும் காண்பிக்க வேண்டிய உண்மையையும், பக்தியையும் விட்டுவிலகச் செய்யும். மேலும், இவ்வுண்மைத் தன்மையையும், பக்தியையும் ஊக்குவிப்பதற்கும், தக்கவைப்பதற்கும் முழு விசுவாசமும் நம்பிக்கையும் தேவைப்படுகின்றது. சொல்லர்த்தமாகத் தரித்திரத்தில் இல்லாவிட்டாலும், ஆவியில் எளிமையுள்ளவர்களாய் இருக்க முடியும். அதிகபட்சமான பூமிக்குரிய ஐசுவரியங்களைப் பெற்றிருந்தோமேயானால், இடுக்கமான வழியில் பிரவேசிப்பதற்கு அதிகமான கிருபை தேவைப்படுகிறது.

## விலையேறப்பெற்ற நளததைலம்

இரண்டு சகோதரிகளும் செய்யப்பட வேண்டிய காரியங்களைத் தங்களுக்குள்ளாக ஏற்கெனவே தீர்மானித்து வைத்திருந்தார்கள். மார்த்தாள் பந்தியில் உணவு பரிமாறினாள். மரியாளோ அபிஷேகம் பண்ணும் விசேஷமான பணியின் மூலம் பணிவிடை புரிந்தாள். பண்டைய யூதர்களின் வழக்கத்தின்படி உயரம் குறைந்த, நீண்ட

மேஜைகளைச் சுற்றி விருந்தாளிகள் பக்கவாட்டில் சாய்ந்த படுக்கை நிலையில் அமர்வார்கள். ஒரு முழங்கையின் மீது சரீரத்தின் மேற்பாதியைச் சாய்த்துக்கொள்வதும், மற்றக் கரத்தைக் கொண்டு உணவை வாய்க்கு எடுத்துச் செல்வதும் வழக்கமாய் இருந்தது. நம்முடைய கர்த்தர் இப்படிப் பக்கவாட்டில் சாய்ந்துப் படுத்த நிலையில் காணப்பட்டபடியினால், அவருடைய தலை பாகத்தையும், அவருடைய பாதத்தின் அருகேயும் மரியாளினால் மிகவும் சுலபமாக நெருங்க முடிந்தது. மரியாள் முதலில் அவருடைய தலையை அபிஷேகம் பண்ணி, பின்னர் அவருடைய பாதத்தைத் தைலத்தினால் அபிஷேகம் பண்ணினாள்.

இந்தத் தைலத்தின் விலை 300 பணத்திற்கும் மேல் என்று 5-ஆம் வசனம் குறிப்பிடுகின்றது. ஒரு பணம் அன்றைய தினத்திற்கான ஒருவருடைய கூலியாகும் (மத்தேயு 20:2). இப்படியாக 300 பணம் என்பது, ஒரு வருடத்தின் உழைப்பினால் பெற்ற ஊதியமாகும். ஆகவே, இக்காலத்தில் இந்த 300 பணம் என்பது, இன்றுள்ள 300-லிருந்து 600 டாலர்களுக்கு ஒப்பிடலாம்.

## அவளால் இயன்றதை அவள் செய்தாள்

இப்படிப்பட்ட விலையுயர்ந்த தைலங்கள் மிக அரிதாகப் பயன்படுத்தப்பட்டது. உண்மையைச் சொல்லப்போனால் சக்கரவர்த்திகளும் கூட, இதைச் சிக்கனமாகப் பயன்படுத்தினார்கள். அதுவுமல்லாமல், அது பயன்படுத்தப்படும் சமயங்களில் பொதுவாகத் தலையின் மீதே ஊற்றப்படுகிறது. மரியாள் கர்த்தருடைய தலையில் தைலத்தை ஊற்றினபோது, மேற்கூறப்பட்ட அவ்வழக்கத்தைப் பின்பற்றினவளாகக் காணப்பட்டாள் என்பது மத்தேயு மற்றும் மாற்குவின் பதிவுகளிலிருந்து தெரியவருகிறது; ஆனால், இதைச் செய்த பிற்பாடோ, அவள் அவர் பாதம் அருகே வந்து, தைலத்தினால் அபிஷேகம் பண்ணி, தன்னுடைய நீண்ட கூந்தலினால் அவர் பாதங்களைத் துடைத்தாள். அன்பு கலந்த பக்திக்குரிய எத்துணை அருமையான காட்சி இங்கு நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது! பாதங்கள் மனிதனுடைய சரீரத்திலேயே தாழ்மையானதும், கீழான அங்கமுமாக, மதிப்புக்குறைந்த அங்கமாக எப்பொழுதும் கருதப்படுகிறது. ஆனால், தலையிலுள்ள மயிரானது, அதுவும் விசேஷமாக, ஸ்திரீகள் விஷயத்தில் விசேஷித்த பொக்கிஷமாகவும், அவளுக்கு மகிமையாகவும் எப்போதும் கருதப்படுகின்றது. இவ்விதமாக, மரியாள் தனது மகிமையான தலைமயிரைக்கொண்டு அவருடைய பாதங்களைத் துடைத்த காரியமானது, மரியாள் தனது, கர்த்தரும் ஆண்டவருமாகிய அவரைத் தன்னைக்காட்டிலும், முற்றிலும் மேலானவராக மதிப்புடன் கருதியதைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆரம்பத்தில், அவரை மனுஷர் மத்தியில் மிகவும் அருமை வாய்ந்த நபராகவும், ஒரு மனுஷனும் அதுவரைக்கும் பேசாதவைகளைப் பேசுகின்ற ஒரு மனுஷனாகவும் மரியாள் உணர்ந்துக்கொண்டாள்; பின்னரே அவர் ஒரு மாபெரும் போதகர் என்றும், விசேஷித்த காலத்திற்காக விசேஷித்தவிதமாய் அனுப்பப்பட்டவர் என்றும் அறிந்திருந்தாள். ஆனால், அவர் லாசருவைக் கல்லறையிலிருந்து எழுப்பினதின் மூலம் இறுதியாக, சர்வ வல்லமையுள்ளவரின் வல்லமை அவருக்குள் இருக்கின்றது என்றும், அவர் தேவனுடைய குமாரன் என்றும்

அறிந்துக்கொண்டாள். ஆகவே, அவருடைய மேன்மையான நிலையை உணர்ந்தவாறு அவருக்குப் பொருத்தமான மரியாதையைச் செலுத்தினாள்.

அவரை இந்தப் பூமியின் சிங்காசனத்தின்மேல் அவளால் அமர்த்த முடியாவிட்டாலும், தான் அவருக்கு என்றுமே பயபக்தியுடன் காணப்படும் ஓர் ஊழியக்காரி என்பதை அவளால் காட்ட முடிந்தது. இஸ்ரயேல் ஜனங்களுக்கு முன்பாக அவரை மகிமைப்படுத்த அவளால் இயலாதபோதிலும், தன்னுடைய சொந்த வீட்டிற்குள் அவரை மகிமையும், கனமும் செய்யமுடிந்தது. அவளால் அவருடைய புகழை எடுத்துக்கூறவோ, அவருடைய மகத்துவங்களை எடுத்துக்கூறி பாட முடியாவிட்டாலும், அவளுடைய இருதயத்திற்குள் அவளால் அவரைக் குறித்துப் பாட முடிந்தது, இன்னுமாக, அவர்மேல் நறுமணதைலத்தையும் அவளால் ஊற்றவும் முடிந்தது. இந்த நறுமணதைலமானது, அவளுடைய வீட்டை நறுமணத்தினால் நிரப்பியதோடல்லாமல், அவளுடைய நாள் துவங்கி தற்காலம் வரையிலும் காணப்படும் பெண் இனத்திற்குரிய கனத்திற்கு இனிமையான நறுமணத்தை வழங்குவதாகவும் இருக்கின்றது. இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் என்று கர்த்தர் கூறினார். அதாவது, இவள் தன்னால் இயன்றமட்டும் தன்னுடைய பக்தியை/அன்பை வெளிப்படுத்தி உள்ளாள் என்றவிதத்தில் கர்த்தர் குறிப்பிட்டுள்ளார். "இந்தச் சுவிசேஷம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் இவள் செய்ததும் அறிவிக்கப்படும்" என்று நம்முடைய ஆண்டவரால் கூறப்பட்ட தீர்க்கத்தரிசனம் எவ்வளவு உண்மையாக இந்நாள்வரைக்கும் நிறைவேறிவருகிறது! இது, ஓர் அன்பான இருதயத்தைக் குறித்தும், இனிமையான குணலட்சணம் குறித்ததுமான ஓர் இனிமையான நினைவுகூருதலாகும். இந்தச் சுவிசேஷயுகம் முழுவதும் உள்ள கர்த்தருடைய ஜனங்கள் அனைவர் மீதும் ஊற்றப்பட்ட நறுமணத்தினிமித்தம் உண்டான புத்துணர்வு, ஆசீர்வாதம் மற்றும் சுகந்த வாசனையின் வெளிச்சத்தின் கீழ் பார்க்கும்போது, மரியாளுடைய நளதம் தைலம் விலையுயர்ந்ததாக இருப்பினும், அது உண்டுபண்ணின பலன்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது அது அவ்வளவு விலையுயர்ந்ததாகத் தோன்றவில்லை.

## இதை விற்று தரித்திரருக்குக் கொடுத்திருக்கலாமே

பணம் விரயமாக செலவழிக்கப்பட்டதைக் குறித்து யூதாஸ் எதிர்த்துப் பேசினான் என்று கூறப்படுகிறது. ஆயினும், அவன் தரித்திரனுக்காக இப்படி பரிந்துரையாமல், அவன் திருடனாக இருந்தபடியினால் தன் பணப்பையை நிரப்புவதற்கு இப்படி கூறினான் என்றும், நறுமணதைலத்திற்கு செலவிடப்பட்ட பணமானது, சீஷர்களின் கூட்டத்தாருக்கு பொருளாளராக இருக்கும் தன்னிடம் கொடுக்கப்பட்டிருந்தால், அதை தனக்காக தகாத விதமாய் பயன்படுத்தி இருக்கலாமே என்று வருத்தமடைந்தான் என்றும் சுவிசேஷங்கள் அறிவிக்கிறது. யூதாஸ்தான் அவர்கள் மத்தியில் முறுமுறுப்பை தூண்டிவிட்டான் என்பதில் ஐயமில்லை. மேலும், சீஷர் கூட்டத்தில் இருந்த சிலர், அவனுடைய கூற்றிற்கு சம்மதித்தார்கள், இப்படியிருக்க, மீதமிருந்த மற்ற அப்போஸ்தலர்கள், அவ்விஷயத்தைக் குறித்து எழுந்த சச்சரவில் பெரும்பான்மையாய்க் காணப்பட்டவர்களின் கருத்தினிமித்தம் இந்த வீண் செலவுகள்

தவறு என்று ஒப்புக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருந்திருக்க வேண்டும். ஆனால், இயேசுவோ, "அவளை தனியே விட்டுவிடுங்கள், என்னை அடக்கம் பண்ணும் நாளுக்காக இதை செய்தாள். தரித்திரர்கள் எப்போதும் உங்களோடு இருப்பார்கள், நானோ உங்களோடு எப்போதும் இரேன்" என்ற வார்த்தைகளைச் சொல்லி அவர்களுடைய வாயை அடைத்தார்.

இன்று காணப்படும் கர்த்தருடைய சீஷர்களில் அநேகர் சிக்கனம் தொடர்பான தங்கள் கருத்துக்களில் சில மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். நாம் வீண் செலவு செய்யாமல், எதிர்காலத்தைக் குறித்த சிந்தனையினிமித்தம் சேமிக்கிறவர்களாய் இருக்க வேண்டும் என்பதும், ஊதாரித்தனமாய் இல்லாமல், சிக்கனமாய் இருக்க வேண்டும் என்பதும் உண்மை தான். இப்படிப்பினை குறித்து நமது கர்த்தர் அடிக்கடி கூறியுள்ளார். உதாரணத்திற்கு, திரளான ஜனங்களைப் போஷித்த பிற்பாடு மீதியிருந்த துணிக்கைகளைச் சேர்த்து வைக்கும்படி அவர் கட்டளையிட்டார் என்று நாம் பார்க்கின்றோம் (மத்தேயு 14:20). ஆனால், சிக்கனம் சரியான விஷயங்களில் காணப்பட வேண்டும். கர்த்தருடைய விஷயத்தில், சிக்கனத்துடனும், கருமித்தனத்துடனும் காணப்படுகிறவர்கள் நிச்சயமாக இழப்புக்குள்ளாவார்கள். ஏனெனில், வேதவாக்கியங்கள் இப்படியாகக் காணப்படுகின்றது. அதாவது, "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம்பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு."

நம்முடைய சொந்த விஷயங்களில், சிக்கனமாய் இருப்பது குறித்தும், கர்த்தர் மற்றும் அவருடைய ஊழியம் தொடர்பான விஷயத்தில் ஏராளமாய் செலவுசெய்யத்தக்கதாக தாராளமாய் இருப்பது குறித்தும், நாம் கற்றுக்கொள்வது, நமக்குப் புதிய காரியமாய் உள்ளது. "இராஜாவினிடத்தில் நீங்கள் வரும்போது பெரிய பெரிய விண்ணப்பங்களை சுமந்து வாருங்கள்" என்று நாம் சில சமயம் பாடுகின்றோம், ஆனால், கிருபையின் சிங்காசனத்தினிடத்தில் பெரிய பெரிய விண்ணப்பங்களைக் கொண்டு வருகிறவன் கர்த்தருக்காக நறுமணதைலமுள்ள பெரிய வெள்ளைக்கல் பரணியை தன்னோடுகூட கொண்டு வந்திருக்கின்றானா என்று கவனிக்க வேண்டும். அதாவது, கர்த்தருடைய தயவைப் பெற்றுக்கொள்வதற்கோ, அல்லது தன்னுடைய விண்ணப்பங்களை நறுமணத்தினால் பிரமாண்டமாக்கிக் கொள்வதற்கோ தைலமுள்ள பெரிய வெள்ளைக்கல் பரணியை அவன் கொண்டுவராமல் மாறாக, தான் ஏற்கெனவே பெற்றுள்ள ஆசீர்வாதங்களை உணர்ந்துக்கொண்டிருப்பதற்கான அடையாளமாய்க் கொண்டுவர வேண்டும். துதி மற்றும் நன்றிகளாகிய தைலம் நிரம்பின வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வருபவர்கள் பொதுவாக கொஞ்சம் விண்ணப்பங்களையே உடையவர்களாகக் காணப்படுவார்கள். மாறாக, தாங்கள் ஏற்கெனவே கடனாளிகளாய் இருக்கின்றார்கள் என உணர்ந்த நிலையில் காணப்படுகின்றனர், அதாவது, தாங்கள் பெற்றுக்கொண்ட தெய்வீக கிருபைகளுக்குச் சரியான பிரதிபலனை தாங்கள் ஒருபோதும் செலுத்த முடியாதவர்களாய் இருக்கின்றார்கள் என்று உணர்ந்து கொண்ட நிலையில் காணப்படுகின்றனர். தாங்கள் கேட்பது அல்லது விரும்புவதைக்காட்டிலும் அதிகமாயும் திரளாயும் கர்த்தருடைய கரங்களிலிருந்து நாளுக்கு நாள்

பெற்றுக்கொண்டிருக்கின்றனர் என்பதையும் உணர்ந்துகொள்கின்றனர். மேலும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களே அல்லாமல் வேறொன்றிலும் இவர்களுடைய ஏக்கங்கள் திருப்தி அடைவதில்லை. இப்படிப்பட்டவர்களே, மரியாளின் நடத்தையைப் பின்பற்றி, ஆண்டவருக்கு நறுமணம் வீசும் தைலங்களைக் கொண்டுவருகின்றனர், அதாவது, தங்களுடைய ஜெபங்களையும் இருதயப்பூர்வமான நன்றிகளையும் அவரிடத்தில் கொண்டுவந்து எவ்விதமான விண்ணப்பங்களையும் கேட்காமல் மாறாக, தங்களால் தாங்க முடியாத அளவுக்கு போதகரிடமிருந்து பொழிந்துக்கொண்டிருக்கும் ஆசீர்வாதங்களாகிய சகல காரியங்களுக்கும் நன்றி தெரிவிக்கிறவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இக்காரியத்தைச் சரியாகக் கண்ணோக்கக்கூடியவர்கள், நம்மில் ஒருவரும் ஆண்டவருக்குக் கொடுக்கத்தக்கதாக, பாத்திரமான எதையும் பெற்றிருக்கவில்லை என்ற உணர்வையும் நிச்சயமாகப் பெற்றிருப்பார்கள், அதாவது, நம்மிடத்தில் இருக்கும் சிறப்பானவைகளும், நம்முடைய மிக விலையேறப்பெற்ற பரிசுகள் அல்லது பலிகள் அவருக்குக் கொடுக்கத்தக்க பாத்திரமாய் இராமல் மாறாக, நம்முடைய இருதயங்களிலுள்ள உணர்வுகளை லேசாக வெளிப்படுத்துகின்றதாய் மாத்திரம் காணப்படுகின்றது என்ற உணர்வையும் நிச்சயமாகப் பெற்றிருப்பார்கள். அவர் அங்கீகரிப்பாரானால், நாம் எவ்வளவு மகிழ்ச்சியாய் இருப்போம், மேலும், அதே இனிமையான குரல் நம்மிடத்தில்: "இவன் தன்னால் இயன்றதைச் செய்தான்" என்றும், "இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்" என்றும் கூறுவதை இறுதியில் நாம் கேட்பதற்கு எவ்வளவாய் எதிர்ப்பார்க்கின்றோம்.

## தரித்திரர்கள் எப்பொழுதும் நம்மோடிருப்பார்கள்

சுவிசேஷயுகம் முழுவதிலும் தரித்திரம் தொடர்ந்துவரும் என்று நம்முடைய ஆண்டவர் தீர்க்கத்தரிசனமாக உரைத்த விஷயங்கள் பெருமளவில் நிறைவேறியுள்ளது. வருங்காலத்தை நாம் நோக்குகையில், அவருடைய ஆட்சியின் கீழ் எந்தவிதமான துக்கமும், தரித்திரமும் இனி இராது என்பதை நாம் அறிந்துக்கொள்ளும்போது, மகிழ்ச்சியடைகிறோம். "அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்." இந்த மாற்றமான சூழ்நிலைகள் அனைத்தும் மனித பரிணாமத்தினாலோ, மனித கோட்பாடுகளினாலோ, மனிதனுடைய சமுதாயம், கூட்டுறவு இயக்கங்கள் முதலியவைகளாலோ உண்டானவைகள் அல்ல. மனித சமுதாயத்தை ஒட்டுமொத்தமாக ஐசுவரியமுள்ளவர்களாகவும், சௌகரியமுள்ளவர்களாகவும், சந்தோஷமுள்ளவர்களாகவும் ஆக்கவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஏறெடுக்கப்பட்ட இத்தகைய பல்வேறு முயற்சிகள் கடந்த காலங்களில் தோல்வியைத் தழுவியுள்ளது, எதிர்க்காலத்திலும் தோல்வியைக் கொடுக்கக்கூடியதாகவே காணப்படும். மனுக்குலத்தின் ஒவ்வொரு அணுக்களும் பாவத்தினால், உரு சிதைந்துக் காணப்படுவதினாலும், இந்த உரு சிதைந்துபோன மனுக்குலத்தின்மேல், சுயநலம்,

இலட்சியங்கள் மற்றும் ஆசைகள் செயல்பட்டுக் கொண்டிருப்பதினாலும், பாவம் தொடர்ந்துக் காணப்படும் வரையிலும் வலிகள், பாடுகள், தேவைகள் தொடர்ந்துக் காணப்பட்டுக் கொண்டே இருக்கும். மாபெரும் மேசியா, தமது மாபெரும் அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு ஆளுகைசெய்து, பாவத்தையும், நீதி மற்றும் சத்தியத்திற்கு எதிராக இருக்கும் யாவற்றையும் ஒழித்துப்போட்டு, நீதியையும் சத்தியத்தையும் பூமியில் நிலைநாட்டும் வரையிலும் பாவம் தொடர்ந்துக் கொண்டிருப்பது நிச்சயமே.

அந்த மகிமையான நாள் வரும் வரையிலும், அனைவரும் இரவின் அழுகையின் வழியாகவே கடந்துச் செல்ல வேண்டியுள்ளது; இப்பொழுது பதினெட்டு நூற்றாண்டுகளுக்குமேல் கடந்துச் சென்றிருந்தாலும், தரித்திரர்கள் நம்மோடு இருக்கின்றார்கள். மேலும், தரித்திரர்களில் அநேகர், கர்த்தருடைய அருமையானவர் களாகவும் காணப்படுகின்றனர். இந்தத் தரித்திரம், பல வழிகளில், இக்காலத்துச் சூழ்நிலைகளில் ஆசீர்வாதமாகவே நிரூபிக்கப்படுகிறது. தரித்திரமும் தரித்திரத்தைக் குறித்த பயமும் அநேகரை சரியான நிலையில் நிற்க உதவியுள்ளது. மேலும், வாழ்க்கையின் போராட்டத்தில் அவர்களைச் சுறுசுறுப்பாகவும் ஆக்கியுள்ளது, இவ்விதமாக, அவர்களுக்குள் ஜெயங்கொள்வதற்கு ஏதுவான குணநலன்களும் வளர்கின்றது. வேறு கோணத்தில் பார்க்கையில், தரித்திரம் இன்னும் நிலவிக்கொண்டிருக்கிறது என்ற உண்மையும், நம்முடைய பராமரிப்பும், உதவியும் தேவைப்படுகின்ற நிலையில் நமக்கு நண்பர்களும் அயலகத்தாரும், இருக்கின்றார்கள் என்ற உண்மையும், இப்பொழுது மிகுந்த சௌகரியமான சூழ்நிலைகளில் காணப்படுவோருக்கு ஆசீர்வாதமாக விளங்குகின்றது. இந்த உண்மைகளினிமித்தம் இப்படிப்பட்ட சௌகரியமான சூழ்நிலைகளில் காணப்படுவோருக்குள் அனுதாபமும், பொறுமையும், அன்பும், நன்மை செய்வதற்கான வாஞ்சையும், உதவி செய்வதற்கான வாஞ்சையும் வளர்கின்றது. ஏழைகளுக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான், கர்த்தரோ அதை அவனுக்குத் திருப்பிக்கொடுக்கின்றார் என்று வாசிக்கிறோம். இந்த வாக்குத்தத்தம் மிகவும் ஐசுவரியமானது, மற்றும் இது எளிமையாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இவ்வார்த்தைகளுக்கு இசைவாக முதலீடு செய்வதற்கும், கர்த்தர் திருப்பிக்கொடுப்பதோடு அல்லாமல் மிகுந்த வட்டியையும் சேர்த்துக் கொடுக்கின்றார் என்று உணர்ந்துக்கொள்வதற்கும் அநேகர் அதிகம் விருப்பமற்றுக் காணப்படுகின்றனர் என்பதே வியப்பாய் உள்ளது.

## நான் உங்களோடு எப்போதும் இருப்பதில்லை

ஆண்டவரைக் கனப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் கொஞ்சமாகவே இருந்தது. கொஞ்ச நாட்களுக்குப் பின்பு, அவருடைய உபத்திரவங்கள் முடிவடைந்து, எல்லா தீமைகளையும், மனிதருடைய வல்லமையையும் கடந்து, அவர் மகிமையை அடையப்போகிறவராய் இருந்தார். ஆகவே, மரியாளின் கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்க்கும்பொழுது, (எல்லாம் முடிவடையப்போகும்) குறுகிய காலத்திற்குள் இவ்வளவு

விலையுயர்ந்த தைலத்தை அவருக்குச் செலவழிப்பது ஏற்றதாய் இருந்தது. அதாவது, அந்நாளில் காணப்பட்ட நியாயசாஸ்திரிகள் மற்றும் பிரதான ஆசாரியர்களின் பழிப் பேச்சுக்களும், தூஷணங்களும் விழப்போகிற அவருடைய தலையானது, அதாவது இன்னும் கொஞ்ச நாட்களில் முட்களினால் உண்டாக்கப்பட்ட கிரீடம் சூட்டப்படப்போகின்ற அவருடைய தலையானது, இப்பொழுதே அவருடைய உண்மையான மதிப்பையும், உண்மையான மகத்துவத்தையும், அவருடைய இராஜத்துவத்தையும், அவர் உண்மையில் தேவனுடைய குமாரன் என்று அறிந்த சொற்பமான ஜனங்கள் மத்தியில் ஒருவரால் (மரியாள்), கனப்படுத்தப்படுவது பொருத்தமானதாக இருக்கும். இன்னுமாக, பாலஸ்தீனாவின் மலைப்பகுதிகளிலும், பள்ளத்தாக்குகளிலும் நடந்துத்திரிந்த அவருடைய அந்தப் பாதங்களை, இன்னுமாக சில சமயம் களைப்புற்ற நிலையில் காணப்பட்ட அவருடைய அந்தப் பாதங்களை, இன்னுமாக இடுக்கமான மற்றும் கரடுமுரடுமான அர்ப்பணிப்பின் பாதையில் நடந்துக் கொண்டிருப்பவர்களின் பாதங்களுக்கு அடையாளமாய் இருக்கும் அவருடைய அந்தப் பாதங்களை, இன்னுமாக விரைவில் சிலுவையில் ஆணியினால் ஊடுருவப்படப்போகிற அவருடைய அந்தப் பாதங்களை, இப்பொழுதே போதகரின் அடிச்சுவட்டில் நடக்க நாடுகிறவர்களும், அவருடைய பாதங்களை விரும்புகிறவர்களும், அவருடைய பாதங்கள் மீது நம்பிக்கை வைக்கிறவர்களும், அவைகளைக் குறித்து உணர்ந்துக்கொண்டவர்களுமாயிருக்கிற ஜனங்களில் ஒருவர் மேன்மையாகக் கனப்படுத்துவது பொருத்தமானதாய்க் காணப்படும்.

இக்காரியங்களைக் குறித்த சரியான கண்ணோட்டம் எது என்று நமக்குத் தெரியும்பொழுது, "அவளை தனியே விட்டுவிடுங்கள்," அவளைத் தொந்தரவு செய்யாதிருங்கள், அவளிடமிருந்து அதை எடுத்துவிடாதீர்கள் என்ற விதத்தில் காணப்பட்ட நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு, நாமும் உண்மையில் இணங்க முடியும். அதாவது, அவள் தைலத்தைப் பயன்படுத்த முன் வந்தபோது, அவளைத் தடுத்து, அவளிடமிருந்து தைலத்தை எடுத்து, அதை விற்றுவிடலாம் என்று அப்போஸ்தலர்கள் விருப்பம் கொண்டிருந்தபோது, அப்படியாக அவளைக் கட்டாயப்படுத்தி அப்போஸ்தலர்கள் அதை விற்றுப்போடாதபடிக்கு, நமது கர்த்தர் அவர்களைத் தடை பண்ணும் விதத்தில், அவளைத் தனியே விட்டுவிடுங்கள், அவளைத் தடைசெய்யாதிருங்கள், அவளிடமிருந்து அதை எடுத்துவிடாதீர்கள் என்பதுபோல் கூறினார்.

அந்நாள் முதல் இந்நாள் வரைக்கும் மரியாளின் தைலம் ஒரு கிறிஸ்தவ குணநலனின் மிக அழகான அம்சங்களில் ஒன்றை அடையாளப்படுத்துகிறது. இயேசுவும், அப்போஸ்தலர்களும் தெரிவித்திருக்கிறபடி, கிறிஸ்துவின் முழுச்சபையும் விரிவான கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படும்போது, கிறிஸ்துவின் சரீரமாக இருக்கின்றார்கள் என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும். தங்களுடைய தனிப்பட்ட விஷயங்களுக்கு அதிக விலை கொடுத்துச் செலவு பண்ணுகிறதைக் காட்டிலும், கிறிஸ்துவின் சரீரமாகிய அபிஷேகம் பண்ணப்பட்ட சபையாருக்கு ஊழியம் புரியும்படி, மிகுந்த விலை கொடுத்து நறுமணதைலம் வாங்குபவர்களாகிய மரியாள்

வகுப்பார் இன்றும் நம்மோடு காணப்படுகின்றார்கள். இன்னும் சொல்லப்போனால், கடந்த 18 நூற்றாண்டுகளாக, சபையார் மத்தியில் காணப்பட்டும் இருந்தார்கள். சரீரத்தின் தலைக்கு மாத்திரம் அபிஷேகமும், நறுமணமும், கனமும், ஆறுதலும், மகிழ்ச்சியும் அளிக்கப்படுவதோடு நிறுத்தப்படாமல், அன்று முதல் இதைப்போலவே அனைத்து அங்கங்களும், இந்த நளததைலம் ஊற்றின மரியாள் வகுப்பாரிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டவர்களாகவே காணப்படுகின்றார்கள். இந்த மரியாள் வகுப்பார் ஆஸ்தி உடையவர்களாயும் அல்லது ஞானமுடையவர்களாயும், சொற்பொழிவாளர்களாயும் உள்ள வகுப்பாராய் எப்போதும் இருப்பதில்லை. மேலும், இவ்வகுப்பாரின் ஊழியம் ஆரவாரத்துடன் காணப்படுவதில்லை, ஆனால், அநேகருக்கு, அதிலும் விசேஷமாக உலகத்தாருக்கு இவர்களுடைய ஊழியம் முட்டாள்தனமாயும், வீணான காரியமாகவும் தோன்றும். ஆனால், கர்த்தரோ இவ்வகுப்பாருடைய ஊழியத்தை அங்கீகரிக்கின்றார். அதுபோல, இவர்களுடைய ஊழியத்தினால், ஆறுதலும், புத்துணர்வும் அடைந்த சரீரத்தின் அங்கங்களும் அங்கீகரிக்கின்றார்கள். இந்த மரியாள் வகுப்பார் மீது, ஆசீர்வாதம் தங்கியிருப்பதாக!

## அங்கத்தினருக்குரிய கனம் - தலைக்குரிய கனம்

சுவிசேஷயுகம் முழுவதும் அங்கங்கள் இப்படியான விதத்தில் ஆறுதல் அளிக்கப்பட்டிருப்பார்களானால், யுகத்தின் முடிவில் இருக்கும் பாத அங்கங்கள் மீது இவ்விதமான சில குறிப்பிட்ட ஆசீர்வாதங்களை நாமும் எதிர்ப்பார்க்கலாம் அல்லவா? யுகத்தின் முடிவில் நாம் வாழ்ந்துக்கொண்டிருப்பதை நன்கு அறிந்திருக்கிறோம். தலை மகிமையடைந்துவிட்டது, சரீர அங்கத்தினர்களில் பலர் திரைக்கு அப்பால் சென்றுவிட்டனர், மீதமுள்ள பாத அங்கத்தினர்கள் மட்டுமே மாம்சத்தில் உள்ளார்கள். மரியாள் ஆண்டவரின் தலையையும், பாதங்களையும் அபிஷேகித்தக் காரியமானது, இக்காலத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் நமக்கு ஓர் அருமையான நிழலாக உள்ளது. நாம் அனைவரும் மரியாள் வகுப்பாராகவும், அதேசமயம் பாத அங்கங்கள் வகுப்பாராகவும் இருக்க முடியும் என்ற தெய்வீக ஒழுங்கின் அருமையான அம்சம் இங்கு வெளிப்படுகின்றது. வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், மரியாள் இயேசுவின் பாதங்களுக்கு ஊழியம் புரிந்ததுபோன்று, கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அங்கமும் சரீரத்தின் உடன் அங்கங்களுக்கு, அதாவது பாதங்களின் உடன் அங்கங்களுக்குச் சில விதங்களில் ஊழியம் புரிய முடியும். கர்த்தருடைய உண்மையான ஜனங்களில் ஒவ்வொருவனும், இக்காரியங்களைக் குறித்துப் படிக்கையில் தேவனுடைய கிருபையினால், தானும் மரியாள் வகுப்பாரில் சேர்ந்துக்கொண்டு, விலையேறப்பெற்ற நளததைலத்தை வாங்கி, அதைச் சபையின் உண்மையான அங்கங்களாகிய கிறிஸ்துவினுடைய சரீரத்தின் பாதங்களின்மேல், தாராளமாய் ஊற்றவேண்டும் எனத் தீர்மானிப்பானாக. இங்குத் தைலம் அன்பையும், அனுதாபத்தையும், இரக்கத்தையும், தயவையும், பொறுமையையும், உதவி அளித்தலையும், ஆறுதல் அளித்தலையும் குறிக்கின்றது. இன்னுமாக இது, சகலவிதமான ஆவியின் கிருபைகள் மற்றும் கனிகள் நமக்குள் பெருகுவதையும், வளருவதையும், விருத்தியாகுவதையும் குறிக்கின்றது. இந்த

ஆவியின் கனிகள் மற்றும் வரங்கள் ஒட்டுமொத்தமாக அன்பு என்னும் பெயருக்குள் அடங்குகின்றது.

அன்பான வாசகர்களே, மரியாள் இந்தப் பாடத்தில் செய்ததுபோல் நாம் செய்வது இயலாத காரியம் என்று நாம் அறிந்திருந்தாலும், இப்பொழுது உலகத்தில் காணப்படும் கிறிஸ்தவ சகோதர சகோதரிகளாகிய, அவருடைய சரீரத்தின் பாத அங்கங்களுக்கு, ஒருவருக்கொருவர் இதைக்காட்டிலும் மிக முக்கியமான காரியங்களைச் செய்வது ஒவ்வொருவருக்கும் உரிய சிலாக்கியமாய் உள்ளது. அன்று மரியாள் சொல்லர்த்தமாகப் பயன்படுத்தின தைலத்தின் நறுமணம் கொஞ்ச நேரத்திற்குப் பின் இல்லாமற்போனது. ஆனால், நாம் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் அன்பின் அடிப்படையிலான சிறு வேலைகள் மற்றும் உதவிகள் கர்த்தருடைய பார்வையில் ஒருபோதும் மதிப்பை இழந்துப்போவதுமில்லை, மற்றும் ஒவ்வொருவருடைய கணிப்பிலிருந்து நித்திய காலத்திற்கும் அதின் நறுமணங்கள் இழந்துப்போவதும் இல்லை. வாழ்க்கையில் சிறிய காரியங்கள், சில வார்த்தைகள்,சிறிய அன்பளிப்புகள், அன்பான பார்வைகள், அவ்வப்போது செய்யப்படும் உதவிகளாகிய இந்தச் சின்ன சின்ன விஷயங்களே, மற்றவர்களுக்கான நம்முடைய நறுமணதைலமாகவும், வாய்ப்புகளாகவும் இருக்கின்றன.

## ஒருவரின் பாதங்களை ஒருவர் கழுவுதல்

பண்டைய காலத்தில் விசேஷமாகக் கிழக்கத்திய தேசங்களில் பாதங்கள் கழுவும் காரியமானது, உடம்புக்கு ஆறுதல் அளிப்பதற்காகச் செய்யப்பட்டு வந்த வழக்கமாக இருந்தது. ஆகவே, ஒருவருக்கொருவர் பாதங்கள் கழுவும் விஷயமானது, மிகவும் தாழ்மையான/மதிப்புக் குறைவான ஊழியங்கள் மூலமாகக் கூட ஒருவருக்கொருவர் ஆறுதலையும், புத்துணர்வையும் அளிப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. எவ்வளவுதான் மதிப்புக் குறைந்த ஊழியங்களாக இருப்பினும், அதன்மூலம் ஒருவருக்கொருவர் ஆறுதலையும், உதவியையும் அளிக்கக்கூடுமானால் அப்படிப்பட்ட மதிப்புக்குறைவான வேலைகள் மூலம், ஊழியம் செய்வதற்கான வாய்ப்புகளினிமித்தம் நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதே கர்த்தருடைய பாடத்தில் அடங்கும் சாராம்சமாகும். இக்காரியத்தை நம்முடைய பாடத்திற்குப் பொருத்திப் பார்க்கலாம். மரியாள், நம்முடைய ஆண்டவரின் பாதத்தைத் தைலத்தினால் கழுவினாள். சபையில் உள்ள மிகுந்த பயபக்தியும், அன்பும் உள்ள வகுப்பாராகிய மரியாள் வகுப்பார், ஒருவருக்கொருவர் உதவி செய்கிறவர்களாகவும், ஒருவருக்கொருவர் பாதங்களைக் கழுவக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். இன்னுமாக, இவைகளை அவர்கள் முரட்டுத்தனமாயும் மற்றும் அருவருப்பாயும் கருதிச் செய்யாமல், ஒருவருக்கொருவர் அன்பினாலும், மரியாதையினாலும், ஏவப்பட்டு, ஒருவருக்கொருவருடைய பாதங்களை, மரியாளுடைய நளததைலம் அடையாளப் படுத்தும் இரக்கம், அனுதாபம், அன்பு மற்றும் உணர்ந்துகொள்ளும் தன்மையினால் கழுவுகிறவர்களாய்க் காணப்பட வேண்டும். இன்னுமாக, இவர்கள் ஒருவருக்கொருவர்

அன்புடனும், அக்கறையுடனும் ஆறுதல் அளிக்க வேண்டிய காரியத்திற்கு, மரியாள் தனது தலைமயிரினால் ஆண்டவருடைய பாதங்களைத் துடைக்க பயன்படுத்தின விஷயம், அடையாளமாய்க் காணப்படுகிறது.

இந்த அன்பு, அதாவது, இந்த நளததைலம் ஊற்றின மரியாளின் அன்பும், இரக்கமும் கர்த்தருடைய சரீர அங்கங்கள் மத்தியில் வளர்ந்துக்கொண்டிருப்பதற்கான சில ஆதாரங்களை நம்மால் பார்க்க முடிகின்றது. மேலும், கர்த்தருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்களுக்கு எதிராகக் காணப்படும் உலகம், மாம்சம் மற்றும் எதிராளியானவனின் விரோதத்தை இவர்கள் உணர்ந்துக்கொள்கையில், இவர்கள் ஒருவருக்கொருவர் இன்னும் அதிகமான பயபக்தியுடன் காணப்பட்டு, அன்பினாலும், அனுதாபத்தினாலும், பராமரிப்பினாலும், ஒருவரையொருவர் இன்னும் அதிகமாகக் கனப்படுத்தி, ஒருவருக்கொருவர் அன்புடன் பேசியும், கிரியைகள் புரிந்த நிலையிலும் காணப்படுகின்றனர். இவைகளையெல்லாம் குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். இப்படியாக, அர்ப்பணிக்கப்பட்டவர்கள் ஆவியின் கனிகளில் வளர்ச்சியடைந்துள்ளார்கள் என்பதை நாம் அறிந்துக்கொள்ளும்போது மகிழ்ச்சியடைகிறோம். நாம் வீட்டை அன்பின் நறுமணத்தினால் முழுமையாய் நிரப்பும் வரையிலும், கிறிஸ்தவர்கள் எப்படி ஒருவருக்கொருவர் அன்பாய் இருக்கின்றார்கள் என்று முழு உலகமும் அறிந்துக்கொள்ளும் வரையிலும் அதாவது, குறுகினப் பார்வையில் அல்லாமல் பிதாவை அன்புகூருகிற அனைவர்மேலும் மற்றும் பிதாவின் வழிகளில் நடப்பதற்கு நாடுகின்ற அனைவர்மேலும் கிறிஸ்து கொண்டிருக்கும் அன்பை, பரந்த பார்வையில் முழு உலகமும் புரிந்துக்கொள்ளும் வரையிலும், இந்த நற்கிரியைகள் அனைத்தும் தொடர்ந்துக் கொண்டிருப்பதாக.

## நாம் இப்பொழுதே செய்வோம்

ஒருவேளை மரியாள், நளததைலத்தைக் கர்த்தருக்குப் பயன்படுத்தும் விஷயத்தில் ஒருவாரம் கழித்துச் செய்யலாம் என்று தாமதித்திருப்பாளேயானால், அவள் அதைக் கர்த்தருக்கு பயன்படுத்த முடியாமல், தனக்கே பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். ஏனெனில், இந்தச் சம்பவம் நடந்த ஒரு வாரத்திற்குள், நமது கர்த்தர் அடக்கம் பண்ணப்பட்டுவிட்டார். கல்லறையும் முத்திரையிடப்பட்டிருந்தது; கல்லறைக்கு முன்பாக உரோம போர்ச்சேவகர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். ஆக மொத்தம், அவருடைய மரித்துப்போன சரீரத்திற்குக்கூட அதனை ஊற்றுவதற்கு வாய்ப்பு இருந்திருக்காது. கர்த்தர் அவளுடைய விருந்தாளியாக வந்திருந்தபோது ஆண்டவரிடத்தில், தான் கொண்ட பக்தியை அவள் வெளிப்படுத்தினது எவ்வளவு நல்ல காரியமாக இருந்தது. கிறிஸ்துவின் பாத அங்கத்தினர்களும் வெகு சீக்கிரத்தில் அவர்கள் ஓட்டத்தை முடித்துத் திரைக்கு அப்பால் கடந்துச் செல்வார்கள்.

நம்முடைய தைலமுள்ள வெள்ளைக்கல் பரணிகளை எடுத்துக்கொண்டு வருவதிலும், அவைகளைக் கிறிஸ்துவின் பாத அங்கங்களாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள நமது அருமையானவர்கள் மேல் ஊற்றுவதிலும், நாம் தாமதம்

காட்டக்கூடாது என்ற ஞானம் இங்கு நமக்கு விளங்குகின்றது. ஒருவேளை நாம் தைலத்தை ஊற்றும் நபர்கள் நம்மைக் கவனிக்காமல் இருந்தாலும் அல்லது நம்மைக் குறித்துச் சிந்திக்காமல் இருந்தாலும் அல்லது நம்மை பாத அங்கங்களில் ஒருவராகக் கருதி நம்மேல் தைலத்தை அவர்கள் ஊற்றாமல் இருந்தாலும் சரி, நாம் நம்முடைய பங்கை செய்வோமாக; நாம் மரியாள் வகுப்பாராக இருப்போமாக. சீஷர்களில் சிலர் நம்முடைய அன்பு மற்றும் பக்தியின் விஷயங்களில், நாம் வரம்புமீறிச் செயல்படுகின்றோம் என்று தவறாய்க் குற்றம் சாட்டினாலும் சரி, அவளைத் தனியே விட்டுவிடுங்கள், அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் என்று மீண்டுமாக (அன்று எச்சரித்ததுபோல்) கர்த்தர் தங்களிடத்தில் கூறுவார் (எச்சரிப்பார்) என்பதைப் புரிந்துக்கொள்ளாமலேயே நம்மைக் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தாலும் சரி, நாம் மற்றவர்கள் மீது நமது இனிமையான நறுமண தைலங்களை ஊற்றிக்கொண்டிருப் போமாக. கர்த்தருடைய சபையாகிய விசுவாச வீட்டாரும், தைலத்தின் இனிமையான வாசனையினால் நிறைந்து இருப்பார்களாக. இந்த நளததைலமும், அதினால் செய்யப்படும் அபிஷேகமும் நம்முடைய கர்த்தருடைய கணிப்பில், நம்மால் செய்ய இயன்ற காரியமாகவே கருதப்படுகின்றது. இதைக்காட்டிலும், வேறு எதுவும் அதிகமாகவோ அல்லது மேன்மையானதாகவோ அவருடைய பார்வையில் இருப்பதில்லை. இந்த நளததைலமும், அதினால் பண்ணும் அபிஷேகமும், அன்பை அதாவது மகாபெரும் அன்பைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கிறது. மேலும், இந்த அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது.

“ஒருவரையொருவர் கவனியுங்கள்” என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அதாவது, நாம் ஒருவரில் ஒருவர் காணப்படும் பலவீனங்களைக் கவனிக்க வேண்டும், ஒருவருக்கொருவர் ஏற்படும் சோதனைகளைக் கவனித்துக்கொள்ள வேண்டும், ஒருவருக்கொருவர் ஏற்படும் பரீட்சைகளைக் கவனித்துக்கொள்ள வேண்டும்; உலகம் மாம்சம், மற்றும் எதிராளியானவனுக்கு எதிராக யுத்தம் பண்ணுவதில் ஒருவருக்கொருவர் ஏறெடுக்கும் பிரயாசங்களைக் கவனிக்க வேண்டும்; உள்ளேயிருந்தும், வெளியிலிருந்தும் வரும் எதிர்ப்புகளுக்கு எதிராக, நெருக்கமான வழியில் நடந்துக்கொண்டிருக்கையில், ஒருவருக்கொருவர் ஏற்படும் உபத்திரவங் களைக் கவனிக்க வேண்டும். மேலும், இப்படியாக நாம் கவனித்துக் கொண்டு வரும்போது, நம்முடைய இருதயங்களில் இரக்கம் உண்டாகும்; இந்த இரக்கமானது ஒரே சரீரத்திலுள்ள உடன் அங்கங்களாகிய அனைவர்மேலும், மிக விலையேறப் பெற்றதும், தூய்மையானதும், சிறப்பானதுமான நளததைலத்தை ஊற்றுவதில் மகிழ்ச்சிக்கொள்ளும்.

“ஊக்குவிப்பவர்களுடைய சமுதாயம்” என்ற மாபெரும் சமுதாயத்தைக் குறித்து ஒருவர் பேசியுள்ளார். இந்தச் சமுதாயமானது, ஜீவியத்தின் பாதையில் சோர்ந்துப் போனவர்களையும், கால்கள் தள்ளாடிப் போனவர்களையும், தூக்கி நிறுத்துவதற்கும் உற்சாகப்படுத்துவதற்கும் மிகுதியான உதவிகளைச் செய்து வருகின்றது. இந்தச் சமுதாயத்தின் அங்கங்களைப் பார்க்கும்போது, அது ஒரு மாபெரும் சமுதாயம் போன்று தோன்றவில்லை. ஆனால், இச்சமுதாயத்திடமிருந்து உதவியும், உற்சாகமும்

பெற்றவர்களுடைய பார்வையிலும், கர்த்தருடைய பார்வையிலும் இது மாபெரும் சமுதாயமாகும். நளததைலம் ஊற்றின மரியாளை, இந்த "ஊக்குவிப்பவர்களுடைய சமுதாயத்தில்" முக்கியமான அங்கமாகச் சொல்லப்படலாம். தாம் படக்கூடிய பாடுகளையும், உபத்திரவங்களையும், சிலுவை மரணத்தையும் குறித்து எண்ணிக்கொண்டிருந்த நம்முடைய ஆண்டவருக்கு, மரியாள் வெளிப்படுத்தின அன்பு மற்றும் பக்தியின் கிரியைகள் எவ்வளவு விசேஷித்த ஊக்கத்தையும், புத்துணர்வையும் அளித்திருக்க வேண்டும் என்று நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது. சிலர் மாத்திரமே அவரைப் புரிந்துக் கொண்டிருந்தார்கள். சுற்றியிருக்கும் சீஷர்கள் கூடச் சூழ்நிலையைப் புரிந்துக்கொள்ளவில்லை. அவர்மேல் நம்பிக்கை கொண்டு, அவரிடத்தில் அன்பு வைத்திருந்த மரியாளாகிலும் அங்கு அவருக்குக் காணப்பட்டாள். இது, அவருடைய பிரயாணத்தின் எஞ்சியுள்ள நாட்களில், அவருக்குத் தைரியம் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

## உண்மை

நாம் ஒருவருக்கொருவர் ஆறுதல் அளிப்பதற்கும், உற்சாகமூட்டுவதற்குமென, தற்கால வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதின் முக்கியத்து வத்தைத் தெரிவிக்கும் விதத்தில் ஒரு எழுத்தாளர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

"உங்களுடைய நண்பர்கள் மரிப்பது வரையிலும் அன்பும், இரக்கமும் உள்ள வெள்ளைக்கல் பரணியை முத்திரையிட்ட நிலையிலேயே வைத்துவிடாதீர்கள். உங்களுடைய நண்பர்களுடைய ஜீவியத்தை இனிமையாக்குங்கள். அவர்களுடைய செவிகள் கேட்கும் நிலைமையிலும் மற்றும் அவர்களது இருதயங்களானது உற்சாகமடைவதற்கு ஏதுவான நிலைமையிலும், நீங்கள் சொல்லும் வார்த்தைகளினால் சந்தோஷப்படக்கூடிய நிலைமையிலும் இருக்கும்போதே, உற்சாகமான வார்த்தை களையும், மகிழ்ச்சியான வார்த்தைகளையும் பேசுங்கள். அவர்கள் மரித்துப்போன பின்னர் நீங்கள் கூறவேண்டுமென்றிருக்கும் அன்பான வார்த்தைகளை, அவர்கள் மரித்துப்போவதற்கு முன்னதாகவே சொல்லுங்கள். அவர்களது சவப்பெட்டிகளுக்கு நீங்கள் அனுப்ப வேண்டுமென்றிருக்கும் மலர்களை, அவர்கள் மரித்துப்போவதற்கு முன்னதாகவே அவர்களது இல்லங்களைப் பிரகாசிப்பதற்கும், மணமூட்டுவதற்கும் என்றும் அனுப்பிவையுங்கள். ஒருவேளை என்னுடைய நண்பர்கள் நான் மரித்த பிற்பாடு, என்னுடைய சரீரத்தின்மேல் ஊற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் அனுதாபமும், பாசமுமாகிய நறுமணதைலங்களினால் நிரப்பப்பட்ட வெள்ளைக்கல் பரணிகளை எங்கோ மூலையில் வைத்திருப்பார்களானால், எனக்கு அவைகள் தேவைப்படும்போது, நான் அவைகளினால் புத்துணர்வும், மகிழ்ச்சியும் அடையத்தக்கதாக, அவர்கள் அதை என்னுடைய சோர்வான மற்றும் உபத்திரவமான நேரங்களில் என்னிடத்தில் கொண்டுவந்து அவைகளைத் திறக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். அன்பு மற்றும் அனுதாபத்தின் இனிமைகள் எதுவும் என் மீது யாரும் வீசிடாத ஒரு ஜீவியத்தை ஜீவிப்பதைப் பார்க்கிலும், பூக்குவியல்கள் இல்லாத எளிமையான சவப்பெட்டியைப் பெற்றுக்கொள்வதிலும், புகழுரை இல்லாத அடக்க ஆராதனையைப்

பெற்றுக்கொள்வதிலும் நான் திருப்தியாய் இருப்பேன் . . . சவப்பெட்டியின் மீதுள்ள பூக்களினால் அவர்கள் மரிப்பதற்கு முன்னதாக கடந்துவந்த சோர்வின் மத்தியிலான வாழ்க்கைக்கு நறுமணம் வீச முடியாது.”

திருமதி பிரஸ்டன் அவர்களின் கவிதையும் இதே கருத்தைத்தான் வெளிப்படுத்துகின்றது:

“. . . நான் ஒருவேளை,

பாராட்டின் ஒரு வார்த்தையையாவது,
உற்சாகத்தின் ஒரு வார்த்தையையாவது கேட்டிருந்திருப்பேனானால் -
வாழ்வா, சாவா - என்று என்னை அழுத்திக்கொண்டிருந்த பிரச்சனைகள் மத்தியில்
'தைரியம் கொள்!' எனும் ஒரு வார்த்தையையாவது கேட்டிருந்திருப்பேனானால-
ஆ, அது -
மீண்டும் மீண்டுமாய்ப் பாய்ந்து வந்ததான கொந்தளிப்புகள் ஊடே
நான் செல்வதற்கு, எவ்வளவாய் எந்தன் ஆன்மாவை, வலிமைப்படுத்தியிருந்திருக்கும்.”

## நறுமணம் வீசும் பலி

சபை ஜனங்கள் ஒருவருக்கொருவர் பண்ண வேண்டிய ஊழியங்களைக் குறித்துப் பேசுகையில், நம்முடைய பலியானது, தேவனுக்கு முன்பு சுகந்தவாசனையாக இருக்கும் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்; மேலும் சுவிசேஷமானது, “கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரணவாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறது” என்றும் குறிப்பிடுகின்றார். அதாவது, நற்கிரியைகள், அன்பான வார்த்தைகள் மற்றும் நல்ல முயற்சிகளைச் சரியான நோக்கத்தையுடைய இருதயங்கள் மட்டுமே புரிந்துக்கொள்ள முடியும். அதேநேரத்தில், தவறான மனநிலையைக் கொண்டிருப்பவர்கள் எல்லா நன்மையான காரியங்களையும், தவறாகவே புரிந்துக்கொள்வார்கள். அவர்களுக்கு அது கெட்ட வாசனையாகவே இருக்கும். நம்முடைய அனுபவங்களில் இவைகளை நாம் அடிக்கடி காணலாம். கிறிஸ்துவின் பாதங்களுக்கு நாம் ஊழியம் செய்வதற்கென நம்மால் முடிந்த சிறந்த பிரயாசங்களை எடுத்தாலும், சிலர் அதினால் ஆறுதலும், புத்துணர்வும் அடைந்துள்ளார்கள்; இன்னும் சிலர் கோபமும் அடைந்துள்ளனர்; அதாவது, சிலருக்கு நம்முடைய இந்தப் பிரயாசம் சுகந்தவாசனையாகவும், வேறு சிலருக்குக் கெட்ட வாசனையாகவும் இருக்கின்றது. ஏனெனில், இவர்களுக்குக் கர்த்தரிடத்திலும், கிறிஸ்துவின் சரீர அங்கங்களிடத்திலும் தவறான இருதய நிலைமையே காணப்படுகின்றது. ஒருவேளை, அவர்களுடைய இலட்சியங்கள் அல்லது பேராசைகள், குறுக்கிடப்பட்டதினாலும் கூட அவர்களுக்கு

இந்தப் பிரயாசங்கள் கெட்ட வாசனையாக இருந்திருக்கலாம்.

பெத்தானியாவிலும் அப்படியே நடந்தது. நறுமணம் வீடு முழுவதும் பரவினது. மேலும், இந்த ஊழியத்தின் விளைவாக, மரியாளுக்கு வந்த ஆசீர்வாதமும், புத்துணர்வும், யூதாசுக்கு மிக வித்தியாசமான தாக்கத்தை உண்டுபண்ணிற்று. யூதாசோ கோபமடைந்தான்; அவனுக்குள் காணப்பட்ட சுயநலம், கர்த்தருக்குச் செய்யப்பட்ட கனத்தைப் புரிந்துக்கொள்வதைத் தடைபண்ணிற்று. அவன் தன்னைப்பற்றியும், இதை விற்றால் என்ன கிடைக்கும் என்பது பற்றியும்தான் சிந்தித்துக்கொண்டிருந்தான். ஆகவே, அவனைப் பொறுத்தவரையில் இந்த அனைத்து விஷயங்களும் வீண் செலவுகளே. அவனுடைய தவறான சிந்தையினிமித்தம் அவனுடைய இருதயத்திற்குள் வந்த கசப்பானது, அவன் அதற்குப் பிற்பாடு நேராகப் பிரதான ஆசாரியரிடத்திற்குச் சென்று இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்கென, பேரம் பேசின விஷயம் குறித்த பதிவுகளில் வெளியரங்கமாகுகின்றது. அன்பான சகோதர சகோதிரிகளே, நம்முடைய இருதயங்கள் ஆண்டவர்மேல் அன்பான நோக்கம் உடையதாக இருக்கின்றதா அல்லது சுயநலமான நோக்கத்துடன் இருக்கின்றதா என்றும், அவருடைய நாமத்தினால் அவருடைய சரீரத்திற்குச் செய்யப்பட்ட அனைத்தையும் உணர்ந்துக்கொண்ட நிலையில் இருக்கின்றோமா என்றும், நாம் சுயத்திற்காக நாடாதவர்களாகக் காணப்படுகின்றோமா என்றும், கவனிக்கக் கடவோம். இல்லையேல், யூதாசுக்கு இருந்ததுபோல, நமக்கு இந்த நறுமணங்கள் மரணத்துக்கு ஏதுவான மரண வாசனையாக இருந்துவிடும்.

நம்முடைய பாடத்தின் முடிவிற்கு வருவோம். அநேகமாக இந்தச் சம்பவத்திற்கு மறுநாள், இயேசுவையும், லாசருவையும் காணும்படியாக யூதர்கள் கூட்டங்கூடத் துவங்கியிருக்க வேண்டும். அனைவரின் நலனுக்காக ஒருவர் மரிப்பது நலம், என்ற முடிவுக்கு வந்திருக்க வேண்டும். ஆதியிலிருந்து இந்நாள் வரையில், "நன்மையின் காரணத்திற்காகவே," சத்தியத்திற்கு எதிரான செயல்கள் செய்யப்பட்டு வந்ததுள்ளது. இப்படிப்பட்ட ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கக்கடவோம். சுயநலமான அன்பை அல்ல, ஆண்டவர் மீதும், மற்ற அனைத்துச் சகோதரர்கள் மீதும் உண்மையான அன்பை உத்தமமாகச் செலுத்துவோம்; இல்லாவிடில், நாம் எப்படிப்பட்ட தீமைகளுக்குள் வழிநடத்தப்படுவோம் என்று நமக்குத் தெரியாது.

## இயேசு, என் கர்த்தர்

என் கர்த்தராகிய இயேசுவைப் பார்த்திருக்கின்றீர்களா?
அவர் இங்கு எளிமையான காட்சியில் காணப்படுகின்றார்!
பாருங்கள், உங்கள் கண்களைத் திறவுங்கள்;
அவரை உங்களுக்குக் காண்பித்தருளுவார்.

வானம் சிவப்பு நிறமாய் கனிந்த பின்பு,
மேகங்களை இறக்கைகளெனத் தொங்கவிட்டு,
சூரியன் அஸ்தமனமாகுவதை நீங்கள் எப்போதேனும் கண்டிருக்கிறீர்களா?
ஆ! பார்த்திருக்கின்றீர்களானால் நீங்கள் என் கர்த்தராகிய இயேசுவைக்
கண்டிருக்கின்றீர்கள் என்று நான் சொல்லிடுவேனே.

வெண்மையான நுரையானது உங்கள் பாதங்களைத் தொட்டுச் செல்ல,
முடிவில்லா ஆவேசத்துடனான சலனத்தை உணர்ந்த நிலையிலும்
சமுத்திரத்தின்முன் நீங்கள் எப்போதேனும் நின்றிருக்கிறீர்களா?
ஆ! நின்றிருக்கின்றீர்களானால் நீங்கள் என் கர்த்தராகிய இயேசுவைக்
கண்டிருக்கின்றீர்கள் என்று நான் சொல்லிடுவேனே.

தமது கண்களில் அன்பின் பார்வையுடன்,
மனதில் வலியுடன் மனிதன் தொங்கிடும்
சிலுவைதனை நீங்கள் எப்போதேனும் ஏறெடுத்துப்பார்த்திருக்கிறீர்களா?
ஆ! பார்த்திருக்கின்றீர்களானால் நீங்கள் என் கர்த்தராகிய இயேசுவைக்
கண்டிருக்கின்றீர்கள் என்று நான் சொல்லிடுவேனே.

- கேம்பர்ஸ் துதிப்பாடல்கள், # 48

# அவளால் இயன்றதை அவள் செய்தாள்

## மத்தேயு 26:6-13

*"அவள் நற்கிரியைகளைச் செய்தாள்."*

யூதருடைய ஓய்வுநாள் நிறைவுபெற்ற மாலையில், வழக்கத்தின்படியே இயேசுவும், அவருடைய சீஷர்களும், இன்னும் மற்றவர்களும் அந்த விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அனைவரும் எருசலேமில் பஸ்கா பண்டிகையைக் கொண்டாடும்படிக்கு, எரிகோவிலிருந்து முந்தின நாளின் சாயங்கால வேளையிலேயே வந்துவிட்டார்கள்; மேலும், இந்தப் பஸ்காவைக் குறித்துதான் கர்த்தர் இயேசு, "தாம் பாடுபடுகிறதற்கு முன்னே அவர்களுடன்கூட, இந்தப் பஸ்காவை புசிக்க ஆசையாய் இருந்தார்" என்று தெரிவித்தார் (லூக்கா 22:15). அவர் தாம் எருசலேமுக்குப் போகவேண்டும் என்றும், அங்கு தாம் சிலுவையில் அறையப்படுவார் என்றும், சீஷர்களிடத்தில் கூறியிருந்தபோதிலும், அவர்களால் அதை உணர்ந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில், அநேகக் காரியங்களை அவர் அவர்களோடு உவமைகளாகவே பேசியிருந்தார். எடுத்துக்காட்டாக, நானே வானத்திலிருந்து இறங்கின அப்பம் என்றும், இன்னுமாக என்னுடைய மாம்சத்தைப் புசித்து, இரத்தத்தைப் பானம் பண்ண வேண்டும் என்றும் கூறியிருந்தார். அநேகமாக, அவர் சிலுவையில் அறையப்படுவது குறித்துக் கூறின காரியங்களையுங்கூட, அவர்கள் உவமைகளாகவே எண்ணியிருந்திருக்கக்கூடும்; சிலுவையில் அறையப்படும் விஷயத்தைப் பொறுத்தமட்டில் பேதுரு அதை ஏற்க மறுத்தபோது, கர்த்தர் பேதுருவைக் கடிந்துகொண்ட பின்னரும்கூட சீஷர்களால் அந்த வார்த்தைகள் உவமைகள் அல்ல என்பதைப் புரிந்துக்கொள்ள முடியாமல் இருந்தார்கள்.

அந்த விருந்து குஷ்டரோகியாகிய சீமோன் வீட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சீமோன் என்பது அக்காலக்கட்டத்தில் மற்றும் அந்த இடங்களில் பொதுவான பெயராக காணப்பட்டது; இந்தச் சீமோனே குஷ்டரோகியாகிய சீமோன் என்று வேறுபடுத்திக் குறிப்பிடப்பட்டுள்ளார் – அநேகமாக ஆண்டவரால் இந்தச் சீமோன் சொஸ்தப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இதுவே இயேசுவுக்கும் லாசருவின் குடும்பத்திற்கும் ஏற்பட்ட நெருக்கமான உறவுக்குக் காரணமாக அமைந்திருக்கலாம். அந்தக் குடும்பத்தில் லாசரு, மார்த்தாள் மற்றும் மரியாள் முக்கியமான நபர்களாகக் குறிப்பிடப்படுகிறார்கள். சுவிசேஷகர் ஒருவர், லாசரு அந்தப் பந்தியில் அமர்ந்திருப்பதாகவும், மார்த்தாள் அவருக்குப் பந்தி பரிமாறினதாகவும் தெரிவிக்கின்றார். இந்தப் பாடத்தில், மரியாள் செய்த காரியத்தைக் குறித்து விசேஷமாக நாம் பார்க்கப்போகின்றோம். இந்த மரியாள், கர்த்தர் சாய்ந்த நிலையில் பக்கவாட்டில் படுத்துக்கொண்டிருக்கும்போது அவர் கிட்டே சென்று, விலையேறப்பெற்ற தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியின் முத்திரையை உடைத்தாள் என்று பார்க்கிறோம். பதிவுகளில் ஒன்று, இத்தைலம் மிகவும் விலையேறப்பெற்றது என்றும், மற்றொரு பதிவு, அதன் விலை 300 பணம் என்றும் தெரிவிக்கின்றது. நம்முடைய பண மதிப்பின்படி அது சுமார் 50 டாலர் மதிப்புடையதாய் இருக்கும்.

இப்படிப்பட்ட அபிஷேகத் தைலங்கள் அரிதாயிருந்தது, அதிலும் பொதுவாக

இராஜாக்கள் அல்லது இளவரசர்கள் அல்லது பிரபுக்களுக்குப் பயன்படுத்தப் பட்டது.யூதாசினுடைய முறுமுறுப்பினால் தாக்கம்பெற்றச் சீஷர்களும் அத்தைலம் விரயம் செய்யப்பட்டதினிமித்தம் நியாயமாக எழும்பும் கோபத்தினால் நிறைந்தவர்கள் ஆனார்கள். பணப்பையைச் சுமந்து திரிந்தவனும், அக்கூட்டத்தாருக்குப் பொருளாளராக இருந்தவனுமாகிய யூதாஸ் திருடனாய் இருந்தான் என்றும், பணத்தைத் தரித்திரருக்குச் செலவுசெய்யலாம் என்று அவனிடமிருந்து வெளிப்பட்ட அக்கறையுடன் கலந்த வார்த்தைகள் மாய்மாலம் என்றும் யோவான் நமக்குத் தெரிவிக்கின்றார். யூதாசினுடைய வாதத்திற்கு ஆதரவு தெரிவித்த மற்ற அப்போஸ்தலர்கள் மீது நாம் அனுதாபமே கொள்ளவேண்டும். ஏனெனில், அவர்கள் அனைவரும் ஏழைகளாய் இருந்தார்கள். மேலும், இப்படிப்பட்ட ஆடம்பரமான செலவுகளுக்கும், வீண் செலவுகளுக்கும்/வரம்பு மீறின செலவுகளுக்கும் பழக்கமற்றவர்களாகவே இருந்தார்கள்; மேலும், இக்கோணத்தில் பார்க்கையில், அப்போஸ்தலர்கள் இன்றைய நாட்களில் காணப்படும் பெரும்பான்மையான கர்த்தருடைய ஜனங்களுக்கு அடையாளமாய் இருக்கிறார்கள்; இன்றைய கர்த்தருடைய ஜனங்களும்கூட நறுமணதைலத்திற்கான விலை சீட்டு (bill) 50 டாலருக்குரியது எனப் பார்க்கும்போது விரையமான வீண்செலவு என்றே கூறுவார்கள். இக்காரியத்தை இயேசு எவ்வாறாகக் கண்ணோக்கினார் என்பதன் மீதே நாம் அதிக கவனமுள்ளவர்களாய் இருக்கின்றோம். இப்படிப்பட்டதான விஷயங்கள் குறித்ததான நம்முடைய கருத்துக்கள் ஏறத்தாழ நம்முடைய சுயநலத்தினாலோ அல்லது வறுமையினாலோ அல்லது பணச்சிக்கனம் காரணமாகவோ தவறாகவே காணப்படுகிறது.

## அந்த ஸ்திரீயை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்?

சீஷர்கள் மத்தியில் காணப்பட்ட குற்றம் கண்டுபிடிக்கும் மற்றும் விமர்சிக்கும் ஆவியை நமது ஆண்டவர் அறிந்து, "அந்த ஸ்திரீயை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்?" என்று மரியாளின் சார்பில் அவர்களைக் கடிந்து கொண்டார். சரியான காரியத்தை ஏற்ற நேரத்தில் செய்வதற்கு, ஸ்திரீகளுக்குரிய உள்ளுணர்வானது அவளை வழி நடத்தியது. அவள் தன்னால் என்றுமே தீர்க்கமுடியாத அளவுக்கு, தான் போதகருக்குக் கடன் பட்டுள்ளாள் என்றும், இந்த விலையேறப்பெற்ற நறுமணதைலம் தனது நன்றிக்கான சிறிய வெளிப்பாடாகவும், அவரைப் பாராட்டுவதற்குரிய சிறிய மரியாதையுமாகவே இருக்கும் என்றும் உணர்ந்திருந்தாள். இருதயப்பூர்வமான பக்தியைக் கர்த்தர்மேல் வைப்பதற்கு அவர் பாத்திரவானாக இருந்தார் என்று அவள் கண்டுபிடித்தாள். பெண்களின் உரிமைக்காக போராடுபவளாக அவள் இருக்கவில்லை. கர்த்தருடைய பெயரையும், அவருடைய கீர்த்தியையும் குறித்துப் பிரசங்கிப்பதற்குப் பிரயாணம் பண்ணுவதற்கும், அப்போஸ்தலர்களின் கூட்டத்தில் தன்னையும், மார்த்தாளையும் சேர்க்காமல் இருந்ததற்கும், அவள் கர்த்தர்மேல் குற்றம் சாட்டவில்லை. ஒருவேளை, அவள் இப்படிப்பட்டதான வேலைகளை எல்லாம் செய்யும்படிக்குக் கட்டளை பெற்றிருந்திருப்பாளானால், அதை மகிழ்ச்சியுடன் செய்திருப்பாள் என்பதில்

ஐயமில்லை, ஆனால் பெண்களுக்கே உரியதாய் அவளிடத்தில் காணப்பட்ட சுபாவங்கள் இப்படியாக குற்றம் சாட்டிடுவதற்கு அவளைத் தூண்டிவிடவில்லை; மேலுமாக கர்த்தருடைய செய்தியைப் பிரசங்கிக்கும் விஷயத்தில் கர்த்தர் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே பாரபட்சம் பார்க்கின்றார் என்று கர்த்தர்மேல் குற்றம் சாட்டுவதற்கு அவளைத் தூண்டவும் இல்லை.

சத்தியத்தைப் பொதுகூட்டங்களில் அறிவிக்கக்கூடிய கனத்திற்குரிய ஊழியத்தை நடப்பிக்க தடைவிதித்திருந்தபோதிலும், "அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்" என்று நம்முடைய ஆண்டவர் அறிவித்தார். ஆண்டவரைப் பிரியப்படுத்தும் காரியத்தை அவள் செய்தாள். பெண்ணின் இருதயத்திற்குரிய உண்மையான மற்றும் பெருந்தன்மையான சுபாவங்கள் மற்றும் அன்பு மற்றும் பயபக்தி மற்றும் நேர்மை ஆகியவைகளை விவரித்துக்காட்டினவளாக இருந்தாள். வார்த்தைகளினால் அல்லாமல் கிரியைகளின் மூலமாக அவள் பேசிவிட்டாள். கர்த்தர் மீது அவள் கொண்டிருந்த நேசம், இரக்கம் மற்றும் அன்பின் கிரியைகளினுடைய நறுமணம் யுகங்களைக் கடந்து வந்துள்ளது; மேலும் அவள் அவர் தலையின் மீதும், பின்னர் அவர் பாதங்கள் மீதும் ஊற்றின தைலத்தினுடைய இனிமையான சுகந்த வாசனை கிறிஸ்துவின் முழுச் சபையையும் நிரப்பின வண்ணமாகக் காணப்படுகிறது. இந்தக் காரியத்தைக் குறித்தே, "இந்தச் சுவிசேஷம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் இவள் செய்ததும் சொல்லப்படும்" என்றார்.

மரியாளைக் குறித்த எவ்வளவு இனிமையான நினைவுகூருதல்! கர்த்தரை இவ்விதமாய் அபிஷேகம் பண்ணும் விஷயத்தில் அவளுடைய உள்ளுணர்வு, சீஷர்களின் இவ்விஷயம் தொடர்பான எண்ணங்களைக் காட்டிலும் மேலானதாய் இருக்கின்றது, என்ற உண்மையை நாம் உணரும்போது அவளின் மீது நம் அனைவருக்கும் அன்பும், மதிப்பும் ஏற்படுகின்றது; கர்த்தரை அபிஷேகம் பண்ணின விஷயத்தில் அப்போஸ்தலர்கள் மிகவும் அக்கறையற்றவர்களாகவும், கணக்குப் பார்க்கிறவர்களாகவும், மிகவும் இலாப நஷ்டம் பார்க்கிறவர்களாகவும் இருந்தார்கள். சீஷர்களிடம் காணப்பட்ட இந்தக் குறைபாட்டினைத் தன்னுடைய அன்பு கலந்த பக்தியின் மூலம் நிறைவாக்கினவளாய் இருந்தாள். அன்று முதல் இன்றுவரையுள்ள கடந்த நூற்றாண்டுகளில் காணப்பட்டச் சபை சரித்திரத்தில் பெண்கள் சந்தேகத்திற்கிடமின்றி நன்மைப்பயக்கும் பங்கினை மரியாளைப்போல் நிறைவேற்றி வந்திருக்கின்றனர். (மரியாளைப் போன்ற) பெண்களுடைய பாகம் இல்லாமல் இருந்தால், இயேசுவினுடைய மதமானது இன்றிருப்தைக் காட்டிலும், மிகவும் சடங்காச்சாரமாகவும், கடமைக்குரியதாகவும், ஆர்வம் காட்டுவதற்கு பாத்திரமற்றதாகவும் இருந்திருக்கும்; ஆனால், இந்த உண்மையான பெண்மையின் பரந்த மற்றும் ஆழமான அன்பானது, கிறிஸ்துவினுடைய இருதயத்தையும், கிறிஸ்துவினுடைய அன்பையும் புரிந்துகொள்வதற்கு உதவிசெய்தது; மேலும், ஆட்டுக்குட்டியானவருடைய பின்னடியார்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமாயும் இருந்துள்ளது.

## தரித்திரர் எப்போதும் உங்களோடிருக்கிறார்களே

ஆண்டவரிடம் ஜெபிப்பதற்கும், அவருடைய திட்டங்களை அறிந்துகொள்வதற்கும் செலவிடப்படும் தருணங்கள் மற்றும் அவருடைய ஊழியத்தைச் செய்வதற்கும், பெற்றச் சத்தியங்களை அறிவிப்பதற்கும் செலவிடப்படும் பணங்கள், காலங்கள் விரயமாக்கப்படுகின்றது என்று கருதுவதும், மேலும் இவ்விதமாய்ச் செலவிடுவதால், தரித்திரர்களுக்குக் கொஞ்சமே செலவிடப்படுகின்றது என்று அனுமானிப்பதும் தவறாகும். மாறாக, ஒருவர் எவ்வளவாய்க் கர்த்தரிடத்தில் மெய்யான அன்புடன் கலந்த பக்தி கொண்டிருக்கின்றாரோ அவ்வளவாய் அவர் கர்த்தருடைய ஊழியத்திலும், தரித்திரர்களிடத்திலும் அக்கறை உள்ளவராய்க் காணப்படுவார். ஒருவன் தரித்திரரிடத்திலும், தன்னுடைய தானதர்மங்களை அடையத்தக்க நிலையில் இருக்கும் யாவரிடத்திலும் மிகுந்த இரக்கமும், மிகுந்த தாராள மனப்பான்மையும் கொண்டிராமல் அவனால் கர்த்தரை உண்மையாய் அன்புகூர முடியாது. "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம்பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு" (நீதிமொழிகள் 11:24) என்று வேதவாக்கியங்கள் கூறுகிறது. கர்த்தருடைய பின்னடியார்கள் சிக்கனமாகச் செலவழிக்க வேண்டுமே தவிர, பிசினித்தனம் பண்ணக்கூடாது. பிசினித்தனமாய் இருந்து சொத்துக்களைத் திரளாய்ச் சேர்த்து வைக்கவும் கூடாது. அவர்கள் தண்ணீர்கள்மேல் தங்கள் ஆகாரத்தைப் போடுகிறவர்களாய் இருக்க வேண்டும்; அவர்கள் நன்மை செய்து கர்த்தரிடத்தில் பலனை எதிர்பார்க்கிறவர்களாய் இருக்க வேண்டும்; அவர்களிடம் கர்த்தரால் ஒப்படைக்கப்பட்ட ஐசுவரியங்களை அவர்கள் ஆவிக்குரிய விதத்திலும், பூமிக்குரிய விதத்திலும் இலவசமாய்/தாராளமாய்ப் பயன்படுத்தி அதற்கே உரிய அவர்களுக்கான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கவேண்டும்.

பக்தியுள்ள மரியாளுடைய இந்தக் கிரியையும், அதற்காக நம் ஆண்டவருடைய விமர்சனமும், சுவிசேஷ யுகம் முழுவதிலும் உள்ள ஆண்டவருடைய ஜனங்களுக்குப் பேருதவியாயிருக்கிறது. ஒரு காலத்தில், கர்த்தருடைய ஜனங்கள் நடத்தின ஒருநாள் ஆவிக்குரிய கூட்டங்களையும், பொது மாநாடுகளையும் நடத்துவதற்கு அதிகமான பணம் செலவழிந்துவிடுகிறது என்றும், அப்பணத்தைக் கொண்டு மற்ற ஊழியங்களைச் செய்யலாம் என்றும் எண்ணினோம். ஆயினும், நாம் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் பணம் என்னும் தாலந்தைப் பயன்படுத்துவதில் மிகுந்த ஆசீர்வாதம் உண்டென்பதை அறிந்துகொண்டோம். சத்தியத்திற்கடுத்த விஷயங்களில் கொஞ்சம் பணங்களையும், கொஞ்சம் தியாகங்களையும், செய்ய மறுப்பவர்கள் சத்தியத்திற்குச் செலவிடுவதின் காரணமாகக் கர்த்தரிடத்திலிருந்து வரும் திரளான பிரதிபலன்களாகிய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை இழக்க நேரிடும். மாறாக தங்களுடைய பணத்தை மற்றவர்களுக்குச் சத்தியத்தை வழங்கும் விஷயத்திற்கும், தங்களுடைய சொந்த இருதயத்திற்குப் போஷாக்களிக்கும் விஷயத்திற்கும் செலவிட நாடுவார்களானால், அதற்கேற்ற மாபெரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வார்கள். அவர்களுக்கு பூமிக்குரிய தேவைகளைக் கர்த்தர் சந்திப்பார் என்று

நாம் சிந்திக்கின்றோம்; ஆனால் ஒருவேளை இப்படியாய்ச் சந்திக்கப்படவில்லை என்றாலும் – அவர்கள் ஆவிக்குரிய விருந்துகளின் காரணமாகப் பூமிக்குரிய விஷயங்களில், தரித்திரர் நிலையில்தான் காணப்படுவார்களென்றாலும் - ஆவிக்குரிய போஷாக்கே, ஆத்துமத்தின் கொழுமையே, கிறிஸ்துவுக்குள் புதுச் சிருஷ்டிகளெனச் செழித்தோங்குவதே நமக்கு மிகவும் முக்கியம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இந்த ஒரு பண்பிலும், அதேசமயம் அறிவிலும், ஆண்டவருக்கு ஒப்பாக அன்பிலும் வளர்ச்சியடைவதே, கிறிஸ்துவின் பள்ளியில் சக அங்கத்தினர்களோடு அங்கத்தினர்களாக இருக்கும் நமக்கான முக்கிய நோக்கமாய் இருக்கின்றது.

## அவரை அடக்கம் செய்வதற்காக அபிஷேகம் செய்தல்

அவரை அடக்கம் செய்வதற்கு எத்தனமாக மரியாளின் கிரியை இருந்ததாக நமது கர்த்தர் கூறுகிறார். அவர் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவார் என்ற அவரது தீர்க்கத்தரிசனத்தை உணராதவர்களாகவும், மறந்தவர்களாகவும், இயேசுவின் கூட்டத்தில் இருந்த அநேக கனத்திற்குரிய ஸ்திரீகள், கர்த்தரின் அடக்கப்பண்ணப்பட்ட சரீரத்தை அபிஷேகிக்கும்படி, அக்காலத்து வழக்கத்தின்படி கந்தவர்க்கங்களையும், நறுமணதைலத்தையும் வாரத்தின் முதல் நாளில் கொண்டு கல்லறைக்கு வந்தனர். அவர்களின் நோக்கம் சந்தேகத்திற்கிடமின்றி சரியானதாக இருந்தபோதிலும், கர்த்தரின் அடக்கத்திற்கு முன்னதாகவே, மரியாள் அவரை அபிஷேகித்த காரியம் மிக நேர்த்தியாய் இருந்தது மற்றும் கர்த்தரின் பார்வையில் வரவேற்கத்தக்கதுமாயிருந்தது. இதுபோல், நாமும் நம்முடைய நண்பர்கள், சகோதர சகோதரிகளிடம் இப்படிப்பட்ட செயல்களை வெளிப்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். இது, நம்முடைய அன்பான சகோதர சகோதரிகள் தங்கள் பிரயாணத்தின் முடிவை எட்டுவதற்கு முன்பும், அதாவது அவர்கள் இன்னமும் போராட்டம் என்னும் பள்ளத்தாக்கிலே காணப்படும்போது நாம் அவர்களை அன்பான வார்த்தைகள், கனிவான பேச்சுக்கள், தயவுள்ள செயல்கள் ஆகியவற்றினால் அபிஷேகிக்க வேண்டும் என்று தெரிவிக்கின்றது. கர்த்தருடைய பின்னடியார்களில் மிகவும் பலவான்களாய் இருப்பவர்களுக்கும்கூட, சில சமயம் இரக்கம் மற்றும் உற்சாகமூட்டும் வார்த்தைகள் எவ்வளவு அவசியமாய் இருக்கும் என்பதை நாம் அறியோம். மேலும், அத்தகைய இரக்கத்தை நாம் அவர்களுக்குக் காட்டும்போது, நாம் நம்முடைய சொந்த இருதயங்களுக்கே நன்மை செய்கின்றவர்களாய் இருக்கின்றோம்.

மிகைப்படுத்திய வார்த்தைகளையும், தேவையற்ற டாம்பீகமான வார்த்தைகளையும் ஒருவர் மீது ஒருவர் பொழிய வேண்டும் என்ற அர்த்தத்தில் நாம் சொல்லவில்லை. இரக்கம் மற்றும் உற்சாகமான வார்த்தைகளைப் பேசுவதற்கும், மாய்மாலமாகப் பேசக்கூடிய வார்த்தைகளுக்கும் மிகப்பெரிய வேறுபாடுகள் உண்டு. இரக்கமுள்ள இருதயத்தையும், தெய்வீக அன்பினால் ஆட்கொள்ளப்பட்ட இருதயத்தையும் உடையவர் நறுமணதைலம் உள்ள வெள்ளைக்கல் பரணியாக இருக்கின்றார். மேலும், தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியாகிய இருதயத்தைத்

திறந்து ஆவிக்குரிய சகோதர சகோதரிகள் மேலும், நம்முடன் தொடர்பில் இருக்கும் நம்முடைய பூமிக்குரிய நண்பர்கள் மற்றும் உறவினர்கள்மேலும் அத்தைலத்தை ஊற்ற வேண்டும். மேலும், ஊற்றுவதற்கேற்ற ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக்கொள்வோம்; இதை நாம் மறந்துவிட வேண்டாம்; மற்றவருடைய ஜீவியத்தின் பாதையில் மலர்களைத் தூவுவதற்கென நமக்கு அன்றாடம் வரக்கூடிய வாய்ப்புகளை நாம் பயன்படுத்து வோமாக; நாம் இப்படிச் செய்துக்கொண்டிருக்கும்போது வேறொருவர் நமக்காகவும் கூட மலர்களைத் தூவும்படிக்கு கர்த்தர் ஒருவேளை அனுமதிக்கலாம். மற்றவர்களுக்கு நீர் பாய்ச்சுகிறவனுக்கு நீர் பாய்ச்சப்படும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில், மற்றவர்களுக்கு உதவிச் செய்கின்றவன், பசியாய் விடப்படுவதில்லை; மற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடியவன், ஆறுதல் அளிக்கப்படாமல் விடப்படுவதில்லை. சந்தேகத்திற்கிடமின்றி நாம் எந்தளவுக்கு இரக்கமான, தாராளமான ஆவியைப் பெற்றிருந்து, மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகிறோமோ, அந்தளவுக்கு நமக்குத் தேவைப்படும் நேரத்தில் ஐசுவரியமுள்ள ஆசீர்வாதங்களில் நம்முடைய பங்கை நாம் பெற்றுக்கொள்ளத்தக்கதாகக் கர்த்தர் பார்த்துக்கொள்வார்.

## "அவரோடு ஒருவரும் இருக்கவில்லை" - அவரை முழுமையாகப் புரிந்துக்கொள்ள ஒருவராலும் முடியவில்லை

நமது கர்த்தருடைய ஊழியத்தின் முடிவில், அவருடைய கிருபையுள்ள நற்செய்தியைப் பெரும்பான்மையான யூதர்கள் ஏற்றுக்கொள்ளாததினாலும், அவரை நம்பாததினாலும் கர்த்தர் ஏமாற்றத்தின் உணர்வுகளை அடைந்திருப்பார். இந்த உணர்வானது, யூதாஸ் தம்மைக் காட்டிக்கொடுப்பதற்கு ஏற்கெனவே திட்டம் தீட்டியுள்ள காரியத்தை அவனுடைய மனதிலிருந்து வாசித்தபோது விசேஷமாய்த் தோன்றியிருக்க வேண்டும். மேலும் பதினொரு அப்போஸ்தலர்களிடத்திலும் பயத்தின் ஆவியைத்தான் கர்த்தர் கண்டார்; தம்மை யார் காட்டிக்கொடுப்பார் என்று அவர் ஏற்கெனவே அறிந்திருந்தார் மற்றும் தம்முடைய இக்கட்டு வேளையில் மற்ற அப்போஸ்தலர்களும் தம்மைத் தனியே விட்டுவிட்டு பயத்தினிமித்தம் ஓடிப்போய் விடுவார்கள் என்றும் அறிந்திருந்தார். இந்த மனுஷர்களிடத்தில் (அப்போஸ்தலர் களிடத்தில்) இயேசு தமது செய்தியையும், தமது அன்பையும், தமது ஆவியையும் இவ்வளவு தூரம் பரிமாறியிருந்தபோதிலும், அவர்கள் இன்னமும் பல விஷயங்களில் பெலவீனர்களாய் இருப்பார்களேயானால் - தம்முடைய ஊழியத்தில் தாம் கொஞ்சமே சாதித்துள்ளார் என்ற எண்ணங்களும், இந்தப் பன்னிரண்டு பேரைக்காட்டிலும் மற்ற ஐந்நூறு சகோதர சகோதரிகளும்கூடக் குறைவான பக்தியுடனே இருப்பார்கள் என்ற எண்ணமும் கர்த்தருக்குள் உதித்தன.

இப்படிப்பட்டதான எண்ணங்களுடன் காணப்பட்ட கர்த்தரிடத்தில் அவரைப் புரிந்தவண்ணமாய் இருந்த ஓர் அன்பான ஆத்துமா வெள்ளைக்கல் பரணியை எடுத்துக்கொண்டு வந்து அவருடைய அடக்கத்திற்கு முன்பதாக அபிஷேகம் பண்ணின காரியமானது, அவருக்கு எவ்வளவு ஆறுதலாய் இருந்திருக்க வேண்டும். நம்முடைய

அருமையான ஆண்டவருடைய இருதயத்திற்குள் கடந்து வந்ததும், வரவிருக்கிற நாட்களில் அவர் கடந்துசெல்ல வேண்டிய அனுபவங்களுக்காக அவரைப் பலப்படுத்துகிறதுமாகிய சந்தோஷமும், ஆறுதலும், ஆசீர்வாதமானதும், முந்நூறு பணத்தைக் காட்டிலும் அதிக விலையேறப்பெற்றதாய் இருந்தது. இந்தச் சம்பவம் மரியாளை நினைவுகூரும்படி சொல்லப்படவேண்டும் என்று மாத்திரம் கர்த்தர் விரும்பவில்லை; இன்னுமாக நித்திய காலமாய் இருக்கும் எதிர்காலத்தில் கர்த்தருடைய உண்மையான பின்னடியார்கள் மத்தியில் மரியாள் மிக உயர்வான ஸ்தானம் வகிப்பாள் என்று நாம் எண்ணுகின்றோம். அவள் இஸ்ரயேலை ஆட்சி செய்யும் பன்னிரண்டு சிங்காசனத்தில் வீற்றிருக்கும் அப்போஸ்தலர்களில் ஒருவராக இடம்பெறாவிட்டாலும், அவள் அன்புகூர்ந்தவரும் மற்றும் தன்னுடைய பக்தியை யாருக்காக வெளிப்படுத்தினாளோ, அந்தக் கர்த்தருக்கு அருகாமையில் காணப்படும் ஏதோ ஒரு பிரமாண்டமான, கனமிக்க ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்வாள் என்பதில் நமக்கு நிச்சயமே.

அறியப்படாத எழுத்தாளர் ஒருவர் கூறும்போது: "உங்களுடைய நண்பர்கள் மரிப்பது வரையிலும் அன்பும், இரக்கமும் உள்ள வெள்ளைக்கல் பரணியை முத்திரையிட்ட நிலையிலேயே வைத்துவிடாதீர்கள். உங்களுடைய நண்பர்களுடைய ஜீவியத்தை இனிமையாக்குங்கள். அவர்களுடைய செவிகள் கேட்கும் நிலைமையிலும் மற்றும் அவர்களது இருதயங்களானது உற்சாகமடைவதற்கு ஏதுவான நிலைமையிலும், நீங்கள் சொல்லும் வார்த்தைகளினால் சந்தோஷப்படக்கூடிய நிலைமையிலும் இருக்கும்போதே, உற்சாகமான வார்த்தைகளையும், மகிழ்ச்சியான வார்த்தைகளையும் பேசுங்கள். அவர்கள் மரித்துப்போன பின்னர் நீங்கள் கூறவேண்டுமென்றிருக்கும் அன்பான வார்த்தைகளை, அவர்கள் மரித்துப்போவதற்கு முன்னதாகவே சொல்லுங்கள். அவர்களது சவப்பெட்டிகளுக்கு நீங்கள் அனுப்ப வேண்டுமென்றிருக்கும் மலர்களை, அவர்கள் மரித்துப்போவதற்கு முன்னதாகவே அவர்களது இல்லங்களைப் பிரகாசிப்பதற்கும், மணமூட்டுவதற்கும் என்றும் அனுப்பிவையுங்கள். ஒருவேளை என்னுடைய நண்பர்கள் நான் மரித்த பிற்பாடு, என்னுடைய சரீரத்தின்மேல் ஊற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் அனுதாபமும், பாசமுமாகிய நறுமணதைலங்களினால் நிரப்பப்பட்ட வெள்ளைக்கல் பரணிகளை எங்கோ மூலையில் வைத்திருப்பார்களானால், எனக்கு அவைகள் தேவைப்படும்போது, நான் அவைகளினால் புத்துணர்வும், மகிழ்ச்சியும் அடையத்தக்கதாக, அவர்கள் அதை என்னுடைய சோர்வான மற்றும் உபத்திரவமான நேரங்களில் என்னிடத்தில் கொண்டுவந்து அவைகளைத் திறக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். அன்பு மற்றும் அனுதாபத்தின் இனிமைகள் எதுவும் என் மீது யாரும் வீசிடாத ஒரு ஜீவியத்தை ஜீவிப்பதைப் பார்க்கிலும், பூக்குவியல்கள் இல்லாத எளிமையான சவப்பெட்டியைப் பெற்றுக்கொள்வதிலும், புகழுரை இல்லாத அடக்க ஆராதனையைப் பெற்றுக்கொள்வதிலும் நான் திருப்தியாய் இருப்பேன். நம்முடைய நண்பர்கள் அடக்கம் பண்ணப்படுவதற்கு முன்னதாக, அவர்களை அபிஷேகம்பண்ணிடுவதற்கு நாம் கற்றுக்கொள்வோமாக. இறந்த பின் காட்டுகின்ற அன்பு எவ்விதத்திலும் அவர்களின்

பாரத்தைத் தணித்து, அவர்களைச் சந்தோஷப்படுத்துவதில்லை. சவப்பெட்டியின் மீதுள்ள பூக்களினால் அவர்கள் மரிப்பதற்கு முன்னதாக கடந்துவந்த சோர்வின் மத்தியிலான வாழ்க்கைக்கு நறுமணம் வீச முடியாது.”

## சுயநலத்திற்கு எதிரான தாராளகுணம்

இச்சம்பவத்திற்குப் பிற்பாடு, யூதாஸ் பிரதான ஆசாரியரிடம் சென்று இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்கு முப்பது வெள்ளிக்காசுகளுக்கு ஒப்புக்கொண்டு, இயேசுவைத் தனது கரங்களினால் காட்டிக்கொடுப்பதற்கான சந்தர்ப்பத்தைத் தேடிக்கொண்டிருந்தான் என்று பதிவு செய்யப்பட்டுள்ள காரியங்களை நாம் பார்த்துவிட்டு இப்பாடத்தை முடிவு செய்யலாம். மரியாளின் இரக்கத்திற்கும், அன்பிற்கும் மற்றும் யூதாசின் சுயநலத்திற்கும் எவ்வளவு பெரிய வேறுபாடுகள் உள்ளது! மரியாள் மிகவும் அன்பினால் நிரப்பப்பட்டவளாய் இருந்தபடியினால், தான் உட்காரவேண்டும் என்று விரும்பின பாதங்களை உடைய மாபெரும் போதகருக்கு அதாவது, அநேக ஆசீர்வாதங்களையும், இருதயத்திற்குச் சந்தோஷம் அளிப்பவைகளையும் தான் பெற்றுக்கொண்டதான உதடுகளையுடைய மாபெரும் போதகருக்கு, அதாவது கல்லறையிலிருந்து தனது சகோதரனை வெளியே கொண்டுவந்ததும், தன்னுடைய தகப்பனைக் குஷ்டரோகத்திலிருந்து சொஸ்தப்படுத்தினதுமாகிய வல்லமையைக் கொண்டிருந்த மாபெரும் போதகருக்கு, தான் செய்த காரியம் போதுமானது அல்ல என்று எண்ணினாள். நாமும் அதே போதகருக்கு எவ்வளவு கடமைப்பட்டுள்ளோம் என்பதையும், அவருடைய அற்புதமான ஜீவனுள்ள வார்த்தைகள் நம்முடைய இருதயத்திற்குள் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் கொடுத்திருக்கிறது என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். அவருடைய வார்த்தைகளினால் நாமும் மரண நிலையிலிருந்து அழைக்கப்பட்டுள்ளோம்; அப்போஸ்தலர் அறிவிக்கிற பிரகாரமாக நாம் ஒருகாலத்தில், பாவத்தினாலும், மீறுதலினாலும் மரண நிலையில் இருந்தோம், ஆனால் இப்பொழுதோ கர்த்தருடைய ஆவியினால், அன்பின் ஆவியினால், நாம் உயிர்ப்பிக்கப்பட்டு ஜீவன் பெற்றிருக்கிறோம்.

நாமும்கூட பாவம் என்னும் குஷ்டரோகத்தைப் பெற்றிருந்தோம்; ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்பட்டுக் காணப்பட்டோம்; மற்றவர்களைப் போலவே நாமும் கோபாக்கினையின் பிள்ளைகளாகக் காணப்பட்டோம். ஆனால், நம்முடைய பாவங்கள் கிருபையாக இரட்சகரினால் மூடப்பட்டது; குஷ்டரோகமும் சுத்தமாக்கப் பட்டது. மேலும், விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் வாயிலாக நமது தேவனுடைய பார்வையில், பனியைக் காட்டிலும் வெண்மையாக்கப்பட்டோம். நாமும் கூட ஆண்டவரின் பாதப்படியில் அமர்ந்து அவருடைய போதனைகளை அனுபவிக்க கற்றுக்கொண்டிருக்கிறோம். மேலும், நம்முடைய மனங்கள் புதிதாகிறதினாலே மறுரூபமும் அடைகிறோம். நாம் அவருக்குக் காணிக்கைகள் செலுத்தினாலும், அவைகள் நம்முடைய இருதயத்தின் நன்றிக்கான வெளிப்பாடாக

இருக்காது என்று எண்ணுவது ஏற்கத் தகுந்ததல்லவா? ஆண்டவர் விரும்பும் விலையேறப்பெற்ற தைலமுள்ள வெள்ளைக்கல் பரணிகளை நாமும் அவருக்குக் கொண்டுவரலாம் அல்லவா! ஆம், தலை மகிமையடைந்துவிட்டது. சரீரத்தின் பல அங்கத்தினர்களும் திரையைக் கடந்துவிட்டனர். ஆனால், கிறிஸ்துவின் இறுதி அங்கத்தினராகிய பாத அங்கத்தினர் மட்டுமே நம் மத்தியில் காணப்படுகின்றார்கள். நம்முடைய முழு வல்லமையோடு ஆவிக்குரிய காரியங்களிலும், பூமிக்குரிய காரியங்களிலும் கிறிஸ்துவின் பாதத்திற்கு உதவிகளைச் செய்ய துரிதப்படுவோம். பாத அங்கங்களிடமிருந்து பூமிக்குரிய கறைகளைச் சுத்தம் பண்ணுவதற்கு எவ்வளவு கண்ணீர்கள் நாம் சிந்தவேண்டியதாயினும், அவைகள் அனைத்தையும் நாம் முழு வல்லமையோடே செய்வோமாக; அவர்களை விலையேறப்பெற்ற நளததைலம் கொண்டு அபிஷேகம் பண்ணுவோமாக. கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கங்கள் மீது, அவர்கள் மத்தியில் மிகவும் தாழ்மையும் எளிமையுமானவர்கள் மீது நாம் செலுத்தும் அன்பும், பாசமும் எவ்வளவு விலையேறப்பெற்றதாய் இருக்குமோ அவ்வளவு நலமாய் இருக்கும்; நம்முடைய இருதயங்களில் அவருக்காகவும், அவருடையவர்களுக்காகவும் நாம் கொண்டிருக்கும் அன்பே நம்முடைய அனைத்து விஷயங்களிலும் வெளிப்படக் கூடியதாய் இருக்கவேண்டும். காலம் விரைவாகப் போய்கொண்டிருக்கிறது - அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் என்ற பாராட்டிற்குரிய வார்த்தைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் மற்றும் நாம் அபிஷேகம் பண்ணுவதற்குரிய வாய்ப்புகள் இல்லாமல் போய்விடுவதற்கு ஏதுவாக சீக்கிரத்தில் கடைசி அங்கங்களும் திரைக்கு அப்பால் போய் விடுவார்கள். ஆகவே, உலகத்தில் இப்பொழுது அவருக்கு அடையாளமாய் இருப்பவர்களாகிய விசுவாச வீட்டாருக்கு, அதாவது கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கங்களுக்கு நாம் உண்மையாய் இருப்பதின் மூலம் நமது கர்த்தருடைய அன்பான உதடுகளிலிருந்து, இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் என்ற பாராட்டைச் சம்பாதித்துக் கொள்வோமாக.


## முப்பது வெள்ளிக்காசுகளுக்காக

நம்முடைய விழுந்துபோன நிலையின் இழிவான கிரியைகளுக்கு அஸ்திபாரமாகச் சுயநலம் காணப்படுகிறது. சுயநலமான பேராசையினிமித்தம் ஏவாள் விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்தாள். பாவமும், மரணமும் ஆளுகை செய்துகொண்டிருக்கும் கடந்த ஆறாயிரம் வருடங்களாகக் காணப்பட்ட சகல இழிவான, கீழ்த்தரமான காரியங்களும் சுயநலத்தின் அடிப்படையிலேயே இருந்தது. ஆகவே, தெளிந்த புத்தியுள்ள ஆவியையே நாம் ஒவ்வொருவரும் நாட வேண்டும். அதாவது, ஒருபக்கம் நாம் மிகவும் கருமிகளாகவும் இருக்கக்கூடாது, மறுபக்கம் மிகவும் ஊதாரியாகவும் இருக்கக்கூடாது. இரண்டில் ஏதோ ஒரு பக்கத்தில் நாம் ஒருவேளை அஜாக்கிரதையாய் இருப்போமானால், கருமித்தனத்திற்குப் பதிலாக மிகவும் தாராளமாய்ச் செய்யும் பகுதியில் நாம் அஜாக்கிரதையாக இருப்பது பாதுகாப்பானதாயும், நலமானதாயும் இருக்கும் அல்லவா? பொருளாசையே எல்லா தீமைக்கும் ஆணிவேராயிருக்கிறது (திருவிவிலியம்) என்று அப்போஸ்தலர்

எழுதியிருப்பது சரியே. பொருளாசை என்பது பணத்தை மாத்திரம் குறிப்பிடாமல் பெயர், புகழ், அதிகாரம் அல்லது செல்வாக்கையும் குறிப்பிடுகின்றது. மேலும், "அந்த ஆசையால் சிலர் விசுவாசத்தினின்று பிறழ்ந்து (வழுவி) திரிந்து பல வேதனைகளைத் தாங்களாகவே தங்கள்மேல் வருவித்துக்கொள்கிறார்கள்" (1 தீமோத்தேயு 6:10) என்றும் அப்போஸ்தலர் கூறுகிறார்.

இந்த வகுப்பாருக்கு, தனது ஆண்டவரை முப்பது வெள்ளிக்காசுகளுக்கு விற்றவனாய் இருக்கின்ற யூதாஸ் உதாரணமாக இருக்கின்றான். இயேசு, தாம் சீக்கிரத்தில் மரித்துப்போவதாகவும், இந்தத் தைலம் தம்முடைய அடக்கத்திற்குத் தொடர்புடையதாய் இருக்கின்றது என கூறினதை ஒருவேளை யூதாஸ் புரிந்திருந்தாலும் சரி; இந்த விஷயங்கள் அனைத்தும் கர்த்தருக்கு நிச்சயமாய் சம்பவிக்கும் என ஒருவேளை யூதாஸ் புரிந்துக்கொண்டவனாய் இருந்து, இன்னும் முப்பது வெள்ளிக்காசுகள் தனக்கு இலாபம் என்று எண்ணினாலும் சரி; இவைகள் அவன் குற்றவாளி அல்ல என்று தீர்த்துவிட முடியாது. யூதாசுக்குப் போதகருடன் நெருக்கமான உறவு இருந்தபோதிலும், அவருடைய விலையேறப்பெற்ற வார்த்தைகள் மற்றும் பலத்தக் கிரியைகள் குறித்த அறிவு அவனுக்கு இருந்தபோதிலும் இப்பொழுது சுயநலமும், கீழ்த்தரமும் யூதாசினுடைய இருதயத்தில் ஆழ்ந்து பதிந்து போனபடியினால் அன்போ, பயபக்தியோ அச்சுயநலத்திற்கு எதிராக எதிர்த்து நிற்கமுடியவில்லை.

யூதாஸ், "அவனுடைய சொந்த இடத்திற்குச் சென்றான்," அதாவது இரண்டாம் மரணத்திற்குச் சென்றான். ஆகவேதான், அவன் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும் என்று ஆண்டவர் கூறினார். எவ்விதமான சுயநலமுள்ள இலட்சியங்களை எவன் ஒருவன் தன் இருதயத்தை ஆண்டுகொள்ள அனுமதிக்கின்றானோ, எவன் ஒருவன் கர்த்தருடைய கிருபையும், சத்தியமும், தன் இருதயத்திற்குள் வரவும், இருதயத்தை விரிவாக்கி அதனை அன்பினால் நிரப்புவதற்கு அனுமதிக்காமல் இருக்கின்றானோ, அப்படிப்பட்டவன் தனக்கென்று நியமிக்கப்பட்டுள்ள இரண்டாம் மரணத்திற்குப் போக நேரிடும். தேவனுடைய ஆவியினாலும், பெருந்தன்மையின் ஆவியினாலும், அன்பினாலும் நிரப்பப்படுவதற்கு விரும்புபவர்களுக்கு மட்டுமே தேவனுடைய தெய்வீக ஏற்பாடுகள் காணப்படுகிறது. ஆகவே, நாம் அனைவரும் யூதாசின் ஆவியை, சுயநலமான இருதயத்தை, பண ஆசையை, சுயவிருப்பத்தை, இலட்சியங்களை, அதிகமதிகமாய்த் தவிர்த்து, மரியாளுடைய அன்பான இருதயத்தையும், தாழ்மையையும், அதிகமதிகமாய்ப் பெற்றுக்கொள்ளக்கடவோம். அதாவது, சத்தியத்திற்கு ஊழியம் புரிவதற்கெனத் தனக்குரியவைகளைச் செலவுசெய்ய அவள் சித்தம் கொள்வதற்கு உதவினதோடல்லாமல், கண்ணீர் சிந்தும் அளவிற்கும், ஸ்திரீயின் விலையேறப்பெற்ற ஆபரணமாகிய தலைமயிரைத் தனது போதகருக்கு, தனது கர்த்தருக்கு மற்றும் அவருடைய பாதங்களாகிய எளிய அங்கங்களுக்கு ஊழியம் புரியும் அளவிற்கும், அவள் தன்னைத் தாழ்த்திக்கொள்வதற்கும் அவளுக்கு உதவின தாழ்மையை நாம் அதிகமதிகமாக பெற்றுக்கொள்வோமாக.



## நினைவுகூருதலின் தியானங்கள்

# வெற்றி பிரவேசம்



# நமது கர்த்தருடைய நிழலான வெற்றி

## மத்தேயு 21:1-17; லூக்கா 19:29-48; யோவான் 12:12-19; மாற்கு 11:1-11

*"ஓசன்னா கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்." மாற்கு 11:9*

இப்பாடம் நம்முடைய மனங்களை, நமது கர்த்தருடைய மாம்ச ஜீவியத்தின் கடைசி நாட்களில் நடந்திட்ட வேதனையான சம்பவங்களுக்கும், அவருடைய மனுஷீக ஜீவன் அவர் சிலுவையில் அறையப்படுவதன் மூலமாய் முடிவடைந்ததற்கும், பின்னர் மரணம் மற்றும் பாதாளத்தின் திறவுகோல்களை உடையவராகவும், இரட்சிப்பதற்கும் வல்லமையுள்ளவராகவும் காணப்பட்ட உயிர்த்தெழுந்த கர்த்தரிடத்திற்கும் படிப்படியாகக் கொண்டு செல்கின்றது. முந்தின பாகத்தில் அவருடைய அற்புதங்களினால் ஈர்க்கப்பட்டு, அவருடைய போதனைகளைக் குறித்து ஆச்சரியமடைந்து, அவருடைய போதனைகளினால் கவரப்பட்டுக் காணப்பட்ட ஜனங்கள் மத்தியில் அவர் பிரபலமடைந்து வருவது அதிகரித்து வருவதைப் பார்த்தோம். ஜனங்களோடுகூட, அவருடைய வாயினின்று புறப்பட்டு வந்த கிருபையான வார்த்தைகளினிமித்தம் நாமும் ஆச்சரியமடைந்து இருந்தோம், மற்றும் அவருடைய வார்த்தைகளை நாம் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்தோம்; மேலும் தேவனுடைய ஆவியானது, நமக்கு அவருடைய ஆலோசனையாகிய தைலத்தை அளித்தபோது, நம்முடைய இருதயங்கள் நமக்குள்ளாகக் கொழுந்துவிட்டு எரிந்தன. இப்பொழுது நாம் அவருடைய மனுஷீக ஜீவியத்தின் கடைசி சில நாட்களுக்குள்ளாக, அவரோடுகூட மனதளவில் பிரவேசிக்கையில் அந்த வேதனையான சம்பவங்கள் நம்முடைய இருதயங்களை, நமக்காக அனைத்தையும் இலவசமாய்ப் பலியாக்கின அவருடைய ஐசுவரியமான அன்போடும், பரிவோடும் நெருங்கின உறவிற்குள்ளாகவும், புரிந்துகொள்ளுதலுக்குள்ளாகவும் கொண்டு வருவதாக.

மேசியா என்று உரிமைப்பாராட்டின விஷயத்தின் உண்மைக்குச் சாட்சி பகர்ந்திட்ட அவருடைய 3½ வருடக் காலப்பகுதிக்கொண்டதும், லாசருவை மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பினதோடு நிறைவடைந்ததுமான, அவருடைய பொதுப்படையான போதனைகளும், வேலைகளும், வெற்றிகரமாய் முடிந்தது போன்று காணப்பட்ட தோற்றமானது, அவருடைய சீஷர்கள் மற்றும் இஸ்ரயேலர்களில் பலரின் நம்பிக்கைகளை உயிரோட்டம் அடையச் செய்தது; அதாவது இப்பொழுது தங்கள் இராஜா, தங்கள் மேசியாவாக உண்மையாய் வந்துள்ளார் என்றும், தீர்க்கத்தரிசிகளால் முன்னுரைக்கப்பட்டிருந்த இஸ்ரயேலின் மகிமை சீக்கிரத்தில் உணரப்படும் என்றும் எண்ணினார்கள். இப்படியாகப் பொது ஜனங்களுடைய மனநிலை இருக்கையில், தாம் இராஜ ஸ்தானத்தை எடுக்க பொதுப்படையாக முயற்சிப்பதன் மூலம், சகரியா 9:9-ஆம் வசனத்தின் தீர்க்கத்தரிசனத்தை நிறைவேற்றுவதற்காக தமக்கு வாய்ப்பு இருப்பதைக் கர்த்தர் கண்டார். சூழ்நிலைகள் சாதகமாய் இருந்தது மாத்திரமல்லாமல், வேளையும் வந்திருந்தது.

தேவன் அவர்களுடைய பிதாக்களுடன் பண்ணின உடன்படிக்கையின்படி,

இராஜ்யத்தின் சுவிசேஷமானது முதலாவதாக யூதர்களுக்கே கொடுக்கப்பட்டது. எனினும் அவர்கள் தேசமாகவே சுவிசேஷத்தை உணர்ந்துகொள்ளவோ, ஏற்றுக்கொள்ளவோ மாட்டார்கள் என்பதை முன்னமே தேவன் அறிந்திருந்தார்; மற்றும் ஜனங்களில் கொஞ்சமானவர்கள் மாத்திரமே கிருபையின் உடன்படிக்கைக்குத் தகுதியானவர்களாக இருப்பார்கள் என்றும், மீதமானவர்கள் (அவர்களுடைய தவறானக் கருத்துக்களினாலும், இருதயக் கடினத்தினாலும்) குருடாக்கப்பட்ட வர்களாய் இருப்பார்கள் என்றும், மாபெரும் உடன்படிக்கையின் ஆசீர்வாதமானது புறஜாதியார்களில் சிலரால் உணர்ந்துகொள்ளப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படுகையில், இந்தப் புறஜாதியார்கள் ஆபிரகாமின் சந்ததியாராகக் கருதப்படுவார்கள் என்றும், தேவன் தம்முடைய தீர்க்கத்தரிசி மூலமாய் முன்னறிவித்துள்ளார். இந்தப் புறஜாதியிலிருந்து வந்தவர்கள், மாம்சத்தின்படி ஆபிரகாமின் பிள்ளைகளாய் இராமல், மாறாக ஆவியின்படி, ஆபிரகாமின் விசுவாசத்தைப் பெற்றிருப்பதினால் ஆபிரகாமின் பிள்ளைகளாய் இருப்பார்கள்; ஏனெனில் தேவன் கல்லிலிருந்துக்கூட ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை எழுப்ப வல்லவராக இருக்கின்றார் என்று இயேசு கூறினார். ரோமர் 9:27; ஏசாயா 10:22,23; ரோமர் 11:7, 11, 12; அப்போஸ்தலர் 13:46; கலாத்தியர் 3:9, 16, 28, 29; மத்தேயு 3:8, 9-ஆம் வசனங்களைப் பார்க்கவும்.

தேவன் இஸ்ரயேல் ஜனங்களுடைய பிதாக்களுடன் பண்ணின இந்த உடன்படிக்கையின் காரணமாகவும், மற்றும் மற்றத் தீர்க்கத்தரிசனங்களுடைய அறிவுறுத்தலின் காரணமாகவும், இயேசு தம்மை மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு முன்னதாக, அவர்களுடைய இராஜாவென முன்வைத்தார்; ஆயினும் ஜனக்கூட்டத்தார் அவருக்கு இராஜரிகமான வரவேற்புக் கொடுத்து, ஓசன்னாக்கள் கூறி, வந்தனம் சொல்லி வரவேற்றாலும், அவர்களுடைய தவறான போதகர்களால், அவர்களுடைய நிலையற்ற மனங்கள் தடுமாறும் என்றும், எதிர்ப்பு வரும்போது, ஜனங்கள் தாங்கள் கூறின வந்தனங்களுக்கு ஏற்ப நடக்க விருப்பமற்று இருப்பார்கள் என்றும், இன்னும் சில நாட்களுக்குள்ளாக, "இவரைச் சிலுவையில் அறையும்! இவரைச் சிலுவையில் அறையும்!" என்று கூக்குரலிடுவார்கள் என்றும் இயேசு அறிந்திருந்த போதிலும், தம்மை அவர்களுக்கு முன்பாக இராஜாவென முன்வைத்தார். (யோவான் 12:1, 12, 13; 19:6, 7, 14, 15)

விளைவு/முடிவு என்னவாக இருக்கும் என்று அறிந்திருந்த போதிலும், ஏன் இப்படி இயேசு இராஜரிக அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும், இந்தச் செயல்பாட்டைச் செய்தார்? என்று கேள்வி கேட்கப்படலாம்; வரவிருக்கிற நன்மையான காரியங்களுக் கான மாபெரும் நிழல்களின் ஒரு பாகமாகவே, இச்செய்கை செய்யப்பட்டது என்று நாம் அப்போஸ்தலர்களுடைய போதனைகளை வைத்துக்கொண்டு பதில் தெரிவிக்கின்றோம்.

இப்படியாக இயேசு எருசலேமுக்குள் வெற்றி விஜயம் கொடுத்ததும், அதன் காலக்கணக்குக் காரியமும், யூத யுகத்திற்கான நிஜமாய்க் காணப்படும் இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவில், கிறிஸ்து இராஜாவாக வருவதைச் சித்தரித்துக் காண்பிக்கின்றது; யூத யுகமும், சுவிசேஷயுகமும், காலங்கள் மற்றும் சம்பவங்கள் விஷயத்திலும் இணையானவைகளாக இருக்கின்றன (தொகுதி 2, அத்தியாயம் 7 பார்க்கவும்). இந்த இணையின்படி கி. பி. 1878 எனும் வருடமானது, இந்த யுகத்தின் இராஜாவாகிய நம்முடைய உயிர்த்தெழுந்த கர்த்தர், தம்முடைய மாபெரும் வல்லமையை

எடுத்துக்கொள்வதற்கும், தம்முடைய ஆளுகையை ஆரம்பிப்பதற்குமான காலமாக இருக்கின்றது.

இது நிறைவேறியுள்ள உண்மையாக இருக்கின்றபடியினால் இதை நாம் தயக்கம் இல்லாமல் தெரிவிக்கின்றோம். தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர் மற்றும் சபையின் கீழ், பூமியில் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கான காலம் சமீபித்துள்ளது என்பதற்கு, அதிக உறுதியான தீர்க்கத்தரிசனங்களில், நமக்கு மிகுதியான நிரூபணங்கள் காணப்படுகின்றன (தொகுதி 2 மற்றும் 3 பார்க்கவும்). இந்த உண்மைக்குக் கிறிஸ்தவர்கள் மாத்திரமல்லாமல், முழு உலகத்தாரும்கூட, கேட்பதற்கும், செவிசாய்க்கும் அளவுக்கும் ஞானமுள்ளவர்களாய்க் காணப்படுவார் களானால், இன்னும் திரளான சத்தியங்களுக்கு வழி நடத்தப்படுவார்கள்.

அநேகர் அவரது வருகை பற்றின தவறான கருத்துக்கள் கொண்டிருப்பதினால், கர்த்தருடைய பிரசன்னம் பற்றின உண்மைக்குக் குருடர்களாய் இருக்கின்றார்கள் என்பது வேதவாக்கியங்களில் தெளிவாய்ச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. அவரை மாம்சத்தில் பார்க்கலாம் என்றும், மாம்ச கண்களுக்குப் புலப்படும் விதத்தில் சொல்லர்த்தமான மேகங்களில், சொல்லர்த்தமான எக்காளத்தின் சத்தத்தினால் அவரது வருகை அறிவிக்கப்பட்டு, அவர் வருவார் என்றும் அநேகர் எதிர்ப்பார்த்திருப்பதினால், அவர் மாம்சத்தில் இல்லாமல், மாறாக மாம்ச கண்களுக்குப் புலப்படாத ஆவியின் ஜீவியாகவும், அதே வேளையில் அதிக உறுதியான தீர்க்கத்தரிசன வார்த்தைகள் மூலமாக, விசுவாசக் கண்களுக்குத் தெளிவாய்ப் புரிந்துகொள்ளத்தக்கதாகவும், வந்து இப்போது இருக்கின்றார் என்பதையும் அவர்களால் உணர்ந்துகொள்ள முடியவில்லை; மற்றும் முழு உலகத்தின் மீது இருளை இப்பொழுது மிக விரைவாக அளித்துக்கொண்டிருக்கும் உபத்திரவமாகிய மேகங்கள் மத்தியில், அவரது வந்திருத்தலையும், வல்லமையையும் உணர்ந்துகொள்ள முடியாமலும் காணப்படுகின்றனர். எனினும் இவைகள் அனைத்தும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டவர்கள் யாவருக்கும், மிக முக்கியமான உண்மைகளாக இருக்கின்றது. "உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்" என்ற வார்த்தைகள் உண்மையுள்ளவர்களாகிய உங்களுக்கே சொல்லப்பட்டுள்ளது (லூக்கா 21:28). அனலுமின்றி, குளிருமின்றிப் போயுள்ள, கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்பவர்களுக்கும், மற்றும் ஒடுக்கப்படுபவர்களின் கூக்குரல்களையும், துன்பப்படுபவர்களின் துயரத்தையும் பொருட்படுத்தாமல், உலக இன்பங்களினால் தங்கள் ஆத்துமாக்களு டைய ஆசைகளைத் திருப்திப் பண்ண நாடுபவர்களாகிய உலகப்பிரகா ரமானவர்களுக்கும், "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" என்ற வார்த்தைகள் சொல்லப்பட்டுள்ளது. (தானியேல் 12:1)

"என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்" (மத்தேயு 21:13) என்று சொல்லி, ஆலயத்தில் காசுக்காரர்களுடைய பலகைகளைக் கவிழ்த்துப்போட்டதான கர்த்தருடைய அதிகாரப் பூர்வமான செய்கையானது, நிழலான செய்கையாகும்; இது இந்த யுகத்தினுடைய

முடிவில், தேவனுடைய வீட்டார் என்று அறிக்கைப் பண்ணுகிறவர்களிடத்தில் ஆரம்பிக்கும் நியாயத்தீர்ப்பையும், சத்தியத்தை வியாபாரம் பண்ணுபவர்களுக்கு எதிரான அவருடைய மாபெரும் கோபத்தையும், சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. (மத்தேயு 21:12, 13; 1 பேதுரு 4:17)

பின்னர் ஆலயத்திற்கு அவரோடு வந்திருந்த குருடர்களையும், சப்பாணிகளையும் அவர் சொஸ்தப்படுத்துகின்ற காரியமானது, எவ்வாறு சபையில் ஆவிக்குரியவற்றில் குருடர்களாயும், சப்பாணிகளாயும் இருந்திட்டவர்கள், அவருடைய சுகமாக்கும் தொடுதலினால் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. "குருடரும் சப்பாணிகளும் தேவாலயத்திலே அவரிடத்திற்கு வந்தார்கள், அவர்களைச் சொஸ்தமாக்கினார்." (மத்தேயு 21:14; வெளிப்படுத்தல் 3:18, 19)

(இன்றும் கர்த்தரினால் சொஸ்தப்படுத்தப்பட்ட குருடர்களுக்கும், சப்பாணிகளுக்கும் எதிராக பிரதான ஆசாரியர்கள் போன்றதான தலைமை குருக்கள் இருப்பது போன்று) பிரதான ஆசாரியர்கள், புதிய இராஜாவை மகிமைப்படுத்தினவர்களுக்கு எதிராக, தங்களது எரிச்சலை வெளிப்படுத்தினபோது, இயேசு: "இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார். (லூக்கா 19:40) ஏன்? காரணம், சகரியா தீர்க்கத்தரிசியானவர் இந்தக் கெம்பீரிப்பையும், களிகூருதல்களையும் பற்றி முன்னமே கூறியுள்ளார். (சகரியா 9:9) மற்றும் இப்பொழுது வேளை வந்துள்ளது, மற்றும் தீர்க்கத்தரிசனமும் நிறைவேறினது; "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்;" இது அப்போது நிழலாய் இருந்தது மற்றும் இப்பொழுது நிஜமாய் இருக்கின்றது. கெம்பீரிப்பும், களிகூருதலும் அப்போது இருப்பது அவசியமாய் இருந்ததானால், இப்போதும் அவசியமானதேயாகும். இராஜாவை இப்பொழுது தங்கள் மத்தியில் காணப்படுபவராக, அடையாளம் கண்டுகொள்பவர்களாகிய பரிசுத்தவான்கள் மத்தியில் இப்பொழுது காணப்படும் சந்தோஷம் மாபெரியதேயாகும்; மற்றும் அவருடைய வந்திருத்தலையும், இராஜ்யத்தையும் குறித்ததான அவர்களது பறைச்சாற்றுதலானது கெம்பீரிப்பாக இருக்கின்றது; இந்தக் கெம்பீரித்தலானது விசுவாசிக்கப்படவில்லை என்றாலும், தொனித்துக் கொண்டிருக்கின்றது. ஆண்டவர், "குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா" (மத்தேயு 21:16) என்று கூறினார். இதன் நிஜமும் இப்படியாகவே இப்பொழுது காணப்படுகின்றது. ஏனெனில் இராஜாவின் வந்திருத்தல் குறித்தும், அவருடைய வல்லமை குறித்துமான அடையாளம் கண்டுகொள்ளுதலினால் எழும்பும் ஓசன்னா, இன்றுள்ள பிரதான ஆசாரியர்கள் மற்றும் மத குருமார் வகுப்பாரிடமிருந்து எழும்பாமல், மாறாக சாதாரணமான ஜனங்களாகிய குழந்தைகள் மற்றும் பாலகருடைய வாயிலிருந்தே துதிக் கேட்கப்படுகின்றது; "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! ஆளுகை செய்வதற்கும், இப்பொழுது தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொண்டிருப்பவருமாகிய தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!" என்று துதிக் கேட்கப்படுகின்றது.

# ஓசன்னா! வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்

## மத்தேயு 21:1-17

*“கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.”*

மார்த்தாள் மற்றும் மரியாளுடைய வீட்டில் நடைப்பெற்ற விருந்திற்குப் பிற்பாடு, அடுத்தநாள் காலையில், அதாவது வாரத்தினுடைய முதல் நாளில் (ஞாயிற்றுக் கிழமையில்) நமது கர்த்தர், எருசலேமிற்குள் இராஜாவெனப் பிரவேசிப்பதற்கான ஆயத்தங்களை நேரமே ஆரம்பித்தார். “தம்முடைய சொந்த” ஜனங்கள் தம்மை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை அறிந்திருந்தபோதிலும், இன்னுமாக அவர் தாம் அதிகாரிகளினால் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார் என்று தம்முடைய சீஷர்களிடம் ஏற்கெனவே பகிர்ந்திருந்தபோதிலும் மற்றும் முந்தின இரவில் மரியாளுடைய தைலம் ஊற்றும் காரியமானது, தம்மை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது என்று அவர் குறிப்பிட்டிருந்தபோதிலும், அவர் தம்மை யூதர்களுடைய இராஜாவென முறையாக முன்வைப்பதும் மற்றும் இப்படியாகத் தேவனுடைய தயவானது, “முதலாவது யூதருக்கே” உரியது எனும் தேவ வாக்குத்தத்தத்தை அந்த ஜனங்களுக்கு நிறைவேற்றுவதும் தெய்வீகத் திட்டத்தில் அவசியமான பாகமாய் இருந்தது.

அவரை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்று, அவரை இராஜாவாக்கிட வேண்டும் என்று ஜனங்களில் சிலரிடம் காணப்பட்ட மனப்பான்மையை, முந்தின தருணங்களின் போதெல்லாம், அவர்களின் நடுவிலிருந்து கடந்துபோய்விடுவதன் மூலம் நமது கர்த்தர் எதிர்த்தவராய் இருந்தார் (யோவான் 6:15); ஆனால் இப்பொழுதோ நேரம், அதாவது ஏற்றவேளை வந்துள்ளபடியால், முந்தின தருணங்களிலெல்லாம் ஆரவார அணிவகுப்பை அவர் தடைப்பண்ணினது போலல்லாமல், இப்பொழுது தமது ஆரவார அணிவகுப்பை நிதானித்து திட்டமிட்டவராய்க் காணப்பட்டார். கழுதையும், அதன் குட்டியும் எங்கு மற்றும் எப்படிக் காணப்படும் என்று தெளிவாய்க் குறிப்பிட்டதின் வாயிலாக இயற்கைக்கு அப்பாற்பட்ட தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினவராக, கழுதையையும், அதன் குட்டியையும் கொண்டுவரும்படிக்கு, சீஷர்களில் சிலரை அவர் அனுப்பி வைத்தார். குதிரைக்குப் பதிலாக கழுதை பயன்படுத்தும் வழக்கம் இருந்தது; இஸ்ரயேலின் இராஜாக்கள் அனைவரும், தங்களது முடிசூட்டு விழாவின்போது கழுதையின்மேல் ஏறிச்செல்வது வழக்கமாயிருந்ததெனப் பாரம்பரியமானது தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

கழுதை வந்தடைந்தபோது, சீஷர்களும், ஜனக்கூட்டத்தார் அனைவரும் உற்சாகம் அடைந்தார்கள்; எரிகோவிலிருந்து வந்தவர்களும், பரிசுத்த நகரம் செல்வதற்கும், பஸ்கா கொண்டாடுவதற்கென்றும் மேற்கொள்ளப்பட்ட பிரயாணத்தின் போது, நமது கர்த்தருடைய வல்லமையையும், போதனைகளையும் நேரில் கண்டறிந்தவர்களுமான அநேக ஜனங்கள், ஓய்வுநாளன்று அவர் பெத்தானியாவில் தங்கினதுபோலவே, பெத்தானியாவில் தங்கினார்கள் என்பதாகத் தெரிகின்றது. இவர்களும், சீஷர்களுமாக சேர்ந்து ஒரு சிறு குழுவினராகி, இயேசுவை இராஜாவென

வாழ்த்த ஆரம்பித்தார்கள் மற்றும் அவருக்கும் மரியாதை செலுத்தும்விதமாக, அந்நாட்களில் புகழ்மிக்கவர்களுக்குச் செய்யும் வழக்கத்தின்படி, அவர் ஏறிச்சென்ற கழுதையானது, தங்கள் வஸ்திரங்கள்மேல் மிதித்துச் செல்லத்தக்கதாக, தங்களது மேல் வஸ்திரங்களை வழியிலே பரப்பினார்கள்; இன்னுமாகப் பேரீச்சைமரக்கிளைகளையும், மலர்களையும், புல்லையும் பறித்து வந்து, வழியிலே பரப்பினார்கள்.

இயேசு இப்படியாகக் கனமிக்க ஸ்தானத்துடன், முன்பாக சவாரிப்பண்ணிக் கொண்டிருக்கையில், இந்தக் கூட்டத்தார் எருசலேமுக்குப் போகும் சாலையில், பின்தொடர்ந்து வந்தனர். பட்டணத்திலிருந்து/ நகரத்திலிருந்து வந்த மற்றொரு கூட்டத்தாரோ, மாபெரும் தீர்க்கத்தரிசியும், போதகருமானவர் பெத்தானியாவில் இருக்கின்றார் என்று கேள்விப்பட்டவர்களாக, அவரையும், லாசருவையும் காணத்தக்கதாகப் புறப்பட்டுவந்தார்கள் மற்றும் இந்தக் கூட்டத்தார் கர்த்தரையும், அவருக்குப் பின்பாக வந்தனம் கூறி வந்தவர்களையும் கண்டபோது, இவர்களும் திசையைத் திருப்பிக்கொண்டு, கூட்டத்தை முன்னின்று நடத்துவோர் போலாகி, மற்றவர்களைப்போல, "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று வந்தனமிட்டனர்; "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்பது இராஜ வம்சாவழியான/சந்ததிவழியான இராஜா" என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஏரோது இராஜாவுக்கு எதிராகவும், இவருக்கு அதிகாரம் வழங்கிட்டதான உரோம சாம்ராஜ்யத்திற்கு எதிராகவும் துரோகம் புரிந்துள்ளனர் எனும் குற்றச்சாட்டினைத் தாங்களே தங்கள் மீது கொண்டுவராதபடிக்கு, "இராஜா" எனும் வார்த்தையைப் பயன்படுத்துவதை அநேகமாக ஜனங்கள் தவிர்த்திருக்க வேண்டும்.

அது பார்க்கின்றவர்களின் பார்வைக்கேற்ப மகா இராஜாவின் நகரத்திற்குள்ளான பிரம்மாண்டமான (அ) கேலிக்கிடமான ஒரு வெற்றி விஜயமாய்க் காணப்பட்டது. மேசியாவின் மீதான ஆவலினாலும், இஸ்ரயேலுக்காக நீண்ட காலம் வாஞ்சிக்கப்பட்டதான ஆசீர்வாதங்கள் விரைவில் நிறைவேறப்போகின்றது என்ற நம்பிக்கையினாலும் முழுக்க நிரம்பப் பெற்றவர்களாகிய சீஷர்கள் மற்றும் ஜனக்கூட்டத்தாரின் கண்ணோட்டத்தின்படி, அதாவது மரித்தவர்களை உயிர்த்தெழுப்புவதற்கும், வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதற்கும் வல்லமை கொண்டிருப்பவராகிய இந்த மாபெரும் தீர்க்கத்தரிசியினால், அவரது ஏற்றவேளையிலும், வழியிலும் தம்மையும், அவர்களையும், அனைத்துச் சத்துருக்களும் ஜெயிக்க முடியாமல் போவதற்குச் செய்ய முடியும் என்றும், தீர்க்கத்தரிசிகளினால் முன்னுரைக்கப்பட்டதான மகிமையான காரியங்கள் அனைத்தையும் இவரால் நிறைவேற்ற முடியும் என்றுமுள்ள விசுவாசத்தினால் முழுக்க நிரம்பப்பெற்றவர்களாகிய சீஷர்கள் மற்றும் ஜனக்கூட்டத்தாரின் கண்ணோட்டத்தின்படி . . . அது ஒரு பிரம்மாண்டமான தருணமாகவும், உண்மையான வெற்றி விஜயமாகவும் காணப்பட்டது. இயேசு தம்முடைய மரணம் குறித்துத் திரும்பத் திரும்ப முந்தின தருணங்களின்போதெல்லாம் அவர்களிடம் கூறியிருந்தாலும் மற்றும் பேதுரு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் பேசினதற்காக இயேசு அவரைக் கண்டித்துப் பேசியிருந்தபோதிலும், அவரது சீஷர்களாலும், மற்றவர்களாலும், அவரது வார்த்தைகளினுடைய உண்மையான அர்த்தத்தினை புரிந்துகொள்ள முடியவில்லை

மற்றும் பிற்காலங்களில் தங்களுக்குப் புரியபோகின்றதான, "மறைப்பொருள்களாகவே" அவர்களால் கருதப்பட்டது. இது அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு, அவர்களால் பேசப்பட்ட வார்த்தைகளிலிருந்து உறுதியாகுகின்றது; "அவரே இஸ்ரயேலை மீட்டு இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம்" என்ற அவர்களது வார்த்தையிலிருந்து உறுதியாகுகின்றது. (லூக்கா 24:21)

ஏரோது, பிலாத்து, பிரதான ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகர்களின் கண்ணோட்டத்தின்படி, இந்த ஆரவார அணிவகுப்பானது மதவெறிக் கொண்ட ஒரு தலைவனுடைய மற்றும் அவரால் ஏமாற்றப்பட்ட அறிவில்லாதவர்கள் மற்றும் மதவெறி கொண்டவர்களுடைய அணிவகுப்பாய் இருந்தது. இப்படியாகவே அவர்கள் பார்த்தார்கள் என்பது உறுதியே. இந்த இழிவான நசரேயனும், அவரது கூட்டத்தாரும், தாங்கள் நிர்வகித்துவருகின்றதான நிர்வாகத்திற்கு எதிராக ஒரு சேனையை உருவாக்கி மற்றும் அதற்குரியவைகளைப் பார்த்துக்கொள்வார்கள் என்று இராஜாவாகிய ஏரோதும், பிலாத்துவும் கொஞ்சமும் பயப்படவில்லை என்பதும் உறுதியே. இந்த மத வைராக்கியமானது/வெறியானது ஏதோ விதத்தில் பரவி, தங்கள் மீது அரசியல் வல்லமைகளுடைய கோபத்தையும், ஒடுக்குதலையும் கொண்டுவரும் என்றும், இதைப் பயன்படுத்தி இந்த அரசியல் வல்லமைகளானது, யூதர்களுக்கான சுயாதீனங்களில் இன்னும் குறுக்கிடும் என்றும் மாத்திரமே மதத்தலைவர்கள் பயந்தவர்களாய்க் காணப்பட்டனர். வேதவாக்கியங்களில் இடம்பெறுகின்றதான கிருபையுள்ள வாக்குத்தத்தங்களினுடைய நிறைவேறுதலுக்காகவே, தேவனால் இயேசு மேசியாவாக அனுப்பப்பட்டவரென, பிரதான அதிகாரிகளில் எவரும் இயேசுவில் விசுவாசம் வைக்கவில்லை என்பதில் உறுதியே. இதைக்குறித்து அப்போஸ்தலர்கள், "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர் களென்று அறிந்திருக்கிறேன்"; "அறிந்தார்களானால் மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே" என்று கூறியுள்ளனர். (அப்போஸ்தலர் 3:17; 1 கொரிந்தியர் 2:8)

அந்த ஊர்வலமானது, இன்னுமொரு கோணத்தில் நமது கர்த்தரினாலும், இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாகிய, கண்களுக்குப் புலப்படாத தூதர் சேனையினாலும்கூடப் பார்க்கப்பட்டது. இவர்களுங்கூட ஜனக்கூட்டத்தாரின் உணர்வுகளில்/ஆர்வத்தில் பங்கெடுத்துக்கொண்டார்கள், ஆனாலும் முற்றிலும் வேறுபட்ட ஒரு கண்ணோட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டவர்களானார்கள்; அதாவது இந்த வெற்றி விஜயமானது தெய்வீகத் திட்டத்தினுடைய ஒரு பாகம் மாத்திரந்தான் என்றும், கர்த்தர் தம்மைப் பலியாக்கிடுவது நிறைவடைந்தும், இப்படியாக "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரத்தைப்" பெற்றுக்கொள்வதன் வாயிலாகக் கர்த்தர் சார்பில் அடையப்படுகின்றதான மாபெரும் வெற்றிக்கான ஒரு முற்செயல் மாத்திரம்தான் என்றும், பாவத்தைக் கீழாக்கிப் போடுவதற்கும், அனைத்தையும் தேவனுக்குக் கீழ்ப்படுத்துவதற்கும், பிதாவுடனும், அவரது சாம்ராஜ்யத்தின் பிரமாணங்களுடன் முழுமையான இசைவுக்குள் வர விரும்புகின்ற யாவரையும் பாவம், வியாதி மற்றும் மரணம் எனும் பயங்கரமான குழியினின்று தூக்கிவிடுவதற்கும் என்று மிகுதியான

வல்லமை மற்றும் அதிகாரத்துடன் தூரதேசத்திலிருந்து (பரலோகத்திலிருந்து), தம்முடைய இராஜ்யத்துக்கு அவர் வெற்றிவாகையுடன் திரும்பி வருதலுக்கான முன்னடையாளம் என்றும் உணர்ந்துகொண்டவர்களாய்க் காணப்பட்டனர். இதுவே தேவனுடைய கிருபையினால் நாம் புரிந்துகொள்வதற்குச் சிலாக்கியம் பெற்றதான, அந்த வெற்றி விஜயத்தை/அணிவகுப்புக் குறித்த மிகுந்த மகிமையான கண்ணோட்டமாகும் மற்றும் நாமும் "நம்முடைய கண்கள் காண்கிறதினாலும், நம்முடைய காதுகள் கேட்கிறதினாலும் பாக்கியவான்களாய் இருக்கின்றோம்" என்றதான நமது கர்த்தருடைய வார்த்தைகளைக் கூறுவோமாக.

ஜனக்கூட்டத்தார் நடுவில் ஆரம்பத்தில் காணப்பட்ட சில பரிசேயர்கள், நமது கர்த்தர் கூறினவைகளையோ (அ) செய்தவைகளையோ மறுத்துப் பேச முடியாமல் காணப்பட்டாலும், ஜனக்கூட்டத்தாரும், சீஷர்களும் அவரை இராஜாவென வாழ்த்துவதற்கும், ஓசன்னாக்கள்! (இரட்சிப்பு, ஸ்தோத்திரித்தல், துதி!) கெம்பீரிப்ப தற்கும் அவர் அனுமதிக்கக்கூடாது என்று முறையிட்டதாக லூக்காவின் பதிவு நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இந்நிகழ்வு தொடர்புடையதான தீர்க்கத் தரிசனத்தை இயேசு அறிந்தவராக, சீஷர்களைக் கடிந்துகொள்வதற்கும் மற்றும் அவர்களது ஆரவாரங்களைத் தடுப்பதற்கும் மறுத்தது மாத்திரமல்லாமல், தேவன் தாமே தீர்க்கத்தரிசி வாயிலாக, "எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி" என்று கூறியிருக்கின்றார் என்றும், ஆகையால் கெம்பீரித்தல்கள் காணப்பட வேண்டும் என்றும், இப்படியாகக் கெம்பீரிப்பதற்கென ஜனங்கள் உற்சாகமடையவில்லை என்றாலும், தீர்க்கத்தரிசனம் நிறைவேறாமல் போய்விடாதபடிக்கு, இந்தக் கல்லுகள்கூடக் கெம்பீரித்திருக்கும் என்றும் பரிசேயர்களுக்குத் தெரிவித்தார் (சகரியா 9:9).

கர்த்தர் கழுதையின் மீது ஏறிப் புறப்பட்ட இடமான பெத்பகேயுவிலிருந்து, எருசலேமுக்குக் கொஞ்சம் தொலை தூரந்தான் காணப்பட்டாலும், எருசலேம் பட்டணமானது ஒலிவ மலையினால், பார்வையிலிருந்து மறைந்து காணப்பட்டது மற்றும் கர்த்தர் ஒலிவ மலையினுடைய உச்சிக்கு வந்தபோதோ, எருசலேம் பட்டணமானது திடீரெனப் பார்வைக்குத் தெரிந்தபோது, அவர் ஊர்வலத்தை நிறுத்தி, பட்டணத்தைக்குறித்துக் கண்ணீர்விட்டழுது, "உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற் போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும்" என்று கூறினார். (லூக்கா 19:41-44) இந்த வார்த்தைகளை வைத்துப் பார்க்கும்போது, நமது கர்த்தர் தம்மோடுகூட அங்குக் காணப்பட்டதான ஜனக்கூட்டத்தார், பட்டணத்திற்கும், தேசத்திற்கும் பிரதிநிதித்துவம் படுத்துபவர்களாய் இருக்கின்றார்கள் என்பதாகக் கருதவில்லை என்பது உறுதியே; ஏனெனில் இவர்கள் தம்மோடுகூட அங்குக் காணப்பட்டு, "யேகோவாவின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்!"

என்ற வார்த்தைகளைக் கெம்பீரித்துக் கொண்டிருந்தாலும், நமது கர்த்தருடைய வார்த்தைகளானது, ஜனங்களின் பிரதிநிதிகளாகிய இஸ்ரயேலின் தலைவர்களும் மற்றும் பிரதானமானவர்களும் அவரது இரண்டாம் வருகையின்போது அவரை இராஜாதி இராஜன் என்றும், கர்த்தாதி கர்த்தன் என்றும் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்வதற்கான காலம் வரவுள்ளது என்பதையும், ஆனாலும் இதற்கிடையில் தங்களது சந்திப்பின் காலத்தை அடையாளங்கண்டுகொள்ள தவறின காரியமானது, அவர்களுக்கு மாபெரும் சிலாக்கியத்தின் இழப்பாகக் காணப்படும் மற்றும் இன்னுமாக இந்தச் சுவிசேஷ யுகத்தில் கர்த்தரினால் அவர்களது வீடு பாழாக்கிவிடப்படுவதாகவும், கைவிடப்படுவதாகவும் காணப்படும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; அவரை ஏற்றுக்கொண்ட (அ) ஏற்றுக்கொள்ளப் போகின்றதான இஸ்ரயேலில் காணப்பட்டதான உண்மையுள்ளவர்களாகிய மீதியானவர்கள்போக, தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடைய எண்ணிக்கை நிறைவடைவதற்குப் போதுமானவர்களைக் கர்த்தர் இந்தச் சுவிசேஷயுகத்தில் புறஜாதிகள் மத்தியிலிருந்து சேர்த்துக்கொள்வார். மத்தேயு 23:39-ஆம் வசனத்தைப்பார்க்கவும்.

இந்த வெற்றி ஆரவாரத்துடன்கூடிய அணிவகுப்பானது, பரிசுத்த நகரத்தை, தலை நகரத்தை, மகா இராஜாவின் நகரத்தை நோக்கியே நோக்கம் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. நமது கர்த்தர் ஏரோதினுடைய அரண்மனைக்குச் சென்று, அது தமக்குரியதென அவர் அதிகாரத்துடன் கேட்டுக்கொள்ளவில்லை; அவர் பிலாத்துவின் அரண்மனைக்குச் சென்று தம்மை அங்கீகரிக்கும்படிக்கு அதிகாரத்துடன் கேட்டுக்கொள்ளவில்லை; மாறாக யேகோவாவின் பிரதிநிதியென, மேசியாவென, இஸ்ரயேல் மற்றும் உலகத்தினுடைய இரட்சகராகும்படிக்குத் தேவனால் அனுப்பப்பட்டவரென பிதாவின் வீட்டிற்கு (அ) அரண்மனைக்கு, அதாவது ஆலயத்திற்குச் சரியாய்ச் சென்றார்.

ஆலயத்தில் நடைப்பெற்ற காட்சியானது, குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஆலயம் நாகரிகமடைந்த உலகத்தினுடைய அனைத்துப் பாகங்களிலுமுள்ள யாத்திரிகர்களால் நிரம்பிக் காணப்பட்டது; வருடத்தினுடைய அந்தக் காலக்கட்டத்தின்போது கர்த்தரைத் தொழுதுகொள்வதற்கும் மற்றும் நியாயப்பிரமாணத்தின்படி பஸ்காவை அனுசரிப்பதற்கும் என்று பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் நாகரிகமடைந்த உலகத்தினுடைய அனைத்துப் பாகங்களிலிருந்து வருவதுண்டு. அநேகமாக இவர்களில் அநேகர் "செய்கையிலும், வாக்கிலும் வல்லமையுள்ளவரான" நாசரேத்தூர் இயேசுவைக்குறித்துக் கொஞ்சம் கேள்விப்பட்டிருந்தவர்களாய்க் காணப்பட்டனர். இவர்களில் அநேகர் இயேசுவினால் குணப்படுத்தப்பட்டவர்களாக (அ) இந்த விதமாய் ஆசீர்வதிக்கப்பட்டதான (குணப்படுத்தப்பட்டதான) நண்பர்களைப் பெற்றிருந்தவர்களாய்க் காணப்பட்டனர்; மேலும் இயேசுவோடுக்கூட வந்து, "உன்னதத்திலிருக்கிறவருக்கு ஓசன்னா" என்றெல்லாம் கெம்பீரித்து வருகிறதான ஜனக்கூட்டத்தார் எத்தகையதொரு சலசலப்பை உண்டுபண்ணியிருப்பார்கள் என்று நம்மால் நன்கு கற்பனைச் செய்துபார்க்க முடிகின்றது. மத சம்பந்தமான விஷயங்களிலும், இன்னும் விசேஷமாக ஆலயத்திலும், ஜனங்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வந்ததான பரிசேயர்களும், வேதபாரகர்களும் மற்றும் பிரதான ஆசாரியர்களும், இயேசுவுக்கு

எதிராகக் கோபமடைந்தபோதிலும், அச்சந்தர்ப்பத்தில் அவருக்குப் பாதிப்பு உண்டுபண்ண வல்லமையற்றவர்களாகத் தங்களைக்குறித்து உணர்ந்து கொண்டார்கள்; ஏனெனில் இயேசு எந்த விதத்திலும் அங்கு நியாயப்பிரமாணத்திற்கு எதிராகச் செய்யவில்லை மற்றும் இது அனைவருக்குமே தெரியவும் செய்தது. தம்முடைய அதிகாரத்திற்கு உட்பட்டவைகளை மாத்திரம் தாம் செய்வதாகக் காண்பிக்கும் பொருட்டு நமது கர்த்தர், ஆவிக்குரிய இராஜாவுக்கு ஏற்புடையதுபோன்று தமது அதிகாரத்திற்கு உட்பட்டதைச் செயல்படுத்த ஆரம்பித்தார்; அதாவது பரிசுத்த ஆலயத்தையும் அதன் எல்லைகளையும் பரிசுத்த குலைச்சலாக்கிப் போட்டவர்களைக் கண்டனம் பண்ணி, காணிக்கைச் செலுத்துவதற்கெனப் புறாக்களை விற்பனைக்காக வைத்திருந்தவர்களையும், காசுக்காரர்களையும் வெளியே துரத்துவதன் மூலம் செயல்பட்டார்; இந்தக் காசுக்காரர்கள் என்பவர்கள், தொலைத்தூரத்திலிருந்து தொழுதுகொள்ளுவதற்கெனப் பிரயாணம்பண்ணி வந்துள்ளவர்களுக்கான தேவைகள் சார்ந்த விஷயத்தில், இலாபங்களை ஈட்டிக்கொள்பவர்களாகக் காணப்பட்டனர்; தொலைத்தூரத்திலிருந்து தொழுதுகொள் வதற்கென வந்தவர்களின் பணங்களானது, யூத பணமாக இராததினால், அவைகள் ஆலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத காரணத்தினால், அவர்கள் பணத்தைத் தங்களுக்கு நஷ்டமான விதத்திலும், காசுக்காரர்களுக்கு இலாபமான விதத்திலும், மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. அத்தேசத்தினுடைய (அ) ஆலயத்தினுடைய சரியான/நியாயமான சட்டங்களில் நமது கர்த்தர் குறுக்கிடுகின்றார் என்பதாக நாம் புரிந்துகொள்ளக்கூடாது; அவர் எல்லா விதத்திலும் சட்டத்திற்கு ஒத்துப்போனவராகவே காணப்பட்டார். ஆனால் நியாயப்பிரமாணத்தினுடைய கட்டளையின்படி ஆலயத்தினுடைய பரிசுத்தத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கு அவசியப்படுவதற் கேற்றதான பலத்தைப் பயன்படுத்துவதற்கு அனைத்து யூதர்களுக்கும் உரியதான முழு அதிகாரத்தையே, இயேசுவும் உடையவராயிருந்தார்.

குருடர்களும், சப்பாணியுமானவர்கள் ஆலயத்தில் நமது கர்த்தரிடத்தில் வந்து, தங்கள் குறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் மற்றும் பின்னர் அவர் ஜனங்களுக்குப் போதித்தார்; இப்படியாக அவர் தொடர்ந்து பல நாட்கள் சொஸ்தமாக்கியும், போதித்தும் காணப்பட்டு, இரவு வேளைகளில் பெத்தானியாவுக்குப் போயும், அடுத்த நாள் காலையில் ஆலயத்திற்கு வந்தவராகவும் காணப்பட்டார்; ஆனால் அவர் தம்மை இராஜாவெனத் திரும்பவும் சுட்டிக்காண்பிக்கவில்லை (நிரூபணம் அளிக்கவில்லை); ஏனெனில் ஒருமுறை சுட்டிக்காண்பித்தது (நிரூபணம் அளித்தது) என்பது நோக்கத்தினை நிறைவேற்றிடுவதற்குப் போதுமானதாய் இருந்தது. அந்த ஒரு நிரூபணமானது, அந்தப் பட்டணத்தின் மற்றும் தேசத்தின் அதிகாரிகள் அவரை இராஜாவென முறையாக ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை அருளினதாய் இருந்தது; ஆனாலோ இவர்களது எதிரிடையான ஆவியானது, ஆலயத்தினுடைய முற்றங்களில் பிள்ளைகள் "ஓசன்னா!" என்று கெம்பீரிப்பதை இவர்கள் கண்டு, அதைக் கர்த்தர் தடைப்பண்ணும்படிக்கு, வேண்டிக்கொள்வதற்கென வந்தபோது வெளிப்பட்டது; இவர்களுக்குப் பிரதியுத்தரமாக நமது கர்த்தர் வேதவாக்கியங்களை மேற்கோளிட்டு, இவ்விஷயம் தெய்வீகத் திட்டத்திற்கு இசைவானதாகக்

காணப்படுகின்றது என்றார்; "குழந்தைகளுடைய வாயினாலும், பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர்" என்று குறிப்பிட்டார். இதை உலக ஞானிகள் உணர்ந்துகொள்ளவில்லை மற்றும் தன்னலத்தின் காரணமாகக் குருடாக்கப் பட்டவர்களாகக் காணப்பட்டனர்; ஆனால் சிறு பிள்ளைகளோ, அதிலும் விசேஷமாக எளிமையான இருதயத்தினாலும், சாந்தத்தினாலும் சிறு குழந்தைகள் போலானவர்களோ, கர்த்தருடைய துதிகளைக் கெம்பீரிப்பதற்குக் கர்த்தரினால் பயன்படுத்தப்பட்ட கருவிகளானார்கள்.

நீசான் மாதம் 10-ஆம் தேதி அவர் வெற்றி பிரவேசம் பண்ணி தம்மை முன்வைத்ததற்கும், பஸ்கா ஆட்டுக்குட்டியெனப் பதினான்காம் தேதி அவர் சிலுவையில் அறையப்படுவதற்கும் இடைப்பட்ட நாட்களிலேயே, அதாவது ஆலயத்தில் காணப்பட்டதான அந்த நாட்களிலேயே அநேகமான அவரது உவமைகளும், விசேஷித்த உபதேசங்களும் வழங்கப்பட்டன (யாத்திராகமம் 12:3, 6 வாசிக்கவும்). இந்த உவமைகள் முதலானவைகளெல்லாம் மத்தேயு சுவிசேஷத்தில் 23 முதல் 25 வரையிலான அதிகாரங்களிலும், மாற்கு சுவிசேஷத்தில் 11 முதல் 13 வரையிலான அதிகாரங்களிலும், யோவான் சுவிசேஷத்தில் 12 முதல் 16 வரையிலான அதிகாரங்களிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மற்ற விஷயங்களைக் குறிப்பிட்டதோடு கூட மாம்சீக இஸ்ரயேலர்களிடமிருந்து தேவனுடைய தயவானது எடுக்கப்பட்டதையும் குறித்து இயேசு அப்போது குறிப்பிடும் வண்ணமாக:

"எருசலேமே, எருசலேமே, தீர்க்கத்தரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (மத்தேயு 23:37-39)

தற்காலத்திலுள்ள நாம் இந்த நிகழ்வுகளிலிருந்து சிறந்த பாடங்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில், அவைகளினுடைய நிழலான அம்சங்களும் மறக்கப்படக்கூடாது என்றும் நாம் தெரிவிக்கின்றோம்; நமது கர்த்தருடைய ஊழியத்தின் இறுதிக்காலங்களில் நடைப்பெற்றதும் மற்றும் மாம்சீக இஸ்ரயேல் வீட்டாரின் புறக்கணிக்கப்படுதலும், நீக்கப்படுதலும் தொடர்புடையதுமான நிகழ்வுகளானது, சுவிசேஷ யுகத்தினுடைய முடிவின்போது, அதாவது தற்காலத்தில், இன்றைய பெயரளவிலான இஸ்ரயேலர்களாகிய பாபிலோனுடைய புறக்கணிப்பிற்கும், நீக்கிவைக்கப்படுவதற்கும் நிழலாகவும், சித்திரிப்பாகவும் காணப்படுகின்றது என்பதை நாம் அனைவரும் நினைவில்கொள்ள வேண்டும். மில்லேனியல் டாண் வெளியீட்டினுடைய இரண்டாம் தொகுதியினுடைய 235-ஆம் பக்கத்தில், கர்த்தர் தம்மை முறைப்படி மாம்சீக இஸ்ரயேல் முன்பாக முன்வைத்ததற்கும், அவருடைய புறக்கணிப்பிற்கும் ஒத்த ஒரு வருடம் 1878-ஆம் வருடமென நாம் ஏற்கெனவே காண்பித்துள்ளோம். முதலாவது (அ) மாம்சீக வீட்டார் புறக்கணிக்கப்பட்டது போலவே,

அவ்வருடத்தில் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர் புறக்கணிக்கப்பட்டனர்; எனினும் இரண்டு தருணங்களிலும் உத்தம இஸ்ரயேலர்கள் அனைவரும் அவரை ஏற்றுக்கொண்டுள்ளனர் மற்றும் இதற்குரிய ஆசீர்வாதங்களையும், அவரது கரத்திலிருந்து பெற்றுக்கொண்டார்கள்.

அந்த வருடம் (1878) முதற்கொண்டு, நமது கர்த்தர் தம்முடைய ஆவிக்குரிய ஆலயமாகிய, உண்மை சபையில் காணப்பட்டு, கேட்கிறதற்குச் செவியுடையவர்கள் அனைவருக்கும் விசேஷமான விதத்தில் போதிக்கிறவராகவும், குருடானவர்களின் கண்களைத் திறந்தும், ஆவிக்குரிய ஊனமுடையவர்கள் அவரது வழியில் நடக்கத்தக்கதாக, அவர்களுக்கு உதவிபுரிந்தும் காணப்படுகின்றார் என்று நாம் புரிந்துகொண்டுள்ளோம். அதுமுதற்கொண்டு உண்மையாய்த் தொழுதுகொள் பவர்களை உள்ளடக்கியுள்ளதான ஆலய வகுப்பார் சார்ந்த அனைவரும், தெய்வீக வார்த்தைகளிலுள்ள ஆச்சரியமான காரியங்களைக் குறித்துக் கேட்பதற்கும், பார்ப்பதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்; இன்னுமாக அந்த ஒரு காலக்கட்டத்தில் தான், உண்மையாய்த் தொழுதுகொள்ளாதவர்களும், சத்தியத்தை வியாபாரம் பண்ணுகிறவர்களுமாகிய காசுக்காரர்கள் மற்றும் புறா விற்பவர்கள் முதலானவர்களை, ஆலயத்திலிருந்து கர்த்தர் வெளியே துரத்தினார்; இன்னுமாக அந்த ஒரு காலக் கட்டத்தில்தான், இன்றைய நாட்களின் பரிசேயர்களுக்கும், வேதபாரகர்களுக்கும் கோபம் ஏற்படுகின்ற விதத்தில் பாலகர்களின் வாயிலிருந்தும், குழந்தைகளுடைய வாயிலிருந்தும் சத்தியம் பறைச்சாற்றப்படுகின்றது.

அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான, ஏற்கெனவே சத்தியம் எனும் நறுமண தைலத்தினால் அபிஷேகிக்கப்பட்டதான கிறிஸ்துவினுடைய சரீரத்தின் கடைசி அங்கத்தினர்கள் தங்கள் பலியை நிறைவேற்றி முடித்தவுடன், முதலாம் உயிர்த்தெழுதல் நிறைவடைந்து, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் அவருடன்கூட மகிமை அடைந்திருப்பார்கள்; கிறிஸ்துவினுடைய பாடுகள் நிறைவடைந்தவுடன், மகிமையானது விரைவாய்த் தொடருகின்றதாயிருக்கும். ஆனால் இதற்கிடையில், அதாவது மகிமை வெளிப்படுவதற்கு முன்னதாக, ஒரு மகா உபத்திரவக்காலம் வரும்; அது உலகத்தின் மீதான அக்கினியின் (உபத்திரவத்தின்) மற்றும் புகையின் (குழப்பத்தின்) காலமாய் இருக்கும்; அது – மாம்சீக இஸ்ரயேல் மீதும், அவளிடமிருந்து தப்பித்துக்கொள்ளாதவர்கள் மீதும் பட்சிக்கும் விதமான பழிவாங்குதல் கடந்துவந்ததுபோல – விசேஷமாகப் புறக்கணிக்கப்பட்ட பாபிலோன் மீதும், மகா உபத்திரவம் வருவதற்கு முன்னதாக, அவளிடமிருந்து தப்பித்துக் கொள்ளாதவர்கள் மீதும் (அந்த மகா உபத்திரவமான காலம் வருகையில்) அது அக்கினியின் மற்றும் புகையின் காலமாய் இருக்கும். (லூக்கா 3:16, 17; மத்தேயு 13:38-43)

# உன்னதத்திலே ஓசன்னா

## யோவான் 12:12-26

**"கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்." மத்தேயு 21:9**

பாலஸ்தீனியாவிலிருந்து மாத்திரமல்லாமல், பாபிலோனிலிருந்தும், எகிப்திலிருந்தும், ஸ்பெயினிலிருந்தும் மற்றும் கிரீசிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் எருசலேமில் கூடிவந்திருந்தார்கள். இந்தப் பஸ்கா பண்டிகையின் காலங்களில் சிலசமயம் எருசலேமுக்குள்ளும், எருசலேமைச் சுற்றியும் 2 மில்லியன் ஜனங்கள் கூடிவந்ததாகக் கணக்குத் தெரிவிக்கப்படுகின்றது. பஸ்கா பண்டிகையை அனுசரிப்பது தொடர்புடைய தெய்வீகக் கட்டளையின் காரணமாகவே ஜனங்கள் இப்படிக் கூடிவந்தார்கள். அநேக நாட்களைச் செலவழித்து, இவ்வளவு தூரம் கடந்து வருபவர்களில் பெரும்பாலானவர்கள், பயபக்தியுடையவர்கள் இல்லையென்றாலும், இன்னுமாக சிலர் சுற்றுலா பயணம் வந்ததுபோல வந்தவர்களாக இருப்பினும், மதத்தின் மீது ஈர்ப்புடையவர்களாய் இருப்பார்கள் என்றும் அனுமானிப்பது நியாயமானதேயாகும். ஆனால் வியாபார நோக்கத்தில் வருபவர்களுக்கு அங்கு அதிகம் வாய்ப்புகள் இருப்பதில்லை. காரணம் வியாபாரம் மற்றும் பணமாற்றத்தின் மூலம் பணம் ஈட்டுவதற்கான சிறந்த வாய்ப்புகளானது எருசலேமில் ஏற்கெனவே வாழ்ந்து கொண்டிருப்பவர்களால் பயன்படுத்தப்படுகின்றது.

நமது கர்த்தரும், அவருடைய சீஷர்களும், பரிசுத்த நகரத்தை நோக்கிப் பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்த இந்தப் பிரயாணிகள் மத்தியில் காணப்பட்டனர் மற்றும் இவர்கள் பெத்தானியாவிலே தங்கினார்கள். நமது கர்த்தர் நளத தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்ட விருந்தைத் தொடர்ந்து வந்த காலை வேளையில், கழுதையைக் கொண்டுவரும்படிக்கு, அப்போஸ்தலர்களில் இருவரைக் கர்த்தர் அனுப்பினார். கழுதை வந்தவுடன், சேணமாக அதன்மேல் வஸ்திரங்கள் விரிக்கப்பட்டன; பின்னர் அதன்மேல் கர்த்தர் ஏறி, தம்முடைய சீஷர்கள் மற்றும் லாசரு கல்லறையினின்று வெளியே அழைக்கப்பட்டதற்குச் சாட்சியாளர்களாகக் காணப்பட்டவர்களும், லாசருவின் குடும்பத்தினுடைய நண்பர்களும் சூழ, ஒரு சிறிய ஊர்வலமாகப் பட்டணத்தை நோக்கிச் சென்றனர். இப்படியாகப் போய்க்கொண்டிருக்கையில், கர்த்தர் பெத்தானியாவில் இருக்கின்றார் என்று கேள்விப்பட்டதினாலும், கர்த்தர் அற்புதம் செய்கிறவர் என்றும், லாசருவை மரணத்தினின்று எழுப்பினார் என்றும் கேள்விப்பட்டபடியினால், அவரைக் காணவேண்டுமென விரும்பியதினாலும், எருசலேமிலிருந்து, பெத்தானியாவுக்கு வந்த திரளான ஜனக்கூட்டத்தினர் இந்த ஊர்வலத்தைச் சந்தித்தனர்.

## குருத்தோலைகள்

நமது கர்த்தருடைய கீர்த்திப் பரவிக்கிடந்தது மற்றும் தெய்வீக வழிநடத்துதலே இந்த அனைத்து ஏற்பாடுகளுக்கும், ஊர்வலம் வந்தவர்களும், இயேசுவைக் காண பெத்தானியாவுக்கு வந்த ஜனங்களும் சந்திப்பதற்குமான காரணமாய் இருந்தது என்பது

உறுதியே. ஜனங்களில் அநேகர், அப்பகுதியில் வளர்ந்திருந்த பேரீசசமரங்களிலுள்ள இறகு வடிவமும், சில சமயம் பத்தடி நீளமுள்ளதுமான குருத்தோலைகளை உடைத்தார்கள். இவைகள் அனைத்தும் களிகூருதல் மற்றும் கனப்படுத்துவதுக்குரிய சின்னங்களாகும் மற்றும் இந்தச் சின்னங்களானது, நமது கர்த்தரே அவ்வேளைக்கான கதாநாயகன் (Hero), அதாவது தாங்கள் வித்தியாசப்படுத்திக் காட்டுவதில் மகிழ்ச்சிக்கொள்ளும் கதாநாயகன் என்பதை இத்தருணத்தின்போது அடையாளப் படுத்துகின்றதாய் இருந்தது. மேலும் இந்த ஊர்வலத்தில் தேவனுக்குத் துதியும், நன்றியும் ஏறெடுக்கும் சந்தோஷ ஆரவாரம் காணப்பட்டது; ஜனங்கள் அத்தருணத்தி னுடைய ஆர்வத்தில் மிதந்தனர். நமது கர்த்தர் ஏறி வந்த மிருகத்தின் முன்பாக ஜனங்கள் குருத்தோலைகளைப் பரப்பினார்கள் மற்றும் குருத்தோலை இல்லாதவர்கள், இப்படி ஆரவாரத்துடன் கழுதையின் மீது வருகிறவருக்குக் கனம் செலுத்தும்விதமாக, தங்களது மேல்வஸ்திரத்தைக் கீழே விரித்தனர்; மேலும் தங்கள் குருத்தோலைகள் மீதும், வஸ்திரங்கள் மீதும், நமது கர்த்தர் ஏறிவந்த விலங்கானது நடந்துபோன பிற்பாடு, குருத்தோலைகளையும், வஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டு, அவர் பின் சென்றார்கள்; இப்படியாக தேவனால் குறிப்பிடத்தக்க விதத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தவரை அனைத்து விதங்களிலும் கனப்படுத்துவதற்கு நாடினார்கள். இப்படியாகவெல்லாம் செய்வதன் மூலம், ஜனங்கள் தங்களுடைய இருதயங்களில் அடக்கிவைக்கப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துபவர்களாக இருந்தனர்.

பதினாறு நூற்றாண்டுகளுக்கு மேலாகவும், அவர்கள் கானானுக்கு வந்தது முதற்கொண்டும், அவர்கள் மேசியாவிற்காகவும், ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்டதும், ஈசாக்கிற்கும், யாக்கோபிற்கும், இவர்களுடைய சந்ததியாருக்கும் உறுதியளிக்கப் பட்டதுமான, ஆணையிட்டுக் கொடுக்கப்பட்டதுமான உடன்படிக்கையின் மகிமையான நிறைவேறுதலுக்காகவும் காத்துக்கொண்டிருந்தார்கள். நமது கர்த்தருடைய கெம்பீரமான தோற்றமானது, அவர்கள் இம்மானுயேலைக் குறித்துக் கொண்டிருந்த பிரம்மாண்டமான கருத்துக்களுக்குப் பொருத்தமானதாய் இருந்தது மற்றும் இதற்குக் கூடுதல் சாட்சியாக, அவர் செய்ததாக அவர்கள் கேள்விப்பட்டிருந்த அற்புதகரமான அற்புதங்களும் காணப்பட்டன; அவர் பண்ணிட்ட அற்புதங்களிலேயே மிகப்பெரியதான அற்புதத்திற்கு லாசருவும், அவர் மரித்து நான்கு நாட்களுக்குப் பின்னர், கல்லறையினின்று வெளியே கொண்டுவரப்பட்டச் சம்பவத்திற்குச் சாட்சியாளர் களாய்க் காணப்பட்டவர் களும், இந்த ஜனங்களுக்குச் சாட்சியாகக் காணப்பட்டனர். அவர்களுடைய இருதயங்கள் சரியாகத்தான் இருந்தது; மனித ஞானத்தினுடைய பயங்களினாலும், சந்தேகங்களினாலும், அவர்கள் இன்னமும் சீரழிக்கப்படவில்லை; மனித ஞானமோ, ஒருவரை உரோம நுகத்தடியினின்று விடுவிக்கும் மேசியாவென நம்புவதற்கு (அ) ஏற்றுக்கொள்வதற்கு முன்னதாக, அந்நபரிடம் பணமும், போர் வீரர்களும், செல்வாக்கும் இருக்கின்றதாவெனப் பார் என்று உலக ஞானியினிடத்தில் வலியுறுத்துவதாய் இருக்கின்றது. இப்படியாகவே இன்றும் கர்த்தருடைய ஜனங்களின் விஷயத்திலும் சில சமயம் காணப்படுகின்றது. நம்முடைய எளிமையான இருதயங்களில் நாம் அவருடைய வார்த்தைகளிலுள்ள விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களைக்

காண்கிறோம் மற்றும் அவற்றை விசுவாசிக்கவும் ஆயத்தமாய்க் காணப்படுகின்றோம்; எதிராளியானவனோ மறுப்புகளையும், பயங்களையும், சந்தேகங்களையும் மற்றும் எப்படி நடக்கும் என்பதான கேள்விகளையும் கூடவே கொண்டுவருகின்றான்; விசுவாசமானது நலிவடைந்துபோய், நம்முடைய ஜீவியங்கள் மற்றும் நடத்தைகள் மீதான கட்டுப்பாட்டிற்கான அதன் வல்லமையை இழந்துவிடுகின்றது. ஆகவே தம்முடைய பின்னடியார்கள், சிறு பிள்ளைகளைப் போன்று விசுவாசமும், கீழ்ப்படிதலும் கொண்டிருக்க வேண்டும் என்றும், உலக ஞானிகள் போன்று காணப்படக்கூடாது என்றும் நமது கர்த்தர் வலியுறுத்துகின்றார். உலக ஞானமானது தேவனுக்குப் பைத்தியமாய் இருக்கின்றது என்றும், தேவனுடைய ஞானமும், தேவனுடைய திட்டமும் உலகத்திற்குப் பைத்தியமாய் இருக்கின்றது என்றும் அவருடைய வார்த்தைகளானது நமக்கு உறுதிப்படுத்துகின்றது. உலக ஞானம் மற்றும் தெய்வீக ஞானத்திற்கிடையே நமது தெரிந்துகொள்ளுதலானது காணப்படுகின்றது. தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடந்து, தெய்வீக வார்த்தைகளுடைய ஞானத்தை ஏற்றுக்கொள்பவர்கள் பாக்கியவான்களாக இருக்கின்றனர். தெய்வீகத் திட்டத்தினுடைய முடிவானது, இவர்களது நம்பிக்கையை முழுமையாய் மெய்ப்பித்து, இவர்கள் கற்பனைப் பண்ணிப்பார்க்காத மேலானவைகளை இவர்களுக்கு அதிகமாய் நடப்பிக்கும்.

## உன்னதத்திலே ஓசன்னா

ஓசன்னா என்ற வார்த்தையானது துதியின், நம்பிக்கையின், எதிர்பார்ப்பின் ஆரவாரமாகவும், அல்லேலூயா எனும் வார்த்தையினுடைய கருத்திற்கு மிக ஒத்தக் கருத்தைக்கொண்டதாகவும் காணப்படுகின்றது. அனைத்துச் சுவிசேஷபுத்தகங்களிலிருந்தும் ஜனங்கள் உரைத்திட்ட பல்வேறு ஆரவாரங்களை நாம் சேகரித்துப்பார்க்கும் போது, பின்வருமாறு காணப்படுகின்றது; அவை, "ஓசன்னா," "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா," "கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்," "உன்னதத்திலே ஓசன்னா," "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரயேலின் இராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்," "கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் இராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக," "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்," "பரலோகத்திலே சமாதானமும், உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக" என்பவைகளாகும். நமது கர்த்தர் முழுச் சூழ்நிலையையும் புரிந்துகொண்டார்; "மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தார்." (யோவான் 2:25) இந்த ஆரவாரங்களுக்கும், பயபக்தியான கிரியைகளுக்கும் பின்னான உண்மையின் ஆழத்தைக் கர்த்தர் அறிந்திருந்தார்; தீமையின் சக்திகளையும், வெளிச்சத்தை இருளாகவும், இருளை வெளிச்சமாகவும் காட்டுவதற்குரிய தீயச் சக்திகளின் வல்லமையையுங்கூடக் கர்த்தர் அறிந்திருந்தார்.

தாம் பஸ்கா ஆட்டுக்குட்டியாக இருக்கப்போகின்றார் என்றும், இன்னும் ஐந்து நாட்களுக்குள்ளாக, மதத் தலைவர்களினால் வழிநடத்தப்படும் மற்றொரு ஜனக்கூட்டத்தார், "அவரைச் சிலுவையில் அறையும்! அவரைச் சிலுவையில் அறையும்!" என்று கூக்குரலிடுவார்கள் என்றும் கர்த்தர் அறிந்திருந்தார். தம்மைச் சுற்றி,

தம்மை உடன்படிக்கையினுடைய தூதுவர் என்று மகிழ்ச்சியுடன் வாழ்த்தும் இந்தக் கெம்பீரிப்புச் சத்தங்களானது ஓநாய்களினால் குழப்பி, அலங்கோலப்படுத்தப்படும் என்றும், இப்படிக் கெம்பீரிப்புப்பண்ணுபவர்கள், அதிகாரிகளுடைய அதிகாரத்தையும், இவர்களுடைய கட்டுப்பாட்டின் கீழ்க் காணப்படும் கலகக் கும்பலையும் உணர்கையில், தங்களது ஜீவனுக்கும், காரியங்களுக்கும் ஆபத்துள்ளது என்று அச்சமடைவார்கள் என்றும் கர்த்தர் அறிந்திருந்தார். இன்னுமாக இப்படிக் கெம்பீரிப்புப்பண்ணும் ஜனங்கள் தங்களுக்கு இருக்கும் கொஞ்சமான அறிவில், தங்களுடைய மதத் தலைவர்களுக்கு நேர்மாறாய்க் காணப்படும், தங்களுடைய கணிப்பின்படி நம்பிக்கைக்கொள்வதற்குத் துணிவு கொண்டிருக்கமாட்டார்கள் என்றும் கர்த்தர் அறிந்திருந்தார். மேய்ப்பன் வெட்டப்படப் போகின்றார் என்றும், ஆடுகள் பயந்து, சிதறடிக்கப்படப் போகின்றது என்றும் அவர் அறிந்திருந்தார், எனினும் அவர் எதுவும் கூறவில்லை; தெய்வீகத் திட்டம் நடந்தேறத்தக்கதாக கர்த்தர் அனுமதித்தார்; அவர் அடிக்கப்படும்படிக்குக் கொண்டு போகப்படும் ஆடு போன்று போய்க்கொண்டிருந்தார்; அவர் உதவிக்காகவோ, தம்மைத் தற்காத்துக்கொள்வதற்கோ, உண்மையான நிலவரத்தை விவரிப்பதற்கோ தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். தம்முடைய ஜீவனை நாடினவர்களின் கரங்களிலிருந்து, தம்மை விடுவித்துக்கொள்ள அவரால் முடியும், ஆனால் அவர் அப்படியாகச் செய்யவில்லை; ஏனெனில் மரிப்பதற்காகவே, அதாவது பாவங்களுக்காக பலிச் செலுத்தப்படுவதற்காகவே அவர் உலகத்திற்கு வந்தார்.

## கல்லுகளே கூப்பிடும்

அநேகமாக அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலில் (curiosity) அல்லது அநேகமாக ஒற்றர்களாகச் செயல்படுவதற்கெனப் பரிசேயர்களில் சிலர் அங்கு ஊர்வலத்தில் காணப்பட்டனர், அதாவது யூதாசுடன் கலந்து ஆலோசனைப் பண்ணிக்கொண்டிருப்பவர்களும், அவருடைய வேளை வராதது வரையிலும், தங்களுடைய வல்லமையைக்கொண்டு, தங்களால் எதுவும் செய்ய இயலாது என்பதை அறியாதவர்களாக, எப்பொழுது மற்றும் எப்படிக் கர்த்தரைக் கைது செய்யலாம் என்பதைத் தீர்மானிப்பதற்கு முயன்று கொண்டிருப்பவர்களுமாகிய பரிசேயர்களில் சிலர்கூட அங்கு ஊர்வலத்தில் காணப்பட்டனர். ஜனங்கள் கூறும் வார்த்தைகளை இயேசுவினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கும், அவரை மேசியா மற்றும் இராஜாவென ஜனங்கள் பிரகடனம் பண்ணுவதற்கு அவர் அனுமதிப்பது என்பது, இயேசுவுக்குத் தகுதியான காரியமல்ல என்று யோசனைக் கூறும்படிக்கும், இந்தப் பரிசேயர்கள் சீஷர்களிடத்தில் கேட்டுக்கொண்டார்கள். ஏமாற்றுக்காரர்கள் கொண்டிருக்கும் வழக்கத்தின்படி, இயேசு தம்மை மேசியாவென அறிவிப்பதற்கு, தம்முன் தாரை ஊதிக்கொண்டு செல்லவில்லை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். மூன்று வருடங்களாக இயேசு சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டும், தம்முடைய சீஷர்களைக் கூட்டிச் சேர்த்தும், அற்புதங்களை நிகழ்த்தியும்

கொண்டிருந்தார், ஆனால் தாம்தான் மேசியாவென்று அவர் எதுவும் சொல்லவில்லை. தம்முடைய சீஷர்கள் யோசித்துக்கொள்வதற்கும், பொது ஜனங்கள் யோசித்துக் கொள்வதற்கும் கர்த்தர் அனுமதித்திருந்தார்.

சிலர் அவரை ஒரு தீர்க்கதரிசி என்றார்கள்; வேறு சிலர் அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்துள்ள தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றார்கள்; வேறு சிலர் அவரை எலியா என்றார்கள்; ஆனால் இப்பாடத்தின் சம்பவம் நிகழ்வதற்குச் சில மாதங்கள் முன்னர், தம்மைச் சீஷர்கள் யார் என்று எண்ணுவதாக இயேசு சீஷர்களிடம் கேட்க, அதற்குச் சீமோன் பேதுரு தெய்வீக ஏவுதலின் (அ) வழிக்காட்டுதலின் கீழ், இயேசுவை மேசியாவென்று அறிவித்த சம்பவம் தவிர மற்றபடி இயேசு எதுவும் கூறவில்லை. அதுமுதல் தாம் மேசியாவாக இருப்பினும், தாம் பாடுபட வேண்டுமென்று இயேசு, சீஷர்களுக்கு விவரிக்க ஆரம்பித்தார் மற்றும் அதைச் சீஷர்கள் புரிந்துகொள்ளவில்லை. சீஷர்களைப் பொறுத்தமட்டில் அவரது மரணம் சம்பவிப்பது அருகாமையில் இருப்பதைக் காட்டிலும், அவர் உயர்த்தப்படும் காரியமே அருகாமையில் இருப்பதாகத் தோன்றியது. ஜனங்களில் சிலர் அவரது மகத்துவம், வல்லமை குறித்த அறிவிற்கு விழித்தெழுந்து கொண்டிருந்தார்கள் மற்றும் மற்றவர்களோ மேசியா உண்மையில் வந்துள்ளதாக அப்போதுதான் கண்டுபிடித்தவர்களாய்க் காணப்பட்டார்கள், ஆகையால் தங்களது எஜமான் சிலுவையில் அறையப்படுவதற்கு வாய்ப்பில்லை என்று சீஷர்கள் எண்ணினார்கள். இயேசு தம்முடைய மரணம் குறித்துப் பேசும் வார்த்தைகளை, அவருடைய மறைபொருள்களில் ஒன்று என்றே சீஷர்கள் கருதினார்கள்.

ஆனால் இயேசு ஜனக்கூட்டத்தாரை அமைதிப்படுத்தும்படிக்கு உத்தரவிடப் போவதில்லை. மாறாக ஜனங்களுடைய கெம்பீரிப்புகளானது, சகரியாவினால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக உரைக்கப்பட்டத் தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதலாக இருக்கின்றது என்று கர்த்தர் விளக்கம் கொடுத்தார்; "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக் கிறார்." (சகரியா 9:9) இன்னும் காரியத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கும், தம்மைக் குறித்தே தீர்க்கத்தரிசி குறிப்பிட்டுள்ளார் என்பதைச் சீஷர்களுக்கு மெய்ப்பித்துக் காண்பிப்பதற்கும் என்று, ஒருவேளை ஜனங்கள் இப்படியாகக் கெம்பீரிக்கவில்லை என்றால், கல்லுகளே கூப்பிட்டிருக்கும், ஏனெனில் இப்படியாகவே கெம்பீரிக்கப்படும் என்று தேவன் தீர்க்கத்தரிசனம் எழுதி வைத்துள்ளார் மற்றும் தெய்வீக வார்த்தைகளில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோவதில்லை எனக் கர்த்தர் கூறினார். கொஞ்சம் நேரம் கழிந்து, நமது கர்த்தரும், அவருடைய பின்னடியார்களும் ஆலயத்தை அடைந்தவுடன், "ஓசன்னா" எனும் கெம்பீரிப்புகளானது இன்னும் உற்சாகமடைந்தது; இங்கு "குழந்தைகளுடைய வாயினாலும், பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர்" என்ற வேதவாக்கியத்திற்கு இசைவாகப் பிள்ளைகளும்கூட சேர்ந்து கெம்பீரித்தார்கள். (மத்தேயு 21:16; சங்கீதம் 8:2)

## அவர்களது சந்திப்பின்/விசாரிப்பின் நாள்

இந்தக் காட்சி எவ்வளவாய் வழக்கத்திற்கு மாறானதாய்க் காணப்படுகின்றது! பல நூற்றாண்டுகளாக மேசியாவிற்காகக் காத்திருப்பவர்களும், அவருடைய விசேஷித்த ஜனங்கள் ஆகுவதற்கும், அவருடைய இராஜ்யத்தின் வேலையிலும் சகல ஜனங்களை ஆசீர்வதிக்கும் வேலையிலும் இணைவதற்கும், ஆயத்தமாகுவதற்கு நாடுபவர்களுமாகிய இஸ்ரயேல் ஜனங்களும் மற்றும் அகலமான காப்பு நாடாக்களையும், நியாயப்பிரமாணம் மற்றும் ஓய்வுநாளுக்குமான பக்திக்கும், வைராக்கியத்திற்கும் அநேக வெளிப்படையான தன்மைகளைக் கொண்டிருந்து, மேசியாவிற்காகக் காத்திருப்பதாகக் கூறிக்கொண்டிருந்த அவர்களின் மதத் தலைவர்களும், ஆயத்தமற்ற நிலைமையிலும், மேசியாவை அடையாளம் கண்டுகொள்வதற்குரிய இருதயமற்ற நிலைமையிலும், குருடான நிலைமையிலும், இவர்களை மிகவும் நம்பிக்கொண்டிருந்த குருடான ஜனங்களை வழிநடத்துபவர் களாகக் காணப்படுகின்ற நிலைமையிலும் இருப்பது எவ்வளவு வழக்கத்திற்கு மாறானதொரு காட்சியாகக் காணப்படுகின்றது.

ஆனால் இன்னொரு பக்கத்தில் படிப்பறிவு இல்லாதவர்களும், பேதமையுள்ளவர்களும், யூதேயாவின் அனுகூலங்களுக்கு மிகவும் தொலைவில் இருப்பவர்களுமாகிய கலிலேயாவின் மனுஷர்களாகிய அப்போஸ்தலர்கள் மேசியாவிற்கான பிரதான ஆதரவாளர்களாகவும், மேசியாவை ஆதரிப்பவர்களாகவும் காணப்பட்டனர். இயேசுவைச்சுற்றிக் காணப்பட்டவர்களும், அவருக்கு ஆதரவு அளித்தவர்களும், அவரை அடையாளம் கண்டுகொண்டவர்களும், அவருக்குத் துதியைக் கெம்பீரித்தவர்களுமாக இருந்தவர்கள் சாதாரண ஜனங்களாக இருந்தனர்; இவர்களில் அநேகர் அவ்விடத்திற்குப் புதியவர்களாகவும், மதம் தொடர்புடைய விஷயங்களில் எருசலேமில் இருந்திட்ட ஜனங்களைக்காட்டிலும் குறைவான அனுகூலங்களை உடையவர்களாகவும் காணப்பட்டனர். கர்த்தருக்குத் துதியைச் சாற்றினவர்களில், சிறியவர்களும், போதிக்கப்படாதவர்களுமாகிய பிள்ளைகளும் காணப்பட்டனர். இந்தக் காட்சி எத்துணை விநோதமாகக் காணப்படுகின்றது; எனினும் இன்றும் இப்படியான விநோதமான நிலைமையே நிலவுகின்றது. நாம் மீண்டுமாக இப்பொழுது மனுஷகுமாரனுடைய நாட்களில் காணப்படுகின்றோம்; கர்த்தருக்குத் தாங்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்று அறிக்கைப்பண்ணியும், "உம்முடைய இராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலேயே செய்யப்படுவதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று தொடர்ந்து ஜெபம்பண்ணியும் கொண்டிருக்கின்ற நியாயசாஸ்திரிகளும், வேதசாஸ்திரிகளும், பிரதான ஆசாரியர்களும், வேதபாரகரும், கல்வியறிவுள்ள ஆசாரியர்களும், முன்னிலை வகிக்கும் சபை ஜனங்களும், மீண்டுமாக நமது கர்த்தருடைய இரண்டாம் வருகைப்பற்றின உண்மைக்கும், நாம் மனுஷ குமாரனுடைய நாட்களில் இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்ற உண்மைக்கும், குருடர்களாகவே காணப்படுகின்றனர். (மத்தேயு 24:37-39)

வெகு சிலரே இன்று சூழ்நிலைகளை உணர்ந்துள்ளனர் மற்றும் இப்படியாக உணர்ந்துள்ளவர்கள் மனுஷர் மத்தியிலும், மதச் சம்பந்தமான வட்டாரங்களிலும் உயர்வாய் மதிக்கப்பட்டவர்களாய் இராமல், விநோதமானவர்கள் என்று கருதப்படுபவர்களும், நாசரேத் மற்றும் கலிலேயா வகுப்பாரைப் பிரதானமாய்ச் சார்ந்தவர்களுமாகக் காணப்படுகின்றனர். இவர்கள் மாத்திரமே இன்று, இம்மானுயேலுக்கு வாழ்த்துதல் கூறுபவர்களாகவும், துதிகளை கெம்பீரிப்பவர் களாகவும், அவரது பாதங்களுக்கு முன்னதாக தங்கள் துதியின் வஸ்திரத்தை விரிக்கின்றவர்களாகவும், சத்தியத்தினிமித்தமாக, உலகம், மாம்சம் மற்றும் பிசாசிற்கு எதிரான போராட்டத்தில் தாங்கள் அடைந்திட்ட வெற்றிகளாகிய குருத்தோலைகளை அவரது பாதங்களுக்கு முன்னதாகப் பரப்புகிறவர்களாகவும் காணப்படுகின்றனர்.

## உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்

அந்தச் சிறு ஊர்வலமானது, பெத்தானியாவிலிருந்து, எருசலேமை தூரத்திலிருந்து பார்க்கமுடிகின்ற ஒலிவமலையின் உச்சியை அடைந்தது. இங்கு போதகரும், ஜனக்கூட்டத்தாரும் சற்று நின்றார்கள்; அவர்களது கவனம் பட்டணத்தின் மீதும், இராஜாவின் மீதும் திரும்பியது. அத்தருணத்தினுடைய முக்கியத்துவத்தை அவர்கள் அறியாதிருந்தார்கள்; ஒரு புதிய யுகமாற்றம் நடைபெறுகின்றது என்றும், இஸ்ரயேல் ஜனங்களுக்கு அருளப்பட்ட ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் பெற்றுக்கொள்வதற்கான இருதய ஆயத்த நிலையில் அவர்கள் காணப்படாத காரணத்தினால், அவர்கள் மீது பல நூற்றாண்டுகளாகத் தங்கியிருந்த, தேவன் அருளின தயவானது/கிருபையானது, அவர்களிடமிருந்து கடந்து போகப்போகிறது என்றும் அண்டசராசரத்தின் மாபெரும் கடிகாரம் சுட்டிக்காட்டுவதை அவர்கள் உணர்ந்துகொள்ளாமல் இருந்தார்கள்.

இஸ்ரயேல் ஜனங்கள் ஆயத்தமாய்க் காணப்படவில்லையெனத் துக்கிப்பது நமக்கடுத்தக் காரியமல்ல, மாறாக அவர்கள் ஆயத்தமற்று இருந்ததினால், தேவனுடைய திட்டமானது குறுக்கிடப்படவோ (அ) தடைப்பண்ணப்படவோ இல்லை என்பதை உணர்ந்துகொள்வதே, நமக்கடுத்தக் காரியமாக இருக்கின்றது; தேவன் முன்னறிந்திருந்தபடியும் மற்றும் முன்னறிவித்திருந்தபடியும், தேவனுடைய வழிநடத்துதலின்படி, மாம்சீக இஸ்ரயேலர்கள் தெய்வீகக் கிருபையினின்று விழுந்துபோகும் காரியமானது, ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வதற்கும், தெய்வீகத் தயவுக்குள் வருவதற்கும், ஆவிக்குரிய இஸ்ரயேலின் அங்கத்தினர்கள் ஆகுவதற்கும், புறஜாதியாரில் ஆயத்தமாய் இருப்பவர்கள் அனைவருக்கும் வழியைத் திறக்கிறதாகவும் இருந்தது. ஆண்டவர் இவை அனைத்தையும் கண்ணோக்கினார் மற்றும் இதுவே திட்டவட்டமான தெய்வீகத் திட்டமாக இருப்பதினால், கர்த்தர் முறுமுறுக்கவில்லை; எனினும் அவர் பட்டணத்தைப் பார்த்தபோது, இஸ்ரயேல் ஜனங்களிடமிருந்து எடுக்கப்பட்டுப்போகும் சிலாக்கியங்கள் குறித்தும் மற்றும் அவர்கள் தங்களுக்கான வாய்ப்புகளைப் புறக்கணித்ததின் காரணமாக, ஆசீர்வாதத்திற்குப் பதிலாக, அவர்கள் மீது எவ்வாறு "மகா உபத்திரவம்," அதாவது பயங்கரமான உபத்திரவம் வரும் என்பது

குறித்ததுமான காரியங்களை அவர் சிந்தித்தபோது, கண்ணீர்விட்டார். இறுதியில் அவர் கல்வாரிக்கு நேராக பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கையில், அவருக்காகக் கண்ணீர் விட்டவர்களிடம் அவர், "எனக்காக அழாமல், உங்களுக்காக அழுங்கள்" என்று கூறினவைகளே, இத்தருணத்தின்போது, அவருடைய மனதில் காணப்பட்டது.

மற்ற நிகழ்வுகளையும், அந்நாளில் நடந்திட்ட நிகழ்வுகளையும், தம்முடைய பின்னடியார்களின் மனதில் தொகுத்துக்கொண்டுவரும் வண்ணமாக நமது கர்த்தர், "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று சத்தமாய்க் கூறினார் (மத்தேயு 23:37-39).

## தீர்ப்பு எவைகளைச் சுட்டிக்காட்டுகின்றது

நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகளானது ஐந்து காரியங்களை வலியுறுத்துகின்றதாய் இருக்கின்றது; அவை பின்வருமாறு:

(1) தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகுவதற்கும், அதாவது மணவாட்டி ஆகுவதற்கும், அதாவது ஆட்டுக்குட்டியானவருடைய மனைவி ஆகுவதற்கும் தெய்வீக ஏற்பாடுகளின் கீழ் ஆபிரகாமின் மாம்சீக சந்ததியினராக யூதர்களே முதலாம் வாய்ப்பை அடைந்தவர்களாய் இருந்தனர். ஆனால் கொஞ்சம் பேர் மாத்திரமே பாத்திரமான நிலைமையில் காணப்பட்டனர், ஏனெனில் கொஞ்சம் பேர் மாத்திரமே கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களுக்கான இருதய நிலைமையில் காணப்பட்டனர். பெரும்பாலானவர்கள் இயேசு குறிப்பிட்டதுபோலவே, தங்களுடைய உதடுகளினால் மாத்திரமே கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணுகிறவர்களாய் இருந்தனர், ஆனால் அவர்களுடைய இருதயமோ கர்த்தரிடமிருந்து தூர விலகிக் காணப்பட்டது.

(2) இஸ்ரயேல் ஜனங்கள் மீதான தயவு முடிவு பெறுவதற்குரிய காலம் வந்துள்ளது. இக்காலம் வரையிலும் தேவன் கொடுக்க சித்தமாய் இருந்த தயவுகள்/அனுகூலங்கள் அனைத்தையும், மாம்சத்தின்படியான இந்த "இஸ்ரயேலின் வீட்டார்" பெற்றுக்கொண்டார்கள்; ஆனால் இப்பொழுதும் அவர்கள் பாத்திரமற்றவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டபோதோ, அவர்கள் புறம்பாக்கப்பட்டார்கள்; அதாவது "உங்கள் வீடு, உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" என்பதாகும்.

(3) நிழலான பணிவிடைக்காரர் வீடானது, பாழாக்கிவிடப்பட்டபோது, இதனால் நிஜமான புத்திரர் வீடு நிறுவப்படுவதற்கான வாய்ப்பு உண்டாயிற்று. இதைக்குறித்தே அப்போஸ்தலர் "மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு (புத்திரர் வீட்டாருக்கு) மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும்

முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்" என்று குறிப்பிடுகின்றார். (எபிரேயர் 3:5-6)

(4) ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தெரிந்தெடுக்கப்படும் காலப்பகுதியில் நமது கர்த்தர் இல்லாமல் இருக்கும் காரியமானது, "சொல்லுங்காலம் வருமளவும்" மாம்சீக இஸ்ரயேலர்கள் தம்மைக் காணாதிருப்பார்கள் என்று கர்த்தர் கூறின வார்த்தைகள் மூலம் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. மேலும் "இன்னுங் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது; நீங்களோ என்னைக் காண்பீர்கள்" என்று நமது கர்த்தர் குறிப்பிட்டிருக்கின்ற பிரகாரம், ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அவரைக் காண்பார்கள்; அதாவது விசுவாசக் கண்களினால் மாத்திரமே அவரைக் காண்பார்கள். (யோவான் 14:19; லூக்கா 13:35)

(5) நமது கர்த்தருடைய வார்த்தைகளானது இன்னுமாக, அந்தக் காலங்கள் வரும்போது, மாம்சீக இஸ்ரயேலர்களின் குருட்டுத்தன்மை மாற்றப்படும் என்றும், அவர்களுடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்படும் என்றும், அவர்களிடத்தில் இந்தச் சுவிசேஷயுகத்தின்போது, பதினெட்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாகக் காணப்பட்டிருந்த இருள் மற்றும் தெளிவின்மை நீங்கப்பெற்று, தெளிவாய்ப் பார்ப்பார்கள் என்றும் சுட்டிக்காட்டுகின்றது.

இந்தக் கருத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வண்ணமாக, ஆவிக்குரிய இஸ்ரயேல் வகுப்பார் நிறைவடைந்து, மகிமையடையும்போது, பிற்பாடு உடனே கிருபையானது மீண்டும் மாம்சீக இஸ்ரயேலர்களிடத்திற்குக் கடந்துவரும் மற்றும் மேசியாவை அவர்கள் புறக்கணித்ததின் காரணமாகவும், அவர்களது வீடானது, கர்த்தருடைய தயவினின்று தள்ளிவிடப்பட்டதின் காரணமாகவும், அவர்கள் மீது வந்த இருளானது, கடந்துபோகும் என்றும், "இஸ்ரயேலர்கள் அனைவரும் – தங்களுடைய குருட்டுத்தன்மையிலிருந்து – இரட்சிக்கப்படுவார்கள்" என்றும் அப்போஸ்தலர் நமக்குக் கூறுகின்றார். இதே காரியத்தை, கர்த்தர் தம்முடைய தீர்க்கத்தரிசிகள் வாயிலாகவும் கூறி, நமக்கு உறுதிப்படுத்துகின்றார்; "நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்." (சகரியா 12:10)

ஆபிரகாமினுடைய மாம்சீக சந்ததியினரைத் தேவன் நிரந்தரமாய்த் தள்ளிவிடவில்லை என்பதினால் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்; வாக்குத்தத்தத்திற்கு உரியவர்களாயிருந்த இவர்கள், பிரதான பங்கை அடைவதற்குரிய தங்களுக்கானச் சிலாக்கியங்களை இழந்துபோனபோதிலும், இவர்கள் நிச்சயமாய் அந்த வாக்குத்தத்தங்களில் பங்கடைவார்கள் என்று தேவன் முன்னறிந்திருந்தார்; இவர்கள் இழந்துபோன காரியத்தைக்குறித்து, "இஸ்ரயேலர் தேடுகிறதை அடையாமல் இருக்கிறார்கள்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் இன்றைய தினம் வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். (ரோமர் 11:7) ஆகவே நாம் இஸ்ரயேலர்கள்

இழந்துபோனதினிமித்தம் அவர்களுக்கு அனுதாபங்கொள்ளும் அதேவேளையில், தேவனுடைய வழிநடத்துதலினால் நம்முடைய கண்கள் காண்கிறதினாலும், இராஜாவைக்குறித்தும், அவருடைய இராஜ்யம் குறித்தும் நம்முடைய காதுகள் கேட்பதினாலும், நாம் அவருடைய ஆவிக்குரிய இஸ்ரயேலாகி உள்ளதினாலும், பூமியின் குடிகளை ஆசீர்வதிக்கப்போகும் ஆபிரகாமின் சந்ததியில், அவரோடுகூட நாம் காணப்படப்போவதினாலும் நாம் களிகூரவும் செய்கின்றோம்; பூமியின் குடிகள் ஆசீர்வதிக்கப்படுகையில் மாம்ச இஸ்ரயேலே, தெய்வீகத் தயவை முதலாவது பெற்றுக்கொள்பவர்களாய் இருப்பார்கள்.

"ஓ! கர்த்தாவே வெற்றி பிரவேசம் செய்திடுமே,
பெருமைதனையும், பேராசைதனையும் உந்தன் பாதங்கள் கீழ்
ஒப்புக்கொடுத்துவிடுகின்றோமே.
எங்கள் கண்கள் திறக்கின்றதே; உம் வார்த்தைகள் எங்களுக்குக் கேட்கின்றதே;
நாங்கள் உம் அடியார்; வழிநடத்திடுமே,
நாங்கள் பாவம், மரணம் மற்றும் கல்லறை மீதினில் ஜெயம் அடையவே."

## ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கான நிஜம்

மாம்சீக இஸ்ரயேலருடைய நிஜமாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், இதேபோன்றதான ஒரு மாபெரும் பரீட்சையை, இந்த யுகத்தினுடைய முடிவின்போது அடைவார்கள் என்று வேத வாக்கியங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன; இன்னுமாகக் கோதுமையைச் சேகரிப்பதற்கான ஓர் அறுவடைக்காலமே, யூத யுகத்திற்கும், சுவிசேஷயுகத்திற்குமான முடிவாக இருக்கும் என்று வேதவாக்கியங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன; இன்னுமாக யூத யுகத்தினுடைய பதர் மீது வரும் அக்கினியும், சுவிசேஷ யுகத்தின் முடிவில் களைகள் மீது வரும் அக்கினியும் அடையாளப்படுத்தும் கடுமையான உபத்திரவத்தின் காலமானது, மேசியாவின் மகிமையான ஆளுகைக்குரிய பிரமாண்டமான யுகத்திற்குரிய வழியை ஆயத்தம் பண்ணுகிறதாய் இருக்குமென்றும் வேதவாக்கியங்கள் தெளிவாய்ச் சுட்டிக்காட்டு கின்றன. நமது கர்த்தர், தம்முடைய முதலாம் வருகையின்போது, பெருந்திரளான, பெயரளவிலான மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு இடறுதலின் கல்லாய்க் காணப்பட்டதுபோன்று, அவரது இரண்டாம் வருகையின்போதும், அவர் தம்முடைய இரண்டாம் வீட்டாராகிய ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அநேகருக்கும்கூட இடறலின் கல்லாய்க் காணப்படுவார் என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே யூத யுகத்தினுடைய முடிவிலுள்ள அறுவடையின்போது காணப்பட்டதுபோலவே, இப்பொழுதுள்ள இந்த அறுவடையின்போதும், கர்த்தருடைய ஜனங்களெனத் தங்களைக்குறித்து அறிக்கைப்பண்ணிக்கொண்டிருக்கும் பெருந்திரளானவர்கள் ஆயத்தமற்ற நிலைமையிலும், இடறிப்போயும், இந்த யுகத்தினை நிறைவு செய்திடும் மகா உபத்திரவக் காலத்திற்குள் பிரவேசிக்கின்றவர்களாய் இருப்பார்கள் என்றே நாம் எதிர்பார்க்க வேண்டும். இந்த நிலவரங்களைக் கண்டு, நாம்

அனுதாபம் கொள்கின்ற அதே வேளையில், மாம்சீக இஸ்ரயேலர்களுக்காக நமது அருமை மீட்பர் கண்ணீர் விட்டதுபோன்று, நாமும் கண்ணீர் விடுகின்ற அதே வேளையில், "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" என்று கர்த்தர் அன்று கூறினதுபோல, "பாபிலோன் விழுந்தது" என்று இன்று கூறப்படுகின்ற அதே வேளையில், இப்படியாகத் தெய்வீகத் திட்டமானது நடைப்பெறுவதே, நீதி, ஞானம் மற்றும் அன்பின் உருவமாக இருக்கின்றது என்பதை உணர்ந்து, இப்படியாக நடைப்பெறுவதில் களிகூருவதற்கு நாம் கற்றுக்கொள்ளவும் வேண்டும். நாம் அதிகமதிகமாய்க் கர்த்தருடைய வார்த்தைகளை ஆழமாய்த் தியானிக்கையில், அவருடைய அன்பானது, புத்திரர் வீட்டாருக்குத் தகுதியற்றுபோன நிலையிலும், அதே வேளையில் ஆயிரவருட யுகத்தில் கீழ்த் தளத்தில் தெய்வீகத் தயவிற்குள் கடந்துவருபவர்களுக்கு எதிர்காலத்தில் இன்னும் ஆச்சரியமான ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதை நம்மால் காணமுடிகிறது.

கர்த்தரை அவருடைய முதலாம் வருகையின்போது ஏற்றுக்கொண்டவர்கள், அதாவது கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களாய் இருந்தவர்கள், கர்த்தரில் இடறிப்போகாதப்படிக்குக் காத்துக் கொள்ளப்பட்டதோடுகூட, இவர்களுக்குக் கர்த்தர் இடறலின் கல்லாய் இருப்பதற்குப் பதிலாக, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய மேலான மற்றும் பிரமாண்டமான காரியங்களினிடத்திற்கும், பெந்தெகொஸ்தே நாள் முதற்கொண்டு ஆரம்பமான மாபெரும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினிடத்திற்கும் இவர்கள் ஏறிவரத்தக்கதாக, தேவனுடைய கிருபையினால் கர்த்தர் இவர்களுக்குப் படிக்கல்லுமானார். ஆகவே இப்பொழுது பெருந்திரளான பெயர்க்கிறிஸ்தவர்களாகிய கிறிஸ்தவ மண்டலம், இரண்டாம் பிரசன்னத்தினுடைய காலத்தின்போது இடறிப் போய்க்கொண்டிருக்கையில், இப்பொழுது உத்தம ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாய் இருப்பவர்கள் அனைவரும் கர்த்தரால் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, அவருடைய களஞ்சியத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதில் நாம் ஐயங்கொள்ள வேண்டியதில்லை; கிறிஸ்தவர்களெனத் தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்ளும் திரளானவர்கள் இடறிப் போய்க்கொண்டிருக்கையில், இந்த உத்தம இஸ்ரயேலர்களானவர்கள், இன்னும் மேலானதும், இன்னும் உயர்வானதுமான புதிய யுகத்தினிடத்திற்கு ஏறிச்செல்வதற்குரிய படிக்கல்லாகக் கர்த்தரையும், தற்கால சத்தியத்தையும் கண்டடைவார்கள்; இந்த உயர்வான மற்றும் மேம்பட்டதுமான புதிய யுகத்தினிடத்திற்கு நாம் இன்னுமொரு பெந்தெகொஸ்தே மூலமாய் உள்ளே கொண்டுவரப்படாமல், மாறாக கர்த்தரைப்போன்று நம்மை ஆவிக்குரிய ஜீவிகளாகவும், திவ்விய சுபாவத்தினுடைய பங்காளிகளாகவுமாக்கும், முதலாம் உயிர்த்தெழுதலுடைய மகிமையான மாற்றத்தின் வாயிலாக, உள்ளே நாம் கொண்டுவரப்படுகின்றவர்களாய் இருப்போம்.

இன்று இந்த ஆசீர்வாதத்திற்கும், உயர்த்தப்படுதலுக்கும் ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கும் இந்த வகுப்பார், முதலாம் வருகையின்போது காணப்பட்டிருந்த வகுப்பாரைப்போன்றே, ஞானிகள் அநேகரையும், பிரபுக்கள் அநேகரையும், கல்விமான்கள் அநேகரையும் பெற்றிருக்கவில்லை, மாறாக உத்தம இஸ்ரயேலர்களையும், சத்தியத்தை உண்மையாய் நேசிப்பவர்களையும், கர்த்தருக்காகவும், சகோதர

சகோதரிகளுக்காகவும் தங்களது ஜீவியங்களை ஒப்புக்கொடுப்பதற்கென இருதயத்திலாகிலும் விருப்பம் கொண்டிருப்பவர்களையும் உள்ளடக்கியுள்ளது. (இன்றுள்ள) இவர்களுக்கும்கூட, "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்" (மத்தேயு 13:16) என்ற கர்த்தருடைய ஆறுதலான வார்த்தைகள் கடந்து வருகின்றன. (முதலாம் உயிர்த்தெழுதலில்) மறுரூபமடைவதற்கு முன்பு, தற்காலத்திலும்கூட இவர்கள் ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றிருப்பார்கள்.

## யூதர்கள் அடையாளங்களையும், கிரேக்கர்கள் ஞானத்தையும் நாடித்தேடினார்கள்

ஆலயத்திற்குள் பிரவேசித்ததைக்குறித்து, யோவானுடைய பதிவுகளானது அனைத்து விவரங்களையும், கொடுக்காமல், சிலவற்றைக் கொடுத்துவிட்டு, நமது கர்த்தர் ஆலயத்தில் ஒன்று (அ) இரண்டு நாட்கள் பிரசங்கித்துவந்த பிற்பாடு அநேகமாக நடந்திட்ட ஒரு சம்பவத்தை விவரிக்கின்றது. நமது கர்த்தர் பேசினவைகளைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள், கர்த்தரைக் குறித்து உணர்ந்துகொள்ளவில்லை என்பதைச் சில கிரேக்கர் உணர்ந்தவர்களாக, அவருடைய மகா பலி தொடர்புடைய தேவனுடைய திட்டத்தை அறிந்திடாத நிலையில், கர்த்தர் தங்களுடைய தேசத்திற்குத் தங்களோடு வரும்படிக்கு அழைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக இருந்தார்கள். இந்தக் கிரேக்கர்கள் இயேசுவைச் சந்திக்கும்படிக்கு, பிலிப்பு மற்றும் அந்திரேயாவினிடத்திற்குச் சென்றார்கள்; பிலிப்பு மற்றும் அந்திரேயாவின் பெயர்கள் கிரேக்க பெயர்களாய் இருந்தபடியினால், இது இவர்கள் கிரேக்க மொழியை அறிந்தவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இவர்கள் இருவரும் இயேசுவிடம் காரியத்தைத் தெரிவித்தார்கள்; ஆனால் இயேசுவோ இந்த நிகழ்வை, தாம் மகிமைப்படுவதற்குரிய, அதாவது தமது சீஷர்களோ, நண்பர்களோ எதிர்ப்பார்த்திட்ட விதத்தில் இல்லாமல், மாறாக தம்மால் உணர்ந்துகொள்ளப்பட்டிருந்த மேலானவிதத்தில், தாம் மகிமைப்படுவதற்குரிய வேளை வந்துள்ளது என்னும் அவ்வேளைக்கான பாடத்தை மனதில் பதிய வைப்பதற்கான வாய்ப்பாக மாத்திரம் பயன்படுத்தினார். தாம் சிலுவையில் அறையப்படப் போவதற்கான தம்முடைய வேளை நெருங்கிக்கொண்டிருக்கின்றது என்பதையும், மரணம் வரையிலான அதாவது சிலுவையின் மரணபரியந்தமான தம்முடைய கீழ்ப்படிதல் எனும் நிபந்தனைகள் மீதே தெய்வீகத் திட்டத்திலுள்ள தம்முடைய உயர்த்தப்படுதல் சார்ந்துள்ளது என்பதையும் கர்த்தர் அறிந்திருந்தார். தாம் செய்யும்படிக்குப் பிதா கொடுத்திருக்கும் வேலையை நிறைவேற்றிடுவதற்கான வாய்ப்பிற்காக, முழுமையாய் அர்ப்பணம் பண்ணப்பட்டிருந்த அவருடைய இருதயமானது காத்துக்கொண்டு மாத்திரம் இருந்தது.

## கோதுமை மணி செத்தால்...

நமது கர்த்தர் "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்" என்ற வார்த்தைகளை மறைப்பொருளாக, உவமையாகப் பதிலளித்தார். (யோவான் 12:24) இப்படியான பதிலானது, அப்போஸ்தலர்களுக்கும், யூதர்களுக்கும் புரியாத புதிராக இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. பெந்தெகொஸ்தே நாள் வருவதுவரையிலும், அதாவது புத்திரசுவிகாரத்தின் ஆவியானது சீஷர்களின் புரிந்துகொள்ளுதல்களை வெளிச்சமூட்டுவது வரையிலும், பெரும்பான்மையான நமது கர்த்தருடையப் போதனைகளானது புரிந்துகொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்படவில்லை (அ) நோக்கம் கொள்ளப்படவில்லை என்று நாம் மற்ற வேதவாக்கியங்களிலிருந்து அறிந்து கொள்கின்றோம். இப்பொழுதோ இந்த வெளிச்சமூட்டுதலின் காரணமாக, நாம் நமது கர்த்தருடைய வார்த்தைகளின் ஐசுவரியமான ஆழங்களைப் புரிந்துகொள்வதற்குரிய சிலாக்கியங்களை உடையவர்களாய் இருக்கின்றோம்.

ஒருவேளை இயேசு தம்முடைய ஜீவனைக் காத்துக்கொண்டாரானால், ஒருவேளை அதை அவர் பலிச்செலுத்தவில்லை என்றாலும், அவர் அந்த ஜீவனை என்றென்றும் தக்கவைத்துக்கொள்ளலாம். ஆனால் சபைக்கும், உலகத்திற்கும் ஜீவன் அளிப்பதற்குரிய சிலாக்கியமற்றவராய் இருந்திருப்பார். அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராக அவர் மரித்திட்ட மரணமானது, அவருடைய விசுவாசிக்கின்ற சீஷர்களுக்குச் செயல்படுத்தப்படும்போது, "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே," சீஷர்கள் ஜீவனுக்கு ஏதுவாய் நீதிமானாக்கப்பட்டனர். இப்படியாக அவருடைய மரணமானது, அவருடைய சபையில், அவருடைய மணவாட்டியில், அவருடைய அங்கத்தினர்களிடத்தில் சிறந்த பலனைக் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது. இன்னுமாக மறைமுகமான பலனானது, இன்னும் பெரியதாய்க் காணப்படும்; ஏனெனில் அவரது இரத்தத்தைப் பற்றும் விசுவாசம் காரணமாக நீதிமானாக்கப்பட்ட சீஷர்கள், அவரோடுகூடத் தங்கள் ஜீவன்களை ஒப்புக்கொடுப்பதற்கும், அவரோடுகூட மரிப்பதற்குமான சிலாக்கியத்தினையும், இதற்கான அழைப்பையும் பெற்றுள்ளனர். அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் விஷயத்தில், இவர்கள் மூலம் உண்டாகும் பலனானது, இனிவரும் யுகத்தில், இன்னும் பெரியதொரு அறுவடையாக இருக்கும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், ஒரு கோதுமை மணியான நமது கர்த்தர், 1,44,000 பேரை மற்றும் இது தவிர எண்ணிலடங்கா திரளான கூட்டத்தாரைப் பெரும்பலனாகக் கொடுத்தார். மேலும் அவருடைய பிரதிநிதிகளும், அவருடைய அங்கத்தினர்களுமாகிய இந்த 1,44,000 பேர் மூலமான பலனானது, பூமியின் குடிகள் அனைவரும் பிதாவுடன் ஒப்புரவாகுவதற்கும், தெய்வீக நிபந்தனைகளின் கீழ் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குமான முழுமையான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்கையில், இறுதியில் இன்னும் பெரியதொரு பலனாகக் காணப்படும்.

## சீஷத்துவத்திற்கான நிபந்தனைகள்

தம்மைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்கள் புரிந்துகொள்ள முடியாத விதத்தில் பேசின பிற்பாடு, தம்முடைய பின்னடியார்கள் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிற்பாடு,

அதாவது ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிற்பாடு புரிந்துகொள்ளும் விதத்தில் விவரங்கள் கொடுக்கும் வண்ணமாக, "தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" (யோவான் 12:25) என்று கூறினார்; அதாவது தற்கால பூரணமற்ற சூழ்நிலைகளின் கீழான, நமது தற்கால ஜீவனை நாம் உயர்வானதாய்க் கருதுவோமானால், விசுவாச கண்களினால் மாத்திரமே பார்க்க முடிகின்ற எதிர்கால ஜீவியம் பற்றின நம்பிக்கையில், நாம் கர்த்தருடைய ஊழியத்தில், நம்முடைய ஜீவியங்களை ஒப்படைப்பதற்கு மனமற்றவர்களாய் இருப்போம் என்ற விதத்தில் கூறினார்.

சிறப்பான சூழ்நிலைகளின் கீழ்க் காணப்படப்போகின்ற நித்திய ஜீவனுடைய மதிப்பை உணர வேண்டுமெனில், நாம் தற்கால பூரணமற்ற சூழ்நிலைகளின் கீழ்க்காணப்படும் தற்கால ஜீவியத்தை அதிகம் அன்புகூரக்கூடாது. தற்கால ஜீவியத்தினுடைய பாவமுள்ள மற்றும் பூரணமற்ற நிலைமையில் திருப்தியடைபவர்கள், கர்த்தருடைய சீஷர்கள் ஆகுவதற்குரிய மனநிலையில் இல்லாதவர்கள் ஆவர். இப்படிப்பட்டவர்கள் தற்கால சூழ்நிலைகளில் திருப்திக்கொண்டிருப்பதினால், இவர்கள் கர்த்தர் முன்வைக்கும் சிறந்தவைகளுக்காக, தற்கால ஜீவியத்தைப் பலியாக்கிட விருப்பமற்றவர்களாய்க் காணப்படுவார்கள். கர்த்தருடைய இந்த வார்த்தைகளானது சுவிசேஷயுகத்தையும் தாண்டி ஆயிரவருட யுகத்திற்கும் பொருந்தும் என்று சொல்வதற்கு எந்த காரணங்களும் இல்லை; ஆயிரவருட யுகத்தில் காரியங்கள் பெரிதும் வேறுபட்டதாயும், சூழ்நிலைகள் மறுசீரமைக்கப்பட்டதாயும் காணப்படும். "இந்த உலகத்தில்" எனும் வார்த்தைகளைக் குறிப்பிடுவதன் வாயிலாக, கர்த்தர் எல்லையைக் குறிப்பிடுகின்றார்; "இந்த உலகத்தில்" – அதாவது இந்தக் காஸ்மோஸ் (kosmos) அல்லது இந்தத் தற்காலத்தின் ஒழுங்குமுறை என்பதேயாகும்.

இன்னும் சீஷத்துவத்திற்கான நிபந்தனைகளைத் தொடர்ந்து விவரிக்கும் வண்ணமாக, நமது கர்த்தர் "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்" (யோவான் 12:26) என்று கூறினார். இவ்வார்த்தைகளின் மூலமாக நமது கர்த்தர் தமது உண்மையுள்ள பின்னடியார்கள், ஆவிக்குரிய வட்டாரத்தில், தம்முடைய திவ்விய சுபாவத்தில் இறுதியில் பங்கடைவார்கள் என்று எடுத்துக் காண்பிக்கின்றார். இதே காரியங்களைக் கொஞ்சம் வேறுவிதமாக, "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" என்று கர்த்தர் கூறுகின்றார். (யோவான் 12:26) மரணம் வரையிலான குமாரனுடைய உண்மையினிமித்தம், பிதா குமாரனைக் கனப்படுத்தினார்; குமாரனுடைய இரத்தத்தினால் நீதிமானாக்கப்பட்டுள்ள குமாரனுடைய பின்னடியார்களை, பிதா குமாரர்களாக ஏற்றுக்கொள்கின்றார்; மேலும் குமாரனுடைய அடிச்சுவடுகளில் உண்மையாய் நடக்கின்றவர்களை, பிதா நிச்சயமாய் இயேசுவைக் கனப்படுத்தினதுபோன்று கனப்படுத்துவார்; முதற்பலனாகிய இந்த இயேசுவைப் பிதாவானவர், மரணத்திலிருந்து தூதர்களுக்கும், அதிகாரிகளுக்கும், வல்லமைகளுக்கும் மேலாகவும், எல்லா நாமத்திற்கும் மேலாகவும் கனத்திற்கும், மகிமைக்கும் மற்றும் அழியாமைக்கும் உயர்த்தினார். நாம் அனைவரும் உண்மையுள்ள

# கர்த்தருடைய நாமத்தில் வருகின்றவர்

## மத்தேயு 21:1-17

***"கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்." மத்தேயு 21:9***

கடந்த பாடத்தில் இயேசுவும், அவருடைய சீஷர்களும், மற்றவர்களும் பஸ்காவை அநுசரிக்கும்படிக்கு எருசலேமை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். அவர்கள் ஏற்கெனவே எரிகோவைக் கடந்துவிட்டனர். போகிற வழியில்தான் இயேசு தாலந்துகள் பற்றின உவமையைப் பேசினார்; இயேசு தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, வெள்ளி இரவு மார்த்தாள், மரியாள் மற்றும் லாசருவின் வீடு இருந்த பெத்தானியாவுக்கு வந்தடைந்தார். ஓய்வு நாளன்று அவர் தம்முடைய நண்பர்களுடன் ஓய்ந்திருந்து, அன்றைய சாயங்கால வேளையில் தம்மைக் கனப்படுத்தும் விதமாக ஆயத்தப்படுத்தப்பட்டிருந்த பந்தியில் பங்குகொண்டு, மரியாளிடமிருந்து விலையேறப்பெற்ற நளததைலத்தினால் அபிஷேகம் பெற்றுக் கொண்டார்; அடுத்த நாளாகிய வாரத்தின் முதலாம் நாளின் காலை வேளையில், எருசலேமை நோக்கிய தம்முடைய பிரயாணத்தை இயேசு தொடர்ந்தார். அந்த வாரம் முழுவதும் அவர் தினந்தோறும் பட்டணத்திற்குச் சென்று, இரவில் பெத்தானியாவுக்குத் திரும்பி, பெத்தானியாவிலேயே தங்கியிருந்தார். ஆலயத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவில் பெத்தானியா காணப்பட்டது. இங்கிருந்து நம்முடைய பாடம் ஆரம்பமாகிறது.

கர்த்தருடன்கூட அநேக திரளான ஜனங்கள் எருசலேமுக்கு வந்திருந்தார்கள்; மேலும் சிலர் அவரைப் பார்க்கும்படியாக எருசலேமிலிருந்து பெத்தானியாவுக்கு வந்திருந்திருந்தார்கள். காரணம் இவர்கள், லாசருவை மரணத்திலிருந்து எழுப்பின நாசரேத்தூர் தீர்க்கத்தரிசி, லாசருவின் வீட்டில் காணப்படுகின்றார் எனக் கேள்விப்பட்டிருந்தனர். இந்தக் கூட்டத்தினர் ஒலிவ மலைகளுக்கு மேலாகக் காணப்படும் சிறிய கிராமமாகிய பெத்பகேயுவை அடைந்தபோது, தமக்கு ஒரு கழுதையையும், அதனோடு அதன் குட்டியையும் கொண்டுவரத்தக்கதாக, தம்முடைய சீஷர்களில் இரண்டு பேரை, மற்றொரு கிராமத்துக்கு அனுப்பி வைத்தார். இவ்விலங்கினுடைய எஜமான், இயேசுவுக்கு அறிமுகமானவராக இருக்கலாம்; இப்படியிருக்குமாயின் அந்த எஜமான், கர்த்தருடைய சீஷருக்கும்கூட அறிமுகமானவராக இருக்கலாம். எப்படியிருப்பினும் கர்த்தருடைய வேண்டுகோளுக்கு மதிப்புக்கொடுக்கப்பட்டது; மேலும் மாற்கு சுவிசேஷத்தின்படி (revised மொழியாக்கத்தின்படி) கழுதையை இயேசு, எஜமானிடம் திருப்பி அனுப்பி வைப்பார் எனச் சீஷர்கள் வாக்களித்ததாகவும் காணப்படுகின்றது. நமது கர்த்தர், கழுதையின் மீது சவாரி பண்ணுவது என்பது வழக்கத்திற்கு மாறான ஒன்றாகும்; அந்த வாரம் முழுவதும் அவர் ஒவ்வொரு நாள் காலையிலும், சாயங்காலத்திலும் நீண்ட தூரம் போக்கும் வரத்துமாய் இருந்தாலும், இந்த ஓர் இடத்தில் மாத்திரமே அவர் சவாரி பண்ணினதாக நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சமயத்தில் அவர் சவாரி

பண்ணினதற்கான காரணம் களைப்பு அல்ல என்பதில் உறுதியே. முற்காலங்களில் இராஜாக்கள் வெள்ளைக் கழுதைகளின் மீது சவாரி பண்ணி தங்களை அறிமுகப்படுத்துவது போன்று, இயேசு ஜனங்களுக்குத் தம்மை முன்வைத்தார்.

## சவாரியின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம்

முன்னிலை வகிக்கும் எழுத்தாளர் ஒருவர் இச்சம்பவம் தொடர்பான விஷயத்தில், நம்முடைய கர்த்தருடைய நடத்தையையும் மற்றும் திட்டத்தையும் மிகவும் தவறான கண்ணோட்டத்தில் பின்வரும் விதத்தில் முன்வைக்கின்றார்: "யூத தேசத்தார் தம்மை மேசியா என்று ஏற்றுக்கொள்வதற்கும், இப்படியாக அழிவிலிருந்து அவர்களை இரட்சிக்கவும் மற்றும் மனுஷர் மத்தியில் பரலோக இராஜ்யத்தைக் கொண்டுவரும் விஷயத்தில், அவர்களை மாபெரும் வல்லமையாக ஆக்கவுந்தக்கதாக, இயேசு இப்பொழுது மூன்று நாட்களாக, தம்முடைய இறுதி பிரயாசங்களை எடுத்தார். தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றும்படியாக இயேசு பல்வேறு விதங்களில் தம்மால் முடிந்த அனைத்தையும் செய்தார். ஓர் இராஜாவாக அவர்களுக்குத் தம்மை அவர் முன்வைத்தார். தம்முடைய பிதாவின் வீடாகிய ஆலயத்தைச் சுத்திகரித்ததின் மூலமாக அவர் தமது இராஜரிக அதிகாரத்தைக் காட்டினார். வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தும் விஷயத்தில் அவர் வல்லமை மற்றும் இரக்கத்தின் இராஜரிகச் செய்கைகளை நிகழ்த்தினார். அவர் விவாதித்தார், அவர் சொற்பொழிவாற்றினார், அவர் வற்புறுத்தினார், அவர் போதித்தார், அவர் மறுப்புகளுக்குப் பதிலளித்தார், அவர் பயமுறுத்தினார், அவர் எச்சரித்தார்."

ஆனால் இவைகள் அனைத்திற்கும் நேர்மாறாக ஜனங்கள் தம்மை, "இராஜாவாக்கும்படி பிடித்துக்கொண்டு போகாதபடிக்கு" ஜனங்கள் தூண்டப்பட்டு விடுவதை, கர்த்தர் வேண்டுமென்றே தவிர்த்துவிடுவதை நாம் பார்க்கின்றோம். (யோவான் 6:15) உவமைகளினாலும், மறைப்பொருள்களினாலும் அவர் ஜனங்களுக்குப் போதித்தார், அதுவும் தனிமையிலிருக்கும் போதுதான், "தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது" என்று கூறி தம்முடைய சீஷர்களுக்கு அவைகளை விவரித்துக்கொடுத்தார். (மாற்கு 4:11-12) இந்தச் சவாரி பண்ணுவதற்குக் கொஞ்சம் நாட்களுக்கு முன்னதாகத்தான், தாம் தேசத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தருளுவார் என்று தம்முடைய சீஷர்களுக்குத் தெரிவித்திருந்தார். இவைகளையெல்லாம் அவர்கள் பகுதியளவு புரிந்துகொண்டிருந்ததினால்தான், இப்படிப்பட்ட எண்ணத்தை அவர் மனதிலிருந்து மாற்றிப்போட செய்வதற்கென அவர்கள் முயற்சி எடுத்தனர்; மேலும்

தம்முடைய இராஜ்யம் பரலோகத்திற்குரியது என்றும், "மறுஜென்ம" காலங்களில் இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களை நியாயந்தீர்க்கும்படியாக அப்போஸ்தலர்கள் பன்னிரண்டு சிங்காசனங்களில் உட்கார்ந்திருப்பார்கள் என்றும் அவர்களுக்குக் கர்த்தர் விவரித்துக்கொடுத்தார்.

தாம் புறக்கணிக்கப்படுவார் என நமது கர்த்தர் அறிந்திருந்தார்; அவர் பட்டணத்திற்குள் பிரவேசிக்கையில், அவர்களைப் பார்த்து, கண்ணீர்வடித்து, "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" என்று கூறினார். பூமிக்குரிய ஓர் இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கெனத் தமக்கு ஆதரவு அளிக்கத்தக்கதாக ஜனங்களை வசீகரிக்கும் நோக்கம் கொஞ்சமும் அவருக்கு இருக்கவில்லை என்பது உறுதியே. தம்முடைய நிலையைத் தக்கவைத்துக்கொள்வதற்கென அவர் ஒருவேளை பேசி இருந்திருப்பாரானால், அவருக்கு எத்துணை அதிகாரம் காணப்பட்டிருக்கும் என்பதிலும் உறுதியே. அவர் பிலாத்துவுக்கு முன்பாகக் குற்றம் சாட்டப்பட்டபோதும், அவர் தம்மைக் காக்கும்படிக்கும் எதுவும் கூறாததினிமித்தம், உரோம தேசாதிபதியாகிய பிலாத்துக்கூட ஆச்சரியப்பட்டார். இவைகளனைத்துமே, "தன்னை மயிர்கத்தரிக்கிற வனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்" என்ற தீர்க்கத்தரிசனத்திற்கு இசைவாகக் காணப்பட்டது. (ஏசாயா 53:7)

கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களாக இருக்கும் யூதர்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தவே இயேசு நாடினார்; தெய்வீக ஞானத்தினுடைய வழிநடத்துதலின் கீழ், தம்முடைய செய்தியானது இந்த வகுப்பாரை மாத்திரமே கவர்ந்து இழுப்பது, பிதாவின் திட்டமாக இருப்பதை இயேசு புரிந்துள்ளார் மற்றும் மற்றவர்கள் கவரப்பட வேண்டுமென இயேசுவும் விரும்பவில்லை. உத்தம இஸ்ரயேலர்கள், பரிசுத்தமானவர்கள் தவிர, அத்தேசத்தின் மீதமானவர்கள், தெய்வீகத் திட்டம் மற்றும் ஏற்பாட்டின்படி நமது கர்த்தரைப் புறக்கணித்து, அவரைச் சிலுவையில் அறைந்துபோட்டு, அவருடைய இரண்டாம் வருகையின் வேளையில் அவர்களுடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டு, "அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" என்பது நிகழ்வது வரையிலும் 18 - நூற்றாண்டுகளுக்கும் மேலாக குருடான நிலைமையில் காணப்படுவார்கள். (சகரியா 12:10) இதற்கிடையில் திட்டமிட்டபடி, கர்த்தருடைய கிருபையானது, இந்தச் சுவிசேஷயுகத்தின்போது, உலகெங்கும் கடந்துபோய், இருதயத்தில் உண்மையுள்ளவர்களைச் சீஷர்களாக்கி, அதாவது பரலோக இராஜ்யத்திற்கு உடன்சுதந்தரர்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்திற்காகப் பல்வேறு ஜாதிகள், ஜனங்கள், கோத்திரங்கள், பாஷைக்காரர்களிலிருந்து ஒரு பக்தி வைராக்கியமுள்ள வகுப்பாரை ஏற்படுத்துகின்றது; இந்தப் பரலோக இராஜ்யமானது, தேவனுடைய ஏற்றவேளை வரையிலும், அதாவது நமது கர்த்தருடைய இரண்டாம் வருகை வரையிலும் ஒரு பூமிக்குரிய இராஜ்யமாகவோ, ஒரு பரலோகத்திற்குரிய இராஜ்யமாகவோ ஸ்தாபிக்கப்படுவதற்குத் திட்டமிடப்படவில்லை.

# தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதல்

இரண்டு தீர்க்கத்தரிசனங்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு, சாட்சியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது; அதாவது, "இதோ உன் இராஜா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின் மேலும், கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள்." (ஏசாயா 62:11; சகரியா 9:9-ஆம் வசனங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கவும்) இப்படியாக உரைக்கப்பட்டது நிறைவேறும்படியாக இயேசு கழுதையின் மீது ஏறி வந்தார். இந்தத் தீர்க்கத்தரிசனத்தை யூதர்கள் நன்கு அறிந்திருந்தனர். மேலும் பல நூற்றாண்டுகளாக இத்தீர்க்கத்தரிசனத்தை மேசியா நிறைவேற்றும்படிக்குக் காத்திருந்தனர். இஸ்ரயேலர்கள் இயேசுவைப் புறக்கணிக்கும் விஷயத்தில் சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லாமல் போகத்தக்கதாக, தீர்க்கத்தரிசிகளால் முன்னுரைக்கப்பட்டதை, தெய்வீகத் திட்டத்தின்படி நமது கர்த்தர் சொல்லர்த்தமாகவே உண்மையில் நிறைவேற்ற வேண்டுவது அவசியமாய் இருந்தது. ஆகவே எதிர்க்காலத்தில் இஸ்ரயேலர்களின் புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்படும்போது, அவர்களுடைய குருட்டுத்தன்மை அப்புறப்படுத்தப்படும்போது, தாங்கள் குத்தினவரை அவர்கள் கண்டு, அவரைப் புறக்கணித்துப் போட்டதற்காகத் துக்கங்கொள்ளும்போது, அவர்கள் தங்களுக்கெனச் சாக்குப்போக்கு எதுவும் சொல்ல முடியாமல் இருப்பதைக் காண்பார்கள்; கர்த்தருடைய உடன்படிக்கையின் ஜனங்களாகிய தங்களுக்கு, அவர் தம்முடைய அனைத்து நல் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியுள்ளார் என உணர்ந்துகொள்வார்கள். மேலும் தாங்கள் புறக்கணித்ததில் உள்ள குற்றம் முற்றும் தங்களுடையதே என்று உணர்ந்துகொள்வார்கள்; இன்னுமாகத் தங்களுடைய இராஜாவை ஏற்றுக்கொள்வதற்குரிய இருதய நிலைமையில் தாங்கள் இல்லாமல் இருந்துள்ளார்கள் என்பதையும், தாங்கள் பெருமையுள்ளவர்களாகவும், தற்பெருமையடித்துக் கொண்டவர்களாகவும் இருந்துள்ளார்கள் என்பதையும் உணர்ந்துகொள்வார்கள்; இன்னுமாக அவர் தூய்மையானவராகவும், சுயநலமற்றவராகவும் இருந்திருக்க, தாங்கள் தூய்மையற்றும், சுயத்திற்காக நாடுபவர்களாக இருந்துள்ளதையும், தாங்கள் இராஜ்யத்திற்குத் தகுதியற்றுப்போனதையும் உணர்ந்துகொள்வார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், தேவன் தாம் நோக்கம் கொண்டிருந்ததும், வாக்களித்திருந்ததுமாகிய அனைத்தையும் மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு நிறைவேற்றினார். ஆகவே புறக்கணித்ததிலுள்ள தவறு முற்றிலும் அவர்களுடையதே என உறுதியானது.

கர்த்தரோடுகூடக் காணப்பட்ட திரளான ஜனக்கூட்டத்தார் சூழ்நிலையைக் கிரகித்துக்கொண்டவர்களாக மேசியாவிற்கு, "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று உரக்கக் கூறிக்கொண்டிருந்து, அவர் ஏறிவரும் விலங்கிற்கு இராஜரிகமாக ஒரு வழிப்பாதையை ஏற்படுத்தினார்கள்; சிலர் தங்கள் வஸ்திரங்களை விரித்தனர். வேறுசிலர் மரக்கிளைகளையும் பரப்பினர். இப்படியாக ஜனங்கள் தங்களுடைய கனத்திற்குரிய அதிகாரிகளை நடத்துவது என்பது பல நூற்றாண்டுக்காலமாக, பல்வேறு ஜனங்கள் மத்தியில் இருந்த வழக்கமாயிருந்தது. மலர்கள் அதிகமாய்க் காணப்படும்

நாடுகளில், மலர்கள் பயன்படுத்தப்படுவது உண்டு; இன்னும் சில நாடுகளில் மரக்கிளைகள் பயன்படுத்தப்படுவதுண்டு; சில சந்தர்ப்பங்களில் உண்மையுள்ள பிரஜைகள் தங்கள் வஸ்திரங்களை, விரிப்பதற்குப் பயன்படுத்துவதும் உண்டு. இயேசுவுடன்கூடக் காணப்பட்ட இந்தத் திரளான ஜனக்கூட்டத்தார் அநேகர் இயேசுவை விரும்பினவர்களாக இருப்பினும், இவர்கள் அனைவரும் பரிசுத்தவான்கள் அல்ல. இந்த ஊர்வலத்தை அப்போஸ்தலர்கள் தூண்டிவிடவில்லை என்ற உண்மையானது, வேறொரு சுவிசேஷகரின் பதிவு உறுதிப்படுத்துகின்றது. அதாவது குறிப்பிட்ட சில பரிசேயர்களும், வேதபாரகர்களும் சீஷர்களிடத்தில் வந்து, இப்படியான சம்பவங்கள் சரியில்லை எனக் கர்த்தருடைய கவனத்திற்கு அப்போஸ்தலர்கள் கொண்டுவரும்படி கூறினார்கள் என்பதில் உறுதிப்படுகின்றது.

நமது கர்த்தருடைய மேசியாத்துவம் தொடர்புடைய விஷயத்தில் அவரிடம் வெளிப்படும் தன்னடக்கமானது கவனிக்கத்தக்கதாகும். அவர் தம்மை மேசியா என்று அறிவித்த, ஒரு சம்பவத்தைக்கூட நாம் அறியோம். அவர் அதிகபட்சமாய்த் தம்மைக்குறித்து அறிவித்தது, அவர் தேவனுடைய குமாரன் என்பதேயாகும். அதாவது, பெந்தெகொஸ்தே நாள் முதற்கொண்டு சுவிசேஷ யுகம் முழுவதிலுமுள்ள அவருடைய உண்மையுள்ள சீஷர்கள் எவருக்கும் பொருந்தும் பெயரையே இயேசு தமக்கென உரிமைப்பாராட்டிக்கொண்டார். எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே, அவர் மேசியா என்ற கனமானது மற்றவர்களாலேயே குறிப்பிடப்பட்டதே ஒழிய, மாறாக கர்த்தரினால் சொல்லி வாதாடப்படவில்லை. உதாரணத்திற்கு முதலாம் தருணத்தின்போது, இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில், "ஜனங்கள் என்னைக்குறித்து யார் என்று சொல்கின்றார்கள்?" என்றும், பின்னர் "நீங்கள் என்னை யார் என்று சொல்கின்றீர்கள்" என்றும் கேட்டதற்கு, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய மேசியா" என்று பேதுரு பதிலளித்தப்போது, "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" என்று கூறி, தம்முடைய ஒப்புக்கொள்ளுதலைச் சுட்டிக்காட்டினார். (மத்தேயு 16:17) (இரண்டாம் தருணத்தின்போது) இப்பொழுது திரளான ஜனங்களே அவரைத் தாவீதின் குமாரன் என்றும், மேசியா என்றும் பறைச் சாற்றினார்கள். அவர் அமைதியைக் காத்துக்கொண்டவராகக் காணப்பட்டார். மறுப்புகள்/எதிர்ப்புகள் வந்தபோது மாத்திரமே, "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்" என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறத்தக்கதாக, ஆர்ப்பரித்து, இப்படியாக சத்தமிடுதல் அவசியம் என்று இயேசு கூறினார். (சகரியா 9:9) மூன்றாம் தருணத்தில், அவருடைய மேசியாத்துவம், "அப்படியானால் நீர் இராஜாவோ?" எனப் பிலாத்து கேள்வி கேட்டபோது குறிப்பிடப்பட்டது; பிலாத்துவின் கேள்விக்கு இயேசு: "நீர் சொல்லுகிறபடி நான் இராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்" என்று பதிலளித்தார். (யோவான் 18:37)

# உன்னதத்திலே ஓசன்னா

இந்தப் பவனியும், நமது இரட்சகருக்கான, இராஜ கனத்துடனான ஆரவாரமும் யூத தேசத்திற்கு ஒரு சாட்சியாய் இருப்பதைக் காட்டிலும், அதாவது அவர்கள் ஒன்றில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அல்லது புறக்கணிக்கத்தக்கதாக அவர்களுக்கு முன்பாக அவர்களுடைய இராஜா முன்வைக்கப்படுதலைக்காட்டிலும் வேறு ஏதேனும் அர்த்தங்கள் உள்ளனவா? அக்காலக்கட்டத்தில் இச்சம்பவத்திற்கு இதைக்காட்டிலும் வேறே அர்த்தம் இருக்கவில்லை. ஆனால், இதில் இந்த யுகத்தின் முடிவில் காணப்படும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நமக்கு மறைமுகமாக ஒரு படிப்பினை இருக்கின்றது. ஏனெனில் யாக்கோபின் மரணம் துவங்கி, இச்சம்பவம் வரையிலான மாம்சீக இஸ்ரயேலர்களுடைய வரலாறானது, இயேசுவின் மரணம் துவங்கி, அவர் தம்முடைய மகிமையில் வந்து, தம்முடைய ஜனங்களுக்கு முன் தம்மை முன்வைப்பது வரையிலுமாகக் காரியங்களுக்கு தெய்வீக ஏற்பாட்டின்படி நிழலாக இருக்கின்றது. அவர், "இஸ்ரயேலின் இரு வீட்டாராகிய" ஆவிக்குரிய வீட்டாருக்கும், மாம்சீக வீட்டாருக்கும் முன் தம்மை முன்வைக்க வேண்டும் என்றே தீர்க்கதரிசிகள் உரைத்தவைகள் தெரிவிக்கின்றன. மாம்சீக வீட்டார் மத்தியில் உண்மையுள்ள மற்றும் உண்மையற்ற இஸ்ரயேலர்கள் காணப்பட்டது போலவே, இந்தச் சுவிசேஷ யுகத்திற்கான ஆவிக்குரிய வீட்டாராகிய, "கிறிஸ்தவ மண்டலத்திலும்" மேசியாவிற்காகவும், அவருடைய இராஜ்யத்திற்காகவும் காத்துக்கொண்டிருப்பதாக அறிக்கைப் பண்ணிக்கொண்டிருக்கும் உண்மையுள்ள மற்றும் உண்மையற்ற இஸ்ரயேலர்களும் காணப்படுகின்றனர்.

மாம்சீக இஸ்ரயேலர்கள், கர்த்தர் தங்களுடைய இராஜாவாக வருவதற்கும், பூமியில் நீதியை ஸ்தாபிப்பதற்கும், ஆபிரகாமின் உடன்படிக்கைக்குரிய நிபந்தனைக்கு ஏற்ப மனுக்குலம் அனைத்தையும் ஆசீர்வதிப்பதற்கெனத் தங்களைக் கருவியாய்ப் பயன்படுத்துவதற்கும் 1845 வருடங்கள் காத்திருந்தார்கள். மேசியா வந்தபோது, அவரை ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் தயாராக இராமல், அவருடைய உடன் வேலைக்காரர்களாக இருப்பதற்குத் தகுதியற்றுப் போனார்கள்; ஆனால் சொற்ப உண்மையான இஸ்ரயேலர்களை மாத்திரம் அவர் அந்தத் தேசத்திலிருந்து சேர்த்துக் கொண்டு, அவர்களைப் புதிய ஜாதிக்கான அணுக்களாக்கிவிட்டார். மாம்சீக இஸ்ரயேலர்களாகிய, யூத தேசத்தார் தள்ளப்பட்டு, புறக்கணித்துப் போடப்பட்டபோது, கர்த்தர் முன்னறிந்து, முன்னுரைத்ததுபோன்று அனைத்து ஜாதிகளிலிருந்தும், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களைத் தெரிந்தெடுக்க ஆரம்பித்தார். இயேசுவின் மரணம் முதல், இயேசு தம்மை இராஜாவாக முன்வைப்பது வரையிலான 1845 வருடங்களாகப் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் காத்துக்கொண்டிருந்தனர்.

நமது மீட்பர் எருசலேமுக்குச் சவாரி செய்து, தம்மை மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு முன்வைத்த இச்சம்பவத்திற்கு இசைவாக கி. பி. 1878-இல் நமது மீட்பர் தம்மை ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு முன்வைத்ததற்குச் சாட்சியாக, அநேக

வேதவாக்கியங்கள் காணப்படுகின்றன. (இக்காரியம் தொடர்பான தீர்க்கத் தரிசனமான காரியங்களுக்குத் தொகுதி 2 மற்றும் 3 பார்க்கவும்) இக்காலப் பகுதியில் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், "பாபிலோன்" – யூத ஜாதியார் புறக்கணிக்கப்பட்டது போலவே – புறக்கணிக்கப்பட்டார்கள் என நாம் நம்புகின்றோம். இந்தப் புறக்கணிக்கப்படுதலை/தள்ளிவிடப்படுதலை, கிறிஸ்தவ மண்டலத்தார் உணர்ந்துகொள்ளவில்லை; மாம்சீக இஸ்ரயேலும், அதன் வீடு பாழாக்கிவிடப்பட்டு, அழிவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை உணரவில்லை. மாம்சீக இஸ்ரயேலர்களை நமது கர்த்தர் புறக்கணித்துப்போட்டு, முப்பத்தேழு வருடங்களுக்குப் பின்பாக அவர்களுடைய பட்டணங்களும், ஆட்சி அமைப்பும் அழிந்ததுபோல, 1878-ஆம் வருடத்திலிருந்து 37 வருடங்களுக்குப் பின்னர், தீர்க்கத்தரிசனத்தில் உரைக்கப் பட்டதுபோல, மகா உபத்திரவக் காலத்தில் கிறிஸ்தவ மண்டலம் அழிவிற்குள் செல்லும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

## ஆலயத்தைச் சுத்திகரித்தல்

ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அவரைத் தங்களது மேசியா என்றும், வந்திருக்கும் தங்களுடைய கர்த்தரும், இராஜாவும் என்றும் ஏற்றுக்கொள்கின்ற அல்லது அவரைப் புறக்கணிக்கின்ற விஷயத்தில் தீர்மானம் எடுக்கும் காலக்கட்டத்தில்தான் நாம் இன்னமும் காணப்படுகின்றோம்; அதாவது, "கர்த்தருடைய நாமத்தில் வருகிறவராகிய தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று தங்களுடைய இருதயத்தில் ஆர்ப்பரிப்பதற்குரிய அல்லது இந்தச் செய்தியைக் கேட்ட மாத்திரத்தில், வெறுப்படைந்தவர்களில் ஒருவராக இருப்பதற்குத் தீர்மானம் எடுக்கும் காலக்கட்டத்தில்தான் நாம் இன்னமும் காணப்படுகின்றோம். அவரை ஏற்றுக்கொள்பவர்கள் நிச்சயமாக, பெந்தெகொஸ்தே நாளில் கர்த்தருடைய உண்மையான ஜனங்கள் மீது வந்த ஆசீர்வாதமான அனுபவங்களுக்கான நிஜத்தை அடைவார்கள். நிஜம், நிழலைக்காட்டிலும் மிகவும் பெரியதாகவும், பிரம்மாண்டமான தாகவும் காணப்படும். அதாவது, அழியக்கூடிய நிலையிலிருந்து, முதலாம் உயிர்த்தெழுதலில் அழியாத நிலைக்கு மாற்றப்படுவார்கள். கர்த்தரையும், ஆசீர்வாதங்களையும் ஏற்றுக்கொள்வதற்கு இருதயத்தில் ஆயத்தமற்றிருக்கும் மற்றவர்களோ, மகா உபத்திரவக் காலத்தில் பங்கடைவார்கள்; இந்த மகா உபத்திரவக் காலத்துடன் இந்த யுகம் முடிவடைந்து உடனடியாக வரும் நீதியின் மகிமையான ஆயிரவருட ஆளுகைக்கென மனுக்குலத்தை ஆயத்தப்படுத்தும்.

"இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள்" என்றுகூறி, யூத தேசத்திற்கான அழிவு பற்றின தீர்ப்பை இயேசு அறிவித்த உடனே, அந்தத் தேசம் தொடர்புடைய அனைத்துப் பிரயாசங்களையும் அவர் நிறுத்திவிட்டார் (மத்தேயு 23:38-39); தேச அளவிலான அவர்களுக்கான பரீட்சை முடிந்தபோதிலும், சரியான இருதய நிலைமையில் காணப்பட்ட தனி நபர்களை அவர் இன்னமும் நாடித்தேடினார். அவர் ஆலயத்திற்குச்

சென்று, அங்கிருந்த விற்கிறவர்களையும், காசுக்காரர்களையும், கயிற்றினாலான சவுக்கைக்கொண்டு துரத்தி, ஆலயத்தைச் சுத்திகரித்தார். வாழ்க்கையின் எந்த மட்டத்திலுமுள்ள யூதனுக்குரிய அதிகாரத்தையும், அவர் கொண்டிருந்தார்; இன்னுமாக அவருடைய இராஜ அதிகாரமும், சரீரப்பிரகாரமாக அவருக்கு ஆதரவு அளிப்பதற்கு ஆயத்தமாய் அவரைச் சூழ்ந்திருந்த ஜனங்கள் மூலமான அதிகாரமும் அவர் கொண்டிருந்தார்; இவைகளுக்கெல்லாம் அப்பால், அவரிடம் பரலோக வல்லமையும் இருந்தது.

## நிஜத்தில் ஆலயம் சுத்திகரிக்கப்படுதல்

நாம் புரிந்திருக்கிறபடி, இச்சம்பவமானது ஒரு நிழலாகும். அதாவது, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு இப்பொழுது பொருந்தக்கூடிய மாபெரும் ஒரு சத்தியத்திற்கான விளக்கமேயாகும். ஏரோதினால் கட்டப்பட்ட ஆலயம் நிழலேயாகும். உண்மையான ஆலயம் என்பது, ஜீவனுள்ள தேவனுடைய சபையாகும். இந்தச் சபை எனும் ஆலயம் இரண்டு கண்ணோட்டங்களிலிருந்து கருதப்படலாம்: (1) எதிர்காலத்தில், மகிமையின் சபை; இதில், இப்பொழுது அடிக்கப்பட்டு, ஆயத்தப்படுத்தப்படும் தற்காலத்திலுள்ள கர்த்தருடைய உண்மையுள்ளவர்கள், ஜீவனுள்ள கற்களாக இருப்பார்கள். (2) தாழ்வான நிலையிலும் பூரணமின்மையிலும் காணப்படும் தற்போது உள்ள சபை, தேவன் வாசம் பண்ணும் கூடாரமாய் இருக்கும். நிழலில் ஆராதனை விஷயத்திலும், ஆராதனை ஏறெடுக்கிறவர்கள் விஷயத்திலும் கடுமையான விதிமுறைகள் காணப்பட்டதுபோல, எதிர்க்காலத்திற்குரிய மகிமையான ஆலயமாக ஸ்தாபிக்கப்படத்தக்கதாக, ஆயத்தமாகுவதற்கு ஏதுவாக தற்காலத்திலுள்ள ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைகளைச் செய்யும் (ஆவிக்குரிய) லேவியர் மற்றும் ஆசாரியர்களுக்கும், தேவனுடைய வார்த்தைகளில் உறுதியான விதிமுறைகள் காணப்படுகின்றன.

இந்தச் சுவிசேஷயுகத்தின் முடிவில், தேவன் தம்முடைய ஆலயமாகிய, கிறிஸ்தவ மண்டலத்தைச் சுத்திகரிப்பதற்கான நோக்கம் கொண்டிருக்கின்றார் என்று வேதவாக்கியங்கள் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றன. மகிமையிலுள்ள ஆலயத்தில் சுத்திகரிக்கத்தக்கதாக, தூய்மையற்ற எதுவும் இராது, மற்றும் அசுத்தமான எதுவும் அங்கு நுழைவதுமில்லை; ஆனால் தற்காலத்திலுள்ள சபையின், ஆலயத்தின் விஷயத்தில், அதாவது அர்ப்பணம் பண்ணியுள்ள விசுவாசிகள் மாத்திரமே காணப்பட வேண்டிய சபையின், ஆலயத்தின் விஷயத்தில் கலப்பினம் காணப்படுகின்றபடியால், கிறிஸ்தவர்கள் மற்றும் சபை என்ற பெயரின் கீழ் முற்றிலும் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களும், சுயநலத்தை அடிப்படையாகக்கொண்டு இவ்வுலகத்துடன் தொடர்பு கொண்டிருப்பவர்களுமாகிய அநேகரும், அநேக பிரிவினர்களும் காணப்படுகின்றனர். "இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் (வருஷம்) செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும்" என்று இந்த ஆலயத்தைக் குறித்துத் தீர்க்கத்தரிசியாகிய தானியேலின் மூலம் முன்னுரைக்கப்பட்டப் பிரகாரம்,

சுத்திகரிப்பதற்குக் கர்த்தர் நோக்கம் கொண்டுள்ளார். (தானியேல் 8:14) நிழலான ஆலயத்தில் நமது கர்த்தரால் நிறைவேற்றப்பட்டது, வெறும் நிழலான சுத்திகரித்தலேயாகும்; நிஜமான சுத்திகரித்தலே உண்மையான முக்கியத்துவம் உடையதாகும்; மேலும் இந்தச் சுத்திகரிப்பின் காலங்களில்தான் நாம் இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக் கின்றோம். (தொகுதி 3, அத்தியாயம் 4 - பார்க்கவும்)

நிழலானது, சுத்திகரிப்பின் அம்சம் தொடர்பான கருத்தை நமக்குக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது; சுத்திகரிப்பானது பரிசுத்தக் காரியங்களை விற்கிறவர்களைப் பிரதானமாய்ப் பாதிக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது சுயநலமான காரணங்களுக்காகத் தங்களைக் கர்த்தருடைய வேலையில் இணைத்துக்கொண்டவர்களைப் பெரிதும் பாதிக்கின்றதாய் இருக்கும்; காரணம் இப்படிப்பட்டவர்கள், தங்கள் சபையுடன் அடையாளப்பட்டுக் காணப்படும்போதுதான், அதிகமாக மனுஷர் மத்தியில் கனத்தையும், ஜீவியத்திற்கான அதிகப்படியான சொகுசையும், சௌகரியங்களையும், நல்ல வியாபாரத்தையும் அடையப்பெற முடிகின்றது. இந்த வகுப்பாரைச் சார்ந்த அனைவரும் வெளியே துரத்தப்பட வேண்டும்; இவ்வேலையைக் கர்த்தர் தாமே பார்த்துக்கொள்வார். கர்த்தருடைய வீடு, விற்கிறவர்களின் வீடாய் இருக்கக்கூடாது. கர்த்தர் தம்மை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்பவர்களையே நாடுகிறாரேயொழிய, அப்பத்திற்காக வோ, மீனிற்காகவோ அல்லது ஏதேனும் பூமிக்குரிய ஆதாயத்திற்காகவோ தம்மைத் தேடுகிறவர்களைக் கர்த்தர் நாடுவதில்லை. ஆகவே சரியான வகுப்பாருக்குச் சத்தியம் ஆசீர்வாதமாய் இருப்பதற்கு ஏதுவாகவும், இராஜா மற்றும் அவருடைய உண்மையுள்ளவர்கள் தொடர்புடைய விஷயத்தில், சரியற்ற வகுப்பார் சத்தியத்தினால் அடையும் வெறுப்பின் காரணமாகப் பிரிக்கப்படுவதற்கு ஏதுவாகவும் உள்ள விதத்தில், கர்த்தர் சத்தியத்தை முன்வைப்பார். தற்காலத்தில் கர்த்தரும், சத்தியமாகிய சவுக்கும் வியாபாரத்திற்காக ஆலயத்தில் இருப்பவர்களுக்கு மாத்திரமே பாதிப்பாய் இருக்கின்றதே ஒழிய, மற்றவர்கள் எவருக்கும் பாதிப்பாய் இருப்பதில்லை. பெயரளவிலான ஆலயத்தில் இன்றும் காசுக்காரர்கள் இருக்கின்றனர்; இவர்கள் உணவு அல்லாதவைகளைக் கொடுப்பதற்கு என்று சம்பளங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் ஜனங்களிடமிருந்து திருடி, கர்த்தருடைய வழியைப் போதிக்கின்றோம் என்று அறிக்கைப் பண்ணிக்கொண்டு, மனுஷர் மத்தியில் கனத்தையும், சம்பளத்தையும் பெற்றுக்கொண்டு, உண்மையில் கர்த்தரையும், அவருடைய சத்தியத்தையும் தவறாய்க் காட்டுகின்றவர்களாய் இருக்கின்றார்கள். இப்படியான அனைவரும் உண்மையான ஆலய வகுப்பாரிடமிருந்து பிரிக்கப்படுவார்கள்; இவர்களும், நிழலான ஆலயத்திலுள்ள விற்கிறவர்களும், காசுக்காரர்களும் போதகர் மீதும், அவருடைய பின்னடியார்கள் மீதும் எரிச்சலாய் இருந்ததுபோல கோபமாய் இருப்பார்கள் மற்றும் ஆதரவாளர்களையும் பெற்றிருப்பார்கள்.

# ஆலயம், கள்ளர்குகை

திருடுதல் என்பது மறைமுகமாக, ஏமாற்றும் விதமாக செய்யப் படுகின்றது. திருடன் தன்னை முற்றிலும் வித்தியாசமானவனாக முன்வைப்பான். திருடன் ஒரு கனமிக்க மனுஷன் போன்று காண்பித்துக்கொள்வான்; ஆனால் தந்திரமாய்ப் போர்வையின் கீழ், திருடன் அவனுக்குச் சொந்தமல்லாததை, தனக்கென வஞ்சித்துக்கொள்கின்றான். இப்படியாகவேதான் கிறிஸ்தவ மண்டலத்திலுள்ள பல்வேறு திசைகளில் கிறிஸ்தவ ஊழியக்காரர்கள், போதகர்கள், கண்காணிகள் எனத் தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்ளும் அநேகர் காணப்படுகின்றார்கள் அல்லவா? கிறிஸ்துவினுடைய சிலுவைக்கும், தேவனுடைய வார்த்தைக்கும் ஊழியக்காரர்கள் என தங்களைக் காண்பித்துக்கொள்கின்ற அநேகர் தேவனுடைய வார்த்தைகளை மறுதலிக்கின்றவர்களாகவும், கிறிஸ்துவின் சிலுவை முட்டாள்தனமானது என எண்ணுகின்றவர்களாகவும் இருக்கின்றார்கள் அல்லவா? இவ்வகுப்பாரில், பரிணாமக்கொள்கைக்காரர்கள் எனத் தங்களை அறிக்கைப் பண்ணுகின்றவர்கள் காணப்படுகின்றனர்; அதாவது மனிதன் தேவனுடைய சாயலிலிருந்து விழுந்துள்ளான் என்றும், சிலுவையின் இரத்தத்தினால் மீட்கப்படுவது அவசியம் என்றும், மனிதன் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவதற்கு, கர்த்தருடைய இரண்டாம் வருகை அவசியம் என்றும் உள்ள காரியங்களுக்குப் பதிலாக, இவர்கள் கொண்டுள்ள சத்தியம் பற்றின கருத்து முற்றிலும் எதிர்மாறாய்க் காணப்படுகின்றது; அதாவது மனுஷன் விழுந்திருந்தாலும், அவன் மேலான நிலைக்குள்தான் விழுந்திருக்கின்றான் என்றும், அவன் மீட்கப்பட அவசியம் இல்லை என்றும், உலகத்தின் இரட்சிப்பிற்கான கர்த்தருடைய இரண்டாம் வருகையை எதிர்ப்பார்ப்பது என்பது முட்டாள்தனம் என்றுமுள்ள கருத்துக்கள் கொண்டிருக்கின்றனர். போலித்தனத்தின் கீழ் இம்மனுஷர்கள் பணம் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள் அல்லவா? இப்படிப்பட்ட திருட்டு, உலகத்திலேயே மிகவும் மோசமான வகை திருட்டு அல்லவா? இது அப்பட்டமான கொள்ளை/திருட்டு அல்லவா? தேவனுடைய நற்பெயரைக் கெடுக்கும் விஷயத்தில், இவர்கள் தேவனிடமிருந்து திருடுகிறார்கள் அல்லவா? ஜனங்களை ஏமாற்றி, அப்பம் அல்லாததும், திருப்திப்படுத்தாததுமாகியவற்றை ஜனங்களுக்கு விற்பதின் மூலம், அவர்களிடமிருந்து பணத்தையும், கனத்தையும் இவர்கள் திருடுகிறார்கள் அல்லவா?

பிதாவின் வீடு, அவருடைய சபை, அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்கிறவர்களை மாத்திரமே கொண்டிருக்க வேண்டும். மீதமான மற்றவர்கள் அனைவரும் வெளியேற்றப்படுவது சரியானதே மற்றும் கர்த்தர் இப்பொழுது இவைகளைப் பார்த்துக்கொள்வார். காரணம் இதற்கான ஏற்றவேளை இப்பொழுது வந்துள்ளது. பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும், பின்னர் ஏற்றவேளையில் அதனை கர்த்தருடைய மகிமை நிரப்பும்; இராஜரிக ஆசாரியக்கூட்டமானது மறுரூபமடைந்து, மகிமையின் ஆலயமாக, கனத்துடனும், வல்லமையுடனும் உள்ள ஆலயமாக மாறும் மற்றும் அதிலிருந்து மனுக்குலத்தின் உலகத்திற்கான ஆசீர்வாதம் கடந்துவரும்.

இயேசு இப்படியாக எருசலேமுக்குக் கழுதையின் மீது ஏறி வந்ததும், காசுக்காரர்களைச் சவுக்கினால் துரத்தியடித்ததும் ஜனங்கள் மத்தியில் பரபரப்பை

எழுப்பினது. யார் இவர்? என்று எழுந்த கேள்விக்கு, "இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கத்தரிசியாகிய இயேசு" என்று பதிலளிக்கப்பட்டது. செய்தி பரவியது, பட்டணத்திலுள்ள ஏழைகளும், முடவர்களும் ஆலயத்தில் குவிந்தனர். இந்த மாபெரும் தீர்க்கத்தரிசியைக்குறித்து ஜனங்கள் முன்னமே கேள்விப்பட்டிருந்தப்படியால், அவருடைய கரங்களிலிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு இதுவே என எண்ணியிருக்க வேண்டும். இப்படியாகவே ஆவிக்குரிய ஆலயமானது முழுமையாகச் சுத்திகரிக்கப்பட்டிருக்கும்போது, எதிர்க்காலத்தில் அதாவது கர்த்தருடைய ஆலயமானது அதன் வல்லமையிலும், மாபெரும் மகிமையிலும் காணப்படும்போது, பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படுதலும், சொஸ்தப்படுத்தப்படுதலும் அரங்கேற்றப்பட்டு, நிறைவேறித் தீரும்.

ஜனக்கூட்டத்தாருடைய ஆரவாரம் நின்றிருந்தாலும், ஆலயத்தில் காணப்பட்ட பிள்ளைகள் எவ்விதமான நோக்கமும் இல்லாமல், "ஓசன்னா, ஓசன்னா, தாவீதின் குமாரனுக்கு" எனச் சத்தமிட்டுக்கொண்டிருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. இப்படியாகக் கர்த்தரைத் துதிக்கும் துதிகள் ஆலயம் முழுவதும் காணப்பட்டிருக்க வேண்டும்; மேலும் பிள்ளைகளும் இப்படியாக ஆர்ப்பரித்துக்கொண்டிருப்பதைக் கேட்ட பரிசேயர்கள் எரிச்சலடைந்தனர்; தடுத்திடுவதற்கு இவர்கள் ஏறெடுத்த முயற்சித் தோல்வியடைந்ததின் காரணமாகத்தான் போதகரிடம் முறையிட்டனர்; அதாவது போதகருடைய அதிகாரத்திற்கு மதிப்பு இருக்கின்றபடியால், ஜனங்களைக் கடிந்துகொள்ளும்படியாகப் பரிசேயர்கள் போதகரிடம் முறையிட்டனர்; ஆனால் இவைகள் எல்லாம் "குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர்" என்று எழுதியிருக்கிறபடி தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதல் என போதகர் அவர்களுக்கு பதிலளித்தார். (சங்கீதம் 8:2; மத்தேயு 21:16) மாம்சீக இஸ்ரயேலர்கள் மத்தியில் அதிக அறிவும், தயவும் பெற்றிருந்தவர்களினால் உணர்ந்துகொள்ளப்படாமல், ஏற்றுக்கொள்வதில் தவறவிட்டதை, கர்த்தர் குழந்தைகளினுடைய வாயினால் நிறைவேற்றினார். பூமிக்குரிய ஞானமானது, தெய்வீக நோக்கங்களைத் தவறாய்ப் புரிந்துகொள்வதை நாம் எங்கும் காண்கின்றோம். ஆகையால் இப்படிப் பூமிக்குரிய ஞானமுடையவர்களைப் பார்க்கிலும் கர்த்தர் பெலவீனர்களையும், ஏழைகளையும், படிப்பறிவில்லாதவர்களையும் பயன்படுத்துகின்றார். அன்பான சகோதர சகோதரிகளே, நமக்கான வாய்ப்புகளும், தாலந்துகளும் எதுவாக இருப்பினும், சிறு பிள்ளைகளென இருக்க நாடி மற்றும் மேசியாவாகிய நமது ஆண்டவரை நாம் இப்பொழுது சரியான விதத்தில் பறைச்சாற்றத்தக்கதாகவும், எல்லா விதத்திலும் நாம் அவருடைய வேலையில் ஒத்துழைக்கத்தக்கதாகவும், இராஜ்யத்தின் மகிமையிலும், அவரோடுகூட உண்மையுள்ளவர்களெனக் கருதப்படத்தக்கதாகவும், நாம் பூமிக்குரிய ஞானத்தினால் மாத்திரம் வழிநடத்தப்படாமல், தேவனாலும் போதிக்கப்பட்டிருப்போமாக.

# நான் அவரை அங்குக் காண்கிறேன்

ஆழ்ந்த சிந்தனையோடு கடந்தகாலங்களைப் பின் நோக்குகிறேன்,
அங்கே இதோ என் ஆண்டவர்,
கபடற்ற தாழ்மையுள்ள - நசரேயனாகிய
தேவனுடைய ஒரேபேறான குமாரன்!

இப்போது உள்ளார்வத்தில் அவரைப் பின்தொடர்ந்தேன்.
யோர்தானின் நிழலான ஆற்றங்கரையோரமாக
பணிவாக அவர் செல்ல - நான்
அங்கே அவர் நின்றதைக் காண்கிறேன்!

தேவனால் ஆயத்தப்படுத்த அனுப்பப்பட்ட
யோவான்ஸ்நானன் அங்கே நிற்கிறார்.
அவர்களின் மத்தியில் அவரின் வார்த்தையைக்
கவனித்துக் கொண்டிருக்கிறவரைப் பற்றி பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்!

தண்ணீரில் என் ஆண்டவர் இறங்கிக் கூறுகிறார்:
"என்னை ஞானஸ்நானம் செய்,
என் அர்ப்பணிப்பின் நேரம் வந்ததால்
இதற்கு இப்பொழுது இடங்கொடு!"

உலகப் பிதா இதனைக் கண்ணோக்கி
தேவ ஆவி புறாவைப்போல இறங்கி
தம் ஒரே பேறான குமாரனை அறிவிக்கும்போது
அவரின் இதயம் அன்பினால் நிரம்பி வழிந்தது!

அந்த மகா பரிசுத்தர், பாவமற்றவர்
தமக்குரிய எல்லாம் ஆனந்தமாய் தந்து,
மனுக்குலத்தைக் காத்திடவே - அவரும்
சிலுவையில் தம் உயிரை ஊற்றினார்!

நானும் அவர் வழியே நடந்து
என் சிறிய பங்கையும் தராமல் இருப்பேனோ?
நான் கொடுக்கும் காணிக்கை சிறிதாயினும் - பிதாவின்
சித்தம் செய்ய எனக்கு ஆனந்தம் அளிக்குமல்லவா!

அதினால் பிரியமான தேவப்பிள்ளையே
சொல்லப்பட்டது என்னவெனில்: "ஏன் தாமதிக்கிறாய்?"
உன் பொருத்தனையின் அடையாளமாக - எழுந்து
இன்றே ஞானஸ்நானம் பெறுவாயாக!

பாதை கரடுமுரடாயினும் பயம் வேண்டாம்
ஏனெனில் அவருக்கு நீ சொந்தம்.
உன் நுகத்தில் உன்னோடுகூட வருகிறார் - அதினால்
தனியாய் நீ என்றும் நடப்பதில்லையே!

-Poems of the Way, p.164

# இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்

சீமோனின் வீட்டிலே விருந்து பரிமாறப்படவே, அவர்கள் புசிப்பதற்கென அங்கு அமர்ந்திருக்கவே. திறந்த வாயிலில் மாது ஒருத்தி வந்து, அமைதியாய் நின்றாளே -
பதட்டத்துடன் காணப்பட்ட அவளது இருதயத்துடன், அணைத்து வைத்திருந்தாளே
தூயதும், விலையேறப்பெற்றதும், அரிதானதுமான நளததைலமுள்ள பரணியை.
அங்கிருந்த ஆர்வமுள்ள கண்கள் தன்மீது திரும்பிட கூடாதே என்ற அச்சத்தில் அவள் காணப்பட்டாளே. அவரது பிரியமான நண்பரும், அவளது எஜமானரும்,
ஆண்டவருமானவர் அங்குக் காணப்பட்டார்.

தன் அன்பினை வெளிப்படுத்திடுவதற்கு இதுவே தனது கடைசி மற்றும் ஒரே வாய்ப்பு என்றே அவள் உள்ளுணர்வினால் உணர்ந்துகொண்டவளாய் இருந்தாளே.
அவர் தனக்குச் செய்திட்ட அனைத்தையும், அவள் எண்ணிப்பார்த்தாள்;
எதையும் பொருட்படுத்தாமல் அந்தச் சத்திய வார்த்தைகளை, அந்த ஜீவ வார்த்தைகளைக் கேட்கவேண்டுமென்று அவர் பாதம் அருகே செலவழிக்கப்பட்டதான அந்தப் பரிசுத்தமான மணிநேரங்களையும் அவள் மனம் எண்ணிப்பார்த்தது.
லாசரு கல்லறையில் கிடத்தப்பட்டிருந்த அந்த இருளான நாள்தனையும்,
எப்படி அவர் தன் இரவை, பகலாகவும், தன்னுடைய கண்ணீரைச் சந்தோஷமாகவும் மாற்றிப்போட்டார் என்று அவள் மனம் எண்ணிப்பார்த்தது.
நன்றியறிதல் ஆழமாய் அவள் கண்களில் பிரகாசித்திடவே, அவள் அழகு முகம் சிவந்ததே.

வேகமாய், சத்தமில்லாமல் அடிகள் எடுத்து வைத்து, ஆட்கள் நிரம்பியிருந்த அந்த அறையைக் கடந்தாள் அவள். கேள்விகளுடன் அவளைப் பார்த்திட்ட கண்களை, தைரியமாய் எதிர்க்கொண்டாள் அவள் (சிங்கம் நடமாட பயப்படும் இடங்களில்கூட, அன்பினால் முன்னேற முடியுமே).

நடுங்கும் கைகளினால், முத்திரையை உடைத்து, பரணியின் தைலத்தைத் தன் இரட்சகரின் பாதங்களின்மேல் ஊற்றினாள் அவள். வீடு முழுவதும் அருமையானதும், இனிமையானதுமான நறுமணத்தினால் நிறைந்ததே.
அவளால் பேசிட முடியாத அளவுக்கு, அவளது இருதயத்தின் அன்பு மிகவும் ஆழமாய் இருந்ததே; அவள் தன் பிரதான அலங்காரமாகிய, தனது நீளமான, பட்டுப்போன்ற கூந்தலைக்கொண்டு அவர் புனிதமான பாதங்களைத் துடைத்திட்டப்போது, கண்ணீர்கள் அவள் கன்னத்தில் வடிந்ததே.

திடீரென, அந்தப் பொன்னான அமைதியினைக் கடுங்குரல் ஒன்று தகர்த்ததே.
எத்தகைய வீண் இது! வீண் இது!
இது எவ்வளவு பணத்திற்கு விற்கப்பட்டிருக்கலாமே!
தரித்திரருக்கு உதவியிருக்கலாமே! எனும் கடுங்குரல் கேட்டதே!


அவள் தலையை இன்னும் குனிந்திட்டாளே - பெரிதான அன்பிற்கு
அது அற்பமான அர்ப்பணிப்பு என எண்ணினாள்.
மீண்டும் ஒரு குரல், ஆனால் இது அவள் ஆண்டவர் குரல்,
ஆம், அவள் அன்பின் ஆண்டவருடைய குரல் அறையில் தொனித்ததே.
(அவர் கொஞ்சம் எழும்பினவராக, தம் கரத்தை மென்மையாய் அவள் கூந்தல்மேல் வைத்தார்)
"இவளைக் கடிந்துகொள்ளாதிருங்கள், என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்;
இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்.
என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமாய் இதைச் செய்திருக்கின்றாள்.
இவளது அன்பின் கிரியையானது, யுகங்கள் முழுவதும் பேசப்படுமே!" - என்றவர் கூறிடவே,
அது அவளது சோர்ந்துபோன இருதயத்திற்கு எவ்வளவாய் எழுச்சியைக் கொடுத்திருக்குமே!

பழங்காலத்து இப்பரிசுத்தவாட்டியினுடைய கதையை நான் கேட்கும் போதெல்லாம்
எத்தனைதரம் என் பாவப்பட்ட இருதயமானது கொழுந்துவிட்டு எரிந்து,
ஏங்கியுள்ளதே, வாஞ்சித்துள்ளதே, தாகித்துள்ளதே,
நானும் இப்படியாய் என் ஆண்டவருக்கு, இராஜாவுக்கு ஊழியம் புரிந்திட வேண்டும் என்று
என் பாவப்பட்ட இருதயமானது ஏங்கியுள்ளதே, வாஞ்சித்துள்ளதே.
"பதினாயிரங்களில் சிறந்தவரும், முற்றிலும் அழகுள்ளவருமானவருக்கு" ஊழியம் புரிந்திட
வேண்டும் என்று என் பாவப்பட்ட இருதயமானது ஏங்கியுள்ளதே, வாஞ்சித்துள்ளதே!

ஆனால் இப்பொழுது அறிந்துகொண்டுள்ளேனே -
ஓ! விலையேறப்பெற்ற கருத்தை அறிந்துகொண்டுள்ளேனே.
"இன்னும் காலம் கடந்துச் செல்லவில்லை."
இன்னும் என்னால் அவரது பாத அங்கங்களுக்கு எந்தன் விலையேறப்பெற்ற அன்பினால்
அபிஷேகம் பண்ணிட முடியும் என்ற விலையேறப்பெற்றக் கருத்தை அறிந்துகொண்டுள்ளேனே!

அருமை ஆண்டவரே, உம்மிடம் நான் வேண்டிக்கொள்கின்றேனே,
பலியின் கரத்தைக்கொண்டு, சுயம் எனும் முத்திரையை நான் உடைத்திடுவதற்கும்,
என் இருதயத்திற்குள் அடக்கி வைக்கப்பட்ட நறுமணங்களை ஊற்றிடுவதற்கும்,
ஓ! எனக்கு நீர் உதவிட, நான் வேண்டிக்கொள்கின்றேனே.
ஓ! என் ஆண்டவரே உம் பாத அங்கங்கள் தேவையற்ற சஞ்சலத்திலிருந்து
தப்புவிக்கப்படுவதற்கும், வெளிச்சத்திற்கும், ஜீவனுக்குமான இடுக்கமான
பாதையில் அவர்கள் செல்ல உதவிடுவதற்குமான பிரயாசத்திலேயே
என் இரவும், பகலும் கழிவதாக!

- Gertrude W. Seibert (R4203)



நினைவுகூருதலின் தியானங்கள்

# சீஷர்களின் பாதங்களைக் கழுவுதல்



# பாதம் கழுவுதல்

கிழக்கத்திய நாடுகளில் பாதரட்சைகள் பயன்படுத்தப்படுவதினால், பாதங்கள் மண்ணும், புழுதியும் ஒட்டிக்கொள்ளும் விதத்தில் காணப்படுகின்ற காரணமாக, பாதங்கள் கழுவப்படுதல் என்பது வழக்கமாகச் செய்யப்படும் பழக்கமாகவும், தேவையாகவும் காணப்பட்டது. இந்தப் பணிவிடையானது மிகவும் கனமற்ற பணிவிடையாகக் கருதப்பட்டது மற்றும் குடும்பத்திற்காகவும், விருந்தினர்களுக் காகவும் இப்பணிவிடையானது கீழான பணிவிடைக்காரர்களினால் (அ) அடிமைகளி னால் செய்யப்படுகின்றது.

இயேசு தம்முடைய சீஷர்கள் மத்தியில் சுயநலத்தின் ஆவி இருப்பதைக் கவனித்தார்; தம்மோடுகூட அவர்கள் பங்கடைவார்கள் என்பதாக தாம் வாக்களித்துள்ளதான இராஜ்யத்தில், தங்களில் யார் ஸ்தானத்திலும், அதிகாரத்திலும் பெரியவர்களாய் இருக்க வேண்டும் என்று அவர்கள் பண்ணின வாக்குவாதத்தின் வார்த்தைகளானது, அவரது காதுகளில் விழுந்தது. இந்த ஆவியானது எந்தளவுக்கு வளர்ந்து, பலப்படுத்தப்படுகின்றதோ, அந்த அளவுக்கு, அது அவர்களுக்கு அபாயமானது என்பதை இயேசு முன்னறிந்தவராக, இந்த ஆவியினைக் கடிந்துகொண்டார். இந்த ஆவியானது 4 முதல் 6-ஆம் நூற்றாண்டுகளின் காலங்களில் போப் மார்க்க அமைப்பில் பூ பூத்து, அதன் கசப்பான கனியைக் கொணர்ந்தது மற்றும் இந்த அசுத்தமான ஊற்றினின்று இன்னமும் பொல்லாப்புகளும், தப்பறைகளும் பாய்ந்துகொண்டே இருக்கின்றது. அவர் ஒரு சிறுபிள்ளையை எடுத்து, சீஷர்களின் நடுவில் நிறுத்தி, "நீங்கள் பிள்ளைகளைப் போல் (சூழ்ச்சியற்றவர்களாக, எளிமையானவர்களாக) ஆகாவிட்டால், நான் உங்களை அழைத்துக் கொண்டிருக்கின்றதான இராஜ்யத்திற்குப் பாத்திரமானவர்களாய் இருக்கமாட்டீர்கள்" என்றார். "அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவன் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்" (மாற்கு 10:42); "கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக் கிறீர்கள்;" "உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனா யிருக்கக்கடவன்" (மாற்கு 10:43). "உங்களில் யார் அதிகமாய்ப் பணிவிடைப் புரிகின்றார்களோ, அவரே பெரியவராய் உங்களால் அடையாளங்கண்டுகொள்ளப்பட வேண்டும். நானும் கூடப் பிரதான பணிவிடைக்காரனாய் இருக்கின்றேன், ஏனெனில் மனுஷகுமாரன் ஊழியம் கொள்ளவும் மற்றும் இவ்விதமாய்க் கனம் அடையவும் வராமல், மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார். ஆகையால் நான் உங்களுக்காகச் செய்யும் பெரிய ஊழியத்தின் நிமித்தமாக, நான் உங்களுக்கு முதன்மையானவராய் இருக்கின்றேன் மற்றும் இப்படியாகவே உங்கள் மத்தியிலும் காணப்படுவதாக. எந்தளவுக்கு நீங்கள் ஒருவரிலொருவர் சுயநலமற்ற பலியுடன்கூடிய அன்பையும், ஊழியத்தையும் காண்கின்றீர்களோ, அவ்வளவாய் ஒருவரையொருவர் உயர்வாய் எண்ணிக்கொண்டு, கனப்படுத்துங்கள். இப்படியானவர்களை அவர்களது கிரியையின் நிமித்தம் மிகவும்

உயர்வாய் எண்ணிக்கொள்ளுங்கள்” எனும் விதத்தில் இயேசு கூறினார். (1 தெசலோனிக்கேயர் 5:13)

ஆனால் இவைகளுக்கும் பிற்பாடு, போதகருடனும் அவரது மாதிரியின் கீழிலும் அவர்கள் மூன்றரை வருடங்கள் செலவழித்திட்ட பிற்பாடும்கூட, பெருமையின் ஆவியும், மற்றவர்கள் மீது எஜமானாய்க் காணப்படுவதற்கும், முதன்மையானவர்கள் என்று தாங்கள் கனப்படுத்தப்பட/பாராட்டப்பட வேண்டும் என்பதற்குமான ஆசையும் இன்னமும் காணப்பட்டது; மேலும் தாம் அவர்களை விட்டுக் கடந்துபோக இருக்கையில், அவர்களோடு உள்ள கடைசி மாலை வேளையில், இந்த ஒரு பாடத்தினை அவர்களது இருதயங்களில் நிரந்தரமாய்க் காணப்படுமளவுக்குப் பதிய வைத்திட இயேசு நாடினார். ஆகையால் பஸ்கா இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, அவர் பந்தியை விட்டு எழுந்து, தம்முடைய சீஷர்களின் பாதங்களைக் கழுவுவதன் மூலமாக, மிகவும் கனமற்ற பணிவிடையை, அவர்களுக்குச் செய்தார். அவர்கள் அவருக்கோ (அ) ஒருவருக்கொருவரோ இத்தகைய பணிவிடையைச் செய்திடுவதற்கு அநேகமாக எண்ணிக்கூடப் பார்த்திருக்க மாட்டார்கள் மற்றும் இவ்வளவு தாழ்மையில், அவர் தங்களுக்குப் பணிவிடைப் புரிவதை மறுக்க முடிந்தவர்களாயும் காணப்பட்டனர்.

இயேசு முடித்த பிற்பாடு அவர்களை நோக்கி: “நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர் தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்” என்றார் (யோவான் 13:12-17). “நான் உங்களுக்குக் கொடுத்துள்ளதான படிப்பினையை நீங்கள் புரிந்துகொள்வீர்களானால் மற்றும் உணர்ந்துகொள்வீர்களானால் மற்றும் அதைக் கைக்கொள்வீர்களானால், அதனால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள் மற்றும் என் ஊழியங்களில் உதவிப் பெற்றுக்கொள்வீர்கள் மற்றும் உங்களுக்கு ஒரு பங்கு உண்டு என்று நான் வாக்களித்துள்ளதான இராஜ்யத்திற்கு ஆயத்தமாக்கப்படுவீர்கள்” என்ற விதத்தில் கூறினார்.

அப்போஸ்தலர்கள் அநேகருடைய வாழ்க்கையை நாம் பார்க்கையிலும் மற்றும் எத்தகைய சுயத்தை வெறுத்தலுடன், தாங்கள் சக அங்கத்தினர்களாகக் காணப்படும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு, தலையாகவும், அனைவருக்கும் முதன்மையானவராகவும் இருந்தவரின் மாதிரியைப் பின்பற்றி ஊழியம் புரிந்திருக்கின்றனர் என்று பார்க்கையிலும், இப்படிப்பினையானது அதற்கே உரிய தாக்கத்தினை ஏற்படுத்தி யுள்ளது என்பதில் நமக்கு ஐயமில்லை.

“நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்” (யோவான் 13:15) என்று கர்த்தர் கூறினபோது, அவர் என்ன அர்த்தத்தில் கூறினார் என்ற கேள்வி எழும்புகின்றது. கொள்கையிலும்,

ஒருவருக்கொருவர் ஊழியம் புரிவது தொடர்புடையதான படிப்பினையிலும் மாதிரி காணப்படுகின்றதா? அல்லது பாதங்களைக் கழுவும் சடங்கென்ற ஊழிய முறைமையில் மாதிரி காணப்படுகின்றதா? இரண்டாம் கருத்துச் சரியானது என்று யூகிப்பது என்பது, சடங்காச்சாரத்தின் கீழ், உண்மையான படிப்பினையை மறைத்துப் போடுவதாய் இருக்கும். ஒருவேளை சடங்கில்தான் மாதிரி காணப்படுகின்றதென்றால், பின்னர்ச் சடங்கினுடைய அனைத்து அம்சங்களும் கைக்கொள்ளப்பட வேண்டும்; மேல் வீட்டறை ஒன்று காணப்படவேண்டும் – இராப்போஜனம் காணப்படவேண்டும் – பாதரட்சைகள் அணியப்பட வேண்டும் – அதே விதமான வஸ்திரங்கள் அணியப்பட வேண்டும் – சீலை அரையிலே கட்டிக்கொள்ளப்பட வேண்டும். இல்லை; போதகரினால் தாழ்மையுடன் சீஷர்களுக்குப் பண்ணப்பட்ட விஷயத்திலேயே மாதிரி காணப்படுகின்றது; சடங்கில் அல்ல. உடன் அங்கத்தினர்களுக்கு மிகவும் கனமற்ற பணிவிடையைக்கூட அவர் புரிந்ததிலுள்ள மாதிரியையே நாம் பின்பற்றிட வேண்டும் மற்றும் இதை நாம் எந்தளவுக்குப் பின்பற்றுகின்றோமோ, அவ்வளவாய் ஆசீர்வதிக்கப்பட்டிருப்போம் மற்றும் அவ்வளவாய் நாம் நித்தியமான இராஜ்யத்திற்கும், தேவனுக்கு ஊழியம் புரிவதற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருப்போம்.

பாதரட்சைகள் இன்னமும் அணியப்படுகின்றதான கிழக்கத்திய நாடுகளில் இன்று வாழ்பவர்களுக்கு வேறுவிதங்களிலும், போதகரினால் பயன்படுத்தப்பட்ட விதத்திலும் மாதிரியைப் பின்பற்றிடுவதற்கான வாய்ப்பு இருக்கலாம்; மற்றும் முற்றிலும் வேறான சூழ்நிலைகளில் காணப்படுபவர்கள் "மாதிரியை" பல்லாயிரம் விதங்களில் பின்பற்றிடலாம். உடன் சீஷர்களில் சிலர் உங்கள் பட்டணத்திலும், என்னுடைய பட்டணத்திலும் வாழ்கின்றனர். அவர்களுக்கு நாம் எவ்வாறு ஊழியம் புரிந்திடலாம்? அவர்களை நாம் எப்படிப் புத்துணர்வு அடையப்பண்ணலாம்? கர்த்தருடைய "மாதிரிக்கேற்ப" நாம் அவர்களிடத்தில் எப்படி நம்முடைய அன்பையும், பரிவையும் காண்பிக்கலாம்? இந்தத் தட்பவெட்ப நிலையில் அவர்களது பாதங்களைக் கழுவுதல் ஏற்புடையதாய் இராது; இப்படிச் செய்வது என்பது அசௌகரியமாகவும், இன்ப மற்றதாகவும் மற்றும் "மாதிரிக்கு" எதிரான பணிவிடையாகவும் காணப்படும். ஆனால் மற்ற விதங்களில் நம்மால் "சரீரத்திற்கு" ஊழியம் புரிந்திடலாம் மற்றும் இப்படியாய் மாதிரியை உண்மையாய்ப் பின்பற்றிடலாம். பூமிக்குரிய விஷயத்திலும், ஆவிக்குரிய விஷயத்திலும் அவர்களுக்கு ஊழியம் புரிவதற்கான நமக்கான பல்வேறு வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். நாம் வாய்ப்பிற்காகப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் மற்றும் துக்கத்தையோ, சோர்வையோ காணுகையில், நம்முடைய சகோதரனுடைய பாரங்களைத் தூக்கிவிடுவதற்கு (அ) நமது சகோதரிகளுடைய துக்கத்தைத் தேற்றுவதற்கு, நம்முடைய உதவிகரத்தினை நாம் நீட்டிடலாம்; அவர்களுக்கு ஊழியம் புரிந்திடுவதற்கான, அதாவது அடையாளப் பேச்சில் அவர்களது பாதங்களைக் கழுவிடுவதற்கான நம்முடைய வாஞ்சையை, நம்முடைய கிரியைகள் மற்றும் வார்த்தைகள் மூலம் அவர்கள் காணும்படி செய்திடலாம்.

உங்கள் உதவியை அவர்கள் கேட்பது வரையிலும் காத்துக் கொண்டிருக்காதீர்கள்; ஏனெனில் அவர்கள் எந்தளவுக்கு வளர்ந்துள்ள சீஷர்களாய்க் காணப்படுகின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் உங்கள் உதவியினைக் கெஞ்சி கேட்காதவர்களாய்க் காணப்படுவார்கள். அவர்கள் தங்கள் பாரங்களையும்,

சோதனைகளையும் உங்களிடத்தில் சொல்வது வரையிலும் காத்துக் கொண்டிருக் காதீர்கள், மாறாக முன்னேற்பாடுடன் பார்த்துக்கொண்டிருங்கள்; ஏனெனில் அவர்கள் எந்தளவுக்குப் போதகருடைய ஆவியைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் முறையிடாதவர்களாகக் காணப்படுவார்கள் மற்றும் "எப்போதும் சந்தோஷமாய்" - உபத்திரவத்திலும்கூடச் சந்தோஷமாய் ஜீவிப்பவர்களாய் இருப்பார்கள்.

"சரீரத்திற்கான" இத்தகைய ஊழியங்களை வெட்கப்படாமல் நாடி, சந்தோஷங்கொள்ளுங்கள் - சரீரத்திற்கான ஊழியங்கள் என்பது கர்த்தர் இயேசுவுக்கே புரியப்பட்டதாகும். பூமிக்குரிய தேவைகள் சார்ந்த ஊழியங்களைக் காட்டிலும், புதிய சிருஷ்டிகளென நாம் ஒருவருக்கொருவர் புரியும் ஊழியங்களே மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. சரீரத்தைச் சத்தியத்தினால் கழுவுதலானது - சரீரத்தை வார்த்தையினால் பரிசுத்தம் ஆக்குவதும், சுத்திகரிப்பதும் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (எபேசியர் 5:26, 27) உங்கள் சக அங்கத்தினர்களுடைய விசுவாசத்தையும், ஜீவியங்களையும் சுத்திகரிக்கும் மற்றும் தூய்மைப்படுத்தும் விஷயத்தில் நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் சத்தியத்துடன், தாழ்மையாயும், அவர்களுக்கு ஊழியம் புரிய வேண்டும், அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும், ஆறுதல்படுத்த வேண்டும் மற்றும் புத்துணர்வடையச் செய்ய வேண்டும் என்ற உண்மையான வாஞ்சைகொண்டவர்களாயும் அவர்களை அணுகுகின்றீர்களா? இப்படிச் செய்கின்றீர்களானால், தொடருங்கள்; உங்கள் ஊழியத்தைச் செய்யுங்கள்; போதகரும் இப்படியாகவே செய்துள்ளார்; இதுவே அவரது மாதிரியாகும்; தொடர்ந்து செய்யுங்கள். எவ்வளவுக்கு அதிகமாய் இப்படிச் செய்கின்றீர்களோ மற்றும் அதிக நேரம் செலவழித்து, பிரயாசம் எடுத்து, சௌகரியத்தைப் பார்க்காமல், சுயத்தை வெறுத்தலுடன் செய்கின்றீர்களோ, நீங்கள் போதகருடைய பார்வையில் பெரியவர்களாகவும் மற்றும் கர்த்தர் உங்களது அன்பையும், அந்த அன்பின் ஊழியத்தையும் காண்கின்றது மற்றும் அறிந்திருக்கிறது போன்று, சரீரத்தின் அங்கத்தினர்களும் உங்களைக் காணும்போது, அறியும்போது நீங்கள் சரீரத்தில் மிகவும் கனப்படுத்தப்பட்டவர்களாகவும், பிரியத்திற்குரியவர்களாகவும் காணப்படுவீர்கள்.

இயேசுவினுடைய தலைச்சிறந்த "மாதிரியை" தொடர்ந்து பின்பற்றுங்கள்; "உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் சுத்தமாகத்தக்கதாக," கழுவுங்கள் மற்றும் ஒருவர் ஒருவரால் கழுவப்பட்டிருங்கள், மற்றும் உலகத்தில் நீங்கள் ஒவ்வொருவரும் தினந்தோறும் தொடர்புக்குள் வருகின்றதான அசுசிகளைச் சுத்திகரித்து, களைந்துபோடுங்கள். அனைவருக்குமான பிரதான ஊழியக்காரனும், கர்த்தருமானவர் அனைவருக்காகவும் கொடுத்திட்டதான விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய புண்ணியத்தினால், நீங்கள் ஏற்கெனவே அனைத்திலுமிருந்து நீதிமானாக்கப்பட்டு, சுத்தமானவர்களாகவும், பரிசுத்தமானவர்களாகவும் கருதப்படுகின்றபடியால், பழைய புளித்த மாவாகிய மாய்மாலம், பொறாமை மற்றும் சுயத்தை உயர்த்துதல் ஆகியவற்றைக் கழித்துப்போடுங்கள்.

# பாதம் கழுவுதல்

யோவான் 13:4-17 வரையிலான வசனங்களில் இடம் பெறுகின்றதான பாதம் கழுவுதலானது, நினைவுகூருதல் இராப்போஜனம் போன்று முக்கியமானதென்று சிலர் எண்ணுகின்றனர்; ஆகையால் இதைச் சுவிசேஷகர்களில் ஒருவரே குறிப்பிடுவதற்கு ஞாபகம் கொண்டிருந்தபோதிலும், இப்பாடத்தினை நாம் இங்குப் பார்க்கலாம்.

கிழக்கத்திய நாடுகளில் பாதரட்சைகள் பயன்படுத்தப்படுவதினால், பாதங்கள் மண்ணும், புழுதியும் ஒட்டிக்கொள்ளும் விதத்தில் காணப்படுகின்ற காரணமாக, பாதங்கள் கழுவப்படுதல் என்பது வழக்கமாகச் செய்யப்படும் பழக்கமாகவும், தேவையாகவும் காணப்பட்டது. இந்தப் பணிவிடையானது மிகவும் கனமற்ற பணிவிடையாகக் கருதப்பட்டது மற்றும் குடும்பத்திற்காகவும், விருந்தினர்களுக் காகவும் இப்பணிவிடையானது கீழான பணிவிடைக்காரர்களினால் (அ) அடிமைகளினால் செய்யப்படுகின்றது.

இயேசு தம்முடைய சீஷர்கள் மத்தியில் சுயநலத்தின் ஆவி இருப்பதைக் கவனித்தார்; தம்மோடுகூட அவர்கள் பங்கடைவார்கள் என்பதாக தாம் வாக்களித்துள்ளதான இராஜ்யத்தில், தங்களில் யார் ஸ்தானத்திலும், அதிகாரத்திலும் பெரியவர்களாய் இருக்க வேண்டும் என்று அவர்கள் பண்ணின வாக்குவாதத்தின் வார்த்தைகளானது, அவரது காதுகளில் விழுந்தது. இந்த ஆவியானது எந்தளவுக்கு வளர்ந்து, பலப்படுத்தப்படுகின்றதோ, அந்த அளவுக்கு, அது அவர்களுக்கு அபாயமானது என்பதை இயேசு முன்னறிந்தவராக, இந்த ஆவியினைக் கடிந்துகொண்டார். இந்த ஆவியானது 4 முதல் 6-ஆம் நூற்றாண்டுகளின் காலங்களில் போப் மார்க்க அமைப்பில் பூ பூத்து, அதன் கசப்பான கனியைக் கொணர்ந்தது மற்றும் இந்த அசுத்தமான ஊற்றினின்று இன்னமும் பொல்லாப்புகளும், தப்பறைகளும் பாய்ந்துகொண்டே இருக்கின்றது. அவர் ஒரு சிறுபிள்ளையை எடுத்து, சீஷர்களின் நடுவில் நிறுத்தி, "நீங்கள் பிள்ளைகளைப் போல் (சூழ்ச்சியற்றவர்களாக, எளிமையானவர்களாக) ஆகாவிட்டால், நான் உங்களை அழைத்துக்கொண்டிருக் கின்றதான இராஜ்யத்திற்குப் பாத்திரமானவர்களாய் இருக்கமாட்டீர்கள்" என்றார். "அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவன் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்" (மாற்கு 10:42); "கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக் கிறீர்கள்;" "உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக் கக்கடவன்" (மாற்கு 10:43). "உங்களில் யார் அதிகமாய்ப் பணிவிடைப் புரிகின்றார்களோ, அவரே பெரியவராய் உங்களால் அடையாளங்கண்டுகொள்ளப்பட

வேண்டும். நானும் கூடப் பிரதான பணிவிடைக்காரனாய் இருக்கின்றேன், ஏனெனில் மனுஷகுமாரன் ஊழியம் கொள்ளவும் மற்றும் இவ்விதமாய்க் கனம் அடையவும் வராமல், மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார். ஆகையால் நான் உங்களுக்காகச் செய்யும் பெரிய ஊழியத்தின் நிமித்தமாக, நான் உங்களுக்கு முதன்மையானவராய் இருக்கின்றேன் மற்றும் இப்படியாகவே உங்கள் மத்தியிலும் காணப்படுவதாக. எந்தளவுக்கு நீங்கள் ஒருவரிலொருவர் சுயநலமற்ற பலியுடன்கூடிய அன்பையும், ஊழியத்தையும் காண்கின்றீர்களோ, அவ்வளவாய் ஒருவரையொருவர் உயர்வாய் எண்ணிக்கொண்டு, கனப்படுத்துங்கள். இப்படியானவர்களை அவர்களது கிரியையின் நிமித்தம் மிகவும் உயர்வாய் எண்ணிக்கொள்ளுங்கள்" எனும் விதத்தில் இயேசு கூறினார். (1 தெசலோனிக்கேயர் 5:13)

ஆனால் இவைகளுக்கும் பிற்பாடு, போதகருடனும் அவரது மாதிரியின் கீழிலும் அவர்கள் மூன்றரை வருடங்கள் செலவழித்திட்ட பிற்பாடும்கூட, பெருமையின் ஆவியும், மற்றவர்கள் மீது எஜமானாய்க் காணப்படுவதற்கும், முதன்மையானவர்கள் என்று தாங்கள் கனப்படுத்தப்பட/பாராட்டப்பட வேண்டும் என்பதற்குமான ஆசையும் இன்னமும் காணப்பட்டது; மேலும் தாம் அவர்களை விட்டுக் கடந்துபோக இருக்கையில், அவர்களோடு உள்ள கடைசி மாலை வேளையில், இந்த ஒரு பாடத்தினை அவர்களது இருதயங்களில் நிரந்தரமாய்க் காணப்படுமளவுக்குப் பதிய வைத்திட இயேசு நாடினார். ஆகையால் பஸ்கா இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, அவர் பந்தியை விட்டு எழுந்து, தம்முடைய சீஷர்களின் பாதங்களைக் கழுவுவதன் மூலமாக, மிகவும் கனமற்ற பணிவிடையை, அவர்களுக்குச் செய்தார். அவர்கள் அவருக்கோ (அ) ஒருவருக்கொருவரோ இத்தகைய பணிவிடையைச் செய்திடுவதற்கு அநேகமாக எண்ணிக்கூடப் பார்த்திருக்க மாட்டார்கள் மற்றும் இவ்வளவு தாழ்மையில், அவர் தங்களுக்குப் பணிவிடைப் புரிவதை மறுக்க முடிந்தவர்களாயும் காணப்பட்டனர்.

இயேசு முடித்த பிற்பாடு அவர்களை நோக்கி: "நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர் தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால்,

பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்றார் (யோவான் 13:12-17). "நான் உங்களுக்குக் கொடுத்துள்ளதான படிப்பினையை நீங்கள் புரிந்துகொள்வீர்களானால் மற்றும் உணர்ந்துகொள்வீர்களானால் மற்றும் அதைக் கைக்கொள்வீர்களானால், அதனால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள் மற்றும் என் ஊழியங்களில் உதவிப் பெற்றுக்கொள்வீர்கள் மற்றும் உங்களுக்கு ஒரு பங்கு உண்டு என்று நான் வாக்களித்துள்ளதான இராஜ்யத்திற்கு ஆயத்தமாக்கப்படுவீர்கள்" என்ற விதத்தில் கூறினார்.

அப்போஸ்தலர்கள் அநேகருடைய வாழ்க்கையை நாம் பார்க்கையிலும் மற்றும் எத்தகைய சுயத்தை வெறுத்தலுடன், தாங்கள் சக அங்கத்தினர்களாகக் காணப்படும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு, தலையாகவும், அனைவருக்கும் முதன்மையானவராகவும் இருந்தவரின் மாதிரியைப் பின்பற்றி ஊழியம் புரிந்திருக்கின்றனர் என்று பார்க்கையிலும், இப்படிப்பினையானது அதற்கே உரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதில் நமக்கு ஐயமில்லை.

"நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவான் 13:15) என்று கர்த்தர் கூறினபோது, அவர் என்ன அர்த்தத்தில் கூறினார் என்ற கேள்வி எழும்புகின்றது. கொள்கையிலும், ஒருவருக்கொருவர் ஊழியம் புரிவது தொடர்புடையதான படிப்பினையிலும் மாதிரி காணப்படுகின்றதா? அல்லது பாதங்களைக் கழுவும் சடங்கென்ற ஊழிய முறைமையில் மாதிரி காணப்படுகின்றதா? இரண்டாம் கருத்துச் சரியானது என்று யூகிப்பது என்பது, சடங்காச்சாரத்தின் கீழ், உண்மையான படிப்பினையை மறைத்துப் போடுவதாய் இருக்கும். ஒருவேளை சடங்கில்தான் மாதிரி காணப்படுகின்றதென்றால், பின்னர்ச் சடங்கினுடைய அனைத்து அம்சங்களும் கைக்கொள்ளப்பட வேண்டும்; மேல் வீட்டறை ஒன்று காணப்படவேண்டும் – இராப்போஜனம் காணப்படவேண்டும் – பாதரட்சைகள் அணியப்பட வேண்டும் – அதே விதமான வஸ்திரங்கள் அணியப்பட வேண்டும் – சீலை அரையிலே கட்டிக்கொள்ளப்பட வேண்டும். இல்லை; போதகரினால் தாழ்மையுடன் சீஷர்களுக்குப் பண்ணப்பட்ட விஷயத்திலேயே மாதிரி காணப்படுகின்றது; சடங்கில் அல்ல. உடன் அங்கத்தினர்களுக்கு மிகவும் கனமற்ற பணிவிடையைக்கூட அவர் புரிந்ததிலுள்ள மாதிரியையே நாம் பின்பற்றிட வேண்டும் மற்றும் இதை நாம் எந்தளவுக்குப் பின்பற்றுகின்றோமோ, அவ்வளவாய் ஆசீர்வதிக்கப்பட்டிருப்போம் மற்றும் அவ்வளவாய் நாம் நித்தியமான இராஜ்யத்திற்கும், தேவனுக்கு ஊழியம் புரிவதற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருப்போம்.

பாதரட்சைகள் இன்னமும் அணியப்படுகின்றதான கிழக்கத்திய நாடுகளில்

இன்று வாழ்பவர்களுக்கு வேறுவிதங்களிலும், போதகரினால் பயன்படுத்தப்பட்ட விதத்திலும் மாதிரியைப் பின்பற்றிடுவதற்கான வாய்ப்பு இருக்கலாம்; மற்றும் முற்றிலும் வேறான சூழ்நிலைகளில் காணப்படுபவர்கள் "மாதிரியை" பல்லாயிரம் விதங்களில் பின்பற்றிடலாம். உடன் சீஷர்களில் சிலர் உங்கள் பட்டணத்திலும், என்னுடைய பட்டணத்திலும் வாழ்கின்றனர். அவர்களுக்கு நாம் எவ்வாறு ஊழியம் புரிந்திடலாம்? அவர்களை நாம் எப்படிப் புத்துணர்வு அடையப்பண்ணலாம்? கர்த்தருடைய "மாதிரிக்கேற்ப" நாம் அவர்களிடத்தில் எப்படி நம்முடைய அன்பையும், பரிவையும் காண்பிக்கலாம்? இந்தத் தட்பவெட்ப நிலையில் அவர்களது பாதங்களைக் கழுவுதல் ஏற்புடையதாய் இராது; இப்படிச் செய்வது என்பது அசௌகரியமாகவும், இன்பமற்றதாகவும் மற்றும் "மாதிரிக்கு" எதிரான பணிவிடையாகவும் காணப்படும். ஆனால் மற்ற விதங்களில் நம்மால் "சரீரத்திற்கு" ஊழியம் புரிந்திடலாம் மற்றும் இப்படியாய் மாதிரியை உண்மையாய்ப் பின்பற்றிடலாம். பூமிக்குரிய விஷயத்திலும், ஆவிக்குரிய விஷயத்திலும் அவர்களுக்கு ஊழியம் புரிவதற்கான நமக்கான பல்வேறு வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். நாம் வாய்ப்பிற்காகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் துக்கத்தையோ, சோர்வையோ காணுகையில், நம்முடைய சகோதரனுடைய பாரங்களைத் தூக்கிவிடுவதற்கு (அ) நமது சகோதரிகளுடைய துக்கத்தைத் தேற்றுவதற்கு, நம்முடைய உதவிகரத்தினை நாம் நீட்டிடலாம்; அவர்களுக்கு ஊழியம் புரிந்திடுவதற்கான, அதாவது அடையாளப் பேச்சில் அவர்களது பாதங்களைக் கழுவிடுவதற்கான நம்முடைய வாஞ்சையை, நம்முடைய கிரியைகள் மற்றும் வார்த்தைகள் மூலம் அவர்கள் காணும்படி செய்திடலாம்.

உங்கள் உதவியை அவர்கள் கேட்பது வரையிலும் காத்துக் கொண்டிருக் காதீர்கள்; ஏனெனில் அவர்கள் எந்தளவுக்கு வளர்ந்துள்ள சீஷர்களாய்க் காணப்படு கின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் உங்கள் உதவியினைக் கெஞ்சி கேட்காதவர்களாய்க் காணப்படுவார்கள். அவர்கள் தங்கள் பாரங்களையும், சோதனைகளையும் உங்களிடத்தில் சொல்வது வரையிலும் காத்துக் கொண்டிருக்காதீர்கள், மாறாக முன்னேற்பாடுடன் பார்த்துக்கொண்டிருங்கள்; ஏனெனில் அவர்கள் எந்தளவுக்குப் போதகருடைய ஆவியைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் முறையிடாதவர்களாகக் காணப்படுவார்கள் மற்றும் "எப்போதும் சந்தோஷமாய்" - உபத்திரவத்திலும்கூடச் சந்தோஷமாய் ஜீவிப்பவர்களாய் இருப்பார்கள்.

"சரீரத்திற்கான" இத்தகைய ஊழியங்களை வெட்கப்படாமல் நாடி,

சந்தோஷங்கொள்ளுங்கள் - சரீரத்திற்கான ஊழியங்கள் என்பது கர்த்தர் இயேசுவுக்கே புரியப்பட்டதாகும். பூமிக்குரிய தேவைகள் சார்ந்த ஊழியங்களைக் காட்டிலும், புதிய சிருஷ்டிகளென நாம் ஒருவருக்கொருவர் புரியும் ஊழியங்களே மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. சரீரத்தைச் சத்தியத்தினால் கழுவுதலானது - சரீரத்தை வார்த்தையினால் பரிசுத்தம் ஆக்குவதும், சுத்திகரிப்பதும் இப்பொழுது நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது. (எபேசியர் 5:26, 27) உங்கள் சக அங்கத்தினர்களுடைய விசுவாசத்தையும், ஜீவியங்களையும் சுத்திகரிக்கும் மற்றும் தூய்மைப்படுத்தும் விஷயத்தில் நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் சத்தியத்துடன், தாழ்மையாயும், அவர்களுக்கு ஊழியம் புரிய வேண்டும், அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும், ஆறுதல்படுத்த வேண்டும் மற்றும் புத்துணர்வடையச் செய்ய வேண்டும் என்ற உண்மையான வாஞ்சைகொண்டவர்களாயும் அவர்களை அணுகுகின்றீர்களா? இப்படிச் செய்கின்றீர்களானால், தொடருங்கள்; உங்கள் ஊழியத்தைச் செய்யுங்கள்; போதகரும் இப்படியாகவே செய்துள்ளார்; இதுவே அவரது மாதிரியாகும்; தொடர்ந்து செய்யுங்கள். எவ்வளவுக்கு அதிகமாய் இப்படிச் செய்கின்றீர்களோ மற்றும் அதிக நேரம் செலவழித்து, பிரயாசம் எடுத்து, சௌகரியத்தைப் பார்க்காமல், சுயத்தை வெறுத்தலுடன் செய்கின்றீர்களோ, நீங்கள் போதகருடைய பார்வையில் பெரியவர்களாகவும் மற்றும் கர்த்தர் உங்களது அன்பையும், அந்த அன்பின் ஊழியத்தையும் காண்கின்றது மற்றும் அறிந்திருக்கிறது போன்று, சரீரத்தின் அங்கத்தினர்களும் உங்களைக் காணும்போது, அறியும்போது நீங்கள் சரீரத்தில் மிகவும் கனப்படுத்தப்பட்டவர்களாகவும், பிரியத்திற்குரியவர்களாகவும் காணப்படுவீர்கள்.

இயேசுவினுடைய தலைச்சிறந்த "மாதிரியை" தொடர்ந்து பின்பற்றுங்கள்; "உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் சுத்தமாகத்தக்கதாக," கழுவுங்கள் மற்றும் ஒருவர் ஒருவரால் கழுவப்பட்டிருங்கள், மற்றும் உலகத்தில் நீங்கள் ஒவ்வொருவரும் தினந்தோறும் தொடர்புக்குள் வருகின்றதான அசுசிகளைச் சுத்திகரித்து, களைந்துபோடுங்கள். அனைவருக்குமான பிரதான ஊழியக்காரனும், கர்த்தருமானவர் அனைவருக்காகவும் கொடுத்திட்டதான விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய புண்ணியத்தினால், நீங்கள் ஏற்கெனவே அனைத்திலுமிருந்து நீதிமானாக்கப்பட்டு, சுத்தமானவர்களாகவும், பரிசுத்தமானவர்களாகவும் கருதப்படுகின்றபடியால், பழைய புளித்த மாவாகிய மாய்மாலம், பொறாமை மற்றும் சுயத்தை உயர்த்துதல் ஆகியவற்றைக் கழித்துப்போடுங்கள்.

# நான் உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்

## யோவான் 13:1-17

நமது கர்த்தருடைய ஊழியம் நிறைவேறப்போகின்ற தருணம் வந்தது. அவர் தம்முடைய பன்னிரண்டு தெரிந்துகொள்ளப்பட்ட சீஷர்களோடு பஸ்கா போஜனத்தைப் புசித்தார். மேலும் "நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" என்ற வார்த்தைகளையும் அவர்களுக்குத் தெரிவித்தார் (லூக்கா 22:15). அவர்கள் புசித்த பஸ்கா ஆட்டுக்குட்டியானது, நமது கர்த்தருக்கே அடையாளமாய் இருந்தது. மேலும் சீஷர்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியைப் புசித்த காரியமானது, சுவிசேஷ யுகம் முழுவதும் விசுவாசிகள் எப்படிக் கிறிஸ்துவைத் தங்கள் இருதயங்களில் போஷிப்பார்கள் என்பதையும், விசுவாசத்தின் மூலம் அவருடைய மரணத்தின் வழியாக வந்த ஆசீர்வாதங்களைத் தங்களுடையதாக்கிக்கொள்வார்கள் என்பதையும் அடையாளப் படுத்துகின்றது. "ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" (1 கொரிந்தியர் 5:7-8). ஆனால், இயேசு நிஜமான ஆட்டுக்குட்டியாக இருப்பதினால், நிழல் இனி நிறுத்தப்படுவது பொருத்தமான காரியமாகும். ஆகவேதான், இந்த நிழலான பஸ்கா போஜனத்தைப் புசித்த பிற்பாடு, நமது கர்த்தர் தமது பிட்கப்படும் சரீரமும் மற்றும் சிந்தப்படும் இரத்தமுமாகிய நிஜத்தை அடையாளப்படுத்தும் புளிப்பில்லா அப்பம் மற்றும் திராட்சரசம் அடங்கிய நினைவு கூருதலின் இராப்போஜனத்தை நிறுவினார்.

யூதர்களின் முறைமையின்படி பஸ்கா போஜனமானது, குடும்பம் குடும்பமாக அநுசரிக்கப்பட்டது. நமது கர்த்தரால் விசேஷமாகத் தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிரண்டு அப்போஸ்தலர்கள், அவரைத் தங்களுடைய தலையாக விசுவாசித்து, தங்களை ஒப்புக்கொடுத்தப்படியால், இவர்கள் தேவனுடைய குடும்பத்தின் கருவாக இருந்தார்கள். இவர்களுடைய இருதயங்களும், நம்பிக்கைகளும், நோக்கங்களும் ஒன்றாயிருந்தது. மேலும், ஒன்றாயிருப்பதற்கான காரணம், இவர்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருப்பதினாலேயாகும் (எபேசியர் 4:4). நமது கர்த்தருக்கு யூதாஸ்தான் தம்மைக் காட்டிக்கொடுக்கப்போகிறவன் என்று ஏற்கெனவே தெரிந்திருந்தாலும், யூதாஸ் தள்ளிவைக்கப்படவில்லை/தவிர்க்கப்படவில்லை. இது கிறிஸ்துவின் பின்னடியார்களாகிய நாம் ஒருவருக்கொருவர் மற்றவருடைய இருதயத்தைக்குறித்து நியாயந்தீர்க்கக்கூடாது அல்லது தீமையானவர்கள் என யூகிக்கக்கூடாது என்ற படிப்பினையை நமக்குக் கொடுக்கின்றது. இருதயத்தின் தீமை, வார்த்தையிலோ அல்லது கிரியையிலோ வெளியரங்கமாகும் சமயம்தான், கர்த்தருடைய நாமத்தை அறிக்கைப்பண்ணின நிலையிலும், நம்முடன் ஐக்கிய

நிலையில் காணப்பட்டும், தங்கள் இருதயத்தில் தீமை கொண்டு, அதை வெளியரங்கமாய்க் காட்டியிருக்கும் அத்தகைய சகோதர சகோதரிகளிடமிருந்து, நாம் நம்மை விலக்கிக் கொள்வதற்கான ஏற்றச் சமயமாகும். தீமை வெளியரங்கமாகக் கிரியைகளில் வெளிப்படுத்துவதற்கு முன்பு இருதயத்தில்தான் தோன்றுகின்றது என்பது உண்மைதான். ஆயினும், (தீமையை இருதயத்தில் உதிக்கப்பெற்றிருக்கும்) சகோதர சகோதரிகள் அந்தத் தீமைக்கு எதிராக ஜெயங்கொள்வார்கள் என்றே நாம் எப்போதும் எதிர்பார்க்கின்றவர்களாகக் காணப்பட வேண்டும். மேலும், எவ்விதத்திலும் அவர்களுக்கு இடறலாயிருக்கின்ற யாதொன்றையும் நாம் செய்ய நாடக்கூடாது. மாறாக, எதிராளியானவனின் தாக்கங்களையும், அவர்களுடைய சொந்த மாம்சத்திற் குரிய பெலவீனங்களையும் அவர்கள் ஜெயங்கொள்ளவே, நாம் எல்லாவிதத்திலும் நாடி உதவ வேண்டும்.

யோவான் தன்னுடைய சுவிசேஷத்தில் பஸ்கா இராப்போஜனத்தைக்குறித்து விரிவாக விவரங்கள் கொடுக்காமலும், அதே வேளையில் மற்றச் சுவிசேஷகர்களால் குறிப்பிடாமல் விடப்பட்டதுமான சில விலையேறப்பெற்ற அம்சங்களையும், அதுதொடர்பான சில படிப்பினைகளையும், முன்வைக்கும் விதமாக பதிவு செய்துள்ளார். நமது கர்த்தர் தம்முடைய பூமிக்குரிய ஊழியம்/வேலை நிறைவுபெறும் தருணத்திற்கு வந்துவிட்டது என ஏற்கெனவே அறிந்திருந்தார் என்றும், அந்தக் கடைசி மணி நேரங்களைத் தம்முடைய சிலருடன் அதாவது, தெரிந்துகொள்ளப்பட்ட நண்பர்களுடன், கூட்டாளிகளுடன் செலவழித்துச் சில நல்ல பாடங்களை அவர்கள் மனதில் ஆழப் பதியவைக்க விசேஷமான ஆர்வம் கொண்டிருந்தார் என்றும் யோவான் தெரிவிக்கின்றார். "அவர் முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்." அதாவது, முற்றும் முழுமையாக அன்பு வைத்தார் (யோவான் 13:1). அவருக்குத் தற்போது காணப்படும் மற்றும் வரப்போகும் கடுமையான சோதனைகளோ அவரது கவனத்தை முழுவதும் விழுங்கிப்போடவும் இல்லை; அவர்களை அன்பு செய்வதிலிருந்து அவரது கவனத்தைத் திசை திருப்பிப்போடவுமில்லை. அவர் இன்னமும் மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்கு எண்ணிக்கொண்டும், முயற்சி செய்து கொண்டும் இருந்தார். அவர் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மீது காட்டின அன்பு அவர்களுக்கு மாத்திரமே விசேஷித்தவிதமாய் உரியது என நாம் எண்ண வேண்டாம். மாறாக, "இவர்களுடைய வார்த்தையினால் தம்மை விசுவாசிக்கப் போகிறவர்களுக்கு" இந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும் பிரதிநிதிகளாகவே கர்த்தர் பார்த்தார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இப்பார்வையை நமது மனதில் நிறுத்திப் பார்க்கையில் நமது கர்த்தர் அப்போஸ்தலர்களுக்குக் கூறினதும், செய்ததுமான காரியங்கள் அனைத்துமே அதுமுதல் அவருடைய சீஷர்களாக ஆகும் அனைவருக்கும் பொருந்தக்கூடியதாகவும், போதனைகளாகவும் இருக்கின்றது என்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடியும் (யோவான் 17:20).

லூக்கா அவர்கள் பதிவு செய்த காரியங்களைப் பார்க்கையில், இத்தருணத்தின் போது அப்போஸ்தலர்கள் மத்தியில் தங்களுக்குள் யார் பெரியவன் என்ற வாக்குவாதம், பிரச்சனை போய்க்கொண்டிருந்ததைக் காணமுடிகின்றது (லூக்கா

22:24-31). இந்தப் பிரச்சனை முழுக்க முழுக்க சுயநலத்தின் அடிப்படையில் காணப்படாமல், போதகர் மீதான அன்பும்கூட இப்பிரச்சனைக்குப் பாதிக்காரணமாக இருந்தது. ஒருவேளை பந்தியில் அமரும்போதும், தங்களுக்கான வரிசை முறையிலும் இப்பிரச்சனை எழும்பியிருக்கலாம். ஏனெனில், நமது கர்த்தரின் அருகாமையில் அமருவதே அவர்கள் ஆசை கொண்ட இடமாகும். இராஜ்யத்தில் இயேசுவின் வலது, இடது பக்கத்தில் அமருவதற்கு எப்படி யாக்கோபும், யோவானும் வேண்டிக் கொண்டார்கள் என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம். இச்சம்பவம் நடந்த தருணத்தில் யோவான் இயேசுவுக்கு அடுத்துக் காணப்பட்டு, அவருடைய மார்பிலே சாய்ந்தவராக இருந்தார் என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம்.

யார் பெரியவன்? என்ற இந்தப் பிரச்சனை, மேல் வீட்டறையில் அவர்கள் விருந்தாளிகளாக அழைக்கப்படாமல், எல்லா வேலைகளையும் தாங்களாகவே செய்துகொள்ள வேண்டும் என்ற நிலையில் அவர்கள் காணப்பட்டதினிமித்தம் தோன்றியிருக்க வாய்ப்புகள் இருக்கலாம். அதாவது, இச்சம்பவத்தன்று மாடி அறை மாத்திரமே அவர்களுக்கு அளிக்கப்பட்டது. மேலும், அங்கு விருந்தளிப்பவர்கள் அவர்களுக்குள் இல்லாதபடியினால், பாதங்கள் கழுவப்படும் வழக்கத்திற்கு எவ்விதமான ஏற்பாடுகளும் அவர்களுக்கு அங்குக் காணப்படவில்லை. மேலும், அப்பணி செய்யப்படவில்லை. பாதரட்சைகளை அணியும் வழக்கமுடைய கிழக்கத்திய நாடுகளில் பாதங்கள் கழுவப்படும் காரியமானது, மரியாதைக் கொடுக்கும் விதமாக மாத்திரம் செய்யப்படாமல், அது அவசியமாய்ச் செய்யப்பட வேண்டிய காரியமாக உள்ளது. ஏனெனில், அந்த நாடுகளின் வெப்பநிலை நிமித்தம் மற்றும் பாதரட்சைகள் முழுவதும் பாதங்களை மூடியநிலையில் காணப்படாமல், திறந்தநிலையில் காணப்படுவதினிமித்தம் சாலைகளின் தூசிகள் பாதங்களில் படிந்துகொண்டிருப் பதினாலும், பிரயாணத்திலிருந்து வீடு திரும்பியவர்களின் பாதங்கள் கழுவப்படுவதன் மூலம், பாதங்களுக்கு ஆறுதல் அளிப்பது மிகவும் இன்றியமையாததாகவும் உள்ளது.

பன்னிரண்டு பேரில் யார் பெரியவன்? மற்றும் இவர்களில் யார் மற்றவர்களுடைய பாதங்களைக் கழுவும் மதிப்புக் குறைவான வேலையைச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குள் எழும்பின கேள்வியானது, அவர்களில் எவரும் பணிவிடைக்காரன் நிலையை எடுக்க விருப்பம் கொள்ளவில்லை என்ற உண்மையை வெளிப்படுத்து கின்றது.

நமது கர்த்தர் அவர்களுடைய பிரச்சனையைத் தீர்த்து வைக்காமல், அல்லது அவர்களுள் ஒருவனை இந்த மதிப்புக்குறைவான வேலையைச் செய்யும்படிக்கு நியமிக்காமல், இவ்விதமாய் அவர்கள் சண்டையிட்டுக்கொள்ள அனுமதித்துவிட்டார். அவர்களோ, அக்காரியத்தைக்குறித்துச் சிந்திக்கும்படி அனுமதித்தார். அதாவது, அக்காரியத்தை மீண்டும் சீர்த்தூக்கிப்பார்க்கவும் மனங்களைத் தாழ்த்தவும், அவர்களுக்கு நேரம் விட்டுக் கொடுத்தார். அவர்களோ வழக்கத்திற்கு மாறாக கழுவப்படாத பாதங்களுடன் இராப்போஜனத்தைப் புசிக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

பின்னர் இயேசு எழுந்து நின்று தமது மேலங்கியைக் கழற்றிப்போட்டு, ஒரு சீலையை எடுத்து அரையில் கட்டிக்கொண்டு, ஒரு பாத்திரத்தையும், தண்ணீர் எடுக்க

ஜாடியையும் எடுத்துக் கொண்டு, தண்ணீர் ஊற்றி தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவ ஆரம்பித்தார். பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றிவிட்ட பிற்பாடு பாதங்களைத் தண்ணீருக்குள் போட்டுக் கழுவுவது கிழக்குப் பகுதிகளில் உள்ள வழக்கமாக இராமல், கழுவப்பட வேண்டிய பாதங்கள் மீது தண்ணீர் ஊற்றப்படுவதே வழக்கமாயிருந்தது. இவ்விதமாக ஒவ்வொருவருக்கும் கழுவுவதற்குச் சுத்தமான தண்ணீர் காணப்படும். மேலும் தண்ணீரும் குறைவாகவே செலவழிகின்றது; ஏனெனில் நம் நாடுகளைக் காட்டிலும், கிழக்கே உள்ள நாடுகளில் தண்ணீர் மிகவும் தட்டுப்பாடு உடையதாகவும், விலையேறப்பெற்றதாகவும் கருதப்படுகின்றது. மேலும் நாம் பயன்படுத்தும் வழக்கத்தின்படியாக மேஜைகளும், இருக்கைகளும் அக்காலக்கட்டத்தில் கிழக்குப் பகுதிகளில் காணப்படுவதில்லை. அவர்களுடைய மேஜைகள் உயரம் குறைந்தவைகளாகவும், கிட்டத்தட்ட குதிரையின் பாதங்களில் அணியப்படும் லாடத்தினுடைய வடிவில் காணப்படும். மேலும் மேஜையில் இருப்பவர்கள் உண்மையில் மேஜையின் மீது பக்கவாட்டில் சாய்ந்து படுத்துக்கொள்வார்கள். அவர்களுடைய இடது முழங்கையானது, தலையணை அல்லது திவான் மீது வைக்கப்பட்டிருக்கும். அவர்களுடைய தலை குதிரைலாடம் போன்ற வடிவம் உடைய மேஜையின் உட்பக்கம் நோக்கியிருக்கும். இந்த உள்பக்கத்தில் உணவு வைப்பதற்கான இடமும், உள்ளே வந்து உணவை வைக்க பணியாளர்களுக்கு இடமும் காணப்படும். இவ்விதமாய் இருப்பதினால் பாதங்கள் வெளி நோக்கிக் காணப்படுவதினால், சாப்பிட்டுக் கொண்டிருக்கும் மற்றவருக்கு இடைஞ்சல் உண்டுபண்ணப்படாமலேயே பாதங்களை எளிதில் கழுவுவதற்குப் பாதங்கள் பக்கம் செல்லலாம்.

பேதுருவின் பாதங்கள் பக்கம் வருவதற்கு முன்னதாகவே, நமது கர்த்தர் சீஷர்களில் அநேகருடைய பாதங்களைக் கழுவி முடித்துவிட்டார் என்பது உறுதியே. ஒருவரும் அவர் தங்கள் பாதங்களைக் கழுவுவதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. எனினும் இவ்விஷயத்தைக்குறித்துத் தாங்கள் சண்டையிட்டுக் கொண்டதையும், ஒருவருக்கொருவர் ஊழியம் செய்ய தாங்கள் விருப்பமின்றி காணப்பட்டதையும், அவர்கள் எண்ணினதினிமித்தம் அவமானமும், குழப்பமும் அவர்கள் முகங்களைக் கவ்விக்கொண்டிருந்திருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. ஆனால், பேதுருவின் தருணம் வந்தபோது, பேதுரு மறுப்புக் கூறினார். இப்படிப்பட்ட மதிப்புக் குறைவான வேலையை நமது கர்த்தர் செய்ய அனுமதிப்பதா? ஒருபோதும் இல்லை எனப் பேதுரு எண்ணினார். பேதுரு கர்த்தரை நோக்கி, "ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா?" என்று கேட்டார். ஆனால், நமது கர்த்தரோ பேதுருவைக் கடிந்துகொள்வதற்கெனக் கால் கழுவும் வேலையை நிறுத்தவில்லை. அதாவது, இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அவருடைய பின்னடியார்களில் சிலர் செய்ய நாடுவதுபோன்று பேதுருவுக்கு நன்கு திட்டு/வசவு கொடுப்பதற்கும், முழுமையாக எல்லாவற்றையும், விவரிப்பதற்கும் அவர் அவ்வேலையை நிறுத்தவில்லை. மாறாக, இவ்விஷயத்தைக்குறித்துப் பின்னர் விவரித்துக்கூறுவார் என்றும், ஒருவேளை தாம் பேதுருவின் கால்களைக் கழுவவில்லையென்றால் தம்மிடத்தில் பேதுருவுக்குப் பங்கில்லை என்றும் கூறி, மற்றவர்களுக்குச் செய்வதுபோன்று பேதுருவுக்குச்

செய்வதைத் தொடர வேண்டும் என வற்புறுத்தினவராக மாத்திரம் காணப்பட்டார்.

பேதுருவின் நடவடிக்கைகளிலுள்ள அருமையான/பெருந்தன்மையான பண்புகளால் நாம் கவரப்பட்டாலும், கவரப்படுகின்ற அளவைப்போன்றே அவருடைய சில பெலவீனங்களையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம். மேலும் இதில் கர்த்தருடைய அனைத்துப் பின்னடியார்களையும் உற்சாகப்படுத்தும் படிப்பினையையும் நாம் பார்க்கின்றோம். அதென்னவெனில், நம்மிடத்தில் பெலவீனங்களும் பூரணமற்றத் தன்மைகளும் காணப்படும்போது, அதேசமயம், பேதுருவிடம் காணப்பட்டது போன்று, கர்த்தரிடத்தில் இருதயப் பூர்வமான உண்மையும் நம்மிடத்தில் காணப்படுமாயின், நாமும் பேதுரு போன்று திடன் கொண்டவர்களாக முன்னேறிச் செல்வதற்கு நாட வேண்டும். அதாவது, ஜெயத்தின்மேல் ஜெயம் கொள்ளவும், இறுதியில் உண்மையுள்ளவர்களுக்கான பலனாகிய பரிசைப் பெற்றுக்கொள்ளவும் முன்னேறிச் செல்வதற்கு நாட வேண்டும்.

பாதங்கள் கழுவப்படுவதினால் வெளியாகும் அன்பையும், உண்டாகும் சௌகரியத்தையும்விட மிக ஆழமான அர்த்தங்கள், பாதங்கள் கழுவின விஷயங்களில் இருக்கின்றது எனவும், இவர்கள் மத்தியில் தாழ்மையின் ஆவி குறைவாய் இருப்பதைக் கடிந்துகொள்வதாக இருக்கின்றது எனவும், பேதுரு கற்றுக்கொண்டபோது, தன்னுடைய பாதங்கள் மாத்திரமல்லாமல், தனது கைகளும், தனது சிரசும் கழுவப்பட வேண்டுமென விரும்பினார். பெருந்தன்மையான பேதுரு! தளர்வில்லாத ஊக்கமுடைய பேதுரு! ஆர்வமிக்க பேதுரு! மனப்பூர்வமாய்க் காணப்படும் பேதுரு! "இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்" (யோவான் 13:10). பொதுவாக குளிக்கும் முறை, அன்று செயல்பாட்டில் காணப்பட்டது. ஒருவர் குளித்துக் கொண்டவராக இருந்தாலும், வீட்டிற்குத் திரும்பும்போது, பாதங்களைக் கழுவுவதன் மூலம் சுத்தம் செய்யும் காரியங்களை நிறைவடையச் செய்வது அன்றைய வழக்கமாய் இருந்தது. இதையே நமது கர்த்தர் குறிப்பிட்டார் என்று தோன்றுகின்றது. அப்போஸ்தலர்கள் இயேசுவுடன்கூடக் காணப்பட்டபடியாலும், மூன்று வருட காலமாக அவருடைய அன்பு, சாந்தம், நற்பண்பு, பொறுமை, தாழ்மையின் ஆவியினுடைய தாக்கத்தின் கீழ்க் காணப்பட்டபடியாலும், இவர்களிடத்தில் பேசப்பட்ட, "திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரிக்கப்பட்டதினிமித்தம்" மிகுதியாய் ஆசீர்வதிக்கப் பட்டார்கள் என்று பார்க்கின்றோம் (யோவான் 15:3; எபேசியர் 5:26).

சீஷர்கள் மத்தியில் வெளிப்பட்ட இதே பெருமையின் ஆவியானது, அவர்கள் மத்தியில் அவர்களுடைய பொருளாளராகிய யூதாஸ் மூலமாகவே கொஞ்சம் தூண்டப்பட்டது என்ற குறிப்புக் கர்த்தருடைய வார்த்தைகளுக்குள் காணப்படுகின்றது. அதாவது, "ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களை எப்பொழுதும் கெடுக்கிறவைகளாக" இருக்கின்றது (1 கொரிந்தியர் 15:33). சீஷர்களின் மாபெரும் போதகரிடமிருந்து வந்த இந்தக் கடைசி பாடமானது, படிப்பினைகளையும், கடிந்துகொள்ளுதல்களையும் ஏற்றுக்கொள்வதற்குரிய சரியான நிலையில் அநேகமாக

இருந்த சீஷர்களிடம் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தினதாக இருந்தது. ஆனால், யூதாசினுடைய பாதங்கள் கழுவப்பட்டிருந்தாலும், இப்பாடமானது அவனிடத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இராப்போஜனத்திற்கு முன்னதாக யூதாசுக்குள் புகுந்த தீமையின் ஆவியானது, அதாவது பணம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற விருப்பமும், கர்த்தரைக் காட்டிக் கொடுப்பதன் மூலம் அப்பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானமும், அவனுக்குள் தொடர்ந்து காணப்பட்டுக் கொண்டிருந்தது. மேலும் நமது கர்த்தருடைய தாழ்மையும், பாதங்கள் கழுவின பணியும் யூதாசை நேராக திசைதிருப்புவதற்குப் பதிலாக இயேசுவை இன்னமும் குறைவானவராகக் கருதும் எதிர்மாறான திசைக்கே திருப்பிற்று. இப்படியே அனைத்துக் காலக்கட்டங்களிலும், பெயரளவில் கர்த்தருடைய நாமத்தை அறிக்கை பண்ணினவர் களின் விஷயங்களில் காணப்படுகின்றது. கர்த்தருடைய அந்தப் போதனைகள், மாதிரிகள் மற்றும் அனுபவங்கள் சிலருக்கு ஆசீர்வாதமாகவும், நன்மை கொடுக்கக்கூடியதாகக் காணப்பட்டாலும், சிலருக்குப் பாதிப்பாகவும் காணப் படுகின்றது. எல்லாவிதத்திலும் சுவிசேஷமானது, "கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்துக்கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும்" இருக்கின்றது (2 கொரிந்தியர் 2:16). தேவனுடைய இரக்கமும், நற்பண்புகளும் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினது போன்றே, இயேசுவினுடைய அன்பும், தாழ்மையும் யூதாசினுடைய இருதயத்தைக் கடினப்படுத்திற்று. மேலும், இதே காரியங்கள் இன்றும் நிலவுகின்றது. இவைகள், இன்றைய நாட்களில் சம்பவிக்கும் அறுவடையின் புடைத்தெடுத்தல்களில் பார்க்கப்படலாம் (யாத்திராகமம் 7:13).

அனைவருடைய பாதங்களைக் கழுவும் வேலையை முடித்த பிற்பாடு, இயேசு தமது மேலங்கியை உடுத்திக்கொண்டு இராப்போஜனத்திற்காக (இது பஸ்கா இராப்போ ஜனமாகும்; அப்பமும், திராட்சரசமுமுள்ள நினைவுகூருதல் இராப்போஜனமானது பிற்பாடு நிறுவப்பட்டது) மேஜையில் பக்கவாட்டில் சாய்ந்து, படுத்த நிலையில் இருந்தார். இப்பொழுது வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு நமது கர்த்தர், தாம் செய்த காரியத்தைக்குறித்து விவரித்தார். இப்படிப்பட்ட மதிப்புக் குறைவான வேலையைச் செய்ததினிமித்தம் தாம் போதகர் அல்லவென்றோ, கர்த்தர் அல்லவென்றோ குறிப்பதில்லை என்று சுட்டிக்காட்டினார். மாறாக கர்த்தரும், போதகருமாகிய தாம் பிதாவின் குடும்பத்திலுள்ள சிறிய அங்கங்களுக்கு ஊழியம் செய்வதிலும், அவர்கள் சௌகரியத்திற்கென/ஆறுதலுக்கென மிகுந்த மதிப்புக் குறைவான வேலையையும் செய்து கொடுப்பதிலும், தாம் விருப்பமற்ற நிலையில் காணப்படவில்லை என்பதே தமது செய்கையின் விளக்கம் என்றும், சீஷர்களாகிய அவர்களும் ஒருவருக்கொருவர் இப்படிப்பட்ட ஊழியங்களைச் செய்வதில் விருப்பமற்றவர்களாய் இராமல், மகிழ்ச்சியுடன் செய்பவர்களாக இருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

நமது கர்த்தர் முன்வைத்த இம்மாதிரியானது, சொல்லர்த்தமாக கால்களைக்

கழுவி செய்ய வேண்டிய ஊழியமல்ல; இப்படியாக கால்களைக் கழுவும் வேலையைக் கர்த்தருடைய ஜனங்கள் வருடந்தோறும், வாரந்தோறும், மாதந்தோறும் அல்லது வேறு ஏதாவது சமயங்களில் சடங்காச்சாரம் போல் செய்யப்பட வேண்டும் என்ற விதத்தில் ஒரு காரியமும் இந்த மாதிரியில் தென்படவில்லை. மாறாக, இந்த மாதிரியின் பின்னணியில் காணப்படும் கொள்கையையே அனைத்து நேரங்களிலும் அவருடைய பின்னடியார்கள் மத்தியில் கைக்கொள்ளப்பட வேண்டும். அதாவது, அவர்கள் ஒருவரையொருவர் அன்புகூர வேண்டும், ஒருவருக்கொருவர் ஊழியம் செய்திட வேண்டும், மேலும் ஒருவர் ஒருவரின் நலன் மற்றும் சௌகரியம் கருதி செய்யப்படும் எந்த வேலையும் மிகவும் மதிப்புக் குறைந்த வேலை எனக் கருதப்படக்கூடாது என்பவைகளே அந்தக் கொள்கையாகும்.

நினைவுகூருதல் இராப்போஜனம் மற்றும் ஞானஸ்நானம் அநுசரிப்பது போன்று இச்சம்பவமும் சொல்லர்த்தமாகக் கடைபிடிக்கப்பட்டு, அநுசரிக்கப்பட வேண்டும் என்று அர்த்தம் காண்கிறவர்கள் தவறாய்ப் புரிந்துகொண்டுள்ளனர் என நாம் எண்ணுகின்றோம். இதில் எவ்விதமான சொல்லர்த்தமான காரியங்களுமில்லை; ஜீவியத்தின் ஒவ்வொரு விஷயத்திலும் காணப்படும் தாழ்மையெனும் கொள்கையைச் சித்தரிக்கும் உதாரணமாகவே இது காணப்படுகின்றது. ஒருவேளை, கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் எவருக்கேனும் கால்கள் கழுவப்படுவதற்கோ அல்லது மதிப்புக் குறைவான உதவிகளோ தேவைப்படுமாயின் அவர்களுடைய சகோதர சகோதரிகள் மகிழ்ச்சியுடனும், சந்தோஷத்துடனும் அவர்களுக்கு அவைகளைச் செய்ய வேண்டும். மேலும், கர்த்தருடைய ஆவியுடைய அனைவரும் இப்படிப்பட்ட பணிவிடைகளை/ ஊழியங்களைக் கண்டிப்பாகச் செய்வார்கள். ஆனால், கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொருவரும் முதலாவது, சொல்லர்த்தமாக தங்கள் கால்களைக் கழுவி தங்களைச் சுத்தம் செய்து கொண்டு, பின்னர் ஒவ்வொருவரும் மற்றவருடைய கால்களைக் கழுவி சடங்காச்சாரமாக அநுசரிக்க வேண்டும் என்று கூறும் காரியமானது, நாம் பின்பற்றும்படி அவர் நமக்குப் போதித்துள்ள மாதிரிக்கு எதிர்மாறானதாய் காணப்படும். அவர் காட்டின மாதிரியானது, ஒரு பணிவிடையே தவிர, சடங்காச்சாரமான அநுசரிப்பும், அசௌகரியமும் அல்ல.

வருடத்திற்கு ஒருமுறை, "புனித வெள்ளிக்கு" முந்தினநாள் அன்று, வயதுமுதிர்ந்த தரித்திரர்களில் பன்னிரண்டுபேர் தெரு வீதிகளிலிருந்து கொண்டுவரப்பட்டு, போப்பினால் பாதங்கள் கழுவப்படுகின்றனர். ஆனால் இந்தத் தரித்திரர்கள் முதலில் தனிப்பட்ட விதத்தில் முன்னேற்பாடாக சுத்தம் பண்ணப்பட்டுக் கொண்டுவந்த பிற்பாடே போப்பினால் பாதங்கள் கழுவப்படுகின்றார்கள். போப்பின் இந்தச் சடங்காச்சாரமான கால்கள் கழுவும் அநுசரிப்பானது, அநேக கனத்திற்குரிய நபர்கள் முன்பாகவே நடக்கின்றது. இதேவிதமான அநுசரிப்பானது, ஆஸ்டிரோ-ஹங்கேரியைச் சார்ந்த யோசேப்பு என்னும் சக்கரவர்த்தியினாலும்கூட வருடந்தோறும் அநுசரிக்கப்படுகின்றது. இவர்கள் இருவரின் அநுசரிப்புமே நாம் கர்த்தரின் மாதிரியை

புரிந்துகொண்ட விதத்தில் அம்மாதிரிக்கு இசைவாக வைத்துப் பார்க்கும்போதும், எதிர்மாறானவைகளாகவே தென்படுகின்றது. மேலும் கிறிஸ்தவர்களின் சில பிரிவினர் கைக்கொள்ளும் கழுவுதல் தொடர்பான சில அநுசரிப்புகளும்கூட எதிர்மாறானவை களாகவே காணப்படுகின்றது.

கர்த்தருடைய பின்னடியார்களாக உண்மையாய்க் காணப்படும் அனைவரும் சாந்தம் மற்றும் தாழ்மை மற்றும் அவருடைய சரீர அங்கங்களுக்கு ஊழியம் புரிதல் எனும் போதகரின் ஆவிக்கான உண்மையான மாதிரிக்குக் கவனமாய்ச் செவிசாய்த்து, அப்படியே பின்பற்றுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். இக்காரியங்கள் அனைத்தும், "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்ற வார்த்தைகளுக்குள் அடங்குகின்றது (யோவான் 13: 16, 17).

தாலந்துகளோ அல்லது திறமைகளோ உடையவர்களும் அல்லது வாழ்க்கையில் கனம் வாய்ந்த ஸ்தானங்கள் வகிப்பவர்களும் மற்றும் சபையில் செல்வாக்கு நிறைந்த ஸ்தானங்களில் விசேஷமாகக் காணப்படுகிறவர்களுமாகிய கர்த்தருடைய ஜனங்களில் அநேகர், விசேஷமாக போட்டி மனப்பான்மை, வாக்குவாதம் பண்ணும் மனப்பான்மை, வீண் செருக்குக்கொள்ளும் தன்மை முதலியவைகளினால் ஆட்கொள்ளப்பட வாய்ப்புகள் உள்ளன. ஆகவே மாம்சத்தின் இந்த விஷயங்களுக்கு எதிராக விசேஷ வண்ணமாக ஜாக்கிரதையுடன் காணப்பட வேண்டும். "பொறாமையுடன் ஏறெடுத்துப் பார்க்கச் செய்யும் ஒரு பெருமை உண்டு மற்றும் ஏளனத்துடன் கீழாய்ப் பார்க்கச் செய்யும் ஒரு பெருமையும் உண்டு" என்ற வாசகமானது மறக்கப்படக் கூடாது. எவ்விஷயத்தைக் குறித்தாகிலும் பெருமை காணப்படுமாகில் அது தேவனுடைய பார்வையில் குற்றத்திற்குரியதாகவும், அவருக்குப் பிரியமற்றதாகவும் காணப்படும். "பெருமையுள்ளவர்களுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கின்றார், தாழ்மையுள்ளவர்களுக்கோ அவர் கிருபையளிக்கின்றார்." ஆகவே, கர்த்தருடைய அன்பில் நிலைத்திருக்கிறவர்கள் தாழ்மையாய் இருக்கும் விஷயத்தில் மிகவும் கவனமாயிருக்க வேண்டும். அதாவது, மிகவும் தாழ்மையாக, நடத்தையில் மிகவும் தாழ்மையாக, எளிமையாக, குறிப்பாக மனதில் தாழ்மையாக இருப்பதில் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும் (யாக்கோபு 4:6; 1 பேதுரு 5:5).

# ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்

## யோவான் 13:1-14

*"அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்." கலாத்தியர் 5:13*

நாம் சூழ்நிலைகளைக் கவனிக்கும்போதே, இந்த நம்முடைய பாடத்தை நம்மால் சரியாய்ப் புரிந்துகொள்ள முடியும். பெத்தானியாவில் நடைபெற்ற விருந்தும், திரளான ஜனக்கூட்டத்தாருடைய ஆரவாரத்தின் மத்தியில், நமது கர்த்தர் கழுதையின் மீது ஏறிவந்து பட்டணத்திற்குள் பிரவேசித்ததும், திரளான ஜனக்கூட்டத்தாருக்கு அவர் அநேகம் நாட்கள் ஆலயத்தில் பிரசங்கித்து வந்ததும், அவரிடத்தில் விசாரிக்கும்படிக்கு, கிரேக்கர்கள் அவரிடத்தில் வந்ததுமான காரியங்கள் அனைத்தும், அவருடைய பிரபலம் அதிகரித்து வருவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக தாம் சீக்கிரத்தில் பிரதான ஆசாரியர்களால் மரணத்திற்குள் ஒப்புக்கொடுக்கப் படுவார் என்று ஆண்டவரால் கூறப்பட்ட வார்த்தைகளை முழுவதும் புரிந்துகொள்ள இயலாத சீஷர்களோ எதிர்காலத்தைக் குறித்த ஆசைப்பற்றின எண்ணங்களினால் நிறைந்து காணப்பட்டனர்; அதாவது கர்த்தரோடுகூடத் தாங்கள் அடையாளம் கண்டுகொள்ளப் படுவது குறித்தும், எவ்வாறு கர்த்தர் இராஜாவாக உயர்த்தப்படும் காரியமானது, தங்களையும் அவரோடுகூடக் கனத்திற்கும், முதன்மை நிலைக்கும் கொண்டுவரும் என்பது குறித்தும், இப்படியாக அதிகப்படியான ஜனங்களுக்கு ஆசீர்வாதம் வழங்குவதற்கும், நன்மை செய்வதற்குமான விரும்பத்தக்க வாய்ப்புத் தங்களுக்குக் கிடைக்கும் என்பது குறித்ததுமான எதிர்காலம் குறித்த ஆசைப்பற்றின எண்ணங்களினால் நிறைந்து காணப்பட்டனர்.

நீசான் மாதம் 13-ஆம் தேதியானது, நமது கர்த்தரினால் அமைதியாகச் செலவழிக்கப்பட்டது மற்றும் அன்றைய நாளின் மாலை வேளையாகிய 14-ஆம் தேதியின் ஆரம்பமானது, பஸ்கா இராப்போஜனம் மேல்வீட்டறையில் அனுசரிக்கப் படுவதற்கென நியமிக்கப்பட்டிருந்தது. கர்த்தருடைய அறிவுரையின்படி, அப்போஸ்தலர்களில் சிலர், அனுசரிப்பிற்கான ஆயத்தங்களை முன்கூட்டியே செய்துவிட்டனர். மேலும் அவர்கள் அனைவரும் கூடிவந்திருக்கையில், இராப்போஜனத்தின்போது, அவர்கள் அமர வேண்டிய இடத்தை நியமிப்பதற்கு உபசரிப்பவர் எவரும் அங்கு இல்லாதபடியினால், தங்களது முதன்மை நிலைக் குறித்தும், ஆண்டவருக்கு அருகாமையில் உட்காருவதாகிய மிகுந்த கனமிக்க இடத்தின் விஷயத்தில், தங்களுக்கான உரிமைகள் குறித்தும் விவாதம் எழும்பினதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இம்மாதிரியான காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில் நமது கர்த்தர் இரண்டுமுறை ஏற்கெனவே சீஷர்களைக் கடிந்துகொண்டு, அவர்கள் சிறுபிள்ளைகளுக்கு இருப்பதுபோன்றதான சாந்தத்தின் ஆவியை வளர்த்துக்கொள்ளாதது வரையிலும், அவர்களால் இராஜ்யத்தில் பங்கடைய முடியாது என்று உறுதியும்படுத்தியுள்ளார். ஒரு வாரத்திற்கு முன்னதாகத்தான், எருசலேமுக்குப் போய்க்கொண்டிருக்கும்போது, இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில் ஆண்டவருக்கு மிக அருகாமையில், ஒருவர் ஆண்டவருக்கு வலது புறத்திலும், மற்றொருவர்

இடதுபுறத்திலும் உட்காரும்படிக்குச் செய்யப்பட வேண்டுமென யாக்கோபும், யோவானும் வேண்டிக்கொண்டார்கள். இதே ஆவியே, இப்பாடத்தின் சம்பவங்களிலும் அவர்களை ஆட்கொண்டிருந்து மற்றும் தாழ்மைபற்றியும், கனம் குறைந்த ஊழியங்களைக்கூட ஒருவருக்கொருவர் புரிந்திடுவதற்கான விருப்பம் பற்றியுமான படிப்பினையைப் புகட்டத்தக்கதாக, சீஷர்களுடைய பாதங்களைக் கழுவும்படிக்கு நமது கர்த்தரை வழி நடத்தினது.

## அன்பிலுங்கூடச் சுயநலம்

சுயநலத்தின் கண்ணோட்டத்தில் மாத்திரமே அப்போஸ்தலர்களில் ஒவ்வொருவரும் அந்த உயர்வான இடத்தை அடைவதற்கு நாடினார்கள் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக கடந்த காலங்களில் அநேகவிதங்களில் கர்த்தரினால் விசேஷித்தவிதமாய்க் கடாட்சிக்கப்பட்டவர்களாகவும், அவரிடத்தில் விசேஷித்த விதமாய் நெருக்கத்துடன் காணப்பட்டவர்களாகவும் இருக்கும் பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான், ஆண்டவருக்கு அருகாமையில் காணப்படும் ஸ்தானங்களை விரும்பினதற்கானக் காரணம், அந்த ஸ்தானத்திற்கான கனங்களுக்காக மாத்திரமே என்றில்லாமல், மாறாக போதகருக்காகத் தாங்கள் கொண்டிருந்த மதிப்பும், அன்புமாகும் மற்றும் இதனோடுகூட இந்தச் சிலாக்கியத்தினை மற்றவர்களால் உணர்ந்துகொள்ள முடிகிறதைக் காட்டிலும், தாங்களே அதிகம் உணர்ந்துள்ளனர் என்ற எண்ணங்கூடக் காரணமாகவும் அநேகமாய்க் காணப்படலாம். இவர்கள் இந்தக் கனமிக்க ஸ்தானத்தைப் பெற வேண்டுமென, இவர்கள் சார்பில் மற்றச் சில அப்போஸ்தலர்களும் வலியுறுத்தியிருக்க வேண்டுமெனவும் நாம் அனுமானிக்கின் றோம். ஆனால் எந்தக் கண்ணோட்டத்தில் நாம் இக்காரியங்களைப் பார்த்திட்டாலும், அத்தருணத்திற்குப் பொருத்தமற்றதும், அதிலும் விசேஷமாக பஸ்கா இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, நமது கர்த்தர் நிறுவுவதற்குச் சித்தம் கொண்டுள்ள நினைவுகூருதலின் போஜனத்தின் காரியத்திற்குப் பொருத்தமற்றதுமான ஓர் ஆவி அங்குத் தோன்றிக் காணப்பட்டிருந்தது.

நமது சொந்த இருதயங்களை நாம் முழுமையாய்க் கணிப்பதே நமக்குக் கடினமான காரியமாயிருக்கின்றபடியால், நாம் மற்றவர்களுடைய இருதயங்களையும், நோக்கங்களையும் கணிக்கும் விஷயத்தில், நாம் பரந்த மனப்பான்மையுடன் காணப்பட வேண்டும் மற்றும் நாம் மற்றவர்களுடைய விஷயத்தில் மிகுந்த அனுதாபமும், இரக்கமும் காட்டித் தவறு செய்தாலும்கூட, மிகவும் பலமாய்க் கண்டித்து நாம் தவறு செய்துவிடக்கூடாது. ஒருவேளை இக்காரியங்கள் குறித்து அப்போஸ்தலரிடம் விசாரித்தால், அவர்கள் தங்கள் நோக்கங்களிலும், நடத்தையிலும் சுயநலத்தின் சுவடுகள் இல்லையென்றும், கர்த்தருக்கான பக்தி வைராக்கியமும் மற்றும் அவர் அருகாமையில் காணப்படுவதற்கான விருப்பமும்தான் தங்களுடைய இந்த எண்ணத்திற்கும், பேச்சிற்குமான காரணம் என்றும் கூறுவார்கள் என்பதில் ஐயமில்லை. இது மனித இருதயமானது மகா திருக்குள்ளது என்றும், இருதயம் மிகக் கவனமாய்க்

கூர்ந்துப் பரிசோதிக்கப்பட வேண்டும், இல்லையேல் அது நன்மையெனும் போர்வைக்கடியில் சில பண்புகளை, அதாவது ஒருவேளை போர்வையினால் மூடப்படவில்லையெனில் நம்மால் வெறுக்கப்படும் சில பண்புகளைக் கொண்டிருக்கும் என்றும் வேதவாக்கியங்கள் தெரிவிக்கும் கருத்துக்கு உதாரணமாகக் காணப்படுகின்றது.

இந்தக் காரியத்திற்கு மற்றுமொரு உதாரணமாகவும், இப்படிப்பினையை நாம் அனைவரும் தனிப்பட்ட விதத்தில் நமக்குச் செயல்படுத்திக்கொள்வதற்கு உதவியாகவும், நாம் ஸ்காட்ச் நாட்டு ஊழியக்காரனாகிய ஹோரேற்றியஸ் போனர் (Horatius Bonar) அவர்கள் மரிப்பதற்குக் கொஞ்சம் காலம் முன்னதாக தெரிவித்திட்டக் கனவு ஒன்றை முன்வைக்கின்றோம். இவர் தன்னுடைய கனவில், தன்னுடைய பக்திவைராக்கியத்தை அதிக அளவும், எடையுமுள்ள பொட்டலமாகக் கண்டார். சில தூதர்கள் வந்து, அதை எடையிட்டுப்பார்த்து, அதிக எடை இருக்கின்றது என்றும், நூறு பவுண்டு எடை என்றும் கூறினார்கள். இந்த அறிக்கையினிமித்தம், இவர் தன்னுடைய கனவில் மிகவும் திருப்திக்கொண்டிருந்திருக்கிறார். அடுத்தக்கட்டமாகத் தூதர்கள் இவரது பக்திவைராக்கியத்தைப், பகுதிகளாகப் பிரித்து ஆராய முற்பட்டார்கள். இவரது பக்திவைராக்கியத்தைத் தூதர்கள், உலோகங்களை உருக வைக்கும் ஒரு மட்பாத்திரத்தில் போட்டு, பல்வேறு விதங்களில் அதைப் பரீட்சித்துப்பார்த்து, பின்னர் பரீட்சையின் முடிவுகளைப் பின்வருமாறு அறிக்கையிட்டனர்: "100 பவுண்டு பக்திவைராக்கியத்தில், 14 - பாகங்கள் சுயநலம்; 15 - பாகங்கள் சபை பாகுபாடுகளை ஆதரிக்கும் தன்மை; 22 - பாகங்கள் புகழ் ஆர்வம்; 23 - பாகங்கள் மனிதனுக்கான அன்பு; 26 - பாகங்கள் தேவனுக்கான அன்பு" ஆகும். தூக்கத்திலிருந்து அவர் விழித்தெழுந்தபோது, நடந்தது கனவு என்று உணர்ந்துகொண்டார்; எனினும் மிகுந்த தாழ்மையையும் அடைந்தார் மற்றும் சந்தேகத்திற்கு இடமின்றி இந்தக் கனவின் மூலம், ஜீவியம் முழுவதும் நன்மையடைந்தவராக இருந்தார். இந்தக் கனவானது, நம்முடைய வார்த்தைகள், எண்ணங்கள் மற்றும் கிரியைகளுக்குப் பின்னால், அதிலும் விசேஷமாகக் கர்த்தர் மற்றும் சகோதரருக்கான நம்முடைய ஊழியங்களுக்குப் பின்னால் காணப்படும் நோக்கங்களை நாம் கவனமாய் ஆராய்ந்துப்பார்த்திட வழிநடத்தும் விஷயத்தில் அந்த ஸ்காட்ச் நாட்டு ஊழியக்காரனுக்கு இருந்ததுபோன்று, நமக்கு நன்மையாகவே காணப்படும்.

நமது பாடத்தினுடைய முதலாம் வசனமானது, நமது கர்த்தருடைய அன்பே, "தம்முடையவர்களின்" விஷயத்திலான, அவரது அனைத்து நடவடிக்கைகளுக்குமான அடிப்படையாக இருக்கின்றது எனும் காரியத்திற்குக் கவனத்தைத் திருப்புகின்றதாய் இருக்கின்றது. அவரது அன்பின் காரணமாகவே, அவர் தமது மகிமையைத் துறந்து மனுஷனானார்; அவரது அன்பின் காரணமாகவே, அவர் தம்மை மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக அர்ப்பணம் பண்ணினார்; அவரது அன்பின் காரணமாகவே, அவர் தம்முடைய அருமையான சீஷர்களுக்கு ஓர் இடர்பாட்டில் உதவிடுவதற்கு ஆவல் உள்ளவராய் இருந்தார்; ஒருவேளை அவர்கள் இந்த இடர்பாட்டை மேற்கொள்ளவில்லையென்றால், அவர்கள் அவருடைய பின்னடியார்களெனத் தற்காலத்திலும்,

எதிர்க்காலத்திலும் பயன்படுத்தப்பட முடியாது. இந்த அன்பானது நமது கர்த்தரை அவசியமான கண்டிப்பைக் கொடுப்பதற்கு மாத்திரம் வழிநடத்திடாமல், இன்னுமாக அந்தக் கண்டிப்பை ஞானமான, சிறந்த மற்றும் அன்பான விதத்திலும் கொடுப்பதற்கும் அவரை வழிநடத்தினது. இவ்விஷயத்திலுள்ள அவருடைய மாதிரியானது, அவருடைய பின்னடியார்கள் அனைவராலும், அதிலும் விசேஷமாகச் சபையில் அவருடைய பிரதி நிதிகளெனப் பொதுவிடங்களில் ஊழியம் பண்ணுகிறவர்களால் கவனித்துப் பின்பற்றப் பட வேண்டும்.

ஒருவேளை இத்தருணத்தின்போது, நமது கர்த்தரும், அவருடைய சீஷர்களும் ஏதேனும் விருந்தளிப்பவரினால், விருந்தாளியாக அழைக்கப்பட்டிருந்திருப்பார்க ளானால், அவர்களது பாதங்களைக் கழுவுவதற்கு, சில வேலையாட்களை அனுப்புவது, விருந்தளிப்பவரின் கடமையாக இருந்திருக்கும். இப்படிப் பாதங்களைக் கழுவுவது, அந்நாட்டின் வழக்கமாகவும், சௌகரியத்திற்கு/ஆறுதலுக்கு அவசியமானதாகவும் காணப்பட்டது. அக்காலப் பாதரட்சைகளின் வடிவங்கள் காரணமாக, சாலையின் புழுதி பாதங்களை அழுக்காக்குகின்றன மற்றும் ஒவ்வொரு பிரயாணத்திற்குப் பின்பும் பாதங்கள் கழுவப்படுவதற்கான அவசியத்தையும் ஏற்படுத்தியது; இன்னுமாக இப்படியான ஓர் அனுசரிப்பின் தருணத்தின்போது, கழுவுதல் குறிப்பாய் அவசியமாய் இருந்தது. கர்த்தரும், சீஷர்களும் விருந்தாளிகளாக இல்லாதபடியினாலும், மேல்வீட்டறையை மாத்திரம் பெற்றிருந்தபடியாலும், தங்கள் பாதங்களைக் கழுவுவதற்கு எந்த வேலையாட்களையும் பெற்றிராதபடியாலும், இம்மாதிரியான சூழ்நிலையில் கூடினவர்களில் ஒருவர் மற்றவருக்கான இந்தக் கனமற்ற வேலையைப் புரிய வேண்டுமென்பது கடமையாகவும் மற்றும் வழக்கமாகவும் இருந்தது. நாம் சற்றுமுன்பு பார்த்ததுபோன்று, சீஷர்களின் இருதயங்களில் போட்டி மனப்பான்மையின் ஆவியானது மேலோங்கிக் காணப்பட்டது மற்றும் இந்தக் கனமற்ற வேலையைப் புரிவதற்கு எவரும் முன்வரவில்லை மற்றும் சீஷர்கள் மத்தியில் கர்த்தர் எவரையும் வேலையாட்களாக நியமிக்காததால், சீஷர்கள் தங்களுக்குள் யாரையாகிலும் இவ்வேலையைப் புரிவதற்கு வற்புறுத்தவும் இல்லை. இவ்வேலையின் காரியமானது சரியாகப் புரிந்துகொள்ளப்பட்டு மற்றும் உணர்ந்துகொள்ளப்பட்டால், மற்றவருக்காக இந்த வேலையைப் புரிவதற்கான மாபெரும் வாய்ப்புச் சீஷர்கள் மத்தியில் சிலருக்குக் கிடைத்திருக்கும். எத்தகைய ஒரு வாய்ப்பினை இழந்துவிட்டனர்!

## அனுகூலமான வாய்ப்பு இழந்துபோகப்பட்டது

இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, இவர்களுக்காக சீஷர்களில் எவரேனும் பணிவிடைக்காரனாகிக் கொள்கின்றானா அல்லது இல்லையா என்று காணத்தக்க தாக, நமது கர்த்தர் காரியத்தை அமைதியாக விட்டுவிட்டார்; போஜனம் பரிமாறப்படுவது வரையிலும் கர்த்தர் காத்திருந்தார் (போஜனம்பண்ணி முடிந்தபிறகு அல்ல, மாறாக பரிமாறி முடிவது வரையிலும் கர்த்தர் காத்திருந்தார்); பின்னர் கர்த்தர் பந்தியை விட்டெழுந்து மேல்வஸ்திரங்களைக் கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டார், அதாவது உள்வஸ்திரங்கள் வேலை புரியும்போது இடைஞ்சலாக

இராதபடிக்கு அரையிலே கட்டிக்கொள்ளும் கச்சையை, இறுக்கமாக்கிக் கொண்டார். இப்படியாகக் கர்த்தர் செய்வதையும், படுக்கையிலிருந்து நீட்டிக்கொண்டு காணப்படும் அப்போஸ்தலர்களின் பாதங்களினிடத்திற்கு ஒன்றன் பின் ஒன்றாக கர்த்தர் கடந்துபோவதையும், அப்போஸ்தலர்கள் கவனித்தப்போது, அவர்கள் திகைத்துப் போயிருப்பதை நம்மால் நன்கு கற்பனை செய்துபார்க்க முடிகின்றது. நாம் பாதங்கள் கழுவும் முறையிலிருந்து, அவர்களது முறை வித்தியாசமாய் இருந்தது; பாதங்கள் கழுவப்பட்டு, தேய்த்து, அலம்பிக் கழுவப்படுவதற்கென்று பாத்திரத்திலிருந்து தண்ணீர் கொஞ்சம், கொஞ்சமாக (பாதங்கள் மீது) ஊற்றப்படுகையில், அழுக்கான தண்ணீர் வட்டமான விளிம்புள்ள தாம்பாளத்தில் (basin) விழுகின்றது.

நமது கர்த்தர் செய்திட்டக் காரியத்தினிமித்தம் அப்போஸ்தலர் மிகவும் ஆச்சரியமடைந்திருந்தனர் என்பதில் உறுதியே மற்றும் அவரது செய்கை அளித்திட்டக் கண்டனத்தை அவர்கள் உணர்ந்து கொண்டபடியால், என்னசொல்ல வேண்டுமென்று அறியாமல் இருந்தனர்; ஆகவே பேதுருவின் பாதங்களைக் கர்த்தர் கழுவ வருவதுவரையிலும் அமைதியே நிலவியது. பேதுரு விநோதமான குணலட்சணங்களின் கலவையைப் பெற்றிருந்தவராகக் காணப்பட்டார். இந்தக் கலவையில், பகுதி குணலட்சணங்கள் மிகவும் நல்லவைகளாகக் காணப்பட்டன. "ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா?" என்று கூறி, கர்த்தர் தனது பாதங்களைக் கழுவுவதற்குப் பேதுரு மறுப்புத் தெரிவித்தார்; அதாவது, "ஆண்டவரே மிகவும் பெரியவரான நீர், ஏழை மீனவனாகிய எனக்குப் பணிவிடைப்புரிவது சரியல்ல" என்ற விதத்தில் பேதுரு கூறினார். ஆனால் நமது கர்த்தரோ, இக்காரியத்தைக் குறித்துப் பேதுரு முழுமையாய்ப் புரிந்துகொள்ளவில்லை என்றாலும், தாம் அனைவருடைய பாதங்களையும் கழுவினப் பிற்பாடு இக்காரியத்தைப் பேதுருவுக்கு விளக்குவதாகப் பதிலளித்தார். பேதுருவின் இரண்டாம் வார்த்தைகளோ, முதல் போன்று பாராட்டத்தக்கதாய் இருக்கவில்லை. "பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றார்."

தான் ஒரு சீஷன் மற்றும் கர்த்தர் போதகர் என்பதை, அதாவது தான் கீழ்ப்படிய வேண்டுமே ஒழிய, ஆணையிடக்கூடாது என்பதை உணர்ந்துகொள்வதற்கு பேதுருவுக்குக் கடினமாய் இருந்தது; ஆனால், "நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை" என்ற கர்த்தருடைய பதிலானது, பேதுருவினுடைய உணர்ச்சிவசப்படும் சுபாவத்தின் சிறந்த பாகத்தை உடனடியாக வெளிக்கொண்டுவந்தது. தான் கழுவப்படுகின்றதான காரியமானது, தான் ஆண்டவருக்கு அருகாமையில் காணப்படும் விஷயத்திற்கும், ஆண்டவருடனான தனது உறவின் விஷயத்திற்கும் தொடர்புடையதாய் இருக்குமாயின், அப்படியானால் அது தனக்கு வேண்டுமென்று பேதுரு எண்ணினார். காரியங்களைக் கர்த்தருடைய பொறுப்பில் விடுவதற்குப் பேதுரு அஞ்சினவராக, "ஆண்டவரே, என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும், என் தலையையும்கூடக் கழுவ வேண்டும்" என்று பேதுரு கூறினார். இவ்விஷயத்தில் நமக்கு ஒரு பாடம் உள்ளது; நாம் கர்த்தருக்கு கட்டளையிடவும் கூடாது, அவர் சுட்டிக்காண்பித்திடாத விதங்களில் நல்லவர்களாக வோ, ஞானவான்களாகவோ (அ) கீழ்ப்படிதல் உள்ளவர்களாகவோ இருக்க நாம்

முற்படவும் கூடாது. சிலர் கற்றுக்கொள்வதற்கு இது கடினமான பாடமாக உள்ளது; சிலர் வேதவாக்கியங்களில் எழுதப்பட்டுள்ளவைகளுக்கும் அதிகமாய்த் தொடர்ந்து செய்ய வேண்டுமென விரும்புகிறவர்களாய் இருப்பார்கள். இப்படியாகச் செயல்படுவது என்பது ஒன்றில் கர்த்தருக்கும், அவருடைய வார்த்தைகளுக்கும், அவருடைய வார்த்தைகளுக்குள் விளங்கும் ஞானத்திற்குமான பயபக்தியின்மையை அல்லது அதிகப்படியான சுயநம்பிக்கையை, அதிகப்படியான சுயமதிப்பைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. "ஓ! கர்த்தாவே என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே, உமது சித்தமே, உமது வழியில், உம்முடைய நேரத்தில் ஆகக்கடவது" என்று கூறுவதற்குத் தாழ்மையும் மற்றும் அவர்மேல் நம்பிக்கையும் கொண்டுள்ள இருதயம் கற்றுக்கொள்ள வேண்டும்.

## முழுகினவனுடைய பாதங்களைக் கழுவுதல்

பொதுவான மொழியாக்கத்தில் (ஆங்கிலம்), பேதுருவுக்கான நமது கர்த்தருடைய பதிலானது கொஞ்சம் தெளிவற்றதாய் இருக்கின்றது; திருத்தப்பட்ட மொழியாக்கத்தில் (ஆங்கிலம்) தெளிவாய் உள்ளது (தமிழ் மொழியாக்கம் சரியாய் உள்ளது); "முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாய் இருக்கும், மற்றபடி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்" (KJV); "குளித்துவிட்டவர் தம் காலடிகளை மட்டும் கழுவினால் போதும்" (திருவிவிலியம் மொழியாக்கம்). பஸ்கா காலத்தின் ஆரம்பத்தில், அசுசிகள் அப்புறப்படுத்தத்தக்கதாக, யூதருடைய வழக்கத்தின்படி, அவர்கள் அனைவரும் சரியாய்க் குளித்திருந்தனர். ஆகவேதான் அவர்கள் குளித்தவர்களாய்க் காணப்படுவதினால், அவர்களின் பாதங்கள் அலம்பப்பட, அதாவது பூமியோடு தொடர்பு கொண்டிருந்த அவயத்தை மாத்திரம் இப்பொழுது கழுவ வேண்டுமென்று கர்த்தர் கூறினார். "ஆகிலும் எல்லாருமல்ல" என்று யூதாசைக் குறித்துக் கர்த்தர் குறிப்பிட்டார். இதிலிருந்து கர்த்தர் மேலான கழுவுதலைக் குறித்தே தம்முடைய மனதில் எண்ணங்கொண்டிருந்தார் என்பதும், அச்சமயத்தில் அவர்களுடைய பாதங்கள் கழுவப்பட்டக்காரியமும், அவர்கள் முன்னதாகக் குளித்திருந்த காரியமும், நிழல்கள் என்பதும் நமக்குத் தெளிவாய்த் தெரிகின்றது.

தம்முடைய சீஷர்களுடைய இருதயங்கள் உண்மையாய் இருந்ததைக் கர்த்தர் அறிந்திருந்தார். அவர்களை அவர் தம்முடைய சீஷர்களாக ஏற்றுக்கொண்டு, அவர்களின் குறைவுகளை மூடத்தக்கதாக, தம்முடைய பலியின் புண்ணியத்தை அவர்களுக்குத் தரிப்பிக்கப்பட்டதாக எண்ணப்பட்டது; இவைகளுக்கான முழுச் சாட்சியும் பெந்தெகொஸ்தே நாளின்போது, இவர்களின் சார்பிலான கர்த்தருடைய பாவநிவாரணபலியானது, பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது எனப் பரிசுத்த ஆவி பகிர்ந்த சாட்சியின் மூலம், இவர்களுக்கு வழங்கப்படப்போகின்றது. ஆனால் இவர்கள் மத்தியில், ஒருவருடைய இருதயம் சுத்தமாக இருக்கவில்லை. நமது கர்த்தர் யூதாசைவிட்டுக் கடந்துபோகவில்லை, மாறாக மற்றவர்களுக்குச் செய்வதுபோல யூதாசின் பாதங்களையும் கழுவினார்; யூதாசின் துரோகத்தை அறிந்த நிலையிலும், யூதாஸ் ஏற்கெனவே பிரதான ஆசாரியர்களுடன் பேரம் பேசிவிட்டார் என்றும், தனது

தீயத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான தகுந்த தருணத்திற்காக மாத்திரமே காத்துக்கொண்டிருக்கின்றார் என்றும் அறிந்த நிலையிலும், கர்த்தர் யூதாசின் பாதங்களைக் கழுவினார்.

நமது கர்த்தருடைய இந்த வார்த்தைகளை மற்றவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்றாலும், அந்த வார்த்தைகளையும், பின்னர் யோவான் 13:18, 26, 27, 28-ஆம் வசனங்களிலுள்ள கர்த்தருடைய வார்த்தைகளையும் யூதாஸ் புரிந்திருக்க வேண்டும். நமது கர்த்தர் யூதாசையும், அவனது நேர்மையின்மையையும், விருந்தோம்பல் காரியத்தை யூதாஸ் மீறுகிறதைக் குறிப்பிடும் தீர்க்கதரிசனத்தையுங்கூடக் குறிப்பிட்டார். இவைகள் எதுவும் யூதாசை அசைக்கவில்லை; யூதாஸ் தனது போக்கை மாற்றிக்கொள்ளத்தக்கதாக, இவைகளில் எதுவும் அவனது இருதயத்தின் கவனத்தை ஈர்க்கவில்லை. இவ்வாறாக யூதாஸ் குற்றஞ்சாட்டப்படுவதற்குக் காரணமான அவரது துணிகரத்திற்குப் பலமான ஆதாரத்தைப் பெற்றிருக்கின்றோம் மற்றும் துணிகரத்திற்கான இந்த ஆதாரமானது, யூதாசை "கேட்டின் மகன்" என்று நம்முடைய கர்த்தர் பெயரிட்டு/அழைத்து, "அவன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்" என்று நமது கர்த்தர் கூறின வார்த்தைகளுக்கான அர்த்தத்தை இன்னும் வலியுறுத்துகின்றது. "என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" என்பதே சங்கீதத்தில் இடம்பெறும் வசனமாகும்.

## முடிந்தமட்டிலுமான பொறுமை

யூதாசை கையாளும் விஷயத்திலான நமது கர்த்தருடைய நடவடிக்கையானது, யூதாஸ் வகுப்பாரிடத்திலான நம்முடைய நடவடிக்கைக்கான சிறந்த மாதிரியாக மாத்திரம் இராமல், இன்னுமாகக் கர்த்தர் தம்முடைய சீஷர்களாகியுள்ள அனைவரிடத்திலும் கொண்டிருக்கும் நீடியபொறுமை குறித்தும், சீஷர்களில் எவரும் கெட்டுப்போய்விடாமல், மாறாக முடிந்தமட்டிலுமான அனைத்தையும் அவர்களுக்குச் செய்து, அவர்களுடைய வழிகளிலுள்ள தவறுகளிலிருந்து அவர்கள் திரும்புவார்கள் என்ற நம்பிக்கையில், மீண்டும் மீண்டுமாக அவர்களுடைய வழிகளிலுள்ள தவறுகளை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு அவர் நாடுவது குறித்ததுமான பாடங்கள் காணப்படுகின்றது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். சத்தியத்தைப் பெற்றுக்கொண்டு, சத்தியத்தினால் வரும் அனைத்துக் கிருபைகளைப் பெற்றுக்கொண்ட பிற்பாடும், தங்களுக்குள் சுயநலத்தின் ஆவியை உற்சாகப்படுத்தி, வளர்த்துபவர்கள், மிகவும் கடினப்பட்டுப் போவதினால், போதகருடைய கண்டிப்புகளும், வேதவாக்கியங்களின் வார்த்தைகளுங்கூட, இவர்களிடத்தில் (நல்ல) தாக்கத்தினை ஏற்படுத்துவதில்லை எனும் கருத்தைக்கூட இங்குப் பார்க்கின்றோம். இது ஒருவேளை கர்த்தருடைய ஆவியானது இவர்களுடைய இருதயத்தில் சுயநலத்தின் ஆவிக்கு முழுமையாய்க் கீழ்ப்பட்டுப்போய்விட்டால் - "மனந்திரும்புவதற்கு ஏதுவாய் - சரியானப் பாதைக்குத் திரும்புவதற்கேதுவாய் - இவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்" எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டுகின்றது (எபிரெயர் 6:6).

கர்த்தர் பேதுருவுக்குப் பதிலளித்ததற்கு இசைவாக, அதாவது பேதுரு

கழுவுதலின் அர்த்தத்தைப் பின்னால் அறிந்துகொள்வார் என்று கர்த்தர் கூறினதற்கு இசைவாக, அனைத்து அப்போஸ்தலருடைய பாதங்களைக் கழுவினப்பின், காரியங்களைக் கர்த்தர் விவரித்தார். "நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" (யோவான் 13:13, 14).

## கர்த்தருடைய இச்செய்கையின் அர்த்தம்

இங்கு முழுப் பாடமும் நமக்கு விவரிக்கப்படுகின்றது. சிறியவன் ஆகிவிடுவோமோ என்ற அவர்களுடைய அச்சத்தின் காரணமாகவே, அங்கிருந்த சீஷர்கள் அனைவரும் போதகருக்கும் மற்றும் ஒருவர் இன்னொருவருக்கும் பணிவிடைப் புரிவதற்கான வாய்ப்பினைத் தட்டிக்கழித்துவிட்டனர். அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தலையும், எஜமானருமான மேசியாவாகிய நமது கர்த்தர், அவர்கள் அனைவருக்கும் பணிவிடைப் புரியத்தக்கதாக தம்மையே தாழ்த்தினார் மற்றும் இவ்வாறாக அவர்களிடத்தில் காணப்பட்ட தாழ்மையின்மையைக் கடிந்துகொண்டார் மற்றும் அதேவேளையில், ஜீவியத்தின் சகல காரியங்களுக்கும் பொருந்தக்கூடிய ஒரு மாதிரியை அவர்களுக்கு முன்னாக வைத்தார்; அதாவது ஜீவியத்தின் உயர்வான காரியங்களிலோ அல்லது சாதாரணமான காரியங்களிலோ எப்போதும் ஒருவருக்கொருவர் பணிவிடைப் புரிந்திட அவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட வேண்டும் என்பதற்கான மாதிரியை முன்வைத்தார். ஒருவருடைய பாதங்களை ஒருவர் கழுவுதல் என்பது, ஜீவியத்தில் சகல மற்றும் எந்த எளிமையான/கனமற்ற ஊழியங்களுக்கும், சகல மற்றும் எந்த இரக்கத்தின் பாராட்டுதலுக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது, அதிலும் விசேஷமாக ஆவிக்குரிய உதவி மற்றும் ஆறுதல் அளிப்பது தொடர்புடைய விஷயங்களுக்கும், இரக்கம் பாராட்டுதலுக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, நம்முடைய டன்கார்டு (Dunkard) கிறிஸ்தவ நண்பர்களும், மற்றவர்களும் நம்பிக்கொண்டிருப்பது போன்று, நமது ஆண்டவர் இங்கு ஒரு சடங்காச்சாரத்தை (அ) அனுசரிப்பை உத்தரவிட்டதாக நாம் புரிந்துகொள்வதில்லை. இன்னுமாக இவ்விஷயத்தில் உரோமினுடைய போப் அனுசரிக்கும் வழக்கத்திற்கான அடித்தளத்தைக்கூட நம்மால் பார்க்கமுடியவில்லை; போப் வருடத்திற்கு ஒருமுறை, இந்தக் காலக்கட்டத்தில் பன்னிரண்டு ஏழை மனிதர்களின், அநேகமாகத் தரித்திரர்களாய் இருப்பவர்களின் பாதங்களைக் கழுவுவார்; ஆனால் இப்படியாகக் கழுவுவதற்கு முன்பு, அந்த ஏழை மனிதர்கள் முன்னமே விசேஷமாய்க் கழுவப்பட்டு, பின்னர் உள்ளே கொண்டுவரப்படுகின்றனர்; பின்னர் இவர்களின் பாதங்களைக் கழுவும் விசேஷித்த பொது மக்கள் முன்னிலையிலான ஊழியத்தைப் போப் நிறைவேற்றுவார். இப்படியான எந்தச் சடங்காச்சாரத்தையும், நம்மால் நமது கர்த்தருடைய நோக்கத்தில் காணமுடியவில்லை. ஆனால் நம்முடைய நாட்களிலும், நம்முடைய சூழ்நிலைகளின் கீழிலும் சொல்லர்த்தமாகப் பாதங்களைக் கழுவுவது ஆறுதலாகவோ (அ) அவசியமாகவோ

இருப்பதற்குப் பதிலாக, நேர் எதிர்மாறாகவே காணப்படுகின்றது. முந்தைய காலங்களில் பரிசுத்தவான்களுடைய பாதங்களைக் கழுவுவது என்பது, விசேஷித்த விருந்தோம்பல் உபசரிப்பிற்கான அடையாளமாகவும், இப்படிச் செய்கிறவர் சபையில் அன்புடன் மதிக்கப்படுவதாகவும் அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகின்றார் (1 தீமோத்தேயு 5:10).

ஒருவரையொருவர் ஆறுதல்படுத்துவதற்கும், புத்துணர்வு அடையச் செய்வதற்கும், தேற்றுவதற்கும், ஜீவியத்தின் சில எளிமையான காரியங்களில் ஒருவருக்கொருவர் உதவிடுவதற்கும் அல்லது இனிமையற்ற சில கடமைகளை, அனுபவங்கள் (அ) ஜீவியத்தின் பரீட்சைகள்/சோதனைகள் தொடர்புடைய விஷயத்தில் ஒருவருக்கொருவர் உதவிடுவதற்கும் நமக்கு எத்துணை ஆசீர்வாதமான வாய்ப்புகள் உள்ளன. நமது பாடத்திற்கான ஆதார வசனம் தெரிவிக்கின்ற பிரகாரம், நாம் அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்ய வேண்டுமே ஒழிய, கடமைக்காக/ சம்பிரதாயமாக ஊழியஞ்செய்யக்கூடாது. அன்பினாலும் மற்றும் கர்த்தருடைய ஜனங்களில் ஒருவருக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற வாஞ்சையினாலும் எந்த ஓர் ஊழியத்தைச் செய்திட்டாலும் (அ) செய்ய முற்பட்டாலும், இப்படியாகச் செய்யப்படும் ஊழியங்களுக்குத் தெய்வீக அங்கீகரிப்பும், ஆசீர்வாதமும் உண்டு என்பதில் நாம் உறுதிப்பெற்றுக்கொள்ளலாம். இம்மாதிரியான வாய்ப்புகளை நாம் இழந்துவிடாமல் இருப்போமாக; எஜமானுடைய மாதிரியை நினைவில் கொள்வோமாக; தாழ்மை கொண்டிருப்பதுபோல் நடிக்காமல், மாறாக நமது எஜமானைப் போன்று, நாமும் தாழ்மையை உண்மையாய்க் கொண்டிருப்போமாக; அதாவது நம்முடைய தொடர்புக்குள் வரும் அனைவருக்கும் நாம் இரக்கம் பாராட்டவும், பணிவிடைச் செய்யவும் அனுமதிக்கும் தாழ்மையை - அதிலும் விசேஷமாக தேவையில் காணப்படுபவர்கள் கர்த்தருடைய சரீரமாகிய சபையின் அங்கத்தினர்களாக இருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு ஊழியம் புரிவதற்குரிய சிலாக்கியத்தில் மகிழ்ச்சிகொள்ளும் தாழ்மையை உண்மையாய்க் கொண்டிருப்போமாக.

"முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாய் இருக்கும்" என நமது கர்த்தர் சீஷர்களிடத்தில் தெரிவித்ததுபோலவே, நீதிமானாக்கப்பட்ட மற்றும் அர்ப்பணம் பண்ணப்பட்ட அவரது சரீரத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் ஏற்கெனவே குளித்துவிட்டனர் மற்றும் மறுஜென்ம முழுக்குப் பெற்றுவிட்டனர் மற்றும் தங்களுக்காகச் சொல்லப்பட்ட உபதேசத்தின் மூலம் சுத்தமாயிருக்கின்றனர் (யோவான் 15:3). இப்படியாகச் சுத்தமாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டாலும், நாம் உலகத்துடன் தொடர்புக்குள் இருப்பதுவரையிலும், நாம் பூமிக்குரிய அசுசியினால் அசுத்தப்படுவதற்கு ஏதுவாகவே இருக்கின்றோம்; ஆகவே ஒவ்வொருவனும் தனக்கானவைகளை நோக்கிப்பார்ப்பதற்கு மாத்திரமல்லாமல், ஒருவருக்கொருவர் பூமிக்குரிய அசுசிகளை அப்புறப்படுத்துவதற்கு உதவிடுவதும், இப்படியாய்ச் சகோதர சகோதரிகளுக்கு ஊழியம் புரிவதும், சகோதர சகோதரிகளின் பெலவீனங்களில், சோதனைகளில், மாம்சத்தின் பூரணமின்மைகளில் உதவிடுவதும், சகோதர சகோதரிகள் ஜெயங்கொள்பவர்கள் ஆகும்படிக்கு உதவிடுவதும், விசேஷமாக அவசியமாய் உள்ளது. இப்படியான விதங்களில், நாம் பரிசுத்தவான்களின் பாதங்களைக் கழுவி, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தும் மாபெரும் வேலையில் ஒத்துழைக்கிறவர்களாக இருப்போம் (2 கொரிந்தியர் 7:1).

## நமது உயிர்த்தெழுதல்

ஓ! பிரியமான கர்த்தாவே! நாங்கள் அங்கு இருந்திருந்தால்,
உதடுகளில் வேதனையான ஜெபத்தோடு
நீர் மண்டியிட்ட அந்த இரவில்
நாங்கள் உம் துயரத்தை உணர்ந்திருப்போமே
நாங்கள் அங்கு இருந்திருந்தால்.

ஓ! அருமையான கர்த்தாவே! நாங்கள் அருகில் இருந்திருந்தால்
கல்வாரியின் பாதையில் நீர் பயணிக்கையில் - நீர்
சுமந்த சிலுவையின் அடியில் நீர் விழுகையில்,
நாங்கள் சுமையைத் தாங்கியிருப்போமே
நாங்கள் அருகில் இருந்திருந்தால்.

அந்த அதிகாலையில் நாங்கள் சென்று
சுகந்தவர்க்கங்களினாலும் பரிமளத்தைலங்களினாலும்
உம்மை அபிஷேகம் பண்ண உம்முடைய
புனித கல்லறையைத் தேடிச் சென்றிருப்போமே
அந்த அதிகாலை வேளையிலே.

என்னே! எங்களது மகிழ்ச்சி, நீர் உயிர்த்தெழுந்தீர்!
இனி என்றும் நீர் மரிக்கமாட்டீர்.
நாங்கள் ஜீவனோடு வாழ, சிந்தப்பட்டது உம் இரத்தமே,
உமது நாமத்தை நாங்கள் மகிமைப்படுத்துவோமே.
என்னே! எங்களது மகிழ்ச்சி!

நாங்கள் எல்லோரும் அர்ப்பணிக்கப்படும்படி, அழைக்கப்பட்ட
தெளிவான அழைப்பைப் பின்பற்றுவோமே - ஒரு
புதிய ஜீவன் எங்களுக்குள் பெற்றதினால்
மற்றெல்லாவற்றையும் நாங்கள் கைவிடுவோமே.
நாங்கள் உம்மைப் பின்பற்றுவோமே!

வாழ்க்கை முடிந்ததும், ஒவ்வொரு சிலுவைக்கும்
ஒரு கிரீடத்தோடு, அவரோடேகூட எழுவோமே.
உயிர்த்தெழுதலின் ஆனந்தம்தனை உணரப்போகிறோமே!
நாம் அவரோடுகூட எழும்போது - நாம்
இழந்த அனைத்திற்கும் என்னே! ஓர் வெகுமதி!

-Poems of the Way, p 91

# கெத்செமனே தூதன்

அது நள்ளிரவாயிருந்தது . . . துக்கம் நிறைந்தவர் தம் அபிமான மூவருடன்,
பாரமான பாத அடிகளோடு ஜெபிக்க கெத்செமனேயின் நிழலை நாடினாரே -
தம் ஆத்துமா மரணத்துக்கு ஏதுவான துக்கம் கொண்டிருப்பதினாலும்,
உலகம் அனைத்தின் துக்கம் மற்றும் பாவ பாரத்தினால் அழுத்தப்பட்டிருப்பதினாலும்
ஜெபித்திட கெத்செமனேயின் நிழலை நாடினாரே.

இரத்தத்தின் பெருந்துளியுடன், தாங்கொண்ணா துயரமடைந்தவராய்
கண்ணீரோடு முகங்குப்புற விழுந்து, "என் தேவனே, என் பிதாவே உமக்குச் சித்தமானால்,
ஓ! அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்படும் அவமான பாத்திரம்
என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கச் செய்யும் -
ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய
சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று கதறினாரே!

பின் அவரின் சிந்தனை பலியின் மீது திரும்பிடவே -
நியாயப்பிரமாணத்தின் அனைத்து எழுத்து, உறுப்பின்படி,
நிறைவேற்றுவதில் தாம் தவறியிருப்பாரோ? என்ற எண்ணம் உதிக்கவே,
மனதில் சொல்லொண்ணா வேதனையின் பாரத்தோடு பயமும் சூழ்ந்ததே.
ஆசாரிய நிழலை சிந்தித்தவரானார், அந்தோ இரண்டாம் திரைச்சீலையைத்
தகுதியற்ற விதமாய்க் கடப்பாரானால், நித்திய மரணம் தமக்குக் காத்திருக்குமே.
நித்திய மரணம் - பிதாவின் முகத்தை பார்க்க முடியாமல் செய்திடுமோ என்ற எண்ணம் -
ஓ! தாங்கொண்ணா துயரத்தை அவருக்குக் கொடுத்ததே.


ஓ! சொல்லொண்ணா வேதனையுடனே, தம் பிரியமான மூவரை நாடினாரே.
ஒருவேளை அவரின் தோய்வடையும் இருதயத்தைத் தீர்க்கத்தரிசன வார்த்தையால்
இளைப்பாறச் செய்திருக்கலாம் அவர்கள்.
அந்தோ! பரிதாபம் அவர்களின் கண்களோ நித்திரை மயக்கமாயிருந்ததே.
நித்திரையும் பண்ணினார்கள். மூன்றுமுறை நாடினார்.
மூன்றுமுறையும் விருதாவாய்ப் போனது - எனினும் அவரின் ஐயத்தில் அவர் கேட்கப்பட்டார்.
உடனே பலப்படுத்த பரமபிதாவும் தேவதூதனை அனுப்பியே,
பிரியமான அர்ப்பணிக்கப்பட்ட தலையை மென்மையாய்,
பலமிக்கக் கைகளினால் தொட்டு மெல்லப் பேசினாரே: "நீதியின் கர்த்தராகிய நான்
அழைத்தேன் உம்மை, கையைப் பிடித்து, உம்மைத் தற்காத்துக்கொள்வேன்,
நீர் இளக்கரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை; நீர் மெல்கிசெதேக்கின் முறைமையின்படி
என்றென்றைக்கும் ஆசாரியராய் இருக்கிறீர்,
உம்முடைய சிங்காசனத்தின் மீது நீர் இராஜாவாயிருக்கிறீர்
நீர் உமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாகுவீர்."

ஓ! இருதயமோ பெற்றது புத்துயிர் - ஏனெனில்
உண்மையுள்ள பிதாவின் வார்த்தைகள் என்றென்றும்
தவறாது என்பதை அறிவார் அவர் - அது
எதற்கு அனுப்பப்பட்டதோ அதை நிறைவேற்றும்.
எழுந்தார் அந்நாழிகையிலிருந்து விசாரிக்கப்படவும், மரிக்கவும்
எதிர்கொண்டு போனார் சமாதானமாய் - தேவ நம்பிக்கையில்
கிடைத்த சமாதானத்துடன் எதிர்கொண்டு போனார்.

ஓ! பல நூற்றாண்டுகளான இருண்ட யுக இரவு முழுவதும்
பிதாவின் "சிறியவர்களும்" துன்பமான கெத்செமனேயில்
எத்தனை எத்தனை முறை ஜெபிக்க மண்டியிட்டிருப்பார்கள் அன்றோ!
ஆம்! இன்றும் தோட்டத்தின் நிழல்கள்தனிலே தேவனின்
தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் கூக்குரல்
எதிரொலித்துக்கொண்டிருக்கிறதே, ஆம் ஒலித்துக்கொண்டிருக்கிறதே:
"எவ்வளவு காலம், ஓ! ஆண்டவரே, எவ்வளவு காலம்;
ஆத்ம வருத்தத்தை எதுவரை, எவ்வளவு காலம் நாங்கள் காண வேண்டும்;
உம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிற எங்களுக்கு நியாயஞ் செய்ய
எவ்வளவு காலம் - எவ்வளவு காலம்! என்றே ஒலித்துக்கொண்டிருக்கிறதே.


ஓ! அன்பான கர்த்தரே, கெத்செமனே தூதன்போல் என்னைப் பயன்படுத்துமே.
ஓ! உம் தெய்வீக அன்பின் ஆவியினால் என்னை நிரப்புமே.
ஓ! என்னை ஞானமும் இரக்கமும் உள்ளவனாக்குமே.
என்னிடம் வரும் துயருற்ற இருதயம் உம்
வார்த்தையிலிருந்து ஆறுதல் அடையாமல் போகாதிருப்பதாக;
சிறைக்கும், மரணத்திற்கும் எதிர்கொண்டுபோகவும்,
கொடுமையான நாவின் பரிகசிப்பைச் சகிக்கவும்,
கசப்பான முடிவுபரியந்தம் சிலுவையைச் சுமக்கவும் - பின்
"எல்லாம் முடிந்தது" என அமைதியாகக் கூறவும்,
அசைக்க முடியாத நம்பிக்கையுடன் திரைக்கு அப்பால்
கடந்து போகும்படியாக ஆறுதலடையட்டும்!
ஆம் பலப்படுத்தப்படட்டும் . . .

- Gertrude W. Seibert [R3785]



நினைவுகூருதலின் தியானங்கள்

# யோவான் 14-17 வரையிலான அதிகாரங்களின் வார்த்தைகள்



# நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்

## யோவான் 14:1-14

சீஷர்களுடைய பாதங்களை அவர் கழுவின பிற்பாடு, துணிக்கையானது யூதாசுக்குக் கொடுத்தப்பிற்பாடு, யூதாஸ் புறப்பட்டுப்போன பிற்பாடு, தம் நிமித்தம் அந்த இரவில் சீஷர்கள் அனைவரும் இடறலடைவார்கள் என்று சீஷர்களுக்குக் கூறின பிற்பாடு, சேவல் கூவுவதற்கு முன்னதாக பேதுரு தம்மை மூன்றுமுறை மறுதலிப்பார் என்று தெரிவித்த பிற்பாடு, பதினொரு பேரின் இருதயங்களும் பாரம் அடைந்ததாகவும், குழப்பம் அடைந்ததாகவும், நடக்கப்போகிறவைகள் குறித்த பயத்தினால் கலக்கமடைந்ததாகவும் இருந்திருக்கும் என்பதை நம்மால் அறியமுடிகிறது. ஆண்டவர் தம்மை மேசியா என்றும், இராஜ்யத்தின் சுதந்தரவாளி என்றும் மற்றும் தாங்கள் அவருடைய சிங்காசனத்தில் அவரோடு கூட இருப்பார்கள் என்றும் கூறியபோது, தாங்கள் அதைத் தவறாய்ப் புரிந்துக்கொண்டார்களா அல்லது தாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டார்களா? எனச் சீஷர்கள் கலங்கினார்கள். ஐந்து நாட்களுக்கு முன்னர்தான் அவர் கழுதையின் மீது ஏறி வந்தபோது, இஸ்ரயேலின் இராஜாவாக, தேவனுடைய குமாரனாக, ஜனங்களால் ஓசன்னாக்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க, இப்பொழுது ஆண்டவர், "துக்கம் அடைவதையும்," காட்டிக்கொடுப்பது பற்றிக் கூறுவதும், சீஷர்களாகிய தாங்கள் சிதறடிக்கப்படுவது குறித்தும், தம்முடைய சொந்த மரணம் குறித்தும் கூறுவதை அவர்கள் எப்படித்தான் புரிந்துக்கொள்ள/ எடுத்துக்கொள்ள வேண்டுமெனக் கலங்கியிருந்தனர்.

இப்படியான அவர்களுடைய கலகத்தில் காணப்பட்ட எண்ணங்களுக்குத்தான், நமது கர்த்தர் யோவான் சுவிசேஷத்தின் 14, 15, 16 மற்றும் 17-ஆம் அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆறுதலும், தேறுதலுமான வார்த்தைகளை அவர்களிடம் கூறுகின்றார். இவ்வார்த்தைகளை அவர், "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்தில் விசுவாசமாயிருங்கள்" என்று கூறி ஆரம்பிக்கின்றார்.

அப்போஸ்தலர்கள் இயேசுவுடன் தொடர்புக்குள் வருவதற்கு முன்னதாகவே, அவர்கள் ஏற்கெனவே தேவனுடைய ஊழியக்காரர்கள் என, தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டனர். அவர்கள் ஏற்கெனவே தேவனில் நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டிருந்தனர். அவர்கள் கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களாக இருந்தனர். இதை நமது கர்த்தருடைய ஜெபத்தின் வார்த்தைகள் உறுதிப்படுத்துகிறது. அதாவது, "அவர்கள் உம்முடையவர்களாக இருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர்" (யோவான் 17:6) என்ற வார்த்தைகள் உறுதிபடுத்துகின்றது. அவர்களுடைய இருதயத்தின் கலக்கமானது, அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளின் அஸ்திபாரம் சார்பானது அல்ல, ஏனெனில் இந்த அஸ்திபாரங்கள் உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தேவனை அறிந்தவர்களாகவும், தேவனில் விசுவாசம் உள்ளவர்களாகவும் மாத்திரம் இராமல், இராஜ்யம் தொடர்பான தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், அந்த இராஜ்யத்தின்

வாயிலாகப் பூமியின் குடிகள் அனைத்தின் மீது வரும் ஆசீர்வாதங்களையும் அறிந்திருந்தவர்களாகவும், விசுவாசித்திருந்தவர்களாகவும் காணப்பட்டனர். அவர்களுடைய மனங்களுக்கு முன்பாக எழும்பின கேள்வி, இயேசு தொடர்பான தேயாகும். அதாவது, இயேசு உண்மையில் மேசியாவா? அல்லது அவருடைய அற்புதமான வார்த்தைகள் மற்றும் கிரியைகளைக் கண்டு, தாங்கள்தான் தவறான சில எதிர்ப்பார்ப்புகளை வளர்த்துவிட்டார்களா? மூன்றரை வருட ஊழியத்திற்குப் பிற்பாடு, அவர் தாங்கள் கொண்டிருந்த எதிர்ப்பார்ப்பின்படி தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபித்து, அனைத்தையும் தமக்குக் கீழ்ப்படுத்துவதற்குப் பதிலாக, அவர் தம்முடைய சத்துருக்களின் கரங்களில் மரிப்பதை, இப்பொழுது எப்படி எடுத்துக்கொள்ள வேண்டும்? அவர், தாம் போகப்போவதாகவும், அவர் போகவில்லையெனில், தங்களால் அங்குவரமுடியாது என்றும் கூறுகின்றார்; இதையெல்லாம் எப்படி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதே, அவர்களுடைய மனங்களுக்கு முன் எழும்பிநின்ற கேள்விகளாகும்.

"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்," "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" (யோவான் 3:3, 5) என்று கர்த்தர் தம்முடைய ஊழியத்தின் ஆரம்பக்கட்டத்தில், நிக்கொதேமுவிடம் பேசின வார்த்தைகளின் அர்த்தத்தை, இன்னமும் அப்போஸ்தலர்கள் கற்றறிந்து கொள்ளவில்லை. இவைகள் ஆவிக்குரிய சத்தியங்களாய் இருப்பதால், பெந்தெகொஸ்தே நாளில் இவர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டு, "சகலபரிசுத்தவான்களோடு கூடத் தெய்வீகத் திட்டத்தினுடைய அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்துக்கொள்வதற்கு" அனுமதிக்கப்படுவது வரையிலும் இவைகள் சீஷர்களால் புரிந்துக்கொள்ளப்படுவதில்லை. ஆனால் அவர்களுக்கு இப்பொழுது கொஞ்சம் ஆறுதல் தேவை. ஆகவே அவர்களால் புரிந்துக்கொள்ள முடியும் அளவுக்கு உள்ள சிறப்பானதும், பலமானதுமான ஆவிக்குரிய உணவை, அறிவுரையை அவர்களுக்குக் கொடுக்க முற்பட்டார். அவர்களிடத்தில் கூறுவதற்கு அவருக்கு அநேகம் காரியம் இருந்தது; ஆனால் அவைகளையெல்லாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகமானது, அவர்களுடைய இருதயங்களை ஆயத்தப் படுத்துவது வரையிலும், அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது மற்றும் புரிந்துக்கொள்ள முடியாது.

பிதாவிடத்திலும், அவருடைய திட்டத்திலுமுள்ள அவர்களது விசுவாசத்தை அவர்களுக்குள் புத்துயிரடையச் செய்யத்தக்கதாக, "தேவனிடத்தில் விசுவாச மாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" என்று கூறி நமது கர்த்தர் ஆறுதல் படுத்துவதை ஆரம்பித்தார். அதாவது, "பிதாவினுடைய திட்டமனைத்தும் நிறைவேறும் என்ற உண்மையை உணர்ந்துக்கொள்ளுங்கள். மேலும் பிதாவுக்கு, வார்த்தையிலும், கிரியையிலும் நான் உண்மையாய் இருப்பதை நீங்கள் பார்த்துள்ளபடியினாலும், என்னிலுள்ள நற்கிரியைகளில் பிதாவினுடைய வல்லமை வெளிப்பட்டுள்ளதை நீங்கள் பார்த்துள்ளபடியினாலும், விசுவாசத்தினுடைய நங்கூரம்

உறுதியாய் நிலைத்திருப்பதாக. என்னைத் தொடர்ந்து விசுவாசித்துக்கொண்டிருங்கள், தொடர்ந்து நம்பிக்கைக்கொண்டிருங்கள். இப்படியிருந்தால் உங்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும். தெய்வீகத் திட்டத்தினுடைய விரிவாகுதலுக்காகக் காத்திருங்கள். அது நீங்கள் எதிர்ப்பார்த்த உச்சக்கட்ட எதிர்ப்பார்ப்பைக் காட்டிலும், திருப்தியை அளிக்கும். நான் போகிறேன் என்று சொன்னப்படியினால், அதாவது பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்று சொன்னப்படியினால் நீங்கள் குழம்பிப்போயிருக்கிறீர்கள். ஆனால், நான் உங்களுடைய நன்மைக்காகவே போகிறேன் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். அநேக வாசஸ்தலங்களுள்ள என்னுடைய பிதாவின் வீட்டில் உங்களுக்கென ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தும்படிக்குப் போகின்றேன். இதைச் செய்த பிற்பாடு, நான் நிச்சயமாய் மீண்டும் வந்து நாம் என்றென்றும் சேர்ந்துக் காணப்படத்தக்கதாக, உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்" என்ற விதத்தில் இயேசு கூறினார்.

இப்படியாகச் சொற்ப வார்த்தைகள் மூலம், ஆண்டவர் சுவிசேஷயுகத்தின் வேலையை விவரித்து, தம்முடைய இரண்டாம் வருகையைக் குறித்தும், யுகத்தின் முடிவில் சபையின் மகிமையடைதலைக் குறித்தும் சுட்டிக்காட்டினார். அவர்கள் கண்டிப்பாகக் கடந்துச்செல்ல வேண்டிய பொறுமைக்கான மற்றும் விசுவாசத்திற்கான பரீட்சைகளைக் குறித்தும் இங்கு அவர் விவரமாய் விவரிக்கவில்லை. இவைகள் குறித்து வேறே தருணங்களில், எச்சரிப்புக் கொடுத்துள்ளார் (மத்தேயு 24-ஆம் அதிகாரம்). இப்பொழுது அவர்களுடைய இருதயங்கள் கலக்கமடைந்துள்ளது. அவர் கடந்துப்போவது அவசியம் என்றும், அவரது இரண்டாம் வருகை நிச்சயமாய்க் காணப்படுமென்றும், ஆயத்தம் பண்ணப்படும் வாசஸ்தலங்களில் நித்திய காலத்திற்குமான ஐக்கியத்திற்குள் அனைவரும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பது நிச்சயமானது என்றும், உள்ள வாக்குத்தத்தங்களினால் அவர்களை அவர் ஆறுதல்படுத்த மாத்திரம் செய்பவராக இருந்தார்.

பிதாவின் வீடு என்பது, உண்மையில் அண்டசராசரமாகும்; மற்றும் அடையாள வார்த்தைகளில் பேசும்போது, வானம் அவருடைய சிங்காசனமாகவும், பூமி அவருடைய பாதப்படியாகவும் கூறப்படுகிறது. தேவனுடைய புத்திரர்கள் அனைவருக்குமான நித்திய காலத்திற்குரியதுமான ஆசீர்வாதங்களுக்குத் தெய்வீக விவேகமானது, மிகுதியான முன்னேற்பாடுகளைப் பண்ணியுள்ளது. தெய்வீக ஏற்பாடுகளில், மனிதனுடைய விழுகைக்கு முன்னதாக மனிதன் தேவனுடைய இசைவான நிலைமையில் காணப்பட்டபோது, அவனுக்கு ஓர் ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது. ஆனால் பாவத்தின் காரணமாக, நீதிமான்களுக்குரிய நித்தியமான வாசஸ்தலத்தை அடைவதற்கான மனிதனுடைய உரிமைகள் அனைத்தும், பறிமுதல் பண்ணப்பட்டது. மேலும் நமது அருமையான மீட்பர் மனிதனையும், அவனால் இழக்கப்பட்ட அனைத்து உரிமைகளையும், உடைமைகளையும் மீட்பதற்கென உலகத்தில் காணப்பட்டவராய் இருந்தார் (லூக்கா 19:10; எபேசியர் 1:14). அவர் பேசிக்கொண்டிருந்தபோது, (மனிதனால் இழக்கப்பட்டது அனைத்தையும்) அவர் இன்னமும் விலைகொடுத்து வாங்கவில்லை... இன்னும் சில மணிநேரங்களுக்குள்ளாகக் கல்வாரியில்

அனைத்தையும் நிறைவேற்றிட நமது கர்த்தர் சித்தங்கொண்டிருந்தார். இதற்கென அவர் தம்மைப் பலியாகக் கொடுக்க வேண்டியிருந்தது. அதாவது ஒரு மனிதனாக, அவர் கிறிஸ்து இயேசுவாகிய மனிதனான, தம்மை முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டியிருந்தது; மற்றும் இப்படியாகத் தம்மை ஒப்புக்கொடுத்த பிற்பாடு, மனிதர்கள் மத்தியில் அவரால் மனிதனாகக் காணப்பட முடியாது. தெய்வீகச் சித்தத்திற்கு அவர் கீழ்ப்படிந்து, மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாகிய தம்மை, பலிச் செலுத்துவதன் மூலமாக ஆதாமையும், ஆதாமுடைய சந்ததியையும் மீட்டுக்கொள்வது மாத்திரமல்லாமல், தாம் மரணத்திலிருந்து மேலான தளத்திலுள்ள புதிய சுபாவத்திற்கு, திவ்வியச் சுபாவத்திற்கு உயர்த்தப்படுவதும் அவருக்கான நம்பிக்கையுமாய் இருந்தது. ஆகவே, கிறிஸ்து இயேசு எனும் மனிதனாகிய அவர், அவர்களை விட்டுக் கடந்துப்போவதும், அவரை மனுஷனாக அவர்கள் இனிமேல் காணாமல் இருப்பதும் அவசியமாயிருந்தது. ஆனால் ஏற்றவேளையில், அவருடைய இரண்டாம் வருகையின்போது, அவர்களும் மனித நிலைமையிலிருந்து, ஆவிக்குரிய நிலைமைக்கு மாறி, "அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசித்து அவருக்கு ஒப்பாயிருப்பார்கள்" (1 யோவான் 3:2).

அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்த பிற்பாடு, பிதாவிடம் ஏறிச்சென்று, மனுஷர் சார்பாகத் தம்முடைய பலியை, மனிதனுக்கான ஈடுபலியாக ஒப்படைப்பதும் அவசியமாய் இருந்தது. இதையும் அவர் செய்தார். பாவங்களுக்கான அந்தப் பலியானது, மனிதனின் சார்பாகப் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதற்கும், இதன் காரணமாகவே, இயேசுவைத் தங்களுடைய மீட்பராக ஏற்றுக்கொள்ளும் அனைவரின் மேலும் ஆசீர்வாதம் கடந்துவருகின்றது என்பதற்கும், பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதங்கள் தெய்வீகச் சான்றாக/உறுதியாகக் காணப்படுகின்றது.

நம்முடைய கர்த்தருடைய மரணத்திற்கும், அவருடைய இரண்டாம் வருகையின் காலத்திற்கும் இடையிலான, இடைப்பட்ட காலமானது, எவருடைய விசுவாசக் கண்ணோட்டத்தின்படியும் நீண்ட காலம் அல்லவே. (1) இது தேவனுடைய கண்ணோட்டத்தில் நீண்ட காலப்பகுதியல்ல, ஏனெனில் அப்போஸ்தலர் பேதுரு, "கர்த்தருக்கு . . . ஆயிரம் வருஷம் ஒருநாள்போலவும்" (2 பேதுரு 3:8) என்று கூறியுள்ளார். (2) இது உண்மையான விசுவாசிகளுடைய கண்ணோட்டத்திலும் நீண்டபகுதியல்ல, ஏனெனில் விசுவாசிகள் எவருடைய வாழ்நாட்களும், காத்திருக்கும் நாட்களும், ஐம்பது வருடங்களுக்கு மேலாக இருந்ததில்லை. இந்த இடைப்பட்ட காலப்பகுதியை, நாம் நீண்ட மற்றும் மிகவும் பொருத்தமற்றக் கண்ணோட்டத்தின் படிப் பார்க்கக்கூடாது. அதாவது, ஏதோ நாம் பதினெட்டு நூற்றாண்டுகளாக வாழ்ந்து, காத்துக்கொண்டிருப்பது போன்று பார்க்கக்கூடாது. "அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்;" மணவாளன் வரும்போதும், ஒவ்வொருவனும் அவருடன் சேர்த்துக்கொள்ளப்படத்தக்கதாக, ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் பரீட்சைகளும், மெருகூட்டப்படுதல்களும், ஆயத்தப்படுத்தல்களும் போதுமானதாயிருக்கும். இப்படியாக ஆயத்தப்பட வேண்டியது ஒருவிதத்தில் ஒட்டுமொத்த சபையாக இருந்தாலும் கூட அது முக்கியமாக, கர்த்தருடைய பின்னடியார்களிலுள்ள

ஒவ்வொருவரின், தனிப்பட்ட விதத்திலான ஆயத்தப்படுத்தலாகவும் இருக்கின்றது.

"நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள்" (யோவான் 14:4). மூன்று வருட காலமாக நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்கு தம்மைத் தெரியப்படுத்திக்கொண்டிருந்தார். இன்னுமாக அவர்களுக்குப் பிதாவின் குணலட்சணத்தைக் குறித்தும் தெரியப்படுத்திக் கொண்டிருந்தார். ஆகவே, இப்பொழுது தாம் பிதாவினிடத்திற்கு, வீட்டிற்குச் செல்வதாக அவர் தெரிவித்தபோது, அவர்கள் பிதாவை முன்பில்லாத அளவுக்கு அறிந்துள்ளதையும், முன்பில்லாத அளவுக்கு பிதா அளிக்கும் நீதியின் மற்றும் உண்மையான சந்தோஷத்தின் வீட்டைக் குறித்து உணர்ந்துக்கொள்ள முடிகின்றதையும் உணர்த்திட வேண்டியவர்களாய் இருந்தார்கள். இன்னுமாகக் கர்த்தருடைய போதனைகள் மற்றும் வழிநடத்துதலின் கீழான அவர்களுடைய இந்த அனுபவமானது, தேவனுடைய வழியுடன் அவர்களைப் பழக்கிவைத்துள்ளது. அதாவது, அவ்வழியைத் தேவனுடைய வழி என்று அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளாதிருந்த போதிலும், அவ்வழிக்கு அவர்கள் பழக்கிவிக்கப்பட்டிருந்தனர். ஆகவேதான் நமது கர்த்தர், "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கின்றேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று கூறினார்.

நமது கர்த்தருடைய பலியின் மூலமாக, "ஈடுபலியின்" மூலமாக, அவருடைய பலியின் புண்ணியம் பாவிகளுக்குத் தரிக்கப்படுவதன் மூலமாக மாத்திரமே, சீஷர்கள் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் அல்லது மீண்டுமாகப் பிதாவினிடத்திலான ஐக்கியத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்ற விதத்தில் நமது கர்த்தர், "வழியாக" இருக்கின்றார். அவருடைய வார்த்தைகள், அவருடைய அறிவுரைகள், அவருடைய வழிகாட்டுதலின் வாயிலாக மாத்திரமே, சீஷர்கள் தேவனுடைய ஆவிக்கு, சத்தியத்தின் ஆவிக்கு இசைவுடன் வருவதற்குரிய நம்பிக்கைக் காணப்படும் என்ற விதத்தில் நமது கர்த்தர், "சத்தியமாக" இருக்கின்றார். மனுக்குலம் முழுவதும் மரித்து, தெய்வீகத் தண்டனை தீர்ப்பின் கீழ்க் காணப்படுவதால், ஜீவனுக்கான உரிமைகள் அனைத்தையும் இழந்துள்ளபடியினால், எவரும் நமது கர்த்தர் மூலம் அல்லாமல், அதாவது நமக்காக அவர் கொடுத்திட்ட ஜீவன் மூலமாக வராத எவரும், ஜீவனுக்குரிய நிலைமைக்குள் மீண்டுமாக வரமுடியாது என்றவிதத்தில் நமது கர்த்தர் "ஜீவனாக" இருக்கின்றார். இப்படியாக, அவர் நமக்கான ஈடுபலியாகவும் (அ) வழியாகவும், நீதியிலும், சத்தியத்திலும் நமக்கான போதகராகவும், நமக்கு ஜீவன் கொடுப்பவராகவும் இருக்கின்றார்..."அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை" (அப்போஸ்தலர் 4:12). "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்," அதாவது வேறெந்த வழி மூலமாகவும், வேறெந்த சத்தியம் மூலமாகவும், வேறெந்த ஜீவன் மூலமாகவும் பிதாவினுடைய வீட்டிலுள்ள வாசஸ்தலம் ஏதாகிலும் ஒன்றில் இடம்பெற்றுக்கொள்ளலாம் என்று, எந்த மனிதனும் எண்ணிக்கொள்ளாதிருப்பானாக என்ற விதத்தில் கர்த்தர் கூறுகின்றார் (யோவான் 14:6).

இப்படியாகவே, ஆயிரவருட யுகத்தின்போதும், கிறிஸ்துவானவர் வழியாகவும், சத்தியமாகவும், ஜீவனாகவும் இருப்பார். கர்த்தர் தம்முடைய பலியின் மூலமாக,

சுவிசேஷ யுக சபையாகிய, தம்முடைய மணவாட்டிக்கு, தேவனுடைய வீட்டிலுள்ள பரலோகப்பகுதியில் ஒரு வசிப்பிடத்தைத் திறந்து வைத்ததுபோன்று, அதே பலியின் மூலமாக, பிதாவின் வீட்டிலுள்ள பூலோகப்பகுதியில், ஒரு வசிப்பிடத்தை (அவருக்குக் கீழ்ப்படிகின்றவர்களுக்கு - அப்போஸ்தலர் 3:21) மீட்டு, மனுக்குலத்திற்குத் திரும்பக் கொடுப்பார். அந்தப் பூமிக்குரிய வசிப்பிடமோ, தேவனுடைய பரதீசாகக் காணப்படும்.

அப்போஸ்தலர்கள் அதிகமாய் ஆண்டவரை மதித்தாலும், அவருடைய பூரணம் குறித்த கருத்தை,அதாவது அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனுடைய சாயலாய் இருக்கின்றார் என்ற கருத்தை, அவர்கள் கிரகித்துக்கொள்வதற்கு, அவர்களுக்குச் சிரமமாய் இருந்தது (1தீமோத்தேயு 3:16). "தேவன் ஆவியாயிருக்கின்றார்," மாம்சத்தில் இல்லை; ஆகவே அவரைப் பார்க்க முடியாது என்பதாக அவர் கூறியுள்ளதையும் அப்போஸ்தலர்கள் கேட்டிருந்தனர்; மற்றும் இக்கருத்தை அவர்கள் நியாயப்பிரமாணத்திலிருந்தும் அறிந்திருந்தனர். "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" (யோவான் 1:18) என்பதை அவர் ஏற்கெனவே கூறியிருப்பதையும் அவர்கள் கேட்டிருக்கின்றனர். ஆனால், இயேசுவைத் தாங்கள் பார்க்கையில், தெய்வீகமானவரிடத்தில் காணப்படக்கூடிய அனைத்தையும் தாங்கள், அவரில் பார்க்கின்றார்கள்; அதாவது தெய்வீகமானவரின் பூரணச் சாயலை, மாம்சத்தில் பார்க்கின்றார்கள் என்ற விஷயத்தை, அவர்கள் அதுவரையிலும் கிரகித்துக் கொள்ளவில்லை. ஆகவேதான், "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்ற உண்மையினிடத்திற்கு அவர்களுடைய கவனத்தை அவர் திருப்ப வேண்டியிருந்தது. இவ்வார்த்தைகளை, தாம்தான் பிதா என்ற அர்த்தத்தில் அவர்களிடத்தில் அவர் கூறவில்லை. காரணம் பிதா தம்மிலும் பெரியவர் என்றும், தாம் செய்யும் கிரியைகள் பிதாவினுடைய வல்லமையினாலே செய்யப்படுகின்றது என்றும், அவர் அநேகம் தரம் தெளிவாய் அறிவித்திருக்கின்றார் (யோவான் 14:28, 10). மேலும் தேவன் கண்களுக்குப் புலப்படாதவர் போன்று இருப்பதுபோல, தம்மைப் பார்க்கும்போது, கண்களுக்குப் புலப்படாத ஜீவியைப் பார்ப்பதாக அவர்கள் புரிந்துக்கொள்ள வேண்டுமெனும் அர்த்தத்திலும் அவர் கூறவில்லை. அவர்கள் தம்முடைய குணங்களை, தம்முடைய நோக்கங்களை, தம்முடைய அன்பைப் பார்க்கும்போது, பிதாவை எல்லாவற்றிலும் உண்மையுடன் வெளிப்படுத்தும் மெய்யான தோற்றத்தின் ஒரு வெளிப்படுத்தலைக் காண்பதாகவே, அவர்கள் புரிந்துக்கொள்ள வேண்டுமெனும் அர்த்தத்தில் கூறினார். பிதாவுக்கும், தமக்கும் இடையே நிலவும் ஒற்றுமை குறித்தும், தம்முடைய சித்தமானது, பிதாவின் சித்தத்திற்குள் புதைக்கப்பட்டுள்ளது குறித்தும், தமக்கு வேறே சித்தமில்லை, "என் சித்தமல்ல, உம் சித்தமே ஆகக்கடவது" என்பதைக் குறித்தும் அவர்களைப் புரிந்துக்கொள்ள வைத்தார். இன்னுமாக, பிதா தம்முடைய வல்லமையின் மூலமாகவும், தம்முடைய ஆவியின் மூலமாகவும், தம்மில் வாசம் பண்ணினதால், தம்முடைய வார்த்தைகளும், கிரியைகளும் முற்றும் முழுமையாகப் பிதாவுடையதே என்றும் அவர்களுக்குப் புரியவைத்தார். தம்முடைய ஊழியத்தின் நாட்களில் அவர்களால் பார்க்கப்பட்ட கிரியைகள் அனைத்தும், தம் மீது

உன்னதமானவரின் வல்லமை காணப்படுகின்றது என்பதற்கும், தம் மூலம் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதற்கும் சான்றாக இருக்கின்றது என்றும் அவர்களிடம் கூறினார். இவைகள் அப்போஸ்தலர்களை முழுமையாய்த் திருப்திப்படுத்தி, அவர்களுடைய இருதயங்களுக்குச் சமாதானத்தைக் கொண்டுவந்தது.

இன்னுமாக தாம் பிதாவினிடத்திற்குப் போக வேண்டியதன் அவசியம் பற்றி விவரிக்கும் வண்ணமாக, தாம் கடந்துப்போவதினால், தம்முடைய பின்னடியார்கள், தாம் செய்ததைக் காட்டிலும் பெரிய கிரியைகள் செய்வார்கள் என்று நமது கர்த்தர் அறிவித்தார். இந்த "பெரிய கிரியைகளில்" சில, இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடுச் செய்யப்படும் என்று எண்ணுவது அநேகமாகச் சரியாகவும் இருக்கலாம். அதாவது மரணம் என்னும் நித்திரையினின்று மனுக்குலத்தின் உலகத்தை எழுப்பி, விருப்பமும் மற்றும் கீழ்ப்படிதலும் காட்டுகின்றவர்களை, மனுஷீக ஜீவனுக்குரிய முழுமையான பூரணத்திற்குத் திரும்பக் கொண்டுவருவதாகிய மாபெரும் கிரியை, இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு செய்யப்படும். இது உண்மையில் முதலாம் வருகையின் போது, நமது கர்த்தர் இயேசுவினால் செய்யப்பட்ட கிரியையைக் காட்டிலும், பெரிய கிரியைதான். காரணம், முதலாம் வருகையின் போது, கர்த்தர் இயேசு மரணத்தில் நித்திரை பண்ணிக்கொண்டிருந்த சிலரை, மனித சுபாவத்திற்குரிய முழுமையான பூரணத்திற்குக் கொண்டுவராமல் வெறுமனே எழும்பப்பண்ணினதே அவருடைய பெரிய கிரியையாக இருந்தது.

ஆனால் நம்முடைய அபிப்பிராயத்தின்படி, இவை மாத்திரமே கர்த்தருடைய பின்னடியார்கள், அவர்களுடைய ஆண்டவர் பண்ணின கிரியைக் காட்டிலும், செய்யும் பெரிய கிரியையல்ல. கர்த்தருடைய கிரியைகள் மாம்சீகத் தளத்திலேயே காணப்பட்டது. பரிசுத்த ஆவி அப்பொழுது அருளப்படவில்லை; அவர் ஈடுபலியைச் செலுத்தி, அதைப் பிதாவிடம் ஒப்படைத்து, அதைப்பிதா ஏற்றுக்கொள்ளாதது வரையிலும், பரிசுத்த ஆவி வருவதில்லை. இதன் காரணமாக, அவர் யாருக்கு ஊழியம் புரிந்திட்டாரோ, (அவருடைய சீஷர்கள் கூட ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை). அவர்களுக்கு அவரால் ஆவிக்குரிய கண்ணோட்டத்தின்படி போதிக்கமுடியவில்லை. அவர்களுடைய செவிகள், பூமிக்குரியது தொடர்பானவைகளினால் நிறைந்திருந்தது. பரலோகம் தொடர்புடைய காரியங்கள் பற்றி அவர்களால் புரிந்துக்கொள்ளப்பட முடியவில்லை. காரணம், "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்." "பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?" (1 கொரிந்தியர் 2:10, 14; யோவான் 3:12).

இன்னமும் ஆவியினால் ஜெநிப்பிக்கபடாமலும், புத்திரத்துவத்திற்குரிய சிலாக்கியம் இன்னமும் அருளப்படாத நிலமையிலுமுள்ள வேலைக்காரர் வீட்டாரின் மத்தியில், நமது கர்த்தரால் பூமிக்குரிய தளத்தின் அடிப்படையிலேயே அல்லாமல், மேலான தளத்தின் அடிப்படையில் எதையும் போதிக்கவும், செய்யவும் முடியவில்லை.

அதாவது உவமைகளினாலும், மறைப்பொருள்களினாலுமே ஜனங்களிடம் போதித்தார். இவைகள் ஏற்றவேளையில் பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதல் கீழாக, சபை புரிந்துக்கொள்வார்கள். இதன் காரணமாகவே நம்முடைய கர்த்தருடைய அற்புதங்கள் அனைத்தும் சரீரப்பிரகாரமான நிலையிலும், எளிமையாய்ப் புரிந்துக்கொள்ளப்படும் அவரது போதனைகள் அனைத்தும், சுபாவத்தின்படியான மனிதனால் உணர்ந்துக் கொள்ளப்படும் நிலையிலும் காணப்பட்டது.

பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிற்பாடு, அதாவது பரிசுத்த ஆவி வந்திறங்கினப் பிற்பாடு கர்த்தரால் செய்யப்பட்டவைகளைக் காட்டிலும், கர்த்தருடைய ஜனங்கள் அவருடைய நாமத்தில், அவருடைய பிரதிநிதிகளாக இருந்து, பெரியதும், மிகவும் ஆச்சரியமானதுமான கிரியைகளைச் செய்தார்கள். கர்த்தர் குருடர்களின் கண்களைத் திறந்தார். ஆனால் அவருடைய பின்னடியார்கள் மனிதனுடைய புரிந்துக் கொள்ளுதலின் கண்களைத் திறப்பதற்குரிய சிலாக்கியத்தைப் பெற்றுக் கொண்டனர். கர்த்தர் சரீரத்தில் வியாதிப்பட்டவர்களைச் சொஸ்தப்படுத்தினார். ஆனால் அவருடைய சீஷர்கள் ஆவிக்குரிய நோயாளிகளைச் சொஸ்தப்படுத்துவதற்கு அனுமதிக்கப் பட்டனர். கர்த்தர் சரீரப்பிரகாரமான குஷ்டரோகத்தைச் சொஸ்தப்படுத்தினார். ஆனால் ஆவிக்குரிய குஷ்டரோகமாகிய பாவத்தைச் சொஸ்தப்படுத்துவதற்குரிய சிலாக்கியம், அவருடைய பின்னடியார்களுக்கு உரியதாய் இருக்கின்றது. நம்முடைய கர்த்தர் மரித்தவர்களை உயிர்ப்பித்தார். ஆனால் அநேகரை மேன்மையான அர்த்தத்தில் மரணத்தை விட்டு நீக்கி, ஜீவனுக்குட்பட்டிருக் கப்பண்ணும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குரிய சிலாக்கியம், அவருடைய பின்னடியார்களுக்கு உரியதாய் இருக்கின்றது. இந்தப் பெரிய கிரியைகளுக்கான சிலாக்கியங்கள் கர்த்தருடைய ஜனங்களுக்குக் காணப்படுகின்றது. இந்தத் தங்களுடைய பெரிய ஆசீர்வாதங்களைப் புரிந்துக்கொண்டு, பிதாவின் வேலையில் ஊக்கத்துடனும், வைராக்கியத்துடனும் ஈடுபட்டிருப்பவர்கள் பாக்கியவான்களாக இருக்கின்றனர். ஆனால் கர்த்தருடைய தாலந்தைப் பெற்றுக்கொண்டு, அதை நிலத்தில், அதாவது வேலையின கீழ், இன்பத்தின் கீழ், சமுதாயத்தின் கீழ்ப் புதைத்துப் போடுபவர்கள், ஆண்டவருடைய இரண்டாம் வருகையின் போது, அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்றோ, அல்லது, "உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று அவர்களை நோக்கி கர்த்தர் கூறுவார் என்றோ எதிர்ப்பார்க்கக்கூடாது.

இன்னுமாக, சபை தொடர்புடைய அனைத்துக் காரியங்களிலும், தாம் தொடர்ந்து பிதாவினுடைய பிரதிநிதியாக இன்னமும் காணப்படுவதை, சுட்டிக்காட்டும் வண்ணமாக நமது கர்த்தர், யோவான் 14:13-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக் கூறி நமக்கு உறுதியளிக்கின்றார். அதாவது பிதா அனைத்தையும் குமாரனுடைய கரங்களில் ஒப்படைத்துள்ளார் என்றும், குமாரன் எல்லாவற்றிலும் பிதாவைக் கனப்படுத்தி, அவருடைய நாமத்திற்கு மகிமை சேர்ப்பார் என்றும், கூறி நமக்கு உறுதியளிக்கின்றார்.

# வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்

## யோவான் 14:15-27

நமது கர்த்தர் தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலை நிறுவினப் பிற்பாடு, கலக்கமடைந்திருக்கும் தம்முடைய சீஷர்களுக்குத் தம்முடைய உரையைத் தொடர்ந்துகொண்டிருக்கையில், ஏற்றக்காலத்தில் அவர் திரும்பிவந்து அவர்களைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வதாக மாத்திரம் அவர் வாக்களிக்காமல், தாம் இல்லாத இடைப்பட்ட காலத்தில் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனையும் வாக்களித்தார். அவர் தம்முடைய மனித சுபாவத்தை ஒப்புக்கொடுக்கப் போகின்றபடியால், ஒப்புக்கொடுத்தப் பிற்பாடு அவர்களோடு அவரால் மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாய் இருக்கமுடியாது. அவருடைய உயிர்த்தெழுதலில், அவர் பிதாவுக்கு ஒத்த தன்மையிலான ஆவிக்குரிய ஜீவியாக வரப்போகின்றபடியால், முழுச் சபையும் நிறைவடைந்து, அவரைப்போல் (மற்றும் பிதாவைப்போல்) ஆக்கப்பட்டு, அவரைக் கண்டு, அவரோடிருந்து, அவருடைய மகிமையில் பங்கடைவதற்குரிய காலம் வருவதுவரையிலும், பிதாவைச் சீஷர்களால் பார்க்க முடியாததுபோல, அவரையும் சீஷர்களால் பார்க்க இயலாது. உயிர்த்தெழுதலில் அவருக்கு ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக, அவர் ஒன்றில் சுவிசேஷயுகம் முழுவதும், எவ்விதமான உதவியில்லாத நிலையில் சீஷர்களைத் தனியே விடுவதற்குரிய அல்லது வேறு ஏதாகிலும் விதத்தில் அவர்களுக்கு உதவியளிக்க ஏற்பாடு பண்ணுவதற்குரிய அவசியம் உண்டானது. நம்முடைய கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு, அவர் தம்முடைய சீஷர்களுக்கு முன்பாக சிறு கண நேரங்களில் சில முறைகள் தோன்றிக் காட்சியளித்தது என்பது, அவர் இன்னமும் மரித்த நிலைமையிலேயே இல்லையென்பதையும், அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்துவிட்டார் மற்றும் அவர் மனித சூழ்நிலைகளுடைய கட்டுப்பாட்டின் கீழ் இல்லை என்பதையும், சீஷர்களுக்கு உறுதிப்பண்ணும் நோக்கத்திற்காகக் கொடுக்கப்பட்ட அற்புதமான வெளிப் படுத்தல்களே ஆகும். அவர் தோன்றுவதற்கு எடுத்துக்கொண்ட மாம்ச சரீரங்களானது, அற்புதமாகத் தோன்றி, அற்புதமாக மறைந்தும் போனது. அவர் காற்றைப்போல் வந்து போய்விட்டார். (யோவான் 3:8; லூக்கா 24:26, 31; அப்போஸ்தலர் 1:3-4)

பரிசுத்த ஆவி என்பது வேறொரு தேற்றரவாளன், எனினும் தேற்றுதல் ஒரே வகையில்தான் காணப்படும். இங்கு இடம்பெறும் "தேற்றுதல்" (comfort) என்ற வார்த்தையானது, இவ்வசனத்தின் கருத்தாகிய பலப்படுத்தலை, தக்கவைத்தலைச் சரியாக வெளிப்படுத்துகிறதில்லை. "தேற்றுதல்" எனும் வார்த்தை கொடுக்கும் அர்த்தத்தின்படி பரிசுத்த ஆவி என்பது, வேதனைகளைத் தேற்றுகிறவராகவும், பயங்களைத் தணிக்கிறவராகவும் மாத்திரம் காணப்படாமல், பரிசுத்த ஆவியானது அவர்களது புரிந்துக்கொள்ளுதலை உயிர்ப்பிக்கின்றதாகவும், அவர்களது பக்தி வைராக்கியத்தைப் பலப்படுத்துகின்றதாகவும், அவர்களை நீதியில் சரிச்செய்யத் தக்கதாகவும், அவர்கள் "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தை"

சுதந்தரித்துக்கொள்ளத்தக்கதாகவும் எனத் தெய்வீக விவேகமானது அனுமதிப்பவை களைச் செய்வதற்கும் மற்றும் சகிப்பதற்கும் அவர்களை உற்சாகப்படுத்துகின்றதாகவும் இருக்கின்றது.

சபையினிடத்திற்கு வந்து, சபையோடு யுகம் முழுவதும் தங்கி, உண்மையுள்ளவர்களின் நலனுக்கடுத்த விஷயங்களை மேற்பார்வையிட்டு வழிநடத்துகிறதாகிய பரிசுத்த ஆவி அல்லது பரிசுத்தமான செல்வாக்கு என்பது, பிதா மற்றும் குமாரன் இருவருடைய பிரதிநிதியாக இருக்கின்றது. சபையின் விஷயத்தில், கர்த்தர் இயேசுவின் பிரதிநிதியாக, பரிசுத்த ஆவி காணப்படுகின்றது என்ற கருத்தானது, அநேக இடங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சில சமயம் கர்த்தரும், அவருடைய ஆவியும்/செல்வாக்கும் மாறிமாறிப் பேசப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, "இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கின்றேன்" என்று சீஷர்களிடம் இயேசு கூறுகின்றார். இன்னுமாக, "நான் உங்களை திக்கற்றவர்களாக விடேன்; உங்களிடத்தில் (பரிசுத்த ஆவியின் மூலமாக) வருவேன்" (யோவான் 14:18). இன்னுமாக, "நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும் (பரிசுத்த ஆவியின் மூலமாக) நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்... அவனுக்கு என்னை (பரிசுத்த ஆவியின் வாயிலாக) வெளிப்படுத்து வேன்... நாங்கள் (பிதாவும், குமாரனும்) அவனிடத்தில் வந்து (பரிசுத்த ஆவியின் மூலமாக) அவனோடே வாசம் பண்ணுவோம்" (யோவான் 14:18, 20, 23).

பரிசுத்த ஆவியை, சத்தியத்தின் ஆவியை, அன்பின் ஆவியை, பிதாவின் ஆவியை, கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றிருப்பவர்கள், இயேசுவைப் பார்க்க உதவப்படுகின்றார்கள் மற்றும் தங்களுக்குள் புதிய ஜீவியத்தை ஆரம்பிக்கவும் பெற்றிருக்கின்றனர் (வசனம் - 19). இவர்கள் தங்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களினால் பார்க்கின்றனர் மற்றும் இருளில் நடப்பதுமில்லை. "இதுவே வழி, இதிலே நடவுங்கள்" என்று சொல்லும் கர்த்தருடைய சத்தத்தை இவர்கள் கேட்கின்றனர். தேவனுடைய நல்ல வார்த்தைகளை இவர்கள் ருசித்து, அவர் மிகவும் கிருபையுள்ளவராய் இருப்பதை உணர்ந்துக்கொள்கின்றனர். தங்களுடைய இருதயத்தில் தேவனுடைய அன்பு ஊற்றப்பட்டிருக்கிறதையும், அந்த அன்பு இவர்களுக்குள், சகோதரருக்கான அன்பை உண்டுபண்ணுவதையும், ஆவியின் அனைத்து நற்கனிகளை உண்டுபண்ணுகிறதையும் இவர்கள் உணருகின்றனர். அதாவது, சாந்தம், பொறுமை, நீடியப்பொறுமை, சகோதர சிநேகம் அன்பாகிய ஆவியின் கனிகளை உண்டுபண்ணுகிறதையும் இவர்கள் உணருகின்றனர். (ஏசாயா 30:21; 1 பேதுரு 2:3; ரோமர் 5:5; கொலோசெயர் 3:12-13)

எனினும் இந்த அனுபவங்கள் அனைத்தும், நிபந்தனைகளின் அடிப்படையிலேயே வாக்களிக்கப்பட்டுள்ளது. அதாவது இவைகள் தேவனுடைய கிருபையை ஒருபோதும் கேட்காதவர்களுக்கு வாக்களிக்கப்படாமல், மாறாக தேவனுடைய கிருபையைக் கேட்டவர்களுக்கே, "தேவனாகிய கர்த்தரினால் வரவழைக்கப்பட்டவர்களுக்கே" அவருடைய கட்டளைகளைக் கேட்டு, அவைகளைச் செய்யத்தக்கதாக அன்பினால் ஏவப்பட்டவர்களுக்கே வாக்களிக்கப்பட்டுள்ளது.

இப்படிப்பட்டவர்களுக்கே பிதாவின் அன்பு காணப்படுகின்றது. இப்படிப்பட்டவர்களுக்கே குமாரனுடைய அன்பு காணப்படுகின்றது மற்றும் இப்படிப்பட்டவர்களுக்கே பரிசுத்த ஆவி எனும் கால்வாய் மூலம், பிதா மற்றும் குமாரன் இருவருடனும் உள்ள ஐக்கியம் காணப்படுகின்றது. இவைகள் குறித்து 15, 16-ஆம் வசனங்களும், இன்னுமாக 21, 23 மற்றும் 24-ஆம் வசனங்களிலும் தெரிவிக்கப்படுகின்றது. இருதயத்தில் விசுவாசமும், கீழ்ப்படிதலும் கொண்டிருத்தல் என்பது ஆவியில் ஜெநிப்பிக்கப்படும் நிலைமைக்குள் எவரும் வருவதற்கு முன்னதாக இருப்பது மாத்திரம் போதாது; மாறாக பரிசுத்தத்தின் ஆவியில் அல்லது பரிசுத்த ஆவியில் பிதாவுடனும், குமாரனுடனுமான ஐக்கியத்தின் ஆவியில் தொடர்ந்துக் காணப்படுவதற்கும், வளர்வதற்கும் என விசுவாசத்திலும், கீழ்ப்படிதலிலும் தொடர்வதும், வளர்வதும் அவசியமாய் இருக்கின்றது.

ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதல் என்பது ஒரு காரியமாகவும், "ஆவியினாலே நிறைந்து" என்று அப்போஸ்தலரால் வலியுறுத்தப்படும் நிலைமையை அடைவது என்பது, வேறொரு காரியமாகவும் இருக்கின்றது (எபேசியர் 5:18). நாம் எந்தளவுக்குச் சுயசித்தத்தின் ஆவியில் காலியாகி, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் ஆவியினால் நிரப்பப்படுகின்றோமோ, அதனடிப்படையிலேயே நம்முடைய நிரப்பப்படுதல் காணப்படுகின்றது. கீழ்ப்படிதல் என்பது, அன்றாட ஜீவியத்தில் வெளிப்படுகின்றதாய் இருப்பினும், கர்த்தர் தம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களிடத்தில் மாம்சத்தின் கட்டுப்பாட்டை மாத்திரமல்லாமல், நோக்கத்தின், சித்தத்தின், இருதயத்தின் கீழ்ப்படிதலையே பொருட்படுத்துபவராக இருக்கின்றார். ஆகவேதான் கர்த்தருக்கு முழுமையாக உண்மையுடன் இருக்கும் சிலருடைய இருதயங்கள், கர்த்தருக்குப் பிரியமாய்க் காணப்படும். ஆனாலோ இவர்களுடன் தொடர்புக்குள் இருப்பவர்களில் சிலருக்கு, இவர்கள் மீது பிரியம் இருப்பதில்லை. இன்னும் சிலர் வெளித்தோற்றமான நன்நடத்தையின் காரணமாக, "மனுஷர் மத்தியில் மிகவும் உயர்வாக" மதிக்கப்படலாம்; ஆனாலோ இவர்களுடைய உண்மையற்ற இருதயத்தின் காரணமாக, இவர்கள் தேவனுடைய பார்வைக்கு முன்பு அருவருப்பாய்க் காணப்படுவார்கள் (லூக்கா 16:15). எனினும், புதிய நம்பிக்கையையும், புதிய ஆவியையும் தனக்குள் பெற்றிருப்பவன், தன்னுடைய சிந்தனைகளில் மாத்திரமல்லாமல் தன்னுடைய வார்த்தைகளிலும், கிரியைகளிலும் அனைத்துக் காரியங்களிலும், உள்ளேயும் வெளியேயும் தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்ள நாடுபவனாக இருப்பான் (1 யோவான் 3:3).

மற்றக் கிருபைகளைப் போன்று பரிசுத்த ஆவியும் பிதாவினுடையதாக இருப்பினும், மற்ற அவருடைய வரங்கள் அனைத்தையும் போன்று பரிசுத்த ஆவியும், குமாரன் மூலமாகவே நமக்கு வருகின்றதே ஒழிய, இப்பரிசுத்த ஆவியானது பிதாவுக்கும் நமக்கும் இடையே எவ்விதமான நேரடித் தொடர்பினால்/உறவினால் அல்ல என்பதை நாம் கவனிக்கத் தவறிவிடக்கூடாது. நாம் வேறே பாடங்களில் பார்த்திருக்கிறபடிப் பிதாவிடம் ஏறெடுக்கப்படும் நம்முடைய ஜெபங்கள், குமாரனினாலேயே பதிலளிக்கப்படுகின்றது. "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்" (யோவான்

14:13). ஆகவே பிதாவுக்கும், நமக்கும் இடையிலான எவ்விதமான நேரடித் தொடர்பு/உறவு காரணமாக பரிசுத்த ஆவி நமக்கு வராமல், மாறாக நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் ஆலோசனையின்படியாக வருகின்றது. "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன்; அப்பொழுது தேற்றரவாளனை உங்களுக்குத் தந்தருளுவார்," அதாவது, "என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, என்னிமித்தமாக பிதா இதை உங்களுக்குச் செய்வார்" என்ற விதத்தில் இயேசு கூறுகின்றார் (யோவான் 14:16). இதே கருத்தானது, "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" என்று மீண்டுமாக தெரிவிக்கப்படுகின்றது (யோவான் 14:26).

இங்கு நமக்குள்ள பாடம் என்னவெனில், பிதாவின் முன்னிலையில், நமக்கிருக்கும் ஒரே அங்கீகரிப்பானது, இதுவரையிலும் கிறிஸ்துவுக்குள் அவருடைய சரீரத்தின் அங்கங்களாகக் கருதப்படுகின்ற நிலையிலுள்ள அங்கீகரிப்பாகத்தான் காணப்படுகின்றது. கர்த்தர் இயேசு நமக்குப் பிதாவை அடையாளப்படுத்துபவராக இருக்கின்றார்; மற்றும் பிதாவுக்கு நம்மை அடையாளப்படுத்துபவராக இருக்கின்றார் என்பதேயாகும். நமக்குக் கொடுக்கப்படும் பரிசுத்த ஆவியின் ஆறுதலும், பலமும் பிதாவினுடையதாகும். சத்தியத்தின் ஆவி, பிதாவிடமிருந்து ஊற்றெடுக்கின்றதாய் இருக்கின்றது. அதுவும் இது நமக்கு நேரடியாய் வராமல், மாறாக நம்முடைய கர்த்தரும் தலையுமானவராகிய இயேசுவின் மூலமாக மாத்திரமே நம்மிடம் வருகின்றது. சொல்லப்போனால், பிதாவுக்கு முன்பாக நமக்கு எந்த அங்கீகரிப்பும் இல்லை; மற்றும் அவருடைய கிருபையினால் நமது கர்த்தர் இயேசு மூலமாக நாம் "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுக்குரிய சுதந்தரத்தை" அடையத்தக்கதாக ஆகி, முதலாம் உயிர்த்தெழுதலில் "மாற்றம்" அடைந்து, தெய்வீகச் சாயலாகிய அவருடைய சாயலில் பூரணமடைவது வரையிலும் நமக்கு எவ்விதமான அங்கீகரிப்பும்/ஏற்புடைமையும் இருப்பதில்லை. இதற்குப் பிற்பாடு நாம் பூரணமானவர்களாகக் கருதப்படாமல், உண்மையில் பூரணமாய் இருப்பதினால் நமக்குப் பிதாவின் முன்னதாகத் தனிப்பட்ட அங்கீகரிப்பும் காணப்படும். ஆனால் இதற்கு முன்னால் வரை இருப்பதில்லை.

ஆகவே, துணிகரமாய்ப் பாவம் செய்வதன் காரணமாக, பரிசுத்த ஆவியை இழப்பதன் மூலமாக அல்லது விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தை இழப்பதன் மூலமாக, ஒருவன் கிறிஸ்துவுடனான தன்னுடைய உறவை இழந்துப்போவானானால், அப்படிப்பட்டவன் இயேசுவினுடைய பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் மறைவிலிருந்து வெளியேறி, ஜீவனுள்ள தேவனுடைய கரங்களில் விழுகின்றவனாய் இருக்கின்றான். ஜீவனுள்ள தேவனுடைய கரங்களில் விழுவது என்பது, நடந்த உண்மைகள் மற்றும் கிரியைகள் அடிப்படையில் நியாயத்தீர்ப்பையும், பூரணமற்ற சிருஷ்டிகள் அனைத்திற்கும் மரணத்தையும் குறிக்கின்றதாய் இருக்கும் (எபிரெயர் 10:31). நாம் அவரில் நிலைத்திருக்க வேண்டுமென்றும், தெளிக்கப்பட்ட இரத்தத்தின் கீழ்க் காணப்பட வேண்டுமென்றும், அவருடைய அன்பில் நிலைத்திருக்க வேண்டுமென்றும் வேதவாக்கியங்கள் புத்திமதிக் கூறுகின்றன. (யோவான் 15:4, 6, 10;

1 யோவான் 2:24-29).

தம்முடைய அறிவுரைகளைக் கைக்கொள்வதன் மூலமாக அவரைப் பிரியப்படுத்துவதற்கு நாடாதவன், தம்மிடத்தில் அவனுக்கு அன்பில்லை என்பதை வெளிப்படுத்துகின்றவனாக இருப்பான் என்பதை நமது கர்த்தர் குறிப்பாகத் தெரிவிக்கின்றார் (23-24-ஆம் வசனங்கள்). பயபக்தியைப் பரீட்சிப்பதைக் காட்டிலும், அன்பைப் பரீட்சிப்பதற்கு வேறு சிறந்த பரீட்சை நிச்சயமாய் இராது; மற்றும் கீழ்ப்படிதலைப் பரீட்சிப்பதைக் காட்டிலும், பயபக்தியைப் பரீட்சிப்பதற்குச் சிறந்த பரீட்சை நிச்சயமாய் இராது. ஒளியூட்டப்பட்டதான நம்முடைய மனசாட்சிகளானது, ஆண்டவருடைய வார்த்தைகளுக்கு இருதயபூர்வமான சம்மதத்தைக் கொடுக்கின்றது மற்றும் நாமும் அப்போஸ்தலருடன் கூட, "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால் எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கின்றவர்கள் (நீதிமான்களாக்கப்பட்டு, புதிதான ஜீவனுக்குள்ளாக ஜெநிப்பிக்கப்பட்டவர்கள்) இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தார் என்றும் நிதானிக்கிறோம்" என்று கூறுகிறவர்களாக இருப்போம் (2 கொரிந்தியர் 5:14-15).

ஆண்டவருடைய வசனங்களை நாம் கைக்கொள்கையில், நாம் அவரை மாத்திரம் பிரியப்படுத்துகின்றவர்களாகவும், அவருக்குக் கீழ்ப்படிகின்றவர்களாகவும் இராமல், இந்த அனைத்து விஷயங்களில் ஆண்டவர், பிதாவாகிய தேவனுடைய வாயாக/வாய்க் கருவியாக இருப்பதினால், நாம் ஆண்டவரைப் பிரியப்படுத்தி அவருக்குக் கீழ்ப்படிகையில், பிதாவையும் பிரியப்படுத்திப் பிதாவுக்குக் கீழ்ப்படிகின்றவர்களாகவும் இருக்கின்றோம் என்று தெளிவாக நமக்கு ஆண்டவர் சுட்டிக்காண்பிக்கின்றார். ஆண்டவர் சீஷர்களோடு இருக்கையில், இவ்வளவு மாத்திரமே அவருக்குச் சொல்ல முடிந்தது. சீஷர்கள் அறிய வேண்டுமென ஆண்டவர் விரும்பினதும், அறிவது அவர்களுக்கு அவசியமாய் இருந்ததுமான அநேக காரியங்கள் சொல்வதற்கு அவருக்கு இருந்தது. ஆனால் அவற்றையெல்லாம் அவர்களால் தாங்க முடியாது. காரணம் பரிசுத்த ஆவி இன்னமும் அவர்கள்மேல் வராததினால், கல்வாரியில் ஈடுபலியைச் செலுத்தி, அவர் பரத்திற்கு ஏறி, அதை நமக்காக அவர் தேவனுக்கு முன்பாக ஒப்படைப்பது வரையிலும், பரிசுத்த ஆவி அவர்கள் மீது வருவது கூடாததினால் ஆகும் (யோவான் 7:39/எபிரெயர் 9:24).

நம்முடைய மீட்பரும், தலையுமான இயேசுவின் வேண்டுகோளுக்கு இணங்கி அனுப்பப்படும் இந்தத் தேற்றரவாளன் அல்லது பலப்படுத்துகிறவர், தேவனுடைய பரிசுத்த ஆவியானது நமக்குப் போதிப்பவராக இருக்கும். அதாவது நமக்கு அறிவுரைகளை/போதனைகளைக் கொண்டுவருவதற்கென, பல்வேறு கருவிகளைப் பரிசுத்த ஆவியானது பயன்படுத்தும் என்று நமது கர்த்தர் உறுதியளிக்கின்றார். தேவைக்கேற்ப அவ்வப்போது கர்த்தர் பரிசுத்த ஆவியின் மூலமாகத் தம்முடைய மந்தைக்கு அளிக்கும் சத்திய வார்த்தைகள், அப்போஸ்தலரின் நிரூபங்கள், பல்வேறு உதவிகள் மற்றும் பிரதிநிதிகளே, இந்தப் பல்வேறு கருவிகளாகும்.

வசனம் 27-இல் தெரிவிக்கப்பட்டிருக்கிறபடி, நம்முடைய அருமையான மீட்பரினால் நமக்கு விட்டுச்செல்லப்படும் சமாதானம் மற்றும் அன்பாகிய சொத்து எவ்வளவு அருமையாகவும், எவ்வளவு ஆறுதலாகவும், சீஷர்களுடைய கலங்கின இருதயங்களுக்கு இருந்தன மற்றும் நமக்கு எவ்வளவு புத்துணர்வு அளிக்கின்றதாய் இருக்கின்றது. "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27). மனித புத்திக்கு எட்டாத இந்தச் சமாதானமும், சந்தோஷமும் உலகத்திற்குக் கொடுக்கப்படவில்லை, பெயர்க்கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்படவில்லை, மரபு வழியை வலியுறுத்துபவர்களுக்கும், சமய சடங்குகளை வற்புறுத்துகிறவர்களுக்கும், இவர்கள் அனைவரும் எவ்வளவுதான் பக்தி வைராக்கியத்துடன் இருப்பினும், இவர்களுக்கும் கொடுக்கப்படவில்லை. இது பரிசுத்த ஆவியின் மூலமாகக் கிருபையின் ஐசுவரியங்களைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும், சத்தியம் மற்றும் அதன் ஆவிக்குக் கீழ்ப்படிவதன் மூலமாக அனைத்துக் காரியங்களிலும் தங்களுடைய ஜீவனுள்ள தலையாகிய கிறிஸ்துவுக்கு ஒப்ப வளருகின்றவர்களுக்கும்தான் கொடுக்கப்படுகின்றது, மற்றும் கொடுக்க சித்தமும் காணப்படுகின்றது. இப்படிப்பட்டவர்களிடத்தில் சமாதானம் ஆழமாய்க் காணப்படுகின்றது. மேலும் இவர்கள் எந்தளவுக்குத் தெய்வீகக் கிருபையின் ஐசுவரியங்களை, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலம் சகல பரிசுத்தவான்களோடு உணர்ந்து, தேவனுடைய அன்பின் நீளம், அகலம், ஆழம் மற்றும் உயரத்தை உணர்ந்துக்கொள்கின்றார்களோ, அந்தளவுக்கு இந்தச் சமாதானம் பெருகுகின்ற தாகவும் இருக்கின்றது.

இது உலகத்தினுடைய சமாதானமல்ல, ஜாக்கிரதையற்றவர்கள் மற்றும் அலட்சியமானவர்களின் சமாதானமல்ல, சுயதிருப்திகொள்பவர்களின் சமாதானம் அல்ல, விதியை நம்புகிறவர்களின் சமாதானமல்ல மாறாக, இது கிறிஸ்துவின் சமாதானமாய் இருக்கின்றது. "என்னுடைய சமாதானம்" என்று ஆண்டவர் கூறுகின்றார். தேவனிடத்திலான இந்தச் சமாதானத்தை, எல்லா சூழ்நிலைகளிலும் ஆண்டவர் தக்கவைத்துக் கொண்டதை நாம் பார்க்கின்றோம். இந்தச் சமாதானமானது, தெய்வீக ஞானத்தை, அன்பை, நீதியை, வல்லமையை அப்படியே நம்புகின்ற சமாதானமாய் இருக்கின்றது; மற்றும் கர்த்தருடைய உண்மையுள்ளவர்களை எதுவும் பாதிப்பதில்லை என்றும், தேவனை அன்புகூருகின்றவர்களுக்கு அனைத்தும் நன்மைக்கு ஏதுவாக மாற்றப்படும் என்றும், கர்த்தருடைய உண்மையுள்ளவர்களுக்குப் பண்ணப்பட்ட கிருபையான வாக்குத்தத்தங்களை நினைவுகூருகின்ற சமாதானமாகவும் இருக்கின்றது. இந்தச் சமாதானத்தினால், தெய்வீக விவேகம் அனுமதிக்கும் எதையும் விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ள முடியும்; மற்றும் தற்கால சந்தோஷமும், சமாதானமும் முன் சுவைத்தலாக மாத்திரம் காணப்படும். கர்த்தரால் வாக்களிக்கப்பட்டுள்ள, முடிவில் வரும் ஆசீர்வாதங்களைக் கண்ணீர்கள் மத்தியில், மகிழ்ச்சியுடன் எதிர்ப்பார்த்திட இந்தச் சமாதானத்தினால் கூடும்.

# நான் திராட்சச்செடி – நீங்கள் கொடிகள்

## யோவான் 15:1-11, 15

நமது கர்த்தருடைய பூமிக்குரிய வாழ்க்கையினுடைய கடைசி இரவின் போது, அனுசரித்திட்ட நினைவுகூருதல் இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, அவர் உரையாடியவைகளில் ஒன்றாக இவ்வசனத்தின் காரியங்களை அப்போஸ்தலர் (யோவான்) பதிவு செய்திருக்கின்றார். அநேகமாக புதிய உடன்படிக்கையின் இரத்தத்தை அடையாளப்படுத்தும் "பாத்திரத்தில்" பானம் பண்ணின காரியமானது, இவ்வுரையாடலுக்கு வழிவகுத்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது; யூதாஸ் போன பிற்பாடும், கர்த்தர் பதினொரு பேருடன் கெத்செமனே தோட்டத்திற்குப் போகுவதற்கு முன்னதாகவும், உரையாடப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இல்லையேல், அவர்கள் கெத்செமனேக்குப் போகும் வழியில் காணப்பட்ட திராட்சத்தோட்டங்களைக் கடந்து போனதுகூட, இவ்வுரையாடலுக்கு வழிவகுத்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. அல்லது ஆலயத்தின் பொன்னினால் ஆன நுழைவாயிலிலுள்ள கதவில் பொறிக்கப்பட்டுள்ள பொன்னினாலான மாபெரும் திராட்சச்செடியைப் பார்த்த மாத்திரத்திலும் உரையாடப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. ஆலயத்தில் இந்தப் பொன்னினால் ஆன நுழைவாயில் (அழகான நுழைவாயில்) மிகவும் பெரிதாகக் காணப்பட்டது என்றும், "மனிதனுடைய உயரத்தின் அளவு திராட்சக்குலைகளைக்" கொண்டிருந்தது என்றும் ஜோசபஸ் அவர்களால் கூறப்படுகின்றது. வேறொரு எழுத்தாளர் பின்வருமாறு எழுதுகின்றார்: "இலைகளும், மொக்குகளும் மங்கலான செந்நிற பொன்னினாலும், அதன் குலைகள் மஞ்சள் நிற பொன்னினாலும், அதன் திராட்சப்பழங்கள் விலையேறப்பெற்றக் கற்களினால் செய்யப்பட்டிருந்தது." பௌர்ணமி நிலவானது, நுழைவுவாயிலில் பொறிக்கப்பட்டிருந்த இந்தத் திராட்சச்செடியை அருமையாய்க் காட்டியிருக்கும். "இயேசு இவைகளைச் சொன்னபின்பு, தம்முடைய சீஷருடனேகூடக் கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார்; அங்கே ஒரு தோட்டம் இருந்தது, அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள்" என்பது முதலாம் அனுமானத்திற்கு ஆதரவாயுள்ளது (யோவான் 18:1). இது அவர்கள் இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, அநேகமாக நடு இரவு வரையிலும், மேல் வீட்டறையில் காணப்பட்டார்கள் என்பதைக் காட்டுகின்றது. இதற்குப் பின்னர், நமது கர்த்தர், "எழுந்திருங்கள் இவ்விடம் விட்டுப்போவோம் வாருங்கள்" என்றார் (யோவான் 14:31).

"நான் மெய்யான திராட்சச்செடி" என்ற வார்த்தையானது, போலியான (அ) பொய்யான திராட்சச்செடி ஒன்று இருக்கின்றது என்ற கருத்தை நமது மனதுக்குக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இன்னுமாக இது, இதே யோவான் வாயிலாக நமது கர்த்தர் இரண்டு அறுவடைகள் காணப்படும், அதாவது மெய்யான திராட்சச்செடியின் கனி சேர்க்கப்படும், பின்னர், "பூமியின் திராட்சக்" குலைகள் சேர்க்கப்படும் என்ற உண்மையை நமக்கு நினைப் பூட்டுவதாகவும் இருக்கிறது (வெளிப்படுத்தல் 14:18-20). மெய்யான திராட்சச்செடி, உண்மையான சபையைக் குறிக்குமானால், பூமியின் திராட்சச்செடியானது, போலியான உண்மையற்ற பொய்யான சபையைக்

குறிக்கின்றதாய் இருக்கின்றது.

பரம பிதா திராட்சச்செடியை நட்டவரும், திராட்சச்செடியின் சொந்தக்காரரும், உண்மையான திராட்சச்செடியைப் பராமரிக்கிறவருமாகிய, தோட்டக்காரராக இருக்கின்றார். மேலும், இவருக்கே திராட்சச்செடி தனது கனிகளைக் கொடுக்கின்றது. இங்கு, "திராட்சத்தோட்டக்காரர்" என்று இடம்பெறும் வார்த்தையானது, வெறுமனே பராமரிக்கின்றவர் என்ற அர்த்தத்தைக் கொடுக்காமல், மாறாக திராட்சத்தோட்டத்தின் உரிமையாளர் என்ற அர்த்தத்தையும் கொடுக்கின்றதாக இருக்கின்றது. இதற்கு இசைவாகவே வேதவாக்கியங்கள் அனைத்தும் காணப்படுகின்றது. தேவனே மனிதனுக்கான நம்பிக்கையாகவும், அவனுடைய இரட்சகராகவும், தேவன் மூலம் மாத்திரமே பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுதலை வருகிறதாகவும் வேதவாக்கியங்கள் முன் வைக்கின்றது. இவையனைத்தையும் கனம் மிக்க ஊழியக்காரனும், பிரதிநிதியுமாகிய தம்முடைய நேசக்குமாரன் மூலம்தான் செய்யப்போகின்றார் என்ற உண்மையையும், இன்னுமாக நியமிக்கப்பட்ட பிரதான ஆசாரியனாகிய தம்முடைய குமாரனின் கீழ் இராஜரிக ஆசாரியக்கூட்டமாகத் தெரிந்துகொள்ளப்பட்ட சபையைப் பயன்படுத்தப்போகின்றார் என்ற உண்மையையும், நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும், வருகின்ற ஊற்றாய் இருப்பவர் தேவன்தான் என்ற உண்மையை அகற்றிவிட முடியாது. (1 கொரிந்தியர் 8:6; யாக்கோபு 1:17)

"என்னில் உள்ள... கொடி" என்பது ஒவ்வொரு பெயர்க் கிறிஸ்தவனையும், கிறிஸ்தவன் என்று அறிக்கைப்பண்ணுகின்ற அனைவரையும், கிறிஸ்தவ மார்க்கத்தின் உண்மைகளைப் பெயரளவில் ஒப்புக்கொண்டு, அதற்கு ஆதரவு தெரிவிக்கின்றவர்கள் அனைவரையும் குறிப்பதாக நாம் புரிந்துகொள்ளக்கூடாது. "நீதிமானாக்கப்பட்ட விசுவாசியானவன்" திராட்சச்செடியில் கொடியாவதற்கு ஆயத்தப்படுகிறவனாக மாத்திரம் இருக்கின்றான். ஆனால், அவனுடைய விசுவாசமும், இந்த விசுவாசத்தினாலாகும் நீதிமானாக்கப்படுதலும், அவனைக் கொடியாக்காது. விசுவாசத்தின் மூலமாக நீதிமானாக்கப்படுதல் எனும் படியை முதலாவதாக எடுத்துக்கொண்டு, பிற்பாடு தங்களை ஜீவபலியாக தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து விட்டு, இப்படியாக அர்ப்பணிப்பின் வாயிலாக, "கிறிஸ்துவினுடைய மரணத்துக் குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே கொடிகள் ஆகுகின்றனர்."

நாம் கிறிஸ்துவுக்குள் அங்கத்துவம் (அதாவது, திராட்சச்செடியின் கொடி) ஆகுவதற்குரிய இந்த வழிமுறையானது, ரோமர் 6:3-5 வரையிலான வசனங்களில் அப்போஸ்தலரால் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. (நம்முடைய பாப்டிஸ்ட் சகோதரர்கள் தவறுதலாய்ச் செய்வதுபோல) நாமும் சரி, அப்போஸ்தலர்களும் சரி, தண்ணீரில் மூழ்கும் ஞானஸ்தானத்தைக் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் அங்கத்துவம் ஆகுவதற்கான நிபந்தனையாக முன்வைக்காமல், மாறாக அப்போஸ்தலர் வலியுறுத்துவது போன்று, நாமும் வலியுறுத்துவது என்னவெனில், "தங்களுடைய சித்தத்தை, கிறிஸ்துவினுடைய சித்தத்திற்குள்ளாக மூழ்கடித்துக்கொள்ளாத எவரும் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் அங்கத்துவம் அடைவதில்லை." அதாவது, அவரோடு

மரிப்பதற்கு தங்களை அர்ப்பணிக்க வேண்டும். நீதிமானாக்கப்பட்ட மனிதர்களாக, தங்களையே மரணத்திற்குச் சரணடையச் செய்து, பின்னர் அதுமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள்ளும், அவருக்குக் கீழும், அனைத்துக் காரியங்களிலும் தங்களது வழிகாட்டியாக (அ) தலையாக, அவரால் ஆளப்படுகிறவர்களுமாகிய புதிய சிருஷ்டியாய்க் காணப்பட வேண்டும்.

இப்படியாக, இப்பொழுது தெய்வீக ஏற்பாட்டிற்கு ஏற்ப உண்மையான திராட்சச்செடியின் கொடிகள் ஆகியுள்ளவர்கள் மத்தியில் இரண்டு வகுப்பார் காணப்படுகின்றனர்; அதாவது கனிக்கொடுக்கின்ற கொடிகள் மற்றும் "உறிஞ்சிகள்" என்று அழைக்கப்படும் கனிக்கொடுக்காத கொடிகள். ஆனால் இவர்கள் இருவரின் நிலையும், ஒவ்வொரு விதமான வளர்ச்சி என்று சொல்லப்படலாம்; ஒவ்வொரு கொடியும் மிகச் சிறிய முளைகளாகவே ஆரம்பிக்கின்றன; ஒவ்வொரு கொடியும் இலைகளை வளரச்செய்கின்றன; ஒவ்வொரு கொடியும், முக்கிய நடுதண்டாகிய கிறிஸ்து மற்றும் தெய்வீக நோக்கம் மற்றும் வாக்குத்தத்தங்கள் எனும் ஒரே வேரிலிருந்து உயிர்ச்சாறாகிய போஷாக்கைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஒரே மாதிரியான வாய்ப்பைப் பெற்றிருக்கின்றது. திராட்சச்செடியின் அனைத்துக் கொடிகளும், தங்களுக்காகவே தங்களது பலத்தைச் செலவிடும் தன்மைக் கொண்டிருக்கின்றது; அதாவது கனிகளைக்கொடுப்பதைப் பார்க்கிலும் கொடிகளை உருவாக்கும் தன்மையைக் கொண்டிருக்கின்றது; எனினும் மாறுபட்ட தன்மையும் காணப்படுகின்றது. சரியான கொடிகளில் கனிக்கான மொக்குகள் காணப்படுவதையும், உறிஞ்சிகளிடத்தில் இந்தக் கனிக்கான மொக்குகள் இல்லாமல் இருப்பதையும், திராட்சத்தோட்டத்திற்கான உதவியாளர்கள் ஆரம்பத்திலேயே கண்டுகொள்ளலாம் என்று நமக்குத் தெரிவிக் கின்றனர்.

இப்படியாகவே, கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களின் விஷயத்திலும் காணப்படுகின்றது. இவர்களிடம் அவர் அதிகளவிலும், அருமையான தன்மையிலும் கனிகளை உடனடியாக எதிர்பார்ப்பதில்லை. ஆயினும், கனிக்கொடுப்பதற்கு ஏதுவான பிரயாசங்களுக்கான சுவடுகள் (அ) மொக்குகள் இருக்கின்றதா எனப் பார்ப்பார். மேலும் உண்மையான திராட்சச்செடியின், சரியான கொடியாக இருப்பவர்களிடத்தில், இந்தக் கனிகளுக்குரிய மொக்குகள் ஆரம்பத்திலே வெளிப்பட்டுவிடும். கர்த்தருக்காகவும், அவருடைய நோக்கங்களுக்காகவும் ஊழியம் செய்வதின் மூலமாகக் கர்த்தருக்கு மகிமை சேர்க்கும் விதமாக கனிக்கொடுக்கத்தக்கதான விருப்பத்தைக் கொண்டிராதவர்கள் கனிக்கொடுப்பதற்குப்பதிலாக, கிறிஸ்துவுடன் ஒன்றுபடுவதன் காரணமாக உருவாகும் ஆசீர்வாதங்களையும், அறிவையும் பயன்படுத்திக்கொண்டு, மனுஷர் முன்பாக தங்களை உயர்த்திக் கொள்ளுபவர் களாகவும், மாம்சத்தில் வேஷம் போடுகிறவர்களாகவும் இருப்பவர்கள் தொடர்ந்து (கொடிகளாக) தக்க வைப்பதற்குப் பாத்திரமற்றவர்களாகக் கருதப்பட்டு, வெட்டப்பட்டுப் போவார்கள்; அதாவது எல்லா விதத்திலும் கொடிகள் என்று அடையாளங் கண்டுகொள்ளப்படுவது நிறுத்தப்படும் நிலைக்கு ஆளாகுவார்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தரால் புறக்கணிக்கப்பட்ட பிற்பாடும் தங்களது பச்சை இலைகள், புத்துணர்வு

முதலானவைகளைச் சிலகாலம் வரையிலும் தக்க வைத்துக்கொள்ளலாம். எனினும், கொஞ்சம் காலத்திற்குள்ளாக நேர்மைக்கான அனைத்துச் சுவடுகளையும் இவர்கள் இழந்துவிடுவர். இவர்கள் உலர்ந்துபோய்விடுவர். இப்படிப்பட்டவர்கள் கொடிகளாக இருப்பது நின்ற பிற்பாடு, இவர்கள் ஒருகாலத்தில் கொடிகளாகக் காணப்பட்டார்கள் என்ற உண்மை எதற்கும் பயன்படாது. காரணம், கொடிகளுடைய மரத்திற்கு/தண்டிற்கு எவ்விதமான முக்கியத்துவமும் இல்லை. அவைகள் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டுவிடும்.

கனிக்கொடுப்பதற்குரிய ஆதாரத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கும் திராட்சச் செடியின் சிறப்பான/நல்ல கொடிகளுக்கும்கூட வெட்டிவிடுதல் அவசியமாய் இருப்பது போன்று, கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் மிகவும் உண்மையானவர்களாகவும், நேர்மையுள்ளவர்களாகவும் காணப்படுகிறவர்களுக்கும் கூடக் கர்த்தருடைய பராமரிப்பும், ஒழுங்குப்படுத்தலும் அவசியப்படுகின்றது. இல்லையேல், இவர்களும் விரைவில் செடித்தண்டை வளர்க்கின்றவர்களாகிவிட்டு, அதிகமான கனிகளைக்கொடுக்கத் தவறுகின்றவர்களாய்க் காணப்பட்டுவிடுவார்கள். தான் விரும்பும் சரியான மற்றும் முதிர்ச்சியடைந்த கனிகளைக்கொடுப்பதற்கு எவ்வளவு இலைகள், முளைகள், கிளைகள் அவசியமெனத் தோட்டக்காரர் அறிந்திருப்பதுபோல, நாமும் அதிகமான கனிகளைக்கொடுப்பதற்கு ஏதுவான மிகுந்த அனுகூலமான பூரணமான சூழல் எது என்பதை நமது பரம பிதாவும் நன்கு அறிந்துள்ளார். பல்வேறு திசைகளில் நம்முடைய இலட்சியங்கள்/குறிக்கோள்கள் முளைவிடுவதை அவர் காண்கின்றார். மேலும் இந்த முளைகள் நம்மை எவ்விடத்திற்கு நடத்திடும் என்பதை நாம் அறியோம், ஆனால் அவர் அறிவார்; நம்முடைய இந்த முளைகளானது அவருடைய வழிநடத்துதலினால் கிள்ளிவிடப்படுகின்றதால், இத்திட்டங்களுக்கெனச் செலவிட நாம் நோக்கம் கொண்டிருந்த பலமும், சக்தியும், நம்மில் ஏற்கெனவே வளர ஆரம்பித்தும், வளர்ந்து கொண்டும் இருக்கும் கனிகளை முதிரப் பண்ணுவதற்கேதுவாக செலவிடப்படுகின்றது.

இந்தக் கிள்ளிவிடுதல்களினிமித்தம், கர்த்தருடைய சித்தத்திற்குள்ளாக தனது சித்தத்தை மூழ்கப்பண்ணியுள்ள தேவனுடைய உண்மையான பிள்ளை சோர்வடைவதுமில்லை, கோபமூட்டப்படுவதுமில்லை. அவன் தன்னுடைய ஞானமற்ற தன்மையைக்குறித்து அறிந்தவனாகவும், மாபெரும் தோட்டக்காரருடைய ஞானத்தின் மீது நம்பிக்கைக்கொண்டவனாகவும் இருக்கின்றான். ஆகவே, ஏதோ ஒரு திசையை நோக்கின அவனுடைய முயற்சிகளைத் தெய்வீக வழிநடத்துதலானது தடைப்பண்ணும்போது, கர்த்தருடைய சித்தமும், கர்த்தருடைய வழியும் சிறப்பானது என்றும், ஆசீர்வாதத்தையே கொண்டுவரும் என்றுமுள்ள நிச்சயத்துடன், தன்னுடைய திட்டங்கள் தடைப்பண்ணப்பட்டதைச் சந்தோஷத்துடன் எடுத்துக்கொள்வான்.

பிதாவின் பிரதிநிதியாக இயேசு, திராட்சச்செடியின் முதல் கொடிகளைக் காத்துக்கொண்டார். அவருடைய கடிந்துகொள்ளுதல்களின் (அ) ஆலோசனைகளின் வாயிலாக அப்போஸ்தலர்களைச் சுத்திகரித்தப்படியால் (அ) கிள்ளிவிட்டப்படியால், தம்முடைய 3-1/2 வருட ஊழியத்தினுடைய நிறைவின்போது, அவரால் "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்

கிறீர்கள்” என்ற வார்த்தைகளைக்கூற முடிந்தது (யோவான் 15:3). இன்னுமாக, தம்முடைய ஜெபத்தில் பிதாவிடம், “நீர் எனக்குத் தந்தவர்களை (கொடிகளாக, சீஷர்களாக, அங்கங்களாக) காத்துக் கொண்டுவந்தேன் . . . கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை” என்றும் கூறினார் (யோவான் 17:12). ஆனால் இதற்குப் பின்னர், இந்த ஜெபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, கொடியின் பராமரிப்பு மற்றும் கிள்ளிவிடுதலானது, இதே மாதிரி நமது கர்த்தராகிய இயேசுவினால் செய்யப்படுவதில்லை, மாறாக பரிசுத்த ஆவியின் – பிதா மற்றும் குமாரனுடைய ஆவியின் செயல்படுத்துதலினால் செய்யப்படுகின்றது.

ஆனால், நாம் முதலாவதாக நீதிமானாக்கப்பட்டு, பின்னர்க் கர்த்தருக்கு நம்மை அர்ப்பணிப்பதின் மூலமாக பரிசுத்தமாக்கப்படுவது மாத்திரம் போதாது. நாம் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் பிரவேசித்து, திராட்சச்செடியின் கொடிகளாகுவது மாத்திரம் போதாது. சிறிய முளையாகக் காணப்படுவதும் நல்லதுதான். கொடியாக வளர்ந்து, கொடியானது கொடிச்சுருளைவிடுவதும் நல்லது தான். எனினும் கொடி பெரியதாகவோ (அ) சிறியதாகவோ, எவ்வளவு வயது முதிர்ந்ததாகவோ (அ) இளமையானதாகவோ காணப்பட்டாலும், கனிகளை உண்டுபண்ணும் உயிர்ச்சாறானது, திராட்சச்செடி மற்றும் வாக்குத்தத்தமாகிய அதன் வேருடன் தொடர்ந்து உறவு கொண்டிருப்பதன் மூலமாகக் கிடைக்கப்பெறும் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஒருவேளை உறவிலிருந்து பிரிந்து போவோமானால், அனைத்து நம்பிக்கைகளும் உலர்ந்து போய்விடும். நாம் கிறிஸ்துவுக்குள் காணப்பட்டால் மாத்திரமே மற்றும் அவர் மூலம் தேவனுடைய சுதந்தரர்களாய்க் காணப்பட்டால் மாத்திரமே நமக்கு இவ்விஷயத்தில் பங்கு காணப்படும். மேலும் இப்படியாக மாத்திரமே நம்மால் மாபெரும் தோட்டக்காரர் நாடும் கனிகளையும் கொடுக்க முடியும். கொடியானது, “நான் முதலில் கிறிஸ்து வாயிலாக திராட்சச்செடியுடன் இணைந்து காணப்படுவது எனக்கு அவசியமாயிருந்தது. ஆனால், இப்பொழுது என்னால் தனித்து நிற்க முடியும்” எனக் கூறுவது அறிவீனமாயிருக்கும். யாரெல்லாம் தனித்து நிற்கின்றார்களோ, யாரெல்லாம் திராட்சச்செடியிலிருந்தும், மற்றக் கொடிகளிடமிருந்தும் பிரிந்து காணப்படுகின்றார்களோ, அவர்கள் சீக்கிரமாய் உலர்ந்து போய்விடுவார்கள். மேலும் திராட்சச்செடியில் நிலைத்திருப்பவர்கள், திராட்சச்செடிக்குத் தொடர்ந்து நேர்மையுடன் காணப்பட வேண்டும் மற்றும் அதே திராட்சச்செடியின் மற்ற அனைத்து உண்மையான கொடிகளுடன் ஒன்றுபட்டும் காணப்பட வேண்டும். இங்கு நாம் உண்மையான திராட்சச்செடியில் காணப்படுவதிலும், உண்மையான கொடிகளுடன் ஒன்றுபட்டுக் காணப்படுவதிலுமுள்ள முக்கியத்துவத்தை நாம் காண்கின்றோம்.

திராட்சச்செடி மற்றும் கொடிகள் பற்றின பாடம் தொடர்பான தவறான கருத்து, பல்வேறு சபை பிரிவுகளில் காணப்படும் நம்முடைய நண்பர்களினால் அடிக்கடி கூறப்படுகின்றன. இவர்கள் திராட்சச்செடியின் கொடியானது கிறிஸ்தவர்களின் பல்வேறு ‘சபை பிரிவினர்’ என்று கூறிக்கொள்கின்றனர். இது, ஒரு பயங்கரமான தவறை ஆழப்பதிய வைத்துவிடுகின்றது. அதாவது, ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனும்

இந்தக்கொடிகளில், உதாரணத்திற்கு ரோமன் கத்தோலிக்கப் பிரிவில் (அ) கிரேக்க கத்தோலிக்கப் பிரிவில் (அ) மெத்தடிஸ்ட் பிரிவில் (அ) லூதரன் பிரிவில் (அ) பிரஸ்பிட்டேரியன் பிரிவில் அங்கத்துவம் பெற்றுக்கொள்வது, அவனுக்குரிய கடமை எனும் பயங்கரமான தவறை ஆழப்பதியவைத்துள்ளது. இதற்கு மாறான சரியான கருத்து என்னவெனில், அதாவது, கர்த்தருக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனும், மெய்யான திராட்சச்செடியின் ஒவ்வொரு தனிப்பட்ட கொடியாகிறான் மற்றும் அவனுடைய ஊழியங்கள், 'சபை பிரிவு' எனும் கனிகளைக் கொண்டுவருவதற்காக அல்லாமல் மாறாக, அவனுடைய சொந்த குணலட்சணத்திலும், ஜீவியத்திலும் தேவனுடைய ஆவியின் கனிகளையே கொண்டுவருகிறதற்காகவே காணப்பட வேண்டும்.

கொடிகள் குறித்த தவறான இந்தக் கருத்தைக்குறித்து ஓர் எழுத்தாளர் பின்வருமாறு கூறுகின்றார்: "பெரியதாகவும், வளமை பொருந்தியதாகவும் இருக்கும் கனியற்ற சபைகளைத் தேவன் விரும்புவதில்லை. அவர்கள் உலர்ந்து போகும்படிக்கு விட்டுவிடுகின்றார். கிறிஸ்துவுடன் நெருக்கத்தில் காணப்படும் 'சபைகளே' விரைவாக வளர்வார்கள்." இந்தத் தவறான கருத்திலுள்ள தவறான வாதத்தைப் புரிந்துகொள்வதில் எவருக்கும் கஷ்டம் இல்லை. ஒருவேளை இது சரியான கண்ணோட்டமாக இருக்குமாயின் ஜனங்களின் எண்ணிக்கையில் பெரியதாகவும், ஆஸ்தியிலும், மனுஷர் மத்தியிலுமான கனத்திலும் மிகவும் வளமையுடையதாகவும் இருக்கும் சபை அமைப்புகளே, மிகுந்த சத்தியத்தை உடையவர்களாகவும், கர்த்தரிடத்திலிருந்து பரிசுத்த ஆவியாகிய உயிர்சாற்றை மிக நேரடியாகப் பெற்றுக்கொள்பவர்களாக இருப்பார்கள். இப்படி இருக்கும் பட்சத்தில் உரோம கத்தோலிக்க மார்க்கமானது, பரிசுத்தமானதாகவும், சிறப்பானதாகவும், கர்த்தருக்கு நெருக்கமானதாகவும் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படுவதாக இருக்க வேண்டியிருக்கும்; கிரேக்க கத்தோலிக்க மார்க்கம் இரண்டாவது இருப்பதாக உரிமைகோரும்; மெத்தடிஸ்ட் மூன்றாவதாகவும், மற்றவைகளும் இப்படியாக வரிசையில் காணப்படும். இப்படிப்பட்டதான விளக்கத்தில் இருக்கும் தவறைச் சுட்டிக்காண்பிக்க புத்தியுள்ள ஜனங்களுக்குத் தேவைப்படுவதில்லை.

கொடிகளைச் சபை பிரிவுகளுக்குப் பொருத்தும்போது ஏற்படும் முரண்பாடு களானது, கொடிகளைத் தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கும், அவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் பொருத்தும்போது, முரண்பாடாக இல்லாமல் மற்றும் இந்த உண்மை முற்றிலுமாய்க் காரணக்காரியத்திற்கு உட்பட்டதாகவும், இசைவானதாகவும் காணப்படுகின்றது. மாபெரும் தோட்டக்காரரின் பார்வையில் பிரியமாய் இருக்கும் கனிகளைக்கொடுக்கத்தக்கதாக, விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், கர்த்தருக்கான ஊழியத்திற்குரிய அர்ப்பணிப்பிலும், கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பவர்கள், தெய்வீக ஏற்பாடுகளின் காரணமாக, அடிக்கடி வேலியடைக்கப்பட்டுள்ள இடுக்கமான வழியில் தாங்கள் இருப்பதையும் மற்றும் பல்வேறு திசைகளை நோக்கின தங்களது பிரயாசங்கள் அத்திசைகளிலிருந்து மாற்றப்படுவதையும் அல்லது தங்களது நோக்கங்கள் தடைப்பண்ணப்படுவதையும் காண்பார்கள். ஆனால், இந்த அனுபவங்கள் அனைத்தும்

தங்களால் சரியாக ஏற்றுக்கொள்ளப்படுவதின் விளைவாக தாங்கள் கிருபையிலும் அறிவிலும், தேவனுடைய அன்பிலும், ஆவியின் கனிகளிலும் வளர்வதை உணர்ந்துகொள்கின்றனர். (ரோமர் 8:28)

"ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால்" என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளானது திராட்சச்செடி மற்றும் கொடிகளுக்கும் இடையிலான நெருக்கமான உறவை நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றது. திராட்சச்செடிக்கும் அதன் கொடிகளுக்கும் இடையே அப்படிப்பட்ட ஓர் ஒற்றுமை காணப்படுவதினால், நாம் ஒரு கொடியை எங்கெல்லாம் தொட்டாலும், நாம் திராட்சச்செடியையே தொடுகின்றவர்களாய் இருப்போம். அது கொடிகள் அடங்கிய ஒரு திராட்சச்செடியாகும்; இப்படியாகவே கிறிஸ்துவின் சரீரம் அநேக அங்கங்களை யுடைய ஒரே சரீரமாகக் காணப்படுகின்றது. எங்கெல்லாம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஓர் அங்கம் அல்லது ஒரு கொடி காணப்படுகின்றதோ, அங்குக் கிறிஸ்துவின் சகல பல்வேறு அம்சங்களும் காணப்படுகின்றது – ஆவியில், நோக்கத்தில், புதிய சிருஷ்டிகளெனக் காணப்படுகின்றது. கிறிஸ்துவுக்குள்ளான இந்த ஒற்றுமையே/ ஒருமையே வல்லமைக்கான, கனிக்கொடுப்பதற்கான மற்றும் மாபெரும் தோட்டக்காரராகிய பிதாவினால் கொடிகள் அங்கீகரிக்கப்படுவதற்கான இரகசியமாகக் காணப்படுகின்றது.

"என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்ற வார்த்தைகள், கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள உண்மையாய் அர்ப்பணம் பண்ணியுள்ள ஒவ்வொருவரின் இருதயத்திலும் ஆழமாகப் பதிக்கப்படுவதற்குப் பாத்திரமானதாகும். ஆனால், கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதென்பது, மாபெரும் தோட்டக்காரரின் சித்தம் அனைத்திற்கும் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுப்பதையும் மற்றும் அவருடைய ஞானம் சிறந்ததென அனுமதிக்கும் அனைத்துக் கிள்ளிவிடுதல்களுக்கும் மகிழ்ச்சியுடனும், சாந்தத்துடனும், கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுப்பதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. கிள்ளிவிடுதல் மற்றும் சிட்சைகளின் அவசியம் தொடர்பாக பெயர்பெற்ற இறையியல் வல்லுநர் டிரெஞ்ச் அவர்கள் பின்வருமாறு அருமையாய்க் கூறியுள்ளதாவது:

"இப்படியாகவே, தேவன் விஷயத்திலும், அவருடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஊழியர்கள் சிலரின் விஷயத்திலும் நிகழ்கின்றது. இவர்களுடைய ஆவியின் கிருபைகள், சராசரியான மனிதர்களுடைய கிருபைகளுக்கு அப்பாற்பட்டு இருந்தும், இன்னமும் இவர்கள் ஏன் பாடுகள்பட வேண்டுமென்றும், ஏன் இவர்களுக்குச் சோதனைகள் ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றது என்றும் சிலசமயம் மனிதர்கள் வியந்தது உண்டு. ஆனால் மற்றக் கண்களால் பார்க்க முடியாததை இவர்களிடத்தில் தேவன் காண்கின்றார்; அதாவது இன்னமும் அதிகப்படுத்துவதற்கு ஏதுவான ஆவியின் கிருபைகள் இவர்களிடத்தில் இருப்பதைத் தேவன் காண்கின்றார். மேலும் தமக்குச் சொந்தமானவர்கள் தம்மை ஒருநாள் மாத்திரமல்லாமல், நித்திய காலமாய்த் தம்மைத் துதிக்கத்தக்கதாக, தம்முடையவர்கள் பேரில் அவர் கொண்டிருக்கும் தொலைநோக்குள்ள அன்பானது, அவர்களுடைய நன்மைக்கேதுவான எதையும் தடைப்பண்ணிவிடாது. அவர்கள் கனிக்கொடுக்கும் கொடிகள் ஆவர்; மேலும் அவர்கள்

இப்படிக் கனிக்கொடுக்கும் கொடியாக இருக்கின்றபடியால், அவர்கள் இன்னும் அதிகமான கனியைக்கொடுக்கத்தக்கதாக அவர்களைக் கிள்ளிவிடுகின்றார்."

சிலசமயம் திராட்சச்செடியானது, அதனால் முதிர்ச்சியான கனிகளைக் கொடுக்க முடிகின்ற அளவையும் மிஞ்சி அதிகமான கனிகளைக்கொடுக்க முற்படும் உண்மையைக்குறித்தும் மற்றும் இதனை கிறிஸ்தவனுடைய அனுபவங்களுடனும், பிரயாசங்களுடனும் பொருத்துவது குறித்தும் H.L. ஹெஸ்டிங்ஸ் அவர்கள் பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கின்றார்:

"திராட்சச்செடியைக் குலுக்கி, அதன் அதிகப்படியான கனிகளின் சுமையினின்று அதனை விடுவித்துவிடுவதே சிறந்த வழியாகும். செடியினால் சமாளித்துக்கொள்ளும் நிலையை அடைவதுவரையிலும் மற்றும், செடியானது அதன் சுமையைத் தாங்கிக்கொள்ளும் நிலையை அடைவது வரையிலும் கிள்ளி, பிடுங்கி, கத்தரித்துவிட்டு, கனிகளைக்குறைத்துவிடுங்கள். ஒவ்வொரு கொடியும், முதிர்ச்சியடையக்கூடிய கனிகளைச் சுமந்துகொள்ளட்டும். மாறாக ஒருபோதும் முதிர்ச்சியடையாத கனிகளால் அதிகச் சுமை சுமத்தப்படாதிருப்பதாக."

இந்தக் கருத்து மற்றவர்கள் சார்பாக, கர்த்தருடைய ஊழியத்தில் ஏறெடுக்கப்படும் பிரயாசங்களுடைய கனிகள் தொடர்புடைய விஷயத்தில் மிகவும் சரியாக இருக்கின்றது. காரணம் அநேகர் போதுமான அளவுக்குக் கவனம்/சிரத்தைக்கொள்ளாததினிமித்தமாகத் தங்களது பிரயாசங்களை வீணடிக்கின்றவர்களாய் இருக்கின்றனர்.

நாம் அதிகளவில் தாலந்து பெற்றிராத காரியங்களில் ஏறெடுக்கப்படும் நம்முடைய பிரயாசங்கள், திட்டங்கள், ஏற்பாடுகளில் சிலவற்றைக் குலக்கிப்போடுவதில் விளங்கும் ஞானம் குறித்தும், நம்மால் பூரணமான பலனைக்கொண்டுவருவதற்கு ஏதுவானவைகள் மீது நமது பிரயாசங்களைச் செலுத்துவது குறித்தும், சாட்சி பகரும் விதத்தில் தாலந்துகள் உடைய அப்போஸ்தலனாகிய பவுல், "ஒன்று செய்கிறேன்" எனக் கூறுகின்றார் (பிலிப்பியர் 3:13). முடிந்தமட்டும் தான் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப் படத்தக்கதான நிலையை அடைவதும், இதே நிலையை மற்றவர்கள் அடையத்தக்கதாக தன்னுடைய பலத்தால் முடிந்த மட்டும் மற்றவர்களுக்கு உதவி செய்வதும் அப்போஸ்தலருடைய ஜீவியத்தின் ஒரே வேலையாக இருந்தது. ஆனால், மற்றவர்கள் கனிகொடுக்கத்தக்கதாக ஊழியம் புரிவதென்பது, இந்தப் பாடத்தின் பிரதானமான கருத்தல்ல. கர்த்தருடைய ஆவியின் கனிகளை நம்முடைய சொந்த இருதயத்தில் பெற்றிருப்பதும், ஆவியின் கிருபைகளை நன்கு வளர்த்தப்பட்ட நிலையில் கொண்டிருப்பதும்தான் முதல் விஷயமாக இருக்கின்றது. இது கர்த்தருடைய ஊழியத்தில் சுயத்தைப் பலி செலுத்துதலையும், வேலைகள் புரிதலையும் குறிக்கின்றது. காரணம், இப்படியாக மாத்திரமேதான் நம்முடைய தனிப்பட்ட கனிகளும், கிருபைகளும் முதிர்ச்சியை அடைவது கர்த்தருடைய ஏற்பாடாக இருக்கின்றது.

அதிகமான கனி வளர்வது என்பது, முற்றிலும் நம்மையே சார்ந்ததில்லை என்றும், நாம் அவரில் கனிகொடுக்கின்ற கொடிகளாக நிலைத்திருப்பினும் கனிகளுடைய தரமும், அளவும் நாம் நமது மனங்களுக்கு முன்பாக சரியான

இலட்சியங்களைக்கொண்டிருப்பதன் மூலமாகவும், அவைகள் நிஜமாக்குவதற்கு உண்மையாய் நாடப்படுவதன் மூலமாகவும் மேம்படுகின்றது என்றும் நமது கர்த்தர் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றார். ஆகவே அவர், "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்று கூறுகின்றார் (யோவான் 15:7). கருத்து என்னவெனில், பரம கிருபையின் சிங்காசனத்தில் இருக்கும் பிதாவிடத்தில் கேட்பதும், வாஞ்சிப்பதும்தான், நாம் திராட்சச்செடியின் உயிர்சாறாகிய பரிசுத்த ஆவியை அதிகமதிகமாய்ப் பெற்றுக்கொள்வதற்கும், ஆவியின் கனிகளை வளர்த்துக்கொள்வதற்குமுரிய வழியாய் இருக்கின்றது. இங்குப் பூமிக்குரிய நன்மையான காரியங்கள் நாடப்படுவது (அ) அடையப்படுவது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பது கவனிக்கப்படலாம். இந்தப் பூமிக்குரிய நன்மைகள் தொடர்பானவைகள் முற்றிலுமாகக் கர்த்தருடைய ஞானத்திடத்திலும், ஏற்பாடுகளிடத்திலும் விட்டுவிடப்பட வேண்டும். மேலும் அவருடைய ஜனங்கள் அதாவது, திராட்சச்செடியின் மெய்யான கொடி, பரிசுத்த ஆவிக்காகவே வாஞ்சிக்கவும், நாடவும் வேண்டும். இந்தப் பரிசுத்த ஆவியைத் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்கக்கூடும் பூமிக்குரிய பெற்றோர்களைக் காட்டிலும், பிதாவானவர் அதிகமாய்க்கொடுக்க சித்தமுள்ளவராக இருக்கின்றார். (லூக்கா 11:13)

இதற்கிடையில் நமது கர்த்தர், "என் வார்த்தைகள் உங்களில் நிலைத்திருந்தால்" எனும் வார்த்தைகளைக் கூறுவதன் மூலமாக, தம்முடைய மெய்யான கொடிகளுக்கு அல்லது சீஷர்களுக்கு வேதவாக்கியங்களின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றார். தெய்வீகக் கிருபையை நாம் நாடுவதென்பது சரியானதாகவும், அவசியமானதாகவும் மாத்திரம் இராமல், மாறாக இதற்குச் சரிசமமான நிலையில், மெய்யான திராட்சச்செடிக்குரிய தோட்டக்காரராகிய, நமது பிதாவாகிய தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் என்ன என்பது தொடர்புடைய தெய்வீக வெளிப்படுத்துதல்களை நாம் பயன்படுத்துவதும் சரியானதாகக் காணப்படுகின்றது. ஆகவேதான் அதிகமான கனிகளையும், நல்ல கனிகளையும் கொடுப்பவர்கள் விசுவாசத்தின் மூலமாக நீதிமானாக்கப்பட்டு, அர்ப்பணிப்பின் மூலம் பரிசுத்தம் பண்ணப்பட்டு, அர்ப்பணிப்பின் மூலமாக மெய்யான திராட்சச்செடியின் அங்கத்துவத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக மாத்திரம் காணப்படாமல், இன்னும் கனிகொடுப்பவர்களாக இருக்க நாடுபவர்களாக, திராட்சச்செடியில் நிலைத்திருக்க நாடுபவர்களாக, திராட்சச்செடியின் அனைத்து அம்சங்களைப் பெற்றிருக்க நாடுபவர்களாக, தேவையானபொழுதெல்லாம் உதவிக்கான கிருபைக்காக நாடுபவர்களாக, வேர்கள் வழியாய் வரும் உயிர்ச்சாற்றைத் தங்களுக்குப் பயன்படுத்துவதோடல்லாமல், தங்கள் மீது கர்த்தருடைய வார்த்தை மூலம் பிரகாசித்துக்கொண்டிருக்கும் சத்தியம் மற்றும் கிருபையின் வெளிச்சத்தைப் பயன்படுத்துபவர்களாகக் காணப்படுவார்கள். இந்த நிபந்தனைகளைப் பின்பற்றுவதன் மூலமே நாம் கனிகொடுப்பவர்களாக இருக்கமுடியும். மேலும், கனிகொடுப்பவர்களாக நாம் இருப்பதன் மூலமாக மாத்திரமே நம்மால் முடிவு பரியந்தமும் கர்த்தருடைய

சீஷர்களாக இருக்க முடியும். ஏனெனில், தற்காலத்தில் காணப்படும் சபையானது, உண்மையை, அன்பை, கீழ்ப்படிதலைக்கொண்டிருப்பதாக அறிக்கைப் பண்ணுபவர்களைக் கொண்டிருக்கும் கூட்டத்தாராக அதாவது, தகுதிக்கான தேர்வின் கீழிருக்கும் சபையாக (Probationary Church) மாத்திரம் இருக்கின்றனர் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். இவர்களுடைய அறிக்கையின் நேர்மையை நிரூபிக்கத்தக்கதாக, கர்த்தர் பரீட்சைகளைக்கொண்டுவருவார் மற்றும் தங்களது அறிக்கையின் நேர்மையை நிரூபிப்பவர்கள் மாத்திரமே, ஆலயத்தின் வாயிலில் காணப்பட்ட பொன்னினாலான திராட்சச்செடி அடையாளப்படுத்தும் மகிமையடையும் சபையின் அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

மெய்யான கொடிகளனைத்தும் தம்முடைய அன்பைக்குறித்தும், தம்முடைய அக்கறையைக்குறித்தும், அவர்களுக்கான தம்முடைய பராமரிப்புக்குறித்தும், திராட்சச்செடியில் அங்கத்துவம் அடைவதற்குரிய நிபந்தனைகளுக்கு இசைவாக அவர்கள் தங்களது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற தமது வாஞ்சையைக்குறித்தும் உணர்ந்திட நமது கர்த்தர் விரும்புகின்றார். ஆகவே, தம்முடைய அன்பைக்குறித்துப் பலமான வார்த்தைகளினால் அவர்களுக்கு உறுதிப்படுத்துகின்றார். பிதா தம்மீது கொண்டிருக்கும் அன்பை போன்றே தாமும் அவர்கள் மீது அன்பு கொண்டிருப்பதாகக் கர்த்தர் அவர்களிடம் கூறினார். இந்த அவருடைய வார்த்தைகளிலுள்ள உண்மை தன்மைக்குப் பல்வேறு சாட்சிகளும், இதோடுகூடக் கர்த்தருடைய வார்த்தைகளின் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களும் சான்றுகளாகக் காணப்பட்டாலும், இது முழுமையாய்ப் புரிந்துகொள்வதற்கு மிகவும் அற்புதமான ஒன்றாக உள்ளது. நமது கர்த்தர் இயேசு, பிதாவினால் மிகவும் அன்புகூரப்பட்டார் என்பதும், அவரைத் தமது நேசகுமாரன் என்று கூறப்பட்டதும் எப்படி மற்றும் ஏன் என்று நம்மால் உடனடியாக அறிந்துகொள்ளபடலாம். ஆனால், இதே அன்பானது, நமது ஆண்டவரால் திரும்பி நம்மிடம் செலுத்தப்படுகின்றது என்பதை நாம் அறியும்போது நம்மை மலைக்கச் செய்கின்றது. "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" (1 யோவான் 3:1). பிதாவின் அன்பை நமது கர்த்தர் இயேசு முழுமையாக வெளிப்படுத்தித் தெரிவித்தார். (யோவான் 14:7)

ஆனால், இந்த ஆழமான அன்பு, "சிறுமந்தையினருக்கு" மாத்திரமே உரியது என்ற வரையறையும் இருக்கின்றது. "தேவன் இவ்வளவாய் உலகத்தை அன்புகூர்ந்தார்" மற்றும் நமது கர்த்தர் இயேசுவும் உலகத்தை அன்புகூர்ந்தார். ஆனால், அனுதாப அன்பின் அடிப்படையிலும், அவர்களுக்கு நன்மை செய்து கொடுக்க வேண்டும் என்ற வாஞ்சையிலும்தான் ஆகும். ஆனால் இங்குச் சபை மீது கர்த்தர் கொண்டதாகக்கூறும் அன்பானது முற்றிலும் வேறே அன்பாகும். அவர்

சொல்லியிருக்கும் அன்பு, அவருக்கெனத் தங்களை முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களுக்கு மாத்திரமே காணப்படுகின்றது. உண்மையில் இந்த அர்ப்பணிப்புதான் அவருடைய விசேஷித்த அன்பைப் பெற்றுக்கொள்வதற்குரிய இரகசியமாகும். ஒரே பேறான குமாரனைப் பிதா அன்புகூர்ந்தார். காரணம் அவர், "மரணபரியந்தம் அதாவது, சிலுவையின் மரணபரியந்தம்" கீழ்ப்படிதல், நம்பிக்கை மற்றும் விசுவாசத்தினால் நிறைந்தவராகக் காணப்பட்டார். அதுபோலவே, அதே அன்பானது, நீதிமானாக்கப்பட்டு ஆண்டவரின் ஆவியினால் நிரப்பப்பட்டு, அவருடைய அடிச்சுவட்டில் நடப்பதற்கும், தங்களது சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்தொடர விரும்புகிறவர்களாகக் காணப்படுபவர்கள் மீதும் கடந்துவந்துள்ளது. நம்முடைய அருமையான மீட்பரிடத்திற்குக் கடந்துவந்த அதே தேவனுடைய அன்பானது, மேற்கூறப்பட்டவர்களிடத்திலும் கடந்துவருகின்றது மற்றும் அவர்களிடத்தில் மீட்பருடைய அன்பும் கடந்துவருகின்றது. இவர்களுக்கே, "எல்லாம் உங்களுடையது; நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்;" "தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?. . . . கிறிஸ்துவே மரித்தவர்" என்ற நல்ல செய்தியும் கடந்து வருகின்றது (1 கொரிந்தியர் 3:22-23; ரோமர் 8:33-34).

இந்த விசேஷமான அன்பானது, இந்த வகுப்பாருடைய அர்ப்பணிப்பு மற்றும் கீழ்ப்படிதலின் அடிப்படையில் காணப்படுவதுபோன்று, இந்த அன்பானது, அர்ப்பணிப்பு மற்றும் கீழ்ப்படிதலின் ஆவி தொடர்ந்து காணப்படுவதையும் சார்ந்துள்ளது. ஒருவேளை அவர்களது பக்தி தணிந்துபோய், சுயத்தின் மீதான அன்பினாலும், உலகத்தின் ஆவியினாலும் நிரப்பப்பட்டுவிடுவார்களானால், இதற்கேற்ப அவர்கள் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகின்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் கர்த்தருடைய இந்த விசேஷமான அன்பினின்று விலகிப்போய்விடுபவர்களாக இருப்பார்கள். ஆகவேதான், "என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்" (யோவான் 15:9) என நமது கர்த்தர் கூறுகின்றார்: இந்த வார்த்தைகள், கர்த்தருடைய அன்பை நாம் இழந்துவிடுவதற்கும், தள்ளப்பட்டுப் போவதற்கும், தேவனைப் பிரதானமான அன்பினால் அன்புகூருபவர் களுக்கு வைத்துள்ள மகா மேன்மையானவைகளுக்கென நமது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்த தவறிப்போவதற்கும் நமக்கு வாய்ப்புள்ளது என்பதைத் தெரிவிக்கின்றது. (2 பேதுரு 1:4-11; 1 கொரிந்தியர் 9:27)

நாம் கொண்டிருக்கும் அன்பானது, கீழ்ப்படிதலில் வெளிப்படும் என்பதை நாம் மனதில்கொள்வது முக்கியமாகும். ஆகவே, கீழ்ப்படியாமை என்பது, கர்த்தருடைய

கண்ணோட்டத்தில் அன்பில்லாமல் இருப்பதற்கான சான்றாக இருக்கின்றது. மேலும் இந்தச் சான்று நியாயமான கண்ணோட்டத்தின்படியான கணிப்பு என்று நாம் அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். சிலர் கேட்கலாம், ஒருவேளை நாம் அறியாமையின் காரணமாகக் கீழ்ப்படியாமல் இருந்தால், இந்தக் கணிப்பு எவ்வாறு பொருந்தும்? நம்முடைய அறியாமைக்குக் கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்பதே நமது பதிலாகும்: எப்படியெனில் முதலாவதாக, "தேவனுடைய மனுஷன் (நன்கு தகவல் பெற்றவனாகவும்) தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக" அவர் நமக்குச் சத்தியத்தின் வார்த்தைகளைக் கொடுத்துள்ளார் மற்றும் இரண்டாவதாக, அவருடைய பார்வைக்குப் பிரியமானவைகளை நாம் செய்திட நமக்கு உதவி செய்யும் அவருடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கும், பரிசுத்தத்தின் ஆவியை அடைவதற்கும் உதவிகள் அருளப்படுமென நமக்கு அவர் வாக்களித்துமுள்ளார் (2 தீமோத்தேயு 3:16,17; யோவான் 16:13). ஆகவே, கர்த்தருடைய வார்த்தைகள் தொடர்புடைய விஷயத்தில் அஜாக்கிரதையுடன் இருப்பதென்பது, அன்பு இல்லாமைக்கான ஒரு சான்றாக இருக்கின்றது. தாம் பிதாவினுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்ததே, தாம் பிதாவின் நேசக்குமாரனாக, பிதாவின் அன்பில் நிலைத்திருந்து, தொடர்வதற்கான காரணமாக இருக்கின்றது என்றும், ஒருவேளை நாமும் கர்த்தருடைய அன்பில் நிலைத்திருந்து, அவருடைய சிங்காசனத்திலும், மகிமையிலும் பங்கடைவோமானால், நாமும் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலுடன் இருப்பதை எதிர்பார்ப்பார் என்றும் நமது கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார்.

"என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" (யோவான் 15:11). நமது கர்த்தருடைய கட்டளைகளும், அறிவுரைகளும், நம்மைப் பயப்படுத்துவதற்கும், நம்முடைய சந்தோஷத்தை எடுத்துப்போடுவதற்கும் நோக்கமுடையவைகள் அல்ல. மாறாக மிகவும் கனிகொடுக்கின்ற கொடிகள் நன்கு அறிந்திருக்கின்றதுபோல, கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதும், இப்படியாக அவரிலும், அவருடைய அன்பிலும் நிலைத்திருப்பதின் வாயிலாக அடையப்பெறும் சிலாக்கியங்களும், மாபெரும் சந்தோஷமாகும் – உலகம் அளிக்கும் அனைத்து அற்பத்தனமான சந்தோஷத்திற்கும் மேலான சந்தோஷமாகும். இது எல்லாப் புத்திக்கும் எட்டாததும், இருதயத்தில் ஆளுகை செய்கிறதுமான சந்தோஷமாகவும், சமாதானமாகவும் இருந்து, தற்போதுள்ள ஜீவியம் பற்றியது மாத்திரமல்லாமல், இனிவரப்போகின்ற ஜீவியம் பற்றியதுமான வாக்குத்தத்தத்தையும், நிச்சயத்தையும் கூடவே கொண்டுவருகின்றதாகவும் இருக்கின்றது.

# மெய்யான திராட்சச்செடி மற்றும் அதன் கனி

## யோவான் 15:1-12

### *"நீங்கள் மிகுந்த கனிகளைக்கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்."* யோவான் 15:8

நினைவுகூருதலின் இராப்போஜனத்தை நிறுவின பிற்பாடு, கர்த்தரைக் காட்டிக்கொடுப்பதற்கு எனப் புறப்பட்டுப் போய்விட்ட யூதாஸ் தவிர, கர்த்தரும், அவருடைய சீஷர்களும் மேல் வீட்டு அறையிலிருந்து புறப்பட்டுப்போய், கெத்செமனே தோட்டத்திற்குப் போனார்கள். கர்த்தர் தம்முடைய சீஷர்களிடம் கூறின பல்வேறு காரியங்களினிமித்தமும், சமீபித்திருக்கிற தம்முடைய மரணத்தைக் குறித்து அவர் பேசினவைகளினிமித்தமும், சீஷர்களின் இருதயம் கலங்கியிருந்ததினாலும் மற்றும் தாம் சீஷர்களை விட்டுப் பிரியவேண்டியிருந்தது குறித்தும், அவர்களுடைய எதிர்க்கால அனுபவங்கள் குறித்தும் கர்த்தரும் மனதில் கொண்டிருந்ததினாலும், அவர் திராட்சச்செடியின் உவமையை அவர்களுக்குக் கூறினார். கர்த்தருடைய மற்ற உவமைகளைப் போலவே, இதுவும் அவர்கள் அனைவராலும் ஏதோ ஒன்றை வழியில் பார்த்து, இந்த உவமையின் காரியங்களைக் கூறினார் எனச் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். போகும் வழியில் காணப்பட்ட திராட்சத்தோட்டங்களானது, இவ்வுவமை பேசப்படுவதற்குத் தூண்டியிருக்கலாம் எனச் சிலர் எண்ணுகின்றனர். இன்னும் சிலர், கர்த்தரும், சீஷர்களும் மாபெரும் பொன்னினால் செய்யப்பட்ட திராட்சச்செடியை உடைய ஆலயத்தின் பொன்னினாலான நுழைவாயிலை அநேகமாய்க் கடந்துப் பிரயாணித்திருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். இந்த நுழைவாயிலில் காணப்படும் பொன்னினாலான திராட்சச்செடி குறித்து யோசப்பஸ் அவர்கள்: "அதன் குலைகள் மனிதனுடைய உயரத்திற்குரிய உயரம் கொண்டிருந்தது" என்று விவரிக்கின்றார். வேறொரு யூத எழுத்தாளர் பின்வருமாறு கூறுகின்றார் . . . "இலைகளும், மொக்குகளும் மங்கலான செந்நிற பொன்னினாலும், அதன் குலைகள் மஞ்சள் நிற பொன்னினாலும், அதன் திராட்சப்பழங்கள் விலையேறப்பெற்ற கற்களினாலும் செய்யப்பட்டிருந்தது." இன்றைய நாட்களில் ஐசுவரியவான்களால், ஆலயங்களுக்கு ஜன்னல்கள் காணிக்கையாக வழங்கப்படுவதுபோன்று, அன்று ஐசுவரியவான்களால் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட பொன்னினாலான இலை (அ) கொடி (அ) குலை காரணமாக, நுழைவாயிலில் காணப்பட்ட பொன்னினாலான திராட்சச்செடியானது வளர்ந்துகொண்டிருந்தது என யூத அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாம் மெய்யான திராட்சச்செடியாக இருப்பதாகவும், தம்முடைய பிதா மெய்யான திராட்சச்செடியை நட்ட மெய்யான திராட்சத்தோட்டக்காரராக இருப்பதாகவும் மற்றும் தம்முடைய பின்னடியார்கள் அந்தத் திராட்சச்செடியின் மெய்யான கொடிகளாக இருப்பதாகவும் கர்த்தர் கூறுகின்றார். "மெய்யான திராட்சச்செடி" என்ற வார்த்தையானது, பொய்யான திராட்சச்செடி ஒன்றிருக்கின்றது எனும்

கருத்தைக்கொடுக்கின்றதாய் இருக்கின்றது. மேலும் இந்தக் கருத்தானது வெளிப்படுத்தின விசேஷத்தில் அடையாளங்கள் வாயிலாகக் கர்த்தருடைய ஜனங்களுக்கு, நம்முடைய கர்த்தர் அளித்திட்ட கடைசி செய்தியில், அழுத்தத்துடன் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷத்தில், "பூமியின் திராட்சப்பழங்கள்" அறுக்கப்படுவதையும், அதை இந்த யுகத்தின் முடிவில் தேவனுடைய கோபாக்கினை எனும் பெரிய ஆலையில் போடப்படுவதையும் குறித்துக் கர்த்தர் பேசியுள்ளார் (வெளிப்படுத்தல் 14:19). ஆகவே "மெய்யான திராட்சச்செடி" என்ற கர்த்தருடைய வார்த்தையை, அப்போஸ்தலர்களால் கிரகித்துக்கொள்ள முடிந்ததைக்காட்டிலும் ஆழமான அர்த்தம் காணப்பட்டிருக்க வேண்டும். பூமிக்குரிய பொய்யான பூமியின் திராட்சச்செடியும், பிதாவினால் நடப்பட்ட மெய்யான திராட்சச்செடியும், இரண்டும் வளர்ந்திருக்கிற காலப்பகுதியில் நாம் வாழ்ந்துக் கொண்டிருப்பதினால், இந்த இரண்டு திராட்சச் செடிகளுக்கு இடையிலான வித்தியாசத்தைப் பார்ப்பதற்கும் மற்றும் பூமியின் திராட்சச்செடி என்பது, பரம திராட்சச்செடிக்கான போலி என்பதைப் பார்ப்பதற்கும் உரிய வாய்ப்பை நாம் பெற்றிருக்கின்றோம். இந்த விஷயத்தை நாம் எந்தளவுக்குத் தெளிவாகப் புரிந்துக்கொள்கின்றோமோ, அவ்வளவுக்குக் கர்த்தருடைய (இந்தத் திராட்சச்செடி பற்றின) உவமையைப் புரிந்துக்கொள்ள நாம் உதவப்படுகின்றவர்களாய் மாத்திரமல்லாமல், அதனை நம்முடைய அன்றாட ஜீவியத்தில் செயல்படுத்தவும் நாம் உதவப்படுகின்றவர்களாய்க் காணப்படுவோம். பொய்யான திராட்சச்செடியானது, தெய்வீகமான தோட்டக்காரருடைய பராமரிப்பின் கீழ்க் காணப்படாததால், பொய்யான திராட்சச்செடி (அ) பொய்யான கொடிகள் மற்றும் பொய்யான கொள்கைகள் மூலம் நாம் வஞ்சிக்கப்பட்டுவிடுவதற்கும், தவறாய்ப் புரிந்துகொள்வதற்கும், தவறாய்ப் பொருள் கொள்வதற்குமுரிய அபாயத்தில் நாம் இல்லை.

## பூமியின் திராட்சச்செடி

பூமியின் திராட்சச்செடி என்பது, பூமிக்குரிய ஞானத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட பெயரளவிலான கிறிஸ்தவ அமைப்பாகும். இதன் கொடிகள், கிறிஸ்தவ மண்டலத்தின் பல்வேறு பிரிவுகள் மற்றும் கூட்டத்தினரைக் குறிக்கின்றது. இதன் கனிகளானது, ஆலயங்கள், மருத்துவமனைகள், அநாதை இல்லங்கள், சிறிய ஆலயங்கள், தலைமை கிறிஸ்தவ ஆலயங்கள், ஜெபக் கூடாரங்கள் முதலியவைகளையும், அரசியல் வல்லமை, மனுஷர் மத்தியில் கனம், ஆஸ்தி மற்றும் சமுதாய அந்தஸ்து என்பவைகளையும் குறிக்கின்றது. பொய்யான திராட்சச் செடியானது உலகத்தில் மகா பெரியதாகவும், செல்வாக்குமிக்கதாகவும் காணப்படுகின்றது; மற்றும் அதன் கொடிகளில், உலகத்தின் ஆவி ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த உலகத்தின் ஆவியானது, அதன் சகல காரியங்களை வழிநடத்துகின்றதாயும், முற்றிலும் மோசமானதாக இல்லை என்றாலும், முற்றிலும்

உலகப்பிரகாரமாக இருக்கும் கனிகளைக் கொடுப்பதற்கு உதவுவதாகவும் இருக்கின்றது. இந்த கனிகள் உலகப்பிரகாரமாக இருப்பதினாலும், பரத்துக்குரியதாய் இருப்பதைப்பார்க்கிலும் நடைமுறை சார்ந்ததாக இருப்பதினாலும் விரும்பவும் படுகின்றது, அங்கீகரிக்கவும் படுகின்றது. இந்தப் பொய்யான திராட்சச்செடியானது அருமையாக வளர்ந்துள்ளது, 300 கொடிகளைக் கொண்டுள்ளது மற்றும் 400 மில்லியன் ஆதரவாளர்கள் இருப்பதாகவும் கூறிக்கொள்கின்றது. மேலும், அதன் கணக்கற்ற சொத்துக்களை வைத்தும், அதன் ஆதரவாளர்களை வைத்தும் பார்க்கையில், உலகத்தின் ஆஸ்திகள் மீது, அதற்கு அதிகாரம் இருக்கின்றது எனச் சொல்லப்படலாம்.

பூமியின் திராட்சச்செடியானது, மகா பெரியதாகவும், அருமையானதாகவும் மனுஷருடைய கண்களுக்குக் காணப்படுகின்றது. ஆனால், அறுவடை காலமோ, இந்தப் பெயரளவிலான அமைப்புகள், பிதாவின் வலது கையினுடைய கிரியையாகிய திராட்சச்செடி அல்ல என்பதைக் காண்பித்து விடும்; மேலும், அறுவடை காலமானது, இந்தப் பெயரளவிலான அமைப்புகள்தான், கர்த்தரால் (வெளிப்படுத்தின விசேஷத்தில், படத்தோற்றமாக விவரிக்கப்பட்டுள்ளப்படி) வேரோடு பிடுங்கப்பட்டு, அழிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ள அமைப்பு என்பதைக் காண்பித்து விடும். சமீபித்துக் கொண்டிருக்கும் மகா உபத்திரவக் காலத்தில் அதாவது, வேத வாக்கியங்கள் போதிக்கின்றன என நாம் நம்புகின்றபடி, இப்பொழுது துவங்கி உலகத்தின் மீது பத்து வருடங்கள் முழுமையாய்க் காணப்படும் எனச் சொல்லப்படும் மகா உபத்திரவக் காலத்தில், அதாவது தேவனுடைய கோபாக்கினை எனும் பெரிய ஆலையிலிருந்து வரும் பாபிலோனின் திராட்சப்பழங்களுடைய இரத்தம் என்பது, உலகத்திற்கான உபத்திரவம் மற்றும் கடுந்துயரத்தின் பெரும் வெள்ளத்தைக் குறிக்கின்றதாய் இருக்கும். எனினும் அக்கால கட்டத்தில் மெய்யான திராட்சச்செடியும், அதன் கொடிகளும் மகிமையடைந்துவிடுவார்கள் மற்றும் அவர்கள் சரியான கனிகளைக் கொடுத்ததின் விளைவுகள் என்பது, பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஆசீர்வாதங்களைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

"மெய்யான திராட்சச்செடியைக்" குறித்தும், அதன் கொடிகளாக நமக்கு அதனோடு இருக்கும் உறவைக் குறித்தும், மாபெரும் தோட்டக்காரர் எதிர்ப்பார்த்திடும் கனியாகிய குணலட்சணத்தைக் குறித்துமுள்ள, நம்முடைய கர்த்தருடைய உவமைகளில் கடைசி உவமையான இது, நமக்கு மிகுந்த நன்மையைத் தரத்தக்கதாகவும், நம்மைப் பெலப்படுத்தத்தக்கதாகவும், நம்மை உற்சாகப்படுத்தத் தக்கதாகவும், அதன் நோக்கத்திற்கு ஏற்ப நமக்கு உதவத்தக்கதாகவும் நாம் கவனமாய்க் கவனிப்போமாக.

## மெய்யான திராட்சச்செடி

மெய்யான திராட்சச்செடியின் கொடிகள் என்பது, பிரிவுகள் கூட்டத்தாரில்லை. மேலும் கர்த்தருடைய ஜனங்களாக இருப்பவர்கள், மனுஷர்களுடைய இந்த அமைப்புகளில் ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது, எதிராளியானவனுடைய

வஞ்சனையாக மாத்திரமே இருக்கின்றது. அப்போஸ்தலர்கள் லுத்தரன்களாக, மெத்தடிஸ்டுகளாக, பிரஸ்பெட்டேரியர்களாக இராததுபோல, கர்த்தருடைய பின்னடியார்களில் எவரும் கூட இப்படியாகக் (பிரிவினர்களாக) காணப்படக்கூடாது. மேலும் எதிராளியானவனுடைய தவறான போதனைகளில் நாம் குருடாக்கப்பட்டிருந்த படியினால், இப்படிப்பட்டதான தவறில் தேவனுடைய உண்மையான பிள்ளைகள் (நாம்) காணப்பட்டிருந்தோம். அப்போஸ்தலர்கள் ஒருவரோடொருவர் இணைந்து கொள்ளவில்லை. மாறாக ஒவ்வொரு அப்போஸ்தலரும் இருதயத்திலும், விசுவாசத்திலும், அன்பிலும் கர்த்தருக்கான பக்தியிலும் ஒன்றுபட்டு இருந்தார்கள். அதுபோலவே நாமும் அப்போஸ்தலர்களுடன் இணைந்துகொள்ளவுங்கூடாது. நான் பவுலைச் சார்ந்தவன், நான் பேதுருவைச் சார்ந்தவன் என்றும் கூறவுங்கூடாது. மாறாக ஒவ்வொருவரும் ஓர் அங்கமாக, ஒரு கொடியாகத் தனிப்பட்ட விதத்தில் கர்த்தருடன்தான் இணைந்துகொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் கனிக்கொடுக்கத்தக்கதாகத் திராட்சச்செடியின் உயிர்சாற்றைப் பெற்றிருக்க வேண்டும். கர்த்தர் பிரியப்படும் உண்மையான கனிகளைக் கொடுக்கும் விஷயத்திற்கு சபைப் பரிவு எனும் உயிர்ச்சாறு உதவுவதாக இராமல், மாறாக இடையூறாக மாத்திரமே இருக்கிறது. இதனால் மெய்யான திராட்சச்செடியின் எந்தக் கொடிகளும், தவறுதலாகப் பூமியின் திராட்சச்கொடியாகிய பெயரளவிலான சபை அமைப்புடன் இணைந்து இருக்காது என்று நாம் சொல்லவரவில்லை. இப்படியாகவும் கொடி இருக்கின்றது என்பதையும் நாம் ஒப்புக்கொள்கின்றோம்; மற்றும், "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படி, அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்று கர்த்தருடைய குரல் அழைப்பதையும் நாம் ஒப்புக்கொள்கின்றோம். தாய் மற்றும் மகள்கள் மீது வரவிருக்கும் மாபெரும் உபத்திரவத்தை, இவ்வழைப்பில் கர்த்தர் பேசுகின்றார்.

கொடிகள் என்பது சபை பிரிவுகளையும், கூட்டத்தினரையும் குறிக்காமல் மாறாக, கர்த்தருடன் ஒன்றுப்பட்டுள்ள தனிநபர்களைக் குறிக்கின்றபடியால், இந்த உவமை போதிப்பது என்னவெனில் நமது கர்த்தர் சபை பிரிவுகளையும், கூட்டங்களையும் கிள்ளிவிடாமல், மாறாக தனிப்பட்ட கிறிஸ்தவர்களையேதான் கிள்ளிவிடுகின்றார். அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, எங்கெல்லாம் காணப்பட்டாலும் சரி, அவர்களை அவர் கிள்ளிவிடுகின்றார். "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" (2 தீமோத்தேயு 2:19). இவ்விஷயம் தொடர்பாக, "என்னில் கனிக்கொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிக்கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக்கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார்" (கிள்ளிவிடுகின்றார்) என்று கர்த்தருடைய வார்த்தை காணப்படுகின்றது (யோவான் 15:2). நம்முடைய இரட்சிப்பும், கர்த்தருடனான நம்முடைய உறவு நிலையும் தனிப்பட்ட விதத்தில் மற்றும் தனிப்பட்ட காரியங்களாகவே இருக்கின்றது என வேத வாக்கியங்கள் அனைத்தும் நமக்குப் போதிக்கின்றன. நாம்

சபையோராகவும், கூட்டங்களாகவும், சபை பிரிவாகவும், குடும்பங்களாகவும் இரட்சிக்கப்படுவதில்லை என்றும், மாறாக நாம் உயிர்சாற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், நாம் ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், நாம் கர்த்தருடைய சரீரமாகிய சபையின் அங்கத்தினராகக் கருதப்பட வேண்டுமெனில், நாம் தனிப்பட்ட விதத்தில் திராட்சச்செடியுடன் இணைந்திருக்க வேண்டுமென்றும் வேதவாக்கியங்கள் நமக்குப் போதிக்கின்றன.

## நம்முடைய ஒற்றுமைக்கான அநேக உதாரணங்கள்

தமக்கும், தம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்களுக்கும் இடையிலுள்ள ஒற்றுமையை விவரிப்பதற்கென, அனைத்து ரகமான உதாரணங்களையும் கர்த்தர் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இயற்கையின் கனிப்பொருள் பெரும் பிரிவிலிருந்து (Mineral Kingdom) அவர் உதாரணத்தை வழங்குகின்றார். அதாவது நாம் தேவனுடைய ஆலயமாக இருக்கத்தக்கதாக, அஸ்திபாரமும், மூலைக்கல்லாகவும் இருக்கும் தம் மேல், நாம் ஜீவனுள்ள கற்களாக ஒன்றாய்க் கட்டப்பட்டுள்ளதைக் குறித்துக் கூறியுள்ளார். மிருகங்கள் பிரிவிலிருந்தும் (Animal Kingdom) நமது கர்த்தர் இந்த ஒற்றுமைக்கான உதாரணத்தை எடுக்கின்றார். அதாவது, தம்மை நல்ல மேய்ப்பனுக்கு ஒப்பிட்டு, தம்முடைய உண்மையான பின்னடியார்களை, தம்முடைய பராமரிப்பின் கீழ், தம்முடைய ஐக்கியத்தில் ஒன்றுபட்டிருக்கும் ஆடுகளுக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். இந்த ஒற்றுமை குறித்த உதாரணத்தை அவர் தாவரங்களின் பிரிவிலிருந்தும் (Vegetable Kingdom) எடுக்கின்றார். அதாவது தம்மைத் திராட்சச்செடி என்றும், தம்முடைய உண்மையான சீஷர்கள் கொடிகள் என்றும் கூறியுள்ளார். குடும்ப உறவிலிருந்து, உண்மையான கணவன் மற்றும் உண்மையான மனைவி குறித்தும் இருதயத்திலும் மற்றும் அனைத்து விஷயத்திலும் அவர்களது முற்றும் முழுமையான ஒன்றுப்பட்ட நிலையைக் குறித்தும் உதாரணமாக எடுத்துக் கூறியுள்ளார். அதே குடும்ப உறவிலிருந்து, தகப்பன் சிருஷ்டிகரைக் குறிக்கின்ற விதத்திலும், மூத்தக் குமாரன் தம்மைக் குறிக்கின்ற விதத்திலும், சகோதரர்கள் தம்முடைய அனைத்துப் பின்னடியார்களையும் குறிக்கின்ற நிலையிலும் இருக்கும் மற்றுமொரு உதாரணத்தை எடுத்துக்கூறியுள்ளார். மனித சரீரத்திலிருந்து நமக்கு இன்னுமொரு உதாரணமும் இருக்கின்றது. அதாவது கிறிஸ்துதாமே தம்முடைய சரீரமாக இருக்கும் சபைக்குத் தலையாக இருக்கின்றார். ஏனெனில் அப்போஸ்தலர் கூறுவதுபோல, நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் தனித்தனி அங்கங்களாக இருக்கின்றோம். இவைகளையெல்லாம் நமது விசுவாசமானது, எந்தளவுக்குக் கிரகித்துக்கொள்கின்றதோ மற்றும் இவைகளின் உண்மைத்தன்மையை நாம் எந்தளவுக்கு உணர்ந்துக்கொள்கின்றோமோ, அதேயளவுக்கு நம்மில் நற்கிரியையை ஆரம்பித்தவர், அதை நிறைவேற்றுவதற்கு விருப்பமும், வல்லமையையும் கொண்டிருக்கின்றார் என்பதில் நாம் உறுதியான விசுவாசமும், நம்பிக்கையும் கொண்டிருப்போம். நேர்மையான மற்றும் கீழ்ப்படிதலுள்ள இருதயம் கொண்டவன் விசுவாசம் வைக்கும்போது, தேவையானபொழுதெல்லாம்,

சோதனையான ஒவ்வொரு வேளையிலும் பிரச்சனையான மற்றும் குழப்பமான ஒவ்வொரு வேளையிலும், ஜீவியத்தின் சகல விஷயங்களிலும் தனக்குப் பலத்தையும், கிருபையையும் பெற்றிருக்கின்றான். அதாவது சமநிலையில் இருப்பதற்கெனப் (கப்பலில், இரயில் பாதையடியில்) போடப்பட்டிருக்கும் பாரம்/சரளைக்கல்லை நாம் பெற்றிருப்போம்; மற்றும் ஜீவியத்தின் சகல அனுபவங்களிலிருந்து, கசப்பிலும், தித்திப்பிலும் நன்மையை அடைய நமக்கு உதவிடும்.

தம்முடைய நாமத்தில், தம்முடைய சீஷர்களில் இரண்டு அல்லது மூன்று பேர் ஒன்றுகூடினால், அவர்கள் சபையாக (அ) கிறிஸ்துவின் சரீரமாக இருக்கின்றனர் என்றும், அவர்களுடைய இருதயங்கள் எந்தளவுக்கு நேர்மையாகக் காணப்பட்டு, தம்முடைய வழிநடத்துதலை நாடுகின்றதோ, அந்தளவுக்கு அவர்களை ஆசீர்வதிக்கத்தக்கதாக (தலையாக), தாம் அவர்களோடு காணப்படுகின்றார் என்றுமுள்ள நமது கர்த்தருடைய வார்த்தைகளானது பின்வருமாறு எண்ணிக்கொள்ள வழிநடத்துகின்றது; அதாவது எங்கெல்லாம் அவருடைய அங்கங்கள் இரண்டு அல்லது மூன்று பேர் காணப்படுகின்றார்களோ, அங்குத் திராட்சச்செடியின் உருவகத்தை நாம் பார்க்கலாம்; மேலும் அந்த இரண்டு அல்லது மூன்று பேருக்குக் கொடிகளுக்கான ஆசீர்வாதங்கள் அனைத்தும், கனிக்கொடுப்பதற்கான சிலாக்கியங்கள் அனைத்தும் கிடைக்கும். எனினும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துள்ளவர்கள் அடங்கிய ஒவ்வொரு சிறு கூட்டத்தார் மத்தியிலும், மெய்யான கொடிகள் மாத்திரம் காணப்படத்தக்கதாக முழுமையான கிள்ளிவிடுதல்களும், முழுமையாய் எரிக்கப்படுதலும் காணப்படும் என்று நாம் புரிந்துக்கொள்ள வேண்டும் எனக் கர்த்தர் விரும்பவில்லை. நம்மைத் தனித்தனியாகவும், ஒட்டுமொத்தமாகவும் கையாளுகின்றார் என்றும், அவருடனான நமது தனிப்பட்ட உறவைத் தக்கவைப்பது என்பது அவருடனான ஐக்கியம் மற்றும் உறவின் பலன்களில் ஒன்றாகிய பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதன் முலமாக, அதாவது திராட்சச்செடியின் உயிர்சாற்றைப் பெற்றுக்கொள்வதன் மூலமாக மாத்திரமே என்பதும்தான், அவர் தெரிவிப்பவைகளாகும்.

பரிசுத்த ஆவியை நாம் நல்லதும், உத்தமுமான இருதயத்திற்குள் பெற்றுக்கொள்ளும்போது, விளைவு கனிக்கொடுப்பது என்பதாக இருப்பினும், நமது கர்த்தர் கொடுத்துள்ள உதாரணமானது, சிலர் திராட்சச்செடியின் மெய்யான கொடிகளாக ஆகியும், கவனிக்கத் தவறிப்போய், கனிக்கொடுக்கும் தன்மை இல்லாமல் காணப்படுகின்றனர் என்று போதிக்கின்றது. சில சமயம் நல்ல அடித்தண்டு மற்றும் வேரிலிருந்து வளரும் ஆரோக்கியமான மற்றும் திடகாத்திரமான கொடியானது, கனிகொடுக்கும் தன்மை இல்லாமல் காணப்படுகின்றது. அனுபவமிக்க கண்களையுடைய தோட்டக்காரர், திராட்சக்குலைகளைக் கொணரும் மொக்குகளுக் கும், இலைகளை மாத்திரம் கொணரும் மொக்குகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் அறிகின்றார். கனிக்குரிய மொக்குகள் அற்றவைகள் "உறிஞ்சிகள்" என்று அழைக்கப்படுகின்றன; காரணம் இவைகள் திராட்சச்செடியின் சாற்றை மாத்திரம் உறிஞ்சிக் கொள்கின்றது மற்றும் தோட்டக்காரரால் நாடப்படும் எவ்விதமான

கனிகளைக் கொடுப்பதுமில்லை. இவைகள் கிள்ளிவிடப்படுகின்றன அல்லது வெட்டிவிடப்படுகின்றன, அதாவது வெளிப்புறமான அழகு தோற்றத்திற்கெனத் திராட்சச்செடியின் சாறு வீணடிக்கப்படாமல், மாறாக கனிக்கொடுக்கும் நோக்கத்திற்கெனச் சேமித்து வைக்கப்படத்தக்கதாகக் கிள்ளிவிடப்படுகின்றன அல்லது வெட்டிவிடப்படுகின்றன. உண்மையில் இந்த உறிஞ்சிகள் போன்று, கிறிஸ்தவர்களென அறிக்கைப் பண்ணிக்கொள்ளும் வகுப்பார் காணப்படுகின்றனர். இவர்கள் தங்களால் முடிந்தமட்டும் திராட்சச்செடியின் நீதியைச் சுயநலத்துடன் தங்களுக்குரியதாக்கிக் கொண்டு, இலைகள் அல்லது அறிக்கைகள் பண்ணுவதன் மூலமாக, உலகத்தில் வெளிவேஷமிட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால் கர்த்தரால் எதிர்ப்பார்க்கப் படுகின்றதும், பலிச் செலுத்துவதன் மூலமாக மாத்திரமே உண்டாக்கப்படுகின்றதுமான கனிகளைக் கொடுக்கும், எண்ணம் கூட இல்லாதவர்களாய்க் காணப்படுவார்கள்.

## கிள்ளிவிடப்படுவதற்குரிய நோக்கம்

உறிஞ்சிகள் தவிர, கனிக்கான மொக்குகளைக்கொண்டிருக்கும் சில கொடிகளானது, ஒருவேளை அதன் போக்கின்படியே விடப்பட்டு, கொடிகளாக மாத்திரம் வளரும்படி விடப்பட்டால், நன்கு கனிந்த அளவிலுள்ள கனிகளை ஒருபோதும் கொடுப்பதில்லை. ஆகவே ஞானமுள்ள தோட்டக்காரர் கனிக்கான மொக்கினைக் கண்டு, அதில் மகிழ்ச்சியடைந்து, கொடிக்குப் பாதிப்பு ஏற்படுத்த வேண்டும் என்றில்லாமல், மாறாக அதனை அதிகமான கனிக்கொடுக்கத்தக்கதாக, ஆக்கத்தக்கதாக, கனிக்கான மொக்குகளுக்கு மேலாகக் காணப்படும் முளைகளைக் கிள்ளி எறிந்துவிடுகின்றார். இதுபோலவே விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பின் மூலமாகக் கர்த்தருடன் இணைந்து கொடிகளென ஏற்றுக்கொள்ளப்பட்டு, கர்த்தர் எதிர்ப்பார்க்கும் நற்கனிகளைக் கொடுப்பதற்கு வாஞ்சிக்கும் கொடிகளாகிய நம் விஷயத்திலும் காணப்படுகின்றது. நாம் அதிகமான கனிக்கொடுக்கத்தக்கதாகவும், நாம் கொடுக்கின்ற கனிகள் அவருக்கு மிகவும் பிரியமாகவும், பெரிய கனியாகவும், நல்ல கனியாகவும், விலையேறப்பெற்ற கனியாகவும், மனதிற்கினிய கனியாகவும் இருக்கத்தக்கதாகவும், நமக்குத் தோட்டக்காரரின் பராமரிப்பு அவசியமாய் இருக்கின்றது. கர்த்தருடைய கிள்ளிவிடுதலின் முறைகளை, அனைத்துக் கொடிகளும் புரிந்துக்கொள்ள வேண்டும்; இல்லையேல் கொடிகள் சோர்வடைந்து வாடி வதங்கி, சரியான கனிகளைக் கொடுக்கத் தவறிவிடும்.

மாபெரும் தோட்டக்காரர், சிலசமயம் பூமிக்குரிய ஆஸ்தி (அ) சொத்தை எடுத்துவிடுவதன் மூலமாக அல்லது சிலசமயம் மனதில் பேணி சீராட்டின திட்டங்கள் மற்றும் ஏற்பாடுகளைத் தடைப்பண்ணுவதன் மூலமாக, கிறிஸ்துவின் கொடிகளைக் கிள்ளிவிடுகின்றார். சிலசமயம் துன்பங்களை அனுமதிப்பதன் மூலமாகவும், நற்பெயரையும், நற்கீர்த்தியையும் இழக்கச் செய்வதன் மூலமாகவும் அவர் நம்மை கிள்ளிவிடுகின்றார். சிலசமயம் அவர் விரும்பும் அதிகமான கனிகளைக் கொடுப்பதற்குத் தடையான விதத்திலுள்ள, நம்முடைய இருதயத்தின் கொடிச்சுருள்கள்

பலமாய்ப் படர்ந்திருக்கும் பூமிக்குரிய தோழமைகளை இழக்கச் செய்வதன் மூலம் அவர் நம்மைக் கிள்ளிவிடுகின்றார். "நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்" எனத் தீர்க்கத்தரிசி கூறியுள்ளது போன்று, சில சமயம் நம்மை உபத்திரவத்திற் குள்ளாக்கும் நோய்களை அவர் அனுமதிப்பதும், இந்தக் கிள்ளிவிடுதல்களில் ஒன்றாகும். கர்த்தருடைய அருமையான ஜனங்களில் அநேகர், உபத்திரவத்தின் படுக்கையில்தான், மிகவும் விலையேறப்பெற்றதான தங்களுக்குரிய படிப்பினைகளை அடைந்திருக்கின்றனர்.

சிலர் தாங்கள் எவ்வாறு பூமிக்குரிய விஷயங்களிலும், கவனத்தை ஈர்க்கும் காரியங்களிலும் மூழ்கிக் காணப்பட்டப்படியினால், யுகங்களைக் குறித்த தெய்வீகத் திட்டத்தைப் படிப்பதற்கும், தங்களுடைய சொந்த இருதயங்களைச் செம்மைப்படுத் துவதற்கும், ஆவியின் கனிகளைக் கொணர்வதற்கும், தங்களுக்கு நேரமில்லாமல் காணப்பட்டது பற்றியும் மற்றும் எவ்வாறு கர்த்தர் அதிகமான இரக்கத்துடன் தங்களைக் கொஞ்ச காலம் ஓய்ந்திருக்கப்பண்ணி, சிந்திப்பதற்கும், கிறிஸ்தவ வளர்ச்சியை அடைவதற்கும், தாங்கள் கிருபையில் வளரத்தக்கதாக, அறிவின் வளர்ச்சியை அடைவதற்கும் தங்களுக்கு அவசியமாய் இருந்த வாய்ப்புகளைக் கொடுத்தார் என்பது பற்றியும் நமக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். தோட்டக்காரரின் இந்தக் கிள்ளிவிடுதல்கள் காயப்படுத்துவதாகவும், பாதிப்பு ஏற்படுத்துவதாகவும், உண்மையான கொடிகள் எண்ணிக் கொள்ளாமல் மாறாக அவரை அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்ற வேதவாக்கியங்களின் நல்ல வாக்குத்தத்தத்திற்கு ஏற்பவே எண்ணிக்கொள்ள வேண்டும். அதாவது, மெய்யான கனிகளைக் கொடுக்கும் திராட்சச்செடியின் கொடிகளாக ஆக்குவதற்கே என்று எண்ணிக்கொள்ள வேண்டும். இப்படியான கிள்ளிவிடுதல்கள், சோர்வுகளை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, உற்சாகத்திற்குரிய ஊற்றுகளாகவே நம்மால் சரியான விதத்தில் புரிந்துக்கொள்ளப்பட வேண்டும். உலகமானது அதன் போக்கிலேயே விட்டுவிடப்பட்டுள்ளது என்றும், பூமியின் திராட்சச்செடிகளுக்குக் கர்த்தருடைய விசேஷித்த கிள்ளிவிடுதல்கள் இல்லை என்றும், நமக்கு இந்த விசேஷித்த கிள்ளிவிடப்படுதல்கள் காணப்படுவது என்பது பிதா நம்மை அன்புகூர்ந்து, நம்முடைய மேலான நன்மைக்கு ஏதுவாக நமக்காகப் பராமரித்துக் கொள்கின்றார் என்பதற்கான ஆதாரமாய் உள்ளது என்றும் நாம் உணர்ந்துக்கொள்கின்றோம்.

## நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்

இந்தப் பாடத்தைத் தம்முடைய சீஷர்களுக்குப் பொருத்தி நமது கர்த்தர், அந்தச் சரியான கிள்ளிவிடுதல் ஏற்கெனவே அந்நாள்வரையிலும் அவர்களிடத்தில் நடந்துக்கொண்டு வருகின்றது என்றும், கனியற்ற கொடியாகிய யூதாஸ் கர்த்தருடைய வழிநடத்துதலின்படி அவர்களிடமிருந்து அகற்றப்பட்டுள்ளான் என்றும் சுட்டிக்காட்டினார். ஆகவேதான் அவர், "நான் உங்களுக்குச் சொன்ன

உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்" என்று கூறினார்; அதாவது, "உங்களுடைய விசுவாசம், கீழ்ப்படிதல் மற்றும் நேர்மைக் காரணமாக, நீங்கள் நீதிமான்களாக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளபட்டுள்ளீர்கள்" என்ற விதத்தில் கூறினார் (யோவா 15:3). இந்த வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் 11 அப்போஸ்தலர்களும் எத்துணை சந்தோஷம் அடைந்திருக்க வேண்டும்; மற்றும் அதே வார்த்தைகளின் உண்மையை நமக்குப் பொருத்திப்பார்க்கும்போது, நாமும் எத்துணை சந்தோஷத்தை அடைவோம். கிறிஸ்து மூலமான தேவனுடைய தயவாகிய இந்த மாபெரும் ஈவுக்காகக் கர்த்தருக்கு நன்றி. அதாவது பாவங்களுக்கான மன்னிப்பும், அவருடைய நீதியின் வஸ்திரத்தினால் மூடப்படுதலும் மாத்திரம் அவருக்குள் நமக்கு இருக்காமல், இன்னுமாக நமக்குக் கொடுக்கப்பட்ட செய்தியை (அ) உபதேசத்தை ஏற்றுக்கொண்டதன் மூலமாக, சுத்தமானவர்களாக, மெய்யான திராட்சச்செடியின் கொடிகளாக அவருக்குள் நாம் பிதாவானவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டும் இருக்கின்றோம். இத்தோடு எல்லாம் முடியவில்லை, இது வெறும் ஆரம்பம்தான். திராட்சச்செடியுடன் கொடிகள் கொண்டிருக்கும் இந்த ஆசீர்வாதமான உறவில் நாம் தொடர்ந்து நிலைத்திருப்பதையே, இறுதியிலுள்ள நமக்கான ஆசீர்வாதமும், பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுதலும் சார்ந்துள்ளது என்ற காரியமே நினைவில் கொள்வதற்கு அவசியமானதாகும்.

ஒருவேளை நாம் கனிக் கொடுக்கவில்லையெனில், நம்மால் இந்த உறவில் நிலைத்து நிற்க முடியாது. ஒருவேளை நாம் கனிக்கொடுப்போமானால், ஒருவேளை கனிக்கொடுப்பதற்குரிய ஆவியும், மனப்பான்மையும் நாம் பெற்றிருப்போமானால் மற்றும் கர்த்தருடைய கிருபையையும், பலத்தையும், உதவியையும் வாஞ்சிப்போமானால், தேவையான பொழுதெல்லாம் அவருடைய கிருபை நமக்குப் போதுமானதாகக் காணப்படும் மற்றும் நம்மை அன்புகூர்ந்து நம்மைத் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கிக்கொண்டவர் மூலமாக நாம் ஜெயங்கொள்கின்றவர்களாகவும், முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும் காணப்படுவோம். கிறிஸ்துவுடன் இணைக்கப்படும் உறவின் காரணமாகவும், அவருடைய திருவுள்ளத்தின்படிச் செய்யத்தக்கதாக, அவருடைய ஆவி மற்றும் அவருடைய வார்த்தையின் வல்லமையானது, நம்மில் விருப்பத்தையும், செய்கையையும், உருவாக்குவதன் காரணமாகவும், அவருடைய கனி நம்மில் உருவாகுகின்றது. ஆகையால் இப்படியாகக் கிறிஸ்துவுடன் நாம் இணையவில்லையெனில், பிதா விரும்பும் கனிகளையும் நாம் கொணரமுடியாது மற்றும் நாம் அவருக்குப் பிரியமாகவும் இருக்க முடியாது. நாம் அவரில் நிலைத்திருந்தால் நாம் அதிகமான கனிக்கொடுப்போம் என்றும், அவரில்லாமல் நம்மால் எதுவும் செய்ய முடியாது மற்றும் பிதா அங்கீகரிக்கத்தக்கதான எவ்விதமான கனியும் பெற்றிருக்க முடியாது என்றும்தான் வாக்குத்தத்தம் காணப்படுகின்றது.

இந்தக் கனிக்கொடுத்தலின் தன்மை என்ன? பிதா நாடும் கனியை நாம் எப்படி அறிந்துக்கொள்ளலாம்? பூமியினுடைய திராட்சச்செடியின் தவறான வழிகாட்டுதல் மற்றும் தவறான முன்னுதாரணம் காரணமாக, கர்த்தர் நன்கு வளர வேண்டும் என விரும்பும் கனிகளானது, மாபெரும் பூமிக்குரிய ஆலயங்கள், அநாதை இல்லங்கள் முதலானவைகளைக் கட்டுதல் என எண்ணிக்கொள்ளும் நிலைக்கு அநேகர்

ஆளாகியுள்ளனர் என்று நாம் பதிலளிக்கின்றோம். இல்லை, ஒருவேளை மேற்கூறியவைதான் கனிகள் என்றால், இயேசுவும், அப்போஸ்தலர்களும் கனிகள் கொடுக்கவில்லை என்பதாகிவிடும். அவர்கள் ஆலயங்கள் (அ) சிறிய ஆலயங்கள் (அ) பெரிய ஆலயங்கள் கட்டவில்லை. அவர்கள் அநாதை இல்லங்கள் (அ) மனநோயாளிக் காப்பகங்கள் (அ) மருத்துவமனைகள் கட்டவில்லை (அ) ஸ்தாபிக்கவில்லை. ஒருவேளை மேற்கூறியவைகள்தான் பிதா நாடும் கனிகள் என்றால், அப்பொழுது கர்த்தரும், அப்போஸ்தலரும் முற்றிலும் தவறு செய்துவிட்டவர்களாக இருப்பார்களே. ஆனால், இயேசுவும், அப்போஸ்தலரும் தவறு செய்யவில்லை என்றும், தவறு வேறு இடத்தில்தான் உள்ளது என்றும் நாம் கூறுகின்றோம். உலகத்தின் ஆவியினால் வழிநடத்தப்பட்ட பூமியின் திராட்சச்செடியானது, பயனுடைமை கொள்கையைப் (utilatarian) பின்பற்றி, உலகம் அங்கீகரிக்கும் வகையான, கனிகளைக் கொணர்ந்துள்ளது என்று நாம் கூறுகின்றோம்.

## உலகம் ஏற்பாடு செய்துள்ளது

மருத்துவமனைகள், காப்பகங்கள் முதலியவற்றிற்கு எதிராக, ஒரு வார்த்தைக்கூட நாம் சொல்வதில்லை. இவைகளெல்லாம் மிகவும் நல்லவைகள், மிகவும் விரும்பத்தக்கவைகள், சமுதாயம் மற்றும் நாகரிகத்திற்கு ஏற்றவைகள் என்றே நாம் நம்புகின்றோம். ஆனால் இவைகளையெல்லாம் ஏற்பாடு பண்ணிட, உலகம் கூட முழுத்திறமையுடன் உள்ளது என்றும், இவைகளை ஏற்பாடு பண்ணிட உலகம் கூட ஆயத்தமாயும் இருக்கின்றது என்றும், இன்னும் சொல்லப்போனால் உலகம் கூட உண்மையில் இவைகளை ஏற்பாடும் பண்ணியுள்ளது என்றும் நாம் நம்புகின்றோம். உதாரணத்திற்குத் தூய பிரான்சிஸ், தூய யாக்கோபு, தூய ஆக்னிஸ் மருத்துவ மனைகள், காப்பகங்கள் முதலியவைகள், புரட்டஸ்டண்டும் சரி, கத்தோலிக்கமும் சரி அனைத்தும், அதன் பராமரிப்பிற்கு, அரசாங்கத்தின் நன்கொடையினால் ஆதரவு பெற்றிட நாடுகின்றது மற்றும் பெற்றுக்கொள்ளவும் செய்கின்றது; மற்றும் சில கோணங்களில் பார்க்கும்போது இவைகள் அனைத்தின் மீது அரசாங்கத்திற்குப் பொறுப்பும்/அதிகாரமும் காணப்படலாம். ஆனால் இப்பொழுது எந்தளவுக்கு முற்றும் முழுமையாக இவைகள் மீது, இன்று அரசாங்கம் அதிகாரம் அடைந்துள்ளது என்பது நமக்குத் தெரியவில்லை. மெய்யான திராட்சச்செடியின் மெய்யான கொடிகளில் எதுவும், இந்தப் பூமிக்குரிய அமைப்புகளில் ஏனும் ஒன்றுடன் தொடர்புக்குள் இராது என்று சொல்ல நாம் வரவில்லை. அதேசமயம் இப்படியாக மருத்துவமனைகள், காப்பகங்கள் உருவாக்கிடுவது, கர்த்தருடைய உவமையின்படியான கொடிகளின் கனிகள் இல்லையென்றும், ஒருவேளை கொடிகள் சரீரத்தின் அங்கங்களாகவும், அதேசமயம் பாபிலோனின் அங்கங்களாகவும் இருப்பினும், பிதா விரும்பும் கனிகளையும், மற்ற நல்ல கனிகளையும் கொண்டிருக்க வேண்டும் என்றும் நாம் முன்வைக்கின்றோம்.

சத்தியத்திற்கான ஊழியங்கள் அதாவது சத்தியத்தைப் பரப்புதல், சத்தியத்தை எடுத்துக் கூறுதல், சிலரை இருளினின்று சத்தியத்தின் வெளிச்சத்திற்கும் மற்றும் அறிவிற்கும் கொண்டுவருதல், சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கெனப் பணத்தைச் செலவிடுதல் என்பது சிலசமயம் ஆவியின் கனிகள் என்றும், கொடிகள் கொடுக்க

வேண்டும் என்று கர்த்தரால் எதிர்ப்பார்க்கப்படும் கனிகள் என்றும் கருதப்படுகின்றது. கனி இதுவல்ல! இவைகளைக்காட்டிலும் மேன்மையானதாகவும், உயர்ந்ததாகவும் இருப்பவைதான் கனிகள். மேலும், இந்தக் கனிகள், அப்போஸ்தலரால் ஆவியின் கனிகள் என்று விவரிக்கப்படுகின்றது. திராட்சச்செடியின் ஆவியானது, அனைத்துக் கொடிகளிலும் ஊடுருவிட வேண்டும் மற்றும் திராட்சச்செடியின் கனிகளானது, ஒவ்வொரு கொடியிலும் காணப்பட வேண்டும். இந்த ஆவியின் கனிகள், சாந்தமாகவும், பொறுமையாகவும், நற்குணமாகவும், நீடிய பொறுமையாகவும், சகோதர சிநேகமாகவும், அன்பாகவும் பட்டியலிடப்படுகின்றது. ஒருவேளை இவைகளெல்லாம் நம்மில் காணப்பட்டு, பெருகும்போது, இவைகள் நம்மை நமது கர்த்தரும், இரட்சகருமானவர் பற்றின அறிவில் வீணரும், கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்.

இந்தக் கனிகள் அனைத்தும் ஏதோ சிலவிதத்தில் ஒன்றாகத்தான் உள்ளது. அதாவது கிறிஸ்தவனுடைய பொறுமையின் சாரம் அன்பாக இருக்கின்றது. நம்பிக்கை மற்றும் விசுவாசம் மற்றும் சந்தோஷத்தின் சாரம், நம்முடைய பிதாவுக்காகக் கொண்டிருக்கும் அன்பாகவும், நமக்கான அவருடைய வாக்குத்தத்தத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற அவருடைய அன்பின் மீதான நமது நம்பிக்கையாகவும் இருக்கின்றது. ஆகையால் ஆவியின் இந்த அனைத்துக் கனிகளும், கிருபைகளும், அன்பு என்னும் ஒரே வார்த்தையின் மூலம் சொல்லப்படலாம். ஒவ்வொரு கொடியும், கொடிக்கான தன்னுடைய ஸ்தானத்தைத் தக்கவைத்துக்கொள்ளவும், பிற்பாடு மகிமையடைந்த திராட்சச்செடியின் கொடியாகவும் வேண்டுமெனில், இந்தக் கனிகள் ஒவ்வொரு கொடியினிடத்திலும் காணப்பட வேண்டும். இவைகளில்லாமல் இருந்தும், மற்ற நல்ல விஷயங்கள் நம்மில் இருப்பதினால், தெய்வீகப் பரிசோதனையில் தப்பித்துக்கொள்ளலாம் என எண்ணிக்கொண்டு, நாம் நம்மையே வஞ்சித்துக் கொள்ளாமல் இருப்போமாக. மற்றவைகள் அதாவது, நல்ல கிரியைகள், அதாவது சத்தியத்தை நாடுவது, (volumes) வேதாகம ஆராய்ச்சிப்பாடங்களின் தொகுதிகளை விநியோகித்தல் என்பவைகள், நம்முடைய இருதயத்தின் கனிகளின் விளைவாக இருப்பதற்கேற்பவே, பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதாய் இருக்கின்றது. இதை அழுத்தமாக அப்போஸ்தலர், "எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" என்று கூறுகின்றார் (1 கொரிந்தியர் 13:3).

இதே கருத்துக் கர்த்தருக்கான ஊழியத்தின் விஷயத்திலும் உண்மையாகவே காணப்படுகின்றது. ஒருவேளை நாம் ஒவ்வொரு நாளையும், ஒவ்வொரு மணி நேரத்தையும் அறுவடை வேலைகளில் செலவிட்டாலும், ஒருவேளை பிரதிகள் மற்றும் புத்தகங்கள் அச்சிடப்படுவதற்கென நம்முடைய பணம் அனைத்தையும் கொடுத்துவிட்டாலும் அல்லது கர்த்தருடைய நோக்கத்திற்கடுத்த ஊழியங்களுக்காக ஏதாவது விதத்தில் நம்மையே நாம் பயன்படுத்திக்கொண்டாலும், இவைகள் நம்முடைய இருதயத்தினுடைய அன்பின் விளைவாக இல்லையெனில், இவைகளினால் நமக்குப் பிரயோஜனம் எதுவும் இராது. ஆகவே நம்முடைய இருதயத்தில், பரிசுத்த ஆவியின் வரங்களாகிய சாந்தம், நற்குணம், பொறுமை, அன்பு முதலியவைகளை நாம் வளர்க்க

வேண்டும்; மற்றும் இவைகள் கர்த்தருக்குப் பிரியமாக இருக்கத்தக்கதாகவும், "அதிகமான கனிகளைக்" கொடுக்கத்தக்கதாகவும், நாம் பெருகப் பண்ணவும் வேண்டும் என்பதே காரியமாகும். பல்வேறு வழிகளில், ஒருவேளை ஏழைகளுக்கு உதவி பண்ணுவதன் மூலமாகவும், ஒருவேளை இரத்தச் சாட்சியாக நாம் மரிக்கத்தக்கதாக, நமது சரீரங்கள் சுட்டெரிக்கப்படத்தக்கதாக, சத்தியத்தை முன் வைப்பதில் அப்படிப்பட்ட ஓர் உண்மையைக் காட்டுவதன் மூலமாகவும் சந்தேகத்திற்கிடமின்றி இந்தக் கனிகளுடைய வெளிப்படுத்தல்கள் காணப்படும். ஒருவேளை நீதியின் கொள்கைக்கான நமது உண்மையின் காரணமாகவும், கர்த்தருக்கான நமது அன்பு மற்றும் நேர்மையின் காரணமாகவும் இப்படியாக நமக்குப் பொருள் இழப்புகள் (அ) சரீரம் சுட்டெரிக்கப்படுதல் சம்பவிக்குமாயின், அப்பொழுது நாம் சந்தோஷப்பட வேண்டியதுதான்.

## வாடின கொடிகள் சுட்டெரிக்கப்படுதல்

திராட்சச்செடியின் கனிகளைக் கொடுக்காமல் இருப்பவர்கள் கொடிகள் நிலையிலிருந்து வெட்டப்பட்டு, வாடிப்போய், இறுதியில் சுட்டெரிக்கப்படுமென்று சொல்லப்பட்டுள்ள காரியமானது, இரண்டாம் மரணத்தை, அதாவது அவ்வகுப்பாரின் முழுமையான அழிவைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இது உலக வகுப்பார் அல்ல, ஏனெனில், உலகம் ஒருபோதும் கிறிஸ்துவுடன் இணைக்கப்படவில்லை. உலகம் ஒருபோதும் திராட்சச்செடியின் கொடிகளாக இருந்ததில்லை. ஆகவே உலகம் ஒருபோதும் இவ்விதமாகப் பரீட்சையின் கீழ்க் காணப்படவுமில்லை. கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணிப்பைப் பண்ணிக்கொண்டவர்கள், அவருடன் முழுமையான உறவிற்குள் கடந்துவந்தவர்கள், பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்பட்டவர்களே இங்குப் பேசப்படுகின்றார்கள். இவர்களைப் பற்றிப் பேசப்படும் வார்த்தைகள் எபிரெயர் 10:31-ஆம் வசனத்தில் அப்போஸ்தலரால் கூறப்பட்டுள்ள வார்த்தைகளுக்கு இணையாக உள்ளது; "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமா யிருக்குமே."

உலகமானது ஜீவனுள்ள தேவனுடைய கரத்தில் காணப்படவில்லை. மாறாக உலகமானது தற்காலத்தில் ஆதாமுக்குள் மரித்துப்போனதாகவும், ஆதாமிற்குரிய தீர்ப்பின் கீழ்க்காணப்படுவதாகவும் கருதப்படுகின்றது; மற்றும் உலகம் கர்த்தரால், இப்பொழுது நியாயம் தீர்க்கப்படவில்லை. சபை மாத்திரமே ஆதாமின் தண்டனை தீர்ப்பினின்று விடுதலையடைந்தவர்களாகக் கருதப்படுகின்றனர் மற்றும் நியாயத்தீர்ப்பிலும் காணப்படுகின்றது. ஆகவே சபை மாத்திரமே கிறிஸ்துவின் கரங்களிலிருந்து விழுந்து, பிதாவினுடைய கரத்திற்குள் விழுவதற்குரிய வாய்ப்பில் இருக்கின்றனர். கிறிஸ்துவிடமிருந்து அறுப்புண்டுப் போகிறவர்களுக்கு, எவ்விதமான நம்பிக்கையும் இல்லை. ஏனெனில் இப்படிப்பட்டவர்களுக்கு இரண்டாம் மரணத்தைக் காட்டிலும் வேறு எதுவும் நன்மையாக இருக்க முடியாது. இன்னுமாக நித்திய காலத்திற்குமான சித்திரவதைக் கொள்கை உண்மை இல்லை என்பதிலும் நாம் மகிழ்ச்சிக்கொள்கின்றோம். இப்படிப்பட்டவர்கள் முழுமையான அழிவிற்குள் போகும்போது, இவர்கள் தேவனால் அருளப்படும் என அறிவிக்கப்பட்ட அனைத்தையும்

இழந்துவிடுகின்றவர்களாக இருப்பார்கள். மேலும் இவர்களது இந்த இழப்பானது, நித்திய ஜீவனை அடைவோரின் கணிப்பில் பயங்கரமானதொரு இழப்பாகத் தோன்றும்.

இப்படியாகக் கொடிகள் வெட்டப்பட்டு, வாடிப்போய், சுட்டெரிக்கப்படுவது பற்றின இவ்வார்த்தைகளானது, விசுவாச வீட்டாரிலுள்ளவர்களை, அதாவது இயேசுவை விசுவாசித்தும், ஒருபோதும் கிறிஸ்துவின் அங்கங்களாக (அ) கொடிகளாக ஆகாதவர்களைக் (பெயர்க்கிறிஸ்தவர்களை) குறிப்பதில்லை. இவ்வார்த்தைகள் திரள்கூட்டத்தாரையும் குறிப்பதில்லை. இந்த (இரண்டம் மரணம்) வகுப்பார் பற்றி வெகு சொற்பமான வேதவாக்கியங்களே பேசுகின்றன. இந்த வகுப்பாராகும்படிக்கு எவரும் அழைக்கப்படவில்லை என்று கர்த்தர் மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகின்றார். இன்னுமாக சிலரைக் குறித்து, "அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்" (1 கொரிந்தியர் 3:15) என்று அப்போஸ்தலர் கூறுகின்றார்; மற்றும் இது தொடர்பான சிறு கருத்து, கொடிகள் நிலையிலிருந்து வெட்டப்பட்டு, வாடிப்போய், சுட்டெரிக்கப்படுதல் பற்றின ஆண்டவருடைய வார்த்தைகளிலிருந்து எடுத்துக்கொள்ளப்படலாம். அதாவது 1 கொரிந்தியர் 3:15-ஆம் வசனத்தில், அப்போஸ்தலரால் குறிப்பிடப்படும் (திரள்கூட்டம்) வகுப்பார், கொடிகள் என்ற விதத்தில் சுட்டெரிக்கப்படுவார்கள்; அவர்கள் உடன்படிக்கையின் மூலம் இணைந்து கொண்டிருந்த அங்கத்துவம் அழிந்துவிடும்; ஆனால், அந்நபர் தனிப்பட்ட விதத்தில் நித்திய காலத்திற்குமென அழிந்துவிடுவதில்லை. 1 கொரிந்தியர் 3:15-ஆம் வசனத்தில் இடம்பெறும் வகுப்பார் (திரள்கூட்டத்தினர்) அக்கினியால் இரட்சிக்கப்படுவார்கள்; ஆனால் அவர்கள் கட்டினது வெந்துபோகும் என்று அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார்.

## திராட்சச்செடியில் அங்கத்துவத்திற்கான பலன்

இப்படியாக, தம்முடன் இணைந்திருப்பதினால் விளங்கும் பலன்கள் குறித்து, நமக்குக் கர்த்தர் சொல்லுகின்றார்:

இவர்கள் எதையும் அவரிடத்தில் கேட்கலாம் என்பதும், இவர்கள் கேட்பது இவர்களுக்கு அருளப்படும் என்பதும்தான் முதலாம் பலனாகும். ஒரே ஒரு நிபந்தனை உள்ளது. அதென்னவெனில், இப்படியாக இவர்கள் கேட்பதற்கு/விசாரிப்பதற்கு ஆயத்தப்படுகிறதற்கு முன்னதாக, கர்த்தருடைய சித்தம் என்னவென்பதையும், அவருடைய சித்தத்திற்கேற்ப தாங்கள் கேட்க வேண்டியது என்னவென்பதையும் தாங்கள் உறுதிப்படுத்திக்கொள்ளும்படியாக, கர்த்தருடைய வார்த்தைகளுக்குத் தாங்கள் கவனம் செலுத்தத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பவர்களுக்குச் சொந்த சித்தம் என்ற ஒன்று இருக்கக்கூடாது; மற்றும் தங்களுடைய தலையின் சித்தத்தையே, தங்களது சித்தமாகக் கொண்டிருக்க வேண்டும். மேலும் இவர்களுடைய (இயேசு) தலை, பிதாவின் சித்தமே, தமது சித்தமாக இருக்கின்றது என ஏற்கெனவே அறிவித்துள்ளார். நாம் பிதாவின் சித்தத்தை நம்முடைய இருதயங்களில் கொண்டிருக்க வேண்டும் என்பதும், பிதாவின் வாக்குத்தத்தங்களை நம்முடைய இருதயங்களில் கொண்டிருக்க வேண்டும் என்பதும்தான் நிபந்தனைகள் (அ) வரையறைகளாகும். இவைகளுக்கேற்ப நம்முடைய

விண்ணப்பங்கள் காணப்படும்போது, அவைகளையெல்லாம் அருளிடுவதற்கு கர்த்தர் பிரியமாய் இருப்பார்.

இரண்டாவது பலன் என்னவெனில், நம்முடைய கனி பெருகுகின்றதற்கு ஏற்ப, பிதாவும் அதிகமாய் மகிமைப்படுத்தப்படுவார். பிதாவின் சித்தத்தை அறிந்துக் கொள்வதற்கும், அதன்படிச் செய்வதற்கும், அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலம், நமது ஜீவியங்கள் வாயிலாகப் பிதாவை மகிமைப்படுத்துவதற்கும், கனப்படுத்துவதற்கும் வழக்கமாகவே நாடுவதாகிய நிபந்தனைகளின் அடிப்படையில்தான் நம்முடைய சீஷத்துவம் தொடர முடியும். மேற்கூறியுள்ள நிபந்தனைகளில் குறைவுபடுவது என்பது நம்முடைய சீஷத்துவத்தைப் பறிகொடுப்ப தாகிவிடும். நம்மிடமிருந்து அது உடனடியாகப் பறிமுதல் பண்ணப்படுவதில்லை. அதாவது ஏதோ நம்மைத் தள்ளிவிடத்தக்கதாகக் கர்த்தர் உடனடியாகச் செயல்படுவார் என்றில்லை. மாறாக நாம் கிருபையில் வளர்வதும், நாம் அறிவில் வளர்வதும் தேவனுடனான இசைவில் வளர்வதும், ஆவியின் கனிகளில் வளர்வதும், நம்முடைய உடன்படிக்கை உறவின் ஒரு பாகமாக இருக்கின்றதினால், ஒருவேளை இந்த ஒப்பந்தத்திலிருந்து நாம் பின்வாங்குவோமானால், சீஷர்களாக, அங்கங்களாக நமது உறவை, நாம் தக்கவைத்துக்கொள்பவர்களாக கருதப்படுவதில்லை.

திராட்சச்செடியுடனான இந்த அங்கத்துவம் மற்றும் கொடிகளாக நம்முடைய தொடர்சியான வளர்ச்சியின் பலனாகிய மூன்றாவது பலன், ஒன்பதாம் வசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது திராட்சச்செடியாகிய கர்த்தர் இயேசுவைப் பிதா அன்புகூருவது போன்று, நம்முடைய மீட்பரும் அவருடைய கொடிகள் (அ) அங்கங்களாகிய நம்மை அன்புகூருகின்றார். பிதா நம்முடைய ஆண்டவர் மீது கொண்டிருந்த அதே அன்பை, நமது ஆண்டவர் நம் மீதும் கொண்டிருக்கின்றார் என்பது எத்துணை ஆச்சரியமான கருத்தாய் உள்ளது! இந்தக் கருத்தை நமது விசுவாசத்தினால் எப்பொழுதும் பற்றிக்கொண்டிருக்க முடியுமானால், அதுவும் பற்றிக்கொண்டிருப்பதைத் தக்கவைத்துக் கொள்ள முடியுமானால், உண்மையில் நாம் பயப்படுவதற்கோ (அ) ஆசைப்படுவதற்கோ எதுவும் இராது. அதாவது நமக்கு வருடம் முழுவதும் கோடை காலமே. அடுத்தக் கருத்து என்னவெனில், கர்த்தருடைய தயவை/அன்பை அடையும் இந்த உயர்வான நிலையை எட்டிய பிற்பாடு, ஒருவேளை நாம் அவருடைய சீஷர்களாகவே இருந்து, அவர் நமக்குச் செய்துள்ளவைகளை உண்மையாய் உணர்ந்துக்கொள்வோமானால், அவருடைய அன்பில் நிலைத்திருக்க நாம் வாஞ்சிக்கிறவர்களாய் இருப்போம் என்பதேயாகும். அடுத்ததாக, இந்த அன்பில் நாம் நிலைத்ததிருப்பதற்கான நிபந்தனைகளை, அதாவது நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வது பற்றி வருகின்றது.

இது நியாயமற்ற கூற்றல்ல/கருத்தல்ல என்று நமக்குக் காண்பிக்கும் பொருட்டு, இதே நிபந்தனைகளின் பேரில்தான், தம்மையும் பிதா கையாண்டார் என்று தெரிவிக்கும் விதத்தில், "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல" (யோவான் 15:10) என்ற வார்த்தைகளைக் கூறினார். நாம் கர்த்தருடைய அன்பில் நிலைத்திருந்து, அதேசமயம் அவருடைய கட்டளைகளுக்கு அஜாக்கிரதையுடன் இருக்கலாம் என்று நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது. பிதாவுக்கு அவர் காண்பித்தக் கீழ்ப்படிதலானது, அவர் பிதாவின் மீது கொண்டிருந்த

அன்பின் அளவாய் இருந்தது போன்று, கர்த்தருக்கு நாம் கீழ்ப்படிவது என்பது, நாம் அவருக்கு உண்மையாய் இருப்பதற்குரிய அளவாய் இருக்கும். இதே கருத்தும், இன்னும் கொஞ்சம் சேர்த்து, அப்போஸ்தலர், "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம் அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" (1 யோவான் 5:3) என்று கூறுகின்றார். நாம் கற்பனைகளைக் கைக்கொள்வது மாத்திரம் போதாது. இன்னுமாக, நாம் அன்புடனும் உண்மையுடனும், மனப்பூர்வத்துடனும் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்; மற்றும் கற்பனைகளைப் பாரமானவைகளாக எண்ணாமல், மாறாக கர்த்தருடைய நீதியான அனைத்து ஒழுங்குகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு ஏற்ப செயல்படுவதிலும் மகிழ்ச்சியுடன் காணப்பட வேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுவினால் கொடுக்கப்பட்ட நீதியான கொள்கைகள் அனைத்துடன், அதாவது அவருடைய கற்பனைகள் அனைத்துடன், முழு இருதயப்பூர்வமான இசைவுடன் இருக்கும் இந்த ஆவியை நாம் அனைவரும் அதிகமதிகமாக நாடுவோமாக.

நமது கர்த்தருடைய கற்பனைகள் என்பது, மோசேயினுடைய பத்துக் கற்பனைகள் அல்ல. ஆனால் கர்த்தருடைய கற்பனையானது ஏறக்குறைய எதிர்ப்பார்ப்பின் கண்ணோட்டத்தில் தான் காணப்படுகின்றது. (கர்த்தருடைய கற்பனைகள்) இக்கற்பனைகள் என்பது நமது மாம்சத்திடம் எதிர்ப்பார்க்கப்படும் கண்ணோட்டத்தில் அல்லாமல், நம்முடைய இருதயத்திடம் எதிர்ப்பார்க்கப் படுபவைகளாக இருக்கின்றது. சுருக்கமாக அவருடைய கற்பனை என்பது, நம்முடைய முழு இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும் பிதாவை அன்புகூருவதும், நாம் நம்மை அன்புகூருவது போன்று நம்முடைய அயலானை அன்புகூருவதுமாகும் என்று நம்மிடம் கூறுகின்றார். இது நம்முடைய பூரணமற்ற மாம்சத்திற்கு முடியாத காரியமாக இருப்பினும், நம்முடைய புதுப்பிக்கப்பட்ட இருதயங்களுக்கு முடிகிற காரியமாகவே இருக்கின்றது. இந்தத் தேவனுடைய கற்பனைக்கு நம்முடைய இருதயங்கள் ஊழியம் செய்வதும், நம்முடைய மாம்சத்தைக் கொண்டு முடிந்தமட்டும் செய்வதும்தான், கர்த்தர் எதிர்ப்பார்ப்பதாகும்; மற்றும் உயிர்த்தெழுதலில் நாம் முற்றும் முழுமையாய், திருப்தியாய்க் கர்த்தருக்கு ஊழியம் செய்யத்தக்கதான புதிய சரீரங்கள் நமக்கும் இருக்கும் என்ற வாக்குத்தத்தம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

## என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும்

ஏன் இந்தச் சிறியதும், அதேசமயம் மிகவும் ஆழமான பாடத்தைக் கொடுத்தார் என்பதைக் கூறி நிறைவு செய்யும் வண்ணமாக, "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன். நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது" என்று பேசினார் (யோவான் 15:11, 12). ஜீவனுக்கேதுவான அற்புதமான இந்த வார்த்தைகள் பல நூற்றாண்டுகள் கடந்துவந்து, இடுக்கமான

வழியில் காணப்படும் கர்த்தருடைய பின்னடியார்கள் அநேகரை உற்சாகமும், தைரியமூட்டியும் உள்ளது.

தூய்மையும், மாசற்றதுமான இந்த மார்க்கத்தை அநேகர் எதிர்த்துப் பேசுகின்றனர். சிலர் இது சந்தோஷமற்றது என்றும், வருத்தத்தைக் கொடுக்கின்றது என்றும், இருதயம் மற்றும் மூளையை விலங்கிடுகின்றது என்றும், இன்பம் எனும் ஒவ்வொரு கோயிலிருந்தும் மனுஷனைச் சாட்டையினால் அடித்துத் துரத்திவிடுகின்றது என்றும், சந்தோஷத்திற்குரிய ஒவ்வொரு களத்திற்கு முன்பாக, "இங்கு மீறி நுழையாதே" எனும் (notice post) பலகைத் தூணை நாட்டியுள்ளது என்றும், குற்றம்/குறை கூறுகின்றனர். இது தவறு என்பது நமது பதிலாக இருக்கின்றது. அதாவது இப்படியெல்லாம் கூறுகின்றவர்கள், வசனத்தில் உள்ளவைகளை அறியாதவர்கள், புரியாதவர்கள் ஆவர். கர்த்தருக்கு உண்மையாய் உடன்படிக்கைப் பண்ணியுள்ளவர்களும், அவரை உண்மையாய் ஏற்றுக்கொண்டவர்களும், அவருடைய பாதத்தில் தங்களுடைய ஜீவியங்களை உண்மையில் ஒப்புக்கொடுத்துவிட்டு, உண்மையில் அவருடைய பின்னடியார்களாக ஆகியுள்ளவர்களும், அவர் வாக்களித்துள்ளபடியே அவருடைய சந்தோஷத்தினால் நிரப்பப்பட்டுள்ளனர்; மற்றும் நாளுக்குநாள், வருடம் செல்லச்செல்ல, அச்சந்தோஷம் பெருகிக்கொண்டிருந்து கிட்டத்தட்ட முழுமையடையப் போகின்றது. நிறைவானது வந்து குறைவானது ஒழியும் போதும், உயிர்த்தெழுதலின் நிலைமையில் நாம், "உங்களுடைய கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள்" என்ற அவரது வரவேற்பை கேட்கும் போதும்தான், அது (சந்தோஷம்) முழுமையடையும்.

இப்பொழுது விசுவாசத்தின் மூலமாகவும், எதிர்ப்பார்ப்பின் மூலமாகவும், இருதயத்தின் இளைப்பாறுதல் மூலமாகவும், அந்தச் சந்தோஷங்களுக்குள்ளாக நாம் பிரவேசிக்கின்றோம். ஆனால் பிற்பாடே நாம் நிஜமாகவே அந்தச் சந்தோஷங்களுக்குள் பிரவேசிப்போம். இதற்கிடையில் உலகம், அதனை கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்க வில்லை. உலகம் கர்த்தருடைய சந்தோஷங்களை உணர்ந்துக்கொள்ளவில்லை. உலகம் சுயநலத்தினாலும், பொறாமையினாலும், இலட்சியங்களினாலும், வாக்குவாதத்தி னாலும் நிறைந்துள்ளது. உலகம் அவரை அறியாதது போல, நம்மையும் அறிந்துக்கொள்ளவில்லை. நமது கர்த்தர் தம்முடைய ஜீவியத்தையும் பலிச்செலுத்தி, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றியதில் அனுபவித்த சந்தோஷங்களை உலகம் அறியாததுபோல, ஆண்டவருடைய ஊழியத்தில் இருக்கும் நம்முடைய சந்தோஷங்களையும் உலகம் அறியாது.

## நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல

நாம் ஒருவரையொருவர் அன்பு செய்ய வேண்டுமென்று, கர்த்தர் கட்டளையிட்டது நம்மை வியப்படையச் செய்யவில்லை; ஆனால் "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல" என்ற வார்த்தைகளில் அடங்கியிருக்கும் கருத்துதான் நம்மைத் திகைக்கவைக்கின்றது. கர்த்தர் நம் ஒவ்வொருவர் மீதும் கொண்டிருந்த அன்பைப்போன்று, எவ்வாறு நாம் ஒருவரையொருவர் அன்பு செய்ய முடியும்? என்பதுதான் நமது முதல் கேள்வி. ஆரம்பத்தில் இது சாத்தியம் அற்றதுதான். ஆனால்

நாம் அதிகமதிகமாகக் கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்படும்போது, அவருடையவர்களாய் இருக்கும் அனைவரிடத்திலுமான பூரணமான அன்பின் இந்தக் கொள்கைக்கு/அளவுக்கோலுக்குக் கிட்ட நெருங்குவோம். மற்றவருக்குப் பாதகம் செய்வதற்கு மறுக்கக்கூடிய அன்பாய் மாத்திரம் இராமல், சகோதரனுக்கு நன்மை செய்வதில் நம் சொந்த நேரத்தையும், சௌகரியத்தையும் தியாகம் பண்ணி நன்மை செய்வதில் சந்தோஷமடையக்கூடிய அன்பாகிய, பூரணமான அன்பின் இந்த அளவுக்கோலுக்குக் கிட்ட நெருங்கிடுவோம். இப்படியாகவே, இயேசுவும் நம் அனைவரையும் அன்புகூர்ந்து, தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டுக்கொண்டார். மேலும், நாம் எந்தளவுக்கு அவரைப்பற்றின கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்கின்றோமோ, அந்தளவுக்கு நாம் கிறிஸ்துவைப்போல இருப்போம்; மற்றும் கிறிஸ்துவின் அன்பை ஒத்த அன்பைப் பெற்றிருப்போம். இந்த அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது. மேலும் சகோதர சகோதரிகளுக்காக இப்படிப்பட்ட அன்பைக் கொண்டிருப்பவர்கள், சந்தேகத்திற் கிடமின்றித் தவிக்கும் சர்வ சிருஷ்டியின் மீதும், அனுதாப அன்பை முழுமையாய்க் கொண்டிருப்பார்கள்; மற்றும் அவர்கள் சார்பில் இப்பொழுது உலகத்திற்குச் செய்ய முடிகின்ற சொற்பமானவைகளைச் செய்வதில் மகிழ்ச்சிக்கொள்வார்கள்; மற்றும் கர்த்தருடைய ஏற்ற வேளையில் ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொருவருக்கும், மாபெரும் அற்புதமான ஆசீர்வாதங்களைக் வைத்திருக்கின்றார் என்பதில் இரட்டிப்பான மகிழ்ச்சியும் கொள்வார்கள்.

இவைகளையெல்லாம் நாம் அறிந்திருப்பதும், கர்த்தருடைய திட்டங்களைப் புரிந்துக்கொள்வதும், அவருடைய வார்த்தைகளில் அடங்கியிருக்கும் கொள்கை களைப் புரிந்துக்கொள்வதும், மிக முக்கியமானதுதான். ஆயினும் நமக்குச் சகல அறிவு இருந்தாலும், அதனை பயன்படுத்தாதது வரையிலும், நமக்கு நன்மை கிடைக்காது. எப்படி அடைய வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வதன் மூலமாக மாத்திரம், நாம் கர்த்தருடைய கிருபையான ஏற்பாடுகளிலிருந்து நன்மை பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணாதிருப்போமாக. மாறாக தேவையான படிகளை எடுத்து வைப்போமாக... அதாவது நாம் முழுமையாய் அவருடையவர்களாக இருக்கத்தக்கதாகவும், நாம் அவரை நெருங்கி வாழத்தக்கதாகவும், நாம் கனிக்கொடுக்கின்றவர்களாக இருக்கத்தக் கதாகவும், அவருடைய அன்பிலும், பிதாவினுடைய அன்பிலும், அவர் இணைத்துள்ளவர்கள் மீதான அன்பிலும் நாம் நிலைத்திருக்கத்தக்கதாகவும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

# வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவி

## யோவான் 16:4-15

**"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்கு தந்தருளுவார்." யோவான் 14:16**

நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில் அவர் கெத்செமனேக்குப் போகின்ற வழியில், நாம் இப்பாடத்தில் பார்க்கவிருக்கிற காரியங்களை, தம்முடைய சீஷர்களுக்குக் கூறினார். தம்முடைய சீஷர்களாக அவர்கள் எதையெல்லாம் எதிர்ப்பார்க்கலாம் என்றும், தமக்கும் மற்றும் சகோதரர்களுக்கும் காண்பிக்கும் உண்மையினிமித்தம் அவர்கள் தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, நிந்திக்கப்படுவார்கள் என்றும் கர்த்தர் அவர்களுக்குக் கூறினார். "அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை" (யோவான் 16:4). "இன்னும் அநேகக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" என்று கர்த்தர் கூறி அவர்கள் எதிர்ப்பார்த்திருக்க வேண்டியவைகள் அனைத்தையும் குறித்து, தாம் அவர்களுக்குக் கூறவில்லையென்று தெரிவித்தார் (12-ஆம் வசனம்). இப்படியாகவே, கர்த்தருடைய சீஷர்களாகும் அனைவரின் விஷயத்திலும் காணப்படுகின்றது. அந்தந்த நேரத்தில் ஓர் அடி எடுத்துவைப்பதற்குப் போதுமான வெளிச்சத்தைப் பார்க்கின்றனர். ஆனால் எதிர்க்காலத்தில் வரும் சோதனைகள் மற்றும் சிரமங்களானது, இவைகளினிமித்தம் அவர்கள் அமிழ்த்தப்பட்டுப் போகாதபடிக்கு கிருபையாக மறைத்து வைக்கப்படுகின்றது. "அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்." இப்படிச் செய்வதென்பது, சீஷர்களுடைய சித்தங்களுக்கு எதிராக, சீஷர்களை ஏதோ ஒன்றைச் செய்ய வைப்பதற்கென அவர்களை வசீகரிப்பதாகவும், ஏமாற்று, சதி பண்ணுவதற்காகவும் இல்லை. ஆரம்பத்திலேயே நாம் நமது சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்பற்றி வரவில்லையெனில், நாம் அவருடைய சீஷர்களாய் இருக்கமுடியாது என்று நமக்கு உறுதியாய்த் தெரிவித்துள்ளார். இந்த ஓர் அடியை நாம் உண்மையுடனும், நேர்மையுடனும் எடுத்து வைத்திருந்திருப்போமானால், இது தொடர்பாக வரப்போகின்ற உபத்திரங்களுடைய விவரம் தெரியாமல் இருந்தாலும், பல சிரமங்கள் இருப்பதை நாம் காண்போம். ஒருவேளை நமக்கு எதிர்க்காலத்தில் வரும் சோதனைகளை நாம் அறிந்துக்கொள் வோமானால், நாம் மிகவும் அமிழ்த்தப்பட்டு விடுவோம். காரணம் ஆரம்பத்தில், "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" மற்றும் "உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார்" என்ற நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகள்

மற்றும் வாக்குத்தத்தங்களின் அர்த்தத்தை நாம் குறைவாகவே புரிந்துக் கொண்டிருப்பவர்களாகவே காணப்படுவோம் (2 கொரிந்தியர் 12:9 மற்றும் 1 கொரிந்தியர் 10:13). கர்த்தருடைய ஜனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக, ஒவ்வொரு அடியை எடுத்துவைக்கும்போது, இந்த வாக்குத்தத்தங்கள் உண்மையாய் இருப்பதைக் காண்பார்கள், தாங்கள் நிலைநிறுத்தப்படுவதை உணர்வார்கள். தங்களால் தாங்கிக்கொள்ள முடிகின்றவைகளே தங்களுக்கு இருக்கின்றது என்பதை உணர்வார்கள்; மற்றும் கடந்துவந்த பாதையில், முன் காலங்களில் வந்ததைக் காட்டிலும், (இப்பொழுது வரும்) தங்களுடைய சோதனைகள் கடுமையானதாக இருப்பினும், இவைகள் கிருபையிலும், அறிவிலும் உள்ள வளர்ச்சியின் காரணமாக, ஜெயங்கொள்ளப்படலாம் என்றும் உணர்வார்கள்.

கர்த்தர் தம்முடைய சொல்லர்த்தமான, கூட இருத்தல் இல்லாத நாட்களில், தம்முடைய துன்புறுத்தப்படும் பின்னடியார்களுக்கு ஒரு வல்லமையின் மூலம் தம்முடைய உதவியை அளிக்கக்கூடிய காரியமானது, அவர்கள் புரிந்துக் கொள்வதற்குக் கடினமாக இருந்தது. அவர்கள் பொருட்டு, ஆண்டவர் தாம் செயல்படுத்தும் வல்லமையை, செல்வாக்கை, பரிசுத்த ஆவி என்று, தேவனுடைய ஆவி என்று, கிறிஸ்துவினுடைய ஆவி என்று அழைப்பதன் மூலம் விஷயத்தைத் தெளிவுபடுத்துகின்றார். சீஷர்கள் மீது செயல்படுத்தப்படப்போகிறதான செல்வாக்கானது, ஆறுதல்படுத்துகின்றதாயும், தாங்கி நிலைநிறுத்துகின்றதாயும் இருக்கப்போவதினால், இந்த வல்லமையை அல்லது ஆவியைக் கர்த்தர், ஒரு தேற்றரவாளனாக, தாங்கி நிறுத்துபவராக, ஓர் உதவியாளராகக் கூறினார். அவர்களை நடத்துவதற்கென்று வேறொரு நபரை அனுப்புவதாகக் கர்த்தர் கூறவில்லை. அவரைக் காட்டிலும் வேறெந்த ஒரு நபராலும், அவர்களைச் சிறப்பாக நடத்த முடியாது. அவர் அனுப்பப்போவது ஓர் ஆவி, ஒரு செல்வாக்கு, ஒரு வல்லமையே ஆகும். மேலும் இந்த ஆவி பிதாவையும், தம்மையும் முழுமையாக அடையாளப்படுத்துகின்றதாயிருக்கின்றது. ஆகவே பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பதன் வாயிலாக, அவர்கள் பிதாவுடன் உறவையும், குமாரனுடன் உறவையும் பெற்றிருப்பார்கள். பிதாவும், குமாரனும் ஆண்பாலில் கூறப்படுகிறது போன்று, இந்தப் பரிசுத்த ஆவியும் கூட ஆண் பாலில் பேசப்படுகின்றது.

## பரிசுத்த திரித்துவம்

"இருண்ட யுகங்களினுடைய" காலப்பகுதியில், அநேக குழப்பமான கருத்துக்கள் நிலவியிருந்தது மற்றும் வேதவாக்கியங்களுடைய தெளிவான போதனைகளும் மறைந்துபோயிருந்தது. ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும், வேதாகமம் மிகக் குறைவாகவே பயன்படுத்தப்பட்டது (பயன்படுத்தப்படவில்லை). "அப்போஸ்தலர் மரபு வம்சாவழி," எனும் உபதேசத்தின் கீழ், கண்காணிகள் அப்போஸ்தலர்களுக்குச் சமமானவர்களாகக் கருதப்பட்டனர். ஆகவே இவர்கள் ஆலோசனை குழுவில் கூடும்போது, ஓர் உபதேசம் பற்றின விஷயத்தில் இவர்களது முடிவு அல்லது

வாக்களிப்பானது, அப்போஸ்தலர்களுடைய முடிவு என, அதிகாரப்பூர்வமானதென ஏற்றுக்கொள்ளப்பட்டது. நமது கர்த்தர் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத்தான் தெரிந்தெடுத்தார் என்பதும், அந்த 12-பேருக்குப் பின்னர் வருபவர்கள் எவர்களையும் குறித்தும் கர்த்தர் பேசவில்லை என்பதும், வெளிப்படுத்தின விசேஷத்தில் பன்னிரண்டு அஸ்திபாரங்களை மாத்திரம் கொண்டுள்ள புதிய எருசலேமைக் குறித்தும், அந்தப் பன்னிரண்டு அஸ்திபாரங்களில், ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடைய நாமங்கள் காணப்படுவதைக் குறித்தும் கூறினதின் வாயிலாக, இந்தப் பன்னிரண்டு பேருக்குப் பின் வேறு அப்போஸ்தலர்கள் இல்லையெனத் தெரிவித்துள்ளார் என்பதும், கவனிக்கத் தவறப்பட்டது (வெளிப்படுத்தல் 21:14).

இரண்டாம் நூற்றாண்டினுடைய ஆரம்பக்கட்டத்தில், சபை மீதான கிரேக்க தத்துவத்தின் செல்வாக்கானது, குறிப்பிடத்தக்க நிலையில் காணப்பட்டது; மற்றும் பல்வேறு தப்பறைகளும் பிரபலமாய்க் காணப்பட்டது. இவைகளில் ஒன்று, விசேஷமாக நமது கர்த்தரைக் கிரேக்க தத்துவ ஞானிகளுடனும், சாக்ரடீஸ் உடனும், பிளோட்டோவுடனும் சரிசமமாக வைத்துவிட்டு, நமது கர்த்தருடைய விசேஷித்த பிறப்பையும், அவர் மனிதனாக வருவதற்கு முன்னதாகவே காணப்பட்டார் என்பதையும் மறுப்பதாகவும் இருந்தது. இந்தத் தப்பறைகளுக்கு எதிர்த்துப் போராடும் வண்ணமாக, கர்த்தருக்கு உண்மையாய்க் காணப்பட்ட சிலர் எதிர்முனைக்குச் சென்று இயேசுவினுடைய சொந்த வார்த்தைகளுக்கு எதிராக அவரைப் பிதாவுக்குச் சரிசமமாக்கினார்கள் (யோவான் 10:29; 14:28). அடுத்ததாகப் பரிசுத்த ஆவி தொடர்பாக வாக்குவாதம் எழும்பிற்று. பின்னர் இயேசுவின் விஷயத்தில் எதிர்முனைக்குச் சென்றவர்கள், மூன்று கடவுள்கள் இருக்கின்றார்கள் என்றும், அவர்கள் பிதா மற்றும் குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி என்றும், இவர்கள் மூவரும் "வல்லமையிலும், மகிமையிலும் சரிசமமானவர்கள்" என்றும் தெரிவித்தனர்.

இவர்கள் மூவரும் சரிசமமான ஆற்றல் உள்ள, வெவ்வேறு நபர்களாய் இருக்கின்றார்கள் என்று விநோதமாய்க் கூறிக்கொண்டிருக்கும்போதே, அடுத்ததாக இவர்கள் நபரிலும் ஒன்றாக இருக்கின்றனர் என்று கூறப்பட்டது. இப்படிப்பட்ட வேதவாக்கியங்கள் தெரிவிக்காததும், காரணகாரியத்துக்கு உட்படாததுமான கருத்தானது, அதற்கே ஆதரவு அளித்திட முடியாது. ஆகவே இக்கருத்தை யுடையவர்கள் பல்வேறு விதமான திருக்குமறுக்கான வாதங்களுக்குள் வழிநடத்தப்பட்டுள்ளனர். சில சமயம் இவர்களில் சிலர், ஒரு நபரில் உண்மையில் மூன்று கடவுள்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். இன்னும் சிலர் ஒரு கடவுளில் மூன்று நபர்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். மேலும் இந்தப் பொருளற்ற சொற்களுக்கு இவர்கள் விளக்கம் கொடுக்க முடியாததினால், தவறையும், மூட நம்பிக்கையையும் மூடி மறைப்பதற்கு, வழக்கமாக பயன்படும் "இரகசியம்" எனும் வார்த்தையை கூறிவிடுகின்றனர். திருத்துவம் பற்றின காரியமானது, அவர்களும் சரி, மற்றவர்களும் சரி புரிந்துக்கொள்வதற்கு மிகவும் இரகசியமானதாக, மறைப்பொருளாக இருக்கின்றது என்று நம்மிடம் கூறுகின்றனர். ஒருவேளை இது அவர்களுக்குப் புரியவில்லை என்றால்,

அவர்கள் அதை விவாதிக்கக்கூடாது என்பது உண்மைதான். ஆனால் அதற்கென்று இதைப் புரிந்துக்கொள்பவர்கள், அதாவது திரித்துவம் பற்றின முழு இரகசியமும், சொந்த கற்பனை என்பதை மிகத் தெளிவாய்க் காண்பவர்கள், அதாவது இவ்விஷயம் தொடர்பான வேதாகமத்தின் போதனையானது மிகத் தெளிவாயும், எளிமையாயும், இசைவாயும், திருப்திகரமாயும் இருப்பதைக் காண்பவர்கள் விவாதிப்பதிலிருந்து தடுக்கப்படக்கூடாது.

தேவனைப் பற்றி அப்போஸ்தலர் கூறும்போது, ஒரே ஒரு ஜீவனுள்ள, உண்மையான தேவன் இருக்கின்றார் என்று கூறுகின்றாரே ஒழிய, மூன்று என்று கூறவில்லை! இந்த ஜீவனுள்ள மற்றும் உண்மையுள்ள ஒரே தேவனைப் பிதா என்றும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவர் இருக்கிறார் என்றும், அப்போஸ்தலர் கூறுகின்றார் (1 கொரிந்தியர் 8:6). மேலும் கர்த்தர் இயேசுவைப் பிதா உயர்வாக உயர்த்தினார் என்றும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குக் கொடுத்தார் என்றும், பிதாவைக் கனம் பண்ணுவது போன்று, அனைவரும் குமாரனையும் கனம் பண்ணும்படிச் செய்தருளினார் என்றும் இதே அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார் (பிலிப்பியர் 2:9-10; யோவான் 5:23). அப்படியென்றால், இரண்டு நபர்கள் இருக்கின்றார்கள்; இல்லையேல் வேறெந்த விதத்திலும் ஒருவர் மற்றொருவரை உயர்த்தி, கனப்படுத்த முடியாது. பிதாவைப் போன்று குமாரன் கனப்படுத்தப்பட்ட தானது, வேறு வேதவாக்கியங்களினால் காட்டப்படுகின்றது. அதாவது இப்பொழுது இயேசு திவ்வியச் சுபாவத்தில் பங்கடைந்தவராக இருக்கின்றார்; மற்றும் தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றத்தக்கதாக, அவருடைய சொந்த ஜீவனை ஒப்புக்கொடுத்து மனுக்குலத்தை மீட்கும்படிக்கு, உலகத்திற்கு வந்ததின் வாயிலாக, பிதாவின் சித்தத்திற்கு அவர் காட்டின கீழ்ப்படிதலுக்குப் பரிசாக அவர் தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டார் என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றது. நாம் ஏற்கெனவே யோவான் 1:1-ஆம் வசனத்தில் பார்த்திருக்கின்றபடி, நமது கர்த்தர் உலகத்திற்கு வருவதற்கு முன்னதாக மற்றும் பிதாவின் பிரதிநிதியாகிய அவரால் உலகம் உண்டாக்கப்படுவதற்கு முன்னதாக, அவர் லோகோஸாக, வார்த்தையாக, யேகோவா தேவனின் செய்தியாளராக இருந்தார் மற்றும் ஒரு தேவனாகவும், வல்லமையுள்ளவராகவும், தேவத்தூதர்களுக்கு மேலானவராகவும், இருந்தார் மற்றும்... "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை."

பிதாவையும், குமாரனையும் பற்றிக் கூறுகையில், அவர்கள் இருவரையும் தனித்தனி நபர்கள் என்று அப்போஸ்தலர் தெரிவிக்கையில், அவர் பரிசுத்த ஆவியை இன்னொரு தேவன் என்றோ அல்லது தேவனுடைய மூன்றாவது பாகமென்றோ குறிப்பிடாதது கவனிக்கப்பட வேண்டும். இன்னுமாக, அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியைப் புறக்கணிக்கவுமில்லை. அவருடைய நிரூபங்கள் எங்கும் இந்தப் பரிசுத்த ஆவியை, பிதாவினுடைய ஆவி என்றும், குமாரனுடைய ஆவி என்றும், சபைக்குப் பிதாவையும், குமாரனையும் அடையாளப்படுத்துகின்றதாய்க் காணப்படுகின்றது என்றும் குறிப்பிடுகின்றார். "தேவன் ஆவியாயிருக்கின்றார்" என்பதை

வைத்துக்கொண்டு, பரிசுத்த ஆவி ஓர் ஆவிக்குரிய ஜீவி என்று நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது. மாறாக ஆவி என்னும் வார்த்தையானது, ஓர் ஜீவியின் ஆவியை, அதாவது ஒரு நபரிடத்திலிருந்து வெளிப்படும் வல்லமையை, செல்வாக்கை, சித்தத்தை, நோக்கத்தை, பலத்தைக் குறிக்கின்றதாக இருக்கின்றது. பரிசுத்த ஆவி என்பது, பிதா மற்றும் குமாரனிடத்திலிருந்து வெளிப்படும் செல்வாக்கு அல்லது வல்லமையாகும். மேலும் அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகள் அடங்கிய சபையிடத்திலான இந்தச் செல்வாக்கு அல்லது வல்லமையானது, இவர்களுடன் ஒன்று சேர்பவர்களிடத்திலும் செயல்படுகின்றதாய் இருக்கின்றது. இது எப்பொழுதும் நல்லதும், பரிசுத்தமானதுமான ஆவி அல்லது செல்வாக்காக இருக்கின்றது. ஆகவே இது உலகத்தின் ஆவியிலிருந்தும், உலகத்தின் மனப்பான்மையிலிருந்தும், உலகத்தின் செல்வாக்கிலுமிருந்தும், பாவத்தின் ஆவியிலிருந்தும், அந்தி கிறிஸ்து முதலானவைகளின் ஆவியிலிருந்தும் வேறுபட்டதாயிருக்கின்றது.

## பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை

துக்கத்துடனும், திகைப்புடனும், குழப்பத்துடனும் காணப்பட்டிருந்த தம்முடைய சீஷர்களிடம் நமது கர்த்தர் கனிவுடன், நிதானமாய், தம்மை அனுப்பிவைத்த பிதாவினிடத்திற்குத் தாம் திரும்பச் செல்வதைக் குறித்துக் கூறினார். எங்கே போகிறார் என்று அவர்கள் கேட்கவில்லை, காரணம் அவர் பிதாவினிடத்திலிருந்து வந்தார் என்பதும், தம்மை அனுப்பின பிதாவினிடத்தில் அவர் திரும்பப் போவார் என்பதுமான அவருடைய வார்த்தைகளை அவர்கள் நம்பினார்கள். ஆனால் துக்கம் அவர்களுடைய இருதயங்களை நிரப்பிற்று. தங்களுடன் கூடக் கர்த்தர் இல்லாமல், அவர்கள் என்ன செய்வார்கள்! ஒருவேளை கர்த்தர் போய்விடுவாரானால், இராஜ்யம் குறித்த வாக்குத்தத்தம் எப்படி நிறைவேறும்! மூன்று வருடங்களாக அவர்கள் மாய்மாலத்தைத்தான் பின்தொடர்ந்திருக்கின்றார்களா? அவர்கள் கர்த்தரைச் சந்தேகிக்க மாட்டார்கள்; ஆனால் அவர்கள் குழம்பிப்போய் இருந்தார்கள். ஆகவே காரியத்தைச் சரியாக அவர்கள் புரிந்துக்கொண்டார்களானால், அவர்கள் கலக்கத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்பதையும், உண்மையில் அவர்களுடைய நன்மைக்காகவும், அவர்களுடைய அனுகூலத்திற்காகவும், தாம் கடந்துப்போக வேண்டியுள்ளது என்பதையும் நமது கர்த்தர் அவர்களுக்கு விவரித்தார். தாம் போகவில்லையெனில், பிதா அவர்களை ஆவியில் ஜெநிப்பிப்பதும், அவர்களைத் தேவனுடைய பிள்ளைகள் என்று அங்கீகரிப்பதும் கூடாததாய் இருக்கும். இவைகள் கூடாது என்றால், அவர்கள் மனிதர்களைவிட மேலானவர்கள் ஆகுவதும், ஆவிக்குரிய ஜீவிகள் அல்லது திவ்விய சுபாவத்தையும், அதனோடு கூட அதன் மகிமைகளிலும், கனங்களிலும் பங்காளிகளாகுவதும் கூடாததாக இருக்கும். நமது கர்த்தர் பிதாவினிடத்திற்குப் போகவில்லையெனில், அவர்களால் மனிதர்களுக்குரிய திரும்பக்கொடுத்தலைக் கூட அடைய முடியாது. காரணம் சபைக்கும், உலகத்திற்குமான இரட்சிப்பின் முழு வேலையும், நமது கர்த்தர் நீதியின்

கோரிக்கைகளை நிறைவேற்றுவதைச் சார்ந்துள்ளது. அடுத்த நாள் ஆதாமின் சந்ததி மேல் காணப்பட்ட ஆதாமின் பாவத்திற்காக கர்த்தர் தேவனுடைய ஆட்டுக்குட்டியாக மரித்தார் மற்றும் மூன்றாம் நாளில், பிதா தம்முடைய சொந்த வல்லமையினால் அவரை உயிர்த்தெழுப்பினார். நம்முடைய சார்பில் நிகழ்த்திய இந்த மாபெரும் நிகழ்வில், மிகவும் முக்கியமான வேலை ஒன்று நிறைவேற்றப்பட்டது. ஆனால் தெய்வீக ஏற்பாட்டின் கீழ் இந்த வேலையின் பலனானது, முதலில் நமது கர்த்தர் பரத்திற்கு ஏறி, பிதாவின் முன்னிலையில் தோன்றி, தம்முடைய ஜனங்களின் சார்பாகத் தம்முடைய பலியின் புண்ணியத்தை ஒப்படைப்பது வரையிலும், சபைக்கும் மற்றும் உலகத்திற்கும் வரமுடியாது. (இயேசு 40 நாட்கள் சீஷர்களுடன் காணப்பட்டதுபோல) இயேசு ஓர் ஆவிக்குரிய ஜீவியாக, இந்த யுகம் முழுவதும் அவருடைய பின்னடியார்களுடன் கூடவே காணப்பட்டிருந்தால், ஒருவரும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட முடியாது. நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, புத்திரச் சுவிகாரம் அடைவதற்கு முன்னதாக, நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக, கிறிஸ்து பரத்துக்கு ஏறி, தம்முடைய பலியின் புண்ணியத்தை ஒப்படைப்பது அவசியமாயிருந்தது.

பெந்தெகொஸ்தே அன்று அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட போது, அவர்கள், "இதுவே தீர்க்கத்தரிசியாகிய யோயேலினால் உரைக்கப்பட்டது," அதாவது "தீர்க்கத்தரிசியாகிய யோயேலினால் உரைக்கப்பட்ட படியே இது நடந்தேறுகிறது" (அப்போஸ்தலர் 2:16) என்று கூறினார்களே ஒழிய, "இவரைப் பற்றியே தீர்க்கத்தரிசியாகிய யோயேலினால் உரைக்கப்பட்டது" என்று கூறவில்லை. இதை அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்று அழைத்தனர்! ஒரு நபரினால் ஞானஸ்நானம் என்பது எண்ணிப்பார்க்க முடியாத ஒரு கருத்தாக உள்ளது. பரிசுத்த ஆவி எனும் நபர், ஒவ்வொரு விசுவாசியினுடைய இருதயத்திலும், தனிப்பட்ட விதத்தில் தங்குகின்றார் என்பதும் சரியான கருத்தல்ல! ஆனால் பரிசுத்த ஆவியை நாம் தனி நபராக, பிதா மற்றும் குமாரனிடமிருந்து தனி நபராகப் பேசுவதில்லை. பரிசுத்த ஆவியானது வேதவாக்கியங்களில் தேவனுடைய ஆவியாக, தேவனுக்குரிய ஆவியாக, தேவனிடமிருந்து வருவதாகவும், கிறிஸ்துவிடமிருந்து வரும் கிறிஸ்துவின் ஆவியாகவும், அனைத்து இடங்களிலும் ஊடுருவக் கூடியதும், எந்த இடத்திலும், எத்தனை இடங்களிலும், எந்த நேரத்திலும், எவ்விதமான வேலையையும் செய்யக்கூடிய ஓர் ஆவி அல்லது செல்வாக்கு அல்லது வல்லமை என்று குறிப்பிடப்படுகின்றது. இந்த உண்மையான கருத்தானது, வேதவாக்கியங்கள் அங்கீகரிக்காததும், அர்த்தமற்றதுமான கருத்துக்களைக்காட்டிலும் எத்துணை திருப்தியை அளிக்கின்றதாய் இருக்கின்றது. யோவான் 16:7-ஆம் வசனத்தில் ஆங்கிலத்தில் இடம்பெறும் "him" (அவரை) என்ற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தையானது it (அதை) என்றும் மொழிப்பெயர்க்கப்படலாம். அதாவது "அதை உங்களிடத்திற்கு அனுப்புவேன்." எனினும் அவரை என்ற வார்த்தை இடம்பெறுவதற்கும் நாம் மறுப்புத் தெரிவிப்பதில்லை. காரணம் இந்தப் பரிசுத்த ஆவி அல்லது செல்வாக்கானது பிதாவிடமிருந்தே வருகின்றது. இதுபோலவே 8-ஆம்

வசனத்தில் இடம்பெறும் அவர் என்ற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தையானது (it) அது என்றும் மொழிப்பெயர்க்கப்படலாம்.

## உலகத்தின் ஆவி அல்ல

பரிசுத்த ஆவியின் செயல்பாடு குறித்த பல்வேறு தவறான கருத்துக்களில் ஒன்று, அந்தப் பரிசுத்த ஆவி என்னும் நபர், பாவத்தில் இருக்கும் ஜனங்களை நம்ப வைப்பதிலும், அவர்களை நீதியினிடத்திற்கு மாற்றுவதிலும், இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் இங்குமங்குமாகச் செல்லும் வேலையில் காணப்படுகின்றார் என்பதாகும். இதையும் தாண்டிச் சிலர் நம்மிடம் தெரிவிப்பது என்னவெனில், தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் அற்புதகரமான விதத்தில் பாவியின் மேல் செயல்படாதது வரையிலும், எவனும் மனம்மாற்றம் அடையான் என்பதாகும். இவைகள் உண்மை என்றால், உலகம் இன்று மனம்மாற்றம் அடையாமல் இருப்பதற்குத் தேவனே பொறுப்பாளியாக இருப்பார்; காரணம் பரிசுத்த ஆவியானது மனமாற்றுவதும், கண்டித்துத் திருத்துவதுமாகிய அதன் பாகத்தைச் செய்யத் தவறிவிட்டதாக இருக்கும். ஆனால் இவை அனைத்தும் கடுமையான தப்பறைகள் ஆகும்.

பரிசுத்த ஆவி உலகத்தாருடைய இருதயங்களில் செயல்படுவதில்லை. மாறாக நமது கர்த்தர் கூறுகின்றபடி, அந்தப் பரிசுத்த ஆவியானது, பிதாவின் ஆவியானது, குமாரனுடைய ஆவியானது, சத்தியத்தின் ஆவியானது, தெளிந்த புத்தியின் ஆவியானது, கர்த்தருடைய பரிசுத்தத்தின் ஆவியானது, அவருடைய சீஷர்களாகிய உங்களிடத்திலே காணப்படும். பரிசுத்த ஆவியினுடைய இந்தத் தன்மைகள் எதுவும் பாவமுள்ள உலகத்தாரிடம் காணப்படுவதில்லை. பரிசுத்த ஆவியின் இத்தன்மை களானது, "கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு" மாத்திரமே உரியதாகும் மற்றும் இவர்களுக்கே திட்டமிடப்பட்டுள்ளது. தேவனுக்கென்று தங்களை முழுமையாய் அர்ப்பணித்துள்ளவர்களுடைய இருதயங்களில் தேவனுடைய வல்லமையானது செயல்பட்டு, அவர்களை உற்சாகப்படுத்தி, அவர்களைச் சுத்திகரித்து, அவர்களை உலகத்தின் ஆவியிடமிருந்து பிரித்து, அவர்களைத் தெய்வீக ஊழியங்களில் பயன்படுத்துகின்றது. உலகத்தின் ஆவி என்பது, பாவம் மற்றும் சுயநலத்தின் ஆவியாக இருக்கின்றது. கர்த்தருடைய ஆவி என்பது, தெய்வீகச் சித்தத்திற்கு என அர்ப்பணம் பண்ணும் ஆவியாகவும், பரிசுத்தத்தின் ஆவியாகவும் இருக்கின்றது.

## அவர் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்

நம்மிடத்தில் இருக்கும் பரிசுத்த ஆவியானது எப்படி உலகத்தைக் கண்டித்து உணர்த்தும்? உலகத்தைக் கண்டித்து உணர்த்தத்தக்கதாக, சபை அதாவது பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு வெளிச்சமூட்டப்பட்ட அனைவரும், மனுஷர்கள் முன்பு தங்களது வெளிச்சத்தைப் பிரகாசிக்கப்பண்ண வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்

என்பது நமது பதிலாகும். சபையினுடைய பரிசுத்தமே, உலகத்தைக் கண்டித்து உணர்த்துகின்றதாய் இருக்கும். கர்த்தருடைய ஆவியும், கர்த்தருடைய ஜனங்களிலுள்ள அவருடைய பண்புகளும், பாவத்தில் ஜீவிப்பவர்களைக் கண்டித்து உணர்த்துகின்றதாய் இருக்கும். நம்முடைய கர்த்தருடைய விஷயத்திலும் இப்படியாகவே இருந்தது. நமது கர்த்தருடைய ஞானஸ்தானத்தின்போது, பிதாவின் ஆவி அவருக்கு அளிக்கப்பட்டது. அவர்மேல் பரிசுத்த ஆவியானது இறங்கி தங்கினதை, யோவான் சாட்சிக் கொடுக்கின்றார். அவர் பிதாவின் ஆவியை அளவில்லாமல் பெற்றுக்கொண்டார். காரணம் அவர் தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் பூரணமானவராய் இருந்தபடியினால், அவர் பரிசுத்த ஆவியை முழுமையாய்ப் பெற்றுக் கொள்ள முடிந்தது. விழுகையின் காரணமாக பூரணமில்லாமல், குறைப்பாடுடன் காணப்படும் நாம், நம்முடைய குறைப்பாடுகளின் காரணமாகக் குறிப்பிட்ட அளவிலேயே, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் நாட்கள் செல்லச்செல்ல, ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியினால் அதிகமதிகமாய் நிரப்பப்பட்டு, பரிசுத்தமாக்கப்படுவது ஒவ்வொருவருக்கும் உரிய சிலாக்கியமாக இருக்கின்றபடியினால் தேவனுக்கு நன்றி. மனுஷர் முன்பு கர்த்தரினால், பிரகாசிக்கப்பட்ட அவருடைய ஒளியானது மாபெரும் ஒளியாக இருந்தது. அதற்கு ஒப்பிடுகையில் நம்முடைய ஒளிகளானது மங்கலானதாகத்தான் காணப்படுகின்றது. எனினும் நமது கர்த்தருடைய உதாரணத்தைப் பின்பற்றுகின்றவர்களாக நாம் காணப்பட வேண்டும்; மற்றும் அதிகமதிகமாகச் சத்தியத்தின் ஆவியினால், சத்தியத்தின் ஒளியினால் நிரப்பப்பட வேண்டும்; மற்றும் நம்முடைய செல்வாக்கின் கீழ் வருகின்றவர்கள் அனைவர் மீதும் ஞானத்துடன் அவ்வொளியைப் பிரகாசிக்கப்பண்ணுகிறவர்களாய்க் காணப்பட வேண்டும்.

வசனங்கள் 8-11-இல் தெரிவிக்கப்பட்டுள்ள பிரகாரம் மூன்று விதமான பலன்கள் காணப்படும்:

(1) "அது பாவத்தைக் குறித்து உலகத்தைக் கண்டித்து உணர்த்தும்," அதாவது உலகத்திற்கு அதன் பாவநிலையைக் குறித்து உணர்த்தும். பாவத்தினுடைய, மிகுதியான பாவத்தன்மையை அதிகமதிகமாய் உலகத்திற்குக் காண்பிக்கும். நேர்மைக்கும் நேர்மையின்மைக்கும், உண்மைக்கும் போலித்தனத்திற்கும், நீதிக்கும் பாவத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை வேறுபடுத்திப்பார்க்க முடியாத அளவுக்கு, உலகத்திலுள்ள அநேகர் தேவனுடைய சாயலை மிகவும் இழந்துள்ளனர்; மற்றும் மனசாட்சியையும் மிகவும் இழந்துள்ளனர். உலகமானது, அதனை கொண்டே அதனை நிதானிக்கின்ற பழக்கத்தைக்கொண்டிருக்கின்றதாய் இருக்கின்றது. ஆனால் கிறிஸ்துவிலும், அவருடைய சபையிலும் இன்று உலகத்திற்கெனத் தேவன் புதிய கொள்கையை/நியமத்தை/அளவுகோலை நிறுவியுள்ளார். நீதி மற்றும் அன்பு தொடர்புடைய தேவனுடைய வார்த்தைகளாகிய மகிமையான நியமத்தை/ அளவுகோலை/ கொள்கையை சபையானது அதன் வார்த்தைகளினால் மாத்திரமல்லாமல், அதன் கிரியைகளினாலும் உயர்த்திப்பிடிக்க வேண்டும்.

(2) பாவம் விஷயத்தில் உலகமானது குற்றவாளி எனத் தீர்க்கப்படுவது

மாத்திரம் போதுமானதாகாது. உலகம் பாவத்திற்கு எதிரான நீதியைக் குறித்துக் கொஞ்சம் புரிந்துக்கொள்வதும் அவசியமாகும். ஓரளவுக்கு நீதியை நிறைவேற்றுவது கூடுகிற காரியம் என்றும், நீதியை நிறைவேற்றுவதில் ஏற்படும் சிரமம் என்பது விழுந்துபோன சுபாவத்தினாலேயே என்றும் உலகம் புரிந்துக்கொள்வது அவசியமாகும். நீதிதான் சரியான கொள்கை என்றும், நீதியை மாத்திரமே தேவன் அங்கீகரிப்பார் என்றும், தேவனுடைய அருமையான திட்டத்தில், நீதியாய் நடப்பவர்களுக்கு மாத்திரமே நித்தியஜீவன் அருளப்படுவதற்கு அவர் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றும், உலகமானது நம்ப வைக்கப்பட வேண்டும். இது தொடர்புடைய விஷயத்ததில் போதிப்பவர்களாகிய ஆவியில் வெளிச்சமூட்டப்பட்டவர்கள் என்பவர்கள், ஒருவனும் தன்னுடைய சொந்த நீதியின் கிரியைகளினால் பிதாவுக்கு இசைவாய் வர முடியாது என்றும், கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியம் அருளுகின்ற, பாவங்களுக்கான மன்னிப்பும், பாவங்கள் மூடப்படுதலும் அவசியம் என்றும் தெளிவுப்படுத்திக் கூற வேண்டும்.

(3) கர்த்தருடைய ஜனங்களின் செய்திக்கும், வெளிச்சத்திற்கும், தொடர்புக்குள் வரும் அயலார்களை, கர்த்தருடைய ஜனங்களிடத்திலிருக்கும் கர்த்தருடைய ஆவியானது, தற்கால ஜீவியத்துடன் அனைத்தும் முடிவடைவதில்லை என்றும், முழு மனுக்குலத்திற்குமான ஒரு நியாயத்தீர்ப்பு, ஒரு பரீட்சையானது தேவனுடைய ஏற்பாட்டில் ஏற்பாடுபண்ணப்பட்டுள்ளது என்றும் நம்பவைத்திடும். இந்தச் செய்தியைக் கேட்கின்ற எவனும், இதிலுள்ள நியாயத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும் இப்படி ஒப்புக்கொள்வது என்பது நித்தியஜீவனை வாஞ்சிப்பவர்கள் அனைவரின் சந்தோஷத்திற்கும், நம்பிக்கைக்கும் அடித்தளமாய் இருக்கும். இப்படியான நம்பிக்கைகளால் சரியாகவும், ஆழமாகவும் செயல்படுத்தப்படுபவர்கள், தாங்களும் சபையுடன் கூடத் தங்களுடைய நியாயத்தீர்ப்பையும், பரீட்சையையும் பெற்றுக்கொள்ளத்தக்கதாகக் கர்த்தரை நாடித்தேடி, தற்காலத்திலுள்ள கிருபைக்கான பல்வேறு வழியைத் தேடுகிறவர்களாகவும் காணப்படுவார்கள். ஆனால் இப்படியான நம்பிக்கையினால் தாக்கம் அடையாதவர்கள், சபை மூலம் அறிவுறுத்தப்பட வேண்டும்; அதாவது எந்தளவுக்கு அவர்கள் ஒளியை அல்லது அறிவைப் பெற்றிருக்கின்றார்களோ, அவ்வளவாய் அவர்களுக்குப் பொறுப்பு உள்ளது என்று அறிவுறுத்தப்பட வேண்டும். தேவனுடைய திட்டத்தில், கர்த்தரிடத்திலான உண்மைக்கு ஏற்ப, பரீட்சிக்கப்பட்டு, நியாயந்தீர்க்கப்படத்தக்கதாக அனைவருக்கும் முழுமையான வாய்ப்பு அளிக்கப்படும் விதத்தில், உலகத்திற்கு எதிர்க்காலத்தில் ஒரு நியாயத்தீர்ப்பின் நாளை தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார். தற்காலத்திலுள்ள உலகத்தாரின் நடக்கையானது, எதிர்க் காலத்திலுள்ள அவர்களுக்கான நியாயத்தீர்ப்பு அல்லது பரீட்சையுடன் தொடர்பு பெற்றிருக்கின்றது. தற்காலத்தில் உலகத்தார் எந்தளவுக்குத் தங்களுடைய மனசாட்சிக்குக் கீழ்ப்படிய தவறி, சத்தியத்தின் வழிநடத்துதலைப் பின்பற்றுவதற்குத் தவறுகின்றார்களோ, அந்தளவுக்கு அவர்கள் எதிர்க்காலத்தில் ஜெயங்கொள்வதற்கு சிரமம் உண்டு; மற்றும் அடிகளும் அடிக்கப்படுவார்கள். மேலும் அவர்கள் எந்தளவுக்குத் தற்காலத்திலேயே நீதிக்கு ஏற்ப வாழ்வதற்கு நாடுகின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் நியாயத்தீர்ப்பின் நாளில் தங்களுக்கு உதவிடும் வண்ணமாக தங்களுக்கென ஓர் ஆசீர்வாதத்தைச் சேர்க்கின்றவர்களாய் இருப்பார்கள்.

## ஏனெனில் அவர்கள் நம்பிக்கை வைக்கவில்லை

கிறிஸ்துவையும், பாவத்திற்கான அவருடைய கிருபாதார பலியையும் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளாததினாலேயே உலகத்தார் இன்னமும் பாவிகளினுடைய தன்மையிலேயே, கோபாக்கினையின் பிள்ளைகளாகத் தொடர்ந்து காணப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பதைச் சபையிலுள்ள சத்தியத்தின் பரிசுத்த ஆவியானது, உலகத்தாருக்கு அறியச்செய்திடும். இயேசு தம்முடைய பலியை, பிதாவிடம் ஒப்படைத்தபோது, நமது கர்த்தர் இயேசுவால் பெற்றுத்தரப்பட்ட நீதி ஒன்று, அதாவது தரிபிக்கப்படும் நீதி ஒன்று உள்ளது என்று உலகத்தாருக்குச் சபையினிடத்திலுள்ள பரிசுத்த ஆவியானது அறியச் செய்திடும். தற்காலத்தின் ஏற்பாடுகள்/ஒழுங்குகள் தொடராது என்றும், நம்முடைய கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது, புதிய ஒழுங்குகள்/ஏற்பாடுகள் கொண்டுவரப்படும், காரணம் கர்த்தர் உலகத்தை ஏற்கெனவே மீட்டுக்கொண்டதன் வாயிலாக, தீமையின் தற்போதைய ஏற்பாட்டிற்கு அதிபதியாக இருக்கும் சாத்தானைப் புறம்பாக்கிப்போடுவதற்குரிய உரிமையைச் சுதந்தரித்துள்ளார் என்றும், சபையினிடத்திலுள்ள பரிசுத்த ஆவியானது உலகத்திற்கு அறிவுறுத்தும்.

## அவர் வரப்போகிறகாரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்

நமது கர்த்தர் தம்முடைய பின்னடியார்களுடன் கூடக் காணப்பட்ட சமயத்தைக் காட்டிலும், அவர் பரத்திற்கு ஏறிப்போன பிற்பாடே, இன்னும் அதிகமான அறிவுரைகளைக்கொடுத்து, தம்முடைய பின்னடியார்களை ஆயத்தப்படுத்தினார். இதற்குக் காரணம் பரத்திலிருந்து ஆவி வருவதுவரையிலும், அவர்கள் ஆயத்தமற்றே காணப்பட்டார்கள் என்பதே ஆகும். அதுவரையிலும் அவர்கள் சுபாவத்தின்படியான மனிதனைப்போன்றே காணப்பட்டனர். மேலும் அப்போஸ்தலர் சுட்டிக்காட்டினது போன்று "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" (1 கொரிந்தியர் 2:14). இதன் காரணமாகவே, பிற்காலங்களில் ஆவிக்குரிய விஷயம் தொடர்புடைய ஆழமான போதனைகளைச் சில அப்போஸ்தலர்கள் கொடுத்ததுப் போன்று, இயேசு (சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு முன்) கொடுக்கவில்லை என்று பார்க்கின்றோம். இப்படியாக ஆழமானப் போதனைகளை இயேசு கொடுக்காதது, அவருடைய சார்பிலான இயலாமையாக இராமல், மாறாக அந்தச் சத்தியங்கள் அப்பொழுது அவருடைய சீஷர்களுக்கு ஏற்றக் கால உணவாய் இராமல், அவர்களைத் திணறச்செய்து, அவர்களைப் பாதித்திருக்கும் என்பதினாலேயே ஆகும். ஆகவேதான் நம்முடைய கர்த்தருடைய போதனைகளிலுள்ள ஆழமான விஷயங்கள் உவமை பாணியில் முன்வைக்கப்பட்டது. இப்படி உவமை பாணியில் முன்வைக்கப்பட்டதின் காரணமாக, அது சீஷர்களுக்கு அச்சமயத்தில்

பாதிப்பையும் ஏற்படுத்தாது மற்றும் பிற்பாடு அதன் காரியங்களை உணர்ந்து, புரிந்துக்கொள்ளப்பட முடியும். ஆகவேதான் அவர், "பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லை (உங்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை) பரம காரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்" என்றார் (யோவான் 3:12).

"சத்தியத்தின் ஆவி வரும்போது, அது உங்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும். எனினும் அது ஒரு கால்வாயாக மாத்திரமே இருக்குமே ஒழிய அதிகாரி போன்று இருப்பதில்லை. காரணம் அது உங்களுக்குத் தெய்வீகத் திட்டத்தினுடைய பல்வேறு அம்சங்களைத் தெரியப்படுத்தும். அதாவது உங்களுக்கு இன்னமும் வெளிப்படுத்தப்படாதவைகள் ஏற்றவேளையில் வசனத்தின் வாயிலாகவும், பரிசுத்த ஆவியினுடைய செல்வாக்கின் வாயிலாகவும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படும். இந்தப் பரிசுத்த ஆவியின் மூலம் (இயேசு) நான் மகிமைப்படுத்தப்படுவேன். ஏனெனில் இந்தப் பரிசுத்த ஆவியானது, உங்களுக்குக் காண்பிப்பவைகள் என்னுடையவைகளாய் இருக்கின்றது. காரணம் பிதாவினுடைய வைகள் அனைத்தும் என்னுடையவைகளாய் இருக்கின்றது. ஆகவேதான் (இயேசு) நான், 'அவர்/அது என்னுடையதில் எடுத்து, உங்களுக்கு அறிவிப்பார்/அறிவிக்கும்' என்று கூறினேன்" என்ற விதத்தில் இயேசு கூறுகின்றார் (15-ஆம் வசனம்). இவ்வசனத்தில் பிதாவுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைக் கவனியுங்கள்; அனைத்தும் பிதாவினுடையவைகள். ஆனால் பிதா, குமாரனைத் தம்முடன் உடன்சுதந்திரராக, தம்முடைய உடன்பங்காளியாக ஆக்கியுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் பரிசுத்த ஆவிக்கு எதுவும் சொந்தமெனச் சொல்லப்படவில்லை. காரணம் பரிசுத்த ஆவி என்பது தொடர்பு வைத்துக் கொள்வதற்குரிய, ஆசீர்வாதங்கள், அறிவுரைகள் வழங்கிடுவதற்குரிய, தெய்வீகக் கால்வாயாக மாத்திரமே இருக்கின்றது. பரிசுத்த ஆவி ஒரு நபரல்ல, மாறாக சர்வ வல்லமையுள்ள தேவன் மற்றும் அவருடைய நித்திய குமாரனுடைய ஆவி அல்லது செல்வாக்கு அல்லது வல்லமையாக மாத்திரமே இருக்கின்றது. பரிசுத்த ஆவி பற்றின விரிவான விளக்கங்களுக்கு வேதாகம ஆராய்ச்சி பாடங்களின் 5-ஆம் தொகுதியில்/volume-இல், 8-ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

## வேறொரு தேற்றரவாளனை உங்களுக்குத் தந்தருளுவார்

நம்முடைய பாடத்தின் ஆதார வசனமானது அருமையானதாகவும், உதவிகரமானதாகவும் காணப்படுகின்றது. இடுக்கமான பாதையிலுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்குத் தேற்றும் ஆவியாக, வழிக்காட்டியாக, போதிப்பவராக, உதவியாளராகக் கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானது, பிதாவிடமிருந்ததான அன்பளிப்பு என்று நமது கர்த்தர் விவரிக்கின்றார். இது பெந்தெகொஸ்தே ஆசீர்வாதம் குறித்த பதிவிலுள்ள அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்கு இசைவாகவே இருக்கின்றது. இவ்விஷயம் குறித்து, தெய்வீக வல்லமையின் வலது கரத்திற்கு

உயர்த்தப்பட்டுள்ள நமது கர்த்தர் இந்தப் பரிசுத்த ஆவியை/வல்லமையை பிதாவிடமிருந்து பெற்றுக்கொண்டு, பெந்தெகொஸ்தே நாளன்று தம்முடைய பின்னடியார்கள் மீது பொழியப்பண்ணினார் என்று அப்போஸ்தலர் பேதுரு விவரிக்கின்றார். இவைகள் அனைத்தும் பரிசுத்த ஆவி தொடர்புடைய சரியான கண்ணோட்டத்திற்குப் பொருந்துகின்றது. ஆனால் பரிசுத்த ஆவி ஒரு நபர் எனும் தவறான கண்ணோட்டத்திற்கு மிகவும் பொருத்தமற்றதாய் இருக்கின்றது. எப்படி ஒரு நபரைப் பொழியப்பண்ண முடியும்! அதிகாரத்தில் சரிசமமாய் இருக்கும் இருவரில் ஒருவர் மற்றொருவரை நோக்கி, இவர்கள் இருவருக்கும் சரிசமமாக இருக்கும் மூன்றாவது ஒரு நபரை, ஓர் அன்பளிப்பாக/வரமாகப் பொழியப்பண்ணுவதற்கென ஜெபம் பண்ணிட முடியும்! இந்தத் தப்பறைக்கு நம்முடைய கண்கள் திறக்கப்படும்போது, இதிலுள்ள முரண்பாடுகள் நமக்கு அருமையாய் வெளிப்படுகின்றது. ஆனால் நமது கர்த்தர் இயேசு நம்பொருட்டு, பிதாவின் முன் தோன்றி, நம் பொருட்டான அவருடைய பலியின் புண்ணியத்தைக் கிருபாசனம் மீது வைத்தவுடன், பிதா தம்முடைய பரிசுத்த ஆவியை, தம்முடைய பரிசுத்தமான செல்வாக்கை நம்மீது அனுப்பி, நம்மை அவருடைய குடும்பத்திற்குள் தத்தெடுத்து, நம்மை அவருடைய பிள்ளைகளென நடத்த பிரியப்பட்டதான உண்மையான கருத்து எத்துணை அருமையானதாய் இருக்கின்றது!

பெந்தெகொஸ்தே நாளன்று வந்த ஆசீர்வாதங்கள் அன்று பெற்றுக் கொண்டவர்களுக்கு மாத்திரமல்லாமல், நிழலில் காண்பிக்கப்பட்டுள்ளது போல முழுச்சபைக்கும் உரியது என்ற கருத்து எத்துணை அருமையானதாய்க் காணப் படுகின்றது! முற்காலங்களில் இராஜாக்களும், ஆசாரியர்களும் அபிஷேகம் பண்ணப்பட்டு, விசேஷமான ஊழியத்திற்கெனப் பிரித்து வைக்கப்படுகின்றனர். கிறிஸ்துவும், அவருடைய சபையும், மெல்கிசெதேக்கின் முறைமையின் கீழ் உண்மையான இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் இருக்கின்றனர்; மற்றும் இவர்களுடைய ஊழியங்களின் கீழ்ப் பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும். நமது கர்த்தர் தலையாக இருக்கின்றார்; மற்றும் நாம் அவருடைய அங்கங்களாக இருக்கின்றோம். கர்த்தரை இராஜாவாக ஆக்குவதற்கும், ஆயத்தப்படுத்துவதற்கும் மற்றும் மெல்கிசெதேக்கின் முறைமையின்படி அவரை ஆசாரியர் ஆக்குவதற்கும், ஆயத்தப்படுத்துவதற்குமென அவர் மீது பரிசுத்த ஆவி வருவதானது, எண்ணெயினால் அபிஷேகித்தல் எனும் நிழலினால் அடையாளப்படுத்தப்படுகின்றது. ஆகவேதான் அவருடைய அபிஷேகத்தைக் குறித்து, அது ஆரோனின் தலையில் ஊற்றப்படுகிறதும், அவருடைய தாடியில் வழிந்தோடி, அவருடைய அங்கிகளின்மேல் இறங்கியிருக் கிறதான தைலமெனத் தீர்க்கத்தரிசி கூறுகின்றார். இது நமது தலையாகிய கர்த்தர் இயேசுவின் ஞானஸ்தானத்தின் போது, அவர்மீது பரிசுத்த ஆவி வந்ததையும், அவருடைய அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கென ஆயத்தத்துடன், காத்திருந்தவர்கள் அனைவர் மீதும் பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவி பொழியப்பட்டதையும், அதுமுதல் அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகள் மூலம் அவரை நம்பி, அதே சரீரத்தின் அங்கத்துவத்திற்குள் வந்துள்ள நாமும், அதே அபிஷேகத்தைப் பெற்றுள்ளதையும் அடையாளப்படுத்துகின்றது. "நீங்கள் அவராலே

பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது” (1 யோவான் 2:27). இந்த அபிஷேகித்தல் என்பது, ஒரு நபரைக்குறிக்காமல், மாறாக செல்வாக்கையும், ஆசீர்வாதத்தையும் குறிக்கின்றது.

நாம் கர்த்தரால் பயன்படுத்தப்படுவதும், பரிசுத்த ஆவியின் ஜெநிபித்தல் மூலமாக அவருடைய குடும்பத்திற்குள் தத்தெடுக்கப்படுவதுமாகிய சிலாக்கியத்தின் மூலமாக, எத்துணை திருப்தியும், எத்துணை ஆறுதலும் கர்த்தருடைய ஜனங்களுக்குக் கடந்துவந்துள்ளது. பரிசுத்த ஆவியின் அபிஷேகமும், பிதா மற்றும் குமாரனுடைய பரிசுத்தமான செல்வாக்கும், ஆசீர்வாதமும், நம்முடைய கணிப்புகளையும், நம்முடைய இருதயங்களையும் வழிநடத்தி, வேதவாக்கியங்களை நமக்குத் திறந்துகாட்டி, பூமியின் சகல குடிகளுக்குமான நமது பிதாவின் இரட்சிப்புக்கு அடுத்த மகிமையான திட்டத்தினுடைய ஆழத்தையும், நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும் அதிகமாய் உணர்ந்துக்கொள்ளும் நிலைக்கு நம்மைக்கொண்டு வந்து, நம்முடைய இருதயங்களைக் கொழுந்துவிட்டு எரியச்செய்கின்றது.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் நிலைத்திருப்பது என்பது தற்காலிகமான தல்ல. ஒரு நாளுக்கு, ஒரு மாதத்திற்கு, ஒரு வருடத்திற்கு நிலைத்திருக்கக்கூடியதாய் அல்லாமல், யுகத்தின் முடிவுவரையிலும் காணப்படும். இப்படியாக இருப்பதின் நிமித்தம் நாம் எத்துணை மகிழ்ச்சியடைகின்றோம்! நாம் அனுபவிக்கும் போதனைகளும்/ அறிவுரைகளும் மற்றும் வழிநடத்துதல்களும் எவ்வளவு ஆசீர்வாதமாய் இருக்கின்றது! நமது கர்த்தர் சொன்னதுபோல, உண்மையில் பரிசுத்த ஆவியானது, நமக்கு வரப்போகும் காரியங்களைக்காட்டி, நடந்து முடிந்தவைகளை நமக்கு விவரிக்கின்றதாய்க் காணப்படும். நம்முடைய எத்தனை ஆசீர்வாதங்கள், வரப்போகின்ற காரியங்களின் உணர்ந்துக்கொள்ளுதலாய்க் காணப்படுகின்றது. அதாவது ஆயிரவருட இராஜ்யம், பூமியின் குடும்பங்களைச் சீர்ப்பொருத்தி, தூக்கிவிட்டு, பலப்படுத்துவதற்குரிய காலங்களாகிய, வரப்போகின்ற காரியங்ளைப்பற்றின உணர்ந்துக்கொள்ளுதலாய்க் காணப்படுகின்றது.

## என் மீட்பர்

பாடிடுவேனே என் மீட்பரை
என் மீதிலுள்ள அவரது ஆச்சரியமான அன்பினையே.
கோர சிலுவையில் அவர் பாடுபட்டிட்டாரே,
சாபத்தினின்று என்னை விடுவித்திடவே.

சொல்லிடுவேனே வியத்தகு கதையினையே,
எப்படிச் சிறிய சுபாவத்திலான என்னை இரட்சித்திடவே;
தம் எல்லையில்லா அன்பிலும், இரக்கத்திலுமே
இலவசமாய் மீட்கும்பொருளைக் கொடுத்திட்டார் என்றே.

துதித்திடுவேனே எந்தன் அருமை மீட்பரை,
இரட்சித்திட அவரது வல்லமை வென்றது என்பது பற்றியே,
எப்படி வெற்றி வென்றார்
பாவம் மற்றும் மரணம் மற்றும் கல்லறை மீதினிலே என்றே.

பாடிடுவேனே எந்தன் அருமை மீட்பரை,
மகிமை சாற்றிட என் சத்தத்தை உயர்த்திடுவேனே;
மரணத்தினின்று என்னை ஜீவனுக்குள் கொண்டுவந்தவரையே,
பரலோக மகிமையைக் காண்பித்தவரையே.

பாடிடு, ஓ! பாடிடு எந்தன் மீட்பரை;
அவர் தம் இரத்தத்தினாலேயே என்னை வாங்கிட்டாரே;
சிலுவையில், எந்தனுக்கான மன்னிப்பினை முத்திரையிட்டாரே,
கடனைத் தீர்த்து என்னை விடுவித்தாரே.

– விடியல் துதிப்பாடல்கள், # 132

# நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்

## யோவான் 17:15-26

நமது கர்த்தர் தம்முடைய மரணத்தைக் குறித்த நினைவுகூருதலை நிறுவின இரவில், அவர் தம்மைக் குறித்தும், தமக்கு வரவிருக்கும் சிலுவை மரணத்தைக் குறித்தும் முழுமையாகச் சிந்தித்துக்கொண்டிருக்காமல், விசேஷமாகத் தம்முடைய சீஷர்களைக் குறித்துச் சிந்தனை செய்பவராகவும், அவர்களுக்காக ஜெபம் பண்ணுகிறவராகவும் காணப்பட்டார். "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" (யோவான் 16:33). "இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து: நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே. என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள் அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன். நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள் நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்" (யோவான் 17:1, 9-11).

"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்று சபையார் அனைவருக்கும் அப்போஸ்தலன் கட்டளையிட்ட வார்த்தைகளுக்கு மாதிரியாக, நமது கர்த்தருடைய முழு வாழ்க்கையும் காணப்படுகின்றது. நமது கர்த்தரும் கூட எப்போதும் ஜெப சிந்தனையுடன் கூடிய இருதயத்துடனே காணப்பட்டார். மேலும், ஜீவியத்தின் சகல விஷயத்திற்காகவும், பிதாவுக்குச் செலுத்துகின்ற நன்றியினால் அவருடைய இருதயம் இருந்தது. அவருடைய இருதயம், பிதாவின் பராமரிப்புடன் கூடிய பாதுகாப்பை உணர்ந்திருந்தது. அவரை விசுவாசித்தது, அவருக்குள் நம்பிக்கைக்கொண்டிருந்தது. மேலும் ஒவ்வொரு பிரச்சனையான தருணங்களிலும், பிதாவே பிரச்சனைகள் அனைத்தையும் நன்மைக்கு ஏதுவாக மாற்றத்தக்கதாக, இயேசுவின் இருதயம் பிதாவை நோக்கி பார்க்கிறதாகவும் இருந்தது. ஆனால், இடைவிடாமல் ஜெபம் பண்ணும் நமது கர்த்தருடைய இத்தன்மையானது, அவர் வாழ்க்கையின் அன்றாட காரியங்களிலிருந்து கொஞ்சம் திரும்பி, பிதாவோடு இரகசியமாக/தனிமையில் பேசுவதற்கெனச் சில சமயம் சுருக்கமாகவும், சில சமயம் தனிமையில் இராப்பொழுது முழுதும், ஜெபத்தில் கழிப்பதற்கென அவர் விரும்பின அவருடைய மிகுந்த தனிப்பட்ட ஜெபங்களை/தியானங்களைத் தடுத்ததே இல்லை. இயேசு, தமது சீஷர்களை அன்பு செய்தபோதிலும், அவர்கள் இன்னும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாதபடியினால், அவருடைய கண்ணோட்டத்திலிருந்து அவர்களால் காரியங்களை முழுமையாய்ப் புரிந்துக்கொள்ள முடியாது. பிதா மாத்திரமே முழுச் சூழ்நிலைகளையும் பற்றிப் புரியக்கூடியவராகவும், அறிந்தவராகவும் காணப்பட்டார். ஆகவே இயேசு சகல மனித உதவிகளிடமிருந்தும் புறம்பாக்கி, தனிமைப்படுத்தப்பட்ட போது, இது அவரை ஜெபத்தின் வாயிலாகப்

பிதாவிடம் நெருங்கி வரவும், அடிக்கடி வரவும் செய்தது.

இப்படியாகவே, கர்த்தருடைய பின்னடியார்கள் காணப்பட வேண்டும். நாம் எந்தளவிற்கு அவருடைய குணலட்சணத்திற்கு ஒப்பாக வளருகின்றோமோ, அவ்வளவாய் நாமும் அவரைப்போன்று இடைவிடாமல் ஜெபம் பண்ணுகிறவர்களாகவும், எல்லாவற்றிற்கும் நன்றி செலுத்துகிறவர்களாகவும், அவரை நம்முடைய சகல நம்பிக்கை, இலட்சியம் மற்றும் சந்தோஷத்திற்கான மையமாக உணர்ந்து, நமது இருதயங்களில் பாடுகிறவர்களாகவும் இருப்போம். மேலும், அவரைப்போன்று ஏற்றவேளையில் சகாயமும், இரக்கமும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக கிருபையின் சிங்காசனத்தை அணுகுவதற்கான சிலாக்கியங்களை அதிகம் பயன்படுத்துகின்றவர் களாகவும் இருப்போம். மேலும் நம்முடைய பூமிக்குரிய அல்லது ஆவிக்குரிய அருமையானவர்கள், நம்முடைய அனுபவங்களுக்கு அனுதாபம்/இரக்கம்/ஆறுதல் காட்ட இயலாமல் இருக்கின்றார்கள் என்று எவ்வளவாக காண்கின்றோமோ, அவ்வளவாக அப்படியான அனுபவங்களின் நேரங்களில் பூமிக்குரிய அனுதாபம்/இரக்கம்/ஆறுதல் இல்லாமையினிமித்தம் இயேசுவைப் போன்றே நன்மையும் அடைவோம். அதாவது, அம்மாதிரியான (ஆறுதல் அற்ற) அனுபவங்களானது, மாபெரும் ஆசீர்வாதம் மற்றும் சந்தோஷத்தை நமக்கு தரக்கூடியதான பரலோகத் தேற்றரவாளனிடம் (பிதா), நம்மை அடிக்கடி/அதிகமாய்க் கொண்டுசெல்லக் கூடியதாக இருக்கும்.

## உலகத்துக்கு அல்லாமல் சபைக்கே

இந்த ஜெபத்திலும் சரி, வேதவாக்கியங்கள் எங்கும் சரி சபைக்கும், உலகத்திற்கும் இடையில் தெளிவான எல்லைக்கோடு போடப்பட்டுள்ளது. இதைப் பார்த்து உணராதவர்களுக்கு மாபெரும் இழப்பு நேரிடுகின்றது. ஏனெனில், இது ஆச்சரியமான விதத்தில், "சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து" பார்ப்பதற்கு உதவுகின்றது. "தேவன் உலகத்தை அன்புகூர்ந்தார்;" "இயேசு தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார்." இயேசு, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாவார் என்றபோதிலும், அவர் உலகத்தான் அல்லாததுபோல, அவருடைய சீஷர்களாகுபவர் களும் உலகத்தாரல்ல. "நான் உலகத்தானனல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல" (யோவான் 17:16). சபைக்கும், உலகத்திற்கும் நடுவே உள்ள இந்த வேற்றுமையைக் காண தவறுவது, உண்மை கிறிஸ்தவத்திற்கு ஆபத்தான விளைவைக் கொண்டுவரக்கூடியதாக இருக்கும்.

உலகமானது சில வாக்குத்தத்தங்களையும், பண்டிகைகளையும், சில வழக்க முறைகளையும் தனதாக்கிக்கொண்டுள்ளதால், அது ஏறத்தாழ சபையின் கிருபைகளுக்கு ஒத்ததாகவும் அல்லது போலியாகவும் காணப்படுகின்றது. இதைச் சமுதாயப் பண்பாடு என்றே அழைக்கலாம். இவ்விதமாக உலகத்தின் பெரும் பகுதியானது, இன்று தவறுதலாகச் சபையின் பாகம் என்று அடையாளம்

கண்டுகொள்ளப்படுகின்றது. சபை என்பது, மீண்டுமாக ஜெநிப்பிக்கப்பட வேண்டும் என்றும், உயிர்த்தெழுதலின்போது, அவர்கள் மீண்டும் பிறக்க வேண்டும் என்பவைகளைப் புரிந்துக்கொள்ளாதவர்களுக்கு, இது பெரும் பாதிப்பாகும். அவர்கள் தங்களையே வஞ்சித்துக்கொண்டிருக்கின்றனர். இது உண்மை சபைக்கும், கர்த்தருடைய உண்மையான பின்னடியார்களுக்கும், தங்களுடைய புதிய சுபாவங்களைக்கொண்டு மாம்சத்தின் பெலவீனங்களோடு போராட வேண்டியவர் களுக்கும் கூடப் பாதிப்பாய் அமைகின்றது. எப்படியெனில், இவர்களுடைய மாம்சம் பொதுவான வழக்கமுறைகளைக் கொண்டு தன்னை நியாயப்படுத்த நாடுகின்றது. மேலும், பொதுவான கோட்பாடுகளைத் தாண்டி செயல்படுவது மதவெறி என்றும், மதத் தீவிரவாதம் என்றும் இவர்களுடைய மாம்சம் வலியுறுத்துகின்றது. மரணம் வரையிலுமான சுயத்தை வெறுத்த விஷயத்திலும், வாழ்க்கையின் விஷயத்திலும் இயேசு மற்றும் அவருடைய அப்போஸ்தலர்கள் கொண்டிருந்த கோட்ப்பாடுகளின்படி, கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் வாழும்போது, நாம் உலகம் மற்றும் பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாரின் கண்ணோட்டத்தின்படி மதத்தீவிரவாதிகள் என்றே கணிக்கப்படுவோம் என்பதைக் கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நமது கர்த்தர் உலகத்துக்காக ஜெபம் பண்ணவில்லை, ஏனெனில், உலகத்தைக் கையாளுவதற்கான கர்த்தருடைய வேளை இன்னும் வரவில்லை; அவ்வேளையானது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை தெரிந்தெடுக்கப்படுவது வரையிலும் வருவதில்லை. அவர் விசேஷமாகத் தம்முடைய அப்போஸ்தலர்களுக்காக ஜெபம் பண்ணினார். ஏனெனில், அவர்கள் உலகத்தில், தம்முடைய விசேஷமான பிரதிநிதிகளாகக் காணப்படப் போகின்றவர்கள். மேலும், அதுவரையில் உண்மையான இருதயங்களோடு அவரை விசுவாசித்துக் கொண்டிருந்த 500 சகோதரருக்காகவும், அவருடைய ஜெபம் உள்ளடங்கி காணப்பட்டது. இவர்கள் மாத்திரமல்லாமல், (வசனம்-20) யுகம் முடியும் வரையிலும் காணப்படும் இதுபோன்ற வகுப்பார் யாவருக்குமாக, அவருடைய விண்ணப்பம் காணப்பட்டது. அதாவது அவருடைய சீஷர்களாகவும், பின்னடியார்களாகவும் ஆகத்தக்கதாக, உலகத்திடமிருந்து பிரித்து, சத்தியத்தின் இடுக்கமான வழியில் செல்லத்தக்கதாக, யார் யாருடைய விசுவாசமானது, மிகுந்த உண்மையுடனும், முழுமையுடனும் இருந்து, அவர் மேல் நம்பிக்கையுடனும் காணப்படுகின்றதோ, அத்தகையவர்கள் யாவருக்குமாக அவருடைய விண்ணப்பம் ஏறெடுக்கப்பட்டது.

## எவைகளுக்காகக் கர்த்தர் ஜெபம் பண்ணவில்லை

இன்றைய உலகத்திலுள்ள பெயர்க்கிறிஸ்தவச் சபையின் கண்ணோட்டத்தை நாம் எடுத்துக்கொண்டு, நம்மை ஒரு பெயர்க்கிறிஸ்தவ விசுவாசியின் ஸ்தானத்திலும், பெயர்க் கிறிஸ்தவன் அறிக்கைப்பண்ணுகிற விசுவாசத்தின் கண்ணோட்டத்திலும் நம்மை நாம் பொருத்திப்பார்க்க முற்படுவோமாகில், நம் கர்த்தர் தற்கால

சூழ்நிலைகளுக்காகவே ஜெபித்தார் என்று நாம் எண்ணிக்கொள்வோமானால், அவருடைய ஜெபம் பின்வரும் வார்த்தைகளை உள்ளடக்கிக் காணப்படலாம்:

"என்னுடைய பின்னடியார்கள் எண்ணிக்கையில் மிகப் பெரிய அளவாக வேண்டும் என்றும், அவர்கள் மிகவும் செல்வ செழிப்புடனும், மிகவும் கல்வியறிவு உடையவர்களாகவும் இருந்து, இதன் மூலம் அவர்கள் உலகத்தார் மத்தியில் சிறப்பு மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்றும், நான் ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக, அவர்கள் மாபெரும் மதப் பிரிவுகளாகப் பிரிய வேண்டும் என்றும், அவர்களில் சிலர் சத்தியத்தின் ஒரு பாகத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்டும், வேறு சிலர் சத்தியத்தின் பாகங்களோடு தப்பறைகளையும், முரண்பாடுகளோடு கலந்துவிடவும் வேண்டும் என்று நான் ஜெபம் பண்ணுகின்றேன். வெளித்தோற்றமான பயபக்தியும், சுயத்தில் திருப்தியும், பெருமையும்/கௌரவமும் கொண்டு, சமயக் குருமார் திருச்சபை (Episcopalians) என்று அறியப்படும் வகுப்பாருக்காக நான் ஜெபம் பண்ணுகின்றேன். வெஸ்ட் மினிஸ்டரின் அறிக்கையின்படியான விசுவாசத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்து, பிற்காலங்களில் தாங்கள் கைக்கொண்டிருந்த விசுவாசத்திற்கு நேர் எதிர்மாறான, சுருக்கமான பிற்சேர்க்கையை 1902-ஆம் வருடத்தில் வெளியிடப்போகும் கௌரவமான வகுப்பாருக்காகவும் நான் ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக, வெஸ்லியின் தலைமையின் கீழ் நடத்தப்பட்டு, தங்கள் வழிபாடுகளில் அநேக உலகரீதியான வழக்கங்களையும், கவர்ச்சிகளையும் சேர்த்துக்கொண்டு, மிகவும் செழிப்புள்ளவர்களாகி, வருடம் முழுவதும் தங்கள் சபை கட்டிடத்தைக் குறித்துப் பெருமையாகப் பேசப்போகும் மற்றொரு மாபெரும் சபை பிரிவுக்காகவும் நான் ஜெபம்பண்ணுகிறேன். இன்னுமாக, என்னுடைய நாமத்தைத் தரித்துக்கொண்டு, லூதரை பின்பற்றுகிற மற்றுமொரு மாபெரும் பிரிவு அல்லது என் பின்னடியார்களின் வகுப்பாருக்காகவும் நான் ஜெபம் பண்ணுகின்றேன். என்னுடைய இராஜ்யத்தைத் தன்னுடையது என்று கூறிக்கொண்டு, பூமியின் இராஜாக்கள்மேல் வல்லமையிலும், மாபெரும் மதிப்பிலும், கனத்திலும் ஆளுகை செய்வோம் என்று உரிமை பாராட்டிக்கொண்டும், தங்களுடைய தலைவர் மற்றும் பிரதிநிதிகளே என்னுடைய பிரதிநிதி என்றும், உலகத்தின் ஆவிக்குரிய சக்கரவர்த்தி என்றும் உரிமை பாராட்டப்போகும் மாபெரும் உரோம கத்தோலிக்க திருச்சபைக்காக நான் ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக, இச்சபை பிரிவானது, தன்னுடைய சூழ்ச்சியான திட்டங்கள் வாயிலாக, என்னுடைய வார்த்தைகள் பொது ஜனங்களைச் சென்றடையாத வண்ணம் பார்த்துக்கொள்ளட்டும் என்றும், இச்சபை பிரிவானது எண்ணற்ற அதன் பூசை பலிகளை, பாவத்திற்கான என்னுடைய மாபெரும் பலிக்கு அடையாளமாக வைக்கட்டும் என்றும், இப்பிரிவினர் செழித்தோங்கவேண்டும் என்றும், இவர்கள், "உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கட்டும்" என்றும் நான் ஜெபம் பண்ணுகின்றேன்.

இன்னுமாக, இந்த அனைத்து சிறு சிறு பிரிவினரும், செழித்தோங்க வேண்டும் என்றும், அந்த ஒவ்வொரு பிரிவினரும் தங்களிடத்தில் மாத்திரமே சத்தியம் இருக்கின்றது என எண்ணிக்கொண்டு, தங்கள் தங்கள் விசுவாசப் பிரமாணங்களில்

திருப்தி அடைந்தவர்களாகக் காணப்பட்டு, வழியையும், சத்தியத்தையும், ஜீவனையும் அறிந்துக்கொள்வதற்கென வேதவாக்கியங்களை ஆராய்வதிலிருந்து தடைபண்ணப் பட்டவர்களாக இருக்க வேண்டும் என்றும், நான் ஜெபம் பண்ணுகின்றேன். இப்பிரிவினர்கள் அனைவரும் இவ்விதமாகச் சிதறடிக்கப் பட்டவர்களாகவும், பிரிந்து பிரிந்து காணப்படுகிறவர்களாகவும் இருந்து, தங்களுக்கு இடையில் ஒருவருக்கொருவர் வேலிகள் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் நான் ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக, இப்பிரிவினர்கள் தங்களை ஒவ்வொரு பிரிவினரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கு அவர்கள் மதபிரிவின் எல்லை கோடுகளைக்கொண்டிருப்பதோடு, அரசியல் ரீதியான எல்லைக் கோடுகளையும், தேசம் சார்ந்த அடிப்படையில் பிரிக்கும் எல்லைக்கோடுகளையும் கொண்டவர்களாக இருந்து, இதன் காரணமான ஒரு பிரிவை அல்லது தேசத்தைச் சார்ந்த ஆயிரமாயிரமானவர்கள், மற்றப் பிரிவினர் (அ) தேசத்தைச் சார்ந்தவர்களை அச்சுறுத்தி, யுத்தம் புரிந்து, கொன்றுபோடவும் நான் அவர்களுக்காக ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக இவர்கள் ஒருவரோடு ஒருவர் யுத்தம் பண்ணுவதற்கும் (அ) ஒருவரையொருவர் பயமுறுத்துவதற்கும், மிரட்டுவதற்கும் என ஒவ்வொரு வருடமும் படைகளுக்காகவும், ஆயுதங்களுக்காகவும், போர்க்கப்பல்களுக்காகவும், பல மில்லியன் டாலர்களைச் செலவழிக்கும் அளவிற்கு இவர்களுக்கு இடையே காணப்படும் இந்தத் தேசம் அடிப்படையிலான வித்தியாசங்கள் மிஞ்சி போவதற்காகவும் நான் ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக, கிறிஸ்தவ மண்டலத்தார் கையாளும் என்னுடைய போதனைகளினால் உண்டாகும் மகிமையான காரியங்களைக் கண்டு அந்நிய தெய்வங்களை வணங்கும் உலகத்தார் வசீகரம் அடைய வேண்டும் என நான் ஜெபம் பண்ணுகின்றேன். மேலும், அந்நிய தெய்வங்களை வணங்கும் உலகத்தார் வசீகரிக்கப்பட்டு, நாமும் தனிக் கட்சிகளாகவும், மதப்பிரிவினரின் உறுப்பினர் ஆகலாம் வாருங்கள் என்றும், நாமும் ஆயுதம் தரித்து, யுத்தம் பண்ணலாம் என்றும், தூய்மை அற்று நடப்பதற்கும், குடிவெறிக் கொள்வதற்கும், நெறிதவறிச் சிற்றின்பங்களில் ஈடுபடுவதற்குமான பிரத்தியேக உரிமை கிறிஸ்தவத் தேசங்களுக்கு மாத்திரம் முழுமையாக இல்லை. ஆகையால், இச்செயல்களை நாமும் செய்யத்தக்கதாகக் கிறிஸ்தவத் தேசத்தாரின் வழிமுறைகளை நாமும் கற்றுக்கொள்வோம் வாருங்கள் என்றும் ஒரே குரல் எழுப்பும்படிக்கு நான் அவர்களுக்காக ஜெபம் பண்ணுகின்றேன்.” இவ்வாறாகவே அவரது ஜெபம் அமைந்திருக்கும்.

## எவைகளுக்காக நமது கர்த்தர் ஜெபம் பண்ணினார்

நமது கர்த்தருடைய விண்ணப்பங்கள் மிகவும் வித்தியாசமாகக் காணப்பட்டது. அவருடைய சீஷர்கள் உலகத்தில் சிறுபான்மையாகவே இருப்பார்கள் என்றும், அவர்கள் உலகத்தால் வெறுக்கப்படுவார்கள் என்றும், உலகத்தால் எதிர்க்கப்படுவார்கள் என்றும், உலகத்தால் தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், அவர்களில் அநேகர் பெரியவர்களாக இருக்கமாட்டார்கள் என்றும், ஞானிகளாக அநேகர் இருக்க

மாட்டார்கள் என்றும், ஐசுவரியவான்களாக அநேகர் இருக்கமாட்டார்கள் என்றும், பிரபுக்களாக அநேகர் இருக்கமாட்டார்கள் என்றும், பிரதானமாக ஏழைகளாகவும், "சிறுமந்தையினராகவுமே" இருப்பார்கள் என்றும்தான் அவருடைய ஜெபத்தின் வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றது. இயேசு தனிப்பட்ட விதத்தில் தெரிந்தெடுத்துக் கொண்ட சீஷர்களிடம் காணப்பட்ட பண்புகளானது, பிற்காலங்களிலும் அவருடைய உண்மையான பின்னடியார்களென, அவரிடம் கிட்டிச்சேரும் அனைவரிடமும் காணப்பட வேண்டும்.

கிறிஸ்தவத் தேசங்கள் மற்றும் கிறிஸ்தவப் பிரிவுகளின் மக்கள் மகாத் திரளாய்க் காணப்பட்டாலும், "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்." மேலும், இந்த ஜெபத்தை நாம் பார்க்கையில், இந்த யுகத்தில் அவர் தம்முடைய ஜனங்களை உலகத்திடமிருந்து பிரிக்காமல், அவர்களை உலகத்தில்தான் விட்டுச்சென்றார். அவர்கள் இருதயம் உலகத்திடமிருந்து பிரிந்திருப்பது மாத்திரமே முக்கியமானதாகும். "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்" (யோவான் 17:15). தீமையை நன்மை என்று நாம் சொல்லக்கூடாது, உலகம் தூய்மையாகிவிட்டது என்று நாம் சொல்லக்கூடாது, அது இன்னமும் தீமை நிறைந்ததாகவே உள்ளது. கர்த்தரைச் சிலுவையில் அறைந்து, அவருடைய பின்னடியார்களைத் துன்பப்படுத்திய யூத மார்க்கம் அப்போது எந்த நிலையில் காணப்பட்டதோ, அதே நிலையில்தான் இன்று கிறிஸ்தவ மண்டலமும் நடைமுறையில் காணப்படுகின்றது.

அப்போதிருந்த யூதர்களின் பிரதானமான மதப் பிரிவினர், தங்களைத் தேவனுடைய பரிசுத்த ஜனங்கள் (இதுவே பரிசேயர் என்ற வார்த்தைக்கான அர்த்தமாகும்) என்று தாங்களே அழைத்துக்கொண்டனர். மேலும், முழுத்தேசமும் வெளிப்புறமான ஒழுக்கம் என்னும் தளத்தில் நின்றுக்கொண்டிருந்ததை, கர்த்தர் தமது பார்வையில் நாடகமாகவே பார்த்தார். அந்தத் தலைவர்களைக் குறித்து, அவர் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை என்றும், உள்ளே முழுத் தீட்டு காணப்படுகின்றது என்றும் கூறினார். மேலும், அவர்கள் பாத்திரத்தின் வெளிபாகத்தைச் சுத்தமாக்கியிருக்க, உட்புறத்தை அழுக்காகவே விட்டுவிட்டார்கள் என்றும், அவர்கள் தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கிக் கொண்டு, வீதிகளில் ஜெபம் செய்கிறார்கள் (மத்தேயு 23:5), ஆனால் அவர்களின் இருதயமோ பரிசுத்தம் (அ) அன்புக்கு மிகத் தொலைவில் காணப்படுகின்றது என்றும், கர்த்தர் கூறினார். ஒருவேளை நியாயப்பிரமாணத்தின் மேலோட்டமான கருத்து ஏழை விதவையின் வீட்டை எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்குமாயின், மேலும், அப்படிச் செய்யும் போதும், அச்செயல் அதிக அளவில் பழித் தூற்றுதல் கொண்டுவருவதில்லை என்றால், தவறான விதத்தில் விதவையின் வீட்டை எடுக்க விரும்பும் அளவிற்கு, அவர்களுடைய இருதயம் பரிசுத்தத்திற்கும் (அ) அன்பிற்கும் மிகத் தொலைவில் காணப்படுகின்றது. (மத்தேயு 23:14,23-28) இன்றைய காலங்களிலும் இப்படியாகவே காணப்படுகின்றது.

வெளிப்புறத்தில் பளபளப்பு (அ) பாசாங்கே காணப்படுகின்றது. அநேக சந்தர்ப்பங்களில் மாய்மாலமும், வெளிவேஷமான வழிபாடுந்தான் காணப்படுகின்றது; நாகரிகமான உடைகள் மற்றும் சந்தோஷம் ஆகியவற்றில் மூழ்கிப்போன நிலையிலும், கடுமையான பாவங்கள் மூலம் பணம் சம்பாதிக்கும் விக்கிரக ஆராதனையில் மூழ்கிப்போன நிலையிலும், இருதயம் தேவனிடத்திலிருந்து மிகத் தொலைவில் இருக்க, உதடுகள் மாத்திரமே அசைகின்றதாய் இருக்கின்றது.

இத்தகைய சூழ்நிலைகளிலிருந்து தம்முடைய உண்மையான பின்னடியார்கள் பரலோக வல்லமையினால் விலக்கிக் காக்கப்பட வேண்டும் என்றே நமது கர்த்தர் ஜெபம் பண்ணினார். அதாவது மாய்மாலங்கள் மீது ஈர்க்கப்படுவதிலிருந்தே விலக்கி, காக்கப்படுவார்களே ஒழிய, மாய்மாலக்காரர்களிடமிருந்து பின்னடியார்கள் பிரிக்கப்படுவதில்லை. இது சுவிசேஷ யுகம் முழுவதும் உள்ள அனைவருக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கின்றது என நாம் விசுவாசிக்கின்றோம். கர்த்தருடைய ஜெபம் நிறைவேறியுள்ளது என்றும், சிதறி ஆங்காங்கே காணப்படும் அவருடைய சிறுமந்தையானது, அதாவது மெய்யான திராட்சச் செடியின் கிளைகளானது, இருதயத்தில் ஆவிக்குரியவர்களாகத் தழைத்து ஓங்கியுள்ளனர். மேலும், உலகத்தின் ஒரு பாகமாக மாத்திரமே இருக்கும் பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாரிடமிருந்து, முற்றிலும் பிரிந்த ஜீவியத்தைக் கைக்கொண்டவர்களாக இருக்கின்றனர் என்றும் நாம் நம்புகின்றோம். இன்றும் உலகத்திற்குள் இருந்தும், உலகத்தார் அல்லாததுபோன்று இருப்பவர்கள் இந்த அறுவடையின் காலக்கட்டத்தில், "என் ஜனங்களே நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்று பாபிலோனிடமிருந்து அழைக்கப்பட்டு வருகின்றார்கள் (வெளிப்படுத்தல் 18:4). பாபிலோனிலிருந்து விடுதலைப் பெற்றுத் திரும்புவதற்கென இஸ்ரயேலர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்ட போது, 50,000 பேர் மாத்திரமே புறப்பட்டு வந்தவர்களின் இலக்கமாயிருக்க, இதைப்போன்றே எல்லாவற்றையும் விட்டுவிட்டு, சத்தியத்தையும், நீதியையும் பின்பற்ற சந்தோஷத்துடனும், தாமதம் காட்டாமலும் வருபவர்களின் எண்ணிக்கை சொற்பமானதாய் இருக்கத்தக்கதாக கர்த்தர் தப்பறைகளின் பிரபலத்தையும், சத்தியத்தின் பிரபலமின்மையையும் இதற்கேற்றாற்போல் ஒழுங்குச் செய்திருக்கின்றார்.

## உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்

இந்த ஜெபமானது, இரண்டு காரியங்களைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. முதலாவதாக, ஏன் அவர்கள் காக்கப்படுவார்கள் என்றும், இரண்டாவதாக, கர்த்தருடைய பின்னடியார்கள் எப்படிக் காக்கப்படுவார்கள் என்பதுமேயாகும். (1) அவர்கள் உலகத்தார் அல்லாததினால், அவர்கள் கர்த்தருடைய பட்சமாய் நிற்போம் என்று வந்தவர்களானபடியினால், அவர்கள் பாவம் மற்றும்

உலகத்திற்கு மரித்துப்போனவர்களாகக் கருதப்பட்டு, பரிசுத்த ஆவியினால் புதியதான ஜீவனுக்குள் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளபடியினால் அவர்கள் காக்கப்படுகின்றார்கள். (2) அவர்கள் உலகத்தில் இருக்கையில் காக்கப்படுவார்கள். ஆனாலும், உலகத்தினால் காக்கப்படாமல், அவர்களுடைய இருதயத்தில் காணப்படும் சத்தியத்தின் வல்லமையினால் காக்கப்படுவார்கள். சத்தியமானது, அவர்களைப் பரிசுத்தமாக்கும் அல்லது பிரித்து வைக்கும். ஏதாகிலும் ஒரு சத்தியம் அல்ல, அனைத்துப் பெயர்க்கிறிஸ்தவ சபைகளின் சத்தியங்களும் அல்ல, மாறாக, தெய்வீகக் குணலட்சணம், தெய்வீகத் திட்டம் மற்றும் இவைகளுடனாக சபையின் தொடர்பைக் குறித்ததான தெய்வீக வெளிப்படுத்தல்கள் உடைய சத்தியமே அவர்களை காக்கின்றது. இவைகள் அனைத்தையும்தான் கர்த்தர் இரத்தின சுருக்கமாக, "உமது/என் வசனமே சத்தியம்" என்று கூறுகின்றார். அதாவது, வசனமாகிய சத்தியமே என்னுடைய சீஷர்களை உலகத்தினின்று பிரிக்கக்கூடியதாக இருக்கின்றது என்றார்.

"உபதேசங்கள்" உலகத்தின் அனைத்து மூலைகளிலும், பெயர்க்கிறிஸ்தவச் சபைகளிலும் பிரபலமற்ற நிலையில் போய்விட்டது என்று நாம் அறிவோம். இதில் எவ்வித ஆச்சரியமுமில்லை! பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தின் பல்வேறு பிரிவுகள் மற்றும் இயக்கங்களின் உபதேசங்களும், விசுவாசப்பிரமாணங்களும் தப்பறையான விஷயங்களோடு மிகவும் கலக்கப்பட்ட நிலையில் காணப்படுவதினால், இவைகள் ஆவிக்குரிய மனதினுடைய ஆவிக்குரிய புலன்களுக்கு மிகவும் வெறுப்பாயிருப் பதினால், பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாரின் மேஜையிலிருந்து, இப்படிப்பட்ட வைகளைப் பங்கெடுக்க சபை ஜனங்கள் எவ்வளவேனும் விரும்புவதில்லை. இதைக் குறித்துதான், தீர்க்கத்தரிசி, "போஜன பீடங்களெல்லாம் வாந்தியினாலும், அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது" என்று கூறுகின்றார். இருண்ட யுகத்தின் போது, உருவாக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசப்பிரமாணமும் இன்றும் அருவருக்கத்தக்க தாகவே இருக்கின்றது. ஆனால், "உமது வசனமே சத்தியம்" என்று சொல்லப்படும் சத்தியமானது ஒருபோதும் ஊசிப்போவதில்லை, ஒருபோதும் சலிப்படைவதில்லை (அ) அருவருக்கப்படும் நிலைக்குப்போவதில்லை. அது இன்னமும் பரலோகத்திலிருந்து வந்த அப்பமாகவே இருக்கின்றது. அது இன்னமும் ஜீவ அப்பமாகவே இருக்கின்றது. மேலும், சத்தியத்தில் காணப்படும் அனைவராலும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக மாத்திரம் இருந்து, அவருடைய வார்த்தை எனும் போஜனத்தைப் புசித்து, அதனை உட்கிரகித்துக் கொண்டவர்கள் அனைவராலும், பால்குடிப்பதை மறந்து, பலமுள்ள ஆகாரம் புசிக்க ஆயத்தமாக இருக்கும் அனைவராலும், "தெய்வீகத் திட்டமானது எனது ஏக்கங்களைத் திருப்தி செய்த வண்ணம், வேறு எதுவும் என்னை திருப்திச் செய்ய முடியாது" என்று பாடுகிற கவிஞனோடு சேர்ந்து பாட முடியும்.

சத்தியமானது இருதயத்தின் ஏக்கங்களை நிறைவு செய்வதினால், சத்தியம் இருதயத்தைச் சுத்திகரிக்கும் வல்லமை உடையதாக இருக்கின்றது. ஒவ்வொரு இருதயத்திலும் காணப்படும் தாலந்துகள்/திறமைகள் மற்றும் விண்ணப்பங்கள் செயல்பட வேண்டுமென விரும்புகின்றது. இருதயத்தின் இந்தப் பல்வேறு தாலந்துகள் மற்றும் பண்புகளின் பசிதாகத்தைச் சந்திப்பதற்கு/திருப்திப்படுத்துவதற்கு ஏதாகிலும்

கொடுக்கப்பட வேண்டும். இருதயத்தின் ஏக்கங்களை (அ) ஆர்வங்களைத் திருப்திப்படுத்துவதற்கென்று, தெய்வீக வார்த்தைகளின் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களானது, இருதயத்திற்குள் கொண்டு போகப்பட வில்லை எனில், இருதயம் மற்ற விஷயங்களைக் கொண்டு திருப்தியாகிவிடும். உலகமும், மாமிசமும், பிசாசும் இருதயத்தைச் சூழ்ந்து, பல்வேறு கவர்ச்சிகர மானவைகளை அதற்கு அளித்துக்கொண்டிருப்பதினால், ஒருவேளை இருதயமானது தெய்வீக வாக்குத்தத்தங்களினால் நிரப்பப்படாமலோ, நிரப்பப்பட்ட நிலையில் காக்கப்படாமலோ விடப்படும் பட்சத்தில், கவர்ச்சியான இவைகளில் சிலவற்றை இருதயம் ஏற்றுக்கொண்டு நிரம்பிவிடும். ஆகவேதான், நமது கர்த்தருடைய உவமைகளில் இப்படியாக வருகின்றது, "அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்: நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லி; அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக்கண்டு, திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்; அப்பொழுது, அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிககேடுள்ளதா யிருக்கும் என்றார்" (மத்தேயு 12:43-45). கிறிஸ்துவின் மீதான விசுவாசம் முலம் நீதிமானாக்கப்படுவதினால், நம்முடைய இருதயங்கள் பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டால் மாத்திரம் போதாது, நம்முடைய இருதயத்தில் கர்த்தர் நிரம்பி இருக்கவும் வேண்டும்; மேலும், தம்மைச் சத்தியம் என அழைக்கும் கர்த்தர், உணவாக, போஷாக்காக பல்வேறு சத்தியங்களை நம்முடைய இருதயத்திற்குக் கொடுக்கின்றார்; நமது இருதயத்தை நிரப்புகின்றார்; நம்முடைய ஆர்வங்களைத் திருப்திச் செய்கின்றார். மேலும் இப்படியாக நிரப்புவதின் மூலம், நீதியின் பால் பசிதாகம் உள்ளவர்களை அவர் பரிசுத்தப்படுத்துகின்றார். மேலும் இப்படியாக, அவர்களை முற்றிலுமாகப் பிரித்து, உலகத்திடமிருந்தும், அதன் ஆவி, அதன் நம்பிக்கைகள், அதன் நோக்கங்கள், அதன் இலட்சியங்களிடமிருந்தும் அவர்களைப் பிரித்துக்காக்கின்றார்.

## தேவனுடைய ஏற்ற வேளையில் செயல்படும் தேவனுடைய வல்லமை

நீதியின் பால் நமக்கு அன்புள்ளதா? நீதியை உலகத்தில் நாம் எதிர்ப்பார்க்கவும் முடியாது. தற்கால சூழ்நிலைகளின் கீழ் நீதியை பூமியில் ஸ்தாபிக்கலாம் என்று நாம் எதிர்ப்பார்க்கவும் முடியாது. தேவனால் வாக்களிக்கப்பட்ட இராஜ்யம் அல்லாமல், வேறு எதுவும் நீதியை ஸ்தாபிக்க முடியாது என்று ஒப்புக்கொள்ள நாம் கடமைப்பட்டுள்ளோம். ஆகவே நோவாவின் புறா போன்று நம்முடைய இருதயங்கள் நீதியின் மையமாகவும், ஊற்றாகவும் இருக்கும் கர்த்தரிடத்திலேயே திரும்புகின்றது. சமாதானத்தையும், சந்தோஷத்தையும் நாம் விரும்புகின்றோமா? முழு உலகமும் சந்தோஷத்தை

நாடினாலும், அதைக் கண்டடையவில்லை என்று உலகத்திலிருந்தபோது, நம்முடைய கடந்தகால அனுபவங்கள் நமக்குக் காட்டியுள்ளது. கர்த்தரைக் கண்டடைந்தவர் களாகிய நாமோ சந்தோஷத்தின் இரகசியத்தை அதாவது, ஒவ்வொரு நாளையும் சந்தோஷமாகக் கழிக்கும் கிறிஸ்தவனுடைய இரகசியத்தைக் கண்டடைந்துள்ளோம். நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக நாம் வல்லமையையும், செல்வாக்கையும் விரும்புகின்றோமா? ஆனால், இவைகளைத் தற்கால சூழ்நிலையின் கீழ்ப் பெற்றுக்கொள்வது, கூடாத காரியம் என்று சத்திய வசனம் நமக்குக் கூறுகின்றது. ஆனால் நாம் ஒருவேளை உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டு, முதலாம் உயிர்த்தெழுதலில் வல்லமை, மகிமை, கனம் மற்றும் அழியாமை பெற்றுக்கொள்ளும் போது, பூமியின் சகல குடிகளை ஆசீர்வதிப்பதாகிய இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களில் நம்முடைய மாபெரும் எதிர்ப்பார்ப்புகளும், சிறந்த இலட்சியங்களும் நிறைவேற்றப் படுவதைக் காணலாம். ஐசுவரியங்கள் நம்மைக் கவருகின்றதா? வேதவாக்கியங்கள் உண்மையான ஐசுவரியங்களை உடையதாக இருக்கின்றது. இன்னும் நாம் கர்த்தரைப் பின்பற்றுகையில், இப்பொழுது விசுவாசத்தினால் அனைத்தும் நமக்குச் சொந்தமாக இருக்கின்றது; பின்னர் பரலோக இராஜ்யத்தில், நம்முடைய போதகருடன் நாம் உடன் ஊழியர்களாக ஆகும்போது, அனைத்தும் உண்மையில் நமக்கே சொந்தமாகி விடுகின்றது என்று வேதவாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றது.

"நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்" (யோவான் 17:18). பிதா எப்படிக் குமாரனை அனுப்பினார் என்றும், குமாரன் மாம்சமாகி, நம் மத்தியில் மனுஷனாக வாசம் பண்ணுபவராக மாற்றப்படுவதற்கு முன்பு, அவருக்கு பிதாவோடு இருந்த மகிமையைத் துறந்து வந்தார் என்றுமான காரியங்களுக்கு, நமக்குப் போதுமான அளவு நிரூபணங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், உலகத்தாராகப் பிறந்துள்ள நாம், எந்த விதத்தில் உலகத்திற்கு அனுப்பப்படுகின்றோம்? உண்மைதான் ஒரு காலத்தில் அப்போஸ்தலர்கள் விசேஷமாக அனுப்பப்பட்டிருந்தனர். ஆனால், கர்த்தருடைய சகல பின்னடியார்களும் ஒரு விதத்தில் அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். இருதயத்திலும், சத்தியத்திலும் நாம் அவருடையவர்களாக இருக்கத்தக்கதாக நாம் உலகத்தினின்று, பிரிக்கப்படாதது வரையிலும், நாம் அனுப்பப்படுவதில்லை. பின்னரே, அவருடைய நாமத்தில், அவருடைய காரணத்திற்கென, ஒரு வேலை செய்யும்படிக்கு அவர் நமக்கு ஒரு கட்டளையை (அ) செய்தியைக் கொடுத்துள்ளார். அவருடைய காரணம் என்று சொல்லும்போது, அது நீதியின் பொருட்டான காரணமாகவே இருக்கின்றது. கர்த்தருடைய உண்மையான பின்னடியார்கள், தேவனுக்கான ஸ்தானாபதிகளாகவும், இயேசுவின் பிரதிநிதிகளாகவும் இருக்கின்றார்கள். அவர் உலகத்தில் இருந்ததுபோன்று, நாமும் உலகத்தில் இருக்கின்றோம். ஆகவே நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடக்கும்படிக்கும், நமக்குள்ளாகவே பாவத்தை எதிர்த்துப் போராடுவதற்கும், பாவத்திற்கு எதிராகவும், நீதி, சத்தியம் மற்றும் வெளிச்சம் ஆகியவைகளுக்கு ஆதரவாகச் சகலவிதமான நேர்த்தியான வழிகளிலும் நம்முடைய செல்வாக்கைப் பயன்படுத்துவதற்கும் அவர் நம்மை அழைக்கின்றார்.

## சபையோடு மகிமை பங்கிடப்படுதல்

"அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி, அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன்" (யோவான் 17:19, திருவிவிலியம்). இத்தருணத்தில் பிதாவின் திட்டம் குறித்துத் தெளிவான புரிந்துக்கொள்ளுதலுக்குள், நமது கர்த்தர் வந்துவிட்டார் என்பது இவ்வார்த்தைகளில் வெளிப்படுகின்றது. அதாவது, இராஜ்யத்தில் தம்மோடு உடன்சுதந்தரர்கள் ஆகுவதற்கும், தம்முடைய மகிமையில் பங்கடைவதற்குமான நோக்கத்திற்கெனத் தம்முடைய சீஷர்கள் வளர்த்தப்பட வேண்டும் என்பதைக் குறித்ததான பிதாவின் திட்டத்தை முழுமையாகப் புரிந்துக்கொண்டிருந்தார். இராஜ்யத்தின் இத்தகைய மாபெரும் மகிமையைப் பங்குப்போடுவது, இயேசுவின் மாபெரும் மகிமையைக் குறைத்துப் போடுவதுபோன்று, நாம் பார்க்கும் மாத்திரத்தில் நமக்குத் தோன்றலாம். அதாவது, இது மோசேயுடன் இஸ்ரயேல் ஜனங்களுக்கு நியாயம் விசாரிப்பதற்கென, 70 மூப்பர்கள் நியமித்த காரியமானது, மோசேயின் அதிகாரத்தை (அ) கௌரவத்தைக் குறைத்துப் போடுவதுபோன்று அதைப்பார்க்கும் மாத்திரத்தில் தோன்றியதுபோல் காணப்படுகின்றது.

ஆனால், நிழலில் மோசே மிகவும் சாந்தத்துடனும், மகிழ்ச்சியுடனும், 70 மூப்பர்களையும் தன்னுடன் பணிபுரிய வரவேற்கும் விதத்தில், "ஆண்டவரின் மக்கள் அனைவருமே இறைவாக்கினராகும்படி ஆண்டவர் அவர்களுக்குத் தம் ஆவியை அளிப்பது எத்துணை சிறப்பு!" என்று கூறுகின்றார் (எண்ணாகமம் 11:29, திருவிவிலிய மொழியாக்கம்). ஆகவே கர்த்தர் இயேசுவும், தம்முடன் கூட்டிச்சேர்க்கப்படும் சபையானது, தம்முடைய இராஜ்யத்தில் உடன்சுதந்தரர்களாக இருப்பது, தம்முடைய மகிமையைக் குறைத்துப் போடுகின்றதாய் இருக்குமே என்று எண்ணுவதற்குப் பதிலாக, அவர்களை இருதயப்பூர்வமாகத் தெய்வீகத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டார். இன்னுமாக அவர் தாம் இடம் விட்டுக் கொடுப்பதாகக் கூறுகின்றார். அதாவது, பிதாவின் பரிசாகிய மகிமை மற்றும் கனம் ஆகிய அம்சங்களில் தம்முடைய பின்னடியார்கள் பங்கடையும் படிக்கும், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட மகா அருமையான வாக்குத்தத்தங்கள் மற்றும் சத்தியத்தின் வாயிலாக தங்களை அர்ப்பணித்து, இத்தகைய கனத்திற்குள் வரவும், தம்மோடு கூட உடன்சுதந்தரர்களாக இருக்கும்படிக்கும் வந்த அவர்கள் பங்கடையத்தக்கதாக, குமாரன் விலகி இடம் விட்டுக் கொடுத்தார் என்று கூறுகின்றார். இதே கருத்துதான், "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். . . என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்ற வசனங்களில் வெளிப்படுகின்றுத. (யோவான் 17:22, 23)

தேவனுடைய அன்பானது நம்முடைய இருதயங்களில் ஊடுருவுகையில், அதில் சுயநலம் குடிக்கொள்வதற்கு இடமே இருப்பதில்லை. நமது அன்பான மீட்பர், மற்றவர்கள் தெய்வீகச் சுபாவத்திற்குள் உயர்த்தப்பட்டு, இராஜ்யத்தின் பங்காளிகள் ஆக்கப்பட போவதைக் குறித்துப் பொறாமை கொள்வதற்குப் பதிலாக, தம்முடைய ஜெபத்தில் தாம் இத்திட்டத்திற்கு முழுமையாக ஒப்புக்கொள்ளுவதாகவும், இதற்கு இருதயப்பூர்வமான ஒத்துழைப்பையும் அருளுவதாகவும், இத்திட்டம் இப்படி இருப்பதினிமித்தம் தமக்கும் சந்தோஷமாய் இருப்பதாகவும், பிதாவிடம் அறிக்கைப்பண்ணினார். இக்காரியங்கள் பரலோக மணவாளனுக்கு ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்டுள்ள, வருங்கால மணவாட்டிகளாகிய நமக்கு எத்தகைய கருத்துக்களைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. நம்மை நம்முடைய தாழ்மையான நிலையிலிருந்து உயர்த்தி, அவரோடுகூட, அவருடைய இராஜ்யத்தில் அவருடைய சிங்காசனத்தில், அவருடைய பிதாவின் அன்பில் பங்கடையச் செய்வதில் கர்த்தர் பிரியமுள்ளவராக இருக்கின்றார்.

அதிசயங்களிலேயே அதிசயம்! தெய்வீகக் கருணைக்கு முடிவே இல்லை! நாம் இன்னமும் பாவிகளாக இருக்க, இன்னமும் மரணம் என்னும் தெய்வீகத் தீர்ப்பின் கீழ் இருக்கையிலேயே, நாம் அன்புகூரப்பட்டுள்ளோம். மாபெரும் விலை கொடுத்து மீட்டுக்கொள்ளப்பட்டுள்ளோம். மீட்கப்பட்ட பின்னர் இப்பொழுது, ஒரு பரலோக சத்தத்தை நாம் கேட்கின்றோம்… "இன்னும் மேல் நிலைக்கு/உயர வாருங்கள்." ஆம், இராஜாதி இராஜாவிடத்திற்கும், கர்த்தாதி கர்த்தரிடத்திற்கும், பிதாவின் ஒரே பேறானவரிடத்திற்கும், கிருபையும், சத்தியமும் முழுமையாகக் கொண்டிருப்பவரிடத திற்கும், அவரோடு கூட அவருடைய சிங்காசனத்திலும், அவரோடு உடன்சுதந்தரர் களாகவும் இருக்க வாருங்கள் என்பதேயாகும். அன்பு மற்றும் சுயநலமின்மையின், இம்மாபெரும் வெளிப்படுத்துதலை நம்முடைய மனங்களுக்கு முன்பாக நாம் என்றென்றும் வைத்திருக்கக்கூடுமானால், தேவனுடைய அருமையான குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாய் இருக்கும்படி நாடுகின்ற அனைவருடைய மனங்களிலிருந்தும், ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் ஒவ்வொரு போட்டி மனப்பான்மையும் சிதறடிக்கப்பட்டுப் போய்விடும். மேலும் இப்படி நினைவில் கொண்டிருக்கும்போது, சரீரத்தின் ஒவ்வொரு மற்ற அங்கமும், கர்த்தருடைய ஊழியத்தில் பயனுள்ளவர்களாக வளர்வதில் நம்மை எவ்வளவாகச் சந்தோஷம் கொள்ள செய்யும். மேலும், இப்படி நினைவில் கொண்டிருக்கும்போது, "கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்" என்ற வேதவாக்கியத்தின் விளக்கத்தை நாம் அதிகமதிகமாய் உணர்ந்துகொள்ளச் செய்து, மற்றச் சகோதரருடைய வளர்ச்சியிலும், சபைக்கான அவனுடைய பயன் அதிகமடைகையிலும், தேவன் மற்றும் மனுஷரிடத்திலும், அவன் பெற்றுக்கொள்ளும் தயவிற்கான சாட்சிகள் அதிகமாகையிலும் நம்மை மகிழ்ச்சிக் கொள்ளச் செய்யும் (ரோமர் 12:10). சரீரத்தின் உடன் அங்கங்களாகிய மற்றச் சகோதரர்களின் வளர்ச்சியில், இவ்விதமாகச் சந்தோஷம் கொள்ள முடிகிறவர்களுக்கு, மாபெரும் மகிமையான தலைக்கு ஒத்திருக்கும் சாயலில், தாங்கள் வளர்ச்சியடைந்துள்ளனர் என்பதற்கான சாட்சியாகவும் அமைகின்றது.

இம்மனநிலையில் இல்லாதவர்கள், இதற்காக முயற்சி செய்ய வேண்டும்; மேலும், இதை அடையும் வரையிலும் முயற்சியைத் தொடர்ச்சியாகக் கொண்டிருக்க வேண்டும்.

## அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்

வெளிநாடுகளில் காணப்படும் நிறுவனங்கள் மற்றும் குழுக்களின் ஆவியானது, எங்கும் பரவிக்கொண்டிருப்பதினால், அது சபைகளையும், சபை பிரிவுகளையும் இணைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தி, மாபெரும் மத நிறுவனங்கள்/அமைப்புகளாக வளர்ச்சிகொள்வதற்கு நேராக நடத்துகின்றது. மேலும், இவர்களது இத்தகைய வளர்ச்சியானது, கர்த்தருடைய உண்மையான அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஜனங்களின் சுதந்தரத்திற்கு ஆபத்தான தொந்தரவாக இருந்தாலும், இது அவர்களுடைய ஆவிக்குரிய நன்மைகளை பாதிப்பதில்லை. இவ்வளர்ச்சிகள் கர்த்தருடைய சிறுமந்தையினருக்கு ஆசீர்வாதமாகக்கூட விளங்குகின்றது. எப்படியெனில், இவர்களுடைய இத்தகைய அமைப்பு வளர்ச்சியினிமித்தம், சிறுமந்தையினர் தங்களுடைய வேதவாக்கியங்களின் அடிப்படையிலான போதனைகளிலிருந்து மற்றப் போதனைகளை வேற்றுமையாகக் கண்டு, சத்தியத்தில் உறுதிகொண்டு, தங்களை முற்றிலும் பெயர்க்கிறிஸ்தவ அமைப்புகளிலிருந்து பிரித்துக் கொண்டவர்களாகவும் இருக்க முடிகின்றது. களைகளோ ஒன்றாகக் கட்டப்படவும் செய்கின்றது. "அப்பொழுது, பலமுள்ள தூதனொருவன் பெரிய ஏந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்து: இப்படியே பாபிலோன் மகாநகரம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி ஒரு போதும் காணப்படாமற்போகும்" (வெளிப்படுத்தல் 18:21).

"அவர்களெல்லாரும் ஒன்றாய் இருக்க வேண்டும்" என்ற நமது கர்த்தருடைய ஜெபமானது, யுகம் முழுவதிலும் நிறைவேறியுள்ளது. உண்மையாக அவர்களுடையவர்களாக இருக்கும் அனைவருக்கும் பிதா மற்றும் குமாரனுடன் கூட ஒரே இருதயமுள்ளவர்களாகவும், ஒரே நோக்கம் உள்ளவர்களாகவும், ஒரே ஆவி/சிந்தை உடையவர்களாகவும் காணப்பட்டுள்ளனர். பூமிக்குரிய விசுவாசப்பிரமாணங்களினாலும், சங்கிலிகளினாலும், தெய்வீகமானவர்களோடு ஐக்கியத்தை/உறவை ஏற்படுத்த முடியாது. கர்த்தருக்குச் சொந்தமானவர்கள் விஷயத்தில் இன்றும், என்றென்றும் இப்படியாகவே காணப்படுகின்றது. வெளித்தோற்றமான அடையாளச் சொற்களினால் அல்ல (அ) அடையாளங்களினால் அல்ல (அ) வெளித் தோற்றமாக பற்றிப் பிடித்துக் கொண்டிருப்பதினால் அல்ல, மாறாக, விசுவாசம் மற்றும் அன்பின் மூலமாக அவர்கள் ஒருவரையொருவர் (தேவன், குமாரன், சபை) அறிந்துக்கொண்டிருக்கின்றனர். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துக் கொள்வார்கள் என்றார்" (யோவான் 13:35). "நாம் சகோதரரிடத்தில்

அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 3:14). உண்மைதான், நாம் அனைத்து மனுஷர்களையும் அன்புகூர்ந்து, வாய்ப்பு அமையும்போது, சகலருக்கும் நன்மை செய்ய நாடுகையில், அப்போஸ்தலர் அறிவித்த பிரகாரம், "விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு," அதாவது, கர்த்தரை அன்புகூர்ந்து, அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீது விசுவாசம் வைத்து, அவருக்கென்று தங்களை முழுமையாக அர்ப்பணம் செய்து, தங்களால் முடிந்தமட்டும் அவருடைய சித்தத்தைச் செய்து, நாளுக்கு நாள் அவர் சித்தம் என்ன என்று இன்னுமாக அறிந்துக் கொள்ள நாடுபவர்களாகிய விசுவாச வீட்டாருக்கு நன்மை செய்ய நாடுபவர்களாக நாம் இருக்க வேண்டும்.

கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் காணப்படும் இந்த ஒற்றுமையானது, (ஆள்தத்துவத்தின்) நபர்களின் ஒற்றுமையைக் குறிப்பதில்லை. கர்த்தருடைய பின்னடியார்கள் மாம்ச சரீரத்தின் விஷயத்தில் ஒன்றானவர்கள் அல்ல. மாறாக, ஆவியில்/சிந்தனையில் ஒன்றாக இருக்கின்றனர். இந்த உதாரணமே/விளக்கமே, தமக்கும், பிதாவுக்கும் இடையில் காணப்படும் ஒன்றாய் இருத்தலுக்கான விளக்கமாக அமைகின்றது எனக் கர்த்தர் விளக்குகின்றார். அவர்கள் இருவரும் ஒரு நபராக இராமல், சிந்தனையிலும், நோக்கத்திலும், சித்தத்திலுமே ஒன்றாய் இருக்கின்றார்கள். ஏனெனில், பிதாவின் பார்வைக்கும் பிரியமாய் இருக்கும் பிதாவின் சித்தத்தையே, தாம் எப்போதும் செய்கின்றதாகக் கர்த்தர் கூறுகின்றார். இவ்விதமாகவே, நாமும் பிதாவின் சித்தமாகக் காணப்படும், கர்த்தருடைய சித்தத்தைச் செய்து, அவருக்குள்ளும், அவருடைய அன்பிலும் நிலைகொண்டிருக்கின்றவர்களாகக் காணப்படுகின்றோம். மேலும், இவ்விதமாக ஆவியிலும், சத்தியத்திலும் பிதாவும், குமாரனும், மணவாட்டியாகிய சபையும் ஒன்றாயிருக்கின்றார்கள்.

## கிறிஸ்துவோடு கூட அவருடைய மகிமையில் பங்கடைதல்

"பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்" (யோவான் 17:24). இது ஒரு விண்ணப்பம் அல்ல, மாறாக தம்முடைய சித்தம் குறித்துக் கர்த்தர் இங்கு அறிக்கையிடுகின்றார். அதாவது, பின்வருமாறு அவர் கூறுவது போன்றுள்ளது: "பிதாவே என்னுடைய பின்னடியார்கள் தொடர்புடைய விஷயத்தில், இதுவே உம்முடைய சித்தமென நான் புரிந்துள்ளேன். நானும் அதையே விரும்புகின்றேன். நீர் ஆயத்தம் பண்ணியுள்ள இந்த மாபெரும், தாராளமனமுள்ள ஏற்பாட்டிற்கு/ஒழுங்குமுறைக்கு நான் ஆட்சேபனையின்றி ஒப்புக்கொள்கின்றேன். இறுதியில், என்னுடைய பின்னடியார்கள் என்னோடு கூட, ஒரே மகிமையின் தளத்தில்,

என்னோடு இடம் பெற்றுக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும், உலகம் தோன்றுவதற்கு முன்பும், என்னுடைய இந்தச் சீஷர்களுக்கு ஒழுங்குகள் ஏற்பாடு பண்ணுவதற்கு முன்பும், என் மீது கொண்டிருந்த அன்பின் நிமித்தமாகவே, எனக்கு நீர் கொடுத்த மகிமைகளை என்னுடைய பின்னடியார்கள் காணவும், அதில் அவர்கள் பங்கடையும்படிக்கு அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதில் நான் மகிழ்ச்சிக்கொள்வேன்" என்பதேயாகும்.

கர்த்தருடைய ஜெபத்தின் இறுதியான வார்த்தைகள் அழகாகவும், பிதாவிடத்திலும், தாம் பிதாவிடத்தில் கொண்டுள்ள உறவின் மீதுமுள்ள, கர்த்தருடைய நம்பிக்கையைக் குறித்து வெளிக்காட்டுவதாகவும் இருக்கின்றது. அவர் பிதாவை அறிந்திருந்தார். ஆகவேதான் பிதாவினால் நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும், அவர் அளிக்கும் நித்திய காலத்திற்குமான ஜீவனுக்குள் நாம் பங்கடைவதற்கும் அளிக்கப்படும் மகாபெரும் சாட்சி இதுவே என்று நம்மைக் குறித்த விஷயத்தில் அவர் கூறியுள்ளார். "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவான் 17:3). "நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள்" (யோவான் 17:25). உம்முடைய நாமம் குறித்தும், உம்முடைய குணலட்சணம் குறித்தும், உம்முடைய மகத்துவம் குறித்தும், உம்முடைய நற்பண்புகள் குறித்தும், உம்முடைய அன்பு குறித்தும், உம்முடைய நன்கொடைகளைக் குறித்தும் நான் அவர்களுக்கு அறிவித்துள்ளேன். இன்னமும், அவர்கள் தாங்கிக்கொள்ளும் அளவிற்குத் தகுந்தாற்படி, சத்திய அறிவில் அவர்கள் வளரும்போது, அதிகமாக உம்மைக் குறித்து அவர்களுக்கு வெளிப்படுத்துவேன். இப்படியாக நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும் உம்மைக் குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்துவேன் என்ற விதத்தில் கூறினார்.

தேவனுடைய இந்த அன்பும், கிறிஸ்துவினுடைய இந்த அன்பும் எத்துணை அதிசயமாய் உள்ளது! இதன் நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும், ஆழத்தையும் நம்மால் அளக்க முடியாததுபோன்று தோன்றுகின்றது! கர்த்தரைத் தங்களுடைய மீட்பராகவும் ஏற்றுக்கொண்டு, அவருடன் ஓர் உடன்படிக்கையின் உறவிற்குள் வந்துவிட்டு, தங்களிடத்தில் இருக்கும் கொஞ்சமான காரியங்கள் அனைத்தையும் அவருக்கென்று கொடுத்துவிட்டு, அவர் ஏற்பாடுபண்ணியுள்ள இந்த அனைத்து ஆசீர்வாதங்களில் பங்கடையும் வாய்ப்பை அவரிடத்தில் பெற்றுக்கொண்ட பிற்பாடு, பெலவீனத்தாலோ (அ) எதிர்ப்பினாலோ (அ) வேறு ஏதாவது காரணங்களினாலோ ஒருவேளை கீழே தள்ளப்பட்ட நிலையில் காணப்பட்டார்களானால், அத்தகையவர்கள்,

பிதா நமக்காகக் கொண்டிருப்பதும், குமாரன் பங்கிட்டுக் கொடுப்பதுமான இந்த மாபெரும் அன்பை நினைவில் கொண்டுவந்து, எண்ணிப்பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும். அதாவது, நாம் பாவிகளாகவே இருக்கையில் நம்மை மீட்டுக்கொண்டது மாத்திரமல்லாமல், (ஒருவேளை) நாம் அவருக்காக பாடுபடுவோமானால், நாம் அதிசயமான ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் மற்றும் கர்த்தராகிய கிறிஸ்துவுடன் உடன்சுதந்தரத்துவத்தையும் அடையும்படிக்கு, நம்மை அழைத்ததுமான அன்பை நாம் நினைவில் கொண்டுவந்து, எண்ணிப் பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும். ஒருவேளை நாம் அவருக்காகப் பாடுப்படுகிறவர்களாக இருப்போமாகில், இந்த அன்பானது நம்மைவிட்டு எளிதில் தள்ளிப்போவதில்லை; நாம் பின்வாங்கி இரண்டாம் மரணத்திற்குள் போவதை அனுமதிப்பதைக் காட்டிலும், இந்த அன்பானது நம்மைச் சிட்சித்துத் திருத்துகின்றது. பின்னர், இயேசுவின் மீதான விசுவாசத்தில் நிலைத்திருப்பவர்களையும், உண்மையுள்ள வார்த்தைகளைத் தொடர்ந்துப் பற்றிப்பிடித்துக் கொண்டிருப்பவர்களையும், இறுதியில் இந்த அன்பானது ஒன்றில் சிறுமந்தையினராகவோ (அ) திரள்கூட்டத்தினராகவோ விடுவித்துவிடுகின்றது. ஆனால், எந்த அளவுக்கு இந்த அன்பானது, நம்மிடத்தில் செழிப்பாகக் காணப்படுகின்றதோ மற்றும் எந்த அளவுக்கு கிறிஸ்து நம்முடைய இருதயங்களில் குடிகொண்டு இருக்கின்றாரோ/வாசம் பண்ணுகின்றாரோ, அவ்வளவாய் பிதாவின் பார்வையில் பிரியமாகவும், நமது கர்த்தரால் அங்கீகரிக்கப்படுகிறதுமான காரியங்களைச் செய்வதில் விருப்பமாகவுமுள்ள பதிலுக்குப் பதிலான அன்பு நம்மிடத்தில் காணப்படும்; மற்றும் அவ்வளவாய் கர்த்தருக்கும், நம்முடைய ஆத்துமாக்களுக்கும் இடையே திரையிடுகின்ற எதையும் செய்ய வெறுப்பும் நம்மிடத்தில் காணப்படும். தெய்வீக அன்பின் நீளம், அகலம், உயரம், ஆழம் ஆகியவற்றை நாம் இப்படியாகப் புரிந்துக்கொண்டுள்ளபடியால், நாம் புதிய தைரியம் கொள்வோமாக. மேலும், தேவனுடைய இந்த அன்பானது, அவருக்காகவும், அவருடைய காரணங்களுக்காகவும்/நோக்கங்களுக்காகவும் நாம் மாபெரும் வைராக்கியமும், பக்தியும் கொள்ளத்தக்கதாக நம்மை நெருக்கி ஏவுவதாக.

# உனக்காக வேண்டிக்கொண்டேன்

**"சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ, உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்." லூக்கா 22:31, 32**

பஸ்கா நாட்கள் சமீபித்தபோது நமது கர்த்தர், "என் ஆத்துமா மரணத்துக் கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்று கூறி, "தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும்" தமக்காக விண்ணப்பம் பண்ணினதோடல்லாமல், தமக்கு அருமையாய் இருந்த பின்னடியார்களுக்கும் மிகுந்த அக்கறை கொண்டவராக, அவர்கள் பிரவேசிக்க இருக்கின்ற "சோதனைக் காலத்தைக்" குறித்து அவர்கள் உணரும்படி செய்வதற்காக, "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்று கூறினார். நமது கர்த்தருடைய பூமிக்குரிய அனுபவங்களிலேயே இவ்வேளையானது மிகவும் சோதனைக்குரியதாய் இருந்தது மாத்திரம் அல்லாமல், இவ்வேளையானது, அவருடைய அப்போஸ்தலர்களுக்கும், விசேஷமாக யூதாஸ் மற்றும் பேதுருவுக்கும் மிகவும் சோதனைக்குரியதாய் இருந்தது. அப்போஸ்தலர்கள் மத்தியில் இந்த இரண்டு மனுஷர்களும் முக்கியமானவர்களாகக் காணப்பட்டார்கள். ஒருவர் அச்சிறு கூட்டத்தாருக்குப் பொருளாளராகவும், தேவைக்கானவைகளை வாங்கும் நபராகவும் காணப்பட்டார். பேதுருவோ, கர்த்தருடைய காரணத்திற்காக/நோக்கத்திற்காக விசேஷமான தைரியத்துடன் போராடுபவராகவும், பன்னிரண்டு பேரின் வாயாக இருந்து இயேசுதான் மேசியா என்ற அவர்களின் விசுவாசத்தை அறிவித்தவராகவும், கர்த்தரை எல்லாரும் கைவிட்டுப் போய்விட்டாலும், தான் ஒருபோதும் அப்படிப் போகமாட்டேன் என்று வெளிப்படையாகக் கூறினவருமாவார். மனுஷனுடைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, பதிமூன்று பேர் (இயேசு +பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்) மேல் வரும் எந்தச் சோதனையும், இவர்கள் மத்தியில் காணப்படும் பலவீனர்கள் மற்றும் முக்கியத்துவம் அற்றவர்கள் மீதே வருமே ஒழிய, இந்த மூன்று (இயேசு, பேதுரு, யூதாஸ்) முக்கியமானவர்கள் மீது வராது என்றே அனுமானிக்கப்படலாம்.

## மூன்று பேர் சோதிக்கப்பட்டார்கள், ஆனால் முடிவுகள் வித்தியாசமானவைகள்

விசேஷமாகச் சோதிக்கப்பட்ட மூன்று பேரின் விஷயங்களை நாம் பார்க்கும்போது, சில முக்கியத்துவம் வாய்ந்த படிப்பினைகளை நாம் பெற்றுக் கொள்ளலாம். நமது கர்த்தருடைய வழிமுறை நேர்த்தியாக இருந்தது. அதாவது தாழ்மை, பயம் மற்றும் சோதனைகளை உணர்ந்துகொள்ளுதல் ஆகியவை அவரை விழிப்புடன் இருப்பதற்கும், ஜெபம் பண்ணுவதற்கும் நேராக வழிநடத்திற்று. எல்லாவிதத்திலும் வலிமையாய் இருந்த சோதனைகளுக்குத்தப்பி அவர் வெளிவந்தார்.

மேலுமாக, அவர் ஆசாரியர்கள் மற்றும் பிலாத்துவுக்கு முன்பு வெளியரங்கமாகக் குற்றம் சுமத்தப்பட்டபோதும், திரளான ஜனக்கூட்டத்திற்கு முன்பு அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்தபோதும், அவர் மிகுந்த அமைதலுடன் காணப்பட்டார். காரணம், தேவன் அவரைப் பலப்படுத்தியிருந்தார். அவரே நமக்கான முன்மாதிரி. நாமும் அவரைப்போன்று ஆபத்துகளைச் சந்திக்க மறுக்காமலும், நம்முடைய சொந்த பலம் மற்றும் தைரியம் குறித்துப் பெருமை பாராட்டிக்கொள்ளாமலும் இருந்து தேவனுடைய கரங்களின் மேல் சாய்ந்துகொண்டு, அவருடைய கிருபையினால், ஜெயங்கொண்டவர்களாக வெளி வர வேண்டும்.

பேதுருவின் சம்பவம், சூழ்நிலை நமக்கு நன்கு ஞாபகத்தில் உள்ளது. பலமுள்ள நல்ல மனுஷன் பேதுரு. அவர் தனக்கான ஆபத்துக்களை உணர்ந்து கொள்ளவில்லை. ஆதலால், அவர் சாத்தானின் தந்திரங்களுக்கு ஆயத்தமாய் இருக்காமல், மிகவும் சோதனையான நிலைமைக்குள் அனுமதிக்கப்பட்டப்படியால், பேதுரு பெருமை பாராட்டிக்கொண்ட தைரியம் பறந்து போய்விட்டது. அவருடைய பலமுள்ள குணம் மறைந்துவிட்டது. கர்த்தரை நிந்தனையாய்ப் பேசி அவரை மறுதலித்தும்விட்டார். மனிதன் எளிதில் விழக்கூடியவன் என்பதற்கான எத்துணை பாடமாக இது அமைகின்றது. மேலும், நாமும் பிசாசின் தந்திரங்களினால் மேற்கொள்ளப்பட்டு, சிக்க வைக்கப்படுவோம் என்பதற்கான பாடமாகவும் இது அமைகின்றது. நாம் சோதனைக்குள் விழுந்துவிடாதப்படிக்கு நாம் விழித்திருந்து, ஜெபம் பண்ணுவது நம் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு அவசியமாய் உள்ளது. "எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" (KJV); "எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்" (திருவிவிலியம்) என்று கர்த்தர் நாம் ஜெபம் பண்ணுவதற்குக் கற்றுக்கொடுத்த மாதிரியை நாம் ஒவ்வொருவரும் நினைவில் கொண்டிருப்பது அவசியமாகும். "Abandon us not in temptation, but deliver us from the evil one" (Diaglott) (மத்தேயு 6:13).

யூதாசுக்கு அது ஒரு கேடு காலமாக இருந்தது; உண்மையுள்ள இருதயமுள்ள பேதுரு, விழித்திருந்து ஜெபம் பண்ணி, தன்னைப் பாதுகாத்துக்கொள்ளாததினால், எதிராளியானவன் அவரை ஏமாற்றி, வஞ்சித்து, தவறாய் வழிநடத்த முடிந்ததானால், சரியான இருதயம் இல்லாமல், சுயநலம், சுயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க நாடுதல், பேராசைகொண்டிருந்த யூதாசிடம் எதிராளியானவன் என்னவெல்லாம் செய்யக்கூடும்? யூதாசின் மீதான சாத்தானின் உடனடியான செயல் நடந்தேறினது என்பதில் நமக்கு ஐயமில்லை. யூதாஸ், எதிராளியானவனின் கண்ணிக்குள் உடனே சிக்குண்டு விழுந்து, போதகரை முப்பது வெள்ளிக் காசுகளுக்காகக் காட்டிக்கொடுக்கும்படிக்கு தனது இருதயத்தையும், சக்தியையும் ஒப்புக்கொடுத்துவிட்டார். உண்மையும், உத்தமமுமாய்க் காணப்பட்டும், சற்று நேரம் தடுமாற்றம் அடைந்ததும், பயம் அடைந்ததும், விழித்து ஜெபம் பண்ணி தன்னைக் காத்துக்கொள்ளாததுமான பேதுருவின் விஷயத்திலிருந்து, யூதாசின் விஷயம் முற்றிலும் வேறுபட்டதாகும். இந்த இரண்டு மனிதர்களையும் சூழ்ந்த ஆபத்து ஒன்றாயிருப்பினும், இவர்களுடைய இருதயத்தின் நிலை வேறுபட்டு

காணப்பட்டபடியினால், இவர்கள் இருவரின் சூழ்நிலைகள் முற்றிலும் வேறுபட்டதாகும்.

## உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

இப்படியாகத்தானே கர்த்தருடைய சகல பின்னடியார்களின் விஷயத்திலும் காணப்படும் அல்லவா? சோதனைகள் நம் ஒவ்வொருவருக்கும் கண்டிப்பாக வருகையில், வேறுபட்ட முடிவுகளை/பலன்களைக்கொண்டு வருவதற்கான இரகசியமும் இதுதான் அல்லவா? இன்றைய யூதாஸ் வகுப்பாரும், எப்போதும்போல், சோதனைகள் அவர்களுக்கு வரும்போது, அவைகளைஅவர்கள் ஏற்றுக்கொண்டு, அச்சோதனைகளில் நன்கு தங்களது பொழுதைப்போக்கி, பேராசை (அ) தவறான கவர்ச்சிகளின் ஆவிக்குள் பிரவேசித்தவர்களாகி, அதினால் விழுங்கப்பட்டும் போய்விடுகின்றனர். பேதுரு வகுப்பாரும் எப்போதும்போல், இன்றும் நம் மத்தியில் உண்மையான இருதயத்துடனும், அதேசமயம் எதிராளியானவனின் கவர்ச்சிகளி லிருந்து பாதுகாக்கப்படத்தக்கதாக, போதுமான அளவு விழிப்பும், ஜெபமும் அற்றவர்களாய்க் காணப்பட்டு, சில சமயங்களில் எதிர்பாராத விதத்தில் வீழ்ச்சியடைந்து, சில நிமிடங்கள் கர்த்தரை அவமதிப்புச் செய்வதோடல்லாமல், தங்களுடைய சொந்த இருதயத்தையும், மனசாட்சியையும் கூட அவமதிப்புச் செய்துவிடுகின்றவர்களாகக் காணப்படுகின்றார்கள். இந்த இரண்டு வகுப்பாருக்கும் இடையில் காணப்படும் வித்தியாசம் இருதய நிலையே ஆகும். பேதுரு வகுப்பார் தாங்கள் செய்ய விரும்பாததையே செய்துவிடுகின்றனர் (அ) அவர்கள் உண்மையில் செய்ய விரும்புவதைச் செய்யாமல் விட்டுவிடுகின்றனர். மேலுமாக, இவர்களுடைய பிரச்சனை, இவர்களுடைய மாம்சத்தின் பெலவீனமாகவும், எதிராளியானவனின் வல்லமையான மேற்கொள்ளுதலாகவும், தேவையான வேளையில் உதவி அளிக்கப்படும் என்று கர்த்தர் வாக்களித்துள்ள உதவியைப் பெற்றுக்கொள்ள தவறிப்போகிற தன்மையாகவும் காணப்படுகின்றது.

யூதாஸ் வகுப்பாரின் இருதயத்தில் உண்மை காணப்படுவதில்லை. மாறாக, சுயநலமே காணப்படுகின்றது. மேலும், இவர்கள் இருதயப்பூர்வமாக எதிராளியானவனுடைய திட்டங்களுக்குள் பிரவேசிப்பதினால், இவர்கள் தங்களுடைய முழு மனதோடு இத்தவறான வழியில் செல்கின்றனர். பேதுருவும், யூதாசும் மனம் வருந்தின போதிலும், ஒருவர் மீண்டுமாக தெய்வீகத் தயவிற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டார் என்றும், மற்றவர் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் நாம் பார்க்கையில், தேவன் அவர்களுக்கிடையே வித்தியாசம் காட்டுவது வெளிப்படுகின்றது. அதாவது இருதயத்தில் நேர்மை கொண்டவரும், அதேசமயம் சிக்குண்டவராக/அகப்பட்டவராக மாத்திரம் காணப்பட்ட பேதுரு, மீண்டுமாகச் சீர்ப்பொருந்தப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டார். ஆனால் பிற்பாடு மனவருந்தினதினிமித்தம் யூதாசிடம் மனசாட்சி காணப்பட்டிருப்பினும், தேவனுடைய பார்வையில் இன்றியமையாததாய்க் காணப்படும் இருதயப்பூர்வமான உண்மையான மனவருத்தம்

அவரிடம் காணப்படவில்லை. என்னதான் யூதாஸ் கர்த்தரோடு நெருக்கமாக பழகினவராய் இருந்தாலும், அவரிடத்தில் உண்மையான இருதயப்பூர்வமான மனவருத்தம் காணப்படாதது மன்னிக்கப்பட முடியாததாகும்.

இந்த இரண்டு மனுஷருடைய இருதயங்களில் காணப்படும் வித்தியாசத்தினிமித்தம், கர்த்தரானவர் ஒருவருக்காக பிதாவுக்கு முன்பு பரிந்து பேசுகிறவராகவும், மற்றவருக்கு பரிந்து பேசுபவராக இராதவராகவும் இருக்க முடியும் என்று நம்முடைய பாடத்தின் ஆதார வசனத்தில் உள்ள நமது கர்த்தருடைய வார்த்தைகள் நமக்கு நிச்சயம் அளிக்கின்றது. பேதுரு, இருதயத்தில் கர்த்தருக்கு உண்மை கொண்டிருந்தும், மாம்சத்தில் பலவீனமுள்ள தன்மையுடன், பாதுகாப்பிற்காக அளிக்கப்பட்டுள்ள தெய்வீக ஏற்பாடுகள் குறித்துக் கவனமற்று/அஜாக்கிரதையாய் இருப்பவர்களுக்கு அடையாளமாய் திகழ்கின்றார். பேதுரு இன்னமும், கர்த்தருடைய ஆடுகளில் ஒன்றாகவேதான் இருக்கின்றார். ஆகையால், அவர் இன்னமும் மேய்ப்பனின் பராமரிப்பிற்குக் கீழாகவேதான் காணப்படுகின்றார். பேதுரு இன்னமும் கர்த்தருடைய அங்கங்களில் ஒருவராகத்தான் இருக்கின்றார். ஆகவே, இவருடைய நலன்கருதி தலை ஏறெடுக்கும் அக்கறைக்கும், மேற்பார்வைக்கும் இவர் இன்னமும் கீழ்ப்பட்டவராகவேதான் காணப்படுகின்றார். கர்த்தர் நேசித்து, தமது ஜீவனையே கொடுத்துவிட்ட, அவருக்கென்று நியமிக்கப்பட்டுள்ள கற்புள்ள கன்னிகையின் அங்கங்களில் ஒருவராக இன்னமும் பேதுரு காணப்பட்டார். ஆகவே, நிச்சயிக்கப்பட்ட மணவாளனாக அவர் ஏறெடுக்க வேண்டிய விண்ணப்பங்களைச் சரியானபடி ஏறெடுப்பார், எடுக்கவும் செய்தார்.

ஆனால், யூதாசின் விஷயத்தில், அவருடைய இருதயமானது, சுயநலத்தினிமித்தம் தூரம் போய்விட்டது. இன்னுமாக, கர்த்தருக்குக் கொடுக்கும் மதிப்பும் மற்றும் ஊழியத்தின் ஆரம்பத்தில் கர்த்தருக்காக அவர் கொண்டிருந்த அன்பும் யூதாசின் இருதயத்திற்குத் தூரமாயின. இன்னுமாக, ஊழியத்தின் ஆரம்பத்தில் கர்த்தர் மீது யூதாஸ் கொண்டிருந்த அன்பானது மரித்துப் போய்விட்டது. மேலும், அது சுயநலம் மற்றும் பேராசையினால் விழுங்கப்பட்டும் போய்விட்டது. இப்படியாக, கர்த்தரிடத்திலிருந்து முற்றிலுமாக விலகிப்போன இருதயத்திற்குள் சாத்தான் பிரவேசித்தான் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. இப்படியாக, யூதாஸ் தனது இருதயத்தையும், பலத்தையும், அர்ப்பணிப்பையும் கர்த்தரிடத்திலிருந்து விருப்பத்துடன் திரும்பப் பின்னுக்கு எடுத்துவிட்டு, இவைகள் அனைத்தையும், சுயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படுத்தும் தன்னுடைய உள்ளார்ந்த நோக்கத்திற்கு ஒப்புக்கொடுத்துவிட்டதால், அவர் எதிராளியானவனின் ஆயுதமானார். ஆகவேதான், "தாம் சிலுவையில் அறையப்பட வேண்டியது – இடறல்கள் வருவது அவசியம். ஆனாலும், எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!" என்று நமது போதகர் கூறினார். (மத்தேயு 18:7)

## இன்றும் நிலவும் அதே சூழ்நிலைகள்

நம்முடைய அனுபவங்களில் நாம் பார்த்த வரையிலும், பஸ்கா காலங்கள் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களுக்கு எப்போதும் விசேஷித்த ஆபத்துகள் மற்றும் விசேஷித்த நெருக்கங்கள் நிறைந்த சூழ்நிலைகளில் ஒன்றாகக்

காணப்படுகின்றது. இக்காலக்கட்டத்தில் நாம் அறியாத ஏதோ சில காரணங்களுக்காக, எதிராளியானவன் விசேஷித்த விதமான வல்லமை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றான். பஸ்கா காலம் சமீபிக்கையில், நாம் காலம் காலமாகப் பார்த்து வந்தது என்னவெனில், சத்தியத்தின் மீது ஏதோ விதத்திலான தாக்குதல் மற்றும் சத்தியம் தொடர்புடைய விஷயங்களில் ஏதோவிதமான சில விசேஷமான சோதனைகள் (அ) பரீட்சைகள் மூலம் சாத்தானின் செயல்பாடுகள் வெளிப்படுகின்றன. உண்மையான இருதயமுடைய கர்த்தருடைய சீஷர்களில் ஒருவரும், அவருடைய கரங்களிலிருந்து, எதிராளியானவனால் பிடுங்கிப் போடப்பட முடியாது என்பதை நாம் முன்கூட்டியே அறிந்திருப்பினும், கர்த்தர் தம்முடைய சீஷர்கள் சோதனைக்குள் பிரவேசித்து விடாதப்படிக்கு, விழித்திருந்து, ஜெபம் பண்ணுங்கள் என்று கூறின புத்திமதியின் மேல் நாம் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டுமென நாம் விரும்புகின்றோம்/கருத்துத் தெரிவிக்கின்றோம்.

யூதாஸ்தான், தம்மைக் காட்டிக்கொடுக்கப் போகிறவன் என்று இயேசு அறிந்திருந்தபடியினால், இயேசு, யூதாசின் நடவடிக்கையைக் கண்டு ஆச்சரியமோ, அங்கலாய்ப்போ அடையவில்லை. மேலும், "தம்முடனே அப்பம் புசிக்கிறவன் தம்மேல் அவன் குதிங்காலைக் தூக்குவான்" மற்றும் தமக்கு உதவியாளனாகவும், கூட்டாளியாகவும், பிராண சிநேகிதனுமாய் இருந்தவன் தமக்குச் சத்துருவாக வேண்டும் என்பதான இந்த அனைத்து எண்ணங்களும் நம்முடைய அருமையான போதகருக்குக் கவலையான தாக்கம் ஏற்படுத்தியிருக்க வேண்டும் (யோவான் 13:18; சங்கீதம் 41:9). நமது கர்த்தரானவர், அவருடைய கொடுமையான சத்துருவின் மீதும் அனுதாபப்படக் கூடியவராக இருந்தார். அதேசமயம், எதிராளியானவனுடைய திடீர் தாக்குதலை முதலில் எதிர்த்துப் போராட முடியாமல் இருந்தும், பிற்பாடு தெய்வீக இரக்கம் மற்றும் உதவியினால் குணமடைந்த பேதுருவுக்கும் கூட அனுதாபம் காட்டக் கூடியவரானார்.

கிறிஸ்துவின் சரீரம் ஒன்றாய் இருப்பதினாலும், தம்முடைய அங்கங்களிலேயே மிகச் சிறியவரான ஒருவருக்கு ஏதேனும் செய்யப்பட்டால், அது அவருக்கே/ கிறிஸ்துவுக்கே செய்யப்பட்டதாகும் எனக் கர்த்தர் கூறியிருப்பதினாலும், சுவிசேஷயுகத்தின் ஆரம்பம் முதல், இன்றுவரை யூதாஸ் வகுப்பாரும், பேதுரு வகுப்பாரும் எந்த அளவுக்கு தங்கள் உடன்/கிறிஸ்துவினுடைய சரீர அங்கங்களைக் காட்டிக் கொடுக்கவோ (அ) மறுதலிக்கவோ செய்கின்றார்களோ, அவைகள் எல்லாம் கர்த்தரை மறுதலித்து, காட்டிக் கொடுப்பதாகவே கருதப்படுகின்றது. ஆகவே, "உன் விசுவாசம் ஒழிந்து போகாதப்படிக்கு உனக்காக நான் வேண்டிக்கொண்டேன்" என்று பேதுருவிடம் நம் கர்த்தர் கூறின வார்த்தைகளுடைய முக்கியத்துவத்தை நாம் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

பேதுரு வகுப்பார் அனைவரின் சார்பாக கர்த்தரே பிதாவுக்கு முன்பு பரிந்து பேசுபவராகவும், பிரதிநிதியாகவும், தலையாகவும் காணப்படுகின்றார். கர்த்தருடைய உதவி இல்லாமல் மற்றும் நம் சார்பாக அவர் பிதாவின் முன்னிலையில் தோன்றி, அவருடைய சொந்த பலியினால் உண்டான புண்ணியத்தை நம் சார்பாக செயல்படுத்தவில்லையெனில், நம்மில் ஒருவரும் நிலைநிற்க முடியாது; இயேசுவோடுகூடப் பங்கடையும்படி தேவன் நம்மை அழைத்த ஆசீர்வாதங்களைப் பெற நாம் தகுதியற்றவர்களாய் ஆகி, பாத்திரமற்றவர்களென நியாயம் தீர்க்கப்பட்டுப்

போய்விடுவோம். இப்படிப்பட்டவர்களுக்காக நமது கர்த்தர் ஜெபம் பண்ணி, இப்படியாக பரிந்துபேசி, அவர்களிடத்தில் காணப்பட்ட வேண்டுமென்றே செய்யப்படாத குறைபாடுகளை சரிசெய்திருக்க, கர்த்தருடைய ஆவி பெற்றிருப்பவர்களும், பேதுரு வகுப்பார் மேல் அன்பும், இரக்கமும், அனுதாபமும் கொண்டு, அவர்களுக்கு உதவியளிக்கும் வண்ணமாக அவர்களிடம் பேச வேண்டும். ஆனால் வெளிப்படையான மற்றும் திட்டம்போட்டுச் செயல்பட்டதான சத்துருவும், துரோகியுமான யூதாசுக்கு, போதகர் எவ்விதமான இப்படிப்பட்ட அனுதாப வார்த்தைகளைக்கொண்டிராதது போன்று, இப்படிப்பட்டவர்களுக்காக நமக்கு மனக்கவலை உணர்வுகள் காணப்பட்டாலும், அவர்களுடைய தீமையான கிரியைகளுக்கு ஒத்தாசை (அ) ஆதரவு தெரிவிக்கும் எவ்விதமான உணர்வுகளுக்கும் நாம் இடம் கொடுக்கக்கூடாது. ஏதேனும் ஓர் அப்போஸ்தலன், யூதாசுடன் கூடச் செயல்பட்டிருப்பாரானால், அது அவனுடைய பொல்லாத கிரியைகளில் பங்குகொள்வதாகிவிடும்.

## கோதுமையைப் புடைக்கிறதுபோல் உன்னைப் புடைக்க

பேதுருவுக்கும், இவரைப்போன்ற பண்பும், அனுபவமும் பெற்றிருக்கும் மற்றவர்களுக்கும் நாம் எவ்வளவுதான் அனுதாபம் கொண்டிருப்பினும், மேலும் பேதுரு தனக்காக விழித்திருந்து, ஜெபம் பண்ணும் விஷயத்தில் அஜாக்கிரதையுடன் காணப்பட்ட விஷயத்தில், அவருக்காக கர்த்தர் ஜெபம் பண்ணினதினிமித்தம், பேதுரு பின்வாங்கிப் போகாமலும், தேவனுடனான தன்னுடைய உறவை இழந்துபோகாமலும் இருந்ததினிமித்தம், நாம் எவ்வளவுதான் பேதுருவோடு சேர்ந்து களிகூர்ந்தாலும், நாம் பேதுரு வகுப்பாரில் ஒருவராக இருப்பதற்கு நாடாமல், நமது கர்த்தர் தாமே அடையாளப்படுத்தும் வகுப்பாரில் ஒருவராக இருக்கவே நாம் நாட வேண்டும். தற்காலத்தில் எதிராளியானவனின் சோதனைகளினால் மேற்கொள்ளப்படாத அளவிற்கு உண்மையுடனும், விழிப்புடனும், ஜெபத்துடனும் காணப்படும் வகுப்பாரில் ஒருவராக நாம் இருக்கக்கடவோம்.

நாம், "அறுவடையின்" காலத்தில் இருக்கின்றோம். அதாவது, கோதுமையிலிருந்து களையைப் பிரித்து எடுப்பதற்கான காலம் வந்துவிட்டது. இன்னும் சொல்லப்போனால், கோதுமையினின்று பதரைப் பிரிக்கக்கூடியதான, புடைக்கும் வேலைக்கான காலம் வந்துவிட்டது. கோதுமை மற்றும் பதர் எனும் நிழலானது, கடந்துபோன காலங்களில் உள்ள சபைக்குரிய அனுபவங்களுக்கு ஓரளவு பொருந்தக்கூடியதாக இருப்பினும், அது, "யுகங்களின் முடிவில்" காணப்படும் சபைக்கு விசேஷமாகப் பொருந்தக்கூடியதாக இருக்கின்றது என்பதில் நமக்கு நிச்சயமே. அதாவது, யூதர் யுகத்தின் முடிவில் (அ) அறுவடையின் போது, வாழ்ந்த சபை அங்கங்களுக்கும், சுவிசேஷயுகத்தின் முடிவில் (அ) அறுவடையின் போது, அதாவது இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கும் சபை அங்கங்களுக்கும் விசேஷமாகப் பொருந்தக்கூடியதாக இருக்கின்றது. நமது கர்த்தர் இத்தகைய புடைப்புகளை அனுமதிப்பதில் பிரியமுள்ளவராக இருக்கின்றார். அவைகள் அவசியமாயும் காணப்படுகின்றது; அதாவது யூதாஸ் வகுப்பாரை முற்றிலும் புடைத்து எடுப்பதற்கும், பேதுரு வகுப்பார் சோதனைகளினாலும் மற்றும் பிரச்சனைகளினாலும், தங்கள் சொந்த பலவீனங்கள் குறித்த உணர்ந்துகொள்ளுதலினாலும் தூண்டப்படுவதற்கு

ஏதுவாகவும், தேவனுடைய பாதுகாக்கும் கிருபை தங்களுக்கு இல்லையெனில், தாங்கள் முழுமையாய்த் தோற்றுவிட நேரிடும் என்பது பற்றின அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாகவும், சகல வல்லமையுள்ள அவர்களுடைய தலையாய் இருப்பவர் மேல் விசுவாசம் கொள்ளவும், அதிகமதிகமாய்ச் சாந்தத்திலும், விழிப்பிலும், ஜெபத்திலும் வளர்ச்சிக்கொள்ளத்தக்கதாக இவ்வனுபவங்கள் மூலம் அவர்கள் பெற்றுக்கொண்ட படிப்பினைகள் அவர்களுக்கு உதவியாய் இருப்பதற்கு ஏதுவாகவும் சோதனைகள் அவசியமாய்க் காணப்படுகின்றது.

"பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்கு" என்ற வார்த்தைகள் தற்காலமானது பூச்சக்கரத்தின் குடிகளுக்குச் சோதனைக் காலமாய் இருக்கும் என்று சுட்டிக் காட்டுகின்றது (வெளிப்படுத்தல் 3:10). இன்னுமாக "அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்" என்ற வார்த்தைகள் மூலம் தற்காலமானது உண்மை சபையாருக்கும் கூடக் கடுமையான சோதனைக் காலமாய் இருக்கும் என்றும், விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு என்னும் பொன், வெள்ளி மற்றும் விலையேறப்பெற்ற கற்களே அக்கடுமையான சோதனையில் நிலைநிற்கும் என்றும் உள்ள வாக்குறுதியையும் நாம் நினைவுகூருகின்றோம். (1 கொரிந்தியர் 3:13)

## அந்த நாளின் அக்கினி

எங்கெல்லாம் பூரணமான அன்பின் நிலை எட்டப்படவில்லையோ, அதை இந்த நாளின், "அக்கினியானது," இந்த நாளின் புடைப்புகளானது வெளிப்படுத்திவிடும். அதாவது, குறைவு பெற்றவர்களைக் கர்த்தர் பிரித்துவிடுவார். இது துக்கத்தை உண்டு பண்ணுகிறதாய் இருக்கும். அதாவது, மாம்சீக உறவுகள் துண்டிக்கப்படும்போது, அருமையானவர்களிடத்தில் காணப்பட்ட நம்பிக்கைகள்/எதிர்பார்ப்புகள் அழிக்கப்பட்டுப் போகும்போது, நமக்குத் துக்கம் ஏற்படும் என்றாலும், இவ்விஷயம் தொடர்பாக, கர்த்தர் நமக்கு அளிக்கும் செய்தியானது, கர்த்தரால் கட்டளையிடப்படாத அந்நிய அக்கினியைச் செலுத்தின ஆரோனின் உடன் ஆசாரியர்கள் மரித்தபோது, அவர்களினிமித்தம் ஆரோனுக்கும், அவருடைய மற்றக் குமாரருக்கும் கொடுக்கப்பட்ட கட்டளையில் நிழலாகக் காணப்படுகின்றது. "பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தன்தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள். மோசே ஆரோனையும், எலெயாசார் இத்தாமார் என்னும் அவன் குமாரரையும் நோக்கி: நீங்கள் சாகாதபடிக்கும், சபையனைத்தின்மேலும் கடுங்கோபம் வராதபடிக்கும், நீங்கள் உங்கள் தலைப்பாகையை எடுத்துப்போடாமலும், உங்கள் வஸ்திரங்களைக் கிழிக்காமலும் இருப்பீர்களாக; உங்கள் சகோதரராகிய இஸ்ரயேல் குடும்பத்தார் யாவரும் கர்த்தர் கொளுத்தின இந்த அக்கினிக்காகப் புலம்புவார்களாக" (லேவியராகமம் 10:1, 6). உயிரோடிருக்கிற மீதமுள்ள ஆசாரியர்கள், கர்த்தரால் அறுப்புண்டுப்போகப் பண்ணினவர்களுக்காக துக்கம் அனுசரிக்கவோ (அ) புலம்பவோ கூடாது என்று கர்த்தருடைய வாயாக இருந்த மோசே அறிவிக்கின்றார். மேலும் அவர்கள் ஒருவேளை

துக்கம் அனுசரிப்பார்களானால், அது அவர்களை, கர்த்தருக்கு முன்பு உண்மையற்றவர்களாகவும், இவ்விஷயத்தில் விளங்கும் தேவனுடைய ஞானம், நீதி மற்றும் அன்பை அங்கீகரிப்பதில்/ஏற்றுக்கொள்வதில் தவறிப் போகிறவர்களாகவும் காண்பித்துவிடும்.

"கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும்" அளவு நம்முடைய நாட்களில் உள்ள "புடைப்புகள்" காணப்படும் என்று, அதாவது கர்த்தருக்கும், அவருடைய தெய்வீக ஏற்பாடுகளுக்கும் நாம் கொண்டிருக்கும் நம்முடைய அன்பையும், நம்முடைய உண்மையையும் நிரூபிக்கும் அளவு சோதனைகள் கடுமையாக, அதாவது விசாரணை செய்யும் விதத்தில் காணப்படும் என்று மிகத் தெளிவாகக் கர்த்தர் தம்முடைய தீர்க்கத்தரிசனத்தில் வெளிப்படுத்தியுள்ளார் (மத்தேயு 24:24). உண்மையுள்ளவர்கள் வஞ்சிக்கப்பட்டுப் போவதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் இவர்களுடைய மகிமையான தலை அவர்களுக்கான ஆதரவாளராக நிற்கின்றார். இவர்கள் அவருடைய பின்னடியார்கள் ஆவார்கள். இவர்கள் அவருக்கென்று நிச்சயிக்கப்பட்டவர்களும், அவருடைய அங்கங்களும் ஆவார்கள். அவர் இவர்களுடைய தலையாகவும், பிரதிநிதியாகவும், ஸ்தானாபதியாகவும் காணப்படுகின்றார். மேலுமாக, அவர் இவர்களுக்காக, பரிந்துபேசுகின்றார். இவர்களுக்காக விண்ணப்பமும், ஜெபமும் ஏறெடுக்கின்றார். மேலுமாக, இவர்களுடைய விசுவாசம் ஒழிந்துபோவதில்லை; ஏனெனில் இவர்கள் அவருக்குச் சொந்தமானவர்கள் ஆவார்கள்; ஏனெனில் இவர்கள் எவ்வளவுதான் மாம்சத்தில் பெலவீனர்களாக இருந்தாலும், இருதயத்தில் இவர்கள் பூரணர்களாகவும், அவருக்கும் மற்றும் அவருடைய நோக்கத்திற்கும் மற்றும் தங்களுடைய உடன் அங்கங்களுக்கும் முற்றிலும் உண்மையானவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்பதினாலேயேயாகும்.

ஆகவே, வருடத்தின் இக்காலக்கட்டத்தில், எப்போதும் கூறுவதுபோன்று, மீண்டுமாக, "சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து, ஜெபம் பண்ணுங்கள்" என்ற போதகரின் வார்த்தைகளைத் தொனிக்கப் பண்ணுகின்றோம். போதகரின் வார்த்தைகள் எப்படி இரு வகுப்பாருக்கு விழுந்ததோ, அப்படியே நம்முடைய வார்த்தைகளும் இரு வகுப்பார் காதுகளில் விழுகின்றது. அதாவது, சிலர் நம்முடைய இந்த எச்சரிப்பையும் பெரிதாகக் கருதிக்கொள்ளாமல், தங்களையே ஆபத்திற்குள் திணித்துக்கொள்வார்கள். வேறு சிலரோ போதகரின் சத்தத்தில் உள்ள எச்சரிப்புக்குச் செவிசாய்த்துக் கொள்வார்கள்; மேலும் இவர்களுக்கோ இது தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான தேவனுடைய வல்லமையின் ஒரு பாகமாகக் காணப்படும்.

## ஐயகோ! என் இரட்சகர் இரத்தம் சிந்திட்டாரா?

ஐயகோ! என் இரட்சகர் இரத்தம் சிந்திட்டாரா?
எந்தன் இராஜா மரித்திட்டாரா?
புனிதமான அந்தத் தலையானவர் தம்மை ஒப்புக்கொடுத்தாரோ?
புழுவான எந்தனுக்காகவா?

நாம் இயலாதவர்களாய்ப் போனதற்காகவே
அவர் மரத்தில் பெருமூச்சு விட்டாரே.
வியத்தகுக் கருணையன்றோ! சொல்லி முடியா கிருபையன்றோ!
அளவில்லா அன்பன்றோ இது!

தேவனுடைய அபிஷேகிக்கப்பட்டவராகிய இயேசு மரித்தபோது,
ஆம், பாவத்தினால் இயலாதவனான மனிதனுக்காக மரித்தப்போது,
சூரியன் நிழலின்கீழ் ஒளிந்தது நன்றே,
தன் மகிமைகளை நிழலின்கீழ் அடைத்தது நன்றே.

அவர் அருமையான சிலுவையைக் காண்கையிலேயே
நானும் நாணத்துடன்கூடிய எந்தன் முகந்தனை மறைத்திடுவேனே,
எந்தன் இருதயம் நன்றியினால் கரைந்துபோகுமே,
எந்தன் கண்கள் கண்ணீர் சிந்துமே.

வருத்தத்தின் கண்ணீர் துளிகளோ ஒருபோதும் திருப்பிச்செலுத்திட முடியாதே,
நான் உமக்கு உட்பட்டுள்ள அன்பு கடனையே;
இதோ ஆண்டவரே, என்னையே உம்மிடம் கொடுத்துவிடுகின்றேனே,
இதுவே என்னால் கொடுக்கமுடிந்த யாவுமாய் உள்ளதே.

இயேசு உந்தனுக்காய் மரித்தார்,
இயேசு எந்தனுக்காய் மரித்தார்;
ஆம்! இயேசு மனுக்குலம் அனைத்திற்குமாக மரித்தார்;
தேவனை ஸ்தோத்திரி, இரட்சிப்பு இலவசமாய் உள்ளதற்கே!

- விடியல் துதிப்பாடல்கள், # 5

# என் பிதா ஊற்றிட்ட பாத்திரம்

"பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக் குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதுமுதல் இந்தத் திராட்சப்பழ ரசத்தை நவமானதாய் உங்களுடனேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறி, நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்திட்டதான இராப்போஜனத்தின் பாத்திரத்தைக் குறித்து நீங்கள் குறிப்பிட்டுள்ளதை நான் கவனித்தேன். (மத்தேயு 26:27-29)


யாக்கோபும், யோவானும் தம்மோடுகூடத் தம் சிங்காசனத்தில் உட்காருதல் தொடர்புடையதான அவர்களது நம்பிக்கையானது, அவர்கள் தம்முடைய பாத்திரத்தில் பங்கெடுப்பதிலும், மரணத்திற்குள்ளாக தம்முடைய ஸ்நானத்தில் பங்கடைதலிலும் சார்ந்திருக்கின்றது என்று நமது கர்த்தர் அவர்களிடத்தில் மத்தேயு 20:22-ஆம் வசனத்தின் வார்த்தைகளினால் பதிலளித்தபோது, இதே பாத்திரத்தைத்தான் குறிப்பிட்டுள்ளதாக நீங்கள் கருதுவதை நான் கவனித்தேன். இதுவே வேதவாக்கியங்களில் இடம்பெறும் பாத்திரத்திற்கான ஒரே அர்த்தமாகக் கருதப்பட வேண்டுமா அல்லது இல்லையா என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன். சில இடங்களில் பாத்திரமானது, பாடுகளைக் குறிக்காமல், சந்தோஷத்தை, மகிழ்ச்சியைக் குறிப்பதாக எனக்குத் தோன்றுகிறது. உதாரணத்திற்கு சங்கீதம் 23:5-ஆம் வசனத்தில், "என் பாத்திரம் நிரம்பி வழிகிறது" என்று வாசிக்கின்றோம்; மீண்டுமாக சங்கீதம் 116:13-ஆம் வசனத்தில், "இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்" என்று வாசிக்கின்றோம். இவை கிறிஸ்துவின் பாடுகள் எனும் பாத்திரத்தைக் குறிக்கிறதில்லை என்று எனக்குத் தோன்றுகின்றது. அப்படித் தானே?

ஆம், என்று நாம் பதிலளிக்கின்றோம். இந்த ஒவ்வொரு தருணங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றதான பாத்திரம், ஒரே பாத்திரம்தான். சங்கீதம் 23-ஆம் அதிகாரமானது, கிறிஸ்து மற்றும் சபையையும், இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதுமுள்ள அவர்களது அனுபவங்களையும் அடையாளப்படுத்தும் தீர்க்கதரிசனமான ஒன்றாகும். நிச்சயமாகவே நமது கர்த்தருடைய பாடுகளின் பாத்திரமானது நிரம்பி வழிந்தது. மேலும் அதை அவர் இந்த யுகம் முழுவதுமுள்ள அவரது உண்மையுள்ள பின்னடியார்களுக்கு முன்வைத்திட்டபோது, அது நிரம்பி வழிகிற பாத்திரமாகவே காணப்பட்டது. அது மரணத்திற்கேதுவான துக்கத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. எனினும் மகிமையான பலன்களுடைய காரணமாக, நமது கர்த்தரும், அவரது பின்னடியார்களும்,

கிறிஸ்துவினுடைய பாடுகளிலுள்ள ஐக்கியத்தின் இந்தப் பாத்திரத்தில் களிக்கூருவதாகத் தீர்க்கத்தரிசனமாய்க் குறிப்பிடப்பட்டுள்ளனர். இதைக் குறித்து நமது கர்த்தர், "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்;" மீண்டுமாக, "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" என்று கூறுகின்றார்.

சங்கீதம் 116:13-ஆம் வசனத்தில், மரணத்தின் இந்தப் பாத்திரமானது, இரட்சிப்பின் பாத்திரமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது; ஏனெனில், இதன் வாயிலாகவே நம்முடைய இரட்சிப்பும், உலகத்தினுடைய இரட்சிப்பும் அடையப்பெறக் கூடும். கிறிஸ்துவும், அவருடைய பின்னடியார்களும், மாபெரும் பரிசினை வெல்லத்தக்கதாக, தங்கள் ஜீவியங்களைப் பொருட்படுத்தாமல், தங்கள் உபத்திரவங்களில் களிக்கூர்ந்திருக்கின்றனர். பின்வரும் வசனத்தைக் கவனியுங்கள்: "இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன் (அவசியமான உதவிக்கென்று). நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல் லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன். கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது" (சங்கீதம் 116:13-15). மரணம் வரையிலுமாக உண்மையாய்க் காணப்படுவதே – பாத்திரத்தில் பானம் பண்ணுவதே, கிறிஸ்து மற்றும் அவரது அங்கத்தினர்களுடைய பொருத்தனையாய் இருந்தது. வாக்களிக்கப்பட்ட பலன் என்பது, இராஜ்யத்தில் மகிமையின் கிரீடம் வழங்கப்படுவதாகும். இது எதிர்க்காலத்திற்குரிய இன்னொரு பாத்திரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. போதகருடன் அவரது புதிய உடன்படிக்கையின் பாத்திரத்தில் பானம் பண்ணுவதில் இணைந்துகொள்பவர்கள் மாத்திரமே, இந்த யுகத்தினுடைய முடிவின்போது – இந்த நிஜமான பாவநிவாரண நாளும், அதன் பலிகளும் நிறைவடையும்போது, உண்மையுள்ளவர்களுக்கென்று பிதா ஊற்றிடும் சந்தோஷம் மற்றும் மகிமையின் பாத்திரத்தில், பங்கெடுப்பதன் மூலம், அவரோடுகூடப் பங்கடைய முடியும்.

–Reprints, p. 4555



## நினைவுகூருதலின் தியானங்கள்

# கெத்செமனே



# கெத்செமனேயில் வியாகுலம்

## மாற்கு 14:32-42; மத்தேயு 26:36-46; லூக்கா 22:39-46; யோவான் 18:1

*"பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?"*

இந்தப் பாடத்தினுடைய துயரம் நிறைந்த காட்சிகளை நாம் பார்க்கையில், பயபக்தியுடனும், ஆழ்ந்த நன்றியுடனும், நம்முடைய பாரத்தையே அவர் சுமந்திட்டார் என்றும், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது என்றும், அவரது தழும்புகளினாலே நாம் சுகமானோம் என்றும் நினைவுகூருவோமாக.

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் நன்கு பரீட்சயமான இச்சம்பவப் பதிவானது, விலையேறப்பெற்ற படிப்பினைகளுள்ள ஒன்றாகும், அதிலும் விசேஷமாக அவரது கிருபையினால் கர்த்தருடைய அடிச்சுவடுகளில் பின்தொடர்வதற்குப் பிரயாசம் எடுக்கின்றவர்களாக இருப்பவர்களுக்கு விலையேறப்பெற்ற படிப்பினைகள் முழுக்க நிரம்பப் பெற்ற ஒன்றாகும். நாம் புரிந்துகொள்வது என்னவெனில்: (1) போதகர் தாம் காட்டிக்கொடுக்கப்படுவதற்கும் மற்றும் தமக்குக் கடுமையான சோதனைகள் வருவதற்குமான தம்முடைய வேளை சமீபித்துள்ளது என்பதை உணர்ந்தபோது, அவர் முதலாவதாக சீஷர்களைத் தேற்றி, அவர்களுக்கு ஆலோசனைக் கொடுத்து, அவர்களுக்காக, அவர்களோடுகூட ஜெபம் ஏறெடுத்தப் பிற்பாடு தேவனிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கும், அவரோடு ஐக்கியம் கொள்வதற்கும், தேவையான வேளையில் கிருபைப் பெற்றுக்கொள்வதற்கும் வேண்டி தனியான ஓர் இடத்தைத் தேடுவதே அவரது அடுத்தக்கட்ட உறுதியான உணர்வாய்க் காணப்பட்டது. (2) தம்முடைய சீஷர்களுக்கான அவரது அன்பையும் மற்றும் அவர்களது அன்பையும், அனுதாபத்தையும் திரும்பப்பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற அவரது விருப்பத்தையும் நாம் கவனிக்கின்றோம். "தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்." மேலும் அவர் அவர்களை அன்புகூர்ந்ததினாலும், அவர்களும் தம்மை அன்புகூருகிறார்கள் என்று அவர் அறிந்திருந்ததினாலும் தாம் ஜெபம் பண்ணப்போகிற இடத்தில், அவர்களும் தம்மோடுகூட விழித்திருந்து, ஜெபம் பண்ணத்தக்கதாக, அவர்கள் வருவதற்கு அனுமதித்தார். தம்முடைய இறுதி ஜெபவேளையானது காட்டிக்கொடுப்பவனால் சடுதியாய்க் குறுக்கிடப்படாமல் காணப்படத்தக்கதாக, வெளிக்காவல் புரியும் வண்ணமாக பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானைத் தவிர மற்ற அனைவரையும் தோட்டத்தின் நுழைவாயிலில் நிறுத்தி வந்தார்; இந்த மூவருடன்கூட அவர் தோட்டத்திற்குள் வந்தார்; அனலாய் இருக்கும் சுபாவமுள்ள இந்த மூவரிடத்தில் தேறுதலான அனுதாபத்தை, அவர் கண்டதாகத் தெரிகின்றது மற்றும் விழித்திருந்து, ஜெபம் பண்ணுவதற்கான உண்மையான வேண்டுகோளை விடுத்தவராக, அவர் அவர்களைவிட்டு, கல்லெறியும் தொலைவுக்குப் போயுள்ளார். ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில் அவர் மூன்று தரம் எழுந்து "என் ஆத்துமா மரணத்திற்கு ஏதுவான துக்கம் கொண்டிருக்கிறது" என்று கூறி மனித அனுதாபத்தின் தொடுதலைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, வியாகுலமான ஆத்துமாவுடன் அவர்களிடத்தில் திரும்பி

வந்தார். அவரைக் கொஞ்சம் நேரம் சோர்வுபடுத்தினதும், இரத்தத்தின் மாதுளிகள் வியர்வையாக வருமளவுக்குக் கடுமையான அளவில் மனதிற்கும், நரம்பிற்கும் அழுத்தம் ஏற்படுத்தினதுமான துக்கமாக, வியாகுலமாக அது காணப்பட்டது.

போதகர் இப்படி மனித அனுதாபத்தை விரும்பினது என்பது, அவர் சார்பிலான பெலவீனத்திற்கான அறிகுறியாகாது. அவருடைய சுபாவமானது கரடுமுரடான தாகவோ, விருப்பு வெறுப்பு அற்றதாகவோ, வலி, இழப்பு மற்றும் நிந்தனை தொடர்புடைய விஷயத்தில் உணர்வற்றதாகவோ இல்லை; அவர் தொடர்பு வைத்திருக்கும் நபர்கள், அவரது மகிமையான பூரணத்திற்கு வெகுக் கீழானவர்களாகக் காணப்பட்டபோதிலும், அவரது சுபாவமானது பெருமையானதாகவோ, தம்மையே சார்ந்துள்ளதாகவோ, மனித உறவினின்று தம்மைப் பிரித்து விலகுகின்றதாகவோ இல்லை. கிருபையாக அவர் கீழ் நிலையிலுள்ள மனித சாயலுக்குத் தம்மைத் தாழ்த்திக்கொண்டார் மற்றும் அவர்களைப் பிரியத்திற்குரிய சகோதரர் என்று கருதினார் மற்றும் அவர்களைக் குறித்து அவர் வெட்கப்படவில்லை. அவரது சுபாவமானது நுட்பமானதாகவும், அன்புள்ளவைகளை, நல்லவைகளை, உண்மையுள்ளவைகளைக் கூர்மையாய் உணர்ந்து கொள்ளுகிற தாகவும், இவைகள் அனைத்திற்கும், எதிர்மாறான வலியையும்கூட அதே அளவுக்கு உணர்ந்துகொள்ள முடிகிறதாகவும் காணப்பட்டது. மனிதனுடைய சீர்க்கேடும், மனிதனுடைய துயரங்களும், அவரது பூமிக்குரிய ஜீவியக்காலம் முழுவதும், அவரைத் தொடர்ந்து வெகு பாரமாய் அழுத்தி இருந்திருக்க வேண்டும். ஆனால் இந்தப் பயங்கரமான வேளையிலோ, ஒட்டுமொத்த உலகத்தினுடைய பாரங்களும், துயரங்களும் அவரது தோள்கள் மீது குவிக்கப்பட்டது மற்றும் அவர் பாவிபோன்று பாடுபட வேண்டும், மரிக்க வேண்டும்; அதாவது உயிர்த்தெழுதலுக்காகப் பிதாவின் கிருபையை மாத்திரம் விசுவாசித்தவராக மரித்துப்போக வேண்டும். இந்த ஒரு வேளையில் அவரது மரணம், சரீர வியாகுலம், அவமானம், கொடுமை மற்றும் கோர மரணத்திற்கேதுவான சித்திரவதை முதலானவைகள் பற்றின உணர்ந்துகொள்ளுதல் மாத்திரம் அவருக்குள் காணப்படாமல், இன்னுமாகத் தம்முடைய பிரியமான சீஷர்கள் பயத்தினாலும், திகிலினாலும் மேற்கொள்ளப்பட்டு, தம்மை தனிமையில் விட்டுவிடும்போது தாம் அனுபவிக்கப்போகும் தனிமைக் குறித்த உணர்வும் அவருக்குள் குவிந்தன; மற்றும் திரும்பிட முடியாத அளவுக்கான யூதாசினுடைய இழப்பும், யூத ஜாதியாருடைய நடவடிக்கைக் குறித்துமான கவலைகரமான நினைவுகளும் அவருக்குள் குவிந்தன - அவரது சொந்த ஜனங்கள் அவரை அசட்டைப்பண்ணி, "இவர் இரத்தப்பழி எங்கள் மீதும் எங்கள் பிள்ளைகள் மீதும் வருவதாக" என்று கூறினதன் மூலம் அவரது இரத்தப்பழியைத் தங்கள் தலைகள் மீது பெற்றுக்கொண்டனர். இதன் விளைவாக அவர்கள் மீது சீக்கிரத்தில் வரும் பயங்கரமான பெருந்துன்பத்தை அவர் முன்னறிந்தவராய் இருந்தார். தம்முடைய பலியின் மூலமாக, உலகத்திற்குப் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுதலையைத் தாம் பெற்றுக்கொள்வது வரையிலும், குற்றவாளியாய்க் காணப்பட்ட உலகமானது தொடர்ந்து தவித்து, பிரசவ வேதனைப்பட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்பதானது, அவரைப் பொறுப்பினுடைய பாரம் குறித்து உணரச் செய்தது; இதை ஓரளவுக்கு நம்மால் கணிக்க மாத்திரமே

முடிகின்றதேயொழிய, முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடியாது. இவைகள் அனைத்துடன்கூட பாவநிவாரண நாளினுடைய நிழலான பலியின் மாதிரிக்கேற்ப, தாம் ஏறெடுக்க வேண்டிய பலி தொடர்புடையதான நியாயப்பிரமாணத்தினுடைய ஒவ்வொரு எழுத்தும், எழுத்தின் உறுப்பும் பூரணமாய் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற உண்மைப் பற்றின அறிவும் அவருக்கு இருந்தது [ * ஆசரிப்புக்கூடார நிழல்கள், ஆங்கில பக்கம் - 39; தமிழ் பக்கம் - 43 பார்க்கவும்]. பணியில் ஏதாகிலும் ஒரு பாகத்தில் அவர் தவறி விட்டாரானால், தமக்கும், மனுஷர்களுக்குமான அனைத்தும் இழந்துபோய்விட வேண்டியிருக்கும். அவர் பரிபூரண மனிதராகக் காணப்பட்டாலுங்கூட, மாம்சமானது எவ்வளவுதான் பூரணமாய் இருப்பினும், அது அவ்வேலையைச் சமாளிப்பதற்குப் பொருத்தமானதல்ல.

அந்தப் பயங்கரமான வேளையில், அவர் தனித்துக் காணப்படும்பொழுது, திணறவைக்கும் இரவினுடைய இருளில் தற்காப்பில்லாமல், தம்மைக் காட்டிக் கொடுப்பவனுக்காகக் காத்திருக்கையில் தம்மைத் துன்புறுத்தப் போகிறவர்களின் சித்தமானது பகைமையினால் வெறியூட்டப்பட்டு, சாத்தானுடைய ஆற்றலினால் நிறைந்திருக்க, நமது கர்த்தர் எத்தகைய மன வலிமையுடன் காணப்பட வேண்டும்! ஓ! உலகம் மற்றும் அவருடைய எதிர்க்காலமானது தராசில் எவ்வளவாய் நடுங்கினது! தெய்வீக உதவியில்லாமல், பரிபூரணமான மனித சுபாவம்கூட, இத்தகைய ஒரு நெருக்கடியான நிலையைச் சமாளிக்க முடியாது; ஆகையால் உயிர்த்தெழுதலின் வாயிலாகத் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லவரை நோக்கி, அவர் பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி ஜெபம் பண்ணினார். தேவையான ஆறுதலானது ஏசாயா தீர்க்கத்தரிசியின் (42:1,7) வாயிலாகக் கொடுக்கப்பட்டது; இவர் மூலம் யேகோவா தேவன், "இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே; என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்; அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார். . . . . அவர் இளக்கரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை. . . . . கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடைய கையைப் பிடித்து, (விழுந்துபோய்விடாதபடிக்கு அல்லது தவறிடாதபடிக்கு) உம்மைத் தற்காத்து, உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்" என்று கூறியுள்ளார்.

கெத்செமனேயின் பயம் கலந்த நெருக்கடியானது, சகிப்புத்தன்மையின் ஆற்றல்களை, அவைகளின் உச்சக்கட்ட அளவு வரையிலும் ஈடுபடுத்தின பிற்பாடு, அவரது ஜெபமானது, "இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (மத்தேயு 26:39) என்பதாக மாத்திரம் காணப்பட்டது. பாத்திரம் அவரைவிட்டு நீங்கக்கூடாததாய் இருந்ததினால், தேவதூதன் வந்து, அவருக்கு ஊழியம் புரிந்திட்டார். எப்படி ஊழியம்புரிந்திட்டார் என்பது எங்களுக்குத் தெரியாது, எனினும் அநேகமாக வரவிருக்கும் மகிமைத் தொடர்புடையதான தீர்க்கத்தரிசன நிழல்களினாலும், விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களினாலும் அவரது மனதினைப்

புத்துணர்வடையப் பண்ணியிருந்திருக்க வேண்டும்; இந்த நிழல்களையும், வாக்குத் தத்தங்களையும் கொண்டு, அடர்த்தியான இருளின் இருட்டானது அவரது ஆத்துமாவை மூடி, அவரது நம்பிக்கையை நெருக்கி, "மரணத்திற்கு ஏதுவான" துக்கத்தை அவருக்குக் கொண்டுவந்திட்டதான அந்த வேளையில், அவரை தேற்றிடுவதற்கு, சீஷர்கள் அவைகளைப் போதுமான அளவுக்குப் புரிந்து கொள்ளவில்லை. ஆ! யேகோவா தேவனே அவரை ஆதரித்தார், அவரது பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்! அவரது வாக்குத்தத்தத்திற்கேற்ப அவரது தாசன் இளக்கரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை.

அந்தப் பாக்கியமான ஊழியத்தின் காரணமாக தைரியமானது வலுவூட்டப்பட்டது மற்றும் அதைக் கண்டு நாம் மிகவும் வியப்படைகின்றோம். அது வலி, அவமானம் மற்றும் இழப்புக் குறித்த விருப்பு வெறுப்பு இல்லாத தன்மையின் காரணமாக உண்டான தைரியமாய் இராமல், தெய்வீக வாக்குத்தத்தம் மற்றும் வல்லமையெனும் திரைக்குள்ளாக நங்கூரமிடப்பட்டுள்ளதான விசுவாசத்தினால் உண்டான தைரியமாகும். அவர் தமது விசுவாசக் கண்களினால் சத்தியம் மற்றும் நீதியினுடைய மகிமையான வெற்றியைக் கண்டபோது – தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு, திருப்தியடைந்த போது – மீட்கப்பட்ட உலகத்தினுடைய நித்தியமான சந்தோஷத்தையும், ஆசீர்வாதத்தையும், பிதாவினுடைய ஆசீர்வாதங்களின் ஐசுவரியத்தையும், வரவேற்பையும் பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள உண்மையுள்ள சிருஷ்டிகள் யாவருடைய நன்றியறிதலையும், அன்பையும் கண்டு, திருப்தியடைந்தபோது – ஆம் விசுவாசம் மற்றும் முடிவு பரியந்தமும் உண்மையாய்ச் சகித்தலின் பலன்களை உணர்ந்தபோது, அவர் தேற்றப்பட்டார் மற்றும் உற்சாகமூட்டப்பட்டார்; இப்பொழுது அவரால் அமைதலுடனும், தைரியத்துடனும்கூட சத்துருக்களைச் சந்திக்க சென்றிடமுடியும். ஆம் இந்த வெற்றியினாலே, இந்த விசுவாசத்தினாலேயே அவர் ஜெயங்கொண்டார் மற்றும் நாமும் இப்படியாகவே ஜெயங்கொள்ள வேண்டும்.

இப்பொழுது கெத்செமனேயில் வரப்போகின்றதான நிகழ்வுகள் குறித்த பயம் கலந்த உணர்ந்துகொள்ளுதல்கள் முடிவுக்கு வந்தது. யூதாசுக்கும், உரோம சேவகர்களுக்கும் அவர் பதில் கொடுத்தபோதும், அப்பதிலினால் அவர்களுக்கு ஏற்பட்ட தாக்கத்தின்போதும், அவரது அமைதியான, உன்னதமான மனோதிடத்தைக் கவனியுங்கள். இந்த வியத்தகு மனிதனுடைய (இயேசுவினுடைய) கம்பீரமும், வீராந்த தோற்றமும் அவர்களை மிகவும் அடக்கினதால், ஒருவேளை அவர் தம்மை அவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கவில்லையெனில், அவர்களால் அவரைப் பிடித்திருக்க முடியாது. திகைப்படைந்த மற்றும் களைப்புற்றிருந்த சீஷர்களுக்கான அவரது இரக்கத்துடன் கூடிய அக்கறையையும், அவர்களுக்கான அவரது, "ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" என்ற அன்புடன் கூடிய காரணங்கள் காட்டுதலையும், தாம் கைது செய்யப்படும்போது, தம்முடைய சீஷர்கள் தமக்கு ஏற்படப்போகும் துன்புறுத்துதலிலிருந்து தப்பித்துக் கொள்ளத்தக்கதாக, அவர்கள் வழியில் போவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்று சேவகர்களிடம் அவர்

வேண்டிக்கொண்டதையும் (யோவான் 18:8) கவனியுங்கள். அவருடைய சோதனைகள், கேலிக்குள்ளாக்கும் நிகழ்வுகள் அனைத்தின் மத்தியிலும் மற்றும் இறுதியில் சிலுவையில் அறையப்படுதலின்போதும், மற்றவர்களுடைய நலனுக்கடுத்த விஷயங்களிலுள்ள அவரது தைரியமும், அக்கறையும் ஒருபோதும் நலிந்து போய்விடவில்லை.

ஆகையால் இப்படி நமது கர்த்தரை மிகவும் கடுமையான சோதனையின் கீழ்க் கண்டு, எப்படி யேகோவா தேவனின் கரம் அவரை ஆதரித்தது என்று காண்கையில், அது அவரது அடிச்சுவடுகளில் நடப்பதற்குப் பிரயாசம் எடுத்துக்கொண்டிருக்கும் அனைவருடைய விசுவாசத்தையும் பெலப்படுத்திடுவதாக மற்றும் இவர்களிடமே கர்த்தர், "திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்; இந்த விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" என்று கூறினார் (யோவான் 16:33; 1 யோவான் 5:4). கிறிஸ்துவினுடைய சரீரத்தின் பாதமானது கல்லில் இடறாதபடிக்கு (ஏதோ சில அமிழ்த்துகிற சோதனைகளானது அவர்களுக்கு மிகவும் பாரமானதாய்ப் போகாதபடிக்கு), அவர்களை ஏந்திக்கொண்டு போகும்படிக்குத் தம்முடைய தூதர்களுக்கு யேகோவா தேவன் கட்டளையிட்டிருக்கின்றார் அல்லவா? (சங்கீதம் 91:11, 12). ஆம், அவரது கரமானது தலையாகிய நமது கர்த்தர் இயேசுவை ஆதரித்தது போலவே, பாதங்களையும் நிச்சயமாய் ஆதரித்திடும். அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்றாலும், "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கின்றார்" என்கிறார் (லூக்கா 12:32). இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு பணிவிடை ஆவிகள் அனுப்பப்பட்டு இருக்கின்றனர். இவர்களது பணிவிடைகளானது நம்மால் பார்க்க முடியாது என்றாலும், இவைகள் உண்மைதான். கிறிஸ்துவினுடைய சரீரத்தின் சக அங்கத்தினர்கள் கூட, ஒருவருக்கொருவர் கர்த்தருடைய தூதுவர்களாய்க் காணப்படுகின்றனர் மற்றும் இவர்களும் பாதங்களை ஏந்திடுவதற்கான சிலாக்கியத்தில் பங்கடைபவர்களாய்க் காணப்படுகின்றனர்.

ஆனால் தேவையின் போதான இந்த உதவியை நாம் பெற்றுக்கொள்வதற்கு, நாம் அதற்காக வேண்டிக்கொள்வது அவசியமாகும். உண்மையில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வேளையும் தேவையின் வேளையாகவே காணப்படுகின்றது; ஆகையால் ஜெப நிலையிலேயே நாம் ஜீவிப்பது, அதாவது இடைவிடாமல் ஜெபம் பண்ணுவது நமக்கு அவசியமாய் உள்ளது. நமது கர்த்தருக்கே தம்முடைய ஜீவியத்தின் விறுவிறுப்பான சூழ்நிலைகளினின்று அடிக்கடி விலகி, தேவனிடத்திற்குத் தனியே சென்று, அன்பின் நெருக்கமான ஐக்கியத்தினை உறுதியாய் வைத்துக்கொள்வது அவசியமாய் இருந்ததானால், நமக்கும் நிச்சயமாகவே அவசியமாய் இருக்கும்; மற்றும் இப்படியாகச் செய்யும்போது, நாமும் தேவையின் போதான கிருபையை எப்போதும் பெற்றுக்கொள்கின்றவர்களாய் இருப்போம். கடுமையான சோதனைகளின் வேளைகளில், நமது கர்த்தருடைய விஷயத்தில் காணப்பட்டதுபோலவே, இருளானது ஆத்துமாவை ஆழமாய் சூழ்ந்து கொள்ளுகிறதாய்க் காணப்படும், நம்பிக்கையின்

நட்சத்திரங்கள் அனைத்தையும் மறைத்துப் போடுகிறதாய்க் காணப்படும்; எனினும் நாமும் கர்த்தரைப் போன்றே யேகோவா தேவனுடைய சர்வ வல்லமையுள்ள கரத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்டு, "ஆகிலும் என்னுடைய சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று கூறுவோமானால், அவரது கிருபை எப்போதும் போதுமானதாய் இருக்கும்; மற்றும் சங்கீதக்காரனோடுகூட நாமும் "என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்" என்று கூறமுடியும் (சங்கீதம் 73:26); மற்றும் கர்த்தரோடுகூட நம்முடைய இருதயங்களும், "பிதா எனக்கு ஊற்றின பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" என்று கூறும்.

## கெத்செமனே

கெத்செமனே! யாருமில்லா தோட்டத்தின் நிழல்தனின் கீழினிலே உலகத்தின்
மீட்பர் நாடினாரே அந்த இரவிலே. தனிமையாய் ஜெபித்திட சென்றிட்டாரே அவர்,
தம் பாத்திரத்தின் கடைசி துளிதனை பருகிட கிருபையும், பலமும் வேண்டிடவே!
மாபெரும் ஆத்துமாக்கள் துயரமான வேளைகளில் தன்னந்தனிமையையே நாடுகின்றனரே!
அங்கிருந்த அவருக்குப் பிரியமான மூவரும், பகிர்ந்து கொள்ளவில்லையே துக்கத்தினையே,
ஆம், தெய்வீகமானவரின் அந்த ஆழ்த்துயரத்தையே! காத்திருக்க அவர்களிடம் கூறியே,
சென்றிட்டாரே சற்றுத்தொலைவில், விழுந்திட்டாரே முகங்குப்புறவே!

கெத்செமனே! தனியான இடம், தனித்த இடம்,
எந்த மனித பாதங்களும் இல்லையே அனுதாபத்துடனே, அந்த அடர்ந்த சிவப்புநிற
பூமியை அவரோடு மிதித்திடவே. எந்த மனித கரமும் அமைதிபடுத்திட முடியாதே,
வேறு எந்த இருதயமும் பகிர்ந்துகொள்ள முடியாதே அவர் துயரத்தையே!
தேவனை அல்லாமல் வேறெந்த குரலும் அங்குள்ள அமைதலைக் குலைத்திட முடியாதே.
அவ்விடத்தில்தானே ஒவ்வொரு ஆத்துமாவும், பாத்திரந்தனில் தன்னந்தனியாய்ப் பருகிட
வேண்டுமே, ஆம்! பிதாவின் கரம் ஊற்றிய, தம் பிள்ளைக்குக் கொடுத்ததிலே.

கெத்செமனே! வனாந்தரமான, தனிமையான இடமோ?
ஆ, இல்லை! கீழே விழும் சிறு குருவியைகூடக் கவனிப்பவரிடம்,
துயருறும் இருதயம் வீணாய்க் கூக்குரலிட வில்லையே.
ஏனெனில் அவர் தம் தூதுவனை அனுப்பிடுவார்ச் செய்தியுடனே: "பயப்படாதே,
நான் உன்னுடன் இருக்கின்றேனே! நான் உன்னை ஒருபோதும் கைவிடுவதில்லையே,
உன்னை விட்டுவிலகேனே! எந்தன் வலக்கரம் உன்னைத் தாங்கிடுமே!
எந்தன் அன்பு வல்லமை உந்தனைக் காத்திடுமே,
உந்தன் கசப்பான அனுபவ முடிவு வரையிலுமே!"

- Gertrude W. Seibert (R5208)

# உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துதல்

**"அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்." எபிரெயர் 5:7-10**

இந்த வசனத்தை ஐந்து தலைப்புகளின் கீழ் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளுகிறோம்: (1) அவர் மாம்சத்திலிருந்த நாட்களில்; (2) எதற்காகப் பயந்தார்; மற்றும் எதிலிருந்து அவர் இரட்சிக்கப்பட்டார்? (3) அவர் குமாரனாயிருந்தும்; (4) அவர் எந்தவிதத்தில் பூரணமாக்கப்பட்டார் மற்றும் (5) யாருக்கு அவர் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார்.

அப்போஸ்தலருடைய இந்த வார்த்தைகள், நம்முடைய அருமையான ஆண்டவரின் அனுபவங்களின் உள்ளார்ந்தப் பார்வையைத் தருகிறது. இவைகள் அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் நமக்காகச் சுமந்த சுமைகளைப் புரிந்துகொள்வதற்கு உதவி செய்கிறது. கீழ்க்காணும் வாக்கியத்தைக் குறிப்பாகக் காணலாம்.

## அவர் மாம்சத்திலிருந்த நாட்களில்

நம்முடைய ஆண்டவர் மாம்சத்திலிருந்த நாட்களிலும், மாம்சத்தில் இல்லாத நாட்களிலும் எந்த விதமான வித்தியாசமும் இல்லை என்று சிலர் கூறுகிறார்கள். அவர் மனித இயல்பில் உயிர்த்து, எழுப்பப்பட்டார் என்றும், அவருடைய மாம்சம் மகிமையடைந்ததாகவும் கூறுகிறார்கள். மற்றும் சிலர் அவர் மனிதனாக வாழ்வதற்கு முன் அவர் இருக்கவில்லை என்றும் கூறுகிறார்கள். ஆனால் இந்தக் கருத்துக்களுக்கு மாறானவைகளே அப்போஸ்தலனுடைய இந்த வாக்கியங்களில் குறிப்பாகச் சுட்டிக்காட்டுவது மட்டுமல்ல, மற்ற வசனங்களிலும் உறுதியாகச் சொல்லப்படுகிறது. "ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்" (எபிரெயர் 2:14). "அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினார்" (யோவான் 1:14). "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்கள் ஆகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2 கொரிந்தியர் 8:9). "நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்" (யோவான் 6:51). ஆம், அவருடைய மனுஷசரீரமே, அவரது தாழ்மையின் சரீரமாக, பலி செலுத்துவதற்காக, "ஆயத்தம் பண்ணப்பட்ட சரீரமாக இருந்தது" (எபிரெயர் 10:4-5). மேலும் அந்தச் சரீரம் பலி செலுத்தப்பட்டது; பலி செலுத்தப்பட்ட அந்தச் சரீரம் திரும்ப எடுத்துக்கொள்ளப் படவில்லை; நம்முடைய மீட்பிற்காக அது விலைக்கிரயமாகக் கொடுக்கப்பட்டது.

ஆகவே அவர் மாம்சத்தில் இனி மனுஷனாக ஜீவிப்பதில்லை; அதை அவர் பலி செலுத்தினதினால் இப்பொழுது அவர் மிக உன்னதமான நிலைக்கு உயர்த்தப்பட்டு, நம்முடைய தெய்வீக பிரதான ஆசாரியனாக என்றென்றும் ஜீவிப்பவரானார். "ஆகையால், இதுமுதற்கொண்டு,நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்" (2 கொரிந்தியர் 5:16).

அவருடைய தாழ்த்தப்படுதலானது, நித்தியமான தாழ்த்தப்படுதல் அல்ல, மாறாக அதைத் தொடர்ந்து மகிமையான ஓர் உயர்த்தப்படுதலை அடைந்தார் – திவ்விய சுபாவத்திற்கும் மற்றும் அச்சுபாவத்திற்கே உரிய மகிமையான சரீரத்திற்கும் உயர்த்தப்பட்டார் – "பிதாவினுடைய தன்மையின் சாயலானார்" (எபிரெயர் 1:3); அவர் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவராக இருந்தாலும், கிறிஸ்துவின் விசுவாசமுள்ள சீஷர்கள் ஒரு நாளில் அவரைக் காண்பார்கள், ஏனெனில், "அவர் இருந்த வண்ணமாக இல்லாமல் – இருக்கிற வண்ணமாக நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோம்" என்று எழுதியிருக்கிறது (1 யோவான் 3:2). இதற்காக, அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில், "பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன் என்று ஜெபித்தார்" (யோவான் 17:24).

ஆயினும் அவர் மாற்றம் அடைந்திருந்தாலும், நம்முடைய ஆண்டவர் அதே இயேசுதான். "ஏனெனில், இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார் (எபேசியர் 4:10). அவர் ஆவியின் தன்மையிலிருந்து மனித உருவம் எடுத்தபொழுது அவரில் எந்த மாற்றமும் இல்லாததுபோல, மனித இயல்பிலிருந்து தெய்வீக நிலைக்கு மாறும்பொழுதும் அவருடைய தனித்துவம் அழிக்கப்படவில்லை. அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின் அவர் தாமே, "மரித்தேன் ஆனாலும் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" என்று கூறினார்.

தேவனுடைய குமாரன் உண்மையில் மாம்சமானார் என்ற வசனத்தை நாம் ஆழ்ந்த நன்றியுள்ள இருதயங்களோடு ஏற்றுக்கொண்டோம். மேலும் மாம்சத்திலுள்ள அவருடைய நாட்கள் எண்ணப்பட்டதாகவும், குறைவாக இருந்ததினால் நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். நம்மைப்போல அவருக்கும், "குறைவான நாட்களும் முழு உபத்திரவத்தோடு காணப்பட்டது." விசேஷமாக பலியின் வேலையைச் செய்வதற்காக அவர் உடன்படிக்கைப் பண்ணின பின் வந்த நாட்களானது வேதனைகளும், ஏமாற்றங்களும், துயரங்களும் உள்ள நாட்களாகக் காணப்பட்டது. இந்நாட்களானது தேவைப்படும் நேரங்களிலெல்லாம் கிருபையைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக பரலோக கிருபாசனத்தண்டைக்கு அவரை வழி நடத்தியது. ஊழியத்தின் விறுவிறுப்பான பகல்பொழுது நிறைவடைந்தவுடன், ஜெபத்திற்கான இடத்தைத் தேடிடுவது நம்முடைய ஆண்டவரின் வழக்கமாக இருந்தது. மலைகளும்,

வனாந்தரங்களும் அவருக்கு மறைவிடமாய் இருந்தது மற்றும் அடிக்கடி அவர் முழு இரவும் ஜெபித்தவராய் இருந்தார்.

தேவனோடு அவர் கொண்டிருந்த இரகசியமான ஐக்கியத்தினால் ஆவிக்குரிய பலத்தையும், ஆறுதலையும், தேறுதலையும் பெற்றார். விலையேறப்பெற்ற தொடர்பு கொள்ளக்கூடிய இப்படிப்பட்டத் தருணங்களில், அவர் வேறுயாரிடமும் திறக்கமுடியாத தம்முடைய இருதயத்தை தந்தையிடம் முழுமையாக திறந்தார்; அத்தருணங்களில் அவருடைய சகலவிதமான வேதனைகளையும், பாரங்களையும், பயங்களையும் அவரிடம் கூறினார் மற்றும் அத்தருணங்களில் பிதாவாகிய தேவன் அவருடைய அன்பான அங்கீகரிப்பையும், ஆதரிக்கும் தம் கிருபையையும் கொடுத்து தம்மை அவருக்கு வெளிப்படுத்தினார்.

## எதற்காகப் பயந்தார்; எதிலிருந்து இரட்சிக்கப்பட்டார்?

என்ன! நம்முடைய ஆண்டவர் பயந்தாரா? என்று சிலர் ஆச்சரியப்பட்டுக் கேட்கலாம். ஆம்! மேற்கூறப்பட்ட அப்போஸ்தலரின் வார்த்தைகள், நம்முடைய ஆண்டவர், "மாம்சத்தில் இருந்த நாட்களில்" நமக்காக அவர் அனுபவித்த மிகப்பெரிய மனரீதியான போராட்டத்தைக் குறிப்பிடுகிறது. இந்த மனப்போராட்டம் அவருடைய ஞானஸ்நானத்துக்குப் பின் வனாந்தரத்தில் அவர் சோதிக்கப்படும்போதே உடனடியாக துவங்கி, கெத்செமனே தோட்டத்தில் உச்சக்கட்டத்தை அடைந்தது. அநேகமாக கெத்செமனேயில்தான் இதுவரையிலும் இல்லாத அளவுக்கு, "பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்" (எபிரெயர் 5:7).

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அல்லது அவருடைய அன்பு தோல்வியடைந்துவிடும் என்று எண்ணி நம்முடைய ஆண்டவர் பயப்படவில்லை. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" என்று அவர் அறிந்திருந்தார். தேவன் உடன்படிக்கையைக் கடைப்பிடிப்பவர் என்றும், அவருடைய சகலவிதமான நடத்தைகளும், நடவடிக்கைகளும் சத்தியம் மற்றும் நீதி என்ற நித்தியமான கோட்பாடுகளின்மேல் அஸ்திபாரம் கொண்டிருக்கின்றது என்றும், அதிலிருந்து சிறிதேனும் மாறுபடுதல் என்பது அவருடைய நெறிமுறையில் இயலாத ஒன்று என்றும் அவர் அறிந்திருந்தார். ஆனாலும் மனுக்குலத்தின் இரட்சிப்பின் திட்டமானது, ஆசரிப்புக்கூடாரத்தின் நிழலான ஊழியங்களில் பிரதான ஆசாரியன் குறித்துக் கூறப்படும் ஒவ்வொரு சிறு எழுத்திற்கும், எழுத்தின் உறுப்பிற்குமான, பிரதான ஆசாரியனுடைய கீழ்ப்படிதலைச் சார்ந்ததாய் இருக்கும் விதத்தில் ஏற்பாடுபண்ணப்பட்டிருந்தது என்பதையும் அவர் அறிந்திருந்தார்.[*ஆசரிப்புக்கூடார நிழல்கள், பக்கம் (ஆங்கிலம்) - 78; தமிழ் பக்கம் - 85 பார்க்கவும்]. அந்தப் பலிகள் செலுத்தப்படுவதுமட்டுமல்ல, துல்லியமாய்க் குறிப்பிட்டுள்ளபடியே பலிகள் ஏற்றெடுக்கப்பட வேண்டும். நிழலான பிரதான ஆசாரியனாகிய ஆரோன் பலி செலுத்துவதற்கான கட்டளைகளுக்கு ஏற்ப செய்யத் தவறியிருந்தால் (லேவியராகமம் 9:16) அல்லது கட்டளையின் ஏதேனும் அம்சத்தை அவர் மறந்து அல்லது

தவிர்த்திருந்தால் அல்லது அவருடைய சொந்தக் கருத்துக்களை அதில் பொருத்தியிருந்தால், அவர் கிருபாசனத்தின்மேல் இத்தகைய அபூரணமான பலியின் இரத்தத்தைத் தெளிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்; அவருடைய பலி அங்கீகரிக்கப்பட்டிருந்திருக்காது; அவர் மரித்திருப்பார் மற்றும் ஜனங்களை ஆசீர்வதிப்பதற்கு அவர் ஒருபோதும் வெளியே வந்திருக்கவும் முடியாது (லேவியராகமம் 16:2-3).

இப்படியாக மீட்பின் மிகப்பெரிய வேலையை மேற்கொள்ளுவதினால் பிரதான ஆசாரியர் இம் முழுமனுக்குலத்தின் ஜீவன் மற்றும் மரணத்தின் பிரச்சனைகளை மட்டும் தம்மேல் சுமந்து கொள்ளாமல், தம் விஷயத்தைக்கூட அவர் பொறுப்பேற்றிருந்தார். அடையாளமாக பேசவேண்டுமெனில் அவருடைய சொந்த வாழ்க்கையையும், அவருடைய கரங்களில் எடுத்துக்கொண்டார். இப்படிப்பட்ட கனமான பொறுப்புகளைச் சுமந்த நம்முடைய ஆண்டவர் பயந்ததில் எந்த விதமான ஆச்சரியமுமில்லையே! தெய்வீகக் கிருபை இல்லாமல் பரிபூரண மனித சுபாத்தினால்கூடத் தாங்கிகொள்ள முடியாதளவுக்கு அவர் காணப்பட்டதான சோதனைகளினால் உண்டான மன அழுத்தம், மிகப்பெரிதாக இருந்தது. ஆகவே அவர் அடிக்கடி ஜெபம் செய்வதற்கு இடம் தேடினார். அவர் கடந்துசென்ற உபத்திரவங்களின் மாபெரும் போராட்டத்தினை கவனியுங்கள் - வனாந்தரத்தில் தந்திரமான மற்றும் வஞ்சகமான சோதனைகள்; [* R1688 - பார்க்கவும்] பாவிகளால் தமக்கு விரோதமாகச் செய்யப்பட்ட விபரீதங்கள்; அவர் இரட்சிக்கும்படி வந்தவர்கள் வெளிப்படுத்தின கீழ்த்தரமான நன்றியின்மையைச் சிந்தித்துப் பாருங்கள். மேலும் அவருடைய வறுமையையும், நண்பர்களின் இழப்பையும், அவருடைய சோர்வுகளையும், களைப்புகளையும், உழைப்புகளையும், வீடற்ற நிலையையும், அவருக்கான கசப்புள்ள மற்றும் கடுமை தணியாத உபத்திரவங்களையும், இறுதியாக அவர் காட்டிக் கொடுக்கப்பட்டதையும், அவரது மரண வேதனையையும் சிந்தியுங்கள். கண்டிப்பாக, இந்தச் சூழ்நிலைகளின்கீழ்த் துன்பத்தைத் தாங்கி சகிப்பதற்கான சோதனைகளும் மற்றும் பலியின் பிரமாணத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிவதற்குமான சோதனைகளுமே, அவர் அனுபவித்த உச்சக்கட்ட சோதனைகளாய் இருந்தது. ஆண்டவருக்குள் எப்படிப்பட்ட ஜாக்கிரதையை இது ஏற்படுத்தியது; ஏனெனில் ஆசாரியனாக அங்கீகரிக்கப்படத்தக்கதான பலிகளைச் செலுத்துவதற்குரிய தம் பணி முழுவதின் விஷயத்திலும் குறைவு ஏற்பட்டால், இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதற்கு அவருக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் மற்றும் ஒப்புரவாகுதலின் நாளைத் தொடர்ந்துவரும் மகிமை நிகழாமல் போய்விடுமோ என்று அவர் பயந்திருந்தார். ஆகையால்,"அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின் வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" (எபிரெயர் 4:1) என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

நம்முடைய ஆண்டவர் அவருடைய பூமிக்குரிய வாழ்க்கையின் கடைசி இரவுக்குள் பிரவேசித்தபோது, அவருடைய சிந்தையில் பின்வரும் கேள்விகள் அவருக்குள் அழுத்தத்தை அதிகரித்தது: தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றவாறு,

அனைத்தையும் துல்லியமாக இதுவரையில் நான் நிறைவேற்றியுள்ளேனா? மேலும் இப்பொழுது நான் படப்போகும் துன்பம் பற்றி முழுக்க அறிந்த நிலையில், என்னால் கசப்பான பாத்திரத்தின் அடிவண்டல் வரையிலும் பானம்பண்ணிட முடியுமா? சரீர ரீதியான துன்பங்களை மாத்திரமல்லாமல் அவமானங்களையும், நிந்தனைகளையும் மற்றும் கொடூரமான ஏளனங்களையும் என்னால் சகித்திட முடியுமா? என்னுடைய சொந்த நீதியில், சகலத்தையும் தேவன் அங்கீகரிக்கும் விதத்தில், பூரணமாக அனைத்தையும் என்னால் செய்து முடிக்க முடியுமா? என்னுடைய சீஷர்கள் சிதறடிக்கப்படுகிறதையும், திகலடைவதையும், என் முழு வாழ்க்கையின் வேலைகள் அழிக்கப்படுவதையும், என் நாமமும் மற்றும் தேவனுடைய காரணங்களும்/ நோக்கங்களும் பழிக்கப்படுவதையும், என்னுடைய சத்துருக்கள் வெற்றிக் கொள்வதையும், பெருமையில் முழக்கமிடுவதையும் என்னால் சகிக்க முடியுமா?

நம்முடைய ஆண்டவருடைய இறுதியானப் போராட்டம் இவ்வாறாக இருந்தது. சந்தேகத்திற்கு இடமின்றி, அவருடைய நம்பிக்கையைத் தளர்ந்துபோகச் செய்வதற்கும், அவர் தவற போகின்றார் (அ) அங்கீகரிக்கப்படும் விதத்தில் பணி புரிவதில் தவறிப்போய்விட்டார் என்றுமுள்ள பயங்களினால் அவரது மனதை நிரப்பிடுவதற்கும் மற்றும் இப்படியாக உயிர்த்தெழுதல் என்பது நிச்சயமில்லை என்று அவரை எண்ண செய்வதற்கும் ஏதுவாக, சூழ்நிலைகளையும், அவரது தளர்வையும், சோர்வையும் பயன்படுத்திப் பார்ப்பதற்கு அந்த பயங்கரமான நேரத்தில், இருளின் வல்லமைகள் விறுவிறுப்பாய்ச் செயல்பட்டிருக்கும். இத்தகைய நேரங்களில் ஒரு பரிபூரணமான மனித இருதயத்தில், இத்தகைய எண்ணங்கள் முன் வந்து நிற்க, பின் அவர் அமிழ்ந்துபோவதில் ஆச்சரியம் இல்லை மற்றும் உணர்வுகளின் கடுந்துயரமானது, வேர்வையின் துளிகளை இரத்தத்தின் துளிகளாக வெளியேற்றியது. ஆனால் சோர்வுக்கு அவர் இணங்கி, அவர்மேல் வந்த இறுதியான கடுஞ்சோதனையின்போது போராட்டத்தைக் கைவிட்டாரா? இல்லை; முன்னேறிச் சென்று, தேவனால் ஏற்றுக்கொள்ளக்கூடிய பலியை முழுமையாகச் செலுத்தும்படிக்கும் – அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஓர் ஆட்டுக்குட்டியைப்போல தாம் செல்லத்தக்கதாகவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருக்கத்தக்கதாகவும் – அவருடைய மனித சித்தம் தெய்வீகக் கிருபையினால் வலுப்படுத்தப்படுவதற்காக, இந்த மனித பயங்களை அவர் தமது பரலோக தந்தையிடம் – தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமை யுள்ளவரிடம் – எடுத்துச் சென்றார்.

மேலும் அவர் பிதாவினிடம் வேண்டிக்கொண்ட ஜெபங்கள் வீணாகவில்லை. "தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்." அவருடைய ஆத்துமாவின் உணர்ச்சிகளை எந்த வார்த்தைகளும் வெளிப்படுத்த முடியாது என்பதினால், அவருடைய ஜெபங்கள் சுருக்கமாக இருந்தப் போதிலும், அந்த நேரம் முழுவதும் அவரது ஆவியானது, வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்து கொண்டிருந்தது (ரோமர் 8:26). அவருக்கு ஆறுதல் அளித்து ஊழியம் செய்யவும், தெய்வீகத் தயவு அவரோடு இன்னும் உள்ளது என்று உறுதியளிக்கவும், மரணம்வரை எல்லாவற்றையும்

சகிக்க புதிய தைரியத்தையும், மன வலிமையையும், உறுதியான பலத்தையும் கொடுக்கவும் தேவன் அவருக்கு ஒரு தூதனை அனுப்பினார். இந்த ஒரு தெய்வீகக் கிருபையின் உதவியோடு நம்முடைய ஆண்டவர் அந்த நொடிப்பொழுதிலிருந்து, அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த வேலையை முடிப்பதற்கு தளரா உறுதிகொண்ட தைரியத்தோடு முன் சென்றார். அதற்குப் பின் மனம் குழப்பமடைந்து, சோர்ந்துப்போன சீஷர்களிடம் வந்து, "இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்" என்று அவரால் அமைதியாகக் கூறமுடிந்தது. இப்பொழுது கசப்பான மனப்போராட்டம் நிறைவடைந்தது; பிணத்தின்மேல் போர்த்தப்பட்ட சீலையைப்போல, அவரை மரணத்திற்கேதுவான துக்கம் கொள்ள செய்யத்தக்கதாக அவர் முன் காணப்பட்டதான ஆழமான இருளை, பரத்திலிருந்து பிரகாசித்த ஒளியானது விரட்டியது. ஆம், தமக்கு உண்டான பயத்தின் விஷயத்தில் அவர் கேட்கப்பட்டார்; பயம் விரட்டப்பட்டது மற்றும் தேவன் தந்த பலத்தில் பலமடைந்தவராக, நியாயப்பிரமாணத்தின் எழுத்தையும், எழுத்தின் உறுப்பையும் தம்மால் நிறைவேற்ற முடியும் என்றும், அங்கீகரிக்கப்படத்தக்கதான பலியைச் செலுத்த முடியும் என்றும் இயேசு உணர்ந்தார் மற்றும் இதனால் மரணத்திலிருந்து தமக்கான இரட்சிப்பையும், உயிர்த்தெழுதலையும் குறித்து உறுதியடைந்தார்.

ஆண்டவரின் சார்பில் இந்த ஒரு பயம் பாவமாக இருக்கவில்லை; இது அவருடைய அடிச்சுவடிகளில் நடக்க முயற்சிக்கிறவர்களாகிய, நாம் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிற பயமேயாகும்; நமக்கருளப்பட்ட விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களானது மாறாததும், உறுதியானதுமான நிபந்தனைகளின் அடிப்படையிலேயே உள்ளது என்று உணரத் தவறாதிருப்போமாக (எபிரெயர் 4:1). இது தம்முடைய வாக்குத்தத்தங்களை பிதா நிறைவேற்றுவதற்குரிய அவரது வல்லமை மற்றும் விருப்பம் குறித்த சந்தேகங்களினால் ஏற்பட்ட பயமல்ல; மாறாக பிதாவின் நடவடிக்கைகளை இயக்கும் நீதியான கொள்கைகள் பற்றிய அறிவின் காரணமாகவும், இன்னுமாக குமாரன் தமது பலியின் உடன்படிக்கையை நிறைவேற்றும் பட்சத்தில் அதற்குப் பலனாக, நித்திய ஜீவனையும், மகிமையையும் நீதியாய் நிர்ணயித்திட்ட, வளைந்துக் கொடுக்காத பிரமாணம் பற்றிய அறிவின் காரணமுமான பயமாகும்; மற்றும் அதே நேரத்தில் தாம் ஒரு மனுஷனாக இருக்கின்றார் என்பதையும், இருதயமும், சரீரமும் பரிபூரணமாய் இருப்பினும், தெய்வீகக் கிருபையினால் வலிமையூட்டப் படவில்லையெனில் தாம் தவறிடுவார் என்பதையும் அவர் உணரத் துவங்கினபோது பயம் ஏற்பட்டது. "என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்" என்று ஆண்டவரின் இந்த ஒரு பயத்தையும், அவருக்குச் சகாயம் வந்த பிறப்பிடத்தையும் பற்றி சங்கீதக்காரன் கூறினார் (சங்கீதம் 73:26). இது பிள்ளைகள் கொண்டிருக்கும் அச்சமாகும். அங்கீகரிக்கப்பட்ட குமாரனாக அவர் தேவனிடத்தில் கொண்டிருக்கும் உறவுக்கு ஏற்றதான ஒரு பயமாகும்.

# அவர் குமாரனாய் இருந்தும்

அவர் குமாரனாய் இருந்தும், அவர் பட்ட பாடுகளினால் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். யேகோவா தேவனால் அவர் தொடர்ந்து குமாரன் என்று அங்கீகரிக்கப்பட்டது, அவருடைய பூரணநிலையை உறுதிப்படுத்துகின்றது; எந்த நேரத்தில் பாவம் செய்திருந்தாலும் அந்த உறவு பறிபோயிருக்கும். இதே கோட்பாட்டின் கீழ், தேவனுடைய புத்திரர்களாக நாம் அங்கீகரிக்கப்படுகிறோம், ஏனெனில் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவின் நீதியானது நமக்குத் தரிப்பிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் அவர் அங்கீகரிக்கப்பட்ட ஒரு குமாரனாகவும், பாவமில்லாமல் பரிபூரணமாகவும் இருந்தாலும், அவர் பூரணரானார் என்று அப்போஸ்தலர் அவரைக்குறித்து கூறுகிறார் – அவர் அனுபவங்களின் வழிமுறையாக – அவமானங்கள் மற்றும் உபத்திரவமான அனுபவங்கள் வழிமுறையாக – ஏதோ விதத்தில் பூரணராக்கப்பட்டார். அவர் எந்த விதத்தில் பூரணராக்கப்பட்டார் என்று நாம் கேள்விக்கேட்கலாம்; இதற்கான பதிலை தலைப்பிலுள்ள வேதப்பகுதியில் காணலாம்– "அவர் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். தாம் (இந்தப் படிப்பினையில்) பூரணரானபின்பு". தேவனுடைய குமாரன் என்று அவர் அங்கீகாரம் பெற்றிருந்தாலும்; எப்போதும் தேவன் அவர்மேல் பிரியமாக இருந்தாலும்; நீதியுள்ள தகப்பனுடைய பிரியத்திற்குரிய நம்பிக்கைகளைக் கொஞ்சமேனும் குலைத்துப் போடாதவராக இருந்தாலும்; அவர் வாழ்வதற்கு ஆதாரமே, அவருடைய தந்தை என்பதையும், சகல ஞானம், நன்மை மற்றும் கிருபைக்கும் தந்தையே ஊற்றும், காரணரும் ஆவார் என்பதையும் அவர் எப்போதும் அடையாளங்கண்டு கொண்டிருந்த போதிலும்; தம்முடைய ஜீவனுக்காகவும் மற்றும் அதன் ஆசீர்வாதங்களுக் காகவும், உன்னத தேவனுக்கு தாம் ஆழமான நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருப்பதையும் அவர் எப்போதும் அடையாளங்கண்டு கொண்டிருந்தபோதிலும்; எல்லா ஞானத்திற்கும், கனத்திற்கும், மகிமைக்கும், வல்லமைக்கும் இருப்பிடமாக பிதா இருப்பதினால், அவருடைய பரிபூரண சித்தமே உன்னதமான பிரமாணமாகவும், பரிபூரண நீதிக்கும், சத்தியத்திற்கும், ஆழமான அன்பிற்கும், கிருபைக்கும், ஆழ்ந்த ஞானத்திற்குமான மிகுந்த பூரணமான வெளிப்படுத்துதல் என்றும் அவர் எப்போதும் அடையாளங்கண்டு கொண்டிருந்தபோதிலும்; பிதாவுக்கே எல்லா சூழ்நிலைகளிலும் எல்லா நேரங்களிலும் மிகுந்த அன்பான கீழ்ப்படிதலும், உண்மையும் உரித்தாகும் என்று அவர் எப்போதும் அடையாளங்கண்டு கொண்டிருந்தபோதிலும்; பிதாவின் சித்தத்தை அங்கீகரிப்பதிலும், அதைச் செய்வதிலும் எப்போதும் அகமகிழும் குமாரனாக அவர் இருந்தபோதிலும்; அவர் அழைக்கப்பட்டதான ஆசாரியத்துவப் பொறுப்புகளுக்கு அவசியமாய்க் காணப்படும் உறுதியான மற்றும் நிரூபிக்கப்பட்டக் குணங்களின் விஷயத்தில், அவர் இன்னும் பூரணரானவராக எண்ணப்படவில்லை. அனைவரும் தங்களுடைய நம்பிக்கைகளை எந்த உறுதியான அஸ்திபாரத்தின்மீது கட்ட வேண்டும் என்று அறிந்து கொள்ளும்படியாக, இந்த ஆசாரிய பொறுப்பின் விஷயத்தில், அவர் கடுமையானச் சோதனைகளினால் நிரூபிக்க வேண்டியது அவசியமாக இருந்தது. இந்த

நோக்கத்திற்காகவே அவருடைய உண்மையானது கெத்செமனேயில் கடுமையாய்ச் சோதனைக்குள்ளாக்கப்பட்டது. அநேகமாக இறுதிச் சோதனையை முகமுகமாகச் சந்திக்கும்வரையிலும் நம்முடைய ஆண்டவரும்கூட அவரது நீதியான குணத்தினுடைய பலத்தை உணராதிருந்திருக்கலாம். அங்கு அவர் உச்சக்கட்டமான அளவுக்குச் சோதிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டார் மற்றும் அந்தக் கடும்சோதனையின்கீழ் முழு அளவில் பூரணமாய் விளங்கின அவரது குணங்களானது, தெய்வீகக் கிருபையினால் மகிமையான பூரணமுள்ள அதன் முழுமையை அடைந்தது.

இப்படியாக பாடுபட்டதின் மூலம், சுயத்தை மிகவும் ஆழமாய் வெறுத்தவராக தேவனுடைய பூரண சித்தத்திற்குக் கீழ்ப்படிய கற்றுக்கொண்டார்; தேவனும் இப்படியாகக் காணப்படுவதற்கு அனுமதித்தார், ஏனெனில் இப்படி நிரூபிப்பது என்பது, அவர் அழைக்கப்பட்ட அந்த உன்னதமான நிலைக்குப் பாத்திரவானாக்கும் குணத்தினுடைய அந்தப் பூரண வளர்ச்சிக்கும், வெளிப்படுத்துதலுக்கும் தேவையாயிருந்து.

குணலட்சணத்தில் பூரணம் மற்றும் சரீரத்தில் பூரணம் ஆகிய இவ்விரண்டும் வேறுபட்ட காரியங்கள் என்பதை நாம் மனதில்கொள்ள வேண்டும். சரீரத்தில் பூரணம் என்பது தேவனுடைய வேலையாகும்; ஆனால் குணலட்சணத்தில் பூரணமாகுதல் என்பது, தெய்வீக வழிநடத்தல் மற்றும் மேற்பார்வையின் கீழ், தெய்வீகப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதலின் மூலமான, அறிவுள்ள சிருஷ்டிகளின் வேலையாக இருக்கிறது. ஆதாம் பூரணமான மனுஷனாகவும், குற்றம் இல்லாதவரும் அடிமைப்படாதவரும், அவருடைய ஆதி அழகில் மகிமையுள்ளவராக இருந்தார்; ஆனால் அவருடைய குணங்களை வளர்ச்சியடையப்பண்ணும் விஷயத்தில், அவர் வெகு சீக்கிரத்தில் தவறிவிட்டார்; ஆகவே பரிபூரண நிலையை இழந்தார். சோதனையின்றி குணங்கள் முற்றிலும் வளர்ச்சியடைய முடியாது. இது ஒரு செடியைப்போல: முதலில் மென்மையாக இருக்கும்; இதற்குத் தேவனுடைய அன்பின் பிரகாசம் அதிகமாய்த் தேவைப்படுகிறது; அவருடைய கிருபையாகிய தண்ணீரை அடிக்கடி இதற்குப் பொழிய வேண்டியதாய் இருக்கிறது; விசுவாசத்திற்கும், கீழ்ப்படிதலைத் தூண்டுவதற்கும், அவருடைய குணங்களைப் பற்றின அறிவை அஸ்திபாரமாகக்கொண்டு இது வளர்க்கப்படவேண்டும்; இப்படிப்பட்ட சாதகமான சூழ்நிலைகளின் கீழ் வளர்க்கப்பட்ட பின் இது பயிற்சிக்கொடுக்கும் கிள்ளிவிடுதலின் கரங்களுக்கு ஆயத்தமாகுகின்றது மற்றும் சில கடினமானவைகளைச் சகிப்பதற்கும் ஆற்றல் பெறுகிறது. மேலும் கொஞ்சம் கொஞ்சமாக குணங்களின் வலிமை வளர்ச்சியடையும்போது, அதற்குக் கொடுக்கப்படும் சோதனையானது, குணலட்சணத்தை அதிக வலிமையும், அழகும் மற்றும் கிருபையும் அடையச்செய்கின்றது; இறுதியில் குணலட்சணம் – உபத்திரவத்தின் வாயிலாக – உறுதியடைகின்றது, ஸ்திரப் படுகின்றது, பூரணப்படுகின்றது.

நம்முடைய ஆண்டவருடைய குணத்தின் விஷயத்தில், அதாவது அதன் ஆரம்பப் பருவத்தில் பூரணமாக காணப்பட்ட விலையேறப்பெற்ற இந்தக் குணமானது, இறுதியில் அது முழுமை அடைந்ததில் பூரணப்படுத்தப்பட்டு, உறுதிபடுத்தப்பட்டு, நிலை

நிறுத்தப்பட்டதற்கு முன்பு வரையிலும்கூட, அதற்கு வைக்கப்பட்டதான சகலவிதமானச் சோதனைகளின் வழியாக அதன் பூரண நிலையைத் தக்கவைத்துக்கொண்டது. இது நம்முடைய பாடத்தின் இறுதி தலைப்புக்கு வழி நடத்துகிறது; அதாவது -

## யாருக்குக் கிறிஸ்து நித்திய இரட்சிப்புக்குரிய காரணராக இருக்கின்றார்?

"தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்."

"தாம் பூரணரான பின்பு" என்ற இந்தத் துவக்க வார்த்தைகளில் நம்முடைய சிந்தையை அதிகமாகச் செலுத்த வேண்டும். அதுவும் முன்னதாக காண்பிக்கப்பட்டபடி, உபத்திரவம் எனும் வலியுடன்கூடிய பயிற்சியின் வழியாக அவர் பூரணரானார். இப்படியாகப் பூரணப்பட்ட அவர், தேவனுக்கும், மனுஷனுக்கும் மத்தியஸ்தராகவும், பிரதான ஆசாரியராகவும் பொறுப்பை ஏற்பதற்குப் பொருத்தமானவர் ஆனார். அவருக்குக் கீழ்ப்படியும் யாவரின் சார்பாகவும் அவர் அந்த ஆசாரியப் பொறுப்பை நிறைவேற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆண்டவருடைய நியாயமான வழியை நேசிக்காத கீழ்ப்படியாதோர், அதில் நடப்பதற்கான எந்த விருப்பமும் இல்லாததினால், ஆண்டவரின் - மத்தியஸ்தரின் வேலையினாலான எந்தப் பலனையும் அடையமாட்டார்கள். ஆனால் அவருக்குக் கீழ்ப்படியக்கூடியவர்களுக்கு, "அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு (ஆறுதல் அளித்திட, விடுவித்திட) உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்."

ஆகவே உபத்திரவங்கள் வழியாக அவர் முதலில் பூரணராக்கப்பட்டார். சுவிசேஷயுகத்திலுள்ள அனைத்து அன்பான சீஷர்களும் எப்படிப்பட்ட பாடுகள், அவமானங்கள், துக்கங்கள், நிந்தனைகளுக்குள் கடந்துபோக வேண்டும் என்பதைப் பரலோக தந்தை அறிந்திருக்கின்றார். இந்த வனாந்தரத்திலிருந்து வாக்குத்தத்தம் செய்யப்பட்ட அந்தத் தேசத்திற்குப் பயணம் செய்வதற்குள், சபைக்கு எதிராக விறகுகட்டைகள், சித்திரவதைக்குரிய கருவிகள் மற்றும் நாகரிகமான சித்திரவதை முறைகளைக்கொண்டும், மத தலைவர்களைக்கொண்டும் சாத்தான் போராடுவான் என்று எல்லாவற்றையும் நோக்கும் நம் தேவன் அறிவார். துன்மார்க்கனுடைய அக்கினியாஸ்திரங்கள் போன்ற கசப்பான வார்த்தைகள் அவர்களை காயப்படுத்தும் என்று அவர் முன்னறிந்திருந்தார் (சங்கீதம் 64:2-3). ஆகவே, "தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது" (எபிரெயர்2:10). "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான

ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" (எபிரெயர் 4:15-16). ஆ! எவ்வளவு கவனமாக நம்முடைய ஞானமுள்ள பரலோக பிதா தம்முடைய சகல ஜனங்களுக்கான நலன்களை முன்னதாகவே கவனத்தில் கொண்டிருந்திருக்கின்றார். அவரது குணலட்சணங்கள் மற்றும் கையாளுதல்களின் இந்தக் கணநேர கண்ணோட்டங்களின் ஊடாக, "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" - என்று சீஷர்களிடம் நம்முடைய ஆண்டவர் சொன்ன வார்த்தைகள் எவ்வளவு உண்மையாக உள்ளது என்பதை நாம் காணலாம்.

ஆனால் உபத்திரவங்களின் வழியாக ஆசாரியத்துவத்தின் பொறுப்புக்காகப் பூரணப்படுத்தும் செயல்முறை ஒருபக்கம் இருக்க, நம்முடைய ஆறுதல், திருப்தி மற்றும் தேறுதலுக்காக நம்முடைய பிரதான ஆசாரியன் பூரணப்படுத்தப்பட்டது பற்றிய உண்மையும் கவனிக்கப்பட வேண்டும். பாவத்தினால் சூழப்பட்டிருந்தபோதிலும், பாவஞ்செய்யத்தக்கதாக, அனைத்துக் கட்டங்களிலும் சோதிக்கப்பட்டிருந்தபோதிலும் இவர் ஒருவரே, "பாவமே அறியாதவரும், வாயில் வஞ்சனை காணப்படாதவருமாக" இருந்தவர். "அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாக" இருந்தபோதிலும், நம்முடைய துயரத்திற்கும், துக்கத்திற்கும் பழக்கப்பட்டவராய் இருந்தார். கசப்பான அனுபவங்கள் மூலம் அவர் நமக்குப் பின்வருமாறு பரிந்துபேசுபவராகத்தக்கதாக, நம்முடைய பிரதான ஆசாரியரெனப் பூரணப்படுத்தப்பட்டார் - அதாவது (1) நம்முடைய இரட்சிப்பைச் சட்டப்பூர்வமாக சாத்தியமாக்குவதற்குத் தேவன் அங்கீகரிக்கக் கூடிய பலியை அவர் செலுத்துவதின் மூலமும், (2) மகிமையான சபையாக, கறைதிறை அற்றவர்களாகக், குற்றமற்றவர்களாக தேவனுக்கு முன் நம்மை நிறுத்தும்வரையில், நம்மைச் சுத்திகரித்துத் துப்புரவாக்கித் தூய்மைப்படுத்துவதின் மூலமும் அவர் நமக்குப் பரிந்து பேசுபவராகத்தக்கதாக, நம்முடைய பிரதான ஆசாரியரெனப் பூரணப்படுத்தப்பட்டார்.

பரலோக பிதாவின் பூரணம் மற்றும் ஸ்தானம்/பொறுப்புகள் அனைத்தும், நம்முடைய ஆண்டவர் அவருடைய தந்தைக்குக் கீழ்ப்படிவதற்கானக் காரணமாக இருந்ததுபோலவே, நம்முடைய மாபெரும் பிரதான ஆசாரியனுக்குரிய தனிப்பட்ட மற்றும் பொறுப்பின் விஷயத்திலான முழுமையானப் பூரணமும், மற்றும் இந்தப் பொறுப்பில் தேவனால் அவர் அமர்த்தப்பட்டார் என்ற உண்மையும், சபையும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்ற காரியத்திற்கு பலமான ஊக்கமாகவும், பலமான கோரிக்கையாகவும் காணப்படுகிறது. தேவன் நமக்கு ஒரு கற்றுக்குட்டியானவரை

நியமிக்கவில்லை அல்லது சுயநலத்தினாலோ, இழிவான ஆதாயத்தினாலோ இயக்கப்படும் ஒருவரை நியமிக்கவில்லை; மாறாக ஞானமுள்ள மற்றும் நன்மையான ஒவ்வொரு கட்டளையைக் கொடுப்பவரும், அவரைப்போல நாமும் உறுதிபெற்று, பலப்படுத்தப்பட்டு, ஸ்திரப்படும் வரையில், அன்பினால் நமக்குக் கிருபையின்மேல் கிருபையளிக்கக்கூடிய மிகப்பெரிய பிரதான ஆசாரியரை தேவன் நமக்கு ஏற்படுத்தினார்.

இந்த மகிமைக்கு நம்மை நடத்தக்கூடிய இந்தப் பயிற்சியானது, நம்முடைய ஆண்டவர்தாமே அனுபவித்த, பயிற்றுவிக்கும் விதத்திலான பாடுகளின், அளவான பாடுகளாக இருப்பது அவசியமாயுள்ளது. சபை நீதியில் பூரணமடைவதற்கு மட்டுமே அழைக்கப்படாமல், இயேசுவின் சரீர அங்கத்தினர்களெனக் கிறிஸ்துவோடு ஆசாரிய பொறுப்புகளில் பங்கெடுப்பதற்காகவும் அழைக்கப்பட்டுள்ளார்கள் என்பதினால், அவர்களும் அவமானங்களிலும், பலியிலும், மரணபரியந்தமும் இயேசுவைப் பின்பற்ற வேண்டும். இப்பொழுது இந்த யுகத்தில், அவருக்குக் கீழ்ப்படிவதே மேற்கூறியவைகள் அனைத்தையும் குறிப்பதாய் இருக்கும்; ஏனெனில் நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. 1 தெசலோனிக்கேயர் 4:3.

இந்த மகாபெரிய பிரதான ஆசாரியரிடம் நம்மை முழுமையாக ஒப்புக் கொடுக்கையில், அவருடைய அன்பையும், அவருடைய குணம் மற்றும் நோக்கத்தின் பூரண வாய்மையையும், உன்னதமான அவருடைய ஞானமும் மற்றும் கிருபையும் முழுமையாகப் பெறக்கூடிய உறுதியைச் சபை பெறுகிறது மற்றும் சகல காரியங்களிலும் நற்குணம், அன்பு மற்றும் பரந்தமனப்பான்மையின் மேன்மையான மற்றும் பரிசுத்தமான கோட்பாடுகளினால் அவர் இயக்கப்படுகின்றார் என்ற உறுதியைச் சபை பெறுகிறது. அவர் மூர்க்கமானச் சோதனைகளினால் தாக்கப்பட்டபோதிலும், அவர் பூரணத்தினின்று கொஞ்சமும் விலகிடவில்லை. அவருடைய குணத்தின் ஒவ்வொரு காட்சியும் மற்றும் சாட்சியும் முழுமையான நம்பிக்கையை நமக்குள் தூண்டுகின்றபடியால், அவருக்குக் கீழ்ப்படிவது என்பது ஒவ்வொரு அடியெடுத்து வைத்தலிலும், பூரணத்திற்கு நேரான நம்முடைய முன்னேறுதலைக் குறிக்கின்றதாய் இருக்கும். இப்படிப் பின்பற்றக்கூடிய ஒவ்வொருவருக்கும் அவர் "நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராயிருக்கின்றார்". பாவம் இல்லாதவரும், எந்தக் குறைப்பாடுகள் இல்லாதவரும், பலவீனங்களை உணரக்கூடியவரும், தம்முடைய பூரணத்தில் மகிமையானவரும், தாம் பெற்ற பொறுப்புகளில் மகிமையானவராகவும் இருக்கக்கூடிய இப்படிப்பட்ட பிரதான ஆசாரியருக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துவோமாக. ஒருவேளை அவர் அபூரணமான மனுஷராக, சில மேன்மையான தகுதிகளை மட்டுமே

கொண்டவராக, நம்மைப்போல தவறுகள் செய்வதற்கு உட்பட்டவராக, கணிப்பில் குறைவுள்ளவராக, சுயநலத்தோடு அல்லது கீழ்த்தரமான செயல்முறை கொள்கைகளோடு செயல்படுபவராக அல்லது அவருடைய கண்களிலிருக்கும் உத்திரத்தை உணராமல் மற்றவரின் கண்களிலிருக்கும் துரும்பை அகற்றும் முயற்சிகளை ஏறெடுக்கக்கூடியவராக இருந்தால், அவர் காட்டும் வழியில் நம்மை நாம் ஒப்படைப்பதற்கு நிச்சயமாகப் பயப்பட்டிருந்திருப்போம் மற்றும் இப்படிப்பட்ட பிரதான ஆசாரியரை சர்வ வல்லமையுள்ள தேவன் ஏன் கொடுத்தார் என்றும் ஆச்சரியபட்டிருந் திருப்போம்! ஆனால் நம்முடைய பிரதான ஆசாரியர் அப்படிப்பட்டவரல்ல. அவருடைய பூரணத்தைக்குறித்து யேகோவா தேவன்தாமே சாட்சிகொடுத்திருக்கிறார் மற்றும் நமக்கான அவருடைய மாபெரும் அன்பானது, ஆயிரக்கணக்கான வழிகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது; அதில் பிரதானமாக அவர் தம்மையே நமக்காகக் கொடுத்ததிலாகும்.

அவர் மாம்சத்தில் வருவதற்கு முன், எப்பொழுதும் நீதியின் பிரமாணமாகவே காணப்பட்ட – தேவனுடைய சித்தம் செய்வதில் நம் ஆண்டவர் கொண்டிருந்த உண்மைக்கு ஆதாரமானது, சிருஷ்டிப்பின் வேலைகளிலும் மற்றும் அதைச் சார்ந்த வேலைகளிலும் தேவனோடு இணைந்து செயல்படும் ஒவ்வொரு பணியிலும் மனமகிழ்ச்சியோடு அவர் கிரியைச் செய்தார் என்பதில் விளங்குகின்றது. மனித நிலைக்கு தம்மைத் தாழ்த்துவது, இப்படிப்பட்ட உன்னதமான பணியிலிருந்து கீழே இறங்குவதாகும்; ஆயினும் இதை மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் செய்தார். அதற்குப் பின் பூமிக்குரிய அவருடைய சோதனைகள் வந்தது. இறுதியாக கெத்செமனே மற்றும் கல்வாரியின் கடுமையான சோதனைகள் வந்தது. இங்கு தேவனிடத்திலான அவரது உண்மைக்கான ஒரு சோதனை, அதாவது அவருக்கு உண்டான யாவையும் தியாகம்பண்ணி உண்மையை நிரூபிப்பதற்கான ஒரு சோதனை வந்தது. இதைக் கடந்த பிற்பாடு, ஞானமுள்ளவரும், அன்புள்ளவரும், வல்லமையுள்ளருமான தேவனிடம் ஆண்டவர் தம்முடைய ஆவியை ஒப்புக்கொடுத்து, தேவனுடைய அன்பு மற்றும் இரக்கத்தினால் தாம் இரட்சிக்கப்படுவதற்கு எதிர்பார்த்தவரானார் (லூக்கா 23:46). இது உண்மையில் ஒரு கடுஞ்சோதனையாக இருந்தபோதிலும், அந்த நேரத்தில் இந்தச் சோதனையின் ஒவ்வொரு அம்சத்தினுடைய தேவையைக் குறித்து அவரால் காண முடியாதபோதிலும், (மத்தேயு 28:39, 42, 44) தம்முடைய நேசகுமாரனைத் துன்பப்படுத்தும் தேவையற்ற வலியை அனுமதியாதளவுக்குத் தேவனுடைய அன்பு மிகவும் பெரிது என்பதை அவர் அறிந்திருந்தார் மற்றும் இதனால் தேவனுடைய வழிகளை அவ்வேளையில் அவரால் புரிய முடியாதபோதிலும், இயேசு தேவன்மேல் முழு நம்பிக்கைக்கொண்டார்.

# கெத்செமனே - விழிப்பும், ஜெபமும்

## மத்தேயு 26:36-46.

### *"என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது."லூக்கா 22:42*

"அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்" எனும் வார்த்தைகளை வாசிக்கையில், கர்த்தர் இயேசுதான், பரம பிதா என்று கிறிஸ்தவ ஜனங்கள் மத்தியில் நிலவிக்கொண்டுவரும் கருத்தில் தவறு இருக்கின்றது என்பதை யாரும் உணராமல் இருக்க முடியாது (எபிரெயர் 5:7); இன்னுமாக இயேசுதான் பிதா என்றால், பிதாவுக்கு நேராக அவருடைய ஜெபம் நடிப்பாக இருந்திருக்கும்; மாறாக இயேசு தம்மைக்குறித்துக் கூறியிருந்தது போன்று அவர் பிதாவாய் இராமல், தேவனால் அனுப்பப்பட்ட குமாரனாக, தேவனுடைய ஒரே பேறானவராக, சிருஷ்டிகள் அனைத்திற்கும் முதற்பேறானவராக, தேவனுடைய சிருஷ்டிகளுக்கு ஆதியானவராக இருந்தார் (யோவான் 10:29; 1:14; கொலோசெயர்1:15; வெளிப்படுத்தல் 3:14). இதைத் தவிர நம்முடைய கர்த்தருடைய, அப்போஸ்தலர்களுடைய பேச்சிற்கும், அவருடைய போக்கிற்கும் வேறே நியாயமான அர்த்தங்கள் இல்லை.இது குறித்த சத்தியத்தை உண்மையாய்த் தேடுகிறவர்களுக்கு 5-ஆம் தொகுதியைப் பரிந்துரைக்கின்றோம்.

நமது கர்த்தரும், அவருடைய சீஷர்களும், அவருடைய மரணத்திற்கான நினைவுகூருதலை நிறுவிவிட்டு, மேல் வீட்டறையை விட்டுப் புறப்பட்டுப் போனார்கள். இவர்கள் கெத்செமனே என்று அழைக்கப்படும் தோட்டம் இருந்த ஒலிவ மலைக்குப் போனார்கள். கெத்செமனே எனும் பெயருக்கான அர்த்தம், எண்ணெய் செக்கு ஆகும்; இங்கு ஒலிவ பழங்கள் அரைக்கப்பட்டு, வெளிச்சத்திற்காகவும், உணவிற்காகவும் பயன்படும் எண்ணெய் எடுக்கப்படுவதினால் இப்பெயர் இருப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. சுவிசேஷகர்களில் ஒருவர், அதைக் கெத்செமனே தோட்டம் என்று குறிப்பிடுகின்றார்; இங்கு இடம்பெறும் தோட்டம் (garden) எனும் வார்த்தையானது, பழங்காலங்களில் பழத்தோட்டம் (orchard) எனும் வார்த்தைக்கான அர்த்தத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது; அது பூந்தோட்டம் அல்ல. அது ஒலிவ மலையின் அருகில் சுமார் 150 அடிகள் உள்ள சிறிய வேலியிட்டு அடைக்கப்பட்டிருந்த இடமாகக் காணப்பட்டது. மேலும் இங்குதான் நமது கர்த்தருடைய வியாகுலம் கலந்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது என்ற பிரபலமும் காணப்படுகின்றது. இங்கு மிகவும் பலவருடமுள்ள மற்றும் மிகவும் முடிச்சுகள் உள்ள எட்டு ஒலிவ மரங்கள் காணப்படுகின்றது; இதுதான் அதே துல்லியமான இடமாக இருப்பினும் (அ) இல்லாவிட்டாலும், இதுவே குறிப்பிடப்பட்டிருக்கும் அம்சங்களுக்குப் போதுமான அளவுக்கு இசைவாய் இருக்கின்றது.

நமது கர்த்தர் இவ்விடத்திற்குப் போவதற்கு அநேகமாக இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது காரணம் என்னவெனில்: துரோகியான யூதாசும், அவனால்

கூட்டிக்கொண்டுவரப்படும் கூட்டத்தாராலும், தாம் கைது செய்யப்படுவார் என்பதை உணர்த்த நமது கர்த்தர், மிகவும் அன்பாக மாடி அறையைப் பயன்படுத்தும்படிக்கு அனுமதித்த நண்பனுக்குப் பிரச்சனையைக் கொண்டுவர அநேகமாக விரும்பவில்லை என்பதாகும். இரண்டாவது காரணம் என்னவெனில், அவர் நடு இராத்திரியின் அமைதியான வேளையை விரும்பி, மலைப்பகுதிக்குச் சென்று, தேவனுடன் தனிமையில் இருக்க விரும்பினார் மற்றும் தம்முடைய ஆத்துமாவை ஜெபத்தில் ஊற்றி, நடக்கவிருக்கும் சம்பவங்களுக்குப் போதுமான பலத்தைப் பெற்றுக்கொள்ள அவர் விரும்பினார் என்பதாகும். இந்த இரண்டாம் கருத்துக்கு இசைவாகவே, நமது கர்த்தர் தோட்டத்தின் வாசலை அடைந்தவுடன், சீஷர்களில் எட்டுப்பேரைக் காவல் காக்கும்படிக்கு வெளியே நிறுத்திவிட்டு, மற்றத் தருணங்களில் கர்த்தரால் விசேஷமாய்க் கனப்படுத்தப்பட்ட அதே மூன்று சீஷர்களை, அதாவது பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் தம்மோடுகூடக் கூட்டிக்கொண்டு உள்ளே சென்றார். தைரியமுள்ள பேதுரு, உணர்ச்சிமிக்க யாக்கோபும், யோவானுமாகிய இடிமுழக்க மக்கள் அவருடன் கூட்டிக்கொண்டு செல்லப்பட்டனர்; இந்த மூவரும் அவருடைய சீஷர்களிலேயே மிகுந்த தைரியமுள்ளவர்களும், மிகுந்த வைராக்கியமுள்ளவர்களும், மிகுந்த உண்மையுள்ளவர்களுமாய்க் காணப்பட்டனர். இவர்களைக் கர்த்தர் இந்தக் கவலைக்கிடமான வேளையில் தம் அருகாமையில் காணப்பட வேண்டும் என்று விரும்பினார். எனினும் இந்தத் தருணத்திலும்கூட, கர்த்தர் தம்முடைய ஜெபத்தில் இன்னும் தனித்துக் காணப்பட விரும்பினார்; காரணம் இந்த அவருடைய உண்மையான நண்பர்களுங்கூடச் சூழ்நிலையை உணர்ந்துகொள்ள முடியாமல் காணப்படுவார்கள்; "ஜனங்களில் ஒருவனாகிலும் அவருடன்கூட இருக்கவில்லை." ஆகவே இந்த மூவரையும் விட்டு, கல்லெறியும் தூரத்திற்கு அப்பால் போய், பதிவுகளின்படி முகம் குப்புற விழுந்து பிதாவுடன் சம்பாஷித்தார்.

இத்தருணத்திலுள்ள நமது கர்த்தருடைய அனுபவங்களைப்பற்றின பல்வேறு பதிவுகளை வைத்து, எல்லாவற்றையும் தொகுத்துப்பார்க்கும்பொழுது, அவர் ஒருபோதும் அனுபவித்திராத மன வேதனையானது, மிகுந்த வேதனையுடன் அவர்மேல் கடந்துவந்திருந்ததை நம்மால் பார்க்க முடிகின்றது. மேலும் அவர்மேல் வந்த பாரத்தின் சுமை அதிகரித்துக்கொண்டே இருந்தது; அதாவது, "மரணத்துக்கு ஏதுவான துக்கமாய் இருந்தது," அதாவது அவருடைய ஜீவியத்தையே நசுக்கிப்போடும் அளவுக்கு உள்ள துக்கமாய் இருந்தது என மத்தேயுவின் பதிவின்படி பார்க்கின்றோம். மாற்கு 14:33-ஆம் வசனத்தின்படி ஏதோ எதிர்ப்பாராத விதத்தில் அவர்மேல் துக்கம் வந்ததுபோலவும், ஏதோ அவர் திகைத்துவிட்டது போலவும், "அவர் திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும்" செய்தார் என்று பார்க்கின்றோம். வைத்தியனாகிய லூக்கா அவர்களின்படி, அவர், "மிகவும் வியாகுலப்பட்டார்" (லூக்கா 22:44) என்று பார்க்கின்றோம்; இங்கு இடம்பெறும் வியாகுலத்திற்கான (agony) கிரேக்க வார்த்தையின் பொருளானது, ஆற்றலிலும், வீரியத்திலும் பெருகிக்கொண்டிருக்கும் ஒரு போராட்டம் என்பதாக இருக்கின்றது; ஆகவே, "அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது"* என்று பார்க்கின்றோம்; இந்த இரத்த வியர்வை என்பது, இன்றைய வைத்தியர்களினால் மிகவும் அபூர்வமான

ஒன்றாகக் கருதப்பட்டாலும், இரத்த வியர்வை என்பது அவர்களால் அறியப்பட்டுள்ள ஒன்றாகத்தான் இருக்கின்றது. இரத்த வியர்வை என்பது, மரணத்துக்கு ஏதுவான துக்கமாகிய உச்சக்கட்ட நெருக்கடியையே சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. [*Vatican மூலப்பிரதிகளில் நமது கர்த்தருயை இரத்த வியர்வைக்குறித்த பதிவு இடம்பெறவில்லை என்றும், Sinaitic மூலப்பிரதிகளில் இது இடம்பெற்றாலும், இது பின்னாளில் வல்லுனர் ஒருவரால் அகற்றப்பட்டுள்ளது என்றும் பேராசிரியர் டிஸ்கென்டார்ப் அவர்கள் தெரிவிக்கின்றார். ஆகையால் இவ்வசனப்பகுதியானது சந்தேகத்திற்குரியதாக (அ) கேள்விக்கு இடம் கொடுப்பதாகக் காணப்படுகின்றது.]

நமது மீட்பருடைய இந்தத் துயரம், கண்ணீர்கள், ஜெபங்கள் என்பது அவருடைய பெலவீனத்தை உறுதிப்படுத்துகின்றது என நாத்திகர்கள் கருத்துத் தெரிவிக்கின் றார்கள். இவர்கள் விவாதிப்பது என்னவெனில், பல்வேறு மதங்களைச் சார்ந்த பலர் இரத்தச் சாட்சி மரணத்தைத் தைரியத்துடனும், விருப்பு, வெறுப்பு அற்று, உறுதியுடனும், சிலசமயம் புன்னகையுடனும் சந்தித்திருக்க, இவர்கள் எல்லாரையும் காட்டிலும் உயர்வாய் இருப்பதற்குப்பதிலாக, இயேசுவின் இந்நடக்கைகள் மூலம் அவர் கோழையானவராகவும், கீழானவராகவும் காணப்படுகின்றார் என்பதேயாகும். ஆனால் இவர்கள் கிரகித்துக்கொள்ளாத ஒரு தத்துவம், இச்சம்பவத்துடன் தொடர்புடையதாய்க் காணப்படுகின்றது. விழுந்துபோன, சீர்க்கெட்டுப்போன, கீழான மனுக்குலத்திற்கு உணர்ச்சியற்ற நிலைமை காணப்படுவதினால் இவர்கள் வலியையும், மரணத்தையும் அலட்சியமாகவே கருதுகின்றனர்; இதினிமித்தம் இவர்கள் பெரிதும் துன்பம் அடையாமலேயே மரணத்திற்குள் தாங்களும் கடந்து செல்கின்றனர் அல்லது இரக்கம் இல்லாமல், கருணையின்றி மற்றவர்களுக்கு மரணத்தைத் தண்டனையாகவும் வழங்குகின்றனர். இப்படிப்பட்ட கடினமானவர்கள், விருப்பு வெறுப்பு இல்லாத கல் மனதையுடையவர்கள் போல் இயேசு இல்லை என்பதினாலும், அவர் மென்மையான, அன்பான, பரிவான உணர்வுகளையும், உணரும் திறன்களையும் கொண்டிருந்தார் என்பதினாலும், மற்ற/வேறெந்த மனுஷனைக்காட்டிலும் மிகவும் பரிவுடனும், மிகவும் மென்மையாகவும், மிகவும் தூய்மையுடனும், மிகவும் கூர்மையான உணர்வுடனும் இயேசுவினால் அனுதாபம்/இரக்கம்கொள்ள முடியும் என்பதினாலும், நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். நம்பொருட்டு, தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கும் விஷயத்தில் அவர் தம்மைத்தாம் எந்த ஒரு நிலைக்குள்ளாக வைத்திருந்தார் என்பதை அவர் நன்கு உணர்ந்திருக்க வேண்டும்; ஏனெனில் ஒரு சிருஷ்டி பூரணமாய் இருந்ததாயின், அதன் உணர்வுகள் மிகுந்த உணர்வுத்திறன் கொண்டதாயும், உயர் ஆற்றல் மிக்கதாயும் காணப்படும்; சந்தோஷத்தையும் அதிகமாய் உணர்ந்துகொள்ளும், துக்கத்தையும் அதிகமாய் உணர்ந்துகொள்ளும் திறன் கொண்டிருக்கும். நமது கர்த்தர் முழுமையாய்ப் பூரணமானவராக இருந்தபடியினால், மற்றவர்களைக்காட்டிலும், கர்த்தரே வலியின் தாக்கத்திற்கு அதிகமாய் உள்ளாகுகின்றவராய் இருப்பார்.

இதுவுமல்லாமல், அவரிடம் பரிபூரணமானதும், எவ்விதமான தண்டனை யினாலும் இழக்கப்பெறாததுமான ஜீவன் இருந்தது மற்றும் அதனைவிட்டு தாம் பிரியப்போகின்றார் என்பதை அறிந்தும், உணர்ந்தும் இருந்தார்; மனித குடும்பத்திலுள்ள மற்றவர்களோ ஜீவன் பறிமுதல் பண்ணப்பட்ட நிலைமையில் அல்லது

ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்பட்ட நிலைமையில் வாழ்கின்றவர்களாய்க் காணப்படுகின்றபடியால், ஏதோ ஒருவிதத்தில் ஜீவனை விட்டுப்பிரிய வேண்டும் என்பதை உணர்ந்தவர்களாக இருந்தனர். ஆகவே, கர்த்தருடைய பின்னடியார்களில் எவரேனும் தங்களுடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பதைக்காட்டிலும், நமது கர்த்தர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பது என்பது முற்றிலும் வேறுபட்டக் காரியமாக இருக்கும். பரிபூரண ஜீவன் என்பது, நூறு பாகங்களை உடையது என்று வைத்துக்கொள்ளுங்கள், நமது கர்த்தர் நூறு பாகங்களையும் ஒப்புக்கொடுக்க வேண்டியவராக இருக்கின்றார்; ஆனால் மீறுதல்கள், பாவங்கள் மற்றும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதின் காரணமாக 99 பாகங்களிலும் மரித்துப் போய்விட்ட நமக்கு, மரணத்தில் ஒப்புக்கொடுப்பதற்கு ஒரே ஒரு பாகமே இருக்கும். மரணம் சில நிமிடங்களில் நடக்கக்கூடிய ஒன்று என்ற அறிவின் காரணமாக, ஜீவனை இழப்பதை நாம் அலட்சியமாகக் கருதுவது என்பது, அவர் ஜீவனை இழப்பதைக் கருதுவதிலிருந்து, முற்றிலும் வேறுபட்ட காரியமாகும்; அதாவது,"உலகம் தோன்றுவதற்கு முன்னதாக" பிதாவுடன் கூடக் காணப்பட்ட அனுபவத்தின் அடிப்படையிலும், தாம் இப்பொழுது ஒப்புக்கொடுக்கப்போகும் ஜீவனானது பாவத்தின் காரணமாகப் பறிமுதல் செய்யப்படாமல், மாறாக தாம் விரும்பி பலி செலுத்துவதினாலேயே என்ற அவருடைய உணர்ந்துகொள்ளுதலின் அடிப்படையிலும், நமது கர்த்தர் கொண்டிருந்த தெளிவான அறிவில், அவர் ஜீவனை இழப்பதைக் கருதுவதிலிருந்து, முற்றிலும் வேறுபட்ட காரியமாகும்.

ஜீவனை இழப்பது என்பது, நமது கர்த்தருடைய துக்கத்திற்கான முக்கிய காரணி என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை. இதை அப்போஸ்தலர் எபிரெயர் 5:7-ஆம் வசனத்தின் வார்த்தைகளில் தெளிவாகத் தெரிவிக்கின்றார். "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்." பிதாவின் சித்தத்தைச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அவருக்கு ஒவ்வொரு நாளும் சுயத்தைப் பலி செலுத்தும் விஷயத்தில் கடந்து சென்றது . . . இன்னும் ஒருசில மணி நேரங்களில் அனைத்தும் முடிந்துவிடும்; இந்த ஒரு எண்ணமானது, வேறொரு எண்ணத்தையும் கூடக் கூட்டிக்கொண்டு வந்தது, . . . தாம் பிதாவின் சித்தத்தைப் பூரணமாய்ச் செய்துள்ளாரா? மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல் என்று தமக்கு வாக்களிக்கப்பட்ட பலனை/பரிசைத் தம்மால் உரிமைக்கோர முடியுமா? தம்மால் பெற்றுக்கொள்ள முடியுமா? என்பதேயாகும்.

பூரணத்தின் அளவுகோலுக்கு ஏற்ப வரும் விஷயத்தில், அவர் ஏதேனும் தவறிப்போனால், அவருடைய மரணம் என்பது, முற்றிலுமான அழிவாக இருக்கும்; மனுஷர்கள் அனைவரும் தாங்கள் அழிந்துபோவதைக் குறித்துத் திகிலடைந்தாலும், எவராலும் அழிவின் அர்த்தத்தினுடைய முழு ஆழத்தையும், அழுத்தத்தையும் அவரைப்போல் அதாவது, பரிபூரணமான ஜீவனை உடையவராக மாத்திரமல்லாமல், பிதாவுடன் தமக்கிருந்த முந்தின மகிமைப்பற்றின நினைவுகளைப் பெற்றிருந்த அவரைப்போல் அறிந்துகொள்ள முடியாது.

அவரைப் பொறுத்தமட்டில், அழிவைப் பற்றின சிந்தனையே, அவருக்குத்

துக்கத்தையும், ஆத்துமாவில் அச்சத்தையும் கொண்டுவந்தது. இதே சிந்தனையானது முன்பு அவருக்கு இப்படியாக அழுத்தத்தைக் கொடுக்கவில்லை. இதுவே இப்பொழுது அவரை மரணத்துக்கு ஏதுவான அதிர்ச்சிக்கலந்த துக்கம் கொள்ளுமளவுக்கு அவர்மேல் பாரமாய் அழுத்தினது. தாம் தீமை செய்தவராக, நியாயப்பிரமாணத்தின்படி பாடுபடப்போவதைக் கர்த்தர் உணர்ந்தார்; தம்மைக் குற்றஞ்சாட்டுவதற்கு அநேகர் தீர்மானத்தில் இருக்க, பரலோக நீதிபதியும் தம்மைக் குற்றவாளி இல்லையென்று தீர்ப்பாரா? தாம் முற்றிலும் குற்றமற்றவராக இருக்கின்றாரா? என்ற கேள்வி அவருக்குள் இயல்பாகவே எழும்பினது.

கொஞ்சம் நேரம் ஜெபம் பண்ணின பிற்பாடு, அவர் தம்முடைய மூன்று சீஷர்களிடத்தில் வந்தார். மற்றவர்களைக் காட்டிலும், இம்மூவரிடமே அவருடைய மாபெரும் நம்பிக்கை காணப்பட்டது; இவர்கள் அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானக் கூட்டாளிகளாக இருந்தனர்; ஆனால் இவர்களை நித்திரைப் பண்ணுகிறவர்களாக இயேசு கண்டார். துயரத்தின் காரணமாகவே இவர்கள் தூங்கிப்போய்விட்டனர் என லூக்கா அவர்கள் விவரிக்கின்றார். அந்த இரவும், அதன் பாடங்களும் மனதில் ஆழமாய்ப் பதிந்ததாய் இருந்தது; அவர்களால் முழுமையாகப் புரிந்துகொள்ளப்படாத நினைவுகூருதலின் போஜன காரியங்களானது, ஆண்டவருடைய மரணத்தைக்குறிக்கின்றது என ஆண்டவர் தெரிவித்ததினாலும், இன்னுமாய் அவர்களில் ஒருவன் ஆண்டவரைக் காட்டிக்கொடுப்பான் என்றும் அவர் கூறினபடியினாலும், அவர்கள் மீது மிகுந்த துக்கமான பாரத்தை கொண்டுவந்ததாய் இருந்தது. துக்கத்தின் காரணமாக, மந்த தன்மையுடன் கூடிய தூக்கம் அவர்களுக்கு ஏற்பட்டது. "நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்று அவர்களை மென்மையாய் நமது கர்த்தர் கடிந்து கொண்டார். "எனக்காக மாத்திரம் நீங்கள் விழித்திராமல், உங்களுக்காகவும் நீங்கள் விழித்திருக்க வேண்டும். நம் அனைவர் மீதும் கடுமையான சோதனை காலம் வரவிருக்கின்றது; இந்தப் பொல்லாத காலக்கட்டத்தில் விழுந்துபோகாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்ற விதத்தில் கர்த்தர் கூறினார்.

பின்னர், மீண்டும் கர்த்தர் ஜெபம் பண்ணும்படிக்குக் கடந்துபோனார். மூன்று முறையும், அவர் ஒரே வார்த்தைகளைக் கூறி – ஒரே உணர்வுகளை வெளிப்படுத்தி ஜெபம் பண்ணினதாக நமக்குக் கூறப்பட்டுள்ளது; அதாவது அவருடைய இருதயத்தை அழுத்திக்கொண்டிருந்த காரியத்திற்காக ஜெபம் பண்ணினார். பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கு நாடி, இப்பொழுது தமது ஓட்டத்தை முடிக்கப்போகின்ற அவர், தாம் அங்கீகரிக்கத்தக்க விதத்தில் செய்துள்ளார் என்று நம்பிக்கைக்கொள்ளலாமா? மரணத்திலிருந்து, உயிர்த்தெழுதல் மூலமாய்த் தம்மைத் தேவன் இரட்சிப்பார் என விசுவாசத்தின் முழு நிச்சயத்தை தம்மால் பெற்றுக்கொள்ளக்கூடுமோ? கர்த்தருடைய விண்ணப்பத்திற்குப் பதிலளிக்கும் வண்ணமாக, அவரை ஆறுதல் படுத்தும்படிக்கும், அவருக்கு நிச்சயம் கொடுக்கும்படிக்கும், அவரைப் பலப்படுத்தும்படிக்கும், தேவதூதன் அனுப்பி வைக்கப்பட்டார். என்ன செய்தி தேவதூதன் கொண்டுவந்தார் என்பது பற்றி நமக்குக் கூறப்படவில்லை, எனினும் அது சமாதானம் கொடுக்கும் செய்தியாகவும்,

கர்த்தருடைய நடத்தைப் பிதா அங்கீகரிக்கத்தக்கதாய் இருந்தது என்பதற்கும், அவர் மரணத்திலிருந்து, உயிர்த்தெழுதல் மூலம் மீண்டும் ஜீவனுள்ளவராய் கொண்டுவரப்படுவார் என்பதற்கும் உறுதியளிக்கும் செய்தியாகவும் இருந்திருக்கும் என நாம் எண்ணுகின்றோம். இவை நமது கர்த்தருக்கு முன்பாக இருக்கும் சோதனைக்கு அவசியமான பலத்தையும், தைரியத்தையும் அவருக்கு அளிப்பதற்குப் போதுமானதாய் இருந்தது; மேலும் அதுமுதல் அனைவர் மத்தியிலும் கர்த்தர் அமைதியுடன் காணப்பட்டார். யூதாசும், அவனோடு வந்த சேனைகளும், கர்த்தரிடம் வந்தபோது, எல்லோர் மத்தியிலும் கர்த்தரே மிகவும் அமைதலுடன், சாந்தத்துடன் காணப்பட்டார்; பிரதான ஆசாரியனாகிய காய்பாவிற்கு முன்பாக இயேசு காணப்பட்ட போதும், இப்படியாகவே காணப்பட்டார்; பிலாத்துவுக்கு முன்னதாகவும் இப்படியே காணப்பட்டார்; சிலுவையில் அறையப்பட்டபோதும் இப்படியாகவே காணப்பட்டார்; தாம் பிதாவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளார் என்பது பற்றியும், மகிமை, கனம் மற்றும் அழியாமை குறித்த கிருபையான வாக்குத்தத்தங்கள் அனைத்தும் தமக்கு உரியது என்பது பற்றியும் உள்ள செய்தியில், கர்த்தர் சமாதானம் அடைந்தார்; இப்பொழுது அவரால் எந்தச் சோதனைக்குள்ளாகவும் கடந்து செல்ல முடிந்தது.

(அவருடைய சகோதரர்களாகிய) நம்மைப்போன்று அவர் எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டதாக வேதவாக்கியங்கள் நமக்கு நிச்சயம் கொடுக்கின்றது; கெத்செமனேயில் உள்ள இந்த அவருடைய அனுபவத்தில், கர்த்தருடைய ஜனங்களுக்கு வரப்போகின்ற மிகக் கடுமையான சோதனைகளில் ஒன்று சித்தரிக்கப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். பலியின் "இடுக்கமான வழியில்" உள்ள சோதனைகளும், சிரமங்களும், அனைத்தும் எவ்விதத்திலும் பலனளிக்காது என்று நம்மை எண்ண வைத்து, நாம் முயற்சியைக் கைவிட்டுவிடத்தக்கதாக நம்மைச் சோர்வுபடுத்தும்படிக்கு, சிலசமயங்களில் எதிராளியானவன் முயல்வான். இப்படிப்பட்ட எண்ணங்கள், தாங்கள் அர்ப்பணிப்பின்போது செலுத்தின வாக்குறுதிகளை நிறைவேற்றத்தக்கதாக நேர்மையுடனும், உண்மையுடனும் நாடுபவர்களுக்கு வருகையில், இது அவர்கள் மேற்கொள்ள வேண்டிய கடுமையான சோதனைகளில் ஒன்றாய் இருக்கும்; பரம காரியங்களுக்காக இந்த உலகத்தையும், அதன் ஆசைகளையும், எதிர்பார்ப்புகளையும், இலட்சியங்களையும், விருப்பங்களையும் கைவிட்டுவிட்டவர்களுக்கு, ஏதேனும் விஷயம் அவர்களுடைய பரம நம்பிக்கைகளை மூடிப்போட்டுவிடும் பட்சத்தில், இவர்கள் ஒருவேளை மகிமையான வாக்குத்தத்தங் களைக் காணாமல், ஏற்றுக்கொள்ளாமலிருந்தால், காணப்படும் இருளைக்காட்டிலும், அடர்த்தியான இருள் சூழ்நிலைமையில் இவர்கள் காணப்படுவார்கள். இப்படியான தருணங்களில் இவர்கள் என்ன செய்ய வேண்டும்? நாம் கர்த்தருடைய மாதிரியைப் பின்பற்றி, அனைத்தும் சரியாக இருக்கின்றதா இல்லையா என்பதை அறிந்து கொள்ளும்படிக்கு, பிதாவின் முகத்தை நாட வேண்டும். உலகமானது நம்மை வெறுத்து, நமக்கு எதிராய்ப் பொய்யாய் அநேக தீமைகளைப் பேசும்போது, அவருடைய அங்கீகரிப்பு இன்னமும் இருக்கின்றது என்பதற்கான ஏதேனும் உறுதிபாடுகளை அடைவதற்கு ஆவலாய் நாம் காணப்பட வேண்டும்; அனைத்தும் சரியாக நடக்கும் என்றும், ஜீவனுக்கான மேலான உயிர்த்தெழுதலில் ஒரு பங்கை கர்த்தர் நமக்குக்

கொடுப்பார் என்றும் ஏதேனும் புதிய உறுதிபாடுகள் கிடைக்க ஆவலாய் நாம் காணப்பட வேண்டும்.

நமது கர்த்தருடைய அனுபவங்களுக்கும், நம்முடைய அனுபவங்களுக்கும் நாம் இவ்விதமாய்த் தொடர்புபடுத்திப் பார்த்திட்டாலும், மிகப் பெரிய வித்தியாசம் நமக்கும், கர்த்தருக்கும் இடையே காணப்படுகின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது; நாம் மரித்துக்கொண்டிருப்பவர்கள் என்றும், நம்மில் 99 பாகங்கள் ஏற்கெனவே மரித்துவிட்டது என்றும், இதனால் மரணத்தின் (அ) நித்திய ஜீவனுக்கான அர்த்தத்தை முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடியாது என்றும் நாம் மறந்துவிடக்கூடாது; இவைகள் எல்லாவற்றையும் விட நமக்கு நமது கர்த்தருடைய மாதிரி காணப்படுகின்றது மற்றும் இன்னுமாக நம்முடைய சரீரங்களிலும், ஆவிகளிலும் அவரை மகிமைப்படுத்துவதற்கான நம்முடைய பிரயாசங்கள் எவ்வளவு பூரணமற்ற பலனைக் கொடுத்திட்டாலும், இருதயத்தில், நோக்கத்தில், சித்தத்தில் நமது உண்மையைக் கர்த்தருக்கு நாம் நிரூபிக்கும் பட்சத்தில், நம்முடைய சொந்த பரிபூரணத்தினால் அல்லாமல், அவருடைய பரிபூரணத்தினால் முதலாம் உயிர்த்தெழுதலில் நாம் பங்கடைவோம் என்ற நிச்சயமும் நமக்கு இருக்கின்றது.

"பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால், நீங்கட்டும்" என்று நமது கர்த்தர் ஜெபம் பண்ணினதாக சுவிசேஷகர்கள் பதிவு செய்துள்ளனர். ஒருவேளை அவர் ஜெபம் பண்ணினதானது, "ஒருவேளை என்னுடைய மரணம் அவசியப்படாமலேயே மனுக்குலத்திற்கான உம்முடைய இரட்சிப்பின் திட்டத்தை ஏதேனும் விதத்தில் நிறைவேற்றிட முடியும் என்று உம்முடைய அளவில்லாத அன்பும், இரக்கமும் ஒருவேளை காணும் பட்சத்தில் பிதாவே, அப்படியாகவே நடப்பதாக" என்று அர்த்தப்படுமாயின் - இயேசு, ஆதாம் மற்றும் அவருடைய பாவங்களுக்குச் சரிநிகர் சமானபலி செலுத்தப்படுவதன் மூலம் மனுக்குலத்தைச் சீர்ப்பொருத்தும் பிதாவின் திட்டத்தை முழுமையாய்க் கிரகித்துக்கொள்ளவில்லை என்பதாகிவிடும்; ஏனெனில் ஈடுபலி தேவை என்பதைக் கர்த்தர் ஒருவேளை அறிந்திருந்தாரானால், ஈடுபலியைக் காட்டிலும் குறைவான வேறு எதுவாலும் பலன்களைக்கொடுக்க முடியும் என நம்முடைய கர்த்தர் எண்ண வாய்ப்பில்லை. ஆகவே, அவரைப் பாரமாய் அழுத்திக்கொண்டிருந்தது என்னவெனில், ஒருவேளை அவர் தேவதூஷணம் புரிந்தவராகக் கைது செய்யப்பட்டால், அவரை அவருடைய சத்துருக்கள் இரகசியமாய் அழித்துப்போடுவதற்குத் திட்டம் பண்ணாமல், அவரை உரோமர்களிடம் கையளிப்பார்கள் என்பதாகும்; இப்படியாக அவருடைய சத்துருக்கள் அவர்களுடைய ஆசைகளை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு வல்லமையையும், செல்வாக்கையும் செலுத்திடுவார்கள் என்பதையும் கர்த்தர் உணர்ந்திருந்தார் மற்றும் சிலுவையில் அறையும் முறையே உரோமர்கள் மரணத் தண்டனையை அளிக்கும் முறை என்றும் கர்த்தர் அறிந்திருந்தார்; மற்றும், "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்" என்று வேதவாக்கியங்கள் கூறுவதையும் கர்த்தர் அறிந்திருந்தார் (கலாத்தியர் 3:13).

"நான் தேவனால் கைவிடப்பட்டவராகவும், தேவனால் சபிக்கப்பட்டவராகவும், என்னுடைய தேசத்தின் ஜனங்களினால் கருதப்படப் போகிறேன். என்னுடைய எல்லா உணர்வுகளும், இப்பொழுதும், எப்பொழுதும் பிதாவுக்கு உண்மையாகவே இருக்க, நான்

தேவதூஷணம் புரிந்தவராகக், குற்றவாளியாக மரிக்கவிருக்கிறேன்” என்பதே கர்த்தருடைய எண்ணங்களின் மையமாக இருந்தது. இது நமது கர்த்தருடைய கவலையின் விசேஷித்த அம்சமாகும்; இதுவே துக்கத்தின் “பாத்திரமாய்” இருந்தது; இதைத்தான் நீங்கக்கூடுமானால் நீங்கட்டும் என்று விரும்பினார். தம்முடைய மரணம் அவசியமான ஒன்றும், தவிர்க்கப்பட முடியாத ஒன்று என்றும் கர்த்தர் அறிந்திருந்தார்; தம்முடைய மரணம் அவசியம் என்று பலமுறை தம்முடைய சீஷர்களுக்கு அறிவித்துமிருந்தார்; ஆனால் சிலுவை பரியந்தமான அவருடைய அவமானத்துடன் கூடிய மரணமே, அவரைத் தயங்க பண்ணினது; காரணம் இப்படியாக அவர் அவமான மரணம் மரிப்பது என்பது வெட்கமாகவும், ஜனங்களுக்கும், தாம் அன்புகூர்ந்தவர் களுக்கும், தாம் நன்மை செய்யும்படிக்கு நாடினவர்களுக்கும், தம்மைத் தவறாய்க் காட்டுவதோடு கூட, தாம் தேவனால் சபிக்கப்பட்டவர் என்ற எண்ணத்தைக் கொடுக்கின்றதாகவும் இருக்கும்; தேவனால் சபிக்கப்பட்டவர் என்றால், தமக்கு உயிர்த்தெழுதல் குறித்த மகிமையான வாக்குத்தத்தம் பற்றின காரியத்திற்கு எவ்விதமான நம்பிக்கையும் இல்லை என்பதாக இருக்கும். ஆனால் அவர் உண்மையில் தேவனால் குற்றம் சாட்டப்படுவதில்லை என்றும், கொஞ்சம் நேரம் சபிக்கப்பட்ட ஆதாமின் ஸ்தானத்தை எடுத்துக்கொண்டு, ஆதாமின் சந்ததியாகிய நமக்கு, “அவர் சாபமாக்கப்படுவார்” என்றும் தேவதூதனினால் நிச்சயமளிக்கப்பட்டபோது, அவரால் சிலுவையையும், அதன் அவமானங்களையும் பொறுமையாய்ச் சகிக்க முடிந்தது.

## நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு, விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்

நம்முடைய கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய விஷயத்தில், சோதனையின் இருளான வேளையில் விழித்திருந்து, ஜெபம் பண்ணுவதற்குரிய முக்கியத்துவம் சித்தரிக்கப்பட்டுள்ளதை நாம் பார்த்தோம். நமது கர்த்தர் சீஷர்களுக்குச் சொன்னவைகளை தாமும் கைக்கொண்டார்; அவர் விழித்திருந்து ஜெபம் பண்ணினார், ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டார், அவர் பெலப்படுத்தப்பட்டார் மற்றும் ஜெயங்கொண்டவராக வந்தார். அப்போஸ்தலர்கள் விழித்திருக்கவில்லை, அவர்கள் ஜெபம் பண்ணவில்லை, சூழ்நிலைக்கான அவசியங்களை உணர்ந்துகொள்ளத் தவறிவிட்டார்கள், இவைகள் காரணமாக அவர்கள் சிதறடிக்கப்பட்டுப் போனதையும், தடுமாறி/திகைத்துப் போனதையும், நாம் பார்க்கின்றோம்; இவர்களில் ஒருவர், இவர்கள் அனைவரிலும் மிகவும் பலமானவர், “அனைவரும் உம்மை கைவிட்டுப்போனாலும் நான் உம்மை விட்டுப்போவதில்லை” என்று சற்று முன்பு தற்பெருமையடித்துக் கொண்டவர், தன்னுடைய சூழ்நிலைகளினால் மிகவும் மேற்கொள்ளப்பட்டுவிட்டார்; ஜெபத்தினாலும், விழித்திருப்பதினாலும் அடையப்பெற்றிருக்கும் பலம், பேதுருவுக்கு இல்லாமல் இருந்தபடியினால், அவர் கர்த்தரை நிந்தித்து மறுதலித்துவிடும் அளவுக்கு மிகவும் பெலவீனமாய்க் காணப்பட்டார்.

எப்போதெல்லாம் பரிசுத்தமுள்ள மற்றும் அர்ப்பணிப்புள்ள ஜீவியத்தை ஜீவிக்க

முற்பட்டு, ஆனால் விழித்திருந்து, ஜெபம் பண்ணும்படியான கர்த்தருடைய கட்டளையைக் கர்த்தருடைய ஜனங்கள் புறக்கணிப்பதை நாம் காண்கையில், இவர்கள் ஞானமற்று நடக்கின்றார்கள் என்பதை நாம் அறிவோம்; மேலும், இவர்கள் எவ்வளவுதான் கன்னிகைகளாகவும், தூய்மையானவர்களாகவும் இருப்பினும், இவர்கள் புத்தியில்லாதவர்கள் ஆவார்கள்; தன்னந்தனியாக இவர்களால் சுயத்தையும், பாவத்தையும், எதிராளியானவனையும் ஜெயங்கொண்டுவிட முடியாது. ஆண்டவருக்கே பலப்படுத்தப்படுதல் அவசியப்படுமாயின், நிச்சயமாய் அது நமக்கும் அவசியம்; அவர் பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் தம்முடைய வேண்டுகோளுக்கான பதிலைப் பெற்றுக்கொண்டாரானால், இது தேவனுடைய நாமத்திற்காகவும், அவருடைய ஊழியத்திற்காகவும் எதையும், மற்றும் எல்லாவற்றையும் நாம் நல்ல போர்ச்சேவகர்களாக சகிக்கத்தக்கதாக நம்மைப் பெலப்படுத்தக்கூடிய விசுவாசத்தின் பூரண நிச்சயத்தை அளிப்பதற்கு, பிதா பிரியப்படுகின்ற வழியை/வழிமுறையை நமக்குச் சுட்டிக்காட்டு கின்றதாய் இருக்கின்றது. கர்த்தரை உண்மையோடு, ஜெபத்தில் நாடுபவர்கள், நிச்சயமாய்க் கர்த்தர் இயேசு பெற்றுக்கொண்டதுபோல, ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள்; ஆறுதல் படுத்துவதற்கும், உற்சாகப்படுத்துவதற்கும் என்று அன்று அனுப்பப்பட்ட அதேவிதமான பரலோகத்தின் தூதுவர் அனுப்பி வைக்கப்பட மாட்டார் எனினும், வேறுவிதமான பரலோகத்தின் தூதுவர் நமக்காக நிச்சயமாய் அனுப்பிவைக்கப்படுவார். அத்தூதுவர்/அது நம்முடைய சோதனைகளை, நமக்கான பிரச்சனைகள் என்று கண்டு, நம்மீது அனுதாபங்கொள்ளும், சக சகோதரர்களாக இருக்கலாம்; இல்லையேல் அது ஒருவேளை அப்போஸ்தலர்கள் ஏவப்பட்டு கொடுத்த கிருபையான வார்த்தைகளின் மூலம் தேவன் நம்மிடம் பேசுகின்றவராய் இருக்கலாம். நமது கர்த்தரின் விஷயத்தில், அப்போஸ்தலர்கள் அவருக்காக அனுதாபங்கொள்ளாமல் (அ) அவருக்கு உதவிடாமல் இருந்துவிட்டனர். எப்படியிருப்பினும், பெலமானது கடந்துவரும்; அது மனுஷர் (அ) தேவதூதரின் வாக்காக இல்லாமல், மாறாக நாம் அவருக்குப் பிரியமாயும், அவரால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகவும் இருக்கின்றோம் என்றும், தேவனை அன்புகூருகிறவர்களுக்கென்று அவர் வைத்துள்ள மகா மேன்மையும், அருமையுமானவைகளை நாம் உரிமைகோரலாம் மற்றும் எதிர்பார்க்கலாம் என்றுமுள்ள தேவனுடைய வாக்காகவே இருக்கும்.

சொல்லப்போனால், உலகம் அனைத்தையும் சோதிக்கத்தக்கதாக உலகத்தின் மீது வரப்போகின்ற சோதனை வேளையில்தான் நாம் இப்பொழுது காணப்படுகின் றோம். இது "சோதனை காலம்" அல்லது இந்த யுகத்தின் முடிவு பகுதியிலுள்ள சோதனைகள் என்று வேதவாக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. இது கர்த்தருடைய உண்மையான ஜனங்கள் அனைவருக்கும், அதாவது அவருக்குத் தங்களை முழுமையாய் அர்ப்பணித்துள்ளவர்கள் அனைவருக்கும் கெத்செமனே வேளையாய் இருக்கின்றது. இது நமது கர்த்தரைப் போன்று நாம் தேவனுடையவர்கள் என்றும், அவர் நம்முடையவர் என்றும், இவ்வேளையில் நம்மை அவரது பலமானது, சுமந்து செல்லும் என்று நம்பிக்கைக்கொள்ளலாம் என்றுமுள்ள முழு நிச்சயத்தைப் பெற்றுக்கொள் வதற்கு, பிதாவின் முகத்தை நாம் நாடுவதற்கான வேளையாகும். இது,

"பூமிக்குரிய எந்த மேகமும் எழும்பி,
உம்முடைய அடியானின் கண்களிலிருந்து
உம்மை மறைக்காமல் இருப்பதாக"

என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான வேளையாகும். இந்த ஒரு வேளையில், "சோதனைக்கு உட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்ற ஆண்டவருடைய வார்த்தைகளை அலட்சியப்படுத்துகின்றவர்கள் சோதனைக்குட்பட்டு, விழுந்துபோவார்கள். இந்த வீழ்ச்சி/விழுகை என்பது, கடுமையாய் இருக்கும்; என்னதான் அவர்கள் பேதுரு போன்று பிற்பாடு குணப்பட்டாலும், அது கண்ணீருடன்தான் குணப்படுகின்றதாய் இருக்கும்.

சிலர் விழித்திருக்காமல் ஜெபம் பண்ணும் தவறைச் செய்கின்றனர்; இன்னும் சிலர் ஜெபம் பண்ணாமல் விழித்திருக்கின்றார்கள்; ஆனால் கர்த்தர் சொல்லியுள்ளது போன்று, இரண்டையும் சேர்த்துச் செய்வதுதான் பாதுகாப்பான மற்றும் சரியான ஒரே வழிமுறையாக இருக்கும். நாம் விழித்திருக்க வேண்டும் மற்றும் உலகம், மாம்சம் மற்றும் பிசாசின் அத்துமீறுதலுக்கு எதிராக காவல் காக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகள் கொடுக்கும் உற்சாக மூட்டுதல் அனைத்தையும், அவருடைய பிரசன்னத்தை மற்றும் யுகத்தின் மாபெரும் மாறுதல்களைப் பற்றின அடையாளங்களையும், கர்த்தருடைய வார்த்தைகளின் நிறைவேறுதல்களுக்கான சாட்சியங்களையும் நாம் கவனிக்கின்றவர்களாய் இருக்க வேண்டும். விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், உண்மையிலும், அன்பிலும் நம்மைப் பலப்படுத்துகின்ற அனைத்திற்காகவும் நாம் கவனித்திருக்க வேண்டும்; மற்றும் இப்படியாக கவனித்திருக்கும் அதே வேளையில், நாம் இடைவிடாமல் ஜெபம் பண்ணவும் வேண்டும். நாம் கர்த்தருடைய ஜனங்களுடன் சேர்ந்து ஜெபம் பண்ண வேண்டும்; நாம் நம்முடைய இல்லங்களில், குடும்பத்தினராகச் சேர்ந்து ஜெபம் பண்ண வேண்டும்; நாம் தனிமையில் இரகசியமாக ஜெபம் பண்ண வேண்டும். நாம் பேசும் மற்றும் செய்யும் அனைத்திலும் நமக்கு ஜெப சிந்தை காணப்பட வேண்டும். அதாவது, பிதா அங்கீகரிக்கத்தக்கதான விதத்தில் நாம் நம்முடைய கையில் வருகின்ற காரியங்களை நம்மால் முடிந்தமட்டும் செய்வதற்கும், நம்முடைய திராணிக்கு மிஞ்சினதாய் இருக்கும் சோதனைகளிலிருந்து அவரால் நாம் பாதுகாக்கப்படுவதற்கும், இறுதியில் பொல்லாங்கனிடமிருந்து விடுவிக்கப்பட்டு நம்முடைய கர்த்தருடைய இராஜ்யத்தில் நாம் இடம்பெற்றுக் கொள்வதற்கும் என்றும், நம்முடைய ஜீவியத்தின் விஷயங்கள் அனைத்திலும் வழிநடத்தல் பெற்றுக்கொள்வதற்கென, நம்முடைய இருதயங்கள் தொடர்ந்து கர்த்தரிடத்தில் போய்க்கொண்டே இருக்க வேண்டும். அன்பான சகோதர சகோதரிகளே, ஒவ்வொரு இல்லங்களிலும் வாட்ச் டவர் வெளியீடு சுமந்துவரும் நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகளான: "சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்பதை நாம் அதிகமதிகமாக நினைவில் கொள்வோமாக மற்றும் செயல்படுத்திடுவோமாக!

## சிலுவையில், இன்னும் இடமுள்ளது

துயரப்படுகிறவனே, நீ யாராக இருப்பினும்,
சிலுவையில் இன்னும் இடமுள்ளது.
உந்தன் இருதயத்தின் பாரந்தனை கூறிடுவாயாக,
சிலுவையில் இன்னும் இடமுள்ளது.
உந்தன் இரட்சகரின் காதினில் கூறிடுவாயாக
உந்தன் பீதி அனைத்தையுமே இறக்கிடுவாயாக,
பேச மாத்திரம் செய்திடு; அவர் கேட்டிடுவார்,
சிலுவையில் இன்னும் இடமுள்ளது!

விரைந்திடு, சுற்றித்திரிந்திடாதே, தாமதித்திடாதே,
சிலுவையில் இன்னும் இடமுள்ளது.
அந்த அர்ப்பணிக்கப்பட்ட ஸ்தலத்தை நாடிடு,
சிலுவையில் இன்னும் இடமுள்ளது.
வெகுபாரம் சுமக்கிறவனே, தாங்கமுடியா துயருடையவனே,
உந்தன் கவலை நிறைந்த இருதயந்தனை அன்பு ஆற்றிடுமே,
இரட்சகரில் உந்தன் இளைப்பாறுதலைக் கண்டடைவாயே,
சிலுவையில் இன்னும் இடமுள்ளது!

அனைவருக்குமே பாக்கியமான சிந்தையாய் உள்ளதே
சிலுவையில் இன்னும் இடமுள்ளது என்பதே.
அன்பின் ஒப்புரவாகுதல் வேலை நடைப்பெற்றதே,
சிலுவையில் இன்னும் இடமுள்ளது!
சீறியே பாய்கின்றதே நதியென இரக்கமே
அங்குச் செல்பவர் அனைவருக்குமே;
ஓ! உலகமனைத்தும் அறிய வேண்டுமே
சிலுவையில் இன்னும் இடமுள்ளது என்பதையே!

-விடியல் துதிப்பாடல்கள் # 173

# பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும்

## மத்தேயு 26:36-50

### *“என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது.” லூக்கா 22:42*

கெத்செமனே தோட்டமானது காட்டு மரங்களையுடைய தோட்டமாகவோ அல்லது பொதுத் தோட்டமாகவோ இராமல் ஒலிவ மரத்தோட்டமாயிருந்தது. இத்தோட்டத்தின் பெயரை வைத்துப் பார்க்கும்போது, இத்தோட்டத்திற்குள் ஓர் இடத்தில் ஒலிவ பழங்களிலிருந்து எண்ணெய் எடுப்பதற்குரிய, எண்ணெய் செக்குக் காணப்பட்டதும் புரிகின்றது. இந்தத் தோட்டம் மாற்கினுடைய தாயாருக்குச் சொந்தமானது என்று அநுமானிக்கப்படுகின்றது. இந்தத் தாயார் ஆஸ்தியுள்ள விதவை என்றும், இயேசுவின் நோக்கங்களினிமித்தம் அவருக்கு நண்பராகவும் காணப்பட்டிருந்தாள் என்றும் கூறப்படுகின்றது. இவர்களுடைய வீடு, இந்தத் தோட்டத்திற்குள் ஓர் இடத்தில் காணப்பட்டிருக்க வேண்டும். இந்த இடம் இயேசுவினுடைய நண்பர்களுடைய கட்டுப்பாட்டிற்குள் காணப்படுகின்றது என்பதும், இயேசுவும் அவருடைய சீஷர்களும் அவ்விடத்திற்கு நன்கு அறிமுகமாக இருந்தார்கள் என்பதும் உறுதியே. நினைவுகூருதலின் போஜனம் புசித்த பிற்பாடு, நமது கர்த்தரும் அவருடைய சீஷர்களும் இத்தோட்டத்திற்கே வந்தார்கள். கெத்செமனே தோட்டம் என்று இப்பொழுது சுட்டிக்காட்டப்படுகின்றதான இடமானது, எருசலேம் மதிலினின்று அரை மைல் தொலைவில் காணப்படுகின்றது மற்றும் இதில் குறிப்பிடத்தக்கதான சில பழமைமிக்க ஒலிவ மரங்கள் காணப்படுகின்றன மற்றும் இத்தோட்டமானது அருகாமையில் வசிக்கும் சில துறவிகளின் பராமரிப்பின் கீழ்க் காணப்படுகின்றது.

நமது கர்த்தரும், அவருடைய பதினொரு சீஷர்களும் தோட்டத்தின் வாசலுக்கு முன்பு வந்தபோது, இயேசு அவர்களில் எட்டுப் பேரை வாசலிலே நின்று வெளியே காவல் காக்கும்படியாக நிறுத்தி, தமது அபிமான சீஷர்களாகிய பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானைத் தம்முடன் உள்ளே கூட்டிக்கொண்டு சென்றார். இந்த மூன்று பேரும் பல்வேறு தருணங்களில் இயேசுவின் விசேஷ தயவினை இப்படியாகப் பெற்றிருந் தார்கள். உதாரணத்திற்கு யவீருவின் மகளை உயிர்ப்பிக்கும்போது, இம்மூவரும் அவரோடுகூடக் காணப்பட்டார்கள். இன்னுமாக, இம்மூவருந்தான் மறுரூப மலையின் காட்சியைக் காணும் சிலாக்கியத்தையும் பெற்றிருந்தார்கள். இயேசு தம்முடைய அனைத்துச் சீஷர்களையும் அன்பு கூர்ந்தாலும், இவர்கள் மூவரிடமும் காணப்பட்ட விசேஷமான வைராக்கியம் மற்றும் தம் மீதான அன்பினிமித்தமே இம்மூவரும் அவருக்கு விசேஷமாக அருமையானவர்களாக, பிரியத்திற் குரியவர்களாகக் காணப்பட்டிருந்திருக்க வேண்டும். ஆனால் இப்பொழுதோ அவருக்கு விசேஷமாக அருமையாய் இருந்த இந்த மூன்று சீஷர்களாலும் கூட நமது கர்த்தருடைய இருதயத்தை அழுத்திக் கொண்டிருந்த பாரத்திற்காக அவருக்கு ஆறுதலளிக்கவோ, உணர்ந்துகொள்ளவோ முடியவில்லை. ஆகவே, கர்த்தர் அவர்களையும் தோட்டத்திற்குள் ஓர் இடத்தில் நிறுத்திவிட்டு, பிதாவிடம் ஜெபம் பண்ணும்படியாகக்

கொஞ்சம் தொலைவில் போய்விட்டார். இச்சம்பவம் தொடர்பான அனைத்துப் பதிவுகளையும் அப்படியே கிரேக்க பாஷையின் அர்த்தத்தின்படி தத்ரூபமாகப் பார்க்கும்போது, இக்கட்டத்தில் துன்பம் கலந்த தனிமையும், சகித்துக்கொள்ள முடியாத துயரமும், பலமாய்க் கர்த்தருக்கு ஏற்பட்டது என்பது நமக்குத் தெரிய வருகின்றது. சீஷர்களோடு அவர் காணப்பட்டது வரையிலும் அவர்களுடைய நலன் கருதி அவர் மகிழ்ச்சியாய் இருக்க முயற்சித்தார் என்பதிலும், சீஷர்கள் மேல் வரப்போகும் சோதனைகளுக்கு அவர்களை ஆயத்தம் பண்ணும்படிக்குத்தேவையான படிப்பினைகளைக் கொடுத்துக்கொண்டிருந்தார் என்பதிலும் ஐயமில்லை. ஆனால், இவைகளையெல்லாம் தம்முடைய முழுப்பலத்தோடு இப்பொழுது செய்துமுடித்த நிலையிலும், பிதாவினிடத்திற்குத் தனிமையாகச் சென்ற நிலையிலும், இப்பொழுது அவருடைய எண்ணங்கள் அவர் மீதும், அவர் பிதாவினிடத்தில் கொண்டிருந்த உறவின் மீதும், அவர் விசாரணை செய்யப்படப் போவதினிமித்தமும், கலகவாதி என்றும், தேவதூஷணம் சொன்னவர் என்றும், தம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டினிமித்தமும், விசாரணையின்போது அவருக்கு நேரிடப்போகும் அவமதிப்பு மற்றும் இகழ்ச்சியினிமித்தமும், இன்னுமாக தாம் இரண்டு கள்வர்கள் மத்தியில் பொது ஜனங்களின் கண்கள் காண கொல்லப்படுவதினிமித்தம் உண்டாகப்போகும் அவமானத்தின் மீதும் திசைத்திருப்பின. இந்த அனைத்து விஷயங்களும் இப்பொழுது அவருடைய மனதிற்கு முன்பு தெளிவாய் வந்து நிற்கும்போது, இவைகளே வியாகுலத்தையும், வலியையும், ஆழமானதும், கடுமையானதுமான வேதனையையும் அவருக்கு அளிப்பதற்குப் போதுமானதாகும்.

## துக்கம் நிறைந்தவரும், பாடநுபவித்தவருமாயிருந்தார்

இச்சம்பவத்தின்போது, நமது கர்த்தருக்கு ஏற்பட்ட பாடுகள் தொடர்பான விஷயங்களை நாம் பார்க்கும்போது, பாவத்தினால் கறைபடுத்தப்படாததும், மரித்துக்கொண்டிருக்கும் செயல்பாடுகளினால் சீரழிக்கப்படாததும், உணர்ச்சிகள் மந்தமாகிப் போகாததுமாகிய பூரணச் சரீரமும், உணர்வுகளும் உடையவராகிய நமது கர்த்தர், இப்படிப்பட்ட துயரங்களினாலும், வேதனைகளினாலும் காணப்பட நேரிடும் விழுந்துபோன மனித இனத்திலுள்ள ஒருவருக்கு ஏற்படும் பாதிப்பைக் காட்டிலும், அதிகமான பாதிப்பிற்குள்ளாவார் என்பதை நினைவில் வைக்க வேண்டும். மன உணர்வுகளும், பண்புகளும் நேர்த்தியாய் இருப்பதற்கு ஏற்ப, பாதகமான சூழ்நிலைகளின்கீழ் வேதனையும் அதிகமாய்க் காணப்படும். கலகத் தலைவனாக இருக்கும் முரடன் ஒருவன் சரக்கு வண்டியில் பயணம் செய்வதைக் கௌரவமாக எண்ணிக்கொள்வான். ஆனால், ஒரு நாகரிகமான மனிதனுக்கு அப்படியானதொரு வண்டியில் பிரயாணம் செய்வது என்பது, அவனுக்குப் பயங்கரமானதாய்த் தோன்றும். வேறொரு உதாரணத்தைக் கூட நாம் பார்க்கலாம்: நன்கு கற்றுத் தேர்ந்த இசை வித்வானுக்கே அதாவது, சுரங்களின் இசைக்கு நன்கு பழகிப்போன செவிகளையுடைய ஒருவருக்கே பாடலிலுள்ள தவறான இசையினிமித்தம் ரசனைக் குலைச்சலும் மற்றும்

அத்தவறான இசையினிமித்தம் மனச்சஞ்சலமும் ஏற்படுகின்றது. ஆனால், இசையில் குறைவான திறமை உடையவர்களுக்கு அப்பாடலில் தவறான இசை/சுரம் காணப்பட்டது என்பதுகூடத் தெரியாமல் இருக்கும். நமது கர்த்தருடைய தலைக்கு மேலாக எழுதிப்போடப்பட்டிருந்ததான "யூதருடைய இராஜா" என்ற விலாசமானது ஒருவேளை நமது கர்த்தருக்கு அருகாமையில் காணப்பட்டதான கள்வர்களில் ஒருவனுடைய தலைக்குமேல் போடப்பட்டிருந்ததானால், அவன் தனது மரணமானது ஒரு வெற்றியென மேன்மைப்பாராட்டியிருந்திருப்பான் என்பதில் ஐயமில்லை. பூரணத்தைக்குறித்துப் புரிந்துகொள்வது என்பது நமக்குச் சிரமமாகவே உள்ளது. ஏனெனில், நாமும் சரி, நம்முடன் தொடர்புகொண்டிருப்பவர்களில் எவரும் சரி, ஒருவரும் பூரணர்களாக இருந்ததில்லை. ஆகவே, இப்படிப்பட்ட உபத்திரவமான சூழ்நிலையின் கீழ் ஒருவேளை நமது கர்த்தருடைய சீஷர்கள் பாடுபட நேரிடுகையில், அவர்கள் படும் பாடுகளைக் காட்டிலும் அதிகமாகவே நமது கர்த்தர் பூரணமான சரீரமும், உணர்வும் கொண்டிருப்பதினால், பாடுபடுவார் என்ற உண்மையை நாம் மீண்டும் நினைப்பூட்டுகின்றோம்.

இத்தருணத்தில் நமது கர்த்தர் துயரப்படுவதற்கும், அவ்வியாகுலம் மிகவும் கடுமையான நிலைக்குச் சென்று அவருக்கு இரத்த வியர்வை உண்டாகுமளவிற்கு நமது கர்த்தர் பாரப்படுவதற்கும், வேறொரு காரணம் உள்ளது. உண்மையைச் சொல்லப்போனால், இதுவே பிரதானமான காரணமாகவும் உள்ளது. தேவனுக்கு முன்பாக தம்முடைய நிலைமையைக்குறித்தும், தாம் பலி செலுத்துவதற்கென, தாம் பண்ணியிருந்த உடன்படிக்கையின் நிலைமைக்குறித்தும் அவருக்குள் ஏற்பட்ட சிந்தனைகளே அந்தக் காரணமாகும். தேவனுடைய கிருபையினால் ஆதாமை மீட்பதற்கும், ஆதாமை மீட்பதன் மூலம் அவருக்குள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட ஆதாமின் சந்ததியை மீட்பதற்குமெனக் காணப்பட்ட பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படிக்கு, இயேசு பரலோக மகிமைகளைத் துறந்து, தேவதூதர்களுக்கும் குறைவான மனித சுபாவத்திற்கும், ரூபத்திற்கும் இறங்கிவந்தார். இப்படியாக, தம்மையே குறைவாக தாழ்த்தும் விஷயத்தில், இயேசு மகிழ்ச்சிக்கொண்ட காரியமானது,"என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" என்ற வார்த்தைகளில் வெளிப்படுகின்றது (சங்கீதம் 40:8). இந்த உணர்வுதான் இயேசுவை அவருடைய முப்பதாம் வயதின்போது, அவர் தம்மை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கும் முழுமையான அர்ப்பணிப்புக்குள் வழிநடத்திற்று. மேலும், இந்த உணர்வினால்தான் அவர் தம்மைப் பாவநிவாரண பலியாக நேர்த்தியாக ஒப்புக்கொடுக்க முடிந்தது. அதே அன்பும், வைராக்கியமும் அவருடைய ஊழிய நாட்கள் முழுவதிலும் அவரை உண்மையுடன் காணப்படுவதற்கும் உதவிற்று; இன்னுமாக அவருக்கு வாழ்க்கையில் வந்த சகல அனுபவங்களையும், பாவிகளால் வந்த பல்வேறு விபரீதங்களையும் அவர் இலேசான உபத்திரவங்கள் என்று கருதுவதற்கும் உதவிற்று; ஏனெனில் தாம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கின்றார் என்பதை அவர் உணர்ந்துகொண்டிருந்தார்.

பின்னர் ஏன் கெத்செமனே தோட்டத்தில் நமது கர்த்தர் இப்படியான

கடுந்துயரமடைந்தார்? அதாவது, அவருடைய ஊழியத்தின் முடிவின்போதும், அவருக்கு வரவிருக்கின்ற மரணம் குறித்து, அவர் தமது சீஷர்களிடம் கூறிவிட்டபோதும், தாம் "மூப்பராலும், பிரதான ஆசாரியராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு" (லூக்கா 9:22) சிலுவையில் அறையப்படுவார் என்பது குறித்து அவர் தமது சீஷர்களுக்கு விவரித்திருந்தபோதும், இவைகள் பற்றிய அனைத்தும் தெரிந்திருந்தபோதும், பிதாவினிடத்தில் அவருக்கு நம்பிக்கை காணப்பட்டிருந்தபோதும், அன்புடன்கூடிய கீழ்ப்படிதல் பிதாவினிடத்தில் அவருக்கு இருந்தபோதும், மரணம் வரையிலான அவருடைய அர்ப்பணிப்பிற்கு அவர் உண்மையாயிருந்தபோதும், ஏன் நமது கர்த்தர் கெத்செமனே தோட்டத்தில் இப்படியான கடுந்துயரத்தை அடைந்தார்? எதற்கு?

இயேசு, "தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணியுள்ளார்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகள் சூழ்நிலையை நமக்கு விவரிக்கின்றன (எபிரெயர் 5:7). ஆனால் அநேகர் மரித்திருக்கின்றார்களே, இதுபோலவும் மற்றும் இதைக்காட்டிலும் கொடூரமான விதத்திலான மரணங்களை அமைதலுடன் அநேகர் சந்தித்திருக்கின்றார்களே. ஏன் நமது கர்த்தர் இப்படியான கடுந்துயரத்தினால் மனமுடைந்தார்? இரத்த வியர்வை வருமளவுக்கு அவர் ஏன் அப்படிப் பலத்த சத்தம் எழுப்பி அழுதார்? நாம் மரணத்தைப் பார்க்கும் விதத்திலிருந்து, அவர் மரணத்தைப் பார்க்கும் விதம் முற்றிலும் மாறுபட்ட காரியமாகும் என்பதே நம்முடைய பதிலாகும். நம்மைப் பொறுத்தவரையில், நம்மில் ஒவ்வொருவருக்கும் பத்தில் ஒன்பது பாகம் மரித்துப் போய்விட்டது. மேலும், பூரணமற்ற தன்மையின் காரணமாகவும், விழுகையில் உள்ள நமக்கான பங்கின் காரணமாகவும் மனம், சரீரம் மற்றும் ஒழுக்க ரீதியிலான சகல உணர்வுகளும் நமக்கு மரத்துப்போய்விட்டன. ஆகவே ஜீவன் என்றால் என்ன என்பதை அதன் மேன்மையான,சிறந்த, உன்னதமான நிலையில் நம்மால் முழுமையாய் உணர்ந்துகொள்ள முடியாமல் போய்விட்டது. ஆனால், நம் கர்த்தரின் விஷயத்தில் இப்படியாக இல்லை. "அவருக்குள் ஜீவன் இருந்தது", அதாவது ஜீவன் பூரணமாய் இருந்தது. மூன்றரை வருடக் காலமாக அவர் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்துக் கொண்டிருந்ததும், சத்தியத்தைப் பிரசங்கிப்பதற்கு அந்த ஜீவனையே அவர் பயன்படுத்திக்கொண்டிருந்ததும் உண்மைதான். விசேஷமாக, திரளான வியாதியஸ்தர் களுடைய வியாதியைச் சொஸ்தப்படுத்தும் விஷயத்தில் அவரிடமிருந்து இந்த ஜீவனின் சத்துவமே/வல்லமையே புறப்பட்டுப்போய் வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கியது. இச்செயல்கள் அவருடைய சரீர பலத்தைப் பலவீனப்படுத்தி / குறைவுபடுத்திக் கொண்டிருந்தது உண்மையாக இருந்தபோதிலும், மனரீதியில் அவர் ஜீவனோடும், முழுச் சக்தியுடனும், பூரணத்துடனுமே ஓடிக்கொண்டிருந்தார் என்பதில் ஐயமில்லை. மரணம் தொடர்பான விஷயங்களில் நாம் இந்நாள் வரைக்கும் வாங்கிக்கொண்டிருக்கும் அனுபவங்கள் காரணமாகவும், மரணத்தை நாம் (வாழ்க்கையில்) எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிற காரணமாகவும், மரணம் இன்றோ அல்லது நாளையோ நிச்சயமாய் வரும் என்றே நம்முடைய எண்ணங்கள் காணப்படுகின்றன. ஆனால், ஜீவன் தொடர்பான விஷயத்தில் நம்முடைய கர்த்தருடைய அனுபவங்கள் முற்றிலும் வேறாக

இருந்தது. நமக்கு அறிவிக்கப்படாத பல நூற்றாண்டுகள் காலமாக, நமது கர்த்தர் பிதாவுடனும், பரிசுத்த தூதர்களுடனும் முடிவில்லா ஜீவனைப் பூரணமாக அனுபவித்திருக்கின்றார். மேலும், மரித்துக்கொண்டிருக்கும் மனுஷர்களுடன் அவர் வாழ்ந்த காலமும் கொஞ்சம் வருடங்கள்தான். ஆகவே மரித்துக்கொண்டேயிருக்கும் மனுக்குலம் மரணத்தைக் காணும் பார்வையிலிருந்து அவருடைய பார்வை மிகுந்த வித்தியாசமாய்க் காணப்பட்டது.

இதுமாத்திரமல்ல, இன்னும் சில காரியங்கள் அவர் அப்படித் துயரப்படுவதற்கு இருந்தன, அவை என்னவெனில்: புறஜாதியாரைப் பொறுத்தவரையில் அவர்களுடைய மூதாதையாருடைய பாரம்பரியமான கருத்துக்களின் அடிப்படையில் எதிர்க்கால வாழ்க்கைக்குறித்த நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. தேவனுடைய ஜனங்களைப் பொறுத்தவரையில், தெய்வீக வாக்குத்தத்தத்தின் காரணமாகவும், கிறிஸ்துவின் பலியினுடைய புண்ணியம் இந்த வாக்குத்தத்தங்களுக்கு நிச்சயம் அளித்ததின் காரணமாகவும், அவர்களுக்கு உயிர்த்தெழுதலின் நம்பிக்கை இருந்தது. ஆனால் இயேசுவுக்கு என்ன நம்பிக்கை இருந்தது? மரித்தவர்கள் உண்மையில் மரித்துப் போகவில்லை என்ற புறஜாதியாருடைய நம்பிக்கையை அவரால் நம்ப முடியாது. ஏனெனில் அது உண்மையல்ல என்பதை அவர் அறிவார். இன்னுமாக, வேறொருவருடைய பலியினால், மீட்படைந்து, உயிர்த்தெழும் நம்பிக்கையும் அவரால் வைக்கமுடியாது; ஆக, அவருக்கு இருந்த ஒரே நம்பிக்கை அவருடைய சொந்த ஓட்டமானது, அவரது அர்ப்பணிப்பின் நாள் துவங்கி முடிவுவரையிலும் முழுக்கப் பூரணமாகவும், நீதியின் பார்வையிலும், பரமபிதாவின் பார்வையிலும் எவ்விதமான குற்றமும் இல்லாததாகவும் இருப்பதிலேயே காணப்பட்டது. அவர் கெத்செமனே தோட்டத்தில் தனியாக நின்றுகொண்டிருந்தபோது, இந்தப் பயங்கரமான பயம் அவரை ஆட்கொண்டது: "நான் எல்லா சிந்தனைகளிலும், வார்த்தையிலும், கிரியையிலும் சரியாக/பூரணமாக இருந்துள்ளேனா? நான் பிதாவை முழுமையாகத் திருப்திபடுத்தியுள்ளேனா? என்னுடைய பூரணத்தன்மையின் காரணமாக என்னைக் கூனிக்குறுகிப்போகச் செய்யக்கூடிய நாளை எனக்கு வரப்போகின்றதான அவமானத்தையும், இகழ்ச்சியையும் என்னால் சகிக்கமுடியுமா? எனக்கு வரப்போகும் இந்த அவமானங்களை கூனிக்குறுகினதினிமித்தமாக (வெட்கத்தினிமித்தமாக) நான் பின்வாங்கிப்போகாமல் என்னால் அவைகளை எதிர்க்கொள்ள முடியுமா? இவைகள் அனைத்தினிமித்தம் நான் பிதாவினால் பாத்திரவானாகக் கருதப்பட்டு, மூன்றாம் நாளில் மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்படுவேனா? ஒருவேளை நான் தோல்வியடைந்துவிட்டேன் என்றால் அல்லது ஏதோ ஒரு சிறிய விஷயத்தில் நான் தவறிப்போய்விட்டால், நான் உயிர்த்தெழுவதற்கு அபாத்திரனாகக் கருதப்பட்டு மரணத்திலேயே விட்டுவிடப்படுகின்ற நிலைக்கு ஆளாகிவிடுவேனோ? என்ற பாரமான கேள்விகள் நமது அருமையான மீட்பருடைய இருதயத்தில் எவ்வளவு தாங்கமுடியாத துயரத்தை உண்டுபண்ணியிருக்கும் என்பதில் நமக்கு ஆச்சரியமில்லை. ஆகவே, தம்மை மரணத்தினின்று உயிர்த்தெழுதலின் மூலம் இரட்சிக்க வல்லவரை நோக்கி, இயேசு பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணினார்.

(மத்தேயு 26:39)"இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபம்பண்ணினதாக மத்தேயு கூறுகின்றார்.(மாற்கு 14:36) "அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபம்பண்ணினதாக மாற்கு கூறுகின்றார்.(லூக்கா 22:42)"பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபம்பண்ணினதாக லூக்கா பதிவு செய்கின்றார். இவைகளனைத்தும் தெரிவிப்பது என்னவெனில், நமது கர்த்தர் தம்மைக்குறித்து மிகவும் பயந்துபோய்விட்டார். அதாவது, தாம் இவ்வளவு தூரம் கீழ்ப்படிதலுடன் கையில் எடுத்துக்கொண்டதும், இவ்வளவு தூரம் உண்மையுடன் நிறைவேற்றிக்கொண்டு வந்திருந்ததுமான தேவனுடைய திட்டமானது, தம்முடைய ஏதாகிலும் ஒரு தவறான அடியெடுத்து வைத்தலின் காரணமாக இல்லாமலாக்கப்பட்டுப் போய்விடுமோ என்று அவர் மிகவும் பயந்து காணப்பட்டார். ஆதாமின் கீழ்ப்படியாமையினிமித்தம் அவருக்கு உண்டான மரணத் தண்டனைக்கு ஈடுபலி கொடுப்பதற்கென ஏதாகிலும் ஒருவிதமான மரணத்தை இயேசு சந்திப்பதே போதுமானதாகும். ஆனாலும் பிதாவோ, தம்முடைய குமாரனாகிய மீட்பரை உச்சக்கட்டமாய் இருக்கும் அனைத்துப் பரிட்சைக்குள் அனுமதிப்பதற்கும், அவர் மேல் சிலுவையின் அவமானத்தையும், இகழ்ச்சியையும் அனுமதிப்பதற்கும் சித்தம் கொண்டிருந்தார். நமது கர்த்தருடைய கேள்வி: என்னால் அதைச் சந்திக்க/எதிர்க்கொள்ள முடியுமா? அல்லது தெய்வீகத் திட்டத்தில் குறுக்கிடாமல் அல்லது இந்த மாபெரும் வேலை நிறைவேறுவதில் எவ்விதமான தடையும் ஏற்படாதவாறு, அவமானம் மற்றும் இகழ்ச்சியாகிய அம்சங்களைப் பிதாவினால் விலக்கிவிட முடியுமா? என்பதாகவே காணப்பட்டது. ஆயினும், "என்னுடைய சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்ற வார்த்தைகளானது அவசியமான கீழ்ப்படிதலைச் சுட்டிக்காட்டியது.

## அவர் பயமடைந்த விஷயம் தொடர்பான அவருடைய விண்ணப்பம் கேட்கப்பட்டது

நமது கர்த்தருடைய விண்ணப்பம் கேட்கப்பட்டது என்றும், அவர் பயமடைந்த விஷயம் தொடர்பாக அவருக்கு பதிலளிக்கப்பட்டது என்றும், அதாவது சிலுவை பற்றியும், மரணத்திலிருந்து உயிரடையும் காரியம் பற்றியும், அவரடைந்த பயத்திற்குப் பதிலளிக்கப்பட்டது என்றும் அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார். இப்படிப்பட்டதான உபத்திரவங்களில் விடுவிக்கப்படுவதற்காக அல்லது உதவி பெற்றுக்கொள்வதற்காக ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் இரண்டு விதங்களில் பதிலளிக்கப்படலாம். எப்படியெனில், ஒன்றில் பிதாவானவர் பிரச்சனைக்குரிய காரணத்தை மாற்றிப்போட்டுவிடுவார், இல்லையேல் அப்பிரச்சனையை எதிர்க்கொள்ளத்தக்கதாக நம்மைப் பிதாவானவர் பெலப்படுத்துகின்றவராய் இருப்பார். ஆனால் நம் விஷயத்திலும் சரி, போதகரின்

விஷயத்திலும் சரி, பிதாவானவர் எப்பொழுதும் இரண்டாம் முறையையே கையாளுகின்றவராகக் காணப்பட்டு, தமது வார்த்தையின் மூலம் உண்டாகும் நிச்சயத்தின் வாயிலாக நமக்குச் சமாதானத்தையும், பலத்தையும் அருளுகின்றவராய் இருக்கின்றார். ஆகவே, நமது போதகரிடம் தூதன் தோன்றி அவரைப் பலப்படுத்தினார் என்று நாம் வாசிக்கின்றோம். அருமையான மீட்பர் தனிமையிலும், தாங்க முடியாத துயரத்திலும் காணப்பட்ட அவ்வேளையில், அவருக்குத் தூதன் என்ன செய்தி கொண்டுவந்தார் என்பது நமக்குத் தெரியவில்லை. நாம் தெரிந்தேயாக வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் இல்லை. பிதா அவருடைய விண்ணப்பத்தைக் கேட்டார் என்றும், அவர் அச்சம் கொண்ட விஷயம் தொடர்பான விண்ணப்பம் கேட்கப்பட்டது என்றும், அவருடைய சகல பயமும் மாற்றிப்போடப்பட்டது என்றும், நமது அருமையான மீட்பருடைய மனதில் சமாதானம்/அமைதி ஆளத் தொடங்கினது என்றும், அதுமுதல் அந்த இரவிலும், அடுத்த நாளிலும் நடந்த அனைத்துச் சம்பவங்களிலும் அவர் அனைத்து மனுஷர்கள் மத்தியிலும் சாந்தத்துடனும், அமைதியுடனும் காணப்பட்டார் என்றும், நாம் அறிந்துகொள்வது நமக்குப் போதுமானதாகும். குமாரன் மேல் தெய்வீகத் தயவு உள்ளது என்பதையும், அத்தருணம் வரையிலும் குமாரன் உண்மையாகவே இருந்துள்ளார் என்பதையும், பிதாவின் ஆதரவு குமாரனுக்கு இன்னும் காணப்படுகின்றது என்பதையும், குமாரனுக்கான சோதனை வேளை வரும்போது, அவ்வேளைக்கான சகல நெருக்கடிகளையும் குமாரனால் முழுமையாகச் சந்திக்க முடியும் என்பதையும் குறித்ததான பிதாவின் வாக்குறுதிக் குறித்த விஷயங்களையே தூதன் குமாரனிடம் கூறியிருந்திருக்க வேண்டும் என்பதே நம்முடைய அனுமானமாகக் காணப்படுகின்றது. பிதாவின் அங்கீகாரம் தொடர்பான நிச்சயத்தைக் கர்த்தர் பெற்றுக்கொண்ட மாத்திரத்தில் அவருக்குள் இருந்த துக்கங்கள் திசை தெரியாமலேயே போயிருந்திருக்கும். இன்னுமாக, அவருடைய இருதயத்திற்குள் நம்பிக்கையும், சந்தோஷமும், அன்பும், சமாதானமும் பாய்ந்து வந்திருக்கும் என்பதிலும் ஐயமில்லை. பின்னர்த் தமக்கு இன்னும் சற்று நேரத்தில் சம்பவிக்க இருக்கும் நிகழ்வுகளை அறிந்தவராக, அவைகளை எதிர்க்கொள்ளும்படியாகச் சீஷர்களை விட்டுவந்த இடத்திற்கு நடந்து போனார்.

## நாமும் அச்சம் கொள்வோமாக

கர்த்தருடைய ஜனங்கள் சந்தோஷத்துடன் ஜீவிக்க முயற்சி பண்ண வேண்டும் என்பதும், சகல விஷயங்களுக்காக எப்போதும் பிதாவுக்கு நன்றிச் செலுத்துகிறவர் களாக இருப்பதற்கு நாட வேண்டும் என்பதும், கிறிஸ்துவினிமித்தம் பாடுகள், நிந்தனைகள் முதலியவைகளைத் தாங்கள் அனுபவிப்பதற்குப் பாத்திரவான்களாக எண்ணப்பட்டதினிமித்தமாக களிகூர வேண்டும் என்பதும் நல்ல காரியந்தான். ஆனாலும், அப்போஸ்தலர் நாம் அச்சத்துடன் களிகூர வேண்டும் என்று கூறுகின்றார். இன்னுமாக, நாம் நம்மையே வஞ்சிக்கும் விதத்திலும், சிக்க வைக்கும் விதத்திலும் நம்முடைய முடிவைக்குறித்துக் கவலையற்ற நிலையிலும், சுயதிருப்தியுள்ள நிலையிலும்

இருந்து களிகூருகின்றவர்களாகக் காணப்படக்கூடாது என்றும் கூறுகின்றார். இன்னுமாக, நம்மை அன்புகூர்ந்து நம்மை விலைக்கொடுத்து வாங்கினவரும், நம்மோடு என்றென்றும் கூடவே இருப்பவரும், நம்முடைய சிறந்த நண்பராகவும், உண்மையான வழிக்காட்டியாகவும் இருந்தவருமாய் காணப்படுகிறவரிடத்தில் நம்முடைய களிகூருதல் காணப்படுவதாக என்றும் கூறுகின்றார். இன்னுமாக, நமக்கு ஞானம் மற்றும் தைரியம் மற்றும் பலம் இருக்கின்றது என்பதான எண்ணங்களில் களிகூருகிறவர்களாய் இராமல், நமக்கு ஓர் இரட்சகர் இருக்கின்றார் என்பதிலும், அவர் மாபெரியவராக இருக்கின்றார் என்பதிலும், அவர் மூலம் பிதாவினிடத்திற்கு வந்தவர்கள் அனைவரையும் முடிவுபரியந்தம் இரட்சிக்க வல்லவராயிருக்கின்றார், என்பதுமான உண்மைகளில் களிகூருகின்றவர்களாய் இருக்கக்கடவோம். இவ்விதமாக, நமது கர்த்தர் நம்முடைய பெலனாகவும், நம்முடைய நம்பிக்கையாகவும், நமது கேடகமாகவும், நமது பரிசையாகவும் இருப்பார்.

நம்முடைய கர்த்தருடைய விஷயத்தில், "அவர் ஒருவராய் ஆலையை மிதித்தார், ஜனங்களில் ஒருவனும் அவரோடு இருந்ததில்லை" என்று நாம் வாசிக்கின்றோம் (ஏசாயா 63:3). அவருடைய கடுமையான வேளையின்போது அவருக்கு மிகுந்த ஆறுதலும், தேறுதலும் அவசியப்பட்டபோது, அவருடைய பூமிக்குரிய நண்பர்கள் மத்தியில் அவருக்கு நெருக்கமாயும், அன்பாயும் காணப்பட்டவர்களால் கூட அவருடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ளவும் முடியவில்லை, அவருக்கு ஆறுதல் அளிக்கவும் முடியவில்லை. ஆனால், நம்முடைய விஷயம் எவ்வளவு வித்தியாசமாய் உள்ளது! நம்முடைய சந்தோஷங்களிலும், துக்கங்களிலும் நம்முடைய நம்பிக்கை களிலும் அச்சங்களிலும் நம்மைப்போன்று ஒரே ஆவியினால் ஜெநிப்பிக்கப் பட்டவர்களும், ஒரே கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் போதிக்கப்படுகிறவர்களுமாகிய நம்முடைய சகோதர சகோதரிகளும், நம்மிடம் அனுதாபம் காட்டாமல் இருப்பதற்கு நாம் ஒன்றும் அவர்களிலிருந்து (இயேசு பரிபூரணமாய் இருந்ததினால், சீஷர்களிடமிருந்தும் அனைவரிடமிருந்தும் வித்தியாசமானவராய்க் காணப்பட்டதுபோன்று) வித்தியாசமானவர்கள் அல்ல. நம் விஷயத்தில் நமக்கு மனித ஆலோசனையும், ஆறுதலும் அளிக்கப்பட முடியும்; இது தகுந்ததும்கூட. நாம் ஒருவருக்கொருவர் ஆறுதல் கொடுக்க வேண்டும் என, ஒருவரையொருவர் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கங்களாகக் கட்டி எழுப்ப வேண்டும் எனக் கர்த்தர் விரும்புவதாகவும், இதுவே தெய்வீக ஏற்பாடு என்பதாகவும் வேதவாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றது. இப்படியாக ஏற்பாடு இருப்பினும் நாம் பரம கிருபையின் சிங்காசனத்தினிடத்திற்குப் பிதாவுடனும், மகிமையடைந்த கர்த்தருடனும் தனிப்பட்ட உரையாடல் வைத்துக் கொள்ளும் காரியத்தையும் நாம் ஒருபோதும் புறக்கணித்துவிடக்கூடாது. என்னதான் மனிதராகிய சகோதர சகோதரிகளின் தோழமை நமக்குக் காணப் பட்டாலும், கர்த்தருடைய தோழமையை நாம் ஒருபோதும் குறைவாக மதிப்பிடவோ அல்லது மறக்கவோ கூடாது. கர்த்தர் சில சமயங்களில் நம்மை ஆறுதல்படுத்து வதற்கும், அவருடைய அன்பு குறித்ததான நிச்சயத்தை நமக்கு அளிப்பதற்கும், நம்முடைய நம்பிக்கை மற்றும் எதிர்ப்பார்ப்புத் தொடர்பான நிச்சயத்தை நமக்குச் சுட்டிக்

காண்பிப்பதற்கும் வேண்டி நமக்கு அவருடைய தூதர்களை அனுப்புவார். கர்த்தருக்கு ஏற்கெனவே பூமியில் மனித தூதர்களாகிய கிறிஸ்துவின் சரீர அங்கங்கள், சத்திய தூது கொடுப்பவர்கள் இருக்கின்றபடியினால், பரலோகத்தின் தூதர்களைத் தூது கொடுக்கும்படிக்கு அனுப்புவதற்கு இனி அவருக்கு அவசியமிராது. இந்த மனித தூதர்களாகிய கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் போதகருடைய ஆவியினாலும், அன்பினாலும் நிரப்பப்பட்டவர்களாகக் காணப்பட்டு அன்பான வார்த்தைகளைப் பேசுவதற்கும், நொறுக்கப்பட்டுள்ள இருதயங்களைக் காயங்கட்டுவதற்கும், போதகரின் பிரதிநிதியாக ஆறுதல் மற்றும் மகிழ்ச்சியின் திராட்சரசம் மற்றும் எண்ணெயையும் ஊற்றுவதற்கும், எப்போதும் ஆயத்தமாய்க் காணப்படுவார்கள். இப்படிப்பட்டதான ஊழியங்கள் மூலமாக எவ்வளவு சந்தோஷம் கடந்துவருகின்றது. மேலும், இவ்விதமான ஊழியங்கள் காரணமாக எத்துணை ஆசீர்வாதங்களை நாம் பெற்றிருக்கின்றோம். மேலும், இவ்விதமாக உடன் சகோதர அங்கங்களுக்குச் சந்தோஷம், சமாதானம் மற்றும் ஆசீர்வாதம் அளிக்கக்கூடிய ஊழியர்களாக நாம் கர்த்தரால் பயன்படுத்தப்படும் தருணங்களானது, எத்துணை சிலாக்கியங்களாக இருக்கின்றன! இப்படிப்பட்டதான வாய்ப்புகளை நாம் தவறி விட்டுவிடாதபடிக்கு விழிப்பாய் இருப்போமாக.

ஆகவே,"அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" என்ற வார்த்தைகளைத் தெரிவிப்பதன் வாயிலாக இயேசு பயப்பட்ட விஷயத்திற்காக, நாமும் பயப்பட வேண்டும் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்( எபிரெயர் 4:1) . புதிய சிருஷ்டிகளாக நாம் புதிய ஜீவனை, பரலோக ஜீவனை ருசி பார்த்துவிட்டோம். இன்னுமாக, பிதாவை அன்புகூருகிறவர்களுக்காக அவர் வைத்துள்ள பரம காரியங்களினுடைய அழகையும், மகத்துவத்தையும் பார்க்கத்தக்கதாக ஓரளவுக்கு நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டுள்ளன. நாம் பண்ணியுள்ள பலியின் உடன்படிக்கைக்கு நாம் உண்மையாய் இருப்பதின் அடிப்படையிலேயே நம்மால் மகிமையையும், கனத்தையும், அழியாமையையும், கர்த்தரோடு உடன்சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது. நாம் ஒருவேளை உண்மையாய்க் காணப்பட்டுவிட்டோமெனில், நமக்கு வாக்களித்தவர், பலனளிப்பதில் உண்மையுள்ளவர் என்பதை நாம் அறிவோம். ஒருவேளை நாம் உண்மையற்றவர்களாய்ப் போய்விட்டோமெனில், நாம் பரிசைப் பெற்றுக்கொள்வதற்குத் தவறிவிட்டோம் என்பதும் நமக்குத் தெரியும். இப்படியாக, சூழ்நிலைகள் இருக்கையில் நாம் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்? இப்படிப்பட்டதான விலையேறப்பெற்ற மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் இழந்துவிடுவோமோ என்ற அச்சம் கொண்டவர்களாக, நம்முடைய உடன்படிக்கையை நிறைவு செய்வதற்குத் தொடர்ந்து முயற்சிப்பவர்களாகவும், நம்முடைய பிதாவின் அன்பிலும், நம்முடைய மீட்பருடைய தயவிலும், அங்கீகரிப்பிலும் நிலைநிற்பவர்களாகவும் இருப்போமாக. இப்படியாக, கவனமாக நடக்க முயற்சிக்கும் யாவரும், முழுமையான அறிவைப் பெற்றுக்கொள்வதற்கும், சூழ்நிலையைப் புரிந்துகொள்வதற்கும், உண்மையாய்

இருப்பதற்கும் அவசியமான அச்சத்தை இவர்களுக்குள் வளர்க்கத்தக்கதாகவும், இவர்கள் பரீட்சிக்கப்படத்தக்கதாகவும், இவர்கள் தங்களை நிரூபிக்கத்தக்கதாகவும், இவர்கள் கெத்செமனேயின் தனிமையினுடைய சிறு அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான தருணங்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

## இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்

உச்சக்கட்டமான மன வியாகுலம் காணப்பட்ட வேளையில், நமது கர்த்தர் மீண்டும் மீண்டுமாக ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார். இதற்கிடையில் ஆறுதலடைவதற்கென அவர் தமது சீஷர்களிடத்தில் வந்தார். ஆனால், அவர்களுடைய கண்கள் துக்கத்தின் காரணமாக நித்திரை மயக்கத்தினால் இருப்பதையும், அவர்கள் உறங்கிக்கொண்டிருப்பதையும் அவர் கண்டார். அப்போது நடுராத்திரி வேளையாய் இருந்தது. அவருடைய துக்கங்களில் அவரோடுகூட இருந்தாலும், அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளாதவர்களாகக் காணப்பட்டார்கள். அவர் பேதுருவை, "நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடுகூட விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட் படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்று போதகர் கடிந்து கொண்டார்/கோபித்துக்கொண்டார் (மத்தேயு 26:40). "உம்மை அனைவரும் கைவிட்டுப்போனாலும், நான் உம்மை கைவிட்டு ஓடமாட்டேன்" என்று கொஞ்ச நேரத்திற்கு முன்பு சூளுரைத்தப் பேதுருவோ, பட்டயத்தைத் தன்னிடத்தில் பெற்றிருந்தவரும், பிற்பாடு அதனை போதகரைக் காக்கும் முயற்சியில் பயன்படுத்தினவருமாகிய பேதுருவோ, அந்நேரத்திற்குரிய முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளாதவராகக் காணப்பட்டார். மேலும் தமக்கு வரப்போகும் பரிட்சைகள் எவ்வளவு கடுமையானதாக இருக்கும் என்றும், அவைகள் எவ்வளவு அண்மையில் இருக்கின்றது என்றும் போதகர் அறிந்திருந்ததுபோன்று பேதுரு அறிந்திருக்கவில்லை. மேலும், "சேவல் கூவுகிறதற்கு முன்னே என்னை நீ மூன்றுதரம் மறுதலிப்பாய்" என்று பேதுருவிடம் போதகர் பேசின வார்த்தைகள் இன்னும் சிறிது நேரத்தில் நிறைவேறப்போகின்றது என்பதையும் பேதுரு அறியாதவராய் இருந்தார். பேதுருவும், போதகரைப் போன்று பரிட்சைகள் சமீபமாய் இருக்கின்றது என அறிந்திருப்பாரானால், அவர் எவ்வளவு எச்சரிப்பாய்க் காணப்பட்டிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. இன்றும் வாழும் நமக்கும் இது பொருந்துகின்றது அல்லவா? கர்த்தருடைய ஜனங்களாகிய நாமும் இந்த அறுவடைக் காலக்கட்டத்தில் சபைக்கான கெத்செமனே வேளையை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம் அல்லவா? நாம் ஏற்கெனவே கொஞ்சம் அந்தச் சோதனை வேளைக்குள் காணப்படுகின்றவர்களாய் இருக்கின்றோமல்லவா? கிறிஸ்துவின் கடைசி சரீர அங்கம் சீக்கிரத்தில் தலையோடு சேர்ந்து, பலி நிறைவடையப் போகின்றதல்லவா? இவ்வனுபவங்களை எதிர்க்கொள்ளத்தக்கதாக நாம் எவ்விதத்தில் ஆயத்தமாய்க் காணப்படுகின்றோம்? நாம் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிறோமா? அல்லது அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்கின்றவர்களாய் இருக்கின்றோமா? அதாவது, தூங்குகிறவர்கள் இராத்திரியிலே தூங்குவார்கள் என்றும், இந்தப் பொல்லாத நாளிலும், நம்மீது ஏற்கெனவே மேலோங்கிக் காணப்படும்

சோதனையான இந்த நாளிலும், இன்னும் கடுமையாக எதிர்க்காலத்தில் நம்மீது வரப்போகிற சோதனையிலும், நாம் நிற்கத்தக்கதாகப் பகலுக்குரியவர்களாகிய நாம் விழிப்புள்ளவர்களாகவும், தெளிந்தவர்களாகவும், தேவனுடைய சர்வாயுத வர்க்கங்களைத் தரித்தவர்களாய் இருக்கக்கடவோம்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்கிறவர்களாய் இருக்கின்றோமா? சீஷர்கள் அனைவரும் கர்த்தரைத் தனியே விட்டுவிட்டு ஓடினதுபோன்று, பொதுவான ஒரு சிதறடிக்கப்படுதல் நேரிடும் வேளைக்கு நாம் ஆயத்தமாய் உள்ளோமா? போதகரின் மாதிரியை நாமும் பின்பற்றி, தெய்வீக அங்கீகரிப்பு நம்மீது உள்ளது என்ற உறுதியான நிலைப்பாட்டை/நிச்சயத்தை நாம் முதலாவது பெற்றுக்கொண்டவர்களாய் இருப்பதற்கு ஏற்ப, நம்முடைய சோதனை வேளைகளில் நம்முடைய தைரியம் காணப்படும். கர்த்தருடைய ஏற்பாட்டின்படி நமக்குக் கெத்செமனே தருணங்கள் ஒருவேளை வருமாயின் அவைகளை நாம் தவிர்த்துவிடாமல், நம்மை மரணத்தினின்று மகிமையான உயிர்த்தெழுதல் மூலம் இரட்சிக்க வல்லவரை நோக்கி பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணுவோமாக. இன்னுமாக, அப்படியான தருணங்களில் நமக்குப் பரிந்து பேசுகிறவர் ஒருவர் இருக்கின்றார் என்பதையும், நமக்கு உதவி செய்வதற்கு ஒருவர் இருக்கின்றார் என்பதையும் நினைவில் கொள்வோமாக. பிதாவின் செய்தியை நமக்களிக்கும் நமக்கான தூதனாகக் கர்த்தர் காணப்பட்டு - நாம் அவருடைய அன்பில் நிலைத்து நிற்பவர்களாகக் காணப்பட்டுவிட்டால், முடிவின் தருவாயில் அனைத்தும் நலமாய் நிறைவேறும் என்றும், நம்மை அவருடைய சொந்த புண்ணியத்தின் மூலமாய் ஜெயங்கொண்டவர்களாக, ஆம் முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாக ஆக்குவதற்கு அவர் வல்லமையும், சித்தமும் கொண்டவராகவும் இருக்கின்றார் என்றும் அவர் நமக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்.

## ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பெலவீனமுள்ளதாய் உள்ளது

இந்த வார்த்தைகளே, நமது அருமையான மீட்பர் அவருடைய சீஷர்களைக்குறித்துக் கூறினவைகளாகும். அவர்கள் இருதயத்தில் தம்மிடத்தில் உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள் என்ற உண்மையை அவர் உணர்ந்தவராகவே இருந்தார். அவர்கள் தம்முடைய சீஷர்களாகும்படிக்கு அனைத்தையும் விட்டுவந்த காரியத்தை அவர் பொருட்படுத்தாதவர் அல்ல. அவர் கடினமான/இரக்கமற்ற ஆண்டவருமல்ல. மாறாக அவர்களுடைய மாம்சம், பூரணக் கோட்பாடுகளை நிறைவேற்றும் விஷயத்தில் தோல்வியுற்றாலும்கூட, அவர்களுடைய இருதயத்தின் நோக்கங்களை ஏற்றுக்கொள்வதற்கு என்றென்றும் விருப்பமுள்ளவராகவே காணப்படுகின்றார். ஆகவே, "இனி நித்திரைப் பண்ணி இளைப்பாறுங்கள்" என்ற வார்த்தைகளை அவர் ஏளனத்துடன் சீஷர்களை நோக்கிப் பேசவில்லை என்றும்,

காலையில் வரப்போகிற காரியங்களினிமித்தம் இரவில் அவர்கள் கொஞ்சம் இளைப்பாறுதலும், புத்துணர்வும் அடையட்டும் என்றே கூறினார். ஆனால், அவர்களால் அதிக நேரம் உறங்கமுடியவில்லை. யூதாஸ் இயேசுவைத் தேடிவந்த திரளான அதிகாரிகளுக்கு வழிகாட்டி அவ்விடத்திற்கு வந்தான். இந்த அதிகாரிகள் உரோம சேவகர்களாய் இராமல், பிரதான ஆசாரியனுடைய சேவகர்களாகவும், என்ன நடக்கப்போகின்றது எனப் பார்ப்பதற்கும் வந்திருந்த கும்பலுமாய் இருந்தார்கள். பஸ்கா அநுசரிக்கும்படிக்குப் பட்டணத்தில் ஜனங்கள் நிறைந்திருக்கும் வேளையில் காலைப்பொழுது, இயேசுவைக் கைது செய்வது என்பது, பிரச்சனைகளை ஏற்படுத்திவிடும் என இவர்கள் கருதி, இவரை இரவோடு இரவாகக் கைது செய்யும்படிக்குக் கெத்செமனே தோட்டத்திற்கு வந்தார்கள். பிரச்சனைகள் வரும் என்று எதிர்ப்பார்த்தபடியால், அப்பிரச்சனைகளைத் தவிர்த்திடுவதற்கு நியாயப்பிரமாணத்தினுடைய அதிகாரிகள் நாடினார்கள்.

கெத்செமனே தோட்டத்திற்கு இயேசுவும், அவருடைய சீஷர்களும் அடிக்கடி போவார்கள் என்று, அல்லது இராப்போஜனத்தின்போது இயேசுவும் அவருடைய சீஷர்களும் இத்தோட்டத்திற்குப் போக இருக்கின்றார்கள் என்று யூதாஸ் அறிந்திருக்கலாம். யூதாசுக்குள் சாத்தான் புகுந்த பிற்பாடு, கர்த்தரைக் காட்டிக்கொடுப்பதின் மூலம், முப்பது வெள்ளிக்காசுகளைச் சம்பாதித்துக் கொள்ளலாம் என்ற தீர்மானத்துடன் பஸ்கா போஜனம் புசிக்கும்படிக்குக் கூடியிருந்த சீஷர்களை விட்டுவிட்டு யூதாஸ் புறப்பட்டுபோய், பிரதான ஆசாரியர்களைக் கண்டு அவர்களிடத்தில் பேரம் பேசினான். இந்த உடன்படிக்கையின் காரணமாகவே இயேசுவைச் சந்திக்கும்படியாகவும், சேவகர்கள் அவரைப் பிடிக்கத்தக்கதாக அவர்களுக்கு அடையாளம் காட்டிக்கொடுக்கத்தக்கதாகவும் சேவகர்கள் கூட்டத்திற்கு முன்பாக யூதாஸ் வந்தார். யூதாஸ் இயேசுவின் அருகே வந்து, ரபீ வாழ்க என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான். கிரேக்க பதிவுகளின் அர்த்தத்தின்படி பார்க்கையில் யூதாஸ் மீண்டும் மீண்டுமாக முத்தஞ்செய்தான் என்பதாகத் தெரிவிக்கின்றது. அன்பிற்கான பொதுச் சின்னமாய் இருந்த இந்த முத்தத்தை இயேசு ஏற்றுக்கொண்டார். மேலும், இது துரோகத்தின் முத்தமாய் இருந்தது என்றும் இயேசு அறிந்திருந்தும் எவ்விதமான கோபத்தின் வார்த்தைகள் அவர் வாயிலிருந்து வரவேயில்லை. மாறாக, மிகுந்த அன்புடனும், மரியாதையுடனும், "சிநேகிதனே என்னத்திற்காக வந்திருக்கின்றாய்?" என்றார் (மத்தேயு 26:50). "தோழா, எதற்காக வந்தாய்?" என்று கேட்டார் (திருவிவிலியம்). இங்குத் தோழா, சிநேகிதனே என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளதற்கான ஆங்கில வார்த்தையான, "friend" அன்பான நண்பனைக் குறிப்பதுமில்லை; இன்னுமாக பிரியமான எனும் அர்த்தத்தைக் கொடுக்கும் philos என்ற கிரேக்க வார்த்தையிலிருந்தும் வரவில்லை; மாறாக உடன்வேலையாள் அல்லது கூட்டாளி என்ற அர்த்தத்தை அளிக்கும் *hetaire* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்தே வந்துள்ளது.

# யூதாசின் ஆவியைத் தவிர்த்துவிடுங்கள்

கிறிஸ்துவின் ஒவ்வொரு சீஷனும், கர்த்தருக்கும் அவருடைய நோக்கங்களுக்கும், தான் ஒருபோதும் யூதாசாக மாறிவிடாத ஒரு வாழ்க்கைப் போக்கை வாழ முடிவு செய்ய விரும்புவது அவனவன் கையில்தான் இருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். பன்னிரண்டு சீஷர்களில் ஒருவன் துரோகியாக இருப்பான் என்றும், தேவனுடைய கிருபையை விருதாவாக அவன் பெற்றுக்கொள்வதோடு அல்லாமல், அக்கிருபையை மிகுந்த தீமையான விதத்தில் பயன்படுத்துவான் என்றும், தேவன் முன்னறிந்து வைத்திருந்த காரியமானது, யூதாசின் வீழ்ச்சிக்கான காரணமல்ல. "கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்றும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவனென்றும்" அப்போஸ்தலன் கூறுகின்றார் (2 தீமோத்தேயு 2:19). தேவனுடைய கிருபையை நாம் எப்படிப் பெற்றுக்கொள்வது என்பது குறித்தும், அதனை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்தும் தீர்மானிப்பது நம் கையில்தான் உள்ளது. தேவனுடைய முன்னறிவானது எவ்விதத்திலும் நமக்குள் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய காரணியாக இராது.

யூதாஸ் சீஷனாக தனது ஓட்டத்தை ஆரம்பித்தபோது, உண்மையுள்ளவனாகவே இருந்தான் என்பதை அநுமானிப்பதற்கு நமக்குப் பல காரணங்கள் உள்ளது. கடைசி வேளையில், அவனிடத்தில் வெளிப்பட்ட மிகக்கேடான குணலட்சணமும், இருதயத்தின் அவகேடான/தீமையான, கீழ்த்தரமான நோக்கங்கள்மீது வளைதலும் அவனுக்குள் படிப்படியாகவே ஏற்பட்டதென நாம் அநுமானிக்கிறோம். அதாவது இந்த அவக்கேடுகள் அவருக்குள் ஒரு சில சிறு யோசனைகளாக உதித்து, பின்னர் இறுதியில் மிகவும் பயங்கரமான அவல சம்பவமாக முடிந்தது என்று நாம் அநுமானிக்கின்றோம். அவருக்குள் உதித்த அந்த யோசனைகள் அநேகமாக சுயநலத்தின் அடிப்படையிலேயே காணப்பட்டிருக்க வேண்டும். அதாவது, பன்னிரண்டு பேர் மத்தியில் தனக்குப் போதுமான அளவில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்ற யோசனைகள் அவருக்குள் தோன்றியிருக்கலாம். நமது கர்த்தர் பேதுருவுக்கும், யாக்கோபிற்கும், யோவானுக்கும் முன்னுரிமைக் கொடுத்து வந்த விஷயத்தில் கர்த்தருக்கு அறிவும், திறமையும் இல்லையென்பதை வெளிக்காட்டுகின்றன என்பதான யோசனைகள் கூட அவருக்குள் தோன்றியிருக்கலாம். இப்படியாக, மற்றவர்களிடத்தில் குறைக்காணும் விதமாக தனக்குள் ஏற்பட்டுள்ள ஆவிக்கு யூதாஸ் உற்சாகமூட்டி வந்தான் என்பதில் ஐயமில்லை. தீர்மானம் எடுக்க வேண்டிய எந்தெந்த விஷயங்களில் இயேசுவும் மற்றச் சீஷர்களும் தவறினார்கள் என்பதையும், எந்தெந்த இடங்களில் வாய்ப்புகளைப் பயன்படுத்த அவர்கள் தவறிவிட்டார்கள் என்பதையும், எந்தெந்த இடத்தில் சரியான வாய்ப்புகள் அமைந்தபோதும், தவறான வார்த்தைகளை அவர்கள்

பேசிவிட்டார்கள் என்பதையும், யூதாஸ் தனக்கு மாத்திரமே புரிகின்றதுபோலவும், அதேவேளையில் தான் செய்பவைகள் சரியென்றும், தன்னிறைவு கொண்டவனாகவும் காணப்பட்டான். வீழ்ச்சி ஏற்படுவதற்கு முன்பு எப்போதும் இப்படிப்பட்ட சுயநலமான ஆவியும், இப்படியான சுயத்திருப்தியின் ஆவியும், மற்றவர் மேல் குற்றம் சாட்டும் இப்படியான ஆவியும் மற்றும் இப்படியான கண்மூடித்தனமான எண்ணங்களும் எப்போதும் காணப்படுகின்றது. இதற்குச் சபையின் வரலாறும், நம்முடைய தனிப்பட்ட அனுபவங்கள்கூடச் சாட்சிபகர்கின்றன.

கிறிஸ்துவின் நோக்கங்கள் முன்னேற்றத்தை நோக்கிச் செல்லவில்லை என்று யூதாஸ் உணர்ந்தபோது - அங்குக் கூடியிருந்த திரளான ஜனங்களின் ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு, இயேசு இராஜாவாகிக் கொள்வதற்குக் கவனம் செலுத்தாமல் இருந்ததோடு, யூதர்களுடைய அதிகாரிகளிடமிருந்து தாம் எதிர்ப்பை எதிர்ப்பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறினதின் மூலம் இயேசுவின் மனம் வேறு திசையில் போய்க்கொண்டிருப்பதை யூதாஸ் உணர்ந்தபோது - அந்த உணர்வால் தன்னுடைய சொந்த கூட்டிற்குச் சொகுசான இறகுகள் வைப்பதற்கு ஆரம்பிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்ற யோசனைகள் அவனுக்குள் எழும்பின. இதன் மூலமாக பிரச்சனைகளும், பிரிவினைகளும் வெடிக்கும்போது, கூட்டத்தாரிலேயே ஆதாயம் பெற்ற ஒருவனாகவும் மற்றும் சீஷனாக இருந்ததின் காரணமாக இழப்புகள் அடையாத நபராகவும் தான் இருக்க முடியும் என யூதாஸ் சிந்தித்தான். ஆக, அவனுடைய மனதை சுயநலம் ஆளுகை செய்து அவனைத் திருடுவதற்கு வழிநடத்தினபடியினால், "அவன் திருடனும், பணப்பையை உடையவனுமாயிருந்தான்" என்று அவனைக்குறித்து எழுதப்பட்டுள்ளது. அவன் சீஷர்களின் கூட்டத்தாருக்குப் பொருளாளராக இருந்தான். மேலும், அவர்களுக்குரிய பணத்தில் யூதாஸ் தன்னுடைய தனிப்பட்ட சில விஷயங்களுக்காக எடுத்துக்கொண்டவனாகவும் இருந்தான். (கர்த்தருடைய) நோக்கத்திற்காக தன்னுடைய ஈடு இணையற்ற நேரத்தைத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறேன் என்ற எண்ணத்தினாலும், தான் செய்து கொண்டிருக்கும் காரியங்கள் மூலம் உண்டாகும் மதிப்புகள் அவர்களுடைய பணப்பையிலிருந்து, தான் எடுத்துக்கொண்ட பணத்திற்கு ஈடு செய்வதாக உள்ளது என்ற எண்ணத்தினாலும், தான் திருடின விஷயம் ஒரு தவறல்ல என்று அவனுடைய நயவஞ்சகத்தினால் தன்னைக் குற்றமற்றவன் என யூதாஸ் எண்ணியிருக்கக்கூடும் என்றுகூட நாம் அனுமானம் செய்யலாம். இதுவே, சுயநலத்தின் ஆவியாகும். இந்தச் சுயநலத்தின் ஆவி, கர்த்தருடைய ஆவிக்கு அதாவது, பலி செலுத்தும் உணர்வின் ஆவிக்கும், சத்தியத்திற்காக முழு ஆன்மாவோடு செய்யப்படும் ஊழியத்திற்கும் முற்றிலும் எதிர்மாறானதாகும். யாரொருவர் இந்த ஆவியை எந்தளவில்

பெற்றிருந்தாலும் சரி, அவர்கள் பெற்றிருக்கும் ஆவிக்கேற்ப அவர்களிடத்தில் யூதாசின் ஆவி இருப்பது மெய்யே. மேலும், இவ்வாவியைக் கொண்டிருப்பதினிமித்தம் உண்டாகும் விளைவுகள், யூதாசின் அளவிற்கு அல்லது அவரைக்காட்டிலும் குறைவாக இருப்பினும் அது நிச்சயமாக தீமையானதாகவே காணப்படும்.

உலகத்தில் காணப்படும் கர்த்தருடைய உண்மையான அங்கங்கள் தம்மை அடையாளப்படுத்துகிறார்கள் என்றும், அவர்களுக்கு எதிராக செய்யப்படும் எக்காரியமும் தமக்கு எதிராகவே செய்யப்பட்டதாகக் கருதப்படும் என்றும், நமது கர்த்தர் அறிவித்துள்ளார். ஆகவே, கர்த்தருடைய பின்னடியார்களில் மிகச் சிறியவராகக் காணப்படும் ஒருவரைக் காட்டிக் கொடுப்பதின் மூலமும், காயப்படுத்துவதின் மூலமும், இந்த யூதாசின் சுயநலத்தின் ஆவியானது இன்றும்கூடக் கர்த்தரைக் காட்டிக்கொடுப்பதற்கு வழிநடத்துகின்றது என்பது உறுதியே. யூதாசினுடைய ஆவிக்குப் பிரதிநிதிகளாகக் காணப்படுகிறவர்கள் முத்தம் கொடுத்துக் காட்டிக் கொடுக்கத்தக்கதான யூதாசின் வழிமுறையைப் பின்பற்றுவார்கள் என்ற விஷயத்தைக்குறித்து நாம் அதிர்ச்சியடைய வேண்டாம். அதாவது, யூதாசின் ஆவியுடையவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கங்கள் மீது தங்களுக்கு மிகுந்த அன்பும், மதிப்பும், மரியாதையும் இருக்கும் என்று கூறுவார்கள். ஆனால் அதேசமயம் தங்களுடைய தனிப்பட்ட ஆதாயங்களுக்காக அல்லது முக்கிய ஸ்தானம் பெற்றுக்கொள்வதற்கோ, செல்வாக்குப் பெற்றுக்கொள்வதற்கோ, வேறெந்த சுயநலமான ஆதாயத்தைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபடுவதற்கெனக் கிறிஸ்துவின் அங்கங்களை மறைமுகமாக/இரகசியமாகத் தாக்குகிறவர்களாக இருப்பார்கள். கர்த்தருடைய பின்னடியார்களாகிய ஒவ்வொருவரும், "ஆண்டவரே நானோ" என்று யூதாஸ் கேட்ட அதே வார்த்தைகள் அடங்கின கேள்வியைத் தங்களிடமே கேட்டுக்கொள்வார்களாக. புதுச் சிருஷ்டிகளாகிய நம்மை அழித்துப்போடுவதற்கும், நம்மைக் கண்ணியில் சிக்க வைப்பதற்கென ஏற்றச்சமயத்தைப் பதுங்கியிருந்து நாடுகின்றதான, இந்த யூதாசின் ஆவி நம்மிடத்தில் எவ்விதத்திலாகிலும் ஒளிந்துகொண்டிருக்கின்றதா என நம்மில் ஒவ்வொருவரும் நம்முடைய இருதயங்களை ஆராய்வோமாக.

# இருளான கெத்செமனே வேளை

## மத்தேயு 26:36-46

***"இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகின்றார்." மத்தேயு 26:45***

யூதர்களெனப் போதகரும், அவரது சீஷர்களும் பஸ்கா இராப்போஜனத்தை ஆசரித்தப் பிற்பாடு, அடுத்து தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலை அப்பம் மற்றும் திராட்சரசம் கொண்டு நிறுவின பிற்பாடு, தம்மைக் காட்டிக்கொடுப்பதற்கென யூதாஸ் வெளியேறின பிற்பாடு, இயேசுவும், மீதம் இருந்த பதினொரு பேரும் எருசலேமிலுள்ள மேல் வீட்டறையினின்று வெளியேறி, பட்டணத்தை வாயில் வழியாய்த் தாண்டி, கெதரோன் ஆற்றைத் தாண்டி, ஒலிவ மலையினுடைய சாய்வான பகுதிகளில் ஏறி கெத்செமனே தோட்டத்திற்குப் போனார்கள். கெத்செமனே என்ற வார்த்தையின் அர்த்தமானது எண்ணெய் செக்காகும். இந்தத் தோட்டமானது, அப்போஸ்தலனாகிய யாக்கோபு மற்றும் யோவானுடைய உறவினர்களுக்குச் சொந்தமானது என்று பாரம்பரியமானது தெரிவிக்கின்றது. சுவிசேஷகர்களில் ஒருவரும், அப்போஸ்தலர் அல்லாதவருமான பரிசுத்த மாற்கு அவர்கள், அதே குடும்பத்தினுடைய அங்கத்தினன் என்றும் சொல்லப்படுகின்றது. போதகர் கைது செய்யப்பட்டதைப் பதிவு செய்யும் பதிவுகள் ஒன்றில், போதகரைப் பின்தொடர்ந்து போனவர்கள் மத்தியில், துப்பட்டியை மாத்திரம் தன்மேல் போர்த்திக்கொண்டு, வாலிபன் ஒருவனும் போனான் என்றும், சேவகர்கள் வாலிபனைப் பிடிக்க முயன்றபோது, அவன் தன் துப்பட்டியைப் போட்டுவிட்டு, நிர்வாணமாய் ஓடிப்போய்விட்டான் என்றும் நமக்குக் கூறப்பட்டுள்ளது. இந்த வாலிபன், பல வருடங்களுக்குப் பிற்பாடு பரிசுத்த மாற்கு என்று அறியப்பட்டிருந்தார் என்று பாரம்பரியமானது தெரிவிக்கின்றது.

இது போதகருடைய அனுபவங்களிலேயே மிகவும் குறிப்பிடத்தக்க இரவாகும். அவர் பஸ்காவினுடைய ஒவ்வொரு அம்சத்தின் அர்த்தத்தையும் நன்கு அறிந்திருந்தார். தாம்தான் நிஜமான தேவ ஆட்டுக்குட்டி என்றும், தம்முடைய மரணமானது அடுத்த நாளில் சிலுவையில் அறையப்படுவதின் மூலம் நிறைவேறும் என்றும் அவர் அறிந்திருந்தார். எனினும் அவரது எண்ணங்களானது, அவரது அருமை சீஷர்கள் பற்றியதாகவே இருந்தது. அவர் அவர்களுக்கு இறுதியான அறிவுரைகள் மற்றும் உற்சாகத்தின் வார்த்தைகளைக் கொடுக்க வேண்டும். அவர் இதைச் செய்தார். மேல் வீட்டறையை விட்டுச் சென்றதற்கும், எண்ணெய் செக்காகிய கெத்செமனேயை வந்தடைவதற்கும் இடையில் நடைப்பெற்றவைகளானது பரிசுத்த யோவான் எழுதிய சுவிசேஷத்தின், மூன்று அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. "இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தபடியினால், அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதாசும் அந்த இடத்தை அறிந்திருந்தான்" (யோவான் 18:2). பரிசுத்த யோவான் எழுதின சுவிசேஷத்தினுடைய 14-ஆம் அதிகாரத்தில், போதகர் சீஷர்களிடத்தில், தாம் போய் அவர்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணப்போகின்றார் என்றும், அவர்களுக்குத் தேற்றரவாளனாய் இருக்கும்படிக்குச்

சத்திய ஆவியை அனுப்புவார் என்றும், சத்திய ஆவியானது, வரும் காரியங்களை அவர்களுக்கு அறிவிக்கும் என்றும் கூறியுள்ளார். 15-ஆம் அதிகாரத்தில் அவர் அவர்களுக்குத் திராட்சச் செடி மற்றும் கொடிகள் குறித்த உவமையைக் கூறினார் மற்றும் அவர்கள் இனி ஊழியக்காரர்களாய் இராமல், நண்பர்களாய் இருக்கின்றனர் என்றும் அவர்களுக்கு உறுதியளித்தார்; "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" (யோவான் 15:15). 16-ஆம் அதிகாரத்தில், அவர்கள் தம்முடைய பாடுகளில் பங்கடைந்து, அவரது மகிமையில் பங்கடைவதற்கு ஆயத்தமாக வேண்டுமெனில், அவர்கள் உபத்திரவங்களை எதிர்ப்பார்த்திட வேண்டுமென்று அவர்களுக்கு விவரித்தார்.

"கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள்" என்றார். தெய்வீகக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில் அவர் இல்லாமல் இருக்கும் காலப்பகுதியானது, நித்தியக்காலத்துடன் ஒப்பிடுகையில், கொஞ்சக் காலமாகவே உள்ளது. பின்னர் உயிர்த்தெழுதலினுடைய "மறுரூபத்தின்" காரணமாக, அவர்கள் அவரைக் காணமுடியும், ஏனெனில் அவர்களும் அவரைப்போன்று காணப்படுவார்கள். "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" (யோவான் 16:33). 17-ஆம் அதிகாரத்தில் தம்முடைய அப்போஸ்தலர்களுக்காக மாத்திரமல்லாமல், இவர்களுடைய வார்த்தைகளின் வாயிலாக தம்மேல் விசுவாசம் வைக்கின்ற யாவருக்காகவும் தம் பின்னடியார்கள் சார்பில் பிதாவிடம் ஏறெடுக்கப்பட்டதான அவரது அருமையான ஜெபம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## கெத்செமனே தோட்டத்தில்

இப்படியாக அவர்கள் சம்பாஷித்துக்கொண்டு, தோட்டத்திற்கு (அ) ஒலிவ தோட்டத்திற்கு வந்து சேர்ந்தார்கள்; இங்கு ஒலிவ பழங்களிலிருந்து எண்ணெய் எடுக்கப்படும் ஆலை காணப்பட்டது. வாயிற் பகுதியில் சீஷர்களில் எட்டுப்பேர் காவல்காக்கும்படிக்கு விடப்பட்டனர்; இயேசுவும், அவரால் விசேஷமாய் அன்புகூரப்பட்டதான பேதுருவும், யாக்கோபும், யோவானும் சற்று உள்ளே, தொலைவாகப் போனார்கள். பின்னர் தம்முடைய அன்பார்ந்த நண்பர்களால் கூடத் தம்முடைய துக்கமானச் சூழ்நிலையை உணர்ந்துகொள்வதற்கு வாய்ப்பில்லை என்பதை உணர்ந்தவராக, இன்னும் தொலைவாக, பிதாவோடு பேசும்படிக்குத் தனிமையில் போனார். அவரது வாயினின்று பேசப்பட்டவைகளைக் குறித்துக் குழப்பமடைந்து, அதிர்ச்சியடைந்துக் காணப்பட்ட சீஷர்கள், உண்மை நிலவரத்தைப் புரிந்துகொள்ளவில்லை. அவரது வார்த்தைகள் மறைப்பொருட்களாகவே

இருக்குமென்று அவர்கள் எண்ணினார்கள் என்பதில் உறுதியே. அவரோடுகூட விழித்திருக்க அவர்களுக்கு விருப்பம்தான், ஆனாலும் அவர்கள் களைப்படைந் திருந்தபடியால், உறங்கிப்போனார்கள். அவர்களது ஆவி உற்சாகமுள்ளதாய்தான் இருந்தது, ஆனால் மாம்சமோ பெலவீனமாய் இருந்தது.

ஏன் இப்படி ஜெபத்தில், தனிமையில் காணப்படுவதற்குப் போதகர் அடிக்கடி விரும்பிட்டார் என்று சிலர் கேட்கலாம் மற்றும் இதற்கான பதில் என்னவெனில், "நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன்; ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை" என்பதேயாகும் (ஏசாயா 63:3). அவரது சீஷர்களும், பின்னடியார்களும் அவரை மிகவும் அன்புகூர்ந்தார்கள். ஆனாலும் அவர் தனியாகத்தான் காணப்பட்டார்; ஏனெனில் அவர் மாத்திரமே பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவராய் இருந்தார். அவரது பலி நிறைவேறுவது வரையிலும், அவர்களுக்கு தம்முடைய புண்ணியத்தினைத் தரிப்பிக்கத்தக்கதாகவும், அவர்கள் பின்வரும் மகிமைகளில் பங்கடையத்தக்கதாக, தற்காலத்தின் பாடுகளில், அவரோடுகூடப் பலிச்செலுத்தும்படிக்குப் பங்கடைவதற்கு அவர்களை அனுமதிக்கத்தக்கதாகவும், அவர் தேவன் முன்னிலையில் தோன்றுவது வரையிலும், அவர்களது பின்னடியார்களால் தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக உணரமுடியாது, ஆவியினால் ஜெநிப்பிக்கவும் படமுடியாது.

இந்த நமது கர்த்தருடைய அனுபவத்தைக் குறித்துப் பரிசுத்த பவுல் அவர்கள், "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்" (எபிரெயர் 5:7) என்று தெரிவிக்கின்றார். அவர் ஏன் பயப்பட்டார்? மனுஷர்கள் அனைவரும் மரணத்தைச் சந்திக்கவில்லையா? மனுஷர்களில் சிலர் மிகுந்த தைரியத்துடனும், சிலர் மனத்துணிவுடனும் சந்தித்திருக்கின்றார்கள் அல்லவா? ஆ! மரணம் குறித்த விஷயத்தில், நம்முடைய கண்ணோட்டத்திற்கும், போதகருடைய கண்ணோட்டத்திற்கும் வெகு வித்தியாசம் உள்ளது. நாம் மரிப்பதற்காகவே பிறக்கின்றோம். நமக்குப் பரிபூரண ஜீவன் என்றாலே என்னவென்று தெரியாது. மரணத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு வழியே இல்லை என்று நாம் எப்போதுமே அறிந்தவர்களாய் இருக்கின்றோம். ஆனால் அவர் விஷயத்தில் மிகவும் வித்தியாசமாகும். உலகத்திற்கு வருவதற்கு முன்னதாக, ஆவிக்குரிய தளத்திலான அவரது அனுபவங்கள் அனைத்தும் ஜீவன், பூரண ஜீவன் தொடர்புடையதாகவே காணப்பட்டது. "அவருக்குள் இருந்த ஜீவனானது" மாசற்றது, ஏனெனில் அவர் பரிசுத்தராகவும், மாசில்லாதவராகவும், குற்றமற்றவராகவும், பாவிகளுக்கு விலகினவராகவும் காணப்பட்டார்; அவரது ஜீவன் ஆதாமிடமிருந்து வந்ததல்ல.

தெய்வீக எதிர்ப்பார்ப்புகளுக்கு இசைவாக தாம் பூரணமாய் ஜீவித்தால், தம்முடைய பரிபூரணத்தில் ஜீவனுக்கான உரிமையை, தாம் பெற்றிருப்பார் என்பதை அவர் அறிவார். இன்னுமாக "பலியினாலான உடன்படிக்கை" என்று தேவனிடத்தில் பண்ணிக்கொண்டதான விசேஷித்த உடன்படிக்கையின் காரணமாக, தம்முடைய பூமிக்குரிய உரிமைகளைக் கையளித்து விடுவதற்குத் தாம் ஒப்புக்கொண்டுள்ளார்

என்பதையும், தம்முடைய ஜீவன் தம்மிடமிருந்து எடுக்கப்படுவதற்கு அனுமதிக்கத் தக்கதாக தாம் ஒப்புக்கொண்டுள்ளார் என்பதையும் அவர் அறிந்திருந்தார். பிதாவும் அவருக்கு மரணத்திலிருந்துள்ள உயிர்த்தெழுதலின் வாயிலாக மகிமை, கனம் மற்றும் அழியாமை எனும் மகா பலனை வாக்களித்துள்ளார்; ஆனால் இது அனைத்து விஷயங்களிலுமுள்ள, அதாவது வார்த்தையிலும், சிந்தையிலும், கிரியையிலுமுள்ள அவரது முற்றும் முழுமையான கீழ்ப்படிதலைச் சார்ந்துள்ளது. அவர் அனைத்து விஷயங்களிலும் தேவனுக்கு உண்மையாய் இருந்துள்ளாரா? என்பதுதான் கேள்வி. இல்லையெனில் மரணமானது, அவருக்கு நித்திய மரணத்தைக் குறிக்கின்றதாகிவிடும்; அவருக்குப் பலனாக வாக்களிக்கப்பட்டுள்ளதான பரலோக மகிமையை இழந்துபோவது மாத்திரமல்லாமல், அனைத்தையுமே இழந்துபோவதாக இருந்துவிடும். அவர் இதைப் புரிந்துகொள்ளவில்லை என்று நாம் எண்ண முடியுமா? அந்த வேளை மிகவும் இருளானதாய்க் காணப்பட்டது மற்றும் அவர் "என்னுடைய ஆத்துமா மரணத்திற் கேதுவான துக்கம் கொண்டிருக்கின்றது" என்று கூறினார். அவர் தாம் மரிக்கப் போகின்றார் என்பதை அறிந்திருந்தார். மரணம் அவசியமானது என்றும் அவர் அறிந்திருந்தார். ஆனால் அடுத்த நாளில் தேவதூஷணம் புரிந்திட்டவரென, குற்றவாளியென, தெய்வீகப் பிரமாணத்தை மீறினவரென அவமானமாய் மரணத்தண்டனை நிறைவேற்றப்படப் போகின்றதான காரியமானது அவரை பயமுறுத்திக்கொண்டிருந்தது. ஏதேனும் விஷயத்தில், கொஞ்சமேனும் தாம், பிதாவுக்குரிய கனத்தைத் தமக்கென்று எடுத்திருப்பதற்கு வாய்ப்பிருக்கின்றதா? ஏதேனும் அளவில், மனதிலாகிலும், பிதாவின் சித்தத்திற்கு முழுமையாய்க் கீழ்ப்படியாமல் இருந்திருப்பதற்கு வாய்ப்பிருக்கின்றதா? இப்படிச் சிலுவையில் அறையப்படுதல் என்பது, தாம் தெய்வீகத் தயவை இழந்துவிட்டதைக் குறிப்பதாக ஒருவேளை உண்மையில் இருந்துவிடுமோ? தாம் இவ்விதமாய் மரிப்பது அவசியமா? இந்த அவமானத்தின் பாத்திரம் நீங்குவதற்கு வாய்ப்புள்ளதா? என்ற கேள்விகள் அவரை பயமுறுத்திக்கொண்டிருந்தது. ஆகையால் அவர் மிகுந்த வியாகுலத்துடனே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தது என்ற வார்த்தைகள் பழைமைமிக்க கிரேக்க மூலப்பிரதிகளில் இடம்பெறவில்லை என்றாலும், மன வியாகுலத்தின்போது, அழுத்தத்தின்போது, இப்படியாக வருவதற்கு வாய்ப்புள்ளது என்றே மருத்துவ துறையானது தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவரது ஜெபத்தினுடைய இறுதி வார்த்தைக ளாகிய, "ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்பதிலுள்ள அருமையான எளிமையினை நாம் கவனிக்கின்றோம்.

கடுமையானச் சூழ்நிலை மத்தியிலும்கூட விசுவாசமும், நம்பிக்கையும் எத்துணை அருமையாயும், குழந்தைகள் வைப்பதுபோன்றும் காணப்படுகின்றது! அவருக்கு உண்டான பயத்தின் நிமித்தம் கேட்கப்பட்டார் என்று பரிசுத்த பவுல் கூறுகின்றார். எப்படி? தேவனுடைய வார்த்தையானது, தேவதூதனுடைய கரங்களின் வாயிலாக வந்தது. ஒரு தூதன் தோன்றி, அவருக்கு ஊழியம் புரிந்திட்டார் - அதாவது அவரது தேவைக்காக ஊழியம் புரிந்திட்டார். "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்

களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" (எபிரெயர் 1:14). போதகர் துயரத்திலும், தாழ்மையிலும் காணப்படுகையில் எந்த வார்த்தைகளினால் இந்தப் பரம ஊழியமானது செய்யப்பட்டது என்பது குறித்து நமக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றாலும், அது பரம பிதாவினுடைய தயவு, அனுதாபம் மற்றும் அன்பு குறித்த முழு வாக்குறுதி நிரம்பின வார்த்தைகளாகவே இருந்திருக்கும் என்பதை நாம் அறிவோம். அவருக்கு உண்டான பயத்தின் நிமித்தம் கேட்கப்பட்டார். அவர் பிதாவுக்கு நன்கு பிரியமாய் இருக்கின்றார் என்றும், அவர் தமது உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவராக இருந்திருக்கின்றார் என்றும், வாக்களிக்கப்பட்டதான உயிர்த்தெழுதலை அவர் பெற்றுக்கொள்வார் என்றுமுள்ள நிச்சயத்தினை அவர் பெற்றுக்கொண்டார்.

அத்தருணம் முதல் போதகர், அந்த இரவு மற்றும் அடுத்த நாள் வந்த மாபெரும் நிகழ்வுகளில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரிலுமே அமைதலுள்ளவராய்க் காணப்பட்டார். அதிகாரிகள், வேலைக்காரர்கள், ஆலோசனை சங்கத்தினர், ஆசாரியர்கள், ஏரோது, இவரது சேவகர்கள், பிலாத்து மற்றும் இவரது சேவகர்கள், மக்கள் கூட்டம் - அனைவரும் மன அமைதல் இல்லாமலும், கிலேசத்துடனும் காணப்பட்டார்கள். இயேசு மாத்திரமே அமைதியுடன் காணப்பட்டார். இதற்குக் காரணம், அனைத்துமே அவருக்கும், பிதாவுக்கும் இடையில் நன்றாய் உள்ளது என்ற பிதாவின் வாக்குறுதியேயாகும். இந்தப் பாக்கியமான வாக்குறுதியானது, போதகருக்குத் தைரியத்தைக் கொடுத்ததுபோன்று, இன்றுவரையிலுமாக அவரது பின்னடியார்கள் கூட, "தேவன் நம் பட்சத்தில் இருந்தால், நமக்கு எதிராய் நிற்பவன் யார்? என்றும், எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானமானது, எங்களுடைய இருதயங்களை ஆளுகின்றது என்றால், நமக்கு எதிராய் நிற்பவன் யார்?" என்றும் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

## நன்றியற்றவனும், எதிராளியானவனுமான யூதாஸ்

ஏமாற்றுகின்ற கதாப்பாத்திரங்கள் அநேகர் உலகத்தில் காணப்படுகின்றனர். அநேக விஷயங்களில் நாம் அனைவருமே தவறுகின்றோம். சுயநலம், பெருமை, பிடிவாதம் (கீழ்த்தரம்)/குறுகிய மனம் முதலானவைகள் மிகவும் துயரமளிக்கும் விதத்தில் மனித குடும்பத்தில் காணப்படுகின்றது. ஆனால் இவைகள் அனைத்திலுமேயே, ஒருவன் நன்றிகெட்டவனாய், தனது அருமை நண்பனைக் காட்டிக்கொடுக்கும் அளவுக்குச் செய்கிறதைப் பார்க்கிலும் மிகவும் கண்டனத்திற் குரியதாய் ஏதேனும் காணப்படுகின்றதா?

யூதாஸ் போன்ற பாத்திரங்கள் குறித்ததான அபிப்பிராயத்தில், உலகம் எதிராகவே காணப்படுகின்றது. யூதாஸ் பெயர் பெற்ற உதாரணம் என்றாலும், இவர் ஒருவரே உதாரணம் என்றில்லை; அநேகர் இப்படியாகக் காணப்பட்டிருந்திருக் கின்றனர். இப்படியானவர்களில் சிலர் இன்றும் ஜீவித்துக்கொண்டிருக்கின்றனர். யார் ஒருவர் இத்தகைய ஒரு பண்பின் குறுகிய தன்மையை/கீழ்த்தரத்தை நன்கு உணர்ந்துகொள்கின்றாரோ, ஒருவேளை இவரின் மற்ற பண்புகள் எவ்வளவுத்தான்

கீழ்த்தரமாய் இருப்பினும், இக்குறிப்பிட்ட பண்பை வெளிப்படுத்துவதிலிருந்து இவர் தப்பித்துக்கொள்வார். தனது எஜமானை முப்பது வெள்ளிக்காசுகளுக்கு விற்கமுடிந்த மனுஷன், யாவராலும் வெறுக்கவேபடுவான். நன்றிகெட்டுப் போவதற்கு, முப்பது வெள்ளிக்காசுகள் மாத்திரமே தூண்டிடவில்லை; பெருமையும் காரணமாகும். யூதாஸ் போதகரோடுகூடப் பூமிக்குரிய சிங்காசனத்தில் காணப்பட வேண்டுமென்று எண்ணம் கொண்டிருந்தான்; இந்த எதிர்ப்பார்ப்பில் அவன் நம்பிக்கையாய்க் காணப்பட்டான். இப்பொழுதோ அதே போதகர் சிங்காசனம் இப்பொழுது வருவதில்லை என்றும், இந்த யுகத்தினைத் தொடர்ந்துவரும் யுகத்திலேயே வரும் என்றும், மரணம் வரையிலும் உண்மையுடனும், நேர்மையுடனும் காணப்படுபவர்களுக்கே அது அருளப்படும் என்றும் தெளிவாய், முழுமையாய் விளக்கினார். இக்காரியமானது ஞானமான மற்றும் சிறந்த வழியல்ல என்று யூதாசின் மனம் எண்ணினது. மாபெரும் போதகரை வெறுத்தவனாக, வஞ்சிக்கப்பட்டவனாகிய யூதாஸ், தற்காலிகமாக போதகர் கையளிக்கப்பட வேண்டுமென்றும் - இது போதகர் இப்படியாய்ப் பேசக்கூடாது மற்றும் இப்படிக் காலத்தைத் தாழ்த்திக் கொண்டிருக்கக்கூடாது என்று அவருக்குப் போதிக்கும் வண்ணமாக காணப்படும் என்றும் - இது போதகருக்குத் தூண்டுதலாக காணப்பட்டு, அவரது ஜீவனை நாடினவர்களை எதிர்க்கும் வண்ணமாய், அவர் தம் வல்லமையைச் செயல்படுத்தத்தக்கதாக அவரை வலுக்கட்டாயத்திற்குள்ளாக்கி மற்றும் இப்படியாய் அவரை உயர்த்திக்கொள்வதன் மூலமாக, அவர் சீஷர்களுக்கு வாக்களித்த வண்ணமாக அவர்களை இராஜ்யத்தில் பங்கடையச் செய்வதன் மூலம், அவர்களுக்கு நன்மைச் செய்ய வைப்பதற்கு ஏதுவாய்க் காணப்படும் என்றும் [அ] இல்லையேல் இவைகளைப் போதகர் செய்யத்தவறினால், முழுத் திட்டத்தையும் சிதைத்துப் போடுவதற்கு ஏதுவாய்க் காணப்படும் என்றும் எண்ணினான். அந்தோ பரிதாபம்! பேராசையினால் வெறியூட்டப்படுகின்ற சிலர், பணத்தின் மீதான ஆசையினாலும், அதிகாரத்தின் மீதான ஆசையினாலும் பெருமிதம் அடைந்து, மன தடுமாற்றம் அடைந்துவிடுகின்றனர். "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (மத்தேயு 23:12) மற்றும் "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1 பேதுரு 5:6) என்கிற செய்தியினைக் கர்த்தருடைய பின்னடியார்கள் நினைவுகூர்வது எத்துணை அவசியமாயுள்ளது.

# ஏன் கெத்செமனேயில் வியாகுலம்?

## மாற்கு 14:38-42

***"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்." மத்தேயு 26:41***

தமது மரணத்திற்கான நினைவுகூருதலாகிய இராப்போஜனத்தை நிறுவின பிற்பாடு, இயேசுவும், அவரது சீஷர்களும் ஸ்தோத்திரப்பாடல் பாடிவிட்டு, பட்டணத்திலிருந்து, வெளியே எதிரேயுள்ள ஒலிவ மலைக்குப் போனார்கள்; சுமார் ஒரு மைல் தொலைவிற்குப் போனார்கள். கெத்செமனேக்குப் போகிற வழியில் அநேக முக்கியமான படிப்பினைகளானது சீஷர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இவைகளைப் பரிசுத்த யோவான் அவர்களின் சுவிசேஷமானது, 15 முதல் 17 வரையிலான அதிகாரங்களில் பதிவு செய்கின்றதாய் இருக்கின்றது.

கெத்செமனே எனும் வார்த்தையின் அர்த்தம் எண்ணெய் செக்காகும்; இது மிகுந்த அர்த்தமுள்ள பெயராகும். யூதர்கள் ஒலிவ பழங்களை உணவிற்காகவும், வெளிச்சத்திற்காகவும் பயன்படுத்தினார்கள் என்பதை நாம் நினைவுகூருகையில் மற்றும் இயேசுவும் உலகத்திற்கு ஆகாரம் அளிப்பவர் மற்றும் வெளிச்சம் அளிப்பவர் என்பதை நாம் நினைவுகூருகையில், இயேசுவின் ஆத்துமாவை நசுக்கிப்போட்டதான, அவரது சோதனையான அனுபவங்களை, எண்ணெய்க்காக ஒலிவப்பழங்களை நசுக்கி எடுக்கும் தோட்டத்தில், அவர் பெற்றிருப்பது விசேஷித்த விதத்தில் பொருத்தமுடையதாய்க் காணப்படுகின்றது என்று நாம் காண்கின்றோம்.

கெத்செமனே என்பது மலர் தோட்டமாய் இராமல், ஒலிவ மரத்தோட்டமாய் இருந்தது. இவ்விடம் என்று அனுமானிக்கப்படுகின்ற இடமானது, இன்றும் கவனமாய்ப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது மற்றும் பிரான்சிஸ்கான் துறவிகளினால் (Franciscan Monks) பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இந்தத் தோட்டத்தில் மிகப் பழமைவாய்ந்த சில ஒலிவ மரங்களும், மிகவும் பழமை வாய்ந்த கர்வாலி மரம் ஒன்றும் காணப்படுகின்றது. தோட்டமானது இயேசுவினுடைய நண்பர்கள் சிலருக்குச் சொந்தமானதாகக் கருதப்படுகின்றது; மற்றும் இயேசு கைது செய்யப்பட்டபோது, ஏற்பட்ட சத்தம் காரணமாக எழுந்து, துப்பட்டியினால் தன்னைப் போர்த்திக்கொண்டு வந்த வாலிபன், பரிசுத்த மாற்கு அவர்களின் சுவிசேஷத்தினுடைய எழுத்தாளராகிய ஜான் மாற்கு ஆவார் என்றும் கூறப்படுகின்றது (மாற்கு 14:51, 52).

### எச்சரித்தல்

கெத்செமனேக்குப் போகிற வழியில், அவர்கள் மகா ஆபத்தானச் சூழ்நிலைக்குள் பிரவேசித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்று இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் பதியவைக்க முற்பட்டார். அவர், "மேய்ப்பனை வெட்டு அப்பொழுது ஆடுகள் சிதறிப்போம்" என்ற தீர்க்கத்தரிசனத்தை அவர்களுக்குக் குறிப்பிட்டார் (சகரியா 13:7). இதன் காரணமாக அவர்கள் அனைவரும் சோர்வடைவார்கள், இடறுவார்கள், கலங்கிப்போய்விடுவார்கள் என்று தெளிவாய் அவர்களுக்குக்

கூறினார். அவர்கள் எதிர்ப்பார்த்திராதக் காரியங்கள் சம்பவிக்கும் என்று கூறினார்.

கர்த்தருக்கான தனது பக்தியில் முழு நம்பிக்கையுடையவரான பரிசுத்த பேதுரு, இதை மறுத்தார் மற்றும் இது ஒருவேளை மற்றவர்களுடைய விஷயத்தில் உண்மையாய் இருந்திட்டாலும், தன் விஷயத்தில் அப்படியாக இராது என்றும், போதகரை மறுதலிப்பதற்குப் பதிலாக, அவரோடுகூட மரிப்பதற்குத் தான் ஆயத்தமாய் உள்ளதாகவும் தெரிவித்தார். பரிசுத்த பேதுரு மாபெரும் அபாயத்தில் காணப்படுவதாக இயேசு இன்னும் வலியுறுத்தினவராக இருந்தார். பரிசுத்த பேதுரு தனது மாம்சத்தினிடத்தில் மிக அதிகமாய் நம்பிக்கைக் கொண்டவராகவும், தேவனை நோக்கிப்பார்க்காதவராகவும், சோதனைக்கு எதிராக ஜெபத்துடன் விழித்திராதவராகவும் காணப்பட்டார். இயேசு கூறினவைகளை, மறுத்து விளக்கம் அளிக்கும் வண்ணமாகச் சீஷர்கள் அனைவரும் பேசினவர்களானார்கள். அவர்கள் தாங்கள் உண்மையுள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்றும், மரிப்பதற்கு ஆயத்தமாகக் காணப்படுகின்றார்கள் என்றும் தங்களைக் குறித்துக் கூறினார்கள். அவர்கள் மீது எத்துணை கடுமையான சோதனைகள் வரப் போகின்றது என்று அவர்கள் அறியாதவர்களாய்க் காணப்பட்டனர்!

இதில் அன்றுபோல் இன்றுமுள்ள இயேசுவின் பின்னடியார்கள் அனைவருக்கும் படிப்பினை நிச்சயமாய் உள்ளது. நமது கடைசி மூச்சு வரையிலும், கர்த்தருடைய காரணங்களுக்கு/நோக்கங்களுக்கு நேர்மையாய்/உண்மையாய்க் காணப்பட வேண்டுமென்று முழுமையாய் உறுதியுடன் காணப்படுவது சரியே; இத்தகைய உறுதி என்பது ஜெயம் கொள்ளுதலுக்கு மிகவும் அவசியமே. அநேகரால் செய்யப்படுகின்ற தவறு என்னவெனில், சோதனைகளும், பரீட்சைகளும் எவ்வளவு கடினமானதாகக் காணப்படும் என்பதை உணர்ந்துகொள்ளாததும், தேவையின் போதான பரம உதவியின் அவசியத்தினை உணர்ந்து கொள்ளாததுமேயாகும். அப்போஸ்தலன்: "நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாய் இருக்கிறேன்" என்று எழுதியுள்ளார். இப்படியாக அப்போஸ்தலன் குறிப்பிடுகையில், தான் கர்த்தருக்கு முழுக்க உண்மையாய் இருக்கும் அதேவேளையில், தான் தன்னுடைய சொந்த பலவீனங்களையும், இயலாமைகளையும் உணர்ந்துகொள்வதாகவும், ஆனால் பரம உதவியினை தான் விசேஷமாய் நாடுகையில், தான் பலமுள்ளவனாய்க் காணப்படுவதாகவும், தான் விழித்திருந்து, ஜெபம் பண்ணும்போது, தான் சோதனைகளுக்கு எதிராக முன்னெச்சரிக்கப்படுகின்றதாகவும் கூறுகின்றார்.

சந்தேகத்திற்கிடமின்றி இந்த யுகத்தினுடைய முடிவில், இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய நிறைவு நாட்களில், கிறிஸ்துவினுடைய சபைக்கு, கெத்செமனே அனுபவங்கள் கடந்துவரும். இந்தச் சோதனைகளிலும், பரீட்சைகளிலும் நிலைநின்று, ஜெயம்கொண்டவர்களாக வருபவர்களின் கர்த்தரிடத்திலான விசுவாசம் மற்றும் நம்பிக்கையே பலமுள்ளதாய்க் காணப்படும்; இவர்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து, ஜெபம் பண்ணுகிறவர்களாய் இருப்பார்கள் மற்றும் இவர்கள் இப்படியாய் அவைகளுக்கு எதிராய்ப் பாதுகாக்கப்பட்டிருப்பார்கள். நமது கர்த்தர் பரிசுத்த பேதுருவையும், மற்ற அப்போஸ்தலர்களையும், அவர்களுக்கு வரவிருக்கின்ற

சோதனைகள் குறித்து முன்னெச்சரித்தது போலவே, நமக்குச் சமீபமாய்க் காணப்படுகின்றதான மிக நெருக்கடியான பரீட்சைகள் குறித்து நம்மையும் முன்னெச்சரிக்கைச் செய்கின்றார். இப்பாடத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதான அப்போஸ்தலர்களுடைய அனுபவங்களிலிருந்து நாம் நன்மை அடைவோமாக.

## மரணத்திற்கு ஏதுவான துக்கம்

தோட்டத்தை வந்தடைந்தவுடன், இயேசு அப்போஸ்தலர்களில் எட்டுப் பேரை வாசலிலேயே நிறுத்திவிட்டு, இன்னும் சற்றுத் தொலைவில் நிழல்களுக்குள் பேதுருவோடும், யாக்கோபோடும், யோவானோடும் போனார். நடக்கப்போகின்ற ஏதோ ஒன்றிற்காகவும், இதைக் குறித்து இயேசுவினால் அறியப்பட்டிருந்த ஏதோ ஒன்றிற்காக, அவர்கள் அனைவரும் விழித்திருக்க வேண்டும், காவல்காக்க வேண்டும். ஆனால் இப்படியாக எதுவும் நடக்காது என்றே அப்போஸ்தலர்களுக்குத் தோன்றினது. போதகர் மீது அவர்களுக்கு அனுதாபம் இருந்தபோதிலும், மோசமான விளைவுகள் வரப்போவதாக அவர் எதிர்ப்பார்ப்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

நடுராத்திரியாயிற்று, அவர்கள் நேரமே தூங்கும் பழக்கம் உடையவர்களாய்க் காணப்பட்டனர். அன்றைய மாலையில் ஏற்பட்ட அழுத்தம் மற்றும் போதகர் கொடுத்திட்டதான பலமான பாடங்கள், அவர்களிடத்தில் அரைத் தூக்கத்தினை ஏற்படுத்தினது. அவர்கள் விழித்திருந்து, ஜெபம் பண்ணுவதற்குப் பதிலாக தூங்கினார்கள். போதகருக்கு நெருக்கமாய்க் காணப்பட்ட மூவரும்கூடத் தூங்கினார்கள்.

பிதாவோடு தனிமையில் சம்பாஷித்திட விரும்பினவராக, இயேசு கல்லெறியும் தூரம் அப்பால் நிழலுக்குள் மறைந்து சென்றார். அவர் மீது கடந்துவந்திட்டதான வியாகுலத்தின் நிமித்தமாக, அவர் அவ்வப்போது, மனித ஆறுதலை/அனுதாபத்தை நாடினபோது, தமக்கு நெருக்கமானவர்களும்கூட, அனைத்தையும் மறந்து போனவர்களாக, தூக்கத்திலிருப்பதைக் கண்டார். “ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை” என்று தீர்க்கத்தரிசி சரியாகவே கூறியுள்ளார் (ஏசாயா 63:3). அவர் ஒருவராய்த் துயரம் எனும் ஆலையை, தனிமையில் மிதித்திட்டார்.

தமது அப்போஸ்தலர்களுக்குப் புத்திமதி கூறி, அவர்களில் சிலரைத் தோட்டத்தினுடைய வாசலில் விட்டது முதல், போதகர் தம்மைக் குறித்தும், சில மணி நேரங்களில் நடக்க விருக்கின்றதென, எதிர்ப்பார்க்கப்படுகின்றதான முக்கியமான நிகழ்வுகள் குறித்தும் விசேஷமாய்ச் சிந்தனைச் செய்தவரானார். அவர் தமது அபிமான மூன்று சீஷர்களை விட்டுச் செல்லுகையில், அவரது ஆத்துமாவின் மீது சடுதியாக வந்திட்டதான அழுத்தத்தினுடைய பாரத்தினை உணர்ந்தவராக, “என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது - என் மீது வரவிருக்கின்றதான ஆபத்துக்கள் வருவதற்கு முன்னதாக, நான் இப்போதே மரித்துவிடுவேன் போன்றுள்ளது” என்றார். அவர் “மிகவும் கலங்கியிருந்ததாகவும், திகிலடைந்ததாகவும்” அவரைக் குறித்து நாம் வாசிக்கின்றோம். இங்கு இடம்பெறுகின்றதான

வார்த்தைகளுக்கான கிரேக்க வார்த்தையானது, உச்ச அளவிலான கலக்கத்தையும், திகிலடைதலையும் குறிக்கின்றதாய் இருந்து, தனிமையை, நண்பர் அற்ற நிலையை, ஏக்கத்தை அர்த்தப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இரட்சகர் மீது சடுதியாய் வந்திட்டதான மிகுந்த துயரங்களும், நம்பிக்கையின்மையின் உணர்வுகளும் சற்றுநேரம் தொடர்ந்தது; அவர் பிதாவிடம் மூன்றுதரம் ஜெபத்தில் சென்று, இந்த வேளை தம்மைவிட்டுக் கடந்துபோகும்படிக்கு வேண்டிக்கொண்டார்; தம்முடைய இருதயத்தை நொறுக்கிக்கொண்டிருக்கின்றதான கடுமையான அழுத்தமானது கடந்துபோகும்படிக்கு வேண்டிக்கொண்டார். போதகருக்கு இரத்த வியர்வை உண்டாகுமளவுக்குப் பெருந்துயரம் காணப்பட்டதாக, மருத்துவராகிய லூக்கா சுவிசேஷகர் தெரிவித்துள்ளார். இரத்த வியர்வை குறித்த இந்தப் பதிவானது சில பழைய மூலப்பிரதிகளில் இடம்பெறவில்லை என்றாலும், இத்தகைய அனுபவங்களானது, மாதுயரங்களில் காணப்பட்டுள்ளதான மற்றச் சிலருக்கு ஏற்பட்டுள்ளதென மருத்துவர்கள் ஒத்துக்கொள்கின்றனர்.

## போதகருடைய துயரத்திற்கான காரணம்

போதகர் தம்முடைய மரணத்தைக் குறித்து முன்னறிந்தவராக இருக்க மற்றும் இதைக் குறித்துத் தம்முடைய சீஷர்களிடம் அவர் கூறியிருக்க மற்றும் தாம் மரணத்திலிருந்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவார் என்று அவர்களுக்கு நிச்சயமளித்திருக்க, அவர் தம்முடைய மரணத்தை எதிர்ப்பார்த்ததில், கொண்டிருந்த மாதுயரத்தை நாம் எவ்வாறு விளக்குவது? அவரது பின்னடியார்களில் சிலருக்கு இல்லாத அளவுக்கும், ஆம் பொதுவான ஜனங்களுக்கு இல்லாத அளவுக்கும், மரணம் குறித்த எண்ணமானது, மீட்பருக்கு ஏன் இத்தனை பயத்தைக் கொடுத்தது?

சிலுவையில் அறையப்படுதலுக்கு நிகரான (அ) இதற்கும் மேலான அனுபவங்களுள்ள மரணங்களுக்குள்ளாகப் பல நூறு இரத்த சாட்சிகள் கடந்துபோயிருக்கின்றனர். இவர்கள் இயேசுவுக்கு நிகரான கொடுமையான மரணங்களுக்குள் கடந்துசெல்கையில், மிகுந்த தைரியத்தையும், மனோதிடத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் இரட்சகருடைய இத்தகைய மனநிலையையும் மற்றும் அந்த வேளை (அ) பாத்திரம் தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும் என்று மிகவும் ஏக்கமாய் அவர் ஜெபம் பண்ணினதையும் நாம் எப்படி எடுத்துக்கொள்வது?

இந்தக் கேள்வியையும், இதற்கானச் சரியான பதிலையும் புரிந்துகொள்வதற்கு, மீதமான மனுக்குலமிடமிருந்து போதகர் எவ்வளவு வித்தியாசமானவர்/வேறுபட்டவர் என்பதை நாம் நினைவில் கொண்டிட வேண்டும். உலகம் அனைத்தின் மீது, ஒரு மரணத்தண்டனை தீர்ப்புக் காணப்படுகின்றது. நாம் எப்போது மரிக்கப் போகின்றோம் என்பதுதான் கேள்வி என்பதை நாம் அனைவருமே அறிவோம். மரிக்கும் நிகழ்வானது, சில மணி நேரங்களுக்கு அதிகபட்சமாய் நீடிக்கக்கூடியவை என்பதை நாம் அனைவருமே அறிவோம். மரணத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான எந்த நம்பிக்கையும் நமக்கு இல்லை என்பது மாத்திரமல்லாமல், நாம் ஏற்கெனவே பத்தில், ஒன்பதும் மரித்த நிலையில் உள்ளவர்களாகக் காணப்படுவதினால், நம்முடைய

உணர்வுகளானது ஏறக்குறைய மரத்துப்போனதாகவே காணப்படுகின்றது. மரணம் குறித்த விஷயத்தில் நாம் ஏறக்குறைய அலட்சியமானவர்களாகவும், கவனமற்றவர் களாகவும் மற்றும் இதற்கேற்ப கடுமையானவர்களாகவும் காணப்படுகின்றோம்.

## உண்மையான தைரியத்தினுடைய வெளிப்பாடு

மரணத்தைக் குறித்துக் கவலைக்கொள்ளாமல், பயமற்ற நிலையில் போர்வீரர்கள் யுத்தத்திற்கு பாய்ந்து செல்வதுண்டு மற்றும் இதைப்போன்று பாய்ந்திடும் குதிரைகளும் உண்டு. தாங்கள் என்ன செய்கின்றார்கள் என்று முழுக்கப் புரிந்துகொண்டுள்ள நிலைமையிலும், மரணத்தைக் கண்டு மிகவும் பயப்படுகிற நிலைமையிலும், ஆனால் கடமை மற்றும் அன்பினுடைய கட்டளையின் காரணமான கீழ்ப்படிதலின் நிமித்தமாக முன்னேறுகிறவர்கள்தான் மாபெரும் தைரியம் உடையவர்களாய் இருக்கின்றனர். இயேசு இப்படியானதொரு போர்வீரன்தான். மற்றவர்கள் மரணம் என்பது என்னவென்று புரிந்துகொண்டிராததை, அவர் புரிந்துகொண்டிருந்தார். ஜீவனுடைய முக்கியத்துவம் மற்றும் மதிப்புக் குறித்து மற்றவர்களால் உணர்ந்துகொள்ள முடியாததை, இயேசு உணர்ந்துகொண்டவராய்க் காணப்பட்டார்.

இயேசு பரலோக மகிமையைத் துறந்தவராக, ஆவிக்குரிய தளத்தின் சுபாவத்தை விட்டுவிட்டவராக, மனித சுபாவத்தை எடுத்துக்கொண்டார், காரணம் மனிதன் பாவம் செய்திருக்கின்றான் மற்றும் தெய்வீக ஏற்பாட்டின்படி இயேசு மனுஷனுக்கான மீட்கும் பொருளென, அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் மரிக்க வேண்டியிருந்தது. இதுவே அவரைக் குறித்த பிதாவின் சித்தமாயிருந்தது. இந்த நோக்கத்திற்காகவே, அவர் உலகத்திற்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளார். இந்த ஒரு சிந்தையே, அவரது ஜீவியம் முழுவதையும் இயக்கினதாய் இருந்தது. தேவனுடைய சித்தத்தைச் செய்வதிலும், மனுக்குலத்திற்கு ஊழியம் புரிவதிலும், அவர் தினந்தோறும் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்து வந்தார். இப்பொழுது அதன் மாபெரும் உச்சக்கட்டத்திற்கு வந்திருக்கின்றார்.

கர்த்தருக்குக் கொடுத்திருக்கும் இப்பணியில் அவர் உண்மையுள்ளவராய்க் காணப்பட்டாரானால், அவர் தெய்வீக வல்லமையினால் மரணத்தினின்று, அவர் முன்பிருந்த நிலைக்கும், ஜீவதளத்திற்கும் மேலான தளத்திற்கும், நிலைக்கும் உயிர்த்தெழுப்பப்படுவார் என்று பரம பிதா வாக்களித்திருந்தார். இவ்விஷயத்திலான பிதாவினுடைய உண்மையைக் குறித்தும், பிதாவின் வல்லமையைக் குறித்தும் இயேசு ஐயம் கொள்ளவில்லை. ஆனால் பிதாவின் வாக்குத்தத்தமும், ஏற்பாடும் நிபந்தனையின் அடிப்படையிலேயே இருந்தது; நமது கர்த்தர் உண்மையுள்ளவராகக் காணப்பட்டால் மாத்திரமே, அவர் உயர்நிலையான ஜீவனுக்கான உயிர்த்தெழுதலைப் பெற்றுக்கொள்ள முடியும். ஏதேனும் அளவில், பெரியளவிலோ (அ) சிறிய அளவிலோ, அவர் பாவத்தில் ஈடுபடுவாரானால், அவருக்கு பாவத்திற்கான தண்டனையானது, "சாகவே சாவாய்" என்பதாகவே இருந்திருக்கும்.

மூன்றரை வருடங்களாக அவரது ஜீவியமானது, தேவனுக்கும், தெய்வீகச் சித்தத்தினைச் செய்வதற்குமென்று அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. அவர் தெய்வீகச் சித்தத்தினைப் பரலோக பிதாவுக்குப் பிரியமான விதத்தில், முற்றும் முழுமையாகச்

செய்துள்ளாரா? என்பதுதான் கேள்வியாயிருந்தது. இதனோடுகூட இனி அடுத்து சில மணிநேரங்களில் வருகின்றதான அனுபவங்கள் வாயிலாகத் தம்மால் சரியான தைரியத்துடனும், சரியான விசுவாசத்துடனும், சரியான கீழ்ப்படிதலுடனும் கடந்துபோக முடியுமா, தாம் கடந்து போவாரா? அல்லது தவறிப்போய், தம்முடைய அனைத்தையும் மரணத்தில் இழந்துவிடுவாரா? என்ற கேள்விகள் அவருக்குள் குவிந்தன.

## போதகருக்குப் பரிந்துபேசுபவர் எவருமில்லை

இப்படியாக அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க நாடுகின்ற நம்மிடமிருந்து, நமது போதகருடைய விஷயம் எவ்வளவு வேறுபட்டிருந்தது என்று நாம் பார்க்கின்றோம். நாம் இழந்துபோய்விடுவதற்கென்று எதுவுமில்லை; ஏனெனில் நம் சந்ததியினர் அனைவரும் மரணத் தண்டனை தீர்ப்பின் கீழ்க் காணப்படுகின்றனர். இன்னுமாக இயேசுவினுடைய பின்னடியார்கள், தங்களுடைய பாவங்களுக்காக மரித்திட்ட தேவனுடைய குமாரன் அவரே என்றும், அவரது புண்ணியமானது நமது அபரிபூரணங்களினாலான குறைகளைச் சரிசெய்துவிடுகின்றது, ஏனெனில் நாமும் அவரில் நிலைத்திருந்து, பிதாவின் சித்தத்தைச் செய்ய விரும்புகின்றவர்களாய் இருக்கின்றோம் என்றும் உணர்ந்துகொள்கின்றனர்.

ஆனால் ஒருவேளை போதகர் தவறிப் போய்விடுவாரானால், அவரது குறைவுகளைச் சரி செய்திடுவதற்கு அவருக்கு எவருமில்லை. அவர் தவறிடுவது என்பது நித்தியமான மரணத்தைக் குறிப்பதாகிவிடும்; இன்னுமாக விசேஷித்த உண்மைக்கெனத் தேவனால் வாக்களிக்கப்பட்டிருந்த அந்த விசேஷித்த ஆசீர்வாதங்கள் அனைத்தையும் இழந்திடுவதையும் குறிப்பதாகிவிடும். மேசியாவின் இராஜ்யத்தின் வாயிலாக, மனுக்குலத்தைப் பாவம் மற்றும் மரணத்தின் நிலைமைகளினின்று தூக்கிவிடும் பிதாவின் வேலையைப் புரிந்திடுவதற்கான மாபெரும் சிலாக்கியத்தினைக்கூட இழந்துவிடுவதைக் குறிப்பதாகிவிடும். சுருக்கமான வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், போதகருடைய நித்தியமான ஜீவனும் மற்றும் தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் மேலாக, பிதாவின் வலது பாரிசத்தில் உயர்வாய் அவர் உயர்த்தப்படுவதும், அழியாமையும், கனமும், மகிமையுமான அவருக்கானவைகள் யாவும், அந்த இரவில், கெத்செமனேயில் தராசில் காணப்பட்டது.

இவைகள் அனைத்தையும் போதகர் உணர்ந்தபோது, அவர் இந்த எண்ணங்களினால் அமிழ்த்தப்பட்டார் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தமக்கு முன்பு காணப்படுகின்றதான விசேஷித்த உபத்திரவங்களிலிருந்தும், கோரமான/பயங்கரமான அனுபவங்களுள்ள வேளையினின்றும் தாம் தப்புவிக்கப் படத்தக்கதாகவும், தாம் கடாட்சிக்கப்படத்தக்கதாகவும், தெய்வீகத் திட்டமானது வேறு விதத்தில் நடந்தேறுவதற்கு வாய்ப்புள்ளதா என்று அவர் விரும்பினதிலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை! அந்த அனுபவங்களினுடைய பயங்கரமான பாகமானது, அவர் தேவதுஷணம் புரிந்தவராக, தேவனுக்கும், நீதிக்கும் சத்துருவாக,

பாதகனாக/குற்றவாளியாகக் கையாளப்படுவதாய் இருந்தது.

## நமது கர்த்தர் எதற்குப் பயப்பட்டார்

இக்காரியங்களானது சீரழிந்த, சீர்க்கேடான ஆத்துமாவிற்குப் பெரிதாய் ஒன்றும் இராது, ஆனால் பிதாவுக்கு அன்பினாலும், உண்மையினாலும் நிரம்பிக் காணப்படுகிற இருதயத்திற்கோ, இத்தகைய அனுபவம் என்பது பயங்கரமானதாய்க் காணப்பட்டிருக்கும்; அதாவது பிதாவின் சித்தத்தைச் செய்யத்தக்கதாக, தம்முடைய அனைத்தையும் தியாகம் பண்ணிட்டவர், தம்முடைய பரலோக மகிமையை, தம்முடைய பூமிக்குரிய நலன்களைத் தியாகம் பண்ணிட்டவர் – இப்படிப்பட்டவர் தேவனுக்கு எதிராக தேவதூஷணம் பேசிட்டவராக கருதப்படுவதும், அவர் பாதகனென, குற்றவாளியெனச் சிலுவையில் அறையப்படுவதும், அவருக்குப் பயங்கரமானவைகளாகவே காணப்பட்டிருக்கும்! உயர்க்குணமுள்ளவரும், நேர்த்தியானவருமான இயேசுவுக்கு, அதாவது "பரிசுத்தரும், மாசில்லாதவரும், குற்றமற்றவரும், பாவிகளுக்கு விலகினவருமானவர்" என்று யாரைக் குறித்து எழுதப்பட்டிருக்கின்றதோ, அவருக்கு இவைகள் பயங்கரமான அனுபவங்களாகவே காணப்பட்டிருக்கும்!

இந்த அவமானமே, தம்மை விட்டுக் கடந்துபோகக்கூடுமோ என்று இயேசு ஜெபம் பண்ணினார். அவர் தாம் சாகக்கூடாது என்று ஜெபம் பண்ணிடவில்லை; ஏனெனில் இந்த நோக்கத்திற்காகவே (மரிப்பதற்காகவே) தாம் பூமியில் வந்திருக்கின்றார் என்றும், தம்முடைய மரணத்தின் மூலமாக மாத்திரமே, மனுஷஜாதியின் மீதான மரணத் தண்டனை மாற்றப்பட முடியும் என்றும் அறிந்திருந்தார். அவர் தம்முடைய மரணத்தைக் குறித்து அடிக்கடி பேசியிருந்தார்; மரணத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று அவர் ஒரு கணம்கூட எண்ணினதில்லை. "மாம்சமும், இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை" என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். அந்த வேளையினுடைய விசேஷித்த அவமானத்தை மாற்றிடுவதற்குப் பிதாவிடம் ஏதேனும் வழி இருக்கும் என்றுதான் அவர் எதிர்ப்பார்த்தார். எனினும் போதகர் தமக்கான மிகுந்த துயரமான வேளையிலுங்கூட, "ஆகிலும் என் சித்தப்படியல்ல, உம் சித்தப்படியே ஆகக்கடவது" என்று ஜெபம் பண்ணினார்.


போதகருடைய கெத்செமனே அனுபவங்களானது, பயத்துடன் இணைந்து காணப்பட்டது என்று பரிசுத்த பவுல் நமக்கு உறுதியளிக்கின்றார்; இது மரித்துவிடுவோம் என்பதற்கான பயமாய் இராமல், மாறாக மரணத்திலேயே என்றென்றும் காணப்பட்டுவிடுவது குறித்த பயமாக இருந்தது; முற்றும் முழுமையான கீழ்ப்படிதல் எனும் நிபந்தனையின் பேரில் பிதாவினால் வாக்களிக்கப்பட்டுள்ளதான மகிமையான உயிர்த்தெழுதலுக்குப் பாத்திரமாகக் கருதப்படாமல் போவது குறித்த பயமாக இருந்தது. "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று (உயிர்த்தெழுதல் வாயிலாக) இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு" (எபிரெயர் 5:7) என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். அவர் மரணத்திலிருந்து இரட்சிக்கப்பட்டார்; மற்றும் இதைவிட மேலாக அவர் மரணத்திலிருந்து (உயிர்த்தெழுதல் வாயிலாக) இரட்சிக்கப்படுவார் என்ற நிச்சயம் பிதாவினால் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

## பரத்திலிருந்து பலப்படுத்தப்பட்டார்

இதுவே தேவனிடமிருந்து ஒரு தேவதூதன், அவருக்குத் தோட்டத்தில் தோன்றி, அவரைப் பலப்படுத்தினார் என்ற வார்த்தைகளுக்கான விளக்கமாகும்; இயேசு அந்நிமிடம்வரை உண்மையாய் இருந்திருக்கின்றார் என்றும், சீக்கிரத்தில் வரவிருக்கின்ற சோதனையான வேளையில், தெய்வீக ஆசீர்வாதமானது அவரோடே காணப்படும் என்றும் பிதாவிடத்திலிருந்ததான வாக்குறுதியை, தூதன் இயேசுவுக்குக் கொடுத்தார். அந்தக் கணம் முதல் அனைத்துப் பயங்களும், வியாகுலங்களும் போய்விட்டன. பிதா இதுவரையிலும் அங்கீகரித்துள்ளாரெனில், மற்றும் பிதாவின் ஆசீர்வாதமும், புன்முறுவலும் தம்மோடுகூட வருமாயின், எது வந்தாலும் அவரால் அனைத்தையும் சந்திக்க/சகிக்க முடியும். மீதமான இராத்திரி வேளையிலும், பின்தொடர்ந்து வந்த நாளிலும், மிகவும் கடுமையான சூழ்நிலைகள் மத்தியில், இயேசு அமைதியிலும் அமைதியுள்ளவராய்க் காணப்பட்டார். தமக்காக அழுதவர்களை அவர் ஆறுதல் படுத்தினார்; தம்முடைய தாயாரை, உண்மையுள்ள பரிசுத்த யோவானிடம் ஒப்படைத்தார்.

போதகருடைய இந்த அனுபவங்களில், அவரது சீஷர்களின் அனுபவங்களை அடையாளம் காணலாம். அவர்களது பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றும், பிதா அவர்களை அன்புகூருகின்றார் என்றும், அவரது கிருபை அவர்களுக்குப் போதுமானது என்றும், மீட்பருடைய நீதியின் வஸ்திரமானது, அவர்களை மூடுகின்றது என்றும் அவர்களுக்கு உறுதியளிக்கப்படுகையில், அவர்கள் மரணத்தைக் கண்டு அச்சமடைந்திருந்தாலும், இம்மாதிரியானச் சூழ்நிலைகளில் அவர்களால் தைரியமாய்க் காணப்பட முடியும்.

போதகருக்கும், அவரது பின்னடியார்களுக்கும் இடையிலான மாபெரும் வித்தியாசமானது நினைவில் கொள்ளப்பட வேண்டும்; அதென்னவெனில்: "ஜனங்களில் ஒருவனும் அவரோடு இருக்கவில்லை" என்பதான போதகருடைய விஷயத்திலிருந்து நம்முடைய விஷயம் வேறுபட்டதாய்க் காணப்படுகின்றது; போதகர் நம்மோடுகூடக் காணப்படுகின்றார்; "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று போதகர் கூறுகின்றார். இதனோடுகூடக் கிறிஸ்துவினுடைய சகோதரரின் மத்தியிலான ஆவியின் ஐக்கியத்தினையும் நாம் பெற்றிருக்கின்றோம்; நம்மோடுகூட விழித்திருந்து, நம்மோடுகூட ஜெபம் பண்ணுகிறவர்களாகிய சகோதரர்களின் உற்சாகப்படுத்தும் வார்த்தைகளானது, ஒவ்வொரு சோதனையான வேளையிலும் பலப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. தெய்வீக ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குகள் அனைத்திற்குமாக நாம் அவருக்கு நன்றி செலுத்திக்கொண்டு, தேவன் தம்முடைய குமாரன் வாயிலாக கொடுத்திட்டதான பலத்தினுடைய பலத்தில் நம்முடைய கெத்செமனேக்குள் கடந்து செல்வோமாக.



நினைவுகூருதலின் தியானங்கள்

# யூதாசினால் காட்டிக்கொடுக்கப்படுதல்



# கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார்

## யோவான் 18:1-14

### *"அவர் அசட்டைப்பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும் ஆவார்."* ஏசாயா 53:3

கடைசி இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, திராட்சச்செடி மற்றும் அதன் கொடிகள் குறித்துத் தம்முடைய சீஷர்களுடன் பேசின பிற்பாடு, நமது கர்த்தர் அருமையான ஓர் ஜெபம் ஏறெடுப்பது குறித்து யோவான் 17-ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அநேகமாக, நடுராத்திரி வேளையில், இயேசு பதினொரு பேருடன் எருசலேமின் நுழைவாயிலைக்கடந்து வெளியேபோய், கெதரோன் என்னும் சிறு ஆற்றைக்கடந்து, அதற்கு அப்புறத்திலுள்ள கெத்செமனே தோட்டம் என்று அழைக்கப்படும் ஒலிவமரத் தோட்டத்திற்குப் போனார். ஒருவேளை இது பொதுவான தோட்டமாக அல்லது நமது கர்த்தருடன் நட்புறவில் காணப்படும் யாரோ ஒருவருக்குச் சொந்தமான தோட்டமாகவும் கூட இருக்கலாம். இத்தோட்டமிருந்த இடமென கருதப்படும் இடமானது, இன்றும் பல நூற்றாண்டுகளாக பூங்காவாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இத்தோட்டத்தைக் காணவரும் பார்வையாளர்களை வரவேற்க விரும்பும், துறவிகள் பொறுப்பில், இத்தோட்டம் இப்பொழுதும் காணப்படுகின்றது. தற்போது இந்தத் தோட்டத்தில் ஆறு (அ) எட்டு மிகப் பெரியதும், மிகப் பழமையானதுமான ஒலிவ மரங்கள் காணப்படுகின்றது. இந்த ஒலிவ மரங்களைப் பார்க்கும்போது, குறைந்த பட்சம் ஆயிரம் வருடங்களான மரம் போன்று காட்சியளிக்கும்; ஆனால் அவைகள் இன்னும் அதிகமான வருடங்களைக் கடந்ததாகவே இருக்க வேண்டும்.

நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோதும், அவர்களுக்காக ஜெபித்தப்போதும், அவர் திடமனதுடன் காணப்பட்டதாகத் தெரிகின்றது. அதாவது, அவர்களுடைய இருதயங்கள் கலங்காதிருப்பதாக என்று அவர்களுக்கு அவர் புத்திமதிக் கூறிக்கொண்டிருந்தபோது, அவருடைய சொந்த இருதயம் கலக்கம்கொள்ளாமல்தான் காணப்பட்டது. ஆனால், அந்தச் சிறுகூட்டம் கெத்செமனேயை நோக்கி நடந்துக்கொண்டிருக்கையில், நம்முடைய அருமை மீட்பருடைய உணர்வுகளை, மிகுந்த பாரம் அழுத்தினதை நம்மால் புரிந்துக்கொள்ள முடிகின்றது. "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" (மத்தேயு 26:38) என்று அவர் கூறினது நம்முடைய நினைவுக்கு வருகின்றது. தற்போது அவர் கெத்செமனேவுக்குச் சென்றுகொண்டிருப்பதென்பது, முற்காலங்களில் அவ்விடத்திற்கு அவர் சென்றதிலிருந்து மிகவும் வேறுபட்டதாய் இருந்தது. ஆண்டவருடைய துக்கத்தைக் கண்டு, அப்போஸ்தலர்கள் சூழ்நிலையைக் கொஞ்சம் கிரகித்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லையென்றாலும், அடுத்து என்ன சம்பவிக்கப்போகின்றது என்பதைச் சற்றே புரிந்திருந்தார்கள்.

சுவிசேஷகர்கள் பதிவு செய்ததிலிருந்து நாம் அறிந்துக்கொள்வது என்னவெனில், தோட்டத்திற்கு வந்தபோது, நமது கர்த்தர் அப்போஸ்தலர்களில் எட்டுப் பேரைத் தோட்டத்தின் நுழைவுவாயிலிலேயே நிறுத்திவிட்டு, தமக்கு

நெருக்கமானவர்களாகிய பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் தம்முடன் கூட உள்ளே கூட்டிக்கொண்டு போனார் மற்றும் அது விசேஷமான சோதனைக்கான வேளையாய் இருந்தபடியினால், அவர்களனைவரும் விழித்திருந்து ஜெபம் பண்ணும்படிக்கு எச்சரித்தார். அவர்களைவிட்டு அவர் அப்புறம் சென்று, பிதாவுடன் மறைவில் உரையாடினார். அவருடைய உணர்வுகளை, அவருக்கு அன்பாய் இருந்த சீஷர்களிடம் கூட அவர் பகிர்ந்துக்கொள்ளவில்லை, கொள்ளவும் முடியாது. அவர் கடந்துப்போகின்ற பரீட்சையை/சோதனையை அவர்களால் புரிந்துக்கொள்ள முடியாது. அவர்கள் இன்னமும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. ஆகவே அவருடைய மிகுந்த சோதனையான வேளையில், இயேசு தனிமையிலேயே காணப்பட்டார், "ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை" (ஏசாயா 63:3).

நம்முடைய கர்த்தருக்கு இரத்த வியர்வை வருமளவுக்கு, அவருடைய நரம்பு மண்டலத்தின் மீது தாக்கம்கொள்ளத்தக்கதாகக் காணப்பட்ட அவருடைய சோதனையினுடைய உண்மையான அம்சத்தைப் புரிந்துக்கொள்வதில், பெரும்பாலானவர்களுக்கு, ஏன் கிறிஸ்தவ ஜனங்களுக்குங்கூடச் சிரமம் இருக்கின்றது. அநேகர் நம்முடைய கர்த்தருடைய (சோதனையின்) பாதையுடன், குறிப்பிடத்தக்க தைரியத்துடன் மரணத்திற்குக் கடந்துச் சென்ற இரத்த சாட்சியாய்க் காணப்பட்ட கர்த்தருடைய பின்னடியார்களில் சிலருடைய பாதையை ஒப்பிட்டுப்பார்த்து, இவர்களைக் காட்டிலும் பூரணமாய்க் காணப்பட்ட நமது கர்த்தருக்கு, இன்னும் அதிகமான பாடுகள் படுவதில், கஷ்டம் இருந்திருக்காது என எண்ணுகின்றனர். உண்மையைத் தெரிந்துக்கொள்வதற்கு, அநேக விஷயங்கள் மனதில் கொள்ளப்பட வேண்டும்:

(1) ஜீவனுக்கான உரிமையைப் பூரணமாய்ப் பெற்றிருந்த நமது கர்த்தர், தம்முடைய ஜீவனை மரணத்திற்குக் கையளிப்பதென்பது, இழந்து போகப்பட்டதும், பலவீனமான ஜீவனுமாய் இருப்பதை, அதிக காலம் வைத்திருக்க முடியாதவர்களால், அந்தப் பலவீனமான ஜீவனை மரணத்திற்குக் கையளிப்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். (2) பத்தில் ஒன்பது பாகத்திலும் மரித்துவிட்ட நம்முடைய சந்ததிக்கு, ஜீவனுடைய மாபெரும் மதிப்புபற்றின உணர்ந்துக்கொள்ளுதல் மந்தமானதாகவே இருக்கின்றது. அதாவது, நம்முடைய சந்ததியினுடைய அனுபவங்கள் அனைத்தும் மரணத்துடன் தொடர்புடையதாக இருப்பதினால், நம்முடைய சந்ததி, மரணத்தை வித்தியாசமான ஏதோ ஒன்றாகக் கருதுவதில்லை. ஆனால், இப்படியாக நம்முடைய கர்த்தருடைய விஷயத்தில் இருக்கவில்லை. அதாவது, பிதாவுடன் ஆரம்பம் முதல் காணப்பட்டவரும், அனைத்தையும் உண்டுபண்ணினவருமாகிய, "ஜீவனின் அதிபதியினுடைய" விஷயத்தில் இப்படியாக இருக்கவில்லை. அவரைப்பொறுத்தமட்டில் ஜீவன் என்பது, மிகவும் விலையேறப்பெற்ற அருளாக, சிலாக்கியமாக, சந்தோஷமாக இருந்தது. ஆகவே பத்தில் ஒன்பது பாகத்தில் ஏற்கெனவே மரித்துப்போனவர்களாகவும், உணர்வுகள் அனைத்திலும் மழுங்கிப்போனவர்களாகவும் காணப்படும் நம்மைப் பார்க்கிலும், அவருக்கு மரணம் மிகவும் பயங்கரமானதாகக் காணப்பட்டது. அவர் ஒருவேளை மரணம்வரைக்கும் உண்மையுள்ளவராய் இருப்பாரானால், அவருக்கு

உயிர்த்தெழுதல் கிடைக்கும் என்ற பிதாவினுடைய வாக்குத்தத்தத்தைப் பெற்றிருந்தார் என்பது உண்மைதான்; மற்றும் அவர் பிதாவின் வாக்குத்தத்தத்தை நம்பினார் என்பதிலும் ஐயமில்லை. அவர் பிதாவினிடத்தில் கொண்டிருந்த விசுவாசத்திற்கு, அவருடைய முழு வாழ்க்கையும் திரளான சாட்சியங்களை அளிக்கின்றது. எனினும் அவருடைய விஷயத்தைப் பொறுத்தமட்டில் நம்மைப்பார்க்கிலும், அவருக்கான விசுவாச சோதனையானது மிகவும் நெருக்கடியானதே. பறிமுதல் பண்ணப்பட்ட ஜீவனில், சிறிதளவையே நாம் ஒப்புக்கொடுக்கப்பெற்றிருக்கின்றோம். இன்னுமாக, கிறிஸ்து மூலமான எதிர்க்காலத்திற்குரிய பிதாவின் வாக்குத்தத்தம் மாத்திரம் நமக்கிராமல், நம்முடைய அருமை மீட்பரின் உயிர்த்தெழுதலில் செயல்பட்ட பிதாவின் வல்லமைக்கான உதாரணமும் கூட நமக்கு இருக்கின்றது. ஆனால், இப்படியான தெய்வீக வல்லமைக்கான சான்றுகள் எதுவும் நமது கர்த்தருக்கு இருக்கவில்லை. தெய்வீக வாக்குத்தத்தத்தின்படி அவரே, "பிதாவின் சிருஷ்டிகளில் முதற்பலனான வராகவும்," "மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவராகவும்" இருக்க வேண்டியிருந்தது (கொலோசெயர் 1:18; 1 கொரிந்தியர் 15:20).

ஆனால், இவைகளனைத்தும் அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்திலேயே அவரால் கருதப்பட்டு, மதிப்பிடப்பட்டு மற்றும் ஏற்றுக்கொள்ளவும் பட்டுவிட்டது. ஆடுகளுக்காக தாம் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பது அவசியம் என்றும், தாம் அப்படியாக ஒப்புக்கொடுக்கப் போவதாகவும் அவர் ஏற்கெனவே சீஷர்களுக்குத் தெரிவித்துள்ளார் (யோவான் 10:15). ஆகவே, "பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்" என்று நமது அருமையான மீட்பர் ஜெபம் பண்ணினதை, அவர் மரணத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வாய்ப்பு இருக்குமானால்... என்ற அர்த்தத்தில் கூறினார் என்று நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. பாவத்திற்கான பலியாக, தாம் உயர்த்தப்படாதது வரையிலும், உலகம் தம்மிடத்திற்கு இழுக்கப்படாது; அதாவது, நம்முடைய பாவங்களுக்காக அவர் மரிப்பதும், அவருடைய மகிமைக்குள் பிரவேசிப்பதும் அவசியம் என்பதை அவர் ஏற்கெனவே அறிந்திருந்தார்; மற்றும் சீஷர்களுக்கும் இதை ஏற்கெனவே அறிவித்திருந்தார். (யோவான் 3:14; 12:32).

தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும் என்று அவர் வேண்டிக்கொண்ட பாத்திரமானது, அவர் நியாயப்பிரமாணத்தை மீறினதாகக்கூறி அவரைக் கைதுச்செய்து, பொதுவிசாரணை அவருக்கு நடத்தி, அவரைக் குற்றவாளி என்று தீர்ப்பிட்டு, பிற்பாடு அவரைக் குற்றவாளி/பாதகனெனச் சிலுவையில் அறையப் படுதலின் காரணமாகக் காணப்படும் அவமானத்தையும், நிந்தனையையும் குறிக்கின்றதாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய பாவங்களுக்காக, பொதுவான மனுஷர்கள் மரிப்பதுபோன்று, எவ்விதமான விசேஷித்த அவமானமில்லாமல் அவர் மரிப்பதென்பது ஒரு காரியமாகவும், அவர் இப்படி உச்சக்கட்டமான அவமானத்திலும், கனவீனத்திலும், இகழ்ச்சியிலும் மரிக்க வேண்டுமென்பது வேறு காரியமாக இருக்கின்றது. அநேகமாகப் பிதாவினுடைய ஞானத்தின்படி, இந்தக் கடைசி அம்சமானது இவைகளெல்லாம் நிறைவேறப்போகும் தருணம்வரையிலும், நம்முடைய அருமையான மீட்பருக்கு ஏறக்குறைய மறைத்தே

வைக்கப்பட்டிருந்தது. மேலும், மனிதனுக்கான ஈடுபலியைச் செலுத்தும் விஷயத்தில், ஒரு பாவி பாடுபடுவதைப்பார்க்கிலும் அதிகமாய், தாம் பாடுபடுவதற்குரிய எவ்விதமான அவசியமும் இருப்பதாக நம்முடைய கர்த்தருக்குத் தெரியவில்லை. ஆகவே, "இப்பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்" என்று அவருடைய ஜெபம் காணப்பட்டது. அப்போஸ்தலர் கூட இந்த வித்தியாசத்தை உணர்ந்தவராக, "மரணபரியந்தம் தாழ்த்தினார்" என்று கூறிய பின்னர், "அதாவது, சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத்தாமே தாழ்த்தினார்" என்று கூறுகின்றார் (பிலிப்பியர் 2:8).

சிலுவையின் மரணமும், அதனோடு கூட உள்ள கனவீனம், நிந்தனை முதலியவைகளும், நம்முடைய முடிந்தமட்டுமுள்ள கணிப்பின்படி, நமக்கான ஈடுபலியின் விலைக்கு அவசியமில்லை என்று காண்கின்றோம். ஏனெனில், "அதை நீ புசிக்கும் நாளிலே, நீ சிலுவையில் அறையப்பட்டு, கனவீனமடைந்து, எல்லோர் முன்பும் கொடியவனாகப் பார்க்கப்பட்டுச் சாவாய்" என்பதாக தண்டனை காணப்படவில்லை. தண்டனை மரணமாக இருக்கின்றபடியினால், நம்முடைய கர்த்தருடைய மரணம் மாத்திரமே, மனிதனுக்கான ஈடுபலித் தொகையெனப் போதுமாய் இருந்திருக்கும் (ஆதியாகமம் 2:17). எனினும், இந்த அதிகப்படியான (அவமானத்தின்) அம்சமானது, பிதாவினால் அவசியமானது என்று கருதப்பட்டப்படியால், "பாத்திரம்" நீங்கவில்லை. "தம்முடைய நேச குமாரனுடைய" இருதயத்தின் உண்மையை அதாவது, குமாரனுக்குத் தம்முடைய சொந்த சுபாவமாகிய தெய்வீகச் சுபாவத்தையும், தம்முடைய இராஜ்யத்தில் உடன் சுதந்திரத்தையும் கொடுத்துச் சீக்கிரத்தில் மிகுதியாய் உயர்த்தவும், மாபெரும் ஆசீர்வாதத்தையும் கொடுக்க வேண்டுமென்று, தாம் திட்டம் பண்ணியுள்ளபடியினால், குமாரனுடைய இருதயத்தின் உண்மையைத் தமக்கு மாத்திரமல்லாமல், அறிவுடைய தம்முடைய சிருஷ்டிகள் அனைத்திற்கும் நிரூபிப்பதற்கென இப்படியான உச்சக்கட்டமான கீழ்ப்படிதலை, பரீட்சையாக வைப்பது பிதாவுக்கு அவசியமாய் இருந்தது. மேலும், நம்முடைய அருமை மீட்பருடைய உண்மையானது முழுமையாய் உறுதிப்படுத்தப்பட்டது. "அவர் அவமானத்தை எண்ணாமல்..." என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். அதாவது, பிதாவுக்குப் பிரியமாய் இருப்பதற்கு முன்பாக, பிதாவினுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முன்பாக, கர்த்தருக்கு அவமானங்கள் ஒரு பொருட்டாய் இருக்கவில்லை (எபிரெயர் 12:2). அவமானம் அடைதல் எனும் அம்சத்தை நீக்கிவிடுவதற்கான வாய்ப்புள்ளது என்ற எண்ணம் அவருக்குக் காணப்பட்டதுவரையிலும், கூடுமானால் நீங்கிவிடட்டும் என்று பதற்றத்துடன் இயேசு எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால், இப்படியாக நீக்குவது பிதாவின் சித்தமல்ல என்பதை அவர் உணர்ந்தவுடனே, "என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" என்று அவருடைய இருதயம் காணப்பட்டது. பிதாவின் சித்தம் தொடர்புடைய முடிவானது, உடனடியாகப் பலத்தைக்கொண்டு வந்தது. தேவனுடைய பலத்திலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் அவர் இப்பொழுது எந்த அனுபவத்தையும் சந்திக்கத் தயாரானார்.

இதற்கிடையில், சில நாட்களுக்கு முன்னதாக இயேசுவைக் காட்டிக் கொடுப்பதாகப் பிரதான ஆசாரியனுடன் ஒப்பந்தம் போட்டிருந்த யூதாஸ், அதாவது இராப்போஜனம் முடிந்தவுடன் தன்னுடைய கொடிய திட்டத்தை நடத்தும்படிக்கு மேல் வீட்டறையை விட்டுப் புறப்பட்ட யூதாஸ், இயேசுவைக் கைதுச்செய்து, பஸ்காவிற்கு முன்னதாக அவருக்கு மரணத் தண்டனை அளிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கும் போர்ச்சேவகரின் கூட்டத்தையும், பிரதான ஆசாரியர், பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு வந்தான். இந்தப் போர்ச்சேவகர்கள் அடங்கிய கூட்டத்தில், 600 உரோம போர்ச்சேவகர்கள் இருந்தார்கள் என்று பொதுவாய் நிலவிவரும் கருத்தை நாம் முற்றிலுமாக நிராகரிக்கின்றோம். இங்கு அனுப்பப்பட்ட போர்ச்சேவகர்கள், இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் போர்ச்சேவகர்கள் பொதுவாய் நடந்துக்கொள்வதிலிருந்து, வித்தியாசமாய்ச் செயல்பட்டனர். இதுவுமல்லாமல், இந்தப் போர்ச்சேவகர்கள் உரோமின் பிரதிநிதிகளாகிய பிலாத்துவினால் அல்லது ஏரோதினால் அனுப்பப்படாமல், உரோம படையினுடைய கட்டளையின் கீழ்க் காணப்படாத பிரதான ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்களால்தான் அனுப்பி வைக்கப்பட்டனர் என்று அனைத்துச் சுவிசேஷகர்களும் பதிவு செய்துள்ளனர். இயேசுவைக் கைதுச் செய்த இந்தப் போர்ச்சேவகர்கள், யோவான் 7:32-46 வரையிலான வசனங்களில் இடம்பெறும் சேவகர்கள்தான் என நாம் எடுத்துக்கொள்கின் றோம்.

மத ரீதியிலான விஷயங்களில், யூத ஆலோசனை சங்கத்தாருக்கு ஓரளவுக்கு அதிகாரம் இருந்ததாகவும், கைதுச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டதாகவும், ஆனால் உரோம ஆளுநரின் சம்மதமில்லாமல் யூத ஆலோசனை சங்கத்தாருக்கு, குற்றவாளிகளை மரணத் தண்டனைக்கு ஒப்புக்கொடுக்க முடியாது என்பது தெரிகின்றது. அப்போஸ்தலர்கள் அநேக தருணங்களில் யூதர்களுடைய இந்த (ஆலோசனை சங்கத்தாரின்) அதிகாரிகளால் கைதுச் செய்யப்பட்டுள்ளதை நாம் நினைவுகூருகின்றோம். அப்போஸ்தலர் 5:17, 18, 22, 25-40 வரையிலான வசனங்களைப் பார்க்கவும்.

பிரதான ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்களுடைய அதிகாரிகளின் கீழ்க் காணப்பட்ட இந்தச் சேவகர்களை, மத்தேயுவும், மாற்கும், "திரளான ஜனங்கள்" என்று கூறுகின்றனர். மேலும் இவர்கள், பொதுவான ஜனங்களிடம் பொதுவாய்க் காணப்படும் பட்டயங்களையும், தடிகளையும் பெற்றிருந்தார்கள் என்று இயேசுவினுடைய வார்த்தைகளிலிருந்து தெரிகின்றது. இவர்கள் உரோம சேவகர்களின் ஆயுதமாகிய ஈட்டியைக்கொண்டிருந்தார்கள் எனக் கர்த்தர் கூறவில்லை. இக்கருத்தை, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரன்தான் இயேசுவின் மீது முதலாவதாகக் கைப்போட்டதன் விளைவாக, பேதுருவின் பட்டயத்தினால் தாக்கப்பட்டான் என்ற உண்மையானது இன்னும் உறுதிப்படுத்துகின்றது. ஒருவேளை உரோம போர்ச்சேவகர்கள்தான் இவ்விடத்தில் பொறுப்பேற்றிருந்திருப்பார்களானால், பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனுக்கு அங்குச் செயல்படுவதற்கு அதிகாரம் இருந்திருக்காது என்பதில் ஐயமில்லை.

யூதாசின் வழிகாட்டுதலின் கீழ் இயேசுவைத் தேடி வந்த இந்தக் கூட்டத்தார், இயேசுவும், அப்போஸ்தலர்களும் சுமார் ஒருமணி நேரத்திற்கு முன்னதாகவே வெளியேறி கடந்துப் போய்விட்ட மேல் வீட்டு அறைக்குத்தான் முதலாவதாகச் சென்றிருக்க வேண்டும். இயேசுவும் பதினொரு பேரும் மேற்வீட்டறையை விட்டுக்கடந்துப் போயிருப்பதைக் கண்டபோது, அவர்களைக் கெத்செமனே தோட்டத்தில் கண்டுபிடிக்கலாம் என்பதை யூதாஸ் அறிந்திருந்தான். காரணம், "இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தார்." காட்டிக்கொடுத்த காரியம் தொடர்புடையதாய் மற்றச் சுவிசேஷகர்களால், பதிவு செய்யப்பட்ட காரியங்களை, யோவான் பதிவு செய்யாமல் விட்டுவிட்டார். அநேகமாக அன்பான சீஷனாயிருந்த யோவான், அவ்வுண்மைகளினிமித்தம் மிகவும் வெட்கமடைந்ததால், அவைகளைக்குறிப்பிட அவர் விரும்பவில்லைபோலும். யூதாசின் நம்பிக்கை துரோகம் போன்று, வெகு சில சம்பவங்களே நடந்துள்ளது. துரோகியின் ஸ்தானமானது, மிகுந்த இழிவானவர்கள் மத்தியில்தான் காணப்படுகின்றது என, தவறான மனநிலையில் காணப்படும் மனுக்குலம் கூட உணர்ந்துள்ளது. ஆண்டவருடைய இப்படிப்பட்ட அன்புக்கும், இரக்கத்திற்கும், நன்மைகளுக்கும்/நற்குணங்களுக்கும் எதிரான இப்படியான நம்பிக்கைத் துரோகச் செயல்கள், சர்வ சாதாரணமானதல்ல என்பதில் நாம் மகிழ்கின்றோம். எனினும் கர்த்தருடைய ஜனங்களின் அனுபவத்தில், இதற்கு இணையான அனுபவங்கள் காணப்படுகின்றன. அதாவது, "சகோதரர்களால் வரும் மோசங்கள்" கர்தருடைய ஜனங்களுக்கு உண்டு. இது, யூதாசின் ஆவிக்கு ஒத்ததான எதுவும் நம்முடைய இருதயங்களை அலைக்கழிக்க நாம் அனுமதிக்கக்கூடாது என்று நம்மில் ஒவ்வொருவருக்கும் எச்சரிக்கின்றதாய் இருக்கின்றது. இப்படிப்பட்டதான விஷயங்களில் நம்முடைய கர்த்தர், "தம்முடைய சரீரத்தின் அங்கங்களை" தம்முடன் ஒரே தளத்தில் வைத்தவராக, இந்தச் சிறியவர்களான தம்முடைய சகோதரர்களுக்கு இடறல் உண்டாக்குகிறவர்கள் விஷயத்தில், இடறல் உண்டாக்குகிறவனின் கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி, அவனைக் கடலின் ஆழத்தில் அமிழ்த்திவிடுவது அவனுக்கு நலமாயிருக்கும் என்று நமக்கு உறுதியளிக்கின்றார் (மத்தேயு 18:6).

தலைக்கும், அவருடைய சரீரத்தின் உடன் அங்கங்களுக்கும் செய்யப்படும் ஒவ்வொரு செய்கையினுடைய, பின்பக்கத்திலும் நிச்சயமாக நல்ல (அ) கெட்ட நோக்கம் ஒன்று காணப்படும். வலுவான நோக்கத்தைத் தேடுவது என்பது, நம்பிக்கை துரோகத்திற்கான உறுதியான பழியிலிருந்து விலகுவதற்குரிய காரணங்களைத் தேடுவது ஆகாது. நம்முடைய அனுபவத்தையும், கணிப்பையும் வைத்துப் பார்க்கும்பொழுது, வல்லமை (அ) ஸ்தானங்கள் அடைவதற்கான இச்சையும், பேராசையும்தான், "கள்ள சகோதரர்" செய்யும் நம்பிக்கை துரோகமான செயலுக்கு ஊற்றாக இருக்கின்றது. இப்படிப்பட்ட பரிசுத்தமற்ற இலட்சியங்களை மேன்மைப்படுத்துவதற்குரிய ஆசையானது, இவ்வாசையைக்கொண்டிருக்கும் இருதயத்தைக் கண்டிப்பாய் மாசுப்படுத்திவிடும். ஒருவர் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"ஒரு எண்ணத்தை விதைத்தால், நீ ஒரு கிரியையை அறுப்பாய்;

ஒரு கிரியையை விதைத்தால், நீ ஒரு பழக்க வழக்கத்தை அறுப்பாய்;
ஒரு பழக்க வழக்கத்தை விதைத்தால், நீ ஒரு குணத்தை அறுப்பாய்;
ஒரு குணத்தை விதைத்தால், நீ ஓர் இலக்கையே அடைந்துவிடுவாய்."

யூதாசின் எண்ணங்கள், வெளியரங்கமான பொல்லாத கிரியையின் தோற்றத்தை எடுப்பதற்கு முன்னதாக, யூதாஸ் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் பொல்லாத எண்ணங்களை விதைத்து வந்துள்ளார். யூதாஸ் ஆஸ்தி மற்றும் செல்வாக்கின் மீது பேராசைக்கொண்டிருந்தார். அவர் சீஷர்களுடைய சிறிய கூட்டத்திற்குப் பொருளாளரானார். மேலும், நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட பணத்தில் ஒரு பாகத்தைத் தன்னுடைய சொந்த காரியங்களுக்காக, யூதாஸ் திருடினதாக வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. யூதாஸ் எந்தளவுக்குப் பணத்தின் மீது ஆசை வைத்தாரோ, அந்தளவுக்கு அந்த ஆசையை நடைமுறையும் படுத்தினார். அதாவது, தனது ஆண்டவரை முப்பது வெள்ளி காசுகளுக்குக் காட்டிக்கொடுக்க விருப்பங்கொள்ளும் அளவுக்கு, பணத்தின் மீதான யூதாசின் ஆசை பெருகினது. யூதாஸ் வாக்களிக்கப்பட்ட இராஜ்யத்தை எதிர்ப்பார்த்ததாகவும், அநேகமாக அந்த இராஜ்யத்தில் இராஜரிக பொருளாளர் எனும் உயர்வான ஸ்தானத்தை அடைய எதிர்ப்பார்த்ததாகவும் தெரிகின்றது.

யூதாஸ், தான் காட்டிக்கொடுத்ததின் விளைவாக உண்டான நிகழ்வுகளினி மித்தம் பயங்கரமான ஏமாற்றத்தை அடைந்திருப்பார் என்பதிலும் நிச்சயமே. நமது கர்த்தர் தம்முடைய சத்துருக்களின் கையினின்று அற்புதமான வல்லமையினால் தம்மைத் தப்புவித்துக்கொள்வார் என யூதாஸ் எதிர்ப்பார்த்திருக்க வேண்டும். இதைவிட பரந்த மனப்பான்மையுடன்கூடிய கண்ணோட்டத்தில், யூதாசினுடைய நம்பிக்கைத் துரோகமான செயலை எடுத்துக்கொள்ள நமக்குத் தெரியவில்லை. எனினும், இந்தப் பரந்த மனப்பான்மையுடன்கூடிய கண்ணோட்டம் கூட, யூதாசுனுடைய செய்கையிலுள்ள கரும்புள்ளியில் கொஞ்சத்தையே துடைக்கின்றது. எனினும், பணம் விஷயத்திற்காகத் தன்னுடைய சிறந்த நண்பனை இழிவான விதத்தில் தற்காலிகமாகக்கூட பயன்படுத்த விரும்புகிறவன், பணத்தின் மீதான தன்னுடைய ஆசையுடன், தன்னுடைய அனைத்து உணர்வுகளையும் வேசித்தனம் பண்ணியுள்ளதை வெளிக்காட்டுகிறவனாய் இருக்கின்றான். கனமடைவதற்குரிய ஆசையும் கூட யூதாசுக்குக் காணப்பட்டிருக்கலாம். காரணம், நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்டிருந்த இராஜ்யத்தை கர்த்தர் ஸ்தாபிக்கும்படிக்கு, அவர் (இயேசு) கட்டாயத்திற்குள்ளாகத்தக்கதாக அல்லது அவர் கூறியவை அனைத்தும், மற்றும் வாக்குத்தத்தங்களும் மோசடி என்று வெளிப்படுத்தத்தக்கதாக இந்த ஆபத்தைக் கொண்டுவருவதற்கு யூதாஸ் எண்ணியிருந்திருக்கலாம்.

காரியங்களை விரைவுபடுத்துவதிலும், தேவனுடைய கரு நிலையிலுள்ள இராஜ்யத்தை நிறுவுவதிலும் யூதாஸ் உண்மையில் வெற்றியடைந்தான்; எனினும் அவன் விரும்பினவிதத்திலல்ல, அதுவும் எந்தவிதத்திலும் அவனுக்குக் கனத்தையோ (அ) நன்மையையோ அளிக்கும் விதத்திலல்ல. இப்படியாகவே சத்தியத்தைப்

பெற்றுக்கொண்டும், தங்களைச் சீஷர்கள் என்று அறிக்கைப் பண்ணிக் கொண்டும், அதே வேளையில் சத்தியத்தின் மீது அன்பு இல்லாமலும், தற்காலத்திலோ (அ) எதிர்க்காலத்திலோ கனத்திற்காக ஆசைப்படுபவர்களின் விஷயத்திலும் காணப் படுகின்றது. கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துள்ளவர்களாகிய நாம் அனைவரும், இந்த வெட்கக்கேடான பண்பின், எவ்வித அம்சங்களும் நம் எவரிடத்திலும் காணப்பட்டுவிடாதப்படிக்குக் கவனத்துடனும், விழிப்புடனும், ஜெபத்துடனும் இருக்கக்கடவோம். கர்த்தரையும், "சகோதரரையும்" காட்டிக்கொடுக்கும் விஷயத்தில் பல்வேறு இரகசியமான வழிகளும், அநேக வெளியரங்கமான வழிகளும் இருப்பதை நாம் நினைவில் கொள்வோமாக.

இயேசு தம் மீது வரவிருக்கும் அனைத்துக் காரியங்களையும் முன்கூட்டியே அறிந்திருந்தார் எனச் சுவிசேஷகர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், அவர் ஜெபம் பண்ணினபோது, "வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி அவரைப் பலப்படுத்தினான்" என்றும் நமக்குத் தெரிவிக்கப்படுகின்றது. கர்த்தர் பட வேண்டிய பாடுகள் எவை மற்றும் அவைகள் எப்படி எதிர்ப்பார்க்கப்பட வேண்டும் என்பவை தொடர்புடைய விஷயங்களிலுள்ள, பிதாவின் சித்தத்தைப் பற்றிக் கர்த்தருக்குத் தெரிவிப்பதாக தூதனின் இவ்வூழியம் காணப்பட்டிருக்கலாம். மேலும், காரியங்கள் தொடர்பான இந்த அறிவின் காரணமாகவும், பிதா அனைத்தையும் நன்மைக்கு ஏதுவானதாக மாற்றுவார் என்ற நிச்சயத்தின் காரணமாகவும், அவருடைய இருதயம் பலப்பட்டது; மற்றும் இதற்குப் பின்னர் நடந்த காரியங்கள் அனைத்திலும், நம்மால் அவரிடம் கவனிக்க முடிந்த, மாபெரும் அமைதியையும் அவருக்குக்கொடுத்தது.

இயேசுவைக் கைதுச் செய்யும்படிக்கு வந்த "போர்ச்சேவகர்கள்", அவரை மரங்களின் மறைவுகளுக்குள்ளெல்லாம் தேட வேண்டிய நிலை தங்களுக்கு ஏற்படும் என்று எண்ணியிருந்திருக்க வேண்டும். ஆகவே அவர்கள் பந்தங்களோடும், தீவட்டிகளோடும் வந்திருந்தார்கள். நமது கர்த்தர், அவர்களிடமிருந்து தப்பி ஓடுவதற்குப்பதிலாக, அவர்களுக்கு முன்பாக எதிர்ப்பட்டு, அவர்கள் யாரைத் தேடுகின்றார்கள் என்று கேட்டதினிமித்தம், அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியம் ஏற்பட்டிருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தப் போர்ச்சேவகர்களில் சிலருக்கும் ஏற்கெனவே கர்த்தரை, அதாவது அவருடைய அற்புதங்கள், பிசாசுகள் மீதான வல்லமைகள் முதலியவைகள் பற்றிய அறிவு இருந்திருக்க வாய்ப்பு உண்டு. மேலும், இதுகூட அவர்கள் பின்னிட்டுத் தரையில் விழுவதன் மூலம், தங்களது பெலவீனத்தை வெளிப்படுத்தினதற்கான காரணமாகக்கூட இருக்கலாம். இல்லையேல், தாம் அவர்களை எதிர்க்க விரும்பினால், அவர்களை எதிர்ப்பதற்கான முழு வல்லமையும் தம்மிடத்தில் இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக, அவர்கள் பின்னிட்டுத் தரையில் விழத்தக்கதாக, அவர்கள் மீது உயர் மனதின் சக்தியைக்கூட நமது கர்த்தர் பயன்படுத்தியிருக்கவும் வாய்ப்புள்ளது.

இதே படிப்பினையானது, பேதுரு பட்டயத்தைப் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரன் மீது உபயோகித்தப்போதும், கற்றுக்கொடுக்கப்படுகின்றது என நாம் நம்புகின்றோம். அப்போஸ்தலர்கள் பட்டயங்களை எடுத்துக்கொள்ளும்படிக்கு நமது

கர்த்தர் அவர்களிடம் கூறினார் என்றும், இரண்டு பட்டயங்கள் இருக்கின்றது என்று சொன்னபோது, அவை "போதும்" என்று நமது கர்த்தர் கூறினார் என்றும், சுவிசேஷங்களில் ஒருவர் பதிவு செய்துள்ளது நம்முடைய நினைவிற்கு வருகின்றது (லூக்கா 22:36, 38). தமக்காக தம்முடைய சீஷர்கள் சரீரப்பிரகாரமான யுத்தம் பண்ண வேண்டும் என்ற எண்ணம் நம்முடைய கர்த்தருக்கு இல்லை. இதை அவர் பிற்பாடு, "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல" என்று தெரியப்படுத்துகின்றார் (யோவான் 18:36). தற்காப்பிற்காக எதுவும் இல்லை என்பதினாலோ, அதேசமயம் தம்முடைய சீஷர்கள் கோழைத்தனமாய் இருப்பதினாலோ, நம்முடைய கர்த்தர் கைதுச் செய்யப்படாமல், மாறாக அவருடைய வேளை வந்தது என்பதையும், நம்முடைய பாவங்களுக்காக அவர் மரித்து, அவருடைய மகிமையில் பிரவேசிப்பதற்குரிய வேளை வந்துள்ளது என்பதையும் அறிந்து, அவர் தம்மை முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்ததினாலேயே, அவர் கைதுச் செய்யப்பட்டார் என்பதைக் காட்டுவதற்கு இரண்டு பட்டயங்கள் போதுமானதாய் இருந்தது. லூக்கா 24:46.

அங்கு வந்துள்ள திரளான ஜனக்கூட்டத்தைத் தம்மால் முழுமையாய்ச் சமாளிக்க முடியும் என்பதையும், தாம் விரும்பினால் தம்மைப் பாதுகாக்க, பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரைக்கொண்டு வருவதற்குத் தம்மிடத்தில் வல்லமை உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டும் வண்ணமாக, இந்த ஒரு வல்லமையை வெளிப்படுத்தின பிற்பாடு (மத்தேயு 26:53), நம்முடைய கர்த்தர் தாம் கைதுச் செய்யப்படுவதற்கென முழுமையாய்த் தம்மை ஒப்புக்கொடுத்துவிட்டு, சீஷர்கள் அவர்கள் வழியே போய்விட அனுமதிக்க வேண்டுமெனும் நிபந்தனையை மாத்திரம் வைப்பதை நாம் பார்க்கின்றோம். இப்படிப்பட்ட ஒரு தருணத்தில், இப்படிப்பட்ட சோதனையான சூழ்நிலையின் கீழ், தம்மைப்பற்றி முற்றிலுமாக மறந்துவிட்டு, மற்றவர்களுடைய நலனில் மாத்திரம் அக்கறைக்கொண்டிருப்பது எத்துணை அருமையான குணலட்சணமாய் உள்ளது! அவர் எப்பேர்ப்பட்டவராய் இருக்கின்றார்!

"நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோகவில்லையென்று அவர் சொல்லிய வசனம் நிறைவேறத்தக்கதாக இப்படி நடந்தது" (யோவான் 18:9). மறுபடியும் ஆண்டவருடைய நடத்தையில் இங்கு அவர் மேல்வீட்டறையை விட்டுப்போவதற்கு முன்பாகத் தம்முடைய ஜெபத்தில் கூறினதின்படியே, தம்முடைய சீஷர்களுக்கான அவருடைய பராமரிப்பிற்கு உதாரணத்தை நாம் காண்கின்றோம். அவர்களில் எவரும் இழந்துப் போகப்படக்கூடாது என்பதில், அவர்களுடைய ஆவிக்குரிய நன்மைகள் தொடர்பான விஷயமே பிரதானமாக அவருடைய ஜெபத்தின் எண்ணமாக இருப்பினும், இது அவருடைய சீஷர்களாகும் அனைவருடைய சரீரத்திற்கடுத்த நன்மைகள் தொடர்புடைய விஷயத்திலுமுள்ள, நம்முடைய கர்த்தரின்

அக்கறையை உறுதிப்படுத்தும் உதாரணமாகவும் இருக்கின்றது. அவர்களுடைய தலையிலிருந்து அவரை அறியாமல், ஒரு மயிர்கூட கீழே விழுவதில்லை; எதுவும் அவர்கள் பாதிக்கத்தக்கதாக அனுமதிக்கப்படுவதில்லை. ஜீவியத்தின் ஒவ்வொரு விஷயமும், சம்பவங்களும், அவர்களுடைய மேலான நன்மைக்கு ஏதுவாக மாற்றப்படும் (மத்தேயு 6:32, 33).

அநேகமாக இயேசுவைக் கட்டுவதற்கு ஆரம்பித்திருக்கும் போதுதான், அவரைப் பாதுகாப்பதற்கெனப் பேதுரு தன்னுடைய பட்டயத்தை உறையிலிருந்து வெளியே எடுத்திருந்திருக்க வேண்டும். ஒருவேளை தம்முடைய சீஷர்களனைவரும் அவரைக் கைவிட்டு ஓடிவிடுவார்கள் என்ற கர்த்தருடைய வார்த்தைகளும், பேதுருவாகிய தான் "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன்" என்று பண்ணின சத்தியத்தையும் பேதுரு நினைவுகூர்ந்திருப்பார் (மாற்கு 14:29). பெருந்தன்மையுள்ள, பக்தி வைராக்கியமுள்ள பேதுரு! அவருடைய உணர்வின் பெருந்தன்மையுடன்கூடிய வெளிப்படுத்தல்களினிமித்தமும், பேதுரு மேல் நமக்கு அன்பு உருவாகுகின்றது. இங்குள்ள பேதுருவின் செயல்பாடானது, பேதுருவின் துடுக்குத்தனத்தினால் செய்யப்பட்ட தவறுகளில் ஒன்றுதான் என அநேகர் இழிவுப்படுத்தும் வழக்கமுண்டு. அப்போதுவரை அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதையும், தாங்கள் அழைக்கப்பட்டிருப்பது ஆவிக்குரிய இராஜ்யம் என்பதைத் தெளிவாகப் புரிந்துக்கொள்ள முடியாமல் இருந்தார்கள் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால், நாம் பார்த்துள்ளபடி பேதுரு, பட்டயத்தை எடுத்துக்கொள்ளும்படியான கர்த்தருடைய ஆலோசனையின்படிச் செய்தவராகத்தான் இருக்கின்றார்; மற்றும் அப்பட்டயத்தைப் பயன்படுத்தினதில், அவர் தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றினவராகவே காணப்படுகின்றார். குற்றப்படுத்துவதற்கென எதையும் நாம் பார்க்க முடியவில்லை. அனைத்தும் பாராட்டும் வண்ணமாகவே காணப்படுகின்றது. இவ்விஷயம் பேதுருவினாலும், அங்கிருந்த மற்றவர்களாலும் உணரப்பட்டதைக் காட்டிலும் மிகப் பெரிய முக்கியத்துவம் உடையதாய் இருந்தது.

இவ்வளவு தூரம் காரியங்கள் அனைத்தும் நடைப்பெறும் வண்ணமாக அனுமதித்தப் பிற்பாடு, நமது கர்த்தர், "உன் பட்டயத்தை உறையிலே போடு; பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ" என்று கூறி, பேதுருவைக் கட்டுப்படுத்தினார் (யோவான் 18:11). இப்படிக்கூறிக்கொண்டு, கர்த்தர் காயமடைந்த தம்முடைய சத்துருவைத் தொட்டு அவனைச் சொஸ்தப்படுத்தினார். நமது கர்த்தர் தம்முடைய சத்துருக்களிடத்தில், தம்மை முன்வந்து விரும்பிக் கையளிக்கின்றார் என்பதை சீஷர்கள் கண்டு, புரிந்துக்கொள்ள வேண்டும்; மற்றும் இதுபற்றின உறுதியும் அவர்களுக்கு ஏற்பட வேண்டும். ஆகவே, இப்பாடத்தை வலியுறுத்தும் வண்ணமாக அனைத்தும் நடத்தப்பட்டன.

நம்முடைய அருமை மீட்பருடைய ஊழியத்தின் சின்னஞ்சிறு விஷயங்கள் அனைத்திலுங்கூட தாழ்மையெனும் கிருபை எவ்வளவாய்ப் பிரகாசிக்கின்றது. அவர்

தம்மைத் தம்முடைய சத்துருக்களிடம் கையளித்த தருணத்திலுங்கூட, தாம் விரும்பிதான் தம்மைக் கையளிப்பதாக தற்பெருமையடித்துக் கொள்ளவுமில்லை, இரத்தசாட்சிக்குரிய பாராட்டையும் நாடவுமில்லை! பிதாவினிடத்திலான தம்முடைய நேர்மைக்கான/உண்மைக்கான சான்றாக இதையெல்லாம் பிதா தம்மிடத்தில் எதிர்ப்பார்க்கின்றார் என்ற எளிய உண்மையையே வெளிப்படுத்தினவராகக் காணப்பட்டார். இயேசு தம்மைத் தேவனுடைய ஊழியக்காரர் என்றும், தாம் படுகின்ற பாடுகள் மூலமாகக் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்கின்ற குமாரன் என்றும் தெரிவித்தார். "பிதா எனக்குக்கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" என்றார் கர்த்தர். உண்மையில் இதுதான் அவருடைய வெற்றிக்கான பலமாக இருந்தது. அதாவது, அவருடைய சித்தத்தை அவர் முழுமையாய்ப் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்திருந்தார்; மற்றும் பிதாவினால் நன்மைக்கேதுவாக மாற்றமுடிகின்றதை மாத்திரம் தவிர, மற்றபடி எந்தத் தேவையற்ற பொல்லாப்புகளையும் பிதா தம்மீது வர அனுமதிப்பதில்லை என்ற உண்மையை, அவருடைய விசுவாசம் பற்றிப்பிடித்திருந்தது.

இங்கு இராஜரிக ஆசாரியகூட்டத்தார் அனைவருக்கும் அதாவது, மாபெரும் பிரதான ஆசாரியனுடைய அடிச்சுவடிகளில் நடக்க நாடும் அனைவருக்கும் முக்கியமான படிப்பினை உள்ளது. நான் கிறிஸ்துவில் நிலைத்திருந்து, அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க நாடுவது வரையிலும் நமக்கான ஜீவியத்தின் சோதனையான அனுபவங்களனைத்தும், நமக்கெனக் கர்த்தரால் கவனமாய்க் கருத்தில் கொள்ளப்படுகிறது. அதாவது, நமக்குத் தேவையற்றதும், நமக்கு நித்திய கனமகிமையை உண்டாக்காததுமான எந்தக் கசப்பான அனுபவங்களையும், நம்முடைய துக்கம் மற்றும் சோதனையின் பாத்திரத்தில் அவர் ஊற்றுவதில்லை என்பதை நாமும் நினைவில் கொள்ள வேண்டும் (2 கொரிந்தியர் 4:17). இந்த வாக்குத்தத்தங்கள் நிமித்தமாகவும், நமக்கு முன்னோடியும், மகிமையடைந்தவருமாகிய நம்முடைய ஆண்டவரிடத்திலான பிதாவின் உண்மைக்கான சான்றுகளின் நிமித்தமாகவும், சுவிசேஷ யுகத்தில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள நம்பிக்கைக்குள் அடைக்கலம் புகுந்துள்ள நமக்குப் பலமான ஆறுதலுள்ளது (எபிரெயர் 6:18-20).

வெட்டப்பட்ட காதைச் சொஸ்தப்படுத்தின நமது கர்த்தருடைய கடைசி அற்புதமானது, அவருடைய குணலட்சணத்திற்கும், போதனைக்குமான மிக அருமையான உதாரணமாக விளங்குகின்றது. இது, "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்" என்ற அவருடைய வார்த்தைகளுக்கான உதாரணமாயிற்று. இது அவருடைய போதனைகள் வெளிப்படுத்தின தெய்வீக அன்பினால் அவர் நிரம்பியிருப்பதையும், அவரை இழிவான விதத்தில் நடத்தினவர்களிடத்திலும், அவரைத் துன்பப்படுத்தினவர்களிடத்திலும் அவருக்கு எந்தக் கசப்பும் இல்லை என்பதையும் காட்டுகின்றது.

நமது கர்த்தரைக் கட்டுவதற்கு அவசியமில்லை. ஆனால், இந்தப் போர்ச்சேவகர்களை அனுப்பி வைத்தவர்களுக்கு முன்பாக, இந்தப் போர்ச்சேவகர்கள் தங்களது வீரத்தை வெளிப்படையாகக் காண்பிக்க வேண்டுமென்று ஆசைப்பட்ட தினால், இப்படியாக அவரைக் கட்டியிருக்கலாம். இதை நமது கர்த்தர் கண்டித்ததை மாற்கு 14:48-49-ஆம் வசனங்களில் பார்க்கலாம். "இயேசு அவர்களை நோக்கி: கள்ளனைப் பிடிக்கப் புறப்படுகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக்கொண்டு என்னைப் பிடிக்கவந்தீர்கள்; நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே தேவாலயத்தில் உபதேசம்பண்ணிக் கொண்டிருந்தேன்; அப்பொழுது நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே; ஆனாலும் வேதவாக்கியங்கள் நிறைவேறவேண்டியதாயிருக்கிறது என்றார்." அப்பொழுதுதான் பதினொரு பேரும் அவரைத் தனியே விட்டுவிட்டு ஓடிவிடுகின்றனர். யூதாஸ் போர்ச்சேவகர்களுடன் கூட ஆசாரியனாகிய அன்னாவினுடைய வீட்டிற்குப் போனான். இந்த அன்னாதான் யூதாசுடன் விலைபேரம் பேசியிருந்தான். மேலும் இத்தருணத்தில்தான், ஒப்பந்தத்தின்படி நிறைவேற்றி முடித்துள்ள யூதாசுக்குக் கூலியாக முப்பது வெள்ளிக்காசுகள் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். இவன் ஈனமான/கேடுகெட்ட மனுஷன்! மனுஷகுமாரனைக் குறித்து எழுதப்பட்டதுபோல அவர் மரணத்திற்குள் போனார். ஆனால், அவர் மரிக்க வேண்டியது அவசியம் எனும் காரியமானது, அவரை அவருடைய சத்துருக்களின் கைகளில் கையளித்த கொலைக்கார, பேராசை மற்றும் நம்பிக்கை துரோகத்தினுடைய கொடூரத்தின் வீரியத்தை குறைத்துக் காட்டுவதில்லை. இப்படியாகவே, கிறிஸ்துவினுடைய சரீர அங்கங்களின் விஷயத்திலும் காணப்படுகின்றது. கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கு அவமானங்கள் வருவது அவசியமாயுள்ளது. இன்னுமாக, தலையினுடைய உபத்திரவங்களில், குறைவானதைக் கிறிஸ்துவின் சரீரமானது நிறைவேற்றுவது என்பது, தெய்வீகத் திட்டத்தின் ஒரு பாகமாக இருக்கின்றது (கொலோசெயர் 1:24). எனினும், இது இப்படியான "காட்டிக் கொடுத்தலை" செய்பவர்களின் செய்கையினுடைய பாவத்தைக் குறைத்திடாது. அதுவும் சத்தியத்தின் அறிவை அனுபவித்திருக்கும் "கள்ள சகோதரருடைய" விஷயத்தில் குறைத்திடாது. கர்த்தருக்கும் சரி, அவரோடு கூட உண்மையாய்ப் பாடு அனுபவிக்கும் அனைவருக்கும் சரி, பரீட்சைகளும், சோதனைகளும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதாக இருப்பினும், யூதாசின் போக்கைத் தெரிந்துக்கொண்டு அநீதிச் செய்பவர்கள், தங்களுக்குக் கனமும், ஆசீர்வாதமும் வேண்டும் என்பதற்காக, பொல்லாப்புச் செய்யும்படிக்குத் தங்களை விற்றுப்போடுகிறபடியால், தாங்கள் இச்சித்த கனங்களையும், ஆசீர்வாதங்களையும் ஒருபோதும் அடைவதில்லை.

# இயேசு காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் கைவிடப்பட்டார்

## யோவான் 18:1-14

*“பிதா எனக்குக்கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ என்றார்.”*

சுவிசேஷ பதிவுகளின் எளிமையே, அதன் மற்றக் காரியங்கள் அனைத்தையும் விட, மனித கணிப்பை மிகவும் பலமாய்க் கவர்கின்றதாய் இருக்கின்றது. அப்போஸ்தலர்களுடைய பெலவீனங்கள், தவறுகள், இடறல்கள் குறித்து உண்மையாய் விவரம் கொடுக்கப்பட்டிருக்கின்றதும், அதுவும் தவறுகளுக்குச் சாக்குப்போக்குகள் சொல்வதற்கு (அ) தவறுகளுக்குக் காரணம் காட்டுவதற்கு அல்லது தவறுகளைப் பூசி மெழுகுவதற்கு எவ்விதமான முயற்சிகள் எடுக்கப்படாததுமாகிய இச்செயல்களின் நேர்மையையும், நோக்கத்திலுள்ள உண்மையையும் வேறே புத்தகங்களில் பார்ப்பது அரிதான ஒன்றாகும். நம்முடைய இந்தப் பாடத்திலுங்கூட யூதாசினுடைய வெட்கக்கேடான நம்பிக்கைத் துரோகம் பற்றியும் கர்த்தருடைய இருளான வேளையில், அவரைத் தனியே விட்டுவிட்டு, தனிப்பட்ட பாதுகாப்பை நாடின மீதமுள்ள பதினொரு பேரின் பெலவீனம் பற்றியும், பின்னர் இந்தப் பதினொரு பேரிலும் ஒருவர் அவரை மறுதலிப்பது பற்றியும் உள்ள பதிவுகள், மற்றப் புத்தகங்களைக் காட்டிலும் கவனத்தை மிகவும் ஈர்க்கின்றதாக இருக்கின்றது. சுவிசேஷ புத்தகங்களின் எழுத்தாளர்கள் ஒருவேளை தங்களது நடத்தைகளுக்கு விளக்கங்களையும், காரணங்களையும் கொடுத்திருந்தாலும்கூட, அது பழியாய்க் கருதப்பட்டிருந்திருக்காது; ஆனாலும் பதிவுகளானது, அவைகள் கொடுக்கப்பட்டிருக்கிற விதத்தில் பலமானதாகவே காணப்படுகின்றது மற்றும் அவர்களுக்காக அவர்களது குறைகளுக்கான விளக்கத்தினைக் கொடுப்பதற்கு நாம் முற்படுகின்றோம்; ஆனால் ஒருவேளை அவர்களே இந்தக் காரணங்களைக் கொடுக்க முற்பட்டிருந்திருப்பார்களானால், அதை ஏற்றுக்கொள்வதில் நாமும் ஒருவேளை ஆர்வமற்றிருந்திருப்போம்.

அப்போஸ்தலர்களில் இருவர் பட்டயங்கள் வைத்திருந்தார்கள் என்றும், கர்த்தருடைய அனுமதியின் பேரில் வைத்திருந்தார்கள் என்றும் நாம் பார்க்கின்றோம்; பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரர்களினால் கர்த்தர் மேற்கொள்ளப்படாமல், அவர் தாம் கைது செய்யப்படத்தக்கதாக, தம்மையே கையளித்துள்ளார் என்பதை வெளிப்படுத்துவதற்காகவே, பட்டயங்களை வைத்துக்கொள்ளுமாறு கர்த்தரினால் கட்டளையிடப்பட்டிருந்திருக்கலாம். பட்டயங்கள் கொண்டுவர கர்த்தர் சொல்லியிருக்கிறார் என்றால் அது ஜோடிப்புக்காக அல்லாமல், பயன்படுத்துவதற்கே என அப்போஸ்தலர் பேதுரு நியாயமாக எண்ணிக்கொண்டு, கர்த்தர் மேல் கைப்போடுவதற்கு முதலாவதாக வந்தவர்களிடமிருந்து, கர்த்தரைப் பாதுகாக்கத் தக்கதாகப் பாராட்டத்தக்கதான தைரியத்தில், பேதுரு தம்முடைய பட்டயத்தை உறையிலிருந்து உருவிக்கொண்டார். தலையை நோக்கம் கொண்டே பட்டயத்தை வீசினார். ஆனால் அநேகமாக காதுக்கு மாத்திரம் பாதிப்பு ஏற்படத்தக்கதாகப் பட்டயத்தின் வீச்சுத் தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனால் அவர்கள் பட்டயத்தைப் பயன்படுத்தக்கூடாது எனப் போதகர் மறுப்புத் தெரிவித்து, தம்மை அவர்கள் பாதுகாக்க

முற்படுவதை மறுத்து, வெட்டப்பட்ட சேவகனைச் சொஸ்தப்படுத்தினபோது, பேதுருவுக்கும், மற்றவர்களுக்கும் எத்தகைய ஒரு திகைப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும்! இப்படியான சூழ்நிலைகளால் சூழப்பட்டிருக்கும் நிலையில், உண்மையுள்ள பதினொரு அப்போஸ்தலர்கள் கீழுள்ள இரண்டில் ஒன்றைச் செய்திருப்பார்கள் என நம்மால் பார்க்க முடிகின்றது: அதாவது ஒன்றில் போதகருடன் கூடவே காணப்பட்டு, அவரைப்போலவே கைது செய்யப்படுவதற்கென ஒப்புக்கொடுக்க வேண்டும்; இல்லையேல் ஓடி, தங்களுடைய தனிப்பட்ட உரிமையையும், பாதுகாப்பையும் தேட வேண்டும்; ஆனால் இயேசு இந்தப் பாதுகாப்பைத் தமக்கெனத் தேடிக்கொள்ள விரும்பவில்லை.

இந்தப் பதினொரு பலமுள்ள புருஷர்கள், வாழ்க்கையின் முக்கியமான ஒரு கட்டத்தில் காணப்படுகையில் அவர்களிடம் இரண்டு பட்டயங்கள்தான் இருந்த போதிலும், நமது கர்த்தரைக் கைது செய்யும்படிக்கு வந்திருந்த கூட்டத்தாருக்கு, அவர்களால் போதுமான அளவுக்குச் சேதத்தை ஏற்படுத்தியிருந்திருக்கக்கூடும் என்பதை நம்மால் உடனடியாக கற்பனை செய்துகொள்ள முடிகின்றது; எனினும் யுத்தக்களத்தின் பரபரப்புகளும், நடவடிக்கைகளும் தைரியத்தைத் தூண்டுகிற தாயிருக்க, உபயோகமில்லாமல் நிற்பதற்குரிய கட்டாயத்திற்குள் ஆக்கப்படும்போது, ஆயுதங்களுடன் காணப்படும் சத்துருவின் முன்னிலையில், தற்காப்பிற்கெனக் கரம் கூட உயர்த்துவதற்கு அனுமதிக்கப்படாத பட்சத்தில், இது எவருக்கும் சோர்வை ஏற்படுத்தக்கூடியதாகவே இருக்கும். இப்படியான ஒரு சூழ்நிலையில் காணப்படும் போது, ஓடித் தப்பிவிடுவதே இயல்பானதாய்க் காணப்படும்; இன்னுமாக, இச்சந்தர்ப்பத்தில் போதகருடைய கருத்தும், "இவர்களைப் போகவிடுங்கள்" என்பதாகக் காணப்பட்டது. ஆகவே, சூழ்நிலையை முழுமையாய்க் கவனிக்கும்போது, அப்போஸ்தலர்கள் கோழைத்தனமாக நடந்துகொள்ளவில்லை என்றே கூற வேண்டும்; இன்னுமாக அப்போஸ்தலர்களுடைய சூழ்நிலையைப் போன்ற சூழ்நிலை ஏற்படுகையில், அப்போஸ்தலர்கள் ஓடிவிட்டது போன்று ஓடிவிடுவதற்குப்பதிலாக, வேறு விதமாய் நடந்துகொள்வதற்குக் கர்த்தருடைய ஜனங்களிலேயே மிகவும் சொற்பமானவர்களுக்கே தெரியும் எனச் சொல்லலாம்.

நமது கர்த்தரைக் கைது செய்யும்படிக்கு, யூதாசினால் வழிகாட்டப்பட்டு வந்த திரளான மனுஷர்கள் உரோம சேவகர்களாய் இராமல், மாறாக பட்டயங்கள், தடிகள் முதலிய ஆயுதங்களுடன் காணப்பட்ட பிரதான ஆசாரியனுடைய வீட்டின் வேலைக்காரர்களும், சேவகர்களும் மாத்திரமே ஆவர். அடுத்த நாளில் ஆசாரியர்களும், பிரதான அதிகாரிகளும், தூண்டிவிடப்பட்ட வேலைக்காரர்களும், ஜனங்களும், இயேசுவைத் தீர்ப்பு மன்றத்திற்கு முன்பாகக் கொண்டுவந்து, இயேசுவுக்கு மரணத் தண்டனையை நிறைவேற்றும்படிக்குக் கேட்பது வரையிலும் பிலாத்துவும், அவருடைய உரோம இராணுவ அதிகாரமும் இயேசுவைக் கவனத்தில் கொள்ளவே இல்லை.

பன்னிரண்டு பேரில் யார் இயேசு என்று அடையாளம் காட்டிக்கொடுத்த யூதாசின் காட்டிக்கொடுத்தலாகிய இழிவான காரியத்தையும், காட்டிக்கொடுக்கப்

பயன்படுத்தின முத்தத்தையும், "சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய்? முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்கின்றாய் என்ற நமது கர்த்தருடைய கடிந்துகொள்ளுதலின் வார்த்தைகளையும் பற்றிப் பரிசுத்தவானாகிய யோவானின் பதிவுகள் தெரிவிப்பதில்லை. அவர்கள் தேடினவரை இன்னவிதமாய்த் தான் அடையாளம் காட்டிக்கொடுப்பதாக யூதாஸ் பண்ணியிருந்த முன்னேற பாட்டின்படி, யூதாஸ் இயேசுவிடம் வாழ்த்துதல் சொல்லத்தக்கதாக சேவகர்கள் கூட்டத்திற்கு முன்பு கொஞ்சம் தொலைவில் வந்திருக்க வேண்டும்.

யூதாசினுடைய நடத்தையைக் குறித்து வாசிக்கின்ற எந்த உயர் மனமுள்ள நபராலும், ஒரு நீதியான கோபத்தின் உணர்வை அடையாமல் காணப்பட முடியாது; இன்னுமாக யூதாஸ் இயேசுதான் மேசியா என்று உறுதியாய் இருந்தாரோ, இல்லையோ, ஆனால் மனுஷர்கள் மத்தியிலேயே உயர்குணமுள்ளவராக அடையாளம் கண்டிருந்த இயேசுவை, முப்பது வெள்ளி காசுகளுக்காக யூதாஸ் காட்டிக்கொடுப்பது என்பது இழிவான குணம் என்ற உணர்வையும், எவராலும் அடையாமல் காணப்பட முடியாது. இந்த அளவுக்கு அக்கிரமத்தின் ஆழத்திற்கு, யூதாஸ் திடீரென வரவில்லை என்று கூறுவது தவறல்ல; மாறாக போதகருடன் தொடர்புகொண்டிருந்த மூன்று வருடங்களாக, யூதாசின் இந்த எதிர்மாறான பண்பானது அவரை முற்றிலும் கட்டுப்படுத்தத்தக்கதாக யூதாசுக்குள் வளர்ந்துகொண்டு வந்தது. யூதாஸ் அப்போஸ்தலனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, இவர் நல்ல மனுஷனாகவே இருந்தார்; இவருடைய பெயரின், துதி என்ற அர்த்தமானது, இவருடைய பெற்றோர்களும் தேவபக்தியுள்ள மனதைக்கொண்டிருந்ததையும், இவர் தேவனுக்குத் துதி சேர்க்கத்தக்கதாக, தேவனுடைய செய்தியாளராக இருக்க வேண்டும் என்று விரும்பினதையும், யூதாசைக்குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்ததையும் சுட்டிக்காண்பிக்கின்றது. இவர் எத்தகைய ஒரு சிலாக்கியத்தையும், வாய்ப்பையும் (இப்படித் தேவனுக்குத் துதி சேர்க்கும்) இவ்விஷயத்தில் அடைந்திருந்தார்!

பணத்தின் மீதான ஓர் ஆசையை/அன்பை இவர் தனக்குள் குடிகொள்ளச் செய்ததே இவருடைய வீழ்ச்சிக்கான ஆரம்பமாய் இருந்தது எனச் சுவிசேஷபதிவுகளில் உள்ள சிறுசிறு குறிப்புகளிலிருந்து நாம் நியாயமாக அனுமானித்துக்கொள்ளலாம். இந்தத் தவறான ஆவியைக் கடிந்துகொள்வதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் பதிலாக, இந்த ஆவிக்கு எதிரான வகையில் அன்பையும், இரக்கத்தையும், பரந்த மனப்பான்மையையும் நாடுவதற்குப்பதிலாக இவர் தன்னுடைய ஜீவியத்தையும், இருதயத்தையும் ஆளத்தக்கதாக சுயநலத்தை அனுமதித்துவிட்டார். இயேசு மற்றும் அப்போஸ்தலர்களுக்குமான சிறிய கூட்டத்திற்குப் பொருளாளராக இருக்கும் பொறுப்பை யூதாஸ் தெரிந்துகொண்டார் என்று நாம் எண்ணுகின்றோம்; ஒருவேளை யூதாஸ் தன்னுடைய சொந்த நிலையைக்குறித்துப் போதுமான அளவுக்கு உணர்வுடையவராய் இருந்திருப்பாரானால், இவர் தனக்கு ஏற்கெனவே பணத்தின் மீது மோகம் இருக்கும் காரணத்தினால் பணங்களை, தான் கையாளுவது என்பது, தனக்குச் சோதனையாக இருக்கும் என்று உணர்ந்தவராக, இப்படியான ஒரு பொறுப்பை ஏற்க மறுத்திருந்திருப்பார். ஆனால் இதற்கு மாறாக, யூதாஸ் அப்பொறுப்பை நாடினார், அதை

அடைந்தார், பணப்பையையும், அதில் போடப்பட்ட பணத்தையும் சுமந்தவராகக் காணப்பட்டார்; மற்றும் இவர் திருடன் என்று அப்போஸ்தலன் யோவான் நமக்குத் தெரிவிக்கின்றார் (யோவான் 12:6). நம்முடைய விழுந்துபோன சுபாவத்திற்குரிய மற்ற ஒழுங்கற்ற தன்மைகள் போலவே, இந்தப் பணத்தின் மீதான ஆசையும் கூட உற்சாகப்படுத்தப்படும்போதும், விருத்திப் பண்ணப்படும் போதும், இறுதியில் எல்லைகள் இல்லாமல் போகும் அளவுக்கு அதிகமதிகமாகப் பலமடைகின்றது; மற்றும் யூதாஸ் தன்னுடைய அன்பான போதகரை, மேசியாவை முப்பது வெள்ளிக் காசுகளுக்காக விற்றுப்போடுவதற்கு ஆயத்தமானார்.

இப்படிப்பட்ட ஒரு குணத்தை வெறுத்து, இழிவாய்க் கருதி, அருவருப்பாகக் கருதி, இதற்கு எதிர்மாறாக நம்மால் முடிந்த மட்டும் நம்முடைய குணலட்சணங்களைக் கொண்டிருக்க நாடுகின்ற அதே வேளையில், யூதாசைப்போன்று கர்த்தரை அன்புகூருகின்றேன் என்று கூறியும், அவரை விற்றுப்போட்டு, காட்டிக்கொடுக்கின்ற இதே மாதிரியான குற்றத்தைப் (குறைந்த அளவில்) புரிகின்றவர்கள் அநேகர் கர்த்தருடைய சீஷர்கள் மத்தியில் காணப்படுவார்கள் என்ற உண்மையையும் நாம் பார்க்கத் தவறிவிடக்கூடாது. இந்தத் தவறு சொல்லர்த்தமான விதத்தில் இன்று செய்யப்பட முடியாது என்பது உண்மைதான்; எனினும் இதன் ஆவியை அவ்வப்போது பார்க்கலாம் என்பதை வேதனையுடன் நாம் தெரிவிக்கின்றோம்; யூதாஸ் காணப்பட்டது போன்று, இயேசுவை உண்மையாய் விசுவாசிக்கின்ற சிலர், அவருடைய பின்னடியார்களெனத் தங்களை அர்ப்பணம் பண்ணியுள்ள சிலர், அவருடைய சத்தியத்தின் ஊழியத்தில் தங்களை ஈடுபடுத்தியுள்ள சிலர், ஒரு பானைக் கூழுக்காக, அதாவது இந்தத் தற்கால ஜீவியத்திற்கான நன்மைகளுக்காக, சம்பளத்திற்காக, சமுதாயத்தின் அந்தஸ்திற்காக, மனுஷர் மத்தியிலான கனத்திற்காக, பிரபலம் அடைவதற்காக, பட்டப்பெயர்களைப் பெற்றுக்கொள்வதற்காக, கர்த்தரை விற்றுப் போடுவதற்கு விரும்புகின்றனர்; யூதாசைப் போன்று தங்களுடைய உதடுகளைக்கூட விற்றுப்போடுவதற்கு விரும்புகின்றனர்; ஆகவே கர்த்தரைக் கனப்படுத்துகின்றோம் என்றும், கர்த்தருக்காக ஊழியம் புரிகின்றோம் என்றும் அறிக்கைப் பண்ணிக்கொண்டிருந்தும், தேவனுடைய குணலட்சணத்தையும், அவருடைய திட்டத்தையும், அவருடைய வார்த்தைகளையும் தவறாய்க் காட்டுகின்றவர்களுடன் சேர்ந்துகொள்ள விரும்புகின்றனர். கர்த்தரைக் கொலை செய்ய நாடுபவர்களுடன் சேர்ந்து களிகூர விரும்புகின்றனர். ஆ! இராப்போஜனத்தின்போது, "ஆண்டவரே நானோ?" என்று எழுப்பப்பட்டக் கேள்வியை ஒவ்வொருவரும் தனக்குத்தானே கேட்டுக்கொள்வது எவ்வளவு நலமாயிருக்கும்; இன்னுமாக எவனும் தன்னைத்தான் மன்னித்துக்கொள்ளும் விஷயத்தில் மிகவும் துரிதமாய் இல்லாமல் இருப்பானாக; ஆனால் ஒவ்வொருவனும் தான் எந்தவிதத்திலாகிலும், சத்தியத்தையும், ஜீவியத்தையும் எதற்காகவும் விற்றுப்போட்டுவிடாதப்படிக்கு, தன்னுடைய சொந்த இருதயத்தையும், ஜீவியத்தையும், நடத்தையையும் உண்மையாய் ஆராய்ந்து தேடிப்பார்ப்பானாக.

## நம்முடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகள் அல்ல

பேதுரு தன்னுடைய பட்டயத்தை உறையிலே போடும்படிக்குக் கூறப்பட்டதன் மூலம் நமது கர்த்தர் ஒரு படிப்பினையை ஆழப் பதிய வைக்கின்றார்; இப்படிப்பினையானது நல் எண்ணத்தினால் தூண்டப்பட்டுள்ள அவருடைய பின்னடியார்கள் அநேகரால் அதுமுதல் கற்றுக்கொள்ளப்படுவதற்கு முற்றிலுமாய்த் தவறப்பட்டு வருகின்றது. மாறாக இருண்ட யுகங்கள் முழுவதிலும் பட்டயங்களும், இராணுவ வல்லமைகளும் கிறிஸ்துவின் பின்னடியார்கள் எனத் தங்களைக்குறித்து அறிக்கை பண்ணிக் கொள்பவர்களின் சார்பில் உதவிக்கு அழைக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டது; சிலசமயம் அவிசுவாசிகளுக்கு எதிராகவும், மற்றும் பெரும்பாலும் சக கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டது. பட்டயமானது, பெயரளவிலான சபையில் இரத்த அச்சடையாளங்களை விட்டுள்ளது மற்றும் இவ்விஷயமானது, நமது அருமையான மீட்பர் தம்முடைய பின்னடியார்களுக்குப் பரிந்துரைத்த வழியிலிருந்து எவ்வளவு வேறுபட்டிருக்கின்றது எனக் காணும் உலகத்திலுள்ள சிலர் அவமதிப்பாய்க் கருதுவதற்குக் காரணமுமாய் இருக்கின்றது. இந்த ஒரு படிப்பினையானது இன்று அனைத்துச் சபை பிரிவுகளிலும் போர் மனப்பான்மையானது நிலவுகின்றபடியால், பெயரளவிலான கிறிஸ்தவ மண்டலத்திற்கே மிகவும் அவசியமாயுள்ளது. கிறிஸ்தவ ஊழியர்களின், மற்றும் இன்னும் சிலரின் மரணத்திற்காக, புற மதத்தாராகிய சீன மக்களைப் பழிக்குப்பழி வாங்கிக்கொண்டிருப் பவர்களாக கிறிஸ்தவ தேசங்கள் என அறிக்கைப் பண்ணிக்கொள்ளும் தேசங்களிலுள்ள போர்வீரர்கள்தான் காணப்படுகின்றனர். புறமதத்தாராகிய ஜனங்களுக்கு முன்னதாக இத்தகைய பாவகரமான/கெட்ட மாதிரியை வைக்கின்றதான கிறிஸ்தவ தேசங்கள் என்று அழைக்கப்படுகின்றதான தேசங்களின் இதே பிரதிநிதிகள்தான், தங்களது பொல்லாத நடத்தையின் வாயிலாக, இரக்கமும், தன்னடக்கமும், சுயக்கட்டுபாடுமுள்ளவர்களென உலகளாவ ஒப்புக்கொள்ளப் டுகின்றதான புறமத நாடாகிய ஜப்பான் வீரர்களைக்காட்டிலும் மோசமானவர்களாகக் காட்டப்படுகின்றனர்.

இந்தப் போர்வீரர்கள் செய்த தவறுகள், கிறிஸ்துவின் காரணத்திற்காக எனச் சொல்வது சரியாக இருக்காது. இவர்கள் கிறிஸ்தவ தேசத்தார் என்பதை நாம் மறுக்கின்றோம், மேலும் இவர்கள் கிறிஸ்தவ போர்வீரர்கள் என்பதையும் நாம் மறுக்கின்றோம். இந்தப் போர்வீரர்கள், "இவ்வுலகத்தின் பிள்ளைகள்" என்றும், இவர்கள் "இவ்வுலகத்தின் இராஜ்யங்களினுடைய" பிரதிநிதிகளாக "இவ்வுலகத்தின் அதிபதியின் கீழ்" போராடுகின்றனர் என்றுமே நாம் கூறுகின்றோம். சீன மக்களைப் பழி வாங்க வேண்டுமெனக் கிறிஸ்தவ ஊழியர்கள், அமெரிக்கா அரசாங்கத்திடம் விண்ணப்பம் பண்ணியுள்ளதை நாம் காண்கின்றோம். இன்னுமாகச் செய்தித்தாள்

களில் வெளிவந்துள்ள செய்தியை வைத்துப் பார்க்கையில், இரக்கத்திற்கான பெரும்பான்மையான வேண்டுகோள்கள் உலக ஜனங்களிடமிருந்து வந்துள்ளதையும், கடுமையான நடவடிக்கைகள் எடுக்கும்படியான பெரும்பான்மையான வேண்டுகோள்கள், "உன் பட்டயத்தை உறையிலே போடு என்று பேதுருவிடம் கூறின இயேசுவின் பிரதிநிதிகளாய் இருக்கும் பெயரளவிலான ஊழியர்களிடமிருந்தே வந்துள்ளது.

இங்கு நாம் தெரிவிக்க முற்படுவது என்னவெனில், "இஸ்ரயேல் வம்சத்தார் அனைவரும் இஸ்ரயேலரல்லவே" என முற்காலத்தில் அப்போஸ்தலர் தெரிவித்ததுப்போல, கிறிஸ்தவ மண்டலத்திலுள்ள அனைவரும் கிறிஸ்தவர்கள் அல்ல என்பதேயாகும். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகள் இன்னமும் உண்மையாகவே இருக்கின்றது என நாம் எண்ண வேண்டும் (ரோமர் 8:9). மேலும் எந்தளவுக்கு ஒருவரிடம் அன்பின் ஆவியும், சாந்தமும், நற்பண்புகளும் குறைவுப்பட்டிருக்கின்றதோ, இந்தக் குறைவானது அந்நபர் தன்னை என்னவாக அறிக்கைப் பண்ணியிருந்தாலும், அந்நபர் கிறிஸ்துவினுடைய ஊழியக்காரன் அல்ல என்பதற்கும், உண்மையான சுவிசேஷத்திற்கு ஊழியக்காரன் அல்ல என்பதற்கும் சான்றாக இருக்கின்றது; இன்னுமாகச் சத்தியத்திற்கு மாறான ஏதோ சில தவறான சுவிசேஷத்திற்கும், ஏதோ சில மனுஷீக சமயப்பிரிவுக்கும் ஊழியக்காரன் மாத்திரம்தான் என்பதற்கும் சான்றாக இருக்கின்றது.

தேவ பக்தியுள்ளவர்கள் எனத் தங்களைக்குறித்து அறிக்கைப் பண்ணிக்கொள்கின்றவர்கள் மத்தியில், அதாவது சிறப்பானவைகளை நாம் நியாயமாய் எதிர்பார்க்கின்றவர்கள் மத்தியில் இரக்கமின்மை, கசப்பு, பகைமை/பழிக்குப்பழி வாங்குதல், எரிச்சலின் ஆவி பரவலாய்ப் பரவி காணப்படுவதை நாம் பார்க்கின்றோம். இந்தக் கசப்பான மற்றும் எரிச்சலின் ஆவிக்கான ஓர் எடுத்துக்காட்டினை, அறிவு பெருத்த நம்முடைய இந்த நாட்டில், அதாவது பெரும்பான்மையானவர்களின் கரங்களில் சட்டம் காணப்பட்டு, தப்பிப்பதற்கான வழியில்லாத இந்த நாட்டில் பெரிய அளவில் நிலவும் லின்ஞ் சட்டம்/சட்டவிரோதமான நீதிமன்ற முறைமையில் நாம் பார்க்கலாம். இந்தச் சட்டவிரோதமான நீதிமன்ற முறைமையின்படியான கொலைகளானது, நல்நோக்கம் உள்ளவர்களாகவும், சாந்தமானவர்களாகவும் காணப்படுகின்ற அநேக ஜனங்களுடைய இருதயங்களில், எரிச்சலான, மிருகத்தனமான, காட்டுமிராண்டித்தனமான தன்மைகள் ஆழமாய்க் காணப்படுகின்றது என்றும், இந்தத் தன்மைகளானது, பரிசுத்த ஆவியினுடைய வல்லமையினாலான மனங்களின் புதிதாக்குதலினால் மாற்றம்/மறுரூபம் அடையவில்லை என்றும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இது எதிர்க்காலத்தில் எதற்குள்ளாகவோ நடத்திவிடும் என்பதைச் சொல்வது சிரமமானதாயினும், இது ஒழுங்கின்மையினுடைய

ஆவியின் ஒரு பாகமேயாகும். மற்றும் இது கிறிஸ்தவ மண்டலம் முழுவதும் பரவிடும் என்றும், பின்னர் முன்னுரைக்கப்பட்டபடி மகா உபத்திரவக்காலம் வரும் என்றும் வேதவாக்கியங்கள் நமக்கு உறுதிப்படுத்துகின்றன; இந்த மகா உபத்திரவக்காலத்தின்போது, மனுக்குலத்தினுடைய கோபத்திற்கு முன்பாக அனைத்துச் சட்டமும், ஒழுங்கும் ஒன்றுமில்லாமலாகிவிடும்.

எண்ணங்கள் மற்றும் உணர்வுகளின் இந்த எல்லை மீறின தன்மைகளானது, சில சமயங்களில் வார்த்தைகளில் மாத்திரம் வெளிப்படுகின்றது; அதாவது பத்திரிக்கையினுடைய பகுதிகளில், கண்டனத்திற்குரிய விதத்தில் வெளிப்படுகின்றது. கட்டுப்படுத்தப்படாத எண்ணங்கள் மற்றும் அதன் வெளிப்படுத்தல்களுக்கான உதாரணமாய், நியூயார்க் சன்ஸ் பத்திரிக்கையில் இடம் பெற்ற கடுமையான மற்றும் நியாயம் கற்பிக்கமுடியாத விதத்தினாலான ஒரு மெத்தடிஸ்ட் கண்காணியின் வார்த்தைகளைக் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம்; பின்வருமாறு:

“பிராயன் அவர்கள், தேர்ந்தெடுக்கப்படலாமா? இல்லை; ஆயிரம் முறை இல்லை, இல்லை என்றே நான் சொல்வேன்! அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், நான் கல் படகில், ஈய பாயுடனும், இரும்புத் துடுப்புடனும், தேவனுடைய கோபத்தைப் புயலெனவும், நரகத்தை வாயிலெனவும் கொண்டிருந்து கடலில் வருவேன்.”

இந்தக் கண்காணிக்கு ஆதரவாக, இந்த வார்த்தைகளே, தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தப்பட்டது என்பதை நாம் மறந்துவிட வேண்டாம்; இந்த நோய்க்கு எதிராக எந்த மருந்தும் போதுமானதாக இருக்கிறதில்லை. இம்மாதிரியான வார்த்தைகளைப் பயன்படுத்திடுவதற்குக் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் எந்த ஓர் ஊழியக்காரனும், எவ்விதமான சூழ்நிலைகளினாலும், சந்தர்ப்பங்களினாலும் வழிநடத்தப்படக்கூடாது; மேலும் இதுவே சகல சிருஷ்டிகளைச் சித்திரவதைப் பண்ணிடுவதற்கும், கொல்வதற்குமான நம்முடைய காலங்களிலுள்ள சட்ட விரோதமான நீதிமன்ற கொலை முறைமைக்கான தற்கால பாணியாகும் என்பதை மாத்திரமே நாம் இப்பொழுது சுட்டிக்காண்பிக்கின்றோம்; மேலும் அனைத்து விஷயங்களிலும், ஒழுங்கற்றுப்போவதற்கும், சட்டம் அற்றுப் போவதற்கும், கட்டுப்பாடற்றுப் போவதற்கும் கிறிஸ்தவ மண்டலத்தை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கும் மற்றும் வேகமாய் வழிநடத்திக்கொண்டிருக்கும் பயங்கர சீற்றமான எண்ணங்களைச் சுட்டிக்காண்பிப்பதற்கும், நாம் குறிப்பிடுகின்றோம். “உன் பட்டயத்தை உறையிலே போடு” என்றும், “உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்” என்றும், “உங்களை நிந்திக்கிறவர்களுக்கும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கும் நன்மை செய்யுங்கள்” என்றும் உள்ள ஆண்டவருடைய கட்டளையை, கிறிஸ்துவின் உண்மையான சீஷர்கள் அனைவரும் அதிகமதிகமாய் நினைவுகூருவார்களாக.

## பிதா ஊற்றும் பாத்திரம்

நம்முடைய பாடத்தின் ஆதார வசனமே, இந்த முழுப்பாடத்தினுடைய சாராம்சமாகும். நமது போதகர் அனைத்து விஷயங்களில் ஜெயங்கொண்டவராக வெளிவரத்தக்கதாக, அவருக்கு உதவிப்பண்ணினதும், பரம பிதாவினிடத்திலான அவருடைய கீழ்ப்படிதலுக்குக் காரணமுமான கொள்கைகளை இந்த ஆதார வசனமானது மிகவும் அருமையாகவும், மிகவும் சுருக்கமாகவும், மிகவும் அழுத்தமாகவும் வெளிப்படுத்துகின்றது; மேலும் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கும், அவருடைய உண்மையான சீஷர்களாய் இருப்பதற்கும் நாடுகின்ற அனைவரும் இவ்வசனத்திலுள்ள கருத்தைச் சிந்தித்துப் பார்ப்பது நலமாயிருக்கும். "பிதா எனக்குக்கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ". இதிலுள்ள கருத்துத் தெளிவாய் வெளிப்படுகின்றது. தமக்குக் காணப்படும் சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் தம்மால் ஏற்படுத்தப்படவில்லை என்றும், தம்முடைய சத்துருக்களினால் தமக்கு ஏற்படுத்தப்படவில்லை என்றும் கர்த்தர் உணர்ந்திருந்தார். தம்முடைய விஷயங்கள் அனைத்திலும் தெய்வீக மேற்பார்வை இருக்கின்றது என்பதை உணர்ந்திருந்தார்; மேலும் பிதா அனுமதிக்காத எதுவும் தம் மீது வருவதில்லை என்பதையும் அறிந்திருந்தார்; காரணம் பிதா இப்படியாக ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றும், தமக்கெனப் பிதா இந்தப் பாத்திரத்தில் ஊற்றியிருக்கின்றார் என்றும், இதநிமித்தம் அதைப் பானம் பண்ணுவது தம்முடைய கடமை என்றும் அறிந்திருந்தார்.

அச்சுறுத்தும் சோதனைகள் மற்றும் சிரமங்களில் கர்த்தருடைய ஜனங்கள் ஒருபோதும் தப்பித்துக்கொள்வதற்குரிய போக்கைப் பார்க்கக்கூடாது என்பதை நாம் சொல்ல வரவில்லை, காரணம் நாம் திராணிக்கு மேலாக சோதிக்கப்படுவதில்லை என்றும், சோதனையில் தம்முடைய திராணிக்கு மிஞ்சினதாய் இருக்கும் அம்சங்களுக்கு நமக்குத் தப்பித்துக்கொள்வதற்கான போக்கும் அருளப்படும் என்றும் உள்ள கர்த்தருடைய வாக்குத்தத்தம் நமக்குக் காணப்படுகின்றது. ஆகவே, தீமைக்கு நாம் நம்மைக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்கும் விஷயமானது, உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டது என நாம் உணரும்போது, உதவி வந்தாக வேண்டும் இல்லையேல் நாம் முற்றிலுமாய் விழுந்துபோய்விடுவோம் எனும் நிலைமை வரும் நேரம்தான், நாம் தப்பித்துக்கொள்ளத்தக்கதாக கர்த்தர் நமக்கு எந்த வழியைத் திறக்கின்றார் என நாம் பார்க்க வேண்டிய நேரமாகும். ஆனாலும் தப்பித்துக்கொள்ளும் வழியானது, நம்முடைய சொந்த வழியாய் இராமல், மாறாக கர்த்தர் ஏற்பாடு பண்ணினதாக இருக்கத்தக்கதாகவும் நாம் நிச்சயத்துடன் காணப்பட வேண்டும். ஏனெனில், ஓர் இடத்திலுள்ள கடமையிலிருந்தும், பரீட்சையிலிருந்தும், சோதனையிலிருந்தும்

ஓடிப்போய்விடுவது என்பது, வேறு ஏதோ திசையிலுள்ள வேறொரு சோதனைக் குள்ளாகவும்,பரீட்சைக்குள்ளாகவும், ஒருவேளை கடுமையான சோதனைக் குள்ளாகவும் விழுந்துவிடுவதாக மாத்திரமே காணப்படும். சரீரத்தினுடைய தலைக்கு மாத்திரமல்லாமல், அங்கங்கள் அனைத்திற்கும் பிதா ஊற்றியுள்ளதின் பாகம்தான் இந்தப் பரீட்சைகள், துன்பங்கள், சிரமங்கள், அவதூறுகள் என்பதை நாம் முன்கூட்டியே அறிந்திட வேண்டும். ஆகவே நாம் நல்ல போர்ச்சேவகர்களெனத் துன்பம் சகிப்பதற்கு ஆயத்தப்பட வேண்டும்; நம்முடைய உடன்படிக்கையை மீறாத விதத்திலும், நீதியின் எந்தப் பிரமாணத்தை மீறாத விதத்திலும், தப்பித்துக்கொள்வதற்கு நியாயமானதாக, சரியானதாக சூழ்நிலை ஒன்றைக் கண்டாலே ஒழிய மற்றப்படி கர்த்தர் நம்மீது வரத்தக்கதாக அனுமதிக்கும் எதையும் தைரியமாய்க் கர்த்தருடைய ஏற்பாடு என ஏற்றுக்கொள்ள வேண்டும்; மாறாக ஓடிப்போய்விடக்கூடாது.

பிதா ஊற்றியுள்ள பாத்திரத்தில் பானம் பண்ணுவதை விரும்புவதைக் காட்டிலும், கர்த்தருடைய பின்னடியார்கள் கற்றுக்கொள்வதற்கு அவசியமான படிப்பினை வேறு எதுவும் இல்லை; அதாவது, நாம் பிதாவினுடையவர்கள் ஆனபடியினாலும், அபிஷேகம் பண்ணப்பட்டவரின் சரீரத்தினுடைய அங்கங்களாய் இருக்கின்றபடியினாலும், நம்முடைய காரியங்கள் அனைத்தையும் பிதா வழிநடத்துகின்றார், மற்றும் வழிக்காட்டுகின்றார் என்பதை அடையாளம் கண்டுகொள்ளுதல் ஆகும். இவ்விஷயத்தில் பார்க்கும்போது, தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள், உலகத்தாரிடமிருந்து முற்றிலும் வேறான ஸ்தானத்தில் காணப்படுகின்றனர்; உலகத்தாரை, பிதா தம்முடைய புத்திரர்களெனக் கையாளுவதில்லை; உலகத்தார் மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கான பரீட்சையில் இல்லை; மேலும் உலகத்தாருக்குப் பிதா இப்பொழுது பரீட்சைகள், சோதனைகள் முதலான பாத்திரங்களை ஊற்றிக்கொண்டிருக்கவில்லை. "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிற தல்லவா?"-அவரது பாடுகளில் பங்கடைதலாயிருக்கிறதல்லவா? (1 கொரிந்தியர்10:16); "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" (2 தீமோத்தேயு 2:12); "ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்." (ரோமர் 6:8).

# இப்பொழுதே முடிவு செய்யுங்கள்

## (யோசுவா 24:15; திருவிவிலியம்) மாற்கு 15:1-15

*"அப்பொழுது பிலாத்து பிரதான ஆசாரியர்களையும் ஜனங்களையும் நோக்கி: இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை என்றான்."* லூக்கா 23:4

நம்முடைய ஜீவியத்தில் நாள்தோறும் நமக்கு முன்பாக வைக்கப்படும் கேள்விகளுக்கு, நாம் எடுக்கும் சரியான தீர்மானங்களின் அடிப்படையில்தான் எல்லாம் சார்ந்துள்ளது என்பது இப்பாடத்தில் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது. நமது கர்த்தரும், பதினொரு அப்போஸ்தலர்களும் மேல் அறையைவிட்டு, கெத்செமனே தோட்டத்திற்குப் புறப்பட்ட போது, யூதாஸ் தனக்குள் ஏற்கெனவே அன்று மாலையில் தீர்மானம் பண்ணி வைத்திருந்தபடி, இயேசுவின் கூட்டத்தைவிட்டு, பிரதான ஆசாரியர்களுடன் இரகசிய ஒப்பந்தம் போடவும், பஸ்கா காலமாய் இருந்தபடியினால் பட்டணத்தில் வந்திருந்த திரளான ஜனங்களுக்குத் தெரியாமல், இயேசுவைத் தனிமையில் கலகமின்றி பிடிப்பதற்குரிய இடத்திற்குப் பிரதான ஆசாரியரின் பணியாட்களையும், ஆதரவாளர்களையும் வழிகாட்டும்படிக்கும் புறப்பட்டுப் போனான். மேலும், உரோமர்கள் உரோம அதிகாரத்திற்கு எதிரான புரட்சியின் அறிகுறிகளைக் கண்ட மாத்திரத்தில், அப்புரட்சியை அணைத்துப் போடுவதில் உரோமர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருந்தபடியினால், ஒருவேளை இயேசுவின் நண்பர்கள், மக்கள் மத்தியில் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டால், யூதர்களின் மதத் தலைவர்கள் உரோமர்களின் பார்வையில், உரோமர்களுடைய ஆட்சியை எதிர்த்து, துரோகம் பண்ணுகிறவர்களாகக் கருதப்பட்டுவிடுவார்களோ என்ற எண்ணம் (அச்சம்) யூத மதத்தலைவர்களிடம் காணப்பட்டது. யூதாஸ், பிரதான ஆசாரியர்களுடன் ஏற்கெனவே ஒப்பந்தம் பண்ணியிருந்தார் என்பதில் சந்தேகமில்லை. மேலும் இயேசுவும், மற்ற அப்போஸ்தலர்களும், போஜனம் முடித்த பிற்பாடு எவ்விடத்திற்குப் போவார்கள் என்பதை அறிந்துகொள்வதற்கே, யூதாஸ் பஸ்கா போஜனத்தின் போது, அவர்களோடு காணப்பட்டதற்கான பாதிக் காரணமாகும். "நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்" என்று யூதாசிடம், நமது கர்த்தர் பேசின வார்த்தைகளானது இக்காரியங்கள் ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்பதையும், மேலும், இயேசு அவைகளை இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் அறிந்திருந்தார் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. அதுவே, கடைசி தீர்மானம் எடுப்பதற்கு யூதாசுக்குரிய வேளையாக இருந்தது. யூதாஸ் பணப்பிரியனாக இருந்தான். மேலும் பணத்திற்காக கர்த்தரை விற்றுப்போடவும் தீர்மானித்திருந்தான். இயேசு தம்மைத்தாமே விடுவித்துக்கொள்வார் என்று அநேகமாக யூதாஸ் யூகம் பண்ணியிருக்க வேண்டும். இன்னுமாக நமது கர்த்தருக்குப் பாதிப்பு உண்டுபண்ணாமல், பணம் சம்பாதிக்கலாம் என்றுகூட எண்ணியிருக்கலாம். எப்படியிருப்பினும், யூதாசின் இச்செயல்பாடுகள் அவனுடைய இழிவான குணலட்சணத்தையும், சுயநலமான காரணங்களுக்காக தீமையைச் செய்ய விரும்பும் தன்மையையும் எடுத்துக்காட்டுகின்றது. மேலும், யூதாசின் செயல்பாடானது,

அக்கிரமம் புரிவதற்கென பாலாக் அளிப்பேன் என்று கூறிய பரிசுகளுக்காக மிகவும் ஆசைப்பட்ட பீலேயாம் தீர்க்கதரிசியை நமக்கு நினைப்பூட்டுகின்றது.

## கூழுக்காகச் சத்தியத்தை வியாபாரம் பண்ணுதல்

கர்த்தரைப் பணத்திற்காக விற்றுப்போட்ட காரியமானது, யூதாஸ் செய்ததுபோன்று, அதேவிதத்தில் இன்று செய்யமுடியாது. எனினும், நம்முடைய நாட்களிலும் கூட இதே இழிவான ஆவிக்கு கொஞ்சம் ஒத்த ஆவி சிலரிடம் வெளிப்படுகின்றது என நாம் விசுவாசிக்கின்றோம். யூதாசின் அளவுக்கு இச்செயல்பாடு அப்படியே (இன்று) காணப்படாவிட்டாலும், அதேமாதிரி (இன்று) காணப்படுகின்றது. மேலும், சாதகமாய்ச் சூழ்நிலைகள் அமைகையில் யூதாசின் அளவுக்குச் செயல்பாடுகள் காணப்படுவதற்கு வாய்ப்பில்லை என யார் நிச்சயம் அளிக்கமுடியும்? சிலர் பண ஆதாயங்களுக்காக, பணத்திற்காக, சமுதாய அநுகூலங்களுக்காகச் சத்தியத்தை விற்றுப்போட விருப்பம் உள்ளவர்களாய் இருக்கின்றார்கள். இன்னும் சிலர் யூதாஸ் எப்படிப் பூமிக்குரிய ஆதாயத்திற்காக தலையாய் இருந்தவரை விற்றுப்போட்டானோ, அப்படியே கர்த்தருடைய சரீர அங்கங்களை விற்றுப்போட விருப்பம் உள்ளவர்களாய்க் காணப்படுகின்றனர். அதாவது, ஒருவரையொருவர் தீமைக்கு ஒப்புக்கொடுப்பது, மற்றும் கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் மீது தீமை, உபத்திரவம், எதிரான காரியங்கள்/துன்பங்கள், நிந்தனைகள் முதலியவைகள் வர உதவுவதுமேயாகும். எனினும், இப்படிப்பட்டவர்கள் ஒருகாலத்தில் யூதாசைப் போன்று இத்தகைய பொல்லாத திட்டங்களையும், நன்றியில்லா தன்மைகளையும் உடையவர்களாயிராமல், முற்றிலும் நல்லவர்களாகவே காணப்பட்டிருந்தார்கள். இன்னும் இப்படிப்பட்டவர்கள் ஒருகாலத்தில் சுயத்தின் மீதான அன்பினாலோ, பணத்தின் மீதான அன்பினாலோ அல்லது வேறு எவ்வித தீமையான காரியங்களினாலோ அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரத்தின் அங்கங்களுக்குப் பாதிப்பு உண்டுபண்ணத்தக்கதாக ஏவப்படாமலே காணப்பட்டார்கள். இரயில் வண்டியிலுள்ள ஒரு மின்விசை மாற்றும் சாதனம் (switch) எப்படி இரயில் வண்டியை முற்றிலும் வேறு தண்டவாளத்தில் மாற்றிவிடுகின்றதோ, அதுபோல சிறு காரியங்களைக்குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்கக்கடவோம். ஏனெனில், இச்சிறு காரியங்கள் இரயில் வண்டியின் சுவிட்ச் போன்று, நாம் அடைய வேண்டும் என முதலில் விரும்பின இலக்கிலிருந்து நம்மை வேறு திசைகளுக்கு மாற்றிவிடும். நமக்கு அனுதினமும் வரும் குணலட்சணத்திற்கான சோதனைகளை, பரிட்சைகளை எதிர்கொள்ளும் விஷயத்தில் நாம் மிகவும் கவனமாய் இருந்திட வேண்டும் மற்றும் அவைகளைக்குறித்து நாம் எடுக்கும் தீர்மானங்கள், நம்முடைய தற்கால மற்றும் எதிர்கால வாழ்க்கைக்கு மிகவும் முக்கியத்துவம் உள்ளதாய்க் காணப்படுகின்றன.

மேல் வீட்டறையிலிருந்து நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களோடு கெதரோன் ஆற்றைக் கடந்து, ஒலிவ மலைக்குச் சென்று, கெத்செமனே தோட்டத்திற்குப் பிரவேசிக்கையில் ஒரு சோதனைக்குள்ளேயே பிரவேசித்தார். கர்த்தருடைய சோதனை/பரிட்சையானது, யூதாசுக்குரிய சோதனையிலிருந்து முற்றிலும்

வேறுபட்டதாகும். அவ்வேளையில் அவர் முழுமையான தீர்மானம் உடையவராகக் காணப்பட்டார். அவருடைய அர்ப்பணம் நிறைவடைந்துவிட்டது. மேலும், தாம் நிறைவேற்றும்படிக்கு அவர் இவ்வுலகத்தில் கடந்து வந்ததற்கான வேலை தொடர்பான எவ்விதமான தயக்கமும் அவரிடத்தில் காணப்படவில்லை. இன்னுமாக, நம்முடைய பாவங்களுக்காக மரிப்பது குறித்து அல்லாமல், வேறு எவ்விதமான எண்ணங்களும் அவரிடத்தில் இல்லை. ஆனால், அவர் மரணத்தின் விளிம்பில் நின்று கொண்டிருக்கையில், இன்னும் சில மணி நேரங்களுக்குள்ளாக தமது அர்ப்பணம் அதாவது, "மரணத்திற்குள்ளான தமது ஞானஸ்நானம்" குறித்த அனைத்து விஷயங்களும் "நிறைவேறப்" போகின்றது என அவர் உணர்ந்தபோது, இரண்டு விஷயங்கள் அவருடைய கவனத்திற்கு முன்பு வீரியத்துடன் வந்து நின்றது. இதில் ஒரு விஷயம் என்னவெனில், அவர் உரோம நீதிபதிகள் முன்பாகவே குற்றம் சாட்டப்படுவார் என்றும், உரோம முறையான சிலுவையில் அறையப்படும் முறையின்படியாக தமது மரணம் சம்பவிக்கும் என்றும், தமக்கு உரோம அரசாங்கம் தீர்ப்பு வழங்கத்தக்கதாக தம்முடைய குணலட்சணங்களும், போதனைகளும் தம்முடைய சத்துருக்களாகிய பிரதான ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகர்களால் தவறாய்க் காண்பிக்கப்படும் என்றும், தாம் மனுஷர்கள் மத்தியில் பொல்லாங்கு விளைவித்தவராகவும், தேவனுக்கு எதிராக தேவ தூஷணம் பேசினவராகவுந்தான் உலகத்திற்கு முன்பு தம் மீதான குற்றச்சாட்டுகள் காண்பிக்கப்படும் என்றுமான விஷயங்களை அவர் தெளிவாய் உணர்ந்துகொண்டார்.

எதற்கும், அதாவது சாவுக்கும் துணிந்தவர்களாகவும், சட்டத்தின் பாதுகாப்பை இழந்த நிலையில் பாடுபடுவதற்கான வாய்ப்பு வருகையில், அதிலும் கெட்ட எண்ணங்களுடன் மகிழ்ச்சிக் கொள்ளும் நபர்கள் உலகத்தில் இருக்கின்றார்கள் என்பதில் நமக்கு எவ்விதமான சந்தேகமும் இல்லை. மேலும், இத்தகையவர்கள் தங்களை ஏறக்குறைய கதாநாயகர்களாகக் கருதுகின்றனர். இன்னுமாக, இவர்களைப் போன்றே சீரழிந்த மனநிலை உடைய வகுப்பார் மத்தியில் இவர்கள் ஏறக்குறைய கதாநாயகர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால், மிகுந்த நேர்மையான மனப்பாங்கை உடையவர்களுக்கு அதாவது, மாண்பு மிக்கவர்களுக்கும், கனம் பொருந்தியவர்களுக்கும், தூய்மையான நோக்கம் உடையவர்களுக்கும் இவ்விதமான அனுபவங்களுக்குள் கடந்து செல்வது என்பது, மிகக் கடினமான சோதனையாகக் காணப்படும். எவ்விதமான சீர்க்கேட்டையும் உணர்வுகளில் பெற்றிராத பூரணமான நமது அருமையான மீட்பர் இப்படியானதொரு சூழ்நிலையில் காணப்படும்போது, நாம் உணர்ந்துகொள்வதைக் காட்டிலும், அவர் அதிகமாக வெட்கமும், அவமானமும் அடைவார் என்பதை நம்மால் நன்கு புரிந்துகொள்ள முடிகின்றது. இந்த வெட்கம் மற்றும் மனுஷர் மத்தியில், தாம் ஓர் ஆபத்தான மனுஷன் எனவும், தேவனுக்கு எதிராக தேவதூஷணம் பேசினார் எனவும், தம்மேல் சுமத்தப்படப் போகின்ற இந்த நிந்தனைகளாகிய விஷயங்களையே நமது கர்த்தர் பாத்திரம் என்ற வார்த்தைகளில் குறிப்பிட்டு, தம்மை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும், ஆனாலும், தம்முடைய சித்தத்தின்படியல்ல, பிதாவின் சித்தப்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார் என நாம் நம்புகின்றோம்.

## ஜனங்களில் ஒருவனும் அவரோடு இருந்ததில்லை

கெத்செமனே தோட்டத்தில் காணப்பட்ட துயரமான அவ்வேளையானது, அதாவது சூழ்நிலைகள் எப்படியாக இருக்கின்றது எனக் கர்த்தர் உணர்ந்துகொண்ட அளவுக்குச் சீஷர்களால் உணர்ந்துகொள்ள முடியாமல் தூங்கிக்கொண்டிருந்த அந்த வேளையானது, நமது அருமையான மீட்பருடைய அனுபவங்களிலேயே அவருக்கு மிகச் சோதனையான வேளையாக இருந்தது. துக்கம், அவமானம் மற்றும் நிந்தனை எனும் பாத்திரத்தில், "மரத்தில் தொங்குகிறவன் சபிக்கப்பட்டவன்" என்று நியாயப் பிரமாணத்தில் எழுதப்பட்டிருக்கின்றதே என்ற எண்ணமும் வந்து சேர்ந்தது. மேலும் இவ்வசனத்தின்படி, அவர் தேவனுடைய ஜனங்கள் அனைவர் மத்தியிலும், சபிக்கப்பட்டவராகக் காட்டப்படுவார். இன்னும் சில எண்ணங்கள் அவருக்குள் உதித்தன: "நியாயப்பிரமாணம் கோரும் விஷயங்கள் அனைத்தையும் நேர்த்தியாகச் செய்து முடிப்பதில் நான் ஏதேனும் விஷயங்களில் தவறியிருப்பதற்கு வாய்ப்புகள் இருக்கக்கூடுமோ?" இன்னுமாக, நான் குறிப்பிடத்தக்கதான ஏதோ ஒரு சிறு விஷயத்தில் தவறிப்போய்விடுவதற்கும், இதனால் தேவனுடைய நியாயப்பிரமாணத்தி னிமித்தம் உண்டாகும் சாபமானது, என் மேலேயே நிலைத்துக் காணப்படுவதற்கும், மற்றும் இதனால் பிதாவின் சித்தத்தை இவ்வளவு தூரம் நிறைவேற்றின பிற்பாடும், பரிபூரண மனிதனாக இருந்து இவ்வளவு தூரம் தெய்வீக நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றின பிற்பாடும், நிரந்தரமாக ஜீவனை இழந்துப் போவதற்குமான வாய்ப்பு என்னில் இருக்கக்கூடுமோ? என்பவைகளேயாகும்.

அவருடைய நரம்பு மண்டலத்தின் மீது அழுத்தம் அளவுக்கு மீறி காணப்பட்டபடியினால், இரத்த வியர்வை அவருக்கு ஏற்பட்டது. இரத்த வியர்வை ஏற்படுவது என்பது அரிதான ஒருவகை உடல் நலக் குறைவாகும். இது அரிதானதாக இருந்தாலும் மருத்துவர்களுக்குத் தெரிந்தவைகளேயாகும். இவ்வெண்ணங்கள் தொடர்பாக அவருக்கு ஏற்பட்ட வேதனையானது, அனைத்து வேதனைகளைக் காட்டிலும் பெரியதாய் இருந்தது. ஒருவேளை அவர் சிறுவிஷயத்தில் தவறியிருந்தாலும் கூட, அவருக்கு எதிர்காலம் என்ற ஒன்று இருப்பதில்லை. இன்னுமாக உயிர்த்தெழுதலின் மூலமாக மீண்டும் பிதாவின் அன்பினிடத்திற்கும், அவருடைய தயவைப் பெற்றுக்கொள்வதும், பரலோக நிலைகளுக்குத் திரும்புவதுமாகிய பிரகாசமான எதிர்ப்பார்ப்புகள் அனைத்தும் சீர்க்குலைந்து போய்விடும். இதைக்குறித்துதான் அப்போஸ்தலர் "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்" என்று குறிப்பிடுகின்றார் (எபிரெயர் 5:7). அவர் அச்சம் கொண்ட விஷயத்தில் அவர் கேட்கப்பட்டார். மேலும், உயிர்த்தெழுதலின் மூலமாக அவர் மரணத்தினின்று விடுவிக்கப்பட்டார். இன்னுமாக, மரணத்தைக்குறித்த பயத்தினின்றும், பிதாவின் சித்தம் குறித்த விஷயத்தில் தமது உண்மை மற்றும் அத்தருணம் வரையிலும் பிதாவினால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் தாம்

காணப்படுகின்றாரோ என்பது குறித்த சகல ஐயங்களினின்றும் கர்த்தர் விடுவிக்கப்பட்டார். ஒரு தேவதூதன், பரலோகத்தின் தூதன் அவருக்குத் தோன்றி, அவரைப் பெலப்படுத்தி, அவரை ஆறுதல்படுத்தி, அவர் மேல் காணப்படும் பிதாவின் அன்பு, பராமரிப்புக் குறித்தும் அவர் பிதாவின் பார்வையில் நன்கு பிரியமான நிலையிலேயே காணப்படுகின்றார் என்பதைக்குறித்தும் தெரிவித்து, அவருக்கு நிச்சயம் கொடுத்தார். இயேசுவின் இருதயப்பூர்வமான உண்மைக்குறித்த நிச்சயமே/உறுதிபாடே இயேசுவுக்கு அவசியமாயிருந்தது. தம்முடைய நடத்தையில் பிதா நன்கு பிரியமாயிருக்கின்றார் என்றும், இந்த அனுபவங்களின் முடிவில் அவர் நமது மீட்பராகும்படிக்கு உலகத்திற்கு வருவதற்கென விட்டுவந்த மகிமைகளை மீண்டும் பெற்றுக்கொள்வதோடுகூட அவருக்கு முன்பாக வைக்கப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தங்களில் காணப்படும் மற்றச் சகல சந்தோஷங்களும் கிடைக்கும் என்றும் உள்ள நம்பிக்கையினால், எவ்விதமான அனுபவங்களுக்குள்ளும் தைரியத்துடன் கர்த்தரால் கடந்து செல்ல (இப்பொழுது) முடியும். அவருடைய மேன்மையான இருதயத்திற்குச் சோதனை வந்தது. ஆனால், அதன் விளைவாக அவருக்கும், மற்றவர்களுக்கும் மாபெரும் ஆசீர்வாதம் உண்டாயிற்று. அவருடைய சோதனைக்கான பலனாக அவருக்குள் சமாதானமும், சந்தோஷமும், நம்பிக்கையும் உண்டாகி, அவைகள் அவரை அன்றைய இரவு நேரத்திலும், அடுத்த நாளிலும், அவருடைய மரிக்கும் தருவாய் வரையிலும், மிகுந்த அமைதலுடன் காணப்பட உதவிற்று. மேலும், இப்படியாக (அவருக்கு வந்த சோதனை) அப்போஸ்தலர் அறிவிக்கிற பிரகாரமாக அவரை உயிர்த்தெழுதலில் மகிமையடையச் செய்தது. இன்னுமாக இறுதியில் மனுக்குலம் மீதுள்ள சாபத்தை மாற்றிப்போடுவதன் மூலமாக மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கங்களுக்கும் ஆசீர்வாதம் கடந்துவரும். அவர் மரணம்வரை உண்மை காண்பித்த விஷயமே மனுக்குலத்தின் மீது காணப்படும் சாபத்தை மாற்றிப்போடுவதற்கான அதிகாரத்தை அவருக்குக் கொடுத்தது.

## தம்முடைய நண்பன் என அறிவிக்கப்பட்ட ஒருவனால் காட்டிக்கொடுக்கப்பட்டார்

இயேசு இருந்த இடத்திற்கு யூதாஸ் பிரதான ஆசாரியனின் வேலையாட்களுடன் வந்தான். இந்த வேலையாட்கள் நம்முடைய காலக்கட்டத்திலுள்ள காவல்துறை படைகளுக்கு ஒப்பாக இருந்தார்கள். அவர்களில் சிலர் பட்டயங்களையும், இன்னும் சிலர் தடிகளையும் எடுத்துக்கொண்டு வந்தார்கள் என்பது, நமது கர்த்தருடைய வார்த்தைகளில் வெளிப்படுகின்றது. பேதுருவும், அப்போஸ்தலர்களில் மற்றொருவரும் தங்களிடத்தில் பட்டயத்தை வைத்திருந்தார்கள். அந்நாட்களில் பட்டயம் கொண்டு செல்வது விநோதமான காரியமல்ல என்றாலும், அப்போஸ்தலர்களிடம் அது காணப்படுவது விநோதமேயாகும். நமது கர்த்தர் வலுக்கட்டாயமாகப் பிடிக்கப்படவில்லையென்பதை விவரிப்பதற்கே அப்போஸ்தலர்களிடம் பட்டயம் காணப்பட்டது என்பதில் ஐயமில்லை. நமது கர்த்தருடன் கூடப் பதினொரு திடகாத்திரமான சரீரமுடைய மனுஷர்கள் காணப்பட்டார்கள். மேலும், நமது கர்த்தர்

தம்முடைய பாதுகாப்பிற்காக இவர்களுக்குக் கட்டளைக்கொடுப்பாரானால், அதற்கென்றே இவர்கள் தங்கள் ஜீவனையும் ஒப்புக்கொடுக்க தயாராக இருந்தார்கள். மேலும், இவர்களுள் ஒருவராகிய பேதுரு, தமது பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனின் வேலைக்காரனுடைய காதை வெட்டினார். ஒருவேளை நமது கர்த்தர் கட்டளையிட்டிருப்பாரானால் அல்லது பேதுருவிடம் அவர் செய்ததுபோதாது எனக் கர்த்தர் தெரிவித்திருப்பாரானால், கர்த்தருக்கான இவர்களது போராட்டம் கடுமையாகக் காணப்பட்டிருக்கும் என்பதிலும் ஐயமில்லை. கர்த்தரோ பேதுருவை அவருடைய பட்டயத்தை அவருடைய உறையிலேயே போட்டுவிடும்படி கூறினார். அதாவது, பேதுரு இம்மாதரியான மாம்சத்திற்குரிய ஆயுதங்களைக் கொண்டு தனது கர்த்தருக்காக யுத்தம் பண்ணக்கூடாது என்று கூறினார். இதற்கிடையில் வெட்டப்பட்ட காதுடைய வேலைக்காரனையும் கர்த்தர் சொஸ்தப்படுத்தினார். நமது கர்த்தர் தம்மையே ஒப்படைத்துச் சரணடைந்ததினிமித்தம் தமது அப்போஸ்தலர்கள் கைது செய்யப்படக்கூடாது என்ற நிபந்தனையை முன்வைத்தார்.

இப்படியாக, அப்போஸ்தலர்கள் தூக்கத்திலிருந்து கர்த்தரால் எழுப்பப்பட்டார்கள், அவரால் ஆச்சரியமடைந்தார்கள், கைது செய்யப்படுவதிலிருந்து அவரால் விலக்கப்பட்டுக் காணப்பட்டார்கள். மேலும், அவருடைய சீஷர்கள் அவர்களிடமிருந்து அவர்களுடைய கர்த்தர் கைது செய்து கொண்டுபோகப் படுவதையும் கண்டார்கள். அவர்கள் திகைப்புடனும், குழம்பிப்போன மனதுடனும் காணப்பட்டார்கள். இச்சம்பவம் நடைபெறுவதற்கு முன்னதாகவே பல்வேறு தருணங்களில் இதைப்போன்ற சூழ்நிலைகள் சீக்கிரத்தில் எதிர்ப்பார்க்கப்படலாம் என நமது போதகர் அவர்களுக்குக் கூறியிருந்த போதிலும், அவர்கள் திகைப்புடனும், குழம்பிப்போன மனநிலையிலும் காணப்பட்டார்கள். "சோதனைகுட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என ஏற்கெனவே ஆண்டவர் கூறின பிரகாரம், அச்சமயமானது அவர்களுக்கும் சோதனையான சமயமாகக் காணப்பட்டது. அவருடைய வார்த்தைகளை அவர்கள் போதுமான அளவுக்குப் புரிந்து கொள்ளவில்லை. இன்னுமாக, சோதனை வேளையானது வருகையில் அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தபடியால், அதற்கு அவர்கள் ஆயத்தமில்லாமலும் காணப்பட்டார்கள்.

நமது கர்த்தர் கைகள் கட்டப்பட்ட நிலையில் அன்னாவிடத்திற்கும், காய்பாவினிடத்திற்கும் இழுத்துச் செல்லப்பட்டார். அது இரவு நேரமாகவும், சுமார் ஒரு மணி அளவும் காணப்பட்டாலும், யூதர்களுடைய பிரதான அதிகாரிகளில் சிலரும், ஆலோசனை சங்கத்தின் அங்கங்களில் சிலரும் கூடி வந்திருந்தனர். அன்றைய இரவு இயேசு கைது செய்யப்படுவார் என்றும், இயேசுவின் சீஷர்களில் ஒருவன் இயேசுவைப் பிடித்து, கைது செய்யத்தக்கதாக அதிகாரிகளை வழி நடத்துவான் என்றும், இவ்விஷயங்களைப் பொதுவான ஜனங்கள் அறிந்துகொள்வதற்கு முன்பும், பஸ்கா வாரம் ஆரம்பிப்பதற்கு முன்பும், எவ்வளவு சீக்கிரமாய்ச் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் இயேசுவின் மரணம் அடுத்த நாள் சம்பவித்தாக வேண்டும் என்னும் அளவுக்கு இவ்விஷயங்கள் அவசரமாய்ச் செய்யப்பட வேண்டும் என்றும் இந்த யூத

அதிகாரிகளுக்கும், ஆலோசனை சங்கத்தாரின் அங்கங்களுக்கும் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தபடியாலே, அவர்கள் உடனே கூடிவந்தார்கள். சூரியன் மறைந்தது முதல் சூரியன் உதிக்கும் வரையிலும், இடையில் காணப்படும் காலப்பகுதியில் மரணத் தண்டனைக்குரிய எந்த மனுஷனையும் விசாரணை செய்வது பிரமாணத்திற்கு விரோதமாய் இருந்தபடியால் இவர்கள் நடத்தின இந்த விசாரணையானது வழக்கத்திற்கு மாறான விஷயமாகும். சூரியன் உதித்த பிற்பாடே ஆலோசனை சங்கத்தார் எடுக்கும் முடிவுகள் அதிகாரப்பூர்வமானவைகள் என்று கருதப்படும். இவர்கள் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றத்தக்கதாக நியாயப்பிரமாணத்தை மீறுவதற்கும், இவர்கள் சித்தம் கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள்.

## தேவதூஷணம் எனும் பயங்கரமான குற்றச்சாட்டு

இயேசு பிரதான ஆசாரியன் முன் நின்றுகொண்டிருக்கையில், அவருடைய சத்துருக்கள் அவருக்கு எதிராக சாட்சிகளைக் கொண்டுவந்து விசாரணை தொடர்ந்துக் கொண்டிருக்கையில், நமது கர்த்தர் தம்மைத் தற்காத்துக்கொள்ள எதுவும் முன் வைக்கவில்லை என்று சொல்லப்படுகின்றது. இன்னுமாக, ஏதோ ஒரு குற்றத்தை அவரிடத்தில் கண்டுபிடிக்க வேண்டும் என்பது அவர்களுடைய நோக்கமாயிருந்தப் படியாலும், அவர்களுடைய இருதயத்தில் கொலைப்பாதகம் காணப்பட்டப்படியாலும், தற்காத்துக் கொள்வதற்கான பிரயாசங்கள் பயனற்றதாகவே காணப்படும். தேவதூஷணம் என்னும் குற்றச்சாட்டை நிலைவரப்படுத்துவதற்கே அவர்கள் நாடினார்கள். இந்தத் தேவதூஷணம் எனும் குற்றச்சாட்டானது, நியாயப்பிரமாணத்தின் கீழ் மரணத் தண்டனைக்கு ஏதுவான குற்றச்சாட்டுகளில் ஒன்றாக காணப்பட்டது. மேலும், இயேசு மரிக்க வேண்டும் என்பதே அவர்களுக்கு வேண்டிய காரியமாகவும் இருந்தது. இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று அறிவித்ததின் மூலம் தேவனுக்கு எதிராக தூஷணம் பேசினார் என்றும், ஆலயத்தை இடித்து அதை மூன்று நாளில் மீண்டும் கட்டுவதாக இயேசு அறிவித்ததின் மூலம் ஆலயத்திற்கு எதிராக தூஷணம் பேசினார் என்றும் அவர்களுடைய வாதம் காணப்பட்டது. ஒரு தீர்மானத்திற்குள் வந்தார்கள். எனினும், விடியும்வரை எதையும் அவர்களால் செய்ய முடியாது. இதற்கிடையில் ஆசாரியனுடைய வீட்டு முற்றத்தில் காணப்பட்ட குறுகிய மனப்பான்மையுடைய வேலைக்காரர்கள் கர்த்தர் மேல் காறி உமிழ்ந்து, அவருடைய கண்களைக் கட்டி, அவரை அடித்து, "உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும்" என்றார்கள். மேலும், இப்படியாகவே விடியும்வரை அந்த மணி நேரங்கள் கடத்தப்பட்டன. இவைகள் கர்த்தருக்குச் சோதனைகள் என்று யூதர்கள் எண்ணினார்கள். ஆனால், கர்த்தருடைய சோதனைகள் அனைத்தும் கடந்துபோன காலங்கள்/மணி நேரங்களிலேயே காணப்பட்டது. இது யூதர்களுடைய பிரதான ஆசாரியர்களுக்கும், அதிகாரிகளுக்கும், ஆலோசனை சங்கத்தாரின் அங்கங்களுக்கும் மற்றும் யூத ஜனங்களுக்குமே சோதனையாக இருந்தது. இவர்கள் சத்தியம் அல்லது தப்பறையில் எதை நேசிக்கின்றார்கள் என்பதற்கும், நீதி மற்றும் அநீதியில் எதை நேசிக்கின்றார்கள் என்பதற்குமான

சோதனையாக/பரிட்சையாகக் காணப்பட்டது. இவர்களோ அநீதியின் பக்கம் சாய முடிவு பண்ணினார்கள்.

இதற்கிடையில், அப்போஸ்தலனாகிய பேதுருவுக்கு மிகுந்த சோதனை ஏற்பட்டது. இவர் ஆசாரியனுடைய வீட்டின் முற்றத்தில் எப்படியோ வந்துவிட்டார். மேலும், இவர் முற்றத்தில் நின்று குளிர்க்காய்ந்து கொண்டிருக்கையில், இவரால் உள்ளே சம்பவிக்கும் விஷயங்களைப் பார்க்கவும், கேட்கவும் முடிந்தது. மாம்ச சுபாவத்தின் முதல் அம்சமாகிய தன் உயிரைக் காக்கும் தன்மையானது, இவரை மேலோங்கி தோற்கடித்து விட்டது. இன்னுமாக, ஒருவேளை தான் இயேசுவின் பின்னடியார்களில் ஒருவனாக அடையாளம் கண்டுகொள்ளப்பட்டால், தானும் போதகருக்கு ஏற்பட்ட நிலையையே அனுபவிக்க வேண்டியிருக்கும் என்று பேதுரு யோசித்து, இயேசுவின் மீதுள்ள பிரச்சனைகள், தன் மீது வராமல் தடுக்கப்பட வேண்டுமென விரும்பி, தனக்கு இயேசுவைத் தெரியும் என்ற உண்மையைப் பேதுரு மறுதலித்த விஷயத்தில் மேற்கூறிய மாம்சத்தின் அம்சமானது காட்சியளித்தது. இரண்டாம் முறையும் பேதுரு தனக்கு இயேசுவை யார் என்று தெரியாது எனச் சொல்கையில் சத்தியமும் பண்ணினார். பாவம் பேதுரு! பேதுருவுக்கு அது கடுமையான சோதனையின் வேளையாய் இருந்தது. ஆனால், அந்தோ பரிதாபம் பேதுரு தோற்றுவிட்டார். ஒருவேளை கிறிஸ்துவினிமித்தமாகவும், தான் இயேசுவின் சீஷனென்று ஒப்புக்கொள்வதினிமித்தமாகவும், பேதுரு ஏதேனும் பாடுகள் பட்டிருப்பாரேயானால் பேதுரு எவ்வளவாகக் கனப்படுத்தப்பட்டிருப்பார்! ஆனால், ஒருவேளை பேதுரு அப்படிச் செய்திருப்பாரேயானால், பேதுருவின் அனுபவங்கள் வாயிலாகக் கற்பிக்கப்படும் மிகுந்த விலையேறப் பெற்ற படிப்பினைகளை அனைத்துக் கர்த்தருடைய பின்னடியார்களும் இழக்க நேர்ந்திருக்கும்.

இச்சம்பவத்தில் வெளிப்பட்ட பேதுருவின் பெலவீனங்கள் மற்றும் பிற்பாடு அவர் மிகவும் கசந்து, அழுது, அறிக்கை செய்து மன்னிப்புப் பெற்றுக்கொண்டதான விஷயங்கள் கர்த்தருடைய பின்னடியார்கள் அனைவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாய் சில விஷயங்களில் அமைந்துள்ளது. அதாவது, பேதுருவைப் போன்று கர்த்தருடைய பின்னடியார்களிடத்திலும், பெலவீனங்கள் வெளிப்படும் போதும், பேதுரு செய்த தவறில் சில சமயம் கர்த்தருடைய பின்னடியார்களும் விழுந்து காணப்படும் போதும் ஆசீர்வாதமாய் அமைந்துள்ளது. இப்படிப்பட்ட நிலையில் அகப்பட்டவர்கள் தங்கள் தவறுகளுக்காக மனங்கசந்து அழ வேண்டும் என்பதை பேதுருவிடமிருந்து கற்றுக்கொண்டுள்ளனர்; இன்னுமாக இப்படிப்பட்ட நிலையில் அகப்பட்டவர்கள், பேதுரு கர்த்தரினால் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மனப்பூர்வமாக மன்னிக்கப்பட்டதையும், அவர் இந்த அனுபவங்கள் வாயிலாக கற்றுக்கொண்ட பாடமானது, அவருடைய ஜீவியத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதையும், இவை அவருக்கு அனுகூலமாகவே இருந்தது என்பதையும் காண்கையில், தாங்கள் முற்றிலுமாய்த் தள்ளிவிடப்படவில்லை என்பதையும் பேதுருவிடமிருந்து கற்றுக்கொண்டுள்ளனர். பேதுருவைக் குறித்து இப்படி ஒரு கூற்றுக் காணப்படுகின்றது; அது என்னவெனில்,

இந்தச் சம்பவம் நடந்த பிற்பாடும் கூட, பேதுரு தினந்தோறும் சேவல் கூவுகின்ற நேரத்தில் எழுந்திருந்து அந்த நாளில் வெளிப்பட்ட தனது பெலவீனத்தையும், பின்னர்ப் பெற்றுக்கொண்ட மன்னிப்பையும் நினைவுப்படுத்திப் பார்ப்பாராம். அது பேதுருவுக்குச் சோதனை வேளையாக இருந்தது. மேலும், இதைப்போன்ற சோதனை வேளைகள் நம் அனைவருக்கும் கூட வரும். எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் கர்த்தரை மறுதலித்து விடாமல் பார்த்துக்கொள்ளக்கடவோம். இன்னுமாக நமது கர்த்தர் தம்மையும், அவருடைய வார்த்தைகளையும், அவருடைய சகோதர சகோதரிகளையும் சரிசமமான நிலையில் வைத்து மதிப்பிடுகின்றார் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேலும், அவருடைய வார்த்தைகளை மறுதலிப்பவர்கள் கர்த்தரையே மறுதலித்துவிடுகின்றனர் என்றும், அவருடைய தீர்க்கத்தரிசனமான வார்த்தைகளை மறுதலிப்பவர்கள், கர்த்தரையே மறுதலித்து விடுகின்றனர் என்றும் அவர் நமக்குத் தெரிவித்துள்ளார்.

## உரோமுக்கு எதிரான துரோகம்

சூரியன் உதயமாகிய பின்னர், ஆலோசனை சங்கத்தார் சட்டப்பூர்வமாகக் கூடினார்கள். மேலும், பிரதான ஆசாரியன் தான் சாட்சிகளை விசாரித்ததாகவும், இயேசு தேவனுக்கும், ஆலயத்திற்கும் எதிராக தூஷணம் பேசினது உண்மையென நிரூபிக்கப்பட்டுவிட்டன என்றும் கூறியவைகளை ஆலோசனை சங்கத்தார் ஏற்றுக்கொண்டு, இயேசு மரிக்க வேண்டும் என்ற தீர்ப்பில் முடிவுக்கு வந்தார்கள். பின்னர் இவ்விஷயத்தை எப்படி உரோம தேசாதிபதியான பிலாத்துவுக்கு முன்பாக வைப்பதெனத் தனியாக ஆலோசனை பண்ணினார்கள். தேவதூஷணம் போன்ற எந்தக் குற்றச்சாட்டிற்கும் பிலாத்துக் கவனம் காண்பிக்க மாட்டார் என்றும், தேவதூஷணம் எனும் குற்றம், உரோம சட்டத்தின் கீழ் ஒரு குற்றமேயல்ல என்று கூறுவார் என்றும் அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். ஆகவே பிலாத்துவுக்கு முன்பாக இயேசுவுக்கு எதிராக சாட்டப்பட வேண்டிய குற்றம், இயேசு உரோம அரசாங்கத்திற்கு எதிரான துரோகி என்றதாகவே காணப்பட வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தார்கள். இன்னுமாக உரோம அரசாங்கத்திற்கு எதிரான இராஜ துரோகம் எனும் குற்றச்சாட்டிற்கு ஆதரவாக, அவர்கள் இராயனுக்கு மேலாக வேறொரு இராஜா இருக்கின்றார், அது மேசியாவாகிய தாம்தான் என்று இயேசு கூறினதாகக் கூறினார்கள். இன்னுமாக, இக்குற்றச்சாட்டிற்கு ஆதரவாகக் காணப்படும் வண்ணம், இயேசு இராயனுடைய அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டாம் என்று தடுத்தார் எனப் பொய்யுரைத்தார்கள். இராயனுக்கு வரி செலுத்தும் விஷயத்தில் இயேசுவைச் சிக்கவைக்கும்படியே இரண்டு தினங்களுக்கு முன்னர் முயற்சி செய்தனர். ஆனால் "இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள்" என்ற இயேசுவின் பதிலோ அவர்கள் எதிர்ப்பார்த்ததற்கு எதிர்மாறாகக் காணப்பட்டது (மாற்கு 12:17). இன்னும் சொல்லப்போனால், இயேசு தமக்காகவும், பேதுருவுக்காகவும் வரி செலுத்தும்படிக்குப் பேதுருவை மீனிடம் அனுப்பினார். ஆனால் இவர்களின் இந்தப் பொய்யான குற்றச்சாட்டுகள், அவர்கள் முன்வைத்த இராஜ துரோகம் எனும் முக்கிய குற்றச்சாட்டுகளுக்கு ஆதரவளிக்கும் விதமாகக் காணப்பட்டது.

இப்பொழுது பிலாத்துவுக்கான சோதனை வேளை வந்தது. பிலாத்து நியாயாதிபதியாக நின்றார். மேலும், இவ்வழக்கிலுள்ள நீதியையும், அநீதியையும், உண்மையையும், பொய்யையும், சரியையும், தவறையும் கண்டறிவது இவருடைய வேலையாக ஒப்புவிக்கப்பட்டிருந்தது. எத்துணை அருமையான ஒரு வாய்ப்பை இவர் பெற்றிருந்திருக்கின்றார்! பொறாமையினிமித்தமே அவர்கள் இயேசுவைக் கையளித்துள்ளார்கள் என்பதைப் பிலாத்து உணர்ந்த மாத்திரத்தில் பிரதான ஆசாரியனின் தீய எண்ணங்களுக்கு பிலாத்து உடன்படுவதற்கு ஒருவேளை மறுத்திருந்திருப்பாரானால், ஒருவேளை பிலாத்து, பிரதான ஆசாரியனையும், ஆலோசனை சங்கத்தாரையும், ஜனக்கூட்டத்தையும் கலைத்து அனுப்பிவிட்டு, இயேசுவை விடுவித்து, அவர்களில் எவரேனும் இயேசுவுக்கு ஏதேனும் தாக்குதல் கொடுப்பார்களானால் அவர்கள் கொல்லப்படுவார்கள் என எச்சரித்துவிட்டிருந திருப்பாரானால், சரித்திரத்தின் கண்களுக்கு இது எத்துணை பெருந்தன்மையான காட்சியாகக் காணப்பட்டிருந்திருக்கும்! இப்படியாக நடக்கவில்லை என்றபோதிலும், பிலாத்துவின் நடத்தையும், நற்பெயரும் பாராட்டத்தகுந்ததாகவும், கவருவதாகவும் காணப்படுகின்றது. பிலாத்துவுக்கு ஒரு சோதனை/பரிட்சை வந்தது என்றும், அதில் அவர் நேர்த்தியான பாகத்தை எடுக்க தவறிவிட்டார் என்றும் நாம் கண்டாலும், இந்த தேசாதிபதியைப் பெரும்பாலானோர் பார்க்கின்ற அவமதிப்பான பார்வையில் நாம் பார்ப்பதில்லை.

பிலாத்து ஒரு யூதனாகவோ, கிறிஸ்தவனாகவோ இராமல், தேவன் அற்றவனும், உலகத்தில் எவ்விதமான நம்பிக்கையும் இல்லாத புறஜாதி மனுஷனானவன் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பிலாத்து எதை நம்பிக்கொண்டிருப்பவனாக இருந்திருந்தாலும் சரி, ஆனால் அவனுக்கு யூத மதத்தில் எவ்விதமான நம்பிக்கையும் இல்லை என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். பிலாத்து இயேசுவில் விசுவாசம் வைக்கவுமில்லை, இன்னுமாக மேசியா குறித்ததான வாக்குத்தத்தங்களை அவர் ஒரு பொருட்டாக எண்ணினதுமில்லை. பிலாத்து உரோமிலுள்ள இராயனுடைய அரசாங்கத்தின் பிரதிநிதியாகக் காணப்பட்டு, ஒரு தேசாதிபதியாகவே காணப்பட்டார். யூதர்கள் மற்றும் அவர்களுடைய பண்டிகைகள் முதலானவற்றின் மீது எவ்விதமான அக்கறை கொண்டிராத பிலாத்து, யூதர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவிதத்தில் தனக்கென்று சொந்த விருப்பங்களும், உவகைகளும் கொண்டிருந்த நபர் ஆவார். பிலாத்துவுக்குத் தேவன் யார் என்பது தெரியாததினால், அவர் தேவனுக்கு இணங்க வேண்டியதில்லை, ஆனால் பிலாத்து இராயனை அறிந்திருந்தபடியினால் அவருக்கே அவர் இணங்க வேண்டும். மேலும், பிலாத்துப் பட்டணத்தில் சமாதானத்தையும், அமைதியையும் தக்கவைத்துக்கொண்டு, உரோமின் அதிகாரத்தையும், மரியாதையையும் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்றே இராயன் இவரிடம் எதிர்ப்பார்த்தார். நாட்டில் சமாதானம் தக்க வைக்கப்படுவதற்கென ஒன்றல்ல, பத்தல்ல, ஆயிரக்கணக்கான அப்பாவி மனுஷர்கள் கொல்லப்பட்டாலும், அது உரோமுக்கு ஒரு பொருட்டல்ல. ஆகவே உரோம தேசாதிபதியாக இருந்த பிலாத்து, எருசலேமுக்குள் சமாதானத்தை நிலவச் செய்வதே அவருடைய பிரதான கடமையாகும்.

## நீர் யூதர்களின் இராஜாவா?

மேற்கூறிய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், பிலாத்துவின் நடவடிக்கை நீதியானதும், சரியானதுமாய் உள்ளது என்று நாம் கூறலாம்; ஆனாலும் பிலாத்துச் செய்திருக்கலாம் என்று நாம் கூறும் நடக்கைகளோடு இந்த நடவடிக்கையை நாம் ஒப்பிட்டுப் பார்க்கையில் இது நீதியானதும், சரியானதுமல்ல. பரிசேயர்களுடைய குற்றச்சாட்டைப் பிலாத்து உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை. இவர்கள் மாய்மாலக்காரர்கள் எனப் பிலாத்து அறிந்திருந்தார். உலகத்தின் வரலாற்றிலேயே, எல்லாக் காலக்கட்டங்களிலும் காணப்பட்ட மிகுந்த பொல்லாப்பு என்னவெனில், அது மதம் என்னும் போர்வையின் கீழ்ப் பகட்டாய் சுற்றித்திரியும் பொல்லாப்பே ஆகும்; மேலும் சத்தியம், உண்மை, நன்மை என்ற போர்வையில் செய்யப்படும் தீமைகளேயாகும் என்று நாம் இங்குக் குறிப்பிட விரும்புகின்றோம். பிலாத்துத் துரோகக் குற்றத்திற்கான விவரங்களைக் கேட்டபோது, பிரதான ஆசாரியர்கள் ஆச்சரியமடைந்தனர்; ஏனெனில், அவர்கள் தங்கள் வாக்குகள் எவ்விதமான நிரூபணங்களும் இல்லாமலேயே ஏற்றுக்கொள்ளப்படும் என்று எதிர்பார்த்திருந்தார்கள். ஒருவேளை இவர்களே ஒரு யூதன், இராஜ துரோகியாகக் காணப்பட்டு, மரணத்திற்குப் பாத்திரனாய் இருக்கின்றான் எனக் கருதினால், நிச்சயமாக பிலாத்துச் சந்தேகிக்க வேண்டும்; ஏனெனில் இவர்கள் தங்கள் இனத்தாரில் ஒருவன் இப்படியானதொரு குற்றச்சாட்டின் கீழ் அழிக்கப்படுவதை விரும்பமாட்டார்கள் என்று பிலாத்துவுக்குத் தெரியும். பிலாத்து இயேசுவைப் பார்த்தார். இயேசுவினிடத்தில் குற்றவாளிக்குரிய எந்தத் தோற்றத்தையும் பிலாத்துவினால் பார்க்கமுடியவில்லை. இன்னுமாக, கலகவாதிகளின் தலைவனுக்குரிய எவ்வம்சமும் அவரிடத்தில் பிலாத்துவால் பார்க்க முடியவில்லை. மாறாக சாந்தமும், பொறுமையும், நீடியபொறுமையும், அன்புமே இயேசுவின் அம்சங்களாகப் பிலாத்துவுக்குத் தெரிந்தது. "நீர் யூதருடைய இராஜாவோ" என்று பிலாத்து இயேசுவிடம் வினவினார். நமது கர்த்தரின் பதில் "ஆம்" என்ற வார்த்தைக்குச் சரிசமமாக இல்லை எனினும், அவருடைய பதிலானது தாம் தம்மை இராஜா என அறிவித்ததாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு மறுப்புத் தெரிவிக்க விரும்பவில்லை என்பதையும் தெரிவிக்கும் விதமாகவும் காணப்பட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தேவனுடைய இராஜ்யம் குறித்து விவரிக்க முற்படுவது என்பது தகுதியாய் இருந்திருக்காது. ஏனெனில் அங்கு இருப்பவர்களில் எவருமே கேட்பதற்கோ, ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது புரிந்துகொள்வதற்கோ ஆயத்தமான நிலையில் காணப்படவில்லை. இன்னுமாக அப்படி முயற்சிப்பது என்பது பன்றிகள் முன்பு முத்துக்களைப் போடாதே என்று நமது கர்த்தர் கற்பித்ததற்கு முரண்பாடாகவே அமைந்துவிடும். அங்கிருந்தவர்கள் இராஜ்யமானது ஆவிக்குரிய இராஜ்யமாக இருக்கும் என்பதையோ, அதற்குப் பூமிக்குரிய பிரதிநிதிகள் காணப்படுவார்கள் என்பது முதலான காரியங்களையோ புரிந்துகொள்வதற்கு ஆயத்தமற்ற நிலையில் காணப்பட்டார்கள்.

இதற்கிடையில் பிரதான ஆசாரியர்கள் அவர் மேல் கடுமையாய்க் குற்றம் சுமத்திக்கொண்டிருந்தார்கள். இயேசுவோ, எதுவும் பேசாமல் காணப்பட்டார். "அவர்

ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்; மயிர்க்கத்தரிக் கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்" (அப்போஸ்தலர் 8:32). இயேசு தம்மைத் தற்காத்துக்கொள்ள முயற்சிக்கவுமில்லை, தமக்கு எதிராக வழங்கப்படும் தீர்ப்பிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் அவர் அவ்விடத்தில் காணப்படவில்லை. மாறாக, அவர் தம்முடைய ஜீவனைப் பலி செலுத்தவும், ஜீவனை ஒப்புக்கொடுக்கவும், எவ்விதமான எதிர்ப்பும் இல்லாமல் தம்முடைய ஜீவன் எடுக்கப்பட அவர் அனுமதிக்கத்தக்கதாகவுமே அவ்விடத்தில் காணப்பட்டார். தமக்கு அளிக்கப்படப்போகும் தீர்ப்புகள் குறித்து எவ்விதமான கலக்கமும், திகைப்பும் இல்லாமல் இயேசு காணப்படுவதைக்குறித்துப் பிலாத்து ஆச்சரியமடைந்தார். இவைகள் அனைத்தும் நம்முடைய கர்த்தருடைய ஜீவியமும், போதனைகளும் எவ்விதத்திலும் உரோமனின் நலனுக்கடுத்த விஷயங்களுக்கு ஆபத்து விளைவிப்பவைகள் அல்ல என்றும், பிரதான ஆசாரியர்கள் குற்றஞ்சாட்டும் அனைத்தும் தவறானவைகள் என்றும் அதிகமாக நிரூபித்துக் காட்டியதோடு பிரதான ஆசாரியர்கள் இயேசுவுக்கு எதிராக உச்சக்கட்டமான எதிர்ப்பைக் காட்டும் வெறுப்பின் ஆவியைப் பெற்றிருந்தார்கள் என்பதையும் வெளிப்படுத்திற்று.

## இயேசுவுக்குப் பதிலாக பரபாஸை பரிந்துரைத்தல்

கொஞ்சம் காலத்திற்கு முன்னதாக உரோம அதிகாரத்திற்கு எதிரான, உண்மையான கலகச் செயல்பாடுகள் சம்பவித்துக் கொண்டிருந்தன. மேலும், இதன் காரணமாகவே பரபாசும், மற்றவர்களும் கைதிகளாக சிறையில் அடைக்கப்பட்டனர். கூட்டத்தில் யாரோ ஒருவர் பிலாத்துவை நோக்கி இக்காலக்கட்டத்தில் அவர் வருடந்தோறும் செய்கிற தமது வழக்கத்தின் முறையில் செய்யும்படிக்குக் கூக்குரல் இட்டார். அதாவது கருணையும், தயவும் காண்பிக்கும் வண்ணமாக, ஏதோ ஒரு கைதியை விடுவிக்கும் வழக்கத்தைச் செய்யும்படிக்குக் கூக்குரலிட்டார். இதைக் கேட்ட மாத்திரத்தில் உடனே ஜனக்கூட்டம் முழுவதும் அதைப் பிடித்துக் கொண்டு அதையே கூக்குரலிட ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே, "யூதருடைய இராஜாவை நான் உங்களுக்காக விடுதலைப்பண்ண உங்களுக்கு மனதுண்டா" என்று பிலாத்து அவர்களிடம் வினவினார். இயேசுவை விடுவிக்கும்படிக்கு ஆதரவளிக்கத்தக்கதாக ஜனங்கள் மத்தியில் கொஞ்சம் உற்சாகம் ஏற்படுத்த வேண்டும் என்பதே பிலாத்துவின் எண்ணமாக இருந்தது. ஏனெனில், பிரதான ஆசாரியர்களே இயேசுவுக்கு விரோதமாகக் காணப்படுகிறார்களே ஒழிய, ஜனங்கள் இயேசுவுக்கு விரோதமாகக் காணப்படவில்லை என்று பிலாத்து உணர்ந்துகொண்டதாக நாம் வாசிக்கின்றோம். பிலாத்து இயேசுவின் சார்பாக கூக்குரலிட்டுக் கொண்டிருந்த ஜனங்களை இழுத்து, அவர்களுடைய வேண்டுதலின்படி இயேசுவை விடுவித்துவிடலாம் என்று முயற்சித்தார். ஆனால் இயேசுவைக் குற்றம் சாட்டின பிரதான ஆசாரியர்களோ, கலகக்காரனாகிய பரபாசை விடுவிக்கக் கோரும்படிக்கு ஜனங்கள் மத்தியில் தூண்டிவிட்டார்கள். ஒரு புறஜாதி தேசாதிபதியின் முன்னிலையில் இப்படிப்பட்ட விதத்தில் இந்தப் பிரதான

ஆசாரியர்கள் தங்கள் நயவஞ்சகத்தை வெளிப்படுத்துவதில் அவர்களுக்கு வெட்கம் ஏற்படவில்லையோ என்று சிலர் யோசிக்கலாம். அதாவது, இயேசுவை உரோமுக்குத் துரோகி என்று குற்றஞ்சாட்டி அவரைச் சிலுவையில் அறைந்து கொல்ல வேண்டும் என்று கூறின அதேசமயத்தில், கலகவாதி என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லாத பரபாசை விடுவிக்கும்படி வற்புறுத்தி, இவர்கள் தங்கள் நயவஞ்சகத்தை வெளிப்படுத்தியதில் அவர்களுக்கு நாணமில்லையோ என்று சிலர் யோசிக்கலாம்.

இயேசுவின் பெரும்பான்மையான ஊழியங்கள் கலிலேயாவில் செய்யப்பட்டதாகக் கூறப்படும் காரியங்களைக் கேட்ட பிலாத்து, கலிலேயாவிற்கு அதிகாரியாகவும், தற்சமயம் எருசலேமுக்கு வந்திருப்பவருமான ஏரோதினிடத்தில் இவ்வழக்கை ஒப்புவித்து ஓய்ந்துவிடலாம் என எண்ணினார். ஆகவே, இயேசு கட்டுண்ட நிலையில் ஏரோதிடம் அனுப்பப்பட்டார். மேலும், இவரோடுகூட இவர் ஒரு கலிலேயனாக இருக்கின்றபடியால், ஏரோதின் அதிகாரத்தின்/தீர்ப்பின் கீழ் இவருடைய வழக்கை ஒப்புவிக்க பிரியப்படுவதாகவும் விளக்கவுரை எழுதி பிலாத்து அனுப்பினார். உண்மையைச் சொல்லப்போனால், பிலாத்துத் தன்னிடமிருந்த இயேசுவின் வழக்கு மாறிப்போவதில் மகிழ்ச்சிக்கொண்டார். ஏனெனில், குற்றமற்ற மனுஷனை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க அவர் விரும்பவில்லை. ஆனால், அதேசமயம் உரோம அரசாங்கத்திற்கு எதிரான துரோகியெனப் பிரதான ஆசாரியர்களால் குற்றஞ்சாட்டப்படும் ஒருவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க தான் ஒருவேளை மறுத்துவிட்டால், தனக்கெதிராக பிரதான ஆசாரியர்கள் கடுமையான குற்றச்சாட்டுக்களைக் குவிப்பார்கள் என்றும் உணர்ந்துகொண்டவராகக் காணப்பட்டார். இப்படிப்பட்ட தனது நடத்தைகள் புரட்சிக்கு வழிநடத்துபவைகள் என உரோம் கருதும் என்றும் பிலாத்து உணர்ந்துகொண்டார். இன்னுமாக ஒருவேளை பிலாத்து தான் அம்மனுஷனிடத்தில் கலகத்திற்கான எவ்வித அபாயம் காணப்படவில்லை என்றும், இயேசு அமைதியான குற்றமற்ற மனுஷன் என்றும் விவரித்துக் கூறினாலும், உரோமில் உள்ளவர்கள் (இராயன் மற்றும் மேலதிகாரிகள்) பிலாத்து இவ்விஷயத்தில் மிகவும் ஈடுபாடு காட்டுகின்றார் எனவும், பிலாத்து உரோம அதிகாரத்திற்கு எதிராக வார்த்தையிலோ, கிரியைகளிலோ கலகத்திற்குத் தொடர்புடைய நிலையில் மிகச் சிறிய அளவு குற்றச்சாட்டைப் பெற்றிருக்கும் எவனையும், எல்லோரையும் மரணத்தீர்ப்புக்கு ஒப்புக்கொடுப்பதில் எப்போதும் தயாராக இருந்திருக்க வேண்டும் எனவும் யோசிப்பார்கள் எனப் பிலாத்து உணர்ந்து கொண்டார். இப்படி நடந்தால் சந்தேகத்திற்கு இடமின்றி பிலாத்து தனது பதவியை இழக்க வேண்டும். இன்னுமாக மீதமான வாழ்க்கை முழுவதையும் கீழ்நிலையிலேயே கழிக்கவும் நேரிடும். பிலாத்து மிகவும் சோதனையான நிலையில் காணப்பட்டார்.

## ஏரோதின் வாய்ப்பு மற்றும் தோல்வி

இயேசு ஏரோதின் அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுவரப்பட்டது என்பது, ஏரோதுக்கான சோதனை காலத்தைச் சுட்டிக்காட்டியது. ஏரோது இயேசுவை எப்படி வரவேற்க போகின்றார்? நீதி, சத்தியம், நியாயம், தூய்மை மற்றும் நன்மை தொடர்புடைய

விஷயங்களில் இவருடைய (ஏரோதினுடைய) நடக்கை எப்படியாகக் காணப்படும்? இதே ஏரோதுதான் சில வருடங்களுக்கு முன்னதாக யோவான்ஸ்நானனைச் சிரைச்சேதம் பண்ணினவர் ஆவார். மேலும் இந்த ஏரோது இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டபோது, யோவான்ஸ்நானன்தான் இயேசுவாக வந்துள்ளார் எனக் கூறினவராகக் காணப்பட்டார். ஏரோது இயேசுவைக் காண்பதில் மகிழ்ச்சிக் கொண்டிருந்தார் என்றும், இயேசு செய்ததாக தான் கேள்விப்பட்ட அற்புதங்களில் சிலவற்றை இயேசு தனக்குச் செய்துகாட்டுவார் என எதிர்பார்த்ததாகவும், இயேசு அவருக்கு முன்பு அமைதியாகக் காணப்பட்டார் என்றும், இப்படிப்பட்ட ஒரு மனுஷன் முன்பு அவர் பேசுவதற்கு எதுவுமில்லை என்றிருந்தார் என்றும் நாம் வாசிக்கின்றோம். இத்தகைய இயேசுவின் நடத்தை ஏரோதுக்குக் கடிந்துகொள்ளுதலாக இருந்தாலும், இந்த அவருடைய நடத்தையானது, அவருடைய மற்ற அனைத்து நடத்தைகளுக்கும் இசைவாகவே உள்ளது. அதாவது, அன்றைய தினமே தாம் மரிக்க வேண்டியதாகக் காணப்படும் தெய்வீக நோக்கம் நிறைவேறுவது தடைபடக்கூடாது என்ற இயேசுவினுடைய தீர்மானத்திற்கு இசைவாகவே இருந்தது.

இயேசு தனக்குப் பதிலளிக்காததையும், தன்னுடைய மகிழ்ச்சிக்காக எந்த அற்புதங்களையும் செய்யாததையும் கண்ட ஏரோது, இயேசுவுக்கு இராஜாவைப்போன்று வஸ்திரம் தரிப்பிக்கப்படவும், அவரைக் கேலி பண்ணவும் தனது சேவகர்களுக்கு அனுமதி வழங்கினான். இன்னுமாக குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதற்கே இப்படி வஸ்திரம் தரிக்கச்செய்து, அவர்களைக் கேலியாக வணங்கி, அவர்களைக் குட்டுவது, சேவகர்களுடைய அன்றைய கால வழக்கமாக இருந்தது. இவைகளை இயேசுவுக்குச் செய்தபிற்பாடு அவர் பிலாத்துவினிடத்தில் திரும்ப அனுப்பப்பட்டார். இன்னுமாக, இப்படிப் பிலாத்து நடந்துகொண்டதைப் பாராட்டுகின்றதாகவும், இது முதல் பிலாத்துவின் அதிகாரத்திற்கு உட்பட்ட விஷயங்களில் தான் தலையிடுவதைக் குறைத்துவிடுவதாகவும் ஏரோது தெரிவித்தார். இதுமுதல் முன்பு எதிரிகளாக இருந்த பிலாத்துவும், ஏரோதும் நண்பர்களானார்கள்.

## அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம்

இயேசுவின் வழக்கானது மீண்டும் பிலாத்துவினிடத்தில் திரும்பினபோது, பிரதான ஆசாரியர்கள் தங்கள் திட்டங்கள் தோல்வியடைந்துவிடுமோ என அச்சம் கொண்டு இயேசுவுக்கு மரணத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற தங்களின் கோரிக்கையில் விடாப்பிடியுடன் காணப்பட்டதோடில்லாமல், அதைக்குறித்துக் கூக்குரலிடும்படிக்கு ஜனக்கூட்டத்தையும் தூண்டிவிட்டார்கள். சுமார் ஆறுமுறை பிலாத்து இயேசு குற்றமற்றவர் என்று அறிவித்தார். மேலும், பிலாத்துவுக்கு இருந்த இக்கட்டான சூழ்நிலைகள் என நாம் ஏற்கெனவே பார்த்து அந்த நிலையினிமித்தம் அவர் யூதர், ஆசாரியர்கள் மற்றும் ஜனங்களின் கோரிக்கையை முற்றிலும் நிராகரிக்க கொஞ்சம் தயங்கினார். அதிலும், விசேஷமாக "இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல; தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன்

இராயனுக்கு விரோதி" என்ற வார்த்தைகள் பேசப்பட்டதைக் கேட்டபோது, பிலாத்துத் தயங்கினார் (யோவான் 19:12). இப்படிப்பட்ட விஷயங்களிலுள்ள நியாயத்தைத் தனது மேலதிகாரிகள் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்று உணர்ந்த பிலாத்து, இவ்விஷயத்தில் யூதர்களைத் திருப்திபடுத்துவதற்கான எல்லா வழிகளையும் கையாண்டார். இதில் முதல் படியாக இயேசு சவுக்கினால்/வாரினால் அடிக்கப்படும்படிக்குக் கட்டளையிட்டார். வாரினால் அடிப்பதின் மூலம் இயேசுவின் இரத்தத்திற்காக வெறிகொண்டிருக்கும் அவருடைய சத்துருக்கள் திருப்தியடை வார்கள் எனப் பிலாத்து எதிர்பார்த்தார். இதற்கிடையில், பிலாத்துவின் மனைவி இயேசுவைக் குறித்துச் சொப்பனம் கண்டதாகவும், அவருக்கு எதிராக எதுவும் செய்துவிட வேண்டாம் எனவும் வலியுறுத்திப் பிலாத்துவுக்குத் தூது அனுப்பினாள். இம்மாதிரியான சூழ்நிலைகளில் ஓர் உலகப்பிரகாரமான மனுஷன் என்ன செய்வான் என்று எதிர்பார்க்கப்படலாமோ, அவை அனைத்தையும் பிலாத்துச் செய்தான். ஆனால், இவ்விடத்தில்/இந்தச் சூழ்நிலைகளின் கீழ் ஒரு கிறிஸ்தவன் காணப்பட்டிருந்திருப் பானானால், அவன் செயல்பாடு வித்தியாசமாகக் காணப்பட்டிருந்திருக்கும்; அதாவது நீதியின் மீது சராசரியான அன்பைக் காட்டிலும் அதிகம் அன்பைக் கொண்டவனும், நீதிக்காக அனைத்து நலன்களையும் தியாகம் செய்ய விருப்பம் கொண்டவனுமான கிறிஸ்தவனோ அல்லது கிறிஸ்தவ செல்வாக்கின் கீழ்க்காணப்படும் ஒருவன் இவ்விடத்தில்/இந்தச் சூழ்நிலைகளின்கீழ் இருக்கும்போது, வித்தியாசமான செயல்பாடுகளே அவனிடமிருந்து எதிர்பார்க்கப்படலாம்.

இயேசுவைக் கொன்றுபோட வகைத் தேடிக்கொண்டிருந்தவர்களிடமிருந்து இயேசுவை விடுவிக்கும்படியான முயற்சிக்குத் தொடர்பாகவே இயேசுவை முன் கொண்டுவந்து நிறுத்தி, "இதோ இந்த மனுஷன்" என்று பிலாத்துக் கூறினான். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையின் போது, நமது கர்த்தரிடத்தில் நிலவின அமைதியும், அவருடைய முகபாவனையும் பிலாத்துவை மதிப்புக் கொடுக்கத்தக்கதான வியப்பிற்குள் ஆழ்த்தியது என்பது, அவர் மேற்கூறின "இந்த வார்த்தைகளில் வெளிப்படுகின்றது. அவருடைய வார்த்தைகள் இப்படியாக அர்த்தம் கொடுக்கின்றதாய் இருந்தது. அதாவது, "நீங்கள் சிலுவையில் அறையும்படிக்குக் கூறிக்கொண்டிருக்கின்ற இம்மனுஷனைப் பாருங்கள்! யூதர்களே இம்மனுஷனைப் போன்ற ஒரு நபர் உங்கள் தேசத்தில் காணப்படுவதில்லை. இவருக்குச் சமமான ஒரு மனுஷன் எங்குமே இருக்கமாட்டான் என நான் எண்ணுகின்றேன்!" ஆனால் இவை அனைத்தும் வீணே. ஜனங்கள் பரவசமடைந்தவர்களாக நமது கர்த்தருடைய இரத்தத்திற்காகக் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தார்கள். பிலாத்து இயேசுவைச் சிலுவையில் அறைய ஒப்புக் கொடுப்பதற்கு முன்னதாக தான் இத்தீர்ப்பை விரும்பவில்லை என்பதற்கும், இயேசுவுக்கு மரணத்தீர்ப்பு வழங்க அவர்கள் தன்னை வற்புறுத்தினார்கள் என்பதற்கும், இதற்குப் பொறுப்புத் தானல்ல என்பதற்கும், தான் குற்றம் புரிந்தவன் அல்ல என்பதற்கும் அக்காலக்கட்டத்தின் அடையாள வழக்கத்தில், ஒரு காரியத்தைப் பிலாத்துச் செய்தார். "கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தினத்தினாலே பிரயோஜனமில்லை யென்று பிலாத்துக் கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக்

கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்றான்" (மத்தேயு 27:24).

## இந்தப் பரிட்சைகளின் முடிவு/விளைவு அல்லது இவர்களின் தவறுகளுக்கான தண்டனை

இப்பாடத்தில் நாம் எத்தனை பரிட்சைகள், சோதனைகளைப் பார்த்துள்ளோம். இப்பொழுது முடிவுகளை நாம் சுருக்கமாகப் பார்க்கலாம். யூதாஸ் தனக்கான பரிட்சையில்/சோதனையில் தோற்றுப்போனதின் விளைவாக தனது சொந்த கைகளினாலே நாண்டுகொண்டு செத்துப்போனான். மரணத் தண்டனை தீர்ப்பு அளிப்பதற்கு விருப்பமற்ற நிலையில் செயல்பட்ட கருவியாகிய பிலாத்து, யூதர்கள் அளவுக்குக் குற்றம் செய்தவனாக இல்லாவிட்டாலும் கொஞ்சம் காலத்திற்குள்ளாகவே உரோம தேசாதிபதிக்குரிய தனது பணியை இழக்க நேரிட்டு, மனம் தளர்ந்து போய்த் தற்கொலை செய்து கொண்டான். பிரதான ஆசாரியனாகிய அன்னாவோ இச்சம்பவங்களுக்குப் பின்னர் வாரினால் அடிக்கப்பட்டு, தெருக்கள் வழியாக தரையில் இழுத்துச் செல்லப்பட்டுக் கொலைச் செய்யப்பட்டார். "சிலுவையில் அவரை அறையும்" என்றும், பிலாத்துவுக்குப் பிரதியுத்தரமாக, "இவனுடைய இரத்தம் எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் வரக்கடவது" என்றும், கூக்குரலிட்ட ஜனங்கள் சிறு காலப்பகுதிக்குள்ளாக இரத்த ஸ்நானத்திற்குள்/குளியலுக்குள் கடந்து சென்றார்கள்; இவர்கள் மீது இந்த அனுபவங்கள் எருசலேம் முற்றிலும் அழிக்கப்பட்ட போது வந்தது; மேலும் இவர்களுடைய பட்டணம் முழுமையாக அழிக்கப்பட்ட போது, ஆயிரக்கணக்கானோர் ஜீவனை இழந்தனர்; பாலஸ்தீனியாவில் முழு யூதர் அரசாங்கமும் கவிழ்க்கப்பட்டது; ஜீவன் தப்பினவர்கள் பல்வேறு தேசங்களிலும், ஜனங்களுக்குள்ளும் சிதறடிக்கப்பட்டார்கள். இவர்கள் தங்கள் மீது வருவித்துக் கொண்டதான சாபம் இன்றும் சில விதங்களில் காணப்படவே செய்கின்றது; அவருடைய இரத்தம் இன்னமும் இவர்கள் மேல் காணப்படுகின்றது; அன்று முதல் இன்றுவரை யூதர்கள் மிகவும் பாடுபட்டுள்ளனர்; 1878-ஆம் வருடம் முதல், இவர்கள் மீது இருந்த தெய்வீகக் கோபமானது/தயவின்மையானது, இவர்களை விட்டுக் கடந்துபோய்க் கொண்டிருந்தாலும், அது கிட்டத்தட்ட 1914-ஆம் வருடம் வரையிலும் சில விதங்களில் நீடித்தே காணப்படும். கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையினால் மன்னிக்கப்படுவதன் காரணமாக சாபம் ரத்துச் செய்யப்படும்.

இன்னொரு பக்கத்தில் சோதனைகளைச் சரியான விதத்தில் ஏற்றுக்கொண்டு, தேவனிடத்திலான தங்களது உண்மையை மெய்ப்பித்துக் காட்டியவர்கள் மீது வந்த ஆசீர்வாதங்களையும் கவனிப்போமாக. நமது கர்த்தர் மரணம் வரையிலும், அதாவது சிலுவையின் மரணப்பரியந்தம் உண்மையுள்ளவராகக் காணப்பட்டதினால் அவர் தூதர்கள், சத்துவங்கள், துரைத்தனங்கள், அதிகாரங்கள் மற்றும் எல்லா நாமங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டார். அப்போஸ்தலனாகிய பேதுரு கொஞ்சம் தவறில் விழுந்துபோனவராகக் காணப்பட்டாலும், மனந்திரும்பினதின் மூலமாகவும்,

மனங்கசந்து அழுததின் மூலமாகவும், மீண்டுமாகக் கர்த்தருடைய தயவிற்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். இன்னுமாக அவர் இந்தக் கவலைக்கிடமான அனுபவங்கள் வாயிலாகப் படிப்பினையையும் பெற்றுக்கொண்டார். இன்னுமாக, அப்போஸ்தலர்கள் மத்தியில் தலைச் சிறந்தவர்களில் ஒருவராகவும், மிகுதியாய்க் கனப்படுத்தப்பட்ட வருமானார். இன்னுமாக, இவர் இராஜ்யத்தில் அவருடைய மீட்பருடன் உடன் சுதந்தரராகவும் கனப்படுத்தப்படுவார்.

## உங்கள் நடுவே பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து - (துன்ப தீ - திருவிவிலியம்) ஏதோ புதுமை என்று திகைக்க வேண்டாம்

நம்முடைய பாடத்தில் நாம் பார்த்த அதே சோதனைகள், அப்படியே நமக்கும் வரும் என்று நாம் எண்ணிவிடக் கூடாது. மாறாக, அக்கினிப்போன்ற சோதனைகளை/துன்ப தீ போன்ற சோதனைகளையே நாம் எதிர்பார்க்க வேண்டும். மேலும், எவ்விதத்தில் நாம் அச்சோதனைகளை எதிர்க்கொள்கின்றோமோ, அதனடிப்படையிலேயே விளைவுகள் காணப்படுகின்றது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். நாம் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நமது பரமபிதாவுக்கு உண்மையாய் இருப்போம் என்றும், எப்படியேனும்/எதை இழக்க நேர்ந்தாலும் பிதாவின் சித்தம் செய்வோம் என்றும், பூமிக்குரிய நலன்களைத் தியாகம் பண்ணியும் பிதாவின் சித்தம் செய்வோம் என்றும், இவைகளையெல்லாம் முறுமுறுத்துக் கொண்டு செய்யாமல், "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகின்றேன். உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" என்று நமது கர்த்தரைக்குறித்துத் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்ட பிரகாரம் செய்வோம் என்றும், தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதே நமக்கான பாடமாகும். (சங்கீதம் 40:3). ஒருவேளை போதகரைப் பின்பற்றுவதில் நாம் தற்காலிகமாக இடறிவிழுந்தாலும் நாம் சோர்ந்து போய்விடக்கூடாது. மாறாக, இடறிவிழுந்து போன இந்த அனுபவங்கள் கர்த்தரிடத்தில் நெருக்கமாக உறவை ஏற்படுத்திக்கொள்வதற்கும், அது முதல்/ இனி மேல் கர்த்தரோடு நடக்கையில் மிகுந்த உண்மையுள்ளவர்களாகவும், மிகமிக ஜாக்கிரதையுள்ளவர் களாகவும் நம்மை ஆக்கிக்கொள்வதற்கும் அந்தத் தவறுகளையும், இடறல்களையும் ஆசீர்வாதங்களாக நாம் மாற்றிவிட வேண்டும் என்பதே மற்றொரு படிப்பினையாய் நமக்கு உள்ளது.

இச்சம்பவத்தைக் குறித்து ஒருவர் பின்வருமாறு கூறியுள்ளார்: இயேசுவுக்கு எதிரான மக்களின் கூக்குரல் குறித்ததான இச்சம்பவம்/இக்காட்சியானது மக்களாட்சி அதற்கே எதிராகத் தெரிவிக்கும் கண்டனமாக எப்போதும் பார்க்கப்பட்டு வருகின்றது. (Vox populi, Vox Dei) ஜனங்களுடைய சப்தமானது, தேவனுடைய சத்தமாயிருக்கிறது – என்று இதன் போலிப்புகழ்ச்சியாளர்கள் கூறியுள்ளனர் – ஆனால் இங்கே நடந்ததைப் பாருங்கள். இயேசு மற்றும் பரபாஸ் இவர்களில் ஒருவரை ஜனங்கள் தெரிந்தெடுக்க

வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது, ஜனங்கள் பரபாசை தெரிந்துகொண்டார்கள். அப்படியானால் மக்களாட்சி, மன்னர் ஆட்சி போன்று கேடாகவே உள்ளது. ஜனங்களைக் காட்டிலும், ஆசாரியர்கள், வேதபாரகர்கள் மற்றும் பெருந்தன்மையுடையவர்களாவது மேம்பட்ட விதத்தில் நடந்து கொண்டார்களா? இவர்களுடைய ஆலோசனையின்படியே ஜனங்கள் பரபாசை தெரிந்து கொண்டார்கள் என நாம் பார்க்கின்றோம். ஜனங்களுடைய சப்தம் சில காரியங்களில் நம்பிக்கைக்குப் பாத்திரமாகக் காணப்படுகின்றது. ஆனால், தற்கால சூழ்நிலைகளின் கீழ்க் காணப்படும் நாகரிகமான ஜனங்களுக்கு உலகில் நிலவும் அரசாங்க அமைப்புகளிலேயே ஜனநாயக/குடியரசு அமைப்பே அநேகமாகச் சிறந்தது ஆகும். ஆனால், மத விஷயங்களைப் பொறுத்தமட்டில் ஜனங்களுடைய சப்தமானது, தேவனுடைய சத்தத்திலிருந்து தொலை தூரத்தில் காணப்படுகின்றது. "எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில்" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார் (1 கொரிந்தியர் 1:21). பிரபலமான சப்தங்கள் நமக்கெதிராய்ச் சப்தமிடும்போது, சுயஞானமானது நம்மைத் தவறான முடிவுகள் எடுப்பதற்கு வழிவகுத்துவிடக்கூடாது. கர்த்தருடைய வார்த்தைகள் மூலம் வெளிப்படும் கர்த்தருடைய சப்தத்தையே நாம் நாட வேண்டும், செவிசாய்க்க வேண்டும். இதில் நமது மீட்பர் திருப்திக்கொண்டது போன்று நாமும் திருப்திக் கொள்ள வேண்டும். தேவன் நம்மை வழி நடத்துகின்றபடியால், அவர் நமக்கு அனுமதிக்கும் விஷயங்களில் நாம் திருப்திக்கொள்ள வேண்டும். சபையினுடைய கடைசி முடிவின் அனுபவங்கள் சில விதங்களில் நமது அன்பான மீட்பருடைய அனுபவங்களுக்கு ஒத்துக் காணப்படலாம். கர்த்தருடைய ஜனங்களில் சிலர் தேவதூஷணக்காரர்களாகவும், கிறிஸ்து எனும் வேறொரு இராஜா உள்ளார் என்று பிரசங்கம் பண்ணினதின் விளைவாக அரசாங்கங்கள் முன்பு நிறுத்தப்படுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. அப்படியாகச் சம்பவிக்கும்போது, நம்முடைய நிலைப்பாட்டினை குறித்து நமக்கு எவ்வித ஐயமும் காணப்படக்கூடாது. அச்சமயங்களில் நாம் கர்த்தர் மேல் முழு நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும் மற்றும் அவருக்கும், அவருடைய வார்த்தைகளுக்கும், அவருடைய சகோதர சகோதரிகளுக்கும் உண்மையாயும் இருக்க வேண்டும். இந்தப் பாடுகள் அனைத்தும், அதிக மேன்மையான நித்திய கன மகிமையை உண்டு பண்ணும் என்று, தமது வார்த்தையின் மூலம் நமக்கு நிச்சயம் அளித்துள்ள தேவனுடைய கரங்களில் இந்தச் சோதனைகள் மற்றும் பரிட்சைகளின் முடிவுகளை ஒப்படைத்துவிடுவோமாக.

# நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் மறுதலிக்கப்பட்டார்

## யோவான் 18:1-27

**"இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றார்." மத்தேயு 17:22**

இன்றைய பாடமானது சரித்திரத்திலேயே துயரம் மிகுந்த அதிகாரங்களெனக் காணப்படுபவைகளில் ஒன்றைப் பற்றினதாகும். இப்பாடமானது, மனிதனுடைய நன்றியற்ற தன்மை, சுயநலம், பெலவீனம், பயம் ஆகியவற்றின் ஆழத்தைக் குறிப்பிடத்தக்க அளவில் நமக்கு வெளிப்படுத்துகின்றதாக இருக்கும். எனினும் இப்பாடத்தை ஏற்றுக்கொள்வதற்குரிய சரியான இருதயத்தின் நிலைமையில் காணப்படுபவர்களுக்கு இது மிகவும் உதவிகரமாய் இருக்கும். காரணம் இப்பாடமானது ஏறக்குறைய அனைவருக்கும் பொதுவாய் இருக்கும் பெலவீனங்களுக்கு எதிராகவும், அனைவரும் ஆளாகக்கூடிய ஆபத்துக்களுக்கு எதிராகவும் எச்சரிக்கின்றதாயும் இருக்கின்றது. நமது கர்த்தர் தம்முடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்குக் கூறினதும், தம்முடைய பின்னடியார்கள் அனைவருக்குங்கூடப் பொருந்துகின்றதாய்க் கூறினதுமான வார்த்தைகளாகிய, "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்பதையே இப்பாடமானது முக்கியத்துவப்படுத்துகின்றது. இன்னுமாக அப்போஸ்தலர் பேதுருவின் அனுபவம் மற்றும் அவரைக் கையாண்ட விதத்தில் வெளிப்பட்ட கர்த்தருடைய பெருந்தன்மை தொடர்புடைய விஷயத்திலும்கூட இப்பாடமானது, விவேகமற்றுச் சரியானப் பாதையைவிட்டு அலைந்து திரியும் பேதுருவைப் போன்றவர்களுக்கு உற்சாகத்தையும் கொடுக்கின்றதாய் இருக்கின்றது.

இப்பாடத்தை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், பஸ்கா போஜனத்தைப் புசிக்கும்படிக்கு கர்த்தரும், அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிரண்டு பேரும் ஒன்று கூடியிருந்த சாயங்கால வேளைக்கு முன்பான வேளைகளுக்கு நாம் செல்ல வேண்டும். மூன்று வருடங்களாக நமது கர்த்தர் இந்தப் பன்னிரண்டு மனுஷர்களைப் பயிற்றுவித்து, இவர்கள் உலகில் தம்முடைய பிரதிநிதிகளாகவும், சபைக்கான தம்முடைய வாயாகவும் இருக்கத்தக்கதாக இவர்களை ஆயத்தம் பண்ணிக்கொண்டும் இருந்தார். இவர்கள் அவருடைய வல்லமையைக் கண்டிருக்கின்றனர். அவருடைய போதனைகளை அறிந்திருக் கின்றனர் மற்றும் இவர்களுங்கூடத் தங்கள் மூலமாய்ச் செயல்படும், அவருடைய வல்லமையைச் சொஸ்தப்படுத்துவதற்கும், பிசாசுகளைத் துரத்துவதற்கும் செயல்படுத்தியிருக்கின்றனர். தாழ்மை அவசியம் என்பதை இவர்களுக்குப் போதித்திட விழிப்புள்ளவராக இருந்தார். தம்மோடுகூடப் பங்கடையும்படிக்கு இவர்கள் அழைக்கப்பட்டுள்ள இராஜ்யத்திற்கு இவர்கள் தகுதியுள்ளவர்கள் ஆகும்பொருட்டு, இவர்கள் சிறுபிள்ளைகளென, எளிமையானவர்களாயும், நேர்மையுள்ளவர்களாயும் கீழ்ப்படிதல் உள்ளவர்களாயும் மாற வேண்டியதன் அவசியத்தைப் போதித்திட கர்த்தர்

விழிப்புள்ளவராக இருந்தார். இவர்கள் மத்தியில் போட்டிமனப்பான்மை மற்றும் அதிகாரத்தின் ஆவி இருப்பதை உணர்ந்துள்ள கர்த்தர், தாழ்மை மற்றும் சாந்தத்தின் அவசியம் குறித்து இவர்களுடைய கவனத்திற்குக்கொண்டுவருவதற்குரிய கடமையில் அநேக சந்தர்ப்பங்களில் காணப்பட்டார். மாம்சத்தில் இவர்களோடு அவர் செலவழிக்க இருந்த அந்தக் கடைசியான சாயங்கால வேளையில் அனைவரும் பஸ்கா போஜனத்திற்கெனக்கூடியிருக்க, இவர்கள் அக்காலக்கட்டத்தில் காணப்பட்ட விருந்தோம்பல் வழக்கத்தை ஒருவருக்கொருவர் செய்யாமல் விட்டுவிட்டதோடு, தங்கள் கர்த்தருக்கு, தங்கள் தலைவருக்கு, தங்கள் போதகருக்கு, மேசியாவென்றும், தேவனுடைய விசேஷித்த குமாரன் என்றும் அவரை விசுவாசிப்பதாக தாங்கள் அறிக்கைப் பண்ணினவருக்கும்கூட, அதைச் செய்யாமல் இவர்கள் விட்டுவிட்டதைக் கர்த்தர் வருத்தத்துடன் கவனித்தார். இவர்கள் ஒருவருக்கொருவரின் பாதங்களையும் மற்றும் அவருடைய பாதங்களையும் கழுவும் வழக்கத்தைச் செய்யாமல் விட்டுவிட்டனர். இந்த வழக்கமானது, காலணிகளுக்குப் (shoes) பதிலாகப் பாதரட்சைகள் (sandals) அணிந்து புழுதி நிறைந்த தேசத்தில் நடந்துவரும் பாதங்களுக்கு ஆறுதலாய்ச்செய்யும் வழக்கமாயிருந்தது.

## உங்கள் கர்த்தராகிய நான் - எல்லோருக்கும் ஊழியக்காரன்

இயேசு தம்முடைய துக்கம் மற்றும் துயரத்தின் பாரத்தை மறந்தவராக, தம்முடைய பின்னடியார்களின் நலன்களில் அக்கறைக்கொண்டவராக, அனைவருக்கும் தாழ்மையின் ஒரு மாபெரும் பாடத்தைக் கற்றுக்கொடுப்பதற்கென வாய்ப்பைப் பயன்படுத்தினார். அவர் ஒரு பாத்திரத்தில் தண்ணீரையும், சீலையையும் எடுத்து பாதங்களைக் கழுவினார். சீஷர்களோ வெட்கப்பட்டு, குழம்பிப்போய், இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் என்ன சொல்ல வேண்டும் என்றோ அல்லது என்ன செய்ய வேண்டும் என்றோ தெரியாமல் காணப்பட்டனர். பேதுரு மாத்திரம் போதகர் தன்னுடைய பணிவிடைக்காரன் போன்று நடந்துகொள்வதற்குத் தன்னால் அனுமதிக்க முடியாது என்று மறுப்பைத் தெரிவித்தார். ஆனால் இவ்விஷயத்திற்கு ஓர் அடையாள அர்த்தம் இருக்கின்றது என இயேசு விவரித்தப்போது, பேதுரு கழுவப்படுவதற்கு ஆவலாய்க் காணப்பட்டார். பாடத்தைப் பெற்றுக்கொள்ள அவர்கள் தவறிவிடக்கூடாது என்பதற்காக, அனைத்தையும் செய்து முடித்தப் பிற்பாடு, நமது கர்த்தர் பின்வருமாறு விளக்கினார் . . ." உங்கள் கர்த்தரும், போதகருமாகிய நானே உங்கள் பாதங்களைக் கழுவி, மிகவும் கனம் குறைந்த வேலையையும் உங்களுக்குப் புரிவதில் வாஞ்சையையும், தாழ்மையையும் வெளிப்படுத்தியிருக்க, நீங்களும் இதே உதாரணத்தை ஒருவரிலொருவர் பின்பற்றுவதற்கும், ஒருவருக்கொருவர் மிகவும் கனம் குறைந்த வேலையைச் செய்வதற்கும், அதுவும் ஒருவேளை வாய்ப்பு அனுமதிக்கும் பட்சத்தில் ஒருவர் ஒருவருடைய பாதங்களைக் கழுவுமளவுக்கு உள்ள வேலையைச் செய்வதற்கும் வாஞ்சையுடன் காணப்பட வேண்டும்."

இவைகளை இயேசு அப்போஸ்தலர்களுக்குப் பேசிக்கொண்டிருக்கும் கொஞ்ச நேரத்திற்குள்ளாகவே, தாம் அதிகாரிகளிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றும்,

சீஷர்கள் அனைவரும் தம்மைத் தனியே விட்டுப்போய்விடுவார்கள் என்றும் அவர்களிடம் தெளிவாக இயேசு கூறினார். இவை, அப்போஸ்தலர்களுக்குக் கடுமையான வார்த்தைகளெனத் தோன்றியது. இயேசுவுக்குத் தங்களிடத்தில் நம்பிக்கை இல்லாமல் இருப்பதைத் தெரிவிப்பதுபோன்று அவர்களுக்குத் தோன்றியது. உணர்ச்சிவசப்பட்டுப் பேதுரு பேசினார்; இன்னுமாக அனைவரும் கர்த்தரை மறுதலித்து, அவரைக் கைவிட்டுப்போனாலும், தான் இப்படியாக ஒருபோதும் செய்வதில்லை எனப் பேதுரு அறிக்கையிட்டார். அப்பொழுதுதான் சேவல் இரண்டுமுறை கூவுவதற்கு முன்னதாக, தம்மைப் பேதுரு, தம்முடைய போதகர் அல்ல என்று மறுதலிப்பார் என நமது கர்த்தர் தீர்க்கத்தரிசனமாய்ப் பேதுருவிடம் கூறி, சாத்தான் பேதுருவை ஜெயிக்க விரும்புகின்றான் என்றும், பேதுருவினுடைய விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு, தாம் பேதுருவுக்காக ஜெபம் பண்ணுகின்றார் என்றும், பேதுருவுக்குக் கர்த்தர் உறுதிப்படுத்தினார். உண்மையில் இந்த வார்த்தைகள் அனைத்தும், அப்போஸ்தலனுக்கு (பேதுருவுக்கு) அவருடைய சோதனையான வேளையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. உண்மையில் இந்த வார்த்தைகள் அனைத்தும், என்ன சம்பவிக்கப்போகின்றது என எதிர்பார்க்கத்தக்க தாகவும், அவைகளுக்கு எதிராக அனைத்து அப்போஸ்தலர்களும் எச்சரிக்கையாய்க் காணப்படத்தக்கதாகவும் உதவும் வண்ணமாகக் காணப்பட்டது.

## ஆண்டவரே நானோ? ஆண்டவரே நானோ?

தம்முடைய எச்சரிப்பை இன்னும் தொடர்ந்தவராக நமது கர்த்தர், "உங்களிலொருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்! அங்கு எத்தகைய ஒரு பீதி காணப்பட்டிருக்க வேண்டும்! கர்த்தரிடமிருந்து அதிகமான அனுகூலத்தை அடைந்தவர்களிலும், அவருடன் நீண்ட காலமாய்ப் பழகி இருப்பவர்கள் மத்தியிலும், தன்னுடைய கர்த்தரைக் காட்டிக்கொடுக்கும் அளவுக்கு இழிவாக நடந்துகொள்ளும் ஒருவர் இருக்கக்கூடுமோ?

இப்பாடத்தின் முக்கியத்துவத்தை நாம் இழந்துவிடக்கூடாது. சுவிசேஷயுகம் முழுவதிலும் உள்ள கர்த்தருடைய சீஷர்கள், அப்போஸ்தலர்கள் பன்னிரண்டு பேரைக்குறித்து, "உங்களைப்போன்று நாங்களும் பாடுள்ள மனுஷர் தான்!" அதாவது, மனித பூரணமின்மைக்குரிய அளவுகோலுக்கு மேலானவர்களாகவோ அல்லது கீழானவர்களாகவோ இல்லாமல், வாழ்க்கையின் சாதாரண தரப்பினர்களையே சார்ந்தவர்கள்! என்று அப்போஸ்தலன் கூறுவது போன்றுதான் உள்ளவர்கள் என்பதை நாம் நினைவில் கொள்வோமாக. அந்தப் பன்னிரண்டு பேர்கள் மீது வரவிருக்கின்ற சோதனைகள் தொடர்பான விஷயத்தில் அவர்களை எச்சரித்த அதே கர்த்தர் இன்னமும் தம்முடைய சபை, தம்முடைய மந்தைக்குறித்துக் கவனமுள்ளவராகவே இருக்கின்றார் என்பதையும் நாம் நினைவில் கொள்வோமாக. அதிலும் விசேஷமாகச் சகோதரர்கள் மத்தியில் பொறுப்பின் விஷயத்தில் எவ்விதமான முக்கிய பங்கை வகித்துக்கொண்டிருக்கும் அனைவர் குறித்து விசேஷித்த அக்கறையுடன் இருக்கின்றார் என நாம் எண்ணுகின்றோம். நாம் எதிராளியானவனுடைய வல்லமையின்

கீழ் விழுந்துவிடாதபடிக்கு நம்மைக் காத்துக்கொள்வதற்கு நாடுகின்றவராகவும், நம்மை எச்சரிக்கின்றவராகவும், நம்மைப் பாதுகாக்கின்றவராகவும் இன்னமும் காணப் படுகின்றார். இருதயத்தில் தம்பால் நேர்மைக் கொண்டிருந்தும், அதேசமயம் சோதனைகளைக் கடுமையானதாய் இருக்கச் செய்யும் அளவுக்கு உள்ள மாம்சத்தின் பலவீனங்களைக்கொண்டிருக்கும் தம்முடைய உண்மையுள்ளவர்களுக்குக் கர்த்தர் இன்னமும் ஜெபம் ஏறெடுக்கின்றார். அப்போஸ்தலர்கள் அவர்களுக்கான சோதனையின் விசேஷித்த காலப் பகுதியை நெருங்கினபோது, அவர்களுக்கான நமது கர்த்தருடைய அக்கறையும், பிரயாசங்களும் பெருகினதுபோலவே, இன்றுள்ள அவருடைய சபையின் விஷயத்திலும், அவருடைய சரீரத்தின் கடைசி அங்கங்களாகிய, "அவருடைய பாதங்கள்" "பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலமாகிய" நெருக்கடியான வேளையை நெருங்கும்போதும் காணப்படும் என்பது உறுதியே (வெளிப்படுத்தல் 3:10).

ஆண்டவர் தம்முடைய அப்போஸ்தலர்களிடம் பேசினதுபோல, நம்மிடத்திலும் காதுகளுக்குக்கேட்கும் சொல்லர்த்தமான விதத்தில் பேசுவதில்லை. ஆனாலும் அப்போஸ்தலர்களுடன் பேசின அதே அழுத்தத்துடனும், அதே ஊக்கத்துடனும் அவர் நம்முடன் பேசுகின்றார் அல்லவா? அந்தச் சீஷர்களுக்கான கர்த்தருடைய வார்த்தைகளும், கிரியைகளும் அதே படிப்பினையுடனும், அவர்களுக்கு இருந்த அதே அழுத்தத்துடனும் இன்று நம்மிடத்திற்கும் கடந்து வருகின்றதல்லவா? இந்த உதாரணங்கள் மற்றும் எச்சரிப்புகளுடன்கூட, யுகத்தின் முடிவு தொடர்பான வேதவாக்கியங்களின் விசேஷித்த அறிவிப்பும் நமக்குக் கூடுதலாகக் வழங்கப்பட்டுள்ளதல்லவா? சரியான மீன் மற்றும் சரியற்ற/ஆகாத மீன்கள் பற்றின உவமையில், இந்தச் சுவிசேஷயுகத்தினுடைய முடிவில் சுவிசேஷ வலையில் காணப்படுபவர்களில் ஒரு பிரித்தெடுத்தல் நடைபெறும் என நமது கர்த்தர் நமக்கு விவரித்துள்ளார் அல்லவா? கோதுமை மற்றும் களைகள் பற்றின உவமையிலுங்கூட, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய அறுவடையின் காலபகுதியில், பிரித்தெடுத்தல் நடந்து, உண்மையும், முதிர்ச்சி அடைந்ததுமான கோதுமைத்தான் களஞ்சியத்தில் சேர்க்கப்படும் எனக் கர்த்தர் மீண்டுமாகக் கூறினார் அல்லவா? "மனுஷர்கள் தற்பிரியராயும் - தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும்- இருப்பார்கள்" என்ற காரணங்களினால், யுகத்தின் முடிவில் கொடிதான காலங்கள் வரும் என்று அப்போஸ்தலன் மூலமாகக் கர்த்தர் நமக்கு முன் எச்சரிப்புக்கொடுத்துள்ளார் அல்லவா? (2 தீமோத்தேயு 3:1-3). இன்னுமாக தெய்வீகத் திட்டத்தின்படி அக்காலத்தில், சத்தியத்தை அதிலுள்ள அன்பின் பிரகாரமாகவும், பக்தி வைராக்கியத்துடனும் ஏற்றுக்கொண்டிராத அனைவரும் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக தேவன் கொடிய வஞ்சகத்தை அனுப்புவார் என்றும் கர்த்தர் நமக்குத் தெரிவித்திருக்கின்றார் அல்லவா? (2 தெசலோனிக்கேயர் 2:11).

## சோதிப்பதற்கான சோதனைக்காலம்

இக்காலத்திற்குரிய சோதனைகளானது, கூடுமானால், "தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும்" வஞ்சிப்பதற்குக் காணப்படும் என்றும், அதுவும்

அவர்களுடைய விஷயத்தில் அது கூடாமல் போகும்; காரணம் அவர்களுடைய அன்பு, அவர்களுடைய பக்திவைராக்கியம் மற்றும் இவைகளின் பலனாக தெய்வீகக் கிருபையானது அவர்களுக்கு அருளும் ஆசீர்வாதங்கள் மற்றும் சிலாக்கியங்கள் ஆகும் என்றும் கர்த்தர் நமக்குக் கூறியுள்ளார் அல்லவா? ஒருவேளை பேதுருவுக்கு விசேஷித்த ஊக்கமளிக்கப்பட்டுள்ளதெனில், அதாவது "உன்னுடைய விசுவாசம் ஒழிந்து போகாதப்படிக்கு நான் உனக்காக வேண்டிக்கொண்டேன்" என்று ஊக்கமளிக்கப்பட்டுள்ளதெனில், இதற்குச் சரிசமமானது, "இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனே கூட இருக்கின்றேன்" என்றும், "என் கிருபை உனக்குப் போதும்; உன்னுடைய பெலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்றுமுள்ள வேதவாக்கியங்களின் வாக்குத்தத்தங்களில் நமக்குக் காணப்படுகின்றது அல்லவா? (மத்தேயு 28:30; 2 கொரிந்தியர் 12:9). உண்மையில் அப்போஸ்தலர்களுக்கு அவர்களுடைய சோதனை வேளையில் இருந்ததைக் காட்டிலும் நமக்கு எல்லா விதத்திலும் மிகுந்த அனுகூலங்கள் காணப்படுகின்றன. இந்த நமக்கான அனுகூலத்திற்கான காரணம், அப்போஸ்தலர்களுடைய அச்சோதனையானது, அவர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்படுவதற்கு முன்பு வந்தது; ஆனால் நமக்கான சோதனைகள் என்பது நாம் அபிஷேகிக்கப்பட்ட சரீரத்தில் காணப்பட்ட காலத்தில்தான் வந்தது என்ற உண்மையில் விளங்குகின்றது. ஆகவே நாம் எதிர்காலத்தை நோக்கிப் பார்க்கையில், "விடியற்காலம் வருகிறது, இராக்காலமும் வருகிறது" என்ற செய்தியை நாம் கேட்கும்பொழுது, உலகத்திற்குப் பரவலாய் வருவதற்கு முன்னதாக அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்களைப் பாதிக்கும் இந்தச் சிறிய இராக்காலத்தின் வேளையில் என்னவெல்லாம் வருமென எதிர்பார்க்கலாம் என்பது குறித்து நாம் முன்னெச்சரிக்கப்பட்டவர்களாய்க் காணப்படுகின்றோம் (ஏசாயா 21:12). இந்தச் சோதனை காலத்தில்தான், "உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது" என்ற வார்த்தைகளினுடைய சம்பவித்தலை நாம் எதிர்பார்க்கலாம் (சங்கீதம் 91:7, 9). எனினும் இவ்வசனத்தில் இடம்பெறும் வாக்குத்தத்தமானது, ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கே உரியது; அதாவது கர்த்தரையும், உன்னதமானவரையும் தங்களுடைய அடைக்கலமாகவும், தாபரமாகவும் கொண்டிருப்பவர்களுக்கு மாத்திரமே உரியது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப்போஸ்தலர் 20:28).

ஒன்றாய்ச் சேர்ந்து, கூடிப் போஜனம் புசிப்பது என்பது, உண்மைக்கான வாக்குறுதியாக இருப்பதினால், ஆண்டவர் விசேஷமான துணிக்கையைத் தோய்த்துக்கொடுப்பது என்பது அன்பிற்கான விசேஷித்த அடையாளமாக இருக்க வேண்டும். மேலும் அது, யார் கர்த்தரைக் காட்டிக்கொடுக்கப்போகின்றான் என்பதைக் காண்பிக்கும் வண்ணமாக, இராப்போஜனத்தின்போது, யூதாசுக்குக்கொடுக்கப்பட்டது. அப்போஸ்தலர்கள் பல்வேறு குரல்களில் கர்த்தரை நோக்கி நானோ? என்பதை எப்படிக்

கேட்டிருப்பார்கள் என்பதையும், இதே கேள்வியை யூதாசும் எப்படிக் கேட்டிருந்திருப்பார் என்பதையும் நாம் விவரிப்பதைப் பார்க்கிலும் நாம் நன்கு கற்பனைப் பண்ணிப்பார்த்துக்கொள்ளலாம். துணிக்கையை யூதாசிடம் கொடுத்தபோது, நமது கர்த்தருடைய கண்ணின் பார்வையையும் நாம் கற்பனை பண்ணிப் பார்த்துக்கொள்ளலாம். அதாவது, "யூதாஸ் நான் உன்னிடத்தில் காண்பிக்கும் அன்புடன் கூடிய இரக்கத்தை ஏன் நீ ஏற்க மறுத்துக்கொண்டிருக்கின்றாய்? நீ என்னுடைய நண்பன் என்றும், சீஷன் என்றும் உன்னைக் குறித்து அறிக்கை செய்திருக்கின்றாய். ஒரு நண்பனாக உனக்கு நான் என்னுடைய பங்கை செய்துள்ளேன்" என்ற விதத்தில் நமது கர்த்தர் பார்வையின் மூலமாகவும், செய்கையின் மூலமாகவும் பேசினதை நாம் கற்பனை பண்ணிப் பார்த்துக்கொள்ளலாம். இந்தக் கண் பார்வையும், இந்தத் துணிக்கையும், சுயநலமான யூதாசைத் திணற வைத்திருக்க வேண்டும். ஆனாலும் பார்வோனின் விஷயத்தில், வாதைகளை எடுத்துப்போடுவதன் மூலமாகக் கர்த்தர் இரக்கத்தைக் காட்டும்போதெல்லாம் பார்வோனுடைய இருதயம் அதிகமதிகமாகக் கடினப்பட்டதுபோலவே, நமது கர்த்தருடைய தாழ்மை மற்றும் அன்பிற்கான/இரக்கத்திற்கான ஒவ்வொரு வெளிப்படுத்தலும், யூதாசினுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினது. நமது கர்த்தருடைய கண் பார்வைக்கும், துணிக்கைக்கும் பிரதியுத்தரமாக, யூதாஸ் மனம் திரும்புவதற்குப்பதிலாக மிகவும் கசப்பு/வெறுப்புக்கொண்டு, தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அதிக தீர்மானமாய்க் காணப்பட்டான். இது யூதாசின் கண்களில் ஜொலித்தது. நமது கர்த்தர் யூதாசினுடைய எண்ணங்களை வாசித்தவராக, "நீ செய்கிறதைச் சீக்கிரமாய் செய்" என்று கூறினார்.

இதிலுள்ள படிப்பினையையும், அது இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்குப் பொருந்துவதையும் பார்க்கத் தவறிடாமல் இருப்போமாக. அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களில் எவரேனும் சுயநலத்தையும், பேராசையையும்/தனிப்பட்ட இலட்சியத்தையும் வளர்த்திக்கொண்டு வருவார்களெனில், அவர்கள் யூதாசின் முடிவைப்போன்ற முடிவை அடைவதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் தங்களுக்குள் வளர்த்துக்கொண்டிருக்கும் ஆவியினுடைய செல்வாக்கானது, இவர்கள் யூதாசைப்போன்று தனிப்பட்ட சிறு ஆதாயங்களுக்கெனச் சத்தியத்தை விற்றுப்போடுவதற்கு ஆயத்தப்படும் நிலைக்கு வருமளவுக்கு, கர்த்தருடைய நோக்கங்கள் மற்றும் உண்மையுள்ள சகோதரர்களுக்கான பரிவிரக்கத்திலிருந்து இவர்கள் வெகு தொலைவிற்கு வழிநடத்தப்படுவார்கள். இப்படியான இருதய நிலைக்கு, முன்பொரு காலத்தில் பிரகாசிக்கப்பட்டு, தேவனுடைய வார்த்தைகளையும், இனிவரப்போகும் பலன்களையும் ருசி பார்த்திருந்தவர்கள் வந்துவிடுவார்களானால், இவர்கள் தங்களுடைய பொல்லாத நடத்தைக்கான எல்லைக்குப் போவதை எந்த வல்லமையும் தடைப்பண்ணுவதில்லை. இப்படிப்பட்டவர்களுடைய மனங்கள் சத்தியத்திற்கு எதிராக மிகவும் விஷமாகியுள்ளபடியால் இரக்கத்தின் துணிக்கைகளானது, இப்படிப்பட்டவர்களைத் தீமைக்கு/பொல்லாப்பிற்கு நேராக அதிகம் தூண்டுகின்றதாகக் காணப்படும். சாத்தான் யூதாசுக்குள் புகுந்தான் என்று

நாம் வாசிக்கின்றதுபோல, யூதாஸ் வகுப்பாரின் விஷயத்திலும் இப்படியாகவே காணப்படும். இவர்கள் மீது எதிராளியானவன் முழு வல்லமைக்கொண்டு, இவர்களை அடக்கி ஆளுவதை நாம் எதிர்பார்க்கலாம்.

## கெத்செமனேயின் பாடங்கள்

அந்த இரவிற்குரிய, ஆழமாய் மனதில் பதியக்கூடிய படிப்பினைகள், அப்போஸ்தலர்களுடைய மனங்களை முழுமையாய் நிரப்பி இருந்திருக்கும் என்றும், அவர்கள் கண்களுக்கு நித்திரை/உறக்கம் தூரமாய் இருக்குமளவுக்கு அவர்களை விழிப்பாய் இருக்கச் செய்திருக்கும் என்றும் ஒருவர் எண்ணக்கூடும். ஆனால், இப்படியாக இருக்கவில்லை. ஆண்டவருடைய வார்த்தைகளை எப்படி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதையே அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. மேசியாவாக இருப்பதற்கும், ஆளுகை செய்வதற்குமென வந்தவர் காட்டிக்கொடுக் கப்பட்டு, சிலுவையில் அறையப்படுவார் என்பதும், அவரோடுகூட அவருடைய சிங்காசனத்தில் இருப்பார்கள் என்று அவரால் வாக்களிக்கப்பட்ட வர்களாகிய தாங்கள் அனைவரும் அவரைக் கைவிட்டு, ஓடுவது என்பதும் மிகவும் புரிந்துகொள்ள முடியாததாய் அவர்களுக்கு இருந்தது. அவர்களால் புரிந்துகொள்ள முடியாத அநேக உயர்வான காரியங்களை அவர்களிடம் அவர் கூறியிருந்தார். ஆகவேதான் அவர்கள் விழித்திருந்து, ஜெபம் பண்ணும்படியாக அவர் திரும்பத்திரும்ப அறிவுறுத்தினது, அவர்களுக்குப் பெரிதாக ஒன்றும் தோன்றவில்லை. இயேசுவின் விசேஷித்த மூன்று நண்பர்களும்கூட, அதாவது அவரது நம்பிக்கைக்கு விசேஷித்த பாத்திரமான வர்களாகக் காணப்பட்டவர்களும், வேறு ஒரு தருணத்தின் போது மறுரூப மலைக்கு அவரால் அழைத்துச் செல்லப்பட்டவர்களுமான மூன்று பேரும் கூடத் தூங்கிவிட்டனர். அவ்வப்போது கர்த்தர் இவர்களிடத்தில் வந்து, இவர்களை விழிக்கப்பண்ணினபோது, இவர்கள் கவனித்த குறிப்பிட்ட சம்பவங்களையே/ நிகழ்வுகளையே இவர்கள் நமக்குப் பதிவு செய்துள்ளனர்.

## யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பி...

இப்பொழுது எப்படியாகக் காணப்படுகின்றது? உபத்திரவமாகிய இரவு நெருங்கிக்கொண்டிருக்க பூச்சக்கரத்துக்குடிகள் அனைத்தையும் சோதிக்கும்படியான சோதனை வேளை அண்மையில் இருக்க, மற்றும் நாம் சோதனையில் விழுந்துவிடாதபடிக்கு நாம் விழித்திருந்து ஜெபம் பண்ண வேண்டுமென வசனங்கள் வாயிலாக ஆண்டவருடைய அநேக எச்சரிப்புகள் இருக்க - நாம் எப்படிக் காணப்படுகின்றோம்? அந்தோ பரிதாபம்! பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் போன்று கர்த்தரிடத்திலிருந்து விசேஷித்த அனுகூலங்கள் பெற்றுக்கொண்டு, அவருக்கு நெருக்கமாய் இருப்பவர்களில் அநேகர், தாங்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கும் காலத்தின் முக்கியத்துவத்தை உணரத் தவறியும், தங்கள் மீது வரும் என முன்னுரைக்கப்பட்டுள்ள சோதனைகளை உணரத் தவறியும்போய், பேதுருவை

போன்று கர்த்தருடைய உண்மையுள்ளவர்கள் மத்தியிலிருந்து பிரித்துப்போடப்படும் மாபெரும் அபாயத்திற்குள்ளாகுகின்றவர்களாக இருக்கின்றனர்.

நமது கர்த்தருடைய நிலைமையை, நம்மால் ஓரளவுக்குக் கற்பனை செய்துகொள்ள முடிகின்றது. அவருக்கான மாபெரும் சோதனை வேளை அவர்மேல் கடந்துவந்தது. அதைக் கர்த்தர் முழுவதுமாக உணர்ந்திருந்தார். கடந்த காலங்களிலும், தற்போதும், அடுத்துவரும் நாளிலும் உள்ள அவருடைய உண்மையானது, பிதாவுக்கான அவருடைய உண்மையையும், மேலான பலனாகிய கனம், மகிமை மற்றும் அழியாமையை அடைவதற்கான அவருடைய உரிமையையும் தீர்மானிப்பதாய் மாத்திரம் இல்லாமல், அது ஒட்டுமொத்த மனுக்குலத்தின் நலம் தொடர்பானதை தீர்மானிக்கின்றதையும் இச்சோதனையானது குறிக்கின்றதாய் இருக்கின்றது. சோதனையில் ஜெயம் என்பது பாவம் மற்றும் மரணம் எனும் அடிமைத்தனத்தினின்று அனைத்துக் கைதிகளையும் முடிவில் விடுவிப்பதைக் குறிக்கின்றதாகும். இதில் தோல்வி என்பது அனைத்தையும் இழந்துவிடுவதாகும்! ஆகவே அவருடைய ஆத்துமா மரணத்திற்கு ஏதுவான துக்கம் கொண்டிருந்ததிலும், அவருடைய உணர்வுகளின் உச்சக்கட்டத்தில் அவருடைய வியர்வை நுண்துளைகளிலிருந்து இரத்தம் வந்ததிலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை அல்லவா? ஆ, அன்பான ஆண்டவரைக்குறித்து, "ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை" என்று சரியாகவே எழுதப்பட்டிருக்கின்றது. அவருக்கு மிகவும் நெருக்கமானவர்களாகவும், மிகவும் அன்பிற்குரியவர்களாகவும் இருந்த சீஷர்கள் கூட, நிலைமையை உணர தவறி, அவர் ஏங்கின/விரும்பின அனுதாபத்தின் சகாயத்தை அவருக்கு அளித்திட தவறிவிட்டனர். இந்த சீஷர்கள் தங்களுடைய கர்த்தருக்கு அவருடைய சோதனை வேளையில் ஊழியம் புரிவதற்குரிய வாய்ப்பை மீண்டுமாகப் பெற்றுக்கொள்ளதக்கதாக பிற்காலங்களிலும் எதையும் செய்வதற்குக்கூடத் தயாராய் இருந்திருப்பார்கள் அல்லவா? எத்தகைய ஒரு சிலாக்கியத்தை அவர்கள் தவற விட்டுவிட்டனர்! இங்கு நமக்கும் ஒரு படிப்பினை உள்ளது. ஏனெனில், ஆண்டவர் மாம்சத்தில் இல்லாமலும், இனிப் பாடுபடுவதில்லை என்றாலும், அவருடைய அங்கங்களில் சிலர் இன்னமும் மாம்சத்தில்தான் காணப்படுகின்றனர் மற்றும் அவருடன் ஆளுகை செய்வதற்கென இப்பொழுது அவருடன் பாடுபட்டுக்கொண்டிருக்கும் சிலர் இருக்கின்றனர். நம்முடைய பாடுகள் ஆண்டவருடைய அந்தப் பாடுகள் போன்றதல்ல. அதேசமயம் நம் அனைவருக்கும் கூட ஒரே பாடுகள் இல்லை. ஒவ்வொருவனுக்கும் தான் ஆண்டவருடைய பயன்பாட்டிற்குத் தகுதியடையத்தக்கதாக, நிரூபிக்கப்படுவதற்கும், பரீட்சிக்கப்படுவதற்கும் தகுதியடைவதற்கும்/பொருந்துவதற்கும், மெருகூட்டப்படுவதற்கும் தனக்கேற்ற அனுபவங்களைப் பெறுகின்றவனாகக் காணப்படுகின்றான். நாம் ஒருவருக்கொருவர் அந்த அனுதாபத்தை/பரிவிரக்கத்தைக் கொண்டிருக்கின்றோமா? ஒருவருக்கொருவர் உதவவும், ஒருவருக்கொருவர் பாரங்களைச் சுமக்கவும், இவ்விதமாக கிறிஸ்துவின் பிரமாணத்தை, அன்பின் பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கு நம்மை வழிநடத்தக்கூடிய அந்த இரக்கத்துடன்/பேராவலுடன்கூடிய அன்பைக்கொண்டிருக்கின்றோமா? இல்லையேல் காயப்படுத்தும் யூதாசின் ஆவியைக் கொண்டிருக்கின்றோமா?

இல்லையேல் சரீரத்திலுள்ள மற்றவர்கள் ஆபத்தான நிலையில் இருக்கும்போது, சகோதர சகோதரிகள் பாடுபடும்போது, சோதனையில் காணப்படும்போது, நம்மைத் தூங்கிபோகச் செய்யும் அளவிற்கு உணர்ந்துகொள்ளுதலை இழந்தவர்களாகவும், சோம்பலுடன் கூடிய அக்கறையின்மையின் ஆவியைக்கொண்டவர்களாக இருக்கின்றோமா? இக்கேள்விக்கான நடைமுறை பதில்களையே கர்த்தர் எதிர்பார்க்கின்றார் மற்றும் தம்முடைய ஆவியை அதிகமாய் வெளிப்படுத்து கிறவர்களின் மீது கர்த்தருடைய அன்பும், கிருபையும் காணப்படும். நமக்கு அதிகமான காரியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன மற்றும் நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற பிற்பாடே இங்குப் பேசப்படும் சோதனை வேளை நம்மீது கடந்துவருகின்றது. நமக்கு அதிகமாய்க்கொடுக்கப்பட்டுள்ளபடியினால், நம்மிடத்தில் அதிகமாய் எதிர்பார்க்கப்படும் - நாம் சகோதரர்களுக்கென நம்முடைய ஜீவனையும் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

## தேவதூதர் அவருக்கு ஊழியஞ்செய்தார்

நமது கர்த்தர் தம்முடைய வியாகுலத்தில், "இப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்" என்று பிதாவிடம் ஜெபம் பண்ணினதில் அவர் மரணத்தின் பாத்திரத்தைக் குறிப்பிட்டார் என்று எண்ணிவிடக்கூடாது. காரணம், இந்த மரணம் அவசியமானது என்றும், இந்தக் காரணத்திற்காகவே தாம் உலகத்திற்கு வந்துள்ளார் என்றும் அவர் ஏற்கெனவே தம்முடைய சீஷர்களிடம் எடுத்துக் கூறியிருக்கின்றார். அப்படியானால் தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும் என்று அவர் குறிப்பிட்ட பாத்திரம்தான் என்ன? இது அநேகமாக அவர் சிலுவையில் அறையப்படுதலுடன் கூட வரும் அவமானத்தைக் குறிக்கின்றதாய் இருக்கும் என நாம் பதிலளிக்கின்றோம். அதாவது, தேவனுக்கு எதிராக தேவ தூஷணம் உரைத்ததாக இரண்டு கள்வர்களின் நடுவில் சிலுவையில் அறையப்படுதலிலுள்ள அவமானம் ஆகும். தம்முடைய உயிர்த்தெழுதல் சார்ந்துள்ள தம்முடைய சொந்த உண்மைத்தன்மை தொடர்பாகவே நமது கர்த்தருக்குக் கடுமையான துயரம் காணப்பட்டது என்று வேறொரு வேதவாக்கியம் நமக்குத் தெரிவிக்கின்றது. ஒரு சிறு விஷயத்திலோ, ஒரு சிறு பிரமாணத்திலோ ஒருவேளை அவர் தவறியிருப்பாரானால் ஆதாமை போன்று அவரும் ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்பட்டு, ஜீவனை இழக்க நேரிடும் மற்றும் இதன் விளைவாக அவருக்கு உயிர்த்தெழுதலும், எவ்விதமான எதிர்கால ஜீவியமும் இருந்திருக்காது மற்றும் அவர் நிறைவேற்றும்படியாக உலகத்திற்கு வந்து செய்த முழு வேலையும் தோல்வியடைந்திருக்கும். "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு" என்று வேதவாக்கியமானது நமக்குத் தெரிவிக்கின்றது (எபிரெயர் 5:7). அவருடைய சீஷர்கள் அவரைச் சூழ்ந்து நின்று, அவருடைய வாழ்க்கையில் கறைதிறை எதுவும் இல்லாமல், முற்றும் முழுமையாகத்

தெய்வீகச் சித்தத்திற்கு இசைவாகவே இருந்தது என அவருக்கு உறுதியளிக்கவில்லை என்றாலும், ஒரு தேவதூதனை விசேஷித்தவிதமாய் அனுப்பி வைத்து, அவர் பயப்பட்ட விஷயத்தில் அவருக்கு உற்சாகம் கொடுத்து, தேவன் அதிகமாகவே செய்துவிட்டார். இயேசு உண்மையுள்ளவராக இருக்கின்றார் என்றும், அவர் அங்கீகரிக்கப்பட்டுள்ளார் என்றும் பிதாவினிடத்திலுள்ள வாக்குறுதியைத் தேவதூதன் இயேசுவுக்குக் கொடுத்திருக்க வேண்டும்.

அந்த வாக்குறுதியின் பலத்தினால் நமது கர்த்தர் அந்த இரவிலும், அடுத்தநாள் அதாவது அவரது மரணத்தின் தருணம் வரையில் வரவிருக்கின்ற அனைத்து நிகழ்வுகளையும் சந்திப்பதற்கு உறுதியுடனும், அமைதியுடனும், பலத்துடன் எழுந்து நின்றார். இப்படியாகவே நம் விஷயத்திலும் காணப்பட வேண்டும். எதிர்க்காலத்தைக்குறித்த கொஞ்சம் கவலைக் காணப்பட வேண்டும். நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்ளும் விஷயத்தில் நாம் ஒருவேளை ஜாக்கிரதையற்று/அக்கறையற்று இருப்போமானால், கர்த்தர் பிரியமாய் இரார். நாம் ஜீவனை மதிப்பிட்டு உணர்ந்தவர்களாகக் காணப்பட வேண்டும். அதுவும் நாம் ஒருவேளை உண்மையுள்ளவர்களாய் இருக்கும் பட்சத்தில் நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ள மேலான ஜீவனை விசேஷமாக நாம் மதிப்பிட்டு உணர்ந்தவர்களாகக் காணப்பட வேண்டும். நாம் இன்னமும் அவருடையவர் களாகத்தான் இருக்கின்றோம் என்றும், மகிமையான நம்பிக்கைகளும், வாக்குத்தத் தங்களும் இன்னமும் நம்முடையவைகளாகத்தான் இருக்கின்றது என்றுமுள்ள நிச்சயத்தைக் கொடுக்கக்கூடிய அவருடைய அன்பு மற்றும் கிருபையின் நமக்கான ஊழியங்களை/உற்சாகப்படுத்தல்களை, நமது கண்கள் கர்த்தரிடத்திலிருந்து எதிர்பார்க்கும் அளவுக்கு நாம் ஜீவனை மதிப்பிட்டு உணர்ந்திருக்க வேண்டும். மேலும் இந்த வாக்குறுதி/நிச்சயம் அல்லது ஆறுதல் என்பது பூமிக்குரிய ஊழியங்கள் மூலமாக வருவதில்லை. இவ்விஷயத்தில் மிகுந்த உண்மையுடனும், பேராவலுடனும் காணப்படும் தம்முடைய சரீரத்திலுள்ள ஒவ்வொரு அங்கங்களும் ஆவியின் சரியான சாட்சியைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, அதாவது அவனுடைய ஏற்றுக்கொள்ளப்படுதல் மற்றும் உண்மை பற்றி அவனுடைய இருதயத்திற்குச் சரியான சாட்சியை அருளத்தக்கதாக கர்த்தர் தாமே பார்த்துக்கொள்வார்.

## இயேசு முத்தத்தினால் காட்டிக்கொடுக்கப்பட்டார்

துரோகம் என்பது உலகளவில் இழிவாகப் பார்க்கப்படுவதினால், தேவனுக்குத் துரோகியாகிய சாத்தானும், நமது கர்த்தர் இயேசுவுக்குத் துரோகியான யூதாசும், அனைவராலும் தவிர்க்கப்பட வேண்டிய இம்மாதிரியான மனநிலைமைக்கும், இருதய நிலைமைக்கும் பிரதிநிதிகளாகக் காணப்படுகின்றனர். இந்த இருதய நிலைமையை உடையவர்கள் இரண்டாம் மரணத்தை அதாவது நித்தியத்திற்குமான அழிவை அடைவார்கள் என்று கர்த்தர் அறிவிக்கின்றார். பல்வேறு சுவிசேஷப் பதிவுகளை வைத்துப் பார்க்கும்பொழுது, கர்த்தரையும், பதினொரு அப்போஸ்தலர்களையும் விட்டு, யூதாஸ் புறப்பட்டுப்போன பிற்பாடு, யூதாஸ் தான் ஏற்கெனவே பேசியிருந்த பிரதான

ஆசாரியர்களிடத்திற்கு மீண்டும் சென்றதாகக் காண்கின்றோம். பேரத்தை முடிவு கட்டிவிட்டு, ஆலயத்தின் போர்ச்சேவர்களுக்கு யூதாஸ் வழிக்காட்டியாக ஆனான். அன்று பௌர்ணமியாக இருந்த போதிலும் செடிகள் மத்தியில் தேடுவதற்கு அவசியப்படும் விளக்குகளுடனும், தடிகளுடனும் சேவகர்கள் வந்தார்கள். அதிகாரிகளின் கண்ணோட்டத்தின்படி நடுராத்திரி வேளை என்பது மிகவும் சாதகமான வேளையாகக் காணப்பட்டது; காரணம் இயேசுவை அறிந்தவர்களும் அவருடைய அற்புதங்களுக்குச் சாட்சியாய் இருப்பவர்களுமான திரளான ஜனங்கள் பஸ்கா பண்டிகைக்கென எருசலேமில் காணப்பட்டப்படியால், காலை வேளையில் இயேசுவைக் கைது செய்வது என்பது கலகத்தைத் தூண்டிவிடுவதாகிவிடும். நமது கர்த்தர் கெத்செமனே தோட்டத்திற்குச் சென்றதற்கான காரணம், அத்தோட்டம் அவருடைய ஒரு நண்பனுக்குச் சொந்தமானதாகும் மற்றும் வெளியிடத்தில் காணப்படும் பட்சத்தில் கைது செய்யப்படுவதிலிருந்து தம்முடைய சீஷர்கள் தப்பித்துக்கொள்வதற்கான நல்ல வாய்ப்பு இருக்கும் என்பதினாலேயே ஆகும். மாற்கு பதிவு செய்துள்ளபடி ஒரு வாலிபன், இயேசு கூட்டிக்கொண்டு சென்ற கூட்டத்தாரைத் தொடர்ந்து போனான் என்றும், அந்த வாலிபன் நீண்டதும் தளர்ந்ததுமான அங்கிபோட்டிருந்தான் என்றும், சேவகர்கள் அவன்மேல் கைப்போட்டபோது, அவன் அங்கி கழன்று போய் நிர்வாணமாய்த் தப்பி ஓடிப்போய்விட்டானே ஒழிய, மற்றபடி சீஷர்களைக் கைது செய்வதற்கான எந்த விசேஷித்த முயற்சிகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த வாலிபன், மாற்கு சுவிசேஷத்தை எழுதின யோவான் மாற்காக இருக்கும் என்று அனுமானிக்கப்படுகின்றது. மேலும் இந்த யோவான் மாற்கு வாழ்ந்த இடத்தின் ஒரு பகுதியில்தான், கெத்செமனே தோட்டம் காணப்பட்டது.

நமது கர்த்தர் வியாகுலம் அடைந்து ஜெபம் பண்ணி, இறுதியில் ஆறுதல் படுத்தப்பட்ட பின்னர், அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் மீண்டுமாக வந்து, "இனி நித்திரைப்பண்ணி இளைப்பாறுங்கள்" என்று கூறினார். அதாவது, "என்னோடுகூட விழித்திருப்பதற்கு அல்லது எனக்கு ஆறுதலின் வார்த்தையைப் பேசுவதற்குரிய உங்களுக்கான வாய்ப்பு முடிந்துவிட்டது. வரவிருக்கின்ற பரீட்சைகள் மற்றும் சோதனைகளுக்கு எதிராக பாதுகாப்பாக, உங்களது இருதயங்களையும், மனங்களையும் ஜெபத்தில் விழிக்கப்பண்ணுவதற்குரிய உங்களுக்கான வாய்ப்புக் கடந்துபோய்விட்டது. இதோ என்னைக் கைது பண்ணுவதற்குரியவர்கள் வருகின்றார்கள்!" என்ற விதத்தில் கூறினார். சேவகர் கூட்டத்தாருக்கும் கொஞ்சம் முன்னதாக வந்து காணப்பட்ட யூதாஸ் துரோகத்தனமான முத்தத்தினால், இயேசுவை அடையாளம் காட்டிக்கொடுத்ததை அவமானத்தின் காரணமாக யோவான் பதிவு செய்யவில்லை. "மனுஷகுமாரனை முத்தத்தினாலா காட்டிக்கொடுக்கிறாய்?" என்ற ஆண்டவருடைய வார்த்தைகளின் நிமித்தம் தன்னுடைய ஏமாற்று வேலை வெளியாகிவிட்டது என்பதை உணர்ந்த யூதாஸ் அவரிடமிருந்து விலகி அவரைக் கைது செய்யும்படியாக வந்திருந்த கூட்டத்தாருடன்கூடச் சேர்ந்து நின்றான். மறைவிலிருந்து இயேசு வெளியே வந்து, "யாரைத் தேடுகின்றீர்கள்?" என்றார். அவர்களுடைய கேள்விக்குப் பிரதியுத்தரமாக: "நான் தான் அவர்; என்னுடைய நண்பர்களாகிய

இவர்களைப் போகவிடுங்கள்" என்று கூறினார். மேலும் அவர்கள் பின்னிட்டுபோய் விழுந்தார்கள் என்று நாம் வாசிக்கின்றோம். சந்தேகத்திற்கிடமின்றி இது அவர்கள் மீது நமது கர்த்தரால் செயல்படுத்தப்பட்ட வல்லமையினாலேயே ஆகும். அதாவது அவர் ஒருவேளை விரும்பினால் அவர்களை முற்றிலுமாய் எதிர்ப்பதற்கு அவரால் பயன்படுத்தப்படக்கூடிய வல்லமையாகும். வேறுவழியின்றி கட்டாயத்திற்காக அல்லாமல், மாறாக பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கே தாம் தம்மைக் கையளிக்கின்றார் என்பதைச் சேவகர்களுக்கும், தம்முடைய அப்போஸ்தலர்களுக்கும் காட்டுவதற்கு, இந்த வல்லமை அவரால் செயல்படுத்தப்பட்டது போதுமானதாய் இருந்தது.

இவைகள் நடப்பதற்குக் கொஞ்சம் நேரத்திற்கு முன்னதாக, அப்போஸ்தலர்கள் சில பட்டயங்கள் எடுத்துகொள்ள வேண்டும் என்றும், இரண்டு பட்டயங்கள் இருக்கின்றது என அவருக்குத் தெரிவிக்கப்பட்டபோது, அவைகள் போதுமென்றும் கர்த்தர் கூறினார். இரண்டு பட்டயங்களில் ஒன்றை, அப்போஸ்தலர் பேதுருதான் வைத்திருந்ததுபோன்று தெரிகிறது. மேலும் ஆயுதங்களைக் கொண்டிருந்த மனிதர்கள் கர்த்தரை நெருங்கின போது, பேதுரு பட்டயத்தைப் பயன்படுத்த, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனாகிய மல்குஸ் என்பவனின் காதை வெட்டினார். தாம் சரணடைந்ததற்கான காரணம், தமது அல்லது சீஷர்களின் கோழைத்தனம் அல்ல என்பதைக் காட்டுவதற்கே இச்சம்பவம் நிகழ்வதற்கான கர்த்தருடைய நோக்கமாய் இருந்தது என்பதில் உறுதியே. இன்னுமாக இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, கர்த்தர் பேதுருவிடம்: "உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு; பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள் என்று கூறினார்" (மத்தேயு 26:52); அதாவது வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், "என்னுடைய பின்னடியார்கள், பூமிக்குரிய ஆயுதங்களைக் கொண்டு யுத்தம் பண்ணக்கூடாது; என்னுடைய இராஜ்யம் இப்படியான விதத்தில் ஸ்தாபிக்கப்படப் போவதில்லை" என்றார்.

அன்னா பல வருடங்களாக பிரதான ஆசாரியனாக இருந்துள்ளார் மற்றும் இவருக்குப் பின்பு இவருடைய குமாரர்களில் பலர் இந்த ஸ்தானத்திற்கு வந்துள்ளனர். மேலும் இப்பொழுது இவருடைய மருமகனாகிய காய்பா இந்த ஸ்தானத்தில் காணப்பட்டார். எனினும், அன்னாவுக்கு ஒரு குறிப்பிட்ட விதத்தில் அங்கீகாரம் இருந்தது. ஆகவேதான் நமது கர்த்தர் முதலாவதாக இவரிடத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார். அன்னா இயேசுவிடம் கேள்வி கேட்டார். ஆனால் சட்டரீதியிலான விசாரணையைச் செய்யவில்லை. இந்த விசாரணை பிரதான ஆசாரியனுடைய அரண்மனையின் இன்னொரு இடத்தில் காய்பாவிற்கு

முன்னிலையில் நடைபெற்றது.

அன்னாவினால் நமது கர்த்தர் கேள்வி கேட்கப்பட்டுக்கொண்டிருக்கும் போதுதான், நெருப்பின் முன் குளிர் காய்ந்துக்கொண்டிருந்த பேதுரு, மூன்று முறை கர்த்தருடைய பின்னடியார்களில் ஒருவராக அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுக் கேள்வி கேட்கப்பட்டார் மற்றும் மூன்று முறை மறுதலிக்க, சேவலும் கூவிற்று. சேவல் கூவுவதைப் பேதுருவும் கேட்டார். நமது கர்த்தர் அன்னாவின் முன்னிலையில் நின்று காய்பாவின் நியாயஸ்தனத்திற்கு முன்பாக அழைத்துச் செல்லப்பட்டபோது, பேதுருவைப் பார்த்தார். பேதுருவைப் பார்த்த அந்தப் பார்வையில் எத்தகைய ஒரு பிரசங்கம் இருந்திருக்கும்! கர்த்தரை ஒருபோதும் மறுதலிக்கமாட்டேன் என்று தன்னுடைய தைரியத்தைக்குறித்துப் பெருமையடித்துக் கொண்டவர் தோற்றுப்போனார். பேதுரு தன்னைப் பற்றி எண்ணியிருந்ததைக் காட்டிலும் எவ்வளவு பெலவீனமாய்க் காணப்பட்டார்! "சேவல் இரண்டு தரம் கூவுவதற்கு முன்னே, நீ மூன்று தரம் என்னை மறுதலிப்பாய்" என்ற கர்த்தருடைய தீர்க்கத்தரிசனம் நிறைவேறினது. பேதுரு வெளியேறி, மிகவும் மனங்கசந்து அழுது, இருதயத்தில் நொந்துபோய், தன்னைக் குறித்து வெட்கம் அடைந்து, இனி எதிர்க்காலத்தில் தற்பெருமையடித் துக்கொள்வதுமில்லை என்றும், ஆண்டவர் சொன்னதுபோல அதிகமாய் விழித்திருந்து ஜெபம் பண்ண வேண்டும் என்றும், தீர்மானம் எடுத்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

இந்த அனுபவங்களில் சில, இன்றுள்ள கர்த்தருடைய அருமையான ஜனங்களில் சிலருக்கு அப்படியே இணையாகக் காணப்படும் என்பதை நாம் அறியோம். நம்மில் எவரேனும் இப்படியான குறைவுள்ள நிலைமைக்குள் காணப்படுவோமேயானால், ஆண்டவர் பேதுருவுக்கு ஜெபம் பண்ணினதுபோன்று, நமக்கும் ஜெபம் பண்ணுவதோடுகூட, அவருடைய சிட்சையின், கண்டிப்பின் பார்வையைக்கூட நம்மேல் விழப்பண்ணுவார். மேலும் நாம் நமது பெலவீனத்தினிமித்தமும், அவமானத்தினி மித்தமும் மூழ்கடிக்கப்பட்டுவிடாமல், யூதாஸைப் போன்று இல்லாமல், நம்முடைய மனம்திரும்புதல் பேதுருவைப் போன்று கர்த்தருக்கு உண்மையானதாகவும், அங்கீகரிக்கத்தக்கதாகவும் காணப்படத்தக்கதாக அவருடைய பரிவிரக்கத்தையும், அன்பையும் நமக்கு நினைப்பூட்டக்கூடிய அவருடைய பார்வைகளையும் நம்மீது விழப்பண்ணுவார் என்று நாம் எதிர்ப்பார்க்கலாம்.

# உண்மையற்ற ஒரு பொருளாளரின் வீழ்ச்சி

## மத்தேயு 26:14-25, 47-50; 27:3-10.

*"எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ." மத்தேயு 26:24*

இயேசுவின் பதினொரு சீஷர்கள் கலிலேயர்களாக இருக்க, யூதாஸ் பாலஸ்தீனியாவின் தெற்குப் பகுதியைச் சார்ந்தவராக இருந்தார். வணிகத்தில் திறமைமிக்கவராக யூதாஸ் இருந்தபடியால், அவர் அப்போஸ்தலர்களின் கூட்டத்திற்குப் பொருளாளராக அமர்த்தப்பட்டார் என்று அனுமானிக்கப்படுகின்றது. இயேசுவின் நண்பர்கள், இராஜ்யத்தைக் குறித்து அறிவிப்பதற்கு, தாங்களும், இயேசுவும், தங்களுடைய முழு நேரத்தையும் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்ததான உண்மையை உணர்ந்திருந்தனர். ஆகவே அவர்களைத் தாங்கும் வண்ணமாக சிலர் தானாகவே முன்வந்து பண உதவி பண்ணினார்கள் என்று நாம் வாசிக்கையில் நமக்கு விநோதமாக எதுவும் தோன்றவில்லை.

இயேசுவும், அவருடைய அப்போஸ்தலர்களும் பணத்திற்காக கெஞ்சியிருப் பார்கள் என்றோ அல்லது பணம் வசூலிக்க முயன்றிருப்பார்கள் என்றோ நம்மால் எண்ணி கூடப் பார்க்க முடியாது. இப்படியாக, செய்யப்பட்டிருக்குமாயின், அது "சகல பொன்னும், சகல வெள்ளியும், பர்வதங்களில் திரிகிற ஆயிரமாயிரமான மிருகங்களும் என்னுடையவைகள்" என்று பிதாவாகிய தேவன் பேசினதின் மதிப்பைக் குறைத்துப் போடுவதாகவும், உதவிக்காக அவர் கேட்டுவாங்க வேண்டிய நிலையில் காணப்படுகின்றார் என்பதாகவும் ஆகிவிடும். மாறாக, ஆண்டவருக்கு ஆதரவாக சிலர் தானாகவே முன்வந்து கொடுத்தார்கள் என்றே வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. உதாரணத்திற்கு, ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், இன்னும் சிலரும் இதைச் செய்தார்கள் என்று வாசிக்கின்றோம் (லூக்கா 8:3). இப்படியாக, முன்வந்து கொடுக்கப்பட்ட நன்கொடையின் நிமித்தம், அப்போஸ்தலரின் கூட்டத்தாருக்குப் பொதுவாக ஒரு பொருளாளர் நியமிக்க அவசியமாயிற்று. அதுவும், அந்தப் பொருளாளர் மிகச்சிறந்த வாணிக திறன்மிக்கவராகவும் இருப்பது அவசியமாயிற்று.

பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராக இயேசு யூதாசைத் தெரிந்துக்கொண்டபோது, அவர் கேடான மனிதனாக இருந்தார் என்று சொல்வதற்கோ, நம்புவதற்கோ எவ்வித காரணங்களும் நமக்கில்லை. ஆனால் மிகுந்த சாதகமான செல்வாக்குகளின் கீழ் இருந்தபோதிலும், அதாவது, இயேசு மற்றும் மற்ற அப்போஸ்தலர்களின் தோழமை இருந்துகொண்டிருக்கும் போதும், இராஜ்யத்தின் செய்தி தொடர்ந்து அவர் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கும் போதும், அவர் கேடான குணங்களை வளர்த்துக்கொண்டிருந்தார் என்று நம்புவதற்கு அனைத்துக் காரணங்களும் நமக்குக் காணப்படுகின்றன. எனினும் அவருடைய பின்மாற்றத்திற்கு ஓர் ஆரம்பம் இருந்தது. மேலும், யூதாசுக்கு, சுயநலம், பணத்தின் மீது பிரியம், பேராசை ஆகியவைகளின் அடிப்படையிலேயே சோதனை வந்தது என வேதவாக்கியங்கள்

சுட்டிக்காண்பிக்கின்றன.

## சகல தீமைகளுக்கும் வேர்

அந்தோ! எத்தனை நேர்மையான மனிதர்கள், பணத்தின் மீதான அன்பின் நிமித்தம், நீதியின் பாதையினின்று கெடுக்கப்பட்டுப் போய்விட்டனர்! பரிசேயர்களுக்கு எதிராக, இயேசு கூறின கடுமையான குற்றச்சாட்டுகளில் ஒன்று, அவர்கள் பணப்பிரியராக இருந்தார்கள் என்பதை நாம் நினைவுகூருகின்றோம். இன்றைய காலத்திலுள்ள அநேக கிறிஸ்தவர்களுக்கும், பிரச்சனை/இடர்பாடு பணத்தின் மீதான ஆசையின் அடிப்படையிலேயே உள்ளது என்று ஒருவேளை நிரூபித்துக்காட்டப் பட்டாலும், அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது" என்பது இன்றும் உண்மையாகவே உள்ளது (1 தீமோத்தேயு 6:10). மேலுமாக அப்போஸ்தலர் (இப்பண ஆசை எனும்) வஞ்சனையின் நிமித்தம், அநேகர் வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக் கின்றார்கள் என்றும் கூறுகின்றார்; எனினும் யூதாஸ் செய்ததுபோன்று எப்போதும் மிக அபாயகரமாக இருப்பதில்லை.

யூதாஸ் தனது ஆண்டவரை முப்பது வெள்ளிக்காசுகளுக்குக் காட்டிக்கொடுக்கும் அளவு பணப்பிரியனாக இருந்தார். அதாவது, கூலியின் அடிப்படையில் பார்க்கையில் முப்பது வெள்ளிக்காசு என்பது இருநூறு முதல் முன்னூறு டாலர்களுக்குள்ளான மதிப்பை உடையதாகும். இன்னும் வேறுசிலர் தங்கள் மனசாட்சியை விற்றுப்போடும் அளவிற்கு, ஆஸ்திகள் பெறும் பொருட்டு/ சம்பாதித்துக்கொள்ளும் பொருட்டுப் பணப்பிரியராக இருக்கின்றனர். தப்பறைகளை ஆதரிப்பதின் மூலம், தங்கள் தொழிலில் நன்கு செழிப்படையலாம் என்று நம்பி, பணத்திற்காகச் சிலர் சத்தியத்தையும் விற்றுப்போட்டவர்களாக இருக்கின்றனர். சிலர் பணத்திற்காக, சபையையே விற்றுப்போட்டவர்களாக இருக்கின்றனர். மேலும், மனுஷனுடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக, தாங்கள் வாடகைக்காக/ கூலிக்காக அமர்த்தப்பட்டிருக்கும் நபராக இருப்பதினால், தாங்கள் விசுவாசிக்கா ததைப் பிரசங்கிக்க விருப்பம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். சிலர் தங்களுடைய தேசபக்தியை, பணத்தின் மீதான விருப்பத்தின் காரணமாக வியாபாரம் செய்து, தங்கள் தேசத்தையும் விற்றுப்போட்டவர்களாகவும் இருக்கின்றனர்.

பண ஆசையின் ஏமாற்றுத்தனமான சதிதாக்கத்திலிருந்து, ஒவ்வொருவரும் தங்களைக் காத்துக்கொள்வது மிகவும் அவசியமாய் உள்ளது. ஆனால், நாம் பணத்திற்கும், பண ஆசைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைத் தெளிவாகத் தெரிந்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில், பண ஆசையே, அழிவையும் உண்டாக்கி, ஆத்துமாவை ஏமாற்றி, சிக்கவைக்க செய்கின்றதாகவும் காணப் படுகின்றது. பணம் என்பது கடின உழைப்பையும், கூலியையும், சேர்த்து வைத்தலையும் குறிக்கின்றது. மேலும், பணத்தைக்கொண்டு செய்யப்படக்கூடிய நன்மையினிமித்தம் அதற்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். ஆனால், பணத்தின் மீது ஆசைக்கொள்வதோ, அதற்கு ஊழியம் புரிவதோ, அதனை விக்கிரகமாக பாவித்து வாழ்க்கையில் வைத்துக்கொள்வதோ, தேவனிடத்திலிருந்து நம்முடைய இருதயங்களைத் தூர

விலகச்செய்யும்படிக்குப் பணத்திற்கு அனுமதிக் கொடுப்பதையோ நாம் செய்யக்கூடாது. இந்தப் பண ஆசையே யூதாசின் பயங்கரமான வீழ்ச்சிக்கான, அடிப்படை காரணம் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம்.

## ஒரு தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதல்

பணப்பையைச் சுமந்திருந்த யூதாஸ், ஒரு கள்வன் என்று சீஷர்கள் ஆரம்பத்தில் அறிந்துக்கொள்ளாமல், போகப்போகத்தான் அறிந்துக்கொண்டார்கள் (யோவான் 12:6). சீஷர்களுக்கென்று கொடுக்கப்பட்ட பணங்களைத் தனக்கென்று யூதாஸ் பயன்படுத்திக் கொண்டிருந்து, சில நியாயமாய்த் தோன்றும் சாக்குப்போக்குகளைக் கூறியிருக்க வேண்டும். ஏனெனில், பாவம் எப்பொழுதும் ஏமாற்றுகின்றதாய்க் காணப்படுகின்றது. சந்தேகத்திற்கு இடமின்றி அவர் இப்படியாகக் கூறியிருந்திருக்க வேண்டும்..."நான் பணத்தைச் சேமித்து வைத்துள்ளேன். ஏனெனில், ஆண்டவருக்கும், நம் அனைவருக்கும் மிகுந்த பணத் தேவை ஏற்படும் ஒரு காலம் வரும் என எனக்கு தோன்றினதினாலேயாகும். அப்படியான ஒரு காலக்கட்டத்தில், வருங்காலத்தைக் கருதி நான் செய்ததை உணர்ந்துக்கொள்வீர்கள்" என்பதேயாகும். இப்படியாக, அவர் சிந்தித்துக் கொண்டிருந்தது, பணத்தின் மீதான அவருடைய ஆசையை அதிகரிக்கச் செய்துவிட்டது. மேலும், இந்த ஆசையானது, இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்காக திட்டம் போடத்தக்கதாக, அவருடைய உற்சாகமான வியாபார எண்ணங்களினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த மனதை, வழி நடத்தினது.

இயேசு குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டுத் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டதை அறிந்த யூதாஸ், தனது தவறுக்காக மனவருத்தம் அடைந்தவராக, பிரதான ஆசாரியர்களிடம் பணத்தைத் திரும்பக்கொண்டு போய், தான் செய்த காரியத்தை திருத்தம் செய்ய விரும்பினவராக இருந்தார் என்று பதிவுகள் உள்ளன. அவர்களோ, அவரைக் கண்டு நகைத்து, அவர் ஒருவேளை குற்றமற்ற இரத்தத்தைக் காட்டிக்கொடுத்துள்ளார் என்றால், அது அவர் பாடு என்றும், அதைக் குறித்துத் தங்களுக்குக் கவலை இல்லை என்றும் கூறினார்கள். திருப்பிக் கொடுக்கப்பட்ட பணமானது, "இரத்த பணமாக" இருந்தபடியினால், அவர்களால் அதை மீண்டுமாக ஆலயத்தின் நிதி இலாகாவிடத்தில் போட்டுவிடக் கூடாதிருந்தது. ஆகவே அவர்கள் அந்தப் பணத்தைக்கொண்டு, அந்நியரை அடக்கம் பண்ணுவதற்குக் குறைந்த விலையில் குயவனுடைய நிலத்தை வாங்கினார்கள். இப்படியாக, அவர்கள் மறந்துபோனதும், எரேமியாவினால் முன்னுரைக்கப்பட்டதுமான தீர்க்கத்தரிசனம் நிறைவேறினது. "இஸ்ரவேல் புத்திரரால் மதிக்கப்பட்டவருக்குக் கிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை அவர்கள் எடுத்து, கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள் என்று எரேமியா தீர்க்கத்தரிசியால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று" (மத்தேயு 27:9, 10).

இயேசு குற்றவாளிக்குரிய தண்டனை தீர்ப்பிற்குள்ளானார் என்று யூதாஸ் கேள்விப்பட்டு, ஆச்சரியம் அடைந்தார் என்பது போன்று பதிவுகள் காட்டுகின்றது. இயேசு இக்கட்டான பரீட்சையில் கொண்டுவந்து நிறுத்தப்படும்போது, அவர் தம்மை மேசியா என்று உறுதிப்படுத்திக்கொண்டு, தமது சத்துருக்கள் மேல் ஜெயங்கொள்வார்

என்று யூதாஸ் அனுமானித்திருக்க வேண்டும். யூதாஸ் தனக்கும் பங்குண்டு என்று நம்பிக்கைக்கொண்டிருந்த இராஜ்யத்தின் ஸ்தாபனத்தை, இப்படியாகத் துரிதப்படுத்தலாம் என்றே அநேகமாக எண்ணியிருக்க வேண்டும். இறுதியில், தன்னுடைய தவறுக்காகக் காரணம் தெரிவிக்கும் விதமாக, "பாருங்கள் நமக்கு முப்பது வெள்ளி காசும் சேர்ந்துவிட்டது மற்றும் வேறு எந்த வழியிலும் காரியங்களை வேகமாக உச்சக்கட்டத்திற்குக் கொண்டுவர முடியாமல் இருக்க, நான் இப்படிச் செய்து உச்சக்கட்டத்திற்குக் கொண்டுவந்ததற்காக எனக்கு நீங்கள் நன்றி சொல்லலாம்" என்றே யூதாஸ் கூறியிருந்திருப்பார். இவ்விதமாக யூதாஸ் ஒரு கதாநாயகனாகவும் திகழ்ந்திருக்க முடியும். அதேசமயத்தில் பொருளாதார ரீதியில், தனக்குள்ள ஞானத்தையும், இராஜ்யத்தில் மாபெரும் பொருளாளருக்குரிய ஸ்தானத்திற்கு/ பதவிக்கு, தான் சரியான நபர்/பாத்திரவான் என்பதையும் நிரூபித்திருக்க முடியும். இப்படியாக திட்டங்கள் அவன் மனதில் இருக்க, நளதத் தைலம் குறித்த விஷயத்தில் காணப்பட்ட மரியாளின் செயல்பாட்டை இயேசு அங்கீகரித்தப்படியால், இயேசுவின் மீது யூதாசுக்குள் கொஞ்சம் கோபம் மூண்டது. இந்தக் கோபத்தினுடைய தாக்கத்தினிமித்தமாகவே, காட்டிக்கொடுப்பதற்கான ஒப்பந்தத்தைச் செய்யும்படிக்கு யூதாஸ் முதலாவதாக, ஆசாரியர்களையும், வேதபாரகர்களையும் தேடிச்சென்றார்.

## மறக்கப்பட்டுப்போன நிலை - உயிர்த்தெழுதலுக்கான நம்பிக்கையற்ற நிலை

யூதாஸ், பழியினின்று விலகிக்கொள்வதற்கான காரணங்களை நாம் இங்கு வைக்கப்போவதில்லை. தேவன் மற்றும் அவருடைய நோக்கங்களுக்கு எதிரான துரோகத்திற்கு, எவ்விதத்திலேயும் காரணங்கள்/சாக்குப்போக்குகள் வைக்க முடியாது. அக்கிரமம் பண்ணுகிற ஒவ்வொருவனும் முதலாவதாக தனது மனதில், தன்னுடைய தவறான போக்கை அங்கீகரித்துக் கொள்கின்றான் என்ற உண்மையை மாத்திரம் நாம் சுட்டிக்காட்டுகின்றோம். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், பாவத்திற்கான ஒவ்வொரு அடியும் எடுத்துவைக்கப்படுவதற்கு முன்பு மனதும், மனசாட்சியும் துணிகரம் கொள்கின்றது. ஆகவேதான் இயேசு,"மனுஷகுமாரன் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்" (மத்தேயு 26:24).

தனது நண்பனை, தனது போதகரை, தான் தேவகுமாரன் என்று அங்கீகரித்துக்கொண்டவரை, இயேசு மூலம்தான் மேசியாவின் இராஜ்யம் வரும் என்று தான் நம்பிக்கொண்டிருந்தவரை காட்டிக்கொடுத்து, ஒப்புக்கொடுப்பதற்குரிய இத்தகையத்துணிகரமும், இத்தகையத்துரோகமும், மிகவும் கேடான/அகோரமான துரோகமாகும்/நயவஞ்சகமாகும்; மற்ற அனைத்து அப்போஸ்தலர்கள் போன்று, யூதாசும், இயேசுவின் அடிச்சுவட்டில் நடந்து வரவும், சத்தியத்திற்காகக் கொண்டிருக்கும் நேர்மையினிமித்தம் இயேசுவுக்கு வரும் பாடுகள், சோதனைகள் மற்றும் ஜனங்களால் தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்படுதல் ஆகியவைகளில் பங்கடையவும் அழைக்கப்பட்டிருந்தார். மேலும், யூதாஸ் உண்மையாய் இருக்கும்

பட்சத்தில், உலகை ஆசீர்வதிப்பதற்கான பரலோக இராஜ்யத்தில், ஆண்டவரோடு பங்கடையவும் அழைக்கப்பட்டிருந்தார். மற்றவர்களோடு, யூதாசும் இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்துள்ளார்; பிசாசுகளை துரத்தியுள்ளார், வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தினார். மேலும், இவை யாவற்றையும் அவர் இயேசுவின் நாமத்தின் மூலம் செயல்படும் தேவனுடைய வல்லமையினாலேயே செய்தார். யூதாஸ் இரட்சகரின் கூடவே இருந்துள்ளார். மேலும், இயேசுவின் வாழ்க்கையினுடைய பரிசுத்தத்தையும், இயேசு எப்படித் தேவனுக்கு உண்மையாக இருந்தார் என்பதையும், யூதாஸ் அறிந்திருந்தார். ஆகவே இந்த அனைத்து விஷயங்களும் யூதாசினுடைய தவறையும், தவறுக்கான அவருடைய பொறுப்பையும் காட்டுகின்றது.

யூதாஸ் தற்கொலை செய்துகொண்ட விஷயமும், இயேசுவின் வார்த்தைகளுடைய நிறைவேறுதலைக் காட்டுகின்றது; அதாவது தான் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும் என்று யூதாஸ் எண்ணினார். தற்கொலை செய்து கொள்ளும் ஒவ்வொருவரும், இதே வார்த்தைகளைத்தான் கூறியிருக்கின்றார்கள். எனினும், தற்கொலை செய்துள்ள மற்றவர்களுக்கு வாய்ப்பு உள்ளது. ஏனெனில், அவர்கள் அறியாமையினாலேயே இப்படிச் செய்துகொண்டார்கள். மேலும், கிறிஸ்து அனைவருக்காகவும் மரித்தும் உள்ளார். ஆகவே இப்போது (அறியாமையினாலே) தற்கொலை பண்ணினவர்கள், மற்றவர்களோடுகூட நித்திய ஜீவன் பெற்றுக் கொள்வதற்கான ஆசீர்வாதத்தையும், வாய்ப்பையும் நிச்சயமாகப் பெற்றுக கொள்வார்கள்.

ஆனால் யூதாசின் விஷயத்திலோ, அவர் ஏற்கெனவே இந்த வாய்ப்புகள், சிலாக்கியங்கள் மற்றும் அறிவு பெற்றுக்கொண்டதினாலும், ஒளி மற்றும் அறிவிற்கு எதிராக பாவம் செய்துள்ளபடியாலும், இந்த அனைத்து ஆசீர்வாதங்களும், வாய்ப்புகளும் அவருக்குத் தள்ளுபடியாகிவிட்டது. யூதாஸ் தனக்கான இடத்திற்குப் போய்விட்டார் என்று வாசிக்கையில், அது யூதாஸ் (அ) வேறு எவரும் பாவத்திற்கான தண்டனையாக நித்திய காலமாய்ச் சித்திரவதை பண்ணப்படுவார்கள் என்று பொருள்படுவதில்லை. மாறாக அவருக்கான இடம் என்பது, மறக்கப்பட்டுப்போன நிலையாகும்; நம்பிக்கை ஏதுமற்ற மறக்கப்பட்டுப்போன நிலையாகும்; அதாவது உயிர்த்தெழுதலின் வாய்ப்பற்ற நிலையாகும். அவர் சாதாரணமான புத்தியில்லாத மிருக ஜீவன் போன்று செத்துப்போனார். இன்னுமாக, இத்தகைய சிலாக்கியங்களை அனுபவித்த ஒரு நபர், எதிர்க்காலத்தில் ஏதாகிலும் வாய்ப்புப் பெற்றுக்கொள்வாரா என்ற விவாதமும் பேசப்பட வேண்டியதில்லை (அப்போஸ்தலர் 1:25).

## இரண்டு பதிவுகளுக்கும் இடையிலான ஒற்றுமை

யூதாசின் முடிவு குறித்து வேதவாக்கியம், அவர் போய் நாண்டுகொண்டு செத்தார் என்று கூறுகின்றது (மத்தேயு 27:5). வேறு ஒரு வாக்கியம் இப்படியாக இருக்கின்றது, "அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று" (அப்போஸ்தலர் 1:18). இந்த இரண்டு பதிவுகளையும் இசைவுபடுத்துவது எளிது. இரண்டு பதிவுகளுமே உண்மை. தூக்குப்போடுவதற்கென்று, யூதாஸ் செங்குத்தான

பாறையின் மேலுள்ள மரத்தின் கிளையைத் தெரிந்துக்கொண்டார். ஒருவேளை பாரபளுவினிமித்தம் கயிறு அறுந்துவிட்டதால், யூதாஸ் தலைக்கீழாக விழுந்து, வயிறுவெடித்து, குடல் சரிந்துபோய்ச் செத்திருப்பார் என்பதை நம்மால் உணர்ந்துக்கொள்ள முடிகின்றது.

எனினும், அவருடைய மரணம் குறித்த விஷயம் அவ்வளவு முக்கியத்துவம் காட்டப்பட வேண்டியதில்லை. அவருடைய ஆத்துமா மரித்துவிட்டது என்றும், இதன் விளைவாக அவருக்குத் தேவனிடத்திலும், கிறிஸ்துவிடத்திலும் இருந்த தொடர்பை அவர் இழந்துவிட்டார் என்றும், எதிர்க்கால வாழ்க்கைக் குறித்ததான சகல நம்பிக்கையும் இழந்துவிட்டார் என்றுமான விஷயங்களைக் கவனிப்பதே முக்கியமானதாகும். எனினும், கடைசி நேரமளவும் ஆண்டவர் அவரிடத்தில் பெருந்தன்மையுடன், அவருடைய ஒவ்வொரு அடிகள் முதற்கொண்டு, கடைசி கிரியைவரை யூதாஸ் நினைத்துப் பார்ப்பதற்கும், வருந்துவதற்கும் ஏதுவான ஒவ்வொரு வாய்ப்பையும் கொடுத்தவராகவே காணப்பட்டார்.

பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவர் இயேசுவைக் காட்டிக்கொடுப்பார் என்று தேவன் ஆரம்பம்/ஆதி முதல் அறிந்தவராக இருந்தும், இரத்த பணத்தின் மூலம் நிலம் வாங்கப்படும் எனும் விஷயம் ஏற்கெனவே தீர்க்கத்தரிசனமாக முன்னுரைக்கப்பட்டிருந்தும், இவைகள் யூதாஸ் வீழ்ச்சியடைவதற்கு அவன்தான் காரணம் என்ற குற்றத்திற்கான பொறுப்பிலிருந்து, அவனை விடுவிப்பதில்லை. தேவனுடைய முன்னறிவு யூதாசைப் பாதிப்பிற்குள்ளாக்காமல், அவனுடைய சொந்த தவறான கிரியையே அவனைப் பாதிப்பிற்குள்ளாக்கிற்று. இப்படியே, அனைவருக்கும் காணப்படுகின்றது. ஆரம்பம் முதல் யார் யார் ஓட்டத்தில் நின்றுவிடுவார்கள் என்று தேவன் அறிந்திருப்பது, நம்மைப் பாதிப்பதில்லை. காரணம், நாம் மீறும்போதும், பேராசைகொள்ளும்போதும், பாவத்திற்கு நம்மை நாமே ஒப்புக்கொடுக்கும்போதும், நாம் என்ன செய்வோம் என்று மாத்திரமே தேவன் அறிந்திருக்கிறாரே ஒழிய, இப்படித் தேவன் அறிந்திருக்கிற காரியத்தினால் நமக்கு எவ்விதப் பாதிப்பும் இல்லை.

இயேசு, தம்மை யார் காட்டிக்கொடுப்பார் என்று முன்னதாகவே அறிந்திருந்தார் என்ற சாட்சியானது, இவ்விஷயத்தை அவர் யூதாசைத் தெரிந்தெடுத்தப்போதே அறிந்திருந்தார் என்று அர்த்தமாகாது. தம்முடைய சீஷர்களில் ஒருவன் தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்று வேதவாக்கியங்களில் குறிப்பிட்டிருந்ததை அவர் அறிந்திருந்தார். மேலும், யூதாசிடம் ஆரம்பம் முதலே பாவம் மற்றும் பேராசையின் திசையில் விலகிப்போகும் மனப்பான்மை தென்பட்டதினால், யூதாசுதான் நம்பிக்கை துரோகத்திற்கு ஏதுவான கிரியை செய்யக்கூடிய நபராக இருப்பார் என்று இயேசு அறிந்துக்கொண்டார் என்றபோதிலும், வார்த்தை மூலமாகக்கூட இயேசு யூதாசைத் தவறு செய்தலுக்கு நேராக நடத்தாமல், மாறாக, அவரை எச்சரிக்கவே செய்தார்.

## அவரின் மென்மையான கைகள்

மரியாள் சிறு குழந்தையை மிக நெருக்கமாய் அணைக்கையில்,
இப்பொழுது வெளிப்படுத்த முடிகிற அன்பின் மகிழ்ச்சியை உணர்ந்தாள்.
குழந்தையின் மெய்யான விரல்கள், தனது விரல்களைப் பிடித்திடவே
அன்பாய் அவளும் குழந்தையின் விரல்களைத் தழுவியே, அன்போடு வருடினாளே
- அவரின் மென்மையான கைகளையே.

பன்னிரண்டாம் வயதினிலே, தனியாய் ஆலயத்தைத் தேடிச் சென்றிட்டாரே,
இப்போது, எல்லா நியாயப்பிரமாணத்தின்படி தாம் நடக்கவேண்டுமென்று அறிந்திருந்தவராய்.
ஆனால் மரியாளோ துக்கத்துடனே அவரைத் தேடினவளாய்
அவரது தேவைதனை புரிந்திடாமலேயே, தன்னோடு அழைத்து வருவதற்குப் பிடித்திட்டாளே
- அவரின் மென்மையான கைகளையே.

அவர் ஆயுள் சொற்பக் காலமாய் இருப்பினும், நன்மை செய்வதிலேயே கழித்திட்டாரே.
வேதனைகள் நிரம்பியிருந்த உலகம்தனிலே, எளிமையான நம்பிக்கையோடு
நோயுற்றோரும், குருடரும், முடவரும் - என அனைவரும் அவரிடம் வந்தனரே.
அவர்தம் ஆழ்ந்த மனஉருக்கத்தினாலே, அவர்களை குணமாக்கினாரே
- அவரின் மென்மையான கைகளினாலேயே.

ஆனால் பொறாமை நிறைந்த மனிதர்களோ, அவரின் ஜீவனுக்கு எதிராக ஆலோசித்தனரே,
அடிமையை விலைக்கு விற்பதுபோல், அவரை விற்றுப்போட்ட துரோகி ஒருவனை,
அவரது சொந்த சீஷர்கள் நடுவிலே - துரோகி ஒருவனைக் கண்டும் பிடித்தனரே.
அவர்கள் இரவிலே வந்து அவரைப் பிடித்து, கயிறுகளால் கட்டினார்களே
- அவரின் மென்மையான கைகளையே.

அந்தப் பயம் நிறைந்த இரவில் நீ அவருடன் சென்றாயோ? அதிகாலையின்,
முதல் மென்மையான ஒளி வருவதற்கு முன்பே, முள்முடி ஒன்றை
அவருடைய தலையின்மேல் வைத்தே, சாட்டையாலடித்து அவரை
துன்புறுத்தினார்களோ? ஓ! நீ கண்டாயோ இரத்தத்தை
- அவரின் மென்மையான கைகளிலே


அவருடன் கொல்கொதா மலைக்கு நீ சென்றாயோ?
அவரது கண்களின் உள்ளே துன்பத்தின் ஆழத்தை நிஜமாய்ப் பார்த்திட்டாயோ?
கண்டாயோ நீ கொடூரமான, இரக்கமற்ற அந்த ஆணிகள்
ஒவ்வொன்றாய் துளைத்த அவரது மாம்சத்தையே, ஆணி ஊடுருவின
- அவரின் மென்மையான கைகளையே.

கடைசியில் சுத்தியலின் பயங்கரமான ஒலிகள் ஓய்ந்தன!
அந்தப் பாரமான சிலுவையைத் தூக்கி வானுக்கு எதிரே நிறுத்தினார்களே.
அவ்வழியே கடந்து சென்றவர்களும் புண்படுத்தும் விதத்திலே அவரை கேலி செய்தனரே;
வியாகுலமான வேதனையிலும்,அவமானத்திலும் அங்கே தொங்கினாரே ஆணி கடாவப்பட்ட
- அவரின் மென்மையான கைகள்தனிலே.

அவரது சரீரம் வலியினால் துடித்து, மரத்துப்போயிருக்க அனைத்தையும் சகித்தவராக,
அவரது கண்களில் பிரகாசித்த அன்பை நீ பார்த்திட்டாயா?
அது நம்மால் புரிந்துகொள்ள முடியாத மிகவும் ஆழமான ஓர் அன்பு!
நீ அழுதாயோ பார்த்த மாத்திரத்தில் – இரத்தத் துளிகளைச் சிந்தின
- அவரின் மென்மையான கைகளையே.

ஓ! கடுந்துயரால் அவர் சத்தமிட்டதை நீ கேட்டாயோ?
திடீரென்று சூரியன் இருளடைந்தது - குளிர்க்காற்று வீசினது!
"என் தேவனே, ஓ! ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று அவர் சத்தமிட்டதை நீ கேட்டாயோ?
எல்லாம் முடிந்தது! வலியிலிருந்து விடுதலையானது, மரத்துப்போனது, உறைந்துபோனது
- அவரின் மென்மையான கைகள்.

தன் இதயத்தின் கடுமையான வலியை அடக்கமுடியாமலேயே,
மரியாள் கண்ணீர் நிறைந்த விழிகளோடு அவரைப் பார்த்தாள்,
அவள் குழந்தையைப் பெற்றெடுத்தபோதான நினைவுகளுக்குள் சென்றாள்,
நினைத்துப்பார்த்தாள் அவரை அணைத்துகொண்டதையும், அன்போடு அவளால் வருடப்பட்ட
- அவரின் மென்மையான கைகளையுமே.



## நினைவுகூருதலின் தியானங்கள்

# பேதுருவின் மறுதலிப்பு



# சுய/தன்நம்பிக்கை ஒரு பெலவீனமாகும்

## மத்தேயு 26:31-35, 69-75.

### "இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்." 1 கொரிந்தியர் 10:12

கிறிஸ்துவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களிலேயே மிகவும் உதவியானவர்களில், ஒருவராக பரிசுத்தவானாகிய பேதுரு காணப்படுகின்றார். அவருடைய மனித சுபாவம், அதன் பலம் மற்றும் பெலவீனங்கள் குறித்ததான வேதவாக்கியங்களின் வெளிப்படுத்தல்களே, நமக்கான அவருடைய உதவியின் இரகசியமாகக் காணப்படுகின்றது. பன்னிரண்டு அப்போஸ்தலர்களிலேயே போதகரை, தேவனால் அனுப்பப்பட்ட மேசியா என்று முதலாவதாக அறிவித்தவர் இவரே ஆவார். பன்னிருவரில் இவர்தான் முதலாவதாக அவரை மறுதலிக்கவும் செய்தார். பன்னிருவரில் இவர் மாத்திரமே போதகரைக் காப்பாற்றுவதற்காக, தனது பட்டயத்தை உருவினவரும் ஆவார். மேலும், இவர் மாத்திரமே பின்னர் போதகரை அறியேன் என்று சூளுரைக்கவும் செய்தார். தெய்வீக ஏற்பாட்டின்படி, இராஜ்யத்திற்கான பரம அழைப்பின் கதவுகளைத் திறக்கும்படி, இவரிடமே திறவுகோல்கள் கொடுக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே நாளின்போது, இவர் வல்லமையின் திறவுகோல்களில் ஒன்றைப் பயன்படுத்தி, மகிமை, கனம் மற்றும் அழியாமைக்குள் பிரவேசிப்பதற்கான வழி திறக்கப்பட்டுள்ளதைக் குறித்து, தைரியத்துடன் யூதர்களுக்கு அறிவித்தார். கொஞ்சம் காலத்திற்குப் பிற்பாடு, நியமிக்கப்பட்ட காலத்தில், அதே பரம அழைப்பிற்கான கதவை, இவர் புறஜாதிகளுக்குத் திறந்து வைத்தார்; மேலும் இது இவர் கொர்நேலியுவுக்குப் பிரசங்கம் பண்ணி, அவர் முதல் புறஜாதியாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டபோது சம்பவித்தது. இச்சம்பவமானது, முற்காலங்களில் யூதர்களையும், புறஜாதிகளையும் பிரித்துவைத்திருந்த தடுப்புச் சுவரானது தகர்க்கப்பட்டதற்கான நிரூபணமாகவும் அமைகின்றது. இத்தகைய சகல அறிவையும், விசேஷமான வாய்ப்புகளையும் பெற்றுக்கொண்டிருந்தாலும், இந்த மாபெரும் மனுஷன் புறஜாதிகளுக்குப் போதுமான அளவு தேவனுடைய கிருபை கொடுக்கப்பட்டுள்ளது எனும் காரியத்தைப் பொருட்படுத்தாததுபோல, பாசாங்குச் செய்யும் அளவுக்கும் நடந்தும் கொண்டார். மேலுமாக, யூதர்கள் மற்றும் புறஜாதிகளுக்கு இடையில் வேற்றுமை கண்டு, கர்த்தருக்கு முன்பு அவர்கள் இருவரும் சரிசமமாகக் கருதப்படுவதைப் பொருட்படுத்தாதது போல பாசாங்குச் செய்யும் அளவுக்கும் போய்விட்டார்.

அனைத்து அனுபவங்களிலும் பரிசுத்தவானாகிய பேதுரு அவருடைய இருதயத்தின் ஆழத்தில் தேவனுக்கும், சத்தியத்திற்கும், நீதிக்கும் உண்மையாய் இருக்கின்றார்; ஆனால் அவருடைய குணலட்சணங்களிலுள்ள களங்கம், தவறுகள், பெலவீனங்கள் ஆகியவை அவருடைய மாம்சத்தினுடையவைகளே தவிர, அவருடைய

உண்மையான இருதயத்தின் நோக்கமாக இருந்ததில்லை என்பது வெளிப்படுகின்றது. போதகரை மறுதலித்ததின் காரணமாக அவர் மிகவும் மனங்கசந்து அழுதார். மேலும், புறஜாதிகளை ஏற்றுக்கொள்வதில் அவர் தவறினதால், மிகுந்த தாழ்மையுடன் தன்னை முழுமையாகத் திருத்திக்கொண்டார். பரிசுத்தவானாகிய பேதுருவின் மனித சுபாவத்தின் வெளிப்படுத்தல்கள், நம்மை அவர்பால் கவரச்செய்தது போன்றே, இஸ்ரயேலின் இராஜாவும், தீர்க்கத்தரிசியுமான தாவீதினிடத்திலும் நாம் கவரப்படுகின்றோம். தவறு செய்யாமல் இருக்க அவர் (தாவீது) ஒன்றும் பரிசுத்தவான் அல்ல. அவரை ஒரு சக மனிதனாகக் காண முடியாத அளவிற்கு, அவர் (தாவீது) மீதியான மனுக்குலத்திற்கு அப்பாற்பட்ட ஜீவியும் அல்ல. எனினும், அவரை வெறுக்கத்தக்க அளவுக்கு, அவர் மதிப்புக் குறைந்தவரும் அல்ல. தேவன் பேரிலும், நீதியின் பேரிலும் இருதயத்தில் அவர் (தாவீது) கொண்டிருந்த உண்மை குறித்த திரளான ஆதாரங்களானது, அவருடைய பெலவீனங்களை முழுமையாக ஈடு செய்கின்றதாக அமைகின்றது. இடறி விழுதல் மற்றும் சீர்ப் பொருந்துதல் குறித்ததான அவருடைய (தாவீது) அனுபவங்களினால், சங்கீதங்கள் மிகவும் நிரப்பப்பட்டிருப் பதினால், அவைகள் தேவனிடத்தில் உண்மை கொண்டிருக்கும் ஒவ்வொரு இருதயத்திலும், அதேசமயம் பாவம் மற்றும் பெலவீனத்தின் அனுபவங்களை வெவ்வேறு அளவுகளில் கொண்டிருக்கும் ஒவ்வொரு இருதயத்திலுமுள்ள, உள் உணர்ச்சியின் நரம்பைத் தொடக்கூடியதாக இருக்கின்றது.

## பரிசுத்தவானாகிய பேதுருவை மற்றவர்கள் பார்த்த விதம்

நமது கர்த்தரின் ஆரம்ப பிரயாண நாட்களில், அவரோடு கூடக் காணப்பட்ட மனிதர்கள் மத்தியில் பேதுரு இன்றளவும் மிகவும் வசீகரிப்பவராகக் கருதப்படுகின்றார். பேதுருவைக் குறித்து, ஜி.சி. மோர்கன் (G. C Morgan) அவர்கள் இப்படியாகக் கூறுகின்றார்: "பேதுருவுக்குள்ளாக, நமக்கொரு மாபெரும் மனிதன் புதிய ஏற்பாட்டில், வெளிப்படுத்தப்பட்டுள்ளான் என்று என்னால் இப்பொழுது நம்ப முடிகின்றது. ஒருவனை மாபெரும் மனுஷன் என்று கணிப்பது அவனுடைய சாதனைகளின் அடிப்படையிலோ அல்லது அவனுடைய தனித்துவமான ஒரு திறமையின்/பண்பின் அடிப்படையிலோ அல்லாமல், அவனுடைய மனித சுபாவத்தின் மிக ஆச்சரியமான வெளிப்படுத்தலின் அடிப்படையிலே என்று நான் கூறுகின்றேன். அறிவுடைய இந்த மனுஷன் தொடர்ந்து கண்மூடித்தனமாக/மடத்தனமாக தவறு செய்து கொண்டிருந்தார். உணர்ச்சிவசப்படும் இந்த மனுஷன், தான் உதவ வேண்டும் என்று விரும்பின, அதே காரணத்திற்கு எதிராக அவர் செயல்பட்டதினால் மிகுந்த குற்ற உணர்வுக்குள்ளாகவும் ஆனார்."

பரிசுத்தவானாகிய பேதுருவைக் குறித்து, சவுதோஸ் (Southouse) என்பவர் இப்படியாகக் கூறுகின்றார்: "பேதுரு ஒரு சராசரியான மனுஷன் ஆவார். இக்காரணத்தினால் அவர் நமக்கும், அவரோடு கூட இருந்தவர்களுக்கும் (மற்ற அப்போஸ்தலர்களுக்கும்) கூடச் சரிசமமாவார். ஆனால், சராசரியான மனிதர்களுக் கும் கூட, அவர்களுடைய வாழ்க்கையில் சிறப்பான தருணங்கள் உண்டு. அதாவது பரிசுத்தவானாகிய பேதுருவின் விஷயத்தில், அவர் தண்ணீரின் மீது நடக்க முயன்றார்.

இவ்விடத்தில் தன்னால் முடியாத ஒரு காரியத்தைச் செய்ய முயன்றார். தனக்கு எவ்வித அனுபவமும் இல்லாத ஒன்றைச் செய்யும்படிக்குப் பேதுரு கடந்துப்போனார். நாம் அறிந்திருக்கும் ஆண்கள் மற்றும் ஸ்திரீகள் மீது நாம் கணநேரம் கண்ணோட்டம் இடுகையில், அவர்களின் திறமையின் அடிப்படையில் அவர்கள் இன்னென்ன காரியங்களைச் செய்துவிடுவார்கள் என்று தீர்க்கத்தரிசனம் கூறுவதுபோன்று கூறுவது, எப்போதும் (சாதகமாக) அப்படியே நடந்துவிடும் என்பது இல்லை என நாம் அறிந்திருக்கின்றோம். ஏனெனில் உலகத்திலேயே (திறமைகளில்) மிகக் குறைவான மனிதனால், அசாதாரணமான காரியங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளது."

பரிசுத்தவானாகிய பேதுருவைக் குறித்து, டாக்டர் டேவிஸ் (Dr. Davis) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்: "பேதுரு புத்திக்கூர்மை உடையவர். மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் இவரே இயேசுவிடம் அநேக கேள்விகளைக் கேட்டுள்ளார். கேள்விகள் கேட்கும் தன்மையானது, புத்திக்கூர்மையின் வெளிப்படுத்தலாகும். கேள்வி கேட்பது என்பது, அறியாமையின் வெளிப்படுத்தலாகக்கூட இருக்கலாம். ஆனால், ஒருபோதும் கேள்வி கேட்காத மனிதன் நிச்சயம் அறிவாற்றலில் குறைவுபட்டவனாகவே இருக்கின்றான்...பேதுரு, நல்ல இருதயம் கொண்டவரும், துக்கத்தால் விம்மி அழுகிறவரும், சிந்திக்காமல் செயலாற்றுகிறவரும் ஆவார். அவருடைய பேரார்வம் எனும் பண்பிலே, அவருடைய நற்பண்புகளும், அவருடைய தவறுகளும், இரண்டும் பொதுவான வேரைக் கொண்டுள்ளது. பேதுருவிடம் அவசர செயல்பாடு எனும் களை இருக்கவே, இதனோடு கூட அவருடைய ஜீவியத்தில் கொழுந்துவிட்டு எரியும் அன்பு மற்றும் சத்தியத்தை உடனடியாக ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையாகிய அழகிய செடியும் மிகப் பலமாக வளர்ந்ததே, அவரிடத்தில் பாராட்டத்தகுந்த விஷயமாகும்."

## உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

ஆண்டவர் தம்முடைய பின்னடியார்களுக்குக் கற்றுக்கொடுத்ததும், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் பயிலும் அனைவராலும் கற்றுக்கொள்ள வேண்டியதுமான மாபெரும் பாடம் என்னவெனில்... தேவன் பேரிலும், நீதியின் பேரிலும் கொழுந்துவிட்டு எரியும் அன்பும், வைராக்கியமும் இருக்கும் அதேசமயத்தில், நம்மிடத்தில் தன்னடக்கமும் காணப்பட வேண்டும்; அதாவது தெளிந்த புத்தியின் ஆவியைச் செயல்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் பின்னடியார்கள், "புறாக்களைப்போல் கபடற்றவர்களாகவும், சர்ப்பத்தைப்போல் வினாவுள்ளவர்களாகவும்" இருக்கும்படி புத்திமதி அளிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய ஞானமானது, அவர்களுடைய நலனை மாத்திரம் கருதும் சுயநலநோக்கமுள்ளதாக இராமல், பரந்தமனப்பான்மையுடையதாக இருக்க வேண்டும். அதாவது, சகலருடைய நலனைக் கருதக்கூடியதாகவும், விசேஷமாகக் கர்த்தருடைய நோக்கங்களுக்கடுத்த நலனுக்காகவும், கர்த்தருடைய நோக்கத்தில் அவர் நமக்கு ஏதேனும் பங்களிப்புக் கொடுத்திருந்தாரானால், அதனுடைய நலனுக்காகவும்

கருதக்கூடியதாக அவர்களுடைய ஞானம், பரந்த மனப்பான்மை உடையதாக இருக்க வேண்டும்.

இயேசு, தாம் காட்டிக் கொடுக்கப்படப்போகிற சோதனையான வேளைக்கு முன்பாக, தம்முடைய சீஷர்களிடத்தில், "மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள். ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்றார்" (மத்தேயு 26:31, 32).

உணர்ச்சிவசப்படும் பேதுரு, "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்" என்று கூறுகின்றார் (வசனம்-33). அந்தோ! இந்தத் தைரியமுள்ள மனிதன், தனக்கு முன்பு வரவிருக்கும் பரீட்சைகள் மற்றும் இடர்பாடுகளின் வீரியத்தை எவ்வளவு குறைவாக மதிப்பிட்டுப் புரிந்துக்கொண்டுள்ளார் (அ) தனது உணர்ச்சிவசப்படும் சுபாவத்தில் உள்ள பெலவீன பாகங்களை, எவ்வளவு குறைவாக மதிப்பிட்டுப் புரிந்துக்கொண்டுள்ளார். எனினும், ஒருவேளை இவர் போதகரை மறுதலித்து விட்டாரே என்று நாம் வருத்தம் அடைந்தோம் என்றால், பிற்காலங்களில் இயேசுதான் மேசியா என்று இவர் அறிக்கைப்பண்ணினதிலும், அவரிடத்திலான தனது உண்மையை எதுவும் அசைக்க முடியாது என்று இவர் அறிக்கைப்பண்ணினதிலும் வெளிப்பட்ட இவருடைய விசுவாசம், அன்பு மற்றும் வைராக்கியங்களைக் கண்டு நாம் களிகூர வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

விசேஷித்த விதத்தில் உண்மையும், அனல்/ஆர்வம் கொண்டவர்களையும்தான் சிக்கவைக்கும்படி எதிராளியானவன் மிகவும் விடாப்பிடியுடன் நாடுகின்றான். ஆகவேதான், அத்தருணத்தில் இயேசு பரிசுத்தவானாகிய பேதுருவிடம், "சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான்" என்று விளக்கினார் (லூக்கா 22:31). அதாவது, "என் மீது நீ கொண்டிருக்கும் உண்மையினின்று உன்னைப் புறம்பாக்கிப்போடவும், சீஷத்துவத்தின் பாதையினின்று உன்னை மனம் தளர்வடையச் செய்யவும், பயம் மற்றும் உன்னுடைய சொந்த பெலவீனத்தைக்கொண்டு உன்னை மூழ்கடித்துவிடவும் சாத்தான் உத்தரவு கேட்டுக்கொண்டான்" என்று பேதுருவுக்கு விளக்கினார். பின்னர், "நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்" என்றும் இயேசு கூறினார் (லூக்கா 22:32). நாம் புரிந்துக் கொள்ள வேண்டியது என்னவெனில், அதே அன்பான ஆண்டவர் இன்னமும், அவருடைய உண்மையும், பாசமுமிக்க சகல பின்னடியார்களுக்கு, அவர்களுடைய முன்னோர் வழிவந்த பெலவீனங்கள் எதுவாயிருப்பினும், அவர்களுக்கு உதவி செய்கின்றார் என்பதேயாகும். மேலும் இத்தகையவர்கள், அவருடைய அன்பில் நிலைத்தும், தங்களுடைய வைராக்கியத்தில் தொடர்ந்தும் கொண்டிருப்பார்களானால், அவர்களைப் பலமுள்ள பாத்திரங்களாக வளர்த்திவிடவும், அவர் வல்லவர் என்பதையும்

கூட நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். சகலவற்றையும் அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாக மாற்ற, அவர் வல்லமையுள்ளவராக இருக்கின்றார்; அதாவது உண்மையுள்ளவர்களுக்கு கர்த்தர் வாக்களித்துள்ள பிரகாரம், அவர்களின் முன்னோர் வழிவந்த பெலவீனங்களையும் கூட, "மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை" உண்டாக்குவதற்கு ஏதுவாக நன்மையாக மாற்றுவதற்கு அவர் வல்லவராக இருக்கின்றார்.

## சேவல் கூவுவதற்கு முன்பு

ஆண்டவர் தம்முடைய அன்புமிக்க, அதேசமயம் சிந்திக்காமல் செயல்படும் பின்னடியானுக்குரிய ஆபத்தை உணர்ந்தவராக, சேவல் கூவுவதற்கு முன்னதாக பேதுரு தன்னுடைய ஆண்டவரை மறுதலிப்பார் என்று எச்சரித்தார். இது, பரிசுத்தவானாகிய பேதுருவுக்கு உண்மையாக இருக்க முடியாததாக தோன்றியிருந்திருக்கும்! "நான் உம்மோடே மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன்" என்று எவ்வளவு தைரியத்துடன் பேதுரு கூறினார். "மீதமுள்ளவர்களும் அப்படியே சொன்னார்கள்" (மத்தேயு 26:35). அவர்கள் அனைவருடைய இருதயங்களும் நல்லவைகளாக இருந்தது. கர்த்தரும் அவர்களுடைய இருதயத்தைப் பார்த்தார். இப்பொழுது நம்முடைய பாடம் மத்தேயு 26:69-ஆம் வசனத்திற்குச் செல்கின்றது. ஆண்டவர் கைதுச் செய்யப்பட்டுவிட்டார். சிதறடிக்கப்பட்ட சீஷர்கள் தப்பி ஓடினார்கள். பிரதான ஆசாரியனின் குடும்பத்திற்குப் பரிசுத்தவானாகிய யோவான் நெருக்கமானவராக இருந்தபடியால், பரிசுத்தவானாகிய பேதுரு முற்றத்தில் நிற்க, பரிசுத்தவானாகிய யோவான் அரண்மனைக்குள்ளாகவே பிரவேசித்து நின்றார். அரண்மனையின் வேலைக்காரி பரிசுத்தவானாகிய பேதுருவை, இயேசுவின் சீஷர்களில் ஒருவராக அடையாளங்கண்டு, வெளிப்படையாகச் சத்தமிட்டுக் கூறினாள். ஆண்டவரின் நிலை தனக்கும் வந்துவிடும் என்று பயமடைந்த பரிசுத்தவானாகிய பேதுரு, தான் அவருடைய சீஷரில் ஒருவன் அல்ல என்று மறுத்து, அக்காரியத்தைக் குறித்துத் தனக்கு ஒன்றும் தெரியாது என்றும் கூறிவிட்டார். கொஞ்ச நேரத்திற்குப் பிற்பாடு வேறொருவர் பரிசுத்த பேதுருவைக் குறித்து மீண்டும் அடையாளம் கண்டபோது, அவர் சத்தியம் செய்து, அதை மறுத்து, தனக்கு இயேசுவைத் தெரியாது என்றும் கூறினார். கொஞ்ச நேரத்திற்குள் முற்றத்தில் இருக்கும் அனைவர் மத்தியிலும் விஷயம் பரவத் தொடங்கி, அநேகர் வேலைக்காரியின் வார்த்தைகளை மெய் என்று ஏற்றுக்கொண்டு, பரிசுத்த பேதுருவுக்கு கலிலேயா பேச்சு வழக்கு காணப்படுகின்றது என்றும் கூறினார்கள். பரிசுத்தவானாகிய பேதுருவோ,

தன்னுடைய மறுதலிப்பை உறுதிப்படுத்தும் வண்ணமாகச் சபிக்கவும் தொடங்கி, அந்த மனுஷனை நான் அறியேன் என்று ஆணையிடவும் செய்தார். இப்படிச் செய்த உடனே சேவல் கூவ ஆரம்பித்தது. அப்போது, பரிசுத்தவானாகிய பேதுரு, "சேவல் கூவுவதற்கு முன்னதாக நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய்" என்று தன்னோடு பேசின ஆண்டவரின் வார்த்தைகளை நினைவுகூர்ந்தார்.

அந்தோ பரிதாபம்! பரிசுத்தவானாகிய பேதுரு தன்னுடைய நிலைநிற்கும் தன்மையின் மீது மிகுந்த நிச்சயமும், தனது நேர்மையின்/உண்மையின் மீது மிகுந்த நம்பிக்கையும் கொண்டவராக இருந்தார். அவர் தன்னைக் குறித்துப் பெருமையாய்ப் பேசின அதே விஷயங்களிலேயே, அவர் எதிராளியானவனால் சிக்க வைக்கப்பட்டார். இயேசு திரும்பி, பேதுருவைப் பார்த்தார் என்று வேறொரு பதிவு கூறுகின்றது! அந்தப் பார்வை போதுமானதாகும். அப்பார்வையானது, பரிசுத்தவானாகிய பேதுருவின் உத்தம இருதயத்திடம், ஆயிரமாயிரமான காரியங்களை/விஷயங்களைப் பேசிவிட்டது. அது கோபத்தின் பார்வையாகவோ அல்லது இகழ்ச்சியின்/வெறுத்து ஒதுக்கும் பார்வையாகவோ இருந்திருக்காது என்பதில் நமக்கு நிச்சயமே. அது அன்புடன்கூடிய அனுதாபத்தின் பார்வையாகவே இருந்தது. அது பரிசுத்தவானாகிய பேதுருவின் இருதயத்தை உருக்கிற்று/கரையப்பண்ணிற்று. அவர் வெளியே போய், மனம் கசந்து அழுதார். எதிராளியானவனின் சோதனைகளினாலும், பெலவீனங்களினாலும், குறைபாடுகளினாலும் நெருக்கப்பட்டிருக்கின்ற, இன்றைய காலத்தில் காணப்படும் ஆண்டவரின் பின்னடியார்களுக்கு, பரிசுத்தவானாகிய பேதுருவின் அனுபவங்களி லிருந்து வரும் பாடம் எச்சரிப்பாக விளங்குகின்றது; அதாவது பின்னடியார்கள் கர்த்தரிடத்தில் நம்பிக்கைக் கொண்டவர்களாக, உதவிக்காகக் கர்த்தரையே நோக்க வேண்டுமே ஒழிய, சுய/தன்நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கக்கூடாது என்பதேயாகும். வீழ்ந்த நிலையில் இன்று காணப்படுபவர்களுக்கும், பரிசுத்தவானாகிய பேதுருவின் அனுபவங்களிலிருந்து, கர்த்தர் வைக்கும் அனுதாபம் மற்றும் இரக்கம் குறித்ததான ஒரு பாடமும் உள்ளது. வீழ்ந்த நிலையில் இருப்பவர்களும் கூடத் தங்களுடைய அக்கிரமங்களுக்காக மனம் கசந்து அழுது, மனந்திரும்பி, தங்களுடைய அனுபவங்களின் மூலம், நன்மை (படிப்பினை) பெற்றுக்கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

# தேவசமாதானம்

**"அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்." பிலிப்பியர் 4:7**

சமாதானம் என்பதின் அர்த்தம், அமைதியான அல்லது மனம் கலக்கமற்ற நிலைமையாகவும், அமைதிக் குலைவிலிருந்து (அ) கலகத்திலிருந்து விடுதலைபெற்ற நிலைமையாகவும் – சாந்தமான நிலைமையாகவும், மன அமைதியுடன் இருக்கும் நிலைமையாகவும் உள்ளது. இப்படியான மனநிலைமையில்தான் தேவன் காணப்படுவதாக, நம்முடைய ஆதார வசனம் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. தேவன் மனக்கலக்கமுறாதவராகவும், அமைதல் உள்ளவராகவும், அமைதி குலைவு பெறாதவராகவும், தம்முடைய பரந்த ஆட்சிப்பகுதி பற்றின எந்த அக்கறைகளினாலும் ஒருபோதும் கலக்கம் அடையாதவராகவும், சோர்வடையாதவராகவும், திகைப்புறாத வராகவும் காணப்படுகின்றார். எனினும் வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்ற தேவனுடைய இந்தப் பூரணமான சமாதானத்திற்கான காரணம், அவரது பரந்துவிரிந்து காணப்படும் ஆட்சி பகுதியில் எவ்விதமான ஒழுங்கீனங்களும் இல்லை என்பதாகவோ அல்லது அவர் விருப்பு வெறுப்பு அற்றவர் என்பதாகவோ இல்லாமல், மாறாக அவரது மகிமையான பண்புகள் பூரண சமநிலையில் காணப்படுவதினால், அவர் ஒட்டுமொத்த அண்டசராசரத்தின் இராஜாவாக, தமது சூழ்நிலைகளை அடக்கி ஆளுபவராகக் காணப்படுகின்றார் என்பதேயாகும்.

குழப்பமும், போரினுடைய புகை மேகத்தின் மத்தியிலும் மாபெரும் தளபதிகளாகிய கிராண்ட் மற்றும் நெப்போலியன் போன்றவர்கள் கொண்டிருந்த அமைதியையும், சாந்தத்தையும், தங்கள் உணர்வுகளைத் தாங்களே அமைதியுடன் கட்டுப்படுத்துவதையும் கண்டு நாம் வியந்திருக்கின்றோமா? அல்லது தேசிய குழப்பங்கள் மற்றும் ஆபத்துக்கள் மத்தியில் மாபெரும் ஆட்சி வல்லுநர்களாகிய கிலாட்ஸ்டோன் (அ) பிஸ்மார்க் போன்றவர்களும் அல்லது ஆபத்தான நேரங்களிலும், இடங்களிலும் திறமிக்க மருத்துவர்களும், இன்னும் மற்றவர்களும் தங்கள் உணர்வுகளைத் தாங்களே அமைதியுடன் கட்டுப்படுத்துவதையும், சாந்தத்தையும், அமைதலையும் கொண்டிருப்பதைக் கண்டு நாம் வியந்திருக்கின்றோமா? இவர்கள் அனைவரும், தேவனுடைய மனதை ஆண்டிடும் தன்னம்பிக்கை மற்றும் தமது உணர்வுகளைத் தாமே கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் விளைவான சமாதானத்திற்கான இலேசான உதாரணங்களே ஆவார்கள். தேவன் ஒருபோதும் குழப்பம் அடைவதில்லை, திகைப்பதில்லை, தடுமாறிவிடுவதில்லை, கவலைப்படுகிறதில்லை அல்லது தமது திட்டங்கள் தோல்வியடைந்துவிடுமோ என்றோ அல்லது தமது நோக்கங்கள் தோல்வியடைந்துவிடுமோ என்றோ பயப்படுவதும் இல்லை; காரணம் அவரிடம் அனைத்து வல்லமையும், ஞானமும் காணப்படுகின்றது.

எந்த ஒரு காரியத்தின் விஷயத்திலும், அது நிகழ்வதற்கான சாத்தியக்கூறுகளின் உச்சக்கட்டங்கள்வரை, நோக்கிப்பார்க்கும் அளவுக்கு, அவரது திறமிக்க அறிவு/ஞானம் காணப்படுகின்றது. மேலும் அவரது அறிவானது, அனைத்துக்

காரணங்களையும் புரிந்து கொள்கின்றது மற்றும் சகல விளைவுகளையும் துல்லியமாய் உய்த்துணர்கின்றது; இதன் காரணமாக அவர் ஆதிமுதல் அந்தம் வரையிலுமானவைகளை, ஞானக்கொள்கைகளின் அடிப்படையில் மாத்திரமல்லாமல் உள்ளுணர்வினால் அறிந்தவராகவும் காணப்படுகின்றார். சகலவற்றின் சிருஷ்டிகராக மற்றும் சகல பிரமாணங்களைத் தோற்றுவித்தவராக அவர், சரீரம் மற்றும் மனம் அறிவு சார்ந்த பிரமாணங்களையுடைய சிக்கலான நுட்பங்களுக்கு முழுமையாய்ப் பழக்கப்பட்டவராகக் காணப்பட்டப்படியினால், அவரது மனதிற்குத் தெரிந்திராத தீர்வையுடைய எந்தப் பிரச்சனையும் எழும்புவதில்லை. "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை" (1 யோவான் 1:5).

சகலவற்றின் சிருஷ்டிகராகிய தேவன் அனைத்தையும் தாங்கிடுவதற்கும்/ அழியாமல் தடுத்து நிறுத்துவதற்கும் ஆற்றல்மிக்கவராய்க் காணப்படுகின்றார். ஆபத்தின் (அ) குழப்பத்தின் எவ்விதமான ஐயமில்லாமல், கடந்த யுகங்களிலெல்லாம் ஒட்டுமொத்த அண்டசராசரமும் அவருடைய சித்தத்தை அமைதலான கம்பீரத்துடன் நிறைவேற்றிக்கொண்டு வருகின்றது; மற்றும் அவர் வல்லமையானது சதாகாலங்களிலும் அண்டசராசரத்தினைத் தாங்கிடுவதற்கு வாக்குறுதியும் அளித்துள்ளது.

ஆகவே திரளாகவும் மற்றும் தமக்குள்ளாகவும் காணப்படுகின்ற வல்லமை மற்றும் ஞானம் என்னும் ஆதாரத்திலிருந்தே, தேவனுடைய சமாதானம் தோன்றியுள்ளது. ஆனால் இந்த ஆதாரங்களிலிருந்து மாத்திரமே தெய்வீகச் சமாதானம் தோன்றிடவில்லை; ஏனெனில் சமாதானம் என்பது உள்ளான நற்பண்புகளுடன் இணைந்துவரும் ஒன்றாகும். தேவனே சகல பண்புகளுக்கும், சகல கிருபைகளுக்குமான உருவமாக இருக்கின்றார்; இதன் காரணமாக அவர் தம்முடைய உள்ளான ஞானம் மற்றும் வல்லமையினாலும் மற்றும் நன்மைத் தீமை பற்றின பூரண உணர்வினாலும் , பாக்கியமான சமாதானத்தையும், திருப்தியையும் கொண்டிருக் கின்றார்.

## உணர்வு பூர்வமான தேவன்

அதிகமான குழப்பங்களும், பிரச்சனைகளும் இருந்தபோதிலும், தேவனுடைய சமாதானமும் காணப்பட்டே வருகின்றதை நாம் பார்க்கின்றோம். ஒரு தகப்பனாக, அவர் தமது அறிவுள்ள சிருஷ்டிகள் அனைத்தின் மீதிலும், அதாவது "பரலோகத்திலும், பூலோகத்திலும் உள்ள முழுக்குடும்பத்தின்" மீதிலும் தகப்பனுக்குரிய அன்பைக் கொண்டிருப்பதாகவும், மற்றும் "சிருஷ்டிக்கப்பட்டவைகள் அனைத்தும் அவருடைய சித்தத்தினாலேயே உண்டாக்கப்பட்டவைகளும், சிருஷ்டிக்கப் பட்டவைகளுமாக" இருக்கின்றது என்பதாகவும் நமக்குக் காட்டித்தருகின்றார் (எபேசியர் 3:14; வெளிப்படுத்தல் 4:11). அவர்களை அவர் தமது சாயலில் சிருஷ்டித்தார், அதாவது புத்திரர்கள் என அவர்களிடம் தாம் ஐக்கியமும், உறவும் கொண்டிருக்கவும் மற்றும் பிதாவென தம்மிடம் அவர்கள் ஐக்கியமும், உறவும் கொண்டிருக்கத்தக்கதாகவும்,

மற்றும் இப்படியான பரஸ்பர உறவு மற்றும் ஐக்கியத்தின் காரணமாக சிருஷ்டிகரும், சிருஷ்டிகளும், மகிழ்ச்சியும், சந்தோஷமும் இன்பமும் அடையத்தக்கதாகவும் அவர்களைத் தம்முடைய சாயலில், அதாவது அதே மனம் மற்றும் நன்னெறித் தன்மைகளில் சிருஷ்டித்தார்.

தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட காரியமானது, ஒரே மனதின் தன்மைகளை மாத்திரம் உள்ளடக்குவதாக இராமல், இன்னுமாகக் குணலட்சணம் உருவாகுவது தொடர்புடைய விஷயத்தில், ஒரேமாதிரி சுயமாய்ச் செயல்படும் விஷயத்தையும் உள்ளடக்குவதாக இருக்கின்றது. குணலட்சணத்தை வளர்த்துக் கொள்ளும் விஷயத்தில் சுயமாய்ச் செயல்பட முடியாத சிருஷ்டி, தேவனுடைய சாயலில் காணப்படாத சிருஷ்டியாக இருக்கும். குணலட்சணத்தை வளர்த்துக் கொள்ளும் நோக்கத்திற்காக, நன்மையும், தீமையும், இரண்டுமே சிருஷ்டியின் முன் வைக்கப்பட வேண்டும். சிருஷ்டியானவன் நடவடிக்கைகள் சார்ந்த சரியான மற்றும் தவறான கொள்கைகளை உய்த்துணர வேண்டும்; மேலும் நீதியானவைகளைச் சிருஷ்டியான வன் சுயமாய்த் தேர்ந்துகொள்வதன் விளைவாக உண்டாகும் நற்பண்புகளில் தேவன் பிரியமாய் இருப்பதை உணர்ந்து கொள்ளத்தக்கதாக, சிருஷ்டியானவன் சுயமாய்ச் செயல்படுவதற்கு/தெரிந்துகொள்ளும்படிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளான்.

கபடற்ற குழந்தையினிடத்தில்/சிசுவினிடத்தில் பூமிக்குரிய பெற்றோர் கொண்டிருக்கும் அன்பைப்போன்று, இதனிலும் பலமானதுமாக புதிதாய்ச் சிருஷ்டிக்கப்பட்டு, கபடற்ற சிருஷ்டிகளாய் இருப்பவர்களிடத்தில் தேவனுடைய அன்பு காணப்படுவதினாலும், மற்றும் சிருஷ்டி வயதில் வளருகையில், அச்சிருஷ்டியின் மீதான அந்த அவருடைய அன்புடன்கூடிய அக்கறையும், கவனமும் குறைந்துபோகாமல், மாறாக கொள்கைகளினுடைய மற்றும் நீதியின் கனிகளினுடைய வளர்ச்சியினை ஆர்வமாய்க் கவனிப்பதாலும், பூமிக்குரிய பெற்றோர்களைப்போலவே, தேவனும் சுயாதீனமுள்ள, அறிவுடைய தமது சிருஷ்டிகள் சரியானப் போக்கையோ அல்லது தவறான போக்கையோ தெரிந்துகொள்ளும்போது மிகிழ்ச்சியையோ அல்லது வேதனையையோ அனுபவிக்கின்றார். இது தொடர்புடைய விஷயத்தில் அவரது தகப்பன்துவம் பற்றின உண்மையை வைத்து நாம் நியாயமாக கணித்த விஷயங்களினால் மாத்திரம் முழுமையாய் உறுதிபடுத்தப்படாமல், இன்னுமாக அவருக்கு வெறுப்பாகவும், விசனமாகவும், அருவருப்பாகவும் சில விஷயங்கள் இருப்பதாகவும், அவைகள் அவருக்குப் பிரியமாய் இருப்பதில்லை என்பதாகவும், அவைகளுக்கு எதிராக அவருடைய கோபம் தீவிரமாய்க் காணப்படுகின்றது என்பதாகவும், அவைகளை உடையவர்களை அழித்துப்போடுமளவுக்கு, அவரது சினமும், கோபமும் தீவரமாய்க் காணப்படுகின்றது என்பதாகவும் கூறும் வேத வாக்கியங்களினாலும் நாம் மேற்கூறிய காரியங்களில் முழுமையாய் உறுதியடைகின்றோம். இன்னும் மற்றச் சில வேதவாக்கியங்களானது அவர் நீதியின் கொள்கைகளிலும், அவைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களிடத்திலும் பிரியமும், மகிழ்ச்சியும், சந்தோஷமும் கொள்வதாகத் தெரிவிக்கின்றது; அதாவது வேதனைக்கு எதிரான இன்ப உணர்வுகளையும் அவர் கொண்டிருப்பதாக வேதவாக்கியங்கள்

தெரிவிக்கின்றன; வலியும், மகிழ்ச்சியும் ஒரே உணர்வுகளின் இறக்கமும், ஏற்றமுமாக இருக்கின்றது என்று கருதப்படலாம்.

தெய்வீக மனம் பற்றின இந்த வெளிப்பாடுகள் அனைத்தும், தெய்வீகமானவர் உணர்வுகள் உடையவர் என்பதை தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது மற்றும் மனிதன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளபடியால் நாம் உணர்வுகளுடைய சுபாவமுடையவர்கள் என்பதை வைத்தே, தெய்வீகமானவரும் உணர்வுகள் உடையவர் என்பதை நிதானித்துக்கொள்ளலாம். அன்புக்குரியவர்களே தேவன் உணர்வுகள் அற்றவர் அல்ல; அவர் வேதனை மற்றும் மகிழ்ச்சி எனும் உணர்வுகளின் விஷயத்தில் உணர்விழந்தவர் அல்ல; மாறாக அவரது குணாதிசயங்கள்/இயல்புகள் முழுமையாய்ச் சமநிலையில் காணப்படுவதின் காரணமாக, வேதனையான (அ) ஆனந்தமான சூழ்நிலைகளிலும், அனைத்துச் சூழ்நிலைகளிலும் சீரான சமாதானம் தக்கவைக்கப்படுகின்றது.

## கண்களுக்குப் புலப்படுகின்ற பிரச்சனைகள் தேவனுடைய சமாதானத்தைக் குலைத்துப்போடுவதில்லை

இந்த ஒரு கருத்தை மனதில்கொண்டவர்களாக, பிரம்மிக்கத்தக்கதான தேவனுடைய சமாதானமானது, நிரந்தரமாய்த் தக்கவைக்கப்படுகின்ற சூழ்நிலைகளைக் குறித்துப் பார்க்கலாம். தேவனுடைய சகல சிருஷ்டிப்பின் கிரியைகளில் காணப்படும் ஆழமான அவரது திட்டங்கள் நிறைவேறுவதற்கு நீண்ட யுகங்கள் (aions) தேவையாய் இருக்கின்றது. யுகங்களின் ஊடே அவரால் தம்முடைய மகிமையின் திட்டத்தின் வாயிலாக, நீதியில் ஸ்திரப்படுத்தப்பட்டு மற்றும் தமது ஈவாகிய நித்திய ஜீவனுக்குப் பாத்திரமான நிலையிலும், தம்முடைய சாயலிலும் (இறுதியில்) அறிவுள்ள சிருஷ்டிகள் காணப்படுவதைப் பார்த்திட முடிந்தது. இன்னுமாகச் சிருஷ்டிகருக்கும், சிருஷ்டிகளுக்கும் இடையிலான பரஸ்பர மகிழ்ச்சியுங்கூட தமது திட்டத்தின் வாயிலாக ஏற்படப்போவதை யுகங்களின் ஊடே அவரால் பார்க்கமுடிந்தது; ஆகவே அந்த மகிமையான நிறைவேறுதலுக்காகக் காத்திருப்பதற்கென, அவர் சமாதானத்துடன்கூடிய பொறுமையுடன் உறுதி கொண்டு காணப்பட்டார்.

திட்டங்கள் நடைப்பெற்றுக்கொண்டிருக்கையில் மற்றும் காலங்கள் கடந்துபோய்க் கொண்டிருக்கையில் அவருடைய சிருஷ்டிகளுக்குக் கொடுக்கப்பட்ட தான சுயாதீனம் சிலரால் தவறாய்ப் பயன்படுத்தப்பட்டதினிமித்தம், அந்தச் சிலர் பொல்லாப்பான குணலட்சணங்களை வளர்த்திக் கொண்டவர்களானார்கள். இதன் காரணமாக அவருடைய குடும்பத்திற்குள், அதாவது "பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள முழுகுடும்பத்திற்குள்," அதாவது அவரது சகல சிருஷ்டிகளாகிய மனிதர்கள் மற்றும் தூதர்களாகிய அவரது குடும்பத்திற்குள் பிரச்சனைகள் வந்தது; குடும்பமே பிரிந்தது; சிலர் நீதியின் பக்கமாய் நின்றார்கள் மற்றும் சிலரோ தீமை செய்வதையே தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள். ஆனால் இந்த எதிர்பாராத நிகழ்வானது நடைப்பெற்றுவரும் திட்டத்திற்கு அவசியமான ஒன்றாக முன்கூட்டியே

தேவனால் அறியப்பட்டதாகும்; தெய்வீகக் கணிப்பின்படி தெய்வீகத் திட்டத்தின் மகிமையான பலனுக்கு, இந்த அனைத்துப் பிரச்சனைகளும், இழப்புகளும் அவசியம் என்பதைத் தேவன் முன்கூட்டியே அறிந்திருந்தார்.

குடும்பத்தில் பிரச்சனை என்பது எத்துணைப் பயங்கரமானதொரு காரியமாகும்! கெட்டக் குமாரனும் அல்லது சிறுபிள்ளைத்தனமாய் நடந்துகொள்ளும் பெண் பிள்ளைகளும் எவ்வளவாய் மனுஷீக பெற்றோர்களின் நரைமயிரைச் சஞ்சலத்தோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணுகிறார்கள்! ஆ! இப்படிப்பட்டதான ஒரு துயரத்தைப் பற்றிப் பரமபிதாவும் அறிந்திருக்கின்றார்; ஏனெனில் அவரது குமாரர்களில் ஒருவனும், ஒளியின் ஒரு தூதனுமாய் இருந்த சாத்தான், மின்னலைப்போல் பரலோகத்திலிருந்து விழுந்ததைப் பிதா பார்த்தார். ஆறாயிரம் ஆண்டுகளாக அந்தக் குமாரன், தேவனுக்கு எதிராக பகிரங்கமாய் எதிர்த்து நின்று, கலகம் புரிந்துகொண்டு வருகின்றான் மற்றும் இன்னும் கலகத்தையும், பொல்லாப்பையும் தூண்டிவிடுவதில் மிகவும் சுறுசுறுப்புடனும், மோசமான சூழ்ச்சியுடனும் ஈடுபட்டிருக்கின்றான் (ஏசாயா 14:12; லூக்கா 10:18). தேவதூதர்களில் அநேகர் தங்களது, ஆதிமேன்மையை விட்டுவிட்டுச் சென்றதையும், சாத்தானுடன் கூட்டாளிகளானதையும், பிதா பார்த்தார் (யூதா 6); பின்னர் முழு மனுக்குலமும் பாவத்திற்குள் விழுந்ததையும் பிதா பார்த்தார். எந்த ஒரு மனுஷீக பெற்றோராகிலும் தனது குடும்பத்திற்குள் இவ்வளவுக்கு வெறுக்கத்தக்கதான மற்றும் கடுமையான சதி எழும்பியுள்ளதைக் கண்டதுண்டோ/ எதிர்கொண்டதுண்டோ? நிச்சயமாய் எந்த மனுஷனும் இல்லை.

பிற்பாடு சிட்சித்தல் எனும் இனிமையற்ற கடமையைச் செயல்படுத்துவதற்குரிய அவசியத்தைத் தேவன் கண்டார். அவருடைய நீதியின்படி, அவர் உண்மையற்ற குமாரர்களை, தம்முடையவர்கள் அல்லவென்று மறுக்க வேண்டும் மற்றும் அவர்களைச் சத்துருக்கள்போல் கையாள வேண்டும். இவ்வளவு காலமும் தேவனுடைய தகப்பனுக்குரிய அன்பானது, வஞ்சிக்கப்பட்டவர்களையும், விழுந்துபோனவர்களையும், ஆசீர்வதிப்பதற்கென ஆயத்தங்களைப் பண்ணிக்கொண்டிருந்தபோதிலும், மீட்பினுடைய நோக்கமானது, மனம் திரும்புகிறவர்களை அவருடைய கிருபையினிடத்திற்குச் சீர்ப்பொருந்தப் பண்ணுவதாக இருந்தபோதிலும், அன்பு திரையிட்டு மூடப்பட்டிருக்க வேண்டும், மற்றும் இரக்கமற்ற, கண்டிப்பான/கடுமையான நீதி மாத்திரமே வெளிக்காட்டப்பட வேண்டும். இது ஓர் இனிமையான கடமையும் அல்ல, இதினிமித்தம் பாவியும் அவரிடத்தில் பிரியப்படுவதும் இல்லை.

இந்தத் துரோகிகள் எத்தகைய அன்பிற்கு எதிர்த்துப் பாவம் புரிந்திட்டார்கள் என்பது குறித்துச் சிந்தித்துப்பாருங்கள். தேவனிடத்திலிருந்து நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் வந்திட்டாலுங்கூட, அவரது கிருபைகள் இழிவாகப் பார்க்கப்படுகின்றது; அவரது அன்பு வெறுப்புடன் உதைத்துத் தள்ளப்படுகின்றது; அவரது நீதியான அதிகாரத்திற்கு எதிராக சதித்திட்டம் போடப்படுகின்றது மற்றும் எதிர்த்து நிற்கப்படுகின்றது; அவரது குணாதிசயங்கள் தவறாய்க் காட்டப்படுகின்றது, அவதூறாய்ப் பேசப்படுகின்றது மற்றும் வெறுக்கத்தக்கதாயும், அநீதியானதாயும், இழிவானதாயும் காண்பிக்கப்படுகின்றது. எனினும் இவைகள் அனைத்தின்

மத்தியிலுங்கூட, தேவனுடைய சமாதானம் தொடர்ந்து காணப்பட்டுக் கொண்டிருக்கின்றது மற்றும் ஆறாயிரம் ஆண்டுகளாக தேவன் தமக்கு விரோதமாகப் பாவிகளால் செய்யப்பட்டுவரும் இந்த விபரீதங்களைச் சகித்தவராகவே காணப்படுகின்றார். ஆனால் இன்னமும் அவரது ஆச்சரியமான கிருபையும், அவரது அன்பும் பெருகிக்கொண்டே இருக்கின்றது; மேலும் அவர் உலகத்தை மிகவும் அன்புகூர்ந்தபடியால், உலகம் பாவிகளாக இருந்தபோதிலும் அவர்களுக்காக மரிப்பதற்கெனத் தம்முடைய ஒரேபேறான குமாரனைத் தந்தருளினார் என்றும், இந்த ஒரே பேறான குமாரன் வாயிலாக, நியாயத்தீர்ப்பானது (பரீட்சை/தேர்வாய்வு) பொய்க்குப் பிதாவும், ஒட்டுமொத்த சதிதிட்டத்திற்குத் தலைவனும், பின்னிருந்து தூண்டிவிடுபவனுமான சாத்தானைத் தவிர, மற்றப்படி விழுந்துபோன தூதர்களுக்கும் அருளப்படும் என்றும் வேத வாக்கியங்களில் எழுதப்பட்டுள்ளது (யோவான் 3:16; 1 கொரிந்தியர் 6:3; யூதா 6; எபிரெயர் 2:14; வெளிப்படுத்தல் 20:10, 14).

## துயரத்துடன் இசைந்து செல்லும் தேவனுடைய சமாதானம்

தெய்வீக அன்பினுடைய இந்த அன்பளிப்பானது, நமது பரம பிதா, தம்முடைய மாபெரும் மற்றும் ஆச்சரியமான திட்டத்தைச் செயல்படுத்தும் விஷயத்தில் கொடுக்க வேண்டிய விலைக்கான மற்றுமொரு அடையாளமாகும். தம்முடைய குடும்பத்தில் ஒரு பெரும்பகுதி பாவத்திற்குள் விழுந்ததை மாத்திரமாக அவர் பார்க்க வேண்டியதாய் இராமல், இன்னுமாக அவர்களை மீட்பதற்கு, அவர் தமது இருதயத்திற்கு அருமையான பொக்கிஷமானவராய்க் காணப்பட்டவரைப் பலிச் செலுத்தவும், இந்தப் பிரியமான குமாரனை மிகவும் கீழாக அவமானத்திற்கும், நிந்தனைக்கும், பாடுகளுக்கும், மரணத்திற்கும் கீழ்ப்படுத்தவும் வேண்டியிருந்தது. மீண்டுமாக மனுஷீக பெற்றோரின் அன்பானது, தேவனுடைய அன்பின் இந்த வெளிப்பாட்டிற்கான விலையினைப் பற்றிப் புரிந்துகொள்வதற்கு நமக்கு உதவியாய் இருக்கின்றது. தமக்குப் பிரியமாய் இருந்த குமாரனை, அவரது நேசக்குமாரனை அன்பின் எத்துணை மென்மையான மற்றும் ஆழமான உணர்வுகளுடன் இப்படியாகப் பலிச் செலுத்தியிருக்க வேண்டும்! லோகோஸ் சிருஷ்டிக்கப்பட்டது முதற்கொண்டு வெளிப்பட்டிருந்த குணலட்சணங்களோடுகூட, அவருக்கு அவமானம் மற்றும் வலியின் பாதை சுட்டிக்காட்டப்பட்ட போது, அவர் தெய்வீகச் சித்தத்திற்கு முழுமையாய்க் கீழ்ப்படித்தி, ஒப்புக்கொடுத்ததினால் வந்த குணலட்சணமும் இப்பொழுது சேர்ந்தது/வெளிப்பட்டது.

ஆ! இரக்கத்தைச் சுமந்துசென்ற இயேசுவை, பிதாவானவர் கொஞ்சமேனும் வேதனையான உணர்வுகள் இல்லாமலா அனுப்பி வைத்தார்? மரணத்தின் அம்புகளானது, தமது நேசக் குமாரனுடைய இருதயத்தை ஊடுருவினபோது, தகப்பனுக்குரிய அன்பின் நோவு/வலி தேவனுக்கு இல்லாமலிருந்ததா? "என் ஆத்துமா மரணத்திற்கு ஏதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்றும், "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படிச் செய்யும்; ஆகிலும் என்

சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது" என்றும் நமது அருமை கர்த்தர் கூறினபோது இவ்வார்த்தைகளானது, நித்தியமானவருடைய இருதயத்தின் அனுதாபம் என்னும் நரம்பை தொடவில்லையா? பிதாவினுடைய உண்மையான அன்பானது, கர்த்தருடைய வேதனையில், பரிவிரக்கத்துடன் பங்குகொண்டது (மத்தேயு 26:38, 39).

உண்மையான அன்பானது, அழுவாரோடு அழும் என்றும், சந்தோஷப் படுவாரோடு சந்தோஷப்படும் என்றும் திவ்விய வார்த்தைகளில் போதிக்கப்பட்டக் கொள்கையானது, தெய்வீகமானவரிடத்திலும் உதாரணமாய்க் காட்டப்படுகின்றது. அழிவில்லாத தேவனால், நமக்காக மரிக்க முடியாது; அவரது திவ்விய சுபாவமானது, மரணம் அவருக்குச் சம்பவிப்பதற்கு இடம் கொடுப்பதில்லை. ஒருவேளை தேவன் மரிப்பாரென்றால், அவரை மரணத்திலிருந்து எழுப்புவதற்கு அவரைக் காட்டிலும் வல்லவர் எவருமில்லை; ஆகவே அனைத்துச் சிருஷ்டிகளும் அதிகாரி இல்லாமல் விடப்பட்டிருக்கும் மற்றும் அழிவும், சீர்க்குலைவுமே தொடர்ந்திருக்கும். ஆனால் தேவனால் தம்முடைய அன்புக்குரிய, தகப்பனுக்குரிய சுபாவத்தில் மிகுந்த வலியுடன், தம்முடைய இருதயத்திற்கு அருமையான பொக்கிஷத்தைப் பலிச் செலுத்திட முடியும் மற்றும் செலுத்தவும் செய்தார்; இவ்வாறாக வஞ்சிக்கப்பட்ட மற்றும் விழுந்துபோன தம்முடைய சிருஷ்டிகள் மீது வைத்த அன்பின் மூலமாக, தேவன் மாபெரும் அன்பை வெளிப்படுத்திட்டார் (1 யோவான் 4:9). ஒருவேளை இந்தப் பலியானது, அவருக்கு எந்த வலியையும்/இழப்பையும் கொடுக்கவில்லையெனில், ஒருவேளை இம்மாதிரியான பலியின் ஒரு சந்தர்ப்பத்தில் அவருடைய மனதில் எவ்விதமான வலியின் உணர்வு ஏற்படுவது சாத்தியமற்றதெனில், அப்போது அவரது குமாரனை அவர் தந்திட்டதானது, அவரது அன்பின் வெளிப்படுத்துதலாக இருக்காது; ஏனெனில் இழப்புகள் இல்லாத எதுவும், எதையும் வெளிப்படுத்துகிறது இல்லை.

பிதா பல யுகங்களாக மிகவும் பொறுமையுடன் தம்முடைய குணலட்சணம் தவறாய்க் காட்டப்பட்டதைச் சகித்து வந்த காரியத்திற்காக, நமது கர்த்தர் இயேசுவும் தமது மாபெரும் அனுதாபத்தை வெளிப்படுத்தினார். பிதாவை மகிமைப்படுத்துவதும், மனுஷர் மத்தியில் பிதாவின் மகிமையான குணலட்சணம் பற்றின தவறான கருத்துகளைச் சரிசெய்வதும், மனுஷர்களுக்கு அவரது நற்பண்புகளையும், பரிவையும், அன்பையும் கிருபைகளையும் காட்டுவதும், தாங்கள் பாவிகளாக இருந்தபோதிலும், தங்களைப் பாவத்திலிருந்து வெளிக் கொண்டுவருவதற்கும், தங்களுக்கான நித்திய இரட்சிப்பைத் திட்டமிடுவதற்கும் நாடினதன் மூலம், தங்களை அன்புகூர்ந்த இரக்கமுள்ள தேவனை, மனிதர்களும் அன்புகூரத்தக்கதாக, வழிநடத்துவதுமே இயேசுவின் ஜீவியத்தினுடைய ஒரே பிரயாசமாகும்.

# தேவனுடைய சமாதானம் அவருக்குள் மையம் கொண்டிருக்கின்றது

உடைந்துபோன தேவனுடைய குடும்பத்தில் மாபெரும் குழப்பம்/ அமைதியின்மை ஏற்பட்டது; இந்தக் குழப்பத்தில் தமக்குப் பிரியமில்லையென்று தேவன் தெரிவித்துள்ளார் (சங்கீதம் 5:4); எனினும் தேவனுடைய சமாதானம் ஒருபோதும் குலைக்கப்படவில்லை. தமது பூரணமான நன்னெறி பற்றியும், தவறிழைக்காத தமது ஞானம் பற்றியும், தமது ஆற்றல்மிக்க வல்லமைப்பற்றியுமான உணர்வுடனும் மற்றும் நீதி பற்றின முழுமையான உணர்ந்துகொள்ளுதலும், பரிசுத்த அலங்காரமுடைய மிகுந்த தீவிரமான அன்புடனும், பொறுமையுடனும், சமாதானத்துடனும், உபத்திரவத்தின் மத்தியிலான மகிழ்ச்சியுடனுங்கூடப் பாவிகளால் தமக்கு விரோதமாகச் செய்யப்பட்ட விபரீதங்களை ஆறாயிரம் வருடங்களாகத் தேவன் சகித்திருக்கின்றார்.

ஆனால் ஏழாம் ஆயிரவருடத்திலோ, தெய்வீக நோக்கங்களின்படியே, பிதாவின் மகிமையான குணலட்சணங்களை, பரலோகத்திலும், பூமியிலும் உள்ள சகல சிருஷ்டிகளுக்கு முழுமையாய் வெளிப்படுத்துவது, நமது கர்த்தர் இயேசுவுக்கான சந்தோஷகரமான சிலாக்கியமாகக் காணப்படும். பிற்பாடு நிறைவடைந்துள்ள தம்முடைய வேலையினுடைய மகிமையிலும், "ஒரே தலையின்கீழ் மீண்டும் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ள, பரலோகத்திலும், பூலோகத்திலும் உள்ள" அவரது குடும்பத்தின் நித்தியமான சமாதானத்திலும், மகிழ்ச்சியிலும், பிதாவானவர் களிகூருவார் (எபேசியர் 1:10; Diaglott).

இந்த ஆசீர்வாதமான நிறைவேறுதலானது, தேவனுடைய விழுந்துபோன குமாரர்களில், திருத்தப்பட முடியாதவர்கள், அநீதியை விரும்பினதின் காரணமாக தேவனால் ஏற்க மறுக்கப்பட்டவர்களும், தீமையினின்று மீண்டுவராதவர்களும், அறுப்புண்டு போகாதது வரையிலும் நடைப்பெறுவதில்லை. இதுவே சிருஷ்டிகரும், அனைவருக்கும் பிதாவுமானவரால் செய்யப்படும், இனிமையற்ற கடைசி கடமையாகும்; இது ஒரு வேதனையான கடமை எனினும், உலகளாவிய நீதி மற்றும் சமாதானத்தின் நலன் கருதி, இதனால் உண்டாகுபவைகளைச் சகித்துப் பொறுமையுடன் தம்மால் இக்கடமையை நிறைவேற்ற முடியும் என்று தேவனே தெளிவாய்க் கூறியுள்ளார். "கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாகவேண்டும் என்கிறார் என்று அவர்களோடே சொல்லு" (எசேக்கியேல் 33:11).

இப்படியாகத் தேவனுடைய சமாதானமானது, மாபெரும் குழப்பங்களுடனும், எல்லா விதமான துக்கம் மற்றும் துயரங்களுடனும் இசைந்து செல்கின்றதை நாம் பார்க்கின்றோம்; ஏனெனில் தேவனுடைய சமாதானமானது வெளிப்புறமான சூழ்நிலைகளைச் சார்ந்ததாய் இராமல், மாறாக மனதை சரியாய்ச் சமநிலையில் கொண்டிருப்பதையும், பூரணமான இருதயத்தினுடைய நிலைமையையும் சார்ந்ததாய்

இருக்கின்றது. இத்தகைய சமாதானத்தை, அதாவது தேவனுடைய சமாதானத்தை நமது கர்த்தர் இயேசுவும்கூட, அவருடைய பூமிக்குரிய ஜீவியத்தில் ஏற்பட்ட அனைத்துக் குழப்பங்கள் மற்றும் கொந்தளிப்புகள் மத்தியில் அனுபவித்தார். இக்காரியமானது, நமது கர்த்தர் உலகைவிட்டுப் பிரிவதற்கு முன்னால், தம்முடைய சீஷர்களுக்கு விட்டுச் சென்ற சொத்தைக்குறித்து நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றது:

"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன் (குறைவான அளவிலோ அல்லது நீடித்திராத விதத்திலோ இல்லை),என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27).

## நமது கர்த்தருடைய இறுதி உயிலும், மரணச் சாதனமும்/விருப்ப ஆவணமும்.

நமது கர்த்தர் தம்முடைய பூமிக்குரிய ஜீவியத்தின் கடைசி இரவில் மிகுந்த பரிவுடனும், கருணையுடனும் தம்முடைய பிரியமான சீஷர்களுக்கு, தம்முடைய இறுதி ஆசியாக, தமது சொத்தாக/சாதனமாக, சமாதானத்தை அருளினார். இது அவர் சீஷர்களுக்குக் கொடுத்திட்ட ஐசுவரியமான சொத்தாகவும், விலையேறப்பெற்ற ஒன்றாகவும் காணப்பட்டது. இது இயேசுதாமே பெற்றிருந்த அந்த ஆத்தும அமைதி, அந்த மன அமைதி, அதாவது தேவ சமாதானம் பற்றின வாக்குத்தத்தமாகும். இந்த ஒரு சமாதானமானது, தீமையின் அனுமதியினால் வந்திட்ட குழப்பங்கள் அனைத்தின் மத்தியிலுங்கூட தேவனால் எப்போதும் அனுபவிக்கப்பட்ட அதே சமாதானமாகும்; ஆனால் இந்தச் சமாதானமானது அதே ஆதாரத்திலிருந்து வரவில்லை. தேவனுடைய விஷயத்தில் இந்தச் சமாதானம், அவரிலேயே மையம் கொண்டிருந்தது; தேவன் தம்மிலே சர்வ வல்லமையுள்ள ஞானமும், வல்லமையும் இருப்பதை உணர்ந்தவராய் இருந்தார்; ஆனால் கிறிஸ்துவின் சமாதானமோ, அவரில் மையம் கொண்டிராமல் மாறாக தேவனுடைய ஞானத்தின் மீதும், வல்லமையின் மீதும், கிருபையின் மீதுமான விசுவாசத்தின் மூலமாக, தேவனிலேயே மையம் கொண்டதாய் இருக்கின்றது. ஆகவே நாமும் தேவனுடைய சமாதானத்தை, கிறிஸ்துவின் சமாதானத்தைக் கொண்டிருப் போமானால், "இந்த நம்முடைய சமாதானமும்," விசுவாசத்தின் மூலமாய்த் தேவனில் மையம் கொண்டிருக்கவேண்டும்.

ஆம், கிறிஸ்துவின் சமாதானம் என்பது பெரும் மதிப்புள்ள சொத்தாகும். எனினும் இயேசு இவ்வார்த்தைகளை அப்போஸ்தலர்களிடத்தில் நேரடியாய்க் கூறின பிற்பாடு, எத்தனை சீக்கிரமாய், அதுவரை கருமையாகிக்கொண்டே வந்த உபத்திரவத்தின் புயலுக்குரிய மேகம், அப்போஸ்தலர்கள்மேல் சீறி வெடித்தது. கிருபையான இந்தச் சொத்துக்குரிய உயில் கொடுக்கப்பட்டவுடனே, இந்த உபத்திரவத்தின் புயலுக்குரிய மேகமானது, திகைப்பையும், தடுமாற்றத்தையும்,

குழப்பத்தையும் அப்போஸ்தலர்களுடைய இருதயத்தில் ஏற்படுத்தி, அவர்களது விசுவாசத்தை வேர் வரையிலும் உலுக்கிப்போட்டது. எங்கே போயிற்று இந்தச் சமாதானம்? கர்த்தர் இந்தச் சமாதானம் குறித்த வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தபோது, வெறுக்கத்தக்க துரோகியான யூதாஸ், தன்னுடைய கொலைப்பாதகத் திட்டத்தை நிறைவேற்றிட போயிருந்தான்; பின்னர் கெத்செமனேயின் வியாகுலம் தொடர்ந்தது; தங்கள் அருமை கர்த்தரின் வாழ்க்கையினுடைய முடிவை அப்போஸ்தலர்கள் உணர ஆரம்பித்தபோதோ, திகைப்பும், பீதியும் அவர்கள் மத்தியில் ஏற்பட்டது. இன்னுமாக பிலாத்துவின் அரண்மனையிலும், ஏரோதின் அரண்மனையிலும் கர்த்தர் தம்மேல் இரக்கமற்ற நிலையில் குற்றஞ்சாட்டுகிறவர்களின் முன்னிலையிலும், தம்மைத் துன்பப்படுத்துகிறவர்களின் முன்னிலையிலும் தனிமையில் நின்றபோது, கர்த்தரைப் பாதுகாத்திட அப்போஸ்தலர்களும் வல்லமையற்றுக் காணப்பட்டபோது, அப்போஸ்தலர்களை அதுவரையிலும் திணறவைத்திட்டக் கவலையுடன்கூடிய நிச்சயமின்மையானது, இப்பொழுது வரப்போகும் தீமையை நடுக்கத்தோடு ஆழமாய் அறிந்துகொள்ளும் உணர்ந்துகொள்ளுதலாயிற்று; பிற்பாடு சோகமான முடிவாகிய, சிலுவையில் அறையப்படுதல் எனும் பேரச்சங்களுக்குரிய நிகழ்வுகள் வந்தன.

## எங்கே போயிற்று அந்தச் சமாதானம்?

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில், வாக்களிக்கப்பட்டச் சமாதானம் எங்கே போயிற்று, அப்போஸ்தலர்கள் பயத்தினாலும், திகிலினாலும் மேற்கொள்ளப்பட்டுக் கர்த்தரைத் தனிமையில் கைவிட்டுவிட்டு, ஓடிப்போனப்போதும் மற்றும் பேதுரு கர்த்தரைக் காப்பாற்ற ஆவல் கொண்டிருந்தபோதிலும், பயத்தினால் நிரம்பியிருந்ததின் காரணமாக இயேசுவை மூன்றுதரம் மறுதலித்தப்போதும், கர்த்தரைத் தெரியாது என்று கூறி, சபித்தப்போதும், எங்கேபோனது அந்த வாக்களிக்கப்பட்டச் சமாதானம்? சமாதானம் இன்னும் வரவில்லை என்பதே பதிலாகும்; ஏனெனில் அப்போஸ்தலர் பவுல் குறிப்பிடுகின்றதுபோல், "ஏனென்றால், எங்கே மரணசாதனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாகவேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசாதனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே" (எபிரெயர் 9:16, 17). ஆனால் சோகமான சம்பவம் முடிவடைந்து, "எல்லாம் முடிந்தது" என்னும் கூக்குரல், அப்போஸ்தலர்களுடைய ஆவலுள்ள காதுகளில் விழுந்திருக்கும்போது, அது விநோதமாய் இருப்பினும் அவர்களுடைய துயரப்பட்டுக்கொண்டிருக்கும் இருதயத்திற்குள், சமாதானம் புகுந்திருக்க வேண்டுமென்பது உறுதியே. இருண்ட வானங்களும், அதிரும் பூமியும், பிளந்த கன்மலைகளும், கிழிந்துபோன ஆலயத்தின் திரைச்சீலையும், இவைகளனைத்தும், உலகத்தினால் அடையமுடியாத ஆறுதலின் ஒரு செய்தியை அப்போஸ்தலர்களுக்கு, சீஷர்களுக்குத் தெரிவித்ததாய் இருக்கின்றது.

(இயேசுவின் கொலைக்குற்றத்தில் பங்குகொள்ளும் யூதர்களும்,

புறஜாதியாருமான) உலகத்திற்கு, இச்சம்பவங்களின் பொருளானது, அவர்களுக்கு எதிரான தெய்வீகக் கோபாக்கினையும், கோபமுமாகும். ஜனங்களைப் பயம் ஆட்கொண்டபோது, மற்றும் அந்தப் பயங்கரமான நாளினுடைய கூச்சல்களும், கிளர்ச்சிகளும் தணிந்தபோது, அவர்கள் தங்கள் மார்பிலே அடித்துக்கொண்டு, தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள். உரோம நூற்றுக்கதிபதியும், இவரோடுகூடக் காணப்பட்டவர்களும் மிகவும் பயமடைந்து, "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்" என்றார்கள் (மத்தேயு 27:54).

ஆனால் கர்த்தருடைய சீஷர்களுக்கோ, இச்சம்பவங்கள் மிகவும் வேறான பொருளைக் கொண்டதாய் இருந்தது. இவர்களுடைய ஆண்டவருடைய நோக்கங்கள்/காரணங்கள், இவர்களுடைய நோக்கங்களாகவும், தேவனுடைய நோக்கங்களாகவும் இருந்தது. இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் நிகழ்த்தப்பட்ட இச்சம்பவங்களானது, தேவன் இக்காரியங்களை அலட்சியமாகக் கருதவில்லை என்பதற்கான சாட்சியமாக சீஷர்களுக்குக் காணப்பட்டது; இருளின் திரைஊடாய் அவர்களால் தேவனுடைய பிரகாசமான திட்டங்களைப் பார்க்கமுடியவில்லை என்றாலும், (இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் நிகழ்த்தப்பட்ட) இச்சம்பவங்களில் நம்பிக்கைக்கான மெல்லிய சத்தம் காணப்பட்டது.

மூன்று நாட்களுக்குப் பிற்பாடு, அந்த நம்பிக்கையானது, நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலினாலும், அவருடைய உயிர்த்தெழுதலானது, சீஷர்கள் நடுவில் அவர் தோன்றி காட்சியளித்து உறுதிப்படுத்தப்பட்டதாலும் மீண்டும் புத்துயிர் பெற்றது. மீண்டுமாக நாற்பது நாட்களுக்குப் பிற்பாடு, அந்த நம்பிக்கையானது, அவர் இறுதி ஆலோசனையை வழங்கி மற்றும் ஆசீர்வாதம் அருளி மற்றும் திரும்பிவருதல் குறித்து வாக்குத்தத்தம் பண்ணி மற்றும் பிதாவினால் வாக்களிக்கப்பட்டுள்ள தேற்றரவாளனாகிய, புத்திரசுவிகாரத்தின் பரிசுத்த ஆவியை அவர்கள் பெற்றுக் கொள்ளுவது வரையிலும், அவர்கள் எருசலேமிலேயே தங்கி இருக்கும்படியான அறிவுரைகளை வழங்கினப் பிற்பாடு, அவர் பரமேறினது காரணமாகப் பலப்படுத்தப் பட்டது. பெந்தெகொஸ்தே நாளின்போது, தேவனால் வாக்களிக்கப்பட்டிருந்த பரிசுத்த ஆவி வந்தது. பிறகே கிறிஸ்துவினுடைய ஐசவரியமான சொத்தாகிய, கிறிஸ்துவின் சமாதானமானது உணர்ந்துகொள்ள ஆரம்பிக்கப்பட்டது மற்றும் அவர்கள் ஜெபத்துடனும், எதிர்பார்ப்புகளுடனும் காத்துக்கொண்டிருந்த நாட்களானது, நிரந்தரமான சமாதானமுடைய நாட்களாகும்; அதாவது நதிபோல் பாயும் சமாதானமாய்க் காணப்பட்டது. ஆனால் பெந்தெகொஸ்தே நாளின்போது, வாக்களிக்கப்பட்டத் தேற்றரவாளன் வந்தபோது, அவர்களுடைய சமாதானம் என்னும் நதியானது, ஆழமான நதிப்படுகையை/ஆற்றின் அடித்தரையைக் கண்டடைந்தது; மேலும் அவர்களுடைய சந்தோஷத்திற்கும் எல்லையில்லாமல் போயிற்று.

"மகிமையான நதிபோன்றுள்ளதே தேவனுடைய பூரண சமாதானமே,
ஜெயம்கொண்டவர்கள் அனைவரிடத்திலும், அதன் ஆனந்தம் பெருகுகின்றதே.
பூரணமாய் உள்ளதே; எனினும் ஒவ்வொரு நாளும் பொங்கிப் பொங்கி வழிந்திடுதே
பூரணமாய் உள்ளதே; எனினும் ஆழமாய் ஆழமாய் வளருதே."

## சமாதானம் எனும் நம்முடைய ஐசுவரியமான சொத்து

ஆதித் திருச்சபையாருக்கு மாத்திரமாக, சமாதானம் எனும் இந்தச் சொத்து, உயிலாக்கப்படவில்லை. இது யுகத்தின் முடிவுவரையிலுமான முழுச் சபையாருக்கும் உரியதான ஆசீர்வாதமான சுதந்திரமாகும். நம் அனைவருக்குமான கர்த்தருடைய எண்ணத்தை அவர், "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று ஜெபம் பண்ணினதின் மூலமாய் வெளிப்படுத்தி யுள்ளார் (யோவான் 17:20).

வாக்களிக்கப்பட்டுள்ள சமாதானமானது, உலகத்தின் குறுகிய கால சமாதானமாக இல்லையென்பதைக் கவனிக்கவும்; உலகத்தினுடைய இந்தக் குறுகிய கால சமாதானமானது, அதிர்ஷ்டம்/நல்ல காலம் இருக்கும்போதும், திரளான நண்பர்கள் காணப்படும்போதும், ஆரோக்கியம் நீடித்திருக்கும்போதும் காணப்படும், ஆனால் தரித்திரம் உள்ளே வரும்போதும், நண்பர்கள் கைவிட்டுச் செல்லும்போதும், ஆரோக்கியம் பாதிக்கும்போதும், மரணமானது நம் இருதயத்திற்கு அருமையானவர் களைத் திருடிச்செல்லும்போதும், இந்தக் குறுகிய கால சமாதானம் மறைந்துபோய்விடும். கிறிஸ்து ஐசுவரியவானாக இருந்தப்போதிலும், நம் நிமித்தம் தரித்திரரானார்; அவர் தம்முடைய நண்பர்களை ஒன்றன் பின் ஒன்றாக இழந்தார்; அவரது இறுதிவேளையில், அவருக்கு இருந்த கொஞ்சமானவர்களும், அவரை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்; விசுவாசத்தின் காரணமாகக் கிறிஸ்துதாமே அனுபவித்திட்டச் சமாதானமானது, இழப்புகளின் மத்தியிலும், துன்புறுத்துதல்களின் மத்தியிலும், ஏளனங்களின் மத்தியிலும், இகழ்ச்சிகளின் மத்தியிலும், சிலுவை யினுடைய பலிகளின் மத்தியிலும் சகித்துக்காணப்பட்டது. இந்தவொரு சமாதானத்தைத் தற்கால ஜீவியத்தின் எந்தக் காரியங்களினாலும்/ சூழ்நிலைகளி னாலும் அழித்திடமுடியாது. மற்ற எந்தச் சத்துருவும் இந்தச் சமாதானத்தை நம்மிடமிருந்து திருடவும் முடியாது.

எத்துணை ஐசவரியமான சொத்தினைக் கர்த்தர் தம்முடைய பிரியமான ஜனங்களுக்கு விட்டுச் சென்றிருக்கிறார்? ஒருவேளை கர்த்தர் இயேசு, தமது பூமிக்குரிய ஜீவியத்தின்போது, பணத்தைச் சம்பாதித்து, சேர்த்துக்கொள்ளத்தக்கதாக தம்முடைய சக்தியையெல்லாம் பிரயோகித்தார் என்று வைத்துக்கொள்ளுங்கள்; ஒருவேளை இப்படியாக அவர் செயல்பட்டு, தாம் சீஷர்களை விட்டுப் பிரியும்போது சுவிசேஷயுகத்திற்குரிய மாபெரும் வேலையினை நடத்தும்படிக்கு, திரளான

பணங்களை, சீஷர்கள் வசத்தில் விட்டுச்சென்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள்; அப்போஸ்தலர்களுடைய போக்குவரத்துச் செலவிற்கும், பல்வேறு இடங்களில் (அறுவடை) வேலை தொடங்குவதற்குரிய அதிகளவிலான செலவுகளாகிய பிரசங்கம் பண்ணுவதற்குரிய அறைகளுக்கான வாடகை, பயணம் மேற்கொள்ளும் சகோதரர்களுக்கு ஊதியம் வழங்குதல் மற்றும் இதுபோன்ற பல தேவைகளுக்குப் பணம் தேவையாய் இருக்கும். ஒருவேளை கர்த்தர் சீஷர்களைப்பிரியும்போது தாம் சேர்த்து வைத்தப் பணத்தைச் சீஷர்கள் வசத்தில் கொடுத்திருந்திருப்பாரானால், இத்தனை தேவைகள் இருக்க, அந்தப் பணங்கள் எத்தனை சீக்கிரமாய்க் குறைந்துபோயிருக்கும், மற்றும் இன்றுள்ள நமக்கு அச்சொத்தில் மிகக் கொஞ்சமே கிடைத்திருக்கும். "பாவ மனுஷனும்" ஏதாவது விதத்தில் இந்தச் சொத்தில் (பணத்தில்) கொஞ்சத்தைக் கைவசப்படுத்தியிருப்பான் (2 தெசலோனிக்கேயர் 2:3); மேலும் இந்த யுகத்தின் முடிவில் உள்ளவர்களால், அச்சொத்தின் தடயத்தைக் கூடப்பார்த்திருந்திருக்க முடியாது. ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாகுவதாக, சமாதானம் எனும் அவரது ஐசவரியமான சொத்தானது, இன்னமும், அவருடைய ஜனங்களுக்கு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது!

வாக்களிக்கப்பட்டுள்ள சமாதானமானது, உலகத்தினால் அடையாளம் கண்டு கொள்ளவோ, உணர்ந்துகொள்ளவோ முடியாத ஒன்றாகும்; ஏனெனில் இச்சமா தானத்தை உடையவர், கர்த்தரைப்போன்றும், பரமபிதாவைப்போன்றும், புயல் நிறைந்த பாதைகளையே பெற்றிருப்பார்கள். உண்மைதான், தீமையை அனுமதிப்பதிலுள்ள தேவனுடைய நோக்கங்கள் நிறைவேறி முடிவதுவரையிலும், உண்மையுள்ளவர்கள் அனைவரின் விஷயத்திலும் இப்படிப் புயல் நிறைந்த பாதைகளே காணப்பட வேண்டும்; எனினும் அனைத்துப் புயல்களின் மத்தியிலும், இந்தச் சமாதானம் காணப்படும் என்ற வாக்குறுதியுடன்கூட முன்னெச்சரிப்பு வழங்கப்பட்டிருக்கிறோம்; "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" (யோவான் 16:33).

## சமாதானத்திற்கு அஸ்திபாரமாகிய விசுவாசம்

ஜீவியத்தின் கடுமையான புயல்களின் மத்தியிலும், தொடர்ந்து காணப்படுகின்ற இந்த நிரந்தரமான சமாதானத்திற்கான அஸ்திபாரத்தையும், பாதுகாப்பு ஏற்பாட்டினையும் நாம் ஒருவேளை அறிய வேண்டுமெனில், நாம் கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய போதனைகளையும், மாதிரியையும் மாத்திரமே நோக்க வேண்டும். இவர்கள் பாடுகள் படும்போது, இவர்களை உறுதியாய் வைத்திட்டதும், இவர்களுக்கு அத்தகைய ஒரு மன அமைதியையும் கொடுத்ததும் எது? அது இவர்களுடைய விசுவாசமாகும், அதாவது தேவனுடைய அன்பிலும், வல்லமையிலும், ஞானத்திலுமான இவர்களுடைய விசுவாசமாகும். தேவன் வாக்களித்துள்ளவைகளை, தேவனால் நிறைவேற்ற முடியுமென்றும், தேவனுடைய நீதியான மற்றும் கிருபையான திட்டமானது தோல்வியடைவதில்லை என்றும் இவர்கள் நம்பினார்கள். "முந்திப்

பூர்வகாலத்தில் நடந்தவைகளை நினையுங்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை; நானே தேவன், எனக்குச் சமானமில்லை. அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளை யெல்லாம் செய்வேன் என்று சொல்லி, உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக்கிழக்கிலிருந்தும், என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனைத் தூரதேசத்திலிருந்தும் வரவழைக்கிறவராயிருக்கிறேன்; அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன்; அதைத் திட்டம்பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன். சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான்? அவருடைய கை நீட்டப்பட்டிருக்கிறது, யார் அதைத் திருப்புவான்?" ஆகிய வசனங்களைத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளுடைய வாயின் மூலம் அறிவித்துள்ளார். (ஏசாயா 46:9-11; 14:27) தேவனுடைய வாக்குத்தத்தங்களில் இவர்கள் இளைப்பாறினார்கள். அவருக்குள் இவர்களுடைய விசுவாசம் நங்கூரமிடப்பட்டிருந்தது; இவர்களுடைய நங்கூரமானது, தேவனுடைய சிங்காசனத்தில் நங்கூரமிடப்பட்டிருக்கையில், இவர்கள் மீது புயல்கள் எத்தனை சீற்றத்துடன் வீசினாலும் சரி அல்லது ஜீவயத்தின் சூறாவளிகளினால் இவர்கள் எவ்வளவாய்த் தூக்கி, தூக்கி எறியப்பட்டாலும், இவைகள் இவர்களுக்கு ஒரு பொருட்டல்ல.

நமது கர்த்தருடைய விசுவாசத்தின் பாஷையானது . . . "நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்" என்பதேயாகும் (யோவான் 17:25). கர்த்தர் ஆரம்பம் துவங்கி பிதாவுடன் காணப்பட்டிருந்திருக்கிறார் மற்றும் பிதாவின் அன்பையும், அவரது கருணையையும் கர்த்தர் உணர்ந்திருக்கிறார் மற்றும் பிதாவின் வல்லமையைக் கண்டிருக்கின்றார் மற்றும் பிதாவின்அனைத்துக் கிரியைகளிலும், பிதாவின் நீதியையும், அவரது அன்புடன்கூடிய இரக்கத்தையும், தகப்பனுக்குரிய பராமரிப்பையும் கர்த்தர் அடையாளம் கண்டிருக்கின்றார். ஆகவேதான், "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்" என்று எழுதப்பட்டுள்ளது (ஏசாயா 53:11). பிதாவைக் குறித்துக் குமாரன் கொண்டிருந்த அறிவானது, எதிர்க்காலம் குறித்த தேவனுடைய நோக்கங்கள்/திட்டங்கள் அனைத்தின் விஷயத்திலும் விசுவாசம் வைப்பதற்குக் குமாரனுக்கு உதவினது/ஆதாரமாய் இருந்தது. ஆகையால் குமாரனால் விசுவாசத்தினால் நடக்கமுடியும் மற்றும் நடக்கவும் செய்தார். இந்த விசுவாசமானது அனைத்துத் தடைகளை/இடற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கும், மரணத்தின் மீது ஜெயங்கொள்ளுவதற்கும் குமாரனுக்கு உதவியாய் இருந்தது.

ஆகவேதான் நமக்கு அறிவுரையாக, "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" என்றும் எழுதப்பட்டுள்ளது (1 யோவான் 5:4); அதாவது தேவன் மீதுள்ள விசுவாசம், அதாவது நமது கர்த்தரால் பிதாவைக்குறித்துக் கொடுக்கப்பட்ட சாட்சியின் மீதான விசுவாசமே ஜெயிக்கும்; மீண்டுமாக "விசுவாசமில்லாமல், தேவனைப் பிரியப்படுத்துவது கூடாத காரியம்" என்றும் எழுதப்பட்டுள்ளது. உறுதியான, அசைவுறாத விசுவாசத்தின் மூலமாய் மாத்திரமே, தேவ சமாதானமானது, கிறிஸ்துவின் சமாதானமானது அவருடைய ஜனங்களில் நிலைத்திருக்கும். கர்த்தர்

சீஷருடன் காணப்பட்டப்போது, கர்த்தரில் பிதாவின் வெளிப்படுத்தலைச் சீஷர்கள் கண்டபோது, அவர்களுடைய விசுவாசம் பலமாய் இருந்தது மற்றும் அவருக்குள் அவர்கள் சமாதானம் கொண்டிருந்தனர் மற்றும் இதனாலேயே, "நான் அவர்களுடனேகூட உலகத்தில் இருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்" என்று கர்த்தர் கூறினார் (யோவான் 17:12). ஆனால் அவர்களை விட்டுக் கர்த்தர் பிரிந்துபோனப் பின்னரே, அவர்களுடைய விசுவாசமானது, தேவனில் நங்கூரமடைந்தது. பெந்தெகொஸ்தேவிற்குப் பிறகு, அவர்கள் கிறிஸ்து அனுபவித்த அதே சமாதானத்தை அனுபவித்தார்கள்; அதாவது தாங்கள் ஒருவேளை மீட்பருடைய அடிச்சுவடுகளைப் பின்தொடருவதில் உண்மையாய்க் காணப்பட்டார்களானால், தங்களைத் தேவன் குமாரர்களென, சுதந்திரர்களென, கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்களென அங்கீகரிப்பார் என்ற உண்மைப்பற்றின அறிவின் காரணமாக, ஆசீர்வாதமான சமாதானம் அவர்களுக்குக் கடந்துவந்தது.

## அசைவுறா விசுவாசத்தை வளர்த்துதல்

இதுவும் நம்முடைய சமாதானத்திற்கான அஸ்திபாரமாகும். ஜீவியத்தின் சூறாவளிகள் எவ்வளவுதான் நம்மைத் தாக்கினாலும், நம்முடைய நங்கூரத்தை நாம் ஒருபோதும் கைவிடக் கூடாது; நாம் காற்றுப்போக்கில் இழுத்துச் செல்லப்படுவதற்கு அனுமதிக்கக்கூடாது; மாறாக "தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது" என்றும், "அவருடைய சத்தியம் நமக்குப் பரிசையும், கேடகமுமாயிருக்கிறது" என்றும், நமக்கு மனுஷீக பூரணமின்மைகளும், வலுவின்மைகளும் காணப்பட்டாலுங்கூட, தேவன் வாக்களித்துள்ளவைகளை, அவர் நிறைவேற்றிட வல்லவராய் இருக்கின்றார் என்றும், நம்முடைய மனுஷீக பூரணமின்மைகளை மூடுவதற்கு நமக்குப் பரிந்துபேசுபவரும், நமக்கு மீட்கும்பொருளாகவும் இருக்கும் கிறிஸ்துவினால் தரிப்பிக்கப்படும் நீதி காணப்படுகின்றது என்றும், "பிதா தாமே நம்மைச் சிநேகிக்கிறார்" என்றும், "அவர் நம்முடைய உருவம் இன்னதென்று அறிந்துள்ளபடியால்" அவர் தம்முடைய குமாரர்களிடத்தில் இரக்கமும், அன்பும் கொண்டிருக்கின்றார் மற்றும் மிகுந்த அனுதாபமும், மிகுந்த இரக்கமும் கொண்டிருக்கின்றார் என்றும் நாம் எப்போதும் நினைவுகூர வேண்டும் (சங்கீதம் 103:14; 2 தீமோத்தேயு 2:19; யோவான் 16:27; சங்கீதம் 91:4). பலியினுடைய இடுக்கமான பாதையின் சோதனைகள் மற்றும் போராட்டங்கள் மத்தியில் பொறுமையாய்ச் சகிக்கத்தக்கதாக நம்முடைய இருதயங்களைப் பெலப்படுத்திடவும், உறுதிபடுத்திடவும் மற்றும் நம்முடைய விசுவாசத்தை உறுதிபடுத்திடவும், தேவனால் நமக்குக் கூறப்பட்டவைகளிலும் அதிகமாய் வேறு என்ன தேவனால் சொல்லக் கூடும்.

கிறிஸ்தவன் தனது விசுவாசத்தின் நங்கூரத்தை விட்டுவிடுவது, அதாவது தற்காலிகமாகக் கூட அதன் பிடியை விட்டுவிடுவது என்பது, அவனது சத்துருக்களின் முன்னிலையில், அவனுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும். இப்படியாக அவன் கணநேரம் விட்டுவிடுவானானால் இருள் அவனைச் சூழ்ந்துகொள்ளும். அவனால் பிதாவின் முகத்தினுடைய பிரகாசத்தைப் பார்க்க முடியாது; ஏனெனில்,

"விசுவாசமில்லாமல் தேவனை பிரியப்படுத்துவது கூடாத காரியமாகும்;" மேலும் அவன் நங்கூரத்தை மீண்டும் பிடித்திட போராடுகையில், இருளின் வல்லமைகளானது, பயங்களினாலும், சந்தேகங்களினாலும், அவனைக் கடுமையாய்த் தாக்குகின்றன. இந்தத் தாக்குதல்களானது அவனது மனுஷீகப் பூரணமின்மைகள் பற்றிய பயங்கள்/சந்தேகங்களாகவே பொதுவாக காணப்படுகின்றது; ஆனால் இந்த மனுஷீக பூரணமின்மைகளானது, கிறிஸ்துவின் நீதி எனும் வஸ்திரத்தினால் மூடப்பட்டுள்ளது என்பதை அவன் எப்போதும் மனதில் கொண்டிருக்க வேண்டும்.

தேவ சமாதானம் நம்முடைய இருதயங்களை ஆள வேண்டுமெனில், நாம் நம்முடைய நங்கூரத்தின் பிடியை ஒருபோதும் விட்டுவிடக்கூடாது மற்றும் சாத்தானுடைய கடுமையான தாக்குதல்களானது, நம்முடைய தைரியத்தை நலிந்துபோகப் பண்ணுவதற்கு நாம் அனுமதித்திடவும் கூடாது. "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" என்பதே நம்முடைய இருதயங்களுடைய வார்த்தைகளாக இருக்க வேண்டும். இந்த ஒரு விசுவாசம் காணப்படும்போது, தேவசமாதானம், அதாவது ஆண்டவரால், நமக்குச் சொத்தாகக் கொடுக்கப்பட்டச் சமாதானமானது, என்றென்றும் நிலைத்திருக்கும். இவ்வாறாகவே "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானமானது, நமது இருதயங்களையும், நமது சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்;" ஏனெனில் "உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிற படியால், நீர் அவனைப் பூரணசமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" என்று எழுதப்பட்டுள்ளது (ஏசாயா 26:3; பிலிப்பியர் 4:7; யோபு 13:15).

கிறிஸ்தவ போராட்டங்கள் மத்தியில், நம்முடைய இருதயங்களானது, தெய்வீக நோக்கங்கள் அனைத்தும் நிறைவேறும் என்ற உறுதியினால் மாத்திரமல்லாமல், தனிப்பட்டத் தயவுகள் பற்றின வாக்குத்தத்தங்களினாலும் களிகூர்ந்து, நம்முடைய மனங்கள் உறுதியடைந்து காணப்படுவதாக.

தனிப்பட்டத் தயவுகள் தொடர்புடைய வாக்குத்தத்தங்களானது பின்வருமாறு:- "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்." "ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது" (சங்கீதம் 103:13, 14; ஏசாயா 49:15, 16); "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" (யோவான் 16:27); "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" (லூக்கா 12:32); "உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள்" (நீதிமொழிகள் 11:20); "கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்" (சங்கீதம் 37:4). ஆம் புயல் மற்றும் சூறாவளியின் மத்தியிலுங்கூட தேவசமாதானத்தை அருள்செய்வார்.

# பரிசுத்தவானாகிய பேதுரு கோதுமையைப்போல் புடைக்கப்பட்டார்

## மாற்கு 14:27-31, 53, 54, 66-72

**“இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.” 1 கொரிந்தியர் 10:12**

பரிசுத்தவானாகிய பேதுரு மனபலமுடைய, மிகவும் தைரியமுடைய மனுஷனாவார், அதே நேரம் சிந்திக்காமல் செயல்படுகிறவராகவும் காணப்பட்டார். “படிப்பறியாதவர்களென்றும், பேதைமையுள்ளவர்களென்றும்” ஜனங்களால் அடையாளங்கண்டுகொள்ளப்பட்ட இரண்டு சீஷர்களில், பேதுருவும் ஒருவர் ஆவார் (அப்போஸ்தலர் 4:13). சில விஷயங்களில் யூதாசைக் காட்டிலும், பேதுருவுக்குச் சாதகமற்ற, அனுகூலமற்ற சூழ்நிலைக் காணப்பட்டது. எனினும் இருவரும் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் சரிசமமான வாய்ப்புகளைப் பெற்றவர்களாய் இருந்தார்கள்; எனினும் இந்த இரண்டு மனிதர்களுடைய முடிவும் எத்துணை வித்தியாசத்துடன் காணப்பட்டது. ஒருவர் இழிவான இரண்டாம் மரணத்திற்குள் கடந்துச் சென்றார். மற்றொருவரோ சோதனையிலும், பயிற்சியிலும் மேலும், கீழும் ஏறி இறங்கினவராகக் கடந்துச்சென்ற பிற்பாடு, தனது ஆண்டவரோடுகூட மகிமை, கனம் மற்றும் அழியாமை எனும் பலன்களில் பங்கடைந்தார் மற்றும் அப்போஸ்தலர்கள் மத்தியிலும் உயர்வானவராய்க் கருதப்பட்டார்.

நமது கர்த்தருடைய மரணத்தின் காலக்கட்டத்தில் பரிசுத்தவானாகிய பேதுருவுக்கு வந்திட்டதான விசேஷமான “புடைத்தல்களைக்” குறித்தே நம்முடைய இன்றைய பாடத்தில் பார்க்கவிருக்கின்றோம்; இது குறித்துப் பேதுரு, இயேசுவினால் முன்கூட்டியே எச்சரிக்கப்பட்டார் மற்றும் அவரிடம் இயேசு: “சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்”என்றார் (லூக்கா 22:31, 32). அநேக பல தருணங்களில் வெளிப்பட்டதான பரிசுத்தவானாகிய பேதுருவின் தைரியமானது, உண்மையில் அவரது பெலவீனமாகவே இருந்தது. பேதுருவுக்கு வரவிருக்கின்றதான புடைக்கிற அனுபவங்கள் குறித்தெல்லாம் அவரை இயேசு முன்கூட்டியே எச்சரித்தப் பிற்பாடுங்கூட, பரிசுத்தவானாகிய பேதுரு எவ்விதமான அச்சமும், திகிலும் கொண்டிராதவராகவே காணப்பட்டார். ஆகையால் அவர் விழிப்புடனும், ஜெபத்துடனும் இருக்க வேண்டியிருக்க, அவர் விழிப்புடனும், ஜெபத்துடனும் காணப்படாதவராகவே காணப்பட்டார்; சுயத்தின் மீதான நம்பிக்கையானது, அவரை இப்படியாகக் கொஞ்சங்காலம் காணப்பட வழிநடத்தினது.

இதே பரிசுத்தவானாகிய பேதுருதான், இவர் அடுத்தநாள் காலையில், சேவல் கூவுகிறதற்கு முன்பாக நமது கர்த்தரை மறுதலிப்பார் என்று கூறப்பட்டபோது, இது நிச்சயமாய்த் தவறு, காரணம் தன்னுடைய ஆண்டவருக்காக தான் மரிப்பதற்கு

ஆயத்தமாய்க் காணப்படுகின்றாரெனக் கூறினார். இதே பரிசுத்தவானாகிய பேதுருதான், தனது பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனுடைய காதை வெட்டிப் போட்டார் மற்றும் இந்த வேலைக்காரன் பிற்பாடு இயேசுவினால் சொஸ்தமாக்கப்பட்டான். உணர்ச்சிவசப்படுகின்றதான இதே பரிசுத்தவானாகிய பேதுருதான், இயேசுவினுடைய மேசியாத்துவத்தை முதலாவதாக ஒப்புக்கொண்டவராக/தெரிவித்தவராக இருந்தார்.

தம்மைக்குறித்து ஜனங்கள் என்ன கூறுகின்றார்கள், அதாவது தாம் யார் என்று சொல்லுகிறார்களென இயேசு கேட்டார். பின்னர் "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார். அப்போது பரிசுத்தவானாகிய பேதுரு பிரதியுத்தரமாக: "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்றார். இந்த ஒரு பதிலானது, பரிசுத்தவானாகிய பேதுரு தேவனுடன் ஓர் ஆசீர்வாதமான உறவின் நிலையில் காணப்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றது இல்லையேல், இப்பதிலைக் கொடுப்பதற்கான அறிவு அவருக்கு இருந்திருக்காது என்று இயேசு கூறினார். இயேசு அவரை நோக்கி: "மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" என்றார் (மத்தேயு 16:17). சிறந்த பண்புகளுள்ள இதே பாத்திரம், தனது ஆண்டவரை மறுதலிக்கும் அளவுக்கு அதுவும் சாபங்களுடன் மறுதலிக்கும் அளவுக்கு, பயத்தினால் மிகவும் திணறிப்போவார் என்று யாராவது எண்ணியிருந்திருப்பார்களா!

புதிய ஏற்பாட்டினுடைய எழுத்தாளர்கள், உண்மையை எவ்விதமான மாற்றங்கள் செய்யாமலும் அல்லது உண்மையை மறைக்காமலும் பதிவு செய்துள்ளதிலிருந்து, அவர்கள் பெரும்பான்மையான எழுத்தாளர்களிடமிருந்து நிச்சயமாய் மிகவும் வேறுபட்டவர்களாய்க் காணப்படுகின்றனர் என்ற கருத்தானது நம்முடைய மனங்களில் உடனடியாகவும், அழுத்தத்துடனும் பதிகின்ற ஒரு காரியமாய் இருக்கின்றது. இப்படியான விதத்தில், வேதாகமத்தைத் தவிர, வேறு எந்தப் புத்தகமும் நிச்சயமாய்க் காணப்படுவதில்லை. உலகப்பிரகாரமான மகா மத அமைப்புகளையும், பல்வேறு பிரிவினராகிய அமைப்புகளையும் ஸ்தாபித்தவர்கள், மிகவும் வேறுபட்ட ஆவியையே வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களது தலைவர்கள் அனைவரும் சிறந்தவர்களாகவும், தலைச் சிறந்தவர்களாகவும், கல்வியறிவுள்ளவர்களாகவும், வீரர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் - நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில், தனது ஆண்டவரைப் பரிசுத்தவானாகிய பேதுரு மறுதலித்ததின் மூலம் வெளிப்படுத்தின பெலவீனங்கள் - போன்றதான பெலவீனங்கள் - தங்களின் தலைவர்களில் காணப்பட்டதென அனைவருக்கும் சுட்டிக்காட்ட வேண்டுமென நினைத்துக்கூடப் பார்க்கமாட்டார்கள்.

இது வேதாகமத்தின் மீதும், அதன் உண்மையின் மீதும், அதன் வாய்மையின் மீதும் நமக்கு நிச்சயமாய் மிகுந்த நம்பிக்கையை உண்டுபண்ணுகின்றதாய் இருக்கின்றது. இப்படியாக தங்களது தவறுகளைக் குறித்து வெளிப்படையாய்க் கூறுகின்றவர்களும், தாங்கள் படிப்பறியாதவர்கள் என்று கூறுகின்றவர்களுமான மனிதர்கள், மகா தைரியமும், மகா உண்மையும், சத்தியத்திற்காக மகா அன்பும் கொண்ட மனிதர்களாக இருக்க வேண்டுமென்ற உண்மையில் நாம் நம்பிக்கைக் கொள்ளலாம். நிச்சயமாய் இவர்களது சாட்சியமானது, ஏற்றுக்கொள்ளப்படுவதற்குப் பாத்திரமானதேயாகும்.

## பரிசுத்தவானாகிய பேதுருவின் சோதனை எதிர்பாராமல் வந்தது

சோதனைகளானது இரகசியமான விதத்தில் வருகின்றதாய் இருக்கின்றது. பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் காதைப் பரிசுத்தவானாகிய பேதுரு வெட்டினபோது, அவர் நமது கர்த்தரை மறுதலிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்திருப்பார் என்று நாம் எண்ணவே முடியாது. ஆனால் சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் மாறினது. ஆண்டவர் கைதியாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். முந்தைய தருணங்களிளெல்லாம், அதாவது "அவரது வேளை இன்னும் வராத" காலக்கட்டங்களில், அவர் தமது சத்துருக்கள் மத்தியில் சஞ்சரிக்கத்தக்கதாக, அவரால் செயல்படுத்தப்பட்ட அந்த வல்லமையை, அவர் இப்பொழுது செயல்படுத்தவில்லை, காரணம் "அவரது வேளை வந்துள்ளது." பரலோகத்தினுடைய நண்பர்கள்/ஆதரவு இல்லாமல், தனது ஆண்டவர், அவரது சத்துருக்கள் வசத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்பதையும், ஒரு நீதிமன்றத்திலிருந்து, இன்னொரு நீதிமன்றத்திற்கு இப்படியாக அழைத்துக்கொண்டுப் போகப்படுவதையும் பார்த்த பரிசுத்தவானாகிய பேதுரு உறைந்து போனார்.

அரண்மனையிலிருந்த யாரோ ஒருவரோடு பரிசுத்த.யோவானுக்குப் பழக்கம் இருந்ததினால், அவர் உள்ளே பிரவேசிப்பதற்கும், தன்னோடுகூடப் பரிசுத்தவானாகிய பேதுருவை உள்ளே கொண்டுவருவதற்கும் அனுமதிக்கப்பட்டார்; ஆனால் இவர்கள் இருவரும் சேர்ந்து அங்குக் காணப்படவில்லை. பரிசுத்தவானாகிய பேதுரு முற்றத்தில் காணப்பட்டார். குளிராய் இருந்தபடியினால், அவர் குளிர்க் காய்ந்துக்கொள்ளத் தக்கதாக, அங்கிருந்த கனல் தட்டை அணுகினார். அரண்மனையின் வேலைக்காரர்கள் பேசிக்கொண்டு காணப்பட்டதான முற்றத்தினுடைய வெளிச்சத்தில், அவர் வேலைக்காரிகளில் ஒருவளால் மிகவும் கூர்ந்து கவனிக்கப்பட்டார் மற்றும் அவள்:

"நீயும் அந்த நசரேயனுடைய சீஷரில் ஒருவனல்லவா" என்றாள்.

தான் அடையாளங்கண்டு கொள்ளப்பட்டதைக் குறித்துத் திகைப்படைந்தவராகவும், இதனால் தனக்கு என்ன நடக்குமோ என்று யோசித்தவராகவும், பரிசுத்தவானாகிய பேதுரு உடனடியாக, தனக்கு இயேசுவை யார் என்று தெரியாதென மறுத்துவிட்டார். பின்னர் ஜனங்கள் குறைவாகவும், இருளும் நிழலும் அதிகமாகவும் காணப்பட்டதான முற்றத்திலுள்ள மற்றொரு பகுதிக்குச் சென்றுவிட்டார். ஆனால் அவர் மீண்டுமாக கலிலேயன் என்று அடையாளம் கண்டு கொள்ளப்பட்டு, அவர் இயேசுவின் சீஷர்களில் ஒருவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டார். மீண்டுமாக அவர் மறுதலித்தார். மூன்றாம் முறையாக அவர் இயேசுவின் சீஷர்களில் ஒருவர் என்றும், ஒரு கலிலேயன் என்றும், அவருடைய பேச்சுபாணியே, அவரைக் காட்டிக் கொடுக்கின்றது என்றும் அதே குற்றச்சாட்டுகள், அவர்மேல் சுமத்தப்பட்டன. மீண்டும் தனது ஆண்டவரைத் தனக்குத் தெரியாது என்று மறுதலித்து, சபித்தார்.

பயங்கரமாயுள்ளது என்றே நாம் இதைக் குறிப்பிட வேண்டும். நிச்சயமாக பரிசுத்தவானாகிய பேதுருவும்கூட, இது பயங்கரமாயிருந்ததாகத்தான் பிற்பாடு எண்ணியிருந்திருப்பார்; ஏனெனில் அவ்வேளையில், அதிகாலையில், சேவல் கூவவே, சாத்தான் பேதுருவைக் கோதுமையைப் புடைக்கின்றதுபோல் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான் என்றும், சேவல் கூவுவதற்கு முன்னதாக, பேதுரு தனது ஆண்டவரை மூன்று முறை மறுதலித்திருந்திருப்பார் என்றுமுள்ள ஆண்டவருடைய வார்த்தைகளைப் பேதுரு நினைவுகூர்ந்தார். இவை அனைத்தும் அவரை நொறுக்கினது; அவர் தனது போர்வையினால், தனது தலையைப் போர்த்திக்கொண்டு, மனங்கசந்து அழுதவராக வெளியேறி, இருளில் நடந்துச் சென்றார்; ஏனெனில் சேவல் கூவினபோது, இயேசு பேதுருவிடமிருந்து சற்றுத் தொலைவில் நடத்திச் செல்லப்பட்டுக்கொண்டிருக்க, பேதுரு இயேசுவை ஏறெடுத்துப்பார்த்த போது, ஆண்டவர் தமது கண்களை ஏறெடுத்து, பரிசுத்தவானாகிய பேதுருவைப்பார்த்தார். அது கோபத்துடன்கூடிய ஒரு பார்வையாக இருக்கவில்லை; அது அனுதாபமிக்கப் பார்வையாக இருந்தது; ஆனால் அப்பார்வை பேதுருவின் இருதயத்தைப் போய்த் தொட்டது.

பரிசுத்த பேதுருவின் குற்றம் என்பது, எவ்விதத்திலும் யூதாஸ் செய்த குற்றத்தைப் போன்றதாகக் காணப்படவில்லை; பேதுரு தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மாத்திரம் நாடினவராக இருந்தார். அவர் ஆண்டவருக்குப் பாதகம் பண்ணவோ (அ) பாதகம் பண்ணிப் பார்க்கவோ நாடவில்லை. பரிசுத்த பேதுருவினுடைய முழுமையான மனந்திரும்புதலுக்கு, அவர் பிற்பாடு, மரணம் வரையிலும் உண்மையாய் இருந்த காரியம் பலமான சாட்சியமாய் அமைகின்றது. பரிசுத்த பேதுரு சிலுவையில் அறையப்படும் தண்டனைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டார்

என்றும், தனது ஆண்டவரை தான் ஒருகாலத்தில் மறுதலித்ததை நினைவுகூர்ந்தவராக, தனது கர்த்தர் அடைந்த அதே மரணத்தைப் போன்றதான ஒரு மரணத்தை தான் அடைவது என்பது, தனக்கு மிகவும் பெரிய கனத்தைச் சாற்றுவதாக இருந்துவிடுமெனப் பேதுரு எண்ணினார் என்றும், அவரது வேண்டுகோளின் பேரிலேயே, அவர் தலைக்கீழாகச் சிலுவையில் அறையப்பட்டார் என்றும் பாரம்பரியமானது தெரிவிக்கின்றது.

## அனைத்துக் கிறிஸ்தவர்களுக்குமான பாடம்

"தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்கக்கடவன்" என்பதான நமது ஆதார வசனமானது, பரிசுத்த பேதுருவின் அனுபவங்களிலிருந்துள்ள பாடத்தினை அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் புகட்டுகின்றதாய் இருக்கின்றது. நம்முடைய சொந்த கணிப்பில், நாம் பெலவீனர்கள் என்று இருக்கும்போதும், முழு விசுவாசத்துடன் நாம் கர்த்தருடைய கரத்தை இறுக்கிப் பற்றிக்கொண்டிருக்கும் போதும்தான் நாம், தேவன் தமது நித்திய குமாரன் வாயிலாக அளிக்கும் வல்லமையில், உண்மையில் பலவான்களாயிருப்போம். தேவனுடைய ஜனங்களுக்கான அனுபவங்களானது, எவ்வளவு வித்தியாசமானவைகளாகக் காணப்பட்டாலும், முதலாம் உயிர்த்தெழுதலுக்கு முன்னேறிக் கொண்டிருப்பவர்கள், கடுமையான புடைக்கப்படுதல்களைச் சகித்து நிலை நிற்பதற்கும், கர்த்தருக்கான, சத்தியத்திற்கான, சகோதரா சகோதரிகளுக்கான தங்களது அன்பையும், தங்களது உண்மையையும்/நேர்மையையும் நிரூபிப்பதற்கும் எதிர்ப்பார்க்கப்படுவார்கள் என்பது மற்றொரு பாடமாகும்.

கர்த்தர் நம்மீது அக்கறையற்றவராக இருப்பதின் காரணமாக இராமல், மாறாகப் புடைத்தெடுத்தல்களிலும், சோதனைகளிலும் மற்றும் பரீட்சைகளிலும் நிலைநிற்க முடிகின்றவர்களே, இராஜ்யத்திற்குப் பாத்திரமானவர்களாய் இருப்பார்கள் என்பதினாலேயே புடைத்தெடுத்தல்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடாமல் இருப்போமாக.



## நினைவுகூருதலின் தியானங்கள்

# ஆலோசனை சங்கத்தாருக்கு முன்பாக நடந்திட்ட விசாரணை



# பிரதான ஆசாரியனுடைய முன்னிலையில் இயேசு

## மாற்கு 14:53-64; மத்தேயு 26:47-75; லூக்கா 22:47-65; யோவான் 18:2-27

*"அவர் அசட்டைப்பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாயிருந்தார்." ஏசாயா 53:3*

மாற்கு 14:53. இயேசு முதலாவதாக அன்னாவிடம் கொண்டு செல்லப்பட்டார் (யோவான் 18:13); அன்னா என்பவர் உரோமர்களால் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலும், பிரதான ஆசாரியனுக்குரிய ஸ்தானமானது, வாழ்நாள் முழுவதுமுள்ள ஸ்தானமானபடியால், இவர்தான் நியாயப்பிரமாணத்தின்படி நியாயமாய்ப் பிரதான ஆசாரியனாய்க் காணப்பட வேண்டியவர் ஆவார் மற்றும் அன்னா இவ்வாறாகவே யூதர்களால் அநேகமாகக் கருதப்பட்டிருந்தபடியாலே, அவரிடத்தில் ஆலோசனைக்காக முதலாவது நாடப்பட்டது. இவரது மருமகன் (அதாவது ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்குமென்று தீர்க்கத்தரிசனம் உரைத்தவருமாகிய - யோவான் 18:14) காய்பா, உரோமர்களால் நியமிக்கப்பட்டுத் தற்போது பணியாற்றிக்கொண்டிருந்த பிரதான ஆசாரியனாய்க் காணப்பட்டார். (மத) அதிகாரிகள் கொண்டிருந்த உணர்வுகளோடு அன்னா ஒருமனப்பட்டிருந்தது தெளிவாகத் தெரிகின்றது மற்றும் இயேசுவிடம் அவரது போதகங்கள் குறித்தும், அவரது சீஷர்கள் குறித்தும் சில கேள்விகள் கேட்ட பிற்பாடு, அவரைக் காய்பாவிடம் கட்டுண்டவராக அனுப்பிவைத்தார் (யோவான் 18:19-24).

இரவு நேரத்தில் மரணத்தண்டனைக்கு ஏதுவான குற்றங்களுக்கான விசாரணையை நடத்துவதற்கு, யூதருடைய நியாயப்பிரமாணமானது அனுமதி வழங்காததினாலும், அதுவும் அன்று பஸ்கா இராப்போஜனத்தினுடைய இரவாக இருந்தபடியால், அப்படியானதொரு விசாரணை மேற்கொள்ளப்படுவது என்பது, இன்னும் மறுப்பிற்கிடமானதாக இருந்தபடியால், அத்தேசத்தின் பிரதிநிதிகள் தேவனால் அபிஷேகிக்கப்பட்ட தங்கள் மேசியாவை ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கும் குற்றத்தில் பங்கெடுக்கத்தக்கதாக, சம்மதத்தோடு ஒன்றுகூடி வந்த இந்தக் கூடுகையானது, சட்டத்திற்கு எதிரான கூடுகை என்பது தெளிவாய்த் தெரிகின்றது. இந்தக் கூடுகையிலிருந்து அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு, நிக்கொதேமு போன்ற சில மனிதர்கள் நிச்சயம் கவனமாய்த் தள்ளிவைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும் மற்றும் புதிய போதகருக்கு (இயேசுவுக்கு) ஆதரவானவர்கள் என்று அறியப்பட்டிருந்த இன்னும் சிலரும் அநேகமாக தள்ளிவைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். இவர்கள் இக்காரியங்கள் குறித்து அநேகமாய் எதுவும் அறியாமல் காணப்பட்டிருக்க வேண்டும் (யோவான் 19:38, 39; 7:50, 51).

வசனங்கள் 55-59. எத்துணை ஆச்சரியப்படத்தக்கதான உண்மை இங்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது: அதாவது பூமியிலேயே மிகவும் கடாட்சிக்கப்பட்ட/தயவு பாராட்டப்பட்டதான ஜாதியினுடைய மாமனிதர்கள், கல்வியறிவுள்ள மனிதர்கள், ஞானவான்கள், அதிகாரிகள், வயதானவர்களும், அனுபவசாலிகளுமான மனிதர்கள், மதப் போதகர்கள், உலகம் கண்டதிலேயே தூய்மையானவராகவும், மிகச் சிறந்த

பண்புகள் உடையவராகவும் காணப்படுகின்ற ஒருவருக்கு எதிராக இப்படியாய் வேண்டுமென்றும், நீண்டகாலமாய் முன்கூட்டியே திட்டமிட்டும், பொல்லாப்பாய்க் கூட்டுச் சதி ஆலோசனை பண்ணினது தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் பொதுவிடங்களில் உபதேசிக்கையில், அவரது வார்த்தைகளினாலேயே, அவரை அகப்படுத்தும்படிக்கு இரகசிய பிரதிநிதிகளை அவர்கள் அடிக்கடி அனுப்பிவைத்தது மாத்திரமல்லாமல், இயேசுவைக் காட்டிக்கொடுக்கத்தக்கதாக, உண்மையற்ற ஓர் அப்போஸ்தலனுக்கும் மற்றுமாக அவருக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டுகளும் இல்லாமல் இருந்தபோதிலும், அவரைக் கைதுபண்ணத்தக்கதாக ஓர் உரோமப் போர்ச்சேவகக் குழுவினருக்கும் இறுதியில் இலஞ்சம் கொடுத்தார்கள். அடுத்ததாக, இந்த மரியாதைக்குரிய, கல்வியறிவுள்ள, மேன்மைமிக்கக் கூட்டத்தார், தாங்கள் பகைத்திட்டதான கைதியைக் கைதுசெய்த பிற்பாடு, அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கத்தக்கதாக, நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்க்கின்ற பிரகாரமாய் ஒன்றுக்கொன்று இசைவாய்க் காணப்படுகின்றதான இரு சில சாட்சிகளைக் கண்டுபிடிப்பதில் விறுவிறுப்பாய்க் காணப்பட்டார்கள் (உபாகமம் 19:15). அவருக்கு எதிராய் விருப்பத்தோடு பொய்ச்சாட்சிச் சொன்னவர்கள் அநேகரைக் கண்டுபிடித்தார்கள், ஆனால், எவருடைய சாட்சியும் ஒன்றோடொன்று இசைவாய்க் காணப்படவில்லை.

வசனங்கள் 60-62. நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்க்கும் இக்காரியத்தினை அவர்கள் திருப்திபண்ணிட முடியாதபோது, பிரதான ஆசாரியன் இயேசு தம்மையே குற்றவாளியென்று காண்பிக்கத்தக்கதாக, அவரை வற்புறுத்துதலுக்குள்ளாக்கும் வண்ணமாக, “இவர்கள் உமக்கு விரோதமாய்ச் சாட்சிச் சொல்லுகிறதைக்குறித்து, நீர் ஒன்றும் சொல்லுகிறதில்லையா?” என்று கேட்டார். ஆனால் இயேசுவோ உண்மையானது அத்தருணத்தில் விரும்பப்படவில்லை என்றும், தங்களுடைய இருதயத்தில் கொலைப்பாதகத்தை நன்கு சீராட்டி வைத்திருக்கும் இந்த மனுஷர்களுக்கு, தாம் பேசும் உண்மை பொருட்டாய் இராது என்றும் அறிந்தவராக, (ஞானத்துடன்) அமைதி காத்து, எதுவும் பேசாமலிருந்தார். இன்னுமாகத் தம்முடைய ஜீவனைப் பலிச்செலுத்துவதற்கான தமது வேளை வந்துள்ளது என அவர் அறிந்திருந்தபடியால், அவர் தம்மைத் தற்காத்துக்கொள்ள வேண்டும் என்ற மனநிலையிலும் இல்லை. ஆனால் “நீர் ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? என்று கேட்கப்பட்டதன் வாயிலாக, அவர் தம்மை வெளிப்படுத்துவதற்கு வலியுறுத்தப்பட்டபோது, தமது பதிலானது, தம்முடைய மரணத்தை உத்தரவாதமாக்கிடும் என்பதை அறிந்தவராக, அவர் நிதானமாய் “நான் அவர்தான்” என்று கூறி, “மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள்” என்ற தீர்க்கத்தரிசனத்தையும் கூறினார்.

இந்தத் தீர்க்கத்தரிசனமானது அவரது மரணம் மற்றும், உயிர்த்தெழுதலின் நிச்சயத்தைச் சுட்டிக்காட்டினது மற்றும் இன்னுமாக சுவிசேஷயுகத்தினுடைய முடிவில் அவர் வல்லமையிலும், மகா மகிமையிலும், அதாவது அவரது இராஜ்யத்தினுடைய வல்லமையிலும் மற்றும் மகிமையிலும் திரும்பி வருதலைச் சுட்டிக்காட்டுகின்றதாகவும்

இருந்தது; இந்த இராஜ்யத்தைக் குறித்து, அது இவ்வுலகத்தினுடையதாகவோ (அ) சாத்தான் பிரபுவாகக் காணப்படுகின்றதான இந்த யுகத்தினுடையதாகவோ இராமல், நீதி வாசம் பண்ணுகின்ற இனிவரும் உலகத்தினுடையதாய் இருக்குமென அவர் முன்னமே வலியுறுத்திக் கூறியுள்ளார் (யோவான் 14:30; எபிரெயர் 2:5; 2 பேதுரு 3:13).

தாம் தேவனால் பிறந்தவர் என்றும், தாம்தான் நீண்டகாலமாய் முன்னுரைக்கப்பட்டு வந்த மேசியாவாக, இஸ்ரயேல் மற்றும் உலகத்தினுடைய இரட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றுமுள்ள அவரது இந்த வெளிப்படையான மற்றும் பயமற்ற ஒப்புக்கொள்ளுதலானது, தேவதூஷணமாக எடுத்துக்கொள்ளப்பட்டது மற்றும் மாய்மாலமான பிரதான ஆசாரியனோ, தீர்க்கதரிசிகளினால் முன்னுரைக்கப்பட்டதான எழுத்துக்களை நிறைவேற்றுகிறவராக, தங்கள் மத்தியில் நின்றுகொண்டிருக்கின்றதான ஸ்தோத்திரிக்கப்பட்டவருக்கு அடையாளமான தனது வஸ்திரத்தை, இப்படியானதொரு தேவதூஷணத்தைக்கேட்டு அதிர்ச்சியும், நடுக்கமும் அடைந்ததாகக் காண்பிக்கும் வண்ணமாகக் கிழித்தார் மற்றும் "இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? தேவ தூஷணத்தைக் கேட்டீர்களே, உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்றார். அதற்கு அவர்களெல்லாரும் இவர் (லேவியராகமம் 24:16; உபாகமம் 18:20-இல் பரிந்துரைக்கப்பட்டபடி தேவதூஷணத்திற் குரிய தண்டனையாகிய) மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறார் என்று தீர்மானம் பண்ணினார்கள்."

இப்படியாக யூத அமைப்பானது, அவிசுவாசம் மற்றும் குற்றம் எனும் குழிக்குள்/சாக்கடைக்குள் விழுந்தார்கள் மற்றும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் விஷயத்திலும், அவரை நிராகரிக்கும் விஷயத்திலும் ஜனங்கள் — பரிசேயர்களில் அல்லது அதிகாரிகளில், எவரேனும் அவரை விசுவாசிக்கின்றார்களா எனக் கருதி பார்த்ததினால் —ஜனங்கள் தங்கள்மேல் பொறுப்பினை ஏற்றுக்கொண்டவர்களாய்க் காணப்பட்டு, அதிகாரிகளோடுகூட குழிக்குள் விழுந்து, "இவரது இரத்தப்பழி எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று சத்தமிட்டார்கள். "மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் (அவரது சத்திய வார்த்தைகளின் பேரில்) பற்றுதலாயிருப்பதே நலம். பிரபுக்களை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்" என்று சங்கீதக்காரன் நன்றாய்ச் சொல்லியிருக்கின்றார் (சங்கீதம் 118:8, 9). இதற்கு (யூத யுகத்திற்கு ஒத்த) சுவிசேஷயுகத்தில், தற்காலத்தில் காணப்படுகின்றதான கிறிஸ்தவர்கள் கவனம் செலுத்துவார்களாக; சத்தியமானது அதன் ஏற்றக்காலத்தில் மீண்டுமாக வெளிப்படுகையில், இது தேவனுடைய ஜனங்கள் என்று தங்களை அறிக்கைப் பண்ணியுள்ளவர்களை நெருக்கடிக்குள்ளாகக் கொண்டுவந்து, "அவனவனுடைய (விசுவாசத்தின்) வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று பரிசோதிக்கின்றதாய்" இருக்கின்றது. நாம் மனித ஆதரவுகளின் மீது சாய்வோமானால், நாம் நிச்சயமாய் விழுந்துபோவோம்; ஆனால் கர்த்தருடைய வார்த்தையோ என்றென்றும் தாங்கும் தன்மையுள்ளதாகும்.

# மாபெரும் பிரதான ஆசாரியன் குற்றம் சாட்டப்பட்டார்

## யோவான் 18:15-27

***"அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை." யோவான் 1:11***

அனைத்துச் சீஷர்களும் தப்பி ஓடிவிட்டார்கள் என்று கூறப்பட்டிருப்பினும், பேதுருவும், யோவானும், சிறிது இடைவெளிவிட்டுப் பின் தொடர்ந்தார்கள் என யோவான் சுட்டிக்காட்டுகின்றார். போதகர் மீது அவர்கள் கொண்டிருந்த ஆழ்ந்த அக்கறையானது, அவர்களை தங்களுடைய வீட்டிற்குச் செல்லவிடாமல், போதகருக்கு என்ன சம்பவிக்கின்றது என்று இறுதிவரை அறிந்துக்கொள்ளவும், காணவும் ஏவிற்று. போதகருக்கு எதிராகக் கூறப்படும் அத்தகைய மாபெரும் விநோதமான பேச்சுகளை, காரியங்களை எதிர்த்து அவருக்கு உதவிசெய்ய அவர்கள் பலமற்றவர்களாக இருந்தார்கள். மேலும், உதவி பெற்றுக்கொள்வதற்குப் போதகரே மறுத்துவிட்டதால், அவருக்கு உதவிபுரிய அவர்களுக்குப் பலமும் இல்லாமல் போயிற்று என்றாலும், அவரை இன்னமும் அன்பு செய்வதில் அவர்கள் பலமற்றுப்போகவில்லை. பிரதான ஆசாரியனுடைய அரண்மனையோடு ஏதோ ஒருவிதத்தில் பழக்கப்பட்டிருந்த யோவான், தனக்கு மாத்திரமல்லாமல், பேதுருவுக்கும் சேர்த்து, உள்ளே செல்வதற்கான அனுமதியை உடனடியாகப் பெற்றுக்கொண்டார்.

ஆனால், இந்தத் தயவுகளும், சிலாக்கியங்களும் பேதுருவுக்கு பரீட்சைகளாக மாறி, அவர் கர்த்தரை மறுதலிப்பதற்கு ஏதுவாக நடத்தவும் செய்துவிட்டது. இன்றும் இப்படியாகவே சில கர்த்தருடைய பின்னடியார்களின் விஷயத்திலும் காணப்படுகின்றது. கர்த்தருடைய பின்னடியார்கள் தனியாகவோ அல்லது தாங்கள் கொண்டிருக்கும் அதே விலையேறப்பெற்ற விசுவாசத்தில் உள்ளவர்களோடு இருக்கையில், அவர்கள் கர்த்தரை அறிக்கைப் பண்ணுவதிலும், அவருக்கு ஊழியம் புரிவதிலும் மிகவும் தைரியத்துடனும், துணிவுடனும் காணப்படுவார்கள். ஆனால், ஒருவேளை தற்செயலாக அவர்கள் அரண்மனைகளுக்குள்ளாகவோ (அ) பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாரின் பிரதான ஆசாரியர்கள் மற்றும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் காணப்பட நேரிடுகையில், சத்தியம் அறிந்திராத அந்தச் சமுதாயத்தார் மத்தியில் அனுபவித்திருந்த சிலாக்கியங்களிலிருந்து புறம்பாக்கிப் போடப்படுவார்களோ என்று கருதி, போதகரைக் குறித்து வெட்கம் அடைந்தவர்களாக, அவரை அறிக்கைச் செய்ய அச்சம் அடைகின்றனர். பரிதாபத்திற்குரிய பேதுரு பின்வருமாறுக் கூறியிருந்தால் அவருக்கு நலமாயிருக்கும், "ஆம், நான் அவர் சீஷரில் ஒருவன்தான். என்னைப்போன்ற அவருடைய சீஷர்கள் உங்கள் மத்தியில் காணப்படுவதை நீங்கள் விரும்பவில்லை என்று நான் புரிந்துக்கொள்ளுகிறதினால், நான் வெளியே போய்விடுகின்றேன்." இப்படி அவர் கூறியிருந்திருப்பாரானால், சகல நீதியான மனுஷர்களுடைய கண்களுக்கு முன்பாகவும், அவருடைய நடத்தை மிகவும் பாராட்டுவதற்கு ஏதுவாகவும், நேர்த்தியானதாகவும் காணப்பட்டிருந்திருக்கும். இன்னுமாக எத்துணை ஆசீர்வாதங்களையும், இது அவருக்குக் கொண்டுவந்திருக்கக்கூடும்!

சரியான முறையைக் கடைபிடிக்கத் தவறின பேதுருவை, அவரது தவறான முறையானது, இன்னும் அதிகம் சோதனைக்குரிய சூழ்நிலைக்கு அவரைப் பிற்பாடுகொண்டு போயிற்று. எப்படியெனில், பேதுரு காதை வெட்டின மனுஷனுடைய உறவினன், அவரை நோக்கி, "நான் உன்னை அவனுடனேகூட தோட்டத்திலே காணவில்லையோ?" (யோவான் 18:26) என்று கேள்வி கேட்டபோது ஏற்பட்டது. சூழ்நிலைகள் பரிதாபத்திற்குரிய பேதுருவுக்கு மிகவும் நெருக்கம் கொடுக்க ஆரம்பித்தது. கேட்கப்பட்ட இக்கேள்வியானது, பிரதான ஆசாரியனின் முற்றத்தில் இருப்பதற்கான கனத்தையும், சிலாக்கியத்தையும், குளிர் காய்வதற்கான நெருப்பையும் விட்டுச்செல்லும் இழப்பைக் காட்டிலும் அதிகமான பாதிப்பை உடைய கேள்வியாகும். இயேசுவைக் காக்கும்படிக்குப் பட்டயத்தைப் பயன்படுத்தினவன் என்ற தனது அடையாளத்தைக் குறித்ததாக இக்கேள்வி அமைந்தது. மேலுமாக, அதே இடத்தில் ஆண்டவரோடு கூடத் தானும் கைதுச் செய்யப்பட்டு, விசாரணை நடத்தப்படுவதற்கான சம்பவங்களைக் கொண்டுவருவதற்கு ஏதுவான கேள்வியாகவும், அக்கேள்வி காணப்பட்டது. தவறுதலாக எடுத்து வைக்கப்பட்ட ஓர் அடியானது, இயல்பாகவே இன்னொரு தவறான அடியை எடுத்து வைக்கவே நடத்துகின்றதாய் இருக்கின்றது. இப்படியாகவே இரண்டாம் முறை கேட்கப்பட்ட கேள்விக்கு, இப்பொழுது இயேசுவின் சார்பாக, தான் உண்மையை அறிக்கைச் செய்துவிட்டால் அது, தான் பொய்யன் என்பதற்கான வெளிப்படையான சாட்சியாக அமைந்து, தன்னைக் கைதுச் செய்துவிடக்கூடிய சூழலாகவும் அமைந்துவிடும். ஆகவே தன்னைக் காக்கும்பொருட்டு, தான் மீண்டும் பொய்ச்சொல்வதோடல்லாமல், மீண்டும் ஆண்டவரை மறுதலிப்பதோடல்லாமல், தன்னைக் குற்றஞ்சாட்ட முற்படுபவர்கள் முன்பாக காரியங்களை மிகவும் உறுதியாய் நிலைப்படுத்தும் வண்ணமாக, தனக்கு இயேசுவைத் தெரியாது என்று கூறவும், சபிக்கவும், சத்தியம் பண்ணவும் முடிவெடுத்தார்.

பாவம் பேதுரு! நமது கர்த்தர் பேதுருவிடம் சாத்தான் அவரை புடமிட விரும்புகின்றான் எனக்கூறின பிரகாரம், பேதுரு இக்கட்டத்தில் மிகவும் கடுமையாகப் புடமிடப்பட்டார். பேதுரு, பெலன் கொண்டு, மனம்வருந்தி, தன்னுடைய பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக்கொண்ட காரியமானது ஓர் அற்புதம் போன்று தோன்றுகின்றது. பேதுரு இப்படியாக மறுதலிப்பார் என்று கூறினதுடன் கூட, அவருக்காக ஜெபம் பண்ணினதாகவும் அறிவித்திருந்த நமது கர்த்தருடைய ஜெபமானது அதன் பலனைக் கொடுத்தது என நமக்குக் காட்டுகின்றது. ஏனெனில், பேதுரு இப்படியாக மறுதலித்த பிற்பாடு சேவல் கூவினதைக் கேட்டு, "சேவல் கூவுவதற்கு முன்னரே என்னை நீ மூன்று தரம் மறுதலிப்பாய்" என்ற கர்த்தருடைய வார்த்தைகளைப் பேதுரு நினைவுகூர்ந்தார். வெளிப்படுத்த முடியாத அளவு உணர்வுகளோடு, பேதுரு இப்பொழுது தன் நிமித்தமாக பிரதான ஆசாரியனின் இடத்தைவிட்டு வேகமாக வெளியேறினார். மனங்கசந்து அழுது, கர்த்தருடைய மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி, அவ்விடத்தைவிட்டு வெளியேறினார்.

இதில் நமக்கு ஒரு பாடம் உள்ளது. என்னவெனில், பேதுரு எந்த விஷயத்தில்

பெலம் உள்ளவராக இருந்தாரோ, அவ்விஷயத்தில்தான் அவர் வீழ்ச்சியும் அடைந்தார். பேதுரு இயல்பாகவே தைரியமுள்ள மனுஷன்தான். தன் தைரியத்தைக் குறித்துப் பெருமையும் அடித்துக் கொண்டார். ஆயினும், தைரியம் இல்லாமையினால் வீழ்ச்சியும் அடைந்தார். "நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" என்ற வார்த்தைகள், எவன் ஒருவன் தன்னை பலமுள்ளவன் என்று எண்ணுகின்றானோ, அவன் உண்மையில் பலவீனனாய் இருக்கின்றான் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. இதற்கு உதாரணமாக, பேதுருவின் விஷயம் காணப்படுகின்றது (2 கொரிந்தியர் 12:10). நமக்கு ஒரு தந்திரமான சத்துரு இருக்கின்றான் என உணர்ந்து/நினைவில் கொண்டு, நம்மிடம் இன்னின்ன பலமுள்ள தன்மைகள் காணப்படுகின்றன என்பதான நம்முடைய அனுமானங்களிலிருந்து விசேஷமாக நம்மைப் பாதுகாத்துக்கொள்ள நாம் அனைவரும் கற்றுக்கொள்வோமாக. எந்த விஷயத்திலும் நம்மிடம் காணப்படும் நம்முடைய பலவீனங்களை, குறைகளை நாம் உணர்ந்துக்கொண்டு, ஒவ்வொரு விஷயத்தையும் விழிப்பாய்க் கவனித்து, நமக்கு உதவி செய்யும், நம்முடைய மாபெரும் இரட்சிப்பின் அதிபதியைச் சார்ந்து நிற்கிறவர்களாகக் காணப்பட வேண்டும்.

யோவான், சம்பவத்தின் சகல அம்சங்களையும் பதிவு செய்யவில்லை. பேதுரு சபித்ததையும், சத்தியம் பண்ணுவதையும் குறிப்பிடுவதை அவர் தவிர்த்துவிட்டார். பேதுருவை பற்றிக் கர்த்தர் கூறின அக்காரியமானது நிறைவேறிவிட்டது என்று கண்டிப்பாகக் காட்ட வேண்டிய அவசியமில்லாத, அச்சம்பவங்களை, சகோதரனாகிய பேதுருவின் மீதான அன்பினிமித்தம் பதிவு செய்யாமல் விட்டுவிட யோவான் ஏவப்பட்டார். பேதுரு சபித்ததையும், சத்தியம் பண்ணினதையும் குறித்த விஷயங்களை மாற்கு, பதிவு செய்கின்றார். மாற்கு எழுதின சுவிசேஷமானது, பேதுருவினால் சொல்லப்பட, அது மாற்கினால் எழுதப்பட்டது என்று எண்ணப்படுகின்றது (மாற்கு 14:66-72).

இயேசு, பிரதான ஆசாரியனால் விசாரணை செய்யப்பட்டார். மேலும், அக்கூட்டத்தார் தீமையையும், கொலை பாதகத்தையும் இருதயத்தில் கொண்டிருந்தாலும், நீதிமுறையை வெளித்தோற்றத்திற்காகிலும் கைக்கொள்ள வேண்டும் எனக் கட்டுண்டவர்களாகக் காணப்பட்டார்கள். ஆனால், ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்கள் மத்தியில் காணப்பட்ட பிரதான ஆசாரியனும், அவனோடு கைக்கோர்த்துள்ளவர்களும், இயேசுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க ஏற்கெனவே முடிவு செய்திருந்தார்கள் என்று பல பதிவுகள் நமக்குக் காட்டுகின்றது. காரணம், ஜனங்கள் மத்தியில் இயேசுவுக்குக் காணப்பட்ட செல்வாக்கானது, அவர்களுக்குத் தீங்கை விளைவிக்கக்கூடியதாக இருந்தது. அதாவது, இயேசுவினுடைய போதனைகள், அவர்களைப் பின்னுக்குத் தள்ளிவிடுகின்றதாகவும், அவர்களின் மாய்மாலம், மதவெறி மற்றும் வஞ்சனைகளை வெட்ட வெளிச்சமாக்குகின்றதாகவும் காணப்பட்டது. பிரதான ஆசாரியனின் கேள்விகளுக்கு நமது கர்த்தர் பதில் கொடுத்துக் கொண்டிருந்தார். அதேசமயம் அவர் எந்தக் குறிப்பிட்ட விரிவான விளக்கங்களும் கொடுக்க மறுத்தும் விட்டார். மேலும், அவர் தாம் போதித்தவைகளை, சுட்டி மாத்திரமே காட்டினார். இவ்விதமாக ஒரு யூதனாக அவருக்கு இருந்த உரிமையின் மீதே, அவர்களது கவனத்தைத் திருப்பினார். கர்த்தருடைய பதில் சரியானதும், நியாயமானதுமாக

இருக்கின்றது. அவர் நியாயமான காரணம் இல்லாமல் கைதுச் செய்யப்பட்டார். மேலும், நீதிபதியோ இப்பொழுது ஒரு காரணத்தைக் கண்டுபிடிக்கும்படிக்கு அவரிடத்தில் தேடுகின்றான். கைதுச் செய்யப்படுவதற்கு முன்பு, கைதுச் செய்யப்படுவதற்கான காரணங்கள் ஏதாகிலும் காட்டப்பட்டிருக்க வேண்டும் என்று மாத்திரமே நமது கர்த்தர் சுட்டிக்காட்டினார்.

இயேசுவைத் தன்னுடைய கைகளினால் அறைந்து, பிரதான ஆசாரியனுக்கு இப்படியா தகாத வார்த்தைகளைக் கொண்டு உத்தரவு கொடுப்பது என்று இயேசுவைக் கடிந்துக்கொண்ட சேவகன், இவ்விஷயத்தில் வேண்டுமென்றே அநீதியாக நடந்துக்கொண்டான் என்று நாம் எண்ண வேண்டியதில்லை. மாறாக, பிரதான ஆசாரியனின் ஸ்தானம் மற்றும் நியாயத்தீர்ப்பை, தான் வைராக்கியத்துடன் ஆதரிக்கின்றேன் என்று தன்னைக் காண்பிக்க வேண்டும் என்ற விருப்பமே, அவனிடத்தில் தாக்கம் கொண்டு, விழுந்துபோன மனுஷனாகிய அவனுடைய சரியற்ற மனதின் மீதும் தாக்கம் கொண்டு, பொல்லாப்பு இல்லாதவற்றில், பொல்லாப்பு/தீமை இருப்பது போன்று கற்பனை செய்து கொள்ளும்படி அவனை ஏவிற்று என்றே நாம் எண்ணுகின்றோம். இச்சூழ்நிலையானது, மலைப் பிரசங்கத்தின்போது, "ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு," என்று நமது கர்த்தர் பேசின வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்துக்கொள்வதற்கான வாய்ப்பை நமக்கு அளிக்கின்றது (மத்தேயு 5:39). சொல்லர்த்தமாக நமது கர்த்தர் தம்முடைய மறு கன்னத்தை அடிக்கிறவனிடத்தில் திருப்பிக்காட்டி, இக்கன்னத்திலும் அடி என்று கூறவுமில்லை. தாம், கன்னத்தில் அறையப்பட்டதை அமைதலுடன் ஏற்றுக்கொள்ளவுமில்லை. தாம் பேசினது தவறல்ல என்ற விஷயத்தை திருத்தம் செய்துகொள்வதற்கு ஏற்ற முயற்சியாகிலும் எடுக்கப்படாதது வரையிலும், அவர் தம்முடைய நன்னடத்தையும், சரியான வார்த்தையும், தவறாய்ப் பேசப்படுவதை ஏற்றுக்கொள்ளவுமில்லை/விரும்பிக் கொள்ளவுமில்லை. ஆகவேதான், தம்மை அடித்தவனிடம், தாம் எவ்விதத்தில் தகாததாய்ப் பேசினேன் என்று காட்டும்படிக் கேட்டுக்கொண்டார். மேலும், ஒருவேளை அவனால் தகாததைச் சுட்டிக்காட்ட முடியவில்லையெனில், தன்னால் சுட்டிக்காட்ட முடியாத தகாததற்காக அநீதியுடன் அடித்ததற்கான தன்னுடைய தவறை அவன் ஒப்புக்கொள்ள வேண்டும் என யோசனைக்கூறினார்.

இந்த உதாரணத்தின் வெளிச்சத்தில் மறு கன்னத்தைக் காண்பித்துக்கொடு என்ற கட்டளைக்கான அர்த்தம் என்னவெனில், கர்த்தருடைய ஜனங்கள் தீமையைத் தீமையினால் எதிர்க்கக்கூடாது என்பதும், மாறாக, தீமைக்குப் பதிலாக தீமை செய்வதைக் காட்டிலும், அவர்கள் அதிகமான தீமையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதேயாகும். அதேசமயம் அவர்கள் தீமையை, நன்மையினால் எதிர்க்க வேண்டும். போதகர் செய்தது போன்று, தீமை செய்தவர்களுக்கு நட்பு முறையில் அறிவுரை கூற வேண்டும். அதாவது, வாக்குவாதம் வரும் காரியங்களில் தீமை செய்பவர்கள், சரி எது, தவறு எது என்று காணத்தக்கதாக, அன்புடனும், நிதானத்துடனும் முயற்சி செய்ய வேண்டும் என்று கர்த்தருடைய ஜனங்கள் புரிந்துக்கொள்ள வேண்டும்.

அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனும், அன்னாவின் மருமகனாகிய காய்பாவிற்கு முன்பாக, யூதர்களால் நமது கர்த்தர் விசாரணை செய்யப்பட்டார். இதே காய்பாதான், ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்குமென்று யூதருக்கு ஆலோசனை சொன்னவராகவும் காணப்பட்டார், "ஜனங்களெல்லாரும் கெட்டுப் போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள் என்றான். இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூதஜனங்களுக்காக மரிக்கப்போகிறாரென்றும், அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறா ரென்றும், தீர்க்கத்தரிசனமாய்ச் சொன்னான்" (யோவான் 11:50-53).

மாபெரும் சத்தியங்கள் எப்படி, இரண்டு எதிரெதிரான கண்ணோட்டங்களில் பார்க்கப்படக்கூடும் என்பதற்கான உதாரணமாக மேற்கூறப்பட்ட வசனங்கள் விளங்குகின்றது. காய்பாவின் தீர்க்கத்தரிசனம் மிகவும் உண்மையே. மேலும், இத்தீர்க்கத்தரிசினம் கர்த்தருடைய வார்த்தைகள் அறிவித்த சகல விஷயங்களுக்கும் மிகவும் இசைவாகக் காணப்படுகின்றது. இத்தீர்க்கதரிசனமானது, தேவன் எப்போதும் பயன்படுத்துவதில் பழக்கமுடைய கருவிகளில் (ஆசாரிய ஊழியன் ஸ்தானம்) ஒன்றின் மூலமாகவே அனுப்பப்பட்டது. ஆனால், அந்த ஸ்தானத்தில் காணப்பட்ட மனுஷனோ, தேவனுக்கு இருதய அளவில் இசைவில்லாதவனும், தெய்வீகத் திட்டத்தின் பல்வேறு அம்சங்களுக்கு இசைவில்லாதவனும், பொல்லாத செய்கையைத் தூண்டினவனாகவும், அச்செய்கைக்குக் கூட்டாளியாகவும் காணப்பட்டான். இப்படி இருப்பினும் இவைகள் அனைத்தும் தெய்வீக ஏற்பாடு மற்றும் முன்னறிவிற்கு இசைவாகவே நடந்துக் கொண்டிருந்தது.

தெய்வீகச் சத்தியத்தின் ஒவ்வொரு அம்சம் தொடர்புடைய விஷயங்களில் இங்குச் சகல கர்த்தருடைய ஜனங்களுக்கும் ஒரு படிப்பினை காணப்படுகின்றது. நாம் சில குறிப்பிட்ட விஷயங்களை அறிந்திருப்பது மாத்திரம் போதாது, நாம் கர்த்தருக்கு இருதய அளவிலும் இசைவுள்ளவர்களாகவும் காணப்பட வேண்டும். இல்லையெனில், நாம் காய்பா போன்று காணப்படுவோம். அதாவது, கர்த்தருடைய திட்டம் நிறைவேற உதவியாய் இருப்போம். ஆனால், தெய்வீகத் திட்டத்தின் நிறைவேறுதலில் இன்னமும் செயலாற்றுகிறவர்களாய் இருப்பினும், நம்மையும், மற்றவர்களையும் கூடச் சாபத்திற்குள்ளாக்குவதற்கு ஏதுவாக தவறான நிலையில் காணப்படுகிறவர்களாகி விடுவோம். வெளிச்சத்தின் பிள்ளைகளாக இருப்பவர்களும், சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர்களும், இன்னும் அதிகமதிகமாய் வெளிச்சத்திலும், ஆண்டவரின் அடிச்சுவட்டிலும் நடப்பதற்கு நாடி, யூதாஸ், பேதுரு மற்றும் காய்பாவின் விஷயங்களில் விளங்கும் தீமையின் உதாரணங்கள் என நாம் கண்டவைகளைக் கவனமாக தவிர்த்து விட வேண்டும்.

யூதர்களுக்கு முன்பாக நடத்தப்பட்ட விசாரணை, மூன்று பாகங்களை உடையதாய் இருந்தது, அவை பின்வருமாறு:

(1) (மத) சட்டப்படி பிரதான ஆசாரியனாக இருந்த அன்னாவுக்கு முன்பாக

நடத்தப்பட்ட விசாரணையானது, முற்றிலும் அதிகாரப் பூர்வமற்றதாகும். இவன் இயேசுவைக் கட்டுண்டவராக, உரோமர்களின் அதிகாரத்தின்படியான பிரதான ஆசாரியனாகியவனும், ஆலோசனை சங்கத்தின் தலைவனுமாகிய காய்பாவினிடத்திற்கு அனுப்புவித்தான். இந்தக் காய்பாவினுடைய விசாரணை அறையானது அநேகமாக அதே அரண்மனையில், பேதுரு நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்த நடைபாதையின் குறுக்கே காணப்பட்டிருந்திருக்க வேண்டும்.

(2) காய்பாவிற்கு முன்பு நடந்த தொடக்க விசாரணையானது, வெள்ளிக்கிழமை காலை அன்று இரண்டு அல்லது மூன்று மணிக்குள்ளாக நடந்திருக்க வேண்டும் என்று அனுமானிக்கப்படுகின்றது. ஏனெனில், யூதருடைய விசாரணை மன்றம் (அ) ஆலோசனை சங்கத்தாரின் அங்கங்கள், இயேசு கைதுச் செய்யப்பட்ட உடனே, செய்தி அனுப்பப்பட்டு வரவழைக்கப்பட்டனர். விடியும் வேளையில், ஐந்து மணியளவு நடத்தப்படப்போகும் சம்பிரதாயப்படியான கூட்டத்தில், இயேசு குற்றவாளி என நிரூபிக்கப்பட்டவர் என்று கூறத்தக்கதாக எக்குற்றங்களைச் சொல்ல வேண்டும் எனத் தொகுப்பதற்கும், முடிவெடுப்பதற்கும், அவரை விசாரிப்பதற்குமே இந்தத் தொடக்க விசாரணை நடத்தப்பட்டது. யூதர்களின் பிரமாணம்/சட்டப்படி, இரவில் விசாரணை செய்வது தடை செய்யப்பட்டிருந்தது (லூக்கா 22:66-71).

(3) விடியலில் ஆலோசனை சங்கத்தார் முன்பு நடத்தப்பட்ட, சம்பிரதாயப் படியான விசாரணையானது வெறும் ஓர் ஆச்சாரம் (அ) நாடகமேயாகும். இயேசுவைக் கொல்ல வேண்டும் என்ற தீர்மானமானது, அவரைக் கைதுச் செய்வதற்கு வெகுகாலம் முன்னதாகவே அவர்களால் தீர்மானிக்கப்பட்டிருக்க, இரண்டு காரணங்களினிமித்தமாக காரியங்கள் துரிதமாக்கப்பட்டது. (a) தங்களால் தொகுக்க மாத்திரமே முடிந்திருந்த பொய்யான குற்றச்சாட்டுகளை எதிர்த்து, இயேசுவுக்காக பொது ஜனங்கள் போராடுவார்கள் என்று பெரிய ஸ்தானங்களில் காணப்பட்ட யூதர்கள் அஞ்சினார்கள். (b) பஸ்கா அண்மையில் இருப்பதினால், அதற்கு முன்னதாக அவர் கொல்லப்பட வேண்டுமென்று விரும்பினார்கள். ஆ! அவர்களுடைய இருதயத்தின் பொல்லாத விருப்பங்களை, அவர்கள் செயல்படுத்த தேவன் அனுமதித்துள்ளார் என்று அவர்கள் புரிந்துக்கொள்ளவில்லை. மேலும், இவ்விதமாக (பஸ்கா) நிழல்களும், தீர்க்கத்தரிசனங்களும் அந்நாளில் நிறைவேறினது.

இதிலும், தேவனுடைய ஜனங்களுக்கு ஒரு படிப்பினை உள்ளது. அதென்னவெனில், நாம் நீதியை ஆச்சாரமாக கடைப்பிடிப்பது போதாது. இன்னுமாக தெய்வீகத் திட்டத்தைத் தந்திரமாக வெல்ல முடியாது (அ) அதன் நிறைவேறுதலைத் தடை பண்ணவும் முடியாது என்பதை நாம் முன்கூட்டியே அறிந்து வைத்துக்கொள்வது மாத்திரம் போதாது. பழிவாங்குதலின் நாளிலும், அனைத்தும் வெளியரங்கமாக்கப்படும் நாளிலும்தான், அநேகர் தாங்கள் கனமோ (அ) இலாபமோ இல்லாமல் தேவனுடைய நோக்கங்களுக்காகப் பணி புரிந்துள்ளனர் என்று உணர்ந்துக்கொள்வார்கள். அதாவது, அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக, குற்றவாளி எனத் தீர்க்கப்படும் வழிமுறையில் தாங்கள் தேவ நோக்கங்களுக்காக பணி புரிந்துள்ளனர் என்று உணர்ந்துக் கொள்வார்கள். மாபெரும் எதிராளியான சாத்தானுங்கூட தேவனுக்கும்,

கிறிஸ்துவுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் எதிராக தன்னால் பண்ணப்பட்ட விஷயங்களானது, தெய்வீக ஞானம் மற்றும் தெய்வீக வல்லமை மற்றும், "மனுஷனுடைய கோபம் தமது மகிமையை விளங்கப்பண்ணும்" படிக்குச் செய்பவர் மூலம் நன்மைக்கு ஏதுவாக மாற்றப்பட்டது என்று இறுதியில் காண்பான். (சங்கீதம் 76:10). ஆயினும், இதனால் அவனுக்கு எவ்வித பாராட்டோ, ஆசீர்வாதமோ வருவதில்லை.

நீதியின் விஷயத்தை ஆச்சாரமாகக் கடைபிடிப்பதை விட, நாம் அதிகமாய்ச் செய்ய வேண்டும் என்பதே மிக முக்கியமானதாகும். நம்மிடத்தில் நீதியின் ஆவி, அதாவது, நீதியின் மீது அன்பு காணப்பட வேண்டும். அதாவது, தேவனுடைய சித்தம் எது என்று அறிந்து, அதைச் செய்வதற்கான உண்மையான வாஞ்சை காணப்பட வேண்டும். இல்லையேல், யூதர்கள் நீதியுள்ளவரைக் குற்றவாளி எனத் தீர்த்துக் கொலைசெய்து போட்டதுபோன்று, நாமும் நீதியின் ஆச்சாரமான கடைப்பிடிப்பு களினால், அவருடைய "சகோதரரை" குற்றம் தீர்த்து, காயப்படுத்துகிறவர்களாக இருப்போம். தேவன் பேரிலும், நீதியின் பேரிலும் அன்பு கொண்டிருப்பது என்பது, கர்த்தருக்கு இருதயம் முழுமையாய் அர்ப்பணம் பண்ணப்பட்டிருப்பதைக் காட்டுகின்றது. "நல்லது, உத்தமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று ஆண்டவர் கூறுவதைக் கேட்க வேண்டும் என விரும்புகிறவர்களுக்கு, அவருடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடி அவருடைய சித்தத்திற்கு முழுமையாய்ச் சுயத்தை அர்ப்பணிப்பது, கர்த்தருக்கு முழுமையாய்த் தத்தம் செய்வதே சரியானதும், பாதுகாப்பானதுமான வழியாக இருக்கின்றது (மத்தேயு 25:23).

காலை மூன்று மணி அளவில், நடந்த விசாரணைக்கும், நமது கர்த்தருக்கு எதிரான செல்வாக்கு மிக்க சத்துருக்கள் காலை ஐந்து மணி அளவில் நடந்திட்ட சம்பிரதாய முறையிலான குற்றம் நிரூபிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கும் கூட்டத்திற்கும் இடையிலேயுள்ள நேரத்தில்தான், மூன்று சுவிசேஷகர்களால் பதிவு செய்யப்பட்டபடி, அவர் இரண்டு மணி நேரமளவும் கேலியும், கிண்டலும் செய்யப்பட்டார் (மத்தேயு 26:67, 68; மாற்கு 14:65; லூக்கா 22:63-65). கீழான/தாழ்வான மனமுடையவர்கள் தங்களைக் காட்டிலும் பிரதானமானவர்களை, அவர்களின் இக்கட்டான நேரங்களில் கேலி செய்து மகிழ்ச்சிக் கொள்வார்கள் என்ற உண்மைக்கு உதாரணமாக, "சேவகர்கள் இக்கேலி வேலைகளைச் செய்தார்கள்" என்பது அமைகின்றது. இந்தச் சேவகர்களும், தங்களுடைய எஜமான்களாகக் காணப்படும், பிரதான ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்களின் அதே சிந்தையை/ஆவியை வெளிப்படுத்தினார்கள். ஆனால், இவர்கள் முரட்டுத்தன்மையும், மடமையானவர்களாகவும் (அறிவில்லாமல்) காணப்பட்டப்படியினால் இவர்களுடைய செயல்பாடுகள், முறைகள் கொடூரமாகக் காணப்பட்டது. மாறாக, கிறிஸ்துவின் ஆவியாகிய அன்பின் ஆவியானது, கல்வியறிவு உடையவர்களிடத்திலோ (அ) அறிவில்லாதவர்களிடத்திலோ காணப்படும்போது, அது அன்பின் ஆவியாகவும், சாந்தம், அனுதாபம் மற்றும் இரக்கத்தின் ஆவியாகவே காணப்படுகின்றது. அவர்களுடைய கனிகளினால், அவர்களுடைய ஆவி இன்னது என்று அறியப்படும். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோமர் 8:9).

## உமக்கே மிகுதியான அன்பு உரித்தாகுக

உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக, ஓ! கிறிஸ்துவே!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!
கேட்டிடுமே நான் ஏறெடுக்கும் ஜெபத்தினை,
நான் முழங்கால் படியிட்டு ஏறெடுக்கும் ஜெபத்தினையே.
இதுவே எந்தன் வாஞ்சையுடன் கூடிய வேண்டுகோளே,
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக, ஓ! கிறிஸ்துவே!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!

ஒருகாலத்தில் பூமிக்குரிய சந்தோஷத்தை வாஞ்சித்த நானே,
நாடுகின்றேனே சமாதானத்தையும் இளைப்பாறுதலையுமே;
இப்பொழுது உம்மை மாத்திரமே நாடுகின்றேனே;
சிறந்தது எதுவோ அதையே எனக்குத் தந்திடுமே.
இதுவே எந்தன் அனைத்து ஜெபமாகும்,
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக, ஓ! கிறிஸ்துவே!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!

துயரம் அதன் வேலையைச் செய்திடுவதாக,
துயரத்தையும், வலியையும் அனுப்பிவையும்.
உந்தன் தூதுவர்கள் இனிமையாய் உள்ளனர்.
இனிமையாய் உள்ளதே அவர்களின் பல்லவி
அவர்கள் என்னோடுகூடப் பாடிடும்போதே.
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக, ஓ! கிறிஸ்துவே!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!

எந்தன் கடைசி மூச்சு . . .
உந்தன் துதியையே பேசிடுமே
இதுவே எந்தன் இறுதி வார்த்தையாய்
எந்தன் இருதயம் பேசிடுமே!
இதுவே எந்தன் அனைத்து ஜெபமாகும்,
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக, ஓ! கிறிஸ்துவே!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!

-விடியல் துதிப்பாடல்கள், # 172

# நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துள்ளீர்கள்

## மத்தேயு 26:57-68

### “நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து.” மத்தேயு 16:16

நமது கர்த்தர் ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்பட்டபோது, காய்பா என்பவன் பிரதான ஆசாரியனின் ஸ்தானத்தில் காணப்பட்டான். இந்தக் காய்பா என்பவன்தான், “ஜனங்களெல்லாரும் கெட்டுப் போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்கும்” என்று முன்கூட்டியே அறிவித்தவனாகவும் இருந்தான். மேலும் இவ்விஷயமானது, தேவன் எப்படிச் சில சமயம் பொல்லாத மனுஷர்களின் எண்ணங்கள் மற்றும் நோக்கங்களைப் பயன்படுத்தி ஆழமான தீர்க்கத்தரிசன சத்தியங்களை வெளிப்படுத்துகின்றார் என்பதற்கு உதாரணமாகவும் அமைகின்றது (யோவான் 11:50; 18:14). யூதர்களுக்கு மாத்திரமல்லாமல், ஒட்டுமொத்த உலகத்தாருக்கும் இது நன்மையாக இருக்கப்போவது என்பது உண்மையே. அதாவது, ஆதாம் மற்றும் அவருடைய சந்ததியாரும் தெய்வீகத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்படவும் மற்றும் தெய்வீகத் தயவினிடத்திற்கும், நித்திய ஜீவனிடத்திற்கும் திரும்பிடுவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு இறுதியில் கொடுக்கப்படத்தக்கதாகவும், அவர்களுக்கு ஈடுபலி கொடுக்கப்படுவது நன்மையானதேயாகும்.

ஆனால், காய்பாவைப் பொறுத்தமட்டில் அவன் மனித ரீதியிலான நன்மையை மாத்திரம் அநேகமாக எண்ணியிருந்திருக்க வேண்டும். நாசரேத்து ஊரைச் சேர்ந்த இயேசுவின் மீதான ஜனங்களின் பிரியம் வளர்ந்து கொண்டுவருவதைக் காய்பா உணர்ந்துகொண்டவனாகக் காணப்பட்டான். உபதேசத்திலும் சரி, வாதம் பண்ணுவதிலும் சரி, இயேசுவுக்கு முன்பு, மிகவும் கற்றுத்தேர்ந்த பரிசேயர்களும், வேதபாரகர்களும் கூட நிகராக நிற்க முடியவில்லை என்றும் காய்பா உணர்ந்து கொண்டவனாகக் காணப்பட்டான். இன்னுமாக, இயேசுவின் போதனைகள் காய்பாவினுடைய தற்கும், யூதா மார்க்கத்தின் பொதுவான பாரம்பரிய நம்பிக்கைகளுக்கும் மிகவும் எதிராகக் காணப்பட்டபடியால், இயேசுவின் போதனைகள் ஏற்றுக்கொள்ளப்படுவது என்பது மதரீதியான புரட்சிக்கு நேராக வழி வகுத்துவிடும் என்றும் காய்பா உணர்ந்துகொண்டவனாகக் காணப்பட்டான். இப்படியாக, புரட்சி நடக்கும் பட்சத்தில் உரோமர்களுக்கு முன்பு தங்கள் தேசத்திற்குக் காணப்படும் மரியாதை போய்விடும் என்றும், ஒப்பந்தத்தின்படி தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டுள்ள சகல உரிமைகளும், சிலாக்கியங் களும்கூட ரத்து செய்துவிடப்படும் என்றும் காய்பா உணர்ந்துகொண்டான். காய்பாவைப் பொறுத்தமட்டில் அவனுடைய மனதில் இயேசுவுக்கான தீர்ப்பை அவன் ஏற்கெனவே நிர்ணயித்துக்கொண்டான். மேலும், அதைச் செயல்படுத்த, அதாவது இயேசுவைக் கொலை செய்து போடுவதற்கான வாய்ப்பை மாத்திரம் வகைதேடிக் கொண்டிருந்தவனாகக் காணப்பட்டான். காய்பா வெளிவேஷமாகவும், பெயரளவில் பயபக்தியுள்ள மனுஷனாக/மதவாதியாகவும் இருந்தபடியினாலும், நீதிக்குப் பிரதிநிதியாகவும் காணப்பட்டப்படியினாலும் அவன்

இயேசுவின் மரணத்தை/கொலையை நீதியின் செயல்பாடு எனும் தோற்றத்தில், பொது ஜனங்களின் நன்மைக்கு அவசியம் எனக் காட்ட வேண்டிய கட்டாயத்தில் காணப்பட்டான்.

இயேசுவுக்கு எதிரான கூட்டத்தாருக்கு காய்பாவே கலகத் தலைவனாக இருந்திருக்க வேண்டும். காய்பாவும், அவனுடைய கூட்டத்தாருமே யூதாசிடம் பேரம் பேசினார்கள். இன்னுமாக, ஜனங்களால் சூழப்படாமல் தனிமையில் இயேசு இரவில் காணப்படுகையில், அவரைக் கைது செய்யத்தக்கதாக, யூதாசுடன் காய்பாவின் உடன் ஆசாரியர்களும், அவனுடைய அலுவலர்களும், அவனுடைய சேவகர்களுமே அனுப்பி வைக்கப்பட்டார்கள். இன்னுமாக, காய்பாவின் கட்டளைப்படியே நமது கர்த்தர் அவனுடைய மாமனாகிய அன்னாவிடம் முதலாவதாகக் கூட்டிச்செல்லப்பட்டிருக்க வேண்டும் என்றும் நாம் அனுமானிக்கின்றோம். காய்பாவின் மாமனாகிய அன்னா என்பவன், யூதர்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கையுடைய மனுஷனாக இருந்தான். இந்த அன்னா என்பவன், காய்பா பிரதான ஆசாரியனாகுவதற்கு முன்பு பிரதான ஆசாரியனாகக் காணப்பட்டான். மேலும், உரோமர்களால் அன்னாவுக்குப் பதிலாக காய்பா பிரதான ஆசாரியனாகப் பலவந்தமாக நியமிக்கப்பட்டிருப் பினும், யூதர் முறைபடி அன்னாவின் பணிக்கான காலம் இன்னும் முடிவுப்பெறவில்லை. இயேசு, அன்னாவிடம் அனுப்பட்டதற்கான காரணம், இயேசு கைது செய்யப்பட்டு, விசாரணை செய்யப்படுவதற்கான மேலிடத்திலான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கேயாகும்; மேலும் அன்னாவின் ஒப்பந்தம் வழி வரும் செல்வாக்கைப் பெற்றுக்கொள்வதற் கேயாகும்.

கைது செய்த குழுவானது அன்னாவிடம் வந்தபோது, அன்னா, இயேசுவிடம் அவருடைய போதனைகள், முதலியவைகள் குறித்துக் கேள்வி கேட்டானே ஒழிய, அதிகாரம் இல்லாதபடியினால் அவ்வழக்குக் குறித்து விசாரணை செய்வதற்கு முற்படவில்லை. அன்னாவினுடைய கேள்விகளுக்குப் பதிலளிக்க இயேசு மறுத்துவிட்டு, தாம் பேசினதைக் கேட்டவர்களிடம் கேட்கும்படிக்கு அன்னாவுக்கு அறிவுறுத்தினதில், இயேசு நீதிமன்றத்திற்குரிய அமைப்பின் முறையையே பின்பற்றினவராக மாத்திரம் காணப்பட்டு, கைதியை விசாரணை செய்யும் விஷயம் தொடர்பான பிரமாணத்தை அலட்சியம் பண்ணாத நடவடிக்கையை அன்னா கையாளுவதற்கு மெல்ல நினைப்பூட்டினார்/ யோசனை அளித்தார். அன்னா இயேசுவினிடத்தில் குற்றம் கண்டுப்பிடிக்காமல் (அ) அவரை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்காமல், இயேசுவைக் கட்டுண்டவராகக் காய்பாவினிடத்தில் அனுப்பி, இயேசுவைக் கைது செய்ததற்கான தனது ஒப்புதலை, செய்கையில் வெளிப்படுத்தினார். அதாவது, அவருடைய செய்கை பின்வரும் வார்த்தைகளை அறிவிப்பதுபோன்று இருந்தது; அதாவது, "இந்த மனுஷன் கைது செய்யப்பட வேண்டும் என்றும், இக்கைதி ஆபத்தானவன், அதாவது நம்முடைய கோட்பாடுகளுக்கும், அமைப்புகளுக்கும் எதிராக ஆபத்து விளைவிப்பவன் என்றும் நீ (காய்பா) கருதி, மேற்கொண்ட உன்னுடைய நடவடிக்கையை நான் அங்கீகரிக்கின்றேன்" என்பதாகும்.

முதன்மை வகிக்கும் அநேக யூதர்கள் மற்றும் விசேஷமாக ஆசாரியர்களின்

ஒத்துழைப்பையும், ஆதரவையும் காய்பா ஏற்கெனவே பெற்றுக்கொண்டிருந்தான். மேலும், இந்த ஆசாரியர்களும் காய்பாவின் "குழுவின்" அங்கங்களாகவும் காணப்பட்டார்கள். கைதியாகிய இயேசு, அன்னாவின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளையில்தான், ஆலோசனை சங்கத்தாரின் அங்கத்தார்களிடம், அவர்களின் சமாதானத்தைக் கலைத்துப்போட்டவர் கைது செய்யப்பட்டுவிட்டார் என்றும், அவரை விசாரணை செய்யும்படிக்கு வர வேண்டும் என்றும் அறிவிப்புக் கொடுக்கப்படத்தக்கதாக பல்வேறு திசைகளிலும் தூதுவர்கள் வேகமாக அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் அனுமானிக்கின்றோம். இயேசு காய்பாவிற்கு முன்பு கொண்டுவரப்படும்போது, சுமார் அதிகாலை இரண்டு மணியளவு காணப்பட்டிருந்திருக்க வேண்டும். சூரியன் மறைந்து போவதற்கும், சூரியன் உதிப்பதற்கும் இடையில் காணப்படும் காலப்பகுதியில் கைதி விசாரணை செய்யப்படுவதை யூதர்களுடைய பிரமாணமானது தடை செய்கின்றது. மேலும், இப்படியாகப் பிரமாணத்திற்கு எதிராக இவ்வேளைகளில் வழங்கப்படும் தீர்ப்பு, சட்டப்படி செல்லாததாகவும், சட்டத்திற்கு விரோதமானதாகவும் கருதப்படும். பிரதான ஆசாரியனோ, தான் ஏற்கெனவே தீர்மானித்திருந்த தீர்ப்பின்படி, கைதியை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கும் காரியத்தை முடிந்த அளவுக்கு வேகமாகச் செயல்படுத்த வேண்டும் என்றும், சூரியன் உதிப்பதற்குள் தனது இவ்வழக்கைத் தனக்குச் சாதகமாக கைக்குள் வைத்திருக்க வேண்டும் என்றும் ஆவலுடன் காணப்பட்டான். எப்படி இருப்பினும், இந்த விசாரணைகள் வெறும் நாடகம்தான். ஆயினும் சூரியன் உதிக்கும்போது, கூடும் ஆலோசனை சங்கத்தார் முன்பு, என்ன நிரூபணங்கள் வைக்க வேண்டும் என்று அறிய வேண்டியிருந்ததினால், காய்பா சட்டத்திற்கு விரோதமாகவும், உடனடியாகவும் இயேசுவை விசாரணை செய்ய ஆரம்பித்து, சாட்சிகளை அழைத்தான்.

இயேசு தம்முடைய மேசியாத்துவத்தைக் குறித்துத் தெரிவித்ததாக தன்னிச்சையாக சொல்லப்பட்டது என்பதில் ஐயமில்லை; சுவிசேஷபதிவுகளை வைத்துப் பார்க்கும்போது, பொது ஜனங்கள் மத்தியிலும், தம்முடைய தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மத்தியிலும்கூட, அவர் தம்மை வெளிப்படையாக மேசியா என்று அறிவிக்கவுமில்லை மற்றும் தம்முடைய வார்த்தைகளை மிகவும் காத்து அடக்கிக் கொண்டவராகவும் இருந்தார். பேதுருவோ முதலாவதாக, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமரனாகிய கிறிஸ்து (மேசியா)" என்று அறிக்கைப் பண்ணினார். இதற்கு இயேசு, பேதுரு உண்மையைச் சொன்னார் என்றும், இப்படிச் சொல்லுவதற்கு பேதுரு பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்பட்டுள்ளார் என்றும் ஒப்புக்கொள்ள மாத்திரமே செய்தார். ஆகவே, மேசியா தொடர்பான விஷயத்தில் காய்பா சாட்சியாளர்களைத் தேடினபோது, திருப்திகரமான சாட்சி அளிக்கக்கூடிய எவரையும் அவனால் கண்டுபிடிக்க இயலாமல் போயிற்று. முக்கியமான சாட்சி ஒன்றைத் தன்னால் கூற முடியும் என்று எண்ணி முன் வந்த ஒரு சாட்சியாளர், ஆலயம் தொடர்பான நமது கர்த்தருடைய வார்த்தைகளைத் தவறாய்த் திரித்து, சில காரியங்களைக் கூறினார். ஆனால், இந்தச் சாட்சியை உறுதி செய்துகொள்வதற்கு இரண்டாம் சாட்சியாளரை

அவர்கள் தேடினபோது, முதலாம் சாட்சியாளர் சொன்ன அதே காரியங்களைச் சாட்சியளிக்க நபர் இல்லாமல் போயிற்று. இப்படிப்பட்ட விசாரணைகளில் குறைந்த பட்சம் இரண்டு சாட்சியாளர்களாகிலும் இருக்க வேண்டும் என்பது யூதர்களின் பிரமாணமாக இருந்தது.

சாட்சியாளர்களைப் பெற்றுக்கொள்ளாததில், தன்னுடைய முயற்சிகள் தோல்வியடைய, கடுங்கோபம் அடைந்த காய்பா, வேறுவிதமான திட்டத்தை அதாவது, சட்டவிரோதமான திட்டத்தைக் கையாள தீர்மானித்தான். அதாவது, தனது கைதியாகிய இயேசு குற்றம் சாட்டப்படுவதற்கு ஏதுவான சில வார்த்தைகளைப் பேசத்தக்கதாக, கைதியை எரிச்சலூட்ட முற்படுவதே அவனுடைய திட்டமாகக் காணப்பட்டது. ஆகவே, காய்பா அநீதியான காரியத்தைக் கண்டு, கடுங்கோபம் மூண்டு, ஆவேசத்துடன் தான் இருப்பதுபோன்றும், மிகவும் கெடுதலான சாட்சியை தான் கேட்டு ஆவேசம் அடைந்தது போன்றும் தோன்றும்விதத்தில் எழுந்து நின்று, கைதியான இயேசுவை நோக்கி, அவருக்கு எதிராக கூறப்பட்ட சாட்சியை அவர் கேட்டாரோ என்று வினவி, தம்மைத் தற்காத்துக் கொள்ளும்படிக்கு அவர் ஏதேனும் ஒருவேளை சொல்ல விரும்புகின்றாரோ என்று கேட்டான். நமது கர்த்தர் எவ்வித பதிலும் கூறவில்லை. தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலும் அவர் அங்கு நிற்கவுமில்லை. மேலும் தம்மை பாதுகாத்துக்கொள்ள நினைத்திருந்தாலும்கூட, அங்கு அவர் எதிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள அவசியமுமில்லை; ஆலயம் தொடர்பான விஷயம் குறித்துக் கர்த்தர் பேசின விஷயங்களில் எவ்வித குற்றமுமில்லை; ஒருவேளை ஆலயம் தொடர்பாக அவர் பேசின விஷயங்களுக்குப் பன்னிரண்டு சாட்சியாளர்கள் சாட்சியளித்தாலும் கூட அதில் எவ்விதமான குற்றமும் கண்டுபிடிக்க முடியாது. காய்பா தோற்றுப்போனான், ஆனாலும் அவன் திறமைமிக்க மனுஷனாகக் காணப்பட்டப்படியினால், அவன் உடனடியாகத் தன்னுடைய தந்திரங்களை மாற்றிவிட்டு, இயேசு தம்மை மேசியா என்று கூறும் விஷயம் உண்மையா என்பதை அறிந்துகொள்ள விரும்பினதுபோன்று, "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்" என்று கூறி, இயேசுவை ஆணையின் கீழ்க் கொண்டுவந்தான் (மத்தேயு 26:63).

இக்கேள்விக்கான பதிலானது, தம்மைத் தேவதூஷணம் சொன்னதாக பழிச் சுமத்துவதற்குப் பயன்படுத்தப்படும் என்று நமது கர்த்தர் அறிந்திருந்தார்; கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் கூற வேண்டும் என்ற கட்டாயம் அவருக்கு இல்லை; எனினும், அவர் மரணத்தைத் தவிர்த்துவிடுவதற்கும் நாடவில்லை. அவர் தாம் பருகும்படிக்குப் பிதா தமக்குக் கொடுத்துள்ள பாத்திரத்தில் பானம் பண்ண வேண்டும் என்று ஏற்கெனவே தீர்மானத்துடன் காணப்பட்டார். ஆகவே அவருடைய பதில் மத்தேயு சுவிசேஷத்தின் படி, "நீர் சொன்னப்படிதான்"; அதாவது நீர் உண்மையைத்தான் சொல்லுகின்றீர் என்றும், மாற்கு சுவிசேஷத்தில், "நான் அவர் தான்", அதாவது நான் தேவனுடைய குமாரனாகிய மேசியா (மத்தேயு 26:64; மாற்கு 14:62) என்றுமுள்ள விதத்தில் காணப்படுகின்றது. இன்னுமாக இன்று, தாம் இங்கு இழிவாகக் கருதப்படுவதையும்,

எள்ளி நகையாடப்பட்டு விசாரணை செய்யப்படுவதைப் பார்த்துக்கொண்டிருப்பவர்கள், ஏற்றக்காலங்களில் தாம் தேவனால் கனப்படுத்தப்பட்டு, உன்னதமானவரின் வலதுபாரிசத்தில் வீற்றிருந்து, மாபெரும் நியாயாதிபதியாக, மேசியாவாக வானத்தின் மேகங்களின்மேல் வெளிப்படுவதை அடையாளங்கண்டுகொள்வார்கள் என்றும் கூறினார்.

காய்பா அவரைத் தேவதூஷணம் சொன்னதாகக் குற்றம் சுமத்தி, தீர்ப்பளிக்க வேண்டும் என்று தனக்குள் ஏற்கெனவே முடிவு பண்ணியிருந்த திட்டத்திற்கு, இயேசுவின் இவ்வார்த்தைகள் மிகவும் ஆதரவு தெரிவிக்கும் விதமாக இருந்தது. இதையே, காய்பாவும் எதிர்ப்பார்த்தான். ஆகவே, நீதியான கோபம் கொண்டது போன்றும், அவமதிப்பு நடந்தது போன்றும் காய்பா தன்னுடைய "சிம்லா" அல்லது மேல் அங்கியைக் கிழித்துக்கொண்டு தேவதூஷணம்! என்று கத்தினான். நாம் தேவதூஷணம் பேசினதைக் கேட்டோமே! என்று கத்தினான். பின்னர், இந்தக் கொலைப்பாதகத்திற்கு ஏற்கெனவே ஆதரவு அளித்த ஆலோசனை சங்கத்தின் அங்கத்தாரை நோக்கி, அவர்கள் இந்த நிரூபணத்தில் திருப்தி அடைந்துள்ளார்களா என்று கேட்டான். அவர்களும் ஏற்கெனவே அவர்களுக்குள் தீர்மானித்து வைத்திருந்தபடி, இவ்வழக்குத் தேவதூஷணம் பற்றினது என்றும், மிகவும் தெளிவாக உள்ளது என்றும், இயேசு மரணத்திற்குப் பாத்திரவான் என்றும் ஒப்புக்கொண்டார்கள்.

டாக்டர் சி.எச்.பிலாம்டிர் அவர்கள் இப்படியாகக் கூறுகின்றார் : "சாக்கிரடிஸ் அல்லது சக்யா மௌனி போன்று, நமது கர்த்தரையும் வேறு வழியின்றி ஒழுக்கத்தைப் போதிக்கும் ஒரு மாபெரும் போதகராக மாத்திரமே காண்கின்றவர்களுடைய கண்ணோட்டங்களுக்கு எதிராய்த் தீர்மானம் அளிப்பதற்கு, மேற்கூறப்பட்ட வேத வார்த்தைகள்தான் முழுச் சுவிசேஷ பதிவுகளிலேயே ஆற்றல்மிக்கதாய் இருக்கின்றது. இயேசுவின் வாழ்கையிலேயே ஆபத்தான சூழ்நிலை வந்தபோது, அதாவது உண்மையை அறிவிப்பது தவிர்க்கப்பட்டால், தமது ஜீவன் தப்புவிக்கப்படலாம் என்ற சூழ்நிலை வந்தபோது அவருடைய வார்த்தைகளானது, கர்த்தரை ஒழுக்கத்தைப் போதிக்கும் ஒரு மாபெரும் போதகராக மாத்திரமே பார்க்கிறவர்களின் கண்ணோட்டத்திற்கு அப்பாற்பட்டுள்ள தமது உரிமைகளை வலியுறுத்துகின்றதாகவும், இயேசு யார் என்று நம்பிக்கொண்டிருக்கும் மிகுந்த பக்தியுள்ள கிறிஸ்தவர்களின் சகல நம்பிக்கைகளுக்கும் இசைவாகவும் இருக்கின்றது." மிகவும் பக்தியுள்ள கிறிஸ்தவர்கள்தான், நமது கர்த்தருடைய வார்த்தைகளின் உருவத்தைத் திரித்துக் கொள்ளாமல் அப்படியே விசுவாசிக்கின்றவர்களாய் இருக்கின்றார்கள். அதாவது, உலகம் உண்டாகுவதற்கு முன்பு இயேசு பிதாவோடு இருந்தார் என்றும், பிதா அவரை உலகத்திற்கான மீட்பராக உலகத்திற்கு அனுப்பினார் என்றும், "அவர் பேசுகிறதுபோல ஒருவனும், ஒருக்காலும் பேசினதில்லை" என்றும், அவர் மற்ற மனுஷர்களிடமிருந்து வேறுபட்டவராக இருந்தார் என்றும், "அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய்" இருந்தார் என்றும், மனுஷனாகிய

கிறிஸ்து இயேசுவின் ஜீவன் மாசற்றதும், பிதாவிடத்திலிருந்து அவர் வந்தார் என்றும் விசுவாசிக்கின்றவர்களே மிகுந்த பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் ஆவார்கள். இயேசு, "நான்தான் பிதா, யேகோவா" என்று ஒருபோதும் தமக்கென்று உரிமை கொண்டாடிக்கொள்ளாத வார்த்தைகளை, சில குறைந்த பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் அவருக்காக உரிமை கொண்டாடி கூறிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், எல்லா யுகங்களில் உள்ள மிகுந்த பக்தியுள்ள கிறிஸ்தவர்களோ, இயேசுவுக்காக இப்படி உரிமை கொண்டாடி அறிவிப்பதைத் தவிர்த்துள்ளனர்.

"என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கின்றார்" என்றும், "பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றும் உள்ள நமது கர்த்தர் இயேசுவின் வார்த்தைகளை மிகுந்த பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றார்கள். பிதாவும், குமாரனும் ஒன்றாயிருக்கின்றார்கள் என்பது அவர்கள் ஒரு நபராகவே இருக்கின்றார்கள் என்பதைக் குறிக்காமல், ஒரே இருதயம், மனம், நோக்கம் உடையர்களாய் இருக்கின்றார்கள் என்பதையே குறிக்கின்றது என இவர்கள் உணர்ந்து/அறிந்து கொண்டு இருக்கின்றார்கள். இந்த ஒன்றாய் இருத்தலானது, இயேசு தம்முடைய ஜனங்களுக்காக ஜெபம் பண்ணுகையிலும் வெளிப்படுகின்றது; "நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்" (யோவான் 17:11). இன்னுமாக மிகுந்த பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் மனுஷனாகிய கிறிஸ்து இயேசு, பரம பிதாவின் பிரதிநிதி என்றும், குமாரனைக் (பிதாவின் தற்சொரூபமாய் இருப்பவரை) காண்கிறவன் பிதாவைக் காண்கிறான் என்றும், இதுவே காணமுடியாத தேவனை மனுக்குலம் பார்ப்பதற்கான ஒரே வழி என்றும், மனுஷர் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமானவரை, அவருடைய ஒரே பேறான குமாரன் மாத்திரம் அருமையாக மனுஷர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்றும் ஒப்புக்கொள்கிறவர்களாய் இருக்கின்றார்கள் (யோவான் 1:18).

புத்தியுள்ளவர்களும், சிந்திக்கிற ஆற்றலுள்ள, பக்தியுள்ள கிறிஸ்தவர்களோ, நமது கர்த்தர் இயேசு வேறு இடங்களில் பேசின வார்த்தைகளுக்கும், இங்குப் பேசின வார்த்தைகளுக்கும் முரண்பாட்டைக் காணாமல், இசைவையே பார்க்க முடியும். கர்த்தர் இயேசு தம்மைப் பரம பிதா என்று கூறினதாக, யூதர்கள் ஒரு கணம்கூட எண்ணிக்கொள்ளவில்லை. இது கேட்கப்பட்ட கேள்வி அல்ல. மேலும், யூதர்கள் மேசியாதான் பிதா என்று எண்ணாமல், மேசியா பிதாவின் பிரதிநிதியாக, தேவனுடைய குமாரனாகத்தான் இருப்பார் என்றே அவர்களும் கருதினார்கள். "இதோ, நான் என் தூதனை (ஊழியன்) அனுப்புகிறேன்" என்றே நாம் வாசிக்கின்றோம் (மல்கியா 3:1). இயேசு தேவதூஷணம் பேசினதாகக் கூறப்பட்டதற்கான காரணம், அவர் தம்மைப் பிதா

என்று கூறினார் என்று கருதப்பட்டதால் இல்லை, மாறாக அவர் தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறினதினாலேயே ஆகும். இதே குற்றச்சாட்டு முன்பொரு தருணத்திலும் அவர் மேல் சுமத்தப்பட்டது (யோவான் 10:29-36). அங்கு அவர் தம்மை தேவனுடைய குமாரன் என்று கூறிக்கொள்கின்றார் என்பதே குற்றம் என அவரைக் குற்றம் சாட்டினார்கள்/கூறினார்கள். இயேசு, தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறுவதின் மூலம் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கி, அதாவது பிதாவினுடைய சுபாவம் போன்ற சுபாவம் கொண்டவர் என்று கூறுகின்றார் என்றே அவர்களது குற்றச்சாட்டுக் காணப்பட்டது. அத்தருணத்தில் அவர்களுடைய சொல் புரட்டுதலுக்குப் பதில் கொடுக்கும் வண்ணமாக, சங்கீதத்தில் உள்ள வாக்கியங்களைக் கோடிட்டுக் காட்டினார்; அதாவது சுவிசேஷ யுகத்தின் சபையாகிய சகல கர்த்தருடைய ஜனங்களும், தேவனுடைய குமாரர்கள் என்று அழைக்கப்படும் காரியம் சங்கீதம் 82:6-ஆம் வசனத்தில் இடம்பெறுவதை அவர்களுக்குச் சுட்டிக் காட்டினார். மேலுமாக, விசுவாசத்தின் வாயிலாக, நீதிமானாக்கப்படுவதின் மூலமாக பிதாவிடத்தில் உறவிற்குள்ளாக வருகிறவர்களுக்கும் கூட, "தேவனுடைய குமாரர்கள்" என்ற பெயர் இலவசமாகக் கொடுக்கப்பட்டிருக்குமாயின், பிதாவுடன் முழு இசைவுடன் என்றென்றும் காணப்படும் தேவனுடைய குமாரனாகிய தாமும் அப்பெயரை உரிமையுடன் சூட்டிக்கொண்டார் என்றும் அவர்களுக்குச் சுட்டிக் காண்பித்தார்.

ஆலோசனை சங்கத்தாரின் இந்தக் கூட்டம் முடிந்த பிற்பாடு, அவர்கள் சூரியன் உதிக்கும் அளவு காக்கவேண்டியிருந்தது. விடியும்போது, ஆச்சாரமாக கூட்டம் நடத்தப்பட்டு, தேவ தூஷணம் என்னும் குற்றம் மீண்டுமாக உறுதி செய்யப்படும். இப்படிச் செய்வதின் மூலம் எல்லாம் சட்டப்பூர்வமாக நடந்தது போன்று காட்சியளிக்கப்படும் (மத்தேயு 27:1). இதற்கிடையில் நமது கர்த்தர் சுமார் மூன்று மணி நேரமளவும் கட்டப்பட்ட நிலையில் பிரதான ஆசாரியனுடைய அரண்மனையின் முற்றத்தில் நின்று கொண்டிருந்தார். இச்சமயத்தில்தான், கைதியான இயேசுவைத் திட்டி, ஏசி, பழிதூற்றி, புண்படுத்தி பிரதான ஆசாரியனின் சேவகர்கள், பெரிய ஸ்தானத்தில் இருந்து செயலாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கான தங்களது ஆதரவை வெளிப்படுத்தினார்கள். சிலர் அவர் மேல் துப்பினார்கள். சிலர் தங்கள் கைகளினாலும், கம்புகளினாலும் அவரை அடித்தார்கள். இப்படியாக, தங்கள் கீழ்த்தரத்தையும், குறுகிய மனப்பான்மையையும் வெளிப்படுத்தினார்கள். அவருடைய கண்களைக் கட்டி, அவரை அடித்து, அவரை யார் அடித்தார் என்று சொல்வதன் மூலம் அவர் தீர்க்கதரிசியா, இல்லையா என்று கேட்ட காரியமானது அவர்களுக்கு மிகவும் ரம்மியமான துன்புறுத்தும் முறையாகவும் சற்று நேரம் காணப்பட்டது. இப்பதிவுகள் நமக்குக் காட்டுவதை நாம் பார்க்கையில், இவைகள் அனைத்தையும் நமது கர்த்தர் முறுமுறுக்காமல் சகித்துக்கொண்டார். இவைகள் அனைத்தையும் இயேசு, தமது பிதா தமக்காக ஆயத்தம் பண்ணின பாத்திரத்தின் ஒரு பாகமாக ஏற்றுக்கொண்டார். இதைத்தான் அப்போஸ்தலர்,"ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில்

சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள். பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்துநிற்கவில்லையே" என்று குறிப்பிடுகின்றார் (எபிரெயர் 12:3, 4). பிதா நமக்கென்று ஆயத்தம் பண்ணின பாத்திரத்தை நாம் ஒருவேளை ஏற்க மறுப்போமானால், அப்பாத்திரமானது அநேகமாக மிகுந்த கசப்பான காடியுடன் பின்னர் நம்மிடத்தில் மீண்டும் வரலாம். ஒருவேளை அதை நாம் முற்றிலும் தவிர்த்துவிட்டால், நமது கர்த்தரோடு கனம், மகிமை மற்றும் அழியாமையில் நாம் பங்குக்கொள்ளத்தக்கதாக நம்மை ஆயத்தம் பண்ணும் நோக்கத்திற்காக இப்போது அனுமதிக்கப்படும் சோதனையான அனுபவங்களை நாம் தவிர்த்துவிட்டால், நாம் இவைகளில் கர்த்தரோடு கூடப் பங்கடைய முடியாது.

ஊழியக்காரன், கர்த்தருக்கு மேலானவன் அல்ல. மேலும், போதகரையே அவர்கள் அடித்து, துப்பி, குத்தினார்கள் என்றால், போதகரின் ஊழியர்களும் இதேவிதமான அனுபவங்களுக்குள் கடந்து போகும்போது, ஆச்சரியம் கொள்ளவோ அல்லது முறுமுறுக்கவோ கூடாது. மேலும், இப்படிப்பட்டவைகள் அவர்களுக்குச் சம்பவிக்கையில் அவர்களும் கர்த்தரைப்போன்று, அவைகளை, பிதா ஆயத்தம் பண்ணின பாத்திரமாகக் கருதி, முறுமுறுக்காமல் சகிக்க வேண்டும். இன்னுமாக, கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தனைகளில் சிலவற்றை அனுபவிப்பதற்கு, தாங்களும் பாத்திரவான்களாகக் கருதப்பட்டதை எண்ணி நன்றி செலுத்த வேண்டும். கொலொசேயர் 1:24; 2 தீமோத்தேயு 1:8; 2:3; யாக்கோபு 5:11.

"உங்களுக்கு வரும் துன்பங்கள் நீங்கள் தீமை செய்பவராகவோ, பிறர் காரியங்களில் தலையிடுபவராகவோ இருப்பதால் வந்தவையாய் இருக்கக்கூடாது" (திருவிவிலியம்) என்று அப்போஸ்தலர் வலியுறுத்துகின்றார் (1 பேதுரு 4:15). ஒருவேளை நம்முடைய சொந்த தவறுகளினிமித்தம் நம்மீது பாடுகள் வருமாயின், நாம் அதில் தேவனை மகிமைப்படுத்த முடியாது, மாறாக வெட்கப்படவே வேண்டும். ஆனால், ஒருவன் கிறிஸ்தவன் போன்று சத்தியத்தினிமித்தமாகவும், நீதியினிமித்தமாகவும் பாடுபடுவானாகில், அவன் வெட்கப்பட வேண்டியதில்லை. இன்றைய காலங்கள் அறிவுடைய நாட்களாக இருக்கிறபடியினாலும், இயேசு நன்கு பிரபலமானவராய் இருக்கிறபடியினாலும் இப்பொழுது பாடுகள் வராது என்று சிலரால் வலியுறுத்தப்படுகின்றது. "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று அப்போஸ்தலர் கூறுவது இன்றும் உண்மையாகதான் உள்ளது. இன்று இயேசுவின் நாமத்தைத் தரித்துக்கொண்டிருக்கும் அநேகருக்கு இயேசுவை யார் என்றும், பிதாவை யார் என்றும் தெரியாமல் இருக்கின்றார்கள். மேலும், இவர்களிடத்தில் அவருடைய ஆவியும் இல்லை. இவர்கள் அன்றைய நாட்களில் மோசேயின் பெயரில் சுகம் கொண்டு, நியாயசாஸ்திரிகளாக மோசேயின் ஆசனத்தில் இருந்தும், மோசே மற்றும் தேவனுடைய பிரமாணங்களை அறியாமல், புரிந்துகொள்ளாமல் காணப்பட்டவர்களுக்கு ஒப்பாவார்கள் (1 பேதுரு 4:15, 16; 2 தீமோத்தேயு 3:12).

# அசட்டைப் பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும்

## மத்தேயு 26:57-68

"அவர் அசட்டைப் பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்ட வருமாய் இருந்தார்" என்று ஏசாயா தீர்க்கதரிசி எழுதியுள்ளார்" (ஏசாயா 53:3). கர்த்தரைப் பற்றின அறிவிற்கு வந்தவர்களுக்கும், தெய்வீக வார்த்தையின்படியான கண்ணோட்டத்தின் படி மனிதனைப் புரிந்துகொள்ளும் நிலைக்கு வந்தவர்களுக்கும், கர்த்தரின் மரணம் தொடர்பான அனைத்துச் சம்பவங்களும் எவ்வளவு விநோதமாகத் தோன்றியிருக்கும். இப்பொழுது நாம் அச்சம்பவங்களைப் பார்க்கப்போகிறோம். அதாவது, நாமும் அச்சூழ்நிலைகளில் காணப்பட்டு, அவைகளைப் பார்த்துக் கொண்டிருப்பது போன்று அச்சம்பவங்களை நாம் பின் தொடரப்போகின்றோம். இன்னுமாக நம்முடைய கர்த்தரைச் சூழ்ந்து காணப்பட்ட பிரதான பாத்திரங்களினால் உண்மையான சூழ்நிலை/நிலைமை என்ன என்பதைப் புரிந்துகொள்வதற்கு அவர்களுக்குக் கடினமாக இருந்தது என்றும் நாம் உணர்ந்து கொள்கின்றோம். மேலும், இவர்களிடமிருந்து தற்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம் பக்கமாக நாம் திரும்பிப் பார்க்கும்போது, சில படிப்பினைகளை நாம் எடுத்துக் கொள்ளலாம் மற்றும் தற்போதைய அறுவடை காலம் தொடர்புடைய மாபெரும் மற்றும் முக்கியமான விஷயங்களுடன் நாமும் தொடர்புடையவர்களாய் இருக்கின்றோம் என்றும், உண்மையான நிலை என்ன என்று நம்மால் புரிந்துகொள்ள முடியாததாய் இருக்கும் மாபெரும் நிகழ்வுகளின் அருகாமையில் காணப்படுகின்றோம் என்றும், நாம் மிகவும் கவனமாய் இருந்து சோதனைக்குள் விழுந்துவிடாதபடிக்கு நாம் ஜெபத்துடனும், விழிப்புடனும் இருக்க வேண்டும் என்றும் உணர்ந்து கொள்ளலாம். நம்முடைய நிலையற்ற/இடறல்கள் நிறைந்த நிலையைப் பார்க்கையில், இப்பாடத்தில் நாம் பார்க்கப்போகிறவர்களுடைய கண்டனத்திற்குரிய நடவடிக்கைகள் மீது நமக்கு அனுதாபமே ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

இயேசுவும், சீஷர்களும் கெத்செமனே தோட்டத்தின் வாசலண்டைக்கு வந்தார்கள். இரண்டு பட்டயங்களில் ஒன்றை வைத்திருந்த பேதுரு, தனது ஆண்டவரைப் பாதுகாக்கும்படிக்கு அதனை பயன்படுத்த ஆரம்பித்தார். முதல் வெட்டாக பிரதான ஆசாரியனுடைய அரண்மனை ஊழியர்களில் ஒருவனாகிய மல்குஸ் என்பவனின் காதை வெட்டினார். இயேசு அவர்களிடம் பட்டயம் எடுத்துக்கொள்ளும்படி சொன்னபோது, அவர்களிடத்தில் இரண்டு பட்டயம் ஏற்கெனவே உள்ளது என அவர்கள் பதிலை அளித்தபோது, "இது போதும்" என்று இயேசு கூறினார். பட்டயம் வைத்திருக்கின்றோம் என்ற அவர்களுடைய பதிலானது, சீஷர்கள் கர்த்தரைப் பாதுகாப்பதற்கு எனப் போராட விருப்பத்துடன் இருக்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்தினது. இவ்வெளிப்படுத்தல், போதுமானதாய் இருந்தது. "பட்டயத்தை

உறையிலே போடு” என்ற ஆணை உடனடியாக இயேசுவினிடமிருந்து வந்தது. காது வெட்டப்பட்டதன் மூலமாக வந்த வாய்ப்பை, இயேசு காதை சொஸ்தப்படுத்தி தம்முடைய சத்துருக்களுக்குத் தமது இரக்கத்துடன் கூடிய பெருந்தன்மையை வெளிக்காட்டுவதற்குப் பயன்படுத்தினார். பட்டயத்தை எடுக்கின்றவன் பட்டயத்தினால் மடிவான் என்பதிலுள்ள படிப்பினையைச் சீஷர்கள் முழுமையாகக் கற்றுக் கொண்டார்கள். ஆகவேதான், பிற்பாடு எங்கும் அவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யும் விஷயத்தில் வன்முறையைக் கையாண்டதாகப் பதிவு செய்யப்படவில்லை. கர்த்தருடைய அனைத்துப் பின்னடியார்களும் இப்படிப்பினையைக் கற்றுக்கொண்டு, செயல்முறைப்படுத்தினால் எவ்வளவு நலமாயிருக்கும்.இப்படிப்பினையைச் சில பின்னடியார்கள் புறக்கணித்த காரியமானது, கர்த்தருடைய போதனைகளுக்கு அவமரியாதை உண்டுபண்ணும் விதத்திலும், அவருடைய உண்மையான நோக்கத்திற்குப் பாதிப்பு உண்டுபண்ணும் விதத்திலும், ஆனால் பெயர்க் கிறிஸ்தவ மண்டலம் மற்றும் அதன் திரளான களைகளுக்கு அனுகூலம் உண்டுபண்ணும் விதத்திலும் வரலாற்றின் பக்கங்களைக் களங்கப்படுத்தியுள்ளது. கர்த்தருடைய அனைத்து ஜனங்களும் இப்படிப்பினையைத் தங்கள் இருதயத்திற்குள் கொண்டு செல்கிறவர்களாகக் காணப்பட்டு, “சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்” என்ற கர்த்தருடைய வார்த்தைகளை நினைவில் வைத்துக்கொள்கிறவர்களாகவும் இருக்க வேண்டும் (மத்தேயு 5:9) . நமது போதகரின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நாம் ஒருபோதும் பட்டயத்தையும், பூமிக்குரிய வல்லமைகளையும் பயன்படுத்துகின்றவர்களாய் இருக்கக்கூடாது. கர்த்தரிடத்தில் போதுமான வல்லமை உள்ளது. மேலும், வல்லமை செயல்படுத்துவதற்கான வேளை வரும்போது, அவரே இந்த மாபெரும் வல்லமையைத் தமது கரத்தில் எடுத்துக் கொள்வார். மேலும், நீதியின் பட்டயம் உறையிலிருந்து எடுக்கப்பட்டுப் பயங்கரமான உபத்திரவக்காலத்தை உண்டுபண்ணும். ஆனால், இவைகளெல்லாம் அதற்குரிய ஏற்றக்காலத்தில் நடைப்பெறும். மேலும், பூமியின் விஷயங்கள் மீதான பொறுப்பைக் கர்த்தர் எடுத்துக்கொள்வார். மேலும், இந்த அனுபவங்கள் வாயிலாக உண்டாகும் படிப்பினைகள் ஜனங்களுக்குப் பாதிப்பை உண்டுபண்ணுகிறதாய் இராமல், நன்மையாகவே காணப்படும். கர்த்தருடைய ஜனங்கள் இப்பொழுது பயன்படுத்த வேண்டிய ஒரே பட்டயம் ஆவியின் பட்டயமாகும். அதாவது, தேவனுடைய வார்த்தையாகிய பட்டயமேயாகும். மேலும், வார்த்தையின் அழுத்தத்தினாலோ அல்லது கடுஞ்சொல்லினாலோ அல்லாமல் அல்லது தேவனுடைய வார்த்தையாகிய பட்டயத்தைப் பயன்படுத்தும் நபரின் கோப வெளிப்படுத்தல்களினாலுமல்லாமல், இப்பட்டயம் அதற்குரிய கூர்மையினாலும், ஊடுருவும் வலிமையினாலும் செயல்படுவதற்கு நாம் விட்டுவிட வேண்டியவர்களாய் இருக்க வேண்டும். இப்பட்டயத்தைப் பயன்படுத்துபவர்கள் அன்பில் சத்தியத்தைச் சொல்ல வேண்டும் என்று வழி காட்டப்படுகின்றனர். இவ்விதமாய் அன்பில் சொல்லப்படும்போது, சத்தியத்தினால் அதன் வேலையை அதற்குரிய வழியில் செய்ய முடியும்.

# எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்

கர்த்தர் கைது செய்யப்பட்ட போது, சீஷர்கள் அனைவரும் அவரைத் தனியே விட்டு ஓடிப்போன காரியத்தை நாம் பார்க்கும்போது, சீஷர்கள் மிகவும் கோழைத்தனமாக நடந்து கொண்டதுபோன்று தோன்றலாம். ஆனால், அவர்கள் நமது கர்த்தருடைய வார்த்தையின்படியே போனார்கள் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். "என்னை தேடுகிறதுண்டானால் இவர்களைப் போகவிடுங்கள்" என்று கர்த்தர்தான் அதிகாரிகளிடம் கூறினார் (யோவான் 18:8). தேசத்தின் சட்டத்திற்கும், அரசியல் நீதிமன்றத்திற்கும் பிரதிநிதித்துவம் வகிக்கும் பிரதான ஆசாரியனின் கரங்களில் கர்த்தர் சிக்கின பிற்பாடு, சீஷர்கள் தங்களைக் கொண்டு கர்த்தருக்கு எவ்விதமான பிரயோஜனமில்லை என்றும், இந்தப் பிரதான ஆசாரியர்கள் இயேசுவுக்கு எதிராக கெடுதல் விளைவிக்கக்கூடியவர்கள் என்றும் சீஷர்கள் உணர்ந்திருந்தனர். "இவர்களைப் போகவிடுங்கள்" என்ற இயேசுவின் வார்த்தைகளைச் சீஷர்கள் கர்த்தரிடமிருந்து வந்த கட்டளை என்றுகூட எடுத்திருக்கலாம். இன்னும் சொல்லப்போனால் அவர்கள் குழம்பிப் போயிருந்தார்கள். அவர்கள் இயேசுவோடு ஒட்டிக்கொண்டிருந்தபோது, வித்தியாசமானக் காரியங்களையே அவரிடத்தில் எதிர்ப்பார்த்தவர்களாக இருந்தார்கள். அவர் (இராஜாவாக) உயர்த்தப்படுவார் என அவர்கள் எதிர்ப்பார்த்த நிலையிருந்தபோது, அவரோ தாம் சிலுவையில் அறையப்படுவதைக்குறித்தும் பேசிக்கொண்டிருந்தார், துக்கத்துடன் இருந்தார், வேதனையுடன் இருந்தார். இப்பொழுதோ, அவர் கைதும் செய்யப்பட்டுவிட்டார். அனைத்தும் குழப்பமாகவும், சோர்வை உண்டாக்குவதாகவும் சம்பவித்தது. மேலும், முற்றிலும் ஏமாற்றம் அடைந்தவர்களாக அவர்கள் அநேகமாக தங்கள் வீடுகளுக்குத் திரும்பியிருக்க வேண்டும். பேதுருவும், யோவானும் மாத்திரம் தொலை தூரத்தில் அவரைப் பின்தொடர்ந்து போனார்கள். பிரதான ஆசாரியனுடைய அரண்மனைக்கும், முற்றத்திற்கும் அவர்கள் வந்த பிறகு இயேசு முதலாவதாக வயதில் மூத்தவராகக் காணப்பட்ட ஆசாரியனாகிய அன்னாவுக்கு முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார். சிறிது நேரம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். பின்னர் இவருடைய மருமகனும், அதிகாரப்பூர்வமான ஆசாரியனாகவும் காணப்பட்டவராகிய காய்பாவினுடைய வீட்டு முற்றத்திற்கு இயேசு அனுப்பி வைக்கப்பட்டார். இயேசு அன்னாவுக்கு முன்பு கொண்டு போகப்பட்ட காரியமானது, அன்னாவுக்கு மரியாதையளிக்கும் விதத்தில் மாத்திரமே செய்யப்பட்டது. மற்றபடி காய்பாதான் இயேசு கைது செய்யப்படுவதற்குரிய காரணமாக இருந்தார். மேலும் இந்தக் காய்பா, யூதர்களுடைய மூப்பர்களில் சிலருடன் இயேசுவுக்கு எதிராக என்ன குற்றச்சாட்டுகளைக் கொண்டுவரலாம் என்ற விதத்தில், அவருடைய விசாரணைக்கான ஆயத்தமாக அவரை விசாரிக்கும்படிக்குக் காத்துக் கொண்டிருந்தார். (பிரமாணத்தின்படி அவரைக் காலையிலேயே விசாரணை செய்யலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கவில்லை. ஆகவே, சட்டத்திற்கு எதிராக இரவில் நிகழ்த்தப்பட்ட இந்த விசாரணையே அவர்கள் செய்த உண்மையான

விசாரணையாகும். பிலாத்து இயேசுவை 'விசாரணை செய்து', அவருக்கு மரணத்தண்டனை அளித்துவிட வேண்டும் என்பது அவர்களுடைய எண்ணமாக இருந்தாலும், அவர்கள் பிலாத்துவினிடத்தில் தாங்கள் இயேசுவை சட்டப்பூர்வமாக குற்றவாளியென்று தீர்த்துள்ளதாக கூறினார்கள்).

## பொய்ச் சாட்சிகளைத் தேடுதல்

இயேசுவைக் குறித்தும், அவருடைய போதனைகள் குறித்தும், அவருடைய வல்லமையான கிரியைகள் குறித்தும் பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும் அதிகமாகத் தெரிந்து வைத்திருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. இயேசுவின் கடைசி அற்புதங்களில் ஒன்றாகிய லாசருவை மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்பண்ணின சம்பவமானது, எருசலேமுக்குள் சம்பவித்தப்படியினால், இவ்விஷயம் வேதபாரகர் மற்றும் பரிசேயரின் ஆவேசத்தைக் கிளப்பிவிட்டது. ஆகவே, இயேசுவைக் கொன்றுபோட்டுவிட வேண்டும் என்ற தீர்மானத்திற்குள் வந்தார்கள். ஏனெனில், இப்படிப்பட்ட அற்புதங்களை இன்னும் கொஞ்சம் இயேசு பண்ணினால் ஜனங்கள் முற்றும் முழுமையாக அவர் பக்கம் போய்விடுவார்கள் என்றும், ஜனங்கள் மீதான தங்கள் ஆதிக்கம் தகர்ந்துபோய்விடும் என்றும் அஞ்சினார்கள். இப்பொழுது இயேசு அவர்கள் கைகளுக்கு அகப்பட்டுவிட்டார். ஜனங்களுக்குத் தெரியாமலும், எவ்விதமான தொந்தரவுகள் கிளறிவிடப்படாமலும் இயேசுவைக் கைது செய்துவிட்டனர். அவரைக் கொன்றுபோட்டுவிட வேண்டும் என்ற கொலைப்பாதக எண்ணம் இன்னமும் அவர்களிடத்தில் காணப்பட்டது. அவரை எப்படிக் கொன்று போடலாம் என்ற கேள்விதான் அவர்களிடம் எழும்பினதேயொழிய, நீதியின்படி எப்படிச் சேவை புரியலாம் என்ற கேள்வி அவர்களுக்குள் காணப்படவில்லை. இன்னுமாக, நீதி மற்றும் நியாயப்பிரமாணத்திற்குப் பிரதிநிதிகளாக இருக்கும் அவர்கள், நீதியின் நிபந்தனைகளுக்கு ஒத்துப்போவது போன்று எப்படிக் காண்பிக்க வேண்டும் என்றும், அதேசமயத்தில் தங்களுடைய இருதயங்களில் காணப்படும் கொலைப்பாதகத்தை எப்படி நிறைவேற்றுவது என்றும்தான் அவர்களுக்குள் கேள்வி காணப்பட்டது. ஆகவேதான், அவர்கள் பொய்ச் சாட்சிகளைத் தேடினார்கள் என்று வாசிக்கின்றோம். போதகரைப் பற்றி அறிந்தவைகளைக் கூறும் உண்மை சாட்சிகளை அவர்கள் தேட விரும்பவில்லை. மாறாக அறியாமையினாலோ, போதகரைத் தவறாகப் புரிந்து கொண்டதினாலோ அல்லது பிரதான ஆசாரியர்களின் ஆதரவை/தயவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பி திட்டவட்டமாக கர்த்தரையும், அவருடைய போதனைகள் முதலானவைகளையும் தவறாய்ப் பேசுகின்ற பொய்ச் சாட்சிகளையே அவர்கள் தேடினார்கள். ஆனால், அவர்களால் ஒருவரையும் கண்டுபிடிக்க முடியவில்லை. பிரதான அதிகாரிகள் தவிர மற்றபடி அவ்வதிகாரிகள் தொடர்புடைய எவரும் நமது கர்த்தருடைய போதனைகளைத் தவறாய்ப் புரிந்துகொள்ளவில்லை என்பதும், கர்த்தருடைய போதனைகளைத் தவறாய்ச் சாட்சி பகரவும் விரும்பவில்லை என்பதும் பாராட்டத்தகுந்த விஷயமாகும். இறுதியாக, ஒருவேளை ஆலயம் அழிக்கப்பட்டால் அதனை தம்மால் மூன்று நாளுக்குள் எழுப்பிவிட முடியும் என்று

இயேசு கூறினதைக் கேட்டோம் என்று சொல்லிய இரண்டு சாட்சிகளைக் கண்டுபிடித்தனர். இது தவறான சாட்சியல்ல, இயேசு பேசின வார்த்தைகளை இந்தச் சாட்சிகள் புரிந்துகொண்ட அர்த்தத்தில்தான் பிரச்சனை; கேட்டவர்களிலும் பெரும்பாலானோர் இப்படியாகவேதான் எடுத்துக்கொண்டிருந்தார்கள். பிற்பாடு பரிசுத்த ஆவியின் வெளிச்சத்தினால் இயேசு இங்குத் தமது சரீரத்தைத்தான் ஆலயமாகக் குறிப்பிட்டார் என்று அப்போஸ்தலர்கள் புரிந்துகொண்டார்கள். ஆகவே, அறியாமையின் காரணமாக இந்த இரண்டு சாட்சிகள் தாங்கள் இயேசுவுக்கு எதிராக சாட்சிக் கூறினோம் என்றும், தாங்கள் இயேசுவுக்குக் களங்கம் ஏற்படுத்தும் சாட்சியைக் கூறிவிட்டோம் என்றும், இயேசுவினிடத்தில் தற்பெருமை அடித்துக்கொள்ளும் ஆவியும், ஆலயத்தின் மகத்துவத்தையும், மேன்மையையும் அலட்சியப்படுத்தும் தன்மையும் வெளிப்பட்டதற்கானச் சாட்சியைக் கூறுகின்றோம் என்றும் இவர்கள் எண்ணிக் கொண்டாலும், இந்த இரண்டு சாட்சிகளும் பொய்ச் சாட்சிகள் என்று குற்றம் சாட்டப்பட முடியாது. கர்த்தருக்கு எதிராக ஏதாகிலும் சாட்சியைக் கொண்டுவரலாம் என்ற தன்னுடைய எடுத்த பிரயாசம் தோல்வியடைந்து விட்டது என்று பிரதான ஆசாரியன் உணர்ந்துகொண்டான். ஆனாலும், தன்னுடைய இந்தத் தோல்வியை அங்கிருந்த ஜனங்கள் அறிந்துகொள்ள வேண்டுமென அவர் விரும்பவில்லை. ஆகவே, இச்சாட்சி மிகவும் இன்னலுக்குரிய சாட்சியாக தனக்குத் தோன்றியதுபோல் காட்டிக்கொண்டு, அநியாயத்தைக் காண்பதினால் உண்டாகும் கோபம் தனக்கும் எழும்பியதுபோன்று இயேசுவை நோக்கி, அவருடைய செவிகளில் இந்தச் சாட்சி விழுந்ததா இல்லையா? என்றும், இச்சாட்சி தவறென நிரூபிக்க அவரிடம் சான்று ஏதேனும் உள்ளதா? அதாவது, சாட்சியை அவரால் தவறு என்று நிரூபித்துக் காட்டமுடியவில்லையோ? என்று கேட்டார். இயேசு ஒன்றும் பேசவில்லை. இரண்டு சாட்சிகளும் அவ்வார்த்தைகளை மீண்டும் மீண்டுமாகக் கூறிக்கொண்டிருந்தாலும் கூட, எந்தப் பிரமாணமும் அவரைக் குற்றஞ்சாட்டுவதற்கு ஏதுவாக, அவ்வார்த்தைகளில் ஒன்றும் இருக்கவில்லை.

## "நீர் கிறிஸ்துவா?"

ஆலயம் தொடர்பான கேள்வியில் இயேசுவை விவாதம் பண்ண வைத்து, அப்படியாக அவர் பேசும் வார்த்தைகளில் எதையாகிலும் குற்றம் என்று தீர்த்துவிடலாம் என்று முயற்சித்தப்போது, இயேசுவை விவாதம் பண்ணும் நிலையில் கொண்டுவர முடியாமற்போனதால் குற்றம் சாட்டத்தக்கதான வார்த்தைகள் அடங்கிய பதிலை இயேசு வழங்கத்தக்கதாக ஒரு முன்னணி வகுக்கும் கேள்வியை மிகுந்த பயபக்தியுடன் இயேசுவிடம் கேட்க வேண்டும் என்று பிரதான ஆசாரியன் தனக்குள்ளாகவே எண்ணிக் கொண்டான். "நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவோ (மேசியாவோ)" என்பதை எங்களுக்குச் சொல்லும் என்பதே இயேசுவின் முன்பு வைக்கப்பட்ட கேள்வியாகும். இயேசு, தாம் மேசியா என்று தற்பெருமை அடித்துக் கொண்டிருக்கவில்லை என்றும், அமைதியுடன் தம் வேலையைச் செய்துகொண்டு

கடந்துபோய்க் கொண்டிருந்தார் என்றும், நன்மை செய்தும், ஜனங்களுக்குப் போதித்துக் கொண்டும் இருந்தார் என்றும், "இம்மனுஷன் பேசினதுபோல் வேறு எவரும் பேசினதில்லையே" என்று சாட்சி பெறத்தக்கதாக இவருடைய கிரியைகள் காணப்பட்டது என்றும், இயேசு தம்மை அனுப்பினவருடைய வேலையைச் செய்து கொண்டிருக்கின்றார் என்றும், ஆகவே இவர் மேசியா என்றும் காய்பாவுக்கு அநேகமாகத் தெரிந்திருக்க வேண்டும். இயேசு, தாம்தான் மேசியா என்று ஒப்புக்கொள்வதன் மூலம் தம்மைத்தாமே குற்றவாளியாக இங்கு ஆக்கிக்கொள்வாரா அல்லது இல்லையா என்பதே கேள்வியாக இருந்தது. ஒருவேளை, தாம்தான் மேசியா என்பதை ஒப்புக்கொள்ள இயேசு மறுத்திருப்பாரானால், அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக் கண்டுபிடிக்க வேறு எந்த வழிதான் காணப்பட்டிருக்கும்? ஆனால், இயேசு இக்கேள்விக்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. அவர் ஒருவேளை அமைதியாக நின்றிருந்திருப்பாரானால் அது அவர் தாம் மேசியா இல்லையென்று மறுதலிப்பதற்கும், சத்தியத்தை மறுதலிப்பதற்கும், அத்தேசத்தின் பிரதான ஆசாரியனுக்கு அறிவையும், அச்சம்பவம் தொடர்பான பொறுப்பையும் வெளிப்படுத்த மறுதலிப்பதற்கும் சமமாகிவிடும். ஆசாரியன் அத்தேசத்திற்கு/ஜனங்களுக்குத் தலைவனாக இருக்கின்றபடியினால், இயேசு மேசியா என்று அவர் அறிந்துகொள்வது எல்லாவிதத்திலும் அவருக்கு அவசியமே. ஆகவே நமது கர்த்தர், "நீர் சொன்னபடியே" என்று பதிலளித்தார். அதாவது, நீர் சொன்னது உண்மை என்று நான் ஒப்புக்கொள்கின்றேன் அல்லது நான் தேவனுடைய குமாரனாகிய மேசியாதான், இன்னுமாக மனுஷக்குமாரன் வல்லமையின் வலது பக்கத்தில் அமர்ந்தவராக மகிமையோடு வானத்தில் வருவதை நீங்கள் இனிமேல் காண்பீர்கள் என்ற விஷயத்தையும் நான் உனக்கு உறுதியளிக்கின்றேன் என்ற விதத்தில் பதிலளித்தார்.

மற்ற இடங்களில் பேசினதுபோல இங்கும் நமது கர்த்தருடைய வார்த்தைகள் சுருக்கமாகவே உள்ளது. இச்சமயத்தில் அதிலும் இப்படிப்பட்ட சூழ்நிலையின் போது, அங்கிருந்த ஜனங்களிடம் எதிர்க்காலத்திற்குரிய தெய்வீகத் திட்டத்தை விவரித்துக்கூறுவது, கர்த்தருடைய நோக்கமாகவும் இருக்கவில்லை. மேலும், அப்படிக் கூறுவதும் சரியாக இருந்திருக்காது. "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்" (சங்கீதம் 25:14). ஆகவே, நமது கர்த்தர் இப்படியாகக் கூறவில்லை: "என்னை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்போகிறீர்கள், இந்த நாளில் நான் இரண்டு கள்வர்கள் மத்தியில் சிலுவையில் அறையப்படுவேன். நான் மூன்றாம் நாளில் உயிரோடு மீண்டுமாக எழுந்திருப்பேன். அதற்குப் பிற்பாடு நாற்பது நாட்கள் கழிந்த பின்னர் நான் பிதாவினிடத்திற்கு ஏறிப்போவேன். பின்னர் என்னுடைய பரிசுத்த ஆவியை நான் பெந்தெகொஸ்தே நாள் அன்று அனுப்புவேன். ஆவிக்குரிய இராஜ்யத்திற்குரிய வேலைகள் ஆரம்பமாகும். முழு உலகிலும் சபை ஜனங்கள் தெரிந்தெடுக்கப்படும் வேலை நடைபெறும். சபையின் எண்ணிக்கையிலுள்ள அங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், நான் வல்லமையிலும், மகா மகிமையிலும் மீண்டும் இரண்டாம் வருகையில் வருவேன். அப்போது உங்களால் நான்

விசாரிக்கப்படுகிறவராக வராமல், உங்களுக்கு நீதிபதியாகவும், முழு உலகத்திற்கு இராஜாவாகவும், அதிகாரியாகவும், முழு அறிவு மற்றும் முழு ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் அடங்கிய ஆயிரம் வருஷம் அரசாட்சியின் ஆசீர்வாதங்களை ஒவ்வொரு சிருஷ்டிகளுக்கும் அருளத்தக்கதாகவும் நான் வருவேன்.” இயேசு எதிர்கால தெய்வீகத் திட்டத்தை விவரித்திருக்க வேண்டுமானால் இப்படித்தான் விவரித்திருக்க வேண்டும். ஆனால், இப்படியாக அவர் கூறவில்லை. நமது கர்த்தருக்கே இவ்விஷயங்கள் அனைத்தும் தெரியும். ஆனாலும், இவைகளைச் சொல்வதற்கு அன்று ஏற்றவேளையாக இருக்கவில்லை என்பதை நம்மால் கர்த்தருடைய வார்த்தைகளிலிருந்து புரிந்துகொள்ள முடிகின்றது.

இவ்வுண்மைகள் தொடர்பான எத்தனை படிப்பினைகள் இங்கு நமக்குக் காணப்படுகின்றது. நாம் ஏதாகிலும் ஒரு காரியத்தைக் குறித்துத் தகவல்கள் தேடிக்கொண்டிருந்தால் அவ்விஷயத்தில் நாம் முற்றிலும் நேர்மையுடனும், முற்றிலும் நியாயத்துடனும் இருக்க வேண்டும்; இன்னுமாக, ஒன்றை/ஒருவரை தவறாய்க் காட்டுவதன் மூலம் எவ்வளவுதான் நன்மைகள் உண்டாகும் என்று நமக்குத் தோன்றினாலும் ஒன்றையும்/ஒருவரையும் தவறாகக் காட்டுவதற்கான வாய்ப்புகளை நாம் தேடக்கூடாது. கர்த்தருடைய ஜனங்களாக இருக்கும் அனைவரிடமும் நியாயம் எனும் விஷயம் மேலோங்கிக் காணப்பட வேண்டும். நீதியும், நியாயமும் தேவனுடைய சிங்காசனத்தின் ஆதாரமாய்க் காணப்படுகின்றது என நாம் வாசிக்கிறதுபோலவே, கர்த்தருக்கு உரியவர்கள், அதாவது இக்காலக்கட்டத்தில் ஜெயம் கொண்டவர்களாக வரவேண்டுமென எதிர்பார்ப்பவர்களுடைய அனைத்துக் குணலட்சணங்களுக்கு அஸ்திபாரமாக நீதி நியாயம் காணப்பட வேண்டும். நேர்மையுடனும், நியாயத்துடனும் காணப்படுகின்றவர்கள் மாத்திரமே, தற்காலத்தில் கர்த்தருடைய வார்த்தைகளில் வெளிப்படும் செய்தியினால் தாக்கம் பெற்றவர்களாய் இருக்க முடியும். மேலும், யாரெல்லாம் தங்களுடைய நேர்மை, உண்மையை இழந்துவிட்டார்களோ, அவர்கள் சத்தியத்தை இழந்துபோவதும் நிச்சயமே. தேவன் விஷயத்திலும், நம் விஷயத்திலும், நம் நண்பர்கள் விஷயத்திலும், நம் சத்துருக்கள் விஷயத்திலும் நியாயத்தோடு நாம் நடந்துகொள்ள வேண்டிய விஷயத்தில் அஜாக்கிரதை ஏற்படாதவாறு கவனமாய் இருக்கக்கடவோம். நாம் அனைவரிடமும் சராசரியான நியாயத்திற்கும் மேலாகவே செய்பவர்களாகவும், செய்ய வேண்டியவர்களாகவும் இருக்க வேண்டியிருந்தாலும், சராசரியான நியாயத்திற்கும் கீழாக நாம் செய்பவர்களாக இருக்கக்கூடாது, இருக்கவும் முடியாது. ஆம், நாம் அன்புடனும், தாராள மனப்பான்மையுடனுமே காணப்பட வேண்டும்.

## அநீதியான காரியத்தைக் கண்டதினிமித்தம் நீதியான கோபம் உண்டானதுபோன்று நடிப்பு

இயேசு தம்மை மேசியா என்று கூறினதைக் கேட்ட பிரதான ஆசாரியன், இதுவே இயேசுவுக்கு எதிராக தீமையான தோற்றம் கொண்டதுபோன்று காணப்படும் பலமான, அதேசமயம் உண்மையைச் சொல்லப்போனால் ஒரே குற்றச்சாட்டாய்

இருக்கப்போகின்றது என்று உணர்ந்துகொண்டார். இயேசுவின் வார்த்தைகளில் தீமையில்லை. ஏனெனில், அவர் கூறினது உண்மையாக இருந்தது. ஆனால், மகா பயபக்தியுடன் இருப்பதுபோன்ற நடிப்புடனும், தேவன் மீது மிகுந்த மரியாதை இருப்பதுபோன்ற நடிப்புடனும், மேசியா குறித்த தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு மிகுந்த பயபக்தி கொண்டிருப்பதுபோன்ற நடிப்புடனும், இயேசு கூறின இப்படிப்பட்ட வார்த்தைகளினிமித்தம் இடியே விழுந்துவிட்டது போன்ற திகைப்பு ஏற்பட்டுவிட்டது போன்ற நடிப்புடனும் காய்பா எழுந்து நின்றார். இப்படிப்பட்ட வார்த்தைகளினிமித்தம் எரிச்சலும் கோபமும் தனக்கு மூண்டுவிட்டது என்ற முழு நடிப்புடன் முகத்தை வைத்துக்கொண்டு இயேசுவின் இப்படிப்பட்ட வார்த்தைகள் தேவனுக்கு அவமரியாதையை உண்டுபண்ணினபடியால், இயேசு தேவதூஷணம் பேசிவிட்டதாக, தான் கண்டுபிடித்துவிட்டது போன்றும், அதினால் தனக்குக் கோபம் மூண்டுவிட்டது போன்றும், தன்னுடைய நாடகமாகிய நீதியின் கோபத்தை வெளிப்படுத்தும் வண்ணமாக தனது வஸ்திரத்தைக் கிழித்தார். பின்னர், ஜனங்களை நோக்கி, "இது தேவதூஷணம் . . . . . இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? தேவதூஷணத்தைக் கேட்டீர்களே, உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது?" இப்படிப்பட்ட மோசமான குற்றத்திற்கு எது சரியான தண்டனையாக இருக்கும்? இவரைப்போல் வந்து தங்களைத் தேவனுடைய குமாரனாகிய மேசியா என்று அறிவித்து, ஜனங்களை சொஸ்தப்படுத்தி, மரித்தோரை உயிரோடு எழுப்பியும், ஜனங்களிடமிருந்து பிசாசுகளைத் துரத்தியும், தங்களது வல்லமையை வெளிப்படுத்தின மற்றவர்களை நாம் எப்படி இதற்கு முன்னதாக தடுத்து நிறுத்தினோம்? என்று உரக்கக் கத்தினார். இயேசுவைக் கொன்றுபோட வேண்டும் என்ற நோக்கத்தில் அங்குக் கூடியிருந்த மூப்பர்கள், "இவன் மரணத்துக்குப் பாத்திரனாய் இருக்கிறான்" என்று பதிலளித்து, தங்கள் வாக்குகளை அளித்தார்கள். இயேசு காத்திருக்க வேண்டியிருந்தது. இதற்கிடையில் அவரைத் திட்டித்தீர்த்தார்கள். மூப்பர்களும், அதிகாரிகளும் இயேசுவை இப்படியெல்லாம் செய்யவில்லையென்றாலும், அவர்களுடைய சம்மதத்தின் பேரிலும், அனுமதியின் பேரிலும் சிலர் கர்த்தரை அடித்தார்கள், அவர் மேல் துப்பினார்கள், அவருடைய கண்களைக் கட்டி யார் அவரைக் குட்டித் துன்புறுத்துகின்றார்கள் என்பதை அவர் சொல்லி, தாம் ஒரு மேசியா என்றும், தீர்க்கத்தரிசி என்றும் நிரூபித்துக் காட்டும்படிக்கு அவரிடம் கூறினார்கள். மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போல, அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைக் காத்துக்கொள்ளும் படிக்குப் பேசவுமில்லை, அல்லது தமக்குள் காணப்படும் வல்லமையைப் பயன்படுத்தவுமில்லை, அல்லது தம்மை விடுதலை பண்ணும்படிக்குப் பன்னிரண்டு லேகியோன்கள் ஆயத்தமாக இருப்பார்கள் என்று அவர் ஏற்கெனவே கூறியிருந்த லேகியோன்களையும் அவர் அழைக்கவில்லை. மாறாக, தம்முடைய பலியின் உடன்படிக்கையையே நிறைவேற்றிக் கொண்டிருப்பதாக உணர்ந்து கொண்டு தம்மை ஒப்புக்கொடுத்துவிட்டார். மேலும், பிதாவின் சித்தம் இதுவாகவோ, அல்லது வேறு எதுவாகவோ இருந்தாலும் சரி, அது தம்மில் நிறைவேற வேண்டும் என்றே விரும்பினவராகக் காணப்பட்டார்.

இதில் நமக்குள்ள படிப்பினை என்ன? அவரைக் குறித்துக்

கற்றுக்கொள்வதற்கும், அவருடைய மாதிரியைப் பின்பற்றுவதற்கும் நாம் உடன்படிக்கை பண்ணியுள்ளோம். அப்படியானால், அடிகளையும், சோதனைகளையும், "பாவிகளினால் உண்டான விபரீதங்களையும்" நாம் எப்படி ஏற்றுக்கொள்கின்றோம்? நாமும் அவரைப்போலவே பொறுமையுடனும், நீடிய பொறுமையுடனும் காணப்படுகின்றோமா? பிதாவுக்குத் தெரியாமல் எதுவும் நமக்கு நடக்காது; அதாவது, நம்முடைய நன்மைக்கு ஏதுவல்லாத எதையும் அவர் அனுமதிக்க விரும்பமாட்டார் என்றும், அவரால் அனுமதிக்க முடியாது என்றும் உணர்ந்து கொண்ட நிலையில் இவைகளையெல்லாம் நாம் சகித்து முன்னேறுகின்றோமா? தீமையான அனுபவங்கள் பெறுவதற்கு ஏதுவான நிலையில் (தவறு செய்த நிலையில்) நாம் காணப்படுவோமேயானால், அதையும் நாம் பொறுமையோடு சகிக்க வேண்டுமென்று நாம் சொல்வது சரியல்ல. ஏனெனில் இயேசுவின் விஷயத்தில், "இவரோ, தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே" என்று அவர் அருகே இருந்த கள்வர்களில் ஒருவன் சாட்சிக் கொடுப்பதை நாம் நினைவு கூருகின்றோம். நம்மைத் துன்பப்படுத்துபவர்கள் விஷயத்திலும், நம்மை வெறுக்கிறவர்கள் விஷயத்திலும், நம்முடைய நோக்கங்கள் நல்லவைகளாக இருந்தாலும், நாம் பெற்றுக்கொண்ட தீமைக்குச் சில விதங்களில் நாம் நன்மையையே அவர்களுக்குச் செய்திருந்தாலும், இப்படிப்பட்டவர்களுடனான நம்முடைய எல்லா நடவடிக்கைகளிலும் நாம் மிக நேர்த்தியாக இருந்துள்ளோம் என்று நம்மால் சொல்லமுடியாது. "நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிற வருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1 பேதுரு 2:20-23).

அடிகளையும், நிந்தனைகளையும் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் நம்மால் முடிந்தமட்டும் நம்முடைய தவறுகளினிமித்தம், அவைகளைப் பெற்றுக் கொள்ளாதபடிக்கு நாம் பார்த்துக்கொள்வதோடுமட்டுமல்லாமல், இவ்வனுபவங்கள் வருகையில் அவைகளைப் பொறுமையுடனும், முறுமுறுப்பில்லாமலும் ஏற்றுக் கொள்வோமாக. மேலும், இவ்விதமாக நமது கர்த்தருடைய சாயலுக்கு ஒத்த குணலட்சணத்தில் அதிகமாய் வளர்ந்து, அக்குணங்களை வெளிப்படுத்து கின்றவர்களாகவும் இருப்போமாக. இப்படியாக செய்பவர்களுக்கு இப்படிப்பட்ட அனுபவங்கள் இறுதியில் அவர்களுக்கு ஆசீர்வாதமாய் முடியும் என்ற நிச்சயித்தைக் கர்த்தர் அருளுகின்றார். ஆனால், இப்படிச் செய்யாமல், தங்கள் உரிமைகளுக்காக யுத்தம் பண்ணுகிறவர்களாகவும் இருப்பவர்கள், தாங்கள் சிலுவையைச் சுமந்துவருவோம் என்று தாங்கள் பண்ணியுள்ள உடன்படிக்கையின் தன்மையை ஒன்றில் புரிந்துகொள்ள முடியாதவர்களாய்க் காணப்படுகின்றார்கள் இல்லையேல், உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு ஒத்துப்போக இவர்களுக்கு விருப்பமில்லை என்பது வெளியாகுகின்றது.

## பஸ்கா ஆட்டுக்குட்டியும், உலகத்தின் பாவமும்

"பஸ்கா ஆட்டுக்குட்டியானது இஸ்ரயேலர்களுடைய முதற்பேறானவர்களை மாத்திரம் தப்புவித்தது என்றும், இதன் நிஜம் என்பது, "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்றதான தேவாட்டுக்குட்டியாகிய" நமது கர்த்தர் இயேசு, பஸ்கா இரவின் நிஜமாகக் காணப்படும் இந்தச் சுவிசேஷ யுகத்தில் முதற்பேறானவர்களின் சபையை மாத்திரம் தப்புவிப்பார் (அ) கடந்துபோகப் பண்ணுவார் என்ற காரியமாய் இருக்கும் என்றுமுள்ள உண்மையினை நீங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளீர்கள். இது உண்மையானால், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி எனும் யோவானுடைய வார்த்தைகளானது எப்படிப் புரிந்துகொள்ளப்பட வேண்டும்?"

நம்முடைய பதில் என்னவெனில், இந்தச் சுவிசேஷயுகத்தின்போது கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியத்தின் வாயிலாக, தெய்வீக இரக்கத்தின் வாயிலாக, அர்ப்பணிக்கப்பட்டவர்களாகிய, விசுவாச வீட்டாராகிய, முதற்பேறான வர்களின் சபை மாத்திரமே தப்புவிக்கப்படுகின்றனர் (அ) கடந்துபோகப் பண்ணப்படுகின்றனர். எனினும் முதலாம் (அ) பிரதான உயிர்த்தெழுதலாகிய – "கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில்," அவரோடுகூடப் பங்கடைபவர்களும், "பரலோகத்தில் பேரெழுதியருக்கிறவர்களுமான முதற்பேறானவர்களின் சபையினுடைய" விடுதலையுடன், தெய்வீகத் திட்டமானது நிறைவடைகிறதில்லை. கிறிஸ்துவின் புண்ணியமானது, முதலாவது சபைக்குச் செயல்படுத்தப்படுவது என்பது தெய்வீகத் திட்டத்தினுடைய ஒரு நியாயமான நிகழ்வாய் மாத்திரம் காணப்படுகின்றது. கிறிஸ்துவோடுகூடப் பூமிக்குரிய நன்மைகளுக்கு மரிப்பதற்கும், புதுச் சிருஷ்டிகளென முதலாம் உயிர்த்தெழுதலில் பிழைத்திருப்பதற்குமாய் இப்பொழுது அருளப்பட்டிருக்கும் சிலாக்கியத்தில், சீக்கிரத்தில் சபையானது பங்கடைந்து முடிந்துவிடும். பின்னர் கிறிஸ்துவினுடைய, அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தின் புண்ணியமானது, "உலகத்தின் பாவத்தினைச் சட்டபடி எடுத்துப்போடத்தக்கதாக" மனுக்குலத்தின் உலகத்திற்காகச் செயல்படுத்தப்படும். அது செயல்படுத்தப்படும்போது, அது உலகத்தின் சார்பில், நீதியினை உடனடியாய்த் திருப்திசெய்து, திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதங்களுக்காக உலகத்தினை மீட்பரிடத்தில் கொடுத்துவிடும். அப்பொழுது தேவாட்டுக்குட்டியும், "ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியாகிய" சபையும், ஆயிரவருட யுகத்தின்போது, உண்மையில் உலகத்தின் பாவத்தை எடுத்துப்போடும் பணியினை நடத்திடுவார்கள்.

- ரீபிரிண்ட்ஸ், பக்கம் 4555

# தேவனைத் தூஷிக்கிறவராகக் குற்றஞ்சாட்டப்பட்டார்

## மத்தேயு 26:57-68

**"அவர் வையப்படும்போது பதில் வையாமலும்..." 1 பேதுரு 2:23**

இப்பாடத்தை நாம் திரு. சாண்டிலர் அவர்களால் கூறப்பட்டுள்ள சில வார்த்தைகளைக் குறிப்பிட்டு ஆரம்பிக்கலாம். அவர் பின்வருமாறு கூறியுள்ளார், "மனுக்குலத்தினுடைய நீதித்துறை சார்ந்த வரலாற்றில், அநேக குறிப்பிடத்தக்கதான விசாரணைகள் நடைப்பெற்றுள்ளது. அத்தேனே பட்டணத்தின் வாலிபர்களைச் சீர்க்குலைத்ததற்கும், கிரேக்கர்களின் தேவர்களைத் தூஷித்ததற்கும், அத்தேனே பட்டணத்தின் ஜனநாயக அமைப்பை அழிக்க நாடினதற்குமான குற்றங்களுக்காக, அத்தேனே பட்டணத்தின் சட்டசபைக்கு முன்பாக நடைப்பெற்ற சாக்கிரெட்டீஸ் அவர்களின் விசாரணையானது, அருமையான ஜனங்கள் பற்றின வரலாற்றில் இன்னமும் வியக்கத்தக்க மற்றும் சுவாரசியமான பாகமாகவே காணப்படுகின்றது."

"ஆல்பிரட் டிரெபஸ் அவர்களின் விசாரணைக்கூட இன்னமும், மனுஷர்களின் நினைவுகளில் காணவேபடுகின்றது. டிரெபஸ் ஒரு பிரமீதீயஸ்* என்று அவருடைய நண்பர்கள் கூறுவதுண்டு [*Prometheus - பிரமீதீயஸ் - கிரேக்க கடவுள்கள் வாழும் மலையிலிருந்து ஒளியைத் திருடி, மனுக்குலத்திற்குக் கொடுத்த ஓர் இராட்சதன் ஆவார். இந்தத் திருட்டிற்கான தண்டனையாக, இவன் பாறையில் கட்டப்படுவதற்கும், இவனுடைய கல்லீரலை உண்ணும்படிக்கு மாபெரும் கழுகை அனுப்புவதற்கும் சீயஸ் கடவுள் கட்டளையிட்டார்]. பிரஞ்சு தேசம் அதன் பிரிவினைவாதங்களினால் இன்னமும் பிரிவினையிலேயே காணப்படுகின்றது. டிரெபஸ் தேவனையோ (அ) கிறிஸ்துவையோ காட்டிக்கொடுத்த யூதாசாய் இராமல், மாறாக பிரான்ஸ் மற்றும் தாய்நாட்டையும் காட்டிக்கொடுத்த யூதாசாக இருக்கின்றாரென இவரது சத்துருக்கள் இன்னமும் கூறிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் இந்த விசாரணைகள் அனைத்தும், கலிலேயா ஊரானாகிய நாசரேத்தூர் இயேசுவினுடைய விசாரணை மற்றும் சிலுவையில் அறையப்படுதலுக்கு முன்னதாக சர்வ சாதாரணமானவைகளாகவும், சுவாரசிய மற்றவைகளாகவும் உள்ளது."

இயேசுவுக்கு யூதர்கள் செய்திட்ட தீங்குகளின் விஷயத்திலும், உரோமர்கள் வாயிலாக இயேசுவை யூதர்கள் சிலுவையில் அறையப்பண்ணிட்ட விஷயத்திலும், யூதர்கள் முழுமையாய்ப் பழியினின்று விலக்கப்பட்டவர்கள் என்று கூறுவது நமக்கடுத்தக் காரியமல்ல. எனினும் நடந்திட்ட அநியாயங்கள் தொடர்புடைய விஷயத்தில், நமது கணிப்பினுடைய தீவிரமானது/ கடுமைத்தனமானது மட்டுப்படுத்தப்படுவதற்குரிய அனைத்தையும்கூட நாம் கருத்தில் எடுத்துக்கொள்வதும் ஏற்றக்காரியமாய் இருக்கும். அவர்களுடைய (யூதர்களுடைய) கண்ணோட்டத் திலிருந்து பார்க்கப்படும்போது, எவைகள் குற்றத்திற்கான பொறுப்பைக்குறிக்கின்றது என்பதை நாம் கருத்தில் எடுத்துக்கொள்வதும் ஏற்றக்காரியமாய் இருக்கும். இது அனைவராலும் அங்கீகரிக்கப்படும் ஒரு காரியமே. குற்றவாளியாகக் காணப்படும் ஒருவனுக்காய் வாதாடும் வழக்கறிஞர், தான் வழக்காடும் குற்றவாளிக்காக

வழக்காடும்போது, குற்றவாளி குற்றத்தைச் செய்திடுவதற்குக் காணப்பட்ட நியாயமான காரணங்களை முன்வைப்பது கடமையாய் உள்ளது.

இந்தக் கண்ணோட்டத்திலிருந்து, நாம் பத்தொன்பது நூற்றாண்டு களுக்கு முன்பாகக் காணப்பட்டிருந்த யூத ஜனங்களைக் கண்ணோக்கும்போது, சூழ்நிலைகளைக் குறித்த மிகுந்த நியாயமான கண்ணோட்டத்தை நம்மால் அடையமுடிகின்றது. யூதர்களின் நடவடிக்கைக் குறித்த பரிசுத்தவானாகிய பேதுருவின் வார்த்தைகளை நாம் முதலாவதாகக் கவனித்துக்கேட்கலாம். "ஜீவாதிபதியைக்கொலை செய்தீர்கள்; சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்கள் என்று அறிந்திருக்கிறேன்" என்று பரிசுத்தவானாகிய பேதுரு கூறினார் (அப்போஸ்தலர் 3:15-17). ஒருவேளை அறிந்திருப்பார்களேயானால், இவர்கள் ஜீவாதிபதியைக் கொலை செய்திருக்கமாட்டார்கள்.

தங்களுக்குத் தீர்க்கதரிசியாகவும், ஆசாரியராகவும், இராஜாவாகவும்; மோசேயைப் போன்று, ஆனால் மோசேயைப்பார்க்கிலும் பெரியவராகவும்; தாவீது மற்றும் சாலொமோன் போன்று, ஆனால் இவர்களைப்பார்க்கிலும் பெரியவராகவும், மெல்கிசெதேக்கைப்போன்று ஆனால் மெல்கிசெதேக்கிலும் பெரியவராகவும் இருப்பாரென முன்னுரைக்கப்பட்ட மாபெரும் மேசியாவானவர், "துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாய்த்" தோன்றுவாரென யூதர்கள் ஒருகணம்கூட எண்ணிப்பார்க்கவில்லை. அவர் "துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமா யிருந்தார்" என்று மேசியாவைக் குறித்துத் தீர்க்கத்தரிசியினால் எழுதப்பட்டதாய் இருந்தாலும் (ஏசாயா 53:3), இவைகள் மற்றத் தீர்க்கதரிசனங்களில் முன்னுரைக்கப்படும் அவரைக் குறித்த மகிமையான காரியங்களினால் அவர்களின் புரிந்துகொள்ளுதலின் கண்களுக்கு முன்பாக மறைக்கப்பட்டன. அவர்கள் மகிமைகளைக் கண்ணோக்கினார்கள். ஆனால் அவர்கள் பாடுகளைக் கண்ணோக்கவில்லை. இன்றுவரையிலும் தங்கள் ஜாதி சந்தித்த பாடுகளானது, இறுதியில் தங்களுக்கு நன்மையைக் கொண்டுவரும் என்றே எண்ணுகின்றவர்களாகக் காணப்படுகின்றனர். தீர்க்கதரிசனங்கள் ஒரே இடத்தில் காணப்படுவதில்லை, மாறாக "இங்கே கொஞ்சமாகவும், அங்கே கொஞ்சமாகவும்" சிதறிக்காணப்படுகின்றன; அக்காலத்தில் அவைகள் புரிந்துகொள்ளக்கூடாதபடிக்கு, இப்படியாகச் சிதறிக்காணப்பட்டன; நமது கர்த்தர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து வந்து தீர்க்கத்தரிசனங்களை விளக்குவது வரையிலும், கர்த்தருடைய சீஷர்களாலும்கூடப் புரிந்துகொள்ளப்படவில்லை; பின்னர் இப்படியாகவே காரியங்கள் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டுள்ளது என்றும், மனுஷகுமாரன் தம்முடைய மகிமைக்குள் பிரவேசிப்பதற்கு முன்பும், இஸ்ரயேலையும் மற்றும் உலகத்தையும் ஆசீர்வதிப்பதற்கு முன்பும், அவர் பாடுபட வேண்டியுள்ளது என்றும் சீஷர்கள் புரிந்துகொள்வதற்குப் பரிசுத்த ஆவியினால் உதவப்பட்டார்கள்.

ஆம், யூதர்கள் போன்று, இன்றும் அநேகம் கிறிஸ்தவர்களும் இவ்விஷயத்தில் மிகவும் குழப்பமடைந்துக் காணப்படுகின்றனர். இஸ்ரயேலையும், சகல மனுக்குலத்தையும் பொதுவாய் ஆசீர்வதிப்பதற்கும், சீர்த்தூக்குவதற்குமான

மேசியாவின் மகிமையான இராஜ்யத்தின் ஆளுகைக் குறித்த கருத்தை அநேகர் முற்றிலுமாகப் புறக்கணித்துள்ளனர். "கிறிஸ்துவின் பாடுகள்தான்" அவரது மகிமையின் இராஜ்யத்திற்கான வழியை ஆயத்தம்பண்ணி, இராஜ்யத்தைக் கொண்டுவருவதாக இருக்கும் பட்சத்தில், (அந்த இராஜ்யம் இன்னமும் வராததினால்) இந்தக் குழப்பமடைந்துள்ள கிறிஸ்தவர்களின் கண்ணோட்டத்தின்படி ஒன்றில் தெய்வீகத் திட்டம் தோல்வியடைந்துவிட்டதாகக் காணப்பட வேண்டும் அல்லது அவரது மகிமையின் இராஜ்யம் என்பது, இவர்களுடைய கண்ணோட்டத்தின்படி, "உம்முடைய இராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பூமியில் செய்யப்படுவதாக" என்று நமது கர்த்தரால் கற்றுத் தரப்பட்ட ஜெபத்திற்கு முழு இசைவாகவும் உள்ள பரலோக இராஜ்யமாக (மாத்திரமே) காணப்பட வேண்டும். கிறிஸ்துவின் தலைப்பாகத்தினுடைய பாடுகள் முடிவடைந்தவுடன், "கிறிஸ்துவின் சரீரத்தினுடைய" பாடுகள், அதாவது அவரது சரீரமாகிய சபையின் பாடுகள், "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுகிற" காரியம் ஆரம்பமாகியுள்ளது என்பதை இவர்கள் உணர்ந்துகொள்ளாததே பிரச்சனையாகும் (கொலோசெயர் 1:24). கர்த்தருக்குப் பின்னாக, கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையானது, பிரயாணத்தின் முடிவுவரையிலும், அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி, சிலுவையைச் சுமந்து முடித்தவுடன், மகிமையின் இராஜ்யம் வரும். இஸ்ரயேலின் குருட்டுத்தனம் எடுத்து மாற்றப்படும் மற்றும் கர்த்தருடைய ஆசீர்வாதமானது, முழுப் பூமியையும் நிரப்புகிறதாய் இருக்கும்.

ஸ்தேவானைக் கல்லெறியும்படிக்குத் தர்சு பட்டணத்துச் சவுலை வழிநடத்தின அதே ஆவிதான், இயேசுவைச் சிலுவையில் அறைந்திட்ட யூதர்களிடத்திலும் காணப்பட்டது. சவுல் மன்னிக்கப்பட்டதுபோன்று, இஸ்ரயேலும் மன்னிக்கப்படும்; "கர்த்தர் தாவீது குடும்பத்தார் மேலும், எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவார்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன (சகரியா 12:10); ஆனால் அவர்களது துக்கம் சந்தோஷமாய் மாறும்; ஏனெனில் யோசேப்பு தன்னுடைய சகோதரர்களை மன்னித்ததுபோன்று, தாம் சிலுவையில் அறையப்படுவதற்குக் காரணமாய் இருந்தவர்களை, பூமியின் சிங்காசனத்தில் காணப்படும் மாபெரும் நிஜமான யோசேப்பும் மன்னிப்பார்.

## அரசியலாகவும், சுயநலமாகவும் காணப்பட்ட மதம்

இன்று காணப்படும் ஜனங்களிலிருந்து வேறுபட்டவர்களாக, யூதர்கள் அன்று காணப்படவில்லை. அரசியல் செல்வாக்கிற்காக, மதநம்பிக்கை அற்றவர்கள், சில உயர்வான ஸ்தானங்களில் யூதர்களின் மத்தியில் காணப்பட்டதாக, வரலாறு தெரிவிக்கின்றது; ஆகவேதான் நமது கர்த்தருடைய முதலாம் வருகையின்போது,

பிரதான ஆசாரியனாக, ஒரு சதுசேயன் காணப்பட்டான் என்று பார்க்கின்றோம்; சதுசேயர் என்பவர்கள் இஸ்ரயேலுக்குத் தேவனால் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங் களை முற்றிலும் நம்பாதவர்களாகவும், மரணத்திலிருந்ததான உயிர்த்தெழுதலில் நம்பிக்கையற்றவர்களாகவும் காணப்படுபவர்களாவர். இப்படியாகவே விசுவாசிக்காதவர்களாகவும், உயர் ஸ்தானம் வகிப்பவர்களாகவும் இருக்கும் பிரதான ஆசாரியர்கள், யூதர்கள் மத்தியிலும் மற்றும் கிறிஸ்தவர்கள் மத்தியிலும் காணப்படுகின்றனர். கிறிஸ்தவர்கள் மத்தியில், விசுவாசிகள் அல்லாத வேதசாஸ்திரிகள் (Doctors of Divinity) காணப்படுகின்றனர்; தாங்கள் முற்றிலும் விசுவாசியாதவர்கள் என்று ஒப்புக்கொள்ளும், மிகவும் பிரபலமான அநேக ரபீக்கள், யூதர்கள் மத்தியில் காணவேபடுகின்றனர். இப்படிப்பட்டதான அவிசுவாசியான கிறிஸ்தவனும், யூத ஊழியர்களும் ஒரு குற்றமற்ற மனிதனுக்கு எதிரான அநீதியான நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கிடுவார்கள் என்று நாம் சொல்ல வரவில்லை. அப்படிச் செய்வார்களா (அ) இல்லையா என்பதை நாம் அறியோம். அநேகமாக இனிமேல்தான் இது குறித்து ஆராய்ந்திட வேண்டும். ஆனால் தெய்வீக வெளிப்படுத்தல்களிலும், மனிதனுடைய காரியங்களிலான தெய்வீக மேற்பார்வையிலுமுள்ள விசுவாசமானது இல்லாமல் போகும்போது, இயல்பாகவே விசுவாசத்தை இழக்கிறவர்கள் அதிகமதிகமாய் கொள்கைவாதிகளாகி, சபை மற்றும் நாட்டினுடைய காரியங்களின் வழிநடத்துதல் தொடர்புடைய விஷயங்களில், குறிப்பாகக் "கொள்கையை" மனித ஞானத்தின் உச்ச நிலையெனக் கருதுவார்கள் என்பதை நாம் அறிவோம்.

உதாரணத்திற்குச் சரித்திரத்தை எடுத்துப்பார்க்கும்போது, நமது கர்த்தருடைய நாட்களில், யூத மார்க்கத்தின் தலைவர்களாய் இருந்தவர்கள், அவிசுவாசிகளாவர் (சதுசேயராவர்); மேலும் இவர்களுடைய கொள்கையானது, உரோம சக்கரவர்த்தியின் உதவியினை அடைவதும், சாமானிய ஜனங்களைத் தங்களுடையக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக்கொள்ள நாடுவதுமாகும் என்பதை நம்மால் எளிதில் காணமுடிகின்றது. ஆகவே இப்படிப்பட்டவர்களுக்கு, உயர்க்குடிப்பிறப்பை உடையவராக, அதாவது தாவீதின் குடும்பத்திலும், யூத கோத்திரத்திலும் பிறந்தவராக இருப்பினும், ஏழையாக இருக்கும் ஒரு மனிதன், கொஞ்சம் மீனவர்களையும், ஆயக்காரர்களையும், இன்னும் சிலரையும் ஆதரவு திரட்டிக்கொண்டு, தம்மையே இராஜாவென அறிவிப்பதும், தம்முடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவது அருகாமையில் உள்ளது என அறிவிப்பதும், கல்விமான்களைக் கவருகின்றது இல்லையென்றாலும், அவர் தரத்திலுள்ள சாதாரண ஜனங்களை அவர் கவருவதும், ஏதோ சில இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையைக்கொண்டு, ஜனங்களின் வியாதிகளை அவர் சொஸ்தப்படுத்துவதும், பேராபத்தாய்த் தோன்றியிருக்க வேண்டும். இக்காரியங்கள், அதாவது இயேசுவின் கீர்த்தி இப்படியாகத் தொடர்ந்துகொண்டே சென்றால், விஷயங்கள் சீக்கிரமாய், உரோம சக்கரவர்த்தியின் செவிகளுக்குப் போய்ச் சேரும் என்றும், இதனால் தங்களுக்கான அதிகாரங்கள் அனைத்தும் தள்ளுபடிப் பண்ணப்படும் என்றும், தாங்கள் அதிகாரத்தை எதிர்க்கும் கலகவாதி ஜாதியினர் எனக் கருதப்படுவர் என்றும் இவர்கள் சிந்தித்திருப்பார்கள் என்பதை நம்மால் நன்கு கற்பனைச் செய்துபார்க்க முடிகின்றது.

இஸ்ரயேலின் இராஜாக்கள் வருவதுபோன்ற விதத்தில், பஸ்காவுக்கு முன்னதாக, இயேசு எருசலேமுக்கு கழுதையின் மீது வந்ததும், ஜனங்கள் அவரைச் சூழ்ந்து, "கர்த்தருடைய நாமத்தில் வருகிற, தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" எனச் சத்தமிட்டதுமான விஷயங்களானது, உச்சக்கட்ட நிகழ்வாய்க் காணப்பட்டது; மேலும் இது ஒட்டுமொத்த தேசமும் கொந்தளித்து மற்றும் இதன் விளைவாக, உரோமர்களால் தங்கள் தேசமானது அழிக்கப்படுவதற்குப் பதிலாக, ஒரு குற்றமற்ற மனிதன் மரிப்பது மிகவும் நலமாய் இருக்குமென, மதத்தின் ஸ்தானங்களில் காணப்படும் இந்த அவிசுவாசியான யூதர்களையும், அரசியல்வாதிகளையும் நம்பவைத்தது. இப்படிப்பட்டதான ஒரு காரியம் தொடர்புடைய விஷயத்தில், இதைப்போன்றே இந்தப் பிரகாசமடைந்துள்ள நாட்களில் வாழும் எத்தனை அமெரிக்க பிரசங்கிமார்களும், நீதிபதிகளும், அதிகாரிகளும் முடிவெடுக்க விரும்புபவர்களாய் இருப்பார்கள்! இந்தக் கொள்கைதானே, சக்கரவர்த்திகளின் விஷயத்தில் எப்போதும் நிலவி வருகின்றது? இப்படிப்பட்ட ஓர் அமைதியின்மை ஜெர்மனியின் தலைநகரத்திலும், இத்தாலியிலும், பிரான்சிலும், ஆஸ்திரேலியாவிலும், ரஷ்யாவிலும், இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் ஏற்படுவதாகக் கொஞ்சம் கற்பனைப் பண்ணிக்கொள்ளுங்கள். இப்படியான ஓர் ஊர்வலம் போய் முடிந்த பிற்பாடு, இயேசு ஆலயத்திற்குச் சென்று, நீண்டகாலமாய்ப் புறக்கணிக்கப்பட்ட பிரமாணம் ஒன்றைச் செயல்படுத்துவதையும் மற்றும் இப்படியாக அவர் தம்முடைய மத உரிமைகளைச் செயல்படுத்துவதையும் கொஞ்சம் கற்பனைப் பண்ணிப்பாருங்கள்; இன்னுமாக யூதர்களின் பிரதானமான ஆலயங்களின் வெளிப்புறங்களிலிருந்து காசுக்காரர்களையும், வியாபாரிகளையும் துரத்துவதையும் கொஞ்சம் கற்பனை செய்துப் பாருங்கள்! இப்படியாகச் செய்யும் ஒரு நபர், இன்றைய காலங்களில் என்ன செய்யப்படுவார்? மிகவும் நாகரிகமான தேசங்களில் அவர் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்படுவாரா? என்றோ, மிகவும் நாகரிகம் இல்லாத தேசங்களில் அவர் அடிக்கப்படுவாரா (அ) கொல்லப்படுவாரா? என்றோ நாம் அறியோம். ஆகவே இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, நமக்கு ஏற்பட வாய்ப்புள்ள பகைமையின் ஆவிக்குப்பதிலாக, அனுதாபமே ஏற்படும்; அதாவது ஒரு பக்தியுள்ள ஜாதியானது, தங்களை இந்த அளவுக்கு அரசியல்வாதிகளின் கரங்களுக்குள் அடங்கிவிடுவதற்கு அனுமதித்துள்ளதைப் பார்க்கையில் அனுதாபமே ஏற்படுகின்றது.

## காய்பாவிற்கு முன்பு கொண்டுவரப்பட்டார்

பிரதான ஆசாரியனின் வேலைக்காரனுடைய காதை வெட்டின பிற்பாடு (இயேசுவினால் காயம் ஆற்றப்பட்டிருப்பினும்) பரிசுத்தவானாகிய பேதுரு, போதகருக்கு என்ன சம்பவிக்கும் என்பதைக் காணத்தக்கதாக, போதகரை பிரதான ஆசாரியனுடைய

பிரகாரம்வரை பின்தொடர்ந்து வந்தது மிகுந்த தைரியத்தை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. எந்த ஒரு கடுமையான குற்றச்சாட்டாக இருப்பினும், இரவு வேளையில் கைதியை விசாரணை செய்வது யூதர்களுடைய நியாயப்பிரமாணத்திற்கு எதிராய் இருந்தபோதிலும், இயேசுவை இரவு வேளையிலேயே குற்றஞ்சாட்டி விசாரணை செய்தார்கள். ஆனால் இதற்கு ஒரு சாக்குப்போக்கு வைத்திருந்தார்கள்; இது ஒரு முக்கியமான சூழ்நிலையாகும்; அவசரமாய்ச் செயல்படுவது அவசியமாய் இருந்தது; ஏனெனில் செய்யப்படப்போகிற காரியங்கள் விரைவாய்ச் செய்யப்பட வேண்டியிருந்தது; இயேசு பொது ஜனங்கள் மத்தியில் கொண்டிருந்த மாபெரும் செல்வாக்கினை, அந்த அவிசுவாசியான அதிகாரிகள் உணர்ந்திருந்தார்கள். இயேசு திறமிக்க, ஆனால் தீங்கற்ற மோசடிக்காரர் என்று அவர்கள் நம்பினார்கள். இயேசு எந்தக் குற்றமும் புரியவில்லை, ஆனால் அவர் சமாதானத்தைக் குலைத்தவராய் இருக்கின்றபடியால், அவருடைய ஜீவனை எடுத்துப்போடுவது சரியான காரியம் என்று அவர்கள் எண்ணினார்கள். பஸ்கா பண்டிகை சமீபமாய் இருந்தது மற்றும் அது ஒரு வாரம் நீடிக்கும் மற்றும் அந்த வாரத்தில் ஒருவரின் மரண தண்டனையை நிறைவேற்றுவது என்பது அவர்களுடைய நியாயப்பிரமாணத்திற்கு எதிரான காரியமாக இருந்தது. பாலஸ்தீனியா முழுவதிலிருந்தும் எருசலேமின் உள்ளிலும், வெளியிலும் ஒன்று முதல் இரண்டு மில்லியன் ஜனங்கள் காணப்படும் தருணத்தில், ஜனங்கள் மீது இயேசுவால் அவ்வாரத்தில் செலுத்தப்படப்போகும் செல்வாக்கைக் குறித்தும் அவர்கள் அஞ்சினார்கள். தாங்கள் செய்யப்போகும் காரியங்கள் திடீரென்றும், திட்டவட்டமாயும் இருக்கவேண்டுமென, அவர்கள் ஏற்கெனவே தீர்மானமாய் இருந்தார்கள். இவைகள் கைது செய்வதற்கு முன்னதாகவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. தங்களுடைய ஜாதிக்கு நன்மையானதாக இருக்குமென அவர்கள் எண்ணியிருந்த, அவர்களது கொலைப்பாதகத் திட்டங்களை நிறைவேற்றிடுவதற்காக, அந்த நடுராத்திரி வேளைக்கு ஆயத்தத்துடன், காத்திருந்தனர்.

அடுத்துவரும் காலையில், காரியங்கள் அனைத்தும் துரிதமாய்ச் செயல்படுத்தப்படத்தக்கதாக, சாட்சியங்கள் திரட்டுவதற்கான ஏற்பாடாக மாத்திரமே, இரவு வேளையின் விசாரணை நடைபெற்றது.

## தேவனைத் தூஷித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டார்

அவர்களுக்குக் குற்றச்சாட்டைக் கண்டுபிடிப்பதில் சிரமம் இருந்தது; ஏனெனில் இரக்கத்தின் கிரியைகளையும், ஞானத்தின், சீர்த்திருத்தலின் மற்றும் நம்பிக்கையின் வார்த்தைகளையும் அல்லாமல், வேறு எதை இயேசு செய்திருக்கின்றார் மற்றும் பேசியிருக்கின்றார்? தேவனைத் தூஷிப்பது என்பது யூதர்களுடைய பிரமாணத்தின்படி, கடுமையான குற்றச்சாட்டாகக் காணப்பட்டது. இயேசு தேவனைத் தூஷித்ததாக

நிரூபிப்பது எளிமையாக இருக்கும் என்பதால், அதினால் இயேசுவைக் குற்றஞ்சாட்டலாம் என்றிருந் தார்கள். ஆலயத்தின் அருகாமையில் இயேசு காணப்பட்டபோது, "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்று கூறியிருந்தார். "அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக்குறித்துப் பேசினார்". இதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் சிலர் இயேசு சொல்லர்த்தமான ஆலயத்தைக் குறித்து இப்படிப் பேசினதாகப் புரிந்து கொண்டார்கள். இதை அவர்கள் தேவதூஷணம் என்று குற்றஞ்சாட்டினார்கள். காரணம் இந்த ஆலயத்தைக் கட்டுவதற்கு பல வருடங்களாயிருக்க, இயேசு அதை மூன்று நாட்களில் கட்டி எழுப்புவது என்பது, அவரிடத்தில் தெய்வீக வல்லமை இருப்பதாக அவர் தெரிவிப்பதாய் இருக்கும். இயேசுவைக் கொன்றுபோட வேண்டுமென்று முன்பே திட்டமிட்டிருந்தவர்களுக்குக்கூட, இந்தக் குற்றச்சாட்டுப் போதுமானதாய், ஆற்றல் மிக்கதாய்க் காணப்படவில்லை. அவர்கள் தாங்கள் கண்டுபிடிக்கும் குற்றச்சாட்டுக்கு, கொஞ்சம் நீதியின் சாயத்தைத் தீட்டிட விரும்பினார்கள். ஆகவே தங்கள் முன்னிலையிலேயே, இயேசு காரியங்களை ஒப்புக்கொள்ளத்தக்கதாக, பிரதான ஆசாரியன் நாடி, "நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்" என்றார்; "அதற்கு இயேசு: நீர் சொன்னபடிதான்; அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: இவன் தேவதூஷணம் சொன்னான்; இனிச்சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ, இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே. உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்று கேட்டான். அதற்கு அவர்கள்: மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றார்கள்.சத்தத்தைக் கேட்ட முற்றத்திலிருந்த கும்பல்/கீழ்த்தரமான ஜனங்கள், தாங்கள் முன்காலங்களிளெல்லாம் செய்து வந்தது போன்று, இப்பொழுதும் கைதியைக் கீழ்த்தரமாய் நடத்திடுவதற்குச் சுதந்தரத்தை உணர்ந்தவர்களாக,அவரை உமிழ்வதன் முலம், அவர் மீதான தங்கள் வெறுப்பினைக் காண்பித்தார்கள்.அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள்; சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து: கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும் என்றார்கள்." (மத்தேயு 26:64-68) "அவர் வையப்படும்போது, பதில் வையாமல் இருந்தார்."

# இயேசுவைக் கேலிக்குள்ளாக்கும் விசாரணைகள்

## மத்தேயு 26:57-68

**"அடிக்கப்படும்படி கொண்டுப்போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்." ஏசாயா 53:7**

நாகரிகமுடையவனோ அல்லது அஞ்ஞானியோ, எப்படியாக இருப்பினும், பகுத்தறிவுள்ள ஒவ்வொருவரிடத்திலும், நியாயம் எனும் மனதின் தன்மையானது இயல்பாகவே நியாயத்திற்காகப் பரிந்து பேசுகின்றதாய் இருக்கின்றது. ஆகவே ஒவ்வொரு தேசமும், அதன் சட்ட புஸ்தகங்களில் நியாயமான சட்டங்களைப் பெற்றிருக்க நாடுகின்றது; மேலும் சீசர் மற்றும் லைகர்கஸ் (Lycurgus) போன்றவர்களுடைய சட்டங்களுடன்கூட, உலகத்தினுடைய அநேக சட்டங்களானது, அதிகப்படியான ஞானத்தையும், அதிகப்படியான நீதியையும்/நியாயத்தையும் வெளிப்படுத்தி உள்ளது என்பதை ஒத்துக்கொள்ளவே வேண்டும்.

ஆனால் மோசேயின் கரங்களில், தேவனாலே சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட யூதருடைய நியாயப்பிரமாணமானது, உண்மையில் உயர் நிலை வகிக்கின்றதாய் இருக்கின்றது; மற்றும் கிறிஸ்தவ மார்க்கத்தினை ஏதேனும் அளவில் அடையாளங்கண்டுகொண்டதாகத் தெரிவிக்கின்றதான தேசங்கள் அனைத்தினுடைய சட்டங்களானது, உயர் நிலையில்/தளத்தில் நீதியின் கொள்கைகளை முன் வைத்திட நாடுகின்றது; எனினும் இந்தச் சட்டங்களுக்கு விளக்கம் கொடுக்க முற்படும் விஷயத்திலும், அவைகளைத் தனிப்பட்ட நபர்களிடத்தில் செயல்படுத்தும் விஷயத்திலும், சட்டங்களையும், நியாயமான கொள்கைகளையும் மீறுவதற்கு அவசியமான சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஆகிவிட்டன என்று சாக்குப்போக்குகள் சொல்வதும், நியாயத்தின் கொள்கைகளினின்றும், சட்டங்களினின்றும் விலகுவதுமாகிய செயல்கள் எங்கும் காணவேபடுகின்றது.

யூதருடைய நியாயப்பிரமாணத்திற்கு எதிராக, இயேசு அநீதியான விதத்தில், யூதருடைய நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டச் சம்பவமானது, நம்மை ஒன்றும் ஆச்சரியத்துக்குள்ளாக்குவதில்லை; இன்னுமாக அச்சம்பவமானது, மற்ற நீதிமன்றங்களில், பல்வேறு சம்பவங்களின்போது நடைப்பெற்ற காரியத்திலிருந்து வேறுபட்டதாகவும் நாம் எண்ணுவதில்லை.

## சட்ட விரோதமான முறையில் - கைது செய்தல்

பிலாத்துவினுடைய கட்டளையின் பேரிலோ அல்லது ஏரோதினுடைய கட்டளையின் பேரிலோ அல்லது இவர்களுடையப் போர் வீரர்களினாலோ இல்லாமல், வேறு நபர்களினால் இயேசு கைது செய்யப்பட்டார். யூத மார்க்கத்திற்கு நன்மை கொடுக்கிறதாய் இருக்குமெனத் தாங்கள் கொண்டிருந்த திட்டங்களுக்கு, இயேசுவும் அவரது ஊழியமும் தீங்கு விளைவிக்கின்றதாய் இருக்குமெனக் குறிப்பாய்த் தீர்மானம் செய்து காணப்பட்டிருந்த பிரதான ஆசாரியனும், அவரது கூட்டாளிகளுந்தான்,

இயேசுவைக் கைது செய்தார்கள். இயேசுவைக் கொலை செய்ய வேண்டுமென முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அனைத்துக் கொலைக்காரர்களும் செய்வதுபோன்று, இந்தக் கொலைக்காரர்களும், தங்களின் இந்தச் செய்கைக்கு ஏதேனும் விதத்தில் நியாயம் கற்பிக்க நாடினார்கள்; இன்னுமாக இவர்கள் அரசியல்வாதிகளாகக் காணப்பட்டப்படியால், தங்களைக் காட்டிலும் மென்மையான மனசாட்சிகளை உடையவர்களைக் கருத்தில் கொண்டவர்களாக, தங்கள் செய்கை நியாயமானதுபோன்று தோற்றமளிக்கத்தக்கதாக வகைத்தேடினார்கள்.

ஆசாரியர்களுடைய பொறுப்பின் கீழ், அநேக மனிதர்கள் ஆலயத்திலும், அதன் சுற்றுப் புறங்களிலும் காவற்காரராய்ப் பணிபுரிந்தனர். இவர்கள் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரர்களாய்க் காணப்பட்டனர்; இந்த வேலைக்காரர்களே பட்டயங்களுடனும், ஆயுதங்களுடனும், பந்தங்களுடனும், யூதாசுடன் பின்தொடர்ந்து வந்தார்கள்; அன்றிரவு, இயேசு வழக்கம்போல் பெத்தானியாவுக்குப் போக நோக்கம் கொள்ளாமல், மாறாக தம்முடைய சீஷர்களுடன் கெத்செமனே ஒலிவ தோட்டத்தில் ஒன்றுகூடுவதற்கு நோக்கம் கொண்டுள்ளார் என்று யூதாஸ் முன்கூட்டியே அறிந்தவனாய் இருந்தான்.

பிரதான ஆசாரியனுக்குரிய ஸ்தானத்திலிருந்து ஓய்வுப் பெற்றிருந்த அன்னாவின் வீட்டிற்கு இயேசுவை நேரடியாய்க் கூட்டிக்கொண்டு வந்தார்கள். இவர் ஓய்வு பெற்ற ஸ்தானத்தில், இவரது மருமகனாகிய காய்பா பொறுப்பேற்றிருந்தார். அன்னா இயேசுவை விசாரணை செய்து தோல்வியடைந்தார்; பின்னர் தன்னுடைய வீட்டு முற்றத்திலேயே, தன்னுடைய வீட்டோடு சேர்ந்து காணப்பட்ட காய்பாவின் வீட்டில், காணப்பட்டக் காய்பாவினிடத்திற்கு இயேசுவை அனுப்பி வைத்தார். அங்கு அநேகமாகக் காலையில் மூன்று மணியளவுக்கு ஆலோசனை சங்கத்தினர் கூடினர்.

இயேசுவைக் கொன்று போடுவதற்கான திட்டம் நன்கு போடப்பட்டிருந்தது. இயேசுவையும், மற்ற அப்போஸ்தலரையும் விட்டு பஸ்கா போஜனத்தின்போது யூதாஸ் கடந்துபோனது முதல், இந்த விசாரணை நடைப்பெறுவது வரைக்குமுள்ள, இடையில் காணப்பட்ட நேரங்கள் முழுவதும், பட்டணம் எங்கும் காணப்பட்ட ஆலோசனை சங்கத்தாரை, அவர்களது இல்லங்களிலிருந்து கூட்டிச் சேர்ப்பதற்கெனச் செலவிடப்பட்டது. இயேசு ஜனங்களுக்குப் போதித்ததினாலும் மற்றும் ஜனங்களுக்கு அவரால் போதிக்கப்பட்டவைகளானது, பரிசேயர்கள் மற்றும் வேதப்பாரகர்கள் மற்றும் முன்னோர்களுடைய பாரம்பரியத்தின் அதிகாரத்தை பலவீனப்படுத்தினதாலும், இயேசுவைக் கொன்றுபோடுவதற்கு நாடின இவர்கள், "ஒருவனும் ஒருக்காலும் பேசாததுபோன்று பேசினவரை" கொன்றுப்போடுவதற்கான இந்த ஏற்பாடுகள் அனைத்தையும் நியாயப்படுத்துவதற்காக, (இப்பொழுது சூழ்நிலைகள் அனைத்தும் ஏதோ கைமீறிப்போனதுபோன்று இவர்கள் கருதி) இந்த நடவடிக்கைகளை எடுத்ததாகக் காண்பித்துக் கொண்டார்கள். (யோவான் 7:46; மத்தேயு 26:55).

புரோகிதருக்குரிய/ஆசாரியனுக்குரிய அதிகாரம் தக்கவைக்கப்படுவதற்கு, அறியாமையும், மூடநம்பிக்கையும் அவசியம் என்பது தவறான மதப்போதனைகளுடைய கொள்கையாகும். ஆகவேதான் தப்பறையானது எப்போதும் சத்தியத்தைப்

பகைக்கின்றதாய்க் காணப்படுகின்றது; ஆகவேதான் இருள் எப்போதும் வெளிச்சத்தைப் பகைக்கின்றதாய் இருக்கின்றது. இயேசு ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட காரியமானது, வெளிச்சத்திற்கு மேலாக, இருள் வெற்றியடைந்து ஓங்கின மற்றுமொரு சம்பவமாக மாத்திரமே உள்ளது. எனினும் இது தோற்றத்தில் மாத்திரமே வெற்றியாகக் காணப்பட்டது; ஏனெனில் இவ்விதமாகவே தேவனுடைய திட்டமானது நடந்தேறியது. இவ்விதமாகவே பாவத்திற்கான மாபெரும் பாவநிவாரணம் ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது; இதன் விளைவாக இறுதியில் பாவம், சாத்தான் மற்றும் மரணம் வீழ்த்தப்படும் மற்றும் நீதியும், சத்தியமும் உலகமெங்கும், நித்திய காலமாய் ஸ்தாபிக்கப்படும்.

## அநீதியான ஒரு விசாரணை

மிகுந்த செல்வாக்குமிக்க 70 யூதர்களை ஆலோசனை சங்கமானது கொண்டிருந்தது. மற்றும் இவர்களது வார்த்தைகளுக்கு, ஜீவன் (அ) மரணத்திற்கான அதிகாரத்தை அக்கால கட்டத்தில் கைகளில் பெற்றிருந்த உரோம தேசாதிபதியிடம் மிகுந்த செல்வாக்கு இருந்தது.

காய்பா பிரதான ஆசாரியனுக்குரிய பணியை மாத்திரம் செய்யாமல், இதனோடுகூட, இயேசுவின் விஷயத்தில், இயேசுவுக்கு எதிராக வழக்கை நடத்தும் வழக்கறிஞராகவுங்கூடச் செயல்பட்டார். ஆலோசனை சங்கத்தாரைக் கூட்டிச் சேர்க்கும்போது, சாட்சியாளர்களைத் திரட்டும் பணியையும் காய்பா மறவாதிருந்தான்; இந்தச் சாட்சிகள், சாட்சி சொல்லத்தக்கதாக இலஞ்சம் கொடுக்கப்பட்டார்கள் என்று நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தீய ஆவிகளின் பிடியிலிருந்து இயேசுவினால் விடுவிக்கப்பட்டவர்களில், இயேசுவினால் குருடான கண்கள் திறக்கப்பட்டவர்களில், இயேசுவினால் செவிடான காதுகள் திறக்கப்பட்டவர்களில், இயேசுவினால் மரண நித்திரையினின்று எழுப்பப்பட்டவர்களில் யாரையாகிலும் ஆலோசனை சங்கத்தின்முன் கொண்டுவருவதற்கான எந்தப் பிரயாசங்களும் எடுக்கப்படவில்லை. பிரதான ஆசாரியன், லாசருவின் சம்பவத்தைக்கூட அறிந்திருந்தார், ஆனால் அவர்கள் இப்படிப்பட்டச் சாட்சிகளை விரும்பவில்லை. அவர்கள் இயேசுவைக் கொலை செய்திட விருப்பமாய் இருந்தார்கள், அதுவும் நியாயமானது போன்றதொரு மூடலின் கீழ்ச் செய்ய விரும்பினார்கள்.

காய்பா சாட்சியாளர்களை அழைத்தார், ஆனால் சாட்சியாளர்களின் சாட்சிகள் இசைவற்றிருப்பதைக் கண்டார்; யூதருடைய நியாயப்பிரமாணத்தின்படி, எந்த ஒரு காரியத்தை நிரூபிப்பதற்கு, குறைந்த பட்சம் ஒன்றுபோல் இரண்டு சாட்சிகளாகிலும் இருக்க வேண்டும். இறுதியாக ஆலயம் குறித்து இயேசு ஏதோ கூறித் தாங்கள் கேட்டதாகத் தெரிவித்த இரண்டு சாட்சிகளுடைய சாட்சிகள் கொஞ்சம் ஒத்திருந்ததாய் இருந்தது; அதாவது இயேசு தம்மால் ஆலயத்தை இடித்துப்போட்டு, மூன்று நாட்களுக்குள் கட்டியெழுப்ப முடியும் என்று கூறி, தாங்கள் கேட்டதாகச் சாட்சியாளர்கள் தெரிவித்தனர். இவர்கள் அநேகமாய் இயேசுவின் வார்த்தைகளைத்

தவறாய்ப் புரிந்துள்ளனர். எனினும் குற்றவாளியெனத் தீர்ப்பு வழங்குவதற்கு, இவர்களது சாட்சிகள் பலமான விஷயங்களாகக் காணப்படவில்லை.

கடைசி முயற்சியாக, தேவதூஷணமெனக் குற்றம் சாட்டத்தக்கதாக, இயேசுவையே எதையாகிலும் பேச வைப்பதற்குக் காய்பா முயன்றார். கேட்கப்பட்ட பல்வேறு கேள்விகளுக்கு, இயேசு எதுவும் பதிலளிக்கவில்லை; ஆனால் இப்பொழுதோ காய்பா, "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்" என்று கேட்டார். இந்தக் கேள்விக்கு, இயேசுவினால் அமைதியாய் இருந்து, பதிலளிக்காமல் இருக்க முடியாது. இக்கேள்விக்குப் பதிலளிக்காமல் இருப்பது என்பது, இந்த மாபெரும் சத்தியத்தை மறுதலிக்கிறதாகவும் இருக்கும் மற்றும் ஆலோசனை சங்கத்தாருக்குச் சரியான சாட்சியை அளிப்பதற்குத் தவறிப்போவதாகவும் இருக்கும். ஆகவே காய்பா சொன்னது சரிதான் என்று இயேசு ஒப்புக்கொண்டார்.

தேவதூஷணம் என்று கூறுவதற்கான வாய்ப்பு இது என்று பிடித்துக் கொள்வதற்கான ஆவலில், காய்பா தாவி, துள்ளி எழுந்தார்; ஆனால் இயேசு இன்னும் தொடர்ந்து, "மனுஷ குமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். இப்படி இயேசு கூறினதினிமித்தம் காய்பா மிகவும் அதிர்ச்சியடைந்தது போன்று நடித்து, ஆலோசனை சங்கத்தார் மத்தியில் தேவனுடைய பிரதிநிதியாகக் காணப்படும், தான் பயங்கரமான ஏதோ ஒன்றைக் கேட்டுள்ளதைப் போன்று ஆலோசனை சங்கத்தாருக்குக் காண்பிக்கத்தக்கதாகக் காய்பா தன்னுடைய ஆசாரிய வஸ்திரத்தைக் கிழித்து நாடகமாடினார். காய்பா ஆலோசனை சங்கத்தாரை நோக்கி, "இவன் தேவதூஷணம் சொன்னான்; இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ, இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே. உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது – உங்களது தீர்ப்பென்ன – என்று கேட்டார்;" அதற்கு அவர்கள், "மரணத்துக்குப் பாத்திரனாய் இருக்கிறான்" என்றார்கள்.

இந்தக் கருத்திற்கு/முடிவிற்கு இரண்டு பேர் மாத்திரம் விலகி நின்றார்கள் என்பது தெளிவாய்த் தெரிகின்றது; இவர்கள் இயேசுவுக்கு மாபெரும் மதிப்புக்கொடுப்பதற்குக் கற்றிருந்த அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும், நிக்கொதேமுவும் ஆவார்கள். இவர்களால் என்னதான் செய்யமுடியும்? அதிகப்பட்சமாக, ஆலோசனை சங்கத்தாரின் இந்த நடவடிக்கை சட்ட விரோதமானது என்றும், இராத்திரி வேளையில் ஒருவரை மரணத் தண்டனைத் தீர்ப்பளிப்பதற்கென விசாரணை நடத்துவதை நியாயப்பிரமாணமானது தடைச்செய்கின்றது என்றும்தான் இவர்களால் கூற இயலும். விடியும்போது, சட்டப்பூர்வமாய் நடவடிக்கை எடுக்கத்தக்கதாக ஆலோசனை சங்கத்தார் காத்துக்கொண்டிருந்த வேளையில், இயேசு அடுத்திருந்த அறையில் காவல் வைக்கப்பட்டார். தேவதூஷணம் உரைத்தவராகவும், குற்றவாளியாகவும் பிரதான ஆசாரியனால் தீர்க்கப்பட்ட இயேசுவானவர், பிரதான ஆசாரியன் செய்வதெல்லாம் சரியென அறியாமையில் எண்ணிக்கொண்டிருந்த பிரதான ஆசாரியனுடைய வீட்டில் காணப்பட்ட

வேலைக்காரர்களுடைய பல்வேறு அவமதிப்புகளுக்கு ஆளாக்கப்பட்டார்.

## தெய்வீகச் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து, ஒப்புக்கொடுத்தார்

"நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலை செய்தீர்கள்; அவன் உங்களோடே எதிர்த்துநிற்கவில்லை" (யாக்கோபு 5:6) என்ற வசனத்தின் வார்த்தைகளும் மற்றும் நம்முடைய இப்பாடத்தின் ஆதார வசனத்தின் வார்த்தைகளும் முழு இசைவுடன் காணப்படுகின்றது மற்றும் இரண்டுமே, இவ்விசாரணையின்போது காணப்பட்ட இயேசுவுக்குப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. இயேசு தம்முடைய ஜீவனைக் காத்துக்கொள்ள முற்படவில்லை என்ற விதத்தில், அவர் தம்முடைய வாயைத் திறவாதவராய்க் காணப்பட்டார். பிதாவின் சித்தமல்லாத எதுவும் தமக்கு நிகழ்வதில்லை என்பதை இயேசு உணர்ந்தவராக, காரியங்களை அவர் தடைப்பண்ணிட முற்படாமல், காரியங்கள் அவைகளின் போக்கிலேயே நடைபெறத்தக்கதாக மகிழ்ச்சியுடன் அனுமதித்தார்.

தம்மைத் தற்காத்துக்கொள்ளத்தக்கதாக, "எந்த மனிதனும் பேசாததுபோல்" பேசின அவரது அறிவுள்ள மனமும், அவரது நாவும் வாதங்களை முன்வைத்ததானால், காய்பாவும், முழு ஆலோசனை சங்கத்தாரும் நடுங்கிப்போயிருப்பார்கள் என்பதிலும், அவரை ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கத் துணிந்திருக்கமாட்டார்கள் என்பதிலும் சந்தேகமில்லை! சத்தியம் முன் வைக்கப்படுவதற்கு, என்ன பேசப்படுவது அவசியமாய் இருந்ததோ, அதை மாத்திரமே இயேசு பேசினார்; மேலும் அவர் பேசின சத்தியத்தையே, அவரது சத்துருக்கள் தவறான விதத்தில், தேவதூஷணம் என்று கூறினார்கள்.

இயேசுவின் பின்னடியார்கள் உலகத்திடமிருந்து முழு நீதியையும், எப்போதும் சரியாய்ப் புரிந்துகொள்ளப்படுவதையும் எதிர்பார்க்கக்கூடாது என்று வேதவாக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. இவர்கள் தங்களது எஜமானைப் போன்றே, தங்களுக்கான அனுபவங்களின் பாத்திரமும்கூட, பரம ஞானத்தினால் மேற்பார்வையிடப்படுகின்றது என்பதை நினைவில்கொள்ள வேண்டும்; இன்னுமாக தெய்வீக ஏற்பாடுகளுக்குத் தாங்கள் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருந்தால், தங்களுக்கான அனுபவங்கள் அனைத்தும் மேலான நன்மைக்கு ஏதுவாய் நடந்தேறுவதைத் தங்களால் காணமுடியும் என்பதையும் இவர்கள் நினைவில்கொள்ள வேண்டும். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர் களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28).

## ஓர் இரட்சகர் மற்றும் ஒரு மாபெரியவர்!

கல்வாரி மேட்டினில், குளிர் காற்று வீசிட, ஒரு கோரமான காட்சி இதோ:
மனுக்குலத்தின் இரட்சகர், அன்போடே, அங்கே தொங்குகிறார்;
சீஷர்கள் தங்கள் தலையை நெஞ்சம் வரை தாழ்த்தியே,
கவலையோடு பெருமூச்சுவிட்டு கூறினரே:
"ஒருவேளை அவர் மரித்துவிட்டால் - அவர் எப்படி மேசியாவாக இருக்கமுடியும்?"

பரியாசம்பண்ணும் ஜனக்கூட்டமோ, சபிக்கப்பட்ட சிறு மலையைச் சூழ்ந்து நின்று,
கர்த்தரை ஏளனம் செய்கின்றனரே. துன்புறுத்தப்பட்ட அவரது ஆன்மாவிலிருந்து,
அவரது உதடுகள்தனிலே வந்தது விலைமதிப்பற்ற அந்த வார்த்தைகள்: "தந்தாய்,
இவர்களை மன்னித்தருளும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்."
அவர் முகம் நிறம் மாற ஆரம்பித்ததே.

"எல்லாம் முடிந்தது" என்ற வெற்றி தொனி தொனிக்கவே, தம் தலையைச் சாய்த்திட்டாரே.
அவர் சத்தத்தைச் சேவகர்கள் கேட்டிடவே, வந்து பார்க்கையில் கர்த்தர் மரித்துவிட்டாரே.
அனைத்துக் கடுந்துயர்களும் முடிந்தது; அவரது வெற்றி ஆரம்பமானதே,
உலகமும் காப்பாற்றப்பட்டது, பாவத்திற்குச் சாவுக்கு ஏதுவான அடி கொடுக்கப்பட்டதே.

தாம் முன்னறிவித்தபடியே, கிறிஸ்து எப்படி சாத்தான், மரணம் மற்றும் நரகத்தை
ஜெயங்கொண்டுவிட்டார்! என்று சேவகர்கள் சொல்வதை எருசலேம் வியப்போடே கேட்டதே.
"இரட்சிக்கப்படுவதற்கு வேறு எந்த நாமமும் இல்லை" என்று எளிய மீனவர்களும்
வல்லமையோடு அறிவித்ததை எருசலேம் வியப்போடே கேட்டதே.

நகரவாயிலிலிருந்து துக்கத்தோடே மேற்கொள்ளப்பட்ட ஓய்வுநாளின் பிரயாணத்தின்போது,
இரண்டு துக்கம் நிறைந்த சீஷர்கள் துக்கத்தின் பாரத்தோடே,
அவர்கள் தங்குமிடம் நோக்கிச் சென்றனரே.
அவர்கள் கண்கள் மறைக்கப்பட்ட நிலையில், கிறிஸ்துதாமே தோன்றியே,
மேசியா மரிக்க வேண்டியதைக்குறித்து அவர்களுக்கு விளக்கினாரே.

எம்மாவூரும் வந்தது, கர்த்தரும் கடந்துபோக மனதானபோது,
"எங்கள் துக்கத்தின் கண்ணீரைத் துடைத்தவரே, எங்களோடு தங்கியருளும்" என்று
அவர்களோ சாந்தமாய் வேண்டினார்களே.
அவர் அப்பத்தைப் பிட்டார் - பின்னர் அவர்கள் பார்வையிலிருந்து மறைந்தாரே.
அந்த இரவில் அவர்களின் இருதயம் பரிசுத்த மகிழ்ச்சியோடே கொழுந்துவிட்டு எரிந்ததே.

மேகத்தால் மூடப்பட்ட கண்களினால் அவரை உணர்ந்துகொள்ள முடியாதபோதிலும்
இன்னும் அவர் இப்படியாகவே வருகின்றாரே; அவர் நம் பாரத்தை
இலகுவாக்குகின்றாரே, கண்ணீரை நிறுத்துகின்றாரே;
தாய் பால் நிறுத்தப்பட்ட குழந்தைகள் பாலுக்காக அழுவதுபோல் நாம் துக்கிக்க
அவரோ நம் இருதயங்களைத் திடமான போஷாக்கான உணவால் ஆதரிக்கின்றாரே.

ஏன் இயேசு மரித்தார் என்பது பழைய கதையாயினும்,
எப்போதும் இனிமையான புதிய கதையாகவே இருக்கின்றதே.
சந்தேகப்படுகிற உனக்கு, ஆணிகளின் தழும்பைக் காட்டுவாரே.
அவர் விலா பக்கத்தில் ஓர் ஈட்டி குத்தப்பட்டதால்,
ஒரு வழிப் பிறந்ததே, மீட்பரின் இருதயத்தை எளிதாய்க் கிட்டி சேரவே.

உனக்காகத்தான், என் சகோதரனே, அவர் தம் ஜீவனை இலவசமாகக் கொடுத்தாரே.
உனக்காகவும், எனக்காகவுந்தான் கல்வாரி மரத்தின் மீது தம் தலை சாய்த்திட்டாரே.
ஆகையால் அவரது நாமத்தின் புண்ணியத்தினை நம்பினால்
நாம் துக்கம், பாவம் மற்றும் வெட்கத்திலிருந்து காப்பாற்றப்படுவோமே.

கடந்த காலங்களைப் பாவக் காரியங்களில் செலவழித்திருக்கின்றோம்.
வாருங்கள், எங்கள் குழுவில் சேருங்கள்.
இயேசுவின் பாதச்சுவடுகளைப் பின்தொடர்ந்து, அவர் காட்டுகிறபடி செல்வோமே.
அவரது நீதியின் வஸ்திரத்தை களங்கமின்றி உடுத்தினவர்களாக,
அவரை நாம் முகமுகமாய் சந்திப்போமே ஆசீர்வதிக்கப்பட்டவர்களுடனேகூட.

- H. Hardie (R1615)

# கிறிஸ்து நமது பஸ்கா

எகிப்து அமைதியாய் படுத்துறங்கும் வேளைதனில், தேவனுடைய கட்டளையை
நிறைவேற்ற வேண்டியே தூதனானவர் முன்னேறியே சென்றிட்டாரே,
அரியணை முதல் குடிசை வரை வாழ்ந்த தலையீற்று
ஈறாய் கொன்றே குவித்தார் பாகுபாடு இன்றியே.

நடுநிசி இரவின் காற்றிலே விரைந்தே முடித்தார் படைத்தவர் பணியையே.
வேதனை நிறைந்த அழுகை அங்கே, ஏதுமியலா நிலையின் அழுகுரல்,
ஒவ்வொரு வீட்டின் இருதயம் தனிலே பிளந்துவந்ததே இறுதி வாதையே,
தேவனின் சொற்படி கடந்துவந்ததே மாபெரும் வாதையாய் எகிப்து தன்னிலே.

இஸ்ரயேலின் வாழிடம் தனிலோ என்னவோர் அற்புதக்காட்சி, ஆங்கே.
இருளே இன்றி வெளிச்சம் சூழவே, கரத்தினில் கோலுடன் காலணி அணிந்தே
பயணத்திற்காய் விரைந்தே புறப்பட்டு, பஸ்கா விருந்தை விரைந்தே உண்டார்.

அவர் பிதாக்களின் தேவன் - அவர் அழுகுரல் கேட்டார்,
அவர் நேரமோ வந்ததே அடிமைத்தனமும் முடிந்துவிட்டதே
எகிப்து முழுதும் துக்கித்தழுத அவ்வேளைதனிலே, கசப்பான கீரைகளுடனே
புளிப்பில்லா அப்பங்கள் செய்தே, ஒருவயதான செம்மறியாட்டினைச் சுட்டே உண்டனர்.

ஒவ்வொரு வீட்டின் நிலைக்காலின் மீதும் இரத்தம் காணும் நோக்கம் யாதோ?
தேவதூதனும் அதைக் கண்டபின்னரே அமைதியாகவே கடப்பதும் ஏனோ?
இஸ்ரயேலின் தலையீற்றுப் பிள்ளைகள்,எகிப்தின் வாதையில்
பங்கில்லாமலே பாதுகாத்ததே நிலைக்காலின் இரத்தமே.

நூற்றாண்டுகள் பலவும் ஓடியே கடந்தே மறைந்தே போனாலும்,
ஒவ்வொரு ஆண்டிலும் பஸ்கா ஆட்டினைக் கொன்றே தின்றாலும்
அதன் இரத்தம் என்னவோ பாவநிவாரணம் செய்வதற்கில்லை.
அது விரைவில் வருகின்ற ஒன்றிற்கு முன்னடையாளமே.

***

மரத்தின் மீதே தொங்கி உயிர் நீத்த பாவமில்லா ஒரு செம்மறி அவரே,
அடிமைத்தனம் பூண்ட கைதிகள் யாவரையும் விடுவித்தே,
பூலோகம் அனைத்தின் பாவம் சுமந்தே, பாவத்தால் அடிமையாகிட்ட அனைவர்க்கும்
அடிமைத்தளையைத் தகர்த்தெறிந்தே விடுதலை அளித்தார். நீதிமானான தேவனின்
ஆட்டுக்குட்டியானவர், இம்முழு உலகமாந்தர் யாவர்க்கும்
தம் விலையேறப்பெற்ற இரத்தம் ஈந்தாரே.

நம் அன்பின் கர்த்தரோ தம் அன்பிற்குரிய சீஷரை அமர்த்தி
விருந்து செய்தார், வெகு ஆவலோடே, தெரிந்துகொண்ட வெகுசிலருடனே.
"இந்த விருந்தை நான் உங்களோடே உண்ண வேண்டியே பேராவல் கொண்டேன்" என்றே உரைத்தார், தம் அன்பிற்குரிய சீடர் தம்மிடம்.

"எந்தன் இருதயம் துக்கமாயுள்ளதே, நான் தெரிந்த எனது சோதரில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பானே, ஒருவன் என்னை மறுதலிப்பானே, எல்லாரும் பயந்தே என்னைவிட்டே ஓடியே விடுவீர்." தந்தையே எனக்கிருப்பாரே ஒழிய மற்றபடி நான் தனியனாய் விடப்படுவேனே.
பந்தியில் அமர்ந்தே இருந்தபோதினில் அவர் அப்பத்தை எடுத்தே ஆசீர் அளித்தே,
பிட்டுத் தமது சீடர்க்குக் கொடுத்தே, இதனை வாங்கிப் புசிப்பீர், உங்களுக்காகவே
பிட்கப்படுமே, இது என் சரீரம் எனக்கூறி அளித்தார்.

பாத்திரமதனைக் கையில் எடுத்தே ஸ்தோத்திரம் பண்ணியே அவர்களுக்களித்தே,
"நீங்கள் இதிலே பானம் செய்வீர், இது பாவமன்னிப்புக்கெனவே அநேகருக்காகவே
சிந்தப்படும் எனது இரத்தமே; இதுமுதல் இந்தத் திராட்சப்பழ இரசமதனை நவமானதாய்,
உங்களுடனே எனது பிதாவின் இராஜ்யம் தனிலே பானம் பண்ணும்
நாள்வரையில் இதனை பானம் செய்வதில்லை" என்றுரைத்தாரே.

தமது சரீரம் இரத்தம் முழுதும் அனைத்து உலக சோதரர்க்காகவே அன்புடன் அளித்தார்,
உலகத்தின் பாவம் அனைத்தும் சுமந்தே, அவமானம் முழுதையும் தம்மேல் ஏற்றார்.
விரைவில் சோதரர் ஒருவர் என்னைக் காட்டிக் கொடுத்திடுவார்
மற்றொருவரோ என்னையே மறுதலிப்பார் என்பதை அறிந்தே மனமும் கசந்தார்,
எல்லாரும் கைவிட்டே ஓடியேவிடுவார் என்பதைக் கர்த்தர் உணர்ந்தே இருந்தார்.

நீங்கள் இதனை பானம் பண்ணும் போதினிலே என்னை நினைவுகூரும் படியாகவே
இதனை செய்தே வாருங்கள் என்றே கர்த்தர் உரைத்த வாக்கின்படியே வருடங்கள்
கடந்தும் ஒவ்வோர் ஆண்டும், உம் பரிசுத்த ஜனங்கள்தாமே, பரிசுத்தமாகவே
கண்ணீர் சிந்தியே நினைவுகூர்ந்தே வருகிறார்கள் இன்றும்.

இந்த இரவுக்காலத்திலே, கர்த்தாவே உமது முதற்பேறான யாமே, கையிலே கோலுடன்,
காலிலே பாதரட்சையுடன், உம் பரிசுத்த இரத்தம் இதயத்தில் தெளித்தே, ஒன்றாய்க் கூடியே
நினைவுகூர்ந்திடவே, கர்த்தாவே இவ்வேளைதனிலே, எம்மண்டை வாரும் ஆசீர்தாரும்,
இந்த மாடிவீட்டினில் எமது விருந்தினராகவே வந்தே அமரும்.

யாம் உண்ணுகின்ற, குடிக்கின்ற வேளைதனிலே, யாம் செய்த பொருத்தனைகள்
புத்தாக்கம் பெற்றிடுமே, எம் பொருத்தனைக்கேற்பவே எம்மையுமே
உண்மையுள்ளவராகவே மாற்றிவிடும்.

பூமியின் நம்பிக்கை, மகிழ்ச்சிகள் எல்லாம் பின்னுக்குத்தள்ளியே
உமக்கு உண்மையாய் வாழ்ந்திடவே, உம்மோடு இடுக்கமான வழிதனிலே நடந்திட
எமக்கருள் தந்திடுமே. உம்முடன் சிலுவை சுமந்தே வந்திட, இப்பூலோக ஆஸ்தி,
மின்னும் கசடுகள், ஆசை யாவையும் ஒதுக்கியே.

உம்மைப் பின்பற்றியே, உம்மைப்போல் பலியாக எம்மையுமே தகுதியாக்கித்தாரும் இயேசுவே.
உம்மைப்போல் பிட்கப்படும் வேளையை யாமே ஒரு பாக்கியமாகவே கருதிக்கொண்டே,
ஒரு பங்கு நானும் ஏற்றுச் சுமக்கவேண்டுமே, பாக்யமதைத் தாருமே.

ஒப்புரவாகும் இந்நன்னாளில்தாமே, சமர்ப்பித்தோம் தந்தையே,
உமக்காக ஒப்படைத்தோம் ஏற்றுக்கொள்ளும் எமையே. எங்களது பலிகளெல்லாம்
சிறிதாகவே இருந்திட்டாலும், எடுத்துக்கொள்ளும் கர்த்தாவே,
எம் முழுபலியும் அதுதானே, பலி செலுத்தும் தந்தைக்கே.

திரைக்கு இப்புறம் எப்போதும் ஒவ்வொரு இமைப் பொழுதினிலும் எமக்களித்த சோதனைகள்
அதிகரித்தே வந்திடினும், அவை எப்போதும் நிறுத்துவதற்கில்லை என்பதறிவோம் என் இறைவா.
பேரழிவோ, வாள்வீச்சோ, தீச்சுவாலையோ,எதுவாக இருந்திடினும்,
எங்களது கெத்செமனேயில் உதவிசெய்யும் எம் இறைவா.

உம் இதழ்கள் சுவைத்திட்ட கசப்பான காடியினை நாங்களும் சுவைத்திடவே
கர்த்தாவே ஆசிக்கிறோம், கசப்பாக உள்ளதென்றே பின்வாங்கிச் சென்றிடாமல்,
முன்னோக்கி வந்திட்டே பானமதைப் பருக வேண்டும். எம் வாழ்வின் கெத்செமனே அனுபவிக்க
வேண்டுமன்றோ, மகனுக்குரிய தகுதிகளை யாம் அடைந்தே; எம் தலையுடனே ஒத்திசைவாய்
யாம் அமைய வேண்டுமன்றோ. உம்முடன் வாழ்ந்திடவே, உம்முடன் மரிக்க வேண்டும்.

எமக்கான பாத்திரமோ வலியினாலும் துன்பத்தாலும் நிறைந்தங்கே
அளித்திடினும், எனக்கான பாத்திரமதை ஏற்று நடத்த அருள்தாரும். கடைசி சொட்டுவரை
சுவைத்திடவே வேண்டுமன்றோ, மரணத்திற்கேதுவாக மரிக்கவே வந்திடினும் மீண்டும்
மீண்டும் குடிக்க வேண்டும், அனுமதிப்பீர் எம் தலைவா. பேரின்ப சந்தோஷம் இப்போதே
நிறைந்துவிடும், பாத்திரமோ மகிழ்வுதரும், வாழ்க்கைப் பாத்திரம் இனித்துவிடும்,
சாகாமை வந்துவிடும். இறப்பும் மறைந்துவிடும்.

ஆண்டவரே, ஆசீர்வதிக்கப்பெற்ற விருந்தினையே உம்முடன் நாங்கள் உண்டுவிட்டோம்,
எத்தனை சோதனைகள் எதிர்கொண்டே வந்திட்டாலும், இப்போதும் கடந்து செல்வோம்,
எம் கர்த்தரையே காட்டிக்கொடுக்கா வண்ணம் உதவிசெய்யும் எம் இறைவா.
விரைப்புடனே இருந்து சாத்தான் எமை சோதிக்கின்ற வேளைதனில்,
கர்த்தாவே எமக்காக வேண்டிக்கொள்ள வேண்டுமன்றோ.

***

இந்த இரவுப்பொழுதினிலே பயமும், திகிலும், பேரச்சமும்
காணுகின்ற வேளையிலே, காற்றுகளோ மூர்க்கமாய் சுழன்றடித்தே புயலாய் மாறி
வாழ்க்கையையே அடித்துக்கொண்டே சென்றிட்டாலும், உமது அன்பு
பரிசுத்தவான்கள், அவரின் பஸ்காவை அநுசரித்தே முடித்திடுவார்.

மேசையை சுற்றியே அமர்ந்துள்ளோர் சிலராகவே இருந்திட்டாலும்,
இதிலே பலர் உம் பரிசினையே அடைந்தே நுழைந்திடுவாரே,
வீட்டுக்குள்ளே பாதுகாப்பாய் அழைத்துச் சென்றே சேர்த்திட்ட ஒருவரையே
தினம் புகழ்ந்தே வீடு பேற்றை அடைந்திடுவார், ஆட்டுக்குட்டியானவரின் கலியாண
நாளுக்காக காத்தே இருக்கின்றார், வேளைவந்தே சேர்ந்திடுமே.

போராட்டம் முடியுமுன்னே சிலர் களைப்படைந்தே போய்விட்டாலும்,
வெகுசிலரோ இது ஆகாது என்றே பின்வாங்கிச் சென்றிட்டாலும்,
வைராக்கியம் எனக்குள்ளே ஸ்திரமாய் நான் மேற்கொண்டே,
அன்பிற்கான சோதனையில் விழுந்திடாமல் நின்றிடவே வேண்டுமன்றோ.


விடுபட்டுள்ள நும் சோதரரோ உமதன்பு பாத அங்கமாக வேண்டும்,
உம் கிருபாசனத்தண்டையிலே இறுதி விருந்தை அநுஷ்டிக்கின்றார், அவர்க்கு முன்பாய்
உள்ளதற்கே பலம் முழுதும் திரட்டிக்கொண்டே, அவர் மரணமதில்
தியாகபலி நிறைவேற்றிடவே வேண்டுமன்றோ.

விடியற்கால நட்சத்திர தூதர்களோ ஏகமாகக் கூடிப்பாடி, தேவ புத்திரர் எல்லாருமே கெம்பீரித்தே
பாடுவாரே; பரலோகத்தின் மணி அனைத்தும் இசைகின்ற மகிமையின் காலையிலே,
கிறிஸ்துவின் சபையோ சோதனை நிலைகளையே கடந்தே வந்திடுவர்,
யுகாயுகத்திற்குமே அவர் சந்தோஷம் நிலைத்திடுமே.

தந்தையின் அரியணை முன்பாகவே பேரன்புடனும் பெருமையுடனும் கறைதிறையற்ற
மணவாட்டிதனை கிறிஸ்து சமர்ப்பணம் செய்திடுவார்; திருமணத்திற்கான
நேரம் வந்ததே, விருந்தும்கூட ஆரம்பமாகிவிட்டதே,
கிறிஸ்துவும் அவர் சபையுமே என்றும் ஒன்றாய் வாழ்ந்திடுவார்.

ஆசீர்வதிக்கப்பெற்ற அந்த நந்நாள்தனிலே, மணவாளன் அரியணையில்
தம் மணவாட்டியுடன் அமர்ந்திருப்பார், அவர் மகிழ்வின் முகம் காண்பதற்கே
அப்பெருங்கூட்ட மத்தியிலே கர்த்தாவே எமக்குங்கூட பாக்கியமதைத் தாருமையா.

- Rebecca Fair Doney (R4358).



### நினைவுகூருதலின் தியானங்கள்

# பிலாத்துவுக்கு முன்பாக நடந்திட்ட விசாரணை



# பிலாத்துவுக்கு முன்பாக இயேசு

## மாற்கு 15:1-15; மத்தேயு 27:1-30; லூக்கா 23:1-25; யோவான் 18:28-40; 19:1-16.

**"இயேசுவோ, அப்பொழுது உத்தரவு ஒன்றும் சொல்லவில்லை; அதினால் பிலாத்து ஆச்சரியப்பட்டான்." மாற்கு 15:5**

ஆலோசனைச் சங்கத்தாருடைய வழக்கமான முறைகளை மீறி கூட்டம் கூடின காரியமானது, சூரியன் விடிவதற்கு முன்னதாகச் சட்டப்பூர்வமான தீர்ப்பை வழங்கிட முடியாது; ஆகையால் அவர்கள் காலையில் கூட்டம் கூடினதும், கலந்து ஆலோசனை பண்ணினதும், இரவில் அவர்கள் எடுத்திட்ட முடிவுகளுக்கு அதிகாரப் பூர்வமாய் உறுதிப்படுத்தும் நோக்கத்திற்கு மாத்திரமாகவே கூடிய கூட்டமாகும். அவர்கள் இயேசுவைக் கட்டி, பிலாத்துவினிடத்திற்கு வந்தார்கள்; மேலும், தங்களுடைய நோக்கம் நிறைவேற்றப்படத்தக்கதாக முழுக் கூட்டத்தினரும் இயேசுவோடுகூட பிலாத்துவினிடத்திற்கு வந்தார்கள் (லூக்கா 23:1).

வசனங்கள் 2-5. ஆலோசனைச் சங்கத்தார், தாங்கள் நியாயப்பிரமாணத்திற்காக மிகவும் வைராக்கியம் பாராட்டுபவர்களெனத் தங்களைக் குறித்துக் காண்பித்திட விரும்பின ஜனங்களிடம், தாக்கத்தை ஏற்படுத்தத்தக்கதாக தேவதூஷணம் எனும் குற்றத்தை முன்வைத்ததிலும், மற்றும் தங்களுடைய மதக் கருத்துகளையெல்லாம் பொருட்படுத்தாத உரோம ஆளுநராகிய பிலாத்துவின் முன்னதாக முற்றும் வேறானதும், பொய்யானதுமான குற்றச்சாட்டுகளை முன்வைத்ததிலும் ஆலோசனை சங்கத்தாருடைய பொல்லாப்பான நுண்ணறிவு மிகவும் தெளிவாய் வெளிப்படுகின்றது. பிலாத்துவுக்கு முன்னதாகக்கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டானது, இராஜ துரோகம் பற்றின குற்றச்சாட்டாகும்; இது உரோம அதிகாரிகளுக்குக் கோபத்தையும், எரிச்சலையும் தூண்டக்கூடிய ஒரு குற்றச் சாட்டாகும். இயேசு கலகத்தைத் தூண்டிவிடுவதாகவும், வரிப்பணம் செலுத்துவதைத் தடைபண்ணுவதாகவும், யூதர்களுடைய இராஜா எனும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டதாகவும், இப்படியாக இராயனுக்கும் மற்றும் உரோம அரசாங்கத்திற்கும் எதிராக சதித்திட்டம் பண்ணுவதாகவும் குற்றஞ்சாட்டினார்கள்.

இதிலுள்ள இரண்டாம் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானதாக இருப்பினும் (மத்தேயு 22:21), மற்ற இரண்டும் கொஞ்சம் உண்மையானது போன்று இருந்தது; மற்றும், இவைகளுடன் அநேகம் முக்கியமற்றத் தனித்தனி குற்றச்சாட்டுகளும் சேர்த்துக்கூறப்பட்டது. ஆனால் இவைகளில் எவற்றிற்கும் கர்த்தர் உத்தரவு

சொல்லவில்லை; இப்படியான அபாயமான சூழ்நிலையில், கர்த்தர் தம்மைத் தற்காத்துக்கொள்ள எந்த முயற்சியும் எடுக்காதது குறித்துப் பிலாத்து ஆச்சரியமடைந்தார்.

லூக்கா 23:6-14 வரையிலான வசனங்கள். பொறாமையின் காரணமாகவே தன்னுடைய இந்தக் குற்றமற்றக் கைதிக் கையளிக்கப்பட்டுள்ளார் என்பதைப் பிலாத்துக் கண்டுபிடித்து, தன்னுடைய இந்தக் குற்றமற்றக் கைதியை விடுவிப்பதற்கு எடுத்திட்ட பல்வேறு பிரயாசங்களானது, மதத்தலைவர்களினால் தூண்டிவிடப்பட்டு, இயேசு மரிக்க வேண்டுமெனக் கூக்குரலிடும் மூர்க்கத்தனமான மக்கள் கூட்டத்திற்கு முன்பாக பயனற்றதாகக் காணப்பட்டது; இயேசுவைப் பற்றின நினைவுகள் அவமானத்தினால் மூடப்படத்தக்கதாக/புதைந்துப்போகத்தக்கதாக, மிகவும் அவமானமான மற்றும் கொடூரமான முறையாகிய சிலுவையில் அறையப்படுதல் மூலமாக இயேசு மரிக்க வேண்டுமென, மதத்தலைவர்களால் தூண்டிவிடப்பட்ட ஜனக்கூட்டத்தார் கூக்குரலிட்டனர்.

லூக்கா 23:15-ஆம் வசனம். பின்னர் பிலாத்து, கொள்கைகளைக்காட்டிலும் விவேகமான நடத்தைக்குக் கொடுக்கிற முக்கியத்துவத்தினால் தாக்கத்திற்குள்ளாக் கப்பட்டு, ஜனங்களைத் திருப்திப்படுத்த வேண்டுமென்று விரும்பி, இயேசு கசையடி அடிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்படும்படிக்கு ஒப்புக்கொடுத்தார்; எனினும் அதே வேளையில் தனது கைதிக் குற்றமற்றவர் என்பதைத் தெரிவித்து, இந்த நீதிமானை அவர்களுக்குக் கையளித்த விஷயத்தில், தன்னுடைய குற்றமற்ற நிலையைத் தெரிவிக்கும் வண்ணமாக, தனது கைகளைத் தண்ணீரினால் கழுவினார். பிலாத்து உரோம அரசாங்கத்திற்கு எதிராக செயல்படுகின்றார் என்றும், உரோம அரசாங்கத்திற்கு எதிரான கலகங்களுக்கும், சதித் திட்டங்களுக்கும் ஆதரவு தெரிவிப்பதன் மூலம், இராயனுடைய நம்பிக்கைக்குத் துரோகம் புரிகின்றார் என்றும் இராயனுக்குத் தெரிவிக்கப்படுமெனக் கலக ஜனக்கூட்டத்தார், பிலாத்துவை மிரட்டுவது வரையிலும், பிலாத்து இயேசுவைக் காப்பாற்றும் தன்னுடைய பிரயாசங்களைக் கைவிடவில்லை. யோவான் 19:12-16; மத்தேயு 27:24, 25

## ஓ! என்னைப் போகவிடாத அன்பே

ஓ! என்னைப் போகவிடாத அன்பே -
எந்தன் சோர்ந்துபோன ஆத்துமாவினை உந்தனில் இளைப்பாற்றிடுவேனே;
கடன்பட்டிருக்கும் ஜீவிதத்தையே உம்மிடத்திலேயே கொடுத்திடுவேனே,
அது சமுத்திர அளவாய் ஆழமுள்ள உம்மில்
நிறைந்து வழிந்திடவே, நிறைந்து வழிந்திடவே.

ஓ! என் வழிகளிலெல்லாம் என்னைப் பின்தொடரும் வெளிச்சமே -
விட்டுவிட்டு எரியும் எந்தன் விளக்கினை உந்தனிடத்தில் கொடுத்திடுகின்றேனே;
எந்தன் இருதயமானது கடன் வாங்கின ஒளிக்கதிரினையே பயன்படுத்துகின்றதே,
உந்தன் சூரிய ஒளிப் பிரகாசத்தினிலே எந்தன் இருதயத்தின் பகல் பொழுதும்கூட
பிரகாசமாகவும், அழகாகவும் காணப்படுவதற்கே.

ஓ! வலியிலும் என்னைத் தொடர்ந்து தேடிவருகின்ற சந்தோஷமே -
உந்தனுக்கு எந்தன் இருதயத்தினை, அடைத்திட முடியாதே - நான்
மழையிலும் காண்கின்றேனே வானவில்லை,
உணர்கின்றேனே! வீணில்லை அந்த வாக்குத்தத்தமே,
அந்த விடியல் கண்ணீரற்று இருக்குமென்ற அந்த வாக்குத்தத்தமே.

ஓ! எந்தன் தலையைத் தூக்கிவிட்ட சிலுவையே!
உம்மிடமிருந்து பறந்தோட நான் வேண்டிட மாட்டேன்;
மரணத்தின் குளிர் அலையையும் கண்டு நான் அஞ்சிட வேண்டியதில்லையே,
ஏனெனில் சர்வ மகிமைகளுள்ள உந்தனின் இல்லத்திலேயே,
எந்தன் ஜீவிதம் முடிவில்லாமல் காணப்படுமே!

- வேத மாணாக்கர் துதிப்பாடல்கள், # 282

# பிலாத்துவின் முன்னிலையில் இயேசு - "அவரை நினைத்துக்கொள்ளுங்கள்"

## மத்தேயு 27:11-26

"*பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.*" 1 தீமோத்தேயு 1:15

கெத்செமனே தோட்டத்தில் கர்த்தர் கைதுச் செய்யப்பட்ட பிற்பாடு, விசாரணைப் பண்ணப்படத்தக்கதாக அவர் பிரதான ஆசாரியர்கள், அன்னா மற்றும் காய்பாவின் முன்னிலையில் கொண்டுவரப்பட்டார் மற்றும் மத்தேயு 26:59-66 வரையிலான வசனங்களில் இடம் பெறுகின்றதான விசாரணை நடைப்பெறுவதற்கு முன்னதாக, பிரதான ஆசாரியனுடைய இந்த வீட்டில்தானே அநேகமாக யூதருடைய ஆலோசனை சங்கத்தினர் கூடி, விசாரணை நடத்தப்பட்டது. காலையில் சுமார் 1-மணி அளவுக்கு, அநேகமாக நமது கர்த்தர் உள்ளே கைதியாகக் கொண்டுவரப்பட்டார் மற்றும் கிட்டத்தட்ட காலை 5:30 மணிவரை விசாரணை நீடித்ததாகக் கருதப்படுகின்றது; அநேகமாக அதே நாளில் 6 முதல் 8 மணிக்குள், அவர் உரோம அரசாங்கத்தினுடைய பிரதிநிதியாகிய பிலாத்துவின் முன்னிலையில் கொண்டு வரப்பட்டார். நமது கர்த்தரைக் கைது செய்வதற்கென்று பிரதான ஆசாரியர்களும், ஆலோசனை சங்கத்தினுடைய முன்னிலை வகிக்கும் யூதர்களும் சில காலமாகவே ஆவலுடன் காணப்பட்டார்கள் மற்றும் யூதர்கள் அவரைக் கொன்றுபோடுவதற்கு நாடினபடியால், அவர் (யூதேயா மாகாணத்திலுள்ள) யூதர்கள் மத்தியில் சஞ்சரிக்காமல், கலிலேயாவில் சஞ்சரித்துவந்தார். "ஆகிலும் ஜனங்களுக்குள்ளே கலகமுண்டாகாதபடிக்குப் பண்டிகையிலே அப்படிச் செய்யலாகாது" (மத்தேயு 26:5) என்று அவர்கள் தங்களுக்குள்ளாக யோசித்துக் கொண்டார்கள்; ஆனால் நமது கர்த்தரோ அவர்களிடமிருந்து நழுவிச் சென்றுவிட்டார் மற்றும் பஸ்கா பண்டிகையினுடைய காலத்தில், "தாம் இவ்வுலகத்தை விட்டுப்போகும்படியான தம்முடைய வேளை வந்தது" என்றும், பஸ்கா காலத்தின்போதே நியாயப்பிரமாணத்தினுடைய நிழல்களையும் மற்றும் தீர்க்கத்தரிசனங்களையும் நிறைவேற்றிட வேண்டும் என்றும் இயேசு அறிந்தவராக, பஸ்கா பண்டிகையினுடைய காலத்தில்தானே திரும்பிவந்தார். இறுதியில் இயேசு கழுதையின்மேல் ஏறி எருசலேமுக்கு வந்ததினாலும், அவர் ஆலயத்திலிருந்து காசுக்காரர்களைத் துரத்தினபடியாலும், அவர்கள் கோபம் அடைந்தவர்களாக, ஜனங்கள் அனைவரும் வீட்டில் காணப்படுகின்றதான இரவு வேளையில், இயேசுவைக் காட்டிக்கொடுப்பதாக முன்வந்த யூதாசினுடைய திட்டத்தைப் பற்றிக்கொண்டார்கள்; அவரது விசாரணையைக் காலந்தவறி, இரவில் நடத்தினார்கள்; அவர் யூதருடைய ஆலோசனை சங்கத்தினால் குற்றவாளியெனத் தீர்க்கப்பட்டார் மற்றும் மரணத்தீர்ப்பிற்கு அவசியமான பிலாத்துவின் சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, காரியத்தை அவசரமாய்ச் செயல்படுத்தினார்கள்.

யூதர்களுடைய பிரதான நீதிமன்றமும், எழுபது முக்கியமான மனிதர்களைக் கொண்டதுமாக ஆலோசனை சங்கத்தார் முன்னிலையிலான விசாரணையில்,

நீதியானது பின்பற்றப்படுவது, அதாவது நீதியின் தோற்றமாகிலும் காணப்படுவது அவசியமாகும்; ஆகையால் நமது கர்த்தர் மரணத்திற்குப் பாத்திரமானவர் என்று காண்பிக்கத்தக்கதாக, அவருக்கு எதிராக எதையாகிலும் நிரூபிக்கத்தக்கதாக, சாட்சிகள் கொண்டுவரப்படுவதற்குத் தேடல் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இப்படியான சாட்சிகளைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதால் இறுதியில் பொய்ச்சாட்சிச் சொல்ல விரும்பும் இருவரைப் பெற்றுக்கொண்டார்கள்; இந்தச் சாட்சிகளானவர்கள் நமது கர்த்தருடைய வார்த்தைகளைக் கொஞ்சம் தவறாய்ப் பொருட்படும் விதத்தில் பேசி பொய்ச்சாட்சிச் சொன்னார்கள்; இவர்கள் நமது கர்த்தருடைய வார்த்தைகளைத் திரித்த கண்ணோட்டங்களில் கூறுவதன் வாயிலாக, இயேசுவுக்கு எதிராக சாட்சி பகரவும் மற்றும் பிரதான ஆசாரியர்களுடைய தயவைப் பெற்றுக்கொள்வதற்கும் விரும்பினவர்கள் ஆவார்கள்.

உரோம தேசாதிபதியுடைய சம்மதம் இல்லாமல் மரணத்தண்டனையை நிறைவேற்றுவதற்கான அதிகாரம் ஆலோசனை சங்கத்தாரிடத்தில் இல்லாதிருந்ததாலேயே, அவர்கள் இயேசுவைப் பிலாத்துவுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள் மற்றும் அவர் மோசமான பண்புகள் உடையவர் என்றும், அவர் குற்றவாளியென முறைபடிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார் என்றும், மரணத் தண்டனைக்கான தங்களது உத்தரவிற்கும், தீர்ப்பிற்கும் சம்மதம் தெரிவிப்பது மாத்திரமே பிலாத்துச் செய்ய வேண்டிய முறையான காரியம் என்றுமுள்ளவைகளைச் சுட்டிக்காட்டும் வகையில், இயேசுவைக் கட்டப்பட்ட நிலையில் பிலாத்துவுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்.

ஆலோசனை சங்கத்தாரின் முன்னிலையில் நடைப்பெற்றதான விசாரணையில், இராஜத்துரோகம் (அ) கலகம் பற்றின எந்தக் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படவில்லை, ஏனெனில் இப்படியான குற்றச்சாட்டுகளை வைப்பது என்பது முறையானதாய் இருக்காது; காரணம் உரோமின் நுகத்தடியிலிருந்து விடுதலைக்கான தங்களது உரிமையை யூதர்கள் பற்றிக்கொண்டிருப்பவர்களாய் இருப்பதினால், உரோமிற்கு எதிரான துரோகம் என்பது யூதமார்க்கத்திற்கு உண்மையாய் இருப்பதாய் இருக்கும்; இன்னுமாக இதற்காகவே, அதாவது ஓர் இரட்சகருக்காகவே, ஒரு மாபெரியவருக்காகவே அவர்கள் நூற்றாண்டுகள் காலமாய்க் காத்திருக்கின்றனர்; ஆகையால் ஆலோசனை சங்கத்தார் முன்னிலையில், தேவதூஷணம் எனும் குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. ஆனால் யேகோவா தேவனிலும், யூத மதம் மற்றும் வழக்கங்களிலும் நம்பிக்கையற்றவராக அநேகமாய்க் காணப்பட்டதான பிலாத்துவின் முன்னிலையில், தேவதூஷணம் எனும் குற்றச்சாட்டிற்கு எவ்விதமான மதிப்பும் இருக்காது. ஆகையால் இராயனுக்குத் துரோகம் புரிந்தார் எனும் குற்றச்சாட்டானது பிலாத்துவுக்கு முன்வைக்கப்பட்டது; உரோம அதிகாரத்தை உண்மையாய்ப் பாதுகாப்பவர்கள் எனும் ஸ்தானத்தைப் பிரதான ஆசாரியர்களும், ஆலோசனை

சங்கத்தினர்களும் மாய்மாலமாய் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் பிலாத்துவோ அவர்களது தந்திரத்தை அடையாளங்கண்டுகொண்டார். தனக்கு முன்பாக நிற்கும் கைதி, ஒரு குறிப்பிடத்தக்க மனிதன் மாத்திரமல்லாமல், அவர் (உரோம) சாம்ராஜ்யத்திற்கு அபாயகரமான சத்துரு இல்லை என்றும் பிலாத்து, மனித சுபாவம் குறித்து அறிந்துகொண்டிருந்த அனுபவத்தின் காரணமாக, ஒரு பார்வையிலேயே கண்டுகொண்டுவிட்டார்.

"நீர் யூதருடைய இராஜாவா?" என்று பிலாத்து நமது கர்த்தரிடத்தில் கேட்ட கேள்வியானது, பலத்தரப்பட்ட அர்த்தம் நிறைந்த, ஆர்வமிக்க ஒரு கேள்வியாகும். ஒருவேளை பிலாத்து (இயேசுவிடமிருந்து) அதிகாரம் மற்றும் ஆளுகை மற்றும் வல்லமை மற்றும் மகத்துவம் குறித்து உரத்தச் சத்தத்தினாலான (அ) அதிகாரப்பூர்வமான விதத்திலான ஏதேனும் வலியுறுத்துதலையாகிலும் எதிர்ப்பார்த்திருப்பாரானால் (அ) (பிலாத்துவாகிய) தன்னுடைய அனுதாபத்திற்கான (அ) கருணைக்கான ஏதேனும் வேண்டுகோளை (இயேசுவிடமிருந்து) எதிர்ப்பார்த்திருப்பாரானால் (அ) (இயேசு தமது) பயத்தை வெளிப்படுத்துவாரென எதிர்ப்பார்த்து இருந்திருப்பாரானால், இயேசுவின் பதிலானது பிலாத்துவுக்கு ஏமாற்றத்தையே கொடுத்திருக்க வேண்டும். போதகர் எளிமையான மற்றும் சுருக்கமான வார்த்தைகளில், "நீர் சொல்லுகிறபடிதான்" என்று மாத்திரம் பதிலளித்தார்.

யூத மூப்பர்களும், ஆசாரியர்களும் இயேசுவின் மீது குவித்திட்டதான பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கும், பழிகளுக்கும் இயேசு எந்தப் பதிலும் கொடுக்கவில்லை – "ஒரு வார்த்தைக்கூடக் கூறவில்லை."

தம்முடைய வேளை வந்துள்ளது என்பதை இயேசு அறிந்திருந்தார்; அடிமண்டி வரையிலுமாக தாம் பானம்பண்ணுகிறதான கசப்பும், அவமானமும் நிறைந்த பாத்திரமானது, பிதாவால் அனுமதிக்கப்பட்டவை என்று இயேசு அறிந்திருந்தார்; அவருடைய சித்தமானது, முழுமையாய்ப் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கப் பட்டதாய் இருந்தது; தம்மைக் குற்றப் பழியினின்று விடுவித்துக்கொள்வதற்கோ, பிரதான ஆசாரியர்களால் விரும்பப் பட்டதான மரணத்தீர்ப்பை எதிர்ப்பதற்கோ (அ) தவிர்த்துக்கொள்வதற்கோ அவருக்கு எந்த விருப்பமுமில்லை. தன்னுடைய சொந்த ஜீவனைத் தக்கவைத்துக்கொள்ளும் விஷயத்தில் ஒருவர் இந்தளவுக்குப் புறக்கணிப்பது, பிலாத்துவுக்கு வியப்பாய் இருந்தது; தமது சத்துருக்களை எதிர்ப்பதற்கும் மற்றும் தமது ஜீவனைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் எந்த முயற்சியையும் எடுத்துக்கொள்ளாத நமது கர்த்தரைக் கண்டு பிலாத்து ஆச்சரியமடைந்தாலும், (அவர்மேல் வைக்கப்பட்ட) குற்றச்சாட்டுகளானது அற்பத்தனமான கட்டுக்கதைகள் என்றும், கருத்தில் எடுத்துக்கொள்வதற்குப் பாத்திரமற்றவைகள் என்றும் கூடப் பிலாத்துத் தெளிவாய்க் கண்டுகொண்டார்;

ஆகையால்தான் வழக்கமாய் ஒரு கைதியை விடுதலைப்பண்ணுகிற காலக்கட்டமாய், அக்காலம் இருந்தபடியால், இயேசு நீதியாய்க் குற்றஞ்சாட்டப்பட்டார் என்றும், நீதியாய்த் தீர்ப்புக்குள்ளாக்கப்பட்டார் என்றும் குற்றஞ்சாட்டுகிறவர்கள் நினைத்துகொள்ளலாம், மற்றும் அதற்குப் பின்னர் இயேசு விடுவிக்கப்படுவார் என்று பிலாத்துக் கூறினார். ஆனால் தங்களது திட்டங்களானது தோல்வியடையப்போகின்றது என்ற எண்ணத்தினால் குற்றஞ்சாட்டினவர்கள் கோபமடைந்தார்கள் மற்றும் தங்கள் கைதி, தங்களிடமிருந்து தப்பித்துவிடுவாரோ என்று அவர்கள் அச்சமடைந்து, அக்கட்டளைக்கு எதிராகக் கூக்குரலிட்டு, ஜனங்களைத் தூண்டிவிட்டார்கள்.

உரோம தேசாதிபதியாகிய பிலாத்துவின் நாட்களில் காணப்பட்ட மற்றவர்களைப் போன்றும் மற்றும் இன்றுவரையிலுமாகக் காணப்படுகின்றவர்களைப் போன்றும், உரோம தேசாதிபதியான பிலாத்துவும் எளிதில் பயத்தினால் தாக்கத்திற்குள்ளாகுபவராகக் காணப்பட்டார்; அதிலும் விசேஷமாகச் சொப்பனங்களினால் ஒருவேளை ஏற்படும் பயத்தினால் தாக்கத்திற்குள்ளாகுபவராகக் காணப்பட்டார்; பிலாத்து இயேசுவுக்கு எதிராக செயல்படாதபடிக்கு அவரை எச்சரிக்கைப் பண்ணி, இயேசுவின் நிமித்தமாக, தான் சொப்பனத்தில் வாதிக்கப்பட்டதாகவும், பிலாத்துவின் மனைவியிடமிருந்து வந்த செய்தியின் நிமித்தமாக, இயேசுவை விடுவிக்க வேண்டும் என்று பிலாத்துத் தீர்மானித்தார். இதற்கேற்ப ஜனங்களுக்காக விடுவிக்கப்படப்போகின்றவர், ஒன்றில் இயேசுவாக இருப்பார் அல்லது நன்கு தெரிந்த கள்வனாகிய பரபாசாக இருப்பார் என்ற தனது தீர்மானத்தைப் பிலாத்துத் தெரிவித்தார். இயேசு அல்லது பரபாஸ் என்று முன்வைத்ததினால், பரபாஸ் என்பவன் விடுதலைப் பண்ணப்படுவதற்கு ஜனங்களால் விரும்பப்படாதவனானபடியால், இரண்டு பேரில் பரபாசுக்குப் பதிலாக இயேசுவை விடுவிக்கலாம் என்று யூதர்கள் இறுதியில் முடிவிற்கு வந்துவிடுவார்கள் என்று பிலாத்து நிச்சயமாய் எண்ணி இருந்திருக்க வேண்டும். ஆனால் பிலாத்துத் தவறாய் எண்ணி இருந்திருக்கின்றார்; மத வெறியர்களால் ஏவப்பட்டதான பகைமையானது, ஆழமானதாகவும், பொல்லாததாகவும் மற்றும் மிகுந்த அளவில் மனசாட்சியற்றதாகவும் காணப்பட்டது மற்றும் உடனடியாக பரபாஸ் தெரிவு செய்யப்பட்டார்; இதினிமித்தம் பிலாத்துப் பொறுப்பாளியாகிவிட்டார் மற்றும் இயேசுவும் தீர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டார்.

தேசாதிபதியோ இன்னும் சிக்கலுக்குள்ளானார். சிக்கலான சூழ்நிலையிலிருந்து வெளிவர முயற்சித்தபோது, அவர் திட்டமிடாமலேயே, தன்னை மிகவும் தர்மசங்கடமான நிலைக்கு ஆளாக்கினவராக, இயேசுவை என்ன செய்ய விரும்புகின்றார்கள் என்று விசாரித்தார். "அவரைச் சிலுவையில் அறையும்" என்ற இரத்தத்தை உறையப் பண்ணுகிறதான அவர்களது கூக்குரலானது, பிலாத்துவை ஆச்சரியப்படப்பண்ணினது மற்றும் அவர், "(இல்லை!) ஏன் என்ன பொல்லாப்புச்

செய்தார்?" என்று கேட்டார். ஆனால் இந்த வழக்கு உறுதியற்றுப்போவதைக் கண்ட இரத்த பிரியராயிருந்த குற்றஞ்சாட்டுபவர்கள், "அவரைச் சிலுவையில் அறையும், அவரைச் சிலுவையில் அறையும்" என்று மிகவும் சீற்றத்துடன்/தீவிரமாய்க் கத்தி, ஒரு கலகத்தை உருவாக்கினார்கள் மற்றும் தாங்கள் கேட்டுக்கொண்டது நிறைவேற்றப்படவில்லையெனில், கலகம் பரவலாய் வெடிப்பதற்கான அபாயத்திற்குரிய வாய்ப்புள்ளது என்பதைப் பிலாத்துவின் மனதில் பதியவைத்திட இப்படியாக முயற்சித்தார்கள்.

பரிதாபத்திற்குரிய பிலாத்து! அவர் உரோம சாம்ராஜ்யத்திற்கான பிரதிநிதியாகவும், அதன் சார்பில் பேசுகிறவராகவும் காணப்பட்டார் மற்றும் எவ்விதத்திலாகிலும், ஒழுங்கை தக்கவைக்க வேண்டியவராகவும் காணப்பட்டார். கோரிக்கைகளுக்குப் பிலாத்து இணங்கினார், எனினும் அவர்கள் முன்னிலையில், அவர் தனது கைகளை அடையாளமாய்க் கழுவிக் கொண்டதன் மூலமும், "இந்த நீதிமானுடைய இரத்தபழிக்கு நான் குற்றமற்றவன், (என்னைப்போன்று இரத்தப்பழிக்கு நீங்கள் நீங்கலாகத்தக்கதாக) நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறினதன் மூலமும், வழங்கப்பட்டுள்ளதான தீர்ப்பிலிருந்து தான் வேறுபட்டிருப்பதைப் பிலாத்துச் சுட்டிக்காட்டினார். இப்படியாகப் பொறுப்பை அவர்கள் மீது வைத்தபோது, அவர்களுடைய மனம் மாறும் என்று அவர் கண்டிப்பாய் எதிர்ப்பார்த்திருக்க வேண்டும். அநேகமாக இதே ஓர் எண்ணத்தை மனதில் கொண்டுதான் (அ) அநேகமாகச் சிலுவையில் ஒருவர் அறையப்படுவதற்கு முன்னதாக, அந்நபர் முதலாவதாக வாரினால் அடிக்கப்பட வேண்டும் என்று சட்டம் காணப்பட்டப்படியால்தான், நமது அருமை மீட்பர், சிலுவையில் அறையப்படுவதற்கென ஒப்புக்கொடுக்கப்படுவதற்கு முன்னதாக, வாரினால் அடிக்கப்பட்டார்.

எதிர்ப்புக் குரலில், "இவர் இரத்தப்பழி எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்ற அவர்களது கூக்குரலானது, பிலாத்துவின் அரமனை முழுவதுமாக ஒலித்தது மற்றுமாக பரலோக வாசஸ்தலத்திலும் எதிரொலித்தது மற்றுமாக அவர்களுக்கு எதிரான தெய்வீக நியாயத்தீர்ப்புக் குறித்தத் தீர்க்கத்தரிசனமாகப் பதிவு செய்யப்பட்டது. அந்தோ! பரிதாபத்திற்குரிய யூதர்கள்; என்ன நியாயந்தீர்த்தீர்களோ, அதினாலேயே நீங்கள் நியாயந்தீர்க்கப்பட்டீர்கள். நசரேயனுடைய உண்மையான பின்னடியார்கள் உங்களை ஒருபோதும் தாக்கவில்லை என்றாலும், அவரது பெயரளவிலான நண்பர்களோ, பிலாத்துவினுடைய வாரிசுகளுடைய கரங்களின் வாயிலாக உங்களை அடிக்கடி பழிக்குப்பழி வாங்கியிருக்கின்றனர். "இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே இராஜா இல்லை" என்று நீங்கள் கூக்குரலிட்டீர்கள் மற்றும் உங்களது வார்த்தைகளைச் சர்வவல்லமையுள்ளவர் கருத்தில் எடுத்துக்கொண்டார். ஓ! பரிதாபத்திற்குரிய யூதர்களே, விசுவாசிக்கின்ற அனைவரையும் (தேவனுக்கு முன்பாக)

பரிசுத்தமுள்ளவர்களாக்குகின்றதும், மனுக்குலத்தைப் போல உங்களுக்கும் பாவநிவாரண இரத்தமாக, இரத்தபலியாக இலவசமாய் அருளப்பட்டதுமான, அவரது இரத்தத்தை நீங்கள் ஏற்றுக்கொள்வதைத் தவிர, மற்றப்படி அவருடைய இரத்தப்பழி குறித்து நீங்களே உங்களுக்குக் கூறிக்கொண்டதான சாபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வழியில்லை. அது புது உடன்படிக்கையின் (முத்திரையாகும்) இரத்தமாகும்.

நம் நிமித்தமாக மிகவும் பொறுமையுடன் நமது அருமை மீட்பர் சகித்திட்டதான அவமானம் குறித்ததான விவரங்களானது மிகவும் உருக்கமானதாய்க் காணப்படுகின்றது மற்றும் வேறெந்த காரியத்தைக் காட்டிலும் இதை வாசிக்கையில்தான் அநேக இருதயங்கள் மனந்திரும்பியுள்ளது. இது நமது கர்த்தரையும், அவரது இரத்தமானது சாத்தியமாக்கின மீட்பையும் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டவர்களிடத்திலும், அதன் ஆற்றலை இன்னமும் இழந்து போகவில்லை; பாவிகளால் தமக்கு விரோதமாகச் செய்யப்பட்டதான இவ்விதமான மா விபரீதங்களைச் சகித்த அவரை நாம் ஒவ்வொரு முறையும் நோக்கிப்பார்க்கையிலும் மற்றுமாக இவைகளெல்லாம் (அவர் அனுபவிப்பதற்கு) அவருக்குப் பாத்திரமானவைகளல்ல, ஆனாலும் இவை நம் நிமித்தமான அவரது பலியினுடைய ஒரு பாகம் என்பதை நாம் நினைவுகூருகையிலும், இவைகள் நமது இருதயங்களைப் பக்குவப்படுத்துகின்றது. நாம் அவரது அடிச்சுவடுகளில் நடக்க நாடுகையில், கர்த்தரோடு ஒப்பிடும்போது, இலேசானதாயுள்ள உபத்திரவங்களைச் சகிக்கையில், நாம் மனதில் சோர்ந்து (அ) தளர்ந்து போகாதபடிக்கு, கிறிஸ்துவினுடைய சாந்தத்தையும், பொறுமையையும் மற்றும் பாடுகளையும், அதுவும் மிகவும் அநியாயமாய் அவரால் சகிக்கப்பட்ட பாடுகளையும், கர்த்தருடைய பின்னடியார்கள் அனைவரும் நோக்கிப்பார்க்க வேண்டும் என்று அப்போஸ்தலன் வலியுறுத்தி, இக்காரியம் தொடர்புடையதான மிகவும் அழுத்தமிக்க படிப்பினைகளில் ஒன்றைச் சுட்டிக்காண்பிக்கின்றார் (எபிரெயர் 12:3). இன்னுமாக அதே காரியத்தைக் கிறிஸ்துவினுடைய மற்றப் பாடுகள் தொடர்புடையதாகக் குறிப்பிடும் வகையில் அப்போஸ்தலன், நாம் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, நம் நிமித்தம் அவர் தரித்திரரானார் என்றும், நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாடுபட்டார் என்றும், நமக்காக அவர் தம்முடைய ஜீவனை விரும்பி வந்து, பலியாக ஒப்புக்கொடுத்தார் என்றும், "நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாய் இருக்கிறோம் என்றும் குறிப்பிடுகின்றார்.

# பிலாத்துவின் முன் நல்ல அறிக்கை

## யோவான் 18:28-40; 1 தீமோத்தேயு 6:13

### "நான் இவரிடத்தில் ஒரு குற்றமும் காணேன்." யோவான் 19:4

யூதேயாவுக்கு உரோம ஆளுநராக இருந்த பிலாத்துவின் கரங்களில், ஜீவன் மற்றும் மரணத்தின் அதிகாரம் இருந்தது. யூத ஆலோசனை சங்கத்தினர், யூதர்களுடைய பிரமாணங்கள் மற்றும் வழக்கத்தின்படி மத வழியில் நாட்டை ஆளுகை செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தாலும், மரணத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லாமல் இருந்தது. தேவதூஷணம் பேசுகிறவர்களை (இந்தக் குற்றத்தையே இயேசு மீது செலுத்தினார்கள்) ஸ்தேவானின் விஷயத்தில் கல்லெறிந்து கொன்றது போல, இயேசுவைக் கொல்வதற்கு ஆலோசனை சங்கத்தாருக்கு அதிகாரம் இருந்தாலும், ஜனங்கள் இது அநீதியான தீர்ப்பு எனக் கோபங்கொள்வார்கள் என்று எண்ணி கல்லெறிதலைச் செயல்படுத்தவில்லை. இயேசு தமது போதகத்தினால் பெரிதளவில் செல்வாக்குப் பெற்றிருந்தார் என்று இவர்கள் அறிந்திருந்தபடியால், அவருடைய மரணத்தண்டனையை முடிந்த மட்டும் வெளிப்படையாக எல்லோரும் அறியத்தக்கதாகவும், அவமானப்படுத்தும் விதத்திலும் செயல்படுத்த வேண்டும் என்று விரும்பினார்கள். இப்படிச் செய்வதினால் இயேசுவும், அவருடைய சீஷர்களும் பெருத்த ஏமாற்றம் அடைந்து அவமானம் அடைவார்கள்; மேலும் மதம் மற்றும் அரசியலின் நியாயாதிபதிகளால் குற்றவாளி என்று வெளிப்படையாகத் தீர்க்கப்பட்டு, மரணத்தண்டனை அளிக்கப்பட்டவரின் சீஷன் நான் என்று சொல்ல யாரும் விரும்பமாட்டார்கள். இதுவே அவர்களின் நோக்கமாக இருந்தது. இப்படியாக வளர்ந்து வரும் இந்தப் புதிய மதப்போதகத்தை தடைபண்ண எண்ணினார்கள். தடைபண்ணப்படவில்லையெனில், ஜனங்கள் மீதான தங்களுடைய செல்வாக்குப் போய்விடும் என்று எண்ணினார்கள். இவ்விதமாக இந்தப் பொல்லாத செய்கைக்காரர்கள் தங்களையும் அறியாமல், தேவன் முன்னேற்பாடு பண்ணின பல ஒழுங்குகளைச் செய்து முடித்தார்கள் என்றாலும், தங்களுடைய தீய நோக்கத்திற் காகவே இவைகளை முழுமையாய்ச் செய்து முடித்தார்கள்.

நமது கர்த்தர் இயேசு விடியற்காலை ஐந்து முதல் ஆறு மணியளவில், யூதர்களின் ஆலோசனை சங்கத்தாரால் குற்றஞ்சாட்டப்பட்டு, பின்னர் எவ்வளவு வேகமாக முடியுமோ, அந்த அளவிற்கு வேகமாக உரோம போர்ச்சேவகர்கள் இயேசுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கத்தக்கதாக, அவரை விரைவாகப் பிலாத்துவின் விசாரணை அறைக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். இப்படிச் செய்வதினால் ஜனங்களும் இயேசுவின் விஷயம் தாங்கள் தலையிட முடியாத வண்ணம் கைமீறிப் போய்விட்டது என்று எண்ணுவார்கள் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. பிலாத்து மரணத் தண்டனையை நிறைவேற்றுவதில் தாமதிக்க மாட்டார் என்று யூத அதிகாரிகள் நம்பினார்கள். கொடுமைக்குப் பிலாத்துப் பெயர்ப்பெற்றவராய் இருந்தார். பிலாத்துவைக் குறித்துப் பிலோ என்பவர் இப்படியாக எழுதுகின்றார்: அதாவது "சீரழிக்கும் அவருடைய இயல்பையும், அவருடைய கர்வத்தையும், ஜனங்களை

அவமானப்படுத்தும் அவருடைய குணத்தையும், அவருடைய கொடூரங்களையும், விசாரிக்காமல் மற்றும் குற்றந்தீர்க்காமல் ஜனங்களைக் கொலை செய்யும் அவருடைய இயல்பையும், அவருடைய கவலைக்கிடமான தளராத மிருகத்தனத்தையும் வேறு எவரிடமும் பார்க்க முடியாது. அவர் மிகவும் அஞ்சத் தகுந்தவரும், மிகவும் இரக்கமற்றவரும், மிகவும் பிடிவாதமானவருமான மனுஷனாவார்." யூதர்களின் அதிகாரிகள் சில சமயம், பிலாத்துவிடம் இரக்கம் வேண்டினாலும், பயனில்லாமல் போன சம்பவங்கள் உண்டு. ஆகையால் பிலாத்துவிடம் எந்தக் குற்றவாளியைக் கொண்டுவந்தாலும், மரணத்தீர்ப்புக் கொடுக்க அவர் இணங்கிவிடுவார் என்று பிலாத்துவின் இயல்புகளைத் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டனர்.

குற்றமற்றவரை அழிக்கும்படிக்குத் தாங்கள் கொலை ஆலோசனை செய்கையில், தாங்கள் தீட்டுப்பட்டுப் பஸ்காவைப் புசிக்க தடைவராதபடி பிலாத்துவின் விசாரணை அறைக்குள் பரிசேயர்கள் பிரவேசிக்காத சம்பவத்தை வாசிக்கையில், இவர்களைக் குறித்து நமது கர்த்தர், "நீங்கள் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்" என்று கூறினது நினைவுக்கு வருகின்றது. எவ்வளவு முரண்பாடுள்ளவர்களாகவும், மாயக்காரர்களாகவும் இருந்திருக்கின்றார்கள்! புறஜாதியான பிலாத்துவின் வட்டாரங்களில் சில (பாவத்திற்குரிய அடையாளம்) புளிப்புகள் இருக்கும் என்று பயந்தார்கள், ஆனால் தங்களுக்குள் பிரவேசித்துள்ள உண்மையான பாவத்தின் புளிப்பையும், தங்கள் இருதயங்கள் நன்கு கோபம், கசப்பு, பகை, பொறாமை மற்றும் கலகத்தினால் முழுவதும் நிரம்பியுள்ளதையும் உணராமல் இருந்தார்கள்.

கர்த்தருடைய ஜனங்களுக்கு இதில் எத்துணை பாடங்கள் உள்ளது, ஏனெனில் இந்த இருதய சீர்க்கேடுள்ள சதிகாரர்கள் அவர்களின் நாட்களில் உள்ள வெளிப்புறமான பரிசுத்த ஜனங்கள் ஆவர். இக்காலக்கட்டத்தில் வாழும் நாம், கர்த்தரைச் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்தும் வல்லமையைப் பெற்றிருக்கவில்லை என்றாலும், அவருடைய "சகோதர சகோதரிகளை" அவமானப்படுத்தி, சிலுவையில் அறையும் ஆற்றல் நம்மிடம் உள்ளது; அதாவது, அவருடைய சரீரத்தின் அங்கங்களைச் சிலுவையில் அறைந்து, அவமானப்படுத்தும் வாய்ப்பு நம்மிடம் உள்ளது. நமது கர்த்தரைச் சிலுவையில் அறைந்திட்ட பரிசேயர் மற்றும் பிரதான ஆசாரியர்களைப் போன்ற வஞ்சிக்கப்பட்ட நிலையில், சிலர் இன்றும் செயல்படுகின்றனர். உண்மைதான் பரிசேயர்கள் தாங்கள் செய்வதை அறியாமல் செய்தார்கள்; "நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்" என்று பேதுரு குறிப்பிடுகின்றார் (அப்போஸ்தலர் 3:17). இதைப்போலவே, இன்றும் கிறிஸ்துவின் சரீர அங்கங்களை அவமானப்படுத்துகின்றவர்கள், தாங்கள் செய்வதை அறியாமலேயே செய்கின்றனர். இவர்கள் கர்த்தரினால், குற்றவாளி என்று தீர்க்கப்படுவதற்கு ஏதுவாய் இருக்கின்றனர், அதாவது, "இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறதைப் பார்க்கிலும், அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்...நலமாயிருக்கும்" (லூக்கா 17:2). ஆகவே

ஜீவஊற்று புறப்படும் இருதயத்தைக் கவனத்துடன் நாம் ஒவ்வொருவரும் காத்துக் கொள்வோமாக.

பரிசேயரின் இருதயங்கள் சரியான நிலையில் இருந்திருந்தால், நீதி மற்றும் சத்தியத்தின் மீதான அன்பில் நிறைந்திருந்தால், உண்மையுள்ளவைகளையும், ஒழுக்கமுள்ளவைகளையும், நீதியுள்ளவைகளையும், கற்புள்ளவைகளையும், அன்புள்ளவைகளையும், நற்கீர்த்தியுள்ளவைகளையும், புண்ணியம் உள்ளவைகளையும் உணர்ந்து, ஏற்றுக் கொண்டிருந்தால், தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரைப் புறக்கணித்துச் சிலுவையில் அறையும் தவறைச் செய்திருக்கமாட்டார்கள். இதைப்போல சகோதர சகோதரிகளுக்கான அன்பின் ஆவி யாரிடம் இருக்கின்றதோ, அவர்கள் துன்பம் கொடுக்கும் ஸ்தானத்தை எடுப்பதில்லை; இத்தகையவர்கள் மாத்திரமே சரியான விதத்தில், நிஜமான பஸ்காவைப் புசிக்க முடியும்.

பஸ்கா காலங்களில் யூதர்கள் கைக்கொள்ளும் விநோதமான வழக்கத்தை அறிந்திருந்த உரோம ஆளுநர், விசாரணை அறைக்கு வெளியே தனது ஆசனத்தைக் கொண்டுவந்து அமர்ந்தார். இயேசு விசாரணைக்கு முன்பு நிறுத்தப்பட்டார். பின்புறமாக நின்று அவர் மேலுள்ள குற்றச்சாட்டை யூதர்கள் பிலாத்துவுக்கு அறிவித்தார்கள். சிலுவையில் அறையப்படுவதற்குப் பாத்திரமாக, குற்றவாளியாக இயேசுவை முன் நிறுத்தினாலே போதும், பிலாத்துத் தீர்ப்புக் கொடுத்துவிடுவார் என்று எண்ணினார்கள். குற்றச்சாட்டுகள் சொல்வது கூட அவசியப்படாது என்றே எண்ணினார்கள். ஆதலால்தான், "இவன் குற்றவாளியாயிராவிட்டால் இவனை உம்மிடத்தில் ஒப்புக் கொடுக்கமாட்டோம்" என்று பதிலளித்தார்கள் (யோவான் 18:30). பிலாத்து, பரிசேயர்களை மதிப்பதில்லை; ஆகையால், "இவன் மேல் என்ன குற்றம் சாட்டுகின்றீர்கள்" என்று பரிசேயர்களிடம் அவர் கேட்ட கேள்வியானது இயேசு, பரிசேயர்களுக்கு எதிராக குற்றம் சாட்ட, இயேசுவுக்குப் வாய்ப்புக் கொடுக்கும்படியாகத்தான் கேட்டார் என்று சிலர் கருதுகின்றனர். பல அனுபவங்கள் பிலாத்துவுக்கு இருந்தபடியால், ஒருவருடைய குணங்களைப் பார்வையிலேயே, தோற்றத்திலேயே கண்டுபிடித்து விடுவார். அவரால் நமது கர்த்தரின் தோற்றத்தில் எவ்விதமான குற்றவாளிக்குரிய அம்சம் இல்லை என்றும், அவருக்கு எதிராக குற்றம் சாட்டுகிறவர்களிடம்தான் குற்றவாளிக்குரிய அம்சம் அதிகம் இருக்கின்றது என்றும் காணமுடிந்தது.

ஆசாரியர்களும், பரிசேயர்களும் எதிர்ப்பார்க்காத வண்ணம் பிலாத்து, இயேசுவை நீங்களே நியாயம் விசாரியுங்கள் என்று திரும்ப ஒப்புக் கொடுத்துவிட்டார். "இது ஏதோ மத ரீதியான பிரச்சனை, இதில் நான் செய்ய ஒன்றுமில்லை; நீங்கள் இவரைக் கூட்டிக்கொண்டுபோய் உங்களுடைய பிரமாணங்கள் மற்றும் வழக்கத்தின்படி அவரைச் சிறையில் அடைக்கவோ அல்லது அடிக்கவோ அல்லது உங்களுடைய பிரமாணத்தின்படி சரியான தண்டனை வேறு ஏதாகிலும் கொடுங்கள்" என்றவிதத்தில் பிலாத்துச் சொல்லிவிட்டார். ஆனால் நமது கர்த்தரை மரணத்திற்குள்ளாக்கும் வாஞ்சையினால் தங்களுடைய உண்மையான இருதய நிலையை வெளிப்படுத்தும் விதமாக, "ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய...அதிகாரமில்லை" என்று

கூறினார்கள் (யோவான் 18:31).

முரட்டுத்தனமானவராகவும், கொடூரமானவராகவும், இரக்கமற்றவராகவும் பிலாத்து இருந்தாலும், சூழ்நிலை என்ன என்று அதாவது, குற்றவாளிகள் குற்றமற்றவரைக் கொல்லப் பார்க்கின்றார்கள் என்று புரிந்துக் கொண்டார். தனிமையில் யோசிக்கவும், இயேசு தம்மைப் பாதுகாப்பதற்காக என்ன சொல்ல போகிறார் என்பதைக் கேட்பதற்கும் பிலாத்து யூதர்களிடமிருந்து, இயேசுவைத் தனித்து விசாரணை அறைக்குள் கொண்டு வந்தார். பிலாத்துவுக்குத் தனது ஆளுகைக்கு உட்பட்ட இடத்தில், சமாதானத்தைத் தக்க வைக்க வேண்டியது முதல் கடமையாக இருப்பினும், ஜீவன் மற்றும் மரணம் கொடுக்கும் அதிகாரம் அவர் கரத்தில் இருப்பினும், அவர் யூதர்களின் ஆலோசனை சங்கம் வைக்கும் மனுவைப் புறக்கணிக்கும் அளவுக்கு, நமது கர்த்தரின் தோற்றத்தில் ஏதோ ஒரு தாக்கம் பிலாத்துவிற்கு ஏற்பட்டிருக்க வேண்டும். தனது ஆளுகையின் வட்டாரத்தில் சமாதானம் நிலவ வேண்டுமெனில், அவ்விடத்தின் பிரதான மனுஷர்களோடு இணங்கி செயல்பட வேண்டும். அவ்விடத்தின் பிரதான மனுஷர்களோ, சமாதானத்தைக் குலைக்கும்படியாக ஒருவரின் மரணத்தை விரும்புகின்றனர். பிலாத்து எவ்விதத்திலும் கவனமாய்ச் செயல்பட வேண்டிய முக்கியமான ஸ்தானத்தில் காணப்பட்டார். அவர் உரோம அரசாங்கத்தைப் பிரியப்படுத்த வேண்டும், உள்ளூர் சார்ந்த அதிகாரிகளிடம் ஏற்படும் பிரச்சனைகளையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் இப்பொழுது இந்த உள்ளூர் அதிகாரிகள் தங்களுடைய தீமையான திட்டம் தடைப்பட்டால், பெரிய அளவில் பிரச்சனையை உருவாக்க ஆயத்தமாயிருந்தார்கள். இதே ஜனங்கள் ஆறு வருடங்களுக்குப் பின்பு பிலாத்துவை நீக்கும்படிக்கு, உரோம சக்கரவர்த்திக்கு அநேக குற்றச்சாட்டுகள் அனுப்பினார்கள்.

பிலாத்து இயேசுவுடன் தனித்து இருக்கும்போது, நீ யூதருடைய இராஜாவா? என்று கேள்வி கேட்டார். யூதர்கள் உண்மையில் இம்மாதிரியான குற்றச்சாட்டை இயேசுவுக்கு எதிராக ஏற்படுத்தவில்லை. அவர்கள் கலிலேயனாகிய இயேசுவை, யூதருடைய இராஜா என்று சொல்வதற்கு விருப்பம் கொள்ளவில்லை. மாறாக இயேசுவைத் தீமை செய்கிறவர் என்றும், கலகவாதி என்றும், தேசத்தின் சமாதானத்திற்கு அவர் மரணம் அவசியம் என்றும்தான் குற்றம் சாட்டினார்கள். இயேசு சில நாட்களுக்கு முன்பு கழுதையின் மீது ஏற்றப்பட்டு வந்ததையும், ஜனங்கள் அவரைத் தாவீதின் குமாரன் என்று வாழ்த்தியதையும் குறித்து பிலாத்துக் கேள்விபட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. நீராக என்னைக் குறித்து இப்படிச் சொல்லுகின்றீரா அல்லது மற்றவர்கள் கூறி இதைக் கேட்கின்றீரா என்று இயேசு பிலாத்துவிடம் கேட்டார். "இந்த விஷயத்தைக் குறித்த சத்தியம் என்னவென்று அறிந்துக் கொள்ளும் விருப்பத்தில் கேட்கின்றீரோ அல்லது கேள்விப்பட்டதை வெறுமனே விசாரிக்கின்றீரோ?" என்ற விதத்தில் இயேசுவின் கேள்வி இருந்தது. அதற்கு நான் யூதனோ? என்று பிலாத்து, பதில் கேள்வி கேட்டார். அதாவது, "உங்களுடைய யூத நம்பிக்கைகள் மற்றும் எதிர்ப்பார்ப்புகள் குறித்து எனக்கு என்ன தெரியும்? நான் ஓர் உரோம ஆளுநர். நீர் இராஜாவானல் உம்முடைய சொந்த தேசத்தாரும்,

பிரதிநிதிகளுமே உம்மை என்னிடத்தில் ஏன் ஒப்புக் கொடுத்துள்ளனர். நீர் என்ன செய்தீர்? நீர் இராஜாவானால், என்ன காரியம் உம்முடைய பிரஜைகளை உமக்கு எதிராக திருப்பிற்று? நீர் சாந்தமாகவும், பணிவாகவும், தாழ்மையாகவும் உம்மைத் தற்காத்துக் கொள்ளாமலும் இருக்கின்றீர். உம்மால் உரோம இராஜ்யத்திற்கு எவ்வித ஆபத்தும் ஏற்பட போவதில்லை. உம்முடைய ஜனங்கள் உமக்கு எதிராக கூக்குரலிடுகின்றார்கள். யூதருடைய இராஜாவே, இந்த விநோதமான சூழ்நிலையை எனக்கு விவரியும்" என்ற விதத்தில் கேள்விக் கேட்டார்.

இயேசு தமது இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல என்றும், இல்லையேல் தம்முடைய ஊழியர்கள் தமக்காக போராடியிருப்பார்கள் என்றும், தற்போது நடக்கும் விஷயங்கள் சம்பவித்திருக்காது என்றும், தாம் சத்துருக்கள் கையில் விடப்பட்டிருக்க மாட்டார் என்றும், தம்முடைய இராஜ்யம் இன்னும் வரவில்லை என்றும், இயேசு விளக்கினார். இப்படிப்பட்ட மாபெரும் இராஜா இவ்வளவு எளிமையான சூழ்நிலையில் காணப்படுகின்றார் என்ற அனுதாபத்தினாலும், அதிர்ச்சியினாலும், நீர் உம்மை இராஜா என்று கூறுகின்றீரோ என்று பிலாத்துக் கேட்டார். அதற்கு இயேசு நீர் கூறினபடியே நான் இராஜாதான் என்றார். "நீர் கூறுவது சரியே, நான் இராஜாதான்" என்ற விதத்தில் இயேசு பதிலளித்தார். "சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்" என்று இயேசு கூறினார்.

இப்படியாகப் பிலாத்துவுக்கு முன்பு இயேசு நல்ல அறிக்கையிட்டார் என்று அப்போஸ்தலர் கூறுகின்றார் (1 தீமோத்தேயு 6:13). இயேசு தமது இராஜஉரிமையையும், தெய்வீக அதிகாரத்தையும் அறிக்கையிட்டார். நமது கர்த்தர், தாம் ஒரு இராஜா என்று கூறினதைப் பிலாத்து நம்பவில்லை என்றும், இயேசுவை மதவெறி கொண்டவராகப் பார்த்தார் என்றும் நாம் எண்ணி விடக்கூடாது. இயேசுவைக் குறித்துக் கேள்விபட்டவர்களில் சிலர் மாத்திரமே, அவர் தம்மை இராஜா என்று கூறின வார்த்தையின் உண்மையை அறிந்திருந்தனர். பெயர்க்கிறிஸ்தவ மண்டலங்களிலும் கூட, சிலர் மாத்திரமே நமது கர்த்தருக்குரிய இராஜ ஸ்தானத்தை உணர்ந்துள்ளனர்! இயேசுவைப் பாடுள்ள மனுஷனாக அடையாளம் கண்டு கொண்ட அனைவரும் மற்றும் இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்று உணர்ந்துக் கொண்ட சிலரும், இயேசு மனுஷனை மாத்திரம் அல்ல, முதல் ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட சாம்ராஜ்யத்தையும் மீட்டுக் கொண்டார் என்பதைப் புரிந்துக் கொள்ளவில்லை. நமது கர்த்தரை ஆசாரியராகக் காண்கின்ற அநேகர், அவர் ஒரு இராஜா என்பதைக் காணத் தவறி விடுகின்றனர்; மேலும், ஆயிர வருட அரசாட்சியில், மெல்கிசெதேக்கின் முறைமையின் படியான ஆசாரியராகச் சிங்காசனத்தில், வீற்றிருப்பார் என்பதையும் காண தவறிவிடுகின்றனர். மணவாட்டியாகிய சபை இயேசுவோடு, அவருடைய ஆசாரிய மற்றும் இராஜ பணியிலும்/ஸ்தானத்திலும் பங்கடைவார்கள்.

அவருடைய ஆசாரிய பணி என்பது இரக்கம், மன்னிப்பு மற்றும் கிருபை பாராட்டுவதைக் குறிக்கின்றது. அவருடைய இராஜ பணியும், உலகத்தின் இரட்சிப்புக்கு இன்றியமையாதது. மனுஷர்கள் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று

விடுவிக்கப்பட்டு, அவர்கள் நித்திய ஜீவனைப் பெற தகுதியடையும் பொருட்டு, இருப்புக் கோல் ஆட்சியினால் ஆளப்பட வேண்டும். தம்முடைய விலையேறப் பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டுக் கொண்டவருக்கே, இவ்வேலைகள் அனைத்தும் உரியதாகும். நமது கர்த்தருடைய உவமையில் பெரும்பாலானவைகள்,பல்வேறு நிலைகளிலுள்ள இராஜ்யத்தைப் பற்றியதாகும்; அதாவது இராஜ்யம் முதலாவது கருவாக இருந்து, படிப்படியாக வல்லமையிலும் மற்றும் அதிகாரத்திலும் உயர்ந்து, தீமையை அப்புறப்படுத்தி, பின்னர் என்றென்றும் நிலைத்திருக்கும் நீதியானது இந்த இராஜ்யத்தில் கொண்டுவரப்படுவது பற்றியதாகும்.

இந்த இராஜ்யம் சத்தியம், நீதி மற்றும் அன்பின் இராஜ்யமாக விளங்கி, அதன் பிரஜைகளின் நன்மைக்கு ஏதுவாக செயல்படும். சத்தியத்திற்குச் சாட்சிக் கொடுப்பதின் மூலம் அந்த இராஜ்யத்திற்கு அஸ்திபாரம் போடுவதே, முதலாம் வருகையின் போது நமது கர்த்தரின் ஊழியமாக இருந்தது; அதாவது தேவன் அன்பும், நீதியும் உள்ளவராக இருக்கின்றார் என்பதும், யாரெல்லாம் சத்தியத்தையும், நீதியையும் விரும்புகின்றார்களோ, அவர்களைத் தம்முடன் மீண்டும் சேர்த்துக் கொள்ள விருப்பம் உள்ளவராக இருக்கின்றார் என்பதுமே அந்தச் சத்தியமாக இருந்தது. நமது கர்த்தர் இந்தச் சத்தியத்திற்கு உண்மையாய் இருந்தபடியால், எதிராளியானவனினால் குருடாக்கப்பட்டவர்களிடமிருந்து அவருக்கு எதிர்ப்பு வந்தது. ஆகவே நான் சத்தியத்திற்குச் சாட்சி கொடுக்க வந்தேன் என்ற அறிக்கையானது, அவரது ஊழியத்தின் சுருக்கமாக இருந்தது. இந்தச் சத்தியத்திற்குச் சாட்சி கொடுக்க அவர் ஜீவனை இழக்க வேண்டியிருந்தது. மேலும் சத்தியத்திற்காக அவர் தமது ஜீவனைக் கொடுத்தது என்பது, மீட்பின் கிரயமாக இருந்தது. இதைப்போல் அனைத்துக் கர்த்தருடைய பின்னடியார்களும் சத்தியத்திற்கு ,அதாவது தேவனுடைய குணம் மற்றும் திட்டம் தொடர்பான சத்தியத்திற்கு, அதாவது உலகத்தின் மீட்பின் விஷயத்தில் முதலாம் வருகையின்போது நிறைவேறின அந்தத் திட்டத்தின் அம்சங்களைக் குறித்ததான சத்தியத்திற்கும், பாவம் மற்றும் அழிவிலிருந்து உலகம் மீட்கப்படுவதன் மூலம், இரண்டாம் வருகையின் போது நிறைவேறப் போகிற அந்தத் திட்டத்தின் அம்சங்களைக் குறித்ததான சத்தியத்திற்கும் சாட்சிக் கொடுக்க வேண்டும். இப்படியாகச் சத்தியத்திற்குச் சாட்சிக் கொடுக்க வேண்டுமெனில், இயேசுவின் அனைத்து உண்மையான பின்னடியார்களும் தங்களுடைய ஜீவனை, கிறிஸ்து இயேசுவின் மூலம் தேவன் ஏற்றுக் கொள்ளத்தக்கதான பரிசுத்தமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். இராஜ்யத்தில் ஜீவாதிபதியோடு உடன் சுதந்தரர்கள் ஆக விரும்பும் ஒவ்வொருவரும், சத்தியத்திற்குச் சாட்சிக் கொடுக்க வேண்டும். அதாவது இராஜ்யம் மற்றும் அதன் அஸ்திபாரம் மற்றும் முடிவில் அதன் மகிமையின் அம்சங்களைக் குறித்து, நாம் நல்ல அறிக்கை பண்ண வேண்டும்.

இப்படியான சுருக்கமான பேச்சு, பிலாத்துவுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. மத ரீதியிலான விவாதத்திற்குள் பிரவேசிக்க பிலாத்துவுக்கு விருப்பமில்லை. ஏனெனில், பேச்சு தொடர்ந்தால், தன்னுடைய கடந்த கால

வாழ்க்கையின் குற்றங்கள் நினைவிற்கு வந்துவிடும் என்பதாலே, பேச்சு வார்த்தைகளைச் சடுதியாக நிறுத்தி, "சத்தியமாவது என்ன?" என்று கேட்டார்; அதாவது, "யார் உண்மையாய் இருக்கின்றார்கள்? எங்கு உண்மையான நீதி, உண்மையான சத்தியம், உண்மையான நேர்மை காணப்படுகின்றது?" என்ற விதத்தில் கேள்வி கேட்டார். பதிலை எதிர்ப்பார்க்காமலேயே பிலாத்து, இயேசுவை விசாரணை அறையிலேயே விட்டுவிட்டு, ஆலோசனை சங்கத்தாரையும், அவர்களுடைய திரளான ஊழியர்களையும் பார்க்க புறப்பட்டு வெளியேறினார்.

தான் அவரிடத்தில் எந்தக் குற்றத்தையும் காணவில்லை என்ற தனது முடிவைப் பிலாத்து அறிக்கையிட்டார். தங்களுடைய இரை (இயேசு) தங்களைவிட்டுப் போய்விடுமோ என்று பயந்த யூதர்கள், யோசித்துக் குற்றச்சாட்டுகளை உருவாக்கினார்கள். இயேசுவின் மேல் தாங்கள் தேவதூஷணம் என்று சாட்டின குற்றத்தை இப்பொழுது கூறவில்லை. ஏனெனில் இக்குற்றச்சாட்டு, உரோம ஆளுநரின் கண்களுக்கு முன்பாக ஒரு குற்றமாக இருப்பதில்லை. மாறாக மூன்று குற்றச்சாட்டுகளை முன் வைத்தார்கள். அதாவது, 1) அப்போது இருக்கும் ஒழுங்குகளுக்கு எதிராக ஜனங்களைக் கலகம் செய்யத் தூண்டினார், 2) அந்நிய அதிகாரிகளுக்கு ஜனங்கள் வரிக்கொடுப்பது சரியல்ல என்று போதித்தார் மற்றும் 3) தன்னை இராஜாவாக அறிவித்தார் என்பவைகளே ஆகும் (லூக்கா 23:2).

பிலாத்து, இயேசு கலிலேயாவைச் சார்ந்தவர் என்று அறிந்த மாத்திரத்தில், இவ்விஷயத்திலிருந்து தன்னை விலக்கிக் கொள்ளும் பொருட்டு, கலிலேயா பகுதிக்குப் பொறுப்பேற்றுள்ள ஏரோதிடம் இவ்விஷயத்தை விசாரிக்கும்படி கூறினார். ஏரோது அப்போது எருசலேமுக்கு வந்திருந்தார். இந்த ஏரோதுதான், யோவான் ஸ்நானகனைக் கொன்று போட்டார். (லூக்கா 23:8-ஆம் வசனத்தின்படி) இயேசுவைச் சந்திப்பதில் ஏரோது மிகவும் மகிழ்ச்சியடைந்தார் என்று வாசிக்கின்றோம். ஏரோது, இயேசுவைக் குறித்து அநேக விஷயங்களைக் கேள்விப்பட்டிருந்தபடியால், இயேசு தனக்கும் ஏதாகிலும் அற்புதம் செய்து காண்பிப்பார் என்று எண்ணினார். நமது கர்த்தரிடம் ஏரோது அநேக கேள்விகளைக் கேட்டார். ஆனால் எதற்கும் இயேசு பதில் பேசவில்லை. பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர்களும் இயேசுவின் மீது அநேக குற்றச்சாட்டுகளைக் குவித்தார்கள். அதற்கு இயேசு எதையும் மறுக்காமல், பதில் கூறாமல் இருந்தபடியால், இன்னும் நிரூபிக்க ஆதாரம் தேவையில்லையென்று தங்களுக்குச் சாதகமாகக் கூறினார்கள்.

நமது கர்த்தர் நடந்துக் கொண்ட விதத்தினாலும், தான் எதிர்ப்பார்த்த சந்தோஷம் கிடைக்காததினால் ஏரோது சினம் அடைந்தார், ஏமாற்றமும் அடைந்தார் என்பதிலும் ஐயமில்லை. பின்னர் ஏரோதும், அவர் சேவகர்களும், மீட்பர் தம்மை இராஜா என்று கூறின விஷயத்தைப் பரியாசம் பண்ணி, களிகூர்ந்தார்கள்.

பிலாத்துக் கொடுத்த மரியாதைக்காகவும், யோவான் ஸ்நானனைக் கொன்று போட்டதினிமித்தம் ஏற்பட்ட குற்றமனசாட்சியின் காரணத்திற்காகவும், ஏரோது நமது கர்த்தரைப் பிலாத்துவிடமே அனுப்பிவிட்டார். நமது கர்த்தர், பிலாத்துவின் நியாயவிசாரணை அறைக்குக் கொண்டு வரப்பட்ட தருணமானது, யூதர்களை

இறுதியாக சாந்தப்படுத்தும் தருணமாகவும், நாட்டின் சமாதானத்தைத் தக்க வைக்கும் தருணமாகவும், மேலும் தன்னால் குற்றமற்றவர் என்று கண்டுபிடிக்கப்பட்ட ஒருவரை விடுவிக்க வேண்டிய தருணமாகவும் பிலாத்துவுக்கு இருந்தது. மேலும் இயேசுவிடம் எவ்விதமான குற்றத்தை, தான் காணாதிருந்தும் அவரைக் குற்றச்சாட்டுகள் நிமித்தமாக, சவுக்கினால் அடிக்க பிலாத்துக் கட்டளையிட்டார். சவுக்கடியினால் உண்டாகும் காயத்தினாலும், இழிவினாலும் குற்றச்சாட்டுகிறவர்களிடம் காணப்பட்ட கசப்பின் ஆவி திருப்திப்பட்டு இயேசுவை விடுவிக்க சம்மதித்துவிடும் என்று பிலாத்து உறுதியாக எதிர்ப்பார்த்தார். இயேசு உரோம சேவகர்களால் உள் அறையில் சவுக்கினால் அடிக்கப்பட்டு, இராஜ வஸ்திரமும், முள்முடியும் பிலாத்துவின் கட்டளையின் பேரில் தரிபிக்கப்பட்டார். இப்படிச் செய்வது இரக்கமற்ற போர்ச் சேவகர்களுக்குக் குதூகலமாகவும், இயேசுவுக்கு மிகவும் அவமானமாகவும் இருக்கும்; மேலும் இப்படிச் செய்வதினால் குற்றம் சுமத்தி, துன்பப்படுத்துபவர் களுக்குள் அனுதாபம் எழும்பவில்லை என்றாலும், திருப்தியாகிலும் அடைவார்கள் என்றே பிலாத்து எதிர்ப்பார்த்தார்.

இரவு நேரத்தில் அலைக்களிக்கப்பட்ட பெலவீனத்தினாலும், சவுக்கடியினாலும் பெலவீனப்பட்டுப் பரிதாப தோற்றத்தில் காணப்பட்ட இயேசுவை, பிலாத்து வெளியே கொண்டு வந்தார். முள்முடியுடனும், இரத்தம் தோய்ந்த இரத்தாம்பர வஸ்திரத்துடன் இயேசு நின்ற காட்சி அனுதாபத்திற்குரியதாக இருப்பினும், பரிபூரண மனிதனுக்குரிய உயரிய அம்சங்கள் இன்னும் இயேசுவிடம் காணப்பட்டதினாலேயே பல நூற்றாண்டுகளாக எதிரொலிக்கும், "இதோ இந்த மனுஷன்" என்ற வார்த்தைகளைப் பிலாத்துக் கூறினார். (யோவான் 19:5). நமது கர்த்தரின் தோற்றத்தினால் பிலாத்துக் கவரப்பட்டார். இப்படியாக ஒரு பிரமாண்டமான மனிதனை அவர் ஒருபோதும் கண்டதில்லை. அவரை யாரும் இராஜாவாக்கிவிடும் தோற்றம் அவருக்கு இருந்தது. இந்த விதமான எண்ணம்/தாக்கம், குற்றம் சாட்டுகிறவர்களிடமும் ஏற்படும் என்று பிலாத்து எதிர்ப்பார்த்தார். ஆனால் பிலாத்து எதிர்ப்பார்த்தது தவறு; கலகம் இன்னும் பெருகினது; சிலுவையில் அவரை அறையும்! சிலுவையில் அவரை அறையும்! என்று சத்தங்கள் அதிகம் எழும்பின. இதற்கிடையில் பிலாத்துவின் மனைவி தனக்கு வந்த சொப்பனத்தினிமித்தம், அந்த நீதிமானை எதுவும் செய்யாதீர்கள் என்ற ஆலோசனையைச் சொல்லி அனுப்பினாள் (மத்தேயு 27:19).

சிலுவையில் அறைவது உங்கள் நியாயப்பிரமாணமாக இருந்தால், நீங்களே அவரைக் கொண்டு போய்ச் சிலுவையில் அறையுங்கள் என்று பிலாத்து உடனடியாக யூதர்களிடம் கூறினார். உரோம ஆளுநர் இதில் தலையிட விரும்பாமல், விலகும் விதமாக இப்படிச் சொன்னதால், பரிசேயர்கள் தடுமாறினார்கள். அவர்கள் உரோம ஆளுநர் மற்றும் போர்ச்சேவகரின் கரங்களினால்தான் இயேசு சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். ஏனெனில் இயேசுவின் நண்பர்களும், அவரால் சொஸ்தமாக்கப்பட்டு மற்றும் போதிக்கப்பட்டுள்ள திரளான ஜனங்களும் இயேசுவுக்கு உதவத்துணிந்து தங்களை மேற்கொண்டு விடுவார்கள் எனக் கருதினார்கள். இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறினபடியால், அவர்

நியாயப்பிரமாணத்தின்படி சாக வேண்டும் என்று பிலாத்துவிடம் கூறினார்கள். ஆனால் ஒருவர் தன்னைத் தேவனுடைய குமாரன் என்று கூறினால், அதற்கு நியாயப்பிரமாணம் மரணம் கொடுக்க வேண்டும் என்று கூறவில்லை. நமது கர்த்தர் தம்மைப் பிதா என்று கூறியிருந்தால், அது தேவ தூஷணமாய் இருந்திருக்கும்; அவர் மரணத்திற்குப் பாத்திரமாகவும் இருந்திருப்பார். ஆனால் இயேசு தம்மை, தேவனுடைய குமாரன் என்று கூறினதில் எந்தத் தேவதூஷணமும் இல்லை. ஆனால் தங்களுடைய பிரயாசம் நிறைவேற வேண்டும் என்பதினால் நியாயப்பிரமாணத்தைத் திரித்தும் கூறிவிட்டார்கள்.

இதைக் கேட்ட மாத்திரத்தில், பிலாத்து இன்னும் எச்சரிப்பானார். இப்படிப்பட்ட தோற்றத்தை உடைய இயேசு, தேவனுடன் தமக்கு உறவு உள்ளது என்று கூறும்போது, பிலாத்துவைப் பயமடைய செய்தது. நமது கர்த்தரை விடுவிக்கும்படி, பிலாத்து இன்னும் வகை தேடினார். கடைசியில், "இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல; தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டு," கூறிப் பிலாத்துவை மிரட்டினார்கள் (யோவான் 19:12). பிலாத்து ஒருவேளை தங்களுடைய திட்டங்களைத் தடைபண்ணி, இயேசுவைச் சிலுவையில் அறையும் தங்களுடைய கோரிக்கையை மறுதலித்தால், சீசருக்கும், அவருடைய சாம்ராஜ்யத்துக்கும் பிலாத்து எதிரி என்று இராயனுக்கு அறிவிப்போம் என்றார்கள். இதற்குப் பிலாத்துவினால் ஒன்றும் சொல்ல முடியாமல், திரளான ஜனங்களுக்கு முன்பாக, "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறி கையைத் தண்ணீரினால் கழுவினார். மேலும், "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்று யூதர்கள் கூக்குரலிட்டபோது, பிலாத்து இயேசுவைச் சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தார்.

பிலாத்துவை நாம் குற்றஞ்சாட்ட முடியாது. அவர் ஒரு சாம்ராஜ்யத்தின் ஊழியனாக இருந்து, தனது கீழ் உள்ள ஜனங்களிடம் சமாதானத்தைக் காத்துக் கொள்ளும்படி தன்னால் முடிந்த நியாயமான விஷயங்களைச் செய்தார். ஒருவேளை முழுமையாக வெளிச்சமூட்டப்பட்டு, முழுமையாக அர்ப்பணித்த நிலையில் உள்ள பரிசுத்தவான், பிலாத்துவின் ஸ்தானத்தில் இருந்தால், இயேசுவை விடுவிக்கும் விஷயத்தில், பிலாத்துச் செய்ததைக் காட்டிலும் அதிகமாய்ச் செய்ய எதிர்ப்பார்க்கப் பட்டிருந்திருக்கும். நமது கர்த்தர் பிலாத்துவைக் குற்றஞ்சாட்டவில்லை. யூதர்களே இதற்குப் பொறுப்பானவர்கள். இதற்கான தண்டனை யூதர்கள் மேலும், அவர்களுடைய பிள்ளைகள் மேலும் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக இருக்கின்றது. அவர்களின் துக்க பாத்திரம் இன்னும் முழுமையாக நிரம்பி முடியவில்லை. வரவிருக்கிற மகா உபத்திரவக் காலத்தில், "யாக்கோபின் இக்கட்டு காலம்" என்பது மிகவும் முக்கியமானதாகும். அவர்களுடைய இரட்சிப்பும், பெரு மூச்சுவிடுகிற சர்வ சிருஷ்டிப்பின் இரட்சிப்பும் அருகாமையில் இருப்பதினால், அவர்கள் சார்பில் தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம். "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" என்ற வசனத்தின் கருத்து மற்றும் சம்பவம் எவ்வளவு ஆசீர்வாதமாக இருக்கும் (சகரியா 12:10).

# இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை

## லூக்கா 23:13-26

வெளிவேஷமான நியாயவிசாரணையும், போலித்தனமான நீதியைச் செயல்படுத்திய பிற்பாடு, பரிசேயர்களும், வேதபாரகர்களும், பிரதான ஆசாரியர்களும் அவர்களுடைய ஆதரவாளர்களும், ஊழியர்களும், கூச்சலிட்டுக்கொண்டிருந்த மக்கள் கூட்டத்தாரும் அதிகாலைப்பொழுதில் இயேசுவைப் பிலாத்துவினிடத்திற்கு இழுத்துச் சென்றார்கள் (யோவான் 18:28). ஆனால் அங்குச் சென்ற அவர்கள், முற்றத்திலேயே நின்றுவிட்டார்கள். அநேகமாக இயேசு, விசாரணை அறைக்குள் தனிமையில் அரண்மனையின் காவலாளரால் அழைத்துச் செல்லப்பட்டிருக்க வேண்டும். யூதர்கள் உள்ளே பிரவேசிப்பதைத் தவிர்த்தனர். ஏனெனில், ஒருவேளை அவர்கள் பிரவேசித்தால், அது அவர்களைச் சம்பிரதாய முறைப்படி தீட்டுப்படுத்தி, அன்றைய நாள் இரவில், அன்று ஆரம்பிக்கவிருக்கும் பஸ்கா பண்டிகையை அநுசரிப்பதையும் தடுத்துவிடும் என்பதினாலேயாகும். இது எத்தகைய ஆச்சரியமான கலவையைக் கொண்டுள்ளது. அதாவது அசுத்தம் மற்றும் சுத்தத்தின் கலவையை நமக்குக் காட்டுகின்றது! குறைவான முக்கியத்துவமுடைய காரியங்களிலுள்ள ஒரு சிறு எழுத்திற்கும், ஓர் எழுத்தின் உறுப்பிற்கும் அவர்கள் எவ்வளவு சரியாகச் செயல்படுகின்றனர். ஆனால், தெய்வீக நியாயப்பிரமாணத்தினுடைய உண்மையான சாரமாகிய அன்பு மற்றும் இருதயத்தில் தூய்மை தொடர்பான அனைத்துக் காரியங்களுக்கும் முற்றிலுமாகப் புரிந்துகொள்வதில் எவ்வளவாய்த் தவறிவிட்டனர்! ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நாமோ, இம்மாதிரியாக நீதியின் மீது அன்பு இல்லாமலும், முழுமையாகப் பரிசுத்தமில்லாமலும், கெட்ட இருதயம் உடைய நிலையிலும், வெளித்தோற்றமாக மதரீதியான சடங்காச்சாரங்களை அநுசரிப்பதும், வெளித்தோற்றமாகச் சடங்காச்சாரமான விஷயங்களில் ஜாக்கிரதையும், உண்மையும் காட்டுவதுமான விஷயங்கள் நமக்குள் வளராதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவோம். உண்மையைச் சொல்லப்போனால், யூதர்கள் மத்தியில் காணப்பட்ட இந்தப் பிரதான ஆசாரியர்கள் தங்கள் மதத்திற்கடுத்த வெளித்தோற்றமான அநுசரிப்புகளில் ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருப்பினும், இவர்கள் தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி பார்க்கும்போது, இருதயத்தில் கொலைப்பாதகம் கொண்டவர்களாக இருந்தனர். நாம் இவர்களைப்போன்று இல்லாமல் இருப்போமாக.

யூதர்கள், தங்கள் இனத்தான் ஒருவனை உரோம தேசாதிபதி முன்பு குற்றம் சாட்டுவது அரிதான காரியமாகும். உரோமர்களிடமிருந்து தங்கள் தப்பிதங்களை மறைத்துக்கொள்வதும், தாங்கள் குற்றமற்றவர்கள் என்ற தீர்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது முடிந்தளவுக்கு இரக்கம் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிப்பதுமே இவர்களுடைய வழக்கமாய் இருந்தது. பிலாத்து தங்கள் கோரிக்கைக்கு உடனடியாக ஒப்புக்கொண்டு, இயேசுவைச் சிலுவையில் அறைந்துவிடுவார் என்றே இஸ்ரயேல் தேசத்தின் இந்தப் பிரதானமான மனுஷர்கள் துணிவுடன்/நம்பிக்கையுடன் எண்ணினார்கள். ஆனால், பிலாத்து (தன் முன் கொண்டுவரப்பட்ட) இவ்வழக்குத்

தொடர்பான விவரங்கள் குறித்து விசாரித்தபோது அல்லது ஒரு யூதனை அவனுடைய இனத்தாரின், குறிப்பாக அவன் இனத்தின் தலைவர்களின் கோபத்தினின்று விசேஷமாகப் பாதுகாக்கும்பொருட்டு நியாயம் வழங்க விரும்பினவராக விசாரித்தபோது, அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். "ஆதலால் பிலாத்து அவர்களிடத்தில் வெளியேவந்து: இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்குப் பிரதியுத்திரமாக: இவன் குற்றவாளியாயிராவிட்டால், இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கமாட்டோம் என்றார்கள். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள் என்றான். அதற்கு யூதர்கள்: ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை என்றார்கள்" (யோவான் 18:29-31). இவ்வசனப்பகுதியில், பிலாத்துவின் கேள்வியும், யூதர்களின் பதிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. உரோம அரசாங்கமானது, மரணத் தண்டனை அளிப்பதற்கான அதிகாரத்தை யூதர்களின் ஆலோசனை சங்கத்தாரிடமிருந்து எடுத்துவிட்டது. மேலும், இயேசுவுக்கு மரணத்தண்டனை அளிக்கப்பட வேண்டுமேயொழிய, வேறு குறைவான தண்டனை அளிக்கப்படக்கூடாது என்பதே அவர்களுடைய மனங்களில் காணப்பட்டது.

நியாயத்தை விசாரிக்காமல், பிலாத்து தங்கள் குற்றச்சாட்டிற்கு உடனடியாகச் சம்மதம் அளித்துவிடுவான் என்ற அவர்களுடைய எதிர்பார்ப்புத் தோல்வியடைந்தது. ஆகவே, இப்பொழுது வேறுவிதத்தில் அவர்கள் தங்கள் கோரிக்கையை வைக்க வேண்டும். அதாவது, ஒரு குற்றச்சாட்டை அவர்கள் உருவாக்க வேண்டும். மேலும், அக்குற்றச்சாட்டானது, உரோம தேசாதிபதியிடம் முறையிடக்கூடியதாகவும் இருக்க வேண்டும். இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறியதே குற்றம் என்பதின் அடிப்படையில் காணப்பட்ட அவர்களுடைய குற்றச்சாட்டானது, பிலாத்துவின் கணிப்பில் ஒன்றிற்கும் உதவாததாய்க் காணப்படும் என்று அவர்கள் நன்கு அறிந்திருந்ததினால், இயேசுவை அநீதியான விதத்தில் தேவதூஷணம் பேசியவர் என்று குற்றஞ்சாட்டினதற்குப் பிற்பாடு பிலாத்துவின் முன்பு மூன்று புதிய குற்றச்சாட்டுக்களை வைத்தார்கள். அவை பின்வருமாறு, (1) இயேசு, சமாதானத்தைக் குலைத்துப்போட்ட கலகவாதி, (2) இயேசு, உரோமர்களின் வரி வாங்கும் விஷயத்தில் குறுக்கிட்டவர், (3) இயேசு, தம்மை இராஜா என அறிவித்ததினால் இராயனுக்கு எதிரானவர் என்பவைகளேயாகும்.

அவ்வழக்கின் உண்மை நிலையைப் பிலாத்து உடனடியாகக் கிரகித்துக் கொண்டார். அதாவது, "பிரதான ஆசாரியர்கள் பொறாமையின் காரணமாக இயேசுவை ஒப்புக்கொடுத்து" (மத்தேயு 27:17), அவரைக் குற்றஞ்சாட்டினார்களே ஒழிய, இராயன் மற்றும் இராயனுடைய அரசாங்கத்தின் மீதான எந்தவிதமான புதிதாய் உதித்த அன்பினால் இவைகளைச் செய்யவில்லை என்று கிரகித்துக்கொண்டார். குற்றஞ்சாட்டும் திரளான கூட்டத்தாரை முற்றத்திலேயே விட்டுவிட்டு பிலாத்து, இயேசு நின்றுகொண்டிருந்த விசாரணை அறைக்குள் சென்று, "நீர் யூதருடைய இராஜாவோ?" என்று கேள்வி கேட்டார் (யோவான் 18:33). கிறிஸ்தவனாகவோ அல்லது யூதனாகவோ காணப்படாமல், புறஜாதி மனுஷனாகக் காணப்பட்ட பிலாத்துவுக்குக் காரியங்கள் முழுவதும் மிகவும் கேலிக்கூத்தாக இருந்திருக்க வேண்டும். மேலும், பிலாத்துவின்

கணிப்பைப் பொறுத்தமட்டில் உலகமெங்கும் காணப்படும் பல்வேறு தேசங்களின் கற்பனைகளுடன்கூடிய நம்பிக்கைகளுடன் மேசியாவைக் குறித்த யூதர்களின் சகல நம்பிக்கைகளும் நகைப்பிற்குரியதாயும்/அர்த்தமற்றதாயும் காணப்பட்டது. பிலாத்து தனக்கு முன்பு நிற்பவர் குறிப்பிடத்தக்கவர்/உயர்வானவர் என்று உணர்ந்துகொண்டார். இன்னுமாக, இயேசுவின் பதில் அதிக தடுமாற்றத்தை உண்டுபண்ணினது. ஏனெனில், இயேசு தம்முடைய இராஜ்யம் தற்காலத்திற்கு உரியதாகவும், தற்கால ஒழுங்குகளை உடையதாகவும் இராமல் எதிர்க்காலத்திற்கு உரியதாகவும், இந்தச் சத்தியம் குறித்த சாட்சி கொடுக்கவே தாம் வந்துள்ளதாகவும் பிலாத்துவிடம் கூறினார். பிலாத்து தன்னால் புரிந்துகொள்ள முடியாத பிரச்சனைகளுக்குள் தான் ஆழமாகக் கடந்துசெல்வதை உணர்ந்தவராக சடுதியாக, "சத்தியமானது என்ன?" என்ற கேள்வி கேட்டு சம்பாஷணையை நிறுத்தினார். பதிலை எதிர்பார்க்காததுபோன்று அல்லது பதிலுக்காகக் காத்திராததுபோன்று, "சத்தியமாவது என்ன?" என்று கூறினார். அதாவது, "ஆம், ஆம் நாம் சத்தியம், நீதி, நேர்மை என்பதான வார்த்தைகள் பேசப்படுவதைக் கேட்டிருக்கின்றோம். ஆனால், இவைகளை எங்குப் பார்க்க முடிகின்றது? இவைகளின் அர்த்தம் தான் என்ன? எது சரி? (எது சரியல்ல?) என்று யாரால்தான் தீர்மானிக்க முடிகின்றது? நீர் நேர்மையாக இருக்கின்றீரா? அல்லது உரோமின் பிரதிநிதியாக அதிகாரத்தில் இருக்கும் நானாவது நேர்மையாக இருக்கின்றேனா? அல்லது உம்முடைய மரணத்தைக் கோரிக்கொண்டிருக்கும் அந்த யூதர்களாவது நேர்மையாக இருக்கின்றார்களா? எது உண்மை? இது நாம் இன்னும் தொடர்ந்து விவாதிப்பதற்கு மிகுந்த குழப்பத்தை ஏற்படுத்தும் கேள்வியாக இருக்கின்றது" எனச் சொல்வதுபோன்று இக்கேள்வியைக் கேட்டார்.

பிலாத்து தான் விசாரணைப் பண்ணின, சாந்தமும், தாழ்மையுமுள்ள அம்மனிதனிடமிருந்து உரோம சாம்ராஜ்யத்திற்கு எவ்விதமான ஆபத்தும் வராது என்று தன் மனதில் தெளிவாகப் புரிந்துகொண்டார். மேலும், இயேசு நிச்சயமாக ஆட்சிக்கு எதிராக குழப்பம் பண்ணுகிறவரல்ல என்றும், எவ்விதத்திலும் புரட்சியாளர் இல்லையென்றும் பிலாத்து அறிந்துகொண்டார். இன்னுமாக, இயேசு உலகத்திற்கு எவ்விதமான பாதிப்புகளையும் உண்டாக்குபவரல்ல என்றும், தாம் பரலோகத்திலிருந்து வந்தவர் என்பது பற்றியும், அவருடைய இராஜ உரிமை பற்றியதுமான இயேசுவினுடைய போதனைகள் ஒருவேளை ஆதாரமற்றவைகளாகக் காணப்பட்டாலும், இவருடைய இப்போதனைகள் எல்லாம் சமநிலையில் காணப்படாத மனதின் நிலையினால் உண்டானவைகளாய் இருந்தாலும், இயேசு எவ்விதத்திலும் உரோமிற்கு தொல்லை கொடுப்பவர் அல்ல என்றும், பிலாத்து உணர்ந்து கொண்டார். ஆகவே,"இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை" என்ற வார்த்தைகளைக் கூறினார் (லூக்கா 23:4). பிலாத்துவின் தீர்மானமே அவருடைய நாட்கள் முதல் இன்றுவரையிலும் உலகத்தில் பல்வேறு மதவேறுபாடுகளுடன் காணப்படும் கனமுடைய மற்றும் நியாயமான மனதையுடைய சகல நபர்களுடைய தீர்மானமாகவும் காணப்படுகின்றது. கண்டுபிடிக்கப்பட்டுள்ள குற்றங்கள் அனைத்தும், கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்கிக்கொண்டு திரியும் பெயரளவிலான அவருடைய பின்னடியார்களுக்கு எதிராகவே காணப்படுகின்றது. அதாவது, கர்த்தருடைய

பின்னடியார்கள் எனத் தங்களை அறிவித்தும், அவரைப் பின்பற்றாமலும், அவருடைய போதனைகளுக்கு எதிராக பல வழிகளுக்குள் கடந்து போனவர்களுக்கு எதிராகவே காணப்படுகின்றது. இத்தகையவர்கள் கர்த்தருடைய புனிதமான நாமத்திற்குக் கனவீனத்தையே கொண்டுவந்துள்ளனர். ஆனால், பிலாத்துவுடன் சேர்ந்து இன்றைய உலகமும், இயேசுவைக் குறித்து, "இந்த மனுஷனிடத்தில் யாதொரு குற்றத்தையும் நாங்கள் காணவில்லை" என்று அறிவிக்கின்றது. இன்னும் சொல்லப்போனால், கர்த்தருடைய ஆசீர்வாதமான வாக்கியங்களில் பலவற்றை மேற்கோள் காட்டிட உலகம் விரும்புகின்றது. இன்னுமாக, கர்த்தர் கூறின நீதியின் கோட்பாடுகள் அருமையான வைகள் என அறிவித்துள்ள அநேகர், அவருடைய கோட்பாடுகளின்படி வழிநடத்தப்பட விருப்பமற்றவர்களாய் இருந்தாலும், அவர் கூறின நீதியின் கோட்பாடுகளின் அடிப்படையில் ஓர் அரசாங்கம் கட்டியெழுப்பப்பட விருப்பமுள்ளவர் களாகக் காணப்படுகின்றனர்.

பிலாத்துவின் தீர்மானத்தினால் யூத மத தலைவர்கள் பெருத்த ஏமாற்றம் அடைந்தனர். ஆகவே, குற்றச்சாட்டுகளைக் குறித்து விவாதிக்க ஆரம்பித்து, இயேசுவின் போதனைகள் ஜனங்கள் மத்தியில் புரட்சியை ஏற்படுத்தும் விதத்தில் காணப்பட்டது என்றும், அவருடைய போதனைகள் கலிலேயாவில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும், இப்பொழுதோ இயேசு எருசலேமுக்கும் கூட வந்துவிட்டார் என்றும், உள்ள காரியங்களை நிரூபிக்க முயற்சி செய்தனர். உண்மைதான், மத சம்பந்தமான காரியங்களில் கர்த்தருடைய போதனைகள் புரட்சிகரமானவைகள்தான். ஆனால், இயேசு அரசியல் ரீதியிலான கலவரத்தை வளர்த்தக்கூடியவர் எனப் பிலாத்து புரிந்துகொள்ள வேண்டும் என அவர்கள் முன்வைத்த அரசியல் புரட்சி தொடர்பான குற்றச்சாட்டானது தவறாகும். மேலும், இது கர்த்தருடைய அனைத்துப் பின்னடியார்களும் கவனிக்க வேண்டிய நல்ல கருத்தாகும். அதாவது நாமும், நமது கர்த்தரைப் போன்று உண்மையாய்த் தொழுதுக்கொள்ளுதல், கர்த்தருக்கு இருதய பூர்வமான கீழ்ப்படிதல் முதலிய விஷயங்கள் தொடர்பாக, தேவனுடைய ஜனங்கள் (கிறிஸ்தவர்கள்) மத்தியில் புரட்சியை ஏற்படுத்தும் பொறுப்பைப் பெற்றிருக்கின்றோம். ஆனால், நமக்கும் நமது கர்த்தர் போன்று அரசியல் புரட்சிகள் தொடர்பான விஷயங்களுடன் எவ்விதமான தொடர்பும் இல்லை. இப்படிப்பட்ட காரியங்கள் (அதாவது, அரசியல் புரட்சிகள்) கர்த்தருக்குரிய நாளிலும், வழியிலும் வருமென நாம் அறிவோம். ஆனால், அவர் எப்படி மாம்சத்திற்குரிய ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் காணப்பட்டாரோ, அதுபோலவே, நாமும் அவ்வாயுதங்கள் கொண்டு யுத்தம் பண்ணுகிறதில்லை. மேலும், அவர் செய்ததுபோன்று நாமும் தேவன் தமக்குரிய வேளையிலும், விதத்திலும் ஸ்தாபிக்கப்போகின்ற இராஜ்யத்திற்காகக் காத்திருக்க வேண்டும். அதாவது, "புறஜாதிகளின் காலங்கள்" நிறைவடைவதற்கு நாம் காத்திருக்கின்றோம். நிறைவடையும்போது, தேவன் ஏற்கெனவே தீர்மானித்திருந்தபடி மற்றும் ஏற்பாடுபண்ணியிருந்தபடி இவ்வுலகத்தின் இராஜ்யங்கள் தேவனுடைய இராஜ்யத்திற்கு இடம் விட்டுக்கொடுக்கும். மேலும், தேவனுடைய இராஜ்யமானது, இவ்வுலகத்தின் இராஜ்யங்களை ஒதுக்கித் தள்ளிவிடும். மேலும், இந்த இராஜ்யத்தில்தான் நாம் கர்த்தருடைய கிருபையினால் பங்கடைவோம் என நாம்

விசுவாசிக்கின்றோம்.

கலிலேயா என்ற வார்த்தையைக் கேட்டபோது, இயேசுவுக்கு அநீதி செய்யாமலும், அல்லது யூதர்களுடைய அதிகாரிகளின் பகையைத் தேவையின்றி எழுப்பிவிடாமலும் இருப்பதற்கு ஏதுவாக தனது சிக்கலிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான யோசனை பிலாத்துவின் மனதில் தோன்றியது. ஆகவே, இவ்வழக்கை அப்போது எருசலேமுக்கு வந்திருந்த ஏரோதிடம் ஒப்படைத்துவிடுவதன் மூலம் பிரச்சனை ஓய்ந்துவிடும் என்று அவர் எண்ணினார். இந்த ஏரோதுதான் யோவான்ஸ்நானனை சிரைச்சேதம் பண்ணினவர் ஆவார். மேலும், இயேசுவின் பிறப்பின்போது, குழந்தைகளைக் கொன்றுபோட்ட ஏரோதின் குமாரனாகவும் இந்த ஏரோது காணப்பட்டார். மேலும், இந்த ஏரோது இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டபோது, இயேசு அநேகமாக மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த யோவான்ஸ்நானனாக இருக்கக்கூடும் என்று யூகம் பண்ணினவராகவும் காணப்பட்டார். "ஏரோது இயேசுவைக்குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்ததினாலும், அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பியிருந்ததினாலும், அவரைக் காணும்படி வெகுநாளாய் ஆசைகொண்டிருந்தான். அந்தப்படி அவரைக் கண்டபோது, மிகவும் சந்தோஷப்பட்டு" (லூக்கா 23:8). ஏரோது, இயேசுவிடம் அநேகம் கேள்விகள் கேட்டபோதும், எவ்விதமான பதிலையும் பெற்றுக்கொள்ளவில்லை. நமது கர்த்தர் அங்குத் தம்மைப் பாதுகாப்பதற்காகவோ, தம்முடைய வாதத்தை முன்வைப்பதற்கோ நம்முடைய பாவங்களுக்கான தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளவோ முயலாமல், முற்றிலும் மாறாகவே காணப்பட்டார். அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அவரிடத்தில் நிலவின அமைதியானது ஞானமுள்ளதும், மகா மேன்மையுள்ளதுமான ஒருமுறையாகும். கைத்திறனால் வித்தைக்காட்டுபவர்போல் இயேசு செய்து தன்னை மகிழ்ச்சியடையப் பண்ணுவார், அதாவது தனக்கு வேடிக்கைக் காட்டுவார் என ஏரோது எதிர்ப்பார்த்தார். ஆனால், இராஜாவாகிய தனது கேள்விகளும், ஆர்வமும் (இயேசுவினால்) புறக்கணிக்கப்பட்டபோது, அவருக்கு ஆச்சரியத்தையும், ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எனினும், ஏரோதும் அவருடைய அரசபையாரும் கொஞ்சம் வேடிக்கைக் காணத்தக்கதாக இயேசுவின் இராஜரிகம் சம்பந்தமான கொள்கைகளை ஏளனம் செய்வதற்கும், அவரைக் கிண்டலாக வணங்குவதற்கும், அவரை அவமானப்படுத்துவதற்குமான வாய்ப்பு ஏரோதின் போர்ச்சேவகர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஏரோது, இயேசுவை நியாயம் விசாரிக்கும்படிக்கு அவரைப் பிலாத்துவிடமே திருப்பி அனுப்பினார்.

நியாயம் வழங்க வேண்டுமெனக் கூக்குரலிட்டுக் கொண்டும், இயேசுவின் மரணத்திற்கு உரோம சட்டப்படி அதிகாரம் வழங்க வேண்டும் என்றும், கூக்குரலிட்டுக்கொண்டிருக்கும் கீழ்த்தர மக்கள் கும்பலும், யூதர்களின் பிரதானமானவர்களும், மீண்டுமாகப் பிலாத்துவின் அரண்மனை முற்றத்திற்கு வந்து நிரம்பினார்கள். பிலாத்துவோ வெளியே வந்து இயேசுவினிடத்தில் எந்தக் குற்றத்தையும் தன்னால் காணமுடியவில்லை என்று அறிவித்தார். இன்னுமாக, இயேசுவுக்கு எதிரான கூக்குரல் மற்றும் கலகத்தினிமித்தமாக இயேசுவை வாரினால் அடிக்கும்படிக்கு

ஒப்புக்கொடுக்கின்றார் என்றும், இப்படியாக, தான் இவ்வழக்கை முடிவிற்குக் கொண்டுவருகின்றார் என்றும் பிலாத்து அறிவித்தார். இயேசுவை வாரினால் அடிப்பது என்பது, பிலாத்துவின் சார்பில் இரக்கம் பாராட்டுவதாக இருந்தது. மேலும், இப்படி இயேசுவை அடிப்பதன் மூலம் குற்றம் சுமத்துபவர்களின் இரத்தப்பழி வாங்கும் கூச்சலை திருப்திச் செய்துவிடலாம் எனப் பிலாத்து எதிர்பார்த்தார். ஆனால், இம்முயற்சியானது, பயனற்றதாகிவிட்டது. மேலும், இம்முயற்சியானது நமது கர்த்தருடைய பாடுகளைக் கூட்டுவதாக மாத்திரமே காணப்பட்டது. "அவரை சிலுவையில் அறையும்!" என்று மக்கள் கூட்டம் அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டார்கள். பிலாத்துத் தப்பித்துக்கொள்வதற்கென அடுத்து கையாண்டவிதமானது, வருடந்தோறும் இக்காலக்கட்டத்தில் கைதிகளில் ஒருவனை அவர்களுக்காக விடுவிப்பது வழக்கமாய் இருந்தபடியால், இம்முறையில் இயேசுவை விடுவித்து, அவர்களை இரண்டு விதத்தில் திருப்தி செய்யப்போவதாக பிலாத்து அறிவித்தார். இரண்டுவிதம் என்னவெனில், (1) முதலாவதாக இயேசுவைக் குற்றவாளியென்று ஒப்புக்கொள்ள கருதுவதாகும். (2) இரண்டாவதாக குற்றவாளியாகிய அவரை, வருடந்தோறும் கடைப்பிடிக்கும் வழக்கத்தின்படி விடுதலை செய்துவிடுவதாகும். ஆனால், பக்தியுள்ளவர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கைப்பண்ணிக்கொண்ட அவர்களுடைய இருதயத்தில் கொலைபாதகமே இருந்தது. அவர்களுடைய இருதயங்களில் காணப்பட்ட சுயநலத்தினிமித்தம் அவர்கள் இரக்கத்திற்கும், நீதிக்கும் குருடர்களாய் இருந்தார்கள். காரணம், இயேசுவும் அவருடைய போதனைகளும் ஜனங்கள் மத்தியில் அவர்களுடைய மதிப்பையும், அவர்களுடைய போதனைகளின் மதிப்பையும் குறைத்துப்போட்டதின் அடிப்படையிலேயே இயேசுவுக்கு எதிரான பகைமை அவர்களிடத்தில் உண்டாயிற்று.

இதுவரையிலும் செய்யப்பட்ட ஒவ்வொரு பாவத்திற்கும், ஒவ்வொரு குற்றத்திற்கும் அஸ்திபாரமாக சுயநலம் காணப்படுகின்றது என்பதை நாம் கவனிக்க வேண்டும். சுதந்தரித்துக்கொண்டதன் காரணமாக நம்மிடத்தில் காணப்பட்டு, இரகசியமாக வளர்கின்ற இப்பாவத்திற்கு எதிராக விசேஷமாக கர்த்தருடைய ஜனங்களென நாம், நம்மைப் பாதுகாத்துக்கொள்வோமாக. இந்தப் பாவமானது, அழிக்கப்பட வேண்டும். வேருடன் ஒழிக்கப்பட வேண்டும். மேலும், நம்முடைய இருதயங்களையும், ஜீவியங்களையும் ஆளும் சக்தியாக இப்பாவத்திற்குப் பதிலாக, அன்பு நிலைநாட்டப்பட வேண்டும்; அதாவது தீங்கு நினையாத, மேன்மை பாராட்டாத, மற்றவர்களின் நலனையும் தியாகம் செய்து ஆதாயம் தேடிக்கொள்ளாத அன்பை நிலை நாட்ட வேண்டும். மேலும், இந்தப் பரிசேயர்களும், வேதபாரகர்களும், ஆசாரியர்களும் வேண்டுமென்றே அறிந்துகொண்டே துணிகரத்துடன் தேவனுடைய குமாரனைச் சிலுவையில் அறைந்தார்கள் என நாம் எண்ணியும் விடக்கூடாது. அவர்களுக்கு அவ்வளவு தைரியம் கிடையாது! மாறாக, அப்போஸ்தலர் கூறுகிற பிரகாரம் அறியாமையினாலே செய்தார்கள் எனப் பார்க்கின்றோம் (அப்போஸ்தலர் 3:17; 1 கொரிந்தியர் 2:8). மேலும், இதனை நாம் மன்னிக்க முடியாத அறியாமை அல்லது கொஞ்சம் மன்னிக்க முடிகின்ற அறியாமை என்று சொல்லலாம். ஏனெனில், இந்த

அறியாமை தவறான அபிப்பிராயம் காரணமாக உண்டானதாகும்; தவறான அபிப்பிராயம் கொள்ளும் இத்தன்மையானது, சுயநலத்தின் விளைவுகளாக/கனிகளாகக் காணப்படுகின்றது.

முயற்சிகளும், காரியங்களும் பயனற்றதாய்ப் போகின்றன என உணர்ந்த ஆசாரியர்கள் தங்களால் முடிந்த அளவுக்கு எல்லாவிதமான அழுத்தத்தைப் பிலாத்துவின் மேல் போட வேண்டியிருந்தது. ஆகவேதான் பிலாத்து, ஒருவேளை இயேசுவைச் சிலுவையில் அறைய ஒப்புக் கொடுக்கவில்லையெனில், பிலாத்து உரோம அதிகாரத்திற்கு எதிராய் உள்ள துரோகிக்கு நண்பனாக உள்ளார் என்றும், பிலாத்துச் சக்கரவர்த்திக்குச் சத்துருவாகிவிட்டார் என்றும், உரோமிலுள்ள இராயனிடத்திற்குச் சென்று பிலாத்துவைக் குறித்துப் புகார் செய்வோமெனத் தெரிவித்தார்கள். இது மிகவும் அபாயகரமான வாதமாகும். இதனை பிலாத்து உணர்ந்து கொண்டார். இப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டானது, யூதர்களின் பிரதானமான அதிகாரிகளால் கையெழுத்திட்டு உரோமுக்கு அனுப்பப்படுமாயின், அக்குற்ற பத்திரத்திற்கு நிச்சயமாக மதிப்பு/கவனம் கொடுக்கப்படும் என்றும், உரோமின் அதிகாரிகள் ஏன் யூதர்களின் பிரதான அதிகாரிகளை எதிர்த்தும், புரட்சியைக் கிளப்ப அனுமதித்தும், ஓர் ஏழையான, சாதாரணமான மனுஷனின் ஜீவன் பாதுகாக்கப்பட வேண்டும்? என யோசிப்பார்கள் என்றும் பிலாத்து உணர்ந்து கொண்டார். ஆகவே, யூதர்கள் போக்கிலேயே விட்டுக்கொடுத்து விடுவதுதான் நியாயமான மற்றும் சரியான ஒரே வழியாக இருக்குமெனப் பிலாத்துத் தீர்மானித்து ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரச்சொல்லி, அவர்கள் (யூதர்கள்) தன்னைக் கட்டாயப்படுத்திச் செய்விக்கக்கூறும் இந்த மரணத் தீர்ப்புக்கான கட்டளையில் தனக்கு ஒப்புதல் இல்லை என்பதை அடையாளமாகக் காட்டும் விதத்தில் அவர்களுடைய பார்வைக்கு முன்பாக பிலாத்து தனது கரங்களைக் கழுவினார். "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்றான். அதற்கு ஜனங்களெல்லாரும்: இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்" (மத்தேயு 27:24-25).

பிலாத்து ஒரு யூதனாகவோ அல்லது கிறஸ்தவனாகவோ இராமல், புறஜாதி மனுஷனாக இருக்கிறபடியினால், மற்றவர்களைப்போன்று இவரை நாம் குற்றம் சாட்டமுடியாது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஆயினும், பிலாத்து நீதியை விரும்பி அதனை வழங்க முயற்சித்து நாடின மனுஷனாவான் என நாம் பாராட்டவே வேண்டும். மேலும், எவ்விதமான அரசியல் செல்வாக்குகள் இல்லாத நபரை உடனடியாக மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து, (மத) அதிகாரிகளின் புகழ்ச்சியையும், தயவையும் பெற்றுக்கொள்வது சுலபமாக இருந்தபோதிலும், பிலாத்து எதிரிடையான அலைபோன்ற செல்வாக்குகளை எதிர்ப்பதற்கான சகல முயற்சிகளையும் எடுத்த பிற்பாடே, அநீதிக்கு இயேசுவைப் பிலாத்து ஒப்புக்கொடுத்த மனுஷனேயாவான் என்று நாம் அவரைக் கண்டிப்பாகப் பாராட்ட வேண்டும். அப்போஸ்தலர்கள், பிலாத்துவையோ அல்லது அரசியல் அதிகாரிகளையோ குறிப்பிடாமல், யூதர்களையும் அவர்களுடைய தலைவர்களையுமே இச்சம்பவங்களுக்கான பொறுப்பாளிகள் என்று தெரிவிப்பதை நாம் கவனிக்க வேண்டும் (அப்போஸ்தலர் 2:23). மேலும், "எங்கள் மீதும், எங்கள் பிள்ளைகள்

மீதும் இவனுடைய இரத்தப்பழி வரட்டும்" என்று யூதர்கள் வேண்டிக்கொண்ட ஜெபம் (தேவனால்) கேட்கப்பட்ட காரியமானது, கடந்த 18 நூற்றாண்டுகளாக வரலாற்றில் நடந்த சம்பவங்களை நாம் பார்க்கையில், தேவனும் இச்சம்பவங்களுக்கு யூதர்களையே பொறுப்பாளிகளாகக் கருதினார் என்பது உறுதியாகின்றது. இந்தக் குற்றம் செய்த நபர்களுக்கு எதிரான தெய்வீகக் கோபத்தின் நிமித்தமாக, இவர்கள் நித்திய நித்திய காலமாக பிசாசுகளால் சித்திரவதை படுத்தப்படுவார்கள் என்று தேவனுடைய வார்த்தைகள் எங்குமே குறிப்பிடாததற்குத் தேவனுக்கு நன்றி. மாறாக, அப்போஸ்தலர் தெரிவிக்கின்ற பிரகாரமாக இந்தத் தேசம் மற்றும் ஜனங்கள் மீது வந்த உச்சக்கட்ட உபத்திரவங்கள்/பிரச்சனைகளே இவர்கள் மீது விளங்கின தேவனுடைய கோபமாய்க் காணப்படுகின்றது (1 தெசலோனிக்கேயர் 2:16). சீக்கிரத்தில் இந்தக் கோபம் மாற்றப்படப் போகின்றது. மேலும்,"என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள் எருசலேமுடன் பட்சமாய்ப்பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள்" என்ற வசனங்களின் காரியங்கள் ஆரம்பிக்கும் காலமும் வந்துவிட்டது (ஏசாயா 40:1-2).

இயேசு இப்பொழுது சிலுவையில் அறைவதற்கு ஆயத்தம் பண்ணும்படிக்குப் பிலாத்துவின் சேவகர்களிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர்களோ இரக்கமற்ற விதத்திலும், கொடூரமாகவும் நடந்துகொண்டு போதகரின் துன்பமான சூழ்நிலைகளில் புகுந்து விளையாடினார்கள். அவருக்கு இராஜ வஸ்திரம் தரிப்பித்து, முள்ளினால் உண்டுபண்ணின கிரீடத்தைச் சிரசில் வைத்து, அவர் உண்மையில் யார் என்றோ? அவர் எப்படிப் பரிசுத்தமான சீயோன் மலையில் இராஜாவாக வீற்றிருக்கப்போகின்றார் என்றோ, எப்படி அவருடைய செங்கோலுக்கு முன்பாக சகல முழங்கால்களும் மண்டியிடும் என்றோ, எப்படி எல்லா நாவும் அவரை அறிக்கைப் பண்ணும் என்றோ கொஞ்சம் கூட யோசிக்காமல்/நினைத்துப்பார்க்காமல் அவர் தம்மை இராஜா என்று கூறின காரியத்தினிமித்தம் அவரை இகழ்ந்தார்கள். இப்படியெல்லாம் இயேசுவுக்குச் செய்தவர்கள் ஒருநாளில் விழிக்கும்போது - அதாவது மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதைக் காணும்போது - மேசியா தமது சத்துருக்களுக்கும் கூட இரக்கம் காட்டுகின்றார் என்றும், தங்களுக்கும் பூமியின் குடிகள் அனைவருக்கும், தேவனையும், அவரது நீதி எதிர்பார்க்கும் காரியங்கள் குறித்த அறிவிற்குள் வருவதற்கும், ஒருவேளை கீழ்ப்படிதல் காட்டினால், நித்தியஜீவன் பெற்றுக்கொள்வதற்குமான வாய்ப்பையும் அருளும் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வதற்கான வழியை அவருடைய மரணமானது திறந்துவிட்டது என்றும், உணரும்போதும் - ஆச்சரியம் அடைவார்கள்!

இதற்கிடையில்தான் பிலாத்துவின் மனைவி இயேசுவைக் குறித்து, தான் கண்ட சொப்பனம் பற்றியும், அவரை மரணத் தீர்ப்புக்கு ஒப்புக்கொடுப்பதில் தலையிட வேண்டாம் என்ற புத்திமதியையும் கூற ஆள் அனுப்பினாள். ஆகவே, பிலாத்து மீண்டும் கடைசி முயற்சி எடுக்கும் விதத்தில் இராஜவென ஏளனம் செய்யப்பட்டு, இரத்தாம்பர சிவப்பு வஸ்திரம் தரிப்பித்து, முள்கிரீடம் சூட்டப்பட்டுள்ள இயேசுவை வெளியே

கொண்டுவந்து, "இதோ, இந்த மனுஷன்!" என்று கூறி ஜனங்களுக்கு முன்பாக நிறுத்தினார். அதாவது, பிலாத்து பின்வரும் காரியங்களைச் சொல்வதுபோன்று அவரின் இந்த வார்த்தைகளும், செயல்பாடுகளும் காணப்பட்டது. அது என்னவெனில்: "உங்கள் இனத்தில் மாத்திரமல்ல, ஒட்டு மொத்த மனித இனத்திலேயே சிறந்தவராகவும், உயர்ந்த பண்புடையவராகவும் காணப்படும் இந்தக் குற்றமற்ற மனிதனைக் கொன்றுபோடும்படியாகவோ, யூதர்களாகிய நீங்கள் நாடுகின்றீர்கள்? கடைசியாக, ஒருமுறை இம்மனிதனை நீங்கள் ஏறெடுத்துப் பார்க்கையில், உங்கள் இருதயமும், மனமும் உருகாதோ? உங்கள் மதத்தின் விஷயங்களையும் சொல்லப்போனால், அனைத்து மதங்களின் விஷயங்களையும் அறியாத உரோமானியனாகிய நானே இம்மனுஷன் மேல் பரிதாபமும், இரக்கமும், நியாயம் வழங்க வேண்டுமென எண்ணுகின்றபோது, பூமியிலேயே மிகுந்த மத நம்பிக்கைகொண்ட ஜனங்கள் என்று கூறிக்கொள்ளும் நீங்கள் இவ்வளவு இரக்கமற்ற நிலையில் இருக்க கூடுமோ? இதோ இந்த மனுஷன்! இம்மனுஷன் சிலுவையில் அறையப்பட வேண்டுமென இன்னமும் நீங்கள் வற்புறுத்துவீர்களோ?" உடனே, ஆசாரியர்கள் இயேசு உரோம பேரரசுக்கு சத்துருவாக இருப்பதினிமித்தம் மாத்திரம் சாக வேண்டுமென தாங்கள் கூறாமல், இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று போதித்து யூதர்களால் தேவதூஷணம் பேசினவர் என்று குற்றம் சாட்டப்பட்டபடியாலும், இப்படிப்பட்டவரை அழிக்க வேண்டுமெனத் தேவன் நியாயப்பிரமாணத்தில் கட்டளையிட்டுள்ளபடியாலும், இயேசு சாகவேண்டுமெனக் கூக்குரலிட்டார்கள்.

இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறியிருக்கின்ற விஷயத்தைப் பிலாத்துக் கேட்டமாத்திரத்தில் மிகவும் பயந்து இயேசுவோடு மீண்டும் ஒரு உரையாடல் செய்வதற்கு முயன்றார். ஆனால் இயேசுவின் பதிலோ, "பரத்திலிருந்து உமக்கு அதிகாரம் கொடுக்கப்படாதது வரையிலும் உமக்கு என்மீது அதிகாரம் இல்லை" என்பதாய் இருந்தது. பிலாத்துவினால் இதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியவில்லை. தாம் மரிக்க வேண்டும் என்பது தெய்வீக ஏற்பாடு என இயேசு தாமே அறிவித்து ஒப்புக்கொண்டார். பிலாத்து மரணத்தீர்ப்புக்குக் கையெழுத்திட்டார் (யோவான் 9:4-11).

நமது கர்த்தர் தமக்குச் சம்பவிக்கும் யாவும் பிதாவின் அனுமதியினாலானது என்று கூறின வார்த்தைகளிலிருந்து நமக்கு ஒரு படிப்பினை உள்ளது. அவருடைய சரீர அங்கங்களாகிய நாமும், தெய்வீகக் கண்காணிப்பின் கீழ்க் காணப்படுகிறதினால் அவருடைய அடிச்சுவடுகளில் நடக்கையில் நம்முடைய ஜீவியத்தின் சகல விஷயங்களும் நன்மைக்கு ஏதுவாகவே நடத்தப்படும் என்ற நிச்சயம் நமக்கு அருளப்பட்டுள்ளது. இதுவே, இவ்வாழ்க்கையில் பல்வேறு சோதனைக்கிடமான சந்தர்ப்பங்களில் நம்முடைய நம்பிக்கைக்கான அடித்தளமாக இருக்கின்றது. இதுவே, சகல புத்திக்கும் எட்டாத சமாதானத்தை நம்முடைய இருதயங்களை ஆளும்படிக்கு அருளுகின்றது. மேலும் இதுவே நாம் நம்முடைய சுயத்தைத் தாழ்த்தித் தேவனுடைய சித்தத்திற்கு நம்மை முற்றிலும் ஒப்புக்கொடுக்கவும் உதவுகின்றது. மேலும் இதுவே உபத்திரவங்களானது தெய்வீக வழிநடத்துதலின் கீழ்ச் சரியான விதத்தில் ஏற்றுக்கொள்ளப்படுமாயின், அவைகள் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை நமக்குள் உண்டாக்கும் என்ற அறிவினிமித்தம் உபத்திரவங்களில் நாம்

# எத்தரென்னப்பட்டாலும், நிஜஸ்தர்

## யோவான் 18:28-40

**"சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்." யோவான் 18:37**

பிலாத்துவினுடைய அரண்மனையில் நடந்திட்ட இயேசுவின் விசாரணை குறித்த விஷயங்களே, நம்முடைய பாடமாக உள்ளது. இயேசு, உலகத்திலேயே மிகப்பெரிய சாம்ராஜ்யத்தின் பிரதிநிதிக்கு முன்பு நின்றுகொண்டிருந்தார்; எவ்விதமான சாதகமான சூழ்நிலைகள் இல்லாதபோதிலும், வியக்கத்தக்க அமைதியுடனும், தைரியத்துடனும் நின்றுகொண்டிருந்தார். அப்பொழுது காலை வேளையாக இருந்தது, சுமார் 8 மணி அல்லது அதற்கும் முன்னதாக இருந்திருக்க வேண்டும். அவர் தமது சீஷர்களுடன் பஸ்கா புசித்தது முதல், அவருடைய நரம்புகளின் மீதான அழுத்தத்திற்கு ஓய்வில்லாமல் இருந்தது . . . அவர்களின் பாதங்களைக் கழுவினார், தம்முடைய சொந்த மரணத்திற்கான அடையாளமாக அப்பத்தைப் பிட்டு, தமது சீஷர்களுக்குக் கொடுத்து, நினைவுகூருதலின் இராப்போஜனத்தை நிறுவினார்; பின்னர் சம்பவிக்கப் போகிறவைகளை முழுதும் அறிந்தவராக, யூதாஸ் திட்டமிட்டதைச் செய்யும்படிக்கு அவனை அனுப்பினார்; பின்னர் கெத்செமனேக்குப் போகிற வழியில் அவர், சீஷர்களிடம் திராட்சசெடி மற்றும் கொடிகள் குறித்துப் பேசி, பின்னர் (யோவான் 17-ஆம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல்) அவர்களுக்காக ஜெபம் பண்ணி, பின்னர் கெத்செமனே தோட்டத்திற்குள் அவர் வந்து, தம்மைக் குறித்து வியாகுலத்துடன் ஜெபம் பண்ணி, தாம் செய்த பணிகள், பிதாவின் அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக முழுமையாகவும், திருப்திகரமாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்று அறிய கவலைக் கொண்டவராகவும் இருந்தார்.

தம்மைப் பெலப்படுத்தும்படிக்கு அனுப்பப்பட்ட தூதன் வாயிலாக, தமக்கான அங்கீகரிப்பை அவர் பெற்றதுமுதல், சகலமும் சமாதானத்துடனும், அமைதியுடனும் காணப்பட்டது. அவரைச் சிறைப்பிடித்த விஷயம், அவருடைய சீஷர்கள் சிதறடிக்கப்பட்ட விஷயம், பிரதான ஆசாரியனின் நீதிமன்றத்தில் அவர் விசாரிக்கப்பட்ட விஷயம், அவர் கேலிபண்ணப்பட்டு, காறி உமிழப்பட்டு, முகத்தின் தாடி மயிர் இழுக்கப்பட்டு, தலையில் கொட்டப்பட்டு, அவருடைய கண்கள் கட்டப்பட்டு, அவரைக் குட்டினது யார் என்று தீர்க்கத்தரிசனம் கூறச் சொல்லப்பட்ட விஷயமாகிய இந்தச் சகல அவமானங்களையும் அவர் பொறுமையுடன் சகித்தார்; மேலும் இரவுபொழுது ஒரு மனிதனைக் ஆக்கினைக்குள்ளாகத்தீர்ப்பது என்பது யூதர்களின் பிரமாணங்களுக்கு எதிரான ஒன்றாக இருந்தபடியால், மீதமான அவருடைய விசாரணையானது ஆலோசனை சங்கத்தார் விதிமுறைபடி, அவரைக் குற்றவாளி என முடிவு தீர்க்கப்படத்தக்கதாக விடியும்வரை தள்ளிவைக்கப்பட்டது. இதற்கிடையில் அவருடைய அன்பான சீஷர்கள், மந்தையைப் போல சிதறடிக்கப்பட்டுவிட்டனர். மேலும், சேவல் கூவுவதற்கு முன்னதாகவே, பிரியமான பேதுருவும், அவரைச் சபித்துப் பேசி, அவரை மறுதலித்துவிட்டார். இந்த அனைத்து அனுபவங்களுக்குள் கடந்து சென்ற பிற்பாடும், அநேகமாக எவ்விதமான ஓய்வும் இல்லாமல் இருந்தபோதும், தமது ஊழியங்கள்

காரணமாகவும், மற்றவர்களைச் சொஸ்தமாக்கும்படிக்கு தம்முடைய சத்துவத்தைக் கொடுத்துவிட்ட காரணமாகவும் பெலவீனமடைந்திருந்தபோதும் நமது கர்த்தர், பிலாத்துவின் முன்பு மிகுந்த அமைதலுடனும், பெலத்துடனும் நின்றது வியக்கத்தக்க விஷயமாகும்.

அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே தங்கள் மனதில் நிர்ணயித்துக் கொண்டிருந்த அவருடைய சத்துருக்களாகிய ஆலோசனை சங்கத்தார் மற்றும் பிரதான ஆசாரியர்கள், தங்களுடைய இருதயத்தில் கொலைப்பாதகத்தைச் சுமந்து கொண்டிருக்க, பயபக்தியின் வேஷத்தைத் தரித்தவர்களாக அரண்மனைக்குள் பிரவேசிப்பதில்லை என்றார்கள். ஏனெனில், அவர்கள் அரண்மனைக்குள் (பண்டிகையின் போது) பிரவேசித்தார்களானால், அது அவர்களின் பரிசுத்தத்தைத் தீட்டுப்படுத்திவிடும் என்பது அவர்களின் பாரம்பரியமாய் இருந்தது. அந்தோ! மனித இருதயம் எத்துணை திருக்குள்ளதாய் இருக்கிறது! மத ரீதியான சடங்காச்சாரமான தூய்மையினை முன்வைத்தும், தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளவும், செய்யவும் நாடுகின்றோம் என்று வெளித்தோற்றமாய் அறிக்கைப் பண்ணியும், ஒளியின் வஸ்திரத்தினுடைய வேஷத்தில், எவ்வளவு கொலைப் பாதகங்களும், அருவருப்பானவைகளும் மறைக்கப்பட்டுள்ளது. இவ்வளவு உன்னிப்பாக இப்பாடத்தில் நாம் சுட்டிக்காண்பிக்கிற இவ்விஷயமானது, நம்முடைய நாட்களிலும் மற்றும் ஜீவியத்தின் அநேக விஷயத்திலும் காணப்படுகின்றது. மாய்மாலம் என்பது, மிகப் பொதுவாகக் காணப்படுகின்ற பெலவீனமாய் இருக்கின்றது; சில சமயம் மாய்மாலக்காரன்/வஞ்சகனின் இருதயத்தினிடமிருந்தே தவறுகள் ஒளிந்து மறைந்து காணப்படுகின்றது; இச்சம்பவத்திலும்கூட அப்படியாகவே உள்ளது. இந்த மனுஷர்களைக் குறித்ததான பேதுருவின் வார்த்தைகளும் நம் நினைவுக்கு வருகின்றது: "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்." (அப். 3:17) உண்மை என்னவெனில், மாபெரும் குற்றங்கள், அறியாமையினாலே செய்யப்படுகின்றது; சிலசமயம் தேவனுக்கு ஊழியம் செய்கின்றோம் என்ற எண்ணத்திலும்கூட மாபெரும் குற்றங்கள் (அறியாமையினாலே) செய்யப்படுவதினால், வெளிச்சத்தின் பிள்ளைகளாய் இருக்கின்ற அனைவரும், சத்தியம் மற்றும் நீதியை நேசிப்பவர்களாய் இருக்கும் அனைவரும் சுய வஞ்சனையில் விழும் வகுப்பாரில் ஒருவராக மாறிவிடாதபடிக்கு, தங்கள் சொந்த இருதயங்களையும், நோக்கங்களையும், ஆராய்ந்து சோதித்துப் பார்ப்பதில் மிகக் கவனமாய் இருக்க வேண்டும்.

## பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக

இவ்வசனத்தின் இப்பாகமானது, சில குழப்பங்களை ஏற்படுத்தி உள்ளது. இயேசுவும், அவருடைய சீஷர்களும் முந்தின நாள் சாயங்காலப் பொழுதிலேயே பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்துவிட்டார்கள் என்று நாம் பார்க்கின்றோம். பஸ்கா புசிப்பு முடிந்திருக்குமானால், பின்னர் ஏன் இவர்கள் தாங்கள் பஸ்கா இராப்போஜனம் புசிப்பது

தடைபடாததற்கு ஏதுவாக தாங்கள் தீட்டுப்படக்கூடாது என்று அஞ்சினார்கள்? என்று கேள்வி எழலாம். ஆனால், அந்த நாள் துவங்கி, ஒரு வாரம் வரையிலும் நீடிக்கும் பஸ்கா பண்டிகையை மனதில் கொண்டே, அவர்களின் விண்ணப்பம் காணப்பட்டது என்று நாம் பதிலளிக்கின்றோம். நாம் நினைவில்கொள்ள வேண்டியது என்னவெனில், பஸ்கா என்ற வார்த்தையானது, இராப்போஜனத்திற்கும், அதனை தொடரும் பண்டிகை வாரத்திற்கும் பொருந்துகின்றதாய் உள்ளது. யூதர்கள் பண்டிகை வாரத்திற்கு அதிகம் முக்கியத்துவம் செலுத்தினவர்களாய் இருக்க, கிறிஸ்தவர்களாகிய நாமோ விசேஷமாக பஸ்கா இராப்போஜனத்தின் மீது அல்லது பஸ்கா இராப்போஜனத்திற்குப் பதிலாக, இந்தச் சுவிசேஷயுகம் முழுவதும் உள்ள கர்த்தருடைய பின்னடியார்களுக்கென அன்று சாயங்கால வேளையில் நிறுவப்பட்ட நினைவுகூருதலின் போஜனத்தின் மீது முக்கியத்துவம் காட்டுகிறவர்களாக இருக்கின்றோம்.

உள்ளே அசுத்தமாயிருக்க, வெளியே பாத்திரத்தைச் சுத்தமாய் வைத்திருப்பதைக் குறித்து, அதாவது வெளித்தோற்றத்தில் பரிசுத்தம்/தூய்மையுள்ள நபர்களாக மற்றும் ஜாதியினராகக் காட்டிக்கொண்டு, உள்ளத்திலோ பரிசுத்தம் தூரமாய்க் காணப்படுகிறதைக் குறித்து, யூதர்களை நமது கர்த்தர் அடிக்கடி கடிந்துகொண்டுள்ளார். வேறொரு தருணத்தில், அவர்கள் மிகுந்த சடங்காச்சாரமாய் உபவாசம் இருப்பதையும் மற்றும் உணவு உட்கொள்ளாததையும் வெளியரங்கமாய்க் காட்டுகிறார்கள், ஆனால் எதையும் அபகரித்துக் கொள்ளுமளவுக்கும் மற்றும் அடையாள பாஷையில் விதவைகளின் வீட்டைப் பட்சிக்குமளவுக்கும், அவர்களின் இருதயங்களில் அவ்வளவுக்கு அன்பு குறைவுபட்டதாகவும், அவ்வளவுக்கு சுயநலம் உள்ளதாகவும் இருக்கின்றது என அவர்களுக்கு கர்த்தர் நினைப்பூட்டினார். சுத்தம், தூய்மை மற்றும் பரிசுத்தம் தொடர்புடைய வெளியரங்கமான சடங்கு முறைகளைக் குறித்து, நமது கர்த்தர் எதுவும் பேசவில்லை, ஆனால் தேவனுடைய பார்வையில் மிக முக்கியமாகக் காணப்படும் இருதய தூய்மை/பரிசுத்தத்தின் ஸ்தானத்தை, இந்த வெளித்தோற்றமான சடங்கு முறைகள் எடுத்துக் கொள்ளக்கூடாது என்றே நமது கர்த்தர் கூறினார்.

தனது அரண்மனைக்குள் அவர்கள் வரமாட்டார்கள் என்று பிலாத்து அறிந்தபோது, அவர்களுடைய வழக்கங்களை நினைவுகூர்ந்தவனாக வெளியே வந்து, தனது அதிகாரப்பூர்வமான சிங்காசனத்தை அங்கே வெளியே கொண்டு வந்து வைத்து, அதில் உட்கார்ந்தான். குற்றவாளிக்கு எதிரான அவர்களின் குற்றச்சாட்டுகளைக் கூறுங்கள் என்று பிலாத்து அவர்களிடம் கேட்டபோது, அது அவர்களை வியப்பிற்குள்ளாக்கிற்று.

தாங்கள் பிலாத்துவிடம் கொண்டுவரும் எந்தக் குற்றவாளியையும், பிலாத்து ஏற்றுக்கொள்வார் என்றும், அதிலும் ஒருவேளை தாங்கள் குற்றஞ்சாட்டும் நபர் தங்களுடைய ஜாதியாரில் ஒருவனாக இருப்பானாகில், அவன் நிச்சயமாக கேடான மனுஷனாகவும், உரோமர்களின் கரங்களிலிருந்து குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு, மரணத்தண்டனை பெற்றுக்கொள்ள பாத்திரவானாக இருப்பான் என்றும் பிலாத்துத் திருப்தியடைந்தவராக இருப்பார் என்றும் எண்ணினவர்களாக, முன்நாட்களில்

விளங்கின பிலாத்துவின் வழக்கத்தைத்தான் அவரிடத்தில் எதிர்பார்த்து வந்திருக்கின்றார்கள். "இவன் குற்றவாளியாயிராவிட்டால், இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்க மாட்டோம்" (வசனம் - 30) என்ற அவர்களின் பதில், அவர்களின் அதிர்ச்சியைக் காட்டுகின்றது; அதாவது, பிலாத்துவே உரோம அதிகாரத்தின் பிரதிநிதியாகிய உம்முடைய கரங்களில் நற்கீர்த்தியுடைய எங்கள் ஜனங்கள் மத்தியில் உள்ள எந்த மனுஷனையாகிலும் ஒப்புக்கொடுக்க நாங்கள் விரும்புவோம்/ இணங்குவோம் என்று நீர் எண்ணுகிறீரோ என்ற விதத்தில் அவர்களுடைய பதில் காணப்பட்டது.

## இவனை நீங்களே கொண்டுபோய் நியாயந்தீருங்கள்

பிலாத்து, ஆலோசனை சங்கத்தாரிடமே திரும்பிப் பொறுப்பை ஒப்புக்கொடுத்தது மிகச் சரியே. பொறாமை மற்றும் துர்க்குணம் காரணமாகவே அவர்கள் இவ்விதமாய் இயேசுவை நடத்துகின்றனர் என்று பிலாத்து அறிந்து/உணர்ந்து கொண்டதாக வேதப்பகுதிகள் நமக்குக் காட்டுகின்றன. மேலும், தன்னிடம் கொண்டுவரப்பட்டவர் சாதாரண குற்றவாளி அல்ல என்றும், இக்குற்றவாளிக்கு விடுதலை கொடுக்கப்பட்டால் நிச்சயமாக அது உரோம சாம்ராஜ்யத்தின் அமைதியைக் குலைத்துவிடும் என்றும் பிலாத்து அறிந்தவராக இருந்தார்.

ஏமாற்றம் கண்ட யூத அதிகாரிகளானவர்களோ, தங்களுக்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள விருப்பம்தான், ஆயினும் எந்த மனிதனுக்கும் மரணத் தண்டனை அளிக்கும் அதிகாரம் தங்களிடமிருந்து எடுக்கப்பட்டுவிட்டதே என்ற விதத்தில் பதிலுரைத்தனர். யூதருடைய (Talmud) வேதத்தில், பின்வரும் குறிப்பு காணப்படுகிறது: "ஆலயம் அழிக்கப்படுவதற்கு 40 வருடங்களுக்கு முன்னதாக பெரிய அளவிலான குற்றங்களை நியாயந்தீர்க்கும் அதிகாரமானது, இஸ்ரயேலிடமிருந்து எடுக்கப்பட்டுவிட்டது." இக்குறிப்பு உண்மையாக இருக்கும் பட்சத்தில், தெய்வீக வழிநடத்துதலின்படி குற்றவாளிக்கு மரணத்தீர்ப்பு அளிக்கும் அதிகாரமானது, நமது கர்த்தர் குற்றம் சாட்டப்பட்ட அதே வருடத்தில் யூதர்களிடமிருந்து எடுக்கப்பட்டுள்ளது. மேலும் யூதர்கள் ஒருபோதும் எவரையும் சிலுவையில் அறையாத விஷயமும், சிலுவையில் அறையும் மரணமானது, உரோம சட்டத்தின் கீழ் மரணத்தண்டனையை நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குமுறையாக இருக்கிறது என்ற விஷயமும், "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்" என்று நீண்ட காலத்திற்கு முன்னதாக உரைக்கப்பட்டத் தீர்க்கத்தரிசனம் குறித்த விஷயமும் மற்றும் கர்த்தர் தாமே, தாம் சிலுவையில் அறையப்படப் போவதைக்குறித்துத் தீர்க்கத்தரிசனமாக, "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" என்று கூறின விஷயமும் நம் நினைவுக்குக் கொண்டுவரப்படுகையில், இயேசு குற்றம் தீர்க்கப்பட்ட வருஷத்தில் மரணத்தீர்ப்பு வழங்கும் அதிகாரம் யூதர்களிடமிருந்து எடுக்கப்பட்டது என்ற குறிப்பு மிகவும்

குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. (யோவான் 12:32, 33; கலாத்தியர் 3:13; உபாகமம் 21:23). அந்தக் குறிப்பிட்ட வருடத்தில் யூதர்களிடமிருந்து அவ்வதிகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டப்படியால்தான், இயேசு கல்லால் எறிந்து கொல்லப்படாமல் சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப்பட்டார்.

இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று அறிக்கைப்பண்ணினபடியால், யூதரின் விசாரணையில் அவர் தேவ தூஷணம் புரிந்தார் என்பதே அவர் மீது இருந்த உண்மையான குற்றசாட்டாகும். யூதர்கள், தங்களை ஒருபோதும் தேவனுடைய குமாரர்கள்/புத்திரர்கள் என்று கூறிக்கொண்டதில்லை. அவர்கள் மத்தியில் உயர்ந்த ஸ்தானம் வகித்தவர்கள், தேவனுடைய நண்பனான ஆபிரகாம், அடுத்து தேவனுடைய ஊழியக்காரரான மோசேயும், தீர்க்கத்தரிசிகளும் - பணிவிடைக்காரர்கள் என்னும் ஸ்தானத்தை வகித்தார்கள். புதிய புத்திரர் வீட்டாரின் தலையாக, கிறிஸ்து வருவதற்கு முன்பு வரையிலும், எவரும் புத்திரர்களாகக் கருதப்படவில்லை. "மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவரா யிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்" என்ற வசனங்கள் இதற்கு இசைவாக உள்ளது (எபிரெயர் 3:5,6). ஆலோசனை சங்கத்தார் முன்பு, தேவ தூஷணம் பேசினவராக குற்றஞ்சாட்டப்பட்ட நமது கர்த்தரானவர், கல்லால் எறியப்பட்டுக் கொலைச் செய்யப்படும் தண்டனைக்குப் பாத்திரமானவராக இருந்தார். ஆனால் மரணத்தீர்ப்பு வழங்கும் அதிகாரமானது யூதர்களின் கையைவிட்டு எடுக்கப்பட்டிருந்தபடியாலும், அந்த அதிகாரம் உரோமர்களின் கைகளில் சென்றபடியாலும் சூழ்நிலைகள் மாறிவிட்டது. மேலும் நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படுவார் என்று முன்னுரைக்கப்பட்ட தீர்க்கத்தரிசனத்தின் படி, இயேசு நமக்காகச் சாபமாக்கப்பட்டார்.

## யூதர்களின் இராஜா

லூக்கா விசாரணை குறித்ததான வேறு சில செய்திகளை நமக்கு பதிவு செய்துள்ளார். (லூக்கா 23:2) மூன்று குற்றச்சாட்டுகளை யூதர்கள் முன்வைத்தார்கள். மேலும், அம்மூன்று குற்றச்சாட்டுகளும், உரோம அரசாங்கத்திற்கு எதிரான துரோகச் செயலாகவும் இருந்தது: (1) ஜனங்களைக் கலகப்படுத்துதல்; (2) இராயனுக்கு வரி கொடுக்க வேண்டாம் என்று தடை விதித்தல்; (3) தன்னை கிறிஸ்து என்னப்பட்ட இராஜாவென்று அறிவித்தல் என்பவைகளே. இந்தக் குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தும் பொருட்டு, சாட்சிகளும் கொண்டுவந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

புத்திக்கூர்மையும், சிந்தனைத்திறனும் இல்லாத எந்த மனுஷனும் பிலாத்து இருந்த உயர்ந்த ஸ்தானத்தில் இடம் பெற்றுக்கொள்ள முடியாது. பிலாத்து, அந்நிய தெய்வங்களை வணங்குகிறவனாகவும், பாவம் நிறைந்த மனுஷனாகவும் இருந்தாலும்,

தனக்கு முன் கொண்டுவரப்பட்ட வழக்கின் உண்மை நிலையை உடனடியாகக் கிரகித்துக் கொண்டவனாக இருந்தான். அவன் இவ்வழக்கு மத ரீதியிலான துன்புறுத்தல் என்றும், உரோம அரசாங்கத்தை ஓங்கச் செய்வதில் குற்றம் சாட்டுபவர்கள் அக்கறை, ஆர்வம் கொண்டிருக்கவில்லை என்றும், குற்றம் சாட்டப்பட்டவர் எவ்விதத்திலேயும் அரசாங்கத்திற்குக் கேடுவிளைவிப்பவர் அல்ல என்றும் உணர்ந்து கொண்டான். சாட்சிகளின் வார்த்தைகளைக் கேட்ட பிற்பாடு சிறைப்பிடிக்கப்பட்டவரிடம் தனிப்பட்ட விதத்தில் பேசும்படிக்கும், தான் அவ்விஷயத்தில் என்ன முடிவு எடுக்க வேண்டும் என்று யோசிப்பதற்குமென, பிலாத்து மீண்டும் அரண்மனைக்குள் பிரவேசித்தான். "நீ யூதருடைய இராஜாவா" என்பதே பிலாத்து இயேசுவிடம் கேட்ட முதல் வார்த்தை என்று நான்கு சுவிசேஷர்களும் ஒரே கருத்தைப் பதிவு செய்துள்ளனர்.

இக்கேள்விக்கு நமது கர்த்தரால் பதில் அளிப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அவர் யூதர்களின் இராஜாதான், இந்த ஸ்தானத்தை எடுப்பதற்காகவே அவர் தமது பரலோக மகிமையைத் துறந்து வந்தார்; அவருடைய வருகையானது, நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே அறிவிக்கப்பட்டிருந்தது; மேலும் தெய்வீக வாக்குத்தத்தங்களும், தீர்க்கதரிசனங்களும் அவருடைய வருகையையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இப்பொழுது, அவரால் பிலாத்துவின் முன்னிலையில் அவ்வுண்மையை மறுதலிக்க முடியாது. அப்படி மறுதலித்துக் கூறுவாரானால், அது அவருடைய போதனைகளைக் கவிழ்த்துப் போடுவதாகவும், தெய்வீகத் திட்டத்தின்படி அவர் ஸ்தாபிக்க விரும்பின விசுவாசத்தையும் கவிழ்த்துப் போடுகிறதாகிவிடும். ஆனால் அவர் அச்சமயத்தில் உரோமர்களிடமிருந்தும், பிலாத்துவிடமிருந்தும் அரசாங்கத்தைப் பிடுங்கி எடுப்பதற்கு தாம் நாடவில்லை என்பதை, தமது பதிலின் மூலமாக பிலாத்துவின் நிமித்தமாகவும், நம் அனைவர் நிமித்தமாகவும் தெளிவாகக் காட்ட வேண்டியிருந்தது. "நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ"என்ற பதிலை வாசிக்கின்றோம் (யோவான் 18:34). எளிமையாக அவரது வார்த்தைகளை விவரிக்க வேண்டுமெனில், "உரோமானியனாகிய நீர் உமது கண்ணோட்டத்திலிருந்து இக்கேள்வியைக் கேட்கின்றீரோ அல்லது மதவாதியாக யூதர்களின் நம்பிக்கையின் கண்ணோட்டத்திலிருந்து இக்கேள்வியைக் கேட்கின்றீரோ?" என்ற விதத்தில் கேட்டார்.

பிலாத்து இதற்குப் பிரதியுத்தரமாக, "நான் யூதன் அல்ல என்பதை நீர் அறிவீர், மேலும் உம்முடைய ஜனங்களின் நம்பிக்கையின் மீது எனக்கு ஈடுபாடும் இல்லை, உம்முடைய சொந்த ஜனங்களும், உம்முடைய ஜனங்களின் பிரதானமான மத அதிகாரிகளும், அதாவது நீர் எந்த ஜனங்களின் இராஜா அல்லது பிரபு என்று உம்மைக் கருதிக்கொள்கின்றீரோ, அந்த ஜனங்களே உம்மை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்துள் ளனர். உம்மை நான் மரணத்தீர்ப்பிற்குள்ளாக்கும்படிக்கு உம்மை என்னுடைய அதிகாரத்தின் கீழ் ஒப்புக்கொடுத்துள்ளனர். நீர் அவர்களுக்கு என்ன செய்தீர்? அவர்கள் கோபம் கொள்ளவும், வெறுப்புக் கொள்ளவும், கடுமையான

எரிச்சல்/பொறாமை கொள்ளவும் தக்கதாய் நீர் என்ன செய்தீர்?" என்றார்.

நமது கர்த்தர் அமைதலுடனும், சாந்தத்துடனும் இத்தருணத்திலும் காணப்பட்டார்: "என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல," அதாவது, தற்காலத்தில் காணப்படுகிற ஒழுங்குமுறைகளின்படியானது அல்ல என்னுடைய இராஜ்யம்! என்ற விதத்தில் இயேசு கூறினார். பிலாத்து புரிந்துகொள்ளத்தக்கதாக, இப்பதில் போதுமானதாக இருந்தது. அநேகமாக இப்பதில் பிலாத்துவுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இப்பதில் எவ்வளவு சுருக்கமாகவும், ஞானமிக்கதாகவும் உள்ளது! மேலுமாக, தம்முடைய பின்னடியார்கள் தமக்காகப் போரடவில்லை என்றும், தமது ஆட்சியை ஸ்தாபிக்கவும், தமது இராஜ்ய அதிகாரத்தை வன்முறையில் ஸ்தாபிக்கவும், தம்முடைய பின்னடியார்கள் நாடவில்லை என்றும்; ஒருவேளை இப்படியாகத்தான் (வன்முறை மூலம்தான்) தம்முடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமெனில், தாம் ஒருபோதும் இவ்விதமாக தம்மைச் சத்துருக்களிடம் கையளிக்கப்பட அனுமதித்திருக்க மாட்டார் என்றும், இப்படியிருக்க தம்முடைய இராஜ்யம் இவ்விடத்திற்குரியதுமல்ல என்றும், தமது இராஜ்யம் அதிகாரத்துடன் வருவதற்கான வேளை இன்னும் வரவில்லை என்றதுமான உண்மைகளின் மீது பிலாத்துவின் கவனத்தைக் கர்த்தர் கொண்டுவந்தார். இதே படிப்பினையைக் கர்த்தர் தமது உவமைகளில் ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்: "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள்" (மத்தேயு 25:31, 32). தமது இராஜ்யமானது, தமது இரண்டாம் வருகையில் ஆரம்பிக்கின்றது என இவ்வுவமையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிலாத்துக் காரியத்தைப் புரிந்துகொண்டார் என்பது அவருடைய வார்த்தைகளில் விளங்குகின்றது. "அப்படியானால் நீர் இராஜாவோ? நீர் இராஜாதான், ஆனால், இதுவரையிலும் இராஜாவாகவில்லை என்றும், உம்முடைய ஆளுகை இன்னும் எதிர்காலத்தில் உள்ளது என்றும் தானே நீர் கூறுகின்றீர்?" என்ற விதத்தில் பிலாத்துக் கூறினார். இதற்கான நமது கர்த்தரின் பதிலானது: "ஆம், நான் ஓர் இராஜா என்ற உம்முடைய யூகம் சரியே, இராஜா ஆகுவதற்கே நான் பிறந்தேன், இராஜாவாகுவதற்காகவே நான் உலகத்தில் வந்தேன்; இந்த மாபெரும் சத்தியத்திற்கு இசைவாகவே என்னைக் குறித்துச் சகல சாட்சியும் உள்ளது; உண்மையுள்ளவர்கள் அனைவரும், சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்டு, என் சீஷன் அல்லது பின்னடியான் ஆகத்தக்கதாக இழுத்துக்கொள்ளப்படுகின்றான், மேலும் என்னை இராஜாவாகவும் ஏற்றுக்கொள்கின்றான்/அறிந்துகொள்கின்றான். மீதியான பெரும்பாலானவர்கள், இப்பொழுது முதல், நான் வந்து என் இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் காலம் வரையிலும் என்னை யார் என்று அறிந்துகொள்ள மாட்டார்கள்;" இப்படியாக, நாம் அவ்வசனப்பகுதிகளுக்குப் பொழிப்புரை (எளிமையான வார்த்தைகளில் விவரித்துள்ளோம்) கொடுத்துள்ளோம்.

# சத்தியமாவது என்ன?

சத்தியம், உண்மை, நேர்மை போன்றவைகளை நமது கர்த்தர் குறிப்பிட்டது என்பது, பிலாத்துவின் மனசாட்சியில், உள்ளத்தில் ஒரு மென்மையான பாகத்தைத் தொட்டது போன்று தோன்றுகின்றது. சொற்ப உலகப்பிரகாரமான ஜனங்கள் மாத்திரம் உண்மையற்ற தன்மைக்கு மரியாதை அளிக்கின்றனர். அநேகர் பொய்ச் சொல்வதையோ அல்லது அதிர்ச்சி உண்டாக்குகிற அளவு வஞ்சனை பண்ணுவதையோ, பாதிப்புக்குள்ளாக்கும் அளவு வஞ்சனை பண்ணுவதையோ விரும்புவதில்லை; ஆனால் வஞ்சனையானது, சமுதாயம் மற்றும் தொழிலில் வெற்றி நடைப்போடுகிறவர்களின் ஒவ்வொரு நடைமுறையிலும், பண்பிலும், வாழ்க்கையிலும் பாகமாகக் கருதப்பட்டு வருகின்றது. ஆகவே, யூதர்களிடம் பேசுவதற்கு நடை எடுத்து வைக்கப்போன பிலாத்து, நமது கர்த்தரின் கடைசி வாக்கியத்திற்கு, "ஆம்," ஆனால், வாழ்க்கையின் ஒவ்வொரு காரியங்களிலும் சத்தியம், உண்மை அல்லது நேர்மை என்ற வார்த்தைகளானது, எவ்வளவாகக் காணப்பட வேண்டும் அல்லது காணப்படலாம் என்று நமக்குச் சொல்லித்தருவதற்கு யார் தான் இருக்கின்றார்! என்று பதிலளித்தார்.

போதகர் தம்மை, "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன்" என்று கூறினது போன்று, அவருடைய சீஷர்களாய் உண்மையாக இருக்கிற யாவரும் சத்தியமாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதைக் கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் மனதில் தெளிவாகப் புரிந்துகொண்டிருப்பது நலமாய் இருக்கும். இந்தச் சுவிசேஷயுகத்தில் இவ்வகுப்பாரை, அதாவது சத்தியத்திற்காக பசி கொண்டவர்களை, உண்மையுள்ளவர்களை, உண்மையுள்ள இருதயமுள்ளவர்களையே விசேஷமாக கர்த்தர் அழைத்துக் கொண்டிருக்கிறார். மற்றவர்களோ, இப்பொழுது கொடுக்கப்பட்ட எவ்வித வாக்குத்தத்தங்கள் மற்றும் நம்பிக்கைகளினாலும் அதிகம் தாக்கம் கொள்வதற்குத் தகுதியற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் சத்தியம் பற்றின சிறு குறிப்பையாகிலும் பெற்றுக்கொண்டாலும் அவர்கள் அதனை பற்றிப் பிடித்துக்கொள்வதில்லை, அவர்கள் இதய அளவில் சத்தியத்தின் பிள்ளைகளாகவும், ஒளியின் பிள்ளைகளாகவும் இருப்பதில்லை. ஆகவே, நம்முடைய சகல வார்த்தைகளிலும், எண்ணங்களிலும், நடத்தைகளிலும், நேர்மையாகவும், இருதயப்பூர்வமான உண்மையுள்ளவர்களாகவும், நாம் இருக்க வேண்டியது எவ்வளவு முக்கியமாய் உள்ளது. உலகத்துடனான நம்முடைய சகல உறவுகள் மத்தியிலும், நாம் வார்த்தையிலும், கிரியையிலும் உண்மையாய் இருக்கிற வேளையில், கர்த்தர் மற்றும் அவருடைய ஜனங்கள் மற்றும் அவருடைய வார்த்தைகளுடனான நம்முடைய உறவுகளிலும் நாம் உண்மையாய் இருக்கத்தக்கதாக இரண்டு விதத்திலும் ஜாக்கிரதையுடன் நாம் காணப்பட வேண்டும்! உண்மையுள்ளவர்களே, உண்மையில் ஜெயங்கொண்டவர்களாக இருப்பார்கள்.

பாவம் பிலாத்து, இவன் தன்னுடைய வாழ்க்கையிலுள்ள அநேக முக்கியமான விஷயங்களில், தான் உண்மையற்றவனாக இருந்ததையும் எண்ணினார்; உலகத்திலேயே நாங்கள்தான் மிகவும் பரிசுத்தமான ஜனங்கள் என்று கூறிக்கொண்ட

யூத தேசத்தின் தலைவர்களையும், அதிகாரிகளையும் கண்டு அக்கேள்வியைக் குறித்து அஞ்சினான் - சத்தியமாவது என்ன? உண்மையாய் இருப்பது என்றால் என்ன? எவ்வளவு உண்மையுடனும், எவ்வளவு நேர்மையுடனும் நாம் காணப்பட வேண்டும்? இக்கேள்விகளின் ஆழம் மிகவும் அப்பாற்பட்டதாகும்; அவனுடைய கிரகித்துக் கொள்ளும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்டதாகும்; யூதர்களில் பிரதானமானவர்களின் புரிந்துகொள்ளும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்டதாகும். இயேசு மாத்திரமே சத்தியத்தின் ஒரே பிரதிநிதியாகவும், மாதிரியாகவும் காணப்பட்டார். அவர் தமது சொந்த ஜனத்தாரின் அதிகாரிகளுக்கு மிகவும் அப்பாற்பட்ட உபதேசம் ஒன்றைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். சத்தியத்தின் இந்தப் பிரகடனம் மூலமாக இந்தச் சுவிசேஷ யுகத்தில் கர்த்தர் தமக்கென ஒரு ஜனங்களை, தமது சம்பத்துக்களைக் கூட்டிச் சேர்ப்பதே அவருடைய திட்டமாக இருக்கின்றது என்று நாம் பார்க்கின்றோம்.

சத்தியம் மற்றும் உண்மையின் அடிப்படையில் இன்று, கர்த்தர் தெரிந்துகொண்டிருக்கும் ஜனங்கள் விநோதமான ஜனங்கள் என்றும், பெரும்பான்மையான ஜனங்களிடமிருந்து வேறுபட்டவர்கள் என்றும், திரளான ஜனங்கள் மத்தியில் அவர்கள் சிறுமந்தையினராக இருப்பார்கள் என்றும் நமக்கு வேதவாக்கியங்கள் தெரிவிப்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அன்பான வாசகர்களே, இந்தத் உண்மையுள்ளவர்களின் வகுப்பாரில் நாம் ஒருவராய் இருக்கத்தக்கதாக, தேவனுடைய இரக்கத்தினால் நாம் ஒவ்வொரு பிரயாசத்தையும் எடுப்போமாக. ஐசுவரியங்கள் அல்லது மனுஷருடைய புகழ்ச்சிக்கு மேலாக, இன்னும் சொல்லப்போனால், ஜீவனுக்கும் மேலாக நாம் சத்தியத்தை உயர்வாக எண்ணக்கடவோம். இப்படியாக, "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம்" என்று நமக்காக ஜெபம் பண்ணினவருக்கும், சத்தியமாய் இருப்பவருக்கும் நாம் உண்மையான சீஷர்களாக, பின்னடியார்களாக இருக்க முடியும்.

## அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்

இவ்வார்த்தைகளில், பிலாத்துவின் தீர்மானம் வெளியாகின்றது. அதாவது, இயேசுவிடம் குற்றம் இல்லை; உரோம சட்டத்தின்படி இப்படியாக வழக்கை முடித்து வைப்பது சரியே. யூதர்கள், தாங்கள் எடுத்த இத்தனை முயற்சிகளுக்குப் பின்னரும், தங்களது கைதியாகிய இயேசு தங்களுடைய கரங்களிலிருந்து தப்பித்துவிடப் போகிறார் என்று இப்போது உணர்ந்தபோது, கோபம் அடைந்தவர்களாகப் பிலாத்துவைப் பயமுறுத்தினார்கள் மற்றும் வெளிப்படையாக குத்திப்பேசவில்லை என்றாலும், பலனளிக்கும் விதத்தில் அவர்களுடைய பயமுறுத்தல் முயற்சி காணப்பட்டது. சமீபகாலத்தில்தான் அவர்கள், சக்கரவர்த்தியிடம் பிலாத்துவைக் குறித்துக் குற்றம் சாட்டியுள்ளனர். இம்முறை, சக்கரவர்த்தியின் பார்வையில், மிகவும் ஆற்றல் மிக்கதாய்த் தோன்றத்தக்கதாக, பிலாத்துவின் மீதான தங்கள் குற்றச்சாட்டுகள் காணப்படும் என

ஜாடையாகக் கூறி, மறைமுகமான வார்த்தைகளில், அவர்கள் பிலாத்துவைப் பயமுறுத்தினார்கள் (யோவான் 1:12). பிலாத்துக் கலகத்திற்கு ஆதரவு அளிக்கின்றார் என்றும், சக்கரவர்த்திக்கு, இராயனுக்குப் பட்சமாக பிலாத்து இல்லை என்றும், பிலாத்துவைக் காட்டிலும் தாங்களே இராயனுக்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்றும், தங்கள் குற்றச்சாட்டுகள் பிலாத்துவுக்கு எதிராக காணப்படும் என்றும் குறிப்பிட்டனர். மேலும் குழப்பத்தை ஏற்படுத்துகின்ற தங்கள் ஜனங்களைச் சேர்ந்த ஒரு கலகவாதியை தாங்கள் கண்டுபிடித்தபோது, அக்குற்றவாளியை மரணத் தண்டனைக்குள்ளாகத் தீர்ப்பளிக்கும்படிக்குத் தாங்களே குற்றவாளியைப் பிலாத்துவிடம் கொண்டுவந்தபோது, யூதர்களுக்கு தன்னை இராஜா என்று கூறி, பாலஸ்தீனியா முழுவதும் தனக்கு ஆதரவாக அநேக ஜனங்களைச் சேர்த்துக்கொண்டிருந்த குற்றவாளிக்கு, மரணத்தீர்ப்பு வழங்க மறுத்ததினிமித்தம் இராயனின் பிரதிநிதியாகிய பிலாத்து, இராஜாவுக்கும், நாட்டிற்கும் துரோகம் புரிந்தவனாய் இருக்கின்றான் என்று தங்கள் குற்றச்சாட்டுகள் பிலாத்துவுக்கு எதிராக காணப்படும் என்றும் குறிப்பிட்டனர்.

இப்படிப்பட்ட செல்வாக்கு மிகுந்த நபர்கள் இப்படியான குற்றச்சாட்டுகளைக் (தனக்கெதிராக) கொண்டுபோனால், இவைகள் இராயனின் பார்வைக்கு மிக மோசமான காரியமாக இருக்கும் என்று பிலாத்து உடனடியாக உணர்ந்து கொண்டார். ஆனால், கலிலேயா என்ற வார்த்தைகள் செவிகளில் விழ இயேசு பிறப்பில் கலிலேயனா? என்று விசாரித்து, உறுதியான பதிலைப் பெற்றுக்கொண்ட மாத்திரத்தில், தப்பித்துக் கொள்வதற்கான வழியைக் கண்டு, "இயேசு கலிலேயனாக இருக்கிறபடியால், இயேசு ஏரோதின் தீர்ப்புக்கு உட்பட்டவர், இந்த முழு வழக்கையும் நான் ஏரோதின் நீதி மன்றத்திற்கு மாற்றிவிடுகின்றேன், ஏரோது இயேசுவுக்குத் தீர்ப்பு வழங்கட்டும்" என்று கூறினார் (லூக்கா 23:5-12).

ஏரோது மற்றும் அவனது சேவகர்களால் எப்படியாக இயேசு மோசமாக நடத்தப்பட்டார் என்றும், முள்முடி சூட்டப்பட்டு, இரத்தாம்பரத்தினாலான வஸ்திரத்தினால் உடுத்தப்பட்டு, மீண்டும் பிலாத்துவிடம் அனுப்பப்பட்டதைக் குறித்து நாம் நினைவுகூருகின்றோம். இதற்கிடையில்தான், அநேகமாக பிலாத்துவின் மனைவி, தான் இயேசுவைக் குறித்துக் கண்ட சொப்பனத்தைப் பிலாத்துவிடம் கூறியிருந்திருக்க வேண்டும். கைதி (இயேசு) மீண்டும் மினுக்கான வஸ்திரங்களுடன் தன்னுடைய அரண்மனைக்கு அனுப்பப்பட்ட போது, பிலாத்து மிகவும் திகைப்படைந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை; கைதி (இயேசு) மினுக்கான வஸ்திரங்களுடன் அனுப்பப்பட காரியத்தில் - இயேசு ஓர் இராஜா என்ற வலியுறுத்துதல் - இன்னும் அதிகம் உறுதியடைந்தது; அதே சமயம் இயேசு ஓர் ஆபத்தான மனுஷன் என்றும், அரசாங்கத்திற்குத் தொந்தரவான மனுஷன் என்றதுமான யூதர்களின் ஆசாரியர்கள்

மற்றும் அதிகாரிகளுடைய நடிப்பும், இன்னும் நகைப்புக்குரிய வண்ணம் காணப்பட்டது.

யூதர்களைச் சமாதானப்படுத்துவதற்குரிய ஒரு வழி பிலாத்துவுக்குத் தோன்றியது. அதாவது, அவர்களுடைய பிரயாசம் முழுமையாக தோல்வியடைய வில்லை என்னும் அளவில் அவர்களை எண்ணச் செய்ய வேண்டும். அதே சமயம், தான் நியாயமான தண்டனை அளித்துள்ளேன் என்ற எண்ணத்தை அவர்களுள் எழச் செய்ய வேண்டும். பின்னர் வருஷந்தோறும் இந்தப் பண்டிகை காலத்தில் கைதியின் கடும் தண்டனையானது, நிறைவேற்றப்படுவதிலிருந்து தள்ளி வைக்கும் வழக்கத்தின்படி இயேசுவின் தண்டனையைத் தள்ளிவைத்திட வேண்டும் என்பதேயாகும். இதைப் பிலாத்து அவர்கள் முன் வைத்தபோது, மக்கள் கூட்டத்தார் பரபாஸ் என்று கூக்குரல் இட்டார்கள். இந்தப் பரபாஸ் என்பவன் உண்மையில் கலகவாதியாகவும், கொலைக்காரனாகவும், அநேகமாக ஆசாரியர்களின் தூண்டுதலினால் இயேசுவை வேட்டை நாய்கள் போன்று துரத்திக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்தாரில் உள்ள அநேகருடைய உண்மையான மாதிரியாகவும் இருந்தான். பின்னரே, "அப்படியானால் இயேசுவை நான் என்ன செய்யட்டும்?" என்று பிலாத்துக் கேட்டான். ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்களின் தூண்டுதலினால், "அவனை சிலுவையில் அறையும்; அவனை சிலுவையில் அறையும்!" எனும் பதில் வந்தது.

## "ஜனங்களுடைய சப்தமே, தேவனின் சப்தம்"
## "Vox Populi, Vox Dei"

அந்தோ! பரிதாபம், விழுந்துபோன மனுக்குலத்தின் சுபாவம் விழுந்துபோன மனிதசுபாவம் எவ்வளவாய் நம்பமுடியாத நிலைக்குப் போய்விட்டது."ஜனங்களுடைய சப்தமே, தேவனின் சப்தம்" - "Vox Populi, Vox Dei" - என்ற பழமொழி எவ்வளவு உண்மையற்றது. ஒருவேளை வேதனுடைய சாயலிலும் ரூபத்தின்படியேயும் பூரணமான புருஷர்களும், ஸ்திரீகளும் பரிசுத்த ஆவியினால் நடத்தப்பட்ட நிலையில் உலகத்தில் நிரம்பிக் காணப்பட்டார்களானால், அப்பொழுது திரளான ஜனங்களின் சப்தம் தேவனுடைய சப்தமாக இருந்திருக்கமுடியும். ஆனால் பெரும்பாலும் ஜனங்களின் சப்தமானது அவர்களை வஞ்சித்துள்ள பேய்களின் சப்தமாகவே இருக்கின்றது மற்றும் அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்று, "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்". (2 கொரிந்தியர் 4:4)

மேற்கூறியவைகளுக்கு இசைவாக நாம் பார்க்கையில், தற்கால

சூழ்நிலைகளின் கீழ் உள்ள உலகத்தின் தீர்ப்பானது நம்பத்தகுந்ததல்ல என்பது நம் அனைவருக்குமான நமது கர்த்தரின் ஆலோசனையாகும். அதாவது "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால் (இப்பொழுது நிலவும் சுயநலத்தின் கொள்கைகளுக்கு எதிராகக் காணப்படுவதற்குப் பதிலாக இன்னமும் பாவத்தின் ஊழியக்காரர்களாய், குருடர்களாய்க் காணப்பட்டால்), உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; . . . . நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்" (யோவான் 15:18, 19, 16). நமக்கோ இயேசுவினுடைய சத்தம்/குரல், தேவனுடைய சத்தமாக/குரலாக இருக்கின்றது. மேலும், அவருடைய ஆடுகள் மாத்திரமே அவருடைய சத்தத்தைக் கேட்கின்றன, அவரைப் பின்தொடரவும் செய்கின்றன. இறுதியில் சாத்தான் கட்டப்பட்ட நிலையில், பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்பட்டுச் சத்தியத்தின் அறிவிற்குள்ளாகக் கொண்டுவரப்பட்டு, பாவம் மற்றும் சாத்தானின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று தெய்வீக வாக்குத்தத்தங்கள் கொடுத்த நிச்சயங்களை நினைவுகூர்ந்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இதற்கிடையில் நீதிக்காக நிற்பவர்கள் சிறுபான்மையான ஜனங்களாக இருப்பதில் திருப்தியாக இருக்கவேண்டும். எனினும் நமக்கு எதிராக நிற்கின்ற அனைவரைக்காட்டிலும் அவர் நமக்குப் பெரியவராக இருப்பார் என்பதான வாக்குத்தத்தமானது நமது விசுவாசத்தைப் பெலப்படுத்துகின்றதாய் இருக்கும். தற்காலத்தின் இருளான மேகங்கள் களைந்துபோய் புதிய இராஜ்யமானது அதிகாரத்தில் வந்து நீதியின் சூரியன் பிரகாசிக்கும்போது, அக்காலத்தில் நீதிமான்கள் பெரும்பான்மையானவர்களாக/திரளானவர்களாக இருப்பார்கள். மேலும், இராஜ்யத்தின் பிரமாணங்களுக்குக் கீழ்படியாதவர்களோ, ஜனங்கள் மத்தியில் இராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவார்கள். (அப்போஸ்தலர் 3:23)

# எத்தரென்னப்பட்டாலும், நிஜஸ்தர்

## லூக்கா 23:13-25

***"இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை என்றார் பிலாத்து." லூக்கா 23:14***

"இருள் ஒளியைப் பகைக்கின்றது" என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளானது, அவருடைய விஷயத்திலும் சரி, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலுமுள்ள அவரது அடிச்சுவட்டைப் பின்தொடரும் பின்னடியார்களின் விஷயத்திலும் சரி உண்மையென நிரூபணமாகியுள்ளது. இவ்வார்த்தைகளுக்கான உதாரணமாக, நமது கர்த்தர் பிலாத்து மற்றும் ஏரோதின் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு, அலட்சியப்படுத்தப்பட்டு மற்றும் பல்வேறு விதத்தில் கொடுமைப்படுத்தப்பட்டச் சம்பவங்கள் தொடர்புடைய அனைத்தையும் இப்பாடத்தில் நாம் காணலாம் மற்றும் இதே காரியங்களை அவரது உண்மையான பின்னடியார்களின் விஷயத்திலும் நாம் பொருத்திப்பார்க்கலாம். இச்சமயத்தின்போதான அவரது அனுபவங்களில், "உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!" என்ற நமது கர்த்தருடைய மற்றொரு வாக்கியத்திற்குக்கூட உதாரணம் காணப்படுகின்றது (மத்தேயு 6:23). "எவ்விதத்திலும் (நன்மை) மிகுதியாயிருக்கிறது" என்று அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளது போன்று, யூத ஜனங்கள் ஓரளவுக்கு வெளிச்சம் உடையவர்களாகக் காணப்பட்டனர் (ரோமர் 3:2). எனினும் நமது கர்த்தருடைய சத்துருக்களின் மத்தியில் மிகவும் வெறித்தனமாக/மூர்க்கத்தனமாகக் காணப்பட்டவர்கள் பிரதான ஆசாரியர்களும், அதிகாரிகளும் மற்றும் இவர்களால் தூண்டிவிடப்பட்ட யூத ஜனக்கூட்டத்தினரும் ஆவார்கள்; இந்தப் பிரதான ஆசாரியர்களும், அதிகாரிகளும் தங்களுடைய கல்வி அறிவின் நிமித்தமும், பாசாங்கான பக்தியின் நிமித்தமும், "மோசேயின் ஆசனத்தில் உட்காரும்" அதிகாரப்பூர்வமான ஸ்தானத்தின் நிமித்தமும் சட்டப்பூர்வமாக அங்கீகரிப்பை உடையவர்களாகக் காணப்பட்டனர். இவர்களுடைய இருள் எவ்வளவு அதிகமாய் இருக்கின்றது; இவர்களது நீதி எவ்வளவு தவறான அர்த்தம் கொண்டதாய்க் காணப்படுகின்றது; இவர்களிடத்தில் எந்தவிதமான அன்பும் எவ்வளவாய் இல்லாதிருந்தது. இவர்கள் மனுஷர் மத்தியில் தேவனையும், அவரது இராஜ்யத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பாத்திரமற்றவர்கள் என்றும், ஆகையால் இவர்கள் தள்ளிவிடப்படுவார்கள் என்றும், ஆவிக்குரிய இஸ்ரயேல் எனும் ஒரு வகுப்பார் மேசியாவின் பங்காளிகளாக, அவரது மணவாட்டிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றுமுள்ள தெய்வீகத் தீர்மானங்களில் விளங்கும் ஞானத்தை, இவர்கள் எவ்வளவு அருமையாக முழுமையாய் நிரூபித்துக்காட்டிவிட்டார்கள். இன்றும் இப்படியாகவே இருக்கின்றதல்லவா? இவர்களைப்போன்று, இன்றும் இந்த யுகம் முழுவதிலும் ஒரு வகுப்பார் காணப்படுகின்றார்கள் அல்லவா? அதாவது தேவனையும், மாம்சத்திலுள்ள கிறிஸ்துவின் அங்கங்களில் பிரதிநிதித்துவப்படும் அவரது அபிஷேகம்

பண்ணப்பட்டவரையும் எதிர்க்கும் ஒரு வகுப்பார் இன்றும், இந்த யுகம் முழுதிலும் காணப்படுகின்றார்கள் அல்லவா? ஆம் இருக்கின்றார்கள்; ஒட்டுமொத்த உலகமும் எதிராளியானவனுடைய குருடாக்கும் தாக்கத்தின் கீழ்க் காணப்பட்டு, வெளிச்சத்தையும், சத்தியத்தையும், வெளிச்சத்தின் பிள்ளைகளையும், சத்தியம் பிரகடனப்படுவதையும் எதிர்க்கின்றதாய் இருப்பினும், பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாரும், அவளது (Doctors of Divinity) வேதசாஸ்திரிகளுந்தான் பிரதானமாய் எதிர்க்கின்றவர்களாகவும், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கும், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் உண்மையான அங்கத்தினர் அனைவருக்கும் எதிராக "சிலுவையில் அறையுங்கள்! சிலுவையில் அறையுங்கள்!" என்று கூக்குரலிடுகின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இப்படியாகச் செயல்படுகின்ற வர்கள் தொடர்புடைய விஷயத்தில், அவர்கள் துணிகரமான குற்றம் புரிந்துள்ளார்கள் என்று சொல்லுமளவுக்கு, அவர்கள் போதுமான அளவுக்கு வெளிச்சம் பெற்றிருக்கவில்லை என்று அப்போஸ்தலராகிய பேதுரு வலியுறுத்துவதால், நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இயேசுவைப் பழிதூற்றினவர்களையும், அவரை உண்மையாய்ச் சிலுவையில் அறைந்து போட்டவர்களையும் குறித்து அப்போஸ்தலர், "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்க ளென்று அறிந்திருக்கிறேன்" (அப்போஸ்தலர் 3:17) என்று குறிப்பிடுகின்றார். இந்த யுகம் முழுவதிலும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு எதிரான பெரும்பான்மையான எதிர்ப்புகளானது, குருடான நிலைமையிலும், அறியாமையிலும் செய்யப்பட்டன என்று கர்த்தரினால் கருதப்படும் என்பது நமக்கு நிச்சயமே. நம்முடைய சத்துருக்களை அன்புகூருவதற்கும், நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு நன்மை செய்வதற்கும், அப்படிப்பட்டவர்களுக்காய் ஜெபம் பண்ணுவதற்குமான இருதய நிலைமையில் நாம் காணப்பட வேண்டும்; மேலும் கர்த்தருடைய ஆசீர்வாதமான இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போதும், கர்த்தரைப்பற்றின தெளிவான அறிவு பூமியை நிரப்பிக் காணப்படும்போதும், இந்தக் குருடரான மற்றும் கடுமையான சத்துருக்களில் அநேகர்/அனைவரும் தங்களது புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பெற்று, தேவனுடைய மகிமையை அறிக்கைப்பண்ணும் நாவையும், அவருக்கு முன் முடங்கி பணியும் முழங்கால்களையும் உடையவர்கள் மத்தியில் காணப்படுவார்கள் என்ற நல் நம்பிக்கையையே நாம் உடையவர்களாய் இருக்கின்றோம்.

## பிலாத்துவின் முன்னிலையில் இயேசு

நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட நாளினுடைய காலை வேளையில், சுமார் 8 மணி அளவில், நமது கர்த்தர் பிலாத்துவுக்கு முன்பாக அழைத்து வரப்பட்டார். இதற்கும் அதிகாலமே யூத ஆலோசனை சங்கத்தார் கூடிக்கொண்டு, இரவு வேளையில் பிரதான ஆசாரியனுடைய விசாரணையின்போது கண்டுபிடிக்கப்பட்டக் குற்றச்சாட்டுகளை அங்கீகரித்தனர்; அதாவது இயேசு தேவனுக்கும், அவருடைய நாட்டிற்கும் எதிராக தேவதூஷணமும், துரோகமும் செய்துள்ளார் என்ற

குற்றச்சாட்டைக் கூட்டங்கூடி அங்கீகரித்தனர். இந்தக் குற்றச்சாட்டானது, இயேசு பிரதான ஆசாரியன் முன்பு, தாம் தேவனுடைய குமாரனாகிய மேசியா என்று ஒப்புக்கொண்டதன் வாயிலாக நிரூபணமானதாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இயேசுவின் நிமித்தமாக அவர்கள் வெட்கமடைந்தார்கள் மற்றும் இப்படியான ஓர் இராஜாவை, ஒரு மேசியாவை, ஓர் இரட்சகரை அவர்கள் விரும்பவில்லை. நமது கர்த்தர் கைதுச் செய்யப்பட்டக் காரியமானது/செய்தியானது பட்டணத்தினுடைய ஜனங்களுக்கு எட்டி, மிகப்பெரிய கிளர்ச்சி ஏற்படுவதற்கு முன்பும், இயேசுவின் நண்பர்களில் சிலர் அவரைப் பாதுகாக்க முற்படுவதற்கு முன்பும், இயேசுவைக் கைதுச் செய்தவர்கள் நேரமே, பிலாத்துவினுடைய அரமனைக்குச் சென்றார்கள்.

கைதியைப்பற்றி பிலாத்து சில நொடிகளிலேயே கிரகித்துக்கொண்டார். யூத ஆலோசனைச் சங்கத்தினர் நமது கர்த்தர் இயேசு மீது செலுத்திட்டக் குற்றச்சாட்டுகளிலிருந்து முற்றிலும் மாறான குற்றச்சாட்டுகளானது, நமது கர்த்தருக்கு எதிராக பிலாத்துவின் முன்னிலையில் வைக்கப்பட்டது. அவை மூன்றாகும்: (1) கலகவாதியாக இருந்து, கிளர்ச்சியை உண்டுபண்ணி ஜனங்களை, அதிகாரத்தை எதிர்ப்பதற்கு நேராக இயேசு வழிநடத்தியுள்ளார் என்றும், (2) ஜனங்கள் இராயனுக்கு வரி கொடுக்கக்கூடாது என இயேசு போதித்தார் என்றும், (3) தாம்தான் வரிகள் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரமான இராஜாவாய் இருக்கின்றார் என இயேசு கூறியுள்ளார் என்றுமுள்ள குற்றச்சாட்டுகளேயாகும். குற்றச்சாட்டுகள் உண்மையற்றவைகளாக இருந்தபடியினால், பிலாத்து உடனடியாக, குற்றச்சாட்டுகளைத் தொகுத்திட்ட யூத அதிகாரிகளுடைய பகைமையைக் கிரகித்துக்கொண்டார். உரோம அரசாங்கத்தினுடைய அரசியல் அதிகாரத்திற்குப்பதிலாக, யூத அதிகாரிகளுடைய மத அதிகாரமே அபாயத்தில் இருப்பதைப் பிலாத்துக் கண்டுகொண்டார். வாசலுக்கு வெளியே காணப்பட்ட ஜனக்கூட்டத்தினர், அவர்கள் மதப்போதகர்களுடைய தூண்டுதலினால், கட்டுப்பாடற்றவிதத்தில் குற்றச்சாட்டுகளைக் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர். இயேசு எதுவும் கூறாமல் காணப்பட்டார்; ஆகவே இயேசு தமக்காக வாதிட திறமிக்கவர்போன்று வெளிப்படையாகத் தென்பட்டபோதிலும், அவர் அமைதலுடனும், மனதை/தம்மை அடக்கின நிலையிலும், எதிர்க்காமலும், பழியினின்று விடுவித்து தம்மைத் தற்காத்துக்கொள்ள முயலாமலும் இருப்பதைக் கண்டு, பிலாத்து ஆச்சரியமடைந்தார். இயேசுவை விடுவிப்பதற்கு அல்லது ஜனங்களுடைய விருப்பத்தின்படி அவரைத் தண்டிப்பதற்குத் தன்னிடத்தில் அதிகாரம் இருக்கின்றது என்பதை இயேசு அறிந்திருக்கவில்லையா என்று கூடப் பிலாத்து இயேசுவிடம் வினவினார். நமது கர்த்தருடைய பதிலானது சாந்தமான ஒன்றாகும்; அதாவது பரம பிதாவினால் அனுமதிக்கப்பட்டால் ஒழிய, மற்றப்படி பிலாத்துவுக்குத் தம்மேல் எவ்விதமான அதிகாரமும் இருப்பதில்லை என்று இயேசுவின் பதில் காணப்பட்டது. ஆ! இதுவே நமது கர்த்தருடைய மன அமைதிக்கான இரகசியமாகும். இயேசு தம்முடைய ஜீவியத்தையும், தம்முடைய அனைத்தையும் ஒப்புக்கொடுத்துள்ளார்; தம்முடைய அனைத்துக் காரியங்களையும் அவர் பிதாவினிடத்திற்கு ஒப்புக்கொடுத்துள்ளார்; அவருக்குப் பிதாவினுடைய அன்பிலும், ஞானத்திலும் நம்பிக்கை இருந்தது, ஆகையால்

அவர் பிதா தமக்கு ஊற்றின பாத்திரத்தில் பானம்பண்ண விருப்பமுள்ளவராகவும், தம்மை அனுப்பினவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதிலும், அந்த வேலையை நிறைவேற்றுவதிலும் களிகூருகிறவராகவும் காணப்பட்டார். இப்படியாகவே இந்த யுகம் முழுவதிலுமுள்ள கர்த்தருடைய பின்னடியார்களும் காணப்பட வேண்டும்; அதாவது அவர்கள் எந்தளவுக்கு தங்களது அர்ப்பணிப்பைப்பற்றி முழுமையாய் உணர்ந்துக்கொள்கின்றார்களோ மற்றும் இருதயத்தில் அவருடைய ஆவியினால் நிரப்பப்பட்டு மற்றும் பிதாவின் சித்தத்திற்கு அன்புடன்கூட ஒப்புக்கொடுக்கின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் மிகவும் கடுமையான மற்றும் சோதனையான வேளைகளில் அமைதல் உள்ளவர்களாகக் காணப்படுவார்கள்; மேலும் இதினிமித்தமாக அவர்களது மன அமைதியையும், அவர்கள் தங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதையும், எல்லாப்புத்திக்கும் எட்டாத மேலான தேவ சமாதானம் அவர்களது இருதயத்தை ஆளுவதையும் உலகத்தார் கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

இயேசுவுடனான தனது சுருக்கமான சம்பாஷணையை முடித்துவிட்டு, பிலாத்து ஜனங்கள் கூடிக்காணப்படும் தனது அரமனையினுடைய முற்றத்து வாசலுக்கு வந்து, "இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை" என்று வெளிப்படையாகவே அறிக்கையிட்டார். யூத அதிகாரிகளோ ஏமாற்றமடைந்தவர்களாக, எங்கே தங்களது கைதி (இயேசு) தங்களிடமிருந்து தப்பித்துக்கொள்வாரோ என்ற அச்சத்தினால் மிகவும் ஆத்திரமடைந்தவர்களாக, தீர்ப்பில் அதிருப்தியடைந்ததைத் தெரியப்படுத்தும்படிக்கு, ஜனக்கூட்டத்தாரைத் தூண்டிவிட்டார்கள். பிலாத்து தனது தீர்ப்பை வழங்கிவிட்டார் மற்றும் அதனை மாற்றுவதற்கும் அவருக்கு மனதில்லை; எனினும் பொதுஜனங்கள் மற்றும் செல்வாக்குமிக்க அதிகாரிகளுடைய கோபத்தின் முன்னிலையில் இயேசுவை விடுதலைப்பண்ணிட பிலாத்துத் தயங்கினார். கலிலேயா பற்றின ஏதோ சில வார்த்தைகள் பேசப்பட்டதைத் தற்செயலாக பிலாத்துக் கேட்க, இயேசு கலிலேயனா என்று பிலாத்து விசாரித்தார் மற்றும் அதை உறுதிபடுத்தின பிற்பாடு, "இம்மனுஷன் கலிலேயனாக இருக்கின்றபடியால் நான் இவரை, எருசலேமிலே வந்திருக்கின்ற ஏரோதுவினிடத்திற்கு அனுப்புகின்றேன்" என்றார். பின்னர் நமது கர்த்தர் உரோம போர்வீரர்களுடைய குழுமத்துடன் பகீரங்கமாக, ஏரோதுவினிடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார்; இந்த ஏரோது நமது கர்த்தரைச் சந்திக்க ஆவலாய்க் காணப்பட்டார்; இயேசுவைக் குறித்து அநேகம் காரியங்களைக் கேள்விப்பட்டிருந்த ஏரோது, ஒருவேளை தன்னால் சிரைச்சேதம் பண்ணப்பட்ட யோவான் ஸ்நானன்தான், மரணத்திலிருந்து உயிரோடு எழுந்து இயேசுவாக வந்துள்ளாரோ அல்லது இல்லையோ என்று யோசனைப் பண்ணிக்கொண்டு காணப்பட்டார். ஆனால் ஏரோது இயேசுவிடம் கேள்விகள் கேட்டப்போது, இயேசு ஒரு பதிலும் கொடுக்கவில்லை. பேச வேண்டிய தருணங்களும் உள்ளன மற்றும் அமைதிக் காக்க வேண்டிய தருணங்களும் உள்ளன மற்றும் நமது கர்த்தர் இயேசு தமது சூழ்நிலைகளைத் தம்முடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டிருந்தார். ஏரோதினிடத்தில் அவர் ஒருவேளை ஏதாகிலும் கூறியிருப்பதைக் காட்டிலும், அவர் அமைதலுடன் காணப்பட்டதே மிகவும் ஆற்றல்மிக்க காரியமாய்

இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இயேசுவின் இந்த அமைதியின் நிமித்தம் ஏரோது சினமடைந்திருப்பார் என்பது உறுதி என்றாலும், ஏரோது அதை வெளிப்படுத்தி, தன்னை அவமானப்படுத்திக்கொள்ளத் துணியவில்லை. ஆகவே தன்னுடைய போர்ச்சேவகர்களில் சிலரைக் கொண்டு, இயேசுவுக்கு மினுக்கான வஸ்திரம் உடுத்தவும், கேலியாக அவரை வணங்கவும் அனுமதிப்பதன் மூலம், ஏரோது திருப்தியடைந்தான். இயேசு ஒரு போலி என்றே ஏரோது கருதினார் மற்றும் தாம் இராஜா என்று இயேசுவினால் உரிமை பாராட்டிக்கொள்ளப்படும் விஷயங்கள் கேலிக்கு இடமானவைகள் என்று ஏரோது கருதினார் என்பதிலும் ஐயமில்லை. இயேசு குற்றமற்றவர் என்றே ஏரோதினுடைய தீர்ப்புக் காணப்பட்டது. மரணத் தண்டனைக்கு ஏதுவான குற்றம் எதுவும் கைதியினிடத்தில் தன்னால் காணமுடியவில்லை என்று அறிவித்துக் கைதியைப் பிலாத்து ஏரோதிடத்திற்கு ஒப்படைத்தது போன்று, ஏரோதும் கைதியை பிலாத்துவினிடத்திற்கு மீண்டும் (விசாரித்துவிட்டு, தீர்ப்புக் கூறி) அனுப்பி வைத்தார். பிலாத்துத் தன்னிடத்திலேயே மீண்டும் இயேசுவின் வழக்கு வந்துள்ளதைக் கண்டு, பிரதான ஆசாரியர்களையும், ஜனங்களுடைய அதிகாரிகளையும் அழைப்பித்து, "அவர்களை நோக்கி: ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது, இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை. உங்களை ஏரோதினிடத்திற்கும் அனுப்பினேன்; அவரும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை; மரணத்துக்கேதுவாக இவன் ஒன்றும் செய்யவில்லையே. ஆனபடியால் இவனைத் தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான்" (லூக்கா 23:14-16).

## பிலாத்துவினுடைய தவறுக்காகக் காரணம் காட்டுகின்றோம்

அநேகர் பிலாத்துவினுடைய கொடூரத்தன்மையின் நிமித்தம், அவரைப் பழித்துரைப்பதுண்டு; பிலாத்து ஒரு பொல்லாத மனிதன் என்றும், தன்னுடைய தீர்ப்புகளுக்கு ஏற்ப செயல்பட விருப்பமற்றவர் என்றும் அநேகர் கூறுகின்றனர்; இன்னுமாக இயேசுவைத் தண்டிக்கும்படியான இவருடைய கருத்தானது மேற்கூறிய இந்தப் பெலவீனங்களுடைய வெளிப்படுத்தலே என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர்; இன்னுமாக இயேசுவில் குற்றம் எதுவும் இல்லையெனில், நீதியானது இயேசுவுக்கான மரணத் தண்டனையை மாத்திரமல்லாமல், இயேசு சவுக்கினால் அடிக்கப்படுவதையும் தடைப்பண்ணியிருக்க வேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

பிலாத்துவுக்கு அநீதியே இழைக்கப்பட்டுள்ளது. பிலாத்து ஒரு புறஜாதி ஆவார்; மேசியாவுக்கான யூதருடைய எதிர்ப்பார்ப்பின் மீது எவ்விதமான நம்பிக்கையும் அற்றவர் மற்றும் யூதர்களுக்கு மதிப்பும் கொடுக்காதவர் ஆவார்; யூதர்களைக் கலகம்பண்ணுகிற ஜனங்களாகவே கருதினார்; இவர்களை ஒழுங்குமுறையுடன் உரோம பேரரசினுடைய ஆளுகையின் கீழ் வைப்பதற்கென்று பிலாத்து அங்குப் பணி அமர்த்தப்பட்டார். கண்ணுக்குத் தெரியாத அநேக தெய்வங்கள் இருப்பினும், உரோம சக்கரவர்த்தியே,

அதாவது இராயனே தெய்வங்களின், கண்ணுக்குத் தெரிகின்ற பிரதிநிதி என்றும், இராயனுடைய கனமும், அதிகாரமும், மதிப்பும் எவ்விதத்திலும் தக்கவைக்கப்பட வேண்டும் என்றும் பிலாத்துக் கருதிக்கொள்ளத்தக்கதாகவே, அவருக்கான ஜீவியத்தின் பயிற்சிகள் காணப்பட்டன. நீதி செய்வதற்காக அல்லாமல், மாறாக ஒழுங்கை தக்கவைத்துக்கொள்வதற்கும், தெய்வீகத் திட்டங்களுக்கு ஆதரவு தெரிவிப்பதற்கோ, அதனை நடந்தேற்றுவதற்கோ அல்லாமல், மாறாக உரோம சாம்ராஜ்யத்தினுடைய அதிகாரத்தினுடைய பிரதிநிதியாக இருந்து, அந்த அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்குத்தான் எருசலேமில் உரோமினுடைய பிரதிநிதியாக பணி அமர்த்தப்பட்டுள்ளார் என்று பிலாத்து நன்கு அறிந்திருந்தார். உரோமுக்கான மரியாதை தக்க வைக்கப்படுவதற்கும் உரோமுக்கான மதிப்பு அடையப்பெறுவதற்குமென ஒவ்வொரு வருடமும் ஒருவேளை பல ஆயிரம் நிரபராதிகள் கஷ்டம் அனுபவித்தால், இதனால் உரோமுக்கு என்ன கஷ்டம்? ஒருவேளை யூதர்கள் மத்தியிலான ஏதேனும் அநீதியான காரியமானது, அவர்களை உரோமுக்கு உண்மையற்றவர்களாக இருப்பதற்குத் தூண்டுமாயின், உரோமின் அதிகாரம் உறுதியாய் நிலைநாட்டப்பட்டிருக்கத்தக்கதாக அந்த அநீதி சரிச்செய்யப்படும்; ஆனால் யூத அதிகாரிகளும், ஜனங்களும் யாருக்கேனும் அல்லது ஏதேனும் காரியத்திற்கு எதிராக கைக்கோர்த்துக்கொண்டு, உரோமுக்கான தங்களது உண்மையை மெய்ப்பித்துக் காட்டுவார்களானால், உரோமுக்குப் பிரதிநிதியாக அமர்த்தப்பட்டிருக்கும் பிலாத்து, ஜனங்களின் விருப்பத்திற்கு இணங்கி, ஒழுங்கையும், அமைதியையும் தக்கவைக்க வேண்டுமென்றே உரோம சக்கரவர்த்தியும், அவரது அவை உறுப்பினர்களும் எதிர்ப்பார்ப்பார்கள். நமது கர்த்தருடைய தனிச்சிறப்பைப் பிலாத்து உணர்ந்து அதினிமித்தம் கொண்டிருந்த மதிப்பினால் அல்லது முந்தின இரவில் பிலாத்துவின் மனைவி கண்ட சொப்பனத்தினுடைய தாக்கத்தினால்தான், இயேசுவை விடுவிப்பதற்கு, பிலாத்து யூத அதிகாரிகளுடன் போராடினார். பிலாத்துவின் ஸ்தானத்தில் காணப்படும் அநேக நபர்கள், அநேகமாக தங்களது கட்டுப்பாட்டின் கீழ்க் காணப்படுபவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக வாய்ப்பைப் பயன்படுத்தி, அவர்களைப் பிரியப்படுத்துவதற்கென இயேசுவை மரணத்தண்டனைக்கு ஒப்புக்கொடுத்திருப்பார்கள்; அதாவது, "யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்தான். அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத்தொடர்ந்த" சம்பவத்தில் ஏரோது நடந்துகொண்டது போன்று நடந்து கொண்டிருந்திருப்பார்கள். (அப்போஸ்தலர் 12:2, 3)

சவுக்கினால்/வாரினால் அடிக்கப்பட்டச் சம்பவம் பின்வரும் கண்ணோட்டத்திலேயே பார்க்கப்பட வேண்டும்; அதாவது பிலாத்து தனது அரமனையின் வாசலில் காணப்பட்ட கும்பலின் கலக ஆவியைத் தணித்திடவே விரும்பினார்; ஒருவேளை இயேசு தண்டிக்கப்படாமல் விடுவிக்கப்படுவதைக் காட்டிலும் வாரினால் அடிக்கப்பட்டு இப்படியாக அவமானப்படுத்தப்பட்டாலே ஜனங்கள் அநேகமாக நன்கு திருப்தியடைந்து, காரியத்தை விட்டுவிடுவார்கள் என்றே பிலாத்துக் கருதினார். ஆகவே கெட்ட நோக்கத்தினால் அல்லாமல், மாறாக பிலாத்து நல்ல நோக்கத்துடனே இயேசு வாரினால்

அடிக்கப்படும்படிக்குச் செய்தார் என்று பிலாத்துவைக் குறித்து உயர்வாகவே நாம் கருதுகின்றோம்.

## பொது மக்களினுடைய கருத்தின்படி, பரபாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டான்

வருடத்தினுடைய அந்தத் தருணத்தின்போது, பெருந்தன்மையின் வெளிப்படுத்துதலாகவும், அத்தருணத்தில் நிலவும் மகிழ்ச்சியுடன்கூட, இன்னும் கொஞ்சம் மகிழ்ச்சி காணப்படத்தக்கதாகவும், ஒரு கைதியை விடுதலைச் செய்வது உரோம அரசாங்கத்தினுடைய வழக்கமாக இருந்தது. பிலாத்து இதனை அவர்களுக்கு நினைவுப்படுத்திக்கொண்டு, இயேசுவை வாரினால் அடித்தப் பிற்பாடு, தான் விடுதலைப் பண்ணப்போகும் கைதி இயேசு ஆவார் என்று குறிப்பாகச் சொன்னார்; ஆனால் பிலாத்துவினுடைய இந்தக் கருத்துக்கு எதிராக, ஜனக்கூட்டத்தினர் ஒரே குரலாக, "இவனை அகற்றும், பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும்" என்று சத்தமிட்டார்கள். ஜனங்கள் இப்படிச் சத்தமிடுவதற்குப் பிரதான ஆசாரியர்களும், அதிகாரிகளும் காரணம் என்பதில் நமக்கு ஐயமில்லை; ஜனங்களை இவர்கள் இயேசுவுக்கு எதிராக தூண்டிவிட்டுக்கொண்டே இருந்தார்கள். யூதர்களைப்பற்றி நாம் எண்ணிப்பார்க்கும்போது, அவர்கள் வெளிப்படுத்தும் இருதயத்தின் நிலைமை நம்மைத் திகைக்கவே வைக்கின்றது. பரபாஸ் என்பவன் உண்மையில் கலகவாதியாவான் மற்றும் கொலைபாதகத்தின் நிமித்தம் அவன் சிறையில் அடைக்கப்பட்டிருந்தான்; இவனையே ஜனங்கள், இயேசுவுக்கு எதிராக தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்! உண்மையில் இவர்கள் தங்களுடைய இருதயத்தின் கொலை பாதக நிலைமையை வெளிப்படுத்தினார்கள்; வெளித்தோற்றத்தில் இவர்கள் ஒழுக்கமுள்ள ஜனங்களாகவும், நியாயப்பிரமாணத்தை மதிக்கிறவர்களாகவும் இருந்திட்டாலும், உள்ளிலோ எதிராளியானவனுடைய ஆவியினால் நிரப்பப்பட்டவர்களாகவும், வெளிச்சத்தையும், வெளிச்சத்தைச் சுமந்து வந்த மா பெரியவரையும் பகைக்கிறவர்களாகவும் காணப்பட்டனர். இதுபோலவே இந்தச் சுவிசேஷயுகம் முழுவதிலும், எப்போதும் கலகவாதிகளும், கொலை பாதகர்களும் உயர் ஸ்தானங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் படுவதில்லை என்றாலும், பரிசுத்தவான்கள் அபூர்வமாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சுமார் 19 நூற்றாண்டுகள் கடந்து சென்றுள்ள இன்றைய காலங்களிலும் கூட மற்றும் உலகத்தின் பெரும்பான்மையான நாகரிகமான பாகங்கள் கிறிஸ்தவமண்டலம் என்று அழைக்கப்பட்டாலும் கூட, இப்பொழுது ஒருவேளை நமது கர்த்தர் தம்மை இராஜாவென முன்வைப்பாரெனில், அவர் புறக்கணிக்கப்படுவார் என்பதிலும், இன்னுமாக அவருக்குப் பதிலாக ஒரு கொலைபாதகன் தேர்ந்தெடுக்கப்படமாட்டான் என்றாலும், கொலைபாதக ஆவியும், உலகத்தின் ஆவியும், எதிராளியானவனின் ஆவியும், அதாவது அப்போஸ்தலர் குறிப்பிடுகிறதுபோல மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகளாகிய பகைமையிலும், துர்க்குணத்திலும், பொறாமையிலும், சண்டைச் சச்சரவுகளிலும் அடிக்கடி வெளிப்படும்

எதிராளியானவனுடைய ஆவியும் கொண்டுள்ளவரே நிச்சயமாய்த் தேர்ந்தெடுக்கப் படுவார் என்பதிலும் நமக்கு உறுதியே. சீஷன் தனது ஆண்டவரிலும் பெரியவன் அல்ல; மேலும் சீஷன் எந்தளவுக்குத் தன்னுடைய ஆண்டவருக்கு இருதயத்தில் ஒத்திருக்கின்றானோ, அவ்வளவாய் அவன் தற்காலத்தில் எவ்விதமான மிகுந்த கனம் மற்றும் மதிப்பு மிக்க ஸ்தானங்களுக்குள் தான் தள்ளப்படாதபடிக்கு பார்த்துக்கொள்கின்றவனாய் இருப்பான். நாம் எந்த விதத்திலும் கனமிக்க ஸ்தானங்களில் அமர்ந்திருப்பவர்களைப் பழித்துக் கூறுவதில்லை. பொதுமக்களின் விருப்பத்திற்கு இணங்க நல்ல மற்றும் தலைச்சிறந்த நபர்கள் சிலர் உயர் கனமிக்க ஸ்தானங்களில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்று நாம் நம்புகின்றோம், ஆனாலும் இப்படியாக அபூர்வமாகவே காணப்படுகின்றது. எனினும் ஒரு நல்ல குடிமகனுக்கும், நல்ல அதிகாரிக்கும், நல்ல மனுஷனுக்கும் மற்றும் இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் பின்னடியானாகிய பரிசுத்தவானுக்கும் மிகுந்த வித்தியாசம் உள்ளது என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும். தேவனுடைய கிருபையினால், நாம் ஆண்டவருடனே காணப்பட வேண்டும் என்று தீர்மானிப்போமாக; இப்படியாக காணப்படும்போது நாம் பிரபலமற்றவர்கள் ஆகுவோம் என்றும், அவமானப்படுத்தப் படுவோம் என்றும், இகழ்ச்சிக்குள்ளாகுவோம் என்றும், தீமை அனுபவிப்போம் என்றும் எதிர்பார்ப்போமாக மற்றும் இதுவே அவருடைய சிலுவையில், நமக்கான பங்காகக் காணப்படும் என்றும் நாம் எதிர்பார்க்கலாம்; சிலுவையைச் சுமப்பவர்கள் மாத்திரமே, கிரீடத்தை அணியமுடியும் என்பதையும் நாம் நினைவில்கொள்வோமாக.

"ஒவ்வொரு மனிதனுக்கும், ஜாதிக்கும் தீர்மானம் எடுக்கும் தருணம் வந்திடுமே ஓர்நாள்,
சத்தியத்திற்கும், தப்பறைக்கும் இடையிலான வாக்குவாதத்தின்போதே,
நன்மையின் அல்லது தீமையின் பக்கமாய் நின்றிடவே.
மாபெரும் காரணத்திற்காய், தேவனின் புதிய மேசியா
ஒவ்வொருவருக்கும் அளிக்கின்றாரே மலர்ச்சியை (அ) அழிவினையே.
இடதுபக்கம் சென்றிடுதே வெள்ளாடுகள்
வலதுபக்கம் சென்றிடுதே செம்மறி ஆடுகள்:
அந்த இரவிற்கும், வெளிச்சத்திற்கும் இடையிலேயே - அவர்கள்
தெரிந்தெடுக்கும் முடிவானது என்றென்றும் நிலைநிற்குமே!"

## பிலாத்துவினுடைய மனைவியின் சொப்பனம்

எடர்செய்ம் (Edersheim) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "இயேசுவுக்குப் பதிலாக பரபாசை தேர்ந்தெடுக்கலாம் என்று ஜனங்கள் முடிவெடுத்துக் கொண்டிருக்கையில், பிலாத்துத் தன்னுடைய நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், பிலாத்துவினுடைய மனைவி, அவருக்கு ஆளனுப்பி: நீர் இயேசுவைச் சிலுவையில்

அறைய ஒப்புக்கொடுக்க வேண்டாம்; இன்றைக்குச் சொப்பனத்தில் அவர் நிமித்தம், நான் வெகுவாகப் பாடுபடுத்தப்பட்டேன் என்று கூறி எச்சரித்தாள்". பாரம்பரியமானது, அவளுடைய பெயரைப் புரோக்குல்லா (Procula) என்று வழங்குகின்றது. முந்தின உரோம தேசாதிபதியின் (Saturninus) மனைவியைப் போன்று புரோக்குல்லாவும் யூதமார்க்கத்தமைந்தவளாக மாத்திரம் இராமல், இயேசுவைப்பற்றி அறிந்தவளாகவும் இருந்து, இயேசுவைக் குறித்துப் பிலாத்துவிடம் அன்று மாலையில் பேசினவளாகவும் இருந்திருக்கலாம் அல்லவா? இவைகள் அனைத்தும் இயேசுவைத் தண்டிக்கும் விஷயத்தில் பிலாத்துக் கொண்டிருந்த விருப்பமின்மையும், இயேசுவைக் குறித்த புரோக்குல்லாளின் சொப்பனத்திற்கும் விளக்கம் அளிக்கின்றதாய் இருக்கின்றது.

## ஏன் இவர் என்ன பொல்லாப்புச் செய்தார்?

பிலாத்து இரண்டாம் முறையாக ஜனங்களிடத்தில் தாக்கம் ஏற்படுத்திட முற்பட்டார்; ஆனால் அவர்கள் மீண்டுமாக "அவரைச் சிலுவையில் அறையும், அவரைச் சிலுவையில் அறையும்" என்றே கூக்குரலிட்டார்கள்; பிலாத்து மூன்றாந்தரமாக ஜனங்களை நோக்கி: ஏன் இவர் என்ன பொல்லாப்புச் செய்தார்? மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவரிடத்தில், தான் காணவில்லை என்றும், தான் இவரைத் தண்டித்து விடுதலையாக்கப் போவதாகக் கூறினார். ஆனாலும் கலகக் கூட்டத்தாரோ அவரைச் சிலுவையில் அறைய வேண்டுமென்று உரத்த சத்தத்தோடு கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஜனக்கூட்டத்தாரும், பிரதான ஆசாரியரும் இட்டச் சத்தம் மேற்கொண்டது.

இச்சம்பவத்தைக் குறித்து ஸ்டால்கர் (Stalker) அவர்கள் பின்வருமாறு விமர்சிக்கின்றார்: "இந்த ஒரு காட்சியானது, அடிக்கடி மக்களாட்சி அதற்கே எதிராகக் கண்டனம் தெரிவிக்கும் காட்சியாக இருக்கின்றது எனக் கருதப்படுகின்றது. Vox populi, Vox Dei - ஜனங்களின் சப்தமே தேவனின் சப்தம் - என்று இதன் போலிப்புகழ்ச்சியாளர்கள் கூறியுள்ளனர் - ஆனால் இங்கே நடந்ததைப் பாருங்கள். ஜனங்கள் இயேசு மற்றும் பரபாசுக்கிடையில் தேர்வு செய்ய வேண்டியிருந்தபோது, அவர்கள் பரபாசைத் தேர்ந்தெடுத்தார்கள்! மக்கள் விஷயமே இப்படி இருக்குமாயின், இந்தக் காட்சியானது, பிரபுக்கள் ஆட்சிக்கும் எதிராகவே தீர்ப்பு அளிக்கின்றதாய் இருக்கின்றது. ஜனங்களைக் காட்டிலும், ஆசாரியர்களும், வேதபாரகர்களும், பிரபுக்களும் மேம்பட்டு நடந்துகொண்டார்களா என்ன? இவர்களுடைய ஆலோசனையின்படியே, மக்கள் கூட்டத்தினர் தேர்வுச் செய்தனர்."

ஆசாரியர்கள் மற்றும் யூத அதிகாரிகளுடைய வாக்குவாதமும் பதிவு செய்யப்பட்டுள்ளது; சம்பவம் உரோமில் தெரிவிக்கப்படும் என்றும், உரோம அதிகாரத்தினுடைய பிரதிநிதியாகிய பிலாத்துவினுடைய எச்சரிக்கையற்றத் தன்மை வெட்ட வெளிச்சமாக்கப்படும் என்றும் அவர்கள் தெளிவாகப் பிலாத்துவிடம் தெரிவித்தார்கள்; அதாவது இஸ்ரயேலின் ஆட்சியில் பாசாங்கு/போலித்தனம் பண்ணும் ஒரு நபர் காணப்பட்டார் என்றும், உரோமுக்குத் தாங்கள் உண்மையாக இருந்ததினால் தாங்களே அந்நபரைக் கைதுச்செய்து, அந்நபரை உரோம தேசாதிபதியினிடத்தில் கொண்டு வந்திருக்க, அந்தத் தேசாதிபதி அந்நபரைச் சிலுவையில் அறைவதற்குப்பதிலாக, விடுதலைப் பண்ணினதன் மூலம் தனது கடமையின் விஷயத்தில் அக்கறையற்றுக் காணப்பட்டார் என உரோமில் விவரம் சொல்லப்படும் என்றும் அவர்கள் தெளிவாகப் பிலாத்துவிடம் தெரிவித்தார்கள். பாவம் பிலாத்துவின் குணத்திற்கும், ஸ்தானத்திற்கும், படிப்பிற்கும் இவ்விடம் மிக கடுமையான இடமாக காணப்பட்டது. இறுதியாக நிர்பந்தத்தின் நிமித்தம் எதிர்க்கும் முயற்சியைக் கைவிட்டார்; ஒருவேளை இவருடைய ஸ்தானத்தில் வேறொரு மனிதன் காணப்பட்டிருப்பானானால், இம்மாதிரியான ஒரு விஷயத்தில் ஜனங்களுடைய விருப்பத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்று எண்ணியிருந்திருக்கக்கூட மாட்டான். பின் ஜனங்களுடைய விருப்பப்படியே நடக்கட்டும் என்று இறுதியாகப் பிலாத்துத் தீர்ப்பு வழங்கினார். இதுதான் பூமிக்குரிய சட்டங்களினாலும், நீதி நியாயத்தினாலும் அடையப்பெற்ற உச்சக்கட்டமான நிலை அல்லவா? ஜனங்களுடைய விருப்பத்திற்கு எதிராக, எந்த மனுஷ சட்டங்களால் எதிர்த்து நிற்கமுடியும்? இன்றும் நம்முடைய விஷயத்திலும் இப்படியாகத்தான் காணப்படுகின்றது அல்லவா? ஜனங்களே சட்டங்களைத் தொகுக்கின்றனர் மற்றும் ஜனங்களே அதை நிறைவேற்றவும் செய்கின்றனர் மற்றும் பிலாத்து, இயேசுவினுடைய சொந்த நாட்டினுடைய ஜனங்களின் விருப்பத்திற்குச் செவிக்கொடுக்க மாத்திரமே செய்தார். "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" என்றே வேதவாக்கியங்கள் குற்றம் சுமத்துகின்றன. இங்கு அப்போஸ்தலன் பிலாத்துவின் மீது இல்லாமல், மாறாக யூதர்கள் மீதும், அவர்களின் அதிகாரிகளின் மீதுந்தான் குற்றம் சுமத்துகின்றார்.

## பிலாத்துக் கைகளைக் கழுவிக்கொண்டார்

பிலாத்து தனது மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்கும் வண்ணமாகவும், பொறுப்பாளியாகுவதிலிருந்து அனைவரின் பார்வைக்கு முன்பாகத் தன்னை

விலக்கிக்கொள்ளும் வண்ணமாகவும், தண்ணீர் கொண்டுவரும்படிக்குக் கூறி, ஜனங்களின் முன்னிலையில் தண்ணீரினால் தனது கைகளைக் கழுவிக்கொண்டார். இப்படியாகத் தனது கைகளைக் கழுவிக்கொள்ளுவதின் மூலமாக, "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" என்பதை அடையாளத்தின் வாயிலாகவும், வார்த்தைகளின் வாயிலாகவும் தெரிவித்தார் (உபாகமம் 21:6-9). தனிப்பட்ட விதத்திலும் சரி, மத ரீதியிலும் சரி எவ்விதமான வரையறைகளையும் கொண்டிராத இந்தப் புறஜாதி அதிகாரியான பிலாத்து நீதியை உணர்ந்திருந்த அளவுக்குக்கூட, நீதியை உணர்ந்துகொள்ள முடியாத அளவுக்கு யூதர்கள் எவ்வளவாய்க் குருடர்களாகக் காணப்பட்டனர்; ஒருவேளை பிலாத்துப் பொதுஜனங்களின் விருப்பத்திற்கு இணங்கியிருந்திருப்பாரானால், அவருக்கு எல்லா விஷயங்களிலும் சிறப்புகள் கிடைத்திருக்கும். இவர்களது இந்த இருதய கடினமானது, "இவரது இரத்தப்பழி எங்கள் மீதும், எங்கள் பிள்ளைகள் மீதும் வரக்கடவது" என்று கூறிப் பொறுப்பை ஆசாரியர்களும், அதிகாரிகளும் மற்றும் ஜனக்கூட்டத்தினரும் ஏற்றுக்கொள்வதில் காண்பித்த விருப்பத்தில் வெளிப்படுகின்றது. முழுப்பொறுப்பும் யூதர்கள் மீதே கடந்து வந்தது.

## தாங்கள் குத்தினவரை

யூதர்கள் மீது பொறுப்பு வந்தது என்றபோதிலும், குருடாக்கப்பட்ட கண்கள் திறக்கப்படும் காலம் வரும் என்றும், அப்போது யூதர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்த்து, அவருக்காகப் புலம்புவார்கள் என்றும் தேவன் தீர்க்கத்தரிசி மூலம் ஏற்கெனவே அறிவித்துள்ளார் (சகரியா 12:10). அப்படியான ஒரு காலம் வருகின்றபடியாலும், ஜெபம் மற்றும் விண்ணப்பத்தின் ஆவியை அவர்கள்மேல் ஊற்றி, அவர்கள் பாவங்களை அகற்றிப்போடுவாரெனக் கர்த்தர் வாக்களித்துள்ளபடியாலும், தேவனுக்கு நன்றி. யூத ஜனங்கள் பல நூற்றாண்டு காலமாகக் கடுமையான அனுபவங்களைப் பெற்றுவிட்டார்கள்; இன்னுமாக அவர்கள் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டு வருகின்றார்கள் என்பதைக் கிறிஸ்துவினுடைய ஆவியையுடைய அனைவரும் அறிய வரும்போது களிகூருவார்கள்; இதுமாத்திரமல்லாமல் யூதர்களிடத்தில் முதலாவதாக ஆரம்பமாகும் ஆசீர்வாதமானது, மகிமையிலுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலாகிய கிறிஸ்துவினுடைய தெய்வீக வழிக்காட்டுதலின் கீழ் ஆசீர்வாதமானது, யூதர்கள் வாயிலாகக் கிறிஸ்துவின் ஆயிர வருட

ஆளுகையின்போது, பூமியின் குடிகளிடத்தில் கடந்துபோகும் என்பதை அறியும்போதும் களிகூருவார்கள்.

## எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராகவும்

அப்போஸ்தலனுடைய இந்த வார்த்தைகளானது (2 கொரிந்தியர் 6:8), இயேசுவின் உண்மையான பின்னடியார்கள் அனைவரும், இயேசுவைப்போன்றே ஏறக்குறைய அனுபவங்கள் பெற்றுக்கொள்வார்கள் என்று ஆண்டவரினால் வலியுறுத்தப்பட்டக் கருத்துக்கு ஒத்ததாகவே காணப்படுகின்றது. இயேசு சத்தியமும், வழியும் மற்றும் ஜீவனுமானார்; அவர் உண்மையுள்ளவர்; ஆயினும் அவர் எத்தரெனச் சிலுவையில் அறையப்பட்டார்; அவர் பாவத்தினால் குருடாக்கப்பட்ட உலகத்தினாலும், அவர் காலத்தில் வாழ்ந்து வந்த மிகவும் வெளிச்சமுள்ள ஜனங்களினாலும் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டார். சீஷன் தன் போதகரிலும் பெரியவனல்ல மாறாக சீஷன், தான் போதகரோடு துணைவனாக இருக்கும் சிலாக்கியத்தில் மேன்மை பாராட்டிக்கொள்ள வேண்டும். ஆகவே நாம் சட்டப்பூர்வமாகவும், அநியாயமாகவும் தவறாய்க் காட்டப்படும் சூழல்கள் மத்தியிலும், போலியாளாக காட்டப்படும் சூழல்கள் மத்தியிலும், குத்தப்பட்டு, வாரினால் அடிக்கப்படும் சூழல்கள் மத்தியிலும், களிகூரக் கற்றுக்கொள்வோமாக. இப்படியாக, நமது அருமை இரட்சகருடன் பங்காளியாக இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதை நாம் மகிழ்ச்சியாய்க் கருதிக்கொள்வோமாக; நன்மைச் செய்வதில் நீடிய பொறுமையுடன், தளர்ந்துபோகாமல் காணப்பட்டால் ஏற்றகாலத்தில் அவருடைய இராஜ்யத்தில் அவரோடுகூட உடன் சுதந்திரத்துவம் எனும் மகிமையான பலனை அறுப்போம் எனும் பாடத்தையும் நாம் கற்றுக்கொள்வோமாக!

## போதகரே, சத்தியமாவது என்ன?

பிலாத்துவின் முன்னிலையில் பொல்லாதவர்களாலும், துணிகரமானவர்களாலும் நிறுத்தப்பட்டதான குற்றமற்ற போதகரிடம் பிலாத்து - சத்தியமாவது என்ன? என்று கேள்வி கேட்டிட்டது போலவே ஞானிகளும் இதைக் குறித்து யோசித்திருக்கின்றனரே, மாமனிதர்களும் இக்கேள்வியையே கேட்டிருக்கின்றனரே.

அவர் மலையோரங்களிலும், புல்வெளிகளிலும்
வருடக்கணக்காக போதித்திருக்கின்றாரே;
ஒவ்வொரு நாளும் அதன்படியே வாழ்ந்தும் இருக்கின்றாரே.
உலகத்திற்கான பிதாவின் மாபெரும் திட்டத்தை அவர் கூறியிருக்கின்றாரே -
தாம் எவ்வாறு வழியும், சத்தியமுமாய் இருக்கின்றார் எனக் கூறியிருக்கின்றாரே.

சிலர் விசுவாசித்து, மகிழ்ச்சியடைந்து, தங்கள் ஆண்டவரைப் பின்தொடர்ந்தனரே,
மற்றவர்களோ பரிகசித்துப்போய்விட்டனரே. அவர்கள் பிரமாண்டமானவரைத்
தேடிக்கொண்டிருக்க, போதகர் எளிமையானவராய் இருந்திட்டாரே,
சத்தியமாவது என்ன என்று அவர்கள் இன்னும் கூக்குரல் இடுகின்றனரே.

சத்தியம் சூரிய ஒளியைப் பிரதிபலிக்கும் ஆபரணம் போன்றதே.
அதன் ஒவ்வொரு சுடர்களிலும் பிரமாண்டமான நிறங்கள் காணப்படுகின்றதே.
மாபெரும் கப்பல்களுக்கு அதன் வழிதனைக் காட்டிடும் –தொலைவில்
சமுத்திரத்திலுள்ள பாறைகள் மீதான கோபுரத்தினின்று வீசிடும்
ஒளி போன்றதாய்ச் சத்தியம் உள்ளதே.

கடந்த நூற்றாண்டுகளில் எல்லாம் சத்தியமானது வெகுவாய் மறைக்கப்பட்டதே.
எனினும் அதற்காய் மனிதர்கள் பலர் மரித்தனரே.
சத்தியம் தொலைந்து போனதுபோன்று இருப்பினும், அது மீண்டும் உதித்திடுமே,
அதை நாடுகிறவனின் ஆத்துமாவிற்கு வழிகாட்டிடவே.

சத்தியமாவது என்ன?
நமது ஆண்டவரும் போதகருமானவர்: "உமது சத்தியத்தினாலே அவர்களைப்
பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என்று ஜெபித்திட்டப்போதே,
கிடைத்ததே தெளிவாய்ப் பதில்.

சத்தியத்தின் கொடிதனை கிழித்தெறிய அநேகர் நாடிட்டாலும்,
நாம் நடக்கையில் சத்தியக்கொடிதனை உயர்த்திப் பிடித்திடுவோமே.
முற்காலத்துப் பரிசுத்தவான்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்கு
நாமும் நிற்போமானால், நம் பிதா, நமக்குக் கிரீடம் அருளிடுவாரே.

- Alice M.Ripper, Poems of the Way, p 128

# இயேசு, பிலாத்துவினால் விசாரணைப்பண்ணப்பட்டார்

## மத்தேயு 27:11-26

*"பிலாத்து அவர்களை நோக்கி: அப்படியானால், கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார்." 22-ஆம் வசனம்.*

சீசருடைய அரசாங்கத்திற்கான பிரதிநிதியாகவும், யூதேயாவிற்கான உரோம தேசாதிபதியாகவும் பிலாத்துக் காணப்பட்டார். இயேசுவினுடைய மரணத்தின் விஷயத்தில், நாம் இவரைக் கடுமையாய்க் குற்றஞ்சாட்டிட விரும்பவில்லை. இவர் என்ன செய்ய வேண்டுமோ, அதையே செய்தவராய்க் காணப்பட்டார். யூதர்களுடைய கோட்பாடுகளை (அ) மதம் சார்ந்த வாக்குவாதங்களைக் குறித்துத் தெளிவு படுத்துவதற்காக பிலாத்து யூதேயாவில் காணப்படாமல், மாறாக யூதேயாவின் ஜனங்களை அமைதியானவர்களாகவும், ஒழுங்குடையவர்களாகவும், உரோம அரசாங்கத்திற்குக் கீழ்ப்பட்டுக் காணப்படுபவர்களாகவும் வைத்துக்கொள்வதற்கே இவர் யூதேயாவில் காணப்பட்டார். நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலவ வேண்டுமெனில், இவர் நீதியாய் ஆளுகை செய்ய வேண்டும் என்பது செயல்முறைக்கொள்கையாகக் காணப்பட்டது; எனினும் உரோம அரசாங்கத்தின் நன்மைக்கு வேண்டி நீதி, தியாகம் பண்ணப்பட வேண்டியும் இருந்தது. இயேசுவைக்குறித்துப் பிலாத்து ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கின்றார் என்றும், நேரம் நியமித்து, இயேசுவை அவர் சந்தித்தும் இருக்கின்றார் மற்றும் இயேசுவினுடைய போதனைகள் தொடர்பாகக் கேள்விகள் கேட்டும் இருக்கின்றார் என்றும் பாரம்பரியமானது தெரிவிக்கின்றது.

ஜனங்கள் விழிப்படைவதற்கு முன்னதாகவும், இயேசு கைது செய்யப்பட்டது தொடர்பாக, அவரது நண்பர்களும், ஜனங்களும் ஒத்துழைத்து ஏதேனும் செய்வதற்கு முன்னதாகவும், இயேசு ஆலோசனை சங்கத்தார் முன்னிலையில் எந்தளவுக்கு விரைவாகக் காலையில் கொண்டுவரப்பட முடியுமோ, அவ்வளவுக்கு முன்னதாகக் கொண்டுவரப்பட்டார். எவ்வளவுக்கு வேகமாய் முடியுமோ, அவ்வளவு வேகமாய்ப் பிரதான ஆசாரியர்களும், ஆலோசனை சங்கத்தினுடைய பிரதிநிதிகளும் இயேசுவை உரோம நாட்டு தேசாதிபதியின் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்று, இயேசுவை ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கும்படிக்குப் பிலாத்துவினிடத்தில் வேண்டிக் கொண்டார்கள். இயேசுவுக்கு எதிரான அவர்களது குற்றச்சாட்டு என்ன என்று பிலாத்துக் கேட்டார். இயேசு ஒரு பொல்லாத மனுஷன் என்றும், தண்டனைப் பெறுவதற்குப் பாத்திரவான் என்றும், அப்படியாக அவர் இல்லையென்றால் தாங்கள் அனைவரும் அவரைக் குற்றஞ்சாட்டிக்கொண்டு, அங்கு வந்து நிற்கமாட்டார்கள் என்றும் தந்திரமாகப் பதிலளித்தார்கள்.

உரோம கையாளுதலின் கீழ், யூதர்கள் தங்கள் மதம் சார்ந்த அனைத்து வாதங்கள் தொடர்புடைய விஷயங்களைக் கையாளுவதற்கு மிகுந்த சுதந்திரம் பெற்றிருக்கின்றார்கள் என்றும், யூதமார்க்கத்திற்கு தான் காப்பாளன் அல்ல என்றும், ஆகையால் அவர்களே தங்களது (மதம் சார்ந்த) வழக்குகளைப் பார்த்துக்கொள்ள

வேண்டுமென்றும் பிலாத்து அவர்களுக்கு நினைப்பூட்டினார். இதைத் தாங்களும் அறிவார்கள் என்றும், ஆனால் மரணத்தண்டனை விதிப்பதற்கான அதிகாரம் எதுவும் தங்களுக்கு இல்லை என்றும் ஆசாரியர்கள் பதிலளித்தார்கள். இப்படியாகக் குற்றமற்ற நபர் ஒருவர் மீது பிலாத்து மரணத்தண்டனையைச் சுமத்தத்தக்கதாக, அவர்கள் வேண்டுமென்றே திட்டம் தீட்டிக்கொண்டிருக்கின்றனர் என்பதான அவர்களது பொல்லாப்பினுடைய ஆழத்தை வெளிப்படுத்தினவர்களானார்கள். பின்னர் இயேசு ஜனங்களின் மனதைத் தவறான திசையில் திருப்பினார்; அதாவது உரோம அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிவதிலிருந்தும், உண்மையாய் இருப்பதிலிருந்தும் ஜனங்களுடைய மனதைத் திருப்பினார் என்றும், இராயனுக்கு ஜனங்கள் வரி செலுத்தக்கூடாது என்று ஜனங்களிடத்தில் இயேசு கூறினார் என்றும், இயேசு தம்மை யூதருடைய இராஜாவாகிய மேசியா என்று உரிமைப்பாராட்டிக்கொள்கின்றார் என்றும் இயேசுவைக் குற்றம் சாட்ட ஆரம்பித்தார்கள்.

இக்குற்றச்சாட்டுகளானது, உரோம தேசாதிபதி கவனத்தில் எடுத்துக் கொள்ளுவதற்கான கட்டாயத்திற்குள்ளாக்கும் கடுமையான குற்றச்சாட்டுகளாகும்; மேலும் இவைகள், ஆலோசனை சங்கத்தார் முன்னிலையில் நடைப்பெற்றதான விசாரணையின்போது, இயேசுவுக்கு எதிராகக் கூறப்பட்டதான குற்றச்சாட்டுகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாய்க் காணப்படுகின்றது என்று நாம் கவனிக்கின்றோம். குற்றச்சாட்டுகள் போலியானதாக இருந்தபோதிலும், இயேசு தம்மைக் காத்துக் கொள்வதற்கென எதையும் கூறவில்லை. தாம் மரிப்பதற்கான வேளை வந்துள்ளதென இயேசு அறிந்திருந்தார். தமக்கான தெய்வீகத் திட்டத்தினுடைய ஒரு பாகமாய்க் காணப்படுவதாக அவரால், அறிந்துகொள்ளப்பட்டக் காரியங்களை அவர் புறம்பே தள்ளிவிட விரும்பவில்லை/முற்படவில்லை.

## இயேசு பிலாத்துவின் முன்னிலையில்

தோற்றத்தில் மிகவும் கனிவானவராகத் தோன்றும் இயேசுவானவர், உரோம சாம்ராஜ்யத்திற்குப் பாதகமாய் அமையும் புரட்சியினை எழுப்புவதற்கு வாய்ப்பில்லையெனப் பிலாத்துச் சிந்தித்தவராகவே, இயேசுவை ஏறெடுத்துப்பார்த்தார். பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர்களும் பொறாமையினாலேயே குற்றஞ்சாட்டினார்கள் என்று பிலாத்து உணர்ந்து கொண்டதாக, மற்றொரு பதிவு நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இந்த மதத் தலைவர்களுடைய போதனைகளைக் காட்டிலும், இயேசுவினுடைய போதனைகளானது ஜனங்களுடைய மனதை அதிகம் கவர்ந்துள்ளது எனவும், இயேசுவின் மரணத்திற்குப் பொறுப்பாளியாகுவதிலிருந்து தங்களைத் தவிர்த்துக்கொள்ள நாடினவர்களுக்காக, பிலாத்துவாகிய தான் கீழ்த்தரமானதும், அநீதியானதுமான காரியத்தைச் செய்து கொடுக்கும்படிக்கு தான் வேண்டிக்கொள்ளப்பட்டிருக்கின்றார் எனவும் பிலாத்துக் கொஞ்சம் உணர்ந்துகொண்டார்.

எனினும் பிலாத்து, நசரேயனுக்காக அனுதாபம் கொள்பவர்போன்று

தெரியப்படக்கூடாது. இராயனைப் பற்றியல்லாமல், வேறொரு இராஜா குறித்து முன்வைக்கப்பட்டதான குற்றச்சாட்டுகளைக் குறித்துப் பிலாத்து அக்கறையற்றவராகக் கையாளுவது போன்றும் தெரியப்படக்கூடாது. ஆகையால் அவர் இயேசுவை நோக்கி: "உமக்கு எதிராய்ச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை நீர் கேட்கவில்லையா? ஏன் நீர் உத்தரவு எதுவும் கொடுக்கவில்லை மற்றும் குற்றஞ்செய்துவிட்டேன் (அ) குற்றஞ்செய்யவில்லை என்று கூறி மன்றாடவில்லை?" என்றார். இயேசு எதுவும் பேசவில்லை.

பஸ்காவினுடைய துவக்க நாளாக இருந்தபடியினால், உரோம தேசாதிபதியின் இருப்பிடத்திற்குப் பிரவேசிப்பதிலிருந்து தவிர்த்துக்கொண்ட பரிசேயர்களினிடத்திற்கும், வேதபாரகர்களினிடத்திற்கும் பிலாத்து வெளியே வந்தார். பிரதான ஆசாரியர்களுடன் கலந்து ஆலோசித்துவிட்டு, அவர்கள் பேசினவைகளைக்கேட்டு வந்தவராக பிலாத்து, "நீர் யூதருடைய இராஜாவா? நீர் அதை ஒப்புக்கொள்கின்றீரா?" என்று கேள்வி கேட்டார். இயேசுவோ பிரதியுத்தரமாக, "என்னைக் கண்டதினாலும் மற்றும் என்னுடைய போதனைகள் குறித்து அறிந்திருந்ததினாலும் கேள்வி கேட்கின்றீரா அல்லது என்னுடைய சத்துருக்கள் உறுதியாய் முன்வைத்தவைகளின் அடிப்படையில் மாத்திரம் உம்முடைய கேள்வி காணப்படுகின்றதா?" என்று கேள்வி கேட்டார். இயேசுவினுடைய சொந்த தேசத்தினுடைய பிரதான மனிதர்களே அவரை ஒப்புக்கொடுத்துள்ளார்கள் என்றும், இத்தகைய எதிர்ப்பை அடையத்தக்கதாக அவர் செய்துள்ளது என்னவென்று, தான் இப்பொழுது அறிய விரும்புகின்றார் என்றும் பிலாத்துக் கேட்டார்.

தமது இராஜ்யமானது இவ்வுலகத்திற்குரியதல்ல, அதாவது இந்தத் தற்கால யுகத்திற்குரியதாகவும் (அ) தற்கால ஒழுங்கிற்குரியதாகவும் இல்லை என்று இயேசு பதிலளித்தார். ஆகையால் தாம், சீசருடைய இராஜ்யத்துடன் மோதலில் இல்லை/சண்டையிலில்லை என்ற விதத்தில் இயேசு பதிலளித்தார். இயேசுவும் சரி, அவரது நண்பர்களும் சரி, அரசியல் ஆட்சியை எதிர்த்துக் கலகம் எதுவும் செய்யவில்லை எனும் உண்மை பற்றிப் பிலாத்துக் கணிப்பதற்கு ஏதுவாயிற்று; ஏனெனில் ஒருவேளை இயேசுவினுடைய இராஜ்யமானது ஒரு பூமிக்குரிய ஆட்சியாக இருந்திருக்குமாயின், நிலவும் ஆட்சிக்கு எதிராக அவரும், அவரது நண்பர்களும் கலகமே செய்திருப்பார்கள். தமது இராஜ்யமானது, எதிர்க்காலத்திற்குரியது என்று இயேசு கூறினார். "அப்படியானால், நீர் உம்மை இராஜா என்றும், எப்போதோ மற்றும் எங்கோ நீர் ஆளுகை செயல்படுத்துவீர் என்றும் கூறுகின்றீரா?" என்று பிலாத்துக் கேட்டார். இயேசுவோ, தாம் ஓர் இராஜா என்றும், இதற்காகவே தாம் பிறந்திருக்கின்றார் என்றும், இதற்காகவே தாம் உலகத்திற்கு வந்தார் என்றும் பதிலளித்தார். தாம் சத்தியத்திற்குச் சாட்சிபகர வேண்டுமென்றும், சத்தியவான்கள் அனைவரும், மற்றும் இப்படியானவர்கள் மாத்திரமே, தம்முடைய சாட்சியை உணர்ந்துகொள்ள முடிகின்றவர்களாய் இருப்பார்கள் என்றும் கூறினார்.

"ஆ!" "அனைவருக்கும் இதுதானே கேள்வியாய்க் காணப்படுகின்றது; 'எது சத்தியம்' என்பதுதான் அனைவருக்கும் கேள்வியாய் உள்ளது. யாருக்குமே அது

தெரிவதில்லை'' என்றார் பிலாத்து. பின்னர் அவர் யூதர்களினிடத்திற்குப்போய், "இவரில் நான் எந்தக் குற்றத்தையும் கண்டுபிடிக்கவில்லை. இவர் சீசருக்கோ அல்லது அவருடைய சட்டங்களுக்கோ எதிரான குற்றவாளியாக எவ்விதத்திலும் இல்லை. இவருடைய சுதந்திரத்தையோ அல்லது இவரது உரிமையையோ நீதியாய்த் தடைப்பண்ணிப்போடும்படிக்கு நான் முடிவெடுக்கத்தக்கதாக, இவர் எதையும் செய்யவில்லை'' என்று பிலாத்துக் கூறினார்.

பிரதான ஆசாரியர்களும், வேதசாஸ்திரிகளும் அபாயத்தை உணர்ந்தார்கள். இயேசுவைச் சிலுவையில் அறைந்துப்போடலாம் என்று அவர்கள் நம்பிக்கையாய்க் காணப்பட்ட தருணத்தில், இயேசு தங்களிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்கு வாய்ப்புள்ளதோ? பின்னர் அவர்கள் இயேசு கலிலேயா நாடு தொடங்கி அனைத்து இடங்களிலும் உபதேசம் பண்ணி ஜனங்களைக் கலகப்படுத்துகின்றார் என்று தீவிரமாய்/சீற்றத்துடன் குற்றஞ்சாட்டினார்கள். கலிலேயா என்ற வார்த்தையைப் பிலாத்துக் கேட்டபோது, "இவர் கலிலேயரா?'' என்று விசாரித்தார். இயேசு கலிலேயன் என்று பதிலளிக்கப்பட்டபோது, "அப்படியானால் இந்தப் பிரச்சனைமிக்க வழக்கை நான், கலிலேயாவின் இராஜாவாகிய ஏரோதினிடத்திற்கு மாற்றிவிடுகிறேன்'' என்று பிலாத்துக் கூறினார்; ஏரோதுக்கும் எருசலேமில் அப்போது அரண்மனை இருந்தது.

இயேசுவைக்குறித்து அறிந்துகொள்வதற்கு ஆர்வத்துடன் காணப்பட்டதான ஏரோதினிடத்திற்கு இயேசு அனுப்பி வைக்கப்பட்டார். ஏரோது, இயேசுவைக்குறித்து அநேக விஷயங்களைக் கேள்விப்பட்டவராகவும், இயேசு ஏதாகிலும் அற்புதம் செய்வதைப்பார்ப்பதற்கு விரும்பினவராகவும் காணப்பட்டார். ஏரோது, நமது கர்த்தரிடம் கேள்விகள் கேட்டார். ஆனால் இயேசு எந்தப் பதிலும் கொடுக்கவில்லை. பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர்களும் இயேசுவைக்குறித்து, இராஜாவினிடத்தில் (ஏரோதினிடத்தில்) கடுமையாய்க் குற்றம் சாட்டினார்கள். ஏரோதும், அவரது போர்ச்சேவகர்களும் அவரைப் பரியாசம் பண்ணினார்கள் மற்றும் மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி, பரியாசம் பண்ணப்பட்ட இராஜாவைப் போல் அவரைப் பிலாத்துவினிடத்திற்கு ஏரோது திரும்ப அனுப்பிவைத்தார். பிலாத்துவின் சார்பில் ஏரோதிற்கு மதிப்புக்கொடுக்கப்பட்டதான இச்செய்கையும் மற்றும் ஏரோதும் மரியாதையைத் திரும்பக்காட்டின செய்கையும், இவர்கள் இருவருக்கும் இடையில், சில காலமாய் நிலவிவந்ததான பகைமையைத் தகர்த்து, இவர்களை இணைத்தது.

## பிலாத்துவும் சரி, ஏரோதும் சரி, அவரைக் குற்றவாளியெனத் தீர்க்கவில்லை

இயேசுவைக் குற்றஞ்சாட்டினவர்களை நோக்கி பிலாத்து மறுபடியுமாக, "ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது, இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை. உங்களை

ஏரோதினிடத்திற்கும் அனுப்பினேன்; அவரும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை; மரணத்துக்கேதுவாக இவன் ஒன்றும் செய்ய வில்லையே. ஆனபடியால் இவனைத் தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான்" (லூக்கா 23:14-17). இயேசுவை இந்தளவுக்குப் பாடுபட அனுமதிக்கும்போது, யூதர்கள் அமைதியடைவார்கள் என்ற எண்ணத்திலும் மற்றும் இயேசுவினுடைய ஜீவனைக் காப்பாற்றுவதற்கான எண்ணத்திலுந்தான் இந்தத் தண்டனை கொடுக்கப்பட்டது என்பது உறுதியே.

வருஷத்தினுடைய அந்த ஒரு காலக்கட்டத்தில், பஸ்காவை முன்னிட்டுப் பிலாத்து, பலமுறை கைதிகளை விடுதலைப் பண்ணியுள்ளார். இம்முறையும் பிலாத்துக் கைதிகளில் எவரையேனும் விடுதலைப் பண்ணுவாரா அல்லது இல்லையா என்று அவ்வேளையில் ஜனக்கூட்டமானது, பிலாத்துவுக்குச் சந்தோஷஆரவாரமிட்டு, கேட்டுக்கொண்டனர். இது இயேசுவைத் தள்ளிவிடுவதற்கும், அவரைப் பிரதான ஆசாரியர்கள் மற்றும் ஜனங்களுடைய தலைவர்களின் கரங்களினின்று விடுவிப்பதற்கும் ஏற்ற வாய்ப்பு எனப் பிலாத்து எண்ணினவராக, ஜனங்களை நோக்கி: "சிறையில் காணப்படுகின்றதான யூதர்களுடைய இராஜாவென்று உரிமைப் பாராட்டிக் கொண்டவரை, நான் உங்களுக்கு விடுதலைப்பண்ணட்டுமா?" என்று கேட்டார். ஜனக்கூட்டத்தாரோ தங்களது மதத் தலைவர்களை நோக்கிப்பார்த்தார்கள் மற்றும் கொள்ளையனாகிய பரபாசை விடுதலைப் பண்ணுவதற்குத் தேசாதிபதியை வற்புறுத்திடத் தூண்டி விடப்பட்டார்கள். ஜனக்கூட்டத்தாரை நோக்கி பிலாத்து: "அப்படியானால், மேசியா என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார். தங்கள் மதத்தலைவர்களால் ஏவப்பட்டதான ஜனக்கூட்டத்தாரோ: "அவரைச் சிலுவையில் அறைய வேண்டும்!" என்று சத்தமிட்டார்கள். பிலாத்துவோ பிரதியுத்திரமாக: "ஏன் இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்? மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் காணவில்லையே; ஆகையால் நான் இவனைத் தண்டித்து, விடுதலையாக்குவேன்" என்றார் (லூக்கா23:22). பரியாசம் பண்ணப்படவும், வாரினால் அடிப்பிக்கப்படவும் மாத்திரம் இயேசு கையளிக்கப்பட்டார். காத்துக்கொண்டிருந்த யூதர்களை நோக்கி பிலாத்து: "அவரிடத்தில் நான் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு அவரை வாரினால் அடிப்பித்து, இன்னும் கொஞ்சம் நேரத்திற்குள்ளாக அவரை நான் உங்களிடத்தில் வெளியே கொண்டுவருவேன்" என்றார்.

## இயேசுவை விடுவிப்பதற்கான பிலாத்துவினுடைய பிரயாசங்கள்

இயேசு முள்முடியும், சிவப்பான அங்கியும் தரிப்பிக்கப்பட்டவராக வெளியே வந்தார். பிலாத்து அவர்களை நோக்கி: "எகி ஹோமோ!" (Ecce homo!) - அதாவது இதோ, இந்த மனுஷன்! என்றார். யாரை நான் கொன்றுபோடுவதற்கென, நீங்கள் முயன்றுகொண்டிருக்கின்றீர்களோ, அம்மனுஷனைப் பாருங்கள். இதோ பாருங்கள், உங்கள் இனத்திலேயே (அ) மனுக்குலத்திலேயே இம்மனுஷன் மிகச் சிறந்த

மனுஷனாகக் காணப்படுகின்றார். இவரது துக்கத்தையும், அவமானத்தையும் பாருங்கள். இவரது குணத்தினுடைய அருமையான மேன்மையை இதோ பாருங்கள். இவருக்கு எதிராக உங்களுக்கு, என்ன கோபம் இருப்பினும், இவருடைய அவமானங்களை நீங்கள் காண்கையில், இப்பொழுது நீங்கள் சாந்தமாகுவீர்கள்" என்றார். ஆனால் அவர்களோ, "இவரைச் சிலுவையில் அறையும், இவரைச் சிலுவையில் அறையும்!" என்று சத்தமிட்டார்கள். பிலாத்துவோ பிரதியுத்தரமாக: "இதுவே உங்கள் விருப்பமானால், நீங்கள் அவரைச் சிலுவையில் அறையலாம்; ஆனால் நான் அவரில் எந்தக் குற்றத்தையும் காணவில்லை - நான் அவரில் எந்தத் தவற்றையும் காணவில்லை" என்றார். அப்போது யூதர்கள் தங்களது எதிர்ப்பிற்கான உண்மையான காரணத்திற்கு வந்தார்கள், காரியங்களினுடைய உண்மை விஷயத்திற்கு வந்தார்கள்; அதாவது இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறிக்கொண்டார் எனவும், அதைத் தாங்கள் தேவதூஷணமாகக் கருதிக்கொண்டார்கள் எனவும் தெரிவித்தார்கள். பிலாத்து இதைக் கேட்டபோதோ, மிகவும் பயம் அடைந்தவராக, இயேசுவை நோக்கி: "நீர் எங்கேயிருந்து வந்தவர்?" என்று கேட்டார் மற்றும் இயேசுவிடமிருந்து எந்த மாறுத்தரமும் அவருக்கு வரவில்லை. அப்போது பிலாத்து அவரிடம்: "நீர் என்னோடே பேசுகிறதில்லையா? உம்மைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உம்மை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உமக்குத் தெரியாதா? என்றார். இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்" (யோவான் 19:10, 11). பின்னர்ப் பிலாத்து மறுபடியுமாக இயேசுவை விடுதலைப் பண்ணிடுவதற்கு எண்ணினார்; எனினும் இப்படிச் செய்வது என்பது, அமைதியும், சமாதானமும் தக்கவைப்பதற்கும், தான் பொறுப்பேற்றுள்ள பட்டணத்தில் அமளியைத் தூண்டிவிடுவதற்கு ஏதுவாய் இருக்கும் என்று எண்ணினார். யூதர்களோ: "இவரை விடுதலைப்பண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல; தன்னை இராஜா என்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி" என்று சத்தமிட்டார்கள். இது பிலாத்துவைத் தர்மச்சங்கடமான நிலைக்குள்ளாக்கியது. இயேசுவை விடுதலைப்பண்ணுவது என்பது, பிலாத்துவை இராயனுடைய எதிரிக்கு ஆதரவளிக்கின்றவராக்கும்; இன்னுமாக (விடுதலைப்பண்ணும் பட்சத்தில்) பிலாத்து விநோதமாய்த் தோன்றுவார், ஏனெனில் இயேசு அவருடைய சொந்த நாட்டாரினாலேயே குற்றஞ்சாட்டப்பட்டவராகவும், தமக்கு ஆதரவாகப் பிலாத்துவைத் தவிர வேறு எவரையும் உண்மையில் பெற்றிராதவராகவும் காணப்பட்டார்.

இயேசுவுக்கு எதிராக எதுவும் செய்ய வேண்டாம் என்று வலியுறுத்தும் விதமாகவும், இது விஷயம் தனக்கு விசேஷமான சொப்பனம் வந்ததை அறிவிக்கும் விதமாகவும், தன்னுடைய மனைவியிடத்திலிருந்து, பிலாத்துவுக்கு வந்ததான செய்தியின் நிமித்தமாகவும் பிலாத்துத் திகைப்பிற்குள்ளானார். மீண்டுமாக யூதர்களுடைய அதிகாரிகளிடமிருந்து இல்லாமல், மாறாக ஜனங்களின் உதவியைப் பிலாத்து நாடினார். உயர்நிலையில் உள்ளவரான இயேசுவை அவர்கள் முன்பாக

நிறுத்தி, பிலாத்து: "இதோ உங்கள் இராஜா!" என்று சத்தமிட்டுக் கூறினார். ஆனால் இது ஜனக்கூட்டத்தாரை ஆத்திரமூட்ட மாத்திரமே செய்தது, மற்றும் அவர்களோ: "இவரை அகற்றும், சிலுவையில் அறையும்! இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே இராஜா இல்லை" என்று தீவிரமாய்/சீற்றத்துடன் சத்தமிட்டார்கள்.

நம்பிக்கை இழந்தவராக, ஜனங்கள் முன்னிலையில், தனது கைகளில் தண்ணீர் ஊற்றி, கழுவிக்கொண்டு பிலாத்து, "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" என்றார். ஜனங்களோ, "இவர் இரத்தப்பழி எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக!" என்று சத்தமிட்டார்கள்.

அப்படியாகவே நடந்ததல்லவா! 18 நூற்றாண்டுகளுக்கு மேலாக யூதர்கள், தேவனுக்கு அந்நியர்களாக்கப்பட்டும், தீர்க்கத்தரிசிகள் இல்லாமலும், ஆசாரியர்கள் இல்லாமலும், பாவநிவாரண பலிகள் இல்லாமலும், பாவ நிவாரண நாட்கள் இல்லாமலும் பாடுபட்டிருக்கின்றனர் (ஓசியா 3:4, 5). "ஆ! அவர்களது அக்கிரமமானது மன்னிக்கப்படுகிறதற்கும், கர்த்தர் இஸ்ரயேல் மேல் விண்ணப்பத்தின் மற்றும் கிருபையின் ஆவியை ஊற்றிடுவதற்கும், அவர்களது புரிந்து கொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டு, அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பதற்கும் மற்றும் அவர்கள் அனைவரும் அவரைத் துதிப்பதற்குமான வேளை நெருங்கிக் கொண்டிருக்கின்றது" (சகரியா 12:10).

உரோம சாம்ராஜ்யத்தினுடைய நலனுக்கடுத்த விஷயங்களுக்கு எதிராய் இராததாய்க் காணப்படும் ஜனங்களுடைய விண்ணப்பங்களுக்குச் சம்மதிப்பதற்குப் பிலாத்துக் கட்டுப்பட்டவராய் இருந்தபடியால், அவர் விண்ணப்பத்திற்கு இணங்கி, இயேசுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து, கள்வனாகிய பரபாசை அவர்களுக்கு விடுதலைப்பண்ணினார்.

## அதே ஆவி இன்னமும் மேலோங்கிக் காணப்படுகின்றது

கடந்த 18 நூற்றாண்டுகளில் மனித சுபாவமானது மாற்றம் அடைந்துள்ளதென நாம் எண்ணிட வேண்டாம். சூழ்நிலைகள் இன்றும் அதைப்போலவே காணப்படுகின்றது என நாம் நம்பலாம்; இன்றும்கூட இயேசுவினுடைய (அ) அவரது சீஷர்களுடைய மரணத்தை, எந்த ஒரு தேசத்தினுடைய அரசியல் வட்டாரங்களானது விரும்பி, இவர்களது மரணமானது, சமாதானத்திற்கு ஏற்றதாக இருக்குமெனக் கருதுமானால் மற்றும் விசேஷமாக அந்த ஒரு தேசத்தின் மத அதிகாரிகளும், போதகர்களும் ஜனங்களை எளிதில் நம்பவைக்கும் தன்மையைத் தக்கவைத்துக் கொள்வதற்குக்

குற்றமற்றவர்கள் பலியாகுவது அவசியமெனக் கேட்டுக்கொள்ளும் பட்சத்தில், இயேசுவோ (அ) அவரது சீஷர்களோ எந்தவொரு தேசத்திலுங்கூட மரணத்தண் டனைக்குள்ளாக்கப்படுவார்கள்.

எதிர்க்காலத்தில் இம்மாதிரியான அனுபவங்களானது, தேவனுடைய பரிசுத்தவான்களில் சிலருக்குக் கடந்துவருமானால், நாம் ஆச்சரியமடையாமல் இருப்போமாக. மதத்திற்கு நலமானவைகள் என்று சொல்லப்படுகின்றதான இந்த நலன்களுக்காக மத அதிகாரிகளினால் குரல் எழுப்பப்படும்போது, அரசியல் அதிகாரிகளினுடைய வல்லமையைக்கொண்டு, நீதியானது புரட்டிப்போடப்பட்டு, யுகம் முழுவதிலும் குற்றமற்றவர்கள் மரணத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று வரலாற்றின் பக்கங்களானது காண்பிக்கின்றது. அனைத்துக் காலக்கட்டங்களிலுமுள்ள தேவனுடைய ஜனங்கள் நடந்துகொள்ள வேண்டிய விதமானது, ஆண்டவரினால் முன்வைக்கப்பட்டுள்ளது; அதென்னவெனில், தேவனுடைய சித்தத்தை எதிர்ப்பின்றி முழுமையாய் ஏற்றுக்கொள்ளுதலாகும் மற்றும் அவரது நோக்கம்/காரணங்களுடைய நலனுக்கடுத்த விஷயங்களில் தேவனுடைய மேற்பார்வை உள்ளது என்று முழுமையாய் உணர்ந்து கொள்ளுவதாகும் மற்றும் விளைவுகளானது மிகவும் அதிகமான நித்திய கனமகிமையாய் இருக்கும் என்று முழுமையாய் நம்பிக்கைக்கொண்டிருத்தலாகும்.

"உலகம் அனைத்துமே எந்தன் முடிவை ஏளனம் பண்ணினாலும்,
இயேசுவே என் பங்காய்க் காணப்படுவாரே;
அனைவரிலும் அழகானவராகிய அவரைத் தவிர,
வேறு எவரிலும் நான் திருப்தியடைகிறதில்லையே.
உம் பாடுகளை, உம்மோடுகூட நான் ஏற்றுக்கொள்கின்றேனே,
உம் தரித்திரத்தையும், அவமானமான சிலுவையையும்,
உம்மோடுகூட நான் ஏற்றுக்கொள்கின்றேனே.
உலகத்தின் இன்பங்களினின்று விலகி ஓடுகின்றேனே.
உலகத்தின் பொக்கிஷங்களைக் களிம்பைப்போல் கருதிடுவேன் நானே.

## அங்கு நீ இருந்தாயா?

எந்தன் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைந்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?
எந்தன் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைந்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?
ஓ! இது சிலசமயம் என்னை நடுங்க வைக்கின்றதே, ஆம்! நடுங்க வைக்கின்றதே!
எந்தன் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைந்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?

அவரை அவர்கள் ஆணியினால் அறைந்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?
அவரை அவர்கள் ஆணியினால் அறைந்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?
ஓ! இது சிலசமயம் என்னை நடுங்க வைக்கின்றதே, ஆம்! நடுங்க வைக்கின்றதே!
அவரை அவர்கள் ஆணியினால் அறைந்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?

அவர்கள் அவரது விலாவில் அவரைக் குத்தினபோது, அங்கு நீ இருந்தாயா?
அவர்கள் அவரது விலாவில் அவரைக் குத்தினபோது, அங்கு நீ இருந்தாயா?
ஓ! இது சிலசமயம் என்னை நடுங்க வைக்கின்றதே, ஆம்! நடுங்க வைக்கின்றதே!
அவர்கள் அவரது விலாவில் அவரைக் குத்தினபோது, அங்கு நீ இருந்தாயா?

சூரியன் பிரகாசிக்க மறுத்தபோது, அங்கு நீ இருந்தாயா?
சூரியன் பிரகாசிக்க மறுத்தபோது, அங்கு நீ இருந்தாயா?
ஓ! இது சிலசமயம் என்னை நடுங்க வைக்கின்றதே, ஆம்! நடுங்க வைக்கின்றதே!
சூரியன் பிரகாசிக்க மறுத்தபோது, அங்கு நீ இருந்தாயா?

அவர்கள் அவரைக் கல்லறையில் வைத்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?
அவர்கள் அவரைக் கல்லறையில் வைத்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?
ஓ! இது சிலசமயம் என்னை நடுங்க வைக்கின்றதே, ஆம்! நடுங்க வைக்கின்றதே!
அவர்கள் அவரைக் கல்லறையில் வைத்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?

அவர் கல்லறையினின்று எழுந்தபோது, அங்கு நீ இருந்தாயா?
அவர் கல்லறையினின்று எழுந்தபோது, அங்கு நீ இருந்தாயா?
ஓ! இது சிலசமயம் என்னை நடுங்க வைக்கின்றதே, ஆம்! நடுங்க வைக்கின்றதே!
அவர் கல்லறையினின்று எழுந்தபோது, அங்கு நீ இருந்தாயா?

-கேம்பர்ஸ் துதிப்பாடல்கள், # 8

## பதிலாக

முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும்,
காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்;
வெற்றிகரமாக தேவன் சிருஷ்டிப்பை அதன் முந்தைய
தூய்மையான அழகுக்கு மீண்டும் கொண்டு வருவார்.
வனாந்தர நீரோடைகள் வறண்ட இடங்களைக் குணமாக்கும் -
வனாந்தரத்திலுள்ள ரோஜாவின் வாசனை கமழும்;
யேகோவாவிற்குத் துதியாக மலைகளும், குன்றுகளும் துதித்திடுமே.
இருண்ட நாட்களுக்குப் பின் சூரியன் ஒளிரும்.
துக்கம் மற்றும் துயரம் ஒழிந்துபோம்.
அடையாளமும், நிழலும் சுவிசேஷத்தின் ஆனந்த கதையும்
தொய்வுற்றவனிடம் கூறுகிறது: "உங்கள் தலையை உயர்த்துங்கள்;
விரைவில் இந்தத் துன்பமிக்க உலகம் தேவனின் மகிமையால் நிறையும்.
ஆசீர்வாதம் வழங்குவார் அவர் சாபத்திற்குப் பதிலாகவே."

இதோ பலிபீடத்தின் மீது ஈசாக் பலி ஆடாக,
முற்பிதா ஆபிரகாமின் உயர்த்தப்பட்ட கையில் கத்தி,
வாக்குத்தத்த உடன்படிக்கையின் குமாரனைப் பலியாக்கப்போகின்றார்
யேகோவாவின் கட்டளைக்கிணங்கவே.
பரலோகத்தின் தூதன் தோன்றியே வார்த்தைக் கூறிடவே,
பிள்ளையாண்டான் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததுபோல் பிழைத்தான்.
கர்த்தர் தமக்கென்று செலுத்தப்படத்தக்கதாக – ஒரு பலியைக் கொடுக்கவே,
புதரிலே இருந்த ஆட்டுக்கடா தகனபலியிடப்பட்டதே ஈசாக்கிற்குப் பதிலாகவே.

தோட்டத்தில் மற்றனைவரும் உறங்குகையில், தனியாக
நமது பாவமற்ற இரட்சகர் முழங்காலிட்டு, பிராத்திக்கிறார்;
பிதாவின் இருதயத்தை நோக்கிய, அவரது ஊக்கமான பிராத்தனை, அவரது
இரத்தவியர்வை, அவரது அழுகை, அவருடைய வேதனை வெளிப்பட்டதே.
அந்தப் பாத்திரம் கசப்பாயிருந்தபோதிலும், அவர் தலையின்மேல் சுமத்தப்பட்டப்
பாரமானது பளுவாயிருந்தபோதிலும், நாம் இரட்சிப்பின் பாத்திரத்தை அடையத்தக்கதாக,
சபிக்கப்படுவதற்கும், கைவிடப்படுவதற்கும் சிலுவையை நோக்கிச் செல்கிறார் நமக்குப் பதிலாக.

தற்போது அவரின் முடிவில்லா புண்ணியத்தின்அடிப்படையில் இரட்சிக்கப்பட்டு
அவரின் மக்கள் ஆத்மா சுத்திகரிப்பின் இரத்தத்தில் களிப்படைகிறார்களே.
அவரது ஆவியின் வலிமையால் மறுரூபமாக்கப்பட்டு - நாள்தோறும்
தேவனுக்குப் பிரியமான கனியை அவர்கள் கொடுக்கின்றனரே.
எல்லா கனமும், மகிமையும், மாட்சிமையும் அவர்களை
மீட்ட தங்களது மகிமையான தலைக்கே கொடுக்கின்றனரே.
அவர்கள் தங்கள் மகிழ்ச்சியாக எப்பொழுதும் எண்ணுவதெல்லாம் -

இயேசுவுக்கென வாழ்வதையே, சுயத்திற்குப் பதிலாக.

சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்து ஏங்குகின்றதான
அந்த ஆனந்தமான நாள் நெருங்குகின்றதே – விசவாசியே களிப்படைவாயாக.
கிறிஸ்து, நமது இரட்சகர், மகிமையில் வரும்போது,
தமக்கான வல்லமை மற்றும் ஆட்சியைத் தமக்கென உரிமையாக்குவாரே.
பூமியின் கடைக்கோடிக்குத் தீய துன்மார்க்கனான
சாத்தான் அகற்றப்படும்போது, கிறிஸ்துவின் இராஜ்யம் பரவுமே,
சமாதானமும், செழிப்பும் இம்மானுயேல் இயேசுவே
ஆளுகிறார் என்று இனிமையாகக் கூறிடுமே சாத்தனுக்குப் பதிலாக.

-Poems of the Way: p 15

## கடைசி இராப்போஜனம் [லூக்கா 22:1-23]

பகலின் உஷ்ணமும் தணிந்தது, நேரமாகிக்கொண்டிருந்தது,
சூரியனும் மறைந்து இருள் சூழும் முன்னே,
களைப்புற்ற யாத்திரிகர்கள் அநேகர்
நகர வாயிலின் வழியே, விரைந்தனரே அலங்கத்தினுள்ளே
இளைப்பாற இடம் தேடி வாஞ்சித்தே.

நகரத்திலே ஓங்கி நின்றதான ஆலயத்தைக் காண்கையிலே,
ஓ! களைப்புற்ற கண்களுக்கு எத்துணை களிப்பு வந்ததே!
ஓ! ஆவிக்கு எத்துணை ஆனந்தம் வந்ததே!

ஒவ்வொரு யூத வீட்டிலும் அப்புனித விருந்து ஆயத்தம்பண்ணப்பட்டிருந்ததே.
பஸ்காவின் பௌர்ணமி நிலவு தோன்றியே தன் வெள்ளிச் சுடர்களை வீசினாளே -
மகிழ்ந்திருக்கும் எருசலேம் மீதும், அதன் பேரழகுள்ள ஆலயத்தின் மீதும் வீசினாளே.
யேகோவாவின் பிரசன்னம், அவர்களைச் சூழ்ந்தே, எல்லா இடத்திலும் காணப்பட்டதே.

அதோ அவர்களின் மத்தியிலே நமது அருமை ஆண்டவரும் இருந்தாரே; அவரை
அறியாமலேயே அநேகர் இருந்தனரே. அவரோ ஆயத்தமாக்கப்பட்ட மேல்வீட்டறையிலே,
கவனிக்கப்படாதவராய், மறக்கப்பட்டவராய் இருந்தாரே. தமக்கன்பான சீஷர்களோடே
விருந்தை அநுசரித்தார். சர்வத்திற்கும் ஆண்டவர், மகா எருசலேமிலே காணப்பட்டாரே.

சற்றே வாருங்கள், நாம் நகரத்திற்கு வெளிப்புறம் செல்வோம்
அதன் ஆழ்ந்த மங்கிய நிழல்களுக்குள், இயேசுவோடு சிறிது
இளைப்பாறி, அவரோடுகூட விருந்தை அநுசரிப்போம்.

இதோ கலைஞன் காட்சி திரையை உயர்த்துகிறான்;
இப்போது நாம் நமது எஜமானனோடு . . . . . . . . . . . .
அவரது இராஜ கண்களிலே கவலையைப் காண்கிறோமே.
அவரது அன்பானவர்களால் சூழப்பட்ட அவ்வமைதியான இடத்திலே . . .
ஆச்சரியமும், பயமும், கவலையும் காணப்படுகிறதே அனைவர் முகங்களிலும்.

மாலை விளக்கு ஏற்றப்பட்டு கூரையிலே தொங்கவிடப்பட்டது.
அதன் மென்மையான இதமான சுடரொளி வீசிடவே
அதன் ஏழு மடங்கான சுடர்கள் குருவின் தலையைச் சுற்றி
ஓர் அழகான வெள்ளொளி வட்டமிட்டதே.
திறந்த கதவுகளுக்கு அப்பால், மறையும் சூரியனின் கடைசி கதிர்கள்
விசுவாசமுள்ள மரியாளின், வியப்பின் பார்வையை வெளிப்படுத்துகின்றதே.

போஜனம் பரிமாறப்படவே, அவர்கள் கேட்டனரே, குரு வேதனையோடு கூறினதையே:
"உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று கூறியே
அந்த துக்கம் நிறைந்த கண்கள் சுற்றி அனைவரையுமே பார்த்ததே.
"உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்றார். அவர்களும், யூதாசும்
நானோ? நானோ? என்று கேட்கிறது, நம் காதுகளிலும் விழுகின்றதே.

"உங்களில் பெரியவன், சிறியவனாயிருக்கக்கடவன்" என்ற பாடத்தை
தாங்கள் கற்றிருக்கின்றார்களல்லவா? யாரோடு விருந்தை அநுசரித்தார்களோ
அந்தப் பிரியமானவரால் தாங்கள் சுத்தப்படுத்தப்பட்டிருக்கின்றார்களல்லவா?
ஆறுதலின் வார்த்தைகளையெல்லாம் தங்களுக்குகே கூறியிருக்கிறாரல்லவா?
ஆனால், "ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று துக்கத்தோடே கூறுகிறாரே.

தண்ணீரும், குடமும், துண்டும் அங்கே இருந்தது - ஒருவர் பாரங்களை ஒருவர்
சுமக்குமாறு அந்தச் சோகக் குரல் முன்பு கூறியிருக்கிறதல்லவா?
அலமாரியில் மன்னா பாத்திரம் அங்கு இருப்பது நம் கண்களுக்குப்பட்டதே,
அன்பான பக்தியுள்ள ஒவ்வொரு யூதனுக்கும் அந்த மன்னா பாத்திரம்,
அவர்கள் பிதாக்கள் கடந்துவந்த வனாந்தரப் பிரயாணத்தை நினைவுப்படுத்துகையில்,
அது உனக்கும் எனக்குமான ஒரு செய்தியை ஒலிக்கின்றதே: "ஜீவ அப்பம்" நமக்காகப்
பிட்கப்பட்டிருக்கிறதே பூமிக்குரிய எல்லாப் பிரச்சனைகளிலிருந்து நம்மைக் காக்கவே.
மேசையில் புளிப்பில்லா அப்பமும், பாத்திரமும் நாம் பார்க்கையிலே - ஞாபகம் வருதே
"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்ற அன்பின் வார்த்தைகள்.

தூணிலிருந்த விளக்கு வேகமாய் அணைவதைக் கண்டபோது, அதைப்போலவே
இரட்சகரின் வாழ்வும் வெகுவிரைவில் முடியப்போவதை நாமும் புரிந்தோமே.
அவர்கள் இனி ஒருபோதும் அவரோடு கூடிக்கொள்ளப்போவதில்லை, மேல் வீட்டறையில்.


ஒதுக்கிவைக்கப்பட்ட குருத்தோலைகள், வெற்றியின் அன்பளிப்புகளாயிருந்ததே,
கல்வாரியை அல்ல, மகிழ்ச்சியான ஒலிவத்தைக் குறிக்கின்றதாய் இருந்ததே.
விரைவில் அந்த மகிழ்ச்சியான ஓசன்னாக்கள் மறக்கப்பட்டுப்போகுமே,
அவரை சிலுவையில் அறையும்! அவரை சிலுவையில் அறையும்! என்றே மாறிடுமே.

மிகவும் பாடுகளும், வேதனையும் நிறைந்த அந்தப் பயங்கரமான கதையை அறிவோமே.
ஓ! இவ்வுலகை சற்றே புறந்தள்ளி, அவரின் பாடுகளை மீண்டும் எண்ணிப்பார்ப்போமே.
நாளை சூரியன் அஸ்தமிக்கையில் நாம் அறிவோமே:-
அவரது அந்த இனிமையான குரல் அமைதியாகிடும் என்று;
நாளை கடன் வாங்கிய கல்லறையிலேயே அவர் கிடத்தப்பட்டிருப்பார் என்று;
நகரத்தை ஒளிரச்செய்யும் சந்திரன், அவமானமான சிலுவை மீது சுடரை வீசிடும் என்று;
அவரை நேசிப்பவர்கள் அவர் நாமத்தை அறிவோம் என்று கூறிட பயமுறுவார்கள் என்று;
சூரியன் அதன் வெளிச்சத்தை நிறுத்த, இருள் அனைத்தையும் மூடிடும் என்று;
துயர் நிறைந்தக் குரல் உரத்தக்குரலாய்: "ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கூறுவதை,
பரியாசக் கூட்டத்தார் கேட்பார்கள் என்று;
அந்த அன்பின் குரல் உடையும் இருண்ட கல்வாரியில் என்று - ஆம் நாம் அறிவோமே.

நம் இரட்சகரின் பாடுகளின் காட்சியை, நாம் ஒருபோதும் மறக்கமாட்டோமே.
நாம் மீண்டும் மீண்டுமாக அக்காரியங்களைச் சிந்திப்போமே;
அந்தக் கலைஞன் எனக்கும் உனக்கும் கற்பித்த ஆழ்ந்த அப்பாடத்தை,
நாம் மீண்டும் மீண்டுமாக சிந்திப்போமே.
துயர் உற்றிருந்த அக்கூட்டத்தை நோக்கி கர்த்தர் பேசிய அதே வார்த்தைகள்
நம்மையும் சூழ்ந்து வருகிறதே, கவனமாயும் எச்சரிப்போடும் இருப்பவர்களுக்கு;
அந்த மென்மையான எச்சரிப்போ உலக பாவத்திலிருந்து நம்மை உயர்த்திவிடுகின்றதே.

நீயும் நானும் அவரைச் சூழ்ந்து அந்த ஸ்தலத்திலே
அவரை நித்திய காலமாக புகழத்தக்கதாகவும்;
அவர் முன் சென்று ஆயத்தமாக்கின அழகான ஸ்தலத்திலே,
இந்த உலகத்தை விட்டுவிட்டு, என்றென்றும் ஆசீர்வாதம் பெறுவதற்காகவுமே
ஓ! அவரது நடத்துதலை மாத்திரம் கேட்போமாக!

- Comforted of God, p. 25



### நினைவுகூருதலின் தியானங்கள்

# சிலுவை மரணம்



# கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்

## மாற்கு 15:22-37;
## மத்தேயு 27:31-66; லூக்கா 23:26-56; யோவான் 19:16-42.

***"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார்." ரோமர் 5:8***

மாற்கு 15:22-ஆம் வசனம். சிலுவையில் அறையப்படுவதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டவுடன், சைத்தான்தனமான வைராக்கியத்தினால் காணப்பட்டிருந்த ஜனக்கூட்டத்தார் உற்சாகமடைந்து, சிலுவையில் அறையப்படும் இடத்தினிடத்திற்குக் கைதியுடன் விரைந்து, வெள்ளிக்கிழமைக் காலை ஒன்பது மணியளவில் வந்து சேர்ந்தனர். எத்துணை பயங்கரமானதொரு இரவைக் கர்த்தர் கடந்து வந்துள்ளார்; கவலைக்கிடமான நிகழ்வுகள் அவருடைய சீஷர்களுடன் அவர் கடைசி இராப்போஜனத்தை அநுசரித்த போது ஆரம்பித்தது; பின்னர் கெத்செமனேயில், அவர் மனவேதனை அடைந்திட்டார்; பின்னர் அன்னாவிடம் அவர் வேகவேகமாய் அழைத்துக்கொண்டு போகப்பட்டார், பின்னர் காய்பாவினிடத்திற்கும், பிலாத்துவினிடத்திற்கும், ஏரோதினிடத்திற்கும், மீண்டும் பிலாத்துவினிடத்திற்கும் கொண்டுபோகப்பட்டார்; அவர் இரவு முழுவதும் மிகவும் அவமானமாய் நடத்தப்பட்டார், பரியாசம் பண்ணப்பட்டார், முகத்தில் துப்பப்பட்டார், குட்டப்பட்டார், தூஷிக்கப்பட்டார், ஏளனப்படுத்தப்பட்டார், தவறாய்க் குற்றஞ்சாட்டப்பட்டார், இறுதியில் கூர்மையான முட்களினால் முடிச் சூட்டப்பட்டு, வாரினால் அடிக்கப்பட்டார்.

இப்படியான அனுபவங்களுக்குப் பிற்பாடும், சிலுவையில் அறையப்படுவதற்கு அவருக்குள் இன்னமும் ஜீவன் இருந்தது ஆச்சரியமாய்த் தோன்றலாம். கடுமையானதாகவும், நீண்ட நேரமும் காணப்பட்ட, சரீரப்பிரகாரமான பாடுகளும், களைப்பும், அசதியும், அனைத்து உடல்சக்தியையும் செலவாக்கி முடித்திருக்குமே என்று நமக்குத் தோன்றலாம்; ஆனால், நமது கர்த்தர் தம்முடைய ஊழியத்தின் வேலைகளுக்காக தம்முடைய சரீரப் பலத்தைப் பெருமளவில் விரும்பி பலிச் செலுத்தியிருந்தாலுங்கூட, அவர் ஒரு பரிபூரண மனிதனாகக் காணப்பட்டப்படியினால், அவர் அசாதாரணமான சகிக்கும் திறனை/வல்லமையைக் கொண்டிருந்தார். சிலுவையில் அறையப்படுவதற்குரிய இடத்திற்கு, இயேசு தம்முடைய சிலுவையைச் சுமந்துச் செல்லும் விஷயத்தில், சிலுவையைச் சுமக்கும் காரியமானது இன்னொருவர்மேல் சுமத்தப்படுவதை வைத்துப்பார்க்கும்போது, இயேசு மிகவும் களைப்படைந்துள்ளார் என்பது தெரிகின்றது (லூக்கா 23:36).

மாற்கு 15:23-ஆம் வசனம். திராட்சரசமானது, வெள்ளைப்போளத்துடன் கலக்கப்பெற்று, வலி தெரியாமல் இருக்கத்தக்கதாக மயக்க மருந்தாகக் கொடுக்கப்பட்டது. உரோமர்களுடைய இந்தக் கொடூரமான முறையினால் தண்டனை தீர்ப்பை அடையும் குற்றவாளிகளுக்காக, இப்படிப்பட்டதான இரக்கத்தின் பணியானது, எருசலேமிலுள்ள சில ஸ்தீரிகளினால் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வழங்கப்பட்ட இரசத்தை ருசி பார்த்ததின் மூலமாக, இயேசு அவர்களது இரக்கத்தை அங்கீகரித்தார்; எனினும், இறுதி வரையிலும் தம்முடைய மனம் தெளிவுடனும், விழிப்புடனும் காணப்பட வேண்டுமென இயேசு விரும்பினபடியால், ருசிப்பார்ப்பதற்கு மேலாக, ரசத்தைப் பருகவில்லை. ஒருவேளை இயேசு அந்த ரசத்தைப்

பருகியிருந்திருப்பாரானால், இயேசு தமது தாயை யோவானின் பராமரிப்பில் விட்டபோது வெளிப்படுத்தின அன்பையும்/பரிவையும் மற்றும் நமக்கு மிகவும் அர்த்தமுள்ளவைகளாக இருக்கும் அந்தக் கடைசி வார்த்தைகளாகிய, "எல்லாம் முடிந்தது" என்பதையும் நம்மால் உணர முடியாமலும், கேட்க முடியாமலும் போயிருந்திருக்கும். இன்னுமாகப் பேதுருவை உடனடியாக மனம் வருந்துவதற்கு நேராக வழிநடத்தத்தக்கதாக, பேதுருவுக்குக் கர்த்தருடைய அன்பையும், பேதுருவிடத்தில் அவர் அடைந்திட்ட ஏமாற்றத்தையும், வெளிப்படுத்தின கர்த்தருடைய கவலை நிறைந்த பார்வையையும், பேதுரு இழந்திருக்கக்கூடும்; இன்னுமாக, இப்படிப்பட்டதான கொடூரமான மரணத்தினுடைய துயரங்கள் மத்தியிலும், கர்த்தருடைய எண்ணங்கள் மற்றவர்கள் மீது எவ்வளவாய்க் காணப்பட்டது என்பதை நம்மால் உணர முடியாமலும் போயிருந்திருக்கும்.

மாற்கு 15:25-28 வரையிலான வசனங்கள். சிலுவையில் அறையப்படுதலானது, காலையில் ஒன்பது மணியளவுக்கு நடந்தது; மற்றும் மரணம் மாலை மூன்று மணியளவுக்குச் சம்பவித்தது. "அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்" எனும் வாக்கியம் நிறைவேறத்தக்கதாக, அவர் இரண்டு கள்வர்களுக்கு இடையே சிலுவையில் அறையப்பட்டார் (ஏசாயா 53:12).

பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், "மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை" என்று பரியாசம் பண்ணின வார்த்தைகளின் விஷயத்தில், அவர்கள் உணர்ந்து பேசினவைகளுக்கும் மேலாக, ஆழமான அர்த்தம் காணப்படுகின்றது. அவரால் மற்றவர்களையும் இரட்சித்து, தம்மையும் இரட்சித்துக் கொள்ளமுடியாது, ஏனெனில் அவர் தம்மைப் பலியாகக் கொடுக்கும்போது மாத்திரமே, அவரால் மற்றவர்களை இரட்சித்துக்கொள்ள முடியும்; ஆகையால், அவரே நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை, சிலுவை மரத்தில் தொங்கின அவருடைய சொந்த சரீரத்தில் ஏற்றுக்கொண்டார்; அவர் அனுமதித்ததாலேயே ஒழிய மற்றபடி எந்த மனுஷனாலும் அவரிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள முடியாத தம்முடைய ஜீவனை, அவரே விரும்பி ஒப்புக்கொடுத்தார்; மேலும், அவர் தாமே விரும்பி வந்து தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார் என்பது, அவரது நடக்கையிலேயே வெளிப்படுகின்றது; அதாவது அவர் எல்லாவற்றையும் அறிந்தவராகவே கெத்செமனேயில் காட்டிக்கொடுப்பதற்கெனக் கொடுக்கப்பட்ட முத்தத்தை ஏற்றுக்கொண்டதிலும், தம்மை உரோம சேவகர்களிடம் எளிமையாகக் கையளித்ததிலும், தம்மைக் குற்றம் சாட்டுபவர்கள் முன்னிலையில் அமைதிக் காத்துக்கொண்டதிலும், தாம் மேசியா என்பதை ஒளிவுமறைவில்லாமல் அறிக்கைப் பண்ணிக்கொண்டதிலும் (இதை அவர்கள் தேவதூஷணமாய்க் கருதிக்கொண்டார்கள்), தம்மைத் தற்காத்துக்கொள்ள முற்படாமல், சிலுவையில் அறையப்படுதல் எனும் தண்டனை தீர்ப்பை ஏற்றுக்கொண்டதிலும் வெளிப்படுகின்றது. உண்மைதான் அவர், "மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்." ஏன்? ஏனெனில், அவர் மற்றவர்களை இரட்சிக்க விரும்பினார்; மற்றும், மற்றவர்களை இரட்சிப்பதற்கு தாம் பலியாக வேண்டும் என்பதையும் அறிந்தவராக இருந்தார்.

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும்

ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசாயா 53:5). "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டார்" (ஏசாயா 53:12). ஓ, எத்துணை அன்பும், சகிப்புத்தன்மையும் இங்கு வெளிக்காட்டப்பட்டுள்ளது! எனினும் மனிதர்களோ, "அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்படுத்தப்பட்டவரென்று" எண்ணினார்கள். மேலும் இது, நமது கர்த்தருக்கு இருந்த கடுமையான பரீட்சைகளில் ஒன்றாக இருந்தது; அதாவது அவர் தேவனுக்கு எதிராகக் குற்றம் புரிந்தவர் என்றும், அவர் தெய்வீகக் கோபாக்கினையின் கீழ்க் காணப்படுகின்றார் என்றும் கருதப்படுவதுதான் கர்த்தருக்கு இருந்த கடுமையான பரீட்சைகளில் ஒன்றாகக் காணப்பட்டது.

இதுபோலவே கர்த்தருடைய ஜனங்களுக்கு வரும் சிறுமைப்படுத்துதல்களானது, உலகத்தாராலும் மற்றும் தங்களைக் கிறிஸ்தவர்களாக அறிக்கைப் பண்ணிக்கொண்டும், ஆழ்ந்து சிந்திக்கிறவர்களாய் இல்லாதவர்களினாலும் தவறாய்க் கருதப்படுகின்றது. ஆனால் கர்த்தருடைய ஜனங்கள் சிறுமைப்படுத்தப்படும்போது, அவர்கள் "சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல" (மத்தேயு 10:24) என்ற வசனத்தின் வார்த்தைகளையும், தேவபக்தியாய் நடப்பவர்கள் அனைவரும் துன்பப்படுவார்கள் என்பதையும், இந்த யுகத்தில் தீமை மேலோங்குவதினால், நீதிமான்கள் துன்புறுவார்கள் என்பதையும், சாத்தானே இவ்வுலகத்தின் அதிபதியாய் இருக்கின்றான் என்பதையும், அவன் கட்டப்படுவது வரையிலும், நீதிமான் உயர்த்தப்படான் என்பதையும் நினைவில் கொள்வார்களாக. நீதிமான்கள் அதாவது, கரு நிலையிலுள்ள பரலோக இராஜ்யமானது, கொடுமையை அனுபவிப்பதற்கான காலம் இதுவே; மேலும், பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிற காலமும் இதுவே. நமது கர்த்தரும், தலையுமானவராகிய கிறிஸ்துவே பாடுப்பட்டாரானல், அவருக்காவும், நீதிக்காகவும், சத்தியத்திற்காகவும் பாடுபடுபவர்கள் அனைவரும் அவரை ஆறுதல்படுத்தின அதே தெய்வீக வாக்குத்தத்தத்தினால் ஆறுதல்படுத்தப்படுவார்களாக. "உன் நீதியை வெளிச்சத்தைப்போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார். கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு" (சங்கீதம் 37:6, 7).

தங்கள் அன்பையும், அனுதாபத்தையும் தெரிவித்த நமது கர்த்தருடைய சில நண்பர்களுங்கூட இத்தருணத்தில் காணப்பட்டனர்; இயேசுவின் தாயாகிய மரியாளும், மகதலேனா மரியாளும், கிலெயேப்பாவின் மனைவியாகிய மரியாளும், மற்ற ஸ்திரீகளும், இயேசுவுக்கு வெள்ளைப்போளமும், திராட்சரசமும் அளித்திட்ட ஸ்தீரிகளும் காணப்பட்டார்கள். "எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். . . பச்சைமரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள் என்றார்;" தம்மீது காண்பிக்கப்பட்ட இதே பொல்லாத ஆவியானது, இஸ்ரயேல் தேசத்தைக் கவிழ்த்துப் போட்டு, எருசலேமை அழித்துப் போடும் கொடூரமானவர்களிடத்திலும் விளங்கும் என்பதையே லூக்கா 23:27-31 வரையிலான வசனங்களின் வார்த்தைகள் மூலம் கர்த்தர் குறிப்பிட்டார். அப்படியாகவே நடக்கவும் செய்தது;

ஏனெனில், இஸ்ரயேல் ஜனங்களுக்கு, அவர்களுடைய வெளிச் சத்துருக்கள் மூலமாய் மாத்திரம் உபத்திரவம் ஏற்படாமல், அரசியல் கலகத்தினாலும் ஏற்பட்டது; ஏனெனில் ஒவ்வொரு மனுஷனுடைய கரமும், அவனுடைய அயலானுக்கு விரோதமாக இருந்தது. எருசலேம் கைப்பற்றப்பட்டபோது, பல நூற்றுக்கணக்கான யூதர்கள் உடனடியாகச் சிலுவையில் அறையப்பட்டு, பட்டணத்தின் சுவர்களில் தொங்கவிடப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாற்கு 15:33, 34-ஆம் வசனங்கள். ஆறாம் மணி வேளையிலிருந்து, ஒன்பதாம் மணி வேளை வரையிலும், தேசத்தை மூடியிருந்த இருளானது, இயற்கைக்கு அப்பாற்பட்ட இருளாகும்; ஏனெனில் பஸ்கா காலங்களில் காணப்படும் பௌர்ணமி அன்று, சூரியக் கிரகணம் ஏற்படுவது சாத்தியமற்ற ஒன்றாகும். இது சந்தேகத்திற்கு இடமின்றி, தெய்வீகக் கோபத்திற்கான வெளிப்பாடாக இருந்தது; அதாவது, இப்படியான கிரியைகளை நடப்பிப்பதன் மூலமாக, நீண்ட காலமாக தயவு பெற்றிருந்த தேசமானது, தேவனிடமிருந்து அந்நியராய்த் தள்ளுண்டுபோகும் காரியத்திற்கு இந்த இருளானது நிழலாய்க் காணப்பட்டது.

மாற்கு 15:34-ஆம் வசனமானது, நேரிட போகிற மரணத்தைக் குறித்த அச்சத்துடன்கூடிய உணர்ந்துக்கொள்ளுதலை வெளிப்படுத்துகின்றது. பலியை நிறைவேற்றி முடிப்பதற்குப் பிதாவினுடைய தாங்கிப்பிடிக்கும்/ஆதரிக்கும் வல்லமையானது (இயேசுவிடமிருந்து) பின்வாங்க வேண்டுவதும், பாடுகளின் பாத்திரத்திலுள்ள கடைசி கசப்பான வண்டல்களும்/அடிமண்டியும் (இயேசுவினால்) குடித்துக் காலியாக்கப்படுவதும் அவசியமானதாகும். ஆனால் இதன் முக்கியத்துவமோ, இருதயமும், மாம்சமும் தளர்வடையும் போது, உணர்ந்துக்கொள்ள சிரமப்படுகின்றது; ஆகையால்தான் திகைப்படைந்து இருதயமானது, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கேட்டது. அவருடைய பாடுகள் அனைத்திலும், அதுவரைக்கும் தெய்வீகக் கிருபையானது அவரைத் தாங்கி ஆதரித்து வந்தது; ஆனால் அவருடைய தழும்புகளினால் நாம் குணம் அடையத்தக்கதாக, அவர் இப்பொழுது கோலின் கீழ் மூழ்கவும், ஜீவனை உடைய பிதாவின் கிருபையினின்று துண்டிக்கப்படவும் வேண்டியிருந்தது.

மாற்கு 15:37-ஆம் வசனம். மீதி இருந்த பலத்தையும், பயன்படுத்தி முடித்திட்ட இந்தக் கடைசிக் கூக்குரலானது, ஜெயங்கொள்ளும் விசுவாசத்தினுடைய இறுதி ஜெயமாகும். தம்மை எப்போதும் மற்றும் இதுவரையிலும் தாங்கி வந்ததான தெய்வீகக் கிருபையானது, தாம் பாவியின் ஸ்தானத்தில் பாவத்திற்கான ஈடுபலியாக நிற்கத்தக்கதாக, தம்மைவிட்டு அகல வேண்டுமென்று அவர் உணர்ந்தபோதிலும், திரைக்கு அப்பால் உணரப்படக்கூடிய தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீது அவரது விசுவாசமானது உறுதியாய் நின்று, பிதாவிடம் தம்முடைய ஜீவனை நம்பிக்கையுடனும், விருப்பத்துடனும் கையளித்தது. இதை அப்போஸ்தலனாகிய பேதுரு நீதியின் நிமித்தம் பாடுபடுபவர்கள் அனைவரும் செய்யும்படிக்குக் கூறுகின்றார். "ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்" (1 பேதுரு 4:19).

# கிறிஸ்து இயேசு சிலுவையில் அறையப்பட்டார்

## லூக்கா 23:33-46

இந்நாட்களில் தங்களைத் தாங்களாகவே உயர்வாய் எண்ணிக்கொள்ளும் விமர்சகர்களுடைய கோட்பாடுகளும், பரிணாமத்தின் வாயிலாக இரட்சிப்பு என்ற கோட்பாடுகளை ஆதரிப்பவர்களும் பல்வேறு திசைகளில் முன்னேற்றம் அடைந்துகொண்டிருக்க, "கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்" என்ற ஆதார வசனத்தின் அடிப்படையிலான நம்முடைய இந்தப் பாடம் போன்றதான பாடங்கள் மீது "உலகளாவிய பாடங்கள்" (International Lessons) அடிக்கடி வேதத்தின் மீது ஆர்வமுள்ள மாணவர்களின் கவனத்தைத் திருப்புகின்றதைப் பார்ப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

மேற்கொள்ளப்பட்டவைகளிலேயே மிகப் பெரியதான நடவடிக்கை யானது, அதாவது பாவம் எனும் மாபெரும் விசாரணைக்காரனிடமிருந்து (50 பில்லியனுக்கும் மேலான) அடிமைகளை வாங்கிக்கொண்டதான நடவடிக்கையானது, இது நடந்த நாட்களிலும் உணர்ந்து கொள்ளப்படவில்லை மற்றும் இதுவரையிலும்கூட உணர்ந்து கொள்ளப்படவில்லை; வெகு சொற்பமானவர்களாகிய "சிறுமந்தையினராலேயே" உணர்ந்து கொள்ளப்பட்டிருக்கின்றது. நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட நாட்களில் காணப்பட்டதான ஜனங்கள் என்ன செய்தார்களோ, அதுபோலவே இன்று வரையிலும் மனுக்குலத்தின் ஜனங்கள் செய்துகொண்டு வருகின்றனர். சிலர் நோக்கிப்பார்த்தனர், கொஞ்சம் அனுதாபம் கொண்டனர், ஆனால் எதையும் உணர்ந்துகொள்ளவில்லை; வேறு சிலர் ஏளனம் செய்து, தூஷித்தனர்; சிலர் களிக்கண்டனர் மற்றும் சிலர் அவரது வஸ்திரத்தின் மீது கேலியாகச் சூதாடினார்கள். அவர்கள் அவர் யார் என்று அறியவில்லை; அவர்களுக்காக அவர் நிறைவேற்றியுள்ளதான வேலையினுடைய முக்கியத்துவத்தை அவர்கள் அறியவில்லை. அவரது ஜீவியம் குறித்து ஏதோ கொஞ்சம், அதுவும் மிகவும் அரைகுறையாகவே அறிந்திருந்தார்கள், ஆனால் அவரது மரணத்தினுடைய முக்கியத்துவம் குறித்தோ, அவர்களால் எதுவும் காண முடியவில்லை. இப்பிரபஞ்சத்தினுடைய தேவனானவன் அவர்களுடைய மனங்களைக் குருடாக்கியுள்ளபடியால் அவர்களால் காண முடியவில்லை என்று கூறி, அவர்களது நிலைமையைக் குறித்துத் தேவ ஏவுதலின் பேரில், அப்போஸ்தலன் அவர்களது கவனத்திற்குக் கொண்டு வந்தார். அன்று முதல் இன்று வரையிலுங்கூடத் தவறான கொள்கைகள், தவறான எதிர்பார்ப்புகள், தவறான மன விவாதங்கள் மற்றும் கர்த்தருக்கான உண்மையான அர்ப்பணம் இல்லாமை என்பவைகள் அநேகருடைய கண்களை, அதாவது உலகத்தாருடையது மாத்திரமில்லாமல், இன்னுமாக கிறிஸ்துவின் சீஷர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கைப்பண்ணிக் கொள்கின்றவர்களுடைய கண்களையும்கூடக் குருடாக்கியுள்ளது.

ஆனால் கல்வாரியில் "நிறைவேற்றப்பட்டதான" ஈடுபலியினுடைய உண்மையான மதிப்பை/முக்கியத்துவத்தைக் காண்கின்றவர்கள் அனைவருக்கும்

மற்றும் அந்த மாபெரும் நடவடிக்கையின் விளைவாக இறுதியில் கடந்து வரப்போகின்றதான அருமையான பலன்களைக் காணத்தக்கதாக, கண்கள் திறக்கப்பெற்ற அனைவருக்கும் – இவர்கள் அனைவருக்கும் "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கத்தரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 13:16, 17) என்பதான போதகருடைய வார்த்தைகளானது, அழுத்தத்துடன் பொருந்துகின்றதாய் இருக்கிறது. தெய்வீகத் திட்டம் முழுவதையும் புரியும்படி தெளிவாக்கின இந்த "மாபெரும் வெளிச்சத்தை" பார்க்கிறவர்களுக்கு, நன்றியுடன் இருப்பதற்கு மாபெரும் காரணங்கள் இருக்கின்றது; ஏனெனில் இப்படியானவர்கள் இருளினின்று, ஆச்சரியமான ஒளியினிடத்திற்குக் கொண்டுவரப்பட்டவர்களாய் இருக்கின்றனர். சிலுவையினுடைய வெளிச்சத்தில் பார்க்கையில், அவரது மாபெரும் பலியில் உண்மையாய் விசுவாசம் கொண்டிருக்கின்றதான அவரது சபையாகிய நமக்கு வந்துள்ளதான ஆசீர்வாதங்களுக்காக மாத்திரம் அல்லாமல், விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமான மீட்பு பற்றின இந்தக் கிருபையான செய்தியானது "ஏற்ற வேளையில்" அனைவருக்கும் தெரியப்படுத்தப்படும் என்றும், செவிடான காதுகள் அனைத்துமே திறக்கும் என்றுமுள்ள வாக்குத்தத்தத்திற்காகவும் நாம் தேவனுக்கு நன்றி ஏறெடுக்கின்றோம். அனைவருக்குமாக ஒரே தரம் கொடுக்கப்பட்டதான மகா பாவநிவாரண பலியினுடைய உண்மையான முக்கியத்துவத்தையும், அதன் மதிப்பையும்/நன்மையையும் ஏற்ற வேளையில் அனைவரும் காண்பார்கள்; ஏனெனில் ஆசீர்வாதமான ஆயிர வருட நாளைக் குறித்துப் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது; "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்" (ஏசாயா 35:5); "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசாயா 11:9).

அழுதுக்கொண்டிருந்த சீஷர்களைத் தவிர, மனம் வருந்தின கள்வன் மாத்திரமே, கர்த்தருடைய நீதியைக் குறித்து உணர்ந்துகொண்டவனாக இக்காட்சியில் காணப்படுகின்றான். அப்போதிருந்தது போலவே, அனைத்துக் காலப்பகுதிகளிலும் காணப்பட்டுள்ளது; பிரதான ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களில் அநேகர் உணர்ந்துகொள்ளுதலோ அல்லது அனுதாபமோ இல்லாமல், சத்தியத்தைச் சிலுவையில் அறைந்துபோட்டிருக்கின்றனர்; ஆதரவு கொடுப்பவர்களாகக் காணப்படும் (ஒரே) கூட்டத்தாரிலும், மிகவும் சீரழிந்து போனவர்களிலிருந்து வந்த சிலரே பெரும்பாலும் காணப்படுகின்றனர்.

ஒரு வேளை மனித இருதயங்களானது, இந்த மாபெரும் நடவடிக்கைக் குறித்து உணர்ந்துகொள்ளாமலும், அனுதாபம் கொள்ளாமலும் காணப்பட்டாலும்கூட, இயற்கையானது அப்படியாகக் காணப்படவில்லை; இந்த அருமையானதொரு

காட்சிக்குச் சாட்சியாகக் காணப்பட்ட இயற்கையானவள், தனது முகத்தினை இருளினால் முக்காடிட்டுக் கொண்டாள் மற்றும் நடுங்கிப் போனாள். பரிசுத்த ஸ்தலத்திற்கும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் நடுவில் காணப்பட்டதான திரைச்சீலை கிழிந்ததானது, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்வதற்கான வழி திறக்கப்பட்டுள்ளதை அடையாளமாய்க் கற்பிக்கின்றதாய் இருக்கின்றது. இதற்கு அப்போஸ்தலன் இவ்விதமாக எபிரெயர் 10: 19-22 வரையிலான வசனங்களில் அர்த்தம் கொடுக்கின்றார்.

இறுதி வரையிலும் உண்மையாயும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவும் நமது கர்த்தர் இயேசு காணப்பட்டு, தம்முடைய ஆவியை, மரிக்கும் தருவாயில் பரம பிதாவிடம் ஒப்படைத்தார்; பிதாவின் வாக்குத்தத்தங்களானது, அவரது ஜீவியம் முழுவதிலும் அவரைத் தாங்கினது/ஆதரித்தது மற்றும் அவைகள் இப்பொழுது, அவரது மரணத் தருவாயில் அவருக்குப் பெலனாகவும் இருந்தது. எனினும் மற்றொரு பதிவில் பார்க்கும்போது, கடைசி தருணத்தில் பரம பிதா, நமது கர்த்தருக்கான இந்த ஆதரவை, அவரிடமிருந்து எடுத்துவிட்டு, அநேகமாக அவரை ஒரு கணம் தனிமையில் விட்டுவிட்டதாக நாம் பார்க்கின்றோம்; மேலும் இந்த அவருடைய கடைசி அனுபவமானது, அவருக்கு முற்றும் முழுமையான தனிமையாகவும், பிதாவிடமிருந்து முற்றிலுமான பிரிவாகவும் காணப்பட்டது. இது பிதாவினுடைய வெறுப்பின் காரணமாய் அல்ல என்பதை நாம் அறிவோம்; ஏனெனில் தாம் அனைத்துக் காரியங்களிலும் மற்றும் எப்போதும் பிதாவைப் பிரியப்படுத்தியுள்ளார் என்ற வாக்குறுதியை இயேசு பெற்றிருந்தார் மற்றும் இதை அப்போஸ்தலனாகிய பேதுரு அப்போஸ்தலர் 17:31-ஆம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளதுபோன்று, மரணத்திலிருந்து இயேசுவை உயிர்த்தெழுப்பினதின் மூலம் பிதா பின்னர் உறுதிப்படுத்தினார். இயேசு பாவியினுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொண்டபடியால், அந்த அனுபவம் அவசியமாய் இருந்தது. பாவியாகிய ஆதாம் மற்றும் அவருக்குள் நாம் அனைவரும் ஜீவனுக்கான நமது உரிமையை மாத்திரமல்லாமல், இன்னுமாகப் பிதாவுடனான ஐக்கியத்தையும் இழந்து போயுள்ளோம்; மேலும் நமக்கான மீட்கும்பொருளாக வேண்டுமானால், நமது மீட்பர், நமக்காக மரிப்பது மாத்திரம் அல்லாமல் இன்னுமாக அவர் பாவியைப்போன்று மரிக்க வேண்டியது அவசியமாகின்றது. அதாவது மரணத்தீர்ப்பின் கீழாகக் காணப்படும் குற்றவாளி போன்று மரிக்க வேண்டியது அவசியமாய் உள்ளது; இன்னுமாக பாவி பிதாவினுடைய தயவு மற்றும் ஐக்கியத்திலிருந்து முற்றிலுமாய்த் துண்டிக்கப்பட்டுக் காணப்படும் அனுபவத்தையும் அவர் ருசிக்க வேண்டும். நமது அருமை மீட்பர் கடந்து சென்ற அனுபவங்களிலேயே, இந்தக் கடைசி அனுபவமே மிகவும் கடுமையான அனுபவமாக இருந்திருக்க வேண்டும். இத்தருணத்தில்தான், அவரது ஆன்மாவானது வியாகுலத்தோடே, "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னை கைவிட்டீர்?" என்று கதறினது.

# சிலுவையில் அறையப்பட்டவர் மீது ஒரு பார்வை

## மத்தேயு 27:35-50

### *"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்."* 1 கொரிந்தியர் 15:3

நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட விவரமானது, வேதவாக்கியங்களினால் மிகவும் எளிமையான விதத்திலும், கலைத்திறன் இல்லாவிதத்திலும் மற்றும் சோகமான தாக்கம் ஏற்படுத்துவதற்காக, விவரங்களை மெருகேற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படாத விதத்திலும் வழங்கப்பட்டிருந்தாலும், இந்த எளிமையான விவரத்தில்தான், சரித்திரத்திலேயே மிகவும் நெஞ்சைத்தொடும் சம்பவத்தின் விவரம் காணப்படுகின்றது. மிகவும் முக்கியமான ஒரு வாழ்க்கையைக் குறித்து (வேதாகமம் போன்று) எந்த ஒரு காவியமும் முன்வைக்க முடியாதது போன்று, எந்த ஒரு காவியமும், சர்வ வல்லமையுள்ள தேவனால் தேவதூதர்களுக்கும், மனுஷர்களுக்குமெனத் தமது நீதியையும், அன்பையும் இணைத்து வெளிப்படுத்தத்தக்கதாக அரங்கேற்றப்பட்ட, இந்த மாபெரும் நிஜமான நாடகம் மிகவும் சோகமுடையதாய் நிறைவடைவது போன்றும் நிறைவடைவதில்லை. நமது கர்த்தருடைய அநேக அற்புதகரமான கிரியைகளையும், எதையும் எதிர்க்காமல் அவர் நம்முடைய பாவங்களுக்காகப் பலியானதையும் கல்நெஞ்சத்துடன், உணர்வற்ற நிலையில் கண்டுகொண்டிருந்தவர்களில் எவ்வளவாய் விழுந்துபோன மனித சுபாவத்தினுடைய சீர்க்கேடு வெளிப்படுகின்றது. இந்தக் காரியத்தினை, நமது கர்த்தருடைய வஸ்திரங்களைப் பங்குபோட்டுக்கொண்ட விஷயத்தைக் காட்டிலும் அவரது நெய்யப்பட்ட அங்கியானது யாருக்குக் கிடைக்கும் என்பதற்காக சீட்டுப்போட்டுக் கொண்ட விஷயத்தைக் காட்டிலும், வேறு எவ்விஷயமும் நன்கு விளக்கிட முடியாது; நெய்யப்பட்டிருந்த வஸ்திரமானது, நமது கர்த்தருடைய தனிப்பட்ட பூரணத்தை அடையாளப்படுத்துகின்றதாக இருந்தது மற்றும் இது அநேகமாக அவருடைய நண்பர்கள் என்று லூக்கா 8:3-ஆம் வசனத்தில் குறிப்பிடப்படுபவர்களாகிய, ஐசுவரியமுள்ள ஸ்திரீகளில் ஒருவர் கர்த்தருக்குக் கொடுத்திட்ட அன்பளிப்பாக இருக்க வேண்டும். வஸ்திரங்களைப் பங்குபோட்டப் பிற்பாடு, அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள், அவரது பாடுகளையும், மரணத்தையும் இரக்கமற்றுக் கண்ணோக்கும் வண்ணமாக, "அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள்.(கவனித்தார்கள்);" பின்னரே உச்சக்கட்டம் வந்தது.

கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் செல்வாக்கானது, மனுக்குலத்தினுடைய உலகத்தின்மீது பெரிதான தாக்கம்கொண்டிருந்து, சமுதாயப் பண்பாட்டை உயர்த்தியுள்ள காரியமானது, கடந்த காலத்தினுடைய அதிகப்படியான முரட்டுத்தனமான மற்றும் கொடூரமான நிலைமைகளையும் அதிகம் மேற்கொண்டுள்ளது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் நாம் காணப்பட்டாலும், உலகப்பிரகாரமான நாகரிகம் மற்றும் மரியாதையான பண்புகள் எனும் மாயத்தோற்றத்தின் கீழ், இன்னமும் இயல்பான இருதயத்தில் அதிகப்படியான சீரழிந்த பண்புகள் இருப்பதை நம்மால் உடனடியாகக் கண்டுகொள்ள முடிகின்றது.

இன்றும்கூட, கர்த்தரைப் பற்றின அறிவிற்கு வந்த பிற்பாடும், அதாவது அன்றுள்ள உரோம சேவகர்கள் அறிந்திருந்ததைக் காட்டிலும் அதிகப்படியான மற்றும் தெளிவான அறிவிற்குள் வந்த பிற்பாடும், கிறிஸ்துவினுடைய அற்புதமான கிரியைகளைக் குறித்தும், பாடுகள் குறித்தும் அறிந்துகொண்ட பிற்பாடும், அவர் நம் நிமித்தமாகப் பாடுபட்டார் என்பதை அறிந்துகொண்ட பிற்பாடும், அநேகர் அவர் பாதத்தில் விழுந்து, "என் கர்த்தரே, என் மீட்பரே" என்று கூறுவதற்குப் பதிலாக, நேர்மாறாக உரோம சேவகர்கள் பண்ணினது போன்று, "உட்கார்ந்து அவரைக் கவனித்துக்கொண்டிருக் கின்றார்கள்" அல்லவா? இவர்களுடைய இருதயங்களானது, இரக்கத்தினால் அசைக்கப்படவில்லை (அ) தங்களது சித்தங்கள் மற்றும் நடக்கைகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் அளவுக்குரிய, அனுதாபங்கூடக் கொண்டிருக்கவில்லை; இவர்கள் "கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராகவே" தொடர்ந்து காணப்பட்டுக் கொண்டிருக்கின்றனர், ஏனெனில் "என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக் கிறான்" என்று கர்த்தர் கூறியுள்ளார் (மத்தேயு 12:30; பிலிப்பியர் 3:18).

அநேகமாக பிலாத்து வேறு உள்நோக்கத்துடன்தான் "இயேசு யூதருடைய இராஜா" என்று எழுதின மேல்விலாசத்தை, சிலுவையில் நமது கர்த்தருடைய தலைக்கு மேலாக போடுவித்தார். போதகரான இயேசு பெற்றிருந்த செல்வாக்கின் மீதான பொறாமையின் காரணமாகவே, யூதருடைய அதிகாரிகள், இயேசுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தனர் என்று பிலாத்து அறிந்திருந்தார்; மேலும் "இராயனேயல்லாமல் தங்களுக்கு வேறே இராஜா இல்லை" என்று கூறி இயேசு, தம்மைத்தாமே இராஜாவாக்கிக் கொண்டுள்ளார் என்ற குற்றச்சாட்டை இயேசுவுக்கு எதிராக, அவர்கள் பிலாத்துவிடம் கொண்டு வந்தபடியாலும், இன்னுமாக இப்படி மாய்மாலம் பண்ணி, இராயனுடைய அரியணை பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமானது என்று கூறி, இயேசுவைச் சிலுவையில் அறைந்துபோடும்படிக்கு அவர்கள் பிலாத்துவைக் கட்டாயப்படுத்தினபடியாலும், பிலாத்து இப்பொழுது அவர்களைப் பழிவாங்கி, அவர்களது ஆயுதத்தை அவர்களுக்கு எதிராகவே பயன்படுத்தினார். ஆனால் அவர்கள் கொன்றுபோட்ட ஆச்சரியமான மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் உண்மையான பெயரைத்தான் மேல்விலாசத்தில், தான் எழுதிப்போட்டுள்ளார் என்பதை நிச்சயமாக பிலாத்து எண்ணிப்பார்த்திருந்திருக்கவே மாட்டார். வேறொரு சுவிசேஷகர், இப்படி மேல்விலாசத்தில் எழுதியிருப்பதை முன்னிலை வகித்த யூதர்கள் வன்மையாய் எதிர்த்தார்கள் என்றும், ஆனால் எழுதப்பட்டதை, மாற்றி எழுதுவதற்குப் பிலாத்து மறுத்துவிட்டார் என்றும் நமக்குத் தெரிவிக்கின்றார்.

நமது அருமை மீட்பர் சகித்திட்ட அவமானங்களின் ஒரு பாகமாகவும், கூடுமானால் நீங்கட்டும் எனக் கர்த்தர் விரும்பிட்ட பாத்திரத்தின் ஒரு பாகமாகவுந்தான், அவர் பொல்லாங்கன் போன்று, இரண்டு கள்வர்கள் மத்தியிலே சிலுவையில் அறையப்பட்டார். இதை நாம் – அவர் பாவிகளால் தமக்குச் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்தார் என்ற கண்ணோட்டத்தில் நினைத்துக் கொள்ள வேண்டும் என்றும், இப்படியாக நாம் நினைத்துக்கொள்ளும்போது, அவருக்கு வந்ததுபோன்றதும், ஆனாலும் இலேசான எதிர்ப்புகளாகவும், உபத்திரவங்களாகவும், தவறாய்க் கருதப்படுவதாகவும் உள்ளவைகளைச் சகிப்பதில் நாம் பலப்படுத்தப்

படுவோம் (சொல்லர்த்தமான பட்டயங்கள் (அ) ஆயுதங்கள் கொண்டு யுத்தம் பண்ணுவதற்குப் பலப்படுத்தாமல், மாறாக சகிப்பதற்குப் பலப்படுத்தப்படுவோம்) என்றும் அப்போஸ்தலர் நமக்குக் கருத்துத் தெரிவிக்கின்றார்.

"என்னால் இப்பொழுது புரிந்துகொள்ளப்படுகிறதைக் காட்டிலும்
அதிகமாய் எனக்காய்ப் பாடுபட்டுள்ளாரே!
கடுமையான வியாகுலத்துடனே பருகிட்டாரே துக்கத்தின் பாத்திரத்திலிருந்தே.
அனைத்தையும் அவர் எனக்காய்ச் சகித்திட்டாரே, எனக்காய்ச் சகித்திட்டாரே!
உமக்காய் நான் என்ன சகித்திருக்கின்றேன், சகித்திருக்கின்றேன்?"

நமது கர்த்தரினால் சகிக்கப்பட்ட வலியோ, துயரமோ நமக்கான ஈடுபலி விலையாக இராமல், மாறாக அவரது மரணமே நமக்கான ஈடுபலி விலையாகக் கொடுக்கப்பட்டது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். இயேசு கொடூரமான விதத்தில் இல்லாமல், அவமானமான விதத்தில் இல்லாமல் மரித்திருந்தாலும்கூட, இது நமக்கான ஈடுபலி விலைக்கிரயம் கொடுக்கப்பட்டதாகவே இருந்திருக்கும்; ஆனால் நமது கர்த்தரினால் சகிக்கப்பட்ட சோதனைகளும், பாடுகளும், எதிர்ப்புகளும், நமக்கான ஈடுபலியின் பாகமாக இல்லையென்றாலும், இவைகள் பிதாவின் கணிப்பில், இயேசுவுக்கான பரீட்சையின் பாகமாக இருப்பது நலமாய் இருந்தது. இவைகளை இயேசு பொறுமையாய்ச் சகித்திட்டக் காரியமானது, பிதாவுக்கும், நீதிக்குமான அவரது உண்மையை முழு அளவில் நிரூபித்துக் காட்டியதாய்க் காணப்பட்டது; மேலும் இவ்வாறாக இயேசுவுக்கான பலனாக பிதா ஆயத்தம் பண்ணி வைத்திருந்த, உன்னத நிலைக்கு உயர்த்தப்படும் காரியத்திற்கு, தாம் பாத்திரவானாக இருப்பதை இயேசு நிரூபித்துக்காட்டினார். ஆகவே அவர் மனித சாயலுக்குத் தாழ்த்தப்பட்டதினிமித்தமும், நம்முடைய பாவங்களுக்காக அவர் மரித்ததின் நிமித்தமும் மாத்திரமல்லாமல், இன்னுமாக அவர் பருகின நிந்தனை மற்றும் அவமானத்தின் பாத்திரத்தினிமித்த மாகவும், அவரைக் குறித்து இவ்வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளது: "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலிப்பியர் 2:9,10, 11).

விழுந்துபோன நிலைமையிலும், கர்த்தருடைய வார்த்தைகள் மற்றும் கணிப்பினுடைய தெளிந்த கொள்கைகளினால் வழிகாட்டப்படாத நிலைமையிலுமுள்ள மனமானது எவ்வளவாய் ஓர் எல்லையிலிருந்து, மறு எல்லைக்குத் தடுமாறிவிடுகின்றது. இது சிலுவையில் அறையப்பட்டிருந்த கர்த்தரை நோக்கி, தங்களது தலைகளைத் துலுக்கி, தூஷித்து, அவர் தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறின விஷயத்தையும், தமது சரீரமாகிய ஆலயத்தைக்குறித்து அவர் பேசின விஷயத்தையும் பழித்துரைத்தவர்களில் அநேகர், இயேசுவின் 3½ வருட ஊழிய காலத்தின்போது, அவரால் பேசப்பட்டவைகளைக் கேட்டவர்கள் மத்தியில் காணப்பட்டவர்களாகவே

இருந்தனர் என்னும் உண்மையில் விளங்குகின்றது. இவர்களில் சிலர் அவர் செய்திட்ட அற்புதங்களைக் கண்டிருந்தவர்களாகவும் இருந்தனர்; இன்னுமாக இவர்களில் சிலர், "அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" என்று குறிப்பிடப்பட்டவர்கள் மத்தியில் காணப்பட்டனர்; இன்னுமாக "மேசியா வரும்போது, இவர் செய்கிற அற்புதங்களைப் பார்க்கிலும் அதிகம் செய்வாரோ" என்று கூறினவர்களிலும் சிலர், இவர்களில் காணப்பட்டனர் (யோவான் 7:31; லூக்கா 4:22).

எனினும் சூழ்நிலைகள் இயேசுவுக்கு எதிராக மாறுவதை, இவர்கள் கண்டபோதோ, அதிலும் விசேஷமாக இவர்களது செல்வாக்குமிக்க மதப் போதகர்கள் இயேசுவை எதிர்த்தபோதோ, இவர்கள் எளிதில் தடுமாற்றமடைந்தனர். இங்கு வெளியாகியுள்ள நமது விழுந்துபோன இனத்திற்கான பலவீனத்தினிமித்தம் நாம் வெட்கம் அடைகின்றோம். எனினும் அதே காரியங்கள் இன்றும் காணப்படுகின்றது. தெய்வீகச் சத்தியம் எவ்வளவுதான் தூய்மையானதாகவும், வெளிச்சமுடையதாகவும் காணப்பட்டாலும்கூட, ஒருவேளை கிறிஸ்தவ மண்டலத்தாரின் பிரதான ஆசாரியர்களும், பரிசேயர்களும், வேதபாரகர்களும் தெய்வீகச் சத்தியங்களைக் கண்டனம் பண்ணினார்கள் என்றால், இதினிமித்தம் ஜனங்களும் தடுமாறிவிடுகின்றனர்; கர்த்தருடைய ஊழியக்காரருடைய ஜீவியங்கள் எவ்வளவுதான் தூய்மையானதாகவும், உண்மையாகவும், நேர்மையாகவும் காணப்பட்டாலும்கூட, சாத்தானால் இன்னமும் இவர்களைப் பழிப்புரைப்பதற்கும், நிந்திப்பதற்குமெனப் பொய்ச்சாட்சியாளர்களையும், கனமிக்க ஊழியர்களையும் கைக்கூலிக் கொடுத்து, தூண்டிவிட்டு ஏற்படுத்த முடியும். இப்படிச் சம்பவிக்கும் என்றே நாம் எதிர்பார்க்கின்றவர்களாய் இருக்கவேண்டும். "சீஷன் தன் போதகனைப்போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் இருப்பது போதும். வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?" (மத்தேயு 10:25) என்று நமது எஜமான் தாமே கூறியுள்ளார் அல்லவா? "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (மத்தேயு 5:11. 12) என்று நமது எஜமான் நமக்குக் கூறி உறுதியளித்துள்ளார் அல்லவா? இப்படியாகவே, "உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது" என்று தீர்க்கத்தரிசிகள் உரைத்தவைகள் நம்மில் நிறைவேறுகின்றது (சங்கீதம் 69:9).

வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களுடைய நிந்திப்புகள்தான் மிகவும் காயம் ஏற்படுத்துகின்றதாய்க் காணப்பட்டது. இயேசு தம்மை இராஜா என்று உரிமைப் பாராட்டிக்கொண்ட காரியத்தையும், அவரது வல்லமையையும், பரம பிதாவின் மீதுள்ள அவரது விசுவாசத்தையும், பிதாவுடனான தம்முடைய உறவைக் குறித்து இயேசு உரிமைப்பாராட்டிக்கொண்ட காரியத்தையும் இவர்கள் ஏளனம் பண்ணிக்கொண்டிருக்கையில், இயேசு தம்முடைய அந்த வல்லமையை வெளிப்படுத்தி, சிலுவையிலிருந்து தாழ இறங்கிவரும்படிக்குக் கூறி, அவரை நகைத்தனர். ஓ! மனுஷ குமாரன் தமக்கான

மகிமைக்குள் பிரவேசிப்பதற்கு, இப்படியாக பாடுபட வேண்டும் என்பதை இவர்கள் அறியாதிருந்தார்கள். மேசியா முதலாவதாக தமது ஜீவனை, நமக்கான ஈடுபலி விலைக்கிரயமாக ஒப்புக்கொடுக்காதது வரையிலும், அவரால் சாத்தான் மற்றும் மரணத்தின் பிடியிலிருந்து இஸ்ரயேலையும், உலகத்தையும் விடுவிக்கிறதற்கான வல்லமையைக் கொண்டிருக்க முடியாது எனும் தெய்வீகத் திட்டத்தை இவர்கள் புரியாமல் காணப்பட்டனர். நமது அருமை மீட்பர் சீற்றத்தினாலும், பழிவாங்கும் எண்ணத்தினாலும் ஆட்கொள்ளப்படாமல், மாறாக பிதாவினுடைய சித்தம் மற்றும் வார்த்தைகளுக்கு ஏற்ப, சாந்தமாய்த் தம்மைச் சித்திரவதைப்படுத்துபவர்களின் பழிதூற்றல்களைச் சகித்து, தமது சித்தத்தைப் பரம பிதாவுடைய சித்தம் மற்றும் திட்டத்திற்கெனத் தாழ்த்திவிட்டபடியால் நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய்க் காணப்பட வேண்டும்.

இதுபோலவே கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஜீவனுள்ள அங்கத்தினர்களும், எவ்வளவாய் உலகத்தாரினால் மாத்திரமல்லாமல், இன்றுமுள்ள முன்னிலை வகிக்கும் பரிசேயர்களாலும் விசேஷமாய்த் தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுகின்றனர்; ஏனெனில் "அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" (1 யோவான் 4:17). நமது எஜமானுடைய பாடுகளையும், சோதனைகளையும் உலகம் புரிந்துகொள்ளாதது போலும், அவரது பலிக்கான அவசியத்தைக் கண்டுகொள்ள முடியாதது போலும், இன்னுமாக அவருடைய பாடுகளானது, "அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்" என்று எழுதப்பட்டிருக்கின்ற பிரகாரம், தெய்வீக அதிருப்திக்கான அடையாளங்கள் என்று எண்ணிக்கொண்டது போலும், சபையினுடைய விஷயத்திலும் காணப்படும்; தேவனுக்கென்று அர்ப்பணம் பண்ணப்பட்ட ஜனங்கள் அவரது கிருபையை ஆவிக்குரியவற்றிலேயே பெற்றிருந்து, பூமிக்குரிய ஆசீர்வாதங்களில் பெற்றிராமல் இருப்பதாகிய உண்மையானது, உலகத்தாரால் தவறாய்ப் புரிந்து கொள்ளப்படுகின்றது. பூமிக்குரிய தயவுகளைப் பலிச்செலுத்துவதன் மூலமாய் நாம் அடைய நாடும் ஆவிக்குரிய தயவுகள் மற்றும் ஆவிக்குரிய சுபாவத்தின் ஆசீர்வாதத்தை உலகத்தார் காண்பதில்லை. இப்படியாகப் பலிச்செலுத்தும் வகுப்பாரிலுள்ள அனைவரும் மற்றும் பரம அழைப்பிற்கான பந்தய பொருளுக்காக ஓட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கும் அனைவரும், தற்காலத்தின் பாடுகளில் களிகூர்ந்து, கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்வதற்கும், அவருக்குள் அதாவது மகிமையடைந்த கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கங்கள் ஆகுவதற்குமென அனைத்தையும் குப்பையும், நஷ்டமுமாகவும் கருதுவார்கள்.

நமது மீட்பருடன், இரு பக்கங்களிலும் சிலுவையில் அறையப்பட்டிருந்த இரண்டு குற்றவாளிகளும் சேர்ந்து கிறிஸ்துவை வைததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்தக் கள்வர்களில் ஒருவன்தான் பின்னர், அனுதாபத்தின் சில வார்த்தைகளைப் பேசினவனாகக் காணப்பட்டான்.

நமது கர்த்தர் ஆறாம் மணி வேளையில், காலை 9 மணி அளவு சிலுவையில் அறையப்பட்டார்; நிழலில் காணப்பட்ட கால வேளைக்குப் பொருத்தமாகவே காரியங்கள் சம்பவித்தது; ஏனெனில் இந்த வேளைதான் அன்றாட காலை பலிச்செலுத்துவதற்கான வேளையாக இருந்தது. ஆறு மணி நேரங்கள் பிற்பாடே, பிற்பகல் 3 மணியளவு, அதாவது யூதர்கள் வழக்கத்தின்படியான ஒன்பதாம்

மணிவேளையில் கர்த்தர் மரித்தார்; இதுவும் நிழலிலுள்ள வேளைக்குப் பொருத்தமானதாக இருந்தது, ஏனெனில் இந்த ஒன்பதாம் மணிவேளைதான் அன்றாட மாலை பலிச்செலுத்துவதற்கான வேளையாக இருந்தது. இப்படியான ஒரு காட்சிக்கு முன்னதாக, இயற்கையும் தனது மகிமைகளைத் திரையிடுவதும், இருள் காணப்படுவதும்கூடப் பொருத்தமானதாய் இருந்தது. அது அடர்த்தியான இருளாக இருந்ததென நாம் அனுமானிக்க வேண்டியதில்லை, மாறாக பதிவு செய்யப்பட்டிருப்பது போன்று, இருள் காணப்பட்டது என்றே எடுத்துக்கொள்ள வேண்டும். எனினும் அது இயற்கைக்கு அப்பாற்பட்ட இருளாகவே இருந்திருக்க வேண்டும், ஏனெனில் அன்று பௌர்ணமியாக இருந்தபடியால், கொஞ்சம் நேரம் சூரிய கிரகணம் காணப்பட்டிருக்க வேண்டும்.

அப்போதுதான் "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" என்ற வியாகுலம் நிறைந்த வார்த்தைகளை நமது கர்த்தர் கூறினார். தமக்கு விரோதமாகப் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதத்தையும், பேதுருவின் மறுதலிப்பையும், தம்முடைய சீஷர்கள் அனைவரும் தம்மைவிட்டு ஓடிவிட்டனர் என்ற உண்மையையும், தமது கடைசி மணி நேரங்கள் தமது சத்துருக்களுடைய இகழ்ச்சிகளின் மத்தியில் செலவிடப்பட வேண்டும் எனும் உண்மையையும் வியக்கத்தக்கச் சகிப்புத்தன்மையுடன் சகித்துவிட்டார்; ஆனால் தம்மிடமிருந்து, பிதா ஆவியின் ஐக்கியத்தைத் துண்டிப்பதற்கான வேளை வந்தபோதோ, இதைக் கர்த்தரினால் சகித்துக்கொள்ள முடியவில்லை; அவர் சொல்லர்த்தமாகவே இருதயம் வெடித்து மரித்ததாகக் கூறப்படுகின்றது; மேலும் இதன் காரணமாகவே, அவர் மரித்தக் கொஞ்சம் நேரத்திற்குள்ளாக ஈட்டியினால் குத்தப்பட்டபோது, இரத்தமும், தண்ணீரும் வந்தது என்று பார்க்கின்றோம்.

இது ஒருவேளை உண்மையிலேயே பிதாவிடத்திலான ஐக்கியம் மற்றும் தயவின் துண்டிக்கப்படுதலாய் இராமல், மாறாக நமது கர்த்தருடைய விசுவாசக் குறைச்சலாக மாத்திரமாக இருக்குமா அல்லது இல்லையா என்று சிலர் கேட்கலாம். இது விசுவாசக் குறைச்சல் இல்லை. இப்படியாக ஐக்கியம் துண்டிக்கப்படுகின்ற காரியமானது, பாவம் சுமப்பவராகிய நமது கர்த்தருடைய பாடுகளில் அவசியமான ஒரு பாகமாக உள்ளது என்றே நாம் நம்புகின்றோம். ஆதாமுடைய மீறுதலுக்கான தண்டனை என்பது, மரணமாக மாத்திரம் இராமல், இன்னுமாக தெய்வீகத் தயவு மற்றும் ஐக்கியத்திலிருந்து தனிமைப்படுத்தலையும் உள்ளடக்கினதாய் இருந்தது; ஆகையால் நம்மைத் தேவனிடத்திற்கு, தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கத்தக்கதாக, நமது கர்த்தர் ஆதாமின் ஸ்தானத்தை எடுத்து, ஆதாமுக்குப் பதிலாக அதாவது அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் பாடுபட்டபோது, அவர் நம் நிமித்தமாக மரிப்பது மாத்திரம் அவசியமாய் இராமல், ஆதாமினுடைய மீறுதலுக்கான தண்டனையின் பாகமாக, பிதாவிடமிருந்து முழுமையாய்த் துண்டிக்கப்படுதல் மற்றும் தனிமைப்படுத்தப்படுதல் எனும் அனுபவத்தையும் அனுபவிக்க வேண்டியது அவசியமாய் இருந்தது. இயேசு தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்துக்கொண்டு வந்த 3½ வருட காலபகுதியில், பிதாவிடமிருந்து பாவியெனத் துண்டிக்கப்படவில்லை (அ) தனிமைப்படுத்தப்படவில்லை; இயேசு அந்த மூன்றரை வருட காலபகுதியில் முழுத்தண்டனையையும் அனுபவிக்கவில்லை; மாறாக சிலுவையில்தான்

கவலைக்கிடமான தருணம் வந்தது; அவர் கொஞ்ச நேரமாகிலும் பிதாவின் ஐக்கியத்திலிருந்து துண்டிக்கப்பட வேண்டும் மற்றும் இப்படியாக ஒரு பாவியாக, நம்முடைய பாவங்களுக்காக மரிக்க வேண்டும்; "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாகத்தக்கதாக" இயேசு இங்ஙனம் மரிக்க வேண்டியிருந்தது (1 கொரிந்தியர் 15:21).

நமது அருமை எஜமானுடைய அனுபவங்களைக் கருத்தில் எடுத்துக் கொண்டாலும், மரிக்கிற அனைவருடைய இறுதி வார்த்தைகளையும் வைத்து, நாம் அவரவருடைய ஆவிக்குரிய நிலைமையைக் குறித்துக் கணிப்பதில்லை. தவறான கொள்கைகளானது, சிலரில் தவறான நம்பிக்கைகளை உண்டுபண்ணி, தாங்கள் உண்மையில் மரணம் எனும் மாபெரும் சிறைச்சாலையின் வாயிலுக்குள் போய்க்கொண்டிருக்கையில், தாங்கள் புதிய எருசலேமின் வாயிலுக்குள்ளாகப் போவதாக நம்பிக்கொள்ளத்தக்கதாக வழிநடத்திவிடுகின்றது. பதிவுகளைப் பொறுத்தமட்டில் கர்த்தரினாலோ (அ) அவரது ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்களாலோ மரிக்கும் தருணத்தின் மிதமிஞ்சின வார்த்தைகள் எதுவும் பேசப்படவில்லை. கர்த்தரும், அப்போஸ்தலர்களும் நல்ல நம்பிக்கையும், உறுதியான நம்பிக்கையும், வேதவாக்கியங்களின் அடிப்படையிலான நம்பிக்கையையும், கொண்டிருந்தார்கள்; வாழ்க்கையின் போராட்டங்களில் தங்களைப் பெலப்படுத்துகின்றதும், வாழ்க்கையின் இறுதிவரை தேவனுக்கும், அவரது வார்த்தைகளுக்கும் உண்மையாய்க் காணப்பட உதவினதுமான ஒரு நம்பிக்கையைக் கொண்டிருந்தார்கள்; ஆனால் நம்பிக்கைக் குறித்த மிதமிஞ்சின வார்த்தைகளைக்கூறி மரிப்பவர்கள் பெரும்பாலானவர்கள், கர்த்தருக்கும், அவருடைய வார்த்தைகளுக்கும், அவருடைய ஊழியத்திற்கான தங்களின் அர்ப்பணிப்பு விஷயத்திற்கும் உண்மையற்றவர்களாகவே காணப்படுகின்றனர். நமது விசுவாசமும், நம்பிக்கையும், களிகூருதலும் நமது எஜமான் மற்றும் அப்போஸ்தலர்களுடையது போன்று காணப்படுவதாக; தேவனுடைய வார்த்தைகளுக்கும் மற்றும் அதன் சாட்சிகளுக்கும் இசைவாகக் காணப்படுவதாக – "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" (2 பேதுரு 1:19).

நமது கர்த்தர் மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டபோது கூறின வார்த்தைகளை மத்தேயு அவர்கள் பதிவு செய்யவில்லை, ஆனால் அவைகளை லூக்கா அவர்களும், யோவான் அவர்களும் பதிவு செய்துள்ளனர்; "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்" (லூக்கா 23:46); "இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்" (யோவான் 19:30).

எதுவும் முடியவில்லை என்று அநேக கள்ளப்போதகர்கள் நம்மிடத்தில் கூறி, பாவங்களுக்காக எந்தப் பலியும் தேவையில்லை என்றும், எதுவும் கொடுக்கப்படவுமில்லை என்றும் அறிவிக்கின்றார்கள்; ஆனால் இது தொடர்புடைய விஷயத்தில், வேதவாக்கியங்களுடைய சாட்சி மிகவும் தெளிவாய்க் காணப்படுகின்றது;

பலிச்செலுத்தப்படாமல் அதாவது, "இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவங்களுக்கான மன்னிப்பு உண்டாகாது" என்று கூறப்பட்டுள்ளது (எபிரெயர் 9:22). நமது கர்த்தர் பூரண புருஷனுக்குரிய 30-ஆம் வயதை அடைந்து, உடனடியாக யோர்தானில் காணப்பட்ட யோவானிடத்திற்கு வந்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, இப்படியாகப் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றத்தக்கதாக, மரணம் வரையிலான தமது அர்ப்பணிப்பை வெளிப்புறமான அடையாளத்தின் மூலம் தெரிவித்தபோது, நமது கர்த்தருடைய பலி ஆரம்பமானது. இங்கு ஆரம்பமான பலி, அவருடைய கடைசித் தருணம்வரை உண்மையாய்த் தொடர்ந்து முடிந்தது. அவர் அனைத்து நிந்தனைகளையும், அனைத்து அவமானங்களையும் கடைசிவரை சகித்துக்கொண்டு, பின்னர் இறுதியில் பிதாவுடனான ஐக்கியத்தில் துண்டிக்கப்பட்டபோது, இதுவே கடைசி காரியமாயிருந்தது மற்றும் இதை நமது கர்த்தர் "முடிந்தது!" என்ற வார்த்தைகள் மூலம் சுட்டிக்காட்டினார். அவருடைய வேலை முடிந்தது; மீட்பிற்கான விலை கொடுக்கப்பட்டு முடிந்தது; பாடுகள் முடிவடைந்துவிட்டன; அவர் நிறைவேற்றும்படிக்கு, பிதா அவமானம் மற்றும் நிந்தனைகளாகிய அம்சங்கள் தொடர்புடையதாகக் கொடுத்திருந்த வேலையின் பாகத்தை அவர் நிறைவேற்றிவிட்டார். அவருடைய வேலையின் மற்றொரு பாகம் உள்ளது மற்றும் அது இன்னும் முடிவடையவில்லை; பூமியின் குடும்பங்கள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதும், பாவங்களுக்கான தம்முடைய பலியின் மூலமாய்ச் சம்பாதிக்கப்பட்ட நித்திய ஜீவனுக்கான வாய்ப்புகளையும், இரக்கமான கிருபைகளையும் மனுக்குலத்திற்கு அருளுவதுந்தான் அந்த வேலையின் முடிவடையாத பாகமாகும்.

அவர் தமது ஆவியை விட்டார். எந்த ஆவியை விட்டார்? அவர் தமது ஆவிக்குரிய சரீரத்தை மரிக்க ஒப்புக்கொடுக்கவில்லை; ஏனெனில் அச்சமயத்தில் அவருக்கு ஆவிக்குரிய சரீரம் இல்லாதிருந்தது. 34- வருடங்களுக்கு முன்னதாக, அவர் தமது தாயாகிய மரியாள் மூலமாய் மனுஷீக சுபாவத்தில் பங்குகொள்ளத்தக்கதாக, தமது ஆவிக்குரிய நிலைமையையும், சுபாவத்தையும் துறந்து வந்திட்டார் – பரலோகத்தில் அவருக்குச் சொந்தமாய்க் காணப்பட்டதான ஜீவனின் ஆவியானது, மனித நிலைக்கு மாற்றப்பட்டது. தமது மனுஷீக சரீரத்தை, உயிரூட்டின இந்த ஜீவனின் ஆவியை அவர் 33½ வருடங்களாக அனுபவித்து, பயன்படுத்தி வந்தார்; இப்பொழுது அதை மரணத்திற்கு அவர் ஒப்புக்கொடுக்கின்றார். சிலுவையில் அறையப்பட்ட மாம்சமானது, இனி ஒருபோதும் அவருடையதல்ல, ஏனெனில் அப்போஸ்தலர் கூறியுள்ள பிரகாரம், அவர் மரிக்க வேண்டும் என்பதற்காகவே அடிமையின் ரூபம் எடுத்தாரே ஒழிய, அந்த அடிமையின் ரூபத்தை என்றென்றுமாய்த் தக்கவைத்துக்கொள்ள அல்ல. குமாரன் தம்மோடுகூட மகிமைப்படுத்தப்படுவார் என்றும், அதுவும் உலகம் உண்டாகுவதற்கு முன்னதாக, குமாரன் பிதாவோடு இருந்தபோது கொண்டிருந்த மகிமையைக் காட்டிலும் உயர்வான ஒரு மகிமையில் மகிமைப்படுத்தப்படுவார் என்றும், அது மனுஷீக நிலையிலான மகிமையாய் இராமல், மாறாக ஆவிக்குரிய நிலையிலான மகிமைப்படுத்தலாய் இருக்கும் என்றுமாக பிதாவின் வாக்குத்தத்தம் காணப்பட்டது. "அவர் மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினபோது" அவர் தமது ஆவிக்குரிய நிலையை விட்டுவந்தவராய் இருந்தார்; தம்மிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள வேலையை தாம் நிறைவேற்றின பிற்பாடு,

தாம் மீண்டுமாக மகிமைக்குள், அதாவது ஆவிக்குரிய நிலைமைக்குள் ஏற்றுக்கொள்ளப்படுவாரெனப் பிதாவின் மீது குமாரன் நம்பிக்கைக் கொண்டிருந்தார். ஆகவேதான், "மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?" என்று இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் கூறினார் (யோவான் 6:62).

இயேசு தம்முடைய ஆவியைப் பிதாவின் பராமரிப்பில் ஒப்படைத்தக் காரியமானது, அவர் மரணம் என்றால் என்ன என்பதை, அதாவது மரணம் என்பது ஜீவன் நின்றுபோகும் நிலைமை என்பதை முழுமையாய் அறிந்திருந்தார் என்பதையும், எனினும் தாம் என்றென்றும் மரணத்தில் இருக்கும்படிக்கு அனுமதிக்கப்படாமல், இப்பொழுதும் பிதாவின் சித்தத்திற்கு இசைவாக தம்மால் ஒப்படைக்கப்பட்ட ஜீவனின் ஆவியானது, உயிர்த்தெழுதலின் மூலம் தமக்கு மீண்டும் அருளப்படும் என்று பிதாவின் மீது குமாரன் நம்பிக்கைக் கொண்டிருந்தார் என்பதையும் மறைமுகமாகக் குறிப்பிடுகின்றது. தாம் மரணத்திலிருந்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுப்பப்படுவார் என்று இயேசு அறிந்திருந்து, அதைத் தம்முடைய சீஷர்களுக்கு முன்னறிவித்திருந்தார். தமது ஜீவனின் ஆவியானது, தமது ஜீவனானது பிதாவிடமிருந்து வந்தது என்றும், அந்த ஜீவனானது பிதாவின் வல்லமைக்கும், பராமரிப்பிற்கும் கீழ்ப்பட்டது என்றும் இயேசு அறிந்திருந்தார்; தாம் மீண்டும் ஜீவன் பெற்றுக்கொள்வதாக, பிதா தமக்கு வாக்களித்துள்ளதை அறிந்திருந்த இயேசு, அந்த வாக்குத்தத்தத்தின் மீதான தமது நம்பிக்கையை மாத்திரமே வெளிப்படுத்தினவராகக் காணப்பட்டார். இயேசுவினுடைய நம்பிக்கை நிறைவேறினது; தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுந்திருக்கப்பண்ணி, மனித சுபாவத்திற்கும் மேலாக மாத்திரமல்லாமல், தேவதூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் மேலாக உயர்வாக, ஆவிக்குரிய சுபாவத்தின் தளத்திலேயே, மிகவும் உயர்வான தளமாகிய திவ்விய சுபாவத்திற்கு உயர்த்தினார்.

இந்தச் சுவிசேஷயுகத்தினுடைய சபையானது, தங்களுடைய எஜமானின் பாடுகளில் பங்கடைவதற்கும், இறுதியில் அவரோடுகூட மகிமையில் பங்கடைவதற்கும் மற்றும் பூரணமான மனுக்குலத்தின் சுபாவத்திலும் கொஞ்சம் மேலானதாய்க் காணப்படும் தேவதூதர்களின் சுபாவம் மற்றும் கனத்திலும் மிக உயர்வானதாய்க் காணப்படும் திவ்விய சுபாவம் மற்றும் அதன் மகிமை, கனம் மற்றும் அழியாமையில் பங்கடைவதற்குமென, அதே அழைப்பினால் அழைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கக் காரியமாகும் (2 பேதுரு 1:4; ரோமர் 2:7; சங்கீதம் 8:5). இவை அனைத்தையும் மனதில் வைத்துக்கொண்டு, நாம் "மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரு மாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபிரெயர் 12:1) என்ற வார்த்தைகளை ஒருவருக் கொருவர் புத்திமதியாய்க் கூறுவோமாக.

# அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்

## யோவான் 19:17-30

*"என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரன்." கலாத்தியர் 2:20*

முற்காலங்களில் சிலுவையில் அறையப்படும் காரியமானது, குற்றவாளி களிலேயே மிகவும் வெறுக்கத்தக்கவர்களை மரணமடையச் செய்வதற்கான கொடூரமான முறையாகும். இந்தத் தண்டனை முறையின் கடுமையான வீரியத்திற்கான காரணம், கொடூரமான உணர்வுகளைத் தணிப்பதற்காக/திருப்திச் செய்யப்படுவதற் காக அல்லாமல் தீமை செய்கிறவர்களை அச்சமூட்டுவதற்காகவேயாகும். இம்மரண முறையைக்குறித்துப் பரார் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்:

"சிலுவையில் அறையப்படுவதினால் உண்டாகும் மரணத்தோடு சகலவிதமான வலிகளும் காணப்படுகின்றது. மேலும், இம்மரணத்தோடுகூடக் கடுமையான தலைசுற்றலும், தாகம், தூக்கமின்மை, உணவின்றி வலுவிழந்துபோதல், தசைகளில் ஏற்படும் சுளுக்கு, அவமானம், சித்திரவதைகள் தொடர்ந்து நீடிக்கும் நிலை, பயம், ஆற்றப்படாத புண்கள், சாவைக்கொண்டு வரும் நிலைகளும் காணப்படும். இன்னுமாக இவைகள் அனைத்தும், அம்மனிதனுடைய சுயநினைவை இழக்கச்செய்யும் அளவுக்கும், சுயநினைவு இழக்கும் கட்டம் வரையிலும் உச்சக்கட்ட வீரியத்தில் காணப்படும். இப்படிப்பட்ட ஒரு மரணத்திற்கே கிறிஸ்துவும் விதிக்கப்பட்டார்."

பொறாமையும், கொலைவெறியும் கொண்டிருந்த பிரதான ஆசாரியர்களும், யூதமார்க்கத்தின் வல்லுநர்களுமாகிய இவர்களின் மாய்மாலத்தையும், முரண்பாடுகளையும் பயமின்றி பகிரங்கப்படுத்தினவரும், பொது ஜனங்கள் மத்தியில் துரிதமாய்த் தாக்கம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறவருமான மாபெரும் போதகர் (இயேசு) மேற்கூறப்பட்ட இப்படியானதொரு வெளிப்படையான கண்டனம் பெறவேண்டும் என்றே விரும்பினார்கள். தேவதூஷணம் பேசியதற்காக அவரை அவர்கள் கல்லெறிந்து கொல்ல முடியும். ஆனால், அப்படிச் செய்யப்படும்போது, அநேகருடைய கண்களுக்கு அவர் இரத்தசாட்சி மரணம் மரித்தார் என்பதுபோல் தோன்றிவிடும். ஆனால், அவர் ஆலோசனை சங்கத்தாரால் குற்றவாளியெனத் தீர்க்கப்பட்டு, உலகத்திலேயே வல்லமையில் உயர்ந்த நிலையில் காணப்படும் அரசியல் சக்தியால் அவர் மரணத் தண்டனைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டால், அது இயேசுவுக்கும் அவருடைய போதனைகளுக்கும், அவருடைய பின்னடியார்களுக்கும் என்றென்றும் பெரும் பழியை/அவமதிப்பைச் சுமத்துவதாக இருக்கும் என்று எண்ணினார்கள். ஆகவே, இயேசுவை மரணத்தீர்ப்பிற்கு ஒப்புக்கொடுப்பதற்கெனக் கையெழுத்து இடும்படி பிலாத்துவை இறுதியில் சம்மதிக்க வைத்தபோது, அவர்களுடைய பொல்லாத இருதயங்கள் எத்துணை ஆனந்தம் அடைந்திருக்கும் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது.

மாற்கினுடைய பதிவின்படி, (மாற்கு 15:25) மரணப் பத்திரமானது காலையில்

சுமார் 9 மணியளவில் பிலாத்துவினால் கையெழுத்திடப்பட்டது என நாம் பார்க்கின்றோம் - அதாவது இயேசுவின் மேல் மேற்கொண்ட விசாரணைகளும், இயேசுவை அவருடைய சத்துருக்களிடமிருந்து பாதுகாப்பதற்கெனப் பிலாத்து மேற்கொண்ட பல்வேறு பிரயாசங்களும் மூன்று மணி நேரத்தை எடுத்துக்கொண்டது. தங்கள் சிலுவைகளைச் சுமந்து செல்லும் இரண்டு கள்வர்கள் மற்றும் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படும் நிலையிலிருந்து விடுதலையாக்கப்பட்ட பரபாசினிடத்தில் இயேசு தமது சிலுவையைச் சுமந்து வந்ததுமாகிய ஊர்வலம் உடனடியாகப் புறப்பட்டது. குற்றவாளிகள் தாங்கள் சித்திரவதைப்படுவதற்குப் பயன்படப்போகிற ஆயுதங்களைத் தாங்களே சுமந்து செல்லப்படுவது பழங்காலத்தில் நிலவிய வழக்கமாகும். இன்றைய நவீன ஓவியங்களில் பொதுவாகக் காட்டப்படுவதுபோன்று, சிலுவைகள் அவ்வளவு உயரமானவைகளாகவும், மிகவும் பாரமானவைகளாகவும் இருந்ததில்லை. மாறாக, சிலுவையில் அறையப்படுபவர்களின் பாதங்கள், நிலத்திலிருந்து பன்னிரண்டு முதல் பதினெட்டு இஞ்ச் அளவு மேலே காணப்பட்டது என நிரூபணங்கள் உள்ளன. மேலும், இந்தச் சிலுவைகள் சிறிய உயரம் கொண்டவைகளாக இருப்பினும், ஒரு திடகாத்திரமான மனுஷனால் சுமந்து செல்ல முடிகின்ற அளவுக்குப் பாரம் கொண்டவைகளாகவே காணப்பட்டன. ஆனால், நமது கர்த்தர் தமது கெத்செமனே அனுபவங்களைக் கடந்துவந்த பிறகு, அடிகளும், சவுக்கடிகளும் மற்றும் பிலாத்துவின் ஆணையின்படி கொடுக்கப்பட்ட சவுக்கடிகளும் நிறைந்த இரவு பொழுதைக் கடந்துவந்த பிறகு அவர் பெலவீனமடைந்தவராகவும், உடல் சக்தி இழந்தவராகவும், புண்களினால் வலியுடையவராகவும், நலிந்தவராகவும் காணப்பட்டார். கல்மனமுள்ள சேவகர்கள் அவர் மேல் பரிதாபம் கொண்டு வழியில் வந்த சீரேனே ஊரானாகிய சீமோனைப் பிடித்து இயேசுவின் சிலுவைப் பளுவைச் சுமந்து வரும்படிக்குச் சீமோனைக் கட்டாயப்படுத்தினார்கள் என்று பார்க்கின்றோம்.

இந்தச் சீமோனைக்குறித்து நமக்கு எதுவும் தெரியாது. ஆனால் மாற்கு இவரை, அலெக்சந்தர் மற்றும் ரூப்புக்கும் தகப்பன் என்று குறிப்பிடுவதைப் பார்க்கும்போது, இவருடைய இரண்டு குமாரர்கள் பிற்பாடு இயேசுவின் பின்னடியார்கள் ஆகியுள்ளனர் என்றும், அவர்கள் சீஷர்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவர்கள் என்றும் நமக்குத் தெரியவருகின்றது. ஆனால், பல பேர் ஆசைப்பட்ட மாபெரும் சிலாக்கியம், இந்தச் சீமோன் என்பவருக்குக் கிடைத்துள்ளது. இருதயத்தில் காணப்பட்ட பயமானது பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும், மற்றவர்களையும் மறைந்து ஒளிந்துகொள்ளச் செய்தது என்பதைக்குறித்தும், போதகரின் சோதனையான வேளையில் அவருக்குத் தங்கள் உதவியினை அளிப்பது தடை பண்ணப்பட்டதைக் குறித்தும் அவர்கள் எண்ணி எவ்வளவு வருத்தப்பட்டிருக்க வேண்டும்! யோவான் அவ்வளவு தொலைதூரத்தில் காணப்படவில்லை என்பதை நாம் அறிவோம். மற்றவர்களும் அநேகமாகக் கொஞ்சம் சமீபத்தில்தான் காணப்பட்டிருக்க வேண்டும். ஆனால், எத்தகைய வாய்ப்பை அவர்கள் நழுவ விட்டுவிட்டனர்!

இதேபோன்றதான வாய்ப்புகள் இன்னமும் நம் அனைவருக்கும் காணப்படுகின்றது. அதாவது, கிறிஸ்துவுக்கு ஊழியம் புரிவதற்கான வாய்ப்புகள்

அதாவது, கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கு ஊழியம் புரிவதற்கான வாய்ப்புகள் இன்னமும் உள்ளன. போதகரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கின்ற ஒவ்வொருவருக்கும் சில கெத்செமனே அனுபவங்கள் பெற்றுக்கொள்வது அவசியமாய் இருப்பது போன்று, போதகரின் அனைத்து அனுபவங்களையும் (கொஞ்சமாவது) சுவைத்தேனும் பார்க்க வேண்டியது ஒவ்வொருவருக்கும் அவசியமாய் உள்ளது. ஆகவே, "சகோதர சகோதரிகளுக்கு," "சிறியவர்களுக்கு," கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கு ஊழியம் புரிவதற்கான வாய்ப்புகளைக் கவனிக்க நாம் மறந்துவிட வேண்டாம். ஆட்டுக்குட்டியானவரின் பின்னடியார்கள் மீது விழுந்துகொண்டிருக்கும்/ விழ வேண்டிய நிந்தனைகளை நாம் கூட்டிவிடாமல் இருப்பதில் கவனமாய் இருப்போமாக. மேலும், ஆறுதலின் வார்த்தைகளை அவர்களுக்கு அளித்து ஒருவருக்கொருவர் வழியில் வரும் சோதனைகள், கஷ்டங்கள் மற்றும் சிலுவைகளைச் சுமப்பதற்கு உதவி செய்வோமாக. இவ்விதமாக, நம் தலையும் கர்த்தருமாய் இருப்பவரிடம் - கல்வாரிக்குப் போகும் வழியில் அவருடைய சிலுவையை அவர் சுமப்பதற்கு நாம் உதவிசெய்வதற்கான வாய்ப்பை நாம் எப்படி பயன்படுத்துவோம் என்பதைச் சிறப்பான விதத்தில் நம்மால் காட்டமுடியும்.

சிலுவையில் அறையப்படும் இடமானது, கொல்கொதாவாகும். மேலும் எபிரெய வார்த்தையான இதன் அர்த்தம் மண்டை ஓடாகும். மேலும் மண்டை ஓட்டின் இலத்தீன் வார்த்தை கல்வாரியாகும். இப்பெயர் இவ்விடத்திற்கு வழங்கப்பட்டதற்கான காரணம், எருசலேமுக்குச் சற்று வெளியே காணப்படும் இந்த மலையின் வடிவமாகவே இருக்க வேண்டும். இம்மலை தொலைதூரத்திலிருந்து பார்க்கப்படும்போது, அப்படியே மண்டை ஓடு போன்றே காட்சியளிக்கின்றது. இந்தக் கல்வாரிக்குப் போகிற வழியில்தான் எருசலேமின் சில இரக்கம் நிறைந்த ஸ்திரீகளால் தங்கள் பொதுவான வழக்கத்தின்படி கசப்பான வெள்ளைப்போளமும், புளிப்பான திராட்சரசமும் கலந்த பானத்தை மரணத் தீர்ப்புக்குக் கடந்து போகும் குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்டது. இந்தப் பானமானது, நரம்புகளின் உணர்ச்சியை இழக்க வைக்கும் தன்மையை உண்டுபண்ணுவதினால், தண்டனை நிறைவேற்றப்படும்போது, வலி குறைவாகக் காணப்படும். அந்த இரண்டு கள்வர்களும் அநேகமாக அந்தப் பானத்தைக் குடித்திருக்க வேண்டும். ஆனால், மாற்கு 15:23-ஆம் வசனமானது, குடிக்க கர்த்தர் மறுத்துவிட்டார் என்று தெரிவிக்கின்றது. அதாவது, தம்முடைய இந்த அனுபவங்கள் பிதாவின் சித்தப்படியே அனுமதிக்கப்பட்டுள்ளது என்று கர்த்தர் அறிந்திருந்தபடியினால், அந்த அனுபவங்களை தாம் முழுமையாய் அனுபவிப்பதற்குத் தடையாய் இருக்கும் எதையும் அவர் அனுமதிக்கவில்லை என்று பார்க்கின்றோம்.

அவரது தாயாராகிய மரியாளும், மகதலேனா மரியாளும், யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், செபெதேயுவின் குமாரருடைய தாயும், கிலெயோப்பாவின் மனைவியாகிய சலோமேயும் மற்றும் இயேசுவின் மற்ற பல நண்பர்களும் தைரியம் கொண்டவர்களாக, ரசமும், வெள்ளைப்போளமும் கலந்த பானத்தைக் கொண்டுவந்த ஸ்திரீகளுடன் சேர்ந்து ஊர்வலத்தில் அவருக்குப் பின்

இப்போது செல்ல ஆரம்பித்தார்கள் (மத்தேயு 27:56; மாற்கு 15:40). "திரள்கூட்டமான ஜனங்களும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள். இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" (லூக்கா 23:27-28).

இந்த வார்த்தைகள் யூத தேசம் மீது வரப்போகும் மாபெரும் உபத்திரவத்தின் காலங்களைத் தெரிவிக்கின்றதாய்க் காணப்படுகின்றது. "பச்சை மரத்திற்கே இப்படிச் செய்தார்களானால், பட்ட மரத்திற்கு எப்படியாகச் செய்வார்கள்" என்று அவரால் பேசப்பட்ட வார்த்தைகள் குறிப்பிடுவது என்னவெனில், "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" என்று அவர் முன்னமே அறிவித்தது முதல், பிறகு இஸ்ரயேல் தேசத்திற்கு ஐந்து நாட்கள் மாத்திரமே (அவகாசம்) கொடுக்கப்பட்டிருக்க, மேலும் அவர்களுடைய பசுமை தன்மையும், புத்துணர்வும், மத/பக்தியின் சக்தியும் காணப்பட்டிருக்கும்போதே ஒருவேளை அவர்களுடைய அதிகாரிகள் இப்படிப்பட்ட அநீதியையும், நியாயப்பிரமாணச் சட்டத்திற்கு மாறான அநியாயத்தையும் செய்வார்களேயானால், எதிர்க்காலத்தில் அவர்களுடைய மத/பக்தியின் சக்திகள் உலர்ந்துபோய், அவர்களுக்குரிய அழிவின் நாளுக்குரிய மாபெரும் சூளையில் போடப்படுவதற்கு அவர்கள் தேசமாக முழுமையாய் ஆயத்தப்பட்டிருக்கும்போது, என்னவெல்லாம் எதிர்ப்பார்க்கப்படலாம்; அவர்கள் மீது வரவிருக்கும் உபத்திரவ நாளுக்குரிய மாபெரும் அக்கினி சூளையானது, அவர்களுடைய ஆட்சி அமைப்பு முறையை முற்றிலும் விழுங்கிப்போடும் அளவுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது மற்றும் இப்படியாக தீர்க்கத்தரிசனமும் உரைக்கப்பட்டது. மேலும் நமது கர்த்தர் உரைத்த இந்தத் தீர்க்கத்தரிசனம் சொல்லர்த்தமாக நிறைவேறின காரியமானது, ஜோசபஸ் அவர்களால் நமக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது; அதாவது இஸ்ரயேல் தேசம் மீது கடந்துவந்த மாபெரும் உபத்திரவத்தின் காலத்தில் ஸ்திரீகள் மீதும், பிள்ளைகள் மீதும் வந்த கடுமையான பாடுகள் குறித்தும், அந்த உபத்திரவக் காலமானது கிபி 70-இல் எருசலேமின் அழிவுடன் நிறைவடைந்தது என்பவைகள் குறித்துமான விவரங்களை இவர் பதிவு செய்துள்ளார்.

"அவர் அக்கிரமக்காரர்களில் ஒருவராக எண்ணப்பட்டார்" என்ற தீர்க்கத்தரிசனத்தைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, பின்னர் அருமையான இந்த மீட்பர் கொல்லப்படுவதற்கென அன்று முன்னிலை வகித்துக்கொண்டிருந்த யூதர்கள் விடாப்பிடியாய் நாடின விஷயங்களையும் கருத்தில் எடுத்துக்கொண்டு பார்க்கையில், எந்த மனுஷனுடைய சுயாதீனத்திலும் தலையிடாமல், தெய்வீக முன்னறிவானது, தேவனுடைய சித்தம் குறித்த ஆலோசனைக்கு இசைவாக சகல காரியங்களையும் நடப்பித்தது என்பதற்கான புதிதான ஆதாரங்கள் நமக்கு வெளிப்படுகின்றன. மேலும், மனுஷனுடைய கோபமானது, தம்மைத் துதிக்கும்படிக்கும் தமது ஞானத்திற்கும், முன்னறிவிற்கும் சாட்சியாக விளங்கும்படி எப்படி நடத்தினார் என்பதற்கான புதிய ஆதாரங்களும் நமக்குக் கிடைக்கின்றது.

மரணத் தண்டனை அளிக்கப்படும் கைதியுடன், நான்கு சேவகர்கள் அனுப்பப்படுவது வழக்கமாக இருந்தது. முதலில் செல்லும் சேவகன், மரணத் தீர்ப்புக்குள்ளாயிருக்கும் கைதிகளின் குற்றங்கள் எழுதப்பட்டுள்ள வெள்ளை நிற பலகையுடன் காணப்படுவான். மேலும், இப்பலகையானது, சிலுவையில் கைதியின் தலைக்கு மேல் கட்டப்படும். முதல் சேவகனைப் பின் தொடர்ந்த நிலையில் ஆணிகள், சுத்தியல் முதலியவைகளுடன் மூன்று சேவகர்கள் பின் தொடர்ந்தனர். இந்த நான்கு சேவகர்களும், ஒரு நூற்றுக்கு அதிபதி அல்லது தலைவனின் கட்டளையின் கீழ்ச் செயல்படுபவர்கள் ஆவர். இயேசுவின் தலைக்கு மேல் சிலுவையில் காணப்பட்ட பலகையானது, மூன்று பாஷைகளில் இயேசு, யூதர்களுடைய இராஜா என்ற வார்த்தைகளினால் எழுதப்பெற்றிருந்தது. இவ்வார்த்தைகள், அந்நாட்டினுடைய பாஷையாகிய எபிரெய மொழியிலும், கல்வியறிவு உடையவர்களின் மற்றும் பயணிகளின் மொழியாகிய கிரேக்க மொழியிலும், உரோம சாம்ராஜ்யம் மற்றும் சேவகர்களின் மொழியாகிய இலத்தீன் மொழியிலும் எழுதப்பட்டிருந்தது. மேலும் இப்பலகையில் எழுதப்பட்டதான வார்த்தைகளைச் சுவிசேஷகர்கள் தெரிவிக்கும் விஷயத்தில் சில வித்தியாசங்கள் காணப்பட்டதற்கான காரணம் வெவ்வேறு பாஷைகளின் வார்த்தைகளில் காணப்படும் சில வித்தியாசங்களேயாகும் என யூகிக்கப்படலாம்.

"நசரேயனாகிய இயேசு யூதர்களின் இராஜா" என்ற வார்த்தைகளை எழுதிட கட்டளையிட்ட பிலாத்துவின் வாக்கியத்திற்குள் இருக்கும் மாபெரும் சத்தியத்தைப் பிலாத்துப் புரிந்துகொள்ளவில்லை. இயேசு ஓர் இராஜா என்ற இந்த வாக்கியத்திற்குள் அடங்கியுள்ள சத்தியத்தை இன்றும் சொற்பமானவர்களே புரிந்து கொண்டுள்ளனர். இன்னுமாக, புரிந்து கொண்டவர்களிலேயே சிலரே அவர் மேல் விசுவாசம் வைத்துக்கொண்டு உண்மையிலும், சத்தியத்திலும் தங்களுடைய இருதயத்தின் முழங்கால்களை மடக்கி முழங்கால் இட்டுள்ளனர். இன்னுமாக, கர்த்தர் கூறின பிரகாரமாக சகல முழங்கால்களும், முழங்கால் இடுவதற்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமை செலுத்தும் வண்ணமாக சகல நாவுகளும் தம்மைக் கர்த்தர் என்றும், போதகர்/எஜமான், இராஜா என்றும் அறிக்கைப்பண்ணுவதற்குமான காலம் அண்மையில் வரவிருக்கின்றது. "அந்தத் தீர்க்கத்தரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்றான்" (அப்போஸ்தலர் 3:23). அவர் யூதர்களால் உண்மையாகப் புறக்கணிக்கப்பட்டார். எனினும், (சபை) இஸ்ரயேலரின் பன்னிரண்டு கோத்திரத்தாராகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய முழு எண்ணிக்கை இன்னமும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இந்த இஸ்ரயேலரின் பன்னிரண்டு கோத்திரத்தாராகத் தெரிந்தெடுக்கப்படுபவர்கள் ஆபிரகாமின் சந்ததியாராக இருந்து, மேசியாவை இராஜாவாக ஏற்றுக்கொண்டு, தற்கால ஜீவியத்தில் அவருக்கு உண்மையாய் ஊழியம் புரிந்து அவருடைய ஊழியத்திற்காகவும், சகோதர சகோதரிகளுக்காகவும் தங்கள் ஜீவியத்தை ஒப்புக்கொடுத்து, இறுதியில் அவருடைய இராஜ்யத்தில் அவரோடுகூட

உடன்சுதந்தரர்களாகக் காணப்படுபவர்கள் ஆவர். இந்தக் கபடற்ற உத்தம இஸ்ரயேலரின் பன்னிரண்டு கோத்திரத்தாராக தெரிந்தெடுக்கப்பட வேண்டிய எண்ணிக்கையை நிறைவு செய்ய மாம்சீக இஸ்ரயேலர்களில் போதுமானவர்கள் இராதபடியினால், கடந்த 18 நூற்றாண்டுகளாக புறஜாதி ஜனங்கள் மத்தியில் தெரிந்தெடுப்பதன் மூலம் தேவன் அந்த எண்ணிக்கையை நிறைவாக்குவார். "முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன்" (வெளிப்படுத்தல் 7:4-8).

இயேசு தம்மை யூதர்களுடைய இராஜா என அறிவித்தப்படியால், யூத மத சாஸ்திரிகள் அவரை குற்றஞ்சாட்ட விரும்பினாலும், அவ்வார்த்தைகளினிமித்தமே அவர் குற்றம் தீர்க்கப்பட்டார் என்ற விஷயங்கள் பொதுஜனங்கள் பார்க்கத்தக்கதாக பலகையில் எழுதப்பட்டுக் காணப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. மேலும் இவ்விலாசமானது இயேசுவின் இவ்வறிக்கையும், அவ்வறிக்கையின் செல்வாக்கையும் குறித்து, அவர்கள் மிகவும் பயந்ததினாலேயே அவரைக் கொன்றுபோட நாடினார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். குற்றச்சாட்டுடைய பலகையின் எழுத்துக்களை மாற்றி எழுத அவர்கள் கேட்டதற்குப் பிலாத்து மறுத்தக் காரியம் நியாயமானதாகும். ஒருவேளை இயேசு தம்மை இராஜாவென அறிவித்த வார்த்தைகளில் எவ்வித முக்கியத்துவம் இல்லையெனில், அவரைக்குறித்து அவர்கள் ஏன் பயப்பட வேண்டும்? ஏன் அவர் சிலுவையில் அறையப்பட்டிருக்க வேண்டும்? ஒருவேளை அவரைச் சிலுவையில் அறையப்படும் அளவுக்கு அவருடைய அறிக்கையில் முக்கியத்துவம் காணப்படுமாயின், அவ்விஷயங்கள் தெளிவாய் வெளிக்காட்டப்பட வேண்டும் என்று பிலாத்து எண்ணினார்.

சிலுவையில் அறையப்பட்டவர்களின் உடைமைகளை, ஒவ்வொரு சிலுவையில் அறையப்படும் தருணத்திலும் பங்குபோடப்படுவது வழக்கமான காரியமாக இருந்தது; மேலும் இது உபத்திரவமான சூழ்நிலைகள் சுற்றிக் காணப்படும்போது, சேவகர்களின் இருதயக் கடினத்தையும், அலட்சியப்போக்கையும் (விருப்பு வெறுப்பு அற்ற நிலையையும்) சுட்டிக்காட்டுகின்றது. பங்கு போடப்பட்ட கூட்டத்தில் தலைப்பாகை, மேலங்கி, இடைக்கச்சை மற்றும் பாதரட்சைகள் காணப்பட்டன. மேலும், இயேசுவின் விஷயத்தில் குறிப்பிடப்படும் வஸ்திரமானது, கழுத்து முதல் பாதம் வரையிலும் உள்ள உள் அங்கியாகும்; மேலும் அது தையல் இல்லாமல் மேல் துவங்கி கீழ் வரையிலும் நெய்யப்பட்டிருப்பதை வைத்து அது சிறந்த தன்மையுள்ள துணியினால் நெய்யப்பட்டது என்பதும் தெரிகின்றது. மேலும் இந்த வஸ்திரத்தின் மீது சீட்டுப் போடப்பட்ட சம்பவமானது, சங்கீதம் 22:18-ஆம் வசனத்தில் உரைக்கப்பட்ட தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது என யோவான் கவனத்திற்குக் கொண்டு வருகின்றார். மேல் துவங்கி கீழ் வரையிலும் ஒன்றாய் நெய்யப்பட்டுத் தையலில்லாமல் காணப்படும் வஸ்திரமானது, கிறிஸ்துவின் நீதியை அடையாளப்படுத்துகின்றது. மேலும் அந்நீதியானது, பிரித்துப் பிரித்து எடுக்கப்படாமல், முழுமையாகவே சொந்தமாக்கிக் கொள்ளப்பட முடியும். மேலும், அவருடைய நீதியானது முழுமையாகக்

காணப்படுகின்றது. அது அழிக்கப்பட முடியாது. மேலும், அதைப் பெற்றுக்கொள்ளும் எவனும் மிகவும் விலையேறப்பெற்ற (நீதியின்) வஸ்திரத்தைப் பெற்றுக்கொள்கின்றான். ஆனால், அதேசமயம் அதைப் பெற்றுக்கொள்ள தவறுகின்றவன் கிறிஸ்துவுக்குள்ளாக தேவனால் கிடைக்கும் நீதிமான் நிலையைப் பெற்றுக்கொள்ள தவறுகின்றான். ஆனால், கர்த்தருடைய ஜனங்களுக்கு இந்த (நீதியின்) வஸ்திரமானது, சீட்டுப்போடுவதன் மூலமாகவோ அல்லது தற்செயலாகவோ அல்லது சந்தர்ப்பவசத்திலோ கிடைப்பதில்லை. வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்ற பிரகாரமாக அது விசுவாசம் வைப்பதினால்/காட்டுவதினால் பெறப்படுகின்றது. மேலும், விசுவாசித்தவைகளுக்குக் கீழ்ப்படிதல் காட்டுவதன் மூலம் தக்கவைக்கப்படுகின்றது. இன்னுமாக, சீட்டுப் போடப்படுவதினால், சிறுமந்தை வகுப்பாருக்கு மாத்திரமே கிடைக்கப்பெறும் கலியாண வஸ்திரத்திற்கும் கூட இவ்வஸ்திரமானது, அடையாளமாகக் கருதப்படலாம். இந்தச் சிறுமந்தையினரோ, விசுவாசத்தின் மூலமாகவும், விடாமுயற்சியின் காரணமாகவும் கிறிஸ்துவினுடைய தையலில்லாத மற்றும் கறைதிறையற்ற நீதியினால் மூடி மறைக்கப்பட்டு, அவருடைய சரீரத்தின் அங்கங்களாக இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.

நேரம் செல்ல செல்ல அப்போஸ்தலனாகிய யோவானின் தைரியம் பெருகிற்று. மேலும், நமது கர்த்தர் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும்போது, யோவான் அவருக்கு அண்மையிலேயே, அதாவது பேசுவது கேட்பதற்குரிய தூரத்திலேயே காணப்படத்தக்கதாக முன்னே வந்து நின்று கொண்டிருந்தார். அநேகமாக, கிலெயோப்பாவின் மனைவியைப் பார்த்தபோது, இவர் தைரியமடைந்திருக்க வேண்டும்; இந்தக் கிலெயோப்பாவின் மனைவி, உறவினள் என்ற அனுமானம் காணப்படுகின்றது. போதகரை அன்புகூர்ந்தவர்களும், அதேசமயம் அவருக்கு ஆறுதல் கொடுக்கவோ அல்லது அவரை விடுவிக்கவோ வலிமையற்றவர்களாகக் காணப்பட்டு, அவருக்கான அனுதாபத்தினால் தங்கள் இருதயங்கள் நிறைய பெற்றிருப்பவர்களும் துக்கத்தினால் ஒன்று கூடினார்கள். "நீர் மேசியாவானால் சிலுவையைவிட்டு தாழ இறங்கிவாரும்" என்று மற்றவர்கள் அவரைப் பரியாசம் பண்ணி, கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கையில், இவர்களோ, (இயேசுவின் நண்பர்கள்) அழுதுகொண்டு, துக்கத்துடன் காணப்பட்டார்கள். நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட காரியமானது, அவர் தம்மை மேசியாவென அறிவித்த விஷயங்களைப் பொறுத்தமட்டில் அவரை ஏமாற்றுப் பேர்வழி என்றும், அவர் ஒரு வஞ்சகன் என்றும் நிரூபிக்கப்படுவதற்கு சிறந்த ஆதாரமாகக் காணப்படும் என்று அவருடைய சத்துருக்கள் எண்ணினார்கள் என்பதில் ஐயமில்லை.

கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கும் கூட இவர்கள் பிதாவின் தயவைப் பெற்றிராதவர்கள் என்றும், அவர்கள் உண்மையில் ஏமாற்றுக்காரர்கள் என்றும் கருதப்படத்தக்கதான அனுபவங்கள் அவர்களுக்கு வர, சில சமயங்கள் பிதா அனுமதித்திருப்பது உண்மையே. கர்த்தருடைய உண்மையான சீஷர்கள் கர்த்தரோடு இருதய பூர்வமான ஒற்றுமை கொண்டிருந்ததுபோன்று, அந்த இருதய பூர்வமான

ஒற்றுமையை வெளிப்புறமான தர்ம சங்கடங்களினாலும், சந்தர்ப்பங்களினாலும் உடைத்துவிட முடியாததுபோன்று, அவர்களிடையிலான அந்த அன்பை எதிர்மாறான கஷ்டமான சந்தர்ப்பங்கள் தணித்துப்போட முடியாதது எப்படியோ, அப்படியே ஒரே ஆவியிலும், இருதய பூர்வமான இசைவுடனும் காணப்படும் அவருடைய அனைத்துச் சகோதர சகோதரிகளுக்கு இடையிலும் காணப்படுகின்றது; இவர்களும்கூட மிகவும் சோதனையான சூழ்நிலைகளிலும், எதிரிடையான சந்தர்ப்பங்களிலும் உண்மையாய்க் காணப்படுவார்கள், ஏனெனில் இவர்களிடமும் ஒரே ஆவியும், சகோதர சகோதரிகள் மீதான அன்பின் ஆவியும் உள்ளது; மேலும் இந்த அன்பின் ஆவியின் மூலம் இவர்களால் ஒருவரையொருவர் ஒரே சரீரத்தின் அங்கங்களாக அடையாளம் கண்டுகொள்ள முடிகின்றது.

நமது கர்த்தர் தாமே, உபத்திரவங்களுக்குள் காணப்படும்போது, அவர் மற்றவர்களுடைய நலன் கருதி யோசித்துக் கொண்டிருப்பதில் விளங்கும் அவருடைய இரக்கம் கொள்ளும் சுபாவத்தைக் குறித்து எத்துணை ஆழமாய் உணர முடிகின்றது. அவருடைய சொந்த வியாகுலங்கள், அவர் தம் தாய் குறித்துச் சிந்திப்பதற்கும், அவளை அன்பான சீஷனாகிய யோவானின் பராமரிப்பில் விடுவதற்கும், சொல்வதற்கும், அவர்களுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் தடைவிதிக்கவில்லை. இவ்விதமாக போதகர்,'' ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரிக்க வேண்டும்'' என்பதற்கு மாதிரியாக இருப்பதை நம்மால் பார்க்க முடிகின்றது; ''ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்'' (1 தீமோத்தேயு 5:8). ''விசுவாசம்'' என்ற வார்த்தை மற்றவர்களுக்கு அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு அன்பு காட்டுவது, இரக்கம் கொள்வது, நலனைக் கருதுவது மற்றும் பராமரிப்பது போன்றதான எண்ணங்களையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. யோவான் (மரியாளைப் பராமரிக்க) தெரிந்தெடுக்கப்பட்டதை நாம் கவனிக்க வேண்டும். அவர் தெரிந்தெடுக்கப்படுவதற்கான காரணம், முதலாவதாக, அவருடைய அன்பான சுபாவம், இரண்டாவதாக, கர்த்தருக்கும், சத்தியத்திற்கும் அவர் கொண்டிருக்கும் வைராக்கியம் மற்றும் மூன்றாவதாக, தன்னுடைய ஜீவனைப் பணயம் வைத்து யோவான் மரித்துக்கொண்டிருக்கும் போதகரின் இறுதி தருணங்களில் அவர் அருகே காணப்படத்தக்கதாகத் தைரியமாக முன்னேறி வந்தது என்பவைகள் போன்றதுதான் என்பதில் ஐயமில்லை. இந்த மூன்று விஷயங்களும் கர்த்தர் அங்கீகரிக்கும் விஷயங்கள் என நாம் கவனிக்கக்கடவோம். மேலும், இவைகளைக் கவனித்த பிற்பாடு, அவைகளை நமக்குள் விருத்திச் செய்ய நாடியிருப்போமாக. மேலும், இதன் விளைவாக அன்று காணப்பட்ட அதே போதகரால், ஊழியம் புரிவதற்கான விசேஷித்த வாய்ப்புகளால் நாம் அருளப்படுவோமாக.

நமது கர்த்தருடைய வேதனைகளுடைய நிறைவின்போதுதான் அவர், ''நான் தாகமாயிருக்கின்றேன்'' என்று கூறினார். மேலும் இது, ''என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள்'' என்ற தீர்க்கத்தரிசனம் நிறைவேறுவதற்கு இடம்

உண்டாக்கிற்று (சங்கீதம் 69:21). இது சாதாரணமான காடியல்ல, இது சேவகர்களின் சாதாரணமான விலைகுறைந்த புளித்த திராட்சரசத்தின் பானமேயாகும். ஈசோப்பின் தண்டில் மாட்டப்பட்டிருந்த காடியில் தோய்த்த கடற்காளானானது, நமது கர்த்தருடைய வாய் அருகே கொண்டு செல்லப்பட்ட காரியமானது, அவரது உதடுகளுக்கும், நாவிற்கும் ஈரத்தன்மையைக் கொடுத்தது. மேலும் இரக்கத்தினாலேயே இது செய்யவும் பட்டது என்பது உறுதியே. பல்வேறு பதிவுகள் கூறும் சம்பவங்கள் தொகுக்கப்பட்டு "சிலுவையின் ஏழு வார்த்தைகள்" என அழைக்கப்படுகின்றது.

*சிலுவையில் உரைக்கப்பட்ட முதல் வார்த்தை:* "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக்கா 23:34). இவ்வார்த்தைகள் உண்மையில் கர்த்தருடைய சத்துருக்கள் குறித்து அவர் கொண்டிருக்கும் உணர்வை வெளிப்படுத்தினாலும், பழைய கிரேக்க மூலப்பிரதிகளில் இவ்வார்த்தைகள் காணப்படுவதில்லை என்பதை இங்கு நாம் குறிப்பிடுவது சரியானதாகக் காணப்படும்.

*சிலுவையில் உரைக்கப்பட்ட இரண்டாம் வார்த்தை:* இது நமது கர்த்தர் கள்வனுக்கு அளித்த செய்தியாகும். "இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக்கா 23:43).

*சிலுவையில் உரைக்கப்பட்ட மூன்றாம் வார்த்தை:* "ஸ்திரீயே, இதோ உன் மகன் . . . . . இதோ, உன் தாய்!"

*சிலுவையில் உரைக்கப்பட்ட நான்காம் வார்த்தை:* "என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" (மாற்கு 15:34). இவ்வசனத்தைக் குறித்து ஓர் இறையியல் நிபுணர்: "முழு வேதாகமத்திலேயே இவ்வாக்கியத்தைக் காட்டிலும், வேறு எந்த வாக்கியமும் விவரிக்க கடினமாய் இருப்பதில்லை" என்று தெரிவிக்கின்றார். ஆனால், ஈடுபலி குறித்த சரியான கண்ணோட்டம் இருப்பவருக்கு, இதன் அர்த்தத்தையும், காரணத்தையும் புரிந்துகொள்வது சுலபமாய்க் காணப்படும். இந்தக் கண்ணோட்டத்தின்படி தேவனுடைய இரக்கத்தினால் ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரணத்தை ருசி பார்க்கும்படிக்கு லோகாஸ் மாம்சமாக்கப்பட்டார் என்று நாம் காண்கின்றோம் (எபிரெயர் 2:9). மேலும், நீதியைத் திருப்திபடுத்துவதற்கும், ஆதாமையும் அவர் மூலம் தண்டனையின் கீழ் வந்தவர்களையும் விடுவிப்பதற்கும், தகப்பனாகிய ஆதாமின் மீது வந்த மரணத் தண்டனையை இயேசு அனுபவிக்க வேண்டும். மேலும், ஆதாமுக்கு எதிராக வந்த தண்டனையானது, மரணமாக இருந்தபடியினால், நம்மை மரணத் தண்டனையிலிருந்து விடுவிப்பதற்கும், மரணத்திலிருந்து உயிர்த்தெழும் காரியத்தை உறுதிப்படுத்துவதற்குமெனக் கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாடுபட்டார். இன்னுமாக, ஆதாமுக்கு எதிரான தீர்ப்பானது, ஆதாமை எதிராளியாக குற்றம் தீர்த்து, பிதாவுடனான ஐக்கியம் துண்டிக்கப்படுதலையும் உள்ளடக்கி இருந்ததினால் நமது கர்த்தராகிய இயேசுவுக்கும், ஆதாமின் ஸ்தானத்தை எடுத்து, பாவிகள் பிதாவிடமிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கும் அனுபவத்திற்குள்

கடந்து செல்வது (கொஞ்சம் நேரமாகிலும் கடந்து செல்வது) அவசியமாய் இருந்தது.

ஆதாமுடைய தண்டனையின் இப்பாகத்தை பிதா மிகுந்த இரக்கத்துடன் நமது மீட்பருடைய பலியுடன் கலந்த ஊழியக்காலம் முழுவதிலும் அவர் மேல் அனுமதிக்காமல், அவருடைய கடைசி நேரங்களில் மாத்திரமே அனுமதித்தார். பிதாவுடன் அவருக்குக் காணப்பட்ட தொடர்பும், ஐக்கியமுமே சகல வேதனையான அனுபவங்களையும், முந்தின நாள் இரவின் அனுபவங்களையும் அப்படி ஒரு தைரியத்துடன் அவர் கடந்து செல்ல உதவிற்று. ஆனால், இப்பொழுதோ, கிறிஸ்துவைத் திடப்படுத்தும் பிதாவினுடைய கிருபையும், ஐக்கியமும், தொடர்பும் இயேசுவிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. சிறப்பான உணர்வுகளையுடைய நமது மீட்பர், அவருடைய அருமையான நண்பரிடமிருந்து, (பிதாவிடமிருந்து) வரும் ஆறுதலை இழந்ததினிமித்தம் முழுமையும் துயரத்திற்குள்ளானார். ஆகவேதான் என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர் என்ற வியாகுலத்தின் வார்த்தைகளைக் கூறிக் கதறினார். ஆதாமின் மீறுதலினிமித்தம் உண்டான தண்டனையின் இந்தப் பாதகத்தையும் இயேசு அனுபவிக்க வேண்டும் என்ற விஷயம் இந்தக் கடைசி நிமிஷம் வரையிலும் அவரிடமிருந்து மறைக்கப்பட்டிருந்தது.

*சிலுவையில் உரைக்கப்பட்ட ஐந்தாம் வார்த்தை:* "நான் தாகமாக இருக்கின்றேன்" இதனை நாம் ஏற்கெனவே பார்த்துவிட்டோம்.

*சிலுவையில் உரைக்கப்பட்ட ஆறாம் வார்த்தை:* "எல்லாம் முடிந்தது" என்ற வார்த்தைகள் நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஊழியம் நிறைவடைந்ததை நமக்குத் தெரிவிக்கின்றது. அவர் மரிப்பதற்காக வந்தார். மரணத்தண்டனையின் தீர்ப்பின் கீழ்க் காணப்படும் ஆதாமின் சந்ததியை மீட்கவும், தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் தம்முடைய ஜீவனால் அவர்களை விலைகொடுத்து வாங்கவும் வந்தார். பிதாவின் திட்டத்திற்கு இசைவான இவ்வேலைக்கென அவர் தம்மையே அர்ப்பணம் செய்திருந்தார். மேலும் பிதா தம்மிடத்தில் ஒப்புவித்திருந்த வேலையைத் தாம் செய்து முடித்துவிட்டதாக தமது இறப்பிற்குரிய கடைசி மூச்சு விடும் தருவாயில் அவரால் கூறமுடிந்தது. நமது அருமையான மீட்பர் அவ்வேலையை முடித்துவிட்டார் என்றும், "நீ மேசியாவானால் சிலுவையை விட்டு தாழ இறங்கி வா" மற்றும் "உன்னையே நீ இரட்சித்துக்கொள்" என்ற வார்த்தைகளினால் அவரை இம்சைபடுத்தினவர்கள் மீது அவர் சினம் கொள்ளவில்லை என்றும் நாம் அறிகையில் எவ்வளவாக சந்தோஷம் கொள்ள முடிகின்றது. மாபெரும் பலி செலுத்தப்பட்டுவிட்டது என்பதை நினைக்கையில், (அது அங்கீகரிக்கப்படும் விதத்தில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுவிட்டது எனப் பிதாவும் பின்னர்த் தெரிவித்தார் என்ற உண்மையின் அடிப்படையிலான கண்ணோட்டத்தின்படி பார்க்கையில்) நம்மால் சந்தோஷம்கொள்ள முடிகின்றது. மேலும், இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் காணப்படுகிறவர்களுக்கு ஆக்கினை தீர்ப்பில்லை என்பதை நாம் உணரும்போதும் மகிழ்ச்சியடைகின்றோம் (ரோமர் 8:1).

தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரின், நம்முடைய கர்த்தரின் பலியின் மூலம், 18 நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே பாவநிவாரணபலி நிறைவேற்றப்பட்டிருப்பினும்,

இன்னமும் நிறைவேற்றப்பட வேண்டிய மற்றும் ஒரு பாகமும் உள்ளது. தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாக நமது கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபையானது, "கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றுவதற்கு" காத்துக் கொண்டிருக்கின்றார் (கொலோசெயர் 1:24). மேலும், கர்த்தருடைய வார்த்தையின் வெளிச்சத்தில் நம் விஷயத்தை நோட்டமிடுகையில் அவ்வேலையானது, கிட்டத்தட்ட முடிவடைந்து விட்டது என்று நம்மால் கூறமுடிகின்றது. வெகு சீக்கிரத்தில் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய கடைசி அங்கமானது, தலையோடு சேர்ந்து நீதியினிமித்தம் பாடுபட்டு முடிவது சம்பவிக்கும். அப்பொழுது இந்தச் சுவிசேஷ யுகம் அல்லது பாவநிவாரண நாளுக்குரிய பலி செலுத்தும் முழு வேலையும் நிறைவடைந்து, பின்னர் மகிமையின் ஆசீர்வதித்தலின், ஆளுகை செய்தலின், சீர்தூக்குதலின் ஆயிரம் வருஷ அரசாட்சியின் யுகம் ஆரம்பிக்கும். மாபெரும் ஆசீர்வாதங்கள் மனுக்குலத்தின் மீது கடந்துவரும். அதாவது, கல்வாரியில் நிறைவேற்றப்பட்ட விலைக்கிரயமாகிய மாபெரும் ஆசீர்வாதங்கள் மனுக்குலத்தின் மீது கடந்துவரும். "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்ற வார்த்தைகளை எஜமான் கூறும்வரையிலும், போதகரின் அடிச்சுவடுகளில் நடந்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு பின்னடியானும், தனது ஓட்டம் நிறைவடையும் தருணம் வரையிலும், சுயத்தை வெறுத்துச் செல்லும் பாதையில் பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் காணப்படுவானாக (மத்தேயு 25:21).

***சிலுவையில் உரைக்கப்பட்ட ஏழாம் வார்த்தை:*** "இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்" (லூக்கா 23:46). இங்குப் பேசப்பட்ட வார்த்தைகளான நமது கர்த்தருடைய கடைசி வார்த்தைகள் சங்கீதம் 31:5-ஆம் வசனமேயாகும். வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், அவர் இவ்விதமாகவே தம்மை, சத்தியம் மற்றும் கிருபையின் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பார் என்பது ஏற்கெனவே முன்னுரைக்கப்பட்டுள்ளது. நமது கர்த்தர் அநேகம் பாவிகளுக்கான ஈடுபலியாக தம்முடைய மனுஷீக ஜீவனை ஒப்புக்கொடுப்பதை நிறைவேற்றிவிட்டார். அவருடைய விசுவாசம், கீழ்ப்படிதல் மற்றும் பலிக்கான பலனாக அவருக்கு உயர்வான தளத்தில் ஒரு புதிய ஜீவனைப் பிதா அவருக்கு வாக்களித்துள்ளார். இந்தப் புதிய ஜீவன் அல்லது புதிய சிருஷ்டியாகிய ஜீவன், நமது கர்த்தருடைய ஞானஸ்நானத்தின் போது, அவர் பரிசுத்த ஆவியைப் பெற்றபோது, அவருக்குள் ஆரம்பித்தது என எண்ணப்படுகின்றது. மேலும், இந்தப் புதிய ஜீவனானது, அவருடைய ஊழியத்தின் நாட்களிலும், மாம்சத்திற்கு அவர் நித்தமும் மரித்துக்கொண்டிருக்கும்போதும், அவருக்குள் தொடர்ந்து காணப்பட்டதாகவும்,

வளர்ந்து கொண்டுவந்ததாகவும் எண்ணப்பட்டது. வெளிமனுஷன் மரித்துக் கொண்டே இருக்கையில், உள்ளான புதுச் சிருஷ்டியோ, நாளுக்கு நாள் புதிதாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இப்பொழுதோ, (இயேசுவின்) வெளிமனுஷன் முழுமையாக மரித்துப் போகிற தருணம் வந்துவிட்டது; அதாவது முற்றிலும் ஒப்புக்கொடுக்கப்பட்டு பலி நிறைவடையும் தருணம் வந்துவிட்டது.

எதிர்க்காலத்திற்குரிய ஜீவன் குறித்த நமது கர்த்தருடைய எதிர்ப்பார்ப்பானது, பிதாவின் வாக்குத்தத்தத்திற்கு இசைவாக புதிய ஜீவனுக்கு அல்லது உயிர்த்தெழுப்பப்பட்ட புதிய ஜீவனுக்கு நேராகக் காணப்பட்டது. அவருடைய ஞானஸ்நானம் மற்றும் அர்ப்பணிப்பின்போது, அவருக்குள் ஆரம்பிக்கப்பட்டதென எண்ணப்பட்டதான புதிய மனம் அல்லது சிந்தையானது உயிர்த்தெழுதலில் பூரணமடையும் என்ற தெய்வீக வாக்குத்தத்தத்தைப் பெற்றிருந்தது. அதாவது, புதிய மனது, புதிய சிந்தைக்குப் பொருத்தமான ஆவிக்குரிய சரீரம் உயிர்த்தெழுதலில் கொடுக்கப்பட்டு, பூரணப்படுத்தப்படும் என்று தெய்வீக வாக்குத்தத்தம் காணப்பட்டது. ஆனால், இந்த மாறுதல் உடனடியாக நடக்கக்கூடாது. மூன்று நாளுக்குப் பிற்பாடே அவர் ஆவிக்குரிய சரீரமுடைய புதிய சிருஷ்டியாக உயிர்ப்பிக்கப்பட வேண்டுமெனத் தெய்வீகச் சட்டம் ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தது. இயேசு இதனை விசுவாசிக்க வேண்டும். ஒருவரும் இப்படியான வழிமுறையின்படி ஒருபோதும் கடந்து சென்றதில்லை. ஆயினும், நமது அருமையான மீட்பர் முழு நம்பிக்கையுடன் பிதாவை நோக்கிப்பார்த்தார். மேலும், முழு விசுவாசத்துடன் தமது ஜீவியத்தின் அனைத்து விஷயங்களையும், எதிர்காலத்திற்குரிய இந்த ஆசீர்வாதமான நம்பிக்கைகளையும் பிதாவின் அன்பினிடத்திலும், பிதாவின் வல்லமையினிடத்திலும் ஒப்புவித்துவிட்டதாக, அதாவது பிதாவின் திட்டம் மற்றும் வார்த்தைகளுக்கு இசைவாக தமக்கு அளிக்கப்படத்தக்கதாக ஒப்புவித்துவிட்டதாக அறிக்கைப்பண்ணினார். நமது எஜமானின் அடிச்சுவடுகளைப் பின் தொடரும் அவருடைய பின்னடியார்களாகிய நாமும்கூட, தம்முடைய குமாரனை நமக்கான மீட்பராக அன்பளிப்பாக கொடுத்தலில் மாத்திரமல்லாமல், நம்முடைய (வாழ்க்கை) பிரயாணம் முழுவதும் காணப்பட்ட அவருடைய பராமரிப்பிலும், நமக்கு முன்பாகச் சென்று, நம்மைச் சூழ்ந்துக் கொண்டு நமக்குப் பலத்தையும், ஆறுதலையும், நிச்சயத்தையும் அருளின மகா மேன்மையும் அருமையுமான அவருடைய வாக்குத்தத்தங்களை அளித்ததிலும், தம்முடைய அன்பை வெளிப்படுத்தின பிதாவின் பொறுப்பில், நம்முடைய மரிக்கும் தருணத்தில், நம்முடைய அனைத்து நலன்களையும் ஒப்படைத்துவிடுகிறவர்களாகக் காணப்பட வேண்டும்.

# பாவநிவாரணபலி நிறைவேற்றப்பட்டது

## லூக்கா 23:35-53

***"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி, நமது பாவங்களுக்காக மரித்தார்."1 கொரிந்தியர் 15:3***

"அவரைப் பரியாசம்பண்ணினபின்பு, சிவப்பான அங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி வெளியே கொண்டுபோனார்கள்" (மாற்கு 15:20). அன்றைய நாளில் மரணத்தீர்ப்பு வழங்கப்பட்ட இரண்டு குற்றவாளிகளுடன், இயேசு அப்பொழுது நூற்றுக்கு அதிபதி ஒருவனிடத்தில் ஒப்படைக்கப்பட்டார்; இந்த மூன்று கைதிகளில், ஒவ்வொருவரும் நான்கு உரோமச் சேவகர்களின் கீழ்க் காணப்பட்டனர் மற்றும் இவர்கள் ஒரு நூற்றுக்கு அதிபதியினுடைய கீழ்க் காணப்பட்டனர்; மொத்தம் பதினாறு நபர்களாகக் காணப்பட்டனர். அப்பொழுது காலை ஒன்பது மணியாக இருந்தது; முந்தின இரவு முதல் உணவோ, இளைப்பாறுதலோ இல்லாமல், தம்முடைய சத்துருக்களினால், குட்டப்பட்டு, அடிக்கப்பட்டு, சித்திரவதைப்படுத்தப்பட்டுக் காணப்பட்ட நமது கர்த்தர், அன்றைய வழக்கத்தின்படி, அவர் சுமந்து செல்ல வேண்டிய சிலுவையின் கடினமான பாரத்தினால் வலுவிழந்து காணப்பட்டார் எனப் பாரம்பரியம் தெரிவிக்கின்றது. இதற்கு இசைவாகவே, இயேசுவுக்காகச் சிலுவைச் சுமக்கும்படிக்கு, சிரேனே ஊரானாகிய சீமோன், போர்ச்சேவகர்களால் பலவந்தம் பண்ணப்பட்டார் என்று சுவிசேஷத்தின் பதிவுகள் காணப்படுகின்றன. எனினும் "சிலுவையை அவர் பின்னே சுமந்துகொண்டு வரும்படி" எனும் லூக்கா அவர்களின் பதிவை வைத்து, சீமோன் இயேசுவுக்குப் பின்னாகச் சென்றார் என்றும், இயேசு சிலுவையைச் சுமப்பதற்கு உதவி மாத்திரமே அளித்தார் என்றும் சிலர் கூறுகின்றனர்.

எப்படியிருப்பினும் எஜமானுக்கு ஊழியம் புரியும் விஷயத்தில், மிகவும் பொறாமைப்படுவதற்கு ஏதுவான ஒரு வாய்ப்பையே சீமோன் பெற்றிருந்தார்; அதாவது எஜமானுடைய பாரப் பளுவைப் பங்கிடுவதில் மாத்திரமல்லாமல், அவருடைய அவமானத்திலும் பங்கடைவதில் மகிழ்ச்சியாய்க் காணப்படும். இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்களில் சிலரால் வாஞ்சையாய்ப் பற்றிப் பிடிக்கப்படும் ஒரு வாய்ப்பை சீமோன் பெற்றிருந்தார். ஆனால் விநோதமாய்ச் சொல்ல வேண்டுமெனில், அந்த வாய்ப்பு இப்பொழுது நம்மிடத்தில் உள்ளது மற்றும் கர்த்தருடைய சீஷர்களாய் இருப்பவர்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்பற்றிச் செல்வதற்குரிய சிலாக்கியத்தில் காணப்படுகின்றனர்; ஏனெனில் சிலுவையின் அவமானம் இன்னும் முடிவடையவில்லை. சிலுவையானது இன்று நாகரிகமான பாணியாகிவிட்டது என்பதும், சிலுவைப்பற்றின சிந்தனைகள் இல்லாமலும், அதன் அர்த்தம்பற்றின சிந்தனை இல்லாமலும், சிலுவையின் அவமானத்தையோ, நிந்தனையையோ, பாரத்தையோ சுமப்பதற்கான எவ்விதமான விருப்பம் இல்லாமலும், சிலுவை அணிகலனாக அணியப்பட்டு வருகின்றது என்பதும் உண்மைதான். ஆனால் போதகருடைய ஆவியை உடையவர்கள் இன்னமும் காணப்படுகின்றனர் மற்றும் இவர்களிடத்திலேயே

அப்போஸ்தலர் இவ்வார்த்தைகளைக் கூறுகின்றார்: "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்;" "நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" (ரோமர் 8:17; 2 தீமோத்தேயு 2:12; 1 யோவான் 3:16; கொலோசெயர் 1:24).

மனிதனாகிய கிறிஸ்து இயேசு பரிசுத்தராகவும், குற்றமற்றவராகவும், மாசில்லாதவராகவும், பாவிகளுக்கு விலகினவராகவும், பூரணராகவும் காணப்பட்டாலும், அவர் சரீர பலத்திலோ, உயரத்திலோ இராட்சதனாக இருக்கவில்லை. இதிலிருந்து பரிபூரண மனிதன் சரீர ரீதியில் இராட்சதன் போலவோ அல்லது காட்டுமிராண்டித்தனமான பலமுடையவனாகவோ இல்லை என்பது தெரிகின்றது; ஏனெனில் பரிபூரண மனிதன் எப்படிக் காணப்பட்டாரோ, அப்படியாகவே பரிபூரண மனிதனுக்கு ஈடுபலியாகும்படிக்கு, நமது கர்த்தராகிய இயேசுவும் காணப்பட வேண்டும். அநேக மனிதர்களிடத்தில் நாம் காணும் முரட்டுத்தனமான மற்றும் காட்டுமிராண்டித்தனமான/மிருகத்தனமான பலமானது, மற்றவர்களிடத்தில் காணப்படும் பலவீனம் மற்றும் வலுவின்மையைப்போன்ற சீர்கேடேயாகும்; சொல்லப்போனால் சீர்கேடு இன்னொரு விதத்தில் இப்படியாக (மிருகத்தனமாக) வெளிப்பட்டுள்ளது. மிகுந்த மிருகத்தனமான பலத்துடனும், முரட்டுத்தனமான இயல்புடனும் உள்ள நபருக்கு அபூர்வமாகவே, இந்தப் பலத்தின் அளவுக்குத்தக்கதான திறமிக்க மூளையின் ஆற்றலும், சீரான மனநிலையும் காணப்படுகின்றது. சீர்த்திருத்தலின் வேலை நிறைவடையும்போது, மனிதன் முரட்டுத்தனமான மற்றும் இராட்சத பலமுள்ள நிலைக்குக் கொண்டுவரப்படுவான் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது; மாறாக சரீர ரீதியிலும், மன ரீதியிலும் சீரான மற்றும் நேர்த்தியான நிலைக்குக்கொண்டுவரப்படுவான். இன்னுமாக நமது கர்த்தருடைய மூன்றரை வருட ஊழியக்காலமானது பொது ஜனங்கள் மத்தியில் அவர் பண்ணின பிரசங்கம் தொடர்புடைய விஷயத்திலும், தம்முடைய சொந்த சத்துவத்தைக் கொடுத்து அவர் செய்திட்ட அற்புதங்கள் தொடர்புடைய விஷயத்திலும், அவரது உயிராற்றலை/சத்துவத்தைத் தொடர்ந்து செலவழித்ததாய் இருந்தது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. "அவரிடத்திலிருந்து வல்லமை (சத்துவம்) புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள்" (லூக்கா 6:19).

கல்வாரியை நோக்கின பிரயாணம், ஒரு சோகம் நிறைந்த காட்சியாகும். சிலர் அழுதுகொண்டே ஊர்வலத்தில் பின்தொடர்ந்தனர்; இப்படியாக அனுதாபமும், இரக்கமும் கொண்டிருந்த ஸ்திரீகளிடத்திலேயே இயேசு திரும்பி, "நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்று கூறினார் (லூக்கா 23:28). இரட்சகருடைய எண்ணங்களானது, அவரைப்பற்றியே முழுமையாய் மையம் கொண்டிருக்கவில்லை; மாறாக இன்னும் சீக்கிரத்தில் எவ்வாறு இந்த அநீதியானது ஜனங்கள் மீது பின்விளைவைச் செயல்படுத்தப் போகின்றது

என்பதையே இயேசு சிந்தித்தவராய்க் காணப்பட்டார்; இந்த ஜனங்களின் பிரதிநிதிகள் தேவனுக்கும், மனிதர்களுக்கும் முன்பாக, "இவருடைய இரத்தப்பழி, எங்கள் மீதும், எங்கள் பிள்ளைகள் மீதும்" வரக்கடவது என்று கூறினவர்களாய் இருந்தனர். தானியேல் மற்றும் எரேமியாவின் தீர்க்கதரிசினங்களில் குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ள, எருசலேமின் மீது வரவிருக்கும் உபத்திரவத்தின் விவரங்களை நமது கர்த்தர் மனதில் கொண்டிருந்தார் என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை (தானியேல் 9:24-27; எரேமியா 6). எருசலேம் முற்றுகையிடப்பட்ட சம்பவத்தையும், எவ்வாறு ஸ்திரீகளும், பிள்ளைகளும் அக்காலக்கட்டத்தில் விசேஷமாய்த் துன்பப்பட்டார்கள் என்பதையும் நினைவுகூரும் போது, எவ்வளவு சொல்லர்த்தமாகவே நமது கர்த்தருடைய வார்த்தைகள் நிறைவேறியுள்ளது என்பதை நாம் எண்ணுகின்றோம். ஒருவர் இப்படிப்பட்ட சோதனையான/கடுமையான சூழ்நிலைகளில் காணப்படும்போது அவர் தம்மைப்பற்றிக் குறைவாகவும், மற்றவர்களைப்பற்றி அதிகமாகவும் எண்ணுவது என்பது, பெருந்தன்மையுடைய மனதிற்கான அடையாளமாகும்.

கல்வாரியில் வந்து சேர்ந்த பின், சிலுவையில் அறையப்படுதல் நடைப்பெற்றது. வழக்கமாக சிலுவைத் தரையில் கிடத்தப்பெற்ற நிலையில், குற்றவாளி ஆணியினால் சிலுவையில் அறையப்படுகின்றார் மற்றும் நான்கு கட்டுறுதியான போர்ச்சேவகர்கள் சிலுவையைத் தூக்கி, அதனைக் குழிக்குள் பொருத்தி, நிற்கப்பண்ணுகின்றனர். சிலுவையானது செங்குத்தான நிலைக்குக் கொண்டுவரப்படும்போது, ஏற்படும் குலுக்குதலினால் காயத்தின் வலி அதிகரிக்கின்றது மற்றும் தொங்கிக் கொண்டிருக்கும் சரீரத்தினுடைய பாரப் பளுவினால், வலி கடுமையாய் அதிகரிக்கின்றது. சிலுவையில் அறையப்படுதல் என்பது, மிகவும் கொடூரமாய் மரிக்க வைக்கும் முறைமையாகும்; உரோமர்கள்கூட இந்த முறைமையைக் குற்றவாளிகள் மீதே, அதாவது சட்டத்தை மீறுபவர்கள், கலகவாதிகள் மற்றும் கொள்ளையர்களாகிய குற்றவாளிகள் மீதே செயல்படுத்துவர். இப்படியாகத் தீர்க்கத்தரிசியினுடைய வார்த்தைகளுக்கு இசைவாக இயேசு, "அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்" என்று பார்க்கின்றோம் (ஏசாயா 53:12).

நமது கர்த்தருடைய சிலுவையில், அவரது தலைக்கு மேலாக அவரது குற்றம், அதாவது அவர் குற்றவாளியெனத் தீர்ப்பு கூறப்பட்டு, மரணத் தண்டனைக்கு ஒப்புக்கொடுக்கப்படுவதற்கான காரணம் மூன்று மொழிகளில், "நசரேயனாகிய இயேசு, யூதருடைய இராஜா" என்று எழுதப்பட்டிருந்தது. இது அதிகாரத்திற்கும், வல்லமைக்கும் பிரதிநிதியாய்க் காணப்பட்ட உரோமர்களின் மொழியாகிய இலத்தீன் மொழியிலும், பண்பாட்டிற்கும், கல்விக்குமான மொழியாக திகழ்ந்த கிரேக்க மொழியிலும், தேவனுக்குப் பயப்படுவதாகக் கூறிக்கொள்ளும் ஜனங்களின் எபிரெய மொழியிலும் எழுதப்பட்டிருந்தது. இதை வாசித்தவர்களுக்கு, இது அவமானம் மற்றும் இகழ்ச்சிக்குரிய பட்டமாகவும், தேவதூஷணத்திற்கான அடையாளமாகவும் காணப்பட்டது; பட்டணத்துக்குப் போக்கும், வரத்துமாய் இருந்த திரளான ஜனக்கூட்டத்தினர், இந்த அவருடைய வாசகத்தினிமித்தம் பரியாசம் பண்ணினவர்களாகவும், இப்படிப்பட்ட உயர் கனங்களையும், மதிப்புகளையும்

தமக்கென உரிமைப்பாராட்டிக்கொண்டு தவறு செய்ய முற்பட்ட விஷயத்தில், இயேசுவின் மோசடி மிகவும் தோல்வியடைந்ததினிமித்தமும் பரியாசம் பண்ணினவர் களாகவும் காணப்பட்டனர். தங்களுடைய கைதி மரித்துப்போவதைக் காணத்தக்கதாக பிரதான ஆசாரியர்களும், அதிகாரிகளுங்கூட அங்கு வந்திருந்தனர்; தங்களது நடவடிக்கையிலுள்ள அநீதி தொடர்புடைய விஷயத்தில் அவர்களுக்கு இருந்த கொஞ்சமான மனசாட்சி குத்துதலுங்கூட, இயேசுவை மரிக்கப்பண்ணுவதில் அவர்கள் அடைந்திட்ட வெற்றியிலும், இயேசு தம்முடைய ஆபத்துக் காலத்தில் தம்மை இரட்சிக்க வல்லமையற்றவர் போன்று காணப்பட்டதிலும், அவர்களுடைய தீர்ப்பு நிலைநாட்டப்பட்டதினால் அடக்கப்பட்டுவிட்டது போன்று தோன்றுகின்றது. பொறுப்பேற்றிருந்த போர்ச்சேவகர்களுங்கூட (இயேசு மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப பட்ட) இக்காரியத்தில் மற்றொரு மோசடி வெளிப்பட்டுள்ளதாகவும், இராயனுடைய அதிகாரத்திற்கு எதிராக தன்னையே உரிமைப் பாராட்டிக்கொண்ட ஒருவர் அவமானமாய் மரணத்திற்கு ஒப்புவிக்கப்பட்டதாகவும் கருதினார்கள்.

இயேசுவின் தாயாரும், அவளுடைய சகோதரியும், சீஷனாகிய யோவானும், அவருடைய தாயாரும், மகதலேனா மரியாளும், கிலெயோப்பாவின் மனைவியாகிய மரியாளும் அங்குக் காணப்பட்டதாக, பதிவுகள் தெரிவிக்கின்றன (யோவான் 19:25; மத்தேயு 27:56). இவர்கள் அனைவரும் துக்கத்தில் காணப்பட்டார்கள்; இவர்களில் அநேகர் அழுதுகொண்டிருந்தனர். நமது கர்த்தரால் உரிமைப் பாராட்டிக்கொள்ளப் பட்டக் காரியங்கள் வஞ்சனைகள் என்று அதிகாரிகளும், ஜனங்களும் உறுதிப்படுத்தினவைகளை இவர்களால் மறுத்துக்கூற முடியவில்லை; அத்தகைய வல்லமையைக்கொண்டிருந்த அவர் மற்றும் தாங்கள் அத்தகைய ஒரு நம்பிக்கையை வைத்திட்ட அவர் எப்படி இங்ஙனம், தம்முடைய சத்துருக்களின் கரங்களில், ஒன்றும் செய்ய இயலாதவராகக் காணப்பட முடியும் என்பதை இவர்களால் புரிந்துகொள்ளவும் முடியவில்லை. கலிலேயாவின் காற்றும், அலைகளும் அவருக்கு எவ்வாறு கீழ்ப்படிந்தன என்பதையும், அவரது கட்டளையின் வார்த்தைகளை எதிர்த்திட முடியாத அசுத்த ஆவிகள் எவ்வாறு பிசாசு பிடிக்கப்பட்டவர்களிடமிருந்து வெளியேற்றப்பட்டன என்பதையும் இவர்கள் நினைவுகூர்ந்தபோது, தற்போது அவர் இயலாதவராகக் காணப்படுவதை இவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. கர்த்தரைத் தூஷிக்கிறவர்களுக்கு, அத்தருணத்தின்போது இவர்களால் எந்தப் பதிலையும் கொடுக்க முடியாவிட்டாலும், இவர்கள் கர்த்தரை அன்புகூர்ந்தார்கள்; ஏனெனில் அவருடைய வல்லமையும், அவருக்கான பட்டங்கள் என்னவாக இருப்பினும், பரம பிதாவுடனான தம்முடைய உறவை அவர் கொஞ்சம் மிகைப்படுத்தியே கூறியிருந்தாலும் சரி அல்லது இல்லாவிட்டாலும் சரி, "இந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும், ஒருக்காலும் பேசினதில்லை" மற்றும் மனுஷர் மத்தியில் தூய்மையின் விஷயத்திலும், ஆத்துமத்தின் உயர்தன்மையின் விஷயத்திலும், இயேசுவுக்கு ஒப்பாக எந்த மனுஷனையும் இவர்கள் அறிந்திருக்கவில்லை. அவரை அன்புகூர்ந்து, அவரில் விசுவாசம் வைத்து, தாங்கள் சந்திக்கின்ற இந்த முரண்பாடான சூழ்நிலைக்குறித்த ஏதேனும் விளக்கங்களுக்காக காத்திருப்பதைக்காட்டிலும், இவர்களால் வேறு எதையும்

செய்ய முடியவில்லை. அன்று முதல், இன்றுவரையிலான கர்த்தருடைய பின்னடியார்களின் விஷயத்திலும் இப்படியாகவே சில சமயங்களில் காணப்படுகின்றது. அவ்வப்போது புரிந்துகொள்ள முடியாத விதத்தில், கர்த்தருடைய வார்த்தைகள் தொடர்புடையதாய்ச் சில விஷயங்கள் நடைபெறுகின்றது மற்றும் தம்முடைய ஜனங்கள் பாடு அனுபவிக்கும்படிக்குச் சிலவற்றை கர்த்தர் அனுமதிக்கின்றார் மற்றும் அவர்களது எதிராளியானவர்கள் செயல்படுவதற்குச் சில அதிகாரங்களையும் அனுமதிக்கின்றார் மற்றும் இம்மாதிரியான தருணங்களில் அவருடைய பின்னடியார்கள் அமைதி மாத்திரமே காக்க வேண்டிய கட்டாயத்திற்குள் காணப்படுகின்றனர்; ஆனால் நெருக்கமான ஐக்கியத்தின் காரணமாகவும், இருதயத்தினுடைய உறவு காரணமாகவும், கர்த்தரை அறிந்திருப்பவர்களும், தேவனுடைய ஆழமான காரியங்களினால் போஷிக்கப்பட்டவர்களும், அவருடைய ஆவியை பானம் பண்ணினவர்களும், பிரச்சனைகளை/சிரமங்களை விவரிக்க முடியாவிட்டாலும், கர்த்தரில் விசுவாசமும், நம்பிக்கையும் முழுமையாய்க் கொள்ளவும், அவருடைய அனைத்துக் கிரியைகளும், வார்த்தைகளும், வழிநடத்துதல்களும் ஏற்றகாலத்தில் நியாயமென நிரூபிக்கப்ப டுவதற்குக் காத்திருக்கவும் முடியும்.

நமது கர்த்தரை மற்றவர்கள் நிந்தித்தும், அவருடைய மேசியாத்துவத்தை வெளிப்படுத்தவும், சிலுவையிலிருந்து இறங்கி வருவதற்கு வசைப்பாடியும் கொண்டிருந்தபோது, கள்வர்களில் ஒருவன் இழிவான தாக்குதல் பேச்சில் இணைந்துகொண்டான்; மரிக்க வேண்டிய நேரம் நெருங்குவதை உணர்ந்தவனாகவும், தனது சொந்த குற்றத்தை ஒத்துக்கொண்டவனாகவும் காணப்பட்ட மற்றொரு கள்வனோ, தன்னிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தன்மைகளையும், குணலட்சணங் களையும் உடைய நபராக இயேசு காணப்படுவதை அடையாளங்கண்டு கொண்டது தெரிகின்றது. பதிவுகளைப் பொறுத்தமட்டில், இந்தக் கள்வன் மாத்திரமே, அவதூறுகளுக்கு எதிரான கண்டனத்தைத் தெரிவிப்பதற்கும், தம்மைத் தற்காத்துக் கொள்வதற்கென எதுவும் கூறாமலும் மற்றும் இப்படியாக நன்மை செய்யும் விஷயத்தில் பொறுமையுடன் கூடிய சகித்தலுக்கு அருமையான மாதிரியை முன்வைத்திட்ட சாந்தமும், மனத்தாழ்மையும் உள்ளவர் சார்பாக பேசுவதற்கும் தனது குரலை எழுப்பினவனாகக் காணப்படுகின்றான். ஒருவேளை அவர்கள் அறைக்கூவலிட்டதற்கு ஏற்ப, இயேசு தம்முடைய வல்லமையை நிரூபித்திருப்பாரானால் அவர், அவரை இகழ்ந்து, அவரைச் சிலுவையில் அறைந்தவர்களுடைய நம்பிக்கைகளைச் சிதைத்துப்போடுபவராக இருப்பது மாத்திரமல்லாமல், ஒட்டுமொத்த மனுக்குலத்தின் நம்பிக்கைகளையும் சிதைத்துப் போட்டவராகவும் இருந்திருப்பார். ஓ! அவர் மரணம் வரையிலும், அதாவது சிலுவையின் மரணப்பரியந்தம் காண்பித்த உண்மையினிமித்தம் நாம் எவ்வளவாய்க் களிகூருகின்றோம்! அவர் தம்முடைய வல்லமையைச் செயல்படுத்தாமலும், தம்மை விடுவிப்பதற்கென, "பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை" அழைக்காமலுமிருந்து, மாறாக ஆதாம் மற்றும் அவரது சந்ததிக்கான ஈடுபலியென, தம்முடைய சொந்த ஜீவனை ஒப்புக்கொடுத்து, தம்மைப் பலிச் செலுத்தினபடியாலும் நாம் எவ்வளவாய் அவரைத் துதிக்க வேண்டும்!

இயேசு நீதியினிமித்தமாக பாடு அனுபவித்து, பொறுமையுடன் சகிப்பதைக் கண்டதால் மாத்திரமேயல்லாமல், மற்றப்படி மனவருந்தின கள்ளனுக்கு இயேசுவைப் பற்றி எதுவும் தெரியாது; "தேவனற்றவர்களாகவும், நம்பிக்கையில்லாதவர்களுமாகிய" சிலருக்கு, உபத்திரவத்தின் மத்தியில் பொறுமையுடன் காணப்படும் கர்த்தருடைய பின்னடியார்களுடைய நடக்கையானது பலமான மற்றும் சிறந்த பாடமாக சில சமயங்களில் காணப்படுவது போன்றே, இந்த ஜீவனுள்ள நிரூபமானவர் (இயேசு) இந்த மனம் வருந்தின கள்வனிடத்தில் தாக்கத்தை ஏற்படுத்தினார். கர்த்தருடனான இந்தச் சொற்ப நேரப் பழக்கத்தினால், இந்தக் கள்வன் ஒரு பரிசுத்தவானாகிவிட்டான் என்று குறிப்பிடுவதற்கு எந்த நிரூபணமும் காணப்படவில்லை; இந்தக் கள்வன் ஜெயங்கொண்டவனாகவும், இராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் உடன்சுதந்தரவாளியாகவும் காணப்படத்தக்கதான குணலட்சணத்தை அவ்வேளையில் கொண்டிருந்தான் அல்லது வளர்த்துக்கொள்ள முடிந்தது என்று சொல்வதற்கும் எந்த நிரூபணமும் இல்லை. இம்மாதிரியான கருத்துக்களுக்கு எதிர்மாறாகவே அனைத்தும் காணப்பட்டன. கள்வன் தான் ஒரு குற்றவாளி என்றும், நியாயப்பிரமாணத்திற்கு/சட்டத்திற்கு ஏற்ப மரணத்திற்குப் பாத்திரவான் என்றும், இயேசு குற்றமற்றவர் என்றும், எதிர்கால இராஜ்யம் தொடர்புடையதாய் இந்த அருமையான மனிதனாகிய இயேசு உரிமைப் பாராட்டிக்கொண்ட விஷயங்கள் கொஞ்சமேனும் நிகழ்வதற்கு வாய்ப்புள்ளது என்றும் உணர்ந்துமாத்திரம் கொண்டான். இயேசுவின் சார்பில் ஒரு வார்த்தையாகிலும் கூறிவிட்டு, பின்னர் ஒருவேளை இயேசு கூறியிருந்த பிரகாரமாகவே இராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு வரும்போது, தான் அவர் சார்பில் பேசினதைத் தயவாய் நினைவுகூர்ந்து, அவரது இராஜ்யம் வருகையில் தனக்கு இரக்கம் பாராட்டும்படிக்கு, இயேசுவிடம் கள்வன் வேண்டிக்கொள்ள வேண்டுமென்றிருந்தான்.

## பரதீஸ் வாக்களிக்கப்பட்டது

"இயேசு அவனை நோக்கி; இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே (என்பது அப்படியே ஆகக்கடவது, அப்படியே ஆகக்கடவது) உனக்குச் சொல்லுகிறேன் என்றார்"* (லூக்கா 23:43). [*ஆங்கிலத்தில் today என்ற வார்த்தைக்குப் பின்பே காற் புள்ளி இடம்பெற வேண்டுமே ஒழிய, முன்பு அல்ல; இப்படியாக இடம்பெறும்போதே நமக்கு, முன்பிருக்கும் உண்மைகளுக்கு இசைவாகப் பார்க்கப்பட முடியும், மற்றும் மற்ற வேதவாக்கியங்களுக்கும் இசைவாகப் பார்க்கப்பட முடியும். ஆரம்பத்தில் வேதவாக்கியங்களில் நிறுத்தல் குறியிடுதலானது (Punctuation) கிடையாது. நிறுத்தல் குறியீடு சமீபக்காலத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது]. கள்வன் கேட்டுக்கொண்டது, அப்படியே ஆகக்கடவது ஒழிய மற்றப்படியல்ல. பாவம் உலகத்தில் பிரவேசித்தபோது, தண்டனையின் ஒரு பாகமாக, இழந்துபோகப்பட்டதும், கல்வாரியில் அப்பொழுது இயேசுவால் நிறைவேற்றப்பட்ட பலியினால் மீட்கப்பட்டதுமான பரதீஸ், இயேசுவின் இராஜ்யம் வரும்போது, அந்த இராஜ்யத்தின் விளைவாக திரும்ப அடையப்படும். அவர் தம்முடைய இரண்டாம் வருகையின் போது,

இராஜ்யத்தில் வருகையில், கள்வன் கேட்டுக்கொண்டதுபோல, இராஜ்யத்தில் கள்வனை நினைவுகூருவார் மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி நமது அருமை மீட்பருடைய சோதனையான வேளையில், ஆறுதலான வார்த்தைகளைப் பேசினதற்காக திரளான பலன்களைக் கள்வன் அடையப்பெறுவான். ஆனால் இந்தப் பலனானது சிங்காசனத்திலோ, இராஜ்யத்திலோ, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகக் காணப்படும் ஸ்தானமாக நிச்சயமாய் இருக்கப்போவதில்லை; ஏனெனில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மத்தியிலான இந்த ஸ்தானம் என்பது, தேவனுடைய அருமையான குமாரனுக்கொத்த சாயலை அடைபவர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்படுகின்றது (ரோமர் 8:29). இதைத் தவிர பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத எவரும் இந்த ஸ்தானத்தை அடையவும் முடியாது மற்றும் இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதலுக்குப் பிற்பாடு, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானது, பணிவிடை வீட்டாரிலிருந்து, புத்திரர் வீட்டாருக்குள் கொண்டுவரப்படுவதற்கெனக் காத்திருந்தவர்கள்மேல் வருவதற்கு முன்பு வரையிலும், புதிய சுபாவத்திற்குள்ளாக ஜெநிப்பிக்கும் வல்லமையாகப் பரிசுத்த ஆவியானது அருளப்படவில்லை (யோவான் 1:12; 7:39).

கள்வன் நன்கு குணலட்சணத்தில் வளர்ச்சியடைந்து, இராஜ்யத்தில் ஏதேனும் பங்கடைவதற்கு முன்னதாகவே, சீக்கிரத்தில் மரித்துப்போய்விட்டான்; அதாவது யோவான் ஸ்நானன் சீக்கிரமாய் மரித்துப்போனதுபோல மரித்துப்போய்விட்டான். இந்த யோவான் ஸ்நானனைக்குறித்து நமது கர்த்தர், யோவானைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி இல்லையென்றாலும், "பரலோக இராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் (இராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட சபையாக, உடன்சுதந்தரர்களாக இருப்பவர்கள்) அவனிலும் பெரியவனாயிருக்கிறான் என்று" கூறினார் (மத்தேயு 11:11). இராஜ்யம் வரும்போதும் மற்றும் பரதீஸ் திரும்பக்கொடுக்கப்படும்போதும், மனம் வருந்தின கள்வன் மாத்திரமல்லாமல், மனம் வருந்தாத கள்வனும், அந்த உரோம போர்ச்சேவகர்களும், அந்த இரத்த வெறிக்கொண்டிருந்த வேதபாரகர்களும், பரிசேயர்களும், ஆசாரியர்களுங்கூட, பரதீசில் காணப்படுவார்கள். இவர்கள் தங்களுடைய சொந்த தகுதியினால் அங்குக் காணப்படாமல், மாறாக இவர்களது தண்டனையை ஏற்றுக்கொண்டு, இவர்கள் ஆயிரவருட பரதீசில் தேவனைப் பற்றின அறிவிற்குள் வருவதற்கும் மற்றும் இவர்கள் விரும்பும் பட்சத்தில் கீழ்ப்படிதல் வாயிலாக நித்தியமான ஜீவனை அடைவதற்குமான முழு வாய்ப்பையும் இவர்களுக்கு உறுதியளித்தக் கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியம் காரணமாகவே இவர்கள் பரதீசில் காணப்படுவார்கள்.

"இன்றைக்கு என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்ற வார்த்தைகள் எத்துணை அழுத்தம் நிறைந்ததாகக் காணப்படுகின்றது; "என்னுடைய சார்பிலிருந்து இயலாமை வெளிப்படுவது போன்று தோன்றினாலும் மற்றும் என்னுடைய சத்துருக்கள் வெற்றியடைந்துவிட்டதுபோன்று தோன்றினாலும், . . . உன்னுடைய விண்ணப்பத்திற்குப் பதிலளிக்கப்படும் என்றும், நான் என்னுடைய இராஜ்யத்தில்

வரும்போது, பரதீஸ் திரும்ப அடையப்பெறும் மற்றும் தெய்வீகத் திட்டத்தில் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை அருளிட நான் அங்கு இராஜாவாகவும், ஆசாரியனாகவும் இருக்கையில், நீ ஆசீர்வதிக்கப்படத்தக்கதாக அங்குக் காணப்படுவாய் என்றும், நான் இன்றைக்கு உன்னிடம் கூறுகின்றேன்" என்ற விதத்தில் இயேசு கூறினார். ஏதேன் தோட்டமே, இழந்துபோகப்பட்ட பரதீசாகும் மற்றும் இது ஏற்றவேளையில், இதையும் (ஏதேனையும்) மனுக்குலத்தையும் தம்முடைய பலியினால் விலைக்கு வாங்கினவரால் பெரிய அளவிலும் மற்றும் பிரமாண்டமான அளவிலும் திரும்பக்கொடுக்கப்படும் (எபேசியர் 1:14; வெளிப்படுத்தல் 2:7).

சிலுவையில் அறைந்தவுடனே, இயேசுவைப் பொறுப்பேற்றிருந்த நான்கு போர்ச்சேவகர்களும் தங்களுக்குள் அவரது வஸ்திரங்களைப் பங்கு போட்டுக் கொண்டார்கள்; ஆனால் இயேசுவினால் அணியப்பட்டிருந்த உயர்தரமான மற்றும் விலையுயர்ந்த நெய்யப்பட்ட அங்கியானது, போர்ச்சேவகர்கள் அனைவராலும் விரும்பப்பட்டதினால், அதற்காகச் சீட்டுப்போட்டனர். அந்த அங்கியானது, கிறிஸ்துவினுடைய நீதிக்கு, அதாவது கிறிஸ்துவோடு கூடப் பாடுபட்டு, இராஜ்யத்தில் அவருடன் கூட உடன் சுதந்தரத்துவத்தை அடைவதற்குரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டிருக்கும், மிகுந்த கிருபைப் பெற்றவர்களுக்கு, இந்தச் சுவிசேஷ யுகத்தில் அருளப்படும் மிகவும் விலையேறப் பெற்ற கலியாண வஸ்திரத்திற்கு அருமையான அடையாளமாய் இருக்கின்றது. கிறிஸ்துவினால் தரிப்பிக்கப்படும் நீதியாகிய இந்த வஸ்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான சிலாக்கியம்/பாக்கியம் அல்லது சீட்டு, நாகரிகமான தேசங்களிலுள்ள நம் பேரில் பிரதானமாய் விழுந்துள்ளது; நமக்கே கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையான திட்டம் குறித்த அறிவின் வெளிச்சம் அருளப்பட்டுள்ளது. அந்த அங்கியானது, அடையாளப்படுத்தும் கிருபைகளைப் பெற்றுக்கொள்வதற்குரிய சிலாக்கியம் (அ) சீட்டு நம்முடையதாய் இருக்கின்றபடியால் நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய்க் காணப்பட வேண்டும். இதை உணர்ந்துகொள்பவர்கள், தாங்கள் உணர்ந்துகொண்டுள்ளதை, தங்களது அன்றாட ஜீவியத்தின் சகல காரியங்களிலும் வெளிப்படுத்துகிறவர்களாகவும், உலகத்திலிருந்து தங்களது வஸ்திரத்தைக் கறைப்படாமல் காத்துக்கொள்வதற்கு நாடுபவர்களாகவும், வஸ்திரம் கறைதிறை அற்றதாகவும், கர்த்தருடைய குணலட்சணத்தினுடைய சகல கிருபைகளினால் சித்திர தையலிடுவதற்கு நாடுபவர்களாகவும் காணப்படுவார்கள்; இப்படியாக தாங்கள் பிரியமானவருக்குள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு நாடு பவர்களாகவும் காணப்படுவார்கள் (சங்கீதம் 45:14; யாக்கோபு 1:27).

சிலுவையில் அறையப்பட்ட பின் மதியம் துவங்கி, நமது கர்த்தர் மரித்தப் பிற்பாடு, மூன்று மணிவரையிலும் நீடித்திருந்த இருளானது, மிகவும் குறிப்பிடத்தக்கதான ஒன்றாகும் மற்றும் இது ஆழமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தினது. புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டு, "பேதுருவின் சுவிசேஷம் என்று அழைக்கப்படும் சுவிசேஷமானது, இந்த இருளைக் குறித்துப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "அநேகர் இரவு வேளை என்றெண்ணி, விளக்குகளோடு

போய்வந்தார்கள்" மற்றும் இயேசு சிலுவையிலிருந்து எடுக்கப்படும்போது, பூமியதிர்ச்சி ஏற்பட்ட வேளை வரையிலும் இருள் நீடித்திருந்தது; "பின்னர் சூரியன் பிரகாசம் காணப்பட்டபோது, அது ஒன்பதாம் மணிவேளை என்று அறியப்பட்டது" என்பதாகும்.

நமது கர்த்தருடைய மரணம் சம்பவித்தத் தருணத்தில் பூமியதிர்ச்சி ஏற்பட்ட அதேவேளையில், ஆலயத்தின் திரைச்சீலையும் கிழிந்தது. திரைச்சீலை என்று சொல்லும்போது, அது கிழிவது என்பது ஒரு சாதாரணமான/அற்ப காரியம் எனத் தோன்றலாம்; ஆனால் இது ஓர் அற்ப காரியமல்ல, ஏனெனில் இந்தத் திரைச்சீலையானது மிகவும் பெரியதாகவும், மிகவும் கனமான திரையாகவும் இருந்தபடியால், இது கிழிவது ஒரு சாதரணமான காரியமல்ல, மாறாக இது கிழிக்கப்படுவதற்கு இயற்கைக்கு அப்பாற்பட்டப் பலத்தினாலேயே கூடும். இந்தத் திரைச்சீலையானது, அறுபது அடி நீளமும், முப்பது அடி அகலமும், ஐந்து அங்குலம் பருமன் கொண்டது என்றும், எழுபத்திரண்டு சதுர துண்டுகள் இணைக்கப்பெற்ற ஒன்று என்றும் எடர்சேம் அவர்கள் விவரிக்கின்றார். இந்தத் திரைச்சீலையானது அடையாளமான அர்த்தம் கொண்டவை என்று (ஆசரிப்புக்கூடாரத்தின் நிழல்களில்) பார்த்திருக்கின்றோம்; இது நமது கர்த்தருடைய பலி நிறைவேற்றப்பட்டதின் வாயிலாக, அவருடைய மாம்சம் பலியாக்கப்பட்டதன் காரணமாக, திரைக்கு அப்பால், அவர் நமக்கு ஜீவனுக்கான புதிய மார்க்கத்தைத் திறந்து வைத்ததை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆகவே தேவனாகிய கர்த்தர், திரையைக் கிழிப்பதன் வாயிலாக, இயேசுவின் மரணமானது மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு, அதாவது பரலோகத்திற்கு வருவதற்கான வழியைச் சாத்தியமாக்கிற்று என்பதை வெளிப்படுத்தினவராக இருந்தார்; இன்னுமாக திரைச்சீலையானது மேல் துவங்கி, கீழ்வரை கிழிந்தது என்ற காரியமானது, இது தேவனால் நடைப்பெற்றது என்றும், அதன் ஆரம்பம் துவங்கி, முடிவுவரை மனித திட்டமிடுதலும், பிரயாசமும் அதில் இல்லையென்றும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

## பிதாவே உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்

நமது கர்த்தர் தம்முடைய ஆவியை, தமது ஜீவனைப் பிதாவின் கையில் ஒப்புவிக்கும் வண்ணமாகக் கூறின வார்த்தைகளானது, ஸ்தேவானின் வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டுகின்றது (அப்போஸ்தலர் 7:59). நம் அனைவரையும் போல், ஸ்தேவானுக்கும் ஒப்புவிக்கிறதற்குக் கொஞ்சமே இருந்தது; ஆதாமிடமிருந்து வரும் ஜீவனுக்கான ஆவி, அதாவது ஆதாம் வழியான ஜீவன் ஏற்கெனவே பறிமுதல் பண்ணியாகிவிட்டது மற்றும் தேவனிடம் ஸ்தேவானால் ஒப்புவிக்கமுடிந்த ஜீவன் என்பது, ஜீவனளிப்பவராகிய இயேசுவின் மூலமாய், விசுவாசத்தினால் அடையப்பெற்ற, "கருதப்பட்ட ஜீவனேயாகும்." நமது கர்த்தருடைய விஷயத்திலோ, காரியங்கள் வித்தியாசமாய்க் காணப்பட்டது. பாவத்தினால் ஒருபோதும் பறிமுதல் செய்யப்படாத, ஜீவனுக்கான உரிமைகளை இயேசு கொண்டிருந்தார் மற்றும் அதையே இயேசு ஆதாமுக்கும், அவரிடமிருந்து பறிமுதல் பண்ணப்பட்ட ஜீவனின் ஆவிக்குமான ஈடுபலி விலைக்கிரயமாக, பிதாவிடம் ஒப்புவித்தார்; எனினும் பிதாவினுடைய சொந்த

வல்லமையினால், தாம் மரணத்திலிருந்து எழுப்பப்படுவார் என்பதான பிதாவின் வாக்குத்தத்தத்தில் நமது கர்த்தர் உறுதியாய் விசுவாசம் கொண்டிருந்தார்; இன்னுமாக ஜீவனுக்குள் எழுப்புவதாக வாக்களித்துள்ள தேவன், அதைச் செய்வதற்கும், தம்மை மரணத்தின் நிலையிலிருந்து, திவ்விய சுபாவத்திற்கும், அதன் மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் கொண்டுவருவதற்கும் மிகுதியாய் விருப்பமும், வல்லமையும் உடையவராய் இருக்கின்றார் என்றும் இயேசு தேவனில் விசுவாசம் கொண்டிருந்தார். இப்படியாக நமது கர்த்தர் தமது ஆவியை விட்டார்; அதாவது ஜீவனுக்கான ஆவியை விட்டார்; அதாவது மரித்தார் மற்றும் பிதா தம்முடைய சொந்த வல்லமையினால், மூன்றாம் நாளில் தம்மை மரணத்திலிருந்து எழுப்புவது வரையிலும், மரணத்திலேயே காணப்பட்டார்.

இறுதி காட்சிகள் நமது கர்த்தருடைய நண்பர்களுக்கு மாத்திரமல்லாமல், அவருடைய சத்துருக்களுக்குங்கூட மிகவும் வியப்பான எண்ணங்களைத் தூண்டினவைகளாக இருந்தது என்பது நிச்சயமே மற்றும் நிசப்தமும், கவலையின் உணர்வுகளும் நிலவின. இருள் வரவர அவருடைய சத்துருக்களின் வசைமொழிகள் நின்றன; இறுதியில் அநேகர், அங்கு நிகழ்ந்தவைகள் குறிப்பிடத்தக்கவைகள் என்று ஒத்துக்கொள்ளும் நிலையில் காணப்பட்டனர் மற்றும், "மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன்" என்று கூறி போதகர் உரிமைப் பாராட்டியிருந்த விஷயங்களை ஓரளவுக்கு உறுதி செய்துகொண்டார்கள் (மாற்கு 15:39).

நமது கர்த்தருடைய மரணத் தருவாயில் வெளிப்பட்ட மகத்துவமான தன்மைகளானது, அவருடைய நண்பர்களில் சிலருக்கு மிகுந்த தைரியத்தை அளித்ததாகத் தெரியவருகின்றது; இப்படிப்பட்ட நண்பர்களில் இருவர் யோசேப்பும், நிக்கொதேமுவும் ஆவார்கள்; இவர்கள் இயேசுவை தண்டனைத் தீர்ப்புக்குள்ளாக்கின ஆலோசனை சங்கத்தின் அங்கத்தினர்கள் ஆவார்கள். இவர்கள் ஒன்றில் தண்டனை தீர்ப்பு வழங்கும்போது இல்லாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது தண்டனை தீர்ப்பிற்கு எதிராக தங்களது வாக்குகளைத் தெரிவித்தவர்களாக இருந்திருக்க வேண்டும். இவர்கள், "யூதருக்குப் பயந்ததினால்," இயேசுவிடத்திலான தங்களது ஈடுபாட்டை ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், தங்களது புகழ் குறைந்துவிடுமோவென ஒருகாலத்தில் மிகவும் ஜாக்கிரதையாய்க் காணப்பட்டனர்; ஆனால் இப்பொழுதோ கர்த்தர் தங்களது நண்பரென ஒத்துக்கொள்வதற்கும் அவரது அடக்கச் செயல்களை ஒழுங்குப்படுத்துவதற்கும் தைரியமடைந்தனர் (யோவான் 19:39). இந்த ஆஸ்தியும், செல்வாக்கும் மிகுந்த மனுஷர்கள், தாமதமாய் இயேசுவைக்குறித்து ஒப்புக்கொள்ளும் காரியமானது, வழியையும், சத்தியத்தையும், ஜீவனையும் ஒப்புக்கொள்வது தொடர்புடைய விஷயத்தில் ஆஸ்தியும், செல்வாக்கும் மிகுந்த மனிதர்களுக்குத் தடையாக இருக்கும் விசேஷித்த சிரமங்களை நமக்கு நினைப்பூட்டுகின்றது. இன்று அநேக ஐசுவரியவான்களும், செல்வாக்குமிக்க அநேகரும் (churchianity) சபைகள் மயமான மார்க்கத்தின் பிரபலம் காரணமாக, சபைகளின் ஊழியங்களில் முன்னிலை ஸ்தானம் வகிக்கின்றவர்களாய்க் காணப்படுவது உண்மையே; ஆனால் உண்மையான சபையாகிய, "கிறிஸ்துவின் சரீரத்தை," சபைகள் மயமான மார்க்கத்துடன் (churchianity) குழப்பிப்பார்க்கக்கூடாது; இந்த உண்மை சபையானது, கர்த்தர் போன்று, உலகத்தின் கண்ணோட்டத்தில் செல்வாக்கு, அதிகாரம் (அ) ஐசுவரியம் அற்றதாகக் காணப்படுகின்றது. இந்தப் பாவநிவாரண நாள் எனும் மாபெரும் நாடகம்

நிறைவடையும்போது, கிறிஸ்துவின் கடைசி அங்கத்தினன் அவனது பலியை நிறைவேற்றி முடிக்கும்போது, ஐசுவரியவான்களிலும், செல்வாக்குமிக்கவர்களிலும் அநேகர் இந்தத் தாழ்மையுள்ளவர்களைக் கனப்படுத்துவதற்கும், இவர்களின் கல்லறைகளை அலங்கரிப்பதற்கும் முன்வருவார்கள் என்பதில் ஐயமில்லை. பலி செலுத்துவதற்கான காலத்தில் இந்த ஐசுவரியவான்கள் தைரியமாய் முன்வந்து, தங்களது சொந்த பலிகளை, பலபீடத்தின் கொம்புகளில் கட்டி வைத்திருந் திருப்பார்களானால், இது அவர்கள் தங்களது அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிபடுத்திக்கொள்ளும் விஷயத்தில் இன்னும் அதிகம் நன்மைக்கு ஏதுவானதாய் இருந்திருக்கும் (சங்கீதம் 118:27).

## ஒப்புரவாகுதல்

கிறிஸ்தவ சமயம் எனும் பெயரிலும், வேதவாக்கியங்களை வைத்துக் கொண்டும், தேவனுக்கும், மனிதனுக்கும் இடையிலான ஒப்புரவாகுதல் தொடர்புடைய விஷயத்தில் பல்வேறு கோட்பாடுகள் வந்துள்ளது. கல்வாரியில், தம்முடைய மரணத்தில், நமது கர்த்தரால் நிறைவேற்றப்பட்ட வேலையானது, நித்தியமான ஜீவன் மற்றும் பரம பிதாவுடன் ஒப்புரவாகுதல் தொடர்புடைய விஷயத்திலுள்ள சகல மனிதனுக்கான நம்பிக்கைகளுக்கு அஸ்திபாரமாகக் காணப்படுகின்றது என்று சிலர் ஒப்புக் கொள்கின்றனர்; ஆனால் மற்றவர்களோ, இதை மறுதலித்து, மனிதனுக்கும், தேவனுக்கும் இடையிலான உறவானது, ஒருபோதும் துண்டிக்கப்படவில்லை என்றும், மீண்டும் ஒப்புரவாகிக்கொள்வதற்கென எந்த ஈடுபலியும் தேவையில்லை என்றும், எந்த விழுகையும் நடைபெறவில்லை என்றும், ஆகவே முன்னிருந்த நிலைக்குக்கொண்டு வரப்படுவதற்கு அவசியம் எதுவுமில்லை என்றும், இப்படியான எந்தத் திரும்பப்பெறுதலும், நமது கர்த்தர் இயேசுவின் மரணத்தினால் அடையப்பெறவில்லை என்றுமுள்ள காரியங்களை முன்வைக்கும் கோட்பாடுகளைக்கொண்டு வருகின்றனர். நமது கர்த்தரின் மரணத்தினுடைய, மீட்பு எனும் பலனை மறுதலிக்கும் இந்தக் கோட்பாடுகளானது, கர்த்தர் மனுக்குலத்திற்கு ஒரு மாபெரும் போதகராக மாத்திரமே பணியாற்றினாரே ஒழிய, எந்த விதத்திலும் மீட்பராக இருந்ததில்லை என்று கூறி, அவருக்கான கனத்தை எடுத்துப்போடுகின்றதாய் இருக்கின்றது. ஈடுபலியைப் புறக்கணிக்கும் இந்தத் தவறான கோட்பாடுகளானது அதிகரித்தும், உறுதியடைந்து கொண்டும், மற்றும் திவ்விய வார்த்தைகளிலும், யுகங்களுக்கடுத்த திட்டங்களிலும் நன்கு வேரூன்றாதவர்களையும், உறுதியடையாதவர்களையும் நாளுக்கு நாள் அதிகம் ஈர்த்துக்கொண்டும் வருகின்றது. ஆகவே யோர்தானில் கர்த்தரால் பண்ணப்பட்ட அர்ப்பணிப்பில் ஆரம்பித்து, கல்வாரியில் அவரது சுவாசம் நின்றதுடன் நிறைவடைந்த, நமது கர்த்தருடைய பலியெனும் மாபெரும் காரியத்தின்/நடவடிக்கையின் மீதே, இரட்சிப்பிற்கான முழுத் திட்டமும் மையங்கொண்டுள்ளது எனும் வேதவாக்கியங்களின் படியான உண்மையின் மீது விசேஷித்த கவனத்தைக்கொண்டுவருவது தகுந்த காரியமாகும். இதனை விசுவாசித்து, ஏற்றுக்கொள்பவன் அந்தப் பலியின் புண்ணியத்தில் தனக்கான பங்கை அடைவதற்குரியவனாகிறான். இதனை மறுதலிக்கிறவன், தேவனிடத்தில் ஒப்புரவாகுவதற்கும், நித்திய ஜீவனை அடைவதற்குமுரிய ஒரே நாமத்தையும், ஒரே விசுவாசத்தையும் மறுதலிக்கிறவனு மாயிருக்கிறான்.

ஒரு கோட்பாட்டினால் மனிதன் இரட்சிக்கப்படுவான் என்று நாம் கூறவரவில்லை, மாறாக இந்தச் சுவிசேஷ யுகத்தில் தேவனுடன் இசைவுக்குள் வருகின்றவர்கள் அனைவரும், கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் மூலமாக, தேவனிடம் வர வேண்டும் என்பதினால், தெளிவான கோட்பாடுகளின் மீதான தெளிவான விசுவாசத்தை அல்லாமல், வேறு விசுவாசத்தைத் தேவனால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், நீதிமானாக்கப்படுதலுக்கும், ஒப்புரவாகுதலுக்குமான அடித்தளமாக இருக்கும் கிறிஸ்துவின் மரணத்தைப் புறக்கணிக்கும் எந்தக் கோட்பாடுகளும் வேதவாக்கியங்களால் அங்கீகரிக்கப் படாதவைகள் என்றும், இப்படியான கோட்பாடுகளினால் எவ்விதமான பயனுமில்லை என்றுமே நாம் கூறுகின்றோம். ஆகையால் வேறு ஏதாகிலும் ஒரு விசுவாசத்தின் அடிப்படையிலும், வேறொரு கோட்பாட்டின் அடிப்படையிலும், தேவனிடம் உறவு கொண்டிருப்பதாகக் கூறிக்கொள்பவர்கள் அனைவரும் தங்களை ஏமாற்றிக் கொண்டிருப்பவர்களாக இருக்கின்றனர்; இப்படிப்பட்டவர்கள் பிதாவுடனோ, குமாரனுடனோ ஒப்புரவாகாதவர்களாகவும், தங்களது பாவங்களிலிருந்து நீதிமானாக் கப்படாதவர்களாகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கத்தினர் களாகாதவர்களாகவும் காணப்படுகின்றனர்.

ஆகவே பாவ நிவாரணத்தின்/ஒப்புரவாகுதலின் கோட்பாடுகளைப்பற்றின தெளிவான புரிந்துகொள்ளுதல் உடையவர்கள் மாத்திரமே நீதிமானாக்கப்படுகின்றனர் என்று நாம் சொல்ல வரவில்லை; மாறாக இன்று நிலவும் தெளிவான புரிந்துகொள்ளுதல் இல்லாமலேயே, இருண்ட யுகங்களுடைய காலபகுதியில் தேவனுடைய அருமையான ஜனங்களில் அநேகர் வாழ்ந்து, மரித்துள்ளனர் என்று நாம் நம்புகின்றோம். கோட்பாட்டைக் காணத்தவறினாலும், தேவனுடைய உண்மையான ஜனங்கள் அனைவரும், கிறிஸ்துவின் மரணமே, பிதாவுடனான நம்முடைய ஒப்புரவாகுதலை ஏற்படுத்திற்று என்றும், கிறிஸ்துவின் மரணத்திலேயே, நித்திய ஜீவன் அடைவதற்குரிய சகல நம்பிக்கைகளும் மையங்கொண்டுள்ளது என்றுமுள்ள உண்மையை அடையாளம் கண்டுகொண்டுள்ளனர்.தொகுதி.5,பார்க்கவும்.

தேவ ஆவியினால் ஏவப்படாதவைகளாகவும், அனுமானமானவைகளாகவும் இருப்பவைகளைக் காட்டிலும், ஏவப்பட்டுப் பேசப்படும் அப்போஸ்தலனின் வார்த்தைகளை விரும்புபவர்களுக்கு, நமது ஆதார வசனமே, ஈடுபலிக்கு எதிரான சகல கோட்பாடுகளுக்கு எதிராக போதுமானதாய்ப் பதிலளிக்கக்கூடியதாய் இருக்கின்றது. ஈடுபலிக்கு எதிரான கோட்பாடுகளில் ஒன்றான கிறிஸ்தவ விஞ்ஞானம் (Christian science) என்பது, "பாவம் என்ற ஒன்று இல்லை" என்பதினால், தண்டனை என்ற ஒன்றும் இல்லை என்றும், "மரணம் என்ற ஒன்று இல்லை" என்பதினால், கிறிஸ்துவும் மரிக்கவில்லை என்கிறது. ஆனால் பாவம் வந்தது என்றும், அதினால் தண்டனை வந்தது என்றும், மரணமும் வந்தது என்றும், கிறிஸ்துவின் மரணமானது, நாம் பாவத்திலிருந்து மீட்கப்படுவதற்காக நடைபெற்றது என்றும் அப்போஸ்தலர் வேதவாக்கியங்களுக்கும், காரியகாரணத்திற்கும் இசைவாய் உறுதியளிக்கின்றார். "பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தில்" உறுதியுடன் நிலைநிற்போமாக (யூதா 3).

## என்னை நினைவுகூருவாயாக

உம் கிருபையான வார்த்தைக்கேற்ப
சாந்தமான தாழ்மையுடனே
இதை நான் செய்திடுவேன், மரித்துக்கொண்டிருக்கும் என் ஆண்டவரே,
நான் உம்மை நினைவுகூர்ந்திடுவேனே.

எந்தனுக்காய்ப் பிட்கப்பட்டதான உம் சரீரமே,
வானத்திலிருந்திறங்கி எந்தனுக்காய் வந்த அப்பமாயுள்ளதே;
உம் உடன்படிக்கையின் பாத்திரந்தனை நான் எடுத்திடவே,
இப்படியாய் நான் உம்மை நினைவுகூர்ந்திடுவேனே.

எந்தன் கண்களைச் சிலுவையினிடத்திற்கு நான் திருப்பி
கல்வாரியினை நான் நோக்குகையில்,
ஓ! தேவ ஆட்டுக்குட்டியே, எனக்கான பலியே,
உம்மை நான் நினைவுகூர்ந்திட வேண்டுமே.

நினைவில் கொண்டிருப்பேனே உம்மையும், உம் வலிகள் அனைத்தையுமே,
நினைவில் கொண்டிருப்பேனே எந்தனுக்கான உம் அன்பு அனைத்தையுமே.
ஆம், கடைசி மூச்சுவரையிலுமே, கடைசி நாடித்துடிப்பு வரையிலுமே
நான் உம்மை நினைவுகூர்ந்திடுவேனே.

உம் கிருபையின் அளவை நான் புரிந்துகொள்வேனே,
உமக்கொப்பாக நான் காணப்படும்போதே.
நீர் உம் இராஜ்யத்தில் வந்திடும்போது
நீர் என்னை நினைவுகூர்ந்தருளுமே.

-விடியல் துதிப்பாடல்கள், # 2

# கிறிஸ்து எப்படி மற்றும் ஏன் சிலுவையில் அறையப்பட்டார்

## மாற்கு 15:22-39

***"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்" 1 கொரிந்தியர் 15:3***

விக்டர் கிஹோ என்பவர், "வாட்டர்லூ* என்பது, அண்டசராசரத்தினுடைய முறைமையை மாற்றிப்போட்டதாகக் காணப்படுகின்றது" என்று எழுதியுள்ளார். [* வாட்டர்லூ என்பது ஒரு மாபெரும் யுத்தம் நடைபெற்ற இடத்தின் பெயர்]. இன்னொருவர் மேற்கூறப்பட்டுள்ள வாக்கியத்தினைத் திருத்தம் செய்து, பின்வருமாறு குறிப்பிடுகின்றார் . . . "கல்வாரி என்பது அண்டசராசரத்தினுடைய முறைமையை மாற்றிப் போட்டதாகக் காணப்படுகின்றது." நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டதான சம்பவமானது, அனுதாபத்தைத் தூண்டுகிற ஒன்றாய்க் காணப்பட்டு, நம்முடைய ஆத்துமாக்களில் அனுதாபத்தைத் தூண்டுகின்றது மற்றும் நம்முடைய ஆதார வசனத்தினுடைய நோக்கத்தினை நாம் உண்மையாய் உணர்ந்துகொள்ளும் தருணம் முதல், நம்மில் பிரதி அன்பினையும் உருவாக்குகின்றதாய் இருக்கின்றது. இதே அளவுக்கு மற்றவர்களும் கூடக் கொடூரமாய் மரித்துள்ளனர் மற்றும் சிலர் தானாக முன்வந்து, பதட்டமின்றி மரணத்திற்குள் கடந்து சென்றும் உள்ளனர். எனினும் கைதி முற்றிலும் குற்றமற்றவராகவும், மரணத்தண்டனைக்கு முற்றிலும் பாத்திரமற்றவராகவும் காணப்பட்ட முதல் சம்பவம் கர்த்தருடைய மரணத்தின் சம்பவமுமேயாகும்; ஆகையால் இந்த ஒரே சம்பவத்தில் மாத்திரமே, மரிக்கும் காரியம், முற்றும் முழுமையாக தானாய் முன்வந்து மரித்த காரியமாய்க் காணப்பட்டது மற்றும் இவர் ஒருவேளை மரிக்க விருப்பமற்று இருந்தால், இவர் ஒருவர் மாத்திரமே மரிப்பதற்கான அவசியமில்லாமலும் இருந்திருப்பார்.

## சிலுவை - சுமத்தலுக்கான உதாரணம்

சிலுவையில் அறையப்பட்ட நிகழ்வுகளைச் சுவிசேஷகர்கள், மிகவும் சிறிய வித்தியாசங்களுடன் விவரித்துள்ளனர் மற்றும் அந்தப் பல்வேறு உண்மையான வாக்கியங்களை நாம் ஒன்றாய்த் தொகுத்துப் பார்த்திடும்போது, முழுச் சம்பவமும் நமக்குமுன் தெளிவாகுகின்றது. யூதர்களுடைய கேடுவிளைவிக்கும் எண்ணங்களையும், கோரிக்கைகளின் கூக்குரல்களுமான கொந்தளிப்புகளையும் எதிர்க்க முடியாத காரணத்தினால், பிலாத்து இயேசுவை மரிக்க ஒப்புக்கொடுப்பதற்குச் சம்மதித்தப் பிற்பாடு, பிலாத்துவாகிய தேசாதிபதியின் அரண்மனையிலிருந்து, நூற்றுக்கு அதிபதி, மூன்று உரோமப் போர்ச்சேவர்களுடன், இயேசுவைச் சிலுவையில் அறையும்படிக்கு, அவரைக் கல்வாரிக்குக் கொண்டு சென்றார். வழக்கத்தின்படியே இச்சம்பவத்திலும், கைதியே தமது சொந்த சிலுவையைச் சுமந்து சென்றார் மற்றும் இது

சுமப்பதற்குக் கடினமானதாகவே நிச்சயமாய் இருந்திருக்கும். நமது கர்த்தரினால், சிலுவையினுடைய பாரபளுவினைத் தாங்கமுடியாத போது, வழியில் போய்க்கொண்டிருந்த நாட்டுப்புற வாசியாகிய சீமோன், இயேசுவுக்கு உதவிச் செய்யும்படிக்குப் பலவந்தம் பண்ணப்பட்டார். லூக்கா 23:26- என்ற வசனத்தின்படி, சீமோன் முழுமையாகச் சிலுவையைச் சுமந்து செல்லாமல், மாறாக பொதுவாய் இழுத்துச் செல்லப்படும் சிலுவையினுடைய பின்பாகத்தைச் சுமந்ததன் மூலம், சீமோன் இயேசுவுக்கு உதவினவராகவே காணப்பட்டார் என்பதாகத் தெரிகின்றது.

போதகருடைய பாரச்சுமையைக் கண்டு, அவருக்கு உதவிப் புரிந்திடுவதற்கு ஓடிவருவதற்குப் பதிலாக, பேதுருவும், யோவானும், யாக்கோபும் எங்கே போய்விட்டார்கள்? என்று நாம் எண்ணுவதுண்டு. சிலுவையைச் சுமந்து, போதகருக்கு உதவிப் புரிந்திடுவதற்கெனச் சீமோனுக்குக் கிடைத்த சிலாக்கியத்தின் மீது நமக்கு ஆசையிருக்குமானால், கர்த்தருடைய சகோதர சகோதரிகளில் அநேகர் தினந்தோறும் அடையாளமானச் சிலுவைகளைச் சுமந்துகொண்டிருக்கின்றனர் என்பதையும், அவர்களுக்கு உதவிப் புரிதல் என்பது நமக்கான சிலாக்கியம் என்பதையும், கர்த்தருடைய உண்மையுள்ள பின்னடியார்களுக்குப் பண்ணப்படுகின்ற எந்தச் சேவையையும், அவர் தமக்கே பண்ணப்பட்டதாகக் கருதுவதற்குக் கர்த்தர் ஒப்புக்கொண்டுள்ளார் என்பதையும் நினைவில்கொள்வோமாக. ஆனால் உதவிக் கரம் நீட்டுவதற்குரிய சிலாக்கியத்தினை எந்தச் சகோதரனும் காணவில்லையெனில், பாரம் சுமப்பவர்கள், இருதயத்தில் சோர்ந்துபோக வேண்டாம். கர்த்தர் தேவையை அறிந்தவராக, தேவையான உதவியை அனுப்பி வைப்பார். சில சமயம் வற்புறுத்தலினால், வந்த உதவியாகவும் (இயேசுவின் விஷயத்தில் போர்ச்சேவகர்கள் உதவியளித்தது போன்று) உலகப் பிரகாரமானவர்களுடைய அனுதாபத்தின் காரணமான உதவியாகவும் கூடக் காணப்படலாம். மரத்தினாலான சிலுவையானது, நமது கர்த்தருக்கு மிகவும் பளுவான பாரமாகக் காணப்படாததுபோன்று, உலகத்தாரால் பார்க்க முடியாத சிலுவைகளை அவருடைய பின்னடியார்கள் சுமந்து கொண்டிருக்கின்றனர்; ஆனால் இதனை "சகோதர சகோதரிகள்" புரிந்துகொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர். "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" (கலாத்தியர் 6:2).

அனுதாபம் கொண்ட யூத ஸ்திரீகள், அருகே அழுதுகொண்டே நடந்துவந்து கொண்டிருந்தார்கள். அநேகமாக இவர்கள் மத்தியில் நமது கர்த்தருடைய தாயாகிய மரியாளும், பெத்தானியாவின் மார்த்தாளும், மரியாளும் மற்றும் மகதலேனா மரியாளும் காணப்பட்டிருக்க வேண்டும். விவரங்கள் நமக்குக் கொடுக்கப்படவில்லை என்றாலும் இந்த ஸ்திரீகளின் அனுதாபமானது குறிப்பிடத்தக்க விதத்தில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. வியாதியஸ்தர்கள் முதலானவர்களைக் குணமாக்கின விஷயத்தில் கர்த்தருடைய சத்துவம் பயன்படுத்தப்பட்டு, குறைந்துபோனதினால் மாத்திரமல்லாமல், இன்னுமாக அவர் இரா முழுவதும் உணவும், உறக்கமும் மற்றும் மிகவும் கடுமையான மன அழுத்தம் நிறைந்த சூழ்நிலையின் கீழும் காணப்பட்டதின் நிமித்தமாகவும், நமது கர்த்தர் பெலவீனமாயும், வலுவிழந்தவராகவும் இருந்தபோதிலும், அவர் மன

அமைதியினால் நிறைந்து காணப்பட்டார். அவர் சிலுவையில் அறையப்படுகிற நாளினுடைய ஒன்பதாம் மணி வேளையாக அப்போதிருந்தது மற்றும் அவர் பிலாத்துவின் அரண்மனையிலிருந்து, கல்வாரி வரையிலும், சுமார் முக்கால் மைல் தூரம், தமது சிலுவையினுடைய சுமையினைக் களைப்புடன் சுமந்து வந்துள்ளார். கொல்கொதாவிற்கு அருகாமையில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஜனங்களினால் இவ்விடத்திற்கு வழங்கப்பட்டதான இப்பெயரின் அர்த்தமாவது, "கபால" (மண்டை ஓடு) ஸ்தலமாகும்;" ஏனெனில் இவ்விடத்திலுள்ள மலையினுடைய அந்தக் குறிப்பிட்ட சரிவானது, மண்டை ஓட்டினுடைய வடிவத்திலும், நிறத்திலும் காணப்பட்டது; பாறையினுடைய இருள்நிறைந்த பிளவுகளானது, கண் குழிகள் போலும், மூக்குக் குழி முதலியவைகள் போலும் காட்சியளித்தன.

கசப்பு என்று அழைக்கப்படுகின்ற, கசப்பான வெள்ளைப்போளம் கலந்த திராட்சரச பானம் கொடுக்கப்பட்டதான காரியமானது, பொதுவாய் எண்ணிக் கொள்ளப்படுவது போன்று, அவமதிப்பான காரியமாய் இராமல், மாறாக இரக்கம் காட்டும் காரியமாகும். பாடுபடுபவர்களுக்கு ஆறுதலளிக்கும் விதத்தில், வலியினுடைய உணர்வுகளைக் குறைப்பதற்கான நோக்கத்திற்கென்று பெண்கள் கூட்டமானது, வலியைக் குறைக்கும் கசப்பான மருந்துகள் கலந்த, புளிப்பான திராட்சரசத்தை எடுத்துச் சென்றனர் மற்றும் அவல நிலைக்குள்ளான பரிதாபத்திற்குரியவர்கள் அனைவருக்கும், அவர்களது கொடுமையான பாடுகளைக் கொஞ்சமேனும் குறைக்கத்தக்கதாக, இந்த மருந்தை அளிப்பது என்பது வழக்கமாய் இருந்தது. நமது கர்த்தர் ரசத்தை ருசிபார்த்தார் என்பதாக நமக்கு மத்தேயு தெரிவிக்கின்றார்; அது என்னவென்று அறிந்துகொள்வதற்கு (அ) தமக்குக் கொடுக்கப்பட்ட பானத்தின் வாயிலாகக் காண்பிக்கப்பட்டதான இரக்கத்தினை தாம் உணர்ந்துகொண்டதற்கான அடையாளமாகக் காணப்படத்தக்கதாக, அவர் அநேகமாக ருசிபார்த்திருக்கலாம். பிதாவின் ஞானமும், அன்பும், நீதியும் தமக்காக ஆயத்தம் பண்ணியுள்ளதும் மற்றும் தம்முடைய உண்மைக்கும், கீழ்ப்படிதலுக்குமான பரீட்சையாகக் காணப்படத்தக்கதாக தம்மீது கடந்துவரத்தக்கதாக, பிதா அனுமதித்துள்ளதுமான பாடுகளையும், வலியையும் முழுமையாய் அனுபவிக்க வேண்டுமென்று விரும்பினவராக, கர்த்தர் பானத்தைப் பருகுவதற்கு மறுத்துவிட்டார். சிலுவையில் அறையப்படும் காரியமானது மிகவும் கடுமையான உபத்திரவமாகக் காணப்பட்டிருக்க வேண்டும். சிலுவையானது தரையில் போடப்பட்டிருக்க, அதன் மீது கைதி நீட்டிக் கிடத்தப்பட்டு, ஆணிகளானது கைகளிலும், பாதங்களிலும் அறையப்படுகின்றது; சிலுவையானது முரட்டுத்தனமான மனிதர்களால் தூக்கப்பட்டு, பாறையில் அதற்கென உருவாக்கப்பட்டுள்ள குழிக்குள் நிற்கப்பண்ணும் காரியமானது, மிகவும் கடுமையான நேரமாகக் காணப்பட்டது. நமது கர்த்தரினால் அனுபவிக்கப்பட்டதான கொடிதான பாடுகளைக் குறித்த விவரங்களையோ, கருத்துகளையோ சுவிசேஷகர்கள் பதிவு செய்திடாதது சரியான காரியமே மற்றும் அதைக் குறித்த விவரங்களை நாமும் சுவிசேஷகர்கள் போன்று தவிர்த்துவிடுவது ஏற்றக் காரியமாய் இருக்கும்; எனினும் நம்மைத் தம்முடைய விலையேறப்பெற்ற

இரத்தத்தினால் வாங்கிக் கொண்டவருக்கு, நம்முடைய பாவங்களுக்கான மீட்பின் கிரயத்தை அவர் கொடுக்கையில், அது அவருக்கு எத்தகைய பாடுகளைக் கொண்டுவந்திருக்கும் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்கையில், நமக்கு இருதயம் வலிக்கவே செய்கின்றது. காரியங்களைத் தெளிவாய்க் கிரகித்துக்கொள்கிறவன், கர்த்தருக்காகவும், அவருடைய காரணங்களுக்காகவும் ஏதாகிலும் பாடுபடுவதற்கு மிகவும் விருப்பமுள்ளவனாய் இருந்து, இப்படியாகத் தனக்குத் தேவனுடைய குமாரனால் செய்யப்பட்டதான மாபெரும் காரியங்கள் குறித்த தன்னுடைய உணர்ந்து கொள்ளுதலையும், தனது அன்பையும் பிரதியுபகாரமாகக் காட்டுகின்றவனாய் இருப்பான். "அவரோடுகூடப் பாடுபடுவதற்கு" அனுமதிக்கப்படவில்லை எனில், அதை நாம் இழப்பாகவே கருதிட வேண்டும், ஏனெனில் அவரோடுகூடப் பாடுபடாமல், "அவரோடுகூட நாம் ஆளுகைச் செய்திடுவதற்கு" நம்மால் எதிர்ப்பார்த்திட முடியாது.

## இரண்டு தீர்க்கத்தரிசனங்கள் நிறைவேறின

மரணத்தண்டனை நிறைவேற்றப்பட்ட நபருடைய உடைமைகள், தண்டனையை நிறைவேற்றிடப் போர்ச்சேவகர்களுக்கான ஆதாயமாகக் கருதுவது வழக்கமாக இருந்தது மற்றும் இயேசுவின் விஷயத்திலோ அவருடைய வஸ்திரங்களை, அதாவது அவரது மேல் அங்கியை, அவரது தலைப்பாகையை, பாதரட்சைகளை மற்றும் கச்சைகளைப் போர்ச்சேவகர்கள் ஆளுக்கு ஒன்று கிடைக்கத்தக்கதாக, பங்குபோட்டு, யார் எதை எடுக்க வேண்டுமென்று சீட்டினால் முடிவெடுத்தார்கள். மீதியாக கழுத்து முதல், பாதம் வரையுள்ளதும், "தையல் இல்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாய் இருந்ததுமான" அவரது அங்கி (அ) உள் அங்கி காணப்பட்டது. இதை அவர்களால் தங்கள் அனைவருக்கும் கிடைக்கத்தக்கதாகப் பங்குபோட முடியாததினால், "அவரது உடையின் பேரில் சீட்டுப்போட்டார்கள்" (சங்கீதம் 22:18; யோவான் 19:23, 24).

சிலுவையில் அறையப்படுதலானது, யூதருடைய நேரத்தின்படி மூன்றாம் மணி வேளையில் அல்லது நம்முடைய நேரத்தின்படி ஒன்பது மணிக்கு நடைப்பெற்றது. அவருடைய தலைக்கு மேலாக, அவர் மீதான குற்றச்சாட்டானது மூன்று பாஷைகளில் எழுதிப்போடப்பட்டிருந்தது; அதாவது உரோமின் அதிகாரப்பூர்வமான மொழியாகிய இலத்தீனிலும், அக்காலக்கட்டத்தினுடைய உயர்தர இலக்கிய மொழியாகக் காணப்பட்ட கிரேக்கிலும் மற்றும் யூதர்களுடைய மொழியாகிய எபிரெயத்திலும் எழுதிப்போடப் பட்டிருந்தது. இயேசுவைக் குற்றஞ்சாட்டுகையில், அவர் தம்மை, யூதருடைய இராஜா என்று உரிமைப் பாராட்டிக்கொண்டார் என்று பிரதான ஆசாரியர்கள் விசேஷித்த அழுத்தம் கொடுத்துச் சாட்டின குற்றச்சாட்டினுடைய அடிப்படையிலேயே, குற்றச்சாட்டு எழுதிப்போடப்பட்டிருந்தது. பிலாத்து எழுதிப்போட்ட வார்த்தைகளுக்கு, முதன்மைவகித்த யூதர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள் என்றும், அதை மாற்றி எழுதப்படுவதற்குப் பிரயாசம் எடுத்தார்கள் என்றும், "நான் எழுதினது எழுதினதே" என்று பிலாத்துக்கூறி மறுத்துவிட்டார் என்றும் நாம் அறிவோம். "இவர் தன்னை

யூதர்களுடைய இராஜா என்று உரிமைப் பாராட்டிக்கொண்ட வஞ்சகர்" என்று எழுதப்படுவதற்கு யூதர்கள் விரும்பினர், ஆனால் தேவ வழிநடத்துதலின்படி, "இயேசு, யூதருடைய இராஜா" என்ற உண்மையான பட்டப்பெயரே, அவருடைய தலைக்கு மேலாக எழுதிப்போடப்பட்டது. இதைக் காட்டிலும் அவர் மேலானவர் என்றும், தேவ வழிநடத்துதலின்படி அவர் உலகத்தைச் சுதந்தரித்துக் கொண்டவர் என்றும், அவர் உலகத்தினுடைய இராஜாவாக நிச்சயமாய் இருப்பார் என்றும், அவர் ஏற்கெனவே பரிசுத்தவான்களுடைய இராஜாவாக இருக்கின்றார் என்றும், யூதர்கள் அல்லாத நாம் அறிந்து களிகூருகின்றோம்.

எப்படி அந்த இரண்டு கள்வர்களுக்கும் அதே நேரத்தில் மரணத்தண்டனைக் கொடுக்கப்பட்டது என்பது பற்றின விவரங்கள் பதிவுகளில் கொடுக்கப்படவில்லை. அவர்கள் இந்தத் தீர்ப்புப் பெற்றவர்களாக, சில காலம் சிறையில் இருந்திருக்க வேண்டும் என்றும், இயேசுவுக்கு மரணத்தண்டனையை நிறைவேற்றும் அதேவேளையில், இவர்களுக்கும் தண்டனை நிறைவேற்றிடுவதற்குப் பிரதான ஆசாரியர்கள் யோசனைத் தெரிவித்திருக்க வேண்டும் என்றும் நாம் அனுமானிக்கின்றோம். தங்கள் போக்கிலுள்ள அநீதியை மறைப்பதற்கும் மற்றும் நடவடிக்கைகள் அனைத்திலும் நீதி காணப்படுவது போன்று காட்டுவதற்குமான எண்ணம் அவர்களுக்குக் காணப்பட்டிருந்திருக்க வேண்டும் அல்லது சட்டத்தினால் கொடுக்கப்படும் பாதுகாப்பினை இழந்தவர்கள் கூட்டத்தாரில் ஒருவராக இயேசுவை ஆளாக்கி, அவரை இழிவுப்படுத்த வேண்டுமென்ற நோக்கம் அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். எப்படியாக இருப்பினும், இது தேவனால் முன்அறியப்பட்டு, தீர்க்கதரிசியால் முன்னறிவிக்கப்பட்டிருந்தது; "அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்" (ஏசாயா 53:12).

## நாமோ, அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவர் என்று எண்ணினோம்

சிலுவையின் அருகாமையில் அப்போஸ்தலனாகிய யோவானும், இயேசுவின் தாயும், அவரை அன்புகூர்ந்தவர்களும் நின்றுகொண்டிருந்தனர்; இவர்கள் அவரது அவமானங்களையும், பாடுகளையும் கண்டபோது, இவர்களது இருதயங்களானது, அனுதாபத்தினால் நொறுங்கினது மற்றும் சம்பவங்களின் அவசியத்தினை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாமல் நின்றார்கள். கொல்கொதாவின் வழியில் போக்கும் வரத்தும் எப்போதும் காணப்படுவதினால், பிரயாணிகள் போக்கும் வரத்துமாக இருக்க, அநேகமாக சிலர் விருதாவாகவும் அங்கு நின்றிருந்திருக்க வேண்டும். அநேகமாக இவர்கள் மத்தியில் இயேசுவையும், அவரது அற்புதங்களையும் குறித்து அநேகம் கேள்விப்பட்டவர்களாய் இருந்த அநேகர், இயேசு உரிமைப் பாராட்டிக்கொண்ட விஷயங்கள் போலியானவைகள் என்றும், அவரது அற்புதங்கள், பரிசேயர்களால், பிசாசுகளின் பிரபுவாகிய பெயல்செபுலின் வல்லமையினால் உண்டானவை என்று கூறப்பட்டதுபோலவே, உண்டான வஞ்சனைகள் என்றும்

இப்பொழுது நம்பினார்கள். ஒருவேளை கர்த்தர் கூறினதுபோலவே, அவர் தேவனுடைய வல்லமையினாலேயே கிரியைகளைப் புரிந்திருப்பாரானால், அவர் தமது சத்துருக்களிடம் கையளிக்கப்பட்டிருக்கமாட்டாரே என்ற கோணத்தில் இவர்கள் யோசித்தார்கள்; ஏனெனில் ஒருவன் தன்னுடைய சிநேகிதனுக்காக தானாய் முன்வந்து ஜீவன் கொடுப்பான் என்ற விஷயம் இவர்களுக்கு ஒருபோதும் உதிக்கவில்லை, இன்னுமாக கர்த்தருடைய மரணத்திற்கான நோக்கம் அல்லது அவசியம் குறித்த காரியங்கள் கொஞ்சமேனும் இவர்களுக்குள் தோன்றவுமில்லை.

இதைப்போன்றதான தவறு, கர்த்தருடைய பின்னடியார்கள் தொடர்புடைய விஷயத்தில், உலகத்தாரால் செய்யப்படுகின்றது. யாருக்குக் கவலைகளும், சோதனைகளும், துன்புறுத்துதல்களும், வறுமையும் காணப்படுகின்றதோ, அவர்கள் தெய்வீகக் கோபத்திற்கு/வெறுப்பிற்கு ஆளாகியுள்ளனர் என்று உலகத்தார் எண்ணுகின்றனர். ஆகையால்தான் நமது கர்த்தரைக் குறித்து அப்படியாகத் தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்டிருந்தது மற்றும் அது அவருடைய சபையின், அதாவது அவரது ஒட்டுமொத்த சரீரத்தின் விஷயத்திலும் உண்மையாகவே உள்ளது . . . "நாமோ, அவர் தேவனால் அடிப்பட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவர் என்று எண்ணினோம்" மற்றும் நாம் அவர் குறித்து வெட்கப்பட்டோம். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இராஜ்யத்தினுடைய கனங்களுக்கு ஆயத்தமாகுவதற்கு அவசியமான அனுபவங்களை, அவர்களுக்கு அனுமதிப்பதின் மூலம், அவர்கள் மீதான தேவனுடைய தயவானது வெளிப்படுகின்றது என்று உலகத்தாரால் புரிந்து கொள்ள முடியாது.

## துன்மார்க்கரில் ஒருவனும் உணரான்

நமது கர்த்தர் மரிப்பதற்கு முன்னதான கடைசி சில நாட்களில் பேசிட்டதான வார்த்தைகளானது, சிலரால் நினைவுகூரப்பட்டது. அதுவும் ஒன்றில் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டிருந்தது அல்லது துணிந்து தவறாய்க் குற்றஞ்சாட்டிக் கேலிப்பண்ணப்பட்டது. அவர்களுடைய ஆலயத்தை இடித்துப்போடுவதாக அவர் பேசவில்லை, மாறாக ஆலயத்தை அவர்கள் இடித்துப்போடுவார்களானால், அது மூன்று நாட்களுக்குள்ளாக (நிஜத்தில்) மீண்டும் கட்டியெழுப்பப்படும் என்றே அவர் கூறியிருந்தார். ஆலயத்தைக் கட்டுவதற்கு நாற்பது வருடங்களானது மற்றும் நமது கர்த்தருடைய வார்த்தைகளை அவர்கள் டாம்பீகமான பேச்சாகக் கருதினார்கள் மற்றும் சிலுவையிலிருந்து இறங்கிவருவதன் மூலம், அவர் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்துவது, அவருக்கு மிகவும் இலகுவானதாய் இருக்கும் என்றார்கள். அவர் இப்படியாகச் செய்யாத காரியமானது, அவர் முன்னமே சொன்னதும், செய்ததுமானவைகள் அனைத்தும் போலி என்பதற்கான ஆதாரம் என்பதாகக் கருதப்பட்டது. உணர்வுகள் மிக்க மனமுடைய நமது கர்த்தருக்கு, இப்படியாகப் போலித்தனம் என்று குற்றஞ்சாட்டுவது, மிகவும் கடுமையான பாரமாக, அவருடைய இருதயத்திற்கு இருந்திருக்க வேண்டுமென்று நம்மால் உணரமுடிகின்றது; எனினும்

அவர் அதைப் பொறுமையாய்ச் சகித்தார். ஓ! இயேசு சிலுவையிலிருந்து இறங்கிவராமலும், நம்முடைய பாவங்களிலேயே நம்மை விட்டுவிடாமலும், முழு உலகத்தையும் மீட்காத நிலையிலேயே விட்டுவிடாமலும் இருந்ததற்காக நாம் மிகவும் மகிழ்கின்றோம்!

சிலுவை மட்டும் கைதியை, பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர்களும் பின் தொடர்ந்தனர்; அவர் தங்களிடமிருந்து தப்பித்துக்கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற ஆவலில், முக்கிய அலுவல்களையெல்லாம் அவர்கள் தள்ளிவிட்டுதான், அவரைப் பின்தொடர்ந்து சென்றிருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. அவர்கள் சாதாரண ஜனங்களைக் காட்டிலும் அதிகமாய்க் குற்றம் சாட்டப்பட வேண்டியவர்களாய் இருந்தனர், எனினும் தங்களது போக்கை நியாயப்படுத்திடுவதற்கு நாடினார்கள். மிகவும் விநோதமாக அவர்கள், "இவர் மற்றவர்களை இரட்சித்தார்" என்பதை ஒப்புக்கொண்டார்கள் மற்றும் இயேசு தம்மைத்தாமே இரட்சித்துக்கொள்ளவில்லை என்ற உண்மையானது, அவர்களுடைய புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாய் இருந்தது மற்றும் இயேசு தமக்கும், யேகோவா தேவனுக்குமான தொடர்பு பற்றி உரிமைப் பாராட்டிக்கொண்ட விஷயங்கள் அனைத்தும் போலி என்பதற்கான தீர்க்கமான ஆதாரமாய் இருப்பதாகவும் அவர்களுக்குத் தோன்றியது. அவருடைய இரத்தப்பழி தங்கள் மீதும், தங்களுடைய பிள்ளைகள் மீதும் காணப்படுவதில் அவர்கள் திருப்தியடைந்தார்கள். பரிதாபத்திற்குரிய மனிதர்கள்! அவர்கள் தங்களையே ஞானியென்று எண்ணிக்கொண்டார்கள், எனினும் இவைகளெல்லாம் சம்பவித்தக் கொஞ்ச நாட்களுக்குப் பிற்பாடு, அப்போஸ்தலனாகிய பேதுரு, இந்தக் காரியங்கள் அனைத்தும் அறியாமையில் செய்யப்பட்டதாகச் சுட்டிக்காட்டினார். "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்" (அப்போஸ்தலர் 3:17) என்பதாக பேதுருவின் வார்த்தைகள் காணப்படுகின்றது. இவர்களும், பெரும்பான்மையான மனுக்குலமும் பாக்கியசாலிகள், ஏனெனில் நம்முடைய ஆண்டவராம் கர்த்தர் கோபமுள்ளவர் என்று சொல்லப்பட்டுள்ளது போன்று, அவர் கோபம் கொள்ளவில்லை; மாறாக அவர் "நீடிய பொறுமையும், பூரண கிருபையும் (இரக்கமும்)" கொண்டிருந்தார். இதற்கு இசைவாகவே, கர்த்தரைச் சிலுவையில் அறைந்துபோட்டவர்கள், இறுதியில் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்த்து, துக்கிப்பார்கள் என்றும், "கர்த்தர் அவர்கள்மேல் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவார்; அப்பொழுது அவர்கள் புலம்புவார்கள்" என்றுமுள்ள மகிமையான தீர்க்கத்தரிசனம் காணப்படுகின்றது.

## அவர் வையப்படும்போது, பதில் வையாமல் இருந்தார்

வையப்பட்டதான சூழ்நிலையின் கீழான நமது கர்த்தருடைய பொறுமையை, அப்போஸ்தலன் நமக்கு மாதிரியாகச் சுட்டிக்காண்பிக்கின்றார். அவர் வையப்படும்போது, பதில் வையாமல் இருந்தார். தம்மைக் துன்புறுத்துபவர்களைக்

குத்தும் விதமான அநேகம் உண்மையுள்ள விஷயங்களை வைத்து நமது கர்த்தரால் பதில் கொடுத்திருக்க முடியும். அவரது பொறுமைக்கான இரகசியமானது, பிலாத்துவினிடத்திலான அவரது வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது; "பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரம் இராது" எனும் வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதே கருத்துதான், "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ?" என்ற வார்த்தைகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதுபோலவே கர்த்தருக்கான நம்முடைய அர்ப்பணமானது எந்தளவுக்கு முற்றும் முழுமையானதாகக் காணப்படுகின்றதோ மற்றும் "நீதிமானுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும்" என்பதை நாம் எந்தளவுக்கு உணர்ந்து கொள்கின்றோமோ, அந்தளவுக்கு நாம் பொறுமையுடனும், கோபங்கொள்ளாமலும், வைதலையும், துன்புறுத்துதல்களையும் ஏற்றுக்கொள்ள முடிகிறவர்களாக இருப்போம் (சங்கீதம் 37:23).

இயேசுவோடுகூடச் சிலுவையில் அறையப்பட்டவர்களில் ஒருவனும் அவரை வைதான்; ஒருவேளை இருவரும் வைதிருக்கலாம்; ஆனால் ஒருவன் மாத்திரமே அநேகமாக வைதிருக்க வேண்டும்; மற்றவன் கொஞ்சம் நேரம் அமைதியாய்க் காணப்பட்டு, பிற்பாடு இன்னொரு சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோன்று, இயேசுவின் சார்பாகப் பேசினான். மிகவும் பிரகாசமாய் விடிந்த காலை வேளையானது, மிகவும் மந்தாரமானது மற்றும் ஆறாம் மணி நேரம் (மதியம் 12) முதல், ஒன்பதாம் மணி நேரம் (3 மணி) வரையிலும், காணப்பட்ட அந்தகாரம் இயேசு மரித்தபோது நன்கு தெரியும் விதத்தில் காணப்பட்டது.

இயேசுவினுடைய அனுபவங்களுடைய இறுதிக் கட்டத்தில், மாலை 3 மணியளவில், அவர் மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; இப்படி அவர் கூப்பிட்டக்காரியமானது, அவரிடத்தில் இன்னும் சத்துவம்/சக்தி இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று அவர் சத்தமிட்டார். கெத்செமனே தோட்டத்தில் இருக்கையில், அவர் பிதாவுக்குப் பிரியமாய்க் காணப்படுகின்றார் என்ற உறுதியைப் பெற்றுகொண்ட நேரமுதற்கொண்டு, இரவிலும், காலையிலுமான அனுபவங்கள் அனைத்தின் மத்தியிலும், நமது கர்த்தர் மிகவும் சாந்தத்துடனும், மனஅமைதியுடனும் காணப்பட்டார். அவருடைய அனுபவங்களினுடைய இறுதிகட்டங்களின் போது, ஏன் இப்படியாக அவருடைய இருதயத்திற்கும் மற்றும் பிதாவுக்கும் இடையில், இவ்வளவு இருளான ஒரு மேகம், ஒரு நிழல் காணப்பட வேண்டும். வேறெந்த நேரங்களிலும் தேவைப்படாத அளவுக்கு, பிதாவுடைய நேசமும் பிரியமுமான குமாரனுக்கு ஆறுதலும், பலமும், பிதாவுடைய அன்பும், தயவும் உள்ளது என்பதான தெளிவான உணர்ந்துகொள்ளுதல் தொடர்ந்து காணப்படுவதும் அவசியமான ஒரு தருணத்தில், இப்படி மேகம் இடையே வருவதற்கு ஏன் பிதா அனுமதித்திட வேண்டும்? இக்கேள்விக்கு, ஏன் நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார் என்பது குறித்துப் பார்க்கையில், நாம் பதிலளிப்போம்.

இத்தருணத்தில்தான், "தாகமாயிருக்கிறேன்" என்று நமது கர்த்தர் கூறினார் மற்றும் கடற்காளான் புளிப்பான திராட்சரசத்தில் தோய்க்கப்பட்டு ஈசோப்புத் தண்டில்

மாட்டி, அவரது உதடுகளினிடத்தில் நீட்டப்பட்டது (யோவான் 19:29). இதை அவர் கொஞ்சம் ஏற்றுக்கொண்டார் இம்மாதிரியான சூழ்நிலைகளில், அவரது காயங்கள், அவரது இரத்தத்தில் கடுமையான ஜுரத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். மீண்டுமாக இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டார். அவர் என்ன கூறினார் என்பது மாற்குவினால் பதிவுச் செய்யப்படவில்லை. ஆனால் இயேசு, "பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை - என் ஜீவனை ஒப்புவிக்கிறேன்" என்று கூறினதாக லூக்கா பதிவுச் செய்துள்ளார். இது அவர் தேவனிடத்தில் கொண்டிருந்த விசுவாசமானது முழுமையானது என்பதையும், அவருடைய பிரதான எண்ணம் ஜீவனைப் பற்றியதாக இருந்திருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. அவர் தம்முடைய ஜீவனை, பிதாவின் ஏற்பாட்டிற்கு இசைவாக, மிகவும் உண்மையுடனும், மிகவும் பெருந்தன்மையுடனும் ஒப்புக்கொடுத்துள்ளார். அவரை மரணத்திலிருந்து எழுப்புவதாகிய பலனை, பிதா அவருக்கு வாக்களித்திருந்திருக்கின்றார்; அந்த வாக்குத்தத்தத்தில் குமாரன் விசுவாசம் கொண்டிருந்தார் மற்றும் தம்முடைய மரணத்தருவாயில், குமாரன் தமது விசுவாசத்தை வெளிப்படுத்தினார்.

## முடிந்தது

நமது கர்த்தருடைய மரணத்தின்போது, பல விஷயங்கள் நடந்ததாகப் பதிவுச் செய்யப்பட்டுள்ளது; சிலுவைக்கு அருகாமையில் காணப்பட்ட நிலப்பகுதியை, பூமியதிர்ச்சியானது அசையப்பண்ணினது மற்றும் எருசலேமிலுள்ள ஆலயத்தில், பரிசுத்த ஸ்தலத்தையும், மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரித்திட்டதான மாபெரும் திரைச்சீலையானது கிழிந்தது; அதுவும் தேய்மானத்தின் காரணமாகக் கிழிவது போன்று கீழிலிருந்து, மேல் கிழியாமல், மாறாக மேலிருந்து, கீழாகக் கிழிந்து, இப்படியாக இக்காரியம் தெய்வீக வல்லமையினுடைய வெளிப்படுத்தல் என்பதைச் சுட்டிக்காட்டினது. இந்தத் திரைச்சீலையானது, அறுபது அடி நீளம் கொண்டதாகவும், முப்பது அடி அகலம் கொண்டதாக, நான்கு அங்குலம் பருமன் கொண்டதாகவும் விவரிக்கப்பட்டுள்ளது. இது "வெண்மை, சிவப்பு மற்றும் இரத்தாம்பரம் நிறங்கள் கொண்ட அருமையான பாபிலோனிய கலைவேலைபாடு கொண்டதென" ஜோசபஸ் அவர்கள் விவரித்துள்ளார். இந்தத் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது என்பது, பரலோகத்திற்கும், உலகில் பரலோக நிலைமையில் காணப்படுகிறவர்களுக்கும் இடையில் வழி திறக்கப்படுவதை அடையாளமாய்த் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. கிறிஸ்து தம்முடைய மாம்சத்தைப் பலிச் செலுத்தினதின் வாயிலாக, திரையின் வழியாய் நமக்குப் புதியதும், ஜீவனுமான மார்க்கத்தை உண்டுபண்ணினார். உண்மை விசுவாசிகளானவர்கள், இப்பொழுது பரிசுத்த ஸ்தலத்திலோ (அ) இரண்டு அறைகளிலுள்ள முதலாம் பாகத்திலோ ஆசாரியர்களாய், இயேசுவின் அங்கத்தினர்களாகக் காணப்படுபவர்களாக அடையாளப்படுத்தப்படுகின்றனர். இங்குக் குத்துவிளக்கினுடைய வெளிச்சத்தின் மூலமாகவும், பொன் மேஜையிலுள்ள

அப்பத்தின் மூலமாகவும், பொன் தூபபீடத்தில் நாம் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டதான சுகந்த தூபவர்க்கங்கள் மூலமாகவும் நமக்குத் தேவனுடன் ஐக்கியம் காணப்படுகின்றது மற்றும் இந்தக் கண்ணோட்டத்திலிருந்து நம்மால் விசுவாசத்தினால், திரைக்கு அப்பால் பார்க்க முடிகின்றது; தேவனை அன்புகூருகின்றவர்களுக்கும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர் களுக்கும், அதாவது தலையும், சரீரமுமான கிறிஸ்துவுக்கு அவர் வைத்துள்ளதான பரலோக ஆசீர்வாதங்களையாகிலும் கணநேரம் நோக்கமுடிகின்றது.

## ஏன் இயேசு சிலுவையில் அறையப்பட்டார்

அனைவருடைய மனங்களிலும், மற்றும் கர்த்தருடைய பின்னடியார்களென அறிக்கைப் பண்ணிக்கொண்டவர்களில் குற்றம் கண்டுபிடிப்பவர்களுடைய மனங்களிலும் நமது கர்த்தர் கல்வாரியில் பாடுபடுவதும், மரிப்பதும் ஏன் அவசியமாய் இருந்தது? என்ற காரியமானது, கிறிஸ்தவம் தொடர்புடைய விஷயத்தில் மிகவும் புதிரான காரியங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. தேவன் இவைகளை அவசியமாக்கியுள்ளபடியால்....இவைகள் இன்றியமையாதவைகளாகக் காணப்படும் விதத்தில் தேவன் தம்முடைய திட்டத்தை ஏற்படுத்தி உள்ளபடியால், இவைகள் அவசியமானவைகளாயின என்று நாம் பதிலளிக்கின்றோம். அவரால் இன்னொரு விதத்தில் இரட்சிப்பிற்கான திட்டத்தைத் தீட்டியிருக்க முடியும் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை, ஏனெனில் அனைத்துக் காரியங்களுமே அவருடைய கரங்களில்தான் இருந்தது, ஆனால் அவர் சிறந்த திட்டத்தையே தெரிந்தெடுத்துள்ளார் என்பதும் மறுக்க முடியாத உண்மையேயாகும். மேற்குறிப்பிடப்பட்டுள்ளக் கேள்விக்குப் பதிலைத் தன்னுடைய சொந்த மனதில் தீர்வுக்காணவோ (அ) மாம்ச மனதினுடைய மனுஷீகக் கோட்பாடுகளின்/தத்துவங்களின் அடிப்படையில் தீர்வுக்காணவோ முயற்சிப்பவன் எவனும், தவறு செய்கிறவனாய் இருப்பான். இக்காரியம் தொடர்புடைய விஷயத்தில், பரத்திலிருந்து வரும் ஞானத்திற்குச் செவிசாய்ப்பதே பாதுகாப்பான மற்றும் சரியான ஒரே போக்காக இருக்கும்.

தேவனுடைய வார்த்தைக்கு நாம் செவிக் கொடுக்கும்போது, அவர் ஆதிமுதல் முடிவுவரை அறிந்தவராய் இருக்கின்றார் என்றும், அவருடைய திட்டமானது, அவரது பண்புகளாகிய ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை தொடர்புடைய விஷயத்தில், மனிதர்களுக்கு மாத்திரமல்லாமல், தூதர்களுக்கும்கூட, அசுத்தமானவர்களுக்கு மாத்திரமல்லாமல், பரிசுத்தமானவர்களுக்கும்கூடப் படிப்பினைகளாகக் காணப்படத்தக்கதாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் நாம் புரிந்துகொள்கின்றோம். தெய்வீகத் திட்டமானது முழுமையாய் நிறைவேற்றப்பட்டிருக்கும்போது, தெய்வீக ஏற்பாடுகளில் வெளிப்படுத்தப்பட்டதான ஞானம், அன்பு, நீதி மற்றும் வல்லமையினுடைய நீளங்களையும், அகலங்களையும், உயரங்களையும் மற்றும் ஆழங்களையும் அனைவரும் காண்பார்கள். தற்காலத்திலோ சொற்பமானவர்கள்

மாத்திரமே காணமுடிகின்றவர்களாய் இருக்கின்றனர்; "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்" (சங்கீதம் 25:14).

தம்முடைய சொந்தத் தீர்ப்பை, தம்மால் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை நன்கு அறிந்த நிலையிலேயே தேவன் பாவத்திற்கான தண்டனையாக மரணத்தை அறிவித்தார்; ஆதாம் பாவம் செய்வார் என்றும், அவரும் அவரது முழுக்குடும்பமும் மரணத்தீர்ப்பின் கீழ்க் காணப்படுவார்கள் என்றும் அறிந்தவராகவே இப்படியான தீர்ப்பைத் தேவன் அறிவித்தார். ஆதாமுக்கும், இக்காரியங்களைப் புரிந்துகொள்ளும் அனைவருக்கும், மனுக்குலத்திற்கு எந்த நம்பிக்கையும் இல்லை என்பதாகவே தோன்றும்; காரணம் முதலாவதாகத் தேவனால் தம்முடைய தீர்ப்பினை இரத்துச் செய்திட முடியாது மற்றும் இரண்டாவதாக இந்தத் தீர்ப்பானது மனிதனிடத்திலிருந்து ஜீவனைப் பிடுங்கிப்போட்டதின் வாயிலாக, அனைத்தையும் பிடுங்கிக் கொண்டதாக இருக்கின்றது. தேவன் தமது நோக்கத்தில் ஒரு பதிலாளை/மாற்றாளைக் கொண்டிருப்பார் என்பது மனிதனுடைய எண்ணத்தில் தோன்றவில்லை; ஒருவேளை அவனுக்கு இப்படியாகத் தோன்றியிருந்தாலும், அவன் தனது சக மனிதர்கள் மத்தியில் நோக்கிப்பார்க்கும் போது, அவனால் ஆதாமுக்குப் பதிலாளாகக் காணப்படுவதற்குப் பாத்திரமான யாரையும் காணமுடியாது; ஏனெனில் விழுகையின் காரணமாக மனிதர்கள் சுதந்தரித்துக் கொண்டவைகளின் விளைவாக, அனைவரும் பாவிகளாகவே இருக்கின்றனர். தேவன் ஆதாமினுடைய விழுந்துபோன சந்ததியை ஏறெடுத்துப் பார்க்கையில், அவர்கள் தங்களுடைய தண்டனையினின்று தப்பித்துக்கொள்வதற்கான வழியை, முயன்று அளிக்குமளவுக்கு, பிரமாணத்தை மீறினவர்களிடத்தில் (மனுக்குலத்திடத்தில்) அவ்வளவுக்கு அனுதாபங்கொள்வார் என்றும் மனிதன் ஒருபோதும் எண்ணிப்பார்த்திருக்கவே மாட்டான். ஆதாமுக்கு ஒரு மாற்றாளைத் தேவன் அருளுவது என்பது, இன்னொரு மனிதனை, அதாவது ஆதாமுக்கு எல்லா விதத்திலும் சரிசமமான ஒரு மனிதனைச் சிருஷ்டிப்பதையோ அல்லது விழுகைக்கு முன்னதாகக் காணப்பட்ட ஆதாமின் சுபாவ நிலைக்கொத்த நிலைக்கு, ஏதோ ஒரு பரிசுத்தமான ஜீவியை மாற்றுவதையோ குறிப்பதாக இருக்கும். சர்வ வல்லமையுள்ள தேவன் இந்தளவுக்குத் தம்முடைய மனித சிருஷ்டிகளினுடைய நலனில் அக்கறைக்கொண்டிருப்பார் என்றும் மனிதன் எண்ணிப்பார்த்திருந்திருக்கவே மாட்டான். இன்னுமாக ஆதாமைப் போன்று இன்னொரு மனிதனைத் தேவன் சிருஷ்டிப்பது என்பது மீறுதலை இருமடங்காக்குவதாக மாத்திரமே இருக்கும் என்றும் மனிதன் சிந்திக்கக்கூடும்; இன்னுமாகத் தேவன் ஏதோ ஒரு மகிமையான ஆவியின் ஜீவியை, மனித நிலைமைகளுக்குள் மாற்றுவது என்பது, நீதிக்கு முரண்பாடானதாக, அதாவது பரிசுத்தமற்ற மற்றும் பாவமுள்ளவர்களுடைய நலனுக்காக, ஒரு பரிசுத்தமுள்ள மற்றும் கீழ்ப்படிதலுள்ளச் சிருஷ்டியைத் தண்டிப்பதாக மனிதனுக்குத் தோன்றக்கூடும்.

ஆனால் இதோ தேவன் ஏற்பாடு பண்ணியுள்ள திட்டத்தில், அவரது ஞானமும்,

அவரது அன்பும் மற்றும் நீதியும் வெளிப்படுகின்றது. தேவன் ஆதாமுக்கு ஈடுபலியை அருளினதின் வாயிலாக, ஆதாமின் சந்ததிக்கும் அருளினார்; விழுந்துபோன ஆதாமுக்கும், அவரில் ஜீவனை இழந்துபோனவர்களுக்கும் தேவன் ஒரு பரிபூரண மனிதனை மீட்பராக அருளினார், எனினும் தேவன் யாருக்கும் அநீதி செய்யவில்லை. மனிதனுடைய மீட்பராகப் போகிறவர், இந்த வேலையிலுள்ளதான பாடுகள் மற்றும் இழப்புகள் நிமித்தமாக மிகுந்த நன்மையை/அநுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில், தேவன் திட்டத்தை ஏற்பாடு பண்ணினவரானார். ஒருவேளை தேவன் இந்தக் கோரிக்கையினை, பரலோக சேனைகள் அனைவரிடமும் பொதுவாய் வைத்திருப்பாரானால், அநேகர் மகிழ்ச்சியுடன் கீழ்ப்படிவதற்கும், பிதா தங்களுக்கு எதைத் தருவது சிறந்ததாக இருக்கும் என்று எண்ணி, தரச் சித்தமாய் இருக்கும் எந்த ஆசீர்வாதத்திலும், பலனிலும் நம்பிக்கைக் கொள்வதற்கும் ஆயத்தமாயும், விருப்பமாயும் காணப்படுவார்கள் என்பதில் எந்த ஐயமுமில்லை; ஆனால் பிதா அந்த வாய்ப்பினை அனைவருக்கும் பொதுவாய் வைக்கவில்லை; அது ஒருவருக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டது.

## தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன்

பரம சேனைகளில் ஒருவராக, பிதாவுடைய ஒரே பேறானவர் காணப்பட்டார்; இவர் ஆதியில் வார்த்தை என்று அழைக்கப்பட்டார் மற்றும் இவர் பிதாவோடு இருந்தார் மற்றும் இவர் தேவனாகவும் (அ) வல்லமையுள்ளவராகவும் இருந்தார் மற்றும் இவர் தேவனால் அனைத்துத் தூதர்களையும், மனிதர்களையும் சிருஷ்டிப்பதில் கருவியாகப் பயன்படுத்தப்பட்டார். இவருக்கே, அனைவரிலும் உன்னதமான இவருக்கே, மாபெரும் பலி ஏறெடுப்பதற்கும், பிதாவின் அன்பின் மீதும், பிதாவின் வல்லமையின் மீதுமான விசுவாசத்திற்கான மாபெரும் பரீட்சைக்கும், அதாவது வேலை முடிவடையும்போது இவரை மகிமைப்படுத்தி, மீண்டும் ஜீவனுக்குள் பிதா கொண்டுவருவார் என்ற விசுவாசத்திற்கான மாபெரும் பரீட்சைக்குமான வாய்ப்புப் பிதாவினால் முதலாவதாக முன்வைக்கப்பட்டது. ஒரே பேறானவர் ஏற்கமுடியாது எனத் தெரிவித்திருக்கலாம் மற்றும் இப்படியாகத் தெரிவித்திருப்பாரானால், அந்த வாய்ப்பானது, அடுத்த நிலையில் கனத்திலும், மகிமையிலும், வல்லமையிலும் தூதர்கள் மத்தியில் காணப்படுபவரிடம் சென்றிருக்கும். ஆனால் ஒரே பேறானவர் மறுப்புத் தெரிவிக்கவில்லை. மாறாக மனுக்குலத்திற்காக பிதாவுடன் உடன் வேலையாளாய்க் காணப்படுவதற்கான வாய்ப்பானது ஒரே பேறானவரால் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவர் வேலையைக் கையில் எடுத்தார்; அவர் பரலோகப் பிரகாரங்களைத் துறந்து, பரலோக நிலைமைகளையும், ஆவிக்குரிய சரீரம் முதலானவைகளைத் துறந்தார்; அவர் மரியாளின் கருவுக்குள்ளாக மாற்றப்பட்டார் மற்றும் ஏற்றக்காலத்தில் அவர் மனுஷர்கள் மத்தியில் மனுஷனாக, "மனிதனாகிய கிறிஸ்து இயேசுவானார்."

நியாயப்பிரமாணத்தின்படி, முப்பதாம் வயதாகிய ஏற்ற வயதில், அவர் தம்மை மரணம் பரியந்தமான முழுமையான அர்ப்பணிப்புச் செய்துகொண்டார் மற்றும் இதனை

அவர் ஞானஸ்நானத்தின் மூலம் அடையாளப்படுத்தினார். மூன்றரை வருடங்களாக மரணம் அவருக்குள் நிகழ்ந்துகொண்டே வர, கல்வாரியில் அவர், "முடிந்தது" என்று சத்தமாய்க் கூப்பிட்டார். இப்படியாக மனிதனாகத்தக்கதாக அவர் தம்மை முதலாவதாக மகா பெரிய விதத்தில் தாழ்த்தினதாவது, ஓர் ஆயத்தப்படியாகவே காணப்பட்டது; ஆனால் ஆதாமுக்காகப் பதிலாளாக அவர் தம்மையே பலியாகக் கொடுத்தக் காரியமானது, மூன்றரை வருட காலங்கள் கொண்டதாகவும், சிலுவையில் அவரது மரணத்தின்போது நிறைவடைந்ததாகவும் இருந்தது. இங்கு அவர் உலகத்தை மீட்பது தொடர்புடைய விஷயத்தில், பிதா அவருக்குக் கொடுத்திருந்ததான வேலையை நிறைவேற்றி முடித்தார். அவருடைய ஜீவனானது, ஆதாமுக்கான மீட்கும்பொருள் விலைக்கிரயமாக இருந்தது மற்றும் ஆதாமுடைய பெலவீனங்களையும், அவருடைய பூரணமின்மைகளையும் உலகம் சுதந்தரித்துக் கொண்டதன் காரணமாக, உலகம் ஆதாம் மூலமாய் ஜீவனை இழந்துள்ளபடியால், நீதியாகவும், சட்டப்பூர்வமாகவும், உண்மையாகவும் கிறிஸ்துவின் மரணமானது, ஆதாமை மாத்திரம் மீட்டுக்கொள்ளாமல் இன்னுமாக மனுக்குலத்தின் உலகத்தையும் மீட்டுக்கொண்டுள்ளது. ஆதாம் பாவியான காரணத்தினால் அவருக்குத் தேவனுடனான ஐக்கியம் துண்டிக்கப்பட்டப்படியினால், ஆதாமுக்குப் பதிலாளாகிய நமது அருமை மீட்பரும், தாம் மரிப்பதற்கு முன்னதாக, இதுபோன்றதான அனுபவத்தைக் கொஞ்சம் நேரம் அனுபவிக்க வேண்டியவராய் இருந்தார். இது அவருக்கு மிகவும் கடினமான வேலையாய் இருந்தது மற்றும் அவர், "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று சத்தமாய்க் கூப்பிட்டார்.

ஏற்ற வேளையில் அவர் மரணத்திலிருந்து, ஓர் ஆவியின் ஜீவியாக உயிர்த்தெழுப்பப்பட்ட போது, அவருக்கான பிதாவின் வாக்குறுதி நிறைவேறினது; ஏற்ற வேளையில் அவர் நமக்காக, அதாவது அவரது பலியினுடைய புண்ணியத்தில் ஒவ்வொரு விசுவாசியும் பங்கடையத்தக்கதாக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படிக்குப் பிரவேசித்தார். இந்த வேலையானது, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது மற்றும் அர்ப்பணம் பண்ணும் விசுவாசிகள் ஒவ்வொருவரும், கிறிஸ்துவுக்குள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றார்கள் மற்றும் அவருக்குள், அவரது சரீரத்தினுடைய அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ள இந்த விசுவாசிகளானவர்கள், தங்கள் சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுத்து, இப்படியாகக் கிறிஸ்துவினுடைய பாடுகளில் குறைவானதை நிறைவேற்றுவதற்கான சிலாக்கியத்தினைப் பெற்றுக்கொள்கின்றவர் களாகுகின்றனர். சீக்கிரத்தில், முழுப் பாவ நிவாரண பலிச் செலுத்துதல்களும் நிறைவடைந்திடும், சீக்கிரம் அது முடிவடைந்துவிடும்; சீக்கிரத்தில் "அவரோடே கூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; அவரோடேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம்" என்ற வாக்குத்தத்தமும் நிறைவேறும். இவைகள் நிறைவேறும் காலத்தில் மீட்பின் வேலையானது, பெரியளவில் நடைபெறும். கிறிஸ்துவினுடைய சரீரத்தின் கடைசி அங்கத்தினர்கள், அவரோடுகூடப் பாடுபட்டு முடிந்தவுடனே, அவர் விசுவாசிகள் அல்லாத மீதமுள்ள மனுக்குலம் சார்பாக,

நீதி - முழுமையாய்ச் சந்திக்கப்பட்டக் காரியங்கள் செயலாக்கத்தில் கொண்டு வரப்படும் மற்றும் உலகத்திற்கு எதிரான தண்டனையானது, சாபமானது, இப்படியாக இரத்துச் செய்யப்படும்; இது விசுவாசத்தின் வாயிலாக அல்ல; இன்னுமாக விசுவாசம் காட்டுகிறவர்களுக்காக மாத்திரமும் அல்ல; மாறாக விசுவாசம் பொருட்படுத்தப்படாமலேயே இரத்துச் செய்யப்படும்.

## பலன்கள் - மகிமையான விளைவுகள்

பின்னர் உலகத்தைச் சீர்த்தூக்கும் வேலை ஆரம்பமாகும். அதாவது கல்லறைக்குள் போகாதவர்களையும், கல்லறைக்குள் ஏற்கெனவே சென்றுள்ளவர்களையும் படிப்படியாகவும் சீர்த்தூக்கிவிடும் வேலை ஆரம்பமாகும். சிறையின் கதவுகள் திறக்கப்படும், கைதிகள் அனைவரும் வெளிவருவார்கள்; தீர்க்கத்தரிசி கூறியுள்ளது போன்று, அவர்கள் அனைவரும் பரீட்சைக்கெனக் கடந்துவருவார்கள் (ஏசாயா 61:1). ஆதாமின் முதல் குற்றத்தின் அடிப்படையிலோ, அவர்கள் ஆதாம் மீது வந்த தண்டனையினுடைய தாக்கத்தின் காரணமாக செய்திட்டவைகளின் அடிப்படையிலோ அல்லாமல், மாறாக அவரவருடைய சொந்தப் பொறுப்பேற்குதலின் (கிரியைகளின்) அடிப்படையில் ஜீவனுக்கான ஒரு புதிய பரீட்சையில் காணப்படுவார்கள். ஒவ்வொருவரும் பொறுப்பாளிகள் என்பது, அவரவர் பெற்றிருக்கும் குணலட்சணம் மற்றும் பலத்தினுடைய அடிப்படையிலேயே ஆகும்; அது ஒரு நீதியான நியாயத்தீர்ப்பாக இருந்து, ஒவ்வொரு சுதந்தரிக்கப்பட்ட அபூரணங்களுக்கும், பெலவீனங்களுக்கும் முழுச்சலுகைக் கொடுக்கின்றது மற்றும் உலகத்திடமிருந்து, மனுக்குலத்தால் செலுத்த இயன்றவைகளை மாத்திரமே எதிர்ப்பார்க்கின்றது.

மனுக்குலத்தின் உலகமானது சீர்த்தூக்கப்படுவதும், தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையின் காரணமாக ஏதேனில் தொலைந்துபோன அனைத்தின் விஷயத்திலும் படிப்படியாக பின் திரும்புவதற்கான வாய்ப்பினை ஒவ்வொருவருக்கும் அருளப்பெறுவதும், பரதீசும் திரும்பிக்கொடுக்கப்படுவதுமே விளைவுகளாகக் காணப்படும். இருதயத்தில் கீழ்ப்படிதலுள்ளவர்கள், கர்த்தருடைய ஆசீர்வாதங் களுக்கும், இந்த ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு நித்திய காலமும் தொடர்வதற்கும் பாத்திரவான்களாய்க் கருதப்படுவார்கள். இப்படிப்பட்டவர்கள் நித்திய ஜீவன் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் வேறான மனம் கொண்டவர்கள் அனைவரும் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போவார்கள்.

இப்படியாகப் பார்க்கும்போது, நமது கர்த்தராகிய இயேசுவின் மரணமானது, மனிதன் மரணத் தண்டனையிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு அவசியமாயுள்ளது; நம்முடைய ஆதார வசனமானது குறிப்பிடுவது போன்று, கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார். நமக்கான மரணத் தண்டனையை இயேசு சந்திப்பதன் வாயிலாக, தேவன் நீதியுள்ளவராகவும், அதேசமயம் இயேசுவில் விசுவாசம் கொள்பவனை நீதிமானாக்குகிறவராகவும் விளங்கும்படிக்கும் மற்றும் அவனை மரணத்தீர்ப்பிலிருந்து விடுதலைப் பண்ணவும் இயேசு மரித்தார். நமது கர்த்தருடைய மரணமானது, இன்னொரு காரணத்திற்கும் அவசியமாய் இருந்தது; அதை

அப்போஸ்தலன் விவரிக்கின்றார். அது என்னவெனில் ஆயிரவருட யுகத்தில் உலகத்தை நியாயந்தீர்க்கப்போகிறவர் அக்காலத்தில் பரீட்சையில் காணப்படப்போகும் மனுக்குலத்தின் உலகத்தாரிடம் அனுதாபம்/பரிவிரக்கம் முழுக்கக் கொண்டவராகக் காணப்படுவதும், பாவத்தினாலும், பெலவீனத்தினாலும் ஆட்கொள்ளப்பட்டவர்களுக்கு உதவிச் செய்ய முடிகிறவராகவும், உதவ விரும்புகிறவராகவும் காணப்படுவதும், எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற அவர் மனுக்குலத்தின் மீது இரக்கம் கொண்டவராகவும் காணப்படுவதும் அவசியமானதாகும். அக்காலத்தில் மகா இராஜாவாகவும், நியாயாதிபதியாகவும் காணப்படும் கர்த்தராகிய இயேசு மாத்திரமல்லாமல், சபையுங்கூட, அதாவது இராஜரிக ஆசாரியத்துவத்திலும், நியாயந்தீர்க்கும் விஷயத்திலும் அவருடைய உடன் சுதந்தரர்களாக இருக்கும் சபையுங்கூட, தங்களால் நியாயந்தீர்க்கப்படுகிறவர்களிடம், பரீட்சிக்கப்படுகிறவர் களிடம், தாங்கப்படுகிறவர்களிடம், உதவப்படுகிறவர்களிடம், சீர்த்தூக்கிவிடப் படுகிறவர்களிடம் அனுதாபம்/பரிவிரக்கம் கொண்டிருக்க முடிகின்றவர்களாய்க் காணப்படுவார்கள்.

தேவன் வடிவமைத்துள்ளதான திட்டமானது, ஞானமானதாகவும், கற்பனைச் செய்து பார்க்க முடிந்ததிலேயே சிறந்தாகவும் காணப்படுகின்றது என்றும், இந்தத் திட்டத்தின் கீழ் மரணத்தீர்ப்பிலிருந்து மனிதனின் மீட்பை மரணம் மாத்திரமே சாத்தியமாக்குமே ஒழிய, வேறெதுவும் இல்லை என்றும், நாம் புரிந்துகொள்கின்றோம்; இன்னுமாக பிதா கிறிஸ்துவுக்குக் கொடுத்தது போன்றதான இவ்வளவு உயர்வான கனமும், மேன்மையும், பொறுப்பும் ஒப்படைக்கப்படும் விஷயத்தில், இவைகள் ஒப்படைக்கப்படும் அந்நபர் கடுமையானப் பரீட்சைகளைப் பெற்றுக்கொள்வதைக் காட்டிலும் வேறெதுவும் தகுதியாய் இராது என்றும் நாம் புரிந்துகொள்கின்றோம். சபையை மகிமையில் கொண்டுவருவதற்கும், அடுத்ததாக உலகத்தைப் பரீட்சைக்குள்ளாக்குவதற்கும் என்று இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களின் வாயிலாகப் பூரணப்படுத்துவதும் பிதாவுக்கு ஏற்றதாய் இருந்தது என்றும், பிதாவுக்கு அடுத்ததாக அண்டசராசரத்தில் பிரதானமானவராய்க் காணப்பட்டவரும், தெய்வீகச் சுபாவத்திலும், மகிமையிலும், கனத்திலும் பங்கடையப் பண்ணுவதன் மூலம், இன்னும் பெரியவராய் ஆக்கிடுவதற்கான பிதாவின் நோக்கத்திற்குரியவருமானவர், சகல சிருஷ்டிகளுக்கும் முன்பாக, பிதாவுக்கான அவரது முழுமையான நேர்மை/உண்மை நிரூபிக்கப்படுவதற்கு எதிர்ப்பார்க்கப்படுவதும் ஏற்றதாய் இருந்தது என்றும் நாம் காண்கின்றோம்; மற்றும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர் களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில் பாடுபட்டபோது நிரூபித்தார். இதன் விளைவாக, "தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலிப்பியர் 2:9-11).

## பழைய கரடுமுரடான சிலுவை

தூரத்தில் மலை மீதினிலே நின்றதே அந்தப் பழைய கரடுமுரடான சிலுவை,
பாடுகளின், அவமானத்தின் அந்த அடையாளமே; மிகவும் அன்புகூர்ந்தேனே –
அந்தப் பழைய சிலுவையை; அங்கே அருமையானவரும், சிறந்தவருமானவர்,
தொலைந்துபோன பாவிகளுள்ள உலகத்திற்காய் அடிக்கப்பட்டாரே.

ஓ! உலகத்தினால் அற்பமாய்ப் பார்க்கப்படுகின்ற அந்தப் பழைய கரடுமுரடான சிலுவையே,
எந்தனை வியத்தகு வண்ணம் கவருகின்றதே;
ஏனெனில் தேவனுடைய அன்பான ஆட்டுக்குட்டியோ தம் மகிமை துறந்துவந்திட்டாரே
இச்சிலுவையை, இருட்டான கல்வாரி வரைக்கும் சுமந்து சென்றிடவே.

வேகமாய் வடிந்த குருதி கறைப்படிந்த அந்தப் பழைய கரடுமுரடான சிலுவைதனிலே
விந்தையான அழகுதனை நான் காண்கின்றேனே;
ஏனென்றால் அந்தப் பழைய சிலுவைதனிலே இயேசு பாடுபட்டாரே, மரித்திட்டாரே
எந்தனை மன்னிப்பதற்கும், பரிசுத்தமாக்கிடுவதற்குமே.

அந்தப் பழைய கரடுமுரடான சிலுவைக்கு, நான் என்றென்றும் உண்மையாய் இருப்பேனே,
அதன்அவமானத்தையும், நிந்தனையையும் மகிழ்வுடனே சுமப்பேனே;
அப்போதே அவர் ஒருநாள் வெகுதூரமாயுள்ள அந்த வீட்டிற்கு எந்தனை அழைப்பாரே,
அங்கு அவர் மகிமையில் என்றென்றும் பங்கடைவேனே.

ஆகையாலே அந்தப் பழைய கரடுமுரடான சிலுவையை நான் சீராட்டிடுவேனே,
கடைசியில் எந்தன் பரிசினை நான் அடையும் வரையிலுமே.
உறுதியாய்ப் பிடித்துக்கொள்வேனே அந்தப் பழைய கரடுமுரடான சிலுவையையே,
ஒருநாள் அதைக் கொடுத்து, மாற்றிவாங்கிடுவேனே கிரீடத்தையே.

- விடியல் துதிப்பாடல்கள், # 359

# சரித்திரத்தில் நிகழ்ந்த மாபெரும் நிகழ்வு

## யோவான் 19:17-30

### *"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்" 1 கொரிந்தியர் 15:3*

சரித்திரத்திலேயே மிகவும் அருமையான நிகழ்வினுடைய காட்சியாகத் திகழ்வது கல்வாரியாகும் மற்றும் இந்த ஆதாரத்திலேயே, மனுக்குலத்தின் மீது காணப்பட்டதான சாபத்தை அப்புறப்படுத்தத்தக்கதாக தெய்வீக அன்பும், நீதியும் செயல்பட்டன. கல்வாரி எவ்விடம் என்பது துல்லியமாய்த் தெரியாது, எனினும் இலத்தீன் வார்த்தையாகிய கல்வாரியானது, "கபால/மண்டைஓடு ஸ்தலம்" எனும் அர்த்தம் கொடுக்கும், கொல்கொதா எனும் எபிரெய வார்த்தைக்கு நிகரானதாய்க் காணப்படுவதினால், ஒரு துப்புக்கிடைக்கின்றதாய் இருக்கின்றது. முன்பாகத்தில் இரண்டு குகைகளுடனான சிறு குன்று ஒன்று உள்ளது மற்றும் அதனை தொலைவில் நின்று காண்கையில், மண்டை ஓட்டினுடைய தோற்றத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் அதன் குகைகளும், அங்கு வளர்ந்து காணப்படுகின்றதான புதர்க்காடுகளும் கண்குழிகளினுடைய தோற்றத்தைக் கொடுக்கின்றதாக இருக்கின்றது. இந்த இடம்தான் சிலுவையில் அறையப்படுதல் நிகழ்ந்த இடமாகக் கருதப்படுகின்றது. பாறைகள் மற்றும் குன்றுகள் ஒத்திருக்கும் வடிவங்களின் அடிப்படையில், அவைகளை விவரிக்கும் வழக்கமானது இன்னமும் காணப்படவே செய்கின்றது. யாஸ்மைட்டில் (Yosemite) போர் வீரருடைய கலிகை மாட மலையும், மணப்பெண்ணினுடைய திரை நீர்வீழ்ச்சியும், ராக்கி மலைகளில் (Rocky Mountains) சொற்பொழிவு மேடைப் (Pulpit Rock) பாறையும் மற்றும் தேனீருக்கான மூடியும், கைப்பிடியுமுள்ள பாத்திரம் (Tea kettle Rock) பாறையும் மற்றும் வெள்ளை மலைகளில் (White Mountain) ஆந்தை தலையும் மற்றும் நீல மலைத்தொடரில் (Blue Ridge) சீசருடைய தலையும் நம்முடைய உலகத்தில் காணப்படுகின்றது.

சிலுவையில் அறையப்படுதல் என்பது மிகவும் கொடூரமான மற்றும் சித்திரவதைகள் கொண்ட மரண முறைமையாகும்; எனினும் கல்வாரியினிடத்திற்கும், அதற்கு முன்பு நிகழ்ந்த நிகழ்வுகளினிடத்திற்கும் நம் மனங்களை நாம் திருப்புகையில், நமக்காக நமது மீட்பர் அனுபவித்திட்டதான மரணத்தினுடைய சித்திரவதையானது, நமக்கு மிகுந்த அனுதாபத்தின் உணர்வுகளையும், துக்கத்தையும் கொடுக்கிறதாக இல்லை. இயேசுவோடுகூட இரண்டுபேர் சிலுவையில் அறையப்பட்டிருந்தனர்; அநேகர் இதுபோன்றதான ஒரு மரணத்தை இயேசுவுக்கு முன்பும், பின்பும் அடைந்திருக்கின்றார்கள் மற்றும் அவர் அளவுக்கும் (அ) நீண்டகாலமான சித்திரவதைகள், கொஞ்சம் கொஞ்சமாக கழுமரத்தில் கட்டப்பட்டு எரிக்கப்படுதல், சித்திரவதைப் படுத்திக் காயப்படுத்தல் முதலானவைகள் மூலம் அதிகமான அளவுக்கும் சிலர் பாடுபட்டுள்ளனர் என்று நாம் எண்ணுகின்றோம். நமது அருமை இரட்சகருக்கான

அனுபவங்களானது, "நன்மை செய்கிறவராக சுற்றித்திரிந்த" அவருக்கு தகுதியற்றது மற்றும் ஏற்றதல்ல என்பது மாத்திரமல்லாமல், "அவருடைய தழும்புகளால் நாம் குணமாகத்தக்கதாக," நமக்கான தண்டனையைச் சந்திப்பது தொடர்புடையதாகவே அவருடைய அனுபவங்களானது காணப்பட்டது என்பதுமான கருத்தே நம்முடைய இருதயங்களைப் பாதித்தவைகளாக இருக்கின்றன (ஏசாயா 53:5).

## கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது

நம் மீதான தண்டனை தீர்ப்பிலிருந்து, சாபத்திலிருந்து நாம் விடுவிக்கப்பட்டு, மீண்டுமாக தெய்வீகத் தயவினிடத்திற்குச் சீர்ப்பொருந்தப்படத்தக்கதாக, நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கத்தக்கதாக, அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் நம்முடைய பாவங்களுக்காகக் கிறிஸ்து மரித்திருக்கின்றார் என்ற கருத்தே – இந்தக் கருத்தே நம்முடைய இருதயங்களை அன்புடன்கூடிய அனுதாபங்கொள்ளச் செய்கின்றது. "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் (மரணத்தீர்ப்பின் கீழ்க்காணப் பட்டார்கள்) மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கிறவர்களாகிய நாம் இனித் நமக்கென்று பிழைத்திராமல், நமக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக் கும்படி, அவர் எல்லாருக்காவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்" (2 கொரிந்தியர் 5:14, 15).

"காலாக் காலங்களாக நிகழ்ந்துவந்த மரணங்கள் அனைத்திலும், மேலோங்கி நிற்கும்
கிறிஸ்துவின் சிலுவைதனிலே நான் மேன்மைப்பாராட்டுகின்றேனே;
இதன் உயர் கருத்துகளிலேயே,
புனித கதையின் அனைத்து விளக்கமும் மையம் கொண்டுள்ளதே."

எந்தளவுக்கு நமது கர்த்தருடைய மரணத்திற்கான அவசியத்தையும், மனுக்குலத்தினுடைய பாவங்களுக்கான பாவநிவாரணமாகிய அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய முக்கியத்துவத்தையும் நம்முடைய நாட்களிலுள்ள "இவ்வுலகத்தின் ஞானிகளும்" மற்றும் வேதசாஸ்திரிகளும், இறையியல் கல்லூரிகளினுடைய பேராசிரியர்களும் மறுக்கின்றவர்களாய் இருக்கின்றார்களோ, அவ்வளவுக்குத் தேவனுடைய கிருபையினால், தெய்வீகத் திட்டத்தைக் காணத்தக்கதாக தங்கள் கண்கள் திறக்கப்பெற்றவர்கள், மனிதனுக்கும், தேவனுக்குமான ஒப்புரவாகுதலுக்கான அடித்தளமாகக் காணப்படும் சிலுவையினுடைய முக்கியத்துவத்திற்கு அதிகமதிகமாய் முக்கியத்துவம் கொடுத்திட வேண்டும். சுவிசேஷத்தினுடைய இந்த அடித்தளமான அம்சத்தினுடைய விஷயத்திலிருந்து நம்முடைய நாட்களில் திரளானவர்கள் விலகி போயுள்ளனர். இயேசு நல்ல, சிறந்த, அருமையான மற்றும் ஞானமான போதகராக சித்தரிக்கப்படுகின்றார்;

இவருடைய வார்த்தைகளானது, பாடங்களுக்கும், வியாக்கியானத்திற்கும் ஏற்றதாய் இருக்கின்றது; ஆனால் மனிதன் பரிணாம வளர்ச்சியின் வாயிலாகவே குரங்கு நிலையிலிருந்து, தேவனுடைய சாயலுக்கு வந்தான் என்று கூறப்படும்போது, உலகத்தினுடைய பாவம் என்கிற காரியமானது மறுக்கப்படுகின்றதாய் இருக்கின்றது; மேலும் பாவநிவாரணம் கொடுக்கத்தக்கதாக, உலகத்திற்குப் பாவம் இல்லையெனில், இயேசு உலகத்தினுடைய பாவங்களுக்கான பாவநிவாரணமானார் என்பதான வேதவாக்கியங்களினுடைய பதிவானது தப்பறையானதாக இருக்கும்; இந்தக் கண்ணோட்டமே கிறிஸ்தவ மண்டலம் முழுவதும் வேகமாய்ப் பரவி, உண்மை கிறிஸ்தவ விசுவாசம் அனைத்தையும் அழித்துப்போடுகின்றதாய் இருக்கின்றது.

மற்ற விசுவாசங்களானது, உண்மை கிறிஸ்தவ விசுவாசமல்ல; பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புக் கொடுக்கப்பட்டதான விசுவாசமல்ல; தேவனுக்குப் பிரியமாய் இருக்கும் விசுவாசமல்ல; நீதிமானாக்கப்படுதலுக்கும், பாவங்களினுடைய மன்னிப்புக்கும் அடிப்படையாய்க் காணப்படும் விசுவாசமல்ல; கர்த்தரினால் ஏற்றக்காலத்தில் மதிக்கப்படுகின்ற, கனப்படுத்தப்படுகின்ற, ஆசீர்வதிக்கப்படுகின்ற மற்றும் பலனளிக்கப்படுகின்றதான விசுவாசமல்ல. இக்காரியத்தினை நாம் அழுத்தமும், தெளிவாயும் விளக்கமுடியாது; சிலுவையினுடைய இரத்தத்தின் மூலம், அதாவது இயேசுவினுடைய மரணத்தின் மூலம் பாவநிவாரணம் எனும் உபதேசத்தைக் கொண்டிராதவர்கள், வேதவாக்கியங்களின் அடிப்படையில் கிறிஸ்தவர்கள் அல்ல என்று சொல்வதானது, சிலரைக் கோபமூட்டுவதாக இருக்கும். இறுதியில் இந்த உபதேசமானது, யார் கர்த்தருடையவர்கள், யார் அவருடையவர்கள் அல்ல என்பதைத் தெளிவாய்க் காண்பித்துத் தருகின்றதான உரைக்கல்லாக விளங்கும். விசுவாசத்தினுடைய இந்த மையத்தை இழந்துபோகின்றவர்கள், தற்காலத்தில் கிறிஸ்துவுக்குள்ளான அனைத்தையும் இழந்துபோகின்றவர்களாய் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் முகமதியர்கள் (அ) யூதர்கள் (அ) பிராமணர்கள் (அ) (சீன தத்துவ ஞானிகள்) கன்`ப்யூசியன்கள் (confucions) போன்று கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் ஆவார்கள். இயேசு ஜீவித்தார் என்றும், அவர் மரித்தார் என்றும், அவர் மாபெரும் போதகராய் இருந்தார் என்றும், யூதர்களும், முகமதியர்களும், நாத்திகர்களும் நம்புகின்றனர்; ஆனால் இப்படியான நம்பிக்கையானது, அவர்களைக் கிறிஸ்தவர்களாக்குவதுமில்லை மற்றும் நீதிமானாக்குகிறதுமில்லை. அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவதுபோன்று நாம், "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே" நீதிமானாக்கப்பட்டிருக்கின்றோம் (உரோமர் 3:26).

## Via Dolorosa – சிலுவை பாதை

பிலாத்துவின் அரண்மனையிலிருந்து, கல்வாரிக்கு நேரான பாதையானது, துக்கமும், கவலையும் நிறைந்த பாதையாய்க் காணப்பட்டது. இம்மாதிரியான சூழ்நிலைகள் அனைத்திலும் நியாயமாய்ச் செய்ய முடிகிற ஒரே ஒரு காரியத்தை,

பிலாத்தும் செய்திருந்தபோதிலும், அவருக்கு மன அமைதியில்லாமல் இருந்தது. பிரதான ஆசாரியர்களும், வேதசாஸ்திரிகளும் வெற்றிப்பெற்றனர் மற்றும் தங்களுடைய கைதி, பலியிடுவதற்காகக் கொண்டுபோகப்படும் ஆட்டைப்போன்று கொண்டு செல்லப்படுவதை அவர்கள் கண்டபோது, அவர்கள் ஆனந்தமாய் வெற்றியைக் கொண்டாடியிருக்க வேண்டுமென்று நாம் எண்ணக்கூடும். அவர்களிடம் மனச்சாட்சி காணப்பட்டது என்றும், அவர்களால் பெரியளவு மகிழ்ச்சிக்கொள்ள முடியவில்லை என்றும் நாம் யூகிக்கின்றோம்; "இவருடைய இரத்தப்பழி எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று அவர்கள் பிலாத்துவிடம் சொன்னாலும், அவர்கள் தாங்கள் யாருக்கு எதிராக வெற்றிப்பெற்றிருந்தார்களோ, அந்த அருமையான நபர் குறித்த ஒருவித மர்மமான அச்சத்தினை உணர்ந்தார்கள். அவர்களது இருதயங்கள் கலங்கவே இல்லை என்று எண்ணுவது என்பது, அவர்களை எல்லாவிதத்திலும் களங்கப்படுத்துவதாக இருக்கும். வழியில் இயேசுவுக்குச் சீஷர்கள் அல்லாத உருக்கமுள்ள ஸ்திரீகளானவர்கள், அவர் கடந்து போகையில் அழுதார்கள். இயேசுவை வாரினால் அடிப்பித்து, அவரைக் குற்றஞ்சாட்டுகிறவர்கள் முன் அவரைக் கொண்டுவந்து நிறுத்தி, பின் பிலாத்து இயேசுவைக் குற்றஞ்சாட்டினவர்களின் மனதை இளகப் பண்ணிடுவதற்கு முற்பட்டார். அப்போது பிலாத்துக் கூறினதாவது: "(Ecce Homo) எக்கிஹோமோ – அதாவது இதோ இந்த மனுஷன்! சிலுவையில் அறைந்துபோடும்படிக்கு என்னிடத்தில் நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கும் இந்த மனிதனைப் பாருங்கள்; உங்கள் தேசத்திலேயே வேறெந்த மனிதனுக்கும் இவரைப் போன்றதான முகமும், ரூபமும் இல்லை; இவர் ஒரு பொல்லாத மனிதர் என்று உங்களில் ஒருவர்கூட, ஒரு கணம்கூட எண்ணுவதில்லை; இவருடைய முகமானது, இவர் பொல்லாதவர் இல்லை என்பதைக் காட்டுகின்றது. உங்களுக்கு இன்னமும் திருப்தியாகவில்லையா? இவர் அடைந்துள்ள அடிகளானது, இவருக்கு எதிரான உங்களது கோபத்தினைத் தணித்திடாதா? நான் இவரைப் போகவிடுவதற்கு நீங்கள் ஒத்துக் கொள்ள மாட்டீர்களா?" ஆனால் இந்த முறையீடுகள் யாவும் பயனற்றதாயின. இயேசுவின் சத்துருக்களானவர்கள் கசப்பினாலும், பொறாமையினாலும் மிகவும் நிரம்பிக் காணப்பட்டிருந்தபடியால், இயேசுவின் தோற்றமானது, அவர்களைக் கவரமுடியாதளவுக்கு அவர்கள் குருடர்களாகக் காணப்பட்டனர். எனினும் இவைகள் இயேசு கடந்து செல்கையில், காணப்பட்ட ஸ்திரீகளின் மனதை இளகச் செய்தது. அந்தச் சூழ்நிலையில் காணப்பட்ட அனைவரிலும், இயேசுவே மிகவும் அமைதியுடன் காணப்பட்டார், ஏனெனில் பிதாவினுடைய சித்தத்தையே தாம் செய்து வருகின்றார் என்ற உறுதியை அவர் பெற்றிருந்தார். தெய்வீகத் தயவுள்ளது எனும் வார்த்தையினை இயேசுவுக்குக் கொடுப்பதற்கும் மற்றும் இப்படியாக அவரைப் பெலப்படுத்துவதற்கும் என்று தேவதூதன் கெத்செமனேயில் இயேசுவுக்குத் தோன்றினது முதல், மேற்கூறின அந்த உறுதியானது அவரை அமைதியாகவும், உணர்ச்சிவசப்படாதவராகவும் காணப்படச் செய்தது. பிதாவினுடைய திட்டத்தை அரங்கேற்றப்போகிறதும், பிதாவின் சித்தமாகக் காணப்படப்போகின்றதுமான எதையும் சகிப்பதற்கு, இயேசு ஆயத்தமாய்க் காணப்பட்டார்; இயேசு தேவனுடைய ஞானத்தின் மீதும், அன்பின் மீதும், நீதியின் மீதும்,

வல்லமையின் மீதும் அப்பேர்பட்டதான ஒரு நம்பிக்கையினைக் கொண்டிருந்தார். சந்தேகத்திற்கிடமின்றி முப்பத்தியேழு ஆண்டுகளுக்குப் பிற்பாடு அந்தப் பட்டணத்தின் மீது வந்ததான பயங்கரமான உபத்திரவத்தை மனதில் கொண்டவராக, அழுது கொண்டிருந்த ஸ்திரீகளை நோக்கி: "நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காக அழுங்கள்" என்று இயேசு கூறினார்.

## அவன் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்

இயேசு தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, நான்கு உரோம போர்ச் சேவகர்களுடன் ஊர்வலத்தின் முன்னாகச் சென்றார்; இவர்களுக்குப் பின்னாக இரண்டு கள்வர்கள் வந்தார்கள்; ஒவ்வொரு கள்ளனையும் நான்கு போர்ச் சேவகர்கள் பாதுகாத்து வந்தார்கள் மற்றும் இவர்கள் அனைவரும் நூற்றுக்கு அதிபதி ஒருவருடைய தலைமையின் கீழ்க் காணப்பட்டார்கள். அந்தக் கள்வர்களைக் காட்டிலும் மிகவும் அறிவுள்ளவராகவும், மிருகத்தனம் அற்றவராகவும், சுபாவத்தில் முரட்டுத்தன மற்றவராகவும் நமது மீட்பர் காணப்பட்டப்படியால், அநேகமாக அவர்களைக் காட்டிலும் அவருக்கே பாரமான மரச் சிலுவையைச் சுமப்பதில் சிரமம் இருந்திருக்கும்; இன்னுமாகக் கிட்டத்தட்ட பன்னிரண்டு மணி நேரங்கள் அவர் உணவு இல்லாமல், மிகவும் மன அழுத்தம் நிறைந்த நிலையிலும் காணப்பட்டிருந்திருக்கிறார். அவரால் அவரது சிலுவையின் பாரத்தைக் கொஞ்சமும் சுமக்கமுடியவில்லை மற்றும் நூற்றுக்கு அதிபதியானவனோ, இயேசுவின் பின்னே சிலுவையைச் சுமந்துவரும்படிக்கு, சிரேனே ஊரானாகிய சீமோனைப் பலவந்தம் பண்ணினான். "இயேசுவின் பின்னே" எனும் வார்த்தைகளானது, இவர் சிலுவையைச் சுமந்துகொண்டு, ஊர்வலத்தில் இயேசுவுக்குப் பின் நடந்துவந்தார் (அ) சிலுவையின் கடைப்பாகத்தைத் தாங்கிக்கொண்டு, இயேசுவோடுகூட வந்தார் என்பதைக் குறிக்கின்றதா எனத் தெளிவாய்த் தெரியவில்லை; எப்படியாக இருப்பினும், இவர் பலவந்தம் பண்ணப்பட்டிருந்தாலும், இவர் மிகவும் மகிமையான ஒரு வாய்ப்பினைப் பெற்றிருந்திருக்கின்றார்.

இந்தப் பதிவுகளை வாசித்துள்ளதான அநேக கர்த்தருடைய அருமையான ஜனங்களானவர்கள், தங்களுக்கு இப்படியாக அந்தச் சிலுவையைச் சுமப்பதில் ஒரு பங்கு கிடைத்திருந்திருக்காதா என்று ஏங்கியிருந்திருக்கின்றனர். பேதுருவும், யாக்கோபும் மற்றும் யோவானும் மற்றும் மற்றவர்களும் எங்கே போனார்கள்? அந்தோ! மிகவும் மகிமையானதொரு ஊழியத்தைத் தாங்கள் புரிவதிலிருந்து தடைப்பண்ணப்படத்தக்கதாகவும், தங்களிடமிருந்து பிடுங்கிப்போடப்படத் தக்கதாகவும், அவர்கள் பயத்தை அனுமதித்துவிட்டனர். இவைகளைக் குறித்து நாம் எண்ணிப்பார்க்கின்றதான அதேவேளையில், நமது கர்த்தரானவர் தம்முடைய பின்னடியார்கள் அனைவரும், தம்முடைய சிலுவையைச் சுமப்பதில் பங்கடையத்தக்கதாகக் கிருபையாய் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்பதை

நினைவுகூருவதும் ஏற்றதாய் இருக்கும். சிலுவையினுடைய அவமானங்களும், சிலுவையினுடைய பாரங்களும், இன்னும் ஓயவில்லை; கிறிஸ்துவினுடைய சிலுவையானது இன்னமும் உலகத்திலேயே காணப்படுகின்றது; அவரோடுகூட சிலுவையைச் சுமப்பதற்கும், அவருக்குப் பின் நடப்பதற்குமான சிலாக்கியம் இன்னமும் நமக்குள்ளது. இயேசுவுக்காக சொல்லர்த்தமான சிலுவையைச் சுமப்பதற்கான சிலாக்கியத்தினை அப்போஸ்தலர்கள் இழந்துபோனபோதிலும், அவர்கள் தங்கள் பயங்களினின்று மகிமையாய்க் குணமடைந்தார்கள் மற்றும் பிற்காலங்களில் அவர்கள் ஜீவித்த வருடங்கள் அனைத்திலும், அவர்கள் கிறிஸ்துவின் சிலுவையைச் சுமந்து, சிறப்பாய் ஊழியம் செய்தது குறித்த பதிவுகளை நாம் பெற்றிருக்கின்றோம்.

நாம் அதிகமாய் அன்புகூருவோமாக மற்றும் சிலுவையைச் சுமப்பதிலுள்ள நம்முடைய வைராக்கியத்தின் வாயிலாக நம்முடைய அன்பை வெளிப்படுத்துவோமாக; மற்றும் எப்போதாகிலும் இந்த வைராக்கியமானது தணிந்துபோகிறதென்றால், "சிலுவையில்லையெனில் கிரீடமில்லை" எனும் ஒப்புக்கொள்ளப்பட்டதான உண்மையினை நினைவு கூருவோமாக; "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" என்றும், "நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்" என்றுமுள்ளதான அப்போஸ்தலருடைய வார்த்தைகளை நாம் நினைவுகூருவோமாக. எனினும் மரணத்தின் காரணமான பயமோ அல்லது கிரீடத்திற்கு மதிப்புக் கொடுக்கும் காரியமோ, நம்மை ஆளும் நோக்கங்களாக இருந்தும் விடக்கூடாது. கர்த்தருக்கான நம்முடைய அர்ப்பணமானது, கர்த்தர் நமக்குச் செய்துள்ளவைகளைப் பற்றின உணர்ந்துகொள்ளுதலினாலும், அவரிடத்திலான நம்முடைய அன்பினாலும், அவரைப் பிரியப்படுத்தக்கூடியவைகளைச் செய்ய நாம் விரும்பி மற்றும் இவ்வாறாக நாம் பதில் அன்பைத் தெரிவிப்பதினாலுமே முக்கியமாய் உண்டானதாக இருக்க வேண்டும். சபையினுடைய தலையாகிய கர்த்தர் இயேசு நீண்டக் காலத்திற்கு முன்னதாகவே மகிமையடைந்திருந்த போதிலும், இந்த உலகத்தில் அவர் தம்முடைய சகோதரர்களென, "தம்முடைய சரீரத்தின் அங்கத்தினர்களென" அடையாளம் கண்டுகொள்ளப்படுபவர்கள் இன்னமும் காணப்படுகின்றனர் என்றும், இந்தச் சிறியவர்களில் ஒருவருக்கு நாம் செய்யும் யாதும், இந்தச் சிறியவர்கள் தங்கள் சிலுவையைச் சுமக்கும் விஷயத்தில் அவர்களுக்கு நாம் அளிக்கும் உதவிகள் எதுவாயினும், அவற்றை அவர் தமக்கே செய்ததாகவும், அவருக்கான நம்முடைய அன்பின் வெளிப்படுத்துதலாகவும் எண்ணிடுவார் என்றும் நாம் நினைவில் கொள்வோமாக.

## அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்

இரண்டு கள்வர்கள் நடுவே நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டதான காரியமானது, பல்வேறு கண்ணோட்டங்களிலிருந்து பார்க்கப்படலாம். இக்காரியமானது அவருக்கு மிக ஆழமான அவமானப்படுத்தும் காரியமாக இருந்தது. தன் இருதயத்தில் தூய்மையை உயர்வாய் மதிக்கின்றதான நற்பண்புள்ள எந்த ஓர்

ஆணுக்கும் (அ) பெண்ணிற்கும், இப்படியாக அக்கிரமக்காரர்களில், கொலைக்காரர்களில், திருடர்களில் ஒருவராக எண்ணப்பட்டுத் தவறாய்ப் புரிந்து கொள்ளப்படுகிறதானது மிகவும் வெறுப்பாய் இருக்கும். இப்படியாக மனதிலும், இருதயத்திலும் பூரணமற்ற நிலையில் காணப்படும் நமக்கே இருக்குமாயின், பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும் பூரணமற்ற உணர்ந்துகொள்ளுதலை உடையதான நமக்கே இருக்குமாயின், இவ்வுணர்வானது பூரணராகிய நமது கர்த்தருக்கு எவ்வளவு தீவிரமாய் இருந்திருக்கும். அவர் எவ்வளவாய்ப் பாவத்தை வெறுத்திருக்க வேண்டும்; அவர் எல்லாவிதத்திலும் எவ்வளவாய்ப் பாவத்தை எதிர்த்திருக்க வேண்டும்; மேலும் நாம் ஒருவேளை அவருடைய நிலைமையில் காணப்பட்டிருந்தால் நம்மால் அடைய முடிந்திருக்கிறதைக்காட்டிலும், அவர் எவ்வளவுக்கு அதிகமாய் வெட்கமடைந்திருக்க வேண்டும். தம்முடைய குமாரன் அக்கிரமக்காரர்களில் ஒருவராக எண்ணப்படுவதற்கான இந்த அனுமதி என்பது பரம பிதாவின் கண்ணோட்டத்தில், "மரணப்பரியந்தமாக, அதாவது சிலுவையின் மரணப்பரியந்தம் (குமாரன்) தம்மைத் தாழ்த்தினார்" என்று நாம் வாசிக்கிறபடியே, இந்த உச்சக்கட்ட அளவிலான குமாரனுடைய இருதயத்தின் நேர்மையை/உண்மையைத் தூதர்களுக்கும் மற்றும் மனிதர்களுக்கும் நிரூபித்துக் காண்பிப்பதற்காகவே ஆகும்.

இப்படியாகக் கர்த்தர் மரிப்பதற்கான தமது விருப்பத்தை மாத்திரமல்லாமல், மிகவும் இழிவான விதத்தில் மரிப்பதற்கான தமது விருப்பத்தையும், தமது முழுமையான சுயத்தைத் துறத்தலையும், தம்முடைய சொந்த சித்தத்திற்கு முழுமையாய் மரித்திருப்பதையும், பிதாவின் சித்தத்திற்குத் தம்முடைய மனமும், இருதயமும் முற்றும் முழுமையாய் உயிருடன் இருப்பதையும் நிரூபித்துக்காட்டினவரானார். இந்த அனைத்து விஷயங்களிலும் அவர் தம்முடைய பின்னடியார்களுக்கு முன்மாதிரியானார்; அப்போஸ்தலர் கூறியுள்ளதுபோன்று, "ஏற்றக்காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும் படிக்கு (தேவனுக்குக் கீழ்ப்படிவது என்பது, எவ்வளவாய்த் தாழ்த்தப்படுதலைக் கொண்டுவருவதாக இருப்பினும்) அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1 பேதுரு 5:6). இரண்டு கள்வர்கள் நடுவில் கர்த்தர், சிலுவையில் அறையப்பட்டதானது, ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகருடைய கண்ணோட்டத்தில் விசேஷமாய் விரும்பப்பட்ட ஒன்றாகக் காணப்பட்டது; இப்படி அவர் இரண்டு கள்வர் மத்தியில் அறையப்பட்டதான காரியமானது, அவரை ஜனங்கள் இரத்தச் சாட்சியாக மரித்தவரெனப் பார்ப்பதைத் தடைப்பண்ணுவதாக இருக்கும் மற்றும் இது அவரை ஜனங்கள் முன்னிலையில் அவமதிப்பதாகவும், இழிவுப்படுத்துவதாகவும் இருக்கும் மற்றும் தேவனுக்கும், மனிதனுக்கும் சத்துருவென, குற்றவாளியென வெளிப்படையாக மரணத் தண்டனை நிறைவேற்றப்பட்ட (இயேசுவினுடைய) மதப்போதகருடைய பின்னடியார் என்று தன்னைக்குறித்து எவனும் அறிக்கைப் பண்ணுவதற்கு வெட்கப்பட பண்ணுவதாகவும் இருக்கும். சிலுவையில் காணப்படுகின்ற கிறிஸ்துவை யாராகிலும் மேன்மைப் பாராட்டுவார்களென எதிர்ப்பார்த்திட எப்படி முடியும்? ஆனால் எத்துணை அருமையாகத் தேவனுடைய திட்டங்களானது, அனைத்து மனித ஏற்பாடுகளையும் ஒன்றுமில்லாமலாக்கிப்போட்டு, மனிதனுடைய இருதயத்தின் பொறாமையையும்,

கோபத்தையும் மற்றும் பாதகத்தையும் கூடத் தேவனுக்கு மகிமையை உண்டுபண்ணத்தக்கதாகவும், அவரது திட்டத்திற்கு இசைவாகச் செயல்படத்தக்க தாகவும் பண்ணிற்று!

## ஜீவாதிபதியைக் கொன்றுபோடுதல்

பிலாத்துவின் அரண்மனைக்கும், கபால ஸ்தலத்திற்கும் இடையே அதிக தொலைவு இல்லை என்றாலும், கபால ஸ்தலமானது பட்டணத்தினுடைய மதிலுக்கு வெளியே இருந்தது. அந்த இடத்திற்குச் சீக்கிரமாய் வந்து சேர்ந்தார்கள்; சிலுவைகளானது தரையில் கிடத்தப்பட்டன மற்றும் கைதிகளினுடைய வஸ்திரங்களைப் போர்வீரர்கள் உடனடியாகக் கழற்றிப்போட்டுவிட்டு, அவர்களை ஆணி அறைந்தனர்; அநேகமாக மர ஆணிகள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்; சிலுவையில் அறைந்திட்ட பிற்பாடு சிலுவையைத் தூக்கி, அது நிற்கத்தக்கதாக ஏற்கெனவே ஆயத்தப்படுத்தப்பட்டிருந்த குழிக்குள் அது நிறுத்தப்பட்டது; சிலுவையில் அறையப்பட்டவருடைய பாதங்களானது, தரையிலிருந்து சுமார் இரண்டு அடிகளுக்கு மேலாகக் காணப்பட்டது. இம்மாதிரியான முறைகள் கையாளப்படுகையிலான வேதனையை, அதிலும் விசேஷமாக குழிக்குள் சிலுவை நிறுத்தப்படுகிறதான தருணத்தின் போதான வேதனையை விவரிப்பதைக் காட்டிலும், நன்கு கற்பனைசெய்து உணர்ந்துகொள்ளப்படலாம்; சிலுவையானது குலுங்குகையில், ஆடி அசைகையில், மற்றும் இவைகளோடுகூடச் சரீரத்தின் பாரப்பளு இழுக்கையில், வலியானது முரட்டுத்தனமானவர்களுக்கும், கரடுமுரடானவர்களுக்கும் இருப்பதைக் காட்டிலும் நேர்த்தியான மனமும், நரம்பு மண்டலமும் உடையவருக்கே மிகக் கடுமையானதாய்க் காணப்படுகின்றது; ஆகையால் நமது கர்த்தரோடு காணப்பட்டிருந்த இருவரைக்காட்டிலும், அவருக்கே வலி மிகக் கடுமையாய் இருந்திருக்கும். "என் கர்த்தர் இதை எனக்காகச் சகித்தார்" என்று இயேசுவின் அர்ப்பணிப்புமிக்க சீஷர்கள் கூறுவதுண்டு மற்றும் அவருக்காக நாம் எந்த நிந்தனையை (அ) அவமானத்தை (அ) வலியைச் சுமந்திருக்கின்றோம்? என்று நாம் நம்மிடமே கேட்டுக்கொள்வோமாக. இது குறித்து நினைக்கும் மாத்திரத்திலேயே, நாம் சகித்துக் கடந்து வந்துள்ளதான எந்தச் சோதனைகளையும், நாம் பெருமையாய்க் குறிப்பிடுவதற்கு நம்மை வெட்கமடையச் செய்யும் மற்றும் நமது சீஷத்துவத்தின் காரணமாக நமது பாத்திரத்தில் இடம்பெறுவதற்குத் தெய்வீக ஏற்பாடானது அனுமதிக்கின்ற அனைத்தையும் நாம் சகிக்கிறதற்கும், அனைத்திலும் பொறுமையுடன் இருக்கிறதற்கும் நம்மைத் தைரியம் கொள்ளச்செய்யும்.

## யூதர்களுடைய இராஜா

இயேசுவைச் சிலுவையில் அறைந்துபோடும் விஷயத்தில், நீதிக்கு எதிராகவும், தன்னுடைய சித்தத்திற்கு/விருப்பத்திற்கு எதிராகவும், தன்னை வற்புறுத்தியவர்களான பொறாமையும், தீய எண்ணமும் கொண்டிருந்ததான யூத அதிகாரிகளுக்குச் சரிக்குச்

சரியாகச் செய்திடுவதற்கான தருணம் பிலாத்துவுக்கு வந்தது. எந்தக் குற்றத்திற்காக மரணத்தண்டனை நிறைவேற்றப்பட்டதோ, அதை எழுதி, குற்றவாளியினுடைய தலைக்கு மேலாகத் தொங்கவிட்டுத் தெரிவிப்பது வழக்கமாய் இருந்தது. இயேசுவின் விஷயத்திலோ, பிலாத்து "யூதருடைய இராஜாவாகிய, நசரேயன் இயேசு" என்று எழுதிபோட்டார்; மாற்கு இதை "யூதருடைய இராஜா" என்றும், லூக்கா இதை "இவர் யூதருடைய இராஜா" என்றும் பதிவு செய்துள்ளனர். இந்த மூன்றுமே சரியே, ஏனெனில் இவ்வார்த்தைகளானது எபிரெயத்திலும், கிரேக்கிலும் மற்றும் இலத்தீனிலும் எழுதப்பட்டிருந்தது.

பிரதான ஆசாரியன் முன்னிலையில் நடந்திட்டதான இயேசுவுக்கான விசாரணையில், அவர் தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறினதால் தேவதூஷணம் கூறினவராக, மரணத்தண்டனை தீர்ப்பிற்குள்ளாக்கப்பட்டார்; ஆனால் நாம் பார்த்திருக்கின்ற வண்ணமாக, இந்த ஒரு குற்றச்சாட்டானது பிலாத்துவுக்கு முன்பு செல்லாததாய் இருக்கும், ஏனெனில் ஒரு மனிதன் தேவனையோ (அ) வேறொரு தேவனையோ தூஷிப்பது எதையும் உரோம அரசாங்கமானது பொருட்படுத்துவதில்லை. உரோமர்கள் அவருக்கு மரணத்தண்டனை வழங்கத்தக்கதாக, இயேசு தம்மை யூதர்களுடைய இராஜா என்று உரிமைப்பாராட்டிக் கொண்டதின் மூலம், அவர் உரோமுக்கு எதிராகக் கலகம் புரிந்தார் என்று அவரைக் குறித்துக் குற்றஞ்சாட்டினார்கள். எழுதினதை மாற்றுவதில்லை என்பதான பிலாத்துவினுடைய தீர்மானமானது சரியானதேயாகும் மற்றும் இயேசுவே உண்மையில் பூமியின் இராஜாவாக இருப்பதற்கான தெய்வீக அபிஷேகித்தலைப் பெற்றவர் என்ற இந்த மாபெரும் உண்மைக்கு, குருடாயிருக்கிற உலகத்தின் கண்கள் யாவும் இறுதியில் திறக்கப்படும். ஆனால் அவர் சொன்னது போலவே, "என் இராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல" . . . அதாவது அதற்கான காலம் இன்னும் வரவில்லை என்பதாகும். அவர் சொல்லியுள்ளது போலவே, "அவர் மகா வல்லமையையும், ஆளுகையையும் எடுத்துக்கொள்ளும்" காலம் வந்துக்கொண்டிருக்கின்றது. தற்போது அவரை இராஜாவென அங்கீகரிப்பவர்கள் மிகவும் சொற்பமானவர்களாகவும், இவ்வுலகத்திலுள்ள மிகவும் முக்கியத்துவமற்ற நபர்களாகவும் காணப்படுகின்றனர்; அதாவது ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, கல்விமான்கள் அநேகரில்லை" – மாறாக "விசுவாசத்தில் ஐசுவரியவான்களாய் இருக்கும் இவ்வுலகத்தின் தரித்திரரே" பிரதானமாய்க் காணப்படுகின்றனர்.

இயேசு உலகத்தினுடைய இராஜாவாக இப்போது இருக்கின்றார் என்றும், அவர் ஆளுகை செய்கின்றார் என்றும், கிறிஸ்தவ மண்டலமே அவரது இராஜ்யம் என்றும், பெயரளவில் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப் பண்ணியுள்ளவர்களான 400,000,000 - பேர் அவரது உண்மையுள்ள பிரஜைகளாகக் காணப்படுகின்றனர் என்றும் கூறித் திரிவது சிலருக்கு இனிமையான கட்டுக்கதையாய்த் தோன்றுகின்றது. இப்படியாக எண்ணிக்கொண்டிருப்பவர்கள், நமது கர்த்தருக்கு மரணத்தை உறுதிச் செய்திட்டதான வேத சாஸ்திரிகள் போலவே கிட்டத்தட்ட குருடான நிலையிலும்,

தவறான அபிப்பிராயத்திலும் காணப்படுகின்றனர். கருப்பை, வெள்ளை என்று கூறுவதுபோலவே, "கிறிஸ்தவ மண்டலத்தை," கிறிஸ்துவினுடைய சாம்ராஜ்யம் என்றும், கிறிஸ்தவ மண்டலத்தினுடைய ஜனங்களைக் கிறிஸ்துவினுடைய ஊழியக்காரர்கள் என்றும் கூறுவது கூடக் காணப்படும். "நீங்கள் யாருக்கு ஊழியம் புரிகின்றீர்களோ, அவருக்கே ஊழியக்காரர்களாய் இருக்கின்றீர்கள்" என்பதே நமது கர்த்தருடைய நிலைப்பாடாய் இருக்கின்றது மற்றும் இந்த அவரது நிலைப்பாட்டின்படி, கர்த்தர் சொற்பமான உண்மையுள்ள ஊழியக்காரர்களை உலகத்தில் இன்று பெற்றவராய் இருக்கின்றார் மற்றும் பெரும்பான்மையானவர்கள் சுயநலத்தினுடைய பல்வேறு வடிவங்களில், பாவத்திற்கு ஊழியம் புரிகின்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் வானத்தின் கீழ் தமது மகா வல்லமையையும், ஆளுகையையும் கிறிஸ்து எடுத்துக்கொள்ளப் போகிறதான கிறிஸ்துவினுடைய நாளானது, அதாவது அபிஷேகிக்கப்பட்டவரின் நாளானது இன்னும் தொலைவில் இருப்பதாக எண்ணுவதில் மகிழ்ச்சிக்கொள்பவர்களாக இருக்கின்றனர்.

"அவர் பிரசன்னமாகுதலை விரும்புகின்றவர்களும்," இராஜாவினுடைய பிரசன்னத்திற்காகவும், பூமியில் அவரது நீதியின் ஆளுகையானது தொடங்குவதற் காகவும் ஏங்கும் ஆத்துமாக்களை உடையவர்களும், மிகச் சொற்பமானவர்களாய் இருப்பது வருத்தத்திற்குரியதே. ஆனால் "சிறு மந்தையினர்," அதாவது சிலுவையின் போர் வீரர்கள் அனைவரும், ஒருவரோடொருவருடனான ஐக்கியத்தினை விசேஷித்த வண்ணம் புரிந்து கொண்டவர்களாக, வேத வாக்கியங்களானது புத்திமதிக் கூறுவது போன்று, "சகோதர சகோதரிகளுக்காக தங்கள் ஜீவியங்களை ஒப்புக் கொடுப்பதற்காக" ஆயத்தத்துடன் காணப்படவேண்டும். சகோதரனுக்காக தனது ஜீவியத்தை/ஜீவனை ஒப்புக்கொடுக்கிறவன், சத்தியத்திற்கு எதிராக எதுவும் செய்யாதபடிக்கும், சத்தியத்திற்காகவே அனைத்தையும் செய்யும்படிக்கும், எவருக்கும் இடறலானவைகளைச் செய்யாதபடிக்கும், இன்னுமாகக் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களுக்கு, "அவரது பாத அங்கங்களுக்கு" கூடுமானமட்டும் உதவும்படிக்கும், தனது நடவடிக்கைகள் அனைத்திலும் நிச்சயமாய் ஜாக்கிரதையாய் இருப்பான்.

## "அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள்" - மத்தேயு 27:36.

தேவனையும், நீதியினுடைய கொள்கைகளையும் அறிந்திராதவர்களும், கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது என்பதை, கடமைப்பற்றின உயர்ந்தபட்ச புரிந்து கொள்ளுதலாகப் பெற்றிருப்பவர்களுமான உரோம போர்வீரர்கள் உணர்வுகளற்றவா களாகக் காணப்பட்டனர்; அவர்களது கைதிகளினுடைய மாம்சமானது துடிதுடிப்பது என்பது அவர்களை உருகிடச் செய்யவில்லை. அவர்கள் கீழே உட்கார்ந்து, அவரைப் பார்த்துக்கொண்டிருந்தனர் மற்றும் உடனடியாக தங்களுக்குள்ளாக அவரது

வஸ்திரங்களைப் பங்குபோடுவதற்கு ஆரம்பித்தனர். யூதனுடைய சாதாரணமான வஸ்திரமானது ஐந்து பாகங்களை உடையதாகும், அவை தலைப்பாகை, பாதரட்சைகள், மேல் வஸ்திரம் (அ) டோகோ (Togo; தளர்ந்த மேல் உடை), கச்சை மற்றும் அங்கி (chiton) ஆகும்; அங்கி என்றுள்ளதான இது கழுத்து முதல் கணுக்கால் வரையிலான இறுக்கமான சட்டைப்போன்றதாகும் மற்றும் இதற்கே அவர்கள் சீட்டுப் போட்டார்கள்.

அநீதியுள்ளவர்களுக்கான மீட்கும்பொருளாக, அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதி உள்ளவராய்ப் பாடுப்பட்டுக்கொண்டிருந்த தேவ ஆட்டுக்குட்டியை அந்தப் போர்ச்சேவகர்கள் உணர்வுகளற்று நோக்கிப்பார்த்து, அவரது வஸ்திரங்களைத் தங்களுக்குக் கிடைத்த ஆதாயமெனப் பங்குபோட்டுக்கொண்டபோது, அவர்கள் அன்றுமுதல், இன்று வரையிலான ஒட்டுமொத்த "கிறிஸ்தவ மண்டலத்திற்கு" கொஞ்சம் ஒத்திருந்தார்கள். நாகரிகமடைந்துள்ள உலகத்தின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள மில்லியன் கணக்கானவர்கள் இயேசுவையும், அவரது அன்பையும், அவரது பலியையும், அவர் நமக்காகவே பலியாகியுள்ளார் என்பதையும் கேள்விப்பட்டிருக்கின்றனர்; எனினும் அவர்கள் முற்றிலும் உணர்ச்சியற்றவர்களாகவும், அக்கறையற்றவர்களாகவும், நன்றியற்றவர்களாகவும் (அ) உணர்ந்துகொள்ளாதவர்களாகவும், காணப்படுகின்றனர். அவரது மரணத்தின் வாயிலாக தங்களுக்குக் கடந்து வந்துள்ளதான பல்வேறு ஆசீர்வாதங்களையும், அனுகூலங்களையும் நாளுக்குநாள் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்வதற்கும் விரும்புகின்றனர்; இவைகளைக்கூட அவர்கள் நன்றியறிதலாலோ (அ) உணர்ந்துகொள்ளுதலாலோ இல்லாமல்தான் பெற்றுக்கொள்கின்றனர். இப்படிப்பட்டவர்களைக்குறித்து நாம் கொண்டிருக்க வேண்டிய மிகவும் இரக்கத்துடன்கூடிய மனப்பான்மையானது, அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளதுபோன்று, "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" (2 கொரிந்தியர் 4:4) என்பதேயாகும்.

## அவர் மரிக்கும் தருவாயில் அவரோடுகூட

நமது கர்த்தருடைய மரணத்தருவாயின்போது, அவரது மிகவும் விசேஷித்த நண்பர்கள் நான்கு பேர் அவரோடுகூடக் காணப்பட்டனர். அவரது தாயாரும், கிலெயோப்பாவின் மனைவியும், மகதலேனா மரியாளும் மற்றும் யோவானும் காணப்பட்டனர். இயேசுவினுடைய மற்ற நண்பர்கள் சார்பிலான துணிவின்மையைக் குறித்து நாம் மிகுதியாய் எண்ணிக்கொள்ள வேண்டாம். இயேசுவைச் சிலுவையில் அறைந்துப்போடத்தக்கதாக வழிநடத்தின பிரபல்யமான கசப்பானது, அவரது பின்னடியார்களுக்கு எதிராகவும் கொஞ்சம் காணப்பட்டது. அவர்கள் பயப்படுவது இயல்பே; லாசருவையும் கொன்றுபோடுவதற்கு ஆலோசனை பண்ணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாடுபடுகின்ற இயேசுவின் மீதான அக்கறை ஒருபக்கம் இருந்தபோதிலும், அந்த ஸ்திரீகள் மூவரும் தாங்கள் தொல்லைப்படுத்தப்படும்

அபாயத்திற்கு நீங்கினவர்களாக இருப்பதை உணர்ந்தே, அங்கே அவருடன் காணப்பட்டிருக்க வேண்டும்; இன்னும் யோவானைப் பொறுத்தமட்டில், அவருக்குப் பிரதான ஆசாரியனுடைய வீட்டாரில் நண்பர் ஒருவர் இருந்தார் என்றும், அந்த நண்பரே இயேசு முதலாவதாக பிரதான ஆசாரியன் முன்னிலையில் கொண்டுவரப்பட்டபோது, யோவான் உள்ளே வந்து காணப்படுவதற்கு அனுமதித்திருக்க, பேதுரு வெளிப்பிரகாரங்களில் அடையாளம் கண்டுக்கொள்ளப்படுவாரோ என்று பயந்து காணப்பட்டார் என்றும் நாம் நினைவுகூருகின்றோம். அநேகமாக முழு நடவடிக்கை குறித்த விவரமளிக்கத்தக்கதாக, பிரதான ஆசாரியனுடைய ஊழியக்காரனும், சிலுவையில் அறையப்படும் வேளையில் காணப்பட்டிருக்க வேண்டும். இந்தச் சூழ்நிலைகள் அனைத்தும், யோவான் அவ்விடத்தில் காணப்படுவதற்குத் தைரியம் மூட்டினதாய் இருக்கலாம். இந்த வேளையில்தான் இயேசு மிகுந்த வலியில் காணப்பட்டபோதிலும், தமது தாயாரை தம்முடைய சீஷனுடைய பராமரிப்பின் கீழ் ஒப்படைத்தவராக, "தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன்" என்றும், "சீஷனை நோக்கி: அதோ, உன் தாய்" என்றும் கூறினார். சிலுவையில் இயேசுவிடம் சென்று நம்முடைய அனுதாபங்களை நம்மால் காண்பிக்க முடியாது, ஆனால் நம்மால் அவரது அன்பார்ந்த சரீர அங்கத்தினருக்கான இருள் சூழ்ந்த நேரங்களில், அவர்களினிடத்திற்குச் சென்று, உதவியைச் செய்திடமுடியும் மற்றும் இதை அவர் தமக்கே செய்ததாக கருதுவார்.

மற்றொரு வேதவாக்கியமும் நிறைவேற வேண்டியிருந்தது. அவரைக்குறித்து, "என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள்" (சங்கீதம் 69:21) என்று தீர்க்கத்தரிசி குறிப்பிட்டுள்ளார். இதுவும் அவர்தான் என்று அடையாளம் கண்டுகொள்வதற்கான மற்றுமொரு அடையாளமாகும் மற்றும் இதுவே இயேசு இந்தத் தாகத்தைக் குறிப்பிட்டதற்கான காரணமாய் வழங்கப்பட்டுள்ளது. சிலுவையில் அறையப்படுதலின் காரணமாக ஏற்படக்கூடிய காய்ச்சல் அதிகமாகிக் கொண்டிருக்கும்போது, அவருக்குக் கொஞ்சம் நேரமாகவே தாகம் எடுத்துக்கொண்டிருந்தது; ஆனால் தம்மைக்குறித்த வேதவாக்கியமானது, நிறைவேறுவதற்குரிய தருணத்தைக் கொடுக்கத்தக்கதாகத் தாகத்தை வெளிப்படுத்துவதற்கான வேளை இப்பொழுது வந்தது. கசப்புக்கலந்த காடி அவருக்குக் கொடுக்கப்பட்டது; இது அவருக்குப் பாதிப்பை உண்டாக்குவதற்காகக் கொடுக்கப்படாமல், மாறாக இரக்கம் பாராட்டுதலாய்க் கொடுக்கப்பட்டது. இந்தக் கலவை பானமானது, ஓரளவுக்குத் தாகத்தைத் தணிப்பதாக எண்ணப்படுகின்றது.

தம்முடைய வாழ்க்கை போக்குத் தொடர்புடையதான பல்வேறு வேதவாக்கியங்களை இப்படியாக நிறைவேற்றி முடித்தபோது, நமது கர்த்தர் தமது ஓட்டத்தின் முடிவு வந்திருப்பதை உணர்ந்துகொண்டார். அநேகமாக இத்தருணத்தின்போதே, பிதாவின் தொடர்பானது, அவரிடமிருந்து ஒரு கணம் துண்டிக்கப்பட்டது; அவர் கொஞ்சம் நேரமாகிலும் பாவி எனும் தெய்வீகத் தயவு துண்டிக்கப்பெற்று காணப்படும் அனுபவம் யாவற்றையும் அனுபவிக்க வேண்டும்; ஏனெனில் நாம் அவர் நிமித்தமாகத் தேவனால் நீதிமான்களாகக் கையாளப்படத்தக்கதாக, நம் நிமித்தமாக அவர்

பாவிபோல் நடத்தப்பட்டார். நமது கர்த்தருடைய அனுபவங்கள் அனைத்திலுமே, பிதா அவரிடமிருந்து தம்முடைய முகத்தை மறைத்துக்கொண்டதான அத்தருணமே, மிகவும் தாங்கமுடியாத தருணமாகவும், கடுமையான சோதனையாகவும் மற்றும் நமது கர்த்தரினால் முன்கூட்டியே எதிர்ப்பார்க்கப்படாத ஒன்றாகவும் இருந்தது என்று நாம் நம்புகின்றோம். பூமிக்குரிய ஆறுதல் மற்றும் தயவு மற்றும் சிலாக்கியம் மற்றும் ஆசீர்வாதம் அனைத்தையும் இழந்த நிலையிலும், அத்தருணம் வரையிலுமாகப் பிதாவுடனான ஐக்கியத்தையும், உறவையும்/தொடர்பையும் அவர் உணர்ந்துகொள்ள முடிந்தவராகக் காணப்பட்டார்; ஆனால் தம்முடைய முழு ஜீவியமே சார்ந்து, நம்பியிருக்கிறதான அந்த ஐக்கியம் இப்பொழுது துண்டிக்கப்பட்டபோதோ, அது கடுமையான பரீட்சையாகவே இருந்தது.

வேதனையில் அவர், "என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்! எனக்கும், உமக்கும் நடுவில் மேகம் வரத்தக்கதாக, நான் என்ன செய்தேன்? மரணம் வரையிலும் நான் உமக்கு உண்மையாய் இருக்கவில்லையா?" என்று சத்தமிட்டார். ஆனால் உடனடியாக அவர் இந்த அனுபவத்தினுடைய அர்த்தத்தைப் புரிந்துகொண்டார்; அதாவது இவ்வாறாக தாம் பாடுகளின் பாத்திரத்தில் பானம் பண்ணிடுவதும், தம்முடைய உண்மை மற்றும் கீழ்ப்படிதலை முழுமையாய் நிரூபிப்பதும் மற்றும் இப்படியாக நம்முடைய சந்ததிக்கு எதிரான தீர்ப்பை முற்றும் முழுமையாய்ச் சந்திப்பதும் அவசியமாய் உள்ளது என்று உணர்ந்துகொண்டார். இந்த மேகம் நடுவில் காணப்படும் சூழ்நிலையிலேயே, ஆனால் காரியங்களை உணர்ந்துகொண்டவராக, அவர், "முடிந்தது!" என்று சொல்லி, மரித்தார். இருதயம் உடைந்து சில ஜனங்கள் மரித்துப்போவதாக, நாம் அடிக்கடி பேசுவதுண்டு. மற்றும் இதை அடையாளமான வார்த்தை விதத்தில் நாம் பயன்படுத்துவதுண்டு; ஆனால் நமது கர்த்தருக்கு இது உண்மையிலேயே நடந்தது. அவருடைய இருதயமானது உண்மையாக உடைந்ததினாலேயே அவர் மரித்தார் என்பது தெளிவாய்த் தெரிகின்றது. ஆழமான துயரமானது, இரத்த ஓட்டத்தைக் குறுக்கிட்டு, இருதயத்திற்கு அழுத்தத்தை உண்டுபண்ணும் தன்மைகொண்டதாகும். இதை நாம் அனைவரும்கூட உணர்ந்திருக்கின்றோம்; அதாவது சில குறிப்பிட்ட மன அழுத்தமுள்ள நேரங்களில் இருதயத்தில் ஒரு பாரத்தையும், கனத்தையும் உணர்ந்திருக்கின்றோம். நமது கர்த்தருடைய விஷயத்திலோ இது மிகவும் கடுமையாய்க் காணப்பட்டபடியால், அவரது இருதயமானது சொல்லர்த்தமாகவே உடைந்துபோனது. இருதயம் உடைந்து அவர் மரித்தார்.

# கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுவேன்

## லூக்கா 23:33-46

### *"பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே."* லூக்கா 23:34

சிலுவையின் இரத்தத்தினால் உண்டாகும் இரட்சிப்பைப் பற்றின சுவிசேஷமானது, மிகமிகப் பிரபலமற்ற நிலைக்குப் போய்க்கொண்டிருக்கின்றது. தெய்வீக நீதியானது, "ஜீவனுக்கு ஜீவனை" கேட்டது. மேலும் ஆதாமின் ஜீவனுக்காகவும், அவர் மூலம் ஜீவனை இழந்துபோன அவருடைய சந்ததியின் ஜீவனுக்காவும், இயேசுவின் ஜீவனை தெய்வீக நீதி, ஈடுபலியாக ஏற்றுக்கொண்டது. ஆனால் அந்தோ! இந்த ஈடுபலியின் விஷயங்கள், மாம்சமான மனுஷனுடைய மனதிற்கு ஒப்புக்கொள்ள முடியாததாகவும் இருக்கின்றது. மேலும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, ஆவிக்குரிய காரியங்களை ஆவிக்குரிய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கிறவர்களின் எண்ணிக்கைகூட மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. உலக ஞானமானது, வீழ்ச்சி குறித்த வேதாகமத்தின் பதிவுகளை நிராகரித்து, அதற்குப் பதிலாக பரிணாம வளர்ச்சி பற்றின கூற்றை முன்வைக்கையில், அதாவது மனுஷன் தன்னைத்தானே படிப்படியாக மிருகம் போன்ற நிலையிலிருந்து, பகுத்தறியும் நிலைக்கு வளர்த்தி முன்னேறுகின்றான் என்ற பரிணாம வளர்ச்சி கூற்றை முன்வைக்கையில், மீட்பின் முழுக் கதையையும் கூட நிராகரிக்கின்றதாய்க் காணப்படுகின்றது. ஆம், ஒருவேளை பரிபூரண நிலையிலிருந்து எவ்விதமான வீழ்ச்சியும் சம்பவிக்கவில்லையெனில், எவ்விதமான பாவமும், ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்படுதலும் இருப்பதில்லை. மேலும் ஆதாமும் அவருடைய சந்ததியாரும் சபிக்கப்படாமல், ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்படாமல், மரணத்தீர்ப்பு அளிக்கப்படவில்லையெனில், இப்படிப்பட்ட (மரண) தீர்ப்பிலிருந்து ஒரு மீட்பு அவசியமாய் இராது. (கல்லூரிகளிலும், மேல்நிலைப்பள்ளிகளிலும், உரோம கத்தோலிக்க சமய குருமார் பயிற்சி கல்லூரிகளிலும் பயிற்றுவிக்கப்படும்) இவ்வுலக ஞானத்தின் கண்ணோட்டத்தின்படி சிலுவையில் சிந்தின இரத்தத்தின் மூலம் உண்டான மீட்பைக்குறித்த முழு வேதாகம நிகழ்வானது முட்டாள்தனமானதாகக் கருதப்படுகின்றது.

இரத்தத்தின் மூலம் உண்டான மீட்பு குறித்த வேதாகம சாட்சியின் மீதான விசுவாசத்தை வலுவற்றதாக்க "கிறிஸ்துவ விஞ்ஞானம்" என்ற தவறான கோட்பாட்டினாலும், உதவியளிக்கப்படுகின்றது. இதன் கூற்று என்னவெனில்: பாவம் என்ற ஒன்று இல்லை, எவ்விதமான தீமையோ, பாவமோ ஒருபோதும் இருந்ததில்லை; இவைகள் அனைத்தும் உண்மையில் மனபிரம்மைகளும், ஏமாற்றுதல்களுமேயாகும் –ஆகையால் ஆதாம் மற்றும் அவருடைய சந்ததியார்களுக்கு, பாவிகள் என்ற எவ்விதமான தெய்வீகத் தீர்ப்பும் அளிக்கப்படவில்லை என்றும், மரணம் என்பது தெய்வீகத் தீர்ப்பல்ல என்றும் கூறுகின்றது. இவ்விதமான கூற்றின் மூலம், இது "ஒரே

மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" என்று அப்போஸ்தலர் கூறியுள்ள வார்த்தைகளை எதிர்க்கின்றதாய் இருக்கின்றது (ரோமர் 5:12). இந்தத் தவறான நம்பிக்கைகளானது, சத்திய வார்த்தைகளை நன்கு பகுத்து ஆராயக் கற்றுக்கொண்டவர்களுக்கு தரம் குறைந்தவைகளாகவும், அர்த்தமற்றவைகளாகவும் தோன்றும். ஆனால் தெய்வீக வார்த்தைகள் மீது மேலோட்டமான அறிவு கொண்டிருப்பவர்களுக்கு இந்தத் தவறான நம்பிக்கைகள், வேதவாக்கியங்கள் அறிவிக்கிற பிரகாரம் "கொடிய வஞ்சகமாக" அமைகின்றது. இவர்கள் தங்கள் சொந்த அனுபவங்களில் காணும் உண்மைகளை மறுதலிக்கக் கற்றுக்கொண்டு, சகல வலிகளையும் மறுதலிக்க இவர்கள் பயிற்சி செய்து கொள்கையில், படிப்படியாக இவர்களுடைய மனங்கள் மிகவும் தவறான வழியில் செல்வதினால், இவர்களால் எவ்விஷயத்தையும் சரியாகவும், உண்மையுடனும் யோசிக்கவோ, பகுத்தறியவோ முடியாமல் போய்விடுகின்றது. இவர்கள் மனதளவில் குருடாக்கப்பட்டதால், இவர்களின் கைகளும், பாதங்களும் கட்டப்படும் விதத்தில் வேதவாக்கியங்கள் இவர்களுக்கு உருமாறிக் காணப்பட்டு, சத்தியம் இவர்களுக்குள் பிரவேசிக்க முடியாத நிலைக்கு இவர்களை ஆளாக்கிவிடுகின்றது.

## தப்பறைகள் இன்னும் அதிகமான தப்பறைகளை விளைவிக்கின்றது

சிலுவை பற்றின மூன்றாவது கண்ணோட்டமே, தற்போது காணப்படும் இரண்டு வஞ்சனைகளின் தோற்றத்திற்கான காரணமாகக் காணப்படுகின்றது: இக்கண்ணோட்டமானது, வேதவாக்கியங்களையும், கிறிஸ்துவின் சிலுவையையும் ஏற்றுக்கொள்கின்றது. மேலும் சிலுவையில் மனுக்குலத்திற்காக ஏதோ ஒரு வேலை நிறைவேறியுள்ளது என்றும் ஏற்றுக்கொள்கின்றது. ஆனால் குழப்பமும், குருட்டுதன்மையும் இருப்பதினால் என்ன வேலை நிறைவேற்றப்பட்டுள்ளது என்று தெளிவாகக் காணும் தன்மை இல்லாமல் போயிற்று. இக்கண்ணோட்டத்தின் குருட்டுத் தன்மையினிமித்தம், கிறிஸ்து தம்முடைய பின்னடியார்களுக்கு மாதிரியை விட்டுச்சென்றார் என்ற வசனத்தை ஏற்றுக்கொள்கின்றது, ஆனால் அவருடைய பாடுகள், மீட்பின் வேலைக்காக அல்லாமல், அவருடைய பின்னடியார்களுக்குப் போதிப்பவைகளாக,வழிகாட்டுபவைகளாக மாத்திரம் இருக்கின்றது என்று காண்பிக்கின்றது. எப்படிப் பாடுபட வேண்டும் என்பதை நமக்குக் காண்பித்துக் கொடுக்கவே இயேசு பாடுபட்டார் என்றும், எப்படி மரிக்க வேண்டும் என்பதை நமக்குக் காண்பித்துக் கொடுக்கவே இயேசு மரித்தார் என்றும், பிதாவின் சித்தத்திற்கு எப்படி அவர் தம்மை ஒப்புக்கொடுத்தார் என்று நமக்குக் காண்பிக்கவுமே என்றும் இவர்கள் குறிப்பிடுகின்றனர். இவர்கள் அநேக வேதவாக்கியங்கள் மூலம் முன்வைக்கப்படும் நமது கர்த்தருடைய மரணத்தைப் பற்றின உண்மையான கண்ணோட்டத்தை

முழுமையாகக் காணத் தவறி, புறக்கணித்து விடுகின்றனர்; அதாவது கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, தம்மையே எல்லோருக்குமான ஈடுபலியாக ஒப்புக்கொடுத்தார் என்றும், கிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் மீட்டுக்கொள்ளப் படத்தக்கதாக அவர் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை வாங்கினார் என்றதுமான வேதவாக்கியங்களின் கருத்தைப் புறக்கணித்து விடுகின்றனர்.

சிலுவையைப் பற்றின உண்மையான கண்ணோட்டமானது, இயேசுவைச் சபையின் போதகராகவும், சபைக்குத் தலையாகவும், சபையாகிய மணவாட்டிக்கு மணவாளனாகவும் அடையாளங்கண்டு கொள்கின்றதாயிருப்பினும் –அது கர்த்தர் நம்முடைய போதகராக இருப்பதற்கும், பின்னர் உலகத்திற்கு இராஜாவாக இருப்பதற்கும் உள்ள அதிகாரத்தை மாத்திரம் பெற்றுக்கொள்ளாமல், அதே பலியின் மூலம், அதே ஈடுபலி என்னும் விலைக்கிரயம் மூலம் சபையையும், உலகத்தையும் கூட வாங்கினார் என்றும், சாபமாகிய மரணத்தீர்ப்பிலிருந்து, சகல மனுக்குலத்திற்கான விடுதலையையும்கூடப் பெற்றுக்கொண்டார் என்றும், இவ்விதமாக தேவன் நீதியுள்ளவராகவும், அதேசமயம் இயேசுவை விசுவாசிக்கிறவர்களை நீதிமானாக்குகிறவராகவும் இருப்பதற்கு ஏதுவாக்கிற்று என்றும் அடையாளங்கண்டு கொள்கின்றதாயிருக்கும். கிறிஸ்துவின் மரணமானது, ஆதாமுக்கும், இவருடைய கீழ்ப்படியாமையினிமித்தம் அனைத்தையும் இழந்துபோன இவர் சந்ததியாருக்கும் ஈடுபலி விலைக்கிரயம் எனக் கருதப்படும் போதுதான் அவருடைய மரணத்தின் உண்மையான முக்கியத்துவத்தை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும். மேலும் தெய்வீக ஏற்பாட்டின்படியாக மரணத்திற்குள்ளான ஞானஸ்நானமானது, நமது கர்த்தரால் தவிர்க்கப்பட முடியாது என்பதையும் புரிந்துகொள்ளலாம். அதேசமயம், அவருடைய மகிமையான மணவாட்டி வகுப்பாரில் அங்கங்களாக இருக்கும் அனைவரும் அவரோடுகூட இந்த மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்திலும் கண்டிப்பாக பங்கடைய வேண்டும் என்பதையும், அவருடைய இரத்தம் சிந்தப்படாமல் பாவமன்னிப்போ, தேவனுடன் ஒப்புரவாக்கப்படுதலோ, மரணத்தினின்று உயிர்த்தெழுதலோ, நித்தியகாலமாய் ஜீவன் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்போ இருப்பதில்லை என்பதையும் நம்மால் காணமுடிகின்றது. இப்படிப்பட்ட சரியான கண்ணோட்டத்தை நமக்கு முன் கொண்டிருப்போமானால், இப்பாடத்தில் சித்தரிக்கப்படப்போகும் கல்வாரியில் நடைப்பெற்றதான நமது அருமையான மீட்பருடைய பாடுகளினிமித்தம் நாம் அனுதாப உணர்வு கொள்வதோடு, அவர் (கடைசி வரையிலும்) உண்மையாய் இருந்ததினிமித்தம் சந்தோஷமும் அடைகின்றோம். ஏனெனில், அவர் உண்மையாய் இருந்தார் என்பது நமது மீட்பையும், இறுதியில் அவர் மூலம் உயிர்த்தெழுதலில் பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையிலிருந்து நாம் விடுவிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துகின்றது.

## கல்வாரிக்குப் போகிற பாதையில்

பிலாத்து எதிர்ப்புகளினிமித்தம் இயேசுவுக்கு மரண ஆணை விடுத்தான். மேலும் அவன் தனது கைகளைக் கழுவினது என்பது, அவன் இவ்வழக்கானது, நீதிக்குப் புறம்பானது எனத் தான் கருதுகின்றார் என்றும், ஆனால் ஜனங்கள், "சிலுவையில் அவரை அறையும்" என்று விரும்பி கூக்குரலிட்டபடியினால், அவர்களுடைய விருப்பத்திற்கு எதிராக செயல்படும்பட்சத்தில் வன்முறை எழும்பும் என்பதினால், உதவி செய்ய முடியாத நிலையில், தான் இருக்கின்றார் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருந்தது. சவுக்கினால் அடிக்கப்பட்ட இயேசு, முடிவை முன்கூட்டியே அறிந்தவராகக் கூட்டத்தார் மத்தியில் மிகுந்த அமைதலுடனும், மனதைக் கட்டுப்படுத்தின நிலையிலும் காணப்பட்டு, பிதா தமக்கென ஆயத்தமாக்கப்படுவதற்கு அனுமதித்த பாத்திரத்தின் அடிமண்டி வரையிலும் குடித்துத்தீர முழு ஆயத்தத்துடன் காணப்பட்டார். மேலும் பிதாவின் அன்பும், பராமரிப்பும் எதையும் தவறாக செய்யாது என்றும், இறுதியில் அனைத்தையும் தமது நன்மைக்கேதுவாக செய்துமுடிக்கும் என்றுமுள்ள உணர்வோடு குடிக்க முழு ஆயத்தத்துடன் காணப்பட்டார். உடனடியாக எல்லாம் ஆயத்தமாக்கப்பட்டது. சிறு ஊர்வலம் ஒன்றுசேர்ந்து பிலாத்துவின் அரண்மனையிலிருந்து தமஸ்குவின் வாசலண்டைக்கு எருசலேமின் ஒடுங்கிய தெருக்கள் வழியாக மெல்ல நடந்து சென்றது. வரிசையில் முதலாவதாக, ஒரு வெண்மையான நிறத்திலான மரப்பலகையைச் சுமந்தவனாக ஒரு சேவகன் சென்றான். அப்பலகையில் குற்றவாளியின் குற்றம் பற்றின வார்த்தைகள் எழுதப்பட்டிருந்தது. இவனுக்குப் பின்னாக, நூற்றுக்கு அதிபதியின் கட்டளைபடி, நான்கு சேவகர்கள் ஆணிகள் மற்றும் சுத்தியலுடன் தம் சிலுவையைச் சுமந்துவரும் இயேசுவைக் காவல் காக்க நடந்து வந்தார்கள். இவர்களுக்குப் பின்னாக, இரண்டு திருடர்கள் தங்கள் தங்கள் சிலுவையைச் சுமந்து வருபவர்களாக, ஒவ்வொருவரும் நான்கு சேவகர்களால் காவல் காக்கப்பட்டு நடந்துவந்தார்கள். திரளான மக்கள் கூட்டம் வழியில் நெருக்கிக் கொண்டுவந்தார்கள். திரளான மக்கள் கூட்டத்தில் என்ன நடக்கிறது என்று பார்க்க வந்தவர்களும், மகிழ்ச்சியுடன் காணப்படும் சத்துருக்களும், கர்த்தருடைய நண்பர்களில் சிலரும் காணப்பட்டார்கள். "திரள்கூட்டமான ஜனங்களும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள்" (லூக்கா 23:27). Antonio எனும் அரமனையிலிருந்து கல்வாரி என்று அழைக்கப்படும் மலை உச்சிக்கு இடையில் ஒரு மைல் தூரத்தில், நான்கில் மூன்று பங்கு தூரம் இருந்தது. கல்வாரி என்பது இலத்தீன் வார்த்தையாகும் மற்றும் இதன் அர்த்தம் மண்டையோடாகும்; மத்தேயுவினால் பயன்படுத்தப்படும் கொல்கொதா எனும் வார்த்தையினுடைய அர்த்தமும் மண்டையோடாகும்; இது பாலஸ்தீனிலுள்ள யூதர்களுடைய மூல பாஷையாகிய - அராமிக் (Aramic) வார்த்தையாகும். இந்த இடமானது, கொஞ்சம் தொலைவிலிருந்து பார்க்கப்படும்போது, மண்டையோடு போன்ற தோற்றத்தினைக் கொண்டிருப்பதினாலேயே அநேகமாக இப்பெயர் வழங்கப்பட்டிருக்க வேண்டும். எழுத்தாளர் ஒருவர் அதைப் பின்வருமாறு விவரிக்கின்றார்:

"எருசலேமினுடைய தமஸ்கு வாயிலிருந்து 200 கெஜம் அளவுக்கு (yard)

வெளியே, 60 அடி உயரமும், மண்டையோடுபோன்ற வடிவில், வெள்ளைச் சுண்ணாம்புக் கல்லினாலான குன்று தனியே காணப்படுகின்றது. அதன் செங்குத்தான கோணத்தில், அது அப்படியே மண்டையோட்டைப் போன்றே காணப்படுகின்றது. இரண்டு கண் குழிகள், மேலே நெற்றியும், மூக்கு, வாய் மற்றும் நாடியின் வரம்புக்கோட்டையும் தெளிவாய்ப் பார்க்கலாம். அது உட்குழிவானதாகவும், மண்டை ஓட்டினுடைய நிறத்திலும் காணப்படுகின்றது. கொல்கொதாவினுடைய உச்சியில், கற்களால் குவிக்கப்பட்டதான பெரிய குழி காணப்படுகின்றது . . . இந்தக் குழியானது சிலுவையில் அறையப்பட்ட மற்றும் கல்லெறியப்பட்ட பழங்கால குற்றவாளிகளுடைய எலும்புகளினால் நிரப்பப்பட்டுக் காணப்படுகின்றது. இதே குழிக்குள் குற்றவாளிகளினுடைய சரீரங்களும் தூக்கி வீசப்படுகின்றது. பயங்கரமான நிலநடுக்கம் ஒன்று, நில மட்டத்தை உயர்த்தி, இந்தப் பாறையைப் பகுதி பகுதியாக பிளந்துபோட்டது. மண்டையோட்டினுடைய வலதுபக்கத்தில், செங்குத்தான பாறையானது, விநோதமாய்ப் பிளந்து காணப்படுகின்றது . . . மேற்குச் செங்குத்தான பாறையினுடைய அடிவாரத்தில், மிகவும் பழமைவாய்ந்த கிணறு ஒன்றுடன், ஒரு பெரிய தோட்டமும் காணப்படுகின்றது. செங்குத்தான பாறையின் அடிவாரத்தில் பாறைக்குள் குடைந்து உருவாக்கப்பட்ட கல்லறை காணப்படுகின்றது மற்றும் இதிலே நமது கர்த்தருடைய சரீரம் வைக்கப்பட்டுள்ளது. இதுதான் உண்மையான கல்வாரி என்று ஒருமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.”

போகிற வழியில் அநேகமாக தமஸ்குவின் வாசலண்டையில் மரணத் தண்டனை பெறப்போகிறவர்களின் பாடுகளின் கடுமையினைத் தணிக்க உதவும் ஸ்திரீகளின் கூட்டம் இந்த ஊர்வலத்தில் வந்தவர்களைச் சந்தித்தனர். இவர்கள், சிலுவையில் அறையப்படுவதினால் உண்டாகும் வலிகளை, அவர்களின் உணர்வுகளை மரத்துப்போகச் செய்வதன் மூலம் தணிக்கத்தக்கதாக திராட்சரசமும், வெள்ளைப்போளமும் கலந்த வலியை நீக்கும் பானங்களைக் கொடுப்பது வழக்கம். மேலும் இவர்களுடைய அனுதாபமானது, இவர்கள் சிந்தும் கண்ணீரின் மூலமும் வெளிப்பட்டது. பதிவுகள் நமக்குத் தெரிவிப்பது என்னவெனில், அவர்களுடைய இரக்கத்தை தாம் ஏற்றுக்கொள்வதைக் காண்பிக்கும் பொருட்டு, அப்பானத்தை அவர் மரியாதை செலுத்தும்விதமாக ருசிபார்த்தாரே ஒழிய, அவர் அதைக் குடிக்க மறுத்துவிட்டார். பிதா பிரியம் கொண்டு தம் மேல் வர அனுமதித்த யாவற்றையும் இறுதி வரையிலும் சகிக்க இயேசு விருப்பம் கொண்டவராக இருந்தார். “முற்றிலும் ஜெயம் கொண்டவராக” நாம் அவரைக் காண்கின்றோம். நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாகிய அவருடைய ஒவ்வொரு செயல்பாடுகளிலும், அவரை இயக்கிய கொள்கைகளைக்குறித்து நாம் மேன்மை பாராட்டுகின்றோம். உறுதியுடன் அவர் தொடர்ந்து முன்னேறினதான அவருடைய மாதிரி நம்மை உற்சாகப்படுத்துகின்றது. மேலும், “நமக்கு எதிராய் இருக்கும் எல்லாவற்றைக்காட்டிலும் அவர் நமக்குப் பெரியவராய் இருக்கின்றார்” என்றும், நம்முடைய நன்மைக்கு மாறுபட்ட எவ்விதமான அனுபவங்களையும், அவர் நமக்கு அனுமதிப்பதில்லை என்றும், நாம் அவரால் வாக்களிக்கப்பட்டிருக்கின்றோம்.

# அவருக்குப் பின்னாக சிலுவையைச் சுமந்து செல்லுதல்

வேறொரு சம்பவமும் இத்தருணத்தில் நடந்தது: நாட்டிலிருந்து வந்த சிரேனே ஊரானாகிய சீமோன் என்பவர், பாரம்பரியத்தின்படி இயேசு வலுவிழந்து போனபோது அவ்வூர்வலத்தைச் சந்தித்தார்; இரவு நேரம் நடந்த விஷயங்களின் அனுபவங்களினாலும், முன் நாட்களில் திரளான வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கினதினிமித்தம் அவரிடமிருந்து சக்தி/சத்துவம் வெளியே சென்றபடி யினாலும் பலவீனமடைந்த இயேசு, சிலுவையின் பாரப்பளுவினால் வலுவிழந்து போனார். இயேசுவுக்குப் பின்னே சிலுவையைச் சுமந்து வரும்படிக்குச் சீமோன் கட்டாயப்படுத்தப்பட்டார். ஆனால் இயேசு முன்னே செல்ல, சீமோன் பிறகே சிலுவைச் சுமந்து வந்தாரா அல்லது இயேசு சிலுவை சுமந்து செல்ல தரையில் இழுத்துக்கொண்டுவரப்பட்ட சிலுவையின் நுனிபாகத்தை சீமோன் சுமந்து அவர் பிறகே வந்தாரா என்பது நமக்குத் தெளிவாய்த் தெரியவில்லை. ஒருவேளை சீமோன் சிலுவையின் நுனிப் பகுதியைச் சுமந்து கொண்டு இயேசுவின் பிறகே சென்றிருப்பாரானால் இக்காட்சியானது, எப்படிக் கர்த்தருடைய பின்னடியார்கள் இன்று அவருடைய அடிச்சுவடுகளில் நடந்து, சொல்லர்த்தமான சிலுவையை அல்ல, அடையாளமான சிலுவையை அவரோடு கூடச் சுமந்து செல்ல வேண்டும் என்பதற்கான மிக அருமையான விளக்கமாக அமைகின்றது.

பேதுருவும், யோவானும், யாக்கோபும் மற்ற அப்போஸ்தலர்களும் போதகருக்கு உதவி கரம் வழங்குவதற்குப் பதிலாக, எங்கே போனார்கள் என்று நம் எண்ணங்கள் எழலாம். அவர்கள், "பொதுவான ஜனங்கள்" என்றும், கலிலேயர்கள் என இழிவாகக் கருதப்பட்டவர்கள் என்றும், இயேசுவுக்கு எதிரான அதிகாரிகள் மற்றும் பிரதான ஆசாரியர்களின் கோபம் தங்கள் மீதும் தாவும் என அஞ்சினார்கள் என்றும், இப்படியாக அவர்கள் எண்ணி அஞ்சினதால், பின் வாங்கினார்கள் என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். தங்களுடைய போதகர் கடந்து சென்று கொண்டிருக்கும் அனுபவங்கள் குறித்த மாபெரும் குழப்பத்தில் அவர்கள் காணப்பட்டார்கள். மேலும் நமது கர்த்தர் உயிர்த்தெழுந்து இவ்விஷயங்கள் தொடர்பான வேதவாக்கியங்களின் விளக்கத்தை கொடுக்கும் வரையிலும், அவர்கள் எதையும் புரிந்துகொள்ளவில்லை. ஆகவே, (உதவிக்கரம் அளிப்பதற்கான) இப்படிப்பட்ட வாய்ப்புகள் நமக்குக் கிடைக்கும்பொழுது, நாம் எப்படியாக மகிழ்ச்சி கொள்வோம் என யோசித்துக்கொண்டு, பயங்கரமான தைரியத்துடன் காணப்படுவோம் என யோசித்து நாம் வீண் பெருமை அடையக்கூடாது/கனவில் மிதக்க வேண்டாம். நம்மிடத்தில் இப்பொழுது இருக்கும் வெளிச்சமும், அறிவும், பரிசுத்த ஆவியும் அத்தருணத்தில் அவர்களுக்கு இல்லை என்றும், எல்லாவிதத்திலும் அவர்களைக் காட்டிலும் நமக்கு மிகுந்த அனுகூலங்கள் இருக்கின்றது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

எனினும், எப்படிப் பேதுரு, யாக்கோபு, யோவான் மற்றும் மற்ற அப்போஸ்தலர்களும் உண்மையுடன் கர்த்தருடைய வேலைகளை நிறைவேற்றினார்கள்

என்றும், எப்படி அவருடைய அப்போஸ்தலர்களாகவும், ஊழியர்களாகவும் அவர்கள் கிறிஸ்துவின் சிலுவையை மேலான விதத்தில் சுமந்து சென்றார்கள் என்றும் எண்ணிப்பார்க்கையில் அவர்களில் மகிழ்ச்சி கொள்ளவும், அவர்களைக் கனப்படுத்துவதற்கும் சகல காரணங்களும் காணப்படுகின்றது. இப்பொழுதோ சிலுவை நமக்கு உள்ளது. நமது கர்த்தரிடத்திலும், அவருடைய போதனைகளிலும், அவருடைய பலியிலும் வெளிப்படும் சத்தியமாவது இன்னமும் மனுஷர்களால் புறக்கணிக்கப்பட்டும், இழிவாகக் கருதப்பட்டும் காணப்படுகின்றது. உலகத்தால் மாத்திரம் அல்லாமல், பெயர்க் கிறிஸ்தவ மண்டலத்தாரின் பிரதான ஆசாரியர்கள், வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களாலும் கூடப் புறக்கணிக்கப்படுகின்றது. கிறிஸ்துவின் சரீர அங்கங்களும், மகிமை, கனம் மற்றும் அழியாமை மற்றும் பூமியின் குடிகளை ஆசீர்வதிக்கப் போகிறதான அவர்களது நம்பிக்கைகளும் இன்றும் ஏளனத்துடன் நகைக்கப்படுகின்றது. மேலும், நம்மை அன்புகூர்ந்து நம்மைத் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் சம்பாதித்தவரின் பிரதிநிதிகளாக இருந்து, நம்முடைய மாம்சம் சிலுவையில் அறையப்படும் அனுபவங்களுக்கும், சிலுவை சுமப்பதற்கும் இன்னும் வாய்ப்பு உள்ளது. இவ்விஷயத்தில், கடந்த காலங்களில் நாம் எந்த அளவுக்கு உண்மையாய் இருந்துள்ளோம்? எதிர்காலத்தில் நாம் எந்தளவுக்கு உண்மையாய் இருப்போம்? இதுவே அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதில் உண்மையாய் இருப்பதன் மூலம், நாமும் ஜெயங்கொண்டவர்களாக வருவதற்கான நமது வாய்ப்பாகும்.

## பிதாவே, இவர்களை மன்னியும்

கொல்கொதாவில், கல்வாரியில் வந்து சேர்ந்தவுடன் மரத்தினால் உண்டாக்கப்பட்ட சிலுவைகள் தரையில் வைக்கப்பட்டன. குற்றவாளிகள் அதன் மேல் கிடத்தப்பட்டுக் கைகளிலும், பாதங்களிலும் ஆணி அறையப்பட்டனர். பின்னர், சேவகர்கள் சிலுவையை நிமிர்த்தி ஏற்கெனவே தோண்டி வைக்கப்பட்ட குழிகளில் நிலைநிறுத்தி வைத்தார்கள். இப்படிச் செய்யப்படுவதன் காரணமாக ஏற்படும் சித்திரவதைகள் சொல்லி விளக்குவதைப் பார்க்கிலும், கற்பனை செய்து பார்த்தாலேயே நன்கு விளங்கும். இது மிகவும் கொடுமையான மரணமாகும் என்றாலும், கர்த்தருடைய பின்னடியார்களும், மற்றவர்களும் மரிக்கையில் கடந்துசென்ற மற்றச் சில கொடுமையான முறைகளின் அளவுக்கு அதிகம் கொடுமையானதாக இல்லாமல் கூட இருக்கலாம். இயேசுவின் பலியோ, பாடுகளோ நமக்கான ஈடுபலி விலைக்கிரயமாக இராமல், மரணமே விலைக்கிரயமாகக் காணப்பட்டது. ஆதித் தகப்பனாகிய ஆதாமின் மீது வந்த தண்டனையானது, அவர் அனுபவிக்க வேண்டிய வலியின் அளவாக இருக்கவில்லை. உண்மை என்னவெனில், அவர் ஜீவனை இழப்பதே தண்டனையாக

இருந்தது. ஆகவேதான், ஆதாமின் சில பிள்ளைகள் மிகுந்த வலி அனுபவித்து மரித்திருக்கின்றார்கள்; இன்னும் சிலர் வலிகள் அவ்வளவாய் இல்லாமலேயே மரித்திருக்கின்றார்கள். ஆனால், "நீ சாகவே சாவாய்" என்ற தீர்ப்பும் எங்கும் ஆளுகை செய்து கொண்டிருக்கின்றது. சில கோணங்களில் பார்க்கையில், கர்த்தர் மரித்துபோவது, போதுமானதாய்க் காணப்படுகின்றது. ஆனால், வேறு சில கோணங்களில் பார்க்கையில் இது போதுமானதல்ல. "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்" என்று மோசேயின் பிரமாணத்தில் காணப்படுகின்றது (கலாத்தியர் 3:13). நியாயப்பிரமாணத்தின் கீழ்ப் பாவிகளாக இருப்பவர்களுக்கான சாபத்தை அல்லது வெறுக்கத்தக்கதான தண்டனை தீர்ப்பை இயேசு ஏற்றுக்கொண்டதினிமித்தம் அவர் பொதுவான உலகத்தின் மீட்பராக இருப்பதோடல்லாமல், யூதர்களின் மீட்பராகவும் கூட இருந்தார். "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலாத்தியர் 3:13).

தோண்டி வைக்கப்பட்ட குழிகளுக்குள் சிலுவை நிறுத்தப்பட்டபோது ஏற்றபட்ட வலியானது, கடந்து சென்ற அனுபவங்களில் மிகவும் வேதனையான ஒன்றாகும் என்று அனுமானிக்கப்படுகின்றது. மேலும் இத்தகைய வலியின் மத்தியில்தான் நமது கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்காக, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்வது இன்னது என்று அறியாமல் செய்கின்றார்கள்" என்று ஜெபம் பண்ணுகின்றார். இப்படிப்பட்ட ஒரு ஜெபத்தை நமது அருமையான போதகரால்தான் ஏறெடுத்திருக்க முடியும். மேலும் இந்த ஜெபத்தின் வார்த்தைகள் கர்த்தருடைய இருதயத்தின் உணர்வுகளுக்கு ஒத்ததாக இருக்கின்றது என்பதிலும் நமக்கு நிச்சயமே. இதேபோன்ற வார்த்தைகளையுடைய ஜெபத்தைத்தான் முதல் இரத்த சாட்சியாகிய ஸ்தேவானும், மரிக்கும் தருணத்தில் பயன்படுத்தினார் – "அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்" (அப்போஸ்தலர் 7:60). எனினும் இயேசு ஏறெடுத்த இந்த ஜெபத்தின் வார்த்தைகள் பழமைமிக்க பிரதிகளில் ஒன்றாகிய Vatican Manuscripts/முலப்பிரதிகளில் இல்லை. மேலும் இது Sinaitic-இல் இடம்பெற்றாலும், பின்னர்ச் சந்தேகத்திற்குரியதாகவே கருதப்பட்டும் வருகின்றது. எனினும், சத்துருக்கள்பால் உள்ள கர்த்தருடைய மனநிலையை வெளிப்படுத்தும் இவ்வார்த்தைகள் மீது நமக்கு ஐயமில்லை. ஏனெனில் இவைகள், "உங்கள் சத்துருக்களை அன்பு செய்யுங்கள், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காக நன்மை செய்யுங்கள், அவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்" என்று போதகர் தம்முடைய பின்னடியார்களுக்குப் போதித்தவைகளுக்கு முழு இசைவுடன் காணப்படுகின்றது.

## அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுக் கொண்டார்கள்

இயேசுவுக்குக் காவலாய் இருந்த நான்கு சேவகர்கள் சிலுவையை நிறுத்தின பிற்பாடு, அவருக்குச் சொந்தமான வஸ்திரத்தை நோட்டமிட்டுத் தங்களுக்கென எடுத்துக் கொண்டார்கள். அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்குபோட்டு, விலையேறப் பெற்றதாய், தையலில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டிருந்த அவருடைய அங்கியின் மீது சீட்டுப் போட்டபோது, அவர்கள் சங்கீதம் 22:18-ஆம் வசனத்தின் தீர்க்கத்தரிசனத்தை நிறைவேற்றினார்கள் எனக் கொஞ்சமும் நினைத்துப் பார்க்கவில்லை. இப்படியாகவே, முழு உலகமும் காணப்படுகின்றது. பல காரியங்கள் நாளுக்கு நாள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றது. தீர்க்கத்தரிசனங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றது. மேலும் இதில் நம்மில் அநேகர் பங்குபெறவும் செய்கின்றோம். ஆனால், வெகு சிலரே அவைகளைக் காணவும், புரிந்துகொள்ளவும் செய்கின்றனர். ஏனெனில், சிலருக்கு மாத்திரமே பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் உள்ளது. "யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்...... அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம்" என்ற தீர்க்கத்தரிசனங்கள் நம்முடைய நாட்களில் நிறைவேறியுள்ளது (தானியேல் 12:1-4). எனினும், சொற்பமானவர்களே, தாங்கள் விசேஷமான மற்றும் அருமையான காலப்பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கின் றார்கள் என்பதையும், இவைகள் அனைத்தும் தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதல்கள் என்பதையும் கண்டு ஒப்புக்கொள்கிறார்கள்.

## வஞ்சகன் என்று அவர் நிரூபிக்கப்படுவதற்கான போலி நிரூபணங்கள்

மக்கள் கூட்டம் சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. மேலும் சமீபகாலத்தில் கழுதையின் மேல் யூதர்களின் இராஜாவாக வந்தவரை அதிகாரிகள், மக்கள் கூட்டத்தாரோடு சேர்ந்து ஏளனம் செய்து சிரித்தார்கள். அவர் வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தின அற்புதங்களையும், மரணத்தினின்று உயிர்ப்பெறச் செய்த அற்புதங்களையும் முன்வைத்து, "இவன் மற்றவர்களை இரட்சித்தான், இவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மேசியாவானால் தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளட்டும்" என்று கூறினார்கள். இவர்கள் எவ்வளவு வஞ்சிக்கப்பட்டுள்ளனர். மேலும் இது மனிதனின் நியாயத்தீர்ப்புக் குறித்த விஷயத்தில் அவன் எவ்வளவாக தவறு இழைக்கக்கூடியவன் என்றும், தேவன் மற்றும் அவர் வார்த்தைகள் தொடர்பான விஷயங்களில் விசேஷமாக, ஆழமாகப் பார்க்க வேண்டியதன் அவசியம் எவ்வளவாய் இருக்கின்றது என்றும், நமக்குக் கற்றுத்தரக்கூடியதாக இருக்கின்றது. சற்று முன்பு வரையிலும் அதிகாரிகள் தங்களின் நடவடிக்கைக் குறித்து ஏதேனும் மனசாட்சியில் உள்ளுறுத்தல் கொண்டிருந்தாலும் கூட, இப்பொழுது அவர்கள் அதை வெளிப்படுத்தவில்லை. ஏனெனில், நமது கர்த்தர் ஓர் ஏமாற்று பேர்வழி, வஞ்சகன் என அவர்கள் இப்பொழுது முழுதும் நம்பினவர்களாயி

ருந்தார்கள்/தங்கள் இருதயத்தில் தங்களையே நம்ப வைத்துக்கொண்டார்கள். ஆகவேதான், "அவருடைய இரத்தப்பழி எங்கள் மீதும், எங்கள் பிள்ளைகள் மீதும் வரக்கடவது" என்று துணிந்து கூறினார்கள். இவர்களுடைய மனசாட்சி கண நேரம் குத்தப்பட்டிருப்பினும், இவர்கள் இயேசுவைச் சிலுவையில் அறையப்பட்டவராக, உதவியின்றி மரித்துக்கொண்டிருப்பவராக பார்த்த மாத்திரத்தில் குத்தல்கள் அனைத்தும் மறைந்துபோயிற்று/சாந்தியடைந்துவிட்டது. இது ஒரு பரீட்சையே என்று அவர்கள் சொல்லிக் கொண்டார்கள்; ஒருவேளை அவர் மேசியாவாக இருப்பாரானால் சந்தேகத்திற்கு இடமின்றி அவர் இவ்விதமான அவமானத்திற்குரிய நிலையில் பாடுபடமாட்டார். மாறாக, அவர் சிலுவையை விட்டு உடனடியாக இறங்கி வந்துவிடுவார் என்று அவர்கள் எண்ணினார்கள். ஆகவேதான், தங்கள் ஜனங்கள் மீது அதிகாரமும், ஆளுகையும் செலுத்திக் கொண்டிருக்கும் ஆசாரியருக்குரிய அதிகாரத்தைக் கவிழ்த்திப்போடும் போதகம் உடையவரும், தேசத்தின் சமாதானத்தைக் குலைப்பவருமானவரை அப்புறப்படுத்தும் விஷயத்தில், தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கையானது ஞானமுள்ளதாகவும், சரியானதாகவும் இருக்கின்றது என்பதற்கான நிரூபணம் தங்களிடத்தில் உள்ளது என்று அவர்கள் கூறினார்கள்.

இந்த யுகத்தின் அறுவடையின் போதும், நிஜமான பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேல் மத்தியில் முன்பு இருந்தது போன்று சத்தியமானது கட்டுக்கதைகளைக் காட்டிலும் அந்நியமானவைகளாகக் காணப்படுகின்றது. மேலும் கர்த்தருடைய ஆவியினால் வழிநடத்தப்படாமலும், தவறான இருதய நிலை உடையவர்களுமாகிய திரளான ஜனங்களும், அவர்களின் அதிகாரிகளாகிய (Doctors of Divinity) வேதசாஸ்திரிகளும், சத்தியத்திற்குக் குருடாக்கப்பட்டவர்களாகக் காணப் படுகின்றனர். ஒரு காலம் வரவிருக்கின்றது. அப்போது, கர்த்தருக்கும், அவருடைய சத்தியத்திற்கும் உண்மையாய் நிற்கப்போகிற அனைவருக்கும் எதிராக வல்லமைகள் செயல்படுத்தப்படும். இவர்கள் மரித்தால் நன்மை உண்டாகும் என்ற பெயரில் இவர்களுக்குத் துன்பம் வரும். அதாவது, இப்படிப்பட்டவர்களின் செல்வாக்கானது அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டிருக்கும் மத அமைப்புகளுக்கு எதிராக செயல்பட அனுமதிப்பதைப் பார்க்கிலும், சொற்பமான இப்படிப்பட்டவர்களுக்கு அநீதி செய்யப்படுவது நலமாயிருக்கும் என்று சொல்லப்படப்போகும் வேளை வரவிருக் கின்றது.

யூத அதிகாரிகளின் தூண்டுதலின் பேரில் உரோம சேவகர்களும், யூதர்களின் இராஜாவாகச் சிலுவையில் அறையப்பட்டிருந்த அவரை ஏளனம் பண்ணி சிரித்தார்கள். அவருடைய தலைக்கு மேல், "இவர் யூதர்களின் இராஜா" என்று முழு மக்கள் கூட்டமும் வாசிக்கத்தக்கதாக இலக்கிய மொழியாக கிரேக்கத்திலும், ஆளுகை செய்பவர்களாகிய உரோமர்கள் வாசிக்கத்தக்கதாக இலத்தீன் பாஷையிலும், அந்தத் தேசத்து ஜனங்கள் வாசிக்கத்தக்கதாக எபிரெய பாஷையிலும் எழுதப்பட்ட பலகையின் வார்த்தைகளை வாசிப்பவர்களுக்கு, அங்கு நிலவின சூழ்நிலைகள் அர்த்தமற்றதாகக் காணப்பட்டது. ஒரு தேசத்தின்/ஜாதியாரின் இராஜா இவ்விதமாக அவருக்குச்

சொந்தமான ஜனங்களினால் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளார், தாக்கப்பட்டுள்ளார், குற்றவாளியாகக் கண்டனம் செய்யப்பட்டுள்ளார்! அவருடைய பலத்தை அவர்கள் எவ்வளவு குறைவாக மதிப்பிட்டுள்ளார்கள்! அவரால் சிலுவையிலிருந்து இறங்கி வந்திருக்க முடியும், மரிக்க மறுத்திருக்க முடியும், அவர்களுடைய கேலி பேச்சுக்களை எதிர்த்திருக்கவும் முடியும். தம்மைக் காத்துக்கொள்வதற்குப் பன்னிரண்டு லேகியோன்களுக்கு அதிகமான தூதர்களையும் அப்போது பெற்றுக்கொண்டிருந்திருக்கவும் முடியும். ஆனால், இப்படி நடந்துகொள்வது அவருடைய அர்ப்பணிப்புக்கு எதிரானதாகவும், பிதாவின் சித்தத்திற்கு இசைவில்லாததாகவும் ஆகிவிடும். மேலும் எதிர்கால வாழ்க்கைக்குரிய நம்பிக்கையில்லாமல் ஆதாமின் சந்ததியாராகிய நாம் மரணத்தீர்ப்பின் கீழேயே விடப்பட்டவர்களாகிவிடுவோம்; அதாவது மிருகஜீவன்கள் மரிப்பதுபோன்று எவ்வித எதிர்கால நம்பிக்கையுமில்லாமல் மரித்துப் போயிருப்போம்.

நமது அருமையான மீட்பர் அவர் வையப்படும்போது பதில் வையாமலும், தம்மைத் துன்பப்படுத்துகிறவர்கள் மேல் சினம் கொள்ளாமலும், தம்மைத் தண்டிக்கிறவர்களைத் தாக்காமலும் இருந்தபடியினால் நாம் எவ்வளவாய்ச் சந்தோஷமடைய முடிகின்றது. நம் சார்பாக, ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதான பலியை ஒப்புக்கொடுக்க காரணமாயிருந்த அவருடைய அன்பு மற்றும் அவருடைய உண்மையினிமித்தம் நாம் எவ்வளவாய்ச் சந்தோஷமடைய முடிகின்றது. கர்த்தருக்குப் பரிசாகவும், பிதாவின் அங்கீகரிப்பிற்கான அடையாளமாகவும், அவருக்குக் கிடைத்த மகா கனம், மகிமை, ஆளுகை மற்றும் முடிவில்லாத/எல்லையற்ற வல்லமையில் நாம் எவ்வளவாய்ப் பேரானந்தம் கொள்ள முடிகின்றது. மேலும் இது, அவருடைய கிருபையினாலும், உதவியினாலும் அவருடன் கூட அவருடைய இராஜ்யத்தில் நாம் உடன் சுதந்தரர்கள் நிலையை அடைய முடியும் என்ற எத்துணை நம்பிக்கையையும் கொடுக்கின்றது.

## என்னோடுகூடப் பரதீசில்

அவரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவர்கள் மத்தியில் சிலர் அனுதாபப்படுகிறவர்களாகவும், சிலர் ஏளனம் பண்ணுகிறவர்களாகவும் காணப்பட்டது போன்று, இயேசுவோடு கூடச் சிலுவையில் அறையப்பட்ட கள்வர்களின் மனதிலும் கூட, இப்படிப்பட்ட உணர்வுகள் எழுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இயேசுவோடு கூட இவர்கள் இருவரும் வந்தபடியினால், அவருடைய சாந்தத்திற்கும், பெருந்தன்மைக்கும், பொறுமைக்கும், தேவன் மீதான விசுவாசத்திற்கும் இவர்கள் இருவரும் சாட்சிகளாய் இருந்தும், இவர்களில் ஒருவனே இவைகளை உணர்ந்துகொள்ளத்தக்கதான புரிந்துகொள்ளுதலின் கண்களைப் பெற்றிருந்தான். மற்றவனோ, அதிகாரிகளைப் போன்றும், ஜனங்கள் போன்றும் குருடனாக

இருந்தபடியினால், அவர்களோடு கூடக் கர்த்தரை வஞ்சகன் என்றும், மாய்மாலக்காரன் என்றும் வைய ஆரம்பித்தான். முதலாவது கள்வன் குறிப்பிடத்தக்க தான விசுவாசத்தை வெளிப்படுத்தினவனாக, மற்றவனை நோக்கி, "நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டான்" (லூக்கா 23:40, 41). நம் கர்த்தருடைய வெளிச்சம் இருளில் பிரகாசித்தது. ஆனால், இருளின் பிள்ளைகளோ அதைப் புரிந்துகொள்ளவில்லை. மாறாக அவருடைய சீஷர்களோ, அதனை புரிந்து கொண்டார்கள். ஆகவே இந்தப் பாவப்பட்ட கள்வனும் கூட நமது கர்த்தர் அநீதியாக துன்பப்படுத்தப்படுகின்றார் என்றும், அடிக்கப்படுகின்றார் என்றும், அதேசமயம் இவைகள் அனைத்தையும் அவர் பொறுமையுடன் ஏற்றுக்கொள்கின்றார் என்றும் உணர்ந்து கொண்டான்.

இக்கள்வன் இயேசுவைக் குறித்தும், அவர் மேசியா எனச் சிலரால் உயர்வாகக் கருதப்படுகின்றார் என்பதைக்குறித்தும் கேள்விப்பட்டிருப்பான் என்பதில் ஐயமில்லை. மேலும் முரண்பாடான சூழ்நிலைகள் நிலவிக்கொண்டிருப்பது அவனுக்குத் தென்பட்டிருந்த போதிலும், நமது மீட்பரிடத்தில் இராஜாவுக்குரிய அந்தஸ்து/தோற்றம் காணப்படுவதை அவனால் உணரமுடிந்தது. மேலும் இவ்வுணர்வு அவனுக்குள்ளே பெருகிக்கொண்டிருந்தது என்பதிலும் ஐயமில்லை. இவர் ஆவிக்குரிய உலகத்தைச் சார்ந்த பெரியவர்களில் ஒருவராக ஒருவேளை இருப்பாரோ? இவர் சொல்வதுபோன்று ஒருவேளை வேறு ஒரு காலத்தில் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபித்துவிட்டால் என்ன செய்வது? இந்த அதிகாரிகள் ஒருவேளை சுயநலம் மற்றும் பொறாமை காரணமாகத்தான் இவருடைய போதனைகளுக்குக் குருடாய்ப் போயிருப்பார் களானால் என்ன செய்வது? என்ற எண்ணங்கள் அவனுக்குள் அலைபாய்ந்தன. மேலும் தன்னோடிருந்த மற்றக் கள்வன் அவரை ஏளனம் செய்ய முற்பட்டபோது, இக்கள்வன் இரட்சகரின் சார்பாக அவரைப் பாதுகாக்கும் வண்ணம் தன்னுடைய வாயைத் திறந்தான். இக்கள்வன் தனது அபாத்திரமான நிலையை ஒப்புக்கொண்டவனாக, "சர்வவல்லவரின் கரங்களில் நம்முடைய எதிர்க்காலம் எப்படியாக இருக்குமோ என்று நம் மரண நேரத்தில் பயம் கொள்வதற்கு எனக்கும், மற்றக் கள்வனாகிய உனக்கும் காரணங்கள் இருக்கின்றது. ஆனால் இங்குப் பழித் தூற்றப்பட்டு, அடிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டுக் காணப்படும், இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்பதற்கு நாமும் சாட்சியாக இருக்கின்றோமே" எனக் கூறி, நியாயத்தை எடுத்துக் கூறினவனாகக் காணப்படுகின்றான்.

# ஆண்டவரே, அடியேனை நினைத்தருளும்

இக்கள்வன் மற்றக் கள்வனைக் கடிந்து கொண்டு நமது கர்த்தரை நோக்கி, "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்று விண்ணப்பம் பண்ணினான் (லூக்கா 23:42). அதாவது "நீர் உம்முடைய இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளும் போது, அது எங்குக் காணப்பட்டாலும் சரி, என்ன சூழ்நிலைகளின் கீழ்க் காணப்பட்டாலும் சரி, இராஜ்யம் உம்முடைய வல்லமைக்குள் இருக்குமாயின் அடியேனை நினைத்தருளும். என்னைவிட நீர் மிகவும் அப்பாற்பட்டவராகவும், எங்கள் அனைவரைக்காட்டிலும் மிகவும் உயர்ந்தவராகவும் நான் காண்கின்றேன். உம்முடைய பிரஜைகளில் உள்ள சிலரால் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்ட வல்லமையுள்ள இராஜாவாய் இருக்கின்றீர் என்று எனக்குத் தோன்றுகின்றது. இவ்விண்ணப்பத்தை நான் உம்மிடத்தில் வேண்டிக்கொள்கின்றேன். நான் கேட்பது மற்றவர்களின் பார்வைக்கு முட்டாள்தனமாக இருந்தாலும் பரவாயில்லை. நீர் ஓர் இராஜாவாகும் பொழுது, "அடியேனை நினைத்தருளும்"; ஏனெனில் ஏதோ ஒருவிதத்தில், ஏதோ ஒரு காலக்கட்டத்தில், எங்கோ ஓர் இடத்தில் நீர் ஓர் இராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டிருப்பீர் என்று நான் மெய்யாகவே விசுவாசிக்கின் றேன். ஏனெனில் நீர் அதற்கு நிச்சயமாகப் பாத்திரவானாயும் இருக்கின்றீர்" என்ற விதத்தில் கூறினான்.

இதற்கு நமது கர்த்தர் பதிலளித்ததாக பதிவு செய்யப்பட்டுள்ள வார்த்தைகள் கிறிஸ்தவர்கள் மத்தியில் மிகுந்த விவாதம் எழக் காரணமாய் இருக்கின்றது. ஆங்கிலத்தில் இவ்வசனமானது, கர்த்தர் அந்நாளிலேயே பரதீசில் இருக்கப்போவதாகவும், அன்றைய தினமே கள்வனும் பரதீசில் வந்து, அவர் கரத்தில் இருந்து ஆசீர்வாதத்தையும், தயவையும் பெற்றுக்கொள்வான் என்பதுபோன்று கருத்தைக் கொடுக்கின்றதாக தோன்றுகின்றது. பரதீஸ் என்பது பரலோகம் எனப் புரிந்துகொள்ளப்படுமாயின், இதில் சில சிக்கல்கள் ஏற்படும் என்பதை நாம் அறிவோம். ஏனெனில், நமது கர்த்தர் அந்நாளில் பரலோகம் செல்லவில்லை. அப்போஸ்தலர் தீர்க்கதரிசியான தாவீதின் வார்த்தைகளைச் சுட்டிக்காட்டி, அவர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுதல் அடையும் வரையிலும் அவர் ஷியோலில் (SHEOL), கிரேக்க வார்த்தையில் - ஹேடிசில் இருந்தார் என்று கூறுகின்றார் (அப்போஸ்தலர் 2:31; சங்கீதம் 16:10). நமது கர்த்தரும் கூட அவர் உயிர்த்தெழுந்த காலையில் அவர் இன்னமும் அவருடைய பிதாவிடத்திலும், சீஷர்களின் பிதாவிடத்திலும், தம்முடைய தேவனிடத்திலும், சீஷர்களின் தேவனிடத்திலும் ஏறிப்போகவில்லை எனத் தம் சீஷர்களிடம் சொல்லும்படிக்கு மரியாளிடம் கூறினார். "அவர் அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து," (1 கொரிந்தியர் 15:4) என்ற வசனத்தில் இடம்பெறும் பவுலின் வார்த்தைகளையும் கவனியுங்கள்.

# இழந்துபோகப்பட்ட பரதீஸ் மீண்டும் கொண்டுவரப்படும்

வேதவாக்கியங்களில் குறிப்பிடப்படும் பரதீஸ் என்கின்ற வார்த்தையானது, ஆதாமும், ஏவாளும் துரத்தப்பட்டதுமான ஏதேன் தோட்டத்தையே குறிக்கின்றது. மேலும் நமது கர்த்தர் தம்முடைய இரண்டாம் வருகையில் வந்து, தமது இராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது, முழு உலகமும் பரதீசாக மாற்றப்படும். இயேசுவின் கள்வனோடு கூட நடந்த இச்சம்பாஷணையானது, நடப்பதற்கு பல காலங்களுக்கு முன்னதாகவே, ஏதேன் தோட்டம் அழிந்துவிட்டது. ஆகவே கர்த்தர் குறிப்பிட்டது, இராஜ்யத்தின் பரதீசாகத்தான் இருக்க முடியும். கர்த்தர் பேசின வார்த்தைகளில் இடம்பெறும் "இன்று" என்ற வார்த்தையின் அடிப்படையிலேயே முழுக் கேள்விகளும் எழும்புகின்றது. ஆனால், இன்றைய ஆங்கில வேதாகமங்களில் (இன்று) Today என்ற வார்த்தைக்கு முன்பு போடப்பட்டிருக்கும் காற்புள்ளியை, Today என்ற வார்த்தைக்குப் பின்பு போட்டுப் பார்க்கும்பொழுது, அர்த்தம் தெளிவாகின்றது. இப்பொழுது வசனம் இப்படியாக வாசிக்கப்பட வேண்டும்: "மெய்யாகவே, நான் உன்னிடம் இன்று (எல்லாம் சாதகமற்றதாய்த் தென்படுகையில், நான் வஞ்சகனாகக் கருதப்படுகின்ற நிலையில், என்னுடைய சத்துருக்களின் அவமதிப்புகளுக்கும், பழித் தூற்றுதலுக்கும் நான் ஆளாகிக் காணப்படும் போதிலும், இன்று) சொல்லுகின்றேன், நீ என்னுடன் கூட பரதீசில் இருப்பாய்." அன்றைய தினம் கர்த்தரும், அக்கள்வனும், ஹேடிசுக்கு, கல்லறைக்கு, மரணநிலைக்குள் போனார்கள். கர்த்தர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். ஆனால், கள்வனோ மீதமான/மற்ற எல்லா உலக ஜனங்களுடன் உணர்வற்ற நிலையில் மாபெரும் மரணம் எனும் சிறைச்சாலையில் கைதியாகவே காணப்படுகின்றான்.

கர்த்தர் தமது இரண்டாம் வருகையின்போது, ஏற்றக்காலத்தில் கல்லறையிலிருந்து கள்வனை அழைப்பார். அப்பொழுது, அவன் பரதீசுக்கு வருவான். காரணம், அப்பொழுது முழு உலகமும் கர்த்தருடைய மகிமையினாலும் நிரப்பப்பட்டுக் காணப்படும். மேலும், நீதியின் சூரியன் தெய்வீகச் சத்தியத்தின் ஒளியினால் பூமியை நிரப்புவார். அப்பொழுது, குறிப்பிடத்தக்க அளவில் விசுவாசம் கொண்டிருந்த கள்வன் நினைவுகூரப்படுவான். மேலும், அவன் காட்டின விசுவாசத்திற்கு ஏற்ப ஆசீர்வாதமும் பெற்றுக்கொள்வான். இன்னுமாக, மீட்பர் இறந்துபோகும் தருவாயில், அவன் அவருக்குப் புரிந்த ஊழியத்திற்கு (அவரை மற்றக் கள்வன் பழிதூற்றினபோது, அவருக்காக இக்கள்வன் நியாயத்தை எடுத்துக்கூறினதே இவன் இயேசுவுக்குப் புரிந்த ஊழியமாகும்) ஏற்ப ஆசீர்வாதமும் பெற்றுக்கொள்வான். அக்கள்வனின் வேண்டுகோளானது, மேசியா அவருடைய இராஜ்யத்தில் வரும்போது, நினைவுகூரப்படும். "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவதுபோன்று பூமியிலும் செய்யப்படுவதாக" என்று நாம் இன்னமும் ஜெபம் பண்ணுகிறவர்களாக இருக்கின்றோம். அவருடைய இராஜ்யம் வராததுவரையிலும் எவ்விதமான பரதீசும் இருப்பதில்லை. நமது கர்த்தருடைய பதில் வார்த்தைகளின், "மெய்யாகவே, மெய்யாகவே"என்ற பதம் "அப்படியே ஆகக்கடவது" என்பதை குறிக்கின்றதாய் உள்ளது. அதாவது, நீ கேட்பதுபோல் நீ என்னோடுகூடப் பரதீசில் இருப்பாய், இருளின் வல்லமையும் மற்றும் பாவிகளின் முரண்பாடுகளும் செயல்படும் சூழ்நிலைகளின் மத்தியில் இன்று நான் உனக்கு இதைக் கூறுகின்றேன் என்ற விதத்தில் கூறினார்.

# பரதீசில் கொஞ்சம் அல்லது அதிகமான அடிகள்

தற்காலங்களில் தேவனுடைய கிருபையைக் கண்டு ருசிபார்த்துவிட்டு, வேண்டும் என்றே அவர் கிருபையை மறுத்துப்போனவர்கள் தவிர, மற்ற மனுக்குலம் முழுவதும் பரதீசின் பாக்கியமான வாய்ப்புகளை, ஆயிரம் வருஷம் அரசாட்சியின் கீழ்ப் பெற்றுக்கொள்வார்களா? ஆம், என்று நாம் பதிலளிக்கின்றோம். குருடாய் இருந்த மற்றக் கள்வனும் அங்கு இருப்பான். கர்த்தரை வசைக்கூறி, இகழ்ந்து அவரை "சிலுவையிலறையும்" என்று கூக்குரலிட்டவர்களும், அவரைக் குத்தினவர்களும், "இவருடைய இரத்தப்பழி எங்கள் மீதும், எங்கள் பிள்ளைகள் மீதும் வரட்டும்" என்று கூறினவர்களுமான இந்த அனைத்துக் குருடர்களும் அங்கு வருவார்கள். "பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும் . . . . . . . எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28, 29). ஆனால், இவர்களை விட கர்த்தருக்கு நண்பர்களாய் இருந்தவர்களுக்கு எவ்விதமான அனுகூலங்கள் காணப்படும்? எல்லாவிதத்திலும் கர்த்தருடைய நண்பர்களாய் இருந்தவர்களுக்கு மிகுந்த அனுகூலம் காணப்படும் என்பதே நமது பதிலாகும். முதலாவதாக, விசுவாசிப்பதன் மூலம் தற்காலத்திலேயே அவர்கள் ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்கின்றார்கள். கர்த்தருடைய அனைத்துச் சீஷர்களும் இதை அறிவார்கள். மேலும் விசுவாசம் வைத்த கள்வனும் கூட இவ்விசுவாசத்தின் மூலம் ஆசீர்வாதத்தை உணர்ந்து கொண்டான் என்பது உறுதியே. மேலும் அக்கள்வன் மகிழ்ச்சியுடன் மரித்தான். விசுவாசம் வைக்காதவர்களின் மனமானது இப்பிரபஞ்சத்தின் அதிபதியினால் குருடாக்கப்பட்டிருக்கின்றது என்று வேதவாக்கியங்கள் கூறுவதினால், குருடாய் இருப்பவர்கள் தங்கள் குருட்டுத் தன்மைக்கு முழுப் பொறுப்பாளிகளாக இராவிட்டாலும், எதிர்கால வாழ்க்கையைப் பொறுத்தமட்டில், சிலவற்றிற்கு அவர்கள் பொறுப்பாளிகளாக கூட இருப்பார்கள் மற்றும் தற்காலத்தில் அவர்களின் துணிகரமான பாவத்தின் அளவிற்கு ஏற்ப, எதிர்காலத்தில் அவர்கள் சிலவற்றில் ஊனராய்க் காணப்படுவார்கள்.

விசுவாசித்த கள்வன் பரலோகத்திற்கென நிச்சயமாக ஆயத்தமாக்கப்பட வில்லை. அவன் ஆவியில் ஜெனிப்பிக்கப்படவும் இல்லை. ஆதலால் உயிர்த்தெழுதலின் மூலம் அவனால் ஆவியில் பிறக்கவும் முடியாது. அவன் ஆவிக்குரிய கனிகளையும், கிருபைகளையும் வளர்த்துக் கொள்ளாததால் அவன் ஜெயம்கொண்டவனாகவும், பரிசுத்தவான்களுடன் உடன் சுதந்தரமுள்ளவனாகவும் ஏற்றுக்கொள்ளப்படவும் முடியாது. ஆனால் அப்படிப்பட்ட மோசமான சூழ்நிலைகளில் அவனுக்குள் ஏற்பட்ட/வளர்ந்த விசுவாசமானது கர்த்தரைக் காக்குமளவு செயல் புரிந்த காரியங்களானது, அவனிடத்தில் நீதியின் மீதான அன்பு மற்றும் கொள்கை இருதயத்தில் அதிகமாகவே காணப்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆகவே ஆயிரம் வருஷம் இராஜ்யத்தின் சூழ்நிலைகளின் கீழ் விசுவாசமுள்ள அந்தக் கள்வன், கர்த்தருடைய ஆசீர்வாதத்தின் கீழ் மிகவும் வேகமாக வளர்ச்சியில் முன்னேறி, ஆதாமுக்குள் இழக்கப்பட்டு, விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்ட அனைத்திற்குமான முழுப் பூரணத்திற்கு முன்னேறுவான் என்பதில் ஐயமில்லை.

டாக்டர் அல்புரோட் அவர்கள் இப்படியாகக் கூறுகின்றார்: "அவமானம், வலி மற்றும் ஏளனம் மத்தியிலும் கூடச் சிலுவையில் அறையப்பட்டவரை இராஜா என்று புரிந்துகொள்ள துணிந்த அந்தக் கள்வனுடைய விசுவாசத்தின் வலிமையும், பலமுமே உண்மையில் ஆச்சரியத்திற்குள் ஆழ்த்துகின்றது. எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசுவாசமுள்ள வீரர்கள் போன்று, இக்கள்வன் பிரசித்தமான இடத்தைப் பெற்றுக்கொள்வான்."

## பூமியை இருள் மூடினது

மதிய வேளையளவு இயேசு தமது தாயும், யோவானும் தம் அருகே நிற்கிறதைக் கண்டு, "தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார்" (யோவான் 19:26, 27). நமது கர்த்தருடைய வேதனையின் உச்சக்கட்டத்திலும் கூட அவர் தம்மைப் பற்றி எண்ணுவதைப் பார்க்கிலும், தம்முடைய சீஷர்கள் மற்றும் தமக்கு அருமையாய் இருப்பவர்கள் குறித்தும் எண்ணினவராகக் காணப்படுகின்றார். இச்சமயத்தில்தான் இருள் பூமியைச் சுமார் மூன்று மணி நேரம் மூடிக்கொண்டது. சந்தேகத்திற்கு இடமின்றி இருளின் நிழலானது, சிலுவையில் அறையப்பட்டவர்களுக்கு சூரிய ஒளியைக் காட்டிலும், இதமாக இருந்திருக்க வேண்டும். உண்மைதான், இத்தகைய (சிலுவையின்) காட்சியின் மீது இயற்கையானது தனது திரைச்சீலையைப் போர்த்தினது. மேலும் இது உலகத்தின் ஒளியாக இருக்கும் அவர் மேல் இருளின் வல்லமையானது, தற்காலிகமாக ஜெயம் கொள்வதைக் கூடச் சித்தரிக்கின்றதாய்க் காணப்படுகின்றது. தேவனுக்கும், நமது கர்த்தருக்கும் நன்றி. பாவத்திற்கான அவருடைய ஆசீர்வாதமான பலியின் மூலம், சகல நிழல்கள் வெகு சீக்கிரத்தில் கடந்து போய்விடும். ஏனெனில், பூமியின் சகல குடிகளையும் ஆசீர்வதிப்பதற்கென நீதியின் சூரியனானது, சுகமளிக்கும் செட்டைகளுடன் எழும்பிப் பிரகாசிக்கும்.

## ஆவியை ஒப்புக்கொடுத்தார்

நமது பாடத்தின் கடைசி வசனமானது, நமது கர்த்தருடைய கடைசி வியாகுலத்துடன் கலந்த உரத்த கூக்குரலாய் இருக்கின்றது; அதாவது எஞ்சியிருந்த பலத்தைப் பயன்படுத்தி உரக்கக் கத்தினார். "என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று அவருடைய வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கெத்செமனே தோட்டத்தில் தூதன் வந்து, இதுவரையிலும் அவரது நடத்தைகள் பிதாவின் பார்வையில் பிரியமாயும், அங்கீகரிக்கப்படக் கூடியதாகவுமே இருந்துள்ளது என்று நிச்சயம் கொடுத்து அவரைப் பெலப்படுத்தின நேரம் முதல், நமது அருமையான எஜமானிடம் மிகுந்த அமைதியை நம்மால் காணமுடிந்தது. ஆனால், பாவிக்குரிய கசப்பான அனுபவமும் பெற்றுக்கொண்டு, பிதாவுடன் கொண்டிருக்கும் ஐக்கியம் துண்டிக்கப்படும் அளவிற்கு அனுபவங்களுக்குள் அவர் செல்ல வேண்டியது அவசியமாயிருந்தது. தேவனுடைய ஏற்பாட்டின்படி இந்த நிலை அதிக நேரம் நீடிக்கப்படவில்லை. மாறாக, "ஒரு கணம்" மாத்திரமே அனுமதிக்கப்பட்டது. பிதா தம்முடைய அருமையான/பிரியமான குமாரனிடமிருந்து தம் முகத்தை மறைத்துக்

கொண்டது என்பது, சகல ஆவிக்குரிய ஐக்கியத்தையும், உறவையும் எடுத்துப் போடுவதைக் குறிக்கின்றது. ஒரு கணப்பொழுது நம்முடைய மீட்பர் இருளின் ஆழத்திற்குள்ளாக விடப்பட்டு விட்டார். மேலும் அவருடைய வேதனை நிறைந்த கதறல்கள், அவர் இருதயத்தில் தனிமைப்படுத்தப்பட்டதைக் காட்டுகின்றது. ஜனங்கள் மாத்திரம் அவரைத் தனித்து விட்டுவிடுவது போதாது. பிதாவும் தற்காலிகமாக அவரைத் (இயேசுவை) தக்க வைக்கும் வலிமையையும், உதவியையும் எடுத்துவிட வேண்டியிருந்தது.

எனினும், நமது கர்த்தர் ஜெயங்கொண்டார். மேலும், அவருடைய இறுதி வார்த்தைகள், "பிதாவே. உம்முடைய கரங்களில் என்னுடைய ஆவியை ஒப்புக்கொடுக்கின்றேன்" என்பதேயாகும். மேலும் இப்படிக் கூறி தம்முடைய ஜீவனை (ghost) விட்டார் என்று பார்க்கின்றோம். இங்கு ஆங்கில வேதாகமத்தில் வரும் ghost என்ற வார்த்தையானது, ஆவி எனும் பொருளைக் கொடுக்கின்றது. அதாவது, கர்த்தர் தமது ஆவியை, ஜீவ சுவாசத்தை விட்டார் என்று பொருள்படுகின்றது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், அவர் தமது கடைசி மூச்சைவிட்டார், தமது ஜீவனைப் போக விட்டார் என்பதாகும்.

"உம்முடைய கரங்களில் என்னுடைய ஆவியை ஒப்புக்கொடுக்கின்றேன்." அதாவது, என் சுவாசத்தை, என் ஜீவனை ஒப்புக்கொடுக்கின்றேன் என்ற வார்த்தைகளின் அர்த்தம் என்ன? நம்முடைய பதில் என்னவெனில்! தேவன் ஆதாமைச் சிருஷ்டித்தபோது, முதலாவது, ஆதாமை உண்டுபண்ணி, அவருக்கு ஜீவனாகிய அன்பளிப்பைக் கொடுத்தார். ஆனால் இந்த அன்பளிப்பை வைத்திருப்பதற்கான உரிமையைக் கீழ்ப்படியாமையினிமித்தம் இழந்துபோனார். ஆதாம் தன்னுடைய சந்ததிக்கு ஜீவனின் ஒரு துகளைக் கொடுக்க முடிந்ததே ஒழிய, பூரணமான ஜீவனைக் கொடுக்க முடியவில்லை. காரணம், அதற்கான சகல உரிமைகளையும் அவர் இழந்து போய்விட்டார். ஆகவே, ஆதாமும், அவருடைய சந்ததியின் ஒவ்வொரு அங்கமும் மரிக்கையில் அவர்கள் ஜீவனுக்கு அபாத்திரர்கள் மற்றும் ஜீவனை அவர்கள் வைத்துக்கொள்ளவோ அல்லது அதைக் கேட்கவோ என்றென்றும் அதிகாரமில்லை எனும் தெய்வீகத் தீர்ப்பின் பிரகாரம் தங்களது ஜீவனைத் தேவனிடத்தில் ஒப்படைத்துவிடுகின்றவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், நமது கர்த்தர் இயேசுவின் விஷயமோ வேறுபட்டதாகும். ஆதாமிடமிருந்து பெற்றுக்கொள்ளாத ஜீவனை அவர் பெற்றிருந்தார்; பரலோகத்தின் நிலையிலிருந்து மாற்றப்பட்ட ஜீவனை உடையவராக இருந்தார். அவரிடம் ஜீவனுக்கான உரிமை இருந்தது. மேலும், அவருக்கு உரிமையான இந்த ஜீவனைத்தான் அவர் ஆதாம் மற்றும் அவர் சந்ததிக்குரிய ஈடுபலியின் விலைக்கிரயமாக ஒப்புக்கொடுத்தார். இந்த ஜீவன் மீதான தமது பிடியை அவர் விடுகையில் அதை அவர் பிதாவினிடத்தில் ஒப்படைத்தார். பிதாவாகிய தேவன், குமாரன் இப்படியாக ஒப்படைக்கும் ஜீவனானது, அவர் மேலான ஒரு ஜீவனை அதிகமான அனுகூலங்களுடன் பெற்றுக்கொள்வதற்கு உரிமை கொடுக்கும்/வழி வகுக்கும் என ஏற்கெனவே வாக்களித்திருந்தார். நமது கர்த்தரும் வாக்களிக்கப்பட்டிருந்த இந்த மேலான ஜீவனை, மரித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுகையில் பெற்றுக்கொண்டார். "அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (1 பேதுரு 3:18).

# அது சிலுவையாய் இருப்பினும்

நான் எப்போதும் ஜெபமாக பாடுவதுண்டே:
"தேவனே, உம்மண்டை நெருங்கிட வேண்டுமே" என்ற இந்த வார்த்தைகளை;
தெய்வீகமானவரின் ஐக்கியத்திற்காய் ஏங்குகின்றேனே நானே,
உந்தன் அன்பான முகந்தனைக் கண்டிடவே ஏங்குகின்றேனே நானே.
ஆனால் இந்தப் பாக்கியமான நிலைதனுக்காய்
இலாபமான அனைத்தையுமே குப்பை என்று எண்ணிடுவேனா,
உம் சித்தப்படியே என்னை இழுத்திடுவதற்கு இணங்கிடுவேனா,
"அது சிலுவையாய் இருப்பினும்?"

தேவனே, உம்மண்டை நெருங்கிட, நெருங்கிட வேண்டுமே,
இதுவே எந்தன் இருதயத்தின் வாஞ்சையாய் இருக்கிறதே;
நாள்தோறும், உந்தன் அருகில் பிரயாணம் பண்ணிடவே விரும்பிடுகின்றேனே.
மிக அருமையான இந்தக் கனத்திற்குரிய நிலைதனை ஆதாயமாக்கிடுவதற்கே,
நான்அனைத்தையும் தூசு என எண்ணிடுகின்றேனே;
எந்த வழிவகையைக் கொண்டும் என்னைத் தூக்குவீராக!
"அது சிலுவையாய் இருப்பினும் பரவாயில்லையே."

சிலுவையை நான் சுமந்திடாதது வரையிலுமே
கிரீடம் கொடுக்கப்படுவதில்லை என்று அறிந்திருக்கின்றேனே;
நான் இங்குப் பாடுபட்டிட வேண்டுமே,
பரலோகத்தில் ஆளுகை செய்ய வேண்டுமெனில் என்று அறிந்திருக்கிறேனே.
அச்சம் கொள்கின்றேனே நான் உம்மிடமிருந்து வேறு பக்கம் பார்த்திடவே;
பார்த்திட்டாலே அனைத்தையும் இழந்திடுவேனே.
ஆகையால் உந்தன் வழிதனிலேயே, எந்தன் ஆத்துமா எழும்பட்டுமே
"அது சிலுவையாய் இருப்பினும் பரவாயில்லையே."

இதுவே எந்தன் இருதயத்தின் உண்மையான வாஞ்சையாம்,
"தேவனே உம்மண்டை நெருங்கிடவேண்டுமே" என்பதே என் வாஞ்சையாம்;
ஓ! எந்தனை நெருக்கமாய் இழுத்துக்கொள்ளுமே,
"சிலுவைதான் இழுத்துக்கொள்ளுமாயினும், அது பரவாயில்லையே."

- விடியல் துதிப்பாடல்கள், # 335

# ஏன் நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார்?

## யோவான் 19:17-42

***"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்." 1 கொரிந்தியர் 15:3***

வரலாறுகளின் மிகுந்த குறிப்பிடத்தக்க உண்மைகளில் ஒன்று, உலகத்திலேயே மிகுந்த அறிவுடையவர்களும், மிகவும் நாகரிகமடைந்தவர்களுமான ஜனங்கள், கிட்டத்தட்ட 19 நூற்றாண்டுகளுக்கு முன்னதாக குற்றவாளியெனச் சிலுவையில் அறையப்பட்டதாக ஒப்புக்கொள்ளப்படும் ஒருவரை, தங்களது தலைவராக, தங்களது ஆசாரியனாக, தீர்க்கத்தரிசியாக மற்றும் இராஜாவாக அங்கீகரித்திருக்கும் காரியமே ஆகும்! இன்னுமாக இவருடைய நாமத்தில், இவருடையப் பின்னடியார்களால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள உபதேசங்களான: இவர் சிலுவையில் அறையப்பட்டக் காரியமானது, தெய்வீகத் திட்டத்தினுடைய ஒரு பாகம் என்றும், இன்னுமாக இவர் சிலுவையில் அறையப்படுவது அவசியம் என்றும், சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தத்தினால், அதாவது சிலுவையில் அறையப்பட்டவரின் மரணத்தினால் சபை மற்றும் உலகத்திற்கான பாவங்களுக்குரிய பாவநிவாரணம் செய்யப்பட்டுள்ளது என்றும் வலியுறுத்தும் உண்மையும்கூட மிகவும் குறிப்பிடத்தக்கதாய் உள்ளது; "நம்முடைய பாவங்களை (சபையின் பாவங்களை) நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவான் 2:2). தெய்வீக வழிநடத்துதலின்படி பார்க்கும்போது, கிறிஸ்துவின் சிலுவையே, (மரமல்ல, மாறாக சிலுவையினால் அடையாளப்படுத்தப்படும் பலியே) பாவம் உலகத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்னதாகவே, அது பிரவேசிக்கும் என்பதை முன்னறிந்திருந்த தேவன், நம்முடைய இனத்திற்காக ஆயத்தம்பண்ணியுள்ள மகா இரட்சிப்பிற்கான மையமாக உள்ளது என்பதை நாம் காண்கின்றோம். தெய்வீகத் தீர்ப்பானது, மரணமாக இருந்தது மற்றும் இந்தத் தீர்ப்பானது ஆதாம் மற்றும் அவருடையச் சந்ததியார் மீது காணப்பட்டது. தண்டனைத் தீர்ப்பின் கீழ்க் காணப்பட்ட எவனாலும் தன்னையோ அல்லது தன்னுடைய சகோதரனையோ மீட்டுக்கொள்ள முடியாது, ஆகவே மனிதனை மீட்கத்தக்கதாக லோகோஸ் தமது பரலோக நிலைமையை விட்டு, மனிதனாக வேண்டும் என்ற விதத்தில் தெய்வீக ஏற்பாடு காணப்பட்டது.

ஏதோ ஒரு விதத்தில் மனிதனாகிய கிறிஸ்து மரிப்பது என்பது, ஆதி தண்டனைத் தீர்ப்பை ஈடு செய்வதற்குப் போதுமானதாய் இருந்திருக்கும்; ஆனால் இயேசுவின் உண்மையானது தூதர்களுக்கும், மனிதர்களுக்கும் குறிப்பாய் நிரூபிக்கப்படுவதற்கும் மற்றும் தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் மேலாகவும், எல்லா நாமங்களுக்கு மேலாகவும் இயேசுவைப் பிதா உயர்த்தும் காரியத்திலும், இன்னுமாக அனைவரும் பிதாவைக் கனப்படுத்துவது போன்று, குமாரனையும் கனப்படுத்தும் நிலைக்கு இயேசுவைப் பிதா உயர்த்தும் காரியத்திலும், பிதா நியாயமாய்ச் செயல்பட்டுள்ளார் என்பது நிரூபிக்கப்படுவதற்கும்

என்று சோதிக்கின்ற விதத்திலும், அவமானமான விதத்திலும் மரணத்தை ஏற்பாடு பண்ணுவதன் மூலம், நமது அருமை மீட்பர், தம்மிடத்தில் கொண்டிருக்கும் உண்மையைப் பரீட்சித்திட தேவன் பிரியமாய் இருந்தார். இதன் காரணமாகவே, சிலுவை மரணம் என்பது வேதவாக்கியங்களில் மிகவும் அவமானமான மரணமாக தெரிவிக்கப்பட்டுள்ளது; "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்" (கலாத்தியர் 3:13). கூடுதலாக வழங்கப்பட்ட சிலுவையின் அவமானத்தைக் குறித்து அப்போஸ்தலன், இயேசுவுக்குப் பிதாவோடு இருந்திட்ட மகிமையை அவர் துறந்து, தம்மைத்தாம் தாழ்த்தி, அடிமையின் ரூபம் எடுத்து வந்தது குறித்துப் பேசுகையில், "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்" (பிலிப்பியர் 2:8-11) என்று குறிப்பிடுகின்றார். எந்த ஓர் உயர் குடிமகனுக்கும் மிகக் கடினமானதாகக் காணப்படுகின்ற, அதிலும் குறிப்பாகப் பூரண மனுஷனுக்கு மிகவும் கடினமானதாகக் காணப்படுகின்ற சிலுவையின் இந்த அவமானமானது, நமது அருமை மீட்பருடைய விஷயத்தில், அவருக்கு மகிமைக்கும், கனத்திற்கும் மற்றும் திவ்வியச் சுபாவமாகிய அழியாமைக்கும் ஏறிச் செல்வதற்கான படிக்கல்லாயிற்று. இந்த அவமானமான சிலுவையினிமித்தமாக, நமது அருமை மீட்பர், அவருக்கு உண்மையாய்ச் சொந்தமானவர்களும், கர்த்தருடைய வார்த்தைகளினால் வழிகாட்டப்பட்டவர்களுமாகிய நம் அனைவரின் கணிப்பிலும்கூட, ஏற்கெனவே உயர்வான நிலையில் காணப்படுகின்றார். நாம் இப்படியாகச் சிலுவையின் மரணபரியந்தமாக நிரூபிக்கப்பட்டுள்ள நமது எஜமானின் உண்மையிலும், கீழ்ப்படிதலிலும் மேன்மைப்பாராட்டுகின்றோம். எனினும் இப்படியான கருத்திற்கு உயர் விமர்சகர்களும், பரிணாமக் கொள்கைவாதிகளும் ஆதரவு தெரிவிப்பதில்லை என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். இவர்கள் தங்களையே ஞானிகள் என்று எண்ணிக்கொண்டு, பரத்திலிருந்து வருகிறதும், தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமைக் காரணமாக ஆதாமினாலும், அவருடைய சந்ததியாராலும் இழந்துபோகப்பட்ட ஜீவனுக்கான ஈடுபலி விலைக்கிரயமானது நமது அருமை மீட்பர் தம்மையே பலியாக்கி, பிதாவிடம் ஒப்படைத்ததின் மூலம் மாத்திரமே உண்டானது என்றும், இந்த ஈடுபலியின் மூலமாக மாத்திரமே மனுக்குலம் உயிர்த்தெழுதலையும், தேவனுடன் இசைவிற்குள் வந்து, நித்தியஜீவன் பெறுவதற்கான வாய்ப்பையும் அடைய முடியும் என்றும் நமக்குப் போதிக்கிறதுமான ஞானத்தைப் புறக்கணித்து விடுகின்றனர்.

## நீதிமானை அவர்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்கள்

நம்முடைய இந்தப் பாடத்தில் நாம் பிரதான ஆசாரியனாலும், ஆலோசனை சங்கத்தாராலும் நமது கர்த்தர் விசாரணை பண்ணப்பட்டதையோ அல்லது நமது கர்த்தர் பிலாத்துவின் விசாரணை ஸ்தலத்தினிடத்திற்கும், பிற்பாடு ஏரோதினிடத்திற்கும், பின்னர் மீண்டும் பிலாத்துவினிடத்திற்கும் கொண்டுவரப்பட்டதையோ மற்றும் இன்னுமாக கர்த்தரை விடுவிப்பதற்கென உரோம தேசாதிபதியான பிலாத்து எடுக்கும்

முயற்சிகளையோ பார்க்கப்போவதில்லை. கலவரம் எழும்பிவிடும் என்ற அச்சத்தினாலேயே, இயேசுவைச் சிலுவையில் அறையும்படிக்கு, பிலாத்துச் சம்மதித்துக் கட்டளையிட்டார் மற்றும் அதேவேளையில், தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி, "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன்" என்று கூறினார். அதற்கு ஜனங்கள், "இவருடைய இரத்தப்பழி எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று கூறினார்கள் மற்றும் இயேசு சிலுவையில் அறையப்படும்படிக்குக் கொண்டுபோகப்பட்டார்.

அதுமுதற்கொண்டு எருசலேம் பல முறை இடித்தும், மீண்டுமாய்க் கட்டி எழுப்பப்பட்டும் இருக்கின்றது மற்றும் சில தெருக்களின் தளமட்டமானது முன்பிருந்த மட்டத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கின்றது; எனினும் வயா டோலோர்சா (via Dolorosa) அல்லது "துக்க பாதையானது" இன்னமும் சுட்டிக்காட்டப்படுகின்றது மற்றும் ஆர்ச் ஆப் எக்கிஹோமோ (Arch of Ecce Homo) என்று அழைக்கப்படுகின்றதான வளைவு பாதையின் ஒரு பகுதியும் இன்னமும் காணப்படுகின்றது! இவ்விடத்தில் தான் பிலாத்து நின்று, நமது கர்த்தரை விடுதலைபண்ணும்படிக்கு வேண்டிடும் வண்ணமாக மூர்க்கமாய்க் காணப்பட்ட ஜனங்களை நோக்கி, "இதோ இந்த மனுஷன்!" அதாவது, மனுக்குலத்திலேயே, உங்கள் இனத்திலேயே சிறந்தவராய்க் காணப்படும் இவரை நான் சிலுவையில் அறைந்திட வேண்டுமென்று விரும்புகின்றீர்களா? இவரைப் பாருங்கள்! இவ்விஷயம் குறித்து இறுதியாய் முடிவு செய்யுங்கள்! என்று கூறுவதுபோன்ற அர்த்தத்தில் கூறினார் என்பதில் இவ்விடத்திற்குக் கீர்த்தியுள்ளது. இந்தப் பாரம்பரியங்களானது பின்வரும் கண்டுபிடிப்பினால் ஆதாரம் அடைந்துள்ளது; அதாவது சமீபக்காலங்களில் பிலாத்துவின் அரண்மனை இருந்த இடமென்று அனுமானிக்கப்படுகின்ற இடத்தில் வீட்டின் அஸ்திபாரத்திற்காக தோண்டி/அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டபோது, ஒரு குறிப்பிட்ட ஆழம் தோண்டினதில், விசாலமான மற்றும் வேலைபாடுள்ள மொசைக் (Mosaic) தளவரிசைப்படுத்தின மேடை பாகம் வெளிப்பட்ட காரியத்தினால் ஆதாரம் அடைந்துள்ளது; இந்தத் தளவரிசைப்படுத்தின மேடையானது அரண்மனை சம்பந்தப்பட்டதாகும்; இது யோவான் 19:13-ஆம் வசனத்தில் இடம்பெறும் தளவரிசைப்படுத்தின மேடையென்ற நியாயாசனத்திற்கு ஒத்திருக்கின்றது; "பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, இயேசுவை வெளியே அழைத்துவந்து, தளவரிசைப்படுத்தின மேடையென்றும், எபிரெயு பாஷையிலே கபத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலே, நியாயாசனத்தின்மேல் உட்கார்ந்தான்." நமது கர்த்தரும், அவரைச் சிலுவையில் அறைந்திடுவதற்காக வந்திட்டதான உரோம வீரர்களும், எபிரெய பாஷையில் கொல்கொதா என்றும், இலத்தீனில் கல்வாரி என்றும் அழைக்கப்படுகின்றதான "மண்டையோட்டு ஸ்தலத்திற்குப்" போகையில், அவர்கள் எடுத்துக்கொண்ட பாதையை அடையாளங்கண்டு கொள்ளத்தக்கதாக, பட்டணத்தினுடைய சிறு வரைபடம் ஒன்றை நாம் இவ்வெளியீட்டோடுகூட வெளியிடுகின்றோம். கல்வாரி என்று அனுமானிக்கப்படுகின்ற இடமானது, எருசலேமுக்கு அருகாமையிலுள்ள மலையாகும் மற்றும் இது தொலைவிலிருந்து பார்க்கப்படும்போது, மண்டை ஓட்டினுடைய

தோற்றத்தினைக் கொண்டிருக்கின்றது; இதன் பள்ளங்களானது, கண் குழிகளினுடைய தோற்றத்தினைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. நவீன கால கல்விமான்கள், இந்த இடமே, சுவிசேஷபதிவில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற அம்சங்களுள்ள இடத்திற்கு ஒத்திருக்கின்றது என்று ஒத்துக்கொள்கின்றனர்; அதாவது பட்டணத்துச் சுவர்களுக்கு வெளியே - பட்டணத்திற்கு அருகே - எளிதில் பார்க்கக்கூடிய இடம் - அடிக்கடி நடமாடப்படும் நடைபாதையின் அருகாமையில் - எனும் அம்சங்களுக்கு ஒத்திருக்கிறது; மற்றும் இவ்விடமானது இன்னமும் யூதர்களால் "கல்லெறியும் ஸ்தலமென" அழைக்கப்படுகின்றது. ஐந்தாம் நூற்றாண்டு முதற்கொண்டு கிறிஸ்தவ பாரம்பரியமானது, இவ்விடத்திலேயேதான் ஸ்தேவான் கல்லெறியப்பட்டதாக முடிவுசெய்துள்ளது.

"இயேசு மாத்திரம் தனிமையில் சிலுவை சுமந்திட,
உலகம் அனைத்தும் சுதந்திரமடைந்து போய்விட வேண்டுமோ?"

சிலுவையில் அறையப்படுபவர்களின் விஷயத்தில், குற்றவாளி தன்னுடைய சொந்த சிலுவையைச் சுமந்து செல்ல வேண்டும் என்பது வழக்கமாய் இருந்தது; ஆகையால்தான் இயேசு தமது சிலுவையைச் சுமந்து சென்றார் என்று வாசிக்கின்றோம்; அதாவது கடந்த 24 மணி நேரங்களில் நடந்திட்ட காரியங்களினால் உண்டான சோர்வின் காரணமாகவும், துூக்கமின்மையினாலும், உணவு உட்கொள்ளாததினாலும், அடிக்கப்பட்டதின் காரணமாக ஏற்பட்ட மிகுந்த களைப்பினாலும், சோர்வினாலும், கர்த்தர் சிலுவையினுடைய பாரபளுவின் கீழ் பலம் குன்றி, மயக்கமடைவது வரையிலும், இயேசு தமது சிலுவையைச் சுமந்துச் சென்றார் என்று பார்க்கின்றோம். அவர் பரிபூரணமானவராகக் காணப்பட்டார் என்ற உண்மையை நாம் நினைவுகூருகையில், அவருக்கு அதிக பலம் இருந்திருக்கும் என்று நாம் எண்ணக்கூடும்; ஆனால் பரிபூரணமான ஒரு மனிதன் கண்டிப்பாக தோற்றத்தில் இராட்சசன் அல்லது பலத்தில் ஹெர்க்குலஸ் போன்றோ இருப்பதில்லை எனும் விஷயத்தையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்; இப்படியாக இயல்புக்கு மாறுப்பட்ட பலம், தோற்றம் காணப்படுவது என்பது பூரணமின்மையினுடைய விளைவுகளேயாகும். ஆணிலும், பெண்ணிலும் காணப்படும் மனம் மற்றும் சரீரத்தின் சிறந்த இயல்புகளை ஒன்றுசேர பெற்றிருக்கும் நிலையிலேயே நமது இனத்தினுடைய பரிபூரண மாதிரி (specimen) காணப்படும் என்றும், மிதமான பலத்துடனும், மென்மையுடனும், கம்பீரத்துடனும், நாகரிகத்துடனும் காணப்படுவதே பரிபூரணம் பற்றின ஓரளவுக்கான நம்முடைய புரிந்துகொள்ளுதல் என்றும் நாம் அனுமானிக்கின்றோம். இப்படியாகவே கனிகள் மற்றும் காய்கறிகளுடைய விஷயத்திலும் காணப்படுகின்றது; பெரிய கனிகள் எப்போதும் கரடுமுரடானவைகளாக இருக்கின்றது; பூரணமான கனிகள் பெரிய பருமன் அளவிலோ, கரடுமுரடாகவோ அல்லது மிகச் சிறுபருமன் அளவிலோ இருப்பதில்லை. நம்முடைய இனத்தாரில் பெரும்பான்மையானவர்கள் ஒன்றில் மிகவும் மென்மையானவர்களாக அல்லது மிகவும் கரடுமுரடானவர்களாகக் காணப்படு

மளவுக்கு, நம்முடைய இனமானது, பரிபூரணத்திலிருந்து மிகவும் தொலைத் தூரத்தில் போய்விட்டது. நம்முடைய கர்த்தருடைய விஷயத்தில் இன்னுமாக அவர் தம்முடைய ஜீவனை மூன்றரை வருடங்களாகப் பலிச் செலுத்திக் கொண்டு வந்தார் என்றும், அனைத்து விதமான வியாதிகளைச் சொஸ்தப்படுத்தினதின் மூலம், அவரிடமிருந்து சத்துவம் கடந்துபோய்க் கொண்டே இருந்தது என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். இந்த இழப்புகளும்கூட அவரைப் பலவீனமாக்கினது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், அவர் மூன்றரை வருடங்களாக மரித்துக்கொண்டிருந்தார் மற்றும் பிதாவின் சித்தத்திற்கு இசைவாக தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கும் காரியத்தை நிறைவேற்றி முடிக்கத்தக்கதாக, இப்பொழுது அவர் கல்வாரி நோக்கி போய்க் கொண்டிருந்தார்.

நமது கர்த்தருடைய சீஷர்களில் சிலர் காரியங்களைப் பார்வையாளராக நின்று பார்த்துக் கொண்டிருந்தனர் (யோவான் மாத்திரமே அங்கே காணப்பட்டார்) மற்றும் கர்த்தருக்காக சிலுவையைச் சுமப்பதற்குச் சீஷர்கள் மகிழ்ச்சியாய் இருந்திருப்பார்கள் என்பது உண்மையே. தாங்கள் சட்டத்தின் அதிகாரிகள் காரியத்தில் குறிக்கிடுபவர்களாகக் கருதப்படுவார்கள் என்ற அச்சமே, சீஷர்கள் கர்த்தருக்காக சிலுவைச் சுமக்கும் பணியைச் செய்வதற்குத் தடையாக இருந்தது என நாம் அனுமானிக்கின்றோம். எனினும் தேவையை உணர்ந்துகொண்ட போர்ச்சேவகர்கள், போகிற வழியில் ஒருவரைக் கண்டு, இயேசுவின் பின்னே சிலுவையைச் சுமந்து வரும்படிக்கு வற்புறுத்தினார்கள். "சிலுவையை அவர் பின்னே சுமந்துக்கொண்டு வரும்படி" எனும் வார்த்தைகளானது, கொஞ்சம் சிலுவையைத் தாங்கி, இயேசுவைக் கொஞ்சம் பாரப்பளுவிலிருந்து விடுவிப்பதையோ அல்லது இயேசு முன்னே நடக்க, சீமோன் சிலுவையின் பின்னே அனைத்துப் பாரப்பளுவையும் சுமந்து வருவதையோ குறிக்கின்றதாக இருக்கலாம். சீமோன் மீது திணிக்கப்பட்ட இந்த வேலையானது, மிகவும் விலையேறப்பெற்ற ஒரு சிலாக்கியமாகும். சீமோனுக்குக் கிடைத்திட்ட இந்த வாய்ப்பின் நிமித்தமாக, கர்த்தருடைய பின்னடியார்களில் எத்தனைபேர், சீமோன் மீது பொறாமை அடைந்துள்ளனர்! சீமோன் பிற்பாடு கிறிஸ்தவனானார் என்றும், இதனால் இவரைக்குறித்தும், இவருடைய ஊரின் பெயரைக்குறித்தும் அப்போஸ்தலனாகிய யோவான் அறிந்திருந்தார் என்றும் பாரம்பரியமானது தெரிவிக்கின்றது. பாரம்பரியம் தெரிவிக்கும் இக்காரியத்திற்கு, இந்தச் சீமோனுடைய குமாரர்களுடைய பெயர்கள் குறிப்பிடப்படுகின்ற காரியமானது பலமான ஆதாரமாகக் காணப்படுகின்றது; (மாற்கு 15:21).

நம்முடைய கர்த்தருக்காக நாம் அனுதாபம் கொண்டு, அவருக்குச் சிலுவைச் சுமப்பதில் உதவி செய்திடுவதற்கு நாம் எவ்வளவு மகிழ்ச்சியாய்க் காணப்பட்டிருந்திருப்போம் என்று சிந்தித்துப் பார்க்கும் அதே வேளையில், இக்காரியம் தொடர்புடைய விஷயத்தில், கர்த்தர் நமக்கு இரண்டு சிலாக்கியங்களை அருளி உள்ளார் என்பதையும் நாம் மறந்து போய்விடக்கூடாது. முதலாவதாக அவர் நம்மிடத்தில் கூறுவது என்னவெனில், நாம் அவருடைய சீஷர்களென அவரைப் பின்பற்றி வந்தோமானால், நாம் தற்காலத்தில் சிலுவையைச் சுமக்கும் விஷயத்தில் அவருடன் பங்கடைபவர்களாய் இருப்போம்; "என்னுடைய சீஷனாகும் எவனும் தன்

சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்;" நாம் கர்த்தரை விசுவாசித்து, விசுவாசத்தின் காரணமாக நீதிமானாக்கப்பட்டு, தேவனிடத்தில் சமாதானம் பெற்ற பிற்பாடு மற்றும் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளதை உணர்ந்துகொண்ட பிற்பாடு, நாம் நம்மை முழுமையாய் அர்ப்பணம் பண்ணுவதற்கு, நம்முடைய சிலுவையைச் சுமப்பதற்கு, நம்முடைய சொந்த சித்தங்களைத் தள்ளி, கர்த்தருடைய சித்தத்தை, அதாவது கர்த்தரை அனுப்பிவைத்தவராகிய பிதாவினுடைய சித்தமாகிய கர்த்தருடைய சித்தத்தைச் செய்வதற்கு அழைக்கப்படுகின்றோம். நம்முடைய சிலுவையை அன்றாடம் சுமந்துச் செல்லத்தக்கதாக, போதுமான அளவுக்கு இந்தச் சிலாக்கியத்தை மதிக்கின்றோமா? நாம் இன்னமும் சிலுவையைச் சுமந்துகொண்டிருக்கின்றோமா? அவர் "முடிந்தது" என்று சொன்னதுபோன்று, நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள பணியாகிய - வார்த்தைகளின் மூலமும், அன்றாட நடத்தையின் மூலமும் சத்தியத்திற்குச் சாட்சிப்பகரும் சிலாக்கியத்தின் விஷயத்திலும் "முடிந்தது" என்று சொல்லும் நிலையை நாம் அடையும் ஓட்டத்தின் இறுதிவரை, நாம் கர்த்தருடைய கிருபையினால் தொடர்ந்து சிலுவையைச் சுமப்போம் என்பதாக நம்முடையத் தீர்மானம் காணப்படுகின்றதா?

சிலுவைச் சுமத்தலுக்குரிய இரண்டாம் வழி, உலகில் நம்மைச் சுற்றி, கிறிஸ்துவினுடைய பிரதிநிதிகளெனக் காணப்படும், கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கத்தினர்களாகிய மற்றவர்களுக்கு உதவிச் செய்வதாகும். கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களில் எவரேனும், சுமப்பதற்கு மிகவும் பாரமுள்ள சிலுவைகளைச் சுமப்பதையோ, பாரப்பளுவினால் அமிழ்ந்துபோகத்தக்கதான நிலையிலோ அல்லது ஏற்கெனவே அமிழ்ந்துப் போய்விட்ட நிலையிலோ காணப்படுவதை நாம் பார்ப்போமானால், நாம் நமது எஜமானையும் மற்றும் அவருடைய பாரங்களை, அவர் சுமப்பதற்கு உதவிட நாம் எவ்வளவு ஆசைப்பட்டோம் என்பதையும் நினைவுக்குக் கொண்டுவருவோமாக; மேலும் அவருடைய நாமத்தில், அவருடையச் சீஷர்களாகிய இந்தச் சிறியவர்களுக்குச் செய்யப்படும் எதுவும், அவருக்கே செய்யப்பட்டதாகும் என்று நமக்கு உறுதியளிக்கும் அவருடையச் சத்தத்திற்கு நாம் செவிக்கொடுப்போமாக. ஓ! சிலுவை சுமப்பது என்பது, கர்த்தருடைய சிறுமந்தையிலுள்ள அநேக பாரமடைந்துள்ள மற்றும் பெலவீனப்பட்டுள்ள மந்தையினருக்கு உதவிகரமான அநேக வார்த்தைகள் பேசுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும்! இன்னுமாக அது அநேகம் இரக்கம் பாராட்டுதல்களையும் குறிக்கின்றதாய் இருக்கும்! இப்படியான உதவிகரமான வார்த்தைகளும், இரக்கம்பாராட்டுதல்களும், கர்த்தரால் தம்முடைய சரீரத்தின் அவயங்கள் என்று அங்கீகரிக்கப்படுபவர்களில் சிலருக்கு எத்தகைய ஆறுதலையும், மகிழ்ச்சியையும் கொண்டுவருகின்றதாய் இருக்கும்! துயரத்தின்போது எப்படி நம்முடைய சரீரத்தினுடைய ஓர் அவயம், மற்றொரு அவயத்திற்கு உதவிபுரிகின்றதோ, அப்படியே கிறிஸ்துவினுடைய சரீரத்தின் விஷயத்திலும் காணப்படுகின்றது. அனைத்து அங்கத்தினர்களும் ஒருவருக்கொருவர் தாங்கியும், ஒருவரையொருவர் பலப்படுத்தியும், ஒருவரையொருவர் ஆறுதல்படுத்தியும், ஒருவரையொருவர் புத்துயிர்பெறச் செய்தும் மற்றும் இராஜ்யம் தொடர்புடைய

நம்முடைய நம்பிக்கைகளின் மகிமையான நிறைவேறுதலுக்காக பொதுவாய் ஒருவரையொருவர் ஆயத்தம்பண்ணியும் காணப்பட வேண்டும்.

## சிலுவையில் அறையப்பட்டவர் மீது ஒரு பார்வை

சிலுவையில் அறையப்படுதல் பற்றின அநேக விவரங்கள் தனித்தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மாற்கின் பதிவின்படி சிலுவையில் இயேசு அறையப்பட்டக் காலமானது மூன்றாம் மணி வேளை, அதாவது ஒன்பது மணியளவாகும், ஆனால் யோவானோ ஆறாம் மணி வேளை (அ) மதியம் என்று குறிப்பிடுகின்றார். சிலுவையில் அறையப்படுவதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்ட மூன்றாம் மணி வேளையை மாற்கு குறிப்பிட்டிருக்கலாம் மற்றும் யோவானோ நமது கர்த்தர் சிலுவையின்மேல் காணப்பட்ட வேளையைக் குறிப்பிட்டிருக்கலாம்; அதாவது கட்டளை பிறப்பிக்கப்பட்டது முதல் மெதுவாய்க் கல்வாரி நோக்கிப் பிரயாணம் பண்ணுவதற்கும், இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கும், "இவர் யூதருடைய இராஜாவாகிய, நாசரேத்தூர் இயேசு" எனும் நமது கர்த்தருக்கு எதிரான குற்றச்சாட்டு எழுதப்பட்டப் பலகையை உண்டுபண்ணி, அதைச் சிலுவையில் தொங்கவிடுவதற்கும், பிற்பாடு இயேசு அறையப்பட்டிருந்த சிலுவையை உயர்த்தி நிறுத்துவதற்கும் கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் எடுத்திருக்கும்; இவையெல்லாம் முடிந்த பிற்பாடு இயேசு சிலுவையின்மேல் காணப்பட்ட ஆறாம் மணி வேளையைத்தான் யோவான் குறிப்பிடுகின்றார்.

குற்றவாளி மரணத்தண்டனைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டதற்குரிய குற்றத்தைச் சுட்டிக்காட்டும் வண்ணமாகச் சிலுவையின் மீது போடப்பட்டிருந்த மேல்விலாசத்தின் காரணமாக யூத தலைவர்கள் அதிருப்தி அடைந்தார்கள். அதைக்குறித்து அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள் மற்றும் இயேசு, யூதருடைய இராஜா எனும் காரியத்தை மறுதலிக்கவும் செய்தார்கள். ஆனால் அதை மாற்றுவதற்குப் பிலாத்து மறுத்துவிட்டார்; பொறாமை மற்றும் துர்க்குணம் காரணமாகவே யூத அதிகாரிகள், இயேசுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்துள்ளார்கள் என்பதை உணர்ந்துகொண்ட பிலாத்து, விசேஷமாக அவர்களுக்குக் கடிந்துகொள்ளுதலாய் இருக்கத்தக்கதாகவே, இப்படி எழுதிப்போட்டார். இப்படியாக அவர்களைப் பிலாத்து இப்பொழுது அவமானத்திற்கு ள்ளாக்கினார். ஜனக்கூட்டத்தார் அனைவராலும், அந்த மேல்விலாசத்தைப் படிக்க முடிந்தது; ஏனெனில் பொது ஜனங்களுடைய எபிரெய மொழியிலும், உரோம அரசாங்கத்தினுடைய இலத்தீன் மொழியிலும், அக்காலக்கட்டத்தின் கல்விமான்க ளுடைய கிரேக்க மொழியிலும், அதாவது மூன்று மொழிகளிலும் மேல்விலாசம் எழுதப்படுவது வழக்கமாய் இருந்தது. இயேசுவினுடைய சத்துருக்கள் அங்குக் காணப்பட்டபோதிலும், சிலுவையில் அறையப்பட்ட இயேசு, மேசியாவெனப் பிரகடனப்படுத்தப்பட்டார். எனினும் இது எவ்வளவு விநோதமாய் உள்ளது! சிலுவையில் அறையப்பட்ட ஒரு மேசியா! மனிதனுடைய வழிகளிலிருந்து, தேவனுடைய வழிகளும், தம்முடைய காரியங்களை நிறைவேற்றுகிற அவரது வழிவகைகளும் எவ்வளவு வேறுபட்டதாய்க் காணப்படுகின்றது! உண்மையில் வானங்கள் எவ்வளவாகப்

பூமியிலிருந்து உயரமானதாக இருக்கின்றதோ, அப்படியே நம்முடைய வழிகளிலிருந்து, அவருடைய வழிகளானது மேன்மையானதாகக் காணப்படுகின்றது. ஒருவேளை இயேசு மரிக்கவில்லை என்றால், ஒருவேளை நம்மை அவர் பாவத்திலிருந்து மீட்டுக்கொள்ளவில்லை என்றால், அவரால் மனிதனைக் கொஞ்சம் சிறந்த விதத்தில் வாழ்ந்திட, மனிதனுக்கு உதவியிருக்க முடியுமே ஒழிய, மற்றபடி ஆதாமின் காரணமாக இழந்துபோகப்பட்டதும், மீட்பின் வாயிலாக அல்லாமல் மற்றப்படித் திரும்பப்பெற்றுக்கொள்ள முடியாததுமான நித்திய ஜீவனுக்கு அவரால் மனிதனை நடத்தியிருக்க முடியாது. தெய்வீகத் திட்டத்தின் கீழ், உலகத்தை மீட்டுக்கொள்ளத்தக்கதாகத் தம்மையே தாழ்த்தினவர், இப்பொழுது பிதாவினால் வல்லமை மற்றும் கனத்தினுடைய தமது வலதுபாரிசத்தினிடத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளார் மற்றும் இன்னும் சீக்கிரத்தில் வாக்குத்தத்தத்தின்படி பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கத்தக்கதாகப் பொல்லாப்பை வீழ்த்துவதற்கும், நீதியை மேம்படுத்துவதற்கும், பெலவீனர்களுக்கும், ஏழைகளுக்கும், அறியாமையில் காணப்படுகிறவர்களுக்கும் உதவிடுவதற்குமென, கர்த்தர் தம்மை இஸ்ரயேலின் இராஜாவாகவும், முழு உலகத்தின் இராஜாவாகவும் வெளிப்படுத்துவார் (ஆதியாகமம் 12:3).

நமது கர்த்தர் கள்வர்கள் மத்தியில் சிலுவையில் அறையப்பட்டார். இயேசுவின் இருபக்கங்களிலும் அவரோடுகூடச் சிலுவையில் அறையப்பட்டிருந்த இரண்டு கள்வர்களும், அநேகமாகப் பரபாசினுடைய கூட்டத்தின் அங்கத்தினர்களாகவும், ஜனங்களால் ஏறக்குறைய வீரர்களாகக் கருதப்பட்டவர்களாய் இருந்தனர். எனினும் இவர்களை ஜனங்கள் இகழ்ந்து பேசினதாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இப்படியாகவே கர்த்தருடைய பின்னடியார்களின் விஷயத்தில் இன்றுவரை காணப்படுகின்றது. நம்முடைய எஜமானும், அவருடைய நோக்கங்களும் மக்களின் ஆதரவைப் பெறவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்; இன்னுமாக உலகத்தினுடைய கல்விமான்களும், செல்வாக்குமிக்கவர்களும் கர்த்தருக்கு எதிராய்க் காணப்பட்டதுபோலவே, நமக்கும் எதிராய்க் காணப்படுவார்கள் என்பதையும், இவை அனைத்தும், அவரோடுகூடப் பாடுபட்டோமானால், அவரோடுகூட ஆளுகைச் செய்வோம் என்னும் அவருடைய வார்த்தை மற்றும் கொள்கையின் அடிப்படையில் நடைபெறும் தெய்வீகத் திட்டத்தின்படியே நடந்தேறுகின்றது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். சிலுவையில் அறையப்பட்டதின் விவரங்கள் விவரமாகக் கொடுக்கப்படவில்லை மற்றும் இப்படியாகக் கொடுக்கப்படாமல் இருந்ததற்காகவும் நாம் மகிழ்ச்சிக்கொள்ளுகின்றோம், ஏனெனில் விவரமான விவரங்கள் கொடுக்கப்படாமலேயே, சிலுவையில் அறையப்படும் காட்சியானது, மனங்களுக்குக் கோரமானதாகக் காணப்படுகின்றது; மேலும் தண்டனைத் தீர்ப்பின் முக்கிய அம்சங்கள் பற்றின விவரங்களைப் பதிவுசெய்துள்ள நான்கு சுவிசேஷகர்களும், சிலுவையில் அறையப்படுதல் பற்றின விவரமான விவரங்களைக்குறித்து எதுவும் பதிவு செய்திடாத உண்மையானது, இப்படிப்பட்டதானக் காரியங்களின் விஷயத்தில் வேதாகமம் பொதுவாய்க் கைக்கொள்ளும் முறைமைகளுக்கு முழு இசைவுடனே காணப்படுகின்றது; இம்முறைமையானது

பொதுவாய்ச் சம்பவங்களைப் பதிவுசெய்யும் எழுத்தாளருடைய முறைமையிலிருந்து மிகவும் வேறுபட்டதாய் இருக்கின்றது.

அயன் மேக்லாரென் அவர்கள் சிலுவையில் அறையப்படுதலின் விவரங்களைப் பின்வருமாறு பதிவு செய்கின்றார்:

"சிலுவையில் அறையப்படுதலைப் போன்றதொரு கொடூரமான/கொடுமை யான மரணம் இருப்பதில்லை; இது கொடுமையாய் இருப்பதற்கான காரணம், கைதி இரத்த இழப்பினாலோ (அ) சிறு கால பகுதிக்குள்ளாகவோ மரிப்பதினால் இராமல், மாறாக மூடப்பெறாத புண்களினுடைய வலியும், கை கால்களுக்கு இரத்த ஓட்டம் தடைப்பட்டதும், நரம்பு மண்டலத்தின் பதற்ற நிலையும், இதயம் மற்றும் மூளையின் அழுத்தமுமேயாகும். ஐந்து மணி நேரம் இயேசு கிழிப்பட்ட நரம்புகளினால் ஏற்பட்ட வலியையும், கடுமையான தாகத்தினுடைய துயரத்தையும், சரீரம் அடைந்த சித்திரவதையினாலான வலியையும், வேகமாய் அதிர்வுறும் மூளையின் வலியையும் சகித்துக்கொண்டிருந்தார்!"

## சிலுவையிலிருந்து பேசப்பட்ட ஏழு வார்த்தைகள்

இப்படியாகச் சிலுவையில் அறையப்பட்டிருக்கும் சூழ்நிலையில் காணப்படும் ஒருவர், அதிகம் பேசுவாரென நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே நமது கர்த்தர் சிலுவையில் தொங்குகையில் பேசினதாக பதிவுபண்ணப்பட்டுள்ள வார்த்தைகளை (அ) செய்திகளை மாத்திரமே பேசினாரே ஒழிய, மற்றப்படி எதுவும் பேசவில்லை. இந்த வார்த்தைகளானது, நமது கர்த்தருடைய குணலட்சணம் மற்றும் போதனைகளுடைய மிக முக்கியமான அம்சங்களில் சிலவற்றை உண்மையாய்ப் பிரதிபலிக்கின்றதாய் இருக்கின்றது.

சிலுவையிலிருந்து பேசப்பட்ட இந்த வார்த்தைகளில், முதலாவதாகப் பேசப்பட்டதாகப் பொதுவாய் அறியப்பட்டிருக்கும் வார்த்தைகளானது லூக்கா 23:34-ஆம் வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது: "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே." நமது கர்த்தருடைய இருதயமானது, மன்னிப்பின் ஆவியினால் நிரம்பியிருந்தது என்பதில் நமக்கு எந்தச் சந்தேகமும் இல்லை, எனினும் அநேக காரணங்களின் நிமித்தமாக, இது கர்த்தர் பேசின வார்த்தைகளாக இருக்குமோவென நாம் சந்தேகிக்கின்றோம்; காரணங்கள் பின்வருமாறு: (1) இவ்வார்த்தைகளானது, கிரேக்க மூலப்பிரதிகளிலும், (4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த) எண்: 1209 கோடெக்ஸ் வாற்றிக்கானசிலும், (5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த) கோடெக்ஸ் அலெக்ஸ்சாண்டிரினசிலும் காணப்படு கிறதில்லை; (2) இந்த வார்த்தைகள் பொருத்தமானதாய் இல்லை, ஏனெனில் நமது கர்த்தருடைய மரணத்திற்குக் காரணமாய் இருந்தவர்கள் மனம் வருத்தம்கொள்ளவே இல்லை மற்றும் மனம் வருத்தம்கொள்ளும் காரியமானது, மன்னிப்பு வழங்குவதற்கு அவசியமாய் இருக்கின்றது என வேதவாக்கியங்கள் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றன என்பதாக நமது புரிந்துகொள்ளுதல் காணப்படுகின்றது; (3)

நமது கர்த்தருடைய மரணத்துக்குக் காரணமாய் இருந்தவர்கள் அவரில் நம்பிக்கையோ அல்லது அவரது மரணத்தினுடைய புண்ணியத்தின் பலன்மீது விசுவாசத்தையோ கொண்டிருக்கவில்லை மற்றும் ஒருவன் மன்னிப்புப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக, விசுவாசம் வைக்கவேண்டும் என்பதே வேதவாக்கியங்களின் தெளிவான போதனையாக இருக்கின்றது; (4) நமது கர்த்தருடைய மரணத்திற்குக் காரணமாய் இருந்தவர்கள், பாவத்தை நினைத்து மனம் வருந்தின இருதயங்களைக் கொண்டிருந்ததாகவோ மற்றும் பாவத்திலிருந்து விலகினதாகவோ எவ்விதமான பதிவுகளும் இல்லை மற்றும் இப்படியான மனம்வருந்தும் நிலையில் காணப்படாதது வரையிலும், எவராலும் மன்னிக்கப்பட முடியாது என்பதே வேதவாக்கியங்களின் தெளிவான போதனையாக இருக்கின்றது; (5) நமது கர்த்தர் இன்னும் தம்முடைய பலியின் வேலையை நிறைவேற்றி முடிக்கவில்லை மற்றும் இன்னும் அவர் பிதாவினிடத்திற்கு ஏறிச்சென்று, விசுவாசிகளின் சார்பாக அந்தப் பலியை ஒப்படைக்கவில்லை. ஆகையால் பாவத்தை மன்னிக்க, பிதா ஆயத்தமாய் இருக்கமாட்டார்; (6) அவர்கள் புரிந்திட்டப் பாவம் மன்னிக்கப்பட்டதற்கும் நமக்கு எந்தச் சாட்சிகளும் இல்லை மாறாக, "இயேசுவினுடைய இரத்தப்பழியானது எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் வரக்கடவது" என்று யூதர்கள் வேண்டிக்கொண்டதற்கான பதிலானது அத்தேசத்தார் மீது வந்த உபத்திரவக்காலத்தின்போது கொடுக்கப்பட்டதற்குரிய சாட்சிகளையே நாம் பெற்றிருக்கின்றோம்; இந்த உபத்திரவத்தைக் குறித்தே அப்போஸ்தலன், "அவர்கள்மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது" (1 தெசலோனிக்கேயர் 2:16) என்று குறிப்பிடுகின்றார்.

சிலுவையிலிருந்து பேசப்பட்டப் பிரசித்திப்பெற்ற இரண்டாம் வார்த்தையான, "இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிப்பாய்" என்பது அதிகாரப்பூர்வமான வார்த்தையாகும். இந்த வார்த்தைகளானது, தனது பாவங்களை ஒப்புக்கொண்டு, கர்த்தருடைய இராஜ்யத்தில் கர்த்தர் வரும்போது, கர்த்தருடையத் தயவையும், கருணையையும் பெறுவதற்கு விரும்பின கள்வனிடம் பேசப்பட்டது. நமது கர்த்தர் தம்முடைய இராஜ்யத்தில் இன்னும் முழுமையாய் வரவில்லை; ஆகவே தன்னை நினைவுகூரும்படிக்கு கள்வன் விரும்பின காலப்பகுதி இன்னமும் வரவில்லை. நமது கர்த்தருடைய ஜீவியம் மற்றும் நம்பிக்கைகள் அந்தகாரத்திற்குள் காணப்படுவது போன்று தோன்றியபோதிலும், மனம்வருந்திய கள்வனின் விண்ணப்பத்திற்குச் செவிகொடுக்க தம்மால் முடியும் என்றும், வேண்டிக்கொண்டபடியே தாம் செய்வார் என்றும் நமது கர்த்தர் மனம்வருந்தின கள்வனுக்கு உறுதியளித்தார். அந்த விண்ணப்பத்தினுடைய நிறைவேறுதலானது, வேதவாக்கியங்கள் தெரிவிக்கிற பிரகாரம், நமது கர்த்தர் தம்முடைய இரண்டாம் வருகையின்போது, தமது மகா வல்லமையைக் கையில் எடுத்துக்கொண்டு, பாவத்தின் காரணமாக இழந்துப்போகப்பட்டதும், விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்டுக்கொள்ளப் பட்டதுமான பரதீசை பூமியில் திரும்பவும் நிறுவும்போது, நிறைவேற்றப்படும். அப்போது மனம்வருந்தின கள்வனும் வருவான்; ஆம், பிரேத குழிகளில் இருக்கும் அனைவரும் மனுஷகுமாரனுடைய சத்தம் கேட்கும் காலம் வருமென்று வேதவாக்கியங்கள் நமக்குத்

தெரிவிக்கின்றன; இப்படியாகச் சத்தம் கேட்பவர்களில், மற்றக் கள்வனுங்கூட ஒருவனாகக் காணப்படுவான். அனைவரும் ஆயிரவருட இராஜ்யத்தினுடைய அனுகூலமான சூழ்நிலைகளுக்குள் கொண்டுவரப் படுவார்கள்; எனினும் மற்றவர்களிலும் மேலாக இந்த மனம்வருந்தின கள்வன் அனுகூலம் பெற்றிருப்பான் என்பதிலும், நமது மீட்பருடைய மரணத் தருவாயில், ஆறுதலான வார்த்தைகளைப் பேசி ஊழியம் பண்ணிட்டதற்காக, விசேஷமான பலனை அடைவான் என்பதிலும் நமக்கு நிச்சயமே.

## “அதோ உன் மகன்!” “அதோ உன் தாய்!”

நமது கர்த்தருடைய தாயாகிய மரியாளும், அவரது அன்புக்குரிய சீஷனாகிய யோவானும் சிலுவையின் அருகாமையில் நின்றுகொண்டிருந்தார்கள்; மேலும் அவர்கள் அழுதும், துக்கித்துக்கொண்டும் இருந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் நமது கர்த்தரோ தம்மைக்குறித்தும், தம்முடைய கடும் வேதனை குறித்தும் எண்ணுவதற்குப் பதிலாக, மற்றவர்களைக் குறித்துச் சிந்தித்துக்கொண்டிருந்தார். அவர் தம்முடைய ஊழியத்தின் நாட்களில், நன்மை செய்பவராகச் சுற்றித் திரிந்ததுபோலவே, தம்முடைய மரண வேளையிலுங்கூட மற்றவர்களுக்கான நன்மையையும், நலனையுமே சிந்தித்தவராகக் காணப்பட்டார்; "அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய்” (யோவான் 19:26, 27) என்று கூறி, தம்முடைய தாயாரை, தம்முடைய அன்புக்குரிய சீஷனுடைய பராமரிப்பின் கீழ் ஒப்படைத்தார். அருமையானதொரு பாடம்! இது நம்முடைய கர்த்தரின் இருதயத்தினுடைய இரக்கத்தையும், அனுதாபத்தையும் எவ்வளவாய் நமக்குக் காண்பித்துத் தருகின்றது மற்றும் இது - நாம் நம்முடைய சிறியதும், பெரியதுமான சொந்தப் பிரச்சனைகளிலும், சிரமங்களிலும் நாம் முழுமையாய் மூழ்கிப்போய்விடக்கூடாது, மாறாக மற்றவர்களுடைய பாரம் சுமப்பவர்களாக நாம் காணப்பட வேண்டும் என்றும், பூமிக்குரிய (அ) ஆவிக்குரிய விஷயங்களில் நம்முடையப் பராமரிப்பின் கீழ்க் காணப்படுபவர்கள் அனைவரின் ஆசீர்வாதத்திற்காகக் நமது அனுதாபங்களையும், நமது எண்ணங்களையும், நமது திட்டங்களையும் நாம் செயலாக்கத்தில் வைத்திருக்க வேண்டும் என்றும் நமக்கு எவ்வளவாய்ப் படிப்பித்துத் தருகின்றது!

"என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்” இந்த வார்த்தைகளானது, சிலுவையிலிருந்து இயேசுவினால் பேசப்பட்ட நான்காம் வார்த்தைகளாகும். இவ்வார்த்தைகளானது, நமது கர்த்தருடைய கடுந்துயரத்தின் ஆழத்தை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. நீதியுள்ளவராகவும், இயேசுவினிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவனை, நீதிமானாக்குகிறவருமாய்த் தேவன் விளங்கும்படிக்கும் மற்றும் இயேசுவில் விசுவாசம் வைக்கிறவர்களுக்கு,

ஆதாமுக்குள் இழந்துபோகப்பட்ட பிதாவின் தயவினிடத்திற்கும், நித்திய ஜீவனிடத்திற்கும் திரும்பிவருவதற்கான ஒரு வாய்ப்பையும், மரணத்திலிருந்து ஓர் உயிர்த்தெழுதலையும் ஏற்றவேளையில் பிதா அருளும்படிக்கும், கர்த்தர் பாவிக்கான ஈடுபலி விலைக்கிரயமாக, பதிலாளாக/மாற்றாளாக மரித்துக்கொண்டிருந்தார். அவர் நமக்கான பதிலாளாக இருக்க வேண்டுமெனில், நாம் பாவிகளென அனுபவிக்கும்படிக்கு விதிக்கப்பட்ட அனைத்தையும் அவர் அனுபவிக்க வேண்டியிருந்தது. ஆகவே அவர் தம்முடைய ஜீவனை இழப்பது மாத்திரம் அல்லாமல், அவர் பிதாவுடன் கொண்டிருந்த சகல ஐக்கியத்திலிருந்தும் துண்டிக்கப்பட வேண்டியிருந்தது. கணநேரம் ஐக்கியம் துண்டிக்கப்படுதலே போதும்; ஆனால் இருளான, தனிமைப்படுத்தப்பட்டதான அந்தக் கணப்பொழுது கண்டிப்பாய் வரவேண்டும். ஆகவே இதுவே நமது கர்த்தருடைய அனுபவங்களிலேயே மிகவும் இருளான தருணமாகவும், (இந்தத் துண்டிக்கப்படுதலின் அனுபவத்திற்கு நிழலாக மாத்திரமே காணப்பட்ட) கெத்செமனேயின் இருளைக்காட்டிலும் இருளான தருணமாகவும் இருந்ததென நம்மால் எளிதாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. இந்த அனுபவம் ஏன் நமது கர்த்தருக்கு வந்தது என்பதற்கான காரணத்தை, ஞானத்தை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றபடியால் நாம் எத்துணை மகிழ்ச்சியடைகின்றோம்! மேலும் இந்தக் காரணத்தை நாம் உணர்ந்துகொள்கையில், இது கிறிஸ்து மூலமான நமக்குரியதான ஆசீர்வாதங்கள் பற்றியதான உணர்ந்துகொள்ளுதலினால் நம்முடைய இருதயங்களை அதிகமதிகமாய் நிரப்புவதாக; அதாவது "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" என்ற நமது ஆண்டவருடைய வார்த்தைகளை நமக்குப் பொருத்த முடியத்தக்கதாகப் பிதாவினுடைய ஐக்கியம் மற்றும் அன்புக்கு மீண்டும் திரும்புவதற்குரிய சிலாக்கியமாகிய ஆசீர்வாதங்கள் பற்றியதான உணர்ந்துகொள்ளுதலினால் நம்முடைய இருதயங்களை அதிகமதிகமாய் நிரப்புவதாக (யோவான் 16:27). "நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்." நமது கர்த்தருடைய மரணத் தருவாயின்போது பேசப்பட்ட இந்த வார்த்தைகளானது, அவரிடத்தில் உண்மையற்ற தன்மை இருந்ததெனத் தெரிவிப்பதில்லை மற்றும் இது திரித்துவ உபதேசம் தொடர்ந்த கருத்தையும் தெரிவிப்பதில்லை! இவ்வார்த்தைகளானது, . . . தமக்குப் பிதாவிடம் இருக்கும் உறவைக்குறித்து அவர் பேசியிருந்தவைகளுக்கு முழு இசைவுடனே காணப்படுகின்றது.

இயேசு ஐந்தாவதாக, "தாகமாய் இருக்கிறேன்" என்றார். இந்த வார்த்தைகளானது, அநேகம் உண்மைகளை மனதிற்கு முன்பாய் அழுத்தத்துடன் கொண்டுவருகின்றது; அவை பின்வருமாறு: (1) சூரியனின் வெப்பத்திற்கு வெளிப்படுத்தப்பட்ட நிலையிலும், நரம்புகளின் எரிச்சல் மற்றும் வலியின் கீழ், தாகம் என்பது சிலுவையில் அறையப்பட்டிருக்கும் நபருக்கான முக்கியமான சித்திரவதைகளில் ஒன்றாகும்; (2) தண்ணீர் உட்பட அனைத்தையும் சிருஷ்டிக்கும்

மாபெரும் வேலையில், நமது கர்த்தர் தேவனுடைய பிரதிநிதியாகக் காணப்பட்டிருந்தார் எனும் உண்மையை நாம் எண்ணிப்பார்க்கையில், கர்த்தர் தாகம் கொள்வதற்கென விரும்பித் தாழ்ந்ததும், பணிந்ததும், ஆம் மனுக்குலத்திற்காக மரிப்பதற்கென அவர் விரும்பி தாழ்த்தினதும், பணிந்துகொண்டதுமான காரியங்கள், மனுக்குலத்திற்காக அவர் கொண்டிருந்த அன்பிற்கான குறிப்பிடத்தக்க விளக்கமாகும். தாகத்திற்கான இந்த வார்த்தைகளானது அனைத்தும் அதாவது தாம் நிறைவேற்றும்படிக்குத் தம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த வேலை அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அவர் அறிந்த பின்னரே உரைக்கப்பட்டதாக நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வார்த்தைகளானது சங்கீதம் 69:21-ஆம் வசனத்தினுடைய நிறைவேறுதலாய் இருக்கின்றது. "என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள்." உணர்வை மழுங்கச் செய்யும் பானத்தை வாங்க மறுத்த நமது கர்த்தர், இப்பொழுது காடியில் தோய்க்கப்பட்டு, அநேகமாக இரண்டு அல்லது மூன்று அடி நீளமுள்ள கோலில் மாட்டி வழங்கப்பட்டக் கடற்காளானை ஏற்றுக்கொண்டார். இந்தக் காரியங்களை நாம் எண்ணிப்பார்க்கையில், நம் அனைவருக்காகவும் மரித்திட்ட நமது கர்த்தர், நாம் ஜீவத்தண்ணீரையும், ஜீவ அப்பத்தையும், அதாவது நாம் அனைவரும் நித்தியமான ஜீவனை அடையத்தக்கதாக பசித் தாகம் கொண்டிட்டார் என்பதை நினைவில் கொள்வோமாக!

## முடிந்தது

இந்த ஆறாம் வார்த்தையானது, ஜெயத்தினுடைய ஒரு வார்த்தையாகக் காணப்படுகின்றது. தாம் செய்யும்படிக்குத் தமக்குப் பிதா கொடுத்திருந்த வேலையைக் கர்த்தர் நிறைவேற்றியுள்ளார்; ஆரம்பம் துவங்கி முடிவுவரை கர்த்தர் உண்மையாய் இருந்துள்ளார் மற்றும் தம்மையே பலியாக்கி உள்ளார். அவர் தம்முடைய பூமிக்குரிய ஓட்டம் முடிவடைந்ததில் மகிழ்ச்சிக்கொண்டார்; அது ஜெயத்துடன் முடிவடைந்ததினாலும், இந்த முடிவு என்பது இறுதியில் மனுக்குலத்தின் உலகம் ஆசீர்வதிக்கப்படப் போவதையும், மனுக்குலம் பாவம் மற்றும் மரணம் மற்றும் எதிராளியானவனுடைய வல்லமையினின்று விடுவிக்கப்படப் போவதையும் குறிக்கின்றதாய் இருக்கும் என்பதினாலும் அவர் மகிழ்ச்சிக்கொண்டார். இப்படியாகப் பார்க்கப்படும்போது, நமது கர்த்தர் பரலோக வாசஸ்தலத்தைத் துறந்து, மனித சுபாவம் எடுக்கத்தக்கதாக தம்மைத் தாழ்த்தினப்போதே, தம்முடைய வேலையை ஆரம்பித்தவரானார்; பின் அது அவர் முப்பதாம் வயதை அடைவது வரையிலும் தொடர்ந்தது என்றும் சொல்லப்படலாம்; எனினும் வேத வாக்கியங்களின்படி பார்க்கப்படும்போது நிறைவேற்றப்பட்ட வேலையான பலியின் வேலையானது, அவர் யோர்தானில் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டபோது, தம்மை மரணம் வரைக்கும் அர்ப்பணம் பண்ணினபோது ஆரம்பித்த ஒன்றாக இருக்கின்றது. அவர் சிலுவையில் அறையப்படுவதற்குக் கொஞ்சக் காலம் முன்னதாக, "ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்" (லூக்கா 12:50) என்று கூறினார்.

மரணத்திற்குள்ளான அவரது ஞானஸ்நானத்தின் காலமானது மூன்றரை வருடங்களாக இருந்தது மற்றும் இப்பொழுது இறுதியான தருணம் வந்துள்ளது . . . "முடிந்தது."

"பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்." இது கர்த்தருடைய இறுதி வார்த்தைகளாகவும், நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஊழியத்தின் இறுதிச்செய்கையாகவும், இறுதி வடிவம் கொடுத்தலாகவும் (finishing touch) கருதப்படுகின்றது. எதை இழந்தும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றிடுவதற்கு நாடினவர், தாம் மரிக்கும்போது, தம்முடைய ஜீவனுக்கான ஆவி, பிதாவின் பராமரிப்பிலும், பாதுகாப்பிலும் காணப்படும் என்று முழுமையான நம்பிக்கைக் கொண்டிருப்பதும், அவர் இவ்விதமாய் அதை வெளிப்படுத்துவதும் எத்துணை பொருத்தமானதாயுள்ளது! இப்படியாகவே அவருடைய பின்னடியார்களின் விஷயத்திலும் காணப்பட வேண்டும். நம்முடைய அனைத்தையும் கர்த்தரிடத்தில் ஒப்புவித்திருக்கிற நாமும், மரணத்திற்குள் செல்லும்போது பயமற்றுக் காணப்படத்தக்கதாக, அவருடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை முழுமையாய்ச் சொந்தமாக்கிக் கொண்டிருக்க வேண்டும். நமது கர்த்தருடைய விஷயத்தில் அவருக்கு மரணம் என்பது, நமக்கு மரணம் காணப்படுவதைக் காட்டிலும், அதிகமானதாய்க் காணப்பட்டிருக்க வேண்டும். உயிர்த்தெழுதல் பற்றின கர்த்தருடைய வாக்குறுதியை மாத்திரமல்லாமல், நமது கர்த்தருடைய விஷயத்தில் தெய்வீக வல்லமைக்கான ஓர் உதாரணத்தையும் நாம் பெற்றிருக்கின்றோம். மரணத்திலிருந்து நமது கர்த்தர் இயேசுவை எழுப்பினவருடைய வல்லமையானது, இயேசு மூலமாய் நம்மை மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் கொண்டுவந்திட செயல்படுத்தப்படும். நமது கர்த்தர் ஒரு முன்னோடியாவார்; அவருக்கு முன்னதாக எவருமே மரணத்திலிருந்து மனுஷீக ஜீவனுடைய பூரணத்தினிடத்திற்கோ (அ) திவ்விய சுபாவத்தினுடைய பூரணத்தினிடத்திற்கோ எழுப்பப்படவில்லை.

## சொல்லர்த்தமாகவே இருதயம் உடைந்தது

தேவன் மீதும், உயிர்த்தெழுதலின் மீதுமான, தமது நம்பிக்கையைத் தம்மைச் சுற்றி நின்ற அனைவரும் கேட்கத்தக்கதான விதத்தில் மகா சத்தமாய்க் கூறினதாகப் பரிசுத்தவானாகிய லூக்கா அவர்கள் நமக்குத் தெரிவிக்கின்றார். சொல்லர்த்தமாய் இருதயம் உடையப்பெற்ற ஒருவரால் தொனிக்கப்படும் கூக்குரலாகவே, இயேசுவின் இந்தக் கூக்குரல் இருக்குமென நவீன எழுத்தாளர்கள் சிலரால் கருதப்படுகின்றது மற்றும் இப்படியாக இருதயம் உடைந்துபோனதே நமது கர்த்தருடைய மரணம் சம்பவித்ததற்கான காரணம் என்னும் யூகம் காணப்படுகின்றது. சொல்லர்த்தமாகவே இருதயம் உடைந்து போகும் வாய்ப்புள்ளது என்பது ஒத்துக்கொள்ளப்படுகின்றது. இருதயம் இப்படிச் சொல்லர்த்தமாக உடைந்து போவதற்கானக் காரணம் நமது கர்த்தர் காட்டிக் கொடுக்கப்பட்டதிலும், கர்த்தர் மறுதலிக்கப்பட்டதிலும், ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்பட்டதிலும், சவுக்கினால் அடிக்கப்பட்டதிலும் மற்றும் சிலுவையில்

அறையப்பட்டதிலுமுள்ள அவமானமானச் சூழ்நிலைகளேயாகும் என நாம் சொல்ல முற்படலாம்; மற்றும் இவைகள் அனைத்தும் ஆவியில் நமது கர்த்தருக்கு அழுத்தம் கொடுத்ததாய் இருந்திருக்கும் என்பதிலும் ஐயமில்லை. ஆனால் நம்முடைய கணிப்பின் படி, தெய்வீக ஐக்கியம்/உறவு துண்டிக்கப்பட்டதின் காரணமாகவும், அவரது ஜீவியத்தின் கடைசி நேரங்களில் அவருக்கு ஏற்பட்டத் தனிமையின் காரணமாகவும் அவரது நான்காம் வார்த்தையில் வெளிப்பட்டத் துயரமே, அவரது இருதயம் உடைந்து போவதற்கான முதன்மையான காரணமாக இருக்கின்றது.

நமது கர்த்தர் இருதயம் உடைந்து/வெடித்து மரித்தார் என்று அனுமானிப்பதற்கான காரணங்களுக்குரிய அறிவியல் சார்ந்த விளக்கங்கள் பின்வருமாறு:

"இதற்குச் சாட்சியாக, போர்ச்சேவகனுடைய ஈட்டியினால் இயேசு குத்தப்பட்டப்போது, வெளிவந்த இரத்தமயமான தண்ணீர் காணப்படுகின்றது. இருதயத்திலிருந்து, இருதயத்தை மூடியிருக்கும் சவ்வுப்பகுதிக்குள் கசிந்த இரத்தமானது, நிண நீராகவும் (serum), உறைந்த இரத்தமாகவும் பிரிந்தது. சொல்லர்த்தமாகவே இருதயம் உடைந்துபோனபடியாலே இயேசு மரித்தார்."

தெய்வீக ஏற்பாட்டின்படி, இயேசு சிலுவையில் தொங்கின வேளையில், முழுவதும் விநோதமான இருளினால் பூமி மூடப்படுவதின் மூலமாக, இயற்கையானது நமது கர்த்தருக்கான அனுதாபத்தை வெளிப்படுத்தும்படிக்கு ஏற்பாடு பண்ணப்பட்டக் காரியத்தில் நமக்கு ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இக்காரியம் குறித்து ஒரு பழைய மூலப்பிரதி பின்வருமாறு தெரிவிக்கின்றது: "அநேகர் போக்கிலும், வரத்திலும் விளக்குடன், சென்றவர்களாய்க் காணப்பட்டார்கள் மற்றும் இயேசு சிலுவையிலிருந்து இறக்கப்படுவது வரையிலும் இருள் நிலவினது." ஒரு மாபெரும் பூமியதிர்ச்சி அவ்வேளையில் ஏற்பட்டது என்றும், இதனால் பரிசுத்த ஸ்தலத்தையும், மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரித்திட்ட ஆலயத்தின் கனமான திரைச்சீலையானது, மேல் துவங்கி, கீழ் வரையிலும் கிழிந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது; திரைச்சீலைக் கிழிந்தக் காரியமானது, அப்போஸ்தலர் குறிப்பிடுவதுபோன்று, இப்பொழுது மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லும் பிரவேசம் வெளியாக்கப்பட்டுள்ளது என்பதையும், இந்தப் பிரவேசமானது கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் மரணம் மூலம் ஏற்பட்டுள்ளது என்பதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. மாற்கு சுவிசேஷத்தின்படி, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு என்பவர், பிலாத்துவினிடத்தில் துணிந்துபோய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டதாகப் பார்க்கின்றோம். அனைத்துப் பதிவுகளை வைத்துப் பார்க்கும்போது, இந்த யோசேப்பு என்பவர் சிறந்த ஒரு நபராக இருந்திருக்கின்றார். இவரைக்குறித்து மத்தேயு அவர்கள் "ஐசுவரியவான்" என்றும், லூக்கா அவர்கள் இவரைக் குறித்து, "உத்தமனும் நீதிமானுமானவர்" மற்றும் தேவனுடைய இராஜ்யத்திற்குக் காத்திருக்கிறவர் என்றும், மாற்கு அவர்கள் இவரைக்குறித்து, "கனம் பொருந்திய ஆலோசனைக்காரனும்," மற்றும் ஆலோசனை சங்கத்தின் உறுப்பினர் என்றும் குறிப்பிடுகின்றனர். "ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது" என்று இயேசு

கூறியுள்ளார். ஐசுவரியவான்களுக்குக் கடினமாய் இருக்கும், காரணம் ஒருவேளை அவர்கள் ஏழைகளாய் இருந்திருந்தால், அவர்கள் மேற்கொள்ள வேண்டியவைகளைக் காட்டிலும், அவர்கள் ஐசுவரியவான்களாய் இருப்பதினிமித்தம் அதிகமாய் மேற்கொள்ள வேண்டியதிருக்கும். ஒருவேளை அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு ஐசுவரியவானாய் இருக்கவில்லையெனில், அவர் முழுமையாய் இயேசுவினுடைய பின்னடியாராகியிருந்திருப்பார். எனினும் அவரைக்குறித்து அநேகம் நல்லக் காரியங்கள் சொல்லப்படவிருப்பதினாலும், சோதனையின் கீழ் அவரது தைரியமும், துணிவும் குறைந்துபோவதற்குப் பதிலாக, பெருகினதினாலும் நாம் மகிழ்கின்றோம். அவர் இறுதியில் முழுமையாக ஒரு சீஷனாகவும், அடிச்சுவட்டைப் பின்தொடரும் பின்னடியாராகவுமானார் என்று நாம் நம்பலாம். இவரைக் குறித்துக் கெய்கீ அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"யோசேப்புச் செய்த காரியம் சாதாரணமான ஒரு காரியமல்ல; ஏனெனில் எந்த ஒரு காலக்கட்டத்திலும் மரித்தவரை அடக்கம்பண்ணும் காரியத்தில் ஈடுபடுபவர் ஏழு நாட்கள் தீட்டுப்பட்டவராகக் காணப்படுவார் மற்றும் அந்நபர் தொடும் அனைத்தும் தீட்டுப்பட்டதாய் இருக்கும் (எண்ணாகமம் 19:11); மேலும் பஸ்கா காலக் கட்டத்தின்போது யோசேப்பு அடக்கம்பண்ணும் காரியத்தில் ஈடுபட்டது என்பது அவரை, முழுப் பஸ்கா வாரம் முழுவதிலும் பரிசுத்தமான அனுசரிப்புகள் மற்றும் களிகூருதல்களிலிருந்து ஒதுக்கிவைத்துவிடும்."

கன்மலையில் இயற்கையாகவே வெட்டப்பட்டிருந்த யோசேப்பினுடைய கல்லறையானது, ஆண்டவர் அங்கே அடக்கம் பண்ணப்பட்டதின் மூலம் எவ்வளவாய்க் கனப்படுத்தப்பட்டது!

யூதர்களின் மத்தியில் ஐசுவரியவானும், செல்வாக்குமிக்கவருமான நிக்கொதேமு என்பவர் நமது கர்த்தருடைய சரீரத்திற்கான அடக்கம் பண்ணுவதற்குரிய பராமரிப்பில், யோசேப்புடன் இணைந்து செயல்பட்டதைப் பார்த்து நாம் மகிழ்கின்றோம். இத்தருணத்தின்போது இம்மனுஷர்கள் வெளிப்படுத்தின தைரியம் மற்றும் வைராக்கியத்தின் காரணமாக, இவர்கள் கர்த்தருடைய கரத்தினின்று விசேஷித்த ஆசீர்வாதம் பெற்றிருப்பார்கள் என்பதில் நமக்கு நிச்சயமே. ஊழியம் புரிவதற்கான வாய்ப்புகள் வரும்போது, பயத்தின் காரணமாக பின்வாங்கிவிடுபவர்கள் ஆண்டவரினால் அங்கீகரிக்கப்படுவதில்லை என்பதிலும், இப்பொழுது அவர் ஜெயங்கொள்பவர்களுக்கு அருளும் மாபெரும் பலனைப் பெற்றுக்கொள்வதற்கு ஆண்டவரினால் அங்கீகரிக்கப்படுவதில்லை என்பதிலும் நமக்கு நிச்சயமே. இதில் நமக்குள்ளப் படிப்பினை என்னவெனில், நீதிக்காகவும், சத்தியத்திற்காகவும், கர்த்தருக்காகவும், சகோதர சகோதரிகளுக்காகவும் எதையும் இழந்து துணிவுடன் நிற்க வேண்டுமென்பதேயாகும். கிடைத்திட்ட வாய்ப்புகளுக்கும், சிலாக்கியங்களுக்கும் நாம் துணிவுடனும், உண்மையுடனும் இருப்பதினிமித்தம் இழப்புகள் அநேகம் இருப்பின் தற்கால ஜீவியத்திலும் சரி மற்றும் இனிவரும் ஜீவியத்திலும் சரி, நமக்கான பலனும்

அதிகமாக இருக்கும். இயேசுவின் ஊழியக்காலம் தொடர்புடைய விஷயத்தில், இங்கு/இத்தருணத்தில் நிக்கொதேமு மூன்றாம் முறையாகக் குறிப்பிடப்படுகின்றார். முதலாம் முறையின்போது, இவர் இயேசுவை இரவு வேளையில் சந்திக்கின்றார் (யோவான் 3). இரண்டாம் முறையின்போது, கர்த்தரைக் கைது செய்திட முயற்சி எடுக்கப்பட்ட போது, இவர் ஜாக்கிரதையுடன், இயேசு சார்பில் குறுக்கிட்டுப் பேசுகின்றார்.(யோவான் 7:44-52). ஆனால் இப்பொழுதோ இவர் சிலர் குறிப்பிட்டுள்ளதுபோன்று "தன்னால் அதிகமானவைகளைச் செய்ய முடிந்திருக்கும் முந்தைய வாய்ப்புகளைத் தவறவிட்டுவிட்டோம் என்ற துயரத்தைத் தேற்றத்தக்கதாக, ஊழியம் புரிவதற்கான கடைசி வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டார்." இவர் ஐசுவரியவானாக இருந்தார் மற்றும் யூதர்கள் மரித்தவர்களை அடக்கம்பண்ணப் படுவதற்குப் பயன்படுத்தும் வெள்ளைப்போளத்தையும், கரிய போளத்தையும் கலந்து, ஏறக்குறைய நூறு இராத்தல் அளவு நிக்கொதேமு கொண்டுவந்தார். சத்தியம் மற்றும் அதற்கான ஊழியம் தொடர்புடைய விஷயத்தில் நாம் நடுநிலையில் காணப்படுவதில் திருப்திக் கொண்டிருக்க கூடாது என்றுள்ள படிப்பினை நமக்குக் காணப்படுகின்றது. நாம் முடிந்தமட்டும் உறுதியுடன் காணப்பட வேண்டும்; நாம் நீதியின் பக்கமாய் நின்று, நம்முடைய முழுப் பலத்துடன் கர்த்தருடைய நோக்கங்கள் மற்றும் கர்த்தருடைய சகோதரர்கள் சார்பில் செய்ய வேண்டியதைச் செய்திட வேண்டும்; ஞானத்தையும், பகுத்தறிவையும் பயன்படுத்தும் அதேவேளையில் நாம் துணிவுடனும் காணப்பட வேண்டும். ஜீவியத்தில் மகிழ்ச்சியையும், ஆறுதலையும் கொண்டுவருவதற்குரிய நம்முடைய மலர்களை நாம் கொண்டுவந்திட வேண்டும் மற்றும் இந்த மகிழ்ச்சியையும், ஆறுதலையும் அனுபவிப்பதை மரணம் தடுத்துப்போடுவது வரையிலும் நாம் காத்திருக்கக்கூடாது.

நியூமேன் ஹால் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"கொல்கொதா! இது பூமியினுடைய மேற்பரப்பினுடைய மையப்பகுதி என்றும், குடியிருப்பிற்குரிய பூமி கோளத்தினுடைய நடுமையம் என்றும் ஒரு புராணக் கதை உண்டு. அந்தப் புராணக் கதையை நாம் எடுத்துக்கொள்வதில்லை, மாறாக அது முன் வைக்கும் உண்மையையே நாம் எடுத்துக்கொள்கின்றோம்; ஏனெனில் கிறிஸ்துவின் சிலுவை என்பது சகல கோத்திரங்கள் மற்றும் ஜாதிகளிடமிருந்து சகல விசுவாசிகளும் ஒன்று சேரும் சபையினுடைய உண்மையான மையமாகக் காணப்படுகின்றது."

இன்னொருவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"சிலுவை நம் முன் இருக்க, நம்முடைய ஜீவியங்களை நம்முடைய சொந்த ஆசீர்வாதத்திற்கும் மற்றும் நம்மையே திருப்திப்படுத்துவதற்கென ஒப்புக்கொடுப்பதற்கு நம்மால் எப்படித் துணியமுடியும்? கிறிஸ்துவின் பாடுகளில் பங்குக்கொள்ளாமலும்,

இன்பங்களை எப்போதும் தெரிந்துகொண்டு, ஒருபோதும் உபவாசித்தலைத் தெரிந்துகொள்ளாமலும் இருந்து, இந்த உலகத்தின் காரியங்களையும், அதன் ஆஸ்திகளையும் (அ) அதன் தயவுகளை (அ) அதன் உயர் ஸ்தானங்களை நம்முடைய ஜீவியத்தின் முக்கிய இலக்காக எப்படி நம்மால் கொண்டிருக்க முடியும்?"

பிலிப்பிஸ் புரூக்ஸ் அவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"என்னுடைய நண்பனே, நீ உன்னுடைய சிலுவையை வைத்திருக்கின்றாய். நீ செய்யும் வேலையில், வலி உள்ளது. ஆனால் உன்னுடைய அனைத்து வலிகளிலும், தேவனுடைய அன்பானது உனக்கு அதிகமாகியும், தெளிவாகியும் கொண்டிருக்கின்றது என்பதை நீ அறிந்துகொள்வாயானால், அப்பொழுது ஒவ்வொரு பலியிலும் உன்னால் வெற்றிச் சிறக்க முடியும். உன்னுடைய சிலுவையானது கர்த்தருடைய மகிமையிலும், அழகிலும் சிலவற்றை உனக்குப் பெற்றுத்தந்துள்ளது. களிகூரு, சந்தோஷப்படு, ஏனெனில் நீ கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டிருக்கின்றாய்."

## நம்முடைய ஆதார வசனம்

இந்தப் பாடத்தை நாம் நிறைவு செய்கையில், நாம் இப்பாடத்தின் ஆதார வசனத்தினுடைய முக்கியமான சத்தியங்களை நினைவுகூருவோமாக; "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்துள்ளார்." இயல்பாகவே மரணம் என்ற ஒன்று சம்பவிக்கும் என்பதினாலோ அல்லது மற்ற மனிதர்களைப் போலவே இயேசுவும் பாவி என்பதினாலோ அல்லது எப்படி மரிக்க வேண்டுமென்று நமக்குக் காண்பிக்க வேண்டும் என்பதினாலோ இயேசு மரிக்கவில்லை; அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார். அவர் மரித்ததற்கானக் காரணம் நம்முடைய பாவங்கள் ஆகும்; நம்முடைய பாவங்களுக்கான தண்டனை, மரணத்தண்டனையாக இருந்தபடியாலும், நாம் ஏதேனும் ஒரு தளத்தில், ஏதேனும் எதிர்க்கால ஜீவியத்தை அடைவதற்கு நாம் மீட்கப்பட வேண்டியிருந்தபடியாலும் அவர் மரித்தார்.

"காலாக் காலங்களாக நிகழ்ந்துவந்த மரணங்கள் அனைத்திலும், மேலோங்கி நிற்கும்
கிறிஸ்துவின் சிலுவைதனிலே நான் மேன்மைப்பாராட்டுகின்றேனே;
இதன் உயர் கருத்துகளிலேயே,
புனித கதையின் அனைத்து விளக்கமும் மையம் கொண்டுள்ளதே."

# ஜீவாதிபதி சிலுவையில் அறையப்பட்டார்

## மத்தேயு 27:33-50

**"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்." ஏசாயா 53:5**

இயேசு கைது செய்யப்பட்ட கொஞ்ச நேரத்திலேயே அவருடைய விசாரணை ஆரம்பித்தது. ஆனால், நியாயப்பிரமாணத்தின்படி மரணத்தீர்ப்பானது காலை வேளையிலேயே அளிக்கப்பட வேண்டும் என்றிருப்பதினால், காலையில் ஆலோசனை சங்கத்தார் கடமைக்காகக் கூட்டங்கூடி, முந்தின இரவில் பிரதான ஆசாரியனால் கொடுக்கப்பட்டத் தீர்ப்பை உறுதிப்படுத்தினார்கள்; அதாவது, சிருஷ்டிகரினால் நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்டிருந்த திட்டத்தின்படி இயேசு தாம் பூமிக்கு வந்ததாகவும், தாம் உலகத்தையும், இஸ்ரயேலர்களையும் மரணத் தண்டனையினின்று மீட்கப்போகிறதாகவும், பின்னர்த் தேவனுடைய ஏற்றவேளையில் பூமியின் குடிகள் மற்றும் இஸ்ரயேலர்களுக்கான ஆசீர்வாதத்திற்கென, தாம் மேசியாவின் இராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போவதாகவும் அறிவித்தபடியால் இயேசு சிருஷ்டிகருக்கு எதிராக தூஷணம் பேசியுள்ளார் என்று பிரதான ஆசாரியனால் கொடுக்கப்பட்டத் தீர்ப்பை ஆலோசனை சங்கத்தார் உறுதிப்படுத்தினார்கள். இயேசு ஐந்து நாளுக்கு முன்பு கழுதையின் மீது ஏறிவந்தபோது, "ஓசன்னா, தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று ஆரவாரித்த ஜனங்கள் மீண்டுமாக இயேசுவை இராஜாவாக அறிவிக்க/நியமிக்க பிரயாசம் எடுப்பதற்கு முன்பாக எல்லாம் முடிந்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் ஆசாரியர்கள் மற்றும் சங்கத்தார் வேகமாகச் செயல்பட்டார்கள். பஸ்கா வாரத்தில் எந்த மரணத்தண்டனையும் நிறைவேற்ற முடியாது. ஒருவேளை இயேசு கொல்லப்படாமல் (பஸ்கா வாரம் முடியும்வரை) கைதியாக வைக்கப்பட்டிருப்பாரானால், அடுத்த கட்டமாக இயேசுவுக்கோ அல்லது தங்களுக்கோ என்ன சம்பவிக்கும் என்பதை அவர்கள் தெரியமுடியாத நிலையில் காணப்பட்டார்கள். ஆகவே, அவர்கள் தங்கள் திட்டத்தை நிறைவேற்றுவதற்குச் சில மணி நேரங்களையே பெற்றிருந்தார்கள். மேலும் தங்களுடைய இந்தத் திட்டத்தின் வாயிலாக அவர்களால் வஞ்சகன்போல் பார்க்கப்படுபவரும், தங்களுக்கும் உரோம அரசாங்கத்திற்கும் இடையே பிரச்சனை உண்டாக்குவதற்கு ஏதுவாய் இருப்பவருமாகிய இயேசுவைத் தங்கள் நாட்டிலிருந்து ஒழித்துக்கட்டிவிடலாம் என்று நம்பினார்கள்.

ஆலோசனை சங்கத்தார் தங்களுடைய மத சம்பந்தமான விஷயங்களில் ஜனங்களை நியாயந்தீர்க்க அதிகாரம் பெற்றிருந்தாலும், அவர்கள் மரணத் தண்டனை விதிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தனர். ஆகவே, இயேசுவை ஆலோசனை சங்கத்தார் முன்பு குற்றவாளி என நிரூபித்த பிற்பாடு, அவரை உரோம தேசாதிபதியாகிய பிலாத்துவுக்கு முன்பு அழைத்துச் சென்று நிறுத்துவது அவசியமாய் இருந்தது. மரணத் தண்டனை வழங்குவதற்குப் பிலாத்துத் தேவதூஷணம் எனும் குற்றச்சாட்டை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ள மாட்டார் என்று அறிந்திருந்த அவர்கள், பிலாத்துவுக்கு முன்பு முற்றிலும் மாறான குற்றச்சாட்டை இயேசுவுக்கு

எதிராக வைத்தார்கள். அதாவது, இயேசு ஒரு கலகவாதி என்றும், பிரச்சனைகளைத் தூண்டிவிடுபவர் என்றும், இயேசு தம்மை இராஜாவாக அறிவித்தார் என்றும், இயேசுவைச் சுதந்திரமாய் விட்டுவைப்பது என்பது உரோம சாம்ராஜ்யத்தின் நலனுக்கடுத்த விஷயங்களுக்கு தீமை விளைவிக்கக்கூடியதாக இருக்கும் என்றுமுள்ளக் குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்கள். இவர்களுடைய இந்தக் குற்றச்சாட்டில் காணப்படும் மாய்மாலமும், முட்டாள்தனமும் மிகவும் வெட்ட வெளிச்சமாய் இருந்தபடியினால் அக்குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்திக்கொள்ள பிலாத்துவுக்கு அவசியமில்லாமல் போயிற்று. பொறாமையினிமித்தமாகவே இயேசுவை அவர்கள் தன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கின்றார்கள் எனப் பிலாத்து புரிந்துகொண்டார். ஏனெனில், பிரதான ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகர்கள் பொது ஜனங்கள் மத்தியில் கொண்டிருக்கும் செல்வாக்கைக் காட்டிலும் இயேசுவுக்கும், அவருடைய போதனைகளுக்கும் அதிக செல்வாக்குக் காணப்பட்டது எனப் பிலாத்து உணர்ந்துகொண்டார். இயேசுவின் ஊர் கலிலேயாவாக இருந்தபடியினால், இயேசுவின் வழக்கை விசாரிப்பதிலிருந்து விலகிக்கொள்ள விரும்பின பிலாத்து, இயேசுவின் வழக்கானது கலிலேயா தேசாதிபதியான ஏரோது இராஜாவிற்கு உட்பட்டது என்று அறிவித்து, இயேசுவின் வழக்கை விசாரிக்கும் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டார்.

## ஏரோது இராஜாவுக்கு முன்பு இயேசு

இப்படி இயேசுவை ஏரோதினிடத்தில் ஒப்புக்கொடுத்த காரியம் அவர்களுக்கு எதிர்பாராத அசௌகரியத்தைக் கொடுத்தது. ஆனால், ஏரோதின் அரமனை அவ்வளவாகத் தொலைவில் இல்லை. ஏரோது, இயேசுவினுடைய அற்புதங்களைக் குறித்து அநேக காரியங்களைக் கேட்டிருந்தபடியால் அவரைச் சந்திக்கும் இவ்வாய்ப்பிற்கு மிகவும் சந்தோஷமடைந்தார். ஏரோது போதகரின் கம்பீரமான தோற்றத்தைப் பார்த்து அவரில் தூய்மையையும், சாந்தத்தையும்,பெருந்தன்மையையும் கண்டு உணர்ந்தபோது, இப்படிப்பட்ட ஒரு நபர் கலகவாதி என்றும், தேசத்தின் சமாதானத்தினுடைய நலனுக்கடுத்த விஷயங்களுக்கு ஆபத்தான மனுஷன் என்றும், குற்றஞ்சாட்டப்படுவது ஏரோதுக்குக் கொஞ்சம் கேலியாகவே தோன்றியிருந்திருக்கும். கொஞ்சம் நேரம் இயேசுவை வசைமொழிக் கூறியும், கேலியாகப் பேசி சிரித்த பிற்பாடு, இயேசுவை மரியாதையின்றி நடத்தின ஏரோதோடு,அவரது அரமனை சேவகர்களும் வாய்ப்பைப் பயன்படுத்தி, அவரை எள்ளி நகையாடினார்கள். அவர்கள் அவருக்கு இரத்தாம்பர வஸ்திரத்தையும், முள்ளினால் உண்டுபண்ணின கிரீடத்தையும் தரிப்பித்து, இராஜா போன்றில்லாத அவரது தோற்றத்தை எள்ளி நகையாடினார்கள். பின்னர், ஏரோது அவ்வழக்கை விசாரிக்க மறுத்து, கைதியை மீண்டுமாகப் பிலாத்துவினிடத்தில் அனுப்பி வைத்தார். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கு முன்னதாக யோவான்ஸ்நானனை சிரைச் சேதம் பண்ணின விஷயம் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைகளே தனக்குப் போதுமென ஏரோது எண்ணிதான், கைதியைப் பிலாத்துவிடம் அநேகமாக திருப்பி அனுப்பியிருக்க வேண்டும். இயேசுவின்

வழக்கானது, ஏரோதுக்கும் பிலாத்துவுக்கும் இடையில் ஒரு நகைச்சுவைப் போன்று காணப்பட்டது. அதாவது, இயேசு தூய்மையும், அப்பாவியாகவும் ஏரோதின் கண்களுக்குக் காணப்படும்போது, பிரதான ஆசாரியர்களோ அவர் மிகவும் ஆபத்தானவர், அவரை மரணத்தண்டனைக்கு ஒப்புக்கொடுத்துவிட வேண்டும் என்று முன்வைத்த இப்படிப்பட்ட ஒரு வழக்கை கையாளுவது ஏரோதுக்குக் கேலியாக இருந்தபடியால், பாவப்பட்ட இயேசு பிலாத்துவினிடத்தில் இருந்தால் பாதுகாப்பாய் இருப்பார் என்று எண்ணி ஏரோது பிலாத்துவினிடத்தில் அனுப்பி வைத்தார்.

## பிலாத்துவின் சிக்கல் பெருகியது

இயேசு மீண்டுமாகப் பிலாத்துவின் அரமனைக்குக் கொண்டுவரப்பட்ட போது, அது பிலாத்துவுக்கு மனமடிவை உண்டாக்கிற்று. அவ்வழக்கைத் தீர்த்துவைப்பது சுலபமானதல்ல. கைதியிடம் எவ்வித குற்றத்திற்கான அறிகுறியும் இல்லை. ஆனால், அவர் மேல் குற்றம் சுமத்துபவர்கள் பிலாத்துப் பொறுப்பேற்றுள்ள பட்டணத்திலுள்ள மிக முக்கியமான நபர்களாய்க் காணப்படுகின்றனர். மதத்தலைவர்கள் தாங்கள் நல்நோக்கத்துடன் இவைகளைச் செய்கின்றார்கள் என்ற தங்கள் நற்சாட்சியைக் கூடுமானமட்டும் காக்கவும் வேண்டியிருந்தது மற்றும் நீதியின் போர்வையின் கீழ்க் குற்றமற்ற தங்களுடைய கைதியைக் கொலை செய்யவேண்டுமென்றிருந்தார்கள். மதம் அவளுடைய ஆதரவாளர்களால் உலகத்தில் எல்லாக் காலக்கட்டங்களிலும் தவறாய்க் காட்டப்படுவது எத்துணை பரிதாபத்திற்குரியதாய்க் காணப்படுகின்றது! இங்கு நமக்கு ஒரு படிப்பினை உள்ளது. அதென்னவெனில், நாம் பொல்லாப்பிற்குரிய தவறுகளில் விழுந்துவிடாதபடிக்கு அதாவது, மற்றவருடைய உரிமைகளை எதிர்ப்பதின் மூலம் தேவனுக்கு எதிராக நிற்காதபடிக்கு நாம் நம்முடைய இருதயத்தின் நோக்கங்களையும், எண்ணங்களையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதேயாகும்.

பிலாத்துக் குற்றச்சாட்டுக்களைக் கேட்ட பிற்பாடு, அவைகளில் எவ்விதமான உண்மையும் இல்லை என்று உணர்ந்துகொண்டு, தன்னுடைய முடிவைக்குறித்துக் கூறினதாவது: "இயேசுவினிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் காணேன், ஆனால், இங்கு ஏற்பட்டுள்ள அமைதியின்மையை நான் காண்கையில், இங்குச் சமாதானத்தை உண்டு பண்ண வேண்டும் என்ற நோக்கத்தை முன்னிட்டு, இங்குக் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கும் ஜனங்களின் அநீதியான கோரிக்கையைத் திருப்தி செய்வது அவசியமென நான் எண்ணுகின்றேன். இக்கைதி தண்டனைக்குப் பாத்திரவான் அல்ல என்று நான் ஒப்புக்கொள்கின்ற போதிலும், இக்கைதியை வாரினால் அடிக்க நான் உத்தரவு இடுகின்றேன். இக்கைதியின் நலன் கருதியும், பட்டணத்தின் சமாதானத்தினுடைய நலன் கருதியுமேதான், இக்கைதியை வாரினால் அடிக்க நான் ஒப்புக்கொடுக்கின்றேன்". ஏனெனில் ஜனங்கள் திருப்திபடுத்தப்படும்போது, இயேசுவின் ஜீவனும் தப்புவிக்கப்படும். அரசியல் தீர்ப்புகளைப் பொறுத்தமட்டில் இது மிகவும் நியாயமான தீர்ப்பாகும். பூரணமற்ற சூழ்நிலைகளில் மெய்யான/முழுமையான நீதி வழங்கப்படுவது கூடாத காரியம் என்று நீதிமன்றத்தின் நீதிபதிகள் கூட

அங்கீகரிக்கின்றனர்.

ஆனால், இயேசுவுக்கு மரணத் தண்டனையில்லாமல் வேறெந்த தண்டனை அளிக்கப்பட்டாலும், அதில் மத அதிகாரிகள் திருப்தியடைவதாக இல்லை. "அவரை சிலுவையில் அறையும்!" "அவரை சிலுவையில் அறையும்!" என்று கூக்குரல் இடும்படிக்கு மக்கள் கூட்டத்தார் தூண்டிவிடப்பட்டனர். இப்படிப்பட்ட ஒரு குற்றமற்ற மனுஷனுக்கு எதிராக இப்படியானதொரு வெறி எழும்பியிருப்பதைப் பிலாத்துவுக்குப் புரிந்துகொள்ள கடினமாக இருந்தது. ஆகவேதான், "ஏன், என்ன பொல்லாப்புச் செய்தார்" என்று பிலாத்து வினவினார். ஆனால், "அவரை சிலுவையில் அறையும்!" என்பதே பதிலாக வந்தது. அந்தோ பரிதாபம், மனிதனுடைய சீற்றம் எவ்வளவாக அவனுடைய கண்களிலிருந்து நீதியின் கொள்கை அனைத்தையும் மறைத்து விடுகின்றது. மேலும், பிலாத்துவின் குழப்பத்தை இன்னும் பெருகப்பண்ணும் விதமாக, அவருடைய மனைவி இயேசுவாகிய நீதிமானுக்கு ஒன்றும் பொல்லாப்புச் செய்யக்கூடாது என்றும், இயேசு தொடர்பான ஒரு பயங்கரமான சொப்பனத்தைக் கண்டேன் என்றும் கூறி செய்தி அனுப்பி வைத்தாள்.

கடைசி பிரயாசமாக, ஜனக்கூட்டம் அனைவரும் இயேசுவைக் காணத்தக்கதாக இயேசுவை ஓர் உயரமான இடத்தில் கொண்டுவந்து பிலாத்து நிறுத்தி, அவர்களை நோக்கி, "இதோ இந்த மனுஷன்" என்று உரத்த சத்தத்தில் கூறினார்... அதாவது, "நீங்கள் சிலுவையில் அறைய வேண்டும் என்று விரும்புகின்ற இம்மனுஷனுடைய அம்சங்களைப் பாருங்கள். உங்கள் இனத்திலும் சரி, வேறு எந்த இனத்திலும் சரி, எவரிடத்திலும் காணப்படாத இராஜாவுக்குரிய அம்சங்களை இவரிடத்தில் அதிகமாய்க் காணப்படுவதைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். உங்கள் இனத்திலேயே காணப்படும் மிகச் சிறந்த அம்சங்களுடைய இவரை நீங்கள் சிலுவையில் அறையப்போகின்றீர்களா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள், நியாயமாய் நடந்து கொள்ளுங்கள், "இதோ இந்த மனுஷன்!" இந்த ஒரு காலக்கட்டத்தில் அரசாங்கமானது, உங்களுக்கு ஒரு கைதியை விடுதலைப்பண்ணுவது வருடந்தோறும் உங்களுக்குக் காணப்படுகின்ற வழக்கமாயிருக்கின்றது. ஆகவே, நீங்கள் இப்பொழுது இயேசுவை ஒரு குற்றவாளியாக எண்ணிக்கொள்ளுங்கள். மேலும், நீங்கள் நீதி எனக் கருதி கொண்டிருக்கும் விஷயங்கள், அவர் குற்றவாளி என்று அழைக்கப்படுவதன் மூலம் திருப்தியடைந்து விட்டது என்றும் எண்ணிக்கொள்ளுங்கள். மேலும், (குற்றவாளி என்று அழைக்கப்படும்) இயேசுவை நான் இப்பொழுது (வருடத்திற்கு ஒருமுறை இக்காலத்தில் ஒரு குற்றவாளியை விடுவிக்கிற பிரகாரமாய்) விடுவிக்கின்றேன்" என்றார். ஆனால், மக்கள் கூட்டமோ, "அவரைச் சிலுவையில் அறையும்!", (திருடனும், ஆபத்தான பண்பை உடையவனுமான) பரபாஸை எங்களுக்கு விடுதலைப்பண்ணும் என்று இன்னும் அதிகமாகக் கூக்குரலிட்டார்கள்.

விழுந்துபோன மனுக்குலத்திடம் விளங்கும் இந்த விநோதமான தவறான நடத்தையை/விபரீதத்தை யாரால் விளக்கக்கூடும்? ...அதாவது, ஒரு பரிசுத்தவானுக்குப் பதிலாக ஒரு பாதகன் பரிந்துரைக்கப்படும் காரியத்தை யாரால் விளக்கக்கூடும்? சில வருடங்களுக்கு முன்னதாக வியட்னா பட்டணத்தில்

சிறைச்சாலையிலிருந்த தனது தண்டனைக் காலம் முடிந்த பிற்பாடு வெளிவந்த ஒரு மனுஷன், வெளிவந்த மாத்திரத்தில் ஒரு சொற்பொழிவாற்றினான். அதில் அனைத்து யூதர்களும் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் என்று அவன் கூறினான். ஜனங்கள் மத்தியில் ஒரு வெறி உண்டாயிற்று. சிறையிலிருந்து வெளிவந்த அந்தக் கெட்ட மனுஷன், வெறி கொண்ட அந்த ஜனக்கூட்டத்திற்குத் தலைவனானான். மேலும், அவனுடைய இந்த வீர பேச்சுகளினிமித்தம் அவன் அப்பட்டணத்திற்கான மாநகர தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டான். வெட்கம்! இப்படிப்பட்ட விஷயங்கள் வரலாற்றின் பக்கங்களில் பதிவு செய்யப்பட்டு, இவைகள் நமக்குப் பயங்கரமாய் தோற்றம் தந்துகொண்டிருக்கும்போது, உலகம் விடுதலை அடைவதற்கான நிலையை எட்டிவிட்டது என்று நம்மால் எப்படிதான் கூறமுடியும்? உலகம் விடுதலைப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஏதுவான நிலையில் இராமல், உலகத்திற்குத் தேவன் அருளுவேன் என்று சொல்லியுள்ள ஒரு பலமுள்ள, ஏகாதிபத்திய அரசாங்கம் தேவைப்படுகின்றது. அதாவது, எல்லாத் தவறுகளைக் கீழாக்கிப் போடுவதற்கும்/கீழ்ப்படுத்துவதற்கும் பலமுள்ளதாகவும், ஒவ்வொரு சரியான காரியங்களைச் சீர்த்தூக்குவதற்குப் பலமுள்ளதாகவும் காணப்படும் தேவனுடைய அருமையான குமாரனுடைய இராஜ்யத்தை அருளுவேன் என்று தேவன் கூறும் அரசாங்கமே, உலகத்திற்கு அவசியமாய் உள்ளது.

## நீர் இராயனுக்கு நண்பனல்ல

யூத மத தலைவர்கள் மதிநுட்பம் உடையவர்களாகக் காணப்பட்டார்கள். உரோமுக்கு எதிரான துரோகம் என்பது மிகப் பயங்கரமான குற்றச்சாட்டுகளில் ஒன்று என அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். மேலும், இயேசு தம்மை இராஜாவாக அறிவித்துள்ள காரியமானது, அவரைச் சிலுவையில் அறைந்து போடுவதற்கு வற்புறுத்தத்தக்கதாக அவர்கள் கையில் ஆயுதமாக விளங்கிற்று. இவ்வாயுதத்தை அவர்கள் பயன்படுத்தினார்கள். மேலும், பிலாத்துக் கைதியை விடுதலைப் பண்ணினால் தாங்கள் பிலாத்துவைக் குறித்துச் சக்கரவர்த்தியிடம் சென்று புகார் செய்ய நேரிடும் என்று வலியுறுத்தினார்கள். இப்படியான காரியங்களை உரோம அரசாங்கத்திடம் விவரிப்பது கடினமாயிருக்கும் என்றும், உரோம அரசாங்கம் தாங்கள் ஆளுகை செய்யும் பகுதியில் கலகம் வெடிக்க அனுமதிப்பதைவிட ஒரு மனுஷன் சாவது நலமாயிருக்கும் என்று உரோம அரசாங்கமும், காய்பாவினுடைய முடிவை ஒப்புக்கொள்ளும் என்றும், பிலாத்து நன்கு அறிந்திருந்தார். இப்படியான நிர்பந்தத்தின் கீழ் வற்புறுத்தப்பட்ட பிலாத்து, இறுதியில் சம்மதித்து, மரணத் தண்டனைக்கான காரியங்களை எழுதினான். ஆனால், இப்படி எழுதுவதற்கு முன்பு பிலாத்துத் தண்ணீருள்ள ஒரு பாத்திரத்தைக் கொண்டுவரச் சொல்லி, "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் காரணமல்ல" என்று கூறிய வண்ணம் ஜனங்களுடைய பார்வைக்கு முன் தனது கைகளைக் கழுவினான்.

தண்டனை தீர்ப்பு நிறைவேற்றுவதற்கான பணிகள் நடந்து கொண்டிருந்தது. போர்ச்சேவகர்களுக்கு ஏற்கெனவே இரண்டு கள்வர்களைச் சிலுவையில் அறைய

வேண்டியிருந்தபடியினால், இப்பொழுது இன்னும் ஒரு சிலுவையை எண்ணிக்கையில் சேர்த்துக் கொண்டார்கள். ஊர்வலம், மண்டை ஓட்டின் வடிவிலிருக்கும் மலைப்பகுதியாகிய கொல்கொதாவை நோக்கி பயணத்தைத் தொடங்கினது. கொல்கொதா என்பது மண்டை ஓட்டுஸ்தலம் எனும் அர்த்தத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இது பட்டணத்திற்கு வடக்கில், மதிலுக்கு வெளியே காணப்படுகின்றது. சமீபத்தில் அங்குக் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றதான புதிய கட்டிடங்களும்,மதிலும், பார்வையாளர்களுக்கு முன்பிருந்த மண்டையோட்டுத் தோற்றத்தைப் பார்க்க முடியாமல் செய்துவிட்டது. சட்டத்தின்படி ஒவ்வொரு குற்றவாளியினுடைய குற்றச்சாட்டுகள் பலகையில் பொறிக்கப்பட்டு, சிலுவையில் கைதியின் தலைக்கு மேல் தொங்க விடப்பட்டிருந்தது. போதகரின் தலையின் மேல், "இயேசு, யூதர்களுடைய இராஜா" என்ற அவருடைய குற்றச்சாட்டு எழுதப்பட்டிருந்தது.

சாத்தானும், அவனால் வஞ்சிக்கப்பட்டவர்களும், ஒருவழியாக இயேசுவை ஒழித்துக் கட்டிவிட்டோம் என்று எண்ணியிருந்திருப்பார்கள் என்பதில் உறுதியே. இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று அறிவித்த விஷயங்கள் குறித்து ஆசாரியர்களும், மூப்பர்களும் இகழ்ந்து பேசினார்கள். மேலும், ஒருவேளை இயேசு உண்மையாகவே தேவனுடைய குமாரனாக இருப்பாரானால், சிலுவையிலிருந்து கீழே இறங்கிவருவதன் மூலம் அதை நிரூபித்துக் காட்டும் என்றும் கூறிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு உண்மை எதுவும் தெரியவில்லை. அதாவது, இயேசு மத்தியஸ்தராகக் காணப்படப்போகும் புதிய உடன்படிக்கையினுடைய நிபந்தனையின்கீழ் மனுக்குலம் முழுவதையும், முழுமையான பூரணத்திற்கும், ஜீவனுக்கும் திரும்பிக் கொண்டுவரத்தக்கதாக தம்முடைய மகிமையான இராஜ்யத்தில் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, தாம் மனுஷனுடைய பாவத்திற்காக மரிக்க வேண்டும் என்பதின் அவசியம் குறித்துள்ள உண்மை எதுவும் அவர்களுக்குத் தெரியவில்லை (எரேமியா 31:31). ஆறாம் மணி வேளையாய் இருந்த மதிய நேரத்தின் போது, காரிருள் மூன்று மணி நேரம் பூமியை நிரப்பிக் கொண்டது. அப்போது, இயேசு, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கூறி மரித்தார். பாவிக்குச் சொந்தமான தெய்வீக நீதியின் பாரத்தை/பளுவை இயேசு முழுமையாக அனுபவிக்க வேண்டியதற்காக, பிதா இயேசுவை ஒரு பாவியைப் போல கருதி தமது முகத்தை அவரிடமிருந்து மறைக்க வேண்டியிருந்தது. பிதாவிடமிருந்து இயேசுவுக்கு ஏற்பட்ட இந்தத் தற்காலிகமான பிரிவு, போதகருக்கு ஏற்பட்ட அனைத்து அனுபவங்களிலுமே கடுமையான அடியாக இருந்திருக்கும் என்பது நிச்சயமே.

# தேவனால் வாதிக்கப்பட்டவர், சிறுமைப்பட்டவர்

## மாற்கு 15:22-37

***"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார் நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்." ஏசாயா 53:4***

இயேசு சிலுவையில் அறையப்பட்டது தொடர்புடையதான உண்மைகளின் விஷயத்தில் வாக்குவாதம் பண்ணுவதற்கு இடமில்லை. சிலுவையில் அறையப் படுதலுக்கான காரணம் மற்றும் தெய்வீக வரம்பு தொடர்புடைய விஷயத்தில் மாத்திரமே வாதம் செய்வதற்கு இடமுள்ளது. ஏசாயா தீர்க்கத்தரிசி நமக்குத் தெய்வீக விளக்கத்தை அளிக்கின்றார்.

## பாடுகள் நிறைந்த பாதை!

ஜனங்களுடைய வியாதிகளைச் சொஸ்தப்படுத்துவதில் தம்முடைய சத்துவத்தை அவர் இலவசமாய்க் கொடுத்து வந்ததான, அவரது மூன்று வருட ஊழியத்தினால் இரட்சகர் மிகவும் பெலவீனமடைந்து காணப்பட்டார். இது தவிர பஸ்காவை ஆயத்தம் பண்ணும்படிக்கு அவர் தம்முடைய சீஷர்களை அனுப்பிவைத்தது முதல், தூக்கம் இல்லாதவராகவும், தொடர்ச்சியாக அழுத்தத்துடன் இருந்தவராகவும் காணப்பட்டார். இந்த ஒரு வேளையில்தான் பஸ்கா தொடர்புடையதான துயரமான அனுபவங்களும், நினைவுகூருதலின் இராப்போஜனம் நிறுவப்படுதலும், கெத்செமனேக்கு நேரான பிரயாணமும், அங்கு வியாகுலமும், பெலவீனம் அடைதலும், பிரதான ஆசாரியனால் நடத்தப்பட்ட ஆலோசனை சங்க விசாரணையும், ஏரோதின் முன்னிலையிலும், பிலாத்துவின் முன்னிலையிலும் நடைப்பெற்றதான விசாரணைகளும், சவுக்கடிகள் முதலானவைகளும் நடைப்பெற்றன; இவைகள் அனைத்துமே அவருக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுத்ததாகவே இருந்தது. யாருக்காக அவர் பரலோக வீட்டையும், மகிமையையும் தியாகம் பண்ணினாரோ, அவர்களாலேயே அவர் சிலுவையில் அறையப்படும்படிக்கு இப்பொழுது தீர்க்கப்பட்டிருக்க, அவர் தம்முடைய சிலுவையையும் இப்பொழுது சுமந்துச் செல்ல வேண்டியவராய் இருந்தார். அவரது பெலவீனம் காரணமாக, சிலுவையின் பாரத்தைச் சுமக்க முடியாமல் போகும் கட்டம் வருவது வரையிலும், அவர் சுமந்துக்கொண்டுவந்தார் மற்றும் அவருக்கு உதவிச் செய்யத் தக்கதாக வழிப்போக்கனான ஒரு விவசாயி வற்புறுத்தப்பட்டார்; வழிப்போக்கன் முழுச் சிலுவையையும் சுமந்து வந்தாரா அல்லது சிலுவையின் ஒரு பாகத்தைச் சுமந்து, இயேசுவுக்குப் பின் நடந்துவந்தாரா என்பது வேதவாக்கியத்தில் மிகத் தெளிவாய்க் கொடுக்கப்படவில்லை.

இயேசுவுக்கு உதவி அளிப்பதற்குப் பதிலாக, பேதுருவும், யோவானும், யாக்கோபும், தோமாவும், மற்ற அப்போஸ்தலர்களும் எங்கே போனார்கள்? அவர்கள் பயத்தினால் தடுக்கப்பட்டிருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்தோ, எத்துணையான ஓர் ஆசீர்வாதத்தை அவர்கள் இழந்துபோனார்கள்! பலவந்தத்தின்

காரணமாகச் சிலுவையைச் சுமந்த சிரேனே ஊர் விவசாயியானவன், அந்த ஒரு வேளையின் போதான அனுபவங்களின் வாயிலாக, இரட்சகருடைய செய்தியினுடைய உண்மையைத் தனது இருதயத்தில் பதியப் பெற்றுக்கொண்டதன் மூலம், நசரேயனின் பின்னடியார்களில் ஒருவராகப் பிற்பாடு ஆனார் என்று பாரம்பரியமானது தெரிவிக்கின்றது.

அழுதுகொண்டிருந்த ஸ்திரீகள் சுற்றிக்கூட்டம் கூடி நின்றார்கள் மற்றும் அவர்களில் எவரும், உதவிக்கரம் நீட்டவில்லை என்று நாம் எண்ணுகின்றோம். அவர்களை நோக்கி இயேசு: "நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்றார். அவர்கள் மறைவிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் மலைகளையும் குன்றுகளையும் நாடுவார்கள் என்பது தொடர்புடையதான போதகருடைய வார்த்தைகளானது, 37-வருடங்களுக்குப் பிற்பாடு எருசலேமின் அழிவின்போது, யூத ஜனங்கள் மீது வந்ததான மாபெரும் உபத்திரவத்தின் ஒரு பாகம் பற்றியதாகும் என்று வேதத்தினுடைய சில மாணவர்கள் எண்ணுகின்றனர். இன்னுமாக எருசலேமுடைய அழிவும் மற்றும் இந்த உபத்திரவமும், இந்த யுகத்தினுடைய முடிவின் காலங்களில் நடைபெறவிருக்கும் மாபெரும் துன்பங்களை எடுத்துக்காட்டுகின்ற நிழல்களாய் இருக்கின்றது என்றும் எண்ணப்படுகின்றது.

மலைகள் மற்றும் குன்றுகள் தொடர்புடையதாகப் பயன்படுத்தப்பட்ட இதே வார்த்தைகளே, இந்தச் சுவிசேஷயுகத்தினுடைய முடிவு தொடர்புடைய விஷயத்திலும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்பது நிச்சயமே. கிறிஸ்து தம்முடைய இரண்டாம் வருகையின்போது, ஜூவாலித்து எரிகின்ற அக்கினியாகிய நியாயத்தீர்ப்புகளோடு வெளிப்படுகையில், அக்கினியானது தற்போதுள்ள ஒழுங்குகளைப் பட்சித்துப்போட்டு, புதிய இராஜாவுக்காக வழியை ஏற்படுத்துகின்றதாக இருக்கும். ஒருவன் தன்னுடைய ஜீவனை மாய்த்துக்கொள்வதற்கு எளிமையான வழிகள் இருக்கின்றது; ஆகையால் ஒருவன் மலைகள் தன்மேல் விழும்படிக்கு ஜெபம் ஏறெடுப்பான் என்று நாம் எண்ணி விடக்கூடாது. மாறாக சீறுகின்ற உபத்திரவங்களுக்கு எதிராக, அநேகர் பாதுகாப்பையும், மறைவையும் நாடுவார்கள் மற்றும் விரும்புவார்கள் மற்றும் இதற்காக ஜெபம் ஏறெடுப்பார்கள் என்பதே கருத்தாகும். சமுதாயம் எனும் பாறைகள், சமுகத்திற்காக சமுக அமைப்புகளாய் இருக்கின்றன மற்றும் இவை ஒவ்வொன்றும் அதன் சொந்த அங்கத்துவத்தைப் பாதுகாத்திட நாடுகின்றது (லூக்கா 23:28-30).

"பச்சைமரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்?" என்று இயேசு கூறினார் (லூக்கா 23:31). இங்கு அவர் யூத தேசத்தை, தமது சாபத்தினால் (அ) தீர்ப்பினால் உடனடியாகப் பட்டுப்போன அத்திமரத்திற்கு ஒப்பிடுவதாகத் தெரிகின்றது. இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு ஐந்து நாட்கள் முன்னதாக, எருசலேமுக்குக் கழுதையின் மீது ஏறிவந்து, எருசலேமுக்காகக் கண்ணீர்விட்டு, "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும்" என்று கூறினார். அத்திமரமானது பச்சையாக இருக்கக்கூடிய கொஞ்சக்காலத்திலேயே, அதன் அதிகாரிகள், அவரைச் சிலுவையில் அறைந்துபோடத்தக்கதாக, அனைத்து நியாயப்பிரமாணங்களை மீறிடுவதற்கும்,

மனசாட்சி அனைத்தையும் உதறித் தள்ளுவதற்கும் விரும்பும் அளவுக்குத் துணிச்சலான/மூர்க்கத்தனமான நிலைக்கு வந்து விட்டார்கள்.

இவ்வளவுக்கு விரைவாகப் பொல்லாப்பானது மிகவும் கொடிய விதத்தில் நீதியின் வரம்பைக் கடந்து செயல்பட்டுள்ளதானால், பிற்காலங்களில் என்னவெல்லாம் எதிர்ப்பார்க்கப்படலாம்; அதாவது யூத தேசமாகிய அத்திமரமானது, முற்றிலும் பட்டுப்போய்விடும்போதும் மற்றும் அதனிடத்தினின்று உயிர்ச்சாறு (தேவனிடத்திலான பக்தி) அனைத்தும் இல்லாமல் போய்விடும்போதும் என்னவெல்லாம் எதிர்ப்பார்த்திடலாம். இதுபோலவே இந்த யுகத்தினுடைய முடிவிலும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது, பரிசுத்தவான்களானவர்கள் கொடுமைக்கு ஆளாகுவார்கள் மற்றும் இப்படியாகப் பூமியின் உப்பானது எடுத்துவிடப்படும் மற்றும் உடனடியாகப் பரவலாய்ச் சீர்கேடாகிய ஒழுங்கின்மை தொடங்கும்.

## மனுஷக்குமாரன் உயர்த்தப்பட்டார்

இயேசு தாம் சிலுவையில் அறையப்படப்போவதை முன்னமே குறிப்பிட்டுள்ளார்; அதாவது "வெண்கல சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்தில் உயர்த்தப்பட்டது போல, மனுஷக்குமாரனும் உயர்த்தப்பட வேண்டும்" . . . சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இப்படியாக வெண்கல சர்ப்பமானது, இயேசுவுக்கு ஒரு நிழலாகப் பயன்படுத்தப்பட்டது. அவர் உண்மையில் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் ஆவார்; ஆனால் அவர் பாவியின் ஸ்தானத்தை எடுத்தார் . . . அவர் பாவிபோன்று நடத்தப்பட்டார். நியாயப்பிரமாணத்தின் கீழ்க்கடுமையானதொரு தண்டனையாகக் காணப்படுவது, சிலுவையில் அறையப்படுதலாகும் . . . "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்" ஆவான். ஆகையால், இயேசு நமக்காக சாபத்திற்குள்ளானார் என்று அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளார் (கலாத்தியர் 3:13). அவர் பாவம் அறியாதவராக இருந்தபோதிலும், அவர் பாவியினுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொண்டார். வேத வாக்கியங்களின்படி இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்.

"பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்றதான வார்த்தைகள் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டாம்; ஏனெனில் இவைகள் பழைய கிரேக்க மூலப்பிரதிகளில் இடம்பெறுவதில்லை. இன்னுமாக, யூதர்களுடைய பாவங்களானது தண்டனையைக் கொண்டுவரும் என்பதையும் இயேசு அறிந்திருக்க வேண்டும். தேவன் அவர்களைத் தண்டிப்பார் என்றும், அவர்களது பட்டணத்தைச் சுட்டெரித்துப் போடுவார் என்றும் இயேசு தம்முடைய உவமையில் முன்னுரைத்துள்ளார் (லூக்கா 20:14-16). "உங்களுக்காக அழுங்கள்" என்ற வார்த்தையானது, யூதர்கள் தங்கள் பாவங்களுக்காக தண்டனைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதையும், இந்தப் பாவமானது அவர்களுக்கு முழுமையாய் மன்னித்துவிடப்படுவதில்லை என்பதையும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. யூதர்கள் தெய்வீகத் தயவினின்று

இப்பொழுதுவரைக்கும் 18-நூற்றாண்டுகளாகத் துண்டிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்பதை நாம் அறிவோம். இந்தப் பிரகாரமான தெய்வீக ஏற்பாடுகள் தொடர்புடைய அனைத்திலும் பிதாவுடன் இயேசு முழு இசைவுடன் காணப்பட்டார் என்றும், தெய்வீகச் சித்தத்திற்கு எதிராக எதையும் இயேசு வேண்டிக்கொள்ளவில்லை என்றும் நாம் எடுத்துக்கொள்வது சரியே.

இயேசுவை யூதர்கள் புறக்கணித்தக் காலத்தில், அவர்கள்மீது வந்த உபத்திரவம் பற்றியதான மேற்கூறிய காரியத்தைப் பரிசுத்தவானாகிய பவுலும் குறிப்பிட்டுள்ளார்; அதாவது அவர்கள் குறித்து எழுதப்பட்டுள்ளதான அனைத்தும் நிறைவேறித் தீரத்தக்கதாக "அவர்கள்மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது" என்பதாகும் (1 தெசலோனிக்கேயர் 2:14-16).

இன்னொரு பக்கம், யூதர்களுக்காகவும் இயேசு தம்முடைய ஜீவனைக் கொடுத்தவராகக் காணப்படுவதினால், தேவனுடைய பிரதிநிதியென, அவரது குமாரரென யூதர்களிடத்தில் அனுப்பி வைக்கப்பட்டவரைக் கொன்றுப்போட்டதான மாபெரும் பாவத்தின் காரணமான தண்டனையினால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டாம் என்று இயேசு விரும்பமாட்டார் என்பதில் நமக்கு நிச்சயமே. இப்படிப்பட்டதான துணிகரமான பாவத்திற்குரிய நீதியான தண்டனை என்பது, முற்றிலுமாய் அழிக்கப்படுவதாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அப்போஸ்தலனோ நீதியைக் குறித்து இல்லாமல், மாறாக "நன்மையானவைகளை இயேசுவின் இரத்தம் பேசுகின்றதெனச்" சுட்டிக்காட்டுகின்றார் (எபிரெயர் 12:24). இயேசுவின் இரத்தமானது உலகத்தாருக்காக மாத்திரமல்லாமல், யூதர்களுக்காகவும் பாவங்களுக்கான மன்னிப்பைப் பேசுகின்றது. அந்த இரத்தமானது, ஆயிர வருட இராஜ்யத்தின்போது, தேவனுடன் ஒப்புரவாகிக்கொள்வதற்கான முழு வாய்ப்பைக் குறித்துப் பேசுகின்றது.

கொஞ்சம் அறியாமையின் காரணமாக, யூதர்கள் தங்கள் நடத்தைக்கு முழுப் பொறுப்பாளிகளாய் இருக்கவில்லை என்ற கருத்தைப் பரிசுத்தவானாகிய பேதுரு உறுதிப்படுத்துகின்றார். யூதர்கள் சிலரை நோக்கி, அவர் கூறினதாவது: "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்." (அப்போஸ்தலர் 3:17); ஏனெனில் அறிந்தார்களானால் "ஜீவாதிபதியை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே" (அப்போஸ்தலர் 3:15-17). தேவனுடைய ஏற்றவேளையில் முழு உலகத்தின் புரிந்துகொள்ளுதலுடைய கண்கள் திறக்கப்படும் என்று சகரியா தீர்க்கத்தரிசி நமக்குக் காட்டுகின்றார். அனைவரும் காரியங்களை வித்தியாசமாய்ப் பார்ப்பார்கள் மற்றும் யூதர்கள் குறித்தும் விசேஷமாய்க் குறிப்பிடப்பட்டுள்ளது; அதாவது "அவர்கள் தாங்கள் குத்தினவரை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, தங்கள் சிறந்த நண்பனை, தங்கள் மீட்பரை தாங்கள் மோசமாய் நடத்தியுள்ளனர் என்று

உணர்ந்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்." (சகரியா 12:10)

## என் வஸ்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள்

இயேசு மரித்துக்கொண்டிருக்க, நெய்யப்பட்டிருந்ததான அவருடைய வஸ்திரத்திற்காக சீட்டுப்போட்டும், இன்னுமாக அவரது மற்ற உடைகளைத் தங்களுக்குள்ளாகப் பங்கிட்டுக் கொண்டதுமான உண்மையின் வாயிலாக, உரோம போர்ச்சேவகர்களுடைய கல்லான இருதய தன்மை சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. ஆயிர வருட இராஜ்யத்தின் விளைவாகக் கல்லான இருதயங்கள் மாற்றப்பட்டு, உருக்கமான இருதயங்கள் கொடுக்கப்படும் என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தை நாம் பெற்றிருக்கின்றோம். ஆதாமினிடத்தில் ஆதியில் காணப்பட்டதும், பிற்பாடு மனிதனாகிய இயேசுவினிடத்தில் காணப்பட்டதுமான தேவசாயலுக்கும், ரூபத்துக்கும் மனுக்குலம் அனைத்தும் முழுமையாய்ச் சீர்ப்பொருந்தப்படுவது ஓ! எத்துணை அவசியமானதாய்க் காணப்படுகின்றது!

இயேசுவோடுகூட, அவரது இரண்டு பக்கங்களிலும், அதேவேளையில் தண்டனை நிறைவேற்றப்பெற்ற இரண்டு குற்றவாளிகளிலும், உலகத்தினுடைய மனப்பான்மையானது வெளிப்படுத்தப்படுகிறது; இயேசுவினுடைய சிலுவையின்மேல், யூதர்களுடைய இராஜா என்று எழுதி தொங்கவிடப்பட்டிருந்தது. துன்பத்தில் காணப்பட்டு ஒரு குற்றவாளி, இயேசுவை வஞ்சகன் என்று தூஷித்து, இயேசு தம்மையும் மற்றும் தங்களையும் இரட்சித்துக்கொள்வதின் மூலம் தம்முடைய வல்லமை எதையாகிலும் வெளிப்படுத்திட வேண்டும் என்று கூறி நகைத்தான். இயேசு தம்மை இரட்சித்துக்கொள்வாரானால், அவர் உலகத்தினுடைய இரட்சகராக முடியாது என்பதை அந்தக் கள்வன் கொஞ்மும் அறியாதிருந்தான்!

மற்றக் கள்வனோ இயேசு தவறு எதுவும் செய்யவில்லை என்றும், அவர் அநியாயமாய்க் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார் என்றும் கூறி இயேசுவுக்கு ஆதரவு கொடுத்தான். பின்னர் இயேசுவை நோக்கி தான் பேசின இரக்கமான வார்த்தைகளுக்காக, கைமாறு ஒன்றை கேட்டுக்கொண்டதின் வாயிலாக, அவர் மீதான தனது விசுவாசத்தை வெளிப்படுத்தினான். "இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்" (லூக்கா 23:42). அந்தப் பாவப்பட்ட கள்வனானவன், இயேசு தம்மை இராஜா என்று சொன்னதை அறிந்திருந்தான். இயேசுவிடம், "நீர் இராஜாவோ?" என்று கேள்விக் கேட்கப்பட்டபோது, கள்வன் அவர் அருகில் நின்றுகொண்டிருந்தான் மற்றும் "என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" என்று அவர் பதில் கூறினதையும் கள்வன் கேட்டான். இயேசு தோற்றத்திலும், பண்புகளிலும் மிகவும் சிறந்தவராகக் காணப்பட்டபடியால், அவர் இராஜாவாய் இருப்பதற்குப் பாத்திரமானவர் என்று கள்வன் அடையாளங்கண்டுகொண்டான். இயேசு சொல்லுகிறபடி, அவர் உண்மையிலேயே

இராஜாவாக இருப்பாரோ? இவர்தான் மேசியா என்று இறுதியில் நிரூபணமாகுமோ? ஆகையால் உண்மையையாகிலும் சொல்லுவோம் மற்றும் இவர் சார்பில் ஒரு வார்த்தையையாகிலும் சொல்லுவோம் மற்றும் இவர் தமது இராஜ வல்லமையை அடையும்போது, என்னைத் தயவாய் நினைவுகூருங்கள் என்று வேண்டுதலாவது செய்வோம் என்று கள்வன் எண்ணிச் செய்தான்.

இயேசுவின் பதிலானது கடந்த காலங்களில் நம் அனைவராலும் பொதுவாக மிகத் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டிருந்தது. அன்றைய தினமே கள்வன் இராஜ்யத்தில் தம்மோடுகூடக் காணப்படுவான் என்று அவர் வாக்களித்ததாக நாம் எண்ணினோம். ஆனால் மற்ற வேத வாக்கியங்களையும் பார்க்கும்போது, இயேசு அன்றைய தினம் இராஜ்யத்தில் இல்லாமல், மாறாக யோசேப்பினுடைய புதிய கல்லறையில் காணப்பட்டார் என்றும், மூன்றாவது நாள் வரையிலும் அவர் மரணத்திலிருந்து, சியோலிலிருந்து, ஹேடிசிலிருந்து, கல்லறையிலிருந்து உயிருடன் எழுந்திருக்க வில்லை என்றும், தமது உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடுங்கூட அவர் மரியாளிடம்: "நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் ஏறப்போகிறேன்" என்று கூறினார் என்றும் நாம் அறிவோம். அப்படியானால் தாமும், கள்வனும் அன்றைய தினமே பரதீசில் காணப்படுவார்கள் என்று இயேசு சொல்லியிருந்திருக்க முடியாது.

இதோ, உண்மையான விளக்கம்: விழுகையின் காரணமாக 6000 வருடங்களுக்கு முன்னதாகத் தொலைந்துபோனதான பரதீசானது, மேசியாவினால் அவரது மகிமையான இராஜ்யத்தில் திரும்பக்கொடுக்கப்படும். அப்போதுதான் அதாவது, "நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது" - கள்வன் தன்னை நினைத்தருளும்படிக்கு வேண்டிக்கொண்டான். மரித்தது முதல் கள்வன் மேசியாவின் இராஜ்யம் வரும் காலத்திற்காக, மரணத்தில் நித்திரைப்பண்ணி, காத்துக் கொண்டிருக்கின்றான். இயேசு கொடுத்தப் பதிலானது, முழு இசைவுடனே காணப்படுகின்றது; ஆமென், அப்படியே ஆகட்டும் என்று பதிலளித்தார். "இன்றைக்கு (எனக்கு ஒரு நண்பன் இல்லாத இந்த நாளில் மற்றும் எனக்கு ஓர் இராஜ்யம் இருக்கும் என்று தோன்றுவதற்கு அநுகூலமாய் எதுவும் இராததுபோன்று காணப்படும் இன்றைக்கு நான் உன்னிடம் கூறுகின்றேன்), நான் உனக்கு மெய்யாகவே சொல்லுகின்றேன் நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய்" (லூக்கா 23:43, சரியான மொழியாக்கம்).

உலகை பரதீசாக மாற்றும் பணியை, இயேசுவின் இராஜ்யமானது விரைவில் ஆரம்பித்து விடும். மரணத்தில் நித்திரைப் பண்ணிக்கொண்டிருக்கின்றதானவர்களின் உயிர்த்தெழுதலின் போது, அந்தக் கள்வனும் ஆண்டவரினால் நினைவுகூரப்படுவான். சந்தேகத்திற்கிடமின்றி அந்தக் கள்வன் பரதீசில் பெரும் ஆசீர்வாதத்தை அடைகிறவனாய் இருப்பான், காரணம் அவன் சிலுவையில் ஆறுதலான வார்த்தைகளைப் - பேசினதினாலும் மற்றும் அவனுடைய வார்த்தைகளானது, அவன் உருக்கமான மற்றும் தவறுக்காக மனம் வருந்துகிற இருதயம் உடையவன் என்பதைச்

சுட்டிக் காட்டுகின்றதாய் விசேஷமாய் இருப்பதாலும் ஆகும்; இப்படிப்பட்ட இருதய நிலைமை உடையவர்களே இராஜ்யத்தில் ஆசீர்வாதங்களை முதன்மையாய்ப் பெற்றுக்கொள்கின்றவர்களாய் இருப்பார்கள்.

இயேசு தமது தாயாரை, தமது சீஷனாகிய யோவானிடத்தில் ஒப்படைத்த காரியமானது, மரியாளுடைய கணவனாகிய யோசேப்பு உயிரோடில்லை என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இப்படியாக அவர் ஒப்படைத்த காரியமானது, அவரது உச்சக்கட்டமான பாடுகளுடைய வேளையின்போது அவரது அன்புக்குரியவர் களின் நலன் குறித்த போதகருடைய ஆழ்ந்த கவனத்தை நமக்குக் காண்பித்துத் தருகின்றது.

போதகர் மரிக்கும்போது, "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னை கைவிட்டீர்?" என்பதான அவரது வார்த்தைகளானது, அவர் தம்மைப் பரம பிதா என்று சொல்லாமல், மாறாக தேவனுடைய குமாரன் என்று சொல்வதை நமக்கு உறுதிப்படுத்துகின்றது. இது போதகர் எந்த அளவுக்கு முழுமையாய்ப் பாவியினுடைய தண்டனையை அனுபவித்திட்டார் என்பதையும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. பாவத்திற்கான தண்டனை என்பது, மரித்துப்போவதாக மாத்திரம் காணப்படாமல், இன்னுமாகத் தேவனுடனான ஐக்கியத்திலிருந்து துண்டிக்கப் படுதலையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. பாவியினுடைய ஸ்தானத்தை எடுக்கும் இயேசு, ஒரு கணமாகிலும் பாவியினுடைய (உறவு துண்டிக்கப்பட்ட) அந்நியனாக்கப்பட்ட நிலையினை முழுமையாக அனுபவித்தாக வேண்டும்.

"முடிந்தது" என்று போதகர் கூறின வார்த்தைகளானது, முந்தின நாளன்று அவர் கூறி இருந்த வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது. அதென்னவெனில் "ஆகிலும் நான் முழுக வேண்டிய (மரணத்திற்குள்ளான) ஒரு ஸ்நானம் உண்டு, அது முடியுமளவும் (முடிவது வரையிலும்) எவ்வளவோ (சிரமப்பட்டு) நெருக்கப்படுகிறேன்" (லூக்கா 12:50).

"பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்ற வார்த்தைகளானது, இயேசு தம்முடைய ஜீவனை ஒப்புவிக்கின்றார் என்றும், அவர் பெற்றிருந்ததான ஜீவனுக்கான ஆவி என்பது அவரது முந்தின நிலைமையிலிருந்து (இப்போதுள்ள மனித நிலைக்கு) மாற்றப்பட்ட ஒன்று என்றுமுள்ள உண்மைகளை நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆதாம் போன்று ஜீவனுக்கான அவரது உரிமையை, அவர் இழந்து காணப்படவில்லை. ஆகையால் அவரால் அந்த ஜீவனை தமது சொந்த ஆவி என்று சொல்ல முடிந்தது; அதை ஜீவனுக்கான அவரது உரிமை என்றும் அவரால் சொல்ல முடிந்தது. உயிர்த்தெழுதலில் அது அவருக்கு மீண்டுமாகக் கொடுக்கப்படும் என்ற தெய்வீக வாக்குத்தத்தத்தின் காரணமாக, அவர் கொஞ்சம் காலம் அதை ஒப்புவித்தவராகவும், சரணடையப்பண்ணினவராகவும் மாத்திரம் காணப்பட்டார்.

# மாசற்ற தேவ ஆட்டுக்குட்டி

ஜீவியத்தின் பிரகாசமான வேளைதனிலும், மழை பெய்யும் வேளைதனிலும்,
என் அனைத்து துக்கங்களிலும், கசப்பான வலிகளிலும்
என் காதுகள் கேட்கின்றதே, என் இரட்சகர் சொல்வதையே:
"யான் அறிவேன்! யான் அறிவேன்! யானும் ஒரு காலத்தில் களிமண்ணாய் இருந்துள்ளேனே;
நீ இப்பொழுது நடக்கின்றாயே, அதே பாதையில் யானும் நடந்துள்ளேனே;
மரித்தோர்க்காய் துக்கித்தவர்களோடு யானும் புலம்பியுள்ளேனே.

வானம்பாடியின் கானம் எத்துணை இனிமையென அறிவேன்;
கோடைக்கால வானம் அழகாய் இருந்ததே மனிதக் கண்களால் அதைக் காணும்போதே.
இளவரசியின் அறை அருகே இருந்த மலர்களைப்போலவே,
விவசாயியின் குடிசை அருகே இருந்த மலர்களும் மணம் வீசினதே;
இவையாவும் எம்மால் உண்டாக்கப்பட்டதே.

முன்கூட்டியே பலிபீடத்தில் பாவங்களுக்கென்று எந்தன் ஜீவனை பலியாய் யான் வைத்தேனே;
மாம்சமாக்கப்பட்டு யான் மனுஷர் மத்தியில் சஞ்சரித்தவனானேன்;
விரும்பி ஏற்பாரில்லை அங்குத் தனிமையில் நடந்தேனே –
எமக்குச் சொந்தமானவர்களுக்கு அந்நியனானேன்.
வெறுக்கப்பட்டேன், வேட்டையாடப்பட்டேன், மறுதலிக்கப்பட்டேன்,
இறுதியில் அவர்களால் சிலுவையில் அறையப்பட்டேன்;

வெகு முன்னே இதைக்குறித்து அறிவுறுத்தப்பட்ட யான்,
துரோகியின் முத்தத்தால் குறுகிபோகவில்லையே;
மரணத்தினாலான எம் உடன்படிக்கை உலகத்தோற்றத்திற்கு முன்னே ஏற்படுத்தப்பட்டதே.
எம் மேல் விழும் அடிகளும், உமிழ்தல்களும்,
எம் நாமத்தின்மேல் சுமத்தப்படும் அவமானங்களும்
எம் பிதா எமக்கு அறிவித்திருந்தாரே.

யான் சுதந்திரமாய் இருந்தபோதே இவைகளை அறிந்தபோதிலும்,
யான் மகிழ்ச்சியாய் நிறைவேற்றினேனே மோசேயின் நியாயப்பிரமாணத்தையே.
யான் ஒருமுறையேனும் திரும்பியதில்லையே,
ஒரு கணம்கூட யான் பண்ணின உடன்படிக்கையிலிருந்து பின்வாங்கியதில்லையே.
பாழாக்கப்பட்ட இனத்தை மரணத்திலிருந்து காப்பாற்றவும், பூமியை மகிமையான இடமாக்கவும்
செலுத்த வேண்டிய விலையை மாற்றிட முயலவுமில்லையே."

ஆம், அவர் சுமந்த சிலுவை மிகப் பாரமானதே, அவர் கடந்தப் பாதை இருளானதே
அவர் தேவனால் சபிக்கப்பட்டவரைப் போல், தேவ அன்பிற்கு பாத்திரமற்றவர் போல்,
தேவனுடைய கிருபையை எதிர்த்த ஒரு கலகக்காரன் போல்,
நம்மைக் காப்பாற்றிட நிற்கவேண்டியது அவசியமானதே.

நம்முடைய பாவங்களுக்காக பிதா தமது முகத்தை அவரைவிட்டுத் திருப்பியதால்
அவர் கதறி அழுதாரே: "என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?"
அவர் இருதயம் நொறுங்கியே மரித்தாரே – நாம் அனைவரும் விடுவிக்கப்படும்படியே.

பலிபீடத்தின் மீது பலியாய் தம் பரிபூரண ஜீவனை வைத்திட்ட
அவருக்கான அன்பின் கடனை ஒருபோதும் நாம் செலுத்தித் தீர்த்திட முடியாதே;
இந்த அற்புதமானப் பரிசுக்காக எப்போதும் துதிசெலுத்துவோமாக.
மரணத்தையும், பாவத்தையும் முடிவுக்குக் கொண்டு வந்து
ஆளுகை செய்யப்போகிற அவருக்கு எப்போதும் துதிசெலுத்துவோமாக.

- Poems of the Way, p. 33

## அன்றாட பாத்திரம்

"இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு" - சங்கீதம் 116:13.

தமது அன்பான முகத்தில் இனிமையான புன்முறுவலுடனே
எந்தன் ஆண்டவர் கிருபையின் பாத்திரத்தைக் கையில் ஏந்தினவராய்:
"அன்பே, இன்றைய தினம், நீ பானம் பண்ணுவாயா?" என்று கேட்டிட்டாரே.

ஓ! என் நேச மணவாளனே, நான் மிகவும் பெலவீனனாய் இருக்கின்றேனே!
நான் பின்வாங்கிப்போவதற்கு ஏதுவாய் என் சத்துருக்கள்
இப்பொழுதும் நாடிக்கொண்டிருக்கின்றனரே என்றேன்.

இன்றைக்கான பாத்திரம் கசப்பான காடிப்போன்று தெரிகின்றதே,
நீர் இதைப் பானம் பண்ணிடுவதற்கு, உம் ஜீவனையும் பலியாக்கினீரே -
ஆண்டவரே, என் விசுவாசத்தை வர்த்திக்க வேண்டுமே என்றே வேண்டுகின்றேனே.

ஆண்டவரோ: "என் புறாவே, நீ இதைத் தினந்தோறும் பானம் பண்ணத்தக்கதாய்
உனக்காகவே இப்பாத்திரம்தனை யான் எத்துணை கவனமாய்க்
கவனிக்கின்றேன் என்பதையே உனக்குக் காண்பித்திடுவேன் வா."

### ஒரு காட்சி இதோ:

ஓ! என் ஆண்டவரே எத்துணை அருமையான ஒரு வெளிப்படுத்துதல்!
கண்டேனே நான் எந்தன் ஆன்மாவின் கடுமையான யுத்தக்களத்தையும்,
நான் அஞ்சிடும் எந்தன் சத்துருக்களையுமே.

உலகமும், மாம்சமும், சாத்தானும்,
அனைவரும் தங்கள் பொல்லாத வேடத்தில்
திட்டம் தீட்டுகின்றனரே தீமைதனையே.

சாத்தானோ: "நான் பாத்திரத்தில் கடுமையானப் பிரச்சனைகளை நிரப்புகின்றேனே,
விளிம்பு நிறையும் வரை ஊற்றுகின்றேனே - அதை விஷமான மருந்தாக்கிடுவேனே.
இத்தகையதோர் மரணத்தினின்று மணவாட்டி ஒவ்வொரு முறையும் அஞ்சி
பின்வாங்கத்தக்கதாய் ஒவ்வொருமுறை பானம் பண்ணுகையிலும்,
அது மிகவும் கசந்து காணப்படப்பண்ணுவேனே"
என்றே சாத்தான், பொல்லாப்பாய் நகைத்தானே நகைத்தானே.

உலகமும், மாம்சமும், அதன் அறியாமையில், பொல்லாங்கனுக்கு உதவிக்கரம் நீட்டிடவே,
எந்தன் ஆன்மா அவைகளின் வல்லமை பயங்கரமாய்க் காணப்பட்டதை உணரமுடிந்ததே.

திரும்பி, ஏறெடுத்துப் பார்த்திட்டேனே எந்தன் மணவாளனுடைய முகத்தையே
அவர் முகத்தின் மகிமையினால் அனைத்து இடங்களும் நிரம்பிக் காணப்பட்டதே,
அவர் கண்கள் அக்கினி ஜூவாலையாய் இருந்ததே.

ஆண்டவரோ: "எம் மணவாட்டியினுடைய சத்துருக்களே ஓடிப்போய்விடுங்கள்! ஓடிடுங்கள்!
பாத்திரம் எம்முடையது!" என்று அவர் கண்டிப்புடன் சத்திமிட்டாரே;
"இப்பாத்திரம்தனை யான் அன்றாடம் கவனித்து காத்துவருகின்றேனே" என்றார்.

"எந்தன் மணவாட்டி கிருபைக்காக எம்மை நோக்கினாலே போதுமே,
அவளது இயலாமையான வேளைதனில், எதுவும் போய்விடாதே
அவள் திராணிக்கு மிஞ்சியே" என்றார்.

அவர் என்னை கனிவாய் நோக்கியே:
"என் அன்பே, நீ கண்ட காட்சியினால் பலப்படுத்தப்பட்டாயா?
இனி உந்தன் சத்துருக்களை எதிர்க்கொள்வாயா?" என்று கேட்டார்.

அருமை ஆண்டவரே, என்னை மன்னித்தருளுமே என்று தாழ்மையுடன் அழுதேனே,
எந்தன் ஆத்துமாவை மீட்பதற்கு மரித்தவர் என் அருகில் உள்ளாரே,
பாத்திரத்தை அவர் கையில் பிடித்திருக்கிறாரே என்பதை மறந்துபோனதற்காய்
எந்தனை மன்னித்தருளுமே என்று அழுதேனே.

மகிழ்ச்சியாய் கையில் வாங்கிட்டேனே அந்த அன்பின் பாத்திரத்தையே,
மகிழ்ச்சியாய் அதை உயர்த்திப் பிடித்திருக்கின்றேனே,
உம்மோடு அதில் பங்குகொள்வது பிரமாண்டமாய் உள்ளதே!

ஒருவேளை இந்நாளில்தானே நான் பானம் பண்ணுகையில்,
மாம்சம் அடிபணிய தொடங்குகின்றதென்றால்,
சந்தோஷத்தின் பாத்திரத்தில் நான் பானம் பண்ணும்வரை இப்படியாகவே இருப்பதாக.

ஓ! எத்தகைய கிருபையின் ஆச்சரியமான அற்புதமிது,
பாத்திரத்தை என் உதடுகள் தொட்டமாத்திரத்தில்,
என் அருமை மணவாளனுடைய முகத்தில் புன்முறுவல் வந்ததே.


எந்தன் ஆத்துமாவில் திவ்விய சமாதானம் நிரம்பினதே!
இந்தச் சமாதானத்தை மாத்திரம் நான் கண்டடையாமல்,
எந்தன் இருதயம் சந்தோஷத்தையும் கண்டடைந்ததே.

ஆகையால் எந்தன் பிரியமானவரின் கைகளிலிருந்து
நான் ஒவ்வொரு நாளும் பாத்திரம் வாங்கும்போது,
சாந்தமாய்க் கிருபைக்கான வேண்டுதலுடன் அவரை ஏறெடுத்துப் பார்க்கின்றேனே.

அவர் எனக்குக் கிருபையும் தருகின்றாரே. திவ்விய சமாதானமும்,
அன்பும், விசுவாசமும், சந்தோஷமும் எனக்குச் சொந்தமானதே,
அவர் முகத்தை நான் ஜெபத்தில் ஏறெடுத்துப் பார்க்கையில்.

அவரது இராஜ்யத்தில் அவரோடு ஆளுகை செய்திடவே, பாத்திரத்தைப் பருகி
முடித்திட வேண்டும் என்ற விசுவாசத்தில் எந்தன் நம்பிக்கை உள்ளதே!
பின்னர் அவர் கிருபையால் ஜெயங்கொள்ளவே -
உரிமையாக்கிடுவேனே சந்தோஷத்தின் பாத்திரம் தனை!

- Lillas S. Ward, Reprints, p. 5868



## நினைவுகூருதலின் தியானங்கள்

# புதுச் சிருஷ்டியின் பஸ்கா



# புதுச் சிருஷ்டியின் பஸ்கா

*"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்."*—1 கொரிந்தியர் 5:7, 8

நிழலான இஸ்ரயேலின் அனுபவங்களுக்குள் குறிப்பிடத்தக்கதாக இருந்தது பஸ்காவாகும். பஸ்கா பண்டிகையானது, ஒவ்வொரு வருடமும் முதலாவது மாதத்தில் பதினைந்தாம் நாளன்று தொடங்கி ஏழு நாட்களுக்குக் கொண்டாடப்பட்டது. அது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரயேல் ஜனங்கள் மீட்கப்பட்டதைப் பொதுவான முறையில் கொண்டாடியது; ஆனால் குறிப்பாக, சங்காரம் கடந்துபோகுதல் அல்லது ஜீவனைத் தப்புவித்தல் - எகிப்தியர் மேல் வந்த மரணம் என்ற வாதையிலிருந்து இஸ்ரயேலரின் முதற்பேறானவர்களைத் தப்புவிக்கும்படியாகக் கொண்டாடப்பட்டது. கடைசியாக வந்த இந்த வாதை இஸ்ரயேலர்களை அவர்களுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும்படியாக பலவந்தம் பண்ணிற்று. இஸ்ரயேலின் முதற்பேறானவர்களைக் கடந்து சென்றது, முழு இஸ்ரயேலும் விடுவிக்கப்படுவதற்கும், எகிப்தின் அடிமைத்தனத்தினின்று சுதந்திரத்திற்குப் பாதுகாப்பாக சிவந்த சமுத்திரத்திற்குள்ளாக கடந்து செல்வதற்கும் முன்னோடியாக அமைந்தது. அவர்களுடைய தேசம் பிறந்ததற்கு மிகவும் நெருங்கியுள்ள இவ்வளவு முக்கியமான ஒரு சம்பவம் சரியான விதத்தில் நினைவுகூரப்படுவதை நாம் காண்கிறோம்; ஆகவே இன்றைக்கும் இது யூதர்களால் கொண்டாடப்படுகிறது. புதுச் சிருஷ்டியின் அங்கங்கள், நிழலான ஜனங்களான மாம்சீக இஸ்ரயேல் மேலும், முழு மனுக்குலத்தின் மேலும், அவர்களுடைய பரம பிதா செய்யும் எல்லாக் காரியங்களிலும் ஒழுங்குமுறைகளிலும் அவர்கள் ஆர்வம் காட்டுவது போல், அந்தச் சம்பவங்களிலும் அவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். ஆனால் புதுச் சிருஷ்டி எகிப்தில் நடந்த காரியங்களில் இன்னும் அதிகமான ஆர்வம் வைத்திருக்கிறார்கள்; ஏனெனில் மாம்சீக இஸ்ரயேலுக்கு நடந்த காரியங்கள் எல்லாம், புதுச் சிருஷ்டியாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கு முன்மாதிரியாகவும் இன்னும் அதிகமான காரியங்களில் திவ்விய திட்டத்தில் நிழலாகவும் இருக்கும்படியாக திட்டமிடப்பட்டிருந்ததென்கிற இரகசியத்தை அவர்களுக்குக் கர்த்தர் வெளிப்படுத்தினார்.

இந்த ஆவிக்குரிய விஷயங்களைப் பற்றி அப்போஸ்தலர் அறிக்கையிடுகிறதாவது: "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரிய வைகளை ஏற்றுக்கொள்ளான்; . . . அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். நமக்கோ (புதுச் சிருஷ்டிக்கு) தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்." (1 கொரிந்தியர் 2:14, 10) நமக்குச் சில தடயங்களைக் கொடுக்கும்படியாக, தேவன் அப்போஸ்தலர்களை தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுபவர்களாக உபயோகப்படுத்தினார்; இதன் மூலமாக அவருடைய ஆவியின் வழிநடத்துதலின்கீழ் தேவனுடைய ஆழமான விஷயங்களை நாம் அறிந்துகொள்ளலாம். இந்தத் தடயங்களில்

ஒன்றை இந்த அதிகாரத்தின் தலைப்பில் இருப்பதைக் காணலாம். அப்போஸ்தலர் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து, மாம்சீக இஸ்ரயேல் தேவனுடைய எல்லா ஜனங்களுக்கும் நிழலாக இருந்தது, அதாவது ஆயிரம் வருட யுக இறுதிவரையிலும், அவருடைய ஜனங்களாக மாறுகின்றவர்களை நிழலாகக் காட்டியது; எகிப்தியர்கள் தேவனுடைய ஜனங்களுக்கு எதிராளிகளையும், அவர்களுடைய இராஜா பார்வோன் பொல்லாப்புகளின் பிரபுவும், அந்தகார லோகாதிபதியுமாகிய சாத்தானையும் நிழலாகக் காட்டியது; பார்வோனின் வேலைக்காரரும் குதிரை வீரர்களும், விழுந்து போன தூதர்களையும், சாத்தானோடு தங்களைச் சேர்த்துக் கொண்டுள்ள அல்லது சாத்தானோடு சேர்ந்துகொண்டு ஆண்டவருக்கும் அவருடைய ஜனமான புதுச் சிருஷ்டிக்கும் பொதுவாக விசுவாச வீட்டாருக்கும் எதிராளியாக இருக்கிற மனிதர்களையும் நிழலாகக் காட்டுவதை நாம் தெளிவாகக் காண்கிறோம். இஸ்ரயேல் ஜனங்கள் விடுதலைக்காக பெருமூச்சு விட்டு, தங்களுடைய எஜமானர்கள் கரத்தில் துன்பம் அனுபவித்தார்கள்; அவர்கள் பெலவீனர்களாகவும், தங்களைத் தாங்களே விடுவித்துக்கொள்ள இயலாதவர்களாகவும் இருந்தார்கள்; ஆனாலும் தேவன் அவர்களுக்காக மோசேயை அவர்களை விடுவிக்கிற இரட்சகராக அனுப்பாதிருந்தால் அவர்கள் தங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து ஒருபோதும் விடுவித்திருக்க முடியாது. அதுபோன்றே, கடந்த காலத்திலும் தற்காலத்திலும் மனுக்குலமானது "இந்த உலகத்தின் அதிபதியின்" கீழ் அவனுடைய சேனைகளாகிய பாவத்திலும் மரணத்திலும், பெருமூச்சு விடுவதையும், கர்ப்பவேதனை அனுபவிப்பதையும் காண்கிறோம். இந்தக் கோடிக்கணக்கான ஜனங்கள் தங்களுடைய சொந்த பெலவீனத்திலிருந்தும், பாவத்திலிருந்தும், அதன் அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலையாகும்படியாகவும், இவைகளின் தண்டனையாகிய வேதனையிலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுவிக்கப்படும்படியாகவும் வாஞ்சிக்கிறார்கள். தெய்வீக உதவியில்லாமல் மனுக்குலமானது சக்தியற்றது. ஒரு சிலர் மிகவும் பாடுபட்டு ஏதோ ஒன்றைச் சாதித்துவிடுகிறார்கள், ஆனால் ஒருவரும் இலவசமாய் பெறுவதில்லை. ஆதாமின் சந்ததியினர் அனைவரும் பாவத்திற்கும் மரணத்திற்கும் அடிமைப்பட்டு இருக்கிறார்கள், அவர்களுடைய ஒரே நம்பிக்கை தேவனிடத்தில் இருக்கிறது. அவர் மெய்யான மோசேயின் மூலம் ஏற்ற காலத்தில் தம்முடைய ஜனங்களை விடுவிப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்; இரண்டாம் மரணத்திற்கு அடையாளமாக இருக்கிற சிவந்த சமுத்திரத்தின் வழியாகக் கொண்டு வருவார்; பார்வோனும் அவனுடைய சேனைகளும் உண்மையான சிவந்த சமுத்திரத்தில் அழிக்கப்பட்டது நிழலாக இருந்தது போல சாத்தானும் அவனோடு சேர்ந்து இருக்கிறவர்களும் அல்லது அவனுக்கு இரக்கம் காட்டுகிறவர்களும், அவனுடைய பொல்லாத வழியில் செல்லுகிறவர்களும் இந்த இரண்டாம் மரணத்தில் நித்தியமாக அழிக்கப்படுவார்கள் என்பதற்கு இது நிழலாக உள்ளது. ஆனால் தேவனுடைய பிள்ளைகள் "இரண்டாம் மரணத்தினால் சேதமடைவதில்லை."

மேலே சொல்லப்பட்டது ஒரு பொதுவான விளக்கம். ஆனால் அதற்குள் அதன் ஒரு பகுதியாக ஒரு குறிப்பிட்ட விளக்கம் இருந்தது; அது பொதுவான மனுக்குலத்தைக்

குறிப்பிடவில்லை; அவர்கள் பாவம், மரணம் என்னும் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாவதைக் குறிப்பிடவில்லை; ஆனால் அவர்கள் மத்தியில் உள்ள ஒரு விசேஷமான வகுப்பினரான முதற்பேறானவர்களைக் குறிப்பிட்டது. அவர்கள் நிழலாயிருக்கிற உண்மைப் பொருளாகிய புதுச் சிருஷ்டியைக் குறிக்கிறார்கள்; "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபை" என்று ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வார்த்தைகளை நம் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். நிழலில், முதற்பேறானவர்கள் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறார்கள் – அவர்கள்தான் சுதந்தரவாளிகள்; அவர்கள் தங்களுடைய சகோதரர்களுக்கு முன்னதாகவே ஒரு விசேஷமான பரீட்சைக்கு அல்லது சோதனைக்கு உட்படுத்தப்பட்டதிலும் ஒரு விசேஷமான இடம்தான் அவர்களுக்கு இருந்தது; எகிப்தை விட்டு வெளியேறுவதற்கு முன்னரே அவர்கள் மரணத்திற்குப் பாத்திரமுள்ளவர்களாக இருந்தார்கள். மேலும் யாத்திரையின் போது (Exodus) இந்த முதற்பேறானவர்கள் அதில் ஒரு விசேஷமான இடத்தைப் பெற்றிருந்தார்கள். பொதுவான மீட்பில் அவர்கள் ஒரு விசேஷமான வேலையைச் செய்ய வேண்டியிருந்தது; அவர்கள் பிரித்தெடுக்கப்பட்ட வகுப்பினராக லேவி கோத்திரத்தைக் குறிப்பிடும்படியாக இருந்தார்கள்; தேசத்தில் அவர்களுக்கு இருந்த சுதந்திரத்தை முற்றுமாக துறந்து, அவர்களுடைய சகோதரர்களிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டார்கள். ஒரு திவ்விய ஒழுங்கின்படி அவர்களுடைய சகோதரர் களுக்கு போதகர்களாக இருக்கும்படியாகவும் பிரித்தெடுக்கப்பட்டார்கள்.

இந்தக் கோத்திரம் அல்லது லேவி வீட்டார் என்பது விசுவாச வீட்டாருக்குத் தெளிவான அடையாளமாக இருக்கிறது. இது அடுத்தபடியாக ஆயத்தமாக்கப்படுகிற இராஜரிக ஆசாரியத்துவத்திற்கு அடையாளமாகக் காட்டப்படுகிறது; இது சகோதரர்களுக்காக பூலோகக் காரியங்களில் உள்ள சுதந்திரத்தை விட்டுக் கொடுக்கிறது; மேலும் இதுதான் உண்மையிலேயே மெல்ல மெல்ல இராஜரிக ஆசாரியத்துவத்தை ஏற்படுத்தும். இதன் பிரதான ஆசாரியராக ஆண்டவர் இருப்பார்; இது ஆயிரம் வருட யுகத்தின்போது உலகத்திற்கு போதித்து, அதை ஆட்சி செய்து, ஆசீர்வதிக்கும். எகிப்தில் உள்ள இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் மரணத்திற்கு பாத்திரமாக இருந்தார்கள், ஆனால் மரணம் அவர்களைக் கடந்து சென்றது, அதிலிருந்து தப்பினார்கள், உலகத்தில் உள்ள சுதந்திரத்தை இழந்து ஆசாரியத்துவத் தைப் பெற்றுக்கொண்டார்கள்; ஆகவே தற்காலத்திய முதற்பேறானவர்களின் மெய்யான சபை இரண்டாம் மரணத்திற்குப் பாத்திரமாக உள்ளது. எஞ்சியுள்ள மனுக்குலத்திற்கு முன்னதாகவே, நித்திய வாழ்வுக்கு அல்லது நித்திய மரணத்திற்கான அவர்களுடைய பரீட்சையை அல்லது சோதனையை அடைந்து மரணத்திலிருந்து, மீட்பரின் இரத்தம் மற்றும் மரணத்தின் புண்ணியத்தால் ஜீவனுக்குள் கடந்து செல்கிறார்கள்.

அவர்களுடைய ஆண்டவரின் கிருபையில் பங்குள்ளவர்களாகி, அவர்களுடைய பூலோக சுதந்திரத்தை, பூலோகத்திலுள்ள பங்கை, பூலோக வாழ்க்கையை விட்டுக்கொடுத்து அல்லது பலியாக செலுத்தி, பரலோகத்தையும் அதன் பரிபூரண ஜீவனையும் அடைகிறார்கள். இப்படியாக புதுச் சிருஷ்டியான,

முதற்பேறானவர்களின் சபை எல்லா மனிதரைப் போன்று செத்து, பூலோகக் காரியங்களில் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக இழப்பது போலவும், துறப்பது போலவும் காணப்பட்டாலும், ஜென்ம சுபாவமுள்ள மனிதன் இதைப் புரிந்துகொள்ளாவிட்டாலும், இவர்கள் மேல் மரணம் கடந்துசென்றது அல்லது மரணத்திலிருந்து மீட்கப்பட்டார்கள்; மேலும், இராஜரிக ஆசாரியர்களாகத் தங்களுடைய பிரதான ஆசாரியரான இயேசுவோடுகூட மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் பங்குள்ளவர்களாவார்கள். இவர்களின் இந்தக் கடந்துபோகுதல் சுவிசேஷ யுகத்தில் இரவு நேரத்தில் நடைபெறுகிறது, ஆயிரம் வருட காலை விடிவதற்கு முன்னால் அதன் நீதியின் சூரியன் உதயமாவதற்கு முன்னால் நடைபெறுகிறது. இவர்கள் ஆண்டவரின் சேனைகளின் தலைவர்களாயிருந்து, பாவம், சாத்தான் என்னும் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பார்கள். இது எப்படி அப்போஸ்தலருடைய கூற்றோடு ஒத்திருக்கிறது என்பதை கவனியுங்கள். (ரோமர் 8:22,19) "சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது" – "தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது." முதலாம் உயிர்த்தெழுதலில் மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் முதற்பேறானவர்களின் சபை முழுமையாகக் கடந்து போவதற்குக் காத்துக்கொண்டிருக்கிறது.

ஆனால், இப்பொழுது, இந்த 'நிழலின்' இன்னொரு அம்சம் முக்கியமானது. நிழலான முதற்பேறானவர்களைச் சங்காரம் கடந்து போவதற்கும், நிழலான ஆண்டவருடைய எல்லா ஜனங்களும் வர இருக்கிற மீட்பைப் பெறுவதற்கும், பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதும், அதன் இரத்தம் வீட்டின் நிலைக்கால்கள் மேலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்படுதலும், அந்த இராத்திரியிலேயே அதன் மாம்சத்தைக் கசப்பான கீரையோடும், புளிப்பில்லா அப்பத்தோடும் புசித்தலும் அவசியமாயிருந்தது. இப்படியாக இஸ்ரயேலில் உள்ள ஒவ்வொரு வீடும் விசுவாச வீட்டாருக்கு அடையாளமாக இருந்தது; ஒவ்வொரு ஆட்டுக்குட்டியும் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற ஆட்டுக்குட்டியானவருக்கு அடையாளமாக இருந்தது; மேலும் ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள முதற்பேறானது, தலையும் சரீரமும் சேர்ந்த கிறிஸ்துவுக்கு – புதுச் சிருஷ்டிக்கு அடையாளமாக இருந்தது; கசப்பான கீரைகள் தற்காலத்துச் சோதனைகளுக்கும், உபத்திரவங்களுக்கும் அடையாளமாய் இருந்தது, அது ஆட்டுக்குட்டியானவருக்கும், புளிப்பில்லா அப்பத்திற்கும் விசுவாச மார்க்கத்தார் அதிக வாஞ்சையுள்ளவர்களாக இருக்கவும் உதவுகிறது. மேலும் ஒவ்வொரு வீட்டாரும் தடியை கையில் வைத்துக்கொண்டு சாப்பிடவேண்டும், மேலும் அரைகளில் கச்சையைக் கட்டிக்கொண்டு யாத்திரைக்கு ஆயத்தமாய் இருக்கவேண்டும் என்பது, இந்தச் சுவிசேஷயுகத்தின் இரவு நேரத்தில் ஆட்டுக்குட்டியில் பங்குபெறுகிற முதற்பேறானவர்களும் விசுவாச மார்க்கத்தாரும் இந்த உலகத்தில் அன்னியரும், பரதேசிகளுமாய் இருப்பார்கள் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது. இவர்கள்

பாவம், மரணம் ஆகியவற்றின் அடிமைத்தனத்தை உணர்ந்து, ஆண்டவரால் பாவத்திலிருந்தும், அழிவிலிருந்தும் விடுதலைக்குள்ளாகவும், தேவ புத்திரரின் சுயாதீனத்திற்குள்ளாக வழிநடத்தப்படவும் வாஞ்சையுள்ளவர்களாக இருப்பார்கள்.

## நம்முடைய ஆண்டவரின் ஞாபகார்த்தம்

முதலாம் மாதம் 14-ஆம் தேதி – யூதர்கள் கொண்டாடுகின்ற ஏழு நாள் பஸ்கா பண்டிகையின் முந்தின தினத்தில் – இந்த நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதற்கு இசைவாக இருக்கும்படியாக, மெய்யான பஸ்கா ஆட்டுக்குட்டியும் "உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியுமான" நம்முடைய ஆண்டவர் மரித்தார். அவர் முப்பது வயதானபோது மரணத்திற்குள்ளான அவரது ஞானஸ்நானத்தில் தொடங்கப்பட்ட அவரது பலியை, வேறு எந்த நேரத்திலும் மரணத்தில் முடிக்க நம்முடைய ஆண்டவருக்கு சாத்தியம் இல்லாதிருந்தது. ஆகவேதான் யூதர்கள் அநேகந்தரம் அவரைக் கொல்ல முயற்சித்தாலும், ஒருவரும் அவர் மேல் கைபோடவில்லை; ஏனெனில், "அவருடைய வேளை இன்னமும் வரவில்லை." (யோவான் 7:8, 30)

யூதர்கள் முதலாம் மாதம் பத்தாம் தேதியில் பலிக்கான ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளும்படியாகவும், தங்களுடைய வீடுகளில் அந்த நாளில் அதைப் பெற்றுக்கொள்ளும்படியாகவும் கட்டளையிடப்பட்டபடியே, ஆண்டவரும் அதற்கேற்ற வாறே அந்த நாளில் அவர்களிடம் தம்மை ஒப்புக்கொடுத்தார்; பஸ்கா பண்டிகைக்கு ஐந்து நாட்களுக்கு முன்பாக, அவர் கழுதைக்குட்டியின் மேல் ஏறினவராய் பட்டணத்திற்குள் வந்தார், அப்பொழுது திரளான ஜனங்கள் "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா, கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" என்றார்கள். "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ (ஒரு ஜாதியாக) அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரை (தனிப்பட்டமுறையில்) ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளா கும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்." ஒரு தேசமாக, அதன் பிரதிநிதிகளாக இருக்கிற ஆட்சியாளர்கள் மூலம் அவரை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக அவரை நிராகரித்தார்கள், அதன் மூலம் அவர்கள் தங்கள் சத்துருவின் பக்கம் இருப்பதை அவ்வேளையில் காண்பித்தார்கள். இருந்தபோதிலும், தேவனுடைய கிருபையில் புது உடன்படிக்கையின் இரத்தம் யாக்கோபின் குடும்பத்தினருக்கு வல்லமை உள்ளதாக இருப்பதோடுகூட, தேவனோடு ஒருமனப்பட்டவர்களாய் இருக்க விரும்புகிற எல்லோர் மேலும் வல்லமை உள்ளதாய் இருக்கிறது. அவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் புண்ணியத்தில் பங்குள்ளவர்களாய் இருந்தார்கள், இருந்தாலும் மெய்யான ஆட்டுக்குட்டியானவரில் புசிக்க மறுத்துவிட்டார்கள். அவர்கள் ஒரு ஜாதியினராக, முதற்பேறானவர்களாக, இராஜரிக ஆசாரியர்களாக, பரிசுத்த ஜாதியாக, மேசியாவின் விசேஷ ஜனங்களாக ஆகும் சந்தர்ப்பத்தை இழந்து விட்டார்கள்; அவர்கள் கடந்து போகின்ற தருணத்தையும், பரிபூரணமான மகிமையும், கனமும், அழியாமையும் உள்ள

வாழ்வுக்குரிய புதுச் சிருஷ்டியின் அங்கங்களாகும் தகுதியையும் இழந்து விட்டார்கள். ஆனாலும் வேதத்தில் இன்னொரு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் தேவ ஆட்டுக்குட்டியை ஏற்றுக்கொள்ள மகிமையான வேறு ஒரு தருணம் அவர்களுக்கு உண்டு என்றும், அதை ஏற்றுக்கொள்ளவும், அவருடைய மாம்சத்தில், பலியில் புசிக்கவும் அவர்களுக்கு ஒரு மகிமையான தருணம் உண்டு என்றும் சொல்லப் பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்வதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்; இதன்படி பாவம், மரணம் என்னும் அடிமைத்தனத்திலிருந்து முதற்பேறானவர்களின் உண்மையான சபையும் ஆவிக்குரிய இஸ்ரயேலருமாகிய, ஆண்டவருடைய உண்மையான சகோதரர்களுக்குக் கீழாகவும், ஆண்டவருடைய தலைமைக்குக் கீழாகவும் இருந்து தப்புவார்கள் என்று வேதத்தில் வேறு பகுதியில் சொல்லப்பட்டுள்ளது என்று கேள்விப்படுவதில் நாம் சந்தோஷம் அடைகிறோம் (ரோமர் 11:11-26).

நம்முடைய ஆண்டவரின் ஊழியத்தில் இறுதி கட்டத்தில், முதலாம் மாதம் 14-ஆம் தேதியன்று, "அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே,"அவர் மரித்த அதே நாளிலே நிஜமான ஆட்டுக்குட்டியாக, யூதர்களின் நிழலான பஸ்காவை தம்முடைய சீஷர்களோடு கொண்டாடினார். அவருடைய பன்னிரண்டு சீஷர்களோடு போஜனம்பண்ணி, நிழலாயிருந்த ஆட்டுக்குட்டி அவருக்கே அடையாளமாக இருந்தது; உலகத்தின் பாவங்களுக்காகத் தம்முடைய சொந்த பலியாக இருந்தது; அது "உண்மையான மாம்சமாக" இருந்தது; இதன் பெலத்தினால் மாத்திரமே ஜீவனும், தேவபுத்திரரின் விடுதலையும், ஆசீர்வாதங்களும் கிடைக்கப் பெறுகின்றன. நம்முடைய ஆண்டவரின் மரணத்திற்கு முந்திய இராத்திரியில், இந்தப் போஜனத்தை அவர் புசித்திருந்தாலும் அதே நாளன்றே அது எப்படிச் சாத்தியமானது என்றால், யூதர்களின் வழக்கப்படி ஒரு நாளானது நடுராத்திரியில் அல்ல சாயங்காலத்தில் ஆரம்பமானது. ஆண்டவர் இஸ்ரயேலின் எல்லாக் காரியங்களையும் அவர்கள் செய்ய வேண்டியிருந்த மாதிரிகளின்படியாகவே ஆண்டவர் ஒழுங்குபண்ணினார் என்பது தெரிகிறது.

"நியாயப்பிரமாணத்திற்குக் கீழாக" பிறந்த யூதர்களாக இருந்தபடியால் நம்முடைய ஆண்டவருக்கும் அவருடைய சீஷர்களுக்கும் இந்த மாதிரியை, அதற்குரிய நேரத்தில் கொண்டாடுவது கடமையாயிருந்தது. ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை புளிப்பில்லா அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் புசிப்பதன் மூலம், ஒருவேளை வழக்கத்தின் பிரகாரம் திராட்சரசத்தோடு இப்படியாக யூத இராப்போஜனம் கடைபிடிக்கப்பட்ட பின்னர், ஆண்டவர், மாதிரியாயிருக்கிற யூத இராப்போஜனத்தில் எஞ்சியிருந்த புளிப்பில்லா அப்பத்திலும், திராட்சரசத்திலும் பங்குபெற்று, தம்முடைய முழுச் சபைக்கென, அதற்குப் பிரதிநிதிகளாக இருந்த (யோவான் 17:20) அவருடைய சீஷர்கள் மத்தியில் ஒரு புதிய காரியத்தை உண்டுபண்ணினார். அது அவர்களோடு ஆவிக்குரிய இஸ்ரயேலாக, முதற்பேறானவரின் சபையாக, புதுச் சிருஷ்டிகளாக, யூத பஸ்கா போஜனத்தின் இடத்தை எடுத்து அதற்கும் மேலாக இருக்க வேண்டும் என்று ஒரு புதிய காரியத்தை ஏற்படுத்தினார். நம்முடைய ஆண்டவர் இன்னொரு, அதற்கும் மேலான, வித்தியாசமான மாதிரியான ஒரு பஸ்காவை ஏற்படுத்தவில்லை. அதற்கு மாறாக, மாதிரியாக இருந்தது இப்பொழுதுதான் அதன் நிறைவைத் தொடங்க

இருந்தது. ஆகவே அதன் நிறைவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு, இனியும் அது பொருத்தமாக இருக்காது. நம்முடைய ஆண்டவர் நிஜமான ஆட்டுக்குட்டியாக, அடிக்கப்பட இருந்தார். இந்த அதிகாரத்தின் தலைப்பு வசனத்தில் அப்போஸ்தலர் சொல்லுகிறபடி "பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறார்."

கிறிஸ்துவைப் பஸ்கா ஆட்டுக்குட்டியாக ஏற்றுக்கொள்ளுகின்றவர்களும், இப்படியாக நிழலின் இடத்தை நிஜமானது எடுத்துக் கொள்வதை ஏற்றுக்கொள்ளுகின்றவர்களும், நிழலான விடுதலையைக் கொண்டாடும்படி நிழலான ஓர் ஆட்டுக்குட்டியை எடுத்து அதை உண்பதற்காக உரிமையும் ஆயத்தமும் செய்வது கூடாத காரியமாகும். உண்மையான பஸ்கா ஆட்டுக்குட்டியென இயேசுவைப் பின்பற்றுகின்ற எல்லா உண்மையான விசுவாசிகளும் இனிச் செய்யக் கூடிய தகுதியான காரியம் அவர்களுடைய இருதயங்களின் நிலைக்கால்களில் அவருடைய இரத்தத்தைத் தெளிப்பதாகும்; "துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும்" (தற்போதைய ஆக்கினையிலிருந்து - அவருடைய இரத்தத்தினால், அவர்களுடைய பாவங்கள் கிருபையாய் மன்னிக்கப்பட்டது என்பதை உணர்ந்து, அவருடைய இரத்தத்தினால் அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுள்ளார்கள் என்பதை உணர்ந்து) இவர்கள் இனிமேல் மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவின் புண்ணியத்தை, எல்லோருக்கும் தம்மை ஈடுபலியாகக் கொடுத்தவரில் புசிக்க வேண்டும் அல்லது அவர்களுடைய மீட்பரின் புண்ணியத்தைத் தங்களுடையதாக்கிக் கொள்ளவேண்டும். விசுவாசத்தினால் அந்தப் புண்ணியங்களில் பங்குபெற வேண்டும், மேலும் தங்களுடைய பாவங்கள் ஆண்டவர் மேல் சுமத்தப்பட்டன, அவர் அவர்களுக்காக மரித்தார், ஆகவே அவருடைய புண்ணியங்களும் நீதியும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை அவர்கள் உணரவேண்டும்.

அப்படியானால், நம்முடைய ஆண்டவருடைய இராப்போஜனம், பஸ்கா போஜனத்தின் இடத்தை எடுத்துக் கொண்டதானால், இருந்தாலும் அது ஓர் உயர்ந்த மாதிரியானதாக அல்ல - நிஜமானது தொடங்கிவிட்ட நிலையில் அது எப்படிப்பட்டதாக இருக்கிறது? அது நிஜத்திற்கு ஒரு ஞாபகார்த்தமானது - நிஜமான பஸ்கா நிறைவேறுதலின் ஆரம்பம் என அவரைப் பின்பற்றுபவர்களுக்கான ஒரு ஞாபகமூட்டுகிற காரியம் என்று நாம் பதில் கூறுகிறோம்.

இப்படியாக நம்முடைய ஆட்டுக்குட்டியானவரை ஏற்றுக்கொள்ளுவது, அவர் நமக்காக மரித்ததை ஞாபகப்படுத்திக்கொள்வது என்பது தேவனுடைய ஜனங்கள் மீட்கப்படுவார்கள் என்ற வாக்குத்தத்தத்தை எதிர்ப்பார்த்திருப்பது என்று பொருள்படும்; ஆகவே, அவைகளைப் புத்திசாலித்தனமாக ஏற்றுக்கொண்டு, ஞாபகப்படுத்திக் கொள்ளுவது, அவர்கள் உலகத்தில் இருக்கும்போது, அவர்கள் உலகத்தாராய் இருக்கமாட்டார்கள் என்று பொருள்படுகிறது. ஆனால் அவர்கள் அன்னியரும், பரதேசிகளுமாய் இருந்து, இப்போது பாவமும் மரணமும் ஆட்சி செய்கின்ற காலத்தின் அடிமைத்தனத்திலிருந்து கறைதிறை மற்றும் துக்கங்களிலிருந்தும் விடுதலையாகும் படியாக, இன்னும் அதிகம் விரும்பப்படுகிற நிலைமைகளைத் தேடுபவர்களாக இருப்பார்கள். இவர்கள் உண்மையான புளிப்பில்லா அப்பத்தில் பங்குபெறுபவர்களாக

இருப்பார்கள். அவர்கள் ஆண்டவரின் சத்துவத்திலும் வல்லமையிலும் பலப்படும்படியாக, அதின் பரிசுத்தத்திலும் மாம்சீக கோட்பாடுகளின்படியான பொல்லாப்பு (புளிப்பு) கறை திறை, அபிலாஷைகள், சுயநலம் போன்றவைகள் இல்லாமல் அதைப் பெறும்படியாக நாடுவார்கள். ஆண்டவர் தாமே நிந்திக்கப்பட்டு, துன்பப்படுத்தப்பட்டு, ஒதுக்கப்பட்டார் என்பதினால், அவர்களும் இதே விதமான உபசரிப்பை எதிர்பார்க்க வேண்டும்; ஏனெனில், உலகம் அவரை அறியாதது போன்று அவர்களையும் அறியமாட்டார்கள் என்றும், வேலைக்காரன் எஜமானுக்கு மேலானவன் அல்ல என்றும் ஆண்டவர் கூறிய வார்த்தையின்படி, அவர்கள் உபத்திரவம் என்னும் கசப்பான கீரையோடு பங்குகொள்ளுகிறார்கள். ஆம், யாரெல்லாம் அவருக்கு உண்மையாய் இருக்கும் பட்சத்தில் உலகத்தில் துன்பம் அனுபவியாமல் இருக்கிறார்களோ அவர்களெல்லாரும் அவருக்குப் பிடித்தமானவர்களாய் இருக்க மாட்டார்கள் என்பது அவருடைய சாட்சியாகும். அவருடைய வார்த்தைகளாவன: "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் . . . சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்." (மத்தேயு 5:11, 12; 2 தீமோத்தேயு 3:12).

நம்முடைய ஆண்டவர் அவருடைய நினைவுகூருதலான இராப்போஜனத்தை ஏற்படுத்தினபோது, கடைசி இராப்போஜனம் என்று அழைக்கப்படுகிறது; அது மேலே கூறியபடி ஒரு புதிய அடையாளமாக இருந்தது; அது பழைய பஸ்காவின் மாதிரிக்கு நிஜமானதாகக் காட்டப்பட்டிருந்தது; ஆனாலும் அது ஒரு நினைவுகூருதலாக அல்லது நிஜமானதற்கு ஒரு ஞாபகார்த்தமாகத்தான் இருந்தது, ஆனாலும் அதன் ஒரு பகுதியாக இல்லை. நாம் வாசிக்கிறபடி, அவர் "அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது (இது நிஜமான ஆட்டுக்குட்டியான எனக்கு அடையாளமாக இருக்கிறது, இது என் மாம்சத்திற்கு அடையாளமாக இருக்கிறது) என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்." நம்முடைய ஆண்டவரின் நோக்கம் இதன்படி நிஜமான முதற்பேறானவர்களுக்கும், விசுவாச மார்க்கத்தாருக்கும் தம்மைப் பின்பற்றி வருபவர்களுக்கும், அவர்களின் மனதில் தாம்தான் நிஜமான ஆட்டுக்குட்டி என்பதை பதிய வைக்க வேண்டும் என்பதுதான் என்று தெரியவருகிறது. "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று சொல்லுவது, முந்தியதைப் பின்பற்றிய அவருடையவர்கள், அது இப்பொழுது நிறைவேற்றப்பட்டு தேவையற்றதாகிவிட்டதால், இதைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக சொன்னார் என்று பொருள்படும். "போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புது உடன்படிக்கையாயிருக்கிறது" – உடன்

படிக்கையின் இரத்தம், புது உடன்படிக்கைக்கு முத்திரை இடுகிற இரத்தம். "நீங்கள் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்." அதை அதற்கான நேரம், இடம் போன்றவைகளைப் பார்க்காமல் செய்ய வேண்டும் என்று பொருள்படும் என்று நாம் புரிந்துகொள்ளக் கூடாது; ஆனால் இந்தப் பாத்திரமும், புளிப்பில்லா அப்பமும் பஸ்காவை கொண்டாடும்படியாக உபயோகப் படுத்தப்பட்டது என்று அல்ல, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாதிரியை அல்ல நிஜமானதைக் கொண்டாடுவதாக எண்ணப்பட வேண்டும். ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்ட நேரத்தைத் தவிர வேறு எந்த நேரத்திலும் பஸ்காவைக் கொண்டாடுவது, நியாயமானதாக, சரியானதாக, அல்லது மாதிரியானதாக இல்லாதிருப்பது போன்று நிஜமானதை அதன் நினைவுகூரும் சமயத்தில் அன்றி வேறு சமயத்தில் கொண்டாடுவது ஏற்றதாக இருக்காது. (1 கொரிந்தியர் 11:23-25)

"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்." (1 கொரிந்தியர் 11:26) என்று அப்போஸ்தலர் தொடர்ந்து கூறுகிறார். அப்போதிலிருந்து வருடந்தோறும் இராப்போஜனத்தைக் கொண்டாடுவது என்பது ஆண்டவரைப் பின்பற்றி வருபவர்கள் எல்லாருக்கும் ஒரு புதிய அர்த்தத்தை உடையதாக இருக்க வேண்டும் என்பதை சீஷர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டார்கள் என்பதை இது காட்டுகிறது. அதாவது பிட்கப்பட்ட அப்பம் ஆண்டவருடைய சரீரத்தையும், பாத்திரம் அவருடைய இரத்தத்தையும் குறிக்கிறது என்பதாகும். இந்தப் புதிய ஏற்பாடு அவரைப் பின்பற்றி வருபவர்கள் மேல் ஒரு சட்டமாகச் சுமத்தப்படவில்லை என்றாலும், மேலும் அதைச் சரியானபடி கடைபிடிக்கத் தவறும் பட்சத்தில் தண்டனை எதுவும் குறிப்பிடப்படாவிட்டாலும், ஆண்டவர், அவரை விசுவாசிக்கிறவர்களும், நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டி என்று தம்மை ஏற்றுக்கொள்ளுகிற அனைவரும் இப்படியாக அவர் உண்டுபண்ணின நினைவுகூருதலைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வார்கள் என்பதை ஆண்டவர் அறிந்திருந்தார். இன்றைக்கும் அது அப்படியே இருக்கிறது. ஈடுபலியில் உள்ள விசுவாசம் அதன் விளக்கத்தை "அவர் வரும் வரைக்கும்" என்ற இந்த எளிமையான நினைவுகூருதலில் இன்னும் காண்கிறது; "அவர் வரும் வரைக்கும்" என்பது நம்முடைய ஆண்டவரின் வருகை வரை அல்லது பிரசன்னம் வரை என்பதையல்ல, அறுவடை அல்லது இந்த யுகத்தின் இறுதிவரை என்பதையல்ல, நம்முடைய ஆண்டவர் கூறியபடி, "தேவனுடைய இராஜ்யத்திலே நவமானதாய் இதைப் பானம் பண்ணும் நாள்வரைக்கும்" என்பதைக் குறிக்கும்; இதற்கேற்ப இதில் இன்னும் நிறைவான அளவுக்குப் பங்குபெறும்படியாக, அவருடைய வருகையில் அவருடையவர்கள், "திரைக்கு" அப்பால் ஒவ்வொருவராக கூட்டிச் சேர்க்கப்படும் வரை

அவரது பலியில் உள்ள விசுவாசம் அதன் விளக்கத்தை இந்த நினைவுகூருதலில் தொடர்ந்து காணும்.

## நாம் அநேகராயிருந்தும் ஒரே அப்பமாயிருக்கிறோம்

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17)

அப்போஸ்தலர், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்படி நம்முடைய ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்ட இந்த நினைவுகூருதலைப் பற்றி மேலும் ஒரு சிந்தனையை நமக்கு முன்பாக வைக்கிறார்; முக்கியமாக அப்பம், நமக்காக பலியாக செலுத்தப்பட்ட நம்முடைய ஆண்டவருடைய பிட்கப்பட்ட சரீரத்திற்கு அடையாளமாக உள்ளது என்பதை அவர் வலியுறுத்துகிறார்; மேலும் பாத்திரம் அவருடைய இரத்தத்திற்கு அடையாளமாக இருக்கிறது என்றும் அவர் வலியுறுத்திக் கூறுகிறார். அந்த இரத்தம் நம்முடைய மன்னிப்பை உறுதிப்படுத்துகிறது. ஆனால் இப்பொழுது அதற்கு மேலும், நாம் சபையின் அங்கங்களாகவும், கிறஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாகவும், புதுச் சிருஷ்டியாகிய முதற்பேறானவர்களாகவும் இருந்து, நம்முடைய ஆண்டவரின் மரணத்திலும், அவருடைய பலியிலும் பங்கு பெறுகிறவர்களாகிறோம்; மேலும் அவர் இன்னொரு இடத்தில் கூறியபடி, "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக . . . நிறைவேற்றுகிறேன்" (கொலோசெயர் 1:24) என்பது நம்முடைய உடன்படிக்கையின் ஒரு பங்காக இருக்கிறது. "அவருடைய மரணத்திற்குள்ளாக நாம் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு இருக்கிறோம்" என்ற வசனத்தில் உள்ள அதே அர்த்தம்தான் இங்கும் இருக்கிறது. இப்படியாக நம்முடைய ஆண்டவரின் மாம்சம் இந்த உலகத்திற்காக பிட்கப்படுகிற அப்பமாக இருந்தபோது, இந்தச் சுவிசேஷயுகத்தின் விசுவாசிகளும், உண்மையானவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், புதுச் சிருஷ்டியும், கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்களுமானவர்கள் அந்த ஓர் அப்பத்தின் பகுதிகளாக எண்ணப்படுகிறார்கள். ஆகவே அந்த அப்பம் ஆண்டவர் நமக்காகச் செய்த பலி என்று உணர்ந்த பின்னர், அப்பம் பிட்கப்படுவது, முழுச் சபைக்கெனப் பிட்கப்படுவது அல்லது பலியாகச் செலுத்தப்படுவது என உணரவேண்டும்; மேலும் அவரோடு மரிக்கும்படியாக அர்ப்பணம் செய்துகொண்ட அனைவரும், அவரோடு பிட்கப்படவும் அவருடைய பாடுகளில் பங்குள்ளவர்களாகும் படியாகவும் அந்த அப்பம் பிட்கப்பட்டது என்பதையும் உணர வேண்டும்.

"கம்யூனியன்" (Communion) என்ற வார்த்தையில், பொதுவான ஐக்கியம் (Common-union), பொதுவான பங்குபெறுதல் (common participation) என்ற அதே அர்த்தம்தான் வெளிப்படுகிறது. ஆகவே, இந்த நினைவுகூருதலை ஒவ்வொரு

வருடமும் ஆசரிக்கும்போது, நம்முடைய நம்பிக்கைகள் அனைத்தும், நம்முடைய மீட்பர் நம்முடைய பாவங்களுக்காகச் செலுத்திய பலியில் அஸ்திபாரம் இடப்பட்டிருக்கிறது என்பதை உணருவது மாத்திரமல்ல, "கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூட பிழைத்தும் இருப்போம்," "அவருடனேகூட பாடுபட்டால், அவருடனேகூட ஆளுகையும் செய்வோம்" என்பதற்கேற்ப நம்முடைய அர்ப்பணிப்பை உயிர்ப்பிக்கவும், புதுப்பிக்கவும் செய்கிறோம். இந்தத் தெய்வீக ஆசரிப்பின் பொருள் எவ்வளவு உயர்வானதாகவும் புரியும்படியாகவும் இருக்கிறது பாருங்கள்! உண்மைக்கு பதிலாக நாம் அடையாளத்தைப் போடவில்லை, நம்முடைய ஆண்டவரின் நோக்கமும் நிச்சயமாக இப்படியாக இருந்திருக்காது, நம்முடைய சார்பிலும் அப்படி இருந்திருக்காது. உண்மையான ஐக்கியம் என்பது, ஆண்டவருடன் இருதயப்பூர்வமாக ஐக்கியம் கொள்வதும், நம்முடைய இருதயம் அவர் மேல் வாஞ்சையாயிருப்பதும், சரீரமான சபையில் உள்ள உடன் அங்கங்களோடு இதயப்பூர்வமாக ஐக்கியமாயிருப் பதும், பலி செலுத்துவது என நாம் செய்து கொண்ட உடன்படிக்கையை இதயப்பூர்வமாக உணர்வதுமாகும். இதில் நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால், நம்முடைய ஆண்டவரோடு தினமும் பிட்கப்பட்டவர்களாக, அவருடைய புண்ணியத்தை அனுதினமும் புசிப்பவர்களாக, அவருடைய வல்லமையிலும் சத்துவத்திலும் பலப்படுபவர்களாக ஒவ்வொரு நாளும், வருடம் முழுவதும் இருப்போம். இந்த நினைவுகூருதலை ஆசரிப்பதினால் எப்படியான ஓர் ஆசீர்வாதம் நமக்கு வருகிறது! மென்மேலும் அறிவிலும், கிருபையிலும் வளர்வதற்குரிய ஒரு வாஞ்சை எவ்வளவாய் இருதயத்தில் பற்றி எரிகிறது! நாம் அழைக்கப்பட்டிருகிற ஊழியத்தில் உள்ள சிலாக்கியங்களில் தற்காலத்திற்குரியவைகளில் மாத்திரமல்லாமல் வருங்காலத்திற் குரியவைகளிலும் பங்கு பெறவும் ஒரு வாஞ்சை எவ்வளவாய் இருதயத்தில் பற்றி எரிகிறது!

நாம் தேவனுக்கு துதி செலுத்துகிற பாத்திரத்தைக் குறித்தும் அப்போஸ்தலர் கூறுகிறதை நாம் பார்க்க முடிகிறது. "இது கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?" (பொதுவான ஐக்கியம், பொதுவான பங்கேற்பு) உண்மையாகவே பிரதிஷ்டை செய்து கொண்ட "சிறுமந்தை" இந்தச் சுவிசேஷயுகம் முழுவதிலும் மாம்சத்தில் உண்மையான கிறிஸ்துவாக இருந்திருக்கிறார்கள். ஓ, எப்படிப்பட்ட ஒரு சிந்தனை! மேலும் மாம்சத்தில் "அவருடைய சரீரத்தின் அங்கங்கள்" என ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டவர்களின் பாடுகள், சோதனைகள், அவமானம், மரணம் ஆகியவை அனைத்தும் அவருடைய பலியின் பகுதிகளாக எண்ணப்படுகின்றன, ஏனெனில் அவர்கள் நம்முடைய தலையும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற ஆண்டவருக்குக் கீழாக உள்ளவர்களாகவும், அவரோடு சம்பந்தம் உள்ளவர்களாகவும் இருக்கின்றனர். சூழ்நிலையைப் புரிந்துகொண்டு, இந்தச் சபையின் அங்கம் வகிக்கும்படியான தேவனுடைய அழைப்பையும், அதனால் ஏற்படுகிற மரணத்திற்கேதுவான பலியில் இப்பொழுது பங்குகொள்வதையும், வருங்காலத்தில் மகிமையான கிரியையில் பங்குகொள்வதையும் பாராட்டுகிறவர்கள், கிறிஸ்துவின் நாமத்திற்கென நிந்தைகளை அனுபவிக்கத் தகுதியானவர் என்று எண்ணப்படுவதிலும்,

அவருடைய மாம்சம் மற்றும் எலும்புகளின் அங்கங்களாக இருந்து சத்தியத்தின் ஊழியத்திற்கெனத் தங்களுடைய ஜீவனையே கொடுப்பதில் களிகூராமல் இருக்க முடியுமா? "உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை." (1யோவான் 3:1) இவர்கள் உலகப்பிரகாரமான நல்ல ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் இழக்க நேரிடினும், மீட்பரின் எதிர்கால மகிமையில் கிறிஸ்துவின் சரீரமாக இருந்து, ஒரு பங்கைப் பெறுவதற்கு தகுதியானவர்கள் என்று எண்ணப்படும் பட்சத்தில், இந்த இழப்புகள் ஒன்றுமில்லை.

அவர்கள் கிருபையிலும், அறிவிலும், வைராக்கியத்திலும் வளரும்போது அவர்கள் ஒவ்வொருவரும் எந்த விஷயத்தையும் அப்போஸ்தலரின் மனப்பாங்கிலேயே பார்க்க முடிகிறது. பூலோக நன்மைகளையும், சிலாக்கியங்களையும் குறித்து அப்போஸ்தலர் கூறுவதாவது: "எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்." "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்." (பிலிப்பியர் 3:11; ரோமர் 8:18)

இன்னொரு கருத்து என்னவெனில், ஆண்டவரின் இந்த ஒரே சரீரத்தில் அங்கங்களாக இருக்கிறவர்களுக்கிடையில் பரஸ்பர அன்பும், இரக்கமும், ஆர்வமும் மேலோங்க வேண்டும் என்பதாகும். ஆண்டவருடைய ஆவி அதிகமதிகமாக நம் இருதயங்களை ஆளும்படி வரும்போது, நமக்குச் சமயம் கிடைக்கும்போதெல்லாம் எல்லாருக்கும், விசேஷமாக விசுவாச மார்க்கத்தாருக்கு நன்மை செய்வதில் அது நம்மை களிகூரும்படிச் செய்யும். நம்முடைய இரக்கங்கள் வளர்ச்சியுற்று உலகத்திலுள்ள மனுக்குலம் முழுவதற்கும் செல்லும்போது, அவர்கள் விசேஷமாக ஆண்டவரில் வளரவேண்டும், மாத்திரமல்ல அவருடைய ஆவி உள்ளவர்கள் என்று அவரால் அங்கீகரிக்கப்பட்டவர்கள், அவருடைய அடிச்சுவட்டில் நடக்க நாடுபவர்களுக்கு நேராக வளரவேண்டும். நாம் ஆண்டவர் மேல் வைத்திருக்கிற அன்பின் அளவு, அவருடைய சரீரத்தின் அங்கங்களாக நம்மோடு உள்ள சகோதரரிடத்தில் நாம் காட்டும் அன்பைப் பொறுத்து இருக்கும் என அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகிறார். மற்றவர்களுக்காக நாம் எல்லாவற்றையும் சகிக்கிற, தாங்கிக்கொள்கிற அளவுக்கு நம்முடைய அன்பு இருக்குமென்றால், நம்முடைய தலையாக இருக்கிறவர் மூலமாக நம்மோடு மிக நெருக்கமாக ஐக்கியம் கொண்டிருக்கிற அதே சரீரத்தின் இந்த உடன் அங்கங்களைப் பொறுத்தவரையில் இது எவ்வளவு பெரிய உண்மையாகக் காணப்படும்! நாம் மரணத்தைக் கடந்து ஜீவனுக்குள் வந்து விட்டோம் என்பதற்கு முக்கியமான அடையாளங்களில் ஒன்று நம்முடைய சகோதரரிடத்தில் அன்பு கூறுகிறோம் என்பதுதான் என்று அப்போஸ்தலர் யோவான் கூறுவது வியப்பிற்குரியதல்ல. (1 யோவான் 3:14) கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நாம் நிறைவேற்றுவதைக் குறித்து அப்போஸ்தலர் பவுல் பேசும்பொழுது, "சரீரமான சபைக்காக நிறைவேற்றுகிறேன்" என்று கூறுவதை நாம் நினைவுகூருகிறோம். (கொலோசெயர் 1:24)

"நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்"

(1 யோவான் 3:16) என்ற வசனத்திலும் இதே கருத்துதான் மறுபடியும் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. எப்படிப்பட்ட சகோதரத்துவம் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது பாருங்கள்! அவர்களுக்காக ஜீவனையே கொடுக்கக் கூடிய ஒரு சகோதர அன்பை வேறு எங்குதான் நாம் காணமுடியும்? "ஆண்டவரின் வெள்ளாடுகள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிற சபையின் பலியை பாவநிவாரண நாளின் பலிகளின் ஒரு பகுதியாக ஈடுபடுத்துவதில் ஆண்டவர் எப்படிச் சந்தோஷப்படுவார் என்று நாம் இப்பொழுது கூறவில்லை. நம்மைப் பொறுத்தவரையில், ஜீவனைக் கொடுக்கும் பலியானது, சகோதரர்களுக்கு செய்கிற ஊழியத்தில் முக்கியமாக செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை அப்போஸ்தலருடன் இணைந்து நாமும் கவனத்தில் கொள்ளுகிறோம். உலகத்திற்காக செய்கிற ஊழியம் முக்கியமாக வர இருக்கின்ற யுகமான ஆயிரம் வருட யுகத்திற்கு உரியதாகும். தற்போதுள்ள சூழ்நிலையில் நம்முடைய நேரம், தாலந்துகள், செல்வாக்குகள், வசதிகள் எல்லாம் ஏறத்தாழ மற்றவர்களிடத்தில் (மனைவி அல்லது பிள்ளைகள் அல்லது வயதான பெற்றோர் அல்லது நம்மைச் சார்ந்து வாழ்பவர்கள்) அடகு வைக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் நாமாகவே, மனுஷருடைய பார்வையில் நேர்மையானவைகள், தேவையானவைகள், நல்லவைகளாகக் காணப்படுகிற தேவையான காரியங்களைச் செய்ய நாம் கடமைப்பட்டு இருக்கிறோம். இப்படியிருக்க, பலிக்கெனக் குறைந்த அளவே நம் பட்சத்தில் மிஞ்சியிருப்பதைக் காண்கிறோம், சகோதரருக்கெனக் கொடுப்பதற்கு குறைந்த அளவே நம்மிடத்தில் மிஞ்சியிருப்பதைக் காண்கிறோம். இந்தக் குறைவானதையும் உலகமும், மாம்சமும், பிசாசும் நம்மிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளவும், நாம் அர்ப்பணித்திருக்கிற பலியிலிருந்து திசை திருப்பவும் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பொல்லாத காலத்தில், ஆண்டவர் சபையைத் தேர்ந்தெடுப்பது, இந்தச் சூழ்நிலையில் ஒருவர் மேல் மற்றவர் வைத்திருக்கிற அன்பு, ஆண்டவர் மேல் வைத்திருக்கிற அன்பு, விசுவாசம் ஆகியவையின் அளவைப் பொறுத்துதான் இருக்கும். நம்முடைய அன்பு குளிராயிருந்தால், உலகம், மாமிசம், சத்துரு நம்மிடத்தில் அதிகமாக உரிமை கொண்டாடுவார்கள்; நம்முடைய நேரத்தை, நம்முடைய செல்வாக்கை, நம்முடைய பணத்தை, சத்துரு கவர முயற்சிப்பான். இன்னொரு பக்கம், ஆண்டவர் மேல் உள்ள அன்பு, அனலாயும், வலிமையுள்ளதாயும் இருக்கும் அளவின்படியே இவைகளை அவருக்கு அர்ப்பணம் செய்வதில் மகிழ்ச்சியடைவோம். சகோதரருக்கெனச் செய்கின்ற ஊழியத்தில் நமக்குச் சமயம் கிடைக்கும் பொழுதெல்லாம் நம்மிடத்தில் தேவைக்கு மேலாக உள்ள சத்துவத்தையும், செல்வாக்கையும், வசதியையும் அவருக்கெனக் கொடுப்போம்; இதற்கும் மேலாக வீட்டின், குடும்பத்தின், முக்கியமாக தனது சொந்த பொருளாதார தேவைகளைக் கூடுமான வரை கட்டுப்படுத்தி, ஆண்டவருடைய பலிபீடத்தில் செலுத்தும்படியாக, அதிகமாகக் கொடுக்க, ஆண்டவரின் மேல் வைத்திருக்கிற இந்தப் பக்தியின் ஆவி நம்மை உந்தித்தள்ளும். நம்முடைய ஆண்டவர் மூன்றரை வருடங்களாக அவருடைய சரீரத்தைப் பிட்கக் கொடுத்தார், மூன்றரை வருடங்களாக அவருடைய இரத்தத்தை, ஜீவனைக்

கொடுத்தார், ஆனாலும் இந்தப் பலிகள் கல்வாரியில்தான் முற்றுப் பெற்றன; இப்படியேதான் நமக்கும் இருக்கிறது. உலகப்பிரகாரமான அல்லது ஆவிக்குரிய விஷயங்களில், சகோதரருக்கென நம்முடைய ஜீவனைக் கொடுப்பது சிறு ஊழியங்களில் உள்ளது, ஆனாலும் ஆவிக்குரிய விஷயங்களில் அது பெரிய காரியமாகும். ஆகிலும் உலகப்பிரகாரமான தேவையுடன் உள்ள ஒரு சகோதரனுக்கு இரக்கம் காட்டாவிட்டால், அது ஆண்டவருடைய ஆவி அவனுடைய இருதயத்தில் சரியான அளவுக்கு ஆட்சி செய்யவில்லை என்று பொருள்படும்.

## நினைவுகூருதல் இன்னும் பொருத்தமானது

நம்முடைய அன்பின் ஆண்டவரின் நினைவுகூருதல் ஆரம்பத்தில் நாம் பார்த்துள்ளபடி ஒரு குறிப்பிட்ட நாளில், யூத கணக்கின்படி முதல் மாதத்தின் பதினான்காம் தேதி கொண்டாடப்பட்டது.

(எபிரெய புது வருடம், வசந்த காலத்தில் சூரியன் பூமத்திய ரேகையைக் கடந்த பின்னர் (Spring Equinox) வரும் முதல் அமாவாசை (New moon) அன்று தொடங்குகிறது. பதினான்காம் நாள் எளிதில் கணக்கிடப்படுகிறது, ஆனால் பண்டிகை வாரத்தோடு குழம்பிவிடக்கூடாது. இந்தப் பண்டிகை வாரம் (யூத கொண்டாட்டம்) 15-ஆம் தேதி தொடங்கி, தொடர்ந்து ஒரு வாரத்திற்கு நீடித்தது. புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் வாரம், களிப்போடு யூதர்களால் கொண்டாடப்பட்டது – ஒரு கிறிஸ்தவனின் முழு எதிர்காலத்திற்கும் ஒத்து இருக்கிறது – விசேஷமாக நினைவுகூருதலான இராப்போஜனத்தை அடுத்த முறை கொண்டாடும் வரை உள்ள முழு வருஷத்திற்கும் அடையாளமாக உள்ளது. யூதருக்கு ஆட்டுக்குட்டி பலியிடப்படுவது முடிவுக்கு அடையாளமாகும். அது வார பண்டிகைக்குத் துவக்கமாக இருந்தது, யூதருடைய விசேஷ கவனத்தை ஈர்ப்பதாக இருந்தது. நம்முடைய நினைவுகூருதல், ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதோடு – முதலாம் மாதம் நீசான் மாதத்தின் 14-ஆம் தேதியோடு – தொடர்புடையதாக இருக்கிறது. மேலும் நாளின் மணிக்கணக்கை கணக்கிடுவதில் மாற்றம் ஏற்பட்ட போது நீசான் மாதத்தின் 14-வது நாளின் இரவு இப்பொழுது 13-வது நாளின் சாயங்காலத்திற்கு இணையாக இருக்கும் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.)

பழைய வழக்கத்தின்படியாக கணக்கிடப்பட்ட அதே நாள் இன்றும் பொருத்தமாக உள்ளது. மேலும் "பூர்வ பாதைகளைப்பற்றி" கேட்பவர்களுக்கும், அதில் நடக்கும்படி வாஞ்சையாயிருப்பவர்களுக்கும் அது பிடித்தமானதாக இருக்கும். நம்முடைய ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்ட, ஆண்டவரின் மரணம் முதலானவைகளை வருடம்தோறும் நினைவுகூருதல் என்பதும், ஆதிச் சபையினரால் கடைபிடிக்கப் பட்டதும், சமீப காலத்தில் தற்கால சத்தியத்தின் வெளிச்சத்திற்குள் வருகிறவர்கள் மத்தியில் புத்துயிர் ஊட்டப்பட்டுள்ளது.

ஆண்டவரின் அடையாளமான இராப்போஜனத்தின் உண்மையான அர்த்தம்

வரவர மறக்கப்பட்ட போது, அதை வருடந்தோறும் கடைப்பிடிப்பதில் உள்ள நோக்கமும் கவனிக்கப்படாமல் போனதில் ஆச்சரியமில்லை. இந்த இராப்போஜனத்தின் சரித்திரத்தை நாம் புரிந்துகெள்ள வரும்போது, இது மிகவும் தெளிவாகப் புரிகிறது. அது பின்வருமாறு உள்ளது:

அப்போஸ்தலர்களும், அவர்களுக்குப் பின்வந்தவர்களும் நித்திரை அடைந்தப் பின்னர் – ஏறக்குறைய மூன்றாம் நூற்றாண்டில் – சபையில் ரோமன் கத்தோலிக்கக் கொள்கை அதிக செல்வாக்கு பெறத் தொடங்கியது. அதன் பொய்யான உபதேசங்களில் ஒன்று எதுவென்றால், கிறிஸ்துவின் மரணம் கடந்த கால குற்றங்களை நீக்கியிருக்கும் போது ஞானஸ்நானத்திற்குப் பின்னர், கிறிஸ்துவோடு தனிப்பட்ட விதத்தில் உறவுக்குள்ளாக வந்த விசுவாசியின் மீறுதல்களை ஈடுகட்ட இயலாதிருந்தது, இப்படியான பாவங்களுக்கு ஒரு புதிய பலி செலுத்துதல் அவசியமாக இருந்தது என்பதாகும். இந்தத் தப்பறையின் அடிப்படையில் திருப்பலி (Mass) என்ற உபதேசம் கொண்டுவரப்பட்டது. இந்தத் திருப்பலி (Mass) என்பது நாம் ஏற்கெனவே விரிவாகப் பார்த்தபடி, தனிப்பட்ட நபரின் குறிப்பிட்ட பாவங்களுக்காகச் செலுத்தப்படுகின்ற புதியதான கிறிஸ்துவின் பலியாகும். மேலும் திருப்பலியை நடத்துகிற குருவானவருக்கு, அப்பத்தையும் திராட்சரசத்தையும் கிறிஸ்துவின் உண்மையான சரீரமாகவும், உண்மையான இரத்தமாகவும் மாற்றும் வல்லமை இருந்தது என்றும், மேலும் அதன் பின்னர் மெல்லிய அப்பத்தைப் பிட்பதின் மூலம், யாருக்கெனத் திருப்பலி நடத்தப்படுகின்றதோ அந்த நபரின் பாவங்களுக்காக ஆண்டவரை புதியதாக பிட்கவோ பலிசெலுத்தவோ கூடும் என்ற எண்ணத்தில் புதியதாக கிறிஸ்துவைப் பலியாகச் செலுத்துவது சரியானதாகத் தோன்றும்படி செய்யப்படுகிறது. திவ்விய நோக்கின்படி இந்த உபதேசமும் பழக்கமும் ஆண்டவருடைய பார்வையில் ஓர் அருவருப்பான காரியம் என்று நாம் ஏற்கெனவே பார்த்துள்ளோம். அது "பாழாக்கும் அருவருப்பாகும்." (தானியேல் 11:31; 12:11)

இந்தத் தவறான உபதேசம் பாழாக்குதலை உண்டுபண்ணிற்று. அதைத் தொடர்ந்து பலதரப்பட்ட தப்பறைகளான, பெரிய விசுவாச துரோகமாகிய ரோம ஒழுங்குமுறைகள் சபையில் இடம் பிடித்தது, அது எல்லா அந்திக்கிறிஸ்துக்களிலும் பிரதானமானதாகும். கிறிஸ்தவ உலகத்தைக் கட்டுப்படுத்தி, முன்னிலையிலிருந்த இந்தத் தப்பறைகள் பல நூற்றாண்டுகளைக் கடந்து வந்தன. இந்த நிலை பதினாறாவது நூற்றாண்டு வரை நீடித்தது. அப்பொழுது பெரிய சீர்திருத்த இயக்கம் ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணி எதிர்த்தது; இதற்கேற்ப, இருண்ட காலத்தில் அந்திக்கிறஸ்துவின் தவறான உபதேசங்கள், தவறான பழக்கங்களுக்குக் கீழாக மறையுண்டிருந்த சத்தியங்களைக் கண்டுபிடிக்கத் துவங்கினார்கள். தேவனுடைய வார்த்தையின் முழுச் சாட்சியைக் குறித்த மேலதிகமான வெளிச்சம் சீர்திருத்தவாதிகளுக்குக் கொடுக்கப்பட்டது. கிறிஸ்துவின் பலியைக் குறித்த தெளிவான கருத்து அந்த வெளிச்சத்தில் தெரிந்தது. அதனால் போப்பாண்டவரின் கருத்தும் திருப்பலியும் உண்மையிலேயே "பாழாக்கும் அருவருப்பு" என்று கண்டுகொள்ளத் தொடங்கி, பலதரப்பட்ட கோணங்களில் அதை ஏற்க அவர்கள் மறுத்து விட்டார்கள். ஆங்கிலேய

திருச்சபை 1552-ஆம் வருடம் அதன் ஜெப புஸ்தகத்தை மறுபரிசீலனை செய்து திருப்பலி (Mass) என்ற வார்த்தையை நீக்கியது.

திருப்பலி என்ற வழக்கம், வருடந்தோறும் கொண்டாடும் ஆண்டவரின் நினைவுகூருதலான இராப்போஜனத்தின் இடத்தைப் பிடித்துக்கொண்டது. ஏனெனில், பாவத்திலிருந்து அடிக்கடி ஜனங்களைக் கழுவும் நோக்கத்தோடுதான் திருப்பலி செய்யப்படுகிறதாக அடிக்கடி சொல்லப்பட்டது. சீர்திருத்தவாதிகள் இதில் உள்ள தப்பறையைப் பார்த்தபோது, முதலில் ஏற்படுத்தப்பட்டதில் உள்ள எளிய நிலைக்கு வர முயற்சித்தார்கள்; அதன்படி ரோம சபையின் திருப்பலி, ஆண்டவருடைய நினைவுகூருதலான இராப்போஜனத்தின் தவறான ஆசரிப்பு என்று சொல்லி அதை ஒதுக்கி விட்டார்கள். இருந்தபோதிலும், நிழலான பஸ்காவிற்கும் மெய்ப்பொருளான நம்முடைய ஆண்டவரின் மரணத்திற்கும் இடையில் உள்ள சம்பந்தத்தையும், இராப்போஜனம் என்பது ஆண்டவருடைய மரணத்தின் ஒரு நினைவுகூருதலாக இருக்கிறது என்பதையும் புரிந்துகொள்ளவில்லை; அது வருடாவருடம் கடைப்பிடிக்கப்படுவதின் தாற்பரியத்தையும் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. ஆகவே இதைப் புராட்டஸ்டண்ட் (Protestant) பிரிவைச் சேர்ந்தவர்கள் மத்தியில் சிலர் மாதம் ஒரு முறையும், மற்றவர்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும், சிலர் நான்கு மாதங்களுக்கு ஒரு முறையும், ஒவ்வொரு சபைப் பிரிவினரும் தங்களுடைய சொந்த தீர்மானத்தின்படி கொண்டாடுகிறார்கள் என்று நாம் பார்க்கிறோம் – சீஷர்கள் சபையினர் ("Disciples") வாரம் ஒரு முறை கொண்டாடுகிறார்கள். ஞானஸ்நானத்தைக் குறித்து வேதாகமம் கூறுவதை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டது போல இதையும் தவறாகப் புரிந்துகொண்டு இப்படிக் கொண்டாடுகிறார்கள். ஆரம்ப காலத்தில் வாரத்தின் முதல் நாளன்று சபை கூடி வந்தார்கள் என்றும் அப்படியான கூடுதலின் போது "அப்பம் பிட்குதல்" இருந்தது என்றும் அப்போஸ்தலர் நடபடிகளில் கூறப்பட்டதையொட்டி இராப்போஜனத்தை வாரம் ஒரு முறை கொண்டாடுகிறார்கள். (அப்போஸ்தலர் 2:42, 46; 20:7)

இந்த வாராந்திர கொண்டாட்டங்கள் ஆண்டவருடைய மரணத்தை நினைவுகூருவதல்ல என்று நாம் ஏற்கெனவே பார்த்துள்ளோம். ஆனால் அதற்கு மாறாக, அவைகள் அன்பின் விருந்துகளாக அவருடைய உயிர்த்தெழுதலையும், அவர் பரமேறுவதற்கு முன்னான நாற்பது நாட்களில் அநேக முதல் - நாட்களில் அவரோடு அப்பம் பிட்ட நாட்களைச் சந்தோஷத்துடன் கொண்டாடுவதாக இருந்தது. இந்த அப்பம் பிட்குதலை நினைவுகூருவதினால் அதில் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு அவரை அறிந்தார்கள்; ஒருவேளை இது வாரத்தின் ஒவ்வொரு முதல் நாளன்றும் கூடிவரும்படியாக வழிநடத்தியிருக்கக் கூடும்; இதுவும் ஒரு சமுதாயமாகக் கூடி உணவு அருந்துவதற்கு, ஓர் அப்பம் பிட்குதலுக்கு வழிநடத்தியதில் தவறில்லைதான். நாம் ஏற்கெனவே பார்த்துள்ளபடி இவைகள் சம்பந்தப்பட்டவைகளில் பாத்திரம் குறித்து ஒருபோதும் சொல்லப்படவில்லை, ஆனால் ஆண்டவருடைய நினைவுகூருதலின் இராப்போஜனம் குறித்துச் சொல்லப்படும் ஒவ்வொரு வேளையிலும், அப்பத்தைப் போலவே அதுவும் ஒரு முழு முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

# யார் இதை ஆசரிக்கலாம்

முதலாவதாக, இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தம் பாவங்களுக்குப் பலியாகச் சிந்தப்பட்டது என்பதை விசுவாசிக்காத எவரும் இதில் பங்கு பெறக்கூடாது என்று நாங்கள் பதில் கூறுகிறோம். பழிவாங்குதலுக்காக ஆபேலின் இரத்தம் பேசினதைப் போன்று இல்லாமல், ஒருவன் விசுவாசத்தினால் தனது பூலோகக் கூடாரத்தின் நிலையின் மேற்சட்டத்திலும், வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும், நமக்காக சமாதானத்தைப் பேசுகின்ற இரத்தத்தைத் தெளிக்காத எவரும் இதில் பங்கு பெறக்கூடாது. (எபிரெயர் 12:24) தன்னுடைய இருதயத்தில் உண்மையான விருந்தை வைத்திராதவனும், கிறிஸ்துவைத் தனக்கு ஜீவன் கொடுக்கிறவர் என்று ஏற்றுக்கொள்ளாத எவனும் இந்த அடையாள விருந்தில் பங்குபெறக் கூடாது. மேலும் ஒரே சரீரத்திலும், ஒரே அப்பத்திலும் அங்கமாக இல்லாதவனும், அதே பாத்திரத்தில், தன்னுடைய ஜீவனும், இரத்தமும் ஆண்டவரோடுகூட பலியாகச் செலுத்தப்பட்டது என்று எண்ணாத எவனும் இதில் பங்கு பெறக்கூடாது. இங்கே விசுவாசிகளுக்கும், அவிசுவாசிகளுக்கும் இடையில் மாத்திரமல்ல, பிரதிஷ்டை செய்து கொண்டவர்களுக்கும் பிரதிஷ்டை செய்து கொள்ளாதவர்களுக்கும் இடையில் இங்கே தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒரு கோடு வரையப்பட்டுள்ளது. இருந்தாலும் ஒவ்வொரு தனி மனிதனும் இந்தக் கோட்டை தானே, தனக்கென வரைந்து கொள்ளவேண்டும், எப்படியெனில் அவனுடைய வேலைகள் நல்லதாக இருக்கும் பட்சத்திலும், அவைகள் அவனுடைய வெளிப்படையான நடத்தையின் மூலம் ஓரளவு அங்கீகரிக்கப்பட்டிருந்தால் அவனே தனக்கென அந்தக் கோட்டை வரைந்து கொள்ளலாம். ஒருவன் இன்னொரு மனிதனை நியாயந்தீர்ப்பதாக இருக்கக் கூடாது, சபைகூடத் தீர்ப்புக் கூறக்கூடாது. ஆனாலும், ஏற்கெனவே சுட்டிக்காட்டியபடி, சபைக்கு முன்பாக அந்த விஷயம் நல்ல உறுதியான விஷயமாக, கொடுக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு ஏற்ப இருக்குமானால் நியாயத்தீர்ப்புக் கூறலாம். அப்படி இல்லாவிடில் மூப்பர்கள் அல்லது சபையின் பிரதிநிதிகள், கூடிவருகிறவர்கள் முன்பாக இந்த ஒழுங்கையும், நிபந்தனைகளையும் வைக்க வேண்டும்.

1. இரத்தத்தில் விசுவாசம்;
2. மரணபரியந்தம் ஆண்டவருக்காகவும் அவருடைய ஊழியத்திற்காகவும் பிரதிஷ்டை செய்து கொண்டிருத்தல்.

அதன் பிறகு இப்படிப்பட்ட மனதுடையவர்கள், பிரதிஷ்டை செய்து கொண்டவர்கள் அனைவரையும் ஆண்டவருடைய மரணத்தையும் தங்களுடைய மரணத்தையும் கொண்டாடும்படியாக அழைக்க வேண்டும். சபை பாகுபாடு பற்றிய எண்ணத்திற்கே இடமில்லாத வகையில் இதுவும் இதோடு சம்பந்தப்பட்ட எல்லா அழைப்புகளும், மிகத் தெளிவாகப் புரியும்படி இருக்க வேண்டும். விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமாக மீட்பு, மரணபரியந்தம் முழுமையான அர்ப்பணிப்பு, அந்த நீதியின் மேல் கட்டப்படுதல் ஆகிய அடிப்படைச் சத்தியங்களோடு முழு மனதோடு இசைந்திருப்பார்களானால், அவர்கள் எல்லோரும் மற்றப் போதனைகளில்

அவர்களுடைய விசுவாசம் வேறுப்பட்டதாக இருந்தபோதிலும் இதில் பங்குபெறும்படியாக வரவேற்கப்படவேண்டும்.

இந்த இடத்தில் இதைக்குறித்து அப்போஸ்தலர் கூறுவதைக் கவனிப்பது மிகப் பொருத்தமாயிருக்கும்:-

"இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும்குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்." 1 கொரிந்தியர் 11:27-29.

அப்போஸ்தலருடைய எச்சரிக்கை இங்கு இந்த நினைவுகூருதலை அக்கறையின்றி கொண்டாடுவதற்கு எதிராக இருப்பது போன்று தோன்றுகிறது, ஏனெனில் அது ஒரு விருந்துபோல ஆகிவிடும் என்று எச்சரித்து, அதற்கு நபர்களை ஏனோதானோ என்று அழைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார். அது அப்படிப்பட்ட ஒரு விருந்தல்ல; அது பயபக்தியுடன் செய்யப்படக்கூடிய ஒரு நினைவுகூருதல். அது ஆண்டவருடைய "சரீரத்தின்" அங்கங்களாக இருக்கிறவர்களுக்கு மாத்திரம் உரியது. மேலும் இதைப் பகுத்தறியாதவனும், அப்பம் ஆண்டவராகிய இயேசுவின் மாம்சத்திற்கு அடையாளமாக இருக்கிறது என்பதையும், மேலும் பாத்திரம் அவருடைய இரத்தத்திற்கு அடையாளமாக இருக்கிறது என்பதையும் பகுத்தறியாதவனும் இதில் பங்குபெறுவான் என்றால் அவன் குற்றமுள்ளவனாயிருப்பான் – பொதுவான மொழிப்பெயர்ப்பில் உள்ளபடி நித்திய ஆக்கினைக்குள்ளாக அல்ல, ஆனால் ஆண்டவருடைய பார்வையில் குற்றமுள்ளவனாக இருப்பதுபோன்று தனது சொந்த மனசாட்சியிலும் குற்றமுள்ளவனாக இருப்பான். இந்தப் பந்தியில் பங்குபெறுவதற்கு முன்பாக ஒவ்வொருவனும், நம்முடைய ஆண்டவரின் பிட்கப்பட்ட சரீரமும் சிந்தப்பட்ட இரத்தமும் தனக்காக அவரால் ஈடுபலியாக செலுத்தப்பட்டது என்பதை அவன் விசுவாசிக்கிறானா அல்லது இல்லையா என்று தனக்குள்ளாக தீர்மானித்துக் கொள்ளவேண்டும்; இரண்டாவதாக, அந்த "ஒரே சரீரத்தில்" அங்கமாக எண்ணப்படுவதற்காக தனக்குண்டான எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்துள்ளானா இல்லையா என்பதை ஒவ்வொருவனும் தனக்குள்ளாக தீர்மானிக்கவேண்டும்.

யாரெல்லாம் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளார்கள், யார் சரியான விதத்தில் ஆண்டவருடைய பந்திக்கு வரமுடியும் என்பதை கவனித்து விட்டு, நாம் சபையின் ஒவ்வொரு உண்மையான விசுவாசிக்கும் அதில் பங்குபெற உரிமை உண்டு, ஆனாலும் ஆண்டவரின் விதிமுறைகளின்படி (மத்தேயு 18:15-17) முழுச் சபையும் ஒரு பொதுவான செயலின் மூலம் அந்த உரிமையைத் தடைசெய்திராத பட்சத்தில் அவர்களும் பங்குபெற உரிமை உண்டு எனக் காண்கிறோம். இப்படிப்பட்டவர்கள் எல்லாரும் கொண்டாடலாம்; இப்படியானவர்கள் எல்லாரும் கொண்டாடுவதற்கு நிச்சயமாகவே வாஞ்சிப்பார்கள்;

ஆண்டவர் மரிக்கும்போது கொடுத்த எச்சரிக்கையான "நீங்கள் வாங்கிப் புசியுங்கள், நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்ற வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய நிச்சயமாகவே விரும்புவார்கள். நாம் மனுஷகுமாரனின் மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தில் பானம் பண்ணாவிட்டால், நமக்குள் ஜீவன் இல்லை என்பதை அவர்கள் உணருவார்கள். மேலும் ஆண்டவருடைய பலியிலும், ஜீவனிலும் உள்ள புண்ணியத்தில் அவர்கள் பங்குபெறுவார்கள் என்பதை அவர்கள் உண்மையிலேயே இருதயத்திலும் மனதிலும் வைத்திருப்பார்களெனில், அதை நினைவுகூருவதை ஒரு சிலாக்கியமாகவும், சந்தோஷகரமானதாகவும் உணர்வதுடன், ஒருவருக்கொருவரும், ஆண்டவரிடத்திலும் மன்னிப்புக் கேட்பதும் ஒரு சிலாக்கியமானது, சந்தோஷமானது என்பதை அறிந்து கொள்வார்கள்.

## யார் இதை நடத்தலாம்

திருப்பலியின் தவறான உபதேசமும், சபையில் இதைக் கொடுக்கும்படியாகவும், இப்படிப்பட்ட ஆராதனைகளை நடத்தும்படியாகவும் குருவானவர்கள் என்ற ஒரு வகுப்பினர் ஏற்படுத்தப்பட்டதும், பொது ஜனங்களின் மனதில் ஒரு பெரிய ஆழமான எண்ணத்தை உண்டுபண்ணினபடியால், புராட்டஸ்டண்ட் (Protestants) இன்றைக்கும் கூட பொதுவான ஆசீர்வாதம் கூறவும், இப்படியான நினைவுகூருதலின் ஆராதனையை நடத்தவும், நியமனம் பெற்ற குருவானவர் இருப்பது மிக அவசியமானதென்றும், வேறு எந்த முறையும் அருவருப்பானது என்றும் கருதுகிறார்கள். இந்த நினைவுகூருதலில் பங்குபெறும் சிலாக்கியம் உள்ள அனைவரும் இராஜரிக ஆசாரியத்துவத்தின் பிரதிஷ்டை பண்ணப்பட்ட அங்கங்கள், ஒவ்வொருவனும் அவனவனுடைய தாலந்துகளுக்கும், சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப ஆண்டவருடைய வார்த்தையைப் பிரசங்கிக்கும்படி, அவரால் முற்றுமாக நியமிக்கப்பட்டவர்கள் என்பதையும், அவருக்கும் அவருடைய சரீரத்தின் அங்கங்களாக இருப்பவர்களுக்கும், அவருடைய நாமத்தினால் மற்றவர்களுக்கும் அவர்களால் இயன்றவரை எந்த ஊழியம் செய்யவோ அல்லது சேவை செய்யவோ முற்றுமாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை நாம் ஞாபகத்தில் கொண்டுவரும்போது இந்தக் கருத்து எவ்வளவு தவறானது என்பது உடனடியாக உணர்ந்துகொள்ளப்படுகிறது. "நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்" என்பது ஆண்டவரின் வார்த்தை, அவரோடு நாம் ஐக்கியம் கொள்ளும்போதும், அவருடைய மீட்பரின் வேலையை கொண்டாடும்போதும், நம்முடைய பொதுவான ஐக்கியத்தை அவரோடும், அவருடைய சரீரத்தின் அங்கங்களாயிருக்கிற ஒவ்வொருவரோடும்கூடக் கடைபிடிக்கும்போது இதை மறந்து விடக்கூடாது.

இருந்தாலும், நாம் ஏற்கெனவே சுட்டிக்காட்டியபடி, ஆண்டவருடைய ஜனங்களின் ஒவ்வொரு சிறுகூட்டத்திலும், ஒவ்வொரு சின்ன சபையிலும் அல்லது கிறிஸ்துவின் சரீரமான சபையிலும் ஒழுங்கு இருக்க வேண்டும், அந்த ஒழுங்கின் ஒரு பகுதியாக, "ஒவ்வொரு சபையிலும் மூப்பர்கள் இருக்க வேண்டும்." சபையின்

அங்கமாயிருக்கிற ஒவ்வொரு புதுச் சிருஷ்டியும், நினைவுகூருதலான இராப்போஜன சம்பந்தப்பட்டதில் எந்தப் பங்கும் பெற அனுமதிக்கும்படி, ஆண்டவரால் நியமனம் பெற்றிருந்தபோதும், சபையானது, முப்பர்களை ஏற்படுத்துவதின் மூலம் இப்படிப்பட்ட விஷயங்களைப் பொறுத்தவரை முழுச் சபைக்கும் மூப்பர்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஆகவே, இந்த ஊழியத்திற்கென அவர்கள் ஏற்கெனவே சபையினால் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதால், இந்த நினைவுகூருதலை ஒழுங்குசெய்வதும், அதை நடத்துவதும் ஒரு ஊழியமாக அவர்களை சார்ந்ததா யிருக்கும்.

"இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்பது ஆண்டவருடைய கூற்று. எங்கெல்லாம் சாத்தியம் உள்ளதோ, அங்கெல்லாம் இந்த நினைவுகூருதல் சபையின் சக அங்கங்களோடு கொண்டாடப்பட வேண்டும் என்பதையே இது விளக்குகிறது. இதில் உள்ள ஆசீர்வாதம் ஒருவரையொருவர் ஐக்கியத்தில் ஈர்க்கும்படியாகவும், இந்த வருடாந்திர கூட்டத்தின்போது மாத்திரமல்ல, சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் கூடிவர ஈர்க்கும்படியாக உள்ளது. இரண்டு அல்லது மூன்று பேர் கூடும்போதுகூட இந்த வாக்குத்தத்தத்தை சுதந்தரித்துக் கொள்ளமுடியும், ஒரு பெரிய கூட்டத்தோடு கூடுவதற்கு முடியாததாக அல்லது வசதியற்றதாக இருக்கும் போது, அவர்கள் ஒரு முழுச் சபையாக கொண்டாடும்படியாக சிலாக்கியம் பெற்று இருக்கிறார்கள்; அப்பொழுது ஒரு தனிமனிதனும் சூழ்நிலைகளின் நிமித்தம் மற்றவர்களோடு கூடிவர வாய்ப்பு இல்லாதவனாக இருக்கும் போது, அவனுடைய விசுவாசம் போதிய பலத்துடன் ஆண்டவரிடத்தில், வாக்குத்தத்தத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படி வெளிப்பட வேண்டும் என்று யோசனையாகக் கூறுகிறோம் – அதாவது ஆண்டவரும், அந்த நபருமாகச் சேர்ந்து இருவராகிறார்கள். பாவத்திற்காகச் செலுத்தப்பட்ட இந்தப் பெரிய பலியை, வருடந்தோறும் கொண்டாட முடியாதபடி – அதில் பங்குபெற முடியாதபடி தனித்துவிடப்படும் நிலைமை தடையாக இருக்க அனுமதிக்கக் கூடாது என்று நாம் யோசனையாகக் கூறுகிறோம். மேலும் தன்னந்தனியாக வாழ்கிற அந்த நபர் அப்பத்தையும் – (புளிப்பில்லா அப்பம் கிடைக்குமென்றால் அதை வைத்துக்கொள்ளலாம் – அது Soda Biscuit அல்லது Water cracker ஆக இருக்கலாம்) அதோடு திராட்சரசத்தையும் (raisin juice or grape juice or wine) ஏற்பாடு செய்ய வேண்டும். ஆவியில் ஐக்கியப்பட்டு ஆண்டவரோடும், இப்பொழுது சந்தர்ப்ப சூழ்நிலையால் தன்னந்தனியாக இருந்தாலும், சரீரமான சபையின் மற்ற அங்கங்களோடு அவன் கொண்டாடவேண்டும் என்று யோசனையாகக் கூறுகிறோம். (எங்களுக்கு தெரிந்தவரை, ஆண்டவர் இந்த நினைவுகூருதலை ஏற்படுத்திய போது அதிக காலம் பதப்படுத்தப்பட்ட (fermented) திராட்சப்பழரசத்தை உபயோகப்படுத்தினார். இருந்தபோதிலும் அவர் திட்டவட்டமாக ஒயின் என்று குறிப்பிடாமல் "திராட்சப்பழரசம்" என்று குறிப்பிட்டார். மேலும் நம்முடைய நாட்களில் மதுபானம் அருந்தும் பழக்கம் அதிகக் கெடுதலை விளைவிக்கும் பழக்கமாகிவிட்டதால், அதிக காலம் ஊறவைக்கப்படாத திராட்சரசத்தை அல்லது உலர்ந்த திராட்சையை

உபயோகிப்பதில் ஆண்டவருடைய அனுமதியைப் பெற்றிருக்கும் என்று நாம் நம்புகிறோம். வசதிப்பட்டால், நீண்டகாலம் பதப்படுத்தப்பட்ட (fermented) திராட்சரசத் துளிகள் சேர்க்கப்படலாம்; பதப்படுத்தப்பட்ட திராட்சரசத்தை உபயோகித்தால்தான் ஆண்டவருக்கு கீழ்ப்படிதலாகும் என்று நினைப்பவர்களின் மனசாட்சியை திருப்திபடுத்துவதற்காக, இப்படிச் செய்வதால் மாம்சத்தில் பெலகீனமாயிருக்கிற, ஆண்டவரின் சகோதரர் எவருக்கும் எந்த ஆபத்தும் கிடையாது.)

## ஆராதனை முறைமை

ஆண்டவர் ஆராதனைக்கென ஒரு சட்டத்தையோ அல்லது ஒழுங்கையோ வைக்காதபடியினால், அப்படி ஒரு சட்டத்தை ஏற்படுத்துவது நமக்குரியதல்ல. இருந்தாலும், இந்த நினைவுகூருதலை ஒழுங்காக கொண்டாடுவதற்கு என்று சாதாரணமானது (Moderate), தகுதியானது என்று எங்களுக்குத் தோன்றுகிற ஒரு முறைமையைக் கூறலாம் என்று நாங்கள் நம்புகிறோம். நாங்கள் இப்படிச் செய்வது ஒரு சட்டத்தையோ அல்லது திட்டத்தையோ உண்டாக்க வேண்டும் என்ற நோக்குடன் அல்ல, ஆனால் இந்த விஷயத்தில், மிகவும் விரிவாக நடத்தப்படுகிற ஆராதனைக்குப் பழக்கப்பட்ட சிலர் அல்லது இப்படியானவைகளுக்கு பழக்கப்பட்டிராத சிலருக்கு ஒரு சாதாரணமான வகையில் உதவிசெய்யும் நோக்கத்துடன் இதை யோசனையாகக் கூறுகிறோம். அப்படியானால் நாங்கள் கூறுகிறவைகள் திருத்தம் செய்யப்பட வேண்டுமென்றால், அப்படிச் செய்யலாம் என்ற கருத்தில் கூறுகிறோம்.

அது பின்வருமாறு:

1) இராப்போஜனத்திற்கு ஏற்ற வகையில் பயபக்தியை உண்டு பண்ணக்கூடிய, அதற்குப் பொருத்தமான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கீர்த்தனைகளைப் (Hymns) பாடி ஆராதனையை ஆரம்பிக்கலாம்.

2) கூடியிருக்கிறவர்களுக்காகவும், விசேஷமாக பங்குபெறுபவர்களுக்காகவும், உலகத்தில் உள்ள, நமக்குத் தெரிந்த, தெரியாத ஒரே சரீரத்தின் அனைத்து சக அங்கங்களுக்காகவும், விசேஷமாக இந்த வருடாந்திர நினைவுகூருதலில் பங்குபெறுபவர்களுக்காகவும் திவ்விய ஆசீர்வாதத்திற்காக ஜெபம் செய்வது.

3)நடத்துகிற மூப்பர் வேதாகமத்திலிருந்து, ஆதியில் ஏற்படுத்தப்பட்ட நினைவுகூருதலைப் பற்றிய ஒரு பகுதியை வாசிக்கலாம்.

4) அவர் அல்லது வேறொரு மூப்பர் அந்த விஷயத்தின் நிழல் பொருள் குறித்துப் பேசாலம்; அவருக்கு விருப்பமானால், முழு விஷயத்தையும் குறித்துச் சில வசனங்களை வாசித்துப் பிரசங்கம் பண்ணலாம்.

5) நம்முடைய ஆண்டவர் அப்பத்தைப் பிட்கும் முன் ஆசீர்வதித்தார் என்ற விஷயத்தில் கவனத்தை ஈர்ப்பதற்கு, தலைவராயிருக்கிறவர் தகுதியாய் இருக்கிற ஒரு சகோதரரை அப்பத்தின்மேல் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க சொல்லலாம்; வேறு ஒருவரும் இல்லாவிட்டால் அவரே அதற்குத் தகுதி உள்ளவராக இருக்கிறபடியால், அப்பத்தின் மேலும், அதில் பங்கு பெறுபவர்கள் மேலும் திவ்விய ஆசீர்வாதம் வரும்படியாகவும், அதற்குரிய ஆசீர்வாதத்தை அல்லது அதற்குரிய ஆழமான

அர்த்தத்தைப் புரிந்துகொள்ளும்படியாக, அவர்களின் பிரகாசமான மனக் கண்கள் திறக்கப்படும்படியாகவும், மேலும் ஆண்டவருடைய மாம்சத்திற்கு அடையாளமானதை உபயோகிப்பதிலும், அவரோடு பிட்கப்படுவதிலும் தங்களுடைய சொந்த அர்ப்பணிப்பைப் புதுப்பித்துக் கொள்ளுவதிலும், அதில் பங்குபெறுகிற அனைவரும் ஆண்டவரோடு ஆசீர்வாதமான ஐக்கியம் கொள்ளும்படியாகவும் திவ்விய ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வேண்டும்.

6)"நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்ற ஆண்டவருடைய வார்த்தையை உபயோகித்து புளிப்பில்லா அப்பத்தின் ஒரு பகுதி அப்பொழுது பிட்கலாம். அப்பம் உள்ள தட்டை சகோதரர்களில் ஒருவராவது அல்லது நடத்துபவர்தானே பரிமாற எடுத்துச் செல்லலாம்; அல்லது ஜனங்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தால் புளிப்பில்லா அப்பம் கொண்ட பல தட்டுகள் ஒரே வேளையில், இரண்டு, நான்கு, ஆறு அல்லது எந்த எண்ணிக்கையிலும் பிரதிஷ்டை செய்துகொண்ட சகோதரர்கள் எடுத்துச் சென்று பரிமாறலாம்.

7)அப்பத்தையும் திராட்சரசத்தையும் பரிமாறும்போது அமைதி காக்கப்பட வேண்டும்; அப்பத்தின் அர்த்தத்தைக் குறித்துச் சுருக்கமான குறிப்புகள் மட்டும் – நாம் எப்படியாக ஆண்டவரின் பந்தியில் அவரைப் புசிக்கவும், பருகவும் செய்கிறோம் என்பதைக் கூறலாம்; ஆனாலும், பந்தியில் பங்குபெறுபவர்களின் கவனம் கலைக்கப்படாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்; பொதுவாக இந்த விஷயம் குறித்து, கொண்டாடுவதில் உள்ள அர்த்தத்தைக் குறித்து, பிரசங்கியாளரோ அல்லது தலைவரோ பரிமாறுதலுக்கு முன்பு கூறுவது நலமாயிருக்கும்.

8) நம்முடைய ஆண்டவர், "பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி" அதைச் சீஷர்களுக்குக் கொடுத்தார் என்று நாம் வாசிக்கிறது போல, பிறகு அந்தப் பாத்திரம் ஆசீர்வதிக்கப்பட வேண்டும். ஒரு சகோதரர் இந்த ஸ்தோத்திரம் பண்ணும் ஜெபத்தை செய்யுமாறு கேட்கப்படவேண்டும்; மேலும், அதில் பங்குபெறுபவர்கள் ஆசீர்வதிக்கப்படும்படியாகவும் ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளப்படவேண்டும். அப்பத்தைப் போன்று இதுவும் அமைதியாகப் பரிமாறப்பட வேண்டும்.

9) இறுதி வரை ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் செய்த வண்ணம், அதற்கு முடிவாக ஒரு ஸ்தோத்திரப்பாட்டுப் பாடப்பட வேண்டும், ஆராதனை இப்படியாக முடிவுற்று, அதன் பின்னர்க் கூட்டம் கலைந்து செல்லவேண்டும் என்று நாம் யோசனை கூறுகிறோம். இந்த வேளையின் போது வழக்கமாகச் செய்யப்படும் வாழ்த்துக்கள் கூறுதல், ஆரோக்கியத்தைப் பற்றிய விசாரிப்புகள் முதலானவைகள் நிறுத்தப்பட வேண்டும்; மேலும், இராப்போஜனப் பந்தியைக் குறித்த சிந்தனையையும் ஆவிக்குரிய ஐக்கியத்தையும் கெடுக்கக் கூடிய எதையும் கூடுமானவரை செய்யாமல் அவனவன் தன்தன் வீட்டிற்குச் செல்ல வேண்டும்; மேலும், கூடுமானவரை ஒவ்வொருவரும் அந்த ஐக்கியத்தை அந்த இராத்திரியில் மாத்திரமல்ல, மறுநாளிலும் காத்துக் கொள்ளவேண்டும், எப்படியெனில் ஆண்டவருடைய கெத்செமனே அனுபவங்களை நினைவுகூருகையில் அவருடையவர்கள் ஒவ்வொருவரும் இந்தக் கெத்செமனே

அனுபவங்களுக்குள் கடந்து செல்லக்கூடும், அவ்வேளையில் உடன் இருக்கும் சீஷர்களுக்கும் உதவியும் அனுதாபமும் தேவைப்படக்கூடும் என்பதை மனதில் கொண்டு அவ்வாறாக செய்யவேண்டும் என்று யோசனையாகக் கூறுகிறோம்.

ஆண்டவரைக் குறித்து இப்படியாக எழுதப்பட்டு உள்ளது: "அப்பொழுது எல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்" – அவருடைய சொந்த சோதனையின் காலத்தில் அவரோடு அனுதாபப்படக்கூடியவர்கள் ஒருவரும் கிடையாது. நம்மைப் பொறுத்தவரை இது வித்தியாசமாக இருக்கிறது. இதேபோல் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, இதேபோல் ஒரே அப்பத்தின் அங்கங்களாக பிட்கப்படும்படியாக உறுதிமொழி எடுத்துக்கொண்டு, மேலும் அதே பரிசுத்த ஆவியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரமான சபையின் சக அங்கங்கள் நமக்கு உண்டு; நாம் இதை நினைவுகூரும்போது, சபையில் மிகச் சிறியவர்களுக்கு எதைச் செய்தாலும் அது தலையாயிருக்கிறவருக்கே செய்யப்படுகிறது என்பதையும், அது அவரால் பாராட்டப்படுகிறது என்பதையும் நினைவில் வைத்து, சபையில் நம்முடன் இருக்கிற அங்கங்களுக்கு அதிக உதவியாய் இருக்க நாடுவோமாக. பேதுருவின் உதாரணத்தை அதே வேளையில் நினைவுகூருவது பொருத்தமாயிருக்கும் – ஆண்டவருடைய துடிதுடிப்புள்ள ஊழியக்காரனாக இருந்தாலும், சோதிக்கப்பட்ட வேளையில் அவருடைய பெலவீனத்தையும் ஆண்டவருடைய உதவியும் ஜெபமும் அவருக்கு தேவைப்பட்டதையும் நினைவுபடுத்திக்கொள்ளுவது சரியானதாக இருக்கும். "நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்." இதை நினைவுகூருவது நமக்கு பிரத்தியேகமான உதவியாக இருக்கலாம், ஏனெனில் அப்போஸ்தலர் பேதுருவுக்கு இது அப்பொழுது உதவியாக இருந்தது. "ஒவ்வொரு தேவையான வேளையிலும் கிருபை கிடைக்கும்படியாக" ஆண்டவரை அதிகமாக நோக்கிப் பார்க்க அது நமக்கு உதவிசெய்யும்.

அதே வேளையில் நாம் யூதாசையும், அவனுடைய வீழ்ச்சி சுயநலத்தினாலும், முன்னேற வேண்டும் என்ற ஆவலினாலும், பொருளாசையினாலும் வந்தது என்பதை நினைவுகூருவது நல்லது. இந்தச் சுயநலம் என்ற கதவின் வழியாக எப்படிச் சாத்தான் அதிகமதிகமாக அவனுக்குள் நுழைந்தான் என்பதை நாம் நினைவுகூரும் போது, இதேபோன்று சத்துருவின் வலைக்குள் நாமும் விழுந்து விடாதபடி ஜாக்கிரதையாக இருக்க அது நமக்கு உதவி செய்யும். அப்படியில்லையென்றால் ஏதாவது ஒரு காரியத்திற்காக நம்மைக் கிரயம் செலுத்தி வாங்கிய ஆண்டவரை மறுதலியாமல் இருக்கும்படியாகவும், எப்பொழுதாவது, வாயின் வார்த்தையின் மூலம் ஆண்டவரை அல்லது அவருடைய சகோதரரை அல்லது சத்தியத்தை மறுதலியாமல் இருக்கவும் அதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். அடுத்த நாளிலும் நம்முடைய அன்பான மீட்பரின் அனுபவங்களை நம்முடைய ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுவோம், இதன்படி, அவரோடு ஆழ்ந்த அனுதாபம் கொள்ளும்படியாக மாத்திரமல்ல, மேலும் அவரைப் பின்பற்றுபவர்களாக இருக்கிற நம்மேல் வரும்படியாக அனுமதிக்கப்படக் கூடிய அக்கினி போன்ற சோதனைகளையும் விநோதமானது என்று நினையாமல் இருக்கும்படியாகவும், இறுதிவரை நாம் அவரை பின்பற்றும்படியாகவும், எக்காலத்திலும்

அவர் மரிக்கும் போது சொன்ன வார்த்தைகளான "எல்லாம் முடிந்தது" என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுவது நல்லது. மேலும் நமது சார்பாக அவர் செலுத்திய பாவத்திற்கான காணிக்கை முடிவு பெறுகிறது என்பதையும், அதன்மூலம் அவருடைய தழும்புகளால் நாம் குணமானோம் என்பதையும், அவர் நமக்காகப் பரிந்துபேசும் படியாகவும், நமக்குச் சகாயம் தேவைப்படும் ஒவ்வொரு வேளையிலும் உதவி செய்யும்படியாகவும் அவர் என்றென்றும் ஜீவிக்கிறார் என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

## ஈஸ்டர்-பஸ்கா

"ஈஸ்டர்" ("Easter") என்கிற வார்த்தை வேதாகமத்தில் ஒரு முறை வருகிறது. (அப்போஸ்தலர் 12:4) அங்கே அது தவறாக மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. அது பஸ்கா பண்டிகை என்று மொழிப்பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஈஸ்டர் என்கிற பெயர் புறஜாதியாரிடமிருந்து பெறப்பட்டது. அது ஜெர்மனியர்களின் பின்னணியிலிருந்து வந்ததாகும். அது Estera என்ற கிழக்கத்திய தேவதை, அல்லது ஜெர்மனியர்களின் தேவதையைக் குறிப்பிடுகிறது. இந்தத் தேவதைக்கான திருவிழா, பஸ்கா பண்டிகையின் காலமான வசந்த காலத்தில் (Spring) கொண்டாடப்பட்டது. இந்தப் பெயரை ஏற்றுக்கொள்ளுவது, நம்முடைய ஆண்டவரின் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் கொண்டாடுகிற காலத்திற்கு இந்தப் பெயரைக் கொடுப்பது, அதுவும் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து அந்தப் பெயரைக் கொடுப்பது ஆகியவையெல்லாம் கிறஸ்தவ நிறுவனங்கள் புறஜாதியாரின் முறைமைகளைச் சபைக்குள் புகுத்தும் ஒரு முயற்சி எனத் தெரிய வருகிறது. அநேக விட்டுக்கொடுக்கப்பட்ட காரியங்களைப் போன்று, இதுவும் மூன்றாம் நூற்றாண்டின் ஒரு காலப்பகுதியில் இருந்து வருகிறது. ஈஸ்டர் என்ற புறஜாதி தேவதையின் பெயரானது, நம்முடைய மனங்களில் குறிப்பாக எந்தவித மாற்றத்தையும் உண்டுபண்ண வேண்டியதில்லை, ஏனெனில் கிழக்கத்திய தேவதையைக் கொண்டாட நாம் இனி இதை உபயோகிக்கப்போவதில்லை. புராட்டஸ்டண்ட் மக்களிடையே ஈஸ்டர் என்ற பெயரானது பழைய காலத்தைப் போலவும், கத்தோலிக்கர்களால் இன்னும் உபயோகப்படுத்தப்படுவது போலவும், ஒரு காலத்திற்கு உரியதாக அல்லாமல் ஒரு நாளைக் குறிப்பதற்காகச் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஒரு நாள், ஈஸ்டர் ஞாயிறு (Easter Sunday) என்று அழைக்கப்படுகிறது. ஆண்டவரின் உயிர்த்தெழுதலைக் கொண்டாடுகிற எந்த நாளும் அவருடைய ஜனங்களுக்கு விலையேறப்பெற்ற நாளாக இருக்கும். ஆனால் இந்த விஷயத்தைச் சரியாக உணர்ந்துகொள்ளுகிறவர்களுக்கு, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஈஸ்டர் ஞாயிறாக (Easter Sunday) இருக்கும். ஏனெனில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நம்முடைய ஆண்டவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததை நினைவுகூரும் நாளாகும்.

இங்கே இதே விஷயத்தை அறிமுகப்படுத்துவதில் உள்ள நம்முடைய நோக்கம்

முக்கியமாக ஈஸ்டர் என்கிற இந்த வார்த்தைக்குப் பரவலாக கத்தோலிக்கர்கள் கொண்டுள்ள கருத்துக்குக் கவனத்தை ஈர்ப்பதற்காகும். இதில் பெரிய வெள்ளியும், ஈஸ்டர் ஞாயிறும் உள்ளடங்கும், இவைகள் பஸ்கா பண்டிகை நாட்களுக்கு மாற்று வார்த்தைபோன்றே அர்த்தம் உள்ளது என்று நினைத்து உபயோகிக்கப்படுகிறது. திருப்பலி அறிமுகப்படுத்தப்பட்டதும், அடிக்கடி கடைபிடிக்கப்பட்டதும், நம்முடைய ஆண்டவரின் மரணத்தை வருடாவருடம் கொண்டாடுவதை அர்த்தமற்றது ஆக்கும் என எதிர்பார்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் அது அப்படியல்ல. ஆதிகால சபையின் பழக்கமானது பெரிய முக்கியமான மையக்கருத்தைக் கொண்டாடுவதாக இருந்தது, சபை நீடித்திருப்பதற்கு உதவியாக அந்த மையக்கருத்து நீடித்து வந்தது; ஆனால் இராப்போஜனத்தைக் கொண்டாடுவதும், அதை ஏற்றக் காலத்தில் கொண்டாடுவதும் நின்றுவிட்டது; திருப்பலிகள் அதிகமாக செலுத்தப்பட்டதின் நிமித்தம் அது அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டது, இப்படியாக இந்த ஒரு முக்கியமான நினைவுகூருதல் அதன் அர்த்தத்தை இழந்துவிட்டது.

நாம் ஏற்கெனவே விளக்கமாக கூறியுள்ளபடி, பல நூற்றாண்டு காலமாக யூத காலண்டர் முறைப்படி நம்முடைய ஆண்டவர் சிலுவையிலறையப்பட்ட தேதியைக் கணக்கிடுவது வழக்கமாக இருந்தது. ஆனால் காலாகாலத்தில் கூடுமானவரை யூத நிறுவனத்தின் முறைகளை மாற்ற வேண்டும் என்ற வாஞ்சையோடு, நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்துவின் மரண நாளை கணக்கிடும் முறையில் ஒரு மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. நிசேயா (Nice) என்ற இடத்தில் கூடிய கிறிஸ்தவ சங்கம் (Ecumenical Council), வசந்தகாலத்தில் மத்திய ரேகையைச் சூரியன் கடந்த பின்னர் (spring equinox) வருகிற முதலாவது பௌர்ணமியைத் தொடர்ந்து வருகிற வெள்ளிக்கிழமையன்று, இனிமேல் பஸ்கா பண்டிகை (Easter) கொண்டாடப்பட வேண்டும் என்று கட்டளையிட்டது. இது உலகம் முழுவதும் ஆண்டவருடைய மரணத்தைக் கொண்டாடுவது, "பெரிய வெள்ளி" ("Good Friday") என்று அழைக்கப்படுகின்ற வெள்ளிக்கிழமை என்று தீர்மானித்ததுமல்லாமல், யூத பஸ்கா பண்டிகையின் நாள், இந்தப் பெரிய வெள்ளியோடு மிகக் குறைந்த பட்சத்தில் மட்டுமே இசைவாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளப்பட்டது. அப்பொழுதும், இப்பொழுதும் கூட, யூதர்கள், சூரியன் வசந்த காலத்தில் மத்திய ரேகையைக் கடக்கும் வரை காத்திருந்து, அதன் பிறகு வருகிற முதலாவது அமாவாசையன்று தங்கள் மாதத்தைத் துவக்குகிறார்கள், அதிலிருந்து 14வது நாளன்று அதாவது பௌர்ணமியன்று பஸ்காவை ஆசரிக்கிறார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். கணக்கிடும் முறை இப்படி மாற்றப்பட்டதால், இந்த மாற்றத்தின் மூலம் இரண்டு விதமான கணக்கீடுகளுக்கிடையில் கிட்டத்தட்ட ஒரு மாத வித்தியாசம்கூட எப்பொழுதாவது ஏற்படுகிறது.

இதில் எது உயர்ந்த முறை என்று சொல்லுவது நம்முடையதல்ல, ஆனாலும் ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் கடைபிடித்ததைக் கைக்கொள்ள வேண்டும் என்பதே நம்முடைய விருப்பமாகும். கணக்கிடுவதில் தவறு இழைத்து விட்டாலும்,

தவறான ஒரு நாளில் கொண்டாடினாலும் நாம் ஒரு குற்றத்தை இழைத்து விட்டோம் என்ற மனவருத்தத்துடன் அல்ல, திவ்விய ஏற்பாட்டின்படி உள்ள அதை நம்மால் இயன்றவரை, அந்த முறையைக் கடைப்பிடிக்க முயற்சித்தோம் என்ற மனதிருப்தியுடன் கடைப்பிடிக்க விரும்புகிறோம். தேதியைத் தற்கால காலண்டர்படி நிர்ணயிப்பது இன்னும் நல்லதாக இருக்கலாம் என்று ஒருவர் சொல்லக்கூடும். அது ஏப்ரல் 15வது நாள், அல்லது ஏப்ரல் முதலாவது நாளாக அல்லது வேறு நாளாக, இன்னும் மற்றக் கணக்கீடுகள் போன்றவைகள் தேவையற்றதாகிவிடலாம், ஆண்டவர் ஏற்படுத்தியபடி அவர் யூத காலண்டரை ஒழுங்குபடுத்தியதற்கு ஒரு காரணம் வைத்திருந்தார், இந்த விஷயத்தில் அவர் ஏற்படுத்தியதை அறிந்து அதைத் தொடர விரும்புகிறோம்.

ஒரு குறிப்பிட்ட விதத்தில் தேவனுடைய ஆவிக்குரிய இராஜ்யத்திற்கு அடையாளமாக சூரியனைக் காண்கிறோம், சந்திரன் நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கும், மேலும், அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கைக்குக் கீழாக இருந்த ஜனங்களுக்கும் அடையாளமாக இருக்கிறது. ஆகவே பௌர்ணமி தினத்தன்று, சரியாக அந்த நாளிலே ஆண்டவர் சிலுவையில் அறையப்படுவதில் இப்படியாக ஒரு விசேஷமான முறையில் அது சரியானதாக இருந்தது; மேலும், வேளையைப் பற்றிய தேவனின் அநாதி தீர்மானத்தின்படி அது அமைந்திருந்தது; ஆகவே அவர்களால் அந்த வேளைக்கு முன்பாக அவரைப் பிடிக்க விரும்பியும் முடியாதிருந்தது, ஏனெனில் "அவருடைய வேளை இன்னும் வராதிருந்தது" (யோவான் 7:30; 8:20) பௌர்ணமியன்று அவர் சிலுவையில் அறையப்பட்டதும், உடனடியாக சந்திரன் மறையத் தொடங்கினதும், இஸ்ரயேல் ஒரு ஜாதியாக தன்மேல் ஒரு திவ்விய நிராகரிப்பை வரவழைத்துக் கொண்டது அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அது புறம்பாக்கப்பட்டது என்ற ஒரு பாடத்தைச் சுட்டிக்காட்டுகிறது; இது சந்திரன் மறைந்துபோனதற்கு ஓர் அடையாளமாக இருப்பதுடன், அவர்கள் ஜாதியாக தாழ்த்தப்பட்டதற்கும் அடையாளமாக இருக்கிறது.

இதைக்குறித்து நன்மதிப்புப் பெற்ற ஒருவரது, சில முக்கிய பகுதிகளைக் கீழே தருகிறோம். மேற்கூறியவைகளுக்கு இது ஆதாரமாக உள்ளது.

## மெக்ளின்டோக், ஸ்ட்ராங் ஆகியோரின் என்சைக்ளோபிடியாவிலிருந்து

## (From Mc Mclintok and strong's Encyclopedia)

"ஈஸ்டர் அதாவது பஸ்கா (Easter, ie., Passover-Easter):- இந்த வார்த்தை ஜெர்மனியர்களின் பின்னணியிலிருந்து வருகிறது; அது அவர்களின் தேவதையைக் குறிக்கிறது; இன்னொரு விதத்தில் பார்க்கும்போது கிழக்கத்திய தேவதையைக் குறிக்கிறது; அதன் பெயர் எஸ்டரா (Estera) என்பதாகும். இந்தத் தேவதையைக் கனப்படுத்தும் வகையில் வருடந்தோறும் பஸ்கா பண்டிகை கொண்டாடப்படும் கிட்டத்தட்ட அதே காலத்தில் (spring) பலிகள் செலுத்தப்பட்டு வந்தன. அந்தப் பெயரையொட்டி பஸ்கா பண்டிகையின்போது நடைபெற்ற கிறிஸ்தவ உயிர்த்தெழுதலின்

பண்டிகைக்குப் பெயர் வழங்க தொடங்கிற்று. இதைத்தான் ஈஸ்டர் நாள் என்றும் ஈஸ்டர் ஞாயிறு (Easter-day, Easter Sunday) என்றும் தவறாகக் கூறுகிறோம். எப்படியெனில் இது ஆதிகாலத்து ஜெர்மனியர்களின் தேவதைக்கு அப்போது வைக்கப்பட்டிருந்த பண்டிகையைத்தான் குறிப்பிடுகிறது. ஆகவே ஈஸ்டர் என்ற பதத்திற்குத் தற்கால ஜெர்மனிய வார்த்தையான Ostern உபயோகப்படுத்தப்படுகிறது. இது அதே தேவதையான எஸ்டரா (Estera) அல்லது ஆஸ்டெராவைக் (Ostera) குறிப்பிடுகிறது. அங்கீகரிக்கப்பட்ட மொழிப்பெயர்ப்பில் இந்த வார்த்தை வருகிறது, – "பஸ்கா (Easter) பண்டிகைக்குப் பின்பு ஜனங்களுக்கு முன்பாக அவனை வெளியே கொண்டு வரலாமொன்று எண்ணி" (அப்போஸ்தலர் 12:4) – மொழிப்பெயர்ப்பாளர்களிடையே மொழிப்பெயர்ப்பில் ஒருமைப்பாடு குறைவுபட்டிருந்ததற்கு இது ஓர் உதாரணமாக இருப்பதை முக்கியமாகக் காணமுடிகிறது. கடைசியாக செய்யப்பட்ட மொழிப்பெயர்ப்பில் எல்லாப் பகுதிகளும் பஸ்கா (Passover) என்று மாற்றப்பட்டது, ஆனால் இது . . .

"ஆசியா மைனரில் உள்ள எல்லாச் சபைகளும் நிசான் மாதத்தின் 14-ஆம் நாளன்று ஆண்டவரின் மரணத்தைக் கொண்டாடின. ஆதிக்காலத்துச் சபைகளனைத்தின் கருத்தின்படி இந்த நாளில் கிறிஸ்துவின் சிலுவை மரணம் ஏற்பட்டது. மேற்கத்திய நாடுகள் (Rome) அது நடந்த நாளன்று, அதாவது அந்த வாரத்தின் வெள்ளிக்கிழமையன்று சிலுவை மரணம் வருடந்தோறும் கொண்டாடப்பட வேண்டும் என்ற கருத்தை உடையதாக இருந்தன. மேற்கத்திய நாட்டுச் சபைகள், கிறிஸ்துவின் மரண நாளை ஒரு துக்க நாளாகக் கருதியது, உயிர்த்தெழுந்த நாள்வரை உபவாசத்தைத் தொடர்ந்தது. இன்னொரு பக்கம், Asia Minor-இல் உள்ள சபைகள், கிறிஸ்துவின் மரணமானது மனுக்குலத்தின் மீட்புக்காக மாத்திரமே என்று எண்ணின; ஆகவே, கிறிஸ்து மரித்த அந்த வேளையில் அதாவது மத்தியான வேளை மூன்று மணியளவில் உபவாசத்தை முடித்துக்கொண்டு, உடனே ஆண்டவருடைய இராப்போஜனத்தைக் கொண்டாடினார்கள். இந்த இரு குழுவினருமே (Orthodox Eastern and Western Churches) பஸ்கா (Pascha – Passover) என்ற பெயரை ஏற்றுக்கொண்டார்கள்; இதன் மூலம் சில வேளைகளில் இந்த வாரத்தின் விசேஷித்த ஆசரிப்பு நாட்களைப் புரிந்துகொண்டார்கள், சில வேளைகளில் பஸ்கா (Passover) நினைவுகூரப்படுகிற முழு வாரத்தையும் புரிந்துகொண்டார்கள்.

"ஏறக்குறைய கி. பி. 196-இல் ரோமாபுரியின் பிஷப் விக்டர், சபையின் முக்கிய பிஷப்மார்களுக்கு ஒரு சுற்றறிக்கையை விடுவித்து, அவர்களுடைய மாகாணங்களில் குருமார்களின் குழுக்களைக் கூட்டவும், மேற்கத்திய வழக்கத்தை (வெள்ளிக் கிழமையிலும், ஞாயிற்றுக்கிழமையிலும் ஆசரிப்பது - சரியான நாளான நீசான் மாதத்தின் 14வது, 16வது நாளை விட்டுவிட்டு) அறிமுகப்படுத்தும்படி கேட்டுக்கொண்டார். அப்போது முதல் முறையாக ஆதிச்சபையில் பெரிய தகராறு எழுந்தது; சிலர் அவருடைய வேண்டுகோளுக்கு இசைந்தார்கள், ஆனால் எபேசுவின் பிஷப் பாலிக்ரேட்ஸ் (Polycrates) கூட்டிய குழுக்கள் திட்டவட்டமாக மறுத்து பிஷப் பாலிக்ரேட்ஸின் நிருபத்தை அங்கீகரித்தன. அவர்கள் ஆசிய நாட்டுப் பழக்கத்திற்குச்

சாதகமாக இருந்து, விக்டரைப் பற்றி அப்போஸ்தலர்களான பிலிப்புவின், யோவானின் அதிகாரத்திற்கும், பாலிக்கிரேப்புக்கும் (Polycrap), அவனுக்கு முன்பாக எபேசுவில் பிஷப்பாக இருந்த அவனுடைய ஏழு உறவினர்களுக்கும் தெரியப்படுத்தினார்கள் . . .

"இது வரைக்குமாக, ஆசியா மற்றும் மேற்கத்திய (Roman) சபைகளுக்கு இடையே இருந்த பிரச்சனை இரண்டு குறிப்புகள் சம்பந்தப்பட்டதாக மாத்திரம் இருந்தன. அவையாவன:

1) கிறிஸ்துவின் மரணம் நிகழ்ந்த வாரத்தின் நாள் நினைவுகூரப்பட வேண்டுமா அல்லது மாதத்தின் நாள் நினைவுகூரப்பட வேண்டுமா என்பது.

2) உபவாசம் நிறுத்தப்பட வேண்டுமா என்பது.

இப்பொழுது நீசான் மாதத்தின் 14-ஆம் தேதி வந்த அதன் சரியான நேரம் எது என்பதைக் குறித்து மூன்றாவது பிரச்சனை வந்தது. அநேக சபையின் தலைவர்களின் கருத்து, எருசலேம் அழிவுக்கு முன் உள்ள காலம் வரை யூதர்களின் ஆரம்பக் கணக்கீடு தான் சரியானது என்பதாகும், நீசான் மாதத்தின் 14-ஆம் நாள் வசந்த காலத்தில் சூரியன் மத்திய ரேகையைக் கடந்த பின்னரே வரும், ஆனால் பின்னால் வந்த யூதர்கள் தவறாகக் கணக்கிட்டதின் விளைவாகத்தான் நீசான் மாதத்தின் 14-ஆம் நாள் எப்போதாவது சூரியன் மத்திய ரேகையைக் கடப்பதற்கு முன்பு வந்தது. இது சபையில் உள்ள இரண்டு குழுவினருக்கும் மத்தியில் ஈஸ்டர் என்பது எப்போதும் சூரியன் பூமத்திய ரேகையைக் கடந்த பின்னர் நீசான் மாதத்தின் 14வது நாளன்று இருக்க வேண்டும் என்று வாதித்து, நிர்ணயம் பண்ணினார்கள்.

"யூதர்கள் வருடம் சந்திர வருடமாக (Lunar year) இருந்தபடியாலும், நீசான் மாதத்தின் 14வது நாள் எப்போதும் பௌர்ணமியாக இருந்தபடியாலும், மேலே உள்ள வானசாஸ்திரத்தின்படியான கருத்தை ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவர்கள், நீசான் மாதத்தின் 14வது நாள், சூரியன் பூமத்திய ரேகையை (Equinox) கடக்கிறதற்கு முன்னால் எப்பொழுதெல்லாம் வருகிறதோ, அப்பொழுதெல்லாம் யூத பஸ்கா பண்டிகைக்கு ஒரு மாதம் கழித்துக் கிறிஸ்துவின் மரணத்தைக் கொண்டாடுவார்கள். இனியும் கிறிஸ்தவர்கள் யூத காலண்டரைச் சார்ந்து இருக்க முடியாது என்றபோது, ஈஸ்டரின் நேரத்தைக் குறித்துத் தாங்கள் தங்களுடைய சொந்த கணக்கீட்டைச் செய்ய வேண்டியதிருந்தது. ஒரு பக்கம், ஏற்கெனவே முன்குறிக்கப்பட்ட காரணத்தினாலும், இன்னொரு பக்கம், சூரியன் பூமத்திய ரேகையைக் கடந்த தேதி சிலரால் மார்ச் 18 என்றும், சிலரால் 19 என்றும், சிலரால் 21 என்றும் நிர்ணயிக்கபட்டதினாலும், இந்தக் கணக்கீடுகள் அநேகமுறை வித்தியாசப்பட்டது. கி. பி. 314-இல் கூடிய ஆர்லெஸ் கவுன்சில் (Council of Arles) தேதி எல்லோருக்கும் ஒரேமாதிரியாக இருக்கும்படியாக முயற்சி செய்தது, ஆனால் அதன் கட்டளைகள் (decrees) அதிகமான பலனைக் கொடுத்த மாதிரி தெரியவில்லை. ஆகவே இந்த விஷயம் மறுபடியும் நிசேயா (Nice) என்ற இடத்தில் கூடிய கிறிஸ்தவ சங்கம் (Ecumenical Council), இதை விவாதித்து சபைகள் அனைத்திலும், சூரியன் பூமத்திய ரேகையைக் (Equinox) கடந்த பின்னர் நீசான் மாதத்தின் 14வது தேதிக்குப் பின் வரும் வெள்ளிக்கிழமையன்று ஈஸ்டர் கொண்டாடப்பட வேண்டும் என்று நிர்ணயித்தது. அதோடகூட, அலெக்ஸாண்டி

ரியாவில் உள்ள சபை வானசாஸ்திரத்தில் சிறந்திருந்தபடியால், ரோம சபைக்கு வருடந் தோறும் காலண்டர் படி எந்தத் தேதியில் ஈஸ்டர் கொண்டாடப்பட வேண்டும் என்பதைச் சொல்ல வேண்டும் என்றும், ரோம சபை உலகத்திலுள்ள எல்லாச் சபைகளுக்கும் அறிவிக்கவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் நிசேயா (Nice) என்ற இடத்தில் கூடிய கிறிஸ்தவ சங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட சட்டங்கள்கூட எல்லா வேறுபாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கவில்லை; ஆகவே டயோனிசியஸ் எக்சிகஸ் (Dionysius Exiguus) என்பவர் கணக்கீடு மூலம், பழைய சபைக்குள் எல்லாருக்கும் ஒரே மாதிரியான பழக்கத்தைக் கடைபிடிக்கப்படும் வரை இது நிறுத்திவைக்கப்பட்டது. பிரிட்டன் போன்ற சில நாடுகள் பழங்காலத்துப் பழக்கத்தை ஒரு பெரிய எதிர்ப்பு இல்லாமல் விட்டுவிடவில்லை. சார்லிமேன் (Charlemagne) என்பவரின் காலத்தில் எல்லாருக்கும் ஒருமித்த கருத்து (யூதர்களின் கணக்குப்படி பௌர்ணமி நாளை ஏற்காமல், வெள்ளிக்கிழமையைக் கடைபிடிப்பது) ஏற்படுத்தப்பட்டுவிட்டது போல் தோன்றுகிறது; அதன் பிறகு, சூரியன் பூமத்திய ரேகையைக் கடந்த பின்னர் வருகின்ற பௌர்ணமி தினமான நீசான் மாதத்தின் 14-ஆம் தேதி கொண்டாடப்படுவதைப் பற்றி எந்தத் தடயமும் காணப்படவில்லை.

"போப் கிரகரி XII (Pope Gregory XII) என்பவர் காலண்டரைச் சீர்த்திருத்திய போது, டயோனிசியஸ் (Dionysius) என்பவரின் காலத்தில் உள்ள காலண்டரை தக்கவைத்துக் கொண்டார்; ஆனால், ஈஸ்டர் பௌர்ணமியை மிகச் சரியான விதத்தில் கணித்தார்; மேலும் வானசாஸ்திர நேரத்திலிருந்து வருங்காலத்தில் எந்த மாற்றமும் ஏற்படுவதை தவிர்ப்பதற்குக் கவனமாக வழிவகைகளை வகுத்தார். இந்தத் துல்லியமான கணிப்பினால், கிறிஸ்தவர்களின் ஈஸ்டர் சில வேளைகளில் நிசேயா கிறிஸ்தவ சங்கத்தின் சட்டங்களுக்கு மாறாக யூதர்களின் பஸ்கா பண்டிகை காலத்தில் வரத்தான் செய்கிறது."

அதே வல்லுநர் பஸ்கா பண்டிகை என்ற வார்த்தையைக் குறித்துச் சொல்லுகிறதாவது:-

பஸ்கா பண்டிகை: "அது வருடாந்திர பிரத்தியேகமான பண்டிகை; இது முக்கியமான ஸ்தானத்தில், எபிரெய சபையின் இரண்டாவது முக்கிய நியமமான விருத்தசேதனத்திற்குத் தொடர்புடையதாக இருந்தது. (யாத்திராகமம் 12:44) யோசுவா கில்காலில் திவ்விய உடன்படிக்கையைப் பரிசீலிக்கும் போது, ஜனங்களின் விருத்தசேதனம் முடிந்தவுடன் பஸ்கா பண்டிகையைக் கொண்டாடினதைக் காணலாம். ஆனால் இந்த இரண்டு சடங்காச்சாரங்கள் இருந்த விதம், இரண்டுக்கும் இடையில் உள்ள உறவின் நிலை, இந்த நிழல்களின் உண்மைப் பொருள்கள் நிறைவேற்றப்படும் வரை, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களின் புனித ஆசரிப்பாக ஆண்டவருடைய இராப்போஜனம் அந்த இடத்தை எடுத்துக்கொள்ளும் வரை, முற்றிலுமாக விருத்திச் செய்யப்படவில்லை."

# ரீபிரிண்ட்ஸ் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகளுக்கான அட்டவணை


| ரீபிரிண்ட்ஸ் | பக்கம் |
|---|---|
| 13 | 471 |
| 94 | 195 |
| 208 | 197 |
| 225 | 281 |
| 325 | 284 |
| 465 | 3 |
| 485 | 475 |
| 509 | 379 |
| 572 | 191 |
| 619 | 148 |
| 721 | 202 |
| 740 | 384 |
| 833 | 206 |
| 839 | 14 |
| 843 | 593 |
| 899 | 390 |
| 936 | 394 |
| 1013 | 26 |
| 1021 | 287 |
| 1100 | 44 |
| 1289 | 123 |
| 1321 | 298 |
| 1382 | 289 |
| 1504 | 489 |
| 1625 | 293 |
| 1636 | 399 |
| 1657 | 207, 209 |
| 1786 | 300 |
| 1793 | 304 |
| 1794 | 551 |
| 1800 | 211 |
| 1801 | 711 |
| 1806 | 717 |
| 1809 | 863, 913 |
| 1815 | 981 |
| 1898 | 404 |
| 1942 | 307 |
| 1988 | 985 |
| 2115 | 313 |
| 2270 | 123 |
| 2278 | 597 |
| 2282 | 415 |
| 2291 | 319 |
| 2312 | 916 |
| 2315 | 988 |
| 2379 | 214 |
| 2387 | 288 |
| 2429 | 329 |
| 2436 | 489 |
| 2447 | 503 |
| 2449 | 602 |
| 2453 | 625 |
| 2455 | 633 |
| 2464 | 639 |
| 2467 | 771 |
| 2469 | 866 |
| 2470 | 922 |
| 2473 | 997 |
| 2592 | 332 |
| 2622 | 336 |
| 2743 | 510 |
| 2745 | 555 |
| 2771 | 53 |
| 2773 | 729 |
| 2778 | 783 |
| 2780 | 874 |
| 2785 | 931 |
| 2787 | 1009 |
| 2793 | 493 |
| 2917 | 224 |
| 3178 | 495 |
| 3363 | 68 |
| 3366 | 792 |
| 3369 | 1022 |
| 3525 | 79 |
| 3534 | 521 |
| 3537 | 563 |
| 3542 | 610 |
| 3544 | 651 |
| 3548 | 231 |
| 3551 | 682 |
| 3553 | 940 |
| 3560 | 1038 |
| 3635 | 339 |
| 3652 | 383 |
| 3706 | 342 |
| 3749 | 87 |
| 3759 | 698 |
| 3850 | 577 |
| 3877 | 538 |
| 3879 | 100 |
| 3885 | 740 |
| 3887 | 882 |
| 3895 | 952 |
| 3900 | 1051 |
| 4127 | 344 |
| 4146 | 418 |
| 4153 | 431 |
| 4164 | 668 |
| 4167 | 810 |
| 4171 | 1069 |
| 4335 | 264 |
| 4346 | 499 |
| 4375 | 355 |
| 4384 | 235 |
| 4555 | 707,891 |
| 4590 | 111 |
| 4605 | 479 |
| 4622 | 369 |
| 4703 | 239 |
| 4707 | 755 |
| 4710 | 892 |
| 4711 | 833 |
| 4712 | 1087 |
| 4756 | 359 |
| 5050 | 435 |
| 5191 | 123 |
| 5272 | 245 |
| 5284 | 839 |
| 5341 | 437 |
| 5342 | 444 |
| 5420 | 364 |
| 5421 | 449 |
| 5538 | 456 |
| 5541 | 149 |
| 5550 | 761 |
| 5552 | 823 |
| 5560 | 899 |
| 5563 | 855 |
| 5570 | 965 |
| 5577 | 1093 |
| 5640 | 158 |
| 5869 | 175 |

**Pastor Russell's Sermons**

| | |
|---|---|
| 557 | 267 |

**Studies in the Scriptures**

| | |
|---|---|
| F457 | 1107 |

**The Photo-Drama of Creation**

| | |
|---|---|
| 33 | 265 |
| 67 | 371 |

**What Pastor Russell Said**

| | |
|---|---|
| 486 | 372 |
| 524 | 266 |
| 525 | 373 |

**What Pastor Russell Wrote For The Overland Monthly**

| | |
|---|---|
| 93 | 251 |